# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி ஒன்று



தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர்

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu01unse

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி ஒன்று

அ – அளபெடை

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு : 53-1

திருவள்ளுவர் ஆண்டு 2022 - 1991

| | | |
|---|---|---|
| துறை | : | களஞ்சிய மையம் |
| நூல் | : | வாழ்வியற் களஞ்சியம் |
| பதிப்பு | : | மறுபதிப்பு 2009 |
| விலை | : | உரூ. 800_00 |
| அச்சு | : | நடராஜ் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ்<br>சிவகாசி. |

# முன்னுரை

தமிழ் ஓர் உயர்தனிச் செம்மொழி. 'என்றுமுள தென்றமிழ்' என்று இதன் காலத் தொன்மையினைக் கம்பர் போற்றியுள்ளார். இம்மொழி, தான் தோன்றிய காலம் தொடங்கி இன்றளவும் செய்யுள் வழக்கிலும் உலக வழக்கிலும் நிலைபெற்று விளங்குகிறது. அகத்தியம், தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இரட்டைக் காப்பியங்கள், திருமுறைகள், திவ்வியபிரபந்தம், திருத்தொண்டர் புராணம், இராமகாதை முதலிய எண்ணற்ற உயர் இலக்கண, இலக்கியங்கள் இம்மொழியின் அழியாச் செல்வங்களாகும். பதினான்கு சாத்திரங்களை அருளிய சந்தான குரவர்களையும், அருணகிரிநாதர், தாயுமானவர், பட்டினத்தார், இராமலிங்க அடிகள் போன்ற அருளாளர்களையும் பெற்றது இச் செந்தமிழ் மொழி. இம்மொழி முன்னைப் பழைமைக்குப் பழைமையாய், பின்னைப் புதுமைக்குப் புதுமையாய்க் காலத்தை வென்று கன்னித்தமிழ் என்னும் சிறப்புடன் விளங்குவது. இத்துணைச் சிறப்புகளைப் பெற்றிருப்பினும், இக்கால வாழ்க்கைக்குரிய புத்தம் புதிய கலைச்செல்வங்கள் தமிழ் மொழிக்கு இன்றியமையாத் தேவையாகும். வாழ்வியற் கூறுகளான வாணிகம், அரசியல், சட்டம், மெய்ப்பொருள், கவின்கலைகள், புவியியல் போன்ற எண்ணற்ற துறைகளிலும் தமிழ் மக்கள் மேனாட்டாருடன் போட்டியிடும் அளவுக்கு உயர்நிலை பெற்றிடும் காலம் இது.

அண்மையில், மனிதன் நிலா மண்டலத்தில் உலா வரும் அளவுக்கு அறிவியல் வியத்தகு முறையில் வளர்ந்துள்ளது. வெட்ட வெளியில் விண்கலங்கள் பறக்கின்றன. மனித ஆற்றல் இயற்கையை வெல்லும் அளவுக்கு வளர்ந்துள்ளது. பொருளியல் வாழ்க்கையில் உலகில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. நாளும் புதுமை காணும் வேட்கை ஆய்வுலகில் வேகமாக வளர்ந்து வருகிறது. இவற்றையெல்லாம் இக்காலத்தில் வாழும் மக்கள், குறிப்பாகத் தமிழ்மக்கள், அறிந்து பயன்பெற வேண்டுவது மிக மிக இன்றியமையாததாகும். இத்தேவை நிறைவேறும் வகையில் வாழ்வியற் செய்திகளைச் செவ்விய முறையில், பல்வேறு துறையறிஞர்கள் வாயிலாகத் தொகுத்தும் விரித்தும் வகை செய்தும் தருகின்ற அழியாக் கலைச் சுரங்கங்களாகிய கலைக்களஞ்சியங்களை உருவாக்குதல் காலத்தின் கட்டளையாகும். மனித வளர்ச்சியின் நாட்குறிப்புகள் களஞ்சியங்கள் எனல் மிகையாகாது. இக்காலச் செய்திகளை நிரல்படத் தொகுத்து வழங்குவதும் இவற்றின் இயல்பாகும். கலைச் செய்திகளைக் களஞ்சியத்தில் வடிக்கும் போது, அவை அழியாச் சிலைவடிவங்களாக நிலை பெற்றுவிடுகின்றன. இத்தகைய பெரும் பணியினை - திருப்பணியினை - பல்கலைப் பணியினை - தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தொலைநோக்குடன் மேற்கொண்டுள்ளது. தமிழக வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இதற்கு முன்னோடியாக 1947-இல் அன்றைய தமிழகக் கல்வி அமைச்சரும், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவருமான மதிப்பிற்குரிய முதுமுனைவர் திரு. தி.சு. அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தூண்டுதலில் திரு. பெ. தூரன் அவர்கள் இத் திருத்தொண்டில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். இப்பெருந்தகைகளுக்குத் தமிழுலகம் என்றும் நன்றி பாராட்டும் கடப்பாடுடையது. இக்களஞ்சியப் பணியினைத் திறம்பட ஏற்று நடத்திய அறிஞர் அனைவரும் பாராட்டுக்குரியர்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பெற்ற கலைக் களஞ்சியம் ஏறத்தாழ 7500 பக்கங்களில் 10 தொகுதிகளாக வெளிவந்துள்ளது. அவற்றுள், முதல் தொகுதி 1947-இல் தொடங்கப்பெற்று, 7 ஆண்டுகள் கழித்து 1954-இல் வெளியிடப்பட்டது. ஏனைய ஒன்பது தொகுதிகளும் 1968 வரையுள்ள இடைப்பட்ட ஆண்டுகளில் வெளிவந்தன. இவை 1968 வரையுள்ள செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளன. ஆனால், இவ்வாழ்வியற் களஞ்சியம் இன்று வரை வளர்ந்துள்ள கோட்பாடுகள், கொள்கைகள், கருத்துகள், செய்திகள் ஆகியவற்றை உள்ளடக்கித் திகழ்கிறது. புதிய களஞ்சியத்தில் பின்வரும் துறைகள் ஆழமாகவும் அகலமாகவும், நுட்பமாகவும் திட்பமாகவும் கருதப்பட்டுக் கட்டுரைகள் பெறப்பட்டுள்ளன. அவை: மொழி, மொழியியல், கல்வியியல், மெய்ப்பொருளியல், வரலாறு, தொல்லியல், கல்வெட்டியல், உளவியல், சமூகவியல், மேலாண்மையியல், பொருளியல், வணிகவியல், வங்கியியல், மக்கள் தொகையியல், மானிடவியல், அரசியல், சட்டவியல், புவியியல், கவின்கலையியல், நாட்டுப்புறவியல், விளையாட்டியல் முதலியன. பழைய களஞ்சியத்தின் முதல் தொகுதியிலும் 10-ஆம் தொகுதியிலும் (இணைப்புத் தொகுதி) சேர்த்து அ,ஆ-வில் ஏறத்தாழ 800 வாழ்வியற் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. புதிய களஞ்சியத்தில் அ, ஆ—வில் ஏறத்தாழ 1600 தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. 'அ'கரத்தில் மட்டில் 1000 பக்கங்களில் 900 தலைப்புகளைத் தாங்கி முதல் தொகுதி வெளிவருகிறது. பழைய களஞ்சியத்தில் பல பொருள்கள் குறித்த கட்டுரைகள் அமைந்திருப்பினும், அவை தனித்தனித் துறைகளுக்குட்பட்டு விரிவாக்கம் பெறாமல் பொது விளக்கம் தரும் தலைப்புகளாகவே அமைந்துள்ளன. தமிழ்ப் பல்கலைக்கழகக் களஞ்சியத்தில் பெரும்பா

லான தலைப்புகள் தனித்தனியே வளர்ந்துவரும் மிகப் பலவாகிய சிறப்புத் துறைகளுக்குரிய முறையில் கவனம் செலுத்தப்பட்டுக் கட்டுரைகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு தரத்திலும் திறத்திலும் புதிய களஞ்சியம் பல வகைகளில் மெருகேறியுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக உலகில் வளர்ந்து வந்துள்ள பல்வேறு அறிவு வளர்ச்சித் துறைகளையும் உள்ளடக்கி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மிகப் பரந்த அளவில் புதிய கலைக்களஞ்சியத்தை உருவாக்கக் கருதியது. அதனைத் தன் பல்வேறு குறிக்கோள்களுள் தலையாயதாகவும் கொண்டது. அதற்கேற்ப மதிப்பிற்குரிய துணைவேந்தரவர்களின் குறிப்பினை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக் கழக ஆட்சிக் குழுவும் நிதிக் குழுவும் களஞ்சியம் உருவாவதற்குரிய இசைவினை 1982மே மாதம் வழங்கின. களஞ்சியத்தை அறிவியல், வாழ்வியல் என்ற இரண்டு தனிப் பிரிவுகளில் வெளியிடுவது என்றும், வாழ்வியற் களஞ்சியத்தை 14 தொகுதிகளில் வெளியிடுவது என்றும் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தை நிறைவேற்றும் வகையில் களஞ்சிய அலுவலகம் 1983 மார்ச்சு மாதம் சென்னையில் செயற்படத் தொடங்கியது வாழ்வியற் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக திரு. அ. வெ.சுப்பிரமணியம் நியமிக்கப்பட்டார். அவர் தலைமையில் பல்வேறு வாழ்வியல் துறைகளுக்கும் தகுதியான பதிப்பாசிரியர்களும் செய்தி திரட்டுவோரும் தட்டச்சரும் நியமனம் பெற்றனர். முதல் கட்டமாக வாழ்வியற் களஞ்சியம் 14 தொகுதிகளுக்குமுரிய கட்டுரைகள், சிறு கட்டுரைகள், குறிப்புகள் ஆகியவற்றின் தலைப்புகள் ஏறத்தாழ 15000 வரை தயார் செய்யப்பட்டன. இந்நிலையில் வாழ்வியற் களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக நான் 4. 4. 84 -இல் பொறுப்பேற்றேன். அதன் பின்னர், தலைப்புகளைத் துறை வாரியாகப் பிரித்து, ஒவ்வொரு துறையிலும் தக்க அறிஞர்களைக் கொண்டு வல்லுநர் குழுக்கள் அமைத்துத் தலைப்புகள் ஆய்வு செய்யப்பட்டன. இவ்வாறு ஆய்வு செய்து தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்புகளுள் தலைமைக் கட்டுரைகள், பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் பணியாற்றும் வல்லுநர்களிடமிருந்து பெறப்பட்டன. இவ்வாறு பெற்ற கட்டுரைகள் மீண்டும் ஒருமுறை வல்லுநர் குழுக்கள் மூலம் பொருளாய்வு செய்து முடிவாகச் செப்பம் செய்யப்பட்டன.

இவற்றுள், ஒருசில கட்டுரைகளை அச்சிட்டு ஓர் எடுத்துக்காட்டுப் படிவம் 1984 மே மாதத்தில் உருவாக்கப்பட்டது. இவ்வெடுத்துக்காட்டுப் படிவங்களைத் தமிழகத்திலும், வெளிநாட்டிலும் உள்ள ஏறத்தாழ 700 தமிழறிஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும், வல்லுநர்களுக்கும் அனுப்பி அவர்தம் கருத்துகள் அறியப்பட்டன. அக்கருத்துகளின் அடிப்படையில் இரண்டாம் முறையாக மற்றும் ஓர் எடுத்துக்காட்டுப் படிவம் 1984 சூன் மாதத்தில் அச்சிட்டுக் குறிப்பிடத்தக்க சில அறிஞர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இந்நிலையில் களஞ்சிய மையம் 20-8-84 முதல் தஞ்சைக்கு மாற்றப்பட்டுச் செயற்படத் தொடங்கியது. இருமுறை அறிஞர் கருத்து அறிய அனுப்பப்பெற்ற எடுத்துக்காட்டுப் படிவங்களைப் பற்றி வந்த ஆலோசனைகளை மனங்கொண்டு இம்முதல் தொகுதி (அ) இறுதி வடிவம் பெற்று 900 தலைப்புகளில் வெளிவருகிறது. இதனுள் ஆங்காங்குப்பொருத்தமான நிழற்படங்கள், வண்ணப்படங்கள், வரைபடங்கள் முதலியன பெருமளவில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்தொகுதிக்குரிய கட்டுரையாளர் பெயர்களின் முன்னெழுத்துகளும் முதலெழுத்துகளும் அவர்தம் கட்டுரைகளின் கீழே தரப்பட்டுள்ளன. அவை இல்லாமல் அமைந்துள்ள கட்டுரைகளும் குறிப்புகளும் துறையினரால் எழுதப்பட்டவையாகும்.

இத்தொகுதிக்குரிய கட்டுரைகள் எல்லாம் தக்க வல்லுநர்களால் இறுதியாக ஆய்வு செய்யப்பட்டுச் செப்பம் பெற்றவை. இத்தொகுதியை உருவாக்குவதில் கீழ்வரும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன:

1. ஆங்கிலச் சமன்சொற்கள் தரப்பட வேண்டிய தலைப்புகளுக்குக் கட்டுரைத் தலைப்பின் தொடக்கத்தில் அவை தரப்பெறாமல் கட்டுரையின் உட்பகுதியில் பொருத்தமான இடத்தில் தரப்பெற்றுள்ளன.

2. கட்டுரைகளில் கூடியமட்டில் கிரந்த எழுத்துகள் தவிர்க்கப்பட்டுள்ளன. வேற்றொலிச் சொற்கள் வருமிடங்களில் தமிழ் மரபுக்கேற்ப ஒலி மாற்றம் செய்யப்பட்டது. அதனை விளங்கிக் கொள்ளும் வகையில் ஆங்காங்கு உரிய ஆங்கிலச் சொற்கள் தரப்பட்டுள்ளன.

   (எ-டு) ஸ்பெயின் – இசுபெயின் **(Spain)**
   பாகிஸ்தான் – பாகிசுத்தான் **(Pakistan)**

3 பிறமொழிச் சொற்கள் வரும்போது தமிழிலக்கண மரபுப்படி சொல்லுக்கு முதலிலும் ஈற்றிலும் வரும் தமிழ் எழுத்துகள் ஆளப்பட்டுள்ளன.

   (எ-டு) ரூபா – உரூபா
   டாலர் – தாலர் **(Dollar)**
   டென்மார்க் – தென்மார்க்கு **(Denmark)**

4. 'கள்' விகுதி சேர்ந்த வன்றொடர்க் குற்றுகரச் சொற்கள் வல்லினம் மிக்கு வரும் விதியினைப் பெறாமல் ஆளப்பட்டுள்ளன.

   (எ-டு) எழுத்துகள் (எழுத்துக்கள்)
   கருத்துகள் (கருத்துக்கள்)

5. கட்டுரையாளர் பெயர்களில் வரும் முன்னெழுத்துகளும் முதலெழுத்துகளும் ஒலி மாற்றம் செய்யாமல் உள்ளவாறே தரப்பெற்றுள்ளன.

   (எ-டு) ந.ஜெ. (ந.ஜெயபாரதி)

6. கட்டுரைகளின் இறுதியில் துணைநூல்கள் கொடுக்கப்படும்போதும், அவை ஆசிரியர் பெயர், நூற்பெயர், வெளியீட்டகம், ஆண்டு என்ற வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

7. கட்டுரைகளில் ஆங்கில ஆண்டுகளைக் குறிப்பிடும் போது, அவை 1900-க்கு முற்பட்டனவாயின், அவற்றிற்கு முன் கி.பி. அல்லது கி.மு. என்னும் சுருக்கக் குறியீடுகள் தரப்பட்டுள்ளன. இந் நூற்றாண்டாயின் அக்குறியீடு இடப்படவில்லை.

8. கட்டுரைகளின் தலைப்புச் சொற்களே எழுவாயாக அமையுமாறு ஒவ்வொரு கட்டுரையிலும் முதல் வாக்கியம் அமைக்கப்பட்டுள்ளது. தலைப்பினை எழுவாயாகக் கொண்டு வாக்கியம் தொடங்காத சில இடங்களில் அத்தலைப்பினைத் தந்து அதன் பின்னர் முக்காற்புள்ளி (:) இடப்பெற்றுள்ளது.

9. இத்தொகுதியில் ஆளப்பட்டுள்ள தமிழ்க் கலைச் சொற்களுக்குப் பொருத்தமான ஆங்கிலக் கலைச் சொற்கள் தொகுதியின் இறுதியில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

10. பெரும்பாலும், கட்டுரைகளில் சுட்டப்பெற்றுள்ள புள்ளி விவரங்கள் 1984-ஆம் ஆண்டு வரை கிடைத்தவையாகும்.

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகத்தாரால் 1947-இல் தொடங்கி 1954-இல் வெளியிடப்பெற்ற முதல் தொகுதியில் உள்ள வாழ்வியல் தலைப்புகள் அனைத்தும் எடுத்துக்கொள்ளப்பட்டு, அவை இக்கால வளர்ச்சியைப் புலப்படுத்தும் வகையில் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. அன்றியும், ஏறத்தாழ இருமடங்கு புதிய தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புதிய களஞ்சியம் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ள பிரிட்டானிக்கா, அமெரிக்கானா கலைக்களஞ்சியங்கள், சமூகவியல், கல்வியியல் கலைக்களஞ்சியங்கள் போன்றவற்றையும் பயன்படுத்தியுள்ளது.

இம்முதல் தொகுதி இவ்வளவு விரைவில் செவ்விய முறையில் வெளிவருதற்கு அனைத்து நிலையிலும் உறுதுணையாக இருந்து வழிகாட்டுபவர் மதிப்பிற்குரிய துணைவேந்தர் பேராசிரியர் டாக்டர் திரு வ.அய். சுப்பிரமணியம், எம். ஏ., பிஎச். டி., டி. லிட். அவர்களாவார்கள். தம் பல்வேறு கடமைகளுக்கிடையில் களஞ்சியப் பணியைக் கண்ணாகக் கருதி ஆலோசனைகளை அவ்வப்போது நேரில் வந்து வழங்கியதுடன், வாரந்தோறும் தவறாது அவர்தம் பார்வைக்கு அனுப்பப்படும் கட்டுரைகளை அவர்கள் திருத்தம் செய்தும் உதவினார்கள். அப்பெருந்தகைக்கு எனது உளமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, இதய அஞ்சலி செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

இத்தொகுதி சிறப்பாக வெளிவர என்னுடன் முழு அளவில் ஒத்துழைத்த வாழ்வியற் களஞ்சியப் பதிப்பாசிரியர், செய்தி திரட்டுவோர் ஆகிய அறிஞர்களுக்கு என் பாராட்டும் நன்றியும் உரிய.

எனக்கு முன் தொடக்கத்தில் முதன்மைப் பதிப்பாசிரியராகப் பொறுப்பேற்றிருந்த திரு. அ. வெ. சுப்பிரமணியம் அவர்களுக்கும், என்னுடன் ஒத்துழைத்து இடையில் பணி விலகிய கல்வித்துறைப் பதிப்பாசிரியர் டாக்டர் வேதமணி மனுவேல், சட்டத்துறைப் பதிப்பாசிரியர் டாக்டர் இராம. சுப்பிரமணியம், உளவியல் துறைப் பதிப்பாசிரியர் டாக்டர் (திருமதி) சு. சாவித்திரி ஆகியோர்க்கும், செய்தி திரட்டுவோராகப் பணியாற்றிய செல்வி டாக்டர் சு.மகாலட்சுமி, செல்வி சுபேதாபானு, திருமதி ந.வள்ளியம்மாள், திருவாளர் பா. சந்திரன், செ. கூடலிங்கம், மு. முத்தையன் ஆகியோர்க்கும் எனது நன்றி உரியது.

ஏறத்தாழ 900 தலைப்புகள் கொண்ட இத்தொகுதியின் கட்டுரைகளையும் சிறு கட்டுரைகளையும் குறிப்புகளையும் ஒரு சிறிதும் அயராது பொறுமையுடன் தட்டச்சுச் செய்த தட்டச்சர் அனைவர்க்கும், அலுவலகக் கண்காணிப்பாளருக்கும், தேரின் கடையாணி போன்ற அடிப்படை ஊழியர் அனைவர்க்கும் எனது பாராட்டு உரியது.

இத்தொகுதிக்குக் களஞ்சியத்தின் வேண்டுகோளை ஏற்றுக் கட்டுரைகள் எழுதிய அறிஞர்க்கும், ஆய்வுக் குழு வல்லுநர்க்கும், நிழற்படங்கள், வரைபடங்கள் முதலியன உருவாக்கித் தந்த ஓவியர் திரு.தே.நெடுஞ்செழியனுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழகக் கணிப்புத் துறை, பதிப்புத் துறை அலுவலர்க்கும், நூலகருக்கும் என் நன்றி உரியது.

இத்தொகுதியை உரிய காலத்தில் அச்சேற்றித் தந்த அண்ணாமலைநகர் கே. பி. டி. அச்சக உரிமையாளர் திரு சேரன் அவர்களுக்கும் அச்சகத்தின் பிற பணியாளர்களுக்கும், பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகப் பணியாளர்களுக்கும் எனது நன்றி.

தஞ்சாவூர்-5 — **நா. பாலுசாமி**

12. 2. 86. — முதன்மைப் பதிப்பாசிரியர்

# நெறிப்படுத்தும் குழு

| | | |
|---|---|---|
| காப்பாளர் | : | மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன்<br>முதலமைச்சர்<br>தமிழ்நாடு அரசு. |
| தலைவர் | : | மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்<br>கல்வி அமைச்சர்-இணைவேந்தர்<br>தமிழ்நாடு அரசு. |
| துணைத் தலைவர் | : | மாண்புமிகு திரு. தொண்டமான்<br>ஊரகம் மற்றும் தொழில் துறை அமைச்சர்<br>சிரிலங்கா. |
| ,, | : | மலேசியாப் பேராளர் |
| ,, | : | சிங்கப்பூர்ப் பேராளர் |
| ,, | : | மோரிசியசுப் பேராளர் |
| ,, | : | தலைமைச் செயலாளர்<br>புதுச்சேரி அரசு. |
| ,, | : | டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்<br>துணைவேந்தர் (கூட்டுநர்)<br>தமிழ்ப் பல்கலைக் கழகம்<br>தஞ்சாவூர். |
| உறுப்பினர் | : | திரு. தி. டி. சுந்தரராசு இ. ஆ. ப.<br>ஆணையர் மற்றும் கல்வி, அறிவியல், தொழில்<br>நுட்பத்துறைச் செயலர்<br>தமிழ்நாடு அரசு. |
| ,, | : | திரு. சி. இராமச்சந்திரன் இ. ஆ. ப.<br>ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலர்<br>தமிழ்நாடு அரசு. |
| சிறப்பு அழைப்பினர் | : | சென்னைவாழ் தமிழ்ப் பல்கலைக் கழக<br>ஆளுநர் குழு உறுப்பினர்கள் |
| ,, | : | டாக்டர் கு. நம்பியாரூரன்<br>வளர்தமிழ்ப்புலத் தலைவர்<br>தமிழ்ப் பல்கலைக் கழகம்<br>தஞ்சாவூர். |
| ,, | : | முதன்மைப் பதிப்பாசிரியர்கள்:<br>திரு. மு. அருணாசலம், பெருஞ்சொல்லகராதி<br>திரு. பி.எல். சாமி இ.ஆ.ப. (ஓய்வு),<br>அறிவியற் களஞ்சியம்<br>பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி,<br>வாழ்வியற் களஞ்சியம். |

# கருத்தறி குழு

தலைவர் : டாக்டர் வ.அய். சுப்பிரமணியம்
துணை வேந்தர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

உறுப்பினர்கள் : திரு. தி.டி. சுந்தரராசு இ.ஆ.ப.
ஆணையர் மற்றும் கல்வி, அறிவியல்
தொழில் நுட்பத்துறைச் செயலர்
தமிழ்நாடு அரசு.

: திரு. சி. இராமச்சந்திரன் இ.ஆ.ப.
ஆணையர் மற்றும் நிதிச் செயலர்
தமிழ்நாடு அரசு.

: பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்
சென்னை.

: திரு. சு. செல்லப்பன்
தமிழ் வளர்ச்சி இயக்குநர்
சென்னை.

: திரு. புலமைப்பித்தன்
சென்னை.

: டாக்டர் ச.வே. சுப்பிரமணியம்
இயக்குநர்
உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
சென்னை.

: திரு. மா. சண்முகசுப்பிரமணியம் (12.10.84 வரை)
டாக்டர் கு. நம்பியாரூரன் (12.10.84 முதல்)
வளர்தமிழ்ப்புலத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

: திரு. மு. அருணாசலம்
முதன்மைப் பதிப்பாசிரியர்
பெருஞ்சொல்லகராதி
தஞ்சாவூர்.

: திரு. பி.எல். சாமி இ.ஆ.ப. (ஓய்வு)
முதன்மைப் பதிப்பாசிரியர் (அறிவியல்)
களஞ்சிய மையம்
தஞ்சாவூர்.

: பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி
முதன்மைப் பதிப்பாசிரியர் (வாழ்வியல்)
களஞ்சிய மையம்
தஞ்சாவூர்.

# பதிப்புக் குழு

**முதன்மைப் பதிப்பாசிரியர்:**

பேராசிரியர் டாக்டர் நா. பாலுசாமி, எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பிஎச்.டி.

(4.4.84 — )

**பதிப்பாசிரியர்:**

1. டாக்டர் திருமதி அரோமா குளோரி சாம்,
   எம்.ஏ., பிஎச்.டி. (28.9.83 — ) ... பொருளியல், வணிகவியல்
2. பேராசிரியர் இரா. அண்ணாமலை, எம்.ஏ.,
   எம்.லிட்., பி.டி. (3.12.83 — ) ... வரலாறு, அகழாய்வு
3. டாக்டர் அ.மா. பரிமணம், எம்.ஏ.,
   எம்.லிட்., பிஎச்.டி. (20.9.84 — ) ... மொழி, மொழியியல்
4. டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை, எம்.ஏ.,
   பிஎச்.டி. (24.7.85 — ) ... தத்துவம்
5. டாக்டர் பா. சூரியநாராயணன், எம்.ஏ.
   (வரலாறு), எம்.ஏ. (அரசியல்),
   எம்.லிட்., பிஎச்.டி. (1.12.85 — ) ... அரசியல்
6. திரு.க. முத்தையா, பி.ஏ.,பி.எல்.
   (மாவட்ட நீதிபதி, ஓய்வு) (2.1.86 — ) ... சட்டம்

**செய்தி திரட்டுவோர்:**

1. டாக்டர் ப. கிருட்டிணன், எம்.ஏ.,
   பிஎச்.டி. (1.12.83 — ) .. முதன்மைப் பதிப்பாசிரியரின் செய்தி திரட்டுவோர்
2. திரு.சு. இராசவேலு, எம்.ஏ.,
   எம்.பில். (25.4.84 — ) ... வரலாறு, அகழாய்வு
3. திரு.வீ. சேகர், எம்.ஏ., எம்.பில்.,
   பி.எட். (1.8.84 — ) ... மொழி, மொழியியல்
4. திரு.சீ. தங்கசாமி, எம்.ஏ., எம்.எட். (7.1.85 — ) ... கல்வியியல்
5. திரு.சீ. பக்தவச்சலு, எம்.ஏ., (4.2.85 — ) ... மானிடவியல்

**மொழி வல்லுநர் - மெய்ப்புத் திருத்துநர்:**

திரு.உ. பழனி, எம்.ஏ., பி.ஓ.எல். (1.10.84 — )

**முன்னர்ப் பணியாற்றியோர்:**

| | | |
|---|---|---|
| திரு.அ.வெ. சுப்பிரமணியம் | ... | முதன்மைப் பதிப்பாசிரியர் |
| பேராசிரியர் டாக்டர் நா. வேதமணிமனுவேல் | ... | பதிப்பாசிரியர் |
| டாக்டர் இராம. சுப்பிரமணியன் | ... | ,, |
| டாக்டர் (திருமதி) சு. சாவித்திரி | ... | ,, |
| டாக்டர் சு. மகாலட்சுமி | ... | செய்தி திரட்டுவோர் |
| திருமதி ந. வள்ளியம்மாள் | ... | ,, |
| திரு.பா. சந்திரன் | ... | ,, |
| திரு.சே. கூடலிங்கம் | ... | ,, |
| திரு.மு. முத்தையன் | ... | ,, |
| செல்வி. சுபேதா பானு | ... | ,, |

# தலைப்புச் சொல் ஆய்வுக் குழு

## மொழி, மொழியியல்

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம்
அய்யாவு நாயுடு தெரு
அமைந்தகரை
சென்னை.

டாக்டர் மு.சு. அருள்சாமி
பேராசிரியர் – தமிழ்த்துறைத்தலைவர் (ஓய்வு)
இலயோலா கல்லூரி
சென்னை.

டாக்டர் தெ. ஞானசுந்தரம்
பேராசிரியர் – தமிழ்த்துறைத் தலைவர்
கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி
அண்ணாநகர்
சென்னை.

டாக்டர் (திருமதி) தி. லீலாவதி
பேராசிரியர் – தமிழ்த்துறை
இராணி மேரிக் கல்லூரி
சென்னை.

டாக்டர் நா. செயராமன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் செ. வை. சண்முகம்
பேராசிரியர் – இயக்குநர்
மொழியியல் உயர் ஆய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் மோ. இசரயேல்
பேராசிரியர்
மொழியியல் துறைத்தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் பொன். கோதண்டராமன்
பேராசிரியர் – தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

## வரலாறு, அரசியல், அகழாய்வு

டாக்டர் சி. இ. இராமச்சந்திரன்
பேராசிரியர் – துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பேராசிரியர் என். கே. நாராயணன்
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

பேராசிரியர் இரா. இராசேசுவரி
முதல்வர்
காயிதே மில்லத் மகளிர் கல்லூரி
சென்னை.

பேராசிரியர் தா. நா. வாசுதேவராவ்
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

டாக்டர் கி.ர. அனுமந்தன்
பேராசிரியர் – துறைத் தலைவர் (ஓய்வு)
பண்டைய வரலாற்றுத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பேராசிரியர் டி. பாலசுப்பிரமணியன்
துறைத் தலைவர்
வரலாற்றுத் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் கே.வி.இராமன்
துறைத் தலைவர்
பழமை வரலாறு, தொல்லியல் ஆய்வு
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

திரு. நடன. காசிநாதன்
இயக்குநர் (பொறுப்பு)
தொல்லியல் துறை
சென்னை.

திரு.வ.ந. சீனிவாச தேசிகன்
காப்பாளர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

டாக்டர் ஒய். சுப்பராயலு
பேராசிரியர் – கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

டாக்டர் வி.கி. பத்மநாபன்
துறைத் தலைவர்
அரசியல் – ஆட்சியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் பா. சூரியநாராயணன்
அரசியல் துறை
அஞ்சல்வழிக் கல்வி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

### பொருளியல், வணிகவியல்

டாக்டர் ஏ. ராமசாமி
பொருளியல் பேராசிரியர் (ஓய்வு)
கிளமென்ட்சு சாலை
வேப்பேரி
சென்னை.

டாக்டர் டி. பிரைட்சிங்
பொருளியற் பேராசிரியர் (ஓய்வு)
சென்னை.

டாக்டர் வே. சண்முகசுந்தரம்
பேராசிரியர் – துறைத்தலைவர்
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் நா.பெ. சீனிவாசன்
வணிகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் – துறைத்தலைவர்
பொருளியல் துறை
என் எம்.எஸ்.எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
நாகமலை
மதுரை.

டாக்டர் எம். இராமதாசு
துணைப் பேராசிரியர்
தாகூர் கலைக் கல்லூரி
பாண்டிச்சேரி.

### கல்வி

பேராசிரியர் வி. கணபதி
கொளத்தூர்
சென்னை.

பேராசிரியர் எஸ். சந்தானம்
முதல்வர் (ஓய்வு)
வேலூர்.

டாக்டர்(செல்வி) இ.ஞா. வேதநாயகம்
பேராசிரியர் – துறைத்தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியன்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் (திருமதி) ஜெ. கோதைப் பிள்ளை
பேராசிரியர்
துறைத் தலைவர்
கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பேராசிரியர் ஜே. இராமச்சந்திரன்
துறைத் தலைவர் (ஓய்வு)
கல்வியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

### சட்டம், தத்துவம்

திரு. தி. வ. தெய்வசிகாமணி
4/2 மல்லீசுவரர் கோயில் தெரு
மயிலாப்பூர்
சென்னை.

பேராசிரியர் மா. சண்முகசுப்பிரமணியம்
முன்னாள் மொழி பெயர்ப்புத் துறைத்தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

பேராசிரியர் ஆ. சந்திரசேகரன்
முதல்வர் (பொறுப்பு)
கோவை சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

பேராசிரியர் திரு. பெ. திருஞானசம்பந்தன்
தியாகராய நகர்
சென்னை.

டாக்டர் வை. இரத்தின சபாபதி
தத்துவத்துறை உயர் ஆய்வு மையம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் மு. முத்துராமன்
முதல்வர்
பச்சையப்பர் கல்லூரி
காஞ்சிபுரம்.

டாக்டர் ஏ. எஸ். பிள்ளை
பேராசிரியர் - துறைத் தலைவர்
மெய்ப் பொருளியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

## உளவியல், சமூகவியல்

டாக்டர் எம். இராசமாணிக்கம்
உளவியல்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் தா. ஏ. சண்முகம்
உளவியல்துறைத் தலைவர் (ஓய்வு)
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் எம். மாத்ருபூதம்
உளநோய் மருத்துவர்
சென்னை மனநலக் காப்பகம்
சென்னை.

டாக்டர் கே. வி. காளியப்பன்
பேராசிரியர்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

திரு. ஆர். சண்முகசுந்தரம்
பேராசிரியர்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

டாக்டர் ஆர். என். அனந்தராமன்
விரிவுரையாளர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் வி. கோமதிநாயகம்
பேராசிரியர் - துறைத் தலைவர்
சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

டாக்டர் சா. சாத்தப்பன
பேராசிரியர்
உளவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

டாக்டர் டி. சுந்தரம்
பேராசிரியர் - துறைத்தலைவர்
சமூகவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

## மானிடவியல்

திரு. தேவசகாயம்
காப்பாளர்
சென்னை அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

# பொருளாய்வுக் குழு

## மொழி, மொழியியல்

டாக்டர் கி. அரங்கன்
மொழியியல்துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்.
தஞ்சாவூர்.

பேராசிரியர் சி. நயினார் முகமது
முதல்வர்
சமால் முகமது கல்லூரி
திருச்சி.

டாக்டர் மா. இராமலிங்கம்
தமிழ்த்துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சி.

டாக்டர் சூ. இன்னாசி
கிறித்தவத்தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

டாக்டர் என். குமாரசாமி ராசா
பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

டாக்டர் நா. செயராமன்
இணைப் பேராசிரியர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

## வரலாறு, அரசியல், அகழாய்வு

டாக்டர் கி.ர. அனுமந்தன்
பேராசிரியர்
வரலாற்றுத்துறை (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் மு. அப்துல் இரகீம்
வரலாற்றுத் துறை
பெரியார் ஈ. வே. ரா. கல்லூரி
திருச்சி.

திரு அ. கேசவன்
3, மேட்டுக் கம்மாளத் தெரு
காஞ்சிபுரம்.

டாக்டர் பா. சூரியநாராயணன்
அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

டாக்டர் பி. சண்முகம்
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

## பொருளாதாரம், வணிகவியல்

டாக்டர் என். எஸ் பாலசுப்பிரமணியம்
பேராசிரியர் – துறைத்தலைவர்
பொருளியல் துறை
என். எம். எஸ். எஸ். வெள்ளைச்சாமிநாடார் கல்லூரி
நாகமலை – மதுரை.

டாக்டர் டி. பீட்டர்
முதல்வர்
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி
நாகர்கோவில்.

டாக்டர் பி. சரவணவேலு
பேராசிரியர் – துறைத்தலைவர்
வணிகவியல் துறை
பூண்டி புட்பம் கல்லூரி
பூண்டி – தஞ்சை மாவட்டம்.

## கல்வி

டாக்டர் பி. எஸ். பாலசுப்பிரமணியன்
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

திரு. எஸ். சந்தானம்
முதல்வர் (ஓய்வு)
காந்தி நகர்
வேலூர்.

## சட்டம், தத்துவம்

திரு. வ. சி. சந்திரசேகரன்
இளநிலைப் பேராசிரியர்
மதுரை சட்டக் கல்லூரி
மதுரை.

டாக்டர் இரா. கோலப்பப் பிள்ளை
தத்துவத்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

## உளவியல், சமூகவியல்

டாக்டர் என். மாத்ருபூதம்
மனநோய் மருத்துவர்
மனநலக் காப்பகம்
சென்னை.

டாக்டர் சி. என். நடராசன்
பேராசிரியர்
சமூகவியல் துறை
மதுரைக் கல்லூரி
மதுரை.

## மானிடவியல்

திரு. பி. தேவநேசன்
சமூக இயக்கவியல் துறை
புனித சூசையப்பர் கல்லூரி
திருச்சி.

# முதல் தொகுதி: கட்டுரையாளர்கள்

அ.அ.
திரு.அ. அறிவொளி எம். ஏ.
142 கனகசபை நகர்
சிதம்பரம்.

அ.அ.ம.
டாக்டர் அ. அ. மணவாளன் எம். ஏ., பிஎச். டி.
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

அ.இரா.
பேராசிரியர் அ. இராமசாமி
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
முசிறி.

அ.இரா.
டாக்டர் அ. இராமசுவாமி எம். ஏ., எம். லிட்., பிஎச்டி., (இலண்டன்)
பொருளியல் துறைத் தலைவர் (ஓய்வு)
26 கிளெமென்சு சாலை
வேப்பேரி
சென்னை.

அ.கா.
திரு. அ. காஜாமொகைதீன் எம் ஏ.
வரலாற்றுத் துணைப் பேராசிரியர்
சுப்பிரமணிய சுவாமி அரசு கலைக் கல்லூரி
திருத்தணிகை.

அ.கே.
பேராசிரியர் அ. கேசவன் எம். ஏ., எம். லிட்.
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

அ.தி.
திருமதி அ. திலகவதி செகதீசன் எம்., ஏ.,
முதல்வர்
அரசினர் மகளிர் கல்லூரி
நாமக்கல்.

அ.பா.
திரு. அ. பாலறாவாயன் எம். ஏ.
விரிவுரையாளர்
தமிழ்த் துறை
இலயோலா கல்லூரி
சென்னை.

அ.பி.
டாக்டர் அ. பிச்சை எம். ஏ.,பிஎச்.டி.
தமிழ்த் துறை
கிராமியப் பல்கலைக்கழகம்
காந்தி கிராமம்
மதுரை மாவட்டம்.

அ.மு.ப.
பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம்.லிட்.
தமிழ்க்கலை இல்லம்
18 அய்யாவு நாயுடு தெரு
செனாய் நகர்
சென்னை.

அர.சி.
டாக்டர். அர. சிங்காரவடிவேலன் எம். ஏ, பி. டி., பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
சிரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி
தேவகோட்டை.

அர.பொ.
திரு. அரங்க. பொன்னுசாமி, எம். ஏ. எம். லிட்.
காப்பாளர்
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.இரா.
டாக்டர் ஆ. இராமகிருட்டிணன் எம். ஏ., பிஎச். டி.
தமிழ்த்துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ஆ.ச.
திரு. ஆ. சந்திரசேகரன் எம். ஏ., எம். எல்,
பேராசிரியர்
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

ஆ.செ.

திரு. ஆ. செல்லப்பெருமாள் எம்.ஏ.
ஆய்வாளர்
மானிடவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆ.ந.

டாக்டர் ஆனந்த நடராச தீட்சிதர் எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆ.மு.

திரு. ஆ. முத்துக்கிருட்டிணன் எம்.ஏ., எம்.எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

ஆர்.எஸ்.ம.

திரு. ஆர். எஸ். மனோகர்
நேஷனல் தியேட்டர்ஸ்
22 பாகீரதியம்மாள் தெரு
தி.நகர், சென்னை.

ஆர்.கி.

பேராசிரியர் ஆர். கிருட்டிணமூர்த்தி எம்.ஏ., எல்.டி.
டி-34 திருநகர்
மதுரை.

ஆர்.கு.

டாக்டர் ஆர். குருநாதன் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
விவேகானந்தர் கல்லூரி
சென்னை.

ஆர்.கோ.

டாக்டர் ஆர். கோபாலகிருட்டிணன் எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறை விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.ச.

டாக்டர் ஆர். சண்முகசாமி எம்.ஏ.,பிஎச்.டி.
அரசியற் கலைத்துறை விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஆர்.செ.

திரு. ஆர். செங்கோட்டுவேலன் எம்.ஏ.,பி.எல்.
நீதிபதி
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை.

ஆர்.பா.

டாக்டர் ஆர். பாலகிருட்டிணன் எம்.ஏ.,பிஎச்.டி,
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஆர்.மு.

டாக்டர் ஆர். முத்தையன் எம்.காம்..பிஎச்.டி.
வணிகவியல் பேராசிரியர்
24 அண்ணா நகர்
திருச்சி.

ஆர்.வே.

டாக்டர் ஆர். வேங்கடராமன் எம்.ஏ.,பிஎச்.டி.
பண்டைய வரலாற்றுத் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஆர்.ஜெ.

டாக்டர் ஆர். ஜெயகோபால் எம்.ஏ.,பிஎச்.டி.
துறைத் தலைவர்
முறைசாராக் கல்வித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இர.ஆ.

பேராசிரியர் இர. ஆலாலசுந்தரம் எம்.ஏ.
முதல்வர்
அரசினர் கலைக் கல்லூரி
தருமபுரி.

இர.ந.

பேராசிரியர் இர. நரசிங்கம் எம்.ஏ.,பி.டி.
முதல்வர் (ஓய்வு)
2 காமகோடி நகர்
தாம்பரம்
சென்னை.

இரா.இரா.

பேராசிரியர் இரா. இராசேசுவரி எம்.ஏ.,பி.டி.,
முதல்வர்
காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி
அண்ணா சாலை
சென்னை.

இரா.க.

டாக்டர் இராச கணேசன் எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

இரா.குரு.

பேராசிரியர் இரா. குருநாதன் எம்.ஏ ,எம்.பில்.
கரந்தைப் புலவர் கல்லூரி
கருந்தட்டாங்குடி
தஞ்சாவூர்.

இரா.கோ.

டாக்டர் இரா. கோலப்பப்பிள்ளை எம்.ஏ., பிஎச் டி.
டிப். (சமசுகிருதம்)
தத்துவத் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

இரா.சீ.

திரு. இரா. சீனிவாசன் எம். ஏ., பி. டி.
11 முதல் குறுக்குத் தெரு
இராசா அண்ணாமலைபுரம்
சென்னை.

இரா.செ.

டாக்டர் இரா. செயபால் எம்,ஏ., பிஎச்.டி., விசாரத்,
தமிழ்ப்பேராசிரியர்
அ.வீ வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

இரா.சே.

திருமதி இரா. சேதுமணி எம்.ஏ.
தமிழ்த்துறை
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை.

இரா.தி.

டாக்டர் (திருமதி) இராதா தியாகராஜன்
துணைவேந்தர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

இரா.தி.
பேராசிரியர் இரா. திருஞானசம்பந்தம்
முதல்வர் (ஓய்வு)
இணை இயக்குநர் (கல்வி)
17 குருநாதன் சாலை
தென்னூர், திருச்சி.

இராம.பெ.

டாக்டர் இராம. பெரியகருப்பன் எம். ஏ., பிஎச். டி,
தமிழ்த் துறைத் தலைவர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

இராம.பொ.

திரு. இராம. பொன்னப்பன்
1 வான்மீகி தெரு
சோமசுந்தரம் காலனி
மதுரை.

ஈ.ஞா.வே.

டாக்டர் (செல்வி) ஈ. ஞா. வேதநாயகம்
துறைத் தலைவர்
கல்வியியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஈ.தி.

டாக்டர் ஈ. திவியன் எம்.ஏ.,பிஎச்.டி
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஈ.ப.

திரு ஈ. பரிபூரணம் எம்.ஏ., எம். எல்.
பேராசிரியர்
சட்டக் கல்லூரி
மதுரை.

ஈ.வே மா.

பேராசிரியர் ஈ. வே. மாரியப்பன் எம்,ஏ.,எம்.பில்.
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

எச்.நி.

பேராசிரியர் எச். நியூமன் எம்.ஏ.
முதல்வர்
பூ. சா. கோ. கிருஷ்ணம்மாள் கலைக் கல்லூரி
பூளைமேடு
கோயம்புத்தூர்.

எம். இரா.

டாக்டர் எம். இராமதாசு எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
பொருளியல் துறை
பாரதிதாசன் மகளிர் கல்லூரி
பாண்டிச்சேரி.

எம்.ஓ.மா.

டாக்டர் எம். ஓ. மாத்யூ எம். காம், பிஎச். டி.
துறைத் தலைவர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எம்.தி.

டாக்டர் எம் திருநாவுக்கரசு எம். ஏ., பி. எட்., பிஎச். டி.
முதல்வர், சி. பி. எம். கல்லூரி
சகிதாபுரி
கோவை புதூர்
கோயம்புத்தூர்.

எல்.கா.ந.

டாக்டர் எல். காமேசுவர நந்தா எம். ஏ., பிஎச். டி.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

எல்.டி.க.

திரு. எல். டி. கடாரியா
துணைவேந்தர்
அரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கிசார் – அரியானா.

எல்.பி.வெ.

டாக்டர் எல் பி. வெங்கடரங்கன் எம். எஸ்ஸி., எம். பில்., பிஎச். டி.
துறைத் தலைவர்
மக்கள்தொகையியல் மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

என்.அ.

திரு. என். அரிநாராயணா எம். எஸ்ஸி.
அருங்காட்சியகங்களின் இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
எழும்பூர்
சென்னை.

என்.இரா.

திருமதி என். இராசலெட்சுமி எம். ஏ., எம். பில்.
உதவிப் பேராசிரியர்
பொருளியல் துறை
இராணிமேரி மகளிர் கல்லூரி
சென்னை.

என்.எஸ்.இரா.

திரு. என். எஸ். இராமசாமி
38 நரசிம்மபுரம்
சென்னை.

என்.எஸ்.ச.

திரு. என். எஸ், சத்தியநாதன் எம். ஏ.
அரசியற் கலைத் துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

என்.எஸ்.பா.

டாக்டர் என். எஸ் பாலசுப்பிரமணியன் எம், ஏ., பிஎச். டி.
துறைத் தலைவர்
என். எம். எஸ். எஸ். வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி
மதுரை.

என்.கு.

டாக்டர் என். குமாரசாமிராசா எம். ஏ., பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

என்.மா.

டாக்டர் என். மாத்ருபூதம்
மனநலக் காப்பகம்
சென்னை.

என்.வி.கே.

பேராசிரியர் என். வி. கேசவன் எம். ஏ.
வரலாற்றுப் பேராசிரியர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

எஸ்.அ.

டாக்டர் எஸ். அகத்தியலிங்கம் எம். ஏ., பிஎச். டி.
மொழியியல் துறைத் தலைவர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.அ.

பேராசிரியை எஸ். அன்புக்கொடி எம். ஏ.
வரலாற்றுத் துறை
அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (வடசென்னை)
சென்னை.

எஸ்.ஆ.

டாக்டர் எஸ். ஆரோக்கியநாதன் எம். ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

எஸ்.எம்.தே.

பேராசிரியர் எஸ்.எம். தேவரத்தினம் எம். ஏ., பி.எல்., டி. எஸ். எஸ்.
சட்டக் கல்லூரி
கோயம்புத்தூர்.

எஸ்.கி.

டாக்டர் எஸ். கிருட்டிணசாமி எம். ஏ. பிஎச்.டி.,
முதல்வர்
சிரிவாசவி கல்லூரி
ஈரோடு.

எஸ்.கு.

டாக்டர் எஸ். குருமூர்த்தி எம்.ஏ.,எம். லிட்.,பிஎச்.டி.
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை.

எஸ்.கோ.

திரு. எஸ். கோபாலகிருட்டிணன்
39 படேல் சாலை
பெரம்பூர்,
சென்னை.

எஸ். ச.நா.

திரு. எஸ். சங்கரநாராயணன் எம்.ஏ.,
நெ. 10 இலட்சுமிபுரம் சாலை.
இராயப்பேட்டை
சென்னை.

எஸ்.ச.

திரு. எஸ். சந்தானம் எம். ஏ. பி.டி
முதல்வர் (ஓய்வு)
44 இரண்டாவது மேற்குக் குறுக்குத்தெரு
காந்திநகர் மேற்கு, காட்பாடி
வேலூர்.

எஸ் சீ.

திரு. எஸ். சீனிவாச சர்மா எம். ஏ.
சமசுகிருத விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

எஸ்.செ.

டாக்டர் எஸ். செகதீசன் எம்.ஏ., பிஎச். டி.
2 பொன்மேனி நாராயணன் தெரு
சோமசுந்தரம் காலனி
மதுரை.

ஏஸ்.சௌ.

டாக்டர் எஸ். சௌமியநாராயணன் எம்.ஏ.,பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
மதுரைக் கல்லூரி
மதுரை.

எஸ்.நீ.

டாக்டர் எஸ். நீலகண்டன் எம்.ஏ.,பி.எல். எம். ஏ., பிஎச். டி.
பொருளியல் துறைத் தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

எஸ்.மு.

திரு. எஸ் முத்துகிருட்டிணன் எம்.ஏ.,
அரசியற் கலைத் துறை
அஞ்சல்வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

எஸ்.வ.

டாக்டர் எஸ். வரதராசன் எம். ஏ., பிஎச் .டி.
வணிக மேலாண்மைப் பேராசிரியர்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ஏ.ஏ.

டாக்டர் ஏ. ஏகாம்பரநாதன் எம் ஏ.,பிஎச். டி.
பண்டைய வரலாறு, தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஏ.சி பா.

பேராசிரியர். ஏ. சி. பார்த்தசாரதி எம்.ஏ.
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

ஏ.சு.

டாக்டர் ஏ. சுவாமிநாதன் எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத் துறைத் தலைவர்
அரசினர் ஆடவர் கலைக் கல்லூரி
நந்தனம்
சென்னை.

க.சொ.

பேராசிரியை (செல்வி) கஸ்தூரி சொக்கையா
எம்.ஏ., எம்.லிட்.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
மீனாட்சி மகளிர் கல்லூரி
மதுரை.

க.த.தி.

டாக்டர் க.த. திருநாவுக்கரசு எம்.ஏ., (தமிழ்),
எம் ஏ., (வரலாறு), பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

க.ப.அ.

டாக்டர் க.ப. அறவாணன் எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
இலயோலா கல்லூரி
சென்னை.

க.மு.

டாக்டர் க. முருகையன் எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கி.அ.

டாக்டர் கி. அரங்கன் எம்.ஏ., பிஎச்.டி.
மொழியியல் துறைத் தலைவர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கி.கோ.

பேராசிரியர் கி. கோதண்டபாணி எம்.ஏ., பி.ஓ.எல்
11/13 திருமகள் இல்லம்
பிரதாபசிம்மபுரம்
தஞ்சாவூர்.

கி.ப.

திரு.கி. பழனியப்பன்
32 முதல் தெரு
செனாய் நகர்
மதுரை.

கி.ர.அ.

டாக்டர் கி.ர. அனுமந்தன் எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

கி.வா.

திருமுருக. கிருபானந்த வாரியார்
திருப்புகழ் அமிர்தம்
89 சிங்கண்ணச் செட்டி தெரு
சிந்தாதிரிப்பேட்டை
சென்னை.

கூ.ரா.ந.

டாக்டர் கூ.ரா. நஞ்சுண்டன் எம்.ஏ. பிஎச்.டி.
இயக்குநர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

கே.அ.

டாக்டர் கே. அண்ணாதுரை எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.அர.

திரு.கே. அரங்கசாமி
உளநோய் நீக்கு உளவியலார்
மனநோய் காப்பகம்
சென்னை.

கே.ஆர்.சி.

டாக்டர் கே.ஆர். சிவதாசன்
இணைப் பேராசிரியர்
கல்வியியல் துறை
கேரளப் பல்கலைக்கழகம்
திருவனந்தபுரம்.

கே.இரா.

திரு.கே. இராசன் எம்.ஏ.
கல்வெட்டுத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.என்.இரா.

டாக்டர் கே.என். இராமானுசம் எம்.காம்.,
எம்.லிட்., பிஎச்.டி.
விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.எஸ்.சோ.

பேராசிரியர் கே.எஸ் சோணாசலம் எம்.ஏ.,எம்.லிட்.
பொருளியல் துறைத் தலைவர் (ஓய்வு)
(அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
சிவகிரி இல்லம்
குற்றாலம்.

கே.கோ.

டாக்டர் கே. கோபாலகிருட்டிணன் எம்.காம்.,
எம்.லிட்., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
வணிகவியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

கே.வி.இரா.

டாக்டர் கே.வி. இராமன் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.
பண்டைய வரலாறு, தொல்லியல் துறைத்தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

கோ.க.

திரு.கோ. கருணாநிதி எம்.ஏ., எம்.பில்.
விரிவுரையாளர்
சமூகவியல் துறை,
புனிதசேவியர் கல்லூரி
பாளையங்கோட்டை.

கோ.சி.

டாக்டர் கோ. சிவகுருநாதன் எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர் (முதுகலை)
அழகப்பா கல்லூரி
காரைக்குடி.

கோ.வி.

டாக்டர் கோ. விசயவேணுகோபால் எம்,ஏ.,
எம்.லிட் , பிஎச்,டி.
பேராசிரியர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.கி.

பேராசிரியை (திருமதி) சரோசா கிருட்டிணன்
எம்.ஏ., எம். லிட்.
துறைத் தலைவர்
பொருளியல் துறை
இராணி மேரி மகளிர் கல்லூரி
சென்னை.

ச.செ.

திரு. ச. செந்தூரன் எம்.ஏ., எம். எச். எட்., எம். எட்.
சேதுபதி மேனிலைப் பள்ளி
வடக்குவெளி வீதி
மதுரை.

ச.நா.

திரு. ச. நாராயணசாமி பி.ஏ., எம். எல்.
இளநிலைப் பேராசிரியர்
சட்டக் கல்லூரி
சென்னை.

சா.சா.

டாக்டர் சா. சாத்தப்பன்
பேராசிரியர் – உளவியல்துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

சி.அ.

மகாவித்துவான் சி. அருணை வடிவேல் முதலியார்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
காஞ்சிபுரம்.

சி.இ.இரா.

டாக்டர் சி.இ. இராமச்சந்திரன் எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி.

இந்திய வரலாற்றுத் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.க.

டாக்டர் சி. கதிர் மகாதேவன் எம்.ஏ., எம்.லிட்.,பிஎச்.டி.

இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.கோ.

பேராசிரியர் சி. கோவிந்தராசன்
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

சி.ஞா.

டாக்டர் சி.ஞானப்பிரகாசம் எம்.ஏ., பிஎச்.டி.
அரசியற்கலைத் துறை
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

சி.பா.

டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.

தமிழ் மொழித் துறைத் தலைவர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

சி.ம.

திரு. சி மகேசுவரன் எம்.ஏ.,எம்.ஏ.
உதவி காப்பாட்சியர்
மானிடவியல் பிரிவு
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

சீ.ப.

திரு. சீ.பக்தவச்சலு எம்.ஏ.
மனை எண்: 52 ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.ச.

டாக்டர் சு. சக்திவேல் எம்.ஏ.,எம்.ஏ.,பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சு.ச.

டாக்டர் சு. சண்முகசுந்தரம் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
புனித யோவான் கல்லூரி
பெங்களூர்.

சு.சி.

டாக்டர் (திருமதி) சு. சிவகாமசுந்தரி எம்.ஏ.,பிஎச்.டி.

தமிழ்ப் பேராசிரியர்,
அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

சு.சு.

டாக்டர் சு. சுவாமி ஐயா எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சுப.அ.

டாக்டர் சுப. அண்ணாமலை எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.

முதல்வர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

சுப.கோ.

டாக்டர் சுப.கோவிந்தராசன் எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சு.ரா.சு.

டாக்டர் சு.ரா.சுப்பிரமணியன் எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர்
வேளாண்மைப் பொருளியல்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

சு.வே.

டாக்டர் சு.வேங்கடராமன் எம்.ஏ ,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ்த்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

செ.அ.

டாக்டர் செ. அய்தர் அலி எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
வக்போர்டு கல்லூரி
மதுரை.

செ.வை.

பேராசிரியர் செ. வைத்தியலிங்கம் எம்.ஏ.,எம்.லிட்.
தமிழ்த்துறை இணைப்பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

செ.வை.ச.

டாக்டர் செ. வை. சண்முகம் எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சை.வே.சி.

பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு எம்.ஏ.,பி.டி.
துணைவேந்தர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

சோமலெ.

திரு. சோமலெ
சாஸ்திரி நகர்
அடையாறு
சென்னை.

டி.எம்.கா.

திரு.டி. எம். காளியப்பா எம்.ஏ.
துணைச் செயலர்
தலைமைச் செயலகம்
சென்னை.

டி.கா.

திருமதி டி. காந்திமதி எம்.ஏ.,எம்.பில்.
பேராசிரியை
பொருளியல் துறை
இராணிமேரி மகளிர் கல்லூரி
சென்னை.

டி.கே.சா.சு.

டாக்டர் டி.கே.சா. சுந்தர்சிங் எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறைத் தலைவர் (ஓய்வு)
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
21 சிதம்பரநாதன் தெரு
இராமவர்மபுரம்
நாகர்கோவில்.

டி.ச.

டாக்டர் டி. சம்பந்தம் எம்.ஏ.,பிஎச்.டி.
பேராசிரியர்
பொருளியல் துறை
பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி
பாண்டிச்சேரி.

டி.த.

திரு.டி. தயாளன் எம்.ஏ.,
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை
தெற்குச் சரகம்
தலைமைச் செயலகம்
சென்னை.

டி.பா.

பேராசிரியர் டி. பாலசுப்பிரமணியன் எம்.ஏ.
வரலாற்றுத் துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

டி.பி.சி.

டாக்டர் டி.பி. சித்தலிங்கையா எம். ஏ., பிஎச்.டி.
இயக்குநர்
அஞ்சல் வழிக் கல்வித் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

த.அ.

திரு.த. அழகப்பராசு எம். ஏ.
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
அடையாறு
சென்னை.

த.கு.மு.

பேராசிரியர் த.கு. முருகேசன் எம்.ஏ.
தமிழ்த்துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

த.கோ.

திரு.த. கோவேந்தன்
8 பாவேந்தர் தெரு
ஆண்டவர் நகர்
கோடம்பாக்கம்
சென்னை.

தா.ஏ.ஞா.

டாக்டர் தா.ஏ. ஞானமூர்த்தி எம்.ஏ., பிஎச்.டி.
தாமு நகர்
புளியங்குளம்
கோயம்புத்தூர்.

தா.வ.

டாக்டர் தா. வசந்தகுமாரி எம்.ஏ., பிஎச்.டி.,
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

தா.வே.வீ.

டாக்டர் தா.வே. வீராசாமி எம்.ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் – தலைவர்
தொகுப்பியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

தி.லீ.

டாக்டர் (திருமதி) தி.லீலாவதி
தமிழ்ப் பேராசிரியை
இராணிமேரி மகளிர் கல்லூரி
சென்னை.

தி.வி.கு.

டாக்டர் தி.வி. குப்புசாமி எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுத்துறைத் தலைவர் (ஓய்வு)
திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர்.

தி.வீ.

திரு.தி. வீரப்பன் எம்.ஏ.
தமிழ் வளர்ச்சிக் கழகம்
குறளகம்
சென்னை.

தே.ந.

திரு.தே.நடராசன் எம்.ஏ.,
எஃப். ஆர்.இ.எஸ்., (இலண்டன்)
நிதியக அலுவலர்
தமிழக அரசு
சென்னை.

தொ.ப.

டாக்டர் தொ. பரமசிவன் எம்.ஏ., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
சாகீர் உசேன் கல்லூரி
இளையான்குடி
இராமநாதபுரம் மாவட்டம்.

ந.க.

டாக்டர் ந. கங்காதரன் எம்.ஏ., பிஎச்.டி.
இணைப் பேராசிரியர்
வடமொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.க.ம.

பேராசிரியர் ந.க.மங்களமுருகேசன் எம்.ஏ., எம்,லிட்.
அஞ்சல்வழிக் கல்வித் துறை (வரலாறு)
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ந.கு.நா.

பேராசிரியர் ந.கு. நாராயணன் எம்.ஏ., (வரலாறு)
எம்.ஏ., (அரசியல்)
வரலாற்றுத் துறைத் தலைவர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

ந.ச.

பேராசிரியர் ந.சக்திவேலன், எம் ஏ.
ஆங்கிலத்துறைத்தலைவர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.சு.

டாக்டர் ந. சுப்பிரமணியன் எம்.ஏ., பிஎச்.டி.
வரலாற்றுப் பேராசிரியர் (ஓய்வு)
(மதுரை காமராசர் பல்கலைக்கழகம்)
(வடகிழக்கு மலைப் பல்கலைக்கழகம், சில்லாங்)
உடுமலைப்பேட்டை
கோயம்புத்தூர் மாவட்டம்.

ந.சே.

பேராசிரியர் ந. சேதுரகுநாதன்
விவேகானந்தர் தெரு
மதிச்சியம்
மதுரை.

ந.து.

டாக்டர் ந. துரைராசு எம்,ஏ., பிஎச்.டி.
துணைப் பேராசிரியர்
பொருளியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ந.மா.

டாக்டர். ந. மாணிக்கம் எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி
தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.மா.

டாக்டர் ந. மாரியப்பன் எம்.ஏ., பிஎச்,டி.
தமிழ்த் துறை
தியாகராசர் கல்லூரி
மதுரை.

ந.ரா.மு.

திரு.ந.ரா. முருகவேள் எம்.ஏ., எம்.ஓ. எல்.
17 வரசித்தி விநாயகர் கோவில் தெரு
சைதாப்பேட்டை
சென்னை.

நா.இரா.

புலவர் நா. இராசகோபாலன் எம்.ஏ., பி.லிட்.,
பி.லிப். ,எஸ். சி. ,டிப்.பிரெஞ்சு
நூலகர்
தலைமைச் செயலகம்
சென்னை.

நா.செ.

டாக்டர் நா. செயராமன் எம். ஏ. , எம். லிட்.,
பிஎச். டி.
இணைப் பேராசிரியர்
தமிழ்த் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

நா.ஜெ.

டாக்டர் நா. ஜெயப்பிரகாசு எம். ஏ., பிஎச்.டி.
தமிழ்த்துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

நே.எஸ்.டே.

டாக்டர் நேன்சி ஸ்டெல்லா டேவிட் எம்.ஏ., பிஎச்.டி
பேராசிரியர் – பொருளியல் துறைத் தலைவர்
கிறித்தவ மகளிர் கல்லூரி
சென்னை.

ப.ச.

டாக்டர் ப. சண்முகம் எம். ஏ. ,பிஎச். டி.
பண்டைய வரலாறு; — தொல்லியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ப.ந.

பேராசிரியர் ப. நடராசன் எம். ஏ.
முதல்வர்
சர் தியாகராயர் கல்லூரி
சென்னை.

பா.சூ.

டாக்டர் பா. சூரியநாராயணன் எம். ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத் தலைவர், அரசியல் துறை
அஞ்சல் வழிக் கல்வித்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

பா.மா.

பேராசிரியர் பா. மாணிக்கவேலு எம். ஏ,
முதல்வர்
முத்துரங்கம் அரசினர் கலைக்கல்லூரி
வேலூர்
வட ஆர்க்காடு மாவட்டம்.

பி.ஆர்.ந.

டாக்டர் பி.ஆர். நரசிம்மன் எம். ஏ., (தத்துவம்),
எம் ஏ., (ஆங்கிலம்), எம்.ஏ., (இந்தியக் கலாச்சாரம்)
பிஎச். டி.
தத்துவத் துறைத் துணைப் பேராசிரியர்
பழநியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரி
பழநி.

பி.இரா.

திரு. பி. இராசகோபாலன் எம்.காம்.,எம்.பில்.
விரிவுரையாளர்
வணிகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

பி.ஏ.மோ.

டாக்டர் பி. ஏ. மோகனராஜன் எம்.ஏ.,பி.லிப்.எசி., பிஎச். டி.
நூலகர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.கி.

டாக்டர் பி. கிருட்டிணாராவ் பி.ஏ., (ஆனர்சு), எம்.லிட்., பிஎச். டி.
பேராசிரியர் – துறைத் தலைவர்
பொருளியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

பி.கி.அ.

திரு. பி. கிங்ஸ்லி அரசகுமார் எம். ஏ.
வரலாற்றுத் துறை
என். எஸ். அரசினர் கலைக் கல்லூரி
பொன்னேரி
செங்கற்பட்டு மாவட்டம்.

பி.கே.ச.

டாக்டர் பி. கே. சட்டோபாத்தியாயா
உளவியல் துறை
பல்கலைக்கழக அறிவியல் தொழில்நுட்பக் கல்லூரி
கல்கத்தா பல்கலைக்கழகம்
கல்கத்தா.

பி.சு.

டாக்டர் பி. சுப்பிரமணியன் எம். ஏ. , பிஎச்.டி.
இந்திய வரலாற்றுத் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

பி.தி.

பேராசிரியர் பி. திருஞானசம்பந்தம் எம்.ஏ.,எல்.டி.
27 சாம்பசிவன் தெரு
தியாகராய நகர்
சென்னை.

பி.ந.

டாக்டர் பி. நடராசப்பிள்ளை எம்.ஏ., பிஎச்.டி.
விரிவுரையாளர்
மொழியியல் துறை
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்
மானச கங்கோத்திரி
மைசூர்.

பி.வி.

திரு. பி விசுவநாதன் எம்.ஏ.,பி.எல்.
துணைத்தலைவர்
அரிசன நல இயக்கம், தமிழ்நாடு
4235 தெற்கு பிளாக்
இ.பெ.தொ.காலனி
சென்னை.

பொ.அ.

திரு. பொ. அரசு எம்.ஏ.
உதவி கடல் அகழாய்வர்
தமிழ்நாட்டு அரசு தொல்லியல் துறை
மந்தைவெளிப்பாக்கம்
சென்னை.

பொன்.சு.

பேராசிரியர் பொன். சுப்பிரமணியம் எம்.ஏ.
வரலாற்றுத் துறை
இராசேசுவரி வேதாசலம் அரசினர் கலைக் கல்லூரி
செங்கற்பட்டு.

ம.இரா.

பேராசிரியர் ம. இராசசேகர தங்கமணி எம். ஏ.
வரலாற்றுத் துறை
அரசினர் கலைக் கல்லூரி
கரூர்
திருச்சி மாவட்டம்.

மா.செ.

டாக்டர் மா. செபகுதியான் சே.ச., எம். ஏ., பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத் தலைவர்
பொருளியல் துறை
புனித சூசையப்பர் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

மு.அ.

திரு.மு. அருணகிரி எம்.ஏ.
துணைத் தமிழ்ப் பேராசிரியர்
தியாகராசர் கல்லூரி
மதுரை.

முடி.அ.ர.

டாக்டர் மு. அப்துல் ரகீம்
வரலாற்றுப் பேராசிரியர்
அரசினர் கலைக் கல்லூரி
திருவெறும்பூர்
திருச்சி.

மு.ச.

பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

மு.த.

டாக்டர் மு. தங்கராசு எம்.ஏ., பிஎச்.டி.
தமிழ்த் துறை
கந்தசாமி நாயுடு கல்லூரி
சென்னை.

மு.நா.

டாக்டர் மு. நாகநாதன் எம்.ஏ.,பிஎச்.டி.
பொருளியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

மு மு.

டாக்டர் மு. முத்துராமன் எம்.ஏ.,பிஎச்.டி.
முதல்வர்
பச்சையப்பர் கல்லூரி
காஞ்சிபுரம்.

ய.ச.

டாக்டர் (திருமதி) யசோதா சண்முகசுந்தரம்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
பேராசிரியர் – துறைத் தலைவர்
பொருளியல் துறை
எத்திராசு மகளிர் கல்லூரி
சென்னை.

யூ.ஆர்.கா.

திரு. யூ.ஆர். காளியப்பன்
சமூகவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

ரா.கி.

திரு. (வலையப்பேட்டை) ரா. கிருட்டிணன்
35 முருகப்ப முதலி தெரு
ஐஸ் அவுஸ்
திருவல்லிக்கேணி
சென்னை.

வ.செ.

டாக்டர் வ. செயதேவன் எம்.ஏ.,பிஎச்.டி.
விரிவுரையாளர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

வா.செ.கு.

டாக்டர் வா.செ. குழந்தைசாமி
துணைவேந்தர்
அண்ணா பல்கலைக்கழகம்
சென்னை.

வி.க.

பேராசிரியர் வி. கணபதி
தமிழ்ப் பேராசிரியர் (ஓய்வு)
பிளாட் எண் 57
2–ஆம் குறுக்குத் தெரு
சீனிவாச நகர், கொளத்தூர் அஞ்சல்
சென்னை.

வி.கோ.

டாக்டர் வி. கோமதி நாயகம்
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தலைவர் – சமூகவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வி.சே.

திரு. வி. சேஷாசலம் எம்.ஏ.
துணைப் பேராசிரியர்
தத்துவத் துறை
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

வி.பா.

புலவர் வி. பாலகிருட்டிணன்
2 பதினாறாம் தெரு
தில்லை கங்கா நகர்
சென்னை.

வீ.ப.கா.சு.

டாக்டர் வீ.ப.கா. சுந்தரம் எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அழகர்கோயில் சாலை
மதுரை.

வெ.ப.

டாக்டர் வெ. பழநியப்பன் எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.
தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

வே.க.

டாக்டர் வேதகிரி கணேசன் எம்.ஏ.,பிஎச்.டி.
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

வே.கா.

டாக்டர் வே. காத்தையன் எம்.ஓ.எல்.,பிஎச்.டி.
தமிழ்த்துறைத் தலைவர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

வை.இ.

டாக்டர் வை. இரத்தினசபாபதி வித்வான்,
பி.ஓ.எல்.,எம்.ஏ.,பிஎச்.டி.
தத்துவத் துறைப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

ஜி.ஆர்.கி.

டாக்டர் ஜி.ஆர். கிருட்டிணமூர்த்தி எம்.ஏ.,பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்
அ.வீ.வா. நினைவு திருபுட்பம் கல்லூரி
பூண்டி
தஞ்சாவூர் மாவட்டம்.

ஜி.எம்.ஜா.

திரு. ஜி.எம். ஜான்
கல்வி அலுவலர்
பிரிட்டிசு கவுன்சில்
அண்ணா சாலை
சென்னை.

ஜெ.இரா.

பேராசிரியர் ஜெ. இராமச்சந்திரன்
கல்வியியல் துறை (ஓய்வு)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்.

ஜெ.கோ.பி

டாக்டர் ஜெ. கோதைப்பிள்ளை
பேராசிரியர் – துறைத் தலைவர்
கல்வியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ஜெ.மு.

பேராசிரியை திருமதி ஜெயா முனுசாமி
எம்.ஏ.,எம்.பில்.
தத்துவத் துறைத் தலைவர்
பச்சையப்பர் கல்லூரி
சென்னை.

ஜே.நீ.

டாக்டர் ஜே. நீதிவாணன் எம்.ஏ.,பிஎச்.டி.
மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

# நன்றியுரை

## முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்

The New Caxton Encyclopaedia, Britannica Micropaedia Ready Reference, The World Book Encyclopaedia, The Americana Encyclopedia, Collier's Encyclopaedia, Compton's Encyclopaedia, The New Book of knowledge, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India by Sivarama Murthy 'C', Delhi and its Neighbourhood, A.S.I., Archaeological remains, monuments and museums, Archaeological Survey of India, part I, II, 1000 Great Lives by Plantagenet Somerset Fry, Early Civilizations-World History in color, Larousse Encyclopaedia of Archaeology, The Wonder that was India by Basham A.L., Anthropology: A General Introduction by Victor Barnoun, Physical Anthropology by philip L. Steine, Anthropology: Perspective on Humanity by Mare J. Swarts David K. Jordan, Nature, Culture and Human History by Davydd J. Greenwood, William A. Stini, The Houses of Mankind by Colin Duly, கலைக் களஞ்சியம், தொகுதி – 1,5,7, பழங்காலப் பண்பாடும் பழங்குடிகளின் பண்பாடும்.

## ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்

சோவியத்துத் தூதரகம், சென்னை; பிரெஞ்சு இந்தியக் கலைக் கழகம், பாண்டிச்சேரி; அரசு அருங்காட்சியகம், சென்னை; பண்டைய வரலாறு, மற்றும் தொல்லியல் துறை, சென்னைப் பல்கலைக்கழகம்; அரியானாப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அழகப்பா கல்வி அறக் கொடை நிறுவனம், காரைக்குடி; பெரியண்ணா மடம், தஞ்சாவூர்; க.ப. அறவாணன், சென்னை; இராமகிருட்டிணன், அரியலூர்; மு. அருணகிரி – செந்தூரன், மதுரை; டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி, சென்னை.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும், தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நா. பாலுசாமி**
முதன்மைப் பதிப்பாசிரியர்

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகத். | = | அகத்திணையியல் |
| அகம். | = | அகநானூறு |
| ஆ. | = | ஆணை |
| உரு. | = | உருபாய் |
| எ.டு. | = | எடுத்துக்காட்டு |
| கி.பி. | = | கிறித்துவுக்குப் பின் |
| கி.மீ. | = | கிலோ மீட்டர் |
| கி.மு. | = | கிறித்துவுக்கு முன் |
| கு.இ. உறவு | = | குரல் இளி உறவு |
| குறள். | = | திருக்குறள் |
| குறு.<br>குறுந். | = | குறுந்தொகை |
| ச.கி.மீ. | = | சதுரக் கிலோ மீட்டர் |
| 'ச.ப'. உறவு | = | சட்ச பஞ்சம உறவு |
| சிலப். | = | சிலப்பதிகாரம் |
| சூ. | = | சூத்திரம் |
| செய். | = | செய்யுளியல் |
| சொல். | = | சொல்லதிகாரம் |
| திருமந். | = | திருமந்திரம் |
| தொல். | = | தொல்காப்பியம் |
| தொல். புறம். | = | தொல்காப்பியப் புறத்திணையியல் |
| நச். | = | நச்சினார்க்கினியர் |
| நற். | = | நற்றிணை |
| நூ. | = | நூற்பா |
| நூற். | = | நூற்றாண்டு |
| பதிற். | = | பதிற்றுப்பத்து |
| புறஞ். | = | புறஞ்சேரி யிறுத்த காதை |
| பெ.தி. | = | பெரியபுராணம் - திருநாவுக்கரசு நாயனார் புராணம் |
| பொருள். | = | பொருளதிகாரம் |
| மீ. | = | மீட்டர் |
| வி. | = | விதி |
| வேனிற். | = | வேனிற்காதை |

# வாழ்வியற் களஞ்சியம்

**அ:** அ என்பது தமிழ் நெடுங்கணக்கிலுள்ள முதல் எழுத்தாகும். உயிரும் மெய்யுமாக அமைந்த எழுத்துகளின் வரிசையை நெடுங் கணக்கு என்பர். ஆங்கிலம் போன்ற மொழிகளில் உயிர் எழுத்துகளும் மெய்யெழுத்துகளும் கலந்த நிலையில் நெடுங்கணக்கு அமைந்துள்ளது. தமிழ், வடமொழி ஆகிய இந்திய மொழிகளில் உயிரெழுத்துகள் முதலிலும் மெய்யெழுத்துகள் பின்னரும் அமைந்துள்ளன. பிற இந்திய மொழிகளிலும் நெடுங்கணக்கு இவ்வாறே அமைந்துள்ளது. இன்று தமிழில் வழங்கும் மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம் அகரம் எழுத்துகட்கு முதலாக அமைவதைக் குறிப்பிடுகிறது. திருக்குறளும் அகரமே எழுத்துகளுக்கெல்லாம் முதலாவது என்று சுட்டுகிறது.

வடிவம்: தமிழெழுத்துகளின் முதலெழுத்தாகிய 'அ' என்பதன் வரிவடிவம் காலந்தோறும் மாறுபட்டு வந்துள்ளது. அதன் வளர்ச்சி நிலைகள் பின்வருமாறு:

மீனாட்சிபுரம் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) ...... 

கொங்கர் புளியங்குளம் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) ...... 

திருப்பரங்குன்றம் (கி.பி. முதல் நூற்றாண்டு) ...... 

ஆனைமலை (கி.பி. முதல் நூற்றாண்டு) ...... 

புகளூர் (கி.பி. 2-ஆம் நூற்றாண்டு) ...... 

ஆண்டிப்பட்டிக் காசு (கி. பி. 2ஆம் நூற்றாண்டு) ...... 

பூலாங்குறிச்சி (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு) ...... 

'ஆ' என்னும் நெட்டெழுத்தின் வடிவம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருநாதர் குன்றுக் கல்வெட்டில்  என அமைந்துள்ளது. இதில் நெடிலைக் குறிக்க வரும் குறியீட்டினை நீக்கிய நிலையில்  என்ற வடிவம் கிடைக்கும். எனவே, கி.பி. 5-ஆம் நூற்றாண்டளவில் இதன் வடிவம் எவ்வாறிருந்திருக்கும் என ஒருவாறு ஊகிக்கலாம்.

தமிழெழுத்துகளின் வளர்ச்சி நிலைகளில் மூவகைப் பாகுபாட்டினைக் குறிப்பர். அவை முறையே கோலெழுத்து, வட்டெழுத்து, கிரந்தவெழுத்து எனப்பெறும். எழுத்துகளின் வரிவடிவம் திரிகின்றமைக்குக் கல், உலோகம், ஓலை முதலான எழுதப்படு பொருள்களின் தன்மை, உளி, எழுத்தாணி போன்று எழுதப் பயன்படுத்திய பொருள்களின் தன்மை, வைத்த கை வாங்காமல் தொடர்ந்தும் விரைந்தும் எழுதும் தன்மை முதலானவை காரணங்கள் என்பர். மேலே குறிப்பிட்ட காலம்வரை கோலெழுத்துக் காலம் எனலாம். இதன் பின்னர் வரும் வடிவங்களை வட்டெழுத்து அல்லது வட்டம் என்பர். இதனைத் தெக்கன் மலையாளம் என்றும், நானாமோனா என்றும் குறிப்பர். இவை பாண்டிய நாட்டிலும் சேர நாட்டிலும் பெரும்பான்மையாகவும், கொங்கு நாட்டில் சிறுபான்மையாகவும் வழக்கிலிருந்தவை. உள்ளீடிட்டு வட்டமாய் எழுதப் பெற்றமையான் இப்பெயர் பெற்றன, எனலாம். இவ்வட்டெழுத்துகளில் 'அ' என்பதன் வளர்ச்சி நிலைகள் பின்வருமாறு:


இருளப்பட்டி நடுகல் (கி.பி. 6-ஆம் நூற்றாண்டு) …… 

ஏனாதிக் கல்வெட்டு (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) …… 

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு …… 

கி.பி. 10-ஆம் நூற்றாண்டு …… 


கி.பி. 11-ஆம் நூ்ற்றாண்டு …… 

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு …… 

கி.பி. 14-ஆம் நூற்றாண்டு …… 

கி.பி. 18-ஆம் நூற்றாண்டு …… 

பிற மொழிச் சொற்களை, குறிப்பாக வட மொழிச் சொற்களைத் தமிழில் எழுதக் கிரந்த எழுத்துகள் பயன்படுத்தப்பெற்றன. தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகளிலும் இத்தகு கிரந்த எழுத்துகள் காணப்படுகின்றன. எனினும், அகரத்திற்குரிய வரிவடிவம் இக்கல்வெட்டுகளில் வரவில்லை. முதன் முதலாகப் பல்லவர் கால எழுத்துச் சான்றுகளில் தான் அகரத்திற்குரிய வரிவடிவம் கிடைக்கிறது. அகரம் கிரந்த எழுத்துகளில் காலந்தோறும் வளர்ந்த நிலைகளைக் கீழே காணலாம்.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டு (பல்லவர் காலம்) …. 

கி.பி. 8-ஆம் நூற்றாண்டு (பல்லவர் காலம்) …… 

கி.பி. 11-ஆம் நூற்றாண்டு (சோழர் காலம்) …… 

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு (பாண்டியர் காலம்) …… 

கி.பி. 15-ஆம் நூற்றாண்டு (விசயநகர அரசர் காலம்) …… 

**அகர ஒலி:** இவ்வொலி மொழி முதல், இடை, கடை என்னும் மூவிடங்களிலும் வரும். வாயைத் திறத்தலால் இவ்வொலி பிறக்கும் என்பர் இலக்கண நூலார். இவ்வொலி அடிப்படை ஒலியாக எல்லா எழுத்துகளிலும் கலந்து நிற்கும். 'அ' எனத் தனித்துச் சொல்லும்போது கரம், காரம், கான் என்னும் சாரியைகள் சேர்த்துக் கூறப்பெறும். கான் சாரியையோடு சேர்த்துக் கூறும்போது ஆய்த எழுத்தையும் சேர்த்துக் கொள்வர். (எ-டு) அஃகான். பொதுவாக இது அ-னா என 'னா' என்னும் சாரியையோடு வழங்கப் பெறுகிறது. மொழிநூலார் இவ்வொலியை Λ என்னும் வரி வடிவத்தால் குறிப்பர்.

வரலாற்று நிலை: திராவிட மொழிகளுக்கு மூலமான தாய்த் திராவிட மொழியிலும் இந்த அகரவொலி உண்டு. ஐ, ஒள என்னும் கூட்டொலிகள் அய், அவ் என்றும் ஒலிக்கப்பெற்றன. தொல்காப்பியரும் ஐ=அஇ/அய், ஒள=அஉ/அவ் ஆகிய வழக்குகளைச் சுட்டுவார். தாய்த் திராவிடமொழிக் காலத்திலிருந்து வழங்கி வரும் இவ்வொலி, பல்லவர், சோழர் காலத்தே வேறு உயிர் ஒலிகளாகவும் திரிந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பல்லவர் காலம்:** | மங்கலம் | > | மங்கிலம் |
| | மேலன | > | மேலின |
| | கடா | > | கிடா |
| **சோழர் காலம்:** | அதனுக்கு | > | அதினுக்கு |
| | புகுந்தது | > | புகுந்துது |

இக்காலத்தே ஐகார ஒலியும் அகரமாக மாறுவதனைக் காணலாம். (எ-டு) ஐந்து > அஞ்சு. இது போலவே அகரமும் ஐகாரமாகத் திரிகிறது. (எ-டு) அரசர் > அரைசர். இலக்கண நூலார் இத்தகு மாற்றங்களைப் போலி என்பர். இவை தமிழிற் கலந்த வடமொழிச் சொற்களிலும் காணப்படுகின்றன. (எ-டு) கங்கை > கெங்கை; தண்டம் > தெண்டம். சில சமயங்களில் அகரம் இதழ்ச் சாயல் பெற்று ஒகர ஒலியாகவும் திரிந்துள்ளது. (எ-டு) அனுபவித்து > அனுபொவித்து; புர(வு)வர் > புரொவர். வைணவ மணிப்பிரவாள உரைநடையில் இவ்வகரம் ஒகாரமாகவும் ஒலிக்கப்பட்டமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளன. (எ-டு) வாருங்கள் > வாருங்கோள்

நாயக்கர் காலத்தே சில சமயங்களில் இகர ஒலி அகரமாகத் திரிந்துள்ளது. (எ-டு) ஞாயிறு > ஞாயறு; வயிறு > வயறு. இது போலவே அகரஒலியும் எகர ஒலியாகத் திரிந்துள்ளது. (எ-டு) கவுதமன் > கெவுதமன். இவ்வாறே எகரமும் அகரமாகத் திரிந்துள்ளது. (எ-டு) எல்லாம் > அல்லாம்.

மிகப் பழங்காலத்திலேயே திசைச்சொற்கள் வழங்கி வந்தமையைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இன்றும், தமிழகத்தில் பல வட்டாரங்களிலும் திசைச்சொல் வழக்குகள் காணப்படுகின்றன. இவ் வட்டார வழக்குகளில் அகர ஒலி பல வகைகளில் திரிந்து ஒலிக்கப்பெறுகிறது. மொழியீற்றில் வரும் னகரம் மறைவதால் அதற்கு முன்னுள்ள அகர வுயிரும் மூக்கொலிச் சாயல் பெற்ற (Nasalization) ஒலிகளாகத் திரிகிறது. (எ-டு) அவன் > அவெ > (அ > எ) (ல மூக்கொலிச்சாயல்); மரம் > மரொ (அ > ஒ). சில வட்டாரங்களில் அ > இ எனத் திரிகிறது. (எ-டு) பலா > பிலா. வட தமிழ் நாட்டில் அவர்கள் என்பது அவங்க > அவுங்க எனத் திரிகிறது. தென்தமிழ் நாட்டிலும் கொங்கு நாட்டிலும் அவர்கள் என்பது, ரகரம், ளகரம் ஆகியவை கெட்டு அவிக எனத் திரியும். மறையோர் வழக்கில் இந்த அகரம் ஆகாரமாக ஆதலும் உண்டு. (எ-டு)

அவர்கள் > அவாள். தனிநிலையில் குசுகுசு (Whispering) எனப் பேசும்போது. இந்த அகர ஒலி ஒலிப்புடை ஒலியாக (Voiced sound) அன்றி, உயிர்ப்பொலியாக (Breathed sound) வும் ஒலிக்கப்படுகிறது.

பொருள்:

1. (அ) சுட்டுப் பொருளில் வரும். சுட்டு அண்மைச் சுட்டு, சேய்மைச் சுட்டு என இரு வகைப்படும். இவற்றுள் அ-சேய்மைச் சுட்டாகும்.

   (ஆ) சுட்டினை அகச்சுட்டு எனவும், புறச்சுட்டு எனவும் இரண்டாகப் பகுப்பர். அ-இவ்விரண்டு நிலைகளிலும் வரும். (எ-டு) அது, அவை - அகச்சுட்டு; அச் சிலம்பு, அப் புத்தகம் - புறச்சுட்டு.

2. சாரியையாக வரும். சாரியைகளை எழுத்துச் சாரியை, பதச்சாரியை என இரண்டாகப் பகுப்பர். அகரம் இவ்விரண்டு நிலைகளிலும் வரும். (எ-டு) க, ங. இவ்விடத்தில், க்,ங், என்னும் ஒலிகளை எடுத்துக் கூறும்போது எழுத்துச் சாரியையாக வந்துள்ளது. பதச் சாரியையாக வருதல்: (எ-டு) தமிழ் + கூத்து → தமிழ் + அ + கூத்து = தமிழக்கூத்து.

3. பெயர்ச் சொற்களிலும் தெரிநிலை வினைமுற்றுகளிலும் ஈற்றின்கண் பலவின்பால் விகுதியாக வரும். (எ-டு) பல, சில-பெயர்ச்சொல்; வந்தன, சென்றன-வினைமுற்று.

4. குறிப்புப் பெயரெச்சங்களின் ஈற்றிலும் அகரம் வரும். (எ-டு) பெரிய, சிறிய.

5. தெரிநிலைப் பெயரெச்சங்களின் ஈற்றிலும் அகரம் வரும். (எ-டு) சென்ற, போன.

6. ஆறாம் வேற்றுமைப் பொருளில் அஃறிணைப் பன்மை உருபாக வரும். (எ-டு) நின் + அ = நின தாள்கள்.

7. செயவென் வாய்பாட்டு வினையெச்ச விகுதியாக வரும். (எ-டு) வர, சொல்ல.

8. பழந்தமிழில், செய்யுளில் சில வேற்றுமை உருபுகள் தாமே நின்று ஒலிக்காமல் அகரமாய்த் திரிந்து ஒலிப்பதுண்டு. (எ-டு) "காவலோனைக் களிறஞ் சும்மே" என்பது, "காவலோனக் களிறஞ் சும்மே" என வரும்.

9. அசைச் சொல்லாக வரும். (எ-டு) "தன் வழிய காளை" (சீவக.494).

10. தமிழ் மொழிக்கு முதலில் வாராத எழுத்தினை மொழி முதலாக உடைய சில வட சொற்கள் தமிழ் மரபுவழிப்படும்போது முதலில் அகரம் பெறும். (எ-டு) ரங்கநாதன்-அரங்கநாதன்: ரத்தம்-அரத்தம்.

11. சில பெயர்கள் விளிக்கப்படும் பொழுது, ஈற்றெழுத்து கெட்டு அகரமாக நின்றொலிக்கும். எ-டு தலைவன் - தலைவ; இராமன் - இராம.

12. வியங்கோள் விகுதியாக வரும். (எ-டு) 'வாழிய கொற்றா' (வாழி + ய் + அ; யகரம் உடம்படு மெய்); 'சாவ வென வாழான்' (சிறுபஞ்ச.66) (சா + வ் + அ; வகரம் உடம்படுமெய்).

13. வடமொழி மரபு பற்றிச் சில சொற்களுக்கு முன், அன்மைப் பொருளைத் தரும் வகையில் அகரம் வந்து நிற்கும். (எ-டு) நாகரிகம்-அநாகரிகம்.

14. எதிர்மறை இடைநிலையாக வரும். (எ-டு) தாரான்; (இதில் அகரம் ஆன் என்னும் விகுதியில் கலந்துவிட்டது. அன்றி 'அல்' என்பதன் மரூஉவாக வந்தது என்பாரும் உளர்).

15. தமிழ் எண்மானத்தில் அ என்பது 8 என்னும் எண்ணைக் குறிக்கும்.

   (எ-டு) க, உ, ங, ச, ரு, சு, எ, அ, கூ, ௰, (1-10).


   இதன் வரிவடிவம் கீழ்வருமாறு:

   குகை எழுத்து ......

   பல்லவர் காலம் ......

   பாண்டியர் காலம் ......

   இந்நாள் ...... அ



16. ஆ என்னும் நெடில் தனக்குரிய இரண்டு மாத்திரைக்குமேல் அளபெடுக்கும்போது, அதற்கு அறிகுறியாக, அந்நெடிலை அடுத்து அகரம் குறிக்கப்பெறும். (எ-டு) "ஆஅதும் என்னும் அவர்."

17. வண்ண இசைப்பாட்டில் வாய்பாடாக அகரம் இறுதியில் இடம்பெறும். (எ-டு) தன, தனன, தானன முதலியன.

18. தமிழில் சொல்லாக்கஞ் செய்ய உதவியாக வரும். (எ-டு) செல்-செல.

19. ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் மூன்று எழுத்துகளுள் அகரம் முதலாகி வரும்; அ + உ + ம் = ஓம் (அகாரம், உகாரம், மகாரம்).

20. கீதையில் கண்ணன் 'எழுத்துகளுள் நான் அகரமாக உள்ளேன்' என்று அருளியமையால் அகரம்

இறைவனையும் காட்டும். சிறப்பு வகையால் இவ் வகரம் பிரமன், திருமால், சிவன் ஆகிய முத்தொழிற் கடவுளரையும் குறிக்கும். கோ.வி.

**அஃதை** என்பவள் சோழ மன்னன் ஒருவன் மகள்; பொற்சிலம்பு அணிந்தவள்; அழகு மிக்கவள். இவள் தோன்றியதால், சோழர்குடி சிறப்பெய்தியது என்றும், இவள் தந்தை பெருமை பெற்றார் என்றும் கருதுமாறு மருதம் பாடிய இளங்கடுங்கோ என்ற புலவர் இவளைப்பற்றிப் பாடியுள்ளார் (அகம். 96). காண்க: அகுதை.

**அஃறிணை** என்பது அல், திணை என்னும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். உலகத்தில் உள்ள பொருள்களை மக்கள், மக்கள் அல்லாத பிற என்று பாகுபாடு செய்வது பெரும்பாலான மொழிகளில் காணப்படுகிறது.

தமிழ் இலக்கணத்தில் மக்கள், மக்கள் அல்லாத பிற என்னும் வேறுபாடு, திணை வேறுபாடு எனப்படும். மக்களைக் குறிப்பிடும் பெயர்கள் உயர்திணைப் பெயர்கள் என்றும், பிறவற்றைக் குறிப்பிடும் பெயர்கள் அஃறிணைப் பெயர்கள் என்றும் கூறப்பெறும். அஃறிணை என்பது உயர்வு அல்லாத திணை என்று பொருள்படும். சங்க காலத்தில் அஃறிணைப் பெயர்கள் யாது, எவன் என்ற சொற்களையும், இக்காலத்தில் எது, என்ன என்ற சொற்களையும் வினாவாக ஏற்றுவரும்.

எல்லா மொழிகளிலும் திணைப் பாகுபாடு இருந்தாலும், தமிழில் அது சிறப்பான இலக்கணக் கூறாகக் கருதப்படுகிறது. இதற்கு இரண்டு சிறந்த காரணங்கள் உள்ளன. ஒன்று, பெயர்ச்சொற்களில் குறிப்பாகச் சுட்டுப் பெயர்களில் வேறுபாடு இருப்பது; மற்றொன்று, வினைமுற்றிலும் அந்த வேறுபாடு அமைந்து, எழுவாயாக வரும் பெயருக்கும், வினைமுற்றில் இறுதியாக அமையும் விகுதிக்கும் இயைபு (Concordance) இருப்பது. அதாவது, எழுவாய் உயர்திணை ஆண்பால் என்றால், வினைமுற்றில் ஆன் விகுதி பெற்று 'வந்தான்' என்பது போன்றே பயனிலை இருக்கவேண்டும். எடுத்துக்காட்டு: கண்ணன் வந்தான்.

தமிழில் திணை என்பது, பால் என்னும் மற்றோர் இலக்கணக் கூறோடு சேர்ந்து சுட்டுப் பெயரிலும் வினைமுற்றிலும் காணப்படுகிறது. எனவே உயர்திணையை அதன் ஒருமை நோக்கியும், பால் வேறுபாடு நோக்கியும், ஆண்பால், பெண்பால் என்றும், அவற்றின் பன்மை நோக்கிப் பலர்பால் என்றும் பிரிக்கின்றனர். அஃறிணையை அதன் எண்ணிக்கை நோக்கி ஒன்றன்பால் பலவின்பால் என்று இரண்டாகப் பிரிக்கின்றனர். இதற்குக் காரணம், மேலே குறிப்பிட்டவாறு சுட்டுப் பெயர்களில் அவன், அவள், அவர், அது, அவை என்று ஐந்து வகையும், வினைமுற்றில் வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன என்று ஐந்து வகையும் காணப்படுவதுதான். இவ்வாறு மொழி அமைப்பில் வேறுபாடு இருப்பதால்தான் இலக்கணத்தில் திணைப்பாகுபாடும், பால் பாகுபாடும் சேர்ந்து 'திணை – பால் பாகுபாடு' என்று வழங்கப்படுகிறது.

அஃறிணையைப் பொறுத்தவரை தமிழ் மொழியில் இரண்டு செய்திகள் சுட்டிக் காட்டத் தக்கன. ஒன்று, உயர்திணையில் ஆண், பெண் என்று வேறுபாடு செய்யப்பட்டதுபோல, அஃறிணையில் செய்யப்படாமை; இரண்டு, அஃறிணையில் எண் அடிப்படையில் ஒன்றன்பால், பலவின்பால் என்னும் வேறுபாடு மட்டும் செய்யப்பட்டுள்ளமை. உலகப் பொருள்களைப் பொறுத்தவரை, விலங்குகள், பறவைகள், பூச்சிகள் ஆகிய உயிருள்ள பொருள்களில் ஆண், பெண் என்னும் வேறுபாடு இருப்பது உண்மைதான். ஆனால், அந்த வேறுபாடு, தமிழ்மொழி அமைப்பில், மேலே குறிப்பிட்டதுபோலச் சுட்டுப் பெயர்களில் உயிருள்ள அஃறிணைப் பொள்களைக் குறிப்பதற்கென்று ஒரு சொல்லோ, அஃறிணைப் பொருளைக் குறிப்பதற்கென்று மற்றொரு சொல்லோ இல்லாமல் 'அது' என்னும் ஒரு சுட்டுப்பெயரே இருப்பதாகும். அதனால்தான், விலங்கு பறவை போன்ற உயிருள்ள பொருளையும் வீடு, கல் போன்ற உயிரற்ற பொருளையும் குறிப்பதற்கு, 'அது' என்னும் சுட்டுப்பெயர் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டு: பறவை அழகானது; அது வானத்தில் பறக்கிறது. வீடு பெரியது; அது அழகாக இருக்கிறது. இங்கு உயிருள்ள பொருளும் உயிரற்ற பொருளும் ஒரே சுட்டுச் சொல்லினையே கொண்டுள்ளதனைப் பார்க்கலாம். இதைப் போலவே, வினைமுற்றிலும் உயிருள்ள பொருளைக் குறிக்கும் சொற்களும் உயிரில்லாத பொருளைக் குறிக்கும் சொற்களும் ஒரே வினைமுற்று விகுதி கொண்டு முடிவதை மேலே காட்டிய எடுத்துக் காட்டால் அறிந்து கொள்ளலாம். இந்தச் செய்தி இலக்கணம் பற்றிய ஒரு பொது உண்மையைப் புலப்படுத்துகிறது. அதாவது, ஒரு மொழியின், இலக்கணம் என்பது, அந்த மொழியில் அமைந்துள்ள வேறுபாடுகளை ஒட்டி அமைக்கப்படுமே தவிர, உலகப்பொருள்களில் உள்ள வேறுபாடுகளை ஒட்டி அமைக்கப்படாது என்பதே.

அஃறிணையில் பொதுவாக ஒருமை பன்மை வேறுபாடு இருந்தாலும், சுட்டுப் பெயர்கள் ஒழிந்த

பிற பெயர்ச் சொற்களில் (இதைத் தொல்காப்பியர் 'அஃறிணை இயற்பெயர்' என்று குறிப்பிடுவார்) வடிவத்தில் ஒருமை பன்மை வேறுபாடு கொள்ளாது வினைமுற்றில் மட்டும் வேறுபாடு கொள்வது உண்டு. மரம் என்பது அஃறிணை ஒருமைச்சொல்; மரங்கள் என்பது அஃறிணைப் பன்மைச் சொல்; ஆனால், மரம் என்பதனையே ஒருமையாகவும் பன்மையாகவும் பயன்படுத்தலாம். பன்மையைக் குறிக்கவேண்டுமாயின், பன்மை வினை முற்றைத் தவறாது பயன்படுத்த வேண்டும். ஆகவே, 'மரம் விழுந்தது' என்பது அஃறிணை ஒருமை வினைமுற்று வாக்கியமாகவும், 'மரம் விழுந்தன' என்பது அஃறிணைப் பன்மை வினைமுற்று வாக்கியமாகவும் அமையும். அஃறிணைப் பன்மை வினைமுற்று வாக்கியத்தில் எழுவாயாக வந்துள்ள பெயர் ஒருமை வடிவமாக இருப்பது கவனிக்கத்தக்கது. ஆகவே, 'பால்பகா அஃறிணைப்பெயர்கள்' என்று சுட்டுப் பெயர் அல்லாத பிற பெயர்கள் இலக்கணத்தில் குறிப்பிடப்படுகின்றன. ஒருமை, பன்மை பகுத்து அறிய முடியாத அஃறிணைப் பெயர்கள் என்பது இதற்குப் பொருள். ஆனால், இன்றைய தமிழில் பன்மைப் பெயர்கள் பெரும்பாலும் 'கள்' விகுதி சேர்த்தே பயன்படுத்தப்படுகின்றன.

செ.வை.ச.

**அக்கபோதி** என்பவன் சிரீலங்கா மன்னனான மானவன்மனின் மகன். இவன் கி.பி. 718-இல் மன்னனாக முடிசூட்டிக்கொண்டவன்; பல்லவ மன்னர் முதலாம் நரசிம்மரின் அரண்மனையில் சிறிது காலம் வாழ்ந்தவன். எனவே, சிரீலங்காமீது பல்லவரின் செல்வாக்கு வளர்ந்திருந்தது. பாண்டியர்க்கும் பல்லவர்க்கும் போர் ஏற்பட்ட போது, அக்கபோதி பல்லவ மன்னருக்கு உறுதுணையாக இருந்தான். இவன் கி.பி. 724-இல் காலமானான்.

**அக்கமாதேவி** கன்னட நாட்டுப் பெண்பாற் புலவர் ஆவர். வடகர்நாடகத்தில் வசவண்ணர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் தோன்றி வீரசைவ மதத்தைப் பரப்பினார். இந்நெறியைப் பின்பற்றிய அடியார் சிவசரணர் எனப்படுவர். இவர்கள் தமது கருத்துகளையும் இறை அனுபவங்களையும் பாடல் வடிவில் எழுதி வைத்தார்கள். இவை 'வசனங்கள்' எனப்படும். இவர்களுள் பெண்கள் பலர் இருந்தார்கள். இவர்களுள் ஒருவரே அக்கமாதேவி. இவர், அக்கமாதேவி என்றும் மகாதேவியக்கா என்றும் அழைக்கப்பட்டார். 'அக்கா' என்ற சொல் வீரசைவ சமயத்தில் இவரை மட்டுமே குறிக்கப் பயன்பட்டது. அக்கமாதேவியின் வசனங்கள் பட்டறிவின் களஞ்சியம்; உணர்ச்சி வெள்ளம்; கவிதைப் பெட்டகம். பெண்களுக்கே உரிய வகையில் எளிய சொற்களையும், அழகிய உவ



அக்கமாதேவி

மைகளையும் பயன்படுத்தித் தம் கருத்துகளை இவர் வெளிப்படுத்தினார். எளிமையும் தெளிவும் இவர் தம் கருத்துகளில் மிளிர்கின்றன.

அக்கமாதேவி வடகர்நாடகத்திலுள்ள உடுதடி என்னும் ஊரில் விமலர் என்பவருக்கும் சுமதி என்பவருக்கும் மகளாகப் பிறந்தார். இருவரும் சிவநெறிப்படி மகளை வளர்த்தனர். சிவவழிபாடு இவர் வாழ்க்கை நெறி ஆகியது. சிரீசைலம் என்னும் ஊரைப்பற்றியும், அங்கு உறையும் இறைவன் மல்லிகார்ச்சுனனைப் பற்றியும் கேள்விப்பட்டார். அந்த இறைவனையே தம் கணவனாக வரித்துக்கொண்டார்.

அந்நாளில், அவ்வூரையாண்ட கௌசிகன் என்ற மன்னன் உலாப் போகும்போது அக்கமாதேவியைக் கண்டு,அவள் அழகில் மயங்கி,மணம் செய்துகொள்ள விரும்பினான். அவள் மணத்துக்கு ஒப்புக்கொள்ளாவிடில் பெற்றோர் உயிரிழக்க நேரிடும் என்பதற்காக அக்கமாதேவி அரசனை மணக்க ஒப்புக்கொண்டார். தம் வழிபாட்டுக்குத் தடைவிதிக்கக் கூடாதென்றும், தடை ஏற்படுமானால் மூன்று முறை பொறுத்துக் கொள்வதாகவும் கூறினார். மணம் நிறைவேறியது. ஆனால், அக்கட்டுப்பாட்டின்படி அவனால் நடக்க முடியவில்லை. எனவே, அக்கமாதேவி அரண்மனையை விட்டு வெளியேறினார். கௌசிகன் தொட்ட ஆடைகளையும் களைந்து விட்டு, கூந்தல் உடலினை மறைக்கக் கலியாண நகரம் சேர்ந்தார். வசவண்ணர் முதலிய வீரசைவ அடியார்கள் அங்கே அனுபவ மண்டபத்தில் கூடியிருந்து, தம் இறையனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அக்கமாதேவியும் அவர்களுள் ஒருவர் ஆனார். ''அடியார், மனைவியரே; ஆண்டவனே கணவன்'' என்ற சீரிய கருத்தை அங்கே நிலைநாட்டினார்.

சிவசரணர் (சிவனடியார்) என்ற நிலையை எய்திய அக்கமாதேவி, தம் வசனங்களால் இறைவனுக்குப் புகழாரம் சூட்டினார். உலக வாழ்க்கையில் மக்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று வழி காட்டினார். உடல்மீதுள்ள பற்றுக் குறைவதற்கும், ஆன்மாவை அறிவதற்கும், ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைவதற்கும் வழிகூறினார். "அகந்தை கூடாது; பசிக்கும்போது பிச்சை எடுத்து உண்ண வேண்டும்; ஏரி குளங்களில் உள்ள நீரைக் குடித்துக் கோயில்களில் படுத்து உறங்க வேண்டும்; மாயை, உலகம் என்ற வடிவத்தில் எல்லோரையும் மயக்குகிறது; இதிலிருந்து விடுபட ஒரு குருவை அணுக வேண்டும்; குருவே உய்யும் நெறி காட்டுவார்." இவ்வாறெல்லாம் தம் வசனங்களில் பாடியிருக்கிறார் அக்கமாதேவி. 'சென்ன மல்லிகார்ச்சு' என்பது இவர் தம் வசனங்களில் பதித்துக்கொண்ட முத்திரையாகும். வாழ்க்கையின் மறைபொருளை மக்களுக்கு மிகத் தெளிவாக விளக்கினார். வீரசைவ வசன இலக்கியத்தில் 'அக்கா'வின் இடம் இணையற்றதாகும்.

டி.பி.சி.

**அக்கரா,** கானா என்னும் மேற்கு ஆப்பிரிக்க நாட்டின் தலைநகர்; அந்நாட்டின் மிகப்பெரிய நகரம். கினி வளைகுடா கடற்கரையில் அமைந்துள்ள இந் நகரம் சிறப்பான வாணிக மையமாகும். கானா நாட்டின் கோகோ விளையும் உள்நாட்டுப் பகுதிகளுடன் அக்கரா (Accra) மாநகர் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இந்நகருக்குக் கிழக்கில் 26 கி.மீ. தொலைவில் உள்ள தெமா (Tema) என்ற புதிய தொழிற்சாலை நகருக்கும் இந்நகருக்கும் இடையே இருப்புப்பாதைத் தொடர்புண்டு. அக்கராவில் ஆழ்நீர் செயற்கைத் துறைமுகம் ஒன்றும் உள்ளது. வோல்டா ஆற்று (Volta river) நீர்மின் திட்டம் அக்கரா, தெமா ஊர்களுக்கு மின்சக்தி அளிக்கிறது. இங்குள்ள விமானநிலையம் உள்நாட்டு, வெளிநாட்டுப் பயணத்திற்கு உதவுகிறது.

அகன்ற சாலைகளையும் அழகிய தோட்டங்களையும் மணற்பாங்கான கடற்கரைகளையும் கொண்டது இக்கால மாநகரம் அக்கரா. இங்குள்ள அரசு கட்டிடங்கள் மிக உயரமானவை. கானா 1957-இல் விடுதலையான பின்னர்ப் பெரும்பாலான கட்டிடங்கள் கட்டப்பெற்றன. நாடாளுமன்றப் பெருமன்றம் வெள்ளையர் ஆட்சியின்போது கட்டப்பட்டது. வெப்பம் மிகுந்த மண்டலத்தில் அமைந்துள்ளதால், அக்கராவின் பல பகுதிகளில் பழந்தரும் மரங்கள் பெருகி வளர்ந்துள்ளன. அக்கரா கானா நாட்டின் கல்வி மையமாகவும் திகழ்கிறது. கானாவின் அறிவியல் கழகத்தின் தலைமையிடமும் இதுதான். இங்குக்



அக்கரா நகரம்

கானா நாட்டின் அருங்காட்சியகமும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நகருக்கு அண்மையில் 1948-இல் இலெகான் (Legon) என்னுமிடத்தில் கானாப் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்டது.

அக்கரா நகரம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் உருவானபோது, போர்ச்சுகீசியர், டச்சியர் (The Dutch), தேனியர் (The Danes) போன்ற அயலவர் கட்டிய மூன்று கோட்டைகள் இதன் அடித்தளமாக அமைந்தன. இக் கோட்டைகள் அடிமை வாணிகத்திற்காக அமைக்கப்பெற்றவை. இவை கி.பி. 19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் வசமாயின. அக்கரா கி.பி. 1876-இல் கோல்டு கோசுட்டு (Gold Coast) என்னும் பெயர் கொண்ட ஆங்கிலக் குடியேற்றப் பகுதியின் தலைநகராயிற்று. கோல்டு கோசுட்டே பின்னர்க் கானா (Ghana) வாயிற்று. இதன் மக்கள் தொகை 6,37,000 (1980).

**அக்கராபாலிசு** என்பது பண்டைய கிரீசு நாட்டில் இருந்த நகர அரசுகளின் (City States) மையப் பகுதியாகும். தொடக்ககாலக் கிரேக்கர்கள், தம் நகரங்களைக் குன்றுகளைச் சுற்றி அமைத்துக் கொண்டார்கள். இவ்வாறு அமைத்துக் கொள்வது நகரின் பாதுகாப்பிற்கு உகந்ததெனக் கருதப்பட்டது. குன்றுகளின் உச்சியில் பின்னர்க்கோட்டை கொத்தளங்கள் கட்டப்பட்டு, நகர ஆட்சி நிறுவனங்கள் அமைக்கப்பட்டன. அவை, சமய மையங்களாகவும் விளங்கின.



அக்கரா பாலிசு (Acropolis)

இவ்வாறு, குன்றின்மீது கட்டப்பட்ட நகரம், சுற்றியுள்ள ஏனைய நகரங்களுக்குத் தலைநகராக விளங்கியது. நகர ஆட்சி அங்கிருந்தே நடத்தப் பெற்றது. ஆதென்சு (Athens) நகர அரசு இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகைய நகர அரசுகள் சங்க காலத் தமிழகத்திலும் அமைந்திருந் தன என்பது புறநானூறு என்னும் தொகைநூல் கொண்டு அறியலாம்.

**அக்கள நிம்மடி**[1] என்பவர் பாண்டிய வேந் தன் சீமாற சீவல்லபனின் அரசியார்; பொத்தப்பிச் சோழனான சீகண்டனின் மகள்; பராந்தக வீரநா ராயணனின் தாயார். இவரது திருமணத் தொடர் பால் பாண்டியர், பொத்தப்பிச் சோழரின் உதவி பெற்றுப் பல்லவர்களை வென்றனர்.

**அக்கள நிம்மடி**[2] மூன்றாம் நந்திவர்ம பல் லவனின் தாயார். இவர் கதம்ப குல இளவரசியாவர்.

ம. இரா.

**அக்காரக்கனி நச்சுமனார்** திருவள்ளுவ மாலை பாடிய புலவர்களுள் ஒருவர்; சங்கப் புலவர் களுள் ஒருவராகவும் கருதப்படுவார். இவர் உக்கிரப் பெருவழுதியால் ஆதரிக்கப்பட்டவர் என்று கூறுவர். திருவள்ளுவமாலையின் மற்றொரு பாடல் நச்சும னார் பாடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், அக்காரக்கனி நச்சுமனாரும், நச்சுமனாரும் வெவ்வேறு புலவர்கள் என்பது தெரிகிறது. திருக்குறளை இவர் சிறப்பித்துப் பாடியிருக்கும் பாங்கு, இவர் தம் புலமை நலத்தைக் காட்டுவதாக உள்ளது. வள்ளுவரின் நய மிக்க முப்பால் நூற்பயன் மாட்சியினை வானில் ஊர்ந்து செல்லும் மதியத்தினிடம் காண இயலுமா என்னும் கருத்தில், ''வானூர் மதியம் தனக் குண்டோ வள்ளுவர் முப், பானூல் நயத்தின் பயன்'' என வியந்து அதனைச் சிறப்பித்துள்ளார். இப்போ துள்ள சங்கத் தொகை நூல்களில் இவரது பாடல் ஒன்றும் இடம் பெறாமைகொண்டு, இவரைச் சங்க காலப் புலவர்களுள் ஒருவராகக் கொள்ளுதல் பொருந்தாது என்று கூறுவாருமுளர். ச.செ.

**அக்கி திம்மய்யா நாயக்கர்** என்பவர் துலுக்காண நாயக்கரின் மகன். தம் கோட்டையில் பணிபுரிந்தமைக்காகத் தனிப்பட்ட மனிதர் ஒருவ ருக்குத் துண்டு நிலமொன்றை மானியமாகக் கொடுத் தவர். நாயக்கர்கள் தம் பெயரில் சிற்றூர்களை நிலைநாட்டிக் கொள்ளும் உரிமை பெற்றிருந்தார் கள். தங்கள் விருப்பப்படி கோயில்களுக்கு நன்கொ டைகள் வழங்கவும், அவர்கள் உரிமை பெற்றிருந் தார்கள். அக்கி திம்மய்யா நாயக்கர் கி.பி. 1513-ஆம் ஆண்டில் தம் பெயரிலும், தம் தந்தையார் பெயரி லும் சதுர்வேதிமங்கலம் ஒன்றை நிலைநாட்டினார்.

**அக்கிபூசை** புத்தரைக் குறித்துக் கொண்டா டப்பெறும் பண்டிகைகளுள் ஒன்று. இப் பண்டி கையை ஏழு நாள்கள் கொண்டாடுவர். இதைப் பேரரசர் அசோகர் கொண்டாடினார் என்று கூறுவர். புத்த பெருமானின் உருவத்தை அசோகரின் காலத்

தவரான மகாகாளர் என்பார் வடித்துக் கொடுத்தார் என்றும் கூறுவர். இக்கொண்டாட்டத்தின் போது பேரரசர் அசோகர் உண்ணா நோன்பிருந்தார் என்றும், இவ்வுருவத்தைக் கண்களைச் சிமிட்டாமல் உற்றுப் பார்த்தார் என்றும் கூறுவதுண்டு. அக்கி என்பது கண்களைக் குறிக்கும். இதனை 'மகாவம்சதிகா' என்னும் நூலில் விளக்கமாகக் காணலாம்.

**அக்கியாபு** என்னும் நகரம் பர்மா நாட்டு வடமேற்குக் கடற்கரையிலுள்ள அரக்கான் பகுதியில் அமைந்துள்ளது. இப்பகுதியைக் கொண்ட மாவட்டமும் அக்கியாபு. (Akyab) எனப்படும். அக்கியாபு ஒரு துறைமுகத் தீவு. பர்மாவின் நான்கு பெரும் துறைமுகங்களுள் இது மூன்றாம் இடத்தைப் பெறுகிறது. அக்கியாபுத் தீவு, கலடன் ஆறு கடலில் கலக்கும் கழிமுகத்தில் வங்காள விரிகுடாவில் அமைந்துள்ளது. இத் தீவு பெரும்பாலும் தட்டையானது. இந்நகருக்குக் கிழக்கில் உள்ள பகுதி பசுமை நிறக் காடுகளைக் கொண்ட வெப்ப மண்டலத்தில் உள்ளது. கடற்கரையில் பெரும்பகுதி சதுப்புநிலமாகவும், தாழைக் காடுகளைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது. சமவெளியின் ஒரு பகுதியில் வேளாண்மை நடைபெறுகிறது. இங்குச் சணலும் நெல்லும் பயிரிடப்படுகின்றன. பர்மாவின் கடற்கரையை அடுத்துள்ள தீவாயினும், அரக்கான் யோமாவின் அடர்ந்த காடுகளும், மலைப்பாங்கான நிலப்பகுதியும் அக்கியாபைப் பர்மாவிலிருந்து தனிமைப்படுத்தியுள்ளன. இதனை இரங்கூனுடனும் அரக்கானின் ஏனைய பகுதிகளுடனும் இணைக்கும் வானவூர்தி, கப்பல் தடங்கள் ஆகியவை உள்ளன. இத்தீவு ஆண்டொன்றுக்கு 510 செ.மீ. மழையைப் பெறுகிறது. கோடையில் பருவக்காற்றுகளால் இம் மழை பொழிகிறது. அக்கியாபில் பொன்னிறப் பகோடாக்கள் என்னும் புத்த சமயக் கோயில்கள் நிறைந்துள்ளன. அவற்றுள் மிகப்பெரியது மகாமுனி பகோடாவாகும்.

அரக்கான் பகுதி கி. பி. 1826–ஆம் ஆண்டில் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவுக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. அக்கியாபு மீனவர் சிற்றூராக விளங்கியது. இந்நகரே அரக்கானின் தலைநகராகவும் சிறந்த துறைமுகங்களுள் ஒன்றாகவும் விளங்கலாயிற்று. இரண்டாம் உலகப்போரின்போது, அக்கியாபு அமைந்திருக்கும் சிறப்பான இடத்தைக் கண்ட சப்பானியர் அதனைக் கைப்பற்றி 1942 முதல் 1945 வரை தம் ஆளுகையில் வைத்துக்கொண்டனர். அவர்கள் அங்குச் சாலைகளை அமைத்தார்கள். அக்கியாபு நகரை இன்று சிட்வே (Sittwe) என்று கூறுகின்றனர். இந்நகரின் மக்கள் தொகை 1,43,125 ஆகும் (1973).

ஆங்கிலப் படை 1945–ஆம் ஆண்டு பெருந்தாக்குதல் நடத்திச் சப்பானியரை இப் பகுதியை விட்டு வெளியேற்றியது.

**அக்கிரகாரம்** என்பது பார்ப்பனர் வாழும் பகுதி. இது பார்ப்பனர்க்குக் கொடையாக வழங்கப்பெற்ற பகுதி என்று பொருள்படும். வேள்விகளைச் செய்த பார்ப்பனர்க்குக் கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலங்களிலிருந்து அக்கிரகாரம் தோன்றியிருக்கலாம். வேதங்களைக் கற்றுத் தெளிந்த அறிஞர்களாகவும், ஆன்மீக வழிகாட்டிகளாகவும் பார்ப்பனர் இருந்திருக்க வேண்டும். அவர்தம் பணிக்காகக் கொடுக்கப்பெற்ற ஊர்கள் அக்கிரகாரம் எனப்பட்டன. அத்தகைய நிலங்களைக் கௌடில்யர் பிரமதேய நிலங்கள் என்று குறிப்பிடுகிறார். இவற்றை இறையிலி நிலம் என்றும் கூறலாம். கொடையாகப் பெறுகிறவர் தம்மைப் பேணிக் காத்துக்கொள்ளுதற்குப் போதுமான உணவுப் பொருளை இந்நிலத்திலிருந்து பெறுவர். அவர் வரி செலுத்த வேண்டுவதில்லை. மேலும், பார்ப்பனர்க்கு அன்பளிப்பு, நன்கொடைகள், அறப்பணிகளின் பொருட்டு வழங்கப்பெற்ற நிலங்கள் ஆகியனவும் அக்கிரகாரம் என்ற சொல்லாலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

**அக்கிரிகோலா** (கி. பி. 40–93) என்பவர் கி.பி. 78 முதல் 84 வரை இங்கிலாந்தில் உரோமானிய ஆளுநராகப் பணியாற்றினார். ஆளுநராக ஆவதற்கு முன், உரோமானியப் படையில் இவர் பணிபுரிந்தார். படை வீரர்களை அணி வகுத்து வழி நடத்திச் செல்வதில் அக்கிரிகோலா (Agricola) மிக்க தேர்ச்சி பெற்றிருந்தார். தமது ஆளுநர் பதவிக் காலத்தில் தம் முன்னையோர் பெற்றிருந்த வெற்றிகளை உறுதிப்படுத்த விரும்பினார்; அதற்கான சூழ்ச்சிகள் பலவற்றையும் மேற்கொண்டார்; வட வேல்சுப் பகுதியைக் கைப்பற்றினார். மேலும் தொடர்ந்து, கிளைடு (Clyde) ஆறுகள் வரை பரவியிருந்த பகுதிகளையும் வென்றார். மேட்டு நிலப் பகுதிகளின் அடிவாரத்தில் வாழ்ந்த கலிடோனியர்களைத் தோற்கடித்தார்.

இங்கிலாந்தில் அமைதியை நிலைநாட்டி வலுவான ஆட்சியை இவர் உறுதிப்படுத்தினார். இவர் கி.பி. முதல் நூற்றாண்டில் உரோமானியக் குடியேற்ற ஆட்சிக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்கினார். இவர் மருமகனான தாசிடசு (Tacitus) என்ற வரலாற்றாசிரியர் இவரது ஆட்சித்திறமை பற்றிப் புகழ்ந்துள்ளார்.

**அக்கிரிப்பினா(கி.பி. 21-59)** என்பவள் உரோமானியப் பேரரசர் அகசுடசு (Augustus) என்பாரின் பெயர்த்தி; பேரரசனாகிய நீரோவின் தாயார். அரசுக்கு எதிரான ஒரு சதியில் ஈடுபட்டதால், அக்கிரிப்பினா (Agripinna) பேரரசர் கலிக்குலாவினால் நாடு கடத்தப்பட்டாள். இவள் மாமன் பேரரசனான போது, இவள் மீண்டும் உரோமாபுரிக்குத் திரும்பினாள். செல்வனும், ஆட்சிப் பேரவையின் உறுப்பினனு



அக்கிரிப்பினா

மான ஒருவனை இவள் கணவனாகப் பெற்றாள். செல்வத்திலும் அழகிலும் அன்றைய உரோமாபுரியில் இவளை ஒப்பாரும் மிக்காரும் இலர் என்பர்.

தன் மாமனும் பேரரசனுமான கிளாடியசின் மனைவி கொலையுண்ட பின்னர், இவள் அவனையே இரண்டாம் முறை திருமணம் செய்து கொண்டாள். கிளாடியசை இவள் தன் விருப்பம்போல் ஆட்டி வைத்தாள். முதல் கணவனுக்கும் தனக்கும் பிறந்த மகன் உலூசியசு (Ulysses) என்பவனை அரசப் பதவிக்கு உரிமையாக்கினாள். கிளாடியசு இறந்த பின்னர், அவனே நீரோ என்ற பேரரசன் ஆனான்.

**அக்கிரியாவாதம்**: சமணத்தையும் பௌத்தத்தையும் தோற்றுவித்த மகாவீரரும் (கி.மு. 559-527) புத்தரும் (கி.மு.570-490) வாழ்ந்த காலத்தில் 363 வகையான தத்துவக் கருத்துகள் பல்வேறு கூட்டத்தாரிடையே நிலவி வந்தன எனப் பிற்காலச் சமண பௌத்த சமய-தத்துவ இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. இந்த 363 வகையான தத்துவக் கருத்துகளை அக்காலத்திய சிந்தனையாளர், கிரியாவாதம், அக்கிரியாவாதம், அஞ்ஞானவாதம், விநயவாதம் என்ற நான்கு பெரும் பிரிவுகளில் அடக்கினர். அக்கிரியாவாதத்தில் 84 வகைகள் இருந்தன. ஆன்மா உண்டு; அது செயல்களில் ஈடுபடுகிறது; செயல்களின் விளைவுகளை அது நுகர்கிறது என்ற கொள்கையைக் கொண்டதே கிரியாவாதம். அதற்கு எதிரான கொள்கையைக் கொண்டதே அக்கிரியாவாதம். அது வினையின் தேவையையோ அதன் பயனையோ ஏற்றுக் கொள்ளவில்லை. நடப்பது நடந்தே தீரும் என்றும் மனித முயற்சிகளும் செயல்களும் பயனற்றவை என்றும் அது எடுத்துரைத்தது.

அக்கிரியாவாதிகளுள் எக்கவாதிகள், அநிக்கவாதிகள், மிதவாதிகள், நிமித்தவாதிகள், சாயவாதிகள், சமுச்சேதவாதிகள், நியதிவாதிகள், நசாந்திவாதிகள் என்று சொல்லப்பட்ட எட்டுப் பிரிவினர் தம் காலத்தில் வாழ்ந்ததை மகாவீரர் குறிப்பிட்டுள்ளதாகத் தாணாங்க சூத்திரம் என்னும் சமய நூல் அறிவிக்கிறது. அவர்களுள் பலர், காலம், ஈசுவரன், ஆன்மா, நியதி, சுபாவம், யதிருச்சா (ஊழ்) எனப்படும் ஆறும் உலகப் படைப்பிற்கு மூலகாரணங்கள் எனக் கூறினர்.

சமணரும் பௌத்தரும் அக்கிரியாவாதத்தை வன்மையாகக் கண்டித்த போதிலும், அதன் கொள்கைகளில் சிலவற்றை ஏற்கத் தயங்கவில்லை எனத் தெரிகிறது. கூ.ரா.ந.

**அக்கில்** வட அயர்லாந்தின் கடற்கரையை ஒட்டியுள்ள ஒரு தீவு. அயர்லாந்துப் பெரு நிலப்பகுதியையும், அக்கில் (Achill) தீவையும், அக்கில் சவுண்டு (Achill Sound) என்னும் குறுகிய நீர்ப்பிரிவு பிரிக்கிறது. எனவே இதனை ஒரு பாலத்தால் இணைத்துள்ளனர். இது மேயோ என்னும் மாவட்டத்திற்குட்பட்டது. அங்குள்ள தூகா (Doogah), கீல் (Keel) என்னும் ஊர்களில் வாழ்வோர் மீன் பிடிக்கின்றனர். உருளைக்கிழங்கும் ஓட்சும் அங்கு வாழும் மக்களுக்கு முக்கிய உணவுப் பொருள்களாகும்.

முக்கோண வடிவில் அமைந்த இத் தீவு கீழ் மேலாக 24 கி.மீ. நீளமும், தென் வடலாக 20.கி.மீ அகலமும் உள்ளது. இதன் மொத்தப் பரப்பு 146 ச.கி.மீ. தீவின் மேற்கு ஓரத்தில் அக்கில் எட்டு(Achill-Head) என்னும் முனையுள்ளது. மலைப் பாங்கான இத்தீவின் மிக உயர்ந்த மலை முகட்டைச் சிலீன் மோர் என்பர். இதன் உயரம் 735 மீ. இதன் மக்கள் தொகை 3129 (1971).

**அக்கிலீசு** ஒரு கிரேக்க வீரன். இவன் இலியாது (Iliad) என்னும் கிரேக்கப் பெருங்காப்பியத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளவன்.

தேட்டியசு (Tatius) என்னும் கடல் தெய்வத்தைத் தாயாகவும், பிலியசு (Peleus) என்னும் சிற்றரசனைத் தந்தையாகவும் கொண்டவன் அக்கிலீசு

(Achilles). தன் மகன் சாகா வரம் பெறவேண்டு மென்ற ஆவலோடு பாதாள உலகில் ஓடிய ஓர் அதிசய ஆற்றில் அவனை அழுத்தி எடுத்தாள் தேட்டியசு. மகனின் குதிகால்களைத் தன் இரு கைகளால் பற்றிக்கொண்டு தலைகீழாக அவனை ஆற்றிலிட்ட போது, அவன் சாகாத் தன்மையைப் பெற்றான். எனினும், அவள் கைகள் பற்றிய குதிகாற்பகுதிகள் அதிசய நீரில் நனையவில்லை. அக்கிலீசின் இறப்பு, அந்தப் பகுதியில் எதிரியின் அம்பு பாய்வதால் ஏற்படும் அபாயம் உருவாகியது. இதனை அறியாத தாய் தன் மகன் பாதுகாப்புப் பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைந்தாள்.

போர்க் கலைகளில் தேர்ச்சி பெற்ற அக்கிலீசு, வலிமை, விரைந்து செயல்படல், துணிவு முதலிய வற்றிற்காகப் பாராட்டப்பெற்றான்.



அக்கிலீசு

எலன் (Hellen) என்னும் அழகிய பெண்ணைக் கவர்ந்து சென்ற பாரிசு (Paris) என்ற இளவரசனைத் தண்டித்து, எலனை மீட்டுவரக் கிரேக்கப் பெரும் படை திராய் (Troy) என்ற நகரை நோக்கிப் புறப் பட்டது. கிரேக்கர் தம் பக்கம் அக்கிலீசு சேர்ந்தால் போரில் வெற்றி வாய்ப்பு ஏற்படும் என்றெண்ணித் தம் படையோடு வந்து சேர்ந்துகொள்ளும்படி அக் கிலீசை வேண்டினர். அக்கிலீசும் கிரேக்கர் பக்கம் சேர்ந்தான். பல சிக்கல்கள், போர்கள் ஆகியவற்றை அக்கிலீசு சந்தித்துத் தன் வீரத்தை நிலைநாட்டி னான். இறுதியில் நடந்த போரில் அப்பல்லோ(Apollo) என்ற தெய்வத்தின் துணையோடு பாரிசு, அக்கிலீசின் உடல்வலிமையற்ற பகுதியான குதிகாலில் அம்பைப் பாய்ச்சியதால் அவன் இறந்துபட்டான்.

அக்கிலீசின் இணையற்ற வீரத்திற்குப் பாராட் டுக் கிடைத்தது. மேலும், மனிதனின் வலிமையற்ற உடற்பகுதியை 'அக்கிலீசின் குதிகால்' (Achille's heel) என்று கூறும் வழக்கமும் உண்டாயிற்று.

***அக்கினி*** நெருப்புக் கடவுள். இந்திரனுக்கு அடுத்தபடியாக அக்கினியைத்தான் வேதங்கள் மிகுதி யாகக் குறித்துள்ளன. அக்கினியின் பெற்றோர் குறித்துப் பலவகைக் கருத்துகள் உள்ளன. அக்கினியைத் தியாயசுக்கும் பிருத்துவிக்கும் (பூமி) பிறந்தவன் என்பர். கசியபர், அதிதி ஆகியோரின் மக்களுள் ஒருவனாக இவனை இணைத்துக் கூறும் மரபும் உண்டு. அக்கினி ஆதித்தியர்களுள் ஒருவன். அபிமானி என்றும் இவனைப் புராணங்கள் குறிப்பிடு கின்றன. மேலும், அக்கினி பிரமாவின் மூத்த மகன் என்றும், அவன் மனைவி சுவாகா என்றும் புராணங் கள் கூறும். சுவாகாவுக்கும் அக்கினிக்கும் பாவகர் பாவமானர், சூசி ஆகிய மூன்று பிள்ளைகள் பிறந் தார்களென்றும், அம் மூவருக்கும் நாற்பத்தைந்து பிள்ளைகள் பிறந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட் டுள்ளது.

அக்கினியின் தன்மை பலவகையாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மக்களுக்கும் தெய்வங்களுக்கும் இடைப் பட்டவனாகவும் அவர்தம் பொருள்களைக் காக்கும் காவலனாகவும் செயல்களுக்குச் சான்று பகர்பவனா கவும் அவர்களைச் சாகாவரம் பெற்றவர்கள் ஆக்கு பவனாகவும் அக்கினி குறிப்பிடப்படுகிறான். முனி வர்களுள் இவன் தூய்மையானவன்; தனக்குப் படைக்கும் பொருள்களை நறுமணம் ஆக்குபவன்; மன்பதையைக் காப்பவன்; ஒவ்வொரு வீட்டிலும் அன்புடன் வரவேற்கப்படும் இனிய விருந்தினன். இவனுக்கு நெய் சொரிந்து படைப்பார்கள்; இவனைத் தீயாக வளர்ப்பார்கள். இவனே ஞாயிற்றுக் கும் விண்மீன்களுக்கும் முன்னோடி. இவன் கட்டளை களுக்கு மண்ணும் விண்ணும் கீழ்ப்படிந்தன. இவனை அனைவரும் வழிபட்டனர்.

இராமனுக்கு உதவுவதற்காக நீலன் என்பானுக் கும் குரங்குத் தாய் ஒருத்திக்கும் மகனாக அக்கினி பிறந்தான் என்பது இராமாயணத்தில் குறிப்பிடப் பெற்ற செய்தியாகும். இவன் மிகுதியான யாகங் களைச் செய்து தன் ஆற்றலைச் செலவிட்டு விட் டான் என்று மகாபாரதம் கூறுகிறது. தன் வலிமையை மீண்டும் பெறுவதற்காகக் காண்டவ வனம் முழுவதையும் எரிக்க விரும்பியதாகவும், அதை இந் திரன் தடுக்க முயன்றதாகவும் மகாபாரதம் கூறு கிறது.

'அரிவமிசம்' என்னும் நூல் அக்கினி கறுப்புடை தரித்தவன் என்றும், புகை இவனது கொடி என்றும் தலையணி என்றும் சித்திரிக்கிறது. இவனிடம் எரி

யும் வேல் இருந்ததாகவும், இவன் நான்கு கைகளைக் கொண்டவனாகவும், பொன்னாலான குதிரைகள் இவனது தேரை இழுத்துச் சென்றதாகவும் சொல் லப்படுகிறது. இவனது வாகனம் செம்மறியாடு.

அக்கினிக்குப் பல பெயர்கள் உண்டு. அவற்றுள் ஒரு சில: வாகின் (ஓமவேள்வியைப் பெறுபவன்), தனஞ்சயன் (செல்வத்தை வெல்பவன் அல்லது அழிப்பவன்), விதகோத்திரன் (யாகத்தைப் புனித மாக்குகிறவன்), சுவாலன் (எரிப்பவன்), தூமகேது (மேகத்தைக் கொடியாகக் கொண்டவன்), உதாசா (படைப்புகளை உண்பவன்), சகரதன் (செம்மறி யாட்டு வாகனன்), சூசி அல்லது சுப்ரா (ஒளி மிக்க வன்), உரோகிதாசுவர் (செந்நிறக் குதிரைகளை உடையவன்), சப்தசிகுவாகன் (ஏழு நாக்குக் கொண் டவன்), தோமராதாரன் (உலக்கையைக் கொண்ட வன்). இவன் தென்கிழக்கு மூலையின் காவலனாகக் குறிப்பிடப்படுகிறான்.

சிற்பங்களில் அக்கினியைக் கிழவனாகச் சித்திரித் துள்ளனர். இவனைச் சூரியனின் சரி பாதியாகக் கருதுவர். இவன் உடலுறுப்புகள் செந்நிறத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவனுக்கு இரண்டு முகங் களும், ஆறு கண்களும், ஏழு கைகளும், ஏழு நாக்கு களும், நான்கு கொம்புகளும், மூன்று கால்களும் உண்டு என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இவனைச் சுற்றிலும் வட்டவடிவ ஒளிப் பிழம்பு இருக்கும்.

அக்கினி, புத்த சமயத் தேவதைகளாகவுள்ள எட்டுத் திக்குப் பாலர்களுள் ஒருவனாகக் குறிப்பிடப் பட்டுள்ளான். இந்திரன், இயமன், வருணன், குபே ரன், ஈசானன், நிருதி, வாயு என்போர் ஏனைய திக் குப் பாலர்கள். அக்கினியின் சிற்பங்கள் திருவாங் கூரைச் சார்ந்த கண்டியூர்ச் சிவன் கோயிலிலும், தில்லை நடராசர் கோயிலிலும் காணப்படுகின்றன.

**அக்கினிமித்திரர்** மோரியர்களைத் தொடர்ந்து வட இந்தியாவை ஆண்ட சுங்க மரபின் இரண்டாம் அரசர். அவர் தந்தை புசியமித்திர (Pushyamitra) சுங்கன்; சுங்க மரபினைத் தோற்றுவித்தவர். பாரூத் தூபி (Barhut Stupa) அக்கினிமித்திரரின் ஆட்சிக் காலத்தில் எழுப்பப்பட்டது. முடி சூட்டிக்கொண்ட போது, முதிர்ந்த வயதினராய் இருந்தமையால், அவர் எட்டாண்டுகளே ஆட்சி நடத்தினார். காளி தாசரால் எழுதப்பெற்ற 'மாளவிகாக்னிமித்திரம்' என்னும் வடமொழி நாடக உறுப்பினர்களுள் அக் கினி மித்திரர் தலைமையானவர்.

**அக்கீசன், தீன் குட்டர்காம் (கி.பி. 1893-1971)** அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சார்ந்த அரசி யல் வித்தகர். அமெரிக்கக் குடியரசுத் தலைவர் துரு மன் (Truman) என்பாரின் ஆட்சியின்போது (1949-1953) இவர் (Acheson, Dean Gooderham) அமெரிக்க வெளியுறவு அமைச்சராக இருந்தவர்.

இவர் 11-4-1893-இல் கனக்டிகட்டு மாநிலத்தில் உள்ள மிடில்டவுன் என்னும் ஊரில் பிறந்தார். ஏல் (Yale) பல்கலைக்கழகத்திலும், ஆர்வர்டு (Harward) சட்டக்கல்லூரியிலும் மூன்றாண்டுகள் பயின்று (1915-1918) பட்டங்கள் பெற்றார். பின்னர், வாசிங்டனில் உலூயி தி. பிராண்டிசு (Louis D.Brandeis) என் பாரின் தனிச் செயலராகப் பதவியேற்றார். இவர் பண்பாட்டுச் சட்டத்துறையில் வல்லுநர்.

பிராங்லின் தி.உரூசுவெல்ட்டு (Franklin D. Roosevelt) குடியரசுத் தலைவராக இருந்தபோது (1933) அவருடைய சார்புச் செயலராகப் (Under Secretary) பணியாற்றினார். ஆனால் சிறிது காலத்துக் குப் பின் அப்பதவியைத் துறந்துவிட்டு வழக்குரைஞ ரானார். மீண்டும் இவர் அரசு ஊழியராகி (1941-45) இணைச் செயலரானார். ஐ.நா. அவையின் உதவி மற்றும் மறுவாழ்வு நிருவாகக் குழுவில் 1943-இல் உறுப்பினரானார்.

வெளியுறவுக் கொள்கையை உருவாக்கிச் செயல் படுத்துவதில் மார்சலுக்கு (Marshall) உறுதுணையாக நின்றார் அக்கீசன். உருசியாவின் செல்வாக்கு வளர் வதைத் தடுக்க, அமெரிக்காவின் செல்வாக்கைப் பெருக்குவது ஒன்றே வழி என்பதை இருவரும் ஏற் றுக்கொண்டனர். கிரீசு நாட்டிலும், துருக்கியிலும் ஏற்பட்ட உள்நாட்டு நெருக்கடியின் போது (1947) மாபெரும் பொருளாதார உதவியின்மூலம் அமெ ரிக்கா தலையிடவேண்டுமென இருவரும் கருதினர். அதன் விளைவுதான் 'துருமன் கோட்பாடு' (Truman Doctrine) ஆகும். மார்சல் திட்டத்தின் மூலம் போரினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்னும் கருத்தினை உரு வாக்கியதிலும் அக்கீசனுக்குப் பங்குண்டு. மீண்டும் சிறிது காலம் வழக்குரைஞராகப் பணி செய்த பின் னர் அக்கீசன் 1949-இல் வெளியுறவு அமைச்சராக நியமிக்கப் பெற்றார். உருசியாவின் முன்னேற்ற வேகத்தைச் சமாளிக்க வடஅட்லாண்டிக் ஒப்பந்த நிறுவனத்தை (NATO) அமைக்க வேண்டுமென அக்கீ சன் பெரிதும் வலியுறுத்தினார். தேசிய சீனாவில் சியாங்கேசேக் என்பாரின் ஆட்சி 1949-இல் வீழ்ச்சி யுற்றபோது, குடியரசுக் கட்சியினர் அவரைக் கடுமை யாகக் குறை கூறினர். கொரியாப் போரில் ஏற் பட்ட இழுபறியே இக் குற்றச்சாட்டுகளுக்குக் காரண மாகும். அக்கீசன் பதவியைத் துறந்த பின்னரும் குடியரசுத் தலைவர்கள் பலருக்குக் கருத்துரை வழங்

கித் துணைபுரிந்தார். பல நூல்களை எழுதியுள்ள இவர் 12—10 –1971 இல் காலமானார்.

**அக்குமீனிய மரபு** கி.மு. ஆறாம் நூற்றாண்டில் பாரசீகப் பேரரசை ஆண்ட முதல் மரபாகும் அதனால் அப் பாரசீகப் பேரரசை அக்குமீனியப். பேரரசு (Achaemean Dynasty) என்றும் கூறுவர். அவர்தம் ஆட்சிக் காலத்தில் பாரசீகப் பேரரசு நைல் ஆற்றிலிருந்து தான்யூப் ஆறு வரை பரவியிருந்தது.

அக்குமீனியப் பேரரசை நிலை நாட்டியவர் மாமன்னர் சைரசு (Cyrus, the Great) என்பவர். இவர் கி.மு.559-529 வரை ஆட்சி செய்தார். அக்குமெனசு என்பவர் சைரசின் மூதாதையருள் ஒருவர். சைரசின் மகன் இரண்டாம் காம்பைசசு (Campyses II) கி.மு.529 முதல் 522 வரை ஆண்டவர். இவர் எகிப்து நாட்டைத் தம் பேரரசுடன் இணைத்தார். இவருக்குப் பின் முதலாம் தேரியசு (Darius I) என்பவர் பேரரசரானார். பெர்சிபாலிசு (Persepolis) என்னும் நகரத்தை உருவாக்கியவர் தேரியசேயாவார். இவரது காலத்தில்தான் பாரசீகப் பேரரசுக்கும் கிரீசு நாட்டிற்கும் இடையே நீண்டதொரு போர் மூண்டது. தேரியசின் மகன் செருசசு (Xerxes) கி.மு. 486 முதல் 465 வரை அரசாண்டவர். இவர்தாம் தருமபைலே (Thermopylae) போரில் வெற்றி பெற்று ஆதென்சு நகரைத் தீக்கிரையாக்கியவர். மூன்றாம் தேரியசு கி.மு. 336 முதல் 330 வரை அரசாண்டவர். இவரே அக்குமீனிய மரபின் இறுதி அரசர். இவரை மகா அலெக்சாந்தர் தோற்கடித்தார்.

**அக்குரன்** சங்க இலக்கியத்தில் வள்ளன்மைக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ள ஆண்மை மிக்க ஒரு வள்ளல். பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்தினைப் பாடிய குமட்டூர்க் கண்ணனார், அப்பத்தின் தலைவனாகிய இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய கொடைத் தன்மையைச் சிறப்பிக்கும்போது இவன் அக்குரனைப்போன்ற வள்ளன்மை உடையவன் என்று பாராட்டியுள்ளார். போர் செய்வதில் மேம்பாடுற்ற துரியோதனன் முதலிய நூற்றுவரொடு படைத்துணையாகச் சென்ற வீரன் அக்குரன் என்பதனை, ''போர் தலை மிகுத்த ஈரைம் பதின்மரொடு, துப்புத்துறை போகிய துணிவுடை ஆண்மை அக்குரன்'' என்று குறிப்பிட்டுள்ளார் (பதிற். 14). இவனைக் கடையெழு வள்ளல்களுள் ஒருவனாகப் பிங்கலந்தை நிகண்டு கூறுகிறது. ஆனால், உ.வே. சாமிநாத ஐயரவர்கள் இவனைப் பற்றி, ''பாரதத்தில் கூறப்படுபவனும் தலையெழு வள்ளல்களுள் ஒருவனுமாகிய அக்குரன் போலும்; கர்ணன் என்று நினைத்தற்கும் இடமுண்டு; ஆதாரம் கிடைக்கவில்லை'' என்று தம் குறிப்புரையில் கூறியுள்ளார்.

**அக்குரூரர்**[1] என்பவர் இயதுவின் வழியில் தோன்றியவர். மகாபாரதத்தில் இடம் பெறும் கதை மாந்தர்களுள் ஒருவர். இவர் தந்தை சுவபல்கன்; தாய் காந்தினி.

இவர் கம்சனின் அமைச்சராக இருந்தார்; கம்சனுடைய வேண்டுகோளின்படி நந்தகோபரிடஞ் சென்று தனுர்வேள்விச் செய்தி குறித்துக் கூறிப் பலராம் கிருட்டிணர்களை இயமுனைக்கரைக்கு அழைத்துச் சென்றார். அவர்களைக் கரையில் நிறுத்தித் தாம்மட்டும் நீரில் மூழ்கினார். அப்பொழுது பலராம கிருட்டிணர் இருவரும் நீரினுள் தேரோடு காட்சி தருவதைக் கண்டு வியந்து வெளியில் வந்தார். அவர்களைக் கண்டு களித்து மீண்டும் நீரில் மூழ்கினார். அவ்வமயம், திருமால் பாம்பணையில் துயிலும் காட்சியைக் கண்டு வணங்கினார். பின், பலராம கிருட்டிணர்களைக் கம்சனிடமே அழைத்துச் சென்று நடந்த செய்திகளைக் கூறினார்.


சததன்வா என்பவனிடமிருந்த சியமந்தக மணியைக் கவரச் செய்து, அதனைக் கண்ணன் அறியாதிருத்தற் பொருட்டுக் கங்கைக்குச்சென்றார். கண்ணன் அச் செயலை வெளிப்படுத்தினான்.

2. இவர் சுவர்கன் என்பவரின் மகன்.
3. இவர் திருக்கச்சி வரதராசப் பெருமாளின் அருள் பெற்ற முனிவர்.
4. இவர் இடையெழு வள்ளல்களுள் ஒருவராகக் கருதப்படுகிறார்.

**அக்குரோணி** என்பது பாரத இராமாயணக் காப்பியங்களில் குறிக்கப்படும் ஒரு படையளவு. 21,780 தேர்களும் 21,780 யானைகளும், 68,610 குதிரைகளும், 1,09,350 வீரர்களும் கொண்ட படைப்பிரிவு ஓர் அக்குரோணி எனப்படும். இவ்வெண்ணிக்கை நிகண்டுகளில் வெவ்வேறு வகையாகக் கூறப்பட்டுள்ளது. த.கோ.

**அக்குவினசு, தாமசு, தூய (கி.பி. 1225—1274)** ஒரு சிறந்த இடைக்காலத் தத்துவ அறிஞர். இவர் இத்தாலி நாட்டிலுள்ள 'இராகாசிகா' (Roccasecca) எனும் இடத்தில் பிறந்தார். இவர் நேப்பில்சுப் பல்கலைக் கழகத்தில் தமது படிப்பை முடித்ததும், கி.பி. 1250-இல் தோமினி மடஒழுங்குப் (Dominican Order) போதகராகப் பணிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். இப் பணிப்பொறுப்பு முடிந்தவுடன் கி.பி.1256–இல் பாரிசுப் (Paris) பல்கலைக் கழகத்தில் இறையியல் (Theology) பேராசிரியராகச் சிறிது காலம் பணியாற்றினார்.

இப் பணியிலிருந்தபோது இவர் பல நூல்கள் எழுதினார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, 'சும்மா காண்டிரா செண்டீல்சு' (Summa Contra Gentiles).



அக்குவினசு, தாமசு, தூய

'சும்மா தியாலசிக்கா'(Summa Theologiae )'அரசியல் தத்துவம்' (Political Philosophy) 'அரிசுடாட்டிலின் அரசியற் கொள்கை' போன்றவையாகும்.

இந் நூல்களில் சமயம், சட்டம், தத்துவம், அரசியல், கடவுள் ஆகியவற்றைப்பற்றி அக்கிவினசு குறிப்பிட்டுள்ளார். பிற மதத்தவரும் கிறித்தவ சமயத்தில் சேருமாறு இவர்தம் அறிவுரைகளும் கருத்துகளும் அமைந்திருந்தன. புனித தாமசு நம்பிக்கையையும் சிந்தனையையும் ஒருங்கிணைத்தார். அரிசுடாட்டிலின் கருத்துகள் அனைத்தும் நேரடியாகப் புனித தாமசுக்குக் கிடைக்கப் பெறாமையால் அவர் முகமதிய அறிஞர் அவரோசு எழுதிய நூல்களின் இலத்தீன் வடிவங்களிலிருந்து அரிசுடாட்டிலின் கருத்துகளைப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட அரிசுடாட்டிலின் கருத்தை ஒழுங்குபடுத்தித் திருத்தியமைத்து, கிறித்தவச் சமயப்பிரிவில் ஒன்றாகக் கத்தோலிக்கச் சமயத்தை வளர்க்கப் பயன்படுத்தினார்.

இவர் மெய்ப்பொருளியல் உண்மைக் கொள்கையைப் (Realism) பின்பற்றியவர். தத்துவ முறையில் அறிவு எவ்வாறு கிடைக்கப் பெறுகிறது என்பதை இங்குக் கூறியுள்ளார். புலன் அனுபவ அறிவே அறிவின் சிறந்த தொடக்கமாகும் என்பது இவரது கொள்கை. மெய்ப்பொருளியலில் புலன் கடந்த மெய்ப்பொருளை விளக்குமிடத்துத் தூய தாமசு ஓர் உண்மைக் கொள்கையினராகத் (Realist) திகழ்கிறார். அதே சமயம் கடவுள் நம்பிக்கை உள்ளவராகவும் காணப்படுகிறார். "உண்மை என்பதை எவ்வாறு முறைப்படுத்திக் கூறினும், யார் யாரால் அது பேசப்படினும், அது கடவுளின் தூய ஆவியால் பேசப்படுகிறது" என்று தூய தாமசு அக்குவினசு மெய்ப்பொருளியல் உண்மையினைப்பற்றிக் குறிப்பிடுகிறார். இதுவே அக்குவினசின் கத்தோலிக்கச் சமயக் கொள்கையாகும்.

மக்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதையே விரும்புகிறார்கள். அம்மகிழ்ச்சி இறைவனுடன் ஒன்றுபட்டுணர்தல் வாயிலாகவே கிடைக்கும். அதனைத்தான் கிறித்தவர்கள் விரும்புகிறார்கள் என்று அக்குவினசு (Aquinas, St. Thomas) குறிப்பிட்டுள்ளார்.

கடவுள் முழுமுதற்பொருள். அவர் மக்களுக்கு அருள்புரிகிறார். அவ்வருளின் மூலமாக மக்களின் நோக்கங்கள் நிறைவேறுகின்றன. மேலும், கடவுள் மறைமுகமாக மக்களுக்கு உதவிபுரிகிறார். அவரே இப்பூவுலகைப் படைத்தவரும், மக்களைக் காப்பாற்றுபவரும், உலகச் செயல்களைக் கவனிப்பவரும் ஆவர். இதுவே தூய தாமசின் இறையியற் கொள்கை. இவர் அரசு பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அரசு, மக்களின் நலனுக்காகச் செயல்பட வேண்டும்; மக்களின் உரிமை, வாழ்க்கை, சமயம், கல்வி ஆகியவற்றில் அது கவனம் செலுத்திப் பேணிப் பாதுகாத்திடல் வேண்டும். அத்தகைய அரசே சிறந்த அரசாகக் கருதப்படும். அரசு மக்களைத் தவறான செயலில் ஈடுபடுத்தல் கூடாது என்றும், மக்களின் நலன்களே அரசின் கடமை என்றும் இவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் சட்டங்கள் இயற்கையோடு ஒட்டியவை; அழிவில்லாதவை. உலகியல் சட்டத்தை நிறுவுவதற்கு அரசுச் சட்டங்கள் உதவ வேண்டும். இவ்வரசின் சட்டம் இறைவனின் சட்ட விதிகளுக்கு (Divine law) முரண்படாத வண்ணம் இயற்றப்பட வேண்டும் என இவர் குறிப்பிட்டுள்ளார்.

இடைக்காலத்தில் தாந்தே (Dante) என்னும் அறிஞர், தமது "தெய்விக இன்பியல்" (Divina commedia) என்ற நாடகத்தில், தாமசு அக்குவினசை "தெய்வ ஞானக் கனற்பிழம்பு" (The flame of Heavenly wisdom) 'என்று குறிப்பிட்டுள்ளார். அக்குவினசு கி.பி. 1323-ஆம் ஆண்டு தூய அடிகளாக (Saint) அறிவிக்கப்பட்டார். ஒவ்வோர் ஆண்டிலும் மார்ச்சு 7-ஆம் நாள் இவரது நினைவு நாளாகக் கொண்டாடப்படுகிறது. மு. மு.

**அக்கேயா** பண்டைய கிரீசு நாட்டின் பெலபோனீசசு (Peloponnesus) நகரின் வடகரைப்பகுதி

யாகும். அக்கேயா (Achaea) பன்னிரண்டு நகரங்கள் இணைந்து கி.மு. ஐந்தாம் நூற்றாண்டில் அக்கேயக் கூட்டாக (Achaean League) உருவாயிற்று. இக் கூட்டு கி. மு. மூன்று, இரண்டு ஆகிய நூற்றாண்டுகளில் புகழ் பெற்று விளங்கியது. ஓமர் (Homer) என்னும் கிரேக்கக் கவிஞர் அக்கேயா என்ற சொல்லைத் தாம் இயற்றிய 'இலியாது' (Iliad) என்ற காப்பியத்தில் ஆண்டுள்ளார்.

**அக்கோச பாரத்துவாசர்** இராசகிருகத்தில் வாழ்ந்த அந்தணர். இவர் தமையன் புத்தரால் மதமாற்றம் செய்யப்பட்டது அறிந்து, உணர்ச்சி வயப்பட்டவராய்ப் புத்தரைக் குறை கூறிக் கடுமை யாகத் திட்டினார். ஆனால் இவர் பின்னர்த் தம் தமையனாருடனும் ஏனைய உடன் பிறப்புகளான அசுரிந்தகர், சுந்தரி, பிராங்கிகா என்பவர்களுடனும் புத்தசமயத்தைத் தழுவினார்.

**அக்கோலா** என்னும் ஊர் மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது. பேரார் (Berar) என்னும் பகுதியில், மூர்னா ஆற்றங்கரையில் தபதி ஆற்றுப் பள்ளத்தாக்கில் இந்நகரம் அமைந்துள்ளது. அக்கோலா (Akola) நகர் அக்கோலா மாவட்டத்தின் ஆட்சித் தலைநகராகும். மேற்கில் பட்டூர் என்னும் ஊரிலிருந்து கிழக்கில் நந்தா என்னும் ஊர் வரை சற்றேறக்குறைய 80 கி.மீ. தொலைவிலும், பூர்ணா ஆற்றின் இருமருங்கிலும் 16 கி.மீ. அகலத்திற்கு உப்புக் கிணறுகள் உள்ளன. தகிகண்டா என்னும் ஊருக்கருகிலுள்ள உப்புக் கிணறுகள் தலைசிறந்தவை.

அக்கோலா மாவட்டத்தின் மீது கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் அலாவுதீன் கில்சியின் படைத்தலைவரான மாலிக் காபூர் என்பார் படையெடுத்து அதைக் கைப்பற்றினார். அங்கு முகமதியரின் ஆட்சி நிலைநாட்டப்பட்டது. இம்மாவட்டத்தை இறுதியாக ஆண்ட இந்து அரசர் தேவகிரியைத் தலைநகராகக் கொண்டார். அவர் கி.பி. 1319- ஆம் ஆண்டில் உயிருடன் தோலுரிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார்.

அக்கோலா கரிசல் மண் நிலப்பகுதியாய் இருப்பதால் இங்குப் பருத்தி நன்கு விளைகிறது. பருத்தி நூல் நூற்றல், பஞ்சு வாணிகம், சிகரெட்டு உற்பத்தி போன்றவற்றின் மையமாகவும் இவ்வூர் திகழ்கிறது. பஞ்சாலைகளும் தாவர எண்ணெய்த் தொழில்களும் இங்குச் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்குப் பல கல்விக் கூடங்களும் ஐந்து கல்லூரிகளும் இயங்குகின்றன. பம்பாய் மாநகரையும் நாகபுரியையும் இணைக்கும் இருப்புப்பாதைத் தொடர் அக்கோலாவின் வழியாகச் செல்கிறது.

அக்கோலா மாவட்டம் 10,598 ச.கி.மீ. பரப்பளவைக் கொண்டது. இம் மாவட்டத்தின் வடபகுதியின் குறுக்காகத் தபதி ஆறு பாய்கிறது. வடக்கில் சாத்பூரா மலைத்தொடரும், தெற்கில் அசந்தாக் குன்றுகளும் இம் மாவட்டத்தின் எல்லைகளாம். கோதாவரி ஆற்றின் துணையாறுகளில் ஒன்றான பெனுகங்கை இம் மாவட்டத்தின் தெற்கில் பாய்வதால், இப்பகுதி நீர்ப்பாசன வசதியைப் பெற்றுள்ளது. இங்குள்ள மண்வகை செழிப்பானது. இங்குச் சுண்ணாம்புக்கல் படிவங்கள் சிறப்பாகப் படிந்துள்ளன. நெல், பருத்தி, கோதுமை, தினைவகைகள், வேர்க்கடலை போன்றவை சிறப்பான விளைபொருள்கள். இங்கு வளர்ந்துவரும் தொழிற்சாலைகள் வேளாண்மைத் தொழிலுக்கு உதவுகின்றன. பராசு என்னுமிடத்தில் அனல்மின் நிலையம் உள்ளது.

சிர்பூரிலுள்ள சமணக் கோயிலும், நர்லாலாவிலுள்ள இசுலாமியர் கோட்டையும் சுற்றுலா மையங்களாகும்.

அக்கோலா என்னும் ஊரின் மக்கள் தொகை 1981- ஆம் ஆண்டுக் கணக்குப்படி 2,25,402 ஆகும்.

**அக்டோபர் புரட்சி** உருசிய நாட்டில் 1917- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 - ஆம் நாள் நிகழ்ந்தது. சார் மன்னர்களின் (Tzars) முடியாட்சி ஒழிக்கப்பட்டு, பொதுவுடைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்களாட்சி மலர்ந்த திருநாளாகும் இது. இதனை இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வரலாற்று நிகழ்ச்சி எனலாம். இப் புரட்சி வெற்றி பெற வழி கண்டவர் இலெனின் (Lenin) ஆவார். இப் புரட்சிக்குப் பல காரணங்கள் உண்டு

உருசியாவை ஆண்ட சார் மன்னர்கள் வல்லாட்சி நடத்தி மகிழ்ந்தவர்கள். அவர்கள் ஆட்சித் துறைத் தலைவர்களாகவும், சமயத் துறைத் தலைவர்களாகவும் விளங்கினார்கள். அதனால் கொடுங்கோன்மை தலைகாட்டியது. இரண்டாம் அலெக்சாந்தர் முதல், இரண்டாம் நிக்கோலசு வரை அரசாண்ட மன்னர்கள், புரட்சி இயக்கங்களையும், புதுமைக் கருத்துகளையும் தலையெடுக்கா வண்ணம் தடுத்தார்கள். சமயத் தலைவர்கள் மக்களை அறியாமை என்னும் இருட்டறையில் வைத்திருந்தார்கள். இவ்விரு சாராரும் செய்ய முனைந்த சீர்திருத்தங்கள் மக்களுக்குப் பயனளிக்கவில்லை. நாட்டில் மக்களாட்சிக் கோட்பாடுகள் மலர வாய்ப்பில்லை. எனவே, மக்கள் மன்னர்களின் எதிரிகளானார்கள். வறுமையில் வாடிய தொழிலாளர்களுக்கும் உழவர்களுக்கும் தலைமை தாங்கிய இலெனின் இப் புரட்சி மலர உறுதுணையாக நின்றார்.



இலெனின் செங்காவற்படையினரிடையே
சொற்பொழிவாற்றும் காட்சி
நன்றி: சோவியத்துத் தூதரகம், சென்னை.

நிலவுடைமைச் சமூக அமைப்பில் நிலப் பிரபுக்களே எல்லா நன்மைகளையும் பெற்றார்கள். நிலமற்ற பண்ணை அடிமைகள் வறுமையில் உழன்றார்கள். நாட்டின் பொருளாதாரம் நலிவுற்றது. உழுது பயிரிட்ட ஏழைக் குடியானவர்கள் வறுமை நீங்கி வாழ்வதற்கு நிலத்தின் தேவையை உணர்ந்தார்கள். ஆனால், சார் மன்னர்களின் விடுதலைச் சட்டமோ காகிதச் சட்டமாகவே நின்றுவிட்டது. குடியானவர்களின் பொருளாதார வாட்டம் தீர வழி பிறக்கவில்லை. தொழிற் புரட்சி, தொழிலாளி–முதலாளி என்னும் புதிய சமூக அமைப்பிற்கு வழிகோலியது. உழைப்பிற்கேற்ற ஊதியம் கிட்டாத நிலையும் இப் புரட்சிக்கு வித்திட்டது.

சமூக அமைப்பின் ஏற்றத் தாழ்வுகள் புரட்சிக் கனலுக்கு நெய்வார்த்தன. சமயத் தலைவர்கள், பிரபுக்கள், உயர் அதிகாரிகள், தொழிலதிபர்கள் போன்றவர்கள் உயர் குடிமக்களாகக் கருதப்பட்டார்கள். மற்றவர்கள் கீழ்க்குடி மக்களானார்கள். இவர்கள் அடிமைகளாகவும் கருதப்பட்டார்கள்.

அக்டோபர் புரட்சிக்கு வழிவகுத்தோர் உருசிய நாட்டு அறிஞராவர். தால்சுதாய் (Tolstoy), மாக்சிம் கார்க்கி (Maxim Gorky), துர்கனேவ் (Turganev), தாசுதயோவ்சுகி (Dostoyevsky) போன்ற புத்துலக எழுத்தாளர்கள் புரட்சிக் கருத்துகளைத் தங்கள் புதினங்களில் வெளியிட்டனர். மக்களிடையே மனமாற்றம் தேவையென வலியுறுத்தினார்கள். அதன் காரணமாக உருசியாவில் 1917-ஆம் ஆண்டில் புரட்சிகள் தோன்றின. முதல்புரட்சி அவ்வாண்டு மார்ச்சு மாதத்தில் ஏற்பட்டது. அதில் உயிர்ச்சேதம் இல்லாமல் மன்னராட்சி ஒதுக்கித் தள்ளப்பட்டதெனலாம். சட்டமன்றமான தூமா (Duma) அவையினரும் படைத் தலைவர்களும் இணைந்து, நிக்கலசு மன்னரைப் பதவியிலிருந்து விலக்கி, இடைக்கால அரசு ஒன்றை இலியோவ் (Lvov) தலைமையில் நிறுவினார்கள். இவரால் சமுதாயத்தைச் சட்டத்தின் கட்டுப்பாட்டில் வைக்க இயலவில்லை. இவர் ஆட்சி ஏற்ற சில மாதங்களுக்குள் உருசியாவில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இலெனின் தலைமையில் போல்சி

விக்கு (Bolsheviks) மத்தியக் குழு, ஆயுதப்புரட்சிக்கு ஆயத்தம் செய்தது. புதிய புரட்சிக்கான ஏற்பாடு களை இலியான் திராட்சுகி (Trotsky, Leon) விரைந்து செயலாற்றி முடித்தார். செங்காவற் படைப் பிரிவு கள் அனைத்தும் இராணுவப் புரட்சிக் குழுவின் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டன. இராணுவப் புரட்சிக் குழுத் தலைவர்கள் அக்டோபர் 21-இல் பெட்ரோகிராடு கோட்டையிலிருந்த படைகளைத் தங்கள் பொறுப்பில் கொண்டுவந்தார்கள். இடைக் கால அரசால் இந்த நடவடிக்கைகளைச் சிறிதும் தடுத்து நிறுத்த இயலவில்லை.

புரட்சியின் தலைமையகமான சுமோல்னி கட்டி டத்திற்கு இலெனின் சென்றார். அங்குப் படைப் பிரிவுத் தலைவர்களும் செங்காவற் படைத்தலை வர்களும் தொழிலாளர் தலைவர்களும் நிரம்பி வழிந்தனர். கட்டிடத்திற்கு வெளியே கவசமோட் டார்கள், துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் அனைத்தும் ஆயத்த நிலையில் இருந்தன.

புரட்சிக்கு எதிராக இருந்த இடைக்கால அர சின்மீது திட்டமிட்டபடி தாக்குதல் நடத்தப்பட் டது. அன்றிரவே, அரசு வங்கி, அஞ்சல் நிலையம், தொலைபேசி நிலையம், பாலங்கள், இருப்புப்பாதை கள் போன்ற அனைத்தும் செங்காவலர்களால் கைப் பற்றப்பட்டன.

அரசாங்கத்தின் போர்க் கப்பலான 'அரோரா' என்னும் போர்க் கப்பலும் நெவா ஆற்றில் நங்கூர மிட்டு நின்றிருந்தது. அக்கப்பலும் அரசின் ஆணைக் குக் கீழ்ப்படிய மறுத்ததோடு புரட்சியாளர்களுக்குத் துணையாகவும் செயல்பட்டது. இவ்வாறு, உருசி யப் புரட்சி உச்சநிலை அடைந்து 1917-ஆம் ஆண்டு அக்டோபர் 24-ஆம் நாள் வெற்றிவாகை சூடியது.

இலெனின் தலைமையில் போல்சுவிக்கும் பெட் ரோகிரேடு சோவியத்தும் இணைந்து நின்று நடத் திய, வரலாற்றுச் சிறப்புமிக்க இப்புரட்சி, புத்துலக நாடுகளுக்கு வழிகாட்டியது. ப.ந.

**அக்பர் (கி.பி. 1542–1605)** இந்தியாவை ஆண்ட மொகலாயப் பேரரசர்களுள் மிகச் சிறந்தவர். சலா லுதீன் முகம்மது அக்பர் என்பது அவரது முழுப் பெயர். அக்பர் என்ற சொல்லுக்குப் பெருமை மிக் கவர் என்பது பொருள். தமது பெரு முயற்சியால் அவர் ஒரு பேரரசை நிறுவி, அதனை ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகள் மிகச் சிறப்பாக ஆட்சி செய்தார். அவரது விரிந்த மனப்பான்மையைக் கண்டு, இராச புத்திரர்கள் சீரிய ஒத்துழைப்பைத் தந்தனர். இந்துக் களின் உள்ளங்களை அப் பேரரசர் மிகவும் கவர்ந் தார். அவரது ஆட்சிமுறை தனிச்சிறப்புடையதா கும்.

**தோற்றமும் இளமைப் பருவமும்:** சூர்வமிச அர சர் சேர்சாவால் நாட்டைவிட்டு விரட்டியடிக்கப் பெற்ற அவர் தந்தை உமாயூன் நாடோடியாகத் திரிந்து சிந்துவை வந்தடைந்தார். அங்கும் அதன் ஆளுநர் சாஉசெயினால் வெறுக்கப்பட்டார். இத் தகைய துன்பநிலையில் உழன்று கொண்டிருந்த போது உமாயூனின் மனைவி அமீதா பானுபேகம் சிந்து மாநிலத்தில் தார்பார்க்கர் மாவட்டத்தில் அமரக்கோட்டை என்னுமிடத்தில் கி.பி. 1542-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 15-ஆம் நாள் இராணா வீரசால் என்பவரின் அரண்மனையில் அக்பரைப் பெற்றெடுத்தார். தம் குடும்பத்தையும் குழந்தை யையும் காந்தகாரில் இருக்கும்படி செய்து உமாயூன் பாரசீகத்திற்குச் சென்றார். குடும்பச் சூழ்நிலையின் காரணமாக அக்பர் படிப்பில் கவனம் செலுத்த வில்லை. அவர் வேட்டையாடுவதிலும் போர்ப் பயிற்சி பெறுவதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். அவரிடம் நெஞ்சுரமும் உடல் வலிமையும் ஒருங்கே காணப்பட்டன



அக்பர்

தந்தை உமாயூன் இறந்தபோது கி.பி. 1556-இல் பஞ்சாபில் குர்தாசுபூருக்கு 24 கி.மீ. மேற்கிலுள்ள கலனார் என்னுமிடத்தில் பைராம்கான் என்பவர் 13 வயது அக்பருக்கு முடிசூட்டினார். அவர் இளைஞ ராக இருந்த காரணத்தினால் பைராம்கான் அவரு க்குக் காப்பாளராக இருந்து ஆட்சியை நடத்தி ...

பீகாரை ஆண்ட ஆதில்சா என்ற ஆப்கானியத் தலைவனின் அமைச்சரும் படைத் தலைவருமான ஏமு, மொகலாய ஆளுநர் தார்டிபெக் (Tardibeg) என்பவரிடமிருந்து ஆக்ராவையும் தில்லியையும் கைப்

பற்றினார். வட இந்தியாவில் இந்து அரசை நிறுவத் திட்டமிட்டு ஏமு, அக்பரை எதிர்த்தார். அவரை அக்பரும் பைராம்கானும் பானிப்பட்டு என்னுமிடத்தில் கி.பி. 1556-ஆம் ஆண்டில் நடந்த போரில் கொன்றனர். அதுவே இரண்டாம் பானிப்பட்டுப் போராகும். தில்லியையும் ஆக்ராவையும் மொகலாயர்கள் கைப்பற்றினர். ஆப்கானியர்களுடைய ஆதிக்கம் முற்றிலும் ஒழிந்தது. அவர்களுக்குப் போட்டியாக மொகலாயர்களின் ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டது. இரண்டாம் பானிப்பட்டுப் போர் முடிந்த நான்கு ஆண்டுகளுக்குள் பைராம்கான், குவாலியர், அசுமீர், (Ajmer) சான்பூர் (Jaunpur) ஆகிய பகுதிகளை மொகலாய அரசுடன் சேர்த்தார். அக்பர் தமக்குப் பதினெட்டு வயது முடியும்வரை காப்பாளர் பைராம்கானின் ஆதரவில் ஆட்சியை நடத்தினார். பிறகு கி.பி.1560-இல் பைராம்கானைப் பதவியிலிருந்து நீக்கி, மெக்காவுக்குப் போக ஏற்பாடு செய்தார். பயண ஏற்பாடுகளை முல்லா பீர்முகம்மது என்பவரிடம் ஒப்படைத்தார். போகும்வழியில் கி.பி. 1561-இல் பைராம்கான், முபாரக்கான் என்பவனால் கொல்லப்பட்டார். கி.பி. 1560-க்குப் பின்னர்ப் பிறர் குறுக்கீடின்றி அக்பர் தாமே நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தினார்.

**மொகலாயப் பேரரசின் வளர்ச்சி:** அக்பர் வட இந்தியா முழுவதையும் தமது ஆட்சியின்கீழ்க் கொண்டு வரவேண்டுமென்று எண்ணினார். அதன் பயனாகப் பல போர்கள் செய்ய நேரிட்டன. முதலில் பாசுபகதூர் (Bas Bahadur) ஆட்சி செய்துவந்த மாளவத்தை மொகலாயப் படைத்தலைவர் ஆதம்கான் கி.பி.1561 இல் கைப்பற்றினார். அக்பர் அவரையே ஆளுநராக நியமித்தார். ஆனால் அக்பருடைய ஆதரவை இழந்ததால் ஆதம்கான் கொல்லப்பட்டார். இராசபுத்திர அரசி துர்க்காவதி, தம் மகன் வீர நாராயணனின் காப்பாளராக இருந்து கோண்டுவானாவை ஆட்சி செய்து கொண்டிருந்தார். மொகலாயப் படைத்தலைவன் ஆசப்கான் (Asaf khan) அவருடன் போர்செய்து அவரைத் தோற்கடித்தான். அரசி அதன்பின் தற்கொலை செய்து கொண்டார். வீரநாராயணன் இறுதி மூச்சுவரை போர் செய்து இறந்தார். அக்பர் கோண்டுவானாவை கி.பி.1564இல் தம் அரசுடன் சேர்த்துக்கொண்டார்.

**அக்பரும் இராசபுத்திரர்களும்:** அக்பரின் அருங்குணத்தையும், பண்பையும் உணர்ந்த சில இராசபுத்திர அரசர்கள் எவ்வித எதிர்ப்புமின்றி அவருக்குக் கீழ்ப்படிந்தனர். ஆம்பர் இராச்சியத்தை ஆண்ட இராசபுத்திர அரசர் இராசா பார்மால் எதிர்ப்பில்லாமல் கி.பி. 1562-இல் அக்பருக்குக் கீழ்ப்படிந்தார். தம் மகள் சோத்பாய் என்பவளை அக்பருக்குத் திருமணம் செய்வித்தார். அவள்தான் சகாங்கீரின் தாயார். அக்பர் இராசபுத்திர அரசர்களுடன் போர் செய்யவும் நேரிட்டது. மேவாரின் தலைநகர் சித்தூரிலிருந்து ஆட்சி செய்த இராணா உதயசிங்கின்மீது அக்பர் போர் தொடுத்தார். அக்பரின் வலிமையை அறிந்த உதயசிங் தப்பியோடினார். அதே சமயத்தில் செய்மல், பட்டா என்ற வீரர்கள் மக்கள் ஆதரவுடன் சித்தூரை எதிரிகள் கைப்பற்றாவண்ணம் பாதுகாத்தபோது, அக்பர் அவர்களைக் கொன்றார். அவர்களுக்கு உதவிய மக்களையும் கொன்று குவித்தார். இராசபுத்திரர்களைக் கொன்றதும், சித்தூரை வீழ்ச்சியடையச் செய்ததும் இராசபுத்திர வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும். சித்தூர் கி.பி. 1568-இல் மொகலாயர் வயமாயிற்று. உதயசிங்கின் மகன் பிரதாப்சிங் ஆரவல்லிக் குன்றுகளில் இருந்து கொண்டே அக்பருடன் இடைவிடாது போர் புரிந்து கொண்டிருந்தார். மான்சிங், ஆசப்கான் ஆகிய மொகலாயத் தளபதிகள் பிரதாப் சிங்கை அல்திகாட் கணவாய் என்னுமிடத்தில் கி.பி. 1576-இல் தோற்கடித்தனர். மறுபடியும் பிரதாப்சிங் தப்பியோடினார். அவருக்குப்பின் அமர்சிங் தொடர்ந்து அக்பரை எதிர்த்தார். சிறிது சிறிதாக மேவார் கைப்பற்றப்பட்டது.

அடுத்து, அக்பர் இரணதாம்பூரைச் சில மாத முற்றுகைக்குப்பின் கி.பி. 1569-இல் இராசா சூர்சன் ஆராவிடமிருந்து கைப்பற்றினார். அதே ஆண்டு கலிஞ்சரை ஆண்ட இராசாஇராம்சந்த் (Ram Chand) என்பவர் அக்பரிடம் சரணடைந்தார். பிகானீர், செய்சல்மர் இராச்சிய அரசர்கள் கி.பி. 1570-இல் அக்பரிடம் சேர்ந்து கொண்டனர். தம் பெண் மக்களை அக்பருக்குத் திருமணம் செய்வித்து அவர் அன்பையும் பெற்றனர்.

ஆதிக்கவெறி கொண்ட தலைவர்கள் குசராத்தில் குழப்பத்தை உண்டாக்கினார்கள். குசராத்தின் அரசன் மூன்றாம் முசபர்சா இதனை அடக்க முடியாத நிலையில் இருந்ததை யறிந்த அக்பர், கடும் எதிர்ப்பு இல்லாமல் ஆமதாபாத்தைக் கைப்பற்றினார். குசராத்து கி.பி. 1573-இல் மொகலாயப் பேரரசுடன் சேர்ந்தது.

வங்காளத்தை ஆண்ட தாவுத் (Dawood) என்ற அரசர் எல்லைப்புறத்தில் மொகலாயருக்குச் சொந்தமான சமானி பகுதியைக் கைப்பற்றினார். அக்பர் தாவுத்துடன் துக்ரா, இராசமகால் என்னுமிடங்களில் போர் செய்து அவரைக் கொன்றார். வங்காளம் கி.பி.1576-இல் அக்பருடைய ஆட்சியின்கீழ் வந்தது. ஒரிசாவையும் கி.பி. 1592-இல் இரண்டு முற்றுகைகளுக்குப்பின் மொகலாய தளபதி இராசா மான்

சிங் கைப்பற்றினார். மொகலாய அரசுடன் ஒரிசா சேர்க்கப்பட்டது.

**காசுமீரமும் வடமேற்குப் பகுதியும்:** பீர்பால், பகவன்தாசு, காசிம்கான் ஆகிய தளபதிகள் உள்ள மொகலாயப் படை காசுமீரத்தையாண்ட யூசுப்சா (Yusuf Shah) என்ற சுல்தானிடம் கடும்போர் புரிந்து, அதனைக் கி.பி.1586-இல் கைப்பற்றியது. இப்போரில் பீர்பால் உயிர் துறந்தார். சிந்துப்பகுதி, ஆப்கானிசு தானம், கைபர் கணவாய் ஆகிய இடங்களில் பாது காப்பை வலுப்படுத்த அக்பர், காபூல், காந்தகார், சிந்து, பலுசிசுதானம் (Baluchistan) முதலிய பகுதி களைக் கைப்பற்றத் திட்டமிட்டார். காபூல் கி.பி. 1585-இல் கைப்பற்றப்பட்டது. பலுசிசுதானம் கி.பி. 1591-இல் மொகலாயர் வயமாயிற்று. அதே ஆண் டில் காந்தகார் மொகலாயரிடம் சரணடைந்தது. அக்பர் வட இந்தியாவிலும், நடு இந்தியாவிலும் தம் ஆதிக்கத்தை நிலை நாட்டினார்.

**தக்காணம் (கி.பி. 1595–1601):** அக்பர் தக்காணத் திலும் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணினார். மாளவத்துக்கும், அகமத்நகருக்கும் இடையேயுள்ள காந்தேசு (Khandesa) அக்பருடைய ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டது. இளவரசர் மூரத் தலைமையில் கி.பி. 1596-இல் மொகலாயப் படை அகமத்நகரை (Ahmed nagar) முற்றுகையிட்டபோது, அந்த இராச் சியத்தின் அரசி சாந்துபீபி வீரத்துடன் போர் செய் தாள். பிறகு அவள் மொகலாயர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டாள். அதன்படி பீரார் என்ற பகு தியை மட்டும் அவள் கொடுத்தாள். இளவரசர் தானியால் கி.பி. 1600-இல் அகமத்நகர் மீது படை யெடுத்தபோது உள்நாட்டுக் கிளர்ச்சியினால் சாந்து பீபியைக் கொன்றனர். அகமத்நகர் அக்பர் வயமா யிற்று; அசிர்கர்கோட்டை கி.பி. 1601-இல் நயவஞ்ச கமாகக் கைப்பற்றப்பட்டது. இளவரசர் தானியால் (Danial) அதன் அரசப்பிரநிதியாகப் பொறுப்பேற் றார்.

**அக்பரின் பேரரசு:** வடக்கில் இமயமலையிலி ருந்து தெற்கில் பீரார், அகமத்நகர் வரையிலும், மேற்கில் ஆப்கானிசுதானம், இந்துகுசு, (Handukush) காந்தகார் (Kandahar) முதல் கிழக்கில் வங்காளம் வரையிலும் அக்பரின் பேரரசு பரவி இருந்தது. அக் பரின் பேரரசு 15 சுபாக்களாகப் (Subah- மாநிலங்கள்) பிரிக்கப்பட்டது. அவை 1. காபூல், 2. இலாகூர் (காசு மீரம் உள்பட), 3. மூல்தான் (சிந்து உள்பட) 4. தில்லி, 5. ஆக்ரா, 6. அயோத்தி, 7. அலகாபாத், 8. பீகார், 9. வங்காளம் (ஒரிசா உள்பட), 10. ஆச் மீர் (Ajmer), 11. குசராத், 12. மாளவம், 13. காந் தேசு, 14. பீரார், 15. அகமத்நகர் என்பனவாம்.

அக்பர் பரந்த நோக்குடையவர். அவ்வடிப்படை யில் அவர் ஆட்சி அமைக்கப்பட்டது. எல்லாவகை அதிகாரங்களையும் அவர் பெற்றிருந்தார். அரசாங்க அலுவலர்களை நியமிப்பதில் அக்பர் இரண்டு அடிப் படை மாற்றங்களைச் செய்தார். அலுவலர்களை அரசரே நியமித்தார். இது முதல் மாற்றம். அக்ப ருக்கு முன்னர் ஒவ்வொரு அலுவலரும் அவரைவிட உயர்ந்த நிலையில் இருந்த அலுவலரால் நியமிக்கப் பெற்றுப் பதவி உயர்வு பெற்றனர். படைத்தலை வர்களாயிருந்த பிரபுகளுக்கும், போர்க்களம் செல் லாது நாட்டு நிருவாகத்தைச் செயல்படுத்திய பிரபு களுக்கும் இடையே அக்பர் காலத்திற்கு முன்னர் மாறுபாடிருந்தது. நிருவாகத்தில் இருந்த அம்மாறு பாட்டை அக்பர் அகற்றினார். இது இரண்டாம் மாற்றம். அமைச்சர்களடங்கிய ஓர் அவை ஆட்சி புரிய அவருக்கு உதவியது. மத்திய அரசாங்கத்தில் முதலமைச்சர் அல்லது வக்கீல், நிதி அமைச்சர் அல்லது வசீர் அல்லது திவான், படைத் தலைவர் அல்லது பக்சி, சமயத்துறை அமைச்சர் அல்லது சாதர், தலைமை நீதிபதி அல்லது தலைமை காசி (Kasi) ஆகியோர் ஆட்சியில் உதவி செய்தனர். அர சரின் விருப்பத்தை அவர்கள் அறிந்து அதிகாரத்தைச் செலுத்தினார்கள். அக்பர் தமது பேரரசை, சுபாக் களாகப் பிரித்தார். சுபாவின் தலைவர் சுபேதார்; அவர் அரசப் பிரதிநிதியாகப் பணியாற்றினார். சுபேதார்களுக்கு நீதியை எடுத்துச் சொல்ல காசிகள், பொருளாதாரத் துறையில் ஆலோசனை கூறத் திவான்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டார்கள். ஒவ் வொரு சர்க்காரும் பல பர்கானாக்களாகவும், ஒவ் வொரு பர்கானாவும் பல கிராமங்களாகவும் பிரிக் கப்பட்டன.

அக்பரிடம் நிலையான அரசு ஊதியம் பெற்ற வலிமை வாய்ந்த படைகள் இருந்தன. அவற்றுள் குதிரைப்படை மன்சப்தாரி முறையில் அமைக்கப் பட்டது. குதிரை வீரர்களுடன் மன்சப்தார்கள் அர சருக்குக் கட்டாயம் போர்க்காலத்தில் உதவ வேண் டும் என்பது அதன் நோக்கமாகும். 10 குதிரை வீரர் களுக்குத் தலைவரான மன்சப்தார் முதல் 10,000 குதிரை வீரர்களுக்குத் தலைவரான மன்சப்தார் வரை பல்வேறு தரமாக மன்சப்தார்கள் பொறுப்பு வகித்தனர். குதிரைப் படையின் எண்ணிக்கைக்குத் தகுந்தவாறு மன்சப்தார்களுக்கு ஊதியம் அல்லது சாகீர் (Jagir) வழங்கப்பட்டது. அவருடைய இராணு வத்தில் குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப் படை ஆகியவை இருந்தன. இராசபுத்திர வீரர் களான இராசா பகவன்தாசும், இராசா மான்சிங்கும் சிறந்த படைத்தலைவர்களாக விளங்கினர்.




அகபா பேரரசு

அக்பரின் திவான் இராசா தோடர்மால் நிலவரித் திட்டத்தை அமைத்தார். அது செர்சாவின் (Sher Shah) திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தது. நிலங்கள் அளக்கப்பட்டுத் தரம் வாரியாகப் பிரிக்கப்பட்டன. நிலங்களின் தரத்திற்கும் விளைச்சலுக்கும் ஏற்றவாறு வரி விதிக்கப்பட்டது. விளைச்சலுள் மூன்றில் ஒரு பங்கு தானியமாகவோ பணமாகவோ வரியாக வசூலிக்கப்பட்டது. விளையாத காலங்களில் வரி குறைக்கப்பட்டது. அத்திட்டம் அரசாங்கத்திற்கும் குடியானவனுக்கும் நேரடித்

தொடர்பை ஏற்படுத்தியது. வரியை வசூலிப்பவர் குடியானவரின் நண்பராக இருக்கவேண்டும் என்பது அரசாங்க உத்தரவாகும்.

**தொழில்களும் தொழில்திறனும்:** மொகலாயப் பேரரசில் பருத்தி பயிரிடுதலும் ஆடைநெய்தலும் மிகமுக்கிய தொழில்களாகும். தாக்கா (Dacca) நகரம் மசுலின் (Muslin) என்ற உயர்தரத் துணிகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. பட்டு நெசவும் சீரிய நிலையில் இருந்தது. பேரரசர் அக்பர் பட்டு நெசவுத் தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் காட்டினார். சால்வை, கம்பள நெசவுத் தொழில்களையும் மக்கள் அறிந்திருந்தனர். இருப்பினும் சால்வை, கம்பளஉற்பத்தி ஆகியவை பருத்தி, பட்டு நெசவைப்போல் பொதுமக்களைக் கவரவில்லை. அணி செய்யப்பெற்ற சாய்வுமேசைகள், எழுதுகோல் உறைகள், தந்தப் பொருள்கள் போன்ற தொழில் திறன் மிக்க பணிகளிலும் பலர் ஈடுபட்டிருந்தனர். செல்வர்கள் இத் தொழில்களில் முதலீடு செய்தனர். உயர்தரத் துணிகள், அணிகலன்கள் முதலியவற்றைப் பெரிய அளவில் உற்பத்தி செய்யும் அரசாங்கப் பணிமனைகளுக்கு அக்பர் ஆதரவு காட்டினார். புதிதாக அரசுத் தரப்பில் பணிமனைகள் ஏற்படுத்தவும் ஊக்கமளித்தார். இவ்வரசாங்கப் பணிமனைகள் 'கர்கானாக்கள்' எனப்பட்டன; இவற்றில் பல நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்தார்கள்.

**அக்பரும் இந்துக்களும்:** அக்பர் தம்முடைய பேரரசை விரிவுபடுத்துவதற்கும் சிறந்த ஆட்சியை அமைப்பதற்கும் இராசபுத்திரர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் இன்றியமையாதது என்பதை நன்றாக உணர்ந்தார். இராசா மான்சிங், இராசா தோடர்மால், இராசா பீர்பால் முதலிய இராசபுத்திரர்களுக்கு அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வழங்கினார். இராசபுத்திரப் பெண்களை மொகலாய இளவரசர்களுக்குத் திருமணம் செய்வித்தார். தாமும் செய்ப்பூர் அரசகுமாரியை மணந்தார். இந்துக்கள், முசுலிம்கள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்தக் கலப்பு மணத்தை ஆதரித்தார். இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த சிசியா தீர்வையையும் பயணியர் வரியையும் நீக்கினார்.

**தீன் இலாகி:** அக்பர் எச்சமயத்தையும் வெறுக்கவில்லை; பிற சமயத்தவர்களைத் துன்புறுத்தும் கொள்கையை அவர் பின்பற்றவில்லை. மெய்ப்பொருளை அறியும்பொருட்டுப் பதேபூர்சிக்ரியிலுள்ள இபாதத்கானா என்ற அரண்மனை அவையில் சமய ஆராய்ச்சிகளை நடத்தினார். இந்து, முசுலிம், கிறித்தவ, பாரசீக, சீக்கியசமயங்களிலுள்ள உண்மைக் கருத்துகளைத் திரட்டி கி.பி. 1562-இல் தீன் இலாகி அல்லது தெய்வீக சமயம் என்ற ஒரு புதிய சமயத்தைத் தோற்றுவித்தார். இச்சமயம் எல்லாச் சமயங்களின் உயர்ந்த கொள்கைகளையும் ஒருங்கே கொண்டது. இச்சமயத்தைத் தழுவும்படி எவரையும் அக்பர் வற்புறுத்தவில்லை. ஆனால் பல நண்பர்கள் தாமாகவே அச்சமயத்தைத் தழுவினர். அவர் காலத்திற்குப் பின் அச்சமயம் மறைந்து விட்டது.

**சமூகச் சீர்திருத்தம்:** சதி என்ற உடன்கட்டையேறும் வழக்கத்தைத் தடுத்தார்; விதவை மறுமணத்தை ஆதரித்தார்; மிருக பலியையும் பசுவதையையும் ஒழித்தார்; போர்க் கைதிகளைக்கூட அடிமைகளாக்குவதை விலக்கினார். இந்துக்கள் முசுலிம்கள் இடையே ஒற்றுமையை ஏற்படுத்த அவர் கலப்புமணத்தை ஊக்குவித்தார்.

**இலக்கியம், கலை வளர்ச்சி:** அபுல்பாசல், அபுல் பைசி போன்ற பேரறிஞர்களும், தான்சென் (Tansen) என்ற புகழ்பெற்ற இசைக்கலைஞரும் அக்பரது அவையைச் சிறப்பித்தனர். அவர் காலத்தில் வாழ்ந்த துளசிதாசர், இராமாயணத்தை இந்தி மொழியில் இயற்றினார். குசராத்து வெற்றியின் நினைவு சின்னமாகப் பதேபூர்சிக்ரி என்ற புதிய நகரை அக்பர் நிறுவினார். அது மிக அழகான கட்டடங்கள் நிறைந்த நகரம். இந்துக் கட்டடக்கலை, முசுலிம் கட்டடக் கலை ஆகியவற்றிலுள்ள நல்ல கூறுகளைப் பயன்படுத்தி, ஆக்ராவில் சகாங்கீர் மகாலும், அலகாபாத்தில் நாற்பது தூண் அரண்மனையும், சிக்கந்தராவில் (Sikandra) அரசரின் சமாதியும் கட்டப்பட்டன. பசவன்லால், முகுந்து, அரிபான்சு போன்ற ஓவியர்கள் அவர் காலத்தில் வாழ்ந்தனர்.

அக்பரின் ஆருயிர் நண்பர் அபுல் பாசலின் கொலைக்கு அக்பரின் மூத்த மகன் சலீம் காரணமாக இருந்தார். அக்பர் கோபமாயிருப்பதை அறிந்த சலீம் கி. பி. 1604-இல் தம் தந்தையின் காலில் விழுந்து மன்னிப்பைக் கேட்டார். அதனால் தமது மகன் சலீமை வாரிசாக நியமித்து, அக்பர் தமது 63-ஆம் வயதில் (கி.பி. 1605-இல்) ஆக்ராவில் இறந்தார். இந்திய வரலாற்றில் புகழ் மிக்க பேரரசர்களுள் அக்பர் முதன்மையானவர்.

அ. கே.

**துணை நூல்கள்:**

**Srivastava A. L.**, "The Mughal Empire", Shivalal Agarwala and Company, Agra, 1983.

**Majumdar R.C. & others**, "An Advanced History of India" 4th Edn. Macmillan, 1972.

**அக்பர்நாமா,** அபுல்பசல் என்பவரால் எழுதப்பட்ட ஒரு நூல்; அக்பரின் ஆட்சியை விரிவாக விளக்குவது.

தம் ஆட்சியைப் பற்றி உண்மை உணர்வுடன் வரலாறு எழுதப்பட வேண்டும் என்று அக்பர் கட்டளையிட்டார். புகழுக்குரிய செய்திகளையும், தொடர்ந்து பெற்றுவரும் வெற்றிகளையும் அந்நூல் சுட்டிக்காட்ட வேண்டுமென அவர் கருத்துத் தெரிவித்தார். அபுல்பசல் பெரு முயற்சி செய்து இந்நூலை எழுதுவதற்கான மூலச் சான்றுகளைத் திரட்டி, அவற்றைத் திறனாய்வு செய்தார். அவ்வரலாற்று நூலை அவர் கி.பி. 1596-இல் எழுதி முடித்தார். அக்பர் நாமாவை எல்பின்சுடன் (Elphinston) என்பாரும் வின்செண்ட் சுமித்து என்பாரும் பாராட்டி எழுதியுள்ளனர்.

**அக்பர்பூர்** உத்தரப்பிரதேச மாநிலத்தில் கான்பூர் மாவட்டத்தில் உள்ளது. தான்சு ஆற்றைக் கடக்க இவ்வூரில் பெரிய இருப்புப்பாதைப் பாலம் ஒன்று உள்ளது. இங்குப் பழங்காலக் கோட்டையொன்றின் சிதைவுகள் காணப்படுகின்றன. இங்கு கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த மசூதியொன்றும் உள்ளது. இவ்வூர், பருத்தி நெசவுக்குப் பெயர் பெற்றது. எண்ணெய் விதைகள், பதனிடப்படாத தோல் போன்ற பொருள்கள் இங்கு மிகுதியாகக் கிடைக்கின்றன.

**அக்மார்க்கு** இந்திய வேளாண்மைப் பொருள்களின் தரத்தை உறுதிசெய்து, அவற்றை வரையறுக்கும் விற்பனைக் குறியீடு ஆகும். தரத்திலும் அளவிலும் ஒரே வகையான வேளாண்மைப் பொருள்களை உற்பத்தி செய்வது இயலாத ஒன்று. மண்வள வேறுபாடு, இயற்கைச் சூழலில் மாற்றம், பயிர் தாக்கு நோய்கள் ஆகியவற்றால் விளைபொருள்களின் தரம் பெரிதும் மாறுபடுகிறது. எனினும் இயன்ற அளவு விற்பனைக்கு வரும் விளைபொருள்களின் தரத்தை மையமாகக் கொண்டு அக்மார்க்குக் குறியீடு (Agmark) வழங்கப்படுவதால், பொருள்களை ஒன்று சேர்த்து ஏலத்திற்குவிட வசதி ஏற்படுகிறது. சிறு உழவர்களின் எதிர்பார்ப்பு, விற்பனைக் கூடத்தில் பாதுகாக்கப்பட்டு நல்ல விலை கிடைக்க ஏதுவாகிறது. வணிகர்கள், இடைத் தரகர்கள் ஆகியோரைக் கட்டுப்படுத்தும் வாய்ப்பும் உள்ளது. ஆகவே, விற்பனைக்கு வரும் வேளாண்மை விளைபொருள்களைத் தரம் அறிந்து பிரிப்பதற்கு ஓர் அமைப்பும் ஒருங்கிணைந்த வழிமுறையும் இன்றியமையாதன. தரத்தை வரையறை செய்வதுடன் குறிக்கோள் முடிவுறுவதில்லை. தரம் வரையறை செய்யப்பட்டு விளைபொருள்கள் நுகர்வோரைச் சென்றடையும்வரை, இடைப்பட்ட காலங்களில் அவற்றின் தரம் குறைந்து போகும் வாய்ப்புண்டு. ஆகவே, தரத்தின் வேறுபாடுகளைக் கண்டறிய ஓர் அளவுகோலாகவும், அனைவருக்கும் பொதுவான குறியீட்டு மொழி ஒன்றைப் பயன்படுத்தவும், 1937-இல் வேளாண்மை விளைபொருள்களின் (தரமும் அளவும் பற்றிய) சட்டம் இயற்றப்பட்டது.

இச்சட்டம் தரக் கட்டுப்பாட்டை வரையறை செய்வதன் மூலம் நுகர்வோரையும் உற்பத்தி செய்வோரையும் பாதுகாக்க வழிசெய்கிறது. நாட்டில் விற்கப்படும் அல்லது வாங்கப்படும் விளைபொருள்களின் தரத்தை எவ்வகையில் வரையறை செய்வது என்பதைத் தெளிவாக்குகிறது. தரத்தை மையமாகக் கொண்டு விளைபொருள்களுக்கு ஒழுங்கான விலை கிடைக்கவும், தேவையான நடவடிக்கைகளை எடுக்கவுமான நோக்கங்களைக் கொண்டு விளங்குகிறது. இச்சட்டத்தின்படி பிரிக்கப்படும் தரங்கள் அக்மார்க்குத் தரம் என வழங்கப்படுகின்றன. இவ்வாறு, வேளாண்மைப் பொருள்களின் தர வரையறையினை அனைத்துப் பொருள்களுக்கும் கட்டாயமாக்க விரும்பும் உற்பத்தியாளர் மட்டுமே இப்போது இதைப் பயன்படுத்தி வருகின்றனர். இவ்விதம் விரும்புவோர் வரையறை செய்யப்பட்ட தரத்தை மையமாகக் கொண்டு, தம் விளைபொருள்களுக்குத் தகுந்த சான்றிதழ் பெற விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டும். தரம் பிரித்துச் சான்றிதழ் வழங்கப் பட்ட ஒவ்வொரு மாதிரியிலும் வரையறை செய்யப்பட்ட தரமும் 'அக்மார்க்கு' என்ற சொல்லும் குறிக்கப்படுகின்றன. முதலில் இச்சட்டம் நுகர்வோருக்கு மட்டும் பலன் அளிப்பதாக இருந்தது. அதனால், உற்பத்தி செய்வோருக்கும் உதவும் வகையில் தர வரையறை செய்ய, 1963-இல் வழி வகுக்கப்பட்டது. தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள் போன்றவற்றைத் தேர்ந்தெடுத்துத் தரமறிந்து பல பிரிவுகளாகப் பிரிப்பதற்குத் தேவையான விதிமுறைகளை இச்சட்டம் உருவாக்கிக் கொண்டுள்ளது. இதை நிறைவேற்றத் தர வரையறை ஆய்வு இணையகம் செயல்பட்டு வருகிறது. உள்நாட்டு நுகர்வுப் பண்டங்களுக்கும் ஏற்றுமதிப் பண்டங்களுக்குமான தர வரையறை வழிமுறைகளை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை விளைபொருள் விற்பனை அலுவலர் பெற்றுள்ளார். இதுவரை 122 விளை பொருள்களுக்குரிய தர வரையறைக் கோட்பாடுகள், 81 தர அளவு வரையறை விதிகளின் மூலம் வகுக்கப்பட்டுள்ளன.

அக்மார்க்குத் தர வரையறையின் வழிமுறைகள்: "அக்மார்க்கு" கோட்பாட்டுக்குள் தம் விளைபொருள்கள் வரவேண்டுமென விழையும் உற்பத்தி

யாளர் இதற்குத் தேவையான சான்றிதழை இந்திய அரசு வேளாண்மை விற்பனை அலுவலர் மூலம் பெறவேண்டும். இதற்கென நாகபுரியில் அமைக்கப் பட்டுள்ள தர வரையறை ஆய்வு இயக்ககத்தின் (Directorate of Marketing & Inspection) மேற்பார் வையில், அறிவிக்கப்பட்ட இடத்தில் தரம் பிரிக்கப் பட்டு அக்மார்க்குத் தரச் சீட்டுகள் வழங்கப்படுகின் றன. இவ்விதம் தரம் பிரிக்கப்படும் அக்மார்க்குத் தரப் பொருள்களைத் தர வரையறை இணையக அலுவலர்கள், மாதிரி எடுத்து, மீண்டும் ‘மண்டல அக்மார்க்கு’ ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்து, வழங்கப்பட்ட அக்மார்க்குத் தரங்களை உறுதி செய்கிறார்கள். குறிப்பிடப்பட்டுள்ள அக்மார்க்குத் தரத்தில் மாறுதல் இருப்பது மேற்கூறிய ஆய்வுக ளில் தெரிய வந்தால், தகுந்த தண்டனை அளிப்ப தற்குத் தேவையான விதிகளும் வகுக்கப்பட்டுள்ளன. அக்மார்க்குத் தரத்தின் கீழ் வரும் அனைத்துப் பொருள்களின் குறிப்பிட்ட தரத்திற்கும் தூய்மைக் கும் வேளாண்மை விற்பனை அலுவலர் தம் உறுதி யினை அளித்துச் சான்றிதழ் அளிக்கிறார். இதற்காக நாடு முழுவதும் 400 ஆய்வுக் கூடங்கள் செயல்படுகின் றன. இப்பணி, தமிழ்நாட்டில் திருச்சியில் உள்ள வேளாண்மை விற்பனைஇயக்ககத்தின் மேற்பார்வை யில் நடைபெறுகிறது.

தரக் கோட்பாட்டு வரையறை ஏற்படுத்தும் பல்வேறு விளைபொருள்களுக்கும், கால்நடைப் பொருள்களுக்கும் விற்பனை ஆய்வுகள் நடத்தப்படு கின்றன. இவ்வாய்வுகளின் முடிவுகளை மையமாகக் கொண்டு, அனைத்து விளைபொருள்களுக்கும் பல் வேறு இடங்களிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு, விரைவு மறு ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. ஆய்வுக் கூடங்களில் ஆய்வு செய்ய இயலாத விளைபொருள் களுக்குப் பயிற்சியளிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம், அவர்களின் நேரடிப் பார்வையில் தரம் வரையறை செய்யப்படுகிறது. விளைபொருளின் மாதிரிகளின் மேல் முத்திரை வைப்பதன் மூலம் குறிப்பிட்ட தரம் நுகர்வோரைச் சென்றடையும்வரை அப்பொருள் பாதுகாக்கப்படுகிறது. முத்திரைகளில் வரிசை எண், வரையறை செய்யப்பட்ட தரம், நாள், எடை, மேற் பார்வை செய்த அலுவலரின் கையொப்பம் ஆகியன குறிக்கப்படுகின்றன.

பழங்களில் (சாத்துக்குடி, ஆரஞ்சுப் பழங்கள் போல்வன) விட்டத்தை வைத்தும், (மாம்பழங்கள் போல்வன) எடைகளை வைத்தும் தரம் வரையறை செய்யப்படுகிறது. முட்டைகளின் தரமும் அவற்றின் எடையைப் பொறுத்தே பிரிக்கப்படுகிறது. முட்டை களில் 4 தரக்கோட்பாடுகள் உள்ளன. முட்டை களில் தேதிகள் குறிக்கப்படாததால், புதிய முட்டை களைத் தரம் கண்டுகொள்வது இயலாது. இதைத் தவிர்ப்பதற்கு, அவ்வப்போது விற்பனை செய்யக் கூடிய அளவிற்கு மட்டுமே தர வரையறை இப்போது செய்யப்படுகிறது. உருளைக் கிழங்கு அளவைப் பொறுத்துத் தரம் பிரிக்கப்படுகிறது. இவை தவிர, கரும்பு வெல்லத்தில் மணல் கலக்கப்படுவதையும், துவரம் பருப்பில், ‘லேதைரிசம்’ என்னும் நோயை ஏற்படுத்தக் கூடிய ‘கேசரிப் பருப்புகள்’ கலக்கப்படு வதையும் தர ஆய்வுகள் வெளிப்படுத்த இயலும். உயூகாலிப்டசு (Eucalyptus) தைலத்தில் மண்ணெண் ணெயும் தர்பன்டைனும் (Turpentine) கலக்கப்படு வதையும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன.

அக்மார்க்குத் தர வரையறை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு 1938 – 39 – ஆம் ஆண்டுகளில் 0.15 கோடி உரூபாயாக இருந்து, 1979 – 80 – ஆம் ஆண்டுகளில் 251.97 கோடி உரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது.

**ஏற்றுமதியில் அக்மார்க்கு:** விளைபொருள்களின் தரம் ஒன்றே ஏற்றுமதியில் முன்னேற்றம் காணச் சிறந்த வழியாகும். தரமான விளைபொருள்களை ஏற்றுமதி செய்யும்போது சிறு தவறு ஏற்பட்டுத் தரம் குறைந்துவிட்டாலும், வெளிநாடுகளில் மதிப் புக் குறைந்துபோகும் வாய்ப்புண்டு. மீண்டும் நல் லெண்ணத்தைப் பெறுவதென்பது கடினமானது. இதனால் நேரிடும் இழப்பினை ஈடுசெய்யவும் முடி யாது. தர வரையறைச் சட்டம் (1945-இன்படி), இப்போது இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் 833 பொருள்களில் வேளாண்மைப் பொருள்களும் கால் நடையிலிருந்து கிடைக்கும் பொருள்களுமாக மொத் தம் 63 பொருள்கள் அடங்குகின்றன. தரமும் அள வும் வரையறை செய்யும் இணையகத்தின்கீழ் 41 விளைபொருள்கள் அடங்குகின்றன. ஏற்றுமதி ஆய் வுக் கழகம், இந்தியப் பட்டு ஏற்றுமதியாளர் ஒன்றி யம், தேயிலை நிறுவனம், காப்பி வாரியம், முந்திரி ஏற்றுமதி ஊக்குவிப்புக் கழகம், உணவு நிறுவனம், இந்திய எண்ணெய் உற்பத்தியாளர் ஒன்றியம் போன்ற நிறுவனங்கள் தத்தம் பொருள்களின் தர வரையறையைக் கவனித்துக் கொள்கின்றன. கட் டாய ஏற்றுமதிச் (தரக் கட்டுப்பாடும் ஆய்வும் குறித்த) சட்டம் 1963-ஆம் ஆண்டு கொண்டு வரப் பட்டு, அதன் மூலம் புகையிலை, கம்பளி, மிளகு, வெங்காயம், ஏலக்காய், மஞ்சள், சந்தனத்தைலம், இஞ்சி, கடலை எண்ணெய், சணல், பருப்பு வகைகள், பூண்டு, உருளைக் கிழங்கு போன்ற அனைத்து ஏற்றுமதி விளைபொருள்களும் கண்காணிக்கப்படு கின்றன.

ஏற்றுமதியில் அக்மார்க்குத் தர வரையறை செய்யப்பட்ட பொருள்களின் மதிப்பு, 1942–43 -ஆம் ஆண்டுகளில் 0.29 கோடி உரூபாயிலிருந்து, 1978-79 -ஆம் ஆண்டுகளில் 377.38 கோடி உரூபாய் மதிப்பிற்கு ஏற்றம் பெற்றுள்ளது.

வேளாண்மைப் பொருள்களின் தரமும் அளவும் பற்றிய சட்டத்தின் வழிமுறைகளைச் சீரிய முறையில் நடைமுறைப்படுத்த வேளாண்மைக்கான தேசியக் குழு, தனது அறிக்கையில் கீழ்க்கண்ட கருத்துகளைப் பரிந்துரைத்துள்ளது. தரமும் அளவு வரையறையும் விற்பனைக்கு வரும் அனைத்து விளைபொருள்களுக்கும் கட்டாயமாக்கப்பட வேண்டும். கால்நடையிலிருந்து கிடைக்கும் பொருள்கள், காட்டில் விளையும் பொருள்கள், சிறிய அளவினாலான பிற விளைபொருள்கள் ஆகிய யாவும் மேற்கூறிய கட்டாயத் தர வரையறைக் கோட்பாட்டின்கீழ்ச் சேர்க்கப்பட வேண்டும். இப்போது வெவ்வேறு நிறுவனங்கள் தர வரையறை அலுவலில் ஈடுபட்டுள்ளதை மாற்றித் தர வரையறைக் கோட்பாட்டினை முடிவு செய்வது முதல், அதை நிறைவேற்றும் வரையுள்ள அனைத்துச் செயல்களையும் 'தர வரையறை ஆய்வு இணையகத்திடம்' ஒப்படைக்கவேண்டும். தர வரையறையைச் செயல்படுத்தும் பணியாளர் தகுந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன், தர வரையறை ஆய்வு இயக்ககத்தின்அல்லது மாநில விற்பனைத் துறைகளின் பணியாளராகவும் இருத்தல் வேண்டும். ஏற்றுமதிப் பொருள்களின்மீது தரம், அளவு வரையறைக் கோட்பாட்டினைச் செயல்படுத்தும் உரிமை, மாநிலங்களிடமும் தர வரையறை ஆய்வு இயக்ககத்திடமும் இருக்கவேண்டும். மாநிலத்திற்குள்ளும் இதனைச் செயல்படுத்தும் உரிமை மாநில விற்பனைத் துறையிடம் இருக்கவேண்டும். சு. ரா. சு.

துணை நூல்கள்:


**Shelar. V.M., and Dhankar. G.H.**, "Quality Control of Agricultural Commodities in India and some Foreign Countries".

A Review of Agricultural Marketing XXV (2) July, 1982.


**அக்னதான்** எகிப்திய அரசர்களுள் ஒருவன். எகிப்து நாட்டு அரசன் மூன்றாம் அமென்கோதெப்பு (Amenhotep III) என்பவனுக்குப் பின் கி.மு. 1375-இல் அவன் மகன் நான்காம் அமென்கோதெப்பு அரசு கட்டில் ஏறினான். அவனுக்கு அக்னதான் (Akhenaton) என்றும் ஒரு பெயர் உண்டு. இறைவன் ஒருவனே எனக் கூறி, ஒரு கடவுள் வணக்கத்தைப் புகுத்தி, சமயத்துறையில் புரட்சிகரமான மாறுதலைச் செய்தவன் இவன்.

அதான் (Aton) என்னும் கடவுளைப் பத்தியுடன் வணங்கும் பழக்கம் அரசன் அமென்கோதெப்பு ஆட்சியிலும் இருந்தது. அதான் என்பது சூரியனின் பல பெயர்களுள் ஒன்று. சூரியன்தான் கடவுள் என்று அரசன் வரம்பில்லா நம்பிக்கை கொண்டிருந்தான். சூரியன் தன் கதிர்கள் மூலமாக அருள் ஒளியை பூமியில் வீசுவதால்தான், இங்கு வாழும் ஒவ்வொரு பொருளும் உயிருடன் இருக்க முடிகிறது என்று எடுத்துக் கூறி, அரசன் சூரியனுக்கு ஒரு சின்னத்தை அமைத்தான். அச்சூரிய சின்னத்தில் உள்ள கதிர்கள் ஒவ்வொன்றும் ஒரு கையுடன் முடிவடையும்படி சித்திரித்து, அதனைக் கடவுளின் காக்கும் கரம் என்று கூறினான்.



இலுக்சார் ஆமோன் கோயிலில் உள்ள அக்னதான் சிலை

அரசன் சமயத் துறையில் சீர்திருத்தம் செய்வதில் மிக்க ஆர்வம் காட்டினான். அமென்கோதெப்பு என்னும் தன் பெயரை அக்னதான் என்று மாற்றிக்

கொண்டான். தனது இல்லத்தின் பெயரையும் மாற்றினான். நாட்டின் தலைநகருக்கும் அக்னதான் என்று பெயரிட்டான். இறைவன் அதானைச் சிறப்பிக்கும் வகையில் நூபியா (Nubia), சிரியா போன்ற மாநிலங்களில் புதிய தலைநகரங்களைத் தோற்றுவித்தான். பழைய பழக்க வழக்கங்கள் கைவிடப்பட்டதைக் காட்டுவதற்கும், இயற்கையில் நாட்டம் இருப்பதைப் புலப்படுத்துவதற்கும் ஒரு சிற்பக்கலைக் கூடத்தை அரசாங்கக் கைவினைஞர்கள் தோற்றுவித்தார்கள். எகிப்து நாட்டு வரலாற்றில் இவன் காலத்தில்தான் கலை இயற்கையோடு இயைந்து காணப்பட்டது; புதிய சமய இலக்கியமும் தோன்றியது.

அதான் ஒரு அமைதியான கடவுள் என்று அரசன் கூறினான். இறைவனாகிய அதான் ஒருவன்தான் மக்களுக்கும் பிற உயிரினங்களுக்கும் அருளை வாரி வழங்குகிறான் என்று போதித்தான். அதானுக்கு வணக்கம் செய்வதைச் சிறப்பான முறையில் செம்மைப்படுத்தியதோடு மற்றெந்தக் கடவுளையும் வழிபடுதல் கூடாது என்றும் ஆணை பிறப்பித்தான். இதை நிறைவேற்றுதற்பொருட்டு, சமய குருமார்களை அரசன் துன்புறுத்தினான். அவர்களின் உணர்வுகள் முடக்கப்பட்டன. அரசன் வலிமையுள்ளவனாக இருந்ததால் அவர்களால் எதிர்ப்புத் தெரிவிக்க முடியவில்லை. எகிப்து நாட்டின் மிகப் பெரிய கடவுளான அமான் (Amon) என்ற பெயர் ஒவ்வொரு நினைவுச் சின்னத்திலிருந்தும் அழிக்கப்பட்டது. அக்கடவுள் பெயருடன் இணைந்திருந்த தன் தந்தையின் பெயரையும் அழித்தான். அக்னதான் ஓர் உண்மை மனிதனாகவும், உயர்ந்த நோக்கங்களைக் கடைப்பிடிப்பவனாகவும், தீர்க்க தரிசியாகவும் விளங்கினான். இவன் மறைவுக்குப் பின் (கி.மு. 1360) இவன் மருமகன் துதன்காமென் (Tutankhamen) அரசனானான். இவன் அக்னதானுடைய சமயச் சீர்திருத்தங்களுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைத்தான். அமான் கடவுளின் வழிபாட்டை மீண்டும் பழக்கத்திற்குக் கொண்டுவந்தான். அ. கே.

**அகக் கட்டுமானம்** என்பது ஒரு நாட்டின் பொருளாதாரம், முன்னேற்றப் பாதையில் திறமையுடன் செயல்படத் தேவையான பொருளாதார அடிப்படை உள்ளமைப்புகளைக் குறிப்பது. இது "பொது மூலதன இருப்பு" (Stock of Public Capital Goods) என்றும் சொல்லப்படும். நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆக்கத்தை (Production) அல்லது ஆக்கத் திறனை (Productivity) மிகுதிப்படுத்தும் பொருளாதார நடவடிக்கைகளை அகக்கட்டுமானம் (Infrastructure) எனலாம்.

உற்பத்தி (ஆக்கம்) செய்வதற்குத் தேவையான மூலப்பொருள்களைத் தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லவும், உற்பத்தியான பொருள்களைப் பல்வேறு இடங்களிலுள்ள அங்காடிகளுக்கு எடுத்துச் செல்லவும் போக்குவரத்து வசதிகள் இன்றியமையாதன. தொழிலகங்கள், நிதி நிறுவனங்கள், வங்கிகள், வணிகக் கழகங்கள், அஞ்சலகங்கள், தொலைபேசி நிலையங்கள் ஆகியன பொருளாதாரத்தின் அடிப்படைத் தேவைகள். இவை போலவே பொது மக்களின் நம்பிக்கையும் மதிப்புறுதியும் பெற்ற செலாவணி, வங்கிகள், மாற்றகங்கள் (Exchanges), நிதி நிறுவனங்கள் ஆகியனவும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு இன்றியமையாத் தேவைகளாக உள்ளன. பொது மின்சாரம், நீர்ப்பாசன வசதிகள் ஆகியவையும் தேவையான அடிப்படைப் பொருளாதார மூலதனமாகக் கருதப்படுகின்றன. அடிப்படைச் சமுதாய மூலதனங்களான (Social Overhead Capital) அடிப்படைக் கல்வி, அறிவியல் வளர்ச்சி, சுகாதார, மருத்துவ வசதிகள், வீட்டு வசதிகள், பாதுகாப்பு வசதிகள், நெருக்கடி நிலை உதவிகள், நிலையான அரசியலமைப்பு, தனி மனித உரிமை ஆகியவையும் அகக் கட்டுமானங்களில் அடங்குகின்றன.

அகக் கட்டுமானச் செலவுகள் ஆழ்ந்த நோக்கத்துடன் பொதுப்பணிகளுக்காகச் செய்யப்படுவதால், இவற்றின் பயன் நேரடியாக உடனுக்குடன் கிடைப்பதில்லை. எனவே, இவற்றுக்குத் தனியார் துறையிலிருந்து ஊக்கமும், முதலீடும் எளிதில் கிடைக்கும் வாய்ப்பில்லை. ஆனால், வளர்ச்சியடைந்த நாடுகளில் அகக் கட்டுமானம், தனியார் துறையின் மூலமும், பொதுத் துறையின் வாயிலாகவும் பெருக்கமடைந்துள்ளது. இந்நாடுகள் முற்காலந் தொட்டே தொடர்ந்து முன்னேற்றமடைந்து வந்த காரணத்தினால் பொருளாதாரச் சமூக அடிப்படை வளங்களைப் பெருக்கி வந்துள்ளன. இவை புதிய கண்டுபிடிப்புகளின் வாயிலாகவும், தனியார் துறை, பொதுத்துறை ஆகியவற்றின் வாயிலாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன. தொழில் நுட்பம், பொருளாதார வளர்ச்சி போன்றவற்றில் பின் தங்கிய நாடுகளில் அகக் கட்டுமானம் தானாகவே வளர்ச்சியடையும் வாய்ப்பில்லை. இதன் அளவும், இதற்கான மூலதன அளவும் மிகையான அளவிற்குப் பெருகிவிட்டதால் தனியார் ஈடுபாடு இதில் முற்றிலும் இல்லாமல் போகிறது. மேலும், இவற்றுக்கான செலவும், மிக்க அளவில் பெருகிவிட்டது. ஆகவே, பொதுத் துறையில் அரசு பொறுப்பேற்று, மையத்திட்டமிடல் முறையில் (Centralised Planning), இவற்றை உருவாக்கித் தரும்படியான நிலை உள்ளது. செலவு

களுக்காக அரசு வரிகளை விதித்து, அவற்றின் பளுவை மக்கள் உணராத வகையில், நீண்ட காலங்களுக்குப் பங்கீடு செய்கிறது. ஆகவே, அரசு பொறுப்புடன் அடிப்படைப் பொருளாதார வசதிகளை ஏற்படுத்தித் தருவதன்மூலம், தனியார் துறையில் முடங்கிக் கிடக்கும் பொருளாதார மூலதனங்களை விழிப்புறச் செய்து, பொதுத் துறைகளில் ஆதாயமும் பயனும் அடையச் செய்கிறது.

அகக் கட்டுமானச் செலவுகளை ஆக்கத்திற்கான வழிகளில் உருவாக்குவது எளிதன்று. அவற்றுக்கான முதலீடு மிகையானது மட்டும் அன்றி, கட்டுமானக் கால அளவும் (Gestation Period) நீண்டதாக இருக்கும். அதாவது, முதலீடு செய்து பணிகள் முடிக்கப் பெற்றுக் கிடைக்கக்கூடிய பலன்கள் 5 ஆண்டுகள் முதல் 50 ஆண்டுகளுக்குப் பின்னரும் கிடைக்கலாம். மேலும், முதலீடு செய்து செயல்படுத்தியவருக்கு எவ்வித நேரடி நன்மைகளும் விளையாமல் இருக்கலாம். இதனையே, பொருளாதார வல்லுநர்கள் ‘அடிப்படைச் சமுதாய ஆக்கச் செலவு’ (Social Overhead Cost) என்று கூறுகின்றார்கள். இது சமுதாய மறுமலர்ச்சி, வேளாண்மை, தொழில் துறை ஆகியவற்றிற்காகப் பல ஆண்டுகள் நாடு முழுமைக்கும் செய்யக்கூடிய செலவு என்பதால் இதன் பலனை அறுதியிட்டுக் கணக்கிட முடிவதில்லை.

கல்வி, தொழில் நுட்பம், அறிவியல், மருத்துவ வசதிகள் ஆகியவற்றில் ஏற்படும் புரட்சியான மாற்றங்கள், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. இவற்றுக்கான சமுதாய மூலதனச் செலவு மிகுதி என்றாலும், மனித ஆற்றல்வளம் (Manpower Resources) பெருகுகிறது. மனித ஆற்றல்வளம் ஒரு சிறப்பான அடிப்படை மூலதன இருப்பு ஆகும். குறைந்த அளவு இயற்கை வளங்களோடு, மிகுந்த அளவு மக்கள் தொகையைக் கொண்ட பின்தங்கிய நாடுகளின் வளர்ச்சி, அந்நாடுகளின் மனித ஆற்றல் வளத்தைக் கொண்டே அமைகிறது. நாட்டின் பொருளாதாரம் நிலையான வளர்ச்சியைத் தொடர்ந்து பெறவேண்டுமாயின், நாட்டில் நிலவும் அரசியல், வாணிகச் சிக்கல்களைத் தீர்க்கக்கூடிய அறிவாற்றலை மக்கள் பெற்றிருக்க வேண்டும். அறிவியல் அறிவும், ஆக்கத் திறனுமே இதனைச் செயற்படுத்தும் கருவிகளாக விளங்குகின்றன. இரண்டாம் உலகப் போரின் போது சப்பான், செருமனி போன்ற நாடுகளில் ஏற்பட்ட பெரும் பொருளாதார இழப்புகளைக் குறுகிய காலத்தில் ஈடுகட்ட அந்நாட்டு மக்களின் ஆக்கமும், ஊக்கமும் காரணங்களாயின. அதனால் இந்நாடுகள் குறுகிய காலத்தில் புதுப் பொருளாதாரச் சமுதாயத்தை உருவாக்கும் வல்லமை பெற்றன.

அகக் கட்டுமானச் செலவுகள் பல துறைகளில் மூலதனங்களைப் பெருக்குவதற்கு வழி வகுக்கின்றன. தொடக்கக் காலத்தில் செலவு மிகுதியாகி, ஆற்றல் பயன்படுத்தப்படாமல் தேங்கிக் கிடப்பது போல் காணப்பட்டாலும், குறுகிய காலத்தில் பல புதிய தொழில்களும், பணிகளும் தொடங்கப்பட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் பெருகி, இதன் விளைவாக மொத்த உற்பத்தி பெருகும். பெரும்பாலான பின் தங்கிய நாடுகளில் சமூக மூலதனத்தின் இருப்பு முற்றிலும் இல்லாத நிலையிலுள்ளது. மின் சாரம் அல்லது அதற்கு மாற்றுச் சக்திகள் கிடைப்பதற்கு அருமையாக உள்ளன. அவற்றைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் எடுக்கப்படுவதில்லை. நகரங்கள் தொழில் மயமாக்கப்பட்டாலும், குடியிருப்புக்கான வசதிகள் செய்து கொடுக்கப்படுவதில்லை. சுகாதாரம், வடிகால் வசதிகள் மிகவும் குறைந்தும், அவற்றுக்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெறாமலும் உள்ளன. இந்நாடுகளில் ‘சமூக மூலதன இருப்பு’ இல்லாமையின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சி தடைப்படுகிறது. ஆகவே, இந்நிலையை அகற்றி அகக் கட்டுமானம் எழுப்பப்பட்டாலொழிய முன்னேற்றத்தை விரைவில் காண இயலாது.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டின்படி வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பிய நாடுகள், தங்கள் நாட்டு மொத்த முதலீட்டுள் 50 விழுக்காட்டினை வீட்டு வசதிகள், பொதுப்பணிகள் போன்ற பொது அடிப்படைத் தேவைகளுக்கென ஒதுக்கீடு செய்கின்றன. இவ்வாறு செய்யப்படும் முதலீடு, முன்னரே அமையப்பெற்ற சமூக முதலீட்டின் இருப்பை, அதன் முழுச் செயற்பாட்டு நிலையில் இயக்குவதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. இதனால், அகக்கட்டுமான வசதிகள் இல்லாத வளர்ச்சியடையா நாடுகளில் ‘பொது மூலதன இருப்பு’ பெரிதும் வருந்தத்தக்க நிலையில் உள்ளது.

துணை நூல்கள்:

**John Cody Etal**, "Policies for Industrial Progress in Developing Countries", Oxford University Press, Newyork, 1980.

**Harry W. Richardson**, "Regional And Urban Economics", Pitman Publishing Limited, London, 1979.

**Ray**. S.K., "Economics of the Third World", Prentice Hall of India Private Limited, New Delhi, 1983.

**Eli Guizberg**, "The Human Economy", Mc Graw Hill Book Company, Newyork, 1976.

Marwin L. Fair ET-AL., "Economics of Transportation and Logistics", Business Publications, INC, Texas, 1975.

***அகச்சந்தி*** என்பது சொற் புணர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தை விளக்கப் பயன்படுத்தும் குறியீட்டுப் பெயர்களுள் ஒன்றாகும். சொல் என்பது வடிவமும் (ஒலி அல்லது எழுத்து) பொருளும் உடையது. பொதுவாக ஒரு சொல் எல்லா இடத்திலும் ஒரே வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. மரம் என்ற சொல் மரங்கள், மர நிழல், மரப் பெட்டி என்ற தொடர்களில் முறையே மரங், மர, மரப் என்ற வடிவங்களில் வந்துள்ளது. இப்படிப் பல சொற்களில் வரும் வடிவ மாற்றத்தைப் பொதுமைப்படுத்தி விளக்குவதையே இலக்கண நூலார் புணரியல் அல்லது சந்தி என்று குறிப்பிடுகின்றனர். இலக்கண ஆசிரியர்கள், சொற்கள் ஒன்றோடு ஒன்று சேரும்போது ஏற்படும் மாற்றத்தைப் புணர்ச்சி விகாரம் என்று குறிப்பிடுகிறார்கள். புணர்ச்சியில் எந்த வித மாற்றமும் ஏற்படாவிட்டால் அது இயல்பு புணர்ச்சி என்றும், மாற்றம் ஏற்பட்டால் விகாரப் புணர்ச்சி என்றும் பெயர் பெறும்.

புணர்ச்சியில் ஏற்படும் மாற்றத்தைப் பல விதமாகப் பாகுபடுத்தி விளக்கலாம். அவற்றுள் ஒன்றே அகச் சந்தி, புறச் சந்தி என்ற பாகுபாடு. அகச் சந்தி என்பது ஒரு சொல்லுக்குள் நடைபெறும் மாற்றத்தையும் (கல் + இல் = கல்லில், மரம் + கள் = மரங்கள்), புறச்சந்தி என்பது இரண்டு சொற்கள், அதாவது இரண்டு பகுபதமோ, இரண்டு பகாப் பதமோ சேரும்போது ஏற்படும் மாற்றத்தையும் (மரம் + பெட்டி = மரப்பெட்டி, மரம் + நிழல் = மரநிழல்) விளக்குவதாகும்.

பெயர்ச் சொல்லோடு வேற்றுமை உருபுகளும், திணை, பால் காட்டும் விகுதிகளும் சேரும்போது ஏற்படும் மாற்றங்களும், வினைச் சொல்லோடு கால விகுதி, வினையெச்ச விகுதி, திணை, பால் விகுதி போன்றவை இணையும்போது ஏற்படும் மாற்றங்களும் அகச் சந்தி ஆகும். அகச் சந்திக்கு 'உள்நிலை விகாரம்' (Internal Sandhi) என்ற பெயரும் உண்டு.

அகச் சந்தி சொல்லியலுக்கு அல்லது உருபனியலுக்கு (Morphology) உரியது. தனிச் சொல்லாகப் பயன்படும் சொற்களின் அமைப்பைப் பகுதி, விகுதி என்று பிரித்து விளக்கும்போது, அவை ஒன்றோடு ஒன்று சேரும் நிலையில் ஏற்படும் மாற்றங்களே அகச் சந்தி ஆகும்.

தமிழ் இலக்கணத்தில் பெயர்ச் சொல்லில் ஏற்படும் அகச் சந்தி விகாரங்கள் உருபியல் அல்லது உருபு புணரியல் என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளன; ஆனால், வினைச் சொல்லில் நடைபெறும் அகச் சந்தி தமிழ் இலக்கண நூல்களில் நுட்பமாக விளக்கப்படவில்லை. செ.வை.ச.

***அகச் சிக்கனங்கள்***: நிறுவனத்தின் அளவு பெருகும்போது உற்பத்திச் செலவில் மாறுதல்கள் நிகழ்கின்றன. உற்பத்திச் செலவு மாறுதல்களுக்கான காரணங்களை மார்சல் என்பவர் இரு வகைகளாகப் பிரித்தார். அவை (1) அகச் சிக்கனங்கள் (Internal Economics), (2) புறச் சிக்கனங்கள் (External Economics) என்பன. அகச் சிக்கனங்கள் நிறுவனத்தின் செயற்பாட்டால் ஏற்படுவன. நிறுவனத்தின் அளவு பெரிதாகும்போது அந் நிறுவனத்திற்குள்ளேயே தோன்றக் கூடிய நன்மைகளை அகச் சிக்கனங்கள் என்கிறோம். இவை இந்நிறுவனத்திற்கு மட்டுமே கிடைக்கக் கூடியவை. இவற்றை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1 தொழில் நுட்பச் சிக்கனங்கள்: இவை நான்கு வழிகளில் தோன்றலாம்.

அ) எந்திர அளவு: பெரிய எந்திரங்களைப் பயன்படுத்தும்போது தொழில் நுட்பச் சிக்கனங்கள் தோன்றும். எடுத்துக்காட்டாக, நாளொன்றுக்கு 1000 சட்டைகள் தைப்பதற்குத் தகுதியுள்ள ஒரு எந்திரத்தைப் பயன்படுத்தி, 500 சட்டைகளை மட்டும் தைத்தால், ஒரு சட்டையைத் தைப்பதற்கு ஆகும் செலவு அதிகமாகிறது. ஏனெனில், இவ்வெந்திரத்தைப் பாதுகாப்பதற்கான (Maintenance) நிலையான செலவு 500 சட்டைகளின் மீது பிரித்துக் கணக்கிடப்படுகிறது. ஆனால், எந்திரத்தின் முழு உற்பத்தித் திறனான 1000 சட்டைகளைத் தைக்கும் போது, அதன் நிரந்தரப் பாதுகாப்புச் செலவை 1000 சட்டைகளின்மீது பிரித்துக் கணக்கிடுவதால் ஒரு சட்டையைத் தைப்பதற்கான உற்பத்திச் செலவு குறைகிறது.

ஆ) இணைப்பு முறை: உற்பத்தி பெருகும்போது' தொடர்புடைய பல நிலைகளை இணைக்க முடிகிறது. ஒரு பால்பண்ணை அங்குள்ள மாடுகளுக்குத் தேவையான தீவனங்களைத் தானே உற்பத்தி செய்து கொள்ளலாம். அதுபோலவே, ஒரு சர்க்கரை ஆலை அதற்கு வேண்டிய கரும்பை உற்பத்தி செய்து கொள்ளலாம். இவற்றால், சராசரி உற்பத்திச் செலவு குறையும்.

இ) உயர் தொழில் நுட்பம்: சில எந்திரங்கள் மிக்க தொழில் நுட்பம் உடையவையாக அமையும். பெரிய அளவிலான நிறுவனங்களே இத்தகைய நுட்ப

எந்திரங்களைப் பயன்படுத்த முடியும். எடுத்துக் காட்டாக, மின் சக்தியால் இயங்கும் கணிப்பொறி (கம்ப்யூட்டர்), மற்றும் தானியங்கி எந்திரங்களைக் கூறலாம்.

**ஈ) வேலைப் பகுப்பும் தொழில் திறன் மேம்பாடும்:** உற்பத்தி அளவை அதிகரிக்கும்போது வேலைப் பகுப்பு முறையைப் புகுத்துவது எளிதாகிறது. இக் கருத்தை ஆடம்சுமித்து (Adam Smith) "நாடுகளின் செல்வம்" என்ற தம் நூலில் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

ஒரு சிறிய நிறுவனத்தில் தொழிலாளர்கள் பல வேறு விதமான தொழில்களைச் செய்ய வேண்டியிருக்கும். அதன் விளைவாக வேலைத் திறமை குறைவாகத்தான் இருக்க முடியும். ஆனால், நிறுவனத்தின் அளவு அதிகரிக்கும்போது ஒவ்வொரு தொழிலாளிக்கும் தனிப்பட்ட, சிறப்பான, தகுதி பொருந்திய ஒரு வேலையைக் கொடுக்க முடியும். அதன்மூலம் ஒரு தொழிலாளியின் தனி ஒருவர் உற்பத்தி (Per Capita Production) பெருகும். எடுத்துக் காட்டாக, தையல் நிறுவனம் ஒன்றில் இரண்டு தொழிலாளிகள் இருப்பதாகக் கொண்டால், அவர்கள் இருவரும் தாமே துணியை வெட்டுதல், தைத்தல், பொத்தான் தைத்தல், தேய்த்து மடித்தல் ஆகிய அனைத்து வேலைகளையும் செய்ய வேண்டியிருக்கும். அதற்குப் பதிலாக, இன்னும் சில தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்தி, ஒருவர் துணிகளை வெட்டுவது, ஒருவர் தைப்பது, ஒருவர் பொத்தான் தைப்பது, ஒருவர் தேய்த்து மடிப்பது என்று பிரித்துச் செய்தால் அதிக துணிகளைத் தைக்க இயலும். அன்றியும் அவரவர் செய்யும் தொழிலில் சிறப்பான திறமையும், விரைந்து செயல்படும் தன்மையும் ஏற்படும்.

**2 நிருவாகச் சிக்கனங்கள்:** தேர்ச்சி பெற்ற வல்லுநர்களை ஒவ்வொரு துறையிலும் அமர்த்துவதன் மூலம், அவர்கள் திறமையுடன் செயலாற்றி உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். உலகப் புகழ் பெற்ற 'இம்பீரியல் கெமிகல் இண்டசுட்ரீசு' (Imperial Chemical Industries) என்ற நிறுவனம் 14 துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவை ஒவ்வொன்றும் ஒரு இயக்குநர் குழுவின் மேற்பார்வையில் இயங்கி வருகிறது. இவை தவிர ஏழு துறைகள், தனித்தனி இயக்குநர் தலைமையில் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் நிருவாகமானது திறமை மிக்கவர்களால் நடத்தப்பட்டு நிறுவனம் சிறந்து விளங்க முடிகிறது.

**3 வாணிகச் சிக்கனங்கள்:** பொருள்களை மொத்தமாக வாங்குவது, விற்பது ஆகியவற்றின் மூலமாகக் கிடைக்கும் நன்மைகள் வாணிகச் சிக்கனங்கள் ஆகும். பெரிய நிறுவனங்கள் பேரம் பேசி, மூலப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்க இயலும். மேலும் மொத்தமாக வாங்குவோருக்கு மற்ற நிறுவனங்கள் பல சலுகைகள் அளிப்பதும், முன்னுரிமை வழங்குவதும் இயல்பு. இருப்புப்பாதை மற்றும் சாலைப் போக்குவரத்துத் துறையினரிடமிருந்து இந்த நிறுவனங்களுக்கு வாடகைச் சலுகைகளும் கிடைக்கும். மேலும், அங்காடியில் தனக்குத் துணையான சூழ்நிலை இருக்கும்போது, இவை பொருள்களை எளிதில் வாங்கவும் விற்கவும் இயலும். அதுபோலவே விளம்பரம் போன்றவற்றைப் பெருமளவில் மேற்கொண்டு வாணிகத்தைப் பெருக்கி விற்பனைச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளவும் இயலும்.

**4 நிதிச் சிக்கனங்கள்:** நிறுவனம் நிதி வசதியைத் திரட்டுவதும் எளிது; பொது மக்கள், வங்கிகள், அரசாங்கம் ஆகியவற்றிலிருந்து எளிதில் கடன் பெற இயலும். அதுபோலவே, இந் நிறுவனம் வெளியிடும் பங்குகளும், இவற்றின் கடன் பத்திரங்களும் எளிதில் விற்பனையாகும் வாய்ப்பும் உண்டு. அதன் மூலம் நிதி வசதி பெருகும். கடன் பெறுவதற்காகத் தரும் ஈட்டின் மதிப்பு அதிகமாக இருப்பதால், பெரிய நிறுவனங்கள் வங்கிகளிடம் குறைந்த வட்டிக்கும் கடன் வாங்க இயலும். பெருந்தொகைகளையும் கடனாகப் பெற இயலும். வெளிநாட்டு வங்கிகளிடமிருந்தும் உலக வங்கியிடமிருந்தும் கூட நிதி வசதி பெறும் வாய்ப்பு ஏற்படும். பெரும் தொகைகளை நீண்ட காலத்திற்குக் கடனாகத் திரட்டும் போது, முதல் சில ஆண்டுகள் கடனைத் திருப்பித் தராமல் இருக்கும் சலுகையையும் பெறலாம்; குறைந்த வட்டி விகிதத்திலும் கடனைப்பெறலாம்.

**5 இடர்தாங்கு சிக்கனங்கள் (Risk Bearing Economics):** பொருள் உற்பத்தியில் ஈடுபடும்போது பல் வேறு இடர்ப்பாடுகள் தோன்றுவது இயல்பு. திடீரென ஒரு பொருளின் தேவை அங்காடியில் குறைந்துவிடலாம். அப்போது, இழப்பு ஏற்படும் நிலை உண்டாகும். சிறு நிறுவனத்தால் இந்த இழப்பைத் தாங்க முடியாமற் போகலாம். ஆனால், நிறுவனம் பெரிதாயிருப்பின் இவ்விழப்பை எளிதில் சமாளிக்க முடியும் இதனைச் சமாளிக்க உற்பத்தியைப் பன்முகப்படுத்துவது ஒரு வகை. பெரிய நூல்வெளியீட்டாளர், புதிய நூல்களை வெளியிடும்போது, அவற்றின் விற்பனையை மட்டும் நம்பியிராமல், பாடப்புத்தகங்கள், மலிவுப் பதிப்புகள் போன்றவற்றால் கிடைக்கும் ஆதாயத்தைக் கொண்டு இழப்பை ஈடுசெய்து கொள்வர்.

அங்காடியைப் பன்முகப்படுத்துவது மற்றொரு வழி. ஒரே நகரம் அல்லது மண்டலத்தை மட்டும் நம்பியிராமல் பல இடங்களிலும் பொருள்களை விற்பனை செய்வது ஒன்று; ஒரே மாதிரியான வாடிக்கையாளர்களை மட்டும் நம்பியிராமல், அனைத்து விதமான வாடிக்கையாளர்களையும் சார்ந்திருத்தல் மற்றொன்று.

நிறுவனத்திற்கு வேண்டிய மூலப் பொருள்களை வாங்குவதில் இடர்ப்பாடுகள் தோன்றலாம். மூலப் பொருள் தேவைக்காக ஓர் இடம் அல்லது மண்டலத்தை மட்டும் நம்பியிராமல், பல இடங்கள் அல்லது நாடுகளிலிருந்தும் மூலப் பொருள்களை வாங்கிக் கொள்வதன்மூலம் இந்த இடர்ப்பாட்டைத் தவிர்க்கலாம். பெரிய நகரங்களிலுள்ள பெரிய நிறுவனங்கள் மின் தட்டுப்பாடு ஏற்படும்போது, மின்வாரியத்தை மட்டும் நம்பியிராமல், தமக்கென்று தனியாக மின் உற்பத்திச் சாதனங்களை (generators) வைத்துக் கொள்வது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

உற்பத்தி முறைகளைப் பன்முகப்படுத்துவதும் ஒரு வழியாகும். சான்றாக, இரண்டாம் உலகப் போரின் போது 'பெட்ரோல்' தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது, பெரிய நிறுவனங்கள் நிலக்கரி அல்லது மரக்கரி (Charcoal) யினால் ஓடக்கூடிய வகையில், தம் பேருந்துகளை மாற்றியமைத்துக்கொண்டு தொடர்ந்து பணியாற்றி வந்தன.

ஒரு நிறுவனம் குறிப்பிட்ட அளவுக்குமேல் வளரும்போது மேற்கூறிய சிக்கனங்கள் தொடர்ந்து கிடைக்கும் என்று கூற முடியாது. ஒருவேளை, இவை மறைந்துவிடலாம்; அல்லது இவற்றிற்கு நேர் மாறான சிக்கனக் கேடுகளும் (Diseconomics) தோன்றக் கூடும். நிறுவனம் சிறிய அளவில் விற்பனை செய்வதைவிடப் பெரிய அளவில் விற்பனை செய்யும்போது செலவுகள் விற்பனைப் பெருக்க விகிதத்துக்கு இணையாக வளர்வதில்லையாதலால், சராசரிச் செலவு குறைகிறது. நிறுவனத்திற்குப் பல சிக்கனங்கள் தோன்றுகின்றன. காண்க: புறச் சிக்கனங்கள்.

இர.ந.

**அகச்சீராய்வு** என்பது ஒரு நிறுவனத்தின் கணக்குப் பதிவு முறையின் கட்டுப்பாட்டைக் குறிப்பது. நிறுவனம் சிறிய அளவில் செயற்படும்போது, அதன் உரிமையாளர் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் தாமே சரிபார்த்துக் கொள்ள முடியும். நாளடைவில் நிறுவனம் வளர்ச்சி அடைய அதன் நடவடிக்கைகள் பெருகும். பணியாளர் பலர் நியமிக்கப்படுவர். இந்நிலையில் உரிமையாளர் அனைத்து நடவடிக்கைகளையும் தாமே கண்காணித்தல் இயலாது. பணியாளர் இச் சூழலைப் பயன்படுத்தி மோசடிச் செயல்களில் ஈடுபட வாய்ப்பு ஏற்படும். இவ்வாய்ப்புகளுக்கு இடம் கொடுக்காமல் பணியாளரின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் வகையில், நிறுவனத்தின் நடைமுறைகளில் சில ஒழுங்குகள் செய்யப்படுவதுண்டு. பணிகள் யாவும் தவறின்றி நடைபெறவும் பணியாளர் குறிப்பிட்ட பணியைத் திட்டப்படி செய்திடவும் பல செய்ம்முறை விதிகளும், வழிகளும் நடைமுறையில் உண்டு. இவ்வகையான அகக் கட்டுப்பாட்டு முறைகளின் ஒரு பகுதியே அகச் சீராய்வு (Internal check) எனப்படுகிறது.

அகச் சீராய்வு முறையை ஒருவகை வேலைப் பகிர்வு முறை என்றும் கூறலாம். ஒரு குறிப்பிட்ட பணியை அலுவலர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு பல பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதல் பிரிவை ஒரு அலுவலரும், அடுத்த பிரிவை மற்றொருவரும் கவனித்துக் கொள்வர். அடுத்ததை மூன்றாமவர் கவனிப்பர். இரண்டாம் பிரிவை இரண்டாமவர் கவனிக்க முற்படும் பொழுது, தன்னியக்கமாகவே அவர் தமக்கு முன் பார்த்த அலுவலரின் வேலையில் தவறுகளிருந்தால், அவை திருத்தப்படாமல் தம் வேலையைத் தொடர இயலாது. இந்நிலையில் முதல் அலுவலர் செய்த தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டுத் திருத்தப்படுகின்றன. இதைப் போலவே ஒவ்வொரு அலுவலரும், அவர்தம் பணியைச் செய்யும்பொழுதே முந்தியவருடைய பணியில் ஏற்படும் தவறுகளை நீக்குவர். இதற்கேற்ப அலுவலகப் பணி பகுக்கப்படுகிறது.

அகச் சீராய்வின் நோக்கப்படி தவறுகளையோ, மோசடிகளையோ கண்டுபிடிக்க எவரையும் அமர்த்த வேண்டிய தேவையில்லை. எழுத்தர்கள் தத்தம் வேலைகளைச் செய்யும்பொழுதே மற்றவரின் தவறுகள் கண்டு கொள்ளப்படுகின்றன. இச்சீராய்வுமுறையில் கணக்கு வைப்புமுறை செயற் படுத்தப்படும் போதேஅவற்றில் ஏற்படும் தவறுகளும் மோசடிகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன. ஒருவர் செய்த வேலையை மற்றவர் திரும்பவும் செய்வதாக இல்லாமல், வேலை செய்யும்போதே சரிபார்க்கப்படுகிறது. இம்முறையில் தவறுகள் ஏற்படும் வாய்ப்புகளும் மிகக் குறைவு. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர் ஒன்றுகூடிக் கூட்டாகச் செயல்பட்டாலன்றி மோசடிகள் நடைபெற வாய்ப்பில்லை. இம்முறையில் ஒரு நடவடிக்கையின் பல நிலைகளும் ஒருவராலேயே எழுதப்படுவது தவிர்க்கப்படுகிறது. மூலப் பதிவேடு ஒன்றுக்குப் பொறுப்பான எழுத்தர், பேரேடு எழுதும் வாய்ப்பைப் பெறுவதில்லை. ஆனால் பெரிய நிறுவனங்களில், நேரப் பதிவு, கணக்கு வைத்தல், பணப் பதிவு ஆகிய

வற்றுக்குத் தான் இயங்கி எந்திரங்கள் பயன்படுத்தப்படுவதால், பல குறைகள் நீக்கப்படுகின்றன. இதன் காரணமாக அலுவலர் தவறு அல்லது மோசடி செய்யும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. நடவடிக்கைகள் எழுதாமல் விட்டுப்போவது குறைக்கப்படுவதுடன், பணியாளர் திறனும் மேம்படுகிறது. பணம், சரக்குகள் ஆகியவற்றைக் கையாடும் வாய்ப்புகள் குறைக்கப்படுகின்றன. தவறு அல்லது மோசடிகளைச் செய்யும் அலுவலர் எளிதில் அகப்படும் வாய்ப்புகள் மிகுதி. நிறுவனம் மேற்கொண்ட முடிவுகள் செயலாக்கப்படுவதைக் கண்காணிப்பதும் எளிதாகிறது.

அகச் சீராய்வு முறை பயனுள்ளதாக அமைய, சில சிறப்புக் கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும். பொறுப்புகள் சீரான முறையில் பணியாளரிடையே பகிர்ந்தளிக்கப்படுவது இன்றியமையாதது. பணியாளர் தம் பொறுப்பினைத் தெளிவாக அறிந்திருத்தல் தேவையானது. அவர் பணிக்கான செயல்முறை, ஆணைகள், கடமைகள் ஆகியன தெளிவுற எழுதி வைக்கப்படவேண்டும். பணியாளரின் பொறுப்புகளுக்குட்பட்ட பணிகளில் நிகழும் தவறுகள், மோசடிகள் ஆகியவற்றிற்குத் தொடர்புடைய பணியாளர் பொறுப்பாவர் என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும். அலுவலர் எவரும் தொடர்ந்து ஒரு வேலையை நீண்ட காலத்திற்குச் செய்ய அனுமதிக்கக் கூடாது. பணியாளர், ஒரு குறிப்பிட்ட கால ஒழுங்குப்படி ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவிற்கு மாற்றம் செய்யப்பட வேண்டும். பேரேடுகள் எழுதும் பணியில் அமர்த்தப்படுபவர், அப்பேரேட்டை நீண்ட காலத்திற்கு எழுத அனுமதிக்கக் கூடாது. விடுப்பினை எடுக்காமல் தொடர்ந்து பணியாற்றும் அலுவலரை அதனை எடுக்கச் செய்து, அவர்தம் பணியினை மற்ற அலுவலர் மூலம் மதிப்பிட வேண்டும். நிலையற்ற பணியாளரின் பணி கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். வங்கி போன்ற நிறுவனங்களில் மிகை நேர வேலை செய்து, கூடுதல் ஊதியம் பெற மிகுந்த வாய்ப்புகள் உண்டு. ஆகவே மிகை நேர வேலைகளை நன்றாகக் கண்காணிப்பது இன்றியமையாதது.

பண நடவடிக்கைகளில் கையாடல் செய்யும் வாய்ப்புகள் மிகுதி. வரவும் செலவும் கூர்மையாகக் கண்காணிக்கப்பட வேண்டும். நிறுவனங்கள் பொதுவாக அன்றாடப் பண வரவுகளை அன்றே வங்கியில் செலுத்தும் முறையினைப் பின்பற்றுவது நலம். சில நிறுவனங்களின் அன்றாடச் சில்லரைச் செலவுகளுக்காக அவ்வப் போது பணம் பெறத் தனியொரு ஊழியர் சில்லரைக் காசாளராக அமர்த்தப்படுவர். அவர் பண நடவடிக்கைகளை முன்பண மீட்பு முறை (Imprest System) யில் வைத்துக் கொள்வது நல்லது. இம்முறையில் மாதத் தொடக்கத்தில் காசாளரிடம் ஐந்நூறு ரூபாய் கொடுக்கப்படுவதாகக் கொண்டு அம் மாதத்தில் அவர் நானூறு ரூபாய் அளவிற்கு மட்டும் செலவிட்டிருந்தால் அச்செலவுக்கான கணக்கை முதன்மைக் காசாளரிடம் காண்பித்து, அதற்கான காசோலை ஒன்றினைப் பெறுவார். அடுத்த மாதத் தொடக்கத்தில் அவரிடம் பழைய தொகை நூறு ரூபாயும், பின்பு பெற்ற நானூறு ரூபாயும் சேர்ந்து மொத்தம் ஐந்நூறு ரூபாய் இருக்கும். இம்முறையை அவர் ஒவ்வொரு மாதமும் பின்பற்ற வேண்டும். நிறுவனங்களில் அன்றாடச் செலவுக்கான தொகைகளை அன்றாட வசூல் தொகையிலிருந்து எடுத்துக் கொள்ளும் பழக்க முறையைப் பின்பற்றக் கூடாது. செலவுக்கெனத் தனிக் கணக்குமுறை பின்பற்றப்படவேண்டும்.

சரக்குக் கொள்முதல் விற்பனை போன்ற நேரங்களிலும் சேமிப்புக் கிடங்கிலும், சரக்குக் கையாடல் மற்றும் மோசடிகள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு. சரக்குத் தொடர்பான சீட்டுகளுக்கு அவை தொடர்பான அனைத்து ஏடுகளிலும் தனித்தனியே பதிவுகள் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, கிடங்கில் இருந்து ஒரு குறிப்பிட்ட பண்டம் வெளியே செல்கிறதென்றால் அது குறித்த பதிவுகள், சரக்கறைப் பொறுப்பர் (Store keeper) ஏடுகளிலும் கணக்கர் ஏடுகளிலும் செய்யப்பட வேண்டும். சரக்கு வெளியே செல்லும்போது தக்க அனுமதிச் சீட்டு அளிக்கப்பட வேண்டும். நிறுவனத்திற்குக் கடன் அடிப்படையில் சரக்கு அனுப்பியவர் கணக்குகளும், சரக்கு பெற்றவர் கணக்குகளும் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் சரிபார்க்கப் படவேண்டும். நிறுவன ஏடுகளில் பதிவு செய்யப்பட்ட கணக்குகளைப் பார்ப்பதோடன்றித் தொடர்புடைய ஏட்டின் கணக்குகளைப் பெறத் தனி ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். இவ்விரண்டு கணக்குகளையும் ஒப்பிடும்பொழுது, பிழைகள் அல்லது மோசடிகள் ஏதேனும் நடந்திருப்பின் கண்டுபிடிக்க ஏதுவாய் இது அமைகிறது. கொள்முதல், விற்பனை ஆகியவற்றுக்கு அளித்த தள்ளுபடி, வாராக் கடன்கள் பற்றி எழுதப்படும் பதிவுகள் ஆகியவை மிகவும் கவனமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். பெரிய நிறுவனங்கள் "தானியங்கி" இயந்திரங்களைப் பயன்படுத்தும்பொழுது, கூடிய வரையில் தவறுகள் தவிர்க்கப்படுகின்றன. தானே இருப்பைச் சமநிலைப் படுத்தும் பேரேடு முறையில் (Self Balancing Ledgers) கணக்குப் பதிவுகள் செய்யப்பட வேண்டும். இதனைச் சரிபார்க்கும் பொறுப்பு ஒரு சிறப்பு அலுவலரிடம் இருக்க வேண்டும் மேலாண்மையினருக்கும், பணியாளருக்கும் தொடர்பில்லாத நிலை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும். பணியாளர் குறிப்பிட்ட கால

ஒழுங்கின்படி அறிக்கை அனுப்புவது செயலாக்கப் பட வேண்டும்.

அகச் சீராய்வு முறைமையில் பல நன்மைகள் உண்டு. எப்பொழுதும் அலுவலர் நேர்மையோடு நடக்க உதவுவதுடன் வேலை பகிர்ந்தளிக்கப்படுவ தால் குறிப்பிட்ட வேலையை அலுவலர் தொடர்ந்து செய்யவும் அதில் சிறப்புப் பயிற்சியும் திறனும் பெற வும் வாய்ப்புள்ளது. தவறுகள் உடனே கண்டுபிடிக் கப்பட்டுத் திருத்தப்படுவதால், ஆண்டுக் கணக்கு களை விரைவில் கணிக்க இயலுகிறது. தணிக்கையர் எளிதில் தம் தணிக்கையை முடிக்க இயலும். இச் சீராய்வு முறையில் பெரும் மோசடிகள் நடக்க வாய்ப்பில்லை.

பல நன்மைகளைக் கொண்டிருந்தபோதிலும் இச் சீராய்வு முறையைப் பின்பற்றுவதில் சில குறைகளும் உள்ளன. இம்முறையை நிறைவேற்ற நிறுவனத்தின் நடவடிக்கைகள் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட வேண் டும். பெரிய அலுவலகங்களில் மட்டுமே நடவடிக் கைகளை அவ்வாறு பிரிக்க முடியும். சிறிய நிறுவ னங்களைப் பிரிப்பது சிக்கனமாக அமையாது. மோச டிகள் நடப்பதை ஓரளவுக்குத் தவிர்க்க முடியுமே தவிர, திட்டமிட்ட மோசடிகள் நடப்பதைத் தவிர்க் கும் வாய்ப்புகள் குறைவே. இயல்பாக மூன்று அல் லது நான்கு அலுவலர் கூட்டாக முயற்சி செய்தால் மட்டுமே, மோசடிகள் நடக்க வாய்ப்புகள் உண்டு. நடைமுறையில் பெரிய நிறுவனங்களில் முயற்சி எடுத்து மோசடிகள் செய்வதும், அவை நீண்ட காலங் களுக்குக் கண்டுபிடிக்கப்படாமலிருப்பதும் பொது வில் காணப்படும் உண்மை. திறமையான அகச் சீராய்வு முறை பின்பற்றப்படும் அலுவலகங்களில், தணிக்கையர் தங்கள் தணிக்கையின்போது அனைத்து நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனிக்காமல் ஒரு சில நடவடிக்கைகளை மட்டும் சரிபார்த்து மனநிறைவ டையும் வாய்ப்புண்டு. அந்நிலையில் பல தவறுகள் கண்டுபிடிக்கப்படாமல் போகலாம்.

அகச் சீராய்வு முறையை அனைத்து நிறுவனங் களுக்கும் ஒரே சீராக அமைக்க இயலாது. நிறுவனத் தின் அமைப்பிற்கேற்ப அகச் சீராய்வு விதிகள் அமையும். பண நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் அகச் சீராய்வு நடவடிக்கைகள் இன்றிய மையாதனவாகக் கருதப்படுகின்றன. நிறுவனத் திற்கு வரும் கடிதங்களை ஒரு பொறுப்புள்ள அலுவ லரே பிரிக்க வேண்டும். அஞ்சலில் வரும் காசோலை கள், அஞ்சல் ஆணைகள் முதலியன செலாவணி இல்லை (Not negotiable) என்ற சொற்றொடருடன் குறுக்குக் கோடிட வேண்டும். நாள்தோறும் வர வாகும் பணம், காசோலைகள் ஆகியவை பணப்பதிவு ஏட்டில் பதிவு செய்யப்பட்டுஉடனே வங்கியில்செலுத் தப்பட வேண்டும். காசாளர் பேரேட்டிலோ மற்ற முதற் பதிவேட்டிலோ பதிவுகள் செய்ய அனுமதி கூடாது. வாடிக்கையாளர் செலுத்தும்தொகைகளுக் குக் குறுக்குக் கோடிட்ட காசோலைகளை அனுப்ப வேண்டுகோள் விடுக்க வேண்டும். எந்த வரவுக்கும் அதற்கான பணச்சீட்டு (Receipt) உடனே அளிக்கப்பட வேண்டும். பணச்சீட்டுப் புத்தகங்கள் தகுந்த பாது காப்புடன் வைக்கப்பட வேண்டும். அனுப்பவேண்டிய தொகைகளையும் காசோலைகள் மூலமே அனுப்ப வேண்டும். சில்லரைப் பணத்திலிருந்து சிறு செலவுகள் செய்யப்பட வேண்டும். அவ்வப்பொழுது கையில் உள்ள பணமும், கணக்குப்படி இருக்கவேண்டிய பண மும் ஒத்திருக்கிறதா என்று சரிபார்த்தல் இன்றியமை யாதது. அனுப்பப்படும் தொகைகளுக்குச் சான்றாகப் பற்றுச் சீட்டுகள் (Vouchers) பெற்று அவை முறை யாகக் கோப்பிலிடப்பட வேண்டும்.

பணம் வாங்கிக் கொண்டு செய்யும் விற்பனை யின் போது விற்பனையர் ஒவ்வொருவருக்கும் தனி விற்பனைக் குறிப்பு ஏடு வழங்கப்பட வேண்டும். பணச் சீட்டு ஒவ்வொன்றுக்கும் மூன்று படிவங்கள் இருத்தல் சிறப்புடையது. விற்பனையர் விற்பனைக் குறிப்பேட் டில் விற்பனை விவரங்கள் எழுதும்போது கரித்தாள் (Carbon papers) வழியாக மேலும் இரண்டு படி களைத் தயாரிக்க வேண்டும். மூலப்பணச் சீட்டும் முதல் படியும் வாடிக்கையரிடம் கொடுக்கப்படும். வாடிக்கையர் அவற்றைக் காசாளரிடம் கொடுத்துப் பணம் செலுத்துவர். காசாளர் கரித்தாள் படியைத் தம்மிடம் இருத்திக்கொண்டு மூலப் பணச்சீட்டைக் கையெழுத்திட்டு வாடிக்கையரிடம் கொடுப்பர். வாடிக்கையர் மூலப் பணச்சீட்டைச் சரக்கு விற்ப னையாளரிடம் காட்டிப் பொருள்களைப் பெற்றுக் கொள்வர். காசாளர் தம்மிடமுள்ள பணச் சீட்டுக ளின்படி ஒரு பட்டியல் அமைப்பார். விற்பனையாளர் தம்மிடமுள்ள பணச்சீட்டுகளின்படி ஒரு பட்டியல் அமைப்பார். இரண்டு பட்டியல்களும் ஒப்பிடப்பட்டுப் பணம் வாங்கிக் கொண்டு செய்த விற்பனை எவ் வளவு என்றுகணக்கிடப்பட்டுப் பொதுப்பண ஏட் டில் பதிவு செய்யப்படும்.

நிறுவனம், அஞ்சல் வழி மூலம் விற்பனை மேற் கொண்டால், (Value Payable by Post) அதற்கெனத் தனி ஏடு ஒன்று வைத்திருக்க வேண்டும். வாங்குபவ ரிடமிருந்து முன்பணம் பெறப்பட்டிருந்தால் அது இந்தப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும். பொறுப் புள்ள அலுவலர் அடிக்கடி இப்பதிவேட்டை முன்ன றிவிப்பின்றிச் சீர்தூக்கவேண்டும். வாங்குபவரிட மிருந்து கடித வழித் தொடர்பு கொண்டு அவர்

செலுத்த வேண்டிய தொகை சரியாகக் கணக்கிடப் பட்டுள்ளதா என்பதை உறுதிசெய்ய வேண்டும். அஞ்சல் வழியில் நாள்தோறும் பெறும் பணம், பண ரொக்க ஏட்டில் பதிவு செய்யப்படவேண்டும்.

பெரிய நிறுவனங்கள் சிலவற்றில் பயண முகவர் கள் (Career Agents) பலர் அமர்த்தப்பட்டு விற்பனை பெருகும். இந்நிலையில் பயண முகவர்களை வாடிக் கையாளரிடமிருந்து பணம் வசூலிக்க அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதிக்கப்பட்டாலும் அத்தொ கையிலிருந்து எச்செலவிற்கும் பணம் எடுக்க வழி வகுக்கக்கூடாது. தொகை முழுவதும் உள்ளூர் வங் கியில் அலுவலகக் கணக்கில் கட்டப்பட வேண்டும். வசூல் விவரம் உடனுக்குடன் அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அலுவலகம், வாடிக்கை யாளரிடம் கடித மூலம் தொடர்பு கொண்டு கணக் கைச் சரிபார்க்க வேண்டும். பயண முகவர்களின் பணியிடம் உடனுக்குடன் மாற்றப்பட வேண்டும்.

சில்லரைச் செலவினங்கள் ஒரு பகுபடு பணப் பதி வேட்டில் (Analytical Cash Book) பதிவாக வேண் டும். சில்லரைச் செலவிற்காகக் காசாளரிடமிருந்து காசோலைகள் மூலம் வரும் பணத்தைத் தவிர, வேறு எந்த வரவும் அதில் இருக்கக் கூடாது எந்தச் சிறிய செலவிற்கும் சான்றுச்சீட்டுப் பெறவேண்டும். சான் றுச்சீட்டுப் பெற முடியாதபோது ஒரு செலவுச்சீட்டுத் தயார் செய்து ஒரு பொறுப்புள்ள அலுவலரின் கையொப்பம் பெற்றுக் கோப்பிலிட வேண்டும். சில் லரை ரொக்க ஏடு, முன்பண மீட்பு முறையில் எழுதப்பட வேண்டும். அலுவலர் எவரும் சில்லரை ரொக்க ஏட்டின் மூலமாகச் சிறுகடன் பெறும் அனு மதி கூடாது.

மிகுந்த எண்ணிக்கையில் தொழிலாளர் வேலை செய்யும் நிறுவனங்களில் கூலிப் பட்டுவாடா செய்யப் படுவது சிறந்த முறையில் இருத்தல் இன்றியமையா தது. கூலி ஏட்டில் கற்பனைப் பெயர்களை எழுது வது, ஆவணங்களில் பொய்யான விவரங்கள் தருவது போன்றவற்றால் பணம் கையாடப்பட்டு மோசடி நடக்கும் வாய்ப்புகள் மிகுதி. இவை ஏற்படாத வகையில் சீரான அகச் சீராய்வு முறை பின்பற்றப் பட வேண்டும். தொழிற்சாலையின் நுழைவாயிலில் நேரம் பதியும் கடிகாரங்கள் வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவரது பெயர், எண், பிரிவு, கூலி விகிதம் போன்ற செய்திகளடங்கிய அட்டை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் கூலி வழங்கு முறை சில நிறுவனங்களில் பின்பற்றப்படு கிறது. கூலிப் பட்டியல் தயாரிக்கும் ஒவ்வொரு எழுத்தரும் அதில் ஏற்படக்கூடிய தவறுகளுக்குப் பொறுப்பேற்கும் வகையில் கையொப்பமிட வேண் டும். கூலிப் பட்டுவாடா செய்பவர், கூலிப் பட்டியல் தயார் செய்தவராக இருக்கக் கூடாது. பணியாளர் ஊதியம் பிறரிடம் அளிக்கப்படக் கூடாது.

நிறுவனத்தின் சரக்கு அறை பாதுகாப்பான இடத்தில் இருக்க வேண்டும். அதற்குள் வருபவரோ உள்ளிருந்து வெளியே செல்பவரோ பொறுப்பான அலுவலர் ஒருவரைத் தாண்டிச் செல்லும்படியான ஒழுங்குமுறை இருத்தல் நலம். சரக்குப் பிரிவில் இருக் கும் ஒவ்வொரு சரக்கிற்கும் ஒருதனி எண் குறிக்கப் பட வேண்டும். சரக்குகள் வைத்திருக்கப்படும் தொட்டிகளின் (Bin) வெளிப்புறத்தில் ஒரு அட்டை தொங்கவிடப்பட வேண்டும். இந்த அட்டைகளில், பெற்ற சரக்கின் விவரம், வெளியில் எடுத்த அளவு, கையிருப்பு ஆகிய செய்திகள் குறிக்கப்பட வேண்டும். தொழிற்சாலைப் பிரிவுகளிலிருந்து திருப்பி அனுப்பப் படும் சரக்குகள் சரியான முறையில் கணக்கில் கொண்டுவரப்பட வேண்டும். அடிக்கடி சரக்கு இருப் புச் சரிபார்க்கும் வேலையை மேற்கொள்வது நல்லது. இவற்றுக்குப் பொறுப்பான அலுவலர் சரக்குக் கணக் குகளை முன்னறிவிப்பின்றிச் சோதனை செய்வது நல்லது.

பொதுவாக, அகச்சீராய்வு முறையில் முழு நன் மையைப் பெற்றிட நிறுவனத்தின் நடவடிக்கைகள் நுண்ணறிவுடன் பகுக்கப்பட வேண்டும். இவ்வகை நிறுவனங்களில் தணிக்கையர் வேலை மிகவும் எளி தாகிறது. தணிக்கையர் தம்முடைய திறமை, பயிற்சி, மதிப்பீடு, நுண்ணறிவு ஆகியவற்றைக் கொண்டு தம் பணிகளை நிறைவேற்ற வேண்டும். தணிக்கையர் அகச் சீராய்வு முறையில் குறைபாடுகளைக் கண் டால் அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிகளை ஆராய்ந்து, அதற்கான பரிந்துரைகளை மேலாண்மை யினருக்குத் தெரிவிப்பர். காண்க: அகத்தணிக்கை.

பி. இரா.

**அகசுடசு சீசர் (கி.மு.63-கி.பி.14)** உரோமா னியப் பேரரசின் முதல் பேரரசர் ஆவர். இவருக்கு மூன்று பெயர்கள் உண்டு. இவரது பிள்ளைப் பெயர் கேயசு அக்டேவியசு என்பதாகும். சூலியசு சீசர் (Julius Caesar) இவரை ஏற்புமகனாக எடுத்துக் கொண்டபோது இவர் கேயசு சூலியசு சீசர் அக்டோ வியசு என அழைக்கப்பட்டார். இது இவரது இரண் டாம் பெயர். மூன்றாம் பெயர் பேரரசர் சீசர் அக சுடசு (Augustus Caesar) என்பதாகும். இவர் பேரரச ராக கி.மு. 27-ஆம் ஆண்டில் முடிசூட்டிக் கொண் டார்.

அகசுடசு சீசரின் செல்வாக்கு பரந்து விரிந்தது. இவரது புகழ் ஏறத்தாழ 200 ஆண்டுகள் நிலைபெற் றிருந்தது. இவரது ஆட்சிக்காலத்தில் உரோமாபுரி பெரும் புகழை ஈட்டியது. எனவே, இவரது காலத்தை

'அகசுடசின் காலம்' என்பர் வரலாற்றாசிரியர். இக் காலம் உரோமானிய இலக்கியத்திற்கும் கட்டடக் கலைக்கும் பொற்காலம் ஆகும். வர்சில் (Vergil), ஒராசு (Horace), ஓவிட் (Ovid), லிவி (Livy) போன்ற தலைசிறந்த எழுத்தாளர்கள் இவர் காலத்தில் வாழ்ந்தார்கள். அவர்களது பணிக்குப் பேரரசர் அகசுடசு பேராதரவு அளித்தார். அகசுடசும் ஒரு சிறந்த எழுத்தாளராவார்.

அகசுடசின் ஆட்சிக் காலத்தில் உரோமாபுரியில் பல்வேறு சாலைகள், பாலங்கள், கால்வாய்கள், கட்டடங்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. ''உரோமாபுரியைச் செங்கற்களால் பார்த்தேன்; அங்குப் பளிங்குக் கற்களை விட்டுச் சென்றேன்'' என்று பெருமிதத்துடன் இவர் கூறிக்கொண்டார். சூலியசு சீசரால் கட்டி முடிக்கப் பெறாது விடப்பட்டிருந்த கட்டடங்களைக் கட்டி முடித்ததுடன், பல்வேறு புதிய கட்டடங்களையும் கட்டினார். இவற்றுள் 82 கோயில்கள் அடங்கும். சிற்பக் கலைஞர்கள் அழகிய பல பணிகளை முதல் தரமான பாணியில் உருவாக்கினார்கள்.

சீசர் காலமானதும் உரோமாபுரியை அந்தோனி (Antony) தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். ஆனால் அக்டேவியசு படையொன்றைத் திரட்டி வட இத்தாலியில் கி.மு. 43-ஆம் ஆண்டு அந்தோனியைத் தோற்கடித்தார். அக்டேவியசு, செனட் அவையை வற்புறுத்தி உரோமாபுரி அரசாங்கத்தின் தலைவராகத் தம்மைத் தேர்ந்தெடுக்கும்படி செய்தார். பின்னர், அக்டேவியசும் அந்தோனியும் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டனர். இருவரும் இணைந்து மூன்றாம் உறுப்பினராக அக்மிலியசு லெபிடசு என்னும் உரோமானியப் படைத்தலைவரையும் சேர்த்து, மூவர் கூட்டினை அமைத்துக் கொண்டனர். இதனை இரண்டாம் மூவர் கூட்டணி என்பர். இக்கூட்டணியினர் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பகைவர்களைக் கொன்றனர்; அவ்வாறு கொல்லப்பட்டவர்களுள் சிசரோவும் ஒருவர்; அவர் அக்டேவியசின் நண்பர்; ஆனால் அவரை மார்க்கு அந்தோனி (Mark Antony) வெறுத்தார். சீசரைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்த புருட்டசையும் (Brutus) காசியசையும் (Cassius) அவர்களுக்கு எதிராகப் படை திரட்டி, அக்டேவியசும் அந்தோனியும் எதிர்த்தனர். அந்தோனியின் திறமையின் விளைவாக அவர்கள் அக்கொலையாளிகளை கி.மு. 42-ஆம் ஆண்டு மாசிடோனியாவில் பிலிப்பி என்னுமிடத்தில் தோற்கடித்தனர். பேரரசின் மேலை மாநிலங்களுக்கு அக்டேவியசும், கீழைமாநிலங்களுக்கு அந்தோனியும் அரசர்களாயினர். திறமையற்றவரான லெபிடசு (Lepidus) ஆப்பிரிக்காவின் அதிபராகப் பொறுப்பேற்றார். ஆனால் விரைவில் அக்டேவியசு அவரைப் பதவியிலிருந்து விலக்கினார். அவர்களின் மற்றொரு பகைவரான இளைய பாம்பெ (Pompeii) என்பார் சிசிலியைக் கைப்பற்றியிருந்தார். ஆனால் கி. மு. 36-ஆம் ஆண்டில் பாம்பெயை மார்க்கசு அக்கிரிப்பா என்பார் தோற்கடித்தார். அக்கிரிப்பா அக்டேவியசின் தளபதியும் சிறந்த அறிவுரையாளருமாவார்.

அக்டேவியசின் சகோதரி அக்டேவியா (Octavia) என்பவளை கி. மு. 40-இல் அந்தோனி மணந்து கொண்டார். ஆனால் எகிப்திய அரசி கிளியோபாத்திரா என்பாள்மீது மையல் கொண்ட அந்தோனி, பின்னர் அக்டேவியாவைக் கைவிட்டார். உரோமானியர் கிளியோபாத்திராவை வெறுத்தனர். உரோமானிய மாநிலங்களை அந்தோனி, கிளியோபாத்திராவுக்குப் பிறந்த தம் மக்களுக்குக் கொடுத்தபோது அந்தோனிக்கும் கிளியோபாத்திராவுக்கும் எதிராக அக்டேவியசு போர் தொடுத்தார். அக்டேவியசின் தளபதியான அக்கிரிப்பா, அந்தோனியையும் கிளியோபாத்திராவையும் ஆக்சியம் என்னுமிடத்தில் நடந்த கடற்போரில் கி. மு. 31-இல் தோற்கடித்தார். ஆக்சியம் கிரீசின் மேற்குக் கரையிலுள்ளது. ஓராண்டுக்குள் அந்தோனியும் கிளியோபாத்திராவும் தற்கொலை செய்து கொண்டனர்.

அக்டேவியசு முடியாட்சியை கி.மு. 27-இல் நிலைநாட்டினார். செனட் அவை, அக்டேவியசுக்கு அகசுடசு என்னும் பட்டப் பெயர் கொடுக்கத் தீர்மானித்தது. சமயம், உள்துறை, படைத் தொடர்பான செயல்கள் போன்றவற்றைக் கவனிக்க அவருக்குச் சட்டப்படியான அதிகாரத்தைக் கொடுத்ததுடன், செனட் அவையும் அவருக்கு ஆலோசனைக் குழுவாக இருக்க வேண்டும் என்றும் முடிவாயிற்று.

உரோமானியப் பேரரசில் வாழ்ந்த மக்கள் அகசுடசைத் தெய்வம் என வழிபட்டனர். அவருடைய கல்லறையின் அழிவுச் சின்னத்தையும் அவர் கட்டிய கட்டடங்கள் பலவற்றின் சின்னங்களையும் இன்றும் உரோமாபுரியில் காணலாம்.

**அகசுடசின் சாதனைகள்:** நூறாண்டுகள் உள்நாட்டுப் போரால் அலைக்கழிக்கப்பட்டிருந்த உரோமானியப் பேரரசில் அக்டேவியசு, அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினார். நாட்டில் நேர்மையான அரசாங்கம், நன்னிலையில் செலாவணியான நாணயமுறை, மாநிலங்களுக்கிடையே தடையிலா வாணிகம் போன்றவற்றைப் பேணிக் காத்தார். திறமை வாய்ந்த அஞ்சல்துறை, துறைமுகங்களின் வளர்ச்சி, குடியேற்ற நாடுகளை அமைத்தல் போன்றவற்றையும் அவர் முன்னேற்றமடையச் செய்தார். நாடு நெடுகிலும் சீரான நெடுஞ்சாலைகளை

அமைத்துத் தொலைவிலிருந்த பேரரசுப் பகுதிகளை உரோமாபுரியுடன் இணைத்தார்.

அமைதி நிலவிய மாநிலங்களின் ஆட்சிப் பொறுப்பைச் செனட் அவையிடம் ஒப்படைத்து, அமைதியற்ற மாநிலங்களின் பொறுப்பைத் தம்மிடம் அகசுடசு வைத்துக்கொண்டார். அதற்காக இவர் நிலையான படையொன்றையும் வைத்திருந்தார். மத்தியதரைக் கடலில் நிலையான கப்பற் படையொன்றையும் நிறுவினார். பேரரசரைக் காத்து நிற்கச் சிறிய மெய்க்காவலர் படையொன்றையும் இவர் உரோமாபுரியில் வைத்திருந்தார்.



அகசுடசு சீசர்

**விரிந்த பேரரசு:** அகசுடசு உரோமானியப் பேரரசை ஓரளவு விரிவடையச் செய்தார். ஆயினும் இவர் அமைதியிலேயே மிகுந்த நாட்டம் கொண்டார். தேவைப்பட்டபோது மட்டுமே இவர் போரில் ஈடுபட்டார். இவருடைய படைத்தலைவர்களான அக்கிரிப்பாவும் தைபீரியசும் இசுபெயின் (Spain), கால் (Gaul) (இன்றைய பிரான்சு), பன்னோனியா (Pannonia) தால்மேசியா (Talmasia) (இன்றைய அங்கேரி, யூகோசுலேவியாவின் பகுதிகள்) போன்றவற்றை வென்றார்கள். அகசுடசு எகிப்தைப் பேரரசுடன் இணைத்துக்கொண்டார். இசுபெயின், கால், தான்யூப் ஆறு வரையிலிருந்த தென்கிழக்கு ஐரோப்பாவின் பெரும்பகுதிகளை அமைதிப்படுத்தினார். இவருடைய படையைச் செருமானியர் கி.பி. 9-ஆம் ஆண்டில் 'தியூடோபார்க்குக் காடுகள்' என்னுமிடத்தில் அழித்தனர். அதன் விளைவாக உரோமானியரின் எல்லைப்புறம் எல்ப் (Elbe) ஆற்றிலிருந்து இரைன் (Rhine) ஆற்றுக்குப் பின்னால் தள்ளப்பட்டது.

அகசுடசு பதட்டப்படாமல் எதனையும் ஆழ்ந்து செய்யும் அரசியல் வல்லுநர். பொது மக்களின், அன்பைப்பெறும் கலை இவருக்குக் கைவந்த ஒன்று. இவர் கி. பி. 14-ஆம் ஆண்டில் காலமானார்.

**இலக்கியம்:** உரோமானிய இலக்கியம் இவருடைய ஆட்சிக்காலத்தில் சிறப்புற வளர்ச்சி பெற்றிருந்தது. அகசுடசின் கருத்தறிந்துதான் வர்சில் (Virgil) 'ஈனியாது' (Aeneid) என்னும் நூலை எழுதினார். ஓராசு (Horace) என்பார் சமயச் சார்பில்லாக் கவிதைகளைத் தொகுத்தார். ஓவிது, காதல் கவிதைகளை எழுதிப் பிறன்மனை விழைதல் தகாதது என்று கூறியபோது உரோமாபுரியிலிருந்து விரட்டப்பட்டார். அவரைப்போன்றே காசியசு (Cassius) சர்விரசு (Serverus) என்பாரும் தாம் எழுதிய இலக்கியங்களுக்காக நாடுகடத்தப்பட்டனர்.

**இறுதிக்காலம்:** தமது வாரிசாக வரத் தகுதி படைத்த ஒருவரைத் தேடி அலைந்தும் அகசுடசு வெற்றி பெறவில்லை. சொந்த மகன் இல்லாத காரணத்தால் அகசுடசு தம் நெருங்கிய உறவினரான மார்செலசு என்பாரையும் தம் நண்பர் அக்கிரிப்பாவையும், பின்னர்த் தம் பேரர்கள் கேயசு (Gaius), இலூசியசு (Lucius) என்பாரையும் தேர்ந்தெடுத்தார். ஆனால் அவர்கள் அனைவரும் இவர் காலமாவதற்கு முன்னரே மாண்டனர். இறுதியாக, கி.பி. 4-ஆம் ஆண்டில் இவருடைய ஒன்றுவிட்ட மகனாகக் கருதப்பெற்ற தைபீரியசு (Tiberius) என்பாரை வேண்டா வெறுப்போடு தம் வாரிசாகத் தேர்ந்தெடுத்தார். இவருடைய மகளும் பேத்தியும் கற்பிழப்புக் குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டனர். சொல்லொணாத் துயருற்ற அகசுடசு தம் இறுதி ஆண்டுகளில் கொடுங்கோலராய் மாறினார்; தேர்தல்களை முறைகேடாகக் கட்டுப்படுத்தினார்; நாட்டில் பல்வேறு தடைச் சட்டங்களைச் செயல்படுத்தினார்; தவறான செயல்களைப் புரியத் தம் வாரிசுகளுக்கு வழிகாட்டினார்.

அகசுடசின் ஆட்சி வல்லாட்சிக்கு வழிவகுத்தது குறிப்பிடத்தக்கதாகும். இருப்பினும் அவர் உரோமானியப் பேரரசின் வளர்ச்சிக்குப் புரிந்த பெருஞ்செயல்கள் அவருடைய குறைகளைவிடச் சிறப்பானவை. இருநூறாண்டுகள் உரோமானியப் பேரரசில்

அமைதி நிலவியமைக்கு அகசுடசின் ஆட்சியே மூல காரணம் எனில் மிகையாகாது. அவர் தம் 76-ஆம் ஆண்டில் காலமானார்.



அகசுடின், தூய

**அகசுடின், தூய (கி.பி. 354-430)** என்பவர் மேனாட்டுத் தத்துவ வரலாற்றில் குறிப்பிடத்தக்கவர். வட ஆப்பிரிக்காவிலுள்ள தகசுதே (Tagaste) என்னும் இடத்தில் தூய அகசுடின் (St. Augustin) பிறந்தார்; இளமையில் இலத்தீன் மொழியைக் கற்பதில் ஆர்வம் காட்டினார்; இவர் கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தைச் சார்ந்தவர்; சிறந்த எழுத்தாளர்; வளமான சிந்தனையாளர். 'மூவொருமை', 'கடவுளின் நகரம்' (Trinity, City of God) போன்ற நூல்களை இவர் எழுதியுள்ளார்.

அரிசுடாட்டில், பிளேட்டோ ஆகியோரின் கருத்துகளை இவர் கற்று, ஒப்பீடு செய்து, அவற்றுள் பிளேட்டோவின் கருத்துகளே மிகச் சிறந்தன என்று கூறினார். இவ்வாறு வெளியிட்ட கருத்துகளும் கோட்பாடுகளும் அகசுடினியக் கொள்கை (Augustinism) எனப்படுகின்றன. இவர் கடவுள், ஆன்மா ஆகிய இரண்டையும் இரு துருவங்களாகக் கருதினார். திருச்சபை பற்றித் தமது நூல்களின் வாயிலாகவும் சொற்பொழிவுகள் வாயிலாகவும் வலியுறுத்தி வந்தார்.

இவ்வுலகத்தைப் படைத்த கடவுள், முழுமுதற் பொருள் (Absolute Being) ஆவார். அவர் இவ்வுலகத்தை இயக்கிக் கொண்டிருக்கிறார்; இவ்வுலகில் உள்ள அனைத்துப் பொருள்களும் கடவுளால் உண்டாக்கப்பட்டவை; கடவுள் இல்லையெனில் இவ்வுலகம் இல்லை; கடவுள் எல்லா நிலைகளையும் கடந்து நிற்பவர்; எங்கும் நிறைந்தவர்; மாறாதவர்; அழிவில்லாதவர்; இவ்வுலகில் உள்ள பொருள்களில் கடவுளை விட உயர்ந்த பொருள் வேறு ஒன்றும் இல்லை; உலகில் மிகச் சிறிய செடி கொடிகள் தோன்றுவதற்கு விதை மூலகாரணமாக அமைவதுபோல், உலகம் படைக்கப்படுவதற்குக் கடவுள் மூலகாரணமாக விளங்குகிறார் என்று இவர் குறிப்பிட்டுள்ளார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் குருமார்கள், தங்கள் வாழ்க்கையின் மூலமாகவும் போதனைகளின் மூலமாகவும் இறைவன் கருணையையும் செயல்களையும் மற்றவர்களுக்கு உணர்த்த வேண்டுமென்றார்; அவ்வாறே தாம் வாழ்ந்தும் காட்டினார். மேலும் கடவுளை ஒளி வடிவத்தில் காணச் சமய ஆசிரியர்கள் ஒழுக்க நெறியுடன் விளங்க வேண்டும் என்றும் அவ்வொழுக்க நெறியின் வாயிலாகத்தான் கடவுள் அருளைப் பெற இயலும் என்றும், விவிலிய நெறிப்படி தாம் செய்கின்ற பாவங்களுக்கு மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இவரது சமயக் கோட்பாடு செறிவினையும் பரந்த மனப்போக்கையும் உடையது. இவர் கூறிய கடவுளின் அருள் (Doctrine of Grace) என்பது குறிப்பிடத்தக்கதாகும். கடவுள் ஒளி வடிவிலும் அன்பு வடிவிலும் தோற்றம் அளிக்கிறார் என்ற கருத்தைக் கத்தோலிக்கரும் சீர்திருத்தவாதிகளும் (Protestants) ஒப்புக்கொண்டுள்ளனர். தூய அகசுடின் அறிவாராய்ச்சியியலைப் (Epistemology) பற்றித் தத்துவ வரலாற்றில் குறிப்பிடுகையில், நம்பிக்கையைப் பற்றியும் இதனுடன் எவ்வாறு அறிவாய்வு (Reasoning) இணைந்துள்ளது என்பதைப் பற்றியும் கூறுகிறார். அறிவாய்வின் மூலமாகப் புலனனுபவ அறிவு பிறக்கிறது என்றும், அறிவுக்கு அடிகோலுவது ஐயந்தான் என்றும் குறிப்பிடுகிறார்.

அகசுடின் அவர்களின் திருச்சபைப் போதனைகளுக்கு மேலை நாடுகளில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இவர் உளவியல் சார்ந்த இட-நேரக்(Space-time theory) கோட்பாட்டின் அமைப்புப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**அகண்ட காவேரி:** கருநாடகம், தமிழ்நாடு ஆகிய இரு மாநிலங்களில் ஓடும் காவேரி ஆறு இந்திய நாட்டில் பெருமையாகப் பேசப்படும் ஏழு புனித ஆறுகளுள் ஒன்று. இது காவிரி எனவும் படும். இதனைத் தென்னாட்டுக் கங்கை என்பர். குடகு மலையில் தொடங்கி, கொங்கு நாட்டைக் கடந்து சோழ மண்டலத்தை அடையும் காவிரி, திருச்சிராப்பள்ளிக்கருகில், திருவரங்கத்தைத் தீவாக ஆக்கும் வகையில் இரண்டாகப் பிரிகிறது. ஒன்று, காவிரி என்றும், மற்றொன்று, கொள்ளிடம் என்றும் பெயர் பெறுகிறது. இவ்வாறு பிரிவதற்கு முன், ஒன்றாகப்



அகண்ட காவேரி
(திருப்பராய்த் துறை)

பெருகி வரும் காவிரியைத்தான் அகண்ட காவேரி என்பர். அகண்டம் என்பதற்குப் பிரிவுபடாதது என்பது பொருள். காண்க: காவிரி.

**அகண்டானந்த சுவாமி**: இராமகிருட்டிண பரமஅம்சரின் மாணவர்களுள் ஒருவராய்த் துறவியாகி, இராமகிருட்டிணரின் அருட்பணியைச் செய்தவர். அவர் கி.பி. 1864-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30-ஆம் நாள் கல்கத்தாவில் பிறந்தார்.



அகண்டானந்த சுவாமி

பெற்றோர் அவருக்குச் சூட்டிய பெயர் கங்காதர கடக்கு (Gangadhar Ghadak) என்பதாகும். முதன் முதலாக அவர் கி.பி.1884-இல் இராமகிருட்டிணரைச் சந்தித்தார். வறட்சித் துயர் துடைக்கும் பணியில் மிகுந்த ஆர்வம் காட்டிய அவர், கி.பி. 1898-ஆம் ஆண்டில் மகுலா (Mahula) என்னுமிடத்தில் அனாதைக் குழந்தைகள் பலரைக் காக்கும் பணியில் ஈடுபாடு கொண்டார். அமைதியாக ஆரவாரமின்றி ஆக்கப் பணி செய்வதையே அவர் பெரிதும் விரும்பினார். நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும், அவர் சாரகாச்சி (Saragachchi) என்னும் சிற்றூரில் பணி புரிந்து வந்தார். அங்கு அவர் இராமகிருட்டிணர் தவமனை ஒன்றையும் அமைத்தார். கங்காதரர் என்னும் பெயருடனே அவர் சுவாமி விவேகானந்தருடன் இந்திய நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றார். காசுமீரத்தில் தங்கியிருந்தபோது, அவர் ஒற்றராக இருக்கக்கூடும் என்னும் ஐயத்தால், சிரீநகரில் (Srinagar) அரசு அவரைச் சிறையில் அடைத்தது. தீவிர ஆய்வுக்குப் பின்னர், அவர் உண்மையான துறவியே என அறிந்து, அரசு அவரை விடுவித்தது. கல்கத்தாவுக்குத் திரும்பிய கங்காதரர், பேலூர் மடத்தில் வச்சிர ஓமம் என்னும் வேள்வியைச் செய்தார். அதற்குப் பின்னரே அவருக்கு அகண்டானந்தர் என்னும் பெயர் வந்தது. சுவாமி அகண்டானந்தர் 1925-ஆம் ஆண்டில் இராமகிருட்டிணப் பணி மன்றத்தின் (Ramakrishna Mission) துணைத்தலைவரானார். சுவாமி சிவானந்தர் காலமான பின் 1934-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் அவர் அம்மன்றத்தின் தலைவரும் ஆனார். சுவாமி அகண்டானந்தர் 1937-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 7-ஆம் நாள், தமது 71-ஆம் வயதில் பேலூர் மடத்தில் இறைவனடி சேர்ந்தார்.

**அகத் தணிக்கை**: நிறுவனத்தின் அலுவலர்களே கணக்குகளைத் தணிக்கை செய்வது அகத்தணிக்கை (Internal Auditing) எனப்படும். நிறுவனத்தின் கணக்குகள், நடவடிக்கைகள் அனைத்தும் தணிக்கை செய்யப்பட்டால் மட்டுமே நிறுவனத்தின் வளர்ச்சியை மதிப்பிட முடியும். வணிக நிறுவனங்கள், பொதுவாக, தனியார் நிறுவனமாகவோ நிறுவன அமைப்பு மூலமோ நடைபெறலாம். நிறுவன அமைப்பு, பொதுமக்கள் சிலரிடமிருந்து சிறு தொகைகளைத் திரட்டி அவற்றை மூலதனமாகக் கொண்டு, அவர்களுள் ஒரு சிலரால் நிருவகிக்கப்படுவது. நிறுவனத்துடன் தொடர்பில்லாத பொது மக்களின் பணம் பயன்படுத்தப்படுவதால் நிறுவனக் கணக்குகள், நிறுவனச் சட்டப்படி தணிக்கை செய்யப்பட வேண்டும். ஆனால், இந்நிறுவனங்கள், கணக்குகள் தணிக்கை செய்யப்படுவதால் ஏற்படும் நன்மைகளைக் கண்டு தங்கள் கணக்குகளையும் தணிக்கை செய்கின்றன. தணிக்கை செய்வதற்கான சிறப்புத் தகுதி பெறாதவர்களும் அகத் தணிக்கையை மேற்கொள்ளலாம். நிறுவனங்கள் தங்கள் கணக்குகளை, நிறுவனத்துடன் தொடர்

பற்ற, ஆனால் பயிற்சிபெற்ற, ''பட்டயக் கணக்கர்'' (Chartered Accountant) மூலம் சரிபார்த்துக் கொள்வது ''சட்டமுறைத் தணிக்கை'' எனப்படுகிறது. இது, நிறுவனச் சட்டப்படி செய்யப்படவேண்டிய கடமைகளுள் ஒன்றாகும்.

நிறுவனத்தின் கணக்கு வைப்பு நடவடிக்கைகள், நிதி நடவடிக்கைகள், தொழில் நடப்பு நடவடிக்கைகள், ஆகியவற்றைத் தணிக்கை முறையில் மறு ஆய்வு செய்து, அதன் மெய்ந்நிலையை மேலாண்மையினருக்கு (Management) முறையானவகையில் தெரிவிப்பது அகத் தணிக்கையாகும். அகத்தணிக்கை மேலாண்மையினருக்குத் தேவையான பாதுகாப்பை அளிக்கிறது. நிறுவனத்தின் முழுநேர அலுவலர்கள், நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்ந்து திறனாய்வு செய்வது, அகத் தணிக்கையின் சிறப்புத் தன்மையாகும். பெரிய நிறுவனங்களில் அகத் தணிக்கைக்கெனத் தனித்துறை செயல்படுகிறது திட்டங்களின் செயலாக்கம், அகச் சீராய்வின் (Internal Check) முறைமை, நிறுவனத்தின் கட்டுப்பாடுகள் ஆகியன குறித்துச் சீர்தூக்கி மேலாண்மைக்குக் கருத்துத் தெரிவிப்பது இத்துறையே ஆகும்.

அகத் தணிக்கையும், அகச் சீராய்வும் ஒன்று போலக் காணப்பட்டாலும் இரண்டும் பரப்பிலும் நோக்கிலும் வேறுபட்டு நிற்பன. ஒன்றுக்குப் பதிலாக மற்றொன்று அமையாது. அகச் சீராய்வு முறையில் நிறுவனத்தின் நடவடிக்கைகள், சிறந்த முன்னேற்பாட்டின்படி பிரிக்கப்பட்டு அலுவலர்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த முறையில் பதிவுகள் செய்வதும், அவற்றைச் சரிபார்ப்பதும் ஒரே நேரத்தில் தானாக இயங்குகின்றன. ஆனால், அகத் தணிக்கை, பதிவுகள் அனைத்தும் எழுதி முடித்த பின்னர் மேற்கொள்ளப்படுவது. தவறுகள், மோசங்கள் முதலியன நடக்காமல் தவிர்க்க அகச் சீராய்வு மேற்கொள்ளப்படுகிறது. இவை நடப்பதைக் கண்டறிய அகத்தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அகச் சீராய்வை மீறி ஏற்படும் தவறுகளையும் மோசடிகளையும் அகத் தணிக்கை கண்டறிகிறது. நிறுவனத்தில் அகச் சீராய்வு எவ்விதத்தில் நடைபெறுகிறது என்பதை மதிப்பீடு செய்ய உதவும் அகத் தணிக்கையில், தணிக்கைப் பணியைச் செய்வதற்கென்று தனியே ஒரு முழு நேர அலுவலர் அமர்த்தப்படுகிறார்.

அகத் தணிக்கையர் நிறுவனத்தின் மேலாண்மையினரால் அமர்த்தப்படுகிறார். இப்பணியினை மேற்கொள்ளக் குறிப்பிட்ட தகுதி ஒன்றும் தேவையில்லை. பயிற்சி அறிவுள்ளவர் அகத் தணிக்கையராகப் பணியாற்றலாம். அகத் தணிக்கை, நிறுவனத்தில் தொடர்ந்து நடைபெறும் நிறுவனப் பணிகளின் ஒரு பகுதியாக அமைகிறது. அகத் தணிக்கையரின் பணிகளை மேலாண்மையினர் முடிவு செய்கின்றனர். இவர்தம் நோக்கம் வரையறுக்கப்பட்டது. நிறுவனத்தின் நடவடிக்கைகளில் ஏதேனும் தவறுகள், மோசடிகள் நடைபெற்றிருக்கின்றனவா என்பதை மட்டும் சோதனை செய்து மேலாண்மையினருக்குத் தெரிவிக்கவேண்டும். நடைமுறையில் அனைத்து நடவடிக்கைகளையும் சரிபார்க்க வேண்டிய பொறுப்பு, சட்டமுறைத் தணிக்கையருக்கு இருந்தாலும், அவர் சில நடவடிக்கைகளை மட்டும் எடுத்துக்காட்டாகப் பார்த்துத் தணிக்கையை முடித்து விடுவார். ஆனால் அகத் தணிக்கையர் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாகக் கவனிப்பார். இவர்தம் அறிக்கை, மேலாண்மையினரின் கவனத்திற்காக உருவாக்கப்படுகிறது.

அகத் தணிக்கையர், நிறுவனத்தின் அறிவுரையாளராகச் செயல்படுகிறார். நடைமுறைகளையோ கொள்கைகளையோ மாற்றி அமைக்க இவருக்கு உரிமை கிடையாது. எந்த அலுவலரையும் கட்டுப்படுத்தவும் இவருக்கு உரிமை கிடையாது. இவர், தம் திறனாய்வுகளை மேலாண்மையினருக்குப் பரிந்துரை செய்யவேண்டும். அந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்வதும் விடுவதும் மேலாண்மையினரைப் பொறுத்தது. மேலாண்மையினரை அகத் தணிக்கையர் கட்டாயப்படுத்த முடியாது. அகத் தணிக்கையர் நிறுவனத்தின் குறைபாடுகளையும் மற்ற ஒழுங்கீனங்களையும் மேலாண்மையினருக்குத் தெரிவிப்பதோடு, கணக்குப் பதிவுகள் செம்மையான முறையில் நடைபெற உதவியாகவும் இருப்பார். மற்றப் பணியாளர்கள் அகத் தணிக்கையரை ஒரு தவறான கண்ணோட்டத்தோடு பார்க்காமல் அவருக்குத் தங்களுடைய முழு ஒத்துழைப்பையும் கொடுத்தால் அனைத்துக் கணக்குப் பதிவுகளும் செம்மையான முறையில் எழுதப்படும். அகத் தணிக்கையர் நீதிபதியாக நன்மை தீமையைப் பகுத்தறிந்து மேலாண்மையினருக்குத் தெரிவிப்பவராக, தனித்தன்மையுடையவராகப் பணியாற்ற வேண்டும். பி.இரா.

துணை நூல்கள்:

ஆளுடைய பிள்ளை, கு., ''தணிக்கைமுறை'', தமிழ் நாடு பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.

**Ghatalia, S.V.**, ''Spicer and Pegier's Practical Auditing'', Allied Publishers Private Limited, 1965.

**Tandon, B.N.**, ''A Hand Book of Practical Auditing'', S. Chand & Company, 1970.

**அகத்திணை** : தமிழில் காலத்தால் முற்பட்டது சங்க இலக்கியம். அதனைத் திணை இலக்கியம் எனல் பொருத்தமுடையதாகும். ஏனெனில், அது அகத்திணை, புறத்திணை, என்னும் இருவகையினதாகப் பகுத்துரைக்கப்படுகிறது. அதனைப் பொருள் இலக்கணம் எனக் கொண்டு அகப்பொருள், புறப்பொருள் எனப் பகுத்தோதலும் உண்டு.

'அகம்' என்பது பொதுவாகக் காதற் பாடல்ளைக் குறிக்கும். காதல் பற்றியவற்றை அகம் என்றும் போர், வீரம், கொடை, புகழ், ஆட்சி முதலிய பிற வாழ்க்கைத் துறைகளைப் புறம் என்றும் கூறுதல் தமிழ் மரபு. தொல்காப்பியர் அகம் என்பதற்குத் தனியே விளக்கம் கூறவில்லை. இளம்பூரணர் "அகப் பொருளாவது போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன்தானே அறிதலின் அகம் என்றார்" என உரைப்பர் (தொல். பொருள். அகத். சூ. 1). நச்சினார்க்கினியர், "ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்றகாலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார்" எனக் கூறுவர். எனவே, "அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அக மென்றது ஓர் ஆகுபெயர்" என விளக்குவர் (தொல். பொருள். அகத். சூ. 1). இவை 'அகம்' என்னும் சொல்லுக்கு உள்ளம் என்னும் பொருள் உண்மையால், அதனடிப்படையில் எழுந்த விளக்கங்களாகும்.

'அகம்' என்னும் சொல் இல்லத்தையும் குறிக்கும். இல்லத்தின் உறுப்பினர்களைக் (தாய், தந்தை, தலைவி, தோழி, தலைவன், பாங்கன், இளையர் முதலியோர்) கொண்ட பாடல்களாதலின் இவை அகமெனப்பட்டன எனக் கருதுவாரும் உளர்.

குறிப்பிட்ட சில விதிமுறைகட்குட்பட்டு, மரபு பிறழாமல் பாடப்படுவன அகமென்றும், அவற்றின் வேறுபட்டு அமைவன புறமென்றும் கருதப்பட்டன எனவும் சுட்டுவர். இதனால் அகம் - ஒருவகை; அகமல்லாதன எல்லாம் புறம் - பிறிதொருவகை எனக் கொள்ள வேண்டும். மரபு பிறழாத காதல் சார்ந்த பாடல்கள் அனைத்தும் அகம்; மரபு மாறிய காதற் பாடல்களும் காதற் பாடல்கள் அல்லாத பிற பாடல்களும் புறம் என்று இதை விளக்கலாம்.

"மக்களின் நாட்டுப் பாடல்களில் இருந்த இன்னொரு மரபும் அந்தப் புலவர்களின் காதற் பாட்டுகளில் படிந்துவிட்டது. ஊர்களில் மக்கள் பாடித் திரியும் பாடல்களில் காதல் பற்றிப் பாடும்போது இன்னாருடைய காதல் என்று குடும்பம், பெயர் முதலியவற்றைச் சுட்டிப் பாடுவது முடியாதது. வீரம் முதலியவற்றைப் பாடும்போது இன்ன தலைவனுடையது என்று அவனுடைய பெயர் முதலியவற்றைக் குறிப்பிட்டுப் பாடுவதே பெருமைக்குரியதாக இருந்தது" என்பர் டாக்டர் மு. வரதராசனார். இவ்வகையில் நோக்கினால் 'அகம்' என்பது மறை பொருள் — இரகசியம் — ஆகும்; பெயர் சுட்டப்படாதது ஆகும். பெயர் சுட்டப்பட்ட அகமும் பெயர் வெளிப்படையாகக் குறிக்கத்தக்க போர், புகழ் கொடை பற்றிய பாடல்களும் புறம் ஆகும்.

அகப் பாடல்களே முதலில் வரையறுக்கப்பட்டன. அவற்றொடு சார்த்திப் புறப்பாடல்கள் பின்னர் விதிமுறைகட்குட்படுத்தப்பட்டன. இதனை 'முற்படக்கிளந்த' (947), 'அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர், புறத்திணை இலக்கணம் திறப்படக் கிளப்பின்' (1002) என வரும் தொல்காப்பிய நூற்பா அடிகளால் உணரலாம். அகத்திணை நன்கு வேரூன்றிய பிறகே, புறத்திணை வளர்ச்சி பெற்றிருக்கிறது. தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் அகத்திணைக்கே விரிவான இடம் தந்து விளக்கியுள்ளார். அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் ஆகிய நான்கும் முழுவதும் அகம் பற்றியன. புறத்திணையியல் தவிர்த்த ஏனைய நான்கு இயல்களிலும் அவர் அகத்திணைக்கே சிறப்பிடம் தந்து தம் கருத்துகளை விளக்கியுள்ளார்.

அகத்திணை ஏழு பாகுபாடுகளை உடையது. கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்பன அவை. இவற்றுள் கைக்கிளை என்பது ஒருதலைக்காமம். இது சிறு உறவு எனவும் படும். பெருந்திணை என்பது பொருந்தாக் காமம். இது மிகைக்காமம் எனவும் படும்.

இனி, இடையில் உள்ள ஐந்திணைகளே பெருவரவினவாகும். ஏனைய கைக்கிளையும் பெருந்திணையும் அருகியே காணப்படும். இதனால் தொல்காப்பியரும் இவற்றைக் 'கைக்கிளைக் குறிப்பு', 'பெருந்திணைக் குறிப்பு' என்றே சுட்டக் காணலாம். தமிழர் நிலத்தை நான்கு வகைப்படுத்தினர். மலையும் மலை சார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சி; காடும் காடு சார்ந்த பகுதியுமாகிய முல்லை; வயலும் வயல் சார்ந்த பகுதியுமாகிய மருதம்; கடலும் கடல் சார்ந்த பகுதியுமாகிய நெய்தல் என்பன அவை. ஏனைய நாடுகளில் இவற்றுள் ஒன்று மிக்கும் மற்றவை குறைந்தும் இவ்வாறு காணப்படும். தமிழகத்தில் இவை சமனிலைப்பாட்டுடன் தனித் தனி நில இயல்புகளாகவும் வாழ்க்கை முறைகளாகவும் வளர்ச்சி கண்டன. இதனால், தமிழன் உலகை 'நானிலம்'

என்றே குறித்தான். ஐந்தாவதாகிய பாலைக்குத் தமிழகத்தில் நிலமில்லை முல்லை, குறிஞ்சி ஆகிய வற்றின் எல்லையோரப் பகுதிகள் கோடைக் காலத் தில் பாலையாகத் திரிந்துவிடும். மீண்டும் கார்ப்பரு வம் வரும்போது, பழைய நில இயல்பை அடையும். முதுவேனில் ''முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து, நல்லியல் பிழந்து நடுங்குதுய ருறுத்துப் பாலை என்பதோர் படிவங்கொள்ளும்'' என்று சிலப் பதிகாரத்தில் இது விளக்கப்படுகிறது. இந்நிலங்களில் தோன்றி வளர்ந்த வாய்மொழிப் பாடல்கள், இந் நிலங்களை வைத்தே பெயரிடப்பட்டன. அவ்வந் நிலப் பின்னணிகளையே இயற்கைப் புனைவாக மேற் கொண்டன; அதனால் முல்லைத்திணைப் பாடல், பாலைத்திணைப் பாடல் என அவ்வந்நில அடிப் படையில் இவை பாகுபாடு செய்யப்பட்டன. இவற் றில் பாடுபொருளும் மரபுவழி வரையறைப்படுத்தப் பட்டது.

ஒத்த அன்புடையார் காதலை விளக்குவனவே அன்பின் ஐந்திணை என்பர். எனவே இவை கற்ற றிந்த புலவரிடையே பெருவழக்குப்பெற்றன. இவற் றுள் இடம்பெறும் நாடகப் பாத்திரங்களாகிய மாந் தர்களை நிலமக்கள், தலைமக்கள், அடியார், வினை வலர் என நான்கு நிலையினராகப் பகுத்துக் காட்டு வார் தொல்காப்பியர்.

அகத்திணைப் பாடல்கள் முதல், கரு, உரி என்ற முப்பாகுபாடு உடையன. இவற்றுள் முதல், நிலமும் பொழுதும் பற்றியது; கரு, அந்நிலத்து உயிரினங்கள் முதலியன பற்றியது; உரி என்பது பாடலுள் அமை யும் அடிக்கருத்து அல்லது ஒழுக்கம் பற்றியது.

ஒவ்வொரு திணைப் பாடலிலும் அவ்வத் திணை சார்ந்த முதற்பொருளும் கருப்பொருளுமே பின்னணி யாகப் பாடப்படவேண்டும். உவமை கூறுவதாயி னும், உள்ளுறை இறைச்சி போன்ற குறிப்புப் பொருள் கூறுவதாயினும், அவ்வந் நிலத்திற்குரிய கருப்பொருள் களாலேயே கூறவேண்டும். அப்பாடல்களில் வரும் மாந்தர்களும் அவ்வந் நிலம் சார்ந்தவர்களாகவே இருத்தல் வேண்டும். இவை அனைத்தும், இவ்வகத் திணைப் பாடல்கள் நிலம் சார்ந்து தோன்றி வளர்ந்த பாடல்கள் என்பதை மெய்ப்பிக்கின்றன. ஆயினும் தொல்காப்பியர் காலத்திலேயே கருப் பொருள்கள் மயங்கி வருவதும் காலம் மயங்கி வருவ தும் உரிப்பொருள் மயங்கி வருவதும் பாடல்களுள் காணத்தக்க கூறுகளாயின.

உரிப்பொருள் என்பது அகத்திணைப் பாடலின் உயிர்போன்ற மையக்கருத்து அல்லது அடிக்கருத்து (Theme) எனலாம். உரிப்பொருளின்றிப் பாடலே அமையாது. ஏனைய முதலும் கருவும் இவ்வுரிப் பொருட்கு வாய்த்த பின்புலமேயாகும். புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்கும், பிரிதலும் பிரி தல் நிமித்தமும் பாலைக்கும், ஆற்றி இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்கும், ஆற்றாது இரங் கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்கும், ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்திற்கும் உரிய உரிப் பொருள்களாகும். தொல்காப்பியர் இத்திணைக்குரி யது இவ்வுரிப்பொருள் எனச் சுட்டிக் கூறாதது கரு தத்தக்கது. ''சிறுபான்மை எல்லாப் பொருளும் எல் லாத் திணைக்கும் உரித்தாகவும்'' (ஷெ. சூ. 16) என்று இளம்பூரணர் கூறுவதுபோல, எல்லா நிலத்தும் எல்லா ஒழுக்கமும் நிகழுமாயினும், மெய்ப்பாடு தோன்றச் சுவையை மிகுத்தற்காக, 'இந்நிலப் பின் னணியில் இவ்வொழுக்கத்தைப் பாடவேண்டும்' என வரையறை செய்தது சிறந்த இலக்கியக் கோட் பாடாகும்.

கைக்கிளையும் பெருந்திணையும் பிற ஐந்திணை களில் விரவி வருதலைச் சங்கத் தொகைநூல்களிற் காணலாம். கைக்கிளை களவு ஒழுக்கம் பற்றிய குறிஞ்சியில் கலந்து வருதலையும், பெருந்திணை இரங் கல் ஒழுக்கம் பற்றிய நெய்தலிற் கலந்து வருதலை யும் கலித்தொகையிற் காணலாம். ஏனைய தொகைப் பாடல்களிலும் இவை அருகிக் காணப்படினும், துறை, கூற்று வகுத்தார் அங்கு அவற்றைச் சுட்டிக் காட்ட வில்லை.

முதலும் கருவும் கொண்டமைந்த இயற்கைப் புனைவு, பிறமொழிப் பாடல்களிற் காணப்படுவது போல் தனி இயற்கைப் புனைவாகவோ, இயற்கை மீது கொண்ட ஆர்வத்தாலும் அழகுணர்ச்சியாலும் தனித்து அதனையே புகழ்ந்த ஓவியமாகவோ அமை யாமல், உரிப்பொருளுக்கு ஏற்ற பின்னணியாகவே அமைதல் அகத்திணைக் கோட்பாட்டின் தனித் தன்மைகளுள் ஒன்றாகும். மாந்தரல்லாத பிற உயி ரினங்களின் காதல் நிகழ்ச்சிகளும், மாந்தர்தம் காதற் செயல்களுக்குத் தூண்டு கோலாகும் துணைக்கருவி களாகவே புனையப்படுகின்றன.

ஒரு திணையின்கண் அதற்குரிய உரிப்பொருளே யன்றிப் பிற உரிப் பொருள் அரிதின் மயங்கி வருத லும், ஓர் உரிப்பொருளோடு அதனுடன் இயைபு டைய பிறிதொன்றும் துணைமைக் கூறாக அரிதின் மயங்கி வருதலும், குறிஞ்சிப்பாட்டு போன்ற நெடும் பாடல்களில் சில உரிப்பொருள்கள் இயைபுபடத் தொடர்ந்து வருதலும் மரபு வளர்ச்சி நிலைகளாகக் காணப்படுகின்றன.

அகத்திணை மாந்தர்களுக்கு இயற்பெயர் சுட்டு வது மரபன்று. புறத்திணைப் பாடல்கள் பெயர்

சுட்டி வரும். காதலை உலகப் பொது அனுபவமாக வெளிப்படுத்தும் நோக்கம் இதனாற் புலனாகிறது. அகத்திணைப் பாடல்களில் புறப்பொருட் செய்திகள் அடைமொழியாகவோ உவமையாகவோ இடம் பெறுதல் உண்டு. முதல் கரு உரியின் வேறாக இவை காணப்படும். இப்புறச் செய்திகளில் இயற்பெயர்கள் இடம் பெறுதலுமுண்டு.

அகத்திணை களவு, கற்பு என இரண்டு கைகோள்களாக (பிரிவுகளாக) அமையும். களவு இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு வகைப்படும். கற்பு மறை வெளிப்படுதல், தமர் கொடுப்ப மணத்தல் என இருவகைப்படும்.

களவின்கண் தலைவன் (கிழவன்), தலைவி (கிழத்தி), தோழி, செவிலி, பார்ப்பான், பாங்கன் என்னும் அறுவரே இடம்பெறுவர். கற்பில் இவ்வறுவருடன் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் என்னும் வாயில்களாவார் அறுவரும் இடம்பெறுவர்.

ஊரார், அயலார், சேரியார், நோயறியும் கட்டுவிச்சி முதலியோர், தந்தை, தமையன், போல்வார் அகப்பாடல்களில் பிறரால் கொண்டெடுத்து மொழியப்படுவார்கள் அல்லாமல் அவர்கள் கூற்றாகப் பாடல்கள் புனைவதில்லை.

மேலும், மேற்கூறிய மாந்தர்கள் பல்வேறு சூழல்களில் திணை மரபுப்படி கூறும் கூற்றுகளும் அக்கூற்றுகளைக் கேட்கும் தகுதியுடையாரும் கூற்று மரபுகளும் அகத்திணை நூல்களில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பியர் ஓதல், பகை, தூது என்னும் மூவகைப் பிரிவுகளைக் குறித்துள்ளார். நாடுகாவற் பிரிவும் பொருள்வயிற் பிரிவும் பரத்தையிற் பிரிவும் உள என்பதைக் குறிப்பாகச் சுட்டியுள்ளார். இவற்றுள் இன்று கிடைக்கும் சங்க அகப் பாடல்களில் பகைவயிற் பிரிவு முல்லைத் திணையிலும் பொருள் வயிற் பிரிவு பாலைத் திணையிலும் பரத்தையிற் பிரிவு மருதத் திணையிலும் சிறப்பாகப் புனையப்பட்டுள்ளன. ஏனைய பிரிவுகள் உய்த்துணருமாறே அமைந்துள்ளன. கடல்வழிப் பிரிவு, நிலவழிப் பிரிவு எனப் பிரிவை இருவகைப் படுத்துவர் தொல்காப்பியர். கடல்வழிப் பிரிவில் தலைவியைத் தலைவன் உடனழைத்துப் போதலில்லை என்பர் அவர். ஆயினும் கடல்வயிற் பிரிவு பற்றிச் சில பாடல்கள் தவிர வேறு காணப்படவில்லை. அன்பின் ஐந்திணையில் காதல் நிறைவேறாவிடத்துத் தலைமகன், யான் மடலேறுவேன் என அச்சுறுத்துவதுண்டு; மடலேறுவதும் உண்டு. ஆனால் எக்காரணம் கொண்டும், எத்திணைக் கண்ணும் மகளிர் அம் முயற்சியை மேற்கொள்வதில்லை. இத்தகைய நாகரிக மரபுகள் பல அகத்திணைக் கூற்று மரபுகள்வழி அறியக் கிடக்கின்றன.

தொல்காப்பியர், வழக்கு இருவகைப்படும் என்பர். ஒன்று நாடக வழக்கு; மற்றொன்று உலக வழக்கு. நாடக வழக்கு என்பது புனைந்துரை மரபுகளைச் சுட்டும். தலைமகன், தலைமகள் ஆகிய இருவரும் எல்லா நலமும் உடையவராகப் புனையப்படுதலே ஒரு நாடக மரபாகும். இன்ன நிலப் பின்னணியில் இன்ன ஒழுக்கத்தைப் புனைந்தால் சுவை மிகும் எனக் கருதிப் பாடப்பட்டனவெல்லாம் சில புனை மரபுகள் வழி அமைந்தனவேயாகும். அங்ஙனமாயின் இறையனார் அகப்பொருள் உரையாசிரியர், "இஃது அன்னதன்று; இல்லது இனியது நல்லது என்று புலவரால் நாட்டப்பட்டதோர் ஒழுக்கமாகலின் இதனை உலக வழக்கத்தினோடு இயையான் என்பது" (சூ.1. உரை) எனக் கூறல் பொருந்துமா என்பது சிந்திக்கத்தக்கது. இதற்கு நச்சினார்க்கினியர் மறுப்புத் தெரிவிக்கின்றமை தக்க விடையாக அமைகிறது. "புனைந்துரை வகையால் கூறுப வென்றலின் புலவர் இல்லனவும் கூறுபவாலோவெனின் உலகத்தோர்க்கு நன்மை பயத்திற்கு நல்லோர்க்குள்ளனவற்றை ஒழிந்தோர் அறிந்தொழுகுதல் அறமெனக் கருதி; அந்நல்லோர்க்குள்ளனவற்றில் சிறிது இல்லனவும் கூறுதலன்றி யாண்டும் எஞ்ஞான்றும் இல்லன கூறார் என்றற்கன்றே நாடகமென்னாது வழக்கென்பாராயிற்றென்பது ......இப்புலனெறி வழக்கினை இல்லது இனியது, புலவரால் நாட்டப்பட்டதென்னாமோ வெனின் இல்லதென்று கேட்டோர்க்கு மெய்ப்பாடு பிறந்து இன்பஞ் செய்யாதாகலானும் உடன் கூறிய உலகியல் வழக்கத்தினை ஒழித்தல் வேண்டுமாகலானும் அது பொருந்தாது. அல்லதூஉம் அங்ஙனம் கொண்ட இறையனார் களவியலுள்ளும்... நால்வகைத் தலைமக்களையும் உணர்த்தலின் இல்லது என்பது தொல்லாசிரியர் தமிழ் வழக்கன்றென மறுக்க" என்பது நச்சினார்க்கினியம் (அகத். சூ. 53).

சங்க அகப் பாடல்கள் ஒவ்வொன்றும் அதனளவில் தனிக் கட்டமைப்புடைய சின்னஞ்சிறு நாடகம். ஒரு பாடலுக்கும் அடுத்து வரும் பாடலுக்கும் எவ்விதக் கருத்துத் தொடர்புமில்லை. தனிநிலைச்சிறு பாடல்கள், நெடும் பாடல்கள், ஒரு திணையில் பல அடுக்கி வரும் தொகுதிப் பாடல்கள் எனச் சங்க அகப்பாடல்களை மூவகையாகப் பிரிக்கலாம். எட்டுத்தொகையில் ஐந்து நூல்கள் முழுவதும் அகப்பாடல்கள் கொண்ட தொகைகளாகும். குறுந்தொகை நற்றிணை, நெடுந்தொகை ஆகிய மூன்றும் முறையே 4 முதல் 8 அடிவரை அமைந்த பாடல்கள்; 9 முதல் 12 அடி வரை அமைந்த பாடல்கள்; 13 முதல் 31,

அடி வரை அமைந்த பாடல்கள் கொண்டவை ஆகும். ஒவ்வொரு தொகையும் நானூறு பாடல்களைக் கொண்டது. ஐங்குறுநூறு பத்துப்பத்தாக அமைந்த தொகுதிப் பாடல்களின் தொகையாகும். இவையெல்லாம் திட்டமிட்டு மரபைக் காத்த முயற்சியை நினைப்பூட்டுகின்றன. இங்ஙனம் கருதி நோக்கினால் அகத்திணை இலக்கிய வளர்ச்சியை நான்காகப் பகுக்கலாம்.

தொல்காப்பியருக்கு முந்தைய நிலை – இயல்பாகப் பாடல்கள் தோன்றி வளர்ந்த காலம் – கடல் வழிப்பிரிவு, ஓதற்பிரிவு, தூதிற் பிரிவு போன்றவை மிகுதியாக இருந்த காலம் – கலியும் பரிபாடலும் அகமரபில் அரசோச்சிய காலம் – வாய்மொழியாக வழங்கிய நாட்டுப் பாடல் மரபுக் காலம் – பாணர் செல்வாக்குக் காலம்.

தொல்காப்பியர் காலமும் அவருக்குப் பிற்பட்ட காலமும் (அல்லது சங்க இலக்கியக் காலம்) – சங்கத் தொகைகளில் தொல்காப்பியர்க்கு முற்பட்ட காலப் பாடல்களும் கலந்துள - ஆயினும் அகப்பாடல்கள் பாணர் கையைவிட்டுப் புலவர் கைக்கு மாறிய காலம் – நாட்டுப் பாடலாக வாய்மொழியாக வழங்காமல், ஏட்டிலும் ஏறிப் புலவர் அவைகளில் இடம் பெற்ற காலம் – கலி, பரிபாடல் குறைந்து ஆசிரியம் அரசோச்சிய காலம் – கலித்தொகை, பரிபாடல் உட்பட அகமரபைக் காத்தற்கு எனப் பாடப்பட்ட கருவூலங்களின் காலம் இது.

பதினெண்கீழ்க் கணக்கில் காணப்படும் அகநூல்கள், முத்தொள்ளாயிரம் போன்றவை தம் காலத்திற்கு ஏற்ப அகமரபை மீட்டுருவாக்க முயன்றன. இம்மரபில் கோவை நூல்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. அகத் துறைகள் அனைத்தும் மறந்து போகாமல் இருக்க அவற்றைக் கோவைப்படுத்தி எடுத்துக்காட்டுப் பாட்டுகளாகப் பாடியமைத்தவையே கோவை நூல்கள் எனலாம். இதனைப் போன்று புறப்பொருள் துறைகளைக் கோவைப்படுத்தி, இலக்கணமும் எடுத்துக்காட்டுச் செய்யுளுமாகத் தந்தவை புறப்பொருள் வெண்பா மாலை எனவும், செய்யுள் இலக்கணத்தில் அனைத்துப் பாவகைகட்கும் பாவினங்கட்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள் பாடி அமைத்தவை சிதம்பரச் செய்யுட்கோவை எனவும் பெயரிடப்பட்டமை இங்கு ஒப்பிடத்தகும்.

பிற வகைமைகளிலும் அகமரபு தன் செல்வாக்கை ஊடுருவ வைத்தது. தமிழ்ப் பத்திமைப் பாடல்கள், சுட்டி ஒருவர்ப் பெயர் கொண்டு கதைவடிவாய் அமைந்த காப்பியங்கள், உலா, தூது, கலம்பகம், பள்ளு, குறம், குறவஞ்சி போன்ற அகமரபைப் பின் [illegible]ர்ந்த சிற்றிலக்கியங்கள் போல்வன குறிப்[illegible]க அக இலக்கியத் தாக்குதலைப் பெற்றன.

இன்றும் இலக்கிய வழக்கிலும் உலக வழக்கிலும் அக மரபுச் செல்வாக்கு உளது. சமுதாய மரபு மற்றும் மானுடவியல் அடிப்படை ஆய்வுகள் இதை நிலை நாட்டுகின்றன. இங்ஙனம் இலக்கியமும் இன்றைய வாழ்வும் ஒப்பிடற்பாலனவாயுள்ளன.

**அக இலக்கணம்:** அகத்திணையைத் தொல்காப்பியப் பொருளதிகாரம் முழுமை பெற விளக்குகிறது. சங்க இலக்கிய விளக்கத்திற்கு அதுவே சிறந்த வழிகாட்டியாகும். பின்னர் எழுந்த இறையனார் அகப்பொருளுரை, இடைக்கால வளர்ச்சியை – மரபு மாற்றத்தைக் காட்டுகிறது. தொல்காப்பிய உரையாசிரியர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் மூவரும் தொடர்ந்து வந்த மரபுவழி விளக்கங்களைப் பதிவு செய்து வைத்துள்ளனர். வீரசோழியம் இடைக்கால மரபு வழியில் விளக்கம் தருகிறது. அடுத்துத் தமிழ் நெறி விளக்கம் (25 நூற்பாக்களே கிடைத்துள்ளன), இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், அறுவகை இலக்கணம் என்பன மரபு வழியிலும் மரபினின்று சற்றே விலகியும் அகத்திணையை விளக்குகின்றன. நம்பியகப் பொருள் கோவை நூல்களின் இலக்கண நூல் போல அமைந்து இடைக்கால நூல்களுள் சிறந்து விளங்குகிறது. மாறனகப் பொருளும் இவ்வரிசையில் குறிக்கத்தக்கதாகும்.

இராம.பெ.

துணை நூல்கள்:

''தொல்காப்பியம்: பொருளதிகாரம்''–இளம்பூரணம், - நச்சினார்க்கினியம் (கழகப் பதிப்புகள்).

''இறையனார் களவியலுரை''–(கழகப் பதிப்பு).

**அகத்திய பட்டர்** கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் வாழ்ந்த ஒரு புலவர். அந்தணர் குலத்தினராகிய இவர், வடமொழி, தென்மொழிகளில் சிறந்த புலமையுடையவராகத் திகழ்ந்தார். வியாசபாரதம் எல்லோரும் கற்றுணர முடியாதவாறு விரிவாக இருந்தமையால் அதனை யாவருங் கற்கும் வண்ணம் சுருக்கமாகப் 'பாலபாரதம்' என்னும் பெயரோடு வடமொழியில் ஒரு நூல் இயற்றினார். வில்லிபுத்தூராரும் பிறரும் இப்பாரதத்தையே அடிப்படையாகக் கொண்டு தமிழில் தம் பாரதப் படைப்புகளைச் செய்தனர் என்பது கூறப்படுகிறது.

த.கோ.

**அகத்திய பண்டிதர்** அகத்தியர் என்னும் பெயர் கொண்ட ஒரு பிற்காலப் புலவர். இவர் ஊர், காலம் முதலியன பற்றிய விவரங்கள் தெரியவில்லை. தமிழில் அகத்தியர் என்னும் பெயரில் பலர் குறிக்கப்படுகின்றனர். தமிழிலுள்ள புலத்துறை ஒவ்வொன்றிலும் அகத்தியரை ஒரு முன்னவராகக் கூறும் மர

புண்டு. முதலிடைச் சங்கங்களில் இருந்து, முத்தமிழ் இலக்கணம் இயற்றியவர் ஒருவர்; தேவாரத்திரட்டு இயற்றியவர் ஒருவர்; ஆறெழுத்தந்தாதி எழுதிய முருகபத்தரான ஒருவர் என்று பலர் கூறப்படுகின்றனர். இவர் பொதியமலையில் பலகாலம் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறார். அகத்தியர், பல அருஞ்செயல் புரிந்துள்ளார் என்று புராணங்கள் மொழிகின்றன. சித்தர்களுள் ஒருவர் அகத்தியர் பெயரில் இருந்துள்ளார். இவர்கள் எல்லோரையும் ஒருவராகவே கொண்டு, தமிழ் நூல்கள் சில குறிப்பிடுகின்றன. இலக்கியம், சமயம், புராணங்கள் ஆகியவற்றில் கூறப்படும் அகத்தியரையேயன்றி, யோகம், ஞானம், இரசவாதம், வைத்தியம், காயகற்பம், சோதிடம், பூசை, தீக்கை, ஆரூடம், வாகடம் முதலிய பல துறைகளில் அமைந்த பல நூல்களின் ஆசிரியராகக் கூறப்படும் அகத்தியரையும் ஒருவராகக் கொள்வது ஏற்புடையதன்று. இவர்கள் அனைவரும் வெவ்வேறு காலங்களில் தமிழகத்தின் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தவராகலாம். மருத்துவம் முதலிய துறைகளில் நூல்களை எழுதி அவற்றை அகத்தியர் செய்தார் என்று கூறும் வழக்கமும் பிற்காலத்தில் இருந்துள்ளது. அகத்தியர் பெயரில் 200-க்கும் மேலான நூல்கள் ஏடுகளில் உள்ளன. சென்னை, அரசாங்கக் கீழ்க்கலைக் கையெழுத்துச்சுவடி நூலகத்தில் 150-க்கும் மேலான சுவடிகள் உள்ளன.

அகத்திய பண்டிதர் என்பவர் இவ்வாறு வழங்கப் பெறும் பல்துறை நூல்களில் ஒன்றையோ, சிலவற்றையோ எழுதிய ஒரு புலவராவார். பண்டிதர் என்னுஞ்சொல் பொதுவாகப் புலமை சான்றவர் என்னும் பொருளதாயினும், பிற்காலத்தில் மருத்துவப் புலமை உடையவர்களைக் குறிக்கப் பொதுமக்கள் வழங்கும் பெயராக உள்ளது. இதனால் இவர் வைத்தியத்துறை வல்லவராகவும், அத்துறையில் நூல் இயற்றியவராகவும் இருக்கலாம். கி.கோ.

**அகத்தியம்** ஓர் இலக்கண நூல். இது அகத்தியரால் இயற்றப்பெற்றது. தமிழில் இந்நூல் பற்றிய குறிப்பு முதன்முதல் இறையனார் அகப்பொருளுரையில் காணப்படுகிறது. இயல், இசை, நாடகம் என மூவகைப்படும் முத்தமிழுக்கும் இதன்கண் இலக்கணம் கூறப்பட்டதாகத் தெரிகிறது. அதனால் இதனை 'மூன்றுறுப்பு அடக்கிய பிண்டம்' என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பிய உரையில் குறிப்பிடுகிறார். 'ஆனாப்பெருமை அகத்தியன்' என்றும், 'அருந்தவமுனிவன் ஆக்கிய முதனூல்' என்றும் பன்னிரு படலப் பாயிரம் இந்நூலையும் இதன் ஆசிரியரையும் பாராட்டுகிறது. இந்நூல் இப்போது கிடைக்கவில்லை. எழுத்து, சொல், பொருள், அணி ஆகியனவேயன்றிச் சந்தம், வழக்கியல், கூத்து போன்றவற்றிற்கும் இதன்கண் இலக்கணம் கூறப்பட்டிருந்தது. தலை, இடை, கடைச் சங்கச் சான்றோர்க்கும் இலக்கணமாக அமைந்தது இந்நூல் என இறையனாரகப் பொருளுரை குறிப்பிடுகிறது. தொல்காப்பியம், நன்னூல், யாப்பருங்கலம், இலக்கண விளக்கம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களின் உரையாசிரியர் சிலர் தத்தம் உரையிடையே, அகத்தியத்தைச் சேர்ந்தனவாகச் சில நூற்பாக்களை எடுத்துக் காட்டியுள்ளனர். அவ்வாறு கிடைத்த 183 நூற்பாக்களைத் தொகுத்துப் பவானந்தம் பிள்ளையவர்கள் கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் 'பேரகத்தியத் திரட்டு' என்றொரு நூல் வெளியிட்டுள்ளார். அந் நூற்பாக்களின் நடை, போக்கு ஆகியவற்றை ஆய்ந்தவர்கள், அவை பிற்காலத்தன எனக் கருதுகிறார்கள். 'பலவின் இயைந்தவும் ஒன்றெனப் படுமே, அடிசில் பொத்தகம் சேனை அமைந்த, கதவ மாலை கம்பலமனைய' என்பது பல பொருளான் அமைந்த ஒரு பொருளையும், 'வயிரவூசியு மயன்வினை இரும்பும், செயிரறு பொன்னைச் செம்மை செய் ஆணியும், தமக்கமை கருவியும் தாமாம் அவைபோல், உரைத்திற முணர்த்தலும் உரையது செயலே' என்பது சொல்லின் செயலையும் உணர்த்துவதற்காக அமைக்கப்பட்ட அகத்திய நூற்பாக்கள். இவை சிவஞான முனிவரின் நன்னூல் விருத்தியுரையில் மேற்கோளாகக் காட்டப் பெற்றுள்ளன.

**அகத்தியர்** ஒருவர் அல்லர்; பலர். பரிபாடல் என்னும் சங்க இலக்கியத்தில் இவர் முதன் முதல் குறிக்கப்படுகிறார் (பொதியின் முனிவன். பரி.). ஆனால் இங்கு இவரது பெயர் ஒரு விண்மீனைக் குறிக்கிறது. அகத்தியரைப் பற்றி ஆராய்ந்தெழுதிய பலரும், அகத்தியர் பலர் இருந்தனரெனவே கருதுகின்றனர். அன்றியும், அவர் ஒருவரே என்ற கருத்தில் புராணக் கதைகள் அப்பெயரை மையமாகக் கொண்டு பெருகிவிட்டன என்றும் எழுதியுள்ளனர். வட நாட்டிலும் தென்னாட்டிலும் மொத்தம் முப்பத்தேழு அகத்தியர் வாழ்ந்தனர் என்று கூறி, அவர்களின் காலத்தையும் ஊகமாகக் குறிப்பிட்டுள்ளார் துடிசைகிழார் சிதம்பரனார். அகத்தியர்களின் காலங்களைக் குறித்து ஊகமாகப் பல செய்திகளை ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

அகத்தியர் தமிழைத்தோற்றுவித்தனர் என ஒரு கதை வழங்கி வருகிறது. மொழியை ஒருவர் தோற்றுவித்தார் என்பது மொழியியல் உண்மைக்கு மாறுபட்டது. மொழி சமுதாயத்தில் தோன்றிச் சிறிது சிறிதாக வளர்ந்தும் இயங்கியும் வரும் ஒரு கருவியாகும்.

அகத்தியர் தமிழுக்கு முதல் இலக்கணம் இயற்றினார் என்றும், அந்நூலின் பெயர் 'அகத்தியம்' என்றும் இறையனார் களவியல் உரை கூறுகிறது. அந்

நூல் இப்போது கிடைக்கவில்லை. தொல்காப்பியம், நன்னூல், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியோர் அகத்திய நூற்பாக்கள் எனச் சிலவற்றை மேற்கோள் காட்டியுள்ளனர். பவானந்தம் பிள்ளை 183 நூற்பாக்கள் கொண்ட 'பேரகத்தியத் திரட்டு' என்னும் நூலை வெளியிட்டுள்ளார். இந்நூற்பாக் களின் நடை மிகவும் பிற்காலத்தது; அவற்றில் வட மொழிக் கலப்பு மிக்குள்ளது; அதனால் அவை பழை மையானவை ஆகா.



அகத்தியர்
நன்றி: பிரெஞ்சு இந்தியக் கலைக்கழகம், பாண்டிச்சேரி.

அகத்தியரின் மாணவர் தொல்காப்பியர் எனக் கூறப்படுகிறது. ஆனால் தொல்காப்பியப் பாயிரத் தில் இது பற்றிய குறிப்பு எதுவுமில்லை. பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை என்னும் பிற்கால நூல்களே இவ்வாறு கூறுகின்றன.

பொதிகை மலையில் அகத்தியர் வாழ்ந்தார் என்றும், அவர் அங்குத் தமிழ்ச் சங்கம் நிறுவினார் என்றும் சிலர் கூறுவர். இதுபற்றிச் சங்க இலக்கி யத்தில் குறிப்பில்லை. மதுரைக் காஞ்சி என்னும் சங்கப் பாட்டில் ''தென்னவற் பெயரிய துன்னரும் துப்பின், தொன்முது கடவுட் பின்னர் மேய, வரைத் தாழ் அருவிப் பொருப்பிற் பொருந'' எனவரும் அடிகளுக்கு நச்சினார்க்கினியர், 'இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின, பொதியமலை யில் இருக்கும் அகத்தியன் பின்னே எண்ணப்படும் சிறப்புடைய பாண்டியன்' என்று உரை கூறியுள் ளார். 'அகத்தியர் சிவபெருமானின் ஆணையால் வடக்கேயிருந்து தெற்கே வந்தவர்; வடக்குத் தாழ்ந்து, தெற்கு உயர்ந்துவிட்டதால் சமப்படுத்த வந்தவர் என ஒரு கதை வழங்குகிறது. அதை நம்பிய நச்சினார்க்கினியர் இவ்வாறு எழுதினார். வேறு சில ஆய்வறிஞர், 'தெற்கு நாகரிகத்தில் உயர்ந்தது என உணர்ந்த ஆரியர் அதை அழிக்க அகத்தியர் தலை மையில் ஒரு கூட்டத்தாரைத் தெற்கேஅனுப்பினர்' என்பர்.

வான்மீகி இராமாயணத்திலும் கம்பராமாயணத் திலும் அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. இவற்றை ஊன்றி நோக்கினால், விந்திய மலைக்குத் தெற்கே இப்போது நாசிக் என வழங்கும் பஞ்சவடி யில் ஓர் அகத்தியரும், தமிழ்நாட்டில் மலையமலை என்று வழங்கிய பொதிய மலையில் ஓர் அகத்திய ரும் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிகிறது. இவர்களுள் முன்னவர், ஆரிய மன்னர்களுக்காகத் தண்டகாரணியத்தில் வாழ்ந்து வேதக் கிரியைகளைச் செய்து கொண்டும், அரக்கர்களுடன் போரிட்டுக் கொண்டும், இருந்தவர். கம்பர் இவரைப்பற்றித் 'தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்' எனவும், 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசை கொண்டான்' எனவும் கூறுகிறார். இதைச் சிந்தித் தால் இவரே வடக்கிலிருந்து தெற்கே வந்தவர் என்பது புலனாகும். மேலும் விந்தியமலைக்குத் தெற்கே, தக்காண பீடபூமியில் தமிழ்மொழி பேசப் பட்டது என்றும் அறியலாம். அகத்தியர் அங்கு ஆசிரமம் அமைத்துத் தமிழை வளர்த்ததையே கம்பர் குறிப்பிடுகிறார்.

வான்மீகி இராமாயணம் கிட்கிந்தா காண்டத் தில் மற்றோர் அகத்தியர் குறிப்பிடப்படுகிறார். சீதையைத் தேடச் சென்ற வானரர்களுள், தெற்கே சென்றவர்களிடம் சுக்கிரீவன் கூறியவற்றுள், ''காவேரி நதியை அங்கே காண்பீர்கள். அந்த மலையமலையின் சிகரத்தில் ஆதித்தனை ஒத்த மிகுந்த ஒளியுடைய முனிவர்களுள் சிறந்தவரான அகத்தியரைக் காண்பீர் கள்'' என வருகிறது. இதனைக் கம்பர், ''தென் றமிழ் நாட்டு அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்பீரேல், என்றும் அவன் உறைவிட மாம்'' என்று கூறியுள்ளார். இவ்வகத்தியர்க்கு என் றுமே பொதியமலைதான் இருப்பிடம் எனக் கூறுவ தாலும் இவர்கள் இருவேறு அகத்தியர்களேயாவர். முன்னவர் ஆரியர்; பின்னவர் தமிழர் எனக் கொள் ளலாம்.

இராமாயணத்திற்கு முன்பு, வேதகாலத்தில் ஓர் ஆரிய அகத்தியர் வாழ்ந்துள்ளார்.

மணிமேகலைக் காப்பியத்தில் அகத்தியரைப் பற்றிய குறிப்புகள் வருகின்றன. இவர் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியனின் காலத்தவர் என்பது ஒரு குறிப்பு. மற்றொரு குறிப்பு, காந்தமன் என்ற சோழன் வேண்ட, இவர் தம் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவேரி ஆற்றை உண்டாக்கினார் என்று

கூறுகிறது. அகத்தியர் கடலைக் குடித்தார் என்று ஒரு கதை வழங்குகிறது இனி, அகத்தியர் ஏழு முனிவர்களுள் ஒருவரென்றும், மனுவின் காலத்தில் எழுந்த ஊழி வெள்ளத்தின்போது ஒரு கலத்தில் சென்று உய்ந்தவர் என்றும், வானத்தில் விளங்கும் வடதிசை விண்மீன் குழுவில் (Ursa Major) ஒருவராகத் திகழ்கிறார் என்றும் கூறப்படுகிறது. இவர், 'அகத்தியர் விண்மீன்' (Canopus) என்னும் பெயரில் வானில் விளங்குகிறார் எனவும் கூறப்படுகிறார். இவர் விண்மீன் மண்டலத்தில் ஒரு முக்கோண அமைப்பின் மேல் கோணத்தில் விளங்கும் மீனாகவும், இவர் மனைவி அனுசூயை அருகில் மற்றொரு மீனாகவும் திகழ்கின்றனர் என்பது கருதப்படுகிறது.

இவர் தெற்கே வருங்கால் வாதாபி வில்லவர்களை அழித்ததாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. இதனைப் போன்றதொரு வரலாறு, வட ஐரோப்பாவிலுள்ள இசுகாண்டிநேவியா (Scandinavia) மக்களின் மூதாதைத் தெய்வமான ஓடின் (Odin) பற்றிய கதைப்பாடலில் சிறப்பாக அமைந்துள்ளது. இவை எல்லாம் அகத்தியர் வரலாறு புராணத் தன்மை அடைந்துவிட்டதனைக் காட்டுகின்றன.

மற்றோர் ஆரிய அகத்தியர் சாவா, சுமத்திரா, போர்னியோ முதலிய தென்கிழக்காசியத் தீவுகளுக்கும், மலாயா, கம்போடியா, சீயம் ஆகிய நாடுகளுக்கும் சென்று, அங்குச் சிவநெறியைப் பரப்பினார். இவர் திபேத்து நாட்டவர் என்றும், பார்ப்பனர் அல்லர் என்றும் கூறப்படுகிறார்.

சித்த மருத்துவராக ஓர் அகத்தியர் இருந்துள்ளார். இவரை ஒரு சித்தர் என்று கருதலாம். தேவாரத் திரட்டு, பக்த விலாசம் முதலிய பல நூல்கள் அகத்தியர் பெயரால் உள்ளன. அவரைப் பற்றிய கதைகளுள் ஒன்று, அவர் குற்றாலத்தில் திருமாலைச் சிவலிங்கமாகக் குறுக்கினார் என்று கூறுகிறது. சைவ வைணவ வேறுபாடுகள் மிகுந்துவிட்ட காலத்தில் இக்கதை எழுந்திருக்க வேண்டும். சுப. அ.

துணை நூல்கள்:

Maclean, C.D., (Ed.), Glossary of the Madras Presidency, Asian Educational Services, New Delhi, 1982.

சாமிநாதையர், உ. வே., (பதிப்பு), "பத்துப்பாட்டும் நச்சினார்க்கினியர் உரையும்".

சாமிநாதையர், உ. வே., (பதிப்பு) "மணிமேகலை".

கனகசபைப்பிள்ளை, வி., "1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்", சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

***அகத்தியர் தேவாரத் திரட்டு*** என்பது அடங்கல் முறை எனப்படும் மூவர் தேவாரப் பதிகங்களிலிருந்து சில பதிகங்களைத் தேர்ந்து தொகுத்த ஒரு தொகுப்பு நூலாகும். இத்திரட்டு தோன்றிய காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டாகும். மூவர் தேவாரம் முழுதும் நாள்தோறும் பாராயணம் செய்யும் அருமை நினைந்து, சிவாலய முனிவர் என்பார், அடங்கல் முறையிலிருந்து இருபத்தைந்து திருப்பதிகங்களைத் திரட்டி 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்னும் இந்நூலைத் தொகுத்தார். இத்திரட்டிலுள்ள தேவாரப் பதிகங்கள் குருவடிவம், திருநீறு, பஞ்சாக்கரம், கோயில்திறம், சிவரூபம், திருவடி, அருச்சனை, அடிமை ஆகியவற்றின் உண்மைகளை உணர்த்துவனவாய் அமைந்துள்ளன. இவற்றை நாள்தோறும் பாராயணஞ் செய்வார்க்கு, அடங்கல்முறை முழுதும் பாராயணம் செய்வோர் எய்தும் பயன் கிட்டும். இத்திரட்டு உணர்த்தும் குருவருள், வெண்ணீறு, திருவைந்தெழுத்து, கோயில், அரன் உருவு, திருவடி, அருச்சனை, தொண்டு என்னும் எட்டு நிலைகளும் சீவன்முத்தர் நிலை என்று சொல்லப்படும். இத்திரட்டின் சிறப்பினை உணர்ந்த ஆறுமுக நாவலர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், இதனோடு திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய திருமுறைகளிலிருந்து சில செய்யுட்களையும் சேர்த்து 'அருட்பா' என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து திருமுறைகளிலிருந்தும் பாடல்களைத் தேர்ந்து 'பஞ்ச புராணம்' என்னும் பெயரில் சிவபெருமான் திருக்கோயிலில் ஓதுவாமூர்த்திகளால் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யும் மரபு உருவாகியுள்ளது. "தோடு கூற்றுப் பித்தா மூன்றும், பீடுடைத் தேசிகன் பேரருளாகும்" எனத் தொடங்கும் ஆசிரியப்பா ஒன்று அகத்தியர் தேவாரத் திரட்டிலுள்ள 85 பதிகங்களையும் அவை உணர்த்தும் உண்மைகளையும் தொகுத்துக் கூறுகிறது.

***அகத்தியர் மலை:*** அகத்தியர் மலை திருநெல்வேலி மாவட்டத்தில் பாபநாசம் என்ற ஊருக்கு அருகில் மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதியில் அமைந்துள்ளது. இந்த மலைப்பகுதி பொதிகை மலை, அகத்தியர் மலை, தமிழ் மலை, தென் மலை, மலையமாமலை, மலையம் போன்ற பல பெயர்களால் குறிக்கப்படுகிறது. இலக்கியங்களால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள பெருமையை உடையது இம்மலையாகும். தமிழ்க்குன்று, தமிழ்மலை என்று புலவர் பெருமக்களால் பெருமளவு இது பாராட்டப்படுகிறது. இம்மலையைத் தமிழின் பிறப்பிடமாகவும் அகத்திய முனிவர் வாழ்ந்த இடமாகவும் வழங்குவர்.

எனவே அகத்தியரைத் 'தமிழ் முனிவர்' என்றும், இம்மலையை 'அகத்தியர் மலை' என்றும் கூறுகின்றனர். இந்த மலையில் தென்றல் காற்று பிறந்தது

எனக் கூறும் வகையில் ''தென்றல்வரை'' என்றும், ''தென்றல் பிறந்த மலையில் தேன் தமிழும் பிறந்தது'' என்றும் பல்வேறு வகையில் இதனைச் சிறப்பித்துக் கூறுவர்.



அகத்தியர் மலை

இமய மலையையும் பொதியை மலையையும் ஒருங்கு வைத்துப் புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர். சேர மன்னனைப் புகழும் புலவர் ''பொற்கோட்டு இமயமும் பொதியமும் போன்று நடுக்கு இன்றி வாழ்க'' என்று வாழ்த்தியுள்ளார். இம்மலையின் மழைச் சிறப்பு, ''மழை தவழ் பொதியில்'' என்றும் ''ஆடுமழை தவழும் கோடு உயர் பொதியில்'' என்றும் கூறப்படுகிறது. சேரநாட்டின் வழியாகப் பொதிகை மலையைக் கடந்து கொற்கைத் துறைமுகம் வந்த மேனாட்டு அறிஞர் பலர், இதன் சிறப்பைப் புகழ்ந்துள்ளனர். ''பெரிப்புளூசு-ஆப்-எரித்திரியன் சீ'' (Periplus of the Erythrean Sea) என்னும்நூலாசிரியர், இம்மலையைச் 'செம்மலை' என்று சிறப்பித்துக் கூறுகின்றார். யுவான்சுவாங் என்ற சீனப் பயணி, இம்மலையை மோ-லோ-யா மலை (மலையமலை), பு-டா-லோ-கா (பொதிகை) மலை என்று குறிப்பிடுகிறார். மேலும் தமது குறிப்புகளில் இதன் அமைப்பு, சிறப்புகள் போன்றவற்றையும் அவர் எழுதியுள்ளார். பல வளங்களையுடைய இம்மலையில் பல சிற்றாறுகளும் ஆறுகளும் அருவிகளும் தொடங்குகின்றன. ஏலம், காப்பி, தேயிலை, சந்தனம், அகில், தேக்கு போன்றவற்றோடு மிகுதியான மூலிகைகளைத் தன்னகத்தேயுடையது இம்மலை. இம்மலையைப் பற்றிய ஆய்வு 1982-ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசு தொல்லியல் ஆய்வுத்துறையால் நடத்தப்பட்டது. பாபநாசம் என்ற இடத்தில் இருந்து அடர்ந்த காட்டுப் பகுதிகளையும் குன்றுகளையும் பள்ளத்தாக்குகளையும் புயல், காற்று, மழை, மூடுபனி, யானை, காட்டுப் பன்றி, புலி, அட்டைகள் போன்றவற்றையும் மிகுதியாக உடைய இம்மலையை ஒருவரும் எளிதில் நெருங்க இயலாது. கால்நடையாகச் சென்றால் இச்சிகரத்தை அடைய இரண்டு நாட்கள் ஆகின்றன. ஏப்பிரல், மே மாதங்களில் மட்டுமே மழை, மூடுபனி, அட்டைகள் போன்ற இடையூறுகள் குறைவாக இருக்கும்.

இம்மலையின் உச்சி, தமிழ்நாடு-கேரள மாநிலங்களின் எல்லைகட்கிடையே அமைந்துள்ளது. இதன் மேல்பகுதி தட்டையாக இல்லாமல் கிழக்கு மேற்குப் புறங்களில் ஓரளவு சரிந்து காணப்படுகிறது. ஆங்காங்கே குட்டையான செடிகளையும், புல்லையும் கொண்ட மண் பகுதியைத் தவிர ஏறத்தாழ 2000 ச. மீ. பரப்புடைய இப்பகுதியில் பெருமளவு பாறைகளே உள்ளன. இம்மலையின் உச்சி பெரும்பாலும் அடர்ந்த மூடுபனியால் மூடப்படுவதால் மூன்று மீட்டருக்கு எதிரில் உள்ள பொருள்களைக்கூடப் பார்க்க இயலாது.

மேல் அணைப்பகுதியில் ஒரு சில கருப்பு சிவப்பு வண்ணப்பானை ஓடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பாண்டியன் கோட்டை என்று சொல்லப்படும் இடிந்த பெரிய மதில் சுவரின் அடிப்பகுதி, மிகவும் பரந்த அளவில் இங்குள்ள சிகரங்களுள் ஒன்றின்மேல் காணப்படுகிறது. இந்தக் கோட்டை மிகவும் பாதுகாப்பானதாகக் காணப்படுகிறது. இதில் பகைவருக்கு அஞ்சிய பாண்டிய அரசன் ஒருவன் பதுங்கி வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. கீழ் அணைக்கு அருகில் உள்ள கல்யாணி தீர்த்தம் என்று செல்லப்படும் சுனைப் பகுதியில் 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தனவாகக் கருதப்படும் நடராசர், உமையவள், முருகன், வள்ளி, தேவயானை, கணபதி, கண்ணன், அனுமன், அகத்தியர் போன்ற புடைப்புச் சிற்பங்கள் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன.

முண்டன் துறையில் இருந்து செல்லும் மற்றொரு பகுதியில் குத்தாலப் புடை என்றோர் இடமுண்டு. அதன் அருகில் உள்ள குகை ஒன்றில் செதுக்கப்பட்டுள்ள வகை வகையான குறியீடுகள் குறிப்பிடத்தக்கனவாம். இங்குள்ள பழங்குடி மக்களான கணிக்கர்களின் பழக்கவழக்கங்களும் குறிப்பிடத்தக்கனவாம். அகத்தியர் மலை இன்றும் தமிழ் நாட்டவராலும் கேரள மாநிலத்தவராலும் மலைவாழ் பழங்குடியினராலும் தூய்மையான இடமாக வழிபாடு செய்யப்பட்டு வருகிறது. பொ. அ.

**அகத்தியாச்சிரமம்** அகத்திய முனிவர் வாழ்ந்த பண்டைய குடில் அகத்தியாச்சிரமம் எனப் படும். இமயம் முதல் குமரி வரை உள்ள இந்திய நாட்டின் பல இடங்களில் அகத்தியாச்சிரமம் இருப்ப

தாகக் கூறுவர். இந்தியாவிற்கு வெளியிலும் இப்படிக் கூறும் மரபுவழிச் செய்திகள் உண்டு. இது மகாராட்டிர மாநிலத்தின் அக்கோலா மாவட்டத்தில் நாசிக் என்னும் நகருக்குக் கிழக்கே அமைந்துள்ளது. வனவாசத்தின் போது இராமன், சீதாபிராட்டி, இலக்குவன் ஆகியோர் அகத்தியாச்சிரமத்திற்கு வருகை புரிந்ததாக இராமாயணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்தியர், இராமனுக்குத் தெய்விக வில்லையும் அம்புகளையும் ஏனைய போர்க்கருவிகளையும் கொடுத்துதவியதாகக் கூறுவர். பஞ்சவடிக் காடுகள் அகத்தியாச்சிரமத்திற்குப் பத்துக் கி.மீ. தொலைவில் அமைந்துள்ளதாக அறிகிறோம். பஞ்சவடியில் சீதை தங்கியிருந்ததை இராமாயணம் சுட்டுகிறது. மேற்குத் தொடர்ச்சிமலையின் தென்கோடியிலும் அகத்தியாச்சிரமம் இருந்திருக்கக்கூடும்.

**அகத்தியான் பள்ளி** தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் வேதாரணியம் என்னும் திருமறைக்காட்டிற்குத் தெற்கே இரு கல் தொலைவில் உள்ள இத்தலத்தில் அகத்தியர் தங்கி வழிபட்டதாகவும், சிவபெருமானது திருமணக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரவிய இத்தலத்து இறைவன் பெயர் அகத்தீச்சுரர்; இறைவி பெயர் பாகம்பிரியா நாயகி. இக்கோயிலில் அகத்தியருக்கு ஓர் உருவச்சிலை அமைக்கப்பட்டுள்ளது. வன்னி தலமரமாகும். அகத்திய தீர்த்தம், அக்கினி தீர்த்தம் முதலிய தீர்த்தங்கள் இங்கே உள்ளன. இராசராச சோழன், குலசேகர பாண்டியன், வீர பாண்டியன் ஆகிய அரசர் காலத்துக் கல்வெட்டுகள் இங்குள்ள திருக்கோயிலில் காணப்படுகின்றன. இம்மன்னர்கள், திருநுந்தா விளக்குகளுக்கும், நாள் வழிபாட்டிற்கும் தேவையான பொன்னையும் நிலத்தையும் தானமாக வழங்கிய செய்திகள் இக்கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. ரா. கி.

**அகத்தீசர் சதகம்** என்னும் நூல் குணங்குடி மசுதான் சாகிபு அவர்களால் (கி.பி.1800–1847) இயற்றப்பட்டது. அகத்தில் விளங்கும் ஈசன் அகத்தீசன். அந்த ஈசன்மேல் பாடப்பெற்றது இச்சதக நூல். இது, குருவருள் நிலை, தவநிலை, துறவின் நிலை, நியம நிலை, வளி நிலை, தொகை நிலை, பொறை நிலை, காட்சி நிலை, தியான நிலை, சமாதி நிலை ஆகிய பத்துத் தலைப்புகளில் ஒவ்வொன்றிற்கும் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களையுடையது.

'குணங்குடி வாழும் என் அகத்தீசனே! மவுன தேசிக நாதனே' என்று ஒவ்வொரு பாடலிலும் ஈசனை விளித்துத் தமக்கு வேண்டியதை அளிக்கத் தம் அருகே வரவேண்டும் என்று நூலாசிரியர் வேண்டுகிறார். இதன்கண், இறைவன் மனத்துள் குருவாக இருந்து அருள்புரிய வேண்டும் எனவும், மனத் தத்துவங்கள் அனைத்தும் கடந்த அருள் வேண்டும் எனவும், காம, குரோத, மோகம் முதலிய அனைத்தும் நீக்கிட அருள வேண்டும் எனவும் வேண்டுகிறார். மேலுமவர் இறைவனைப் பிரியாத நியம நிலை, இரேசக, பூரக, கும்பக நிலை ஆகியவற்றை உணர்த்தி வாயுவை அடக்கும் உபாயம், பொறியுணர்வெல்லாம் புறத்தில் செல்லாது அகமுகப்படுத்தும் நிலை மனத்தினை ஒருவழிப்படுத்தும் பொறுமை நிலை, ஒளிமயமான இறைவன் தோற்றத்தினைக் கண்டு மகிழும் நிலை, மனநிலை திரியாமல் குறித்த பொருளோடு நிற்கும் தியான நிலை, மனம் அடங்கி, அஞ்சி ஒடுங்கும் சமாதி நிலை ஆகியவற்றை அருள வேண்டும் எனவும் வேண்டியுள்ளார். வி.பா.

**அகதிகள்**: இன, சமய, மொழி, சமுதாய, அரசியல் காரணங்களால் அடக்கு முறைக்குட்பட்டும் தம் சொந்த நாடுகளிலிருந்து துரத்தப்பட்டும் வேறு நாடுகளுக்குச் சென்று குடியேறும் மக்கள் அகதிகள் எனப்படுவர். வரலாற்றுக் காலம்தொட்டு மாபெரும் போர்களை அடுத்து, மக்கள் பெருமளவில் ஓர் இடம் விட்டு வேறு இடம் பெயர்ந்து வந்துள்ளனர். உரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக் காலத்தில், ஒரு மாபெரும் மனித இடப்பெயர்ச்சி நிகழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து மிகப் பெரிய அளவில் மக்கள் குடிபெயர்ந்து, அமெரிக்கக் கண்டத்திலும் வேறு பல நாடுகளிலும் குடியேறினர். அக்காலத்தில் ஒரு நாடு விட்டு வேறு நாடு சென்று மக்கள் குடியேறுவதற்கு நுழைவுச் சீட்டு போன்ற கட்டுத்திட்டங்கள் இல்லை. அதனால் ஒரு நாட்டிலிருந்து துரத்தப்பட்ட மக்கள், வேறுநாடுகளில் நிலைத்து வாழ முடிந்தது நாடுகளின் எல்லைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்படாமலும், கண்காணிக்கப்படாமலும் இருந்ததே அக்காலத்தில் அகதிகளின் மறுவாழ்விற்குத் துணையாக அமைந்திருந்தது.

முதலாம் உலகப்போர் (1914–18), சீன-சப்பானியர் போர் (1937–45), இரண்டாம் உலகப்போர் (1939-45) இவைகளின் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தம் நாட்டைவிட்டு ஓடி அகதிகளாயினர். செருமானியப் படைகளுக்கு அஞ்சி ஐரோப்பிய நாடுகளில் இருந்த மக்கள், வேற்று நாடுகளுக்கு ஓடினர். கிரேக்கப் படைகளுக்கு அஞ்சித் துருக்கி நாட்டு மக்கள் ஓடினர். போர் முடிந்தபின் இம்மக்கள் பெரும்பாலும் தத்தம் நாடுகளுக்குத் திரும்பினர். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் (1942–ஆம் ஆண்டு) சப்பானியப் படையினர் பர்மாவில் படை எடுத்ததன் காரணமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர் தாய் நாட்டிற்கு அகதிகளாக ஓடி வந்தனர்.

கிரேக்கப் படைகள் 1922-ஆம் ஆண்டு துருக்கியிடம் தோல்வியடைந்ததால் துருக்கியிலிருந்து பல்லாயிரம் கிரேக்கர்கள் நம் நாட்டிற்கு ஓட வேண்டியதாயிற்று. இவ்விரு நாடுகளுக்குமிடையே 1923-ஆம் ஆண்டு ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன்படி இரு நாடுகளும் சிறுபான்மையினரைப் பரிமாற்றம் செய்து கொண்டனர். இதற்குப் பின் வேறு பல நாடுகளும் இத்தகைய பரிமாற்றத்தைப் பின்பற்றின.

அண்மைக் காலங்களில் அரசியல் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் மக்கள் தாமே நாட்டைவிட்டு வெளியேறி விடுகின்றனர். உருசியாவில் 1917 ஆம் ஆண்டில் நடந்த அக்டோபர் புரட்சி, அதற்குப் பின் நடந்த உருசிய உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் காரணமாக நூறாயிரக்கணக்கான மக்கள் அந்நாட்டைவிட்டு வெளியேறி, ஐரோப்பாவின் பல இடங்களில் குடியேறினர். இசுபெயின் நாட்டில் தளபதி பிராங்கோ (General Franco) என்பவரின் ஆட்சிக் காலத்தில் 1936 முதல் 1939 வரை சுமார் 5 லட்சம் இசுபானியர்கள் (Spaniards) அரசியல்கொடுமை தாங்காமல் பிரெஞ்சு நாட்டிற்கு ஓடினர். அங்கேரியை 1956-ஆம் ஆண்டு உருசியா வலிந்து கவர்ந்து கொண்டதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான அங்கேரியர் நாட்டைவிட்டு வெளியறினர். கிழக்குச் செருமனியிலிருந்து மேற்குச் செருமனியில் 1945-61 வரை 37 இலட்சம் மக்கள் தஞ்சம் புகுந்தனர். சீனா, 1959ஆம் ஆண்டு திபெத்மீது படைஎடுத்தபோது, ஆயிரக்கணக்கான திபெத்தியர் இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

இன, சமய, மொழிக் காரணங்களாலும் உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளிலிருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு வேறு நாடுகளுக்குச் சென்றிருக்கின்றனர். இசுபெயின் (Spain) நாட்டிலிருந்து 15 இலட்சம் யூதர்கள் கி. பி. 1492-இல் வெளியேற்றப்பட்டனர். செருமானிய அரசின் யூதர் எதிர்ப்புக் கொள்கையின் காரணமாக 1930 முதல் 1940 வரை 40 இலட்சம் யூதர்கள் நாட்டைவிட்டு வேறுநாடுகளுக்கு ஓடினர்.

ஐரோப்பாவில் இரண்டாம் உலகப்போரில் தோற்ற செருமனி, தான் வசப்படுத்தியிருந்த சில நாடுகளை இழக்கவேண்டியதாயிற்று. இதனால் பல்லாயிரக்கணக்கான செருமானியர் நாட்டைவிட்டு வெளியேறினர். இவ்வாறு வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடிக்கும் அதிகம். இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன் (1947) ஏறத்தாழ ஒரு கோடி இந்துக்கள் பாகிசுத்தானிலிருந்து இந்தியாவிற்கு அகதிகளாக வந்து அடைக்கலம் புகுந்தனர். இதுவே வரலாற்றில் மிகப் பெரிய மக்கள் மாற்றமாகும் இம் மாற்றத்திற்கு அரசியலும் சமயமும் காரணங்களாக இருந்தன.

பாலசுதீன நாடு 1948-ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டதால் ஆயிரக்கணக்கான பாலசுதீன ஐரோப்பியர்கள் பாலசுதீனத்திலிருந்து (Palestine) இசுரேலுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அடைக்கலம் அடைந்தனர்.

ஆப்பிரிக்க நாடுகள், ஐரோப்பியரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபின், இத்தகைய மக்கள் மாற்றங்கள் பெருமளவில் நடைபெற்றன. ஆப்பிரிக்காவில் வெள்ளையர்களால் துன்புறுத்தப்பட்டு, இங்கும் அங்கும் மிருகங்கள்போல் வேட்டையாடப்பட்டு அகதிகளாக மாறியவர்களின் எண்ணிக்கை 1971-ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் அமைப்பின் கணக்குப்படி 10 இலட்சத்து 85 ஆயிரமாகும்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் உலகெங்கிலும் நாடு இழந்து தவித்துக் கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை 4 கோடி ஆகும். உலக அகதிகளின் மொத்த எண்ணிக்கை 1966-ஆம் ஆண்டில் 1 கோடி 10 இலட்சமாகக் குறைந்தது; 1970-ஆம் ஆண்டிற்குப் பின் இது 1 கோடி 80 இலட்சமாக உயர்ந்தது.

அகதிகள் பற்றிய சிக்கல் உலகெங்கிலும் காணப்படுவதாகும். இந்நூற்றாண்டில் தம் சொந்த நாடுகளிலிருந்து பல காரணங்களினால் வெளியேற்றப்பட்டவர்கள், வேறு நாடுகளில் குடியேறுவதால் பல இன்னல்களும் சிக்கல்களும் தோன்றியுள்ளன. நாடு இழந்தவர்கள், பெரும்பாலும் வேற்று நாட்டினரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

ஐக்கியநாடுகள் அமைப்பு, 1947-ஆம் ஆண்டிற்குப்பின் 70 இலட்சம் அகதிகளைத் தத்தம் நாட்டிற்குத் திருப்பியனுப்ப உதவி செய்தது. ஐக்கிய நாடுகளின் உறுப்பான அனைத்துலக அகதிகள் நிறுவனம் (International Refugee Organization) அகதிகளின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களைத் தீட்டிற்று. இதன் விளைவாக உலகெங்கணுமுள்ள பல்வேறு நாடுகள், அகதிகளின் மறுவாழ்வுக்குப் பொறுப்பேற்க முன் வந்துள்ளன. உலகெங்கிலும் உள்ள பல தனியார் அமைப்புகளும் அகதிகளின் மறுவாழ்வுக்காகப் பாடுபட்டு வருகின்றன.

ஐக்கியநாடுகள் அமைப்பு, அகதிகளின் நிலை பற்றி முடிவெடுக்க 1951-இல் ஒரு பேரவையைக் கூட்டியது. இதன் முடிவுகளைப் பெரும்பான்மையான நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. இம் முடிவுகளையொட்டி அகதிகளுக்குச் சில உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன அவை. அகதிகள் தாம் குடியேறிய நாட்டில் தம் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் உரிமை, சமய உரிமை, தொழில் செய்து பொருளீட்டும் உரிமை, கல்வி கற்கும் உரிமை, குடியுரிமை, சட்டம்சார் உரிமைகள் போன்றவையாகும்.

அகதிகள் தாம் குடியேறிய நாட்டின் மக்களாக மாறிய பின் அகதிகள் என்ற நிலை மாறி, அவர்கள் அந்நாட்டு மக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நாடி ழந்தவர்கள் என்ற எண்ணம் மாற்றப்படவேண்டும். அவர்களின் மொழி, சமயம், பண்பாடு ஆகியவற் றிற்கு ஏற்ற மதிப்புக் கொடுக்கப்பட வேண்டும்.

எஸ். கோ.

துணை நூல்கள் :

**Murphy, Henry**. B.H., "Flight & Resettlement", UNESCO, Paris, 1955.

"U.S. Committee for Refugee Report", Annual Survey, New York, 1971.

**அகநானூறு :** பழந்தமிழ் இலக்கியங்களைச் சங்க இலக்கியம் என்னும் பெயரால் முன்னோர் வழங் கினர். அச்சங்க இலக்கியம் மேற்கணக்கு என்றும் கீழ்க்கணக்கு என்றும் இரு பிரிவாகக் கொள்ளப்படும். பாட்டும் தொகையும் மேற்கணக்காகும். பாட்டு என் பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத் தொகை நூல்களையும் குறிக்கும்.

எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்களும் அகத்திணையைச் சார்ந் தவை; பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்திணை யைச் சார்ந்தவை; பரிபாடல் அகம், புறம் ஆகிய இரு கூறுகளையும் உள்ளடக்கி நிற்கிறது.

அகத்தே நிற்கும் இன்பம் 'அகம்' எனப்படும். அகப்பொருள் நூல்கள் பல தமிழில் இருக்கவும், 'அகம்' என்றே பெயரமைந்த நூல் தமிழில் அக நானூறு ஒன்றேயாகும். மேலும், எட்டுத் தொகை நூல்களுள் அடிவரையறையால் நீண்டன பிற இருக் கவும், அகநானூறு ஒன்றே 'நெடுந்தொகை' எனப் பெயர் பெற்றுள்ளது. யாப்பமைதியும் பொருட் சிறப்பும் இதில் விஞ்சி நிற்பதே இதற்குக் காரண மாகும். அன்றியும், குறுந்தொகை என வழங்கப் படும் நூலின்கண் அமைந்துள்ள சில பாடல்களில் முதல், கருப்பொருள்கள் விளக்கமுறக் காணக்கூடி யனவாக இல்லை. ஐங்குறுநூற்றில் முதல் கருப் பொருள்கள் ஓரளவே இடம் பெற்றுள்ளன. ஆனால் அகநானூற்றில் முதல் கரு உரிப்பொருள்கள் ஆகிய மூன்றும் சிறக்க அமைந்திருப்பதனைக் கற்றோர் காண முடியும். மிக விரிந்த நிலையில் முதற்பொருளும் கருப் பொருளும் அமைந்து, உரிப்பொருளாற் சிறப்புற்று விளங்கும் பாடல்களை எடுத்துக்காட்ட வந்த தொல் காப்பிய உரையாசிரியர்களாகிய இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்து திணைகளுக்கும் அகநானூற்றிலிருந்தே மேற்கோள் காட்டியுள்ளனர். தொல்காப்பியத்தின் பிறிதோர் உரையாசிரியராகிய பேராசிரியரும் தம் உரைக்கண் அகத்திணை கூறும் பிற நூல்களிலும் அகநானூற்றிற்கே தலைமையிடம் தந்துள்ளார். மேலும், 'அகம்' என்னும் பெயராலே அகநானூற்றினை அவர் குறிப்பிட்டுள்ளார்.

எட்டுத்தொகை நூல்களுள் அடியளவால் நீண் டுள்ள நூல் அகநானூறு ஆகும். பதின் மூன்றடிச் சிற்றெல்லையும் முப்பத்தோரடிப் பேரெல்லையும் கொண்ட இந்நூல், மூன்று பகுதிகளாகப் பகுக்கப் பட்டுள்ளது. முதல் நூற்றிருபது பாடல்களைக் கொண்ட பகுதி 'களிற்றியானை நிரை' என்றும் அடுத்த நூற்றெண்பது பாடல்களைக் கொண்ட பகுதி 'மணிமிடை பவளம்' என்றும் இறுதி நூறு பாடல் களைக் கொண்ட பகுதி 'நித்திலக் கோவை' என்றும் வழங்கப்பெறுகின்றன. நூலின் இறுதியிற் காணப் பெறும் 'நின்ற நீதி' என்று தொடங்கும் பாயிரச் செய்யுளை அடுத்துள்ள உரைநடைச் சொற்றொடர் களுள், இவ்வாறு அகநானூற்றின் பாடல்களை மூன்று பகுதிகளாக்கிப் பெயரிட்டு வழங்குவதற்குக் காரணங் கள் கூறப் பெற்றிருப்பினும் அவை விளக்கமாக இல்லை. ஆயினும் இவ்வாறு பெயர் அமைந்ததற் குரிய காரணத்தினை நாம் ஒருவாறு அறிந்து கொள்ள முடிகிறது. நெடியவாகி நிமிர்ந்தொழுகும் அடிகளைக் கொண்டு செம்மாந்து செல்லும் பாட்டின் நடையும் பொருட்சிறப்பும் நன்கு விளக்கமுறும் பகுதி 'களிற்றியானை நிரை' ஆகும். பாட்டும் பொருளும் தம்முள் செறிந்து விளங்காமல் வண்ண வேறுபாடு டைய மணியும் பவளமும் மிடைந்தாற்போல ஒவ் வாமை காட்டி விளங்குவது 'மணிமிடை பவளம்' என்னும் பகுதியாகும். குளிர்ச்சியும் ஒளியும் உடைய நன்முத்தின் கோவையின் ஒளியெனத் திகழ்ந்து பாட் டும் பொருளும் தம்முள் பொருந்துதல் காட்டிச் சிறக்கும் பகுதி 'நித்திலக்கோவை' ஆகும். இப்பாகு பாடு அகநானூற்றுப் பாடல்களின் பொருள், நடை ஆகியவற்றைத் தெளிவுற ஆராய்ந்து புலப்படுத்திய திறனாய்வு முடிவாகும். அடுத்து, குறிஞ்சி முதலாக உள்ள ஐந்திணைகளிலும் பேசப்படும் பிரிவு நிலை களும், அவற்றைக் கூறு முகத்தால் வரும் அன்பு வெளிப்பாடும், வேறு எந்நூலுள்ளும் சிறக்கக் காண முடியாத அளவிற்கு அகநானூற்றில் அமைந்திருத்தல் இதன் தனிச்சிறப்பாகும். அகப்பொருள் கூறும் நூல் களுள் இதுவே காலத்தாலும் முற்பட்டிருக்க வேண் டும் என்பர்.

இந்நூற் பாடல்களைப் பாடியோர் 145 புலவ ராவர். மதுரை உப்பூரிகுடி கிழார் மகனார் உருத் திர சன்மனார் என்பவர் இந்நூலைத் தொகுத்தவர். இத்தொகுப்புக்கு ஆதரவாக இருந்த மன்னன் பாண் டியன் உக்கிரப் பெருவழுதியாவான். முதலில் அமைந்

துள்ள கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

அகநானூற்றுப் பாடல்கள் ஓர் ஒழுங்கு முறையினை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளன. 1,3,5,7,9 என ஒற்றைப் படை எண் பெற்ற பாடல்கள் பாலைத் திணையாகவும், 2, 8, 12,18 என இரண்டும் எட்டும் ஆன எண் பெற்றவை குறிஞ்சித் திணையாகவும், 4,14 என நான்கை ஒட்டிய எண் பெற்றவை முல்லைத் திணையாகவும், 6,16 என ஆறு தொடர்பான எண் பெற்றவை மருதத் திணையாகவும், 10,20 எனப் பத்தாக வருவன நெய்தல் திணையாகவும் தொகுக்கப்பட்டுள்ளன. எனவே அகநானூற்றில் ஒரு பாட்டின் எண்ணைச் சொன்னால், உடனே அது இன்ன திணைக்குரிய பாடல் என்பதனைச் சொல்லி விடலாம். இவ்வாறு பாட்டுகளைத் தேர்ந்தெண்ணித் தொகுத்த தொகுப்பாசிரியரின் முயற்சி வியக்கத்தக்கது.

அகநானூற்றின் நானூறு பாடல்களும் அகவற்பாக்களால் அமைந்தனவாகும். இந்நூலில் நயங்கண்டு தெளிய வேண்டிய பாடல்கள் பலவுள. உள்ளுறை, இறைச்சி முதலிய குறிப்புப் பொருள்கள் நிறைந்து காணப்படுவது இந்நூலாகும். கோசர், காரி, கொடித் தேர்ச்செழியன், நன்னன், பண்ணன், பிட்டன், பாரி, தித்தன், செழியன், அத்தி, கங்கன், கட்டி, புல்லி முதலிய குறுநில மன்னர்களைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் மிகப் பலவாக இந்நூலில் உண்டு. மாமூலனார் தம் பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகளை வைத்தே பாடுகிறார். பரணர் சங்க காலத்தில் விளங்கிய வரலாற்றாசிரியரோ என்று எண்ணும் அளவிற்குத் தாம் இயற்றியுள்ள பாடல்களில் வரலாற்றுக் குறிப்புகளை வடித்துத் தந்துள்ளார். அடுத்து, ஐவகை நிலங்களின் புனைவு அகநானூற்றுப் பாடல்களிற் காணும் அளவிற்கு விரிவாகவும் விளக்கமாகவும் அழகாகவும் அருமைப்பாடாகவும் வேறு எந்நூலிலும் காணவியலாது. உவமைகள் மிகச் சிறந்து விளங்குகின்றன. குடவோலை மூலம் நாட்டின் நல்லாட்சிக்கு வேண்டியவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறைபற்றி இதில் காணப்படுகிறது. குழந்தைப் பேற்றின் சிறப்பு, பழந்தமிழர் திருமண முறை, புலவர்கள் ஒருவர்மீது ஒருவர் கொண்டிருந்த நன்மதிப்பு, ஆதிமந்தி என்னும் பெண்பாற்புலவர் பேதுற்று அலைந்த காட்சி, கிளியை முன் கையில் வைத்துக் கொண்டு பொருள்வயிற் பிரிந்து சென்ற தலைவன் வருவானா என வினவும் தலைவியின் சொற்சித்திரம், வினைமுடித்து மீளும் தலைவன் திரும்பி வருங்கால் வண்டுகளின் காதல்வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படுத்தாமல் தன் தேரின் மணிகளைப் பிணைத்து விட்டு விரைந்து வருதலைக் காட்டும் அருட்காட்சி, இதிகாசக் கதை நிகழ்ச்சிகள், தோழியின் சொல்லாடல், சூழ்ச்சி, வரைவுகடாதல் போன்றன நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவை போன்ற பல சிறப்புகள் அகநானூற்றில் பொதிந்து கிடக்கின்றன. புறப்பொருள் நூல்களுள் புறநானூறும், அகப்பொருள் நூல்களுள் அகநானூறும் தமிழக வரலாறு எழுதப் பெரிதும் பயன்படுவனவாம்.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது முதல் 90 பாடல்களுக்கு மட்டும் குறிப்புரையாக அமைந்துள்ளது. அடுத்து 70 பாடல்களுக்கு அகநானூற்றின் முதற் பதிப்பாசிரியரான திரு. வே. இராசகோபால ஐயங்கார் உரை எழுதியிருக்கிறார். இவரது குறிப்புரை நூல்முழுவதற்கும் உண்டு. நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டாரவர்களும் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து நூல் முழுமைக்கும் உரை கண்டுள்ளார்கள். இவ்வுரை ''வேங்கடவிளக்கு'' எனப் பெயர் பெறும். இவ்வாறே பெருமழைப்புலவர் பொ. வே. சோமசுந்தரனாரும் அகநானூறு முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். சி.பா.

**அகநிலைக் கொள்கை** ஐரோப்பிய மறுமலர்ச்சியின் விளைவாக அறிவுமுதற் கொள்கையின் (Rationalism) பின்னணியில் எழுந்ததாகும். ஐரோப்பிய மறுமலர்ச்சி, இதுகாறும் இறைமையமாக (Theo-centric) இருந்த பண்பாட்டை, மனித மையம் கொண்டதாக (Anthropo-centric) மாற்றியது. தேக்கார்ட்டின் (Descartes) அறிவுமுதற் கொள்கை இந்த மாற்றத்திற்குத் தத்துவ வடிவம் கொடுத்தது. தேக்கார்டின் சிந்தனை, இந்த உலகம் அனைத்துமே ஒரு மாயக் கனவாக இருக்கக்கூடும் என்னும் ஐயப்பாட்டில் தொடங்கியது. ஆனால், அது தன்னையே இத்தகைய ஓர் ஐயத்தின் மையப் பொருளாகக் கொள்ளத் துணிவின்றி, அகத்தின் எல்லையில் நின்று 'நான் சிந்திக்கிறேன், எனவே, நான் இருக்கிறேன்' என்று கொண்டது.

மறுமலர்ச்சியில் பிறந்த, பகுத்தறிவின்பாற் பட்ட இத்தகைய சிந்தனை, புற உலகப் புரட்சிக்கு வித்திட்டது. அறிவியலும் பொறியியலும் அவற்றின் வழி வந்த தொழிற் புரட்சியும் மனிதனின் புற உலகச் சூழலை விரைவில் மாற்றி அமைத்தன. ஆனால், தேக்கார்டு இறைமைய உலக நோக்கை முற்றிலும் விட்டுவிடவில்லை. இறைவன் உலகை அறிவு வழி இயங்குமாறு படைத்தான் என்பது அவரது கொள்கை.

மனிதனின் புற உலகச் சூழலில் நிகழ்ந்த இம்மாறுதல்கள், அவனது சமூக அமைப்பையும் அகச் சூழலையும் தொடவில்லை. வால்டேர், உரூசோ,

போன்ற சமூகச் சிந்தனையாளர்கள், மனிதனை மையமாகக் கொண்ட உலகில் அறிவுமுதற் கொள்கையின் துணைகொண்டு, சமுதாய அமைப்பைத் திறனாயும் போக்கிற்கு வித்திட்டனர். அது பிரெஞ்சுப் புரட்சியாக மலர்ந்தது.

செருமானியத் தத்துவ அறிஞர் ஏகல் (Hegel), தேக்கார்டின் இறை எச்சக் கருத்தைப் புறக்கணித்தார். அவரது அறிவுமுதற் கொள்கையைப் புரட்சியின் துணைக் கருவியாக்காமல், அதனை மனிதன் தன் இன வரலாற்றை அறிந்து உலகத்தோடு ஒட்ட ஒழுக மாந்தர்க்கு உதவும் வழிகாட்டியாகக் கொண்டார். ஒவ்வொரு தனி மனிதனும், தன் இனம் கண்டு கடந்த நிலைகளைத் தானும் கண்டு கடந்து, தன் காலத்தோடு நிலைபெறுத்த வேண்டும் என்பது இவர் கொள்கை.

ஏகலின் தத்துவத்தில் அகநிலையானது (Subjectivism) அறிவுமுதற் கொள்கையின் வன்மையால் வரலாற்றில் கரைந்து மறைந்தது. தேக்கார்டு தமது அறிவுமுதற் கொள்கையமைப்பில் இறைவனையும் மனிதனின் அகநிலையையும் விட்டுவைத்தார். ஆனால், அவர் வரலாற்றின் போக்கிற்கு வழி வகுக்கவில்லை. ஏகல் வரலாற்றை வலியுறுத்தி இறைவனையும் அகநிலையையும் அறிவுமுதற் கொள்கையின் துணையால் வரலாற்றின் போக்கில் கரைத்துவிட்டார். ஆனால், ஏகல், வரலாற்றுக்குத் தன் காலத்தோடு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்.

பாயர்பாகு (Feuerbach), அகநிலை இழத்தலையே அயன்மையாகிவிட்ட நிலையாகக் காட்டி அகநிலைக்கு வலியூட்ட முயன்றார். ஆனால், அவரது அகநிலை இறை மைய எதிர்ப்பில் தோன்றியது. பாயர்பாகு, ஏகலைப்போல் வரலாற்றுப் போக்குக்கு ஒரு வழி வகுக்கவில்லை.

காரல் மார்க்சு, வரலாற்றின் போக்கில் அகநிலை இழத்தலை அயன்மையுற்ற நிலையாகக் காட்டிப் புரட்சிக் கொள்கை மூலம் தேங்கி நிற்கும் வரலாற்றுக்கு வழிவகுக்க முனைந்தார். இதற்கு அவர் அறிவுமுதற் கொள்கையைக் கருவியாகக் கொண்டார். ஆனாலும், மார்க்சின் தத்துவத்தில் அகநிலைக்கு உரிய இடம் அளிக்கப்பெறவில்லை.

வரலாற்றின் போக்கிற்குள் புகுத்தி, அறிவுமுதற் கொள்கையால் ஏகல் அழித்து விட்ட அகநிலையைத் தென்மார்க்குசமயச் சிந்தனையாளர் கீர்க்கிகார்டு (Kierkegaard) முற்றிலும் உயிர்த்தெழச் செய்தார். உண்மை, சத்தியம் என்பவை வெறும் அறிவினால் இல்லை; வரலாற்றின் போக்கிலும் இல்லை; அகநிலையில் மட்டுமே உய்த்துணரக் கிடக்கின்றன என்று இவர் அறிவித்தார். ஏகல், அறிவுமுதற் கொள்கையால் மறைத்துவிட்ட இறைவனையும் 'உயிர்த்தெழச்' செய்த இவர், அகநிலைக் கொள்கையால் தேக்கார்டையும் விஞ்சினார். தேக்கார்டின் ஐயப்பாட்டு முறை அகநிலையின் எல்லைக் கோட்டைத் தொட்டவுடன் புறவுலகிற்கு நேராக முகம்திரும்பி அறிவுமுதற் கொள்கையைப் பற்றிக் கொண்டுவிட்டது. கீர்க்கிகார்டு அகநிலையின் எல்லைக் கோட்டை ஊடுருவி, உள்ளே சென்று அதன் மையத்தில் நிலை கொண்டார். ஆனால், கீர்க்கிகார்டு வரலாற்றின் போக்கிற்கு உரியவழி வகுக்கவில்லை.



மார்ட்டின் எய்டெகர் (Martin Heideggar) என்ற செருமானிய அறிஞர், கீர்க்கிகார்டின் அகநிலைக் கொள்கையைத் தழுவி, இறைக் கொள்கையை மறுத்தார். ஆனால், இவரும் வரலாற்றுப் போக்கிற்கு உரிய வழி வகுக்கவில்லை.

சான்பால் சார்த்தரே (Jean Paul Sartre) என்னும் பிரெஞ்சு அறிஞர், எய்டெகரைப் பின்பற்றி இறைக் கொள்கையை மறுத்து, அகநிலைக் கொள்கையை மேற்கொண்டார். சார்த்தரே, கீர்க்கிகார்டும் எய்டெகரும் புறக்கணித்த வரலாற்றுப் பாதையைக் கார்ல் மார்க்சிடம் கண்டார். அதேசமயம் மார்க்சின் தத்துவத்தில் அகநிலைக் கொள்கைக்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை என்பதை சார்த்தரே வலியுறுத்தினார்; மனிதர்கள், குழந்தைகளாக அன்றி வயது வந்த தொழிலாளர்களாக, இன உணர்வுடன் பிறப்பதாகக் கொள்ளும் பாங்கில் மார்க்சின் சிந்தனை செல்வதை அவர் சுட்டிக் காட்டினார். புற உலகப் புரட்சிக்கு மக்களை அறைகூவி அழைத்த காரல் மார்க்சு அவர்தம் அகநிலையைப் பண்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை மறந்துவிட்டார்.

சார்த்தரே ஒருபுறம் மனிதரின் அகநிலையை இளமையிலிருந்தே முறையாகப் பண்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்து பாரம்பரிய வழிக்கல்விக் கொள்கையை முன் வைத்தார். மறுபுறம், மார்க்சிய வரலாற்றுப் புரட்சியால் முற்றிலும் புதிய ஓர் உலகத்தைச் சமைத்துவிட முடியாது என்பதைக் கண்கூடாக அறிந்திருந்தும்கூட, சார்த்தரே புற உலகப் புரட்சியைத் தூண்ட விழைந்தார்.

ஏகலின் சிந்தனையில், தனி மனிதன் பரம்பரை வழி, தன் இனவரலாறு கண்டு வளர்ந்து நிலைபெறும் கல்விக் கொள்கை பொதிந்து உள்ளது; ஆனால் அவன் அகநிலையில் ஆழ்ந்து, மீண்டு, வரலாற்றில் புதுமை சமைக்கும் வாய்ப்பு இல்லை. வரலாறு சமைக்க வாய்ப்பு அளிக்கவேண்டுமென்றால், வரலாற்றின் திசை குறிக்கவேண்டும். வரலாற்றின் திசையை முன்னரே குறிப்பிட்டால் தனிமனிதன்

அகநிலை பறிமுதலாகி, மனிதன், வரலாற்றின் – வரலாற்றைக் குறிக்கும் மனிதக் கும்பலின் – கைப்பாவை ஆகிவிடுவான். திசை குறிப்பிடாவிட்டால், பல்வேறு வகுப்பினர், பல்வேறு திசையில் வரலாற்றை இழுக்க அது நகராமல் நின்று விடும்; அல்லது யாரும் விழையாத இடைப்பட்ட திசைகளின் ஊடே நழுவிச் செல்லும்.

இத்தகைய நிலையில், கல்விதான் பழைமைக்கும் புதுமைக்கும் பாரம்பரியத்திற்கும் புரட்சிக்கும் அகநிலைக்கும் புறச் சூழலுக்கும் பாலமாக விளங்க வேண்டும். கல்வி, வளரும் தனி மனிதன் தன் இனம் கடந்து வந்த பாதையைப் புரிந்து, உணர்ந்து, அகவயப்படுத்திக்கொள்ள உதவ வேண்டும். இந்தக் கொள்கை ஏகலின் சிந்தனையில் பொதிந்து உள்ளது. ஆனால், கல்வியானது மனித இனம் கடந்து வந்த பாதையை இன்றைய மனிதனின் அகத்தில் இட்டு நிரப்பி, இன்றைய சமூக வரலாற்று அமைப்பின் எல்லையோடு அவனை நிறுத்திவிடக் கூடாது. இதையும் விஞ்சிய அகநிலைச் சுதந்திரத்தை அவன் கண்டு கொள்ளக் கல்வி உதவ வேண்டும். பின், இந்தச் சுதந்திரத்தால் அவன் புதிய வரலாறு படைக்க அது ஊக்கம் அளிக்க வேண்டும். இந்த முயற்சியின் திசையில் உலகம் விரைந்து செல்லாமல், நின்ற நிலையில் உழலும்போது அல்லது திசைமயங்கி நழுவும்போது, இதுவும் உலகின் இயற்கை என்று அவன் உணர்ந்து அகநிலையில் ஆற்றி இருக்கக் கல்வி உதவ வேண்டும். இன்றேல், அவன் அகநிலையினின்றும் பிறழ்ந்து, புரட்சிவெறி கொண்டுஅழிவான்.

பண்டைய இந்தியத் தத்துவங்கள், வரலாறு கடந்த அகநிலையை மனித வாழ்வின் முத்தி நிலையாக முன்வைக்கின்றன. புற உலக வரலாறு மனிதனின் வாழ்க்கைக்கு – பிறவிக்கு - எல்லை ஆகாது; வரலாறு என்பது ஒரு முடிவற்ற தொடுவானக் கானல் நீர்; இதனைத் தேடிப் புறஉலகில் அலைவதில் மனிதனுக்கு முத்தி இல்லை; புற உலக வரலாறு என்பது இத்தகைய தொடுவானக் கானல் நீர் என்பதை ஒவ்வொரு மனிதனும் தனித்தனியாகத் தன் அகநிலையில் கண்டு உணர்ந்து நிலைபெறுவது தான் பிறவியின் பேறு என்பது பண்டைய இந்தியத் தத்துவங்களின் துணிந்த முடிபு.

இது கல்வியின் வழி அமையும் அகநிலைப் பண்பாடாகும். எனவே, கல்வி அகநிலையில் தொடங்கிப் புற உலகில் இயங்கி, மீண்டும் அகநிலையில் முடிவதாகும். இரா.க.

**அகநிலைப்பாலை** என்பது ஓர் இசையமைப்பு முறை ஆகும். பண்களை உண்டாக்குவதற்குப் பல்வேறு முறைகள் இருந்தன. அவற்றுள் நான்கு முறைகளை ஓர் இனமாகக் கூட்டி — சாதிப் பாலைகள் என்று பெயரிட்டு வழங்கி வந்தனர். நான்குமுறையில் தொகுத்த நால்வகைச் சாதிப் பாலைகள் 1. அகநிலைப்பாலை, 2. புறநிலைப்பாலை, 3. அருகியல்பாலை, 4. பெருகியல்பாலை என்பன. சிலப்பதிகாரத்திற்குப் பல நூற்றாண்டுக்கு முன்னரே பண்டைப் பாணர்கள் யாழிலும் குழலிலும் இம்முறைகளைக் கையாண்டு களிப்பூட்டினார்கள். இரு நரம்புகளின் அகநிலை என்பது அவற்றின் குரல், இளி உறவு நிலை, அதாவது, சட்சம பஞ்சம உறவு நிலையாகும். நின்ற பண்ணினுடைய ஏழு நரம்புகட்கும் (சுரங்கட்கும்) 'ச. ப' உறவு முறையில் உரிய ஏழு நரம்புகளை இசைப்பதே 'அகநிலைப்பாலை முறை' யாகும் எடுத்துக்காட்டாக, செம்பாலை என்றது இன்றைய அரிகாம்போதி என யாழ்நூல் யாத்த விபுலானந்தர் ஆய்ந்து கூறியுள்ளது ஏற்றற்குரியது. செம்பாலையின் நரம்புகட்கு — "கு.இ" உறவில் (ச.ப. உறவில்) ஒலிக்கும் நரம்புத் தொகுப்பே – செம்பாலைக்குரிய அகநிலைப் பாலை யாகும். அவற்றை இன்றைய சுரங்களாக நேர்நேர் நிறுத்திப் பின்வருமாறு காட்டலாம்.

செம்பாலைக்கு அகநிலைப்பாலை — அரும்பாலை

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செம்பாலை | ச | ரி | ரி | க | க | ம | ம | ப | த | த | நி | நி | அரிகாம்போதி |
| அரும்பாலை | ப | த | த | நி | நி | ச | ரி | ரி | க | க | ம | ம | சங்கராபரணம் |
| கீழ்க்குறிப்புக்கு | (1) | | (2) | | (3) | (4) | | (5) | | (6) | | (7) | |

குறிப்பு:

1) ச—ப; 2) ரி—த; 3) க—நி; 4) ம—ச; 5) ப—ரி; 6) த—க; 7) நி—ம; இந்த ஏழும் அகநிலை நரம்புகள்.

மேலே காட்டிய இரு பாலையின் சுரங்கள் அகநிலையில் நிற்பதை அறியலாம்: எனவே, ஒருபாலையின் நரம்புகளில் — உழையைக் குரலாகக் கொண்டு ('ம' வை 'ச' வாகக் கொண்டு) இசைத்தால் நின்ற பாலைக்கு அகநிலைப் பாலை கிடைக்கும். இதுவே சுருக்கமான முறை. எந்த ஒரு பெரும் இராகத்தையும் அதன் மத்திமத்தைச் சட்சமாகக் கொண்டு

இசைத்தால் கிடைக்கும் இராகம் அகநிலை இராகம் ஆகும்.

''உழை முதலாக... அகநிலை மருதம்'' - (சிலப் 8:37—39) என்றார் அரும்பதவுரைகாரர். இதன் பொருள்: 'மருதப்பாலையின் உழையைக் குரலாகக் கொண்டு, உழைமுதல் உழைவரை (ம—ம்) இசைத் தால், அகநிலை மருதம் வரும். ''அகநிலை மருத மாவது ஒத்த கிழமை உயர்குரல் மருதம்'' என்ற மேற்கோளையும் அரும்பதவுரைகாரர் காட்டியுள் ளார். ''ஒத்த கிழமை'' என்றது — 'குரல் இளி' உற வாகி (ச. ப. உறவாகி) ஒன்றோடு ஒன்று ஒத்து இணையும் உறவு நிலையாகும். இது 2000 ஆண்டு களுக்கு முன் பாணர்கள் வழங்கிய முறையேயாயினும் இன்றும் குழலிலும் நாதசுரத்திலும் வீணையிலும் கின்னரத்திலும் (வயலின்) இம்முறையில் இசைத்துக் காட்டிப் பெரிதும் இன்பமூட்டுகிறார்கள். ஆனால், அதற்குரிய பெயர் இன்று இல்லை.


அகநிலை நரம்பு என்பதற்குரிய பிற பெயர்கள் இளிக் கிழமை நரம்பு, அகப்படு நரம்பு, இணை நரம்பு, பட்டடை நரம்பு என்பன. இப்பெயர்களா லும் ''அகநிலைப்பாலை என்பது குரல் இளிக்கிழ மைப் பாலை'' எனத் தெளிவாய் அறியலாகும்.

வீ.ப.கா.சு.

**அகநோக்கு முறை** என்பது மனிதன் தன்னு டைய உணர்வுகளையும் பட்டறிவுகளையும் தானே உணரும் முறையாகும். இதனை ஓர் உளவியல் கோட் பாடாக விளக்கியவர் வில்கெல்ம் உண்ட்டு (Wilhelm Wundt) என்னும் செருமானிய உளவியல் அறிஞர். இம்முறை, அகநோக்கு உளவியல் என்னும் பழைமை யான உளவியல் கோட்பாட்டினுள் அடங்கும் ஆய்வு முறையாகும். உண்ட்டு மனித மனத்தில் மூன்று அடிப் படை ஆக்கக்கூறுகள் உள்ளன என்று கூறுகிறார். அவை வெளித் தூண்டுதல்களினால் ஏற்படும் புலன் உணர்வுகள், உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளை ஒத்த பட்டறிவுகள், பட்டறிவுகளின் மனவெழுச்சிக் கூறுகள் அல்லது உணர்ச்சிகள் எனப்படும்.

அகநோக்கு (Introspection) என்பது ஒருவன் குறிப் பிட்ட ஏதேனும் ஓர் அனுபவத்தைப் பற்றித் தன்னு டைய எண்ணங்களை உடனுக்குடனோ சில காலம் சென்ற பின்னரோ மனத்தில் உணரும் ஓர் அக அனு பவமாகும். இதுவரை ஒரு பொருளை நோக்கிய மனி தன் இப்பொழுது அகநோக்கு முறையின் மூலம், தான் அப்பொருளை நோக்குவதை மனத்தால் உணர் கிறான். இவ்வாறு அவன் உணரத் தொடங்கியவுடன் அவனுடைய தன்னுணர்வு விழிப்படைகிறது. இதுவே அவனுக்குத் தன்னுணர்வு ஏற்படும் தொடக்க நிலை யாகவும் அமைகிறது.

அகநோக்குமுறையை நன்கு கற்றுத் திறமை மிக்க ஓர் அகநோக்காளராக ஆவதற்குப் பொறுமையும் பயிற்சியும் தேவையாகும். மனித மனம் ஓர் எண்ணத் திலிருந்து அடுத்த எண்ணத்திற்கு முன்னோக்கிச் செல்வதேயன்றிப் பின்நோக்கித் திரும்புவதில்லை. ஆனால் அகநோக்குமுறையில் மனத்தைப் பின்னோக் கித் திருப்புவது இன்றியமையாததாகிறது. இது பெரும்பாலானவர்களுக்கு மிகக் கடினமான பயிற்சி யாகும். இம்முறையில் ஒருவரே எண்ணங்களில் ஈடு படுபவராகவும் அவற்றை ஆராய்பவராகவும் இருப் பதால், இயல்பான பட்டறிவுகளையும் உணர்வுகளை யும் அறிய இயலாமற் போக வாய்ப்புண்டு.



வில்கெல்ம் உண்ட்டு

உளவியலை அறிவியல் பாதையில் செலுத்த எண்ணிய உளவியல் கோட்பாட்டினர் மனிதன் புற நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதே போதுமான தென்றும், சிந்தனைகள், உணர்ச்சிகள், கனவுகள், கற்பனைகள் போன்ற அனுபவ அடிப்படையிலான அக உணர்வுகளைப் பற்றி ஆராய்வது தேவையற்றது என்றும் கருதினர். உளவியல் ஓர் அறிவியலுக்கான தகுதியை அடைவதற்கு அகநோக்குமுறை ஒரு தடையாக இருப்பதாக முன்பு உளவியலாளர் கருதி வந்தனர். அகநோக்கு முறையின்போது தத்தம் விருப் பம்போல் உண்மைகளைத் திரித்துக் கூறவும் பொய்

கூறவும் வாய்ப்பிருக்கிறது. இதை எவ்விதத்திலும் தடுக்க இயலாது. மேலும், இம்முறையில் உளவியலாளர் சோதனைக்கு உட்படுத்தப்படும் ஒருவரை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது.

அவர் கூறுவதைச் சோதிக்கவோ அவர் கூற்றுகள் உண்மையா என்று கண்டுபிடிக்கவோ இயலாது. மேற்கூறிய குறைகள் இருந்தாலும் உளவியலை அறிவியலின் ஒரு பிரிவாக ஆக்குவதில் அகநோக்கு முறைக்குப் பெரும்பங்குள்ளது. இம்முறை உளம் இயங்கு முறைகளைப் பற்றிய பல அரிய விவரங்களை அறிய உதவுகிறது. இம்முறையைக் கவனத்துடன் பயன்படுத்தினால் சிறந்த பயனைப் பெறலாம். வாய்மொழி அறிக்கையுடன் நரம்பு சார்ந்த உடலியக்கங்களையும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் பட்டறிவு நிலைகளைச் சிறந்த முறையில் அறிய இயலும். பரிசோதனை முறையையும் அகநோக்கு முறையையும் இணைத்து, பினேயின் (Binet) "உருவமற்ற சிந்தனைகள்" மியுலரின் (Muller) "நினைவிலிருத்தும் முறை" போன்ற முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. உளவியல் ஆய்வுகளுக்கு இன்றியமையாதனவாகவுள்ள வாய்மொழி அறிக்கை அகநோக்கு முறையால் பெறப்படுகிறது.

அகநோக்கு முறையால் சிறந்த பயனடையக் கீழ்க்கண்டவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. அகநோக்கின்போது எவ்வித எதிர்பார்ப்பும் இன்றிப் பட்டறிவைக் கவனித்தல் வேண்டும். உண்மையான பட்டறிவையே வெளியிடுதல் வேண்டுமேயன்றி ஒருவர் விரும்பும் பட்டறிவைக் குறிப்பிடுதல் கூடாது.

2. முழுக் கவனத்தையும் அனுபவத்தின்மீது செலுத்த வேண்டும். நாம் என்ன செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்பன பற்றிச் சிந்திப்பதோ அனுமானிப்பதோ கூடாது. தமக்கு ஏற்படும் அனுபவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

3. உளச்சோர்வு இன்றிப் புத்துணர்வுடனும் இயல்பாகவும் இருத்தல் வேண்டும். உளச் சோர்வு, பட்டறிவை மாற்றியமைக்கக்கூடும்.

அகநோக்கு முறை, உளவியல் ஆய்வு முறையாக மட்டுமன்றி, தனி மனிதன் தன்னுடைய நடத்தை, பட்டறிவுகள், உணர்வுகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள உதவும் ஒரு சிறந்த முறையாகவும் விளங்குகிறது.

அகநோக்கு முறையுடன் தொடர்புடைய "புற அறிவு" (Meta-Knowledge) என்ற நிலை, மனிதனிடம் மட்டுமன்றி மிருகங்களிடமும் பறவைகளிடமும் காணப்படுகிறது. புறாக்கள் தம்முடைய செயல்களையும் நடத்தையையும் அறிய வல்லனவாக உள்ளன என்று ஆராய்ச்சிகள் வெளிப்படுத்தியுள்ளன. அகநோக்கு முறையின் உதவியால் சினம், காமம், அச்சம் போன்ற உணர்ச்சிகளின் வயப்படுதலினின்று மனிதன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள இயலும்.

அகத்திற்கும் புறத்திற்கும் உள்ள வேறுபாட்டை நன்கு உணர்தல் அகநோக்கு முறையின் அடிப்படைத் தத்துவமாகும் ஆதலின், குழந்தைகளும் உள நோயாளிகளும் அகநோக்கு முறையைப் பயன்படுத்த முடியாது. வே.க.

**அகப்பகை** என்பது ஒருவர் மனத்தின்கண் நின்று அவருக்குத் துன்பம் செய்யும் பகையாக விளங்குவதாகும். அஃது அறுவகைப்படும். அவையாவன, காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்பன. முற்றக் கடியலாகாக் குற்றங்கள் காமம் வெகுளி உவகை ஆகிய மூன்றுமாம். முற்றக் கடியவேண்டுவன கடும்பற்றுள்ளம் மானம் மதம் ஆகியவை. இந்த அறுவகைக் குற்றங்களையும் வடநூலார் பகை வருக்கம் என்பர்.

**அகப்பேய்ச் சித்தர்** பதினெண் சித்தர்களுள் ஒருவராவர்; வேளாளர் குலத்தில் தோன்றியவர். தமது மனம், பேய் போன்று ஒரு நிலைப்படாது அலைதலினால், அதனையே பேயாக உருவகித்து 'அலையாது நிற்க' என்று அறிவுரை கூறிப் பாடியுள்ளார். இவருடைய பாடல் 90 கண்ணிகள் கொண்டது. அதன் ஒவ்வொரு கண்ணியிலும் 'அகப்பேய்' என்னும் சொல் விளியாக இடம்பெற்றுள்ளது. இச்சிறப்பினாலேயே இவர் அகப்பேய்ச் சித்தர் என அழைக்கப் பெற்றார். சங்க காலத்தில், குப்பைக் கோழியார், தொடித்தலை விழுத்தண்டினார், செம்புலப் பெயல் நீரார் போன்றோர் தாம் பாடிய பாடலில் அமைந்த தொடர் காரணமாகப் பெயர் பெற்றவராவர். இவரும் தாம் பாடிய பாடலிலமைந்த அகப்பேய் என்னும் தொடர் காரணமாக அகப்பேய்ச் சித்தர் என்னும் பெயர் பெற்றுள்ளார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் பாடல் ஏனைய சித்தர் பாடல்களைப் போலவே மறைபொருட் சொற்களைக் கொண்டுள்ளது. இவரது பாடல் சித்தர் ஞானக்கோவை என்னும் சித்தர் நூற்றொகுப்பில் இடம் பெற்றுள்ளது. தன்னை அறியும் அறிவே மெய்யானது என்றும், பின்னை அறிவதெல்லாம் பேயறிவென்றும் கருதும் தம் கருத்தினைத் 'தன்னையறியவேணும் அகப்பேய், சாராமற் சாரவேணும், பின்னை அறிவதெல்லாம் அகப்பேய் பேயறிவாகுமடி' என்று சாடியுள்ளார். இவர், 'தானற நின்றவிடமே சைவம்' என்று கூறுகின்றார்.

**அகப்பொருள் இலக்கண நூல்கள்**: இலக்கிய இலக்கணங்கள் காலந்தோறும் வளர்ந்தும் புதுமை ஏற்றும் தேவையற்றவற்றை ஓரளவு விலக்கி

வளம்பெறுவது இயல்பு. தமிழ் மொழிக்குரிய ஐந் திலக்கணங்களான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகியன தொல்காப்பியத்துள் கூறப்பட்டுள் ளன. அதன் பொருளதிகாரத்தில் பண்டைத் தமிழ ரின் கவிதை மரபும் வாழ்க்கை நெறியும் வகுத்துக் காட்டப் பட்டுள்ளன. அதனுள் கூறப்பட்ட யாப்பு, அணி ஆகியவை பிற்காலத்தில் தனித்தனி நூல்களாக விரிந்தமை போன்றே ஏனைய பொருட் பகுதிகளும் விரிந்து தனித்தனி நூல்களாய்ப் பெருகின. இவை தொல்காப்பியம் கூறியவற்றைப் பலவகையில் விரித் தும் விளக்கியும் காலத்திற்கேற்றவாறு சிற்சிலகருத்து களைப் புதிதாக எடுத்தாண்டும் சிலவற்றை மாற்றி யும் அமைந்துள்ளன. அகம், புறம் பற்றிய பிற்காலப் பொருளிலக்கண நூல்களுக்குத் தொல்காப்பியமே முன்னோடி ஆகும்.

தமிழ் மொழிக்கே உரிய பொருளிலக்கணத்துள் அகப்பொருள் தனிச்சிறப்புடையது. ‘இன்பமும் பொருளும் அறனும்’ என வரும் நூற்பாவில் தொல் காப்பியர், இன்பமாகிய அகப்பொருளை முதலில் வைத்துப் போற்றுவர். ஆரிய மன்னன் பிரகத்த னுக்குத் தமிழின் சிறப்பினை உணர்த்திய கபிலர் அகப்பொருள் துறை அமைய, குறிஞ்சிப் பாட்டி னைப் பாடிக் காட்டினார். கம்பர், கோதா வரியையும் சான்றோர் கவியையும் ஒப்பிடுமிடத்து, ‘அவியகத் துறைகள் தாங்கி, ஐந்திணை நெறி அளாவி’ எனக் கூறியது, தமிழில் உள்ள அகப்பொரு ளின் சிறப்புக் கருதியேயாம். ‘பூவில் மணமெனும் புனிதத் தமிழினுக்கு, ஆவி யாகும் அகப்பொருளி யல்பே’ என்று அறுவகை இலக்கணமும் அகப்பொரு ளின் சிறப்பைக் குறித்துள்ளது.

தமிழில் ஐந்திலக்கணங் கூறும் நூல்களாகவும் ஐந்திலக்கணங்களில் ஒன்று மட்டும் கூறும் நூல்களா கவும் இலக்கண நூல்கள் சில பிற்காலத்தே தோன் றின. இவற்றிற்குத் தொல்காப்பியமே அடிப்படை. வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம், சாமிநாதம், அறுவகை இலக்கணம் ஆகிய நூல்கள் தமிழில் ஐந்திலக்கணங் களையும் கூறும் நூல்களாகும். இவை அகப்பொருட் செய்திகளை நூலின் ஒரு பகுதியாகவே கூறுகின்றன. அகப்பொருளை மட்டுமே விரித்துரைக்கும் தனி நூல் கள், இறையனார் களவியல் என்னும் இறையனார் அகப்பொருள், அகப்பொருள் விளக்கம், களவியல் காரிகை, மாறன் அகப்பொருள் ஆகியவையாம். தொல்காப்பியம் கூறும் பொருளதிகாரச் சிந்தனை களை ஏற்று, மற்ற இலக்கண நூல்கள் விரித்துரைப் பினும், மிகப் பெரிய வேறுபாடுகளை அவை கொண் டில. அகப்பொருள் மட்டுமே கூறும் தனித்த நூல் களுள் இறையனார் அகப்பொருள் முதலாவதாகும்.

அகப்பொருளைக் கூறும் ஐந்திலக்கண நூல்கள்: வீரசோழியம் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு) புத்தமித் திரனார் எழுதியதாகும். இந்நூலுக்குப் பெருந்தேவ னார் உரை எழுதியுள்ளார். அகப்பொருள் பற்றிய சில நூற்பாக்கள் இந்நூலில் உள்ளன. அகப்பொருள் பற்றிய பகுப்பை வீரசோழியம், அகம், அகப்புறம் என இரண்டாக அமைத்துள்ளது. இந்நூல் உரை வகையை இருபத்து ஏழாகக் கூறும். பொருட்பலத் தில் இவற்றைக் காணலாம்.

இலக்கண விளக்கம் (கி.பி.17-ஆம் நூற்.): ஐந்தி லக்கண நூல்களுள் ஒன்றாகிய இந்நூல் வைத்திய நாத தேசிகரால் எழுதப்பட்டது. அவரே இதற்கு உரையும் எழுதியுள்ளார். இதில் உள்ள அகப்பொருள் பற்றிய நூற்பாக்கள் இருநூற்று இருபத்தாறாகும். மாணாக்கர்களுக்கு அகப்பொருள் கற்றுத்தந்ததன் விளைவாக இந்நூல் எழுந்ததென இதன் முன்னுரை தெரிவிக்கிறது. அம்பிகாபதிக் கோவை, தஞ்சை வாணன் கோவை ஆகியவற்றிலிருந்து மேற்கோள்கள் காட்டப்பெற்றுள்ளன. இந்நூல் பெரும்பாலும் அகப் பொருள் விளக்கத்தைத் தழுவி அமைந்துள்ளது.

தொன்னூல் விளக்கம் (கி.பி. 18-ஆம் நூற்.): வீர மாமுனிவரால் எழுதப்பெற்ற இந்நூல் சில அகப் பொருட் செய்திகளை எடுத்துக்காட்டுகிறது. இது பொருளதிகாரம் என்னும் பகுதியில் சில புதுமை யான செய்திகளைத் தருகிறது. அகப்பொருளை உரிமை என்ற பகுப்பில் இடவுரிமை, கால உரிமை எனப் பகுத்துரைப்பர் இந்நூலாசிரியர். நூற்பயன் குறிக்கும் பொருளையே ‘பொருள்’ என்பதற்குப் பொருளாகக் கூறுவர் ஆசிரியர்.

முத்துவீரியம் (19-ஆம் நூற்.): இந் நூல் முத்துவீரப்ப உபாத்தியாயர் எழுதிய ஐந்திலக்கண நூலாகும். இதன்கண் அகவொழுக்கவியல், களவொ ழுக்கவியல், கற்பொழுக்கவியல் எனப் பாகுபடுத்தி அகப்பொருளுரைத்துள்ளார்.

சுவாமிநாதம் (19-ஆம் நூற்.): ஐந்திலக்கணமும் கூறும் இந்நூல் சாமிகவிராயர் என்னும் சாமிநாத பண்டிதரால் எழுதப் பெற்றது. அகத்திணை மரபு, களவு, கற்பு ஆகியன இடம் பெற்றுள்ளன. இந்நூல் பெரிதும், நம்பி அகப்பொருளைத் தழுவிச் செல்கி றது.

அறுவகை இலக்கணம் (20-ஆம் நூற்.): இந்நூல் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளால் எழுதப் பட்டதாகும். அகப்பொருட் செய்திகள், உறுப்பியல், குறிப்பியல், பழைமையியல்பு, துறையியல்பு, நிலத்தி யல்பு, உழியியல்பு, வேற்றுயிர் இயல்பு முதலிய பகுதி களில் இடம் பெற்றுள்ளன. இந்நூல் ஐவகை இலக்

கணங்களோடு வண்ண இலக்கணத்தை ஆறாவதாகச் சேர்த்து அறுவகை இலக்கணம் என வழங்கப்படுகிறது.

அகப்பொருள் மட்டும் கூறும் இலக்கண நூல்கள்: அகப்பொருள் மட்டும் கூறும் தனி இலக்கண நூல்களை அகப்பொருள் இலக்கண நூல்களாகக் கருதலாம்.

இறையனார் அகப்பொருள்: இஃது அகப்பொருள் மரபுகளைத் தனியே விரித்துரைக்கும் இலக்கண நூலாகும். இந்நூல் உக்கிரப் பெருவழுதி காலத்தில் வெளியிடப்பட்டதாக இதன் உரையிலிருந்து அறிய முடிகிறது. இந்நூலுக்கு உரை எழுந்த காலம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டாகும். பாண்டியனும் சங்கத்தாரும் பொருளிலக்கணம் பெறாது இடர்ப்பட்டமை கண்டு, ஆலவாய்ப் பெருமானால் வெளிப்படுத்தப்பட்டது இந்நூல் என்பதனை இதன் உரை தெரிவிக்கிறது. நக்கீரர் இதற்கு உரை கண்டார். இவர் சங்க கால நக்கீரரினும் வேறுபட்டவர்.

ஒரு நூல் அது கூறும் பொருளாலும் பெயர் பெறும் என்பதற்கேற்ப, இது இறையனார் அகப்பொருள் என்னும் பெயர் கொண்டுள்ளது. களவின் வழிவந்த கற்பே சிறப்புடையது எனக் கொள்ளும் இந்நூல், இறையனார் களவியல் என்னும் பெயரையும் கொண்டது.

களவியல் 33 நூற்பாக்களும் கற்பியல் 27 நூற்பாக்களுமாக அறுபது நூற்பாக்களைக் கொண்டது இந்நூல். இந்நூல் அகப்பொருட் செய்திகளை விரிவாக எடுத்துரைக்கவில்லையெனினும் இன்றியமையாத பகுதிகளில் அகப்பொருளைச் சுருங்கக் சொல்லி விளங்க வைக்கிறது. அகமாந்தர் பண்பு நலன்கள் தொல்காப்பியம்போல விரித்துக் கூறப்பெறாவிடினும் தலைவன், தலைவி, தோழி ஆகியோர்க்கான தனித்த பண்புகள் ஓரளவு சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன. அகத்திணைப் பொருள்களின் அடிப்படையை விளக்கிச் செல்லும் நிலையை இந்நூலில் காணமுடியவில்லை.

இந்நூலின் உரையாசிரியர் அகப்பொருட் செய்திகளையெல்லாம் இனிய தமிழில் நாடகக் காட்சியாகத் தந்து, நிகழ்ச்சிகளை அகப் பின்னணியில் விளக்கிச் செல்வது கற்போருக்கு இன்பம் பயக்கும்.

இந்நூலின் உரை பொழிப்புரை, விளக்கம், விளக்கத்தின் விரி என்ற முறையில் அமைந்துள்ளது. தமிழ் உரைநடையின் செம்மாந்த செலவினை இதன் உரை வழி அறியலாம்.

தமிழ் நெறி விளக்கம் (கி.பி. 9-ஆம் நூற்.): இந்நூலின்கண் அகப்பொருள் பற்றிய இருபத்தைந்து நூற்பாக்கள் உள்ளன. இதனை எழுதியோர் யார் என அறியப்படாவிடினும், இந்நூலின் உரை இதனை இயற்றியோராலேயே எழுதப்பட்டிருக்க வேண்டும் எனக்கருதப்படுகிறது. இந்நூல் அகப்பொருள் பகுப்புப் பற்றியும் அகத்திணை அடிப்படை பற்றியும் குறிப்பிடுகிறது. களவு, கற்பு பற்றிய செய்திகள் ஆறு நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் சங்க இலக்கியத்தினின்றும் மேற்கோள்களைக் காட்டிச் செல்கிறது. இந்நூலை வெளியிட்ட பெருமை உ.வே. சாமிநாதையரைச் சாரும்.

அகப்பொருள் விளக்கம் (கி.பி. 13-ஆம் நூற்): தொல்காப்பியம் விரித்துரைத்த அகப்பொருட் செய்திகள் பலவும் இந்நூலில் ஓர் ஒழுங்கில் கூறப்பட்டுள்ளன. இந்நூலாசிரியர் நாற்கவிராச நம்பியாவார். நாற்கவி என்ற சிறப்புக் காரணமாக இவர் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என்ற நால்வகைக் கவியும் பாடும் திறமிக்கவர் எனலாம். வடமொழி, தென்மொழி இரண்டிலும் வல்லவர் என்பதை இந்நூல் சிறப்புப் பாயிரவழி உணரலாம். இந்நூலுக்குப் பழைய உரை உண்டு. இப்பழைய உரையை ஆசிரியரே எழுதினார் என்பாரும் உளர். அதற்குத் தக்க சான்று இல்லை.

இந்நூல், தொல்காப்பியர் கூறிய அகப்பொருட் செய்திகளைச் சுருக்கியும், இறையனார் அகப்பொருள் கூறியிருக்கும் களவு, கற்பு பற்றிய செய்திகளை விரித்தும் எழுதப்பட்டதாகும். இது அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல் ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களைக் கொண்டது. இந்நூலில் உள்ள நூற்பாக்கள் 252 ஆகும்.

தொல்காப்பியமும் இறையனார் அகப்பொருளும் அகப்பொருளைக் களவியல், கற்பியல் என ஈரியலாகப் பகுத்திருக்க, அகப்பொருள் விளக்கம் இவற்றிற்கிடையே வரைவியல் என ஓரியல் அமைத்துக் கொண்டுள்ளது. இந்நூலுக்குப் பின்வந்த அகப்பொருள் இலக்கண நூலான மாறன் அகப்பொருளும், மற்றும் சில ஐந்திலக்கண நூல்களும் இந்நூல் கூறும் செய்திகளையே பெரிதும் தழுவி உரைக்கின்றன.

தொல்காப்பிய அகப்பொருள் மரபைப் பெரிதும் தழுவிச் செல்லும் இந்நூல், ஆங்காங்கே சில மாற்றங்களையும் கொண்டுள்ளது. கருப்பொருள் பற்றி விரிவாகக் குறிப்பிடுகிறது இந்நூல். தொன்னூல் விளக்கம் போன்ற நூல்கள் கருப்பொருளில் பல்வகைக் கருப்பொருளையும் குறித்துச் செல்லுதற்கு இந்நூல் ஒருவகையில் காரணமாய் விளங்குகிறது. சாமிநாதம் காட்டும் அகப்பொருட் செய்திகள் பல

அகப்பொருள் விளக்கத்தைப் படி எடுத்ததுபோல் உள்ளன.

இந்நூல் அகத்திணைஇயல், அகப்பொருள் வகைகள், புணர்ச்சி வகை, அறத்தொடு நிற்றல், கற்பு, பிரிவு வகை முதலான செய்திகளைக் குறிப்பிடும். களவியலில், தொல்காப்பியர் குறித்த கூற்றுவகைகளை விரித்தும், தொகுத்தும் கூறுகிறது.

வரைவியல் என்னும் பகுதி இந்நூல் பகுத்துக் கொண்ட புதிய இயலாகும். கற்பெனும் கைகோளின் நிமித்தமாகிய வரைந்து கோடலின் இயல்பினைத் தனியே விரித்துரைக்கக் கருதி இவ்வியல் அமைக்கப்பட்டுள்ளது. கற்பியலில் இல்வாழ்வு நான்காகப் பகுத்துரைக்கப்படுகிறது. ஒழிபியலில் 34 செய்யுள் உறுப்புகள் கூறப்பட்டுள்ளன. திணை, கைகோள், கூற்று, கேட்போர், களன், காலம், பயன், மெய்ப்பாடு, எச்சம், முன்னம், பொருள், துறை என்ற பன்னிரண்டு அகப்பாட்டு உறுப்புகளும் ஒழிபியலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**களவியல் காரிகை (கி.பி. 14-ஆம் நூற்.)**: அகப்பொருள் துறைகளை இனிதின் விளக்கும் இந்நூல் இறையனார் அகப்பொருளைத் தழுவி எழுதப்பட்டதாகும்; நூலின் வடிவம் சிதைந்துள்ளது. கட்டளைக் கலித்துறையால் இதன் நூற்பாக்கள் அமைந்துள்ளன. தொடக்கத்தில் பத்துச் செய்யுளும் இறுதியில் ஆறு செய்யுளும் மறைந்து போயின. இப்போது பதினொன்று முதல் ஐம்பத்துநான்கு நூற்பாக்கள் உள்ளன. கலித்துறைப் பாடல்கள் அந்தாதியாக அமைந்துள்ளன. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. வையாபுரிப்பிள்ளை இந்நூலுக்குக் களவியல் காரிகை எனப் பெயரிட்டார்.

இறையனார் அகப்பொருள் உரையில் மேற்கோளாக எடுத்தாளப்பட்ட கலித்துறைச் செய்யுட்கள் இன்ன நூலைச் சார்ந்தவை என அறியப்படாமல் இருந்து, பின்னர் அவை பாண்டிக் கோவையிலிருந்து எடுக்கப்பட்டன என்பது புலனாயிற்று.

யாப்பருங்கலக் காரிகை யாப்புக்குரிய செய்திகளைக் கலித்துறைச் செய்யுட்களால் விளக்குவது போன்று, அகப்பொருட் செய்திகளை அந்தாதித் தொடையிலமைந்த கலித்துறைச் செய்யுட்களால் சுருங்கவுரைக்கிறது இந்நூல். இஃது இறையனார் களவியல் நூற்பாக்களை அடிப்படையாகக் கொண்டமைந்து, பரந்துபட்ட அகப்பொருட் செய்திகட்கெல்லாம் அரிய மேற்கோள்காட்டிச் செல்கிறது.

இந்நூலில் அரையர் கோவை, வங்கர் கோவை, தில்லையந்தாதி, கோயிலந்தாதி, நறையூரந்தாதி, பொருளியல், கிளவிமாலை, கண்டனலங்காரம், பல்சந்தமாலை, கிளவித்தெளிவு, இன்னிசை மாலை, தமிழ்நெறி விளக்கம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்தாளப்பெற்றுள்ளன. ஆசிரியரே இதற்கு உரை எழுதியுள்ளார். ஆயினும் உரை விளக்கம் விரிவாக எழுதப்பெறவில்லை.

இந்நூலின்கண் கருப்பொருட் செய்திகள் சில அரிதின் உரைக்கப்பட்டுள்ளன. பாலை நிலத்துக்குரியனவாக ஆதித்தன், பகவன் ஆகிய தெய்வங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. காதற் குறிப்புகளைக் கழிபடர் கிளவி, கையறு கிளவி, தன்னுட் கையாறெய்திடு கிளவி என வகுத்துக் காட்டியுள்ளது.

**மாறனகப் பொருள் (கி.பி.16–ஆம் நூற்.)**: அகப்பொருளைத் தனியே கூறும் நூல்களுள் இறுதியில் தோன்றியது இந்நூல். திருக்குருகைப் பெருமாள் இந்நூலை இயற்றியவர் ஆவார். திருப்பதிக் கோவைக்கு அகப்பொருட் கிளவியாக இந்நூல் எழுந்ததாகும். இந்நூல் பெரிதும் அகப்பொருள் விளக்கம் கூறியவற்றையே சற்று விரித்துரைக்கிறது. தொல்காப்பிய நூற்பாக்கள் சிலவற்றையும் பின்பற்றியுள்ளது. இவ்விரண்டு நூல்களிலிருந்தும் பிற அகப்பொருள் இலக்கணம் கூறும் நூல்களிலிருந்தும் தொகுத்தும் வேண்டும் வழி விரித்தும் புதியனவாய்ச் சிலவிடத்துக் கூட்டியும் இதன் ஆசிரியர் எழுதியுள்ளார்.

இந்நூலில் ஆசிரியப்பாவாலும் விருத்தப்பாவாலும் ஆன இருசிறப்புப் பாயிரங்கள் உள்ளன. இவை நூலின் காலத்தையும் ஆசிரியரைப் பற்றிய செய்தியையும் தருகின்றன.

363 நூற்பாக்களைக் கொண்ட இந்நூல் களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என்று பகுக்கப்பட்டுள்ளது. ஒழிபியல் இதுகாறும் கிடைக்கவில்லை. எனவே களவியலில் 62 நூற்பா; வரைவியலில் 34 நூற்பா; கற்பியலில் 10 நூற்பா ஆக 106 நூற்பாக்கள் கிடைத்துள்ளன. இதன் நூற்பாக்கள் ஓரடிச் சிறுமையும் 25 அடிப் பெருமையுமுடையன.

நம்பி அகப்பொருளில் கூறியவாறு கற்பின் இறுதி நிலை, துறவு என இந்நூலும் குறித்துச் செல்கிறது. பிரிவு வகைகளை விரிவுபடுத்திக் கூறுகிறது.

**அகப்பொருளிலக்கணத்தின் வளர்ச்சியும் மாற்றமும்**: தொல்காப்பியம் உரைத்த அகப்பொருட் செய்திகளுக்கும், பிற்காலத்தெழுந்த அகப்பொருள் இலக்கண நூல்களுக்கும் ஐந்திலக்கணம் கூறும் அகப்பொருள் செய்திகளுக்கும் இடையே நிலவும் வளர்ச்சி மாற்றங்களையும் வேறுபாடுகளையும் காண்பது அகப்பொருள் நூல்களின் வளர்ச்சியை அறிய உதவியாக அமையும்.

அகத்திணைக் கூறுகளான முதல், கரு, உரிப் பொருள்கள் பிற்காலத்திய நூல்களில் விரிந்துள்ளன.

தெய்வமும் நிலமும குறித்துவரும் தொல்காப்பிய நூற்பா, முல்லை நிலத்தை முதலில் சுட்டும். அந் நூற்பாவின் இறுதியில் வரும் 'சொல்லிய முறையான் சொல்லவும் படும்' என்பதனைப் 'பிறவாறும் சொல்லப்படும்' எனக் கொண்டு பிற்கால நூல்கள் பல குறிஞ்சியை முதன்மைப்படுத்தியுள்ளன. சிறுபொழுது பற்றிக் கூறுமிடத்துத் தொல்காப்பியர், நண்பகலின் பிற்பொழுதாக எற்பாடு என்பதனைக் கருதுவர். நாற்கவிராச நம்பி எற்பாட்டைக் காலைப் பொழுதாகக் கருதியுரைப்பர்.

கருப்பொருள் பற்றிய பரப்பு, தொல்காப்பியத்தைக் காட்டிலும் பிற்கால அகப்பொருள் கூறும் நூல்களில் மிகுதியும் விரிந்துள்ளது. கருப்பொருள் வகையை எட்டெனத் தொல்காப்பியம் கூற, அகப்பொருள் விளக்கம் பதினான்காக விரித்துள்ளது. உயர்ந்தோர், அல்லோர், ஊர், நீர், பூ, பண் ஆகிய ஆறும் தொல்காப்பியத்தில் கருப்பொருளாகக் கூறப் படவில்லை.

நானிலத் தெய்வங்களைத் தொல்காப்பியர் மாயோன், சேயோன், வேந்தன் (இந்திரன்), வருணன் எனக் குறிப்பார். பாலை நிலத்திற்குரிய தெய்வமாக இறையனார் அகப்பொருள் உரைகாரர், பகவதியையும் ஆதித்தனையும் குறிப்பார். அகப்பொருள் விளக்கம், கன்னி (கொற்றவை)யைப் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகக் கருதும். தமிழ்நெறி விளக்கத்தில் இரவி (சூரியன்), பகவதி ஆகியோர் குறிக்கப்பட்டுள்ளனர். களவியல் காரிகை இதனைப் பின்பற்றி மொழிந்துள்ளது.

அறுவகை இலக்கணம் முதற்பொருளை நிலத்தியல்பிலும், ஐந்திணை இருப்பிடங்களை உழியியல்பிலும், மா, புள் பற்றிய கருப்பொருட் செய்திகளை வேற்றுயிரியல்பிலும் குறிக்கிறது.

தொன்னூல் விளக்கம், பொழுது குறித்தும் கருப்பொருள் குறித்தும் கூறும் கருத்துகள் புதுமையாக உள்ளன. கருப்பொருட் செய்திகளில் இராகம், கானம் முதலானவை குறிக்கப்பட்டுள்ளன. சாமிநாதம் மருதத்திற்குரிய கருப்பொருளில் தமிழ், கல்வி பயிலல், பாடல், ஆடல் போன்றவை சுட்டப்பட்டமை வியப்பைத் தருவதாகும். இவை கால வகையால் விளைந்த மாற்றங்களாகும்.

தொல்காப்பியம் ஐவகை நிலத்துக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது ஆகியவற்றை ஆறாகப் பகுத்துள்ளது. அகப்பொருள் விளக்கம், பெரும்பொழுது ஆறெனவும் சிறுபொழுது ஐந்தெனவும் கூறும். முத்துவீரியம், அகப்பொருள் விளக்கத்தைப் பின்பற்றியுள்ளது. ஆயினும் பெரும்பொழுது, சிறுபொழுது ஆகிய காலங்களில் நிகழும் இயற்கை நிகழ்ச்சியாக முத்துவீரியம் விரித்துரைப்பது, தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம் ஆகியவற்றில் காணப்படாததாக உள்ளது. மக்கட் பெயர்களில் மருத நிலத்துக்குரியதாக மகுணன் என்ற பெயரைத் தொன்னூல் விளக்கம் உரைப்பது, வேறெந்நூலுள்ளும் காணப்படாத ஒன்று.

அகப்பொருட் பிரிவுகளை அகப்பொருள் நூல்கள் தத்தமக்குத் தோன்றியவாறு பகுத்துக் கொண்டுள்ளன. தொல்காப்பியம், அகப்பொருள் விளக்கம், சாமிநாதம், முத்துவீரியம் ஆகியன அகப்பொருட் பிரிவை ஏழு எனக் கூறும்.

தொல்காப்பியம் கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்ற ஏழினையும் குறிக்கும். இறையனார் அகப்பொருள் ஆசிரியர், ஐந்திணை மட்டுமே கருதி அன்பின் ஐந்திணைக்கே இலக்கணம் வகுத்தார். அகப்பொருள் விளக்கம் அகப்பொருள் ஏழெனக் கூறினும், கைக்கிளை, பெருந்திணை ஆகிய இரு திணைகளையும் அகத்திற்குரியது, புறத்திற்குரியது எனப்பகுத்துக் கொண்டுள்ளது. தமிழ்நெறி விளக்க ஆசிரியர் அகப்பொருளை அகம், அகப்புறம் எனப் பகுத்துள்ளார். இளம்பூரணர், 'அடியோர் பாங்கினும்' என்னும் தொல்காப்பிய நூற்பாவில் கைக்கிளை, பெருந்திணைகளைப் புறமாகக் கருதுவர். இலக்கண விளக்க ஆசிரியர் அகம், அகப்புறம் எனப் பகுத்து அகப்புறத்தில் கைக்கிளை பெருந்திணைகளை அடக்குவர். ஐந்திணைகளிலும் கைக்கிளை மயங்கும் எனச் சாமிநாதம் எடுத்துரைக்கும். அகப்பொருள் விளக்கம், கைக்கிளை, பெருந்திணைக்கு இலக்கணம் வகுத்துள்ளது.

தொல்காப்பிய அகத்திணை இயலில் கூற்று வகையாகச் சொல்லப்பட்டன, பிற்கால இலக்கண நூல்களில் கிளவித் தொகையாகக் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் ஆகியன களவிற்குரிய இலக்கணத்தை வகுத்துள்ளனவே யன்றிக் களவிற்குரிய கிளவித்தொகை இவை எனத் தொகுத்துச் சுட்டவில்லை. நாற்கவிராச நம்பி பதினேழு கிளவித் தொகைகளைச் சுட்டியுள்ளார். நம்பி கூறியவை தொல்காப்பியத்தில் கூற்றுவகையாக உள்ளன. நம்பி அவற்றை விரித்தும் தொகுத்தும் கூறியுள்ளார்.

களவுக்காலத்தில் தலைவிக்குக் கூற்று நிகழுமிடங்களில் இரவுக்குறியும் ஒன்று. இறையனார் அகப்பொருள் இதனை இலக்கணப்படுத்தவில்லை. அகப்பொருள் விளக்கம், இரவுக்குறி இடையீடு ஏழெனக் காட்டுவது பிற்காலத்திய வளர்ச்சி. இவற்றை இரவுக்குறியிடையீட்டின் வகையொன்றின் பிரிவுகளாகக் கூறியுள்ளமை நோக்கற்பாலது.

தொல்காப்பியம் குறித்துள்ள மடலேறுதல், உடன்போக்கு போன்ற அகப்பொருட் செய்திகள், இறையனார் அகப்பொருளில் காணப்படவில்லை. ஆயினும் அறத்தொடு நிற்றல் பற்றிய செய்திகள் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பின்னர்த் தோன்றிய அகப்பொருள் இலக்கண நூல்களின் விரிவுக்கு இது வேண்டப்படுவதாயிற்று. ஆயின் அறத்தொடு நிற்றலைக் களவு, கற்பு இவற்றில் எவ்வியலில் அடக்குவது என்பதில் இலக்கண நூல்கள் மாறுபடுகின்றன. தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள் ஆகியவை, அறத்தொடு நிற்றலைக் களவியலில் வைத்துக் கூறும். அறத்தொடு நிற்றலில் சிலவற்றை அகப்பொருள் விளக்கம், களவியலிலும், அறத்தொடு நிற்றல் வகை முதலான சிலவற்றை வரைவியலிலும் எடுத்துக் கூறும். களவியல் காரிகை கற்பியலில் அறத்தொடு நிற்றலைக் கூறும். அறத்தொடு நிற்றலை இந்நூல் வெளிப்படை நிலை எனச் சுட்டும்.

தொல்காப்பியம் வகைப்படுத்திக் கூறாத கற்பின் நிலைகளை அகப்பொருள் விளக்கம், களவு வழி வந்த கற்பு, களவு வழி வாராக் கற்பு என வகைப்படுத்தும். தலைமகனுக்குக் களவிற் புணர்ச்சியும் வதுவைப் புணர்ச்சியும் பொருந்துவனவாகும் எனக் கூறும் அகப்பொருள் விளக்கம், அவ்வொழுக்கத்திற்குரியவர் காதற்பரத்தையரும் காமக்கிழத்தியரும் பின்முறை வதுவைப் பெருங்குலக்கிழத்தியரும் என மூவகையினர் என்று சுட்டும்.

தொல்காப்பியம் குறிப்பிடும் களவிற்கும் கற்பிற்குமுரிய பிரிவுகள் அனைத்தையும், அகப்பொருள் விளக்கம் வகைப்படுத்திக் கூறும். வாயில்களாகத் தொல்காப்பியம் பன்னிருவரைக் குறிக்கும். அகப்பொருள் விளக்கம் பாகன், புதல்வன் ஆகிய இருவரையுங் கூட்டிப் பதினான்காகக் கூறும்.

இவ்வாறு தொல்காப்பியம் கூறிய அகப்பொருட் செய்திகள் பிற்காலத்து இலக்கண நூல்களில் காலச் சூழலுக்குத்தக விரிந்தும் சுருங்கியும் அமைந்துள்ளன. தேவையான இடங்களில் சமுதாய மாற்றங்களுக்கு ஏற்பவும் அக இலக்கியப் போக்கிற்கு ஏற்பவும் சிற் சிலவற்றைப் புதிதாகக் கருதியுள்ளதையும் அகப்பொருள் இலக்கண வளர்ச்சியில் காணமுடிகிறது. சிற்றிலக்கியங்களில் ஒன்றான கோவை இலக்கிய வளர்ச்சிக்கு அகப்பொருள் இலக்கண நூல்கள் உறுதுணையாகி அவற்றைத் தழைக்கச் செய்துள்ளன. அண்மைக் காலங்களில் அகப்பொருள் விளக்கம் பலரால் பயிலப்பட்டு வருகிறது. இது அதன் செல்வாக்கை உணர்த்தும். ஆர். கு.

**அகப்பொருள் விளக்கம்** அகத்திணை இலக்கணம் கூறும் தமிழ் நூல்களுள் ஒன்று. கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாற்கவிராசநம்பி இதன் ஆசிரியர். இதனால் இந்நூல் நம்பியகப்பொருள் எனவும் வழங்கப்பெறும். தொல்காப்பியத்திற்குப் பின்னர் அதன் பொருளதிகாரப் பகுதிகள் வளர்ச்சியுற்றுத் தனித்தனி நூல்களாக அமையலாயின. அகம், புறம், உவமை, செய்யுள் போன்ற பகுதிகள் முறையே இறையனாரகப்பொருள், பன்னிரு படலம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம் எனத் தனி நூல்களாக வளர, அவை, அவ்வத்துறையில் மேலும் பல இலக்கண நூல்கள் உருவாவதற்கு ஏதுவாயின. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணை, களவு, கற்பு, பொருள் ஆகிய இயல்களில் பேசப்பெறும் அகப்பொருள் செய்திகளை விரித்து அகப்பொருள் விளக்கம் கூறுகிறது.

இதன் ஆசிரியர் நாற்கவிராசநம்பியின் வரலாற்றினை நூலின் சிறப்புப் பாயிரத்தால் ஓரளவே அறிய முடிகிறது. இவர் பெயரிலமைந்த 'நாற்கவிராச' என்னும் அடைமொழி, ஆசு, மதுரம், சித்திரம்,வித்தாரம் என்னும் நால்வகைக் கவிகளையும் பாடவல்ல திறத்தால் அமைந்ததாகும். எனினும், இந்த இலக்கண நூலைத் தவிர வேறு நூல்கள் எதனையும் செய்ததாகத் தெரியவில்லை. நம்பி இவர்தம் இயற்பெயராகும். "இத்தலத்து, இருபெருங் கலைக்கும் ஒரு பெருங்குரிசில்'' என்று இந்நூலின் சிறப்புப்பாயிரம் இவரைக் கூறுவது கொண்டு, தமிழ் வடமொழிகளில் இவர் பெற்றிருந்த சிறந்த புலமையினை உணரலாம். இவர் தந்தையார் புளியங்குடி என்னுமூரில் தோன்றிய உய்யவந்தான் என்னும் பெயர் கொண்ட ஆசிரியர் என்பதனையும், அவர் முத்தமிழ்ப் புலமை மிக்கு விளங்கினார் என்பதனையும், அப்பாயிரம் அறிவிக்கிறது. 'முக்குடைக்கீழ் உதயமால்வரைக், கதிரொன்று இருந்தெனக் காண்டகஇருந்து, தத்துவம் பகர்ந் தோன் சரணம் பொருந்திய உத்தமன்' என்பதனால் இந்நூலாசிரியர் சமணர் என்பது புலனாகிறது. சிறப்புப் பாயிர உரைப்பகுதியால் இவர் கி.பி. 1196 முதல் 1266 வரை ஆண்ட குலசேகரபாண்டியன் காலத்தினர் என்பது தெரிகிறது.

தொல்காப்பியத்தின் வழி நூலாகத் தோன்றிய இந்நூல் தொல்காப்பிய அகப்பொருட் செய்திகள் பலவற்றை ஏற்றும் சிலவற்றில் புதியன சுட்டியும் அமைந்துள்ளது. தொல்காப்பியர் சிறுபொழுதினையும் ஆறாகக் கொள்ள, இந்நூலாசிரியர் அதனை ஐந்தெனக் கொண்டனர். எற்பாடு என்பதனைத் தொல்காப்பியர் நண்பகலின் பிற்பட்டது எனக்கூற, இவர் ஞாயிறு தோன்றும் காலைப் பொழுது என்று கூறியுள்ளார். தொல்காப்பியர் கருப்பொருள் வகை எட்டும் பிறவும் எனக் கொள்ள, இவர் பதினான்கும்

பிறவுமாகக் கொண்டு, ஒவ்வொரு திணைக்கும் தனித் தனியே கருப்பொருள் நிரலை நூற்பாவாக்கித் தந்துள்ளார். தொல்காப்பியர் மணத்திற்கு முன்னும் பின்னும் அமையும் தலைவன் தலைவியர் வாழ்க்கை நிலையைக் களவியல் கற்பியல் என இருகூறுபடுத்தி இலக்கணம் கூற, இவர் களவியல், வரைவியல், கற்பியல் என ஓரியலை இடையே புதிதாகத் தோற்றுவித்துள்ளார். இது காலத்தின் தேவை நோக்கி அமைந்ததாகும்.

இந்நூல் அகத்திணை இயல் (116), களவியல் (54), வரைவியல் (29), கற்பியல் (10), ஒழிபியல் (43) என்னும் ஐந்து இயல்களையும் 252 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. தொல்காப்பியத்திற்குப் பின்னர் அகப்பொருள் பற்றித் தனி நூல்களாகத் தோன்றிய இறையனார் களவியல் 60 நூற்பாக்களிலும் தமிழ் நெறி விளக்கம் 25 நூற்பாக்களிலும் கூறும் பொருளை இது விரிவாக 252 நூற்பாக்களால் வகுத்தும் விரித்தும் கூறியுள்ளது. தொல்காப்பியம் அகப்பொருட் செய்திகளைத் தனித்தனிக் கூற்று வகையால் கூற, இஃது அப்பொருள் நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்தி நாடகப்பாங்கில் அமைத்துள்ளது. இந்தப் பாங்கே பிற்காலத்தில் கோவை என்னும் பிரபந்தம் தோன்றிச் சிறப்பதற்கு வாயிலாகவும் அமைந்தது எனலாம். தஞ்சை வாணன் கோவைச் செய்யுட்கள் அனைத்தும் தொடர்ச்சியாக இவ்விலக்கணத்திற்கு இலக்கியமாகக் காட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்நூல் எளிமையும் தெளிவும் கொண்டமைந்துள்ளது. ஐந்திலக்கணங்களும் அமைந்த 'இலக்கண விளக்கம்' என்னும் நூலை இயற்றிய வைத்தியநாத தேசிகர் இந்நூற் சிறப்புணர்ந்து தம் அகப்பொருள் இலக்கணப் பகுதியைப் பெரும்பாலும் இந்நூலின் நூற்பாக்களைக் கொண்டே அமைத்துள்ளார்.

இந்நூலுக்கு ஒரு பழைய உரை உள்ளது. யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த வ.ச. வைத்திலிங்கம் பிள்ளை ஓர் உரை வரைந்துள்ளார். தஞ்சை வாணன் கோவைச் செய்யுட்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார். பின்னர்ச் சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளையும் திரிகோணமலை த. கனகசுந்தரம் பிள்ளையும் சேர்ந்து ஓர் உரை வரைந்துள்ளனர். தொல்காப்பியத்திற்குப் பின்னர் அதன் வழியில் தோன்றிய இலக்கண நூல்களில் யாப்பிற்கு யாப்பருங்கலக் காரிகையும், அணிக்குத் தண்டியலங்காரமும், புறப்பொருளுக்குப் புறப்பொருள் வெண்பா மாலையும் மக்களிடையே செல்வாக்குப் பெற்றதுபோல, அகப்பொருளுக்கு அகப்பொருள் விளக்கம் செல்வாக்குப் பெற்றுள்ளது.

**அகம்பன் மாலாதனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். முல்லைத் திணையிலமைந்த இவரது ஒரே பாடல் நற்றிணையில் (81) அமைந்துள்ளது. ஆதன் என்பது இப்புலவரின் இயற்பெயரென்றும் அகம்பல் என்பது இவரது ஊர் என்றும் கருதப்படுகிறது. இவ்வூர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம் வட்டத்திலுள்ள அகமலை என்னும் ஊராகலாம் என்பர்.

**அகமணம்**: ஒருவன் தனது பண்பாட்டோடு வரையறுக்கப்பட்ட குழுவிற்குள் மணம் கொள்ளும் சமூக முறைமையே அகமணம் (Endogamy) ஆகும். அகமணத்தைப் பால்சம் என்பார் வரையறை செய்யும் போது, ''தன்னுடைய சாதி அல்லது குழுவிற்குள் மட்டும் மணம் செய்து கொள்ள வேண்டும். எனினும் நேரிடையாக இரத்த உறவுடையோருடன் மணம் கொள்வதை அகமணம் தடுக்கிறது'' என்கிறார். புறமணம் இதற்கு நேர்மாறானது. தன் கால்வழியினருக்கு அப்பால் மணம் கொள்ளும் முறை புறமணம் ஆகும். அகமணம், புறமணம் ஆகிய இச்சொற்கள் ஒன்றோடு ஒன்று செயல்முறைக் கருத்தளவில் சார்புடையன எனலாம்.

பழங்குடிகளில் சிலர் பெருங்கால்வழியினராகவும் பலர் கால்வழிக்குழுவினராகவும், தம் முன்னோர் அல்லது கால்வழிக் குறியீட்டோடு தொடர்புற்று வேறுபடுகின்றனர். இக்குழுக்களுக்கிடையே திருமண அமைப்பில் அகமண, புறமணச் சொற்களைச் செயல் முறைக் கருத்தோடு உற்று நோக்கும்பொழுது இரண்டும் மற்றதன் பொருளை ஏற்க முடியும்.

பழங்குடி மக்கள் தம் பழங்குடிக்குள் மட்டுமே மணம் செய்து கொள்ள வேண்டும் என்னும் ஒழுங்கு அகமண முறையைக் காட்டுகிறது. ஆனால் ஒவ்வொரு கால்வழியிலும் உள்ள குடிகள் இரத்த உறவுடையன என்பதால் குறிப்பிட்ட அக்குடிகளுக்குள் மண உறவு கொள்ளாமல் அப்பழங்குடியிலேயே வேறொரு கால் வழியினருடன் மணம் கொள்கின்றனர். ஆகவே, இக் கால்வழிக்கு இம்மணம் புறமணமாக அமைகிறது. ஆயினும் இவை ஒரே பழங்குடிக்குள் அமைந்த கால் வழிகளாதலின் இம்மணம் அகமணமாகவும் அமைகிறது. மாறிவரும் சமூக அமைப்பில் கலப்புச் சாதித் திருமணம் புறமணச் சாதித் திருமணமாய் இருந்தாலும் அகமண வரையறைக்குள் சொல்ல வேண்டுமாயின் அதை அவ்வினத்தின் அகமண முறை (Racial Endogamy) என்றோ அந்நாட்டின் அகமண முறை (National Endogamy) என்றோ சொல்லலாம். ஏனெனில் ஒரே இனம் அல்லது ஒரே நாட்டினரோடு மணம் கொண்டிருப்பதால் அதனை அகமண முறை என்று குறிப்பிடுவது ஏற்புடையதாகிறது. இதனால் 'அகமணம்' என்பது குழு அகமணம், சாதி அகமணம், வகுப்பு அகமணம், இன அகமணம், நாட்டு அகமணம் எனப் பல நிலைகளில் அமைகிறது.

**அகமணக் காரணிகளின் அகமும் புறமும்:** அகமணம் பொதுவாகப் பெருமளவில் சமூகங்களுக்கிடையே காணப்படுகிறது. புறமணக் கோட்பாட்டைப் போல் அகமண வரையறை ஓர் உலகளாவிய பொது விதியை அதன் சமூகங்களுக்கிடையே கட்டமைக்க இயலவில்லை.

பன்னாட்டு மக்களிடையே அகமணம் அவரவர் சமூக அமைப்பிற்கு ஏற்றவாறு பல நிலைகளை ஏற்றுள்ளது. பழங்குடி அகமணம், வகுப்பு அகமணம், சாதி அகமணம், இனக்குழு அகமணம், சமூக அகமணம் ஆகிய முதன்மையான நிலைகளுடன் அரசகுடி தகாப் புணர்ச்சி(Royal Incest), பிரேசில் நாட்டுத் தோட்டப் பண்ணைச் சமூகம், முகம்மதியர்களின் தந்தை வழிப் பெற்றோர்களின் நேர் உடன் பிறந்தோரின் சேய்களின் திருமணம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அகமணம் பல சமூகங்களிடையே வேரூன்றியிருப்பதற்குப் பல நேரிடையான காரணிகள் புலப்படுகின்றன. தம் கால்வழியினரின் சாதி அல்லது இனக்குழுக்களைச் சாராத புதியவர்களை மணப்பதை ஆதிக்குடி அல்லது பழங்குடியினர் விரும்பவில்லை. புதியவர்களின் மந்திரம், சூனியம் முதலானவை தம்மையும் தம் இனக்குழுவினரையும் பாதிக்கும் என்ற மனப்பான்மை, அகமணத்திற்கு ஒரு காரணமாய் அமைந்தது. கொராவா ஆதிக்குடியை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

காடர், பில், ஓ (Ho), தோடர் மற்றும் இதர அகமணப் பழங்குடியினர், பிரேசில் நாட்டுத் தோட்டப்பண்ணைச் சமூகத்தினர், மத்திய கிழக்கு, வட ஆப்பிரிக்க அகமணக் குடும்பங்கள், தென் அமெரிக்க வட அமெரிக்கக் காட்டுப் பகுதிகளில் வசிக்கும் பியூப்லோ இந்தியர்கள், வடகிழக்கு சைபீரியாவின் சுக்சி மக்கள், புது மெக்சிகோவின் சுனி பியூப்லோ இந்தியர்கள், இந்திய சாதிகள், முகம்மதியர் போன்றோர் அகமண முறையைக் கொண்டுள்ளனர். சொத்து, குடும்ப உரிமை ஆகியன தங்கள் கால்வழி அல்லது பரம்பரைக்குள்ளேயே பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கிலேயே இம்முறையை மேற்கொள்கின்றனர்.

இனக்குழுப் பண்புகள், சுற்றுப்புறம், வாழிடப் பகுதிகள் முதலானவை ஒவ்வொரு பழங்குடியினரிடையேயும் வேறுபட்டிருப்பதால் புறமண அமைப்பை ஆதிக்குடிகள் ஏற்கவில்லை. ஒவ்வொரு பழங்குடியும் தங்களின் தனித்தன்மை புறமண முறையால் குன்றிவிடும் என்று எண்ணுவதாலேயே அகமண முறை ஆழ்ந்து வேரூன்ற ஏதுவாகியது.

**அகமண முறைகள்:** இந்தியாவில் ஏறத்தாழ அனைத்துப் பழங்குடிகளும், சாதிகளும் அகமண உறவுத் திருமணத்தைச் சமூக முறைமைகளுள் ஒன்றாகக் கொண்டுள்ளனர். உலகச் சமூகங்களிடையே சற்றேறக்குறைய 10 விழுக்காட்டிற்குச் சிற்றூர் அல்லது குடியிருப்புக்குள்ளேயே அகமணம் (Village Endogamy) செய்யும் முறை காணப்படுகிறது. தென் அமெரிக்க, வட அமெரிக்க பியூப்லோ இந்தியர்களிடையே அவர்கள் குடியிருப்புப் பகுதிக்குள் இருப்பவர்களை மட்டுமே மணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சமூக வரையறை உள்ளது. இவ்விதத் திருமணங்களினால் வலையமைப்புக் குடும்ப முறை ஏற்பட்டு மிக நெருக்கமான ஒத்துழைப்பு ஏற்படுகிறது.

இனக்குழு அகமணத் திருமணம் ஐவரிக் கடற்கரை (Ivory Coast) இனக்குழுக்களிடையே காணப்படுகிறது. ஐவரிக் கடற்கரையில் அபார்ன், கொலங்கோ, அக்கினி, பொவுல்,இலெபி குடியினர் அருகருகே வாழ்கின்றனர். மேல் வோல்டா (Upper Volta) பகுதியில் வாழும் மொசி குடியினர் இடம் பெயர்ந்து ஐவரிக் கடற்கரைக் குடிகளோடு ஒன்றியிருந்தாலும் கொலங்கோ, அக்கினி, மற்றும் பொவுல் குடிகளோடு மட்டுமே அகமண உறவு கொள்கின்றனர்; மொசி, இலெபி குடிகளுடன் மணம் கொள்வதில்லை.

இந்தியச் சாதிகளின் அகமணம் இந்து சமூகத்தின் சிறப்புக் கூறாக இருப்பது போலவே, பெரு, இன்கா, பண்டை எகிப்தியர், அவாய் அரச குடிகளின் 'அரசகுடி தகாப்புணர்ச்சி' ஆகிய மண முறைகளும் சிறப்பிடத்தைக் கொண்டுள்ளன. இவ்வரச குடிகளில் உடன்பிறந்தோரிடையே திருமணம் பண்டைக் காலந் தொட்டே வழக்கத்திலிருந்து வருகிறது.

பாலினேசியா முதுகுடிகளின் வழக்குப்படி இவ்வரசகுடித் தகாப்புணர்ச்சி முறையை இருவிதக் கருத்துகளோடு தெளிவாக்குகின்றனர். தன் மனப் பார்வைக்குத் தெளிவாகத் தெரியும் செயல் முறைக் கருத்துக்கும், முழுமை பெறாத நிலைத்துள்ள கருத்திற்கும் அப்பாற்பட்ட விசைப் பொருள்களிலோ தெய்விகத் தன்மை பெற்ற சில மனிதர்களிடமோ தெய்வ ஆற்றல் சேருகிறது என்பது இவர்களுடைய சமயத் தத்துவம் ஆகும். இவ்வித தெய்விக ஆற்றல் அரச பரம்பரையினருக்கு உரித்தானதால் தம் குழந்தைகளிடையே மணம் முடிப்பதன் மூலம் இவ்வாற்றலைத் தம் கால்வழியினரிடையே கொண்டு செல்ல முடியும் என நம்புகின்றனர். பிரேசில் நாட்டுத் தோட்டப் பண்ணைச் சமூகம் சொத்துரிமை, அதிகார அமைப்பு ஆகியவற்றை நிலை நிறுத்தும் பொருட்டு அமைந்த அகமணக் குடும்ப முறை சற்று மாறுபட்ட நிலையில் காணப்படுகிறது. கரும்பு, காப்பித் தோட்ட உரிமையாளர்கள் குடும்பங்களில் பெற்றோரின் உடன் பிறந்தோரின் சேய்களிடையே மணம் செய்யும் முறை வழக்கத்திலுள்ளது. இந்தக் குடும்பங்களுடைய நிலம்

அடிமைக் கூலியாட்கள், இதர பண்ணைப் பொருள்கள் ஆகியன சொத்துரிமை விதிப்படி மகனுக்கும் மகளுக்கும் சம அளவில் பகுக்கப்படுகிறது. ஆகவே இச்சமூகங்களில் 19-ஆம் நூற்றாண்டின் அண்மைக் காலம் வரை முதல் நேர் உடன் பிறந்தோருடன், நெருக்கமான உறவுடைய ஒரே குடும்பத்தினருடன் மணம் செய்வது வழக்கத்திலிருந்து வருகிறது.

இசுலாமியர் தந்தைவழி நேர் உடன் பிறந்தோர்களின் சேய்களின் திருமணம், செயல்முறையில் பிரேசில் நாட்டுத் தோட்டப் பண்ணைச் சமூகத்திற்கு ஒப்பானது எனலாம். இசுலாமியர் சமூகம், தந்தை கால்வழியைச் சார்ந்ததாகும். இவர்கள் ஆபிரகாம் என்று தம் மூதாதையரை இனம் காட்டுகின்றனர். உடன் பிறந்தோரின் மகளை மணம் கொள்ளும் முறை இச்சமூகத்தில் காணப்படுகிறது. இவ்வித அகமணம் பொதுவாக அனைத்துச் சமூகத்திலும் காணப்படுவது போன்று குடும்பச் சொத்தைத் தம் பரம்பரைக்குள் நிலை நிறுத்த அமைந்த திருமண அமைப்பு ஆகும். இசுலாமியப் பெண்கள், சொத்துரிமையில் ஆண்கள் பெறுவதில் பாதியைப் பெறுகின்றனர். பிரடரிக் பார்த் என்பவர், இசுலாமியரின் இவ்விதத் திருமண முறை அரசியல் அமைப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், சகோதரர்களுள் சுயநலக் கருத்து வேறுபாட்டினை ஏற்படுத்தாமல் ஒற்றுமையை ஏற்படுத்துகிறது என்றும் கூறுகிறார்.

அகமணமும் இன்றைய குடும்ப அமைப்பும்: திருமணம், மனிதனின் மணம், உயிர், பால் உணர்வுகளை நிறைவு செய்வதற்காக மட்டும் அமையாமல் சமய, பண்பாட்டு உறுப்பினராக அச்சமூகத்தில் ஏற்றுக்கொள்ளும் நிலையினையும் அமைத்துத் தருகிறது.

இருவர் இணைந்து மேற்கொள்ளும் வரையறுக்கப்பட்ட சமூகச் செயல்கள், அவர்களது வாழிடம், பொருள், அதிகாரம், சமயம், சடங்கு ஆகிய சமூக நெறிகளைத் தனித்தன்மை கொண்ட நிலையில் ஏற்றுக்கொண்டு அவற்றை வழிவழியாகத் தம் கால்வழியினருக்குப் பயிற்றுவிக்கும் கூடமாகவும் குடும்பம் அமைகிறது. திருமணமும் குடும்பமும் இருவித சமூகக் கட்டமைப்புகளாக இருப்பினும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயல்படும் தன்மை கொண்டவை.

அகமணத் திருமணம் பல கூறுகளில் ஏற்புடையதாகவும், ஏற்பற்றதாகவும் காணப்படுகிறது. இதன் சிறப்புக் கூறுகளை நோக்கும்போது, அகமணம், அகமணக் குடும்பங்கள் அக்குழுவினரிடையே ஒற்றுமையையும் ஒத்துழைப்பையும் நிலை நாட்டுகின்றன. பெண்கள் சுதந்திரமாகத் தம் பங்கினைப் பெற இவ்வமைப்பு வழிகோலுகிறது. சொத்து, அதிகார அமைப்பில் வேற்றுக் குழுவினரின் ஆதிக்கம் தடுக்கப்படுகிறது. இனக் கலப்பும் தடுக்கப்படுகிறது.

இம் மணமுறையின் சிறப்பற்ற குணங்களாகச் சிலவற்றைக் குறிப்பிடும்பொழுது, ஒரு நாட்டின் ஒற்றுமையை, குறிப்பாகச் சமூகங்களிடையே ஒற்றுமையைப் பெருமளவில் அகமண முறையும் அகமணக் குடும்ப அமைப்பும் பாதிக்கின்றன. மணமகனையும் மணமகளையும் குறுகிய வட்டத்திற்குள் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளதால் மரபுவழியில் சில பண்புகள் மங்கிக் காணப்படுவதாகவும் மரபியலார் கருத்துத் தெரிவிக்கின்றனர். சீ. ப.

துணை நூல்கள்:

**Bohannan, E.P.J., and J. Middleton,eds.,** "Marriage, Family and Residence", Natural History Press, New York, 1968.

**Firth, R.,** "The Analysis of mana: An Emprical Approach, "Journal of the Polynesian Society". 49:1940.

**Hutton, J. M.,** "Caste in India: Its nature, function and origins", Oxford University Press, London, 1951.

**Kapadia, K.M.,** "Marriage and family in India", Oxford University Press, Bombay, 1955.

**Murphy, R.F., and Kasdan,L.,** "The structure of parallel cousin Marriage, "American Anthropologist", 61: 1959.

**Stephen, W.N.,** "The family in Cross-Cultural perspective", Hrt. Rinehart and Winston, New York, 1963.


**Wastermark, E.,** "The history of human marriage", Macmillan, New York, 1921.

**அகமதாபாத்து** என்னும் நகரம் குசராத்து மாநிலத்தின் தலைநகரமாகும். இந்நகரம் சபர்மதி ஆற்றின் மேல்கரையில் கடல் மட்டத்திலிருந்து 55 மீட்டர் உயரத்தில் உள்ளது. பம்பாய் மாநகருக்கு வடக்கே 451 கி.மீ. தொலைவிலும், தில்லி மாநகருக்கு 805 கி.மீ. தென்மேற்கிலும் இது உள்ளது. இந்திய மக்கள்தொகைக் கணக்குப்படி இது இந்தியாவின் ஆறாம் பெரும் நகரமாகும். இந்நகரத்தின் பழைய பெயர் கருணாவதி என்பதாம். கருணன் என்னும் அரசரால் அமைக்கப்பட்டதால் இது இப்பெயர் பெற்றது.

அகமதாபாத்து (Ahamedabad) இந்தியாவின் மிகப் பெரிய வாணிக மையங்களுள் ஒன்றாகும்.

இங்கு ஆயிரத்துக்கு மேல் பஞ்சாலைகள் உள்ளன. பருத்தி நூல் நூற்றல், பருத்தி ஆடைகள், பனியன்கள், கதராடைகள் நெய்தல் போன்றவை இந்நகரத்தின் முதன்மையான கைத்தொழில்களாம். புகையிலை, கண்ணாடி, பட்டு முதலியன உற்பத்தியாகும் பிற பொருள்களாம். கண்ணைக் கவரும் கைவினைப் பொருள்களின் உற்பத்திக்கும் இந்நகரம் பெயர்பெற்றது.

அகமதாபாத்தில் எண்ணற்ற அழகான மசூதிகளும், கல்லறைகளும், நுழைவாயில்களும் உள்ளன. இவை 15, 16, 17–ஆம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. இக்கட்டிடங்களில் இந்து-முசுலிம் பாணி கட்டிடக்கலை இணைப்பினைக் காணலாம். இந்நகரில் இருக்கும் 'சும்மா' மசூதியைப் (Jumma Mosque) 'பெரிய மசூதி' என்றும் கூறுவர்.



சும்மா மசூதி

குசராத்தை ஆண்ட சுல்தான் முதலாம் அகமதுசா (Ahmed Shah I கி.பி.1411) என்பவரால் இந்நகர் கட்டப்பெற்றது. மொகலாய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் புகழ் மிக்க நகரங்களுள் ஒன்றாகவும் இது திகழ்ந்தது. வரலாற்றில் பல்வேறு ஏற்றத் தாழ்வுகளைக் கண்ட இந்நகரம் 19—ஆம் நூற்றாண்டில் வளம் கொழிக்கும் நகரமாக மாறியது. இது ஒரு கல்வி மையமும் ஆகும். இந்தியத் தேசிய காங்கிரசின் இரு மாநாடுகள் இங்கு நடைபெற்றன. இந்திய விடுதலைப் போராட்டத்தில் இந்நகர மக்கள் சீரிய முறையில் பங்கேற்றனர். இந்நகரின் மக்கள்தொகை **21,23,831** ஆகும்.

**அகமதாபாத்துச் சோதனைகள்**: தொழிலாளர்களிடையே மன நிறைவை ஏற்படுத்தக்கூடிய காரணிகளைத் திட்டமிட்ட சோதனைகளின் மூலம் 1953—ஆம் ஆண்டு அகமதாபாத்து காலிமகா நெசவாலையில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் அகமதாபாத்துச் சோதனைகள் (Ahamedabad Experiments) எனப்படுகின்றன. இலண்டன் நகரத்தில் உள்ள தாவிசுதாக்டு மனித உறவு நிறுவனத்தைச் (Tavistock Institute of Human Relations) சேர்ந்த ஏ.கே.இரைசு (A.K. Rice) என்பவரால் இச்சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

அகமதாபாத்து நெசவாலையில் 1952—ஆம் ஆண்டில் புதிய எந்திரங்கள் புகுத்தப்பட்டதன் விளைவாகத் தொழிலாளிகளிடையே அமைதியின்மை தோன்றியிருந்தது.

தொழிலாளர்களின் தொல்லைகளுக்குக் காரணங்களைக் கண்டுபிடிப்பதற்காகவும் உற்பத்தித் திறன் பெருக்கத்திற்கான வழிகளை ஆராய்வதற்காகவும் 1953–ஆம் ஆண்டு முதல் 1955-ஆம் ஆண்டு வரையில் இச்சோதனைகள் நிகழ்த்தப்பட்டன.

இங்கிலாந்தில் ஈ.எல். திரிசுது (E.L. Trist) என்பவரால் விளக்கப்பட்ட சமூகத் தொழில் நுட்ப உற்பத்தி முறை என்னும் கருத்தை இரைசு அகமதாபாத்துச் சோதனைகளில் பயன்படுத்தினார். தொழிலாளர்களிடையே குழு ஒழுங்குணர்வு நல்ல முறையில் காணப்பட்ட போதிலும் உற்பத்தித்திறன் குறைந்து காணப்பட்டது. நெசவாலைத் தொழிலாளர்கள் வேலைசெய்த தொழிற் கூடத்தில் 224 தறிகள் இருந்தன. 24 முதல் 32 தறிகள் வரையில் ஒரு தொழிலாளர் வேலை செய்து வந்தார். மற்றத் தொழிலாளர், தத்தம் திறன், அனுபவம் இவற்றிற்கு ஏற்ப வேறு பணிகளைச் செய்து வந்தனர். இவ்வாறு 224 தறிகள் ஒவ்வொரு வேலை நேரத்திலும் 29 தொழிலாளிகளால் கவனிக்கப்பட்டு வந்தன தொழிலாளர்களுக்கு அவரவர் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களும், மேற்பார்வையாளர்களின் பொறுப்புகளும், மேலாண்மைக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே நிலவி வந்த மனப்பான்மைகளும் மேலெழுந்தவாரியாக அமைதியான போக்கைக் காட்டுவதாக இருந்தாலும் நெசவாலையில் உள்ளார்ந்த தொல்லைகள் இருந்தன என்பதை எல்லோரும்

உணர்ந்தனர். தொழிலாளர்களுக்கு வேலைப் பங்கீடு செய்து கொடுக்கப்பட்டிருந்த முறையும் அவர்களைப் பொருட்படுத்தாதவாறு அமைந்திருந்தது. தொழிலாளர்களைச் சிறு சிறு பணிக் குழுக்களாகப் பிரித்து அக்குழுக்களுக்குக் குறிப்பிட்ட பொறுப்புகளையும் பணிகளையும் வரையறை செய்து கொடுத்தனர். குறிப்பிட்ட சில தறிகளுக்குக் குறிப்பிட்ட ஒரு பணியாளர் குழு பொறுப்பு என்ற அடிப்படையில் இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

தறிகள் கீழ்க்கண்ட முறையில் வரிசைப்படுத்தப்பட்டன. ஒரு வரிசையிலிருந்த தறிகள் அடுத்த வரிசைத்தறிகளைப் பார்த்த வண்ணம் வைக்கப்பட்டிருந்தன. முன் பக்கத்து நெசவாளி இரு தறிகளையும் எளிதாகக் கவனித்துக் கொள்ள முடிந்தது. நுட்பமில்லாத தொழிலாளர் இதற்குப் பின்வரிசையில் அமர்ந்து தம் பணிகளில் ஈடுபடவும் முடிந்தது. ஒவ்வொரு குழுவிலும் 11 தொழிலாளர் ஒருங்கிணைந்து வேலை செய்தனர். இதற்கு முன் இந்த வேலையை 20 தொழிலாளர்கள் ஒருங்கிணைவின்றிச் செய்து வந்தனர். தொழிலாளர்கள் தம் இடங்களைவிட்டு எழுந்து சென்று மற்றவர்களுடன் பேசவும் வசதி இருந்தது. சோதனைகள் 9 காலப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சோதனையின் முடிவுகள் கண்டறியப்பட்டன. இச் சோதனைக் காலத்தில் உற்பத்தித் திறன் மிகுந்தது. தொழிலாளர்களின் மனநிறைவுடன், குழு ஒழுங்கும் குறையாமல் நிலைத்து நின்றது. தொழில் திறன் மிகுந்தது. இதன் காரணமாக உற்பத்தி செய்த துணிகளின் தரமும் உயர்ந்தது.

இத்தகைய மாற்றங்களைச் சமூகத் தொழில் நுட்ப விதி என்று இரைசு குறிப்பிட்டார். தொழிற் குழுக்களில் அதிகார வரையறை துல்லியமாகக் காணப்படவில்லை. அதாவது, குழுக்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் வேறுபாடு இன்றி, எல்லோரும் ஒரு குடும்பத்தினர்போல் பழகி வேலையில் ஈடுபட்டனர். இது அவர்களிடையே சமூக உறவு மனப்பான்மையை வளர்த்தது. இந்திய ஊரகச் சமுதாய அமைப்பில் காணப்படும் சமூக இடைத்தொடர்புகள் தொழிற் சாலைகளில் மங்கிவிடுவதால், தொழிலாளர்கள் தாம் எந்திரங்களினிடையே இருக்கும் ஒரு சிறு மரை தான் என்ற மனப்பான்மை வளர்கிறது. இத்தகைய மனப் பான்மை தொழில் உறவுகளைப் பாதிப்பதாக உள்ளது. இவற்றை நீக்கித் தொழிலாளர்களிடையே அவா கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற மனப் பான்மை வளரும் முறையில் தொழிற் பங்கீடு, தொழிற் சூழமைவு ஆகியவை மாற்றியமைக்கப்பட வேண்டும். இதுவே உற்பத்தித்திறன், தொழில் ஊக்கம் இவைகளுக்கு அடிப்படையாகும் என்று அகமதா பாத்துச் சோதனைகள் மெய்ப்பித்தன.

துணை நூல்:

**Pascual Gisbert**.S.J., "Fundamentals of Industrial Sociology", Tata McGraw Hill publishing Company, New Delhi, 1972.

***அகமதிய இனம்*** இசுலாமியப் பிரிவுகளுள் ஒன்று. பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த குருதாசுபூர் மாவட்டத்திலுள்ள காடியான் என்ற ஊரைச் சேர்ந்த சமய அறிஞர் மீர்சா குலாம் அகமது என்பவர் 1889-ஆம் ஆண்டில் இப்பிரிவை ஏற்படுத்தினார். இந்தியாவில் இப்பிரிவினரின் மக்கள் தொகை இன்று 1,00,000 ஆகும். மேலும் ஆப்கானிசுதானம், பாரசீகம் அராபியா, எகிப்து போன்ற இசுலாமிய நாடுகளிலும் இப்பிரிவினர் வாழ்கின்றனர்.

நபிகள் நாயகம் சமயப் பரப்புநர்களுள் ஒருவர். தெய்விக வெளிப்பாடு அவரோடு மட்டும் நின்று விடுகின்ற ஒன்றன்று என்று அகமதிய இனத்தவர் கருதுகின்றனர். "இறைவன் இறுதிவரைத் தம்மால் தேர்ந்தெடுக்கப்படுபவர் மூலம் பேசிக் கொண்டிருப்பவன்" என்றும் இப்பிரிவினர் உறுதியுடன் கூறுகின்றனர். "உலக முடிவு நாளில் மகதியென்னும் ஒருவர் ஒரு கையில் வாளுடனும், மற்றொரு கையில் குரானுடனும் தோன்றி, இசுலாம் சமயத்தின் மேன்மையை நிலை நாட்டுவார்" என்ற மற்ற முசுலிம்களின் கருத்தை இவர்கள் ஏற்க மறுக்கிறார்கள். தங்கள் கருத்துக்கு ஆதரவாகக் குரானிலிருந்தே இவர்கள் மேற்கோள் காட்டுகிறார்கள். "சமயத்தில் கட்டாயம் ஏதுமில்லை" என்பதே இவர்களுடைய வாதமாகும். முசுலிம் அல்லாத பிரிவினருடனும் இவர்கள் நெருங்கிய நட்புறவு கொண்டிருப்பதோடு அவர்களுடைய சமூக நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கிறார்கள்.

அகமதிய இனத்தைத் தோற்றுவித்த மீர்சா குலாம் அகமதுவின் காலத்திற்குப்பின், மௌலவி நூருதீன் என்பவர் இப்புதிய இனத்தின் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1914-இல் காலமானபோது, அகமதிய இனம் பிளவுண்டது. காடியான்கள் என்னும் தொடக்ககாலப் பிரிவினர் குலாம் அகமதுவை நபிகள் நாயகமாகவும், அவர் மகன் அட்ரத்து மீர்சா பசீருதீன் முகமது அகமதுவை இரண்டாம் கலீபா என்றும்கருதினர். ஆனால், பிரிந்து சென்ற மற்றொரு பிரிவினர் குலாம் அகமதுவை ஒரு சீர்திருத்தக்காரர் என்றே கருதினர். இரண்டாம் பிரிவினரின் தலைமையிடம் இலாகூரில் அமைந்தது.

இப்பிரிவினரில் பெரும்பாலோர் தம் தாய் மொழியான பஞ்சாபி மொழியையே பேசுகின்றனர். 1974-ஆம் ஆண்டு அகமதிய இனத்தவரை முசுலிம் அல்லாத சிறுபான்மையினத்தவர் என்று பாகிசுதான்

(Pakistan) அரசு அறிவித்தது. இப்பிரிவினர் காடியான்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இப்பிரிவை நிறுவிய மீர்சாகுலாம் அகமது 1908-இல் தாம் இறப்பதற்கு முன்பே தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிய காரணத்தினால், சாகர் அஞ்சுமணி அகமதியா என்பவர் இப்பிரிவினரின் இப்போதைய தலைவராக இருக்கிறார். காடியான்கள் சிறப்பாகப் பாகிசுதானத்திலே வாழ்கிறார்கள். சிலர் இந்தியா, மேற்கு ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் வாழ்கின்றனர். இவ்வினத்து மக்கள் கட்டுப்பாட்டிற்குப் பெயர் பெற்றவர்கள்; செல்வச் செழிப்பு மிக்கவர்கள். அகமதிய நம்பிக்கைகளே உண்மையான இசுலாம் சமயம் என்றும், முகமதுநபியும் மீர்சாகுலாம் அகமதுவும் தீர்க்கதரிசிகள் என்றும் நம்பும் இவர்கள் சிறந்த சமயப் பரப்புநர்கள். 1947-இல் பாகிசுதானம் உருவானபோது தம் தலைமையிடத்தைக் காடியானிலிருந்து இரப்வா (Rabwah) என்னும் இடத்திற்கு மாற்றிக் கொண்டனர்.

இலாகூர்ப்பிரிவினரும் மதமாற்றத்தில் நம்பிக்கைக் கொண்டவர்களே. ஆனால், அவர்கள் இசுலாம் சமயத்திற்கு மற்றவர்களை மாற்றுகிறார்களேயன்றி அகமதிய இனத்திற்கன்று. இதனை நடத்திச் சென்ற மௌலானா முகமது அலி என்பவர் தம் இனத்தைப் பரப்ப ஆங்கிலத்திலும் உருதுவிலும் பல நூல்களை வெளியிட்டு இசுலாம் சமயத்தை முற்போக்குச் சமயமாக்கப் பாடுபட்டார். அவர் 1951-இல் காலமானார்.

அகமதிய இனத்தவர்கள் சூபி இயக்கத்தாரை ஒத்தவர்கள். எகிப்திலும் கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இத்தகைய முற்போக்கு இசுலாம் இனம் ஒன்று இருந்தது.

இசுலாம் சமயத்தைச் சார்ந்த வைதிக சமய சித்தாந்திகள் அகமதிய இனத்தைக் கடுமையாகக் குறைகூறுவார்கள்.

அ.கா.

**அகமது சா துரானி (கி.பி. 1724-1774):** அகமது சா துரானி ஆப்கானிசுதானத்தின் முதல் அமீராவார். இவர் அப்தாலி இனத்தின் தலைவர். ஆப்கானியர்கள் பாரசீகத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் ஏனைய ஆப்கானியத் தலைவர்களை விட இவருக்குத்தான் மிகுந்த செல்வாக்கிருந்தது. பாரசீகத்தைச் சார்ந்த நாதர் 'சா கொலையுண்ட போது (கி.பி. 1747), ஆப்கானியத் தலைவர்கள் தங்களை விடுதலை பெற்றவர்களாக அறிவித்து, அகமதுவைத் தங்கள் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். பின்னர் அகமது தம் இனப் பெயரான அப்தாலி என்பதை மாற்றித் துரானி என்னும் பெயரைச் சூட்டிக் கொண்டார். துரானி என்னும் சொல் முத்து என்று பொருள்படும். இவரது ஆட்சியின் போது தில்லியில் நலிந்து மெலிந்திருந்த மொகலாயப் பேரரசைப் பன்முறை தாக்கி இலாகூர், காசுமீரம் போன்ற பகுதிகளை கி.பி. 1748-ஆம் ஆண்டில் கைப்பற்றினார். தில்லி நகரம் கி.பி. 1756-இல் இவரால் சூறையாடப்பட்டது


**அகமது நகர்:** இந்நகரம் மகாராட்டிர மாநிலத்தில் உள்ளது. பம்பாய் மாநகருக்கு 200கி.மீ. தொலைவில் உள்ள இந்நகர் ஒரு மாவட்டத்தின் மையமாகும். இது மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கில் தக்காணப்பீடபூமியின் விளிம்பில் அமைந்துள்ளது; கரிசல்மண் கொண்ட பகுதியாகும். பருத்தி விளையும் பகுதியின் மையமாய் விளங்கும் இந்நகரில் பஞ்சாலைகள் மிகுதியாக உள்ளன. இம் மாவட்டத்தில் மழை குறைவு. பருத்தி, துவரை, கோதுமை, சாயப் பொருள்கள் போன்றவை இங்குப் பயிரிடப்படுகின்றன. நூற்பாலைகள் தொடர்பான பல கைத்தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன.

நைசாம் மரபினரான அகமது நிசாம்சா என்பவர் இந்நகரை உருவாக்கினார். அகமதுநகர் அரசர்களுக்கும் விசயநகரப் பேரரசர்களுக்கும் இங்குப் போர் மூண்டது. இராமராயர் என்னும் விசயநகர அரசர் அகமதுநகர் மன்னரைத் தோற்கடித்தார். மீண்டும் கி.பி. 1563-ஆம் ஆண்டில் விசயநகரப் படைகள் இந்நகரைக் கைப்பற்றிக் கொடுமைகள் பல புரிந்தன. கி.பி. 1565 ஆம் ஆண்டில் மூண்ட தலைக்கோட்டைப் போரின் போது அகமது நகர் இசுலாமிய அரசுகளுடன் இணைந்து கொண்டது.

முகலாயருடைய ஆட்சிக் காலத்தில் அகமது நகரை அரசாட்சி செய்தவர் சாந்துபீபி என்னும் அரசியாவார். சாந்துபீபியைக் கி. பி. 1600-இல் அக்பர் தோற்கடித்து இந்நகரைக் கைப்பற்றினார். பின்னர், இது மொகலாயப் பேரரசின் தென் மாநிலங்கள் மூன்றில் ஒன்றாகக் கருதப்பட்டது.

இந்நகரை மராத்தியர் கி.பி. 1797-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டனர். பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவின் படைத் தலைவரான ஆர்தர் வெல்லெசுலி கி.பி. 1803-இல் இந்த நகரைக் கைப்பற்றினார்.

அகமது நகரில் உள்ள கோட்டை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. கோட்டையில் வண்ண ஓவியங்களும் உள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் சவகர்லால் நேரு இங்குள்ள கோட்டையில் மூன்றாண்டுகள் சிறை வைக்கப்பட்டார். விடுதலைப் போராட்ட காலத்தில் மௌலானா அபுல்கலாம் ஆசாத்து உட்பட இந்திய நாட்டுத் தலைவர்கள் பலர் அகமதுநகர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டனர். இங்குத்தான் பண்டித நேரு 'இந்தியக் கண்டு



அகமதுநகர்க் கோட்டை

பிடிப்பு' (Discovery of India) என்னும் வரலாற்று நூலை எழுதித் தம்முடன் சிறையில் இருந்த இணைக் கைதிகளுக்குப் படைத்தார். இந்நகரின் மக்கள் தொகை 1,81,239.

**அகமது வீபிக் பாட்சா** (கி.பி.1819-1891) என்பவர் துருக்கி நாட்டைச் சார்ந்த அரசியல் வல்லுநர். அவர் 1819-ஆம் ஆண்டில் கான்சுடாண்டிநோபிலில் பிறந்தார்; பாரிசு மாநகரில் கல்வி கற்றார். பிரான்சை உலூயி பிலிப் மன்னர் (Louis Philippe) ஆண்ட காலத்தில் பாரிசில் துருக்கி நாட்டுத் தூதரகத்தின் முதல் செயலராகப் பணியைத் தொடங்கினார் அகமது வீபிக் பாட்சா (Ahmed Vefik Pasha). அதே பொறுப்பைப் பின்னர் உருசியாவில் செயின்ட் பீட்டர்சுபர்க்கிலும் தொடர்ந்தார். இவர் 1851-இல் தான்யூப் ஆற்றைச் சுற்றியிருந்த துருக்கிப் பகுதிகளின் ஆணையராகவும் 1851 முதல் 1855 வரை பாரசீக நாட்டில் தூதராகவும் பணியாற்றியவர். மேலும் 1851-இல் நீதித்துறை அமைச்சராய்ப் பொறுப்பேற்றுப் பல சட்டத் திருத்தங்களைச் செய்தார். உருசியா - துருக்கிப்போரின்போது இவர் ஏட்ரியாநோபிலின் ஆளுநராகவும் 1877 இல் துருக்கி சட்ட மன்றத்தின் தலைவராகவும் நியமிக்கப் பெற்றார். சுல்தான் இரண்டாம் அப்துல் அமீது இவரைத் தலைமை அமைச்சராக 1878 இல் நியமித்தார். 1878 முதல் 1882 வரை இவர் அரசப் பிரதிநிதியாகப் பொறுப்பேற்ற காலத்தில் வேளாண்மை, பொருளாதாரம், கல்வி போன்ற துறைகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தினார். ஆனால் 1882-இல் இவர்தம் அரசியல் பகைவர்கள் இவர் மீது துரோகக் குற்றஞ் சாட்டிச் சிறையிலடைத்தனர். அப்துல் அமீது இவரை விடுதலை செய்து மீண்டும் தலைமை அமைச்சராக்கினார். ஆனால் பதவியேற்ற மூன்றாம் நாள் இவரின் எதிரியான சையது பாட்சா என்பவர் தலைமை அமைச்சராக்கப் பெற்றதால் பதவியை இழந்தார். வாழ்வில் எஞ்சியிருந்த ஆண்டுகளை இவர் தமது சொந்த நாட்டுப்புற வீட்டில் கழித்தார். அகமது புகழ்பெற்ற அறிஞர்; பன்மொழிப் புலவர்; பல அகராதிகளைத் தொகுத்தவர்; பிறமொழி நூல்களையும் மொழி பெயர்த்துள்ளார். இவர் 1891-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் காலமானார்.

**அகமீட்டுருவாக்கம்** என்பது ஒரு மொழியின் தொல்வடிவத்தையும் வரலாற்றையும் அறிந்து கொள்வதற்குரிய அணுகு முறைகளுள் ஒன்று. மொழி வரலாற்றில், ஒரு மொழியின் மிகப்பழைய எழுத்துச் சான்று கிடைத்த காலத்திலிருந்து இன்று வரையுள்ள கால வரலாற்றைச் சான்று வழிப்பட்ட வரலாற்றுக் காலம் (Recorded History) என்றும், அதற்கு முற்பட்ட கால வரலாற்றை மொழியின் தொல் வரலாற்றுக் காலம் (Pre-History) என்றும் குறிப்பிடுகிறார்கள்.

எல்லா மொழிக்கும் ஒரே சமயத்தில் எழுத்துச் சான்று கிடைப்பதில்லை. ஆதலால் ஒவ்வொரு மொழியின் சான்று வழிப்பட்ட வரலாற்றுக் காலமும் தொல்வரலாற்றுக் காலமும் மாறுபடுகின்றன. தமிழ் மொழிக்கு இன்றுவரை கிடைத்திருக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்று கி.மு 3 அல்லது 2 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகளே. தெலுங்கு மொழியில் கிடைக்கும் மிகப் பழைய எழுத்துச் சான்று கி.பி. 575-ஆம் ஆண்டுக் கல்வெட்டாகும்.

மொழியின் தொல்வரலாற்றைத் தெரிந்து கொள்ள மொழியியலார் நான்கு அணுகு முறைகளைக் கண்டுள்ளார்கள். அவையாவன: 1. கிளைமொழியியல் (Dialectology) 2. அகமீட்டுருவாக்கம் (Internal Reconstruction) 3. புறமீட்டுருவாக்கம் (External Reconstruction) அல்லது ஒப்பிலக்கணம் (Comparative Method) 4. சொற்கோவைப் புள்ளியியல் (Lexico Statistics).

அகமீட்டுருவாக்கம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொழியில் ஏற்பட்டிருக்கும் புணர்ச்சி மாற்றங்களைச் சிலநெறிமுறை ஒழுங்குகட்கு உட்படுத்துவதாகும். அந்த மாற்றம் ஒலி மாற்றத்தால் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் மாற்றம் இல்லாத வடிவமே அதற்குமுன் இருந்திருக்க வேண்டும் என்றும் முடிவு

கட்டுவதாகும். எனவே, அகமீட்டுருவாக்கத்தை மிகப் பழங்கால மொழிக்கு மட்டுமன்றி, எல்லாக் காலத்து மொழிக்கும் பொருத்திப் பார்த்து, அவ்வக் காலத்துக்கு முன்னிருந்த மொழி பற்றிய சில உண்மைகளை உணர்ந்து கொள்ளலாம். எடுத்துக்காட்டாக இக்காலப் பேச்சுத் தமிழில் மக ல மகளெ (இரண்டாம் வேற்றுமை வடிவம்) அவ ல அவளெ. வந்தா ல வந்தாளே என்பதன் இறுதியில் உள்ள ஏகாரம் தேற்றப்பொருள்; எகர, ஏகாரத்தை எடுத்துவிட்டால் அவ ல அவள்;மக ல மகள்; வந்தா ல வந்தாள் என்று மாற்று வடிவங்கள் கிடைக்கின்றன. மெய்யெழுத்தை இறுதியாக உடைய வடிவங்களை அடிப்படை வடிவமாகக் கொண்டு, ளகரம் பிற உருபன் எதுவும் தொடராமல் வரும்போது கெட்டுவிடும் அல்லது சூனியம் (ϕ) ஆகும் என்று கொள்வார்கள். ள்→ϕ /–# (# என்பது பிற உருபன் எதுவும் தொடராமல் தனித்து அந்தச் சொல் செயல்படுவதைக் குறிப்பதற்கு இடும் குறியீடு. இது வேறு எச்சேர்க்கையுமின்றி வருவது என்னும் பொருள்படும்). இந்தப் புணர்ச்சி விதி இக்காலப் பேச்சுத் தமிழில் இருப்பதைக் கொண்டு முன் காலத்தில் ளகரம் எங்கும் இருந்திருக்க வேண்டும். அதாவது அவ, மக, வந்தா என்ற வடிவங்கள் அவள், மகள், வந்தாள் என்று இருந்திருக்க வேண்டும் என்பதும், சொல்லுக்கு இறுதியில் ளகரம் மறைதல் என்ற ஒலிமாற்றம் ஏற்பட்டிருக்கவேண்டும் என்பதும், அதனால்தான் அவ ல அவள் என்ற சொற்களில்வடிவ மாற்றமும் புணர்ச்சி மாற்றமும் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதும் உணர்ந்து கொள்ளத்தக்கன. இதுவே அகமீட்டுருவாக்கம் ஆகும். இங்கு எழுத்து மொழியில் அவள், மகள் என்று எங்கும் இருப்பது நம் கருத்துக்கு அரண் செய்கிறது. இதே முறையைப் பழங்கால மொழிக்கும் பின்பற்றி அகமீட்டுருவாக்கம் செய்தால் அதற்கு முற்பட்ட கால-தொல் வரலாறு பற்றிய சில உண்மைகள் புலனாகும்.

அகமீட்டுருவாக்க முறையும் விளக்க மொழியியலில் புணர்ச்சி விதி அமைக்கும் முறையும் அடிப்படையில் ஒன்றேயாம். விளக்க மொழியியலில் வரலாற்று உணர்வு இன்றிப் புணர்ச்சி மாற்றங்களை விளக்குவதற்காகப் பொதுமைப் படுத்திக் கூறுவது அகமீட்டுருவாக்கத்தில் வரலாற்று உணர்வோடு மொழி அமைப்பில் ஏற்பட்ட மாற்றத்தைப் பற்றிப் பேசுவதாகும். விளக்க மொழியியலில் அடிநிலைக் கிளவி (Base form) என்றும், புணர்ச்சி விதிகள் (Morphophonemics rules அல்லது Sandhi rules) என்றும் சொல்லப்படுவது முறையே அகமீட்டுருவாக்கத்தில் தொல்வடிவம் என்றும் ஒலிமாற்றம் என்றும் கொள்ளப்படும்.

மலையாள மொழியில் தமிழில் ஐகாரத்தில் முடியும் சொற்கள் அகரமாக மாறியுள்ளன. [பற என்றால் மலையாளத்தில் பறப்பதையும் பறைவதை (பேசுவதை)யும் குறிக்கும்] அதனால், மலையாளத்தில் உள்ள அகரம் தொல் திராவிடத்திலும் இருந்திருக்க வேண்டும் என்றும், அகரம் ஐகாரமாக மாறியது [(தல > தலை, பற > பறை (பேசுதல்)] தமிழில் நடந்த சிறப்பு மாற்றம் என்றும், மலையாள அறிஞர்கள் சொல்லி வந்தார்கள். ஆனால், மலையாளத்தில் பறப்பது என்ற வினையடியின் இறந்தகால வடிவம் பறஞ்ஞு என்றும், பேசுதலைக் குறிக்கும் பற என்பதன் இறந்த கால வடிவம் பறஞ்ஞு என்றும் இடையண்ண வடிவம் இருப்பதால் அதன் தொல்வடிவம் பறைந்து என்று அகமீட்டுருவாக்கத்தால் நிறுவலாம். மலையாள மொழியில் சொல்லுக்கு இறுதியில் ஐகாரம் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யலாம். இந்த வடிவம் தமிழ் போன்ற பிற தென் திராவிட மொழிகளில் இருப்பதால் ஒப்பிலக்கண ஆய்வுக்கு எளிதாக உள்ளது.

அகமீட்டுருவாக்கம் முதன் முதல் எர்மன் கிராசுமன் (Herman Grassman) என்ற அறிஞரால் (1809–1877) கண்டுபிடிக்கப்பட்டது. பழைய கிரேக்க மொழியில் காணப்படும் சில வடிவங்கள், பிற இந்திய ஐரோப்பிய மொழி வடிவத்திலிருந்து மாறுபட்டு வருவதை இவர் கண்டார். அகமீட்டுருவாக்கத்தின் மூலம் பிற இந்திய ஐரோப்பிய மொழியில் உள்ள வடிவம் தொல் கிரேக்கத்திலும் இருந்தமை சில மாற்றங்களால் கிரேக்க மொழியில் மறைந்து காணப்படுகிறது என்று நிறுவினார். அதன் பின்னரே தொல் வரலாற்றை அறியும் வழிகளுள் ஒன்றாக அகமீட்டுருவாக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. செ.வை.ச.

***அகமுகம்-புறமுகம்:*** மனிதர்களுள் சிலர் தம்மைப் பற்றிய எண்ணத்திலேயே இருக்கின்றனர். இத்தகைய பண்புக் கூற்றினை உளவியலார் அகமுகம் (Introversion) என்பர். அகமுகப் பண்புக் கூற்றினை உடையவர்கள் சமூகச் சூழ்நிலைகளிலிருந்து ஒதுங்கியும் தம்வயப்பட்டும் கூச்சம் மிக்கும் இருப்பர். அகமுகப் பண்புக் கூற்றினுக்கு நேர் எதிரிடையான பண்புக்கூறு புறமுகம் (Extroversion) எனப்படும். புறமுகப் பண்புக் கூற்றினை உடையவர்கள் நண்பர்களை விரைவில் தேடிக் கொள்பவராகவும், சமூகம் தம்மை ஏற்றுக் கொள்வதைப் பெரிதும் விரும்புபவராகவும் கூச்சமின்றிப் பிறருடன் பழகுபவராகவும் இருப்பர். இவ்வாறு பண்புக் கூறுகளின் அடிப்படையில் மனிதர்களின் ஆளுமையை முதன் முதல் வகைப்படுத்திய உளவியல் அறிஞர் காரல் உயுங் (Carl Jung) என்பவர். ஆனால், இவ்வாறு மக்களை வகைப்படுத்தல் ஐயத்

திற்கு இடமான முறையாகும் என்று அறிவியலார் கருதுகின்றனர். ஆயினும் அகமுகம், புறமுகம் என்னும் பண்புத் தொகுதிகள் உளவியல் விளக்கங்களில் தலையாய இடத்தைப் பெற்றிருக்கின்றன.

தனி மனிதனின் உள் ஊக்குத் திறன் (Libido) உள் நோக்கிச் செல்லுமாயின், அவன் அகமுக ஆளுமை கொண்டவன் என்றும், வெளியுலகை நோக்கிச் செல்லுமாயின், அவன் புறமுக ஆளுமை கொண்டவன் என்றும் உயுங் இந்த ஆளுமைப் பாகுபாட்டினை விளக்கினார். ஒவ்வொருவரிடமும் சில அகமுகப் பண்புக் கூறுகளும் சில புறமுகப் பண்புக் கூறுகளும்காணப்படுகின்றன. இப்பண்புக்கூற்றுத்தொகுதிகளில் எது வலிமையாக இருக்கிறதோ அதையொட்டியே அவருடைய ஆளுமை, அகமுகம் அல்லது புறமுகமாக அமைகிறது. ஆதலின், எவரும் முற்றிலும் அகமுக ஆளுமையினராகவோ முற்றிலும் புறமுக ஆளுமையினராகவோ இருப்பதில்லை என்று உயுங் கூறினார். இவ்விரு ஆளுமைவகையினரையும் இவர் மேலும் புலனுணர்வு, சிந்தனை, உணர்ச்சி, உள்ளுணர்வு ஆகியவற்றின் அடிப்படையில் நான்கு பிரிவினராகப் பிரிக்க முடியும் என்று கருதினார். பாவ்லவ்வு (Ivan Pavlov) என்னும் உளவியல் அறிஞர் அகமுகம், புறமுகம் ஆகிய இரு பண்புக் கூறுகளுக்கு இணையாகக் கிளர்ச்சி வகை (Excitory Type), உளத்தடை வகை (Inhibitory Type) என்று இரு பண்புக் கூறுகளை விளக்கினார். இவர் மனிதர்களின் ஆளுமைப் பண்புக் கூறுகளுக்கு மைய நரம்பு மண்டல அமைப்பு அடிப்படைக் காரணமாகும் என்று கூறினார். நாய்களைக் கொண்டு இவர் நடத்திய ஆக்க நிலையிருத்தப் பரிசோதனைகளால் இவருக்குக் கிடைத்த கண்டுபிடிப்புகளில் மையநரம்பு மண்டல அமைப்பு, உயிரினங்களின் நடத்தைக்குக் காரணமாக அமைகிறது என்பதும் ஒன்றாகும். பரிசோதனைக் குட்பட்ட நாய்களின் நடத்தைக் கூறுகளை ஆராய்ந்து, அவற்றில் சில கிளர்ச்சி வகைப்பட்டனவாகவும் மற்றவை உளத்தடை வகைப்பட்டனவாகவும் இருந்ததைக் கண்டார். இத்தகைய ஆளுமைப் பாகுபாடு, மனிதர்களிடம் காணப்படும் புறமுகம், அகமுகம் ஆகியவற்றிற்கு இணையானவையாக இருப்பதையும் கண்டறிந்தார். பாவ்லவின் கருத்துகளைச் சோதனை முறையில் உண்மையெனக் கண்டறிந்தவர் ஐசங்கு (H.J. Eysenk) ஆவார். இவர் மனிதர்க்ளிடம் காணப்படும் பண்புக் கூறுகளை ஆராய்வதற்காகத் தரப்படுத்தப்பட்ட பல வினா நிரல்களை அமைத்தார். இவற்றின் உதவியினால் ஐசங்கு பலவகையான மக்களைச் சோதனை செய்தார். இச்சோதனைகளின் விளைவாக இவர் பாவ்லவு கூறிய கிளர்ச்சியுறு வகை என்னும் பண்புக்கூறு மனிதர்களிடம் புறமுக ஆளுமையாகவும், தடையுறுவகை என்னும் பண்புக்கூறு மனிதர்களிடம் அகமுக ஆளுமையாகவும் காணப்படுகின்றன என்று கண்டுபிடித்தார். இவ்விரு வகையினரின் இயல்புகள் நேர் எதிரிடையானவை எனவும் கூறினார். ஐசங்கு நிகழ்த்திய சோதனைகளின் விளைவாக இவர் அகமுக ஆளுமையின் பண்புக் கூறுகளையும் புறமுக ஆளுமையின் பண்புக் கூறுகளையும் வேறுபடுத்திக் குறிப்பிட்டார்.

அகமுக ஆளுமையினர் தாமாகச் செய்யக்கூடிய செயல்களில் மட்டுமே அக்கறை காட்டுவர்; பிறர் நட்பு விழையார்; தனிமையை நாடுவர்; தத்துவ ஆர்வமும் ஆராய்ச்சித் திறனும் கொண்டிருப்பர்; பகற் கனவில் ஈடுபடுவர்; மிகையான அவைக்கூச்சம் உடையவராயிருப்பர்; எளிதில் மனவெழுச்சி வயப்படுபவர்; கற்பனைத் திறன் மிக்கவராய் இருப்பர்; எச்செயலையும் திட்டமிட்டுச் செய்வர்; நம்பிக்கைக்கு உரியவராயிருப்பர். புறமுக ஆளுமையினர் சமூகவயமாதலை விரும்புபவர்; சமூக ஏற்புடைமையைப் பெரிதும் மதிப்பவர்; உரையாடுவதில் ஆர்வம் கொண்டவர்; நட்பு விழைபவர்; தற்புகழ்ச்சியில் ஈடுபடுபவர்; தம் குற்றம் காணாதவர்; தலைமை ஏற்க முன்வருபவர்; தனிமையை விரும்பாதவர்; எதையும் ஆழ்ந்து எண்ணாமல் உள்துடிப்புக்கு (Impulse) ஏற்ப விரைந்து செயல்படுபவர்; தேவைக்குமேல் தன்னம்பிக்கை உடையவராய் இருப்பர்.


மிகையான அளவில் புறமுகப் பண்புக் கூறுகளைக் கொண்டிருப்பவர்களும் மிகையான அளவில் அகமுகப் பண்புக் கூறுகளைக் கொண்டிருப்பவர்களும் இயல்பு நிலையினின்றும் பிறழ்ந்த நடத்தையினையுடையவராக இருப்பார்கள். இவ்விரு மிகை நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலையில் இருப்பவர்கள் சில அகமுகப் பண்புக் கூறுகளையும் சில புறமுகப் பண்புக் கூறுகளையும் உடையவராக இருப்பார்கள். மனிதர்களுள் பெரும்பாலோர் இந்த இடைப்பட்ட ஆளுமை வகையினராக (Ambivert) இருக்கின்றனர். எவ்வகை ஆளுமையினையுடையவராக இருப்பினும் பெரும் இழப்புகள், உளப் போராட்டங்கள், ஏமாற்றங்கள், மனக் குலைவுகள், மன உளைச்சல்கள் ஆகியவை அவர்களுடைய ஆளுமையைச் சீர்குலையச் செய்கின்றன.

அகமுக ஆளுமையினர் இத்தகைய மன உளைச்சல்களுக்கு உள்ளாகும்போது பெரும்பாலும் கிலி, உளச்சோர்வு, பதற்றம், உளப்பீடிப்பு போன்ற உளக் கோளாறுகளுக்கு (Neuroses) உள்ளாகின்றனர். இவர்கள் கடுமையான மனப் போராட்டங்களுக்கு உட்படும் போது உளச்சிதைவு நோய் (Schizophrenia) கருத்துத்திரிபு நோய் (Paranoia) ஆகிய உளப்பிணிகளால் (Psychoses) பாதிக்கப்படுகிறார்கள்.

புறமுக ஆளுமையினர் இத்தகைய கோளாறுக ளுக்கு உள்ளாவதில்லை. இவர்கள் மன உளைச்ச லுக்கு உட்படும்போது உளக்கூறு மாற்றக் கோளாறு (Hysterical Conversion), உளவிரிசல் கோளாறு (Hysterical Dissociation) ஆகியவற்றிற்கு உள்ளா கிறார்கள். இவர்கள் கடுமையான உளப் போராட் டங்களுக்கு உட்படும்பொழுது உளக் கிளர்ச்சிச் சோர்வு நோய்க்கு (Manic Depressive Psychosis) உள்ளாகிறார்கள்.

அகமுக, புறமுகப் பண்புக் கூறுகளை மதிப்பீடு செய்வதற்காகத் தனிப்பட்ட வினா நிரல்கள் அமைக் கப்பட்டுள்ளன. இவற்றில் ஐசங்கினால் அமைக்கப் பட்ட வினா நிரல்களும் நீமன் கோல்சுடெட் சோதனை (Neyman Kohlstet Test) என்னும் 50 வினாக்களைக் கொண்ட வினாநிரலும் பலராலும் அறியப்பட்டனவாகும்.

அகமுக ஆளுமையினர், புறமுக ஆளுமையினர் என்று இரு தனிப்பட்ட வகையினராக மனிதர்களைப் பிரிப்பதில் பல இடையூறுகள் உள்ளன. ஏனென்றால் மனிதர்களுள் ஒருசிலர் மிகையான அகமுகப் பண்பு டையவராகவும் வேறு சிலர் மிகையான புறமுகப் பண்புடையவராகவும் இருக்கின்றனர். மக்களுள் பெரும்பாலோர் இவ்விரு வகையினரின் பண்புக் கூறு களில் பலவற்றைக் கொண்டு, இவ்விரு வகையினருக் கும் இடையே உள்ள நிலையில் காணப்படுகின்றனர். மனிதர்களுள் பெரும்பாலோரிடம் காணப்படும் பண் புக் கூறுகளை எடுத்து அகமுகம், புறமுகம் ஆகிய ஆளுமைகளுக்காகக் கீழே கொடுக்கப்பட்டுள்ள வரை படத்திலுள்ள மணி போன்ற வளைவைப் பெறுகி றோம். இதில் 'இ' யிலிருந்து 'அ' வை நோக்கிச் செல் லச் செல்ல மிகையான அகமுகப் பண்புகளைக் கொண்டவர்களாகவும் 'இ' யிலிருந்து 'பு' நோக்கிச் செல்லச் செல்ல மிகையான புறமுகப் பண்புகளைக் கொண்டவர்களாகவும் இருப்பதைக் காணலாம்.




மேலும் இவ்வரைபடத்திலிருந்து மக்களுள் பெரும் பாலோர் அகமுகத்திற்கும், புறமுகத்திற்கும் இடைப் பட்ட, இரண்டும் கலந்த ஆளுமையினைக் கொண்ட வர்களாக இருப்பதையும் காணலாம்.


மேலும் சூழ்நிலை, தூண்டல் ஆகியவற்றால் ஒருவன் சில சமயங்களில் புறமுகத்தோனாகவும் வேறுசில சமயங்களில் அகமுகத்தோனாகவும் காணப் படுவான். தற்காப்புடன் முன்னெச்சரிக்கையாகச் செயல்படும் பொழுது புறமுகனாகச் செயல்படுவான். ஆனால், அவன் இடையூற்றிலிருக்கும் பொழுதும் புற அழுத்தங்களால் தூண்டப்படும்பொழுதும் அகமுக னாகச் செயல்படுவான். இவ்வாறு அகமுகம், புற முகம் ஆகிய இரு பண்புகளும் ஒரு நடத்தைக் கோலத்தின் இரு துருவங்களாக இருக்கின்றன.

காண்க: ஆளுமை.

கே. அர.

துணை நூல்கள்:

1. Jung, C.G., "The Structure and Dynamics of the Psyche", In Collected works, Vol. 18. Princeton N.J., Princeton University press, 1960.
2. Nicholas S. Dicaprio, "Personality Theories", CBS College Publicity, New York, 1983.



அகமெம்னன் முகமூடி

**அகமெம்னன்,** திராய் (Troy) நகரை முற்று கையிடப் புறப்பட்ட கிரேக்கப் படையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றவர்; மைசினியாவின் புராண கால அரசர். போர் மூண்ட பத்தாம் ஆண்டில் அக மெம்னன் (Agamemnon) தம் மக்களின் விருப்பத்திற் கிணங்க, தாம் கைப்பற்றிய கிரைசீசு (Chryseis) என் பாளை அவள் தந்தையாரிடம் ஒப்படைத்தார். பழிக் குப் பழி வாங்க எண்ணிய அகமெம்னன், பிரிசீசு (Briseis) என்னும் மங்கையை அக்கிலீசுவிடமிருந்து கைப்பற்றிக் கொண்டார். திராய் நகர் வீழ்ச்சியுற்ற பின், அகமெம்னன் ஆர்காசுக்குத் திரும்பிச் சென்றார். வீடு திரும்பிய அதே நாள், அவர் மனைவி கிளதம் நெசத்திராவும் (Clytemnestra) அவள் கள்ளக் காதல

னான ஏசித்தசு (Aegisthus) என்பவனும் இணைந்து சதிசெய்து, அகமெம்னனைக் கொன்றுவிட்டனர். அகமெம்னனின் மகன் ஒரத்தெசு (Orestes) அவர்கள் இருவரையும் கொன்று பழி தீர்த்துக் கொண்டான்.

**அகர்தலா,** இந்திய மாநிலங்களுள் ஒன்றான திரிபுராவின் தலைநகர். இந்நகரம் பங்களாதேசத்தை ஒட்டியுள்ளது. 23½° பாகை வடகுறுக்குக் கோடு இதன் அண்மையில் செல்கிறது. இந்நகர் அரிசி, பருத்தி, தேயிலை, சணல், கடுகு, எண்ணெய் போன்ற உற்பத்திப் பொருள்களின் வாணிக மையமாகும். இங்கு ஒரு விமானத் தளம் உண்டு. இங்கிருந்து கல்கத்தாவுக்கு வானவூர்திப் போக்குவரத்து ஒழுங்காக நடைபெறுகிறது. அகர்தலாவில் (Agartala) வங்காளமொழி நாளிதழ்கள் பல வெளியிடப்படுகின்றன. கைவினைப் பொருள்களைத் திட்டமிடும் மையமொன்று அகர்தலாவில் செயல்படுகிறது. இங்கு மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றும் இயங்குகிறது. அகர்தலாவையும் தர்மநகரையும் இணைக்கும் மின்சாரத் தொடர்புக்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**அகர்வாலா,** வட இந்தியாவில் நிலவும் சாதிகளுள் ஒரு பிரிவு. பெரும் செல்வம் படைத்த வணிகர்கள் அகர்வாலாக்கள். சுறுசுறுப்பிற்கும் கடுமையான உழைப்பிற்கும் பெயர் பெற்ற இவர்களில் சிலர் சமண சமயத்தைச் சார்ந்திருக்கின்றனர். எனினும் சமணர்களல்லாத வைணவக் குடும்பங்களில் இவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள். அகர்சென் அல்லது உக்கரசென் என்னும் அரசரால் நிலைநாட்டப் பெற்ற அகரக அல்லது அகரோக என்னும் ஊரைச் சார்ந்தவர்களாதலால், இவர்கள் அகர்வாலாக்கள் எனப்பட்டார்கள். இவர்களுள் பெரும்பாலோர் சைவர்கள்; பாம்பினைப் புனிதமாகக் கருதுகிறார்கள். சமயப் பற்று மிக்கவர்களாயினும், அண்மைக் காலத்தில் இவர்கள் மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுகிறார்கள். அகர்வாலாக்களுள் சிலர் இந்தியாவின் தலைசிறந்த தொழிலதிபர்களாகத் திகழ்கிறார்கள்; நல்ல பணிகளுக்குப் பெரும் செல்வத்தை வாரி வழங்குகிறார்கள்; அனைத்துச் சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கும் ஆதரவு காட்டுகிறார்கள்.

**அகரம்**[1] : இப்பெயரில் பல ஊர்கள் தமிழகமெங்கும் காணப்படுகின்றன. சென்னையிலிருந்து 42 கி.மீ. தொலைவில் செங்கற்பட்டு வட்டத்தில் அகரம் என்னும் ஓர் ஊர் உள்ளது. கேளம்பாக்கம்–திருப்போரூர் கடற்கரைச் சாலையிலிருந்து தென் மேற்குப் புறமாகச் செல்லும் சாலையில் இவ்வூர் உள்ளது. அகரத்தை அடுத்து மனமதி என்னும் ஊர் உள்ளது. சோழர்கள் காலத்தில் மனமதி அகரத்தின் ஒரு பகுதியாக இருந்தது.

அகரத்தில் கைலாசநாதர் கோயிலும் மனமதியில் திருகாரீசுவரர் கோயில், வைகுந்தப் பெருமாள் கோயில் ஆகியவையும் உள்ளன.

அகரம் சோழர் காலத்தில் வளமிக்க நகரமாக இருந்தது. இங்குள்ள கோயில் கல்வெட்டுகளில் இவ்வூர் வானவன் மாதேவி சதுர்வேதிமங்கலம் என்று சொல்லப்படுகிறது. இவ்வூர் ஆமூர்க் கோட்டத்தில் செயங்கொண்ட சோழ மண்டலத்தில் இருந்தது என்று இக்கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அகரத்தில் உள்ள கைலாசநாதர் கோயில் கல்வெட்டு ஒன்றில் பொன்னி நாடன், செங்கோல் வளவன், பூம்புகார்த் தலைவன் என்பன முதலாம் இராசேந்திரனின் சிறப்புப் பெயர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வூரில் முதலாம் இராசேந்திர சோழன் 4,000 வேதியர்களைக் குடியமர்த்தி வளமங்கை என இதற்குப் பெயரிட்டான் என்றும் இக்கல்வெட்டுகள் கூறுகின்றன.

இங்குள்ள கைலாசநாதர் கோயில் கிழக்கு நோக்கிக் கட்டப்பெற்றுள்ளது. இக்கோயிலில் அர்த்த மண்டபம், முகமண்டபம், கருவறை ஆகியவற்றையும் காணலாம். அர்த்த மண்டபம் தூண்களுடன் அமைந்துள்ளது. கருவறையைச் சுற்றியுள்ள மாடக் குழிகளில் தட்சிணாமூர்த்தி, பிரமன், திருமால், துர்க்கை, கணபதி போன்ற மாடத் தெய்வங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**அகரம்**[2] என்னும் பெயரில் பிறிதோர் ஊர் சென்னை–விழுப்புரம் நெடுஞ்சாலையில் விழுப்புரத்திற்கு வடமேற்கில் 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இன்று இவ்வூர், அய்யூர் அகரம் என்று சொல்லப்படுகிறது. இங்குள்ள அபிராமேசுவரர் கோயில் தொன்மையானது. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுகள், முதலாம் இராசராசனின் காலத்திலும், அவர் மகன் முதலாம் இராசேந்திரன் காலத்திலும் நிலங்களை விற்றதைப்பற்றிக் குறிப்பிடுகின்றன.மேலும், இக்கோயிலுக்கு நிலங்களை நன்கொடையாக அளித்தது குறித்தும், நந்தாவிளக்கு அளித்தது குறித்தும் செய்திகள் உள்ளன. முதலாம் இராசராசனின் காலத்தில் அகரத்தைச் சனநாத சதுர்வேதி மங்கலம் என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**அகரவகைக் குறியீடுகள்**: இவை ஒரு வகை எழுத்துமுறை. சிரியாவிலும், பாலசுதீனத்திலும் வாழ்ந்துவந்த வடசெமிதிக் மக்களால் கி.மு. 1500–இல் இந்த அகரவகைக் குறியீடுகள் (Alphabetic Signs) பயன்படுத்தப்பட்டன. இம்முறையில் குறியீடுகளின் எண்ணிக்கை மிகக் குறைவாகும். எனவே இவற்றை மனத்தில் வைப்பது எளிது. ஒவ்வொரு குறியீடும் (Sign) ஓர் ஒலியைக் குறிக்கும். உலக எழுத்து வரலாற்றில் இவை ஒரு முதிர்ந்த வளர்ச்சி

நிலையைச் சுட்டும். அசை எழுத்து (Syllabary) முறையைவிட இதுமேம்பட்டது. எபிரேயம் (Hebrew), உரோமானியம் (Romance) போன்ற மொழிகள் அகரவகை எழுத்துகளை உடையனவாகும். பிற்காலத்தில் தோன்றிய ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளின் எழுத்துகளும் இவ்வகையானவையே.

ஏ.சி. ஏடென் (Hadden, A.C.) என்னும் தொல்லெழுத்தியல் அறிஞர் எழுத்துமுறை வளர்ச்சியை ஐந்து நிலைகளாகப் பிரித்துள்ளார். அவை, சித்திர எழுத்துகள் (Pictographs), கருத்துக்குறியீட்டு எழுத்துகள் (Ideograms), சொற்குறியீட்டு எழுத்துகள் (Verbal Signs), அசைக் குறியீட்டு எழுத்துகள் (Syllabic Signs), அகரவகைக் குறியீட்டு எழுத்துகள் (Alphabetic Signs) என்பனவாம்.

**அகராதி** என்பது பலவகையாகப் பரந்துபட்ட பார்வை நூல்களைக் குறிக்கும். அடிப்படை நிலையில் அகராதி, சொல் தொகுதிகளை நிரல்பட அளிக்கும். பின்னர் அவற்றிற்குரிய பொருள்களைக் கூறும். இத்தொகுதி மொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் கொண்டிருக்கும். அன்றி, சொற்களில் ஒரு கூறாகவும் அமையும். புத்தகப் பின்னிணைப்பில் காணும் சிறுபட்டியலைச் ‘சொற்றொகை (Glossary) என்பர். குறிப்பிட்ட ஒரு நூலுக்குச் சொல்லடைவு திரட்டும்போது சொல்லொப்பீடு காணலாம் சிறந்த பேரகராதி ஒப்பீட்டிற்குரிய சொற்பட்டியலைத் திரட்டித் தரும். ஆங்கிலத்தில் ‘லெக்சிகன்’ (Lexicon) என்பது ‘சொற்றொகுதி’யைக் குறிக்கும். மொழியியலில் இது ஒரு மொழி அமைப்பிற்குரிய பகுப்புக் கூறுகளைக் குறிக்கும். இதனால், இலக்கியம் எழுத்து வடிவில் தோன்றுவதற்கு முன்னரே சொற்றொகுதிகள் இருந்தன என்பர். அவற்றின் பின்னரே அகராதிகள் உருவாயின.

அகரநிரல்: அகராதி தொகுக்கும் கலை அகராதிக்கலை. மொழியியலில் ஒரு கிளை அகராதி இயல். இது, அகராதிக் கலையில் எழும் சிக்கல்களைத் தீர்க்க அறிவியல் நெறியில் கொள்கைகளைக் கூறும். சொற்களை அகர நிரல்படி தொகுப்பது அகராதி முறை ஆகும். வேறுவகையில் சொற்களைத் தொகுத்தால் எளிதில் பயன்பெறலாம் என்ற கருத்துமுள்ளது. பொருளடிப்படையில் தொகுத்த சொற்களஞ்சியத்தை இதற்கு எடுத்துக்காட்டாக உரைப்பர். அதிலும் ஒவ்வொரு பொருளையும் எளிதில் காண அகரநிரல் வேண்டும். இதனால் அகரநிரலின் சிறப்பு நன்கு புலனாகும்.

**அகராதியும் கலைக்களஞ்சியமும்:** அகராதிக்கும் கலைக்களஞ்சியத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிவது எளிது. அகராதி, சொற்களை விளக்கும். கலைக்களஞ்சியம் பொருள்களை விளக்கும். எனினும் நடைமுறையில் இவற்றைக் கண்டு உணர்வது அரிது.

ஒரு மொழி அகராதியில் அம்மொழியின் சொற்பட்டியலும் அதற்குரிய விளக்கமும் அந்த மொழியிலே அமையும். இருமொழி அகராதி, பன்மொழி அகராதி ஆகியவற்றில் ஒரு மொழிச் சொற்களுக்கு வேற்று மொழியிலோ மொழிகளிலோ விளக்கம் அமையும். பொதுவாக அகராதி என்பதன் பொருளை அகரநிரலில் சொற்பதிவுகளமைந்த ஒப்பு நோக்கீட்டு நூல் எனலாம். இதற்கு வாழ்க்கை வரலாற்று அகராதிகள், கவின்கலை அகராதிகள் ஆகியவை தக்க சான்றுகள்.

வரலாற்றுப் பின்னணி: உலகில் அகராதிக் கலை மெதுவாக வளர்ந்ததுபோலத் தமிழ் அகராதிக் கலையும் மெதுவாகவே வளர்ந்தது. இதன் தொடக்க நிலையைத் தொல்காப்பியத்தில் (கி.மு. 3-நூ.) காணலாம். மெல்ல வளர்ந்து இன்றுள்ள அகராதி வடிவினைப் பதினெட்டாம் நூற்றாண்டில் பெற்றது.

**தொல்காப்பியம்:** தொல்காப்பிய உரியியல் சொற்பொருள் பற்றிக் கூறும் தமிழிலக்கணப் பகுதியாகும். மேலும் இந்நூலின் இடையியல், மரபியல் ஆகிய இரு பகுதிகளும் சொற்பொருள் வழக்குப் பற்றிக் கூறும். எளிய சொற்களுக்குப் பொருள் கூறாமல் அரிய சொற்களுக்குரிய பொருளைத் தொல்காப்பியம் கூறும். இக்காலத்தில் எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் (தீர்தல், தீர்த்தல்) அக்காலத்தில் அரும்பொருள் சொற்களாக அமைந்திருந்ததைக் காணலாம்.

நூற்பா வடிவில் சொற்பொருள் கூறும்போது எதுகை நோக்கிச் சொற்கள் அமைந்த பாங்கு உள்ளது. இதில் அகர நிரலோ வேறு அளவை நெறியோ காணப்பெறவில்லை.

பொதுவாகத் தொல்காப்பியம், சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என நான்கு வகையாகப் பகுத்துள்ளது. இதனால் தமிழ்ச் சொற்றொகையின் களங்கள் பற்றி அறியலாம். சொற்பிறப்பியல் அகராதியியலின் சிறப்புக் கூறு. எனினும் அதனை அறிதல் கடினம் என்பது தொல்காப்பியக் கருத்தாகும். தொல்காப்பியத்தில் அகராதி இயற்கூறுகள் சில உள்ளன. பிற்காலத்தில் தோன்றிய நிகண்டுகளுக்குத் தொல்காப்பிய உரியியல் களம் அமைத்துத் தந்தது. தொல்காப்பியத்தின் பின்தோன்றிப் பெயரளவில் தெரிகின்ற சில நிகண்டுக் குறிப்புகள், இறையனார் களவியல் உரை போன்றவை கூறும் செய்திகள் கொண்டு அகராதிக்கூறு

பற்றி ஓரளவு அறியலாம். எனினும் அகராதி பற்றிய இன்றைய கருத்து வடிவில் அவை அமைந்துள்ளன எனக் கூற இயலாது.

நிகண்டின் தோற்றம்: தொல்காப்பியத்திற்குப் பின் பல நூற்றாண்டுகள் கழிந்து சமயத்தைப் பரப்புதற்கெனச் சமய இலக்கியங்கள் எழுந்தன. சமணம், பௌத்தம், சைவம், வைணவம் போன்ற சமயங்கள் தம் செல்வாக்கை நிலைநாட்ட முயன்றன. அப்போது தமிழில் வடசொற்கள் கலந்தன. இச்சமயச் செய்திகளை அறியவும் வடசொற் பொருளைப் புரியவும் ஒப்பு நோக்கீட்டு நூல்கள் தேவைப்பட்டன. இத்தேவையை நிறைவேற்றத் தொல்காப்பிய நெறியில் சொற்பொருள் விளக்கும் நிகண்டுகள் எழுந்தன. 'உரிச்சொல்', 'உரிச்சொற்பனுவல்' என்ற பெயரில் சொற்கூட்டம் என்ற பொருள் தரும் நிகண்டு சுட்டப்பெற்றது. காலவளர்ச்சியில் 'நிகண்டு' என்ற சொல்லாட்சியே நிலைபெற்றது.

திவாகரம்: முதலில் திவாகரர் (9 – நூ.) இயற்றிய 'திவாகரம்' சொற்பெயர்களைத் தெய்வம், மக்கள், விலங்கு, மரம், இடம், பல்பொருள், செயற்கை வடிவம், பண்பு, செயல், ஒலி, ஒருசொல் பலபொருள், பல்பொருள்கூட்டத்தொருசொல் என்பனவற்றைத் தனித்தனியே பன்னிரு பகுதிகளில் பகுத்துக் காட்டும். கி.பி. 1835-இல் வெளிவந்த இதன் முதற்பதிப்பில் பத்துத் தொகுதிகளே பதிப்பிக்கப் பெற்றன. பதிப்பாசிரியர் தாமாகச் சில நூற்பாக்களை இயற்றிச் சேர்த்துள்ளார். இவ்வாறு பிறர் சேர்த்தவை தவிர ஏறத்தாழ 9500 சொற்கள் இதில் உள்ளன. பின்னர் வந்த பதிப்பில் மேலும் புதிய சொற்கள் சேர்க்கப்பெற்றன. தொல்காப்பிய உரியியலை விட இது சொல் எண்ணிக்கையில் பலமடங்கு பெருகியுள்ளது.

பிங்கலம்: திவாகரப் பாகுபாட்டை ஒட்டியே பிங்கலம், சூடாமணி, உரிச்சொல், கயாதரம் முதலிய நிகண்டுகள் அமைந்துள்ளன. திவாகரத்தை அடுத்துப் பிங்கலரின் பிங்கலந்தை நிகண்டு (10 – நூ.) வெளிவந்தது. பலவழிகளில் இதன் சொல்வளம் பெருகியுள்ளது. இதன் பத்துத் தொகுதிகளில் 14700 சொற்களுக்கு மேல் உள்ளன. பிற்காலத் தமிழிலக்கணமாம் நன்னூல் (நூ. 460) இதன் சிறப்பைத் தனியே சுட்டும்.

பெயர்தெரியா நிகண்டுகள்: இவ்விரு நூல்களின் காலத்திற்கும் பதினாறாம் நூற்றாண்டுக்கும் இடையே பல சொற்றொகை நூல்கள் எழுந்தன. எனினும் தொல்காப்பிய இளம்பூரணருரை (தொல். சொல். 390), யாப்பருங்கல விருத்தியுரை (1916. பக். 222), திவ்வியப் பிரபந்தவுரை ஆகியவை குறிப்பிடும் நிகண்டுகளும், அச்சேறாத வேறு சில நிகண்டுகளும் பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவற்றால் பல நிகண்டுகள் காலவெள்ளத்தில் மறைந்தன என அறிகிறோம்.

பிங்கலந்தைக்குப் பின் தோன்றிய சிறுநூல் உரிச்சொல் நிகண்டு. இதனைக் காங்கேயர் (14 – நூ.) பத்துத் தொகுதிகளில் 3200-க்குட்பட்ட சொற்கள் கொண்டு தொகுத்துள்ளார். இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. பின் வெளி வந்த பதிப்புகளில் கடைசி இரு தொகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

கயாதரம்: இராமேச்சுரத்தில் பிறந்த கயாதரர் (15 – நூ.) கயாதரம் என்ற நிகண்டைக் கட்டளைக் கலித்துறை யாப்பில் இயற்றினார் இதில் பதினொரு தொகுதிகள் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளன. இதனால் இந்நூலை மனனம் செய்வது எளிது. இதில் 10500 சொற்கள் உள்ளன.

சூடாமணி நிகண்டு: நிகண்டு சூடாமணியை மண்டல புருடர் எனும் சமணர் (16–நூ.) தொகுத்தார். விருத்தப்பாவில் இந்நூல் உள்ளது. சோழப் பேரரசின் பின்வந்த குழப்ப நிலையில் தோன்றிய சொற்களையும் இதில் காணலாம். இந்நூலின் பன்னிரு தொகுதிகளில் 11000 சொற்கள் உள்ளன. இதன் பதினோராம் தொகுதியை மாணவர்கள் மனனம் செய்து வந்தனர். இந்நிகண்டே மக்களிடம் நன்கு செல்வாக்குப் பெற்று விளங்கியது. நூற்றுக்கு மேற்பட்டு இதன் பதிப்புகள் வெளிவந்தமை இக்கருத்தை வலியுறுத்தும்.

அகராதி நிகண்டு: அகராதி நிகண்டு என்ற நூலைப் புலியூர்ச் சிதம்பர இரேவண சித்தர் இயற்றினார். அகரம் முதலாகச் சொல்நிரல் அமைவதை இவரே முதலில் நிகண்டில் எடுத்தாண்டார். முதல் எழுத்தை மட்டும் அகர வரிசையில் ஒழுங்குபடுத்தினார். இந்நிகண்டு தோன்றிய காலம் கி.பி. 1594. இந்நூலில் 3334 நூற்பாக்கள் உள்ளன. ஒருபொருள், இருபொருள் கொண்ட சொற்கள் 3368 தனியே தொகுக்கப்பட்டுள்ளன இவர் அகர வரிசையில் நூற்பாக்களை இயற்றத் திருநாவுக்கரசரின் (7 – நூ.) 'சித்தத்தொகைத் திருக் குறுந்தொகை' போன்றவை தூண்டியிருக்கலாம். அகரவரிசையில் எழுந்த முதல் ஒப்பு நோக்கு நூல் இதுவே. தமிழ் அகராதி வரலாற்றில் இது தனியிடம் பெறும் சிறப்புடையது அகர வரிசை அமைப்பைச் சுட்ட இவர் பயன்படுத்திய அகராதி என்ற பெயர், இன்று அகராதிக்குரிய நூற்பெயராகவே அமைந்துவிட்டது.

ஆசிரிய நிகண்டு: ஊற்றங்கால் ஆண்டிப்புலவர் (17–நூ.) ஆசிரிய நிகண்டு எழுதினார். இவர்க்கு முன்னர் வந்த எல்லா நிகண்டுகளிலுமுள்ள சொற்களை

இந்நிகண்டு கொண்டுள்ளது. ஆசிரிய விருத்தத்தில் அமைந்த இந்நூலில் 12000 சொற்கள் உள்ளன.

பல நிகண்டுகள்: கைலாசநாதர் (17- நூ.) என்பவர் தம் நிகண்டைத் திவாகர நெறியிலிருந்து மாற்றிப் படைத்துள்ளார். இந்நூலின் 56 பகுதிகளில் ஏறத்தாழ 15000 சொற்கள் உள்ளன. திருவேங்கட பாரதி (17-நூ.) கலித்துறையில் அமைந்த 'பாரதி தீபம்' என்ற நிகண்டில் 13000 சொற்கள் அமையப் படைத்துள்ளார்.

சிதம்பரக் கவிராயரின் (18-நூ.) உசித சூடாமணி நிகண்டு விருத்தப்பாவில் அமைந்துள்ளது. அரும்பொருள் விளக்க நிகண்டு அருமருந்தைய தேசிகரால் (18-நூ.)விருத்தப்பாவில் 12000 சொற்களைக் கொண்டு இயற்றப்பட்டது. பொதிகை நிகண்டின் ஒருபகுதி ஆசிரியப்பாவிலும் மற்றொரு பகுதி நூற்பாவிலும் சாமிநாதக் கவிராயரால் (18-நூ.) இயற்றப்பட்டது. முதல் ஒன்பதியல்களில் 14500 சொற்கள் உள்ளன. திருநெல்வேலி வட்டார வழக்குச் சொற்களை இவற்றில் காணலாம். ஔவை நிகண்டு என்ற பெயர் மட்டும் தெரிகிறது. இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. இதுபோன்றே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் கந்தசுவாமியம், அபிதானச் செய்யுட் சிந்தாமணி, பொதிய நிகண்டு ஆகியவை தோன்றின என்பர்.

நாமதீப நிகண்டு: சிவசுப்பிரமணியக்கவிராயர் (19-நூ.) பதினாறு இயல்கள் கொண்ட நாமதீப நிகண்டை 800 வெண்பாவில் இயற்றினார். இதில் 12000 சொற்கள் உள்ளன. சொற்கள் இலக்கண நெறியில் உயர்திணை, அஃறிணை, எனவும் இறுதியில் பண்புப் பெயர்கள் எனவும் அமைந்துள்ளன.

பலபொருள் ஒருசொல் நிகண்டுகள்: பலபொருள் ஒரு சொற்களைத் தரும் நிகண்டில் பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதி என்ற பிரிவுள்ளது. அறிவியலிலும் இலக்கியத்திலும் அமைந்த கலைச்சொற்கள், பொதுச் சொற்கள் ஆகியவற்றின் உட்பிரிவுகள் இவற்றின் பொருளாக அமையும். எண் வரிசைப்படி சில குழுக்கள் அமையும். திவாகர நிகண்டு இவற்றை இறுதிப் பகுதியில் காட்டும். கால வளர்ச்சியில் இப்பகுதியே தனி நூல்களாக வெளிவந்தது. இவ்வகையில் சுப்பிரமணியக் கவிராயரின் தொகை நிகண்டு ஒன்றாகும். பிறநூல்கள் கூறும் செய்திகளால் இதுபற்றி அறிகிறோம். பொருட்டொகை நிகண்டு என்பது தொகைப் பெயர்களைத் தொகுத்துள்ளது. இதன் ஆசிரியர் குடுமியாமலைச் சுப்பிரமணிய பாரதி. இதைப் பதிப்பித்த ஆசிரியர் சேர்த்த 122 நூற்பாக்களுடன் இதில் 1000 நூற்பாக்கள் உள்ளன. வேதிகிரி முதலியார் கி.பி. 1849-இல் இயற்றிய தொகைப் பெயர் விளக்கம் வெளிவந்தது. இந்நூலில் தொகைப் பெயர்கள் அகர வரிசையில் அமைந்துள்ளன.

இதற்குப் பல ஆண்டுகள் கழிந்தபின் இலக்கணத் திறவுகோல் தோன்றியது. இது எல்லாத் தொகைப் பெயர்களையும் ஒரே அகரவரிசைப் பட்டியலுள் தந்துள்ளது. இனப்பெயர்த் தொகுதிகள் இன்றைய சொற்கருவூலங்களோடும் தொகைப்பெயர்களோடும் ஒத்து நோக்குதற்குரியவை. காலப்போக்கில் இச்சொற்களின் எண்ணிக்கை மிகுந்தது. இத்தகைய வளர்ச்சியால் தனி நூல்கள் எழுந்தன. இவ்வளர்ச்சிக் கூறுகள் அகராதிக் கலையுள்அடங்குவன. இவ்வளர்ச்சியின் முடிவில் அகரநிரலைப் பின்பற்றத் தொடங்கினர்.

தொடக்க நிலையில் பல பொருள் ஒருசொல் தொல்காப்பியத்திலும், திவாகரத்திலும் தனித்த போக்கில் அமைந்துள்ளது. திவாகரத்தில் இவ்வகைச் சொற்கள் 384 உள்ளன. இவற்றைப் பதிப்பாளர்கள் அகரவரிசையில் தொகுத்தார்கள். பிங்கலந்தையில் இவற்றின் எண்ணிக்கை 1091 ஆயிற்று. இவற்றையும் அச்சுநூல்கள் அகரநிரலில் அளித்தன. ஓலைச் சுவடிகளில் இவ்வமைப்பு இல்லை. இச்சொற்களைத் தொகுப்பதில் தொல்காப்பியம், திவாகரம் ஆகிய நூல்களில் எதுகை பயன்பட்டது. மாறாக, எதுகை கொண்டு சொற்களை அறியும் வகையில் சூடாமணி நிகண்டு உருவாகியது இதில் சில குறைகள் நேர்ந்தன. இந்நிலையில் எதுகைக்காகக் கலந்த பிற சொற்களைக் கலப்பெதுகை எனப் பெயரிட்டுத் தனியாகத் தந்தனர்.

நிகண்டின் நோக்கம்: நிகண்டுகள் தொகுப்பதில் மனப்பாடம் செய்வதே முதல் நோக்கமாக இருந்தது. எளிமையாக ஒப்புநோக்கிற்கென எம்முறையும் பயன்படுத்தப்படவில்லை. கயாதரத்தில் அந்தாதித் தொடை பயன்பட்டது. பலபொருள் ஒரு சொல்லுக்கெனத் தனிநூல்கள் எழுந்தன. இதற்கென முதலில் தோன்றிய அருமருந்தைய தேசிகரின் அரும்பொருள் விளக்க நிகண்டு (1763) குறிப்பிடத்தக்கது. இதில் 3200 பலபொருள் ஒரு சொற்கள் பலவகை எதுகை வடிவில் அமைந்துள்ளன. சொல்வளத்திலும் எதுகை நயத்திலும் இது உயர்ந்துள்ளது. இவ்வகையில் சூடாமணி நிகண்டின் பதினோராம் தொகுதியைப் புதுப்பித்து வேதகிரி முதலியார் வேதகிரி நிகண்டென அளித்தார் (19-நூ.). இதில் பலபொருள் ஒரு சொற்கள் 2526 உள்ளன. இத்துறையில் திருநெல்வேலி முத்துசாமி பிள்ளையின் நானார்த்த தீபிகை (1850) எழுந்தது. இது வடமொழிக்கே முதலிடம் அளித்தது. சிறந்த எதுகை அமைப்பில் 5430 பல பொருள் ஒரு சொற்கள் இதில் உள்ளன. இதில் தொடர்பற்ற ஒட்டுச் சொற்கள் நீக்கப்பட்டன. வடமொழி

யில் பலபொருள் ஒரு சொல்லுக்கென ஆரிய நிகண்டு தொகுக்கப்பெற்றது. வீரவநல்லூர் அருணாசல நாவலரின் விரிவு நிகண்டு (1900) இத்துறையில் உரு வாயிற்று. இதில் வழக்குச் சொற்களும் தொழிற் றுறைச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. 3000 சொற் களுக்குப் பொருள் கூறும் சிந்தாமணி நிகண்டை யாழ்ப்பாணம் வைத்தியலிங்கம் பிள்ளை (1874) வெளியிட்டார். இத்தகைய பலபொருள் ஒருசொல் அகராதிகளின் தனித்தன்மையை எதுகை அமைப்பில் காணலாம். இதனால் மனப்பாடம் செய்யும் நோக் கைக் காட்டிலும் ஒப்புநோக்குமுறை முதலிடம் பெற் றது. 1984-இலும் மால்முருகனாரின் தமிழ் உரிச் சொல் பனுவல் இந்நெறியில் வெளிவந்தது.

அகரநிரல் வளர்ச்சி: பதினெட்டாம் நூற்றாண் டில் அகரநிரல் பற்றிய கருத்து வளர்ச்சிபெற்றது. திவாகரத்தின் பதினோராம் பிரிவை அகரநிரலில் பலபொருள் ஒரு சொற்களை ஈற்றெதுகை நோக்கித் தொகுத்தனர். வைணவ உரையில் காணும் கடின மான மணிப்பிரவாள நடையில் உள்ள சொற்களுக்கு அகரவரிசையில் பொருள் கூறினர். இவ்வாறு தொகுத்த சொற்கோவை இருநூறு ஆண்டுகட்கு முற்பட்டது. கி.பி. 13, 14-ஆம் நூற்றாண்டுகளில் காணும் பேச்சு வழக்கை அறிய இது உதவும். இதில் சொற்களுக்குரிய விளக்கம் வடமொழியிலுள்ளது. அகரநிரல் பற்றிய ஆர்வம் அகராதிகள் உருவாவதற் குரிய வழிகளை வகுத்தது.

சதுரகராதியின் தோற்றம்: தமிழில் அகரநிரல் படி வீரமாமுனிவரின் (Father Beschi) சதுரக ராதி (1732) எழுந்தது. அதற்குமுன் அகராதி ஓலைச் சுவடி ஒன்று அகராதி மோனைக்ககராதி யெதுகை (17-நூ.) என்றபெயரில் இருந்தது. அதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. சொல்லில் இரண்டாம் எழுத்து என்ற அளவிலேயே அகரநிரல் பின்பற்றப்பட்டது. இதில் 7500 சொற்கள் உள்ளன. உருபுகள், தொடர் கள், சிறப்புப் பெயர்கள் ஆகியவற்றைத் தொகுத் துள்ள இது நிகண்டு நெறியில் சொற்பொருள் கூறும்.

திவாகரம், உரிச்சொல் நிகண்டு, சூடாமணி, நாமதீபநிகண்டு ஆகியவற்றில் காணும் சொற்களை அகரநிரலில் பத்துப் பிரிவுகளாகத் தொகுத்துள்ளது, பத்துச் சொல்லகராதி. ஓரெழுத்துச் சொல், ஈரெ ழுத்துச் சொல் போன்றவற்றையும் தனியே தொகுத் துத் தந்துள்ளது.

மேனாட்டார் செல்வாக்கு: தமிழில் அகராதிக் கலை வகைச்சொல், தொகை என்ற நிலைக்கு வளர்ந் தது. மனைநிலையிலிருந்து ஒப்புநோக்கு நிலைக்குச் சென்றது. இரண்டாம் எழுத்துவரை அகரநிரல் முறை உருவாகியது. இந்நிலையில் மேனாட்டார் செல்வாக்கும் தமிழில் பரவியது.

ஐரோப்பிய வணிகர்களுடன் தமிழகத்திற்குக் கிறித்துவப் பாதிரிமார்களும் வந்தனர். இவர்களால் தமிழ் அகராதிக் கலை பெரிதும் வளர்ந்தது. இவர் கள் தம் மதத்தைப் பரப்ப இந்நாட்டு மொழியையும் மக்களையும் நன்கு அறிய முதலில் முயன்றனர். முக் கிய ஊர்களில் தங்கித் தமிழர்களுடன் பழகி அவர் களின் பழக்க வழக்கங்களை நன்கறிந்தனர். தம் முயற்சிக்கு உறுதுணையாக அச்சகங்களையும் நிறு வினர். தமிழில் வெளிவந்த முதல் அகராதியாகத் தமிழ்-போர்ச்சுகீசிய அகராதியை, கி.பி. 1679—இல் அச்சிட்டனர். இதனை ஆந்தெம் டி புரோயென்கா (Antem de proenca) தொகுத்தார் என்பர். இத னைத் திப்புசுல்தான் ஆணையால் எரித்துவிட்டதால் இதுபற்றி வேறு செய்திகள் தெரியவில்லை. கி.பி. 1712-இல் பார்த்தலோமியோ சீகன்பால்கு (Bartholmaeus Ziegenbalg), டிக்சனரியம் தமுலிகம் எழுதி னார். இது அச்சாகவில்லை.

வீரமாமுனிவர் பணி: அக்காலத்தில் தமிழகத்தில் கிறித்துவத்தைப் பரப்பி வந்த வீரமாமுனிவர் தமிழி லக்கியங்களை நன்கு கற்றார். எல்லோரும் நம்பத் தக்க அகராதி ஒன்றுதேவை என உணர்ந்தார். அத னால் சதுரகராதியைத் தொகுத்தார். அதற்கு நீண்ட நெடும் பெயரை வின்சன் (Vinson) அளித்தார். இவ் வகராதி பழைய நிகண்டுகளின் போக்கை மாற்றிப் புதிய வழியைக் காட்டியது. தெளிவு பெறவேண்டிச் செய்யுள் வடிவை நீக்கியது. அகரநிரலை முழுதும் பின்பற்றியது. கடினமான மிகப்பழஞ்சொற்களைக் கைவிட்டது எளிய சொற்களை ஏற்றுக்கொண்டது. சதுரகராதி என்பது நான்கு அகராதி எனப் பொருள் படும். முதல் பிரிவு பெயர் பற்றியது. இதில் ஒவ் வொரு சொல்லுக்கும் உரிய பல பொருள்கள் உள் ளன. இரண்டாம் பிரிவு ஒரு பொருளுள்ள பலசொற் களைத் தொகுத்துள்ளது. மூன்றாம் பிரிவு பல்வேறு துறைக்குரிய கலைச்சொற்களைக் காட்டும் நான் காம் பிரிவு தொடை அகராதி ஆகும். நிகண்டு சூடாமணியில் காணும் பதினோராம் தொகுதியுடன் இதன் முதல், நான்காம் பிரிவுகள் ஒத்துள்ளன. பன்னிரண்டாம் தொகுதியின் செய்திகளைக் கொண் டது, மூன்றாம் பிரிவு. நிகண்டுகளில் காணும் சொற் களின் அடைவாகச் சதுரகராதி விளங்குகிறது. அக ராதி என்ற சொல்லின் பொருளுக்கேற்பத் தலைப் பில் அகராதி என்ற சொல்லைப் பெற்றிருப்பது சது ரகராதியே. இவ்வகராதியைப் பலமுறை திருத்தி வெளியிட்டனர். பொருளகராதியை எல்லிசு (Ellis) என்பவர், சிற்றம்பல ஐயர் உதவியுடன் கி.பி.1819-இல் வெளியிட்டார். தாண்டவராய முதலியார், இராமச் சந்திரக் கவிராயர் மேற்பார்வையில் கி.பி. 1824-இல் சதுரகராதி முழுதும் வெளிவந்தது. அத்துடன்

பிற்சேர்க்கையும் இணைத்தனர். சுமித் (Rev. Smith) கி.பி. 1835-இல் வெளியிட்ட இதன் இரண்டாம் பதிப்பில் பெயர்ப் பகுதி கொண்டுள்ள சொற்கள் மட்டும் 12400 ஆகும். முதல் நூலில் இவ்வளவு சொற்கள் இல்லை, இப்பதிப்புகளில் சொல்லின் பல பொருளும் அகர வரிசையில் அமைந்துள்ளன. இது சுவடிகளில் காணப்பெறவில்லை.

பலவகை அகராதிப்பணி: வீரமாமுனிவர் 9000 சொற்களுள்ள தமிழ்-இலத்தீன் அகராதி (1742), தமிழ்-பிரஞ்சு அகராதி (1744), போர்ச்சுகீசிய-இலத்தீன்-தமிழ் அகராதி ஆகியவற்றைத் தொகுத்தார். இவர் இலத்தீன்-தமிழ் அகராதியும், கொடுந்தமிழ் அகராதியும் தொகுத்தார் என்பர். பின்னுள்ள மூன்று நூல்கள் கிடைக்கவில்லை. சதுரகராதியின் பல சுவடிகள் கிடைப்பதால் இதன் செல்வாக்குப் புலப்படும். இச்சுவடிகளில் முதல் நூலிலில்லாத பல புதுச் சொற்களைச் சேர்த்துள்ளனர்.

தமிழ் –ஆங்கில அகராதி: முதல் தமிழ்–ஆங்கில அகராதி கி.பி. 1779–இல் வெளிவந்தது. சாம் பிலிப் பெப்ரீசியசும் (Joham Philip Fabricius), சான் கிறித்தியான் பெரெய்தாப்டும் (John Christian Breithaupt) இணைந்து இவ்வகராதியை உருவாக்கினர். தென்னகத்தில் கிறித்துவ மதம் பரப்ப வந்த திருச்சபையினர்க்கும், வணிகர்க்கும் உதவுதற்கு என இதனை வெளியிட்டனர். கிரந்தச் சொற்களைக் குறிக்க உடுக்குறி (*) இட்டிருந்தனர். பல மரபுத் தொடர்கள் அடங்கிய 9000 சொற்கள் இதில் இருந்தன. அக்காலத்தில் தமிழை ஐரோப்பியர் மலபார் மொழி எனக் குறிப்பிட்டதை இதன் முகப்புப் பக்கம் கூறும். இது சிறிய அகராதி எனினும் பல அறிஞர்களை அகராதித் துறையில் ஈடுபடச் செய்தது. கி.பி. 1833-இல் யாழ்ப்பாணத்தில் அமெரிக்கத் திருச்சபையார் தமிழ்-ஆங்கில அகராதி உருவாக்கத் திட்டமிட்டனர். நைட் (Knight), காபிரியேல் திசேரா (Gabriel Tissera), பெர்சிவல் (Percival) என்போர், இதற்குரிய சொற்களைத் திரட்டினர். எனினும் இப்பணி இடையில் நின்றுவிட்டது. பைபிள் இறையியல் அகராதியை என்றி பவர் (Henry Power) கி.பி. 1841–இல் வெளியிட்டார்.

உரிய சொற்களின் துணை கொண்டு சந்திரசேகரப் புலவரின் தமிழ் அகராதி வெளிவந்தது (1832). இதனை யாழ்ப்பாண அகராதி எனவும் மானிப்பாய் அகராதி எனவும் குறிப்பிடுவர். இதிலும் நான்கு பகுதிகள் இருந்தன. சொல் தொகுதி மிகுதியாக இதில் உள்ளது. அகர வரிசையில் 58,500 சொற்கள் திரட்டப் பெற்றன. வில்சன் (Wilson) வடமொழி அகராதியிலிருந்து சொற்களை இதில் சேர்த்தனர். தமிழ் மக்களின் பேச்சு வழக்கு, நாட்டு வழக்கு என்பவை மிகக் குறைவாகக் காணப்பெறும். பொருள் விளக்கமும் அகரவரிசையில் உள்ளது. இதனையடுத்து, கி.பி. 1850-இல் ஒரு சொற் பல பொருள் விளக்கம் என்னும் சிறு அகராதி வெளி வந்தது. விசாகப்பெருமாள் ஐயரின் வழியில் அண்ணாசாமி பிள்ளை இதைத் தொகுத்தார். சூடாமணியின் பதினோராம் தொகுதியில் காணும் சொற்களை இதில் காணலாம். தனித்து வழங்கும் சிறப்புடைய சொற்களை இது விரித்துக் காட்டும். இதற்கிடையே அமெரிக்கத் திருச்சபையின் பேரகராதி வின்சுலோவால் (Winslow) கி.பி. 1842-இல் வெளிவந்தது. சுபால்டிங்கு (Spaulding) அதனை கி.பி. 1852-இல் திருத்தி வெளியிட்டார்.

இராட்லெர் அகராதி: இதற்குச் சற்று முன்னர் இராட்லெர் (Rottler) தமிழ் ஆங்கில அகராதியைத் (1830) தொகுத்தளித்தார். அதனை நால்வர் திருத்தம் செய்து கி.பி. 1834-இல் வெளியிட்டனர். இடையில் ஆசிரியர் மறைந்தார். டெய்லரும், வேங்கடாசல முதலியாரும் இதன் பதிப்பாளராயினர். முழுமையாக கி.பி. 1841–இல் இது வெளிவந்தது. சதுரகராதியில் காணும் சொற்களையும் பொருளையும் இது நன்கு பயன்படுத்திக் கொண்டது. வீரமாமுனிவரின் மற்ற அகராதிகளும், டிபோர்கசின் (De Bourges) தமிழ்-பிரஞ்சு அகராதியும் இதற்கு நன்கு பயன்பட்டன. சோதிடம், புராணம், அறிவியல் ஆகிய துறைச்சொற்கள் இதில் இல்லையென வின்சுலோ அகராதி முன்னுரை கூறும்.

வின்சுலோ அகராதி: முன்னர் நைட முதலியோர் தொகுத்த சொற்றொகுதியைப் பயன்படுத்தி வின்சுலோ தமிழ் - ஆங்கில அகராதி கி.பி. 1862-இல் வெளி வந்தது. இராமானுசக் கவிராயர், விசாகப்பெருமாளையர், வீராசாமி செட்டியார் போன்றவர்கள் இதற்குத் துணை புரிந்தனர். இதில் இலக்கியச் சொற்களும் பொதுமக்கள் வழக்குச் சொற்களும் உள்ளன. சோதிடம், புராணம், அறிவியல் துறை பற்றிய சொற்களும், ஆசிரியர், கவிஞர், வீரர் ஆகியோர் பெயர்களும் இதில் தொகுக்கப் பெற்றதால் சொல் அளவில் இது மிகப் பெரிய அகராதியாக விளங்கியது. ஏறத்தாழ 67,000 சொற்கள் இதில் உள்ளன. வடமொழிச் சொற்கள் 8,000-க்குள் தொகுக்கப்பெற்றன. இவ்வகராதி வினையின் வேர்ச்சொல் வடிவை முதன் முதலில் தருகிறது. தமிழ்ச் சொற்களிலிருந்து வடசொற்களை உடுக்குறி தந்து பிரித்துக் காட்டும். வேண்டுமிடத்து வில்சனின் வடமொழி அகராதி மேற்கோள்களைத் தரும். முதன்மைச் சொற்களுக்கு விளக்கம் கூறும்போது எடுத்துக்காட்டுகளையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தந்துள்ளது. இது பல வழிகளில் மக்களுக்கு நன்கு பயன்பட்டுப் பரவியது.

சுருக்க அகராதிகள்: கையடக்கத் தமிழ் - ஆங்கில அகராதியையும் மக்கள் பெரிதும் பெற விழைந்தனர். போப் (Pope) கி.பி. 1859-இல் வெளியிட்ட 'தமிழ்க் கையே'ட்டில் தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ்ச் சொல்லடைவுகளை இணைத்துள்ளார். இவற்றைப் புதுக்கிப் பின் தமிழ் - ஆங்கிலச் சுருக்க அகராதி வெளிவந்தது. இது வடமொழி, அரபிச் சொற்களைத் தனியே எடுத்துக்காட்டுகிறது. வினையின் வேர்ச் சொல்லையும் தனியே கூறும். கல்வித்துறையினர் கி.பி. 1870-இல் செவ்விய தமிழ் - ஆங்கிலச் சுருக்க அகராதியை வெளியிட்டனர். இதனைத் திருத்தம் செய்து விரிவாக்கி,கி.பி. 1888-இல் விசுவநாதபிள்ளை அளித்தார்.

யாழ்ப்பாண அகராதியைத் தொடர்ந்து அகராதிச் சுருக்கம் அல்லது தமிழ்க்கையகராதியை விசயரங்க முதலியாரும், இராசகோபால பிள்ளையும் கி.பி. 1883-இல் தொகுத்தனர். 3000 சொற்களுக்கு மேல் இதில் இருந்தன. பெயர், வினையாகப் பயன்படும் சொற்கள் பின்னிணைப்பில் உள்ளன. இவ்வகராதி, மாணவர் நலத்திற்குப் பெரிதும் உதவியது. கையடக்கமான சுருக்க அகராதியின் தேவை பெருகவே, தரங்கம்பாடி அகராதி கி.பி. 1897-இல் வெளிவந்தது. வினைச்சொல்லின் கீழ் அதன் ஆக்கச் சொற்களும் தொடர்களும் அமைந்துள்ளன. வழக்கு வீழ்ந்த அருஞ்சொற்கள் இவ்வகராதியில் இடம் பெறவில்லை. 33,000 சொற்பதிவுகள் இதில் அடங்கியுள்ளன.

இருமொழி அகராதிகளின் விளைவு: இத்தகைய இருமொழி அகராதிகளால் ஒருமொழி அகராதி வளர்ச்சி குன்றியது. யாழ்ப்பாண அகராதியை விரிவுபடுத்திப் பேரகராதி அல்லது விரிவகராதியாக அளித்தனர். ஆர்வத்தால் பல புதிய பதிப்புகள் வெளிவந்தன. அவற்றில் பிழை மிகுதியாக இருந்தது.

நா. கதிரைவேற்பிள்ளை அகராதி: இக்குறைக்கு அப்பாற்பட்டது நா. கதிரைவேற்பிள்ளையின் பதிப்பு. பொருள் அகராதியில் மிகுதியாக வேறு பலவற்றை இணைத்தார். சி. டபிள்யூ. கதிரைவேற்பிள்ளையின் அகராதியொன்று 1904-இல் வெளிவந்தது. இதனை அறிஞர்கள் பாராட்டினர். வடமொழிச் சொற்களை வரையறையின்றி இவர் தமிழகராதியில் சேர்த்தார். சாத்திரங்களில் காணும் எல்லாச் சொற்களையும் தொகுத்தளித்ததால், மற்ற அகராதிகளிலுள்ள சொற்களைவிட மிகுதியாகத் தர இயலும் என்று எண்ணியதின் விளைவாக இது நேர்ந்தது. மருத்துவம், தாவரவியல் போன்ற துறைச் சொற்களும் இதில் உள்ளன. இதில் சொல்லின் எண்ணிக்கை பெருகியது. வடமொழியிலுள்ள எல்லாச் சொற்களையும் சேர்க்க வேண்டுமென்று இவ்வகராதி தொகுத்தவர் விரும்பினார். பிற்காலத்தில் வெளிவந்த அகராதிகள் இந்நோக்கில் சொல்லெண்ணிக்கையைப் பெருக்க வடமொழி அகராதிச் சொற்களை அவ்வாறே எடுத்தாண்டனர். சி. டபிள்யூ. கதிரைவேற்பிள்ளை தமிழ் இலக்கியத்தைச் சிறப்பாகக் கற்று அதிலுள்ள சொற்களையும் தொகுத்தார். பொருள் விளக்கத்திற்குச் சிறந்த நூல்களிலிருந்து மேற்கோள்களை நன்கு எடுத்தாண்டுள்ளார். வடமொழிப் பொருளின் மூலத்தையும் காட்டியுள்ளார். பொருள் கூறுவதில் அகர நிரல் அமைந்துள்ளது. சொற்பிறப்பும் இதில் காணப் பெறும். இவற்றையெல்லாம் தொகுத்த ஆசிரியர் இது அச்சில் வெளிவருமுன் மறைந்தார். இப்பணியை மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடர்ந்து மேற்கொண்டது. இது சங்கத்தகராதியாக வெளிவந்தது. முதல் தொகுதி வெளியாகிப் (1910) பதின்மூன்றாண்டுகள் கழிந்து இரு தொகுதிகள் வந்தன. இம்மூன்று தொகுதிகளில் ஏறத்தாழ 63900 சொற்கள் உள்ளன.

யாழ்ப்பாணம் குமாரசுவாமிபிள்ளையின் இலக்கியச் சொல்லகராதி 1914-இல் வெளிவந்தது. நிகண்டுகள், காப்பியங்கள் போன்றவற்றிலுள்ள பெயர்களுக்கு இது சிறப்பிடம் தந்துள்ளது. புதிதாக 1500 சொற்களை இதில் சேர்த்துள்ளதாகக் கூறுவர்.

அகராதி வளர்ச்சி: தெளிந்த நல்லகராதிகள் உருவாக்கும் நோக்கம் மேலும் வளர்ந்தது. வின்சுலோ, தரங்கம்பாடி, சங்கம் ஆகிய மூன்று அகராதிகளின் நற்கூறுகளை உட்கொண்டு, குறிப்பிட்ட விதிமுறைகளில் பொருள் கூறி, மற்றவர்கள் புறக்கணித்த சொற்பிறப்புக்கு உரிய இடம் நல்கித் தமிழ்ச் சொற்களின் சொற்பிறப்பைக் கண்டறிந்து, தக்கமேற்கோள்கள் விளங்க ஒரு பேரகராதியை உருவாக்க எண்ணினர். இந்நோக்குகளின் அடிப்படையில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி உருப்பெற்றது.

சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி: சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரடரிக் நிக்கல்சனால் (Frederik Nicholson) உருப்பெற்றது. வின்சுலோ அகராதியைப் புதுக்கி வெளியிடவும், போப் திரட்டிய சொற் செல்வத்தைப் பயன்படுத்தவும் எண்ணினர். சென்னைப் பல்கலைக்கழகமும் சென்னை அரசும் ஒரு முதல்தர அகராதியை வெளிக்கொணரத் திட்டமிட்டன; நாடளாவிய தமிழறிஞர்களின் துணை இதற்குக் கிடைக்குமாறு ஆவன செய்தன. இடையில், போப் இதனை வெளிநாட்டில் பதிப்பிக்கச் செய்த முயற்சி நடைபெறவில்லை. போப் திரட்டியவற்றைச் சென்னைக்குக் கொண்டு வந்தனர். ஐந்தாண்டில் முடிக்கத் திட்டமிட்டனர். சென்னைப் பல்கலைக்கழக மேற்பார்வையில் அகராதி உருவாகத் தொடங்கியது. முதலில் மதுரையில் தொடங்கிய இப்பணி சென்னைக்கு மாறியது. சாண்டலர் (Rev.Chandler) இதன் முதல்

பதிப்பாசிரியர். இதன் முன்மாதிரிப் படிவத்தை வெளிநாட்டறிஞர்களுக்கு அனுப்பி அவர்களின் அறிவுரையைப் பெற்றனர். வின்சுலோ, போப், உ.வே. சாமிநாதையர் ஆகியோர் திரட்டிய சொற்களையும் மற்ற அறிஞர்கள் பல நூல்களிலிருந்து திரட்டிய சொற்களையும் சேர்த்தனர். பொதுமக்களின் உதவியையும் இதற்கெனப் பெற்றனர். அகராதி அமைப்பைப் பல்கலைக்கழகம் ஏற்று, விரைந்து பணியை முடிக்க எண்ணியது. சாண்டலருக்குப்பின் சிலகாலம் அனவரதவிநாயகம்பிள்ளை பதிப்பாசிரியர் ஆனார். இறுதியாக 1926-முதல் வையாபுரிப்பிள்ளை பதிப்பாசியர் ஆகியதால் பணி விரைந்து நடைபெற்றது. பல அறிஞர்களின் கருத்துரைகளை அறிந்து பொருள் விளக்கங்களைச் செம்மை செய்து, மொத்தம் 117762 சொற்கள் கொண்ட ஏழு தொகுதிகளாக வெளியிட்டனர். தேவநேயப்பாவாணர் போன்றவர்கள் இதன் குறைகளைச் சுட்டிக்காட்டினர். எனினும் இன்றுள்ள தமிழகராதியில் மிகச்சிறந்த தனி அகராதியாக இதுவே உள்ளது இதன் சுருக்கத்தமிழ் அகராதி ஒன்று (1955) வெளிவந்தது.

தமிழில் ஒருமொழி அகராதிகள்: தமிழ்ச் சொற்களுக்குத் தமிழில் பொருள்தரும் ஒருமொழி அகராதிகள், நூற்றுக்கும் மேற்பட்ட அளவில் வெளிவந்துள்ளன. இந்நூற்றாண்டில் இதன் வளர்ச்சியை நன்கு காண முடியும். சிறிதும் பெரிதுமாகத் தமிழகராதிகள், தமிழ்க்கல்வி ஆர்வம் பெருகுதற்கு ஏற்ப வெளிவந்தன. அவற்றுள் கா. நமச்சிவாய முதலியாரின் தமிழ் மொழி அகராதி (1918) அனவரதவிநாயகம் பிள்ளையின் மாணவர் தமிழ் அகராதி (1921) பர்மாவிலிருந்து இராவுத்தர் (1922) நாகுமீரா (1923) வெயிட்ட அகராதிகள், பவானந்தம் பிள்ளையின் தற்காலத் தமிழ்ச் சொல்லகராதி (1925) என்பவை குறிக்கத்தக்கவையாகும். அனவரதவிநாயகம் பிள்ளையின் மாணவர் தமிழ் அகராதியில் (1921) 26000 சொற்கள் உள்ளன. பவானந்தரின் அகராதியில் 33000 சொற்களுக்கு மேல் உள்ளன. மாணவர்க்குப் பயன்படும் அளவில் மே.வீ. வேணுகோபாலப்பிள்ளையின் இளைஞர் தமிழ்க்கையகராதி (1928) 8500 சொற்களுடன் வெளிவந்ததை ஒப்பிடின் இவ்வுண்மை தெரியும். பகுத்தறிவுப் போட்டிக்கென வெளிவந்த ஆனந்தவிகடன் அகராதி (1935) தனிப்பட்ட அகராதி ஆகும். விக்டோரியா தமிழ் அகராதி (1934) சூபிலி தமிழ் அகராதி (1935) என்பவை ஆங்கில அரசுக்குரிய மரியாதையைத் தங்கள் பெயரிலேயே தெரிவித்தன. கிருட்டிணசாமி பிள்ளை என்பவர் நவீன தமிழ் அகராதியில் 20500 சொற்கள் அமையத் தொகுத்தார் (1935). இவரே 1939-இல் தமிழமிழ்த அகராதியையும் அளித்தார்.

கையகராதிகள்: கழகத்தமிழ்க் கையகராதி 12500 சொற்களுடன் 1940-இல் வெளிவந்தது இது மாணவரிடையே செல்வாக்குப் பெற்ற அகராதி ஆகும். தமிழகராதிகள், இந்திய நாட்டு விடுதலைக்குப் பின் பல்வேறு வகையில் வெளிவந்தன. நடராசனின் கார்த்திகேயினி புதுமுறை அகராதியும் (1949) ந.சி. கந்தையாபிள்ளையின் செந்தமிழ் அகராதியும் (1950) வெளிவந்தன. சென்னைப் பல்கலைக் கழகத்தின் சுருக்கத் தமிழ் அகராதி 1955-இல் வெளிவரினும், கோனார் தமிழ்க்கையகராதி இதே ஆண்டில் வெளிவந்து பெரும் செல்வாக்குப் பெற்றது.

குழு அகராதி: தனி ஒருவர் அகராதி திரட்டிய நிலையிலிருந்து கழகப்புலவர் குழு திரட்டிய கழகத் தமிழகராதி 1964-இல் உருவாயிற்று. மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையின் தமிழுக்குத் தமிழ்க்கையகராதியும் (1966) மாணவரிடம் பரவியது. லிப்கோ நிறுவனம் பெரிய, சிறிய அகராதிகளை வெளியிட்டது. மணிமேகலைத் தமிழகராதி என்பது (1979) எளிய முறையில் தயாரிக்கப் பெற்றது ஆகும். தமிழக அரசின் வெளியீடாகத் தமிழ்-தமிழ் அகரமுதலி மு. சண்முகம்பிள்ளையால் 1985-இல் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரகராதித் திட்டம்: இந்நிலையில் (1984) தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சையில் பேரகராதி ஒன்றை நான்காண்டிற்குள் முடிக்கத் திட்டம் தீட்டியது. மு. அருணாசலம் தலைமைப் பதிப்பாளராகப் பணியேற்றார். இப் பேரகராதி சங்க கால முதல் இன்றுவரையுள்ள இலக்கிய வழக்குகளையும், வட்டார வழக்குகளையும் பல அறிஞர்களின் ஒத்துழைப்புடன் திரட்டி வருகிறது. இலங்கை, மலாயா, தென்னாப்பிரிக்கா ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் பயன்படுத்தி வரும் சொற்களையும் தொகுக்கிறது. இப்போதைய நிலையில் சொற்பிறப்பைப் பற்றி எண்ணவில்லை. தேவநேயப் பாவாணர் தொடங்கிய செந்தமிழ்ச் சொற் பிறப்பு அகர முதலியைத் தனியே தொகுக்கும் அரசு முயற்சியும் இந்நிலையில் நடந்து வருகிறது. இத்துடன் தனித் தமிழகர முதலி ஒன்று உருவாக வேண்டும் என்ற எண்ணமும் எழுந்து, அதனை உருவாக்கும் முயற்சியும் வளர்ந்து வருகிறது.

தமிழில் இருமொழி அகராதிகள்: தமிழில் இருமொழி, பன்மொழி அகராதிகள் வெளிவந்துள்ளன. ஐரோப்பிய மொழிகள், கிழக்காசிய மேற்காசிய மொழிகள், இந்திய மொழிகள் ஆகியவற்றில் பொருள் விளக்கம் தரும் அகராதிகள் என இவற்றைப் பகுக்கலாம். ஐரோப்பியர் வரவால் அவர்கள் மொழிகளின் துணையுடன் தமிழகராதிகள் பல வெளி வந்தன. குறிப்பாக ஆங்கில ஆட்சி

தமிழகத்தில் நிலைத்திருந்ததால் தமிழ் – ஆங்கிலம்/ ஆங்கிலம் – தமிழ் அகராதிகளின் எண்ணிக்கை மிகுதி யாக உள்ளன.

தமிழ் – ஆங்கில அகராதிகள்: 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியரால் தமிழ் - ஆங்கில அகராதிகள் தொகுக்கப்பட்டன. ஒரு சில தமிழர்களும் அவற்றைத் தொகுத்தனர். இராட்லெரின் தமிழ் – ஆங்கில அகராதி எட்டு ஆண்டுகளில் (1834-1841) உருவாயிற்று. ஐரோப்பிய அலுவலரின் பயன்பாட்டிற்கெனப் பெர்சிவலின் இருமொழி அகராதி உரோமன் எழுத்தில் கி.பி. 1861–இல் வெளிவந்தது. அடுத்த ஆண்டு வின்சுலோவின் அகராதி மக்கள் வழக்குத் தமிழையும் சேர்த்து வெளிவந்தது. விசுவநாத பிள்ளை, இலக்கியத் தமிழ் ஆங்கில அகராதியை கி.பி. 1870–இல் உருவாக்கினார். கி.பி. 1897-இல் பெப்ரீசியசின் இருமொழி அகராதி வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ் ஆங்கிலக் கையகராதியை 1900–இல் டூனேயும் சுபவாக்கியமும் தொகுத்தனர். அடுத்துக் கிருட்டிணசாமி ஐயரின் கையகராதி வந்தது (1921). லிப்கோவின் தமிழ்–தமிழ்-ஆங்கில அகராதி 1966-இலும் பாலகிருட்டிணரின் அகராதி 1976-இலும் வெளிவந்தன. வின்சுலோவின் அகராதி மறுபடியும் 1983-இல் வெளியிடப்பட்டது.

ஆங்கிலம்-தமிழ் அகராதிகள்: ஆங்கிலம் - தமிழ் அகராதிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டின் மத்தியிலும் மிகுதியாக வெளிவந்தன. பெப்ரீசியசின் அகராதி கி.பி. 1786-இல் இரு தொகுதிகளாக வந்தது. கி.பி. 1846-இல் வீராசாமி முதலியார் 20500 சொற்கள் அடங்கிய கையடக்க அகராதி வெளியிட்டார். பள்ளி மாணவர்களுக்கென இவை பயன்பட்டன.

போப் தொகுத்த இருமொழி அகராதி (1905–6) பல பகுதிகளாக இருந்தது. பேச்சு வழக்கையும் அகராதியில் சேர்த்து அவற்றைப் பயிலும் வெளிநாட்டினர் புரிந்து கொள்ள வகை செய்தார். சாமிநாதையரின் அகராதியில் சொற்கள் 12800க்கு மேல் இருந்தன. அதனை மேலும் பெருக்கி வெளியிட்டனர் (1905). யாழ்ப்பாணத்திலிருந்து ஆங்கிலச் சொல் தொடர்களுக்குரிய தமிழ்ச் சொற்களை முத்துத்தம்பிப் பிள்ளை 1907-இல் வெளியிட்டார். கொழும்பில் அடிப்படை ஆங்கிலம் - தமிழ் அகராதி உருவாயிற்று. ஆங்கிலச் சொல்லுக்கு ஆங்கிலப் பொருள், பின்னர்த் தமிழ் என்னும் வகையில் சுப்பிரமணியனின் அகராதி 1947-இல் வந்தது. இதனை ஒட்டித் தங்கவேலுவின் மணி புதுமுறை மாணவர் அகராதி 1949-இல் வந்தது.

ஐம்பதுகளில் இத்தகைய போக்கில் சில அகராதிகள் வந்தன. கா. அப்பாதுரையின் கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி (1952) மிகுந்த செல்வாக்குடன் பரவியது. லிப்கோ நிறுவனம் சிறிய, பெரிய அகராதிகளை (1959) வெளியிட்டது. கொழும்பில் நாகலக்குமி ஆங்கிலம் – ஆங்கிலம் – தமிழ் அகராதியை அளித்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் அ. சிதம்பரநாதஞ் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு ஆங்கிலம் - தமிழ் அகராதி மூன்று பகுதிகளாக முதலில் வெளிவந்தது. (1963-65). யாழ்ப்பாணத்தில் வரதர் மாணவ அகராதி 1970–இல் நாகலக்குமி நெறியில் உருவாயிற்று. பார்ன்வெல் (Parnwell) முதலானோர் உருவாக்கிய ஆங்கிலம் - தமிழ் அகராதி ஆக்சுபோர்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. இதில் மிகுதியாகப் படங்கள் உள்ளன.

தமிழ் – பிரஞ்சு அகராதிகள்: கி.பி. 1750-இல் உருவான பிரஞ்சு-தமிழ் அகராதி பாரிசில் சுவடி வடிவில் உள்ளது. மேலும் பிரஞ்சு – தமிழ் அகராதி பாரிசில் கி.பி. 1831–இல் வெளியிட்டனர். கி.பி. 1845–இல் பெசுகியின் அகராதி வெளிவந்தது. இலத்தீனையும் சேர்த்து மும்மொழியில் பொருள்காணப் பாண்டிச்சேரியிலிருந்து கி.பி. 1846–இல் ஓர் அகராதி வெளியாயிற்று. டூபூய் (Duipuis), மூசே (Mousset) தயாரித்த பிரஞ்சு - தமிழ் அகராதி பாண்டிச்சேரியில் கி.பி. 1850-இல் வெளிவந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல பிரஞ்சு - தமிழ் அகராதிகள் வெளிவந்தன. பாண்டிச்சேரிப் பகுதி, பிரஞ்சு ஆட்சியின் கீழ் இருந்தமை இத்தகைய அகராதிகள் வரக் காரணம் ஆயிற்று. டூபூய், மூசே அகராதியின் பல பதிப்புகள் 1938-இலும் 1942-இலும் வெளிவந்தன.

தமிழ் - உருசிய அகராதி: தமிழ் - உருசிய அகராதியைப் பியாதி கோர்சுகி, உரூதின் ஆகியோர் 1960-இல் பதிப்பித்தனர். இதில் 38000 சொற்கள் உள்ளன. இத்துடன் அந்திரோனவ் எழுதிய தமிழ் இலக்கணச் சுருக்கமும் உள்ளது. 1965-இல் அந்திரோனவ், இப்ரகீமவ், யுனானவா ஆகியோர் உருசிய - தமிழ் அகராதியை வெளியிட்டனர். இது 1960–இல் வெளிவந்த தமிழ் - உருசிய அகராதியின் தொடர்ச்சியாகும். பலதுறைகளிலுள்ள சொற்களில் நடுத்தர, கடினமான சொற்களைத் திரட்டினர். இக்கால இலக்கியத்திலுள்ள சொற்களும் இதில் உள்ளன. இதில் ஏறக்குறைய 24000 சொற்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

தமிழ் - இலத்தீன் அகராதி: தமிழ் - இலத்தீன் அகராதிகள் இரண்டு, வீரமாமுனிவரால் தொகுக்கப்பெற்றன. இவற்றுடன் குரி (Gury) அகராதியும் (1867) சுந்தரசண்முகனார் அகராதியும் (1970) குறிப்பிடத்தக்கவை.

**தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி**: தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி 1879-இல் உருவாயிற்று. ஆண்டெம் டெ புரொயென்கா (Antam de Proenca) இதன் தொகுப்பாசிரியர். இதனை மலேசியாப் பல்கலைக் கழகம் 1966-இல் வெளியிட்டது. ரொதெசே நூலகத்தில் மதிப்புள்ள நூலாகச் செர்குராவின் (Cerquera) தமிழ் - போர்ச்சுகீசிய அகராதி (1855) குறிப்பிடப்பட்டுள்ளது. இராபர்ட் டி நொபிலியின் (Robert de Nobile) தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி 1968–இல் வெளிவந்தது.

**இசுலாம் செல்வாக்கு**: மேற்காசியாவில் அரபு நாடுகளுடன் கொண்ட வணிகத் தொடர்பும் தமிழகத்தில் இசுலாம் பரவியதும் அரபு – தமிழ் அகராதிகள் தமிழகத்தில் உருவாக வாய்ப்பளித்தன. குலாம் காதிர் நாவலர் (1902), முகம்மது அப்துல்லா (1905) ஆகியோர் இத்துறையில் அகராதிகளை வெளியிட்டனர். உவைசு, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் தமிழிலக்கிய அரபுச்சொல் அகராதியை 1983-இல் தொகுத்துள்ளார்.

**கிழக்காசியா**: கிழக்காசியாவில் தமிழர்கள் பழங்காலந் தொட்டுச் செல்லவும், குடியேறவும் வாய்ப்பிருந்தது. புள்ளப்பச் செட்டியாரின் தமிழ் – பர்மா அகராதி (1905) குறிப்பிடத்தக்கது. சதாசிவம் பிள்ளை, தமிழ் – மலாய் அகராதியைத் (1938) தொகுத்தார். மலாய் - தமிழ் அகராதியைச் சாமி (1962) வெளியிட்டார். மாணவர் மலாய் - தமிழ் - ஆங்கிலம் ஆகிய மும்மொழி அகராதியை வேலுசாமி (1964) அளித்தார். தமிழ் – சிங்களம் அகராதியைக் கதுகோவிகே (1960) தொகுத்துள்ளார். தமிழ் - நிப்போங் அகராதியும், சப்பான் - தமிழ் அகராதியும் (1942) வெளிவந்தன.

**இந்திய மொழிகள்**: இந்திய மொழிகளுள் தமிழ் - வடமொழி அகராதியினை வேங்கடேச சர்மா தொகுத்தார். வடமொழி - தமிழ் அகராதிகள் பல வெளிவந்துள்ளன. சென்ற நூற்றாண்டில் வடமொழி திரவிய நிகண்டு (1857), பதார்த்த பாசுகரம் (1878) ஆகியவை வெளியாயின. இந்த நூற்றாண்டில் வடமொழி - தமிழ் அகராதிகளைச் சீனிவாச ஆச்சாரியார் (1928), வேங்கடேச சர்மா (1930), பாபநாசசிவம் (1962) ஆகியோர் தொகுத்து வெளியிட்டனர்.

தமிழ் – இந்தி கோசம் அரிகரசர்மாவால் (1926) தொகுக்கப்பட்டது. அந்தோணிப்பிள்ளை இந்தி – தமிழ் அகராதியைத் (1878) தொகுத்தார். அரிகரசர்மாவின் இந்தி - தமிழ் கோசம் (1925), கா. அப்பாதுரையின் இந்தி – தமிழ் அகராதி (1957) போன்றவை வெளிவந்தன. இரமாபாய் சோசியின் மராத்தி - தமிழ் அகராதி (1961) வெளிவந்தது. தமிழ் - தெலுங்கு அகராதி ஒன்றைச் சேசாசார்லு 1939–இல் வெளியிட்டார். தெலுங்கு - தமிழ் அகராதியைக் கிருட்டிணசாமி ஐயர் (1925) அளித்தார்.

பன்மொழி அகராதிகள் தமிழில் வெளிவந்துள்ளன. தமிழ் - ஆங்கிலம் - செர்மன் (1869), ஆங்கிலம்- மலாய் - சீனம் - தமிழ் (1824), தமிழ் - இந்துசுதானி- பர்மீயம் - ஆங்கிலம் (1886), இந்தி - மராத்தி- தெலுங்கு- தமிழ் (1964), கன்னடம்- தெலுங்கு- தமிழ்- ஆங்கிலம் - இந்துசுதானி (1891) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. ஆறு மொழிகளின் சொற்றொகையும் வெளிவந்துள்ளது. (1884, 1896) பொதுவாகச் சென்ற நூற்றாண்டின் இறுதியில் பல மொழிச் சொற்றொகைகள் பெரிதும் வெளிவந்தன.

அகராதிகளாய்த் தொகுக்கப் பெற்று அச்சில் வெளிவராத நூல்கள் சென்னை உ.வே. சாமிநாதையர் நூலகம் போன்றவற்றில் உள்ளன. அவற்றுள் அகநானூறு அகராதி, தலக்குறிப்புகள், திருக்குறள் பரிமேலழகர் அரும்பத அகராதி, தேவார அருந்தொடரகராதி, புலவர் வரலாறு, வாகட அகராதி போன்றவை உள்ளன.

**பண்டைய அகராதி வளர்ச்சி**: மெசபடோமியாவில் கி.மு. ஏழாம் நூற்றாண்டில் அக்காடியன் (Akkadian) சொற்களின் சிறுபட்டியல் கிடைத்தது. கிரேக்கர்களிடையே அகராதி மரபு பழங்காலத்திலேயே உருவாகியிருந்தது. அலெக்சாண்டிரியா பாம்பிலசு (Pamphilus) அகராதிக்குப் (கி.பி.1 நூ.) பின்னர்ப் பல கிரேக்க அகராதிகள் எழுந்தன. கி.பி. 2 நூற்றாண்டில் அட்டிகிசுட்டுகளின் (Atticists)அகராதிகள் சிறப்பாக உருவாயின. இலத்தீன் மொழியைப் பலரும் மதிப்புள்ள மொழியாகப் பயன்படுத்தினர். அம்மொழி அகராதிகள் பிற்கால ஆங்கில அகராதிகளிடையே தம் செல்வாக்கை நிலைநாட்டின. கி.மு. முதல் நூற்றாண்டில் எழுந்த வாரோ (Varro) எழுதிய புத்தகத்தில் சொற் பிறப்புக்கு மேற்கோள் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்க செயல் ஆகும். இடைக்காலத்தில் பலர் அகராதியில் ஆர்வம் செலுத்தினர். அகராதியைக் குறிக்க, 'காலெபின்' (Calepin) என்ற சொல் வழங்கியது. மக்கள் தங்கள் உடைமைப் பொருளில் மதிப்புடையதாக அகராதியைக் கருதித் தம் தலைமுறையினர்க்குச் செல்வமாக விட்டுச் சென்றனர். பள்ளிகளில் மாணவர் அறிவைப் பெருக்க அகராதிகள் இருக்க வேண்டும் என்றனர். கடினமான சொற்களுக்குப் பொருள் காண இருமொழிப் பட்டியலை இடைக்காலத்தில் பயன்படுத்தினர். நூலின் வரிகளினிடையே சொற்பொருளைக் குறித்தனர். இத்தகைய சொற்பொருள்களைத் திரட்டிச் சொற்கோவையாக அளித்தனர். கி.பி.7,8 – ஆம் நூற்றாண்டுகள் முதல் இவை வழங்கி வருகின்றன.

ஆங்கில அகராதியின் தோற்றம்: இருமொழிச் சொற்றொகையாகப் பிரஞ்சு -ஆங்கிலச் சொற்றொகை வெளிவந்தது. காக்சுடன் (Caxton) 1480-இல் இதனை அச்சிட்டார். அடுத்து இலத்தீன்- ஆங்கிலச் சொற்றொகையை,சான் இசுடான்பிரிட்சு (John Stanbridge) 1496-இல் வெளியிட்டார். குழந்தைகளுக்கென ஒரு சொற்களஞ்சியம் 1499-இல் ஆங்கிலம்-இலத்தீன் சொற்றொகையாக வந்தது. 1530-இல் வெளிவந்த பால்சுகிரேவின் (Palsgrave) ஆங்கிலம்-பிரஞ்சு சொற்றொகை மிகவும் சிறப்பு வாய்ந்தது. எட்டாம் என்றி(Henry VIII) மன்னர் இலத்தீன்- ஆங்கில அகராதி வெளியிட ஆவன செய்தார். அதனால் 1538-இல் சர் தாமசு எலியட் (Sir Thomas Elyot) அதனை வெளியிட்டார். 1573 - இல் ஆங்கிலம்-இலத்தீன்- பிரஞ்சு ஆகிய மும்மொழி அகராதியைச் சான் பேரெடு (John Baret) தயாரித்தார். இதற்கு அவருடைய மாணவர்கள் உதவினர். முதல் எதுகை அகராதி (1570) பீடர் லெவன்சால் (Peter Levens) உருவாக்கப் பெற்றது. தனி ஆங்கில அகராதியை விட இத்தகைய அகராதிகளில் ஆங்கிலச் சொற்கள் மிகுதியாக இருந்தன.

ஆங்கிலச் சொற்களுக்கு ஆங்கிலத்தில் பொருள் தந்த சொற்றொகை, மறு மலர்ச்சியால் மேலும் வளர்ந்தது. வேதாகமத்தை எளிய ஆங்கிலேயரும் புரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இதன் அடிப்படை நோக்கம். சொல்வடிவச் சீர்திருத்தத்தைப் பற்றிச் சான் ஆர்டு (John Hart-1569) எண்ணினார். பள்ளி ஆசிரியர்கள் அகராதி வளர்ச்சியில் ஆர்வம் காட்டினர்; பொது அட்டவணை என 8000 சொற்களை மட்டும் திரட்டினர். எட்மண்டு கூடே (Edmund Coote) என்பவர் 1596-இல் 1400 சொற்களடங்கிய பட்டியலைப் பலவகைப்படுத்தித் தந்தார். இது 'முதல்' ஆங்கில அகராதி எனப் போற்றப் பெற்றது. 1604-இல் ஆங்கில அகராதியொன்று வெளிவந்தது. இதன் அமைப்பு கூடேயின் அகராதியைப் பின்பற்றியது. புல்லோகர் (Bullokar) தாம் தொகுத்த அகராதியில் (1610) பல பண்டை வழக்குகளை உடுக்குறியிட்டுக் காட்டியுள்ளார். 'டிக்சனரி' என்ற சொல்லை முதலில் தம் அகராதித் தலைப்பில் அளித்தவர் காகெராம் (Cockeram-1623) ஆவர். மற்ற அகராதிகளில் காணாத சொற்களை இவர் தந்துள்ளார்.

1702-இல் அகராதிக் கலையையே முழு நேரத் தொழிலாகக் கொண்ட சான் கெர்சியின் (John Kerscy) புதிய ஆங்கில அகராதி வெளிவந்தது. காலத்திற்கு ஒவ்வாத சொற்களை இது நீக்கியதால் பலரும் விரும்பி இதனைப் பயன்படுத்தினர். ஒலிப்பு முறைகுறித்து 1727-இல் அகராதி இணைப்பு ஒன்று வெளிவந்தது.

சான்சன் (Johnson) அகராதி: பல இலக்கிய அறிஞர்கள் ஆங்கில அகராதியின் குறையை உணர்ந்தனர். அதைப் போக்கப் பல முயற்சிகள் உருப்பெற்றன. பல ஐரோப்பிய மொழிகள் தத்தம் மொழியில் அகராதிகளை வெளியிட்டன. பிரஞ்சு, இத்தாலி மொழிகளைப் போன்று ஆங்கிலத்திலும் அகராதிகளை உருவாக்க விரும்பினர். அதனைச் சாமுவேல் சான்சன் (Samuel Johnson) தம் அகராதிப் படைப்பால் (1755) நிறைவேற்றினார். அவர் தம் அகராதித் திட்டம் 1746-இல் தொடங்கியது. அடுத்த ஆண்டு அவர்தம் திட்டம் பற்றிய சிறு தொகுப்பு வெளிவந்தது. இன்றும் அது சிறந்த வழிகாட்டியாக இத்துறையில் விளங்குகிறது. பல இலக்கியங்களைப் படித்துச் சொற்களைத் திரட்டினார். 43,500 சொற்களை அவர் புதிதாகச் சேர்த்தார். தக்க ஆசிரியர்கள் பயன்படுத்திய தக்க சொற்களை எடுத்தார். அவர் தொகுத்த அகராதியில் 118000 மேற்கோள்கள் உள்ள நிலையே அதன் சிறப்பைக் கூறும். அது சொற்களின் பரந்த பொருளை எல்லாம் தொகுத்துள்ளது. சில விளக்கங்கள் நீண்ட சொற்களால் அமைந்திருக்கும். ஆசிரியரின் விருப்பு வெறுப்பும் சில இடங்களில் புலப்படும். அவர் காலத்தில் அவரே திருத்திய பதிப்புகள் வெளிவந்தன. பல ஆண்டுகள் அவர் அகராதி தன்னிகரற்று விளங்கியது.

அமெரிக்க அகராதிகள்: சொல்லொலிப்புப் பற்றிக் குறிப்பிடத்தக்க அகராதியாகப் புசானன் (Buchanan) படைப்பு (1757) உருவாயிற்று. இதனைப் பலரும் பின்பற்றினர். அமெரிக்காவில் பென்சமின் பிராங்க்லின் (Benjamin Franklin) 1751-இல் பள்ளிகளில் அகராதியின் தேவைபற்றி வற்புறுத்தி எழுதினார். அங்குச் சான்சனின் அகராதி இருக்க வேண்டுமெனப் பலரும் விரும்பினர். அமெரிக்காவில் பள்ளி அகராதியை முதல் அகராதியாகச் சாமுவேல் சான்சன் (Samuel Johnson Jr.) 1798-இல் வெளியிட்டார். அமெரிக்கப் புதுச்சொற்களைத் தொகுத்த கொலம்பியா அகராதி 1800-இல் வந்தது. அமெரிக்கியத்தைக் கொண்ட மூன்று அகராதிகள் வெளியிட நோவா வெப்சுடர் (Noah Webster) திட்டமிட்டார். அதன்படி பெரிய அமெரிக்க அகராதி (1800), சுருக்க அகராதி (1806) என்பவை வெளிவந்தன. 1823-இல் இவர் மிகப் பெரிய ஆங்கில மொழி அமெரிக்க அகராதியை அளித்தார். சொற்றொகுப்பும் பொருள் விளக்கமும் இதன் சிறப்பை நிலைநாட்டின.

வரலாற்றுப் பார்வை: பிரான்சு பாசோ (Franz Passow) என்பவர் 1812-இல் மேற்கோள்களைக்

கால வரிசைப்படி தருவதை வற்புறுத்தி எழுதினார். ஐரோப்பிய மொழிகளில் சொற்பிறப்பியல் நன்கு வளர்ந்தது. கிரிம் (Grimm) உடன் பிறந்தவர்களின் செருமன் அகராதி முதற்பகுதி பெருமதிப்புடன் 1852-இல் வெளிவந்தது. இங்கிலாந்தில் வரலாற்றுப் பார்வை முதலிடம் பெறத் தொடங்கியது. வரலாற்று அகராதி தேவை என அறிஞர்கள் உணர்ந்தனர். 1842–இல் தோன்றிய சொற்பிறப்புக் கழகம் ஆங்கில அகராதியின் குறையைப் பல அறிஞர்கள் வாயிலாக உணர்த்தியது; ஒரு புதிய ஆங்கில அகராதியை உருவாக்கத் திட்டமிட்டது. 1879–இல் இதன் ஆசிரியராக முர்ரே(Murray)அமர்ந்தார். பல அறிஞர்கள் இப்பணிக்குத் தாமே முன்வந்து உதவினர். அறுபது இலட்சம் பதிவுகளில் 18,27,306 பதிவுகளையே அச்சிட்டனர். 1884–இல் முதல் தொகுதி வெளிவந்தது. பிராட்லே (Bradley), கெரெய்கி (Craigie), ஆனியன்சு(Onions)ஆகியோரும் ஆசிரியராகி இதனை உருவாக்கினர். 1928-இல் முழுதும் வெளிவந்தது. பின்னிணைப்பு 1933-இல் வந்தது. இது மிகச் சிறந்த அகராதி என்றஉணர்வு நிலைநாட்டப் பெற்றுள்ளது. ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி என்ற பெயர், அகராதி உலகில் ஈடும் இணையுமின்றி விளங்குகிறது. பல தொகுதிகளாக உள்ள இதனைச் சுருக்கி இரு தொகுதியாக்கித் துணைக்கு உருப்பெருக்கி ஆடியும் உடன் தந்துள்ளனர். இதுபோன்று மற்ற அகராதிகளும் (தேசிய அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு) எழுபதுகளில் வெளிவந்துள்ளன.

அகராதிப் போர்: 1828–க்குப்பின் அமெரிக்காவில் அகராதிப் பணி இடையீடின்றி வளர்ந்தது. ஒரு 'அகராதிப் போ'ரே நடைபெற்றது. வெப்சுடர் (Webster), உர்செசுடர் (Worcester) குழுவினர் இதில் முதலிடம் பெற்றனர். இறுதியில் வெப்சுடர் மதிப்பு உயர்ந்தது. உர்செசுடரின் அகராதியில் (1846) பல புது வழக்குகள் காணப்பட்டன. மெரியம் குழுமத்தார் (Merriam Co.) அகராதிப் போரில் ஆர்வம் பூண்டு திருத்தமுற்ற வெப்சுடர் அகராதியை எங்கும் பரப்பினர்.

சிறந்த அகராதிகளில் ஒன்றான விட்னேயின் (Whitney) செஞ்சுரி அகராதியின் 24 பகுதிகள் 1889 முதல் 1891 வரை வெளிவந்தன. இவ்வகராதி கலைக்களஞ்சியம் போன்று செய்திகளைக் கொண்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் காப்மன் பங்க் (Kauffman Funk) அகராதியையும் சேர்த்து நான்கு நல்ல அகராதிகளை அமெரிக்கா வெளியிட்டது.

ஆக்சுபோர்டு (Oxford) ஆங்கில அகராதிகள்: இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆக்சுபோர்டு ஆங்கில அகராதிப்பணி ஓரளவு முழு வடிவு பெற்றது. வணிக நோக்கில் இதன் சுருக்க அகராதி 1911-இல் வெளிவந்தது. கல்லூரி மாணவர்க்கெனப் பல ஆங்கில அகராதிகள் வெளிவந்தன. ஆக்சுபோர்டு ஆங்கில அகராதியின் வரலாற்றுக் கொள்கைகளைப் பல சிறப்பகராதிகளும் பின்பற்றின.

அமெரிக்க ஆங்கிலம் பற்றிய அகராதிகள்(1938–44) வெளிவந்தன. அமெரிக்க நாட்டில் நேர்ந்த மொழி மாற்றம் அடங்கிய அமெரிக்க ஆங்கிலச் சிறு அகராதி அமெரிக்காவில் உருவாகிய கலைச் சொற்களுடன் 1951–இல் தோன்றியது.

சிறப்பு அகராதிகளில் குறிப்பாக ஆங்கிலப் பேச்சு மொழி அகராதி, ஆறு தொகுதிகளாக (1898-1905) வெளி வந்தது. இசுகீட் (Skeat) ஆங்கில மொழிச் சொற்பிறப்பு அகராதி, 1881–இல் வெளிவந்து 1907-இல் மேலும் செப்பஞ் செய்யப் பெற்றது. ஆக்சுபோர்டு ஆங்கிலச் சொற்பிறப்பு அகராதி ஆனியன் சால் 1966–இல் வெளிவந்தது. எர்னசுடு கிளெயின்சு (Ernest Kleins) வெளியிட்ட ஒப்பில்லா இரு தொகுதிகளில் ஆங்கில மொழிச் சொற்பிறப்பு விளக்க அகராதி 1966–67–இல் வந்தது. கனடா மொழிச் சிறப்புக் கூறுகளைத் தொகுத்து வால்டர் ஆல்விசு (Walter-Alvis) 1967–இல் அளித்தார்.

அமெரிக்க அகராதி வளர்ச்சி: அமெரிக்காவில் இடைநிலை அகராதிகளில் 180000 முதல் 25000 பதிவுகளமையச் சில அகராதிகள் உருவாயின. இரண்டம் அவுசு (Random House) அகராதி (1966) இதில் குறிப்பிடத்தக்கது. கல்லூரிக்கெனப் பெரும் பணம் செலவிட்டுப் பல அகராதிகள் அமெரிக்கப் பதிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டன. கல்லூரி, உயர்நிலைப்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றின் கல்வி நிலைக்கேற்பத் தரமுள்ள அகராதிகள் உருவாயின. கிளாரென்சு பார்ன்ஆர்ட்டு (Clarance Barnhart) அமெரிக்கக் கல்லூரி அகராதி (1947) வெப்சுடர் நியூ ஒர்ல்டு (Webster's New World) அகராதி (1953) போன்றவை குறிப்பிடத்தக்கவை. 'வெப்சுடர்' என்ற பெயர் பற்றிய வழக்கும் அமெரிக்காவில் நடைபெற்றது. பல அமெரிக்க அகராதிகள் பல்வேறு மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் வெளி வந்தன. 1961-இல் வெளிவந்த அமெரிக்க மரபுச் சொல் அகராதி அவற்றுள் ஒன்றாகும்.

அகராதி வகைகள்: தமிழகத்தில் கல்விமுறை ஐரோப்பியர் வருகையாலும் ஆங்கில ஆட்சியாலும் மாறியது. புதிய கல்வி முறைக்கு ஏற்ற துணைக் கருவியாக அகராதி பயன்பட்டது. இவ்வகராதி மொழியகராதி, கலைக்களஞ்சியம் என இரு பிரிவுகளாகப் பகுக்கப்பெறும். சொற்பொருளை விளக்கும் மொழியகராதியை வரலாற்று அகராதி, இக்கால விளக்க அகராதி என இருவகைப் படுத்துவர்.

வரலாற்று அகராதி, சொல்வடிவம் பொருள் முதலியவற்றின் வளர்ச்சிக்கு முதலிடம் தரும். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குட்பட்ட சொல் வடிவிலும் பொருளிலும் காணும் மாற்றங்களைப் பதிவு செய்வது வரலாற்றுமுறைப் பொருள் அகராதி ஆகும். சொற்களின் பிறப்பைக் கண்டறிவது சொற்பிறப்பியல் அகராதி ஆகும்.

வரலாற்று நிலை: தமிழில் வரலாற்று முறைப் பொருள் அகராதியை உருவாக்கும் முயற்சிகள் தோன்றின. எனினும் அது முழுமை பெறவில்லை. பல்கலைக்கழகங்களும் ஒருசில தனிப்பட்ட அறிஞர்களும் இத்துறையில் ஈடுபட்டு வருகின்றனர். சொற்பிறப்பினைக் கண்டறிய உடன்பிறப்பு மொழிகளை ஒப்பிட்டு ஆய்வர். சில அகராதிகளில் இவ்வொப்பியல் பண்பிற்கு முதலிடம் நல்குவர். இன்றுள்ள ஒப்பியல் அகராதியில் பல்லாசு (Pallas) தொகுத்த உலக மொழிகளில் ஒப்பியல் சொற்றொகை (1787-89), அகராதி (1790-91) என்பவை பழைமையானவை. 1868-இல் ஆசியமொழிகளின் ஒப்பியல் அகராதியை அண்டர் (Hunter) வெளியிட்டார். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தில் கால்டுவெல் (Caldwell) சொற்பிறப்பு, ஒப்பியற் கூறுகளைக் கூறியுள்ளார். நீர்வேலி சங்கரபண்டிதரின் தாது மாலை (1908) வடமொழி வேர்களைத் தமிழில் காட்டும். காலின்சு (Collins) இவ்விரு கூறுகள் பற்றியும் ஆய்ந்துள்ளார் (1919-1926). தமிழில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி இவ்விரு கூறுகளையும் சிறப்பாக விளக்கும் பெருமையுடையது எனலாம். உடன்பிறப்பு நிலையும் அண்மை வழக்கும் இதில் விளக்கப் பெறும். உலக மொழிச் சொற்களின் வேர், தமிழில் உள்ள தென ஞானப்பிரகாசர், தேவநேயப் பாவாணர் போன்றவர் கருதினர். ஒப்பியல் கூறு வெளிப்பட இராமகிருட்டிணையாவின் (1944) நூல் வெளிவந்தது. இத்துறையில் பர்ரோவும் (Burrow) எமெனோவும் (Emeneau) 1961-இல் வெளியிட்ட திராவிடச் சொற்பிறப்பு அகராதி (DED) தனிச்சிறப்புடையது. இது பற்றி ஆந்திரானேவ், ஆசர், பிலிபோசா, மார் போன்றவர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்தனர். இவ்வகராதியின் பின்னிணைப்பு 1968-இல் வெளிவந்தது. சொற்பிறப்புக் குறிப்புகள் 1972-இல் வெளிவந்தது. இதனால் இத்துறை நன்கு வளர்தற்கு வாய்ப்பேற்பட்டது. தமிழிலிருந்து ஆங்கிலத்திற்குச் சென்ற சொற்கள் பற்றி ஞானகிரி ஓர் அகராதி (1972) வெளியிட்டார். தேவநேயப் பாவாணரின் செந்தமிழ்ச் சொற்பியப்பியல் அகரமுதலித் திட்டம் உருவாகிவருகிறது (1985).

விளக்க நிலை: இக்கால விளக்க அகராதியைப் பொது, சிறப்பு என இரண்டாகப் பகுப்பர். எல்லாச் சொற்களுக்கும் பொதுவாகப் பொருள் வரையறுப்பது பொது அகராதி. சொல்லின் குறிப்பிடத்தக்க சிறப்புப் பகுதியை மட்டும் விளக்குவது சிறப்பகராதி.

பொது அகராதியில் தகுதி வழக்கை மட்டும் விளக்கும் அகராதியை நிலைமொழி அகராதி என்பர். ஒரு மொழியில் வழங்கும் கிளைமொழி குறுமொழி, 'திசைவழக்குகொச்சை வழக்கு, துறை வழக்கு ஆகிய எல்லா வழக்குச் சொற்களையும் விளக்குவது பெருவிளக்க அகராதி எனப் பகுப்பர்.

அகராதி மோனைக்ககராதி எதுகை (17-நூ.) தமிழில் வெளிவந்த முதல் நிலைமொழி அகராதி ஆகும். நிகண்டுகளில் காணும் சொற்களை விளக்குவது பத்துச் சொல் அகராதி. 1850-இல் அண்ணாசாமி பிள்ளையின் ஒருசொல் பல்பொருள் விளக்கம் இவ்வகையில் குறிப்பிடத்தக்க அகராதியாகும். இதனைத் தொடர்ந்து யாகப்பப்பிள்ளையின் கடின சொல் அகராதி (19-நூ.), சுன்னாகம் குமாரசாமி பிள்ளையின் இலக்கியச் சொல்லகராதி (20. நூ.) ஆகியவை வெளிவந்தன.

17-ஆம் நூற்றாண்டில் எழுந்த வைணவவுரை அருஞ்சொல் அகராதி, பெருவிளக்க அகராதிக்குத் தக்க சான்று. ஐரோப்பியர் தமிழில் தொகுத்த அகராதிகளும், அவற்றைப் பின்பற்றி மற்றவர் தொகுத்தவையும் இத்துறைக்குரியன. வீரமாமுனிவர், பெப்ரீசியசு, இராட்லர் போன்றவர்களின் அகராதிகளில் அன்றாட வாழ்வில் வழங்கும் தமிழ்ச் சொற்களும், தமிழில் கலந்துள்ள பிறமொழிச் சொற்களும் தொகுக்கப் பெற்றுள்ளன. இவ்வகை அகராதிகள் தமிழில் மிகுதியாக உள்ளன.

சிறப்பகராதிகள்: தமிழில் வெளிவந்துள்ள சிறப்பகராதிகள் பல வகைப்படும். இதுவரையில் வெளிவந்தவற்றைச் சொற்சேர்க்கை அகராதி, மரபுச் சேர்க்கை அகராதி, விதிப்பு நிலை அகராதி என மூவகைப்படுத்துவர்.

சொற்சேர்க்கை என்பது பேசுவோர் விருப்பிற்கேற்ப எவ்விதக் கட்டுமின்றி அமையும். இத்தகைய பண்பு கொண்டு அமையும் அகராதிகள் பலவாகும்.

கிளைமொழி அகராதி: ஒரு மொழியில் காணும் பல்வேறு கிளைமொழிகளை அடிப்படையாகக் கொண்டு மொழி வேறுபாட்டை விளக்கக் கிளைமொழி அகராதிகள் இத்துறையில் வெளிவந்தன. வீரமாமுனிவரின் தமிழ் - இலத்தீன் அகராதி (1882), தமிழ்க் கிளை மொழிகளை விளக்கும். போப் தொகுத்த அகராதியின் ஒருபகுதி வட்டார வழக்குகளைத் தந்துள்ளது. கி. இராசநாராயணன் தொகுத்த அகராதி திருநெல்வேலி வட்டார வழக்கை விளக்கும்.

**கலைச்சொல் அகராதி:** பல துறைகளில் வழங்கும் கலைச்சொற்களைத் தொகுத்துக் கலைச் சொல்லகராதித் தொகைகள் தமிழில் வெளிவந்துள்ளன. அரசு அலுவலகக் கடிதப் போக்குவரவு பற்றிய தொகை அகராதியை இலங்கை அரசு (1894) வெளியிட்டது. அவ்வரசு இத்துறையில் இந்த நூற்றாண்டின் பிற்பகுதியிலும் சில நூல்களைத் தொகுத்துள்ளது. மர இனப் பெயர்கள்பற்றிப் பிரஞ்சில் சென்ற நூற்றாண்டில் தமிழ்த் தொகை அகராதி வெளிவந்தது. மருத்துவம், விலங்குநூல், அளவை நூல் பற்றிய கலைச்சொல் தொகை அகராதிகள் இலங்கையிலும் தமிழகத்திலும் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. லூசிங்டன் (Lushington) 1915-இல் தொகுத்த மர இனப்பெயர்களுள் தமிழில் உள்ளவற்றையும் காணமுடியும். புத்தமதச் சொற்களை 1900-இல் உ.வே. சாமிநாதையர் தனியாகத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

நாட்டு விடுதலை இயக்கத்தில் நாட்டு மொழிகள் வளர்ச்சி பெறும் இயக்கம் வளர்ந்ததால், தமிழில் கல்வி வளர வேண்டுமென்ற இயக்கத்தால், பல கலைச்சொல் அகராதிகள் எழுந்தன. கலைச்சொற்கள் தொகுதியைச் (1936) சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம் வெளியிட்டது. சென்னை, தமிழ்ப் பாதுகாப்புக் கழகம் ஆட்சிச் சொல் அகரவரிசையை (1941) வெளியிட்டது. இந்திய விடுதலைக்குப் பின் மக்களாட்சி மலரத் தமிழ் நாடு அரசு பல கலைச் சொற்றொகைகளைப் பல துறைகளில் வெளியிட்டது. 'கலைக்கதிர்' வெளியீடுகள் அறிவியல் கலையியல் துறைகளில் கலைச்சொற்களைத் தமிழில் உருவாக்கின. இந்நூற்றாண்டு அறுபதுகளில் தமிழக அரசின் போக்குவரவு, கூட்டுறவு, சட்டம், புள்ளிவிவரம், வருவாய், வேளாண்மை போன்ற துறைகளின் சிறப்புச் சொற்கள் துணை அகராதிகள் வெளிவந்தன. வி.டி. பண்டிதர் (1913), மத்தியாசு (1976), வேலாயுதம் (1940), இராமலிங்கனார் (1960) போன்ற தனிப்பட்ட அறிஞர்கள் முறையே தாவர இயல், கணிதம், பொதுவியல், ஆட்சியியல் துறைக்குரிய கலைச்சொற்களைத் திரட்டி வெளியிட்டனர். இவ்வாறு தனிப்பட்டவரும் தமிழக அரசும் சில நிறுவனங்களும் கலைச் சொற்களைத் தொகுத்துச் சிறப்பகராதிகள் வெளியிடப் பாடுபட்டுள்ளனர். தமிழ்ப் பல்கலைக் கழகம் அறிவியல் கலைச்சொல்லாக்கப் பணியில் ஈடுபட்டுள்ளது.

**நூல் அடைவுகள்:** சிறப்பான நூல்களில் பயன்பட்ட சொற்களைக் கண்டறிய நூல் அகராதிகள் தோன்றின. இவற்றில் ஒரு நூல் அல்லது பல நூல்கள், குறிப்பிட்ட காலத்தில் வெளிவந்த நூல்கள் அல்லது குறிப்பிட்ட வகை நூல்கள் பயன்படுத்திய சொற்களைத் தொகுப்பர். சொற்கள் மட்டுமன்றிக் கருத்துகளையும் அவை பயின்று வரும் இடக்குறிப்புடன் அளிப்பர். இந்நிலையில் காணும் அகராதிகளை முறையே சொற் குறிப்பு அகராதி, பொருள் குறிப்பு அகராதி என்பர். நூலில் காணும் பெயர்கள், அருஞ்சொற்கள் அவை பயன்பட்ட இடங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுவது சொல்லடைவு. 1886-இல் போப் திருக்குறளுக்குத் தனி அகராதியும் சொற்குறிப்பு அகராதியும் தொகுத்தார். இந்நெறியில் இவர் நாலடியாருக்கும் திருவாசகத்திற்கும் நூல் அகராதிகள் வெளியிட்டார். இத்தகைய அகராதிகள் வளர்வதற்குரிய செய்திகளை உ.வே. சாமிநாதையரின் பதிப்புகளில் காணும் அடிக்குறிப்புகள், அருஞ்சொல் அகராதிகள் ஆகியன அளித்தன. 1924-இல் மார்க்கசகாயம் செட்டியார் தொகுத்த திருக்குறள் சொற்குறிப்பு அகராதியைத் தொடர்ந்து, சாமி வேலாயுதம் திருக்குறள் சொல்லடைவை முழுமையாக அளித்தார் (1952). திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத்தில் வி.அய். சுப்பிரமணியத்தின் நேர்ப்பார்வையில் பல சொல்லடைவுகள் உருவாக அவருடைய புறநானூற்றுச் சொல்லடைவு வழிகாட்டியது. அதைப் பின்பற்றிச் ச.வே. சுப்பிரமணியத்தின் சிலப்பதிகாரச் சொல்லடைவும் இளையபெருமாளின் ஐங்குறுநூற்றுச் சொல்லடைவும் வெளிவந்தன. கம்பராமாயணம் (வேலவன் கோவிந்தன்குட்டி), பெரிய புராணம் (வீராசாமி), பெருங்கதை (இளவரசு), வில்லி பாரதம் (குற்றாலம்), கல்வெட்டுகள் (பன்னீர்ச் செல்வம்) ஆகிய பெருநூல்களின் சொல்லடைவுகளும் வேறுபல தமிழிலக்கியங்களின் சொல்லடைவுகளும் அறுபதுகளில் தொகுக்கப் பெற்றன. அண்ணாமலை, மதுரை காமராசர் பல்கலைக்கழகங்களும் இத்துறையில் ஈடுபட்டன.

**பொருள் விளக்க அகராதிகள்:** பொருள் விளக்க அகராதிகளில் மேற்கோள் விளக்க அகராதிகள் சில வெளிவந்தன. தொல்காப்பியப் பொருளதிகாரம் (நாகமணி), திருக்குறள் (தாமோதரன்) ஆகிய நூல்களுக்கு இத்தகைய அகராதிகள் உருவாயின. தேவார ஒளி நெறி, திருவாசக ஒளி நெறி, திருக்கோவையார் ஒளி நெறி போன்றவற்றைப், பொருள் விளக்கம் பெறச் செங்கல்வராயபிள்ளை தொகுத்துள்ளார். மர்ரேக்குழுவின் பாட்டும் தொகையும் (1958) குறிப்பிடத்தக்கது. பல மாவட்டங்களின் ஊர்ப் பெயர்களைச் சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொகுத்து வெளியிடுகிறது.

**மரபுச் சேர்க்கை:** மொழியில் நிலைத்து நிற்கும் மரபுச் சேர்க்கைகளைத் தொகுத்துத் தனி அகராதிகளை வெளியிட்டனர். இத்துறையில் யாழ்ப்பாணப்

புத்தகச் சங்கம் ஆங்கிலம் – தமிழ் மரபுச் சேர்க்கை களைத் தொகுத்தளித்தது (1841). இதனை ஒட்டிக் கிறித்துவச் சங்க அச்சகம் ஆங்கிலம் - தமிழ் மரபுத் தொடர் கொண்ட நூலை 1881-இல் வெளியிட்டது. மொழிபெயர்க்க உதவும் வகையில் தமிழ் மரபுத் தொடர்களை இராமசாமி தீட்சிதர் 1900-இல் வெளி யிட்டார். உவமை அகர வரிசை, மரபுத் தொடர் அகர வரிசை எனும் நூல்கள் இத்துறையில் வெளி வந்தன. பூந்துறையானின் மரபுத் தொடர்களும், சொற்றொடர்களும் (1977) இங்குக் குறிப்பிடத்தக்க நூலாகும்.

பழமொழி: பழமொழி அகராதியைப் பெர்சிவல் 1842-இல் வெளியிட்டார். இது மேலும் திருந்திய நிலையில் வெளியிடப் பெற்றது. ஏகன் (Haeghen) என்பவர் தமிழ் - பிரெஞ்சு பழமொழி அகராதியைத் தொகுத்தார் (1858). பழமொழிகளைப் பலவகை யாகப் பகுத்துச் சென்சன் வெளியிட்டார். இத்துறை யில் இலாசரசு (Lazarus) வெளியிட்ட பழமொழி அகராதி (1894) சிறப்புடைய நூலாகும். மேலும் அனவரத விநாயகம் பிள்ளை, நீலாம்பிகை அம்மை யார், கோலார் பெருமாள், திருமதி செயா மீனாட்சி சுந்தரம் போன்றவர்கள் இவ்வகை அகராதிகளை வெளியிட்டுள்ளனர். மாசுகோவிலிருந்து ஒரு பழ மொழி அகராதி (1962) வெளிவந்தது குறிப்பிடத் தக்கது.

ஒரு பொருட் பன்மொழி முதலியன: ஒரு பொருட் பன்மொழி அகராதிகளில் - இராசகோபால முதலியா ரின் தொகுப்பகராதி (1862), சங்கரநாராயண செட்டி யார் தமிழ் - ஆங்கில மொழி அகராதி (1908), மணி அகராதி (1934) ஆகியவை இத்துறையில் குறிப்பிடத் தக்கன. எதிர்ச்சொல் அகராதி, அடுக்கு மொழி அக ராதி, ஐம்பொறி அகராதி, பல தெய்வங்களுக்குரிய அடைமொழி அகராதிகள் போன்றவற்றை மு. சதா சிவம் அண்மையில் தொகுத்துள்ளார். எழுத்து வேறு பாடுகளைக் காட்டும் புதுமுறை அகராதியை நடரா சன் வெளியிட்டார் (1949). சிலேடை அகராதியை இராமசாமிப் புலவர் (1960) வெளியிட்டார். மக்கட் பெயர், இல்லப் பெயர், முசுலிம் பெயர் ஆகியவற்றை யும் தொகுத்துத் தனித்தனியாக வெளியிட்டுள்ளனர்.

விதிப்பு நிலை: விதிப்பு நிலை அகராதிகளைப் பயிற்று நிலை, வரிவடிவம், ஒலிப்பு, எதுகை மோனை என நான்கு வகைப்படுத்துவர். ஆங்கிலம் - தமிழ் ஒலிப்பு நிலை குறித்து அங்கடெல் (Anketell) (1888) ஓரகராதி வெளியிட்டார். மார்ட்டினே (Martinat) என்பவர் தமிழ் - பிரஞ்சு ஒலிப்பகராதியைத் தொகுத் தார் (1890-97). தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் ஒலிப்புப் பற்றிய அகராதி இலங்கையில் (1932) வெளி வந்தது. அப்பாய் செட்டியாரின் எதுகை மோனை அகராதி 1938-இல் தொகுக்கப் பெற்றது.

அகராதி அமைப்பு: அகராதியில் ஒரு மொழியின் சொற்கள் தொகுக்கப் பெறுகின்றன. சொற்களைப் பதிவு செய்யும்போது சொல் விளக்கக் கூறு முதலி லும் பொருள் விளக்கக் கூறு பின்னரும் அமையும்.

சொல் விளக்கக் கூறு: இதில் பதியப் பெற்ற தலைச்சொல், அதன் ஒலிப்பு முறை, இலக்கணக் கூறு, சொற் பிறப்பு, உடன்பிறப்பு மொழிகளின் ஒப்புமைக் கூறு ஆகியவை அமையும்.

தலைச் சொல்: பெயர், வினை ஆகிய சொற் களுக்குரிய அடிப்படை வடிவம் தலைச் சொல்லாக இடம் பெறும். தொடக்க நிலையில் இத்தகைய அடிப்படை வடிவம் தமிழ் அகராதிகளில் தக்க முறை யில் அமையவில்லை. வின்சுலோ தமிழ் – ஆங்கில அகராதி (1862) நீண்ட சொற்றொடர்கள், முடியாத் தொடர்கள் போன்றவற்றைத் தலைச் சொல்லாகத் தந்துள்ளது. இக்குறை சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் நீக்கப் பெற்றது. தமிழல்லாத பிற மொழித் தலைச் சொற்களை உடுக்குறியிட்டுப் பெப் ரீசியசு அகராதி (1779) காட்டும். ஒப்புருச் சொற் களைப் பிரித்துக் காட்ட அரபு எண்களைப் பயன் படுத்தினர். (மா[1] மா[2]...) பேரகராதியே இம்முறைக்கு வழிகாட்டியது.

ஒலிப்பு முறை: ஒலிப்பு முறை பற்றி விளக்கமில்லா விடினும் எழுத்துப்பெயர்ப்பு முறை சில அகராதிக ளில் சுட்டப் பெறும்.

இலக்கணக் கூறு: இலக்கணக் கூற்றினை இராட் லர், வின்சுலோ அகராதி போன்றவற்றில் காணலாம். வினைப் பகுப்பு முறையைப் பல நிலைகளில் தமிழ் அகராதிகள் பயன்படுத்தியுள்ளன. சதுரகராதியில் தொழிற் பெயர் வடிவமும், பெப்ரிசியசில், கிரால் முறைப்படி மென்மை, இடைமை, வன்மை வடிவங்க ளும் காணப்பெறும். இராட்லெரில் நிகழ் காலத்தை ஒட்டி மற்றக் காலத் திரிபுகள் அமைந்துள்ளன. வின் சுலோவில் வினைப் பகுதிகளை ஒட்டி முற்றெச்ச வடிவங்கள் காணப் பெறும் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி வினையடிகளை 13 வகைப்படுத் திக் காட்டும். சொற்பிறப்பு முறையைப் பொருள் விளக்கத்தின் முன்னோ பின்னோ அளிப்பர். இது, வின்சுலோவில் பொருள் விளக்கத்தின் பின்னும், சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதியில் பொருள் விளக்கத்தின் முன்னரும் காணப் பெறும்.

பொருள் விளக்கம்: தலைச் சொல்லின் பொருள் விளக்கப் பகுதியில் பொருள் வரையறை, மேற்கோள், குறிப்பீடு, படம் ஆகியவை இடம் பெறும்.

பொருள் வரையறை: பொருள் வரையறை செய் யும்போது எல்லாவகையிலும் பொருள் நிறைவுடை யதாய் அமைதல் வேண்டும். அது மிகைபடவோ

குறைபடவோ அமைதல் கூடாது. எளிய சொற்களில் பொருளை அறுதியிட்டுக் கூற வேண்டும். பொருள் வரையறையில் செப்பமுடைய அகராதியே சிறந்த அகராதி.

**மேற்கோள்:** பொருள் தெளிவு பெறவும், சொல் வழக்கு உறுதி பெறவும் மேற்கோள் அமையும். இதற்கு இலக்கிய வழக்கும் பேச்சு வழக்கும் பயன் படும். வெளிநாட்டார் தமிழக மக்களுடன் பழகப் பேச்சுவழக்கிற்கே முதலிடம் அளித்தனர். சிறுபான்மை மேற்கோள்களை இலக்கியத்திலிருந்து கொண்டனர். சங்க அகராதி விரிந்த அளவில் இலக்கிய மேற்கோள் களை அளித்தது. அதனையும் விஞ்சிய நிலையில் சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி உள்ளது.

**குறிப்பீடு:** ஒரு சொல் எத்துறையைச் சார்ந்தது, எப்பகுதி மக்கள் அதனைப் பேசுகின்றனர் என்பன குறித்து அறியத்தக்க செய்திகளைக் குறிப்பது குறிப்பீடு ஆகும். பேச்சு வழக்கு, குறுமொழி, அருகிய நிலை, வீழ்ந்த வழக்கு முதலியவற்றைக் குறிக்கும், இசை, மருத்துவம், விலங்கியல் போன்ற துறைகளுக் குரிய சொல் எனவும் குறிக்கும்.

**பட விளக்கம்:** பார்த்ததும் விளங்கும் வகையில் படங்களையும் சில அகராதிகள் பயன்படுத்தும். இராமநாதன் (1909) எதிராசுலு நாயுடு (1915) ஆகியோர் வெளியிட்ட அகராதிகளில் சொல் விளக்கப் படங்கள் உள்ளன. இன்று மாணவர்க்கு வெளியிடும் சில அகராதிகளில் படங்கள் உள்ளன.

**சொல் வைப்பு நிலை:** சொல் வைப்பு நிலை அகராதிகளில் பொதுவாக அகரநிரலில் அமையும். முதலில் உயிரும் பின் மெய்யும் கொள்வர். வின்சுலோ போன்றவர்கள் உயிரை அடுத்து உயிர்மெய்யைக் கொள்வர். சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி மெய்க்குப் பின்னரே உயிர்மெய்யைக் கொண்டுள்ளது.

**பொருள் வைப்பு நிலை:** பொருள் வைப்பு நிலையிலும் அகர நிரலைப் பின்பற்றுவதும் உண்டு. இதனைச் சதுரகராதியில் காணலாம். வரலாற்று முறையிலும், அவ்வாறு இயலாத இடங்களில் அளவை முறையிலும், பிற மொழிச் சொற்பொருளுரைக்க எது எளிய முறையோ அம்முறையிலும் சென்னைப் பல்கலைக்கழக அகராதி பொருள் உரைக்கும் நெறியைப் பின்பற்றியுள்ளது. ஆக்சுபோர்டு வரலாற்று முறைப் பேரகராதி, டெக்கான் கல்லூரியில் உருவாகி வரும் வடமொழி வரலாற்று முறைப் பேரகராதி இம்முறைக்குத் தக்க எடுத்துக்காட்டுகளாம்.

**நிலைமொழிக் கூறு:** இடைக்காலத்தில் உரோமானிய மொழிகளில் இலத்தீன் சொற்கள் பல நிலைகளில் கலந்திருந்தன. மறுமலர்ச்சி ஏற்பட்ட பின் இந்நிலை மாறியது. தூய்மைப் போக்கும் பேச்சு மொழிப் போக்கும் குறிப்பாகக் கிரேக்க மொழியில் காணப்பட்டன. இருமொழி நிலை அரசியற் கொள்கைக் குறியீடாகவும் விளங்கியது. தூய்மைப் போக்கில் பழைமை உணர்வு பெருகியது. பெரும்பான்மை மக்கள் நிலை பேச்சுமொழிப் போக்கில் சென்றது. இவ்விரு வேறுபாடுகள் கிரேக்க அகராதிக் கலையிலும் தலைதூக்கின. பேச்சு வழக்குச் சொற்களைத் தனியே தொகுத்தனர். கிரேக்கப்பேச்சு மொழி வரலாற்று அகராதி 1933-இல் வளர்ச்சியுற்றது. செய்திப் பரிமாற்றத்திற்கு மக்கள் பேச்சு வழக்கையும் இணைத்தனர். இந்நிலைக்கு இருமொழி அகராதிகள் பெரிதும் உதவின (கிரேக்கம்-இத்தாலி 1709; கிரேக்கம்-பிரஞ்சு 1882).

செவ்வியல் (பைசாண்டைன்) மொழியினை அறிவியல், சட்டம், அரசியல், இதழ்கள் ஆகியவை பயன்படுத்தின. தூய்மைப்போக்கு மக்களின் பேச்சு மொழியிலிருந்து வேறுபட்டிருந்தது. சொற்கள், ஒலிப்பு முறை ஆகியவை வேறுபட்டிருந்தன. இதில் பேச்சு வழக்கு இலக்கிய வழக்கு என்ற மாறுபட்ட இரு நிலைகள் காணப்படுகின்றன. எழுத்து நிலையில் இலக்கியம், பண்பாட்டுநிலை ஆகியவற்றை மனத்தில் கொண்டு பல்வேறு எண்ணம், விருப்பம், உணர்வு இவற்றைச் சுட்டும் ஒருபொருள் பல சொற்களை அகராதி திரட்ட வேண்டும்.

நிலைமொழிக்கும் பேச்சு மொழிக்கும் அடிப்படையாக விளங்கும் கூறுகளை அறிந்து அச்சொற்களையும் தொகுக்க வேண்டும், நிலைமொழி என்பது வட்டார மொழியுடன் வேறுபட்டு விளங்கும். இதனால் பேச்சுமொழி ஒன்றினைச் சரியானது என ஏற்கும் போது 'நிலைபேறு' உருவாகிறது. இதனால் ஒலிப்பு முறை, சொல்வடிவம்பற்றி அறியவும் நிலைத்த சொற்களை ஏற்கவும் இயலும்.

இக்கால அகராதியை இந்நிலையில் உருவாக்க எண்ணும்போது மரபையும் பழைய அகராதிச் சொற்களையும் கருத்தில் கொள்கின்றனர். பின்னர்ப் பேச்சு வழக்கில் காணும் சொற்கள் அகராதியில் உள்ளனவா என அறிந்து, மக்கள் வழங்கும் பழஞ் சொற்கள் எவை எனத் தெரிந்து, பொதுச் சொற்களைத் திரட்டுகின்றனர்.

துருக்கிய மொழிச்சொற்களை அகராதிக்கெனத் திரட்டுதலிலும் சில சிக்கல்கள் ஏற்பட்டன. அதன் ஒலிகள் துருக்கிச் சொற்களுக்கும் பிறமொழிச் சொற்களுக்கும் என இரு முறைகளாக உள்ளன. பல அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டதால் இலக்கிய வழக்கு மறைய மக்கள் வழக்கு மிகுந்தது. பல மாற்றங்கள் ஏற்பட்டதால் பேச்சு நிலை மொழி ஒன்று உருவா

யிற்று. கமால் குழுவினர் பழைய மரபை முழுதும் நீக்கினர். எழுத்து முறையிலும் மாற்றத்தை உண்டாக்கினர். புதிய சொற்கோவை உருவானதால் அவற்றை இதழ்கள் பயன்படுத்தின. புதிய சொற்களுக்கு எழுதப்பட்ட அடிக்குறிப்புகளின் துணையால் பொருளைப் புரிந்து கொண்டனர். 'கண் ஒன்றைப் பார்க்கப் பொருள் ஒன்று தோன்றும்' நிலை ஏற்பட்டது. எல்லா நிலையிலும் செயற்கை நெறியே தலையெடுத்தது. முதியோர்க்கும் இளையோர்க்கும் இடையே பெரிய பிளவு ஏற்பட்டது. வேண்டுமிடத்துச் சொற் பொருள் விளங்கப் பழைய தொடர்கள், வேற்றுமொழிச் சொற்கள் ஆகியவற்றைப் பெரிதும் கையாண்டனர்.

பழைய சொற்களையும் புதிதாகப் படைத்த சொற்களையும் கையாளும் நிலையிலும், பொருள் புரியும் நிலையிலும் சிக்கல் ஏற்பட்டது. இவ்வாறு குறுகிய காலத்தில் ஏற்பட்ட மாற்றம் அகராதிக் கலையில் பல சிக்கல்களைத் தோற்றுவித்தது. பழைய சொற்கள், பொருள் ஆகியவற்றை விட்டுவிடச் செய்தது. மரபு வழி வந்த அகராதி, படித்தோர்க்கு மட்டுமே பயன்பட்டது. பழைய எழுத்திலிருந்து இலத்தீன் எழுத்திற்கு மாற்றியதும் இக் கலையின் விளைவாகும். சொல்லின் எழுத்து வடிவம் சிதைந்தது. சில விதிகளுக்குட்பட்டுச் சொல்வடிவு உருவாக்குதல் பற்றிய சிந்தனை எழுந்தது. வேற்றுமொழிச் சொற்கள் பற்றிய வடிவச் சிக்கல் மேலும் பெருகியது. சொற்பொருள் காண்பதிலும் பல சிக்கல்கள் எழுந்தன. இதனைப் பொருளின் அகராதியாக உருவாக்கும் போது பல சிக்கல்கள் தீர்ந்தன. பொருளின் வடிவும் பொருளும் மாறாதிருப்பதால் அகராதிச் சிக்கலை இவ்வழியில் தீர்க்கும் முயற்சி நடைபெற்று வருகிறது.

இருமொழிச் சிக்கல் கிரேக்கம்போல் பெரும்பாலான நாடுகளில் காணப்பெறுகிறது. ஐரோப்பிய நாடுகளில் குறைவாகக் காணப்படுகிறது. நிலைமொழியைக் கற்பிக்கவும், கற்கவும் செய்தால் இதன் சிக்கல் ஓரளவு தீரும். அதற்குரிய அகராதிகளைச் செவ்விய முறையில் உருவாக்க வேண்டும்.

வெப்சுடரின் மூன்றாம் பதிப்பு பிலிப் கோவ் (Philip Gove) என்பவரால் 1961-இல் வெளிவந்தது. எல்லா வழக்குகளையும் அதில் ஏற்றுக் கொண்டதால் பலரும் அதனை வன்மையாக எதிர்த்தனர். குறிப்பாக, எழுத்துலகைச் சார்ந்தவர்கள் எதிர்த்தனர். மொழி தொடர்ந்து மாறுவதால் எழுத்து வடிவைவிடப் பேச்சு வடிவின் மாற்றத்தை நன்குணர முடியும். கொச்சை, நிலை பேறில்லாதவை என்ற நிலையில் வெப்சுடர் அகராதி பல சொற்களை ஏற்றுக் கொண்டது. மொழியியலார்க்கும் பொதுமக்கட்கும் இதுபற்றிய கருத்து பெரிதும் வேறுபட்டதாகும்.

நிலைமொழி குறித்து இலாரா (Lara) அகவிதி (Poiesis) ஒன்றை அமைத்தார். சமூகத்தில் ஒருசொல்லைப் புரிந்து வழங்குதற்கு இது வழி செய்தது. நிலைபேறில்லாதவற்றைப் பேச்சு வழக்கு, கொச்சை, பழம்வழக்கு எனக் குறியிட்டு அகராதியில் வழங்க எண்ணினார். எல்லா அகராதிகளும் அகவிதிகளைப் பின்பற்றின எனக் கூற இறலாது. சில அகராதிகள் சிறந்த நல்ல எழுத்தாளர்கள் பயன்படுத்தியவற்றை மட்டும் ஏற்றுக் கொண்டன. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் செர்மன் உயர்குடி மக்கள் பிரெஞ்சு மொழியை மிகுதியாகப் பயன்படுத்தியதால் அடிலங் (Adelung) காம்ப் (Campe) போன்ற அகராதிக் கலைஞர்கள் தூய்மை நெறியில் செர்மன் சொற்களைத் தொகுத்தனர். கடன் வாங்கிய சொற்களை நீக்கினர். புதிய சொற்களை உருவாக்கி அகராதியில் சேர்த்தனர்.

புதிதாகப் பயன்படுத்தற்குரிய பழம் சொற்கள், அவற்றில் பயன்படுத்த இயலாதவை, நல்ல அறிஞர்கள் பயன்படுத்தி வழக்கில் நிலை பெற்ற புதுச்சொற்கள், புதிய சொற்கள் எனினும் ஏற்க இயலாதவை. நல்ல எழுத்தாளர்கள் பயன்படுத்திய வட்டாரச் சொற்கள், அவற்றிலும் ஏற்க இயலாதவை, இழிவழக்கு, அவற்றில் பயன்படுத்தற்குத் தகுதியற்றவை, செய்யுள் வழக்கு, செய்யுளுக்கு மட்டுமுரிய புதிய வழக்கு என அவற்றைப் பகுத்துள்ளனர்.

புதுவழக்கில் சில வேர்கொண்டுவிட்டன. ஆசிய ஆப்பிரிக்க அகராதிக் கலைஞர்கள் அடிலங், காம்ப் ஆகியோரைப் பின்பற்றிப் புது வழக்குகளைப் பயன்படுத்துகின்றனர். அகவிதிகளை ஒட்டிய நிலையில் பிரஞ்சுக் கழகம் (அகாதெமி) செயல்பட்டது. அத்துடன் சமூக மொழியியல் பார்வையும் இணைந்திருந்தது. வெர்செயில்சிலுள்ள நீதிமன்ற மொழியை நிலைமொழி வழக்காக ஏற்க டி வாகெல (De Vauglas) முன்னின்றார். பிரெஞ்சு அரசு மொழித் தாக்கத்தை இது உணர்த்தும். இது உயர்குடி மக்களின் உயர் வழக்கின் விளைவாகும். இக்கால அகராதிக் கலைஞர்கள் இதனைக் கருத்தில் கொள்ளார். சமூக மொழியியல் உணர்வு வெளிப்பட இரு எல்லைகளைக் காட்ட 'அரசுமொழி', 'குடியரசு மொழி' எனப் பிரஞ்சு அகராதி சுட்டும்.

இந்நிலையே பிராகு (Prague) மொழியியல் வட்டத்திலும் காணப்பெற்றது. நிலைமொழி உருவாக அகவிதியும், சமூக மொழியியல் பார்வையும் இணைப்பதை என்னேயும் (Henne) ஏற்றார். அவர் கருத்துப்

படி நிலை மொழி என்பது நிலப்பகுதியால் வரைய றுக்கப்படாத மாற்று மொழி. பல்வேறு சமூகக் குழு வினர்க்கு எழுத்து வடிவில் செய்தி பரிமாற உதவும். இதுவரை இதனைப் பயன்படுத்தாதவர்களும் இத னைக் கேட்ட அளவில் புரிந்துகொள்ளும் வகையில் இதனை உருவாக்கியிருப்பர். மாற்று மொழி வடி வங்களைப் பேசுவோரும் பயன்கருதி இந்நிலை மொழியை விரும்பி ஏற்பர்.

பதிவுகளைத் தேர்ந்தெடுத்தல்: அகராதியில் சொற்களைச் சேர்க்கப் பல முறைகளைக் கையாளு கின்றனர். சிலமொழிகளில் அடிச்சொல்லையும் பிற இணைப்புகளையும் சேர்ப்பர். சிலவற்றில் தொடர் களை அவ்வாறே ஏற்பர். பெயரடைகளையும், புற ஒட்டுகளையும் இணைத்தே சொற்களைத் தொகுப் பர். வடிவம், தொடரியல், பொருள், சொல் வருகை நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சொற் களை ஆய்ந்து கொள்வர்.

சொல் வருகை நிலையை அறியச் சொற்களின் சிக்கலான வடிவமோ பொருளோ துணையாகும். சில மொழிகளில்தான் சொல் வருகைப் பட்டியல் உள் ளது. இப்பட்டியல் கொண்டு இலக்கண மாற்றுரு வங்கள் போன்றவற்றைப் பகுத்தறியலாம்.

இடைச்சொற்கள், வினையடைகள் போன்ற பயன்பாட்டுச் சொற்களையும் இடமறிந்து தொகுக்க வேண்டும்.

சொல்லுருவாக்க நிலையை அறிந்து அவற்றில் காணும் தொகைநிலை, ஒட்டுநிலை, பெயர்வினை நிலைகள், மறுபகர்ப்பு வடிவங்கள் கொண்டு சொற் களைத் தொகுக்க இயலும்.

பொருள் வகைப்பாட்டினையும் கருத்தில் கொண்டு பொருளின் நிலையில் சொற்களைப் பாகு படுத்தும்போது முரண், பகரநிலை அடிப்படையில் சொற்பொருள் கண்டு தொகுக்கலாம்.

பண்பாட்டு வேறுபாடுகளை மனத்தில் கொண்டு சொற்களின் தகுதியையும் பொருள் வேறுபாட்டை யும் உணர்த்தும் வகையில் சொற்களைத் தொகுக்க வேண்டும். இவ்வாறு அகராதிக்குரிய சொற்களை அறிந்து தொகுக்கும்போது அதன் பயன் நன்கு புலப்படும்.

அகராதிச் சொற்பதிவுகளை நல்ல அகராதிக ளுக்கெனச் சிறந்த முறையில் தேர்ந்தெடுக்க முயன் றனர். அறிவியல் முறையில் பொருண்மை இயல் அக ராதியில் தேர்ந்தெடுக்கும் சொல் வடிவையும் அதற் கேற்ற சூழலையும் 1960 முதல் ஆராயத் தொடங்கி னர். அத்துறையில் காட்சும் (Katz) பாடரும் (Foder) ஈடுபட்டுத் தக்க வடிவங்களைத் தேர்ந்தெடுக்க முயன்றனர்.

1. இலக்கணக்குறிச்சொல் (பெயர், வினை) 2. பொருண்மைக் குறிச்சொல் (உயர்திணை) 3. வேறு படுத்தி என்பவற்றைப் பயன்படுத்தினர். இது பொருண்மைச் செய்தியால் விடுபட்டவற்றைப் பற்றி விளக்கும். இதற்கெனத் தனிக்குறிச்சொற்கள் இல் லாவிடினும் கருவிகளுக்குரிய நோக்கு விலங்குகள் பற்றிய சுருக்க விளக்கம் ஆகியவற்றைச் சுட்டும். இரு மொழி அகராதிகளில் சொற்களைத் தேர்ந்தெடுக் கும்போது எளிதில் உணரும் வகையில் சொற்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். முறைப்படி வழங்காத சொற்கள் (பன்மைச் சொற்கள்) ஏவல், தொழிற் பெயர் போன்றவற்றையும் தொகுக்க வேண்டும். ஆலன் பீபர் (Alan Pfeffer) பதிப்பித்த 'செர்மன்-ஆங்கிலம், ஆங்கிலம் செர்மன் அகராதி' இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. இக்கால நிலையில் பிறமொழி யிலும் எழுதவும் பேசவும் தேவை ஏற்படுகிறது. பலர் வெளிநாட்டுக்குச் செல்கின்றனர். எழுதுதல் பேசுதல் எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அதற்குரிய சொற்களை இருமொழி அக ராதிகளில் இணைக்கலாம். அரபி மொழி குறித்து இந்நிலையில் சிக்கல் ஏற்பட்டது. எவ்வகை மொழிச் சொற்களைச் (மொரோக்கோ, ஈராக், சிரியா) சேர்ப்பது என எண்ணி, அரசியல் காரணங்களை எண்ணி ஆங்கிலம்-சிரிய அகராதிக்கு முதலிடம் தந் தனர். இவ்வாறு இருமொழி அகராதிக்குரிய சொற் களைத் தேர்ந்தெடுக்கும்போது பல காரணங்களை எண்ணிப்பார்த்து, அவற்றிற்கேற்பச் சொற்களைத் தொடுப்பர்.

சிலசமயம் 5000 சொற்கள் முதல் 10,000 சொற் கள் வரை இருமொழி அகராதிக்கென முதலில் தொகுத்துக் கொள்வர். பயன்பாடு கருதிச் சில சொற் களை நீக்குவர். பழைய பின்னிலை ஒட்டுகளையும் (தொடையல், சாக்காடு), சொற்றொடர்களையும், தொகை நிலைகளையும் விடாமல் சேர்ப்பர்.

வரவெண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சிக் கலான வடிவங்களை ஏற்பர். ஒருசில மொழிகளே இத்தகைய வரவெண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு சொற்பட்டியல்களைத் தொகுத்துள்ளன. செயற் பாட்டுச் சொற்கள் (இடைச்சொல், வினையடை) சொல்லாக்க அமைப்புகள் (நல்கு-நல்குகை; இயக்கு-இயக்குநர்) உருவலி ஒட்டு (இடி (பெ) ) இருபெய ரிணைந்து புதுச்சொல்லாக்கம் (விண்கோள்) பண்பாட் டுக் கூறுகள் (வேம்பன்-பாண்டியன்) ஆகியவற்றை மனத்தில் கொண்டு மற்றவற்றைத் தொகுப்பர்.

மாணவர்க்கும் கணிப்பொறிக்கும் தேவைப்படும் இருமொழி அகராதியை உருவாக்கும் காலம் இது. ஒவ்வொரு அகராதியும் நேர்முக மொழிபெயர்ப்பு அகராதி ஆகும். கணிப்பொறியால் மொழிபெயர்க்க

வேண்டியபோது எல்லா இலக்கணச் செய்திகளையும் அகராதிப் பதிவில் இணைத்துள்ள வகையில் திட்டமிட்டால், அது சொற்றொடர் ஆக்கும் தகைமை பெறும். தாய்மொழியாளர் தம் மொழியில் மிகுதியாகச் செய்திகளை அளிக்கமுடியும் என்பது உண்மை. எனவே மொழி பெயர்க்கும் இயந்திரத்திற்கும் ஏராளமான செய்திகளை அளிக்க வேண்டும். எதனை எங்குத் தேடிக்காணலாம் என அறிவுறுத்தும் வகையில் அகராதி அமைய வேண்டும். அன்றாடக் குறுமொழி வழக்குகளை அகராதி தவிர்த்துவிடும். இன்றியமையாத சொற்களை மட்டும் தொகுக்க வேண்டும். அப்போதுதான் சுருங்கிய அளவில் அகராதி நன்கு பயன்படும். மொழிபெயர்ப்பாளருக்குப் பொருள் தரும் வகையில் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பெருக்கியும், பொருட்பரப்பில் தெளிவை நல்கியும் அகராதி அமையவேண்டும். அகராதியில் ஏராளமாக ஒரு பொருட் பல சொற்களைக் குவித்தால் பொருள் காண்பது கடினம். குறுக்கு நோக்கீடு இவ்வகையில் துணைபுரியும். பயன்படுமிடத்தைச் சுட்டிக்காட்டினால் பொருள் நன்குவிளங்கும். எடுத்துக்காட்டினைத் திறமிக்க புலமையாளர் தேர்ந்தெடுத்து எளிய வடிவில் அளிக்கவேண்டும். இருமொழி அகராதிகளில் அமைந்த இலக்கணக் குறிப்பையும் சுட்ட வேண்டும். வினை முற்றுகளையும் எச்சங்களையும் சுட்டும்போது மொழி மரபு வழியில் எளிய முறையைக் கருத்தில் கொண்டு தொகுக்கவேண்டும். சொற்றொடர்களைக் கூறும்போது தடையின்றிப் பொருள் புரியும் வகையில் அளிக்கலாம். வேண்டுமிடத்து இன்றியமையாத இடைச் சொற்களைக் கூட்டியுரைத்தல் நல்லது. முதலில் உள்ளது உள்ளவாறே மொழி பெயர்ப்பைக் கூறிப் பின் வேண்டுமிடத்து விரும்பிய வகையில் மொழிபெயர்ப்பைத் தரலாம். தேவையானவை, முன்னுரிமை அளிப்பவை, விரும்புபவை எவை எனத் தனியே குறிப்பிடலாம். மரபு வழியில் மொழி பெயர்ப்பது எளிது. மொழிக்கு ஏற்ப மொழி பெயர்ப்பு முறைகளை ஏற்றால் இருமொழி அகராதிகள் செம்மையாக உருப்பெறும்.

எழுது முறை: ஒலிக்கின்ற முறையிலே சில மொழிகளில் சொற்களை எழுதுகின்றனர். காலப் போக்கில் எழுதும் மரபில் பல பிழைகள் நேர்ந்துவிடும். மரபுவழியில் எழுதும் முறை சொற்பிறப்புப் பற்றி அறிய ஒருவகையில் உதவும். சிலர் ஒலிப்பு முறையையும், எழுதும் முறையையும் தனித்தனியாக அகராதியில் அமைக்கவேண்டும் என்பர். அகராதியைப் பயன்படுத்துவோர் ஒலிப்புமுறை, எழுதுமுறை ஆகியவற்றை அறிவர். அதனால் அகராதி வாயிலாகச் சொல்லின் ஒலி வடிவம், வரிவடிவம் இரண்டையும் அறிய இயலும். மொழிக்கு முதலில் வாராத எழுத்துக்களையும் ஈற்றில் வாராத எழுத்துகளையும் உணர்த்தும் வகையில் எழுதுமுறை அமையும். (இராமன், காலின்சு)

சொற்பிறப்பு நிலை: ஆங்கில மொழியின் சொற்பிறப்புச் சுருக்கச் சிறப்பகராதியின் நான்காம் பதிப்பைச் சுகீட் (Skeat) 1890-இல் வெளியிட்டார். முன்னைய நூலை மறுபடியும் அவர் எழுதினார். அவர் கருத்தின்படி, உடன்பிறப்பு மொழிகளின் எடுத்துக்காட்டுகளைப் பொருளுடன் கூற வேண்டும். சிறப்பான இயல்களில் சொல் எப்போது பயன்பட்டது என வரலாற்றைக் கூறுவது நன்று. சொற்களின் பொருள், விளக்கம், ஒப்புநோக்கு ஆய்வுரை ஆகியவற்றைக் கொண்டு எம்மொழியிலிருந்து சொற்கள் உருவாயின என வரிசைப்படுத்திக் காட்ட வேண்டும். ஒலிமாற்ற விதிகளைக் கூறும்போது எச்சொல் எதிலிருந்து வந்தது என அறிய இயலும். குறிப்பாக உயிர் மாற்றங்கள் இத்துறையில் நன்கு பயன்படும்.

அகர நிரலில் சொற்களை அளித்துத் தலைச் சொல்லையும் ஆக்கச் சொல்லையும் பிரித்துக் காட்டும்போது அகராதிப்பயன் மேலும் நன்கு புலப்படும். பொதுச் சொற்களுக்குரிய விளக்கம் தவிர்க்கப்படலாம். இவ்வகராதியில் காணும் மொழிகள் எவை என நன்கு தெளிவாகச் சுட்டப்பெறும். வேர்ச் சொல் பட்டியலைத் தனியே தருவது நன்று இவ்வகையில் சொற் பிறப்பு அகராதி பற்றிய விளக்கம் பெறலாம்.

சொற்கோவைப் புள்ளியியல் (Lexicostatistics): மொழிக் காலவரையறையியலில் இக்கலை நுட்பத்தைப் பயன்படுத்தி உறவுள்ள மொழிகள் தனித் தனியே வளர்ச்சி பெற்ற கால ஆழத்தை வரையறுத்துக் காட்டுவர். புள்ளியியல் அடிப்படையில் உறவுள்ள இருமொழிகளிலிருந்து எடுத்த அடிப்படைச் சொற்கோவையின் சில கூறுகளை ஒப்பிடுவர். அவை கொண்டு எக்காலத்தில் அவை பிரிந்து சென்றன எனக் காணலாம். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏறத்தாழ ஒரே நிலையில் மொழிகள் மாறுதல் உறுகின்றன என்ற ஊகத்தின் அடிப்படையில், இக்கலை நுட்பத்தைப் பயன்படுத்துவர்.

அகராதியும் கணிப்பொறியும்: கணிப்பொறியின் துணைகொண்டு அகராதிப் பணிகளையும் நன்கு செய்ய இயலும். மொழித்தரவுகளை முதலில் திரட்டிப் பொறிக்கு அளிக்கும் நிலை ஏற்பட்டபின் அதனை எவ்வாறு கையாளலாம் என ஆணை இடலாம். பொறி மிக வேகமாகவும் செவ்வையாகவும் செயல்பட்டு அகராதிக்கலைக்கு உதவும். இதனால் காலம் மிஞ்சுவதால் இதனை அகராதித் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்துவர்.

ஒரு நூலின் சொல் ஒப்பீட்டாராய்ச்சிக்கும் கணிப்பொறி உதவும். திரட்டிய செய்திகளைத் அது தொகுத்தளிக்கும். பொருட்கூறுகளைத் தருவதில் சில குறைகள் நேரினும், சொல், தொடர் என்ற நிலையில் தரவிற்குரிய பொருளைத் தரும்.

வேண்டாத செய்தியைப் பொறி நீக்கிவிடும்; திரட்டியவற்றை மறுபடியும் எழுதி அச்சடித்துத் தரும்; எழுத்துப் பிழைகளை நீக்கிச் செப்பம் செய்யும்; கொடுப்பனவற்றை அகரநிரல் செய்து தரும்.

ஒருவகை அகராதியை அகரநிரலாக்கியபின், ஒவ்வொரு பதிவையும் பயன்படுத்தி வகைப்படுத்திப் பின், மறுபடியும் அகரநிரலாக்கும். இருமொழி அகராதிகட்கும் இஃது இவ்வழியில் துணையாகும். இன்னும் வளர்ச்சி பெற்ற நிலையில் பல்வேறு மொழியகராதிகளை உருவாக்க இப்பொறி துணைபுரியும்.

செய்திகளைச் சேர்ந்து அகராதியை விரிவுபடுத்தி முதற்பதிவு, இரண்டாம்பதிவு போன்றவற்றைச் செம்மை செய்யலாம்.

எழுத்தமைப்பிற்கும் கணிப்புப்பொறி துணை செய்யும். செய்திகளை நிலையாகப் பதிவு செய்வதால் எதிர்காலத்தில் வெளியிடும் அகராதிப் பதிப்புகளுக்கு அவற்றைப் பயன்படுத்த இயலும். மனித உழைப்பை இதனால் குறைத்து இயந்திர ஆற்றலைப் பயன்படுத்தி, விரைவில் அகராதிப் பெரும் பணிகளை முடிக்கமுடியும். அமெரிக்காவில் இந்தியானாப் பல்கலைக் கழகத்தில் தென்னமெரிக்கா மொழிகளுக்குரிய இத்தகைய முயற்சிகள் நன்கு செயல்பட்டு வருகின்றன. பம்பாய் டாடா நிறுவனம், கான்பூர் இந்தியத் தொழில் நுட்பக் கழகம் போன்றவை சில முயற்சிகள் செய்து வருகின்றன. கணிப்பொறி தானாகச் சிந்திக்காது. ஆயின் அதனை நெறிப்படுத்தின் அவ்வழியில் செயல்படும். திட்டமிட்ட வழியில் அது இயங்கும். இதற்கெனக் கணிப்பொறி மொழியினை அகராதிக் கலைஞர் பயன்படுத்த வேண்டும். செம்மையான முறையில் செய்திகளைப்பதிவு செய்துதரின் கணிப்பொறி அகராதிக் கலை வளர்ச்சிக்குப் பெருந்துணையாகும். தமிழகத்தில் கல்வித்துறையில் கணிப்பொறியைப் பயன்படுத்தும் முயற்சி வலுப்பெற்று வருகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையம் திருக்குறளுக்கென ஒப்பீட்டாராய்ச்சித் தரவுகளைத் திரட்டி வருகிறது. மேலும் இத்துறையில் பல திட்டங்கள் உருவாகும் எனில், தமிழ் அகராதிக் கலைக்கு அவை நல்வளர்ச்சியூட்டும்.

**அகராதியியல் (Lexicology):** மொழியில் காணும் சொற்கள் அல்லது சொற்கூறுகள் பற்றி அறிவியல் முறையில் ஆயும் இயல். இவ்வியலில், பொருள், வடிவம், சொற்பயன்பாடு, சொல்லாக்கம், சொல்வரலாறு, சொற்கூறு ஆகியவை ஆராயப்பெறும். இவ்வியல் கண்டுரைக்கும் கொள்கைகளை அகராதிக் கலை பயன்படுத்திக் கொள்ளும்.

**அகராதியின் பணி:** அகராதி என்பது இலக்கணத்தின் சொல்லடைவு. அதனால் ஒவ்வொரு சொல்லும் இலக்கணத்தில் எந்தப் பிரிவைச் சார்ந்தது அல்லது துணைப் பிரிவைச் சார்ந்தது எனக் காட்டும். இத்தகைய பிரிவுகள் சில மொழிகளுக்கு மிக மிகத் தேவையாகும்.

அகராதி, இலக்கணத்தின் திருத்தமாகவும் பயன்படும். சில சொற்கள் பயன்படும் முறை இலக்கண நிலையில் தெளிவாக இராது. அவற்றை எப்பிரிவுக்குரியது எனக்குறித்தால் வரன்முறை நெறிப்படும். இலக்கணம் அச்சொற்களின் பொதுவரன்முறை அல்லது மொத்த வரன்முறை பற்றிக்கூற அதுவழி செய்யும்.

இலக்கணம் கூறும் செய்திகளுடன் விளக்கத்தையும் அகராதி கூறும்.

குறுக்கு நோக்கீட்டின் (Cross reference) முறையாக அகராதி உதவும். மொழியின் பல்வேறு அமைப்பு முறைகளைத் தொடர்பு படுத்திக் காண அகராதி ஒருநெறியாக அமையும். தா.வே வீ.

**அகராதி நிகண்டு** சிதம்பர இரேவண சித்தரால் இயற்றப்பட்டது. இவரது ஊர் புலியூர். எனவே, இவர் புலியூர்ச் சிதம்பர இரேவணதேவர் எனவும் அழைக்கப்பட்டார். இவர் சைவ வேளாளர். இவர், திருப்பட்டீச்சுரப் புராணம், திருவலஞ்சுழிப் புராணம், திருமேற்றளிப் புராணம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

இந்நூல், முதல் எழுத்தை அகர வரிசையில் அமைத்துப் பொருள் கூறும் நிகண்டாதலின் 'அகராதி நிகண்டு' என்னும் பெயர் பெற்றது. இது சூத்திரத்தால் ஆனது. எனவே, சூத்திரவகராதி, இரேவண சூத்திரம், இரேவணாத்திரியார் சூத்திரம் என யாப்பாலும், தன்மையாலும், ஆசிரியர் பெயராலும் இது வழங்கப்பெறும். தமிழ்நிகண்டுகளிற் பல, பல பொருள் குறித்த ஒரு சொல்லாகவும், சில, ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவும் அமைந்துள்ளன. ஆனால், அகராதி நிகண்டு அவ்வாறு இல்லாமல் ஒருசொல் ஒரு பொருளையும் பலபொருளையும் உணர்த்தும் வகையில், அகராதியாகத் தொகுக்கப்பட்டுள்ளது. இதன்கண், பிற நிகண்டுகளில் உள்ள சொற்களும் பொருளும் பெரும் பகுதி காணப்படுகின்றன. அவற்றில் இல்லாத, சங்க மருவிய சான்றோர் செய்யுள்களிலும் அவற்றின் உரைகளிலும் பிற்காலத் தமிழ் நூல்களிலும் வழங்கப்பட்டுள்ள செந்தமிழ்ச் சொற்களும், உலக வழக்கில் உள்ள வெளிப்படைச் சொற்களும், தெலுங்கு, கன்னடம் முதலிய பிறமொழித் திரி சொற்களும், ஆங்காங்குச் செந்

தமிழ் நாட்டுள் வழங்கும் திசைச் சொற்களும், மருவியும் திரிந்தும் வழங்கும் வட சொற்களும் பிற சொற்களும் இடையிடையே மலிந்து கிடக்கின்றன.

தமிழ் அகராதியியலுக்கு முதன்முதலாக அகர நிரலை அகராதி நிகண்டே அறிமுகம் செய்தது இது. அகரப் பேர்த்தொகுதி முதலாக வகரப் பேர்த் தொகுதி ஈறாகப் பத்துத் தொகுதிகளை உடையது. இதில் அ–ஔ, க–கௌ, ச–சௌ, ஞ–ஞௌ, த–தௌ, ந–நௌ, ப–பௌ, ம–மௌ, ய–யௌ, வ–வௌ எனப் பத்துத் தொகுதிகளிலும் முதல் எழுத்தளவில் அகரநிரலில் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, மேனாட்டு அகராதியியலிலும் தொடக்கக் காலத்தில் முதலெழுத்தளவில் மட்டுமே அகரநிரல் பின்பற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகண்டில் ஒரு சொல்லுக்குரிய பொருளை எளிதில் கண்டறிய இயலாது. ஒரு சொல்லின் பொருளை அறிய வேண்டின், அந்தச் சொல் எத்தனை பொருள்களை உடையது என முதலில் அறிந்து கொள்ள வேண்டும். அதற்குப் பின், உரிய பொருள் தொகைப் பகுதியில் அச்சொல்லின் முதல் எழுத்தை மனத்திற்கொண்டு தேடி, அச்சொல்லுக்குரிய பொருளைக் கண்டறிய வேண்டும். இந் நிகண்டில் இத்தகைய குறை இருப்பினும், தமிழ் அகராதியியல் வரலாற்றில் இதற்குத் தனியிடம் உண்டு. ஏனெனில் இதுவே முதன் முதல் சொற் பொருள் விளக்கும் நூல்களுக்கு அகரநிரலை அறிமுகம் செய்தது. இந்நிகண்டின் பெயரில் அடையாக அமைந்த அகராதி என்னும் சொல், பெருக வழங்கிச் சொற்பொருள் கூறும் நூலுக்குரிய கலைச் சொல்லாக நிலைத்துள்ளது குறிக்கத்தக்கது.

இந்நிகண்டை நாராயணையங்கார் 1921-இல் மதுரைத் தமிழ்ச்சங்க வாயிலாகப் பதிப்பித்து வெளியிட்டார்.

வ.செ.

**அகல்யாபாய் ஓல்கார்** (1735–1795) ஒரு மராத்திய அரசி; வீராங்கனை. ஆங்கிலேயருடன் மகாதாசி சிந்தியா என்ற மராத்தியத் தலைவர் செய்துகொண்ட சால்பை உடன்படிக்கை (கி.பி. 1782), மராத்தியரின் கூட்டமைப்பைப் பெரிதும் வலுவிழக்கச் செய்தது அவர்களுக்குள் தன்னல உணர்வு மிகுந்தது. அதனால், அங்கு நிலவிய ஒற்றுமை மறைந்து, பகைமை வளரலாயிற்று. அக்காலத்தில் மகாதாசி சிந்தியாவும் அகல்யாபாய் ஓல்காரும் (Ahalyabai Holkar) மராத்தியர்களின் வருங்காலத்தை முடிவு செய்யும் தலைவர்களாக விளங்கினர்.

ஓல்கார் வழித்தோன்றல்கள் மகேசுவர் என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார்கள். பின்னர் இந்தூர் தலைநகராயிற்று. மலகரிராவ் ஓல்கார் மறைவுக்குப்பின் ஓல்கார் மரபில் கருத்து வேற்றுமைகளும் குழப்பங்களும் மிகுந்து ஒருவரையொருவர் பகைத்துக் கொண்டனர். மக்களின் வரிப்பணம் பாழ்படுத்தப்பட்டது. இதனை உணர்ந்த அகல்யாபாய், நல்லாட்சி ஏற்படுத்த முனைந்தார். ஏறத்தாழ முப்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். இவரை வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாளர் எனச் சர் சான் மார்சல் (Sir John Marshall) போற்றுகிறார். இவர் நாட்டு மக்கள் அமைதியாக வாழச் சமய இலக்கியங்களைக் கற்பிக்கச் செய்தார்; போருக்கான செலவினத்தைக் குறைத்தார்; இரக்க குணம் மிக்கவராகத் திகழ்ந்தார்; சமய நிலையங்களுக்கு மிகுதியாக நன்கொடைகள் வழங்கினார்; அரசியாக விளங்கியபோதிலும் செருக்கற்றவராக இருந்தார். இவர் காலத்தில் பொருளாதாரத்தில் நாடு சிறந்திருந்தது; உற்பத்தியினைப் பெருக்கினார். மக்களின் சுதந்தர உணர்வை மதித்தார். இந்தூரை உருவாக்கியவரும் இவரே. இவர் அழகான மாளிகைகள் பலவற்றை அங்கு அமைத்தார். இவரது ஆட்சியில் பெரும்பாலான மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்ந்தனர். தாமும் தூய்மையாக வாழ்ந்து, அரசினையும் தூய்மையாக்கிச் சிறந்து புகழ் பெற்றவர் அகல்யாபாய் ஓல்கார்.

எனினும் இவரால் ஆங்கிலேயரின் படை பலத்தை அறிந்துகொள்ள முடியவில்லை. அகல்யாபாயும், மலகரிராவ் ஓல்காரிடம் படைத் தலைவராக விளங்கிய துக்கோசி ஓல்காரும் சேர்ந்து நாட்டை ஆண்டு வரலாயினர். அரசின் வருவாயையும் செலவினங்களையும் அகல்யாபாய் கவனித்தார். போர்க்காலங்களில் இவரே தலைமையேற்றுப் போருக்குச் சென்றார். ஆங்கிலேயரை எதிர்த்த போரில் அவர்களின் உயர்ந்த போர் முறைகளால் மகேசுவர் என்ற இடத்தில் இவரது படை பின்வாங்க நேரிட்டது. அறச் செயல்கள் பல புரிந்துள்ள போதிலும், வீரச் செயல் புரியும் படைபலத்தைப் பெருக்கத் தவறிவிட்டார். அகல்யாபாயும் துக்கோசியும் ஒன்றுபட்டுச் செயற்படவில்லை. இவர்களின் ஒற்றுமைக்காக மகாதாசி பெரிதும் முயன்றார். இவர் தாம் கொண்ட கொள்கையில் தீவிரப் பற்று உடையவராக விளங்கினார். மக்கள் அனைவரையும் தம்முடைய கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க விரும்பினார். இறுதிக் காலத்தில் நிதி நிலை அனைத்தும் இவரது கைவசம் இருந்ததால், துக்கோசியால் படையினை நன்கு நிருவகிக்க முடியவில்லை. அகல்யாபாய் கி.பி. 1795-இல் காலமானார். அதன் பின்னர் நாட்டில் குழப்பங்கள் மிகுந்தன.

தீ. வி.

**அகலிகை** இராமாயணக் கதை மாந்தருள் இடம் பெறும் ஒரு பெண். அகல்யா என்னும் வடமொழிச் சொல்லின் திரிபாக அமைந்த இப்பெயருக்கு

மிக்க அழகுடையவள் என்பது பொருள். படைத்தற் கடவுளான நான்முகன் தான் முன்னர்ப் படைத்த பெண்களின் அங்கங்களில் உள்ள சிறப்பை எல்லாம் எடுத்து, அழகுமிக்க பெண் ஒருத்தியைப் படைத்து, அவளுக்கு 'அகல்யா' என்று பெயரிட்டான். இவ் வழகிய மங்கைக்குத் தக்க கணவன் தானேயன்றிப் பிறரில்லை என எண்ணிச் செருக்குற்ற இந்திரன் இவளைத் தன் மனைவியாக்க எண்ணினான். பிர மனது விருப்பத்திற்கு மாறாக இங்ஙனம் இந்திரன் எண்ணிச் செருக்குற்றதால், பிரமன் அவளை அவனி டம் கொடாமல் கோதம முனிவரிடம் கொடுத்து 'இவளைப் பாதுகாத்து வருக' எனக் கட்டளை இட் டான். அவ்வாறே அவர் பன்னெடுங்காலம் பாது காத்துப் பின் பிரமனிடம் கொண்டு சென்று சேர்த் தார். அவருடைய பற்றற்ற தன்மையையும், தவச் சிறப்பையும் கண்டு பிரமன் உவந்து அம்முனிவருக்கே அவளை மனைவியாக்கினான். இதனால் பொறாமை கொண்ட இந்திரன் வேற்றுருக் கொண்டு அவளை அடைய விரும்பினான்.

இந்திரன் அகலிகையை அடைய விரும்பியதும், உருமாறி நின்றதும், முனிவரால் சாபம் பெற்றது மாகிய செய்திகள் இராமாயணத்தில் பாலகாண் டத்தே இடம் பெற்றுள்ளன. இந்நிகழ்ச்சி, திருக்குறளி லும் சுட்டப்பட்டுள்ளது. கம்பர், வான்மீகி ஆகியோர் இராமாயணங்களில் இக்கதை வரலாறு, சிறு வேறு பாடுகளுடன் அமைந்துள்ளது.

கோசிக முனிவரும் இராம இலக்குவர்களும் மிதி லையின் புறமதிலை அடைந்தனர். அங்குக் கல்லுரு வாகக் கிடந்த அகலிகை, இராமன் திருவடித் துகள் பட்ட அளவில் உயிர்த்தெழுந்தாள் என்றும், கோசிக முனிவர் அவள் தன்மையை இராமனுக்கு உரைத்தார் என்றும் கம்ப ராமாயணம் கூறுகிறது. பாழடைந்து கிடந்த ஆசிரமத்தைக் கண்ட இராமன் அதுபற்றி வினவ, முனிவர் இராம இலக்குவர்களை அங்கு அழைத்துச் சென்று, கல்லுருவாய்க் கிடந்த அகலிகை வரலாற்றை அறிவித்து, அவள் சாபத்தைத் தீர்க்கச் செய்தார் என்று வான்மீகம் குறிப்பிடுகிறது.

பண்டை வடிவங்கொண்டு நின்ற அகலிகையை 'அன்னையே அனையாள்' என்று வணங்கிய இராம னுக்கு அவளது வரலாற்றினைக் கோசிக முனிவர் கூறினார். அகலிகையை விரும்பிய இந்திரன் நல்லறிவு கெட்டுக் கோதம முனிவர் இல்லாத நேரத்தில், அத் தூய முனிவர் உருவத்தைத் தாங்கிக் குடிலுள் புகுந் தான் புகுந்த அவனுடன் காமப் புதுமணத் தேறலை உண்ணும்போது, அகலிகை தன்னிலை உணர்ந்தாள். உணர்ந்த பின்பும் தக்கது அன்று எனத் தெளிவு பெறாதவளாக அவ்வின்ப நுகர்ச்சியில் ஆழ்ந்தாள். அப்போது முக்கண்ணன் அனைய முனிவர் விரைந்து வந்தார். அகலிகை அஞ்சி நின்றாள். இந்திரன் பூனை வடிவங் கொண்டு போகலுற்றான். அதனைக் கண்டு சினந்த முனிவர் 'ஆயிரம் மாதர்க்குள்ள அறி குறி நினக்குண்டாக' என இந்திரனுக்கும், 'விலைமகள் அனைய நீயும் கல்லாகுக' என அகலிகைக்கும் சாபம் இட்டதாகக் கம்பர் கூறியுள்ளார். இந்திரன் ஆண்மை யிழக்குமாறும் அகலிகை ஊண் உறக்கமின்றி எவர் கண்ணுக்கும் புலனாகாதவாறு நெடுங்காலம் வருந்து மாறும் சாபமிட்டதாக வான்மீகர் கூறியுள்ளார்.

பிழைத்தது பொறுத்தல் பெரியோர்க்குக் கடன் எனப் பணிந்து அகலிகை சாப நீக்கம் வேண்ட, முனி வர் இராமபிரானின் திருவடித் துகள் படுங்கால் கல்லுருவம் நீங்கும் எனவும், இந்திரனுக்காகத் தேவர்கள் வேண்ட முனிவர் சினம் தணிந்து, அவன் உடம்பில் அமைந்த குறிகள் ஆயிரம் கண்களாகத் தோன்றும் எனவும் அருளினார்.

தன் திருவடித் துகளால் முன்னைய வடிவம் பெற்ற அகலிகையிடம் இராமன், 'மாதவன் நல்ல ருள் உண்டாக அவரை வழிபடுவாயாக! என்றும் முந்தைய நிகழ்ச்சியால் துயர்ப்படாது எம்முன் வருக என்றும் கூறி, அவளுடன் அருந்தவ முனிவர் இருப் பிடம் அடைந்தான். அரிய விருந்தினர்களாக அவர் களைப் பெற்ற முனிவர் வியந்து எதிர்கொண்டு போற்றினார். 'நெஞ்சினால் பிழைப்பு இல்லாதவளா கிய அகலிகையை ஏற்றருள வேண்டும்' என இராமன் முனிவரிடம் வேண்டினான். குணங்களால் உயர்ந்த இராமன் திருவடிகளை வணங்கிய அகலிகையை அம்முனிவரிடம் இராமன் ஒப்படைத்தான் என்பது கதை நிகழ்ச்சியாகும்.

இக்கதைக்குத் தத்துவப் பொருள் காணவும் இட முண்டு. கம்ப இராமாயணப் பழைய உரை ஒன்றில், 'அகலிகை பெண்ணுருவாய் நின்றது எப்படியிருந்த தென்றால், அறிவு வடிவாய் இருந்த ஆன்மா, மாயை யால் பிறப்பு, இறப்புகளுக்கு உள்ளாகிப் பின்னர்ப் பழைய வினைகள் நீங்கப் பெற்றுத் தலைவன் திரு வடி சேர்ந்து, தூய ஆன்மாவாக நிற்பது போலிருந் தது' என்று ஒரு குறிப்புக் காணப்படுகிறது


கோதம முனிவருக்கும் அகலிகைக்கும் பிறந்த வர் சதானந்தர் ஆவார். அவரைக் ''கோதமன் காத லன்'' என்று கம்பர் குறிப்பிடுகிறார்.

தொகை நூல்களுள் ஒன்றான பரிபாடலின் 19-ஆம் பாடல் அங்குள்ள எழுத்துநிலை மண்டபத்தில் தீட்டப் பெற்றுள்ள ஓவியங்கள் ஒன்றில் அகலிகை, கோதமன, இந்திரன் ஆகியோர் உருவங்கள் அமைக் கப்பட்டுள்ளதும், அதனை ஒருவர் மற்றொருவருக் குக் காட்டி மகிழ்வதும் கூறப்பட்டுள்ளன.

அகலிகையின் கற்பினுக்கு ஏற்பட்ட சோதனை காலந்தோறும் தோன்றிய படைப்பாளிகளின் சிந்தனையைக் கவர்ந்துள்ளது. வெ.ப.சுப்பிரமணிய முதலியார் ''அகலிகை வெண்பா'' எனத் தனிநூல் ஒன்று யாத்துள்ளார். இக்காலத்தில் புதுமைப்பித்தனும், கவி ச.து.சு.யோகி அவர்களும், அகலிகையைத் தம் படைப்புகளில் காட்டியுள்ளனர். ஜி.ஆர்.கி.

**அகலிகை வெண்பா** வெண்பாக்களால் இயன்று அகலிகை வரலாற்றை உரைக்கும் நூல். இது கடவுள் வழிபாடு, அவையடக்கம் நீங்கலாக 129 வெண்பாக்களைக் கொண்டது. இறுதியில், வாழ்த்துப்பா ஒன்றும் உள்ளது. இதில் 'ஐந்தாம் சார்சாம் எம் அரசர் பிரான் வாழி' என அரச வாழ்த்துப் பகுதி அமைந்துள்ளது.

இந்நூலின் கடவுள் வாழ்த்து, தனிப்பட்ட எந்தத் தெய்வத்தின் மீதும் அமையவில்லை; பரம் பொருள் வாழ்த்தாக அமைந்துள்ளது. ''எந்தப் பொருளைச் சமயங்கள் எல்லாம் தாம் தாம் கண்டு கொண்டனவாகக் கூறுகின்றனவோ, எந்தப் பொருளைச் சாத்திரங்கள் ஆராய்ந்தும் எட்டமாட்டாமல் இளைக்கின்றனவோ, எந்தப் பொருளை நாத்திகர் ஒருசிறிதும் தெரியேம் என்று பிடிவாதமாகக் கூறுகின்றனரோ, அந்தப் பரம்பொருளை எனது நெஞ்சே, நீ பற்றுக் கோடாகப் பற்றி உய்வாயாக'' என்பது கடவுள் வாழ்த்தின் பொருளாகும்.



வெ. ப. சுப்பிரமணிய முதலியார்

இந்நூலாசிரியர் வெ.ப. சுப்பிரமணிய முதலியார் ஆவார். இவர் காலம் 1857-1946. இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வெள்ளக்கால் என்னும் ஊரைச் சேர்ந்தவர். வேளாண்மைக் கல்வி பெற்ற இவர், சென்னை மாநிலக் கால்நடைப் பராமரிப்புத் துறையில் பணியாற்றினார். இவர் கம்பராமாயண சாரம் என்னும் தொகுப்பு நூல், நெல்லைச் சிலேடை வெண்பா, கோம்பி விருத்தம், ஆகிய நூல்களையும் சுவர்க்க நீக்கம் என்னும் மொழி பெயர்ப்புக் காவியத்தையும் செய்துள்ளார்.

இந்நூலாசிரியர் திருக்குறளில் மிகவும் ஈடுபட்டவர். இவர் திருக்குறள் தொடர்களை ஆள்வதும் குறட்கருத்தினைத் தழுவி எழுதுவதும், குறள் உவமைகளைத் தாமும் கையாளுவதும் இதனை மெய்ப்பிக்கின்றன. 'நோய்நோக்கும் அந்நோய்தனை நீக்கும் மருந்து நோக்கும்' என வரும் பகுதியும், 'கொன்ற தீங்கு என்போல் இழைத்தாரும் இல்லை' என்னும் தொடரும் 'புலியதன் தோல்போர்த்த புல்லிய எருது' என்னும் உவமையும் சான்றாம்.

கவிச்சுவையை மிகுவிக்கும் உவமைகள் பலவற்றை இந்நூலில் காணலாம். காட்டாகப் பாற்கடலில் விடமும் அமுதமும் தோன்றியது போல, அகலிகையின் கண்ணின் கருவிழியும் வெண்படலமும் 'நீல விடமும் வெண்ணிறத்த அமுதமுமாக' இந்திரனுக்குத் தோன்றுகின்றன. இந்திரன் முன் அஞ்சி நடுங்கி நின்ற அகலிகைக்குக் ''கட்டவலைப் பட்ட மயில்'', 'வன்புலி கௌவிப் பற்றும் மான்', 'பையரவம் வாயுள் அகப்பட்ட தவளை', 'தீண்டார்கள் தொட்டிட்ட செம்மண் கலம்' எனப் பல உவமை கூறியுள்ளார். இழிந்த காமத்தில் இச்சை வைத்த இந்திரனைத் 'தூய அவி திருடித் துய்த்த திருட்டு நாய்' என்கிறார். ''பெண் எனில் வெம்பேயும் பெரிதிரங்கும்'' ''வெல்லம் சுசந் திடுதல் வாய்க்குற்றம்'' என்பன போலப் பல பழமொழிகள் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன.

இந்நூலில் காலாந்தகன், போன்ற சில வட சொற்களும், களவாணி போன்ற வழக்குச் சொற்களும், வெந் (முதுகு) போன்ற அருஞ்சொற்களும் ஆளப்பட்டுள்ளன.

எங்கள் பிரான் முக்கண்ணன், ஈசன், மேருவில்லி, மாதேவன், பரன், அரன் ஆகிய பெயர்களைத் தக்க இடத்தில் ஆண்டிருப்பது இந்நூலாசிரியர் சிறந்த சைவசமயப் பற்றாளர் என்பதைக் காட்டுகிறது.

இந்நூலில் அகலிகைக்கும் இந்திரனுக்கும் இடையே நிகழும் நீண்ட உரையாடலில், சேக்சுபியரின் கருத்துகளைக் கூட்டியும் குறைத்தும் ஏற்றவாறு பயன்படுத்தியுள்ளதாக இந்நூலாசிரியர் கூறியுள்ளார்.

இந்நூலின் பாடல்கள் யாப்பிலக்கணத்திற்கு ஏற்பவும், பொருள் நன்கு புலப்படுமாறு சந்தி பிரித்தும், நிறுத்தக் குறிகள் இடப்பெற்றும் அமைக்கப் பெற்றுள்ளன. அரிய சொற்களுக்கும், தொடர்களுக்

கும் குறிப்புரையை அடிக்குறிப்பாகத் தந்துள்ளார். மேலும் செய்யுட் பயிற்சி இல்லாதோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு 'அகலிகை வெண்பா வசனம்' என்னும் பகுதியையும் பின் இணைப்பாகச் சேர்த்துள்ளார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பதின்மூன்றாம் ஆண்டு நிறைவு விழா 1915–ஆம் ஆண்டு இராமநாத புரத்தில் டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள் தலைமையில் நிகழ்ந்தபோது இந்நூல் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அக்காலத்துச் சிறந்து விளங்கிய சேது சமசுதான வித்துவான் மு.ரா. அருணா சலக் கவிராயர் அவர்களும் எட்டையபுரம் காசி விசுவநாதபிள்ளை அவர்களும் இந்நூலுக்குச் சிறப்புப் பாயிரம் நல்கியுள்ளனர். ஜி.ஆர்.கி.

**அகவர்** என்போர் தொன்றுதொட்டு வரும் பழங்குடியில் தோன்றிய முன்னோரின் புகழ் பாடு வோர். இவ்வாறு பாடும்போது, முன்னோரை அகவி (அழைத்து)ப் பாடுதலால் அகவர் எனப்பட்டனர், இவர் சூதர் எனவும் சொல்லப்படுவர். அரசன் பாச றையில் உறங்கும்போது அவன் துயிலெழப் பாடுவதும் இவ்வகவரது இயல்பு. அகவன் மகளிரும் பாடுவ துண்டு. இவர்களுக்கு அரசன் தேரையும் குதிரை களையும் வழங்கிச் சிறப்பிப்பான் என்று சங்க இலக்கியம் கூறும்.

**அகவற்பா** தமிழில் உள்ள நால்வகைப் பாக் களுள் ஒன்று. இஃது அகவல் ஓசை உடையது. பழங் காலத்தில் இப்பாவினைப் பாடும் ஆடவர் 'அகவுநர்' என்றும், பாடும் மகளிர் 'அகவன் மகளிர்' என்றும் அழைக்கப்பட்டனர். பின்னர், இப்பாவினை இலக் கிய ஆசிரியர்கள் மிகுதியாகப் பயன்படுத்தியதால் இஃது 'ஆசிரியப்பா' என்று வழங்கப்பட்டது. இன்று இப்பெயரே அகவற்பாவைக் குறிக்கப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

அகவற்பாவில் எல்லா வகையான இயற்சீர் களும் வரும். இயற்சீர்களுக்கு இடையே சில இடங்களில் வெண்சீரும் வஞ்சிச்சீரும் கலந்து வரலாம். நிரை நடுவாகிய வஞ்சி உரிச்சீர் இடம் பெறாது. நேரொன்றிய ஆசிரியத் தளையும் நிரை யொன்றிய ஆசிரியத்தளையும் இதற்குரியவை. வேற்றுத் தளைகளும் சில இடங்களில் வரலாம். இப்பாவின் அளவடிகளோடு இடையிடையே குற ளடி, சிந்தடி, நெடிலடி ஆகியவைகளும் கலந்து வருவதுண்டு. இப்பாவின் சிற்றெல்லை மூன்றடி; பேரெல்லை பாடுபவரின் பொருள் முடிவைக் குறித்து அமையும். இப்பேரெல்லையினைத் தொல்காப்பியம் ஆயிரம் அடிகள் என வரையறுத்துள்ளது. இப்பா, பெரும்பாலும் ஏகாரத்தில் முடியும். ஓ, என், ஈ, ஆய், அய் என்னும் ஈறுகளுள் ஒன்றினைப் பெற்று முடியவும் பெறும். மேற்கூறிய விதிகளை ஏற்று அமைவது அகவற்பா ஆகும்.

தொல்காப்பியர் ஆசிரியப்பாவை வகைப் படுத்திக் கூறவில்லை. அசிரியப்பாவில் பல்வேறு அமைப்புகள் தோன்றிய பின்னர் இடைக்கால யாப் பிலக்கணிகள் அடியமைப்பு, பொருள் தொடர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் இதனை நான்காகப் பிரித்தார்கள். எல்லா அடிகளும் அளவடியாய் அமைய, ஈற்றயலடி சிந்தடியாய் அமைவது 'நேரிசை ஆசிரியம்' ஆகும். எல்லா அடிகளும் அளவடியாய் அமைந்தால், அது 'நிலைமண்டில ஆசிரியம்' ஆகும். அளவடிகளை முன், பின் மாற்றியமைத்தாலும் பொருட் குழப்பம் ஏற்படாது அமையின், அந்த ஆசிரியப்பா 'அடிமறிமண்டிலம்' எனப்படும். முதல டியும் ஈற்றடியும் அளவடிகளால் அமைய, அவற் றுக்கு இடையே குறளடியும் சிந்தடியும் நெடிலடி களும் கலந்து வருமாயின், அது 'இணைக்குறள் ஆசிரியப்பா' ஆகும் இந்நான்கு வகைகளிலும் நேரிசை ஆசிரியப்பாவே பெரும்பான்மையாகக் கையாளப் படுகிறது. எடுத்துக்காட்டாக, 2356 சங்கப்பாடல் களுள் 2172 பாடல்கள் ஆசிரியப்பாக்கள். இதில் நேரிசை ஆசிரியம் மட்டும் 2079 பாடல்களாகும்.

இலக்கிய வகைகளைப் பொதுவாகத் தன்னு ணர்ச்சிப் பாடல், காப்பியம், நாடகம் என்று மூவகை யாகப் பகுத்துரைப்பர். இம்மூன்று வகைகளிலும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்வது ஆசிரியப்பாவாகும். தன்னுணர்ச்சிப் பாடல் வகையைச் சார்ந்த சங்கப் பாடல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் அமைந் துள்ளன. சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை போன்ற தொடக்கக் காலக் காப்பியங்கள் ஆசிரியப் பாவில் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மொழி பெயர்க்கப்பட்ட சேக்சுபியர் நாடகங்களும், மனோன் மணீயம், அனிச்ச அடி போன்ற செய்யுள் நாடகங் களும், பெரும்பாலும் ஆசிரியப்பாவில் இயற்றப் பட்டுள்ளன. இன்று செல்வாக்குப் பெற்றுவரும் புதுக்கவிதைகளும் இணைக்குறள் ஆசிரியப்பாவின் பிறழ் வடிவங்களே என்று கருத இடமுண்டு. ஆசிரி யத்துறை, ஆசிரியத் தாழிசை, ஆசிரிய விருத்தம் என்று ஆசிரியப்பாவின் இனம் மூவகைப்படும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தலைமையும் பெருமையும் பெற்றுத் திகழ்வது ஆசிரியப்பா. ஏனெனில், இது மக்களின் பேச்சொலி நயத்துக்கும் தமிழ்மொழி அமைப்புக்கும் பொருத்தமாக அமைந் துள்ளது. இது திராவிடமொழி யாப்புகளில் தொன் மையானதாகக் கருதப்படுகிறது. எளிய அமைப்பும் இயல்பான ஓசையும் உடைய பா அகவற்பா என்பதில் ஐயமில்லை. அ.பி.

**அகழாய்வு** மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கின்ற பண்டைய நாகரிகச் சின்னங்களை அறிவியல் முறைப்படி வெளிப்படுத்தும் முயற்சியாகும். மிகப் பழங்காலத்தைப் பற்றி இயம்பும் இலக்கியங்கள், வரலாற்று ஏடுகள், கல்வெட்டுகள், காசுகள் போன்றவை தோன்றுவதற்கு முன்னர், நிலவிய தட்ப வெப்ப நிலை, மரம், செடி, கொடிகள், விலங்கினங்கள், ஆதி மனிதனின் வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப்பற்றி அறிய உதவுவது அகழாய்வு (Excavation). ஒரு நாட்டின் பண்பாட்டுச் சிறப்பியல்புகளைத் தக்க முறையில் வெளிப்படுத்தும் திறன் இவ்வாய்வுக்கு உண்டு.


அகழாய்வில் அனைத்துப் பொருள்களும் ஆராய்ச்சி முதன்மையும் பொருண்மையும் பெறுகின்றன. இயற்கை ஆற்றல்களின் இயக்கம், புவியின் அமைப்பு, அதில் ஏற்பட்ட தட்ப வெப்ப நிலை மாற்றங்கள் போன்றவை பற்றியும் இவ்வாராய்ச்சியின் மூலம் அறிந்துகொள்ள இயலும்.

அகழாய்வு ஒருவகையில் அறிவியலாகத் திகழ்கிறது; மற்றொரு வகையில் கலையாகக் காட்சியளிக்கிறது. அகழாய்வில் நாம் பலவகை அறிவியல் கருவிகளையும் கையாள வேண்டியுள்ளது. இப்பணியில் புவி அமைப்பியல், இயற்பியல், வேதியியல், விலங்கியல், வானவியல், உடற்கூற்றியல் போன்ற அறிவியல்களின் துணைகொண்டு தொல்பொருள்களை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

அகழ்ந்தெடுக்கப்படுகின்ற தொல்பொருள்களை வெறும் காட்சிப் பொருள்களாக மட்டும் கருதாமல் பழங்குடியினரின் பண்பாட்டுச் சிறப்பியல்புகளை விளக்கவல்ல சான்றுகள் எனக் கருதிச் செயற்பட வேண்டும். அப்பணிக்கு வரலாற்றறிவு, எழுத்துவன்மை, கற்பனைத்திறன் போன்றவையும் தேவை. இந்த வகையில் இதனை ஒரு கலையாகக் கருத வாய்ப்புள்ளது. உலகில் உயர்ந்தெழுந்து மறைந்த பேரரசுகள், பேரரசர்கள், படையெடுப்புகள், அவற்றின் வெற்றிதோல்விகள் ஆகியவைபற்றி வரலாறு நமக்கு அறிவிக்கிறது பொதுமக்களைப் பற்றிய செய்திகளைப் பெரும்பாலும் வரலாறு தெரிவிப்பதில்லை. ஆனால், அகழாய்வு இப்புவியில் தோன்றி மறைந்த தொன்மை வாய்ந்த நாகரிகங்களைப் பற்றியும் அவற்றின் எழுச்சி, பரவல், ஊடுருவல், வீழ்ச்சி பற்றியும் வெளிப்படுத்தும். ஆதிமனிதனின் அன்றாட வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், அவனது சமூகத்தில் நிலவிய அரசியல், பொருளாதாரம், வாணிபம், சமயம், கட்டிடக்கலை, இறந்தவர்களை அடக்கம் செய்யும் முறை, உடலைவிட்டுப் பிரிந்த உயிரின் மீது அவனுக்கு இருந்த நம்பிக்கை ஆகியவை பற்றிய விரிவான குறிப்புகளை இவ்வியல் மூலம் பெறமுடியும். அகழ்ந்தெடுக்கப்படும் தொல்பொருள்கள் அவற்றிற்குச் சான்றுகளாக நின்று உறுதுணை செய்யும். ஏனென்றால், இத் தொல்பொருள்களுள் பெரும்பாலானவை, சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்ந்த பொது மக்களால் பயன்படுத்தப்பட்டவை யாகும்.

கல், மண், எலும்பு போன்றவற்றால் ஆக்கப்பட்ட கருவிகள், அணிகலன்கள், பாத்திரங்கள், மட்கலங்கள், தெய்வத் திருமேனிகள் ஆகியனவெல்லாம் பொது மக்களின் உடைமைகளாகும். அகழாய்வில் அக்கால நகர அமைப்புப் பற்றியும் ஓரளவு தெரிந்து கொள்ளலாம். வரலாற்று ஏடுகளால் தொடமுடியாத காலத்தை அகழாய்வினால் தொடமுடியும். வரலாற்றுக் காலப் பண்பாட்டுச் சிறப்பியல்புகளையும் அகழாய்வு அளிக்க இயலும். ஒரு நாட்டின் வரலாறு பண்பாட்டுச் சிறப்பியல்பு போன்றவற்றை முழுவதுமாக அறிந்துகொள்ள இவ்வாய்வு இன்றியமையாததாகும். பண்டைய மக்கள் வாழ்ந்த இடங்களில் அவர்கள் பயன்படுத்தியபின் கழிக்கப்பட்ட பொருள்கள் நிலத்தடியில் பன்னெடுங்காலம் இருக்கின்றன. பழைய மண் தரைகள் அழிக்கப்பட்டு அங்குப் புதியவை இடம் பெறுகின்றன. வெள்ளத்தின் காரணமாகவோ வேறு பல இயற்கைக் காரணங்களினாலோ கட்டிடங்கள் இடிந்து சரியலாம். வெள்ளம் வடிந்தபின் மறுபடியும் அங்குக் குடியிருப்பு ஏற்படலாம். மேலும், இத்தகைய இடங்களில் பிற்கால மக்களால் குழிகள் பல தோண்டப்படுகின்றன. அக்குழிகள் இறந்தவர்களைப் புதைப்பதற்காகவோ கழிவுப் பொருள்களை உள்ளே போடுவதற்காகவோ தோண்டப்பட்டிருக்கலாம். எனவே, இத்தகைய மாறுதல்களுக்கான சான்றுகளைக் கண்டுபிடித்து அவற்றை ஆராய வேண்டியது இன்றியமையாத பணியாகும். பூமியைத் தோண்டிச் செல்லுங்கால் கிடைக்கும் தடயங்களையும், அவற்றின் கால எல்லையையும் கணக்கிடல் வேண்டும். பல்வேறு காலங்களைச் சார்ந்த தொல்பொருள்களைக் கொண்டுள்ள மண் அடுக்குகளின் அமைப்பை ஆராய்வதே அகழாராய்ச்சி எனப்படும். மண் அடுக்குகளின் நிறம், அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு, பல்வேறு காலங்களைச் சார்ந்த அடுக்குகள் பிரிக்கப்படுகின்றன. இம் மண்ணடுக்குகளைப் பற்றி ஆய்வு செய்வதே மண்ணடுக்காய்வு (Stratigraphy) எனப்படும். பின்பு அவற்றின் தொன்மை, ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பு ஆகியவற்றைக் கவனிக்க வேண்டும்.

மண்ணுள் அகழாராய்ச்சி நடத்துவதற்குச் சிறப்புப் பயிற்சி தேவைப்படுகிறது. அகழாராய்ச்சியில் பொதுவாக இரண்டு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவை: 1. பரவலாகத் தோண்



அகழாய்வுக்குழி மண்ணடுக்குகள்

டும் முறை (Horizontal Excavation) 2. ஆழத் தோண்டும் முறை (Vertical Excavation).

பரவலாகத் தோண்டும் முறை என்பது, தொன்மையான ஓர் இடத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய புதைமண்ணை மட்டும் பெருமளவில் பரவலாகத் தோண்டிப் பார்ப்பதாகும். இதன்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய பண்பாட்டுச் சின்னங்களை ஒரே இடத்தில் பெருமளவில் பெற வாய்ப்புள்ளது. மேலும், பரவலான முறையில் நிலப்பரப்பைத் தோண்டுவதன் வாயிலாக ஓர் இடத்தில் கிடைக்கப்பெறாத தடயம், மற்றோர் இடத்தில் கிடைக்க வாய்ப்புண்டு. மண்ணுக்குள் மறைந்து கிடக்கிற பண்டைய கோட்டைச் சுவர்கள், அரண்மனைகள், தெருக்கள், போன்றவற்றை எளிதில் கண்டுபிடிக்க இம் முறையினைக் கையாளலாம். இம் முறைப்படிதான் அரப்பா, மொகஞ்சோதாரோ அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆழத் தோண்டும் முறை என்பது குறிப்பிட்ட இடத்தில் மிகக் குறைந்த அளவு நிலப்பரப்பில் கன்னிமண் (Virgin Soil) வரை ஆழமாகத் தோண்டிச் செல்வதாகும். ஆழமாகத் தோண்டுவதன் மூலம் அவ்விடத்தில் புதைந்து கிடக்கும் பல்வேறு காலங்கட்கு உட்பட்ட தொல்பொருள்களை ஆராய இயலும். மேலும் இயற்கைப் பாறை வரையில் தோண்டுவதால், அந்த இடத்தில் மக்கள் முதன் முதல் குடியேறியது தொடங்கித் தொடர்ச்சியாக அவ்விடத்தில் தோன்றி மறைந்த பல காலங்கட்கு உட்பட்ட பல்வேறு மக்களது வரலாற்றுப் பண்பாட்டுப் பெருமையை அறிய முடிகிறது. ஆழமாகத் தோண்டினால்தான் பல்வேறு மண் அடுக்குகளைப் பிரித்து அவற்றிற்குரிய காலத்தை வரையறை செய்து அவை சுட்டிக் காட்டும் பண்பாட்டுச் சிறப்பினை உணர முடியும். அதுபோலவே, தோண்டி எடுக்கப்படுகிற தொல் பொருள்களுக்கும் அவற்றிற்குரிய மண் அடுக்

குகளுடன் இணைத்துக் காலவரம்பைக் கணக்கிட இயலும். இம் முறை, தொல்பொருள்களின் உண்மையான காலத்தை வரையறுத்துணரப் பெருமளவில் உதவி செய்கிறது. எனினும் குறைந்த அளவு நிலப் பரப்பில் தோண்டுவதன் காரணமாகக் குறிப்பிட்ட காலத்திற்கு உட்பட்ட ஒரு பண்பாட்டின் எல்லாக் கூறுகளையும் அறிந்துகொள்ள இயலாமற்போகலாம் என்பது இம்முறையில் உள்ள குறைபாடாகும். பெரிய கட்டிடங்கள், சுவர்கள், கோயில்கள் போன்றவற்றை இம் முறையைக் கையாண்டு தோண்டுவதற்கு மிக்க உழைப்பு, காலம், பொருள் ஆகியவை தேவைப்படுகின்றன. எனினும் தொல்பொருளியலுக்கு ஆழமாகத் தோண்டும் இம் முறையே சிறந்ததெனக் கருதப் படுகிறது. தமிழகத்தில் அரிக்கமேடு, கரூர், கொற்கை, காஞ்சிபுரம், உறையூர், திருக்காம்புலியூர், வல்லம், கொடுமணல் போன்ற இடங்களில் இம் முறையே பின்பற்றப்பட்டது.

தோண்டுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்த பின் அகழ வேண்டிய குழியின் அளவுகளை (நீளம், அகலம்) வரையறுத்து, நிலத்தின் மேற்பரப்பில் அடையாளமிடப்படும். அக் குழியின் அளவுக்குட்பட்ட நிலப்பரப்பின் மேற்பகுதியைப் புல், செடி முதலியன எவையுமின்றி நன்றாகத் தூய்மை செய்தல் இன்றியமையாததாகும். குழியின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பக்கங்களிலும் மர முளைகளை ஒரு மீட்டர் இடைவெளிக்கு ஒன்றாக நடவேண்டும். பின், அந்த முளைகளை இணைக்கும் வகையில் நூற் கயிற்றைக் கட்டவேண்டும். ஒரு பக்கமுள்ள மர முளைகளுக்கு I, II, III, IV என்றும், மற்றொரு பக்கமுள்ளவற்றிற்கு I′, II′, III′, IV′ என்றும் எண்கள் கொடுக்கப்படும். தோண்டத் தொடங்குவதற்குமுன் குழியின் மேற்பரப்பைப் புகைப்படம் எடுத்தல் இன்றியமையாததாகும்.

நிலத்தைத் தோண்டும்பொழுது சிறிய களைக் கொட்டுகளையே பயன்படுத்த வேண்டும். பெரிய மண்வெட்டிகளைக் கொண்டு தோண்டினால் அவற்றைக் கொண்டு சிறிது சிறிதாக, அதாவது அங்குலம் அங்குலமாக நிலப்பரப்பைத் தோண்ட வேண்டும். தோண்டிய மண்ணை உடனேயே அப்புறப்படுத்தக் கூடாது. அதைக் கட்டிகளின்று உடைத்துக் கைவிரல்களாலும் கத்தியாலும் அலசிப் பார்த்த பின்னரே அப்புறப்படுத்தல் வேண்டும். ஏனென்றால், மண்ணுடன் கலந்த கடுகளவை ஒத்த பாசிகள், சிறிய காசுகள் மற்றும் ஏனைய தொல்பொருள்கள் அதில் கிடைக்கப் பெறலாம். தொல்பொருள்கள் கிடைக்கப் பெறின், அவை கண்டெடுக்கப்பட்ட இடத்தின் அடையாளம் ஆழம் ஆகியவற்றை உடனே பதிவு செய்தல் வேண்டும். கிடைத்த பொருள் எந்த இரு மர முளைகளுக்கு இடையில் உள்ள பரப்பில் கிடைத்தது என்பதே அப்பொருளின் இட அடையாளமாகும்.

கிடைக்கும் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காக அவ்வப்போது அவற்றிற்குரிய மண் அடுக்குகளுடன் இணைத்துப் பதிவு செய்து உறைகளில் போட்டு வைத்துப் பாதுகாத்தல் வேண்டும். அதே போல் ஏராளமான பானை ஓடுகள், முழுப் பானைகள் ஆகியவற்றையும், அவற்றிற்குரிய மண் அடுக்குப்படி, மண்பாண்டக் கொட்டிலில் (Pottery Yard) வைப்பர். இவ்வாறு தோண்டுகையில் மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து, மண் அடுக்குகளில் மாற்றத்தைக் கண்டு கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

சில வேளைகளில், கிடைக்கும் தொல்பொருள்களின் வாயிலாக மண் அடுக்குகளின் மாற்றத்தை உணரலாம். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழாக (1), (2), (3), … ..………என்று எண்களிடப்படும். இறுதியில், தோண்டி முடித்த பிறகு, குழியின் நான்கு பக்கங்களிலும் உள்ள சுவர்களைச் சமப்படுத்துவார்கள். சுவர்களைச் சமப்படுத்துவதால் மண் அடுக்குகள் பல நன்றாகத் தெரியவரும். அவற்றைக் கோடுகளினால் குறித்திடல் வேண்டும். குழியின் சுவர்களில் அந்தந்த மண் அடுக்குகளைக் காட்டும் (1), (2), (3), ………… என்று எண்களிடப்பட்ட குறிப்புச் சீட்டுகள் மாட்டப் படும்.

மண் அடுக்குகளில் எவையெவை எந்தக் கால வரம்பிற்குட்பட்டவை என்பதையும் வரையறுத்துக் கொள்ளவேண்டும். அதற்குப் பேருதவியாக இருப்பன காசுகளும் பானை ஓடுகளுமேயாகும். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழ்நோக்கி எண்களிடப்படும். ஆனால் பல காலங்களுக்குட்பட்ட வெவ்வேறு பண்பாடுகள், கீழிருந்து மேல் நோக்கிக் கணிக்கப்படும். ஏனெனில், தொல்பொருள்களின் தொன்மை, கீழிருந்து மேல்நோக்கிக் கணக்கிடப்படுவதேயாகும். மிகவும் கீழே உள்ள மண் அடுக்குகள் மிகப் பழங்காலத்தைச் சார்ந்தவை. இதுவே மண் அடுக்குகளை ஆராய்வதில் உள்ள தத்துவமாகும்.

குழியின் பக்கங்களைச் சமப்படுத்திய பின்னர் அவற்றைப் புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள். சுவர்கள், மண்தரைகள், பெரிய பானைகள் ஆகியவை காணப்பட்டால் அவற்றை உடனுக்குடன் புகைப்படம் எடுத்துப் பதிவு செய்தல் வேண்டும். மேலும் வரைபடத் தாளில் குழியின் சுவர்களில் காணப்படும் மண் அடுக்குகளின் நீளம், அகலம், மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை வரைந்து கொள்ள வேண்டும்.

கடலுக்கடியில் அகழாய்வு அகழாய்வின் பிறிதொரு பிரிவு, 20-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்

அறிவியலின் வளர்ச்சியினால் கடலகழாய்வு பெரு வளர்ச்சி அடைந்து வருகிறது. நிலப்பகுதியில் நடத்தப்படும் அகழாய்வு முறைகளே கடலகழாய்விலும் பின்பற்றப்படும். ஆனால் கடலகழாய்வில் கடலில் மூழ்கும் திறன் உடையவர்களையே இப்பணிக்குப் பயன்படுத்துகிறார்கள். உலகின் தொன்மையான கடற்கரை நகரங்கள், துறைமுகப்பட்டினங்கள் பல கடல்கோள்களினாலும் இயற்கையின் சீற்றத்தாலும் அழிந்துபட்டுள்ளன. தமிழகத்தில் காவிரிப்பூம்பட்டினமும் மாமல்லபுரமும் கடல்கோளால் அழிந்துள்ளன என அறிஞர்கள் கருதுகின்றனர். இத்தகைய நகரங்களின் தொன்மையான சிறப்பைக் கடலகழாய்வின் மூலம் வெளிக்கொணர இயலும். மத்திய தரைக்கடற் பகுதியில், மார்சிலி (Marseille) என்னும் இடத்திற் கருகில் இலி கிரான்ட் காங்லோ (LeGrand Congloue) என்னும் இடத்தில் நடத்தப்பட்ட கடலகழாய்வு முதன்மையான கடலகழாய்வாகும். 1958-ஆம் ஆண்டு கேப் கிலிடோன்யா (Cape Gelidonya) என்னுமிடத்தில் நடத்தப்பட்ட கடலகழாய்வின் மூலம் தொன்மையான கப்பல் ஒன்றின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**அலுவலர்கள்**: அகழாய்வுப் பணியில் ஈடுபடும் பணியாளர்கள் அகழாய்வில் நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும் கற்றுணர்ந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். இதற்குப் போதிய அலுவலர்களும் ஊழியர்களும் வேண்டும். பொதுவாக, அகழாய்வுப் பணிகள் ஓர் இயக்குநருடன் (The Director) செயல்படத் தொடங்கும். அவருக்குத் துணையாக ஓர் உதவி இயக்குநர் (Deputy Director), மற்றும் மேற்பார்வையாளர் (Site Supervisors) ஆகியோர் இருப்பர். மட்பாண்ட ஓடுகளை வகைப்படுத்தி மட்பாண்டக் கொட்டிலில் வைக்க ஓர் அலுவலர் (The Pottery Assistant), அவ்வப்பொழுது அகழாய்வுக் குழிகளையும் கிடைக்கிற தொல்பொருள்களையும் நிழற்படம் எடுக்க நிழற்படம் எடுப்பவர் (Photographer), குழிகளின் மேற்பரப்பினையும் பக்கங்களையும் குழிகளில் காணப்படும் கட்டிடங்களையும் அளக்கும் ஓர் அளவையர் (Surveyor), மக்கிக் கிடக்கும் தொல்பொருள்களைக் குறிப்பாக நாணயங்களைத் தூய்மை செய்ய ஒரு வேதியியல் வல்லுநர் (Field Chemist), குழிகளின் வரைபடங்கள், மட்பாண்டங்கள், தொல்பொருள்கள் ஆகியவற்றை வரைய ஓர் வரைவாளர் (Draftsman) ஆகியோர் இருத்தல் வேண்டும். அகழாய்வுக் குழிகளை அகழ்வதற்குக் கூலி ஆட்கள் இன்றியமையாதவர்கள்.

அகழாய்வுக்கெனப் பலதரப்பட்ட கருவிகள் பயன்படுகின்றன. குழிகளை வெட்டக் களைக்கொட்டு, மண்வெட்டி, சல்லடை, சிறு கத்தி, புகைப்படக் கருவி, வரைபட அட்டை, கூடை, வரைபடத் தாள்கள், தொல்பொருள்களைச் சேகரித்து வைக்கும் பை, ஆழத்தைக் கண்டுபிடிக்கும் எடை நூற்குண்டு, அளவு கோல்கள் போன்ற கருவிகள் இருத்தல் வேண்டும். மேலும், அகழாய்வில் கிடைக்கும் மட்பாண்டங்களைச் சேகரித்து வைக்கும் கொட்டில் ஒன்றும் நாணயங்கள், உலோகப் பொருள்கள் ஆகியவற்றைத் தூய்மை செய்யும் ஓர் இரசாயனக் கூடமும் அகழாய்வு நடைபெறும் இடத்தில் இருத்தல் இன்றியமையாதது. அகழாய்வு செய்து முடித்ததுடன், அகழாய்வு செய்யப்பட்ட ஊரின் சிறப்புத் தன்மை, விளைவுகள் ஆகியன பற்றி உடனே பிறர் அறியும் வண்ணம் நூல்கள் வெளியிடுதலும் வேண்டும்.

காண்க: மண்ணடுக்குஆய்வு: கடலகழாய்வு. எஸ்.கு.

துணை நூல்கள் :

**Wheeler, R.E.M.**, "Archaeology from the Earth". Oxford Clarendon Press, London, 1954.

**Robert F. Heizer & John A. Graham**, "A guide to field methods in Archaeology", The National Press, California, 1968.

**Kenyon, K.M.**, "Beginning in Archaeology", New York, 1961.

***அகழி*** என்பது பண்டைக்காலத்திலும் இடைக்காலத்திலும் அரசர்கள் தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டுக் கோட்டையின் சுற்றுச் சுவரையடுத்து வெளிப்புறத்தில் அகழ்ந்து தோண்டிய பள்ளமாகும். அதில் நீர் நிறைந்திருக்கும். அகழி ஆழமாகவும் இருக்கும்.

கோட்டைக்குள் பகைவர்கள் எவ்வகையிலும் நுழையாமல் தடுக்கவே இம்முறை கையாளப்பட்டது. பொறியியல் அறிவு முதிர்ந்து வரும் இக்காலத்தில் அகழியால் பயனில்லை; இன்று அகழியைக் கட்டுவாருமில்லை.

நீரரண், நிலவரண், மலையரண், காட்டரண் ஆகிய நால்வகை அரண்களைத் தம் கோட்டையைச் சுற்றி அமைக்கும் வழக்கம் இருந்ததற்குத் திருக்குறளில் சான்றுகள் உள்ளன. வட இந்தியாவிலும் அத்தகைய அரண்கள் இருந்தமை வடமொழி நூல்களால் அறிகிறோம். அகழியில் நீர் நிரப்பப்படும். இதில் முதலைகளை வளர்க்கும் வழக்கமும் இருந்தது.

பாடலிபுரத்தில் அகழி இருந்ததை மெகஸ்தனிசு குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பாக் கண்டத்திலும் இதற்கான சான்றுகள் உள்ளன. உரோமானியர் காலம் முதல் படைமானியப் பிரபுக்கள் தோன்றிய காலம் வரை கோட்டைகளும் அகழிகளும் பெருகலாயின. கோட்டைகளைக் கல்லால் கட்டினர். கற்சுவர்களுக்




வேலூர்க் கோட்டை அகழி

கிடையே மண்ணைக்கொட்டி உறுதியான அகலக் கோட்டைகளையும் கட்டினர். வெடி மருந்தும் பீரங்கிப் படைகளும் பயன்படுத்தப்பட்டபோது அரண்களும் அகழிகளும் பயனற்றுப் போயின. தமிழ் நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தின் தலைநகரான வேலூரிலுள்ள கோட்டை அகழியுடன் கட்டப்பட்டது. இப்போதும் சிதையாமல் அது பாதுகாக்கப் பட்டு வருகிறது.

இக்காலத்தில் பள்ளங்களில் பதுங்கிக் கொண்டு எதிரிகளைச் சுட்டுக் கொண்டே முன்னேறும் போர் முறை அகழிப்போர் (Trench warfare) எனப்படுகிறது. அகழிப் போர் முறை, அமெரிக்க உள்நாட்டுப்போரின் போதும் , முதல் உலகப் போரின் போதும் பயன் பட்டது. இரண்டாம் உலகப் போரின் போதும் இத்தாலியின் மலைப்புறங்களில் அகழிப் போர் முறை பழக்கத்திலிருந்தது. முற்றுகையிடும் சமயங்களில் அகழிப் போர் முறையைச் செருமானியர் முதல் உலகப் போரின் போது பெரிதும் பயன்படுத்தினர்.

முதல் உலகப் போரின் போது அகழிப் போர் முறையைத் தடுக்கக் கண்ணி வெடிகளைப் பயன்படுத்தினர். இம் முறையால் போரை முற்றிலும் தடுக்க முடியாவிடினும் தாமதப்படுத்த முடிந்தது. காண்க: அகழிப் போர்.

**அகழிப் போர்** என்பது முதல் உலகப் போரின் போது நடைமுறைப் படுத்தப்பட்ட ஒருவகைப் போர் முறையாகும். செருமானியர் பிரான்சு நாட்டில் போரிட்டபோது சாபரே என்ற படைத்தலைவர் தம் படை வீரர்களுக்கு ஊக்கமூட்டினார். பகைவர்களுக்குப் பணிவதை விடப் போர் செய்து மடிவதே மேல் என்று அவர் தம் வீரர்களுக்குக் கூறி, அவர்களை மாரன் ஆற்றங்கரைக்கு நடத்திச் சென்று செருமானியர்களுடன் போரிட்டார். இப்போருக்குப் பின் செருமானியரின் முன்னேற்றம் தடைப்பட்டது. அகழிப்போர் முறை தொடங்கியது. ஆழமான பள்ளங்களில் மறைந்து கொள்வதும் திடீரென வெளிப்பட்டுப் போரிடுவதும் ஆகிய இம்முறையால் செருமானியரது முன்னேற்றம் தடைப்பட்டது.



அகன்காகுவாவின் மலை உச்சி

**அகன்காகுவா** தென் அமெரிக்கக் கண்டத்தில் சிலி நாட்டின் இடைப் பகுதியிலுள்ள ஒரு மாநிலம். இது பெரும்பாலும் மலைப்பாங்கான இடம். இங்கு மழை மிகக் குறைவாகவே பொழிகிறது. இங்குள்ள பள்ளத்தாக்குகள் செழிப்பானவை. இங்குப்

பழவகைகள் பயிரிடப்படுகின்றன. இம்மாநிலத்தின் பரப்பு 16109 சதுர கி.மீ. இதன் தலைநகர் வால்பரைசோ (Valparaiso) என்னும் நகரம். அகன்காகுவா (Aconcagua) என்ற பெயரில் உள்ள அவிந்த எரிமலை, சிலிநாட்டிற்கும் ஆர்செண்டீனா நாட்டிற்கும் இடையே ஆண்டீசு மலைத்தொடரில் அமைந்துள்ளது. உருண்டையின் மேற்குப்பகுதியில் இதுதான் மிக உயர்ந்த சிகரம், (6,959 மீட்டர்) அகன்காகுவா மலையுச்சியை, வைன்சு (Vines), சுர்பிரிக்கன் (Zurbriggen) என்னும் ஆங்கில வீரர்கள் பிட்சரால்டு (Fitzgerald) என்பாரின் தலைமையில் கி.பி. 1897-இல் அடைந்தார்கள். அகன்காகுவா என்னும் பெயரில் உள்ள ஆறு எரிமலைக்கு மேற்கில் உள்ள மலைகளில் தொடங்கி மேற்காகப் பாய்ந்து பசுபிக் பெருங்கடலில் விழுகிறது. இம்மாநிலத்தின் மக்கள் தொகை 11,81,638; வால்பரைசோவின் மக்கள்தொகை 2,48, 200.

**அகர்** இசுரேல் நாட்டின் சிறு துறைமுகம். அதன் மக்கள்தொகை 33,000. அகர் (Acre) விரிகுடாவின் வட முனையில் அமைந்துள்ள இந்நகரம் தொல்லைகள் நிறைந்த வரலாற்றைப் படைத்ததாகும். அகரின் இடத்தை இப்போது அய்பா என்னும் நகரம் பற்றிக் கொண்டது. அய்பா நகரம் அகரிலிருந்து 14 கி.மீ. தொலைவில் அகர் விரிகுடாவின் தென் முனையில் உள்ளது. ஆனால், அகர் பண்டைய பொனீசியாவின் (Phoenicia) முக்கிய நகரங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. விவிலியத்தின் 'பழைய ஏற்பாடு' என்னும் நூலில் இந்நகரை அக்கோ (Akko) என்றும் புதிய ஏற்பாட்டில் தாலமே (Ptolemais) என்றும் கூறுவர்.



அகர் நகரம்

அகர் நகரை முசுலிம்கள் கி.பி.638-ஆம் ஆண்டில் கைப்பற்றினர். முதல் சிலுவைப் போரின்போது (கி.பி.1104) கிறித்தவர்கள் அதனைக் கைப்பற்றிக் கிறித்தவ அரசான எருசலத்தின் முக்கிய துறைமுகமாக்கினர். மூன்றாம் சிலுவைப் போரின் போது அதனைக் கைப்பற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டு, சிலாடின் என்பவர் அதனை முசுலிம்களின் ஆட்சிக்குட்படுத்தினார். பிரான்சு நாட்டு மன்னர் இரண்டாம் பிலிப்பு, கி.பி. 1191-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் படையுடன் அகரை முற்றுகையிட்ட போதிலும் அவரால் முன்னேற முடியவில்லை. இங்கிலாந்து அரசர் முதலாம் இரிச்சர்டு (Richard I) இப்போரில் ஈடுபட்ட பின்னர் முன்னேற்றம் ஏற்பட்டது. தாக்குதல் தீவிரமாக்கப்பெற்று, இரண்டு அரசர்களும் வெற்றிவாகை சூடி இந்நகருக்குள் நுழைந்தார்கள். ஆனால் முசுலிம்கள் கி.பி.1291-இல் இந்நகரை மீண்டும் பிடித்துக்கொண்டார்கள். எருசலமும் அதனோடு வீழ்ச்சியுற்றது.

இப்போது காணப்படும் அகர் நகரைக் கட்டியவர்கள் துருக்கியரே ஆவர். அது கட்டப்பட்டபோது அங்குள்ள கோட்டை கொத்தளத்தையும் சேர்த்தே அவர்கள் கட்டினார்கள். இன்றும் அது சீரிய முறையில் காக்கப்பட்டு வருகிறது. இங்குக் கி.பி.13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிலுவைப் போர் வீரர் நிலவறை ஒன்று உள்ளது. அதனுடன் கி.பி.1781-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பெரிய மசூதியும் உள்ளது. இந்நகருக்கு வடக்கில் பகாயத்துகள் என்னும் முசுலிம் சமயப் பிரிவினை நிலைநாட்டிய பகாயுல்லா (Baha'ullah) என்பாரின் வழிபாட்டிடம் உள்ளது. பாரசீகரான அவர் தம் வாழ்நாளின் இறுதியாண்டுகளை அகரில் புகலிடம் பெற்றுக் கழித்தார். வணிகர் கூட்டம் தங்குவதற்கேற்ற முறையில் அங்கு நான்கு பெரிய வழிமனைகள் உள்ளன. அவற்றைக் கானாக்கள் என்பர். வணிகப் பொருள்களைச் சுமந்து வந்த ஒட்டகங்கள் நாள்தோறும் அகர் துறைமுகம் வந்து சென்றிருக்க வேண்டும் என்பதை அவை நினைவூட்டுகின்றன.

**அகாசுரன்** கம்சன் என்னும் கொடிய அரசனின் படைத்தலைவன். கிருட்டிணனையும் அவன் நண்பர்களையும் கொல்வதற்காக அகாசுரன் பெரும் பாம்பாக உருமாறித் திறந்த வாயுடன் வந்தான். கிருட்டிணனின் நண்பர்கள் திறந்திருந்த வாயை ஒரு குகை எனக் கருதி அதனுள் நுழைந்தார்கள். தம் தவற்றை உணர்ந்து அல்லலுற்ற அவர்களைக் கிருட்டிணன் காப்பாற்றினான். இது மகாபாரதத்தில் வரும் ஒரு நிகழ்ச்சியாகும்.

**அகாசூரியசு** பண்டைய பாரசீக அரசர். அவருக்கு முதலாம் செரக்சீசு (Xerxes) என்ற பெயரும் உண்டு. யூதர்களைப் படுகொலை செய்யாமல் காக்க வேண்டுமென்று எசுதர் என்ற அரசியின் வேண்டுகோளுக்கிணங்கி அகாசூரியசு (Ahasuerus) அவர்களைக் காத்தார் என்பது விவிலியக் கதை.




அகார மட்கலன்கள்

***அகார்*** இராசசுதான் (Rajasthan) மாநிலத்தில் உதயப்பூருக்கு அருகில் அமைந்துள்ள சிற்றூர் (Ahar). இவ்வூர், வரலாற்றுக்கு முந்திய நாகரிகத்தினைக் கொண்டு திகழ்கிறது. இடைக்காலக் கல்வெட்டில் "அகதபுரா" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேவார் இராணாக்களின் மூதாதையர்களான கொகில்லா அரசர்களின் தலைநகராக இவ்வூர் இருந்தது. இவ்வூருக்கு அருகில், அகார் என்ற சிற்றாற்றங்கரையில் துல்கோட் என அழைக்கப்படும் பண்டைய நாகரிகத்தின் தடயங்கள் கொண்ட மண்மேடு உள்ளது. இங்கு முதன் முதலாக இராசசுதான் மாநிலத் தொல்லியல் துறையினர் 1952–இல் மாதிரிக் குழிகளை அகழ்ந்து ஆய்வு செய்தனர். இவ்வாய்வின் முடிவு உறுதியாக அறியப்படாததாலும், மேலும் இங்குப் புதையுண்ட நாகரிகத்தினை நன்கு அறிதற் பொருட்டும், 1954–55–இல் மறுமுறை அத்துறையினர் அகழாய்வு மேற்கொண்டனர். இது 1955-56–லும் தொடர்ந்து நடைபெற்றது. 1961–62–இல் புனேயிலுள்ள தக்காணக் கல்லூரியின் முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் (Deccan College of Post–graduate and Research Institute), இராசசுதான் மாநிலத் தொல்லியல் துறை, மெல்போர்ன் (Melbourne) பல்கலைக்கழகம் ஆகிய மூன்று நிறுவனங்களின் கூட்டு முயற்சியில் இங்கு மீண்டும் அகழாய்வு தொடங்கியது. இவ்வகழாய்விற்கு டாக்டர் எச். டி. சங்காலியா இயக்குநராகப் பொறுப்பேற்றிருந்தார்.

இவ்வகழாய்வுகளின் மூலம் இரண்டு பெரிய கால கட்டங்களைச் சேர்ந்த பண்பாட்டுக் கூறுகளுக்கான சான்றுகள் வெளிக்கொணரப்பட்டன. இங்குத் தொல்பொருள்கள் 10 மீட்டர் ஆழம் வரை கிடைக்கின்றன. கன்னி மண்ணின் (Virgin Soil) மேல் தொடங்கி, ஏறத்தாழ 6.5 மீட்டர் கனமுள்ள படிவு

கள் முதற் காலத்தைச் சேர்ந்தவையாகும். இக்கன மான படிவுகளைக் கொண்டு அக்கால மக்கள் இங்கு நீண்ட காலம் வாழ்ந்திருக்கவேண்டும் என அறி கிறோம். இந் நாகரிகத்தின் சிறப்புக் கூறான கருப்பு சிவப்பு மண்பாண்ட ஓடுகளின் படிவுகள் முழுவதும் கிடைத்துள்ளன. அக்காலத்தினை ஆய்வாளர் மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். முதல் துணைப்பிரிவில் கிடைக்கும் கருப்பு சிவப்பு ஓடுகள் உட்புறம் சொர சொரப்பாகவும் பளபளப்பாகவும் உள்ளன. இரண்டாம் துணைப் பிரிவில் இவ்வோடு கள் இரு பக்கமும் பளபளப்பாகச் செய்யப்பட்டுள் ளன. இவற்றில் பெரும்பாலானவை வெள்ளை நிறத் தில் வண்ணம் தீட்டப்பட்டுத் திகழ்கின்றன. வெள்ளைநிற வண்ணம் தீட்டப்பட்ட கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள் இங்குக் கிடைத்த மட்பாண்டங் களில் குறிப்பிடத்தக்கவனவாகும். கடைசி துணைப் பிரிவில் இதனுடன் கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட செந்நிறப் பானை ஓடுகளும் கிடைத்துள்ளன. இவ் வோடுகள் அரப்பா (Harappa) நாகரிகத்திலும் அதன் பின்னர்ச் செப்புப் பண்பாட்டுக் காலத்திலும் பெரிதும் பயன்படுத்தப்பட்டன.

இங்குப் பானை ஓடுகள் மட்டுமன்றி நுண்கற் கருவிகளும் (Microliths) செப்புப் பொருள்களும் கிடைத்துள்ளன. அக்கால மக்கள் வீடு கட்டி வாழ்ந்த தடயங்களும் இவ்வகழ்வாய்வில் கண்டெடுக்கப்பட் டுள்ளன. இப்பண்பாட்டு மண்ணடுக்குகளில் இரும்பி லான அம்புகளும் ஆணிகளும் இரும்புக் கசடுகளும் (Iron Slags) கிடைத்துள்ளன. இதனால் ஏறத்தாழ கி.மு. 16-15 ஆம் நூற்றாண்டுகளிலேயே இங்கு உருக் குத்தொழில் நடைபெற்றிருக்கலாம் என்று சாகி என்னும் ஆய்வாளர் கருதுகிறார். ஆயினும், இதனை உறுதிப்படுத்த மேலும் சான்றுகள் தேவை.

அகழாய்வின் மூலம், முதற் காலத்தில் வாழ்ந்த மக்களின் கட்டிடக் கலைத்திறனை ஒருவாறு உய்த் துணரலாம். வீட்டுச் சுவர்கள் மண்ணாலும் கல்லா லும் ஆனவை. மூங்கில் தட்டிகள் தடுப்புச் சுவர்கள் போல் பயன்படுத்தப்பட்டன. ஏறத்தாழ 36 ச.மீ. அளவுடைய வீடுகள் காணப்பட்டன. பல அறைகள் கொண்ட வீடுகளும் அகழ்வாய்வில் கிடைத்துள்ளன. இங்குள்ள பல வாய்களைக் கொண்ட அடுப்பின் பய னைச் சரிவர அறிய முடியவில்லையாயினும், கூட் டாக உணவு சமைப்பதற்கோ உலோகத்தாதுகளை உருவாக்குவதற்கோ இவை பயன்பட்டிருக்க வேண் டும். செப்புக் கோடரிகளும் செப்புப் பாளங்களும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவற்றினைக் கொண்டு செப்புத் தாதுகளை உருக்கிச் செப்புப் பொருள்கள் செய்யும் தொழில் இங்கு நடைபெற்றிருக்க வேண்டு மென உணரலாம். இவையன்றிச் சுடுமண்ணால் ஆன ஆடு, பெரிய கொம்பினை உடைய காளை, மற்றும் பல பொம்மைகள் போன்றவை இங்குக் கிடைத்த தொல்பொருள்கள் ஆகும். இக்காலத்தில் கல்லினா லான கருவிகள் கிடைக்காமல் செப்புப் பொருள்கள் மட்டும் கிடைத்ததால் இக்காலத்தினைச் செப்புக் காலம் (Bronze Age) என அறிஞர்கள் கொள்வர்.

இரண்டாம் காலம் வரலாற்றுக் காலத் தடயங் களைக் கொண்டுள்ளது. இக்காலப் படிவத்தின் கன அளவு 1.5 மீ. முதல் 1.8 மீ. வரை இருந்தது. இக்காலத்தையும் இரண்டாம் காலம்-அ, இரண் டாம் காலம்-ஆ, இரண்டாம் காலம்-இ என மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இரண்டாம் காலம் அ-வில் வடக்கத்திய மெரு கேற்றப்பட்ட கருப்பு நிற மட்பாண்டங்களும் (Northern Black Polished Ware), வண்ணம் தீட்டாத கருப்பு சிவப்பு மட்பாண்டங்களும், சிவப்பு மட்பாண் டங்களும் மற்றும் இரும்பாலான பொருள்களும் கிடைத்துள்ளன.

இரண்டாம் காலம்-ஆ - வில் கிடைத்துள்ள பொருள்களைக் கொண்டு அதன் காலத்தை கி.பி. 100 முதல் கி.பி. 300 வரை கணிக்காலம். இக்காலத் தில் கிடைத்த இரண்டு சுடுமண் முத்திரை அச்சுகளில் (Terracotta Sealing) கி.மு. 200 முதல் கி.பி. 100 வரை கணிக்கத்தக்க பிராமி எழுத்துகள் உள்ளன.

இரண்டாம் காலம்-இ-யில் இடைக்காலத்தின் முற்பகுதியைச் சார்ந்த தொல்பொருள்கள் கிடைத் துள்ளன. டி.த.

துணை நூல்கள்:

"Archaeological Remains Monuments and Museums, Part I & II", Archaeological Survey of India, New Delhi, 1964.

**Kailash Chand Jain**, "Ancient Cities and Towns of Rajasthan", Motilal Banarsidas, Delhi, 1972.


***அகாரசாதகம்*** என்பது கருநாடக இசையைப் பயிற்சி செய்யும் முறைகளுள் ஒன்றாகும்.

சுர வரிசைகள் அ, இ, உ, எ, ஒ, என்னும் உயிர் எழுத்துகளைக் கொள்வதும், "ம்" எனும் ஒலியில் பயிற்சி செய்வதும் அகார சாதகம் எனப்படும். இது குரல் வளத்திற்காகச் செய்யப்படும் முறையாகும். கமகங்கள் தெளிவாகத் தெரியுமாறு பாடுவதற்கும் மத்திம கால சுரவரிசைகள் குரலில் ஒலிப்பதற்கும் அகார சாதகம் முக்கியமாகும். அகார சாதகத்தி னால் குரலுக்கு அழுத்தமும் வலிமையும் ஏற்படும்.

எ.டு. கபதச ……… என்னும் சுர வரிசையை அஅஅஅ …… என்றும், ரிகமப என்னும் சுரவரி சையை இஇஇஇ ……… என்றும் பாடிப் பயிற்சி செய்யும் முறையைக் குறிப்பிடலாம்.

**அகாலவருச சுபதுங்கர்**: இராட்டிரகூட அரசர் கிருட்டிணராசருக்கு, சுபதுங்கர், அகாலவருசர் என்னும் பெயர்கள் உண்டு. தந்திதுருகர் என்னும் அரசர் குழந்தையின்றி இறந்தார் என்பதனைக் கர்தா (Karda) என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல் வெட்டு ஒன்று குறிப்பிட்டுள்ளது. அவருக்குப் பின் னர்ப் பட்டத்திற்கு வந்தவர்தான் கிருட்டிணராசர்; அவர் தந்திதுருகரின் தந்தைவழிச் சிற்றப்பனாவர். தந்திதுருகர் விட்டுச் சென்ற பணியை அகாலவருசர் நிறைவேற்றினார். அவர் சாளுக்கியர்களை வெற்றி கண்டார். அவரைப் பற்றிக் கூறும் இரு கல்வெட்டு கள், அவர் "சாளுக்கிய இனம் என்னும் கடலைக் கடைந்து இலக்குமி என்னும் முதன்மையான பேராட் சியை நிலைநாட்டினார்" என்று உருவகப்படுத்திக் கூறுகின்றன. இராகப்பா என்பவரைத் தோற்கடித்து முதன்மையான பேராட்சியை நிலைநாட்டினர் என்று அகாலவருச சுபதுங்க கிருட்டிணராசரைப் பற்றிக் கூறுவர். வார்தாச் செப்பேடுகள் இவ்வரசர் சிவ னுக்குப் பல கோயில்களைக் கட்டினார் என்றும் அவை கயிலை மலையை ஒத்திருந்தன என்றும் கூறு கின்றன. கிருட்டிணராசர், எலபுரா மலையில் அழ கான கோயிலைக் கட்டுவித்தார் என்று பரோடா கல்வெட்டுச் சாசனம் குறிப்பிடுகிறது. அவரால் கட்டப்பட்ட சிவன்கோயில் இன்றும் நிலைத்துள்ளது. கிருட்டிணராச அகாலவருச சுபதுங்கர் கி.பி. 753-775 வரை ஆண்டிருக்க வேண்டும் என்பது இராதா கிருட்டிண கோபால் பண்டார்க்கரின் கருத்தாகும்.

**அகிச்சத்திரா** உத்தரப் பிரதேச மாநிலத்தி லுள்ள பரேலி மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு நக ரம். மகாபாரத காலத்திலிருந்தே இந்நகர் இருந்த தாகக் கருதுவர். தாலமி இதனை அதிசத்ரா (Adi-sadra) என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிற்கு வருகை புரிந்த யுவான் சுவாங் என்னும் சீன நாட் டுப் பயணி இங்குப் பல பௌத்த மடாலயங்கள் இருந்ததாகத் தம் குறிப்புகளில் எழுதியுள்ளார். இந் நகர மக்கள் கல்வி கற்பதிலும் விடாமுயற்சியிலும் பெயர் பெற்றவர்கள் என்றும், உணவுப் பொருள் களை விளைவித்தும் காடுகளை வளர்த்தும் வந்த வர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் தட்ப வெப்ப நிலை வாழ்வதற்கேற்றதாக இருந்தது என் றும் அவர் கூறுகிறார். சமணர்கள் இந்நகரைச் சம்கய வதி எனக் குறித்தனர். பார்சுவநாதர் இவ்விடத் திற்கு வந்ததாகவும் தெரிகிறது. முகலாயர்களின் காலத்தில் இந்நகர் தனது மதிப்பினை இழந்தது. இங்கு அழிந்த நிலையில் காணப்பட்ட கோட்டை களையும் பிற அழிவுச் சின்னங்களையும் பார்வை யிட்ட ஆட்சன் (Hodgson) என்ற தொல்லியல் அறி ஞர் இவ்வூரின் பழமையை வெளிப்படுத்தினார். பின்னர் அலெக்சாந்தர் கன்னிங்காம் இங்கு அகழாய் வினை மேற்கொண்டார். இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறை இவ்விடத்தில் 1940-44 வரை இராவ்பகதூர் கே.என். தீக்சித், ஏ.கோசு (A. Ghosh) ஆகியோர் தலைமையில் அகழாய்வினை மேற்கொண் டது.



அகிச்சத்திரா - அழிவுச்சின்னம்

இவ்வூரில் கி.மு. 300 முதல் கி.பி. 1100 வரை நிலவிய நாகரிகப் பண்பாட்டுக் கூறுகள் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டன. இப்பண்பாட்டுக் கூறுகள் ஒன்பது காலப் பிரிவுகளாகப் (Periods) பிரிக்கப்பட் டன. அகழாய்வில் வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள், வடக்கத்திய பளபளப்பான கருப்பு மட்பாண்டங்கள் (N.B.P.Ware) போன்றவை கிடைத்தன. பாஞ்சால அரசர்கள் பயன்படுத்திய நாணயங்கள், குசானர் நாணயங்கள், அச்சு என்ற எழுத்து பொறிக்கப்பட்ட நாணயம் ஆகியவை கிடைத்தன. இவற்றுள் அச்சு என்ற எழுத்து பொறிக்கப்பட்ட நாணயம் அச்சுதா என்ற அரசரின் நாணயமாக இருக்கலாம் என்று தொல்லியல் வல்லு நர்கள் கருதுகிறார்கள். அச்சுதர் என்னும் அரசனை, சமுத்திரகுப்தர் தோற்கடித்ததாக அலகாபாத் கற் றூண் குறிப்பிட்டுள்ளது. ஆதிவராகன், விக்கிரகன் என்னும் பெயர் கொண்ட 9, 10-ஆம் நூற்றாண்டு நாணயங்களும் இங்குக் கிடைத்துள்ளன. மேலும் கோயில்களின் அழிவுச் சின்னங்கள், சுடுமண் பொம் மைகள் போன்றவை அகழாய்வில் கண்டுபிடிக்கப் பட்டன. சுடுமண் பொம்மைகளில் சுங்கர் காலத்தைச்

சார்ந்த மிதுனா சுடுமண் உருவம் மிக்க அழகு வாய்ந்தது.

**அகிம்சை** என்பது கொல்லாமை, தீங்கு செய்யாமை என்று பொருள்படுவதுடன் தீமையான செயல்களைப் பற்றி மனத்தாலும் நினையாமை என்றும் பொருள்படும். காந்தியடிகள் கடைப்பிடித்த அகிம்சைக் கொள்கைக்கும் இதுவே விளக்கமாகும். இதிலிருந்து அகிம்சை என்னும் அறப்பண்பு எவ்வளவு ஆழமானதென்பது அறியப்படும். காந்தியடிகள் மேல்வாரியான நோக்கில் அறத்தின் இலக்கணத்தைக் கூறவில்லை. அவற்றைச் செயற்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். அவர் தமது அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்திய பின்னரே பிறருக்கு அறிவுரை செய்தார். அதனால்தான், தமது சுய சரிதைக்கு உண்மையின் ஆராய்ச்சி (சத்திய சோதனை -My Experiments with Truth) என்ற தலைப்பினையும் அமைத்தார்.

காந்தி அடிகளின் அகிம்சைத் தத்துவத்திற்கு இன்னும் விளக்கம் தருவது, எல்லாச் சமயங்களின் அடிப்படையும் அகிம்சைதான் என்பது. இது அடிகளின் அசையாத நம்பிக்கை. இதுதான் உண்மையுமாகும். இந்நிலையில், வாய்மையும் அகிம்சையும் நெருங்கிய தொடர்புடன் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்பினார். அன்றாட வாழ்க்கையில் அகிம்சை நேரடியாகவே தொடர்பு கொண்டுள்ளது; வாய்மை அத்தொடர்புக்கு உறுதியளிக்கிறது. ஆகவே, வாய்மையில்லாத அகிம்சை பொருளற்ற செயலாகிவிடும் என்பதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். அகிம்சையின் ஆழமான பகுதியை மேலும் விளக்க முற்பட்டு அதனை மூன்று பிரிவுகளாக எடுத்துக் காட்டினார். தெளிந்த சிந்தனையும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர்கள் பின்பற்றும் அகிம்சை (Non-Violence of the Enlightened) முதன்மையானதாகும். அறிவு வளர்ச்சியும் ஆழ்ந்த நம்பிக்கையும் இல்லாதவர்கள் பின்பற்றும் அகிம்சை (Passive Non-Violence) இரண்டாம் நிலையினதாகும். கோழைகள் பிடிவாதமாகப் பின்பற்றும் அகிம்சை (Non-Violence of the coward) மூன்றாம் நிலையினதாகும். இவற்றுள் முதலில் குறிப்பிடப்பட்ட அகிம்சையே காந்தி அடிகள் சிறப்பானதென்று வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு வாய்மை, அகிம்சை என்னும் அறக் கருத்துகளின் ஆழமான விளக்கங்களைக் கூறியதுடன் காந்தியடிகள் அமையவில்லை; அக் கருத்துகள் எந்த அளவுக்கு நம் அன்றாட வாழ்வில் பயன்படும், பயன்படுத்தவேண்டும் என்பதையும் வரையறைப்படுத்திக் காட்டியுள்ளார். காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவம் சிந்தனை, சொல் என்ற அளவில் நின்றுவிடாமல் செயல் வடிவம் பெற்றுச் சிறப்பெய்துவதாகும். பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் துன்பமும் தொல்லையும் மனிதனை எதிர்கொள்ளத்தான் செய்கின்றன. அவற்றை அகிம்சையின் அடிப்படையில் அமைதியோடும் உறுதியோடும் வாய்மையின் அடிப்படையில் உள்ளத்தூய்மையோடும் துணிவோடும் அணுகும் செயல் முறையையே அவர் சத்தியாக்கிரகம் என்று கூறினார்.

காந்தி அடிகள் வழங்கிய சத்தியாக்கிரகக் கோட்பாடு இன்றைய அரசியல் உலகில் ஒரு சிறந்த தத்துவமாகவே திகழ்கிறது. தீமைகளைத் தீமையாலும் வன்முறைகளாலும் தீர்த்துவிட முடியாது; உண்மையான அன்பினாலும் தன்னலமற்ற தியாகத்தினாலும்தான் அவற்றை அகற்றவியலும். இக்கருத்தினையே திருவள்ளுவரும் வலியுறுத்திக் கூறியுள்ளார். ‘அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுபவர் உண்மையை அறியாதவரே; ஆராய்ந்து பார்க்குங்கால் பகையை ஒழிப்பதற்கும் துணையாக நின்று செயற்படுவது அன்பே’.

காந்தி அடிகளின் சத்தியாக்கிரகம் என்னும் கோட்பாட்டைப் பின்பற்றுகிறவர்கள் முதற்கண் அவர்களுடைய உள்ளங்களிலிருந்து தீய எண்ணங்களையும் தன்னல உணர்வுகளையும் களைந்தெறிய வேண்டும்; உள்ளம் தூய்மை அடையும்போதுதான் அங்கே வாய்மை வலிமைபெறும்; உண்மை ஒளிவீசும்; அப்போதுதான் எதிரியின் உள்ளத்தையும் உருக்க முடியும். இந்நிலையில்தான் வாய்மையே வெல்லும் (Satyameva Jayate) என்ற அடிப்படைத் தத்துவம் மலருகிறது. இவ்விளக்கங்களிலிருந்து சத்யாக்கிரகம் என்னும் அறப்போர் எல்லோராலும் எளிதாகக் கையாளக் கூடியது அன்று என்ற உண்மையும் நன்கு விளங்குவதாகும். எனினும் இம்முறையைக் கடமை உணர்வுடனும் கட்டுப்பாட்டுடனும் கண்ணியமாகக் கையாண்டால் மனிதனுக்கு மனிதன் வேறுபாடுகளை உண்டாக்கிப் பகைமையை வளர்க்கும் மனப்பான்மை அழியும்; ஒழியும்.

சுருங்கக் கூறின், காந்தி அடிகளின் சத்தியாக்கிரகக் கோட்பாடு அறத்திறன் அடிப்படையில் அமைந்து அகிம்சையில் உருப்பெற்று வாய்மையில் செயற்படுவதாகும். அதில் வன்முறைக்கு இடமில்லை. மனிதனின் தன்னடக்கத்தாலும் உள்ளுணர்வாலும் தன்னலமற்ற தியாக உணர்வாலும் ஊக்குவிக்கப்பெற்று, வாய்மையே வெல்லும் என்னும் புனிதமான உணர்வின் அடிப்படையில் சத்யாக்கிரகம் இயங்க வேண்டும்; இயக்கவும் வேண்டும் என்பதுதான் காந்தியடிகளின் கொள்கையாகும். உண்ணாமை (Fasting), ஒத்துழையாமை (Non-Co-operation), அரசு பணி மறுப்பு (Civil-disobedience) போன்ற நடவடிக்கைகள் சத்தியாக்கிரகத்தின் செயல் வடிவங்களாகக்

கருதப்பட்டன. இருந்தபோதிலும், அச்செயல் வடிவங்களனைத்திற்கும் அடிப்படையாகிய அறத்தை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால் அறத்தை அடிப்படையாகக் கொள்ளாத எந்தச் செயலையும், காந்தியடிகள் மனிதச் செயலாகக் கருதவில்லை. அதனால்தான், அரசியலைப் புனிதப்படுத்தியவர் காந்தியடிகள் என்றும் அவர் புகழப்பட்டார்.

அறக்கருத்துகளேயாயினும், அவை அரசியல் அரங்கில் செயற்படும் நிலையில் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதனையும் காந்தியடிகள் அறிவுறுத்தியுள்ளார்கள். வழியும் முடிவும் என்பதே அக்கோட்பாடாகும் (Means and End). வாய்மையும் அகிம்சையும் என்னவென்பதைத் தெளிவாகத் தெரிந்து உணர்ந்து அவற்றை அன்றாட வாழ்வில் கடைப்பிடிப்பவர்களே, வழியும் முடிவும் என்ற கோட்பாட்டினையும் பின்பற்ற முடியும். பொதுவாக, ஒவ்வொருவரும் – ஆடவரும் பெண்டிரும், இளைஞரும் — முதியோரும் — ஏதாவதொன்றினை அடைவதற்கே முயன்றுகொண்டு இருக்கிறார்கள். பொருளைச் சேர்ப்பதிலோ பொன்னைப் பெறுவதிலோ புகழை ஈட்டுவதிலோ பதவிகளைப் பெறுவதிலோ வரம்பற்ற அதிகாரத்தைப் பெறுவதிலோ மனிதமனம் சிக்கி உழல்கிறது. இந்நிலையில், தாம் அடைய விரும்பும் எதனையும் சிறந்ததாகக் கருதி, எப்படியேனும் அதை அடைந்துவிட வேண்டும் என்று முயன்றால், அது தவறாகும். ஒரு பொருளை அடைய முற்படுவது எவ்வளவு சிறந்ததோ அவ்வளவு சிறந்தது அதனை அடைவதற்காகப் பின்பற்றும்வழி முறைகளும். சுருங்கக் கூறின், தவறான முறைகளைக் கொண்டு நல்லதொரு முடிபை அடைதல் கூடாது; வழி முறையும் தூயதாக இருத்தல் வேண்டும்.

முடிவாகக் கூறுமிடத்து, இன்றைய அரசியல் உலகில் இந்தியாவில் மட்டுமன்றி அனைத்துலக அரங்கிலும் காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவம் மனித சமுதாயத்தின் அனைத்துச் சிக்கல்களையும் நல்ல முறையில் தீர்த்து உறவு மனப்பான்மையுடன் அனைத்து மக்களும் நாடுகளும் ஒன்று சேர்ந்து வாழ்வதற்கு உற்ற துணையாக உள்ளது என்பதை மேல்நாட்டு அரசியல் அறிஞர்களே ஏற்றுப் போற்றியுள்ளனர். மு.மு.

**அகிரிமன்** செண்டு அவசுதா (Zend Avestha) என்ற சொராத்திரிய வேதத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள தீய தேவதையாகும். ஆகூரா மாசுதா எனும் தெய்வம் நற்கொள்கையின் உருவகம். சொராத்திரரின் கொள்கைப்படி உலகில் ஒரு கடவுள்தான் உண்டு. அவர்தாம் நற்கொள்கையின் உருவகமாகிய ஆகூரா மாசுதா (Ahura Mazda). அகிரிமனுக்கும் ஆகூரா மாசுதாவுக்கும் ஓயாத போராட்டம் நடைபெற்று வருவதாகவும் இறுதியில் ஆகூரா மாசுதாவே வெற்றி பெறுவதாகவும் சொராத்திரர்கள் நம்புகிறார்கள்.

**அகிலேசபிள்ளை** யாழ்ப்பாணத்தைச் சார்ந்த திரிகோணமலையில் வாழ்ந்த புலவர். கார்காத்த வேளாளர். கி.பி. 1853-இல் பிறந்த இவர் 57 ஆண்டுகள் வாழ்ந்தார். தந்தை பெயர் அளகைக் கோன் வேலுப்பிள்ளை. இவர் நிகண்டுகள், நீதிநூல்கள் போன்றவற்றைக் குமாரவேலுப் பிள்ளையிடமும் இலக்கண இலக்கிய நூல்களையும் வடமொழியையும் தம் சிறிய தந்தையாராகிய தையல் பாகம் பிள்ளையிடமும் பயின்றார். ஆசிரியப் பயிற்சி பெற்று அரசினர் கல்லூரியில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார். பணி ஓய்வு பெற்ற பின்னர்த் தமிழ்த் தொண்டிலும் சிவத்தொண்டிலும் ஈடுபட்டார்.

திருக்கோண நாயகர் பதிகம், திரிகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி பத்துப் பதிகம், திரிகோணமலை வில்லூன்றிக் கந்தசாமி பதம், கந்தசாமி கலிவெண்பா, திரிகோணமலை சிவகாமியம்மன் கும்மி, திரிகோணமலை விசாலாட்சியம்மன் விருத்தம், வெருகல் சித்திர வேலாயுதசாமி விருத்தம், சித்திர வேலாயுதசாமி தரிசனப் பத்து, சிவகாமியம்மன் ஊஞ்சல், சித்தி விநாயகர் ஊஞ்சல், பத்திரகாளி ஊஞ்சல், வேற்பத்து, மயிற்பத்து, விசுவநாதர் விருத்தம், தனிப்பாடல்கள், கண்டி நாடகம், கண்டனங்கள், நெஞ்சறி மாலை, விசாலாட்சியம்மை பெருங்கழி நெடில் விருத்தம், கந்தசாமி விருத்தம், திருக்கோணாசல வைபவம் என்பன இவர் செய்த நூல்கள்.

திருக்கரசைப் புராணம், திருக்கோணாசல வைபவம், கோணேசர் கல்வெட்டு, நரேந்திர சிங்கராசன் வசந்தன் சிந்து, வெருகல் சித்திர வேலாயுதசாமி காதல் என்னும் நூல்களை இவர் பதிப்பித்துள்ளார். த.கு.மு.

**அகுதை** சங்க காலத்தில் வாழ்ந்த வீரனும் வள்ளலும் ஆவான். இவன் பெயர் அஃதை எனவும் சிலவிடங்களில் காணப்படுகிறது. இவன் நாளோலக்கத்தில் இருக்கையில் தன்பால் வரும் புலவர்கட்கு இனிய கள்ளும் களிறும் வழங்கும் இயல்பினன். இவன் அகவன் மகளிர்க்குப் பிடி யானைகளைப் பரிசிலாக நல்கினவன். ஆய் எயினன், மிஞிலியால் போரில் இறந்தபொழுது, எயினனைச் சார்ந்த வேண் மகளிர் பலரும் அழுது புலம்பினர். அவ்வொலியைக் கேட்டும் நன்னன் அங்குச் செல்லாததனை அறிந்து, அகுதை அங்குச் சென்று அம் மகளிரின் பெருந்துயரைப் போக்கி ஆறுதல் அளித்தான். இதனால் இவனது அருள்திறம் புலனாகிறது. கூடல் மாநகர்

இவனுக்குரியதாகும். இவனைக் கபிலர், பரணர் ஆகியோர் பாடியுள்ளனர். இவனுக்கு ஏதம் வாராது பாதுகாத்துக் கோசர் காவல் புரிந்தனர்.

**அகூகன்** பண்டைய யாதவ அரசர்களுள் ஒருவன். கரந்துரை வாழ்விலிருந்து திரும்பி வந்த தருமர், அகூகனின் அரண்மனையில் நுழைந்தார். அக்குரூரர் என்பவருக்கு அவரைக் கிருட்டிணன் அறிமுகப்படுத்தினான். அகூகனுக்கு நூறு ஆண்பிள்ளைகள். அவர்கள் ஒவ்வொருவரும் தெய்வத்திற்கு இணையானவர்கள். சல்லியனின் வேண்டுகோளை ஏற்று அவர்கள் துவாரகையைப் பாதுகாத்தார்கள். அவருடைய ஆணையின்படி போதைப் பொருள்களின் உற்பத்தி அங்குத் தடைசெய்யப்பட்டது. இச்செய்தியை மகாபாரதத்தில் அறியலாம்.

**அகோ (கி.பி. 1615–1675)** என்பார் ஒரு ஞானி. இவர் கி.பி. 1615–ஆம் ஆண்டில் அகமதாபாத்தில் பிறந்தவர்; தட்டார வகுப்பினர். இவர் குருவின் பெயர் பிரமானந்தர்; காசி நகரைச் சார்ந்தவர். தாழ்த்தப்பட்டவரான இவருக்குப் பிரமானந்தர் உண்மை ஞானத்தைக் கற்பித்தார். வேதாந்தத்தைப் பற்றி 'அகே கீதா' முதலிய பல காவிய நூல்களையும் ஆறு அடிகள் கொண்ட சந்தப்பாக்களையும் அகோ (Akko) இயற்றினார். குசராத்தி இலக்கியத்திற்குப் புது வழிகாட்டிப் புதுநடை வகுத்தளித்தவர் இவர்.

**அகோபிலம்** என்பது ஓர் ஊர். இவ்வூரில் வைணவப் பெரியாரான அழகிய சிங்கர் மடம் உள்ளது. ஆந்திர மாநிலத்தில் கர்னூல் மாவட்டம் சிரவேல் வட்டத்தில் உள்ள இவ்வூரில் பெரிய அளவில் பெருமாள் கோயில் உள்ளது. மலையுச்சியிலும் சரிவிலும், அடிவாரத்திலுமாக மூன்று கோயில்கள் உள்ளன. மலை அடிவாரக் கோயிற் சுவரில் தீட்டப்பெற்றுள்ள இராமாயணக் காட்சிகள் எழில்மிக்கவை. மண்டபத் தூண்கள் ஏறத்தாழ மூன்று மீட்டர் சுற்றளவு கொண்டவை. கோயிலைச் சார்ந்த அகோபில மடம், ஆதிவண் சடகோப சுவாமிகளால் நிறுவப்பட்டது. அகோபில மடத்தின் கிளைகள் திருவரங்கம், காஞ்சிபுரம், திருவள்ளூர் முதலான ஊர்களில் உள்ளன. அகோபில மடத்தைச் சார்ந்த பள்ளிகளில் வேதங்கள் ஓதுவிக்கப்படுகின்றன. சென்னையில் அகோபில மடத்தில் வேத பாடசாலையொன்று செயற்பட்டு வருகிறது.

**அகோர சிவாச்சாரியார்** சோழ நாட்டைச் சேர்ந்தவர். இவர் குரு சர்வாத்ம சம்பு. கௌண்டில்ய கோத்திரத்தைச் சார்ந்த இவர் சிதம்பரத்தில் வாழ்ந்து வந்தார். இவர் வேதங்களையும் ஆகமங்களையும் பிற கருவி நூல்களையும் நன்கு கற்று உணர்ந்தவர்.

சர்வஞானோத்திரவிருத்தி, மிருகேந்திர விருத்தி, தீபிகை ஆகிய உரைநூல்களையும், பரார்த்த நித்திய பூசாவிதி போன்ற நூலையும் இயற்றினார். மேலும் தத்துவப் பிரகாசிகை, தத்துவ சங்கிரகம், நாத காரிகை, போக காரிகை முதலான நூல்களுக்கு உரை எழுதியுள்ளார். இவையன்றி, இவர் எழுதிய பாசண்டாப சயம், நாட்டியாப்யுதயம் முதலான நூல்கள் காவிய வகையைச் சார்ந்தவை.

இவர் பெயரால் வழங்கும் அகோரசிவ பத்ததி தமிழ்நாட்டில் இன்றும் சைவர்களால் பின்பற்றப் பட்டு வருகிறது. ஆசிரியர் இந்நூலுக்கு இட்ட பெயர் கிரியாதிரமோத்யோதிகை என்பதாகும். 'பத்ததி' என்பது 'மரபுவழி' என்று பொருள்படும். பதினெட்டுப் பத்ததிகள் உள்ளன. அகோரசிவ பத்ததியில் நித்திய கருமவிதி, பவித்திர விதி, கணேச பூசை, இட்டலிங்க பூசை, சாமானியதீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை, ஆசாரியாபிடேகம், அபர கிரியை என்று கூறப்படும் அந்தியேட்டி பற்றிய விதிமுறை விரிவாகக் கூறப்பட்டுள்ளன. பெ.தி.

**அகோர முனிவர்** சமயத் தலைவராகவும் பெரும்புலவராகவும் விளங்கியவர். இவர் கி.பி பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவரை அகோரத் தம்பிரான் எனவும் அகோர முனிவர் எனவும் அழைப்பர். இவர் திருவாரூர்க் கோயிலில் திருமஞ்சனம் என்னும் அபிடேகக் கட்டளையை மேற்பார்க்கும் பொறுப்பில் இருந்தார். வடமொழி, தென்மொழி ஆகிய இரு மொழிப் புலமையும் வாய்க்கப் பெற்றவர். கும்பகோணப் புராணம், வேதாரணிய புராணம், திருக்கானப்பேர்ப் (காளையார் கோயில்) புராணம் என்னும் நூல்களை இயற்றியவர். இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத தேசிகருக்கு ஆசிரியர் இவர். 'அகோரம்' என்ற சொல் அச்சம் விளைக்கும் 'உக்கிரம்' என்ற பொருள் கொண்டது. இது பஞ்ச மந்திரங்களுள் ஒன்றாகவும் கருதப்படுகிறது. சிவபிரானுடைய ஐந்து முகங்களுள் ஒன்றாக அகோர முகம் குறிக்கப்படுகிறது. கி.கோ.

**அகோரமூர்த்தி** என்பது அச்சத்தினை விளைவிக்கும் சிவபெருமானது திருவுருவங்களுள் ஒன்றாகும். அகோரமூர்த்தியின் திருவுருவக் குறிப்புகள் காரணாகமம், சிவதத்வரத்னாகரம் போன்ற நூல்களில் காணப்படுகின்றன. இத்திருவுருவம் எட்டு, பத்து, முப்பத்திரண்டு கைகளுடையதாக அமைக்கப்படுவதுண்டு. எட்டுக் கைகளுடைய திருவுருவத்தில் சூலம், உடுக்கை, பாசம், கபாலம், தண்டம், வில், அம்பு, குறுவாள் ஆகியவை இடம் பெறும். கருத்த நிறம் உடைய இவரது உடல் ஆடையின்றியோ யானை, சிங்கம் ஆகியவற்றின் தோல்களிலான ஆடையணிந்தோ காணப்படும். உடலில் பாம்புகள்

தோள்கள் ஆகியவை அணிகலன்களாகத் திகழும். மிகுந்த அச்சத்தினையூட்டும் முகத்தோற்றமும், வாயின் இருபுறமும் வளைந்த கோரைப் பற்களும், பாம்பினால் கட்டப்பட்ட தலைமுடியும், கழுத்தில் மட்டும் நீல நிறமும் இத்திருவுருவத்தின் சிறப்பு களாம்.

மற்றொரு திருவுருவ அமைப்பில் எட்டுக் கை களும், மூன்று கண்களும், அச்சம் தரும் முகத்தோற் றமும், கறுத்த நிறமும், வளைந்த கோரைப் பற்களும் காணப்படும். இவரது கழுத்தில் தலை மாலையும், குறுவாள் (Kadagamala) மாலையும் தோள்களாலான மாலையும் இடம் பெறுவதுண்டு. தலைமுடி தீச்சுடர் போலிருக்கும். செந்நிற ஆடையும் சிவந்த மலர் மாலையும் இவருக்கு அணிவது வழக்கம். இவர் கைகள் வேதாளம், குறுவாள், உடுக்கை, கபாலம், மணி முதலியவைகளைக் கொண்டும், மற் றிரு கைகள், சூலத்தை மார்புக்கு எதிராகச் சற்று மேல் நோக்கிப் பிடித்தவாறும் காணப்படும்.

பத்துக் கைகளையுடைய அகோரமூர்த்தி 'தசபுய' அகோரமூர்த்தி எனச் சொல்லப் பெறுவார். இவர் எட்டுக் கைகளில் பரசு, உடுக்கை, குறுவாள், கேடயம், அம்பு, வில், சூலம், கபாலம் ஆகியவை கொண்டிருப் பார். எஞ்சியுள்ள இரண்டு கைகள் அபயம், வரதம் ஆகிய முத்திரைகளைக் கொண்டு விளங்கும். முப்பத்தி ரண்டு கைகளையுடைய அகோரமூர்த்தி அச்சத்தின் வடிவாய்த் தலையில் சடாமகுடம், பிறைச் சந்திரன் ஆகியவற்றையும் முக்கண்களையும் கொண்டவராகக் காட்சியளிப்பார்.

தமிழகத்தில் காணப்படும் அகோரமூர்த்திச் சிற் பங்களுள் திருக்கழுக்குன்றம், பட்டீசுவரம் போன்ற இடங்களிலுள்ளவை அழகும் சிறப்பும் வாய்ந்தவை யாகும். ஏ. ஏ.

**அகோரா** என்பது பண்டைக் கிரேக்க நகரங் களில் இருந்த சந்தைக் கடையாகும். மக்களின் சமூக வணிக வாழ்வின் மையமும் அதுவேயாம். அகோரா திறந்த வெளிச் சதுர அமைப்பைக் கொண்ட முற்றம் போன்றது. திறந்தவெளி அரங்கத்தைச் சுற்றிலும் எல்லையாகப் பொதுக் கட்டிடங்களும், நகரின் சிறப் பான கோயில்களும், கடைகளும் இருந்தன. தொன் மையான கிரேக்க நகரங்களில் அகோராக்கள் எனப் படும் சந்தைக்கடைகள் யாதொரு திட்டவட்டமான அமைப்பில்லாமல் ஒழுங்கீனமான முறையில் எழுந் தன. ஆனால், அலெக்சாந்தரால் நிறுவப்பெற்ற நகரங்கள் எழுந்தபோது அகோராக்கள் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பெற்றன. ஆதன்சு (Athens) நகரில் அகோராக்கள் மேற்குறிப்பிட்ட இரண்டு வகைகளையும் இணைத்து எழுப்பப் பெற்றன.

**அகோராத்திரமூர்த்தி** சிவமூர்த்தங்களுள் ஒன்று. சத்ததந்து என்னும் அசுரனைக் கொல்லச் சிவபெருமான் மேற்கொண்ட கோலமாகும். சத்த தந்து என்பவன் தக்கனைப் போல் வேள்வி செய்ய அதில் தேவர் பலர் அவிகொள்ளச் சென்றனர். அத னால், அவ்வேள்வியை அழிக்கச் சிவபெருமான் எண்ணி, ஆகாயத்தைத் தேராகவும், வாயுவைக் குதிரையாகவும், அக்கினியை வில்லாகவும், சந்திரனை நாணாகவும், நீரை அம்பாகவும் கொண்டு தேவரை விரட்டி யாகத்தை அழித்ததாகக் கூறப்படுகிறது. சிவபெருமானது ஆயுதம் ஒன்றையும் இப்பெயரால் குறிப்பர்.

**அங்கத பூபதி** வடநாட்டில் வாழ்ந்து, திரு மாலடியாராகத்திகழ்ந்தவன். இவனுக்கு இராயசிங்கு என்னும் பெயருடைய உடன் பிறந்தான் ஒருவன் இருந்தான். அங்கத பூபதியின் மனைவி திருமாலடி யார்களிடம் அன்புடையவளாக இருந்தாள். அவ ளுக்கு அருளுரை கூறிய ஆச்சாரியார் ஒரு நாள் அவள் இல்லத்திற்கு வந்தார். அங்கத பூபதியின் மனைவி தன் ஆச்சாரியாருக்குச் சிறப்பாக உணவு படைக்க ஏற்பாடு செய்தாள். இதனைக் கண்டு அங்கதபூபதி பொறாமை கொண்டான். தன் மனை வியைப் பார்த்து, ''கற்புடைய பெண்களுக்குக் கண வனைப் பார்க்கினுஞ் சிறந்த தெய்வம் வேறு இருக் கிறதோ? இருந்தால் காட்டு. நான் ஒருவன் இருக் கும்போது இவ்வாறெல்லாஞ் செய்கின்றாயே'' என்று கேட்டான். அங்கத பூபதி கூறியதைக் கேட் டதும் அவன் மனைவிக்கு மிகுந்த வருத்தம் உண் டாயிற்று. உணவு முதலியன கொள்ளாமல் மூன்று நாள் திருமாலையே நினைந்திருந்தாள். திருமால் அங்கத பூபதியின் கனவில் தோன்றி, 'உன் மனைவி யிடம் கணவனினும் சிறந்த தெய்வத்தைக் காட்டு மாறு கேட்ட தெய்வம் நான்தான்' என்று கூறி மறைந்தருளினார். அங்கத பூபதி திடுக்கிட்டு விழித் தான். தன் மனைவியிடம் போய், ''நான் உன் மீது வீணே சினங் கொண்டேன். நீ உனது விருப்பம் போல் திருமாலையும் அவனடியார்களையும்போற்றி வழிபடுவாயாக'' என்று சொன்னான். உடனே அவள் தன் ஆச்சாரியாரைக் கொண்டு கணவனுக்கும் தீட்சை வழங்கச் செய்தாள். அதன் பிறகு கணவன், மனைவி இருவருமே திருமாலிடத்தில் பெருமாலுடையவர் களாய் விளங்கினர். இவ்வாறு இருக்கையில், அங்கத பூபதியின் அண்ணன் இராயசிங்கு தன் பகைவர்கள் மீது தம்பியைப் படையெடுத்துச் செல்லப் பணித் தான். அங்கத பூபதியும் அவ்வாறே போய்ப் பகை வர்களை வென்று அவர்களுடைய பொருள்களைக் கைப்பற்றினான். அப்பொழுது பெரிய வயிரமணி ஒன்று கிடைத்தது. அது அழகியதாகவும் அருமை

யானதாகவும் இருந்தபடியால் அதனைத் திருமாலுக்குச் சூட்ட விரும்பிப் பாதுகாத்து வைத்திருந்தான். இராயசிங்கு இச்செய்தியை அறிந்தான். அம்மணியை எவ்வாறேனும் கைப்பற்ற வேண்டும் என்று பெருமுயற்சி செய்தான். முடியாமற் போகவே தம்பியைக் கொன்று கைப்பற்றுவதென்று முடிவு செய்தான்.

தன் தங்கையிடம் நஞ்சினைக் கொடுத்து உணவிற் கலந்து கொடுக்குமாறு கட்டளையிட்டான். அண்ணனுக்கு அஞ்சிய அவள் அவ்வாறே செய்தாள். அங்கத பூபதி இதனை அறிந்தும், அதனைக் கடவுளுக்குப் படைத்து உண்டான். அதனால் அவனுக்கு எத்தகைய ஊறும் உண்டாகவில்லை. பின்னர் அங்கிருப்பதற்கு விருப்பமில்லாதவனாய் மனைவியோடு சகநாதத்தை நோக்கிப் புறப்பட்டான்.

இதனை இராயசிங்கு உணர்ந்து அவ்வயிர மணியைக் கைப்பற்றி வருமாறு அமைச்சனைப் படையோடு அனுப்பி வைத்தான். அமைச்சன் சென்று வயிரமணியைக் கைப்பற்ற எண்ணினான். அங்கத பூபதி அவ்வயிரமணியை அண்மையில் இருந்த ஆற்றில் எறிந்து விட்டதைக் கண்ட அமைச்சன் தன் படைகளைப் பார்த்து அதனைத் தேடிக் கண்டெடுத்து வருமாறு சொன்னான். படையினர் நெடுநேரம் தேடி முயன்றும் அதனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அங்கத பூபதி, அமைச்சனையும் தேடுபவர்களையும் பார்த்து, ''நீங்களேன் வீணாக வருந்துகிறீர்கள்? என்னோடு வந்தால் அது சகநாதர்மீது இருத்தலைக் காட்டுகிறேன்'' என்றான்.

எல்லோரும் சகநாதத்தையடைந்து சகநாதரைப் போற்றி வழிபட்டனர். அப்பொழுது அம்மணி சகநாதர் மார்பில் இருப்பதை அங்கத பூபதி அமைச்சனிடம் காட்டினான். அமைச்சன் கோயில் பூசாரிகளைப் பார்த்து இம்மணி இங்கு எவ்வாறு வந்தது? என்று கேட்டான். பூசாரிகள், மூன்று நாட்களுக்கு முன்பு அங்கத பூபதி இதனை எங்களிடம் கொடுத்தார். சகநாதர், பதக்கத்திற் பதித்து இதனை அணிக என்று கட்டளையிட்டனர். அவ்வாறே செய்துள்ளோம் என்று கூறினர்.

அமைச்சன் இச்செய்திகளை இராயசிங்கிற்குத் தெரியப்படுத்தினான். இராயசிங்கு தன் தம்பி சகநாதனுக்குத் தொண்டனானதை அறிந்து மகிழ்ந்தான். அவனிடத்துப் பேரன்பு கொண்டான். உடனே திரும்பி இங்கு வந்து விடுக – சகநாதன் மீது ஆணை என்று கடிதம் எழுதினான். அங்கத பூபதியும் திரும்பி ஊரையடைந்து திருமாலைப் போற்றி வழிபாடு செய்து வாழ்ந்தான். த.கோ.

**அங்கதம்** என்பது ஓர் இலக்கிய வகை. இது தனிமனிதன், சமுதாயம், நிறுவனம் முதலியவற்றில் காணப்படும் குறைபாடுகளைத் திறனாய்வு செய்யும் ஒரு கேலிச் சித்திரம். அன்றியும், அங்கதம் (Satire) செய்யுளில் எடுத்தாளப்படும் ஓர் உத்தியுமாகும்.

அங்கத இலக்கியம் முதன்முதல் உரோம் நாட்டில் தோன்றியது எனச் சில திறனாய்வாளர் கருதுகின்றனர். ஆனால் அதற்கு முன்னரே மிகப் பழைய கிரேக்க நாடகங்களில் அங்கதக் குறிப்புகள் அமைந்துள்ளன என்று மற்றொருசார் திறனாய்வாளர் கருதுவர். கிரேக்க உரோமானிய இலக்கியங்களில் அமைந்திருந்தது போலவே, பழந்தமிழ் இலக்கியங்களிலும் அங்கதக் குறிப்புகள் வந்துள்ளன. காலத்தால் எது முந்தியது பிந்தியது என அறுதியிட்டுக் கூறுவதற்கில்லை.

கிரேக்க, இலத்தீன், தமிழ் இலக்கியங்களை அடியொற்றி ஆங்கில இலக்கியத்திலும் அங்கதம் நன்கு வளர்ச்சி பெற்றுள்ளது. பொதுவாக மேலைநாட்டில் கவிதையின் வடிவம் கொண்டு அங்கதத்தைப் பாகுபடுத்தினர். பொருள் நோக்கிப் பிரிக்கும் நிலை காலத்தால் பிற்பட்டது. அங்கதம் கொடுமைகளையும் முறைகேடுகளையும் சாடுதல் என்ற கொள்கையிலிருந்து முகிழ்த்தது. பின்னர், அதுவே ஒரு கலையாக வளர்ந்தது. அங்கதப் படைப்பில் யாதேனும் ஒரு குறிக்கோள் இருத்தல் வேண்டும். சமுதாயம் திருந்த வேண்டும் என்ற குறிக்கோளுடன், கேலியும் நகையும் கலந்து பாடப்படுவது இது. ஒன்றன் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதற்கும், எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கும் உள்ள வேறுபாட்டையே அங்கதம் அறிவுறுத்த முற்படுகிறது. மக்களால் புறக்கணிக்கப்பட்டவருடைய குற்றங்குறைகளைத் தகர்த்தெறிவதற்காக எவன் ஒருவன் மக்களை ஆற்றுப்படுத்துகிறானோ அவனே சிறந்த அங்கதப் படைப்பாளி ஆவான் என்பது மேனாட்டார் கருத்து.

தொல்காப்பியர் எழுவகைப்பட்ட இலக்கியங்களைக் கூறும்போது அங்கதத்தையும் குறிப்பிட்டுள்ளார். இதனை அவர் 'கூற்றிடை வைத்த குறிப்பு' என்பர். இது செம்பொருள் அங்கதம், பழிகரப்பு அங்கதம் என இருவகைப்படும். தொன்மைக்காலம் தொடங்கி இக்காலம் வரை எழுந்துள்ள தமிழிலக்கியங்களில் அங்கதப் பாங்கு தொடர்ந்து வந்துள்ளது.

தொண்டைமானிடம் தூது சென்ற ஔவையார் அவனது படைக்கலக் கொட்டிலைக் கண்டு பாடிய 'இவ்வே பீலியணிந்து' எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல் (95) அங்கதக் குறிப்புடையது எனப் பல திறனாய்வாளர் விளக்கியுள்ளனர். இது பழிகரப்பு அங்கதத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஔவையார் தொண்டைமானின் படைக்கருவிகளைப் புகழ்வது போலப் புகழ்ந்து அவனது போர்த் திறமை இன்மையை - போர்க்களமே காணாத தன்

மையைச் சாடியுள்ளார். அதே நேரத்தில், அதிகமான் அஞ்சி படைப் பயிற்சி மிக்கவன் என்பதையும் அடிக் கடி போர்க்களம் செல்வதால் இவன் போர்க்கருவிகள் மழுங்கி எப்பொழுதும் கொல்லன் உலைக் களத்தில் கிடந்தன என்பதையும் சுட்டியுள்ளார். இப்பாடலில் அங்கதக் குறிப்பு அமைந்துள்ளது.

பிற்காலத் தனிப்பாடல்களில் அங்கதத்தினை மிகுதியாகக் காணமுடிகிறது. காளமேகப்புலவர் சிறந்த அங்கதப் புலவராவர். இவர் ஒரு சமயம் நாகப்பட்டினத்தில் உள்ள காத்தான் என்பவனது சத்திரத்திற்குச் சென்றார். அங்கு உணவு உண்பதற் காகப் புலவர் நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய தாயிற்று. அதனால் மனம் வெதும்பிய காளமேகப் புலவர் காத்தானையும் அவனது சத்திரத்தையும் அவன் உணவு அளிக்கும் விதத்தையும் ஏளனமாகப் பாடினார். இப்பாடல் குறைகளைச் சுட்டிக்காட்டு வதால் அங்கதமாகிறது. ''கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்'' என்று தொடங்குவது அப்பாடல்.

இக்கால இலக்கியங்களுள் கவிமணி தேசிகவிநாய கம் பிள்ளை இயற்றிய 'மருமக்கள் வழி மான்மியம்' சிறந்த அங்கதக் குறிப்புகளையுடைய நூலாகும். நூற் பெயரிலும் பகுப்பிலும் அவர் அங்கதத்தைக் கையாண் டுள்ளார். நாஞ்சில் நாட்டுச்சமுதாயம் ஒன்றும் அதன் பல்வேறு அங்கங்களும் அங்கதப் பார்வைக்கு ஆளா யின. மூடப்பழக்க வழக்கங்களும் கவிஞரால் பெரிதும் சாடப்பட்டுள்ளன.

இன்றைய புதுக்கவிதைகளில் அங்கதக் குறிப்பு முதலிடம் பெற்றுள்ளது. சங்க காலத்திலிருந்தே அங் கதச் சுவைதரும் பாடல்கள் இருந்தாலும் புதுக் கவிதைதரும் அங்கதத் தொனி புதுமையாக உள்ளது. அரசியல், சமுதாயம், கல்வி, நீதி, சாதி வெறி, நிரு வாகம் போன்ற அனைத்துத் துறைகளுள்ளும் காண லாகும் குறைகளைச் சாடுவதில் வல்லவர்களாகப் புதுக் கவிஞர்கள் உள்ளார்கள். கவிதைகள் தவிர கதை, இக்காலக் கட்டுரை, நாடகம் போன்றவற்றுள் ளும் அங்கதம் இடம் பெற்றிருப்பதைக் காண முடி கிறது.

குற்றங் குறைகளை எதிர்த்து மனிதனால் வெற்றி பெற முடியாமல் இருக்கலாம். ஆனால் அவன் நீதியற்ற முறையை எதிர்த்துப் போராடிக் கொண்டே இருக்கவேண்டும் என்ற கொள்கையை உடையவர்களாக அங்கதக் கவிஞர்கள் இருக்கிறார் கள்.

நா.செ.

***அங்கதர்*** என்பவர் குருநானக்கைத் தொடர்ந்து வந்த சீக்கியர்களின் இரண்டாம் குரு. இவரது இயற் பெயர் இலானா. இவர் கி.பி. 1504-இல் பியாசு ஆற் றங்கரைக்கு அருகில் கடூர் என்ற சிற்றூரில் பிறந்தார். சீக்கியக் குருக்கள் வழிவழியாக 'அமர்த்தப்பட்டவர் கள் அல்லர். சீக்கியர் மக்களாட்சிக் கொள்கையின் அடிப்படையில் குருக்களை அமர்த்தினர். குருநானக் குக்கு இரு புதல்வர் இருந்த போதிலும், அவர் தம் வாரிசாகக் குரு அங்கதர் என்பாரையே அமர்த்தினார். அங்கதர் நேர்மை மிக்கவர்; கடமை தவறாதவர். நிறைந்த இறை ஈடுபாடு கொண்டவர். இவர் தம் தொடக்க நாள்களில் சுவாலமுகியில் உள்ள தேவி யின் பக்தராக விளங்கினார். அதற்காகப் பன்முறை பயணங்களை மேற்கொண்டார். குருநானக் தம் வாழ் நாள் முழுதும் மக்களுக்குத் தன்னலமற்ற சேவை செய்தவர். இவரைப் பின்பற்றி மக்களுக்கு நீதி நெறி களைப் போதித்தவர் அங்கதர். இவர் கி.பி. 1539–52-இல் குருவாக விளங்கினார்.

இவர் பஞ்சாபி மொழியின் எழுத்து வடிவத்தை வழக்கத்திற்குக் கொண்டு வந்தார். இதுவே காலப் போக்கில் துதிப்பாடல்களுக்குப் புனிதவடிவெழுத்துக் களாக உருப்பெற்றது. அங்கதர் குருநானக்கின் வர லாற்றைத் தொகுத்துள்ளார்; அவர்தம் துதிப்பாடல் கள் அனைத்தையும் திரட்டியுள்ளார். குருநானக்கின் வரலாற்றுத் தொகுப்பில் அவரைப் பற்றிய சீரிய உண்மை நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன. அவர் காசுக்கு உணவு விற்கப்படாதவாறு பொது உணவுக் கூடத்தை ஏற்படுத்தினார். இக்கூடம் சீக்கிய சமயத்தினரின் பெருமைக்குச் சான்றாகும். இக்கூடத்திற்கு விருந்தின ராகப் பலர் அழைக்கப்பட்டனர். எச்சமயத்தினரா யினும், எத்தொழிலைப் புரிபவராயினும், எவ்வினத் தவராயினும், ஏழையாயினும், பணக்காரராயினும், எப்பாலாராயினும் அவர்கள் சீக்கிய குருவுடனும் சீடர்களுடனும் சேர்ந்து உணவருந்த அழைக்கப்பெற் றனர். இக்கூடம் 'லங்கார்' நிலையம் என்று இன்றும் அழைக்கப்படுகிறது.

உமாயூன் 1540-இல் செர்சாவால் முறியடிக்கப் பட்டு இலாகூர் நோக்கிச் செல்லும்போது, அங்க தரைப் பற்றிக் கேள்வியுற்றார். மொகலாயப் பேரரசு தமக்குக்கிடைக்க உதவிடுமாறு அங்கதரிடம் வேண்ட உமாயூன் கடூர் சென்றார். அப்போது அங்கதர் வழி பாட்டில் ஆழ்ந்திருந்தார். அவர் சீடர்கள் துதிப் பாடல்களை இசைத்தபடி அமர்ந்திருந்தார்கள். அத னால் உமாயூன் நெடுநேரம் காத்திருக்க நேர்ந்தது. உமாயூன் பொறுமை இழந்து சினமுற்றுக் குரு அங்க தரைக் கொல்ல நினைத்துக் கத்தியை ஓங்கினார். அப்போது அங்கதர் உமாயூனை நோக்கி 'நீ செர் சாவை நோக்கிக் கத்தியை வீசாமல் கோழையாக ஓடிவந்து, இப்போது வீரனைப் போன்று இறையீடு பாட்டில் இருக்கும் குற்றமற்றவர்கள் மீது கத்தி யினை வீசுகிறாய்' என்று கூறினார். அதனைக் கேட்

டவுடன் உமாயூன் மன்னிப்புக் கேட்டார். பின்னர்ச் சிந்து ஆற்றைக் கடந்து ஈரான் நாடு சென்றடைந்தார். இந்நிகழ்ச்சியினை ஆதாரமற்றதெனச் சில வரலாற்று ஆசிரியர்கள் மறுத்துரைக்கிறார்கள். இருப்பினும், அனைத்துச் சீக்கிய வரலாறுகளும் இந்நிகழ்ச்சியினைக் கூறுகின்றன. உமாயூன் அங்கதரைச் சந்தித்து நல்வாழ்த்துப் பெற்றவர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

தாமியற்றிய துதிப்பாடல்களை அங்கதர், ஆதிகிரந்தத்தில் இணைத்துள்ளார். இவருக்கு இரண்டு புதல்வர் இருந்தனர். இருவரும் பெரிய அறிவாளிகளாகத் திகழ்ந்தனர். எனினும், அவர்களை விடுத்து அமர்தாசர் என்பாரையே அங்கதர் மூன்றாம் சீக்கிய குருவாக அமர்த்தினார். தி.வீ.

**அங்கதன்** கம்பராமாயணக் கதை மாந்தருள் சிறப்பிடம் பெற்றவன். இவன் வாலிக்கும் தாரைக்கும் பிறந்தவன். அழகு, அறிவு, ஆற்றல் போன்ற பண்புகளின் உறைவிடம்.

கம்பர் காப்பியத்தில் இராமனை முழு முதற் கடவுளாக உணர்ந்தோர் அனுமன், வீடணன் போன்ற சிலரே ஆவர். உயிர் பிரியும் காலத்துத் தன் மகனை அருகழைத்து "மால்தரும் பிறவி நோய்க்கு" இவன் மருந்து என்று நல்லுரை கூறுகிறான் வாலி. இறைக் காட்சி பெற்ற தந்தையைக் குருவாகப் பெற்று இராமனைப் பரம்பொருள் என்றுணரும் பேறு பெற்றவன் அங்கதன்.

வாலியின் வேண்டுகோளின்படி இராமன் அங்கதனை அடைக்கலமாக ஏற்றுக் கொள்ளும்போது தனது உடைவாளை அவன் கையில் கொடுக்கிறான். அதனைத் தாங்கும் தனிச் சிறப்பு அங்கதனுக்கே வாய்த்தது. இராம காதையின் முடிமணிப் பாடலில் 'அரியணை அனுமன் தாங்க, அங்கதன் உடைவாள்' ஏந்தி நிற்கும் காட்சியைக் கம்பர் காட்டுகிறார்.

வாலியின் அன்பு மகன் என்பதை 'வாலி காதலன்' என்னும் தொடர் காட்டும். அரசியல் படலத்தில் 'சீலம் நீ உடையை' என இராமன் கூறுவது அங்கதனின் ஒழுக்கச் சிறப்புக்குச் சான்று பகரும். உரிய காலத்தில் உதவச் சுக்கிரீவன் செல்லாத போது, இலக்குவன் சினந்து வருகிறான். அப்போது அங்கதன் சுக்கிரீவனிடம் 'செல்வம் எய்தி வியந்தனை, உதவி கொன்றாய், மெய்யிலை' என இடித்துக் கூறும் தொடர்கள், செல்வத்தால் மயங்குதல், செய்ந்நன்றி மறத்தல், பொய்யனாதல் போன்ற தீய பண்புகளை அவன் வெறுத்த தன்மையைக் காட்டுவனவாம்.

சீதையைத் தேடிக் காணாது வருந்தித் தளரும் வானரப் படைக்கு ஊக்கம் கொடுப்பவன் அங்கதனே. கடல் கடந்த பின் இராமன் தூது அனுப்ப நினைக்கிறான். மாருதியின் நினைவு வருகிறது. மாருதியே மீண்டும் செல்லின் மிடல் உடையார் வேறில்லை என்று பகைவர் கருதுவர் என்ற ஐயமும் தோன்றுகிறது. 'யாரினி ஏகத் தக்கார்' என்ற இராமனின் வினாவிற்கு 'அங்கதன் அமையும்' என்ற சுக்கிரீவனின் சுருக்கமான விடை அவனது ஆற்றலுக்குப் பெரு விளக்கமாகும். 'மாருதி அல்லனாகில், நீ எனும் மாற்றம் பெற்றேன்' என்று அங்கதன் மகிழ்கிறான். 'அனுமன் இல்லாவிட்டால் அங்கதன்' என்னும் பழமொழியும் இது பற்றி எழுந்ததாகும்.

காப்பிய உறுப்புகளில் தூது சிறப்புடைய ஒன்று. இராம காதையில் அத்தகு சிறப்பினை அங்கதன் தூது பெறுகிறது. புகலடைகிறானா? போர் செய்ய விரும்புகிறானா? என இரண்டில் ஒன்று கேட்டு வா என்று அங்கதனைத் தூதனுப்புகிறான் இராமன். இராவணன் அவையில், 'தேவியை விடுக, அன்றேல் ஆவியை விடுக' என்று கூறுகிறான். மூர்க்கன் முடித்தலை அற்ற போதன்றி, ஆசை அறான் என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி இருப்பது அங்கதனின் சொல்லாற்றலுக்குச் சான்று பகரும்.

மூல பலத்தின் ஆற்றலுக்கஞ்சி வானரச் சேனை சிதறி ஓடுகிறது. அப்போது, அதனை அமைதிப்படுத்தி, அபயம் கூறி, அச்சம் நீக்கி, அறஞ்சாரா அரக்கர், தொகையால் மிக்கவராயினும் மடிவர் என்று கூறி, மீண்டும் போராடச் செய்த பெருமை அங்கதனுடையது.

வீடணன் மீது இராவணன் வேல் எறியும்போது அவன்முன் சென்று அதைத் தாங்க முற்படும் துணிவும் தியாக உணர்வும் படைத்தவன் அங்கதன். இந்திரசித்தின் தலையை இளையவீரன் கொய்து வீழ்த்தியபோது, அதனை ஏந்தி இராமனிடம் கொண்டு வரும் பெருமை அங்கதனைச் சார்ந்தது. போர்க்களத்தில் இராமனை அனுமன் தாங்கியது போல, இலக்குவனை அங்கதன் தாங்கி நிற்கிறான். அயோத்திக்கு இராமன் மீண்டு வருகிறபோது, அங்கதனே முன்னதாகச் செல்லும் சிறப்புப் பெறுகிறான்.

அனுமனுக்கு அடுத்தபடி வானரச் சேனையில் ஆற்றலும் அறிவும் படைத்தவன் அங்கதனே. இராமனுக்கு உதவுவதிலும் அவன் முந்தி வரும் இயல்பினன். "புகழுடைக் குரிசில்" என்று கம்பர் போற்றும் சிறப்பு அங்கதனுக்கே உரியதாம். ஜி.ஆர்.கி.

**அங்கப்ப நாவலர்** விசுவகரும வகுப்பினைச் சேர்ந்த புலவர். இவர் செய்த நூல்கள் பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ், பரசமய கோளரியார் திருவூசல், பரசமய கோளரியார் திருவம்மானை, பரசமய கோளரியார் ஆசிரியப்பாமாலை முதலியன. பரசமய கோளரியார் பிற சமயங்களை வென்ற

சைவப் பெரியார். திருநெல்வேலியில் அவர் வாழ்ந்தவர் என்பது பரசமய கோளரி பிள்ளைத் தமிழால் தெரிகிறது.

தொண்டைமண்டலத்துப் பொன்விளைந்த களத்தூரில் சிறந்து விளங்கிய வேதகிரி முதலியாரின் மைந்தர்களால் சிறப்பிக்கப் பெற்றவராதலின், அங்கப்ப நாவலர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகலாம். த.கு.மு.

**அங்கப்பப் பிள்ளை,நா.** கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் பெரியார் மாவட்டம் பவானி என்னும் ஊரில் வாழ்ந்த புலவர். இவர் வாணியம்பாடி சங்கரச் செட்டியார் மகன் முருகப்பச் செட்டியாரின் சிறப்புகளை விளக்கிப் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள இந்நூல் முருகப்ப நவரச சிலேடை எனப் பெயர் பெறும். இது முருகப்பரவச சிலேடை என்றும் வழங்கப்படும். இதன்கண் 9 பாடல்களும் சில கையறுநிலைச் செய்யுட்களும் முருகப்பச் செட்டியாரின் மனைவி கன்னியம்மாள் மீது பிறர் பாடிய பாடல்கள் சிலவும் இடம் பெற்றுள்ளன.

**அங்கப்பப் பிள்ளை, பி.** திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் என்னும் ஊரினர். 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்புலவர் ஊர்க்காடு என்னும் ஊரில் தொடக்கப்பள்ளி ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர்தம் ஞானாசிரியராக விளங்கிய இராமசாமி சுவாமிகள் இயற்றிய 'வேதாந்தப் பிரதீபம்' என்னும் நூலுக்குச் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார்.

**அங்கம்**[1] கி.மு. 6–ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் இருந்த பதினாறு அரசுகளுள் (மகாசனபதங்களுள்) ஒன்று. அது மகதப் பேரரசின் பகுதியாக இருந்தது. செல்வச் செழிப்பு மிக்கது. வரலாற்றுச் சிறப்பு நோக்கி, அங்கத்தைப் பற்றிய விவரங்களை மகாவத்து, யோகதந்திரம், இராமாயணம், மகாபாரதம், இருக்குவேதம், இலலிதவித்தாரம் போன்ற நூல்களில் காணலாம். இது சமண பௌத்த சமய வரலாறுகளுடன் நெருங்கிய தொடர்புடையது. பீகார் மாநிலத்தைச் சார்ந்த பாகல்பூர் பண்டைய அங்கம் எனக் கருதப்படுகிறது. இப்பகுதி கௌடில்யருக்கு நன்கு தெரிந்திருந்தது. அங்கத்தில் உயர்தர யானைகள் கிடைத்தனவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அங்கம்**[2] ஒரு மொழியின் பெயரும் ஆகும். பீகார் மாநிலத்தில் அங்கமொழி பேசுவோர் தொகை ஆறாயிரம் எனக் கருதப்படுகிறது.

**அங்கம்**[3] என்பது இருக்கு முதலிய வேதங்களின் பகுதிகளையும் சுட்டும். சுவேதாம்பர, திகம்பர சமண சமய நூல்கள் பன்னிரண்டு அங்கங்களாகவும், பன்னிரண்டு உப அங்கங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. சமணத் துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய சட்ட திட்டங்கள் இவற்றில் விளக்கப்பட்டுள்ளன.

**அங்கமாலை** பிற்காலத்தே தமிழில் தோன்றியுள்ள சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. வெண்பாப் பாட்டியல், பிரபந்த மரபியல் முதலிய பாட்டியல் நூல்களில் இதன் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. ஓராண்மகன் அல்லது பெண்மகளின் உறுப்புகளை வெண்பா அல்லது வெளி விருத்தங்களால் முறை பிறழாது தொடர்ச்சியுறப் பாடுவது அங்கமாலையாகும். "நிறுத்த வெளி விருத்தம் நீடுறுப்பில் வந்தால் குறித்தங்க மாலையாக் கொள்க" என வெண்பாப் பாட்டியலும், "அவ்வப் பெயரின் அங்க வகையை விளம்பி ஒழுங்கின் வெளி விருத்தத்தால், வழுத்துவது அங்க மாலையாமே" எனப் பிரபந்த மரபியலும் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளன. நான்காந் திருமுறையில் ஒன்பதாம் பதிகமாகச் சாதாரிப் பண்ணில் அமைந்துள்ள 'தலையே நீ வணங்காய்' எனத் தொடங்கும் திருநாவுக்கரசர் தேவாரப் பதிகம் இதற்கு எடுத்துக்காட்டாகும். இப்பதிகம் 'திருவங்கமாலை' என்று வழங்கப்படுகிறது. பன்னிரண்டு பாடல்களைக் கொண்ட இப்பதிகத்தில் தலை, கண், செவி, மூக்கு, வாய், நெஞ்சு, கை, ஆக்கை, கால் ஆகிய உறுப்புகளைத் தனித் தனியே விளித்து, அவை தத்தம் இயல்பினால் இறைவனைப் போற்றி நிற்றல் வேண்டும் என்பதனையும், அவ்வாறு போற்றாவிடில் அவற்றால் பயனில்லை என்பதனையும் திருநாவுக்கரசர் சிறப்பாக வலியுறுத்திப் பாடியுள்ளார்.

**அங்கவை** கடையெழு வள்ளல்களுள் ஒருவனான பாரியின் மகளிர் இருவருள் ஒருத்தி. மூவேந்தர் சூழ்ச்சியால் பாரி இறந்தபின், அவன் மகளிர் இருவரையும், உயிர் நண்பராகிய கபிலர் அழைத்துச் சென்று, மன்னர்களுக்கு மணமுடிக்க முயன்று, முடியாமையின் பார்ப்பார் சிலரின் பாதுகாவலில் அவர்களை இருத்தி வடக்கே சென்றார் என்பது கூறப்படுகிறது.

பாரி மகளிராகிய அங்கவையும் சங்கவையும் தம் வறிய நிலையினும் தம்மிடம் வந்த ஔவையாருக்கு விருந்திட, அவர் மகிழ்ந்து, இருவரையும் திருக்கோயிலூர் மன்னன் மலையமான் தெய்வீகனுக்கு மணமுடித்துத் தம் ஆற்றலால் மூவேந்தர் பகைமையையும் தீர்த்தருளினார் என்றும் கூறுவர். பாரி மகளிர் பெயர் அங்கவை சங்கவை என்பதற்குச் சங்க நூல்களிற் சான்றில்லை. ஔவையார் பாரி மகளிர்க்குத் திருமணம் நிகழ்த்திய செய்திகள், சங்க காலத்திற்குப் பின்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஔவையாரின் தனிப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. த.கு.மு.

***அங்காடி அமைப்பு:*** தேவையின் நிறைவு, அங்காடியில் நிகழும் பண்டமாற்றினால் ஏற்படுகிறது. தேவையான எல்லாப் பண்டங்களையும் பணிகளையும் (Goods and Services) எவரும் தாமாகவே உற்பத்தி செய்துகொள்ள முடியாது. தம்மிடம் மிகுந்துள்ளதை விலைக்கு விற்று, அதற்குப் பதிலாகத் தமக்கு வேண்டியதைப் பெற்றுக் கொள்வதன் அடிப்படையில் நிகழும் செயல்களின் அமைப்பு அங்காடி (Market) என்பதாகும். இங்குப் பண்டமாற்று அல்லது பண்டம் விற்றல் – வாங்கல் என்பனவற்றிற்கு மாற்றுக் கருவியாக இது பயன்படுத்தப்படுகிறது. பண்டத்திற்குப் பண்டம் நேரடியாக மாற்றிக் கொள்ளும் பண்டமாற்றுமுறை (Barter System) பணம் பழக்கத்திற்கு வாராத பழங்காலத்தில் இருந்து வந்தது. இப்போது உலகின் எல்லா நாடுகளிலும் பொருள்களை வாங்கவும் விற்கவும் பணம் மாற்றுக் கருவியாக அமைந்து, பணப்பொருளாதாரம் (Money Economics) நடைமுறையில் உள்ளது. இம்முறைப்படி பண்டங்கள், பணிகளின் மதிப்பு, பணத்தைத் துணைக் கருவியாகக் கொண்டு வரையறுக்கப்படுகிறது. மக்களின் பல்வேறுபட்ட தேவை நிறைவேற்றத்திற்கும் நல்வாழ்வுக்கும் அங்காடிகள் அமைந்துள்ளன.

பற்றாக்குறை, பண்டங்களுக்கும் பணிகளுக்கும் மதிப்பைத் தருகிறது. எவை தடையின்றிக் கிடைக்கின்றனவோ அவற்றிற்கு விலை கொடுப்பதில்லை. காற்றும் தண்ணீரும் இலவசமாகக் கிடைப்பதால் அவை அங்காடியில் விற்பனைக்கு வருவதில்லை. அங்காடியில் பண்டங்கள், பணிகள், வாங்கல் விற்றல், ஆகியவற்றைப் பொறுத்து அங்காடி அமைப்பு (Market Structure) பலவிதங்களில் மாறுபடுகிறது. விலை பெறும் பண்டங்களும் பணிகளும் பொருளாதாரப் பொருள்கள் எனச் சொல்லப்படுகின்றன. ஒரு பண்டத்தின் விலை, அதன் மதிப்பை உறுதிப்படுத்துகிறது. மதிப்பு (Value) என்பது, ஒரு பண்டத்தின் பயன்தரும் தன்மையைப் பொறுத்துள்ளது. அன்றியும் அப்பண்டம் கிடைப்பதற்கு அரிதாக இருந்தால் மட்டுமே அது விலை மதிப்புப் பெறுகிறது. தேவை ஒரு பக்கமும் அளிப்பு ஒரு பக்கமும் சேர்ந்து பண்டத்தின் அல்லது பணியின் விலையை வரையறுக்கின்றன. விலைமதிப்புப் பெறுகிற பண்டங்கள் அங்காடிகளுக்கு வருகின்றன. அங்காடி செயற்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட இடம் தேவையில்லை. விற்பவனும் வாங்குபவனும் நேரடித் தொடர்பில்லாமலோ குறிப்பிட்ட இடம் இல்லாமலோ பண்ட மாற்றம் செய்யலாம். அயற் செலாவணி அங்காடி, மூலதன அங்காடி முதலியன இத்தகைய அங்காடிகள் ஆகும். எனவே அங்காடி என்பது பண்டத்தின் இயல்பு, விற்பனையாளன் அல்லது உற்பத்தியாளனின் தன்மைகள், மற்றும் வாங்குபவன் அல்லது நுகர்வோனின் பின்னணி இவற்றைப் பொறுத்துப் பல்வேறுபட்ட அமைப்புகளாகப் பிரிக்கப்படுகிறது. பொருள்களின் அடிப்படையில் விளைபொருள் அங்காடி (Produce Exchange Market), உலோக மாற்று அங்காடி (Bullion Exchange Market), பங்கு மாற்று அங்காடி (Stock Exchange Market) என அங்காடியை வகைப்படுத்தலாம். பரப்பின் அடிப்படையில் அங்காடியை, உள்ளூர் அங்காடி (Local Market), வட்டார அங்காடி (Regional Market), தேசிய அங்காடி (National Market), பன்னாட்டு அங்காடி (International Market) என்று வகைப்படுத்தலாம்.

காலத்தின் அடிப்படையில் மிகக் குறுகிய கால அங்காடி (Very Short Period Market), குறுங்கால அங்காடி (Short Period Market), நீண்டகால அங்காடி (Long Period Market), மிக நீண்டகால அங்காடி (Secular Market) என்று வகைப்படுத்தலாம். அளிப்பைச் (Supply) சிறிதளவுகூட மாற்ற இயலாத காலம் மிகக் குறுகிய காலம். அளிப்பை ஓரளவுக்கு மாற்றியமைக்கத் தக்க காலம் குறுங்காலம். அளிப்பை எவ்வளவு வேண்டுமானாலும் மாற்றியமைக்கத் தக்க காலம் நீண்டகாலமும், மிக நீண்டகாலமும் ஆகும்.

அங்காடியைப் போட்டி அடிப்படையில் நிறைவுப் போட்டி நிலவும் அங்காடி, நிறைகுறைப் போட்டி நிலவும் அங்காடி என இருவகையாகப் பிரிக்கலாம். நிறைவுப் போட்டி நிலவும் அங்காடியைச் சார்ந்து தூய போட்டி (Pure Competition) அங்காடி என்ற ஒரு பிரிவும் உண்டு. நிறைகுறைப் போட்டி அங்காடியில், முற்றுரிமை அங்காடி, இருவர் முற்றுரிமை அங்காடி, சில்லோர் அங்காடி என்ற வகைகளும் உண்டு. அங்காடிகளின் இயல்புகளைப் பொறுத்து, அங்காடிகள் இவ்வாறு வகைப்படுத்தப் படுகின்றன. இவ்வகை அங்காடிகளில் நுகர்வோர் எண்ணிக்கை மிகுதியாக இருக்கிறது என்பது அடிப்படை எடுகோள் (Assumption).

நிறைவுப் போட்டி அங்காடி: தூய போட்டி அங்காடியின் இயல்புகளோடு கீழ்வரும் இயல்புகளையும் இவ்வங்காடி பெற்றிருக்கும்: (1) காரணிகளின் தடையற்ற இடப்பெயர்ச்சி (2) போக்குவரத்துச் செலவின்மை (3) அங்காடி பற்றிய தெளிவான அறிவு எல்லோருக்கும் இருத்தல் (4) எதிர்கால நிலை பற்றிய உறுதியின்மை இல்லை என்னும் நிலை.

தூய போட்டி அங்காடி: இது (1) தனிப்பட்ட எவருக்கும் விலையின் மீது கட்டுப்பாடு இன்மை (2) விற்பனையாளர்களின் எண்ணிக்கை மிகுதி (3) ஒரியல்பான பண்ட அலகுகள் (4) உற்பத்தியைத் தொடங்க

அல்லது நிறுத்த எவ்விதத் தடையும் அற்ற நிலை ஆகிய இயல்புகளை உடையது.

நிறைகுறைப் போட்டி (Imperfcet) அங்காடி, (1) ஒன்றுக்கொன்று போட்டியிடும் முற்றுரிமைத் தன்மையுடைய பல நிறுவனங்கள் இருத்தல் (2) மிக நெருக்கமான பதிலீடுகளாகப் பயன்படத்தக்க, வேறு படுத்தப்பட்ட பண்டங்கள் (3) விலையின் மீது அல்லது அளிப்பின் மீது நிறுவனங்களுக்குக் கட்டுப்பாடு இருத்தல் (4) நிறுவனங்களுக்கிடையே கடும் போட்டி (5) தொகுப்பில் புகவும் வெளியேறவும் வாய்ப்பு இருத்தல் (6) விலை ஒழிந்த பிற வடிவங்களில் போட்டி நிகழ்தல் (7) உற்பத்திச் செலவும் விற்பனைச் செலவும் சேர்ந்து மொத்தச் செலவை வரையறுக்கும் தன்மை (8) எச்சத்திறன் இருக்கும் நிலை கொண்டது.

அங்காடியில் ஒரேயொரு உற்பத்தியாளரும் ஒரேயொரு விற்பனையாளரும் இருந்தால் அதை இருமுக முற்றுரிமை அங்காடி (Bilateral Monopoly) என்றும், விற்பவர் பலரும் வாங்குபவர் ஒருவரும் இருந்தால், அதனை, வாங்குவோர் முற்றுரிமை (Monopsony) அங்காடி என்றும் குறிப்பிடுவர்.

முற்றுரிமை அங்காடி, (1) ஒரேயொரு உற்பத்தியாளர் அல்லது விற்பனையாளர் (2) மிக நெருக்கமான பதிலீட்டுப் பண்டம்/பணி இன்மை (3) நிறுவனமே தொழிலாக இருத்தல் (4) எப்போதும் மிகை ஆதாயம் பெறும் நிலை (5) விலையை அல்லது அளிப்பை உற்பத்தியாளர் கட்டுப்படுத்தும் நிலை (6) குறுங்கால, நெடுங்கால வேறுபாடு இன்மை (7) விலை பேதங்காட்டும் இயல்பு இருத்தல் கொண்டது.

இருவர் போட்டி (Duopoly) அங்காடி: இது முற்றுரிமை இயல்புகளில் பெரும்பான்மையானவற்றைக் கொண்டு இருவர் முற்றுரிமைபெற்றிருக்கும் அங்காடி; இருவரும்ஒருவரோடு ஒருவர்இரகசிய ஒப்பந்தம் மேற்கொள்வாரானால் அது ஒரு முற்றுரிமை அமைப்புப் போலவே செயற்படும்.

சில்லோர் போட்டி (Oligopoly) அங்காடி: இது (1) நிறுவனங்களின் எண்ணிக்கைக் குறைவு (2) மொத்த உற்பத்தியில் ஒவ்வொரு நிறுவனமும் கணிசமானதொரு பங்கை உற்பத்தி செய்யும் நிலை (3) நிறுவனங்களுக்கு இடையே கடும் போட்டி (4) அங்காடியில் உறுதியில்லா நிலை இருத்தல் (5) பலவிதமான தீர்வுகளுக்கு (Indeterminate Solution) வாய்ப்பு (6) ஏறத்தாழ மாறா விலை (7) விலை தவிர்த்த பிற வழிகளின் அடிப்படையில் போட்டி (8) உறுதியற்ற தேவை கொண்டது.

நிறைவுப் போட்டி, முற்றுரிமைப் போட்டி, இருவர் போட்டி ஆகிய அங்காடி அமைப்புகள் நடைமுறைக்குப் பெரும்பாலும் ஒவ்வாதவை. நடைமுறைப் பொருளாதாரத்தில் காண்பது நிறைகுறைப் போட்டி என்னும் முறையேயாகும். நிறைகுறைப் போட்டி அங்காடியில் விற்பனையாளர்களின் எண்ணிக்கை மிகுதியாதலால் தனியொரு விற்பனையாளனின் உற்பத்தி மொத்தத்தில் மிகச் சிறு பகுதியேயாகும். ஆகையால் உற்பத்தியளவை மாற்றுவதால் விற்பனையாளர்கள் விலைமாற்றங்களை விளைவிக்க முடியாது. இத்தகைய அங்காடியில் பண்டங்கள் ஒரே தன்மையற்றதாக இருக்கும். ஆனால் அவை பயன்பாட்டிற்குத் தகுந்த முறையில் சிறுமாறுதல்களுடன் உற்பத்தி செய்யப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பற்பசை சலவைக்கட்டி போன்ற இன்றியமையாப் பண்டங்களிலிருந்து மோட்டார் வண்டி, தொலைக்காட்சிப் பெட்டி போன்ற ஆடம்பரப் பண்டங்கள் வரையுள்ள பொருள்களை உண்டாக்கும் உற்பத்தியாளர்கள், ஒருசில மாறுதல்களுடன் ஒரே பண்டத்தைப் பல வடிவங்களில் பல அளவுகளில் உற்பத்தி செய்கின்றனர். இம்மாறுபடுத்தும் வாய்ப்புகளே, அங்காடியைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தையும் உற்பத்தியாளனுக்கு அளிக்கின்றன. முற்றுரிமையாளனைப் போல, நிறைகுறைப் போட்டியில் பண்டத்தின் விலையை ஏற்றி, அதிக விலைக்கு விற்க வாய்ப்பு மிகுதியாக இல்லை. அவனுடைய விற்பனை பாதிக்காத அளவுக்கு மட்டும்தான் விலையை உயர்த்த முடியும். விற்பனையாளருக்கிடையிலுள்ள தூரத்தாலும் பண்டங்களின் மாறுபாடுகளினாலும் மட்டுமே நுகர்வோர்களைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும்.

நிறைகுறை அங்காடியில் போட்டியிட நுழைவது கடினமானதன்று. ஆயினும் தன்னுடைய மாறுபட்ட பண்டத்தின் மூலம் அங்காடியில் ஏற்கனவே உள்ள மற்ற விற்பனையாளர்களிடமிருந்து நுகர்வோரை ஈர்த்துக்கொள்வதற்கு விளம்பரச்செலவுகளும் ஆக்கச் செலவுகளும் பெரிதும் தேவைப்படும். பண்டங்கள் ஒன்றுக்கொன்று சிறிதளவே மாறுபட்டுள்ளதால் அங்காடியில் காலூன்றி நிற்கப் பலவிதமான நுட்பங்களைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. விளம்பரம், பண்டத்தின் தரம், பண்ட விற்பனையில் வெவ்வேறு நுணுக்கங்கள், வாணிக முத்திரைகள் போன்றவை பயன்படுத்தப் படுகின்றன. நடைமுறையில் மிகப் பெரும்பாலான பண்டங்கள், நிறைகுறைப் போட்டி அங்காடி அமைப்பில் அடங்குகின்றன.

மற்றுமொரு அங்காடி அமைப்பு, சில்லோர் முற்றுரிமை எனப்படும். இருவர், உற்பத்தி அல்லது விற்பனை முழுவதையும் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தால் அதற்கு இருவர் முற்றுரிமை என்றும், ஒரு சிலர் அவ்வாறு கட்டுப்படுத்தினால் சில்லோர் முற்றுரிமை என்றும் அமைகிறது. மிகச்சில விற்

பனையாளர் இவ்வங்காடியில் செயற்படுகின்றனர். இந்தியாவின் சிமிண்டு தொழிலில் விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச் சில நிறுவனங்களே உற்பத்தியில் ஈடுபடுகின்றன. ஒவ்வொரு நிறுவனமும் மொத்தத்தில் கணிசமான பகுதியை உற்பத்தி செய்வதால் உற்பத்தியளவு மாறுபாடுகளினாலும், விலை மாற்றங்களினாலும் அங்காடியில் முக்கியமான மாறுதல்களை ஏற்படுத்தும் வாய்ப்பு சில்லோர் முற்றுரிமையில் உள்ள நிறுவனங்களுக்கு உண்டு. ஆகவே, ஒவ்வொன்றும் போட்டியிடும் பிற நிறுவனத்தின் செயற்பாடுகளில் மிக விழிப்பாக இருக்க வேண்டும்.

நடைமுறையில் அங்காடிகள் தூயதாகச் செம்மைப்பட அமைவதில்லை. குறைகள் பல இருக்கும் போது, அங்காடியில் நிலவும் விலைகள், பொருளியல் முறையில் சீராக அமைவதில்லை. மேலும், தனியார் துறையுடன், பொதுத் துறையும் பண்டங்களையும் பணிகளையும் மக்கள் நலனுக்காக உற்பத்தி செய்கின்றன. இந்த நிலையில், விலை வரையறை நடவடிக்கைகள் தேவையாகின்றன. மின்சக்தி, போக்குவரத்து, தொலைபேசி, இரயில்வே முதலானவை அளிக்கும் பணிகளுக்கு விலைகளையும் கட்டணங்களையும் அரசு உறுதி செய்கிறது. போட்டியமைப்பில் தனியார் துறை இயங்கும்பொழுது அரசின் தலையீடு தேவைப்படுகிறது. பொருளாதார நெருக்கடி நிலைமை, ஒரு வகுப்பினரிடமிருந்து மற்றொரு வகுப்பினருக்கு வருமானத்தை மறு பகிர்வு செய்யவேண்டிய தேவை, தவிர்க்கப்பட வேண்டிய பண்டங்களின் உற்பத்தியைக் குறைக்க வேண்டிய தேவை, இவையெல்லாம் எழும் போது அரசு விலைக்கட்டுப்பாடு முறையைச் செயற்படுத்த வேண்டியுள்ளது. இக்கட்டுப்பாடு நேரடியாகப் பண்டங்களுக்குக் குறைந்த விலை அல்லது உயர்ந்த விலையை வரையறுப்பதன் மூலமும் மறைமுகமாகப் பண்டங்களின் மீது வரி விதிப்பது அல்லது தொழில்களுக்கு உதவி நிதி அளிப்பது ஆகியவற்றின் மூலமும் செயற்படுத்தப் படுகிறது.

அங்காடி அமைப்பைப் பற்றிய விளக்கம், பண்டங்களின் உற்பத்தி அளவு, விலை, சமூகத்திற்குப் பண்டத்தாலும் பணிகளினாலும் ஏற்படும் பயன்கள், சமூகத் தேவைக்கு ஏற்றபடி பண்ட உற்பத்தியிலும் விலையிலும் செய்ய வேண்டிய மாறுதல்கள், அரசாங்கம் எந்தக் கோட்பாட்டைக் கையாள்வது, எந்தத் தொழிலுக்குச் சலுகை தருவது, எதனைக் கட்டுப் படுத்துவது போன்ற பலவிதமான செயற்பாடுகள் ஆகியவற்றிற்கு இன்றியமையாதது. ய.ச.

துணை நூல்கள்:

**Stonier**, A.W. & **Hague**, **D.C.**, "A Text Book of Economic Theory," ELBS, London, 1973.

**Hirshleifer, J.**, "Price Theory and Applications", Prentice Hall, New Delhi, 1982.

**Lipsey, R G.**, "An Introduction to Positive Economics", ELBS, London, 1971.

**Samuelson, P.A.**, 'Economics', Mc Graw - Hill, New York, 1961.

***அங்காரகன்***: இவன் மங்களன், குகன், ஆரல் செவ்வாய் முதலிய வேறு பெயர்களைக் கொண்டவன். இவன் நவக்கிரக மண்டலத்தில் மூன்றாவதாக விளங்குகிறான். நவக்கிரக வழிபாட்டில் சூரியனுக்குத் தெற்கே இவனை மந்திர முறையால் அமர்த்தி வழிபடுவது மரபு. உடல், உடை, மாலை முதலியன சிவப்பாய் இருத்தலின் செவ்வாய் - செம்மீன் எனத் தமிழில் குறிக்கப்பட்டுள்ளான். வானில் இவன் தோற்றத்தை, 'முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச் செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்' என்று புறநானூறு (60) குறிப்பிடுகிறது. நிலமகளால் வளர்க்கப் பெற்றவனாதலின் இவன் நிலமகளின் மகனாகக் குறிக்கப்பெறுகிறான். குகன், தராசுதன், பௌமன் என்பனவும் அக்காரணம்பற்றி இவனுக்கு அமைந்த பெயர்களாகும்.

உமை இறைவனை நீங்கியிருந்த காலத்தில் இறைவன் யோகத்தில் இருந்தார். அப்போது நெற்றிக் கண்ணில் வேர்வை அரும்பி நிலத்தில் விழுந்தது. அதிலிருந்து அங்காரகன் தோன்றி நிலமகனாய் வளர்க்கப்பெற்றான். அவன் கடும் தவம் செய்ய, அத்தவ மிகுதியால் உடம்பில் யோகாக்கினி தோன்றியது. அத்தவப் பயனாகக் கிரக நிலை எய்தினான்.

தக்கன் செய்த யாகத்தினை அழித்த வீரபத்திரர், மூவுலகையும் அழிக்க முற்பட்டபோது தேவர்கள் வேண்டுகோளுக்கிணங்கத் தன் உருவினை மாற்றி அழகிய அங்காரகனாகத் திருமேனி பூண்டதாக மச்ச புராணம் கூறுகிறது.

இவன் பிரமனுக்குப் பூராடத்தில் தோன்றியவன் என்றும் ஏகாதச உருத்திரர்களில் ஒருவன் என்றும் சயத்தரதனுடன் பிறந்தவன் என்றும் கூறப்படுகிறான்.

அங்காரகன் நான்கு அருட் கைகளையுடையவன்; செம்மலரும் செவ்வுடையும் செம்மேனியுஞ் செவ்வாயுங் கொண்டவன்; வலக் கைகளில் அபயமும் சக்திப் படையுமுடையவன்; இடக் கைகளில் சூலமும் கதையும் கொண்டவன்; செம்மறியை ஊர்தியாகக் கொண்டவன்; செங்கொடியும் குடையும் உடையவன். சித்திரை, முதல் செவ்வாயில் இவனைச் சிறப்பாக வழிபடுவது மரபு. த. கோ.

***அங்காளம்மை*** சக்தி வழிபாட்டிற்கமைந்த தெய்வங்களுள் ஒன்றாகும். அங்காளி, அங்காளதேவி

என்னும் பெயர்களும் இத்தெய்வத்திற்கு உண்டு. இத்தெய்வத்தின் வடிவமைப்பினைப் பற்றி, 'தியான சுலோகம்' என்ற சிற்ப நூலில், 'சிவந்த திருமேனி, சுடரிதழ் மகுடம், நான்கு திருக்கரங்கள் சூலாயுதம் ஏந்திய நிலை, கோரவடிவம்' என்பன கூறப்பட்டுள் ளன.

கண்ணகியே காளி வடிவெடுத்துப் பழி தீர்த்துக் கொண்டாள் என்னும் தெருக்கூத்தின் நிகழ்ச்சி வழக்காக, அங்காளம்மை கண்ணகியின் கோர வடி வென்றும் கூறுவர்.

பொற்கொல்லரும் அம்மரபினைச் சார்ந்த கம் மாளரும் குலதெய்வமாகக் கொண்டு இத்தெய்வத் தினை வழிபட்டு வருகின்றனர்.

தஞ்சைத் தெற்குவீதி, குடந்தைக் கம்பட்ட விசுவ நாதன் தெற்கு வீதி, கீழ்வேளூர் தெற்குத் தெரு ஆகிய இடங்களில் உள்ள இவ்வம்மையின் திருக் கோயில்கள் வரலாற்றுச் சிறப்புடையனவாகும்.

சி. கோ.

**அங்கீகாரம் (ஏற்பு)**: காலப் போக்கில் பல புதிய நாடுகள் தோன்றுகின்றன; சில பழைய நாடு கள் மறைகின்றன; சில நாடுகள் இணைகின்றன; வேறு சில நாடுகள் புதிய வடிவம் பெறுகின்றன. இவ்வாறு புதிய நாடுகள் தோன்றுவதும் மறைவதும் இணைவதும் உலக அரங்கில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. அவற்றுள் ஒன்று அங்கீகாரம் (Recognition) அல்லது ஏற்பு என்பதாகும்.

புதிய நாடு ஒன்று உருவாகும் போது, முன்னரே இருக்கும் நாடுகளால் அந்நாடு அங்கீகரிக்கப்பட்டால் தான் அது உலக நாடுகளின் கூட்டுக் குடும்பத் தில் உறுப்பினராக இயலும். வங்காளதேசம் (Bung-ladesh) 1971-இல் தோன்றியது இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும். ஆனால், சில அறிஞர்கள் இக்கருத் தினை ஏற்றுக்கொள்வதில்லை.

அங்கீகாரம், புதுநாடு அங்கீகாரம், புதுத்தலைமை அங்கீகாரம், போரிடுவோர் அங்கீகாரம், எதிரெழுச்சி நிலை அங்கீகாரம், ஆள்நிலப் பகுதி கூடுதல், குறை தல் அங்கீகாரம் என்று பல்வேறு வகைப்படும்.

அரசு அங்கீகாரம், அரசாங்க அங்கீகாரம் முதலி யவற்றைச் சட்டப்படியான அங்கீகாரம் (De Jure Recognition), நிகழ்வுநிலை அங்கீகாரம் De Facto Re-cognition) என இருவகைப்படுத்தலாம். இன்றுவரை அங்கீகாரம் அந்தந்த நாடுகளால் அவர்களுடைய விருப்பம்போல் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. உலக நாடுகள் ஒருமுகமாக வரையறுக்கப்பட்ட விதிகளின் படி அங்கீகாரம் வழங்க இதுவரை அனைத்துலகச் சமுதாயம் வழிவகை செய்யவில்லை. ஐக்கிய நாடு களின் சபை, இப்புதிய சமுதாயத்தை ஓர் உறுப்பு நாடாக ஏற்றுக் கொள்வதானது, அதனை ஒரு நாடென்று உறுதி செய்வதற்கு ஒப்பாகும். பேரா சிரியர் ஓப்பன்கீம் (Oppenheim) என்பவர், ஒரு நாடு உலக ஆளுமை (International personality) பெறுவது அங்கீகாரத்தின் மூலமே என்று கூறியுள்ளார். ஒரு சமுதாயம் ஒரு நாட்டுக்குத் தேவையான அனைத்துச் சிறப்புகளையும் அடைந்த பிறகும், உலக அரங்கில் நாடாகக் கருதப்பட, அது பிற நாடுகளின் அங்கீகா ரத்தைப் பெற்றாக வேண்டும்.

அங்கீகாரம்வெளிப்படையானதாகவோ (Express) உய்த்துணரக்கூடியதாகவோ (Implied) இருக்கலாம். அறிவித்தலால் அல்லது பிரகடனத்தால் (Declara-tion) அங்கீகாரம் கொடுக்கப்பட்டால் அதனை வெளிப்படை அங்கீகாரம் என்றும், ஒரு நாட்டின் நடவடிக்கை மூலம் அங்கீகாரம் வெளிப்படுமானால் அதனை உய்த்துணர் அங்கீகாரம் என்றும் கூறப் படும். புதிய சமுதாயத்துடன் தூதர் பரிமாற்றம் செய்துகொள்ளப்பட்டால், அந்தப் புதிய சமுதாயம் அங்கீகரிக்கப்பட்டதாகக் கருதப்படும். அந்த அங்கீ காரம் வெளிப்படையானதாகாது. அது உய்த்துணர் அங்கீகாரம் என்று கூறப்படும். ஒரு நாடு புதிய சமு தாயத்துடன் நேரடியாக எந்தவித உறவு ஏற்படுத் திக் கொண்டாலும் அதனை மறைமுகமாக அங்கீ கரித்ததாகக் கூறலாம்.

நாடுகள் தனித் தனியாகவோ ஒருங்கிணைந்தோ ஒரு புதிய சமுதாயத்தை அங்கீகரிக்கலாம். ஒரு நாட் டில் அரசு ஒன்று தோன்றி, தன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் இறையாண்மையுடன் (Sovereignty) அர சோச்சுகிறது. ஆனாலும், அங்கீகரிக்கும் வெளிநாடு களின் கருத்துப்படி, அந்நாடு தன்னை நிலையாக உறுதிசெய்து கொள்ளாத போதும் அனைத்துலக அரங்கில் தன் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தயங்கும்போதும் அல்லது தவறும்போதும் சட்டப் படி இல்லாவிட்டாலும் அந்நாட்டைச் செயல்நிலை யில் அங்கீகரிக்கலாம். இதுவே நிகழ்வு நிலை (De Facto) அங்கீகாரம் ஆகும்.

பொருநிலை அங்கீகாரம் (Recognition of Belli-gerency) என்பது பொருவோர், நாட்டின் சட்டப் படி இயங்கும் அரசுடன் பொதுவாகப் போரில் ஈடு பட்டு, போர் விதிகளைக் கடைப்பிடித்து, ஆளும் நிலத் தையோ அதன் ஒரு பகுதியையோ அடக்கி ஆண்டால், அயலரசுகள் அவர்களோடு தொடர்புகளை வரை யறை செய்ய வேண்டிய தேவை ஏற்படும்போது, அவர்களைப் பொருவோராக (எதிரியாக) அங்கீக ரிப்பார்கள். இதனைப் பொருநிலை அங்கீகாரம் என் பர். மேலே கூறிய கட்டுப்பாடுகளையும் எதிரெழுச்சி யினர் (Insurgents) நிறைவு செய்வார்களானால் அவர்களும் பொருதுவோராவார்கள். மற்றைய நாடு

கள் அவர்களுக்கு நிகழ்வுநிலை அங்கீகாரம் வழங்க லாம்; சட்டப்படியான அங்கீகாரம் வழங்குவதில்லை. ஏனெனில், சட்டப்படி அங்கீகரிக்கப்பட்ட பழைய அரசும் அதே ஆளும் நிலத்தில் ஆட்சியில் இருக்கும் அல்லது இருப்பதாகக் கருதப்படும்.

எதிரெழுச்சிநிலை அங்கீகாரம் (Recognition of Insurgency) என்பது, சட்டப்படி ஆட்சியிலுள்ள அர சுக்கு எதிராகச் சிலர் கிளர்ச்சியில் ஈடுபட்டுப் பொரு துவோராக ஏற்கப்படுவதற்குரிய கட்டுப்பாடுகளில் ஏதேனும் ஒன்றினை நிறைவு செய்யாமல் இருப்பார் களானால், அவர்கள் எதிரெழுச்சியினர் (Insurgents) என அங்கீகரிக்கப்படுவார்கள். அந்நிலை எதிரெழுச்சி நிலை அங்கீகாரம் எனப்படும். அவ்வாறு எதிரெழுச் சியினராக அங்கீகரிக்கப்படாவிட்டால் அவர்கள் கலகக்காரர்கள் என்றும், சட்டத்தை மீறுபவர்கள் என்றும், அதனால் தண்டனைக்குரியவர்களென்றும் நாட்டின் சட்டப்படி கருதப்படுவார்கள். உள்நாட் டுச் சட்டம் அவர்களை எந்நிலையிலும் கலகக்காரர் களாகவே கருதும்.

**ஆள்நிலப்பகுதி கூடுதல் குறைதல் அங்கீகாரம்:** ஒரு நாடு புதிய ஆள்நிலப் பகுதி ஒன்றினை இணைக் கும்போது அதனைப் பிற நாடுகள் அங்கீகரிக்கலாம். புதிய ஆள்நிலம் பற்றிய உரிமை அங்கீகாரத்துக்குப் பின்னரே நிறைவு பெறுகிறது. பிற நாடுகள் அங்கீக ரிப்பதால் அந்தப் பகுதியில் அவர்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்பதும் தெளிவாகிறது. ஆகவே ஒவ்வொரு நாடும் புதிய ஆள்நிலம் பெற்ற விடத்து அதனை அங்கீகரிக்கும்படி பிற நாடுகளைக் கேட்கும். இது இசுட்ரிம்சன் கொள்கை (Strimson Doctrine of Non-Recognition) எனப்படும்.

**அங்கீகரியாமைக் கோட்பாடு:** பன்னாட்டுச் சட் டத்திற்குப் (International law) புறம்பாக ஒரு நாடு மற்றொரு நாட்டை இணைத்துக் கொள்வதைப் பிற நாடுகள் அங்கீகரிக்க மறுக்கலாம். இதனால் சட்டம் மீறிய நாடு தொல்லைக்குள்ளாகும். இவ்வாறு அங் கீகாரத்தை மீறும் நாடுகளை ஒடுக்கும் ஓர் ஆயுத மாக இந்த அங்கீகாரச் சட்டத்தைக் கொள்ள இட மிருக்கிறது.

சப்பான் உலகநாடுகள் மன்றத்தில் 1931-இல் ஓர் உறுப்பினராக இருந்தபோது சீனாவிற்குச் சொந் தமான மஞ்சூரியாவை முற்றுகையிட்டுத் தெற்கு மஞ் சூரியாவைத் தன்வயப்படுத்திக் கொண்டது. இத் தகு சூழ்நிலைகளில் வன்முறையின் அடிப்படையில் நடந்த இந்நிகழ்ச்சிக்குத் தான் அங்கீகாரம் வழங்க இயலாது என்று அமெரிக்க நாட்டுச் செயலர் இசுட்ரிம்சன் அறிவித்தார். அன்று முதல் எந்த ஒரு நாடும் இக்காரணங்களுக்காக அங்கீகாரம் மறுக்கப் படுமானால் அது ''இசுட்ரிம்சன் கொள்கை'' என அழைக்கப்படுகிறது.

அங்கீகாரம் புதிய சமுதாயத்திற்குப் பல உரிமை களை வழங்குகிறது. அங்கீகாரம் வழங்கும் நாடுகள் சட்ட விதிகளைக் கடைப்பிடித்து அதனை வழங்குவ தில்லை; அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை முன்வைத்தே வழங்குகின்றன. தங்கள் கொள்கைக்கு எதிராக வளரும் சமுதாயத்தை அந்நாடுகள் நீண்ட காலத்திற்கு அங்கீகரிப்பதில்லை.

எனவே அங்கீகாரம் வழங்கும் பொறுப்பைத் தனிப்பட்ட நாடுகளிடமிருந்து எடுத்து, ஐக்கிய நாடு கள் சபையிடமோ பன்னாட்டு நீதி மன்றத்திடமோ (International Court of Justice) ஒப்படைப்பது சிறப் புடையது என்று பல சட்ட வல்லுநர்கள் கருதுகி றார்கள்.

ஐக்கிய நாடுகள் அமைப்பில் ஒரு நாடு உறுப்பின ராவதற்குச் சில நிபந்தனைகளை நிறைவு செய்தல் வேண்டும்.

உறுப்பினராக விரும்பும் நாடு வரையறை செய் யப்பட்ட எல்லையையும் அரசினையும் நிலையான மக்களையும் பிற நாட்டாரோடு தொடர்பு கொள் ளக் கூடிய தகுதியையும் பெற்றிருத்தல் வேண்டும்; ஐக்கிய நாட்டு நிலையாவணத்தில் (Charter) கண் டுள்ள சட்டப் பிணைப்புகளை நிறைவேற்ற விருப்பம் தெரிவித்தல் வேண்டும். வே.க.

துணை நூல்கள்:

Starke, J. G., ''Introduction to International Law'', Butterworths, London, 1977.

பழனிசாமி, அ., ''சர்வதேசச் சட்டம்'', சி. சுப்பய்ய செட்டி & கோ, சென்னை, 1979.

தனபாலன், இர. வை., ''அமைதிக்கால நாட்டிடைச் சட்டம்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.


**அங்கீரசன்** என்பானுக்கு அங்கீரன், அங்கிரா, அங்கீரகன் எனவும் பெயர்கள் வழங்கின. இவன் நான்முகனுடைய மானதப் புதல்வர்களுள் ஒருவன். இவனுக்கு உதத்தியன் அல்லது சம்வர்த்தனன், பிரு கற்பதி என்ற இரண்டு ஆண் மக்களும் யோகசித்தி என்னும் மகளும் இருந்தனர். தீக்கடவுள் ஒருமுறை தேவருணவாகிய அவியைச் சுமக்க வலியற்றுக் காட் டிற்குச் சென்றான். அக்காலத்தில் தேவர்கள் இவ னைத் தீக்கடவுளின் இடத்தில் இருத்தினர். பிறகு தீக்கடவுள் வர, இவன் தீக்கடவுளை முதலாக வைத் துத் தான் இரண்டாவதாய் மகனானான். இவனு டைய மனைவி சிவை. இவளிடத்தில் இவனுக்குப் பிரகச்சோதி, பிரகத்கீர்த்தி, பிருகன்முகன், பிருகன்

மதி, பிருகத்பானன், பிருகற்பதி, பிருகற்பிருமன் என்னும் ஆண்களும் அனுமதி, இராகை, சிநிவாலி, குகு, அர்ச்சிசுமதி, அவிசுமதி என்னும் பெண்களும் பிறந்தனர். மக்களெல்லாரும் அக்கினிகளாயினர். மகளாகிய யோகசித்தி பிரபாவசு என்னும் வசுவை மணந்து விசுவகர்மனைப் பெற்றாள். த.கோ.

**அங்குமுத்து புலவர்** கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்தில் வைப்பாற்றின் இடப்பக்கத்துள்ள ஆற்றங்கரை சமசுதானத் தலைநகரான பொய்கையூரில் பிறந்தவர். இவர் இச்சமசுதானத் தலைவர்களாக விளங்கியவர்களுள் ஒருவரான சொக்கலிங்கப் பெத்தண்ண பூபதி என்பவரால் வளர்க்கப் பெற்று அவர்தம் அவைப் புலவராகத் திகழ்ந்தார். கடிகை என்பது இப்புலவர் பிறந்த மரபாதலின் இவர் கடிகை அங்குமுத்துப் புலவர் என்று வழங்கப் பெற்றார். இவர் தம்மை வளர்த்த பெத்தண்ண பூபதியின் மீது பொய்கைப் பள்ளு என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்த நூலுக்கு இப்புலவரின் மைந்தரான சுப்பிரமணியப் புலவர் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார். பொய்கைப் பள்ளு என்னும் இவர்தம் நூல் 82 செய்யுட்களைக் கொண்டுள்ளது.

**அங்கேரி** ஐரோப்பாக் கண்டத்தின் இடையில் உள்ள நாடுகளுள் ஒன்று. இதன் வடக்கில் செக்கோசுலோவாகியாவும் வடகிழக்கில் சோவியத் உருசியாவும் கிழக்கில் உருமேனியாவும் தெற்கில் யுகோசுலோவியாவும் மேற்கில் ஆசுத்திரியாவும் எல்லைகளாய் அமைந்துள்ளன.

பரப்பும் மக்கள் தொகையும்: அங்கேரி (Hungary) நாட்டின் மொத்தப்பரப்பு 93,032 சதுரக் கிலோ



மீட்டர்களாகும். 1981-ஆம் ஆண்டு மதிப்பீட்டின் படி இந் நாட்டின் மக்கள் தொகை 1,07,10,000. இதன் தலைநகர் புதாபெசுட்டு; ஆட்சிமொழி மாக்யார் எனப்படும் அங்கேரிய மொழி. அங்கேரி நாட்டு நாணயத்திற்குப் பாரின்ட்டு (Forint) என்பது பெயர். அதனை 100 பில்லர்களாகப் பிரித்துள்ளனர்.

**நாடும் தட்பவெப்பமும்:** அங்கேரியைச் சுற்றிலும் நாடுகள் சூழ்ந்துள்ளன. அதனால் இதனை நாடுகளால் சூழப்பட்ட நாடெனலாம். இதன் மூன்றிலிரண்டு பங்கு நிலம், கடல் மட்டத்தைவிட 198 மீட்டர் வரை உயரமுள்ளது. கீழை அங்கேரி, பெரும்பாலும் தட்டையானது. இதன் வடக்கில் உள்ள மலைகள் உயரமானவை. இங்குத்தான் அங்கேரியின் உயரம் மிகுந்த மலையுச்சியான கேகசு (Kekes) உள்ளது. மேலை அங்கேரியில் வளைந்து செல்லும் குன்றுகளையும் தாழ்ந்த மலைத் தொடர்களையும் காணலாம்.

இந்நாட்டின் மிக நீண்ட ஆறு திசா (Tisza) என்பதாகும். இந்த ஆறு ஏறத்தாழ 600 கிலோமீட்டர் வடக்கு தெற்காகக் கீழை அங்கேரி முழுவதிலும் பாய்ந்தோடுகிறது. திசா ஆறு தான்யூபு ஆற்றின் சிறப்பான கிளையாறாகும். தான்யூபு ஆறு, ஐரோப்பாவின் ஏழு நாடுகளில்-அங்கேரியையும் உள்ளடக்கிப் பாய்கிறது. தான்யூபு அங்கேரியின் வட எல்லையாகிப் பின்னர் வடக்கு - தெற்காக இந்நாட்டின் நடுவில் பாய்ந்து ஓடுகிறது. பால்ட்டன் ஏரி மேலை அங்கேரியில் அமைந்துள்ளது. இதுவே நடு ஐரோப்பாவின் பெரிய ஏரியாகும்.

**இயற்கைப் பிரிவுகள்:** அங்கேரியை நான்கு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. பெரும் சமவெளி, 2. தான்யூபு ஆற்றுக்கப்பாலுள்ள பகுதி, 3. சிறு சமவெளி, 4. வடமேட்டு நிலங்கள்.

பெரும் சமவெளி என்பது தான்யூபு ஆற்றுக்குக் கிழக்கில் உள்ள பகுதிகள் அனைத்தையும் சுட்டும். வடபால் அமைந்துள்ள மலைகளை இது குறிக்காது. இப்பகுதி, இந்நாட்டின் அரைப் பகுதியை உள்ளடக்கி உள்ளது. சிறு குன்றுகள், மணல் மேடுகள், ஆற்றுப் பள்ளத்தாக்குகள் போன்ற அறுத்த பகுதிகளை விட ஏனைய பகுதிகள் தட்டையானவை. இப்பகுதி வேளாண்மைக்கு ஏற்றதாகும். இதன் தென்கிழக்குக் கோடியிலுள்ள பகுதியே அங்கேரியில் மண்வளம் மிக்க பகுதியாகும்.

தான்யூபு ஆற்றுக்கப்பாலுள்ள பகுதி என்பது தான்யூபு ஆற்றின் மேற்கில் உள்ளதாகும். வடமேற்குக் கோடி இதனுள் அடங்காது. இப்பகுதி பெரும்பாலும் குன்றுகளையும் மலைகளையும் கொண்டது. பால்ட்டன் ஏரியின் வடக்கில் உள்ள நடு மேட்டு நிலங்களும் தாழ்ந்து வளைந்து நிற்கும் மலைகளும் சங்கிலித் தொடர்போல் அமைந்துள்ள இதன் வளைவில் புதாபெசுட்டு நகரம் அமைந்துள்ளது. ஆசுத்திரிய ஆல்ப்சுமலை அடிவாரம் இப்பகுதியின் மேற்கில் உள்ளது. இப்பகுதி பெரும் பண்ணைகளைக் கொண்டது. சிறுசமவெளி அங்கேரியின் வடமேற்குக் கோடியிலுள்ளது. இது மிகச் சிறிய பகுதியாகும். மேற்கு எல்லையை அடுத்துள்ள ஆசுத்திரிய ஆல்ப்சு அடிவாரத்தைவிட இப் பகுதிகள் தட்டையானவை. இதன் பெரும் பகுதி பண்ணைகளுக்கேற்றது.

வடமேட்டு நிலங்கள் என்பது தான்யூபு ஆற்றுக்கு வடகிழக்கிலும் பெரும் சமவெளிக்கு வடக்கிலும் அமைந்துள்ளது. மலைத்தொடர்களாக உள்ள இப்பகுதி, நடு ஐரோப்பாவின் பெரும் மலைத்தொடரான கார்ப்பேத்திய மலையின் பாகமாகும். அடர்ந்த காடுகள், குறுகிய ஓடைகள், கண்கவர் மலைத்தொடர்கள் போன்றவற்றைக் கொண்டு விளங்கும் இப்பகுதி இயற்கை அழகுக்கு எடுத்துக்காட்டான இடம். இங்குத் தொழிற் சாலைகளும் சுரங்கங்களும் சிறப்பாக உள்ளன.

**தட்ப வெப்பநிலை:** வகைவகையான இயற்கைக் கூறுகள் இல்லாமையால் அங்கேரியின் தட்ப வெப்பத்தில் ஏற்றத் தாழ்வுகள் குறைவு. இந் நாட்டில் குளிர்ந்த மழைக் காலமும் வெப்பமான கோடைக் காலமும் நிலவுகின்றன. இந் நாட்டின் ஆண்டு மழையளவு 60 செ.மீ. மே, சூன், சூலை மாதங்கள் இங்கு மழைக்காலம்.

**பொருளாதாரம்:** பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோரைக் காட்டிலும் மிகப் பெரும் அளவில் அங்கேரியத் தொழிலாளர்கள், தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்து பெரும் பொருளீட்டி நாட்டின் வருமானத்தை உயர்த்தியுள்ளனர். இரண்டாம் உலகப் போருக்கு முன்னர், அங்கேரி பெரும்பாலும் வேளாண்மையையே சிறப்பான தொழிலாகக் கொண்டிருந்தது. பொதுவுடைமைக்கட்சி அரசாங்கம் ஏற்பட்ட பின்னர், அக் கட்சியே இந் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தி வருகிறது. திட்டமிட்ட முறையில் தொழிற்சாலைகள் பெருகி வளர்ந்துள்ளமையால் அங்கேரி இன்று தொழில் மயமான நாடாகியுள்ளது. 1968-இல் உருவாக்கப் பெற்றுச் செயற்படுத்தப்பட்ட புதிய பொருளாதாரச் செயலமைப்புத் திட்டத்தில் தொழில் துறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது. பெரும்பாலும் அனைத்து அங்கேரியத் தொழிலாளர்களும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்சாலைகளிலோ பண்ணைகளிலோ ஈடுபட்டுப் பணியாற்றுகிறார்கள். கூட்டுறவுத் துறைகளிலும் மக்கள் ஈடுபாடு கொண்டுள்ள

னர். இந் நாட்டில் சொந்தத் தொழில் செய்வோரும், பண்ணை வைத்திருப்போரும் சிறுபான்மையினரே.

**இயற்கை வளங்கள்:** அங்கேரியின் வளமான மண்ணும் வாழ்வுக்கேற்ற தட்ப வெப்ப நிலையுமே இதன் சிறப்பான மூலதனங்களாம். நாட்டின் பரப்பில் முக்கால் பங்கில் பண்ணைகள் பரவியுள்ளன. அப் பண்ணைகள் மக்களின் அடிப்படைத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றன. 15 விழுக்காடு நிலத்தில் காடுகள் உள்ளன. நாட்டு மக்களுக்குத் தேவையான மரப் பொருள்கள் போதுமான அளவிற்குக் கிட்டாமையால், அப்பொருள்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்படுகின்றன.

பாக்சைட்டு உற்பத்தியில் அங்கேரி உலகிலேயே முதன்மையான இடத்தை வகிக்கிறது. இதிலிருந்து தான் அலுமினியம் செய்கிறார்கள். நிலக்கரி, இரும்புத் தாதுக்கள், மாங்கனீசு, இயற்கை எரிவாயு, பெட்ரோல் போன்றவை இங்குக் கிடைக்கும் பிற பொருள்களாம். ஆயினும், இப் பொருள்கள் போதுமான அளவு கிடைப்பதில்லை. ஆகவே, அங்கேரி, தேவையான பொருள்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்கிறது. உரேனியம், மின்சார உற்பத்திக்குப் பயன்படுகிறது. இது மெக்செக்கு மலைத் தொடருக்கருகில் உள்ள பெக்சு என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. சோவியத் உருசியாவின் துணையுடன் உரேனியச் சுரங்கங்கள் பெருக்கப்பட்டுள்ளன. நாட்டிற்குத் தேவையான அளவு மின்சாரம் கிடைக்கப் பெறாமையால், பிற நாடுகளிலிருந்து அதைப் பெறுகிறார்கள். 1980–இல் அணு ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்து, மின்சாரப் பற்றாக் குறையை ஈடுசெய்து வருகின்றனர்.

**செய்தொழில்கள்:** அங்கேரியின் தொழிற்சாலைகள் அனைத்தும் பெரும்பாலும் அரசுக்குச் சொந்தமானவையே. சில கூட்டுறவுக் குழுக்களிடம் உள்ளன. பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தபின், எந்திரங்களை உற்பத்தி செய்து, அவற்றைச் செய்தொழில் மூலச் சரக்காக்க முயலுகிறது. நுகர்வோருக்குத் தேவையான பொருள்கள் போதுமான அளவு உற்பத்தி செய்யப்படாமையால், புதிய பொருளாதாரச் செயலமைப்புத் திட்டத்தின் மூலம் அவற்றைப் பெருக்கி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அங்கேரி முயல்கிறது.

அங்கேரியின் சிறப்பான செய்பொருள்கள் பின்வருவன: வேதியியல் பொருள்கள், உணவுப் பொருள்கள், மதுபானப் பொருள்கள், எந்திரப்பொருள்கள், எஃகு, துணிமணிகள், போக்குவரத்துத் துணையாக உதவும் கருவிகள். பாக்சைட்டிலிருந்து அலுமினியம் தயாரித்தல் முதலியவை சோவியத் உருசியாவின் துணையுடன் நடைபெறுகின்றன.

புதாபெசுட்டு நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் அங்கேரியின் தொழிற்சாலைகள் நிறைந்துள்ளன.



அங்கேரி - புதாபெசுட்டுநகரம்

**வேளாண்மை:** அங்கேரியின் பண்ணைப் பொருள்கள் மூலம் 60 விழுக்காடு மதிப்புள்ள வருவாயும் கால்நடைகள் மூலம் எஞ்சிய 40 விழுக்காடு வருவாயும் கிடைக்கின்றன. இங்குப் பயிரிடப்படும் சிறப்பான பொருள்கள், உணவுப்பயிர்கள், உருளைக்கிழங்கு, பீட்டுச்சருக்கரை, கோதுமை, திராட்சைச்சாறு முதலியன. உழவர்கள் கோழிக்குஞ்சுகளையும் பன்றிகளையும் ஏனைய கால்நடைகளைவிட மிகுதியாக வளர்க்கிறார்கள். மாட்டிறைச்சிக்கான கால்நடைகளும் பால்மாடுகளும் குதிரைகளும் ஆடுகளும் ஏனைய கால்நடைச் செல்வங்களாகும்.

நாட்டின் மொத்தப் பண்ணை நிலங்களுள் 5 விழுக்காடே தனியாருக்குச் சொந்தமானவை. ஏனையவை கூட்டுறவுப் பண்ணைகளும் அரசுப் பண்ணைகளும் ஆகும். அங்கேரியின் பண்ணை நிலத்தின் 80 விழுக்காடு கூட்டுறவுப் பண்ணைகள் ஆகும். பல குடும்பங்கள் இப்பண்ணைகளில் இணைந்து பணிபுரிகின்றன. பொதுவான பண்ணைக் கொள்கைகளை அரசு முடிவு செய்கிறது.

**அயல் நாட்டு வாணிகம்:** அங்கேரியின் பொருளாதாரம் பெருமளவு அயல் நாட்டு வாணிகத்தைச் சார்ந்துள்ளது. எந்திரக் கருவிகள், பேருந்துகள், நிலக்கரி, பருத்தி, மின்சாரம், செயற்கை உரங்கள், இரும்புத்தாதுக்கள், கால்நடைத் தீவனங்கள், பெட்

ரோலியப் பொருள்கள் போன்றவை சிறப்பான இறக்குமதிப் பொருள்களாம். அலுமினியம், கால்நடைகள், எந்திர வகைகள், மருந்துகள், பதப்படுத்தப்பெற்ற உணவுப்பொருள்கள், மதுபானங்கள், எ∴கு, போக்குவரத்துக்குத் துணையான கருவிகள், குறிப்பாகப் பேருந்துகள் போன்றவை குறிப்பிடத்தகுந்த ஏற்றுமதிப்பொருள்களாகும். பொதுவுடைமை நாடுகளின் பொருளாதாரக் கூட்டிணைப்பில் அங்கேரியும் சேர்ந்துள்ளது. அங்கேரி மூன்றில் ஒருபங்கு வாணிகத்தைச் சோவியத் உருசியாவுடனும், மற்றொரு பங்கினைப் பிற பொதுவுடைமை நாடுகளுடனும், எஞ்சியதை ஆசுதிரியா, இங்கிலாந்து, மேற்குச்செருமனி போன்ற நாடுகளுடனும் செய்கிறது.

**போக்குவரத்து:** இந்நாட்டின் இருப்புப்பாதைப் போக்குவரத்து அரசின் உடைமையாக உள்ளது. இவ் விருப்புப்பாதை 9,000 கிலோ மீட்டர் நீளமுள்ளது சாலைகளின் நீளம் ஏறத்தாழ 30,000 கிலோ மீட்டர்களாம். அங்கேரியின் ஆறுகளும் கால்வாய்களும் படகுப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இங்குக் கப்பல் போக்குவரத்து நிறுவனமொன்றும், வானவூர்தி வழிகளும் செயற்படுகின்றன.

**வரலாறு:** கிழக்கும் மேற்கும் ஒன்றையொன்று தழுவும் சந்திப்பில் அங்கேரி அமைந்துள்ளதால், படையெடுப்பாளர்கள் பலமுறை அதனைத் தாக்கிய வரலாற்றைக் காணலாம். ஏசுகிறித்து பிறப்பதற்கு முன்னர், அங்கேரி உரோமானியப் பேரரசின் பகுதியாய் இருந்தது. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் கிழக்கிலிருந்து வந்த ஊணர்கள் அதைக் கைப்பற்றினர் என்றும், ஊணர்களின் அரசரான அட்டிலாவை அங்கேரியில் புதைத்தனர் என்றும், செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. பின்னர் இசுலாவுகளும், தியூடானியரும், அவார்களும் இந்நாட்டைக் கைப்பற்றினர். ஆனால், அங்கேரியர்கள் தம் வரலாற்றை கி.பி. 896-இலிருந்து தொடங்கியபோது, தான்யூப் ஆற்று வடிநிலத்தில் மாக்கியர்கள் குடியேறியிருந்தனர்.

மாக்கியர்கள் ஆசியாவிலிருந்து அங்கேரி வந்த முரட்டு இனமக்கள். அவர்கள் கொடூரமாகப் போரிடும் இயல்புடையவர்கள். காலப்போக்கில் அங்கேரியைக் கட்டுப்படுத்தினர். செருமானிய இனத்தாரிடமிருந்தும், பைசான்டியப் பேரரசரிடமிருந்தும் காத்துக் கொள்ளும் பொருட்டுத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டனர். 10-ஆம் நூற்றாண்டில் மாக்கியர்கள் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்திற்கு மாற்றப் பட்டனர். மதம் மாறிய மாக்கியர்கள் உரோமாபுரியுடன் சேர்ந்துகொண்டு பைசான்டியத்திற்கு எதிரிகளாயினர்,

கி.பி. 1001-ஆம் ஆண்டில் போப்பாண்டவர், மாக்கியரின் தலைவரான செயின்ட்டு இசுடீபன் என்பாருக்கு முடிசூட்டி, அவரை அங்கேரியின் முதல் கிறித்தவ அரசரென அறிவித்தார். இசுடீபன் மன்னர் அங்கேரியைப் பல பகுதிகளாகப் பிரித்து, அவற்றை ஆள ஒவ்வொன்றிற்கும் ஒரு கோமகனை அமர்த்தினார். பல சீர்திருத்தங்களை மேற்கொண்ட அவ்வரசர், மடாலயங்களை நிறுவி, அங்கேரியை மேலை ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய உறவுடையதாகச் செய்தார். அன்றிருந்து இன்றுவரை, செயின்ட்டு இசுடீபனின் மணிமுடி அங்கேரியின் மதிப்பு மிக்க சின்னமாக இருந்து வருகிறது.

13-ஆம் நூற்றாண்டில் அரசர் பொன் ஆணை எனப்படும் பேரறிக்கை யொன்றை வெளியிட்டு, உயர்குடி மக்களுக்குப் புதிய உரிமைகளையும் மேலான அதிகாரங்களையும் வழங்கினார். ஆனால், அதே நூற்றாண்டில் தார்த்தார் இன மங்கோலியர்கள் கிழக்கிலிருந்து புற்றீசல்கள் போல் படையெடுத்து வந்து, நாட்டை அழித்து எரித்தனர். படையெடுத்து வந்தவர்களை எதிர்த்துப் போரிட்ட உயர்குடி மக்கள் மேலும் அதிகாரங்களைப் பெற்றனர். ஆனால், இவ்வுயர்குடிமக்கள் குடியானவர்களைப் பழித்துரைத்தனர். அதன் விளைவாக 1437-இல் குடியானவர்கள் கொதிந்தெழுந்தனர். ஆனால், அக்கலகம் எளிதில் அடக்கப்பட்டது.

இதனிடையில், துருக்கியர் அங்கேரியின் எல்லைப் புறங்களைத் தாக்கி வந்தனர். 1443-க்கும் 1456-க்குமிடையில் உன்யாடி சானோசு,(Hunyadi Janos)என்பவர், செர்பியர்கள், உருமேனியர்கள் போன்றவர்களின் உதவியுடன் துருக்கியர்களைத் தோற்கடித்தனர். அவர் மகன் மத்தியாசு கார்னிவசு, 1458 முதல் 1480 வரை ஆட்சி புரிந்தார். நடு ஐரோப்பாவில் அங்கேரியை வலிமைமிகுந்த நாடாக்கிய பெருமை அவரையே சாரும். ஆனால், மத்தியாசு காலமானபோது, அவருக்கு அடுத்து யார் மன்னராக வேண்டுமென்பது குறித்து, உயர்குடிமக்கள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளவே, அங்கேரியில் மீண்டும் குழப்பம் மூண்டது. 1524-இல் மூண்ட உழவர் புரட்சி, கொடுமையாக அடக்கப்பட்டது. வலியிழந்த அங்கேரியின்மீது துருக்கியர் படையெடுக்கவே, நாட்டின் நிலை மேலும் மோசம் அடைந்தது. 1526-இல் துருக்கியர், மொகாக்சு (Mohacs) போரில் வெற்றி கண்டனர். இவ் வெற்றியின் விளைவாக, அங்கேரி மூன்று பகுதிகளாகப் பிரிந்தது. தான்யூப் ஆற்றுக்குக் கிழக்கிலிருந்து திசா ஆறு வரையிலுள்ள பகுதியைத் துருக்கியர் கைக்கொண்டனர். திரான்சில்வெனியா என்னும் பகுதியையும் அவர்கள் கட்டுப்படுத்தினர். எனினும், அதைத் தனியானதொரு அரசர் ஆண்டார். தான்யூப் ஆற்றுக்கு மேற்கில் இருந்த பகுதியை ஆசுத்திரியாவின் அரசரான முதலாம் பெர்டினான்டு பெற்றார்.

17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை துருக்கியர், அங்கேரியைத் தம் ஆட்சியின்கீழ் வைத்திருந்தனர். பின்னர், அங்கேரியர்கள் ஆசுத்திரியாவின் உறுதுணையுடன் துருக்கியரைத் தம் நாட்டிலிருந்து விரட்ட முயன்றனர். 1739-ஆம் ஆண்டளவில் ஆசுத்திரியர்கள் அங்கேரி முழுவதையும் தம் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தனர். மேற்கூறிய உதவிக்காக அங்கேரியர்கள் கைம்மாறாகப் பெருவிலை கொடுக்க வேண்டியவராயினர். அங்கேரி ஆசுத்திரியாவின் குடியேற்றப் பகுதியாகியது. அம்மக்கள் தொடர்ந்து விடுதலைக்காகப் பாடுபட்டனர்.

18, 19-ஆம் நூற்றாண்டுகளில் ஆசுத்திரியாவுக்கெதிரான வெறுப்புணர்ச்சி மேலோங்கியது. 1848-49-ஆம் ஆண்டுகள் ஐரோப்பா முழுவதிலும் புரட்சிகள் மூண்ட காலமாகும். இலாசோசு காசூத் என்பாரின் தலைமையில் அங்கேரியிலும் விடுதலைப்போராட்டம் தொடங்கியது. ஆனால் உருசியாவின் துணையுடன் ஆசுத்திரியா கலகத்தை அடக்கியது.

1867-இல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி ஆசுத்திரியா-அங்கேரி என்னும் பெயரில்இரட்டைஅரசாங்கம் நிலைநாட்டப்பட்டது. அதன்படி அங்கேரிக்கு என்று தனியான நாடாளுமன்றமும், அதன் சொந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் உரிமையும் அந்நாட்டிற்குக் கொடுக்கப்பட்டன. அங்கேரி, ஆசுத்திரியாவுடன் இணைந்தது. ஆனால், ஆசுத்திரியாவின் பேரரசர் முதலாம் பிரான்சிசு சோசப், அங்கேரியையும் இணைத்து ஆட்சி நடத்தியதுடன், அங்கேரியின் அரசராகவும் முடிசூட்டப்பெற்றார்.

அங்கேரி, முதல் உலகப் போரின்போது செருமனி, ஆசுத்திரியா நாடுகளின் பக்கம் சேர்ந்தது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட புரட்சியின் பயனாய் அங்கேரி ஒரு குடியரசாயிற்று. பின்னர்ப் பொதுவுடைமைக் கட்சியினரும் சமநிலைச் சமுதாயக்காரரும் பேலாகுன் (Bela Kun) என்பாரின் தலைமையில், 1919-இல் ஆட்சியைக் கைப்பற்றிச் சிறிது காலம் ஆண்டனர். கப்பற்படைத் தலைவர் மிக்லோசு ஓர்த்தி என்பாரின் தலைமையில் வந்த படைகள், அவர்களது ஆட்சியைத் தூக்கியெறிந்தது. ஓர்த்தி அங்கேரியை அரசரற்ற முடியாட்சி நாடாக்கினார். அவர் அந்நாட்டின் அரசப் பேராளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1920-இல் செய்து கொள்ளப்பட்ட திரியானன் உடன்படிக்கையின்படி, பழைய அங்கேரியின் மூன்றிலிரண்டு பங்கு நிலமும் அதன் பெரும்பாலான கனிச் செல்வங்களும் மலைகளும் காடுகளும் பறிபோயின. அங்கேரி அவற்றைத் திரும்பப் பெறச் சூளுரைத்தது. இரண்டாம் உலகப் போர், அவ்வாய்ப்பைக் கொடுத்தது. தம் பழைய நிலப்பகுதிகளில் சிலவற்றை அவர்கள் மீண்டும் வென்றார்கள். ஆனால், அங்கேரியின் அரைகுறை ஆதரவைக் கண்ட செருமானியர் அந்நாட்டை முழுவதும் கைப்பற்றிக் கொண்டனர். 1944-க்கும் 1945-க்கும் இடையில் உருசியப் படைகள், செருமானியப் படைகளை அங்கேரியிலிருந்து விரட்டியடித்தன. தனக்குச் சொந்தமாயிருந்த பழைய பகுதிகளை அங்கேரி மீண்டும் பெற விரும்பியது.

1946-ஆம் ஆண்டில் அங்கேரி குடியரசாயிற்று. ஆனால், சில ஆண்டுகளுக்குள் பொதுவுடைமையாளர் அங்கேரியைக் கைப்பற்றிக் கொண்டார்கள். 1949-இல், சோவியத் உருசியாவின் அரசியல் விதியமைப்பினைப் போன்றதொரு திட்டத்தை அங்கேரி பெற்றது. மாத்யாசு இராகோசி என்பார், தலைமை அமைச்சராகிக் கொடூரமாய் ஆட்சி நடத்தினார். அவரைத் தொடர்ந்து, தலைமை அமைச்சரான இம்ரே நாகி என்பார் ஆட்சி செய்தார். அவருடைய ஆட்சி கொடுமைகள் குறைந்ததாக இருந்தபோதிலும், காலதாமதமாக வந்த அவருடைய முயற்சியைக் கண்டு அங்கேரியர் சினங் கொண்டனர். 1956-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 23-ஆம் நாள் அங்கேரியில் புரட்சி மூண்டது. மாணவர்களையும் தொழிலாளர்களையும் கொண்ட விடுதலை வீரர்கள், பொதுவுடைமைக் கட்சிக் கெதிராகப் புதாபெசுட்டு நகரச் சாலைகளில் கலகம் செய்தார்கள். கலகக்காரர்களின் கையோங்கியபோது, அவர்களை உருசிய தாங்கிப் (Tanks) படைகள் அங்கேரியில் தாக்கி அடக்கின; புரட்சி நசுக்கப்பட்டது. ஏறத்தாழ 20,000 பேர் கொல்லப்பட்டனர்; இரண்டு இலட்சம் பேர் மேற்கு நாடுகளுக்குத் தப்பி ஓடினர். புதிய பொதுவுடைமைக் கட்சி அரசு ஒன்று நிலைநாட்டப்பட்டது. சானோசு கேதார் என்பார் பொதுவுடைமைக் கட்சியின் புதிய தலைவரானார். அவருடைய அரசு தாராள மனப்பான்மைக் கொள்கையை மேற்கொண்டது.

செயின்ட்டு இசுடீபனின் மணிமுடி, இரண்டாம் உலகப்போர் முடியும் நிலையில் கைப்பற்றப்பட்டு, அமெரிக்க ஐக்கிய நாட்டில் வைக்கப்பட்டிருந்தது. அது 1978-ஆம் ஆண்டில் அங்கேரிக்குத் திரும்பக் கொடுக்கப்பட்டது. சானோசு கேதார் அங்கேரியப் பொதுவுடைமைக் கட்சியின் தலைவராக விளங்கிச் சோவியத் உருசியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்.

**அங்கோலா** ஆப்பிரிக்காவின் தென்மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளதொரு நாடு. வடக்கில் காங்கோவும், கிழக்கில் சாம்பியாவும், தெற்கில் நமீபியாவும், மேற்கில் அட்லாண்டிக் கடலும் இதன் எல்லைகளாம்.


ஆட்சி: இந்நாட்டின் ஆட்சி, அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கத்தின் வசம் வந்தது. இவ்வியக்கத்தின் கொள்கைகள் காரல் மார்க்சின்

கொள்கையை அடிப்படையாகக் கொண்டவை. கட்சியின் தலைவரே நாட்டின் தலைவராகவும் படைகளின் தலைவராகவும் இருப்பார்.

மக்கள்: கறுப்புநிற ஆப்பிரிக்கர்கள்; பிற இனத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். 4,00,000 ஐரோப்பியர்கள் அங்கோலாவில் வசித்து வந்தார்கள். உள்நாட்டுப் போரின்போது அவர்கள் ஓடிவிட்டார்கள். பெரும்பான்மை மக்கள் சிற்றூர்ப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அவர்கள் உழவர்களும் கால்நடை மேய்ப்பவர்களும் ஆவர். நகரத்தில் வாழ்பவர்கள் அலுவலகங்களிலும் நிருவாகங்களிலும் இருப்பவர்கள்.

கறுப்பர், பாண்டுக் கூட்டத்தினரின் மொழியைப் பேசுகின்றனர். மக்கள் தொகையில் பாதிப்பேர் கிறித்தவர். எழுத்தறிவு பெற்றவர் 30 விழுக்காடு.




அங்கோலா

நாடு பெரிதும் மலைப்பாங்கான புல்வெளிகளை உடையது. நிலம் நடுவிலிருந்து மேற்கில் உயர்ந்து செல்கிறது. கடற்கரை ஓரம், திடுமென இறக்கங் கொண்டுள்ளது. வடக்கே வெப்ப மண்டலக்காடுகள் வளர்கின்றன. கியூனெனி (Cunene), குவான்சா (Cuanza) என்னும் ஆறுகள் ஓடுகின்றன. அவை நீர் வழிகளாகப் பயன்படுகின்றன.

பொருளாதாரம்: வேளாண்மையின் அடிப்படையில் அமைந்துள்ளது. உணவுப் பயிர்கள், வாழைப் பழங்கள், கூலவகை, கரும்பு ஆகியவை பயிராகின்றன. ஏற்றுமதிப் பொருள்கள் காப்பி, புகையிலை முதலியன. இங்குச் செம்பு, வைரம், இரும்புத் தாது, சிமெண்டு, இரசாயனப் பொருள்கள், துணிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

நாட்டில் ஏறத்தாழ 72, கி.மீ. நீளமுள்ள சாலைகள் உள்ளன. இருப்புப் பாதைகளின் நீளம் 2798 கி.மீ. அங்கோலாவில் 8 வானொலி நிலையங்கள் உள்ளன; சில நாளேடுகளும் உள்ளன.

கி.மு 50,000 ஆண்டுகளுக்கு முன்னரே அங்கோலாவில் மக்கள் வாழ்ந்தனர். பாண்டு மொழி பேசும் மக்கள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இங்குக் குடியேறினர். போர்த்துகீசியர் கி.பி. 1482–ஆம் ஆண்டில் அங்கோலாவிற்கு வந்தனர். பிரேசில் நாட்டில் இருந்த போர்த்துகீசியருக்கு இந்நாடு அடிமைகளை அளித்து வந்தது. அடிமை வாணிகம் கி.பி.1800–இல் வீழ்ச்சியுறவே, கூலம், கரும்பு, புகையிலை முதலானவற்றை அவர்கள் பயிரிடத் தொடங்கினர்.

தச்சுக்காரரின் (The Dutch) குறுகிய கால இடையீட்டுக்குப் பின்னர்ப் போர்த்துகீசியர் மீண்டும் 1920–இல் ஆட்சியைக் கைப்பற்றினர். அவர்தம் ஆட்சியில் பொருளாதார முன்னேற்றம் தொடங்கியது. 1950–ஆம் ஆண்டளவில் அங்கோலர்கள் தன்னுரிமை கேட்கத் தொடங்கினர். 1956–இல் விடுதலைக்குக் கிளர்ச்சி செய்தனர். கொரில்லாப் போர் முறைகள் மேற்கொள்ளப்பட்டன. 1961–ஆம் ஆண்டு புரட்சி வெடித்தது. விடுதலை இயக்கத்தினர் மூன்று அணிகளாக நின்று கொரில்லாப் போரில் ஈடுபட்டனர்.

போர்த்துகீசியப் படைத்தலைவர்கள் 1947–இல் அங்கோலாவுக்குத் தன்னாட்சி அளித்திட முடிவு செய்தார்கள். ஆனால் மூன்று புரட்சி அணியினரும் தனித்தனியே அரசாங்கத்தைக் கைப்பற்ற முயன்றதால், உள்நாட்டுப் போர் மூண்டது. எனினும் 1975



நவம்பர் 11–இல் இந்நாடு விடுதலை பெற்றது. ஆனால், உள்நாட்டுப் போர் தொடர்ந்தது. மூன்று அணிகளுள் ஒன்றான மக்கள் விடுதலை இயக்கம் (MPLA), உருசியாவிடமிருந்தும் கியூபாவிடமிருந்தும் உதவி பெற்று, மக்கள் குடியரசினை நிறுவியது.

அங்கோலாவின் தலைநகர் உலுவாண்டா (Luanda); ஆட்சிமொழி போர்த்துகீசியம். நாட்டின் மொத்தப்பரப்பு 12,46,700 ச.கி.மீ. இந்நாட்டின் உயர்ந்த மலையுச்சியின் உயரம் 2620 மீ. மக்கள் தொகை 70,80,000 (1982). அங்கோலாவின் நாணயம் குவான்சா (Kwanza) எனப்படும். த.கோ.

**அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச் சட்டம்**: இது மத்திய அரசின் சட்டம். முதல் பகுதி, சட்டத்தின் பெயரையும் விதிகளின் வரையறைகளையும் சட்டப் பெயர்களின் விரிவான பொருள் விளக்கத்தையும், இரண்டாம் பகுதி, அச்சகம் நடத்த, நூல் வெளியிட, பருவ இதழ் வெளியிட அனுமதி பெறும் வழிமுறைகளையும், மூன்றாம் பகுதி, அச்சிட்ட நூலினையும் பருவ வெளியீடுகளையும் அரசு அலுவலர்களிடம் ஒப்படைக்கும் விதிமுறைகளையும், நான்காம் பகுதி, விதிகளை மீறினால் வழங்கப்படும் தண்டனையின் தன்மைகளையும், ஐந்தாம் பகுதி, நூல்களையும் இதழ்களையும் பதிவு செய்யும் முறைகளையும், ஆறாம் பகுதி, மத்திய–மாநில அரசுகளின் அதிகார வரம்புகளையும் சட்டத்திற்கு உட்பட்டு உள்விதிகள் ஏற்படுத்தும் முறைகளையும் சட்டத்தின் பிடியிலிருந்து விலக்கு அளிக்கும் உரிமையினையும் கூறுகின்றன.

இச்சட்ட விதிகளின்படி, புதிதாக அச்சகமோ பருவ இதழ்களோ தொடங்க விரும்புவோர், மாவட்டங்களில், மாவட்ட வருவாய்த் துறை அலுவலரிடமும், சென்னைப் பெருநகரில், சென்னைப் பெருநகர்த் தலைமைக் குற்றவியல் நடுவரிடமும் உறுதி ஆவணம் (Declaration) தாக்கல் செய்து, அனுமதி பெற்றுச் செயற்பட வேண்டும். அச்சகத்தின் இருப்பிடத்தையோ பருவ வெளியீட்டின் இருப்பிடத்தையோ மாற்ற விரும்பினால், குற்ற இயல் நடுவரின் அதிகார எல்லைக்குள் 60 நாள்களுக்குள் மாற்றலாம். ஆனால், அம்மாற்றத்தை 24 மணி நேரத்திற்குள் குற்றவியல் நடுவருக்குத் தெரிவிக்க வேண்டும்; அச்சகத்தின் உரிமையாளரும் மாறாமல் இருக்க வேண்டும். அச்சிடப்பட்ட நூல்களிலும் பருவ வெளியீடுகளிலும் அச்சகத்தின் பெயர், ஆசிரியர் பெயர், வெளியிடுபவரின் பெயர், அச்சக முகவரி, பருவ வெளியீட்டின் முகவரி முதலிய தேவையான விவரங்களை அச்சிட வேண்டும். பருவ வெளியீட்டின் பெயர் மாறினாலும் உரிமையாளர் மாறினாலும் புதிய உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டும்.

அச்சகத்தைப் பற்றியும் பருவவெளியீடு பற்றியும் தவறான விவரங்களைக் கொடுப்பது குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு உரூ. 2,000/– ஒறுப்புத் தொகை அல்லது 6 மாதத்திற்குக் குறையாத சிறைத் தண்டனை வழங்க விதி அனுமதிக்கிறது. இச்சட்டத்தின் 11-ஆம் (பிற்.) பிரிவுப்படி, பதிவாளருக்குப் படிகள் அனுப்பாமல் இருப்பது குற்றமாகும். அத்தகைய குற்றத்திற்கு உரூ. 50/– ஒறுப்புத்தொகை பெற விதி இடமளிக்கிறது.

மாநில நூற்பதிவாளருக்கு இரு படிகளை இலவசமாக அனுப்பும்பொழுது அதனுடன் நூலின் பெயர், மொழி, ஆசிரியர் பெயர், பொருள், அச்சகப் பெயர், வெளியிடுவோரின் முகவரி, அச்சிடப்பட்ட காலம், பக்கங்கள், படிகளின் எண்ணிக்கை ஆகியவற்றின் விவரங்களைக் கொண்ட அறிக்கை ஒன்றினையும் நூலுடன் தாக்கல் செய்யவேண்டும்.

மத்திய அரசின் இச்சட்டத்தை நடைமுறைப் படுத்தவும் விதிமுறைகளை வரையறை செய்யவும் மாநில அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் தேவையான திருத்தங்களைச் செய்யும் உரிமையுடையது மத்திய அரசாகும். சட்டத்திலிருந்து விதிவிலக்கு வழங்கும் அதிகாரத்தை மாநில அரசு கையாளலாம்.

அச்சகம், மற்றும் நூல்கள் பதிவுச் சட்டத்தில் (1867) சில திருத்தங்கள் செய்ய வேண்டும் என்று அச்சகச் சட்ட விசாரணைக் குழு 1948-இல் பரிந்துரை செய்தது. மாநில அரசுகளும் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எழுந்த இடர்ப்பாடுகளைக் களையப் பரிந்துரைகள் வழங்கின. இதன் விளைவாக, அச்சகம் மற்றும் நூல்கள் பதிவுச் சட்டத்திற்கு 1955–ஆம் ஆண்டில் திருத்தச் சட்டம் கொண்டுவரப் பட்டது. திருத்தச் சட்ட விதியின்படி உறுதி ஆவணம் தாக்கல் செய்து, குறிப்பிட்ட காலத்திற்குள் செய்தித் தாளை அச்சிட்டு வெளியிட்டாக வேண்டும். அவ்வாறு வெளியிட முடியவில்லை என்றால், அனுமதி வழங்கப்பட்ட உறுதி ஆவணம் முறிக்கப் பட்டதாகக் கருதப்படும். வார இதழாக இருப்பின், உறுதி ஆவணம் பெற்று, ஆறு வாரத்திற்குள் இதழ் வெளி வர இயலவில்லை என்றால், உறுதி ஆவணம் செல்லாது. உறுதி ஆவணம் பெற்ற மூன்று மாதத்திற்குள் செய்தித்தாளை வெளியிடாமல் இருந்தால், உறுதி ஆவணம் செல்லத்தகாததாகி விடும். குற்றவியல் நடுவர் உறுதி ஆவணத்தில் அலுவலக முத்திரையைக் குத்தி, ஒரு படியைச் செய்தித்தாள் பதிவாளருக்கும் ஒரு படியை உறுதியாவணம் தாக்கல்

செய்தவருக்கும் அனுப்பவேண்டும். உறுதி ஆவணம் ஏற்காமல் தள்ளப்பட்டாலும், மேலே கூறிய இருவருக்கும் முத்திரை குத்திய ஆவணப்படியை அனுப்ப வேண்டும். அச்சிடுகின்றவரோ, வெளியிடுகின்றவரோ தம் பொறுப்பிலிருந்து விலகினால், குற்றவியல் நடுவர்முன் தோன்றி, பணியிலிருந்து விலகிவிட்ட விவரத்தை உறுதி ஆவணமாக எழுதிக் கையொப்பமிட வேண்டும். ஒப்புதல் இல்லாமல் ஒருவரின் பெயர், ஆசிரியர் என்று செய்தித்தாளில் அச்சிடப்பட்டிருந்தால், அதனால் பாதிக்கப்பட்டவர் குற்றவியல் நடுவர்முன் தோன்றித் தன் நிலைமையை விளக்கினால், குற்றவியல் நடுவர், தக்க விசாரணைக்குப் பின், அதற்கு உரிய சான்றிதழ் கொடுப்பார். உறுதி ஆவணம் தாக்கல் செய்து, அனுமதி பெற்றபின் அச்சகத்தாரோ, வெளியிடுவோரோ, அப்பணிகளிலிருந்து விடுபட்ட விவரத்தைக் குற்றவியல் நடுவர் முன்பு அறிவிக்கத் தவறினால், அக்குற்றத்திற்கு ரூ. 2,000/- வரை ஒறுப்புத் தொகை விதிக்கலாம். தொடர்ந்து ஓராண்டுக் காலம் செய்தித்தாள் வெளிவராவிட்டால், உறுதி ஆவணம் செல்லாத ஆவணமாகிவிடும். நீதி மன்றங்கள் வழங்கிய சில தீர்ப்புகளால் ஏற்பட்ட சிக்கல்களையும் திருத்தச் சட்டம் சீர்படுத்தியுள்ளது. சுவரொட்டிகளையும் திருத்தச்சட்டம் நெறிப்படுத்தியது. நாட்டிலுள்ள செய்தித் தாள்களை நெறிமுறைப்படுத்தி, உற்று நோக்கி, நோட்டமிடச் செய்தித்தாள் பதிவாளர் அலுவலகம் புதுதில்லியில் ஏற்படுத்தப்பட்டது. செய்தித் தாள் வெளியிடுகிறவர் வெளியிடும் ஒவ்வொரு படியையும் செய்தித்தாள் பதிவாளருக்கு இலவசமாக அனுப்பவேண்டும். அவ்வாறு அனுப்பத் தவறும் குற்றத்திற்கு உரூ. 50/- ஒறுப்புத் தொகை விதிக்க, விதி இடமளிக்கிறது.

1867-ஆம் ஆண்டுச் சட்டத்தையும் 1955-இல் திருத்திய சட்டத்தையும் செயற்படுத்தும் போது, சில முரண்பாடுகளும், காலத்துக்கு ஒவ்வாத இயல்புகளும் வெளிப்படவே, மீண்டும் இச்சட்டம் 1960-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. சூழ்நிலை நெருக்கத்தின் விளைவாக, அனுமதி வழங்கிய உறுதி ஆவணத்தை முறிக்கும் ஆணை வழங்குவதற்கு முன், பாதிக்கப்படுபவருக்குத் தம் நியாயத்தை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர், மத்திய அரசினால் ஏற்படுத்தப்பட்ட குழுமத்திற்கு மேல் முறையீடு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. உள்ளூர்க் குற்றவியல் நடுவரின் தீர்ப்பை எதிர்த்து, மேல் முறையீடு செய்யவும் வழி வகுக்கப்பட்டுள்ளது. அச்சக உரிமையாளரோ வெளியிடுகிறவரோ மாறினாலும், உடைமை மாற்றப்பட்டாலும் புதியதாக உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெறவேண்டும். வெளியிடும் காலம் மாறினாலும் (மாத இதழை வார இதழாக மாற்றினாலோ வேறு விதமாக மாற்றினாலோ) புதிய உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டும். செய்தித் தாள்களுக்கு உரிய விதிகளை மீறினால் 20-ஆம் விதியின்படி உரூ. 100/- ஒறுப்புத்தொகையாக விதிக்க மாநில அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. திருத்தச் சட்டத்தின் 21-ஆம் பிரிவுப்படி மாநில அரசுகள், மத்திய அரசின் ஒப்புதல் பெற்றே விதி விலக்கு வழங்கவேண்டும். இத்தகைய கூறுகள் மேலே காட்டிய திருத்தச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட இன்றியமையாத திருத்தங்களாகும்.

புது தில்லியில் இயங்கிவரும் செய்தித்தாள் பதிவாளர் தம்முடைய அலுவலகத்தில் செய்தித் தாள்களின் பெயர், மொழி, ஆசிரியர் பெயர், அச்சிடுகின்றவர்பெயர், வெளியிடுபவர் பெயர், அச்சிடப்படும் இடம், வெளியாகும் இடம், பக்கங்கள், விலை, பருவ வெளியீட்டின் உரிமையாளர் பெயர் முதலிய விவரங்கள் அடங்கிய பதிவேட்டினைத் தயாரித்து வைத்திருப்பார். 19-சி பிரிவின்படி குற்றவியல் நடுவர் உறுதி ஆவணம் வழங்கிய விவரம் கிடைத்ததும் அப்பருவ வெளியீட்டிற்குப் பதிவுச் சான்றிதழைச் செய்தித் தாள் பதிவாளர் வழங்குவார். சட்டத்தின் 19-டி பிரிவின்படி செய்தித் தாள்கள், செய்தித்தாள் பதிவாளருக்குத் தங்களுடைய பருவ வெளியீட்டின் முழு விவரங்கள் அடங்கிய அறிக்கையைத் (Statement) தாக்கல் செய்ய வேண்டும். அத்தகைய விவரங்களைத் தங்களுடைய பருவ வெளியீட்டில் வெளியிடவேண்டும். 19-இ பிரிவுப்படி செய்தித்தாள் பதிவாளர் கேட்கும் விவர அறிக்கையை (Return) அனைத்துச் செய்தித் தாள்களும் கொடுத்தாக வேண்டும். பதிவாளர், செய்தித்தாள் அலுவலகங்களுக்குச் சென்று பருவ வெளியீடு தொடர்பான ஆவணங்களையும், மூல ஏடுகளையும், இதர குறிப்புகள் அடங்கிய பதிவேடுகளையும் பார்வையிடலாம்; தேவையான குறிப்புகளுக்கு நகல் எடுத்துக் கொள்ளலாம், எந்த விதமான தகவலையும் கேட்டு அறிந்து கொள்ளச் சட்டம் அதிகாரம் அளிக்கிறது.

சேகரிக்கப்பட்ட தகவல்களைச் செய்தித்தாள் பதிவாளர், முறைப்படுத்தி, வகைப்படுத்தி, ஆண்டறிக்கை தயாரித்து, அச்சிட்டு, மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் வழங்குவார். சட்டத்தின் 19-டி, 19-இ பிரிவுகளை மீறினால், செய்தித் தாள்களுக்கு உரு.500/-தண்டனை அளிக்கச் சட்டம் இடமளிக்கிறது.

இச்சட்டத்தின்படி, தவறான தகவல்களை வேண்டும் என்றே எவர் கொடுத்தாலும், அத்தகைய குற்றத்துக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனையும் உரூ. 1,000/- ஒறுப்புத் தொகையும் விதிக்கச் சட்டம் இடமளிக்கிறது. இச்சட்டத்தைத் திருத்தவோ, சட்-

டத்தில் புதிய விதிமுறைகளை உருவாக்கவோ மத்திய அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

நூல் வெளியிடத் தனியாக உறுதி ஆவணம் தாக்கல் செய்து அனுமதி பெற வேண்டியதில்லை; அச்சகத்திற்குப் பெறப்பட்ட உறுதி ஆவணமே போதுமானது. நூல் வெளிவந்ததும், அச்சிட்டவர் இரு படிகளை நூற்பதிவாளரிடம் கொடுத்து ஒப்புதல் சீட்டுப் பெற வேண்டும். அவ்வாறு கொடுக்கும் நூலுடன் நூலின் பெயர், மொழி, நூலின் அளவு, விலை, பக்கம், படிகளின் எண்ணிக்கை, ஆசிரியர் பெயர் முதலிய விவரங்கள் அடங்கிய உறுதி மொழி ஆவணத்தையும் உடன் இணைத்துக் கொடுக்கவேண்டும். அன்றி, அத்தகைய விவரங்களை நூலின் ஒரு பகுதியில் அச்சிட்டும் தரலாம். நூல் வெளியிட்டவர் கன்னிமாரா, நூலகம் (சென்னை), தேசிய நூலகம் (பம்பாய்), தேசிய நூலகம் (கல்கத்தா) ஆகிய மூன்று நூலகங்களுக்கு மூன்று படிகள் அனுப்பி அல்லது நேரில் கொடுத்து, ஒப்புதல் சீட்டுப் பெற வேண்டும்.

டி.எம்.கா.

**அச்சணந்தியடிகள்** சீவக சிந்தாமணிக் காப்பியத்தின் தலைவனாகிய சீவகனின் ஆசிரியர் ஆவார். ஆரியநந்தி என்பது இவரது மற்றொரு பெயர். சீவகனுக்குப் பிறப்பு உணர்த்துகிற நிலையில் நாமகள் இலம்பகத்தில் இவர் அறிமுகப்படுத்தப்படுகிறார். கோவிந்தையார் இலம்பகத்தின் முதற் செய்யுளில் இவரது பெயர் 'அச்சணந்தி' என்று சுட்டப்படுகிறது. சீவகனைக் கட்டியங்காரனின் கொடுமையினின்றும் தப்புவித்துக் காலம் வரும்வரை வெளிப்படுத்திக் காட்டாது காப்பாற்றியவர்.

அச்சணந்தியடிகள் சீவகனுக்குத் தமது முற்பிறப்பு வரலாற்றினைக் கூறினார். இவர் முற்பிறப்பில் வெள்ளிமலையிலுள்ள வாரணவாசி என்னும் நகரத்தரசர். உலோகமாபாலன் என்பது இவரது இயற்பெயர். இவர் தவஞ்செய்யக் கருதித் தம் மகனுக்கு அரசளித்துத் தவவேடம் புனைந்து நோன்பு மேற்கொண்டார். ஆனால், முற்பிறப்பில் செய்த பாவத்தால் யானைத் தீ என்னும் நோய் இவருக்கு உண்டாகிப் பெரிதும் வருத்தியது. நீண்ட காலம் அதிலிருந்து இவர் விடுபட முடியவில்லை. சீவகனைக் கண்டவுடன் அந்நோய் நீங்கப் பெற்றார். ஆதலின், அவனிடம் பெரு விருப்புக் கொண்டு அவனுக்குக் கல்வி கற்பித்தார். கடமை முடிந்ததும் தவஞ் செய்தற்குச் சென்றார். சீவகன் இவரைப் பிரிவதற்கு வருந்தினாலும், இவர்தம் தவ நாட்டத்தை மறுத்தற்கு அஞ்சி உடன்பட்டான். பின்னர், அச்சணந்தியடிகள் இருபத்து நான்காம் தீர்த்தங்கரராகிய சீவர்த்தமானரைச் சரணமடைந்து நோன்பியற்றி முத்தியடைந்தார்.

சீவகனுக்குப் பிறப்புணர்த்திய அச்சணந்தியடிகள் அவன் அருகப் பெருமான் நெறியைத் தழுவுதல் வேண்டி நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் ஆகியவற்றைக் கற்பித்தார். நரகர், விலங்கு, மக்கள், தேவர் ஆகிய உயிர்கள் செல்லும் நெறியையும் காட்டினார்.

வெ.ப.

**அச்சம்** என்பது இன்னல் தரும் சூழ்நிலைகளின் காரணமாக எல்லா உயிரினங்களிடமும் இயல்பாகத் தோன்றும் ஒரு மனவெழுச்சி. இன்னலிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும் அச்சம் வழி செய்கிறது. எல்லாப் பருவத்தினருக்கும் அச்சம் தோன்றலாம். பச்சிளம் குழவிக்கு அச்சம் தோன்றுவதில்லை. ஏறத்தாழ ஆறுமாதங்களுக்குப் பின்னரே குழந்தை அச்சத்தை உணர்கிறது. மூன்று மாதக் குழந்தை மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சிகளைக் காட்டமுடிகிறது. ஆனால், ஆறுமாதங்களுக்குப் பின்னரே குழந்தை பட்டறிவின் மூலமாக அச்சம் கொள்ளக் கற்றுக் கொள்கிறது. காட்டாக, குழந்தை தன் தாய் பாம்பைக் கண்டு அச்சம் கொள்வதைப் பார்க்கிறது. இதனைப் பார்க்கும் குழந்தையும் அஞ்சக் கற்றுக் கொள்கிறது. இவ்வாறே காலப்போக்கில் அக்குழந்தை பிற பொருள்களையும் கண்டு அஞ்சத் தொடங்குகிறது.

அச்சம் மனிதர்களின் நடத்தையில் குறிப்பிடத்தக்க மாறுதல்களைத் தோற்றுவிக்கிறது. இன்னல் நீடித்து இருப்பதாக அறிந்தால், மனிதன் அச்ச நிலையை அடைகிறான். இந்நிலையில் "சஞ்சலமும் கிலியும் நிறைந்த கூக்குரல், அழுகை, அல்லது பெருஞ் சிரிப்புப் போன்ற கட்டுக்கு மீறிய நடத்தைகளில் அவன் ஈடுபடலாம். தீ விபத்துப்போன்ற சூழ்நிலைகளில் அச்சத்தின் காரணமாகச் செய்வதறியாது உயரமான இடத்திலிருந்து கீழே குதித்துவிடலாம் அல்லது செயலற்று நின்றுவிடலாம்.

வால்டர் கானன் (Walter Cannon) என்னும் அமெரிக்க உடற்கூற்று வல்லுநர் 1920-இல், உடல் மாற்றங்களைப் பற்றி ஆராய்ந்து "நெருக்கடிச் செயற் கோட்பாடு" (Emergency function theory) என்னும் விளக்கத்தைக் கொடுத்தார். மிகையான அச்சம் ஏற்படின் உடலில் உள்ள பரிவு நரம்பு மண்டலம் (Sympathetic Nervous System) மனிதர்களை எதிர்பாராத வன்முறையான செயல்களிலோ ஓட்டத்திலோ ஈடுபடச் செய்யும் என்று கானன் கூறினார். இந்நிலையில் உடலின் இயங்கு முறைகளைச் செயற்படுத்தும் துணைப் பரிவு நரம்பு மண்டலம் தடைப்பட்டு நிற்கிறது என்றும் கூறினார். வேறு சில ஆராய்ச்சியாளர்கள், தானியங்கு நரம்பு மண்டலப் பகுதியின் சமநிலை சீர்குலைந்து விடுவதால், மிகை அச்சம்

கொண்டவர்கள் தடுமாறுகின்றனர் என்று விளக்கம் தருகின்றார்கள்.

எதனைக் குறித்து அச்சம் கொள்கிறோம் என்பது தெரியாமலே சிலர் அச்சம் கொள்கின்றனர். இதனை இனம்புரியாத அச்சம் அல்லது பதற்ற நிலை (Anxiety) என்றும் கூறுவர். சிக்மண்டு பிராய்டு (Sigmund Freud) என்பவரின் கோட்பாட்டின்படி கசப்பான உண்மைகளும் பட்டறிவுகளும் ஒடுக்கல்களாக (Repressions) நனவிலியில் (The Unconscious) புதைந்து கிடக்கின்றன. இவற்றுடன் இயைபு கொண்ட வேறு ஏதாவது அனுபவம் நனவிலியில் இருந்தால், புதைக்கப்பட்ட எண்ணங்கள் மனத் தடைகளை மீறி, நனவு உள்ளத்தை ஆட்கொள்ள முற்படலாம். இவ்வாறு வெளிப்படும் ஒடுக்கப்பட்ட நினைவுகள், உள்ளத்தில் எப்பொழுதும் அச்சத்தை ஏற்படுத்தக் கூடும். இறுதியில் ஏன் இந்த அச்சம் எழுந்தது என்று தெரியாமலேயே ஒருவர் பதற்ற நிலையை அடைகிறார். இத்தகைய அச்சம், இனம் புரியாத அச்சம் ஆகும். இந்நிலையிலிருந்து மீள்வவதற்கு இதற்கு அடிப்படைக் காரணத்தைக் கண்டு பிடித்து விளக்கி, அச்சம் கொண்டவரிடம் அதனை எடுத்துக் கூறுவதினாலேயே ஓரளவு பலன் கிட்டும். உளவியல் வல்லுநர், நோயாளியின் உள்ளத்தைச் சமன்படுத்த அவரிடம் சில வழிமுறைகளை எடுத்துரைத்தபின், நோயாளிக்கு அளிக்கப்படவேண்டிய மருந்துகளும் பயிற்சிகளும் இருக்கின்றன. இவற்றின் மூலமாகப் பதற்றநிலை எனப்படும் இவ்வச்சம் நீங்கக்கூடும்.

சிலருக்கு ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பொருளையோ சூழ்நிலையையோ காணநேரிடின், மிகையான அச்சம் ஏற்படும். இத்தகைய அச்சங்கள் கிலிகள் (Phobias) எனப்படும். கிலிகள் எந்தப் பொருள் அல்லது எந்தச் சூழ்நிலை பற்றியேனும் ஏற்படலாம். கோபுரம், மலையுச்சி போன்ற உயரமான இடங்கள், அடைபட்ட இடங்கள், இருள், வெட்டவெளி, நெருப்பு, கூட்டங்கள், ஆறு, குளங்கள், பூச்சிகள், எலி, பாம்பு, தவளை, பல்லி, புற்றுநோய், காசநோய் போன்ற எதனைப் பற்றியும் கிலிகள் ஏற்படலாம்.

கிலிக்குக் காரணமான பொருள் அற்பமானதாக இருந்தாலும் மனநல ஆய்வுப்படி இத்தகைய கிலி படைத்தவர்களுக்கு மருத்துவம் செய்ய முற்படும் போது அவர்களின் அச்சம், இடம் மாறிய உணர்வு என்று கண்டு கொள்ளலாம். பாலுணர்வு பற்றிய குழப்பங்கள், குழந்தைப் பருவத்து ஈடிபசு சிக்கல் (Oedipus Complex), ஏற்றுக்கொள்ள முடியாத கசப்பான உண்மைகள் ஆகியவை இவர்களின் அடிப்படை அச்சத்துக்குக் காரணமாயிருக்கலாம். அவற்றை உள்ளத்திலிருந்து வெளிக்கொணர்ந்து, நோயாளியை உணர வைப்பது ஒரு மருத்துவ முறையாகும். ஆனால், பலரும் இதுபோன்ற கிலியில் பீடிக்கப்பட்டவர்களைப் படிப்படியாக அவர்கள் பயப்படும் பொருளை உண்மையாக நெருங்கவோ கற்பனையில் நெருங்கவோ ஏற்பாடு செய்வது, நடத்தை மருத்துவம் (Behaviour Therapy) ஆகும். இதில் பலவித அணுகுமுறைகள் உள்ளன. மேற்கூறிய முறைகளைத் தவிர அச்சத்திற்குக் காரணமான சூழ்நிலைக்குப் பாதிக்கப்பட்டவரைத் தள்ளுவது என்னும் முறையும் (Implosive Therapy), முள்ளை முள்ளால் எடுப்பது போல் காரணமில்லா அச்சத்திற்குள்ளானோரை அந்த அச்சத்தை முழுவதும் உணர அல்லது எதிர் கொள்ள வைத்து மருத்துவம் செய்வது போன்ற முறைகளும் நடைமுறையில் உள்ளன. என்.மா.

**அச்சிராவதி** ஓர் ஆறு. அயோத்தியில். இந்த ஆற்றை இக்காலத்தில் இராப்தி என்பர். பௌத்த சமய இலக்கியத்தில் போற்றப்பெறும் புனித ஆறுகளுள் ஒன்று. இந்த ஆறு கோசல நாட்டின் கடைசித் தலைநகரான சிராவசுதி என்னும் பண்டைய நகரத்தின் மேற்கே ஓடுகிறது. இந்த ஆற்றங்கரையில் அமைந்திருந்த மனசாகேதா என்னும் மாந்தோப்பில் புத்தபிரான் தங்கியிருந்ததாகக் கூறுவர்.

**அச்சிறுபாக்கம்** தேவாரப் பாடல்பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் ஒன்று. இன்று அச்சரப் பாக்கம் என்றும் இவ்வூர் வழங்கப் பெறுகிறது. திண்டிவனம்-சென்னைத் தொடர்வண்டி வழியில் சென்னைக்குத் தெற்கில் 22 கல் தொலைவில் இவ்வூர் உள்ளது. செங்கற்பட்டு, காஞ்சி ஆகிய இடங்களிலிருந்து செல்லச் சாலைத் தொடர்புகள் உள்ளன. இத்தலம் திருஞான சம்பந்தரால் பாடப்பெற்றது. இறைவன் ஆட்சி நாதர்; இறைவி–இளங்கிளியம்மை. மேலும், இங்கு உமையாட்சி நாதர்–மெல்லியலாள் சந்நிதியும் உள்ளது. "மெல்லியலாளை ஒரு பாகமாப் பேணி", "இளங்கிளை அரிவையோ டொருங்குடனாகி" என்பன தேவாரத் தொடர்கள். சிவபெருமான் திரிபுரமெரிக்கச் சென்ற போது, விநாயகரை வணங்காது சென்றமையால், இவ்விடத்தில் அவர் ஊர்ந்து சென்ற தேரின் அச்சு முறிந்தது என்றும், அதனால், இவ்விடம் அச்சிறுபாக்கம் (அச்சு + இறு + பாக்கம்) எனப்பட்டது என்றும் கூறப்படுகிறது. கொன்றை தலமரமாகும். ரா. கி.

**அச்சுதராயர்** விசயநகரப் பேரரசை ஆண்ட கிருட்டிணதேவராயரின் தம்பி. இவர் கி. பி. 1529 முதல் 1542 வரை விசயநகரப் பேரரசின் அரசராகப் பதவி வகித்தவர். இவர் வல்லாட்சி நடத்த விரும்பி

னார். பீசப்பூர் சுல்தானாகிய இசுமாயில் ஆதில்சா என்பவன் அச்சுதராயரைப் போரில் தோற்கடித்து, முத்கல், இரெய்ச்சூர் ஆகிய கோட்டைகளை வெற்றி கொண்டான். ம. இரா.

**அச்சுதன்** என்பது அழிவில்லாதவன் என்னும் பொருளில் இறைவனைக் குறிக்கும். திருமாலின் பன்னிரு திருநாமங்களுள் அச்சுதன் என்பதும் ஒன்றாகும். அச்சுதன் என்னும் பெயர் திருமாலையும் சிவனையும் சண்முக சேனா வீரனையும் குறிக்கும்.

சங்க காலத்தில் அச்சுதனார் என முடியும் பெயர் கொண்ட புலவர் சிலர் வாழ்ந்தனர். அவருள் நல்லச்சுதனார் என்பவர் ஒருவர். இவர் பெயரில் வரும் 'நல்' சிறப்பு அடையாகும். அச்சுதனார் எனப் பிறிதொரு புலவரும் அக்காலத்தில் வாழ்ந்தார். இவர் பரிபாடல் சிலவற்றிற்கு இசையமைத்துள்ளார்.

**அச்சுதாநந்தசாமி**[1] 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்; நாயுடு மரபினர்; இளமைப் பெயர் அப்பாய் நாயுடு; வைணவர்; இவர் வடார்க்காடு மாவட்டம் போளூரில் கி.பி. 1850-இல் பிறந்தார். இளமையில் பெற்றோரை இழந்தார். நெடுங்காலம் மணம் செய்து கொள்ளவில்லை. பின்னர்த் தாயம்மை என்பாரைத் துணைவியாராக ஏற்றார்.

வேங்கட. கிருட்டிண தாசர் என்பவர் இவருக்கு ஞானாசிரியராக வாய்த்தார். பக்தியில் திளைத்த இவர், இசையோடு கூடிய துதிப் பாடல்கள் பல பாடியுள்ளார். யோகத்திலும் இவர் நாட்டம் சென்றது. வெங்கம்மையார் என்பவரிடம் யோகப் பயிற்சி பெற்றார். வைணவராக இருந்தும் நிசானந்தர் என்பவரிடம் அத்துவிதக் கோட்பாடுகளைக் கேட்டுணர்ந்தார். தோத்திர இசைப் பாடல்கள், நிசானந்தர் பதிகம், துருவ சரித்திரம், அத்துவைத கீர்த்தானந்த லகரி, சன்மார்க்க தருப்பணம், பிரகலாத சரித்திரம் ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும். இவர் கி.பி. 1902-இல் மறைந்தார்.

**அச்சுதாநந்தசாமி**[2] 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர்; அத்துவித நெறியினர்; சென்னைக்கு அண்மையில் கோவிந்தபுரம் என்ற ஊரில் பிறந்தவர். பெற்றோர் சுப்பராய பூபதி, காமாட்சி அம்மையார். விருத்தாசலம் சிவசிதம்பர தேசிகர் என்பவர் இவருக்கு ஞானாசிரியர்; சமயப் பற்று மிக்கவர்; வழிபாட்டில் பேரீடுபாடு கொண்டவர். இவர் இயற்றிய நூல்கள்: தியானானுபூதி, அத்துவைத சாத்திர மான்மிய சங்கிரகம், அத்துவைத ரச மஞ்சரி. இந்நூல்களால் இவரது பரந்த தத்துவ ஆராய்ச்சி நன்கு விளங்கும். ஆதிசங்கரரிடம் ஈடுபாடு கொண்ட அச்சுதானந்த அடிகளும் இவரும் ஒருவரா வேறானவரா என்பது தெளிவாகவில்லை. அச்சுதானந்த அடிகள் 'திருத்தாலாட்டு' என்னும் நூலைப் பாடியுள்ளார்.

**அச்சுநாடுகள்** என்பது செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய மூன்று நாடுகளின் அணியாகும். இரண்டாம் உலகப்போரின்போது (1939) உலக நாடுகள் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றன. செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய மூன்று நாடுகளும் வலிந்து கவரும் போக்கினை மேற்கொண்டு, உலக அமைதியைக் காக்கத் தோன்றிய அனைத்து நாட்டுச் சங்கத்தைப் (League of Nations) புறக்கணித்தன. கடற்படை மற்றும் போர்க்கருவிகளைப் பெருக்குதலில் நம்பிக்கை வைத்துப் புதிய நாடுகளை அடையும் போட்டியில் இதுவரை வெற்றியடைந்துள்ள மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இணையாக விளங்க ஆவல் கொண்டு, ஒன்றாக இணைந்தன. ஒரே அச்சில் சுழல உடன்பட்ட இந்த மூன்று நாடுகளின் இணைப்பு அச்சு நாடுகளின் அணி (Axis Powers) என்று சொல்லப் பட்டது. இந்த இணைப்பிற்குப் பதிலளிக்கும் வகையில் நேச நாடுகளின் அணி (Allied Powers) உருவாயிற்று. இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு ஆகிய நாடுகள் இருந்தன. பின்னர் உருசியாவும் இவ்வணியில் சேர்ந்துகொண்டது.

முதல் உலகப் போர் (1914-1918) முடிந்ததும் அமைதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. இதில் போரைத் தொடங்கிய குற்றத்திற்காகச் செருமனி நாட்டின்மீது மிகக் கடுமையான விதிகள் சுமத்தப்பட்டன. இதனால் ஆல்சேசு, இலொரேன் போன்ற இரும்புக் கனி வளம் நிறைந்த பகுதிகளைச் செருமனி இழந்தது. அன்றியும் பெரும் இழப்பீட்டுத் தொகையும் தர வேண்டியதாயிற்று. இவற்றோடு போரால் துயருற்ற மக்களின் பொருளாதாரத்தையும் பண்பாட்டையும் சீரமைக்கும் பெரும் பொறுப்பும் சேர்ந்துகொண்டது. தலை நிமிர்வதற்குள் செருமனி திணறிவிட்டது. தன்மானத்தையும் மதிப்பையும் இழந்த நிலையில் ஒரு செருமானியன், அவற்றை மீட்டுத் தர உறுதியளிக்கும் எந்த ஒரு தனி மனிதனையும் எந்த ஓர் அரசியல் கட்சியையும் நம்பத் தயாராக இருந்தான். இட்லர் செருமனியின் உயர்வு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு மக்களின் பேராதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றினார். செருமனியை அவமானத்திற்குள்ளாக்கிய அமைதி உடன்பாட்டு விதிகளை மீறுதல், குடியேற்ற நாடுகளை அடைதல், படைவலியைப் பெருக்குதல் போன்ற செயல்களை நிறைவேற்றுவதில் விளையும் எதிர்ப்பை முறியடிக்க அவருக்கு நண்பர்கள் தேவைப்பட்டனர்.

அமைதி உடன்படிக்கையால் ஏமாற்றப்பட்டதாக எண்ணிப் பொருமிக் கொண்டிருந்த இத்தாலியும்,

செருமனியைப் போல் நாடு பிடிக்கும் ஆசையை வளர்த்துக் கொண்டது. எனவே, அந்நாடு அபிசீனியாவைத் தாக்கித் தன்னுடன் இணைத்துக் கொண்டபோது, பிற ஐரோப்பிய நாடுகள் கூட்டுப் பாதுகாப்பு என்ற பெயரில் இத்தாலிமீது பொருளாதாரத் தடை விதித்தன.

கீழை நாடான சப்பான் பொருளாதார மேம்பாடடைந்து தன் கடற்படையை விரிவுபடுத்த முற்பட்டபோது, இங்கிலாந்தும் அமெரிக்காவும் அதற்குக் குறுக்கே நின்றன. தனது நாடு பிடிக்கும் ஆசைத்தீயும் இதுபோன்றே அணைக்கப்பட்டுவிடும் என்ற கசப்பான உண்மையை உணர்ந்த சப்பான், இட்லரின் நேசக்கரம் நீண்டபோது அதனைப் பற்றிக் கொண்டது. இதன் முடிவாக 1937–ஆம் ஆண்டில் பெர்லின்–ரோம்–டோக்கியோ அச்சு உருவாயிற்று. இத்தாலியின் வல்லாட்சித் தலைவரான பெனிட்டோ முசோலினி இந்த அச்சின் தோற்றத்தைப் பற்றிக் கூறியபோது 'அமைதியை விரும்பும் எண்ணத்தோடு எல்லா ஐரோப்பிய நாடுகளும் இந்த அச்சினை மையமாகக் கொண்டு ஒருங்கிணையலாம்' என்றார். மேலும் தொடர்ந்து. 'இந்த அச்சில் இணைந்துள்ள நாடுகளுக்கும் இணையாத நாடுகளுக்கும் இடையே உறவுப்பேச்சிற்கே இடமில்லை. ஒன்று நாம் அல்லது அவர்கள்,' என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

இட்லர், ''உலகின் மகத்தான அரசியல் முக்கோணமிது; இதில் இணைந்திருப்போர் வலிமையற்ற பொம்மைகள் அல்லர். மூவரும் தங்கள் உரிமைகளையும் இன்றியமையாத நலன்களையும் உறுதியோடு பாதுகாக்க ஆயத்தமாகவும் மனத்திண்மை கொண்டும் இருக்கிறார்கள்'' என்றார்.

இங்ஙனம் செருமனி, இத்தாலி, சப்பான் அடங்கிய அச்சுநாடுகள் இணைப்பு ஏற்பட்டு, உலகம் போரை நோக்கி விரைந்து சென்றது.

இரண்டாம் உலகப்போர் 1939–இல் மூண்டது. உலகின் பல பாகங்களில், நிலத்திலும் வானத்திலுமாகப் போர் கடுமையாக நடந்தது. உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் அளவிறந்து ஏற்பட்டன. முடிவில், செருமனியும் இத்தாலியும் தோற்றன. அமெரிக்கா, இரண்டு அணுகுண்டுகளைச் சப்பான் மீது வீசியபின், சப்பானும் தோல்வியை ஒப்புக் கொண்டது. போர் (1945–இல்) முடிந்தது. அச்சின் சுழற்சி நின்றது. அச்சு நாடுகளின் இணைப்பும் அவிழ்ந்தது. அ.தி.

**அச்சுறுத்திப் பறித்தல்**: ஒருவரைப் பற்றி அவதூறான செய்தியை வெளியிடப் போவதாக மற்றொருவர் கூறுகிறார். அவ்வாறு வெளியிடாமல் இருக்க வேண்டுமெனில் தமக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றும் கூறுகிறார். அந்த அவதூற்றுக்கு அஞ்சி, முன்னவர் பணம் கொடுக்கிறார். இந்த வகையில் ஒருவர் மற்றொருவரை அச்சுறுத்திப் பணம் பெறுவது அச்சுறுத்திப் பறித்தல் (Extortion) எனப்படும். இது தண்டனைக்குரிய குற்றமாகும்.

ஒருவர், உடம்பில் காயம் ஏற்படுத்தப் போவதாக மற்றொருவரை அச்சுறுத்திப் பணம் பெறுவதும், ஒரு கொடையாவணத்தில் (Gift-deed) கையெழுத்துப் பெறுவதும் குற்றமாகும். ஒன்றும் எழுதப்படாத ஒரு வெள்ளைத் தாளில் ஒருவர் மற்றொருவரிடம் ஏதேனும் காரணம் கூறிக் கையெழுத்தைப் பெற்றுக் கொள்கிறார். பின்னர் அத்தாளினை ஒரு கடனுறுதிச் சீட்டாகவோ (Promissory Note) மதிப்பாவணமாகவோ (Valuable Security) மாற்றிக் கொள்கிறார். இவ்வாறு, தீய நோக்குடன் ஒரு வெள்ளைத் தாளில் ஒருவரை அச்சுறுத்திக் கையெழுத்துப் பெறுவதும், கடனுறுதிச் சீட்டு அல்லது மதிப்பாவணத்தில் கையெழுத்துப் பெறுவதும் குற்றமாகும். இவ்வாறு இந்தியக் குற்றவியல் சட்டம் கூறுகிறது.

ஒருவருக்குச் சொந்தமான ஒரு பொருளை அதன் சொந்தக்காரரின் இசைவின்றி எடுத்தல் திருட்டுக் குற்றம்; ஆனால் அதனையே அச்சுறுத்திப் பெறுதல் 'அச்சுறுத்திப் பறித்தல்' என்னும் குற்றம்.

ஒருவரின் புகழ், பொருள் இவைகளுக்குக் கேடு விளைவிப்பதாகவோ உள்ளத்தைப் புண்படுத்துவதாகவோ அமைகிற தீங்குகளில் ஏதாவது ஒன்றைச் செய்யப்போவதாக அச்சுறுத்திப் பொருளைப் பெறுதலும் 'அச்சுறுத்திப் பறித்தல்' என்ற குற்றமாகும்.

அச்சுறுத்தலின் விளைவாக அச்சுறுத்தப்பட்டவரின் மனநிலை பாதிக்கப்படுகிறது. அவ்வாறு பாதிக்கப்பட்டவரின் மனம் குழம்பி நிற்கும் நிலையில், அவர் செய்யும் செயல்கள் தன்னிச்சையான செயல்கள் ஆவதில்லை. இந்நிலையில் அவர் பிறரிடம் பொருள் முதலியன கொடுப்பது அவராக இசைந்து கொடுப்பதாகாது. தமக்கு விளையவிருக்கும் துன்பத்திற்கு அஞ்சியே, தம்முடைய பொருளைப் பிறரிடம் கொடுக்கிறார். இவ்வாறு, அச்சத்தால் கொடுக்கப்பட்ட பொருளைப் பிறர் பெற்றுக் கொள்ளல், அவரது இசைவின்றி வலிந்து எடுத்துக் கொள்ளும் செயலையே ஒக்கும். இத்தகைய குற்றத்திற்குரிய தண்டனையாக மூன்று ஆண்டுச் சிறைத் தண்டனை கொடுக்கலாம்.

அச்சுறுத்தியவர் ஒருவராகவும், அச்சுறுத்தப்பட்டவரிடமிருந்து பொருளைப் பெறுபவர் அவர்

அல்லாத மற்றொருவராகவும் இருக்கலாம். அச்சுறுத்தியவரே பொருளைப் பெற வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை.

அச்சுறுத்துபவர் நேருக்கு நேர் நின்று இன்னொருவரை அச்சுறுத்த வேண்டியதில்லை; அஞ்சல் அனுப்பி ஒருவர் மற்றொருவரை அச்சுறுத்தலாம்; தொலைபேசி மூலமாகவும் அச்சுறுத்தலாம். தீங்கை உடனடியாக விளைவிக்கப் போவதாகக் அச்சுறுத்த வேண்டியதில்லை. சில நாட்கள் கழித்துத் தீங்கு விளைவிக்கப் போவதாகக் கூறியும் அச்சுறுத்தலாம். அச்சுறுத்தியவுடன் பொருளைப் பெறவேண்டும் என்பது கட்டாயமில்லை. அச்சுறுத்தப்பட்டுச் சில நாள்கள் கழிந்த பின்னும், அச்சுறுத்தப்பட்டவரிடமிருந்து பொருளைப் பெறலாம்.

ஒருவர் மீது குற்றம் சுமத்தப் போவதாகக் கூறி அச்சுறுத்தலும், தீங்கு விளைவிப்பதாகக் கூறி அச்சுறுத்தலேயாகும். ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்திருக்கலாம். அதனை வெளிப்படுத்தி வழக்கிடப் போவதாகக் கூறுவதும் அச்சுறுத்தலேயாகும்.

துணை நூல்:

மா. சண்முகசுப்பிரமணியம், ''குற்றவியல் சட்டம்'', தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1966.

Atchuthan Pillai, P.S., ''Criminal Law'', N.M. Tripathi Private Limited, Bombay, 1983.



அச்சூலியன் கைக் கோடரி

**அச்சூல்** பிரான்சின் சோம் பள்ளத்தாக்கிலுள்ள ஓர் ஊர். இது புனிதஅச்சூல் (St. Acheul) என்றும் சொல்லப்படும். இவ்வூரில் கண்டெடுக்கப் பட்ட கைக் கோடரிகள் அச்சூலியன் கைக் கோடரிகள் எனப்படும். இந்தக் கைக்கோடரிகள் அபிவில்லியன் கைக் கோடரிகளைக் காட்டிலும் தரத்திலும் செயல்திறத்திலும் உயர்ந்தவை. வழவழப்பு மிக்க கூர்மையான தாக்குவிசைப் பகுதியை இக்கருவிகள் கொண்டுள்ளன.

**அச்சோதை** என்பது ஒரு புனித ஆறு. ஒரு பெண் தன் முன்னோர் சாபத்தால் ஆறாக மாறிய கதை மச்ச புராணத்தில் இடம் பெற்றுள்ளது. சத்தியவதி என்னும் பெண் மீன் வயிற்றில் தோன்றியவள். இவளுக்குப் பரிமள கந்தி என்னும் வேறு பெயரும் உண்டு. இவள் மீனவ மன்னன்பால் வளர்ந்து ஓடம் செலுத்தியபோது, இயமுனை ஆற்றினைக் கடக்க, அங்கு வந்த பராச முனிவர் அவளைக் கூடியதால் வியாசரைப் பெற்றெடுத்தாள். பின்னர்ச் சந்தனுவின் மனைவியாகிச் சித்திராங்கதன், விசித்திர வீரியன் என்னும் இரு ஆண்மக்களை ஈன்றாள். அதன் பிறகு அவள் அச்சோதை என்னும் புண்ணிய ஆறாக மாறினாள். சாபத்தால் மீன் வயிற்றில் பிறந்து, இறுதியில் ஆறாகிய இவளது முன் வரலாற்றினை மச்ச புராணம் பின்வருமாறு கூறுகிறது.

மரீசியின் மக்களாகிய பிதிர்களுக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் தன் முன்னோரால் அமைக்கப் பெற்ற அச்சோதம் ஆற்றங்கரையிலிருந்து ஆயிரம் ஆண்டுகள் தவம் புரிந்தாள். அதன் பயனாக அவள் பிதிர்கள் அவள் முன் தோன்றினர். அப்பிதிர்களுள் ஒருவனாகிய மாவசு என்பானைத் தன் கணவனாக எண்ணினாள். அதனால் ஒழுக்கக் கேடுற்ற அவள் சுவர்க்கத்திலிருந்து தள்ளப் பெற்றாள். பூமியில் விழாமல் அந்தரத்தேயிருந்து தவம் புரிந்தாள். அவள் வயப்படாத மாவசு அச்செயல் நிகழ்ந்த நாளை அமாவாசை என்று ஆக்கினான். அந்த நாளில் இறந்த முன்னோர்களை நினைத்துக் கருமம் செய்தால் அது அவர்களுக்கு உவப்பாகி நன்மை தரும் என்று கருதப்பட்டது. மாவசுவின் கூற்றுப்படி அப்பெண்ணே பின்னர்ச் சத்தியவதியாகி, இறுதியில் அச்சோதை என்னும் புண்ணிய நதியாக விளங்கினாள்.

**அசட்ராகான்** சோவியத் உருசியாவின் தென் பகுதியில் வால்கா ஆற்றின் கழிமுகத்தில் உள்ளதொரு நகரம். காசுபியன் கடலுடனும், வால்கா ஆற்றுத்துறைமுகங்களுடனும் நல்ல நீர்த் தொடர்புகளைக் கொண்டுள்ளதால், அசட்ராகான் (Astrakhan) சீரிய வாணிக மையமாகக் கருதப்படுகிறது. மீன்

 அசந்தா ஓவியங்களும் சிற்பங்களும்



அசட்ரகான் நகர்

பிடித்தல் இங்கு நடைபெறும் சிறப்புத் தொழில்களுள் ஒன்றாகும். உப்பிட்டு உலர்த்திய உயர்தர மீன்வகையின் கருச்சினையும், அசட்ரகன் என்னும் கவர்ச்சியான ஆட்டுத்தோலும் இப்பகுதியின் செய்பொருள்களாம்.

**அசந்தா ஓவியங்களும் சிற்பங்களும்:** மகாராட்டிர மாநிலத்தில் ஔரங்காபாத்து நகரத்திற்கு 104 கி.மீ. தொலைவில் அசந்தா என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரையடுத்து வண்ண ஓவியங்களும் சிற்பங்களும் நிறைந்த முப்பது பௌத்தக் குகைக் கோயில்கள் அமைந்துள்ளன. இவற்றில் சில முடிக்கப்பெற்ற நிலையிலும் வேறுசில முடிக்கப் பெறாத நிலையிலும் உள்ளன. இவை சயாத்திரி மலைத் தொடரின் ஒரு செங்குத்தான பாறையில் ஓர் அருவியை அடுத்து அரைவட்டமாகக் குடைந்தெடுக்கப்பட்டுள்ளன. இக்குகைகள் கி.மு. 200 முதல் கி.பி. 650 வரை வெவ்வேறு காலங்களில் உருவாக்கப்பட்டிருக்கலாம். அடர்ந்த காடுகளுக்கு இடையே மறைந்திருந்த இக்குகைகள் கி.பி. 1819–ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் காணப்படும் சிற்பங்களும் ஓவியங்களும் பெரும்பாலும் புத்தரின் வாழ்க்கையை விளக்குவனவாக இருக்கின்றன. சிற்பங்கள் வாகடக மன்னர்கள் காலத்துச் சிற்பக் கலையைப் பற்றி அறிய உதவுகின்றன. கி.பி. 5-ஆம் நூற்றாண்டுக்கு முன் நிலவிய ஈனயானக் கருத்துகள் புத்தரின் உருவச் சிலை அமைப்பதைத் தடுத்தன. ஆனால் கி.பி. 5–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பௌத்தர்களிடையே நிலவிய மகாயானக் கருத்துகள் சிற்பக் கலையை ஆதரித்தன. புத்தரின் சிற்பங்கள் பல அசந்தாக் குகைகளில் காணப்படுகின்றன.

அசந்தாக் குகைகளின் சுவர்களில் காணப்படும் வண்ண ஓவியம் சுதை ஓவியம் எனப்படும். நெல், உமி, காய்கள், நார், புல் ஆகிய பொருள்கள் நேர்த்தியான மணலுடன் கலக்கப்பட்ட ஒரு வெண்ணிறப் பூச்சு, ஓவியத்தின் அடித்தளமாக அமைகிறது. முதல் குகை ஓர் அழகிய பௌத்த விகாரம் ஆகும். பௌத்தத் துறவிகளின் இருப்பிடமே விகாரம் எனப்படும். இதில் பல அழகிய சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்கள் காணப்படுகின்றன. சித்தார்த்தர் உலக இன்பங்களைத் துறக்கக் காரணமாயிருந்த நான்கு நிகழ்ச்சிகளையும் இங்குச் சிற்பங்களாகக் காணலாம். ஒரே தலையும் நான்கு உடல்களும் கொண்ட மானின் உருவமும் காணப்படுகின்றன. இவற்றைத் தவிரப் பல சுவரோவியங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் இளவரசர் சித்தார்த்தரும் அவர் மனைவி அசோதரையும் கையில் தாமரை மலருடன் அருகில் இருப்பதாகத் தீட்டப்பெற்ற ஓவியமும் ஒன்றாகும். மன்மதனின் உருவமும் சாதகக் கதைகளிலிருந்து பல நிகழ்ச்சிகளும் இங்குச் சுதை ஓவியங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. சாளுக்கிய மன்னன் புலிகேசி பாரசீகத் தூதர்களை வரவேற்கும் காட்சியும், ஒரு காளைச் சண்டைக் காட்சியும் சுவரோவியங்களாகக் காணப்படுகின்றன. அவலோகிதேசுவரர் (போதிசத்துவர்) ஓவியம் ஒன்றும் காணப்படுகிறது. இது வைணீகம் என்னும் முறையைச் சேர்ந்த ஓவியமாகும். விட்டுணு

தருமோத்தரம் என்னும் பண்டைய வடமொழி நூலில் குறிப்பிடப்பட்டுள்ள நால்வகை ஓவிய முறைகளுள் வைணீகம் ஒன்றாகும். இது கவிதைத் தன்மை பொருந்திய ஓவியங்களைக் குறிக்கும். அவலோகிதேசுவரர் உருவம் காதணிகளையும் அழகிய முத்துச் சரத்தையும் அணிந்து ஒரு நீல அல்லி மலரைக் கையில் ஏந்தியுள்ளது. மங்கலான வண்ணப் பூச்சும் அழுத்தமான வண்ணப் பூச்சும் மாறி மாறித் தீட்டப்பெற்று இவ்வோவியத்தில் இருளும் ஒளியும் சேர்ந்தாற் போன்ற காட்சி அமைந்திருக்கிறது. அசந்தா ஓவியங்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்தது அவலோகிதேசுவரர் ஓவியமே ஆகும். அசந்தா வண்ண ஓவியக் கலைக்கு உலகப் புகழ் கிடைத்தது இந்த ஓவியத்தினால்தான் என்று கூறலாம். இதனைத் தவிர, மன்மதன் தோல்வி, களியாட்டக் காட்சிகள், காதற்காட்சிகள், சிபி, நாகர், சாதகக் கதைகள் போன்ற ஓவியங்கள் இங்குச் சிறப்பாக விளங்குகின்றன.

இரண்டாம் குகையும் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த முகப்பும் தூண்களும் நிறைந்த ஒரு பௌத்த விகாரம் ஆகும். இங்கு அரண்மனைக் காட்சிகள், இந்திரலோகம், சிராவத்தியின் சாதனை, சாந்திவாதி, மைத்திரிபாலா கதைகள், கூரையின் அடிப்பரப்பு வேலைப்பாடுகள் முதலியன தலைசிறந்த ஓவியங்களாகும். இங்குப் புகழ்பெற்ற பஞ்சிகை, அரிதி ஆகிய பெண்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. மூன்றாம் குகை முடிக்கப்பெறாத நிலையில் உள்ளது.

நான்காம் குகை முடிக்கப்பெறாத விகாரம் ஆகும். இது கி.பி. 7-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இதன் முகப்பில் மலர் பறிக்கும் இளம் பெண்களின் சிற்பங்களைக் காணலாம். இதில் எட்டுத் தூண்கள் உள்ளன. இங்குப் புத்தரின் பெரிய உருவச் சிலையும் வச்சிரபாணி, பத்துமபாணி என்னும் போதிசத்துவர்கள் புடைசூழ அறிவுரை கூறும் புத்தரின் மாபெரும் உருவமும் காணப்படுகின்றன. இங்குள்ள சுவரோவியங்கள் எல்லாம் பெரும்பாலும் அழிந்துவிட்டன.

ஐந்தாம் குகை முடிக்கப் பெறாத விகாரம் (பௌத்த மடம்) ஆகும். ஆறாம் குகை இரண்டு அடுக்குகள் உள்ள விகாரமாகும். இங்கும் சுவரோவியங்கள் அழிந்துவிட்டன. தாழ்வாரத்தின் இரு ஓரங்களிலும் உள்ள சிறிய அறைகளில் புத்தரின் படிமங்கள் இருக்கின்றன. ஏழாம் குகை இரண்டாம் குகையைப் போன்ற விகாரம் ஆகும். இங்குப் புத்தரின் படிமங்கள் காணப்படுகின்றன. சாதகக் கதைகளின் நிகழ்ச்சிகள் இங்குச் செதுக்கப்பட்டுள்ளன.

எட்டாம் குகை ஒரு சிதைந்த விகாரமாகும். ஒன்பதாம் குகையில் வரிசையாக 23 தூண்கள் காணப்படுகின்றன. இதுவே மிகப் பழமையான குகை என்று கருதப்படுகிறது. இதில் காணப்படும் சுவரோவியங்கள் கி.மு. முதலிரண்டு நூற்றாண்டுகளில் தீட்டப்பெற்றவை ஆகும். இது சைத்தியம் எனப்படும் வழிபாட்டுக் கூடத்தின் வடிவில் உள்ளது.

பத்தாம் குகையும் ஒரு வழிபாட்டுக் கூட்டத்தின் வடிவில் உள்ளது. இங்குப் போதி மர வழிபாடு, சாதகக் கதை நிகழ்ச்சிகள் ஆகியன ஓவியங்களாகக் காட்சியளிக்கின்றன.

பதினோராம் குகை ஒரு சிதைந்த விகாரம் ஆகும். பன்னிரண்டு பதின் மூன்றாம் குகைகள் பௌத்தத் துறவிகளின் மடம் போன்று உள்ளன. பதினான்கு பதினைந்தாம் குகைகளும் பௌத்த மடங்களாகும். பதினாறாம் குகையில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை கி.பி. 500-இல் ஏற்பட்டனவாக இருக்கலாம். சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களின் முகப்பில் பல சாதகக் கதை நிகழ்ச்சிகள் விளக்கம் பெற்றுள்ளன. பதினேழாம் குகை, கல்வெட்டுகள் நிறைந்த விகாரம் ஆகும். இங்குள்ள ஓவியங்கள் புத்தரின் முற்பிறவியை விளக்குகின்றன. சாதகக் கதைகளும் அவதானக் கதைகளும் (புத்தரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் அருஞ்செயல்களும்) விளக்கம் பெற்றுள்ளன.

பத்தொன்பதாம் குகை அழகிய வழிபாட்டுக் கூடம் ஆகும். இங்கு அழகிய முகப்பும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களும் காணப்படுகின்றன. இது ஏறத்தாழ கி.பி. 550-ஆம் ஆண்டு கட்டப்பட்டிருக்கலாம். வழிபாட்டுக் கூடத்தில் புத்தரின் படிமங்கள் காட்சியளிக்கின்றன. இது மகாயானச் சிற்பக் கலையின் வளர்ச்சியைக் காட்டுகிறது. இதன் முகப்பில் ஓவியத் தலைகள் அமைந்த பலகணிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஆந்திரச் சிற்ப வகையைச் சார்ந்தவையாக இருக்கலாம். புகழ் பெற்ற ஓவியமான அசோதரை-இராகுலன் முன் புத்தர் ஓடு ஏந்திப் பிச்சையெடுக்கும் ஓவியம் இங்குக் காணப்படுகிறது. 20, 21, 22, 23, 24, 28, 29-ஆம் குகைகள் விகாரங்களாகும். முப்பதாம் குகை முடிவு பெறவில்லை.

26-ஆம் குகை வழிபாட்டுக் கூடம் ஆகும். தூபியில் இங்குக் காணப்படும் ஓவியத்தில் புத்தர் பிரலம்ப பாத ஆசனத்தில் அமர்ந்திருப்பதாகக் (நாற்காலியில் அமர்வது போன்று) காட்டப்பட்டுள்ளது. பூத்து நிற்கும் இருசாலை மரங்களுக்கிடையில் வலப்புறம் சாய்ந்து பாதத்தின் மீது பாதம் வைத்துக்கொண்டு ததாகதர் (புத்தர்) வீட்டுநிலை (நிருவாணம்) அடைகிறார். அவர்தம் மாணவர் சுற்றியிருந்து அழுகின்றனர். கந்தருவரும் தேவரும் இன்னிசை பொழிந்து

கொண்டிருக்கின்றனர். இச்சிற்பம் அசந்தாச் சிற்பக் கலையின் பெருமைக்குச் சான்றாக விளங்குகிறது.

என்.எஸ்.இரா.

துணை நூல்கள்:

**Calambur Sivarama Murthy**, "The Art of India", Indian Book House, Bombay.

**Calambur Sivarama Murthy**, "Indian Painting", National Book Trust of India, New Delhi, 1970.

**Krishna Chaitanya**, "The Mural Tradition," Abinav Publication, New Delhi, 1976.

**அசமுகி** என்பவள் சூரபதுமன் தங்கை. இப்பெயர் ஆட்டுமுகம் உடையவள் எனப் பொருள்படும். மாயை என்னும் அசுரப் பெண் நான்காம் சாமத்தில் ஆட்டினுருக்கொண்டு காசிபரைக் கூடியதால் இவள் பிறந்தாள். இவள் துருவாசரை வலிதிற் கூடி வாதாவி வில்லவர்களைப் பெற்றாள். தனித்திருந்த இந்திராணியைத் தன் அண்ணன் சூரனுக்கு மனைவியாக்க விரும்பி வலிந்து இழுக்க முயன்றாள். அப்போது மகாகாளரால் கையறுக்கப்பட்டாள். பின் தனக்கு நேரிட்டதைத் தன் அண்ணனுக்கு உணர்த்தினாள். பிரமனால் கைவளரப் பெற்றாள். கச்சியப்பரின் கந்த புராணத்தில் இவளைப் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

அவற்றுள் சில வருமாறு: அசமுகி மணம்புரிந்து கொள்ளாதவள்; ஒழுக்கக் கேடானவள்; தேவர்களின் மனைவிகளைத் தன் தமையன்மார்களுக்கு மனைவிகளாக ஆக்குபவள்; முனிவர் இயற்றும் வேள்விகளை அழிப்பவள்; தீமையே வடிவானவள்; அசுரர்களை அழிக்கும் தீவினை போல் எங்கும் உலாவி வருபவள்; தன் கிளைஞரை இகழ்பவர்களைக் கொன்று தின்பவள்; அழகிற்சிறந்த ஆடவர்களைத் தேடி வலிந்து கூடுபவள்.

எஸ்.சௌ.

**அசயராசா** இராசபுதனத்தைச் சார்ந்த சாகம்பரியை ஆண்ட சாகமான அரசர்களுள் ஒருவர். இவர் முதலாம் பிரிதிவிராசனின் மகன். கி. பி. 12–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அசயமேடு அல்லது ஆசுமீர் (Ajmer) என்னும் நகரை இவர் உண்டாக்கினார்.

**அசரத்நிசாமுதீன் ஔலியா சிசுடி** கி.பி. 14–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமிய அருள் தொண்டர். இந்திய நாட்டின் தலைநகர் புதுதில்லிக்கு அண்மையில் அவரது பெயரில் வழிபாட்டுத் தலம் ஒன்றுள்ளது. இவர் கி.பி. 1325–ஆம் ஆண்டில் காலமானார். இவரது உடல் புதைக்கப் பெற்ற இடம் புனிதமானதாக இசுலாமியர்களால் கருதப்படுகிறது. இவர் தில்லி சுல்தான்களின் சமயப் பெரியாராகத் திகழ்ந்தார். புதிய தலைநகரான துக்ளகாபாத்தைக் கட்டிக் கொண்டிருந்த கியாசுதீன் துக்ளக்கு அரசருக்கும் அசரத் நிசாமுதீன் ஔலியா சிசுடிக்கும் (Hazrat Nizamuddin Aulia Chishti) மோதல் ஏற்பட்டது. அங்கிருந்து தில்லிக்குப் புறப்பட்டு வரும் வழியில் சிசுடி கொல்லப்பட்டார். புதிய தலைநகர் கட்டும் பணியை கியாசுதீனின் மகன் கைவிட்டு விட்டார். இன்றைய தில்லிமாநகர்ப் புகைவண்டி நிலையத்திற்கு அண்மையில் இவர் நினைவாக அசரத்து நிசாமுதீன் என்ற புதிய புகைவண்டி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அசரத்பால் மசூதி** இந்தியாவின் சம்மு–காசுமீர மாநிலத்தின் தலைநகரான சிரிநகரில் உள்ள ஒரு சிறப்பான வழிபாட்டு இடம். இங்குள்ள மசூதியில் நபிகள் நாயகத்தின் புனித தலைமுடிகளில் ஒன்று பாதுகாக்கப்பட்டு வருகிறது. நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் போன்ற சிறப்பான சமயங்களில் அது பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும். நபிகள் நாயகத்தின் வழித் தோன்றல்களுள் ஒருவரான சையது அப்துல்லா என்பாருக்கு இப்புனித நினைவுப் பொருள் கிட்டியது. அவர் மதீனாவில் உள்ள முத்தாவலி மசூதியில் புரவலர். கி.பி. 1634–ஆம் ஆண்டில் அவர் இந்தியாவுக்கு வருகை புரிந்தார். தக்காணத்தில் பீசப்பூரில் 23 ஆண்டுகள் வாழ்ந்தார். அவர் மகன் சையது அமீது கி.பி. 1692–ஆம் ஆண்டில் தில்லி நகருக்கு வந்தார். அங்கு அவர் காசுமீர வணிகர் ஒருவரைச் சந்தித்தார். அவரிடமிருந்த தலைமுடிச் சின்னத்தை அவ்வணிகர் தம்முடைய பொருளாகப் பெற்றுக் கொண்டார். அவர் காலப்போக்கில் இலாகூரில் இறந்து போனார். குவாசா மதனிசு (Khwaja Madanish) என்பார் அதைக் காசுமீரத்திற்குக் கொண்டு வந்தார் சில காலம் நவுசி பாந்த்சாகேப் மசூதியில் வைக்கப்பட்டிருந்த அந்த நினைவுச்சின்னம் அசரத்பால் மசூதிக்கு மாற்றப்பட்டது. இந்த அசரத்பால் மசூதியைக் கட்டியவர் பேரரசர் சாசகான் (Shah Jahan) ஆவார். இம்மசூதியின் கட்டிடக்கலை மொகலாயப் பாணியையும் காசுமீரத்துக் கட்டிடக்கலைப் பாணியையும் இணைத்துக் கட்டப்பட்டதாகும். சேக்கு முகமது அப்துல்லாவும் அவர் துணைவர்களும் தீவிரமாக முயன்று மதீனாவில் நபிகள் நாயகத்தின் மசூதியைப் போல இதனையும் கட்டி முடித்தனர்.

**அசரீரி** என்பது உடலற்றது என்று பொருள்படும். அசரீரி பேசுவதாகப் பல இடங்களில் வழங்கப் படுகிறது. இது ஆகாயவாணி (வானொலி) எனவும், அறக்கடவுள் எனவும், தரும தேவதை எனவும் வழங்கப்படும். திருக்குறள் அரங்கேறியபோது

அதற்குச் சங்கப் புலவர்கள் பலர் சாற்றுக்கவிகள் பாடினர் என்றும் அவற்றின் தொகுப்பே திருவள்ளுவ மாலை என்றும் கூறப்படுகிறது. அரங்கேற்றத்தின் போது எல்லோருக்கும் முற்பட்டு அறக்கடவுள்'திருத் தகு தெய்வத் திருவள்ளுவரோடு, உருத்தகு நற் பலகை யொக்க, இருக்க உருத்திர சன்மர் எனவு ரைத்து வானில், ஒருக்கவோ என்றதோர் சொல்' என்னும் பாடலைப் பாடியதாகவும் வழங்குகிறது.

இப்பாடல் திருவள்ளுவமாலையின் முதற் பாட லாக உள்ளது. யாண்டும் நிறைந்துள்ள அறக்கடவுள் தக்காரின் தகுதியறிந்து அவர்கட்கு நிகழப் போகும் நன்மை தீமைகளைப் பிறர் வாக்கிற் பொருத்தி நின்று உரைக்கிறது என்பது சான்றோர் துணிபு. உருவமுடைய பிறர் வாக்கிலிருந்து அவ்வுரை வெளி வரினும், ஆண்டு அறக்கடவுள் அமைந்து நிற்றல் கருதி அது அசரீரி என வழங்கலாயிற்று. சில இடங் களில் பிறர் வாயிலிருந்து சொற்கள் புறப்படாமல் விண்ணிலிருந்து உண்டாதலும் உண்டு. அதனால் தான் ஆகாயவாணி எனவும் பெயர் வழங்குகிறது.
த.கோ.

**அசலாம்பிகை அம்மையார்** இரட்டணை என்னும் ஊரில் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவராவார். இவர் தந்தையார் பெருமாளையர். இவருக்கு இளம் வயதிலேயே திருமணம் நடந்தது. சில ஆண்டுகளில் கணவனை இழந்ததால், கல்வி கற்க விழைந்து இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்தார். அதனால், இவர் பண்டிதை அசலாம் பிகை அம்மையார் எனப்பட்டார். தம் இறுதிக் காலத்தில் வடலூரில் வாழ்க்கை நடத்தினார். இவர் திரு.வி. கலியாணசுந்தரனாரிடம் தோழமைகொண்டு அவருடன் பல மாநாடுகளிலும் பொதுக்கூட்டங்களி லும் பங்கு பெற்றுச் சொற்பொழிவாற்றியுள்ளார். இதழ்களில் அப்போதைக்கப்போது பல கட்டுரைகள் எழுதியுள்ளார். காந்தியடிகள், திலகர் ஆகியோர் மீது நூல் பாடியுள்ளமை இவர்தம் தேசிய நாட்டத் தினைக் காட்டுகிறது.

இவர் காந்திபுராணம், இராமலிங்கசுவாமிகள் வரலாற்றுப் பாடல்கள், குழந்தை சுவாமிகள் பதி கம், ஆத்திசூடி வெண்பா, திலகர் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். திருவிடையூர்த் தல புராண முதற் காண்டத்தைப் பாடியுள்ளார். அதன் இரண்டாம் காண்டம் குழந்தைவேலுப் பிள்ளை என்பவரால் பாடப்பட்டது.

**அசனாலெப்பைப் புலவர்** இலங்கையில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர்; யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் பெயர் சுல்தான் முகையிதீன். காலம் கி.பி. 1870-1918. இவர் ஆங்கிலம், அரபு ஆகிய மொழிகளில் சிறந்த புலமை பெற்றிருந்தார். இலங்கை அரசுத் துறையில் எழுத்தராகப் பணியாற்றிய முதல் இசுலா மியத் தமிழர் இவரே என்பர். இவரது நெருங்கிய நண்பர் குலாம் காதிறு நாவலர். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்புடையவர்.

அசனாலெப்பைப் புலவர் இயற்றிய நூல்களுள் குறிப்பிடத்தக்க சில: ஆசிரிய விருத்தம் (முகையதீன் ஆண்டவர் மீது பாடியது), திருநாகை நிரோட்டக யமகவந்தாதி, நவரத்தினத் திருப்புகழ், குதுபு நாயக அனுசாசனம்.

**அசாசியோ** மத்தியதரைக் கடலில் கார்சிகா தீவில் உள்ளதோர் ஊர். இது சார்டீனியாவின்





அசாசியோ துறைமுகம்

வடக்கே அமைந்திருக்கிறது. இத்தாலிக்கு மேற்கே யும், பிரான்சுக்குத் தென்கிழக்கிலும் உள்ள இத்தீவு பிரான்சு நாட்டிற்குச் சொந்தமானது. அசாசியோ (Ajaccio) என்னும் ஊரில்தான் நெப்போலியன் பிறந் தார்.

**அசாதசத்துரு:** (கி.மு. 500-475) முதல் மக தப் பேரரசை நிலைநாட்டிய பிம்பிசாரரின் மகன். அசாதசத்துருவின் தாயார் இலிச்சாவி இளவரசியா, கோசல நாட்டு இளவரசியா என்பதைத் திட்டவட்ட மாகக் கூற இயலவில்லை. பிம்பிசாரரும் அசாதசத் துருவும் அரியங்கா (Haryanka) குலத்தைச் சார்ந்த வர்கள். பிம்பிசாரர் ஆட்சி நடத்தியபோது அசாத சத்துரு சம்பாவில் இளவரசராக ஆட்சி செய்தார். தேவதத்தனின் சொற்படி தம் தந்தையைக் கொன்று விட்டு இராசக் கிருகத்தில் அரியணை ஏறியவர் என்று அசாதசத்துருவின் மீது பௌத்தர்கள் பழி சுமத்தி னர். வரலாற்றுப் பேராசிரியர் வின்சென்ட்டு சுமித்து (Vincent Smith) இதனைக் கட்டுக்கதை என்று ஐயுறு கிறார். அசாதசத்துரு சமண சமயத்தில் பற்றுக் கொண்டவராதலின் அக்கூற்று அவரைப் பற்றிப் பௌத்தர்கள் கூறிய பொய்க் கூற்று என்பர். அசாத சத்துரு பேரரசரானதும் புத்தரையும் மகாவீரரை யும் ஆதரித்தார் என்பது அறிஞர் சிலர் கருத்து. தம் தந்தையைப் போன்று அவரும் நாடு பிடிக்கும் மனப் போக்கு உடையவர். கோசலமும் வைசாலியும் கூட் டாக இணைந்து ஏறத்தாழப் பதினாறு ஆண்டுகள் அவரை எதிர்த்துப் போரிட்டன. ஆனால் இறுதியில் அசாதசத்துருவே வென்றார். கோசலமும் வைசாலி யும் மகதத்துடன் இணைக்கப்பட்டன. அதனால் மகதப் பேரரசின் வலிமையும் மதிப்பும் பெரிதும் உயர்ந்தன. இப்போர் நடைபெற்ற காலத்தில் அசாத சத்துரு பாடலிக் கிராமத்தில் கோட்டையொன்றைக் கட்டினார். பாடலிக் கிராமமே பின்னர்ப் பாடலி புத்திரமாக உருவாகியது. அசாதசத்துருவின் ஆட்சி யின் போது சாக்கியர் பெருமளவில் கொலை செய் யப் பட்டனர். இராசக்கிருகத்தில் புத்த சமயத்தின் முதல் மாநாடு கூடியது. இக்காலத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. இது, இப்போது இராசகிர் (Rajgir) என்றழைக்கப்படுகிறது. அசாதசத்துரு தம் தந்தை பிம்பிசாரரைச் சிறை வைத்த இடத்தை இன்றும் அங்குக் காணலாம்.

**அசாந்தி:** வடமேற்கு ஆப்பிரிக்க நாடான கானாவில் (Ghana) வாழும் வரலாற்றுப் புகழுடைய ஒரு மக்களினம் அசாந்தி Ashanti) எனப்படும். இவ் வின மக்கள், சூடான், காங்கோ, மத்திய ஆப்பிரிக்கக் குடியரசு போன்ற நாடுகளின் சில பகுதிகளிலும் ஆங் காங்கே சிறுசிறு குழுக்களாக வாழ்கின்றனர். இம் மக்கள் தொகை ஏறத்தாழ 7,50,000 ஆகும்.

இவ்வினத்தவர் கொண்டிருக்கும் 'தங்க மணை' (Golden Stool) அரசுச் சார்புடையது; புனிதமானது. இன ஒருமைப்பாட்டையும் ஒற்றுமையையும் குறிக் கும் சின்னம். இதனை அம்மக்கள் கவனமாகப் பாது காத்து வருகின்றனர். தங்கள் அரசியல் தலைவருக் கென்று அமைக்கப்பட்டுள்ள இச்சின்னத்தின்மீது இதன் புனிதத்தன்மை நோக்கி அத்தலைவரும் அமர் வதில்லை.



தங்க மணையுடன் அசாந்தித் தலைவன்


இவர்கள் வேளாண்மையையும் வேட்டையாடு தலையும் தொழில்களாகக் கொண்டவர்கள். இரும்பு, களிமண், மரம் ஆகியவற்றால் சிறந்த கலை வேலைப் பாடுகளைச் செய்வதிலும் இவர்கள் வல்லவர்கள். இம்மக்கள் கடந்த காலங்களில் மனிதனைஉண்ணும் பழக்கமுடையவராய் இருந்தது மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இவர்களிடையே பலதாரமணம் (Polygamy) நிகழும். முறையற்ற சேர்க்கை (Adultery) கடுமையாகத் தண்டிக்கப்பட்டது. மணமகன் தான்

மணம் முடிக்க விரும்பும் பெண் வீட்டிற்கு 20 அம்பு களைக் கொடுப்பதன் மூலம் திருமண ஒப்பந்தம் ஏற்படுகிறது. பெண்கள் மிகச் சிறு வயதிலேயே மணம் செய்து வைக்கப்படுகிறார்கள். இவ்வினத் தவரிடம் தந்தைவழிக் குலங்கள் (Patriclans) பரவிக் காணப்பட்டதுடன் அவை ஒரே மாதிரியான சமூக வழக்கங்களையும் கொண்டிருக்கின்றன. எளிய மக் கள் தாங்கள் சார்ந்திருந்த குலத்திற்குள் திருமணம் புரிந்து கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், அரச பரம்பரையில் வந்தவர்களுக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்படுகிறது. அசாந்தி இனத்தவரின் அமைப்பியல் குறியீடுகளை (Structural Symbols) ஒட்டிய பல்வேறு குலங்களின் நம்பிக்கையின்படி, ஒரு மனிதனுக்கு இரண்டு ஆவிகள் இருப்பதாகக் கருதப் படுகிறது. அசாந்தி மதமானது முன்னோர் வழி பாட்டை அடிப்படையாகக்கொண்டதாகும். அசாந்தி இனத்தவரைப் பொறுத்தவரையில், இவர்களது கடவுள் நம்பிக்கை மிகவும் தெளிவற்றது. இவர்களி டம் நிலவும் யந்திரம், பில்லி சூனியம் பற்றிய நம் பிக்கை முதலியன குறிப்பிடத்தக்கவை. உடல் நலக் குறைவு, இறப்புப் பற்றிய கவலைகள் தங்களிடம் உள்ள பழி சூழ் போக்கினால் உண்டாகின்றன என்பது இவர்களின் நம்பிக்கை. இந்த மாய மந்திர சக்தியைப் பறவைகட்கு நஞ்சினைச் செலுத்தி அறிய லாம் என நம்புகின்றனர். முற்காலத்தில், இக்கார ணத்திற்காக மனிதர்கட்கே நஞ்சினைச் செலுத்துவது உண்டு. இத்தகைய கொடிய மந்திரக்காரனை அம்பு எய்து கொன்று விடுகின்றனர். அன்றி, உரிய இழப் பீட்டுத் தொகையும் கேட்பர். ஆ.செ.

**அசாபுக்கடல்** தென் உருசியாவில் உள்ள பெரியதும் ஆழம் குறைந்ததுமான உள்நாட்டுக்கடல். இதனைக் கருங்கடலுடன் கெர்ச்சு (Kerch) நீர்ப்பிரிவு இணைக்கிறது. இதன் பரப்பளவு 37,550 ச.கி.மீ. ஆழம் 15 மீ. இக்கடலின் மேற்கு முனையைச் சிவாசு (Sivash) அல்லது பூட்ரிட் (Putrid) கடல் என்பர். இம்முனை யில் பல தீநாற்றமுள்ள சதுப்பு நிலங்களும், உப்பங் கழிகளும் உள்ளன. அசாபுக் கடலின் (Azov Sea) ப்கு தியான தாகான்ராக்கு (Taganrog) வளைகுடாவில் தான் ஆறு (Don) கலக்கிறது. இவ்வளைகுடா, கடலின் வடகிழக்கு முனையில் அமைந்துள்ளது. குளிர் காலத்தில் இக்கடலில் கப்பற் பயணம் செய்வது தொல்லைகள் நிறைந்ததாகும். ஏனெனில், பனியும் புயலும் கப்பற் பயணத்திற்கு ஊறு செய்யவல்லவை.

**அசாம்** இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதி யில் உள்ள மாநிலம். வடக்கே, பூடான், அருணா சலப் பிரதேசம், கிழக்கே, நாகாலாந்து, மணிபுரி, தெற்கே, மிசோரம், திரிபுரா, பங்களாதேசம், மேகா லயா, மேற்கே, மேற்கு வங்காள மாநிலம் இவற் றால் சூழப்பட்டதே அசாம் மாநிலமாகும்.

அசாம்




⊙ மாநிலத் தலைநகர்

அசாம் மாநிலம்

அசாம் மாநிலம் 78,523 ச.கி.மீ. பரப்பளவு உள் ளது. இதன் தலைநகர் திசுபூர் (Dispur) ஆகும். புதிய தலைநகர் பிராக்சோதிசுபூர் (Pragjyotishpur).

அசாம் மாநிலத்துக்கு இமய மலைத் தொடர் களான பாட்காய்புர், நாகர்மலை–பராய் தொடர், காசி, சயிந்திய மலைத்தொடர் போன்றவை எல் லைப்புறங்களாக அமைந்துள்ளன. மாநிலத்தின் நடுவே வெள்ளம் பெருக்கெடுத்தோடும் பிரம்மபுத் திராவும் அதன் கிளை ஆறுகளும் பாய்கின்றன.

அதிக அளவில் மழை பெய்யும் இந்திய மாநிலங் களுள் அசாம் சிறப்பானதாகும். அசாம் என்ற பெயர் வடமொழியில் 'அசமம்' – சமமானதன்று என்று பொருள்தரும். மலையும் சமவெளியும் பள்ளத் தாக்குகளும் கொண்ட இம்மாநிலத்திற்கு இப்பெயர் பொருத்தமே. மேலும், 'அசம' என்றால் நிகரற்றது என்றும் பொருள் உண்டு. அசாம் என்ற பெயர் அகோம் மொழியில் உள்ள அசம் என்ற சொல்லிலி ருந்து வந்தது என்பர். இதன் பொருள் 'வெல்லுதற் கரியவர்' என்பதாம். இச்சொல் ஆசாம் – ஆசம் – ஆகம் – அகோம் என்று மருவி வந்தது. பிறகு ஆங் கிலேயரால் அசாம் என்று உச்சரிக்கப்பட்டுள்ளது.

இராமாயண காலத்தில், அசாம் பரத கண்டத் தின் பகுதியான பிராக்சோதிச அரசாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த அரசு விசுவாமித்திரரின் பாட்ட னாரான அமிருதராசர் என்பவரால் ஏற்படுத்தப் பட்டது. மகாபாரதத்தில் இப்பகுதியை நரகாசுரன்

ஆண்டுவந்ததாகக் குறிப்பு உள்ளது. இதனைக் காமரூபம் என்றும் இங்கு வாழ்ந்தவர்களைக் கிரீடர்கள் என்றும் அழைத்தனர். யுவான் சுவாங்கின் பயணக் குறிப்பும், கவி வாணர் எழுதிய அர்ச சரித (Harsha Charita) நாடகமும், கல்வெட்டுகளும் அசாம் பற்றி அறிய உதவியாக உள்ளன. இவற்றிலிருந்து, இப்பகுதி காமரூபம் என்று அழைக்கப்பட்டது என்றும், கி.பி. 4–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 7–ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியை வர்மன் மரபினைச் சேர்ந்த மன்னர்கள் ஆண்டுவந்தனர் என்றும், இவர்கள் நரகாசுரன் வழிவந்தவர்கள் என்றும் அறியப்படுகிறது.

வர்மன் மரபிற்குப் பின், அசாம் பகுதியைச் சலசுதம்ப மரபினர், பாலர், கென் மரபினர் போன்றோர் ஆண்டனர். கென் மரபினரின் காலத்தில்தான் முகமது கோரியின் படைத்தலைவரான பக்தியார் கில்சி இப்பகுதியை வென்றார் ஆனால், மீண்டும் கென் வமிசத்தினர் அசாமைத் தங்கள் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தனர். கி.பி. 1515–இல் கோரி வமிசத்தினர் அசாமைக் கைப்பற்றினர். விரைவிலேயே அகோம் மரபினர் மீண்டும் அசாமைக் கைப்பற்றிக் கிழக்கிந்தியக் கம்பெனியார் காலம் வரை ஆண்டுவந்தனர். கி.பி. 1819–ஆம் ஆண்டு பர்மியர் இப்பகுதியைக் கைப்பற்றினர். பர்மியரிடமிருந்து ஆங்கிலேயர் அசாம் பகுதியை வென்றனர். பின்னர் அது பிரிட்டீசு இந்தியாவின் (British India) ஒரு பகுதியாக மாறியது.

இந்தியா 1947–ஆம் ஆண்டு ஆங்கில ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றபொழுது பிரிவினை செய்யப்பட்டது. அதனையொட்டி அசாம் பிரதேசத்தின் பகுதியான சில்கட் மாவட்டம் பாகிசுத்தான் பகுதியான கிழக்கு வங்காளத்துடன் இணைக்கப்பட்டது.

எஞ்சிய அசாம் பகுதி 2,23,590 ச.கி.மீ. பரப்புடையது. ஆயினும், கடந்த சில ஆண்டுகளாக அசாம் பகுதியிலிருந்து வேறு சில மாநிலங்கள் பிரிக்கப்பட்டன. இன்றைய அசாமின் பரப்பளவு 78,523ச.கி.மீ.

அசாமிலிருந்து வடகிழக்கு எல்லைப் பகுதி என்ற அமைப்பு 1948–இல் பிரிக்கப்பட்டது. இப்போது அது அருணாசலப் பிரதேசம் என்றழைக்கப்படுகிறது. 1957–ஆம் ஆண்டு நாகர்மலை மாவட்டம் மத்திய அரசின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. 1963–ஆம் ஆண்டு இப்பகுதி, நாகாலாந்து என்ற தனி மாநிலமாக ஆக்கப்பட்டது. 1970–ஆம் ஆண்டு அசாமின் மற்றொரு பகுதியான மேகாலயா மத்திய அரசின் கண்காணிப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1972–ஆம் ஆண்டு காசி, சயிந்தியா, காரோமலை மாவட்டங்களைக் கொண்ட இப்பகுதி மேகாலயா என்ற தனி மாநிலமாக மாறியது. அவ்வாண்டே மிசோ மலைப்பகுதி மாவட்டம் அசாமிலிருந்து பிரிக்கப்பட்டு மிசோரம் என்ற பெயரில் மத்திய அரசின் ஆளுகையின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1962–ஆம் ஆண்டு அசாம் மாநிலத்தின் வடக்கில் உள்ள இமாலயப் பகுதிகள் சீனப்படைகளால் தாக்கப்பட்டன. மலைவாழ் மக்களில் பலர் அசாம் மாநிலத்தின் மலைகளிலும் சமவெளிகளிலும் வாழ்ந்து வருகின்றனர். நாகர், நாக்டர், காசி கூட்டத்தினர், சயிந்தியா கூட்டத்தினர், மிசிரியர்கர்பி கூட்டத்தினர், கூகி பிரிவினர், போரே–போடோ பிரிவினர், மிசோலுசாயி பிரிவினர், இலலுங்கு கூட்டத்தினர், சுத்தியா பிரிவினர், மிரி அல்லது மிசிங் பிரிவினர், அகா பிரிவினர், மோரோ அல்லது மடகா பிரிவினர், கம்மதியர், நாரா பிரிவினர், பகியால் பிரிவினர், ஐதன்யர், துருங் பிரிவினர், காம்சங் பிரிவினர் என்னும் பல மலைவாழ்மக்கள் அசாம் பகுதியில் வாழ்ந்து வருகின்றனர். மற்றும் பார்ப்பனர் காயசுதர், கலிக, கோச், கியோட், கனகா, கைபர்டா, குமாரா, அரி என்ற சாதிப் பிரிவுகளும் உள்ளன. அசாமிய மக்களிடையே ஆவினத்தைப் போற்றும் மரபு உள்ளது. ஆவினம் போற்றும் விழாவாகப் பிகு பண்டிகை அங்குக் கொண்டாடப்படுகிறது. மக்கள் எண்ணிக்கைச் செறிவு, இந்தியா முழுவதன் செறிவை விடக் குறைவு. நாகாலாந்தில் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 31 பேரும், மேகாலயாப் பகுதியில் 45 பேரும் உள்ளனர். அசாமின் சில பகுதிகளில் கல்வி அறிவுத் தரம், இந்திய நாட்டின் பொதுத்தரத்தைவிட உயர்ந்துள்ளது. மக்கள் தொகையில் மேகாலயாப் பகுதியில் 30 விழுக்காடும், நாகாலாந்துப் பகுதியில் 27 விழுக்காடும் எழுத்தறிவு பெற்றவர்கள். ஆனால், அசாமில் பொதுவாக 29 விழுக்காடு மக்களே எழுத்தறிவு பெற்றுள்ளார்கள்.

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து அண்டை மாநிலங்களிலிருந்தும் அயல் நாடுகளில் இருந்தும் மக்கள் குடியேற்றம் அசாமில் நடந்து வருகிறது. அதனால் பெரும் அரசியல் கொதிப்பு உருவாகியுள்ளது. வங்காளத்திலிருந்தும் பீகாரிலிருந்தும் பங்களாதேசத்திலிருந்தும் மக்கள் அசாமில் கடந்த 70 ஆண்டுகளாகக் குடியேறியும் ஊடுருவல் செய்தும் வருகின்றனர். 1951–ஆம் ஆண்டு மக்களின் எண்ணிக்கையையும், 1981–ஆம் ஆண்டு மக்கள் எண்ணிக்கையையும் ஒப்பிடும்போது 30 ஆண்டுகளில் 35 விழுக்காடு அளவிற்கு இப்பெருக்கம் அதிகரித்துள்ளது. இது இந்திய நாட்டின் பொதுமக்கள் எண்ணிக்கைப் பெருக்கத்தைவிட ஒன்றரை மடங்காகும். 1911–ஆம் ஆண்டு அசாமில் இசுலாமியர் 9.4 விழுக்காட்டினராயிருந்தனர். 1974–ஆம் ஆண்டில் அவர்கள் எண்ணிக்கை 34.5 விழுக்காடாக உயர்ந்துள்ளதால் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. காசிப் பிரிவினர்

போன்ற மலைவாழ் மக்களிடையே தாய் வழி அதிகாரம் குடும்பத்திடையே உள்ளது. அசாம் மாநிலத்தில் மலைப் பகுதிகளில் கிறித்தவ சமயத்தினரும், சமவெளிப் பகுதிகளில் இந்து சமயத்தினரும், இசுலாமிய சமயத்தினரும் வாழ்கின்றனர். 1971-ஆம் ஆண்டு மக்கள்தொகை விவரப்படி அசாமில் இந்துக்கள் 71 விழுக்காடும், இசுலாமியர் 24 விழுக்காடும் இருந்தனர். மலைவாழ்மக்களிடையே கிறித்தவ சமயத்தினர் எண்ணிக்கை 51 விழுக்காடாகும். இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் மிசோரம் பகுதியில் 27 விழுக்காடு கிறித்தவர்கள் இருந்தனர். 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக்கணக்குப்படி அங்குக் கிறித்தவ சமயத்தினர் 98.09 விழுக்காடாக உள்ளனர்.

இங்குள்ள இந்துக்கள் வைணவ, சைவ, சக்தி வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். வைணவ வழிபாட்டு முறை பெரிதளவு இங்குப் பரவுவதற்குக் காரணமாய் இருந்தவர் 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கரதேவர் என்னும் அடியாராவார். மகாபாரதக் கதைகள், கண்ணன் வழிபாடு, பாகவத நூல் போன்றவை இந்துக்களிடையே பெரிதும் இடம் பெற்றுள்ளன. பட்டிதொட்டிதோறும் உள்ள மக்கள் கண்ணன் பெயரைப் போற்றும் மரபினர். சங்கர தேவர் வைணவ வழிபாட்டு முறையை நாமதர்மமாக அறிமுகப்படுத்தி மக்கள் மன்றங்களை அமைத்துள்ளார். சைவ வழிபாடும் அசாமிய இந்துக்களிடம் சிறப்பாக உள்ளது. பண்டைக்கால அசாமிய இந்துக்களில் பலர் சைவ சமயத்தினர். தேசுபூரில் உள்ள மகா பைரவர் ஆலயம் மற்றும் உமாநாதர் ஆலயம் சிறப்பானவை. சக்தி அல்லது தேவி வழிபாடும் அசாமிய இந்துக்களிடம் உள்ளது. இங்குள்ள காமாக்யா ஆலயம் சிறப்பான சக்தி பீடமாகும். தாந்தரீக முறையில் தேவியை வழிபடும் முறையும் அசாமில் தோன்றியதே.

அசாமில் ஆலயங்களும் தான் என்ற வழிபாட்டு மன்றங்களும் நூற்றுக்கணக்கில் உள்ளன. சிவன், துர்க்கை, திருமால் போன்ற தெய்வங்களுக்கு இவ்வாலயங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும்பாலானவை சிவ ஆலயங்கள். அசோ (Hajo) என்ற ஊரில் பெயர்பெற்ற பௌத்த ஆலயம் உள்ளது. பூடான் நாட்டிலிருந்தும் பௌத்தர் இங்கு வந்து வழிபடுகின்றனர்.

பிகு அல்லது பைகாச விழா அசாமில் மிகச் சிறப்பான விழா. இது அசாமியப் புத்தாண்டு விழா. இது இளவேனிற் காலத்தில் சித்திரை மாதத் தொடக்கத்தில் கொண்டாடப்படுகிறது. கோமாதா-கோலட்சுமி என்ற முறையில் ஆவினத்திற்கு வழிபாடு செய்யப்படுகிறது. மற்றும், தியல் திருவிழா-கண்ணனைப்பற்றிய விழா, அம்பு பசிநோன்பு, சிவராத்திரி போன்றவையும் சிறப்பான விழாக்களாகும். சிவசாகரில் நடத்தப்படும் சிவராத்திரி விழா மிகவும் போற்றத்தக்கதாகும்.

அசாம் நீர்வளம், நிலவளம், வனவளம், கனிவளம் மிக்க மாநிலம். அங்குள்ள மலைச்சாரல் பகுதியில் 756 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அவை 26.3 கோடி கிராம் தேயிலையை உற்பத்தி செய்கின்றன. அதன் மதிப்பு ஏறத்தாழ 400 கோடி உரூபாய் ஆகும். இங்கு மழை மிகுதியாகப் பெய்கிறது. இதனால், இம்மாநிலத்தில் அடர்ந்த பசுமை இலைக் காடுகள் மிகுதி. மரம் அறுக்கும் தொழிலுக்கு இவை அடித்தளமாகும். இங்குள்ள மூங்கில் காடுகள் செழிப்பானவை. அவை காகித உற்பத்திக்குப் பயன்படுகின்றன. உலகிலேயே பல வண்ணங்களோடு கூடிய சிறியதும் பெரியதுமான மலர்கள் மலிந்துள்ளன. நெல் விளைச்சலும் பிரம்மபுத்திர வடிகால் நிலத்தில் சணலும் மிகுதியாக விளைகின்றன. ஆண்டுதோறும் இம்மாநிலம் பிரம்மபுத்திரா ஆறும் அதன் கிளை ஆறுகளும் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றன. இங்குப் பருத்தி, பழவகை, எண்ணெய் விதைகள், கரும்பு, கோதுமை, தேயிலை போன்றவை பயிராகின்றன. கனிவளத்திற்கும் இம்மாநிலம் பெயர் பெற்றது. நிலக்கரி, பழுப்பு நிலக்கரி, சுண்ணாம்புக் கல், பெட்ரோல், எரிவாயு போன்றவை இங்குக் கிடைக்கின்றன. ஓலை முடைதல், கம்பள ஆடை நெய்தல் போன்ற குடிசைத் தொழில்களுடன் உரச்சாலை, காகிதம், பெட்ரோல், மரப்பலகை வெட்டுதல், சர்க்கரை, தேயிலை உற்பத்தி ஆலைத் தொழில்களும் உள்ளன. இரா.சீ.


*அசாமிய மொழி*: இந்திய தேசிய மொழிகளில் அசாமிய மொழியும் ஒன்றாகும். இந்திய நாட்டின் வடகிழக்குப் பகுதியில் உள்ள அசாம் மாநிலத்தில் வாழும் 1,99,00,000 மக்களால் (1981 கணக்குப்படி) பேசப்படுவது இம்மொழி. இவர்களில் பெரும் பகுதியினர் இம் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள். இவர்கள் மட்டுமன்றி இம் மாநிலத்தில் வாழும் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வேற்று மொழியினரும் இம்மொழி பேசுவோராக உள்ளனர்.

அசாம் என்ற சொல் அண்மைக் காலச் சொல்லாகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டளவில் இப்பகுதியில் படையெடுத்துத் தங்கள் ஆட்சியை நிறுவிய அகோம் அல்லது சான் (Shans) மக்களைக் குறிக்கவே இச்சொல்லை இம்மக்கள் பயன்படுத்தினர். "அழிக்க முடியாதவர்கள்" அல்லது "ஒப்பு உயர்வு இல்லாதவர்கள் (அ+சமா) எனப் பொருள்படும் இச்சொல், தங்களை வென்ற மக்களைக் குறிக்குஞ் சொல்லாகத்

தோன்றிப் பின்னர்த் தங்கள் நாட்டையே குறிக்கும் சொல்லாக மாறியுள்ளது.

இம்மொழி இந்தோ-ஆரிய மொழிகளுள் ஒன்றாகும். இந்தோ-ஆரிய மொழிகள், இந்தோ-இரானிய மொழிகளின் பின்னர்த்தோன்றியவிரிவாகும். இந்தோ இரானிய மொழிகள், இந்தோ-ஐரோப்பிய மொழிகளுள் ஒரு பிரிவு என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தோ ஆரிய மொழிகளுள் பல பிரிவுகள் உள்ளன என்பதும் அவற்றுள் கிழக்குப் பிரிவு ஒன்று என்பதும், அப்பிரிவுக்கு மூலமாக உள்ள மகதி பிராகிருதம் என்பதிலிருந்து தோன்றியனவே ஒரியா, வங்காள, அசாமிய மொழிகள் என்பதும் ஒப்புமொழியியல் காட்டும் உண்மைகள். இம்மூன்று மொழிகளும் மகதி பிராகிருதம்அல்லது மகதிஅபப்பிராம்சா(Apabhramsa)கிளையிலிருந்து தோன்றியவை. இவற்றுள்ளும் மூன்று பிரிவுகளைக் காணலாம். இவற்றுள் கிழக்குப் பிரிவிலிருந்து தோன்றியவையே இம் மூன்று மொழிகளும். இம் மூன்றுள்ளும் அசாமி, வங்காளி ஆகியவற்றிடையே நெருங்கிய தொடர்புண்டு. பண்டைய வங்காளி மொழிக்கும் அசாமிய மொழிக்குமிடையே மிகுதியான வேறுபாடுகள் கிடையா. இவை இரண்டும் ஒரே மொழியாகவே கருதப்பட்டு வந்தன. இவை தனித் தனி மொழியாக வளர்ந்தன என்று கூறுவாரும் உளர். இவற்றோடு தொடர்புடைய வங்காள மாநிலத்தின் மேற்குப் பகுதியில் அண்மைக் காலம் வரை தனித்து வழங்கிய மற்றொரு மொழி வங்காள மொழியின் செல்வாக்கில் மறைந்து விட்டது என்றும் கூறுவர்.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் இது தனியொரு மொழியாக வளரத் தலைப்பட்டது. கி.பி. 643-இல் இப்பகுதிக்கு வந்த யுவான் சுவாங்கு (Hiuen Tsang) என்ற சீனப் பயணி இம்மொழியைப் பற்றிக் குறிப்பிடும் போது "நடு இந்தியாவில் பேசப்படும் மொழிகளிலிருந்து இப்பகுதி மொழி சிறிது மாறுபட்டிருக்கிறது" எனக் கூறியுள்ளார். கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இது மகதி அபப்பிராம்சாவிலிருந்து தோன்றியது என எண்ண இடம் உண்டு.




இன்று அசாம் என்று அழைக்கப்படும் பகுதி காப்பியக் காலங்களில் பிராக்கியோதிச(Praggyotisa) என்றும், காளிதாசன் காலத்தில் இப்பெயருடன் காமரூபா (Kamarupa) என்றும்அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது. மகதி பிராகிருத மொழியிலிருந்து உருவான நான்கு கிளை மொழிகளுள், காமரூபா என்னும் கிளைமொழியிலிருந்துதான் அசாமிய மொழியும் வடக்கு வங்காளத்தில் பேசப்பட்ட மொழியும் உண்டாயின என்ற கருத்தும் உண்டு.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டு முதலே தனியொரு மொழியாக வளரத் தலைப்பட்ட இம்மொழியின் காலப்பகுதியையும் பழங்காலம், இடைக்காலம், இக்காலம் என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். எனினும் பழங்காலம் இக்காலம் எனப்பிரிப்பது நல்லது.

கி.பி. 13-16-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி பழங்காலப் பகுதியாகக் கருதப்படுகிறது. இதனையும் வைணவ காலத்திற்கு முந்திய பகுதி என்றும் வைணவ காலப் பகுதி என்றும் இரு பிரிவுகளாகப் பிரிப்பர்.

முன்பகுதியில்தான் அசாமிய மொழியின் முதல் எழுத்துச் சான்று உருவாயிற்று. ஏமா சரசுவதி என்னும் கவிஞர் இயற்றிய பிரகலாத சரிதம் (Prahalada Carida) என்னும் சிறிய கவிதையே இம்மொழியின் முதல் இலக்கியம். பின்னர் வந்த அரிகர விப்ரா, கவிரத்தின சரசுவதி, உருத்திரா கந்தலி, மாதவ கந்தலி போன்றவர்கள் குறிப்பிடத்தக்க கவிஞர்கள். இவர்களுள் மாதவ கந்தலி முக்கியமானவராகக் கருதப்படுகிறார். இராமாயணம் முழுவதையும் அசாமிய மொழியில் மொழிபெயர்த்துத் தந்தவர் இவரே. இக்காலத்தில்தான் பாரதத்தின்பல பகுதிகள் இம் மொழியில் எழுதப்பட்டன.

வைணவ காலத்தில் குறிப்பிடத்தக்கவர் சங்கர தேவா. இவர் கவிஞராக மட்டுமன்றி, வைணவச் சீர் திருத்தவாதியாகவும் விளங்கியவர். இவர் பல வைணவ நூல்கள் இயற்றியுள்ளார். இவரைப் போன்றே இவர்தம் சீடர் பலரும் பலவேறு

நூல்களை இயற்றியுள்ளனர். இக்காலப் பகுதியில் சமய நூல்கள் மட்டுமன்றி, நாடகங்கள் போன்ற வேறு இலக்கியவகை நூல்களும் தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அசாமிய மொழியில் எழுதப்பட்டிருப்பினும் இந்நூல்களில் வடமொழிக் கலப்பும் செல்வாக்கும் அதிகமாகவே உள்ளன என்பர்.

அகோம் மன்னர்களின் கீழ் அரசவைக் கவிஞர்களாக வாழ்ந்த பலர் வடமொழி நூல்கள் பலவற்றை மொழிபெயர்த்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கவிச் சக்கரவர்த்தி என்ற புலவர். இவர் சிவ சிங்கா என்ற மன்னனின் (கி.பி.1714–44) அரசவைப் புலவராக இருந்தவர். சங்கராசுரவதம், கீத கோவிந்தா போன்ற நூல்களை இயற்றியுள்ளார். இவரைப் போன்ற பல்வேறு கவிஞர்கள் வாழ்ந்த காலம் இது. எனினும் இக்காலக் கவிதைகள் செறிவுடைய இலக்கியங்களாக இல்லை என்றே அறிஞர் கருதுகின்றனர்.

கி.பி. 17–ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரையுள்ள காலப் பகுதியே இக்காலம் என்று கருதப்படுகிறது. ஆங்கிலேயர் வரவிற்குப் பின்னர் அசாமிய மொழியில் ஏற்பட்ட பலவேறு மாற்றங்கள் இம்மொழியையும் வளரும் மொழியாக ஆக்கியுள்ளன. பல்வேறு அகராதிகள், இலக்கணங்கள், கவிதை நூல்கள், நாடகங்கள், உரைநடைகள் போன்ற பல துறைகள், இம் மொழி வளர்ந்துள்ளமைக்குச் சான்று பகர்கின்றன. 1836–இல் வங்காள மொழி இப்பகுதியில் பல நிலைகளில் நுழைந்த போதிலும், நாட்டு விடுதலைக்குப் பின்னர் அசாமிய மொழி நன்கு வளரத் தலைப்பட்டது.

1836–இல் இங்குவந்த பிரௌன் (Dr. Wathan Brown), காட்டர் (O.T. Cotter) போன்றவர்களும், பின்னர் வந்த ஆங்கிலேயப் பாதிரிகளான கரே (Carey), மார்சுமன் (Marshman) போன்றவர்களும் செய்த பணிகள் குறிப்பிடத்தக்கன. அசாமிய மொழியில் எழுதப்பட்ட வேதாகமம் 1813-இல் முதல் அச்சு நூலாக வெளிவந்தது. பின்னர்ப் பல்வேறு இலக்கண நூல்களும் (A grammar of the Assamese Language (W. Robinson); Grammatical Notice of the Assamese Language) உருவாயின.

இவர்களைப் போன்றே அசாமிய அறிஞர்களுள் சிலரும் இம்மொழி வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். இவர்களுள் ஆனந்தராம் தெக்கியல் புக்கன் (Anandaram Dhekial Phukan), குணாகிராம் பருவா (Gunahiram Barua, 1837–95), ஏமச்சந்திர பருவா (1835–96) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்களுள் ஏமச்சந்திர பருவா இக்கால அசாமிய மொழியின் தந்தையாகக் கருதப்படுகிறார்.

இக்காலத்தில்தான் அசாமியமொழி புது வேகத்துடன் வளர்ந்தது எனக் கருதலாம். கவிதை, நாடகம், உரைநடை போன்ற துறைகளில் இது நன்கு வளர்ந்துள்ளது.

இலட்சுமிநாத பெசு பருவா (1868-1938) மிகச் சிறந்த கவிஞர்; உரைநடையாளர்; இதழாசிரியர். இவர் எழுதிய படைப்பிலக்கியங்கள் பலவாகும். அசாமியமொழியின் சொற்களஞ்சியம் இவரால் வலுப்பெற்றது. இவர் தேசியப் பாடல்களும் பல புனைந்தார். மக்களிடையே நல்ல விழிப்புணர்ச்சியைத் தோற்றுவித்த பெருமை இக்கவிஞரைச் சாரும். இவர் இயற்றிய 'என் திருநாடே' (Oh my Beautiful Land) என்ற கவிதையே இன்றைய அசாமிய நாட்டின் தேசப்பாட்டாகக் (State Anthem) கருதப்படுகிறது.

இவரைப் போன்றே பல கவிஞர்கள் அசாம் மொழிக்கவிஞர்களாகக்காலம் கடந்துநிற்கும் கவிதைகளை யாத்துள்ளனர். பத்மநாத கோகெய்ம் பருவா (Padmanath Gohim Barua), சந்திரகுமார் அகர்வாலா, ஆனந்த சந்திர அகர்வாலா (1874–1940), இதேசுவர் பார்பருவா (1876–1939), சந்திரதர் பருவா, இலட்சுமி ராம் பருவா, தயானந்தர் பட்டாச்சாரியா, உமேசு சந்திர சௌத்திரி, பரேந்திர குமார் பட்டாச்சாரியா போன்ற பல கவிஞர்கள் இம்மொழியின் கவிதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கவர்கள்.

கவிதையைப் போன்றே பிற துறைகளும் இம்மொழியில் நன்கு வளர்ந்துள்ளன. நாடகம், புதினம், குறு நாவல், சிறு கவிதைகள் போன்ற பல துறைகள் நன்கு வளர்ந்துள்ளன.

அசாமிய மொழியில் பல்வேறு கிளை மொழிகள் (Dialects) உள்ளன. பொதுவாக இவற்றைக் கிழக்கு, மேற்கு என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். மேற்குப் பிரிவையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பர். கோவல்பாரா மாவட்டத்தில் பேசப்படும் கிளைமொழி காமரூபி(Kamrupi) எனப்படும். கிழக்குக் கிளைமொழியே நிலைமொழியாகக் (Standard) கருதப்படுகிறது. இது சிபசாகர் போன்ற மாவட்டங்களில் பேசப்படுகிறது. எனினும், பண்டை இலக்கியங்கள் மேற்குக் கிளைமொழியிலேயே எழுதப்பட்டுள்ளன.

இம்மொழியில் எட்டு உயிர் ஒலியன்களும் இருபத்தாறு மெய் ஒலியன்களும் உள்ளன. உயிர் ஒலியன்களில் குறில் நெடில் வேற்றுமை இல்லை.

பிற இந்திய மொழிகளைப் போன்றே அசாமிய மொழியிலும் பெயர், வினை, இடை (Particles) என்ற மூன்று வகைச் சொற்களைக் காணலாம். இவற்றுள் இடைச்சொற்கள் மிகக்குறைவாகவே உள்ளன.

பிற மொழிகளைப் போன்றே இம்மொழியிலும் பெயர்ச் சொற்கள் அமைந்துள்ளன. பொதுவாக

இவை எண், பால், வேற்றுமைத் திரிவொட்டுகளைக் (Inflexional suffix) கொண்டு இவ்விலக்கணக் கூறு களைக் காட்டி நிற்கின்றன. ஒருமை, பன்மை என்ற இரு எண்களே இதன்கண் உள்ளன.

இம்மொழி இலக்கணத்தில் பால் பகுப்பு இல்லை என்பர். எனினும், ஆண், பெண் பால்களையும், ஒன் றன்பாலினையும் (Neuter) காணமுடிகிறது. முன்னர்க் குறிப்பிட்டபடி பல்வேறு பெயர்கள் பல ஒட்டுகளை யும் பெண் (Maiki), ஆண் (Mota) போன்ற சொற் களையும் கொண்டு ஆண், பெண் பால்களைக் காட்டு கின்றன (manuh-to 'மனிதன்'; manuh-zni 'பெண்').

இம்மொழியில் காணப்படும் வேற்றுமைகளை எழுவாய், செயப்படு பொருள், கருவி, கு வேற்றுமை, உடைமை வேற்றுமை, இடவேற்றுமை என ஆறு வேற்றுமைகளாகப் பிரிப்பர். இவற்றை உணர்த்தும் ஒட்டுகளும் உள்ளன. எழுவாய் வேற்றுமை ஒட்டோ டும் ஒட்டின்றியும் காணப்படுகிறது.

| | |
|---|---|
| manuh | 'மனிதன்' |
| manuh-e | 'மனிதன்' |
| manuh-k | 'மனிதனை' |
| manuh-ini | 'மனிதனுக்கு' |
| manuh-r | 'மனிதனுடைய' |
| manuh-t | 'மனிதனிடம்' |
| manuh-re | 'மனிதனால்' |

மேலும், இம்மொழியில் குறிப்பிட்ட பண்பை (Definiteness) உணர்த்தும் ஒட்டுகளும் சொற்களும் காணப்படுகின்றன. தமிழ் போன்ற மொழிகளில் இப்பண்பு (manuh 'மனிதன்' manuh-to 'குறிப்பிட்ட மனிதன்') காணப்படுவதில்லை. இவ்வொட்டுகளிலும் பல வகைகள் உள்ளன.

பதிலிடு பெயர்களும் (Pro-nouns) பல உள்ளன. தன்மை, முன்னிலை, படர்க்கைப் பதிலிடு பெயர் களுடன் சுட்டுப் பெயர்களும் காணப்படுகின்றன. தன் மை, முன்னிலைப் பெயர்கள் பால் காட்டுவதில்லை. பிற பதிலிடு பெயர்கள் பால் காட்டுவதுடன் உணர்வு ஒருமையையும் சுட்டுகின்றன. உணர்வு ஒருமையிலும் பொதுவான உயர்வு, சிறப்பு உயர்வு என இருவகை உயர்வுப் பண்புகளையும் காணலாம். எடுத்துக்காட் டாக, முன்னிலையில் வரும் ti என்ற சொல் நீ என்றும், tumi என்பது நீர் என்றும், apuni என்பது நீங்கள் என்றும் பொருள்படும்.

சுட்டுப் பெயர்களிலும் அண்மைச் சுட்டு என்றும் (i 'இவன்', ei 'இவள்', ei-to 'இது') சேய்மைச் சுட் டென்றும் இரு பிரிவுபடும். இவற்றில் சேய்மைச் சுட்டு அண்மைச் சேய்மைச் சுட்டு என்றும், தொலைவுச் சேய்மைச் சுட்டு என்றும் பிரிவுபடும்.

வினைச்சொற்கள் தொழில்காட்டும் சொற்களே. இவை இடம், காலம் போன்றவற்றைக் காட்டும் திரி வொட்டுகளை அடுத்து வரும். ஆனால் எண் காட்டு வதில்லை; பாலும் காட்டுவதில்லை. இதனால் ஒரே வினைமுற்று ஒருமை, பன்மை காட்டும் எழுவாய்களு டன் வர முடியும். m i zao 'நான் போகிறேன்' iam zao 'நாம் போகிறோம்' எனக் கூறமுடியும். எண், பால் ஆகியவை எழுவாயால்தான் காட்டப்படுகின் றன.

பல்வேறு காலங்களைக் காட்டும் கால ஒட்டுகளா லேயே காலம் காட்டப்படுகின்றது.

| | |
|---|---|
| mikha-o | 'நான் உண்கிறேன்' |
| mikha-lo | 'நான் உண்டேன்' |
| mikha-m | 'நான் உண்பேன்' |

போன்ற எடுத்துக் காட்டுகள் இப்பண்பைக் காட்டும். எதிர்மறை n என்ற முன்னொட்டால் காட்டப்படு கின்றது. எஸ்.அ.

***அசாய்கர்***: மத்திய பிரதேச மாநிலத்தில் பன்னா மாவட்டத்தில் உள்ளதோர் ஊர். மத்திய பிர தேசத்துடன் இணையும் முன்னர் இப் பகுதியை விந் தியப் பிரதேசம் என்றனர். இங்கு, கி.பி. 9-ஆம் நூற் றாண்டில் கட்டப்பெற்ற வரலாற்றுப் புகழ் மிக்க கோட்டை ஒன்றுள்ளது. இங்குள்ள சமணக் கோயில் களில் அழகு மிக்க சிற்பங்கள் உள்ளன. மக்கள் தொகை, 8366 (1981).

***அசிசி*** என்னும் நகரம் இத்தாலியில் அம்பிரியா (Umbria) பகுதியில் பெரூசியா (Perugia) மாநிலத்தில் உள்ளது. பெரூசியாவிற்கு 24 கி.மீ. தென்கிழக்கில் அசிசி (Assisi) அமைந்துள்ளது. சுபாசியோ (Subacio) மலை முகட்டில் 400 மீ. உயரத்தில் அமைந்துள்ள இந் நகரத்திலிருந்து தைபர் (Tiber), தோபினோ (Topino) ஆறுகளைக் கண்குளிரக் காணலாம். இங்குச் சணல், தேனிரும்புப் பொருள்கள், செயற்கை உரங் கள், விசைக் குழாய்கள் போன்றவை உற்பத்தி செய் யப் படுகின்றன. இதனையொட்டியுள்ள பகுதியில் ஒலிவத் (Olive) தோட்டங்களும், கனிப்பொருள் ஊற் றுகளும் (Mineral springs) உள்ளன.

பிரான்சிசுகன் மடாலய முறையை (Franciscan Order) உருவாக்கிய பிரான்சிசு முனிவர் (St. Francis) இவ்வூரில்தான் பிறந்தார். இங்கு, இடைக்காலத்தில் கட்டப்பட்ட கோட்டையொன்று உள்ளது. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்நகரின் மக்கள் தொகையில் பெரும் மாற்றம் ஒன்றுமில்லையெனலாம். இங்கு உள்ள பெர்டோனோ-டி- அசிசி (Perdono-de-Assisi) என்னும் பயணத்தலம் வரலாற்றுச் சிறப்புமிக்கது. பிரான்சிசு முனிவர் கட்டிய திருச்சபை இந்நகரின்

வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. அசிசியின் மக்கள் தொகை ஏறத்தாழ 20,000 ஆகும் (1980).



அசிசியில் உள்ள திருச்சபை

**அசிசியா** உலகத்தில் வெப்பம் மிகுந்த ஊர். வட ஆப்பிரிக்காவில் இலிபியா (Libya) நாட்டின் தலைநகரான திரிபோலிக்கு அண்மையில் இவ்வூர் உள்ளது. இதனை அல் அசிசியா (Al-Azizia) என்றும் கூறுவர். இது ஒரு வணிக மையம். இங்கு 60 . 6 சென்டிகிரேடு வெப்பம் பதிவாகியுள்ளது. (141° பாகை பாரன்கீட்).

**அசித கேச கம்பளி** என்பவர் புத்தர் காலத்தில் வாழ்ந்தவர். இவர் சமய நிந்தனையாளர்கள் அறுவருள் ஒருவர். பீடகங்கள், சாமண்ணாபால சுத்தம், திகநிகாயம் போன்ற பௌத்த சமய நூல்கள் இவர் பெயரைக் குறித்துள்ளன. புராண கசியப்பர், மாக்காளி கோசாலர் போன்றவர்களைப் போல் இவரும் ஒருகாலத்தில் வேலைக்காரராக இருந்தவரே. தம் குருநாதரிடமிருந்து தப்பியோடிய இவர் வாழ வசதியற்ற நிலையில் துறவியாக மாறியவர். மானிடரின் முடியிலிருந்து (கேசம்-முடி) தயாரிக்கப்பெற்ற தரம் குறைந்த கம்பளத்தைப் பயன்படுத்தியதால் இவருக்குக் கேச கம்பளி என்ற சிறப்புப் பெயர் வந்தது போலும். ஆடைகளிலேயே வெறுப்பூட்டுவதான இக்கம்பளியை இவர் ஆண்டு முழுதும் எல்லாப் பருவங்களிலும் பயன்படுத்திக் கொண்டார். ஏனைய துறவிகளைப் போன்று இவரும் தலையை மழித்துக் கொண்டார். தீவிரமான சமய நிந்தனையாளரான இவர் வேதங்கள் மற்றும் பிராமணக் கோட்பாடுகளைப் புறக்கணித்துஒதுக்குவதில் சிறிதும் அச்சப்படாதவர். மறு பிறப்பு, பழி பாவம், மற்றும் சடங்குகளைப் பற்றிய கொள்கை கோட்பாடுகளை மறுத்தவர். உலகம் நால் வகைப் பூதங்களின் சேர்க்கைஎன்றும், உணர்வுகளும், ஆன்மாவும்பொருள்களின் இரசாயன விளைவேயன்றி வேறொன்றுமில்லை எனவும் கொண்டவர். பாவபுண்ணியக்கோட்பாடுகளை நம்பாதவர். கச்சாயனர் போதித்த இருபொருளுண்மைக் கோட்பாட்டை எதிர்த்தவர் (பருப்பொருள், உயிர் இருவேறெனக் கொள்ளும் கோட்பாடு). புத்தரும் மகாவீரரும் அசிதரின் தத்துவத்தைச் செயலின்மைக் கோட்பாடெனக் கூறினர். அசாத சத்துரு மன்னர் அசிதரைச் சென்று பார்த்ததாகத் தெரிகிறது. அசிதர் அவருக்கு ஊழிக் காலத்தின் முடிவில் அனைத்தும் அழிந்துவிடும் என்னும் கோட்பாட்டைப் போதித்தார். அசிதர் புத்தரைவிட வயதில் மூத்தவர்

**அசிதர்.**[1] என்பவர் சித்தார்த்தர் பிறந்தபொழுது அவர் உடற்கூறுகளைப் பார்த்து, வருங்காலத்தில் அவர் இவ்வுலக இன்பங்களைத் துறந்து மெய்யறிவு பெறுவார் என்று பாராட்டியவர். ஒருவரைப் பார்த்த உடனேயே அவரது எதிர்காலம் உணர்த்த வல்லவர்.

2. இந்திரனது வெகுளியால் நெறி தவறி ஒழுகியவர்; பின்னர், இடையறாது சிவபெருமானை வழிபட்டுத் திருந்தியவர்; அறவுணர்வு மீளப் பெற்றவர். பெருமான் அருளால் நெடிது வாழும் பேறும் பெற்றவர்.

**அசிதன்**[1] மகாபாரதத்தில் கவுரவர் தலைவனாகிய திருதராட்டிரனின் நூறு மக்களுள் ஒருவன்.

2. உதிட்டிரன் எனப்படும் தருமனுக்கு அறத்தின் சிறப்பினை எடுத்து விளக்கிய முனிவர்களுள் ஒருவர்.

3. ஞாயிற்றின் மரபில் தோன்றிய மன்னர்களுள் ஒருவர். இவர் இறந்த போது, உடன் உயிர் துறக்க முற்பட்ட இவர் மனைவி கருவுற்றிருப்பதனை அறிந்த சியவனமுனிவர், அவள் வயிற்றில் பிறக்கும் மைந்தனால் அம்மரபு தழைத்து விளங்கவிருக்கும் உண்மையை எடுத்துக் கூறி, அவளைச் சாவாது தடுத்துக் காத்தார்.

4. தீர்த்தங்கரர் எனப்படும் சமண சமயாசாரியர்களுள் ஒருவர். மத்திய காலத் தீர்த்தங்கரர் 24 பேர்களுள் இவர் இரண்டாமவராக விளங்குபவர். இவர் சீதசத்துரு மாமன்னருக்கும் விசயசேனைக்கும் பிறந்தவர் என்றும் 450 வில் உயரமுடைய உருவங் கொண்டவர் என்றும் கூறப்பட்டுள்ளது.

5. அங்க நாட்டு மன்னனுக்கு வைதிக கருமம் ஆற்றுபவர்களுள் ஒருவர். சிவன் கோயிலிலிருந்து வாழையினைத் தன்னலத்திற்காகப் பயன்படுத்தி அதன் விளைவாக நரகம் எய்தினார் என்று கூறப்பட்டுள்ளது.

**அசிமுல்லாக்கான் (1834-1859)** இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற தியாகிகளுள் ஒருவர். இவர் உத்தரப் பிரதேச மாநிலத்தில் கான்பூர் மாநகரில் 1834-ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் அரசாங்கப் பள்ளியொன்றில் ஆசிரியராகப் பணியாற்றியவர். தனிப் பெரும் திறமையின் காரணமாக இவர் நானா சாகேபின் முதன்மைச் செயலாளராகப் பொறுப்பேற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று நானா சாகேபின் வழக்கில் வாதாடினார். ஆனால் அவரால் வெற்றி பெற முடியவில்லை.

இந்தியாவுக்குத் திரும்பியவுடன் ஆங்கிலேயருக்கு எதிராகப் போராட்டம் நடத்த முற்பட்டார். வெள்ளையர் ஆட்சியை வேரறுக்க நானா சாகேபு செய்த போராட்டத்தில் உறுதுணையாக நின்றார். 1857-ஆம் ஆண்டு மூண்ட பெரும் புரட்சி தோற்றபோது, ஆங்கில அரசுக்கு அகப்படாமல் இந்தியாவிலிருந்து தப்பிச் சென்று, நானா சாகேபுடன் நேபாள நாட்டு எல்லைக்குச் சென்றுவிட்டார். அங்கு இவர், 1859-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்களில் காலமானார்.


**அசிர்கர்** என்பது ஒரு கோட்டை; தக்காணத்திலுள்ள காந்தேசம் (Khandesh) என்னும் பகுதியில் உள்ளது. இதனை மாளவ அரசர் கட்டினார் என்பர். இக்கோட்டை கட்டப்பெற்றுள்ள இடம் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அசிர்கர் (Asirgarh) கோட்டையைக் கைப்பற்ற எண்ணிய அக்பர் தம் வாழ்நாளின் இறுதியில் அதன் மீது படையெடுத்தார். இக்கோட்டை முற்றுகையிடப்பட்டது. பல மாதங்கள் கடந்தும் அக்பரால் இதைப்பிடிக்க இயலவில்லை. இறுதியாகப் பெருந்தொகையைக் கையூட்டாகக் கொடுத்து கி பி. 1601-இல் அசிர்கர் கோட்டையை அக்பர் கைப்பற்றினார். அசிர்கர் கோட்டையின் வாயிலைப் பொன் திறவுகோலால் அக்பர் திறந்தார் என்று இந்நிகழ்ச்சியை வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

**அசிரிய நாகரிகம்** பண்டைய நாகரிகங்களுள் ஒன்று. ஆற்றங்கரைகளில் தோன்றிய பழம் பெரும் நாகரிகங்களுள் எகிப்திய நாகரிகத்துக்கு அடுத்த படியாக வைத்து எண்ணப்படக் கூடியது மெசபடோமிய நாகரிகமாகும். நைல் நதிக்கரையில் எகிப்திய நாகரிகம் தோன்றியது போலவே, தைகிரிசு (Tigris), யூப்ரடிசு (Euphrates) என்ற இரு ஆறுகளின் இடையில் செழிப்பான சமவெளியில் மெசபடோமிய நாகரிகம் தோன்றியது. அந்நாகரிகம் பல கிளைகளாகக் கவடுவிட்டுச் சுமேரிய, பாபிலோனிய, அசிரிய, சாலடிய நாகரிகங்கள் என்னும் பெயரில் விளங்குகின்றன. இவை நான்கும் ஒன்றோடொன்று பெரிதும் தொடர்பு கொண்டவை. எனினும், இவற்றுள் பெரிதும் தனிப்பட்ட இயல்புடையது அசிரிய நாகரிகமாகும் (Assyrian Civilization).

அசிரிய நாகரிகம் படைவலிமையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. போர் வெறி மக்களிடம் மிகுந்திருந்தது. சமுதாயத்தின் பெரும்பான்மையான மக்கள் போர்வீரர்கள். போரில் வெற்றி பெறுதல் ஒன்றே இவர்களின் உயர் குறிக்கோளாயிருந்தது. போரால் வெல்லப்பட்ட நாடுகள் அடக்கு முறையாலேயே ஆளப்பட்டன. எப்போதும் போரிலீடுபட்ட காரணத்தால் விரைவிலேயே இவர்களது வலிமை குன்றியது. அடக்குமுறைக்குட்பட்ட நாடுகள் கிளர்ச்சியில் ஈடுபட்டன. இதனால், அசிரியப் பேரரசு அழிந்தொழிந்தது. அடக்கு முறையின் அடிப்படையில் அமைந்த படைவீரர் ஆட்சி நெடுநாள் நீடிக்காது என்ற வரலாற்று உண்மைக்கு அசிரிய நாகரிகம் ஒரு சான்றாகும்.

மெசபடோமியாவின் வடக்குப் பகுதியில் அசிரிய நாடு அமைந்துள்ளது. மெசபடோமியாவின் மேற்குப் பகுதி ஒரே சமவெளியாகக் காட்சியளித்த போதிலும், அதன் வடபகுதி மலைகளாலும் காடுகளாலும் சூழப்பட்டிருந்தது. அசிரிய நாட்டின் பெரும்பான்மையான பகுதி மலைப்பாங்கான இடமாகும். தைகிரிசு ஆற்றங்கரையில் அது அமைந்திருந்தாலும் அந்நீரைப் பயன்படுத்தக்கூடிய சமவெளிகள் அங்கு ஒரு சிலவே இருந்தன. எனவேதான், அசிரியர்கள் அண்டை நாடுகளைப் பிடிப்பதில் பெரிதும் அக்கறை காட்டலாயினர். வளமாக வாழ்வதற்கான வசதிகளில்லாமையாலும் சுற்றிலும் பகைவர்களின் தாக்குதலுக்கு உட்படக்கூடிய நிலையிலிருந்ததாலும் அசிரியர்கள் போர்க்குணத்தையும் வல்லாட்சி வெறியையும் இயல்பாகவே பெற்றிருந்தார்கள்.

ஏறக்குறைய கி.மு. 3000 ஆண்டளவில், தைகிரீசு ஆற்றின் வடபாகத்தில் ஒருவகை செமிடிக் இனத்தவர் குடியேறினர். அசுர் என்னும் சூரியக் கடவுளை அவர்கள் வணங்கி வந்ததால் அவர்களுக்கு அசிரியர் என்ற பெயர் வழங்கலாயிற்று. பாபிலோனியா முதலிய இடங்களிலிருந்து வந்த செமிடிக் இனத்தவர்களோடு மலைகளில் வாழ்ந்த செமிடிக் அல்லாத இட்டைட்டு, குர்திசு இனத்தவர்களும் நாளடைவில் கலந்துவிட்டார்கள். இக்கலப்பு இனத்தவர் ஒரே தேசிய இனமாக மாறித் தமக்கென ஓர் அரசனை நினவா (Nineveh) என்ற தலைநகரில் ஏற்படுத்திக் கொண்டனர். தைகிரீசு ஆற்றின் கிழக்குக் கரையில்




அசிரியப் பேரரசு

அமைந்திருந்த அந்நகரிலிருந்து அசிரியர் சிறிது சிறிதாகத் தங்களது நாட்டை விரிவுபடுத்தலாயினர். தெற்கேயிருந்த பாபிலோனியர்க்கும் அசிரியர்க்கும் அடிக்கடி போர் மூண்டது. இறுதியில் கி.மு. 1200-ஆம் ஆண்டளவில் பாபிலோனியாவை அசிரியர் கைப்பற்றினர். கி.மு. 1100-இல் முதலாம் திக்லாத் பிலாசர் என்ற மன்னர் மேற்கேயிருந்த பாலசுதீனத்தைக் கைப்பற்றினார். இட்டைட்டு மக்களை வென்று அவர்கள் நகரங்களைத் தம் நாட்டோடு இணைத்தார். ஏறக்குறைய 1000 சிங்கங்களை வேட்டையாடிக் கொன்றதாகக் கருதப்படும் இவ்வீர மன்னருக்குப் பின் அவர் கைப்பற்றிய நாடுகள் தன்னாட்சி பெற்றன. எனினும், இரும்புக் கனிகள் நிறைந்த கம்போடீசியாவை அவர்கள் கைப்பற்றி, அதன் மூலம் இரும்பாலாய போர்க்கருவிகளைச் செய்து அவற்றைப் பயன்படுத்தி, மீண்டும் ஒரு பேரரசை நிறுவினர். இரண்டாம் சார்கன் (கி.மு. 722-705), சென்னகேரீப் (கி.மு. 785-681), ஆசுர்பானிபல் (கி.மு. 668-626) என்ற அரசர்கள் காலத்தில் அசிரியப் பேரரசு விரிவடைந்தது. அதன் தலைநகரான நினவா ஈடும் எடுப்புமற்ற வாணிப நகராக விளங்கியது. உலகிலேயே மிகப் பெரிய நூல் நிலையம் ஒன்றை ஆசுர்பானிபல் அங்கு நிறுவினார். அவரது மறைவுக்குப் பின் பேரரசு நலியத் தொடங்கியது. பரந்து கிடந்த பேரரசைக் கட்டியாளக்கூடிய திறமை மிக்க ஆட்சி முறையை அமைக்க அசிரியப் பேரரசர் தவறிவிட்டனர். எனவே ஆங்காங்கே கலகங்கள் மூண்டன. தெற்கே தோன்றிய சால்டியர் கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கினர். பாரசீகத்திலிருந்து வந்த மீடியர் ஒரு புறமும் சால்டியர் மற்றொரு புறமும் தாக்கிய போது அசிரியப் பேரரசு நிலை குலைந்தது. நினவா நகரம் கி.மு. 612-இல் சால்டியர் வசமாயிற்று. அந்நகரை அவர்கள் அழித்துத் தரைமட்டமாக்கினர். அசிரியர்களின் ஆட்சி அங்கு நடைபெற்றது என்பதற்குரிய அடையாளம் ஒரு சிறிதும் இல்லாத வகையில் அவ்வழிவு வேலை நடைபெற்றது.

அசிரியர்களின் ஆட்சி இராணுவ வலிமையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. முதலில் பாது காப்புக்கென அமைக்கப்பெற்ற இராணுவம், விரை வில் அக்காலத்து நாடுகள் எவற்றிலும் காணப் பெறாத அளவுக்குப் பெருகியது. ஒரு பெரும் இரா ணுவப் பொறியாகவே அரசு மாறிவிட்டது. போர்த் தளபதிகள் நாட்டிலேயே செல்வாக்கு மிக்க வகுப் பினராக விளங்கினர். போரில் வெல்லப்பட்ட நாடு களில் இருந்த நிலங்கள் யாவும் அவர்களுக்கே பிரித்து வழங்கப்பட்டன. அதனால், அவர்களுள் ஒரு சிலர் அரசர்களையே நீக்குமளவுக்கு அதிகாரம் பெற்றனர். இரண்டாம் சார்கன் என்னும் தளபதி அவ்வாறு ஆட்சியைக் கைப்பற்றியவர். அசிரியர்களின் நிலைப் படைக்கு நிகராக அக்காலத்தே எந்த நாட்டிலும் படை இல்லை. அசிரியர்கள் சென்றவிடமெல்லாம் வெற்றி பெற்றதற்குப் போர்க் கருவிகளின் வலிமை யும் புதுமையும் ஒரு பெருங் காரணமாகும். மற்றும், குதிரைப் படையிலும் அவர்கள் வல்லுநராக விளங் கினர். அவற்றின் மின்னல் தாக்குதலைச் சமாளிக்க இயலாமல் எதிரிகள் தவித்தனர். தேர்ப்படை, குதி ரைப்படை, காலாட்படை ஆகிய முப்படையுடன் அவர்கள் சென்று எதிரிகளின் கோட்டைகளைத் தாக்கினர். கோட்டைகளைத் தகர்க்க, இரும்பாலா கிய முனைகளைக் கொண்ட மதில் தகர் கருவிகளைப் பயன்படுத்தினர். நகர்ந்து செல்லும் முற்றுகைத் தேர் களில் வீரர்கள் அமர்ந்து சென்று எதிரியின் கோட் டைகள் மீது நின்றிருந்த வீரர்களை நேரடியாகத் தாக்கினர். இரும்பாலாகிய வாள்கள், ஈட்டிகள், மெய்யுறைகள், கேடயங்கள், தலைக் கவசங்கள், கனமான விற்கள், இரும்பு முனை கொண்ட அம்பு கள் இவற்றுடன் போர் புரிந்த வீரர்களை வெற்றி கொள்ள முடியாமல் ஏனைய வீரர்கள் தவித்தனர். இவ்வாறு தலைசிறந்த போர்க்கருவிகளைப் பயன் படுத்தியதால் மட்டுமே அசிரியர்கள் எதிரிகளை வெல்லவில்லை. பலவகையான அச்சுறுத்தல் முறை களையும் அவர்கள் கையாண்டு எதிரிகளைப் பணிய வைத்தனர். கைது செய்யப் பட்ட போர் வீரர்களை அவர்கள் ஈவிரக்கமின்றிக் கொன்றனர். தளபதி களின் உடல்கள் கண்டதுண்ட மாக்கப்பட்டு நகரின் பல பகுதிகளில் எறியப்பட்டன. சிறைப்பட்ட கைதி களின் தோல்கள் உரிக்கப்பட்டன. காது, கை போன்ற உறுப்புகள் வெட்டி எறியப்பட்டன. போர் வீரர் களை மட்டுமன்றி எளிய குடிமக்களையும் பெண் களையும் குழந்தைகளையும் அவர்கள் அதே முறை யில் துன்பத்துக்குள்ளாக்கினர்.

நாட்டை ஆட்சி புரிவதில் அசிரியர் தமக்கே உரிய பாணியைக் கையாண்டனர். பேரரசைப் பல மாநிலங் களாகப் பிரித்து அவற்றின் ஆளுநர்களை அவர்களே நியமித்தனர். அவர்களை அவ்வளவாக மன்னர்கள் கட்டுப்படுத்தவில்லை. ஓரளவு மாநிலத் தன்னாட் சியை அவர்கள் வழங்கினர். மத்திய அரசுக்கு எதி ராகச் சதி செய்தவர்களும், திறை செலுத்தத் தவ றியவர்களும் மட்டுமே கடுமையாகத் தண்டிக்கப்பட் டனர். நன்கு பயிற்சி பெற்ற ஆட்சித் துறை அலு வலர்கள் மூலம் நாட்டின் நிருவாகம் நடைபெற்றது. தகுதிக்கேற்பவே பதவி உயர்வு வழங்கப்பட்டது. சட்டங்களை மன்னரே ஆக்கினார். அவற்றைச் செயற் படுத்தும் அதிகாரிகளை அவரே நியமித்தார். உள் ளூர் ஆட்சி, வரி வசூல் ஆகியவற்றைப் பெரியவர் களே மேற்கொண்டனர். அசிரியச் சட்டங்கள் பாபி லோனியச் சட்டங்களினின்றும் வேறுபட்டிருந்தன. வெவ்வேறு நிலையிலிருந்த மக்களுக்கேற்பத் தண் டனைகள் மிகக் கடுமையாக இருந்தன. சிறு குற்றங்க ளுக்கும் கூட மரண தண்டனை வழங்கப்பட்டது.

அசிரிய சமுதாயம் ஐந்து பெரும் பிரிவுகளைக் கொண்டிருந்தது. நிலம்படைத்த பிரபுக்கள், படைத் தளபதிகள் ஆகியோர் சமுதாய மாடியின் மேல்தளத் தில் உலவினர். அவர்களுக்குக் கீழ் பல்வேறு தொழில் களைச் செய்வோரும் கைவினைஞரும் இருந்தனர். அவர்களுக்கும் கீழாகக் கூலி வேலை செய்வோரும் வயலில் வேலை செய்வோரும் நான்காம் வகுப்பின ராகக் கருதப்பட்டனர். சமுதாயத்தின் அடித்தளத் தில் உலவியவர்கள் வீட்டிலும் நிலத்திலும் உழைத்த அடிமைகளாவர். அடிமைகளுக்கு நிலம் சொத்து முதலியன கிடையா. விலங்குகள்போல் அவர்கள் நடத்தப்பட்டனர். அவர்களை அடையாளம் கண்டு கொள்ளவேண்டித் தலையை மொட்டையடித்துக் கொள்ளுமாறும், காதுகுத்திக் கொள்ளுமாறும் அவர் கள் வற்புறுத்தப்பட்டனர். மக்கள் பெருக்கத்தை அசிரிய அரசு ஆதரித்தது. படைக்கு ஆள் சேர்க்கவே அவர்கள் அத்தகைய கொள்கையைக் கடைப்பிடித் தனர். அதனாலேயே அவர்கள் கருச் சிதைவுக்கு மரண தண்டனை விதித்தனர்.

பெண்டிரை அசிரியர்கள் மிக இழிவாக நடத் தினர். விலங்குகள் போல் அவர்கள் விலைக்கு வாங்கப்பட்டார்கள். கணவன், மனைவியை எவ் விதம் வேண்டுமானாலும் நடத்திக் கொள்ளலாம். ஒரு மனைவியிருக்கும் போதே வேறு பல மகளிரை மணந்து கொள்ளவும், வேண்டாத மனைவியரை மணவிலக்குச் செய்யவும், காமக் கிழத்தியர்களோடு உறவு கொள்ளவும், கணவனுக்கு உரிமை தரப்பட் டது. மேலும், சோரம்போன மனைவியைக் கணவர் கள் கொல்லவும் உரிமை பெற்றிருந்தனர். பெண்கள் பொது இடங்களில் முகமூடி இன்றி உலவக் கூடாது. வீட்டில் தனி இடங்களில் அவர்கள் ஒதுக்கி வைக்கப் பட்டனர். இந்தப் பர்தா முறை இன்றும் மேற்கு

ஆசிய நாடுகளில் கடைப்பிடிக்கப்படுவதைக் காண லாம். சமயச் சடங்குகளிலும் பொதுப் பணிகளிலும் ஈடுபட மகளிருக்கு உரிமை இல்லை. பரத்தைமை (Prostitution) சட்டத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டுக் கட்டுப்படுத்தப்பட்டது.

போர்த் தொழிலில் நாட்டம் கொண்டிருந்த அசிரியர்கள், வேளாண்மை, வாணிகம் போன்ற துறைகளில் போதிய ஆர்வம் காட்டவில்லை. அத்தகைய தொழில்களில் ஈடுபடுதல் தமது குலப் பெருமைக்கே இழுக்கென்று அவர்கள் கருதினர். பெரிய நில புலங்களைப் பிரபுக்கள் வைத்திருந்த போதும் அவற்றைச் சாகுபடி செய்தவர்கள் நிலமற்ற அடிமைகளேயாவர். வாணிகத்தில் ஈடுபட்டவர்கள் அராபியர்கள் என்ற அயலவர்களேயாவர். எனவே நாட்டின் மூலதனம் அயலவர்களின் ஆதிக்கத்தில் சிக்கிக் கொண்டது. பழைய பாபிலோனிய முறையிலேயே நிலங்கள் சாகுபடி செய்யப்பட்டன. நிலக் கிழார்கள் நகரங்களில் இன்பக் களிப்பில் மூழ்கிக் கிடக்க, நாட்டுப் புறங்களில் உழவர்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றித் தவித்தனர். முதலில் செம்பு, பித்தளை ஆகிய உலோகங்களையும், இறுதியில் இரும்பையும் தோண்டி எடுத்து உருக்கிப் பல கருவிகளைச் செய்யக் கற்றிருந்தனர். இந்தியாவிலிருந்து பருத்தியைக் கொணர்ந்து நூல் நூற்று ஆடை நெய்வதிலும் ஒரு சிலர் வல்லவராயிருந்தனர். அழகிய அணிகலன்களை ஆக்கவும் பானைகளை வனையவும் அவர்களுள் பலர் தெரிந்திருந்தனர்.

பண்டமாற்று முறையில்தான் பெரும்பாலும் வாணிகம் நடைபெற்றது. வெள்ளியாலும் ஈயத்தாலுமான ஒரே நிறையுள்ள உலோகக் கட்டிகளையும் வணிகர்கள் சில சமயங்களில் பண்டமாற்றுக்குப் பயன்படுத்தினர். வங்கி முறையும், கடன்கொடுத்து வாங்கும் முறையும் வழக்கத்திலிருந்தன. 25 விழுக்காடு வரை வட்டி வசூலிக்கப்பட்டது. உள்ளூர் வாணிகமே அன்றி, உலக வாணிகத்திலும் சிலர் ஈடுபட்டனர். அவர்கள் ஒன்றுசேர்ந்து வணிகக் குழுக்களை அமைத்துக் கொண்டனர்.

அசிரியர்களின் சமயம் எளிமையானது. அசுர் என்ற சூரியக் கடவுளே அவர்களின் முக்கிய தெய்வம். அதனை மகிழ்விக்கவே அவர்கள் போரிலீடுபட்டனர். அசுர் அல்லாத ஏனைய தெய்வங்களை வணங்குபவர்கள் மீது படையெடுத்து அவர்களைக் கொல்வதை அவர்கள் ஒரு புனிதச் செயலாகக் கருதினர். சிறைக் கைதிகளை நரபலியாக அவருக்குப் படைப்பதில் அவர்கள் பேருவகை கொண்டனர். ஆடுமாடு போன்ற விலங்குகளையும் அவர்கள் தெய்வத்துக்குப் பலியிட்டனர். இசுடார் என்ற பெண் தெய்வத்தையும் அவர்கள் வணங்கினர். பிள்ளைப் பேற்றை வழங்கும் தேவதையாக அதனை அசிரியர்கள் கருதினர். பேய், பிசாசு, பில்லி, சூனியம், மாயம், மந்திரம் முதலியவைகளிலும் அவர்களுக்கு நம்பிக்கை இருந்தது. அவற்றிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தாயத்துகளை அவர்கள் அணிந்தனர். போர்த் தளபதிகளை அடுத்து, சமய குருமார்களுக்கே மிகுதியாக நிலங்கள் மானியமாக வழங்கப் பட்டன. வரப்போகும் இடையூற்றைச் சுட்டிக் காட்டும் சகுனங்கள் பலவற்றை அவர்கள் மக்களுக்கு எடுத்துக் கூறி வந்தனர். வருங்காலமுணர்த்தும் கலையில் விற்பன்னர்களாக அவர்கள் விளங்கினார்கள்.

போர் வாழ்க்கையில் மட்டுமே பெரிதும் இன்பங் கண்ட அசிரியர்கள், கலை இலக்கியம் ஆகியவற்றில் அதிக ஆர்வம் காட்டாததில் வியப்பில்லை. எனினும், போரில் வெற்றி பெறுதற்காக அவர்கள் ஒரு சில கலைகளை வளர்த்தனர். மதில்களை இடிக்க அவர்கள் முற்றுகை இரதங்களையும் தகர்க்குங் கருவிகளையும் கையாண்டனர். போர்க்களத்தில் ஏற்படக் கூடிய வெற்றி தோல்விகளை முன் கூட்டியே அறியச் சோதிடக் கலையை வளர்த்தனர். அதனால், கணிதமும் இலக்கணமும் வளர்ந்தன. ஒரு வட்டத்தை 360 பாகைகளாகப் பிரிக்கவும், பூமியின் மேற்பரப்பிலுள்ள இடங்களைச் சுட்டிக்காட்டக் குறுக்குக் கோடு, நேர்க் கோடு போன்ற கோடுகளைப் பயன்படுத்தவும் அவர்கள் அறிந்திருந்தார்கள். ஐந்து கோள்களின் இருப்பை அவர்கள் உணர்ந்திருந்ததோடு கிரகணங்களைத் துல்லியமாகக் கணிக்கும் முறையையும் நன்கு கற்றிருந்தனர். போர் வீரர்களின் உடல்நலம் மிக முக்கியமாதலால் மருத்துவக் கலையை அவர்கள் நன்கு வளர்த்தனர். 500-க்கும் மேற்பட்ட மருந்துகளை அவர்கள் தயாரிக்கத் தெரிந்திருந்தனர். நோய்க்கான அறிகுறிகளைப் பற்றியும் அவர்கள் விரித்துரைத்தனர். நோய் நீக்க மருந்துகளும் மந்திர முறைகளும் பயன்படுத்தப்பட்டன.

அசிரியர்கள் சிற்பக்கலையில் சிறந்து விளங்கினர். கல்லாலாய விலங்குருவங்களும், வெண்கலத்தால் செய்யப்பட்ட சிறகுகளைக் கொண்ட எருதுகளும் அரண்மனையின் வாயில்களை அழகுபடுத்தின. அரண்மனைச் சுவர்களைப் புடைப்போவியங்கள் அழகு செய்தன. வீரர்களின் துணிச்சலான செயல்களையும் விலங்கு வேட்டைகளையும் காட்டும் ஓவியங்களில் உயிரோட்டம் தெரிகிறது. மனித உருவங்களில் கை, கால்கள் எல்லாம் விறைப்பாகவும், நேராகவும் வரையப்பட்டுள்ளன. ஆனால் விலங்குகளின் உருவங்களில் நெளிவு சுளிவுகள் காணப்படுகின்றன. சிறப்பாகச் சிங்கங்களின் பாய்ச்சலும் வீரமும் நன்கு தீட்டப்பட்டுள்ளன. அசுர்பானிபல் என்னும் மன்னரின் சிற்பத்

தில் அவரது எடுப்பான தோற்றமும் வீரமும் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அது இன்று இங்கிலாந்தின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. சிகாகோவில் உள்ள வெண்கலத்தால் செய்யப்பட்ட அசிரியப் பறக்கும் எருதின் வேகம், வலிமை ஆகிய இரண்டும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.



அசிரியாவிலுள்ள பறக்கும் எருதுச் சிற்பம்

கட்டிடக் கலையில் அசிரியர்கள் பெரிதும் முன்னேறவில்லை. எனினும், அவர்கள் கல்லைப் பயன்படுத்திக் கோயில்களையும் அரண்மனைகளையும் கட்டினர். வட்டம், வளைவு, குவிமாடம் போன்ற சிறப்பியல்புகளை அவற்றில் புகுத்தினர். அளவில் மிகப் பெரியதாகக் கட்டிடங்களைக் கட்டுவதில் அசிரியர்கள் பெரிதும் இன்பங் கண்டனர். தூண் வரிசைகளை அவர்கள் அவ்வளவாகப் பயன்படுத்தவில்லை.

அசிரியர்கள், குறிப்பாக அரசர்கள், இலக்கியத்தைப் பெரிதும் பேணி வளர்த்தனர். சான்றாக, அசுர்பானிபல் என்னும் மன்னன் பாபிலோனிய இலக்கியங்கள் பலவற்றைத் தேடி எடுத்து நினவா நகரிலிருந்த நூல் நிலையத்தில் சேர்த்தார். ஏறக்குறைய 22,000 அசிரிய ஆப்பு வடிவ எழுத்துகள் பொறிக்கப்பட்ட களிமண் பலகைகளை அவர் சேகரித்ததாகத் தெரிகிறது. அவற்றுள் பல மந்திர தந்திரங்களைப் பற்றியவை. இன்னும் பல வாணிகம், இராணுவம், வரலாறு, மருந்து தொடர்பான கடிதங்கள் ஆகும். இக்களிமண்பலகைகள் இப்போது இங்கிலாந்திலுள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அம்மன்னர் தம் வரலாற்றை ஒரு நூலாக எழுதியுள்ளார். அவர் கடிதங்களில் இலக்கியச் சுவை இருப்பதைக் காணலாம். போர்க்களங்களில் நடைபெற்ற வீரச் செயல்கள் பல நூல்களில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருந்த அசிரியப் பேரரசு உச்சநிலை அடைந்த ஒரே நூற்றாண்டில் வீழ்ச்சியடைந்தது. இராணுவ வலிமையை மட்டும் நம்பி வாணிகத்தையும் வேளாண்மையையும் புறக்கணித்தது, அசிரியர்கள் செய்த பெருந்தவறாகும். நாட்டின் பொருளாதாரத்தில் அயலவரின் ஆதிக்கம் புக அது வழிவகுத்தது. நாட்டில் வேளாண்மையில் பெரும்பான்மையான உழவர்களை விலங்குகளைப் போல் நடத்தியது, அசிரியர்களின் மற்றொரு தவறாகும். அயலவர் படையெடுப்பு வந்தபோது அத்தகைய அடிமைகள் எதிரிகளோடு சேர்ந்து கொண்டு, அசிரியப் பெருங்குடி மக்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். மன்னர்களின் செல்லப் பிள்ளைகளாகப் போர்த் தலைவர்களும், சமய குருமார்களும் நடத்தப்பட்டது மற்றுமொரு தவறாகும். அதனால் அவர்கள் ஒழுக்கமும் வீரமும் நாளடைவில் மங்கின. இன்பக் களிப்பில் மூழ்கி அவர்கள் நாட்டைக் காக்கும் திறனை இழந்தனர்.

இப்படிப் பல குறைகளைக் கொண்டிருந்த அசிரியப் பேரரசு, மேற்கு ஆசியாவில் ஓர் ஒற்றுமையை உண்டாக்கியது. பிற்காலத்தே தோன்றிய பாரசீகப் பேரரசு, உரோமானியப் பேரரசு, ஆங்கிலப் பேரரசு போன்றவற்றிற்கு அஃது ஒரு வழிகாட்டியாய் விளங்கியது. பெரும் சாலைகளாலும், அஞ்சல் முறையாலும், நாடுகளைப் பிணைக்கும் கலையை அசிரியர் உலகுக்குக் காட்டிச் சென்றனர். உலக அமைதிக்காக நாடுகளை ஒன்று சேர்ப்பதற்கு அவர்கள் எடுத்துக்காட்டாக விளங்கினர் என்றால் அது மிகையாகாது.

கி.ர.அ.

துணை நூல்கள்:

**Durrant**, W., "The Story of Civilization-Part I-", Our Oriental Heritage Simon & Schnoter, 1954.

**Wallbank & Taylor**, "Civilization - Past and present, Vol.I".

**Tull**, **G.K.**, "Early Civilizations", Blandford Press, London, 1968.

**Stipp, John L.Warrent Holliester, C Dirrim, Allen W.**, "The rise and development of Western Civilization, Part I: Beginnings to 1500", John Wiley & Sons, INC, New York, 1967.

அனுமந்தன், கி.ர., "பண்டைய உலக வரலாறு", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1976.


**அசின்கோர்ட் போர்** இங்கிலாந்து நாட்டு வரலாற்றில் என்றும் நினைவில் நிலைத்துவிட்ட

போர்களுள் ஒன்று. கி பி. 1415-ஆம் ஆண்டில் பிரான்சிலுள்ள சிற்றூராகிய அசின்கோர்ட்டில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த கடும் போரினால் அந்த இடம் உலகப் புகழ் பெற்றுவிட்டது.

இருநூறு ஆண்டுகளாக ஆங்கில அரசர்களும் குறுநில மன்னர்களும் பிரெஞ்சு நாட்டிலுள்ள நிலங்களுக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர். இதையொட்டி நடந்த போராட்டங்கள் நூற்றாண்டுப் போர் எனக் குறிக்கப்படுகிறது. ஆங்கிலேயருக்கு வெற்றி தோல்வி மாறி மாறிக் கிடைத்து வந்தது. மூன்றாம் எட்வர்டு காலத்தில் வெற்றி பெற்ற அவர்கள், இரண்டாம் ரிச்சர்டு காலத்தில் தோல்வியுற்றுச் சில நிலங்களை இழந்தனர். இழந்த நிலங்களை மீட்கவும் பிரெஞ்சு அரியணையைக் கைப்பற்றவும் ஆங்கிலேயர் உறுதி கொண்டனர். ஐந்தாம் என்றி (Henry V) பிரெஞ்சுக்காரர்களுக்குச் சொந்தமான ஆர்பிளார் என்னுமிடத்தைக் கைப்பற்றினார். கைப்பற்றிய பின், வேண்டிய உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும், பல போர் வீரர்கள் உடல் நலக் குறைவுற்றதாலும், தமக்குச் சொந்தமான கலே என்ற இடத்திற்குச் சென்று, கப்பல் மூலம் இங்கிலாந்து செல்ல அவர் முடிவு செய்தார். அவ்வாறே தமது படையை அணிவகுத்துக் கலேயை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

இந்த வாய்ப்பினைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த எண்ணி, கலேக்கு 72 கி.மீ. தொலைவில் உள்ள அசின்கோர்ட், திராம்கோர்ட் என்ற இரண்டு சிற்றூர்களுக்கு இடையேயுள்ள நீண்டதும் மிக ஒடுக்கமானதுமான காட்டு வழியில், பிரான்சு தனது படையை நிறுத்தி, கலேக்குச் செல்லும் வழியைத் தடுத்துவிட்டது. வடவெளியில் அசின்கோர்ட்டில் சார்லசு டி ஆல்பர்ட் என்பாரின் தலைமையில் படைவீரர்கள் நின்றனர். நல்ல மழையால் ஆறுகள் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடின. அதனால், ஆங்கிலேயர் சோம் என்ற ஆற்றைக்கடந்து வரக் காலதாமதமானது. இந்தச் சமயத்தைப் பிரான்சு தன் வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கப் பயன்படுத்திக் கொண்டது. ஆர்பிளார் இடத்தை வேண்டுமானால் திரும்பக் கொடுத்து விடுவதாகவும், அதற்குப் பதிலாக கலேக்குச் செல்ல வழி விடுமாறும் ஆங்கிலேயர் வேண்டினர். ஆனால், பிரெஞ்சுக்காரர் அவ்வேண்டுகோளை ஏற்க மறுத்தனர். கி.பி. 1415, அக்டோபர் 24-ஆம் நாள் இரவெல்லாம் மழை. படைகள் வெளித் தரையிலேயே இரவைக் கழித்தன. ஆங்கிலப் படைக்கு ஒதுக்கிடமே கிடைக்க வில்லை. அப்படை பசியுடன் உறங்கவேண்டிய நிலை ஏற்பட்டது. பிரெஞ்சுப் பாசறையில் ஒளிவிட்டுத் தீ எரிந்தது. வெற்றி கிட்டிவிடும் என்ற ஆர்வமும் களிப்பும் பிரெஞ்சுக்காரர்க்கு உண்டாயின.

கி.பி. 1415, அக்டோபர், 25 விடிந்தது. என்றியிடம் (Henry) ஆயிரம் வீரர்களும் 6000 நீண்ட வில் வீரர்களும் இருந்தனர். படைக்கலம் தாங்கிய வீரர்களை நான்கு அடுக்கு வரிசையாக மையப் படுத்தி நிறுத்தி, வில் வீரர்களைப் படை வகுப்பின் பக்க அணியாக இருபக்கமும் அவர் நிறுத்தினார். அவரே மையப் படைக்குத் தலைமை தாங்கினார்.




அசின்கோர்ட் போர்முனை

எதிர்ப்பக்கத்தில் இருந்த பிரெஞ்சுப் படைக்கும், அவர்களுக்கும் 333மீ. இடைவெளிதான் இருந்தது. அவர்கள் எண்ணிக்கையோ ஆங்கிலேயர் படையை விட நான்கு மடங்கு மிகுதியாக இருந்தது. ஐந்து ஆறு வீரர்களைக் கொண்ட அடுக்கு வரிசையாகப் படைக்கலம் தாங்கிய வீரர்கள் முதல் இரண்டு வரி

சைகளிலும், வீரப் பெருந்தகை எனப்பட்டம் பெற்று, உயர்குடிப் பிறப்பாளர்களைக் கொண்ட குதிரைப் படைகள் மூன்றாம் வரிசையிலும், பக்கத்திற்கு 600 பீரங்கிகளைக் கொண்ட பீரங்கிப் படைகள் இரு மருங்கிலும் நிற்க, குறு வில்லாளர்கள் இறுதியிலுமாக மிகப் பெரும் படை உருவாக்கப்பட்டது. ஆங்கிலப் படைகள் போர்புரிய வேண்டும் அல்லது பசியினாலும் குளிரினாலும் மாண்டுமடிய வேண்டும் என்ற நெருக்கடியான நிலை. மூன்று மணி நேரம் படைகள் அசையாது நின்றன. என்றி (Henry), தலைசிறந்த படைத் தலைவர்; படை வீரர்களிடம் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். அவர்களின் கடந்த கால வெற்றிகளை நினைவில் கொள்ளவும், தாயகமாகிய இங்கிலாந்து இப்போரில் வாகை சூடவும், அவர்களின் மனைவிமார்களையும் குழந்தைகளையும் பெற்றோர்களையும் நினைவிற் கொண்டு போர் புரியவேண்டுமென அரசர் அவர்களை ஊக்குவித்தார். தங்கக் கவசத்தையும் விலை மதிப்பற்ற கற்கள் பதித்த தங்க முடியையும் அணிந்து கொண்டு அவர் படைகளுக்குத் தலைமை தாங்கினார்; முன்னேறும்படி கட்டளையிட்டார். வில் வீரர்களை எதிரிகளுக்கு அருகில் சென்று அம்பு எய்யும்படி கூறினார். அதன்படி அம்பு மாரி பொழிந்தனர். குதிரைப்படை வீரர்களும் படைக்கல வீரர்களும் அம்புகளிலிருந்து தப்பிக்க முடியவில்லை. பிரெஞ்சுப் படை முன் வர முயன்றது. மிகப் பளுவான கவசங்கள் ஒரு பக்கம்; கால்கள் மண்ணில் புதைந்து கொள்ளும் நிலை மற்றொரு பக்கம். அம்பு மாரிக்குத் தப்பி மையத்தினை நெருங்கினர் வீரர்கள். மிகக் குறுகிய இடம். மேலும், பெரும் எண்ணிக்கையில் படைவீரர்களின் குழப்பமும் நெரிசலும் மிகுந்தன. கவசம் அணிந்த வீரர்கள் சுடுவதற்குக் கையைத் தூக்கப் போதுமான இடமில்லை. பின்வரிசை முன்னேற, முன் இருந்தவர் பலர் நெரிசலில் கீழே உருண்டனர். இச்சமயத்தில் ஆங்கிலப் படை வீரர்கள் சிறு கோடரியையும் கத்தியையும் எடுத்துக்கொண்டு மின்னல் வேகத்தில் தத்தளிக்கும் பிரெஞ்சுப் படைக்குள் புகுந்து அவர்களைக் கொன்று குவித்தனர். பிரெஞ்சுக் குதிரைப் படை ஆங்கிலப்படைக்குப் பின் சென்று என்றியைப் பிடிக்க முயன்றது; முடியவில்லை. பிரெஞ்சுத் தலைவரும் கொல்லப்பட்டார். பிரெஞ்சுப் படை பட்டறிவைப் பயன்படுத்திச் செயற்பட மறுத்து விட்டது. தொன்றுதொட்டு வரும் போர்த் தளவாடங்களைப் புதிய தேவைக்கேற்ப மாற்றி அமைக்கத் தவறியதால் பிரெஞ்சுக்காரரிடம் மிகப் பெரிய படையிருந்தும் அவர்கள் பெரும் தோல்வியே அடைந்தார்கள். ஆங்கிலப்படை சூழ்ச்சித் திறனைப் பயன்படுத்தி வெற்றி பெற்றது. என்றிக்கு இது மாபெரும் வெற்றியாகும். செகப்பிரியர் (Shakespeare) தம் நாடகத்திலும் அசின்கோர்ட் போரைச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். எச்.நி.

**அசுக்காபாத்து,** சோவியத் உருசியாவில் தர்க்குமெனிசுதான் (Turkmenistan) குடியரசின் தலைநகரம். இதன் பழைய பெயர் போல்டோராட்சுகு (Poltoratsk) என்பதாகும். தர்க்குமெனிசுதான், சார்தோசு (Chardzhou), மெருய் (Maruy), அசுக்காபாத்து (Ashkhabad), தசுவாசு (Tashauz), கிராசுநோவட்சுகு (Krasnovodsk) என்று ஐந்து பகுதிகளாகப் பிரிந்துள்ளது. அசுக்காபாத்தின் மக்கள் தொகை 3,25,000 ஆகும். (1981). அசுக்காபாத்திலிருந்து ஈரான் நாட்டிலிருக்கும் மெசடு (Meshed) நகரம் வரை பேருந்துச் சாலை ஒன்று செல்கிறது. அசுக்காபாத்திலிருந்து செல்லும் விமான வழி, சோவியத்து நாட்டின் மேற்கு, வடக்கு, கிழக்குப் போன்ற தொலைதூரப் பகுதிகளை இணைக்கிறது.

**அசுட்டோரியா** அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஓரேகான் மாநிலத்தில் உள்ளதோர் நகர். இது கொலம்பியா ஆற்றின் நுழை வாயிலில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க துறைமுகப் பட்டினமாகும். இது ஓரேகான் மாநிலத்தின் வடமேற்கில் இருக்கும் கிளாட்சாபு மாவட்டத்தின் (County) தலைநகராகும். மீன் பிடித்தல், அவற்றைப் பெட்டிகளில் அடைத்தல், மரமறுத்தல், கப்பற்கட்டுதல் போன்றவை அசுட்டோரியாவின் சிறப்பான தொழில்களாகும்.

சான் சாகப் அசுட்டர் என்பவர் கி.பி. 1811-ஆம் ஆண்டில் இங்கு ஒரு குழுவினை அனுப்பி, மென்மயிருடன் கூடிய மெல்லிய தோல் வாணிக மையத்தை ஏற்படுத்தினார். அசுட்டர் என்பாரின் பெயரே அசுட்டோரியா நகரின் பெயராயிற்று. இராக்கி மலைத் தொடருக்கு மேற்கில் முதன் முதலாக நிலைநாட்டப் பெற்ற அமெரிக்கக் குடியேற்றம் Colony) இதுதான். மக்கள் தொகை 10,244.


**அசுணம்,** பழந்தமிழிலக்கியங்களால் அறியப்படும் உயிரினங்களுள் ஒன்று. இது ஒருவகை விலங்கு என்றும் பறவை என்றும் கூறப்படுகிறது. இதனைக் குறிப்பிடுங்கால், "அசுணம் என்பது விலங்குகளுள் ஒன்று என்று பலவிடத்தும், பறவைகளுள் ஒன்றென்று சிலவிடத்தும் குறிக்கப்படுகிறது. இதற்கு, யாழ் ஒலி (குழல் ஒலி, வண்டொலி, பாட்டொலி) முதலிய மெல்லிசையால் இன்புறுதல் முதலியனவும், பறையொலி (முரசொலி, வெடியொலி)முதலிய வல்லிசையால் துன்புறுதல் முதலியனவும் இயல்பு. இதனைக் குறிஞ்சி நிலத்துக்குரியதென்றும், புகை போன்ற மேனி உடையதென்றும், அச்சப்பொருள்களுள் ஒன்றென்றும், சுவை ஒளிஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தனுள் ஓசையில் ஈடுபட்டு உயிரையும் இழப்பது'' என்றும் இ.வை.


அனந்தராமையர் விளக்கிக் கூறியுள்ளார். அசுணம் பற்றிய இவ்வியல்புகள், நற்றிணை, அகநானூறு, கலித்தொகை, நான்மணிக்கடிகை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், கூர்மபுராணம், காஞ்சிப் புராணம், பாகவதம் முதலிய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்விலக்கியங்களில் அசுணம் இன்னோசை கேட்டு இன்புறுவதும், வல்லோசை கேட்டுத் துன்புறுவதும் ஆகிய பண்பே, பெரும்பாலும் உவமை வாயிலாகவும் பிற வாயிலாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனைப் பிடிக்க விரும்புவோர், இது வாழும் காட்டகத்தே சென்று, முதலில் இனிய யாழிசையை இசைப்பர். அதன் இசையில் மயங்கி நிற்கும் நிலையில் வலிய பறையினை முழக்குவர். அவ்வல்லோசையால் துன்புற்று விழும்போது பிடித்துக் கொள்வர். வண்டுகள் மலைச்சாரலில் இமிர்கின்ற இன்னொலியினை அசுணம் யாழோசை எனக் கேட்டின்புறும் செய்தியினை நற்றிணையும் (244) அகநானூறும் (88) கூறுகின்றன. தலைவிக்கு இன்பமும் துன்பமும் உண்டாக்கும் தலைவன் மார்பினுக்கு, இனிய ஒலியையும் வலிய ஒலியையும் அடுத்தடுத்து உண்டாக்கி அசுணத்தைக் கொல்பவர்களின் கை உவமையாகக் கூறப்பட்டுள்ளது (நற். 304). தான் இசைக்கும் யாழோசையைக் கேட்டு இன்புற்றிருக்கும் அசுணத்தின் இன்னுயிர் நீங்குமாறு, அதனைப் பிடிப்போர் பறை முழக்கும் செய்தி கலித்தொகையில் (143) இடம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களிலேயன்றிச் சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற நூல்களிலும் குறிப்பிடப்படும் அசுணம் இக்காலத்தில் இருப்பதாகத் தெரியவில்லை. இது காலத்தால் அழிந்துபட்ட உயிரினங்களுள் ஒன்றாகும். இன்னிசையால் மகிழ்ந்தின்புற்றநில்லயில் எழுப்பப்படும் வல்லோசை கேட்டுத் துன்புற்று உயிர்விடும் இந்த இயல்பே, சங்க காலத்தில் உவமையாகக் கூறிவிளக்கும் அளவு மக்களால் அறியப் பெற்றிருந்த இந்த உயிரினம், பின்னர் முற்றிலும் அழிந்து போனதற்குக் காரணமாதல் கூடும்.

**அசுத்திவர்மன்** என்னும் அரசன் சாலங்காயன மரபினைச் சார்ந்தவன். இவன் பெத்தவேங்கியிலிருந்து அரசாண்டான். இவ்வூர் ஆந்திரப் பிரதேசத்தில் எல்லூருக்கு 10 கி.மீ. தொலைவிலுள்ளது. குப்த மரபினைச் சார்ந்த சமுத்திர குப்தர் தென்னாட்டின் மீது படையெடுத்தபோது கோதாவரி ஆற்றிற்கும் கிருட்டிணா ஆற்றிற்கும் இடையிலிருந்து வேங்கியை அசுத்திவர்மன் ஆண்டு வந்தான் என்பதை, அரிசேனர் என்னும் கவிஞர் மெய்க்கீர்த்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார். இம்மெய்க்கீர்த்தி அசோகரின் அலகாபாத்துக் கற்றூணில் குறிப்பிடப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலேயே அவன் சாலங்காயன மரபினன் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சமுத்திர குப்தர் அசுத்திவர்மனை வென்று கப்பம் கட்டுமாறு பணித்துப் பின் விடுதலையளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**அசுத்திரியாசு** என்பது வடமேற்கு இசுபெயினிலுள்ள (Spain) ஒரு பகுதி. இப்பகுதியில் ஒவிடோ என்னும் மாநிலம் அமைந்துள்ளது. இங்கே பழத் தோட்டங்கள் மிகுதி. நிலக்கரி, யூக்கலிப்டசு, பீச்சு Beech) மரங்கள், ஆடு மாடுகள் போன்றவற்றிற்குப் பெயர் பெற்றது அசுத்திரியாசு (Astirias). பரப்பளவு- 10,565 ச. கி.மீ. மக்கள் தொகை 1, 127, 007 (1981).

**அசுதெக்கு** வட அமெரிக்கக் கண்டத்தின் மெக்சிகோப் பகுதியில் வாழ்ந்து வரும் ஒரு செவ்விந்திய மரபு. அசுதெக்குகள் நாடோடிகளாக, கி.பி. 12-ஆம் நூற்றாண்டு வரை வாழ்ந்தார்கள். கி.பி. 1248-ஆம் ஆண்டு மெக்சிகோவின் வளமிக்க பகுதிக்குள் அவர்கள் நுழைந்தார்கள். அங்கிருந்த பிறிதொரு பழங்குடியின் கூலிப்படையினராய்ச் சேர்ந்த அசுதெக்குகள் (Aztecs) பின்னர் நன்கு தேர்ச்சிபெற்ற வீரர்களாகித் தங்களது வல்லமையை நிலை நாட்டினார்கள். கி.பி. 1345 – ஆம் ஆண்டு தெக்சுகோகோ (Texcoco) ஏரிக்கரையினைச் சுற்றி இருந்த சதுப்பு நிலங்களை அழித்து ஒரு புதிய நகரினை உருவாக்கினார்கள். அந்நகரினைச் சுற்றி நாணல் வேலிகளை அமைத்தார்கள். தெனோசிடிட்லான் (Tenochtitlan) என்று அந்நகரம் பெயர்பெற்றது. அக்காலத்தில் மெக்சிகோ பகுதியில் சிறப்பான ஐந்து நகரங்கள் அமைந்திருந்தன. அவற்றுள் தெனோசிடிட்லான் அசுதெக்கு அரசின் தலைநகரமாக விளங்கிற்று.




அசுதெக்குப் பேரரசு

அசுதெக்குகளின் அரசியல் தலைவர் அரசா எனப்பட்டார். மக்களால் பெரிதும் மதிக்கப்பட்ட அவர் மகிழ்ச்சியான வாழ்க்கையை மேற்கொண்டார்.

பல்வேறு அரண்மனைகளையும் ஏறக்குறைய 2000 பணியாட்களையும் அவர் கொண்டிருந்தார். பல அதிகாரங்களைத் தம் விருப்பம் போல் பெற்றிருந்தும், அரசர் தாமே செயற்படும் உரிமையினை இழந்திருந்தார். அரசரைத் தேர்ந்தெடுக்கவும் கருத்துரை வழங்கவும் அவருக்கு உதவியாக மேலாண்மை மன்றம் ஒன்று இருந்தது. இராணுவ அமைப்பு அசுதெக்கு அரசின் பிறிதொரு சிறப்பு ஆகும். பெருங்குடி மக்கள் பலர் இராணுவத் தலைவர்களாகவும் ஆளுநர்களாகவும் பணியாற்றினர்.

பெருங்குடி மக்கள், பொதுமக்கள், ஊழியர்கள், அடிமைகள் என நான்கு பிரிவுகளாக அசுதெக்குகள் பிரிந்திருந்தார்கள். பெருங்குடிமக்களும் பொது மக்களும் சமூகத்தில் உயர்ந்தவர்களாகக் கருதப்பட்டார்கள். பெருங்குடி மக்களின் நிலங்களில் வேலை செய்வோர் ஊழியர் எனப்பட்டனர். போர்க் கைதிகளாக வந்தோர் அடிமைகள் எனப்பட்டனர். அடிமைகள் உடைமைகளாகக் கருதப்பட்டார்கள்.

அசுதெக்குகள் தம்முடைய ஆண் குழந்தைகளுக்கு 15 வயது வரை வீட்டில் கல்வி கற்றுக் கொடுத்தார்கள். அதன் பின்னர், அவர்களுக்குப் படைக்கலப் பயிற்சியோ சமயம் பற்றிய கருத்துகளோ கற்றுத் தரப்பட்டன. பெண்கள் வீட்டு வேலைகளை மட்டுமே கவனித்து வந்தார்கள். ஆண்களே குடும்பத் தலைவர்களாயிருந்தார்கள். பலதார மணம் பெருங்குடி மக்களிடம் நிலவி வந்தது. மணவிலக்குச் செய்தல், மறுமணம் செய்தல் போன்றவை ஏற்றுக்கொள்ளப் பட்ட வழக்கங்களாம்.

பருத்தி ஆடைகளையே உயர் வகுப்பினர் அணிந்தனர். ஏழைகள் நாரினால் செய்யப்பட்ட ஆடைகளை உடுத்தினர். பெண்டிர் கைகளில்லா மேல்சட்டையையும் பாவாடையையும் உடுத்தினர். உயர்ந்த வகுப்பினர் பல அணிகலன்களை அணிந்து வாழ்ந்தனர். நாணல் தட்டிகளால் ஆன குடிசைகளில் அசுதெக்குகள் வாழ்ந்தனர். உயர் வகுப்பினர் கல் வீடுகளில் வசித்து வந்தனர். சாம்பல் அல்லது சிவந்த மஞ்சள் நிறமுடைய மட்பாண்டங்களை இவர்கள் பயன்படுத்தினார்கள்.

அசுதெக்குகள் தங்கள் பொழுதைச் சமய விழாக்களில் கழித்தார்கள். இயற்கையை வழிபட்ட இவர்களின் முதன்மைத் தெய்வம் சூரியன். கடவுளுக்கு நரபலி கொடுக்கும் வழக்கம் இவர்களிடம் மிகுந்த அளவில் காணப்பட்டது. இரண்டாம் மொன்ட்சுமா அரசர் (Montezuma) காலத்தில் ஏறக்குறைய 20, 000 அடிமைகள் நரபலியிடப்பட்டனர். சமய குருமார் பெரிதும் மதிக்கப்பட்டனர். விதியை நம்பிய இம்மக்கள், போரிட்டு,அடிமைகளைக் கொண்டு வந்து நரபலி இடுவதே இறைவனுக்குத் தாம் செய்யும் தொண்டு எனக் கருதினர். அசுதெக்குகளின் ஆண்டுக் குறிப்பேடு 52 ஆண்டுகளைக் கொண்டது.

அவரை, மிளகு, மக்காச்சோளம், புகையிலை, தக்காளி போன்றவை இவர்கள் உற்பத்தி செய்த வேளாண்மைப் பொருள்களாகும். அசுதெக்குகள் உழவுக் கருவிகளைக் கற்களினாலேயே செய்தார்கள். நாணய முறை பற்றி இவர்கள் அறியமாட்டார்கள். பொருள்கள் பண்டமாற்று முறையில் பெறப்பட்டன. நகரங்களில் அடிக்கடி சந்தைகளைக் கூட்டினர். தெலாடிலோல்கா (Tlatelolco) என்னும் இடத்தில் மிகப் பெரிய சந்தையொன்று நடந்தது. ஏறக்குறைய 60,000 மக்கள் இச் சந்தையில் கூடுவர். அசுதெக்குகள் குதிரைகளின் பயன்களை அறியவில்லை. கால்நடையாகவும் நீர்வழியாகவும் இவர்கள் ஓரிடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குச் சென்றார்கள்.

இவர்களின் மொழி செவ்விந்திய மொழிகளுள் ஒன்றாகும். நாகுதல் (Nahutal) அல்லது அசுதெக்டானோன் (Aztec -Tanoan) என இம்மொழி குறிக்கப்பட்டது. சித்திர வடிவ எழுத்து முறையை இவர்கள் அறிந்திருந்தார்கள்.



அசுதெக்கு ஆண்டுக் குறிப்பேடு

அசுதெக்குகளின் கலைத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு கல்லினால் செய்யப்பட்ட வட்டவடிவமான ஆண்டுக் குறிப்பேடாகும். இந்தக்கல், மிகுந்த வேலைப்பாடுடன் சூரியக் கடவுளின் முக அமைப்பை நடுவில் பெற்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கல்லின் குறுக்களவு 3.7மீ. அசுதெக்குகளின் வாய் மொழி

இலக்கியங்கள் செய்யுள்களையும் மரபுக் கதைகளையும் கொண்டுள்ளன. இசைக் கருவிகளை இயக்குவதிலும் இவர்கள் வல்லவர்களாகத் திகழ்ந்தார்கள்.

கே. இரா.

**அசுநான்தாசு** மராத்திய நாட்டுக் கவிஞருள் ஒருவர். அப்சல்கானுக்கும் சிவாசிக்கும் நடந்த போரில் அப்சல்கான் கொல்லப்பட்டார். அவ்வரலாற்று நிகழ்ச்சியை நாட்டுப் பாடலாகப் பாடியவர் அசுநான்தாசு என்ற கவிஞர். இக்கவிஞரைப் புனேயிலிருந்து பிரதாப்கர் கோட்டைக்குச் சிவாசியின் தாயார் சீசாபாய்தான் அனுப்பி வைத்தார். நாட்டுப் பாடலைப் புனைந்து பாடிக் காட்டியவரும் அசுநான்தாசே ஆவார். அந்நாட்களில் அப்சல்கான் கொலையுண்ட நிகழ்ச்சியை வெளியிட வாய்ப்புகள் இல்லை. நாட்டுப் பாடல் மூலம்தான் அதனை வெளியிட முடியும். அசுநான்தாசின் பாடல்களைச் செவிமடுத்த சீசாபாயும் சிவாசியும் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டனர். சிவாசி அதற்குப் பரிசாக ஒரு கிலோ தங்கத்தையும் குதிரையொன்றையும் கொடுத்தார். இப்பாடல்கள் கேட்போரின் உணர்ச்சிகளைத் தூண்டிவிடும். இந்நிகழ்ச்சியைக் குறிக்கும் சான்றுகள் இப்பாடல்களைத் தவிர வேறொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. பாடலாசிரியர் இக்கவிதைகளில் 'சத்திரபதி' 'மகராசன்' என்னும் சொற்களால் சிவாசியை விளித்துள்ளார். இந்நாட்டுப் பாடலை அக்வொர்த்து என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**அசுமாரா** எத்தியோப்பியாவில் உள்ள ஒரு தொழில் நகரம். எரிட்ரியா மாநிலத்தின் தலைநகரம். செங்கடலில் அமைந்துள்ள மிட்சிவா (Mitsiwa) என்னும் துறைமுக நகரிலிருந்து 105 கி.மீ. தொலைவில் உள்ளது. மிட்சிவாவுடன் இந்நகரம் இருப்புப் பாதையால் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு அசுமாராப் பல்கலைக் கழகம் உள்ளது. மக்கள் தொகை 37,3,827 (1978).

**அசுமீர்** இராசசுத்தான் மாநிலத்தில் உள்ள நகரம். தில்லிக்குத் தென்மேற்கில் 350 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள இந்நகரம் ஒரு இருப்புப்பாதைச் சந்திப்பு. வேளாண்மைப் பகுதியின் மையமான இந்நகரம் வாணிகச் சிறப்புப் பெற்ற சந்தையினையுடையது.

இராசபுத்திர மரபுகளில் ஒன்றான சௌகன் மரபு அரசர்களின் தலைநகர் அசுமீர் (Ajmir). தில்லியில் அடிமை வமிசத்தை நிலை நாட்டிய குதுப்புதீன் அய்பெக்கு என்பார் கட்டிய மசூதியின் அழிவுச் சின்னத்தை இன்றும் இங்குக் காணலாம். 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் ஆண்ட முகலாயப் பேரரசர்களின் விருப்பத்திற்குகந்த தலைமையிடமாக அசுமீர் கருதப்பெற்றது. இங்குப் பேரரசர் அக்பர் கட்டிய அரண்மனை இன்று அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. பேரரசர் சாசகான் காலத்தில் கட்டப்பெற்ற பளிங்கு மண்டபங்களை இந்திய அரசு கண்காணித்து வருகிறது. இங்கு காசா நசுமுத்தீன் சிசுத்தி (Khaja Najmuddin Chisthi) என்ற ஒரு இசுலாமிய முனிவரின் கல்லறை இருப்பதால், இது இசுலாமியருக்கு ஒரு புனிதத் தலமாகவும் இருக்கிறது.

கி.பி. 1616-ஆம் ஆண்டில் இந்நகரில்தான் சகாங்கீர் கிழக்கிந்திய வணிகக்குழுவின் தூதரான சர் தாமசு ரோ (Sir Thomas Roe) என்பாரை முகலாய அரண்மனையில் வரவேற்றார். இந்நகரம் ஆங்கில ஆட்சியின்போது அசுமீர்-மீர்வாரா என்ற மாநிலத்தின் தலைநகராக இருந்தது. 1950-க்குப் பின்னர் இது அசுமீர் மாநிலமாயிற்று. இது, 1956-இல் இராசசுத்தான் மாநிலத்தில் இணைக்கப்பெற்றது. மக்கள் தொகை 3,74,350 (1981).

**அசுரர்** தேவர்களுக்கு மாறானவர்களாகக் கருதப்பட்டனர். இவர்களைப் பற்றி இருக்கு வேதம் நிருத்தம், சதபதபிராமணம் ஆகியவை கூறுகின்றன. தேவர்களுடன் ஒத்துநோக்கப்பட்ட இவர்கள் பிற்காலத்தில் கொடியவர்களாகக் கருதப்பட்டார்கள். சிற்பங்களில் இவர்கள் அழகற்ற முகங்களுடனும் கோரைப் பற்களுடனும் அச்சத்தை உண்டாக்கக் கூடிய விரிந்த கண்களுடனும் சித்திரிக்கப்பட்டுள்ளார்கள். பல்வேறு போர்க் கருவிகளுடனும் உடலில் பல அணிகலன்களுடனும் தலையில் முடியுடனும் காணப்படுகிறார்கள்.

**அசுவகோசர்** பெருங்கவிஞர்; தத்துவ ஆசிரியர்; இந்தியாவுக்குப் பெருமை தேடித் தந்துள்ள பேரறிஞர்களுள் ஒருவர். ஏனையோர் நாகார்சுனர், ஆரியதேவர், குமாரிலபட்டர். இந்நால்வருள் அசுவகோசரும் நாகார்சுனரும் ஒரே காலத்தவர்; கனிசுகர் என்னும் இந்தியப் பேரரசரால் புரக்கப் பெற்றவர்கள்; கி. பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். அசுவகோசர் ஒரு பௌத்த அறிஞர். பௌத்த சமயத்தின் ஒரு பிரிவான யோகாசார தத்துவத்தைப் பற்றி முதன் முதலாக எழுதப்பட்ட சிரத்தோத்பாத சூத்திரம் என்னும் நூலின் ஆசிரியர் இவரே யாவர். இவர் பிராகிருதம், வடமொழி ஆகிய இரு மொழிகளிலும் வல்லுநராய்த் திகழ்ந்தார்.

கனிசுகர் காலத்தில் பௌத்த மதத்தில் பெருவழி எனப் பொருள்படும் மகாயானம் என்ற ஒரு புதிய பிரிவு தோன்றியது. காசுமீரிலுள்ள குண்டலவன விகாரம் என்னும் பௌத்த மடத்தில் பௌத்த சபை ஒன்று கனிசுகரால் கூட்டப்பட்டது. வசுமித்

திரர் என்னும் பேரறிஞர் அதற்குத் தலைமை வகித்தார். அசுவகோசர் அதன் துணைத்தலைவராக இருந்து பணியாற்றினார். அசுவகோசரின் ஆழ்ந்த புலமையைச் செவியுற்ற கனிசுகர், தாம் கூட்டப் போகும் சபையில் அவர் பணியாற்ற வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து, இவரைப் பாடலிபுரத்திலிருந்து வலுக்கட்டாயமாக அழைத்து வந்தார். இவர் பௌத்த சபையின் முதுகெலும்பாய்த் திகழ்ந்தார். பௌத்த சமயம் பற்றிய கையெழுத்துப் படிகளை எல்லாம் சேகரித்து, அவைகளுக்குப் பேருரை எழுதி வழங்கினார். பௌத்த சமயம் பற்றிய பல்வேறு தத்துவங்களும் இச்சபையால் தொகுக்கப்பெற்றன. சர்வத்திவாதிகள் என்ற பிரிவினரின் கொள்கைகளை விளக்கும் அபிதம்ம பிடகம் என்னும் நூலின் எட்டுப் பிரிவுகளை இச்சபை தொகுத்தது. அவற்றை இலக்கிய நயம்பட எழுதித் தந்தவர் அசுவகோசரே. தொடக்க கால மகாயானக் கொள்கைகளைத் தெளிவாகப் புலப்படுத்தக்கூடிய மகாயான சிரத்தோத்பாதம் என்ற நூலை ஆக்கியவரும் இவரே. வச்சிசூசி என்னும் இவரது நூல் சாதி முறையின் கொடுமைகளை நன்கு படம்பிடித்துக் காட்டுகிறது. காந்தித்தோத்திர காதா என்னும் காப்பிய நூல் இவரது உயர்ந்த கோட்பாடுகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

புத்தசரிதம், சௌத்திராநந்தம் ஆகிய இரு பெருங்காப்பியங்களை அசுவகோசர் ஆக்கியுள்ளார். அவற்றில் சமயக் கருத்துகளோடு அரசியல் அறிவுரைகளும் விரவிக் கிடப்பதைக் காணலாம். புத்த சரிதம் 28 பிரிவுகளைப் பெற்று விளங்கியதாக இட்சிங்கு என்ற சீனப் பயணி குறிப்பிடுகிறார். ஆனால், அவற்றுள் 17 பிரிவுகளே இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள்ளும் 13 பிரிவுகளே அசுவகோசரால் எழுதப்பெற்றவை. எஞ்சிய நான்கினை அமிர்தானந்தர் என்ற அறிஞர் பிற்காலத்தே எழுதிச் சேர்த்தார் எனக் கூறப்படுகிறது. புத்தரது வாழ்க்கையில் நடைபெற்ற சுவையான நிகழ்ச்சிகளை நயம்படத் தொகுத்துக் கூறுவதே புத்த சரிதமாகும். தன் ஒன்று விட்ட சகோதரரான நந்தர் என்பவரைப் புத்தர் எவ்வாறு பௌத்த நெறிக்குத் திருப்பினார் என்பதை அது விதந்தோதுகிறது. தன் மனைவியின் அழகில் மயங்கியவராய், உலக இன்பங்களில் ஆழ்ந்து திளைத்த நந்தருக்கு இம்மை இன்பங்களின் நிலையாமையையும், மறுமை இன்பத்தின் மாண்பினையும் எடுத்துக்காட்டி, மனமாற்றத்தைப் புத்தர் எவ்வாறு ஏற்படுத்தினார் என்பதை இந்நூல் பரக்கக் கூறுகிறது. இந்நூலில் இராமாயணத்தின் சாயல் ஊடாடுவதை ஆங்காங்கே காணலாம். சுத்தோதனர் பாத்திரம் தசரதனையும், சுந்தரியின் பாத்திரம் சீதையையும் நமக்கு நினைவுபடுத்துகின்றன. சித்தார்த்தர் எழுந்தருளும் தேரில் அவரில்லாததைப் பார்த்து மக்கள் புலம்புவது, இராமர் வீற்றிருந்த தேரில் அவரில்லாததைக் கண்ட மக்கள் கதறி அழுத காட்சியை ஒத்துக் காணப்படுகிறது.

சௌந்திராநந்த காப்பியத்தில், ஒரு நாட்டுக்கு அரசர் ஒருவர் எவ்வாறு இன்றியமையாது வேண்டப்படுபவர் என்பதையும், அவர்தம் கடமைகள் என்னென்ன என்பதையும், அசுவகோசர் நன்கு எடுத்துக் கூறுகிறார். குடிமக்களின் ஆசானும் வழிகாட்டியும் அரசரே என அவர் அறுதியிட்டுக் கூறுகிறார். சூத்திராலங்காரம் அல்லது கல்பனா மந்திரிகா என்ற நூலில் இளவரசன் ஒருவனுக்கு என்னென்ன பயிற்சிகள் அளிக்கப்படவேண்டும் என்பது விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இலக்கணம், தேவ இலக்கியம், சொல்வன்மை, எழுத்து வன்மை, இசை, மருத்துவம், ஓவியம், கனவு நலமுரைத்தல், சோதிடம், குதிரை யானை முதலியவைகளைப் பழக்குதல், ஈட்டிகளைச் சுழற்றல், வில்லைப் பயன்படுத்துதல், போர்க்கள ஒழுங்கு பற்றிய அறிவு, அரச தந்திரம் முதலிய பல்வேறு கலைகளில் இளவரசன் பயிற்சி பெறுதல் வேண்டும் என இந்நூல் கூறுகிறது. கனிசுகர் காலத்துக்குப் பின் வாழ்ந்த குமாரலதர் என்பவரால் இந்நூல் ஆக்கப்பட்டிருக்கலாம் என்றும், அசுவகோசர் இதன் ஆசிரியரல்லர் என்றும், அறிஞர்கள் சிலர் கருதுகின்றனர். காளிதாசர், சேக்சுபியர் போன்று அசுவகோசர் ஒரு பெரும் நாடகாசிரியருமாவார். அவரால் எழுதப்பட்ட மூன்று நாடகங்களின் சில பகுதிகள் மத்திய ஆசியாவிலுள்ள சில பௌத்த மடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள், சரிபுத்திரர் என்னும் நாடகம் வடமொழியில் கிடைக்கும் நாடகங்களிலேயே மிகத் தொன்மையானதாகும். அது ஒன்பது காட்சிகளை உடையது. முத்கலாயனர், சாரிபுத்திரர் என்ற இரு இளைஞர்களைப் புத்தர் எவ்வாறு தனது சமயத்தில் சேர்த்தார் என்பதையே இந்நாடகம் விரித்துரைக்கிறது. துறவைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர் ஆங்காங்கே இவ்வுலக இன்பங்களையும் நமக்கு நன்கு எடுத்து விளக்குகிறார். சோதத்தன் என்ற வணிக இளைஞன், தன் வாலிப நண்பர்களுடன் ஒரு குன்றின் உச்சிக்குச் சென்று விழாக் கொண்டாடுவதும், காமக் களியாட்டங்களி லீடுபடுவதும் படிப்போர்க்குச் சிற்றின்பப் போதையை உண்டாக்கும் வகையில் விவரிக்கப்பட்டுள்ளன. இந் நாடகத்தை ஆசிரியர் நாட்டிய சாத்திர விதிகளுக்கேற்ப அமைத்துள்ளார். நாடகத்தின் இறுதிக் காட்சியில் அசுவகோசரின் பெயர் புகுத்தப்பட்டுள்ளது. அதே சமயம் புத்தரே வந்து வாழ்த்துக் கூறுவது போன்றும் இறுதிக் காட்சியில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

அசுவகோசரின் ஏனைய இரு நாடகங்களும் முழுமையாகக் கிடைக்கவில்லை, சில சில பகுதிகளே

வழி வழியாக வந்துள்ளன. அவற்றுள் ஒன்று, பெருந் தத்துவங்களை மறைபொருளாய் விளக்கும் வகையில் அமைந்துள்ளது. அதில் வரும் பாத்திரங்களின் பெயர்கள், புத்தி, கீர்த்தி, திருட்டி என்று அமைந்துள்ளதிலிருந்தே இது நன்கு பெறப்படும். மற்றும் அப்பாத்திரங்கள் தூய வடமொழியிலேயே உரையாடுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு நாடகம் இராட்டிரபாலா எனப்படுவது. இதில் நகைச்சுவை பளிச்சிடுகிறது. இதில் வரும் விதூடகனின் பேச்சு, கேட்போரைக் குலுங்கக் குலுங்க நகைக்க வைக்கும் தன்மையது.

பொதுவாக, அசுவகோசரின் நாடகங்களிலும் காப்பியங்களிலும் தூய வடமொழிச் சொல்லாட்சியே காணப்படுகிறது. பிழைகள் மிக அரிதாகவே உள்ளன. ஆங்காங்கே பிராகிருதச் சொற்களும் விரவிக் கிடக்கின்றன. பிராகிருதத்தின் ஒரு கிளை மொழியான மகதியின் பல சிறப்புக் கூறுபாடுகளைத் துட்டன் என்ற கதாபாத்திரத்தின் பேச்சுகளில் காணலாம். கொபெய்ன் என்ற மற்றுமொரு பாத்திரத்தின் உரைகளில் அர்த்தமாகதி என்னும் பிராகிருதக் கிளைமொழியின் சாயல் தென்படுகிறது. விதூடகனின் சொற்களில் சௌரசேனி என்ற பிராகிருதக் கிளைமொழியின் கூறுபாடுகள் நன்கு தென்படுகின்றன. முற்காலச் சௌரசேனி சில இடங்களிலும், பிற்காலச் சௌரசேனி வேறு சில இடங்களிலும் பயன்படுத்தப் பட்டுள்ளன. புத்தசரிதம், சௌந்தராநந்தம் போன்ற நூல்களில் ஆசிரியர் எளிமையும் தெளிவும் நிறைந்த ஒரு நடையைக் கையாளுகிறார். பிற்காலத்தே வைதருப்பி என்று விவரிக்கப்பட்ட நடையை அது பெரிதும் ஒத்திருக்கிறது.

இவ்வாறு, சமயம், உலகியல் ஆகிய இரண்டு துறைகளிலும் மக்களுக்குத் தேவையான சீரிய கருத்துகளை அசுவகோசர் மிகத் திறமையாகக் கலந்து அளித்துள்ளார். பிராகிருத இலக்கண ஆசிரியர்களுக்கு முன்னோடியாகவும், வடமொழி வல்லுநர்களுக்கு ஒளிவிளக்காகவும் இவர் திகழ்ந்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக, ஆசிய நாடுகளிலெல்லாம் மிகுதியாகப் பரவிய மகாயான பௌத்த சமயத்தை உண்டாக்கிய பெருமக்களுள் தலைசிறந்த ஒருவர் என்ற பெருமையும் இவரையே சாரும். கி.ரா.அ.

துணை நூல்:

"The age of Imperial Unity", Bharatiya Vidya Bhavan, Vol. II, Bombay, 1980.

***அசுவசாத்திரம்*** வடமொழியில் எழுதப் பெற்றுள்ள, குதிரைகளைப் பற்றிய நூல். பலதரப்பட்ட குதிரைகளைப் பற்றியும், அவற்றின் சிறப்பான இயல்புகளைப் பற்றியும் இந்நூலில் காணலாம். தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் இந்நூல் கையெழுத்துப் படியுருவில் இன்றும் உள்ளது. இதில் 275 விளக்கப்படங்கள் உள்ளன. இவை தஞ்சை மராட்டியர்களின் காலத்தன.

***அசுவசேனன்*** தட்சகன் என்னும் நாகமன்னனின் மகன். இவனைப்பற்றிய செய்திகள் வில்லிபாரதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன. கண்ணன் அருச்சுனன் ஆகியோர் துணையுடன் தீக்கடவுள் காண்டவக்காட்டை எரிக்குங்கால், தேவர்க்கரசனான இந்திரன், அக்காட்டில் தன் குடும்பத்துடன் வாழும் தட்சகன் என்னும் பாம்பினைக் குறித்துக் கவலைப் பட்டான். அவனைக் காக்கத் தேவப்படையுடன் புறப் பட்டான். முகில்களை அனுப்பித் தீயை அணைக்கப் பணித்தான். அருச்சுனன் அம்புக் கூடம் அமைத்துத் தீக்கடவுளைக் காத்தான். மேகங்கள் செயலற்றன. தேவர்கள் தட்சகனைத் தேடினார்கள். தட்சகனின் மனைவியான பெண் நாகம் தன் குட்டியை வாயில் பற்றியவாறு வானில் எழுந்தது. அருச்சுனன் அப் பெண்நாகத்தைத் தலை துணித்துக் கொன்றான். இந்திரன் அதன் மகவை, உடன்சென்று காத்தான். தன் அன்னையின் வாயுடன் தன் வாலும் சிறிதே துணிக்கப்பெற்ற தட்சகன் புதல்வன் அசுவசேனன் பெரிதும் வருத்தமுற்றான். அதனால் அருச்சுனன்பால் சீற்றமும் பகைமையும் கொண்டான், அருச்சுனனுடைய பகைவன் யாரெனப் பலரையும் வினவிக் கன்னனை அடைந்து அவன்பால் கணையாகி அருச்சுனனைப் பழி தீர்க்கும் நோக்கத்துடன் வளரலானான்.

கன்னன் அருச்சுனனைக் கொல்ல முடிவு செய்தான். காண்டவக் காட்டை அருச்சுனன் எரித்த நாளில் தன்னிடம் கணையாக வந்து தங்கிய பாம்புக் கணையை எடுத்தான். அதற்குத் தீபம், புகை, மலர் ஆகியவற்றால் வழிபாடு இயற்றி வணங்கும்போது, அவனை நோக்கிச் சல்லியன் "சூழ்ச்சித் திறமுள்ள கண்ணன் அங்குள்ளான். ஏதேனும் சூழ்ச்சியால் கணையைத் தடுத்துவிடுவான். ஆகையால், நீ கணையைக் கழுத்திற்கு நேர் குறியாகச் செலுத்தாமல், மார்புக்கு நேரே குறிவைத்துச் செலுத்து" என்று கூறினான். கன்னன் சல்லியன் கூற்றை ஏற்கவில்லை. தன் முடிவுப்படி கழுத்தையே இலக்காக்கி எய்தான். கழுத்து நோக்கிவரும் பாம்புக் கணையைக் கண்ட கண்ணன் தேரைப் பன்னிரண்டு அங்குலம் நிலத்தில் அழுந்தச் செய்தான். அதனால் அப்பாம்புக்கணை கழுத்திற்கும் மேல் ஓடி, அருச்சுனன் மகுடத்தைத் தட்டி இடறிக்கொண்டு சென்றது. அருச்சுனன் பின் புறமாக அம்பெய்து அப்பாம்புக் கணையை இரண்டு துண்டாக்கி வீழ்த்தினான். அழிகின்ற நிலையை அடைந்த அப்பாம்பு, ஐந்து தலையுடன் கூடிய தன்

உடலின் முற்பகுதியுடன் கன்னன்பால் சென்று மறுமுறை தன்னை அருச்சுனன்மேல் ஏவும்படி வேண்டியது. குந்திக்கு அளித்த உறுதிமொழி கருதிக் கன்னன் கணையை மறுமுறை ஏவ மறுத்திட்டான் அதனால் அப்பாம்பு, கன்னனை நொந்து கூறி உயிர் துறந்தது. இவ்வரலாறு வியாசபாரதத்தில் சிறிது வேறுபாட்டுடன் கூறப்பட்டுள்ளது. எஸ்.சௌ.

**அசுவத்தாமன்** துரோணாசாரியாரின் மகன். துரோணர் மனைவியாகிய கிருபியின் கற்புச் சிறப்பினை நாரதரால் அறிந்த உருத்திரன், அதனை ஆராய நினைத்து அவளிடம் நிருவாணப்பிச்சை கேட்டுச் சென்றான். அவள் அழகினைக் கண்டு மயங்கித் தன் வீரியத்தைத் தட்டில் விட, அதனை அவள் துரோணரின் குதிரையிடம் வைத்தாள். குதிரையின் முதுகைக் கிழித்துக் கொண்டு பிறந்தமையின் அசுவத்தாமன் என அழைக்கப்பட்டான். இவன் சிவனருள் வாய்க்கப் பெற்றவன்.


துரியோதனன் ஏவலால் இவன் பாரதப் போரில் ஈடுபட்டுப் பஞ்சபாண்டவர் மக்களாகிய இளம் பஞ்ச பாண்டவர்களைப் பாண்டவர் என்றெண்ணிக் கொன்றான். அருச்சுனனைப் போன்ற சிறந்த வில் வீரன்; சாகாவரம் பெற்றவர்களுள் ஒருவனாகக் கருதப்படுபவன்.

மாளவ மன்னனுடைய பட்டத்து யானை பாரதப் போரில் கொல்லப்பட்டது. கண்ணன் சொற்படி இச் செய்தியைத் தருமர் 'அசுவத்தாமா அதாகுஞ்சரம்' என்று கூறித் தெரிவித்தார். இதனைக் கேள்வியுற்ற துரோணர் தம் மகனான அசுவத்தாமன் போரில் இறந்துவிட்டான் என்று தவறாகக் கருதி உயிர்துறந்தார். த.கு.மு.

**அசுவமேதம்** அரச குலத்தவர் தமது பெருமையை நிலைநாட்டுவதற்குச் செய்யும் ஒரு வேள்வி. வேத கால முதல் பரந்த பேரரசுகள் ஏற்படத் தொடங்கின. வலிமை மிக்க மன்னர்கள் பற்று மிக்க மக்கள் தலைவர்களானார்கள். ''சார்வ பௌம'', ''ஏகரதன்'' முதலிய விருதுகளைச் சூட்டிக் கொண்டதுடன், தங்கள்மதிப்பிற்கொப்ப ''இராசசூயம்'', ''வாசபேயம்'', ''அசுவமேதம்'' போன்ற பல வேள்விகளையும் செய்துவந்தார்கள். அசுவமேத வேள்வியில் குறிப்பிட்ட நிறம் கொண்ட குதிரையொன்று, படைக்கலம் ஏந்திய அரசரோ, உயர்குடித் தோன்றல் ஒருவரோ பின்தொடர, நாடெங்கும் சுற்றித் திரிய விடப்படும். ஓராண்டு வரை யாராலும் தடுக்கப் பெறாமல் சுற்றித் திரிந்து மீண்டு வரும் குதிரையை வேள்வியில் பலியிடுவது வழக்கம். தென்னிந்திய அரசர்கள் சிலரும் ''இராசசூயம்'', ''அசுவமேதம்'' போன்ற வேள்விகளைச் செய்தனர்.

''கிருட்டிண யசுர்வேத தைத்திரிய சம்கிதம்'' என்ற நூலில் வேள்வி நடைபெறும் அரங்கின் அமைப்பு நுணுக்கங்களைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. வரைபடம் அரங்கின் அமைப்பை விளக்குகிறது:-

வேள்விக்கூடம், முத்தீ, வேள்வி நடத்துபவர் இருக்கை மற்றும் ஆசான்களின் இருக்கைகள்:




அசுவமேத யாககுண்டம்

1. காருகபத்தியம், 2. ஆகவனீயம், 3. தட்சிணாக்கினி, 4. வேதி, 5. யசமானன், 6. மனைவி, 7. பிரமன், 8. அத்துவார்யு, 9. கோதா, 10. அக்கித்திரா, 11. உத்தரா, 12. பிரனிதா.

ஆட்டுக் கடா ஒன்று முன் செல்லப் பட்டாக்கத்தியைத் தாங்கி வேள்விக் குதிரை உலாவரும். பின்னர்க் குதிரையைப் பலியிடுவார்கள். கொலையுண்ட குதிரையின் உடலைத் தங்க இழையோடிய பட்டு விரிப்பில் கிடத்தி அதன் இறைச்சியை (வபை) ''உக்கா'' என்ற தனித்தொரு பானையில் வேகவைத்துத் தீயிலிடுவார்கள். இறைச்சியை வேள்வித் தீயில் படைக்கும்போது யாழிசைத்துப் புகழ்பாடும் வழக்கமும், புரோகிதர் அடுக்கான கதைகளைக் கூறும் வழக்கமும் சடங்கு முறைகளாய் விளங்கின. குதிரையின் 34 விலா எலும்புகளையும், ஆட்டின் 24 எலும்புகளையும் கணக்கிட்டு இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பலியிடப்பெற்ற குதிரையை ''ஆதித்தன், திரிதன்யமன்'' ஆகிய கடவுளின் பட்டியலில் இணைத்து வேதச் செய்யுள்கள் சிறப்பிக்கின்றன. வேத சூத்திரங்களிலும் பிராமண வகை இலக்கியங்களிலும் இவ்வேள்வி பற்றிய குறிப்புகள் உண்டு.

வேள்வியின் இறுதிச் சடங்கு 'அவப்புருதம்' எனப்படும், பக்குவப்படுத்தப்பட்ட குதிரை இறைச்சியை (வபை)க் கூடியிருப்பவர்களுக்கு வழங்குவார்கள்.

மொட்டைத் தலையும் மஞ்சள் நிற ஆந்தைக் கண்களும் நீண்ட பல்வரிசைகளுமுடைய ஒரு குட்டரோகியைத் தேர்ந்து, நீர்த்தொட்டியில் கைகளால் நீரை அளையச் செய்து, பின் யாவரும் அத்தண்ணீரில் மூழ்குவார்கள். அவ்வாறு மூழ்குவதால் பாவங்களை அகற்றித் தூய்மையானவர்கள் ஆகிவிடலாமென்ற நம்பிக்கை இருந்தது. ஒவ்வொரு சடங்கையும் மேற்கொள்வதற்கென நல்ல நாள்களைச் சாத்திரங்கள் வகுத்திருந்தன.

இராமாயணம், மகாபாரதம், போன்ற இதிகாசங்களிலும் இவ்வேள்வி பற்றிய செய்திகளுண்டு. இந்திரனின் ஆசியைப் பெற்று மன்னர் அனைவரும் உலகை வலம் வந்து பகைவர் அனைவரையும் வென்ற பின், குதிரையைப் பலி கொடுப்பர் என ஐதரேய பிராமணம் கூறுகிறது. அசுவமேத வேள்வி நடத்திய மன்னர்களின் பட்டியலொன்றைச் சதபத பிராமணம் தருகிறது. சனகர், பரீக்சிதா, பீமசேனோ, உக்ரசேனா போன்றவர்கள் அதில் குறிப்பிடப்பட்டவர்களுள் முக்கியமானவர்கள். பேரரசன் ஒருவன் தான் இந்த வேள்வியைச் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. சிற்றரசர்களும் இவ் வேள்வியைச் செய்ததாகத் தைத்ரேய பிராமணம், ஆபசுதம்ப சூத்திரம் போன்ற சாத்திரங்கள் கூறுகின்றன. மகாபாரதக் குறிப்புகளிலிருந்து வேள்வி அரங்கு முக்கோண வடிவுடையதெனத் தெரியவரும். அயோத்தி மன்னன் தசரதன் மக்கட் பேறு பெறுவதற்காக மூன்று நாள்கள் வேள்வியைச் செய்து முடித்தான். இந்திய-ஈரானிய மன்னர்கள் இவ்வேள்வியை விருப்பமுடன் ஏற்றனர். ஆந்திர குல மன்னனொருவன் இரு அசுவமேத வேள்விகள் நடத்தியதாக நானகாட் குகைக் கல்வெட்டு அறிவிக்கிறது. புசியமித்திர சுங்கன் அசுவமேத வேள்வி நடத்திய கல்வெட்டுச் செய்தியுமுண்டு. அசுவமேத பராக்கிரமர் எனப் புகழப்பட்ட சமுத்திர குப்தருக்கு முன் வேள்வியைச் செய்த மன்னர் பலர். பராசரி புத்திரர், சர்வதாத, சதகர்ணி, வசிட்ட புத்திர இக்சுவாகு சந்தமூலா, வாகாடக மன்னன் முதலாம் பிரவாரசேனா, பல்லவ மன்னன் சிவகந்த வர்மன், நாகமன்னர் போன்றோர் இவர்களுள் முக்கியமானவராவர். காளிதாசன் இயற்றிய இரகுவம்சத்திலும் மற்ற வடமொழி நூல்களிலும் இது பற்றிய குறிப்புகளைக் காணலாம். நாணயச் சான்றுகளும் இவ்வேள்வியை விளக்குகின்றன. குப்தர்கள் ஆட்சிக்குப் பின்னர் இவ்வேள்வி பற்றிய பேச்சு இல்லை.


தமிழக வரலாற்றில் இவ்வேள்வி பற்றிய செய்திகளைக் காண இயலவில்லை. பல்லவ மன்னர் சிலர் இவ்வேள்வி நடத்தியதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அசுவமேத நீராழி மண்டபத்தில் நீராடித் தன் பாவங்களைப் புலிகேசி மன்னன் போக்கிக் கொண்டான் என்று கூறப்படுகிறது. பிருதிவி வியாக்கிரன் என்ற நிடத மன்னனைப் பல்லவ நந்திவர்மனின் (கி.பி. 9-ஆம் நூற்றாண்டு) தளபதி உதயசந்திரன் முறியடித்த செய்தியைக் கல்வெட்டு ஒன்றின் வாயிலாக அறியலாம். பிருதிவி வியாக்கிரன் அசுவமேத வேள்விக் குதிரையை நடத்திவந்தான் என்று கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. 18-ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் அம்பர் நாட்டு மன்னன் சவாய் செயசிங் அசுவமேத வேள்வி நடத்திய செய்தி கால வரன் முறையில் இறுதியான செய்தியாக தெரியவருகிறது.

தி.வி.கு.

***அசுவான்*** எகிப்தின் தென்கிழக்கில் உள்ள வாணிகமும் சுரங்கத்தொழிலும் மிக்க நகரம்; நைல் ஆற்றின் கீழ்க் கரையில் அமைந்துள்ள இந்நகரம் கெய்ரோவுக்குத் தெற்கே 692 கி.மீ. தொலைவிலுள்ளது. நைல் ஆற்றுப் பள்ளத்தாக்கில் வாழும் குடியானவர்களின் சந்தை இங்குக் கூடுகிறது. அராபிய நாடோடிகளான பெடூயினினத்தவர்களின் மையமாக அசுவான் (Aswan) உள்ளது. இந்நகரத்தையும் கெய்ரோவையும் இருப்புப்பாதை இணைக்கிறது. இந்நகரில் அமைந்துள்ள அசுவான் உயர் அணைக் கட்டு கெய்ரோ நகருக்குத் தெற்கில் 8 கி.மீ. தொலைவில் நைல் ஆற்றின் குறுக்கே கட்டப்பெற்றுள்ளது. நைல் ஆற்றின் வெள்ளத்தைக் கட்டுப்படுத்தும் அசுவான் உயர் அணை சீரிய பொறியியல் நுட்பத்தை வெளிக்காட்டும் திட்டமாகும். இவ்வணை தெற்கு எகிப்தில் நாசர் ஏரியின் வட கரையாய் அமைந்துள்ளது.

அசுவான் உயர் அணையைக் கட்டும் பணி 1960-இல் தொடங்கியது. 1968-இல் இவ்வுயர் அணை கட்டி முடிக்கப்பெற்ற போது, தேக்கி வைக்கப்பெற்ற நீரைப் பயன்படுத்தி ஒரு இலட்சம் ஏக்கர் பரப்புள்ள பாலை நிலம் உழவுக்கு வந்தது. 7½ இலட்சம் ஏக்கர் பரப்பில் ஒரு போகம் மட்டும் விளைந்த நிலங்களில் இரு போகமோ முப்போகமோ விளையலாயிற்று. இதன் விளைவாக எகிப்தின் வேளாண்மைப் பொருள் உற்பத்தி இருமடங்காக உயர்ந்தது.

அசுவான் உயர் அணையின் உயரம் 110 மீ.நீளம் 3.2 கி.மீ. அசுவான் உயர் அணை அதன் அருகிலுள்ள சிறிய அசுவான் அணையை மிஞ்சி விட்டதுடன், நீர் மின்சக்தி உற்பத்தி செய்யப் பெரிதும் பயன்படுகிறது. நீரினால் மூழ்கவிருந்த சிலைகளையும், சிற்பங்களையும் அபுசிம்பல் என்னுமிடத்திலிருந்து அகற்றி, மலைமுகடுகளில் வைத்துக் காக்கின்றனர். இவ்வணையைக் கட்ட 1100 கோடி உரூபாய் செலவிட்டார்கள். அமெரிக்கா, குவைத்து ஆகியநாடுகளும் ஐ.நா. கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனமும் பொருளுதவி செய்தன. 1971-இல் அசுவான் உயர்




அசுவான் அணைக்கட்டு

அணையை எகிப்து அதிபர் அன்வர் சதாத்தும் உருசியாவின் அதிபர் நிகோலாய் பொட்கர்ணியும் திறந்து வைத்தனர்.

அசுவானுக்கு அருகில் செம்மை நிறக் கற்கள் கிடைப்பதால் அவற்றைக் கொண்டு, சீரிய நினைவுச் சின்னங்கள் மிகத் தொன்மையான காலத்திலிருந்து கட்டப்பெற்று வருகின்றன. அசுவானில் நிலவும் தட்பவெப்ப நிலையால் இந்நகரம், பொதுமக்களைச் கவரும் நல்வாழ்வு மையமாகவும் திகழ்கிறது. மக்கள் தொகை 1,44,377 (1976).

**அசென்சன் தீவு** தென் அட்லாண்டிக் பெருங் கடலில் செயின்ட் எலீனா தீவுக்கு வடமேற்கே 1100 கி.மீ. தொலைவில் உள்ளது. உலக நடுக்கோட் டிற்கு 800 கி.மீ. தெற்கே இத்தீவு அமைந்துள்ளது. பிரிட்டனுக்குச் சொந்தமான இதன் நிருவாகத்தைச் செயின்ட் எலீனா கவனித்து வருகிறது.இதன் பரப் பளவு 88 ச.கி.மீ.; மக்கள் தொகை 1200. கடல் ஆமைகளும் கரிய நிறக் கடற் பறவைகளும் இத்தீவில் பெருகி வளர்கின்றன.




அசென்சன் தீவு

**அசே** மகாராட்டிர மாநிலத்தில் அவுரங்கா பாத்திலிருந்து வடக்காக 72 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சிற்றூர்; வரலாற்றுப் புகழ்பெற்றது. கி.பி. 1803–ஆம் ஆண்டு செப்டம்பர் 23–ஆம் நாள் ஆர்தர் வெல்லெசுலிப் பிரபு அசே (Assaye) என்ற இடத்தில் சிந்தியா, பான்சலே ஆகிய மகாராட்டிர அரசர்களின் கூட்டுச் சேனையைத் தோற்கடித்து வெற்றி கண்டார்.

அசை என்பது மொழியின் மிகச் சிறிய ஒலி அல்லது அலகு ஆகும். அறிவு வளர்ச்சி, செயல் எளிமை ஆகியவற்றின் காரணமாக அசைகளையும் விடச் சிறிய ஒலி வடிவம் எண்ணிப் பார்க்கப்பட்டது. இதுவே, இன்றைய நெடுங்கணக்கு (Alphabet) எழுத்துகளாகும். சுமார் 4000 ஆண்டுகளுக்கு முன், கிரேக்க அறிஞர்கள், செமித்திக் மொழியில் தோன்றியிருந்த எழுத்துகளை அடிப்படையாகக் கொண்டு, அசையின் உறுப்புகளாகிய உயிர், மெய்களைக் குறியீடு செய்தனர். இதனை அடுத்து, அராமிக்கு, ஈபுரு, அரபு, மற்றும் இந்திய மொழிகளில் நெடுங்கணக்கு எழுத்துகள் தோற்றுவிக்கப்பட்டன. அசைகள் உயிர்மெய்களாக உணரப்பட்ட போதிலும், எல்லா மொழிகளிலுமே இவை தனி எழுத்துகளால் குறிப்பிடப்படவில்லை. சில மொழிகளிலேயே இவற்றைக் குறிக்கும் தனி எழுத்துகள் தோன்றின. இன்று உள்ள ஆங்கிலம் போன்ற ஐரோப்பிய மொழி எழுத்துகள் இவ்வகையைச் சாரும். தமிழ் போன்ற இந்திய மொழிகளில் உயிர் மெய்களைக் குறிக்கத் தனி எழுத்துகள் இருந்தபோதிலும், மெய்யும் உயிரும் அடுத்தடுத்துத் தோன்றினால் அவற்றை இணைத்து, உயிர்மெய் என்ற ஒரே வடிவாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அசையுணர்வு: மொழியின் எழுத்து வரலாற்றில் மிகவும் இன்றியமையாத இடத்தைப் பெறும் அசை, ஒவ்வொரு மனிதனாலும் மிகவும் தெளிவாக உணரப்படும் ஒன்றாகும். எனினும், இதனை முறையாக விளக்கி வரையறை செய்ய இயலவில்லை. ஒருவர் தாம் பேசும் சொற்களில் எத்தனை அசைகள் உள்ளன என்று மிக எளிதில் கூறிவிடலாம்; அவற்றைப் பகுத்தும் காட்டிவிடலாம்; ஆனால் அவ்வாறு பகுத்துக் காட்டுவதற்கான அடிப்படைக் காரணத்தை அறிவியல் அடிப்படையில் விளக்குவது மிகவும் கடினம்.

அசை, மனிதனின் உணர்வு (Feeling) அடிப்படையிலானது. எனவேதான் எல்லைகளைக் குறிப்பிடுவதில், தெளிவான கொள்கையை வகுப்பதில் இடர்ப்பாடு உள்ளது. இதன் விளைவாக ஒரு சொல்லில் உள்ள அசைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுவதிலும், சிலபோது வேறுபாடு தோன்றுகிறது. எனினும் அசைகள் ஒவ்வொரு மனிதனாலும் உணரப்படும் உண்மைக் கூறுகளாகும்.

அசையும் எழுத்தும்: அசைகள் உயிர் அல்லது உயிர் மெய்களால் ஆனவை. 'ஆ', 'ஆல்', வா,' 'வாய்' என்பவை ஓரசைச் சொற்கள், இவற்றில் முதலில் உள்ள சொல் உயிர் மட்டும் உள்ள ஓரசையால் ஆன சொல்; பின்னவை மூன்றும் முறையே உயிர்-மெய், மெய்-உயிர், மெய்-உயிர்-மெய் என்னும் உறுப்புகளைக் கொண்ட ஓரசைச் சொற்கள்.

மொழியின் மிகப்பெரிய அலகு தொடர்களாகும். தொடர்கள் அசைகளாக உணரப்படுகின்றன. அசைகள் உயிர், மெய் ஆகிய ஒலிகளாக உணரப்படுகின்றன. ஒன்று அல்லது பல அசைகளை இணைத்து இலக்கண அடிப்படையில் சொற்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. தனிநிலை மொழி (Isolating language) சொற்கள் குறைந்த அளவு அசைகளை உடையவை. ஒட்டு நிலை மொழிச் (Agglutinative language) சொற்கள் அதிக அளவு அசைகளை உடையவை. தமிழ் ஒட்டு நிலை மொழிவகையைச் சார்ந்த மொழி. இதன்கண் பல அசைகளைக் கொண்ட நீண்ட சொற்கள் உள.

'ஆ', 'ஆல்', 'கா', 'கால்', 'அல்', 'கல்' போன்றவை ஓரசைச்சொற்கள். 'எடு'. 'எட்டு', 'எட்டில்', 'வெடி', 'வெட்டி', 'வெட்டில்', 'ஆடு', 'ஆட்டு', 'ஆட்டின்', 'பாடு', 'பாட்டு' 'பாட்டின்' போன்றவை ஈரசைச் சொற்கள். இவ்வாறு தமிழ் மொழிச் சொற்கள், மூவசை, நாலசை என்று விரிந்து கொண்டே போகும். 'வந்து கொண்டிருந்த பொழுதிலா' என்னும் தொடரில் உள்ள சொற்களில் பல அசைகள் வருதலைக் காணலாம். சொற்களின் அசைகள், ஒரு மொழியின் இலக்கண விதியையும் யாப்பமைதியையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடையவை.


அசை உறுதிசெய்தல்: ஒரு சொல்லின் அசைகளின் எல்லையை வரையறுப்பதிலும் எண்ணிக்கையை உறுதி செய்வதிலும் ஒரே மொழி பேசும் மக்களிடையே கூட ஒத்த கருத்து நிலவுவதில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழில் சொல்லிடையில் மெய்க்குமுன் வரும் ரகர மெய், சில வட்டார வழக்கில் உயிரேற்றி ஒலிக்கப்படும். இதனால் அச்சொல்லின் அசை எண்ணிக்கைக் கூடும். 'ஆர்வம்', 'பார்வை', 'சோர்வு' போன்ற சொற்கள் 'ஆருவம்', 'பாருவை', 'சோருவு' என்று ஒலிக்கப்படும். இங்கு ஈரசைச் சொற்கள் மூவசையாக ஒலிக்கப்படுதலைக் காணலாம். இவ்வாறே 'கூறுவான்', 'வாருவான்' போன்ற சொற்கள் 'கூற்வான்', 'வார்வான்' என்று ஓரசை குறைவாக ஒலிக்கப்படுகின்றன. வேறு மொழிகளிலும் இத்தகைய வேறுபாடுகள் உள்ளன. ஆங்கில மொழியில் Predatory என்ற சொல், t, r, ஆகிய ஒலிகளுக்கு இடையே உயிரின்றி மூவசைச் சொல்லாகவும், உயிரிட்டு நாலசைச் சொல்லாகவும் ஒலிக்கப்படுகிறது. Bottling brightening போன்ற சொற்களில் உள்ள லகர, னகரங்களைச் சிலர் தனி அசைகளாக ஒலிக்கின்றனர். எனவே அவர்கள் உச்சரிப்பின்படி இவை மூவசைச் சொற்களாகின்றன.

அசை எல்லை: சொற்களில் உள்ள அசைகளின் எண்ணிக்கையில் வேறுபாடு உள்ளது போன்றே, அவ்வசைகளின் எல்லைகளை வரையறை செய்வதிலும்

வேறுபாடு உள்ளது. தமிழில் 'ய்', 'ர்', 'ழ்' ஆகிய மெய்களை அடுத்து வரும் இரட்டித்த அடைப்பொலி மும்மெய் வரிசையை உண்டாக்கும். இவ்விடங்களில் அசை எல்லையை வரையறுப்பதில் தடுமாற்றம் ஏற்படும். சிலர் அடைப்பொலிகளுக்கு இடையில் வர வேண்டிய எல்லையை இடையினத்தை அடுத்து இருப்பதாக உணர்வர். 'வாய்ப்பு', 'வார்ப்பு' 'வாழ்த்து' போன்ற சொற்கள், 'வாய்ப்-பு', 'வார்ப்-பு', வாழ்த்-து' என்று பகுக்கப்படுதற்கு மாறாக 'வாய்-ப்பு', வார்-ப்பு', 'வாழ்-த்து' என்று தவறாகப் பகுத்துணரப்படுகின்றன. இவ்வாறு பார்க்கும்போது சொற்களின் அசை எண்ணிக்கையில், அசையாகும் ஒலியில், அசையின் எல்லையில் கருத்து வேறுபாடு இருப்பதை உணரலாம். எவ்வாறு இருப்பினும் ஒரே மொழிபேசும் மக்களிடையே சொற்களின் அசை எண்ணிக்கையைப் பொறுத்தவரை வேறுபாடு மிகவும் அருகியே காணப்படும். இது, மொழியில் அசைகள் உண்மையானவை, அவை ஏதோ ஒரு கொள்கையின் அடிப்படையில் அமைந்துள்ளன என்பவற்றை வலியுறுத்துகிறது.

**அசைச் சொற்கள்:** அசையை விளக்கத் தெளிவானதொரு கொள்கையைப் படைக்கவேண்டுமெனில் முதலில் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்பட்ட அசை எண்ணிக்கை, எல்லை ஆகியவற்றை உடைய சொற்களை எடுத்துக்கொண்டு அவற்றின் அசைகளை உறுதி செய்யும் விதிமுறைகள் யாவை என்று ஆராய வேண்டும். பிறகு வேறுபாடு உடையனவாகக் கருதப்படும் அசைகளை உடைய சொற்களை எடுத்துக் கொண்டு, அவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்ன என்று ஆராய வேண்டும். இவ்வாறு பார்க்கும்போது அசைகளை வரையறை செய்வதில் ஒலிகளில் இயல்பாகவே உள்ள ஒலிமுழக்கம் (Sonority) இன்றியமையாப் பங்கினைப் பெறுதலைக் காணலாம். ஒலிமுழக்கம் என்பது, ஓர் ஒலியின் ஒப்புமைச் சத்தம் (Relative loudness) ஆகும். அதாவது ஓர் ஒலி அதே போன்ற நெடிற்றன்மை, அழுத்தம் (Stress), தாயி (Pitch) ஆகியவற்றைக் கொண்ட மற்ற ஒலிகளுடன் ஒப்பிடும்போது அவ்வொலிக்கு உள்ள சத்தத்தின் அளவாகும்.

**ஒலி முழக்கக் கொள்கை:** 'அ', 'இ', 'உ', 'எ', 'ஒ', ஆகிய உயிர்களை ஒப்பிட்டுப் பார்த்தால், 'அ' மற்ற உயிர்களை விட அதிக முழக்கம் உள்ளதை அறியலாம். சற்றுத் தொலைவில் உள்ள ஒருவரை இவ்வுயிரொலிகளை ஒரே சீராக ஒலிக்கச் சொல்லிக் கூர்ந்து கேட்டால், 'அ' மற்ற உயிரொலிகளை விடத் தெளிவாகக் கேட்பதை உணரலாம். பிறகு 'எ', 'ஒ',க்களும், அடுத்து 'இ', 'உ' க்களும் தெளிவு பெறும். இது அவ்வவ்வொலிகளின் உணர்வுரப்பினைப் (Acoustic intensity) பொறுத்துள்ளது. ஒலிகளின் முழக்கத்தை அவற்றின் உணர்வுரப்பின் அடிப்படையில் கருவிகளின் உதவியால் கண்டறியலாம். ஒரேமாதிரியான நெடுமை, அழுத்தம், தாயி ஆகியவற்றைக் கொண்ட பேச்சொலிகளின் ஒப்பீட்டு முழக்கத்தை அடியில் உள்ள பட்டை வரைபடத்தில் காணலாம்.




பேச்சொலி முழக்கம் - ஒப்பீடு

உயிரொலிகள், மெய்யொலிகள் அனைத்தையும் விட முழக்கமுடையவை. மெய்யொலிகளில் லகர, ரகரங்களே அதிக முழக்கமுடையவை. அவற்றை அடுத்து மூக்கொலிகள் வருகின்றன. இம் மெய்யொலி முழக்கம் ஓரளவிற்கு ஒத்தநிலையுடையது. எஞ்சிய வற்றில் உரசொலிகள் தவிர மற்ற ஒலிகளின் முழக்கம் மிகமிகக் குறைவு. அடைப்பொலிகளில் குரலொலியே மிகக் குறைந்த முழக்கம் கொண்ட ஒலியாகும்.

முழக்கத்தின் அடிப்படையில் அசைகளை வரையறை செய்வது முழக்கக் கொள்கை (Sonority theory) எனப்படும். இதன்படி இரு மிகக் குறைந்த முழக்கமுடைய ஒலிகளுக்கு இடையில் அமையும் ஒலித் தொகுப்பே அசையாகும். இக்கொள்கை பெரும்பாலான சமயங்களில் ஒத்துவந்தாலும் ஒருசில இடங்களில் தடுமாற்றத்தை விளைக்கிறது. எடுத்துக்காட்டாக 'ஸ்பா' என்று ஒரு சொல் இருப்பதாகக் கொள்வோம். இச்சொல்லில் 'ஸ'கரத்தை அடுத்து ஒலிமுழக்கம் குறைந்த பகரம் இருக்கிறது. எனவே 'ஸ'கரம், அகரம் இரண்டும் தனித்தனியாக இரண்டு ஒலிமுழக்கம் உள்ள ஒலிகளாகக் கொள்ளப்படவேண்டி உள்ளன. எனவே, இக்கொள்கைப்படி இதை ஈரசைச் சொல்லாகக் கருதவேண்டும். ஆனால் நடைமுறை வழக்கின்படி இஃது ஓரசைச் சொல்லாகவே உள்ளது. இவ்வகை எதிர்ப்பாட்டினைத் தவிர்க்க மூச்சுத் துடிப்புக் (Chest pulse theory) கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது.

மூச்சுத் துடிப்புக் கொள்கை: இக்கொள்கையின்படி நாம் பேசும்போது வெளியிடும் மூச்சுக் காற்றில் விளையும் அளவு மாற்றம் ஒவ்வொன்றும் ஒவ்வோர் அசையை உண்டாக்கக் காரணமாக உள்ளது என்பது கூறப்படுகிறது. ஆர்.எச். இசுடெட்சன் என்பவர் இக்கொள்கையை வெளியிட்டார். ஒவ்வோர் அசை உண்டாகும் போதும் விலா எலும்புகளுக்கு இடையே உள்ள தசைகள் ஒருமுறை சுருங்கி, மூச்சுக் காற்றின் வெளியேற்றத்தைத் தனித்தனிப் பந்துகள் உருண்டு வருவதைப்போல் செய்கின்றன. அல்லது இவ்வுருண்டைகளே அசைகளின் தோற்றத்திற்குக் காரணமாக உள்ளன. எனினும் இக்கொள்கையை வலுப்படுத்தும் அளவிற்கு ஆய்வு முயற்சி மேற்கொள்ளப்படவில்லை.

மேலே கண்டவற்றிலிருந்து அசைகளை வரையறை செய்ய இரு கொள்கைகள் உள்ளன என அறியலாம். அவற்றில் ஒன்று ஒலியின் முழக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. இஃது 'ஒலிமுழக்கக் கொள்கை' எனப்படும். மற்றது மூச்சுக்காற்று வெளிப்படும் போது விலாத்தசைகளின் இயக்க மாறுபாட்டின் அடிப்படையிலானது. இது 'மூச்சுத்துடிப்புக் கொள்கை' எனப்படும். இவ்விருகொள்கைகளும் சேர்ந்தே அசைகளை வரையறை செய்ய உதவுகின்றன.

அசை உறுப்புகள்: அசைகள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒலிகளால் ஆனவை. அசையின் முதன்மையான உறுப்பு அசைமுகடு (Peak) அல்லது கரு (Nucleus) எனப்படும். இதுவே அசையின் அதிக முழக்கமுள்ள ஒலியாகும். இது பெரும்பாலும் உயிரொலியாகவே இருக்கும். ஒரு மூச்சுத்துடிப்பின்போது உண்டாக்கப்படும் ஒலிக்குழுவில் உயிரொலி இல்லை எனில், அக்குழுவில் உள்ள அதிக அளவு முழக்கம் உள்ள மெய்யொலி அசை முகடாக இருக்கும். இம்மெய்யொலி அசை மெய் (Syllabic consonant) எனப்படும். ஒரே மூச்சுத் துடிப்பின்போது ஒன்றிற்கு மேற்பட்ட உயிரொலிகள் உண்டாக்கப்பட்டால், இவற்றில் அதிக முழக்கம் உள்ளது அசை முகடாக இருக்கும். மற்ற உயிரொலி(கள்) அசையில் உயிர் (கள்) (Non-syllabic vowel) எனப்படும். அசை முகட்டிற்கு முன் உள்ள ஒலிகள் அசைமுன்னி (Onset) என்றும், அசை முகட்டிற்குப் பின் உள்ள ஒலிகள் அசை முடிப்பி (Coda) என்றும் சொல்லப் பெறும். ஓர் அசையில் முகடு கட்டாயமாக இருக்கும். முன்னி, முடிப்பிகள் அசையில் இன்றியமையா உறுப்புகளல்ல. இவை இல்லாமலும் அசைகள் காணப்படும். முடிப்பியோடுள்ள அசை மூடசை (Closed syllable) என்றும், முடிப்பி இல்லாத அசை திறந்த அசை (Open syllable) என்றும் வழங்கப் பெறும். கீழே சில சொற்கள் அசை பிரித்துக் காட்டப் பெற்றுள்ளதைக் காணலாம்.

| ஓரசை | ஈரசை | பல்லசை |
|---|---|---|
| ஆ | ஆ/டு | ஆட்/டிற்/கு |
| ஆல் | ஆட்/டின் | ஆட்/டி/னில் |
| கா | கா/டு | காட்/டிற்/கு |
| கால் | கா/லில் | கா/லின்/கண் |
| | | கா/லி/னு/டை/ய |
| | | அ/வ/னோ/ட/வே/தான் |
| | | வந்/து/கொண்/டி/ருந்/த/வ/னா |

ஆ – முகடு மட்டும் உள்ள அசை ... திறந்த அசை
ஆல் – முடிப்பியுடைய அசை ... மூடசை
கா – முன்னியுடைய அசை ... திறந்த அசை
கால் – முன்னியும் முடிப்பியும் உடைய அசை ... மூடசை

க.மு.

மரபிலக்கணம் அசையைச் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகக் குறிப்பிடும். இஃது எழுத்துகளால் ஆக்கப் பெற்றுச் சீருக்கு அடிப்படையாக அமைவது. எழுத்து

கள் ஒன்றோடொன்று சேர்க்கப்படுவதால் – அசைக் கப்படுவதால் – அசை என்பது காரணப் பெயராகும்.

அசை, நேரசை நிரையசை என இரண்டு வகைப் படும். குறில் தனித்தும், நெடில் தனித்தும், குறில் ஒற்றடுத்தும், நெடில் ஒற்றடுத்தும் அமையுமாதலின் நேரசை நான்கு வகையில் உருவாகும். மி, ஆ, வெள், வேல் என்பன முறையே நேரசை வகை நான்கனுக் கும் எடுத்துக்காட்டுகளாகும். குறில் இணைந்தும், குறில் இணைந்து ஒற்றடுத்தும், குறில் நெடில் இயைந்தும். குறில் நெடில் இயைந்து ஒற்றடுத்தும் அமையுமாதலின் நிரையசையும் நான்கு வகையில் உருவாகும். வெறி, நிறம், சுறா, விளாம் என்பன முறையே நிரையசை வகை நான்கனுக்கும் எடுத்துக் காட்டுகளாம்.

சொல்லின் முதலில் குறில் தனித்து நின்று நேர சையாகாது. வெறி என்பதில், வெ தனியே நேரசை யாகாது. அது அடுத்துள்ள குறிலைச் சேர்ந்து நிரை யசையாகும். சொல்லின் முதலில் நின்ற எழுத்துக் குறிலாக அமைந்து, அடுத்த எழுத்து ஒற்றெழுத்தாக இருந்தால், அப்போது குறில் ஒற்றடுத்து வந்த நேரசை யாகும். தொடக்கத்தில் ‘விட்டிசை’ அமைந்தால், அப்போது தனிக்குறில் பின்வரும் எழுத்தோடு சேராது நேரசையாகும். ‘அ, ஆ இழந்தான் என்று எண்ணப்படும்’ என்பதன்கண், அ, ஆ நேர், நேர் என அலகிடப்பெறும்.

அலகிடுங்கால் செய்யுளில் ஒற்றும் குற்றுகரமும் அலகு பெறமாட்டா. அவ்வகையில் நேரசை நிரையசை களில் வரும் ஒற்றினை நீக்கிக் காண, நேர் ஓரெ ழுத்தசையாகவும் நிரை ஈரெழுத்தசையாகவும் அமை யும்.

நேர் நிரையாகிய அசைகள் தம்மொடு தாமும் தம்மொடு பிறவும் கூடச் சீர் என்னும் செய்யுளுறுப்பு உண்டாகிறது. ஈரசைச்சீர் முதலாகச் சீர்கள் அமை கின்றபோது, அவற்றிற்குத் தேமா முதலான வாய் பாடுகளால் பெயர்கள் குறிக்கப்படுகின்றன. ஒரே எழுத்து சொல்லாவது போல, ஒரே அசை சீராக அமையும் இடமும் உண்டு. அஃது அசைச்சீர் எனப் படும். வெண்பாவின் ஈற்றிலும், ஒரோவழி ஆசிரியப் பாவின் இடையிலும் ஓரசைச் சீர் இடம்பெறும். வெண்பா ஈற்றில் ஓரசைச்சீர் வருங்கால் நேராயின் ‘நாள்’ என்றும், நிரையாயின் ‘மலர்’ என்றும் வாய் பாடு கொள்ளப் பெறும்.

தொல்காப்பியர் அசையினை விளக்கும்போது நேர்நிரை என்பவற்றோடு, அவற்றின் வேறாக நேர்பு நிரைபு என்னும் இரண்டு அசைகளைக் குறிப்பிட்டுள் ளார். நேரசை நிரையசைகளுக்கு இயலசை எனவும், நேர்பசை நிரைபசைகளுக்கு உரியசை எனவும் வேறு பெயர் சுட்டியுள்ளார். குறில் தனித்து வரும் நேரசை வகை நீங்க, எஞ்சிய மூன்றினோடும், நிரையசை வகை நான்கினோடும் குற்றியலுகரம் அல்லது முற்றியலுகர எழுத்து தனித்தனியே சேர்வதால் நேர்பு நிரைபு அசைகள் உண்டாகின்றன. யாப்பருங்கலம் யாப்பருங் கலக் காரிகை தோன்றிச் செல்வாக்குப் பெற்ற பின் னர், இவ்வாறு யாப்பில் நேர்பு, நிரைபு என்று அசை கொள்ளும் தொல்காப்பிய மரபு அருகியது. பிற்கால யாப்பிலக்கணங்கள், நேர் நிரை என்னும் இருவகை யாக அசை கொள்ளும் முறையினையே பெரிதும் போற்றி வந்துள்ளன.

துணை நூல்கள்:

**Abercrombie**, D., “Elements of General Phonetics”, Edinburgh, 1967.

**Bell**, **A. and Hoope**, I.B., “Syllable and Segment”, New York, 1978.

**Ladefoged**. P., “A course in General Phonetics”, New York, 1975.

**அசோகர்** (கி. மு. **273–232**) தலைசிறந்த மௌரியப் பேரரசர். இவர் தம் தந்தை பிந்துசாரர் இறந்தபின் கி.மு. 273–இல் பட்டத்திற்கு வந்தார்.

முதலில் உச்சயினியிலும் பின்னர்த் தட்சசீலத்திலும் அரசப் பிரதிநிதியாக இருந்து, தம் தந்தை இறந்த தும் தம் மூத்த சகோதரர் சுசீமாவைப் போரில் வென்று அரியணை ஏறினார். இரு சகோதரரிடையே நடைபெற்ற போட்டியின் காரணமாக அரியணை ஏறிய நான்கு ஆண்டுகளுக்குப் பின்னரே, அசோகரின் முடிசூட்டுவிழா நடைபெற்றது.


அசோகர் தம் குறிக்கோள்களையும் சாதனை களையும் கல்வெட்டுகளில் பொறித்து வைத்துள்ளார். அவற்றுள் சில முக்கியமான கல்வெட்டுகள்:

1) பாறைகளில் பொறிக்கப்பெற்ற 14 பெரிய கல் வெட்டுகள்.
2) பாறைகளில் பொறிக்கப்பெற்ற சிறிய கல் வெட்டுகள்.
3) கல்தூண்களில் பொறிக்கப்பெற்ற 7 கல்வெட் டுகள்.

இக்கல்வெட்டுகள் பிராகிருதம், கிரேக்கம், அரா மிக் மொழிகளில் காணப்பட்டாலும் பெரும்பாலா னவை பிராகிருத மொழியிலேயே இருக்கின்றன.

இக்கல்வெட்டுகளில் மசுகி என்ற இடத்தில் உள்ள கல்வெட்டைத் தவிர, மற்றக் கல்வெட்டுகளில் அசோகர் தேவானாம்பிய அல்லது பியதசி என்றே குறிக்கப்பட்டுள்ளார். இவை முறையே தேவர்களால் விரும்பப்பட்டவன், கண்ணுக்கு இனியவன் என்ற

பொருளைத் தருகின்றன. அசோகர் அரியணை ஏறியபோது வடமேற்கில் ஆப்கானித்தானத்தில் இருந்து தெற்கில் மைசூர் வரை மௌரியப் பேரரசு பரவி இருந்தது. முடிசூட்டு விழா நடந்தபின் தம் ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டில், அசோகர், கலிங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, போரில் வென்று, அந்நாட்டை மௌரியப் பேரரசுடன் சேர்த்தார். அப்போரில் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் உயிரிழந்தும் அடிபட்டும் பெருந்துன்பத்திற்கு ஆளாயினர். ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் கொல்லப்பட்டதால் பலர் தங்கள் சுற்றத்தினரை இழந்து, வாழ வகையின்றித் தவித்தனர். இக்கொடுமையைக் கண்ணுற்ற அசோகரின் உள்ளம் உருகியது. இனி அத்தகைய போர் புரிவதில்லை என்ற முடிவை அன்று முதல் மேற்கொண்டார். அதன் பின் அகிம்சையைப் போற்றிய பௌத்த மதத்தைத் தழுவி, பௌத்த சங்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டார்.




அசோகர் பேரரசு

மேலும், அக்கால முதல் உல்லாசப் பயணங்களை விடுத்தார், பௌத்த மதத்தைச் சார்ந்த புனிதஇடங்களுக்குச் சென்றும், தம் பேரரசு முழுவதும் சுற்றி வந்தும் தம்மக்களைக் கண்டு, அவர்கள் அறவழியில் நடக்கச் செய்வதையே தம் கடமையாகக் கொண்டார். அதற்காகக் கல்வெட்டுகளை மக்கள் அன்றாடம் கூடும் இடங்களில் பொறிக்கச் செய்தார். அக்கல்வெட்டுகளில் மாணவர்கள் ஆசிரியருக்கு அடங்கி மரியாதையோடு நடந்து கொள்ளவேண்டும் என்றும், துறவிகள், அந்தணர்கள், சிரமணர்கள் ஆகியோரை மதித்து நடக்க வேண்டும் என்றும், சுற்றத்தார், ஊனமுற்றோர், நண்பர் ஆகியோருக்கு அவர்கள் வேண்டிய பொருளைக் கொடுத்து உதவ வேண்டும் என்றும், மக்கள் நல்வழியில் நடந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மற்ற சமயத்தவரை மதித்து நடக்க வேண்டும் என்றும், அவர்கள் மனம் புண்படும்படி நடந்து கொள்ளக் கூடாது என்றும் அறிவுறுத்தினார்.

மக்கள் நல்வழியிலே நடந்து நற்கதி அடைய வேண்டும் என்று எண்ணிய அசோகர், தாமே அவர்களுக்கு வழிகாட்டியாக இருக்க முற்பட்டார். அரச மரபிலே வந்த அவர் விலங்குகளை வேட்டையாடுவதை நிறுத்தினார். அரண்மனையிலே அரச குடும்பத்தினரின் உணவிற்காகக் கொல்லப்பட்ட விலங்குகள், பறவைகள் முதலியவற்றின் எண்ணிக்கையைப் பெரிதும் குறைத்தார். ஆனால்,இறைச்சி உணவை அறவே நீக்கும்படி மக்களை அவர் கட்டாயப்படுத்தியதாகத் தெரியவில்லை.

மற்றவர்களை அன்புடன் நடத்த வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதில் நாட்டம் கொண்ட அவர், மௌரியப் பேரரசின் எல்லைப் புறத்திலே வாழ்ந்த மக்களை வென்று, அவர்களை அடக்காமல், அவர்கள் பிழை செய்தாலும் பொறுத்துக் கொள்ளும் மனப்பான்மையை வளர்த்ததோடு, தாம் அவர்கள் நாட்டைக் கவர்ந்து கொள்ளக் கூடும் என்ற எண்ணமே அவர்களுக்கு எழாதவாறும் நடந்துகொண்டார்.

அகிம்சையைக் கடைப்பிடித்த அசோகர் சாலைகளின் இரு மருங்கிலும் ஆலமரங்களை வளர்த்து நிழல் தரச் செய்தார். பயணிகள் தங்குவதற்குச் சத்திரங்களையும் ஆங்காங்கே அமைத்துக் கொடுத்தார். மக்களுக்கும் விலங்குகளுக்கும் மருத்துவம் அளிப்பதற்கான வசதிகளையும் செய்து கொடுத்தார்.

கிரீசு, எகிப்து, இலங்கை போன்ற நாடுகளுக்குத் தூதர்களை அனுப்பித் தாம் கடைப்பிடித்த அறங்களைப் பரப்பினார். மௌரியப் பேரரசில் வாழ்ந்த தம் குடிமக்கள் அறநெறியை அறிந்து கொள்ளவும் அவ்வழியிலே நடக்கவும், அவர்களுக்கு உதவ 'தரும மகாமாத்திரர்' என்ற அதிகாரிகளை நியமித்தார். மற்ற அதிகாரிகளும் ஐந்தாண்டிற்கு ஒருமுறை சுற்றுப்பயணம் செய்து, மக்களிடையே அறநெறியைப் பரப்ப வழி செய்தார்.

அசோகர் தாம் புத்த மதத்தைத் தழுவினாலும், அந்தணர்க்கும், ஆசீவகர்க்கும்,துறவியர்க்கும், ஆதரவு தந்தார். இவ்வாறு அவர் அக்காலத்திலேயே சமயப் பொறையைக் கடைப்பிடித்தார். மூன்றாம் பௌத்த மத மாநாடு அசோகரின் தலைநகரான பாடலிபுத்திரத்தில் அவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்றதாகச் சிங்கள பௌத்த நூலான மகாவம்சம் கூறுகிறது.

எச்.ஜி. வெல்சு (H.G. Wells) என்ற வரலாற்றாசிரியர் அரசர்களிலேயே தலைசிறந்தவர் அசோகர் என்று கூறியுள்ளார். இந்தியாவிலேயே முதன் முதலில் கல்வெட்டுகளைப் பொறித்தவர் அசோகர் எனப் பொதுவாக நம்பப்படுகிறது. போரின் காரணமாகத் தாம் இழைத்த கொடுமைகளைக் கல்வெட்டுகளில் சுட்டிக்காட்டி, அந்தக் கொடுமைகளுக்காகத் தாம் மிகவும் வருந்தியதாக மக்களுக்குச் சொல்லி, போரின் மூலம் வரும் வெற்றியை வன்மையாகக் கண்டித்த ஒரே அரசர் அசோகரேயாவார்.

தாம் புத்த சமயத்தைத் தழுவினாலும், மற்றவர்களை மதமாற்றம் செய்யவோ துன்புறுத்தவோ நினைக்கவில்லை. அகிம்சையைப் போற்ற வேண்டும், மக்களிடமும் விலங்குகளிடமும் அன்பு காட்ட வேண்டும் என்று மக்களுக்குச் சொல்லித் தம் வாழ்க்கையிலேயே அவற்றைக் கடைப்பிடித்துக் காட்டிய ஒரே அரசரும் அசோகரே ஆவார். சி.இ.இரா.

துணை நூல்கள்:

**Majumdar**, R.C. (Ed), "The History and Culture of the Indian People", Vol II. The Age of Imperial Unity, Bombay, 1980.

**Mookerji,** R. K., "Asoka (Gaekwad Lectures)", London, 1928.

**Majumdar, R.C. & others** "An Advanced History of India", 4th Edition, Macmillan India Ltd, Delhi, 1982.

**Smith**, V.A. "Asoka",3rd Ed., Oxford, 1920.

**அசோகர் கல்வெட்டுகள்** இந்தியாவில் கிடைக்கும் கல்வெட்டுகளுள் மிகத் தொன்மையானவை. இவரால் வெளியிடப்பட்ட இக்கல்வெட்டுகள் இவர் கால வரலாற்றை அறியப் பெரிதும் உதவிபுரிவன. தாம் தழுவிய புத்த சமயக் கொள்கைகளை மக்களுக்கு அறிவிக்கப் பேரரசின் பல்வேறு பகுதிகளில் பாறைகளிலும் தூண்களிலும் அறக் கட்டளைகளாக வெட்டுவித்தார். இக்கல்வெட்டுகள் பிரா


 அசோகர் கல்வெட்டுகள்

கிருதம் (Prakrit), கிரேக்கம், அராமிய (Aramic) மொழிகளில் வரையப்பட்டன. பிராகிருத மொழிக்கு, பிராமி (Brahmi) எழுத்துகளும், அராமிய மொழிக்கு, கரோத்தி (Kharoshthi) எழுத்துகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க, அராமிய மொழிக் கல்வெட்டுகள் இன்றைய பாகிசுத்தான், ஆப்கானித்தான் போன்ற நாடுகளில் காணப்படுகின்றன. ஆங்காங்கே வழக்கிலுள்ள மொழியும் எழுத்துகளும் பயன்படுத்தப்பட்டமை தனிச் சிறப்பாகும். கி.பி. 1958-ஆம் ஆண்டு அசோகரின் இரு மொழிக் (Bilingual) கல்வெட்டொன்று, ஆப்கானித்தானத்தில் காந்தகாருக்கருகில் சார்-இ-குனா (Shar-i-Kuna) என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு கிரேக்க, அராமிய மொழிகளில் எழுதப்பட்டது. 1963-ஆம் ஆண்டு காந்தகாரில், அசோகரின் கிரேக்கமொழிக் கல்வெட்டுப் பகுதி ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

அசோகரின் கல்வெட்டுகளைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. பாறைக்கல்வெட்டுகள், 2. கற்றூண் கல்வெட்டுகள். பாறைக் கல்வெட்டுகளை (அ) சிறுபாறை ஆணைகள் (Minor Rock Edicts), (ஆ) பாறை ஆணைகள் (Rock Edicts) (இ) குகைக் கல்வெட்டுகள் (Cave Inscriptions) என்று மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கற்றூண் கல்வெட்டுகளையும் (அ) சிறுதூண் ஆணைகள் (Minor Pillar Edicts), (ஆ) தூண் ஆணைகள் (Pillar Edicts), (இ) தூண் கல்வெட்டுகள் (Pillar Inscriptions) என்று மூன்று துணைப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவற்றுள் சிறுபாறை ஆணைகளையே முதன் முதலாக வெட்டினார். இக்கல்வெட்டுகள் 'தேவானாம் பிய' என்றும் 'பியதசி' என்றும் பிராகிருத மொழியில் இம்மன்னனின் பெயரைக் குறிப்பிடுகின்றன. மாசுகி, குச்சரா சிறுபாறை ஆணைகள் (Minor Rock Edicts) மட்டுமே அசோகர் என்ற பெயரைப் பொறிக்கின்றன.

அசோகர் கல்வெட்டுகள் கீழ்க்கண்ட இடங்களில் காணப்படுகின்றன. ஆப்கானித்தானத்தில் பழைய காந்தகார் (Old Kandahar) அருகில்; பாகிசுத்தானத்தில் மான்சகேரா (Mansehra), சாபசுகார் (Shabazgarhi); நேபாளத்தில் பராரியா (Parariya), நிக்லிவா (Nigliva); இராசசுத்தானத்தில் பைரட் (Bairat); உத்தரப்பிரதேசத்தில் பகாபூர் (Bahapur), அக்ராரா (Ahraura), கால்சி (Kalsi), அலகாபாத்து, மீரத்து, சாரநாத்து; குசராத்தில் கிர்நார் (Girnar); மத்தியப் பிரதேசத்தில் குசரா (Gujarra), உரூப்நாத் (Rupnath), சாஞ்சி; பீகாரில் சசாரம் (Sahasram) பராபர் குன்றுகள் (Barabar Hills), உலூரியா நந்தன்கர் (Lauriya Nandagarh); ஒரிசாவில் சௌகதா (Jaugada), தௌலி (Dhauli); கருநாடகத்தில் கவிமாத்து (Gavimath)- மசுகி (Maski), பிரமகிரி (Bramagiri), சடிங்க இராமேசுவரம் (Jadinga Rameswaram), சித்தபுரம்; ஆந்திரப் பிரதேசத்தில் இராசுல மாந்தகிரி (Rojula Mandagiri), எர்ரகுடி (Erragudi).

அசோகரின் கல்வெட்டுகளிலிருந்து புத்தரின் கொள்கைகள், சமய அலுவலர், அரசு அலுவலர், ஆட்சிச் சிறப்பு, அண்டை அரசுகள், நகரங்கள், வெளிநாட்டு அரசர்கள் போன்ற பல விவரங்களைத்



அசோகரின் முதலாம் கற்றூண் கட்டளை-உலூரியா நந்தன்கர்

தெரிந்துகொள்ளலாம். அசோகரின் அலுவலர் மகா மாத்திரர் எனவும், சமயப் பரப்பாளர் தர்ம மகா மாத்திரர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிரதேசிகர், இராசுகர் (Rajukar), இராசுட்டிரிகர் (Rashtrika) போன்றவர்கள் ஆளுநர்கள் என்பதும் கல்வெட்டுகள் மூலம் அறியப்படும் செய்தியாம். இக் கல்வெட்டுகளில் மகதம், உச்சயினி, தட்சசீலம், சுவர்ணகிரி, தோசாலி (தௌலி), சமாபா, ஈசாலம் (சித்தபுரம்) ஆகிய நகரங்களின் பெயர்கள் காணப்படுகின்றன. ஆப்கானித்தான் பகுதியில் வாழ்ந்த யவனர்கள், காம்போசர்கள், விந்திய மலைக்குத் தெற்கே வாழ்ந்த போசர்கள், இராசுட்டிரிகர்கள், (Rashtrikas) ஆந்திரர்கள், புலிந்தர்கள், நாபகர்கள் (Nubhakos) போன்ற மக்களையும் இக்கல்வெட்டுகள் குறிக்கின்றன. அசோகரது ஆட்சிக்குட்படாத அரசர்களாகச் சோழர், பாண்டியர், கேரளபுத்திரர், சத்தியபுத்திரர் ஆகியோர் குறிக்கப்படுவதாகக் கருதுகின்றனர். மேலும், வெளிநாட்டு அரசர்களாகக் கிரேக்கநாட்டு இரண்டாம் ஆண்டியோகசு தியோசு (கி.மு. 261–246), எகிப்தின் இரண்டாம் தாலமி பிலடெல்பசு (கி.மு. 285–247), மாசிடோனியாவின் ஆண்டிகோனசு கோநாடசு (கி.மு. 277–239), கிரேக்கநாட்டு அலெக்சாந்தர் (கி.மு. 272–255) முதலியோர் குறிக்கப்பட்டுள்ளனர்.

**அசோதை[1]** ஆயர் குலமகள்; நந்தகோபன் மனைவி. கண்ணனின் வளர்ப்புத் தாய். புகழைக் கொடுப்பவள் என்னும் பொருளில் வடமொழியிலுள்ள 'யசோதை' என்னும் பெயர், தமிழில் தற்பவமாய் 'அசோதை' என ஆயிற்று. கண்ணனை வளர்க்கும் பேறு பெற்று ஆயர் குலத்திற்கே புகழை அளித்தவள். ஆகையால் இவள் இப்பெயர் பெற்றாள். இதற்கு முன் வசுமதி, தரா என்னும் பெயர்களைப் பெற்றிருந்தாள். பாகவதத்திலும் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் இவளைப் பற்றிய செய்திகள் காணக் கிடக்கின்றன. கண்ணன் வட மதுரைச் சிறைச்சாலையில் தேவகியின் திருவயிற்றில் பிறந்த அன்றே, இவள் வயிற்றிலும் ஒரு பெண் குழந்தை 'யோக மாயை' யின் அம்சமாய்ப் பிறந்தது. அது பிறந்தவுடனேயே அசோதை, கரு உயிர்த்த துன்பத்தால் உணர்வற்று இருந்தாள். அவளருகில் இருந்தவர்கள் இவள் பட்ட துன்பத்தால் தாமும் உணர்வற்றிருந்தார்கள். அப்போது மழையும் காரிருளும் உலகை மூடின. யாதவ குலத் தோன்றலான வசுதேவன் தன் குழந்தையாகிய கண்ணனை, கஞ்சன் வாளுக்கு இரையாக்காமல் தப்புவிக்க வேண்டும் என்ற கருத்துடன், அவனைக் கொண்டு, நந்தன் மனை புகுந்தான். கண்ணனை அசோதை பக்கம் கிடத்தி, அவள்பெற்ற பெண் மகவைக் கொண்டு சென்று தேவகியின் பக்கலில் விட்டான். அதுவரை வாய் திறவாதிருந்த அப்பெண் குழந்தை, தேவகிபக்கம் கிடத்தப்பட்டவுடன் அழத் தொடங்கியது. அவ்வழு குரல் கேட்ட காவலாளர் கஞ்சனுக்கு அறிவிக்க அவன் ஓடிவந்து, குழந்தையைப் பறித்துத் தரையில் கிடத்திக் கொல்ல வாளை ஓச்சினான் அது கண்ட தேவகி அழுது புலம்பி, "இது பெண் குழந்தையாதலால், தீங்கு நேரிடாது, இதற்கு உயிர்ப் பிச்சையருள்க" என்று வேண்டினாள். கஞ்சன் உடன்படவில்லை. அவன் ஓங்கிய வாள் படு முன்பே அக்குழந்தை வானில் எழுந்து எட்டுக்கைகளுடன் கூடிய ஒளிவடிவாய்த் திகழ்ந்து நின்று, "ஓ! கஞ்சனே! என்னை வீணாய்க் கொல்ல முயன்றாய்! உன்னைக் கொல்ல வந்த சிறுவன் வேறு இடத்தில் வளர்கிறான். அவனால் நீ மடிவது பொய்யாகாது" என்று சொல்லி மறைந்தது.

கோகுலத்தில் அசோதை மயக்கம் தீர்ந்து விழித்துப் பார்த்தபோது 'நீலக்கல்' போல் ஒளிபடைத்த ஆண் மகவைக் கண்டாள். அதனை நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமுமாக வளர்த்தாள். அந்தக் குழந்தையின் உண்மை வரலாறு தெரிந்த பின்னும் தன் அருமைக் கண்மணியாகவே அன்புடன் வளர்த்தாள். கண்ணன் அசோதையிடம் வளர்ந்துவருங்கால் பல்வேறு இளமை விளையாட்டுகள் நிகழ்த்தியுள்ளான். தான் பரம்பொருள் என்பதனை உணர்த்தும் சில செயல்களையும் செய்து காட்டியுள்ளான். இவற்றையெல்லாம் அசோதை கண்ணுற்று மகிழ்ந்தும் வியந்தும் கண்ணனைப் போற்றி வந்துள்ளாள். இச்செயல்கள் பலவும் பாகவதத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அசோதை கண்ணனை உறங்கச் செய்துவிட்டு, யமுனையாற்றுக்குச் சென்றிருந்தபோது, அவன் விழித்தெழுந்து தன் கால்களால் சகடத்தை இறுத்த வரலாற்றை வியாசர் தம் பாரதத்தில் குறிப்பிட்டுள்ளார். அசோதை பற்றிய செய்திகள் பல ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் பல்வேறிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அசோதை[2]**: சலத்காரு என்னும் முனிவருக்கு நாக கன்னியிடம் தோன்றியவர் அத்திகர். இவர்தான் சனமேசயனின் நாக வேள்விக்குச் சென்று, அவனை வேண்டி, அவ்வேள்வியை நிறுத்தி நாகங்களைக் காத்தார். இந்த அத்திகரின் மனைவி பெயர் அசோதை. இவள் முந்திய அசோதையின் வேறானவள்.

**அஞ்சல் வழித் தொடர் கல்வி**: அஞ்சல் மூலம்அளிக்கப்படும் கல்வி அஞ்சல் வழிக் கல்வி எனப்படும். இக்கல்வி தனி மனித முயற்சியின்பாற் பட்டதாகும். தனியொருவரின் தேவையை அடிப்படையாகக் கொண்டு, எவ்வித வெளிக்கட்டுப்பாடும் இன்றி, தன் விருப்பத்தின் பேரில், தன் நிலை, வயது, சூழ்நிலை, வேலை நிலை, வாழுமிடம் முதலியவற்றுக்குக் கட்டுப்படாது, தனது கல்வி முன்னேற்றத்திற்காக

வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள உதவும் கல்வியே அஞ்சல்வழிக் கல்வியாம் (Correspondence Education).

கல்வி என்பது குறிப்பிட்ட சில ஆண்டுகட்கு, குறிப்பிட்ட வயதினர்க்கு, அதற்கென்றே அமைந்த நிறுவனங்களின் கற்பித்தல் என்ற பழங்கொள்கையை மாற்றி, திறமைகளையும் அடங்கிக் கிடக்கும் ஆற்றல்களையும் வாழ்நாள் முழுவதும் வெளிக் கொணர்ந்து மலர வைப்பது என்ற கருத்து, இன்று வளர்ச்சியடைந்துள்ளது.

வாழ்நாள் முழுதும் கற்றல், பள்ளியில் கற்றல், பள்ளிக்கு வெளியே கற்றல், முறையாகக் கற்றல், முறைசாராமல் கற்றல், தொடர்ந்து கற்றல், பொது நிலையில் கற்றல், தொழில் நுணுக்கம் கற்றல், தொடர்ந்து மீளக் கற்றல் (Continuous and Recurrent Education) ஆகிய பல வழி முறைகளிலும் ஒருவர் தம்முடைய அறிவையும், திறமையையும் வளர்க்க வழிவகுப்பது கல்வியாம்.

வள்ளுவர் கூறியது போல், 'சாந்துணையும் கற்றல்' என்பதே இன்றைய கல்விக் கருத்தாகும். இந்தக் கண்ணோட்டத்தின் பொருள், கற்போர் தேவையானவற்றைத் தமது வசதிப்படி, தம் வேகத்தில் கற்கலாம் என்பதாகும். கற்கும் முறையும் அவரவர்க்கு ஏற்றபடி அமைய முடியும் என்பதே இன்றைய கல்வியின் அணுகு முறையாகும்.

பல இடர்ப்பாடுகளால் கற்றலை இடையில் நிறுத்தி, மீண்டும் கல்வியைத் தொடர விரும்புகின்றவர்களும், கல்விக்கூடங்கள் இல்லாத சிற்றூர்களில் வாழ்பவர்களும், ஆர்வமின்மையால் கற்பதை விடுத்துப் பின்னர் ஆர்வம் கொண்டு மீண்டும் கல்வி கற்க விழைபவர்களும், மேற்படிப்பைத் தொடர விருப்பம் இருந்தும், அடிப்படைத் தகுதிகள் இருந்தும், கல்லூரி, பல்கலைக்கழகங்களில் சேர்ந்து பயில இடமும் வாய்ப்பும் கிடைக்காதவர்களும், கல்வி, வாழ்வு முழுவதற்கும் உரியது என்ற கொள்கைக்காகத் தொடர்ந்து கற்க விரும்புபவர்களும், அறிவை மேன்மேலும் வளர்த்துக் கொள்ளவிரும்புபவர்களும், கல்வி கற்பதால் அதிகப்படியான வருவாய், ஊக்குவிப்புத் தொகை முதலியவை பெற இயலும் என்ற நிலையில் உள்ளவர்களும், தமது தொழில் முன்னேற்றம் கருதித் தொடர்ந்து படிக்க நினைப்பவர்களும், தாம் பணியாற்றும் பொறுப்புகட்குத் தக்கவாறு தம்மை ஆயத்தப்படுத்திப் பட்டங்கள் பெற எண்ணுபவர்களும், ஓய்வு நேரத்தைப் பயனுள்ள முறையில் கழிக்க விரும்புபவர்களும், ஆர்வம் காரணமாகத் தாம் விரும்பும் பாடத்தை மேன்மேலும் படிக்க எண்ணுபவர்களும் விரும்பக்கூடிய ஒருவகைக் கல்வி முறையே அஞ்சல்வழிக் கல்வி முறையாகும்.

பணியாற்றிக்கொண்டே கற்க விரும்புவோர், தாம் விரும்பும் துறைகளில் அறிவுவளர்ச்சி அடைய விரும்புவோர், பொருளாதார, சமூக, கல்வி முன்னேற்றங் காண விழைவோர், வேலையின்றி இருக்கும் காலங்களில் தமது தகுதியை வளர்த்துக் கொள்ள நினைப்போர், மற்றும் பணியாற்றாத பெண்டிர், விதவையர், உடல் ஊனமுற்றோர், வயதான, ஓய்வு பெற்ற பிரிவினர் அனைவர்க்கும் கல்வி பயில வழி செய்வது அஞ்சல்வழிக் கல்வியாகும்.

இந்திய மைய அரசில் கல்வி அமைச்சராக இருந்த கே.எல். சிரிமாலி (Shri Mali) மக்களின் பெருகிவரும் உயர் கல்வித் தேவைகளை உணர்ந்து, அஞ்சல்வழிக் கல்வித் திட்டத்தின் மூலம்தான் மக்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய இயலும் எனத் தெரிந்து, கோத்தாரியின் தலைமையில் 1960-இல் அஞ்சல் வழிக் கல்வி பற்றி ஆய்ந்திட ஒரு குழு நியமித்தார். அக்குழு, நாட்டின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்ய அஞ்சல் வழிக் கல்வி முறை இன்றியமையாதது எனத் தீர்மானித்தது. இதையொட்டி, தில்லிப் பல்கலைக்கழகம் 1962-ஆம் ஆண்டு அஞ்சல் வழிக்கல்வித் துறையைத் தொடங்கியது. இதன் பின், பஞ்சாபு, மைசூர், இமாசலப் பிரதேசம், பம்பாய், மதுரை, வேங்கடேசுவரா, ஆந்திரா, மூரத்து, குருச்சேத்திரா, அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்கள் அஞ்சல்வழிக் கல்வித்துறையைத் தொடங்கி நடத்தி வருகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் அஞ்சல் வழிக் கல்வித் துறை, 1971-ஆம் ஆண்டு டாக்டர் மு. வரதராசனார் அவர்களால் 1054 மாணாக்கர்களுடன் தொடங்கி வைக்கப்பட்டது. 1972 முதல் புகுமுகவகுப்புத் தொடங்கப்பட்டதன் விளைவாக மாணாக்கர்களின் எண்ணிக்கை பன்மடங்கானது. பாடங்களைத் தமிழ் வழியிற் கற்க ஏற்பாடுகள் செய்த பின்னர், பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 70 விழுக்காடு மிகுதியானது. 1977 முதல் 1982 வரை தமிழ், வரலாறு, ஆங்கிலம், பொருளாதாரம் வணிகவியல், அரசியல், அறிவியல் ஆகிய பாடங்களில், முதுநிலை வகுப்புகள் தொடங்கப்பட்டு ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகள் வாயிலாகவும் நடத்தப்பட்டு வருகின்றன.

புகுமுக வகுப்புகள் 1978-இல் கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்டு, மேல்நிலைப் பள்ளிகளில் தொடங்கப்பட்டன. அம்மேல்நிலைப் பள்ளிகளில் பணியேற்று, ஆசிரியப்பட்டம் பெறாத முதுநிலைப் பட்டதாரிகளின் தேவைகளை நிறைவு செய்ய, பி.எட்., எம்.எட். வகுப்புகள் தொடங்கப் பட்டு நடைபெற்று வருகின்றன.

பல்கலைக்கழக மானியக் குழுவின் பரிந்துரையின் படி "காந்தியக் கொள்கை"யை முதன்மைப் பாடமாகக் கொண்ட முதுநிலைப் பாடப்பிரிவு 1982-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் திறந்த வெளிப் பல்கலைக் கழகத் திட்டத்தின் மூலம் (Open University) பட்ட முன்படிப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மூன்று நிலைகளில் இப்படிப்புத் திட்டம் அமைந்துள்ளது. அறிமுக நிலை ஆறு மாதங்கட்கும், தொடக்க நிலை ஓர் ஆண்டிற்கும், அடிப்படை நிலை ஈராண்டுகட்கும் எனப் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

பத்தாண்டுப் பள்ளியிறுதி வகுப்பிற்குச் சமமாகத் தொடக்கநிலையும், பழைய 11 ஆண்டுப் பள்ளியிறுதி வகுப்பிற்குச் சமமாக, அடிப்படை முதலாம் ஆண்டும், பழைய புகுமுக வகுப்பிற்கும், புதிய 12-ஆம் வகுப்பிற்கும் சமமாக அடிப்படை இரண்டாம் ஆண்டும் எனப் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தமிழ் எழுதப்படிக்கத் தெரிந்த எவரும் இக்கல்வித் திட்டத்தில் சேரலாம். அறிமுகநிலையில் சேர்பவர்கள் குறைந்தது 14 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும். ஆங்கிலப் பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ் வழியிற் கற்பிக்கப்படுகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழக மாணாக்கர்கட்கு வானொலி மூலம் பாடங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. திருச்சி, சென்னை, கோயமுத்தூர், திருநெல்வேலி வானொலி நிலையங்கள் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகின்றன. மாணாக்கர்கட்கு முதற்பாடத் தொகுதி அனுப்பும்பொழுது ஒலிபரப்புப் பட்டியலும் அனுப்பப்படுகிறது.

அஞ்சல்வழிக் கல்வியில் ஒப்படைகள் (Assignments), மீள்விடைத் தாள்கள்(Response Sheets) ஆகியவை சிறப்பான கூறுகளாகும். பாடங்களோடு அனுப்பப்படும் ஒப்படைகள், வினா விடைப்பகுதிகள், மீள்விடைத்தாள்கள் முதலியவற்றிற்குமாணாக்கர்கள் விடை அனுப்ப வேண்டும். அவ்வாறு மாணாக்கர்களால் அனுப்பப்பட்ட விடைப்பகுதிகள் ஆசிரியர்களால் திருத்தப்பட்டுத் தேவையான விளக்கங்களோடு மாணாக்கர்கட்கு மீண்டும் அனுப்பப்படுகின்றன. இவ்வாறாக மாணாக்கர்கட்கு எழுத்துப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்த அளவு இத்தனை மீள் விடைத் தாள்கள் நிறைவு செய்யப்பட்டு மாணவர்களால் அனுப்பப்பட வேண்டும் என்ற விதி உண்டு.

ஆசிரிய, மாணாக்கர்களிடையே நல்லுறவு ஏற்படவும், பாடங்கள் தொடர்பாகத் தங்கள் ஐயங்களைக் களையவும், மாணாக்கர்கட்குப் பாடங்களைக் குறைந்த நேரத்தில் விளக்கமாக மனத்தில் பதியும் வண்ணம் எடுத்துக் கூறவும், தொடர்பு வகுப்புகள் (Contact Classes) பல மையங்களில் சனி, ஞாயிறு ஆகிய வார இறுதி நாள்களில் நடத்தப்படுகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அஞ்சல் வழிக் கல்வி இயக்ககம் பி. எட்., எம். எட் போன்ற கல்வித்துறை வகுப்புகளையும், சமூகவியல், உளவியல், பொருளாதாரம், தமிழ், ஆங்கிலம், வணிகவியல், வரலாறு, இயற்பியல், வேதியல், கணிதம் என்பவற்றை முதன்மைப் பாடங்களாகக் கொண்ட முதுகலைப் பட்ட வகுப்புகளையும் நடத்துகிறது. மேலும், இளங்கலையில் அனைத்துப் பாடப்பிரிவுகளும், சட்டத்துறைச் சான்றிதழ் வகுப்புகளும், அடிப்படைநிலை வகுப்புகளும், அஞ்சல்வழிக் கல்வி மூலம் நடத்தப்படுகின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம், தமிழ், வரலாறு, பொருளாதாரம் ஆகிய முதன்மைப் பாடங்களைக் கொண்ட இளங்கலை வகுப்புகளும் முதுகலை வகுப்புகளும் அஞ்சல்வழிப் பயிற்றுவிக்கப்படுகின்றன. பல்வேறு மையங்களில் தொடர்பு வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வி பற்றி ஓர் ஆய்வு அப்பல்கலைக்கழகக் கல்வித் துறையால் மேற்கொள்ளப்பட்டது.

அஞ்சல் வழியில் பயிலும் மாணாக்கர்களில் பெரும்பாலோர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்தோராவர். ஏறக்குறைய ஐந்தில் ஒரு பங்கினர் மாத வருமானம் ரூ.500-க்கும் குறைந்தோராவர். அஞ்சல் வழிக் கல்வித்துறையில் படிக்கும் மாணாக்கர்களில், 20-30 வயதுப் பிரிவினரே மிகுதியாகப் பயில்கின்றனர் என்றும், அடுத்தபடியாக 30-40 வயதுப் பிரிவினர் என்றும், ஐந்து விழுக்காட்டினர் 40 வயதிற்கு மேற்பட்டவர் என்றும் அறியப்பட்டது.

இந்த ஆய்வில், அலுவலர், பணியாளர், படைவீரர், வங்கியில் பணிபுரிவோர், தொழில் துறையினர், கல்வி நிறுவனத்தினர், பொறியாளர், விஞ்ஞானிகள், தொழில் நுட்ப வல்லுநர், சுயதொழில் செய்வோர், குடும்பப் பெண்டிர், வேலையற்றிருப்போர், சிறையில் வாடுவோர் எனச் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் இவ்வஞ்சல்வழிக் கல்வி மூலம் பயன் பெறுகின்றனர் என அறியப்பட்டது. பயன் பெறுவோருள் ஆசிரியர், வேலையின்றி இருப்போர் ஆகியோரின் எண்ணிக்கையே மிகுதியாக உள்ளது.

அஞ்சல்வழிக் கல்வி மூலம் படித்தல், மாணாக்கரின் வாழ்வில் ஏற்படுத்திய விளைவுகளைக் கணக்கிட்டுள்ளனர். சமுதாயத்தில் தம் நிலை உயர்ந்துள்ளது என ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கினரும்,

கல்விப் பயன்கள் விளைந்துள்ளன என நான்கில் ஒரு பங்கினரும், தொழில் பயன்கள் விளைந்துள்ளன என ஆறில் ஒரு பங்கினரும், கற்றுள்ளோம் என்ற மன உணர்வு சிறக்கின்றது என ஒன்பதில் ஒரு பங்கினரும், பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளோம் எனப் பதினொன்றில் ஒரு பங்கினருமாக மாணாக்கர் தாம் பெற்ற பயன்களைத் தெரிவித்துள்ளனர்.

அஞ்சல்வழிக் கல்வி முறையை மேலும் வளப்படுத்த வேண்டுமானால், பாடக் குறிப்புகள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அனுப்புதல், பாடங்களை நிரலாக-வரிசையாக அனுப்புதல், தேர்வு நேரங்களில் மொத்தமாக அனுப்புவதைத் தவிர்த்தல் ஆகியன இன்றியமையாதனவாகும். மேலும், மிகுதியான மாணாக்கர்கள் ஒவ்வொரு வகுப்பிலும் இருப்பதால், ஐயங்களை நீக்க வழியில்லை; தனிக் கவனம் செலுத்தவும் வழியில்லை. ஆகையால் தொடர்பு வகுப்புகளில், ஒவ்வொரு பிரிவிற்குமுரிய மாணாக்கரின் எண்ணிக்கையை வரையறுத்தல் வேண்டும். ஜெ.கோ.பி.

துணை நூல்கள்:

**Bhatia**, S.C., "Continuing Education - Status and Direction", Indian University Association for Continuing Education, Delhi, 1982.

**Gupta**, S.K., "Evaluation of Students performance in Correspondence Education", 1980.

**Pillai**, J.K., "Pedagogy to Methetics", 'Sarvodaya Illakkiya Pannai' Madurai, 1982.

**Pillai**, J.K., **Mohan**,S., "Impact and Performance of Correspondence Education Programme of Madurai Kamaraj University", Department of Education, Madurai Kamaraj University, 1983.

**Ron Glutter Wedell**, B.G., "Study by Correspondence", Longman Group Ltd., London, 1971.

**Sukdev Singh Chib**, "Teaching by Correspondence in India", Light and Life Publishres, New Delhi, 1977.

**அஞ்சனை**[1] என்பவள் குஞ்சரன் என்னும் வானர வீரனின் மகள்; கேசரி என்னும் வானர வீரன் மனைவி; காற்றுக் கடவுளொடு கூடி அனுமனை ஈன்றெடுத்தவள். இவள் அஞ்சனாதேவி என்றும் அழைக்கப்படுவாள். "காற்றின் வேந்தற்கு, அஞ்சனை வயிற்று வந்தேன், நாமமும் அநுமன் என்பேன்" என்று கூறி அநுமன் தன்னை இராம இலக்குவர்களுக்குக் கிட்கிந்தையில் அறிமுகப்படுத்திக் கொண்டனன். அஞ்சனையின் மகனாதலின் அனுமன் ஆஞ்சநேயன் எனவும் அழைக்கப்பெற்றான். வான்மீகி இராமாயணத்தில் அஞ்சனைக்கும் காற்றுக்கடவுளுக்கும் இடையே ஏற்பட்ட உறவு விரித்துரைக்கப்படுகிறது. அவ்வுறவிற் பிறந்தவனே ஆஞ்சநேயன். சாபத்தால் ஒரு கந்தருவப் பெண் காமரூபிணி என்னும் குரங்காகிக் கேசரி என்னும் ஆண்குரங்கினை மணந்தாள். இவள் தன் உண்மை உருவில் உலவுகையில் காற்றுத்தேவன் கண்டு காமுற்றுக் கூடினான். அதனால் பிறந்தவன் அனுமன் என்று இராமாயணம் கூறுகிறது.

அஞ்சனை[2] மகப்பேறு வேண்டி வேங்கட மலையில் தவஞ்செய்தாள். மலைவளம் காண அங்குவந்த உருத்திரன், சத்தி ஆகியோர்க்கு முன் ஆணும் பெண்ணுமாய் இரு குரங்குகள் மகிழ்ந்து ஆடிக் கூட அதனைக் கண்ட உருத்திரன்பால் வெளிப்பட்ட வீரியத்தைக் காற்றுத் தேவன் ஏந்தி அங்குத் தவஞ் செய்த அஞ்சனையின் கையிலிட்டான். அதனைப் பழமென்று உட்கொண்ட அவள் அனுமனைப் பெற்றெடுத்தாள் என்று திருவேங்கட புராணம் உரைக்கிறது.

அஞ்சனை[3] சாருவபூமம் என்னும் திசையானையின் மனைவி. எட்டுத் திசைகளிலும் காவலாக நிறுத்தப்பட்டுள்ள எட்டு ஆண்யானைகளுள் வடதிசைக்கண் உள்ள யானை சாருவபூமம் என்பதாகும். ஆர்.கி.

**அஞ்சி** சங்க காலத்தில் வாழ்ந்த அரசனும் வள்ளலும் ஆவான். காண்க: அதியமான்(2).

**அஞ்சியத்தை மகள் நாகையார்**: காண்க: அஞ்சிலாந்தை மகனார்.

**அஞ்சில் அஞ்சியார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். அஞ்சில் என்னும் ஊரினராதலின் இவர் ஊரோடு சேர்த்து அஞ்சிலஞ்சியார் என அழைக்கப்பட்டார் என்றுசிலரும்,பாடலில் அமைந்துள்ள அஞ்சில் என்னும் தொடரினை அடைமொழியாகக் கொண்டு இவர் இவ்வாறு அழைக்கப்பட்டார் என்று வேறு சிலரும் கருதுகின்றனர். அஞ்சி என்பது தகடூரைத் தலைநகராகக்கொண்ட சிறிய நாட்டை ஆண்டு வந்த அதியரைக் குறிக்க வழங்கிய பெயராகும். எனவே, அஞ்சில் அஞ்சியார் அதியர் குடியில் வந்தவராதல் வேண்டும் என்று கருத இடமுண்டு. இவர் பாடிய பாடலாக நமக்குக் கிடைத்திருப்பது நற்றிணை 90-ஆம் பாடல் ஒன்று மட்டுமேயாம். மருதத் திணையைச் சார்ந்த இப்பாடல், தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுக்கும் துறையில் அமைந்துள்ளது. இப்பாடலால் ஆடைக்குக் கஞ்சி தோய்த்து அணியும் பழக்கமும், ஆடைகளில் பூ வேலைப்பாடு செய்யும் திறமும், பனை நாரினால்

கயிறு திரிக்கும் பயிற்சியும் பழந்தமிழர் பெற்றிருந்தமையினை உணரமுடிகிறது. வே.கா.

**அஞ்சிலாந்தை மகனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவரது பெயர் அஞ்சியத்தை மகள் நாகையார், அஞ்சிலாந்தை மகனார் நாகையார் என்று பலவாறாகக் காணப்படுகிறது. அஞ்சியத்தை மகள் நாகையார் என்பது பெயராயின், இப்புலவர் பெண்பாற்புலவராவர். அப்பொழுது, நாகையார் அஞ்சியின் அத்தை மகளாவார் என்று கூறப்படுகிறது. ஆனால், அத்தை என்னும் உறவுப் பெயர் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவில்லை. அஞ்சிலாந்தை என்பது பெயர்ப் பகுதியாயின், அஞ்சில் என்பது ஊரையும், ஆந்தை என்பது ஆதன் தந்தையையும் குறிக்கும். அங்ஙனமாயின் பாட்டன், தந்தை, மகன் ஆகிய மூவரையும் சுட்டி இப்பெயர் அமைந்ததாகும். இவரது ஒரேபாடல் அகநானூறு 352-ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் அமைந்த இப்பாடல், வரைவிற்குப் பின்னர் மணமனை சென்ற தோழியிடம் தலைமகன் கூறியதாக அமைந்துள்ளது. வரைவு விரும்பிய தோழியிடம் தலைவி கூறியதாகவும் கொள்ளுமாறு பாடல் அமைந்துள்ளது. பாணன் பண்ணில் புதியது புனைந்த திறத்தினும், வதுவை நாளினும் மிக்க இனிமை பொருந்தியவனாகத் தலைவன் உள்ளான் என்று கூறியிருப்பது நயமுடையதாக உள்ளது.

**அஞ்சில் ஆந்தையார்** ஒரு சங்கப்புலவர்; அஞ்சில் என்னும் ஊரினர்; ஆதன் என்பாரின் தந்தையார். ஆதன் தந்தையார் என்னும் தொடர்மொழி ஆந்தையாரென்று மருவிற்று. எனவே, இவர் ஊர்ப் பெயருடன் சேர்த்து அஞ்சிலாந்தையார் என்றழைக்கப்பட்டார். சில பதிப்புகளில் இவர் பெயர் அஞ்சியாந்தையார் என்றும் காணப்படுகிறது. இவர் நற்றிணைப் பாடல் ஒன்றும் (283) குறுந்தொகைப் பாடல் ஒன்றும் (294) பாடியுள்ளார். இவரது நற்றிணைப் பாடல் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளது. இப்பாடல் தலைவியை முறைப்படி மணந்து கொள்ளாது நெடுங்காலம் களவு வாழ்க்கையில் ஈடுபட்டு ஒழுகும் தலைவனைச் சால்பு இல்லாதவன் என்று தோழி தலைவியிடம் இழித்துக் கூறுவதாக அமைந்துள்ளது. இது தலைவியின் நல்வாழ்வில் தோழி கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகிறது.

இவரது குறுந்தொகைப் பாடல் நெய்தல் திணையில் அமைந்துள்ளது. தலைவி தோழிமாருடன் விளையாடியபோது, தலைவன் அடிக்கடி வந்து சென்றதால், ஊரார் பலர் பலவாறு பேசலாயினர். அதனால், தாய் அவளை வீட்டிலேயே இருக்கச் செய்தாள். இதனைத் தலைவன் உணருமாறு தோழி தலைவியிடத்துக் கூறியதாக இப்பாடல் அமைந்துள்ளது. பழந் தமிழ்ப் பெண்டிர் விளையாட்டுகளுள் ஒன்றான 'தழுவணி' என்ற குரவையாடல் இதில் குறிப்பிடப்படுகிறது. வே.கா.

**அஞ்சுவண்ணம்** இடைக்காலத் தமிழகத்தில் செயற்பட்டுவந்த வாணிகக் குழுக்களுள் ஒன்று. டாக்டர் குண்டர்ட்டு, டாக்டர் பர்னால் என்ற அறிஞர்கள் சேரநாட்டில் யூதர்கள் வாழ்ந்த பகுதி அஞ்சுவண்ணம் என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர். எல்லிசு என்ற அறிஞர், இது ஐந்துவகை உரிமைப் பட்டங்களை உணர்த்தும் சொல் என்று கூறுகிறார். அறிஞர்சிலர் இது தன்னுரிமை பெற்றிருந்த ஒரு வணிகக்குழு என்று கருதுகின்றனர். சிலர் இப்பெயர் ஐந்து வகைச் சாதியாரைக் குறிக்கிறது என்று கருத்துத் தெரிவித்துள்ளனர். அஞ்சுவண்ணம் என்பது கிறித்தவ வணிகக் குழு எனச்சிலர் கருதுகின்றனர். 'பல்சந்தமாலை' என்னும் நூலின் மூலம், அஞ்சுவண்ணத்தார் என்போர் இசுலாமிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. தஞ்சை மாநகரிலுள்ள சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள பழைய பாடல் திரட்டொன்று, அஞ்சுவண்ணம் என்பது, கிழக்குக் கடற்கரையிலுள்ள நாகப்பட்டினத்தில் வாணிகம் செய்யும் பொருட்டுத் தங்கியிருந்த முகம்மதியர் குழுவினைக் குறிக்கிறது என்று கூறுகிறது.

துணை நூல்:

தி.வை. சதாசிவப்பண்டாரத்தார், ''கல்வெட்டுகளால் அறியப்பெறும் உண்மைகள்'', தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963.

**அஞ்செங்கோ** கேரள மாநிலத்தில் உள்ள ஒரு சிற்றூர். அஞ்சு தெங்கு என்பதன் சிதைவு. திருவனந்தபுரத்திலிருந்து 28 கி.மீ. தொலைவிலும் கன்னியாகுமரியிலிருந்து 115 கி.மீ. தொலைவிலும் உள்ளது. ஆங்கிலேயர் இந்தியாவில் ஏற்படுத்திய குடியேற்றங்களுள் இதுவும் ஒன்று. அவர்கள் கட்டிய கோட்டையும் பண்டசாலையும் இன்று சிதைவுற்றுக் காணப்படுகின்றன. இக்காலத்தில் இங்கு மீன் பிடித்தலும் கயிறு திரித்தலும் பாய்முடைதலும் நடைபெறுகின்றன.

**அஞ்சைக்களம்** தேவாரப் பாடல் பெற்ற மலைநாட்டுத் திருத்தலமாகும். கேரள மாநிலத்தில் கொடுங்களூருக்கு அருகில் உள்ள இத்தலம் சுந்தரரால் பாடப் பெற்றது. சென்னை - கொச்சி இருப்புப் பாதையிலுள்ள இரிஞாலக்குடா நிலையத்திலிறங்கி 4 கல் தொலைவு கடந்து இவ்வூரை அடையலாம். இங்கிருந்து சுந்தரர் வெள்ளை யானை மீதும், அவர் தோழர் சேரமான் பெருமாள் நாயனார் குதிரை மீதும் ஏறிக் கைலாயத்துக்குப் புறப்

பட்டுச் சென்றனர் என்பது நூற்செய்தியாகும். இறைவன் – அஞ்சைக் களத்தீசர்; இறைவி – உமையம்மை. ஆழ்வார்களுள் ஒருவராகிய குலசேகரர் இத்தலத்தில் தோன்றினார். ரா.கி.

**அஞ்ஞுவதைப்பரணி**: ஆயிரம் யானைகளை அமரிடை வென்ற வீரன்மீது பாடப்படுவது பரணி என்னும் இலக்கியமாகும். மோகம், அஞ்ஞானம் முதலியவற்றை யானையாக உருவகப்படுத்தி, அவற்றை அழித்து ஆன்ம வெற்றிகொண்ட பெருவீரர்மீது பாடப்படுவதாகவும் இப்பரணி இலக்கியம் வளர்ச்சியுற்றது. இவ்வகையிலமைந்த பரணிகளுள் ஒன்று அஞ்ஞுவதைப்பரணி.

அஞ்ஞுவதைப்பரணி வேதாந்தக் கருத்துகள் நிறைந்தது. இந்நூல் நடுநாட்டில் உள்ள வீரமாநகரில் பிறந்த தத்துவராய சுவாமிகள் என்பவரால் இயற்றப்பட்டது. தம்முடைய அஞ்ஞானத்தை அழித்தருளிய குருவின் மீது பாடப்பட்டது இப்பரணி. இந்நூலாசிரியர் காலம் 15 –ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். அஞ்ஞானத்தை அரசனாகவும், அகங்காரம் முதலியவற்றை அவன் சேனைகளாகவும், ஞானத்தை இறைவனாகவும் உருவகஞ்செய்து, ஞானமாகிய இறைவன் அஞ்ஞானமாகிய அரசனை அழித்தமை பற்றிப் பாடப்பட்டதே அஞ்ஞுவதைப் பரணி. இப்பரணிக்கு ஞானப் பரணி என்ற பெயரும் உண்டு. இது தத்துவக் காட்சி என்றும் சொல்லப்படும். இப்பரணி 493 தாழிசைகளைக் கொண்டது; வீறுமிக்க நடையினை உடையது.

கனவுலகிலுள்ள மாயாபுரியின் அரசன் அஞ்ஞன்; நன்றி மறந்த குருடன்; பிறர் குற்றம் காண்பதில் வல்லவன்; அழியும் உடல், மயக்கந்தரும் மகளிர் சொற்கள் ஆகியவற்றை 'மெய்யென்று நம்பி, ஞானிகளின் உரைகளைப் பொய் என்பான்; இளமை வளமைகளைப் பெரிதாக மதிப்பான். துன்மதி என்பவன் இவனுக்கு அமைச்சன். உலக மக்கள் துன்பங் கண்டு இரங்கி, இறைவன், பேரருளே வடிவாக மண்ணில் தோன்றி மெய்யடியார் சூழ வீற்றிருந்தான். ஒற்றர் இறைவன் வந்திருப்பதை அஞ்ஞனுக்கு அறிவுறுத்தினர். அது கேட்ட அஞ்ஞன் இறைவன் பிறந்துள்ளான் என்று சொன்னவர், கேட்டவர், அனைவரையும் சிறையில் அடைத்தான். காமன், கோபன், ஆசை, அகங்காரன் என்னும் படைத்தலைவர் வீரம் பேசி இறைவனை அழிப்போம் என்றனர். முனிவர்கள் இறைவனிடம் இதனைக் கூற, இறைவன் ஒரு வினோதரை அனுப்பி அஞ்ஞனை அழித்தான் என்பது இந்நூற் கருத்தாகும். வீ.பா.


**அட்கின்சன் சேம்சு (கி.பி. 1780–1852)** ஆங்கிலேய மருத்துவர்; கீழ்நாட்டு வரலாற்று ஆராய்ச்சியாளர்; பாரசீக மொழி வல்லுநர். இவர் கி.பி. 1780-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 9–ஆம் நாள் பிறந்தார். பண்டைய பாரசீக இலக்கிய நூல்களை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்தார். அவற்றில் பல கவிதை வடிவில் அமைந்துள்ளன. சாநாமா என்னும் நூலின் ஒரு பகுதியைக் கவிதை வடிவில் மொழி பெயர்த்ததுடன், அந்நூலின் சுருக்கத்தையும் வெளியிட்டார். 'அதீம் தாய்' என்னும் நூலைப் பாரசீக மொழியில் தொகுத்தார். கி.பி. 1842 –ஆம் ஆண்டில் ஆப்கானித்தானத்தின் மீது நடைபெற்ற படையெடுப்பைப் படவிளக்கத்துடன் எழுதினார். இவர் புகழ் மிக்க ஓவியரும் ஆவர். 'ஆப்கானித்தானம் பற்றிய வரைபடங்கள்' என்னும் தலைப்பில் இவர் ஓவியங்களைத் தீட்டினார். கி.பி. 1852 –ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 7–ஆம் நாள் காலமானார்.

**அட்சய குமாரன்** இராவணன் மைந்தர்களுள் ஒருவன். அட்சன், அட்சயன், அக்ககுமாரன், அட்சகுமாரன் என்னும் பெயர்கள் இவனையே குறிக்கும். 'குறைவில்லாதவன்' என்பது இவன் பெயரின் பொருள். அநுமன் தன் வருகையை இராவணனுக்குத் தெரிவிப்பதன் பொருட்டுச் சீதையைச் சிறைவைத்துள்ள அசோகவனிகை எனப்படும் பொழிலை அழித்தான். பருவத்தேவர் வாயிலாக இச்செய்தி அறிந்து, அநுமனைப் பிடித்து வருமாறு கிங்கரர் என்னும் அரக்க வகுப்பினரை அனுப்பினான். அவ்வரக்கர் அநுமனால் கொல்லப்பட்டனர். பின்னர்ச் சம்புமாலி என்பவனை ஏவ, அவனையும் அநுமன் கொன்றான். பின்னர், விரூபாட்சன், யூபாட்சன், துர்த்தரன், பிரகசன், பாசகர்ணன் என்ற ஐந்து சேனாபதியர் சென்றனர். அவர்யாவரும் மாண்டனர். இதனை அறிந்து கோபம் கொண்ட இராவணன் தானே அநுமனோடு போரிடச் செல்ல நினைத்தபொழுது, தந்தையைத் தடுத்து நிறுத்தித் தானே போரிடப் புறப்பட்டான் அட்சகுமாரன். அவனுக்குத் துணையாக அரக்க வீரர் பலர் சென்றனர். அரக்க வீரரை அழித்த பின், அட்சகுமாரனின் தேரைத் தகர்த்தான் அநுமன். பின் இருவருக்கும் வானில் போர் நிகழ்ந்தது. முடிவில் அட்சகுமாரன் எலும்பெல்லாம் ஒடிந்து நசுக்கப்பட்டுக் கீழே விழுந்து மாண்டான். இராம. பொ.

**அட்சர காலம்**: கருநாடக இசையில் தாளத்தின் எண்ணிக்கைக் கால அளவு அட்சர காலம் எனப்படும். ஆதிதாள ஆவர்த்தம் ஒன்றுக்கு எட்டு எண்ணிக்கைகள் அல்லது அட்சர காலங்கள் உள்ளன. தாளத்திற்குத் தகுந்தவாறு அட்சர காலங்கள் மாறுபடும். சுர ஒலியில் 'ச' போன்ற குறில் சுரங்களுக்கு ஒரு அட்சர காலமும்,'சா'போன்ற நெடில் சுரங்களுக்கு இரண்டு அட்சர காலமும் தரப்படுகின்றன.

காண்க: இசை.

**அட்சன் ஆறு**: அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சிறப்பான வாணிகம் நடைபெறும் நீர்வழி அட்சன்



அட்சன் ஆறு

ஆறாகும். அது நியூயார்க்கு மாநிலம் முழுவதும் பாய்கிறது. கி.பி. 1609 -இல் என்றி அட்சன் என்னும் ஆய்வுப் பயணி இவ்வாற்றை ஆய்ந்த முதல் வெள்ளையராவார். அவர் பெயராலேயே இது இவ்வாறு குறிக்கப்படுகிறது. அட்சன் ஆற்றை 'அமெரிக்காவின் ரைன்' என்று கூறுவர். இவ்வாற்றின் சில அழகான கரைப் பகுதிகள் இரைன் ஆற்றுக் கரைகளைப் போல் இருப்பதால் இப்பெயர் வந்தது. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் அட்சன் ஆறு சீரிய இடத்தைப் பெறுகிறது.

அட்சன் ஆறு (Hudson River) 492 கி. மீ. நீளமுள்ளது. நியூயார்க்கு மாநிலத்தில் உள்ள பெரிய ஆறாகவும் இது விளங்குகிறது. தியர்-ஆப்-தி-கிளவுடுசு (Tear-of-the-clouds) என்னும் சிறிய ஏரியிலிருந்து இந்த ஆறு தொடங்குகிறது. அந்த ஏரி கடல் மட்டத்தைவிட 1317 மீ. உயரமுள்ளது. அடிராண்டாக்கு மலைத்தொடரின் காட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஏரி அது. நியூயார்க்கு மாநிலத்தின் கிழக்கு எல்லையில் நேர் தெற்காகப் பாய்ந்து, அட்சன் ஆறு அட்லாண்டிக்குப் பெருங்கடலில் கலக்கிறது. மோகாக்கு ஆறு இதன் துணையாறுகளுள் ஒன்று.

அட்சன் ஆற்றில் பெருங் கப்பல்கள் 232 கி. மீ. தொலைவிலுள்ள ஆல்பனி (Albani) என்னும் நகரம் வரை செல்கின்றன. சிறுபடகுகள் தொடர்ந்து 10 கி. மீ. தொலைவிலுள்ள திராய் என்னும் ஊர் வரை செல்லலாம். ஐரோப்பாவிலிருந்து கப்பற்பயணம் செய்யும் பயணிகள், அட்சன் ஆற்றின் கீழ்க்கரையில் உள்ள நியூயார்க்கின் பெருந்துறைமுகத்தில் வந்து கரையிறங்குகிறார்கள். சார்சு வாசிங்டன் (George Washington) பாலம் இவ்வாற்றின் கழிமுகத்திற்கருகில் கட்டப்பட்டுள்ளது.

கி. பி. 1524 -இல் கியோவன்னிடா விராசானோ என்னும் இத்தாலிய மாலுமிதான் இந்த ஆற்றைக் கண்ட முதல் ஐரோப்பியர். அட்சன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் முதன்முதல் குடியேற்றங்களை அமைத்தவர்கள் தச்சுக்காரர்களே (The Dutch).

**அட்சன் என்றி** என்பார் ஆங்கிலப் புத்தாய்வுப் பயணியும் கப்பல் தலைவருமாவார். இவரது இளமைக் காலத்தைப் பற்றிய விவரங்கள் கிடைத்தில. இவர் கி. பி. 1611-இல் காலமானார் என்பது மட்டும் தெரிய வருகிறது. ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையில் நான்கு பயணங்களை மேற்கொண்டு வடக்குத் தடத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டவர் அட்சன் என்றி (Hudson Henry). ஆனால் அட்சனால் அத்தகைய கடல் வழியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இவர் வடக்குத் திசையில் பயணம் செய்து வந்த பயணிகளைவிடத் தொலை தூரம் சென்று வந்தவர் ஆவர். அட்சன் ஆறு, அட்சன் விரிகுடா, அட்சன் நீர்ப்பிரிவு என்று



அட்சன் என்றி

கூறப்படும் மூன்று நீர்நிலைகளைத் தம் ஆய்வுப் பயணம் மூலம் கண்டறிந்தவர் இவர். எனவே இவரது பெயராலேயே அம்மூன்று நீர்நிலைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன என்பது இவருக்குப் பெருமை சேர்க்கும்.

அட்சன் இங்கிலாந்திலிருந்து ‘ஆப்வெல்’ என்னும் கப்பலில் தம் இளைய மகன் சான் என்பானுடனும் பத்து மாலுமிகளுடனும் புறப்பட்டார். இவர் கிரீன்லாந்துக் கடற்கரையின் வடகிழக்காகப் பயணம் செய்து இசபிட்சுபர்கன் (Spitsbergen) என்னும் தீவுகளைச் சேர்ந்தார். இத்தீவுகள் வடதுருவத்திலிருந்து 1,100 கி.மீ. தொலைவில் அமைந்திருந்தன. மிதக்கும் பெரும் பனிக்கட்டிகள் அட்சனை மேற்கொண்டு பயணம் செய்ய முடியாது தடுத்தமையால், இங்கிலாந்து திரும்ப வேண்டியவரானார்.

ஆங்கில வணிகர் சிலர் கி.பி. 1610–இல் வணிகக் குழு ஒன்றை நிறுவி அட்சனைப் புதிய பயணம் ஒன்றைச் செய்யப் பணித்தனர். இவர் அட்லாண்டிக்குப் பெருங்கடலைக் கடந்து இலாப்ரடார் கடற்கரைவரை பயணம் செய்தார். இவர் பெரும் தொல்லைகளினூடே பயணம் செய்து அட்சன் நீர்ப்பிரிவைக் கண்டார். பின்னர், அதுவே அட்சன் விரிகுடாவைக் கண்டுபிடிக்க உதவியது.

அட்சன் கி.பி. 1611–ஆம் ஆண்டு சேம்சு விரிகுடாவிலிருந்து மேற்கில் பயணம் செய்து வழி காண வேண்டுமென்று நினைத்தார். ஆனால் இவர் துணைவர்களுள் சிலர் கலகம் செய்தனர். அட்சன் தம் மகனுடனும் சில மாலுமிகளுடனும் ஒரு சிறிய படகை எடுத்துக் கொண்டு பயணமானார். ஆனால் இவர் திரும்பி வரவேயில்லை.

கலகம் செய்த ஏனைய மாலுமிகள் இங்கிலாந்திற்குத் திரும்பினர். அட்சன் விரிகுடாவிலிருந்து பசிபிக்குப் பெருங்கடலுக்குப் போக முடியும் என்னும் நம்பிக்கையை இவர்களின் அறிக்கை அளித்தது. அட்சனின் இறுதிப் பயணத்தின் அடிப்படையிலேயே அட்சன் விரிகுடாவைச் சுற்றியிருந்த பெரும் பரப்பை இங்கிலாந்து உரிமை கொண்டாடியது. இப்பகுதியில் பயணம் செய்ததன் பயனாக, கி.பி. 1670–இல் அட்சன் விரிகுடா வணிகக்குழு நிறுவப்பெற்று, மென்மயிர்த் தோல் வாணிகம் பெருகலாயிற்று.

**அட்சன் நீர்ப்பிரிவு** வடகிழக்குக் கானடாவில் தாபின் தீவிற்கும் குவிபெக்கு மாநிலத்திற்கும் இடையிலுள்ளது. இந்நீர்ப்பிரிவு, அட்சன் விரிகுடாவையும் அட்லாண்டிக்குப் பெருங்கடலையும் இணைக்கிறது. இதன் நீளம் 720 கி.மீ; அகலம் 80 கி.மீ. முதல் 240 கி.மீ. வரை மாறுபடுகிறது. வேகம் மிகுந்த நீரோட்டமும் பனிக்கட்டிகள் நகர்வதும் கப்பல் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளன. அட்சன் விரிகுடா வாணிகக் குழுவினர் இந்நீர்ப்பிரிவை கி.பி. 17–ஆம் நூற்றாண்டிலிருந்து பல இன்னலுக்கிடையிலும் கப்பலோட்டிப் பயன்படுத்தி வந்தனர். இந்நீர்ப்பிரிவில் முதன்முதலாகக் கப்பலோட்டிச் சென்றவர் புரோபிசர்(Frobisher)என்பவராவார். இந்நீர்ப்பிரிவை கி.பி. 1610-ஆம் ஆண்டில் என்றி அட்சன் கண்டு பிடித்தார். அதனால் இது இவர் பெயர் கொண்டு விளங்குகிறது.

**அட்சன் விரிகுடா** கனடா நாட்டின் வடகிழக்கில் பரந்து விரிந்துள்ள உள்நாட்டுக் கடலாகும். இதன் பரப்பளவு 8,19,731 ச.கி.மீ.

இந்த விரிகுடா, தென்கோடியிலுள்ள சேம்சு விரிகுடாவுடன் இணைந்து 1690 கி.மீ. நீளமும் 1118 கி.மீ. அகலமும் கொண்டது. இது ஏறத்தாழ 100மீ. ஆழமுடையது. அட்சன் நீர்ப்பிரிவு அட்சன் விரிகுடாவை அட்லாண்டிக்குப் பெருங்கடலுடன் இணைக்கிறது. பாக்சு கால்வாய் இவ்விரிகுடாவை ஆர்க்டிக்குப் பெருங்கடலுடன் இணைக்கிறது.

இவ்விரிகுடாவை அடுத்துள்ள வடகரைப் பகுதிகளில் உள்ள நிலப்பரப்பு மிகக் குளிர்ந்தும் தட்டையாகவும் மரங்கள் இன்றியும் உள்ளது. இதனைத் துந்திரப் பகுதி என்பர். இதன் தெற்கில் காடுகள் வளர்ந்துள்ளன; கிழக்கில் நெடிதுயர்ந்தும் செங்குத்தானதுமான மலைகள் எழுந்துள்ளன. மேற்கிலுள்ள தட்டையானதும் ஈரப்பசையுள்ளதுமான நிலம் பாக்சு (bogs) என்னும் சதுப்பு நிலம் ஆகும். அட்சன் விரிகுடாவின் சிறப்பான வாணிக நடவடிக்கை, கப்பலில் சரக்கேற்றலேயாம். பனிக்கட்டியாக மாறாத பருவமாகச் சூலை முதல் அக்டோபர் வரையிலான மாதங்களைக் கருதலாம். அட்சன் நீர்ப்பிரிவின் வழியாகப் பல நாட்டுக் கப்பல்கள் இவ்விரிகுடாவிற்கு வந்து செல்லும். அவை மாட்டிறைச்சித் தொடர்பான பொருள்கள், உணவு தானியம் உள்ளிட்ட பொருள்கள் ஆகியவற்றை ஏற்றிச் செல்லும். சர்ச்சில் ஆற்றின்




அட்சன் விரிகுடா

கழிமுகத்தில் அமைந்துள்ள சர்ச்சில் என்னும் நகரம் சிறந்த துறைமுகமாகவும் விரிகுடாவில் அமைந்துள்ள மக்கள் தொகை மிக்க நகரமாகவும் விளங்குகிறது. தானிய ஏற்றுமதி மையமாக இவ்வூர் திகழ்கிறது. அட்சன் விரிகுடா இருப்புப்பாதை, சர்ச்சில் நகரை மேற்குக் கானடாவுடன் இணைக்கிறது.

எசுகிமோக்களும் செவ்விந்தியர்களுமே அட்சன் விரிகுடாவின் அருகில் வாழ்ந்த தொன்மையான மக்கள். இன்று எசுகிமோக்கள் துந்திரப் பகுதியில் சிறுசிறு குழுவினராகவும் பிளவுபட்ட சமூகங்களாகவும் வாழ்கிறார்கள். செவ்விந்தியர்கள் சர்ச்சில் நகரத்திற்கு அருகிலும் சேம்சு விரிகுடாவுக்கு அருகிலும் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிறார்கள். விரிகுடாவில் வாழும் எசுகிமோக்கள், செவ்விந்தியர்கள் ஆகியோரில் பலர் விரிகுடாப் பகுதியில் கட்டுமானப் பணிகளிலோ சில்லரை வாணிகத்திலோ ஈடுபட்டுள்ளனர். பலர் அரசுத் துறைத் தொடர்பான நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். எஞ்சியோர் மீன் பிடித்தும் வேட்டையாடியும் வாழ்கின்றனர்.

அட்சன் விரிகுடா என்பது, என்றி அட்சன் என்னும் ஆங்கிலக் கண்டுபிடிப்புப் பயணியின் நினைவாக வந்தது. இவர் இதனை கி.பி. 1610-ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார். கி.பி. 1670-இல் அட்சன் விரிகுடா வாணிகக்குழு என்ற பெயரில் மென்மயிர்த் தோல் வாணிகம் செய்ய ஆங்கில வணிகர் சிலர், அட்சன் விரிகுடாக் கடற்கரையில் ஒரு குழுவை அமைத்தனர். அதனை இங்கிலாந்து தனக்குச் சொந்தமான பகுதியென உரிமை கொண்டாடியது. ஆங்கிலேயர் கி. பி. 1811-இல் மேற்குக் கானடாவின் பண்ணை நிலங்களைச் சென்றடைய இவ் விரிகுடாவின் வழியே சென்றனர். இங்கிலாந்து கி.பி. 1870-இல் விரிகுடாப் பகுதியைக் கானடா நாட்டிற்குக் கொடுத்துவிட்டது.

**அட்சன் விரிகுடா வாணிகக்குழு**: மேற்குக் கானடா நாட்டு வரலாற்றில் சீரிய இடத்தைப் பெற்றுள்ள வாணிக நிறுவனம் அட்சன் விரிகுடா வாணிகக் குழுவாகும். இது கி.பி. 1670-ஆம் ஆண்டில் இலண்டனில் நிறுவப்பட்டது. இது அட்சன் விரிகுடாப் பகுதியில் மென்மயிர் வாணிகத்தில் ஈடுபடத் தொடங்கப்பட்ட குழு. இன்று இக்குழு கானடாவின் மிகப் பெரிய வாரியங்களுள் ஒன்றாக விளங்குகிறது. இக் குழுவின் பெரும்பாலான பண்டசாலைகள் அட்சன் விரிகுடா, சேம்சு விரிகுடா போன்ற கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. ஆர்க்டிக்குப் பெருங்கடலிலும் மேற்கு உள்நாட்டுப் பகுதிகளின் கரைகளிலும் இவை அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவின் பண்டசாலைகள் கானடாவின் பெரிய நகரங்களிலும் உள்ளன.

இவ்வாணிகக் குழுவை நிறுவப் பிரான்சு நாட்டு வணிகர் இருவர் உதவினர். கி.பி. 1670-ஆம் ஆண்டில் இங்கிலாந்து மன்னர் இரண்டாம் சார்லசு, இக்குழுவிற்கு வாணிகம் செய்யும் உரிமையை அளித்தார். அட்சன் விரிகுடாவில் கலக்கும் ஆறுகள் பாயும் அனைத்து நிலப்பகுதிகளிலும் வாணிகம் செய்யும் முற்றுரிமையை இக்குழு பெற்றது. இக்குழுவினரிடமிருந்து செவ்விந்தியர் பண்டமாற்று முறையில் மணிகள், வெந்நீர்க் கெண்டிகள், நீர் நாய்களை வேட்டையாட உதவும் கத்திகள் போன்றவற்றைப் பெற்றனர்.

அட்சன் விரிகுடா வாணிகக் குழு நிலங்களையும் அங்கு வாழும் மக்களையும் உரிமை கொண்டாடியது. கி.பி. 1869-ஆம் ஆண்டுச் சாசனப்படி ஆண்டுவந்த நிலங்களைக் கானடா அரசே எடுத்துக் கொண்டு, மேற்குப் பிரெய்ரியில் உள்ள பண்ணை நிலத்தைக் கொடுத்தது. காலப் போக்கில் வாணிகக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நிலங்கள் அனைத்தும் விற்கப்பட்டன. எனினும் பல இலட்சம் ஏக்கர் பரப்புடைய அந்நிலங்களில் சுரங்கங்கள் வெட்டிக் கனிப்பொருள்கள் எடுக்கும் உரிமையை மட்டும் அவ் வாணிகக் குழு பெற்றது.

முதல் உலகப் போர் மூண்ட காலத்தில் அட்சன் விரிகுடா வாணிகக் குழு அதன் மொத்த வாணிகத்தையும் சில்லரை வாணிகத்தையும் விரிவுபடுத்தத் தொடங்கியது. இக்காலத்தில் அக்குழு நகரங்களிலும் நகர்ப்புறச் சேரிகளிலும் பல புதிய பல்பொருள் அங்காடிகளைத் திறந்து வாணிகம் செய்தது. நிலங்களை வாங்கி விற்கவும் பெட்ரோல் இயற்கை எரிவாயு போன்ற பொருள்களை வாங்கவும் விற்கவும் பெரும் பொருளை முதலீடு செய்தது. கி.பி. 1970-இல் இந்நிறுவனத்தின் தலைமை இடம் கானடாவில் உள்ள வின்னிபெக்கு மாநகருக்கு மாற்றப்பட்டது.

**அட்டகம்** என்பது எட்டு அடங்கியதொரு தொகுதியினைக் குறிக்கும். எட்டுப் பகுதிகள் கொண்ட நூலையும் எட்டுப் பாக்களால் அமைந்த நூலையும் இவ்வாறு தொகைப் படுத்திக் கூறும் மரபு உள்ளது. வடமொழியிலுள்ள பாணினி வியாகரணம் எட்டு அத்தியாயங்கள் கொண்டுள்ளமையால், எட்டு அத்தியாயங்கொண்டது என்னும் பொருளில் அட்டாத்தியாயி என வழங்கப்படுகிறது. தமிழில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய சிற்றிலக்கியங்கள் எட்டினை அவருக்குப் பின் வந்தோர் 'அட்டப் பிரபந்தம்' எனப் பெயரிட்டுப் போற்றி வருகின்றனர். தன்பால் அமைந்துள்ள செய்யுள் எண் அடிப்படையில் ஒரு சிற்றிலக்கியம் சதகம், தசகம், பஞ்சகம் எனக் குறிக்கப்படுவதுண்டு. அவ்வகையில் ஏதேனுமொரு பொருள் மீது எவ்வகைப் பாவினாலும் அமைந்த

எட்டுப் பாடல்கள் கொண்டதாகத் தமிழில் பாடப்படும் சிறுநூல் அட்டகம் எனப்படும். எவர் மீது இந்நூல் பாடப்படுகிறதோ அவர் பெயரொடு சேர்த்துச் சிவாட்டகம், சுப்பிரமணியாட்டகம் என்பதாக வழங்கப்படும். சைவத்திருமுறையிலுள்ள கார் எட்டு என்னும் நூலுக்கு அப்பெயர், அட்டகம் என்பதன் நேரிய தமிழ்ச் சொல்லால் அமைந்ததொன்றாகும். ஊர்ப் பெயரொடு சேர்த்துத் 'திருப்போரூர் அட்டகம்' என்று வழங்குவதுமுண்டு.

**அட்ட கிராமம்:** எட்டுக் கிராமங்களைக் கொண்ட ஊர் அட்ட கிராமம் எனப்படும். இராமானுசர் மைசூரை யாண்டுவந்த சமண சமயத்தைச் சார்ந்த பிச்சாளன் என்னும் ஒய்சாள அரசனை வைணவ சமயத்திற்கு மாற்றினார். இதனால் தனது பெயரை அவன் விட்டுணு வர்த்தனன் என மாற்றிக் கொண்டான். இவ்வரசன், சீரங்கப்பட்டணத்திற்கருகில் காவிரியின் இருகரையிலும் உள்ள எட்டுக் கிராமங்களை இராமானுசருக்குப்பரிசாக அளித்தான். இதனால் இக்கிராமத்திற்கு "அட்ட கிராமம்" எனப் பெயர் வந்தது. இவை கி.பி. 1863–ஆம் ஆண்டு மைசூர், ஆசன் மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டன. இங்குச் சர்க்கரை உற்பத்தித் தொழில் சிறப்பானது. இங்கு உற்பத்தி செய்யப்படும் சர்க்கரைக்கு "அட்ட கிராமம்" என்று பெயர்.

**அட்டகோண மகரிசி** கண்டுவ மகரிசியின் மகன். தம் மாமன் கூறியபடி குபேரனைக் காணச் செல்ல, வழியில் ஒரு பெண் இவரை மயக்கினாள். மயங்காது, ஒழுக்கம் காத்து ஊர் திரும்பி, வதான்ய முனிவர் மகளை மணந்தார். அம்முனிவரிடம் மறை முதலியவற்றைக் கற்றுணர்ந்தார். வேதப் புலமையில் தம் தந்தையாரை வென்றவர். திருமால், நான்முகன், உரோமரிசி முதலியோர் வந்து இவரிடம் தத்தம் வாழ்நாள் அளவு கேட்டுச் சென்றனர்.

இவர் இயமுனைக் கரையில் தவம் புரிந்தார். அங்கு நீராடவந்த மாந்தாதாவின் பெண்கள் இவரது அழகில் மயங்கி இவரை மணந்தனர். பின், இவரது கோணலைக் கண்டு மறுத்தனர். அதனால், சினங்கொண்ட இவர் அப்பெண்களைக் கனிகளாகுமாறு சபித்தார்.

அநேகபத்தர் என்னும் இருடி, பல பிள்ளைகளுக்கு வேதம் கற்பித்தார். பாடங் கேட்குங்கால் உறங்கிய ஒரு மாணவனைச் சினந்தார். அப்பொழுது மனைவியின் கருப்பத்திலிருந்த குழந்தை, இரவு பகலின்றி ஓதினால் உறக்கம் வராதா? என்று வினவிற்று. அதனைக் கேட்டுச் சினந்த ஆசிரியர், 'நீ பிறந்து பூமியை அடையும்போது எட்டுக் கோணலாக அமைவாயாக' என்று சாபமிட்டார். அக்குழந்தையே பிற்காலத்தில் அட்டகோணமகரிசி என வழங்கப்பெற்றது.

புத்தரொருவரொடு வாதிட்டபோது உதவியமையால் மகிழ்ச்சியுற்ற தந்தை, இவரைச் சாமங்க ஆற்றில் முழுகச் செய்து இவர்தம் கோணலை அகற்றினார். ஒரு பிரமன் இறந்தால் உடம்பு முழுதும் முடியுடைய உரோமரிசியின் ஒரு முடி உதிரும் என்றும், மூன்றரைக் கோடி பிரமர் இறந்தால் இவரது ஆயுள் முடியும் என்றும், அப்போது அட்டகோண மகரிசிக்கு ஒரு கோணல் நிமிரும் என்றும் கூறப்பட்டுள்ளது.

த.கோ.

**அட்டதிக்கசங்கள்** விசயநகர அரசர் கிருட்டிணதேவராயரின் அவையில் இருந்த எட்டுப்பெரும் புலவர்கள். அட்டம் என்றால் எட்டு என்றும் திக் என்றால் திசை என்றும் கசம் என்றால் யானை என்றும் பொருள்படும். அவர்கள் 1. அல்லசானி பெத்தண்ணா, 2. நந்தி திம்மண்ணா, 3. பட்டுமூர்த்தி, 4. தூர்சதி, 5. மாதய்யகாரி மல்லண்ணா, 6. அய்யலராசு இராமபத்திரர், 7. பிங்கலி சூரண்ணா, 8. தெனாலி இராமகிருட்டிணா ஆகியோர் ஆவர். அவர்களைத் தவிர சங்குசலா நரசிம்மகவி, வேமண்ணா கனகதாசர் ஆகியோரும் கிருட்டிணதேவராயரின் காலத்திலோ அவருக்குப் பின்னரோ வாழ்ந்தவர்கள்.

அல்லசானி பெத்தண்ணாவுக்கு ஆந்திரக் கவிதா பிதாமகர் என்னும் பட்டத்தைச் சூட்டினார் கிருட்டிணதேவராயர். ஆந்திரக் கவிதா பிதாமகர் என்பதற்குத் தெலுங்குக் காப்பியத்தின் பாட்டனார் என்பது பொருள். அவர் கிருட்டிணதேவராயரின் அரசவைக் கவிஞராகவும் விளங்கித் தெலுங்கிலும் வடமொழியிலும் மிகுந்த புலமை பெற்றிருந்தார். அவர் எழுதிய சிறந்த நூலின் பெயர் சுவரோசிசுன சம்பவம் (மனு சரித்திரம்) என்பது. இக்கதையை இவர் மார்க்கண்டேய புராணத்திலிருந்து எடுத்தாண்டிருக்கிறார்.

நந்தி திம்மண்ணா கிருட்டிணதேவராயரின் அவையை அணிசெய்த புலவர் பெருமக்களுள் இரண்டாமிடத்தைப் பெற்றவர். அவர் ஒரு சைவர். அவரது நூலின் பெயர் 'பாரிசாத பகரணமு' என்னும் தெலுங்குக் காப்பியமாகும்.

பட்டுமூர்த்தி என்பார் பின்னர் இராமராச பூடணம் என்று அழைக்கப்பட்டார். அவரது நூலின் பெயர் 'வசுசரித்திரம்'. அது கலைகளுக்கெல்லாம் முத்துப் போன்றது. அவரது பிறிதொரு நூல் நரச பூபாலியம் எனப்படும். அரிச்சந்திர – நளோபாக்கியானம் என்னும் அவரது மூன்றாம் நூல் அரிச்சந்திரன் நளன் ஆகியோர் கதையைக் கூறுகிறது.

தூர்சதி என்ற பெயர் கொண்ட கவிஞரும் ஒரு சைவர்; சொந்த ஊர் காளத்தியாகும். அவர் எழுதிய காளகசுத்தி மகாத்மியம் என்னும் நூல் சிறப்பு மிக்கது. காளகசுத்தி திருக்கோயிலைக் குறித்து அவர் 'சதகம்' ஒன்றையும் பாடியுள்ளார். அவருடைய நூல்களைக் கிருட்டிணதேவராயர் பெரிதும் போற்றினார்.

மாதய்யகாரி மல்லண்ணாவும் சைவரே. அவரும் கிருட்டிணதேவராயரின் அவைப் புலவராவர். அவர் எழுதிய 'இராசசேகர சரித்திரம்', சாளுவதிம்மரின் உறவினரும் கொண்ட வீட்டின் ஆளுநருமான நாதெந்தலா அப்பா என்பாருக்கு உரிமையாக்கப்பட்ட நூலாகும். இந்நூல் பிரபந்த வகையைச் சார்ந்ததாகும்.

அய்யலராசு இராமபத்திரர் என்பாரைப் பிள்ளை இராமபத்திரர் என்றும் அழைப்பர். அவருக்குப் பிள்ளைகள் பலர் இருந்தனர் போலும். இராமராச பூடணம் என்பாரின் உறுதுணையால் அவர் கிருட்டிண தேவராயரின் அன்பைப் பெற்றவர் என்று கருதுவர். அவர் எழுதிய நூலின் பெயர் 'சகலகதாசார சங்கிரகம்' என்பதாகும். இந்நூல் புராணக் கதைகளின் சுருக்கமாகும். 'இராமாப்யுதயம்' என்னும் அவர் எழுதிய மற்றொரு நூல் இராமகாதையைக் கூறுகிறது.

பிங்கலி சூரண்ணா அட்ட திக்கசங்களுள் ஒருவராக எண்ணப்பெற்றாலும் கிருட்டிணதேவராயரின் ஆட்சிக்காலத்திற்குப் பின் வாழ்ந்தவர். அவர் எழுதிய இராகவ–பாண்டவ்யம் என்னும் கவிதை, இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் ஒரே சமயத்தில் கதையாகக் கூறும் நூலாகும். சூரண்ணா எழுதிய பிற நூல்கள் 'கலாபூரணோதயம்', 'பிரபாவதி பிராத்யுமனா' என்பனவாம்.

தெனாலி இராமகிருட்டிணா சாகாவரம்பெற்ற விகடகவி. கிருட்டிண தேவராயர் காலத்தில் வாழ்வைத் தொடங்கி வேங்கடரின் காலம் வரை வாழ்ந்தவர். அவருடைய விகடகவிகளைக் கேட்டு அரசவை மகிழ்ச்சியில் திளைக்கும். அவர் எழுதிய 'பாண்டுரங்க மகாத்மியம்' தெலுங்கு இலக்கியத்தில் சிறப்பாகப் பேசப்படும் ஐந்து காப்பியங்களுள் ஒன்றாகும். 'உத்போதசார்ய சரிதம்' என்னும் நூல், அவர் தொகுத்த பிற நூலாகும்.

மேற்கூறிய எண்மரும் அட்ட திக்கசங்கள் எனப் பெறுவர்.

**அட்டப்பிரதான்** என்னும் சொல் எண்மர் அமைச்சர் எனப் பொருள்படும். 17–ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் மகாராட்டிரத்தை ஆண்ட சிவாசி மன்னனின் அமைச்சரவை அட்டப்பிரதான் எனப்பட்டது. மராட்டிய மாவீரன் சிவாசி பண்டைய அற நூல்களின் கூற்றுப்படி ஆட்சி செய்தவன். அமைச்சர்களுக்குத் திட்டவட்டமான பணிகளை வகுத்தளித்தான். சிவாசி மக்களாட்சி முறையைப் பின்பற்றவில்லை. எனவே, அமைச்சர்கள் தனி அதிகாரம் பெறவில்லை. அரசாங்கத்தைத் திறமையாக நடத்த அமர்த்தப்பட்டவர்கள் இவ்வமைச்சர்கள். அட்டப்பிரதானில் இருந்த அமைச்சர்கள் எண்மரும் அரசனது ஆலோசனைக்குழு உறுப்பினர்களே. அந்த எண்மர்,

1. பேசுவா அல்லது தலைமை அமைச்சர்
2. அமாத்தியர் அல்லது நிதி அமைச்சர்
3. மந்திரி அல்லது அரசரின் சிறப்பு ஆலோசகர்
4. சேனாபதி அல்லது படைத்தளபதி
5. சச்சீவா அல்லது அரசரின் கடிதப் பொறுப்பாளர் மற்றும் பொருள் கண்காணிப்பாளர்
6. சுமந்து அல்லது வெளியுறவு அமைச்சர்
7. நியாயாதிசு அல்லது தலைமை நீதிபதி
8. பண்டிதராவ் அல்லது அறநிலையம் மற்றும் சமயத்துறைத் தலைவர் எனப்படுவர்.

தலைமை நீதிபதியான நியாயாதிசு என்னும் பதவி வகிப்பவரே நாட்டின் மிக உயர்ந்த நீதிபதி. உள்நாட்டிலும் இராணுவத்திலும் நீதியை நிலைநாட்டும் பொறுப்பு அவருடையதே. நிலம், கிராமம், குடும்பத் தலைவர் போன்ற விவரங்களில் வரும் உரிமை பற்றிய சிக்கல்களைத் தீர்த்து முடிவு கூறுவது இவரது தலையாய கடமை ஆகும்.

பண்டிதராவ், தனதயக்சா என்றும் சதர் என்றும் முகதாசிப்பு என்றும் சொல்லப்படுவார். இவரை அறத்துறைத் தலைவர் என்பதும் பொருந்தும் சமய விழாக்களுக்கான நாட்களை முடிவு செய்தல், சமயத்தைப் பழிப்பவர்களைத் தண்டித்தல், அறப்பணிகளுக்காக அரசரால் ஒதுக்கப்பெற்ற பெருந்தொகையை அந்தணர்களுக்குப் பகிர்ந்துகொடுத்தல் போன்றவை இவருடைய தலைசிறந்த பணிகளாம். சமயச் சட்டம், அரசருக்கான பஞ்சாங்கம், பொது ஒழுக்கத்தை வரையறுத்தல் போன்றவற்றிற்கும் இவரே பொறுப்பாளர் ஆவார்.

பேசுவா, அமாத்தியர் ஆகியோர்க்கு இராணுவப் பணிகள் கிடையா. ஏனையோர் படைகளை நடத்திச் செல்லுதலும், படைகளுக்குத் தலைமை தாங்குதலுமாகிய பொறுப்புகளை உடையராயிருந்தனர்.

**அட்டப்பிரபந்தம்** 'திவ்வியகவி' பிள்ளைப் பெருமாளையங்கார் எழுதிய எட்டுப் பிரபந்தங்கள் அடங்கிய ஒரு தொகுப்பு நூலாகும். அழகிய மணவாளதாசர் என்னும் வேறு பெயருடைய இந்நூலா

சிரியர் திருமங்கை என்னும் ஊரில் தோன்றினார்; கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். வைணவ சமயத்தில் தீவிரமான பற்றுடைய இவர் தெய்வத்தை யன்றி மற்ற மனிதர்களைப் பாடாதவர். அதனால் 'மனிதக் கவி மொழியா மங்கைவாழ் மணவாள வள்ளல்' என்று சிறப்பிக்கப் பெற்றார். நடைநலனும் கருத்து வளமும் சான்ற பாடல்களைக் கொண்டுள்ளமையால் தமிழ் இலக்கியச் சுவை விரும்பிக் கற்போர்க்கு இத்தொகுப்புநூல் அரிய இலக்கியக் கருவூலமாகத் திகழ்கிறது. சொல்லாலும் பொருளாலும் ஆழ்வார் பாசுரங்களின் சாரமாக விளங்கும் சிறப்புடையது.

'அட்டப்பிரபந்தம் கற்றவர் அரைப்பண்டிதர்' என்னும் உரை இத்தொகுப்பின் சிறப்பைக் காட்டுகிறது. இத்தொகுப்பில் திருவரங்கக் கலம்பகம், திருவரங்க மாலை, திருவரங்கத்தந்தாதி, சீரங்கநாயகர் ஊசல், திருவேங்கடமாலை, திருவேங்கடத்தந்தாதி, அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி ஆகிய எட்டுப் பிரபந்தங்கள் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர் காலத்திற்குப் பின்வந்தவர்களே இவற்றை ஒரு தொகுதியாக்கி அட்டப்பிரபந்தம் என்ற பெயரில் வெளியிட்டுப் போற்றினர். அந்தாதி, மாலை, கலம்பகம், ஊசல் என்னும் பிரபந்த வகைகளில் யமகம், திரிபு, சிலேடை முதலிய சொல்லணிகள் அமைய இந்த நூல்கள் அமைந்துள்ளன. இப்பிரபந்தங்கள், சொற்றொடர் நிலைச் செய்யுள் வகை சார்ந்தன. இவை திருவரங்கம், அழகர்மலை (திருமாலிருஞ் சோலை), திருவேங்கடம் ஆகிய திவ்விய தேசங்களில் கோயில் கொண்டுள்ள திருமால் மீது பாடப்பெற்றன. ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெற்ற வைணவத் திருப்பதிகள் நூற்றெட்டினையும் தனித்தனியே ஒவ்வொரு வெண்பாவால் போற்றும் நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி, இலக்கிய எழிலும் சமயநலமும் ஒருங்கே திகழும் பிரபந்தமாகும்.

**அட்டபுட்பம்** என்பது எண்வகை மலர் எனப் பொருள்படும். புறத்தே இறைவன் உருவத்தை அமைத்து வழிபாடு செய்வதனைப் புறப்பூசை என்றும், அருவமாய் ஞானவடிவாய் விளங்கும் அவ்விறைவனை அகத்தே கொண்டு வழிபாடு செய்வதனை அகப்பூசை என்றும் சைவ சமயம் குறிப்பிடுகிறது. புறப்பூசையில் இறைவனை மலரிட்டு வழிபடுவது இன்றியமையாதது. புறப்பூசைக்குரிய எண் வகை மலர்கள் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை என்பனவாம். புறப்பூசைக்குரிய எண்வகை மலர்களைப் போல, எட்டு வகையான மலர்களாக உருவகப் படுத்திக் கூறப்படும் எண்வகைப் பண்புகளைக் கொண்டு ஞான வழிபாடாகிய அகப்பூசை செய்யப்பெற வேண்டும் எனச் சமயநூல்கள் விதிக்கின்றன. கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு ஆகிய எட்டுப் பண்புகளும் அகப்பூசைக்குரிய எட்டு மலர்களாகும்.

**அட்டமங்கலம்[1]** தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்கள் எனப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. ஒருவனைக் காக்குமாறு இறைவனை வேண்டி எட்டு விருத்தப்பாக்களால் இயற்றப்படுவது இந்தச் சிறு பிரபந்தம். பாடல்கள் அந்தாதியில் அமையும். 'ஒருவனைக் காக்கவென்று இறைவனை ஏத்திய, எண்வகை அகவல் விருத்தம் புணர்த்தல், நண்ணிய அட்டமங்கலம் என்ப' என்று பன்னிரு பாட்டியல் இதற்கு இலக்கணம் வகுத்துள்ளது. வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபிகை ஆகிய பாட்டியல் இலக்கணங்கூறும் நூல்களும் இப்பிரபந்தத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளன. இதற்குப் பண்டை இலக்கியம் இருப்பதாகத் தெரியவில்லை.

**அட்டமங்கலம்[2]** எட்டு வகையான மங்கலப் பொருள்களைக் குறிக்கும். கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இரட்டை மீன் ஆகியவை அட்ட மங்கலப் பொருள்களாகும்.

**அட்டமாசித்திகள்** இறைவனின் திருவருட் பேற்றினால் தவநலத்திற் சிறந்த ஆன்மாக்கள் அடைகின்ற சித்திகள் அளவில்லாதவை. "எண்ணிலி ஆகிய சித்திகள் வந்து எனை எய்துவ தாகாதே" என்பது மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் 'திருப்படையாட்சி' என்னும் திருப்பதிகத்தில் வரும் வரியாகும்; எட்டு வகையான சித்திகளை மிகவும் சிறப்பாக எடுத்து நூல்கள் விதந்து கூறும். "அட்டமா சித்தி அணைதரு காளத்தி" என்பது சம்பந்தர் தேவாரம். "பட்டமங்கையில் பாங்காய் இருந்து அங்கு, அட்டமா சித்தி அருளிய செயலும்" என்று திருவாசகத்தில், கீர்த்தித் திருவகவலில் வருகிறது. பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணத்திலும் 'அட்டமா சித்தி உபதேசித்த படலம்' என்று ஒன்று அமைந்திருக்கிறது. திருமூலர் திருமந்திரத்திலும் மூன்றாம் தந்திரத்தில் 'அட்டமா சித்தி' என்னும் தலைப்பில் 72 பாடல்கள் அமைந்திருக்கின்றன. எட்டு வகையான சித்திகள் வருமாறு:

1. அணிமா: அணுவிலும் சிறிய அணுவாக நுணுகி விளங்கக்கூடிய தன்மை.
2. மகிமா: மிகவும் உயர்ந்த பெரிய மேரு மலையைப்போல உயர்ந்த பெரிய நிலையிற் பிறங்கும் பெற்றிமை.

3. இலகிமா: மிகப்பெரிய மேரு மலையைப் போன்று விளங்கினாலும் எடுத்தற்கு இலகுவாக-எளிதாக-இருக்கும் இயல்பு.
4. கரிமா: அணுவைப்போல நுணுகிச் சிறிய நிலையில் இருந்தாலும் மேருவைப் போல எடுத்தற்கரிய நிலையில் கனத்திருக்கும் பண்பு.
5. பிராப்தி: நினைத்த அளவில் எல்லாவுலகங்களிலும் எல்லா இடங்களுக்கும் சென்று உலவி வரக்கூடிய ஆற்றல்.
6. பிரகாமியம்: கூடுவிட்டுக் கூடுபாய்தல், விரும்பிய போகங்களை நுகர்தல், முக்காலத்து நிகழ்ச்சிகளையும் உணரப் பெறுதல் போன்ற ஆற்றல்களைப் பெற்றுத் திகழ்தல்.
7. ஈசத்துவம்: இறைவனைப்போலத் தாம் விரும்பி நினைத்தால் ஆக்கல் அளித்தல் அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் செய்ய வல்லவராதல்.
8. வசித்துவம்: தேவர்கள் முதலிய யாவரையும் எல்லா உலகத்து உயிர்களையும் தம்முடைய ஏவல்களுக்கு அடங்கி ஒழுகுமாறு தம்மிடம் வசப்படுத்திக் கொள்ளக்கூடிய திறன் பெற்று விளங்குதல். ந.ரா.மு.

**அட்ட மூர்த்தம்** என்பது சிவபெருமான் உருவினனாக விளங்கும் நிலையைக் குறிக்கும். எண் வகை நிலையாவன நிலம், நீர், தீ, வளி, வான், ஞாயிறு, திங்கள், இயமானன் ஆகிய எட்டும் ஆம். இதனால், சிவபெருமான் அட்டமூர்த்தி என்றும் குறிக்கப்படுவார்.

**அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள்**: இந்திய வங்கிகள் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் (Scheduled Banks), அட்டவணைப்படுத்தப் படாத வங்கிகள் (Non-Scheduled Banks) என இரு வகைப்படும். இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டத்தின் (Reserve Bank of India Act) இரண்டாம் பின்னிணைப்புப் பட்டியலில் ஒரு வங்கியின் பெயர் சேர்க்கப்படுமாயின், அவ்வங்கி அட்டவணைப்பட்ட வங்கி என்னும் தகுதியைப் பெறும். மற்ற வங்கிகள் யாவும் அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளாகும். அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் மைய இருப்பு வங்கியிடமிருந்து பல சலுகைகளைப் பெற முடியும். குறிப்பாக அவை மைய இருப்பு வங்கியிடமிருந்து கடன் வசதியைப் பெறக்கூடிய் தகுதியை அடைகின்றன. அதற்கேற்பச் சில பொறுப்புகளை ஏற்கும் கடமையும் அவ்வங்கிகளுக்கு ஏற்படுகிறது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டத்தின் 42-ஆம் பிரிவு அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கி என்னும் தகுதியைப் பெறுவதற்கான முறைப்பாட்டினை விளக்குகிறது. எந்த ஒரு வங்கியும் அதற்கான ஒரு விண்ணப்பத்தை இந்திய மைய இருப்பு வங்கியிடம் தரலாம். அதற்கான வரை முறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. விண்ணப்பிக்கும் வங்கிக்கு உருபாய் ஐந்து லட்சத்திற்குக் குறையாத அளவில், செலுத்தப்பட்ட மூலதனமும் காப்பும் (Paid up Capital & Reserve) இருத்தல் வேண்டும்.
2. வங்கியின் நடவடிக்கைகள், அதன் வைப்பாளர் (Depositor) நன்மைக்கு ஊறு நேரா வண்ணம் நடத்தப்படுகின்றன என்று மைய இருப்பு வங்கி தெளிவுற அறிந்து கொள்ளுதல் வேண்டும்.
3. வங்கி 1953-ஆம் ஆண்டு இந்திய நிறுவனச் சட்டத்தின்கீழ் விளக்கப் பட்டிருக்கும் வகையிலுள்ள ஒரு நிறுவனமாகவோ ஒரு கழகமாகவோ (Corporation) அயல் நாடுகளில் நாட்டின் நடைமுறைச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய வரையறைகள் விண்ணப்பித்த வங்கிக்குப் பொருந்துகின்றனவா என்று அவ்வங்கியின் ஆவணங்களைச் சோதித்து அறிவதன் மூலம் அவ்வங்கியின் பெயரை இரண்டாம் பின்னிணைப்பில் சேர்த்துக் கொள்ள இந்திய மையஇருப்பு வங்கி ஆணை பிறப்பிக்கும். இதற்கு அவ்வங்கியின் பெயரை அட்டவணையிலிருந்து நீக்கிவிடுவதற்கான உரிமையும் உண்டு. அட்டவணைப்படுத்தப்படும் தகுதியைப் பெறும் உரிமை 1966-ஆம் ஆண்டுவரை வணிக வங்கிகளுக்கு மட்டுமே இருந்து வந்தது. பின்னர் அவ்வுரிமை மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தகுதியைப் பெற அவை முன் குறிப்பிட்டுள்ள வரையறைகளில் முதலிரண்டைப் பெற்றிருத்தல் வேண்டும். வட்டார ஊரக வங்கிகள் சட்டத்தின் (Regional Rural Banks Act) படி நிறுவப்படும் எல்லா வங்கிகளும் இரண்டாம் பின்னிணைப்பில் சேர்க்கப்பட்டு, அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குரிய தகுதியைப் பெறுகின்றன. புதிய சட்டங்களின்படி, இப்போது தோற்றுவிக்கப்பட்டிருக்கும் வேளாண்மை, ஊரக முன்னேற்றத்திற்கான தேசிய வங்கிக்கு (National Bank for Agricultural and Rural Development), ஒரு மாநிலக் கூட்டுறவு வங்கியையோ ஒரு வட்டார ஊரக வங்கியையோ இரண்டாம் பின்னிணைப்பில் சேர்க்கவும் நீக்கவும் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வகை வங்கிகளைச் சட்டத்தில் குறிப்பிடப் பட்டிருக்கும் பின்னிணைப்பிற்கான வரையறைகள் இனிக் கட்டுப்படுத்தாது.

பெறும் பயன்கள்: ஒரு வங்கி அட்டவணைப்படுத்தப்பட்டுவிடின் அதற்கு மைய இருப்பு வங்கியிட

மிருந்து இரண்டு அடிப்படை நன்மைகளைப் பெறும் உரிமை உண்டு. ஒன்று இவ்வங்கிகள் மட்டுமே அயற் செலாவணி வசதிக்குரிய உரிமம் பெற முடியும். மற்றொன்று, மைய இருப்பு வங்கிச் சட்டம் 17-ஆம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கடனுதவிகளைப் பெற முடியும். அக்கடனுதவிகள் வருமாறு:

1970-ஆம் ஆண்டு, தொடங்கப்பட்ட உண்டியல் மறு கழிவுத் திட்டத்தின் (Bill Rediscounting Scheme) கீழ், மறு கழிவு உண்டியல்களையோ கடனுறுதிச் சீட்டுகளையோ மைய இருப்பு வங்கியிடம் மறு கழிவு செய்து கொள்ளலாம். அவை 90 நாள்களுக்கு மேற்படாமலும் இரண்டு மதிப்பு வாய்ந்த கையொப்பங்களைப் பெற்றவைகளாகவும் இருத்தல் இன்றியமையாதது. அவற்றுள் ஒரு கையொப்பமாவது அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கியினுடையதாக இருத்தல் வேண்டும்.

வேளாண்மை நடவடிக்கைகளுக்கோ வேளாண்மைப் பொருள்களைச் சந்தையில் விற்பதற்கோ கடனுதவியை மைய இருப்பு வங்கி தரலாம். இதற்கான காலக் கெடு 150 நாள்கள்.

அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளின் பேரில் 90 நாள்களுக்கு மிகாத கடனுதவி பெற இயலும்.

அயல்நாட்டு வாணிகத்திற்காக எழுதப்பட்ட உண்டியல் மாற்றுக் கடனுதவி, அவ்வாறான உண்டியல் மாற்றுச் சீட்டுகளின் மேலிடப்பட்ட கையொப்பங்களில் ஒன்று அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கியினுடையதாக இருத்தல் வேண்டும். அச்சீட்டுகளின் மேல் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு 180 நாள்களுக்கும் மற்ற நாடுகளிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுக்கு 90 நாள்களுக்கும் கடனுதவி வழங்கப்படும்.

ஏற்றுமதிக்கான உண்டியல் மாற்றுக் கடனுதவித் திட்டத்தின் கீழ் 180 நாள்களுக்கு மேற்படாமல் ஏற்றுமதிக்கு முன்னதாகவே கடனுதவி (Pre-Shipment Scheme) உண்டு.

வாணிகம், வேளாண்மை நடவடிக்கைகள், விளைபொருள் விற்பனை ஆகியவற்றிற்கு அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கியின் கையொப்பமிடப்பட்ட கடனுறுதிச் சீட்டின் மேல் 180 நாள்களுக்கு மேற்படாத அளவிற்குக் கடனுதவி உண்டு. ஆனால், கடனைப் பெறும் வங்கி, கடனுறுதிச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் நோக்கத்திற்காகக் கடனுதவி பெறப்படுகிறது என்ற உறுதியை அளித்திட வேண்டும்.

பழைய (1952) மற்றும் புதிய (1970) உண்டியல் அங்காடித் திட்டத்தின் (Bill Market Scheme) கீழ்க் கடனுதவி வழங்கப்படும்.

அயற் செலாவணி வசதிக்கான கடனுதவி 1978-ஆம் ஆண்டிலிருந்து அளிக்கப்படுகிறது.

இச் சட்டப் பிரிவின்கீழ் அயற் செலாவணியையே கடனாகப் பெற்றுக் கொள்ளலாம், இது எந்திரக் கருவிகளை இறக்குமதி செய்துகொள்வதற்குப் பயன்படும் வகையில் 1978-ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

பொறுப்புகள்: மேற்கூறிய கடனுதவிகளைப் பெறும் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குச் சில பொறுப்புகளையும் சட்டம் வகுத்துள்ளது. இந்திய மைய இருப்பு வங்கிச் சட்டப் பிரிவு 42(1) இன் கீழ் அவ்வங்கிகளுக்கு இரண்டு பொறுப்புகள் உள்ளன. ஒன்று, அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகள் தங்களின் கேட்பு வைப்புகள் (Demand Deposits) கால வைப்புகள் (Time Deposits) ஆகியவற்றின் மொத்தத் தொகையில் மூன்று விழுக்காடு பணமாக மைய இருப்பு வங்கியிடம் காப்பீடு செய்ய வேண்டும். இதனை 15 விழுக்காடுவரை உயர்த்துவதற்கு மைய இருப்பு வங்கிக்கு உரிமையுண்டு. 1956-ஆம் ஆண்டிலிருந்து வங்கிகள் ஒரு குறிப்பிட்ட நாளுக்குப் பிறகு பெறும் மிகைப்படியான வைப்புகள் மீது கூடுதலான பண இருப்பினைத்(Cash reserve)தன்னிடம் வைக்கும்படி மைய இருப்பு வங்கி ஆணையிடலாம். இவ்வகைக் கட்டுப்பாடுகள் யாவும் அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளுக்கும் பொருந்தும். ஆயினும், அவை தங்கள் பண இருப்பினை எந்த வங்கியிலும் வைத்துக் கொள்ளலாம். அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் தங்கள் பண இருப்பினை மைய இருப்பு வங்கியில் மட்டுமே வைத்திருக்கவேண்டும். மேலும், அவ்வப் போதைய நடவடிக்கைகளைக் குறித்த, வார இருப்பு நிலைக் குறிப்பொன்றை வாரத்தின் வெள்ளிக்கிழமை வரை முடித்து மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதன் அடிப்படையில் அதன் மொத்த இருப்புநிலை அறிக்கை ஒன்றை மைய இருப்பு வங்கி வெளியிடும். அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளும் தங்களின் மொத்த இருப்புநிலைக் குறிப்பை மாதந்தோறும் அனுப்பி வைக்க வேண்டும்.

பாரத மாநில வங்கி உள்ளிட்ட நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அயல்நாட்டு வங்கிகள், தனியார் வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள் ஆகியவை அட்டவணைப் படுத்தப்பட்டவையாகும். இவற்றுள் தனியார் துறை வங்கிகள் சில அட்டவணைப் படுத்தப்படாதனவாகும். 1982-ஆம் ஆண்டு சூன் 30 ஆம் நாள் வரை இந்தியாவில் 215 அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் 28நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், 18 அயல்நாட்டு வங்கிகள், 34

தனியார் துறை வங்கிகள், 14 மாநிலக் கூட்டுறவு வங்கிகள், 121 வட்டார ஊரக வங்கிகள் ஆகும். அட்டவணைப் படுத்தப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை கடந்த 22 ஆண்டுகளில் பெருவாரியாகப் பெருகியிருக்கிறது. 1960–ஆம் ஆண்டின் இறுதியில் அட்டவணைப் படுத்தப்படாத வங்கிகளின் எண்ணிக்கை 335 ஆக இருந்தது. 1982–ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை 4 மட்டுமே. இதன் விளைவாக அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளின் மொத்த வைப்புக் கணக்கு உரூபாய் 10 கோடியாகக் குறைந்துள்ளது. இக் கணக்கை அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகளின் மொத்த வைப்புத்தொகையான உரூபாய் 43,432 கோடியுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, இந்தியாவில் அட்டவணைப்படுத்தப்படாத வங்கிகளின் பங்கு மிகவும் சிறிதே என்பது புலப்படும்.

அட்டவணைப்படுத்தப்படுதல் என்பது, வங்கிகளின் சிறப்புத் தகுதியாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வங்கிகள் அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொண்ட காலமுமிருந்தது. ஏறத்தாழ எல்லா வங்கிகளும் அட்டவணைப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில் இத் தகுதியின் தனிப்பட்ட சிறப்புப் பெரிதும் குறைந்துவிட்டது.

கே.கோ.

**அட்டவணையிடுதல்**: எழுதப்பட்ட விவரங்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடத் தொடங்கிய காலத்திலிருந்தே அட்டவணை வெளியிடுதலும் வழக்கமாக இருந்து வந்துள்ளது. அன்றைய அட்டவணைகள் பொருள் (Subject), கருத்து வடிவம் (Concept) ஆகியவை பற்றி அமைக்கப்படாமல் தனி மனிதரின் பெயர்களைப் பற்றியோ ஒரு நூலின் சொற்களைப் பற்றியோ அமைக்கப்பட்டிருந்தன. ஆனால், தலைப்புகளுக்கு அட்டவணையிடுதல் (Indexation) மதத் தொடர்புடைய நூல்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வந்தது. கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வெளிவந்த இலக்கியத் தொகுப்புகளில் முக்கிய தலைப்புகளுக்கு மட்டும் அட்டவணைகள் காணப்பட்டன. இவ்வட்டவணைகள் அறிவியல் அடிப்படையில் அமையவில்லை. கி.பி.19–ஆம் நூற்றாண்டில் வெளிவந்த பொருளடக்க அட்டவணை (Subject-Index), நூலகத் துறையில் கண்ட புதிய முறைகளினாலும், ஆவணத் தொகுப்பு முறையில் ஏற்பட்ட புதிய செயற்பாடுகளினாலும் அறிவியல் அடிப்படையில் அமைந்திருந்தது. ஆனால் அது மிகுந்த அளவில் பயன்படுத்தப்படவில்லை.

அட்டவணையிடுதல் சொற்பட்டியல் அமைப்பு (Cataloguing), வகைப்பாடு (Classification) ஆகியவற்றினின்றும் தூவியின் பதின் முறை வகைப்பாடு (Dewey Decimal Classification), விதிக் கோவை (Coding), தலைப்பமைப்பு (Facet) முறைகளும் மேற்கூறியவற்றுக்கு இணையாக வளர்ந்துள்ளன. அகரவரிசைப்படி பொருள் அடைவு (Subject Index), முதன்மைத் தலைப்பு (Main Heading), உட்பிரிவு (Sub-Division), உருத்திரிபு(Modifier) ஆகியவை தரவகைப் படிநிலை (Heirarchy Structure) முறையில் அமைந்திருக்கும்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட தகவல் பெருக்கத்தினால் (Information Explosion) தகவல்களை உலகமெங்கும் பரப்ப வேண்டிய உடனடித் தேவை ஏற்பட்டது. எனவே, குறுகிய காலத்திற்குள் செய்திகளைத் தொகுக்க வேண்டியிருந்தது. அதனால் அட்டவணையின் தேவை பெருகிற்று. பின்னர்த் தொடர்ச்சியாகப் பலபுதிய அட்டவணை முறைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய அடைவு அட்டை (Index Card), கணிப்பொறி (Computer) மூலம் வேண்டிய பொருள் பற்றி எளிதில் அறிந்துகொள்ள வகை செய்கிறது. இவ்வாறு அடைவு அட்டையும் அட்டவணைக்குத் தேவையான நுணுக்க முறைகளும் கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டுள்ளன.

வரையறை: ஒவ்வோர் இயலிலும் பல்வேறு கருத்து வடிவங்கள் உண்டு. அவற்றிற்குரிய விளக்கங்கள் பொருத்தமாகவும் சுருக்கமாகவும் தரமுள்ளவையாகவும் கொடுக்கப்பட வேண்டும். தொகுக்கப்பட்ட நூல்களின் தொகை அல்லது நூல்களிலிருந்து திரட்டப்பட்ட விளக்கங்கள் அல்லது அடிப்படை விளக்கங்கள், கருத்துகள் அல்லது பொருள் ஆகியவை பற்றி எளிதில் அறிய உருவாக்கப்படும் பட்டியல்தான் பொருள் அடைவு எனப்படுகிறது. இதன் குறிப்புப் பதிவு (Index Entry), ஆராய்ச்சியின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, அகரவரிசையில் காலமுறைப் படியோ (Chronological Order) எண் வரிசைப்(Numerical Order) படியோ பதியப்படுகிறது.

கலைச்சொல்: சொல் ஒரு கருவி. இது கருத்தை வெளிப்படுத்துகிறது. இம் முயற்சியின் அடுத்த நிலை சொற்றொடராக, சிறு வாக்கியமாக, பெரு வாக்கியமாக வளர்வது. இம்முறையில் ஒவ்வொரு துறையும் தனக்கெனச் சில சிறப்புச் சொற்களைக் கொண்டுள்ளது. இதுவே கலைச்சொல் (Technical Term) எனப்படும்.

திரட்டு (Collection): பொருள்களைப் பற்றிய தொகுப்பு, திரட்டு எனப்படும். தனி இதழ் அல்லது பல்வேறு வகைப்பட்ட பொருள்/நூல்களின் தொகுப்புகளை உள்ளடக்கியது திரட்டு. எடுத்துக்காட்டுகள்: ஆவணங்கள் (Documents), ஆவணத் தொகுப்பு (An-

thology), கலைக் களஞ்சியம் (Encyclopaedia), பருவ இதழ் (Periodical) ஆகியவை.

**இனம் (Item)**: தனித் தன்மை மிக்க நூல், கட்டுரை, அறிக்கை, சுருக்குரை (Abstract), மதிப்புரை (Review) ஆகியவையும், தொகுப்பின் ஒரு பகுதி, கோப்பின் ஓர் ஆவணம், நாடாப் பதிவின் ஒரு பகுதி, கால இதழ் (Journal) களில் வரும் கட்டுரை, நூல் வெளியீட்டு வரிசையில் ஒன்று ஆகியவையும் இனங்களாகக் கருதப்படுகின்றன.

**அடைவுப் பகுதி (Index Entry)**: அட்டவணையின் போது பல்வேறு பொருள் பற்றிய குறிப்புகள் பதிவு செய்யப்படுகின்றன. பதிவு என்பது அட்டவணையின் அடிப்படை அலகு (Unit). இப்பதிவு, குறியீடுகளாகவோ குறியீட்டுச் சொற்றொடர்களாகவோ அமைந்திருக்கும். இது அடையாளச்சொல் இனத்தையோ கருத்துப்படிவம் பற்றிய முடிவையோ எளிதில் கண்டுபிடிக்க உதவும்.

**அமைத்தலும் பணிகளும்**: கலைச் சொற்களுக்குப் பதிவுகளை உருவாக்கி அவற்றை அட்டவணையில் முறைப்படி பொருந்துமாறு அமைப்பதே அட்டவணை அமைப்பாளரின் முதற் கடமை. இதில் கவனிக்கப்பட வேண்டிய பல நிலைகள் பின்வருமாறு:

அ) திரட்டுகளில் காணப்படும் குறைகளைப் போக்கித் தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளல் (Scanning the Collection).

ஆ) அவ்வாறு திரட்டப்பட்ட திரட்டுகளின் கருப்பொருளைப் பாகுபாடு செய்தல். இப் பாகுபாடு, திரட்டு மற்றும் அட்டவணைக்காகப் பயன்படுத்தப் போகும் காரணிகளையும் அவற்றின் பயன்பாட்டினையும் பொறுத்தது.

இ) திரட்டுகளிலுள்ள தொடர்ச்சியற்ற (Discrete) இனங்களைப் பொருத்தமான அடையாளக் குறியுடன் (Identifier) அவற்றின் சரியான இருப்பிடத்தைக் (பக்க எண், கோப்பு எண் முதற்கொண்டு) குறிப்பிடல்.

மேற்குறித்த நான்கு நிலைகளைக் கொண்டு அட்டவணையை உருவாக்கும்பொழுது கவனிக்கப்பட வேண்டிய சில நுட்ப வேலைகளும் (Technical Works) உண்டு. அவற்றைச் சீரான முறையில் பின்பற்றி அட்டவணை அமைத்தல் இன்றியமையாதது. அவை,

அ) சேகரிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட அட்டவணைப் பதிவுகளை இணைப்புள்ள (Cohesive), மாறாத் தன்மையுள்ள (Consistent) முழு அட்டவணையாகச் செய்தல்.

ஆ) அடையாளக் குறிகளைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளை உருவாக்குதல்.

இ) குறுக்கு மேற்கோள் (Cross-reference), இனங்காணுதல் (Tracing) மற்றும் நோக்க இலக்குகளைக் (Scope Notes) கொண்டு அடையாளக் குறிகளுக்குள் தொடர்பு முறையை நிறுவுதல்.

ஈ) அவ்வாறு அமைக்கப்பட்ட அட்டவணைப் பதிவுகள் எவ்விடத்தில் உள்ளன என்பதைச் சுட்டிக்காட்டத் தேவையானவற்றைக் (நாள், ஆண்டு, பக்கம் முதலானவை) குறிப்பிடல்.

உ) முழுமை பெற்ற அட்டவணை, பதிப்பிலோ பயன்படுத்தும் வகையிலோ எவ்வுருவில் இருப்பது என்பது பற்றி முடிவெடுத்தல்.

ஊ) அட்டவணை அமைத்த பின்னர் அதன் அமைப்பாளர், அவர் தொகுத்த சொற்கள் கருத்துக் கூட்டாக்கமாக (Synthetic), மற்றச் சொற்களை இணைக்கும் முறையில் இணைப்பிடைச் சொல் (Syndetic) சார்ந்ததாக, அமைப்பது இன்றியமையாததாகும்.

எ) பொருத்தமான அடையாளக் குறிகளைத் தேர்ந்தெடுத்து அவற்றின் உறவைச் சிறப்பாக விளங்கிடச் செய்தல் வேண்டும்.

மேலே கூறியுள்ளவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி அட்டவணை அமைத்த பின்னர் அமைப்பாளர் அதன் தகுதியை உறுதி செய்தல் வேண்டும். அவர் பணி செய்யும்போது மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் செயலாற்றுவதுடன் தம் சொந்த விருப்பு வெறுப்புக்கு இடந்தருதலும் கூடாது. அட்டவணையின் தரத்தைப் பேணிக் காப்பதுடன் அதைப் பயன்படுத்துவோரின் தேவைகளைக் குறித்த சரியான கண்ணோட்டத்துடன் இருப்பது இன்றியமையாததாகும்.

**பயன்கள்**: அட்டவணை அமைத்தல் ஒரு பணி நடவடிக்கை. ஒருவருக்குத் தேவையான விளக்கங்களை எந்த இடத்திலிருந்து பெறலாம் என்பதைச் சுருக்கமான முறையிலும் எளிதிலும் விளக்கி, செய்தி வேண்டுவோருக்கும் செய்தியுள்ள இடத்திற்கும் இடையே ஒரு பாலமாகச் செயல்படுவதே அட்டவணையின் பணியாகும். மூல ஆதாரத்தின் அளவு, கையேடு (Hand Book) அல்லது தொகுப்பு, இவற்றின் தன்மையைப் பொறுத்து, அட்டவணை அதன் முழு மதிப்பைப் பெறுவதோடு பலருக்கும் பயன்படும் தன்மை வாய்ந்ததாகவும் அமையும்.

நுட்பமுடன் அறிவியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட அட்டவணைப்பட்டி (Index Catalogue) பயன்படுத்துவோரின் தேடும் முயற்சியைக் குறைப்பதோடு, சரியான முறையில் எந்தக் கலைச் சொல்லிற்கும் எளிதில் அடையாளக் குறிகளைக் கொண்டு

பொருளைக் காண வகையும் செய்கிறது. பொருத்தமான தனித்தன்மையுள்ள அடையாளக் குறியும் தகுந்த இடஞ்சுட்டி (Locator) களும், குறுக்கிணைப்பு மற்றும் குறிப்புகளும் முழுமையாக இருப்பின், அட்டவணை, பயன்படுத்துவோரின் தேவையை மிகுந்த அளவில் நிறைவு செய்வதுடன் அவை இருக்கும் இடங்களை மிகவும் துல்லியமாக அறியவும் வகை செய்கிறது. இதைத் தவிர முன்பு கூறியபடி, அட்டவணை ஒரே நேரத்தில் கருத்துக் கூட்டாக்கமாகவும் இணைப்பாக்கமாகவும் இருந்து செயல்படுகிறது. மேலும், இது முடிவுக்கு வகை செய்யும் ஒரு வழிமுறையே தவிர இதுவே முடிவன்று.

அட்டவணை அமைப்பதில் பல புதிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஒன்று, ஓரினக் கலைச்சொல் அடைவுப்பட்டி (Coordinate Index) பொதுச்சொல் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆனால், தரவகை/படிநிலைக் கருத்துப் பொருள் அட்டவணை (Hierarchial Subject Index) யினின்றும் மாறுபட்டது. இந்த அட்டவணையில், இனம் அல்லது அடையாளக் குறி மற்றவற்றைச் சார்ந்திராமல் அதனோடு தொடர்புள்ள தொகுப்பின் எல்லா இனங்களையும் கண்டறிய வகை செய்கிறது. எடுத்துக்காட்டு, ஓர் ஆய்வாளர் குடிசைப் பகுதிகளில் குடும்ப நலத் திட்டத்தால் ஏற்படும் பிறப்புவீத மாற்றம் பற்றி ஆராய விரும்புகிறார். இதற்காகத் தரவகை அட்டவணைப் பட்டியலில் 'குடிசைப்பகுதி', குடும்ப நலத் திட்டம்', 'பிறப்பு விகிதம்' என்ற மூன்றையும் துணைத் தலைப்புகளுடன் நோக்க வேண்டும். மூன்றுமே முக்கிய தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டிருப்பின், ஒரு தலைப்பின் கீழ் உள்ள பதிவுகள், மற்ற இரு தலைப்புகளிலும் முழுமையாகக் குறிக்கப்பட்டோ குறுக்கு மேற்கோள் அளிக்கப்பட்டோ இருக்கும். ஆனால், ஓரினமான அட்டவணையில் 'குடிசைப்பகுதி', 'குடும்ப நலத்திட்டம்' 'பிறப்பு வீதம்' இம்மூன்றும் தனித்தனித் தலைப்புகளாக அகர வரிசையில் அமைந்திருக்கும். ஒவ்வொன்றும் அதனைச் சார்ந்து இருக்கக் கூடிய எல்லா இனங்களுடனும் பதிவு செய்யப்பட்டிருக்கும். மூன்று தலைப்புகளுக்கும் பொதுவான இடஞ்சுட்டிகளைக் கொண்டு தேவையான இனங்களின் விவரத்தை அறிய இயலும்.

**கலைச்சொல் அட்டவணை:** அட்டவணை அமைக்கும்போது அதன் அமைப்பாளர் மூலக் கோப்புகளை ஆராய்ந்து அவற்றில் பயன்படுத்தப்படும் அரிய கலைச் சொற்களை முதலில் தயாரிப்பர். எடுத்துக்காட்டு: நூல்கள், இதழ்கள் முதலானவை. இம் முறையில் அமைக்கப்படும் அட்டவணை, சொல்லாக்க அட்டவணை (Derivative Index) எனப்படும்.

**கருத்துப் படிவ அட்டவணை:** மூல ஆவணம் அல்லது நூல் என்ன உட்கருத்தைக் கொண்டுள்ளது என்பதை ஆராய்ந்து, அவ்வாவணத்தில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களுக்கு நெருங்கிய பொருள் குறித்தும் அட்டவணை உருவாக்க முடியும். இதிலுள்ள பதிவுகள் மூல ஆவணத்தில் கூறப்பட்ட சொற்களாகவே (Terms) இருக்கத் தேவையில்லை.

**கவனிக்க வேண்டிய குறிப்புகள்:** சொல் அட்டவணை (Word Indexing), கருத்துப்படிவ அட்டவணை (Concept Indexing) ஆகியவற்றை உருவாக்கும் போது சில சொற்களை ஆள்வதில் கவனம் தேவை. பொருளொப்புமையுடைய (Synonymic) சொற்களையும் உச்சரிப்பில் ஒற்றுமையுள்ள பல சொற்களையும் கவனமாக ஆய்ந்து அடைவுப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். பொருத்தமான கலைச்சொற்கள், கருத்துப் படிவங்கள் (Concepts) ஆகியவற்றை நன்கு ஆய்ந்து உருவாக்கப்பட்ட அட்டவணையே முழுமை பெற்ற ஒன்றாகக் கருதப்படும். குறிப்பிட்ட கலைச்சொல் அல்லது கருத்துப்படிவங்கள் எம்மொழியிலிருந்து பெறப்பட்டன என்பதைக் குறிப்பிடுவதும் இன்றியமையாதது. முறையான பொருளமைந்த சொற்களை அடைவுப் பதிவு செய்வதும், தேவையற்ற, பொருளற்ற சொற்களை விலக்குவதும் கட்டாயமான ஒன்றே. அதாவது எந்தக் கலைச்சொல்லை கலைச் சொல்லாகத் தேர்ந்தெடுப்பது அல்லது விடுவது என்பதை அறிந்து செயல்பட வேண்டும். முதலில், தொகுப்பின் தன்மை ஒரே தன்மை (Homogenous) படைத்ததா – ஒரு மொழியைச் (Monolingual) சேர்ந்ததா– நிகழ்வுகளைப் (Factual) பற்றியதா என்பனவற்றை உறுதி செய்யவேண்டும். இரண்டாவதாக, பயன்படுத்துவோரின் தகுதி நலன்களைப் பற்றி – படித்தவர் –ஆய்வாளர்– திறன் படைத்தவர் போன்ற செய்திகளை மனத்திற்கொண்டு அட்டவணை தயாரிக்க வேண்டும். மூன்றாவதாக, அட்டவணையை நூலின் கடைசிப் பகுதியில் சேர்ப்பதா தனியாக வெளியிடுவதா அல்லது பதிவுகளைச் சேர்க்க வகை செய்யும் விதத்தில் தொடரேட்டின் (Serial) ஒரு பகுதியாகத் தர வேண்டுமா என்பனவற்றை முதலிலேயே முடிவு செய்ய வேண்டியது மிகவும் முக்கியம். அட்டவணையைக் காண்போரின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமையும் அட்டவணை, கீழ்க்காணும் தகுதிகளைப் பொதுவாகப் பெற்றிருக்கும்.

அ) சரிபார்க்கப்பட்ட அல்லது அலகிட்டு வைத்துள்ள அடைவு அட்டை (Index Card) அழகுற அச்சிடப்பெற்றுப் பக்க எண்களைக் குறிக்கும் முறையில் இருத்தல்.

ஆ) அடைவுச் சொற்றொடர், துணைத் தலைப்பு, மற்றும் திருத்தப்பட்ட சொற்றொடர் ஆகிய

வற்றைத் துல்லியமான முறையில் அமைத்திருத்தல்.

இ) அகரவரிசைப்படி அமைந்துள்ள சொல்லடைவு மற்றும் சொற்றொடர் அடைவுப் பட்டியானது உட்பிரிவுகள், தலைப்புகளிலிருந்து வேறுபட்டது என்பதைத் தெளிவு செய்திருத்தல்.

தகுதிமிக்க அடைவுகளைத் தயாரித்தல்:

அ) அட்டவணையில் எவ்விதக் கருத்துகளைத் திரட்டி எழுதியுள்ளோம் என்பதையும் அவை ஒத்த தன்மையுள்ளவையா வெவ்வேறு துறைத் தொடர்புள்ளவையா என்பதையும் எளிதில் விளங்கும் வகையில் அமைத்திருத்தல்.

ஆ) அட்டவணையிலுள்ள கலைச்சொற்களின் விவரங்களைத் தெளிவாக விளக்கியிருத்தல்.

இ) ஒரு கலைச்சொல்லின், மூலம் (Origin) என்ன என்பதையும் அக்கலைச்சொல் எம்மொழியினின்று பெறப்பட்டுக் கையாளப்படுகிறதென்பதையும் குறிப்பிட்டிருத்தல்.

ஈ) அட்டவணையைப் பயன்படுத்துவோர் யார்? எவ்வகையைச் சார்ந்தவர்? என்பதைக்கவனத்திற்கொண்டு உருவாக்கப்பட்டிருத்தல்.

உ) உரிய காலத்தில் வெளியிடப்படுதல்.

ஊ) அதன் விலை வாங்குவோரின் வாங்கும் சக்திக்குத் தக்கவாறு இருத்தல்.

எ) அட்டவணையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற வினாவிற்குச் சரியான விடையையும் விளக்கக் குறிப்புகளையும் தன்னகத்தே கொண்டிருத்தல். எல்.பி.வெ.

துணை நூல்கள்:

தில்லை நாயகம், வே., "இந்திய நூலக இயக்கம்", பாரி நிலையம், சென்னை, 1981.

**Marn**, Margaret, "Introduction to Cataloguing & the Classification of Books", (A. L. A.1943).

**Tauber**, Maurice, F., ' Current Trends in Cataloguing Classification", Library Trends, Vol .2. 1953.

***அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் கல்வி***: கல்வியிலும், பொருளாதார நிலையிலும் தாழ்ந்தும் சமூக நிலையில் தனியாக ஒதுக்கப்பட்டும் இருந்த மக்களைத் தாழ்த்தப்பட்டோர் என்று 1931–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புக்கு முன்வரை குறித்து வந்தனர். அத்தொடரை மக்கள் வெறுத்ததால் 1935–ஆம் ஆண்டு அரசுச் சட்டப்படி, 1936–ஆம் ஆண்டு முதல் அம்மக்கள் அட்டவணை வகுப்பினர் (Scheduled Castes) என அழைக்கப்பட்டனர்.

இவ்வகுப்பினர் கல்வி வாய்ப்புகளின்றி, சமூகத்தில் பிறருக்குத் தொண்டு செய்து கொண்டு கீழ் நிலையிலேயே இருந்து வந்தனர். தத்தம் சாதிக்குரிய வேலைகளையே பின்பற்றி வந்தனர்.

ஆங்கிலேயர் ஆட்சியோடு இணைந்து இந்திய நாட்டுக்கு வந்த கிறித்துவ சமயத்தினர் சமயப் பணியோடு கல்விப் பணியையும் ஆற்றினர். அட்டவணை வகுப்பினரில் பலர் மதம் மாறியதுடன் கல்வியும் பெற்று உயர்நிலை அடைந்தனர். இதைக் கண்ட இராசாராம் மோகன்ராய், சுவாமி தயானந்தர் போன்ற இந்துமதச் சீர்திருத்தவாதிகள், தாழ்த்தப்பட்டவர்களுக்காக இரவுப் பள்ளிகள் நடத்தத் தொடங்கியதுடன் தங்கள் பள்ளிகளில் அட்டவணை வகுப்பினர் குழந்தைகளையும் சேர்த்துக் கொண்டனர். கி.பி. 1879–ஆம் ஆண்டு இந்தியாவில் தொடங்கப்பட்ட பிரம்மஞான சங்கத்தினரான (Theosophical Society) கர்னல் ஆல்காட்டும் (Col. Alcot) தாழ்த்தப்பட்டோரின் இழிநிலை கண்டு மனம் நெகிழ்ந்து, தமிழ்நாட்டில் பஞ்சமப் பள்ளிகள் (Panchama Schools) பலவற்றைத் தொடங்கினார். பின்னர், சென்னை அரசு அப்பள்ளிகளைத் தாழ்த்தப்பட்டோருக்கான மாதிரிப் பள்ளிகளாக ஏற்றது.

1902–ஆம் ஆண்டு ஆமதாபாத்தில் நடைபெற்ற தேசிய சமூக மாநாடு தாழ்த்தப்பட்டோர் கல்விக்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது. மக்கள் வாழ்க்கை முறையில் காலப்போக்கில் உண்டான முன்னேற்றங்களும் தாழ்த்தப்பட்டோர் கல்விக்கு அடிகோலின.

தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கான இந்தியச் சங்கம், 1917–ஆம் ஆண்டுத் தீர்மானம் ஒன்றின் மூலம் தாழ்த்தப்பட்டோருக்குக் கட்டாயக் கல்வியை இலவசமாக அளிக்கவேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொண்டது. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கார், எம்.சி. இராசா ஆகியோரும் அரசியல் நிலையிலும் கல்வி நிலையிலும் தாழ்த்தப்பட்டோர் நலத்துக்காகப் பெரும்பாடுபட்டனர். எரவாடா ஒப்பந்தத்தின் (1932) ஒன்பதாம் பிரிவு, ஒவ்வொரு மாநிலத்திலும் கல்விக்காக ஒதுக்கப்படும் நிதியில் ஒரு பகுதி தாழ்த்தப்பட்டோர் கல்வி நலனுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறியது.

1947-ஆம் ஆண்டு நாடு விடுதலை பெற்றது. மாநிலங்களை நெறிப்படுத்தும் இந்தியக் குடியரசுச் சட்டம் 46-ஆம் பிரிவு, தாழ்த்தப்பட்டோர் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்துக்கு வழிகோலியது. விடுதலைக்குப்பின் இந்திய அரசினர் வகுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் தாழ்த்தப்பட்டோர் கல்விக்காக மிகுந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்

திய நாட்டின் ஒவ்வொரு மாநிலமும், அங்குள்ள தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கைக்கும் தேவைக்கும் ஏற்பத் திட்டமிட்டுச் செயல்படத் தொடங்கியது.

பள்ளிப் படிப்பில் இவ்வகுப்பைச் சார்ந்த பிள்ளைகளுக்குப் பெற்றோர் வருவாயைக் கவனிக்காமல் இலவசமாகப் புத்தகங்களும் குறிப்பேடுகளும் வழங்கப்பட்டன. பள்ளிக்குக் கொடுக்கப்படும் சிறப்புக் கட்டணமும் (Special Fees) தேர்வுக் கட்டணமும் (Examination Fees) இவர்களிடம் வாங்குவதில்லை. மேலும், பெற்றோர் வருமானம் ஆண்டுக்கு உரூ. 6,000/-க்கு உட்பட்டதாயின் விடுதிச் செலவுக்காக உரூ.280/- முதல் உரூ.350/- வரை உதவியளிக்கப்படுகிறது.

இவ்வுதவிகளைத் தவிர ஒவ்வொரு மாவட்டத்திலும் பத்தாம் வகுப்பில் உயர் மதிப்பெண் பெறும் அட்டவணை வகுப்பு மாணவருக்குச் சிறப்பான படிப்புதவித் தொகையும் காந்திநினைவு உதவித் தொகையும் சிறப்புத் தகுதிக்கான உதவித் தொகையும் வழங்கப்படுகின்றன.

கல்லூரிப் படிப்பு, முதுகலைப்படிப்புப் பெற விரும்பும் அட்டவணை வகுப்பு மாணவர்க்கு விடுதியில் தங்கிப் படிக்க 1971-72 முதல் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இதற்குப் பெற்றோரின் வருவாய் எல்லை குறிக்கப்படவில்லை. இதனால் இவ்வகுப்பினரின் கல்விநிலை சீராக வளர்ந்து வருகிறது.

வாழ்ந்ததால் ஓரிடத்தில் இருக்கும் பள்ளிக்குக் குழந்தைகள் வந்து சேர்தல் அரிதாக இருந்தது. இக்குடியினரின் பொருளாதார நிலையும் மிகவும் தாழ்வாக இருந்தமையால், தங்கள் குழந்தைகளை இவர்கள் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைகளில் ஈடுபடுத்தினர். மேலும், இவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசியதால் இவர்கள் மொழிகளில் பாடநூல்களும் இல்லை. இவர்கள் அறியாத அயல் மொழி மூலம் கற்றல் மிகவும் கடினமானதால், இவர்களது மொழியைக் கற்ற ஆசிரியர் கற்பிக்க வேண்டியதாயிருந்தது. இத்தகைய திறனும் ஈடுபாடும் உள்ள ஆசிரியர் மிகச் சிலரே உளர். இவை தவிர, கல்வியறிவு பெற்றால், சிறுவர்கள் பெரியோரை மதிக்கமாட்டார்கள் என்றும், இவர்களின் சிற்றூர் வாழ்க்கை சிதையும் என்றும் இக்குடியினர் கருதினர். ஆதலால், கல்வியறிவு பெறுவதில் இவர்கள் ஆர்வம் காட்டவில்லை. இவ்வகையான சிக்கல்கள் இருந்தமையால் இவர்கள் நீண்ட காலமாகக் கல்வியறிவு பெறாமலேயே இருந்தனர்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கிறித்தவச் சங்கத்தினரும் சமூகத் தொண்டாற்றும் நிறுவனத்தாரும் இக்குடியினருக்குக் கல்வியறிவு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து அரசும் இவர்களுக்குக் கல்வி வழங்குவது பற்றிக் கருதத் தொடங்கியது. கி.பி. 1882-ஆம் ஆண்டு இந்தியக்

| | அட்டவணை வகுப்பினர் | | | பிறர் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1961 | 1971 | விழுக்காடு உயர்வு | 1961 | 1971 | விழுக்காடு உயர்வு |
| தமிழ்நாடு | 14.66 | 21.82 | 7.16 | 35.09 | 43.26 | 8.17 |
| இந்தியா | 10.27 | 14.66 | 4.39 | 26.41 | 31.97 | 5.56 |

**அட்டவணைப் பழங்குடியினரின் கல்வி:** முன்னேற்றமின்றி, கல்வியறிவின்றிக் காடுகளிலும் மலைகளிலும் தனிக்கூட்டமாகவும் சில பகுதிகளில் நாடோடிகளாகவும் வாழ்ந்த மக்களை மலை வாசியினர் என்றும் பழங்குடியினர் (Scheduled Tribes) என்றும் 1931-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புக்கு முன்னர்க் குறித்து வந்தனர். ஆனால் 1935- ஆம் ஆண்டு இந்திய அரசுச் சட்டத்தின் மூலம் குறிப்பிட்ட விதிகளின்படி வரன்முறைப்படுத்தி, அட்டவணையில் அவர்கள் பெயர்களைக் குறித்தனர். அது முதல் அம்மக்கள் அட்டவணைப் பழங்குடியினர் என்று அழைக்கப்பட்டனர்.

இவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற பள்ளிகள் இவர்கள் வாழும் இடத்தில் அமையவில்லை. மலைப் பகுதிகளில் ஆங்காங்கே சிற்றூர்களில் கூட்டமாக

கல்வித்திட்டக்குழு இந்தியாவின் கல்வி நிலை பற்றி ஆய்ந்து கூறிய அறிக்கையில், அட்டவணைக் குடியினருக்குக் கல்வி வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தவிர்க்கத் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது.

நாடு உரிமை பெற்ற பின்னர் இந்தியக் குடியரசுச் சட்டம் 46-ஆம் பிரிவு, அட்டவணைக் குடியினருக்குக் கல்வி வழங்குதல் மத்திய, மாநில அரசுகளின் சிறப்பான பொறுப்பென வலியுறுத்தியது. ஐந்தாண்டுத் திட்டங்களில், இவர்கட்குக் கல்வி வசதிகளும் வாய்ப்புகளும் வழங்க உதவும் வகையில் பெருநிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் சூழ்நிலைக்கும் தேவைக்கும் ஏற்ப அட்டவணைக் குடியினரின் கல்விக்கு ஏற்பாடு செய்தது.

தமிழ்நாடு அரசு, அரிசன நலத்துறை (ஆதிதிரா விடர் நலத்துறை) என்னும் பெயருடன் தனியாக ஒரு துறையமைத்து, அதன்மூலம் அட்டவணை வகுப்பினர், அட்டவணைக் குடியினர் ஆகியோர் நலன்களைக் கவனித்து வருகிறது. பள்ளிகள் நடத்துதல், சம்பள உதவித் தொகையளித்தல், மாணவர் விடுதிகள் கட்டப் பொருள் உதவி செய்தல், புத்தகம், சீருடைகள் வாங்கப் பொருள் உதவி செய்தல், விடுதிகள் நடத்துதல், கல்லூரி மாணவர்கட்குத் தனிப் பயிற்சியளித்தல், கலைக் கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிலக் குறிப்பிட்ட சதவீதம் இடம் ஒதுக்குதல் (அட்டவணைக் குடியினருக்கும், பழங்குடியினருக்கும் 18%) ஆகிய செயல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அட்டவணைக் குடியினரும் பழங்குடியினரும்இவ் வாய்ப்புகளைப் பெற்றுக் கல்வி கற்கத் தொடங்கினர்.

1961-இல் இவர்களுள் 5.91% பேர் கல்வியறிவு பெற்றிருந்தனர். 1971-இல் 9.81 விழுக்காட்டினரும், 1981-இல் 20.45 விழுக்காட்டினரும் கல்வியறிவு பெற்றிருந்தனர். அட்டவணைக் குடியினருள் கல்வியறிவு பெற்ற பெண்கள் தொகையும் பெருகி வருகிறது. 1971-இல் தமிழகத்தில் 6,800 பேர் கற்றிருந்தனர். ஆனால், 1981-இல் 35, 829 பேர் கல்வியறிவு பெற்றுள்ளனர்.

மத்திய அரசும் மாநில அரசும் சில செலவினங்களைச் சமமாகப் பங்கிட்டும் சில செலவினங்களை மாநில அரசு தனியாக மேற்கொண்டும் அட்டவணைக் குடியினரின் கல்வி நிலையை உயர்த்தி வருகின்றன. வி.க.

**அட்டவால்பா (கி.பி. 1500–1533)** என்பவர் இன்கா (Inca) பேரரசின் இறுதி அரசர். இவர் அட்டபாலிபா (Atapalipa) என்றும் கூறப்படுகிறார். இவர் தந்தையார் கி.பி. 1525-ஆம் ஆண்டு இறந்ததும், இவருக்கும் இவரது ஒன்று விட்ட சகோதரர் காசுக்கர் என்பவருக்கும் (Huascar) அரசுரிமைப் போர்கள் மூண்டன. அவரை முறியடித்து அட்டவால்பா பட்டம் ஏற்றார்.

கி.பி. 1532-ஆம் ஆண்டு இசுபெயின் (Spain) நாட்டிலிருந்து பெரு நாட்டிற்கு (Peru) வந்த பிசாரோ பிரான்சிசுகோ (Pizarro Francisco) என்பவர், அட்டவால்பாவைக் (Atahualpa) கிறித்தவராக்க முயன்றார். அட்டவால்பா அவ்வேண்டுகோளை ஏற்காததால், பிசாரோவும் அவன் ஆட்களும் குறைந்தது 4000 இன்காக் குடிமக்களைக் கொன்று குவித்ததுடன் அட்டவால்பாவையும் கைது செய்தனர். இதனைக் கண்டு அஞ்சிய அட்டவால்பா பிணைய மீட்பாக ஓர் அறையைப் பொற் காசுகளால் நிரப்பிப் பிசாரோவிடம் தந்து, தம்மை விடுவிக்கும்படி வேண்டிக் கொண்டார். பொற்காசுகளைப் பெற்றுக் கொண்ட பின்னும் பிசாரோ அட்டவால்பாவைக் கசமார்க்கா என்னுமிடத்தில் கி.பி. 1833-ஆம் ஆண்டில் கொன்று விட்டார்.

**அட்ட வீரட்டத் தலங்கள்** : சிவபெருமான் வீரச் செயல்கள் நிகழ்த்திய தலத்தினை வீரட்டானம் (வீரஸ்தானம்) என்பர். அவை எட்டுத் தலங்களில் நிகழ்ந்தமையினால், அவ் எட்டுத் தலங்களையும் அட்டானம் (அஷ்ட-ஸ்தானம்) எனக் கூறுவர். வீரச் செயல்கள் நிகழ்ந்த எட்டுத் தலங்களையும் அட்ட வீரட்டானம் (அஷ்ட-வீர-ஸ்தானம்) என்றும் வீரட்டம் (வீர-அஷ்டம்) என்றும் நூல்கள் குறிப்பதுண்டு.

சிவபெருமான் எட்டு வீரச் செயல்களைச் செய்ததாகத் திருமூலர் திருமந்திரம் முதலிய சைவசமய நூல்கள் கூறும். 'பதிவலியில் வீரட்டம் எட்டு' என்று திருமூலர் திருமந்திரத்தில் இரண்டாம் தந்திரத்தில் எட்டுப் பாடல்கள் அமைந்திருக்கக் காணலாம். அவ் வீரச் செயல்கள், முறையே பிரமனின் தலையை அரிந்தது, அந்தகன் என்னும் கொடிய அசுரனை அழித்தது, திரிபுரங்களை எரித்தது, தக்கனைத் தடிந்தது, சலந்தரன் என்னும் அசுரனைக் கொன்றது, கசாசுரன் என்னும் யானை முகம் கொண்ட அசுரனின் தோலை உரித்தது, காமதேவனைக் காய்ந்தது, எமதருமனைக் காலால் எற்றியது என்பனவாகும். இந்த அட்ட வீரட்டத் தலங்களையும் திருநாவுக்கரசர், "காவிரியின் கரைக்கண்டி வீரட் டானம்" எனத் தொடங்கும் தம் திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிவபெருமான் நிகழ்த்திய எட்டு வீரச் செயல்களும் அவை நிகழ்ந்த தேவாரப் பாடல்பெற்ற சிவத் தலங்களும் வருமாறு:

| | வீரச்செயல்கள் | தலங்கள் |
|---|---|---|
| 1. | பிரமன் தலை அரிந்தது | திருக்கண்டியூர் |
| 2. | அந்தகாசுரனை அழித்தது | திருக்கோவலூர் |
| 3. | திரிபுரம் எரித்தது | திருவதிகை |
| 4. | தக்கனைத் தடிந்தது | திருப்பறியலூர் |
| 5. | சலந்தராசுரனைக் கொன்றது | திருவிற்குடி |
| 6. | யானையைத் தோல் உரித்தது | திருவழுவூர் |
| 7. | காமனைக் காய்ந்தது | திருக்குறுக்கை |
| 8. | இயமனைஎற்றியது | திருக்கடவூர் |

ந.ரா.மு.

**அட்டன்சேம்சு (கி.பி. 1726-1797)** என்பவர் நில உட்கூற்றியல் நூலாசிரியரும் இயற்பியல் அறிவியலாரும் ஆவார். இவர் இக்கால மண்ணூல் ஆய்வுக் குழுவிற்கு அடிகோலியவர் என்று கருதப்படுகிறார். ஒருருப் படுத்துதவிய கோட்பாடு (Uniformitarianism)

என்பது இவர் அறிவியல் உலகுக்குக் கொடுத்த நன் கொடையாகும். அதன்படி பண்டைக்காலத்தில் பூமியை உருவாக்க உறுதுணையான மண்ணியல்பு களும் இக்காலத்தில் செயல்படும் கூறுகளும் ஒன்றான வையே என்பதாகும்.

அட்டன் கி.பி. 1726-ஆம் ஆண்டு எடின்பரோவில் பிறந்தார். வழக்குரைஞராக வாழ்வைத் தொடங்கி வெற்றிபெற இயலாத நிலையில், எடின்பரோ, பாரிசு, இலெய்டன் பல்கலைக் கழகங்களில் மருத்துவம் பயின் றார். கி.பி. 1749-இல் இலெய்டன் பல்கலைக் கழகத் தில் முதுநிலை (எம்.டி) பட்டம் பெற்றாலும் இவர் மருத்துவராகப் பணி செய்தாரில்லை. பெர்விக்கிலி ருந்த தம் பண்ணையில் வேளாண்மை செய்ய முற் பட்டார். இவர் ஆய்வு முறைகள் சீரிய பலனளித்த மையால் பதவியிலிருந்து விலகி, எஞ்சிய நாட்களை நில உட்கூற்றியல் ஆய்வுகளில் பயன்படுத்தினார். கி.பி. 1797-ஆம் ஆண்டு அட்டன் சேம்சு (Hutton James) எடின்பரோவில் காலமானார்.

பூமியின் அமைப்புக்கு வெப்பத்தின் பங்கு சீரிய தாகும் என்பது இவரது கருத்து. எரிமலைப் பாறை யும் கருங்கல் பாறையும் உருகிய திரள்களிலிருந்து உருவானதே பூமி என்று இவர் நம்பினார். ஏனைய அறிவியல் வல்லுநர்களுள் பலர் பூமியின் மீது ஒரு காலத்தில் தண்ணீரே நிறைந்திருந்ததென்றும், நீரின் அடியில் கனிமங்கள் நிலையாகத் தங்கியதாலேயே பாறைகள் அனைத்தும் உருவாயினவென்றும் எண்ணி யிருந்தனர். பூமியானது இயற்கைக் கூறுபாடுகளினால் படிப்படியாக மாறியதென்றும், அதே கூறுபாடுகளி னால் தொடர்ந்து மாறும் என்றும் இவர் தம் கொள் கையை நிலைநாட்டினார். ஏனைய அறிவியல் வல்லு நர்கள், ஏறத்தாழ 6000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரே சமயத்தில் முழுமையாக உருவாகியதென்று நம்பியி ருந்தனர்.

**அட்டாக்கு** பாகிசுத்தானின் பஞ்சாப் மாநி லத்திலுள்ள அட்டாக்கு மாவட்டத்தின் தலைநகர். சிந்து நதிக் கரையில் அமைந்துள்ள இந்நகரம் பெசா வரிலிருந்து ஏறத்தாழ 90 கி.மீ. தூரத்தில் அமைந் துள்ளது. அட்டாக்கிலுள்ள (Attock) மலைகளுக் கிடையே ஓடும் சிந்து ஆறு இந்நகருக்கு அழகிய தோற் றத்தினை அளிக்கிறது. அக்பர் இங்கு ஒரு கோட்டை யைக் கட்டியுள்ளார். இந்நகருக்கு அருகே எரிபொருள் (Petroleum) எண்ணெய்க் கிணறுகள் உள்ளன.

**அட்டாதச இரகசியங்கள்** என்பது நாலா யிரத் திவ்வியப் பிரபந்தங்களின் பொருளையும் வேதாந்தங்களின் நுண்பொருளையும் கூறும் பதி னெட்டு அரிய வைணவ நூல்களின் தொகுப்பாகும். இதன் ஆசிரியர் வைணவராகிய பிள்ளை லோகா சாரியர் (1264-1369). இவர் தந்தை வடக்குத் திரு வீதிப் பிள்ளை; தாயார் சீரங்க நாச்சியார். தென் னாட்டில் முடும்பை என்னும் ஊரில் ஐப்பசித் திரு வோணத்தில் பிறந்தார். இவர் நூல்கள் அனைத்தும் தமிழும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் உள்ளன. நூல்கள் வருமாறு:-

(1) தனிப்பிரணவம்: இந்நூல் எட்டெழுத்தாலான திருமந்திரத்தின் பொருளை விவரிக்கிறது. (2) தனித் துவயம்: மந்திர இரத்தினமான துவயத்தின் பொருளை இந்நூல் விவரிக்கிறது. துவயம் என்பது "ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே," "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்னும் இரு மந்திரங் களாகும். (3) தனிச்சரமம்: பகவத்கீதையின் சரம சுலோகத்தின் பொருளை இந்நூல் விவரிக்கிறது. (4) யாத்ருச்சிகப்படி: இந்நூல் முன்னர்க் குறித்த மூன்று நூல்களிலுள்ள மந்திரங்களின் பொருள் களையே மிகவும் விரிவாகக் கூறுகிறது. (5)பரந்தபடி: முதல் மூன்று நூல்களின் விளக்கமாகும். (6) சிரியபதி படி: மேற்கூறிய மூன்று மந்திரங்களின் பொருள் களையே மிகவும் சுருக்கமுமின்றி மிகவும் விரிவுமின்றி இடைநிலையில் விளக்கம் செய்கிறது. இந்நூலில் வட மொழிச்சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. (7) முமுட்சுப்படி: மேற்கூறிய மூன்று மந்திரங்களையே மூன்று பிரிவுகளில் கூறுகிறது. இது மிகச் சுருக்க மும் மிக விரிவுமின்றி வடமொழிச் சொற்கள் அதிகமின்றிச் சூத்திர வடிவில் அமைந்துள்ளது. மோட்சமடையும் இச்சையுடையவன் முமுட்சு. அவன் அறிய வேண்டிய தன்மை, வழி, குறிக்கோள் என்னும் மூன்று இரகசியங்களை இந்நூல் எடுத்துரைப்பதால் இப் பெயர் பெற்றது. (8) தத்துவத்திரயம்: நூற்பா வாக அமைந்துள்ள இந்நூல் சித்து, அசித்து, ஈசுவரன் என்னும் மூன்று தத்துவங்களை விரித்துக் கூறுகிறது. தத்துவம் என்பது 'உண்மைப் பொருள்' எனப் பொருள்படும். (9) அர்த்த பஞ்சகம்: இந்நூல் உயிரின் தன்னிலை (சுயசொரூபம்), இறைவன் நிலை (பர சொரூபம்) ஒருவன் விரும்பும் பேற்றின் நிலை புருடார்த்த ரூபம்), தான் பெறும் பயனை அடைய ஒட்டாமல் தடுக்கும் தடையின் தன்மை (விரோதி சொரூபம்), தடையைப் போக்கி இறைவனை அடை வதற்குரிய வழியின் தன்மை (உபாய சொரூபம்) ஆகிய ஐந்து பொருள்களின் தன்மையை விவரித்துக் கூறுகிறது. இவ்வைந்து பொருள்களைக் கூறுவதால் இதற்கு இப்பெயர் அமைந்தது. (10) தத்துவசேகரம்: தத்துவம் என்பது திருமாலைக் குறிக்கிறது. சேகரம் என்பது அணி விசேடம். இந்நூல் திருமாலே பரம் பொருள் என்பதனை மறைகள் முதலானவற்றிலிருந்து தகுந்த சான்றுடன் உறுதிப்படுத்துகிறது. உயர்நிலை முதலானவையும் கூறப்பட்டிருப்பினும் இதன் காரண

மாகவே இப்பெயர் அமைந்துள்ளது. (11) பிரபந்த பரித்திராணம்: தன்னை அடைந்தவர்களைக் காத்தல் திருமால் ஒருவருக்கே இயல்பானது. மற்றெவரும் அதற்குரியரல்லர் என்பதனை மேற்கோள்களுடன் இந்நூல் எடுத்துக்காட்டுகிறது. (12) நவவிதசம்பந்தம்: இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தந்தை, மகன் (பிதா, புத்திர), காப்பவன், காக்கப்படுவது (ரட்சக, ரட்சீய), அதிகாரி, சேவகன் (சேடன், சேட்டி), கணவன், மனைவி (பர்த்துரு, பாரியை), அறிபவன், அறியப்படுவது (ஞாத்துரு, ஞேய), உடைமை, உடையவன் (சுவ, சுவாமி) தாங்குபவன், தாங்கப்படுவது (ஆதார, ஆதேய), உடல், உடலில் உறைபவன் (சரீர, சரீரி), நுகர்பவன், நுகரப்படுவது (போக்துரு, போக்கிய) என்னும் ஒன்பது வகை உறவுகளை இந்நூல் விவரித்துக்கூறுகிறது. (13) நவரத்தினமாலை: ஒன்பது வகை இரத்தினங்களாலான மாலையைப் போன்று ஒன்பது வகையான பொருள்களை ஒருவன் நினைத்திருக்க வேண்டிய முறையை இந்நூல் கூறுகிறது. அவையாவன: தான், தனக்குப் பகையாய் நிற்கும் உடல், உடலினைப்பற்றி நிற்கும் உறவினர், ஊழ்வினையால் ஏற்பட்ட பிறப்பில் அல்லலுறும் மக்கள், தெய்வங்கள், சீவைணவர்கள், ஆசாரியன், பிராட்டி, இறைவன். (14) சாரசங்கிரகம்: துவயம் என்பது மறையின் சாரமாம். இந்நூல் அதனை விளக்கிக் கூறுவதால் இப்பெயர் பெற்றது. துவயத்தில் அடங்கிய பொருள்களைக் கூறுகிறது. (15) பிரமேய சேகரம்: பிரமேயம் என்பது சான்றுகளினால் அறியப்படுவது. இறைவன் திருவருளைப் பெற்ற ஓருயிர் அவன் திருவடிகளில் ஆற்றும் தொண்டே அஃது அடையும் பயன் என்பதை இந்நூல் விளக்கிக் கூறுகிறது. (16) சம்சார சாம்ராச்சியம்: சம்சாரமென்னும் அரசாட்சி பற்றிக் கூறுகிறது. மன்னனுக்குப் படைவீடு போன்றது ஒருவனுக்கு அவனது உடல். இந்த உடலிலிருந்து ஆளும் ஆன்மாவை இறைவன் தன் திருவருளாலே திருத்திச் சேர்த்துக் கொள்ளுவான் என்று விளக்கிக் கூறுகிறது. (17) அருச்சிராதி கதி: அருச்சித என்பதற்குத் தேவர் என்பது பொருள். தேவர் முதலானவர் எதிர் கொள்ள ஒருவன் போகும் வழியான முக்தி நெறியைப் பற்றி இந்நூல் விவரிக்கிறது. பிரமேய சேகரம் என்னும் நூலில் சுருங்கக் கூறியதை இந்நூல் விரித்துக் கூறுகிறது. திருவாய் மொழியிலுள்ள 'சூழ் விசும்பணி முகில்' என்று தொடங்கும் திருப்பாசுரம் இப்பொருளைப் பற்றியே கூறுகிறது. (18) சீவசன பூடணம்: இரத்தினாபரணம் என்பது இரத்தினங்கள் மிகுந்த அணிகலன். அதுபோலவே ஆசாரிய பரம்பரையினரின் வசனங்களை மிகுதியாகக் கொண்டதாகவும் படிப்பவர்க்குப் பேரொளியைத் தருவதாகவும் இருப்பதனால், இந்நூல் இப்பெயர்பெற்றது. இது தென்கலை வைணவ ஆசாரிய பரம்பரையினரின் வழிமுறைகளைத் தெளிவாக விளக்கிக் கூறுகிறது. இந்நூலின் சிறப்பு மணவாள மாமுனிகளின் உபதேசரத்தின மாலையில் நன்கு கூறப்பட்டுள்ளது. இவற்றுள் முமுட்சுப் படி, தத்துவத்திரயம் ஆகியவற்றுக்கு மணவாள மாமுனிகளே உரை எழுதி இருப்பது இந்நூல்களின் சிறப்பைக் காட்டும். ந.க.

**அட்டாவதானம்** என்பது ஒருவர் ஒரே நேரத்தில் எட்டு வகையான அறிவுச் செயல்களில் தம் கவனத்தைச் செலுத்தி அவற்றில் ஈடுபடும் ஆற்றலைக் குறிக்கும். இலாட சங்கிலி இணைத்தல், இரண்டொருவர் வினாவும் வினாக்களுக்கு விடையளித்தல், சொக்கட்டான் விளையாடுதல், முதுகிலிட்ட பரற்கற்களை எண்ணுதல், சதுரங்கமாடுதல், கொடுத்த குறிப்பிற்கேற்பப் புதிய செய்யுளியற்றல், கண்ட பத்திரிகை கணிதம் கூறுதல், குதிரையடி கூறுதல் போன்ற செயல்களில் ஒரே நேரத்தில் ஈடுபடுவது இக்கலையாகும். இவ்வாற்றல் வாய்க்கப் பெற்றோர் அட்டாவதானி எனச் சிறப்பிக்கப் பெற்றனர். இக்கலையில் எண்வகை ஆற்றலுக்கு மேலாகப் பத்து, பதினாறு வகை ஆற்றல்களைப் பெற்று விளங்கினோரும் இருந்துள்ளனர். திருக்குறள் புலமையில் இவ்வாறு எண் வகை நினைவாற்றலைப் பெருக்கி விளங்குபவரும் உள்ளனர்.

**அட்டாவதானம் கிருட்டிண ஐயங்கார்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியின் அரண்மனைப் புலவராக விளங்கியவர். அட்டாவதானத் திறமை வாய்ந்து விளங்கியமையால் அட்டாவதானம் கிருட்டிண ஐயங்கார் என்று அழைக்கப் பெற்றார். அட்டாவதானம் என்பது ஒரே நேரத்தில் எட்டுவகையான செயல்களில் சிந்தை செலுத்தி, அவற்றில் ஈடுபட்டுச் செயற்படும் ஆற்றலாகும். அவ்வாற்றல் பெற்றோர் அட்டாவதானி எனப்படுவர். கிருட்டிண ஐயங்கார் நாலு மந்திரி கதை, பஞ்ச தந்திரம், வீரகுமார நாடகம், விடநிக்கிரக சிந்தாமணி ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். 'விடநிக்கிரக சிந்தாமணி' என்னும் நூல் 'விடநிக்கிரக நிகண்டு' என்றும் வழங்கப்பெறும். இவரது 'பஞ்ச தந்திரம்' என்னும் நூல் செய்யுள் வடிவினது. நாலு மந்திரி கதை கி.பி. 1869-ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

**அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சென்னையில் வாழ்ந்த தமிழ்ப் புலவராவார். ஒரே நேரத்தில் எட்டு வகையான செயல்களில் ஈடுபட்டுச் செயல்படத்தக்க அட்டாவதானம் எனப்படும் நினைவாற்றல் பெற்றவராக விளங்கியமையால், இவர் அட்டாவதானம் வீராசாமிச் செட்டியார் என்று அழைக்கப் பெற்றார். இவர் சென்னை, சூளைப் பகுதியில்

வாழ்ந்தார்; சென்னை அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார்; நகைச்சுவை மலியப்பேசும் ஆற்றல் மிக்கவர். இராமாயணம், பாரதம் முதலிய நூல்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவதில் இவர் சிறந்து விளங்கினார். வின்சுலோ அகராதியினை உருவாக்கியவர்களுள் இவரும் ஒருவராவார். தமிழில் 'விநோத ரச மஞ்சரி' என்னும் உரைநடை நூலினை எழுதியுள்ளார். கம்பர், ஒட்டக்கூத்தர், ஔவையார், புகழேந்திப் புலவர், காளமேகப்புலவர் போன்ற பல புலவர்களின் வரலாறுகளை, அவர்தம் தனிப் பாடல்களோடுஇயைத்து வரைந்துள்ளார். இப்புலவர்களைப் பற்றிச் செவிவழிச் செய்தியாக வழங்கப்பட்டவற்றையும் இணைத்துள்ளார். தெய்வக் கொள்கை, கற்பு நிலைமை போன்ற சில தமிழ்க் கட்டுரைகளும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. வீரமாமுனிவர் எழுதிய அவிவேக பூரண குரு கதையும் இதன்கண் உள்ளது. இவர் கதைகளுள் கூறப்படும் வரலாறுகள் பற்றிய உண்மை எதுவாயினும், இவை சுவையுடையனவாக உள்ளன. விநோதரச மஞ்சரி என்னும் பெயருக்கேற்பச் சுவைமிக்க செய்திகள் பல இவ்வுரைநடை நூலில் உள்ளன.

**அட்டிகா** என்பது கிரீசு நாட்டின் மையத்தில் ஆதன்சு நகரைச் சுற்றியுள்ளதொரு பகுதி. இப்பகுதி கிறித்தவ ஆண்டு தொடங்குவதற்கு முன்னரே இருந்த தெனக் கருதுகிறார்கள். அட்டிகா (Attica) வில் வாழ்ந்திருந்த பன்னிரு வகுப்புகளைத் தீசியசு (Theseus) என்பார், இணைத்துப் பண்டைக்கால ஆதன்சு நகரை நிலைநாட்டினார் என்பது மரபு வழியாக வரும் செய்தியாகும்.

அட்டிகா இன்றைய கிரீசில் நிருவாகப் பகுதிகளுள் ஒன்றாகும். இதன் பரப்பளவு 2380 ச.கி.மீ. இது பண்டைய அட்டிகாவின் பரப்பளவை விடப் பெரியது என்பர். இங்குக் கோதுமை, ஒலிவ எண்ணெய், திராட்சைச் சாற்றிலிருந்து உற்பத்தியாகும் மதுவகை, அத்திப்பழம் போன்றவை கிடைக்கின்றன. இதன் அண்மையிலுள்ள இலாவிரியானில் (Lavrion) ஈயம், துத்தநாகம், இரும்புத் தாதுகள் போன்றவை அகப்படுகின்றன.

**அட்டிலா** உரோமானியப் பேரரசின்மீது கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் படையெடுத்து, மங்கோலிய இனங்களை இணைத்தவர். இவர் ஹூண (Huna) மரபினர். அங்கேரியைச் சுற்றியுள்ள பகுதிகளையும் இவர் வென்றார். ஹூணர்களின் ஆட்சியைத் தான்யூபு (Danube) ஆற்றங்கரையிலிருந்து காசுபியன் (Caspian) கடல்வரையிலும் பரப்பினார். கிழக்கு, மத்திய ஐரோப்பாவில் வாழ்ந்த பல காட்டுவாழ் இனமக்களை அட்டிலா (Attila) வெற்றி கண்டார். தம் தாக்குதலைத் தவிர்க்க வேண்டுமாயின், ஆண்டு தோறும் கப்பம் கட்டவேண்டுமெனக் கிழக்கு உரோமானியப் பேரரசை இவர் வற்புறுத்தினார். அப்பேரரசின் தென்கிழக்கு மாநிலங்களை அடக்கிக் கொள்ளையடித்தார்.



அட்டிலா

பின்னர், அட்டிலா தம் கவனத்தை மேற்கு உரோமானியப் பேரரசின்மீது திருப்பினார். கி.பி. 450-ஆம் ஆண்டில் உரோமானியப் பேரரசர் மூன்றாம் வேலண்டினியனின் சகோதரி கோனோரியா என்பாளை மணந்துகொண்டார். அவளுடைய சீதனமாக மேற்கு உரோமானியப் பேரரசில் பாதியைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார். ஆனால் வேலண்டினியன் மறுத்துவிட்டார். வெகுண்ட அட்டிலா, கால் (Gaul) நாட்டின்மீது சூறாவளித் தாக்குதல் நடத்தினார். ஆனால் உரோமானியர்களையும் காட்டுமிராண்டிகளையும் கொண்டிருந்த கூட்டுப் படையொன்று, கி.பி. 451-இல் இவரைத் திராய்சு என்னும் இடத்தில் தடுத்து நிறுத்தியது. இவர் கிழக்கில் இரைன் ஆற்றுப் பக்கம் பின்வாங்கினார். கி.பி. 452-இல் இத்தாலியின் மீது படையெடுத்து, போ (Po) ஆற்றுக்கு வடபால் அமைந்துள்ள பல நகரங்களைக் கைப்பற்றியும் அழித்தும் அத்துமீறிய செயல்களில் ஈடுபட்டார். ஆனால் பஞ்சமும் பிணியும் இவர் படைவீரர்களைப் பின்வாங்க வைத்தன. கி.பி. 453-ஆம் ஆண்டில் அட்டிலா காலமானார். அடுத்த ஆண்டில் ஹூணர்கள் ஆசியாவிற்குத் திரும்பினர்.

**அட்மிரால்டி தீவுகள்** நியூ கினியின் வடக்கிலுள்ள தீவுக் கூட்டம். பசுபிக்குப் பெருங்கடலின் தென்மேற்கில் உள்ள பிசுமார்க்குத் தீவுக்குழுவில்



அட்மிரால்டி தீவுகள் - மானசு தீவு

அமைந்துள்ள அட்மிரால்டி தீவுகளை மானசு (Manus) என்றும் கூறுவர். இத்தீவுகளின் மொத்தப் பரப்பு 2070 ச.கி.மீ. உள்ளூர் வாசிகளை மாலனேசியர் (Melanesians) என்பர். கி.பி. 1616-இல் இதனை முதன் முதலாகக் கண்டுபிடித்தவர் வில்லெம் சூட்டன் என்னும் தச்சு (Dutch Sailor) மாலுமியாவார். கி.பி. 1884-இல் இத்தீவுகளைச் செருமனி உரிமை பாராட்டியது. முதல் உலகப் போரின்போது இத்தீவுகளை ஆசுதிரேலியர் கைப்பற்றினர். இரண்டாம் உலகப் போரின் போது சப்பான் இவற்றைக் கைப்பற்றியிருந்தது. அமெரிக்கப் படைத் தளபதி மக்கார்தர் மானசுத் தீவினை 1944-இல் மீண்டும் கைப்பற்றி மேற்கு நாடுகளின் படையெடுப்பு அடித்தளமாக ட்தனைப் பயன்படுத்திக் கொண்டார். பாப்புவா நியூ கினி (Papua New Guinea) என்னும் விடுதலை பெற்ற நாட்டின் பகுதியாக இத்தீவுகள் மாறின. மானசுத் தீவு கரடுமுரடான மலைத் தொடர்களைக் கொண்டது. வெப்ப மண்டலமாதலின் இங்கு நல்ல மழை பொழிகிறது. ஆண்டுக்கு 380 செ.மீ. மழை பெய்கிறது. இங்குள்ள குறுகிய ஆறுகள் வேகமாகச் செல்லக் கூடியவை. தாழ்நிலங்களில் சதுப்பு நிலக் காடுகளும், பெருந் தென்னந்தோப்புகளும் உள்ளன. மலஞ்சுனை, காச்சைக்கிழங்கு, வாழை, அன்னாசி, சவ்வரிசி, முதலானவை இத்தீவுகளில் பயிரிடப்படும் பொருள்களாகும். மானசுத்தீவின் கீழ்க்கோடியிலுள்ள இலோரங்கா (Lorengau) என்னும் நகர் சிறந்த துறைமுகமும் நிருவாக மையமுமாகும். மக்கள் தொகை 26,036. தலைநகர் இலோரங்கா.

**அட்மிரால்டி மலைகள்** தென் துருவத்திலுள்ள அண்டார்க்டிகா கண்டத்தில் உள்ள மலைகள். அக்கண்டத்தின் தெற்கே இராசு (Ross) கடலுக்கு வடமேற்கே இம்மலைகள் அமைந்துள்ளன. மேலும் இம்மலைத்தொடர் விக்டோரியாலாந்துவின் வட கடற்கரையையொட்டிப் பரந்துள்ளது. இதில் அமைந்துள்ள மிக உயர்ந்த மலையுச்சி சபைன் (Mt. Sabine) என்பதாகும். இதன் உயரம் 3,007 மீ. அட்மிரால்டி மலைகளை (Admiralty Mountains) சர் சேம்சு இராசு (Sir James Ross) என்பார் கி.பி. 1841-ஆம் ஆண்டில் தம் அண்டார்க்டிகா பயணத்தின்போது கண்டறிந்தார்.

**அட்லாசு மலைகள்** வடமேற்கு ஆப்பிரிக்காவின் குறுக்கே செல்லும் மலைகள், 2,410 கி.மீ. நீளமுள்ளவை. அட்லாண்டிக்குப் பெருங்கடலிலுள்ள கேப்




அட்லாசு மலைகள்

ரீர் (Cape Rhir) என்னுமிடத்திலிருந்து மத்தியதரைக் கடலிலுள்ள கேப் போன் (Cape Bone) வரையிலும் மொராக்கோ, அல்சிரியா, துனிசியா ஆகிய நாடுகளின் குறுக்கே செல்கிறது. கிரேக்க தைட்டன் ஆட்லெசு (Titan Atlas) என்பவன் நினைவாக இம்மலைகள் இப்பெயர் பெற்றன. இவை கரையோரப் பகுதியில் உயரம் குறைவாகவும் உள்நாட்டில் மிகுதியாகவும் தொடர்ச்சியாகச் செல்கின்றன. உள்நாட்டு மலைகளுள் குறிப்பிடத்தக்கது மொராக்கோ மலைத் தொடராகும். இம்மலைத் தொடரின் நடுவிலுள்ள திசு மலையுச்சி மிக உயரமானது.

வட ஆப்பிரிக்கச் சுதேசிகளான பர்பர் இம்மலைப் பகுதிகளில் வாழ்கின்றனர். வெள்ளி, ஈயம், இரும்பு தாமிரம் போன்றவை இங்குக் கிடைக்கும் கனிப் பொருள்கள்.

**அட்லாண்டா** அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள சார்சியா மாநிலத்தின் (Georgia) தலைநகர். கி.பி. 1837–ஆம் ஆண்டில் தெர்மினசு (Terminus) என்னும் பெயருடன் இந்நகரம் நிறுவப்பட்டது. இந்நகரின் பெயர், மார்தாசு வில்லி (Marthas Ville) என



அட்லாண்டா

கி.பி 1843–ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. கி பி. 1845–ஆம் ஆண்டு முதல் இது அட்லாண்டா (Atlanta) எனக் குறிக்கப்படுகிறது. கி.பி. 1868–ஆம் ஆண்டு முதல் சார்சியா மாநிலத்தின் தலைநகரமாக இது விளங்கி வருகிறது. இது அமெரிக்க ஐக்கிய நாட்டுத் தென்மாநிலங்களின் வாணிக நகரமாகவும் விளங்குகிறது. இதன் வழியாகப் பல்வேறு நகரங்களுக்கு இருப்புப் பாதை வழிகளும் நெடுஞ்சாலைகளும் பிரிந்து செல்கின்றன. இது தொழிற்சாலைகள் மிகுந்த நகரமுமாகும். இந்நகரத்தில் பல்கலைக் கழகமும் அருங்காட்சியகமும் நூல்நிலையங்களும் உள்ளன. மக்கள்தொகை 4,25,022 (1980).

**அட்லாண்டிக் பட்டயம்**: இரண்டாம் உலகப்போர் (1939–45) நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் அட்லாண்டிக் பட்டயம் (Atlantic Charter) உருவாயிற்று. இது எட்டு நெறிமுறைகள் கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாட்டின் அதிபர் பிராங்க்ளின் டி. ரூசுவெல்ட்டும் (Franklin D. Roosevelt) இங்கிலாந்து நாட்டின் தலைமை அமைச்சர் வின்சுடன் சர்ச்சிலும் (Winston Churchill) அட்லாண்டிக் கடலில், கானடாவிற்கு அருகில் அகசுடா (Augusta) என்ற போர்க்கப்பலில், 1941–ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 9–ஆம் நாள் முதல் 12–ஆம் நாள் வரை சந்தித்துப் பேசினர். இவ்வுரையாடலின் விளைவாக அவ்விருவரும் 1941–ஆம் ஆண்டு ஆகசுட்டு 14–ஆம் நாள் இப்பட்டயத்தை வெளியிட்டனர். அட்லாண்டிக் கடலில் இருந்த போர்க் கப்பலிலிருந்து வெளியிடப்பட்டதால் இது ‘அட்லாண்டிக் பட்டயம்’ எனக் குறிக்கப்படுகிறது.

அட்லாண்டிக் பட்டயத்தின் எட்டுக் கோட்பாடுகள் வருமாறு:

1. அமெரிக்காவும் இங்கிலாந்தும் தங்கள் எல்லைகளையோ பிறவற்றையோ பெருக்கிக் கொள்ளுதல் கூடாது.
2. பிறநாட்டு மக்களின் உண்மையான கருத்துகளைக் கேட்காமல் எல்லைகளைப் பெருக்குதற் பொருட்டு அந்நாடுகளைப் பிடித்தல் கூடாது.
3. இவ்விரு நாடுகளும் மக்கள் தாம் விரும்பும் ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் உரிமையினை வழங்குகின்றன. மேலும், வலுக்கட்டாயமாக உரிமை பறிக்கப்பெற்ற நாடுகள், தாம் இழந்த உரிமையை மீண்டும் பெறச் செய்தல்.
4. உலகத்தில் உள்ள அனைத்துப் பெரிய, சிறிய நாடுகளும் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு வாணிகம் நடத்தவும் மூலப் பொருள்களைத் தடையின்றிக் கொண்டு செல்லவும் இவ்விரு நாடுகளும் இப்பட்டயத்தின் மூலம் முயற்சிகளை மேற்கொள்ளும்.
5. உலக நாடுகளுக்கிடையே உடலுழைப்பை ஏற்படுத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு அளித்து அவர்களின் தரத்தை உயர்த்தவும், சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்தவும் இவ்விரு நாடுகளும் விரும்புகின்றன.

6. நாசிகளுடைய (The Nazis) கொடுங்கோன்மை ஆட்சியை அழித்த பின், மக்கள் தங்களது நில எல்லைக்குள் அமைதியாக வாழவும், அவர்களது சொந்த நாட்டிற்குள் உரிமையுடனும் அச்சமின்றியும் தேவைகளை விரும்பியவாறு பெறவும் இவ்விரு நாடுகளும் வழிவகை செய்யும் என்று இப்பட்டயம் உறுதியளிக்கிறது.
7. இவ்வமைதியால் மனிதன் தடையேதுமின்றிக் கடல்களையும் பெருங்கடல்களையும் கடந்து செல்ல முடியும் என இப்பட்டயம் கூறுகிறது.
8. உலக நாடுகள் அனைத்தும் தங்களுடைய நலனுக்காகப் படை வலிமையைப் பெருக்குவதைத் தவிர்க்கும் என இவ்விரு நாடுகளும் நம்புகின்றன. நிலத்திலோ கடலிலோ வானிலோ போர்ப்படை வலிமையைப் பெருக்கி அமைதியாக வாழ முடியாமல் பிற நாடுகளைத் துன்புறுத்த விரும்பினால், அந்நாடுகளுக்குப் பொதுவான, நிலையான பாதுகாப்பு அளிக்க இப்பட்டயம் வழிவகுக்கிறது.

மக்கள் இவ்வகைப் படைவலிமைப் பயத்திலிருந்து விடுபட்டு, அமைதியும் அன்பும் கலந்த நல்வாழ்வை அனுபவிக்க இந்நாடுகள் வழிவகை செய்யும்.

இப்பட்டயம், இரண்டாம் உலகப்போரில் ஈடுபட்ட அச்சு (Axis Powers) நாடுகளின் வலிமைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட நிலை ஆவணம் ஆகும். ஐக்கிய நாடுகளின் அறிக்கையில் நேச நாடுகள், 1942 சனவரித் திங்கள் 1–ஆம் நாள் வாசிங்டன் டி.சி.யில் (Washington D.C.) கையெழுத்திட்டன. பின்னர், 26 நாடுகள் ஐக்கியநாட்டு அறிக்கையின் மூலக் கருத்துகள் தாங்கிய இப்பட்டயத்தை ஏற்றுக் கொண்டன. இப்பட்டயத்தினை மீண்டும் உறுதிசெய்யும் வண்ணம் 1954-ஆம் ஆண்டு சூன் மாதம் சர்ச்சிலும் அப்பொழுதைய அமெரிக்க அதிபர் ஐசனோவரும் இதன் கோட்பாடுகளை முறைப்படுத்தினர்.

துணை நூல்கள்:

**Grant, A.J. and Harold Temperley.,** "Europe in the Nineteenth and Twentieth Centuries", Lillian, M. Penson, Longman Group Ltd., 1982.

**Hayes, J.H.,** "Contemporary Europe Since 1870", Delhi, Surject Publications, 1981.


***அட்லாண்டிக்குச் சூறைமீன் வளப் பாதுகாப்புப் பன்னாட்டுக் குழு:*** அட்லாண்டிக்குச் சூறைமீன் வளப்பாதுகாப்பிற்கென 17 அட்லாண்டிக்கு மண்டல நாடுகள், 1966–ஆம் ஆண்டு மே திங்களில் பிரேசில் நாட்டின் இரியோடி சனிரோ (Riode Janeiro) என்ற இடத்தில், இக்குழுவிற்கான உடன்பாட்டிற்கு ஒப்புதல் அளித்தன. பின்னர், இசுபெயின் (Spain) நாட்டின் தலைநகரான மாட்ரிடு (Madrid) என்னுமிடத்தில் தலைமைச் செயலகம் நிறுவப்பட்டுச் செயல்படுகிறது. இத் தலைமைச் செயலகம், பல ஆய்வுத் திட்டங்களைக் கண்காணிப்பதோடு பல திட்டங்களையும் ஒருங்கிணைத்துக் குழுவின் நோக்கங்கள் நிறைவேறச் செயலாற்றுகிறது. புள்ளி விவரங்களைச் சேகரித்துத் தேவையான நாடுகளுக்கு வழங்கிச் சூறைமீன் (Tuna) வளம் பற்றிய நுட்ப அறிவினை வளர்ச்சியடையச் செய்யும் தகவல் மையமாகவும் திகழ்கிறது.

உறுப்பினர்கள்: அங்கோலா, பெனின் (Benin), பிரேசில், கனடா, கேப் வெர்டி (Cape Verde), கியூபா, பிரான்சு, கபான் (Gabon), கானா, அய்வரி கோசுட்டு (Ivory Coast), சப்பான், கொரியாக் குடியரசு, மொராக்கோ, போர்ச்சுகல், செனகல், தென்னாப்பிரிக்கா, இசுபெயின் (Spain), உருசியா, அமெரிக்கா ஆகியவை இப்போதைய உறுப்பு நாடுகள்.

நோக்கங்கள்: சூறைமீன் வளத்தைப் பெருக்குவது, மீன்வளம் முற்றிலும் சுரண்டப்பட்டு அழிந்து போவதைத் தடுப்பது, சூறை இனத்தைச் சார்ந்த பிற உயிரின வகைகளின் வளத்தைப் பாதுகாப்பது, இனப்பெருக்கத்தை வளப்படுத்தி மீன்பிடிப்பு முறைகளை வரையறை செய்வது ஆகிய சிறப்புக் குறிக்கோள்களைக்கொண்டுஇக்குழு செயல்படுகிறது.

குழுவின் ஆண்டுக் கூட்டம் தவறாது நவம்பர்த் திங்களில் நடந்து வருகிறது. அதில் உறுப்பு நாடுகளின் வல்லுநர்கள், சிறப்புப் பேராளர்கள் ஆகியோர் கலந்துரையாடிக் குழுவின் திட்டங்கள், கொள்கைகள், செயல் முறைகள் முதலியனவற்றை முடிவு செய்கின்றனர். உறுப்பு நாடுகள் எவ்வகை மீன் இனங்களை எந்த அளவில் பிடிக்கலாம் என்பதை இக்குழு வரையறை செய்கிறது. இசுகிப் சேக் துனா (Skip Jack Tuna) எனப்படும் மீன் இனம் அழிந்துபோகும் நிலையிலுள்ளது எனக் குழுவின் ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியதால், இப்போது அதனைப் பாதுகாப்பதற்கானதிட்டங்களுக்கு முதலிடம் கொடுத்துப் பன்னாட்டு "இசுகிப் சேக் ஆண்டுத் திட்டம்" (Skip Jack Year Programme) ஒன்றை (1979-1982) உருவாக்கிச் செயல்படுத்துகிறது.

***அட்லாண்டிக்குப் பெருங்கடல்*** உலகிலுள்ள பெருங்கடல்களுள் ஒன்று. இது இந்தியப் பெருங்கடலைவிடப் பெரியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய மூன்று கண்டங்களுக்கும் இது கடல்வழியாய் அமைந்துள்ளது. உலகிலுள்ள நீண்ட ஆறுகள் அட்லாண்டிக்குப் பெருங்கடலிலோ (Atlantic Ocean) அதனுடன் தொடர்புள்ள கடல்களிலோ கலக்கின்றன. உலகில் தொழில்வளம் மிக்க



அட்லாண்டிக்குப் பெருங்கடல்

நாடுகள், இக்கடற்கரைப் பகுதிகளில் அமைந்துள்ளன. உலக வாணிகப் பெருக்கத்திற்கு இக்கடல் பெரிதும் உதவி புரிகிறது. இப்பெருங்கடலில் உவர்ப்புத் தன்மை மற்றைய கடல்களைவிட மிகுந்துள்ளது.

அட்லாசு மலைத்தொடரை (Atlas Ranges) அடுத்திருக்கின்றமையால், இதற்கு அட்லாண்டிக்குக் கடல் என்று பண்டைய உரோமானியர் பெயரிட்டனர். அட்லாண்டிக்குப் பெருங்கடலின் பரப்பளவு 8,16,62,000 ச.கி.மீ. வளைகுடாக்கள், விரிகுடாக்கள், இப்பரப்பளவில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. உலகில் தென்படும் நீர்ப்பரப்பினுள் மூன்றில் ஒரு பங்கு அட்லாண்டிக்குப் பெருங்கடலாகும். ஐரோப்பாவும் ஆப்பிரிக்காவும் இதன் கிழக்குக் கோடியிலும் வட அமெரிக்காவும் தென் அமெரிக்காவும் இதன் மேற்குக் கோடியிலும் அமைந்துள்ளன. இப்பெருங்கடலின் வட தென் எல்லைகளைத் திட்டவட்டமாகக் கூற இயலாது. வடக்கில் ஆர்க்டிக்குப் பெருங்கடலுடனும், தெற்கில் அண்டார்டிக்குப் பெருங்கடலுடனும் இப்பெருங்கடலின் பகுதிகள் இணைகின்றன. வட அமெரிக்காவில் உள்ள பிளாரிடாவிலிருந்து (Florida) ஐரோப்பாவில் இசுபெயின் (Spain) வரை அட்லாண்டிக்குப் பெருங்கடலின் அகலம் 6679 கி.மீ; கிழக்குக் கடற்கரையின் நீளம் 51,500 கி.மீ; மேற்குக் கடற்கரையின் நீளம் 88,500 கி.மீ. ஐரோப்பாவிலும் வட

அமெரிக்காவிலும் இக்கடலின் கடற்கரை ஒழுங்கற்றும், ஆப்பிரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் ஒழுங்காகவும் தென்படுகிறது.

நார்வேக்கடல், வடகடல், பால்டிக்குக் கடல், மத்திய தரைக்கடல், கருங்கடல் போன்றவை இப்பெருங்கடலின் கிழக்குப்பகுதி நீர் நிலைகள்; செயின்ட்டு இலாரன்சு வளைகுடா, மெக்சிகோ வளைகுடா, கரீபியக் கடல் போன்றவை மேற்குப் பகுதி நீர் நிலைகள். பிரித்தானியத் தீவுகள் (British Islands), அசோரசு (Azores), கானரித் தீவுகள் (Canary Islands), வெரிடிமுனைத் தீவுகள் (Verde Cape) வட அட்லாண்டிக்குப் பெருங்கடலைச் சார்ந்தவை. இதன் ஆழம் சராசரி 4270 மீ.

**அட்லாண்டிக்கு மாநிலங்கள்** அமெரிக்க ஐக்கிய நாட்டில் நியூ இங்கிலாந்து மாநிலத்தின் தெற்கில் உள்ள மாநிலங்கள். அட்லாண்டிக்குப் பெருங்கடலை எல்லையாகவோ அதனுடன் நெருங்கிய பொருளாதாரத் தொடர்பு கொண்டோ உள்ள மாநிலங்களை அட்லாண்டிக்கு மாநிலங்கள் (Atlantic States) என்பர். நியூயார்க்கு, நியூ செர்சி, பென்சில்வேனியா ஆகிய மாநிலங்கள் மத்திய அட்லாண்டிக்கு மாநிலங்கள். தெலாவர், மேரிலாந்து, வர்சீனியா, வட கரோலினா, தென் கரோலினா, சார்சியா, பிளாரிடா போன்றவை தென் அட்லாண்டிக்கு மாநிலங்கள். மேற்கு வர்சீனியா உள் நாட்டில் அமைந்திருந்தாலும் இதனையும் அட்லாண்டிக்கு மாநிலங்களில் சேர்ப்பர்.

**அட்லாண்டிசு** அட்லாண்டிக்குப் பெருங்கடலில் சிப்ரால்டர் நீர்ப்பிரிவிற்கு மேற்கில் இருந்ததாகக் கிரேக்கர்களும் உரோமானியர்களும் நம்பி வந்த தொன்மையான தீவு. பிளேட்டோ (Plato) என்னும் கிரேக்க அறிஞர் பழங்காலத்தில் இங்கு ஒரு பேரரசு இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பிற்காலத்தில் நில நடுக்கத்தாலும் பெரு வெள்ளத்தாலும் இத்தீவு அழிந்துவிட்டதாகக் கருதப்படுகிறது. இப்பொழுதுள்ள கானரித் தீவே (Canary Islands) அக்கால அட்லாண்டிசு (Atlantis) எனச் சிலர் கூறுவர். அட்லாசு மலையை வைத்தே இத்தீவிற்கு அட்லாண்டிசு எனப்பெயர் ஏற்பட்டது என்று நம்பப்படுகிறது.

**அடக்கக் கணக்கு**: ஒரு பொருள் விற்பனைக்கு வருமுன் பல உற்பத்தி நிலைகளைக் கடந்து வருகிறது. அதன் ஒவ்வொரு நிலையிலும் அதன் நிலைக்கேற்ப ஆகும் பலவிதச் செலவுகளைக் கணக்கில் கொண்டு, அப் பொருளுக்கான அடக்கவிலை வரையறுக்கப்படுகிறது. மேலாண்மையினருக்குப் பொருள்களின் ஒவ்வொரு நிலையும், அதன் அடக்கவிலையை நன்கு உணர்த்துகிறது. ஒவ்வொரு நிலையிலும் அதற்கு ஆகும் செலவைக் குறைப்பதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வரும். இவை பற்றிய கணக்குகள், பதிவேடுகள், விவரங்கள், கட்டுப்பாடுகள் அனைத்தும் அடக்க முறைக் கணக்குகள் எனப்படும்.

ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்கோ ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்து முடிப்பதற்கோ ஆகக்கூடிய செலவுகளின் கூட்டுத் தொகையை அதற்கான அடக்கச் செலவு என்பர். ஆகவே அடக்கச்செலவை வரையறுக்கும் முறைகளை அடக்கவிலை முறைகள் (Costing) என்று கூறுவர். அடக்கக் கணக்கு முறைகளைக் கையாளும் வல்லுநர்களை அடக்கக் கணக்கர் (Cost Accountant) என்பர். அடக்கக் கணக்கர், தம் கடமைகளைச் செய்யும்போது சில ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கைகளையும், வழிமுறைகளையும் கையாள்வர். அந்நிலையில் அடக்கக் கணக்கு முறை அறிவியல் தொடர்புடையதாகக் கருதப்படும். அடக்கக் கணக்கர் அடக்கவிலை விவரங்களைக் (Cost Data) கையாளும்போது பலவித எடுகோள்களையும் (Assumptions) முடிவுகளையும் மேற்கொள்வர். பொதுவாக இவை ஒரே தன்மையாக இருக்கமாட்டா. இதில் மாறுபாடுகளும் இருக்கும். ஆகவே அடக்கவிலைக் கணக்கு ஓர் இயலாகவும் கருதப்படுகிறது. அடக்கக் கணக்குப் பதிவுகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை 1) அடக்கவிலை வரையறை (Cost Ascertainment), 2) அடக்கவிலைத் தெரிவிப்பு (Cost Presentation), 3) அடக்கவிலைக் கட்டுப்பாடு (Cost Control) எனப்படும்.

அடக்கவிலை வரையறை: ஒரு குறிப்பிட்ட பொருளுக்கோ வேலைக்கோ ஆகும் செலவு விவரங்களைச் சேகரித்தல்; பொருளின் ஒவ்வொரு உற்பத்தி நிலையிலும் அதன் உற்பத்தியளவை வரையறுத்தல்; அனைத்து உற்பத்திக்கும் தொடர்புள்ள பிற செலவுகளை வரையறுத்தல் ஆகிய மூன்றும் அடக்கவிலை வரையறையின் சிறப்புக் கூறுகளாகும். மேலும், பழைய பதிவுச் செலவுக் கணிப்பு (Historical Costing); மதிப்பீட்டுச் செலவுக் கணிப்பு (Estimated Costing); வேலைச் செலவுக் கணிப்பு (Job Costing); தொழில் முறைச் செலவுக் கணிப்பு (Process Costing); மதிப்பீட்டுக் கட்டுப்பாடு (Budgetary Control); இறுதி நிலைச் செலவுக் கணிப்பு (Marginal Costing); திட்டச் செலவுக் கணிப்பு (Standard Costing) போன்ற முறைகள் அடக்கவிலை வரையறையில் பின்பற்றப்படுகின்றன. பொருள் உற்பத்தியின் பின்னும், பொருள் உற்பத்தியின் போதும், அதன் அடக்கவிலைக் கணிப்பு தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்.

அடக்கவிலை விவரங்கள் மேலாண்மையினரின் தேவைக்கேற்ப அளிக்கப்படும். மேலாண்மையினர்

அவ்வப்போது முடிவுகளை எடுக்க இது உதவுகிறது. அடக்கவிலை ஏடு (Cost Sheet), மூலப் பொருள் நுகர்வுக் கணக்கேடு (Consumption of Materials Statement), உழைப்புப் பயன்பாட்டுக் கணக்கேடு (Labour Utilisation Statement), உற்பத்தி நிலை அறிக்கை (Production Report), விற்பனை அறிக்கை (Sales Report), சரக்கிருப்பு அறிக்கை (Inventory Report) முதலியன மேலாண்மையினர் முடிவுகளை மேற்கொள்ள உதவுகின்றன. அடக்கவிலைக் கட்டுப்பாடு, அடக்கவிலையைக் கட்டுப்படுத்தக் கையாளப் படுகிறது. மதிப்பீட்டுக் கட்டுப்பாடு, திட்டச் செலவுக் கணிப்பு, பொறுப்பேற்புக் கணக்கு முறை (Responsibility Accounting) முதலியவை, அடக்கவிலைக் கட்டுப் பாட்டு முறைகளாகும். அடக்கவிலைக் கட்டுப்பாட்டு முறைகள், நிறுவனத்தின் அனைத்துத் துறை அலுவலராலும் தொடர்ந்து செயற்படுத்தப்பட வேண்டியவை.

அடக்கவிலைக் கட்டுப்பாடு என்பது, அடக்க விலையைக் குறைப்பதற்கான முறைகள் மட்டுமன்று. ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கான தேவைகள் அனைத்தும் அடக்கவிலைக் கட்டுப்பாட்டில் அடங்கும். இதன் சிறப்புக் குறிக்கோள் பொருள் உற்பத்தியில் திறமையின்மையையும் பொருள் வீணாக்கலையும் பெருமளவில் தடுப்பதுதான். அடக்க விலைக் குறைப்பு என்பது, ஒரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தி விலை அதன் மதிப்பு மாறாத நிலையைக் காட்டுகிறது. மேலும், அடக்கவிலைக் குறைப்பு, நிறுவனம் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டியதொரு முயற்சி. அடக்கவிலைக் கட்டுப்பாடு என்பது, தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கச் செயற்படுத்தும் முறையாகும்.

**அடக்கவிலைத் தணிக்கை:** அடக்கவிலைக் கணக்குகளையும் அடக்கக் கணக்குப் பதிவேடுகளையும் வரையறுக்கப்பட்ட ஒழுங்குகளின்படி சரிபார்ப்பது அடக்கவிலைத் தணிக்கை (Cost Auditing) எனப்படும். நிறுவனத்தில் குறிப்பிட்ட அலுவலர்களிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டிருக்கும். இவ்வமைப்புகள் “பொறுப்பு மையங்கள்” (Responsibility Centres) எனப்படும். அடக்கவிலை மையம் (Cost Centre), ஆதாய மையம் (Profit Centre), முதலீட்டு மையம் (Investment Centre), மதிப்பீட்டு மையம் (Budget Centre) போன்ற பல அமைப்புகள் இருக்கும்.

**அடக்கவிலை மையம்:** இது ஒரு செலவு மையம். ஒரு துறையையோ விற்பனையாகும் இடத்தையோ, விற்பனையாளரையோ ஒரு குறிப்பிட்ட எந்திரத்தையோ குறிக்கும். தகுந்த அடக்கவிலை மையங்களை முடிவு செய்வது அடக்கவிலையை வரையறுப்பதற்கு மிகவும் இன்றியமையாதது. மையத்தின் மேலாளர், அம்மையத்தின் அடக்கக் கட்டுப்பாட்டு முறைகளுக்குப் பொறுப்பேற்கிறார். ஒரு நிறுவனத்தில் மிகுதியான அடக்கவிலை மையங்கள் இருந்தால் கணக்குகளை எல்லா விவரங்களுடனும் கணிக்க இயலும். ஆனால் பல மையங்களை வைத்துக் கொள்வதால் மிகுந்த செலவாகும்.

**ஆதாய மையம்:** நிறுவனத்தின் அமைப்பு, பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒரு பிரிவின் செயல் திறன், அப்பிரிவுக்காகும் செலவுகளாலும் அப்பிரிவினால் வரக்கூடிய வருமானத்தினாலும் மதிப்பிடப் படுகிறது. ஒவ்வொரு பிரிவின் மேலாளரும் தம் பிரிவில் மிகுந்த ஆதாயம் ஈட்ட முனைவர். இதற்குப் “பங்களிப்பு மையம்” (Contribution Centre) என்று பெயர்.

**முதலீட்டு மையம்:** ஒவ்வொரு பிரிவின் மேலாளரும் அப்பிரிவினால் வரக்கூடிய ஆதாயத்திற்கு மட்டும் பொறுப்பேற்பதில்லை. அப்பிரிவில் அவர் பயன்படுத்தும் சொத்துகளுக்கும் அவரே பங்கேற்கிறார். அப்பிரிவிற்கான முதலீடும் அதனால் வரக்கூடிய வருமானமும் கணக்கிடப்படுகின்றன. இதைப் பொறுத்தே அங்கு வேலை செய்யும் தொழிலாளரின் செயல் திறனும் மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு மேலாளரும் அவர் கையாளும் முதலீட்டிற்கேற்ப ஒரு குறிப்பிட்ட அளவுக்குக் குறையாத வருமானம் ஈட்ட ஊக்குவிக்கப்படுவர். திறமைமிகு மேலாளர்கள் மேலாண்மை முடிவுகளைத் தாமே எடுக்க முழு உரிமையும் அளிக்கப்படுகிறது.

**மதிப்பீட்டு மையம்:** மதிப்பீட்டுக் கட்டுப்பாடுகளுக்காக இம் மையம் இயங்குகிறது. ஒவ்வொரு மதிப்பீட்டு மையத்திற்கும் தனித்தனியே மதிப்பீடுகள் உருவாக்கப்படுகின்றன. அதற்கேற்றவாறு செயல்பட ஒரு மேலாளர் பொறுப்பேற்கிறார். அம் மதிப்பீட்டின்படி செயல்படுத்துவதில் ஏற்படும் குறைபாடுகளுக்கும் அவரே பொறுப்பேற்கிறார். பொருள்களுக்கேற்பப் பொருத்தமான வகைகளில் அடக்கவிலை வரையறுக்கப்படுகிறது.

**அடக்கக் கணக்கின் சிறப்புக் கொள்கைகள்:** 1)ஒவ்வொரு நிறுவனமும் அதன் நடவடிக்கைகளின் சிறப்புத் தன்மைக்குத் தக்கவாறு அடக்கக்கணக்கு முறைகளைக் கையாள வேண்டும். 2) ஒரு செலவினம், செலவு செய்யப்படுவதற்கு முன் அடக்கவிலைக் கணக்கில் சேர்க்கப்படக் கூடாது. 3) அடக்கக் கணக்கு உருவாக்கத்தில் பழைமை எண்ணங்களுக்கு இடம் கொடுக்கலாகாது. 4) கடந்த காலச் செலவுகளை எதிர் காலச் செலவிற்கு எடுத்துக்கொள்ளக் கூடாது. 5) பொதுவாக, நிகழாத, ஆனால் எப்போதாவது

நிகழக் கூடிய, செலவுகளும்அடக்கக் கணக்கில் வாரா. 6) அடக்கக் கணக்குகள் இரட்டைப் பதிவு (Double Entry) முறைக் கணக்கின் அடிப்படையில் எழுதப்பட வேண்டும். 7) நடவடிக்கைகளின் உண்மைத் தன்மைக் கேற்றவாறு செலவுகள் அந்தந்தக் கணக்குகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

**அடக்கக் கணக்கின் வகைகள்:** பல வகையான முறைகளில் அடக்கவிலை முடிவு செய்யப்படலாம். ஆனால், எல்லா முறைகளிலும் பொதுவான கொள் கைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. உற்பத்திப் பொருளுக்குத் தகுந்தவாறும் உற்பத்தி முறைகளுக் குத் தகுந்தவாறும் செலவுகள் ஒதுக்கப்படுவதும் அடக்க விலைக் கணக்குகள் உருவாக்கப்படுவதும் மாறுபடும். இதில் இருவகையான முறைகள் கடைப் பிடிக்கப்பட்டு வருகின்றன. அவை 1) வேலைச் செல வுக் கணிப்பு, 2) தொழில் முறைச் செலவுக் கணிப்பு. வாடிக்கையாளரின் குறிப்பிட்ட தேவைக்குத் தக்க வாறு பொருள் உற்பத்தி செய்யும்போது, அதற்கான அடக்கவிலை வரையறை செய்யப்பட்டு, அனைத்துச் செலவுகளும் கணக்கில் கொண்டுவரப்படுகின்றன. இவ்வடிப்படையிலேயே அச்சகங்களிலும் கப்பல் கட் டும் நிறுவனங்களிலும் தொழிற் சாலைகளிலும் கட்டட வேலைகளிலும் பழுதுபார்க்கும் பணிமனை களிலும் அடக்கக் கணக்குகள் வரையறை செய்யப்படு கின்றன.

பொதுவாக, பொருள் உற்பத்தி வெவ்வேறு முறைகளில் நிகழ்கிறது. ஒரு முறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள், அடுத்த முறைக்கு மூலப் பொருளாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு முறையிலும் சில துணைப்பொருள்கள் (By-products) உருவாவதும் உண்டு. இரசாயனத் தொழிற்சாலை கள், நெசவாலைகள், தோல் பதனிடு தொழிற்சாலை கள், காகிதத் தொழிற்சாலைகள், செங்கற் சூளைகள், சோப்புத் தொழிற்சாலைகள் போன்றவற்றில் இம் முறையில் அடக்கவிலை கணக்கிடப்படுகிறது. சில நிறுவனங்கள் ஒரே தன்மையான பொருள்களை உரு வாக்கும். அங்கு ஒவ்வொரு பொருளின் தனி அடக்க விலை (Unit Costing) கண்டுபிடிக்கப்படும்.

போக்குவரத்து நிறுவனங்கள், மருத்துவமனை கள், மின்சார நிறுவனங்கள், குடிநீர்ப்பங்கீட்டு நிறு வனங்கள் முதலியவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட முறைகள் பொதுவாகக் கையாளப்படுகின்றன. அம் முறைகளுக்குப் பல்வகைச் செலவுக் கணிப்பு (Multiple Costing) என்பது பெயர்.

**அடக்கக் கணக்கின் நுட்பம்:** 1) பழைய விவர அடிப்படைக் கணிப்பு (Historical Costing): ஒரு பொருளின் உற்பத்திக்குப் பின், அதன் செலவு விவ ரங்களிலிருந்து உற்பத்திச் செலவைக் கணக்கிடுதல். இதில் அடக்க விலைக் கட்டுப்பாட்டு முறையைக் கையாள முடியாது. 2) திட்டச் செலவுக் கணிப்பு: ஒரு பொருள் உற்பத்திக்கு முன்பே செலவினங்களை வரையறுப்பது திட்டச் செலவுக் கணிப்பு எனப்படும். உற்பத்திக்குப் பின், செலவையும் திட்டக்காலச் செல வுக் கணிப்பையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைத் திட்டச் செலவுக் கணிப்பு கணக்கிடுகிறது. 3) இறுதிநிலைச் செலவுக் கணிப்பு: ஒரு பொருளை உற்பத்தி செய்யும் பொழுது அதற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சில செலவுகள் ஏற்படலாம். சில, உற்பத்திக்குத் தக்க வாறு மாறும் செலவுகள் (Variable Costs); சில மாறாச் செலவுகள் (Fixed Costs): மாறாச் செலவு களைக் கணக்கிடாமல், மாறக்கூடிய நேரடிச் செலவு களை மட்டும் கணக்கிடுவது இறுதிநிலைச் செலவுக் கணிப்பு எனப்படும். இந்த இறுதிநிலைச் செலவை விற்பனை விலையிலிருந்து நீக்கினால், கிடைப்பது ஆதாயப் பங்கு (Contribution). இத் தொகையிலிருந்து மாறாச் செலவுகளைக் கழித்தால் கிடைப்பது ஆதா யமாகும் (Profit).

**சேர்ப்புச் செலவுக் கணிப்பு (Absorption Costing):** இம் முறையில் ஒரு பொருளுக்காகும் நேரடியானதும் மறைமுகமானதுமான அனைத்துச் செலவுகளும் கணக் கிடப்படுகின்றன,

**ஒரு தன்மைச் செலவுக் கணிப்பு (Uniform Costing):** ஒரு தன்மைப் பொருள்களை உற்பத்தி செய்யும் பல நிறுவனங்களும் ஒரே வகையான அடக்கக் கணக் குக் கொள்கைகளைக் கையாள்வதைக் குறிக்கும். அவை நிறுவனங்களின் உற்பத்தி அடக்க விலைகளை ஒப்பிட்டுப் பார்க்கவும் விற்பனை விலையை வரைய றுக்கவும் உதவும்.

சில செலவுகள், அவை செலவிடப்படும் இனத் தைக் கொண்டு வகைப்படுத்தப்படுகின்றன. இவ் வகைச் செலவுகள், உற்பத்திச் செலவு என்றும் மேற்பார்வைச் செலவு என்றும் விற்பனைச் செலவு என்றும் இனப்படுத்தப்படுகின்றன.

**அடக்கக் கணக்கின் பயன்கள்:** அடக்கவிலைக் கணக்குகளின் மூலமாக 1) அடக்கவிலை முடிவு செய்யப்படுகிறது. 2) எந்தெந்த வருமானத்திற்கு எந் தெந்தச் செலவுகள், முறையாகக் காட்டப்பட வேண் டும் என்று முடிவு செய்ய முடியும். 3) ஒரு குறிப் பிட்ட பணியை அதற்காகும் அடக்கச் செலவின் அடிப்படையில் கணக்கிட இயலும். 4) விற்பனை விலையை உறுதிசெய்ய முடியும். 5) நடவடிக்கை ஒவ்வொன்றிலும் ஈட்டக்கூடிய ஆதாயத்தை வரை யறை செய்ய முடியும். 6) மேலாண்மையினர் எதிர் காலத் திட்டத்தைத் தீட்டவும் உறுதியான முடிவு களை மேற்கொள்ளவும் இயலும். பி.இரா.

துணை நூல்கள்:

Bhar, B.K., "Cost Accounting", Academic Publishers, Calcutta, 1978.

Sarkar, N., "Cost Accounting", Academic Publishers, Calcutta, 1976.

**அடக்கம்**: பண்டைத் தமிழ்நாட்டில் விளங்கிய இசைக்கருவிகளுள் அடக்கம் என்பது ஒன்றாகும். இது தோற் கருவியாகும். இது வன்மைக் கருவி வகையினைச் சேர்ந்தது. இது ஒரு கடைக்கருவி (அதம மான 'பறை' என்னும் கருவியைப் போல) என்று கூறப்படுகிறது. இதனைப் புறப் புற முழவு என்பர். காளி, சாத்தன், காடுகாளி ஆகிய கடவுளர் மூவர்க்கும் இசைக்கப்படும் கருவிகளுள் அடக்கம் என்பதும் ஒன்றாம்.

**அடக்கல்**: காண்க: தன்முனைப்புத் தற்காப்பு வழிமுறைகள்.

**அடக்க விலை**: பொருளியலில் அடக்க விலை (Cost Price) என்பது ஒரு பண்டம் உற்பத்தி செய்வதற்கு ஆகும் மொத்தச் செலவினைக் (Total Cost) குறிக்கும். செலவுகள் பல வகைப்படும்: அலுவற் செலவு, மொத்தச் செலவு, மாறுஞ் செலவு, மாறாச் செலவு, குறுங்காலச் செலவு, நீள்காலச் செலவு, மாற்றுச் செலவு, இறுதி நிலைச் செலவு ஆகியவை சிறப்பானவை.

அலுவற் செலவு: ஒரு நிறுவனத்தின் மேலாண்மைச் செலவுகள் மட்டும் அலுவற் செலவுகள் (Business Costs) எனப்படும். கச்சாப் பொருள்களை வாங்குவதற்கான செலவு, தொழிலாளருக்குக் கொடுக்கப்படும் கூலி, சில வரிகள், எரிபொருட் செலவு ஆகியன இவற்றில் அடங்கும்; நிறுவன நிருவாகம், பட்டுவாடா செய்யும் பணச் செலவுகளே இவை. வெளிப்படைச் செலவுகள் (Explicit Costs) என்றும் இவை சொல்லப்படும்.

மொத்தச் செலவு: அலுவற் செலவுகளுடன் வேறு சில வகைச் செலவுகளையும் கூட்டிக் கணிக்கும் தொகை மொத்தச் செலவு (Total Cost) எனப்படும். ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் தாம் செய்யும் வேலைக்கு ஊதியம் பெறாதிருப்பின் அவருக்குரிய ஊதியச் செலவும், அவர் தம் பணத்தை முதலீடு செய்திருந்தும் அதற்கான வட்டியைப் பெறாவிடின் அந்த முதலுக்குரிய வட்டித் தொகையும், அவருடைய நிலத்திலும் கட்டடத்திலும் அத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு அதற்கான வாடகையைப் பெறாவிடின் வாடகையும், அலுவல் செலவுகளுடன் சேர்க்கப்படும். சுருங்கக் கூறின், உரிமையாளர் கொடுத்துதவும் உற்பத்திக் காரணிகளுக்கு, அவற்றிற்குரிய அங்காடி விலைகளைச் செலவு இனங்களாகக் கருதி அவையும் கூட்டப்படுகின்றன.

இவற்றையெல்லாம் எவ்வாறு கணிப்பது? ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் இன்னொரு நிறுவனத்தில் உழைப்பாரேயானால், அதில் அவர் பெறக் கூடிய ஊதியம் தம்முடைய சொந்த நிறுவனமும் தரவேண்டிய ஊதியமாகும். எவரிடமிருந்து நிறுவன உரிமையாளர் மிகுதியான ஊதியம் பெறுவாரோ அவ் வூதியம் அவருடைய உழைப்புக்கு வாய்ப்புப் பெறுமானம் அல்லது மாற்றுச் செலவு (Alternative Cost) எனப்படும். இவை சொந்த நிறுவனத்தின் செலவுகளுடன் சேர்க்கப்படும். இவ்வகையில் அவருடைய முதலுக்கு வட்டி அதனைப் பிறருக்குக் கடனாகக் கொடுத்தால் கிடைக்கக் கூடிய உயர் நிலை வட்டி, அவருடைய நிலம், கட்டிடம் முதலியவற்றைப் பிறருக்கு வாடகைக்கு விட்டால் கிடைக்கக்கூடிய வாடகைகளில் மிகுதியான வாடகை ஆகியவை மொத்தச் செலவுக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றன. இவையெல்லாம் வெளிப்படைச் செலவுகள் அல்ல. ஆனால், அனுமானத்தில் ஏட்டில் எழுதும் செலவுகள். இவை உட்கிடைச் செலவுகள் (Implicit Costs) எனப்படும்.

இயல்பான ஆதாயம்: நிறுவன உரிமையாளர் ஒரு நிறுவனத்தைத் தோற்றுவித்து, அதன் செயல்பாட்டைக் கண்காணித்து, உயர்நிலை முடிவுகளான எப் பொருள் செய்வது, எத்தனை அலகுகள், எவ்வகை எந்திரம், எம்முறை உற்பத்தி போன்றவற்றை முடிவு செய்து செயலாற்றினால் அவர் ஒரு தொழில் முயலுநரின் (Entrepreneur) பணிகளைச் செய்கிறார் என்பதாகும். ஒரு தொழிலைத் தோற்றுவித்தலோடு புதிய தொழில் நுட்பம், புதிய கச்சாப் பொருள், புதிய அங்காடி போன்ற புதுமைப்படுத்தல் முயற்சிகளனைத்தும் தொழில் முயலுநரின் சிறப்புப் பணிகளாகும். இவற்றை உணர்ந்து செயலாற்ற அரிய திறமை வேண்டும். இவை கண்காணிப்பாளர் மட்டுமே செய்யும் பணிகளல்ல. பொதுவாக இவை நிருவாகிகளால் செய்யமுடியாத பணிகள். இப்பணிகளுக்குப் பொதுவான நிருவாகியின் ஊதியம் போதாது. ஆகவே, தகுந்த வெகுமதியில்லாவிடில் தொழில் முயலுநர் எவரும் ஊக்கத்துடன் செயலாற்ற இயலாது. சிறப்புத் திறன் மிக்க ஒரு தொழில் முயலுநர், நாள்தோறும் செய்யவேண்டிய நிருவாக அலுவல்களை ஊதியம்பெறும் நிருவாக அலுவலரிடம் ஒப்படைத்து விடுவார். தொழில் முயலுநரை ஊக்குவித்துப் புதுமை புகுத்தலைத் தொடர்ந்து செய்யக் குறைந்த அளவு வெகுமதியாவது கொடுப்பது இன்றியமையாதது. இல்லையேல் நுகர்வோர் புதிய பொருள்களை மலிவான விலையில் நுகரும்

வாய்ப்பினை இழப்பர். தொழில் முயலுநருக்கு அளிக்கப்படும் வெகுமதியையே பொதுவான அல்லது இயல்பான ஆதாயம் (Normal Profit) என்பர். இயல்பு ஆதாயமும் நிறுவனத்தின் மொத்தச் செலவில் அடங்குகிறது.

விற்பனைச் செலவு: முதலாளித்துவப் பொருளாதாரத்தில் விற்பனைச் செலவு (Selling Cost) ஒரு சிறந்த இடம் பெறுகிறது. ஏனெனில், நிறைவுப் போட்டி (Perfect Competition) இப்பொருளாதாரத்தின் உயிர்நாடி. எனவே, இதனை விலை மையப் பொருளாதாரம் என்றும், அங்காடி மையப் பொருளாதாரம் என்றும் கூறுவதுண்டு. ஒரே பொருளைப் பல உற்பத்தியாளர் பல வணிகப் பெயர்களுடன் விற்பதால், அவர்களுக்கிடையே வலுவான போட்டி ஏற்படுகிறது. போட்டி என்பது முதலாளித்துவத்தின் கொள்கை. உற்பத்தியாளர் அனைவரும், பொருள்களை விற்கவும் போட்டியில் வெற்றிபெறவும் விளம்பரத்திற்குப் பெரிய அளவில் செலவு செய்வர். சில பொருள்களுக்கு உற்பத்திச் செலவு குறைவாகவும் விளம்பரச் செலவு மிகுதியாகவும் ஆவதுண்டு. எடுத்துக்காட்டாக வாசனைப் பாக்கு, வாசனைப் புகையிலை, பீடி, தலைவலி மாத்திரை முதலியவற்றைக் கூறலாம். விற்பனை நடக்காத காலத்திலும் கூட விளம்பரச் செலவு இடைவிடாது தொடர்ந்து கொண்டிருக்கும். போர்க்காலத்தில், இங்கிலாந்தின் புகழ்பெற்ற "அன்ட்லீ & பாமர்சு" மாச்சில்லுகளும் (Biscuits) ஒவல் துகள்களும் (Ovaltine) இந்திய அங்காடிக்கு வரவில்லை. இருப்பினும் அக்காலங்களில் "போர் முடிந்தவுடன் உங்களுக்குச் சுவைமிக்க "பிசுகோத்துகளும் ஒவல்டின்களும் கிடைக்கும்" என்று விளம்பரம் செய்து கொண்டிருந்தார்கள். ஆகவே, இப்போது விளம்பரம் இல்லாத பொருள்கள் குப்பையிலே என்று கூறுவதுகூட மிகையாகாது. எனவே, விளம்பரச் செலவு தொடர்ந்து இடைவிடாது செலவிடப்படின், அதுவும் மொத்தச் செலவில் ஓர் இனமாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

மொத்தச் செலவு = அலுவல் செலவுகள் + நிறுவன உரிமையாளரின் வாய்ப்புப் பெறுமானங்கள் + இயல்பான ஆதாயம் + விற்பனைச் செலவுகள்.

மாறுஞ்செலவும் மாறாச் செலவும் : மொத்தச் செலவை மாறுஞ்செலவு, மாறாச் செலவு என்று இரு கூறுகளாகப் பிரிப்பது பொருளியல் மரபு. மாறுஞ் செலவுகள் (Variable Costs) உற்பத்தியின் அளவுக்கேற்ப மாறும். கச்சாப் பொருள் (Raw materials), எரிபொருள், தொழிலாளர் கூலி, ஆயத் தீர்வை முதலியவற்றிற்காகும் செலவுகள் மாறுஞ் செலவுகளாகும். மாறாச் செலவுகளில் (Fixed Costs) தலையாயது நிலம். மற்றவை தொழிற்சாலைக் கட்டிடம், எந்திரங்கள் ஆகியவற்றுக்கு முதலீடு செய்த முதலுக்குரிய வட்டி, தேய்மானம், சில வரிகள், சில காப்பீட்டுக் கட்டணங்கள், சிலவகை ஊதியம் முதலியன. ஒரு தொழிற்சாலை மூடிக் கிடக்கும் காலத்திலும் அதற்கு ஏற்படும் செலவுகள் அனைத்தையும் மாறாச் செலவுகள் என்று கூறலாம். மூடிக் கிடப்பினும் நிருவாகி நிருவாக அலுவலர்கள், தொழில் நுட்பஅறிஞர், காவல்காரர் முதலியோரை வேலையினின்றும் நீக்க முடியாது. அவர்கள் நிலையாக வேலையில் அமர்த்தப் பட்டவர்கள். எனவே, அவர்கள் சம்பளங்கள் மாறாச் செலவில் இடம்பெறுகின்றன. மேலும், எந்திரங்கள் துருப் பிடிக்காமலிருக்க அவைகளுக்கு எண்ணெய் முதலியன தடவுவதற்கு ஆகும் செலவும் மாறாச் செலவில் அடங்கும் சில வரிகளும் (மனை வரி) கட்டியே ஆகவேண்டும். தொழிலதிபரின் மாற்றுப் பெறுமானங்கள், விளம்பரச் செலவுகள் ஆகியவை மாறாச் செலவைச் சேர்ந்தவையே. இவ்வாறு நோக்கின், மாறாச் செலவு நடைமுறையில் பொதுச் செலவுகளைவிட மிகுதியான இனங்களைக் கொண்டது என்பது விளங்கும். மாறுஞ் செலவுகள் முதன்மை அல்லது நேர்ச் செலவுகள் (Prime or Direct Cost) என்றும் மாறாச் செலவுகள் துணைச் செலவுகள் (Suplementary Costs) என்றும் கூறப்படும். மொத்தச் செலவு = மாறுஞ் செலவு + மாறாச் செலவு.

குறுங்காலச் செலவுகளும் வளைகோடுகளும்: அடக்கவிலையை ஆயும் பொருளியல் வல்லுநர்கள், குறுங்கால, நீள்காலச் செலவுகளில் மிகுந்த கவனம் செலுத்துவதுடன் அவற்றில் வேற்றுமையும் காண்கின்றனர். குறுங்காலத்தில் ஒரு நிறுவனத்தின் மாறாச் செலவுகள் நிலையாக இருக்கும். உற்பத்தி, பூச்சியத்திலிருந்து உயர்நிலை உற்பத்தி அளவைத் தொடும் வரை மாறாச் செலவு உற்பத்தியைப் பாதிப்பதில்லை. ஏனெனில், நிறுவப்பட்ட கட்டிடம், எந்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டே உயர்நிலை உற்பத்தியை எட்டிப் பிடித்துவிடலாம். ஆகவே, குறுங்காலத்தில் உற்பத்தித் திட்டங்களை மாறுஞ் செலவுகள் மட்டுமே பாதிக்கின்றன. உற்பத்தியைக் கூட்டினால் மாறுஞ்செலவும் அதே விகிதத்தில் கூடும். உள்ளீடுகளின் விலை நிலையாக இருப்பின், உற்பத்தி வளர்ச்சியின் வேகத்திலேயே மாறுஞ் செலவுகளும் வளரும். வளர்ச்சி குன்றினால், மாறுஞ் செலவும் குறையும் தன்மையுடையது. அங்காடியின் தேவைக்கேற்ப, ஒரு நிறுவனம் உற்பத்தியைக் கூட்டவும் குறைக்கவும் செய்யும். கச்சாப் பொருள்கள், எரிபொருள்கள், ஆயத்தீர்வை, கூலிகள், குறுகிய காலக் கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி முதலிய மாறுஞ் செலவுகள் மாற்றமடைகின்றன.

கீழ்க்காணும் அட்டவணை, குறுங்காலத்தில் எவ்வாறு அடக்க விலை வரையறுக்கப்படும் என்பதைக் காட்டுகிறது. குறுங்காலத்தில் உற்பத்தி பூச்சியத்திலிருந்து உயர்நிலை உற்பத்திக்கு உயர்ந்தாலும், உள்ளீடுகளின் (கச்சாப் பொருள்கள் முதலியன) விலைகள் மாறாது நிலையாகவிருக்கும் என்னும் கருதுகோளில் (Hypothesis) தொகுக்கப்பட்டது.

மட்டுமே பாதிக்கப்படும் என்பதைக் கணிதவியல் முறையில் ஆராயலாம். மொத்த உற்பத்தி 'n' அலகுகள் என்க. அப்படியிருப்பின்,

$$MC = TC(n) - TC(n-1)$$
$$= (TVC(n) + TFC) - (TVC(n-1) + TFC)$$
$$= TVC(n) - TVC(n-1) = AVC$$

அட்டவணை (1): மாறுஞ்செலவு, மாறாச் செலவு முதலியன:

| உற்பத்திப் பொருள் அலகுகள் | உரு. மொத்த மாறாச் செலவு | உரு. சராசரி மாறுஞ் செலவு | உரு. மொத்த மாறுஞ் செலவு | உரு. மொத்தச் செலவு | உரு. சராசரி மொத்தச் செலவு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 0 | 1000 | 0.50 | 0 | 1000 | — |
| 1000 | 1000 | 0·50 | 500 | 1500 | 1.50 |
| 2000 | 1000 | 0·50 | 1000 | 2000 | 1.00 |
| 3000 | 1000 | 0.50 | 1500 | 2500 | 0.83 |

உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவையான உள்ளீடுகளின் விலைவாசி நிலையாக இருக்கும் என்ற கருதுகோளினால், சராசரி மாறுஞ் செலவு உரூ.0.50 ஆக நிலைத்திருப்பதுடன் மொத்த மாறுஞ்செலவு உற்பத்தியின் வீதத்தில் கூடிச் செல்கிறது. மாறாச் செலவு (பத்தி-2) உரூ.1000-உம் உற்பத்தி பூச்சியத்திலிருக்கும்போதும் மற்ற உற்பத்தி அளவுகளிலும் அப்படியே மாறாதிருக்கிறது. உற்பத்தி அளவு கூடக் கூட, ஓர் அலகுக்குரிய சராசரி மொத்தச் செலவு (பத்தி–6) குறைந்துகொண்டே செல்கிறது (உரூ.1.50 இலிருந்து உரூ.0.83வரை). ஏனெனில் இது மொத்த உற்பத்திச் செலவை (பத்தி–5) உற்பத்தி அலகுகளால் (பத்தி–1) வகுத்துவரும் ஈவு. சராசரிச் செலவு (Average Cost AC) இரண்டு பகுதிகளையுடையது: (1) சராசரி மாறாச் செலவு (Average Fixed Cost, AFC), (2) சராசரி மாறுஞ் செலவு (Average Variable Cost AVC) அதாவது சராசரிச் செலவு=சராசரி மாறாச்செலவு+சராசரி மாறுஞ்செலவு AC=AFC+AVC.


**இறுதிநிலைச் செலவு:** இறுதிநிலைச் செலவு என்பது ஓர் அலகு மிகுதியாக உற்பத்தி செய்வதனால் ஏற்படும் மிகுதிச் செலவு ($\triangle C$). இறுதிநிலைச் செலவு மாறாச் செலவினால் சிறிதேனும் பாதிக்கப்படாதது. இறுதிநிலைச் செலவு மாறுஞ் செலவினால்

இதில் Mc (n) என்பது, "n"–ஆவது அலகின் இறுதி நிலை உற்பத்திச் செலவு ஆகும். இதுபோன்று TC(n), 'n' அலகுகளின் மொத்தச் செலவு; TC (n–1), (n–1) அலகுகளின் மொத்தச் செலவு; TFC, மொத்த மாறாச் செலவு; TVC, மொத்த மாறுஞ் செலவு; TVC (n–1), (n–1) அலகுகளின் மொத்த மாறுஞ் செலவு; AVC, சராசரி மாறுஞ்செலவு.

இச்சமன்பாட்டில் இறுதிநிலைச் செலவு, மாறுஞ் செலவுடன் மட்டுமே இணைந்தது. சராசரி மாறுஞ் செலவு, ஒரே நிலையில் உள்ள காலத்தில் அதுவும் நிலைச்செலவும் சமமாயிருக்கும் என்பது தெளிவாகிறது.

**மாறுஞ்செலவு, மாறாச் செலவு:** உற்பத்தி எந்த அளவிலிருப்பினும் மொத்தச் செலவு ஒரே நிலையிலிருப்பதை TFC என்னும் கிடைகோடு காட்டுகிறது.

உற்பத்தி பூச்சியமாயினும் TFC உரூ.1000 என்பதை OY அச்சில் அது தொடும் உயரத்திலிருந்து காண்க. மொத்த மாறுஞ்செலவுக் கோடு TVC O-விலிருந்து கிளம்புவது, உற்பத்தி பூச்சியமாயுள்ள போது மாறுஞ் செலவும் பூச்சியம் என்பதைக் காட்டுகிறது அது, மேல்நோக்கிச் செல்வது, வெளியீடு (output) பெருகும்போது மாறுஞ்செலவும் அதே விகிதத்தில் பெருகுவதைக் காட்டுகிறது. TC = TFC +




படம்-1
மாறுஞ்செலவு, மாறாச்செலவு

TVC என்பதை TC என்னும் மொத்தச் செலவுக் கோடு காட்டுகிறது. இது இருவகைச் செலவுகளையும் (TFC, TVC) செங்குத்தாகக் கூட்டிவரும் தொகையைக் காட்டும்படி வரையப்பட்டுள்ளது. TCயும் TVCயும் இணைகோடுகள். இவற்றினிடையேயுள்ள செங்குத்துத் தூரம் உரூபாய் 1000-ஐக் குறிக்கும்.

**குறுங்காலச் சராசரிச் செலவு வளைகோடுகள்:** மொத்தச் செலவைக் காட்டிலும் ஓர் அலகு உற்பத்தி செய்வதற்கு ஆகும் சராசரிச் செலவில் மட்டுமே பொருளியல் வல்லுநரும் தொழிலதிபரும் மிகுந்த அக்கறை காட்டுகின்றனர். ஒரு நிறுவனத்தின் செலவு வளைகோடுகள் (Cost Curves) வளைவாகவும் வழவழப்பாகவும் முக்குகள் (Corners), கோணங்கள் இல்லாமலுமிருக்கும். அவற்றில் நான்கு வகைக் கோடுகள் சிறப்பானவை.

மொத்தச் செலவுக்கும் சராசரிச் செலவுக்குமுள்ள தொடர்பைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கலாம்:-

சராசரி மாறுஞ்செலவு $AVC = \frac{TVC}{q}$

சராசரி மாறாச் செலவு ... $AFC = \frac{TFC}{q}$


சராசரி மொத்தச் செலவு ... $ATC = \frac{TC}{q}$

$$= \frac{TVC}{q} + \frac{TFC}{q}$$

இறுதிநிலைச் செலவு ... $MC = \frac{\triangle TVC}{\triangle q}$

இதில் △ என்பது ஒரு சிறு அளவு மிகுதி (மாறுஞ் செலவிலும் மொத்த அலகு எண்களிலும்) என்பதைக் காட்டும் குறியீடு.

**மரபுவழிக் குறுங்காலச் செலவு வளைகோடுகள்:** மரபுப்படி புகழ் பெற்ற நான்கு குறுகிய காலச் செலவு வளைகோடுகளைக் காட்டுவதுடன் அவற்றின் வடிவங்களையும் அவற்றிற்கிடையேயுள்ள உறவு முறைகளையும் காட்டுவதாக அமைந்துள்ளது.




படம் (2)
மரபுவழி, குறுங்காலச் செலவு வளைகோடுகள்

முதலில் AFC வளைகோடு ஒரு செவ்வக இருபுற வளைவு (Rectangular Hyperbola) என்பதைக் காட்டுகிறது. இதன் இரு நுனிகளும் முறையே செங்குத்து (OY), கிடை (OX) அச்சுகளை அணுகிக் கொண்டே சென்றாலும் அவற்றைத் தொடவில்லை. உற்பத்தி (OM) சிறிதளவாயிருப்பின் ஓர் அலகின் மாறாச் செலவு MN உயரமுள்ளது. உற்பத்தி பெரிய அளவில் ($OM^1$) விரிவடைந்தால், மிகவும் குறைந்த உயரத்தில் ($M^1N^1$) உள்ளது. சராசரி மாறாச் செலவு எந்த அளவாயிருந்தாலும் உற்பத்தி அலகுகளைக் கொண்டு பெருக்கினால் ஒரே தொகையாக (உரூ. 1000 என்று அட்டவணை (I)இல் கொடுக்கப்பட்டது போல்) இருக்கும். கணிதவியலில் இதற்குரிய வாய்பாடு $X \times Y = K$. இதில் X ஓர் அலகின் விலை; Y உற்பத்தி அலகின் எண்; K நிலையான தொகை.

சராசரி மாறுஞ்செலவு AVC வளைகோடு உற்பத்தி அளவு பூச்சியத்திலிருந்து நிறுவனத்தின் திறன் அளவு (Capacity Output OP) வரை மிகும் போது வளர்ந்துசெல் விதியின் செயல்பாட்டினால் AVC குறையும். AVC வளைகோடு கீழ் நோக்கிச் செல்லும்; நிறுவனத்தின் திறனளவை அடையும்போது AVC மிகக் குறைந்த அளவிலிருக்கும். திறனுக்கு அப்பால் AVC கோடு மேல் நோக்கிச் செல்கிறது. இதற்குக் காரணம், இந்நிலையில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுவதே. படத்தில் AVC முதலில் கீழ் நோக்கியும் பின்னர் மேல் நோக்கியும் செல்கிறது. ஆகவே இது U வடிவம் பெறுகிறது.


**சராசரி மொத்தச் செலவுக் கோடு:** இது சராசரி மாறுஞ் செலவும் சராசரி மாறாச் செலவும் சேர்ந்த கூட்டுத்தொகை. இவற்றில் முன்னது (AVC) திறனளவு வரை கீழ்நோக்கியும் பின்னர் மேல் நோக்

கியும் செல்கிறதென்பது தெளிவு. பின்னதாகிய AFC கீழ்நோக்கியே செல்லும். AFC–இன் தீவிர வீழ்ச்சியினால், சராசரி மொத்தச் செலவுக் கோடு AVC மேல் நோக்கிச் செல்லத் தொடங்கிய பின்னும் சிறிது தூரம் கீழ்நோக்கியே செல்கிறது. ஆனால் இறுதியில் AVC-இன் வேகம் வலுப்பட்டு ATC–யையும் மேல் நோக்கி வளையச்செய்கிறது. எனவே ATC வளைகோடும் U வடிவம் பெறுகிறது.

இறுதிநிலைச் செலவுக் கோடு: இதன் வடிவம் தூய கோட்பாட்டின (Pure Theory) படி எப்படி இருக்கும் என்பதை ஆராயலாம். மாறு விகித விளைவு விதியின் (Law of variable proportions) படி, தொடக்கத்தில் உள்ளீடுகளால் மிகுதியான வெளியீடும் (Output), பின்னர் ஒரு கட்டத்திற்கு அப்பால் வெளியீடு குறைந்தும் காணப்படும். வெளியீடு மிகுதியாகும் போது MC குறைவதால் MC வளைகோடு கீழ் நோக்கிச் செல்லும். பின்னால், வெளியீடு குறையும் போது MC கூடிக்கொண்டும் அதனால் MC வளைகோடு மேல் நோக்கியும் செல்லும். எனவே MC வளைகோடும் U வடிவம் பெறும். இதைப் படத்தில் காணலாம். MC வளைகோடு கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும்போது AVC மற்றும் ATC வளைகோடுகளிரண்டையும் அவற்றின் மிகவும் தாழ்ந்த நிலைப் புள்ளிகளில் கீழிருந்து வெட்டி மேல் நோக்கிச் செல்லும். மேலும் MC வளைகோட்டின் கீழ்ப்பகுதி, அதாவது இரண்டு அச்சுகளுக்கும் (OX,OY) உள்ளடங்கிய பரப்பு மொத்தச் செலவைக் காட்டும்.

படம் (1)இல் காட்டியுள்ளவற்றை ஒரு வரைகோட்டுக் கோவை என்று கூறலாம். அதைக் கூர்ந்து ஆராய்ந்தால், அது எவ்வாறு ஒரு குறிப்பிட்ட நிறுவனம் செயல்படுகிறது என்பதைக் காட்டுவதாகும். குறுங்காலச் சராசரி மொத்தச் செலவு தொடக்கத்தில் குறைந்து கீழ்நோக்கிச் சென்று பின்னர் மேல் நோக்கிச் செல்லும். இதில் மிகக் குறைந்த அளவு செலவில் விளையும் உற்பத்தியைத் திறனளவு உற்பத்தி என்று கூறுவர். இதுவே உயர்ந்த நிலை உற்பத்தியளவு அன்று. திறனளவு உற்பத்திக்கு மேல் உற்பத்தி செய்தால் செலவுக்கோடு மேல் நோக்கிச் செல்லும்.

எந்தத் தொழிற்சாலையிலும் பொறியியல் வல்லுநர்கள், ஒரு குறிப்பிட்ட அளவு அல்லது திட்டமிட்ட உற்பத்தி அளவு (Designed or planned output)-க்கு என எந்திரங்களை அமைக்கிறார்கள். திட்டமிட்ட அளவுக்குக் குறையினும் கூடினும் எந்திரங்களைப் பயன்படுத்துவதென்பது நடைமுறையில் இயலக் கூடியதே. ஆனால், இந்நிலையில் அலகு ஒன்றிற்காகும் சராசரி மொத்தச் செலவு உயர்ந்து விடும். இதனால், மொத்தச் செலவுக்கோடு U வடிவம் பெறுகிறது. மொத்தச் செலவில், மாறாச் செலவின் விழுக்காடு மிகுமேயானால் சராசரி மொத்தச் செலவு விரைவாகக் குறையும்; இதில் U வடிவத்தின் இரு முனைகளும் செங்குத்து நிலையைப் பெறும். மாறாச் செலவு மொத்தச் செலவில் ஒரு சிறு பகுதியே; சிறு விழுக்காடாயிருப்பின் U வடிவத்தின் இரு கைகளும் ஒரு தட்டின் (saucer) விளிம்புகள் போலத் தட்டையாக இருக்கும். படத்தில் நான்கில் மூன்று வளைகோடுகள் U வடிவத்திலும் AFC வளைகோடு இருபுற வளைவுக் கோடாகவும் (Hyperbola) இருப்பதைக் காணலாம். இவ்வகைச் செலவுக் கோடுகள் வழவழப்பான வளைகோடுகளாக இருக்க வேண்டியதில்லை. உற்பத்தி வளர்ந்து செல்கையில், ஒரு பெரும்பகுதிக்கு AVC-யும் MC-யும் கிடைக்கோடாகவும் (horizontal line) இருக்கக் கூடும். அப்போதுAVC-யும் MC-யும் சமமாகவிருக்கும். சராசரி மாறுஞ்செலவுக் கோடு (AVC) கிடைக்கோடாக இருப்பின், அதன் பொருள், AVC மாறவில்லை ஒரே நிலையில் இருக்கும் என்பதுவே. இந்நிலையில் ''மிகுகின்ற ஒவ்வொரு அலகுக்கும் ஒரே செலவு'' தானிருக்கும். இதுவே இறுதிநிலைச் செலவு (MC) ஆகும். இறுதிநிலைச் செலவும் சராசரி மாறுஞ் செலவுக் கோடுகளும் இணைந்து செல்வதைப் படம் (3)–இல் காணலாம்.





படம்: 3

இறுதி நிலைச் செலவு வளைகோடு

படம் (3)-இல் AB பகுதி முழுவதும் AVC–யும் MC–யும் சமமாயுள்ளன. ஆயினும் இச்சமநிலைக்கு ஒரு முடிவு தெரிகிறது. MC செங்குத்தாக மேல் நோக்கிச் செல்வதையும் AVC மேல் நோக்கிச் செல்வதையும் காட்டுகிறது. படம் (2)–இல் காணும் AVC, MC கிடைகோடுகளைப் பற்பல அனுபவ ஆய்வுகள் (empirical studies) உறுதிப்படுத்தியுள்ளன. சில நிறுவனங்களில் உற்பத்தி அளவு விரிவடையும்போது, நீண்ட கட்டத்திற்கு இறுதி நிலைச் செலவு மாறாமல் அல்லது மிக நுண்ணிய மாறுதலுடன் இருப்பதாகக்

கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே, உற்பத்தி பெருகும்போது ஒரு பெரிய விரிவுக் கட்டத்தைத் (expansion path) தாண்டுவது வரை இறுதிநிலைச் செலவு மாறாதிருக்கும்.

**நீள்காலச் செலவு வளைகோடுகள்:** நீண்ட காலத்தில் ஒரு நிறுவனத்தில் எல்லா உள்ளீடுகளும் மாறும். ஏனெனில், நீண்ட காலத்தில் நிறுவனர் புதுக் கட்டடங்களைக் கட்ட முடியும்; பழைய கட்டடத்தை விரிவாக்க முடியும்; புது எந்திரங்களை நிறுவமுடியும்; புதிய தொழில் நுட்ப வல்லுநர்களை அமர்த்த முடியும். உள்ளீடுகளை எந்த விகிதத்திலும் மாற்றிக் குறைந்த அளவுச் செலவில் அமைத்துக் கொள்ள முடிகிறது. எனவே, நீண்ட காலத்தில் உற்பத்தி விளைவுகள் (returns to scale) பெருகி வரும்.





படம்-4
நீள்காலச் செலவு வளைகோடுகள்.

படம் (4)-இல் வரையப்பட்டவை சராசரி மொத்தச் செலவுக் கோடுகள் (இனி மொத்தம் எனும் அடையை நீக்கியே குறிக்கப்படும்). குறுங் காலத்தில் மூன்று வகைத் திறனளவு உற்பத்தி கொண்ட A,B,S எனும் நிறுவனங்களின் சராசரிச் செலவுக் கோடுகள் முறையே $SAC_A$, $SAC_B$, $SAC_C$ என்பன. A நிறுவனத்தின் திறனளவு உற்பத்தி மிகக் குறைந்ததே; B நிறுவனம் A-ஐ விடப் பெரிது; C நிறுவனம், B-ஐ விடவும் பெரிது. இவற்றில் B நிறுவனம்தான் மிகக் குறைந்த சராசரிச் செலவில் உற்பத்தி செய்கிறது என்பதை $SAC_B$-இல் உள்ள P எனும் புள்ளி, மிகத் தாழ்ந்த இடத்திலிருந்து காட்டுகிறது. இதற்குக் காரணம் பேரளவு உற்பத்தி நல்கும் சிக்கனங்கள் (Economics of large scale production) ஆகும். C நிறுவனம் B-ஐ விடப் பெரியதாயிருப்பதனாலேயே அதன் சராசரிச் செலவு B-யினதை விட மிகுதியாக இருப்பதை $SAC_C$ கோடு சற்று உயரத்திலிருப்பதன் மூலமாகக் காட்டுகிறது. மிகப் பெரிய தொழிற்சாலையாக C ஆகிவிட்டதனால், இரண்டு சிக்கனக் கேடுகள் அதனைப் பாதிக்கின்றன:-

1) உற்பத்தியில் குறைந்து செல் விளைவு விதியின் (Law of decreasing return or law of increasing Cost) தாக்கு வலுவடைகிறது. (2) மிகப் பெரிய அளவு உற்பத்தியினால் ஏற்படும் அச்சிக்கனக் கேடுகள் (Diseconomies of scale) வலுவடைகின்றன.


OA உற்பத்தியை A அல்லது B நிறுவனத்தில் ஒரே சராசரிச் செலவில் செய்யக்கூடும்; எதில் உற்பத்தி செய்தாலும் சராசரிச் செலவு DA தானிருக்கும். $SAC_A$, $SAC_B$ செலவுக் கோடுகளும் D-இல் வெட்டிச் செல்வது, இரண்டு நிறுவனங்களிலும் சராசரிச் செலவு சமம் என்பதைக் காட்டுகிறது. $OA^1$ அளவு உற்பத்தி A நிறுவனத்தின் கொள்ளளவு உற்பத்தியாகும். ஏனெனில், A-யின் செலவுக் கோட்டின் குறைந்த அளவுச் செலவு $A^1F$. அதாவது, $OA^1$ என்பது இந்நிலையில் உற்பத்தியாகும். ஆனால், B நிறுவனத்தில் இதே $OA^1$ உற்பத்தியைச் செய்தால் சராசரிச் செலவு $A^1E$ ஆகும்; இது $A^1F$-ஐ விடஉயரத்தில் குறைவு; அதனால், சராசரிச்செலவும் EF அளவுக்குக் குறைவு என்பது தெளிவாகிறது. B நிறுவனத்தின் திறனளவைவிடக் குறைவான $OA^1$ உற்பத்தியை B-யில் செய்வதனால், A-யின் உற்பத்தியை விடக் குறைந்த செலவில் உற்பத்தி செய்யமுடியும் என்பது வடிவக் கணிதவியல் மூலம் நிறுவப்படுகிறது. இதிலிருந்து ஒரு பொதுத் தேற்றத்தை உருவாக்கலாம்:- வளர்ந்துசெல் விளைவு விதி செயல்படுகையில், குறிப்பிட்ட அளவு உற்பத்தியை அதற்கு நிகரான திறனளவு கொண்ட நிறுவனத்தில் செய்வதை விட, அதனைக் காட்டிலும் பெரிய நிறுவனத்தில் அதன் திறனளவுக்குக் குறைந்த போதிலும் அதில் உற்பத்தி செய்வதனால், மிகக் குறைந்த அளவுக்குச் சராசரிச் செலவு குறையும்.

ஒரு சிறிய நிறுவனம் படிப்படியாகப் பெரியதொரு நிறுவனமாக வளருவதாகவும், ஒவ்வொரு கட்ட வளர்ச்சியிலும் புதிய எந்திரங்களை நிறுவி வருவதாகவும், அவற்றை இயக்கத் திறன் மிக்க தொழிலாளர்கள் கிடைப்பதாகவும் அனுமானத்தில் கொண்டு, நீண்டகாலச் செலவு வளைகோட்டைப் பகுத்தாயலாம்.



படம்-5
நீள்காலச் செலவு வளைகோடு

**நீள்காலச் செலவு வளைகோடு:** வரைபடம் 4-இல் பற்பல குறுங்காலச் செலவுக் கோடுகள் (SAC) வரையப்பட்டுள்ளன. அவற்றில், இடப்புறமிருந்து வலப்புறமாகப் பார்ப்போமானால் ஒவ்வொன்றும், ஒவ்வொரு திறனளவு உற்பத்தி அளவைக் கொண்டது என்பது புலப்படும். ஒவ்வொரு வலப் புற SAC-யின் நிறுவனமும் இடப்புறமுள்ள SAC-யின் நிறுவனத்தை விடப் பெரியது. ஒவ்வொரு ஆலையின் திறனளவும், குறைந்த அளவுச் செலவும் ஒவ்வொன்றிற்கும் வேறுபடும். LAC என்பது நீள்கால மொத்தச் சராசரிச் செலவுக்(Long run total average cost) கோடு. SAC வளைகோடுகள் அனைத்தையும் கீழ்ப்பகுதியில் தொட்டுக் கொண்டு செல்வதால், LAC அவைகளுக்கு ஒரு தொடுகோடாக (tangent) அமைகிறது. பல வகையான உற்பத்தித் திறன் படைத்த தொழிற்சாலைகளை அமைத்து, அவற்றின் குறைந்த அளவு செலவுகளைக் கண்டுபிடித்து, அதன் பின் அங்காடியில் தாம் உற்பத்தி செய்யும் பொருள்களின் மொத்தத் தேவையைக் கணக்கிட்டு, அதில் தனக்கு என்ன கிடைக்கக்கூடும் என்று ஆய்ந்து, அந்த அளவுள்ள நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது என்பது நடைமுறைக்கு ஒவ்வாததொன்று. பொதுவாகத் தொழில் முயலுநர் ஒவ்வொருவரும் தாம் எந்த அளவில் பொருள்களை விற்கக் கூடும் என்று முன்னரே கணக்கிட்டு அதில் ஓர் உறுதியான அளவைச் செய்வதென்று முடிவுகட்டுவார். பின்னர், தம் அனுபவத்துடன் பொறியியல் ஆய்வுகள், அகச் சிக்கனங்கள், சிக்கனக் கேடுகள் முதலியவற்றையும் ஆராய்ந்து, எந்தஅளவு நிறுவனத்தை நிறுவுவது என்பதை முடிவு செய்வர். இந்த ஆய்வுகளின் மூலம் இவற்றை அறிய முற்படுவதால், நீள்காலச் செலவு வளைகோட்டைத் ''திட்டமிடும் வளைகோடு'' (Planning Curve) என்றும் கூறுவதுண்டு.




படம்-6

மரபுவழிச் செலவுக் கோடுகள் நீள்காலமும் குறுங்காலமும்

**மரபுவழி நீள்காலச் செலவு வளைகோடு:** படம் 5-இல் நீள்காலச் செலவு வளைகோடும், இறுதி நிலைச் செலவுக் கோடும், குறுகியகாலச் சராசரிச் செலவுக் கோடும் அதன் இணையான இறுதி நிலைச் செலவுக் கோடும் வரையப்பட்டுள்ளன.


குறைந்த செலவைக் குறுகிய காலத்தில் SAC இன் மிகத் தாழ்ந்த புள்ளி E காட்டுகிறது. அப்போது உற்பத்தியின் அளவு OA ஆகும். நிறுவனர் இப்பொழுதுள்ள உற்பத்தியைக் காட்டிலும் மிகுதியாக உற்பத்தி செய்ய முடிவு செய்தால் அம்முடிவை (Decision), இரண்டு வழிகளில் செயல்படுத்த இயலும். 1) இப்பொழுது நிறுவப்பட்டுள்ள எந்திரங்களைக் கொண்டே மிகுதியான உற்பத்தி செய்வது ஒரு வழி. இதனைப் பின்பற்றினால் மிகை உற்பத்திச் செலவுப் பாதை, குறுகியகால இறுதிநிலைச் செலவுக் கோடு SMC ஆகும். 2) தமது தொழிற்சாலையில் மேலும் பல எந்திரங்களை நிறுவி உற்பத்தியைப் பெருக்குவதே மற்றொரு வழி. இப்படிச் செய்தால், அதன் சராசரிச் செலவு (LAC) உயரும். இப்படிச் செலவு உயர்ந்து இறுதிநிலைச் செலவுக் கோடுகளும் சராசரிச் செலவுக் கோடுகளும் மேல் நோக்கிச் செல்வதற்குக் காரணம், குறைந்து செல் விளைவு விதியின் (Law of decreasing returns) செயற்பாடாகும்.

பொருளியல் அறிஞர்கள் நீள்காலச் செலவு வளைகோடுகளையும் அவற்றின் வடிவத்தையும் முடிவு செய்வது, மூன்று வகை விளைவு அல்லது செலவு விதிகள் என்பர். குறைந்த அளவு செலவை அடையும்போது ஒரு நிறுவனம் தனது திறனுக்கு ஏற்றவாறு உற்பத்தி செய்கிறது. அதற்கும் மிகுதியாக உற்பத்தி செய்யத் துணிந்தால், வளர்ந்துசெல் செலவு விதி (Law of increasing costs) செயல்பட்டு LAC மேல் நோக்கிச் செல்லலாம். மாறாச் செலவு விதி (Law of Constant Costs) செயல்பட்டு LAC கிடைக்கோடாகவும் செல்லலாம். அல்லது குறைந்து செல் செலவு விதி (Law of decreasing costs) செயல்பட்டு LAC கீழ்நோக்கியும் செல்லலாம்.

இம் முறையில் காணும் இம்மூன்று முடிவுகளில் LAC கிடைக்கோடாக அல்லது கீழ்நோக்கிச் செல்லும் என்ற முடிவுகளை வல்லுநர்கள் மறுக்கிறார்கள். ஏனெனில், 1) புறச் சிக்கனங்களைக் குறைத்து மதிப்பிட்டும் அதன் கேடுகளை மிகைப்படுத்தியும் சராசரிச் செலவு மிகும் என்கிறார்கள். மேலும் தூய போட்டியில் (Pure Competition) தொழில் முயலுநர்களுக்கிடையே கடும் போட்டி நிலவுவதால், கச்சாப் பொருள்களும் கிடைப்பருமைப் (Scarce) பொருள்களின் விலைகளும் வேகமாக உயரும். இதன் காரணமாகச் செலவு மிகும் என்கிறார்கள். LAC கீழ்நோக்கிச் செல்லுமேயானால், நிறுவனம் ஒன்று மட்டுமே பொருள் உற்பத்தி செய்வதனால், சமூகத்தின்

பொருள்கள் உள்ளீடுகளாக வீணடிக்கப்படுவதில்லை. நுகர்வோர்க்கும் குறைந்த விலையில் பண்டங்கள் கிடைக்கும். அப்படி LAC கீழ்நோக்கிச் சரியாவிடில் ஒவ்வொரு தொழிலிலும் பல உற்பத்தியாளர்கள் ஈடுபட்டுத் தீவிர போட்டி ஏற்பட வழிவகுக்கும். அளிப்புக் கோடு (Supply curve) கீழ்நோக்கியே சென்றால், தேவைக்கோட்டை (Demand Curve) வெட்டாமலே செல்வதற்கு வாய்ப்புண்டு. அப்படியானால், உறுதிச் சமநிலை (Determinate Equilibrium) ஏற்பட வழியில்லை எனவே கீழ்நோக்கிச் செல்லும் செலவு அல்லது அளிப்புக் கோட்டிற்கு வழியில்லை என்பது மற்றும் ஒரு கருத்து. நீண்டகாலச் சராசரி செலவுக் கோடு தொடக்கத்தில் கீழ் நோக்கிச் சென்று, குறைந்த அளவு செலவைத் தொட்டுவிட்டு மேல் நோக்கிச் செல்லும் தன்மையுடையது. எனவே LACயும் U-வடிவமுடையது என்பது தெளிவாகிறது.


**L—வடிவ நீள்காலச் செலவு வளைகோடு:** ரண்டாம் உலகப் போ... ...ப் பின் வந்த ஆராய்ச்சி ...வுகள், L வடிவ நீ... ...லச் செலவுக் கோட்டை ...றுத்துகின்றன.




படம்- 7
L-வடிவ நீள்காலச் செலவு வளைகோடு

படம் (7)-இல் LAC தொடக்கத்தில் கீழ்நோக்கிச் சென்று இறுதியில் கிடைக்கோடாகச் செல்கிறது. இதன்படி, ஒரு தொழிலில் இயங்கும் பற்பல தொழிற்சாலைகள் தொடர்ந்து விரிவடையும்போது உற்பத்தி அளவு OA இலிருந்து OB வரை ஒரே குறைந்த அளவுச் செலவில் செயல்படுகிறது என்று தெரிகிறது. ஒரு தொழில் துறையில் இயங்கும் தொழிற்சாலைகள் அனைத்தும் ஒரே திறன் அளவையும் ஒரே தொழில் நுட்ப முறைகளையும் பின்பற்றுவதில்லை என்பது நடைமுறையில் தெரிந்த உண்மை. ஆயினும் அவை ஒரே அங்காடியில் தங்கள் பொருள்களை விற்கின்றன; இயல்பான ஆதாயத்துடன் விற்கின்றன என்பதையும் மறுக்க முடியாது. இயல்பான ஆதாயம் இல்லாமல் இழப்பு ஏற்படுமாயின் இழப்பு ஏற்படும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விடும். அவ்வாறின்றி, செயல்முறையில் தொழிற்சாலைகளின் திறன் அளவு வேறுபட்டிருப்பினும் A முதல் B வரையான உற்பத்தி அளவைக் கொண்ட நிறுவனங்கள், ஒரே குறைந்த அளவுச் செலவில் அல்லது சிறு வேறுபாடுகளுடன் இயங்குகின்றன. நீள்காலச் செலவு கோடுகள் முதலில் கீழ்நோக்கிச் சரிந்தாலும் பின்னர், கிடைக்கோடாகவே இருக்கும். எனவே LAC வளைகோடு L வடிவம் பெறும் என்பதாகிறது.

**கீழ்நோக்கிச் செல்லும் நீள்காலச் செலவு வளைகோடுகள்:** இயற்கையான முற்றுரிமைகள் (Natural monopolies) தனிவகையானவை. மின்சக்தி, தண்ணீர் வசதி முதலிய பொது வசதிகள் (Public Utilities), தொலைபேசி ஆகியவை இயற்கை முற்றுரிமை வகையைச் சேர்ந்தவை; இவற்றிற்கு அளவுச் சிக்கனங்கள் மிகுதியாகக் கிடைக்கும். எனவே எவ்வளவுக்கெவ்வளவு ஒரு நிறுவனம் பெரியதாக அமைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் மொத்தச் சராசரிச் செலவு குறையும். இதன் நீள்காலச் செலவுக்கோடு கீழ்நோக்கிச் செல்லும் பண்புடையது. இவ்வகை வசதிகளை இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்தால் நீண்டகாலச் செலவுக் கோட்டின் கீழ்நோக்கிச் செல்லும் பகுதியின் நடுவில் அல்லது இடைவெளிகளில் அவற்றின் உற்பத்தி அளவு இருக்கும்.




படம்: 8.
பொதுப்பணி நிறுவனங்களின்
நீள்காலச் செலவு வளைகோடு

ஒரு பொதுப்பணி நிறுவனம் தன் தேவையை நிறைவு செய்ய அதன் உற்பத்தி OM-ஆக இருக்க வேண்டும். அப்படியானால், ஓர் அலகின் சராசரிச் செலவு MP ஆகும். இந்த அளவு உற்பத்தியை

இரண்டு நிறுவனங்களுக்குச் சமமாகப் பிரித்துக் கொடுப்பின், நிறுவனத்தின் உற்பத்தி OM′′ ஆகக் குறைந்து, ஓர் அலகின் சராசரிச் செலவு M′′ P′′ ஆக மிகும். மொத்தத் தேவைக்குரிய அளிப்பை மூன்று நிறுவனங்களுக்குச் சமமாகப் பங்கிட்டளித்தால், ஒவ்வொன்றின் உற்பத்தி அளவும் OM′ ஆகவும் ஒரு அலகின் சராசரிச் செலவு M′ P′ ஆகவும் மிகும். இப்படத்தில் $OM'' = \frac{1}{2}$ OM; $OM' = \frac{1}{3}$ OM என்று குறிக்கப்பட்டிருக்கின்றன. M′ P′ மிகுதியான செலவாகவும் M′′ P′′ அதற்கடுத்தும், மிகக் குறைந்த செலவாக MPயும் உள்ளன. மொத்த அளிப்பையும் ஒரு நிறுவனமே உற்பத்தி செய்ய அனுமதித்தால் தான் மிகவும் குறைந்த விலையில் நுகர்வோர் மின் சக்தியைப் பெறுவர். இந்த எடுத்துக்காட்டினால் வெளிப்படும் உண்மை என்னவெனில், கீழ்நோக்கிச் செல்லும் நீள் காலச் செலவுக் கோடுடைய நிறுவனத்தை, போட்டியை வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2 அல்லது 3 நிறுவனங்களாகப் பிரித்து நடத்தினால், சராசரிச் செலவு மிகவும் உயர்ந்துவிடும். இப்படிச் செய்வதால் தவிர்க்கக் கூடிய சுமையை நுகர்வோர்மேல் வைப்பதாகும். எனவே இயற்கை முற்றுரிமைகளைப் பலமான போட்டி எனும் குறிக்கோளை வைத்து நிறுவனத்தை உடைத்துச் சிறு நிறுவனங்களாக ஆக்கினால் சமூக நலன் (Social Welfare) கெடும்.

அறக்கட்டளை எதிர்ப்புச் சட்டம்: ஐக்கிய அமெரிக்காவில் ஒவ்வொரு தொழிலிலும் சில மிகப் பெரும் நிறுவனங்கள் (Giant Firms) இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக இரும்பு, எஃகு, மோட்டார், சர்க்கரை ஆலைகள் முதலியவற்றைக் குறிப்பிடலாம். அவற்றின் நீள்காலச் செலவுக் கோடுகள் படம் (5) இல் காண்பது போல் L வடிவம் பெற்றவை. ஒரே நிறுவனத்திடம் குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியை ஒப்படைத்தால் சராசரி மொத்தச் செலவு (ATC) கிடைக்கோட்டு மட்டத்திலேயே இருக்கும். இதன் உற்பத்தியை எட்டு அல்லது பத்து நிறுவனங்களிடம் பகிர்ந்தளித்தால், ஒரே சராசரிச் செலவுதான் அவை அனைத்துக்கும் நேரிடும்; ஒரு தீமையும் சமூகத்திற்கு வராது. ஆனால் ஒரே நிறுவனத்திடம் ஒப்படைத்தால் அது முற்றுரிமை பெற்று மிகையான ஆதாயம் திரட்டுவதில் முனையும். இதனைத் தடுக்கவும், இரண்டு அல்லது மூன்று நிறுவனங்களிடம் மொத்த அளிப்பும் அகப்பட்டால் அவை ஒன்று கூடி மறைமுக உடன்பாடுகளின் பேரில் விற்கும் விலையை உயர்த்தி நுகர்வோரைச் சுரண்டுவதைத் தடுக்கவும், அறக்கட்டளை எதிர்ப்புச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதற்குக் காரணமும் கருவியுமாக இருந்தது L வடிவ நீள் காலச் செலவு வளைகோடே. கே.எஸ்.சோ.

துணை நூல்கள்:

**Donald Stevenson Watsonz**, "Price Theory and Its Applications", Scientific Book Agency, Calcutta, 1970.

**Samerelson, P.A.**, "Economics", McGraw - Hill Book Company, Tokyo, 1958.

**Richard P. Libsey**, "Positive Economics", Wiendenfeld and Nicholson, London, 1963.

**William Feliner**, "Modern Economic Analysis", Mc Graw - Hill Book Company, Tokyo, 1960.

**Jacob Viner**, "Cost Curves And Supply Curves", Homewood, 1952.

**George J. Stigler.**, "Production and Distribution in the Short Run", Blackiston, 1946.

அடகு வணிகர் சட்டம்: கடனுக்கு அல்லது வாக்குறுதி நிறைவேற்றத்திற்குப் பிணையமாகப் பொருளை ஒப்படைத்தல் அடகு எனப்படும். அவ்வாறு பொருளை ஒப்படைப்பவரை அடகு வைப்பவர் (Pawner) என்றும், ஒப்படை பெறுபவரை அடகு பெறுபவர் (Pawnee) என்றும், பொருளை அடகாகப் பெற்றுக் கொண்டு, அதன் மீது கடன் வழங்குபவரை அடகு வணிகர் (Pawn Broker) என்றும் கூறுகின்றனர்.

தமிழ்நாடு அடகு வணிகர் சட்டம் (Tamil Nadu Pawn Brokers Act 1943) 1943-ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. நகரத்தின் சுற்றுப் புறங்களில் வாழ்கின்ற ஏழைமக்கள் பணமின்மையினால் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாவதே அடகு வைத்தலுக்குக் காரணமாகவுள்ளது. உடனடிப் பணத் தேவைக்கு ஒரு நகையோ பாத்திரமோ ஏதேனும் ஒரு மதிப்புள்ள பொருளோ அடகு வைக்கப்படுகிறது. பல வேளைகளில் அவை மீட்கப் படுவதில்லை. ஏழைகளின் துன்பநிலையினை நீக்கி, அடகு முறையை ஒரு வரையறைக்குள் உட்படுத்த வேண்டும் என்பதனால், தமிழ்நாடு அடகு வணிகர் சட்டம் இயற்றப்பட்டது.

அடகு வணிகர் உரிய உரிமம் (Licence) இல்லாமல் அடகுக் கடையினை நடத்தக் கூடாது. ஒரே நகரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் கடைகளை நடத்தினால் ஒவ்வொரு கடைக்கும் தனித் தனியாக உரிமம் பெறவேண்டும்.

அடகு வணிகர்களுக்கு வழங்கப்படும் உரிமம் ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த உரிமத்திற்குரிய விண்ணப்பத்தினைக் குறிப்பிட்ட படிவத்தில் உரிய தொகையுடன் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பம் செய்பவர் ஐயத்திற்குரிய நடத்தை உள்ளவராக இருந்தாலும், அடகுக்கடை வைக்கப்படுகின்ற இடத்திற்குத் திருடர்கள் அல்லது ஐயத்திற்குரிய நடத்தை உள்ளவர்கள் அடிக்கடி வந்து செல்வதாக இருந்தாலும் மேற்படி உரிமம் மறுக்கப்படலாம்.

அடகு வணிகர் ஒவ்வொருவரும் தம்முடைய கடையின் வெளிப்புறப் பகுதியில், தம்முடைய பெயரை அந்தப் பகுதியில் வழங்கி வருகின்ற மொழியில் தெளிவாக எழுதி வைக்க வேண்டும். மேலும் அவரிடத்தில் பொருள்களை அடகு வைத்துப் பணம் பெறுவதற்காக வருகின்றவர் என்ன விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும் என்பதையும் தெளிவாக எழுதி வைத்திருக்க வேண்டும்.

அரசு வரையறை செய்கின்ற வட்டி வீதத்திற்கு மேல் அடகு வணிகர் வட்டி பெறக் கூடாது. கூடுதலாக வட்டி வாங்கக் கூடாது என்பதனால், வேறு முறையில் எவ்வித இலாபத்தையும் பெறக்கூடாது. ஒவ்வொரு பொருளும் அடகு வைக்கப்படும்போது அதற்குரிய அடகுச் சீட்டினைக் குறிப்பிட்ட படிவத்தில் கொடுக்க வேண்டும். அந்த அடகுச் சீட்டினைக் கொடுத்த பின்னரே அடகினை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடகை மீட்பதற்கான நிபந்தனைகள்:

1. அடகுச் சீட்டினைக் கொண்டுவந்து அடகுக்கான தொகையினைக் கொடுத்தால் அடகுப் பொருளை மீட்டுக் கொள்ளலாம்.

2. அடகு வணிகர் வேறு யாருக்கேனும் அடகுப் பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்கான உரிமையை மாற்றிக் கொடுத்திருந்தால், அதனை அந்த அடகுச் சீட்டில் குறித்துக் கொடுத்துத் தம்முடைய பதிவேட்டிலும் பதிவு செய்ய வேண்டும்.

3. அடகு வைத்தவர் தம்முடைய பணியாளரை அனுப்பிப் பொருளை மீட்க விரும்பினால், அடகு வைத்தவருடைய பணியாளர்தாமா என்பதை உறுதி செய்து கொண்டு, அதற்குரிய படிவத்தில் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு அடகுப் பொருளைத் திருப்பித் தரலாம். அவ்வாறு வந்தவர் அடகு வைத்தவருடைய பணியாளர் அல்லர் என்று உறுதி செய்யப்பட்டால், அடகு வணிகர் அடகு வைத்தவருக்கு இழப்பீட்டுத் தொகை கொடுக்கக் கடமைப் பட்டவராவர்.

இச் சிக்கலைத் தவிர்க்க அடகு வணிகர் அடகு வைத்தவருக்கு ஒரு பதிவு அஞ்சல் அனுப்பிப் பதினான்கு நாட்களுக்குள் எவ்வகைப் பதிலும் கிடைக்கப் பெறாவிட்டால், எவர் அடகுச் சீட்டைக் கொண்டு வருகிறாரோ அவருக்குப் பொருளை மீட்பதற்கான தகுதியினைக் கொடுக்கலாம். அப்போது அடகு பிடித்தவர் இழப்பீடு கொடுக்கின்ற கட்டாயத்திலிருந்து விடுவிக்கப் பெறுகிறார்.

4. அடகு வைத்தவர் இறந்துவிட்டால் அவருடைய சட்டப்படியான வாரிசுகளுக்கு அடகுப் பொருளை மீட்பதற்கு உரிமையுண்டு. ஆனால் வாரிசுதாரர்கள் மீட்கவருகின்றபொழுது குறிப்பிட்ட படிவத்தில் நீதிபதியிடம் கையெழுத்து வாங்கி, அவர் தாம் இறந்தவரின் வாரிசு என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அதே போன்று, தகுந்த பிணைமுறை (Security Bond) வேண்டும் என்று அடகு வணிகர் கூறினால் அதனையும் கொடுக்க வேண்டும். ஆனால் உரிமையியல் நீதிமன்றம் இன்னார்தாம் வாரிசுதாரர் என்று முடிவு செய்து, அவருக்கு மீட்க உரிமையுண்டு என்று கூறி இருந்தால் பிணைமுறை தேவையில்லை.

5. அடகுச் சீட்டினை மற்றவருக்கு மாற்றியிருந்தால் அந்த மாற்றத்தைக் குறித்து, அடகு வணிகருக்குப் பதிவு அஞ்சலில் அறிவிப்புக் கொடுக்கப்பட வேண்டும். பின்னரே, மாற்றம் பெற்றவர் அப்பொருளை மீட்க இயலும்.

6. அடகு வைத்தவர் தம்முடைய அடகுச் சீட்டு காணாமல் போய்விட்டதென்று கூறினால், அதற்கான படிவத்தில் ஓர் உறுதிமொழியினைக் கொடுத்த பின்னரே, அடகுப்பொருளை மீட்க முடியும். ஆனால் அடகு வணிகர் தகுந்த பிணையம் (Surety) கொடுத்தால்தான் மீட்க இயலும் என்று கூறலாம்.

திருட்டுப் பொருள்கள் அடகு வைக்கப் பட்டால் அவ்வாறு வைத்தவர்மேல் நடவடிக்கை எடுக்கச் சட்டம் வகை செய்துள்ளது.

அடகு வணிகர்களுடைய கடமைகள் என்னென்ன என்பது பற்றியும் இச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

மேலும், இச் சட்டம் என்னென்ன பதிவேடுகள், படிவங்கள் முதலியன வைத்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

அரசு விதிக்கின்ற பல்வேறு நிபந்தனைகள் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை மேற்பார்வை யிடும்பொருட்டு அரசு ஆய்வாளர்களைப் பணியமர்த்தல் செய்யலாம். இச் சட்ட விதிகளை மீறி அடகுக்கடை செயல்படுகிறது என்பதை அறிந்தால், குற்றவியல் நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று அவ்வடகுக் கடையில் உள்ள கணக்குப் பதிவேடுகள் பொருள்கள் முதலியவற்றைக் கைப்பற்றுவதற்குரிய அதிகாரம் காவல்துறை அதிகாரிக்கு உண்டு.

ஒரு பொருளை அடகு வைத்தவர், அப்பொருளினை அடகு வைத்த தேதியிலிருந்து ஓர்

ஆண்டுக்குள் அதை மீட்க உரிமையுண்டு; இந்த ஓராண்டு கழிந்த பின்னர் ஏழு நாட்களுக்குக் கால நீட்டிப்பு உண்டு. ஆகவே, மொத்தமாக ஓராண்டு ஏழு நாட்கள் வரை மீட்கும் உரிமை அடகு வைத்த வருக்கு உண்டு.

ஒரு பொருளை மேலே குறிப்பிடப்பட்ட காலக் கெடுவிற்குள் மீட்க இயலாவிட்டாலும், அப்பொருளை ஏலத்திற்கு விடத் தொடங்குவதற்கு முன்பும் மீட்ப தற்கு உரிமையுண்டு. இச்சட்டத்தின் அடிப்படை நோக்கமே, கடன் பெறுவோர் எப்போதும் துன்பத்தில் உழலுபவர்கள்; அந்நிலையினைப் பயன்படுத்திக் கொண்டு அடகு வணிகர் எத்தகைய இலாபத்தை யும் பெற முயலக் கூடாது என்பதே ஆகும். அடகு வணிகரும் அடகு வைப்பவரும் தங்கள் விருப்பம் போல இக்காலத்தை நீட்டித்துக்கொள்ள உரிமை உண்டு. அப்பொழுது அவர்கள் ஒப்பந்த மூலம் ஒரு காலவரையறையினைச் செய்து கொள்ளுகிறார்கள்.

பொது ஏலமில்லாது தனிப்பட்ட முறையில் அட குப் பொருளை அடகு வணிகர் விற்கக் கூடாது. அடகு வணிகர் ஏலம் விடுவதாயின் அத்தொகை அசலும் வட்டியும் சேர்ந்த தொகைக்கு அதிகமாக இருத்தல் வேண்டும். அந்த அதிகத் தொகையினை அடகு வைத் தவர் மூன்றாண்டுகள் வரை திருப்பிப் பெறலாம். 1976-ஆம் ஆண்டு எந்தெந்த அடகுகளுக்கு வட்டி சேருவதில்லை என்பதற்கான ஒரு சிறப்புப் பிரிவு (பிரிவு. 12-ஏ) கொண்டுவரப்பட்டது. 22.7.1975-இல் ஏதேனும் ஓர் அடகுமீது தொகை பாக்கியிருந்தால் அத் தேதியிலிருந்து 15.1.1976 வரை அக்கடன் மீது வட்டி வசூலிக்க முடியாது. மேலும் அந்தப் பொருள் களை 15.1.1977-வரை விற்கக் கூடாது என்றும் ஏலத்திற்குக் கொண்டு வரக் கூடாது என்றும் சட்டம் செய்யப்பட்டது. அடுத்து வந்த திருத்தங்களில் 15.1.1977 என்பது 15.1.1978 என்றும், பின்னர் 15.1.1979 என்றும் மாற்றியமைக்கப்பட்டது.

அடகுப் பொருள் திருட்டுப் போய்விட்டால் அல்லது தீயினால் அழிக்கப்பட்டுவிட்டால், அடகு வணிகர் அதற்குரிய தொகையை அடகு வைத்தவ ருக்குக் கொடுக்க வேண்டும்.

அடகுப் பொருளின் தொகை அசலையும் வட்டி யையும் விட கூடுதலாக இருக்கின்றதா என்பதை அடகு வணிகர் எப்பொழுதும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடகு வணிகரின் உரிமம் கீழ்க்கண்ட காரணங் களுக்காக நீக்குதல் செய்யப் படலாம்.

1. உரிமம் வழங்காத இடத்தில் அடகுக்கடை நடத்துதல்.

2. முறையான கணக்குகள் அல்லது பதிவேடு கள் வைக்காத குற்றத்திற்காகத் தண்டனை பெற் றிருத்தல்.

3. பொய்க் கணக்குகள் வைத்திருத்தல்.

மேற்கூறிய காரணங்களுக்காக உரிமத்தை நீக்கு தற்கு முன்னர் அடகு வணிகருக்கு, இன்னின்ன கார ணங்களுக்காக உரிமம் நீக்குதல் செய்யப்படும் என் றும் அவ்வாறு ஏன் செய்யக் கூடாது என்றும் விளக் கம் கேட்டு, அதன் பின்னரே நீக்குதல் செய்ய இய லும். மேலும், இந்த நீக்கத்திற்கான ஆணையை உரிய அரசிதழில் வெளிப்படுத்த வேண்டும். இந்த உரிமம் இழந்ததற்காக இழப்பீட்டுத் தொகை கேட்பதற்கு அடகு வணிகர்க்கு உரிமை இல்லை.

அடகு வணிகர் கீழ்க்காணும் குற்றங்களுக்காகத் தண்டிக்கப்படலாம்.

1. பதினெட்டு வயதுக்குக் குறைவானவர்களிட மிருந்து அல்லது அறிவுத் தெளிவில்லாத ஒருவரிட மிருந்து அடகு பெறுதல்.

2. மற்றொரு அடகு வணிகருடைய அடகுச் சீட்டை வாங்குதல்.

3. பதினெட்டு வயதுக்குக் கீழ் இருப்பவரைப் பணியில் அமர்த்தி அவர் மூலம் அடகு வணிகம் செய் தல்.

4. தம்மிடம் அடகு வைக்கப்பட்டிருந்த பொரு ளைத் தாமே வாங்கிக் கொள்ளுதல்.

5. அடகுப் பொருளை மீண்டும் அடகு வைத்து அதை ஏலத்திற்குக் கொண்டுவரும்போது தாமே திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.

6. அடகு வைத்தவரிடம் கால முறையான வரம்புக்குள்ளே அப்பொருளை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்துதல்.

7. அடகு வணிகர் சட்டத்திற்குப் புறம்பாக அடகுப் பொருளை விற்றல்.

இக்குற்றங்களுக்கு ஆறுமாதச் சிறைத் தண்ட னையோ ஆயிரம் ரூபாய் வரையிலான ஒறுப்போ இரண்டுமோ விதிக்கப்படலாம்.

**அடங்கன் முறை** என்பது, தேவார முதலிக ளாகிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரும் பாடிய பதிகங்க ளில் இக்காலத்தே கிடைப்பன அனைத்தையும் தொகுத்துள்ள தேவாரத் தொகுப்பினைக் குறிக்கும். இத்தொகுப்பினை 'மூவரோது திருமுறைகள் ஏழு' என்றும், 'சிறப்புடைய மூவர் முதலிகள் திருவாய் மலர்ந்த திருநெறிய தமிழ்' என்றும் உமாபதி சிவாச்

சாரியார் பாராட்டியுள்ளார். முறை என்ற சொல்லிற்கு அடைவு முதலாகக் கற்பு ஈறாகப் பதினாறு தனித்தனிப் பொருள்களைச் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி குறிப்பிட்டுள்ளது. இப்பதினாறு பொருள்களும் அடங்கன் முறையிலுள்ள தேவாரப் பனுவல்களுக்குப் பொருந்தும் என அறிஞர் ஆய்ந்து காட்டியுள்ளனர்.

சைவ உலகம் அச்சமய அருளாளர்கள் அருளிய திருப்பனுவல்களைப் பன்னிரண்டு திருமுறைகளாகப் பகுத்துப் போற்றி வருகிறது. பன்னிரு திருமுறை வகுக்கப்பட்ட வரலாற்றினைத் திருமுறை கண்ட புராணம் என்னும் பெயரில் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் விளக்கிப் பாடியுள்ளார். அபய குலசேகரன் என்னும் இராசராச மன்னன், மூவர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்தை மட்டும் பாடக் கேட்டு, முழுவதையும் கேட்க விரும்பித் தேடிக் கிடைக்காமல் மனம் நைந்தான். அக்காலைத் திருநாரையூரில் பொல்லாப்பிள்ளையார் அருளால் எல்லாக் கலைகளும் உணர்ந்து, நம்பியாண்டார் நம்பி என்பார் ஒருவர் விளங்குவதைக் கேள்வியுற்றான். அங்குச் சென்ற மன்னன் மூவர் செய்தியினை அறிய வேண்டும் என்ற தன் அவாவினை நம்பியிடம் கூறி வேண்டினான். அரசன் வேண்டுகோளை ஏற்ற நம்பி, பொல்லாப் பிள்ளையாரை வேண்ட, அவரருளால் நம்பியாண்டார் நம்பி தேவாரம் பற்றிய செய்தியினையும் அது தில்லையில் மூவர் கைஇலச்சினையோடு காப்பிடப் பட்டுள்ளதனையும் அறிந்து மன்னனிடம் கூறினார். நம்பியும் அரசனும் தில்லை சென்று தேவாரம் பெறும் தங்கள் விருப்பினைத் தில்லை மறையவரிடம் கூற, அவர்கள், 'தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும்' என மொழிந்தனர். அதனைக் கேட்ட மன்னன், விழாவெடுத்து மூவர் திருமேனியும் ஒருங்கே எழுந்தருளுமாறு செய்து வேண்டினான். மறையவர் காப்பு நீக்கித் திருக்கதவந்திறந்து காட்ட ஏடுகள் செல்லரித்துக் கிடக்கக் கண்ட மன்னன், கண்ணீர் ததும்ப நின்றான். 'இக்காலத்திற்கு வேண்டுவன மட்டும் வைத்தோம்' என்னும் வானொலி கேட்டு வருத்தம் நீங்கி, ஏடுகளைத் தொகுக்க ஏற்பாடு செய்தான். கிடைத்த மூவர் தேவாரப்பதிகங்களில் திருஞானசம்பந்தருடைய பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் பதிகங்களை 4,5,6-ஆம் திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் பாகுபாடு செய்து தொகுத்தனர். மூவர் தேவாரப் பதிகங்கள் கொண்ட இந்தத் தொகுப்பே அடங்கன் முறை எனப் பட்டது. 'நல்லிசை யாழ்ப்பாணனார்' மரபின் வந்த ஒரு பெண்மணியின் துணையால் அடங்கன் முறைப் பதிகங்களுக்குப் பண்ணும் கட்டளைகளும் வகுத்தமைக்கப்பட்டன. இத்தொகுப்பு அடங்கன் முறை என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இது பண் முறையில் அமைந்த தொகுப்பாகும். இம் மூவர் தேவாரங்களுக்குத் தல முறையில் வகுத்தமைத்த பதிப்பும் உண்டு.

**அடர்சுபீல்டு** இங்கிலாந்தில் மேற்கு யார்க் சயர் (West york shire) மாநிலத்தில் கிர்கிலீசு (Kirklees) மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதி. இது புகழ் மிக்க இலீடுசு (Leeds) நகரத்தின் தென் மேற்கில் 24 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஒரு சிற்றூராக இருந்த இப்பகுதி காலப்போக்கில் விரிவடைந்து நெசவாலைகள் மிக்க தொழில் நகரமாக மாறியது. இதன் அண்மையில் கால்டர் (Calder), மார்சுடென் (Marsden) கால்வாய்கள் வெட்டப்பட்டமையால் இந்நகரத்தின் வளம் மேலும் பெருகியது. இங்குப் பஞ்சாலைகள் மிகுதி. நிலக்கரியும் மிகுதியாகக் கிடைக்கிறது. இவற்றின் உதவியால் இரசாயனத் தொழில்கள், பொறியியல் தொழிற்சாலைகள் முதலியன தோன்றியுள்ளன. அடர்சுபீல்டின் (Huddersfield) மக்கள் தொகை 123,888 (1981),

**அடவு** என்பது அடைவு என்ற சொல்லின் திரிபாகும். இதற்குச் சேர்க்கை என்பது பொருள். இது பரதநாட்டியக் கலையில் நிருத்தங்களும் அபிநயங்களும் சேர்ந்து ஒருங்கிணைந்த ஆடல் பகுதியாகும். கூத்தநூல் என்னும் பண்டைத் தமிழ் நூலில் அடவு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

தஞ்சையை (கி.பி. 1763-1787) ஆண்ட துலாச மன்னன் இயற்றிய சங்கீதசாராமிருதம் என்னும் வடமொழி நூல், அடவு பற்றி விரிவான விளக்கங்களைத் தருகிறது. இந்த அடவில் பல மாற்றங்களைச் செய்து வேறு புதிய அடவுகளை அமைக்க முடியும் என்று துலாசர் கூறினார். அவர் குறிப்பிட்டுள்ள அடவுகளில் பல இப்பொழுது நடைமுறையில் இல்லை.

தஞ்சையை ஆண்டு வந்த இரண்டாம் சரபோசி மன்னன் (கி.பி.1798-1832) அவையில் திகழ்ந்த ஆடல் வல்லுநர்களான சின்னய்யா, பொன்னய்யா, சிவானந்தம், வடிவேலு என்ற நால்வரும் துலாசர் குறிப்பிட்ட விளக்கங்களையே பின்பற்றி வந்தனர்.

பரத நாட்டியக் கலையில் அலாரிப்பு, சதிசுரம், தில்லானா, சப்தம், வருணம், சுரசதி ஆகியவற்றுக்கான நிருத்தங்கள் சிறந்த உறுப்புகளாக அமைந்துள்ளன. இவ்வுறுப்புகளுள் அடவுகள், அழகுறப் பொருந்தி இக்கலையைக் கண்ணுக்கு இனியதாகச் செய்கின்றன.

அடவு என்பது பரத முனிவரால் இயற்றப்பட்ட நாட்டிய சாத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் கரணங்களை ஒத்திருக்கும் ஆடல் பகுதியாகும். கர

ணம் என்பது நிலைகோடல், கால் அசைவு, நிருத்த அத்தம் ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்த ஆடல் நிலை யாகும். கரணம் அல்லது நிருத்த கரணம் என்பது அடிப்படை ஆடற்கூறு ஆகும். இரு கரணங்கள் சேர்தல் ஒரு மாத்திரிகம் என்றும், மூன்று கரணங்கள் சேர்தல் ஒரு கலாபகம் என்றும், நான்கு கரணங்கள் சேர்தல் ஒரு பந்தகம் என்றும், ஐந்து கரணங்கள் சேர்தல் ஒருசங்காடகம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. நாட்டிய சாத்திரம் 108 கரணங்களை விளக்குகிறது. தில்லை நடராசர் கோயிலில் இக்கரணங்களுள் பெரும் பாலானவற்றைக் காணலாம். அடவுகளில் இவை யாவும் அமையப்பெற்றுள்ளன. காலப் போக்கில் அடவுகள் பல மாறுதல்களுக்கு உட்பட்டன. இப் போதைய பரத நாட்டியக் கலையில் பல அடவு வழிகள் காணப்படுகின்றன. இவை, ஆடல் ஆசிரியன் (நட்டுவனார்) கற்பனைத் திறனுக்கு ஏற்ப அமைகின்றன. இந்த அடவு வகைகள் ஒன்றுக்கொன்று மிகுந்த வேறுபாடுகளைக் கொண்டிருப்பதால், இவை ‘பத்ததி’ அல்லது ‘வழி’ என்று கூறப்படுகின்றன. ஆடலாசிரியர் எந்த ஊரைச் சேர்ந்தவராக இருந் தாரோ அந்த ஊரின் பெயரே இந்த அடவு முறைகளுக்கும் ஆடல் முறைகளுக்கும் வழங்கிற்று. இவ்வாறு பந்தநல்லூர், வழுவூர், தஞ்சாவூர் போன்ற பத்ததிகள் வழக்கத்தில் வரலாயின. தஞ்சாவூர்ப்பத்ததியைத் தோற்றுவித்தவர்கள் குப்பையா பிள்ளையும் அவர் மக்களும் ஆவர். இவர்களே இப்போது பழக்கத்தில் இருந்துவரும் அலாரிப்பு முதல் தில்லானா வரையிலான பரதநாட்டிய நிகழ்ச்சியின் வரிசை முறையை அமைத்தார்கள் என்பது கருதப்படுகிறது. இந்த அடவு வழிகள் ஒவ்வொன்றும் உடல் அசைவில் தெளிவு, நளினம், தாளம், முகபாவம் போன்ற வெவ்வேறான தனிப்பட்ட ஆடற்கூறுகளுக்கு முதலிடம் கொடுக்கிறது. இவ் வழிகளைத் தொகுத்து நோக்கினால், ஒரு பொதுவான முறையில் அடவுகளைப் பின்வருமாறு பாகுபாடு செய்யலாம். இது கால் அசைவுகளின் அடிப்படையிலான பாகுபாடு.

| | | |
|---|---|---|
| தட்டடவு | — | தரையைப் பாதத்தினால் தட்டுதல். |
| நட்டடவு | — | தரையைப்பின் பாதத்தினால் தட்டுதல். |
| தட்டிமெட்டடவு | — | பின் காலைத் தரையில்வைத்தபடி முன் பாதத்தினால் தரையைத் தட்டுதல். |
| மத்தித அடவு | — | பாதத்தினால் தரையை இலேசாகச் சிராய்த்தல். |
| சரிக அடவு | — | பாதத்தை எடுக்காமல் நகர்தல். |
| குதித்தடவு | — | முன் பாதத்தினால் எழும்பி, பின் காலினால் தரையில் குதித்தல். |
| குட்டடவு | — | முன் பாதத்தினால் தரையைத் தட்டுதல். |
| சறுக்கல் அடவு | — | கால் சறுக்குதல் போன்ற அசைவு |
| மண்டி அடவு | — | முழு உடலும் பின்கால்களின் மேல் தாங்கி இருத்தல் போன்ற அசைவு. |
| பாய்ச்சல் அடவு | — | தாவுதலும் குதித்தலும் கொண்ட அசைவு |
| சுற்றடவு | — | சுழலுதல். |
| கோ(ர்)வை அடவு | — | முற்கூறிய அடவுகள் பல ஒருங்கிணைந்த அசைவு. |
| தீர்மான அடவு | — | எல்லா ஆடல்பகுதியிலும் இறுதியாகச் செய்யப்படும் அசைவு. |

மேற் குறிப்பிட்டவைகளைத் தவிரச் சொல்லுக் கட்டு என்பதன் அடிப்படையிலும் அடவுகள் பாகுபாடு செய்யப்படலாம்.

ஆடலின் அசைவுகள் முதலில் வலக்காலாலும் பின்னர் இடக்காலாலும் செய்யப்படுகின்றன. இவை இணைந்து நிருத்தங்கள் ஆகின்றன. கரணத்தைப் போன்றே அடவிலும் தானகம், சரீ, நிருத்த அத்தம் ஆகிய மூன்று பகுதிகளும் ஒருங்கிணைந்திருக்க வேண்டும். தானகம் என்பது நிற்கும் நிலையையும் சரீ என்பது கை கால் அசைவுகளையும் குறிக்கின்றன. அடவுகளுக்குத் தனிப்பட்ட சொல்லுக்கட்டுகள் உள்ளன. இவை ஆடலாசிரியரால் கூறப்படுகின்றன. அடவுகளுக்குத் தனிப்பட்ட பொருள் இல்லை. இவை வெறும் நிருத்தங்களாகும். சொற்கள் பல சேர்ந்து பொருள் பொதிந்த சொற்றொடரை உண்டாக்குவது போல், அடவுகள் பல சேர்ந்து கோ(ர்)வையை உண்டாக்குகின்றன. கோ(ர்)வையின் நடுவில் ஆங்காங்கு ஆடலாசிரியனின் கருத்துக்கு ஏற்பத் தாளத்தைக் குறிக்கும் சொற்களும் அவற்றிற்கு ஏற்ப நிருத்தங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை, சதி என்று குறிப்பிடப்படுகின்றன. ஆடலின் வரிசையையும் அதன் பல்வேறு பாகங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ள முறையையும் விளக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள தாளச் சொற்கள், தீர்மானங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. தீர்மானங்கள் அடவுகளுக்கு அழகும் கவர்ச்சியும் சேர்க்கின்றன. பரத நாட்டியத்தில் அடங்கியுள்ள அலாரிப்பு, சதிசுரம், தில்லானா, வருணம், சுரசதி ஆகிய உறுப்புகளில் எல்லாம் அடவுகள் அமைந்திருக்கின்றன. அடவுகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் பாத அசைவுகளில் சில இங்கு விளக்கப்பட்டுள்ளன.

பாதங்களின் நிலை:

1. சமயம்: பாதங்களையும் முழங்கால்களையும் நேராக வைத்து நிற்கும் நிலை.
2. பார்சுவம்: பாதங்கள் பக்கவாட்டில் திரும்பிய நிலை.
3. திரையச்சுரம்: பாதங்களைக் கொண்டு 'V' போன்ற வடிவில் நிற்றல்.
4. சுவசுதிகம்: பாதங்கள் இடம் மாறிய நிலை.

பாதங்களின் அசைவுகள்:

1. குட்டனம்: பாதத்தினால் தரையைத் தட்டுதல்.
2. சரிகம்: பாதங்களைத் தூக்காமல் நகர்தல்.
3. அஞ்சிதம்: பின்கால்களைத் தரையில் பதித்து முன் பாதங்களை மட்டும் உயர்த்தல்.
4. அக்கிரதள சஞ்சாரம்: முன் பாதங்களைத் தரையில் பதித்துப் பின் பாதங்களை மட்டும் உயர்த்தல்.
5. சுசி: ஒரு பாதத்தை மட்டும் தரையில் பதித்து மறு பாதத்தின் பெருவிரல் மட்டும் தரையில் பதித்தல்.
6. உத்கட்டிதம்முன் பாதங்கள் தரையில் பதிந்திருக்கப் பின் பாதங்களினால் தரையைத் தட்டுதல்.
7. குட்டனம்: பின் பாதங்கள் தரையில் படாமல் முன் பாதங்களினால் மட்டும் தரையைத் தட்டுதல்.
8. தடிதம்: பின்பாதங்களினால் நின்று முன் பாதங்களினால் தரையைத் தட்டுதல்.
9. மர்த்திதம்: பாதங்களின் அடிப்பாகத்தினால் தரையை இலேசாகத் தேய்த்தல்.
10. சுகலிதம்: பாதம் தரையில் சறுக்குதல்.

நிலை கோடல்கள்:

1. சமம்: பாதங்கள் சமநிலையில் இருக்க, உடல் நேராக நிற்றல்.
2. மண்டலம்: பாதங்கள் பாரிசுவ நிலையில் இரண்டிற்கும் இடையே மிகுந்த தூரம் இருக்குமாறு உடலின் கனத்தை இரு பாதங்களிலும் சமமாகப் பகிர்ந்து முழங்கால்கள் வளைந்து நிற்றல். இது பழக்கத்தில் அரைமண்டி என்று சொல்லப்படுகிறது.
3. அலிதம்-பிரத்தியலிதம்: இடக்கால் மண்டல நிலையில் இருக்க, வலக்காலைப் பக்கவாட்டில் நீட்டுதல். இதனை மாற்றிச் செய்தல் பிரத்தியலிதம் எனப்படும்.
4. குஞ்சிதசலு: தொடைகளும் கால்களும் இணைந்திருக்க, பாதங்கள் இரண்டும் அக்கிரதளமாக இருக்கப் பின் பாதங்களின் மேல் உட்காருதல்.

அடவுகளுக்கான கையசைவுகள்:

1. பதாகை: பெருவிரலை மட்டும் வளைத்து மற்ற விரல்களை நேராக நிமிர்த்தி வைத்தல்.
2. திரிபதாகமயூரம்: பதாகை நிலையினின்று மோதிர விரலைமட்டும் வளைத்துப் பெருவிரலைத் தொடுதல்.
3. அருத்தசந்திரன்: பதாகை நிலையிலிருந்து பெரு விரலை மட்டும் நிமிர்த்துதல்.
4. கபித்தம்: சுட்டுவிரலை வளைத்துப் பெருவிரலால் தொடுதல், மற்ற விரல்களை இரு கைகளுடன் சேர்த்தல்.
5. கடகமுகம்: பெருவிரலை முதல் இரண்டு விரல்களுடன் இணைத்தல்.
6. சந்திரகலை: அருத்த சந்திரநிலையிலிருந்து சிறுவிரல், மோதிரவிரல், நடுவிரல் ஆகிய மூன்றையும் இரு கைகளுடன் இணைத்தல்.
7. மிருகசீரிடம்: பதாகை நிலையிலிருந்து முதல் மூன்று விரல்களை மட்டும் நிமிர்த்துதல்.
8. ஆலபதுமம்: விரல்களைப் பிரித்தல்.
9. கர்த்தநிமுகம்: பெருவிரல் சிறு விரலையும் மோதிர விரலையும் இணைந்திருக்க, மற்ற விரல்கள் பிரிக்கப்பட்டு இருத்தல்.
10. அஞ்சலி: பதாகை அத்தங்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருக்க மணிக்கட்டுகள் முன்புறம் வளைந்திருத்தல்.
11. நாட்டியாரம்பம்: பதாகை அத்தம் இரண்டையும் இரு பக்கங்களிலும் தோளுக்கு இணையாக விரித்தல்.

உள்ளங்கை நிலை:

1. உத்தானம்: உள்ளங்கையை மேல் நோக்கித் திருப்புதல்.
2. அதோமுகம்: உள்ளங்கையைத் தரையை நோக்கித் திருப்புதல்
3. உள் முகம்: உள்ளங்கையைத் தன்னை நோக்கித் திருப்புதல்.
4. பரன்முகம்: உள்ளங்கையை வெளிப்புறமாகத் திருப்புதல்.

கூத்த நூல், நாட்டிய சாத்திரம், அபிநயதருப்பணம் போன்ற நூல்களில் ஆடல் இலக்கணத்திற்கான விளக்கங்கள் காணப்பட்ட போதிலும் அடவுகளுக்கான எண்மான முறை (Notation) காணப்படவில்லை. அடவுகளின் நுட்பங்கள், கலைஞர்கள் ஆடல் ஆசிரியரிடம் நேரிடையாகப் பெறப்பட்ட பயிற்சியின்

மூலமே கற்கப்பட்டன. ஆடல் தொகுதி அமைப்பியல் (Choreography) என்பதும் ஆடல் கலையில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சியே ஆகும். அடவுகளுக் கான எண்மானக் குறியீடு செய்தல் மிகக் கடினமாக இருந்த போதிலும் அவற்றை எண்மான முறையில் வகுத்தல் மிகப் பயனளிப்பதாகும். காண்க: பரத நாட்டியம்; நாட்டிய சாத்திரம்.

**அடால்பசு கசுடவசு** சுவீடன் நாட்டு அர சர். இவர் வாசா அரச குடும்பத்தைச் சார்ந்தவர்; தந்தை பதினோராம் சார்லசு. இவர் பதவியேற்ற பொழுது சுவீடன் மிக நலிவுற்ற நிலையில் இருந்தது. மிக இளவயதிலேயே இவர் பதவியேற்று ஆட்சியை நடத்திச் செல்லும் தெளிவான சிந்தனையைப் பெற்றி ருந்தார். அடால்பசு கசுடவசு (Adalphus Gustavus) கம்பீரமான தோற்றமும் ஆழ்ந்த புலமையும் போர்க் கலையில் வல்லமையும் படைத்தவர். இலட்சியத்தில் நாட்டமும் செயலாற்றும் திறனும் கொண்டவர். வட ஐரோப்பாவில் பிராட்டசுடண்டு (Protestant) மதக் கொள்கையைக் கடைப்பிடித்த சுவீடன் தலை மைப் பதவி பெற வேண்டும்; பால்டிக்குக் கரையோர நாடுகள் சுவீடனின் ஆதிக்கத்திற்குள் வரவேண்டும்; அதாவது, பால்டிக்குக் கடல் ஒரு சுவீடன் நாட்டு ஏரி யாக மாறவேண்டும் என்ற குறிக்கோள்களைக் கொண்டிருந்தார். பின்லாந்தையும் எசுதோனியா வையும் இவர் படையெடுத்துக் கைப்பற்றினார். கி.பி. 1617-இல் இங்கிரியாகூம் கிடைத்தது. பின்னர், போலந்தோடு கடும்போரிட்டு இலிவோனியாவைப் பிடித்தார்.

செருமனியில் முபபதாண்டுப் போர் நடந்து கொண்டிருந்த நேரம் அது. பிரான்சின் சமயகுருவா கவும் அமைச்சராகவும் இருந்த இரிச்சல்யூ இப்போரில் இசுபானிய, ஆசுத்திரிய அரசர்களின் அழிவையும் பிரான்சின் போர்பன் மரபின் ஏற்றத்தையும் விரும் பினார். சிறந்த அரசியல் தந்திரியான அவர், கசுடவ சின் வெற்றிகளைக் கண்டு, நிதி, படை உதவி அளிப்ப தன் மூலம் தம் விருப்பம் நிறைவேற வழி வகுத்தார்.

செருமானியச் சிற்றரசர்கள் சிலரும் கசுடவசின் தலையீட்டை விரும்பினார்கள். இவற்றின்விளைவாக முப்பதாண்டுப் போரின் மூன்றாவது காலகட்டத்தில் கசுடவசு போரில் தலையிட்டார். இக்கட்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாக மாக்டபர்க்குக் கோட்டையின் வீழ்ச்சி, கத்தோலிக்கத் தளபதியின் மறைவு, வாலன் சுடைன் திரும்பவும் தளபதியாதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அ.தி.

**அடி** என்பது யாப்பின் அல்லது செய்யுளின் உறுப்புகளுள் ஒன்றாகும். பல்பொருள் குறித்த ஒரு சொல்லாகிய அடி, யாப்பியலில் சீரின் தொகுதியைச் சுட்டுகிறது. வடமொழி யாப்பியலில் அடிக்குப் 'பாத' என்னும் சொல் வழங்கப்படுகிறது. ஒருவரின் நடையை முடிவு செய்வதில் அவர் 'காலடி' இன்றியமையாத பங்கு பெறுவதைப்போலப் பாட்டின் நடையை உறுதி செய்வதில் அடி தலைமையான உறுப்பாக அமைகிறது.

பாட்டமைப்பிற்கும் கருத்தோட்டத்திற்கும் ஒலி நயத்திற்கும் நிலைக்களமாக அமைவது அடியாகும். தமிழில் ஓரடி பாட்டாகாது; இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடிகளால் ஆக்கப்படுவதே பாட் டாகும். அடியைக் கொண்டு பாட்டு அமைக்கப்படுவ தால் "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே"என்று தொல்காப்பியர் உரைத்துள்ளார். இடைக்காலப் புல வர் பல்காயனாரும் "அடியின் ஈட்டத்து அழகுபட்டு இயலும் செய்யுள்" என்று சிறப்பித்துக் கூறியுள்ளார். அடி என்பது பொதுவாக நாற்சீரடியைச் சுட்டும். தொடை வகைகள் நாற்சீரடி அடிப்படையில் விளக் கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியம் எடுத்துரைக்கும் 34 செய்யுள் உறுப்புகளுள் அடியும் ஒன்று. அடியின் சிறப்பை நன்கு உணர்ந்த நக்கீரர் 'அடிநூல்' ஒன்றை இயற்றியுள் ளார். இந்நூல் இன்று கிடைக்கவில்லை. இருப்பினும் செய்யுளின் உறுப்பாகிய அடியைத் தனியாகவே விளக் கும் நூலொன்று இருந்தது என்பதை யாப்பருங்கல விருத்தியுரையிலிருந்து அறியும்போது, அடியின் இன்றி யமையாமை புலப்படும்.

யாப்பின் உறுப்புகளுள் எழுத்து, அசை, சீர் மூன் றும் கீழ்நிலை உறுப்புகளாகும். எழுத்தால் அசையும் அசையால் சீரும் சீரால் அடியும் அடியால் தொடை யும் தொடையால் பாவும் அமைவதால் யாப்புறுப் புகள் அடுக்கு முறையில் அமைந்துள்ளன.

பண்டைக் காலத்திலிருந்தே தமிழ் யாப்பியலார் அடிகளைச் 'சீர்' அடிப்படையில் பாகுபாடு செய்து வந்துள்ளனர். அடியில் வரும் சீர்களின் எண்ணிக் கையை வைத்து அடிகளை வேறுபடுத்துகிறார்கள். ஆனால், இலக்கண விளக்கம் மட்டும் தளையின் எண் ணிக்கை அடிப்படையில் பகுப்புச் செய்துள்ளது. ஒரு சீரால் அமையும் அடியைச் 'சொற்சீரடி' என்றும், 'கூன்' என்றும் குறிப்பர். பொதுவாக, ஒரு பாட்டடி அமைவதற்குக் குறைந்தது இரண்டு சீர்களேனும் இருக்க வேண்டும். அடியில் வரும் சீர்களின்மேல் எல்லை குறித்து வேறுபட்ட கருத்துகள் காலப்போக் கில் வளர்ந்து வந்திருக்கின்றன. அடியில் வரும் சீர் களின் மேல் எல்லையாக 'ஏழு' என்று தொல்காப் பியமும், 'எட்டு' என்று காக்கைபாடினியமும், 'பத்து' என்று யாப்பருங்கலமும், 'வரையறை இல்லை' என்று வீரசோழியமும் குறிப்பிடுகின்றன. இக்கால யாப்பு நூல்கள் பதினாறு சீர்களை மேல் எல்லையாகக்

கூறுகின்றன. ஆனால், பெரும்பாலான யாப்பிலக் கணிகள் எட்டுச் சீர்களுக்கு மேல் வரும் அடிகளை வரவேற்றுப் போற்றுவதில்லை.

இரண்டு சீர்களைக் கொண்டது 'குறளடி'. மூன்று சீர்களைக் கொண்டது 'சிந்தடி'. நான்கு சீர்களை உடையது 'அளவடி' அல்லது 'நேரடி' எனப்படும். ஐந்து சீர்களைக் கொண்டது 'நெடிலடி' எனவும் ஆறு சீர்களையும் அதற்கு மேற்பட்ட சீர்களையும் கொண்டவை 'கழிநெடிலடி' எனவும் படும். பிற்கால யாப்பியலார் 6 முதல் 8 சீர்களைக் கொண்ட அடி களை 'முதலாகு கழிநெடிலடி' என்றும், 11, 12, 13, 14, 15, 16 சீர்களைக் கொண்ட அடிகளைக் 'கடை யாகு கழிநெடிலடி' என்றும் வகைப்படுத்துவர்.

தொல்காப்பியம், ஐந்தாகப் பிரித்து விளக்கிய சீர்வகை அடிகளில் நாற்சீரடியை மட்டும் மேலும் எழுத்து அடிப்படையில் துணைப் பகுப்புச் செய்துள் ளது. அதன்படி, 'குறளடி' என்பது நான்கு முதல் ஆறுவரை உள்ள எழுத்துகளைக் கொண்டது. சிந்தடி என்பது ஏழு முதல் ஒன்பது வரையுள்ள எழுத்து களைக் கொண்டது; ஆகவே, எழுத்தின் அளவால் பதினேழு நிலங்களாகப் பகுத்து ஐவகையடியாகத் தொகுத்துத் தொல்காப்பியம் கூறுகிறது. நாற் சீரடியை எழுத்தளவு அடிப்படையில் செய்யும் பகுப்பு இடைக்காலத்தும் இக்காலத்தும் வழக்கில் இல்லை.

தொல்காப்பியர் எழுத்தின் அளவில் பிரித்த அடிகளைக் 'கட்டளை அடிகள்' என்று பேராசிரி யரும் நச்சினார்க்கினியரும் குறிப்பிடுகிறார்கள். இருவருக்கும் முன்னவரான இளம்பூரணர் அவ்வாறு குறிப்பிடவில்லை. முன்னைய இரண்டு உரையாசிரி யர்களின் கருத்தைப் பின்பற்றி அ. சிதம்பரநாதன் செட்டியாரும் வெள்ளைவாரணரும் புலவர் குழந் தையும் தொல்காப்பியரின் எழுத்தினளவு அடி களைக் கட்டளையடிகள் என்று வழி மொழிகிறார் கள்.

கட்டளை என்னும் சொல் யாப்பியலில் கட்டுப் பாடு, விதிப்பு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. எனவே, எழுத்து எண்ணிக்கையில் நெகிழ்ச்சியின்றிக் குறிப்பிட்ட கட்டுப்பாடு உடையது கட்டளை அடி யாகும். இம்முறையிலே அமைந்த பாக்கள் கட்டளைக் கலிப்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தக் கலித் துறை போன்ற இடைக்காலப் பாட்டு வகைகளாகும். இப்பாட்டுகளில் உள்ள அடி நேரசையில் தொடங் கினால், இத்துணை எழுத்து வரவேண்டும் என்றும் நிரையசையில் தொடங்கினால், இத்துணை எழுத்து வரவேண்டும் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. இதில் எவ்வித நெகிழ்ச்சியும் கிடையாது. எண் ணிக்கை குறிப்பிட்டுள்ளபடி சரியாக அமையவேண்டும். ஆனால், இம்முறையில் தொல்காப்பியரின் எழுத் தளவு அடிகள் அமையவில்லை.

தொல்காப்பியம் விளக்கும் ஐவகை எழுத்தளவு அடிகள் ஒவ்வொன்றும் நெகிழ்ச்சிக்கு இடம் தருகிறது. எடுத்துக்காட்டாக, குறளடி நான்கு அல்லது ஐந்து அல்லது ஆறு எழுத்துகளால் அமையும். இவ்வாறே பிற அடிகளும் நெகிழ்ச்சி உடையன. கட்டளை அடி யைப்போலக் கட்டுப்பாடு இல்லாமல், ஓரளவு நெகிழ்ச்சியுடன் அமைந்து இருப்பதால் தொல்காப் பியரின் எழுத்தளவு அடிகளைக் கட்டளை அடிகள் என்று கூறக் கூடாது. ஆகவே, தொல்காப்பியரின் எழுத்தளவு அடிகளை 'எழுத்து வகை அடிகள்' எனக் கூறுவதே பொருத்தமாகும்.

எழுத்து வகை அடிகள்தாம் முதலில் தோன்றி யவை என்று பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் தம் உரைகளில் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது, முதற் சங்கத்தாரும் இடைச் சங்கத்தாரும் எழுத்து வகை அடிகளால் பாட்டு யாத்தனர் என்றும் அம் முறையில் பாட்டு யாப்பது கடினம் என்பதால், அதனைக் கைவிட்டுச் சீர்வகையடியினைக் கொண்ட னர் என்றும் மொழிந்துள்ளார்கள்.

அடியின் அமைப்பு, எண்ணிக்கை, பயின்றுவரும் முறை ஆகியவை பா வகைகளையும் பாவினங்களை யும் வேறுபடுத்தப் பயன்படுகின்றன. இருசீர்க் குறளடி வஞ்சிப்பாவிலும், வஞ்சித்தாழிசையிலும், வஞ்சித் துறையிலும், இணைக்குறள் ஆசிரியப்பாவிலும், ஆசிரியத்துறையிலும், ஒத்தாழிசைக் கலிப்பாவின் மற்றும் கொச்சகக் கலிப்பாவின் அம்போதரங்க உறுப் பிலும் வரும். முச்சீர்ச் சிந்தடி வஞ்சிப்பாவிலும், வஞ்சி விருத்தத்திலும், வெண்பாவின் எல்லா வகை களிலும், வெண்டுறையிலும், நேரிசை மற்றும் இணைக் குறள் ஆசிரியப் பாக்களிலும், வெண்டாழிசையிலும், ஆசிரியத்துறையிலும், கலித்தாழிசையிலும் இடம் பெறும்.

நாற்சீர் அளவடி நான்கு பா வகைகளிலும், வெண்பாவின் எல்லாப் பாவினங்களிலும், ஆசிரியத் தாழிசையிலும், ஆசிரியத் துறையிலும், கலித்தாழிசை யிலும், கலி விருத்தத்திலும் பயின்று வரும். ஐஞ்சீர் நெடிலடி இணைக்குறள் ஆசிரியப்பாவிலும் ஒத்தாழி சைக் கலிப்பாவின் மற்றும் கொச்சகக் கலிப்பாவின் அராக உறுப்பிலும் காணப்படுகிறது. கழிநெடிலடி வெண்கலிப்பா தவிர மற்றக் கலிப்பாவகைகளிலும் வெண்டுறையிலும், ஆசிரியப்பாவின் மூன்று பாவினங் களிலும் பரிபாடலிலும் இடம் பெறுகிறது.

மேலே தரப்பட்டுள்ள விளக்கத்திலிருந்து நாற்சீர் அளவடி பெரும்பாலான பாக்களிலும் பாவினங்களி லும் அதிகமாகப் பயின்று வருகின்றமை புலனாகும்.

தொல்காப்பியரின் கருத்துப்படி, நாற்சீர்க் குறளடி முதல் நாற்சீர்க்கழிநெடிலடிகள் வரையுள்ள (4–20 எழுத்தடிகள்) யாவும் ஆசிரியப்பாவில் வரும். வெண் பாவில் நாற்சீர்ச் சிந்தடிகளும் அளவடிகளும் (7–14 எழுத்தடிகள்) பயின்றுவரும். நாற்சீர் அளவடியும் நெடிலடியும், கழிநெடிலடியும் (11-20 எழுத்தடிகள்) கலிப்பாவிற்குரியவை.

வெண்பாவிற்குக் குறைந்தது இரண்டு அடிகள் தேவை. வஞ்சிப்பாவிற்கும் ஆசிரியப்பாவிற்கும் குறைந்த அளவு எல்லை மூன்றடிகள். கலிப்பா குறைந்த அளவு நான்கு அடிகளால் ஆக்கப்படும். ஆசிரியத்தின் உயர்ந்த அடியளவு ஆயிரம் என்று தொல்காப்பியமும் 'வரையறை இல்லை' என்று இடைக்கால நூல்களும் தெரிவிக்கின்றன. பொது வாகக் கலிப்பாவின் உறுப்புகளுக்கே வெவ்வேறு குறைந்தளவு அடிகளும் அதிக அளவு அடிகளும் தரப் பட்டுள்ளன.

சில சலயங்களில் அடிகள் பாவின் பெயரோடு, அகவலடி, வெள்ளடி, கலியடி என்றும் சுட்டப்படுகின் றன. இயற்சீர், ஆசிரிய உரிச்சீர், வெண்சீர் ஆகிய சீர்களால் அமையும் அடிகள் அகவலடிகள். வெள்ளடி கள் வெண்சீர்களாலும் அவற்றால் ஆன வெண்டளை களாலும் ஆக்கப்படும். கலியடிக்குத் தனியான சீர் கள் இல்லை; அது வெண் சீர்களால் ஆன கலித் தளையால் உருவாகும். சிற்சில இடங்களில் கலியடி யில் இயற்சீர்களும் இடம் பெறுவதுண்டு 5, 6, 7 சீர் களால் ஆகும் முடுகியல் அடிகள் கலிப்பாவிலும் பரி பாடலிலும் இடம் பெறும். அ.பி.

**அடிக்கூறுகள்:** மொழி ஆராய்ச்சியில் தனித்து இயங்கக்கூடிய சொற்களைப் பல விதமாகப் பிரிக்கலாம். மேலை நாட்டுமொழி அறிஞர்கள் பெயர், பெயரடை, வினை, வினையடை, முன்னுருபு (Preposition), இணைப்புச் சொற்கள் (Conjunction), வியப் புச்சொற்கள் (Interjection), பதிலீட்டுப் பெயர்கள் (Pronouns) என்று எட்டு வகையாகப் பாகுபாடு செய் வார்கள். இவைகளைப் பொதுவாகச் சொல்வகைப் பாடு (parts of speech) என்று குறிப்பிடுவார்கள். இவை கருத்து அடிப்படையில் தோன்றியவை. அப்படி இல்லாமல் சொற்களை அவை ஏற்றுவரும் சிறப்பு விகுதிகளைக் கொண்டு பிரிப்பதே அமைப்பு அடிப் படையில் அமைந்தது ஆகும். இதுவே இன்றைய மொழி ஆராய்ச்சியில் சிறப்பானதாகக் கருதப்படு கிறது. வேற்றுமை உருபு ஏற்பன பெயர் என்றும் கால விகுதி ஏற்பன வினை என்றும் பெரும்பாலான மொழிகளில் குறிப்பிடப்படுகின்றன. ஆங்கிலத்தில் ஒப்பு விகுதி (Comparative suffix) ஏற்பன பெயரடை என்று குறிப்பிடப்படும். 'டால்' (tall) என்பது பெய ரடை, அது 'டாலர்' (taller) என்று அர் (er) ஒப்புமை விகுதி ஏற்று வந்துள்ளது. இப்படிச் சொற்களை அமைப்பு அடிப்படையில் பாகுபடுத்தும் விகுதிகளைத் திரியொட்டுக் கூறு (Inflectional category) என்றும் கூறுவர். சில இலக்கணக் கூறுகள் சொல்லில் வரும் விகுதியால் மட்டும் தெரிவதில்லை. தொடரில் பயன் படும் விதத்தையும் அங்குள்ள மாறுபாட்டையும் பொறுத்து அமையும். எடுத்துக்காட்டாகத் திணை–பால் என்பது ஓர் இலக்கணக் கூறு. அது பெயர்ச் சொல்லில் பெரும்பான்மையாக வெளிப்படுவதில்லை. ஆனால் வினைமுற்றோடு வரும். வினை திணை, பால் கட்கு ஏற்ற விகுதியை ஏற்றுவரும். 'காளை' என்ற சொல் இளைஞனைக் குறித்தால் காளை வந்தான் என்றும் மாட்டைக் குறித்தால் காளை வந்தது என் றும் சொல்லப்படும். எனவே திணை-பால் என்ற இலக் கணக்கூறு வினைமுற்றில் வெளிப்பட்டு விடுகிறது. ஆனால், பெயரெச்சமாகவோ (வந்த காளை) வினை யெச்சமாகவோ (காளை வந்து ...) வரும்பொழுதோ, வேற்றுமை உருபை ஏற்று வரும்பொழுதோ (காளையை) என்ன திணை – பால் என்று உணர்ந்து கொள்ள முடியாது. ஆயினும் தமிழ் மொழி அமைப்பை-இலக்கணத்தை அறிந்து கொள்ள விரும்புகிறவர்கள் திணை – பால் என்ற இலக்கணக்கூறு இருக்கிறது என்ற உண்மையைக் கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் மேலே குறிப்பிட்ட வினைமுற்று விகுதியைச் சரியாகப் பயன்படுத்த முடியாது. மேலும், சரியான பதிலீட்டுப் பெயர் களைப் பயன்படுத்துவதற்கு முடியாது. காளை என்பது மனிதனைக் குறித்தால் அவன் என்றும் மாட்டைக் குறித்தால் அது என்றும் சுட்டுப் பெயர் களாகக் கையாள வேண்டும். ஆனால் பெயர்ச் சொல் லில் திணை – பாலை உணர்த்தும் விகுதிகள், அஃதா வது ஒவ்வொரு பாலுக்கும் உரிய சிறப்பு விகுதிகள் எதுவும் கிடையாது. மகள், மக்கள், தேள் ஆகிய மூன்று சொற்களும் ளகரத்தில் முடிந்தாலும் மகள் என்பது பெண்பால், மக்கள் – பலர்பால், தேள் – ஒன்றன்பால் என்று கருதப்படுகிறது. இதற்குக் காரணம் அவை கொண்டு முடியும் வினைமுற்றுகளே. வினைமுற்றுகட்கு ஏற்பச்(மகள் வந்தாள்; மக்கள் வந் தார்; தேள் வந்தது) சுட்டுப்பெயர்களும் முறையே அவள், அவர், அது என மாறுபட்டு விடுகின்றன. எனவே தமிழில் பெயர்ச் சொற்களில் திணை - பால் என்ற இலக்கணக் கூறு இருந்தும் அதை அந்தச் சொல்லின் வடிவம் காட்டுவதில்லை; சில சமயத்தில் சில தொடர்களும் கூடக் (பெயரெச்சத் தொடர், வினையெச்சம், வேற்றுமைத் தொடர்) காட்டா. ஆனால், வினைமுற்றும் சுட்டுப்பெயரும் அவற்றினு டைய சரியான திணை – பாலைப் புலப்படுத்தி விடு கின்றன. இவ்வாறு இலக்கணக் கூறுகளை அந்தச் சொல்லின் ஈற்றெழுத்தும் சில தொடரும் காட்டா

மல், வேறு முறையில் சில தொடர்களில் புலப்படு மாயின், அவ்வகைத் தொடரமைப்பை அடிக்கூறு (Selective category) என்று குறிப்பிடுகிறார்கள்.

ஏதாவது ஒன்றிரண்டு இலக்கணக் கூறுகளில் இந்த முறை காணப்படும். இசுபானிசு மொழியில் பால் என்பது அடிக்கூறாகவே கருதப்படுகிறது. ஏனெனில் லாப்பிசு (Lapiz) என்னும் பென்சிலைக் குறிக்கும் சொல் பெண்பால், மன (mana) என்னும் கையைக் குறிக்கும் சொல் ஆண்பால். அதன் பால் வேறுபாடு, அடைகளை ஏற்கும்போதே வெளிப்படுகிறது. 'எல்லாப்பிசு' 'அந்தப்பென்சில்' என்றும், 'லமன'என்றால் 'அந்தக் கை' என்றும் கூற வேண்டும். எனவே, இசுபானிசு (Spanish) மொழியில் பால் என்ற இலக்கணக் கூறு பெயர்ச் சொல்லின் அடிக்கூறாகவே கருதப்படுகிறது.

தமிழ் இலக்கியத்தில் தொல்காப்பியர் வினைச் சொற்களுக்கு மட்டும் திணை – பால் விகுதிகளை விதந்து கூறிவிட்டுப் பெயர்ச் சொற்களுக்கு 'உரியவை உரிய பெயர் வயினான' (பெயரியல்: 7: 2) என்று குறிப்பிடுவது, அடிக்கூறு என்ற கருத்தின் அடிப்படைதான்.

அடிநிலை இலக்கணக் கூறுகள் என்பது, மொழியியலில் சொல் பற்றிய வரையறைக்கண் அமையும் ஒரு பெயராகும். 'சொல்', கலைச் சொல்லாகப் பயன்படும்போது தனக்கெனப் பொருள் உடையதாகவும் தனித்து இயங்கக் கூடியதாகவும் இடை நிறுத்தத்திற்குப் (pause) பிறகு வரக்கூடியதாகவும் (தலை, மரம், பார், ஓடு) இருக்கும் என்று வரையறுத்துள்ளார்கள். இவைகளையே அடிநிலை இலக்கணக் கூறுகள் (Primary grammatical categories) என்றும் குறிப்பிடுவார்கள். இதற்கு மாறாகக் கட்டுண்டு, தமக்கெனப் பொருள் இல்லாத உருபன்களை (ஐ–இரண்டாம் வேற்றுமை உருபு; வாள்–வாளை; ந்த–இறந்தகால இடைநிலை – வாழ்ந்தான்) துணை நிலை இலக்கணக் கூறுகளின் அடிப்படையிலேயே கருதப்படும். அடிநிலை இலக்கணக் கூறுகளைச் சொல்வகைப்பாடு (parts of speech) என்றும் கூறுவார்கள்.

மேலை நாட்டைப் பொறுத்த வரையில் பிளேட்டோவேதான் பெயர், வினை என்ற அடிநிலை இலக்கணக் கூறுகளை முதலில் அமைத்தார். அவருடைய மாணவரான அரிசுடாட்டில் பொருளின் தன்மையைக் குறிப்பவை என்றும் (பெயர்),பயனிலையாக வருபவை என்றும் (வினை), இவைகளை இணைப்பவை (connectives) என்றும் மூன்று பெரும் பிரிவு செய்து, கருத்து (notion) அடிப்படையில் பிரித்துச் சென்றுள்ளார். அவருக்குப் பின்னால் இடயோனிசியசு திரேக்சு (Dionysius thrax) என்பவர்தான் பெயர், வினை, எச்சம் (particles),சுட்டுகள் (articles),பதிலீட்டுப் பெயர்கள் (pronouns), முன்னுருபுகள் (prepositions), வினை அடைகள் (adverb), இணைப்புச் சொற்கள் (conjunction) என எட்டுவகையான பிரிவை ஏற்படுத்தினார்.

பொதுவாக அடிநிலைக் கூறுகளின் எண்ணிக்கை எல்லா மொழிக்கும் பொதுவானது அன்று. இவைகளின் எண்ணிக்கையும் சில பண்பும்கூட மொழிக்கு மொழி மாறுபடும்.

தமிழில் தொல்காப்பியர் 'சொல் எனப்படுப பெயரே வினை என்று, ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே' என்றும், 'இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும் அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப'என்றும் கூறியிருப்பதால், சுப்பிரமணிய சாத்திரி போன்ற அறிஞர்கள், பெயர், வினை என்பனவற்றைத் தாம் சொல்வகைப்பாடாகத் தொல்காப்பியர் கருதுவதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். தெ.பொ.மீனாட்சி சுந்தரனாரும் இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டு உரிச்சொல் என்பது பொருள் உள்ளவை (contentives) என்றும் இடைச்சொல் என்பது இலக்கணப் பொருள் உள்ளவை (functors) என்றும் கொள்ளலாம் எனவாதிட்டுள்ளார். ஆனால், டாக்டர் இசரயேல் இடைச்சொற்களில் அசைநிலைக்கிளவி, இசைநிறைக் கிளவி, உவம உருபுகள் போன்றவற்றை ஒரு நிலைச்சொற்கள் (Particles) என்று கூறியுள்ளார். இவை பெயர்ச்சொல் வேற்றுமையையும், வினைச்சொல் கால விகுதியையும் தமக்குரிய சிறப்பான இலக்கணக் கூறுகளாகப் பெற்றிருப்பது போலப் பெற்றிராவிட்டாலும், இவை ஏ, ஓ, உம் போன்ற ஒட்டிகளைப் (Clitics) பெற்று வருவதும், தமக்கெனப்பொருளை உடையனவாய் இருப்பதும் ஆகிய காரணங்களால் தனிச் சொல் வகைபாடாகக் கருதத் தகுந்தவையே. ஆயினும் திட்ட வட்டமாகத் தமிழில் அடிநிலை இலக்கணக் கூறுகள் இன்னும் வரையறுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எல்லா அறிஞர்களும் பெயர், வினை என்ற அடிநிலை இலக்கணக் கூறு இருப்பதை ஒத்துக் கொள்கிறார்கள். ஏனையவற்றைப்பற்றி இன்னும் தெளிவு ஏற்படவில்லை.


இங்கு இன்னோர் உண்மையையும் சுட்டிக் காட்டலாம். ஒரு மொழியில் அடிநிலை இலக்கணக் கூறாக இருப்பது இன்னொரு மொழியில் அப்படி இருக்க வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் பெயரடை (adjectives) ஒரு தனி அடிநிலை இலக்கணக் கூறாகக் கருதப்படுகிறது. அதற்குக் காரணம், ஆங்கில மொழியில் பெயரடை என்பது 'எர்' (er) என்ற ஒப்பு விகுதியை ஹை (high), ஹையர் (higher) என்றாற்போல ஏற்று வருவதுதான். தமிழில் பெரிய, நல்ல போன்

றவை வினையைப் போலக் கால விகுதி ஏற்பதில்லை. ஏனைய, பெயரெச்ச விகுதிகளையும் வினையெச்ச விகுதிகளையும் (பெரும், நன்கு) வினை முற்று விகுதி களையும் (பெரியன், பெரியர், பெரிது; நல்லேன், நல்லாய் முதலியன) ஏற்று வருகின்றன.

தமிழில் உறு, தவ, நனி போன்ற அடைகள் இருந்தாலும், அவை சிறப்பாக எந்த இலக்கணக் கூறு களையும் ஏற்று வருவதில்லை. எனவே அவற்றை வெறும் அடைச்சொற்கள் என்று கருத வேண்டுமா என்பது ஆராயத்தகுந்தது. இப்படிப் பட்டவைகளை உரையாசிரியர்கள் வினைப்போலி, பெயர்ப்போலி என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

எப்படியாயினும் இன்றைய நிலையில் தமிழில் உள்ள அடிநிலை இலக்கணக் கூறுகளின் எண்ணிக்கை திட்டவட்டமாக அறிஞர்களால் வரையறுக்கப்பட வில்லை என்பதுமட்டும் கூற இயலும். செ.வை.ச.


**அடிசு அபாபா** ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள எத்தியோப்பிய நாட்டின் தலைநகர். இதுவே இந் நாட்டின் பெரிய வாணிக நகரம். சில தொழிற் சாலை, கல்வி மையங்கள் ஆகியவை இங்கு அமைந் துள்ளன. இங்குத்தான் அரசாங்கத்தின் அலுவல்கள் நடைபெறுகின்றன. ஆப்பிரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தலைமை அலுவலகமும், ஆப்பிரிக்க ஐக்கிய நிறுவ னத்தின் தலைமை அலுவலகமும் இங்குள்ளமையால் பன்னாட்டு மாநாடுகள் பல இங்கு நடைபெறு கின்றன.




அடிசு அபாபா இருப்பிடம்

அடிசு அபாபாவின் (Addis Ababa) பரப்பு 218 ச.கி.மீ. இந்நகர் 2400 மீ. உயரத்தில் இருக்கிறது. எனவே இங்கு எப்போதும் குளிராக இருக்கும். அடிசு அபாபா என்ற சொற்றொடருக்குப் 'புதுமலர்' என் பது பொருள். கி.பி. 1886-ஆம் ஆண்டில் பேரரசர் இரண்டாம் மெனலிக்கு (Menelik II) என்பவர் இந் நகரை உருவாக்கினார். கி.பி. 1890-இல் இது தேசியத் தலைநகராயிற்று. மக்கள் தொகை 11,25,340 (1978)

**அடி நிலை உறுப்பு**: மொழியில் வழங்கும் ஒலியன்கள் சொல்லின் எல்லா இடங்களிலும் (முதல், இடை, கடை) ஒரே மாதிரியாக வேறுபட்டு வருவ தில்லை. சொல்லுக்கு முதலில் ஒலிப்பு ஒற்றுமை உடைய இரண்டு ஒலியன்கள் வந்து, சொற்களை வேறுபடுத்திக் காட்டினால், நடுவிலோ கடைசியிலோ அவற்றுள் ஓர் ஒலியன் மட்டுமே வருமானால், அங்குச் சிறப்புக் கூறுகள் ஒன்றில் சமன் (neutralisation) ஏற் பட்டுவிட்டது என்பது பொருள். எடுத்துக்காட்டாக, ஒலிப்புடைய வல்லொலியும் (b,d போன்றவை), ஒலிப் பில்லா வல்லொலியும் (p,t போன்றவை) சொல்லுக்கு முதலில் வந்து, ஒலியனாகச் செயல்பட்டுச் சொல்லுக்கு நடுவில் அந்த இரண்டு ஒலியில் ஏதாவது ஓர் ஒலி மட்டுமே வருகிறது என்று வைத்துக்கொண்டால், அங்கு ஒலிப்பு உடைமையோ, ஒலிப்பு இன்மையோ முக்கியம் இல்லாமல் போய்விடுகிறது. அதாவது, ஒலிப்புக் கூறும் (voicing), ஒலிப்பில்லாக் கூறும் (voiceless) சமனாகிவிடுகின்றன. எனவே, இங்கு ஒலிப் பிலா ஒலி மட்டும் வந்தாலும், அந்தக் குறிப்பிட்ட இடத்தில் ஒலிப்புடைமையும் ஒலிப்பு இன்மையும் முக் கியம் இல்லை என்று சுட்டுவதற்கு உரோமன் எழுத் தில் பெரிய எழுத்தைப் (Capital letter - P) பயன் படுத்துவார்கள். அதற்கு அடிநிலை ஒலியன் (archi-phoneme) என்பது பெயர்.



அடிசு அபாபா

ஆங்கில மொழியில் சொல்லுக்கு முதலில் ஒலிப் பிலா வல்லொலிகளும் ஒலிப்புடைய வல்லொலிகளும் ஒலியனாகச் செயல்பட்டாலும், (pit-குழி; bit-'சிறு' தாள்) சொல்லுக்கு நடுவில் குறிப்பாக 'ஸ்' (S) என்ற ஒலிக்குப் பிறகு ஒலிப்பிலா வல்லொலி (spit -'துப்பு')

மட்டுமே வரும்; அங்கு ஒலிப்புடைய வல்லொலி வருவதில்லை. எனவே, 'ஸ்' என்னும் ஒலிக்குப் பிறகு 'P' என்னும் பெரிய எழுத்தில் எழுதி, அடிநிலை ஒலியன்தான் அங்கு வருகிறது என்று குறிப்பிடுவார்கள்.

தமிழில் ஆய்தம் என்பது அடிநிலை ஒலியனாகக் கருதப்படுகிறது. ஏனெனில், ஆய்தமும் அதனை அடுத்து வல்லொலியும் இரட்டை உரசொலியாக உச்சரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் ஊகித்துக் கூறியது, இன்றைய மொழியியல் அறிஞர்கள் எல்லோராலும் ஒத்துக் கொள்ளப்படுகிறது. உரசொலியின் இடம் பின் வரும் வல்லொலியின் இடத்தை ஒட்டியது. எனவே, ஆய்தம் உரசொலித் தன்மையை மட்டும் குறிப்பதால், கடைநா ஒலி, இடைநா ஒலி போன்ற கூறுகள் சமனாகிவிடுகின்றன. எனவே, ஆய்தம் அடிநிலை ஒலியனின் குறியீடாக இன்று தமிழ் மொழியியல் நூல்களில் குறிப்பிடப்படுகிறது.

அடிநிலை உறுப்பு (Archisegment) இப்பொழுது ஒலியன் நிலையில் மட்டுமே பேசப்படுகிறது. இந்தக் கருத்தை முதன் முதலில் துருபட்சுகாய் (Trubetzcoy) என்ற செக்கோசுலோவிய நாட்டு அறிஞர் வெளிப்படுத்தினார்.

செ.வை.ச.

**அடிப்படை உரிமைகள்:** அரசாங்க அமைப்பின் ஆணிவேராக உரிமைகள் விளங்குகின்றன. இவை அரசாங்கத்திற்கு ஆளும் தன்மையை அளிக்கின்றன. மேலும், நல்வாழ்விற்கு இன்றியமையாதவையாக இருப்பவை என்ற முறையில் இவற்றை இயற்கையுரிமைகள் என்றும் கொள்ளலாம். ஒரு நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிமைகள் இடம் பெற்று விட்டால் அவற்றை யாரும் மீற முடியாது. அரசாங்கம், மக்கள் என்ற இரு பிரிவினரும் அவற்றை மதித்து நடப்பர். ஒவ்வொருவருக்கும் அடிப்படையாக உள்ள உரிமைகளை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

அடிப்படை உரிமைகள் தவிர வேறு சில உரிமைகளும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் உண்டு. அவற்றை நிலைநாட்டுவதற்கு நீதிமன்றத்தின் துணையை நாட இயலாது என்றாலும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள காரணத்தால் அவற்றுக்கும் சிறப்பிடம் ஏற்படுகிறது. அவற்றைப் புறக்கணிக்க முடியாது. இந்த உரிமைகள் மக்களின் அறிவை விரிவுபடுத்தி, அவர்கள் சிறந்த குடிமக்களாக ஆவதற்குப் பயிற்சியளிக்கின்றன.

அடிப்படை உரிமைகளுக்கு உறுதியளித்திருப்பதால் அரசின் அதிகாரத்திற்கு வரம்பு ஏற்படுகிறது. அரசாங்கமோ, மன்றமோ வல்லாட்சி அதிகாரத்தை மேற்கொள்ளாதபடி தடுப்பதே இதன் நோக்கம். இதன் பலனாகத் தனிப்பட்டவர் தங்குதடையின்றி முன்னேறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆயினும் அடிப்படை உரிமைகள் வரையறையற்ற உரிமைகள் அல்ல. தனி ஒருவரின் நலனை மட்டுமன்றி, அனைத்து மக்களின் உரிமைகளையும் சமுதாயத்தின் நலனையும் அரசின் நலனையும், சமூகம் திட்டமிட்டு முன்னேறுவதையும் பாதுகாக்க வேண்டியிருக்கிறது. இந்த அளவிற்கு அடிப்படை உரிமைகளை அரசாங்கம் கட்டுப்படுத்த முடியும். இதையும் அரசியல் அமைப்புச் சட்டம் உறுதி செய்திருக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பகுதியில் இடம் பெற்றுள்ள இந்த அடிப்படை உரிமைகள் விரிவானவை. இவ்வுரிமைகளுக்கு முரணாகவோ இவற்றைப் பறிக்கும் விதத்திலோ குறைக்கும் விதத்திலோ இயற்றப்படும் சட்டங்கள் எவையும் செல்லா. அரசியல் அமைப்புச் சட்டம் விதித்துள்ள வரையறைகள் தவிர வேறு எந்த விதத்திலும் அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்த முடியாது. மக்களாட்சியின் மிகச் சிறந்த நன்மைகளை ஒவ்வொரு குடிமகனுக்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்குகிறது. வாழ்க்கைக்குப் பொருளும் வளப்பமும் வழங்குகின்ற அடிப்படை உரிமைகளை அது மக்களுக்கு அளித்திருக்கிறது.

மத, இன, சாதி, பால், பிறப்பிடம் காரணமாக வேறுபாடு காட்டாமை; பொதுப் பணிகளைப் பெறுவதற்குச் சம வாய்ப்பு; பேச்சு–எழுத்து உரிமை; கூட்டம் கூடும் உரிமை; சங்கம் சேரும் உரிமை; கல்வி–பண்பாட்டு உரிமைகள் என்பன போன்ற அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமகனுக்கு மாத்திரமே உறுதி செய்யப்பட்டிருக்கின்றன. இவை நீங்கலாக உள்ள அடிப்படை உரிமைகள் இந்தியப் பகுதியில் வாழும் அயலார்க்கும் உண்டு.

அடிப்படை உரிமைகள்:

1. சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
2. சம வாய்ப்பு.
3. தீண்டாமை ஒழிப்பு.
4. பேச்சுரிமை, எழுத்துரிமை, சங்கம் சேர்தல், விருப்பமான தொழில் செய்தல் முதலிய உரிமைகள்.
5. உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு.
6. சுரண்டலை எதிர்க்கும் உரிமை.
7. எந்த மதத்தையும் பின்பற்றவும் தழுவவும் பரப்பவும் உரிமை.
8. கல்வி, பண்பாட்டு உரிமைகள்.
9. சொத்துரிமை.

10. குறைகளுக்குச் சட்டத்தின் மூலம் தீர்வு காணும் உரிமை.

**அடிப்படைக் கல்வி**: ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (UNESCO) தொடங்கியவுடன், அது வகுத்த திட்டங்களுள் ஒன்று அடிப்படைக் கல்வித் திட்டமாகும். உலகின் சில நாடுகள் கல்வியிலும் வாழ்க்கை நிலையிலும் மிகவும் முன்னேறியிருக்க, பல நாடுகள் வறுமையில் உழல்வதுமட்டுமன்றி, வளர்ச்சிக்கு வழிகோலும் கல்வி வாய்ப்பும் இல்லாது பின்தங்கிக் கிடக்கின்றன. 1946-ஆம் ஆண்டுக் கணக்கின்படி, வட ஐரோப்பாவிலும் வட அமெரிக்காவிலும் உள்ள நாடுகள் ஏறக்குறைய முழு எழுத்தறிவுள்ளவையாக இருந்தன. ஆனால், ஆப்பிரிக்காவில் 90 விழுக்காடும் ஆசியாவில் 80-90 விழுக்காடும் தென் அமெரிக்காவில் 50-70 விழுக்காடும் எழுத்தறியாமை பரவியிருந்தது. உலக அரங்கில் இத்தகைய ஏற்றத் தாழ்வைக் குறைக்கும் முயற்சிகளுள் ஒன்றாக அடிப்படைக் கல்வித் திட்டம் தொடங்கப்பட்டது.

வளர்ந்து முன்னேறிவரும் உலகில் வாழ்வதற்கு எண்ணறிவும் எழுத்தறிவும் இன்றியமையாதவை. ஆனால் இவை கருவிகளேயாகும்; அடிப்படைக் கல்வியாகா. சொந்த வாழ்க்கையையும் நாட்டின் நலத்தையும் முன்னேறச் செய்தலும் இயற்கைச் சூழலையும் சமூகச் சூழலையும் நன்கு புரிந்து கொண்டு அவற்றுடன் இணங்கி வாழக் கற்பித்தலும் தொழிற்பயிற்சி, பொருளாதார வளர்ச்சி, சமூகக் கல்வி, குடிமைப் பயிற்சி, அழகியற் கல்வி, ஒழுக்கக் கல்வி, ஆன்மிகக் கல்வி முதலியவற்றின் அடிப்படைக் கூறுகளும் அடிப்படைக் கல்வியுள் அடங்கும். அடிப்படைக் கல்வியினைப் பொதுமக்கள் கல்வி, அனைவர்க்கும் அளிக்கப்படும் தகுந்த கல்வி, மக்களாட்சிக்கு அடிகோலும் கல்வி என்றும் சொல்லலாம்.

நடைமுறையில் அடிப்படைக் கல்வியின் எல்லையை வரையறுப்பதும் எளிதன்று. முதலில் எந்த மொழியில் அடிப்படை எழுத்தறிவு அளிக்கப்பட வேண்டும் என்னும் கேள்வி எழுகிறது. பல ஆப்பிரிக்க, ஆசிய நாடுகளில் நூற்றுக்கணக்கான மொழிகளும் கிளைமொழிகளும் உள்ளன. இவற்றுட் பல வளம் பெறாத நிலையில் உள்ளமையால் இக்கால வாழ்க்கைக்குத் தேவையான அறிவை இவற்றின் இயல்பு நிலையின் மூலம் அளித்தல் அரிது. பல மொழிகளுக்கு எழுத்து வடிவமும் இலக்கண அமைப்பும் வளரவில்லை. இத்தகைய சூழல்களுட் சிலவற்றில் ஆங்கிலம், பிரெஞ்சு, இசுபானியம் (Spanish) போன்ற இக்கால வளம் பெற்ற மொழிகள், ஓரளவு பரவி அரசுப் பணிகளுக்கும் வளர்ச்சித் திட்டங்களுக்கும் தேவையான ஆள்வலத் தேவைகளை (Manpower needs) நிறைவேற்றவும் நாட்டின் ஒருமைப்பாட்டை வளர்க்கவும் பயன்படுகின்றன. இரண்டாம் மொழி ஒன்று நாட்டு வளர்ச்சிக்கும் ஒருமைப்பாட்டிற்கும் வேண்டுமாயின், அம்மொழியின் பயன்படு கூறுகளைக் கற்பதும் அடிப்படைக் கல்வியுள் அடங்கும். இவ்வாறு குடிவந்தோர் புகுத்திய புதுமொழி பயன்பட்ட போதிலும், அது, பெரும்பாலும் நாட்டு மக்களிடையே ஓர் உயர்குடியினரை (Elite) வளர்த்து, கல்வியறிவற்ற மக்களின் பண்பாட்டு வேர்களை உலரச் செய்யவும் காரணமாகப் பல இடங்களில் அமைந்தது. ஆகையால், கூடியவரை பன்மொழிச் சூழல்களில் (Multilingual environments) கூடத் தாய்மொழியை வளர்த்துப் பிள்ளைகளின் தொடக்கக் கல்விக்கும் வயது வந்தோர் கல்விக்கும் பயன்படுத்த வேண்டும்.

வீடும் சமுதாயமும் அடிப்படைக் கல்வியின் அடிப்படைக் கூறுகளாகும். ஆகையால், எழுத்தறிவு குறைந்த சமூகங்களில் வயது வந்தோர் கல்வி முயற்சியும் குழந்தைகளின் கல்வி வளர்ச்சியும் பள்ளிப் படிப்பும் பள்ளிசாராக் கல்வியும் ஒருங்கே திட்டமிட்டு நடத்தப்படவேண்டும்.

அனைவரும் சமம், ஏற்றத்தாழ்வுகளைச் சமன் செய்ய முடியும் என்பன போன்ற குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டே அடிப்படைக் கல்வி திட்டமிடப்பட்ட போதிலும், திட்டம் தொடங்கும் நிலையில் நாட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் பற்றிய நுண்ணிய அறிவு நடைமுறைக்குத் தேவை. ஒரு நாட்டில் காணப்படும் சாதி சமயம், வகுப்பு வரிசை, வாழ்க்கை முறைகள் முதலியன சமூக அமைப்பையும் மற்ற ஏற்பாடுகளையும் எவ்வளவு தூரம் தாக்கக் கூடும் என்பதை உணர்ந்தே இத்திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும்.

பண்பாட்டின் ஊற்றுகளைப் பாதுகாத்தல் அடிப்படைக் கல்விக்கு இன்றியமையாதது. அறிவொளி வீசுவதற்கும் தனியாளின் விழுப்பொருள் உணர்வை வளர்ப்பதற்கும் ஆக்கமுறையாக அமையும் மாறுதல்களை வளர்ப்பதற்கும் பண்பாட்டின் அடித்தளம் இன்றியமையாததாகும்.

யுனெசுகோவின் (UNESCO) அணுகு முறைச் சிறப்புகளுள் ஒன்று, ஒரு திட்டத்தை மேலிடத்திலிருந்து அல்லது புறத்தேயிருந்து புகுத்தாது, ஒரு நாட்டின் பண்பாடு, வரலாறு முதலியவற்றின் அடிப்படையிலிருந்து, உள்நின்று ஊற்றெடுக்கு முறை (Endogenous method)யைக் கையாளுவதேயாகும். ஆகையால், அடிப்படைக் கல்வி சிந்தனையுருவம் கொண்ட போது, அது வளரும் நாடுகளுக்கு ஓர் உயிர் மருந்தைக் கண்டுபிடித்ததுபோல், ஒவ்

வொரு நாட்டிலும் அடிப்படைக் கல்விக் கருத்துகளை ஒத்த அனுபவங்கள் வித்து உருவத்திலேனும் உண்டோ என்று காணும் தனிக்கள ஆராய்ச்சிகளை மேற்கொண்டது. இலாபாக்கு (Laubach), காபெல்லெரோ (Cabellero), காபிரியேல், தோரெசு (Torres), சார்ட்டன் (Charton), போன்ற வல்லுநர்களால் எழுதப்பட்ட இவ்வாராய்ச்சிகள், அவர்களின் மிக்க மதி நுட்பத்தை வெளிப்படுத்துகின்றன. அவை இன்றைய நிலைக்கும் பொருந்தும் பாடங்களை உட்கொண்டவை; பலவேறுபட்ட சூழ்நிலைகளை அடக்கியுள்ளவை. பேட்டிரிசு கிங் (Beartice King) எழுதிய சோவியத்துக் கல்விப்புரட்சியைப் பற்றிய அறிக்கை அடிப்படைக்கல்வித் திட்டத்திற்குப் பத்து இருபது ஆண்டுகளுக்கு முற்பட்டது. சோவியத்து நாடு பெற்ற வெற்றி அனுபவம் இப்பொழுது வளரும் நாடுகளுக்கும் பொருந்துவதாகும். காந்தியடிகள் வகுத்த வார்தாத்திட்டமும் அடிப்படைக் கல்விக்குரிய ஓர் அணுகுமுறையாகும் என்பதும் யுனெசுகோவின் வெளியீட்டிலிருந்து புலனாகிறது.

பின்னோக்கு ஆய்வினைப் போலவே திட்டமுன்னோக்கிலும் மிகச் சிறந்த அறிஞரின் அனுபவமும் உட்காட்சிகளும் செறிந்து கிடக்கின்றன. குறிப்பாக இலாபாக்கு, சாவோ (Chao), ஆக்டென் (Ogden), இரிச்சர்ட்சு முதலியோர் வளரும் சூழல்களில் மொழி கற்பித்தலைப் பற்றி எழுதியுள்ளவை குறிப்பிடத்தக்கவை.

அடிப்படைக் கல்வித்திட்டம் பல்வேறு வடிவங்களில் பல்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் பரந்த ஆய்வும் உள்நின்று ஊற்றெடுக்கும் அணுகுமுறையும் இன்றும் எல்லா நாடுகட்கும் பொருந்துபவை. இவற்றைவிடுத்து, விரைவில் பலன் காண விரும்பிக் குறுகிய புகுத்துமுறைகளைப் பயன்படுத்திய சில திட்டங்கள், சில நாடுகளில் பலன் தராது போனதும் உண்டு.

UNESCO, "Fundamental Education", The Macmillan Company, New York, 1947.

**அடிப்படைத் திறன்கள்**: அறிவு பெறுதலிற் சில திறன்கள் அடிப்படையாக அமைகின்றன. கல்வியறிவு பெறுதலிலும் அடிப்படைத் திறன்கள் தேவையாகின்றன. அறிவியல், கணிதவியல், மொழியியல், முறைசாராக் கல்வி ஆகியவற்றில் அறிவைப் பெருக்க விழையும் ஒருவருக்குச் சில அடிப்படைத் திறன்கள் இன்றியமையாதன.

**அறிவியல் அடிப்படைத் திறன்கள்**: அறிவியற் கல்வி பெற்றுக் கொள்ள விரும்பும் மாணவருக்குச் சில அடிப்படைத் திறன்கள் தேவை. அறிவியல் கற்பதில் பிறர் கண்ட அறிவை ஆசிரியர் கூற, அவ்வாறே ஏற்பதை விட மாணவர்கள் தாமாகவே அறிவியல் முயற்சியில் ஈடுபட்டு, அறிவு பெறுதற்கு அடிப்படைத் திறன்கள் இன்றியமையாதவை. இயற்கைச் சூழலில் உள்ள பொருட்கள், உயிரினங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை மாணவர் பார்க்கலாம்; ஆனால், அவற்றைக் கூர்ந்து கவனிப்பது அறிவியல் கற்பதற்குத் தேவையான அடிப்படைத் திறனாகும். கூர்ந்து கவனிக்கும்போது, மாணவர் மனத்தில் பல வினாக்கள் எழலாம். அறிவியல் வளர்ச்சிக்குத் தேவையான கேள்விகளைக் கேட்பது மற்றொரு திறன். இக்கேள்விகள், இயற்கைச் சூழலில் நிகழும் நிகழ்ச்சிகளை இன்னும் கூர்ந்து கவனிக்கச் செய்கின்றன. அன்றியும், பல தகவல்களை, ஆராய்ச்சிக்குத் தேவையான பொருள்களை, உயிரினங்களைச் சேகரிக்க இக்கேள்விகள் மாணவரை ஊக்குவிக்கின்றன. சேகரித்தவற்றை வகைப்படுத்தி, வரிசைப்படுத்தி ஆராய்வது அறிவியற் பாடத்தில் உள்ள அடிப்படைச் செயல்களுள் அடங்கும். இம்முயற்சி சில அடிப்படைக் கேள்விகளுக்குத் தன்னிடமுள்ள தகவல்களையொட்டி ஒரு கருதுகோள் அல்லது விளக்கம் பற்றிய ஊகம் அமைக்கும் திறனைத் தருகிறது. தான் ஊகித்து அறிந்த விளக்கம் தவறா, அன்றா என்பதைச் சோதித்தறிவது மிகவும் இன்றியமையாதது. அதற்கு ஏற்ற சோதனையைத் தேர்ந்தெடுத்துச் செய்து முடிக்கும் திறன் வேண்டும். இவ்வாறு, சோதனைகள் மூலமாக மெய்ப்பிக்கப்பட்ட உண்மைகளைத் தொகுக்கும் போது புதிய உண்மைகள் தோன்றுகின்றன. அறிவியல் உண்மைகளை வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் ஒருவருக்கு இவ்வடிப்படைத் திறன்கள் தேவை. தாம் கண்டுபிடித்த உண்மைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும், மற்றவர்கள் கண்டுபிடித்த உண்மைகளைச் சீர்தூக்கி அறியவும் அறிவியல் ஆற்றல் மிக இன்றியமையாததாகும். ஜி.எம்.ஜா.

**மொழியில் அடிப்படைத் திறன்கள்**: மொழியின் அடிப்படைத் திறன்கள் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என நான்கு ஆகும். அவற்றுள் கேட்டல், பேசுதல், ஆகிய இரண்டும் ஒலியை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும். படித்தல், எழுதுதல் ஆகிய இரண்டும் வரிவடிவ அமைப்பை அடிப்படையாகக் கொண்ட திறன்களாகும். கேட்டலும் படித்தலும் செய்திகளை அல்லது கருத்துகளை நாம் அறிந்து கொள்ள உதவுவதால் இவற்றை உட்கொள்ளும் திறன்கள் (Receptive Skills) என்பர். பேசுதல் மூலமும் எழுதுதல் மூலமும் நாம் பிறர்க்கு அறிவிக்க வேண்டிய கருத்துகளையும் செய்திகளையும் வெளியிடுகிறோம். எனவே, இவற்றை வெளியிடும் திறன்கள் (Expressive Skills) என்பர். இந்நான்கு அடிப்படைத் திறன்களிலும் வல்லமை உடையவரே மொழியைக் கையாளும் திறன் பெற்றவர் ஆவார்.

கேட்டல் திறனை (Listening Skill) ஒலிகளைக் கேட்டல், கேட்டுப் பொருளுணர்தல் என நுண்ணிய வேறுபாடு அமைந்த இரு பெருங் கூறுகளாகப் பிரிக்கலாம். செவி நரம்புகள் வழியாக ஒலி மூளைப் பகுதியில் பதிவாதலைக் கேட்டல் (Hearing) எனலாம். ஒலிக்குரிய பொருளுணர்ந்து தமது முன்னறிவுடன் இணைத்து அறிந்து கொள்ளுதலே கேட்டுப் பொருளுணர்தல் (Listening) ஆகும். கேட்டல் திறன் என்னும் பொழுதெல்லாம் நாம் கேட்டுப் பொருளுணர்தலையே குறிக்கிறோம்.

கேட்டல் திறனின் இன்றியமையாமையை உணர்ந்து இக்காலத்தில் மொழிப்பாடம் கற்பித்தலில் அதற்குச் சிறப்பிடம் தந்துள்ளனர். குழந்தைகள் கேட்டுச் செய்திகளை அறிவதற்குத் தகுந்த சூழ்நிலையமைத்து அவர்கள் விரும்பக் கூடிய செய்திகளைக் கூறுதல் வேண்டும். சிறுகதைகள், விளையாட்டுகள் பற்றிய செய்திகள், விடுகதைகள் ஆகியவற்றை ஏற்ற முறைகளில் கையாளுவதன் மூலம் கேட்டல் திறனை வளர்க்கலாம்.

**பேசுதல் திறன்:** நம்முடைய கருத்துகளை வெளியிடுவதற்கு ஏற்ற பொருள் தரும் சொற்களை ஒலிவடிவில் வெளிப்படுத்தல் பேச்சுத் திறன் எனப்படும். தெளிவான, பிழையற்ற பேச்சினை வளர்க்கப் பேச்சுப் பயிற்சியளித்தல் வேண்டும். ஒலிகளைப் பிழையின்றி ஒலிப்பதற்காக ஒலிப்புப் பயிற்சி (Sound Drill) நாநெகிழ் பயிற்சி, நாபிறழ் பயிற்சி போன்றவைகளைப் பயன்படுத்துதல் வேண்டும். பேச்சுத்திறமை பெறுவதற்காக உரையாடல்களையும், கதைகளையும் ஆட்டப் பாடல்களையும், செவிலிப் பாடல்களையும் பயன்படுத்தலாம். அறிவிப்புகளைப் படிக்கச் செய்தல், சிறு சொற்பொழிவாற்றுதல், பேச்சுப்போட்டிகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்றவைகளும் பேச்சுத் திறன் வளர்க்க உதவுவனவாம்.

மொழியின் வரிவடிவத்தைக் கண்டு ஒலித்தோ ஒலிக்காமலோ படித்துப் பொருள் அறிதலே படித்தலாம். ஒலித்துப் படித்தலை வாய் விட்டுப் படித்தல் (Loud Reading) என்றும், ஒலிக்காமல் படித்தலை வாய்க்குட் படித்தல் (Silent Reading) என்றும் கூறுவர். படித்தல் என்னும் போது படித்துப் பொருள் உணர்தல் என்றே பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு பொருள் உணரச் சொற் களஞ்சியத்தைப் பெருக்குதல், உவமை, பழமொழி, வருணனைத் தொடர் ஆகியவற்றை விளக்குதல், நிறுத்தற்குறிகளின் பயன் அறிதல் ஆகியவற்றில் பயிற்சியளித்தல் வேண்டும்.

பேசும் மொழியின் ஒலிக்குரிய வரிவடிவத்தைப் பயன்படுத்திக் கருத்தை உணர்த்துதலே எழுதுதல் திறன் ஆகும். வரிவடிவத்தை ஒழுங்காக அமைக்கவும் ஒரு சீராக எழுதவும் பயிற்சியளிக்க வரியொற்றி எழுதுதல் (Copy writing), பார்த்து எழுதுதல் (Transcription) போன்ற பயிற்சிகளை அளித்தல் வேண்டும். பின்னர், பிழையின்றியும் முறையாகவும் எழுதுவதற்குச் சொல்வது எழுதுதல் அல்லது ஒப்ப எழுதுதல் (Dictation), தாமே எழுதுதல் (Original writing) போன்ற பயிற்சிகளை அளித்தல் வேண்டும். இவ்வாறு நான்கு அடிப்படைத் திறன்களிலும் பயிற்சி அளித்தால் மொழியைக் கையாளும் திறனை ஒருவர் பெறலாம்.

பள்ளிப் படிப்பின் தொடக்க நிலையில் சொற்களைப் பிழையின்றி ஒலித்தலிலும் வரிவடிவத்தை நன்குணர்தலிலும் பயிற்சியளித்தல் வேண்டும். பின்னர், வாய்க்குட் படித்தலிலும், திறமையாகப் பேசுதலிலும், முறையாகவும், சுவையாகவும் எழுதுதலிலும் பயிற்சியளித்து மொழித்திறன்களை வளர்த்தல் வேண்டும். வி.க.

முறைசாராக் கல்வியில் அடிப்படைத் திறன்கள்: வளர்ந்து வரும் நாடுகளில் நிலவிவரும் முறைசாராக் கல்வித் (Non-Formal Education) தொடர்பான செயல்களை ஆய்ந்து பார்க்கும் பொழுது, பல வகையான கல்வி நடவடிக்கைகள் நடைபெறுவது புலப்படும். இக்கல்வியின் அடிப்படையில் பெரும்பாலான நடவடிக்கைகள் பள்ளியின் வெளியே நடைபெறுகின்றன. இதன் காரணமாகத்தான் முறைசாராக் கல்வியைப் பற்றி ஒரு குறிப்பிட்ட விளக்கம் தர முடியாத நிலை உள்ளது. ஆயினும் ஒரு வகையான பொது விளக்கம் தர முடியும். முறைசாராக் கல்வியைப் பயன்படுத்திச் சில குறிப்பிட்ட திறன்களைத் தனிப்பட்டவர்களுக்கோ குழுக்களுக்கோ புகுத்தலாம்.

முறைசாராக் கல்வி ஒருவன் சமுதாய வளர்ச்சிக்குத் தன்னால் இயன்றதை வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் இயங்கி வருகிறது. சமுதாய வளர்ச்சிக்குத் தனி மனிதன் உதவ வேண்டுமாயின் அவனுக்குச் சில திறன்கள் தேவைப்படுகின்றன. குறிப்பாகத் தன் நிலையை உணரும் திறன் மிக இன்றியமையாத ஒன்று. இன்றைய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றியடையாமல் போவதற்கு ஒரு காரணம் அவற்றில் பங்கு பெறும் ஒருவன், தான் யார்? தன் நிலை என்ன? எந்நிலையை அடைய வேண்டும்? என்று உணர முடியாத நிலையில் இருப்பதே. எனவேதான், அடிப்படையாகத் 'தன் நிலையை உணரும் திறனை' வளர்க்க வேண்டும் எனக் கூறப்படுகிறது. அத் திறனை அடைந்துவிட்டால், பிறர் ஊக்குவித்தல் இன்றித் தன் ஊக்கத்தின் அடிப்படையில் தானும் வளர்ந்து சமுதாய வளர்ச்சிக்கும் தன்னால் இயன்றதைச் செய்ய முடியும்.

முறைசாராக் கல்வியில் வளர்க்க வேண்டிய இரண்டாம் திறன், 'ஒரு காரணத்தின் அடிப்படையில் விளையும் விளைவுகளையும் புதைந்து கிடக்கும் பிணைப்புகளையும்' (Cause-effect relationship) அறிந்து கொள்ளும் திறன். இன்று உலகில் நிலவும் தத்துவங்கள் (Phenomena) அனைத்தும் காரண காரியங்களினால்தான் நிலவுகின்றன என்று கூறத் தேவையில்லை. இருப்பினும், நம்மில் பலர் எக்காரணத்தினால் விளைவுகள் ஏற்படுகின்றன என்று சிந்திப்பதில்லை. எனவேதான் முறைசாராக் கல்வி ஏற்பாட்டின் மூலம் காரண விளைவுகளில் இருக்கும் பிணைப்புகளைப் புரிந்து கொள்ளக் கூடிய திறன்களை வளர்க்க வேண்டும் என்பது கருதப்படுகிறது. இத் திறனால் ஒருவன் அன்றாடச் சிக்கல்களுக்கு விடை காண முடியும்.

மதிப்பீடு செய்தல், அதன் அடிப்படையில் ஒரு முடிவு எடுத்தல் ஆகியவை முறைசாராக் கல்வி மூலம் வளர்க்க வேண்டிய பிற திறன்களாக அமைகின்றன. கல்வியறிவில்லாத பலர் எந்த் முடிவினையும் எடுக்க முடியாதவர்களாகவும் அவ்வாறே முடிவெடுத்தாலும் எவ்வாறு செயலாற்றுவது என்று அறியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இதன் விளைவாக, அவர்கள் சார்பில் நடுவர்கள் முடிவெடுத்துத் தங்கள் முடிவுகளுக்கு அவர்களை அடிமைகளாக ஆக்கி விடுகிறார்கள்.

முடிவாக மனப்பாங்கில் (Attitudinal Changes) சில மாற்றங்களைத் தோற்றுவிக்கக் கூடிய சில அடிப்படைத் திறன்களையும் இக்கல்வி மூலம் உண்டாக்க வேண்டும். அவ்வகைத் திறன்களாவன:

1. செயலற்றுக் கிடக்கும் நிலையிலிருந்து ஊக்கமுடன் செயலில் இறங்கக் கூடிய உள்ளத் திறன்.

2. கூச்சத்தால் பங்கு கொள்ள முடியாத மன நிலையில் இருந்து தன்னம்பிக்கையுடன் செயலாற்ற முனையும் உள்ளத் திறன்.

3. செய்ததையே திரும்பத் திரும்பச் செய்யும் மன நிலையில் இருந்து விலகி ஆக்கவுணர்வுடன் செயல்படும் உள்ளத் திறன். ஆர்.ஜெ.

**கணிதவியல் அடிப்படைத் திறன்கள்:** கணிதப் பாடத்தின் அடிப்படைத் திறன்களாய்க் கருதப்படுவன கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகியவையாம். இயற்கணித அடிப்படை உண்மைகளை அறிதலும் அவற்றைப் பயன்படுத்தும் திறனை வளர்த்தலும் கணிதப்பாடம் கற்பித்தலின் குறிக்கோள்களாகும். திறன்களைப் பெறுவதிலும் பன்முறைப் பயிற்சி மட்டுமே போதாது. அடிப்படை உண்மைகளை அறிந்து பயன்படுத்தும்போதே திறன் சிறப்புற வெளிப்படும். எண்கள், குறியீடுகள் ஆகியவற்றைப் பருப் பொருள்களின் அடிப் படையில் தொடங்கிக் கற்கும்போது அவை தெளிவாக விளங்குகின்றன. கணிதப் பாடத் திறன்களில் நுணுக்கமும் (Accuracy) விரைவாகச் செய்தலும் சிறப்புத் தன்மைகளாய் அமைவன.

மின்னணுக் கணக்குப் பொறிகள் மிகுதியும் பயன்படுத்தப்படும் இந்நாளில், கணிதப் பாட அடிப்படைத் திறன்கள் யாவை என்ற வினா எழுகிறது. இப்பொறிகளைப் பயன்படுத்தும் போது கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் ஆகிய திறன்களிலும் முன்போலவே பயிற்சி வேண்டப்படுவதில்லை. இக்கருவிகளை வேண்டுமிடத்து வேண்டும் முறையில் நன்கு பயன்படுத்தும் திறன் கணிதப் பாடத்தில் ஓர் அடிப்படைத் திறனாக இன்று அமைகிறது. கணக்கிடும் பொறிகளைக் கையாளும் திறனோடு, இப்பொறிகளில் இருந்து வெளிப்படும் தீர்வுகளை நன்கு விளக்கும் திறனும் பெறுதல் வேண்டும்.

கணிதப் பாடத்திறன்கள், கருத்துகளின் தெளிவிலிருந்தும் பிரிக்கப் படக் கூடியனவல்ல. கருத்துகளைத் தெளிந்து சிக்கல்களைத் தீர்க்க, அவற்றைப் பயன்படுத்தத் தெரியும் திறன், கணிதப் பாடத்தின் அடிப்படைத் திறன்களுள் முதன்மை பெறும். செய்து காட்டும் திறன் (Operation Skill) பன்முறைப் பயிற்சியால் அமையலாம். ஆயின் இச்செயலின் அடிப்படையான கருத்துகளின் தெளிவே இன்று கணிதப் பாட அடிப்படைத்திறன் எனக் கொள்ளப்படுகிறது. கணிதச் செயல்களைச் செய்ய இன்று எளிதாய்க் கையாள வல்ல மின்னணுக் கருவிகள் பல உள்ளன. எனவே செயல்களைச் சாராது, இச்செயல்களுக்கு அடிப்படையான கருத்து விளக்கங்களின் தெளிவே கணிதப் பாடத்தின் அடிப்படைத் திறன்களாகும்.

**அடிப்படைப் புள்ளிவிவரம்** என்பது மக்கள் தொகைத் தொடர்பான செய்திகளைத் தரும் ஓர் அடிப்படைக் குறிப்பு. மனிதன் உலகில் தோன்றுவதும் மறைவதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகக் கருதப்படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் மனிதனின் வாழ்நாளில் நிகழும் தோற்றம், முடிவுகள் ஆகியவற்றை விளக்குவன. மக்கள் தொகை இயலின்படி செத்துப் பிறத்தல் (Still Birth), கருவில் இறப்பு (Foetal Death) ஆகிய நிகழ்ச்சிகளும் இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன. மனித வாழ்வில் ஏற்படும் திருமணம், மணமுறிவு, தத்தெடுப்பு(Adoption) போன்ற நிகழ்ச்சிகள் மனிதனின் சமூக நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் காரணமாக இவை அடிப்படை நிகழ்ச்சிகளாகக் கொள்ளப்படுகின்றன.

அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்புகள் (Vital Records) என்பவை பிறப்பு, இறப்பு, செத்துப் பிறத்தல், திருமணம், மணமுறிவு மற்றும் பலவித நிகழ்ச்சிகளைத்

தொடர்புடைய அலுவலகத்தில் பதிவு செய்தல் பற்றியனவாகும். சான்றாக, பிறப்பினைப் பெற்றோர் பதிவு செய்வதும், இறப்பினைத் தொடர்புடைய அலுவலகத்தில் சுற்றத்தார் தெரிவிப்பதும், தனிப்பட்ட ஒருவன் தன் திருமண நிகழ்ச்சியைத் தானே பதிவு செய்வதும் இக் குறிப்புகளில் அடங்கும்.

அனைத்துச் சமுதாயங்களிலும் பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடப்பவையே. இவையாவும் அவ்வப்பொழுது முறையே பதிவு செய்யப்படுகின்றன. இவ்வகையில் திரட்டப்படும் விவரங்கள் யாவும் அலுவலர்களால் பிரித்துத் தொகுக்கப்பட்டு அதனால் கிடைக்கக்கூடிய விவரங்கள் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் என்றழைக்கப்படுகின்றன.

இந்நிகழ்ச்சிகளுக்குமேல் சில துணை விவரங்களும் திரட்டப்படுகின்றன. ஒரு குழந்தையின் பிறப்பைப் பதிவு செய்யுங்கால், அக் குழந்தை பிறந்த தேதி, பால் (Sex), தாயின் வயது, முன்னர்ப்பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை, பிறப்பின் வரிசை எண் (Birth Order), தாயின் இருப்பிடம் போன்ற விவரங்களும் கேட்டறியப்படுகின்றன. இது போலவே இறப்பினைப் பதிவு செய்யும்போது இறந்த தேதி, இறந்தவரின் வயது, பால், இறந்த இடம், இறந்தவரின் வழக்கமான இருப்பிடம், இறப்பிற்கான காரணம் போன்றவை குறிப்பிடப்படுகின்றன.

இப்புள்ளி விவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட ஆண்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் நிகழக்கூடிய இயற்கையான மக்கள் தொகையின் மாற்றத்தைக் (Natural Change in Population) கணக்கிட இயலும். ஐக்கிய நாடுகளின் வெளியீட்டில் இதன் விளக்கம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

இது 'இன்றியமையாத நிகழ்ச்சிகளையும், பண்புகளையும் தொடர்ச்சியாகவும், நிலையாகவும், கட்டாயமாகவும் ஒரு நாட்டின் சட்ட வடிவிலான தேவைகளுக்காகப் பதிவு செய்வதாகும். இம்முறையில் திரட்டப்படும் விவரங்கள் யாவும் பிறப்பு, இறப்பு, மணமுறிவு, மணவிலக்கு (Annulment), சட்டப்படியான மண வாழ்க்கைப் பிரிவு (Judicial Separation), தத்தெடுப்பு, சட்டப்படியான முறைமை, மற்றும் அங்கீகாரம் (Legitimation and Recognition) போன்றவற்றை உள்ளடக்கியவை. ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் சட்ட முறைப்படி இது போன்ற நிகழ்ச்சிப் பதிவு முறை காலங் காலமாகச் செயல்பட்டு வருகிறது.

அடிப்படைப் புள்ளி விவரம் என்பது குடியுரிமைப் பதிவு முறை (Civil Registration System) என்ற வேறு பெயரிலும் அழைக்கப்படுகிறது. இப்பதிவுகள் மக்கள் தொகை மாற்றத்தை அறிவதற்கான கருவியாகப் பயன்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட மக்கள் தொகையில் நிகழக்கூடிய அத்தனை நிகழ்ச்சிகளும் முறையே தெரிவிக்கப்படுவதுடன் பதிவு செய்யப்பட்டுத் தொகுக்கப்படவேண்டும். இவ்வாறான பதிவுகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமே பொதுவாக முறைப்படி திரட்டப்பட்டுள்ளன. இதற்குச் சான்றாக ஐக்கிய அமெரிக்க நாடுகள், கனடா, இங்கிலாந்து, பிரான்சு, சுவீடன், சப்பான், ஆசுதிரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளைக் கூறலாம். ஆனால், வளரும் நாடுகளான இந்தியா, பாகிசுதான், வங்காள தேசம், இந்தோனேசியா, தாய்லாந்து, பர்மா, கென்யா போன்ற நாடுகளில் இப்புள்ளி விவரங்கள் நிறைவான வகையில் அமையவில்லை. இந்நாடுகளில் குறிப்பிடத் தக்க அளவில் பிறப்பும், இறப்பும் கூட பதிவு செய்யப்படுவதில்லை. ஆகவே இக் குறிப்பேடுகள் நிறைவில்லாமலும் துல்லியமில்லாமலும் காணப்படுகின்றன.

அடிப்படைப் புள்ளி விவர முறையில் திரட்டப்படும் விவரங்கள் யாவும் நிகழ்ச்சிகளின் தொகுப்பே தவிர, இப்புள்ளி விவரங்கள் முழுமையான அனைத்து விவரங்களையும் தரக்கூடியன அல்ல. குறிப்பிட்ட கால கட்டத்தில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளின் செயல்பாட்டைத் தெரிவிப்பதால் இவை நிகழ் விவரம் (Flow data) என்றழைக்கப்படுகின்றன. இப்பதிவு தொடர்ச்சியாக நடைபெறுவதால் இச் செயல்முறை நிலையான ஒன்றாக அமைகிறது. இடையிடையே தடைபடக் கூடியதாக, குறுகிய காலம் ஒன்றிற்கே திரட்டப்படும் புள்ளி விவரங்கள் நிகழ்கால நிலையைத் தெரிவிக்காமல் பயனற்றுப் போகும். பதிவு செய்வது சட்டத்தின் மூலம் கட்டாயமாக்கப்படுவதால் இப்பதிவைச் செவ்வனே செய்ய இயலும். சில நாடுகளில் இப் பொறுப்புத்தொடர்புடைய குடும்பத்திற்கும் வேறு சில நாடுகளில் துப்புரவுப் (சுகாதாரப்) பணியாளரிடமும் அல்லது ஈமச் சடங்குகளைச் செய்வோரிடமும் ஒப்படைக்கப்படுகிறது.

அடிப்படைப் புள்ளிவிவர முறையினால் திரட்டப்படும் நிகழ்ச்சிகளுடன் அவற்றுக்குத் தொடர்புடைய மனிதரின் சில பண்புகள் குறித்தும் விவரங்கள் திரட்டப்படுவதால் இப்புள்ளி விவரம் மக்கள்தொகைக் கணிப்பிலிருந்து (Census) மாறுபடுகிறது. இருப்பினும் மனிதனின் சில தனிப்பட்ட பண்புகளான வயது மற்றும் பால் போன்ற விவரங்களின் தொகுப்பு இரண்டிற்கும் பொதுவானதாகவே உள்ளது.

**பயன்கள்:** அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்புகள் சட்ட ஆவணமாகப் பயன்படுகின்றன. தனி மனிதன் ஒருவன் தன் வயது, குடியுரிமை, மண வாழ்க்கை நிலை ஆகியவை தொடர்பாக அவ்வப்பொழுது

சான்று அளிக்கும் கட்டாயத்திற்குட்படுகிறான். ஆகவே இவ்விவரங்கள் தொடர்புடைய அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுத் தேவைப்படும் நேரத்தில் அவற்றைக் கேட்டுப் பெறுவது அவனுக்கும் அவன் சார்ந்த அரசுக்கும் இன்றியமையாததாகிறது. இப் பதிவுகள் முறைப்படியான புள்ளி விவரமாகத் திகழாமலும் இருக்கலாம். ஆனால், இவ்விவரங்களின் தொகுப்பும் ஆய்வும் அரசுக்கு மக்கள் தொகைத் தொடர்பான செய்திகளைத் தருவிக்கின்றன. இச் செய்திகளின் அடிப்படையில் அரசின் கொள்கைகள் வகுக்கப்படுவதுடன் நலவழித் தொடர்புடைய நடவடிக்கைகள் உடனுக்குடன் எடுக்கப்படுகின்றன. எதிர்கால மக்கள் தொகை மதிப்பீடுகளைச்செய்யப் பிறப்புப் புள்ளி விவரங்களின் இன்றியமையாமை உணரப்பட்டுள்ளது. திருமணம், மணமுறிவு, மணவிலக்கு, மணவாழ்க்கைப் பிரிவு, தத்தெடுப்பு, சட்டப்படியான சட்டப்படியல்லாத பிறப்புப் போன்ற விவரங்கள் அரசின் சமூக நலத்துறை திறம்படச் செயல்புரியத் தேவைப்படுகின்றன. காண்க: இந்தியக் குடியுரிமைப் பதிவு முறை, மக்கள்தொகை, மக்கள்தொகைக் கணிப்பு.

துணை நூல்கள்:

**Bhende, Asha, A. & Tara Kanitkar**, "Principles of Population Studies", Himalaya Publishing House, Bombay, 1982.

**Benjamin, Bernard**, "Health and Vital Statistics", Allen & Unwin, London, 1968.

**Spiegelman, Mortimer**, "Introduction to Demography", Revised Edition, Mass., Harvard University Press, Cambridge, 1968.

**அடிப்படைப் பொருளியல்**: மனிதன் அன்றாட வாழ்க்கையில் வருவாயை ஈட்டி அவ்விதம் ஈட்டப்பட்ட வருவாயைத் தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு எவ்வாறு செலவிட முயல்கின்றான் என்பதை ஆராயும் சமூகவியலே பொருளியல் எனப்படும். ஆகையால், மனிதனின் அன்றாட வாழ்க்கையில் பொருளாதார ஆற்றல்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் ஒரு பொருளாதார அடிப்படையில் இயங்கும் ஓர் உயிரினம் என்று கொள்ள வேண்டும். பொது வாழ்க்கையில் பொருளாதார ஆற்றலில் இணைக்கப்படாத மனிதன் ஒருவனும் இல்லையென்றே கொள்ளல் வேண்டும்.

பற்றாக்குறை: இவ்வாறு இயங்கும் பொருளாதார மனிதன், உலகிலே முதலில் கண்டறிவது பற்றாக்குறை (Shortage). அவனுக்கு விருப்பம் பலவாகவும் அவற்றை நிறைவு செய்யத் தேவைப்படும் பொருள்கள் குறைவாகவும் உள்ளதைக் கண்டறிகின்றான். அவனுக்குப் பயன்பாடு உடையவை பற்றாக்குறையாக இருப்பதனால் அவற்றை அடைவதற்கு மனிதன் ஆவலுறுகின்றான். அதற்கு ஒரு விலை கொடுத்து வாங்குவதற்கு முனைகின்றான். தேவையோடு ஒப்பிடும்போது அளவுக்கு மிகுதியாக அரிசி கிடைக்குமானால் அதனை விலை கொடுத்து வாங்குவதற்கு முனைய மாட்டான். ஆகையால் பொருளாதாரத்தில் சிக்கலுக்கு உரித்தான கூறுகளில் பற்றாக்குறை என்பது அடிப்படையானது. சூரிய வெளிச்சம் பெருமளவில் கிடைப்பதால் அதனை யாரும் தேடுவதும் இல்லை; விலை கொடுத்து வாங்குவதற்கு முன் வருவதும் இல்லை. காண்க: அருமைப்பாடு.

பயன்பாடு: பொருளியலில் மனிதன் தேடும் பொருள்களுக்குப் பயன்பாடு உண்டு. பயன்பாடு (Utility) என்பது மனித விருப்பத்தை நிறைவு செய்யும் ஆற்றல். இப்பயன்பாடு வடிவப் பயன்பாடாகவும் (Form Utility), இடப் பயன்பாடாகவும் (Place Utility), காலப் பயன்பாடாகவும் (Time Utility) இருக்கலாம். அப்பொருளில் பயன்பாடு இருப்பதால்தான் அதனை மக்கள் விரும்புகின்றனர். உலகில் இயற்கையில் தோன்றும் எல்லாப் பொருள்களும் ஏதேனும் ஒரு வகையில் பயன் உடையவே. ஆனால் பயன்பாடு இருந்தால்தான் மக்கள் அதற்குப் பணத்தை அல்லது பணியைத் தந்து பெற முயல்கின்றனர். இயற்கையில் கிடைக்கும் பண்டத்தின் வடிவத்தை மாற்றுவதன் மூலம் வடிவப் பயன்பாட்டைப் படைக்கலாம். எடுத்துக்காட்டு: களிமண்ணிலிருந்து பானையை உருவாக்குதல். பண்டம் கிடைக்கும் இடத்தை மாற்றுவதன் மூலம் இடப்பயன்பாட்டைப் படைக்கலாம். எடுத்துக்காட்டு: வங்காளத்திலிருக்கும் சணலைத் தமிழகத்தில் கிடைக்கச் செய்தல். பண்டம் கிடைக்கும் காலத்தை மாற்றுவதன் மூலமும் பயன்பாட்டைப் படைக்கலாம். எடுத்துக்காட்டு: மழைக்காலத்தில் கிடைக்கும் நீரைச் சேமித்துக் கோடையில் வேளாண் பெருமக்களுக்குக் கிடைக்கும்படி செய்தல். இம்மூன்றோடு பணிப்பயன்பாட்டையும் (Service Utility) குறிப்பிடலாம். ஒரு சில பண்டங்களில் இப்பயன்பாடுகள் கலந்து இருப்பதையும் காணலாம். எடுத்துக்காட்டு: மின்சாரம். இத்தகைய பயன்பாடுகளைப் படைப்பதையே ஆக்கம் அல்லது உற்பத்தி எனக் குறிப்பிடலாம்.

நுகர்வு: பண்டங்களையும் பணிகளையும் பயன்படுத்தி மனிதன் மனநிறைவைப் பெற முயல்கிறான். இதுவே பொருளியல் நடவடிக்கைகளின் தொடக்க நிலை. நுகர்வில் (Consumption) நாட்டம் இல்லையெனில் பொருளியல் நடவடிக்கைகளும் மங்கிமடிந்துவிடும். ஆகையால் நுகர்வு மிகவும் அடிப்படையான பொருளியல் தத்துவம். ஆனால் இப்படி நுகர்வதில்

மனிதன் ஒரே சீராக நுகர்வதில்லை. பொருளின் பல அலகுகளை ஒருவன் நுகரும்போது, அப்பொருளை நுகர்வதற்கான வேட்கை அவனுள் குறைந்து விடுவதனால், ஒரு பொருள் மேலும் மேலும் கிடைக்கும் போது அப்பொருளின் இறுதி அலகின் பயன்பாடு குறைந்து கொண்டே வரும். இவ்விதியைக் குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாடு விதி (Law of Diminishing Marginal Utility) என்பர். அதைப்போன்று மனிதன் தன்னுடைய வருவாயைப் பல பொருள்களில் பயன்படுத்தும்போது தனக்குக் கிடைக்கும் மொத்தப் பயன்பாட்டு உச்சஅளவில் கிடைக்க வேண்டும் என்று முயற்சி செய்வான். எனவே பல பண்டங்களின் இறுதி நிலைச் சமன்பாடுகளும் ஒன்றோடொன்று சமமாக இருக்கும் வண்ணம் பணத்தைப் பகிர்ந்து பயன்படுத்துவான். இதைச் சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி (Law of Equi-Marginal Utility) என்பர்.

நுகர்வின் அளவைக் குறைத்துச் சேமிப்பை மிகுதியாக்குவதன் மூலம் மூலதனத்தைத் திரட்டி முதலீடு செய்து நாட்டை முன்னேறச் செய்ய வேண்டும் என்பது ஒரு கொள்கை. ஆனால் இக்கருத்து இக்காலத்தில் முற்றிலும் நிறைவான ஒன்று என ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நுகர்வை மிகுதிப்படுத்தி அதன் மூலம் தேவையைப் பெருக்கி அதன் வழியாக உற்பத்தியையும் வருவாயையும் வேலை வாயப்பையும் பெருக்கிப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறலாம் என்ற கருத்து இக்காலத்தில் வலுப்பெற்று வருகிறது.

பொருளாக்கம்: படைத்தல் என்பது உற்பத்தி அல்லது ஆக்கம். பொருள் ஆக்கத்திற்கு (Production) இன்றியமையாத காரணிகள், நிலம் (Land), உழைப்பு (Labour), மூலதனம் (Capital) இம்மூன்றையும் இணைக்கும் அமைப்பு (Organisation) என நான்கு ஆகும். இயற்கைச் செல்வம் உலகிலேயே பரந்துகிடக்கும் நிலங்கள், தட்பவெப்பக் கால நிலைகள், ஆறுகள், மலைகள் போன்றவை. இவை பொருளியலில் நிலம் என்று சொல்லப்படுகிறது. மனிதனின் உடலால் அல்லது சித்தனையால் பயன் கருதி மேற்கொள்ளப்படும் முயற்சி உழைப்பு எனப்படும். செல்வத்தை ஆக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் செல்வத்தின் பகுதி மூலதனமாகும். இதை மனிதன், தான் ஈட்டும் வருவாயிலிருந்து சேமித்து அளித்தல் வேண்டும். இம்மூன்று காரணிகளையும் ஒருங்கிணைத்துப் பயனுள்ளதாகச் செய்யும் காரணி, அமைப்பு எனப்படுகின்றது.

ஆக்கக் காரணிகளை உற்பத்தியில் ஈடுபடுத்தும் போது அவைகளால் ஏற்படும் பயன்கள் எப்பொழுதும் சமநிலையில் இருப்பதில்லை. சில காலங்களில் மிகையான ஆக்கக் காரணிகளைப் பயன்படுத்தும் போது விளைவுகள் மிகும் விகிதத்தில் இருக்கும். இதுவே வளர்ந்து செல் விளைவு விதியாகும். இதனைப் பெருமளவுக்கு எந்திரத் தொழில்களில் காணலாம். சில ஆக்க முறைகளின் காரணிகள் குறைந்த விகித விளைவை அளிக்கும். எடுத்துக்காட்டாக வேளாண்மையில் காரணிகளை ஓர் அளவுக்கு மேல் மிகச்செய்தால் இறுதிநிலை விளைவு குறைந்து செல்லும். இதுவே குறைந்து செல் விளைவுவிதி ஆகும்.

அங்காடி: தனக்குத் தேவையான பொருள்களை மனிதன் அங்காடியில் பெறுகின்றான். அங்காடி (Market) என்பது ஒரு பரப்பு அங்கு வாங்குவோரும் விற்பவரும் நேரடியாக அல்லது மறைமுகமாகத் தொடர்பு கொள்கின்றனர். பண்டங்களுக்கும் பணிகளுக்கும் அங்காடியில் அவற்றின் தேவை, அளிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அவற்றின் விலை வரையறுக்கப்படுகிறது. அளிப்போர் மிகுதியான விலையில் விற்கவும் வாங்குவோர் குறைவான விலையில் வாங்கவும் போட்டியிடுவர். இவ்வாறு போட்டியிடுவதன் முடிவில் அளிப்போரும் நுகர்வோரும் சமநிலை அடைவர். இந்தச் சமநிலையில் அளிக்கும் பொருளின் அளவும் நுகரும் பொருளின் அளவும் சமநிலை அடையும். இந்தச் சமநிலையில் கூறப்படும் விலையே அந்தப் பொருள்களுக்கு அங்காடி விலையாகும். ஒரு கத்திரிக்கோலில் இரண்டு தகடுகளும் ஒரே சமயத்தில் இயங்கிக் குறிப்பிட்டதொரு வேலையை முடிப்பது போல, அளிப்பும் தேவையும் ஒரே சமயத்தில் இயங்குவதால் அங்காடிச் சமநிலை உருவாகிறது; பண்டம் அல்லது பணியின் விலை வரையறுக்கப்படுகிறது.

பகிர்வு: ஓராண்டில் ஒருநாட்டில் உற்பத்தியான பொருள்களின் மொத்தத்தை நாட்டின் வருவாய் (National Income) என்று கொள்ளலாம். இந்த உற்பத்தியான பொருளை ஆக்கக் காரணிகளுக்குப் பகிர்ந்தளித்தல் (Distribution) முறையாகும். அப்படிப் பகிர்ந்து அளிக்கும்போது ஒவ்வொரு காரணிக்கும் வரும் பங்கு, வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்று பகிர்ந்து அளிக்கப்படுகிறது. இயற்கைச் செல்வங்கள் வாரத்தையும், உழைப்புக்கூலியையும், மூலதனம் வட்டியையும், அமைப்பு ஆதாயத்தையும் பெறுகின்றன. அதாவது நிலக்கிழார்கள் வாரம்என்ற வடிவத்திலும் உழைப்பாளர்கள் கூலி என்ற வடிவத்திலும் மூலதனக்காரர்கள் வட்டி என்ற வடிவத்திலும் அமைப்பாளர்கள் ஆதாயம் என்ற வடிவத்திலும் தங்கள் பங்கினைப் பெறுகின்றனர்.

பணம்: பொருள்களை ஒருவர் கையிலிருந்து மற்றொருவர் கைக்கு மாற்றுவதற்கு, அதாவது பண்டமாற்றத்திற்கு இன்றியமையாத கருவி பணம் (Money). பணமென்பது பொருள்களின் மதிப்பை அள

விடும் கருவியாகும். பணத்திற்குச் சிறப்பான இலக்கணம் அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் செலாவணியாயிருக்க வேண்டும். ஆகையால் அப்பணத்தை அரசாங்கம் முறையாக அச்சிட்டு வெளியிடுவது இன்றியமையாததாகும். வங்கிகளும் பணத்தைப் பெருக்குகின்றன. அப்பணம் வங்கிகளில் கடன் விரிவாக்கம் மூலம் உண்டாகிறது. இவ்வாறு உண்டாகும் பணம் பண்டமாற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது. பொருள்கள் ஓர் அளவாகவும் பணம் மிகுதியாகவும் இருக்குமேயானால் பொருள்களின் விலை மிகுதியாகும். பொருள்கள் ஓர் அளவாகவும் பண அளிப்புக் குறைவாகவும் இருக்குமேயானால் விலை குறையும். ஆகையால் பொருள்களின் விலை பண அளிப்பின் தன்மையோடு நேர்முக விகிதமாக இணைந்து இருப்பதைக் காணலாம். இந்தத் தன்மையைவிளக்கும் தத்துவம் பண அளவுக் கோட்பாடு எனப்படுகிறது.

ஒரு நாட்டின் பணம், அந்நாட்டின் எல்லைக்குள் சுழலும் செலாவணியாகும். ஆனால் பன்னாட்டு வாணிகத்தில் அயற் செலாவணியைப் பயன் படுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. அந்த அயற் செலாவணி நிலையை வரையறை செய்வதற்கு மிகவும் சிறப்பானது பண்ட ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகும்.

பொது நிதி: தனியார் வருவாயைப் பெற்றுச் செலவு செய்து உச்ச அளவு நன்மையைப் பெற முயல்வதைப் போன்று,அரசுகளும் பல வழிகளில் பல கோட்பாடுகளின் அடிப்படையில் பணத்தைப் பெற்றுப் பணத்தைச் செலவிட்டு உச்ச அளவு சமுதாய நன்மையைப் பெற முயல்கின்றன. அரசின் செலவைப் பொதுச் செலவு என்றும் அரசின் வரவைப் பொது வரவு என்றும் கூறுவர். அரசின் வரவு செலவுகளை முன்னதாக அறிவிக்கும் நிதி அறிக்கையைப்பட்செட்' (Budget) என்றும் வரவு செலவு அறிக்கை என்றும் குறிப்பிடுவதுண்டு. வரவுக்கு மிஞ்சிய செலவு இருக்கும்போது பொதுக் கடன்களை எழுப்பி நிதி நிலையைச் சமன்செய்ய அரசுகள் முயல்கின்றன. தனி மனிதன் பொது வரவிற்குத் தன்னாலியன்ற பங்கைச் செலுத்துகிறான்; பொதுச் செலவினால் நன்மைகளைப் பெறுகிறான். பொருளாதார வாழ்வில், அரசு நடவடிக்கைகள் வளர்ந்து செல்லும் இக்காலத்தில் பொதுநிதி மிகுந்த சிறப்பைப் பெற்று வருகிறது.

வங்கியல்: பணத்தைப் பொது மக்களிடமிருந்து குறைந்த விலைக்கு (வட்டிக்கு) வாங்கிப் பணத்தேவையுள்ளவர்களுக்கு மிகுந்த வட்டிக்குக் கொடுத்து அதன் மூலம் வணிக வங்கிகள் ஆதாயம் பெறுகின்றன. நாட்டின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, பண அளிப்பைத் தேவைக்கேற்ப மாற்றி, அரசுகளுக்கும் வங்கிகளுக்கும் வங்கியாகத் தலைமை நிலையில் விளங்குவது மையவங்கி. கூட்டுறவின் பயன்களை முழுமையாகப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன கூட்டுறவு வங்கிகள்; அயற் செலாவணிப் பணியில் சிறப்பாகப் பணியாற்றுவன அயற் செலாவணி வங்கிகள்; ஊரகங்களின் முன்னேற்றத்தைக் கருத்தில்கொண்டு செயல்படுபவை ஊரக வங்கிகள். இவை போன்ற பல நிதி அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. தனி மனிதன் பல நிலைகளில் இந் நிறுவனங்களோடு தொடர்புடையவனாக இருக்கிறான்.

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்: நாட்டின் பொருளாதாரத்திற்கு அடிப்படையாகத் திகழ்வன இவை. இத்துறையில் ஏற்படும் முன்னேற்றத்திற்கேற்ப நாடுகளின் பொருளாதார முன்னேற்றமும் அமையும்.

பொருளாதார முன்னேற்றம்: தனியாள் உண்மை வருவாய் (Per Capita Income) வளர்ந்து செல்வதைப் பொருளாதார முன்னேற்றம் எனலாம். இன்றைய அரசுகள் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதில் மிகுந்த அக்கரையும் ஆர்வமும் காட்டி வருகின்றன. நாட்டு வருவாயை மிகைப்படுத்தி, மக்கள் பெருக்க வேகத்தைக் கட்டுப்படுத்தி, கல்வி நிலையை மேம்படுத்தி, வேலையின்மையைத் தவிர்த்து, விலைகளை நிலைப்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எல்லா நாடுகளும் அயராது பாடுபட்டுக் கொண்டே இருக்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதில் அரசுகளின் பங்கு நாள்தோறும் பெருகிக் கொண்டே வருகிறது.

இப் பொருளியல் அடிப்படைகள் பொருளியலில் பதிந்திருப்பதைத் காணலாம். எளிய மனிதன் உலகில் வாழ்க்கை நடத்த வேண்டுமேயானால் இவ்வடிப்படைப் பொருளியல் ஆற்றல்களுக்கு அவன் கட்டுப்பட்டே ஆக வேண்டும். அ.இரா.

**அடிப்படை மனவெழுச்சிகள்:** குழந்தைப் பருவத்திலிருந்தே ஒருவரிடம் காணப்படும் மனவெழுச்சிகள் அடிப்படை மனவெழுச்சிகள் எனப்படும். மனவெழுச்சிகளைப் பற்றிய பல சோதனைகளை நடத்திய வாட்சன் (Watson) என்பார் சினம், அச்சம், அன்பு என்று மூன்று மெய்ப்பாடுகளை அடிப்படை மனவெழுச்சிகள் என்று குறிப்பிடுகிறார். மற்ற உளவியலறிஞர்கள் நான்கினுக்கு மேற்பட்ட அடிப்படை மனவெழுச்சிகளைக் குறிப்பிடுகின்றனர். இளங்குழவியின் மனவெழுச்சி பண்படாத அடிப்படைக்கிளர்ச்சியாக இருக்கும் என்று பிரிட்சசு (Bridges) என்னும் உளவியலறிஞர் கருதுகிறார். குழந்தை வளர வளர இக்கிளர்ச்சி மகிழ்ச்சி, துயரம் என்னும் இரு பெருங் கிளைகளாகப் பிரிகிறது. துயரமானது பின்னர் அச்

சம், சினம் என்னும் இரு பெருங் கிளைகளாகப் பிரிகிறது. இந்த அடிப்படை மனவெழுச்சிகளே ஒன்றுடன் ஒன்று பலவாறாக இணைந்து பொறாமை போன்ற மனவெழுச்சிகளின் ஆதாரமாக அமைகிறது.

குழந்தையின் உடல், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சியுடன், அதன் மனவெழுச்சிகளும் இணைந்து வளர்ச்சி பெறுகின்றன. குழந்தை சமூகத் தொடர்புகளை அடையத் தொடங்கிய பின் தீவிரமான மனவெழுச்சிகளை வெளிப்படுத்தல் குறைந்து வருகிறது. சமூக ஏற்புடைமைக்குத் தக்கவாறு மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தக் குழந்தை கற்றுக் கொள்கிறது. கற்றல், பார்த்துச் செய்தல் ஆகிய இரு வழிகளிலும் குழந்தையின் மனவெழுச்சிகள் முதிர்ச்சியடைகின்றன. மனவெழுச்சி முதிர்ச்சியும் மனவெழுச்சி வெளிப்பாடும் தனி மனிதன் சார்ந்துள்ள பண்பாட்டிற்குரிய சமூகத்திற்குத் தக்கவாறு வேறுபாடுகள் அடைகின்றன.

**அச்சம்**: இது ஓர் எதிர்மறை மனவெழுச்சியாகும். விலங்கினங்களிலும் இது காணப்படுகின்றது. தனி மனிதன் தன்னால் வெற்றி கொள்ள முடியாத ஆபத்தான ஒரு நிலை ஏற்படும்போது அச்சம் ஏற்படுகிறது. ஒரு குறிப்பிட்ட நிலை உண்மையிலேயே அச்சத்தை உண்டாக்குவதாக இல்லா விட்டாலும் கூட அது ஆபத்தானது என்று தனிமனிதன் எண்ணினாலும் அவனிடம் அச்சம் தோன்றும். தீவிரமான அச்சம் ஏற்படின், அது திகில், கவலை, இனம்புரியாத பதட்டம் போன்ற பல்வேறு மெய்ப்பாடுகளாக வெளியிடப்படுகிறது. நிகழக்கூடிய ஆபத்துகளும் கூட குழந்தையிடம் அச்சத்தைத் தோற்றுவிக்கின்றன. பெற்றோர்களின் நடத்தையைப் பார்த்தும் குழந்தை அச்சங்களைக் கற்றுக்கொள்கிறது. குழந்தைகளைக் கட்டுப்படுத்தவும் கீழ்ப்படிய வைக்கவும் பெற்றோர்கள் அச்சமூட்டுவதை ஒருமுறையாகக் கையாளுகின்றனர். குழந்தைகள் தாம் பெற்றோரால் கைவிடப்படுவதாகவும் வேற்று மனிதர்களிடம் விட்டுவிடப் படுவதாகவும் எண்ணி அச்சம் கொள்கின்றனர். இந்த அச்சங்களும் அச்சுறுத்தல்களும் அவர்களுடைய ஆளுமையைப் பள்ளி வாழ்க்கையிலும் பிற்கால வாழ்க்கையிலும் பாதிக்கின்றன. குழந்தைகளின் பாதுகாப்புணர்வின்மையே அவர்களின் அச்சத்தைப் பெரிதும் குறைக்க முடியும்.

**சினம்**:ஒருவனுடைய செயல்கள் தடுக்கப்பட்டால் அவன் சினங்கொள்வது இயற்கை. குழந்தை தன் இயக்கங்களைப் பிறர் கட்டுப்படுத்தும் பொழுதோ தான் விரும்பும் பொருளை அடையமுடியாமற் போகும் பொழுதோ சினம் கொள்கிறது. சமூகத் தொடர்பில் ஏற்படும் தடங்கல்கள், குறுக்கீடுகள் இவைகளால் குழந்தைகள் சினமுறுகின்றன. சினம் கொள்வது புறக்காரணிகளை (External factors) மட்டுமன்றித் தனி மனிதனின் மனப்பாங்கினையும் (Temperament) பொறுத்தது. ஒருவனைச் சினம் கொள்ளச் செய்யும் ஒரு தூண்டல் சில சமயங்களில் மற்றொருவனைச் சிறிதும் பாதிப்பதில்லை. குழந்தைகளிடம் காணப்படும் சினம் திசைமாறி வெளிப்படையான எதிர்ப்பாக உருவெடுத்து நேர்மாறானவற்றைச் செய்தல், எதிர்மறை நிலை (Negativism), புறங்கூறல், வம்பு பேசுதல் போன்ற நடத்தைகளின் மூலம் வெளிப்படுவதுண்டு.

**அன்பு**: அச்சம், சினம்ஆகிய மனவெழுச்சிகளைப் போலன்றி, அன்பு என்னும் மனவெழுச்சி ஆக்கம் தருகிற மனவெழுச்சியாகும். குழந்தைக்கு ஒரு பொருளின் மீது மிகுதியான அன்பு ஏற்படும்போது பிடிவாதமாக நடந்து கொள்கிறது. தான் அன்பு செலுத்துகின்ற பெற்றோர்களோ மற்றவர்களோ தன்னைவிட்டுப் பிரிந்து செல்வதைக் குழந்தை சகிப்பதில்லை. தான் விரும்புகின்ற நாய், பூனை போன்ற விலங்குகளையும் விளையாட்டுப் பொருள்களையும் தூங்கும் போது கூடத் தம் பக்கத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று குழந்தைகள் விரும்புகின்றன. இளமைப் பருவம் நெருங்கும் பொழுது இந் நிலை மாறத் தொடங்குகிறது. இளையோர், தாம் விரும்பும் பொருளினின்றும் மனிதர்களிடமிருந்தும் பிரிந்திருக்கக் கற்றுக் கொள்கின்றனர். ஆனால், இப் பருவத்தில் அன்பு நிலையானதாக மாறத் தொடங்குகிறது. தம் நெருங்கிய நண்பர்களையோ தாம் காதலித்தவர்களையோ விட்டுப்பிரிய நேரிடும் பொழுது நெடுநாள் வரை பிரிவுத் துயரத்தில் ஆழ்ந்துவிடுகின்றனர். இளமைப் பருவத்தினர் எதிர்பாலினரிடம் உயர்மதிப்புடன் நடந்து கொள்ளவும் அவர்கள் அன்பைப் பெறவும் விரும்புகின்றனர். ஆனால், அவர்கள் எத்தகைய செயல்களின் மூலம் தங்கள் மதிப்பை நிலைநிறுத்தி, எதிர்ப் பாலினரின் அன்பைப் பெறமுடியும் என்பது தெரியாமல் சில சமயங்களில் சிக்கலான நடத்தைகளில் ஈடுபடுகின்றனர். காண்க: மனவெழுச்சி; மனவெழுச்சிக் கோட்பாடுகள்.

துணை நூல்கள் :

**Arnold**, M.B., "Emotion and Personality", 2 Vols. Columbia University Press, Newyork, 1960.

**Plutchik**, R.,"The Emotions: Facts, Theories and a New Model", Random House, Newyork, 1962.

***அடிமை நிலை***: மனித இனத்தில் ஒரு சிலரை மற்றவர் தம் உடைமைப் பொருளாக வைத்திருக்கும் நிலை அடிமைநிலை (slavery) எனப்படும்.

பழங்காலத்தில் போரில் தோல்வியுற்றுச் சிறைப் படுத்தப்பட்டோர் யாவரும் கொல்லப்பட்டனர். காலம் செல்லச் செல்ல இம்முறை மாறிப் போரில் தோற்றவர் அடிமைகளாக்கப்பட்டனர். போரில் தோல்வி பெற்ற நாட்டைச் சேர்ந்த பெண்கள் மட்டும் பிடிக்கப்பட்டுக் கொல்லப்படாமல் வென்றவர்களால் அடிமைகள் ஆக்கப்பட்டு வந்தனர். இம்முறை மாறித் தோல்வியுற்ற படையினர் யாவரும் அடிமைகள் ஆக்கப்படும் நிலைமை பின்னர்த் தோன்றியது. இத்தகைய அடிமை முறை உலகெங்கிலும் பரவலாக இருந்து வந்தது. இதற்குச் சான்றாகப் பண்டைய சுமேரிய மொழியில் அடிமைப் பெண் என்பதைக் குறிக்கும் சொல் ''வெளிநாட்டிலிருந்து வந்த பெண்'' என்னும் பொருள் படுவதாக இருந்ததைக் குறிப்பிடலாம். ஆண் அடிமைக்குப் பண்டைய சுமேரிய மொழியில் இத்தகைய சொல் இல்லை.

அடிமை முறை பண்டைய பாபிலோனிய நாட்டில் நிலவி வந்ததாகவும் பண்டைய உரோமானிய நாட்டில் அடிமைகளின் எண்ணிக்கை உரோமானியக் குடிமக்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருந்ததாகவும் வரலாறு கூறுகிறது.

கி.பி. 2–ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட உரோமானியச் சட்டம் அடிமை முறை என்னும் சொல்லுக்கு ''இயற்கைக்கு மாறாக ஒரு மனிதன் சட்டப்படி மற்றவனுடைய சொத்தாக மாறிவிடும் முறை'' ஆகும் என்று இலக்கணம் கூறுகிறது. பண்டைய உரோமானியப் பேரரசை வலுப்படுத்துவதற்கும் உரோமானிய நாட்டின் ஆக்கப் பணிகளுக்கும் ஆதாரமாக அடிமைகளே இருந்தனர். உரோமானியப் பேரரசின் மாபெரும் தோட்டங்களிலும் பண்ணைகளிலும் அடிமைகள் வேலை செய்தனர். கி.மு. 73 முதல் கி.மு. 71 வரை இசுபார்ட்டகசு (spartacus) என்னும் உரோமானிய அடிமை, உரோமானியப் பேரரசை எதிர்த்துப் பல்லாயிரக் கணக்கான அடிமைகளை ஒன்று திரட்டிப் போராடித் தோல்வியுற்றான். தோல்வியுற்ற ஆயிரக்கணக்கான அடிமைகள் கொதிக்கும் எண்ணெயில் எரிக்கப்பட்டனர். எஞ்சியிருந்த அடிமைகள் சிலுவையில் அறையப்பட்டனர். அகசுடசு சீசர் (Augustus Caesar) என்னும் உரோமானியத் தலைவர் அடிமைகளின் நிலையை ஓரளவு சீர்திருத்தினார். அடிமை முறையின் இழிவு, அநீதி இவைகளை மக்கள் உணர்ந்திருந்த போதிலும் பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டு உலகெங்கிலும் அடிமை வாணிகம் தொடர்ந்து வந்தது. உரோமானிய நாடுகளில் ''கிளேடியேட்டர்கள்'' (Gladiator) எனப்படும் அடிமை மல்லர்களைக் குடிமக்களின் மன மகிழ்ச்சிக்காக ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டு மடிய வைத்து உரோமானிய மக்கள் அதனைக் கண்டு களித்தனர். உரோமானியக் குடிமக்களில் எவரேனும் இறந்துவிட்டால் அவனுடைய அடிமைகள் கசையடியினால் கொல்லப்பட்டனர். அடிமைகள் இரும்புச் சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தனர். அடிமைப் பெண்கள் அவர்களுடைய தலைவர்களுடைய வீட்டு வேலைகளைச் செய்ததோடன்றித் தங்கள் உடைமையாளரின் காம இச்சைக்கும் ஆளாக்கப்பட்டனர். உரோமானியச் சட்டம் அடிமைகளைத் தனி மனிதர்களாக மதிக்கவில்லை. அடிமைகளின் சொந்தக்காரர்கள் அடிமைகளைச் சித்திரவதை செய்யலாம், அடித்துத் துன்புறுத்தலாம் என்ற சட்ட அனுமதி இருந்தது.

ஓமர் (Homer) என்னும் கிரேக்கக் கவிஞரின் கவிதைகளில் அடிமைகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. பண்டைய கிரேக்கக் குடியரசுகளில் அடிமைகள் தொழில் வல்லுநர்களாகவும் கைவினைஞர்களாகவும் திகழ்ந்தனர். அவர்களுக்கு அரசியலிலோ சமூக வாழ்விலோ எவ்வித உரிமையும் இல்லை. இவர்களை ஒதுக்கிவிட்டு மற்றவர்கள் நடத்தும் அரசிற்குத்தான் மக்களாட்சி என்று அவர்கள் பெயரிட்டனர். அடிமைகள் குடிமக்களாகக் கருதப்படவில்லை. இசுபார்ட்டாவில் இலெட்டுகள் என்னும் அடிமைகள் மிக இழிவான நிலையில் நடத்தப்பட்டு வந்தனர். அரிசுட்டாட்டில் என்னும் கிரேக்க அறிஞர் அடிமை முறையை எதிர்த்தார்.

கி.மு. 12–ஆம் நூற்றாண்டில் எழுதத்தொடங்கி கி.மு. 2–ஆம் நூற்றாண்டில் முடிக்கப் பெற்ற மானவ தரும சாத்திரம் என்ற நூல் பின்வரும் ஆறுவிதமான பணியாட்கள் அடிமைகள் என்று குறிப்பிடுகிறது.

1. போர்க்காலத்தில் சிறைப்பிடிக்கப்பட்டவர்கள்.
2. உணவு, உடை, இல்லம் இவற்றிற்காக மற்றவர்களிடம் பணியாட்களாக இருப்பவர்கள்.
3. மற்றவர்களால் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு வாங்கப்பட்டவர்கள்.
4. அடிமைப் பெண்களின் குழந்தைகள்.
5. தோட்டங்களை வாங்கும் பொழுது அவற்றுடன் வாங்கப்பட்டவர்கள்.
6. தாம் வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாத காரணத்தினால் அடிமை ஆக்கப்பட்டவர்கள்.

மேற் குறிப்பிட்ட ஆறுவிதமான அடிமைகளை எவரும் தங்கள் உடைமையாளரின் விருப்பப்படி கொடுமைகளுக்கு ஆளாக்கவில்லை என்பது முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது. ஏனெனில் மானவ தரும சாத்திரம் அடிமைகள் எவ்வாறு நடத்தப்படவேண்டும்

என்பதைத் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறியுள்ளது. இன, சாதி அடிப்படையில் சமுதாயத்தில் மக்கள் பாகுபாடு செய்யப்பட்டனர். இத்தகைய பல்வேறு சாதிகளுக்குத் தனிப்பட்ட ஒழுங்குமுறைகளும், சட்ட திட்டங்களும் இருந்தன. சூதாட்டத்தில் தோற்றவர்கள் வென்றவர்களுக்கு அடிமையாகும் பழக்கம் பண்டைய இந்தியாவில் இருந்து வந்தது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் சூதாட்டத்தில் தோல்வியுற்றவுடன் ஆட்டத்தில் வென்றவர்களால் அடிமைகளாக்கப்பட்டு நாடு கடத்தப்பட்டு, 12ஆண்டுகள் காட்டில் வாழ்ந்தனர். தாம் வாங்கிய கடனைத் திருப்பித் தர இயலாமல் தாமே கடன் கொடுத்தவருக்கு அடிமையாகும் பழக்கமும் இருந்துவந்தது. இதே காரணத்தை முன்னிட்டுச் சிலர் தம் நெருங்கிய உறவினரை விற்கும் பழக்கமும் இருந்து வந்தது.

பண்டைய சீன, சப்பானிய நாடுகளிலும் அடிமை முறை பழக்கத்தில் இருந்து வந்ததாக வரலாறு கூறுகிறது. அந்நாடுகளில் அடிமைகள் விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தனர். பௌத்த மதம் சீனத்தில் பரவத் தொடங்கிய காலத்திற்குப் பின் சகிப்புத் தன்மை, இரக்கம் போன்ற கருத்துகள் பரவலாயின. அடிமை முறை இயற்கைக்கு விரோதமானது என்பதை அந்நாட்டு மக்கள் நாளடைவில் உணர்ந்தனர். அடிமை முறை சீன நாட்டில் ஒழிந்தபின்னரும், பல நூற்றாண்டுகள் வரையில் சீனப் பெண்கள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கு அடிமைகள் என்ற பெயர் இல்லாத போதிலும் நடைமுறை வாழ்க்கையில் சீனப் பெண்கள் பல நூற்றாண்டுகளாக அடிமைகளாகவே நடத்தப்பட்டு வந்தனர். இரண்டாம் உலகப் போருக்குப்பின் நிகழ்ந்த சீனப் பொதுவுடைமைப் புரட்சிக்குப் பின், இந்நிலை மாறத் தொடங்கியது.

இசுலாமிய நாடுகளில் அடிமைகள் ஆண்மை அழிக்கப்பட்டு அரண்மனையைச் சேர்ந்த அந்தப்புரத்தில் பணியாட்களாகவும், பல்வேறு பொறுப்புகளை வகிப்பவர்களாகவும் இருந்துவந்தனர். வேறுசில இசுலாமிய நாடுகளில் அடிமைகள் தம் உடைமையாளர்களால் உயர்ந்த நிலைமைக்கும் கொண்டுவரப்பட்டனர். கி.பி.1250 முதல் 1517–ஆம் ஆண்டு வரையில் எகிப்து நாட்டை ஓர் அடிமை மரபு (Slave Dynasty) அரசாட்சி செய்தது. இதைப் போன்று இந்தியாவிலும் முகம்மதியர்கள் ஆட்சிக் காலத்தில் சில காலம் அடிமை மரபினர் அரசாண்டனர்.

அடிமைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பல நூற்றாண்டுகள் வரையில் மறையவில்லை. ஆட்டோமன் துருக்கியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் இடையே சிலுவைப் போர் தொடர்ந்து நடந்து வந்தது. சிலுவைப் போர்களில் ஆட்டோமன் துருக்கியப் படையினர் தோற்கடிக்கப்பட்டுக் கிறித்தவர்களால் சிறைபிடிக்கப்பட்டனர். இப்போர்க் கைதிகள் முதலாம் இரிச்சர்டு (Richard I) என்னும் இங்கிலாந்து அரசரால் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டனர். துருக்கியக் கைதிகளுள் சிலர், கிறித்தவ நாடுகளில் அடிமைகளாக்கப்பட்டனர்.

அடிமை முறைக்கு ஓரளவு இணையான பண்ணையாள் முறை (Serfdom) ஐரோப்பாவில் பல நூற்றாண்டுகள் நிலவி வந்தது. பண்ணையாட்கள் அடிமைகளைப்போல விற்கப்படவும் வாங்கப்படவும் இல்லை. ஆனால் அவர்களது வாழ்க்கைமுறை, வேலைப்பாங்கு இவை யாவும் அடிமை நிலையை ஓரளவு ஒத்து இருந்தன. தங்கள் நிலமானியப் பிரபுக்கள் (Feudal Lords) எத்தகைய கொடுமைகளையும், அநீதிகளையும் அவர்களுக்கு இழைத்தாலும் அவர்களால் அவற்றை எதிர்க்கவோ அரசனிடம் சென்று முறையிடவோ முடியாது. இது மட்டுமின்றி நிலமானியப் பிரபுக்கள் அழைக்கும் பொழுதெல்லாம் மறுக்காமல் வந்து, அவர்களுக்காகப் போரிட்டு மடியவேண்டும். அவர்களுக்கு இழைக்கப்பட்ட சமூக அநீதிகள் கணக்கில் அடங்கா. நிலமானியத் திட்டத்தில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருந்த பண்ணையாட்கள் (Serf) நிலமானியப் பிரபுக்களின் கொடுமைகளைத் தாங்காமல் காடுகளில் ஓடி ஒளிந்து வாழ முயன்றனர். இவ்வாறு ஓடியவர்கள் பிடிக்கப்பட்டுக் கல்லால் அடித்துக் கொல்லப்பட்டனர்.

நிலமானியத் திட்டம் கி.பி.14-ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பாவெங்கிலும் அழிந்து வரத் தொடங்கியது. இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, இசுபெயின் (Spain) போன்ற நாடுகளில் கொள்ளை நோய் ஒன்று (Black Death) பரவிப் பல்லாயிரக்கணக்கான நிலமானியப் பண்ணையாட்களை அழித்துவிட்டது. ஆயினும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நிலமானிய முறை 19–ஆம் நூற்றாண்டு வரையில் நீடித்து இருந்தது. போலந்து, பொகீமியா, அங்கேரி, உருசியா போன்ற நாடுகளில் வேளாண்மை செய்து வந்தவர்கள் அடிமைத்தளையிலிருந்து கி.பி.19–ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில்தான் விடுபட்டனர். உருசியாவில் நிலமானியத் திட்டம் மறைந்தபிறகும் சார் அரசர்களின் ஆட்சிக் காலத்தில், வேளாண் குடிமக்கள் அடிமைகளை ஒத்த நிலைமையிலே வாழ்ந்து வந்தனர். 1917–ஆம் ஆண்டு அக்டோபர் புரட்சிக்குப் பின் இந்த நிலைமை மாறியது.

போர்த்துகீசிய மாலுமிகள் மூலம்கி.பி 15–ஆம்நூற்றாண்டின் இறுதியில் அடிமை வாணிகம் ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் மிக விரைவாகப் பரவியது. ஆப்பிரிக்காவில் நைசீரியாவிலும், கினியா நாட்டுக் கடற்கரைகளிலும் போர்த்துகீசியர்கள், ஆப்பிரிக்

கர்களை விலங்குகளைப் போன்று வேட்டையாடிப் பிடித்து, இரும்புச் சங்கிலியால் பிணைத்துத் தங்கள் கப்பல்களில் ஏற்றி, ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவில் இருந்த இசுபானியர்களின் (Spaniards) தோட்டங்களிலும் வேலை செய்வதற்காக அடிமைகளாக விற்றுவந்தனர். வட அமெரிக்காவில் பருத்தித் தோட்டங்களில் ஆயிரக்கணக்கான ஆப்பிரிக்கர்கள் வேலை செய்வதற்கு அடிமைகளாக விற்கப்பட்டனர். கி.பி. 1754-ஆம் ஆண்டு அமெரிக்காவில் 2,63,000 ஆப்பிரிக்க அடிமைகள் இருந்தனர். இவர்கள் பருத்தித் தோட்டங்களைத் தவிர வெர்சீனிய மாநிலத்தில் புகையிலைத் தோட்டங்களிலும் அமெரிக்கர்களின் வீடுகளிலும் வேலை செய்தனர். வட அமெரிக்காவில் நீக்கிரோக்கள் அடிமைகளாக ஏலத்தில் விற்கப்பட்டும் வாங்கப்பட்டும் வந்தனர். அடிமைகளை வாங்குவதும் அவர்களைத் தம் உடைமைப் பொருள்களாக வைத்திருப்பதும் வட அமெரிக்காவின் தெற்கு மாநிலங்களைச் சேர்ந்த தோட்டச் சொந்தக்காரர்களுக்கு ஒரு சமூக மதிப்பு நிலையாகக் கருதப்பட்டு வந்தது. தெற்கு மாநிலங்களில் ஒருவர் எத்தனை அடிமைகளைத் தம் சொந்தப் பொருள்களாக வைத்திருந்தார் என்பதே அவரது சமூக மதிப்பு நிலைக்கு ஓர் அளவுகோலாக இருந்தது. வடமாநிலங்கள் அடிமை நிலையை எதிர்த்தன. ஆபிரகாம் இலிங்கன் குடியரசுத் தலைவர் பதவிக்கு வருவதற்கு முன், அடிமைகளை விடுதலை செய்தல் என்னும் சிக்கல், உள்நாட்டுப் போருக்கு ஒரு முக்கியமான காரணமாக இருந்தது. கி.பி. 1861-ஆம் ஆண்டு அமெரிக்க உள்நாட்டுப் போர் தொடங்கியபோது, அமெரிக்காவில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை 44,41,830 ஆகும். நீக்கிரோ அடிமைகள் அமெரிக்காவின் துறைமுகங்களிலும் சுரங்கங்களிலும் காடுகளிலும் வேலை செய்து வந்தனர். அடிமைகள் ஏலத்தில் விற்கப்படுவதும் வாங்கப்படுவதும் மிகச் சாதாரணமான நிகழ்ச்சியாக இருந்தது. கி.பி. 1863-ஆம் ஆண்டு உள்நாட்டுப் போரின் முடிவில் ஆபிரகாம் இலிங்கனின் பெரு முயற்சியால் அமெரிக்க நீக்கிரோக்கள் அடிமைத் தளையிலிருந்து விடுபட்டனர். இதனைப் பொறுக்காத அமெரிக்கத் தெற்கு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவனால் ஆபிரகாம் இலிங்கன் கி.பி. 1865-ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்க நீக்கிரோக்கள் அடிமைத்தளையிலிருந்து விடுபட்ட போதிலும், தங்களுக்குக் கிடைத்த உரிமையை முழுமையாக அனுபவிக்க முடியாமல் பல ஆண்டுகள் அவதியுற்றனர். அமெரிக்க நீக்கிரோக்கள் கல்வியறிவு அற்றவர்களாக இருந்ததும், அவர்களை அமெரிக்க வெள்ளையர்கள் தங்களுக்குச் சமமானவர்களாக ஏற்றுக்கொள்ளாமல் இருந்ததும், இந்த நிலைமைக்கு முக்கியமான காரணங்களாகும். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் குவேக்கர் (Quaker) என்னும் பிரிவினர், அடிமை விடுதலைக்காகப் பாடுபட்டனர். விடுதலை பெற்ற அடிமைகள் வட அமெரிக்காவில் ஒற்றுமையின்றி, வாழ வழியின்றிச் சமுதாயத்தின் அடித்தளத்திலேயே இருந்துவந்தனர். இவர்களை ஒற்றுமைப்படுத்தி இவர்களின் நலனுக்காகப் பாடுபட்டவர் பலர். இவர்களுள் மிக முக்கியமானவர் மார்ட்டின் உலூதர் கிங் (Martin Luther King) என்னும் அமெரிக்க நீக்கிரோ ஆவார். இவர் அடிமைகளின் ஒற்றுமைக்காக மகாத்மா காந்தியின் இன்முறை வழியில் போராட்டம் நடத்தினார். இவர் வெள்ளை அமெரிக்கர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஐரோப்பிய நாடுகள் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அடிமை வாணிகத்தை எதிர்த்து மும்முரமாகப் போரிட்டன. முதலாம் உலகப்போரின் இறுதியில் அமைக்கப்பட்ட உலக நாடுகள் குழுவும் (League of Nations) உறுப்பாக இருந்த அதன் உலகத் தொழிலாளர்களின் அமைப்பும் அடிமை வியாபாரத்தை உலகெங்கிலும் இருந்து ஒழித்துக்கட்ட உறுதி கொண்டன. 1924-ஆம் ஆண்டு இக்குழு ஒரு தற்காலிக அடிமை விசாரணைக் குழுவை அமைத்தது. இக்குழு உலகமெங்கிலும் இருந்த அடிமைகளின் நிலைகள் பற்றி ஆராய்ந்து அவர்கள் விடுதலைக்கான பரிந்துரைகளைச் செய்தது. உலகத் தொழிலாளர்கள் அமைப்பு, அடிமை முறையை எதிர்த்துப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வந்தது.

மேலை நாடுகளில் அடிமை வாணிகமும் அடிமை முறையும் ஒழிந்த பின்னரும் செருமானிய நாசிகள் (German Nazis) ஆட்சியில் அடிமைமுறை மறுபடியும் தலைதூக்கத் தொடங்கியது. 1939-ஆம் ஆண்டு 20,000 யூதர்களைச் (Jews) செருமானிய நாசி அரசு பிணைக் கைதிகளாக வைத்திருந்தது. அவர்களில் பல்லாயிரக்கணக்கான யூதக் கைதிகள் நாசிப் படையினரின் கட்டாயப் பணிக்கிடங்குகளில் (Nazi Labour Camps) அடிமைகளாக்கப் பட்டனர். இரண்டாம் உலகப்போர் தொடங்கியவுடன் அதன் ஆரம்ப ஆண்டுகளில், கோடிக்கணக்கான ஐரோப்பிய மக்கள் அடிமைகளாக்கப்பட்டு நாசிப் படைகளுக்காக உழைத்தனர். இவர்களை நாசிப்படையினர் பலவிதமான-கணக்கில் அடங்காத-எழுத்தில் வடிக்க இயலாத-கொடுமைகளுக்கு ஆளாக்கிக் கொன்றுகுவித்தனர். நாசிப்படையினர் கட்டாயப் பணிக்கிடங்குகளில் இருந்த போர்க் கைதிகளுக்கு இழைத்த கொடுமைகள் இரண்டாம் உலகப் போரின் இறுதியில் செருமனியின் வீழ்ச்சிக்குப் பிறகு உலக மக்களுக்கு வெளியாயின. புகழ் பெற்ற நூரம்பர்க்கு விசாரணையின் (Nuremberg Trials) மூலம் இவற்றை உலக மக்கள்

அறிந்தனர். இரண்டாம் உலகப்போரின் இறுதியில் மனித சமுதாயம், மனிதனின் அடிப்படை உரிமை களைப்பற்றி உணர்ந்து விழித்துக் கொண்டது. ஐ.நா. -வின் பொதுச் சபை (General Assembly) அதன் மூன்றாம் கூட்டத்தில் (1948) அனைத்துலக மனித உரிமை அறிக்கையை ஏற்றுக்கொண்டது. இந்த அறிக் கையின்படி "அடிமையாகவோ அடிமை நிலையிலோ எவரும் வைக்கப்படக் கூடாது, அடிமைநிலையும் அடிமை வாணிகமும் உலகெங்கிலும் அனுமதிக்கப் படக்கூடாது".

கி.பி. 1843-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் அடிமை முறை சட்டப்படி ஒழிக்கப்பட்டு விட்டது. இதற்குப் பின் முகமதியர்களிடையேயும் அடிமை நிலை நீங்கிவிட்டது. இந்தியக் குற்றச் சட்டத்தின் 370, 371-ஆம் பிரிவுகளின்படி அடிமைகளை வைத் திருப்பதும், அடிமை வாணிகம் செய்வதும் தண்ட னைக்கு உரிய குற்றங்களாகும்.

**கொத்தடிமை முறை:** அடிமை முறை மறைந்த பின் அதனை ஒத்த கொத்தடிமை முறை இந்தியா விலும், வேறு பல நாடுகளிலும் இருந்து வந்தது. நிலத்தில் பாடுபடும் பண்ணை ஆட்கள் வறுமை காரணமாகத் தம் நிலச் சொந்தக்காரரிடம் கடன் வாங்கும்பொழுது அவர் பணியாளரிடமிருந்து கொத் தடிமை ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்வார். இந்த ஒப்பந்தத்தின்படி பணியாள், நிலவுரிமையாளர் வீட்டி லும் நிலத்திலும் ஊதியமின்றி உழைப்பர். ஒரு கொத்தடிமை (Bonded labourer) இறந்துவிட்டால், அவன் சந்ததியினர் உடைமையாளனுக்கு அடிமைகள் போல் உழைப்பர். அவர்கள் வீட்டுப் பெண்களை உடைமையாளர் கற்பழிப்பது, மிகச் சாதாரண நிகழ்ச் சியாக இருந்தது. கொத்தடிமைகள் கல்வி அறி வின்மை, வறுமை ஆகிய காரணங்களினால் தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்க்க இயலாமல் அவதியுற்றனர். இந்திய அரசு இருபது அம்சத் திட்டத் தின் மூலம் கொத்தடிமைகளுக்கு விடுதலை வழங்கி யது. கொத்தடிமைகளாகப் பணியாட்களை வைத்தி ருப்பதும் ஒழிக்கப்பட்டு வருகிறது. ஆனால், கொத்த டிமை முறை பல்வேறு வடிவங்களில் தலைதூக்குகி றது. ஒப்பந்தத் தொழில் (Contract Labour) என்னும் முறையில் பல முதலாளிகள் இன்னும் பணியாட் களைக் கொத்தடிமை நிலையில் வைத்து வேலை வாங்குகின்றனர். அதிக ஊதியம் கொடுப்பதாக வாக் குறுதியளித்துப் பணியாட்களை, அவர்கள் குடும்பத் துடன் வேற்றூர்களுக்குஅழைத்துச் சென்று, கொத்த டிமை நிலையில் மிகக் குறைந்த ஊதியம் கொடுத்து நீண்ட நேரம் வேலைவாங்கி வதைக்கின்றனர். இந்தச் சமுதாயக் கொடுமைக்கு எதிராகப் பல சமூக நிறுவ னங்களும் இயக்கங்களும் செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசும் இந்தக் கொத்தடிமை முறையையும் ஒப்பந்தப் பணியின் கொடுமைகளையும் ஒழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. எஸ்.கோ.

துணை நூல்கள்:

**Filler Louis**, "The Crusade Against Slavery", Harper, New York, 1960.

**Fonlay, M.I.**, "Between Slavery Freedom", Comparative Studies Slavery & History, 1964.

**அடிமைநிலைச் சட்டங்கள்:** மக்கள் சமு தாய வரலாற்றில் அரசன், அடிமை என்று தனி யாகக் குறிப்பிடப்பட்ட காலம் ஒன்று இருந்தது. மெசபடோமிய, கிரேக்க, உரோம் நாகரிகத்தில் அடிமைப் பாகுபாடு உச்ச நிலையில் இருந்தது. தமிழ கத்திலும் அடிமைகள் இருந்தனர்.

இரண்டாம் இராசாதி ராசனின் காலம் முதன் மூன்றாம் இராசராசன் காலம் வரை (கி.பி.11-12-ஆம் நூற்றாண்டுகள்) தமிழகத்தில் அடிமைகள் இருந்தனர் என்பதனைக் கல்வெட்டுகளினால் அறிய லாம்.

அடிமைகளில் ஆண்களும் பெண்களும் உண்டு. குறுநில மன்னர்களும் மன்னனின் அன்புக்கும் ஆதர வுக்கும் உரியவர்களும் அடிமைகளை வைத்திருந்தார் கள். இவர்கள் கோயில் பணிகளைச் செய்துவந்தார் கள். பஞ்சம், வறட்சி காரணமாகத் தங்களையே வழி வழி அடிமையாக விற்றுக் கொண்டார்கள். இவர்கள் கோயில்களுக்கோ தனிப்பட்டவர்களுக்கோ உடை மைகளாகவே இருந்தார்கள். அடிமைகளை விற்பதைக் குறிக்கும் ஆவணங்கள் 'ஆள்விலைப் பிரமாண இசை வுச்சீட்டு' என்று வழங்கப்பட்டன.

அடிமையாவதில் சில வகைகள் இருந்தன. தன் னைத் தானே விற்றுக் கொள்வது ஒன்று; அடுத்து, தன்னையும் தன் மனைவி மக்களையும் சேர்த்து விற்றுக்கொள்வது; அடுத்து, பின்வரும் சந்ததிகளை யும் சேர்த்து அடிமையாக்குவதாக எழுதிக்கொடுத்து விடுவது.

தம் அடிமைகளைப் பெருமக்களுக்கோ கோயி லுக்கோ மடத்திற்கோ விற்றுவிடுதல், தாம் பிறரிடம் விலைக்கு வாங்கி மீண்டும் விற்பனை செய்தல், தான மளித்தல் போன்ற பலவகைகளில் அடிமைகளின் பரி மாற்றம் நடைபெற்றிருக்கிறது.

மக்களை அடிமைகளாக வைத்து வேலை வாங்கி வந்தமையை உணர்த்தும் கல்வெட்டுகள் சில உண்டு. பெரும்பாலோர் கோயில்களுக்கே தம்மை விற்றுக் கொண்டனர்; பிறரால் விற்கப்பட்டனர் சிலர். மாத ரிருவர் தம்மையும் தம் உற்றார் உறவினரையும் ஒரு கோயிலுக்கு விற்ற செய்தி ஒரு கல்வெட்டில் காணப் படுகிறது. ஒருவன் 13 காசுகளுக்கு அறுவரைக் கோயி

லுக்கு விற்றான். திருவிடந்தைப் பெருமான் கோயிலுக்கு 12 குடும்பங்களைச் சேர்ந்த மீன் பிடிப்பவர் தங்களை அடிமைகளாக அமைத்துக் கொண்டார்கள். அரசன் முத்திரையிடப்பட்ட அடிமைப் பெண்கள் அரண்மனையில் அலுவல் பார்த்தார்கள். 700 காசுகளுக்கு மாதர் நால்வர் திருவாலங்காட்டுக் கோவிலுக்கு விற்கப்பட்டனர். சிற்றரசர்களிடம் அடிமைகள் இருந்தனர். அவர்கள் மணந்துகொண்ட மனைவிமார் அடிமைகள் சிலரைச் சீதனமாகக் கணவன் வீட்டிற்குக் கொண்டு வருதல் அக்கால வழக்கமாக இருந்தது. அங்ஙனம் கொண்டுவரப்பெற்ற அடிமைகளைத் தம் மனைவியர் இசைவுபெற்று வைராதரா யர் என்ற பெருமகன் ஒரு மடத்திற்கு விற்றுவிட்டான். உடனே அவ்வடிமைகளுக்குச் சூலப் பொறி பொறிக்கப்பட்டது. அவர்கள் தம் கடமைகளிலிருந்து தவறின் தண்டிக்கப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

வேளாளர் மூவர், மாதர் இருவரையும் அவர்தம் பெண்களையும் திருவக்கரைக் கோயிலுக்கு விற்றுவிட்டனர். தஞ்சை மாவட்டத்திலுள்ள கீழையூர்க் கோயிலுக்கும் மடத்திற்கும் விடப்பட்ட அடிமைகள் பலராவர். இவ்வாறே ஒரு பெருமகன், அடிமைகள் பலரை விலைக்கு வாங்கித் திருவாலங்காட்டு மடம் ஒன்றுக்குத் தானமாகக் கொடுத்தான். கி.பி. 1201-ஆம் ஆண்டில் ஒரு வேளாளன் தன்னையும் தன் பெண்கள் இருவரையும் வறுமையின் காரணமாகத் திருப்பாம்புரம் கோயிலுக்கு விற்றுவிட்டான். அடிமைகள் வழிவழியாகக் குறிப்பிட்ட சிலரிடம் இருந்து வந்தனர் என்பதையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. ஒரு கல் தச்சன், தன்னையும் தன் மனைவியையும் தன் புதல்வர் நால்வரையும் ஒரு கோயிலுக்கு விற்றுவிட்டான்.

பெரிய புராணத்தில் தடுத்தாட்கொண்ட புராணப் பகுதியிலும், பாரதத்திலும் அடிமைகள் பற்றிய சில அகச் சான்றுகளைக் காணலாம்.

**போர் அடிமைகள்:** போரில் வெற்றியடைந்த மன்னர் அந்நாட்டுப் பொன்னையும் பொருளையும் கவர்ந்து வருவது போல், அந்நாட்டுப் படைகளையும் மக்களையும் கவர்ந்து வருதல் மரபு. மூன்று பியூனிக் போர்களிலும் கார்த்தேசு நகர மக்கள் அனைவரும் அடிமைகளாக விற்கப்பட்டனர் என்பது கிரேக்க வரலாறு கூறும் செய்தி. கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலும் கொத்தடிமை முறை இருந்து வந்திருக்கிறது. கி.பி. 1834-இல் திருவாங்கூரில் ஓர் அடிமைச் சந்தை இருந்ததை ஒரு பாதிரியார் குறிப்பிட்டுள்ளார்.

அடிமையை ஓர் ஆளாகக் கருதலாமா என்பது உரோமானியச் சட்டத்தில் தெளிவாக இல்லாத ஒரு செய்தியாகும். அடிமையை ஆளாக மதியாமல் பொருளாகவே மதித்து வந்தார்கள். அடிமை வெறும் பொருளென்று என்பதைக் காட்டும் கூறுகளும் அச்சட்டத்தில் காணப்பட்டன. அவற்றுள் சில வருமாறு: அடிமை, குற்றவியல் குற்றங்களுக்குப் பொறுப்பாளியாவது போலவே தீங்கியல் (Torts) வழக்குகளுக்கும் பொறுப்பாளியாகலாம்; முதலாளிக்காகச் சொத்துத் தேடலாம். அவன் சமயம் தொடர்பான சில சலுகைகள் உடையவனாகலாம். இதனால் அடிமையைப் பொருள் என்று கருதுவதினும், ஆள் என்று கருதுவதே பொருத்தமாகும்.

அடிமைக்கு உரிமைகளும் கிடையா கடமைகளும் கிடையா. முதலாளியின் விருப்பத்தினைப் பொறுத்தவை அவனுடைய வாழ்வும் உயிரும்; அவன் தேடும் பொருள் அனைத்தும் முதலாளிக்கே உரியதாகும். அடிமைக்கு எதிராக எவ்விதத் தீர்ப்பும் செல்லுபடியாகாது. அடிமையானவுடன் அவனுடைய கடன்கள் நீங்கிவிடும். அடிமைநிலை நீங்கிய பின்னரும் அக்கடன் புத்துயிர் பெறுவதில்லை.

இத்தகைய அடிமைநிலை சிறிது சிறிதாக நாளடைவில் மாறுதல் அடைந்து வந்தது. இறுதியில் முதலாளி அடிமையைத் திருத்துவதற்காக மட்டுமே அடிக்கலாம் என்றும், அடிமையைக் கொல்வது குற்றமாகும் என்றும் ஏற்பட்டது. முதலாளி கொடுக்கும் சொத்தைப் பாதுகாத்து, அதனைக் கொண்டு வாணிகம் செய்வதால் ஏற்படும் கடன்களை முதலாளியைக் கொடுக்கும்படி செய்யவும் அடிமைக்கு அதிகாரம் ஏற்படுவதாயிற்று.

அடிமைகள் விலை மதிப்புள்ள பொருள்களாக மதிக்கப்பட்டார்கள். கடன் கொடுத்தவர்கள் கடனுக்காக அடிமைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பினார்கள்.

முகமதியர்களிடையே அடிமை நிலை தோன்றுவதற்கு வேறு காரணங்கள் உண்டு. முகமதிய அடிமைகள், உரோமானிய அடிமைகளை விட மிகுதியான உரிமையும் பாதுகாப்பும் பெற்றிருந்ததாகத் தெரிகிறது.

ஐ.நா.வும் உலகத் தொழில் நிறுவனமும் இரண்டாம் உலகப் போரின் இறுதியில் மனித சமுதாயம், மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பற்றி உணர்ந்து விழித்துக் கொண்டன. ஐ.நாவின் பொதுச் சபை அதன் மூன்றாவது கட்டத்தில் (1948) மனித உரிமை அறிக்கையை அங்கீகரித்தது. இந்த அறிக்கையின் 4-ஆம் பிரிவு "அடிமையாகவோ அடிமை நிலையிலோ எவரும் வைக்கப்படக் கூடாது, அடிமை நிலையும் அடிமை வாணிகமும் உலகெங்கிலும் அனுமதிக்கப் படக்கூடாது" என்று கூறுகிறது.

**அடியன்** தென்னிந்தியாவில் வாழும் பழங்குடிகளுள் ஒன்று. இக்குழு மக்கள் பெரும்பாலும் கேரள மாநிலத்திலும் கருநாடக மாநிலத்திலும் காணப்படுகின்றனர். இவர்களின் தாய்மொழி கன்னடத்திலிருந்து தோன்றிய ஒரு கிளைமொழி. எனினும், அனைவரும் மலையாளமும் அறிந்துள்ளனர். உயர்குலப் பிரிவினர் ஒருவருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகப் பெண் ஒருத்திக்கும் உதித்த வழித்தோன்றல்களே அடியன் இனத்தவர் என்ற பழங்கதை ஒன்று, இவ்வினத்தவரிடையே வழங்கி வருகிறது.

அடியன் பழங்குடி மக்கள் தாங்கள் வசிக்கும் பகுதியில் உள்ள 'தம்புரான்' மக்களின் விளைநிலங்களில் அடிமையாக வேலை செய்து வருகின்றனர். இம்மக்கள் ஏனைய தீண்டத்தகாத சமூகங்களைக் காட்டிலும் மிக்க கீழ்நிலையில் நடத்தப்படுகின்றனர். இவர்களின் பண்ணை முதலாளிகள், இவர்களிடமிருந்து தீட்டைத் தவிர்ப்பதற்காகக் குறைந்தது ஆறு அடி தூரமாவது தள்ளியிருக்கவேண்டும் எனக் கருதுகின்றனர். எனினும் உயர்சாதியினரின் வாழ்வுச் சடங்குகளில் அடியன் இனத்தவரின் பணி இன்றியமையாததாக இருக்கிறது. அடியன் பெண்மணி உயர்சாதியினரின் மாதவிடாய்க்குப் பிறகு பல தூய்மைப் படுத்தும் சடங்குகளை மேற்கொள்ளுகிறாள். இவள், தான் சார்ந்துள்ள வீட்டின் பெண் மகப்பேறு அடைந்திருக்கும்போது தீட்டுக்கழியும் நாள்வரை தாயையும் சேயையும் நன்முறையில் பேணிக்காத்தல் வேண்டும். இக்காலங்களில் இவளைத் தொடுவதனால் தீட்டேதும் பட்டதாகக் கருதப்படுவதில்லை. இவர்கள் செய்துவந்த அடிமை ஊழியத்திற்கு ஒரு நுசர் (பரிசுப்பணம்) தங்கள் பண்ணையாளர்களிடமிருந்து பெறுவர். ஆண்டிற்கு ஒருமுறை இவர்கள் பெறும் இப்பணம் 'அடிமைப்பணம்' எனக் கூறப்படுகிறது. அடியன் மக்களிடையே வழி வழி வந்த 'பெருமான்' எனப்படும் தலைவன் உளன். பெரும்பாலும், அடியன்கள் வாழுமிடங்கள் மலையுச்சியிலோ மருத நிலப்பரப்பிலோ இருக்கும். இவர்களுக்குச் சொத்துரிமை ஏதுமில்லை. எனவே, தங்கள் சந்ததியினரிடையே சொத்தைப் பிரிப்பது தொடர்பான பழக்க வழக்கச் சட்ட முறைகளும் இவர்களிடையே இல்லை. இக்காலத்தில் இவர்கள் மிகக் குறைவான கூலியைப் பெறும் ஊழியர்களாக உழுதொழில் பணிகளுக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்கள் இந்துக்களின் கடவுளர்களையும் வழி படுகின்றனர். இந்தப் பழங்குடிகளுக்கெனக் குறிப்பிடத்தக்க கோயில்கள் எவையும் கிடையா. இவர்கள், முன்னோர் வழிப்பாட்டை மேற்கொள்கின்றனர். முன்னோர்களின் சாவுச் சடங்குகளை இவர்களின் தலைவன் முன்னின்று நடத்துகிறான். ஆ.செ.

**அடியார்க்கு நல்லார்** சிலப்பதிகாரத்துக்கு உரை எழுதிய சான்றோருள் ஒருவராவார். உரைச் சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் இவர் வரலாற்றினை ஓரளவு உய்த்துணரத் துணைசெய்கின்றன. இவர் நிரம்பை என்னும் ஊரினர் என்பதையும், இவருக்கு 'நிரம்பையர் காவலன்' என்று மற்றொரு பெயரும் உண்டு என்பதையும், இவரை ஆதரித்து உரை செய்வித்தவன் பொப்பண்ண காங்கேயர்கோன் என்பதையும் அப்பாடல்களால் அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வுரையாசிரியர் 'அடியார்க்கு நல்லான்' என்றே அப்பாடல்களில் குறிக்கப்பட்டுள்ளார். 'நிரம்பையர் காவலன்' என்னும் பெயர் ஊரால் வந்தது என்றும், நிரம்பை என்னும் ஊர் கொங்கு மண்டலத்தில் விசய மங்கலத்தின் அண்மையில் உள்ளதென்றும் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் கூறுவார்.

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பாடலில் சிவ பெருமானை 'அடியார்க்கு நல்லார்' என்னும் பெயரால் அழைப்பர். அப்பெயரைத் தாங்கியுள்ள இவ்வுரையாசிரியர் சைவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது ஒரு சாரார் கருத்தாகும். உரையாசிரியர் சிவபெருமானை இறைவன் என்றே சுட்டுவதையும், 'துறவறம்' 'யோகம்' ஆகிய சொற்களின் உரைகளில் சைவ சமயக் கருத்துகளை விரித்துரைப்பதையும், 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்னும் அடிக்கு, 'என்றும் பிறவாத யாக்கையையுடைய இறைவன்' என்று பொருள் கூறுவதையும் இக்கொள்கையர் தம் கருத்துக்குச் சான்றாகக் கொள்வர்.

அடியார்க்கு நல்லார் சமண சமயத்தைச் சார்ந்தவர் என்ற கருத்தும் உண்டு. அவர் குறிப்பிடும் மூன்று அதிசயம், மூன்று ஆகமம், எண்வகைக் கன்மங்கள், எண் குணங்கள், பஞ்ச நமசுகாரம் என்று சமணர்களால் வழங்கப்படும் பஞ்சமந்திரம், பஞ்சபரமேட்டிகள் பற்றிய கருத்துகள் யாவும் அச்சமயத்தைச் சார்ந்தவை என்றும், அவற்றை உரையாசிரியர் விரிவாகவே சொல்லிச் செல்கின்றார் என்றும் இக்கருத்துடையார் கூறுவர். மேலும், 'ஆதியில் தோற்றத்து அறிவனை வணங்கி' (11:4) என்னும் அடி உரையில் அருகதேவன் பலபடப் பாராட்டப் படுகின்றார் என்றும், 'பெருமகன்' என்னும் சொல்லுக்கு 'அருகதேவன்' என்று பொருள் கூறி, 'திருமொழியை' 'அவன் அருளிச் செய்த ஆகமம்' எனக் குறித்து 'இறைவனூலிற் கூறிய விரதம் தப்பாமை' என்பதால், அருகதேவனை இறைவன் என்றே கூறுகின்றார் என்றும் சுட்டித் தம் கருத்தை வலியுறுத்துவர். மேலும் 'இதனாற் சொல்லியது' நமது தரிசனத்துக் கடியப்பட்டவாற்றால் தேனுண்டலைப் பரிகரிக்க வென்றதாம்' என்றும், 'இதனாற் சொல்லியது,

உயிர்க்கொலை புகாமற் பரிகரிக்க வென்பதாம்' என்றும் உரையாசிரியர் சமண சமயக் கொள்கை களை உணர்ந்து எழுதுவதையும், மேற்கோள் காட் டச் சமண சமய நூல்களையே மிகுதியும் கையாளு கின்றார் என்பதையும் இக்கொள்கையர் தமக்குச் சான்றாக எடுத்துரைப்பர்.

அடியார்க்கு நல்லார் உரையில் இளம்பூரணரும் அரும்பதவுரையாசிரியரும் இடம் பெறுகின்றனர். இவ்விருவர்தம் காலமும் கி.பி. 11-ஆம் நூற்றாண் டிற்கும் பிற்பட்டது எனக் கருதப்படுகின்றது. மேலும், இவர் உரையில் கலிங்கத்துப் பரணிப் பாடல்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டுள்ளன. இப்பரணிகொண்ட் குலோத்துங்கன் காலம் கி.பி. 1070—1120 என வரலாற்றாசிரியர்கள் கருதுவதால் இவர் காலம் கி.பி. 1120-க்கும் பிற்பட்டது என்று கொள்ள இடமுண்டு. 'இவருடைய வருணம், சமயம், காலம் ஆகிய இவற்றுள் ஒன்றும் புலப்படவில்லை; ஆனாலும் நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவன வற்றுள் சில இவருடைய கொள்கையாக இருத்தல் பற்றி, இவரது காலம் நச்சினார்க்கினியருடைய காலத்துக்கும் முந்தியதாக இருக்கலாமென்று ஊகிக் கப்படுகின்றது' என்பர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர். இவரது காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு எனக் கொள்வாரும் உண்டு.

சிலப்பதிகாரத்துக்கு உரையெழுதிய சான்றோர் பலர் என்பதை அரும்பதவுரையாலும், அடியார்க்கு நல்லார் உரையாலும் அறிந்துகொள்ள முடிகின்றது. ''நாவொடு நவிலாது நவைநீ ருகுத்து' (5:137): நவை: குற்றம், குற்றத்துக்காகக் கண்ணீருகுக்கையின் நவை நீரென்றார்; நவநீரென்று பாடமோதிப் புதிய நீரென்று உரைப்பாருமுளர்'', ஆற்றுவீயரங்கம் (10: 156)-ஆற்றை மறைக்கும் அரங்கம்; ஆவது குறை; அது சீரங்கம்; ஆற்றுவி என்பாருமுளர்''. இவை போன்றன பிறவும் அரும்பதவுரையுள் இடம்பெற் றுள்ளன. ''ஆடகமாம் (26:62) – திருவனந்தபுரம்; இரவிபுரம் என்பாருமுளர்''. ''மங்கல வணி (2:63)– மாங்கலியமென்பாருமுளர்'', 'தோல் (5:81) -பரிசை; கருங்கடகமென்பாருமுளர்; அடைகரை (10:90) – கடற்கரையென்பாருமுளர்'' இன்ன பிறவும் அடி யார்க்கு நல்லார் உரையுள் இடம்பெற்றுள்ளன. இவை யாவும், சிலப்பதிகாரத்துக்குப் பண்டை உரை யாசிரியர் பலர் என்னும் கூற்றை மெய்ப்பிக்கின்றன.

அடியார்க்கு நல்லார் உரைதானும் சிலப்பதி காரத்துக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. கானல் வரி நீங்கலாக முதல் 19 காதைகளுக்கு மட்டுமே (ஊர் சூழ்வரி வரை) உரை கிடைத்துள்ளது. அரங் கேற்று காதையுள் இரண்டு இடங்களில் 'கானல் வரியிற் கூறுதும்' எனக் கூறுவதாலும், வேனிற் காதையுள் 'அது முன்னர் ஆணி என்பதனுட் கூறி னாம்' எனக் கூறுவதாலும், கானல்வரிக்கும் அடி யார்க்கு நல்லார் உரையெழுதியமை புலனாகும்.' 'அழற்படு காதைக் கண்ணே விரித்துக் கூறுதும்' 'கட்டுரை காதையுள் விரியக் கூறுவாம்' என வரும் இவர்தம் உரைப் பகுதிகள், இவ்விரு காதைகட்கும் இவர் உரை எழுத எண்ணியிருந்தமையைப் புலப் படுத்துகின்றன. இடைப்பட்ட வழக்குரை காதை, வஞ்சினமாலை பற்றிய குறிப்புகள் நூலுள் இடம் பெறவில்லை. இவற்றை நோக்க அடியார்க்கு நல் லார் மதுரைக் காண்டம் வரை உரை எழுதியிருக்க லாம் எனத் தோன்றுகிறது. வஞ்சிக் காண்டம் பற் றிய குறிப்புகள் எவையும் இவர்தம் உரையில் காணப் படவில்லை.

சிலப்பதிகாரத்தின் சில காதைகளின் கீழே தனி வெண்பாக்கள் சில இடம்பெற்றுள்ளன. இவற்றை இளங்கோவடிகள் எழுதினாரென்றும், வேறு சிலர் எழுதிச் சேர்த்தனர் என்றும் கருத்து வேறுபாடுகள் உண்டு. சில வெண்பாக்களுக்கு அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லார் உரையும் காணப்படுவதால் அவை, இவ்வாசிரியர்க்கு முன்னர்த் தோன்றியனவா தல் வேண்டும்.

அவ்வெண்பாக்களுள், 'ஊடினீரெல்லாம்', 'காதலி கண்ட', 'நண்ணு மிருவினையும்' என்று தொடங்கு வனவற்றுக்கு அடியார்க்கு நல்லார் உரை காணப்படு கின்றது. அவற்றுள்ளும், 'நண்ணு மிருவினையும்' என்னும் வெண்பாவுக்கு உரையாசிரியர், 'உலகத்தீர்! நல்வினையே செய்யுமின்களென்று அடிகள் கூறினா ரென்க' என உரை எழுதுவதால், இவ்வெண்பா இளங்கோவடிகளால் எழுதப்பட்டது என்ற அவர்தம் கருத்து வெளிப்படுகிறது. ஊர்சூழ்வரியில் 'வம்பப் பெருந்தெய்வம்' (19:24) என்னும் தொடருக்கு, பெருந்தெய்வம் — தெய்வத்தினும் பெரியது; கற்பு டைத் தெய்வம்; என்னை? கற்புக் கடம் பூண்ட இத் தெய்வமல்லது, பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமால்' எனவும், 'தெய்வம் தொழாஅள் கொழு நற்றொழுவாளைத் தெய்வந் தொழுந் தகைமை திண்ணமால்' எனவும் கூறினமையின் என எழுதுவர். எனவே, கட்டுரை காதையின் இறுதியில் இடம்பெறும் 'தெய்வம் தொழாஅள்' எனத் தொடங்கும் வெண்பா வும் அடிகளால் இயற்றப்பட்டது என்றே உரையா சிரியர் கருதுவதாகத் தெரிகிறது.

அடியார்க்கு நல்லார் உரை பல சிறப்புகளைக் கொண்டது. உரைப்பாயிரம், பதிகத்தின் உரை இவற் றில் பொதுவாகக் காப்பியம் பற்றி ஆய்ந்து கூறும் கருத்துகள் சிறப்பிடம் பெறுகின்றன. ஐந்திணைக்கு முரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகிய இவற்றுள் ஒவ்வொன்றின் வகை பலவற்றுக்கும்

சிலம்பினின்றே காட்டுகள் தந்து விளக்கியிருப்பது அவர்தம் புலமைச் செழுமைக்கோர் எடுத்துக்காட்டாம். ஒவ்வொரு காதையின் ஒவ்வொரு பகுதிக்கும் பொழிப்புரை தந்துள்ளார்; அதன்கீழ் அருஞ்சொற்பொருள், விளக்கம், நயம், மேற்கோள், இலக்கணம் ஆகியவற்றைத் தந்துள்ளார். தேவையான இடங்களில் அணி வகைகளையும், மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்தியுள்ளார். சொற்களை வருவித்துப் பொருள் கூறியும் வினை முடிவுகளை முடித்துக் காட்டியும், ஒவ்வொரு காதையின் முடிவிலும் இஃது இன்ன செய்யுள் என ஆய்ந்து கூறியும் உள்ளார்.

மற்றை உரையாசிரியர்கள் போலன்றித் தாம் எடுத்துக் காட்டும் மேற்கோள்கள் இன்னின்ன நூல்களில் உள்ளனவென்று பெரும்பாலும் புலப்படுத்தியுள்ளார். "இக்கதையைப் பதிற்றுப் பத்தினுள் அஞ்சாம்பத்தின் முடிவின்கண், வடவருட்கும் என்னுங் கவியுள்ளும் (பதிகம் 1-2: உரை), கலியுள் முல்லைத் திணையின்கண் ஆறாம் பாட்டினுள் 'கழுவொடு சுடுபடை . ... வியன்புலத்தார்' எனக் கருவி கூறினமையானும்" (17.21: உரை) என்று மேற்கோள்களை மிகத் தெளிவாகச் சுட்டுவதும், இவர்தம் உரைப் போக்காகும். இவரது இத்தனித் தன்மையே பெருங்கதையை ஆராய்ச்சி செய்வதற்கு ஏதுவாக இருந்ததென்று டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். நூற் பெயரைச் சுட்டும் போக்கொடு 'என்றார் வள்ளுவனாரும்' (1:36-9 உரை) என்று ஓரோவழி ஆசிரியர் பெயரைச் சுட்டுவதுமுண்டு. பலவிடங்களில் இலக்கியவடிகளை உரை நடைப்படுத்தியுள்ளார். சிலம்படிகளை மிகுதியாகக் கையாளுவது, நூலுள் இவர் பெற்றிருந்த சிறந்த பயிற்சியினைக் காட்டுகிறது.

சங்க இலக்கியங்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள், மணிமேகலை, இடைக்காலக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பஞ்ச தந்திரம் போன்ற நூல்களினின்று மேற்கோள்களை எடுத்தாள்வது இவர்தம் பரந்துபட்ட இலக்கியப் புலமையை எடுத்துக்காட்டும். சொற்களுக்குத் தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள் காட்டி இலக்கணஞ் சுட்டுவதும், தேவைப்படும் இடங்களில் புறப்பொருள் வெண்பாமாலை நூற்பாக்களையும் பாடல்களையும் எடுத்தாள்வதும் இவர்தம் சிறந்த இலக்கணப் புலமைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. தொல்காப்பியத்தையே சிலப்பதிகாரத்துக்கு இயற்றமிழ் இலக்கணமாக இவர் கொண்டுள்ளார். இசை நாடகப் பகுதிகட்கு இசை நுணுக்கம், இந்திரகாளியம், பஞ்சமரபு, பரதசேனாபதியம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் என்னும் ஐந்து நூல்களையும் இவர் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளார். தொல்காப்பியர், 'ஆசிரியர்' என்றும், இளம்பூரணர் அடிகள் 'உரையாசிரியர்' என்றும் இவரால் குறிக்கப்படுகின்றனர். பல மேற்கோள் பாடல்கள் எந்நூலினின்று எடுக்கப்பட்டனவென்று அறிதற்கில்லை.

சொற்களுக்கும் சொற்றொடர்கட்கும் பல பொருள் கூறுதலும், சிறந்த பொருள் கூறி விளக்கம் தருதலும் இவர்தம் உரைப் போக்காகும். சொற்பொருள் விளக்கமேயன்றி நயவுரையும், உவமை மூலம் விளக்கமும் தருதலுண்டு. 'அமைந்த நற்கலங்கள்' (16:20) என்னும் தொடருக்கு, 'அமைந்தகலமென்றாள், தாங்கள் ஆளுங்கலமன்றி மேன்மக்கள் ஆளும் மடைக்கலங்களை' என நயவுரை பகர்ந்துள்ளார். 'அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்' (14:11) என்னும் சொற்றொடர் உரையில், 'இனித் துறவறமாவது நாகம் தோலுரித்தாற்போல அகப்பற்றும் புறப்பற்றுமற்று இந்திரிய வசமறுத்து முற்றத்துறத்தல்' எனக் கூறியுள்ளார். நாகம் புறத்தே தோலுரிக்கும்போது அகத்தே தான் கொண்டுள்ள நஞ்சினைக் காலுதல் போல், துறப்போர் புறப்பற்றோடு அகப்பற்றையும் துறத்தலே துறவு என உவமை வாயிலாக நயம்படப் பொருள் விளக்கம் தந்துள்ளார். 'முன்நீர்' (17:31) என்னும் சொல்லுக்கு இவர் கூறும் உரைப் பகுதி, தாஅனாட்டித் தனாது நிறுத்தும் இவர்தம் கோட்பாட்டை எடுத்துக் கூறும்.

'இடைப்பாட்டுக் கூத்தியும்' (14:156) என்னும் தொடருக்கு, "இடைப்பாட்டாவது ஔகம்; இவர் கூட்டக் கூத்தியர்; இவையெல்லாம் முன்னம் அரங்கேற்று காதை முதலியவற்றுள் விரித்துக் கூறினவாதலின், ஈண்டும் விரித்துக் கூறுதல், 'கூறியது கூறல்' என்னுங் குற்றமாமெனின், ஒக்கும்; ஆண்டுக் கூறிய அடிகளே ஈண்டும் கூறுதலானும், இக்காதை ஒன்றனையுமே கற்றுணர்வார்க்குப் புலப்பட வேண்டுதலானும் ஈண்டும் விரித்துரைக்கப்பட்டன" என எழுதும் உரை, ஒவ்வொரு பகுதியையும் தனித்தனியே படிப்போருக்கு அவ்வப்பகுதி ஆங்காங்குள்ள உரையினாலேயே புலப்பட வேண்டுமென்பது உரையாசிரியரின் கருத்து என்பதைப் புலப்படுத்துகிறது. மேலும் அகலாதும், கற்பார் மனநிலை சலியாதும் உரையமைதல் வேண்டும் என்பதும் ஆசிரியரின் உட்கோளாகும்.

மூலத்தில் எவ்விடத்தேனும் திசைச் சொற்கள், பழமொழிகளின் கருத்துகள் இடம்பெறுமாயின் அவற்றைத் தனித்தனியே எடுத்துக்காட்டி இன்ன சொல் இன்ன நாட்டு வழக்கென்றும், இன்னது இன்ன பழமொழியென்றும் இவர் புலப்படுத்துவார். பனி கொண்டு – பனியென்பதொரு நோயுமுண்டு – அது குடநாட்டு வழக்கு; தெழித்தல் – பிரித்தலுமாம் – குடநாட்டார் வழக்கு; சிறுமியர்–சிறுபெண்கள்–குட

நாட்டு வழக்கு; புதைத்தல்-போர்த்தல்- மலைநாட்டு வழக்கு; பணிமொழி- பணித்தல் - அருளிச் செய்தல்- திசைச்சொல் என்று வட்டார வழக்குச் சொற்களைக் காட்டியுள்ளார். 'திருவாணைக்கு மேலாய ஆணை இல்லை', 'விளையாட்டுப் பூசல் வினையாயிற்று', 'கெட்டால் மதிதோன்றும்' என்று பழமொழிகளைச் சுட்டியுள்ளார். குற்றமில்லாதவன்மேற் குற்றத்தைச் சுமத்துவதை 'இடுவந்தி கூறுதல்' என்பர். இச்சொல் இப்பொருளில் தமிழ்நாட்டின் வட பாகத்தே வழங்குவதாக அறியப்படுகிறது.

இளங்கோவடிகளையும் அவர் படைத்துள்ள பாத்திரங்களின் பண்புகளையும் உளங்கொண்டே அடியார்க்கு நல்லார் உரையெழுதியுள்ளார். காப்பியத் தலைவி கண்ணகியின் கற்பு மேம்பாட்டைச் சிறப்புறப் புகழ்வது அடிகளின் கொள்கையாம். இக்கொள்கை உரையாசிரியரின் உரையில் போற்றப்பட்டுள்ளது. ' புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும்' (11:199) என்னும் அடியில், கண்ணகியை அடிகள் முற்கூறினமைக்குத் 'தவத்தினும் கற்புச் சிறந்ததாகலின் முற்கூறினார்' எனக் காரணங் காட்டியுள்ளார். 'வம்பப் பெருந்தெய்வம்' (19:24) என்னும் தொடருரையில், 'பெருந்தெய்வம்-தெய்வத்தினும் பெரியது- கற்புடைத் தெய்வம்' எனக் கூறுவதும், 'சிலம்புள' (9:73) என்னும் சொல்லுக்குப், 'புலந்து கூறினாளெனிற் கற்பின் தன்மையன்றாம்' என விசேடித்து உரைப்பதும் இக்கொள்கைக்குச் சான்றாக அமைகின்றன.

இளங்கோவடிகளின் உள்ளம் மூவேந்தரைக் குறிப்பிடும்போதெல்லாம் அவர்களை ஒப்பவைத்துப் புகழ்கின்றது. அடிகள் கருத்தில் தமிழக மன்னர்கள் ஓரினமாகக் காணப்படுகின்றனர். ஆட்சியால் வேறுபடினும் மொழியால் தமிழக வேந்தர்கள் ஓரினத்தவரே என்பது அடிகளின் கருத்தாகும். அடிகளின் இந்நடுவு நின்ற நன்னெஞ்சினை உளங்கொண்டே அடியார்க்கு நல்லார் உரையெழுதியுள்ளார். ஆய்ச்சியர் குரவையுள் உள்வரிக் கூத்தினுள் முதலில் பாண்டியனையும், பின்னர்ச் சோழனையும், அதன் பின்னர்ச் சேரனையும் அடிகள் வாழ்த்துகின்றார். பாண்டியனை முதற்கண் வாழ்த்தியமைக்கு அடியார்க்கு நல்லார் கூறும் காரணம், இளங்கோவடிகளின் பண்பு நலனை மிகுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவற்றுள், 'சேரனை முற்கூறாது பாண்டியனை முற்கூறியது என்னையெனின், இது மதுரைக் காண்டமாதலானும், இக்காப்பியஞ் செய்தவர் விழைவு வெறுப்பற்ற சேர முனியாதலானும், முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரியது எனச் சாத்தர் கூறினமையானுமென்க'. என்பது அவ்வுரையாகும். இவ்வாறே பிற பாத்திரங்களின் பண்பு நலன்களை அறிந்து உரையெழுதினும், கண்ணகி கோவலர்க்கு எதிர்வது அறிந்து கூறும் ஆற்றல்-காலவுணர்ச்சி- கவுந்தியடிகள் மாட்டு இல்லை என்பதை ஈரிடங்களில் (10:55; 10:164-9 உரை) குறைகூறிச் சுட்டிச் செல்வதையும் அறியமுடிகிறது.

அடியார்க்கு நல்லார் கணிதநூற் பயிற்சியுடையார்; பல்கலைப் புலமையர்; அரங்கேற்று காதைக்கு இவர் எழுதியுள்ள உரை இவர் பெற்றிருந்த பிற புலமைகட்குத் தக்கதோர் சான்றாகும். கூத்தி, ஆடலாசிரியன், இசையாசிரியன், கவிஞன், தண்ணுமையோன், குழலோன், யாழாசிரியன் ஆகியோரின் அமைதிகளும், அரங்கின் அமைதி, தலைக்கோல் அமைதி, அரங்கிற்புகுந்து ஆடுகின்ற இயல்பு ஆகியனவும், இக்காதையுரையுள் பல மேற்கோள்களுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவருரையில் இந்திரவிழா எடுத்த காதையுள் ஆடை அணிமணிகளின் வகைகளும், கடலாடு காதையுள் ஒப்பனை வகைகள், ஆடல்பாடல்களின் இலக்கணம், இசைக் கருவிகளின் அமைப்பு முறை ஆகியனவும் கூறப்பட்டுள்ளன. ஊர்காண் காதையுள் நவமணிகள் பற்றிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன. ஆய்ச்சியர் குரவையுள் கூத்திற்கு நல்ல விளக்கம் தந்துள்ளார்.

அடியார்க்கு நல்லார் இயல் இசை நாடகக்கலைகளை நன்கு பயின்று திளைத்தவர்; பழுதற்ற முத்தமிழின் பாடற்குச் சிறந்த உரைகண்டவர். இவர் உரை இருபதாம் நூற்றாண்டில் தமிழிசை மறுமலர்ச்சிக்கு அடிகோலியது; பல இசை நூல்கள் தமிழகத்தில் கிளைத்தமைக்குக் காரணமாக அமைந்தது. இது தமிழிசையில் இன்று விரிவான ஆய்வு செய்ய உறுதுணையாய் விளங்குகிறது. இரா. செ.

**அடிலேய்டு** தென் ஆசுதிரேலிய மாநிலத்தின் தலைநகர்; ஆசுதிரேலியாவின் மூன்றாவது பெருநகரம். இது தென் ஆசுதிரேலியாவின் தெற்குக் கடற்கரைக்கு அருகில் உள்ளது. அடிலேய்டு (Adelaide) நகரின் துறைமுகம் 11 கி.மீ. தூரத்தில் செயின்ட்டு வின்சென்ட்டு விரிகுடாவில் அமைக்கப் பெற்றுள்ளது. இது கடல் மட்டத்திலிருந்து 30 மீ. உயரத்தில் உள்ளது. இங்கு மத்தியதரைக் கடல் தட்ப வெப்ப நிலையான குறுகிய குளிர்ந்த மழை பெறும் மாரிக்காலமும், நீண்டு, வெப்பமான வறண்ட கோடைக் காலமும் நிலவுகின்றன.

இந்நகரைச் சுற்றியுள்ள கிராமப் புறங்களில் ஆடு மேய்க்கும் தொழில் சிறப்பானது; பால் கொடுக்கும் கால் நடைகளும் வளர்க்கப்படுகின்றன. பால்வளப் பொருள்கள், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, உரோமம், கம்பளங்கள் போன்றவை அடிலேய்டு துறைமுகத்தின் வழியாக ஏற்றுமதியாகின்றன.

இந்நகர், கி.பி. 1836-ஆம் ஆண்டில் நிறுவப்பெற்றது. இங்கு அடிலேய்டு பல்கலைக் கழகமும், தென்



அடிலேய்டு நகரம்

ஆசுதிரேலியப் பல்கலைக் கழகமும், ஏனைய கல்வி, பண்பாட்டு நிறுவனங்களும் இயங்குகின்றன. மக்கள் தொகை 900400 (1976).

**அடுக்குநிலை மொழியியல்**, சிட்னிலேம்பு என்பவரால் உருவாக்கப்பெற்ற புதிய வகை மொழியியற் கொள்கையாகும். மொழி என்பது மனிதன் தன் கருத்துகளைப் பிறருடன் பரிமாறிக் கொள்வதற்குப் பயன்படுத்தும் ஒரு கருவியாகும். கருத்துகள் ஒலிகளின் வாயிலாகப் புலப்படுத்தப்படுகின்றன. எனவே, கருத்துகள்,ஒலிகள் ஆகியவற்றைத் தொடர்புபடுத்தும் அமைப்புகளின் தொகுதியாக மொழியைக் கருதலாம். மொழி என்பது இத்தகைய தொடர்பு அமைப்புகள்தாம் என்பது, அடுக்குநிலை மொழியியலாளர்கள் கருத்து.

அமெரிக்காவில் புளூம்பீல்டு தோற்றுவித்த கட்டமைப்பு மொழியியலின் ஒரு வகையாக இந்த அடுக்குநிலை மொழியியலைக் (Stratificational Linguistics) கருதலாம். இதனை உருவாக்கியவர் சிட்னிலேம்பு (Sydney Lamb) ஆவார். ஐரோப்பாவில் கோபன்கேகன் மொழியியற் கொள்கையை நாட்டிய இலூயி எம்சுலேங் என்பவரின் தாக்கம், அடுக்குநிலை மொழியியலில் அமைந்து விளங்கக் காணலாம்.

மொழியின் கூறுகள் ஒன்றோடொன்று தொடர்பு பட்டுப் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன என்றும், இந்தத் தொடர்புகளின் அடிப்படையில் தான் மொழியில் அமைந்து கிடக்கும் பல்வேறு வகையான கூறுகளை விளக்கி வேறு படுத்திக் காணமுடியும் என்றும் சிட்னிலேம்பு கருதுகிறார். சொற்களைக் கோவைப் படுத்தினால் அது மொழியாகாது. எனவே, சொற்களை மட்டும் வைத்துக்கொண்டு மொழிக்கு இலக்கணம் படைக்க முடியாது. இச்சொற்களுக்கிடையேயான தொடர்புகள் மிகவும் இன்றியமையாதனவாகும்.

மொழியின் பணி, கருத்துகளையும் ஒலிகளையும் தொடர்புபடுத்துவது ஆகும். இந்த மொழியமைப்பில் பல்வேறு அடுக்குநிலைகள் உள்ளன என்று அடுக்குநிலை மொழியியலாளர் கருதுகின்றனர். இவற்றில் ஓர் அடுக்குநிலை, கருத்து அமைப்போடு தொடர்புடையது; இன்னொன்று, ஒலியமைப்போடு தொடர்புடையது. இந்த இரண்டு அடுக்குநிலைகளுக்கும் இடையில் ஒன்றுக்கு மேற்பட்ட அடுக்குநிலைகள் உள்ளனவாகக் கருதலாம். ஒவ்வோர் அடுக்கு நிலைக்கும் ஒரு தொடரமைப்பு உண்டு. தொடரமைப்பு மட்டுமல்லாமல் மற்ற வகை அமைப்புகளும் ஒவ்வோர் அடுக்குநிலையிலும் உண்டு. ஒரு மொழியில் குறைந்தது மூன்று அடுக்குநிலைகளாவது இருக்க வேண்டும் என்று அடுக்குநிலை மொழியியலாளர் கருதுகின்றனர்.

தமிழ் மொழியில் 'கினம்' என்றோ 'க்னம்' என்றோ சொல் இல்லை. முன்னது தமிழ்ச்சொல் அன்று என்றாலும், அதனை ஓரளவுக்குச் சொல் என்று ஏற்றுக் கொள்ளலாம். பின்னதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. இதற்குக் காரணம் மொழி முதல் மெய்யெழுத்தின் பின்னர் ஓர் உயிரெழுத்து வரவேண்டும் என்ற தமிழ் ஒலியியல் விதியாகும். இவை வடிவாக்கத் தொடர்புகள் என்று கூறப்படும். ஒவ்வொரு அடுக்கு நிலையிலும் உள்ள மொழிக் கூறுகளுக்கிடையேயான பிணைப்புத் தொடர்புகள், தொடராக்கத் தொடர்புகள் என்று கூறப்படும். கருத்துகளையும் ஒலிகளையும் மேலும் கீழும் இருப்பனவாகக் கருதுவோமேயானால், வடிவாக்கத் தொடர்புகள் செங்குத்தாகவும், தொடராக்கத் தொடர்புகள் கிடையாகவும் அமைந்து விளங்கக் காணலாம்.

உருபன்கள் ஒலிகளால் ஆனவை அல்ல; ஒலியன்களால் ஆனவை என்பது இக்கால மொழியியலாளர் கருத்து. ஒலியன் என்பது ஒரு கற்பிதம். இந்த ஒலியன் சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் குறிப்பிட்டஒலி வடிவம் பெறும். ஒலியனுக்கும் ஒலிக்கும் இடையேயான தொடர்பு, வடிவாக்கத் தொடர்பு ஆகும். உருபன்களுக்கும் ஒலியன்களுக்கும் இடையேயான தொடர்பு சேர்க்கைத் தொடர்பு ஆகும். புளூம்பீல்டு தம் நூலில் உருபன்கள் ஒலியன்களால் ஆனவை என்று கூறுகிறார். ஆனால் இந்த உருபன்களுக்கு மாற்றுவடிவங்கள் உண்டு என்றும் அவரே கூறுகிறார். ஒலியன்களால் ஆனவை மாற்றுருபுகள் தாம். உருபன்களுக்கும் மாற்றுருபுகளுக்கும் இடையேயான தொடர்பு வடிவாக்கத் தொடர்பு.

சிட்னிலேம்பின் நான்கு அடுக்குநிலை இலக்கணத்தில், குறிப்பிட விரும்பும் கருத்துகள், பொருளன்கள் ஆகும். இப்பொருளன்கள் பொருள் துகள்களால்

ஆனவை. பொருள் துகள்கள் கிளவியன்கள் ஆகும். இக்கிளவியன்கள் கிளவித் துகள்களால் ஆனவை. கிளவித் துகள்கள் உருபன்கள் ஆகும். இவ்வுருபன்கள் உருபுத் துகள்களால் ஆனவை. உருபுத் துகள்கள் ஒலியன்கள் ஆகும். இவ்வொலியன்கள் ஒலித்துகள்களால் ஆனவை. ஒலித் துகள்கள்தாம் கேட்கும் ஒலியலைகள் ஆகும். ஒவ்வொரு அடுக்கு நிலையிலும் தனித்தனித் தொடராக்கத் தொடர்பு உண்டு. ஒலியன் தொடராக்கத்தில் எந்தெந்த ஒலியன்கள் இணைந்து செயல்படும் என்பதும், உருபன் தொடராக்கத்தில் எந்தெந்த உருபன்கள் இணைந்து செயல்படும் என்பதும், கிளவியன் தொடராக்கத்தில் எந்தெந்தக் கிளவியன்கள் இணைந்து செயல்படும் என்பதும், பொருளன் தொடராக்கத்தில் எந்தெந்தப் பொருளன்கள் இணைந்து செயல்படும் என்பதும் தெளிவுறும். என்.கு.

**அடேனார் கொன்ராடு** (1876-1967) என்பவர் செருமானிய அரசியல் வல்லுநர். இரண்டாம் உலகப் பெரும் போரினால் சீரழிந்த மேற்குச் செருமனியைப் பொருளாதார வளமிக்க நாடாக்கிய பெருமை இவரையே சாரும். இவர் கி.பி. 1876-இல் கோலோன் நகரில் பிறந்தார். இவர் தந்தையார் கொன்ராடு ஒரு சட்டத்துறை எழுத்தர். அடேனார் குடும்பத்தினர் உரோமானியக் கத்தோலிக்கச் சமயத்தைச் சார்ந்தவர்கள்; ஆழ்ந்த சமயப் பற்றுள்ளவர்கள்.

அடேனார் கொன்ராடு (Adenauer Konrad) சட்டத்தையும் பொருளாதாரக் கலையையும் கற்றுக் கோலோன் நகரின் மாவட்ட நீதிமன்றத்தில் துணை



அடேனார் கொன்ராடு

நீதிபதியானார். 1906-ஆம் ஆண்டில் கோலோன் நகரின் துணை மேயராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார். பின்னர் 1917 முதல் 1933 வரை மேயராகப் பதவி வகித்தார். நகரவை அரசியலில் செயல்பட்டு வெற்றி கண்ட அடேனார், செருமானிய தேசிய அரசியலிலும் பங்கேற்றுக் கத்தோலிக்க மையக் கட்சியின் உறுப்பினரானார். 1917 முதல் 1933 வரை இரைன்லாந்து மாநிலச் சட்டமன்றத்தில் பணியாற்றினார். மேலும், பிரசிய (Prussia) அரசுக் குழுவில் மையக் கட்சியின் சார்பாளராகவும் செயலாற்றினார். பின்னர், அக்குழுவின் தலைவராகவும் மையக் கட்சியின் நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும் பொறுப்பேற்றார். 1926-இல் அடேனார் 'இலான்சிலிகல்' (சமயப்பிரசாரக்குழு) கட்சியினரையும், கத்தோலிக்கக் கிறித்தவர்களையும் அரசியலில் இணைக்க வேண்டுமென வெளிப்படையாகப் பறைசாற்றினார்.

1933-ஆம் ஆண்டில், இட்லரின் ஆட்சியைச் சார்ந்தவர்கள், அடேனாரைச் செருமானிய மக்களுக்கெதிராகக் குற்றங்கள் செய்தவர் என்று குறைகூறி அனைத்துப் பதவிகளிலிருந்தும் விலக்கி விட்டார்கள். பன்னிரண்டு ஆண்டுகள் இவர் அரசியலிலிருந்து விலகி இருந்தார். அரசியல் நோக்குடன் 1944-ஆம் ஆண்டின் இறுதியில், நாசிகள் இவரை அரசினருக்கு எதிர்ப்பானவர்களை ஒதுக்கிவைக்கும் குடியேற்ற முகாம்களில் தள்ளி ஒறுத்தனர்.

இரண்டாம் உலகப் போரில் செருமனி தோல்வியுற்றபோது, அமெரிக்கர் 1945-ஆம் ஆண்டில் அடேனாரைக்கோலோன் நகரின் மேயராக்கினர். சில மாதங்களுக்குப் பின்னர், ஆங்கிலேயர் அடேனாரைப் பதவியிலிருந்து நீக்கினர். அப்போது கோலோன் நகர் ஆங்கிலேய ஆட்சிப்பகுதியாயிற்று.

கிறித்தவ சனநாயக ஒன்றியம் என்னும் அரசியல் கட்சியை நிறுவியவர்களுள் அடேனாரும் ஒருவர். போரில் அழிவுற்ற செருமனியைச் சீராக்கப்பாடுபடுவதே அக்கட்சியின் நோக்கமாக இருந்தது. கிறித்தவ சமய உணர்வைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்துடையது அக்கட்சி. அடேனாரின் நன்முயற்சியால் கிறித்தவர்களுக்கிடையே நல்லிணக்கம் தோன்றியதெனலாம்.

தம் எழுபதாம் வயதில் அடேனாரின் பெரும் அரசியல் வாழ்வு தொடங்கியது. விரைவில் இவர் கட்சித்தலைவரானார். சமதரும சனநாயகவாதிகளுடன் மூண்ட அதிகாரப் போராட்டத்தில் கிறித்தவ சனநாயக ஒன்றியம் வெற்றி பெற்றது. இவ்வெற்றியால் அடேனார் செல்வாக்கு மிக்கவரானார். மேற்குச் செருமனியில் இருந்த மூன்று பகுதிகள் அமெரிக்க, ஆங்கில, பிரெஞ்சு ஆதிக்கத்தில் இருந்தவை. இம்மூன்று பகுதிகளையும் இணைத்துப் புதிய மேற்குச்

செருமனி உருவானபோது அடேனார் அதன் தனிப் பெரும் தலைவராக மதிக்கப்பெற்றார். 1948-இல் பாராளுமன்றக் குழுவின் தலைவராக ஆனவுடன் செருமானியக் கூட்டாட்சிக் குடியரசுக்கான புதிய அரசியல் அமைப்புத் திட்டத்தை வரையும் பணியில் ஈடுபட்டார். 1949-இல் முதல் செருமானியக் கூட் டாட்சி நாடாளுமன்றத்தால் இவர் தலைமை அமைச் சராகத் (Chancellor) தேர்ந்தெடுக்கப்பட்டார். 1953, 1957, 1961 ஆகிய ஆண்டுகளிலும் மீண்டும் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். 1963 அக்டோபர்த் திங்கள் அடேனார் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார்.

இவரது தலைமையில் மேற்கு செருமனி 1955-இல் முழு விடுதலை பெற்றது. அந்நாடு வியத்தகு முறை யில் பொருளாதார முன்னேற்றம் பெற்றதற்கும் இவரே பொறுப்பானார். இவரது முயற்சியால் மேற்குச் செருமனி, வட அட்லாண்டிக்கு உடன் படிக்கைப் பேரமைப்பிலும் (NATO), ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவிலும் (EEC) உறுப்பு நாடாகி யது.

அடேனார், பிரான்சு நாட்டுடன் இணக்கத்தைப் பெரிதும் விரும்பி, 1963ஆம் ஆண்டில் இரு நாடுகளுக் கும் பொருந்தும் உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டார். அவரை அடுத்துத் தலைமையமைச்ச ராக வந்த இலட்வின் எர்கர்டு மேற்கூறிய உடன் படிக்கையைத் திருத்த முயன்றதை அடேனார் குறை கூறினார்.

அடேனார் இரு முறை திருமணம் செய்து கொண் டவர்; ஏழு குழந்தைகளுக்குத் தந்தை. இவர் 1967-இல் மறைந்தார்.

**அடை** என்பது ஒரு சொல்லைச் சிறப்பிக்க வரும் சொல்லாகும். நல்ல பையன் என்ற தொடரில் பையன் என்பது பெயர்ச்சொல். இப்பெயரைச் சிறப் பிப்பது 'நல்ல' என்னும் பண்பு குறித்து வரும் சொல். இதனை அப்பெயர்ச் சொல்லுக்கு அடையாகக் கொள்வர்.

ஆரிய மொழிகளில் பெயர்ச் சொல்லுக்கும் அடைக்கும் இடையே ஒரு வகை இயைபு உண்டு. இந்தி மொழியில் 'அச்சா லட்கா' என்பது 'நல்ல பையன்' என்று பொருள்படும். 'நல்ல' என்ற தமிழ்ச் சொல்லுக்கு இணையாக இந்தியில் 'அச்சா' என்றும், 'அச்சீ' என்றும் இரண்டு வடிவங்கள் அமைந்து விளங் கக் காணலாம். பெயர்ச் சொல் ஆண்பாலைக் குறிக்கு மானால் அடைச்சொல் வடிவம் ஆகாரத்தில் முடி யும். எனவே, இந்தியில் உள்ள பெயரடைகளுக்கெல் லாம் இருவகை வடிவங்கள் உண்டு. ஒன்று ஆகார இறுதி வடிவம்; மற்றொன்று ஈகார இறுதி வடிவம். கருப்பு என்ற அடைக்கு இணையாக இந்தியில் காலா, காலீ என்ற இரண்டு சொற்கள் உண்டு. முதற்சொல் ஆண்பால் பெயருடன் வருவது; இரண்டாவது பெண் பால் பெயருடன் வருவது. வடமொழி போன்ற மொழிகளில் அடைகளுக்கு மூவகை வடிவம் உண்டு. ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்ற மூன்று வகைப் பெயர்ச் சொல்லோடும் வரும் அடைகள் மூவகையினவாகும்.

தமிழ் மொழியில் பெயரடைகளுக்கும் பெயர்ச் சொற்களுக்கும் இடையே இத்தகைய இயைபு இல்லை. இவ்வகையில் ஆங்கிலமும் தமிழும் ஒற்றுமை உடை யன. ஆங்கிலத்தில் குட் (Good) என்ற அடைச்சொல் பாய் (Boy) என்ற ஆண்பாற் சொல்லுடன் வந்தாலும் கியர்ல் (Girl) என்ற பெண்பாற் சொல்லுடன் வந் தாலும் வேறு எப்பாற் சொல்லுடன் வந்தாலும் மாறுபடாத ஒரே வடிவத்தில் வரக்காணலாம். தமிழி லும் இதே நிலைதான். ஆண்பாற் பெயரோடும் பெண்பாற் பெயரோடும், இவையல்லாத பாற் பெய ரோடும் வரும் அடை, நல்ல என்னும் ஒரே வடிவம் கொண்டு விளங்குகின்றது.

பெரும்பாலான மொழிகளில் அடைகள் பெயர்ச் சொல்லுக்கு முன்னரே வரும். தமிழ், இந்தி, ஆங்கிலம் போன்றவை இதற்கு எடுத்துக் காட்டாகும். பிரெஞ்சு மொழியிலோ அடைகள் பெயர்ச் சொல்லுக்குப் பின்னரும் வரக்காணலாம்.

தமிழில் 'மாணவர் விடுதி' போன்ற தொகை யுடன் 'புதிய' போன்ற அடை வரும்போது, 'புதிய மாணவர் விடுதி' போன்ற தொடர் உண்டாகும். இத்தொடர் இரு பொருள் உடையது. மாணவர் புதியவரா, மாணவர்க்கான விடுதி புதியதா என்பதைப் பொறுத்து, இரு வகையாகப் பொருள் கொள்ளலாம்.

தமிழ் மொழியில் பெயர்ச் சொற்களே பெரும் பாலும் அடைகளாக அமைந்து விளங்குவதைக் காண லாம். முள்வேலி என்ற தொடரில் முள் என்னும் பெயர்ச்சொல் வேலிக்கு அடையாக வந்துள்ளது. பெயருக்கு முன்னர் வரும் டுகர, றுகரக் குற்றிய லுகரங்களில் முடிகின்ற அடைகள் இரட்டித்து வரு வதைக் காணலாம். எடுத்துக்காட்டு: காடு வழி-காட்டு வழி, ஆறு மணல்-ஆற்றுமணல், கிணறு நீர் -கிணற்று நீர், உதடு சாயம்-உதட்டுச்சாயம்.

அம் ஈறு பெற்ற பெயர்ச் சொற்கள் பொதுவாக இறுதியிலுள்ள மகரத்தை இழக்கும். அதன் பின்னர் வரும் பெயர்ச்சொல் வல்லின எழுத்தில் தொடங்கு மானால் அந்த வல்லெழுத்து இரட்டிக்கக் காணலாம். எடுத்துக்காட்டு: மரம்+நாற்காலி=மரநாற்காலி; மரம்+ பெட்டி=மரப்பெட்டி.

பழந்தமிழில் மென்றொடர்க் குற்றியலுகரத்தில் முடியும் சொற்கள் அடையாக வரும்போது, அவற்றில்

உள்ள மெல்லெழுத்துகள் வல்லெழுத்துகளாக மாறி அமைந்திருக்கக் காணலாம். எடுத்துக்காட்டு: இரும்பு+ கோல்=இருப்புக்கோல்; குரங்கு+பிடி=குரக்குப்பிடி.

சில பெயர்ச் சொற்கள் அடையாக வரும்போது அவற்றுடன் — ஆன என்ற உருபோ – உள்ள என்ற உருபோ சேர்ந்து வரக் காணலாம். எடுத்துக்காட்டு: அழகான பெண்; ஆழமான கிணறு; நியாயமான வேண்டுகோள்; அன்புள்ள நண்பன்; கீழ்ப்படிதலுள்ள மாணவன்; இரக்கமுள்ள மனிதர்.

உயர்ந்த, சிறந்த, நீண்ட, கெட்ட, உற்ற, நெருங்கிய என வரும் சொற்கள் அடைகளாக அமைதல் உண்டு. இவை முறையே உயர், சிற, நீள், கெடு, உறு நெருங்கு என்னும் வினையடியாகப் பிறந்த பெயரெச்ச வடிவங்களே. ஆனால், நாளடைவில் இவை பெயரெச்சத் தன்மை கெட்டு வெறும் அடைகளாயின.

அழகு போன்ற பெயர்ச் சொற்கள் வினைகளாக மாறி, இறந்தகாலப் பெயரெச்ச வடிவில் அடைகளாதலையும் காணலாம். எடுத்துக்காட்டு: அழகிய வீடு.

பெரு(மை) போன்ற சொற்கள் இறந்த கால எதிர்காலப் பெயரெச்ச வடிவில் அடைகளாக அமைகின்றன. எடுத்துக்காட்டு: பெரிய வீடு, பெருங்குன்று.

புது(மை) போன்ற சொற்கள் இறந்தகாலப் பெயரெச்ச வடிவிலும், அடிச்சொல் நிலையிலும் அடைகளாக விளங்குகின்றன. எடுத்துக்காட்டு: புதிய பாதை, புதுவாழ்வு.

நன்(மை) போன்ற சொற்கள் கால இடைநிலையற்ற பெயரெச்ச வடிவிலும், அடிச்சொல் நிலையிலும் அடைகளாக அமைந்துள்ளன. எடுத்துக்காட்டு: நல்ல வீடு, நல்வினை.

வினைச் சொற்கள் அடிச்சொல் நிலையில் அடைகளாக வருதலும் உண்டு. இதனை வினைத்தொகை என மரபு இலக்கியம் கூறும். எடுத்துக்காட்டு: தொங்கு பாலம், ஆழ்கடல். என்.கு.

**அடைநெடுங்கல்வியார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். கிடைத்தற்கரிய கல்வியை எளிதில் பெற்றுப் புகழ் சிறக்க வாழ்ந்தமையால் அடைநெடுங்கல்வியார் என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது எனக் கருத இடமுண்டு. சில பதிப்புகளில் அடைநெடுங்கல்லியார் என்றும், அண்டர் நடுங்கல்லினார் என்றும், அண்டர் நெடுங்கல்லியார் என்றும் இவர் பெயர் குறிக்கப்பட்டுள்ளது. பகைவர் பற்றிச் சென்ற தம் ஆனிரைகளை மீட்கும் போரில் துறக்கம் எய்திய வீரர்களுக்கு நடுகல் நட்டு, ஆயர் சிறப்புச் செய்ய, அவ்வாறு நடப்பட்ட கல்லை 'அண்டர் நடுங்கல்' என இவர் பாராட்டிப் பாடிய பாடல் தொடரால் அண்டர் நடுங்கல்லினார் என இவர் அழைக்கப்பட்டிருத்தல் கூடும்.

இவர் பாடிய மூன்று பாடல்கள் புறநானூற்றில் 283, 344, 345–ஆம் பாடல்களாக அமைந்துள்ளன. இருபாடல்கள் காஞ்சித் திணையில் மகட்பாற் காஞ்சித் துறையிலும் (புறம். 344, 345), ஒருபாடல் தும்பைத்திணைப் பாடாண்பாட்டுத் துறையிலும் (புறம். 283) உள்ளன. இரு பாடல்கள் இடையே குறைபட்டுள்ளன (புறம். 283, 344).

போரில் பகைவர் எறிந்த வேல்கள் தன் உடலெங்கும் பாய்ந்து ஊடுருவப் பெற்ற நிலையில் வீழ்ந்து கிடக்கும் வீரனுக்கு, ஆரக்கால்கள் சூழச் செருகப்பட்டுத் தோன்றும் வண்டி உருளின் குடத்தை உவமையாகக் கூறியிருப்பது (புறம். 283) சிறப்பாக உள்ளது. இப்பாடலில் 'வலம்புரி கோசர்' என வெற்றி மிக்க கோசர் பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளது.

மகட்கொடை வேண்டி வருவோர், பெண்ணைப் பெற்றவருக்குப் பெண்ணின் நிறையளவு (எடையளவு) பொன்னை நிறுத்துத் தருதலும் உண்டு என்பது இவரது பாடலினின்றும் (புறம். 344) புலனாகிறது.

மகட்கொடை வேண்டி வந்தோர் நால்வகைப் படைகளோடு வந்து நின்ற போதிலும் நிறைந்த பொருள் தருவதாகக் கூறிய போதிலும் வந்தவர் குடிமை, ஆண்மை முதலிய பண்புகளில் பொருந்தாதவராயின், தம் மகளைக் கொடுக்கப் பெண் வீட்டார் மறுப்பர் என்னும் பழந்தமிழர் பண்பினை இவர் பாடல் (புறம். 345) குறிப்பிடுகிறது. வே.கா.

**அடைமானம்**: ஒருவர் கட்டடம், நிலம் போன்ற அசையாச் சொத்துகளைப் பிணையமாக வைத்துக் கடன் பெறும் நடவடிக்கை அடைமானம் (Mortgage) எனப்படுகிறது. அடைமானம் என்ற சொல்லும் அடகு (Pledge) என்ற சொல்லும் ஒரே பொருள் தரும் வகையில் பயன்படுத்தப்பட்டாலும் சட்ட முறைப்படி அடைமானமும், அடகும் வெவ்வேறு நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்தப்படும் சொற்களாகும். ஆனால், அசையும் பொருள்களைப் பிணையமாக வைத்துக் கடன்பெறும் நடவடிக்கை அடகு எனப்படுகிறது. கி. பி. 1882–ஆம் ஆண்டுச் சொத்து மாற்றுச்சட்டத்தின் (Transfer of Property Act) 58–ஆம் பிரிவின்படி, ஒரு குறிப்பிட்ட அசையாச் சொத்தின் மீதான உரிமையினைப், பெற்ற கடனுக்குப் பிணையமாகவோ பெறப்படவிருக்கும் கடனுக்குப் பிணையமாகவோ மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கையே அடைமானம் எனப்படுகிறது.

தன்மைகள்: (அ) அசையாச் சொத்தின் மீதான உரிமை அடைமானம் கொடுப்பவரால் அடைமானம் பெறுபவர் மீது மாற்றப்பட வேண்டும். (ஆ) அந்த அசையாச் சொத்து வகைப்படுத்தப்பட்டுக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். (இ) அந்த அடைமானத்

தின் மறுபயன், பெறப்பட்ட கடனாகவோ பெறவிருக்கும் கடனாகவோ ஓர் ஒப்பந்தத்தினை நிறைவேற்றும் பொருட்டோ இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட சிறப்புத் தன்மைகளின்படி மாற்றப்பட்ட சொத்து, அசையாச் சொத்தாக இல்லாவிடினும், அல்லது அசையாச் சொத்தாக இருந்தும் அச்சொத்துமாற்றப்பட்டதன் நோக்கம் பெறப்பட்ட கடனுக்கோ அல்லது பெறவிருக்கும் கடனுக்கோ பிணையமாக இல்லாதிருப்பினும், அந் நடவடிக்கை அடைமானமாகக் கருதப்படமாட்டாது. அடைமானம் விற்பனையினின்றும் மாறுபட்டதாகும். விற்பனையில் சொத்தின் முழு உரிமையும் அச் சொத்தினை வாங்குவோருக்கு மாற்றப்படுகிறது. ஆனால், அடைமானத்தில் அடைமானம் பெறுபவர் சொத்தின் முழு உரிமையைப் பெறுவதில்லை. அடைமானத்திற்குச் சட்ட முறைப்படி உருவாக்கப்பட்ட அடைமானம் வைப்பவர் (Mortgager), மற்றும் அடைமானம் பெறுபவர் (Mortgagee) என்ற இருவர் தேவை. ஒரு அசையாச் சொத்தின் உரிமை ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் பெறப்பட்டு இருக்குமேயானால் ஒவ்வொருவரும், அவருக்குரிய சொத்தின் பங்கினை அடைமானமாக வைத்துக் கடன்பெறும் உரிமையினைப் பெறுகிறார். அடைமானத்தில், அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் உடைமை, அடைமானம் பெறுபவரிடம் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அடைமானம் வைப்பவரே அடைமானத்திற்குப் பிறகும் அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் உடைமையைத் தொடர்ந்து பெற்றிருக்கலாம். கொடுக்கப்பட்ட கடன் திருப்பிச் செலுத்தப்படாவிட்டால், அடைமானம் பெறுபவர் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தை விற்றுத் தமக்குச் சேரவேண்டிய பணத்தினை எடுத்துக்கொள்ளும் உரிமையினைப் பெறுகிறார். அவ்வாறின்றி, பெறப்பட்ட கடன் உரிய காலத்தில் அடைமானம் வைப்பவரால் திருப்பிச் செலுத்தப் பட்டால் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தும் அதன் மீதான உரிமையும் அடைமானம் வைத்தவருக்கே திருப்பிக் கொடுக்கப்பட்டுவிடும்.

**ஈட்டு அடைமானம்:** ஈட்டு அடைமானத்தில் அடைமானம் வைப்பவர் அடைமானம் பெறுபவரிடம் அடைமானச் சொத்தின் உடைமையை மாற்றிக் கொடுக்காது தாமே வைத்துக்கொண்டு அடைமானம் பெறுபவருக்கு எழுத்து மூலமாகவோ தொக்கி நிற்கும் வகையிலோ கடனாகப் பெறும் தொகையைத் திருப்பிச் செலுத்துவதாக வாக்களித்தும், அவ்வாறு திருப்பிச் செலுத்தாத நிலையில் அடைமானம் பெறுபவர் அடைமானமாகப் பெறப்பட்ட சொத்தினை விற்றுக் கடன் தொகையைச் சரிசெய்து கொள்ளும் வகையில் உறுதி அளித்தும் ஆக்கப்படும் அடைமானம், ஈட்டு அடைமானம் ஆகும். இத்தகைய அடைமானத்தில் அடைமானம் வைப்பவர், கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தாத நிலையில் ,அடைமானம் பெறுபவர் கீழ்க்காணும் இரண்டு உரிமைகளில் ஒன்றினைப் பெறுகிறார்.

1. அடைமானம் வைத்தவர்மீது கடன் தொகையைத் திருப்பிச் செலுத்த வழக்குத் தொடுத்தல்.
2. அடைமானமாகப் பெற்ற சொத்தினை விற்றுக் கடன் தொகையைச் சரிக்கட்ட முயற்சி செய்தல்.

அவ்வாறு சொத்தினை விற்றதால் வரும் தொகை அடைமானம் பெறுபவருக்குச் சேரவேண்டிய தொகையைவிடக் கூடுதலாக இருக்குமேயானால், எஞ்சிய தொகை அடைமானம் வைத்தவரிடம் செலுத்தப்பட வேண்டும். அவ்வாறின்றி விற்றதால் வரும் தொகை அடைமானம் பெறுபவருக்குச் சேரவேண்டிய தொகையைவிடக் குறைவாக இருக்குமேயானால் குறையும் தொகையை அடைமானம் பெறுபவர், அடைமானம் வைத்தவர் மீது வழக்குத் தொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**விற்பனை அடைமானம்:** அடைமானம் வைப்பவர், அடைமானச் சொத்தினைக் கீழ்க்காணும் கட்டுத் திட்டங்களுடன் அடைமானம் பெறுபவருக்கு விற்பனை செய்யலாம்.

அடைமானக் கடன்தொகை ஒரு குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாக அடைமானம் வைப்பவரால் திருப்பிச்செலுத்தப்படாவிட்டால், விற்பனை நிறைவு பெறுகிறது. அவ்வாறன்றி அக்கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டுவிட்டால், அவ்விற்பனை இல்லா நிலையினை அடைகிறது. ஆதலின், சொத்தினை வாங்குபவர் அதனை விற்பனை செய்பவருக்கு மாற்றிக் கொடுத்துவிடுதல் வேண்டும். இத்தகைய அடைமானம் எந்தக் கட்டுப்பாட்டுக்குட்பட்டு உருவாகிறது என்பது அடைமானக் கடனுறுதிச் சீட்டில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

விற்பனை அடைமானம், கட்டுத் திட்ட விற்பனை (Conditional Sale) யினின்று முற்றிலும் மாறுபட்டதாகும். விற்பனை அடைமானத்தில் சொத்து, பெறப்படும் கடனுக்குப் பிணையமாக அடைமானம் வைப்பவரால் கொடுக்கப்படுகிறது. ஆனால், கட்டுத் திட்ட விற்பனையில், விற்கப்படும் சொத்தினை விற்பனை செய்பவர், திரும்ப வாங்கும் உரிமை பெற்றிருந்தாலும் இந்நடவடிக்கை ஒரு கடனை ஒட்டி எழுவதில்லை. மேலும், விற்பனை அடைமானத்தைப் போலின்றிக் கட்டுத்திட்ட விற்பனையில் சொத்தின் முழு உரிமையும் வாங்குவோர் மீது தொடக்க நிலையிலேயே மாற்றிக் கொடுக்கப்படுகிறது.

தன்வய அடைமானம்: அடைமானம் வைப்பவர் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் உடைமையை அடைமானம் பெறுபவருக்கு மாற்றிக் கொடுத்து, அச்சொத்தின் மூலம் வரும் வருவாயையும் ஆதாயத்தையும் பெற்ற கடனுக்குரிய வட்டிக்குப் பதிலாக, கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரையில் அடைமானம் பெறுபவரே அடையுமாறு உருவாக்கப்படும் அடைமானம், தன்வய அடைமானம் ஆகும். எனவே தன்வய அடைமானத்தில் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் உடைமையினையும் அச்சொத்தின் மூலம் வரும் வருவாயினைத் துய்த்து மகிழும் உரிமையினையும் அடைமானம் வைப்பவர், அடைமானம் பெறுபவருக்கு மாற்றிக் கொடுக்கிறார்.

இத்தகைய அடைமானத்தில் அடைமானம் வைப்பவர் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கும் வரையில் அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தின் உடைமையினைக் கொண்டிருக்கும் காரணத்தினாலும், அச்சொத்தின் வருவாயைப் பெறுவதாலும், கடன் தொகை திருப்பித் தாராத நிலையிலும், அவர் அடைமானம் வைத்தவர் மீது அடைமானச் சொத்தினை விற்கும் வகையில் வழக்குத் தொடர இயலாது. பெற்ற கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரையில் அடைமானச் சொத்தின் உடைமையினையும் அதன் மூலம் வரும் வருவாயினையும் தொடர்ந்து நுகரலாம்.

ஆங்கில அடைமானம்: ஆங்கில அடைமானம் என்பது, அடைமானம் வைப்பவர் கடன் தொகையினை ஒரு குறிப்பிட்ட தேதியில் திருப்பிச் செலுத்துவதாக வாக்களித்து, அதற்குப் பிணையமாகத் தமது சொத்தினைக் கடன்தொகை செலுத்தப்பட்டவுடன் திருப்பித் தரும் வகையில் ஒப்பந்தம் செய்து, அடைமானம் பெறுபவர் மீது மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கையாகும். இத்தகைய அடைமானத்தில் அடைமானம் பெறுவோர், அடைமானச் சொத்தின் உடைமையினை உடன் பெற்றுக் கொள்ளும் உரிமை பெறுகின்றார். அச்சொத்து அவர் கொடுத்த கடன் தொகை திருப்பிச் செலுத்தப்படும் வரையிலும் அவரிடமே இருக்கும். கடன்தொகை திருப்பிச் செலுத்தப்படாத நிலையில் அடைமானம் பெறுபவர், அடைமானம் வைப்பவர் மீது வழக்குத் தொடர்ந்து அடைமானச் சொத்தினை விற்கலாம்.

ஈட்டு அடைமானத்திற்கும் ஆங்கில அடைமானத்திற்கும் உள்ள வேறுபாடு, அடைமானச் சொத்தின் உடைமையினைச் சார்ந்தே அமைகிறது. ஈட்டு அடைமானத்தில் அடைமானமாக வைப்பவரின் சொத்தின் உடைமை அவரிடமே இருக்கும். ஆனால், ஆங்கில அடைமானத்தில் அச்சொத்தின் உடைமை அடைமானம் பெறுபவரிடமே மாற்றிக் கொடுக்கப்படுகிறது.

மூல ஆவண அடைமானம்: இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி இத்தகைய அடைமானம் நியாய அடைமானம் (Equitable Mortgage) என்று சொல்லப்படுகிறது. இத்தகைய அடைமானம், கடன் பெறுபவர் கடன் கொடுப்பவரிடமோ அவரது முகவரிடமோ ஒரு நிலைச் சொத்தின் உரிமை ஆவணத்தினைப் பெறப்படவிருக்கும் கடனுக்குப் பிணையமாகக் கொடுப்பதன் வாயிலாக உருவாக்கப்படுவதே ஆகும். இத்தகைய அடைமானம் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமைய வேண்டுமேயானால், சொத்துரிமைப் பத்திரங்கள் கடன் வாங்குபவராலேயே கொடுக்கப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. அவை கடன் வாங்குபவருடைய முகவராலும் கொண்டுவரப் படலாம். இத்தகைய அடைமானத்தில் ஈட்டு அடைமானத்தினுடைய விதிமுறைகள் செயற்படுத்தப்படுகின்றன. எனவே, அடைமானம் வைப்பவர், தாம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் தனிப்பட்ட பொறுப்பினைப் பெறுகிறார். மேலும், கடன் திருப்பிச் செலுத்தப்படாத நிலையில் அடைமானம் பெறுபவர், நீதி மன்றத்தின் மூலம் அடைமானச் சொத்தினை விற்றுக் கடனைச் சரிசெய்து கொள்ளலாம்.

இத்தகைய அடைமானம் மேற்குவங்கம், தமிழ்நாடு, மகாராட்டிரம் ஆகிய மாநில அரசுகள் அவ்வப்பொழுது குறிப்பிடும் நகரங்களுக்கு மட்டுமே பொருந்தும். கதம்ப அடைமானத்தில், அடைமானம் பெறுபவருக்கும் அடைமானம் கொடுப்பவருக்கும் இடையேயுள்ள ஒப்பந்தக் கட்டுப்பாடுகள், பிற வகை அடைமானங்களில் அடைமானம் பெறுவோர் அடைமானம் வைப்போர்களுக்கு இடையேயுள்ள ஒப்பந்தக் கட்டுப்பாடுகளினின்றும் முற்றிலும் மாறுபட்டனவாக அமைகின்றன. இதனை ஈட்டு அடைமானம், மற்றும் தன்வய அடைமானம் ஆகிய இரு அடைமானங்களின் தன்மைகளும் பிணைக்கப்பட்ட ஒரு சிறப்பு அடைமானம் என்று குறிப்பிடலாம். அதாவது, அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தினால் வரும் வருவாயைத் துய்த்து மகிழ்வதுடன், அடைமானம் வைப்பவர் மீது தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடர்ந்து அடைமானத் தொகையினைத் திரட்டும் உரிமையினையும் பெறுகிறார். சுருங்கக் கூறின், இத்தகைய அடைமானத்தில் அடைமானம் பெறுபவர், அடைமானம் வைப்பவர் ஆகியோர் உரிமைகளும் பொறுப்புகளும் அவர்களுக்கிடையே எழும் ஒப்பந்தத்தின் படி வரையறை செய்யப்படுகின்றன.

சட்டப்படியான அடைமானமும் நியாய அடைமானமும்: அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின்

உடைமையினை மாற்றிக் கொடுக்கப்படும் முறையின் அடிப்படையில் அடைமானம் சட்டப்படியான அடைமானம் (Legal Mortgage) என்றும், நியாய அடைமானம் (Equitable Mortgage) என்றும் இருவகைப் படும். சட்டப்படியான அடைமானத்தில் ஒரு பத்திரத்தின் வழி அடைமானச் சொத்தின் உரிமையினை அடைமானம் வைப்பவர், அடைமானம் பெறுபவர் மீது மாற்றிக் கொடுக்கிறார். ஆனால், நியாய அடைமானத்தில் அடைமானம் வைப்பவர், சொத்தின் மீதான உரிமைப் பத்திரங்களை அடைமானம் பெறுபவரிடம் கொடுத்துவிட்டு, அவ்வாறு அப்பத்திரங்களைக் கடன்பெறும் பொருட்டுக் கொடுப்பதாக எழுத்து மூலமான ஒரு ஆவணத்தையும் எழுதிக் கொடுத்துக் கடன் பெறுகிறார். நியாய அடைமானத்தின் நன்மைகள் கீழ்வருவனவர்கும்:

1. நியாய அடைமானம் பதிவு செய்யப்பட வேண்டிய தேவையில்லை.
2. கடன் பெற விரும்புவர் உடனே கடன்பெற முடிகிறது.
3. அடைமானம் பதிவு செய்யப்பட வேண்டியதில்லையாதலால், சொத்து அடைமானமாக வைக்கப்பட்ட விவரம் மறைபொருளாக வைக்கப்பட்டு, அடைமானம் வைத்தவருடைய பெருமை கெடுக்கப்படுவதில்லை.
4. கடன் தொகை திருப்பிச் செலுத்தப்பட்டவுடன் தொல்லை எதுவுமின்றி,சொத்துரிமைப் பத்திரங்கள் எளியமுறையில் அடைமானம் வைப்பவரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டு விடலாம்.
5. இத்தகைய அடைமானத்தில் மிகுந்த முத்திரைக் கட்டணம் கட்ட வேண்டிய தேவையில்லையாதலால், இம் முறை மிகவும் சிக்கனமானதாகும். ஆனால் அடைமானம் பெறுபவர், சொத்துரிமைப் பத்திரங்களைத் தவறாக அடைமானம் வைப்பவரிடம் கொடுக்க, அதன்வழி அவர் அச்சொத்தின் மீது சட்டப்படியான அடைமானத்தின் மூலம் கடன் பெறுவாரேயானால், முதலாவதாகக் கடன் கொடுத்த நியாய அடைமானம் பெற்றவர், தனது முன்னுரிமையை இழக்கிறார்.

சொத்து மாற்றுச் சட்டத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட நிலைகளில் அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து, நீதிமன்றத்தின் உதவியின்றி விற்பனை செய்யப்படுகிறது:

1. அடைமானம் ஆங்கில அடைமான வகையாயிருந்து, அடைமானம் வைப்பவரோ அடைமானம் பெறுபவரோ, இந்துமதம், முகமதிய மதம், புத்த மதம் அல்லது மாநில அரசால் குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சார்ந்தவராக இல்லாத நிலை.
2. அடைமானம் பெறுவது அரசாக இருந்து அடைமானப் பத்திரத்தில் தனிப்பட்ட முறையில் விற்பனை செய்யும் உரிமை கொடுக்கப்பட்டிருத்தல்.
3. அடைமானச் சொத்து முழுவதுமோ அதில் ஒரு பகுதியோ அடைமானப் பத்திரம் எழுதப்பட்ட நாளன்று பம்பாய், கல்கத்தா, சென்னை அல்லது மாநில அரசுகளால் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நகரத்தில் இருத்தல்.

**அடைமானம் பெறுபவரின் உரிமைகள்:** சொத்து மாற்றுச் சட்டம், அடைமானம் பெறுபவருக்குக் கீழ்க் காணும் உரிமைகளை அளிக்கிறது:-

1. உரிய காலத்தில் கடன் பெறுபவர் கடனைத் திருப்பிச் செலுத்தாத நிலையில், அடைமானமாகப் பெற்ற சொத்தினை எடுத்துக்கொள்ளுதல் அல்லது விற்பனை செய்தல்.
2. சொத்து மாற்றுச் சட்டத்தின் 68-ஆம் பிரிவின் படி, அடைமானம் பெறுபவர் கீழ்க்காணும் நிலையில் அடைமானப் பணத்தினைத் திரும்பப்பெற வழக்குத் தொடுக்கும் உரிமையினைப் பெறுகிறார்:

அ) அடைமானம் வைப்பவர், தனிப்பட்ட முறையில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருந்தால்,

ஆ) அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து முழுமையுமோ பகுதியோ அழிந்திருக்குமேயாயின் அல்லது அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தின் மதிப்புத்திடீரென்று குறைந்து, அடைமானம் வைத்தவர் கூடுதலான சொத்தை அடைமானம் வைக்க முன்வராத நிலையில்,

இ) அடைமானம் வைத்தவருடைய தகாத நடவடிக்கையினால் அடைமானச் சொத்தின் மீது அடைமானம் பெற்றவர் உரிமை பாதிக்கப்பட்ட நிலையில்,

ஈ) அடைமானம் பெறுபவர் அடைமானச் சொத்தின் உடைமையினைப் பெறும் உரிமை பெற்றிருந்தும் அடைமானம் வைத்தவர், அச்சொத்தின் உடைமையினை மாற்றிக் கொடுக்காத நிலையில்,

3. அடைமானம் பெறுபவர் சாதாரணமாக அடைமானச் சொத்தின்மீது உரிமை கொண்டாடலாம்.
4. அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து குத்தகைக்கு விடப்பட்டிருந்து, அந்தக் குத்தகைக் கெடு முடிந்தபிறகு, சொத்தின் உரிமையாளர் (அடைமானம் வைப்பவர்)அச்சொத்தினை மீண்டும் குத்தகைக்கு விட முயற்சி செய்யும் போது அடை

மானம் பெறுபவர் அச்சொத்தின் மீதான குத்தகைக்கு முன்னுரிமை பெறுகிறார்.

5. தனிப்பட்ட ஒப்பந்தத்தால் தடைப்படுத்தப்பட்டிருந்தால்மட்டும் அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தின் மீது கீழ்க்கண்ட காரணங்களுக்குப் பணம் செலவிட்டிருப்பாரேயானால், அது கடன் தொகையுடன் சேர்த்துக் கணக்கிடப்பட்டு, அடைமானம் பெறுபவரால் பெற்றுக் கொள்ளப் படலாம். அவ்வாறு செலவிடப்பட்ட தொகைக்கு அடைமானம் பெறுபவர், ஒப்பந்தப் படி வட்டி வசூலிக்கும் உரிமை பெறுகிறார். வட்டி குறித்து அடைமானம் பெறுபவருக்கும் அடைமானம் வைப்பவருக்குமிடையே ஒப்பந்தம் ஏதுமில்லையேல், செலவுத் தொகை மீது ஒன்பது விழுக்காடு வட்டி செலுத்தப்படும்:

அ) அடைமானமாக வைக்கப்பட்ட சொத்து அழியாது இருக்கச் செய்யப்பட்ட செலவுத் தொகை.

ஆ) அடைமானம் வைத்தவருடைய சொத்தின் மீதான உரிமையினைக் காப்பாற்றச் செய்யப்பட்ட செலவினம்.

இ) அடைமானம் பெறுபவர், அடைமானச் சொத்தின் மீதான உரிமையினைத் தங்கவைத்துக் கொள்ளச் செய்யப்பட்ட செலவினம்.

ஈ) அடைமானமாக வைக்கப்பட்ட சொத்துக் குத்தகையிலிருந்து அந்தக் குத்தகைக் காலம் முடிந்த பிறகு, அக் குத்தகையைப் புதுப்பிக்கச் செய்யப்பட்ட செலவு.

**அடைமானம் பெறுபவரின் கடமைகள்:** சொத்து மாற்றுச் சட்டத்தின் 76–ஆம் பிரிவு, அடைமானம் பெறுபவருடைய கடமைகளை விளக்குகிறது. அவை யாவன:

1. அடைமானச் சொத்தினைக் கொண்டிருக்கும் அடைமானம் பெறுபவர் அதனை ஒருவர் தம் சொத்தினை எவ்வாறு பாதுகாப்பாரோ அவ்வாறு பாதுகாத்தல் வேண்டும்.
2. அச்சொத்தின் மீதான ஆதாயம் மற்றும் வாடகையினைத் திரட்ட உரிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
3. ஒப்பந்தத்தால் மாற்றப்பட்டாலன்றிப் பொதுவாக அரசுக்குச் செலுத்த வேண்டிய வரி மற்றும் இதர செலவினங்களை அடைமானச் சொத்தினின்று வரும் வருவாயிலிருந்து செலுத்த வேண்டும்.
4. ஒப்பந்தத்தால் குறிப்பாகத் தடைசெய்யப்பட்டிருந்தாலன்றி அடைமானச் சொத்தினின்று வரும் வருவாயினைக் கொண்டு அச்சொத்திற்கு ஏற்படும் பழுதினைச் சரிபார்த்தல் வேண்டும்.
5. அடைமானச் சொத்தின் தன்மை நிலையாகப் பாதிக்கும் வகையில் எவ்விதச் செயலையும் செய்தல் கூடாது.
6. அடைமானச் சொத்தினை தீ மற்றும் வேறு இழப்பீட்டிற்கு எதிராகக் காப்பீடு செய்திருந்து, அடைமானச் சொத்து தீ மற்றும் வேறு இழப்பீடு காரணமாக அழிக்கப்பட்டுக், காப்பீட்டுக் கழகத்தினின்று அடைமானம் பெறுபவர், நட்ட ஈடு பெறுவாரேயானால், அந்த நட்ட ஈட்டுத்தொகை, அழிந்த அடைமானச் சொத்தினை மீண்டும் உருவாக்கச் செலவு செய்யப் படுதல் வேண்டும்.
7. அடைமானச் சொத்தின் மீதான வருவாய் மற்றும் செலவினங்களுக்கான முழுமையான கணக்கினை விவரமாக வைத்திருத்தல் வேண்டும்.
8. வருவாயில் செலவினங்கள் போக எஞ்சியிருக்கும் தொகையினை அடைமானம் வைத்தவர் கணக்கில் வரவு வைத்தல் வேண்டும்.
9. அடைமானம் வைப்பவர் அடைமானப் பணத்தினைத் திருப்பிச் செலுத்திய காலத்திலிருந்து அடைமானச் சொத்திலிருந்து வரும்வருவாயினை அடைமானம் வைத்தவருடைய கணக்கிலேயே வரவு வைத்தல் வேண்டும். அவ் வருவாயில் அடைமானம் பெறுபவருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

**துணை அடைமானம்:** அடைமானம் பெறுபவர் அடைமானமாகப் பெற்ற சொத்தினை அவரே மீண்டும் பிணையமாக வைத்துக் கடன்பெற விழைவதுண்டு. அவ்வாறு அடைமானச் சொத்தினை மீண்டும் அடைமானமாக வைப்பது துணை அடைமானம் **(Sub-Mortgage)** எனப்படும். இத்தகைய துணை அடைமானம், வங்கிகளிடமிருந்து கடன்பெற விழையும் வாடிக்கைக்காரர்கள், ஏற்றுக் கொள்ளத்தக்க வேறு பிணையங்களைக் கொடுக்க முடியாத நிலையில், வங்கிகளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இவற்றைப் பெற விழையும் வங்கி, கீழ்க்காணும் எச்சரிக்கைகளைக் கையாள வேண்டும்.

1. அடைமானம் வைப்பவருக்கு ஓர் அறிவிப்பு விடுத்து அவரிடமிருந்து அடைமானம் பெறுபவருக்கு வரவேண்டிய கடன்தொகையினை உறுதிப் படுத்திக்கொள்ள வேண்டும்.
2. வங்கி முதலில் அடைமானம் வைத்த சொத்தின் உரிமையாளருக்கு, கடன் தொகையினை முதலில் அடைமானம் பெற்றவருக்குக் கொடுக்காது தன்னிடம் செலுத்தும் வகையில் ஓர் ஆணையினைப் பிறப்பித்தல் வேண்டும்.

3. வங்கி, அடைமானம் பெற்றவரிடமிருந்து அடைமானச் சொத்தின் உரிமைப் பத்திரத்தினையும் மூல அடைமானப் பத்திரத்தினையும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
4. இத் துணை அடைமானம் மூல அடைமானத்தின் கட்டுப்பாடுகள், வரைமுறைகள் ஆகியவற்றிற் குட்பட்டே அமையும். எனவே, ஒரு சொத்தினைத் துணை அடைமானமாகப் பெறுவதற்கு முன் வங்கி, மூல அடைமானத்தின் கட்டுப்பாடுகளை நன்கு அறிந்து கொள்ளுதல் தேவையானது.

**அசையும் சொத்துகளை அடைமானமாக வைத்தல்:** ஓர் அசையும் சொத்தின் உரிமையாளர், அதன் பொது உரிமையினை, மீண்டும் திரும்பிப் பெறும் உரிமையினைக் கொண்டு, கடன் பிணையமாகக் கடன் அளிப்பவருக்கு மாற்றிக் கொடுக்கும் நடவடிக்கையினை அசையும் சொத்துகளை அடைமானமாக வைத்தல் என்று சொல்லலாம். இத்தகைய அடைமான முறையில் சொத்தின் உடைமையினை அடைமானம் பெறுபவருக்கு, மாற்றிக் கொடுக்காமலேயே அடைமானமாக வைத்தும் கடன் பெறலாம். ஆனால், இத்தகைய அடைமானத்திற்குப் பின்னால் அதே சொத்து, உடைமை மாற்றத்துடன் அச்சொத்தின் உரிமையாளரால் அடைமானமாக வைக்கப்படுமேயானால், அந்தச் சொத்தினை முதல் அடைமானம் பற்றிய விவரம் அறியாது அடைமானமாகப் பெறும் இரண்டாம் கடனாளர், முந்திய கடனாளரைவிட முன்னுரிமை பெறுகிறார்.

பொதுவாக அடைமானம் எனும் சொல் அசையாச் சொத்தின் தொடர்பு கொண்டே பயன்படுத்தப் படுகிறது. அசையும் சொத்தைப் பொறுத்தவரை அடகு (Pledge) என்னும் சொல்லோ அடைஅடைமானம் (Hypothecation) என்னும் சொல்லோதான் பொருந்தும்.

**அடைமானப் பிணையமும் வங்கியரும்:** அடைமானத்தினைப் பிணையமாகப் பெறும்போது ஒரு வங்கி மிகக் கவனமாக இருத்தல் வேண்டும். சொத்து மாற்றுச் சட்டத்தின் விதிகளை வங்கி முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். அடைமானப் பத்திரம், எதிர்பாராமல் எழும் சிக்கல்களைத் தவிர்க்கும் வண்ணம் எழுதப்பட வேண்டும். வாடிக்கையாளரால் பிணையமாகக் கொடுக்கப்பட்ட சொத்துரிமைப் பத்திரத்திற்கு அவ்வாடிக்கையாளர் உரிமையற்றவர் என்னும் நிலை எழுந்தால், வங்கியின் நிலை இக்கட்டாக அமையும். எனெனில், அத்தகைய சூழ்நிலையில் சொத்துரிமைப் பத்திரத்தில் உண்மை உரிமையாளர், வங்கியிடமிருந்து பத்திரத்தினைப் பெறும் உரிமையினைப் பெறுகிறார். வங்கி நல்ல நம்பிக்கையுடன் செயல்பட்டிருந்தால் கூட அது அந்நிலையில் தனது உரிமையினை இழக்கிறது. மேலும் உரிமைப் பத்திரத்தினைப் பிணையமாகக் கொண்டு வங்கி கடன் வழங்கும்போது, அவ்வங்கி அப்பத்திரங்கள் சார்ந்துள்ள சொத்துகளின் மீது உரிமை பெறுவதில்லை.

கடன் பெற்ற வாடிக்கைக்காரர் கடனை உரிய முறையில் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திவிட்டால் வங்கிக்கு எவ்விதச் சிக்கலும் எழுவதில்லை. அவ்வாறு கடன்தொகை உரிய முறையில் உரிய காலத்தில் திருப்பிச் செலுத்தாத நிலையில், வங்கி அடைமானமாகப் பெற்ற சொத்தினை விற்க வேண்டிய நிலை எழுந்தால் அது வங்கிக்கு மேலும் பல தொல்லைகளைத் தரும். சட்டப்படி கடன் தொகையினைத் திரட்டும்பொருட்டு அடைமானமாக வைக்கப்பட்ட சொத்தினை விற்பனை செய்யப் பல கட்டுப்பாடுகளை நிறைவு செய்தல் வேண்டும். எனவே, அடைமானச் சொத்தினை வங்கி விற்பனை செய்யக் கால நீட்டிப்பு ஏற்படக்கூடும்.

அடைமானமாக வைக்கப்பட வேண்டிய சொத்தின் மதிப்பினை அளவிடுதல் எளிதன்று. வழங்கப்படும் கடன் தொகை சொத்தின் மதிப்பினைப் பொறுத்தே அமைகிறது. தவிர்க்க இயலாத சூழ்நிலையில் வங்கி அடைமானமாகப் பெறவிருக்கும் சொத்துகளின் மதிப்பைக் கணக்கிட வல்லுநர்களின் பணியினைப் பெறுதல் சாலப் பொருந்தும். இது போன்ற பல சிக்கல்கள் இருப்பதால், வங்கி சொத்துகளை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்குதலைத் தவிர்த்தல் நலம். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வங்கி சொத்துகளை அடைமானமாகப் பெற்றுக் கடன் வழங்க வேண்டிய இன்றியமையாமை நேர்ந்தால், அவ்வங்கி கீழ்க்காணும் எச்சரிக்கைகளைக் கையாளுதல் தேவை.

1. சொத்தினைச் சட்ட முறை அடைமானமாகப் பெற்றுப் பதிவு செய்தல் பாதுகாப்பானது.
2. நியாய அடைமான முறையில் சொத்துகளைப் பெற்றுக் கடன் வழங்க வேண்டிய நிலை ஒரு வங்கிக்கு வருமேயானால், அது போன்ற நிலையில் அவ்வங்கி அடைமானம் வைப்பவரிடமிருந்து அடைமானமாக வைக்கப்படும் சொத்து, முன்னரே இதுவரை அடைமானமாக வைக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் சட்டமுறை அடைமானமாக வைக்கப்படமாட்டாது என்றும் எழுத்து மூலமான உறுதிமொழியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.
3. எந்தக் காரணத்தைக் கொண்டும் சொத்துரிமைப் பத்திரங்களை வங்கி அடைமானம் வைப்பவரிடம் கொடுத்தல் கூடாது.

ஆர்.மு.

**அடைமான மீட்புரிமை:** சொத்தினை உறுதி ஈடாகக் காட்டிப் பணத்தினைப் பெற்ற அடைமானம் வைத்தவருக்கு உள்ள உரிமைகளில் தலையாய உரிமை, தாம் பெற்ற அடைமானத் தொகையைத் திரும்பச் செலுத்தித் தமது சொத்தினை மீட்டுக் கொள்ளும் உரிமை. இது அடைமான மீட்சி உரிமை எனப்படும். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் 60-ஆம் பிரிவு, அசல் தொகையைச் செலுத்த வேண்டிய காலம் வந்தவுடன் எப்போது வேண்டுமானாலும் செலுத்தவேண்டிய தொகையினைச் செலுத்திச் சொத்தை மீட்கச் சட்டமுறையான உரிமையை அளிக்கிறது. அடைமானம் வைப்பவர் சொத்தின் உரிமையாளர். இவர், சொத்தை அடைமானம் வைக்கும் போது தம்மிடம் உள்ள பல உரிமைகளில் சில உரிமைகளை மட்டும் உரிமை மாற்றம் செய்கிறார். மற்ற உரிமைகள் அவரிடமே இருக்கின்றன. மீதமுள்ள உரிமைகளைக் கொண்டு தாம் மாற்றிய உரிமைகளை மீட்டுக் கொள்கிறார். இதுதான் அடைமான மீட்பு எனச் சொல்லப்படுகிறது. இது அடைமானத்துடன் இணைந்த சிறப்பியல்பாகும். இது அடைமானம் உயிர் பெற்றிருக்கும் வரை உயிர்பெற்றிருக்கும். இத்தகைய உரிமை வரம்பிலா உரிமையாகும். சட்டமுறையில் கிடைக்கக் கூடியது. அடைமானம் வைப்பவருக்கு இத்தகைய உரிமை கிடையாது என்று கூறியோ கடும் கட்டுப்பாடுகள் விதித்தோ இத்தகைய உரிமையை யாரும் தடுக்க முடியாது. அடைமானத் தொகை செலுத்த வேண்டிய காலம் வந்தவுடன் கால வரம்புச் சட்டத்திற்குட்பட்டு எப்போது வேண்டுமானாலும் இவ்வுரிமையைச் செலுத்தலாம். இவ்வுரிமையைத் தடுப்பதோ மறுப்பதோ அடைமான மீட்சியின் மீதான தடை எனக் கருதப்பட்டுச் செல்லாததாகிவிடும்.

அடைமானம் வைத்தவர் தவிர, வேறு சிலரும் அடைமானத்தை மீட்பதற்கும், அடைமான மீட்பு வழக்குத் தொடுப்பதற்கும் உரிமை பெற்றுள்ளனர். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தின் பிரிவு 59 (அ), அடைமானம் வைத்தவர் என்ற சொல், அவரிடமிருந்து உரிமை பெறுபவர்களையும் உள்ளடக்கும் என்று கூறுகிறது. எனவே அடைமானம் வைத்தவர் தவிர அவரிடமிருந்து உரிமை பெறுகின்றவர்களும் அடைமானத்தை மீட்கலாம். 91-ஆம் பிரிவின்படி அடைமான மீட்பு உரிமை கொண்டவர்களை இரு பிரிவினராகப் பிரிக்கலாம். அவர்கள்: (1) அடைமானச் சொத்தில் உரிமை கொண்டவர்கள் (2) அடைமானச் சொத்தில் உரிமையோ, பொறுப்போ பெறாதவர்கள்.

அடைமானச் சொத்தில் உரிமை கொண்டோரைத் தவிர அடைமான மீட்பில் உரிமை கொண்டோரையும் இப்பிரிவு உள்ளடக்குவதால், துணை அடைமானம் பெற்றவருக்கும் இவ்வுரிமை உண்டு. இதைப் போல் முன் அடைமானத்தை மீட்கப் பின் அடைமானம் பெற்றவருக்கும் உரிமையுண்டு. அடைமான ஆவணத்தில் திரும்பக் கடனைச் செலுத்தும் காலத்தைக் குறிப்பிடாதபோது எப்போது வேண்டுமானாலும் அடைமானம் வைத்தவர் சொத்தை மீட்கலாம். அதேபோல வேண்டும்போது செலுத்துவதாக ஒப்புக் கொள்ளும்போது உடனேயும் செலுத்தலாம். ஆனால் குறிப்பிட்ட காலம் குறிக்கப்பட்டிருக்கும்போது, அந்தக் காலம் முடிவடையுமுன் அடைமானத்தை மீட்க உரிமை கிடையாது. குறிப்பிட்ட காலம் ஒன்று குறிப்பிடப்பட்டிருந்து அதற்கு முன்னதாகக் கூட மீட்கலாம் என்று கடன் அடைமானம் பெற்றவர் ஒப்புக் கொள்ளும்போது, அவர்கள் தங்கள் உரிமையைச் செலுத்துவதில் தடையேதுமில்லை. அடைமானத்தை நிறைவேற்ற உரிமை எழும் வரை, மீட்பதற்கும் உரிமையில்லை. மீட்புரிமையும் மீட்படைப்பும் ஒரே காலத்தில் எழுகின்றன. ஒன்றினைச் செலுத்துவது மற்றொன்றிற்கு முற்றுப்புள்ளி வைக்கும்.

**அடைமானம் மீட்புரிமை அடைப்பு:** அடைமானம் வைத்தவர், 60-ஆம் பிரிவில் பெற்றுள்ள அடைமான மீட்புரிமைக்கு இணையாக, அடைமானம் பெற்றவர் அடைமான மீட்புரிமை அடைப்பு (Right of Fore Closure) என்னும் உரிமையை 67-ஆம் பிரிவின் கீழ்ப் பெறுகிறார். அடைமான மீட்புரிமை அடைப்பு என்பது, அடைமானம் வைத்தவர், இனி அவர் மீட்பதிலிருந்து தடுக்கப்படுகிறார் என்பதைக் கூறும் நீதிமன்ற ஆணை. இவ்வகையான ஆணை பெறப்பட்டவுடன், அடைமானச் சொத்தில் அடைமானம் வைத்தவர் தம் உரிமையை இழப்பர். குறுகிய உரிமையைப் பெற்றிருந்த அடைமானம் பெற்றவர் முழு உரிமையைப் பெறுவார். மீட்புரிமை அடைப்பினைத் தரப்பினர் செயல்படுத்த முடியாது நீதிமன்றத்தின் ஆணையின் வாயிலாகவே செயல்படுத்த முடியும். மீட்புரிமை அடைப்பு, அடைமானம் வைத்தவரின் உரிமையை இழக்கச் செய்யும் உரிமையாகும். மீட்புரிமை அடைப்பிற்கான உரிமை விற்பனை அடைமானத்திலும் தன்வய அடைமானத்திலும் அடைமானம் பெற்றவருக்குக் கிடைக்கிறது.

அடைமான மீட்புரிமைக்கும் மீட்புரிமை அடைப்பிற்குமான உரிமைக்கும் இடையே, ஒரு தலையாய வேறுபாடு உள்ளது. மீட்புரிமை என்பது முழுமையான உரிமை. அதனை எந்தக் கட்டுப்பாட்டினாலும் கட்டுப்படுத்த முடியாது. 'மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாத போது' என்ற சொற்றொடர் 60-ஆம் பிரிவில் இடம்பெறவில்லை. ஆனால், அது 67-ஆம் பிரிவில்

இடம் பெற்றிருக்கிறது. எனவே மீட்புரிமை அடைப்பு உரிமை முழுமையானதன்று. 67–ஆம் பிரிவில் கூறப்பட்டிருப்பதற்கு எதிராகக்கூட ஒப்பந்தம் செய்து கொள்ளலாம்.

**அடைமான மீட்புத் தடை:** அடைமானம் ஒன்றை நிறைவேற்றிக் கொடுக்கும்போது பேரத்தின் ஒரு பகுதியாக, அடைமானம் வைப்பவரின் மீட்சி உரிமைக்கு முரண்படும் வகையில், ஏதாவது ஒப்பந்தம் ஒன்றும் எழுதிக்கொடுத்தால் அது செல்லாது. அடைமானம் உயிரோடு இருக்கும்வரை, கடன் தொகை செலுத்த வேண்டிய காலத்தில் அடைமானம் வைத்தவர், தம் மீட்புரிமையைச் செலுத்தும்போது, எத்தகைய தடங்கலுமின்றிச் சொத்தை விடுவித்துக் கொள்ளலாம். அடைமானம் என்பது கடன் தொகைக்கு ஈட்டுறுதியே அன்றி வேறில்லை. எனவேதான் தொகையைத் திரும்பச் செலுத்தும்போது எத்தகைய கட்டுப்பாடுமின்றி அடைமானம் பெற்றவர் சொத்தை விடுவிக்க வேண்டும். அடைமானத்தின் ஒரு பகுதியாக அமைந்து மீட்புரிமையைத் தடுக்கும் எந்தச் சொற்றொடரும் மீட்புத்தடை (Clog of Redemption) என்று கருதப்படும். இது சட்டப்படி செல்லாது. நீதிமன்றங்கள் இதனை நிறைவேற்றா.

**அடைமானத்தில் கூடுதல் ஆதாயம்:** கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தின் பேரில் வட்டியைத் தவிர வேறு எதைப் பெற்றாலும் அது கூடுதல் ஆதாயம் ஆகும் (Collateral Advantage). இத்தகைய கூடுதல் ஆதாயம் பெறுவது முறையானதா என்ற வினா எழும். கூடுதல் ஆதாயத்திற்கான கட்டுப்பாடுகள் மீட்புத் தடையாகச் செயல்பட்டாலோ மோசமானதாக இருந்தாலோ நிறைவேற்றமுடியாத அளவிற்குக் கடுமையானதாக இருந்தாலோ செல்லாமல் போகா. ஆனால், இத்தகைய ஆதாயத்தை ஒருவர் (அது மீட்புத் தடையாக அமையாமல் இருக்கும்போது) அடைமானக் காலத்திற்குப் பின்பும் பெறமுடியும்.

**மீட்பினால் பெறும் பிற உரிமைகள்:** ஒருவர் தமது சொத்தினை மீட்டுக் கொள்ளும்போது பின்வரும் உரிமைகளையும் பெறுவார்:

1. அடைமான ஆவணம் மற்றும் அடைமானச் சொத்துத் தொடர்பான ஆவணங்களைப் பெறும் உரிமை.
2. உரிமை கொடுக்கப்பட்டிருந்தால் அதனைத் திரும்பப் பெறும் உரிமை.
3. அடைமானச் சொத்தை மீண்டும் தமக்கு உரிமை மாற்றம் செய்ய வேண்டும் உரிமை.
4. ஒருவரிடமே இரண்டுக்கு மேற்பட்ட அடைமானங்கள் இருக்கும்போது ஏதாவது ஒன்றினை மீட்கும் உரிமை.
5. சொத்தில் வளர்ச்சி இருந்தால் அதனைப் பெறும் உரிமை.
6. குத்தகைக்கான உரிமை.
7. அடைமான விகிதப்படி செலுத்தும் உரிமை.

அடைமான மீட்புரிமையை எந்தெந்த வகையில் செலுத்தலாம் என்பதைப் பிரிவுகள் 60, 83 கூறுகின்றன. ஒருவர் பின்வரும் மூன்று விகிதத்தில் செலுத்தலாம்:

1. நேரடியாக நீதிமன்றத்திற்கு வெளியே முதல் தொகை செலுத்த வேண்டிய முறை வந்ததும் தக்க இடத்தில், நேரத்தில் அடைமானம் பெற்றவரிடத்தில் அடைமானப் பணத்தைச் செலுத்தலாம் அல்லது ஒப்படைக்கலாம்.
2. அடைமானம் வைத்தவர் நீதிமன்றத்தில் தொகையை ஒப்படைக்கலாம்.
3. அடைமானம் வைத்தவரோ 91–ஆம் பிரிவில் குறிப்பிட்ட அடைமான மீட்புக்கு உரிமையுள்ளவர்களோ அடைமான மீட்புக்கு வழக்குத் தொடுப்பதன் மூலம் மீட்புரிமையைச் செலுத்தலாம்.

**பகுதி அடைமான மீட்சி:** அடைமானம் என்பது ஒன்று. அதனைப் பகுக்க முடியாது என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையாகும். அடைமானம் ஒன்றாக இருக்கும் வரை, அதன் ஒவ்வொரு பகுதியும் முழு அடைமானக் கடனுக்கு உட்பட்டது. 60–ஆம் பிரிவின் இறுதி கட்டுப்பாட்டுச் சொற்றொடர், அடைமான உறுதி ஈட்டினைப் (Security) பகுக்க முடியாது என்ற கோட்பாட்டினை ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே, ஒரு சொத்து, பலருக்கு உரிமை உடையதாக இருந்து, அடைமானம் வைக்கப்பட்டிருந்தால், அவர்களுள் ஒருவர், தம் பங்கிற்குரிய பணத்தை விகிதாசாரப்படி செலுத்திவிட்டுத் தம் பங்கை மட்டும் மீட்க முடியாது. இவ்வாறே, அடைமானம் பெற்றவர்கள் பலர் இருக்கும்போது அவர்களுள் ஒருவரின் கடனை மட்டும் செலுத்திவிட்டு அடைமானம் வைத்தவர் மீட்க முடியாது. இச்சட்டவிதி அடைமானம் பெற்றவருக்கு நன்மை பயக்கும் விதத்தில் அமைந்தது. பகுதி அடைமான மீட்சி (Partial Redemption) அனுமதிக்கப்பட்டால் பல வழக்குகள் எழும். ஒவ்வொருவருக்கும் எதிராக வழக்குத் தொடர நேரிடும். இதனால் அடைமானம் பெற்றவர் பாதிக்கப்படுவர். ஆனால், அடைமானச் சொத்தில் அடைமானம் பெற்றவர் ஒருபகுதியைப் பெறும்போது அடைமானச் சிதைவு ஏற்படுகிறது. அப்போது மற்றவர்கள் தங்கள் பகுதிகளை மீட்டுக் கொள்ளலாம்.

**சேர்ந்து மீட்கும் உரிமை ஒழிப்பு:** அடைமானம் பெற்றவர், தம்மிடம் ஒருவர் பல அடைமானங்களை

வைத்திருக்கும் போது, எல்லா அடைமானங்களையும் ஒரே சமயத்தில்தான் மீட்க வேண்டும் என்று விரும்பும் உரிமைதான், சேர்ந்து மீட்கும் உரிமை (Right of Consolidated Redemption) எனப்படும். இவ்வாறு அவர் வேண்டும்போது, அடைமானம் வைத்தவர் மற்ற அடைமானங்களை மீட்காமல் ஒரே ஓர் அடைமானத்தை மட்டும் மீட்க முடியாது. இக்கோட்பாடு சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. 61-ஆம் பிரிவின்கீழ் ஒருவர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடைமானங்களை எழுதிக் கொடுத்திருந்தால், மாறுபட்ட ஒப்பந்தம் இல்லாத போது, ஏதாவது ஓர் அடைமானத்தைத் தனியாகவோ எவையேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அடைமானங்களைச் சேர்த்தோ மீட்கலாம். எனவே அடைமானம்பெற்றவர் எல்லா அடைமானங்களையும் சேர்ந்தே மீட்க வேண்டும் என்று அடைமானம் வைத்தவரை வற்புறுத்த முடியாது.

அடைமான மீட்புரிமை மறைதல்: அடைமான மீட்புரிமை எவ்வழிகளில் அழிகிறது என்பதை 60-ஆம் பிரிவின் இரண்டாம் பத்தி குறிப்பிடுகிறது. அவையாவன:

அ) தரப்பினரின் செயல்.

ஆ) நீதிமன்றத்தின் தீர்ப்பாணை.

தரப்பினர் செயல்: அடைமானப் பேரத்திற்குப் பின்னர்ச் செய்யப்படுவதே தரப்பினர் செயலாகும் (Act of parties). அடைமான ஒப்பந்தத்திலேயே அடைமான மீட்புரிமை மறைவதற்கு (Extinguishment of Redemption) ஒப்பந்தம் ஏதும் செய்ய முடியாது. அது அடைமான மீட்புத் தடைக்கு ஒப்பாகும். இச்செயல் அடைமானப் பேரத்திலிருந்து தனிப்பட்டதாக, அதற்குப் பிந்தியதாக இருக்க வேண்டும். அடைமானத்திலேயே அடைமானம் வைத்தவர், தாம் குறிப்பிட்ட தேதியில் பணத்தைச் செலுத்தவில்லை என்றால் அடைமானம் பெற்றவருக்கு அடைமான மீட்பினை அடைப்பதற்கு உரிமையுண்டு என்று ஒப்புக் கொள்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அடைமானம் பெற்றவர் அடைமான மீட்புத் தடைக்கான தீர்ப்பாணை பெறும் வரை மீட்புரிமை முடிவுக்கு வாராது. அடைமானத்திற்குப் பிறகு, அடைமானம் வைத்தவரிடமிருந்து அடைமானம் பெற்றவர், அடைமான மீட்புரிமையை விலைக்கு வாங்கலாம். இச்செயலால் அடைமான மீட்புரிமை முடிவுக்கு வரும்.

நீதிமன்றத்தின் தீர்ப்பாணை: அடைமானம் வைத்தவர் மீட்புரிமை, வழக்குகளின் தீர்ப்பாணையாலும் அழிவுறும். ஆ.ச.

அடைமானச் சொத்தின் வரிசை உரிமை: பல சூழ்நிலைகளில் ஒருவன் தன் கைப்பொருளைப் பிறரிடம் மாற்றும்போது ஏற்படும் மாற்றங்களை விளக்குவது சொத்துரிமை மாற்றுச் சட்டம் ஆகும். சொத்துரிமை மாற்றுச் சட்டம் கி.பி. 1882-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதி நடைமுறைக்கு வந்தது. இங்குப் 'பொருள், என்பது சொத்தினைக் குறிக்கும். சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் சொத்தினைப் பற்றிய பொருள் கூறப்படவில்லை. சொத்து என்னும் சொல், பரந்த பொருள் கொடுப்பதாக இச்சட்டத்தின் கண் அமைந்துள்ளது. ஒருவருடைய உடைமையில் இருக்கும் பொருளை மட்டும் அது குறிக்காமல், அப்பொருளின் மீது அவர் கொண்டிருக்கும் கட்டுப்பாட்டினையும் உரிமையையும் குறிக்கும்.

அடைமானச் சொத்தின் வரிசை உரிமைக் கோட்பாடு: சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் பிரிவு 81, அடைமானச் சொத்தில் வரிசை உரிமைக் கோட்பாட்டினை (Marshelling) விளக்குகிறது. ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட அசையாச் சொத்துகள் இருக்கின்றன. இவற்றில் சில சொத்துகளை அவர் ஒருவரிடம் அடைமானமாக வைக்கிறார். அதற்குப் பின் இரண்டாம் முறை மற்றொருவரிடம் முதல் அடைமானச் சொத்துகளில் ஒரு சிலவற்றை மட்டும் அடைமானமாக வைக்கிறார். இந்நிலையில் இரண்டாம் அடைமானத்திற்கு உட்பட்ட சொத்துகளை விட்டு விட்டு, மற்றச் சொத்துகளைப் பொறுத்த மட்டும் முதல் அடைமானம் செய்தவர் தமது கடனை வசூல் செய்ய முதலில் முயல வேண்டும் என்ற உரிமை இரண்டாம் அடைமானம் செய்தவருக்கு உண்டு.

அடைமான விகிதப் பொறுப்புக் கோட்பாடு: அடைமானச் சொத்து, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்டவர்களுக்குச் சொந்தமாயிருந்தால், அடைமானத் தேதியன்று அவர்களுடைய பங்குகளின் மதிப்பு விகிதாசாரப்படி கடனடைத்தல் வேண்டும்.

மாற்றமர் அடைமான உரிமைக் கோட்பாடு: ஒருவர் மற்றொருவரின் கடனை அடைக்கும்போது, அவர் அந்த மற்றொருவரின் உரிமைகளைப் பெறுவார் என்பதாகும். மேற்கண்ட தொடர் அடைமானங்களில் ஏற்படும் விளைவுகளில் அடைமானச் சொத்தின் வரிசை உரிமைக் கோட்பாடு ஒரு சிறப்புக் கோட்பாடாகும்.

பொதுவாக, சொத்துரிமை மாற்றுச் சட்டத்தில் ஒருவர் தம்மிடம் உள்ள சொத்துரிமையை இழக்காமல் சொத்தின் மீதுள்ள உரிமையை மட்டும் மற்றொருவரிடம் மாற்றிவிட்டு, அதன் பயனாகக் கடன் பெற்றுப் பயனடைவதும், மீண்டும் கடனைத் திருப்பி அளித்துவிட்டுச் சொத்தினைத் திரும்பப் பெறுவதும் அடைமானத்திற்கு உரிய தனிச் சிறப்பாகும். மேலும், ஒரே சொத்தை மீண்டும் மீண்டும்

அடைமானம் வைப்பது அடைமானத்தில் வழக்கமாக நடைபெறுவதாகும். முதன்மை அடைமானம் பெற்றவர் அல்லது தொடர் அடைமானத்தில் பின்னர் அடைமானம் பெற்றவர், அடைமானம் செய்தவர் என்ற முறையில் அவர் மேற்கண்ட அடைமானச் சொத்தின் வரிசை உரிமைக் கோட்பாட்டை நன்கு தெரிந்து கொண்டால்தான் அவர் கொடுத்த கடனை இழக்காமல் உரிய பயன்பெற முடியும். ஆ.மு.

துணை நூல்கள்:


**Mulla**, **D.F.**, "Transfer of Property Act", N.M. Tripathi, Bombay-19.

**Mitra, B.B.**, "Transfer of Property Act", Eastern Law Book House, Calcutta, 1984.

**Bare, ACT**, "Transfer of Property Act IV of 1882 as Amended by Act 1929".


**அடையாள மொழி**: 'மொழி' என்பது மனிதன் பேச்சாலும் எழுத்தாலும் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிப்பது என்னும் கருத்தோடு, அவன் தன்சைகையாலோ படத்தாலோ குறியீட்டாலோ ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவித்தலும் ஆகும் என்று விளக்குவது பொருந்துவதாகும். கருத்தைப் புலப்படுத்தும் முறையோ வழியோ எவ்வாறு இருப்பினும் கருத்தை இருவர் புரிந்துகொண்ட மாத்திரத்திலேயே மொழியின் செயல் ஓரளவு நிறைவு பெற்று விடுகிறது. இத்தகைய மொழி, மனித வரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே அவன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய உணர்வோடு முயன்று வந்த முயற்சியின் முற்றிய வளர்ச்சியேயாகும்.

மொழித் தோற்றம் பற்றிய கருத்துகள் இன்றும் ஆய்வுக்குரியனவாக உள்ளன எனலாம். கடவுளால் வழங்கப்பட்டது மொழி என்னும் பழங்காலக் கொள்கை உலகெங்கும் காணப்படுகிறது. ஈடன் தோட்டத்தில் கடவுள் சுவீடிசு (Swedish) மொழியைப் பேசினார் என்றும், ஆதாம் (Adam) தேனிசு (Danish) மொழியைப் பேசினான் என்றும், பாம்பு பிரெஞ்சு மொழியைப் பேசியது என்றும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுவீடன் என்ற மொழியியல் அறிஞர் கூறுகிறார். நம் நாட்டிலும் சிவபெருமான் பாணினிக்கு வடமொழியையும்,அகத்தியருக்குத் தமிழையும் கற்பித்தார் என்ற புராணக் கதை நிலவுகிறது. இத்தாலி மொழி தாந்தே என்னும் கவிஞராலும், ஆங்கிலம் சாசர் (Chaucer) என்னும் புலவராலும், செருமானிய மொழி மார்ட்டின் லூதர் (Martin Luther) என்னும் அறிஞராலும், தச்சுமொழி (Dutch) பெடர்சன் (Pederson) என்பவராலும் போற்றி வளர்க்கப்பட்டன என்று ஐரோப்பியர் நம்பினர்.

மொழியின் தோற்றத்தைப் பற்றி ஆராயப் பல்வேறு காலங்களில் பல்வகை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மானிட மொழியியல் அறிஞர்கள் (Anthropological Linguists) மொழியின் தோற்றம், வளர்ச்சி இவற்றை மூன்று நிலைகளில் ஆராய்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| i. | அடையாள மொழி | (Gesture Language) |
| ii. | பேச்சு மொழி | (Speech Language) |
| iii. | எழுத்து மொழி | (Written Language) |

மொழியின் தோற்றத்தை ஆராயும்போது, மனிதனின் படிநிலை வளர்ச்சியும் ஆராயப்படும். மனித இன வளர்ச்சியை விலங்கினங்களைக் கொண்டு ஆராய்வது போன்று, மொழியின் தோற்றத்தை ஆராயும் போதும் எவ்வாறு விலங்குகள் தம் எண்ணங்களைச் சைகையாலும் ஒலிக் குறிப்பாலும் தெரிவிக்கின்றன என்பதையும் ஆராயவேண்டும். விலங்கினங்களின் செயல்களை வைத்து மனித மொழியின் தோற்றத்தை ஆராய முற்பட்டனர். தேனீ தனது கருத்தைப் பல்வேறு கோணங்களில் நடனமாடிப் பிற தேனீக்களுக்குத் தெரிவிக்கின்றது என்று அறிவியலார் நம்புகின்றனர். இச் சைகைகள் (Gestures) வாயிலாகத் தேன் கிடைக்கும் திசை, செல்ல வேண்டிய வழி ஆகியவற்றைப் புரியவைக்கிறது. எறும்புகள் மூன்றுவகைச் சைகைகள் மூலம் தம்முள் கருத்துகளைப் பரிமாறிக் கொள்கின்றன என உருசியப் பேரறிஞர் மாரிகாவுசுகி கூறுகிறார். சைகைகளுள் சிலவற்றைக் கட்டளையிடவும், சிலவற்றைப் புதிய வாசனையை உணர்த்தவும், சிலவற்றைத் தேவைகளை வெளிப்படுத்தவும் எறும்புகள் பயன்படுத்துகின்றன என்பது இவரது ஆய்வின் முடிபாகும். இச் சைகைகளை மற்ற எறும்புகள் புரிந்து கொள்ளும். இவ்வாறு விலங்கினமும் பறவையினமும் சைகைகள் வாயிலாகத் தமக்குள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்கின்றன. குரங்கினமும் தம் எண்ணங்களைச் சைகைகள் வாயிலாகப் பரிமாறிக் கொள்கின்றன என அறிவியலார் நம்புகின்றனர். ஆதிகால மனிதன் காட்டில் வேட்டையாடும்போது விலங்கினமும் பறவையினமும் இயற்கையாக ஒலித்த ஒலிகளையே பாவனை செய்து ஒலித்து, அதனால், "இன்னின்ன விலங்குகளையும் பறவைகளையும் வேட்டையாடி வந்தேன்" என்று பிறருக்குத் தெரிவித்து மகிழ்ந்தான் என்று மொழித் தோற்றத்தைப் பற்றிய பாவனை மொழிக் கோட்பாடு விளக்குகிறது. ஆதிகால மனிதனின் இம்முயற்சி மொழித் தோற்றத்திற்கு அடிப்படையானதாகும்.

பழங்காலத்து மனிதனும் மொழி வளராத காலத்தில் அடையாளங்கள் அல்லது சைகைகள் வாயிலாகவே தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவித்

திருக்க வேண்டும். பழங்கால மனிதனின் மொழி வளர்ச்சியில் சிறந்த பல அமைப்புகளோடு கூடிய ஒரு சைகை மொழி இருந்திருக்க வேண்டும். இதற்குச் சான்றாக இன்று மக்கள் பல கருத்துகளைச் சைகைகள் வாயிலாகத் தெரிவிப்பதனைக் காட்டலாம். இவ்வடையாள மொழியிலிருந்தே மொழி, தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனச் சில மொழியியல் பேரறிஞர்கள் கருதுகின்றனர். சைகை மொழியும் வாய்மொழியும் இணைந்து இன்றைய மொழி உருவானது எனக் கொள்ளலாம். சைகைகள் தொன்றுதொட்டே மொழியாகக் கருதப்பட்டு வந்துள்ளன. முகக் குறிப்பு, மெய்ந்நிலை, போலி ஒலி என்பனவும் மொழியாகக் கருதப்பட்டனவே. சைகையாய், குறிப்பாய், போலியாய் இருந்த நிலை படிப்படியே வளர்ந்து சிறந்து பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு மக்களிடத்தில் உயர்நிலை அடைந்திருக்கிறது. வரி வடிவமாகவும் ஒலி வடிவமாகவும் இன்று நாகரிக மக்களிடையே நிலவும் மொழி, இந்த வளர்ச்சியாகிய கூர்தலறத்தின் (Evolution) பயனே ஆகும்.

அடையாள மொழியைப் பழங்கால மனிதன் தன் கருத்தைப் பிறருக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தியிருக்க வேண்டும். பேச முடியாத ஊமையர்களிடம் இன்றும் இந்தச் சைகைகளைக் காண்கிறோம். பேச்சு இல்லாத நிலையில் சைகைகளைப் பயன்படுத்தித் தன் கருத்துகளைப் புலப்படுத்துவதனை இன்றும் காணலாம். மொழி வளர்ச்சி பெறாத காலக் கட்டத்திலும் அடையாள மொழி அல்லது சைகை மொழியைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். பசி உள்ளவன் வயிற்றைக் காட்டுவதும், நீர் வேட்கை உள்ளவன் கையைக் குவித்து வாயருகே காட்டுவதும், அடித்தலைப் புலப்படுத்தக் கையை ஓங்குவதும், ‘உன்னை ஒருகை பார்க்கிறேன்’ என்பதை உணர்த்த மற்ற விரல்களை மடக்கிக் கொண்டு பெருவிரலை நிமிர்த்திக் காட்டுவதும், பேச வேண்டாம் என்பதைக் கையால் வாயை மூடிக் காட்டுவதும், இன்றும் காணப்படுகின்றன. இவையெல்லாம் விரும்பிச் செய்யும் இயல்பினாலானவை (Intentional) யாகும். ஒரு மொழி அறிந்த பழங்குடி மக்களிடத்தில் அவர்தம் மொழியை ஆய்வு செய்தற்காகக் கள ஆய்வு செய்யும்போது தொடக்கநிலையில் சைகைகள், படங்கள் வாயிலாகத் தொடர்பு கொண்டுதான், இப்பொருளுக்குரிய தரவுகளைச் (Data) சேகரிக்கலாம் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. உள்ளத்து உணர்ச்சிகள் அனைத்தையும் சைகைகளால் உணர்த்த முடியாது. அருகில் உள்ளவர்களிடம்தான் சைகைகளால் கருத்தைப் புலப்படுத்த முடியும். இரவு நேரங்களிலும் சைகைகளால் கருத்தைப் புலப்படுத்த முடியாது. தென்னாப்பிரிக்காவிலுள்ள பழங்குடி மக்கள் இரவு நேரத்தில் கருத்தைப் புலப்படுத்த, தீயைவளர்த்துப்பின்னர்ச் சைகை வாயிலாக வெளிப்படுத்துவர். சைகை முறை இரு வகைப்படும்.

i. பாவனைச் சைகை முறை (Mimetic gesture)

ii. குறியீட்டுச் சைகை முறை (Pointing gesture)

பாவனைச் சைகை முறை மிகத் தொடக்கக் காலத்திலேயே வளர்ச்சி பெறலாயிற்று. குறியீட்டுச் சைகை முறை பேச்சு வளர்ச்சியின் ஒரு காலக் கட்டத்தில் தோன்றியதாகும்.

கைகளைப் பயன்படுத்திச் சைகை செய்த மனிதன், கைகளைப் பயன்படுத்தி வேலைசெய்யத் தொடங்கினான். அந்நிலையில் கையாலோ கண்ணாலோ சைகைகள் செய்து தன் கருத்தைப் புலப்படுத்த முடியவில்லை. இந்நிலையில் மனிதன் வாய்மொழிச் சைகைகளைக் (Mouth gestures) கையாண்டான். இதுவே இக்கால மொழிவளர்ச்சிக்குத் தோற்றமாக அமைந்தது என்று இரிச்சர்டு பிகாட்டு (Pigott, Richard) என்ற அறிஞர் கருதுகிறார். பேச்சு உறுப்புகளின் அசைவுகளால் எண்ணங்களை வெளிப்படுத்திய எளிமையும், சைகைகளையே எப்போதும் பயன்படுத்த இயலாமையும் வாய்மொழிச் சைகைகளுக்கு முதன்மை கொடுக்கப்பட வேண்டிய நிலையை உருவாக்கின எனலாம். குறிப்பிட்ட வகையில் ஒரு குறிப்பிட்ட சைகையின் பொருளை உணர்த்த, ஒரு குறிப்பிட்ட ஒலியை வெளிப்படுத்தியதின் முதல்படி, மொழியின் ஒலியமைப்பு முறைக்கு (Articulated Structure) அடிப்படையாக அமைந்தது. எனவே, பேச்சு உறுப்புகளின் குறிப்பிட்ட சில அசைவுகள் உணர்த்திய வாய்மொழிச் சைகைகளும் ஏனைய சைகைகளும் கொண்ட ஒரு மொழி மனிதனுடைய மொழி வரலாற்றில் இருந்திருக்க வேண்டும் என்பதை ஆராய்ச்சி காட்டுகிறது. சைகைகளை மொழியிலிருந்து பிரித்து நோக்க முடியாமையும் குறிப்பிடத்தக்கதாகும். ஒருவர் மொழியை மற்றவர் அறியாத வெவ்வேறு மொழி பேசும் இருவர் தத்தம் கருத்துகளைச் சைகைகள் வாயிலாகவே முதலில் புலப்படுத்துவதை இன்றும் காணலாம்.

அடையாள அல்லது சைகை மொழிக்கு அடுத்த நிலையில், மொழியின் தோற்ற வளர்ச்சி பற்றி ஆராய்ந்ததன் விளைவாகக் கீழ்க்கண்ட ஐந்து கோட்பாடுகள் உருவாயின.

i. பாவனை மொழிக் கோட்பாடு (The Bow-vow theory)

ii. உணர்ச்சி மொழிக் கோட்பாடு (The Pooh-pooh theory)

iii. பண்பு மொழிக் கோட்பாடு (The Ding-Dong theory)

iv. ஏலேலோ மொழிக் கோட்பாடு (Yo-he-ho theory)

v. இன்பப்பாட்டு மொழிக் கோட்பாடு (The Lyric theory)

இக்கோட்பாடுகள் அறிவியல் அடிப்படையில் அமையாமல், மொழியைப் பற்றிய கதைகள் போன்று உள்ளன என்பர் மொழியியல் அறிஞர் சிலர். எனினும் மொழியின் தோற்ற வளர்ச்சியை ஆராய, ஓரளவு இக்கோட்பாடுகளும் உதவுகின்றன என்பதை மறுப்பதற்கில்லை. மொழியின் தோற்ற வளர்ச்சியில் அடையாள மொழி அல்லது சைகை மொழி முதல் படி நிலை என்று கூறலாம். சு.சக்தி

**அடையாறு**: தென் சென்னை மாநகரின் கிழக்குக் கடற்கரையையொட்டி உள்ளதொரு பகுதி; சென்னை மாநகர் வட்டங்களுள் ஒன்றாகும். அனைத்து உலக பிரமஞான சபையின் மையம் அடையாற்றில் உள்ளது. டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் பெயரால் குறிக்கப்பெறும் நூல் நிலையமும் இம்மையத்தில் உள்ளது. இங்கு அரும்பெரும் நூல்களையும் ஓலைச் சுவடிகளையும் காணலாம். திருமதி உருக்குமணிதேவி அருண்டேல் அம்மையார் நடத்தும் கலாசேத்திரப் பள்ளியும் அன்னி பெசண்டு அம்மையார் (Annie Besant) உயர்நிலைப் பள்ளியும் இங்குள்ளன. பெசண்டு அம்மையார் தாம் வாழ்ந்த காலத்தில் அடையாற்றையே தம் அரசியல் நடவடிக்கைகளின் தலைமையிடமாகக் கொண்டிருந்தார். அடையாறு என்பது ஓர் ஆற்றின் பெயர். அடையாற்றின் இடக்கரையில் செட்டிநாடு அரண்மனையும் வலக் கரையில் பிரமஞான சபையும் அமைந்துள்ளன. அவ்வை இல்ல ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும், கர்னல் ஆல்காட்டு (Col.Olcott) உயர்நிலைப் பள்ளியும் மத்திய அரசாங்கத் தொழில் நுட்பப் பள்ளியும்., அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகமும், இந்தியத் தொழில்நுட்ப நிறுவனமும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவான அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரியும், தோல் பதன் செய் தொழில்நுட்பக் கல்லூரியும், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும் அடையாற்றில் அமைந்துள்ளன. உலகப் புகழ்பெற்ற புற்றுநோய் மருத்துவமனை ஒன்று அடையாற்றில் உள்ளது. அடையாற்றை மையமாகக் கொண்ட காந்திநகர், கஸ்தூரிபாய் நகர், இந்திரா நகர், பக்தவத்சலம் நகர், பெசண்டு நகர் போன்ற குடியிருப்புப் பகுதிகளில் நடுத்தர வகுப்பினர் வாழ்கின்றனர். அடையாறு பிரமஞான சபையில் ஆண்டாண்டுக் காலமாக உள்ள பெரியதோர் ஆலமரம் வனப்புமிக்கதாகும். அதன் அடியில் 1000 பேர் அமர்ந்து தியானம் செய்ய முடியும்.

முதல் கருநாடகப் போரில் (1740-1748) அடையாறு சிறப்பிடம் பெறுகிறது. அடையாற்றின் கரையில் நடைபெற்ற போர் ஒன்றில்தான், கருநாடக நவாப்பின் பெரும்படையைப் பிரெஞ்சுக்காரர்களின் சிறுபடை ஒன்று தாக்கிப் புறமுதுகிட்டு ஓடச் செய்தது. கட்டுப்பாடு மிக்க ஐரோப்பியப் படை எண்ணிக்கையில் சிறியதாயிருப்பினும், கட்டுப்பாடில்லாத இந்தியப் பெரும்படையையும் எளிதில் வெல்லக் கூடும் என்பதற்கு ஒரு பெருஞ் சான்றாக அடையாற்றுப் போர் விளங்கியது.

**அடையாறு நூலகம்**: அடையாறு நூலகமும் ஆராய்ச்சி நிலையமும் அனைத்துலக பிரமஞான சங்கத்தினைத் தோற்றுவித்தவரும் தலைவருமான கர்னல் எச்.எசு.ஆல்காட்டு அவர்களால் 1886-ஆம் ஆண்டு நிறுவப்பெற்றன. கீழை நாட்டு இலக்கியங்களைப் பாதுகாத்துப் புத்துயிர் தரவும், பல்வேறு சமயங்கள், தத்துவம், அறிவியல் ஆகிய கலைகளை ஆராய்ந்து கற்கவும் ஆசியாவிலேயே இந்நிறுவனம் முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது.

கர்னல் ஆல்காட்டு இந்நூலகத்தை முதலில் தம்மிடமும் பிரமஞான சங்கத்தின் துணை நிறுவனரான திரு. எச்.டி. பிளாவட்சுகியிடமும் இருந்த ஏறக்குறைய 200 நூல்களைக் கொண்டு தொடங்கினார். ஆல்காட்டு வெளியிட்ட நூல்களும், பல்வேறு சயமங்கள், தத்துவக் கோட்பாடுகள் பற்றிய நூல்கள் முதலியனவும் பின்பு சேர்க்கப்பட்டன. மேலும், அவர் பல நூல்களை இந் நூலகத்திற்காகச் சேகரித்து வந்தார். கீழை நாட்டு மேலைநாட்டு நூல்கள், மீண்டும் அச்சில் வாராத பல முதற் பதிப்பு நூல்கள், வடமொழி, பாலி மொழி, இந்தி, தமிழ், சீனம், சப்பானியம், திபேத்திய மொழிகள், கிரேக்கம், இலத்தீன், பிரெஞ்சு, செருமன், இத்தாலி, இசுபானிசு, (Spanish), தச்சு (Dutch), ஆங்கிலம் முதலிய பலவேறுபட்ட மொழிகளில், பல்வேறு பொருள்கள் பற்றியனவாக உள்ள பல்வேறு துறைசார்ந்த நூல்களை இந்நூலகத்தில் சேர்த்தார். இவ்வாறு சேகரிக்கப்பட்டவற்றுள் மரப்பட்டையில் செய்யப்பெற்ற காகிதத்தின்மீது வரையப்பட்ட திபேத்து நாட்டுக் கையெழுத்துப் படிகள் இந்நூலகத்திற்குத் தனிச்சிறப்புக் கொடுக்கின்றன. விலை மதிக்க முடியாத உயர்ந்த சேகரிப்பு நூல்களுள் சீனம், சப்பான், பர்மா, சிங்களம், சையாம் ஆகிய நாட்டு மொழிகளில் எழுதப்பட்ட புத்தமத அறிவுரைகளான திரிபிடக நூல்களும் அடங்கும். தொன்மை வாய்ந்த இசுலாமியச் சுவடிகள், பௌத்த சமயச் சுவடிகள், நேபாளச் சுவடிகள், பாரசீக மொழிச் சுவடிகள், சீன மொழியில் உள்ள கலைக்களஞ்சியம், சீன நூல் விவரப்பட்டியல், இலத்தீன் நூல்கள், விவிலிய நூலின் பல்வேறு

பதிப்புகள், பிளேட்டோவின் நூல்கள், கீதை மொழி பெயர்ப்பு, ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கும் முற்பட்ட பழமையான, புத்தர் பெருமானின் சித்திரங்கள் வரையப்பட்ட காகிதச் சுருள்கள், டாக்டர் அன்னி பெசண்டு அம்மையாரின் அரசியல் வாழ்க்கை பற்றிய நூல்கள், அவர் நடத்தி வந்த 'நியூ இந்தியா', ஓம்-ரூல் (Home rule) பற்றிய சிறு வெளியீடுகள் ஆகியவை இந் நூலகத்தில் உள்ளன. இந்தியச்சுதந்திர இயக்கம் பற்றி ஆய்வு செய்ய விரும்பும் ஆய்வாளர்களுக்கு இது மிகுதியாகத் துணை செய்யும்.

உலகெங்குமுள்ள, சிறப்பாக நடைபெற்றுவரும் ஏறத்தாழ 130 பருவ ஏடுகள் இங்கு மாற்று முறையில் வருகின்றன. உலகிலுள்ள அறுபது நாட்டுப்பிரம ஞான சங்கங்களின் பருவ ஏடுகளையும் இங்குக் காணலாம். பருவ ஏடுகள் நீங்கலாக ஏறக்குறைய இலட்சத்திற்கும் மேற்பட்ட அச்சு நூல்கள், பனையோலைகளிலும் காகிதத்திலும் எழுதப்பட்ட 17,300 ஏட்டுச் சுவடிகள் இங்கு உள்ளன. பல்வேறு மொழிகளைச் சார்ந்த ஏறத்தாழ 40 000 சுவடிகள் இங்குள்ளன. அத்வைதத்தைச் சார்ந்த வேதாந்த விளக்கத்துடன் கூடிய 108 உபநிடதங்களையும் இங்குக் காணலாம்.

கர்னல் ஆல்காட்டு இந்நூலகத்தைக் கீழைநாட்டுச் சமயம், தத்துவம், பண்பாடு பற்றிய, சாதிமொழி இன வேறுபாடற்ற ஆராய்ச்சி நிறுவனமாகத் தொடங்கினார். ஆசிய நாட்டு இளைஞர்களின் உள்ளத்தில் ஆன்மீக மேம்பாட்டை விளைவிக்கவும், சமுதாயத்தில் அறிஞர்களின் மதிப்பு உயர்வதற்கேற்ற வகையில் சீரமைக்கவும் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள அறிஞர்களிடையே நன்முறையில் பரிமாற்ற மதிப்பினைத் தோற்றுவித்து உறுதிப்படுத்தவும் இந் நிலையம் பணியாற்ற வேண்டுமென்பது அவர் கருத்தாகும்.

அடையாறு நூலக வெளியீட்டுத் தொடர்வரிசையில் இதுவரையிலும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களும், ஏறத்தாழ நாற்பது சிறு வெளியீடுகளும் வெளியிடப்பட்டுள்ளன.

நூலகம் சேகரித்துள்ள சுவடிகளின் விவரமான பெயர்ப்பட்டியலும் உள்ளது. 1937–ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் 'பிரம்ம வித்யா' அல்லது 'அடையாறு நூலக இதழ்' என்னும் ஓர் ஆராய்ச்சிப் பருவ இதழினை வெளியிட்டு வருகிறது. இந்நூலகம் தனது அரிய சேகரிப்பு நூல்களின் மூலமும் வெளியீடுகளின் மூலமும், உலகெங்குமுள்ள அறிஞர்களுடனும் பல ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றுடனும் தொடர்பு கொண்டுள்ளது. இந்நூலகத்தில் சிறந்த நுண்ணிழற்படக் கருவி (Microfilm) உள்ளது.

இது தேவையான, பரந்த படிப்பறைகளும், இரண்டரை இலட்சம் நூல்களைச் சிறந்த வகையில் பாதுகாப்பதற்குரிய அறைகளும் கொண்டதாக விளங்குகிறது.

**அடைவுச் சோதனைகள்**: தனி மனிதன் தன்னுடைய தொழிலில் எந்த அளவிற்குத் திறமை பெற்றிருக்கிறான் என்பதை அளவிட உதவும் உளவியல் சோதனைகள், அடைவுச் சோதனைகள் (Achievement Tests) எனப்படும்.

தொழிலகங்களிலும் அரசு அலுவலகங்களிலும் இராணுவத்திலும் நிறுவனங்களிலும் பணியாளர் திறன் மதிப்பீட்டிற்காக அடைவுச் சோதனைகள் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தொழிலகங்களில் இவை தொழிற் சோதனைகளாக அமைக்கப்படுகின்றன. பணியாளர்களின் பயிற்சி முடிந்த பின் அவர்களைக் குறிப்பிட்ட நுட்பத் தொழிலுக்காகத் தேர்ந்தெடுக்கும் பொழுது, இச்சோதனைகள் பயன்படுத்தப்படுகின்றன. பதவி உயர்வு, பணிமாற்றம் போன்றவற்றிற்கும் இச்சோதனைகள் பயனுள்ளனவாக இருக்கின்றன. இவை குறிப்பிட்ட தொழில் தொடர்புள்ளவையாக இருப்பதால், பணியாளரும் மேலாண்மையினரும் இவற்றைப் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கின்றனர். பெரும்பான்மையான அடைவுச் சோதனைகள் பல்வேறு பணிகளுக்காக அவ்வப்போது தரப்படுத்தப்படுகின்றன.

தொழில் அடைவுச் சோதனைகளில் பல்வேறு முறைகளைக் கையாளுகின்றனர். சொற் சோதனைகளும் செயற் சோதனைகளும் பணியாளரின் தொழிலுக்கு ஏற்பவும் அமைக்கப்படுகின்றன. இத்தகைய சோதனைகளில் சில தொழில் செயல் முறையைஒட்டி அமைந்திருக்கும். எ-டு. ஊர்திகளை ஓட்டுதல், பாடுதல் போன்றவை அச்செயலைச் செய்யும் பொழுதே மதிப்பீடு செய்யப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட பொருளுக்குச் சிறந்த விளம்பரத்தை உருவாக்கும் பணியை மதிப்பீடு செய்யும்பொழுது அச்செயல் நிகழ்முறை முதன்மையானதாகக் கருதப் படுவதில்லை. அதற்கு மாறாக, விளம்பரத்தினால் விற்பனையாகும்பொருள்களின் அளவு, எண்ணிக்கை ஆகியவற்றைப் பொறுத்து மதிப்பீடு அமைகிறது. அடைவுச் சோதனைகளை மதிப்பீடு செய்யும்பொழுது தனிமனிதனின் விருப்பு, வெறுப்பு, சார்பெண்ணங்கள் போன்றவற்றின் பாதிப்பினைத் தவிர்ப்பதற்காகவும், சாதனை மதிப்பீட்டில் புறவயம் அமைவதற்காகவும் தர அளவுகளும், சரிபார்த்தல் பட்டியலும் துணைக் கருவிகளாப் பயன்படுத்தப்படலாம். எழுத்தர் தொழில், தட்டச்சுப் பணி, சுருக்கெழுத்தர் பணி போன்றவற்றிக்குத் தொழில் அடைவுச் சோதனைகள் தரப்படுத்தப்பட்டு இக்காலத்தில் பல பெரிய நிறுவனங்களால் பயன்படுத்தப்படு

கின்றன. இந்தச் சோதனையில் ஆட்படுநர் ஒன்றை விட ஒன்று மிகுந்த நீளமும் சிக்கலானதுமான கடிதங்களுக்கான சுருக்கெழுத்துக் குறிப்புகளை எடுத்துக் கொள்ளவேண்டும். ஆட்படுநர் இக்கடிதங்களை ஒன்றைவிட மற்றதை மிக விரைவாக ஒப்ப எழுதுமாறு கூறப்படுவர். பின்னர் இக்குறிப்புகள் ஆட்படுநரால் தட்டச்சுச் செய்யப்படுகின்றன.

சில தொழில் அடைவுச் சோதனைகளில்வேலைத் திறமையைவிடத்தொழில் நுட்பம்பற்றிய விவரத்தை அறிவதற்கு முதலிடம் கொடுக்கின்றனர். இவற்றிற்கு இப்பொழுது எழுது சோதனைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பர்டியு தனியாள் சோதனை (Purdue Individual Test) என்பது, பல நிறுவனங்களில் பயன்படுத்தப்படுவதாகும். இதில் வணிக விவரச் சோதனையும் ஒன்றாகும். தச்சு வேலை, பற்றவைப்பு, உலோகத்தகடு வேலை மற்றும் இயந்திர இயக்கச் செயல் போன்ற தொழில்களில் இச்சோதனை பயன்படுத்தப்படுகிறது.

தொழிற்பயிற்சி, மற்றும் அனுபவத்தை மதிப்பீடு செய்வதற்கு வணிகச் சோதனைகள் பல்வேறு நுணுக்கங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகைச் சோதனைகளில் வரிசையான சிறு வினாக்கள் குறிப்பிட்ட வணிக அறிவைப் பற்றியதாக அடங்கியிருக்கும். இவ்வினாக்கள் ஒரு குறிப்பிட்ட வேலையைப் பற்றியதாகவும் அத்துறையில் அனுபவம் உள்ளவர்க்கு எளிதில் புரியக்கூடியதாகவும் இருக்கும்.

இவை, இரண்டு உலகப் போர்களில் படையில் பணிசெய்தவர்களைத் துரிதமாகப் பாகுபாடு செய்வதற்குப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டன. தொழிலகங்களில் பல்வேறு பணிகளிலும் இவை பயன்படுத்தப்படுகின்றன. இச்சோதனைகள் இந்தியாவில் பெரிய அரசுத் தொழில் நிறுவனங்களிலும் பயன்படுத்தப்படுகின்றன. காண்க: உளவியல் சோதனைகள். பி.கே.ச.

**துணை நூல்கள்:**

**Anastasi, A.**, "Psychological Testing", Macmillan Publishing Co., INC. 1968.

**Tiffin, J. & Maccormick, E.**, "Industrial Psychology," Englewood Cliffs, N.J. Prentice-Hall, 1965.

**அடோனிசு**: இவன் கிரேக்கப் புராணங்களில் வரும் ஓர் அழகிய இளைஞன். இவன் தந்தை பெயர் சினிராசு (Cinyras). அப்ரோடைட்டி என்னும் அன்புத் தேவதை இவன் மீது காதல் கொள்கிறாள். இவள் உரோமானியப் புராணங்களில் வீனசு (Venus)எனக் குறிக்கப்படுகிறாள். வேட்டையில் விருப்பமிக்கவன் அடோனிசு (Adonis). அப்ரோடைட்டி, வேட்டையில் ஏற்படும் இன்னல்களை அவனிடம் கூறி அடோனிசை வேட்டைக்குச் செல்ல வேண்டாமென்று அறிவுறுத்துகிறாள். அவளது சொல்லைக் கேளாது வேட்டைக்குச் சென்ற அடோனிசை ஒரு காட்டுப் பன்றி கொன்று விடுகிறது. அப்ரோடைட்டி மிகுந்த துயருற்று அவனது குருதியைச் சேகரித்துஒரு மலராக மாற்றுகிறாள். இம்மலர் 'அனெமொனி' (Anemone) அல்லது காற்று மலர் எனக் கூறப்படும். பின்னர்ப் பாதாள உலகத்துப் பெண் ஒருத்தி அடோனிசை உயிர்பெறச் செய்கிறாள். அதற்காக அடோனிசு அவளுடன் பாதாள உலகத்தில் ஆறு மாதம் தங்கவேண்டியவனாகிறான். அடுத்த ஆறு மாதத்தை அவன் அப்ரோடைட்டியுடன் கழிக்கிறான்.



நேப்பிள்சில் உள்ள அடோனிசு சிலை

அடோனிசைப் பற்றியும் வீனசைப் பற்றியும் பல கவிஞர்கள் கவிதைகள் எழுதியுள்ளனர். சேக்சுபியரின் 'வீனசும் அடோனிசும்' என்ற கவிதை கிரேக்கப் புராணத்தின் அடிப்படையை வைத்து எழுதப்பட்டது. இப்புராணக் கதை பருவங்களின் மாறுதலை அறிவிக்கும் கதை என்று கூறுவார்கள்.

**அண்டர், இராபர்ட்டு** (கி.பி. 1823-1897) என்பவர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த கிறித்தவ சமயப் பரப்புநர். கி.பி. 1823-ஆம் ஆண்டு செப்டம்பர் 3-ஆம் நாள் பிறந்தவர். இவர் மண்ணூல் இயலில் பல உண்மைகளைக் கண்டறிந்தவர்; இலக்கியத் துறையிலும் கிறித்தவ சமயத்தைப் பரப்பும் பணியிலும் ஈடுபாடு கொண்டவர்.

'லூயிடு' என்பாரின் கலைக்களஞ்சிய அகராதி'யை கி.பி. 1889-இல் தொகுத்தவர்; 'இந்திய வரலாறு' என்னும் நூலைக் கி.பி. 1863-இல் பதிப்பித்தார். இ'ந்தியா, ஆப்பிரிக்கா நாடுகளில் சுதந்திர இசுகாட்லாந்து திருச்சபைச்சங்கங்களின் வரலாறு' என்னும் நூலைக்கி.பி. 1872-இல் வெளியிட்டார். கி.பி. 1897-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 25-ஆம் நாள் அண்டர் இராபர்ட்டு (Hunter, Robert) காலமானார்.

**அண்டர், சர் வில்லியம் வில்சன்** (1843-1900) இந்திய ஆட்சிப் பணியில் (ICS) அதிகாரியாய் இருந்தவர். கீழ்நாட்டு மொழி, வரலாறு ஆகியவற்றின் ஆராய்ச்சியாளர்; புகழ்பெற்ற வரலாற்று வல்லுநர். கி.பி. 1843–ஆம் ஆண்டு சூலை மாதம் 15–ஆம் நாள் பிறந்தவர். இவர் பல நூல்களை வெளியிட்டுள்ளார். ''வங்காள கிராமப்புற வரலாறு'' (1868), ''மேல் ஆசியா மற்றும் இந்திய–ஆரியமல்லாத மொழிகளின் ஒப்பியல் அகராதி'' (1868), ''மேயோ பிரபுவின் வாழ்க்கை'' (1875), ''வங்காளம் பற்றிய புள்ளிவிவரத் தொகுப்பு'' (20 தொகுதிகள்), ''இம்பீரியல் இந்திய விவரச் சுவடி'' (9 தொகுதிகள்), ''இந்திய மக்களின் வரலாற்றுச் சுருக்கம்'' (1883), ''இந்தியப் பேரரசும் அதன் மக்களும் வரலாறும் உற்பத்திப் பொருள்களும்'' போன்றவை இவரால் எழுதப்பெற்ற நூல்களாம். இந்தியர்களின் பெயர்களையும் சொற்களையும் ஒலிபெயர்க்கும் (Transliteration) முறையை இவர் ஏற்றுக் கொண்டார்.

அண்டர், சர்வில்லியம் வில்சன் (Hunter, Sir William Wilson) எழுத்தாற்றலும், செம்பாகமான நடையும் வாய்க்கப்பெற்றவர். இவர் 1900–ஆம் ஆண்டு பிப்ரவரி 7–ஆம் நாள் காலமானார்.

**அண்டர்மகன் குறுவழுதியார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவர் அண்டர் மகன் குறுவழுதி என்றும் குறிக்கப்பட்டுள்ளார். அக்காலத்தில் அரசியற் பணிபுரிவோர் தம் அரசரின் சிறப்புப் பெயரைத் தம் பெயரோடு சார்த்தி வழங்கும் வழக்கம் உண்டு. இவர் பாண்டிய வேந்தரிடம் அரசியற் பணிபுரிந்த புலவர் எனலாம். அகநானூற்றில் இரண்டும் (150, 228), குறுந்தொகையில் ஒன்றும் (345), புறநானூற்றில் ஒன்றும் (346) ஆக நான்கு பாடல்கள் இயற்றியுள்ளார்.

புறநானூற்றுப் பாடலில் மகள் மறுத்தமையால் தோன்றிய போரில் விளையவிருக்கும் கொடுமையை நினைந்து, 'இப்பெண்ணின் அழகு, போரில் இறந்தோர் நீங்க, மற்றவர்களும் அவர்களின் சுற்றத்தவர்களும் பேணுவாரின்றிப் பெரும்பாழ்படுமாறு செய்யும்' என்று புலவர் ஏங்கியுள்ளார். குறுந்தொகைப் பாடல், பகலில் வந்தொழுகும் தலைவனைத் தோழி இரவு வருமாறு கூறும் பாங்கில் நெய்தல் திணையில் அமைந்துள்ளது. அகநானூற்றில் தோழி கூற்றுகளாக அமைந்த அகநானூற்றுப் பாடல்களில் ஒன்று நெய்தல் திணையிலும் மற்றொன்று குறிஞ்சித் திணையிலும் உள்ளது, நீர்நிலைகளில் நெய்தல் மலரும், குவளை மலரும் தனித்தனி மலர்ந்து விளங்குவதற்குக் கண்ணை உவமைகாட்டிக் 'கனைத்த நெய்தல் கண்போல் மாமலர்' என்றும், 'கண் என மலர்ந்த மாஇதழ்க் குவளை' என்றும் கூறியிருப்பது நயமிக்கதாம்.


ந.சே.

**அண்டலூசியா** தெற்கு இசுபெயின் (Southern Spain) நாட்டிலுள்ள மலையும் சமவெளியும் கொண்ட மிகப் பெரிய பகுதி. கி.பி. 1833–இல் இப்பகுதி எட்டுச் சிறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. செவில் (Seville) இப்பகுதியின் பழைய தலைநகரமாகும். அண்டலூசியாவில் (Andalusia) உள்ள சிறப்பான நகரங்கள் கிரனாடா (Granada), காடிசு (Cadiz), மலாக்கா (Malaga), கார்டோபா (Cordoba) என்பனவாம். இப்பகுதியின் பரப்பளவு 87,268 ச.கி.மீ. ஆகும்; மக்கள் தொகை 6,441,755 (1981). கி.பி. 8–ஆம் நூற்றாண்டிலிருந்து 18–ஆம் நூற்றாண்டு வரை இப்பகுதியை மூர்கள் (The Moors) என்னும் முசுலீம்கள் ஆண்டனர். கல்வி கேள்விகளில் சிறந்த இவர்கள் அழகான பல கட்டிடங்களைக் கட்டித் தங்கள் கலைத்திறனைக் காட்டியுள்ளார்கள். அவற்றின் சின்னங்களை இன்றும் காணலாம்.

**அண்டார்க்டிகா** தென்துருவக் கண்டமாகும். உலகில் இறுதியாகக் கண்டுபிடிக்கப்பட்டு ஆய்வு நடத்தப் பெறும் பெரும் பரப்பு இது. பனிக்கட்டி நிரம்பிய இக்கண்டத்தைப் பற்றிய விவரங்கள் அண்மையில்தான் வெளிவரத் தொடங்கியுள்ளன. உலக உருண்டையின் கிழக்குப் பாதியின் தென்கோடியில் அமைந்துள்ள பனிக்கட்டிக் கண்டம் இது. எனவே இங்கு மக்கள் ஒருவரும் நிலையாக வாழவில்லை. அண்டார்க்டிகாவின் (Antarctica) வடக்கில் அட்லாண்டிக் பெருங்கடலும் கிழக்கில் இந்தியப் பெருங்கடலும் தெற்கில் பசிபிக் பெருங்கடலும் அமைந்துள்ளன.

கி.பி. 20–ஆம் நூற்றாண்டில் உலக வரைபடங்கள், தென் துருவத்தில் வெறும் பொட்டல் நிலம் இருக்கிறதென்றும் அங்கு அண்டார்க்டிகா பனிக்கட்டி மண்டிக் கிடக்கிறதென்றும் தெரிவித்தன. ஆய்வாளர் ஆய்வு நடத்துவதுகூட இயலாதென எண்ணினர். அக்கண்டத்தை அணுகவிருந்த கப்பல்கள் கொடும் பனிப்புயல்களால் தாக்குற்றமையால் அதன் அருகே செல்லவும் துணியவில்லை.

அண்டார்க்டிகாவின் உள்ளே நுழைந்த பெருமை ஆங்கிலப் புவியாய்வாளர் காப்டன் இராபர்ட்டு எப். இசுகாட்டு (Robert F. Scott) என்பாரைச் சாரும். 1902–ஆம் ஆண்டில் இதை அவர் செய்தார். அவருக்கு முன்னோடிகளாகப் பலரிருந்தனர். கி.பி. 1772–75 ஆம் ஆண்டுகளில் சேம்சு குக் (James Cook) என்பார் தம் இரண்டாம் பயணத்திற்குப்பின் அண்டார்க்டிகாவைப் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் அக்குறிப்புகள் அண்டார்க்டிகாவின் உண்மையான நிலையை



அண்டார்க்டிகா

அறியப் பயன்படவில்லை. ஐம்பதாண்டுகளுக்குப் பின்னர்த் திமிங்கில வேட்டையாளர்களும் சீல் என்னும் கடல் நாய் வேட்டையாளர்களும் அடிக்கடி அண்டார்க்டிகாவின் அருகு வரை சென்று வந்தார்கள். எப். வான் பெல்லிங்சவுசன் (F. Von Bellingshausen) என்னும் உருசியரும் நாத்தானியல் பாமர் (Nathaniel Palmer) என்னும் அமெரிக்கரும்தாம் அண்டார்க்டிகா நிலப் பகுதியை முதன்முதலாகக் கி.பி. 1820–ஆம் ஆண்டில் கண்டார்கள். கி.பி. 1822–24–இல் சேம்சு வெட்டல் (James Weddell) என்பாரும் கி.பி. 1834–43–இல் இசுகாட் சேம்சு இராசு (Scot James Ross) என்பாரும் கண்டுபிடித்த கடற்பகுதிகள் அந்த இருவர் பெயரால் தனித்தனியே பெயரிடப்பட்டன. அவ்விருவரும் ஆங்கில மாலுமிகள். கி.பி. 1838–42 இல் அமெரிக்கரான சார்லசு வில்கீசு (Charles Wilkes) கண்டுபிடித்த நிலப்பரப்பு, வில்கீசு நிலம் என்று பெயரிடப்பட்டது.

கி.பி. 1850–ஆம் ஆண்டளவில் அண்டார்க்டிகாவைப் பற்றிய சிறப்புக் கூறுகள் படம் பிடிக்கப்பட்டன. அதன் பின்னர்ப் பல்லாண்டுகள் அண்டார்க்டிகாவைப் பற்றி யாரும் ஆய்வு நடத்தாமல் விட்டனர். கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் அறிவியல் ஆய்வுகள் நடந்தன. அதில் பங்கு கொண்டவர்கள் எர்னசுட்டு சாக்கில்டன் (Earnest Shackleton), இராபர்ட்டு இசுகாட் என்னும் இரு ஆங்கிலேயராவார்கள்.

மக் மருதோ சவுண்டு (Mc-Murdo Sound)என்பார் இராசு பனிக்கட்டித் திட்டின் கிழக்குக் கோடியிலிருந்து கப்பல் வழியாக உள்ளே நுழைந்தார். அதுவே பின்னர் ஆய்வு நடத்திய பலருக்கு அடித்தளமாக அமைந்தது. மக் மருதோ சவுண்டு கண்டுபிடித்த இடம் அவர் பெயராலேயே வழங்கலாயிற்று. மக் மருதோ சவுண்டிலிருந்து இசுகாட்டும் சாக்கில்டனும்

இராசு பனிக்கட்டித் திட்டின் மேற்குப் பகுதியை ஆய்ந்தார்கள். 1908-9-இல் சாக்கில்டனும், 1911-12-இல் இசுகாட்டும் பியர்டுமூர் (Beard more) பனிமலையின் மீது ஏறினார்கள். 1909 சனவரி மாதத்தில் சாக்கில்டன் தென்துருவத்திற்கு 400 கிலோமீட்டர் தொலைவுவரை சென்றார். இசுகாட்டும் அவருடைய துணைவர்கள் நால்வரும் 1912-இல் தென்துருவத்திலிருந்து திரும்பும் வழியில் மாண்டுபோனார்கள். அவர்கள் தென் துருவத்தினை அடைவதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்னர் 1911 திசம்பர் மாதம் 14-ஆம் நாள், ஆமுன்சன் (Amundsen) என்னும் நார்வேக்காரர் தென்துருவத்தை அடைந்துவிட்டார்.

முதலாம், இரண்டாம் உலகப் பெரும்போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில், பன்னாட்டு ஆய்வுக் குழுக்கள் அண்டார்க்டிகா ஆய்வினைத் தொடர்ந்தன. அமெரிக்கர்களான இலிங்கன் எல்சுவர்த் (Lincoln Ellsworth) என்பாரும் இரிச்சர்டு பைர்டு (Richard Byrd) என்பாரும் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களுடன் சார்சு வில்கின்சு, (George Wilkins) தக்லசு மவுசன் (Douglas Mowson) போன்ற ஆசுதிரேலியர்களும் வேறுபலரும் இவ்வாய்வுகளில் ஈடுபட்டனர். இந்நிலையில் இராசு கடல் எல்லையைக் கடந்து பிற இடங்களிலும் ஆய்வாளர்களின் கவனம் திரும்பியது. இயந்திரப்போக்குவரத்துச்சாதனங்களும் வானவூர்திகளும் பெருமளவில் இக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன. அமெரிக்கர்கள் இத்தகைய போக்குவரத்தில் முதலிடம் பெற்றார்கள். 1929-இல் பைர்டும் 1936-இல் எல்சுவர்த்தும் வானவூர்திகளைப் பயன்படுத்திப் பெருமை பெற்றனர்.

இரண்டாம் உலகப் பெரும்போருக்குப் பின்னர் மீண்டும் அண்டார்க்டிகா ஆய்வுப்பணி தொடங்கியது. அமெரிக்கர்கள், ஆங்கிலேயர்கள், உருசியர்கள் இப்பணியில் மிக்க தீவிரம் காட்டினர். பன்னாட்டு நில உலக இயற்பியல் ஆண்டையொட்டிப் (International Geo-physical year) பல ஆய்வுகள் நடைபெற்றுவருகின்றன. இதில் கண்டம் கடக்கும் வானவூர்தியின் மூலம் அண்டார்க்டிகா வந்தடைந்தது விவியன் பாக்சு (Vivian Fuchs) தலைமையில் வந்த ஆங்கிலக் குழுவாகும். வெட்டல் கடலிலிருந்து தொடங்கிய 3520 கிலோமீட்டர் தொலைவுள்ள பயணம் 99 நாள்களில் முழுமைபெற்றது. எட்மண்டு இல்லரி (Edmund Hillary) என்னும் நியூசிலாந்துக்காரர் ஆங்கிலேயருக்கு உறுதுணை நின்றார்.

அண்டார்க்டிகா பயணத்தில் இந்தியாவும் ஈடுபட்டு வருகிறது. இந்தியர் 1984-ஆம் ஆண்டில் நான்காம் பயணத்தை மேற்கொண்டனர்.


1981-ஆம் ஆண்டு திசம்பர் மாத முதல் வாரத்தில் கோவாவிலிருக்கும் மர்மகோவாத் துறைமுகத்திலிருந்து முதல் ஆய்வுக்குழு புறப்பட்டது. இந்தியப் பயணிகள், அண்டார்க்டிகாவில் 'தட்சிண' கங்கோத்திரி என்னுமிடத்தில் தங்கள் முகாமை அமைத்து ஆய்வுகளை நடத்தினர்.

இந்திய அரசின் பெருங்கடல் வளர்ச்சித்துறையினர் 1982-83 -ஆம் ஆண்டுகளில் இரண்டாம் பயணத்திற்கு ஏற்பாடுகள் செய்தனர். அதன் தலைவராக வி.கே. இரெய்னா (V.K. Raina) என்பார் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

1983-84-ஆம் ஆண்டில் இந்தியாவின் மூன்றாம் பயணம் மேற்கொள்ளப்பட்டது. அங்கு நிலையானதொரு ஆய்வு நிலையத்தைக் கட்டி, ஆண்டு முழுவதும் இந்திய அறிவியல் வல்லுநர்கள் ஆய்வு நடத்த வேண்டுமென்பது உறுதியாயிற்று.



ஊர்விலிக் கடல்



வானிலை ஆய்வு நிலையம்

டாக்டர் பி.பி. பட்டாச்சாரியா என்பாரின் தலைமையில் ஒருகுழு 1984–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 3–ஆம் நாள் மர்மகோவாவிலிருந்து 82 பேர்களுடன் புறப்பட்டுச் சென்றது. இதில் பங்கு பெற்றவர்களில் பெரும்பாலோர் முப்படைகளைச் சார்ந்தவர்கள். இப்பயணக் குழுவினர் தட்சிண கங்கோத்திரிக்குத் தெற்கே 100 கி.மீ. தொலைவில் மூன்று குடிசைகளைக் கட்டி அவற்றிற்கு 'மைத்ரி' என்று பெயரிட்டார்கள். இப்பயணத்தை மேற்கொண்டவர்களில் பெரும்பாலோர் தாயகம் திரும்பிவிட்டார்கள்.

இந்திய அரசின் பெருங்கடல் வளர்ச்சித் துறையின் செயலாளரான டாக்டர் எசு. இசர்டு. காசீம் (Dr. S.Z. Kasim) என்பார், அண்டார்க்டிகா ஆய்வுக்காக இந்திய அறிவியல் வல்லுநர்கள் பத்தாண்டுத் திட்டமொன்றைத் தீட்டியுள்ளதாக அறிவித்துள்ளார். அண்டார்க்டிகாவின் மொத்தப் பரப்பளவு 1,42,00,000 சதுரக் கிலோமீட்டர்களாகும்.

தென்துருவத்தைச் சுற்றிச் சுற்றிப் பரவியுள்ள அண்டார்க்டிகாவின் நிலப்பரப்பு முழுதும் பனிக் கட்டி படர்ந்துள்ளது. பனிக்கட்டியின் பருமன் 3000 மீட்டர் ஆகும்.

அண்டார்க்டிகாவை இரு துணைக்கண்டங்களாகப் பிரிக்கலாம். பரப்பில் பெரிதான பகுதியைக் கிழக்கு அண்டார்க்டிகாவென்றும் மற்றதை மேற்கு அண்டார்க்டிகா என்றும் கூறலாம். கிழக்கு அண்டார்க்டிகா உயர்ந்த மேட்டு நிலங்களைக் கொண்டுள்ளது. மேற்கு அண்டார்க்டிகா பனி உறைந்த தீவுக் கூட்டங்களைக் கொண்டது.

அண்டார்க்டிகாவில் திமிங்கிலங்களும் கடல்நாய்களும் உள்ளன. இக்கடல்நாய்களைச் சீல்கள் (Seals) என்பர். பெங்குவின் (Penguin) என்னும் பறவைகள் இங்கு மிகுதியாக உள்ளன.

அண்டார்க்டிகாவில் உறைந்து கிடக்கும் பனி உருகுமாயின் கடல்நீர் மட்டம் ஏறத்தாழ 67மீட்டர் உயர்ந்துவிடும். அதனால் உலகத் துறைமுகங்களும் கடற்கரைத் தாழ்நிலங்களும் மூழ்கிவிடலாம்.

**அண்டார்க்டிக்காப்பெருங்கடல்** என்பது பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், இந்தியப் பெருங்கடல் ஆகியவற்றின் தென் பகுதிகளையும் குறிப்பதாகும். ஏனெனில், இம்மூன்று கடல்களும் அண்டார்க்டிகா (Antarctica)வைச் சூழ்ந்துள்ளன. ஏனைய கண்டங்களின் நிலப் பரப்பிலிருந்து அறுபடாமல் அண்டார்க்டிக்குப் பெருங்கடலின் (Antarctic Ocean) குறுகிய இடுக்காக அமைவது திரேக்கு (Drake) நீர்வழியாகும். இந்நீர்வழி 1112 கி.மீ. அகலமுடையது. இப்பெருங்கடலில் நில அமைப்பில் கண்டத்திட்டு ஒன்று உள்ளடங்கியுள்ளது இதனை வெட்டல், இராசு (Weddell & Ross) கடல்களுக்கு அருகில் காணலாம். இதற்கு வடக்கில் அமைந்துள்ள பகுதிகள் 4500 மீ. ஆழமுள்ளவை. மலை முகடுகள், மேட்டு நிலங்கள், கடல் அகழிகள் போன்ற பல இயற்கைக் கூறுகளை அண்டார்க்டிகாவில் காணலாம்.

அண்டார்க்டிகாவின் நீரோட்டங்கள் சிக்கல்நிறைந்தவை. இங்கிருந்து பாய்ந்து வரும் குளிர்ந்த நீரோட்டம், இந்தியப் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடலிலிருந்து தெற்காகப் பாயும் வெப்ப நீரோட்டங்களுடன் கலக்கிறது. இவ்விருவகை நீரோட்டங்களும் சந்திக்குமிடந்தில் ஒருயிர்மக் (Single Cell) கொடிகள் வளரும். இக்கடலின் அடியில் பல வகையான மீன்களும் பிற நீர்வாழ் இனங்களும் வாழ்கின்றன. அண்டார்க்டிக் பெருங்கடலைத் தென் பெருங்கடல் (Southern Ocean) என்றும் கூறுகிறார்கள்.

**அண்டார்க்டிக்கா வட்டம்** என்பது உலக உருண்டையையொட்டி இணையாக 66½ பாகையில் அமைந்துள்ள தென் குறுக்குக்கோட்டைக் குறிப்பதாகும். உலக உருண்டை அதன் அச்சில் சாய்ந்திருப்பதால் ஆண்டிற்கு ஒரு நாள், அதாவது திசம்பர் 22–ஆம் நாள் சூரியன் மறைவதில்லை. அவ்வாறே

சூன்21-ஆம் நாள் சூரியன் தோன்றுவதுமில்லை. தொடர்ந்து பகலாகவோ இரவாகவோ இருக்கும் நாட்களின் நீட்சி தெற்கே செல்கையில் மாறுபடுகிறது. அண்டார்க்டிக் வட்டத்தில் (Antarctic Circle) ஒரு நாளாக இருப்பது தென் துருவத்தில் ஆறு மாதமாக உயருகிறது. தென் துருவம், அண்டார்க்டிகா கண்டத்தின் பனிப்பாறைகள் நிறைந்த மேட்டு நிலத்தில் அமைகிறது. அண்டார்க்டிக் வட்டத்தை முதன் முதலாக கேப்டன் சேம்சு குக் (Capt. James Cook) என்பார் கி.பி. 1773-ஆம் ஆண்டு சனவரி மாதம் 17-ஆம் நாள் கடந்தார்.

**அண்டிரன்.** சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னனும் வள்ளலும் ஆவான். இவன் ஆய் எனவும் ஆய் அண்டிரன் எனவும் வழங்கப்பெற்றான்; வேளாளர் மரபினன்; சுரபுன்னை மாலை சூடியவன். இவனது ஊர் பொதிகை மலைக்கருகிலுள்ள ஆய்குடியாகும். கடையெழு வள்ளல்களுள் ஒருவன். நீல நாகம் நல்கிய ஆடையினை, ஆலமர் செல்வராக விளங்கும் சிவபெருமானுக்கு உவந்து அளித்தான் என்று சிறுபாணாற்றுப்படை இவனைப் புகழ்கிறது. இவன் நாட்டில் யானைகள் மிக்கிருந்தன. அதனால், இரவலர்க்கு இவன் வழங்கிய யானைக் கொடையினை வியந்து, ‘வழைப்பூங்கண்ணி வாய் வாள் அண்டிரன் குன்றம் பாடின கொல்லோ, களிறுமிகவுடைய இக் கவின்பெறு காடே’ என்று இவனை முடமோசியார் பாராட்டியுள்ளார் (புறம். 131). மேலும், வடதிசையிலுள்ள இமயத்திற்கு ஒப்பாகத் தென் திசையில் ஆய்குடி இல்லாது போனால் உலகம் பிறழ்ந்துவிடுவது உறுதி என்று கூறுவதன் வாயிலாக, இவனுடைய ஆட்சிச் சிறப்பையும் ஊர்ப்பெருமையையும் புலப்படுத்தியுள்ளார். ‘இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன்’ அல்லன் இவன். தனது வீரத்தால் கொங்கரைக் குடகடல்வரை விரட்டியவன். உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், காரிக்கண்ணனார், உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன் கீரனார், பரணர் ஆகியோர் இவனைப் பாடியுள்ளனர் (நற். 237; அகம். 69, 152, 198; புறம். 127-136; 240, 241, 374, 375).

**அண்டைப்பள்ளி**: இது தரமான கல்வி அளிக்க வகை செய்யும் ஒரு திட்டமாகும். பல்வேறு சமூகங்களையும் குழுக்களையும் ஒன்றுபடுத்தி, எல்லோரும் சமமென்னும் உணர்ச்சியை வளர்க்க வேண்டும் என்பது அண்டைப்பள்ளித் (Neighbourhood School) திட்டத்தின் நோக்கம். இது கோத்தாரி கல்வி ஆய்வுக் குழுவின் (1964-66) பரிந்துரைகளுள் ஒன்றாகும்.

கல்வி, சமூக, தேசிய ஒருமைப்பாட்டிற்கு அடிகோலும் ஒரு கருவியாக அமைய வேண்டும். மாறாக, இன்றைய கல்விமுறை பல வகைகளில் சமூக ஒதுக்கத்தையும் (Segregation), வகுப்பு வேறுபாடுகளையும் வலுப்படுத்துவதைக் காணமுடிகிறது. பொதுத் துறையில் கட்டணம் செலுத்தத் தேவையில்லாத, பெரும்பாலும் குறைந்த வசதிகளுள்ள பள்ளிகளே உள்ளன. ஆனால், தனியார் துறையில் அதிக வசதிகளுடன் கூடிய அதிகக் கட்டணம் விதிக்கும் பள்ளிகளும் உள்ளன. செல்வர் அதிகப் பணம் செலவிட்டுத் தம் குழந்தைகளுக்கு இத்தகைய அரிய கல்வி வசதிகளைப் பெற்றுத் தர முடிகிறது. ஆனால் திறமை மிக்க ஏழைக் குழந்தைகளுக்கு இவ்வாய்ப்புகள் கிடைப்பதில்லை. அவர்கள் தம் வீட்டிற்கு அருகிலுள்ள குறைந்த வசதியுள்ள பள்ளிகளிலேயே பயிலமுடிகிறது.

இக்குறையைப் போக்குவதற்கு ஒரு பொதுவான, தரமான பள்ளியமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இதில் சாதி, சமயம், பொருளாதார ஏற்றத்தாழ்வு முதலியவற்றை நோக்காது, எல்லாக் குழந்தைகளும் இடம் பெற வேண்டும். சிறந்த கல்வி வாய்ப்புகள் பெற்றோரின் வருவாயின் அடிப்படையில் அன்றி, குழந்தைகள் திறமையின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்; அனைத்துப் பொதுப் பள்ளிகளும் தரமுள்ளவையாக எளியவரும் அணுகும் முறையில் அமைய வேண்டும். இத்தகைய தரமான பொதுப் பள்ளி அமைப்பே, சோவியத்து உருசியா முதலிய நாடுகள் மிக விரைவில் முன்னேற்றமடையத் துணைபுரிந்தது. அமெரிக்கா, பிரான்சு முதலிய நாடுகளில் வன்மையுள்ள தனியார் துறை இருந்த போதிலும் தரமான பரந்த பொதுப்பள்ளி அமைப்பும் உள்ளது.

கல்வியில் பிளவு, ஒதுக்கம் ஆகிய குறைகளைத் தவிர்ப்பதற்காகக் கல்வி ஆய்வுக்குழு, அண்டைப்பள்ளிகள் அமைப்பை முதலில் தொடக்க நிலையிலும் பின் இடைநிலையிலும் உருவாக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது. இதன்படி அனைத்துப் பள்ளிகளிலும், அண்டையிலுள்ள எல்லாப் பிள்ளைகளும், சாதி, சமய, சமூக-பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் முதலிய வேறுபாடின்றிச் சேர்க்கப்பட வேண்டும்.

அண்டைப் பள்ளியமைப்பு,சமூக தேசிய ஒருமைப்பாட்டை வளர்ப்பதற்குத் துணை புரிவது மட்டுமன்றி, வேறு இரண்டு வகைகளிலும் பயன்படுகிறது. (1) இம்முறை, கற்கும் குழந்தை பொது வாழ்க்கையில் பங்கு பெறத் துணை புரிகிறது. பொதுமக்கள் தொடர்பு நற்கல்வியில் ஓர் இன்றியமையாத கூறாகும். (2) இத்தகைய பள்ளியமைப்பு செல்வரையும் சமூகத்தின் உயர்மட்டத்திலுள்ளோரையும் சமூக

ஆற்றல் மிக்கோரையும் பொதுக் கல்வியின் முன்னேற்றத்தில் அக்கறை கொள்ளத் தூண்டும்.

அண்டைப்பள்ளித் திட்டத்தை இரண்டு படிகளில் நடைமுறைப் படுத்தலாம் என்று கல்வி ஆய்வுக்குழு பரிந்துரைத்தது. முதல் 10 ஆண்டுகளில் எல்லாத் தொடக்கப்பள்ளிகளையும் ஒரு குறைந்த அளவு தரத்தையாவது எய்துமாறு உயர்த்த வேண்டும். அவற்றுள் 10 விழுக்காட்டுப் பள்ளிகளை மேலும் உயர்ந்த நிலை எய்துமாறு செய்ய வேண்டும். அதே சமயம் அண்டைப் பள்ளித்திட்டத்தை ஒரு முன்னோடிச் செயல் திட்டமாகச் சில இடங்களிலாவது நடைமுறைப்படுத்த வேண்டும். 20 ஆண்டுகளுக்குள் இத்திட்டம் எல்லா இடங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்.

கல்வி ஆய்வுக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டு ஏறக்குறைய 20 ஆண்டுகள் கழிந்து விட்டன. தொடக்கக் கல்விமுறையில் சில சீர்திருத்தங்கள் ஏற்பட்டுள்ளபோதிலும், பொதுப் பள்ளிகள் தரம் குறைந்தவை என்ற எண்ணமே மக்கள் மனத்தில் பதிந்துள்ளது. இதனால் சிறு பிள்ளைகள் தனிச் சீருடை அணிந்துகொண்டு அண்டையிலுள்ள பள்ளியைப் புறக்கணித்துவிட்டு, நகரின் ஒரு முனையிலிருந்து மறு முனைவரை மிகுந்த இன்னல்களைப் பொறுத்துக் கொண்டு செல்வதைக் காணலாம். இக்குறையை ஆய்ந்து அதனைக் களைய வேண்டியது இன்றைய கல்வியின் உடனடித் தேவையாகும்.

**அண்டையம்** என்பது மனிதர்கள் குறிப்பிட்ட சில பழக்கங்களிலும் வரன் முறைகளிலும் ஒரே தன்மையுடையவர்களாகி நெருங்கிய இடையுறவுகள் கொண்டு வாழும் ஒரு நிலப்பரப்பைக் குறிக்கும். அண்டையத்தை (Neighbourhood) வட்டாரக் குழுமம் (Local Community) என்றும் கூறலாம். சமூகவியலார் அண்டையத்தை இடக் கோட்பாட்டின் அடிப்படையில் ஆராய்கின்றனர். ஊரகங்களில் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் வாழும் மக்கள் ஒருவரோடு ஒருவர் இடையுறவும் இடைச் சார்பும் கொண்டு வாழும் குறுகிய நிலப்பரப்புகளைப் பெர்டினண்டு தானிசு (Ferdinand Tonnies) என்னும் செருமானியச் சமூகவியலறிஞர், குழுமம் (Gemeinshaft) என்றும் நகர்ப்புறங்களில் மக்கள் நெருங்கி வாழும் இடங்களைச் சமூகங்கள் (Geselshaft) என்றும் குறிப்பிடுகிறார். ஊரகக் குழுமங்களில் ஒருவரை மற்றவர் நன்கு அறிந்திருக்கின்றனர். ஒருவரின் இன்பதுன்பங்களில் அண்டை அயலார் பங்கு கொள்கின்றனர். ஊரகத் தலைமை ஒருவரிடம் (பண்ணையார்) அமைந்துள்ளது. தலைவரும் குழுமத்தினரும் அண்டையராக வாழ்கின்றனர். நகர்ப்புறங்களில் ஊரகங்களைப்போல் அண்டையத்தை எளிதில் அடையாளங் கண்டுகொள்வது இயலாது. நகரங்களில் வாழும் குடும்பத்தினர் அடுத்திருக்கும் குடும்பங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதில் மிக்க ஆர்வம் கொள்வதில்லை. தம் குடும்பம், தம் தொழில், தம் முன்னேற்றம் என்னும் நினைவுடன் மட்டுமே செயல்படுகின்றனர். தமக்கு வேண்டிய தேவைகளைத் தாமாகவே நிறைவேற்றிக் கொள்ளப்பல வாய்ப்புகள் நகரங்களில் இருப்பதால் அண்டையில் வாழ்பவர்களை அவர்கள் பெரும்பாலும் சார்ந்திருப்பதில்லை. இதனால், அவர்களுக்குள் நெருங்கிய உறவு ஏற்படுவதில்லை. தொழில், வாழ்க்கை வாய்ப்புகள் போன்றவற்றை முன்னிட்டு அடிக்கடி வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்வதும் இதற்குக் காரணமாக அமைகிறது.

அண்டையத்தில் வாழும் குடும்பங்களுக்கிடையில் நிலவும் உறவு தனிப்பட்டதாக, நெருக்கமானதாக நேருக்கு நேரானதாக இருந்த போதிலும், அது ஓர் ஒருங்கிணைக்கப்படாத அமைப்பாகும் என்று சாண்டர்சன் குறிப்பிடுகிறார். ஆயினும், அக்குடும்பங்கள் ஒன்றுக்கொன்று தனித் தன்மையுடன் பழகிக் கொள்வதை அறியலாம். இதனால், அண்டைய உணர்வு என்பது சுற்றுச் சூழல் நல்லுறவை வளர்ப்பதோடு, குடும்பங்கள் தனித்தன்மையுடன் விளங்குவதற்கும் காரணமாக இருக்கிறது.

மக்கள் பல காரணங்களை முன்னிட்டு ஒரே நிலப்பரப்பில் வாழ்கின்றனர். ஊரக அண்டையத்தினரிடையே ஏற்படும் இடையுறவுகள், அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருக்க உதவி செய்கின்றன. இத்தகைய இடையுறவுகளும் இடைச்சார்புகளும் (Interdependence) இயல்பான சமூக நிகழ்வுகளாக அமைகின்றன. இத்தகைய சமூக நிகழ்வை ஓமன்சு (Homang) என்னும் சமூகவியலார் 'சமூக உபரி' (Social Surplus) என்று குறிப்பிடுகின்றார். அண்டையங்கள் முதனிலைக் குழுக்கள் எனப்படுகின்றன. இவை ஒரே இடத்தில் நிலைத்து வாழ்கின்றன. அண்டையத்தில் இருப்பவரிடையே மனப்பான்மைகளும், பிரச்சினை - அணுகு முறைகளும் ஒரே விதமாக இருக்கின்றன. இவ்வாறு முதனிலைக் குழுக்களின் தலைசிறந்த இயல்புகளே, அண்டையத்தின் இயல்புகளாக அமைகின்றன என்று ஓமன்சு குறிப்பிடுகின்றார்.

20-ஆம் நூற்றாண்டின் பிற் பகுதியில் தொழில், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அண்டையத்தினரின் சிறப்புத் தகுதிகளைப் பெரிதும் குறைத்துவிட்டது. தொழில் மயமாதலின் விளைவாக ஊரக மக்கள் பெருமளவில் நகர்ப் புறங்களில் சென்று குடியேறியுள்ளனர். ஊரக அண்டையத்தினரின் மீது ஊரகத் தலைவர் கொண்டிருந்த தனி அதிகாரம் மறைந்து விட்டது. நகர்ப்

புறங்களில் மக்கள் குறுகிய, அண்டையத்தின் பகுதியினராக இருப்பதைக் காட்டிலும் விரிந்த தேசிய அளவிலான அண்டையத்தின் உறுப்பினராக இருப்பதை வெறுக்கின்றனர். அண்டையங்களின் தனிப்பட்ட வரன்முறைகளும் குழுமங்களும் (Archetypal Community) ஏற்படுகின்றன. சில நகர்ப்புற அண்டையங்களில் ஒரு மனிதன் தன் வீட்டிற்குச் செல்லும் பாதை அல்லது தெரு மட்டுமே அவனுக்குத் தன் அண்டையத்தை உணர்த்துவதாக இருக்கலாம். ஆயினும் நெருக்கமான நகர்ப்புற மையப் பகுதிகளின் அண்டைய அமைப்புக்கும் நகர எல்லைப் புறங்களில் இருக்கும் அண்டைய அமைப்புக்கும் பல வேறுபாடுகள் உள்ளன. முன்னர்க் கூறிய அண்டையம் மிகக் குறைந்த இடைச் சார்பு கொண்டதாக அமைந்துள்ளது. பின்னர்க் குறிப்பிட்டது இதனைக் காட்டிலும் நெருங்கிய இடைச் சார்பும் இடை உறவும் கொண்டுள்ளதாக அமைந்துள்ளது. கோ.க.


துணை நூல்கள் :

**Chitambar**, J.B., "Introductory Rural Sociology; A Synopsis of Concepts and Principles," Wiley Eastern Ltd., New Delhi, 1976.

**Gore**, M.S., "Immigrants and Neighbourhoods", Tata Institute of Social Sciences, Bombay, 1970.

**MacIver**. **R.M. and C.H. Page**, "Society, Holt Rinehart and Winston", New York, 1961.


**அண்டோரா** மேற்கு ஐரோப்பாவில் பிரான்சு நாட்டிற்கும் இசுபெயின் (Spain) நாட்டிற்கும் இடையிலுள்ள தன்னாட்சி நாடு. பிரான்சு நாட்டு அதிபரும், உர்கெல் (Urgel) என்னும் பகுதியின் இசுபானியப் பேராயரும் கூட்டாக இணைந்து ஆளும் ஆட்சிப் பகுதி. அண்டோரா (Andorra)வின் வடக்கிலும் கிழக்கிலும் ஆரீச (Ariege) மாவட்டம் உள்ளது. தெற்கில், இலெரிடா (Lerida) உள்ளது. மலைத் தொடர்களின் மூலமும் கணவாய்களின் மூலமும் வளைந்து செல்லும் சாலைகள் உள்ளன. இந்நாட்டின் பரப்பளவு 464 ச.கி.மீ. அண்டோரி-லா-வெயிலி (Andorre-La-Vieille) இதன் தலைநகர். கடும் குளிரும் குளிர்ந்த கோடையும் இங்குள்ள தட்பவெப்ப நிலையாகும். மக்களுள் பெரும்பாலோர் இசுபானிய மரபினர்; உரோமன் கத்தோலிக்கர்; கடலான் (Catalan) மொழி பேசுபவர். சிறப்பான விளைபொருள் புகையிலை. இதன் அரசாங்கம் 24 பேர் கொண்ட குழு




அண்டோரா

ஒன்றினால் நடத்தப்படுகிறது. 1970-இல் மகளிர் வாக்குரிமை பெற்றனர். மக்கள் தொகை 38,051 (1982).


***அண்ண ஒலிப்படக் கருவி***: இது கருவி ஒலியியலில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகிறது. இக்கருவி ஒலிப்பான், ஒலிப்பு முறை ஆகியவைகளுக்கிடையே ஏற்படும் தொடர்பினைத் துல்லியமாக அறிவியல் அடிப்படையில் அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது. குறிப்பாக நாக்கு, வல்லண்ணம் ஆகிய இரண்டிற்கும் இடையே உச்சரிப்பின் போது ஏற்படும் உறவை ஆய்வு செய்வதற்கு இது பயன்படுகிறது. இவ்வாய்வு இரு முறைகளாகச் செயல் படுத்தப்படுகிறது. ஒன்று, கரியும் சாக்லேட்டும் கலந்த ஒரு கலவையை நேரடியாக நாக்கு அல்லது அண்ணத்தில் பூசுவது. இது இயற்கை முறை அல்லது நேரடி முறை எனப்படும். இரண்டு, செயற்கையாகச் செய்யப்பட்ட ஓர் அண்ணத்தினை வல்லண்ணத்தோடு ஒட்ட வைத்து, அதில் தொடர்பினைப் பதிய வைப்பது. இது செயற்கை அல்லது சுற்று முறை எனப்படும். இம்முறைகளின் வழியே நாக்கிற்கும் அண்ணத்திற்கும் இடையே ஏற்படும் உறவு தெளிவாகப் பதிவு செய்யப்பட முடியும். அதன் விளைவாக நமக்குக் கிட்டுகின்ற படமே அண்ண ஒலிப்படக் கருவி (Palatography) ஆகும். பற்களின் அடிப்படையில் அண்ணத்




அண்ண ஒலிப்படம்

தைக் கீழ்க்கண்ட பகுதிகளாகப் பிரித்து ஒலிப்படத்தைப் புரிந்து கொள்வது எளிது.

'Very' என்ற ஆங்கிலச் சொல்லை உச்சரிக்கும்போது எடுக்கப்பட்ட அண்ண ஒலிப்படம்:




இவ்வொலிப் படங்கள் இதழ் ஒலி, கடையண்ண ஒலி அல்லாத ஏனைய ஒலிகளுக்கான உச்சரிப்பு முறைகளை மட்டுமே புரிந்து கொள்வதற்குப் பயன்படுகின்றன. இதழ் ஒலி, கடை அண்ண ஒலி ஆகிய வற்றின் உச்சரிப்பு முறையைப் புரிந்து கொள்வதற்கு இக்கருவி பயன்படாது. தா. வ.

துணை நூல்கள்:

**Firth**, **J.R.**, "Improved techniques in Palatography and Kymography", (Linguistics 1934–1951), Oxford, 1957.

"Word Palatograms and Articulation", in (Linguistics 1934-1951), Oxford, 1957.

**Strenger**, **F.**, 'Radiographic Palatographic and Labiographic methods in Phonetics, in Malmberg, B. (Ed.) Manual of Phonetics Amsterdam, 1968.

**அண்ணன்மார் சுவாமி கதை** என்பது கதையைப் பாடலாகக் கூறும் கதைப்பாடல் வகையினைச் சார்ந்தது. கதைப் பாடல்கள் நாட்டுப்புற மக்களால் பாடப்படுவதற்காகவே அமைந்தனவாகும். தமிழகக் கதைப்பாடல்களைப் புராணக்கதைப் பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள் என மூன்று பிரிவுகளாகப் பகுக்கலாம். இவற்றுள் 'அண்ணன்மார் சுவாமி கதை' வரலாற்றுக் கதைப்பாடலாகும்.

இக்கதை கொங்கு நாட்டு வாழ்வையும் வரலாற்றையும் படம் பிடித்துக் காட்டுகிறது. இதற்குக் 'குன்றுடையான் கதை' என்னும் பெயரும் உண்டு. கள்ளழகர் அம்மானை என்னும் நூலும் இதனையே விவரிக்கின்றது. இந்நூல் பெரியக்காண்டி அம்மனைக்

குல தெய்வமாகக் கொண்டு வாழ்ந்த வேளாண்குடியில் பிறந்த குன்றுடையானுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் உறவினர் செய்தபல இன்னல்களையும், அவற்றை நீக்கக் குலதெய்வம் அருள் செய்த நிகழ்ச்சியையும் வரலாறாகக் கூறுகிறது.

குன்றுடையானும் அவன் மனைவி தாமரையும் பட்ட இன்னல்களும், அவனை அடுத்துக் கெடுக்க அவனது உறவினர் செய்த கொடுமைகளும் பலப்பலவாகும். 'பாம்புக்குப் பல்லிலே விடம்; பங்காளிக்கு உடம்பெல்லாம் விடம்' என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது இக்கதைப் பாடல். குன்றுடையானின் உறவினர் அவனொடு உறவாடிக் கொண்டே பல தீங்குகளைச் செய்தனர். அவனது திருமணத்தை நிறுத்த முயன்றனர். விதைப்பதற்கு வறுத்த விதைச் சோளத்தைக் கொடுத்தும் தோட்டத்தைப் புழுதி உழவு செய்தும் பாழாக்கினர். அவர்கள் எண்ணத்திற்கு மாறாகத் தோட்டம் செழித்து வளர்ந்ததைக் கண்டு உறவினர் பொறாமை கொண்டனர். 'வறுத்த சோளம் கொடுத்தோமே மங்கு மசையனுக்கு வறுத்த சோளப்பயிறு வளர்ந்து வந்து நிற்குது பார்' என்று கூறி அப்பயிரை அழிக்க உழுதனர். அன்று பெய்த மழையால் உழுத பயிர் கிளைத்துச் சோளத் தட்டையில் முத்து விளைந்தது.

குன்றுடையானுக்கும் தாமரைக்கும் பொன்னர், சங்கர், தங்கம் என்ற மூவர் பிறந்தனர். தாய், தான் பட்ட துன்பங்களையும், தான் செய்த சூளுரையையும் குழந்தைகளுக்குக் கூறி, அதனை முடிக்குமாறு பணித்தாள். அவள் சூளுரையின்படி அண்ணன்மார் இருவரும் பங்காளிகளைப் பழிவாங்கினர். பெற்றோர் மறைவிற்குப் பின், பொன்னர், சங்கர் இருவருக்கும் திருமணம் நடைபெற்றது. தாயின் சூளுரையை நிறைவேற்ற மணப்பெண்களைச் சிறை வைத்தனர். இவர்களின் தங்கை தங்கம், நற்குண மிக்கவள்; எதனையும் சிந்தித்துச் செயலாற்றக் கூடியவள்.

வேடுபடைத் தலைவன் தலையூர்க்காளி, அண்ணன்மார் நாட்டைச் சார்ந்த நன்னாட்டைத் தாக்கினான். பச்சனா முதலி மகள் குப்பாயி என்னும் பெண்ணையும் சிறையெடுத்துச் சென்றான். பொன்னர் சங்கருடன் சென்று வேடுபடையைச் சந்தித்துக் குப்பாயியைச் சிறைமீட்டு வந்தனர். வேங்கைபோல் நிற்கும் சங்கர் முன், வேடுபடை வெள்ளாட்டுக் கூட்டமாகியது. உண்மை கூறிப் பொன்னர் தட்டான் பின் போனது, சங்கர் மடிந்து களமானது, அத்தை பிள்ளை, மைத்துனர்கள், சாம்பான் ஆகிய அனைவரும் மடிந்தது ஆகிய அனைத்தும் வேதனைமிக்க நிகழ்ச்சிகளாயின. அண்ணன்மாரைத் தேடிச் செல்ல அண்ணிமார்களைத் துணைக்கழைத்தாள் தங்கம். திருமணம் என்ற சடங்கைத் தவிர எந்தவித இன்பத்தையும் அறியாத அண்ணிமார்கள் அவளுடன் செல்ல மறுத்துக் கதவைச் சாத்தித் தாளிட்டனர்.

அண்ணிமார் வரமறுக்கவே, தங்கை தனியாகக் காட்டினிடையே அண்ணன்மாரைத் தேடிப் புறப்பட்டாள். பெரியக்காண்டி அம்மன் அருள் கிட்டியது. அண்ணன்மாரைப் பார்த்து அழுது புலம்பினாள். பெரியக்காண்டி அம்மன் அவளுக்கு ஆறுதல் கூறி இறந்தவரை எழுப்பி அமரநிலை அளித்து அருள் பாலித்தாள். அதன்பின், அண்ணன்மார் தெய்வமாகி மக்கள் வழிபடும் நிலையெய்தினர். வீரப்பூர், மோழியப்பள்ளி, செம்மடை முதலிய இடங்களில் அண்ணன்மார் தெய்வமாய் நிலை பெற்றிருப்பதாக இக்கதைப் பாடல் கூறுகிறது.

அண்ணன்மார் சுவாமி கதையைப் பாடகன் உடுக்கையடித்துப் பாடுவதும், மக்கள் அதனைக் கேட்டு நெஞ்சுருகி நிற்பதும் கொங்கு நாட்டில் இன்றும் வழக்கமாக இருந்துவருகிறது. இக்கதை கி.பி. 13-ஆம் நூற்றாண்டிலோ அதற்குப் பின்னரோ நடந்ததாகக் கூறப்படுகிறது. கி.பி. 15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிச்சன் என்னும் கவிஞர் இதனை இயற்றியதாகத் தெரிவிக்கும் குறிப்புகள் காணப்படுகின்றன. கருவேல மரத்தில் கட்டி அடித்தல், சாட்டால் பொதியளத்தல் தமுக்கடித்துச் செய்தியை ஊராருக்கு அறிவித்தல், புரவிக்குப் புலிநகச் சங்கிலி அணிவித்தல், பல்லி சொல் கேட்டல், கனவு காணல், பல்லாங்குழி யாடுதல், ஊனான் கொடி பிடுங்கிக் கட்டுதல், தேங்காய் உடைத்துச் சகுனம் பார்த்தல், தாம்பூலம் தரித்தல் போன்ற பல செய்திகள் இக்கதைப்பாடலில் இடம் பெற்றுள்ளன. மேலும், கொங்குநாட்டு மலைகள், ஆறுகள் பற்றிய வருணனைகளும், நாட்டுப்புறக் கலைகளும், அக்கால ஆயுதங்கள் பற்றிய செய்திகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. இந்நூல் கொங்கு நாட்டாரின் விருந்தோம்பற் பண்பினைச் சிறப்புற எடுத்தியம்புகிறது. அந்நாட்டு வட்டார வழக்கினை அறிய இது பெரிதும் பயன்படுகிறது.

கதைப்பாடல்களில் பொதுவாகக் காணப்படும் நிமித்தக் கனவுகள் இந்நூலில் தீமை நிகழப் போவதைச் சுட்டிக் காட்டும் முன் அறிகுறிகளாக அமைந்துள்ளன. அண்ணன்மார் சுவாமி கதையில் பொன்னர், சங்கர், சாம்பான், அத்தை பிள்ளைகள் அனைவரும் உயிர் பெற்று எழுகின்றனர். வாழ்ந்த நாள் போதுமென்று வைகுந்தம் போய்ச் சேருகின்றனர். கதைப் பாடல்களில் இறந்தவர் உயிர் பெற்று மீண்டும் எழுதல் என்பது, 'உண்மை என்றும் வெல்லும்; நீதி அழியாது' என்பதைக் காட்டுவதற்கான உத்தியாக அமைக்கப்படுவதாகும்.

அண்ணன்மார் சுவாமி கதையைச் சக்திக்கனல் 1971-ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார். அண்ணன்மார், வீரம் மானம் முதலிய நற்பண்புகளில் மேலோங்கி நின்றதால் கொங்குநாட்டு மக்களால் தெய்வமாகப் போற்றப்பட்டு வருகின்றனர். சு.சக்தி

**அண்ணாச்சாமி ஐயர்**[1]: இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். சிதம்பர மகாத்மியம் என்னும் நூலை, வடமொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தமைத்துள்ளார். இந்நூல் கி.பி. 1891-இல் உருவாக்கப் பெற்றது. ஆனந்த நடராசர் பேரில் அழகிய கீர்த்தனம் என்றொரு நூலையும் இயற்றியுள்ளார். இந்நூலில், ஆனந்த நடராசர்மீது இயற்றப் பெற்ற சாவளி, பதம், வேதாந்தம், தங்கப்பண், கிளிப்பண் முதலியனவும், நலுங்கு, இலாலி, ஊஞ்சல் முதலியனவும் உள்ளன.

**அண்ணாச்சாமி ஐயர்**[2]: இவரும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இராமநாதபுரம் மாவட்டம் கோட்டையூரைச் சேர்ந்தவர். இவர் சதாவதானம் பாலசுப்பிரமணிய அய்யர் இயற்றிய 'மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ்' என்ற நூலைப் புகழ்ந்து சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்.

**அண்ணாச்சாமி முதலியார்** 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். தொண்டை நாட்டு அமரம்பேடு என்னும் ஊரைச்சார்ந்தவர். அராபியக் கதையினைத் தமிழ் மொழியில் பெயர்த்தார். சகர்சாத் சக்ரெயார் என்னும் மன்னனுக்கு 1001 இரவுகளில் சொன்ன இன்பச் சுவை மிக்க கதைகள் அரபுக் கதைகள் என்று கூறப்படும். இவை அரபு மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டன. அக்கதைகளின் சுவை கருதித் தமிழிலும் மொழி பெயர்க்கப்பட்டன. 'ஆயிரத்தோரு இரவுகளிற் சொல்லிய அரபுக் கதைகள்' என்னும் அந்நூல் பல பகுதிகளாக வெளியிடப்பட்டது.

**அண்ணாதுரை கா.ந.** (1909-1969) அண்ணா என்று அழைக்கப் பெறும் இவர் 1909-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்தில் நடராசன்-பங்காரு அம்மாள் தம்பதியர்க்கு மகனாகப் பிறந்தார். ஆயினும், இவரை வளர்த்த பெருமைக்குரியவர், இவர் அன்போடு 'தொத்தா' என்று குறிப்பிட்ட இவர்தம் சிற்றன்னை இராசாமணி அம்மையார் ஆவார்.

**இளமைக்காலம்**: இவர் தம் கல்வியைக் காஞ்சிபுரம் மிசன் பள்ளியில் 1914-இல் தொடங்கினார். காஞ்சிபுரம் பச்சையப்பர் உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பு வரை பயின்றார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்ததும் கல்லூரியில் படிக்க விரும்பிய இவர், வறுமை நிலை காரணமாகக் கல்லூரியில் சேர இயலவில்லை காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகத்தில்



அண்ணாதுரை

சிறிது காலம் பணிபுரிந்து பின்னர் அவ்வேலையை விடுத்துச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்து 1934-இல் ஆனர்சு பட்டத் தேர்வில் வெற்றி பெற்றார். கல்லூரியில் பயின்ற நாள்களிலேயே தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் சிறந்த பேச்சாளராக விளங்கினார். இவர், 1930-ஆம் ஆண்டில் மாணவராக இருந்த போதே இராணி அம்மையாரை மணந்து கொண்டார். நாகரத்தினம்மாள் என்பவர் அண்ணாவின் தமக்கையாவார். பரிமளம், இளங்கோவன், கவுதமன், பாபு என்னும் இராசேந்திர சோழன் ஆகிய நால்வரும் இவர்தம் வளர்ப்புப் பிள்ளைகளாவர்.

அரசியல் நுழைவு: அண்ணாவின் ஆழ்ந்த சிந்தனை, அறிவுத்திறன், பேச்சு வன்மை முதலானவற்றை முதலில் உலகறிய உதவியவர் பாசுதேவ் என்ற தொழிற்சங்கத் தலைவர் ஆவார். தமிழில் பேசும் ஆற்றலற்று இருந்த பாசுதேவின் அழகிய ஆங்கிலப் பேச்சுகளைத் தமிழாக்கம் செய்யும் பணியில் அண்ணா முதலில் ஈடுபட்டிருந்தார். அவர்தம் தொடர்பு இவருக்கு நீதிக்கட்சியின்பால் ஈடுபாட்டை ஏற்படுத்தியது. ஆயினும், தம் சிற்றன்னையின் விருப்பப்படி வேலை தேடும் முயற்சியில் ஈடுபட்டுச் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் நடுநிலைப் பள்ளியில் 1935-இல் ஆசிரியராகச் சேர்ந்து சிறிது காலம் பணியாற்றினார்.

பொப்பிலி அரசர் நீதிக்கட்சியின் சார்பில் முதலவராகப் பொறுப்பேற்ற காலத்தில், அக்கட்சியுடன்

அண்ணாவிற்கு நேரடித் தொடர்பு ஏற்பட்டது. திருப்பூரில் 1935–இல் நடைபெற்ற செங்குந்தர் இளைஞர் மாநாட்டில், முதன் முதலாகப் பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்களைச் சந்தித்தார். அன்று முதல் தம் வாழ்வின் இறுதி வரை அவரையே தம் தலைவராக ஏற்றுக் கொண்டார். மாநகராட்சி உறுப்பினர் தேர்தலில் 1935–ஆம் ஆண்டில் சென்னை பெத்து நாயக்கன் பேட்டையின் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி வாய்ப்பினை இழந்தார்.

சி. இராசகோபாலாச்சாரியார் 1937–இல் தமிழகத் தலைமை அமைச்சராகப் பணிபுரிந்தபோது, தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாட மாக்கியதை எதிர்த்து நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தளபதியாக அண்ணா நியமிக்கப் பட்டார். நான்கு மாதச் சிறைத் தண்டனையையும் ஏற்றார்.

இவர் 1938–இல் பெரியாரின் ‘விடுதலை’நாளேட் டின் துணை ஆசிரியரானார். பெரியார் தலைமையில் 1940–இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் அதன் பொதுச் செயலாளராக அண்ணா தேர்ந்தெடுக்கப் பட்டார். ‘திராவிடநாடு’ என்னும் ஏட்டினை 1942–இல் தொடங்கினார். சேலத்தில், 20-8-1944–இல் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நான்கு முக்கிய தீர்மானங்களைக் கொண்டுவந்தார். அவற்றுள் ஒன்று நீதிக்கட்சியின் பெயரைத் ‘திராவிடர் கழகம்’ என்று மாற்ற வேண்டியது. இத் தீர்மானங்கள் ‘அண்ணா துரை தீர்மானங்கள்’ என்று அழைக்கப்படுகின்றன

கருத்து வேறுபாடு: திராவிடர் கழகம், தனது முதல் மாநில மாநாட்டை 1945–இல் திருச்சியில் நடத் தியது. பெரியார் தம் தொண்டர்களைக் கறுப்புச் சட்டை அணியச் சொன்னதை ஏற்றுக்கொள்ளாத அண்ணா ‘கறுஞ்சட்டைப் படையினை’த் திடீரென்று அரசு தடை செய்தபோது, கறுப்புச்சட்டையினை அணிந்து கட்டுப்பாடு காத்தார். இந்திய விடுதலை நாளான 1947 ஆகசுட்டு 15–ஆம் நாளைப் பெரியார் துக்க நாள் என்று அறிவித்தபோது, அண்ணா அக் கருத்தினை ஏற்காது அந்நாளை மகிழ்ச்சிக்குரிய நாளாக அறிவித்துத் தம் நீண்ட கட்டுரையில் அதன் காரணத்தையும் விளக்கினார். பெரியார், 1949 சூலை 9–ஆம் நாள் தம் 72–ஆம் வயதில் 26 வயது நிரம்பிய மணியம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இது அண்ணா–பெரியார் கருத்து வேறுபாடு முற்றக் காரணமாயிற்று.

புதிய இயக்கம்: பெரியாருடன் கருத்து வேறு பாடு கொண்டவர்கள், 1949 செப்டம்பர் 17–ஆம் நாள் அண்ணாவின் தலைமையில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கினர். அண்ணா கட்சியின் முதற் பொதுச் செயலாளர் ஆனார். தமது இயக்கமும், பெரியாரின் திராவிடர் இயக்கமும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் போல் செயல்படும் என்று அறிவித்தார். மும்முனைப் போராட்டம் என்ற ஒரு போராட்டத்தினை 1952–இல் மைய அரசுக்கு எதிராக நடத்தினார். பின்னர், 1956–இல் திருச்சியில் நடைபெற்ற இரண்டாம் மாநில மாநாட்டில் தி.மு.க. அரசியல் இயக்கமாக மாறியது. இது அண்ணாவின் மக்களாட்சிக் கோட்பாட்டு நம் பிக்கையை வெளிப்படுத்தியது. இம்மாநாட்டில் அரசி யலில் பங்கு கொண்டு தேர்தலில் போட்டியிட வேண் டும் என்று தீர்மானம் செய்தனர். அண்ணாவின் தலைமையை ஏற்றுக் கொண்ட தி.மு.க. 1959–இல் சென்னை மாநகராட்சியைக் கைப்பற்றியது. பின்னர் 1962–இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட அண்ணா வெற்றி வாய்ப்பினை இழந்த போதிலும், இந்தியப் பாராளுமன்றத்தில் மேலவை உறுப்பினராகித் தமிழகத்தின் குரலை எதி ரொலித்தார். அனைத்து இந்திய அளவில் அண்ணா வின் சிறப்பு வெளிப்படுவதற்கு இந்தக் காலம் மிகவும் பயன்பட்டது.

திராவிட நாட்டுப் பிரிவினை: அண்ணா 1962–இல் விலைவாசி உயர்வைக் கண்டித்துப் போராட்டம்நடத் திச் சிறை சென்றார். தனித் திராவிட நாடு அமைப் பது தி.மு.க.வின் கொள்கையாக விளங்கிய போதிலும் இந்தியாவைச்சீனா ஆக்கிரமித்தபோது, இந்தியாவின் பாதுகாப்பையும் பொது நலனையும் கருத்தில் கொண்டு, திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கை யைக் கைவிட்டு, மேலும் உயர்ந்தார். பின்னர், 1963–நவம்பர் 16–இல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, இந்திய அரசியல் சட்டத்தைக் கொளுத்திய தற்காக ஆறு மாதக் காலம் கடுங்காவல் தண்டனை பெற்றார்.

ஆட்சிக் கட்டிலில்: ஏழு அரசியல் கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து 1967–இல் நடைபெற்ற பொதுத் தேர் தலில் தி.மு.க. 138 இடங்களைப் பெற்று அண்ணா வின் தலைமையில் அரசு அமைந்தது. அரசியலில் புதிய பண்பாட்டை அண்ணா ஆட்சி அமைத்ததும் கடைப்பிடித்தார். தம்மை எதிர்த்துத் தேர்தலில் பணியாற்றிய தம் தலைவர் தந்தை பெரியாரையும் காமராசர், இராசாசி, பக்தவத்சலம் முதலான அரசி யல் தலைவர்களையும் சந்தித்து அவர்களின் வாழ்த் துகளைப் பெற்றார்.

முதலமைச்சர் அண்ணா: அண்ணாவின் அரசியல் கருத்துகள் தமிழ் உணர்வுடன் ஒன்றிக் கலந்தவை. இந்தித் திணிப்பையும் வடவர் ஆதிக்கத்தையும் எதிர்த்து வந்தார். அண்ணா பின்வருவனவற்றை

வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். மே முதல் நாள் விடுமுறை நாள், பெரிய தொழில்கள் தேசியமயம், நிலச் சீர்திருத்தம், சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்ட பூர்வ ஏற்பு, தமிழ் ஆட்சிமொழி ஆதல், இந்தியாவின் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடித்தல், மாநிலச் சுயாட்சி முதலியன.

மேலே கூறப்பெற்ற கொள்கைகளை முதலமைச்சரானதும் நிறைவேற்ற முனைந்தார். சென்னை மாநிலம் 'தமிழ்நாடு' என்று பெயர் பெற்றது. ௳ ரூபாய்க்குப் படி அரிசித் திட்டமே, அண்ணாவின் அமைச்சரவை கொண்டு வந்த முதல் மக்கள் நலத் திட்டமாகும். அண்ணாவின் ஆட்சிக் காலத்தில் புன்செய் நிலங்களுக்கு வரி நீக்கப்பட்டது. கல்லூரியில் புகுமுக வகுப்புவரை மாணவர்க்ள் கட்டணம் இன்றிக் கல்வி பெற ஏற்பாடு செய்யப் பெற்றது. கலப்புத் திருமணங்கள் ஊக்குவிக்கப்பட்டன. தன்மானத் திருமணங்கள் சட்ட உருப்பெற்றன. சென்னையில் 1968-இல் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டினைச் சிறப்புடன் நடத்தினார். தமிழ்நாடு சட்டமன்றம் 1968 சனவரி 23-ஆம் நாள், தமிழும் ஆங்கிலமும் ஆகிய இருமொழிகள் தமிழ்நாட்டில் நீடிக்கும் என்ற இருமொழித் திட்டத்தை நிறைவேற்றியது.

ஏல் பல்கலைக்கழகம் (Yale University) 1968-இல் அண்ணாவிற்கு, 'சப்-பெல்லோசிப்' (Chubb Fellowship) விருதை வழங்கிச் சிறப்பித்தது. அதே ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. அண்ணாவிடமிருந்து மேலும் பல சாதனைகளைத் தமிழகம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அவர் 1969, பிப்பிரவரி 3-ஆம் நாள் உயிர் துறந்தார்.

**அண்ணாவின் இலக்கியப் பணி:** தமிழ் எழுத்துலகில் தனிப் புகழ் பெற்ற அண்ணா திராவிட நாடு, காஞ்சி ஆகிய தமிழ் இதழ்களைத் தொடங்கித் திறம்பட நடத்தினார். அன்றியும் நவயுகம், விடுதலை, குடியரசு முதலிய பிற தமிழ் இதழ்களுக்கும் சில ஆங்கில இதழ்களுக்கும் பெருந் தொண்டு ஆற்றினார். அண்ணா, 'தம்பிக்கு' என்ற தலைப்பில் எழுதிய கடிதங்கள் வரலாற்றுப் புகழ் பெற்றவை. 'ஓர் இரவு', வேலைக்காரி' அண்ணாவின் புகழ் பெற்ற நாடகங்களாகும். நாவல்களில் 'ரங்கோன் ராதா' புகழ் பெற்றது. 'நாடோடி', 'செவ்வாழை' முதலான சிறுகதைகள் குறிப்பிடத்தக்கவை. 'கம்பரசம்', 'ஆரியமாயை' ஆகியன சிந்தனைக்கு விருந்தளிக்கும் படைப்புகளாகும். நடிப்பிலும் வல்லவர் இவர். 'சந்திரமோகன்' 'நீதி தேவன் மயக்கம்' முதலானவை அண்ணா நடித்த நாடகங்களாகும். திரைப்படங்களில் 'ஓர் இரவு', 'நல்லதம்பி', 'சொர்க்க வாசல்', 'நல்லவன் வாழ்வான்' இவர்தம் முத்திரை பதித்தவையாகும்.

**மதிப்பீடு:** அண்ணா திறமையான இதழாசிரியர்; ஆற்றல்மிகு சீர்திருத்த எழுத்தாளர்; மிகச் சிறந்த பேச்சாளர், சீர்திருத்தவாதி; சமூகக் கொடுமைக்கு எதிராகப் போராடிய தளபதி என்ற பெருமைகளை விட, மனிதப் பண்புடைய பெருந் தலைவர் என்ற அளவில் மக்கள் மனத்தில் நன்கு இடம் பெற்றவர். இறுதிவரை எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்பதனைப் பொன்மொழியாக அளித்தவர். அடக்கமும், பணிவும் அவரை உயர்த்தின. தாம் இரண்டாண்டே முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பிலிருந்தாலும், மக்கள் இதயத்தில் அழியா இடம் பெற்று, ஏழை, எளியவர் நலன் காத்த பண்பாளர் அண்ணா. இவர்தம் மறைவு தமிழக மக்களைத் துயர்க் கடலுள் ஆழ்த்தியது.

இவர் பெயரில் அமைந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திரு எம்.ஜி. இராமச்சந்திரன் தலைமையில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றது. பேரறிஞர் அண்ணாவின் நினைவாக 1985-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் முதலமைச்சர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களால், மதுரை மாவட்டத்தில் உள்ள திண்டுக்கல் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு 'அண்ணா மாவட்டம்' தொடங்கப் பெற்றது.

மேலும், அண்ணாதுரைக்குப் பெருமை கூட்டும் முறையில் அண்ணாவிருது ஒன்றையும் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது. அண்ணாவின் கொள்கை வழி நிற்போர், நிலை நிறுத்துவோர், பரப்புவோர், அவற்றை ஆய்வு செய்வோர் என்னும் நான்கு வகையினர்க்கு இவ்விருது வழங்கப்படும். இந்நிலையில் முதன் முதல் 1985-ஆம் ஆண்டு அண்ணாவிருது தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி. இராமச்சந்திரனுக்கு வழங்கப்பட்டது.

தமிழில் நாவன்மை படைத்த அண்ணாதுரையைத் தமிழக மக்கள் 'பேரறிஞர் அண்ணா' என்று பாராட்டி மகிழ்கிறார்கள்.

## அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர்

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; முன்சி அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் எனவும் அழைக்கப்படுவார். வீரமாமுனிவர் அர்ச்சு அடைக்கல நாயகி மேல் பாடிய 'அடைக்கல மாலை' 'வெண்கலிப்பா' ஆகிய நூல்களுக்கு இவர் பொழிப்புரைகள் எழுதியுள்ளார். மேலும், அந்தோணிக்குட்டி அண்ணாவியார் எழுதிய 'பேரின்பக் காதல்' என்னும் பகுதிக்கும் பொழிப்புரை வரைந்துள்ளார்.

**அண்ணா பல்கலைக் கழகம்:** வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் தொழில் நுட்ப உலகில், கல்வி ஆராய்ச்சித் துறைகளில், இந்திய நாடும்

விரைந்து முன்னேறத் துணை செய்யும் நோக்குடன், சென்னையில் இயங்கிவந்த பழம் பெருமை வாய்ந்த பொறியியற் கல்லூரி, அழகப்பர் தொழில் நுட்பக் கல்லூரி, சென்னைத் தொழில் நுட்பக் கல்லூரி ஆகிய நிறுவனங்களையும் இணைத்து. தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு சி.என். அண்ணாதுரை அவர்களின் நினைவாக, 1978 செப்டம்பரில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் (Perarignar Anna University of Technology) தொடங்கப் பெற்றது. அது 1982-இல் அண்ணா பல்கலைக் கழகம் என்று சுருக்கமாகப் பெயரிடப் பட்டு வழங்கி வருகிறது.

வளர்ச்சிக்குத் துணை செய்வதோடு, வளர்ந்துவரும் அறிவுத் துறைகளின் பயன, சமூகத்தின் பல்வேறு நிலையிலுள்ளோருக்கும் ஏற்ற நிலையில் பரவிட வழி செய்தல்; கல்வி நிறுவனங்களுக்கும் நாட்டின் பல்வேறு தொழில் நிறுவனங்களுக்குமிடையே கூட்டு உழைப்பின வாயிலாகப் பயனுள்ள திட்டங்களில் ஈடு பட வழிசெய்தல் முதலியன ஆகும்.

பொறியியற் கல்லூரி வளாகத்தில் 100 எக்டேர் (Hectare), குரோம்பேட்டையில் 20 எக்டேர், தரமணிப் பகுதியில் 80 எக்டேர் ஆக 200 எக்டேர் நிலப் பரப்பில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக் கழகத்



அண்ணா பல்கலைக் கழகம்

பல்கலைக் கழகத்தின் தலையாய குறிக்கோள்கள், பொறியியல், தொழில் நுட்பம் ஆகியவை தொடர்பான துறைகளில் உயர் கல்வி, ஆராய்ச்சி, நடைமுறைப் பயிற்சிகளுக்கு ஏற்ற வாய்ப்புகளை உருவாக்கல்; சமுதாயத்தின் இன்றைய, வருங்காலத் தேவைகளுக்கேற்ற புதிய கல்வித் திட்டங்களை உருவாக்கல்; புதிய ஆராய்ச்சிகளின் வாயிலாக நாட்டின்

தில், பொறியியல், பயன்பாட்டுப் பொறியியல் ஆகிய இவை ஒவ்வொன்றிலும் பல்வேறு துறைகளும் மையங்களும் பிரிவுகளும் அமைந்துள்ளன. இளநிலைப் பட்டம் முதுநிலைப் பட்டம், முதுநிலைக் கல்விச் சான்றிதழ், இளநிலை ஆய்வுப் பட்டம் ஆகிய பல நிலைகளில் தொழில் நுணுக்கக் கல்வி இங்கு அளிக்கப்படுகிறது. முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சித் திட்டங்களும்

தொழில் துறை நிறுவனங்களுக்கான செயல் திட்டங்களும்நடைபெறுகின்றன. இப்பல்வேறு படிப்பு வகைகளிலும் இப்போது பயிலும் 4735 மாணவர்களுள் 3740 பேர் பட்டக் கல்விப் படிப்புகளிலும் 835 பேர் பட்ட மேற்கல்விப் படிப்புகளிலும் 160 பேர் முனைவர் பட்ட ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.இவர்களுள் 9% (426பேர்) மகளிர் என்பதும் 79 பேர் வெளிநாட்டவர் என்பதும் குறிப்பிடற்குரியன.

ஐ.பி.எம் 360144 என்னும் பெரிய கணிப்புப்பொறி (Computor) நிறுவப்பட்டுள்ளது. மேலும், பல்கலைக் கழகம் தொடங்கியபின், பழைய துறைகள் செழுமை பெறுவதுடன் பல புதிய துறைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவற்றுள் நீர்வள ஆய்வியல் மையம் (Centre for Water Resources), சூழல் ஆய்வியல் மையம் (Centre for Environmental Studies), தொலை உணர்வு நிறுவனம் (Institute of Remote Sensing), உகந்த தொழில் நுட்ப மையம் (Centre for Appropriate Technology), தொடர்கல்வி வளர்ச்சி மையம் (Centre for Continuing and Development Education), கடல் நிருவாகச் செய்தி மையம் (Ocean Data Centre), ஆற்றல் ஆய்வு மையம் (Centre for Energy Studies), படிக வளர்ச்சி மையம் (Centre for Crystal Growth), மானிட வாழ்குடி மையம் (Centre for Human Settlement), உயிரியல் தொழில் நுட்ப மையம் (Centre for Bio-technology) ஆகியன குறிப்பிடத் தக்கனவாகும். மேலும், அச்சுத் தொழில் நுட்பம், தொலை உணர்வு (Remote Sensing) முதலான புதிய துறைகளில் கல்வித் திட்டங்கள் வகுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு குறுகிய காலப் பயிற்சிகளின் வழியாகப் பணியில் உள்ள பொறியாளர்களுக்குப் பொறியியல் துறைகளின் புதிய வளர்ச்சிகளை அறிமுகப்படுத்திப் பொறியியல், தொழில் நுட்பக் கல்வியை, நடைமுறை வளர்ச்சிப் பணிகளோடு இணைத்து அவை சிறக்கப் பல்கலைக் கழகம் பணியாற்றி வருகிறது. துறையறிவு, தாய்மொழியில் வளர்த்திடும் பணிகளை மேற்கொள்ள 'வளர் தமிழ் மன்றம்' என்னும் புதிய அமைப்பு உருவாகி வருகிறது. அண்ணா பல்கலைக் கழகம் தொழிற் கல்வி, தொழிற் பயிற்சி, அறிவியல் தொழில் நுட்ப ஆய்வு, தொழில் நுட்ப அறிவு ஆகிய பணிகளில், தேசிய அளவிலும் அனைத்து நாடுகள் அளவிலும் சிறந்த மையமாக உருப்பெற்று வருகிறது.

இப்பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் திரு. பி. சிவலிங்கம். இன்றைய துணைவேந்தர் டாக்டர் வா. செ. குழந்தைசாமி. வா.செ.கு.

**அண்ணாமலைச் செட்டியார், இராசா, சர்** (1881-1948) இராமநாதபுரம் மாவட்டம், கானாடு காத்தானில் 30-9-1881-இல் பிறந்தார். இவர்தம் தந்தையார் முத்தையச் செட்டியார்; தாயார் மீனாட்சி அம்மையார். இவர் கரூரில் உள்ள பள்ளியில் சேர்ந்து ஆங்கிலமும் தமிழும் பயின்றார். 1895-இல் பள்ளத்தூர் பழனியப்பச் செட்டியார் மகள் சீதை ஆச்சியை மணந்தார். 1901-1910 வரை இந்தியா, பர்மா, இலங்கை, மலேயா, கிழக்கிந்தியத் தீவுகள், சயாம் முதலிய நாடுகளில் அயராது பாடுபட்டுப் பெரும் பொருள் ஈட்டினார். இவர் மிகவும் சுறுசுறுப்புடையவர்; கண்டிப்பானவர்; காலமறிந்து எச்செயலையும் செய்பவர்; கணப்பொழுதும் வீணாக்க மாட்டார்; தொழில் தொடர்பான கணக்குகளைத் தாமே உடனுக்குடன் பார்த்து முடித்துவிடுவார்; தூங்கும்போதும் எழுதுகோலும் குறிப்பேடும் பக்கத்திலேயே வைத்துக்கொள்வார். தமது தொழிலை விரிவுபடுத்த எண்ணி, அதற்கான வழிவகைகளைக் காண 1911-இல் இங்கிலாந்து சென்றார். அங்குத் தாம் கண்டவற்றை நடைமுறைப்படுத்தினார்.



இராசா, சர் அண்ணாமலைச் செட்டியார்

பதவிகள்: இவர், 1910 முதல் 1913 வரை காரைக்குடி நகரசபைத் தலைவராகப் பணியாற்றினார். 1912-இல் தில்லியில் நடந்த ஐந்தாம் சார்சு மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு அழைக்கப்பட்டார். 1916 முதல் 1919 வரை சென்னைச் சட்டசபை உறுப்பினராகப் பதவி வகித்தார். 1917-இல் நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கத்தைச் சென்னையில் நிறுவினார். இவரது முயற்சியால் சென்னைச் சட்டசபையில் நகரத்தார்க்கு ஓர் இடம் அளிக்கப்பட்டது; பர்மா சட்டசபையிலும் தனவந்தர் ஒருவருக்கு இடம் அளிக்கப்பட்டது.

1920-இல் இந்திய இம்பீரியல் வங்கியின் சென்னைக் கிளையில் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்

டார். 1921 முதல் 1935 வரை சென்னை அரசாங்க சபையில் உறுப்பினராக இருந்தார்.

1935-இல் பர்மாப் பிரிவுச் சட்டத்தை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று வாதிடச் சென்ற குழுவில் ஒருவராக இவர் நியமிக்கப்பட்டார்.

கல்விப்பணி: இவர் தம் தமையனாரின் உயர் நிலைப் பள்ளியை மீனாட்சி கல்லூரியாக உயர்த்தி னார். பின்னர், இம் மீனாட்சிகல்லூரி வளாகத்திலேயே 1927-இல் தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, ஆசிரியர் கல்லூரிஆகியவற்றையும், 1928-இல் இசைக் கல்லூரியையும்அமைத்தார். இதற்கென இவர் செல விட்ட தொகை ஏறத்தாழ இருபது இலட்சம் ஆகும்.

1926-இல் ஆந்திரப் பல்கலைக் கழகம் நிறுவப் பட்டது. தமிழுக்கும் அவ்வாறு ஒரு பல்கலைக் கழகம் தேவையென மக்கள் விரும்பினர். அதனால், அப் பணிக்கு இருபது இலட்சம் ரூபாய் அளிக்க முன்வந் தார். அரசாங்கம், இதனைப் பாராட்டி இருபத்தேழு இலட்சம் நிதியும், ஆண்டுதோறும் ஒன்றரை இலட்ச ரூபாய் உதவித் தொகையும் அளிக்க முன்வந்தது. இவ்வாறு மீனாட்சி கல்லூரி அமைந்த இடத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் உருவாகியது.

சமுதாயப் பணிகள்: இவர் கானாடுகாத்தானில் மிகச் சிறந்த மகளிர் மருத்துவமனை ஒன்றை நிறு வினார். இவரது முயற்சியினால் திருச்சியிலிருந்து மானாமதுரைக்குப் புகைவண்டி செல்லும் வழியில் உள்ள 'செட்டி நாடு' என்ற பகுதி பல வசதிகளை அடைந்தது.

இவர் தில்லைக் கோவிந்தராசப் பெருமாள் கோயில், இளையாற்றங்குடிச் சிவன்கோயில் ஆகிய வற்றைப் புதுப்பிக்கவும், திருவண்ணாமலைச் சிவன் கோயில் முதலிய பல கோயில்களைப் பேணிக் காக் கவும் தாராளமாக நிதியுதவி செய்தார்.

சென்னையில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் பெண்களுக்காக "வெலிங்டன் கிளப்பு" ஏற்படுத்தி னார். தில்லையில் நகரப் பெருமக்கள் வசதிக்காக நகரமன்றம், பூங்கா ஆகியவற்றை ஏற்படுத்தினார். இவரது முயற்சியால் சென்னையில் தோற்றுவிக்கப் பெற்ற தமிழிசைச் சங்கம், 1943-ஆம் ஆண்டு முதல் இசைக் கல்லூரி ஒன்றையும் நடத்தி வருகிறது.

விருதுகள்: இவர் காரைக்குடி நகரசபைத் தலை வராகப் பதவி வகித்து வந்த சமயத்தில், கள்வர் சிலர் இரவில் அஞ்சல் கட்டுகள் கொண்டு செல்லும் குதிரை வண்டியினை வழிமறித்து அவற்றைப் பறித்துச் சென்றுவிட்டனர். இச்செய்தியறிந்த செட்டியார் உடனே சில வேலையாட்களுடன் விரைந்து சென்று அவற்றைக் கள்வரிடமிருந்து மீட்டார். இதனைப் பாராட்டி இவருக்கு 'இராவ் பகதூர்' என்ற விரு தினை அரசாங்கம் அளித்தது. இவரது பல்வேறு தொண்டுகளைப் பாராட்டி 1922-இல் 'திவான் பக தூர்', அடுத்த ஆண்டில் 'சர்' ஆகிய விருதுகளும் வழங்கப்பட்டன.

பட்டங்கள்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவிய இவரது தொண்டினைப் பாராட்டி, 3-6-29-இல் அன்றைய சென்னை மாநிலஆளுநரால் வழிவழி 'இராசா' பட்டம் வழங்கப்பட்டது. சென்னைப் பல் கலைக்கழகமும் 1932-இல் எல்எல்.டி. (LL.D) என் னும் சிறப்புப் பட்டம் அளித்தது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1947-இல் டி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது. இவர் 15-6-1948-இல் காலமானார்.


இவருக்கு மைந்தர் மூவர்; மகளிர் நால்வர். இவர்களுள் மூத்தவரான அரசர் முத்தையச் செட்டி. யார் அண்ணாமலை அரசருக்குப்பின் 1948-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இணைவேந்த ரானார்.

அ.அ.ம.

## அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

இந்தியாவின் 14-ஆம் பல்கலைக் கழகமாக, தென் னிந்தியாவின் 5-ஆம் பல்கலைக் கழகமாக, தமிழ் நாட் டின் 2-ஆம் பல்கலைக் கழகமாக 1929-ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்றது. அப்போது இந்தியாவிலிருந்த பல்கலைக் கழகங்களிலிருந்து இரண்டு வகைகளில் இது மாறுபட்டது முதலாவதாக, இது கிராமப்புறச் சூழ லில் உடனுறை பல்கலைக் கழகமாகப் பின்தங்கிய தென்னார்க்காடு மாவட்டத்தில் தோன்றியது. தனி ஒருவருடைய கொடையால் ஒருபல்கலைக் கழகம் ஏற் பட்டது இதன் இரண்டாம் தனித் தன்மையாகும்.

இலண்டனில் ஐந்தாம் சார்சு பேரரசரின் முடி சூட்டு விழா 1910-ஆம் ஆண்டில் நடைபெற்றது. ஆங் கிலேய அரசின் அழைப்பை ஏற்று அண்ணாமலைச் செட்டியார் இலண்டனுக்குச் சென்றார். விழா முடி வடைந்த பின்னர் ஆக்சுபோர்டு, கேம்பிரிட்சு பல் கலைக் கழகங்களை இவர் பார்வையிட்டார். அவை போன்ற ஓர் உயர் கல்வி நிலையம் தமிழ்நாட்டிலும் ஏற்படுத்த வேண்டும் என்று அங்கேயே உறுதி பூண் டார். அதற்குத் தேவையான மூலதனத்தை ஒதுக்கு வதிலும், பொருத்தமான இடத்தைத் தேர்ந்தெடுப்ப திலும் அடுத்த பத்து ஆண்டுகளைச் செலவிட்டார். 1917-இல் தம் தமையனார் திவான் பகதூர் இராம சாமிச் செட்டியார் காலமானதால், சிதம்பரத்தில் இயங்கி வந்த இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியின் ஆட்சிப் பொறுப்பும் அண்ணாமலைச் செட் டியார் வயப்பட்டது.



அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சிதம்பரம் நகரிலேயே, அண்ணாமலைச் செட்டியார் தம் தாயார் பெயரில் சிரீமீனாட்சி கல்லூரியை 1920-இல் நிறுவி ஈராண்டு 'இன்டர்மீடியட்' படிப்பைத் தொடங்கினார். 1922-இல் பி.ஏ. பட்டப்படிப்புத் தொடங்கப்பெற்றது. 1925-ஆம் ஆண்டளவில் தில்லையின் எல்லையில் உள்ள திருவேட்களத்தில் (இன்றைய அண்ணாமலை நகர்) புதிய கட்டடங்கள் கட்டப் பெற்றுக் கல்லூரி அங்குச் செயற்படத் தொடங்கியது. 1925-இல் பி.ஏ. ஆனர்சு பட்டப்படிப்புத் தொடங்கப் பெற்றது. 1925-ஆம் ஆண்டில் மேலும் இரண்டு கல்லூரிகளை அண்ணாமலைச் செட்டியார் நிறுவினார், இவை மீனாட்சி தமிழ்க் கல்லூரி, மீனாட்சி வடமொழிக் கல்லூரி என்பவை.

தொடக்கத்திலிருந்தே பெரும் புலமை பெற்றவர்களும் பேரறிஞர்களுமே இம் மூன்று கல்லூரிகளிலும் முதல்வர்களாகவும் பேராசிரியர்களாகவும் நியமனம் செய்யப் பெற்றனர். வரலாற்றுப் பேரறிஞர் திரு. கே.ஏ. நீலகண்ட சாத்திரியார், மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், மகாமகோபாத்தியாய தண்டபாணிசாமி தீட்சிதர், ஆங்கிலப் பேராசிரியர் கே. சாமிநாதன் போன்றோர் அவருள் சிலராவர்.

அன்றைய சென்னை இராசதானியின் தெலுங்கு பேசும் மாவட்டங்களுக்காக, விசாகப்பட்டினம் துறைமுகத்தை அடுத்த வால்ட்டேர் என்னும் நகரில் 1926-ஆம் ஆண்டில் ஆந்திரப் பல்கலைக் கழகம் தொடங்கப்பெற்றது. அவ்வாறே, தமிழ் மாவட்டங்களுக்கும் ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவதற்காகச் சர். பி.டி. இராசனைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவைச் சென்னை அரசாங்கம் நியமித்தது. அந்தக் குழுவின் அறிக்கையில் முன்னரே எல்லா வசதிகளும் நிறைந்ததும் மூன்று கல்லூரிகளைக் கொண்டு இயங்கியதும் ஆகிய சிதம்பரம்-திருவேட்களத்திலேயே புதிய பல்கலைக் கழகம் தொடங்கப்பெறலாம் என்று பரிந்துரைத்தது.

முன்னர் உள்ள கல்லூரிகளையும் அவற்றிற்கு உரிய சொத்துகளையும் 700 ஏக்கர் நிலத்தையும் 20 லட்சம் உரூபாய் பணத்தையும் நன்கொடையாக வழங்க அண்ணாமலைச் செட்டியார் முன்வந்தார். இந்த வள்ளன்மையை அன்றைய சென்னை அரசாங்கம் பெருமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, புதிய பல்கலைக் கழகத்திற்கும் அந்தப் பல்கலைக் கழக நகரத்திற்கும் நன்கொடையாளர் பெயரைச் சூட்டுவது

என்றும் முடிவு செய்தது. இவற்றிற்கு வகைசெய்யும் சட்டத்தை டாக்டர் சுப்பராயன் தலைமை அமைச்சராக இருந்த அமைச்சரவை, 1928-ஆம் ஆண்டில் சென்னைச் சட்டசபையில் (Legislative Council) நிறைவேற்றியது.

ஏனைய பல்கலைக் கழகங்களுக்குக் கல்வி அமைச்சரே இணைவேந்தராக இருந்து வருகிறார். அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சட்டப்படி அண்ணாமலைச் செட்டியாருக்கு நிறுவனர்-இணைவேந்தர் (Founder-Prochancellor) என்ற மதிப்புப் பதவி வழங்கப்பெற்றது. இப்பதவி காரணமாக இவருக்கும், இவருக்குப் பின் இவர் குடும்பத்தில் மாநில ஆளுநர் குறிப்பிடும் ஒருவருக்கும் சில அதிகாரங்கள் வழங்கப்பெற்றன.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவிய பின் இராசா அண்ணாமலை இசைக்கல்லூரி என்ற பெயரில் ஒரு தனிக் கல்லூரியைப் பல்கலைக் கழக வளாகத்திலேயே அண்ணாமலை அரசர் நிறுவினார். அந்தக் கல்லூரி சில ஆண்டுகளுக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் புகழ் மிக்க பெருமக்கள் பலர் துணைவேந்தர்களாகப் பதவிவகித்தனர். மகாகனம் வி.எசு. சீனிவாச சாத்திரியார் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பதவியேற்றார். அடுத்து, பேராசிரியர் சாமுவேல் அரங்கநாதன், சர் கே.வி. ரெட்டி, பேராசிரியர் எம். இரத்தினசாமி, டாக்டர் மணவாள ராமானுசம், சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், சர் சி.பி. இராமசாமி ஐயர், டாக்டர் சந்திரசேகர் ஆகியோர் அவருள் சிலர். 1980 முதல் பேராசிரியர் சை. வே. சிட்டிபாபு துணைவேந்தராக இருந்து வருகிறார். 1929 முதல் 1948 வரை நிறுவனர் - அரசர் அண்ணாமலைச் செட்டியார் இணைவேந்தராகவும், 1948 முதல் 1984 வரை அவர் மகன் இராசா சர் முத்தையா செட்டியார் இணைவேந்தராகவும் இருந்தனர். இக்காலத்தில் பல்கலைக் கழகம் பல துறைகளிலும் அகலமாகவும் ஆழமாகவும் வளர்ச்சியடைந்தது. 1984-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் அரசர் முத்தையா செட்டியார் மகன் டாக்டர் எம். ஏ. எம். இராமசாமி இணைவேந்தராக மாநில ஆளுநரால் நியமிக்கப்பெற்றார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பின்வரும் புலங்கள் உள்ளன: 1. கலை 2. அறிவியல் 3. பொறியியல் 4. வேளாண்மை 5. மருத்துவம் 6. நுண்கலை, 7. இந்திய மொழிகள்.

ஒவ்வொரு புலத்தின் கீழும் பல துறைகள் உள்ளன. இப்போது 40-க்கும் மேற்பட்ட துறைகள் உள்ளன. இவற்றுள் இரண்டு துறைகள், உயர் ஆராய்ச்சி மையங்களாக (Advanced Centres of Research) இந்தியப் பல்கலைக் கழகங்களின் மானியக் குழுவின் பொறுப்பில் இயங்கி வருகின்றன. அவை, 1) அண்ணாமலை நகரிலேயே இயங்கிவரும் மொழியியல் துறை, 2) பரங்கிப் பேட்டையில் உள்ள கடல்வாழ் உயிரின ஆராய்ச்சிக் கூடம். அன்றியும், இங்கு ஓர் அஞ்சல் வழிக்கல்விப் பகுதியும் உண்டு.

எல்லாத் துறைகளிலும் முனைவர் பட்டம் (Ph.D.) பெறுவதற்குரிய வசதிகள் உள்ளன. கண்கவர் கட்டிடங்களும் ஆய்வுக்கூடங்களும் மிகப்பெரிய நூலகமும் வனப்புமிக்க பூங்காக்களும் விளையாட்டரங்கங்களும் மாணவர் விடுதிகளும் ஆசிரியர் இல்லங்களும் மருத்துவமனையும் விருந்தினர் இல்லமும் அமைந்த அழகான வளாகம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற பாசுபதீசுவரர் கோயிலும் ஏனைய மதத்தார் வழிபடுவதற்குரிய பள்ளிகளும் இங்கு அமைந்துள்ளன. சோம.லெ.

**அண்ணாமலை மன்றம்** சென்னைத் தமிழிசைச் சங்கத்தார் சென்னையில் கட்டியுள்ள மண்டபம். செட்டிநாட்டு அரசர், அரசர் அண்ணாமலைச் செட்டியார் தமிழிசைக்குச் செய்த அரும்பணியின் நினைவாக எழுந்துள்ள இம்மண்டபம் தமிழர் கட்டிடக் கலைக்கு ஓர் எடுத்துக் காட்டு. கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுதோறும் தமிழிசைத் திருவிழாவும், பண் ஆராய்ச்சியும் நடைபெறும் இடம். தமிழிசையில் தலை சிறந்தோர்க்கு இசைப் பேரறிஞர் என்னும் பட்டம் அளித்துத் தமிழிசைச் சங்கம் பெருந்தொண்டாற்றி வருகிறது. இசை அரங்குகளும், நாடகங்களும் இங்கு ஆண்டு முழுவதும் நடைபெற்று வருகின்றன.

**அண்ணாமலை ரெட்டியார் (கி.பி. 1861-1890)** 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழகத்தே தோன்றிய புலவர்களுள் ஒருவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் கரிவலம்வந்தநல்லூரை அடுத்துள்ள சென்னிகுளம் என்னும் ஊரில் சென்னவ ரெட்டியார்-ஓவு அம்மாள் ஆகியோரின் மகனாய்ப் பிறந்தார். இவர் இளமையிலேயே ஊர்த் திண்ணைப் பள்ளியிற் சேர்ந்து நிகண்டுகள், அந்தாதிகள் முதலியன கற்றார். அப்பருவத்திலேயே யமகம், திரிபு முதலிய சொல்லணிகளும் பொருட் சிறப்பும் அமையுமாறு பாடல்கள் இயற்றுவதில் வல்லவராய்த் திகழ்ந்தார். யாப்பமைதியோடு பாடல் எழுதுவதோடன்றி, அவற்றிற்கு ஏற்ப இசையமைத்துப் பாடுவதிலும் இவர் வல்லவராக விளங்கினார்.

தொடக்கநிலைக் கல்விக்குப் பின்னர்ச் சில காலம் சேற்றூர்க் குறுநில மன்னர் ஆதரவில் தங்கியிருந்தார். பின்னர்த் திருவாவடுதுறை ஆதீனம் சென்று, அப்

போது பட்டத்திலிருந்த திருப்பெருந் திரு. சுப்பிரமணிய தேசிகரைக் கண்டு, அங்குத் தங்கிக் கல்விப் பயிற்சி பெற வேண்டும் என்ற தம் ஆர்வத்தைப் புலப்படுத்தினார். இரெட்டியார் தாம் தேசிகர் மீது பாடிய பாடல்களில் 'அரசனகராதியர் முன்' எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். அப்பாடலில், இரசமற்றவன் என்னும் பொருளில் அரசன் என்ற சொல் ஆளப்



அண்ணாமலை ரெட்டியார்

பட்டமை அறிந்து கவிஞரின் புலமையை வியந்து பாராட்டினார். அதனால், ஆதீனத் தலைவர் இவர் விரும்பியவாறே ஆதீனத்திலிருந்து கற்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். அங்குத் தங்கியிருந்த ஓராண்டுக் காலத்தில் மேலும் பல இலக்கண இலக்கியங்களை நன்கு கற்று நிறைந்த புலமையுடையவராகி ஊர் திரும்பினார்.

ஊற்றுமலைக் குறுநில மன்னராக விளங்கிய இருதயாலய மருதப்ப தேவர் தமிழ்ப் பற்றும், புலவர்களைப் போற்றும் நற்பண்பும் உடையவர் எனக் கேள்வியுற்று, அவர்மீது பல பாடல்கள் இயற்றிப் பாடிக் காட்டினார். இவர்தம் புலமையைக் கண்டு பாராட்டிய குறுநில மன்னர் இவரைத் தம் அரண்மனைப் புலவராக அமர்த்திக் கொண்டார். இவர் புலமைத் திறத்தைப் பிறரும் அறிவதற்காக ஒருநாள் மருதப்ப தேவர், தம் அவைப் புலவர்களிடம், "சரிகமபதநி" என்னும் ஏழு எழுத்துகளையும் தொடக்கமாகக் கொண்டு யமக யாப்பில் ஒரு செய்யுளியற்றுமாறு கூறினார். புலவர்கள் பலரும் அவ்வாறு இயற்றுதல் இயலாது என்று வருந்தியுரைத்தனர். அண்ணாமலை ரெட்டியார் சிறிது நேரத்தில், "சரிகமபதநி யேற்குச் சந்துசொல் என்பாள்" எனத் தொடங்கும் பாடலை இயற்றிப் பாடிக் காட்டினார். மன்னரேயன்றிப் பிற புலவர்களும் அண்ணாமலை ரெட்டியாரின் புலமைத் திறம் கண்டு வியந்து பாராட்டினர்.

தம் 24-ஆம் வயதில் அண்ணாமலை ரெட்டியார் குருவம்மாள் என்னும் மங்கையை மணந்து இல்லறம் தொடங்கினார். ஊற்றுமலை மன்னர், இவர் திருமணத்திற்கு வேண்டும் பொருளெல்லாம் அளித்து உதவியதோடன்றித் தம் யானையையும் பல்லக்கையும் திருமண ஊர்வலத்திற்கு அனுப்பிவைத்துப் பெருமைப்படுத்தினார். இல்லறம் ஏற்ற புலவர் வீரகேரளம் புதூரிற் சென்று இரண்டாண்டுகள் இல்வாழ்க்கை நடத்தினார். அதன் பின்னர் நலங்குன்றிக் கொடிய இருமல் நோயால் துன்புற்ற இவரது உடல் நாளும் நலிந்து வருவதனை அறிந்த ஊற்றுமலை மன்னர், புலவரைத் தமது பல்லக்கில் ஏற்றிச் சென்னிகுளத்திற்கு அனுப்பி வைத்தார். நோயின் கடுமை மேலும் முற்றியதால் தமது 29-ஆம் வயதில் அண்ணாமலை ரெட்டியார் இவ்வுலக வாழ்வை நீத்தார். இவர் பிறந்தது 1861-ஆம் ஆண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயின் இறப்பு 1890-ஆம் ஆண்டில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். ஆனால், கல்குளம் குப்புசாமிமுதலியார் 1904-ஆம் ஆண்டில் வெளியிட்ட தமது 'சுப்பிரமணியர் காவடிச் சிந்து' முன்னுரையில் அண்ணாமலை ரெட்டியார் 1884-ஆம் ஆண்டில் காலஞ்சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இயற்றமிழ்ப் புலமையும் இசைத்தமிழ்ப் புலமையும் ஒருங்கிணைந்ததன் பயனாகக், 'காவடிச் சிந்து' என்னும் ஒரு புதிய இசைத்தமிழ் இலக்கிய வகையினை அண்ணாமலை ரெட்டியார் தோற்றுவித்தார். இந்நூல் கழுகுமலையில் எழுந்தருளியிருக்கும் முருகவேளின் மீது பாடப்பட்டது. முருகன் திருக்கோயில்களுக்குக் காவடியெடுத்துச் செல்லும் அன்பர்கள் விருப்பத்திற்கிணங்கி, இவர் பல்வேறு சந்தங்களிற் பாடி வெளிப்படுத்திய நூலே 'காவடிச் சிந்து' எனப் பெயர் பெற்றது என்றும், ஊற்றுமலை மன்னர் இருதயாலய மருதப்பதேவர் கழுகுமலை முருகனுக்கு வேண்டுதல் செய்துகொண்டு, காவடி எடுத்தபோது வழியில் பாடும் பொருட்டு, இந்த நூலை அண்ணாமலை ரெட்டியார் பாடினார் என்றும் கூறப்படுகிறது.

இந்நூலில் இருபத்திரண்டு இசைப்பாடல்கள் உள்ளன. சில முழுமையும் சந்தப்பாக்களாக அமைந்துள்ளன. ஏனைய பாடல்களின் இடையிடையே முடுகு அமைந்துள்ளது. நற்றாய் இரங்கல், தலைவி இரங்கல், தலைவியின் ஊடல், தலைவியின் புலவி போன்ற அகத்துறை நலஞ்சான்ற பாடல்கள் இந்நூலில் அழகுறத் திகழ்கின்றன. 'மூசுவண்டு வாசமண்டு

காவில்மொண்டு தேனை உண்டு, மோகன முகாரி ராகம் பாடுமே-மைய-லாகவே பெடையுடனே கூடுமே-அலை-மோதுவாருதி மீதுலாவிய சீதளாகர முகில் பெருஞ் சிகரமுற்று மூடுமே-கண்டு மயிலினம் சிறகை விரித்தாடுமே' போன்ற பகுதிகள் சந்த நலமும் இயற்கை எழிலும் கற்பனை வளமும் ஒருங்கே கொண்ட செந்தமிழ்த் தீங்கனிகளாக அமைந்துள் ளன. தமிழ்நாட்டு மக்கள் இந்நூலைப் பெரிதும் விரும்பிப் போற்றினர். 'காவடிச்சிந்து' மக்களிடையே பெற்ற செல்வாக்கினால் பலவேறு காவடிச் சிந்துக ளைப் புலவர்கள் பிற்காலத்தில் இயற்றியுள்ளனர்.

வீரை அந்தாதி, வீரை நவநீத கிருட்டிணன் பிள், ளைத் தமிழ், சங்கர நாராயணர் கோயில் திரிபந்தாதி கருவை மும்மணிக்கோவை ஆகிய நூல்களையும் அண்ணாமலை ரெட்டியார் இயற்றியுள்ளார்.

அ.அ.ம.

**அண்ணா மாவட்டம்**: காண்க: தமிழ்நாட்டு ஆட்சிப் பிரிவுகள்.

**அண்மை உறுப்பு** என்பதனை, ஒரு தொட ரில் உள்ள சொற்களில், ஒன்றனுக்கு ஒன்று நெருங்கிய தொடர்பு முறை உறவு கொண்ட இரு சொற்களை எடுத்துக் கொண்டால், அவை ஒன்றனுக்கொன்று அண்மை உறுப்பு (Immediate Constituents) ஆகின் றன என விளக்கிக் காட்டலாம். மொழியில் அடிப் படை உறுப்புகளாக - தனிமங்களாக - எழுத்து (ஒலி யன்), சொல் (உருபன்-பகாப்பதம்) என்ற இரண்டே உண்டு. இந்த உறுப்புகள் இரண்டு விதமான உற வைப் பெற்றிருக்கலாம். ஒன்று: ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று வருவது. இதுவே தொடர் முறைஉறவு (Syntagmatic relation) என்று குறிக்கப்படுகிறது. இன்னொன்று: ஓர் உறுப்புக்குப் பதிலாக அதே இடத்தில் - தானத்தில் - வரக்கூடிய உறுப்புகள். இவை அடுக்கு முறை உறவு (Paradigmatic relation) உடையனவாய்க் கருதப்படும். எடுத்துக்காட்டாக, எழுத்திலக்கணத்தில் அடு என்ற சொல்லில் அ என்ற எழுத்துக்குப் பதிலாக ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, போன்ற ஒலிகள் வர முடியும். (அடு, ஆடு, இடு, ஈடு உடு, ஊடு, எடு, ஏடு, ஒடு, ஓடு). இங்கு ஐ, ஔ தவிரப், பத்து உயிர்களும் அடுக்குமுறை உறவு உடையன வாகச் சொல்லலாம். அதாவது, சொல்லை இன் னொன்றிலிருந்து வேறு பிரித்தறியும் வேலையும் அடுக்குமுறை உறவு செய்கிறது. உயிர் எழுத்தை அடுத்து என்னென்ன எழுத்துகள் வரலாம் என்று தீர்மானிப்பதே தொடர் முறை உறவு ஆகும். நிற்ப, நிற்க, நிற்ற என்ற ஒலிக்குப் பதிலாக மூன்று ஒலி கள் வரலாம். எழுத்திலக்கணத்தில் மெய்ம்மயக்கங் கள் தொடர்முறை உறவைக் காட்டுவனவே.

சொல்லிலக்கணத்தில் இந்த இருவகை உறவும் இன்னும் சிறப்பாகவே செயல்படுகிறது. ஒரு சொல் லின் இடத்தில் வரக்கூடிய சொற்கள், ஒரு சொல் லை அடுத்து வரக்கூடிய சொற்கள் என்று சொற்க ளைப் பாகுபடுத்தி, அதற்குத் தனிப் பெயரும் இட முடியும். 'படித்த பையன்' என்பதில் 'படித்த' என் பது பெயரெச்சம்; 'பையன்' என்பது பெயர். எனவே பெயரெச்சமும் அதை அடுத்துவரும் பெயரும் தொடர்நிலை உறவு உடையன. பெயரெச்சம் என் பது பெயருக்கு முன்னால் வருவது. 'படித்த' என்னும் இடத்தில் வேறு பல சொற்களும் வந்து'பையன்' என் னும் பெயருக்கு முன் அமையலாம். அவ்வாறு வரும் சொற்களுக்கும் (பார்த்த, நடந்த, படிக்கிற, படிக் கும்) 'படித்த' என்னும் சொல்லுக்கும் உள்ள உறவு அடுக்கு முறை உறவைக் காட்டுவதாகும்.

வாக்கியத்தில் சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வருகின்றன. இதை நேர்நிலை அமைப்பு (Linear Structure) என்று குறிப்பிடலாம். ஆயினும், வாக்கியத்தில் சொற்கள் அடுத்து அடுத்து வந்தாலும் அவை எல்லாம் ஒரே வித நெருங்கிய உறவைப் பெற் றிருப்பதில்லை. 'அந்தப் பையன் பாடம் படித்தான்' என்ற நான்கு சொற்கள் கொண்ட வாக்கியத்தில் 'அந்த' என்ற சொல் 'பையன்' என்பதையும் 'பையன்' என்பது 'பாடம்' என்பதையும், 'பாடம்' என்பது 'படித்தான்' என்பதையும் தொடர்ந்து வந்திருக்கின் றன. அதாவது, அவை தொடர்நிலை உறவில் அமைந்து உள்ளன. 'பையன்' என்பதும் 'பாடம்' என்பதும் தொடர்ந்து வந்திருந்தாலும் அவை நெருங் கிய உறவு பெற்றிருக்கவில்லை. 'அந்த' என்பதும் 'பையன்' என்பதும் நெருங்கிய உறவு உடையன. பாடம்' என்பதும் 'படித்தான்' என்பதுமே நெருங்கிய உறவு உடையன. அதாவது, பையன், பாடம் என் பனவும் அடுத்தடுத்து வந்தாலும் 'பையன்' என்பதும் 'அந்த' என்பதும் சேர்ந்து ஒரு பெரிய உறுப்பாகவும் 'பாடம்' என்பதும் 'படித்தான்' என்பதும் மற்றொரு பெரிய உறுப்பாகவும் அமைந்து, அந்த இரண்டு உறுப்புகளுமே நெருங்கிய உறவு உடையனவாக (அண்மை உறுப்பு உறவு உடையனவாக)க் கருதக் வேண்டும். ஏனென்றால், அந்த வாக்கியத்தில் எழு வாய், பயனிலை என்ற அடிப்படை உறுப்புகளே உள்ளன. பையன் படித்தான் என்பதன் விரிவாக்கப் பட்ட வாக்கியமே அது. எனவே, வாக்கியத்தில் சொற்கள் ஒன்றோடு ஒன்று தொடர்ந்து வந்தாலும், அவைகளிடையே வெறும் நேர்நிலை உறவு மட்டும் அல்லாமல், படிநிலை உறவும் (Hierachi Relation) இருப்பதாகக் கொள்ள வேண்டும். படிநிலை உற வைக் கிளை வரைபடம் (Tree Diagram) மூலம் தெளி வாகக் காட்ட முடியும்.

அந்தப் பையன் பாடம் படித்தான்

படம்-1

அந்தப் பையன் பாடம் படித்தான்

அந்தப் பையன் பாடம் படித்தான்

அந்தப் பையன் பாடம் படித்தான்

படம்-2

படம்-1: வாக்கியத்திலுள்ள சொற்கள் இணைந்து, இரண்டு பெரிய உறுப்புகளாகி, அவையே ஒன்றோடு ஒன்று நெருங்கிய உறவு உடையன என்பதைக் காட்டுகின்றன. படம்-2: பெரிய உறுப்புகளாக இருந்து பின் அவை எப்படிச் சிறிய உறுப்புகளாகப் பிரிகின்றன என்பதைப் புலப்படுத்துகிறது.

வாக்கியம் முழுவதும் ஓர் உறுப்பி (Constitute) ஆகக் கொண்டால் அங்கு இரண்டு அண்மை உறுப்புகள் (Immediate Constituents) இருக்கின்றன என்பது பொருள். அது போலவே பெயர்த் தொடரை ஓர் உறுப்பியாகக் கொண்டால் 'அந்த', 'பையன்' என்ற இரண்டு உறுப்புகளும் ஒன்றனுக் கொன்று அண்மை உறுப்பாக அமைந்திருக்கின்றன என்று கொள்ளலாம். அப்படியே, 'பாடம் படித்தான்' என்ற வினைத் தொடரும், பாடம், படித்தான் என்ற அண்மை உறுப்புகளை உடையது.

அண்மை உறுப்பு ஆய்வில் மிகப் பெரிய உறுப்பியிலிருந்து சிறிய உறுப்பி வரை இரண்டு இரண்டாகப் பகுத்துக் கொண்டே போக முடியும். அன்றி, மிகச் சிறிய உறுப்பியிலிருந்து மிகப் பெரிய உறுப்பி வரை இணைத்துக் கொண்டும் போகலாம்.

அண்மை உறுப்பு ஆய்வின் இன்றியமையாமையை மூன்று சொற்கள் கொண்ட வாக்கியத்தாலோ தொடராலோ விளக்க முடியும். 'பழைய மாணவர் விடுதி' என்ற தொடர் இரண்டு பொருளைத் தர முடியும். பழைமையான, 'மாணவர் விடுதி' என்றும் 'பழைய மாணவர்' விடுதி என்றும் பொருள்படும். இந்த இரண்டு பொருள் ஏற்படக் காரணம் அங்குள்ள சொற்களின் அண்மை உறுப்பு உறவு மாறுபடுவதே ஆகும். முதல் பொருளைக் குறித்தால், 'பழைய' என்ற பெயரடை 'மாணவர் விடுதி' என்ற தொகையைத் தழுவுகிறது. அதாவது, 'பழைய' என்பதும் 'மாணவர் விடுதி' என்பதும் அண்மை உறுப்புகளாக அமைந்துள்ளன. இரண்டாம் பொருளைக் குறித்தால், 'பழைய மாணவர்' என்ற தொகை 'விடுதி' என்ற சொல்லோடு சேர்கிறது. அதாவது, பழைய மாணவர் என்பதும் விடுதி என்பதும் அண்மை உறுப்புகளாக அமைகின்றன. இந்த இரண்டையும் கீழ்க்கண்டவாறு படம் போட்டுக் காட்டலாம்.

பழைய மாணவர் விடுதி

பழைய மாணவர்களுடைய விடுதி

பழைய மாணவர் விடுதி

பழைமையான மாணவர் விடுதி

இங்கு அடுத்தடுத்து வரும் சொற்களிடையே அண்மை உறுப்பு உறவு மாறுவதே பொருள் வேறுபடக் காரணம் என்பது தெளிவாகிறது.

பொதுவாக மொழியில், சிறப்பாகத் தொடரியலில், மிகப் பெரிய அலகு வாக்கியமே. இதனைத், தொடர் (Phrase), பயனிலைகள் (Clause) என்ற அலகுகளாகவும் பிரிக்கலாம். அந்த அலகுகளை உறுப்பியாகக் கொண்டால் அவை ஒவ்வொன்றையும் பல உறுப்புகளாகப் பிரிக்கலாம். அந்த உறுப்புகளுக்கு இடையேதான் அண்மை உறுப்பு உறவு காண முடியும். அப்படியே ஒவ்வோர் உறுப்பையும் உறுப்பியாகக் கொண்டு, அவற்றில் அடங்கியுள்ள உறுப்புகளுக்குள்ளே அண்மை உறுப்பு உறவு காண முடியும். ஆகையினால், அண்மை உறுப்பு ஆய்வைத் தொடரியலில் குறைந்த உறுப்பான உருபன் (Morpheme) அல்லது பகாப்பதம் வரை, படிப்படியாக மேற்கொள்ளலாம்.

அண்மை உறுப்பு ஆய்வு என்பது, பெரிய சொற்றொடர்களை இரண்டு இரண்டு உறுப்புகளாகப் பிரித்துக் கொண்டே வருவது. எனவே, அண்மை உறுப்பு ஆய்வுக்கு இரண்டாகப் பகுப்பதே இன்றியமையாததாகும். அப்படி இரண்டாகப் பிரிக்கும் போது அந்தத் தொடர்கள் வேறு சிறு தொடர்களின் பதிலியாக வரக்கூடியவையாக இருக்க வேண்டும். நம் விருப்பப்படி இரண்டாகப் பகுக்கக் கூடாது. எடுத்துக்காட்டாக, 'சிறிய பையன் பெரிய பேனாவை எடுத்தான்' என்ற வாக்கியத்தைக் காண்போம். இந்த வாக்கியத்தில் சிறிய பையன்/பெரிய பேனாவை எடுத்தான் என்ற இரண்டு அண்மை உறுப்புகள் இருக்கின்றன. ஏனென்றால், 'சிறிய பையன்' என்பது 'கந்தன்' என்ற மற்றொரு சொல்லைப் பெய்தாலும் வாக்கிய அமைப்பு சரியானதாக இருக்கும். அப்படியே, பெரிய பேனாவை எடுத்தான் என்ற

தொடர், பெரிய பேனாவை/எடுத்தான் என்னும் இரண்டு அண்மை உறுப்புடையது. காரணம், பெரிய பேனாவை என்ற உறுப்பை மற்றொரு உறுப்பால்–பழத்தை என்ற சொல்லால் நிரப்பினாலும் வாக்கியம் சரியாக அமையும். எனவே, பெரிய தொடர்களுக்கு வேறாகத் தனிச் சொல்லைக் கொண்டு அமைத்தாலும் வாக்கியத்தின் அடிப்படைப் பண்பு மாறாமல் இருக்கவேண்டும். எனவேதான், இரண்டு இரண்டாகப் பிரிக்கும் போதே அவை தனிச் சொற்களைக் கொண்டு சரியான வாக்கியம் அமைக்கும்படி இருக்க வேண்டும் என்பது, மிகவும் இன்றியமையாததாகும்.

அண்மை உறுப்புகள் இரண்டாக அமைந்தாலும் அவை உம்மைத் தொடராகவோ உம்மைத் தொகையாகவோ வரும்போது, இரண்டுக்கு மேற்பட்ட உறுப்புகளும் இருக்க முடியும். இவற்றைப் பன்மை அண்மை உறுப்புகள் (Multiple Immediate Constituents) என்று கூறுவர். 'கை, கால், முகம் கழுவினான்' என்ற தொடரில், 'கை கால், முகம்' என்பதும் 'கழுவினான்' என்பதும் அண்மை உறுப்பு உறவு உடையன. ஆனால், கை, கால், முகம் என்ற உறுப்புகளை உறுப்பியாகக் கொண்டு பகுக்க வேண்டுமென்றால், இரண்டு உறுப்பாகப் பகுக்க முடியாது. பகுத்தால் (கை + கால் + முகம்), (கை + கால் + முகம்) என றாகி அவற்றிற்குச் சரியான காரணம் காட்ட முடியாமற்போகும். எனவே, கை + கால் + முகம் என்ற மூன்று உறுப்புகளும் ஒன்று சேர்ந்துள்ளனவாகக் கருத வேண்டும். இதுவே, பன்மை அண்மை உறுப்பு எனப்படும்.

அண்மை உறுப்புகள் எப்பொழுதும் நேர் நிலையில் இடைவிடாமல் அமைந்திருக்க வேண்டும் என்பதில்லை. எனவே தொடர் நிலையை ஒட்டி இரண்டு விதமாக அமையலாம். ஒன்று, இடைவிடா அண்மை உறுப்பு (Continuous Immediate constituent) என்றும், மற்றொன்று, இடைவிட்ட அண்மை உறுப்பு (Discontineous Immediate Constituent) என்றும் கூறப்படும். மேலே காட்டப்பட்ட எடுத்துக்காட்டுகள் எல்லாம் இடைவிடாத அண்மை உறுப்பு வகையைச் சார்ந்தன. 'எல்லா மக்களும்' என்ற தொடரில் எல்லா ...... உம் + மக்கள் என்பதே அண்மை உறுப்புகள். ஆனால், எல்லா மக்களும் என்ற தொடரில் மக்கள் என்ற உறுப்பு எல்லா ...... உம் என்ற உறுப்புக்கு இடையே வந்துள்ளது. எனவே இதை இடைவிட்ட அண்மை உறுப்பு என்றே கூறவேண்டும்.

அண்மை உறுப்பு ஆய்வு பெரும்பான்மை தொடரியல் ஆராய்ச்சியில் பயன்படுவது. இஃது இந் நூற்றாண்டின் முற்பகுதியில் செம்மையாக்கப்பட்டது என்பது குறிப்பிடத் தகுந்தது.


வாக்கியத்தில் சொற்கள் சேர்ந்து வரும் முறையை ஒட்டிச் சொல்லிலக்கணம் (Parsing) என்ற முறை – மேலை நாடுகளில் எழுவாய், பயனிலை; பெயரடை, பெயர்; செயப்படுபொருள், வினை; வினையடை, வினை என்று பிரித்து ஆராய்கிற முறை – நெடுங் காலமாகப் பழக்கத்தில் இருந்துவந்திருக்கிறது. இஃது ஓரளவு சொல் வகைப்பாட்டு (Parts of Speech) அடிப்படையிலும், பயன்பாட்டு (Functional) அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்த முறையை அண்மை உறுப்பு முறையில் ஆராய முடியும் என்று 1933–இல் புளூம்பீல்டு என்னும் அமெரிக்க அறிஞர் சில எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்கிக் காட்டினார். அதன் அடிப்படையில் ஆரிசு (Haris) வெல்சு (Wells) என்னும் இரண்டு அறிஞர்களும் அண்மை உறுப்பு என்பதைக் கோட்பாட்டு நிலையில் செம்மைப்படுத்தினர். தமிழ் இலக்கண உரைகளில் அண்மை உறுப்பு ஆய்வின் அடிவேர் காணப்படுவதும் சுட்டிக் காட்டத்தகும். தெய்வச்சிலையார் பல சொற்களை உடைய நீண்ட வாக்கியம் எப்படி இணைந்து அமைந்துள்ளது என்பதைப் பூத்தொடை' என்ற தொடர் கொண்டு விளக்கியுள்ளார். செ.வை.ச.

**அண்மை உறுப்புப் பகுப்பாய்வு** என்பது (Immediate Constituent Analysis) மொழியியலார் மேற்கொள்ளும் சொற்றொடராய்வு பற்றியதாகும். மொழி ஆய்வில் உருபன் நிலையில் ஏற்பட்டிருந்த வளர்ச்சி, சொற்றொடர் நிலையில் நீண்ட காலமாக இல்லாமலே இருந்தது எனலாம். எனினும், உருபன்களை வகைப்படுத்தி, வரிசையாக அடுக்கினால் மட்டும் உருபுக் கட்டுமானத்தைப் புரிந்து கொள்ள முடியாது. இதனை உணர்ந்த பலரும், சொற்றொடர் ஆய்விற்கான முயற்சியில் ஈடுபட்டனர். உருபன்களை இனங்காண்பதன் மூலம் மட்டுமே, ஒரு மொழியின் கட்டமைப்பைப் புரிந்து கொள்ள முடியுமானால், அகராதியின் துணைகொண்டே ஒரு மொழியைப் புரிந்து கொள்ளலாம். ஆயின், உண்மை அஃதன்று.

புளூம்பீல்டு (Bloomfield) என்பார் சொற்றொடர் ஆய்வு முறையாக, அண்மை உறுப்புகள் பற்றிய கோட்பாட்டை 1933–இல் வகுத்துத் தந்தார். எனினும், இக்கோட்பாட்டை இன்னும் தெளிவாகவும் விரிவாகவும் ஆக்கித் தந்தவர்கள், அவருக்குப் பின்னர் வந்த கட்டமைப்பு (Structural) மொழியியல் கோட்பாட்டைச் சார்ந்த அறிஞர்களே ஆவர்.

இக் கோட்பாட்டை விளக்கப் புகுந்த புளூம்பீல்டு, ஒரு சொற்றொடரை இரண்டாகப் பிரித்து, அவற்றை, மேலும் இரண்டிரண்டாகப் பிரித்துக் காட்டி, அவற்றுக்கிடையே காணப்படும் தொடர் முறை உறவை விளக்கியுள்ளார். எடுத்துக்காட்டாக,

"வெள்ளைப் புறா வேகமாகப் பறந்தது" என்னும் சொற்றொடரை, "வெள்ளைப்புறா" என ஒரு தொடராகவும், "புறா பறந்தது" என மற்றொரு தொடராகவும் பிரிக்கலாம். மீண்டும், இவற்றை, "வெள்ளை" "புறா" எனவும், "வேகமாக" "பறந்தது" எனவும், இரண்டிரண்டாகப் பிரிக்கலாம். கொடிவழி முறையில் இதனைக் கீழ்க்கண்டவாறு விளக்குதல் கூடும்.




இங்ஙனம் பிரிக்கும்போது, எவரும் "வெள்ளை புறா வேகமாக பறந்தது" எனப் பிரிப்பதில்லை. 'வெள்ளை' என்னும் உருபு 'புறா' என்பதன் அடையாகவே செயற்படுகிறதென்பதும், அவை இரண்டும் சேர்ந்த தொடரே இங்கு எழுவாயாகச் செயற்படுகிறது என்பதும் தாய் மொழியாளர் எவரும் உள்ளுணர்வின் மூலம் அறிந்த செய்தியாகும். எனவே, உருபன்கள் வரிசையாக, ஒரு சங்கிலித் தொடர்போலக் கட்டுவதனால் மட்டுமே பொருள் பொதிந்த ஒரு சொற்றொடர் ஆக்கப்படுவதில்லை என்பதும், தொடர்முறை உறவே இதற்குக் காரணம் என்பதும் இதனால் புலப்படுத்தப்படுகின்றன.

'வெள்ளைச் சட்டை அணிந்த அந்தப் பையன் வேகமாகக் கல்லூரிக்குப் போகிறான்' என்ற மற்றொரு சொற்றொடர், இதே அடிப்படையில் 'வெள்ளைச் சட்டை அணிந்த அந்தப் பையன்', 'வேகமாகக் கல்லூரிக்குப் போகிறான்' என இரண்டாகப் பிரிக்கப்படலாம். இங்ஙனம், இதுவரையிலும் ஒருவர் பேசியறியாத அல்லது கேள்விப்பட்டிராத சொற்றொடர் ஒன்றை ஒரு தாய் மொழியாளர் புதிதாகக் கேட்டாலும், அவரால் அதனைத் தொடர்முறை உறவின் அடிப்படையில் இரண்டிரண்டாகப் பிரிக்க முடியும். இதற்குக் காரணமாக அமைவது, ஒவ்வொரு மொழியிலும் காணப்படும் சில அடிப்படையான சொற்றொடர் வாய்பாடுகளே ஆகும். இவ் வடிப்படை வாய்பாடுகளின் மூலம் எந்தப் புதிய சொற்றொடரையும் புரிந்து கொள்ள முடியும். உண்மையில், புதிய சொற்றொடர்கள் எல்லாமே அடிப்படை வாய்பாடுகளின் 'விரித்தல்' அல்லது 'மாற்று' களேயாகும். இவ் 'விரித்தல்' அல்லது 'மாற்று' என்பதும், அண்மை உறுப்புகள் ஆய்வின் மற்றொரு அடிப்படைக் கோட்பாடாகும்.

சொற்றொடர்கள் தம் தொடர் முறை உறவின் அடிப்படையில் இரண்டிரண்டாகவே பிரிக்கப்படுவது நோக்கத்தக்கது. இதனை 'இருமைப் பகுப்பு' என இவ்வாய்வு குறிப்பிடுகிறது. தொடர்முறை உறவு இவ்வாறு இரண்டிரண்டாகவே அமையமுடியும் என்பதனை இது வலியுறுத்துகிறது. மேலும் பிரிக்கப்படும் உருபுகள் அனைத்தும் அடுத்தடுத்தே அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. இது அவற்றின் 'அண்மை'க் கோட்பாட்டைச் சுட்டுகிறது.

தொடர்முறை உறவு, இருமைப்பகுப்பு, விரித்தல் அல்லது மாற்று மற்றும் அண்மைநிலை என்பவை அண்மை உறுப்பாய்வின் அடிப்படைக் கோட்பாடுகளாகக் கருதப்படுகின்றன. பிரிக்கப்படுகின்ற உருபன்களுக்கோ தொடர்களுக்கோ எந்தப் பெயரும் தரப்படுவதில்லை என்பதும் குறிக்கத்தக்கது.

இவ்வடிப்படையில் பிரிக்கப்படும் அண்மை உறுப்புகள், மயக்க அண்மை உறுப்பு, பன்மை அண்மை உறுப்பு, தொடரா அண்மை உறுப்பு, ஒத்தியல் அண்மை உறுப்பு எனப் பலவாறாக வகை செய்யப்பட்டுள்ளன. இவ் வகைப்பாடுகளே இவ்வாய்வின் குறை நிறைகளையும் தெளிவாகச் சுட்டுகின்றன.

மயக்கம் தரும் சொற்றொடர்களை இவ்வாய்வின் மூலம் வேறுபடுத்திக் காண்பது எளிது. எடுத்துக்காட்டாக, 'பழைய புத்தகக்கடை' எனும் சொற்றொடரில் காணப்படும் மயக்கத்தினைக் கீழ்க் கண்டவாறு பிரிப்பதன் மூலம் தவிர்க்கலாம்.

பழைய புத்தகக் கடை

பழைய புத்தகங்களை விற்கும் கடை' என்னும் பொருளை இப்பகுப்பு உணர்த்துகிறது.

பழைய புத்தகக்கடை

புத்தகக்கடையானது பழையது, என்னும் பொருளை இப்பிரிவு உணர்த்துகிறது. எனினும், ஒரே பகுப்பின் மூலம் இம்மயக்கம் தவிர்க்கப்பட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 'பழைய' என்னும் உருபன் எப்பெயருக்கு அடையாக வந்துள்ளது என்ற இலக்கண உறவு தெரிந்தாலன்றி, இத்தீர்வு இயலாத ஒன்றாகிவிடும். ஆனால், புளூம்பீல்டு முதலில் வகுத்துத் தந்த கோட்பாட்டின்படி இலக்கண உறவுகள் வெளிப்படையாகப் பேசப்படுவதில்லை. உருபன்கள் மட்டுமே பிரிக்கப்படுகின்றன. 'இருமைப் பகுப்பு' என்ற கோட்பாடும் அனைத்து நேரங்களிலும் செயல்

பட முடியாது என்பதனைப் பன்மை அண்மை உறுப்பு உணர்த்துகிறது. 'சேர, சோழ, பாண்டியர்' வந்தனர் என்னும் தொடரைப் பின்வருமாறு மட்டுமே பிரிக்க முடியும்.


சேர, சோழ, பாண்டியர் வந்தனர்

சேர, சோழ, பாண்டியர் என்ற மூன்றுமே இங்கு, தலைப் பெயர்களாகும். ஒத்த நிலையிலேயே அவை எழுவாயாகச் செயற்படுகின்றன. இருமைப் பகுப்பு இங்குச் செயல்படவில்லை.

தொடரா அண்மை உறுப்பும் ஒரு வகையில் இவ்வாய்வில் சிக்கலைத் தருவதாகும். எடுத்துக் காட்டாக, 'எல்லாப் பையன்களும் வந்தார்கள்' என்ற தொடரில் 'எல்லா' என்பதும், 'உம்' என்பதும் அண்மை உறவுகள் கொண்டிருப்பினும் அவை அண்மை உறுப்புகள் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.

இருமை அல்லது பன்மை நிலையில் சொற்றொடரைப் பகுப்பதன் மூலம் மட்டுமே அதனைப் பற்றிய முழு உண்மைகளையும் பெற முடியாது. இத்தகு ஆய்வின் மூலம் வெளிக் கொணர முடியாத பல இலக்கண உறவுகள் இல்லாமல் இல்லை. எடுத்துக்காட்டாக, செய்வினை – செயப்பாட்டு வினைத் தொடர்களுக்கு இடையே உள்ள உறவு ஒரு போதும் இவ்வாய்வின் மூலம் புலப்படாது. ஏனெனில் இவ்வாய்வு ஒரு நேரத்தில் ஒரு சொற்றொடரையே பகுப்பிற்கு எடுத்துக்கொண்டு, அதனுடைய உறுப்புகளுக்கிடையே காணப்படும் உறவை மட்டுமே வெளிக் கொணர்கிறது. ஆனால், 'நான் பால் குடித்தேன்' எனும் தொடரும் 'பால் என்னால் குடிக்கப் பட்டது' எனும் தொடரும் அடிப்படையில் ஒன்றேயாகும். புற நிலையில் காணப்படும் இவ் வேறுபாடுகளையும் அவற்றிற்கிடையே காணப்படும் உறவுகளையும் அண்மை உறுப்புகள் ஆய்வு, புலப்படுத்த முடியாது. இது போன்ற உறவுகள் தாய் மொழியாளரது உள்ளுணர்வின் மூலம் தெரியவந்துவிடும் என இவ்வாய்வு ஊகித்துக் கொள்கிறது. ஆனால் அப்படிப்பட்ட ஊகங்கள் அறிவியல் சார்ந்த ஓர் அணுகுமுறைக்கு ஒத்துவரா.

இத்தகைய ஆய்வு, ஒரு சொற்றொடரின் உறுப்புகளை இனம் காண்பதிலும் வகைப்படுத்துவதிலுமே தன்னுடைய முழுக்கவனத்தையும் செலுத்துகிறது. ஆனால் அவற்றின் செயற்பாடுகளைக் கவனத்தில் கொள்வதில்லை. இப்படிப்பட்ட ஓர் அணுகுமுறை புளூம்பீல்டுக்குப் பிற்பட்ட காலத்தில், அதாவது சோம்சுகியின் (N. Chomsky) காலம் வரையிலும் மேலோங்கி இருந்தது. இவ் வாய்வின் இரண்டாம் கட்டமாக, அடைப்புக் குறியாக்கம், (Bracketting) பெயரிட்ட அடைப்புக் குறியாக்கம் (Labelled-bracketting) என்ற வேறுபாடு வளர்ந்தது. சொற்றொடரை வெறும் அண்மை உறுப்புகளாக மட்டுமே பிரிப்பதை நோக்கமாகக் கொண்ட முதல் வகையினால் பயன் ஏதும் இல்லை என்பதனால், அவற்றின் இலக்கண உறவுகளை விளக்கும் இரண்டாம் வகையான 'பெயரிட்ட அடைப்புக் குறியாக்கம்' அறிமுகப்படுத்தப் பட்டது. இதன் அடிப்படையில் முதலில் குறிப்பிட்ட சொற்றொடர் பின் வருமாறு பிரிக்கப்படும்.




மொழி ஆய்வில் உறுப்புகளைப் பிரிப்பது, அவற்றை இனம் கண்டு வகைப்படுத்தும் எந்த முயற்சிக்கும் முன்னரே நிகழவேண்டும் என்பது கூட்டமைப்பு மொழியியலின் ஓர் அடிப்படைப் போக்காக அமைந்திருந்ததாலேயே, அடைப்புக் குறியாக்கம் என்ற முதல் வகை, தொடக்கக் கட்டத்தில் மேலோங்கி இருந்தது என்பதனையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

பிரிக்கப்பட்ட உறுப்புகளுக்குப் பெயரிட்டுவிட்டோமானால் முதல்வகைப் பகுப்பான எளிய பிரிப்பாய்விலிருந்து அது வேறுபட்டுவிடும் என்பது மட்டுமல்லாமல், அத்தகைய ஆய்வு மரபாகப்பின்பற்றப்படும் 'இலக்கணக் குறிப்புகள் கூறும் ஆய்விற்கு மிகவும் நெருங்கியதாகவும் ஆகிவிடும். இத்தகைய ஆய்வு, 'தொடர்-அமைப்பு இலக்கணம் என இன்று குறிக்கப்படுகிறது. இவ்வாய்வு எல்லா உறுப்புகளுக்கும் அவை பிரிந்து வரும் கணுக்களுக்கும் (Nodes) பெயரிட்டு இலக்கண உறவைப் புலப்படுத்த முடியும் என்று நம்பினாலும், பெயரிட முடியாத சில கணுக்கள் இவ்வாய்வுப் பகுப்பிலும் இல்லாமலில்லை. இத் 'தொடர்-அமைப்பு' இலக்கணத்தின் பல வடிவங்கள், இன்று நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை, ஆலிடே (Holiday) பைக் (Pike), இலாம்பு (Lamb) ஆகியோரின் இலக்கணங்களாகும். இவை அனைத்தும், மொழி உறுப்புகள் பெரும்பாலும் ஒரு சங்கிலித் தொடராக அமைந்திருப்பதாகவே எண்ணுவதனால் இவற்றை அண்மை உறுப்புகள் ஆய்வின் வளர்ச்சியாகவே கருதலாம். சோம்சுகியின் மாற்றிலக்கணக் கோட்பாடே மிகுந்த வேறுபாட்டைக் கொண்டது எனலாம். ஜெ.நீ.

துணை நூல்கள்:

**Bloomfield**, L., Language, New York, 1933.

Crystal, David, Linguistics, Pelican, Harmondisworth, 1971.

Hockett, C.F., "A Course in Modern Linguistics," The Macmillan Company, New York. 1958.

Lyons, John., "An Introduction to Theoretical Linguistics", Cambridge University Press, 1968.

Palmer, Frank Grammer, Pelican, Harmonds worth, 1971.

**அணி** என்பது இலக்கியங்களில் அமைந்துள்ள அழகுகளைக் குறிக்கும். இயற்கையின் பல்வேறு கூறுகளில் அழகினைக் காண்பது போல், இலக்கிய மொழியிலும் பேச்சு மொழியிலும் அழகினைக் காணலாம். அணிநலம்பட மொழியை ஆள்வது என்பது கவிதை நடைக்கு மட்டுமன்றிப் பேச்சு நடைக்கும் தவிர்க்க முடியாததும் இயல்பானதுமாய் அமையக் கூடியதாகும்.

தமிழில் மிகப் பழைய இலக்கண நூலாகிய தொல்காப்பியம், தமிழ் இலக்கணத்தை எழுத்து சொல், பொருள் என்ற பாகுபாட்டிலேயே அடக்கியது. யாப்பும் அணியும் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் பகுதிகளாக அமைந்தன. பின்னர்ப் பொருளதிகாரத்தின் செய்யுளியல் யாப்பதிகாரமாகப் பிரிந்தது. பொருளதிகாரத்தின் அகப்பொருள் புறப்பொருள் செய்திகளும் தனித்தனி இலக்கண நூல்களாக வளரத் தொடங்கின. அடுத்துப் பொருளதிகாரத்தின் அகத்திணையியல் செய்திகள் சிலவற்றையும் உவமவியலையும் மெய்ப்பாட்டியலின் சுவைகளையும் வடமொழி அலங்காரங்களுடன் சேர்த்து, அணியிலக்கணம் என்னும் தனிப்பிரிவில் விளக்கும் நூல்கள் எழலாயின. தமிழ் இலக்கணத்தை மூவகையாய்க் கூறும் நிலை வளர்ந்து எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணமாகக் கூறும் நிலை உருவாகியது. ஐந்திலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது புத்தமித்திரனாரது வீரசோழியம் (11-ஆம் நூ.) ஆகும். தமிழ் நெறி விளக்கமும் நன்னூலும் ஐந்திலக்கண நூல்கள் என்னும் குறிப்பு முறையே அவற்றின் முன்னுரையிலும் சிறப்புப் பாயிரத்திலும் இடம் பெற்றாலும், நமக்குக் கிடைத்திருப்பவை தமிழ்நெறி விளக்கத்தின் அகப்பொருள் பற்றிய 25 நூற்பாக்களும், நன்னூலின் எழுத்தும் சொல்லுமே ஆகும். திருவாரூர் வைத்தியநாத தேசிகர் (கி.பி. 17-ஆம் நூற்றாண்டு) எழுதிய இலக்கண விளக்கம், ஐந்திலக்கணத்தையும் விரிவாகத் தருகிறது. இது குட்டித் தொல்காப்பியம் என்றும் வழங்கப்படுகிறது. இந்நூல் கூறும் அணியிலக்கணம் காவியாதர்சத்தையும் தமிழ் மரபினையும் தழுவி எழுதப்பட்டது. வீரமாமுனிவர் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தொன்னூல் விளக்கம் என்னும் ஐந்திலக்கண நூலை இயற்றினார். இந்நூல் 69 நூற்பாக்களில் அணியிலக்கணம் கூறுகிறது. முத்துவீர உபாத்தியாயரின் முத்துவீரியமும், சாமி கவிராசர் எழுதிய சுவாமி நாதமும் ஐந்திலக்கணம் கூறும் நூல்கள். கலா நிலையம் இராசகோபாலாச்சாரியாரின் இலக்கண விளக்கம் இந்நூற்றாண்டில் எழுந்த ஐந்திலக்கண நூல். தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணமும் அணியிலக்கணம் கூறுகிறது.

அணியிலக்கணத்திற்குத் தனி அதிகாரம் அமைத்த மேற்கண்ட நூல்களைத் தவிர, முற்றிலும் அணிகள் பற்றியே எழுந்த அணியிலக்கண நூல்களுள் சிறப்பு வாய்ந்தது தண்டியலங்காரம். தண்டியலங்காரத்துக்கு முன்னர்த் தமிழில் அணியியல் என்ற பெயரில் அணியிலக்கண நூல் ஒன்று இருந்ததாகக் கருத இடம் உள்ளது. தண்டியலங்காரத்துக்கு முந்திய யாப்பருங் கல விருத்தியுரையாசிரியர், அணியியல் என்ற நூலை ஐந்திடங்களில் குறிப்பிடுகிறார். அணியியலிலிருந்து இவர் தரும் மேற்கோள்கள் தண்டியலங்காரத்தில் இல்லை. நேமிநாத உரையாசிரியரும், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் அணியியல் என்னும் நூல்பற்றிக் குறிப்பிடுகின்றனர். தண்டியலங்காரத்தையே அணியியல் என்ற பெயரால் சுட்டுவர் என்று கூறுவாரும் உளர். ஆனால், காலத்தால் தண்டியலங்காரத்துக்கு முந்தியவரான யாப்பருங்கல உரையாசிரியர் தண்டியலங்காரத்திலிருந்து மேற்கோள் காட்ட இயலாது என்பதால், அணியியல் என்று மேற்குறித்த உரையாசிரியர் சுட்டுவது, தண்டியலங்காரத்தினின்றும் வேறான அணியிலக்கண நூலினையே என்றும், அதன் காலம் கி.பி. 8-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.

தண்டியலங்காரத்தை முதல் நூலாகக் கொண்டு எழுந்தது மாறனலங்காரம். இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் (கி.பி. 16-ஆம் நூற்றாண்டு). இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்ற நான்கு இயல்களில் அணியிலக்கணம் கூறுகிறது. தொல்காப்பியச் செய்திகளையும் தண்டியலங்கார அணிகளையும் தாமே படைத்த புதிய அணிகளையும் சேர்த்து, ஆசிரியர் விரிவாக இந்நூலைச் செய்துள்ளார். வடமொழிச் சந்திராலோகத்தை விசாகப்பெருமாள் கவிராயர், அணியிலக்கணம் எனத் தமிழ் உரைநடையாக மொழி பெயர்த்தார். இதனைப் பின்பற்றிச் சந்திராலோகத்தைத் தமிழ்க் கவிதையில் ஆக்கியவர் மு. இராகவையங்காரின் தந்தை முத்துச்சாமி ஐயங்கார் (கி.பி. 19. நூற்.) ஆவார். இதுவே சந்திராலோகம் என்னும் தமிழ் அணியிலக்கண நூலாகும்.

அணியிலக்கணத் துறையில் மேற்கூறப்பட்டனவே யன்றி, வேறு சிலவும் உள்ளன. டாக்டர் சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய 'தொனி விளக்கு' என்னும் நூலும், சபாபதியாப்பிள்ளையவர்களின் துறைசைச் சதாலங்கார நூலும் (1884), நாராயணசாமிப் பிள்ளையவர்களின் அரங்கர் அலங்கார மாலை (1884) என்னும் நூலும், திருஞான சம்பந்த முதலியாரால் வெளியிடப்பட்ட ஆரணசைலர் அலங்கார பஞ்சகமும் (1900) குறிப்பிடத்தக்கவை.

அணியிலக்கண நூல்கள் அணிகளைப் பொருளணி, சொல்லணி என்று பாகுபாடு செய்கின்றன. பொருட் சிறப்பால் செய்யுளுக்கு அழகு சேர்ப்பன பொருளணிகள். பொருளை அதிகம் போற்றாது செய்யுளில் சொற்களின் அமைப்புக்கும் ஓசை நயத்திற்கும் முதன்மை கொடுப்பவை சொல்லணிகள். பொருளணி களையே அறிஞர் பெரிதும் போற்றுவர். சொல்மாற அணி கெடுவது சொல்லணி என்றும், அவ்வாறு மாறினாலும் நிலைக்கும் அணி பொருளணி என்றும் இவ்விருவகை அணிகளையும் வேறுபடுத்திக்காட்டுவார் வீரமாமுனிவர் (தொன்னூல் விளக்கம்). சில அணி களைப் பொருளணியின்பாற் சேர்ப்பதா, அன்றிச் சொல்லணியின்பாற் சேர்ப்பதா என்பதில் இலக்கணி களிடையே கருத்து வேறுபாடு காணப்படுகிறது. பிற அணியிலக்கண நூல்கள், சித்திர கவியைச் சொல்லணியுள் அடக்கத் தொன்னூல் விளக்கம் பொருளணியுட் படுத்துகிறது. ஓவியம் வரைதல் போன்று இலக்கியத்தில் வருணிப்பது என்று சித்திர கவிக்கு வேறுபட்ட விளக்கமும் தருகிறது. பூட்டுவில் பொருள் கோளைப் பொருளணிகளுள் ஒன்றாக மாறனலங்காரம் குறிப்பிட, பொருள்கோளைச் சொல்லணியுள் அடக்குகிறது தொன்னூல் விளக்கம். பொருளணியாக இலக்கணிகளால் விளக்கம்பெறும் சிலேடையைச் சொல்லணியாகக் கருதுவார், கலாநிலையம் இராசகோபாலாச்சாரியார் (இலக்கண விளக்கம்). சொல் திறமையே இதில் அதிகம் தேவைப்படுவதால் இது சொல்லணி என்பதே பொருந்தும் என்பது அவர் கருத்து.

பொருள் வெளிப்பாட்டில் அமையும் மிக நுண்ணிய வேறுபாடுகள் தனித்தனி அணிகளாக வெவ்வேறு ஆசிரியர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒரே அணி பல பெயர்களால் சுட்டப்பெற்றுள்ளது. பெயரால் ஒன்றாகக் காணப்படும் அணி வேறுவேறு விளக்கம் பெறுவதையும் காணமுடிகிறது. ஒரு நூலில் ஓர் அணியாக இடம்பெறுவது, இன்னொன்றில் ஒன்றுக்கு மேற்பட்ட அணிகளாக அமைவதும் உண்டு. ஒரு நூல் அணியாகக் கொள்வதை இன்னொன்று கூறாது விட்டுவிடுகிறது. தண்டி முதலிய நூல்கள் பின்வரு நிலையணி என்று குறிப்பதனை வீரசோழியம் 'மீட்சி' என்றும், தற்குறிப்பேற்ற அணியை வீரசோழியம் 'நோக்கம்' என்றும், தொன்னூல் விளக்கம் ஊகாஞ்சிதம் என்றும் சுட்டுகின்றன. வீரசோழியம் அதிசய வணியைப் பெருக்கு என்று கூறுகிறது. தன்மேம் பாட்டுரையினை வீரசோழியம் ஊக்கம் என்றும் மாறனலங்காரம் நெடுமொழி என்றும் வழங்குகின்றன. காப்பியம் முழுதும் ஊடுருவி நிற்கும் கருத்தாகிய பாவிகத்தை வீரசோழியம், தண்டி, மாறனலங்காரம், இலக்கண விளக்கம் ஆகியன ஓர் அணியாகக் கொள்ள, பிற நூல்கள் அதனைக் கூறாது விடுத்துள்ளன. பொருளணியை முன்கூறிச் சொல்லணியைப் பின்கூறும் முறையிலிருந்து மாறி அவற்றின் வைப்பு முறையிலும் மாற்றம் காணப்படுகிறது.

இலக்கணிகள் கூறும் பொருளணிகள் இருநூற்றிரண்டனுள் உவமை, உருவகம் வேற்றுமை, வேற்றுப் பொருள்வைப்பு, பின்வருநிலை, உயர்வு நவிற்சி, தற்குறிப்பேற்றம், சுவை, புகழாப் புகழ்ச்சி, ஐயவணி, மயக்க அணி, தன்மை அணி போன்றவை வழக்குப் பயிற்சியுடையனவாகும்.

பொருளணிகள் அனைத்துள்ளும் மிகப் பழமையானதும், ஏனைய அணிகளுக்குத் தோற்றுவாயாய் அமைவதும், உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் ஆட்சி மிகுதியுடையதும் உவமை அணியேயாகும். தொடக்கத்தில் வடமொழியில் அலங்காரங்கள் குறித்துச் சிந்தித்தவர்களும் உவமையிலிருந்தே தொடங்கினர். வடமொழி வேதத்திற்குப் பொருள் உரைத்தவர்களுள் ஒருவரான யாசுகர் என்பார், உவமையைக் குறிக்கும் சொற்களையெல்லாம் தொகுத்து உவமையின் இலக்கணத்தையும் பிரிவுகளையும் தந்துள்ளார். கி.மு. 500-இல் வடமொழிக்கு இலக்கணம் வகுத்துத்தந்த பாணினி உவமையணியின் உறுப்புகளைக் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழ் இலக்கண நூலாசிரியராகிய தொல்காப்பியரும் உவமை பற்றி நுட்பமாய்ச் சிந்தித்திருக்கிறார். உவமை பற்றிய ஆய்வுக்குப் பொருளதிகாரத்தில் உவமவியல் என்று தனியியல் ஒதுக்கியதோடு, அகத்திணையியலுள்ளும் உள்ளுறை உவமம் பற்றிச் சுட்டியுள்ளார். பிற்கால அணியிலக்கணிகள் கூறும் அணிவகைகள், அவ்வளவு விரிவாகத் தொல்காப்பியத்தில் இடம் பெறாவிட்டாலும், அவ்வணிவகைகளுக்கான கூறுகள் உவமவியலுள்ளும் பிற பொருளதிகாரச் செய்திகளுள்ளும் காணக் கிடக்கின்றன. இதனைத் 'தொல்காப்பியர் உவமவியலுள் கூறும் உவமங்களுள் சிலவற்றையும் சொல்லதிகாரத்துள்ளும் செய்யுளியலுள்ளும் சொல்லும் சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு அவை செய்யுளுக்கு அணியென்று நூல் செய்தாரும் உளர்', என்பார் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர்.

ஒரு பொருளோடு ஒரு பொருளினை ஒப்புமை கூறுவது உவமமாகும். பொதுவாக உவமத்துக்கு நான்கு கூறுகள் உள்ளன. அவை வருவாறு:

1. பேச எடுத்துக் கொண்ட பொருள் அல்லது உவமேயம்
2. அதனோடு ஒப்புமையுடைய உவமைப் பொருள்
3. இரண்டுக்கும் உள்ள பொதுத்தன்மை
4. இரண்டையும் இணைக்கும் உவம உருபு

ஒப்புமைக்கான பொதுத்தன்மை கொண்டு உவமையினை வினை, பயன், மெய், உரு என்று நான்காகப் பாகுபாடு செய்வார் தொல்காப்பியர். 'புலிபோலப் பாய்ந்தான்' என்பது வினைபற்றியும், 'மழை யன்ன கொடை' என்பது பயன்பற்றியும், 'துடி, போன்ற இடை' என்பது மெய் (வடிவம்) பற்றியும், பொன் போன்ற மேனி என்பது உரு (வண்ணம்) பற்றியும் வந்த உவமங்களாகும், இவ்வுவமைகள் சிறப்பு, நலன், காதல், வலிமை, கிழக்கிடுபொருள் (கீழதாகும் பொருள்) இவ்வைந்தனுள் ஒன்றை நிலைக்களமாகக் கொண்டு தோன்றும் என்பார் அவர். உவமை உவமேயப் பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதை 'உயர்ந்ததன் மேற்றேஉள்ளும் காலை', என்ற நூற்பாவால் உணர்த்துவார். மேலும், சுட்டிக் கூறா உவமம், பொருளே உவமம் செய்தல், மெய்ப்பாடுவமம், அடையடுத்த உவமை, முன்ன உவமை, உவமப்போலி, ஒரீஇக் கூறல், தடுமாறுவமம், அடுக்கிய தோற்றம், நிரனிறை உவமம், வேறுபடவந்த உவமத் தோற்றம் என்ற உவமை வகைகளையும், உவமவியலுள் காணலாம். சுட்டிக் கூறா உவமம், உவம உரு பின்றித்தோன்றும் எடுத்துக்காட்டுவமைஆகும்.(எ-டு) பவளவாய். பொருளே உவமம் செய்தல் என்பதை இளம்பூரணர் உருவகம் என்று கூறப் பேராசிரியர் விபரீத உவமைக்கு நிகராக்குவார். எண்வகை மெய்ப் பாடுகளோடும் சேர்ந்து வரும் உவமம் மெய்ப்பாடுவமம். பொருள் அடையடுத்து வருவதற்கேற்ப உவமையும் அடையடுத்து வருவது அடையடுத்த உவமை. முன்ன உவமையினையும் உவமப் போலியினையும் குறிப்பாய் உவமம் கூறும் உள்ளுறை உவமமாகக் கொள்வார் பேராசிரியர். ஒரீஇக்கூறல் என்பது உவமை, பொருளை ஒக்குமெனக் கூறாது ஒவ்வாதென்று கூறுதல். (எ.டு) அன்னம் மாதர் நடை ஒவ்வாய்.

அடுக்கிய தோற்றம் என்பது உவமைக்கு உவமையாக வருவது. இது கடியப்படுகிறது. பொருளையும் உவமையையும் நிரலே நிறுத்தி உவமம் செய்வது நிரனிறை உவமமாகும். தடுமாறுவமம் என்பது தண்டியின் மயக்க அணியோடு ஒப்புமையுடையது. இவையே யன்றி உவமத்தை வேறு வகையாகக் கையாளும் முறைகள் அனைத்தினையும் வேறுபடத் தோன்றும் உவமத் தோற்றத்துள் அடக்குவார் தொல்காப்பியர்.

பண்பு, தொழில், பயன் என்ற மூன்று அடிப்படையில் உவமம் தோன்றும் என்பார் தண்டி. மேலுமவர் இம்மூவகை உவமைகளையும் விரியுவமை முதலாக மாலையுவமை ஈறாக இருபத்து நான்காக விரித்து விளக்குவார். அன்ன, ஏய்ப்ப, உறழ, ஒப்ப முதலான 36 உவம உருபுகளைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. இவற்றுள் சிலவற்றை விடுத்துப் புதியன சிலவற்றைச் சேர்த்து 35 உருபுகளைத் தருகிறார் தண்டி.

உருவகம் உவமையினை அடுத்துப் புலவர்களால் மிகுதியாக ஆளப் பெறும் அணியாகும். உவமையின் செறிவே உருவகமாகும். இதனைப் 'பொருளே உவமஞ்செய்தல்' என்று உவமத்துள் அடக்கிக் கூறுவர் தொல்காப்பியர். உவமைப் பொருளையும் உவமிக்கப் படும் பொருளையும் வேறுபாடொழித்து ஒன்று என்று கருதும்படி கூறுவது உருவகமாகும். "கை காந்தள், வாய் குமுதம், கண் நெய்தல்" என்று வருபவை உருவகங்கள். இவ்வுருவக அணி தொகையுருவகம், விரியுருவகம், தொகைவிரியுருவகம் முதலிய பதினைந்து வகையாக விளக்கப்பெறும். வேற்றுமையணி ஒப்புமையுடைய இருபொருள்களை ஒரு பொருளாகக் கொண்டு அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படச் சொல்வது. வேற்றுப் பொருள் வைப்பு முன் ஒரு செய்தியைக் கூறிப் பின் வேறொரு வலியுடைய உலகறிந்த செய்தியைக் கூறி முடிப்பது. பின்வருநிலையணி ஒரு செய்யுளுள் முன்னர் வந்த சொல்அல்லது பொருள் பின்னர்ப் பலவிடத்தும் வருவது. இது சொற் பின்வருநிலை, பொருள் பின்வருநிலை, சொற்பொருள் பின்வருநிலை என்று மூவகையாகச் செய்யுளில் வரும்.

உயர்வு நவிற்சி, கற்போர் வியந்து மகிழும் வண்ணம் பெரியதை மிகப்பெரியதாயும், சிறியதை மிகச் சிறியதாயும் கூறுவது. தற்குறிப்பேற்றம் இயல்பான நிகழ்ச்சி அல்லது தன்மை ஒன்றன் மீது கவிஞன் தன் கருத்தினை ஏற்றிக் கூறுவது.

சுவையணி, அகத்தே நிகழும் உணர்வுகளைப் புறத்து நிகழ்ச்சிகளால் விளங்கும்படி எண்வகைப் பட்ட மெய்ப்பாட்டால் இயல்வது. புகழாப் புகழ்ச்சி பழித்துரைப்பது போல் புகழ்வது. ஐயவணிஇதுவோ அதுவோ அல்லது வேறு ஒன்றோ என்னும் ஐயப் பாட்டுடன் ஒரு பொருளைக் கூறுவது. மயக்கவணி ஒரு பொருளை அதனுடன் ஒப்புமையுடைய வேறொன்றாகக் கருதிக் கூறுவது. தன்மையணி ஒரு பொருளின் இயல்பை உள்ளவாறு வருணனை செய்து கூறுவது. இயன்றவரை மேற்காணும் அணிகள் இல்லாமல் அமைவது என்றும் இதனைக் கூற


லாம். இயல்பான வருணனையினாலேயே ஒரு பொருளைச் சித்திரமாக்கிக் காட்டுவதும் ஓர் அழகே. இதனாலேயே அணியிலக்கணத்தார் இதனை அணிகளுள் ஒன்றாகக் கருதி முதலாவதாய் உரைத்துள்ளனர். இதனைப் பொருள் தன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழில் தன்மை என்று நான்காகப் பாகுபாடு செய்வர். மடக்கும் மடக்குத் தழுவி அமையும் சித்திர கவிகளும் சொல்லணிகளாகும். தொன்னூல் விளக்கம், பிற நூல்களிலிருந்து வேறுபட்டு மறிநிலை, சொல் மிகல், சொல் எஞ்சல், சொல் ஒப்பு என்று சொல்லணிகளை நான்காக வகைப்படுத்தியுள்ளது. பொருள்கோளை மறிநிலையணிக்குள் அடக்கியது. முத்துவீரியமும் மறிநிலையைக் குறிப்பிட்டுள்ளது. மறிநிலை என்பது, ஒன்றற்குரியதைப் பிறிதொன்றற்கு உரைப்பதாகும்.

வந்த சொல்லே பிற சொற்கள் இடையிடாதும் இடையிட்டும் வந்து, வேறு பொருளைத் தருவது மடக்கு என்னும் அணியாகும். இதனை அடிமுதல் மடக்கு, ஈரடி மடக்கு, மூன்றடி மடக்கு, நான்கடி மடக்கு என்று பாகுபாடு செய்து மிக விரிவாகப் பேசுகிறது தண்டியலங்காரம்.

மடக்கணி அமைந்த சித்திரச் செய்யுளே சித்திர கவியாகும். சக்கரம், சதுரம், சுழிரேகை, நாகம், முரசம், தேர் ஆகிய வடிவங்களில் படங்கள் வரைந்து அவற்றினூடே செய்யுளைப் பொதிந்து வைக்கின்றனர். எழுத்துகளைக் கூட்டிச் சொல்ல வேண்டிய திசைகளை அறிந்து வேறு வேறு திசைகளில் எழுத்துகளைக் கூட்டிப் பார்க்கும் போதும், ஒரே செய்யுள் கிடைக்குமாறு எழுத்துகள் படங்களுக்குள் அமைக்கப்பட்டிருக்கும். சித்திரத்திலிருந்து செய்யுளை விடுவிப்பவனுக்கு ஒரு விடுகதையை விடுவிப்பவனுக்கு ஏற்படும் மகிழ்ச்சி உண்டாகிறது. இங்குச் செய்யுளில் பொருள் முதன்மை பெறுவதில்லை. செய்யுளைச் செய்பவன் சித்திரத்துக்குள் செய்யுளை வெற்றிகரமாக அமைக்கும் வித்தையிலேயே நாட்டம் செலுத்துகிறான். படிப்பவனும் சித்திரத்திலிருந்து கவிதையை வெற்றிகரமாக விடுவிக்கும் வித்தையிலேயே இன்பம் காண்கிறான். எனவே சித்திர கவிகள் என்பன சொற்களால் அமைந்த ஒரு விளையாட்டு என்பது பொருத்தமாகும்.

மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், கோமூத்திரி, சருப்பதோ பத்திரம், நாகபந்தம், முரசபந்தம், இரத பந்தம், ஆகியவை சித்திரகவிகளுள் சிலவாகும். அணியிலக்கண நூல்கள் மொத்தம் 41 வகைச் சித்திர கவிகளைக் குறிப்பிட்டுள்ளன. எடுத்துக்காட்டாகச் சுழிகுளம், சருப்பதோ பத்திரம் என்ற சித்திர கவிகள் கீழே காட்டப்படுகின்றன.

**சுழிகுளம்:** இதில் முதலடி முதல் எழுத்திலிருந்து சுழிரேகை வழியே மேலிருந்து கீழிறங்கியும் கீழிருந்து மேலேறியும் உள்வந்து முடியும்படி இடஞ்சுற்றிப் படிக்கச் செய்யுள் விளக்கம் பெறும்.




சுழிகுளம்

செய்யுள் :
கவிமுதி யார் பாவே
விலையரு மா நற்பா
முயல்வ துறு நர்
திருவ ழிந்து மாயா

**சருப்பதோ பத்திரம்:** இதில் நாற்புறமும் தலைப் பாக வைத்து வரிசையாகப் படித்தாலும் மடக்கிப்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |

சருப்பதோ பத்திரம்

படித்தாலும், நான்கடிகளையும் மேலிருந்து கீழிறக்கியும், கீழிருந்து மேலேற்றியும் படித்தாலும் கீழ்க்காணும் செய்யுள் வடிவம் சிதையாமல் கிடைக்கக் காணலாம்.

செய்யுள்: மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா

இலக்கியம் படைப்பவனுக்குப் பொருள் வெளியீட்டு உத்திகளைத் தருவதோடு இலக்கியச் சுவைஞனுக்குப் பொருள் கொள்ளும் முறையினையும் உணர்த்துவதால், இலக்கியப் படைப்பிலும் இலக்கியச் சுவையிலும் அணியிலக்கணம் தனியிடம் பெறுகிறது. அணியிலக்கணம் கூறும் காப்பிய வழுக்கள் இலக்கிய மதிப்பீட்டிற்குத் துணை செய்யும் போக்கில் அமைந்தவை. அணியிலக்கணங்கள் பொதுவாகக் காப்பியத்தின் பொருள், வெளியீட்டு உத்திகள் பற்றியே மிகுதியும் பேசுகின்றன. சிறுபான்மை தசாங்கம், தூது, அந்தாதி ஆகியவற்றுக்கும் விதிகள் கூறுகின்றன. இலக்கிய அணிகளுள் பெரும்பாலானவற்றை ஒருங்கே காண்பதற்கும், இலக்கிய இன்பங்களை ஓரிடத்திலே துய்ப்பதற்கும் காப்பியமே களம் என்று எண்ணியதாலேயே அணியிலக்கணங்கள் காப்பியத்துக்கே முதன்மையும் சிறப்பும் தருகின்றன என்னும் கருத்து ஏற்புடைத்து. காப்பியத்தின் உள்ளடக்கம் எதுவாயிருத்தல் வேண்டும் என்றும், அதனை எவ்வாறு உணர்த்தினால் பொருள் சிறக்கும் என்றும் விதிகள் செய்திருப்பதால், காப்பியத்தின் உள்ளடக்கம், உருவம் ஆகியவை பற்றிய சிந்தனை அணியிலக்கணத்தில் இடம் பெறக் காணலாம். ஆனால் இலக்கியத்தின் உள்ளடக்கமும் உருவமும் சமூகத்தின் சூழலுக்கும் தேவைக்குமேற்ப மாறக் கூடியவை. இலக்கியக் கலைஞனது வெளியீட்டு உத்திகளும் ஒரு வரையறைக்குள் அடங்குவன அல்ல. இதுபற்றித் தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியரும் சிந்தித்துள்ளார். அணியிலக்கணம் பற்றிய அவரது திறனாய்வு குறிப்பிடத்தக்கது. அணியிலக்கணிகள் கூறும் 'அணிகள் செய்யுளுக்கு அணி செய்வன' என்னும் கருத்தையே அவர் மறுக்கிறார். செய்யுளின் வேறாகாத பொருளுறுப்புகளைச் செய்யுளுக்கு அணி என்று கூறுதல் பொருந்தாது என்பது அவர் கருத்து. அப்படியே அணி என்று கொண்டாலும், செய்யுளுக்கு அணி செய்யும் பொருட்கூறுகள் முழுவதும் தொகுக்க இயலாது பெருகும் இயல்பினவாதலால் அவற்றுள் சிலவற்றை விடுத்து இலக்கணம் செய்வது, குன்றக் கூறலாக அமையும் என்றும் விளக்குவார். உவமை, உருவகம் போன்றவற்றைக் கவிஞன் பொருள் வெளியீட்டு உத்திகளாகவே கையாளுகிறான். ஆனால் பொருள் வெளியீட்டு உத்திகளையும் பொருளுறுப்புகளாகவே பேராசிரியர் கொள்வது குறிப்பிடத் தக்கது. வெளியீட்டு உத்தியும் பொருளும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கவியலாத ஒருமையுடையன என்பதை அவர் இவ்விதம் குறிப்பிடுகிறார். வெளியீட்டு உத்திகள் எல்லையின்றிப் பெருகும் இயல்பின என்னும் கருத்து வரலாற்றியல் நிலையில் முதன்மை வாய்ந்தது. ஆனால் அணியிலக்கண முயற்சி, பிற இலக்கண நூல்களைப் போலவே விளக்கவியல் நிலையில் முதன்மை வாய்ந்தது என்பதும் கருதத்தக்கது. மேலும் மேலும் கருத்து வெளியீட்டு உத்திகளைப் படைக்கவும் காணவும் தூண்டும் வகையில் இலக்கியத்தின் உள்ளடக்கம், உருவம் பற்றிய சிந்தனைகளை விளக்க முறையில் அணியிலக்கண நூல்கள் முறையாக வகைப்படுத்தியுள்ளன. இரா.சே.

**அணியியலுடையார்** தொல்காப்பியத்திற்குப் பின்னரும் தமிழ்த் தண்டியலங்காரத்திற்கு முன்னருமாகிய காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் அணியியல் என்னும் அணி இலக்கண நூலாசிரியராவார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர், நேமிநாத உரையாசிரியர், அடியார்க்கு நல்லார் ஆகியோர், தாம் எழுதிய உரைகளில் அணியியல் என்னும் இலக்கண நூலிலிருந்து சில நூற்பாக்களை எடுத்துக் காட்டியுள்ளனர். அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டியுள்ள அணியியல் நூற்பாக்கள் தண்டியலங்காரத்தைச் சார்ந்தனவாக உள்ளன. இதனால் தண்டியலங்காரம் என்னும் நூல், அணியியல் என்றும் வழங்கி வந்தமையினை உணரக்கூடும்.

யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும் நேமிநாத உரையாசிரியரும் எடுத்துக்காட்டும் அணியியல் நூற்பாக்கள் தண்டியலங்காரத்தில் இல்லை. ஆகவே தண்டியலங்காரத்திற்குமுன் அணியியல் என்னும் இலக்கண நூல் ஒன்று இருந்திருக்கலாம் என்பது தெரிகிறது. யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் காலம் கி.பி. 10–ஆம் நூற்றாண்டாகும். இவரால் மேற்கோளாகக் காட்டப்பட்ட அணியியல் என்னும் நூல், கி.பி. 10–ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாக இருத்தல் வேண்டும். அணியியலின் பெயரை நோக்கும் போது இந்நூல் அணியிலக்கணம் கூறும் நூல் என்பது விளங்கும். யாப்பருங்கல விருத்தியுரையாசிரியரும், நேமிநாத உரையாசிரியரும் இந்நூலிலிருந்து எடுத்தாண்டுள்ள நூற்பாக்களைக் காணும்பொழுது இந்நூல் செய்யுட்களின் வகை, சொற் பொருளணிகள், சித்திரகவிகள், நூல்வகை முதலியன பற்றிய இலக்கணங்களைச் சொல்லுவதாகும் என்பது விளங்கும். ஆனால் இந்த அணியியல் நூலுக்கு ஒரு பழைய

உரை உண்டு. அதனையும் யாப்பருங்கல உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 'வைகலும் வைகல் வரக் கண்டும் அஃதுணரார்' எனத் தொடங்கும் வெண்பாவினை அகவல் வெண்பா என்று அணியியலுடையார் காட்டியுள்ளார்.

**அணிலாடு முன்றிலார்**: இவரது இயற்பெயர் இன்னதென்று அறிய முடியவில்லை. எட்டுத்தொகையுள் குறுந்தொகைப் (41) பாடலொன்றைத் தவிர வேறொன்றையும் இவர் பாடியதாக அறிய முடியவில்லை. தலைவன் பிரிந்த காலத்தில், அவன் பிரிவால் பொலிவிழந்த தலைவிக்கு, மக்கள் நீத்துச் சென்றபோது அணில் விளையாடும் முன்றிலையுடைய பொலிவிழந்த இல்லத்தை உவமையாக்கி இவர் பாடியுள்ளமையால் 'அணிலாடு முன்றிலார்' என்ற பெயர் இவருக்கு அமைந்தது. தாம் பாடிய பாடலில் அமைந்துள்ள அரிய தொடரால் பெயர் பெற்று விளங்கும் சங்கப் புலவர்களுள் இவரும் ஒருவராவர்.

தலைவன் பிரிவால் மேனிப் பொலிவிழந்த தலைவியின்பால் கவலை கொண்ட தோழியை நோக்கித் தலைவன் தன்னோடு உடனிருக்கும் போதில் விழாக் கொண்ட ஊரினர் மகிழ்வதைப் போல மிக்க மகிழ்ச்சியுறுவதாகவும், தன்னைத் தலைவன் பிரிந்து சென்ற போதில், பாலை நிலத்தில் உள்ள அழகிய குடிகளையுடைய சிறிய ஊரில், மனிதர் நீங்கிச் சென்ற, அணில் விளையாடுகின்ற முற்றத்தையுடைய தனிமையுடைய வீட்டைப் போலப் பொலிவிழந்து வருந்துவதாகவும் தலைவி கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்பாடலால் விழாக்காலங்களில் ஊர்கள் அணி செய்யப் பெற்று மகிழ்ச்சிப் பெருக்குடன் விளங்கும் என்ற செய்தியினை அறிய முடிகிறது.

வே.கா.

**அணிவகுப்பு** என்பது போரில் ஈடுபடுவோர் தம் படைகளை வகுத்தும் தொகுத்தும் ஒழுங்குபடுத்திப் போர் நிலைக்கு ஏற்றவாறு அவற்றை ஈடுபடச் செய்யும் அமைப்பு நிலையாகும். யானைகள் பத்தும், குதிரைகள் நூறும், தேர்கள் மூன்றும், காலாள் ஆயிரமும் கொண்ட அமைப்பு பதாதி எனப்படும். 82 பதாதி கொண்டது ஒரு தண்டு என்றும், 100 தண்டு கொண்டது ஒரு அக்குரோணி என்றும் கூறப்படும். யானை ஒன்றும் குதிரை மூன்றும், தேர் ஒன்றும் காலாள் ஐந்தும் கொண்டது ஒரு பத்தி; மூன்று பத்திகள் கொண்டது ஒரு சேனாமுகம்; மூன்று சேனாமுகம் கொண்டது ஒரு குமுதம்; மூன்று குமுதம் கொண்டது ஒரு கணம்; மூன்று கணம் கொண்டது ஒரு வாகினி; மூன்று வாகினி கொண்டது ஒரு பிரளயம்; மூன்று பிரளயம் கொண்டது ஒரு சமுத்திரம்; மூன்று சமுத்திரம் கொண்டது ஒரு அநீகினி; பத்து அநீகினி கொண்டது ஒரு அச்சோகினி என்று கூறப்படும்.

இவ்வாறமையும் படைப் பகுதிகளை வகுத்து நிறுத்தும் முறை தண்டம், போகம், மண்டலம் என மூவகைப்படும். தண்டம் படையைக் குறுக்கே நிறுத்துதல் என்றும், போகம் நால்வகைப் படைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக நிறுத்துதல் என்றும், மண்டலம் அவற்றை வட்டமாக நிறுத்துதல் என்றும் கூறப்படுகிறது.

வேறுவகையாகவும் படையமைப்பு கூறப்படும். அது 3 சமுத்திரம் ஒரு சங்கம்; 3 சங்கம் ஒரு அநீகம்; 3 அநீகம் ஒரு அக்குரோணி; 8 அக்குரோணி ஒரு ஏகம்; 8 ஏகம் ஒரு கோடி; 8 கோடி ஒரு மகாசங்கம்; 8 மகாசங்கம் ஒரு விந்தம்; 8 விந்தம் ஒரு குமுதம்; 8 குமுதம் ஒரு பதுமம்; 8 பதுமம் ஒரு நாடு; 8 நாடு ஒரு வெள்ளம் என்பதாகும்.

போரில் இப்படைப் பத்திகளை அனுப்பும் அமைப்பு வியூகம் எனப்படும். அது தெண்டவியூகம், சகடவியூகம், வராக வியூகம் மச்ச வியூகம், சூசிகா வியூகம், காருட வியூகம் முதலிய பல வகைப்படும். தக்க வியூக அமைப்பினைத் தேர்ந்து தம் படைகளை அணிவகுத்துச் சென்றுசெயல்படுமாறு அனுப்புவதும் எதிரி அனுப்பிய படை வியூகங்களை அறிந்து அதற்குத் தகுந்தாற்போலத் தம் படை வியூகத்தை அமைத்துத் தடுத்தும் முன்னேறியும் போரினை வெல்வதும் சிறந்த போர் உத்தியாகும். பழந்தமிழ்ப் படையமைப்புப் பற்றிய செய்திகள் புறநானூறு போன்ற சங்கவிலக்கியங்களில் காணப்படுகின்றன. யானை முதலிய நால்வகைப்படைகள் அக்காலத்தில் இருந்தன. போரின் போது முன்னணியில் நிற்கும் வீரர்களைத் தார்ப்படை அல்லது தூசிப்படை என்றும், பின்னணியில் நிற்போரைக் கூழைப் படை என்றும் கூறுவர்.

காண்க: போர்.

**அணு — ஆணவர்** எனப்படுவோர் ஆரியரல்லாத ஒருவகை மக்கள் கூட்டம். துருவாசர், யது, துக்ரிக்யசு, புருசு போன்ற இனத்தவர்களுடன் அனசு என்ற இன மக்களும் வேத நூல்களில் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளனர். அவர்கள் பருசுனி (ராவி) ஆற்றங்கரையில் வாழ்ந்தவர்கள். ஆணவம் என்னும் சொல் அக்கினியைக் குறிப்பதாகும். அணு இளவரசர் ஒருவரையும் சுட்டுவதால் அணு — ஆணவம் என்று குறிக்கப்பட்டது.

**அணுக்குண்டு** இரண்டாம் உலகப் பெரும் போரின்போது வெடிக்கப்பட்ட கொடுமையான வெடிகுண்டு. 1945–ஆம் ஆண்டு சூலை 16-ஆம் நாள் நியூ மெக்சிகோவில் அணுக்குண்டு வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது. இரண்டாம் உலகப் போரின்போது

அமெரிக்க விமானங்கள் சப்பானிலுள்ள ஈரோசிமா, நாகசாகி என்னும் ஊர்களின் மீது அணுக்குண்டுகளை வீசின. 1945 ஆகசுட்டு 6-ஆம் நாள் ஈரோசிமாவின் மீதும், 9-ஆம் நாள் நாகசாகியின் மீதும் அணுக்குண்டுகள் வீசியதால் பல்லாயிரக்கணக்கானவர் உயிர்துறந்தனர். அவ்விரு நகரங்களும் தரை மட்டமாயின. இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வர இவ்வணுக்குண்டுத் தாக்குதல்கள் பெரிதும் உதவின. எனினும், இக்கொடுமையை ஆசியர்களான சப்பானியரே முதன் முதலாக அனுபவித்தனர். மன்பதைமீது சுமத்தப்பட்ட மாபெரும் குற்றமாகும் இவ்வணுக்குண்டு வீச்சு. உலக நாடுகளில் வல்லரசுகளாகக் கருதப்படும் அமெரிக்க ஐக்கிய நாடுகள், சோவியத்து உருசியா, சீனா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளிடம் அணுக்குண்டுகள் கையிருப்பில் உள்ளன. அணுக்குண்டுப் போரைத் தவிர்க்காவிடில் மனிதகுலம் அழிவுறும் எனும் அச்சம் இன்றும் நீடிக்கிறது.

**அணுக்கொள்கை**: உலகத்தின் சடப்பொருள்கள் யாவும் அணுக்கள் (Atoms) எனப்படும். இவை எளிய, மாற்றம் பெறாத மிக நுண்ணிய துகள்களால் (Particles) ஆனவை என அணுக்கொள்கை (Atomism) கருதுகிறது. அணுவினைக் குறிக்கும் ஆங்கிலச் சொல், 'அடோமா' என்ற கிரேக்க மொழிச் சொல்லின் திரிபு ஆகும். இதன் பொருள் ''மேலும் பிரிக்கவோ பகுக்கவோ இயலாதது'' என்பதாம். உலகில் நாம் காணும் மாற்றங்கள் யாவும், இவ்வணுக்களின் சேர்க்கை அமைப்பில் தோன்றும் மாற்றங்களின் விளைவாகும். இயற்கையின் கோடிக்கணக்கான, மாறுபட்ட பொருள்களுக்கு அணுக்களின் சேர்க்கைமுறை மாறுபாடுகள் அடிப்படைகளாகும் என அணுக்கொள்கை குறிப்பிடுகிறது.

**மேல் நாட்டுத் தத்துவ அணுக்கொள்கை**: தத்துவ அணுக்கொள்கை, மேலை நாடுகளைப் பொறுத்த வரை, கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க நாட்டுத் தத்துவ அறிஞர்கள் இலுசிப்பசு (Leucippus), தெமாகிரிடசு (Democritus) ஆகியோரது கோட்பாடுகளைச் சார்ந்து எழுந்தது எனலாம். இவர்களுக்கு முன் பரவியிருந்த கருத்து பார்மனைடிசு (Parmenides) என்பாரின் கருத்தாகும். இவர், 'மாற்றம்' என்பது அறிவாராய்ச்சியின் அடிப்படையில் உண்மையாக இருக்க முடியாது என்றும், எனவே 'மாற்றம்' என்னும் கருத்து ஏற்கத்தக்கதன்று என்றும் கூறினார். ஆனால் நம் அனுபவம் மாற்றத்தினை நமக்கு அறிமுகப்படுத்துகிறது என்பதனை மறுப்பதற்கில்லை அறிவுக்கும் பட்டறிவிற்கும் இடையேயுள்ள இந்த முரண்பாட்டினைத் தவிர்க்க தெமாகிரீடசு, அணுக்கொள்கையினை எடுத்துக் கூறினார். பண்புக் கூறுகளில் மாற்றம் ஏற்படுவது அறிவுக்கு ஏற்புடையதாக இல்லையெனினும், அளவில் மாற்றம் (Quantitative changes) ஏற்படுவது இயலாததன்று என்பது தெமாகிரிடசின் கருத்து. இத்தகைய அளவு அல்லது விகித மாற்றங்களைக் கணித முறைப்படி நமது சிந்தனை ஏற்கத்தான் வேண்டும். எனவே, இயற்கையுலகின் மாறுபட்ட பொருள்களின் வேறுபாடுகள், அவற்றை உருவாக்கும் அணுக்களின் பருமன், உருவம் போன்றவற்றைச் சார்ந்தவையாகும். அணுக்கள் பல்வேறு அளவுகளிலும் உருவங்களிலும் உள்ளன; இவை ஒன்றுடன் ஒன்று இணையும் விகிதமும் முறையும் பலதிறப்பட்டவை; இதன் விளைவாக நாம் பலவாறான பொருள்களை இயற்கையில் காண்கிறோம். ஆனால், இவ்வாறு இணையும்போதோ பிரியும் போதோ அணுக்களின் தன்மையில் மாற்றம் ஏற்படுவதில்லை. அவை மாறாத நிலையான தன்மையுடையவையாம்.

காலப்போக்கில், அணுக்கொள்கையிலும் சில மாற்றங்கள் எழுந்தன. அணுக்களிடையே பண்பு வேற்றுமைகள் இல்லை என்பது தெமாகிரிடசின் கருத்து; ஆனால் வேறு சிலர், அணுக்களிடையே பண்பின் தன்மையிலும் வேறுபாடு இருக்கக்கூடும் என்று குறிப்பிடத் தொடங்கினர். எடுத்துக்காட்டாக, அனெக்சகொரசு (Anaxagoras) என்பவர், இயற்கையில் நாம் காணும் பல்வேறு பொருள்களுக்கேற்பப் பலவகையான பண்புகளுள்ள அணுக்கள் உண்டு என்று கூறுகிறார். ஆனால், பெரும்பாலோர், ஒருசில பண்பு வேறுபாடுள்ள அணுவகைகளை மட்டுமே குறிப்பிடுவர். எம்பிடோகிளசு (Empedocles) என்பவர் நிலம், நீர், ஆகாயம், நெருப்பு ஆகியவற்றிற்கேற்ப நான்கு வகை அணுக்கள் மட்டுமே இருத்தலைக் குறித்தது, நம் முன்னோர்களது 'பஞ்சபூதங்களை'க் குறிக்கும் கருத்தினை ஒத்திருப்பதை உணரலாம். மற்றும், அணுக்களைப் பகுக்க இயலாது என்ற கருத்துக்கு மாறாக, அணுக்களையும் சிறிய கூறுகளாகப் பிளக்கக் கூடுமெனவும் பின்னர் வந்த சில அணுக்கொள்கையினர் குறிப்பிட்டனர். இவ்வாறு அணுக்களைச் சிறு கூறுகளாகப் பிரிக்கலாம் என்று கருதியோருள் ஒரு சிலர், அவ்வாறு செய்தலின் விளைவாக வேறு ஒரு பொருளின் அணுத்தன்மை அவற்றிற்கு வரும் என்றனர். ஆனால், அனெக்சகொரசு (Anaxagoras) போன்றோர், அணுவைச் சிறு கூறாக்கினும் அதே பண்புடன் அது விளங்கும் என்றனர். இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பின்னரும் தோன்றிய கிரேக்க தத்துவ அறிஞர்களான அலெக்சாண்டர், தெமிசடசு, பிலோபோனசு போன்றோரும் அடிப்படையில் அணுக்கொள்கையினை உடன்பட்டனர். அணுக்களை இவர்கள் 'மிக மிகச் சிறியது' என்னும் பொருள் குறிக்கும் சொல்லான

'எலெகிசுடா' (Elechista) என்பதனைப் பயன்படுத்திக் குறிப்பிட்டனர். இவ்வடிப்படைக் கருத்துகள் தொடர்ந்து கிரேக்கத் தத்துவ வரலாற்றில் இடம் பெற்று வந்துள்ளன. பிளோட்டோவும் நான்கு அடிப் படைப் பொருள் அணுக்கள் இருத்தலை ஏற்றார். அணுக்களை மேலும் கூறுகளாகப் பிரிக்கலாம் என் னும் கருத்து, இன்றைய அறிவியல் ஆராய்ச்சி விளைவு களான 'அணுப் பிளவு' முறைகளுடன் ஒப்புநோக்கத் தக்கது.

கிரேக்கத் தத்துவ வரலாற்றில், அரிசுடாட் டிலின் கருத்துகள் மேலோங்கிய பின், அணுக் கொள்கையினை முழுமையாகப் பின்பற்றுவோரது எண்ணிக்கை குறையத் தொடங்கியது. எனினும், எபிகியூரசு (Epicurus), உரோமானியக் கவிஞர் உலுதிரிசியசு (Lucretius) போன்றோர் அணுக் கொள்கையினை உடன்பட்டோருள் சிறந்தவர்களாக விளங்கினர். இவர்களுக்குப் பின்னரும் ஐரோப்பியத் தத்துவ வளர்ச்சியில் அணுக்கொள்கையின் செல் வாக்கு ஓரளவு தொடர்ந்து இருந்து வந்ததோடன்றி, அது தத்துவ ஆராய்ச்சியினின்றும் அறிவியல் துறைக்கு மாற்றமும் பெற்றது. இம்மாற்றத்திற்கு மத்தியகால அரபு நாட்டு அறிஞர்களான அவரோசு (Averroes) என்பாரும், அவரது சிந்தனை வழிவந்தோரும் காரணமாவர். இக்காலத்தில், தத்துவச் சிக்கலுக்குப் பொதுப்படையான ஒரு விடையாகக் கருதப்பட்ட அணுக்கொள்கை, அறிவியல் ஆராய்ச்சிகளில் அனு பவம் சார்ந்த பல்வேறு இயற்கை நிகழ்ச்சிகளை விளக்கப் பயன்படுத்தப்படலாயிற்று. தத்துவக் கொள் கையின் இவ்வறிவியல் மாற்றத்திற்கு 16, மற்றும் 17-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அடிலயசு, இசுகேலிகர், தேனியல் சென்னெட்டு, வான்கூர்லே, கேசண்டி, இராபர்ட்டுபாயில் போன்றோர் கருத் துகள் துணை செய்தன. இவையே சான் தால்டனின் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற அறிவியலில் அணுக் கோட்பாட்டின் அடிப்படைகளாக அமைந்தன.

கிரேக்கர்களது சிந்தனையில் தத்துவம், அறிவி யல் என்ற பாகுபாடில்லாத காரணத்தால், அணுக் கொள்கை இவ்விரண்டிற்கும் பொதுவாக இருந்தது. அன்றைய அணுக்கொள்கை தத்துவச் சிக்கல்களுக்கு விடைகாண மட்டுமன்றிப் பல்வேறு இயற்கை நிகழ்ச் சிகளுக்கு விளக்கம் கொடுப்பதாகவும் கருதப்பட்டது. இன்றைய புதிய அணு பற்றிய பொருளறிவியல் கருத்துகளின் எழுச்சிக்கு இத்தத்துவக் கருத்துகள் ஊக்கிகளாக இருந்தன என்பது தெளிவு. இயற்கை யின் பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளுக்குப் பின், பொது வான ஒருமைப்பாடு இருத்தலை விளக்கும் கோட்பா டாக அணுக்கொள்கை விளங்கியது. இது மேலை நாடுகளில் அறிவியல் ஆராய்ச்சிகளின் வளர்ச்சி யினைப் பெரிதும் ஊக்குவித்தது எனலாம்.

**இந்தியத் தத்துவ அணுக்கொள்கை:** இந்திய அணுக்கொள்கையின் ஒரு சிறப்புக் கருத்து, அணுக் களின் அழிவின்மையாகும். இந்தியத் தத்துவத்தில் அணுக்கொள்கையை மையக் கருத்தாகக் கொண்டது, 'வைசேடிகம்' (Vaiseshika) என்னும் மெய்யறிவுப் பிரிவு (Darsana). இது வேதங்களின் இறுதி உண் மையை ஏற்பதனால் ஆத்திகத் தத்துவப் பிரிவுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதன் முதல் நூல், ஏறக் குறைய கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் இறுதியில் கணாதர் என்பவரால் சூத்திரங்களாக அளிக்கப் பட்டது. இதற்குப் பல உரைகளும் விளக்கங்களும் பிற்காலத்தில் எழுந்தன. இவற்றுள் சிவாதித்தியர் என்பாரது 'சப்தபதார்த்தி' என்னும் விளக்க நூல் தலையாய சான்றாகக் கருதப்படுகிறது.

வைசேடிகத் தத்துவக் கொள்கை, உலகத்தின் அடிப்படைகளாகப் புலன்களால் நேரடியாக உணர வியலாத ஆன்மாக்களையும் அணுக்களையும் குறிப் பிடுகிறது. உலகத்தில் அடங்கியுள்ள பொருள்களை ஏழுவகையாக இத்தத்துவக் கொள்கை பிரிக்கிறது. இவற்றைப் பதார்த்தங்கள் (padarthas) என்று இக்கொள்கையினர் குறிக்கின்றனர். தம்மால் உணர்ந்து அறியக் கூடியவையும், பெயரிட்டுக் குறிப் பிடக் கூடியவையுமான பொருள்கள் 'பதார்த்தங்கள்' எனப்படுகின்றன. தொடக்கத்தில் 6 பதார்த்தங்களே குறிப்பிடப்பட்டன. பின்னர் எழுந்த அறிஞர்கள் இவற்றுடன், 'அபாவம்' அல்லது 'இன்மைக்கொள்கை' (Non-Existence) என்பதனையும் சேர்த்தனர். முதல் ஆறு பதார்த்தங்கள் திரவியம், குணம், கருமம், சாமா னியம், விசேடம், சமவாயம் என்பனவாம். உலகின் அடிப்படைப் பொருள்கள் திரவியம் எனப்படுகின்றன. இவை மண், நீர், தீ, காற்று, ஆகாயம், காலம், திசை, ஆன்மா, மனம் ஆகியனவாம். இவற்றுள் மண், நீர், தீ, காற்று ஆகிய திரவியங்கள் நுண்ணிய அணுக்க ளால் ஆனவை. இவ்வணுக்கள் இணைந்து பல பொருள்களை உருவாக்குகின்றன; அப்பொருள்கள் சிதைந்து போகும்போது, அவை மீண்டும் அடிப்படை அணுக்களாக மாறி விடுகின்றன. ஆகாயம். காலம், திசை போன்றன எங்கும் பரவியுள்ளவை. இவை அணுக்களால் ஆனவையல்ல. இவை 'விபு' எனக் குறிக்கப்படுகின்றன. ஆன்மா எங்கும் பரவியும், என் றும் உளதாயும் இருப்பது. ஒவ்வோர் ஆன்மாவும் அதனுடன் இணைந்த மனத்தின் துணைக்கொண்டு உலகில் இன்ப துன்பங்களை நுகர்கிறது.

திரவியத்தைச் சார்ந்து குணங்கள் காணப்படு கின்றன. இருபத்து நான்கு வகைப்பட்ட குணங்கள் வைசேடிகக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றுள் சில பல்வேறு திரவியங்களில் காணப்படும். இவற்றைச் சாமானிய குணங்களென்றும், குறிப்

பிட்ட ஒரு திரவியத்தில் மட்டும் காணப்படும் குணங்களை விசேட குணங்களென்றும் கூறுவர். கருமம் இயக்கத்தைக் குறிக்கிறது. இதனை ஐவகையாகப் பிரிப்பர். ஒருவகைப் பொருள்களுக்குப் பொதுவாகக் காணப்படும் தன்மையினை (Generality) சாமானியம் என்பர். இது உயர்ந்தது என்றும் தாழ்ந்தது என்றும் இரு நிலைகளைக் கொண்டது. ஆனால், ஒரு பொருளை மற்றொன்றினின்றும் பிரித்துக் காட்டும் சிறப்புப் பண்பு விசேடமாகும். பல்வகை அணுக்களின் பண்புகள் இத்தகையவை. சமவாயம் என்பது பிரிக்கவியலா இணைப்பினைக் (Inherence) குறிக்கும். இவ்விணைப்பு துண்டிக்கப்பட்டால் இணைந்தவற்றுள் ஒன்றேனும் உறுதியாக அழியும். முன்னர்க் குறிப்பிட்டபடி, இவ் ஆறு பதார்த்தங்களுடன் 'அபாவம்' என்பது ஏழாவதாகப் பின்னர் ஏற்கப்பட்டது.

பூமி அல்லது, மண், நீர் தீ, காற்று ஆகியவற்றின் அடிப்படை இவற்றுக்கான அணுக்களாகும். இவற்றால் உருவாகும் பொருள்கள் காலப்போக்கில் அழிவனவாயினும், இவ்வடிப்படை அணுக்கள் அழிவற்றவை. அணுக்களை மேலும்சிறிய பகுதிகளாகப்பகுக்கவியலாது. அணுவினைத் தனியே உணரவியலாதெனினும், மூன்று அணுக்களின் சேர்க்கையில் (புரோட்டான், நியூட்ரான், எலக்ட்ரான்) தோன்றும்சிறு துகள் நம்மால் பார்க்க அல்லது உணரவியலும் மிகச்சிறிய பொருளாகும். நான்குவகை அணுக்களுக்கு ஏற்ப நான்கு வகைப்புலனுணர்வுகளும் வைசேடிகக் கொள்கையினரால் குறிப்பிடப்படுகின்றன. தொட்டறியும் உணர்வு, சுவையுணர்வு, காட்சியுணர்வு, மனவுணர்வு ஆகியன இவையாம். இவை இவற்றுக்கான அணுக்களில்என்றும் உள்ளன. மற்றும் மண்ணிலும் அதன் அணுக்களிலும் தீயின் சேர்க்கையால் சிலபோது புதிய பண்புகளும் எழக் கூடும். ஆனால் நீர், ஒளி, காற்று போன்றன இத்தகைய மாற்றங்களைப் பெறுவதில்லை; அணுக்கள் என்றுமே அழிவதில்லை என்பதனை வைசேடிகக் கொள்கை திட்டவட்டமாகக் கூறுகிறது. மேலைநாட்டு அணுக்கொள்கைக்கும் இந்தியக் கருத்துக்கும் இடையே சில ஒற்றுமைகளும் சில வேறுபாடுகளும்இருத்தல்தெளிவு. அறிவியல் உலகில் இன்று தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டு, நடைமுறையில் பயன்படுத்தப்படும் அணுபற்றிய கோட்பாடுகளுக்குத் தமது அறிவின் அடிப்படையில் அடித்தளம் அமைத்துத் தந்த சிறப்பு, மேலை நாட்டுத் தத்துவ அறிஞர்களுக்கும் நமது இந்தியத் தத்துவ அறிஞர்களுக்கும் உரியதாகும்.

எஸ்.ச.

இனிச் சாங்கிய மதம், 'அணுக்களாகட்டும், பரமாணுக்களாகட்டும்; அவையும் காரியமான அநித்தியப் பொருள்களே. அதாவது தோன்றி அழிவனவே. ஆகையால் அவற்றிற்கும் காரணம் உண்டு. அது மூலப் பிரகிரதி. அது பொருளன்று; சக்தியே' என்கிறது. அதையேதான் சைவமும் கொள்கிறது. 'அணுவே காரணம்' என்கிற மதங்கள் எல்லாம், 'பொருள்களைக் கூறு கூறுகளாகப் பிரித்துக் கொண்டே போனால் கடைசியில் பிரிக்க முடியாது நிற்பது அணு' என்கின்றன. சாங்கியமும், சைவமும் 'அணுவையும் பிரிக்க முடியும்', பிரித்தால் சக்தியாய் விடும்' என்கின்றன.

தருக்க மதம், 'கண்ணுக்குப் புலனாகாமல் ஓர் அணு உண்டு; அது பரமாணு' எனக் கூறுகிறது. சாங்கியமும், சைவமும் கண்ணுக்குப் புலனாகின்ற அந்த அணுவை ஒப்புக் கொண்டு, 'கண்ணுக்குப் புலனாகாமல் ஓர் அணு உண்டு என்பதை நிரூபிக்க முடியாது' எனக் கூறி, 'அப்படியே கண்ணுக்குப் புலனாகாத அணு ஒன்று இருக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அதுவும் காரியப் பொருளே; அதனால் பரமாணுக்களும் தோன்றியழிகின்ற அநித்தியப் பொருள்களே; அவற்றிற்கும் காரணம் பிரகிருதியே' என்கின்றன.

இனி, 'தருக்கம், சமணம், பௌத்தம் ஆகிய மதங்கள் கூறுகின்ற எந்த அணுவும் கடினப் பொருளே; நீர்ப் பொருளோ, காற்றுப் பொருளோ அன்று அதனால், கடினப் பொருளாகிய பூமி மட்டுமே அணுக்களால் ஆயது எனச் சாங்கியமும், சைவமும் கொள்கின்றன.

இவையெல்லாம், இப்படி எடுத்துக் கூறப்படாவிட்டாலும் சித்தாந்த சாத்திரங்களையும், சிவஞான பாடியத்தையும் ஆழ்ந்து நோக்கினால் விளங்கும்.

சி.அ.

**அணுவிரதம்** என்பது சமண சமயத்து இல்லறத்தவர் மேற்கொள்ள வேண்டிய நோன்பாகும். சமண சமயச் சான்றோர் கூறும் அறவுரை கேட்டு ஒழுகவேண்டிய இல்லறத்தவர் சிராவகர் – சாவகர்– என அழைக்கப்படுவர். இவர்கள் மேற்கொள்ளும் விரதம் அணுவிரதம் எனப்படும். இதனைச் 'சாவக நோன்பு' என்றும் கூறுவர். இச்சமயத் துறவறத்தார்க்குரிய விரதம் மாவிரதம் எனப்படும். இந்த அணுவிரதம் மாவிரதம் பற்றிய விளக்கம் சமண அறநூல்களிலும் காப்பியங்களிலும் சுட்டப்பட்டுள்ளது. அணுவிரதமானது, அகிம்சை, அசத்தியத் தியாகம், அசுதேயம், பிறனில் விழையாமை, பொருள்வரைதல் என்று ஐந்து வகைப்படும். இவை முறையே கொலை, பொய், களவு, காமம் ஆகியவற்றை நீக்குதல், பொருள் வரைதல் எனப்படும். இவற்றைச் சமந்த பத்ராச் சாரியாரால் இயற்றப்பட்ட இரத்தின கரண்டவம் என்னும் சமண சமயநூல், "பெரிய கொலை பொய்

களவொடு காமம் பொருளை வரைதலோடைந்து'' என்று காட்டியுள்ளது. இவற்றோடு கள்ளுண்ணாமை, ஊன் உண்ணாமை, தேன் உண்ணாமை, இரவுண்ணாமை, குரவரைப் பணிதல் ஆகியன சேர்ந்த பத்தும் சமண சமய இல்லறத்தார்க்குரிய விரதங்கள் என்று மேருமந்தர புராணம் முதலிய சமணத் தமிழ் நூல்கள் சாற்றுகின்றன. அணு விரதிகளுக்குச் சுவர்க்கம் உண்டாகும் என்று அருங்கலச் செப்பு கூறுகிறது.

**அத்தார்** கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு பாரசீகக் கவிஞர். இவருடைய கவிதைகளால் இவர் அடைந்த சிறப்பினைக் காட்டிலும் மிகுதியான சிறப்பினை அவற்றில் இவர் வலியுறுத்திக் கூறிய நல்லொழுக்கம், உள்ளுணர்வு ஆராய்ச்சி முதலியவற்றால் அடைந்தார். இவருடைய இயற்பெயர் சேக்பரீதுத்தீன் (Shaik Fariduddin) என்பதாகும். நீசாபூரில் தோன்றிய இவர் தம் இளமைக் காலத்திலேயே மெய்ஞ்ஞான நாட்டம் மிக்கவராய், இமாம்ரிசா என்னும் இசுலாமிய ஞானியின் அருளை விரும்பி, அவர் சமாதியருகே பல்லாண்டுகள் தவம்புரிந்தார். பின்னர்ப் பாரசீகத்திலுள்ள சில இடங்களுக்கும், மக்கா மதினா ஆகிய புனித நகரங்களுக்கும், எகிப்து இந்தியா போன்ற நாடுகளுக்கும் சென்று வந்தார். இவரும் இவர் தந்தையாரும் மருத்துவத் தொழில் புரிந்தனர். அதனால் மருந்து விற்போர் என்னும் பொருளிலமைந்த அத்தார் என்னும் பெயர் இவருக்கு அமைந்தது. இவர் இல்லறவாழ்வில் ஈடுபட்டிருந்தாராயினும் இவருடைய உள்ளம் சூபிக்கொள்கை எனப்படும் உள்ளுணர்வார்ந்த மெய்ஞ்ஞான நாட்டத்திலேயே ஈடுபட்டிருந்தது. மருந்துக்கடைத் தொழில் செய்து கொண்டிருந்தபோதே, நோய்களைப் பற்றிக் கூறும் 'முசீபத் நாமா' என்னும் நூலையும், இறைவனைப் பற்றிக் கூறும் 'இலாசி நாமா' என்னும் நூலையும் இயற்றினார். இவை இவருக்குப் பெரும் புகழ் தந்தன. அறிவுரை கூறும் 'பந்த நாமா', பறவைகளின் சிந்தனைகளாக 'மன்திக்குத்தைர்' ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார். மன்திக்குத்தைர் என்னும் நூல், பிறிது மொழிதல் என்னும் அணி வகையிலமைந்த உருவக நூலாய், இறை நாட்டமுடையதாகத் திகழ்கிறது. இதன்கண் எல்லாப் பறவைகளும் 'சிமூர்க்' என்னும் பறவையைத் தேடி அலைவதாகக் கூறப்பட்டுள்ளது. இறைவன் அப்பறவையாக உருவகப் படுத்தப்பட்டுள்ளான். இவருடைய கவிதைகள் உணர்ச்சியைத் தூண்டுவனவாக இல்லாமல், அறிவைத் தூண்டுவனவாக உள்ளன. இன்னார் என்று அறியாமல் ஒருவன் இவரைக் கொன்று விட்டான். பின்னர் அவன் உணர்ந்து, இவர்தம் கல்லறைக் காவலாளியாகத் தொண்டு புரிந்தான்.

**அத்தான் பாட்டு** என்பது அத்தானை நையாண்டி செய்து பாடும் பாடல். அத்தை மகன் அத்தான் என்று அழைக்கப்படுகிறான். தமக்கையின் கணவனும் அவ்வாறு அழைக்கப்படுவதுண்டு. திருமண விழாக்களில் பாடப்படும் பாடல்களுள் அத்தான் பாட்டும் உண்டு. பெண்ணின் தங்கை முறையினர் மாப்பிள்ளையை நையாண்டி செய்து பாடும்போது, ''தஞ்சாவூர் மாப்பிள்ளை தாசில்தாருன்னு சொன்னாங்க தஞ்சாவூர் போயி பாத்தேன்–அவரு தவில டிக்கக் கண்டேனே'' என்று குறிப்பிடுவர்.

அத்தை மகன், அம்மான் மகன் உறவு மிக நெருக்கமானது. பெண்ணை மணம் செய்து கொள்வதில் இவர்களுக்கே முதல் உரிமை. இவர்களை அடிக்கடி ஏளனம் செய்து பாடுவதுண்டு. இத்தகைய உறவினை மானிடவியலாளர் கேலி உறவு (Joking relations) என்று குறிப்பிடுவர். ''பூ! பூ! புளியம்பூ பொன்னத்தான் கொண்டைக்குத் தாழம்பூ'' என்று பெண்கள் அத்தானை நையாண்டி செய்வது கிராமிய வழக்கம்.

புதுமாப்பிள்ளை மாமனார் வீட்டிற்கு விருந்துக்கு வரும்போது பெண்ணின் உடன் பிறந்தவர்கள் நையாண்டி செய்வர். ''அத்தானே அத்தானே வாருங்கள் அமரிக்கையாய் உக்காருங்கள் ஆறுபணம் தாருங்கள் அக்காள் அழகைப் பாருங்கள்'' என அத்தானின் ஆசைப் பார்வையை அம்பலமாக்குவர். சு.சு.

**அத்தி**[1] பாகவதத்தில் இடம்பெறும் சராசந்தன் என்பவனுடைய மகள்; கம்சனின் மனைவி.

**அத்தி**[2] சிவகணத்தில் ஒருவன். வாயிற் காவலரை மீறிச் சிவனிடம் சென்றமை அறிந்து பார்வதியம்மையால் யானையாகுமாறு சாபம் பெற்றுப் பின் அவரை வேண்டி வழிபட்டு வீடு பேறு எய்தியவன்.

**அத்தி**[3] சந்திர மரபில் தோன்றிய ஒரு மன்னன். இவன் அத்தினபுரியை அமைத்தான்.

**அத்தி**[4] சந்திர மரபில் தோன்றிய அசமீளன் என்பானின் தந்தை.

**அத்தி**[5] சேரனின் படைத்தலைவருள் ஒருவன்; சிறந்த அணிகலன்களை அணிந்தவன். 'நறும்பூண் அத்தி' என்று அகநானூறு இவனைக் குறிப்பிடுகிறது. சோழன் பெரும்பூட் சென்னிக்கும் சேரனுக்கும் இடையே நிகழ்ந்த கழுமலப் போரில் கணையன் என்னும் படைத்தலைவன் கீழ்ப் போரிட்டவன். சோழன் படைத் தலைவனான பழையன், பாசறைப் போரில் இறக்கக் காரணமாய் இருந்தவருள் அத்தியும் ஒருவன். (அகம் 44)

**அத்திப்பட்டு** அருணகிரிநாதரால் பாடப் பெற்ற தலங்களுள் ஒன்று. வில்லுடையான்பட்டி என நெய்வேலி நகருக்கருகில் உள்ள முருகன் தலமே அருணகிரியாரால் திருப்புகழில் அத்திப்பட்டு என்று போற்றப்படுகிறது. இங்கு முருகன் வில்லும் அம்பும் கொண்டு, இருபுறமும் வள்ளி, தேவயானையுடன் ஒரே சிற்பத்தில் அமைந்து விளங்குகிறார். இப்பெய ரில் அமைந்த வேறு ஊர்களும் தமிழ்நாட்டில் உண்டு.

ரா.கி.

**அத்தியட்சர்**, கௌடில்யரின் அர்த்தசாத்தி ரத்தில் கண்காணிப்பாளர் என்னும் அரசாங்க ஊழிய ருக்குக் கொடுக்கப் பெற்றிருக்கும் பெயர். கௌடில் யர் தம் நூலில் 21 வகையான கண்காணிப்பாளர் களையும் அவர்களின் கடமைகளையும் தொகுத்துக் கூறியுள்ளார். அவை பின்வருமாறு:-

1. அக்சசாலா — தட்டார் அலுவலகம்
2. லோகத்தியட்சர் — உலோகங்கள்
3. லக்சணா — தங்கசாலை
4. கோசுட்டாக்கரா — களஞ்சியம்
5. பணயம் — வாணிகம்
6. குப்பாயம் — காட்டுப்பொருள்கள்
7. ஆயுதகரம் — போர்க்கருவிகள்
8. துலாமான பௌதவ்யம் — எடைகளும், படிகளும்
9. சுல்க — சுங்கவரி
10. சூத்திரம் — நெசவு
11. சீதா — வேளாண்மை
12. சுரா — சாராயம்
13. சூனா — (ஆட்டுத்தொட்டி) இறைச்சிச்சாலை
14. கணிக்கா — வேசி; பரத்தை.
15. நாவா — கப்பல்
16. கோ — பசு, ஆவினம்
17. அசுவம் — குதிரை
18. அசுத்தி — யானை
19. ரதம் — இரதம்
20. பதியா — காலாட்படை
21. முத்திரா — நுழைவுச்சீட்டு.

இப்படி 21 வகைப்பணிகளுக்குக் கண்காணிப்பாளர் களை அர்த்தசாத்திரம் குறிப்பிட்டுள்ளது. மேற்கூறிய அரசாங்கப் பதவிகளில் பல பன்னிரண்டாம் நூற் றாண்டு வரையிலும், அதற்குப் பின்னரும் புழக்கத்தி லிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**அத்திரம் பாக்கம்** சென்னையிலிருந்து 35 கி.மீ. தொலைவில் செங்கல்பட்டு மாவட்டம் திரு வள்ளூர் வட்டத்தில் சத்தியவேடு செல்லும் சாலை யில் அமைந்துள்ள ஓர் ஊர். அளகூர்-சத்தியவேடு மலைத்தொடரின் குன்றுகளை இவ்வூர் அரணக ளாகப் பெற்றுள்ளது. பண்டைக் கற்கால மனிதன் வாழ்ந்தமைக்கான சான்றுகள் இவ்வூரில் பெருமளவில் கிடைக்கின்றன. கொற்றலையாற்றின் கரைகளிலும், அத்திரம்பாக்க ஓடையின் கரைகளிலும் தொல்பழங் கால மனிதன் பயன்படுத்திய கற்கருவிகள் கிடைக்கின் றன. கொற்றலையாற்றை முற்காலத்தில் 'விருதச்சீர் ஆறு' என்று வழங்கினர். இதுவே பழைய பாலாறு மாகும். இக்கொற்றலையாற்றுப் பள்ளத்தாக்கு உலகப் புகழ் பெற்றது. நாடோடிகளாகத் திரிந்து வந்த கற் கால மனிதனை இவ்விடம் கவர்ந்திருக்க வேண்டும். ஏனெனில், அவனுக்கு வேண்டிய கருவிகளைச் செய் வதற்கு இக்குன்றுகளின் கற்கள் மிகுதியாகப் பயன் பட்டிருக்கின்றன.



பழங்கற்காலக் கற்கருவிகள் காணப்படும் ஆற்றடுக்கு

உலகப் பழங்கற்கால வரலாற்றில் அத்திரம்பாக் கத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. இங்குக் கற்கால மனிதர்கள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்து வந்திருக்கி றார்கள். அவர்கள் பயன்படுத்திவிட்டுச் சென்ற கற் கருவிகள் அளவிடற்கரியன. கற்கால மனிதனின்

'தொழிற் கூடமாக' இவ்விடம் இயங்கி வந்ததாகக் கருதலாம். அந்த அளவிற்குக் கற்கருவிகள் இவ்வூர் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. இப்பள்ளத் தாக்கில் ஆற்றடுக்குகளும் (River Terraces) காணப் படுகின்றன. பண்டைக் கற்காலக் கருவிகள் இவ் வடுக்குகளில் புதைந்து கிடக்கின்றன. அவற்றின் காலம் ஒரு சில இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும். இவ்விடத்தில் இந்தியத் தொல்லியல் துறையின் அகழ் வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வமயம் பல வகையான கற்கருவிகள் அடுக்கடுக்காக வெளிப் பட்டன. அவற்றுள் பழங்கற்காலத்தைச் சார்ந்த கைக்கோடரி, வெட்டுக் கருவிகள், துளையிடும் கருவி போன்றவை குறிப்பிடத்தக்கவை. பழங்கற்காலத்தை அடுத்து வந்த 'கடைப்பழங் கற்காலத்திற்குச்' சொந் தமான சில்லுக் கருவிகளும் கண்டெடுக்கப்பட்டுள் ளன. அவை வடிவில் சிறியனவாகவும் மிகுதியான வேலைப்பாடுடனும் செய்யப்பட்டுள்ளன. ஒரு சில கருவிகள் வேப்பிலை வடிவத்தில் செதுக்கப்பட் டுள்ளன.

இங்குக் கிடைத்த கருவிகளுள் கைக்கோடரி களே மிகுந்த எண்ணிக்கையுடையன. கைக்கோடரி யின் இரு பக்கங்களும் செதுக்கப்பட்டுக் கூர்மையான விளிம்புகளையும் இணையான பக்கங்களையும் கொண்டு விளங்குகின்றன. இத்தகைய கைக்கோடரி களை "இருமுகக் கைக்கோடரிகள்" (Bifacial hand axes) என்பர். இவை போன்ற கைக்கோடரிகள் இந்தியாவில், தமிழகத்தில் மட்டுமே கிடைக்கின்றன. எனவே இக்கற்கருவிகளை "மதராசுக் கற்கருவிகள்" என்றும் கூறுவர். உலகக்கற்கால வரலாற்றில் இக்கருவி கள் புகழ்பெற்றவை எனலாம். தென் ஆப்பிரிக்காவில் இவை போன்ற கைக்கோடரிகள் அகப்படுகின்றன. எனவே தமிழகமும் தென் ஆப்பிரிக்காவும் கற்காலத் தில் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு சான்றாகிறது. எஸ்.கு.

**அத்திரி முனிவர்[1]** சிறப்புமிக்க ஒன்பது முனி வர்களுள் ஒருவர். மரீசி, அத்திரி, அங்கிரா, புலத்தியர், புலகர், கிராது, பிருகு, வசிட்டர், அதர்வா ஆகியோர் அம்முனிவராவர். பிரமனின் ஆணைப்படி இவர்கள் கர்த்தம முனிவரின் ஒன்பது பெண்களையும் மணந்து மக்களைப் பெற்றனர். அத்திரி முனிவர் அநசூயை என்னும் பெண்ணை மணந்தார். இவர் தம் மனைவி யிடம் உருக்குளை என்னும் மலைக்குச் சென்று, பிள்ளைப் பேற்றுக்காக நூறாண்டுகள் ஒற்றைக் காலில் நின்று தவமிருந்தார். அவருடைய தவத்தைப் பாராட்டி மும்மூர்த்திகளும் அவருடைய ஆசிரமத்திற்கு வந்து மூன்று பிள்ளைகள் பெற வரமருளினர். அவர் கள் அருளால் அவர் பெற்றெடுத்த பிள்ளைகள் சோமன், தத்தாத்திரேயர், துருவாசர் ஆகியோரா வர். இவர்கள் முறையே பிரமன், விட்டுணு, சிவன் அருளால் பிறந்தவர்கள். பிருது மன்னன் இயற்றிய அசுவமேத யாகத்தின்போது இந்திரன் பொறாமை கொண்டு குதிரையைத் திருடிச் சென்றான். அவன் காவியுடையணிந்து சந்நியாசி போல் வந்ததால் யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அப்போது அத் திரி முனிவர், பிருதுவின் மகனுக்கு இந்திரனைச்சுட்டிக் காட்டி விரட்டிப் பிடிக்கச் செய்தார். இராமபிரான் காட்டிற்குச் சென்றபோது அத்திரி முனிவரின் ஆசிர மத்திற்குச் சென்று அவரைக் கண்டு வாழ்த்துப் பெற் றார்.

அத்திரிமுனிவர்[2] தயிரிய மாமன்னனிடம் சென்று, பொருளைப் பெற்றுத் தம் மக்களுக்குக் கொடுத்து விட்டுத் தவஞ்செய்வதற்குச் சென்ற ஓர் அந்தணர்.

அத்திரி முனிவர்[3] ஆத்திரேயனின் தந்தையும், அத்திரி மரபில் வந்த ஓர் அந்தணனும் ஆவான். காமம் மீதூரப் பெற்றமையால், காயத்திரி மந்திரம் ஓதுதல் முதலிய வைதிக நெறியினின்றும் மாறிப் பாவம் எய்தியவன், திருக்குற்றாலமலை சார்ந்து அதன் காற்றுத் தீண்டியமையால் அப்பாவம் நீங்கப் பெற்று வீடு பேறெய்தினான் என்று திருக்குற்றாலப் புராணம் கூறுகின்றது. ந.மா.

**அத்தினாபுரம்** மகாபாரதத்தில் சிறப்பித்துக் கூறப்படும் பழைமையான நகரம். இப்பொழுது உத்தரப் பிரதேச மாநிலத்தில் மீரட் மாவட்டத்தில் மவானா (Mavana Tehsil) வட்டத்தில் அமைந்துள்ளது. இன்று சிற்றூராகக் காட்சியளிக்கும் அத்தினாபுரம் (Hastina-pura), குரு மரபு மன்னர்களின் தலைநகரமாகவும் பாண்டவர்களின் தலைநகரமாகவும் விளங்கியிருந்த தாக மகாபாரதம் கூறுகிறது. இந்நகரை 'அத்தினா'



அத்தினாபுரம்-அகழாய்வு செய்யப்பெற்ற இடம்

என்னும் மன்னன் நிறுவியதாகவும், அதனால் 'அத் தினாபுரி' என்னும் பெயரை இந்நகரம் பெற்றது என் றும் சொல்வர். இந்நகரத்தின் சிறப்பினையும் அழகி

னையும் மகாபாரதம் செப்புகின்றது. புத்தர் பிரான் இந்நகருக்கு வந்து தங்கியிருந்ததாக, புத்த சமய நூல் கள் கூறுகின்றன. இந்நகரம் சமண சமயத்தோடும் தொடர்புடையதாக விளங்கியது. 'திவ்விய வதனா' என்னும் புத்தசமய நூலில் இந்நகரின் பெருமைகள் கூறப்பட்டுள்ளன. சாந்தி நாதர், கீர்த்தி நாதர், ஆதிநாதர் என்னும் மூன்று சமணத் தீர்த்தங்கரர்கள் இந்நகரத்தில் பிறந்தனர் என்னும் பெருமையினை அத்தினாபுரம் பெற்றுள்ளது. பாணினி என்பவரும், தாலமி என்னும் கிரேக்க நாட்டுப் புவியியலாரும் தங் கள் நூல்களில் இந்நகரினைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள னர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த அபுல் பாசல் என்பவர், இந்நகரை அசுநகர் (Hast Nagar) எனக் குறிப்பிட்டுள்ளார். பெரும் தலைநகரமாக விளங்கி வந்த அத்தினாபுரம் கங்கை ஆற்றின் பெருவெள்ளத் தால் அழிந்தது என்று புராணங்கள் கூறுகின்றன. வர லாற்றுத் தொடர்பு கொண்ட இந்நகரின் பெருமை களை மேலும் அறியும் பொருட்டு இந்தியத் தொல்லி யல் பரப்பாய்வுத் துறையினர் 1950-52-ஆம் ஆண்டு களில் அகழாய்வினை மேற்கொண்டனர். அத்தினா புரத்திலுள்ள மண்மேடுகளில் அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. இவ்வகழாய்வின் மூலம் அத்தினா புரம் மிகத் தொன்மைவாய்ந்த நகரம் என்பதும், ஐந்து வகையான பண்பாட்டுக்கால மக்கள் இந்நகரில் வாழ்ந்திருந்தனர் என்பதும், கங்கை ஆற்றின் பெரு வெள்ளத்தாலும், தீப்பற்றி எரிந்ததாலும் இந்நகரம் பலமுறை அழிந்து மீண்டும் பன்முறை புதுப்பிக்கப் பட்டிருக்க வேண்டும் என்பதும் புலனாகின்றன. வெளி றிய பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் (Ochre Coloured Pottery), வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டங்கள் (Painted Gray Ware), சிவப்பு நிற மட்பாண்டங்கள் (Red Ware) போன்றவை இங்குக் கிடைத்த மட்பாண்டங்களில் குறிப்பிடத்தக்கனவாம். மற்றும் எழுத்துகள் பொறிக்கப்பட்ட மட்பாண்டங் களும், மதுரா அரசர்களின் நாணயங்களும், யவுதேயர் கால நாணயங்களும், அடிமை மரபினைச் சார்ந்த கியாசுதின் பால்பனின் நாணயங்களும், சுடுமண் பொம்மைகளும், மணற்கல்லினால் செய்யப்பட்ட பார் வதி உருவச்சிலையும், சமணத் தீர்த்தங்கரரான இரிசப தேவரின் உருவச்சிலையும் மணிகளும் அகழாய்வின் மூலம் கிடைக்கப்பெற்றன.

**அத்து மீறுதல்** என்பது சட்டத்தை மீறுதல்; அதாவது பிறர் நில எல்லையை மீறுதலாகும். இந் தியத் தண்டனைச் சட்டப்படி அத்து மீறுதல் குற்ற மாகவும் உரிமையியற் சட்டப்படி தீங்காகவும் கரு தப்படுகிறது.

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 441-இன் படி, மற்றவர் உடைமையில் உள்ள நிலத்தில் நுழைதலும், சட்டப்படி நுழைந்த பின்னர்ச் சட்ட முரணான வகையில் அங்குத் தங்கியிருத்தலும் குற்ற மாகும் என்று கூறப்படுகிறது. அவ்வாறு நுழைதலும் தங்கியிருத்தலும், ஒரு குற்றத்தைப் புரியவோ அந் நிலத்தில் உடைமை பெற்றவர்களை அச்சுறுத்தவோ அவமதிப்பு அல்லது தொந்தரவு செய்யும் கருத்து டனோ செய்யப்பட்டிருக்கலாம்.

வீட்டினுள் அத்து மீறி நுழைதல், பதுங்கி வீட்டி னுள் அத்து மீறி நுழைதல், இரவு நேரத்தில் பதுங்கி வீட்டில் அத்து மீறுதல், மற்றும் கன்னம் வைத்து வீட்டில் நுழைதல் ஆகியன இக்குற்றத்தின் கடுமை யான வகைகளாகக் கருதப்படுகின்றன. சிறைத் தண் டனை, ஆயுள் தண்டனை அல்லது மரண தண்டனை பெறத்தக்க குற்றத்தைச் செய்யும் நோக்கத்தோடு வீட்டில் அத்து மீறி நுழைதல், குற்றத்தை மேலும் கடுமையாக்கும்.

சட்டப்படியான காரணமோ முறையோ இல்லா மல் ஒருவருடைய உடைமையில் உள்ள நிலத்தில் அனுமதி இன்றி நுழைதலும், அங்கு ஒரு பொருளை வைத்தலும், தங்கியிருத்தலும், நிலத்தின் மேல் ஒரு பொருளை நீட்டிக் கொண்டிருக்குமாறு செய்தலும் அத்து மீறுதல் ஆகும். ஒருவர் உடைமையில் உள்ள நிலத்தில் மற்றொருவர் தாமே நுழையாமல் பிற ரைப் புகச் செய்தலும் அத்து மீறலேயாகும். ஒருவ ருடைய நிலத்தின் எல்லையைச் சிறிது கடந்து சென் றாலே அது அத்து மீறலாகும். அத்து மீறலினால் ஒருவருக்கு உண்மையில் பொருட்சேதமோ இழப்போ ஏற்பட்டிருக்க வேண்டுமென்பதில்லை. அத்து மீற லாகும் செயல்களால் பொது அமைதி குலைவதைத் தடுக்கும் கருத்துடன் இச்சட்டம் தோன்றியிருக்கக் கூடும். அத்து மீறலுக்கு எடுத்துக்காட்டுகளாக, ஒரு வரின் நிலத்தின் மீது கல்லெறிதல், குதிரையோட்டு தல், கார் ஓட்டுதல், அங்குள்ள பொருள்களைச் சேதப்படுத்துதல், வீட்டுச் சுவரில் ஆணி அடித்தல், நில எல்லைக்குள் செடி கொடிகள் பரவிப்படருமாறு செய்தல், வீட்டுச் சுவரில் ஏணியைச் சாய்த்து வைத் தல், காற்று போன்ற இயற்கைச் சக்திகளால் மற் றொருவருடைய நிலத்திற்கு அடித்துச் செல்லுமாறு நிலத்தருகில் வேண்டுமென்றே குப்பை கூளங்களைக் கொட்டி வைத்தல் முதலியவற்றைக் கூறலாம். ஒருவருக்குச் சொந்தமான விலங்குகள், கால்நடைகள் அடுத்தவர் நிலத்தில் நுழைந்தால், அவர் அத்து மீறல் என்ற தீங்கினைச் செய்தவராகக் கருதப்படுவார். இவை யாவும் தீங்கியற் சட்டப்படி, தீங்குகளாகக் கருதப்படுகின்றன.

அத்து மீறலாகிய தீங்கினைக் கண்ணுக்குப் புல னாகக் கூடிய ஒரு பொருள் மூலமாகவோ தொட்ட

றிய முடியாத, கண்ணுக்குப் புலனாகாத ஒன்றின் மூலமாகவோ செய்யலாம்.

சட்டத்தின் பார்வையில், ஒவ்வொரு மனிதனின் நிலமும் மற்றவர் நிலத்திலிருந்து தனித்தனியே பிரித்து வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது. இரு நிலங்களுக்கு இடையே வேலியோ தடுப்போ இல்லாத போதும், கண்ணுக்குப் புலனாகாத ஓர் எல்லை இருப்பதாகக் கருத வேண்டும். நெடுஞ்சாலையை ஒருவன் கடந்து செல்வதற்கு மட்டும் பயன்படுத்தாமல், அதில் முறையின்றிக் கால்நடைகளை மேய விடுதலும் அதன்மீது முறையின்றி அமர்ந்திருத்தலும் அடுத்துள்ள நிலங்களில் நடப்பதைக் கண்காணிக்கும் நோக்கத்துடன் இங்கும் அங்கும் அதில் போய் வருதலும், அத்து மீறல்களேயாகும்.

நிலத்தின் மேலுள்ள காற்று மண்டலத்தை உரிமை கொண்டாலும் அத்து மீறுதலாகும். ஆயினும் ஒருவரது நிலத்தின் மேலுள்ள வானவெளியில் விமானம் முறையாகப் பறந்து செல்வது அத்து மீறல் ஆகாது. ஆனால், ஒருவருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் வான ஊர்தியைப் பறக்கச் செய்தலும் இறக்குதலும் அதில் இருந்து பொருள்களை விழச் செய்தலும் அத்து மீறலாகக் கருதப்படும்.

ஒரு நிலப்பரப்பு யாருக்கு உடைமையானதாக உள்ளதோ அவருக்கே அந்நிலத்தின் கீழுள்ள அடித்தளமும் உடைமையானதாக எண்ணப்படும். எனவே நில மட்டத்தின் கீழ் உள்ள மண்ணுக்கடியில் உரிமை கொண்டாடுதல் நிலத்தின் மேற்பரப்பில் அத்து மீறுதல் போன்றதேயாகும். ஆதலால் ஒருவர், மற்றவர் நிலத்திற்குக் கீழே உள்ள நிலக்கரியை, அவருடைய இசைவின்றி எடுத்தால், அது அத்து மீறல் என்ற தீங்காகும்.

சட்டப்படியான காரணம் இல்லாமல், ஒருவர் மற்றவரது உடலைத் தாக்குவதும், மற்றவர் தன்னை உடனடியாகத் தாக்கக்கூடும் என்ற அச்சத்தை உள்ளத்தில் தோற்றுவிப்பதும் அத்துமீறல் என்ற குற்றத்தின் பாற்படும். எனவே, ஒருவர் தனக்குச் சேதம் அல்லது ஊறு ஏற்பட்டது என்று மெய்ப்பிக்காமலேயே அவரது தனித்த உரிமையில் நேரடியாகவும் உடனடியாகவும் குறுக்கிடும் பொழுது வழக்கிடலாம்.

ஒருவருடைய உடைமையான அசையும் சொத்தில் மற்றவர் முறையின்றிக் குறுக்கிடலும் அத்து மீறுதல் ஆகும். ஒருவர் உடைமையில் உள்ள பொருளை முறையின்றி நகர்த்தலும், தொடலும் அத்து மீறுதல் ஆகும். எடுத்துக் காட்டாக, காரில் உள்ள சக்கரத்தை அகற்றல், ஒருவருடைய விலங்குகளை அடித்தல், கொல்லுதல், அவற்றிற்கு நோய் தொற்றச் செய்தல், சிற்பங்களைச் சிதைத்தல், ஓவியங்களில் கிறுக்குதல் முதலியவற்றைக் கூறலாம்.

அத்து மீறலுக்காக வழக்கிட்டுத் தீங்கீடு பெற, ஒருவர் தமக்கு ஏற்பட்ட இழப்பை அல்லது சேதத்தை நேரடியானது என்று மெய்ப்பிக்கவேண்டும். எடுத்துக் காட்டாக, ஒருவர் மற்றவர் கட்டிடத்தின் மீது கல்லை எறிந்து சேதப்படுத்துவது நேரடியானதாகும். ஆனால், பாழடைந்த நிலையில் உள்ள ஒருவரது வீட்டுப் புகைக் கூண்டிலிருந்து கற்கள், பெயர்ந்து தானாக மற்றொருவர் கட்டடத்தில் அல்லது நிலத்தில் விழுதல் தொல்லை எனும் தீங்கேயன்றி அத்து மீறல் என்னும் தீங்காகாது.

ஒருவர் மற்றொருவரிடம் அனுமதி அல்லது உரிமம் பெற்று நிலத்தில் நுழைவது அத்து மீறல் அன்று. அனுமதி வெளிப்படையாகவோ உட்கிடையாகவோ வழங்கப்படலாம். அவ்வாறு வழங்கப்பட்ட அனுமதியை ஒருவர் தம் விருப்பப்படி விலக்கிக் கொள்ளலாம். கொடுத்த அனுமதி விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர், அனுமதியின் அடிப்படையில் எந்தச் செயல் செய்வதும் முறையாகாது. அனுமதி பெற்றுச் செய்யப்பட்ட செயல்கள் தீங்குகளாகக் கருதப்பட மாட்டா. ஒரு செயலைச் செய்யக் கொடுக்கப்பட்ட அனுமதி, வேறு எந்த உரிமையையும் அந்நிலத்தின் மீது வழங்குவதில்லை. அனுமதி பெற்றவர் அத்து மீறியவர் அல்லர் என்பதை மட்டுமே அது குறிக்கிறது.

வெளிப்படையாகக் கொடுக்கப்படும் அனுமதிக்கு எடுத்துக் காட்டுகளாகப் பின் வருவனவற்றைக் கூறலாம்: மற்றவர் நிலத்தில் மரம் வெட்டும் உரிமை, திரைப்பட, நாடக அரங்குகளில் திரைப்படம், நாடகம் பார்த்தல் ஆகிய இவற்றில் அனுமதி வெளிப்படையாகக் கொடுக்கப்படுகிறது. இவை தவிர, அனுமதி உட்கிடையாகவும் வழங்கப்படலாம். இதை, அனுமதி கொடுப்பவரின் நடத்தையில் இருந்து ஊகித்து அறிந்து கொள்ளலாம். எடுத்துக் காட்டாக, ஒருவர், தமது நிலத்தில் மற்றொருவர் ஆடு மாடுகள் மேய்ப்பதைப் பார்த்துக்கொண்டு வாளாவிருந்தால், அச்செயலை அவர் அனுமதித்துள்ளதாக உட்கிடையாகக் கொள்ளலாம்.

அனுமதி பெற்றவர், அதை வேறு ஒருவருக்கு உரிமை மாற்றம் செய்ய இயலாது. அனுமதி என்பது, ஒருவர் மற்றொருவருக்குத் தனிப்பட்ட முறையில் அளிக்கும் உரிமையாகும். எனவே, அனுமதி பெற்றவர், அச்சொத்தைப் பயன்படுத்துவதற்கு இடையூறாக இருக்கும் வேறு ஒருவர் மீது வழக்கிட முடியாது. ஆனால் அனுமதி கொடுத்தவர் மீது ஒப்பந்த மீறலுக்காக வழக்கிடலாம்.

ஒருவர் மற்றொருவரிடம் அனுமதி அல்லது உரிமம் பெற்ற நிலத்தில் நுழைவது அத்து மீறல் ஆவதில்லை என்று மேலே பார்த்தோம். ஆயினும் அவர், அனுமதி அல்லது உரிமம் பெற்றுச் சட்டப்படியான அதிகாரத்துடன் நுழைந்து, பின்னர்த் தீங்கான செயலைச் செய்து, அவர் தம் அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்தினால், அவர் தம் அதிகாரத்தை முறையின்றிப் பயன்படுத்திய அக்கணம் முதலே அந் நிலத்தில் அத்து மீறி நுழைந்தவராகக் கருதப்படுவார்.

உண்பதற்காக உணவு விடுதியில் நுழைந்த ஒருவர், அங்குள்ள பண்டங்களையும் பாத்திரங்களையும் திருடினால், அவர் அவ்விடுதியில் நுழைந்த நேரத்தில் இருந்தே அத்து மீறல் செய்ததாகக் கருதப்படுவார். அதாவது அவருடைய செயல், தொடக்கத்திலிருந்தே அத்து மீறலாகக் கருதப்படும். இது அடி முதலே அத்து மீறல் என்றும் கூறப்படும் (Trespass ab initio). ஒருவருடைய புறச்செயல் அவரது மறைவான உட்கருத்தைப் புலப்படுத்தும் எனச் சட்டம் கருதுகிறது. சட்டப்படி, நுழைந்தவரின் முறையற்ற செயல் அவர் அங்கு நுழையக் காரணமோ நியாயமோ சிறிதும் கிடையாது என்று கூறத் தக்க முறையில் அமைகிறது.

அத்து மீறல், உடைமைக்கு எதிராகச் செய்யப்படும் தீங்காகுமே தவிர உரிமைக்கு எதிராகச் செய்யப்படும் தீங்கன்று. அத்து மீறல் நிகழும் பொழுது, நிலம் யாருடைய உடைமையில் இருக்கிறதோ அவர் தாம் அத்து மீறலுக்காக வழக்கிட முடியும். எடுத்துக் காட்டாக, ஒரு நிலச் சொந்தக்காரர், தம் நிலத்தைக் குத்தகைக்கு விட்டிருக்கின்றார்; அந்நிலத்தில் அத்து மீறல் நிகழ்ந்தால், அவர் வழக்கிட முடியாது. குத்தகை பெற்றவர்தாம் அத்து மீறலுக்காக வழக்கிடலாம். ஆனால், மரத்தை வெட்டுதல், கட்டிடங்களை இடித்தல் போன்ற நிரந்தர நலன்களைப் பாதிக்கும் தீமைகள் செய்யப்படும் பொழுது நிலத்தின் சொந்தக்காரர் வழக்கிடலாம்.

மற்றவர் நிலத்தில் புகுந்து அத்து மீறல் செய்கின்றவர், அங்கிருக்கும்வரை தொடர்ந்து அத்து மீறிக் கொண்டிருப்பவராகவே கருதப்படுவார். இவ்வாறே, ஒரு பொருளை மற்றவர் நிலத்தில் வைப்பவாறே, ஒரு பொருளை மற்றவர் நிலத்தில் வைப்பதின் மூலம் அத்து மீறல் செய்பவர், அப்பொருள் அங்கிருந்து நீக்கப்படும் வரை தொடர்ந்து அத்து மீறல் செய்து கொண்டிருப்பவராகக் கருதப்படுவார். அத்து மீறி இன்னொருவர் நிலத்தில் புகுந்தவர், தொடர்ந்து அங்கிருக்கும் ஒவ்வொரு நாளும் தனித் தனியாக அத்து மீறல் செய்தவராகக் கொள்ளப்படுவர். ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே வழக்கிடலாம். அவ்வாறே. அத்து மீறல் செய்த பொருள் அங்குள்ள வரை, ஒவ்வொரு நாளும் தனித்தனியாக அத்து மீறல் நிகழ்ந்ததாகக் கருதப்படும். அப்பொருள் அங்கிருந்து அகற்றப்படும் வரை, ஒவ்வொரு நாளும் வழக்கிடும் உரிமை, பாதிக்கப்பட்டவருக்கு இருக்கிறது. இவ்வகை அத்து மீறல்கள் தொடர்ந்து நிகழும் அத்து மீறல்கள் எனப்படும்.

சட்டப்படி செய்யப்படும் செயல்கள் அத்து மீறல் ஆவதில்லை. தன் கடமையைச் செய்வதற்காகக், காவல் துறை அதிகாரி, மற்றவர்களுக்குச் சொந்தமான நிலத்தில் அல்லது கட்டிடத்தில் நுழைவது அத்து மீறல் ஆகாது. அவ்வாறே நீதிமன்றத்தின் ஆணையை நிறைவேற்றும் கடமை கொண்டவர்கள், நிலத்தினுள் நுழைதலும் அங்குள்ள பொருள்களை எடுத்தலும் அங்குள்ளவர்களைக் கைது செய்யலும் அத்து மீறல்கள் ஆகா. ஏனெனில் இவை சட்டப்படியான செயல்களாகும்.

அத்து மீறலுக்காகத் தீங்கீடு, நிலச்சொத்தை மீட்டுப் பெறல், உரிமை பற்றி விளம்பல், உறுத்துக் கட்டளை ஆகிய தீர்வுகளை நாடி ஒருவர் உரிமை வழக்கிடலாம். இவை தவிரக் குற்றமாகும் அத்து மீறலுக்காகவும் வழக்கிடலாம். தவிர, குற்ற விசாரணைச் சட்டத்தின் (Criminal Procedure Code) 145–ஆம் பிரிவின் கீழ், அமைதியைக் குலைக்கக்கூடிய வகையில் நிலத்தைப் பற்றிய தகராறு இருப்பதாகக் குற்றத்துறை நீதிபதி தகவல் அறிந்தால், நிலம் யாருடைய உடைமை என்று தீர்ப்பு வழங்கி, உடைமையை இழந்தவர் மீண்டும் பெற அத்து மீறி நுழைந்தவரை வலுக்கட்டாயமாக வெளியேற்றலாம். ஆயினும் அளவு மீறி வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது. நிலத்தில் சட்டமுரணாகக் குடியேறியவரை 1963–ஆம் ஆண்டு குறித்த தீர்வுச் சட்டப்படி வெளியேற்ற நீதிமன்றத்தில் வழக்கிடலாம். இதன்படி ஒருவர் நிலத்தில் தமக்கு உள்ள உரிமையை நிலைநாட்டாமலேயே, தாம் இழந்து விட்ட உரிமையை மீட்டுப் பெறமுடியும். மற்றொருவர் தம் நிலத்தில் அத்துமீறி நுழைந்த போது, நில உடைமை தம்மிடம் இருந்ததாக அத்து மீறப்பட்டவர் மெய்ப்பித்தால் போதும். அத்து மீறி நுழைந்தவர் மீது வழக்கிடப் படும்போது எவரும் அத்து மீறப்பட்டவர் உடைமையில் உள்ள நிலம் மூன்றாமவருக்குச் சொந்தமானது என்று எதிர்வாதிட முடியாது. ஒருவருக்கு ஒரு நிலத்தில், உரிமை இருப்பினும், நீதிமன்றத்தின் துணையின்றி அந்நிலத்திற்கு உடைமை கொண்டவரிடம் இருந்து உடைமையைப் பறிக்க முடியாது. அத்துமீறிச் செய்தால் அவர் மேல் வழக்கிட்டு, உடைமையை மீண்டும்பெறமுடியும். ஆனால் உடைமையிலிருந்து அகற்றப்பட்ட ஆறு மாதங்களுக்குள் வழக்கிட வேண்டும். அத்து மீறி நுழைந்து உடைமையைக் கைப்பற்றியவர் இச் சட்டப் பிரிவின் துணையை நாட முடியாது.

எஸ். எம். தே.

**அத்துவாக்கள்,** 'வழி' என்று பொருள்படும். உயிர் மேல்நிலை அடைவதற்குப் படிவழி போல இருப்பது அத்துவா. உலகம், சொல்லுலகம் பொருளுலகம் என்று இருவகைப்படும். இவை, சுத்த மாயையான பிந்து தத்துவத்திலிருந்து தோன்றியவை. சுத்த மாயையிலிருந்து சூக்குமை (நுண்மொழி), பைசந்தி (ஒரு சிறிது விளங்கும் மொழி), மத்திமை (மெல்லிதாக ஒலிக்கும் மொழி), வைகரி (தெளிவாகக் கேட்கப்படும் மொழி) என்ற நான்கு வகை வாக்குகள் தோன்றுகின்றன. இவை சொல் உலகத்தின் வகைகள். இவை மந்திரம் (சொற்றொடர்), பதம் (சொல்), வன்னம் (எழுத்து) என மூன்றாகச் சொல்லப்படும். பிரம மந்திரங்கள் ஐந்து; அங்க மந்திரங்கள் ஆறு; ஆக, மந்திரங்கள் பதினொன்று; பதம் எண்பத்தொன்று; வன்னம் வடமொழிக்குரிய ஐம்பத்தோரெழுத்துகள்.

ஆன்மதத்துவங்கள் இருபத்து நான்கு; வித்தியா தத்துவங்கள் ஏழு; சிவ தத்துவங்கள் ஐந்து; ஆக தத்துவங்கள் முப்பத்தாறு. இத் தத்துவங்களும் ஒவ்வோரண்டத்திலுள்ள நூற்றெட்டுப் புவனங்களும் சேர்ந்தது பொருள் உலகம்.

அசுத்த மாயையில் ஐம்பூதங்கள் போலச் சுத்த மாயையில் நிவிர்த்திகலை, பிரதிட்டைகலை, வித்தை கலை, சாந்திகலை, சாந்தியா தீதகலை என ஐந்து கலைகள் உள்ளன. மேற்கூறப்பட்ட மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பவை ஆறு அத்துவாக்கள் எனப்படுவன. பெ. தி.

**அத்துவிதம்** என்ற சொல் அ+துவைதம் எனப் பிரிந்து நின்று, இரண்டற்றது (துவைதம்= இரண்டு; அ=அற்றது) எனப் பொருள்படும். பொருள் ஒன்றே; இரண்டற்றதாக நின்ற ஒன்றே என்பது, அத்துவிதம் என்ற சொல்லுக்குச் சற்று விரிவான விளக்கம்.

அத்துவிதம் என்ற சொல்லுடன் முன்னாகவோ பின்னாகவோ ஒட்டுச் சொற்களைச் சேர்த்து, விசிட்டாத்துவிதம், துவைதாத்துவிதம், சிவாத்துவிதம், சுத்தாத்துவிதம் என நிறுத்தி, வேதாந்த இயலான மெய்ப்பொருட் கொள்கையை விளக்குவது மரபு. ஆசார்ய சங்கரர் தாம் விளக்கப் புகுந்த வேதாந்த இயலான மெய்ப் பொருட் கொள்கையைக் 'கேவலாத்துவிதம்' என்ற பெயரின் அடிப்படையிலேயே விளக்கினார் எனச் சில அறிஞர்கள் எழுதியிருந்தாலும், ஆசார்ய சங்கரரின் வேதாந்த இயலான மெய்ப்பொருள் கொள்கையானது 'அத்துவிதம்' எனத் தனித்து நிறுத்திய பெயரிலேயே இன்றும் வழங்கி வருவதைப் பெருவழக்காகக் காண இயலும்.

சொற்பொருளடிப்படையில், வேதாந்தம் என்பது வேதத்தின் இறுதிப் பகுதியாகிய உபநிடதத்தைக் குறிக்கும். வேதாந்தம் எனப்பெறும் உபநிடதங்களை மூல நூல்களாகக் கொண்டு அமைக்கப்பெற்ற மெய்ப் பொருளியற் கொள்கைகள் – தத்துவக் கொள்கைகள் அனைத்தும் 'வேதாந்தம்' என்ற பொதுப் பெயராலேயே வழங்கப் பெற்றன. வேதாந்த இயலான மெய்ப் பொருட் கொள்கைகள் அனைத்தும் 'அத்துவிதம்' என்ற சொல்லுடன் இணைத்தே விளக்கம் செய்யப்பெறுகின்றன.

வேதாந்த இயலான அத்துவித மெய்ப்பொருளியற்கொள்கையானது ஆசார்ய சங்கரரின் காலத்துக்கு முன்னமேயே நின்று நிலவிய வரலாற்றுப் பெருமையுடையதாயினும், ஆசார்ய சங்கரருடன் இணைத்து நிறுத்தியே வழங்கப்பெறும் மரபினைப் பெற்றிருக்கிறது. ஆசார்ய சங்கரரால் அக்கொள்கை இயற்றப் பெற்றதன்று. ஆயினும், அவர் அத்துவித வேதாந்தக் கொள்கையைத் தம் நூல்களில் தெளிவாக விளக்கியுள்ளார். ஆசார்ய சங்கரருக்கு முன்னே, உபநிடதங்களிலும், யாக்ஞவல்கியர் உரையாடல்களிலும் அத்துவிதக் கொள்கை விளக்கம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆசார்ய சங்கரருக்குக் காலத்தால் முற்பட்ட கௌடபாதர் அத்துவிதக் கொள்கையை விளக்கியிருப்பதை வரலாற்றால் உணரலாம்.

வேதாந்தக் கொள்கை என்றாலே உபநிடதங்களை மூலமாகக் கொண்டு வெளிப்பட்ட கொள்கை என்பதே பொது விளக்கம். ஆயினும், வேதாந்த இயலான மெய்ப் பொருட் கொள்கைகள் மூன்று நூல்களை முதன்மை மூலங்களாகக் கொள்கின்றன. அவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை (பிரத்தானத்ரயம்) என்பன. அம்மரபுப்படி, அத்துவித வேதாந்தக் கொள்கையும் மூன்று முதன்மை நூல்களை (பிரத்தானத்ரயத்தை) மூலமாக ஏற்கிறது.

ஆசார்ய சங்கரருக்கு முற்பட்டவரான கௌடபாதர் அத்துவிதக் கொள்கையை நிறுவிக் காட்டும் வகையில் மாண்டூக்யம் என்ற உபநிடதத்துக்கு ஒரு சிற்றுரை எழுதினார். அது மாண்டூக்ய காரிகை எனப்பெறும். அவருக்குப் பின்னர் வந்த ஆசார்ய சங்கரர் அத்துவித வேதாந்தக் கொள்கையைச் சிறப்பாக நிலைநிறுத்தும் பணியினை மேற்கொண்டு, பிரத்தானத்ரயம் எனப்பெறும் மூன்று மூல நூல்களுக்கும் விரிவுரை எழுதினார். பிரமசூத்திரம் பகவத்கீதை, சில முக்கிய உபநிடதங்கள் ஆகியவற்றிற்கு விரிவுரை இயற்றினார். பிரத்தானத்ரயத்துக்கு விரிவுரை எழுதுவதன் மூலம் அத்துவித வேதாந்தக் கொள்கையை நிலைநாட்டியதோடன்றி, 'விவேக சூடாமணி' உபதேச லகரி' என்ற தனி நூல்களையும் இயற்றி, அத்

துவித மெய்ப்பொருளியற் கொள்கையை வரையறுத்து நிறுவினார் ஆசார்ய சங்கரர்.

பிருகதாரண்யம், தைத்திரீயம் என்ற உபநிடதங்களுக்கு ஆசார்ய சங்கரரால் இயற்றப்பெற்ற விரிவுரைகளுக்கு மேலும் விளக்கம் அமையும் வகையில், அவருடைய மாணாக்கர் சுரேசுவரர் வார்த்திகம் எனப்பெறும் பொழிப்புரை எழுதியுள்ளார். அவை தவிர, சுரேசுவரர் நைசுகர்மியசித்தி என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

ஆசார்ய சங்கரரின் இன்னொரு மாணாக்கராகிய பத்மபாதர் ஆசார்ய சங்கரரின் பிரமசூத்திர விரிவுரைக்கு ஒரு விளக்கவுரை இயற்றினார். பத்மபாதரின் விளக்கவுரையில் முதலில் உள்ள ஐந்து பகுதிகள் மட்டுமே வெளிவந்தன. அதனால், அதற்குப் பஞ்சபாதிகை என்பது பெயர்.

பத்மபாதரின் பஞ்சபாதிகைக்கு, பிரகாசாத்மன் என்பவர் பஞ்சபாதிகா விவரணம் என்ற பெயரில் ஒரு பேருரை எழுதினார். அவ்வாறே, 'வாசசுபதி மிசுரா' என்பவர் ஆசார்ய சங்கரரின் பிரமசூத்திர விரிவுரைக்கு விளக்கம் அமைக்கும் வகையில், பாமதி என்ற பெயரில் ஒரு பேருரை அமைத்தார். மேலே குறிப்பிடப்பெற்ற இரண்டு விளக்கவுரைகளின் அடிப்படையில், விவரண மரபு என்றும் பாமதீமரபு என்றும் இருவகை மரபுகள் அத்துவித வேதாந்தக் கொள்கையில் இடம்பெறலாயின.

அத்துவித மெய்ப்பொருளியற் கொள்கையில், விவரண மரபுக்குரிய கருத்துகளைத் திரட்டித் தொகுத்து, 'விவரணப் பிரமேய சங்கிரகம்' என்ற நூலைப் பாரதீ தீர்த்த-வித்யாரண்யர் இயற்றினார். அதைத்தவிர, பஞ்சதசீ என்ற நூலையும் அவர் இயற்றியுள்ளார்.

விவரணக்கொள்கையின் வளர்ச்சியைப் போலவே, பாமதீக் கொள்கையின் விளக்கமாக, கல்பதரு என்ற நூலை அமலானந்தர் இயற்றினார். இந்நூலுக்கு உரையாக அப்பைய தீட்சிதர் கல்பதரு பரிமளம் என்ற நூலை இயற்றினார். மேலும், அவர் அத்துவிதக் கொள்கையில் மரபு நெறியில் வந்த வேறுபாடுகளை எடுத்துக்காட்டும் வகையில் 'சித்தாந்த லேச சங்கிரகம்' என்ற நூலை இயற்றினார்.

மூன்று முதன்மை மூல நூல்களுக்கும் பேருரைகளை இயற்றி, அவற்றின் மூலம் நிறுவப்பெற்ற வேதாந்த இயலான மெய்ப்பொருட் கொள்கைகளாக இன்று பெருவழக்கில் இருப்பவை மூன்று கொள்கைகளே. அவை ஆசார்ய சங்கரரின் அத்துவிதம், இராமானுசரின் விசிட்டாத்துவிதம், மத்வாசார்யாரின் துவைதாத்துவிதம் என்பனவே. அவ்வாறு மூன்று நூல்களுக்கும் விரிவுரை எழுதாமல், பிரமசூத்திரம் என்ற ஒரு நூலுக்கு மட்டுமே பேருரை எழுதுவதன் மூலம் நிலைநாட்டப் பெற்ற கொள்கைகளும் வேதாந்த இயலான மெய்ப்பொருட் கொள்கைகளே. அவ்வகையில் பாசுகரரின் பேதா பேத வாதம், நிம்பார்க்கரின் சுத்தாத்துவிதம், சீகண்டரின் சிவாத்துவிதம், சீபதி பண்டிதாசார்யாரின் சத்தி விசிட்டாத்துவிதம் என்பவையும் பிறவும் அடங்கும். வரலாற்று மரபிலான வளர்ச்சி நிலையில், அத்துவிதம் என்றாலே சங்கர அத்துவிதம் எனவும் பெருவழக்கினவாய் இன்றும் அறியப்பெறும் உண்மைகளாம்.

மேலே குறிப்பிடப் பெற்ற உரைநூல்கள், தனி நூல்கள் என்பவற்றோடு ஒப்பநின்று, அத்துவிதக் கொள்கையை நிலைநிறுத்தும் ஏற்றம் உடைய சித்தி நூல்கள் அத்துவிதக் கொள்கையை அரண்களாக நின்று காப்பவையாம். அத்துவித சித்தி நூல்கள் என்ற பொதுப் பெயரில் தனி நூல்களாகவும் முதல் நூல்களாகவும் நின்று, அத்துவிதக் கொள்கையை விளக்கும் பெருமையுடையவை அவை. அவை நான்கு. மண்டன மிசிரர் என்பவரால் இயற்றப் பெற்ற பிரமசித்தி, சுரேசுவரரால் இயற்றப் பெற்ற நைசுகர்மிய சித்தி, விமுக்தாத்துமன் என்பவரால் இயற்றப் பெற்ற இட்ட சித்தி, மதுசூதன சரசுவதி என்பவரால் இயற்றப் பெற்ற அத்துவித சித்தி என்பவையே அவை. பிரம சித்தி என்ற நூலை இயற்றிய மண்டனமிசிரர், ஆசார்ய சங்கரருக்குச் சமகாலத்தவராயினும், மூத்தவர் எனக் கொள்ள வேண்டியவராகிறார். கீழே கொடுக்கப் பெற்றிருக்கும் நூல்கள், சங்கர அத்துவிதக் கொள்கையை விளக்கும் வகையில் சமசுகிருதத்திலும், இந்தியிலும், தமிழிலும் உள்ளவை.

'சர்வஞ்ஞாத்ம முனி'வர் இயற்றிய சமசேபசாரீரகம், சிரீவுர்சர் இயற்றிய கண்டன கண்டன காத்யம், சித்சுகர் இயற்றிய தத்வப் பிரதீபிகை, மதுசூதன சரசுவதி இயற்றிய அத்துவிதசித்தி, தர்மராசர் இயற்றிய வேதாந்த பரிபாடை, சதானந்தர் இயற்றிய வேதாந்த சாரம் என்பவை சமசுகிருத நூல்களாம்.

நிச்சலதாசர் இயற்றிய விசார சாகரம், விருத்திப் பிரபாகரம் என்பவை இந்திமொழி நூல்கள். இவ்விரண்டு நூல்களையும் குப்புசாமி ராசு என்பார் தமிழாக்கம் - செய்துள்ளார். அத்துவித வேதாந்தக் கொள்கையைத் தமிழ் மக்கள் விரிவாக அறியவேண்டும் என்ற வகையில் பல நூல்களைத் தமிழில் இயற்றியும் மொழி பெயர்த்தும் பணியாற்றிய பெருமை தத்துவராயருக்கே உரியது. அவருக்கு அடுத்தநிலையில் பணிபுரிந்தவர் சிவப்பிரகாச சுவாமிகள்.

தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதம், தத்துவராயரால் தமிழில் பெயர்க்கப் பெற்ற சூதசங்கிதையில் உள்ள ஈசுரகீதை, சொருபானந்

தரின் சொரூபசாரம், தத்துவராயர் தொகுத்த குறுந்திரட்டு தத்துவராயரின் அஞ்ஞவதைப் பரணி, மோகவதைப் பரணி (மோகவதைப் பரணியில் உள்ள ஒரு பகுதியே அத்துவிதக் கொள்கையின் உயிர் நாடியென விளங்கும் சசிவன்னபோதம்), மாதை-திரு வேங்கடநாதர் இயற்றிய பிரபோத சந்திரோதயம், நடராசர் என்பார் இயற்றிய இரிபு கீதை, தத்துவராயர் தொகுத்த சிவப்பிரகாசப் பெருந்திரட்டு, நிசகுண சிவ யோகிகள் கன்னடத்தில் எழுதிய நூலைத் தமிழில் சிவப்பிரகாசர் பெயர்த்து அளித்த வேதாந்த சூடாமணி என்பவை தமிழ் நூல்கள்.

மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் என்ற சூத்திர நூலுக்கு, சென்னை கோ. வடிவேலுச்செட்டியார் அவர்கள் அத்துவித வேதாந்தக் கொள்கை அடிப்படையில் ஒருரை இயற்றியுள்ளார்.

ஏற்புடைய அறிவைப் பெறுவதற்குரிய வழிகள் என்ற வகையில் ஆசார்ய சங்கரரின் அத்துவித வேதாந்தக் கொள்கையானது காட்சியளவை, கருதலளவை, உரையளவை, ஒப்புமை அளவை, இன்மை அளவை, ஒழியளவை என்ற ஆறு அளவைகளை ஏற்கிறது. ஆயினும், காட்சி, கருதல், உரை என்ற மூன்று அளவைகளில் தனக்கே உரிய சில தனி விளக்கங்களை அமைத்துக் கொள்ளும் அத்துவிதக் கொள்கையானது ஒப்புமை, இன்மை, ஒழிபு என்ற மூன்றளவைகளில் ஏனைய தத்துவக் கொள்கையினர் அமைத்துக் காட்டும் விளக்கத்தையே தானும் ஏற்றுக் கொள்கிறது.

கண் என்ற புறப்புலனுக்கும் அதனாற் காணப் பெறும் புறப் பொருளுக்கும் இடையே அமையும் இணைப்பை அடிப்படையாகக் கொண்டு உண்டாகும் ஞானத்தைக் காட்சியளவையாற் பெற்ற ஞானம் என்பது பொது விளக்கம். இதனை அத்துவித வேதாந்தக் கொள்கையானது வேறு வகையாக விளக்குகிறது.

வெளியே உள்ள பொருள், கண் முதலிய புறப் புலன்களைத் தாக்கி, அவைகளைத் தன்வயப்படுத்திய போது, மனம் என்னும் அகக் கருவியானது, வெளிப்பட்டு நின்று, புறத்தே உள்ள பொருளாகவே தன்னை மாற்றிக் கொள்ளுகின்றது. புறப்பொருளின் வடிவமாகவே மனம் உருவம் கொண்டு நிற்கும்போது அதனை 'அந்தக் கரண விருத்தி' என விளக்கம் செய்து காட்டுகிறது அத்துவிதக் கொள்கை. அந்தக் கரண விருத்தியானது, ஆத்மாவின் ஞானத்தால் விளக்கமடையும் போது உண்டாகும் அறிவே காட்சியறிவு எனப்பெறும். மனம் என்னும் அந்தக் கரணம் புறப்பொருளின் வடிவமேயாகி நின்று மாற்றங்கொள்ளும். ஆத்ம ஞானம் எப்போதும் மாறாது நிலை பெற்றிருக்கும். தொடர்ந்து நிகழும் அந்தக் கரண விருத்தியின்மேல் ஆத்மஞானம் பட்டு விளக்கமுறுதும் அந்நிலையில் ஏற்படுகிற விருத்தி ஞானமே காட்சியறிவு.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன புறக் கருவிகள். மனம் அகக் கருவி. புறக் கருவிகளின் மூலம் வரும் செய்திகளைப் பாகுபடுத்தியும் இணைத்தும் செயற்படும் அகக் கருவியே மனம். அதுவே, புறப் பொருளுக்கு ஏற்ப மாற்றம் பெற்று – விருத்திப்பட்டு நிற்கும். மனத்துக்கு மேல் உள்ளது புத்தி. மனத்தின் 'செயலாகிய விருத்தியின் அடிப்படையில் அமைந்த விருத்தி ஞானத்தை' ஏற்றுச்செயற்படுவது புத்தி. மனமும் புத்தியும் அகக் கருவிகளே. அவற்றிற்கும் அப்பாற்பட்டது ஆன்மா. அது தன்னளவில் மாறாத ஞானமயமாக என்றும் விளங்கிக் கொண்டிருப்பது. ஆன்ம ஞானம் எனப்பெறும் ஆன்ம சைதன்யம் வேறு; ஆன்ம சைதன்யம் காரணமாக அமையும் 'விருத்தி ஞானம்' வேறு.

அத்துவிதக் கொள்கையின்படி, அறிதல் என்பதில் நான்கு கூறுகள் உள்ளன. அறிபவன், அறியப்பெறும் பொருள், அறியும் வழி, அறிவு என்பன. இந்த நான்கும் ஆத்மா என்ற பொருளின் நான்கு கூறுகள் என்றே அத்துவிதக் கொள்கை விளக்குகிறது.

மனம் என்ற அந்தக் கரண விருத்தியின் மேலெழுந்து விளக்க மடையச் செய்யும் ஆத்மஞானமும் 'அறிபவன்' என்ற பெயரைப் பெறுகிறது. அறியப் பெறும் பொருளிலும் ஆத்மஞானம் உள்ளது. மனம் என்ற அந்தக் கரணமானது விருத்திப் படுவதிலும் ஆத்ம சைதன்யம் உண்டு. ஆத்ம சைதன்யத்தின் தொடர்பினால் அமையும் பொருள் விளக்கமும் விருத்தி ஞானம் எனப்பெறும் காட்சியறிவாகும்.

காட்சியளவையை அடுத்து வரும் கருதலளவையானது இரு பொருள்களின் இடை நின்ற, இடையறவுபடாத இணைப்பின் அடிப்படையில் அறிவு விளக்கம் பெறுதற்கு உரிய வழியாக அமைகிறது.

மூன்றாவதாக நின்ற உரையளவையானது இரு வகைப்படும். நம்பிக்கைக்கு உரியவனாக நின்ற மனிதனால் எழுத்தாலோ பேச்சாலோ பெறக் கூடிய ஞான விளக்கம் ஒரு வகை. அடுத்தது, மனிதனைக் கடந்தது. வேத உரைகள், சுருதிகள் இரண்டாம் வகையான உரையளவை. பரம்பொருளை வேத உரைகள் எனப்பெறும் சுருதிகளால் அன்றி வேறு எந்த அளவையாலும் அறிய முடியாது. வேத வாக்கியங்களின் மூலமாகவே ஆத்மஞானம்–பிரமஞானம் அடைதல் இயலும். உலகம் முதலியவற்றைக் கடந்ததாக விளங்கும் பிரமப் பொருளின் உண்மையையும், அதைப் பற்றிய செய்திகளையும் சுருதி எனப்றெும் உரையளவையால் மட்டும் உணரமுடியும் என்பது அத்துவிதக் கொள்கை.

கருமங்களைச் செய்ய வேண்டும் என்பதே வேத வாக்கியங்களின் உட்பொருள். ஒரு தொடரோ அதி லமைந்த சொற்களோ செயலை அடிப்படையாகக் கொண்டே பொருளைத் தெளிய வைக்கின்றன என் பது பீமாம்சகக் கொள்கையினரின் கருத்து. ஆனால், செயலோடு தொடர்பில்லாத ஒன்றைக்கூட, ஒரு தொடரிலிருந்து நாம் பெற முடியும் என்பது அத்து விதக் கொள்கை. 'மிகவும் ஒளியுடையது நிலா' என்ற தொடரில், செயலுடன் ஒரு சிறிதும் தொடர்பில்லாத நிலவின் இயல்பு அறிவுறுத்தப் பெறுவதை நாம் காண லாம்.

மேலே கூறப்பெற்ற ஆறு அளவைகளாலும் ஒருவன் ஏற்புடைய அறிவைப் பெற இயலும் என ஏற்பதே ஆசார்ய சங்கரரின் அத்துவித வேதாந்தக் கொள்கை. ஆனால், நாம் பெற்ற அறிவு ஏற்புடைய மெய்யான அறிவுதானா என அளந்து பார்ப்பதும் அளவையே.

கயிற்றைப் பாம்பெனவும், சிப்பியை வெள்ளி யெனவும் அறியும் வழக்கும் காணப்பெறுகிறது. சிப் பியைச் சிப்பியென, கயிற்றைக் கயிறு என அறிவதே உண்மை ஞானம். சிப்பியை வெள்ளி என அறிவது பொய்ம்மை ஞானம். பொய்ம்மை ஞானமே அஞ் ஞானம். ஞானத்தின் தன்மை உண்மை. ஒரு ஞானம் பொய்ம்மை ஞானமாக அமைவதற்குப் புறச் சூழல் கள் காரணமாகிவிடுகின்றன. பொய்ம்மை ஞானம் பற்றிய ஆய்வியல் முறையை, 'கியாதிவாதம்' என்ற பெயரால் தத்துவத் துறையானது விளக்கமுற்படும்.

1) கீழே கிடப்பது முத்துச்சிப்பி. அங்கே இல்லா ததாகிய-இல்பொருளாகிய – சூனியமாகிய வெள்ளி தோன்றுகிறது. உள்பொருளாகிய சிப்பியில் இல் பொருளாகிய, சூனியப் பொருளாகிய வெள்ளி தோன்றுவதால் 'அசத்கியாதி' என்று சூனியவாத பௌத்தம் விளக்குகிறது.

2) வெளியில் இருப்பது சிப்பி. ஆனால், பார்ப் பவனின் அக நிலையில் விஞ்ஞான உருவாக அமைந் திருக்கும் வெள்ளியானது தவறாக வெளிப்பட்டுத் தோன்றி விடுகிறது என்பது விஞ்ஞான பௌத்தக் கொள்கை. இதனை 'ஆத்மக்யாதி' என்பர்.

3) 'இது வெள்ளி' என்று சொல்லும்போது 'இது' என்ற சொல்லால் சுட்டப்பெறும் ஞானமும், வெள்ளி என்ற சொல்லால் குறிக்கப்பெறும் ஞானமும் தத்தம் தனி நிலைகளில் உண்மைகளே. ஆனால், 'இது' என் னும் சொல்லால் குறிக்கப்பெறும் பொருளை நேரில் பார்க்கிறோம். வெள்ளி என்பது முன்பு எப்போதோ பார்த்தது. எப்போதோ பார்த்த ஒன்றை இப்போது நினைவிற் கொண்டுவந்து, இது என்ற பொருளோடு தவறாக இணைத்து 'இது வெள்ளி' என்று கருதிவிடு கிறோம். இதுவே அக்யாதி எனப்பெறும் அஞ்ஞானம். சாங்கியக் கொள்கையினரும், மீமாம்சகர்களின் ஒரு பிரிவினராகிய பிரபாகரர்களும் இவ்வாறு விளக்கு கிறார்கள்.

4) பொய்ம்மை ஞானம் என்பது ஒன்றை மற் றொன்றாக நினைப்பதே. எங்கோ உள்ள வெள்ளியை இங்கு இப்போது இல்லாத வெள்ளியை, இங்கு இப் போது கிடக்கிற சிப்பியின்மேல் ஏற்றிக் காண்கிறோம். சிப்பிக்கும் வெள்ளிக்கும் இடை அமைந்த ஒப்புமை அதற்குக் காரணமாகிறது. இவ்வாறு விளக்கம் செய்து, அதனை 'அன்யதாக்யாதி' என்ற பெயரிட்டு விளக் குவது நியாயம் என்ற தத்துவக் கொள்கை. மீமாம் சகர்களின் ஒரு பிரிவினர்களாகிய பாட்டர்களுக்கும் இது உடன்பாடே.

5) உள்ளது சிப்பி. வெள்ளி தோற்றம் பெறு கிறது. பொய்யாகத் தோன்றும் வெள்ளி உள்ளதும் அன்று. இல்லாததும் அன்று. தோன்றுவதால் அதை 'இல்லாதது' என்று சொல்ல முடியாது. சிப்பி' என்ற உண்மை ஞானம் தோன்றியவுடன் வெள்ளி என்ற ஞானம் மறைந்து விடுவதால், அதை உள்ளது என்று கூறவும் முடியாது. இல்லதும் அன்று, உள்ளதும் அன்று என்றால், அப்பொருளின் தன்மை என்ன? அதாவது அப்பொருள் இன்னது என்று சொல்லொ ணாதது என்பதே. அவ்வகையில் 'அநிர்வசனக்யாதி' என்று விளக்குவது அத்துவிதக் கொள்கை. அஞ்ஞானத்தால் – அவித்யையால் தோற்றுவிக்கப் பெற்றது. ஞானத்தால் அழிவை அடைவது என விளக்கம் அமைத்துக் கொள்ளவேண்டும்.

உண்மை என என்றும் உளதாம் பொருள் என நின்ற பொருள் ஒன்றே. அதுவே பிரமம்; அதுவே ஆத்மா. குணம் இல்லை; குறியும் இல்லை; காலத் தால் தாக்கப்பெறாதது உண்மை என, உளது என, ஒன்று என நின்ற பரம முழுப் பொருளை இது இத் தன்மைத்து என்று உடன்பாட்டு முகத்தால் கூறாமல், இது அன்று, இது அன்று என எதிர்மறை முகத்தா லேயே உபநிடத வாக்கியங்கள் விளக்குகின்றன. எதிர்மறை முகத்தால் கூறுதல் என்பதன் அடிப்படை யிலேயே 'நிர்க்குணப்பிரமம்' என்ற வழக்கு அமை கிறது.

வேத வாக்கியங்களைக் கொண்டும், உபநிடதங் களைக் கொண்டும் வரையறை செய்யப்பெற்றதாகிய அத்துவித வேதாந்தக் கொள்கைக்கு 'அடிப்படை மூல முதற்கல்' என நின்று, அத்துவிதக் கொள்கையின் எல்லாப் பிரிவுகளையும் சிக்கல் தீர்த்து இணைத்து விளக்கும் ஆற்றல் வாய்ந்த ஒன்றாக விளங்குவதே அவித்யை என்ற கருத்தமைவு. அவித்யை, மாயை என்ற இரண்டு குறியீடுகளும் ஒரே பொருளுக்கு

அமைந்த குறியீடுகளே என்று கொள்ளும் மரபும் இரண்டும் வெவ்வேறே என்று கொள்ளும் மரபும் இருந்து வருகின்றன

உண்மை எனலின், உளது என நின்ற பரம முழுப் பொருள் ஒன்றே என நிறுவுகிறது, அத்துவித வேதாந்தக் கொள்கை. அது குணமற்றதா குண முடையதா என வரையறை செய்ய முற்படும் நிலை யில் எழும் வேறுபாடு, ஒன்றென நின்ற பிரமத்துக்கும் சீவனுக்கும் இடையே அமைந்த வேறுபாடு. பொருள் ஒன்றாயின், பலவாக நின்ற பொருட்டன்மை நமக்குக் காட்சிப்படுவது ஏன்? புலன் கடந்த பொருள் பற்றிய ஆய்வில் எழுந்த பல்வேறு சிக்கல்களும் 'அவித்யை' என்ற ஒன்றால் தீர்வு பெறுகின்றன.

அடுத்துநின்ற அறிவாராய்ச்சி நிலையிலும் அறி பவன், அறியப்பெறும் பொருள், அறிவு என்று பன் முகங்கொண்டு வேறுபட்டு அமைவது ஏன்? மெய்ம்மை ஞானத்துக்கு அப்பால் பொய்ம்மை ஞானம் உண்டா வது ஏன்? இவ்வினாக்கள் மூலமாக எழும் சிக்கல் களுக்கெல்லாம் தீர்திறன் தந்து நிற்பது 'அவித்யை' என்ற கருத்தமைவுதான்.

ஞானமே விடுதலைக்குரிய நேர்வழி என அமைக் கும்போதும் ஞானத்தின் அடிப்படையில் அறவாழ்வை அமைக்கும்போதும் எழும் சிக்கல்களுக்கெல்லாம் தீர் திறன் விளைத்து நிற்பது 'அவித்யை' என்ற கருத் தமைவு ஒன்றே.

'பிரமப்பொருள் ஒன்றே; இரண்டற்றது' என்பதே பிரமம் பற்றிய விளக்கம். ''ஏகம் ஏவ அத்விதீயம் பிரமம்' என்ற சுருதி வாக்கியத்துக்கு, பிரமப்பொருள் ஒன்றே; இரண்டற்றது என்ற விளக்கமே ஆசார்ய சங்கரரால் அத்துவித வேதாந்தக் கொள்கை விளக்க மாக அமைக்கப் பெறுகிறது. 'ஏகம் ஏவ' என்ற வாக் கியத்தில் நான்கு சொற்கள் உள்ளன; 'ஏகம் பிரமம்' என்ற சொற்களே போதுமானவை. அப்படியிருக்க ஏவ, அத்விதீயம் என்ற இரண்டு சொற்களை ஏன் அந்த வாக்கியம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்ற ஐயத்தை எழுப்பிக் கொண்டு, இருமையற்றது, பன்மையற்றது என்ற கருத்துகளை விளக்கவே அவை வந்தன என விளக்கம் தருகிறது அத்துவிதம். 'மூவகை வேறுபாடுகளைக் கடந்த ஒருமையே ஏகம்' என்பதை உணர்த்தவே 'அத்விதீயம்' என்ற சொல் லாட்சி அமைகிறது.

ஒரே இனத்தைச் சார்ந்த இரண்டு மரங்கள் இருப்பதை நாம் காணலாம். அது தற்சாதி வேறு பாடு; ஒரு மரத்தையும் ஒரு கல்லையும் எடுத்துக் கொண்டால் அவற்றிடையே அமைந்த வேறுபாடு வேற்றுச் சாதி வேறுபாடு. ஒரே மரத்தில் பல கிளை கள், பல இலைகள் உள்ளன. இது அகநிலை வேறு பாடு. இம்மூன்று வேறுபாடுகளுள் எந்த ஒரு வேறு பாடும் இல்லாதது என்பதைக் குறிக்கவே 'அத்விதீயம்' என்ற வழக்கு அமைகிறது. எனக் கூறப்பெறும் விளக் கம் அத்துவித வேதாந்தக் கொள்கையின் உயிர்மூச்சு எனலாம்.

ஆசார்ய சங்கரர் வகுத்துக் காட்டிய அத்துவித வேதாந்தக் கொள்கையானது, இருவகையான ஆய் வியற்கலைத் திறன்களை அமைத்துக் கொடுத்துப் பிரமப் பொருளை அறிதற்குத் துணை செய்துள்ளது. இல்லாததை ஏற்றிப் பார்த்தல், அவற்றை மறுத்தல் என்பனவே அவ்விரு திற ஆய்வியற் கலைத்திறன். இருவகைக் கலைத் திறன்களாலும் பிரமப் பொருளை அறியமுடியும் என்பதே.

ஒரு பொருளின் இயல்புகளை இரண்டு நிலை களில் அறியலாம். பிறபொருளோடு இணைத்துக் காணும் நிலையில் அப்பொருளுக்கு அமையும் இயல் புகள் யாவை என அறிதல். இதனைப் புறநிலைச் சார்பிலக்கணம் (தடத்தலக்கணம்) என்பர். சார்த்தி நிறுத்திய நிலையில் அமைந்த இயல்புகளை மறுத்து நீக்கிக் கொண்டே சென்றால், அப்பொருளின் தன் னுண்மை நிலையிலக்கணம் அறியப்பெறும். இங்கே யும் பிரமம் இருமையுடையது என அறியப் பெறுவ தன்று; இரு வேறு நிலைகளில் உணரப் பெறுகிறது என்பதே. உலகத்தோடும், சீவனோடும் பிரமத்தைச் சார நிறுத்திக் காணுதல். ஒன்றென, உண்மை ஞான மென, உளதென நின்ற பிரம முழுப்பொருளை உலகுக்கு மூலமாக, உலகைத் தாங்கிப் புரப்பதாக, இவ்வாறு சில பண்புகளை — சில செயல்களை ஏற் றிக் காணுதல் இந்த நிலையில் பிரமம் சகுணம் என வும் ஈசுவரன் எனவும் கொள்ளுதல். ஈசுவரன் உல கத்துக்கு நிமித்த காரணம் என்பது மட்டுமன்று; முதற் காரணமும் அதுவே. பிரமத்திடமிருந்து உலகம் பிறக் கிறது. பிறந்தபின் அதனிடத்தே நிலைக்கிறது. இவ் வாறு பிரமத்தை உலகத்தோடு இணைத்து நிறுத் திச் சில குணங்களையும் செயல்களையும் பிரமத்தின் மேல் ஏற்றிக் காண்கிறோம்.

அத்துவித வேதாந்தக் கொள்கையின் அளவை யியற் கூறு ஒன்றை எடுத்துக்காட்டுக்காக இங்கு அறிய லாம். கீழே கிடக்கும் பொருள் கயிறுதான். அதைப் பாம்பு எனப் பார்க்கிறான். கயிறு பாம்பாக மாற் றங்கொண்டு விடுகிறதா என்றால் இல்லை. கயிறு இடமாக அமைய, பாம்பு தோற்றம் பெறுகிறது. கயிறு பாம்பைத் தோற்றுவித்ததா? மெய்ம்மை ஞானம் பொய்ம்மை ஞானத்தைத் தோற்றுவிக்காது. கயிறு என்ற ஞானம் வந்தவுடனேயே பாம்பு என்ற ஞானம் அழிந்துவிடுகிறது.

கயிறு எல்லாக் காலத்திலும் எல்லாராலும் பாம்பு என்றே பார்க்கப் பெறுதல் இல்லை. கயிற்றைக் கயிறு எனவே காணும் நிலையும், கயிறு என்ற ஞானத்தைப் பெறும் நிலையும் இல்லாதவை அல்ல. கயிற்றைக் கயிறாகப் பார்த்தல் அதன் தன்னுண்மை நிலை. அதுவே 'பாரமார்த்திகம்' எனப்பெறும். எந்த ஒரு பொருளையும் அதனதன் உண்மை நிலையைக் கண்டறிவதே அதன் பரமார்த்த நிலை. கயிற்றைப் பாம்பு எனப் பார்த்த நிலையில், அது அவனுக்கு மட்டுமே அமைந்த தனிக்காட்சி அனுபவம். அவனுக்கு மட்டுமே அமைந்த பாம்பு அனுபவம் பிரதி பாசிகநிலை எனப்பெறும். ஏனையோருக்கும் பொதுமை நிலையில் உள்ள அனுபவமாக இல்லாமல் அவனுக்கு மட்டுமே உரிய தனிநிலை அனுபவத்தைக் கொடுத்த உள்பொருள் என்பதே பிரதிபாசிக நிலை என்பதன் விளக்கம். எல்லாராலும் எக்காலத்தும் பொதுமையாகப் பார்த்து இது இது என அறியத் தகு நிலையில் அமைந்துள்ள பொருள்கள் விவகார நிலைப் பொருள்கள் எனவும் அத்துவித வேதாந்தக் கொள்கை விளக்குகிறது. இதனை 'மூவகையில் உளதாம் நிலைப் பொருள்' (சத்தாத்ரய) என்ற நெறியில் அத்துவித வேதாந்தம் விளக்கம் செய்கிறது. இம் மூவகை நிலைகளையும் வேறுபடுத்தி, வரையறையுடன் முறைப்படுத்தி அறிந்து கொள்ள வேண்டும் என்பதுதான் ஆசார்ய சங்கரரரின் அறிவுரை.

கீழே கிடக்கும் கயிற்றைக் கயிறாகவே எல்லாரும் பார்க்கிறார்கள். இது அனைவர்க்கும் பொதுவாகிய நிலை. அதே கயிறு ஒருவனுக்குப் பாம்பு எனத் தோற்றமளிக்கிறது. அது அவனுக்கு மட்டும் அமைந்த தனிநிலைக் காட்சி அனுபவம். சிறிது நேரத்துக்குப் பின்னர், அவனே அப்பொருளைப் பாம்பு அன்று, கயிறு எனக் காண்கிறான். பாம்பு எனக் கயிற்றைப் பார்த்தது பொய்ம்மை ஞானம் என அறிகிறான். கயிறு ஞானம் வந்ததும் பாம்பு ஞானம் பொய் என்பது அவனால் அனுபவநிலையில் அறியப்பெற்ற ஒன்று. இதற்கு அடுத்த நிலையை இங்கே சிந்தித்தறிய வேண்டும்.

பிரமம் ஒன்றே உண்மை என உளதாய் நின்ற பொருள். பிரமம் என்ற பொருளே கிடக்க, அது கயிறாக, உலகமாக எல்லாராலும் பார்க்கப் பெறுகிறது. கயிற்றைப் பாம்பு என்று பார்த்த ஒருவன் தனிநிலை அனுபவம் போன்றில்லாமல், பிரமஞானம் பெற்றவர்களைத் தவிர ஏனைய எல்லாராலும் பிரமம் உலகமாக, கயிறு, கட்டில் போன்ற பொருள்களாகப் பார்த்தறியப் பெறுகிறது. இதனையே 'வியவகார சத்' எனச் சுட்டி விளக்குகிறது அத்துவித வேதாந்தக் கொள்கை. பிரமத்தை உலகமாகப் பார்க்கும் நிலை நீங்கி, பிரமத்தைப் பிரமமாகவே காணும் நிலை அமைந்துவிட்டால், உலகம் என்ற ஞானம் உண்மை ஞானமா பொய்ம்மை ஞானமா என்ற வினா எழும். பிரமஞானம் பெற்ற நிலையில், இல்லாது அழிந்து போன உலகம் என்ற ஞானத்தைப் பொய்ம்மை ஞானம் என்று சொல்லும் நிலையில், ஆசார்ய சங்கரர் 'அத்துவிதம்' என்ற வேதாந்தக் கொள்கையை மூன்று தொடர்களில் விளக்கி அமைத்து விடுகிறார். "பிரமம் இரண்டற்ற மூலப் பொருள்; பலவாகக் காணப்பெறும் உலகம் பொய்த்தோற்றம்; சீவன் பிரமத்தை விட வேறன்று" என்பதே அவ்விளக்கம்.

கயிற்றை இடமாகக் கொண்டு பல்வேறு பொய்த் தோற்றப் பொருள்கள் தோன்றுவதற்குக் காரணம் மாயை அல்லது அவித்யை என்பர். ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறைப்பதும், இல்லாத தன்மையை ஏற்றி நிறுத்துவதும் ஆகிய இரண்டு செயல்களைச் செய்யும் ஆற்றல் உடையது மாயை அல்லது அவித்யை. உலகைப் பற்றி நின்று செயற்படுத்துவதை மாயை என்றும், ஆத்மா அல்லது சீவனைப் பற்றி நின்று செயற்படுத்துவதை அவித்யை என்றும், வேறு பிரித்து எடுத்துக்காட்டும் மரபுமுறையும் உண்டு.

பிரமப் பொருளை ஆதாரமாகக் கொண்டு உலகத் தோற்றத்தை அமைக்கும் 'மாயை' என்பது எதிர்மறை நிலையில் உணரப் பெறுவது அன்று. ஞானத்தின் இல்லாமையை அஞ்ஞானம் என உணர்தல் போலன்றி, பொய்ம்மை அறிவு என்றாற்போல உடன்பாட்டு முறையில் அறியத்தகும் நிலையுடையதே மாயை. அதனை 'மித்யா ஞானம்' - 'பொய்ஞானம்' என விளக்குவர். காலம் முதலியவைகளையுங் கடந்தது ஆதலின், காலத்தைத் தன்னிடத்திருந்தே தோற்றுவிப்பது ஆதலின் மாயையை அநாதி எனக் கொள்ளுகிறது அத்துவிதம். அநாதி என்பதனால் அது நித்தியம் என்பதாக ஆகாது. நித்தியப் பொருள் பிரமம் ஒன்றே. மாயை சத்தும் அன்று; அசத்தும் அன்று. ஆதலின் அநிர்வசனீயம் என அதனைக் குறிப்பிடுவது அத்துவித வேதாந்த மரபு.

சீவன் எனவும் ஆத்மா எனவும் வழங்கப் பெறும் தனிநிலை உயிரானது பொய்த்தோற்றமுடையதன்று. பிரமப் பொருளின் தன்னுண்மை நிலையும் ஆத்மாவின் தன்னுண்மை நிலையும் ஒன்றே. அதனாலேயே, ஆசார்ய சங்கரரர் 'சீவன் பிரமத்தை விட வேறன்று' என்று அத்துவிதக் கொள்கை விளக்கத் தொடரிலேயே அமைத்துக் காட்டியுள்ளார். அவித்யையின் காரணத்தால் சீவன் தன்னுண்மை நிலையை மறந்து, தான் வேறு, பிரமம் வேறு என்று கருதுகிறது. தான் அல்லாததைத் தான் எனப் பாவித்தும், மனம், இந்திரியம் முதலியவற்றின் இயல்புகளைத் தன்னுடைய இயல்புகள் எனப் பாவித்தும் மயங்குகிறது. ஒன்றை மற்றொன்றின் மேல் ஏற்றிக் காண்பதை 'அத்தியா

சம்' என்று கூறுவது மரபு. அவ்வகையில் சீவன், தான் துன்புறுவதாகவும் இன்புறுவதாகவும் மயங்குகிறது.

பிரமம், சீவன் என்ற இரண்டையும் உவமைகளைக் கொண்டு விளக்க முற்படும் நிலையில் விவரண மரபும் பாமதி மரபும் வெவ்வேறு எடுத்துக்காட்டுகளையும் விளக்கங்களையும் அமைக்கின்றன. ஒருவன் உருவம் கண்ணாடியில் தோற்றும்போது பிம்பம் பிரதிபிம்பம் என அமையும் நிலையில் பிரமமும் சீவனும் அமைகின்றன. இது விவரண மரபு தரும் விளக்கம். பாமதி மரபு இவ்விடத்தில் அவச்சேதவாதத்தை அமைக்கிறது. குடத்தின் உள்ளே இருக்கும் ஆகாயம் குடாகாயம் எனப் பெயர் பெறுகிறது. குடத்துக்கு வெளியே உள்ள ஆகாயம் மகாகாயம் என்ற பெயரைப் பெறுகிறது. இரண்டு நிலைகளிலும் ஆகாயம் வேறுபாடற்றது. குடம் என்ற ஒருவகைக் கட்டுப்பாட்டிற்குள் இருக்கிறது என்ற ஒன்றுதான் வேறுபாடு. அவ்வாறே சீவனும் பிரமமும் ஒன்றே. உடம்பு முதலிய கட்டுப்பாடுகளுக்குள் இருப்பதால் சீவன் என்ற பெயரை ஏற்று நிற்கிறது. எடுத்துக் காட்டுகள் மாறுபட்டாலும், 'சீவன் பிரமத்திலிருந்து வேறுபட்டதன்று' என்பதே அத்துவித வேதாந்தத்தின் குறிக்கோட் கொள்கை.

பிரமத்துக்கும் சீவனுக்கும் வேற்றுமை இல்லை என்பதை விளக்கவே மகாவாக்கியங்கள் எழுந்தன என்று கூறி அவற்றிற்கு விளக்கம் அமைக்கிறது அத்துவிதம். மகாவாக்கியங்களுக்குப் பொருள் காணும் போது வாக்கியப் பொருள், இலட்சியப் பொருள், அகண்டார்த்தம் என்ற மூவகைப் பொருள்கோள் நிலைகளை எடுத்துக் கூறி, அகண்டார்த்தத்தை உள்ளீடாகக் கொண்டு வெளிப்பட்டவைகளே மகா வாக்கியங்கள் என்று குறிப்பிடுகிறது அத்துவித வேதாந்தம்.

பிரமமும் சீவனும் ஒன்றே என்ற கொள்கை வலிவு பெற்றால், சீவன் பிரமத்தைச் சென்று அடைவதே முத்தி என்ற பேச்சுக்கு இடமேயில்லை. சீவன் தன்னுண்மை நிலையையும் பிரமத்தின் உண்மை நிலையும் ஒன்றே என அறிந்து, அறிந்த அந்நிலையிலேயே நிற்கப் பயிற்சி செய்ய வேண்டும் என்பதே தேவை. இதை அடையும் வகையில் ஆசார்ய சங்கரர் நான்கு பயிற்சிப் படிகளை அமைத்துக் கொடுத்துள்ளார்.

1. நித்திய அநித்தியப் பொருளறிவு – அழியாதது ஆத்மா; ஏனையவை அழிவன என அறிவும் அறிவு.

2. இவ்வுலகம் பரவுலகம் என்ற இரண்டிலும் உள்ள சுகத்தை விரும்பாதிருத்தல்.

3. சமம் முதலிய ஆறு குணங்களைச் செல்வமாகக் கொள்வது. சமம் – மன அடக்கம். தமம் – இந்திரியங்களை அவ்வவற்றிற்குரிய துய்ப்பு நிலையிலிருந்து தம்மிடத்தில் திரும்புமாறு செய்தல். உபரதி – இந்திரியங்களை மீளவும் வெளியிற் செல்லவிடாது காத்தல். திதிட்டை – மாறுபட்ட அனுபவங்களைப் பொறுமையுடன் ஏற்றல். சமாதானம் – மனத்தை ஒரு நிலையில்இருத்துதல். சிரத்தை – வேதாந்த விளக்கங்களில் ஆர்வம் கொள்ளுதல்.

4. முமுட்சுத்வம் – மோட்சத்தைப் பெறவேண்டும் என்ற இச்சை. மேலே குறிப்பிடப்பெற்ற நான்கு படிகளையும் சாதித்துக் கடந்த ஒருவன் வேதாந்தக் கொள்கை விளக்கங்களைக் கேட்கவும் ஆராயவும் ஆகிய தகுதிகளைப் பெற்றவனாகிறான். இந்நிலையில் அவனுக்கு ஞானமார்க்கப் பகுதிகளாக மூன்று நிலைகள் அமைத்துக் கொடுக்கப் பெறுகின்றன.

(1) சிரவணம்–வேதாந்த வாக்கியங்களின் குறிக்கோளியலான பொருளைக் குருமுகமாகக் கேட்டல்.

(2) மனனம் – கேட்டவற்றைச் சிந்தித்தல்.

(3) நிதித்தியாசனம் – சிந்தித்துத் தெளிந்ததை இடைவிடாது தியானித்தல்.

இங்கேயும் விவரண மரபு சிரவணத்தை வற்புறுத்துகிறது. பாமதி மரபு தியானம் அல்லது பிரசங்கியானம் என்பதை வற்புறத்துகிறது. இரண்டுமே ஞானம் பெறுவதற்குரிய சாதனைப் படிகள். ஞானமே மோட்ச சாதனம் என்பதில் இருமரபுக்கும் கருத்து வேற்றுமை இல்லை.

ஆசார்ய சங்கரர் வகுத்தமைத்த அத்துவித வேதாந்தக் கொள்கையானது எடுத்த இப்பிறப்பிலேயே முத்தியைப் பெற முடியும் என்பதை வலியுறுத்துகிறது. மோட்சம் என்பது சீவனால் சென்று அடையக்கூடிய ஒன்றன்று. சீவன் தற்சொரூப நிலையில் நிற்றல் என்பதே மோட்சம். அதை வேறு தேசத்திலோ வேறு காலத்திலோ அடைய வேண்டியதில்லை. தற்சொரூபத்தை அறிய முடியாமல் சீவனை மறைத்து நிற்கும் அஞ்ஞானத்தை அழிவு பெறச் செய்த நிலையே மோட்சம். பிரமமும் சீவனும் அபேதம் என்ற நிலையில் உண்டாகும் அத்துவித அனுபவம் என்பதே நாம் பெறும் பேறு.

சீவன் முத்தர்கள் அத்துவித அனுபவத்தில் நம் கண் முன்னால் அனுபவித்து வாழ்ந்து கொண்டிருக்கிற முத்தர்கள். அவர்கள் உடம்புடன் கூடியிருப்பவர்கள் போலக் காணப் பெற்றாலும் அவர்களுக்கு உடம்பு இல்லை. ஏனைய சீவர்களையும் முத்தர்களாக ஆக்குவதற்காகவே அவர்கள் இங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

''ஞானமே உருவாயும், ஆகாயத்தைப் போல மேலானதாயும், எப்பொழுதும் ஒரே ஒளியாயும்,

பிறப்பற்றும், ஒன்றாயும், அழிவற்றும், மலமற்றும், வியாபகமாயும், இரண்டற்றதாயும் எது உளதோ அதுவே நான் – எப்பொழுதும் முக்தன் நான்'' என்று அத்துவித அனுபவப் பேற்றினை ஆசார்ய சங்கரர் தம்முடைய உபதேச லகரியில் அமைத்துக் காட்டி யுள்ளார். வை. இ.

**அத்புதானந்த சுவாமி** இராமகிருட்டிண பரமகம்சரின் சீடர்களுள் ஒருவர். அவருடைய பிறந்த நாள் தெரியவில்லை. அவருடைய தொடக்கக் காலப் பெயர் இரக்துராம். பீகார் மாநிலத்தைச் சார்ந்த சாப்ரா என்னும் மாவட்டத்தில் உள்ள சிற்றூர் ஒன்றில் அவர் ஏழைப் பெற்றோர்களின் மகனாகப் பிறந்தார். அவருடைய பிள்ளைப் பருவத்தைப் பற்றிய விவரங்கள் கிடைத்தில. ஆசிரியர் போல் அவர் கருதப்படாவிடினும் தற்செயலாகக் கற்பித்த அவருடைய பாடங்கள் அவரைச் சந்திக்க வந்த மக்களிடத்தில் தீவிரமான பத்தியையும் அவரிடம் அன்பையும் ஏற்படுத்தின. அவருக்கு இலாது மகரா சர் என்று மற்றொரு பெயரும் உண்டு. சுவாமி அத்புதானந்தர் 1920–ஆம் ஆண்டு ஏப்பிரல் 24–ஆம் நாள் காலமானார்.

**அத்யயனம்:** வேதத்தை ஓதும் முறைக்கு அத்யயனம் என்பது பெயர். அத்யயனம் செய்வதில் ஐந்து முறை உண்டு. அவை சம்கிதை, பதம், கிரமம், சடை, கனம் என்பனவாம். மந்திரங்கள் மட்டும் சம்கிதை எனப்படும். 'சம்கிதா பாடம்' என்றும் சொல்லுவதுண்டு. இதில் சந்தி சேர்ந்த சொற்களைத் தனித்தனியாகப் பிரித்து ஓதுவது பதபாடம். பத பாடத்தில் அடுத்தடுத்து வரும் சொற்களை 1, 2; 2, 3; 3, 4; இப்படி சந்தி விதிப்படி சேர்த்துப் பாடு தல் கிரமபாடம். ஈரிரு சொற்களைச் சடைபோல் (1), 2, 2, 2, 1, 1, 2; (2) 3, 3, 2, 2, 3; (3), 4, 4, 3, 3, 4; 5, 5, 4, 4, 5; (5), 6, 6, 5, 5, 6 என்று அமைத்துச் சந்தி சேர்த்துக் கொத்துக் கொத்தாக ஓதுவது சடா பாடம். இதையே புரட்டிப் புரட்டி 1, 2, 2, 1, 1, 2, 3, 3, 2, 1, 1, 2, 3; 2, 3, 3, 2, 2, 3, 4, 4, 3, 2, 2, 3, 4; 3, 4, 4, 3, 3, 4, 5, 5, 4. 3, 3, 4, 5; 4, 5, 5, 4, 4, 5, 6, 6, 5, 4, 4, 5, 6, இப்படிச் சேர்த்துச் சொல்வது கனபாடம். எழுத்தெழுத்தாகப் பிரித்து அதனதன் இலக்கணத்தைச் சொல்லுவது இலட்சணம். சடாபாடம் ஓதவல்லவர் சடாவல்லவர். கனபாடம் சொல்லவல்லவர் கனபாடி. இலட்சணம் சொல்ல வல்லவர் இலட்சணாதிகாரி. இவ்வைந்து முறைகளில் ஓதுகையில், இதுதான் என்று வரையறுக்கப்பட்டிருப் பதால் இடைச்செருகல் நிகழ வழியில்லை. ஆசிரியர் ஓர் அடியை ஓதுவார். மாணவர் அதை இருமுறை இசைப்பார். பாடல் முடிந்தபின் அதைப் பத்து உரு ஓதுவர். இதுதான் அத்யயனம். அத்யயனத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் 'அரிஓம்' என்பது முறை. த.கோ.

**அத்ரன்சிகேரா** உத்தரப் பிரதேசம் எட்டாவா மாவட்டத்தில் உள்ள தொன்மையான ஊர். அலிகார் முசுலிம் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையைச் சார்ந்தவர்கள் இவ்வூரில் அகழாய்வை 1962–63–ஆம் ஆண்டுகளில் மேற்கொண்டார்கள். அகழாய்வுக் குழிகளின் அடிமட்டத்தில், வெளிறிய பழுப்பு மஞ்சள் நிற மட்கலன்கள் கிடைத்தன. இந்த மட்கலன்களுடன் வெளிறிய பழுப்பு மஞ்சள் நிறச் செங்கற்கட்டிகளும் கண்டெடுக்கப்பட்டன. இரண் டாம் பண்பாட்டுப் பகுதியில் கறுப்புநிற மட்கலன் களும் நுண்கருவிகளும் சில செம்புப் பொருள்களும் கிடைத்தன. வடஇந்தியாவில் அகழாய்வு செய்யப் பட்ட ஏனைய இடங்களில் கிடைத்த கறுப்பு சிவப்பு மட்கலன்களைப் போல் அல்லாமல், இங்குக் கிடைத்த கறுப்பு சிவப்பு மட்கலன்களின் வடிவங்கள் மாறுபட்டுக் காணப்படுகின்றன. இந்த மட்கலன்களில் வண்ணங் கள் தீட்டப்பெறவில்லை. மற்றும் இப்பண்பாட்டு மண் ணடுக்கில் செப்புப் பொருள்களும், எலும்பால் செய்யப்பட்ட சீப்பும், சிவப்பு நிற மணிவகைக் கற் களும் கிடைத்தன. மூன்றாவது பண்பாட்டு மண் அடுக்குகளில் வண்ணம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்கலன்கள், சாதாரண சாம்பல் நிற மட்பாண்டங் களுடன் கிடைத்தன. இவற்றுடன் உடைந்த கறுப்பு– சிவப்பு நிற மட்கலன்கள், சுடுமண் பொம்மைகள் ஆகியவையும் கிடைத்தன. வீடுகள் இக்காலத்தில் களிமண்ணால் கட்டப்பட்டவையாக இருந்தன என் பதை அகழாய்வின் மூலம் அறிகிறோம். நான்காவது பண்பாட்டுக் காலம் கி.மு. 600 முதல் கி.மு. 200 வரை ஆகும். இப்பண்பாட்டுக்கால மண்ணடுக்குகளில் வடஇந்தியப் பளபளப்பான கறுப்பு மட்கலன்கள் கிடைத்தன. இரும்புப் பொருள்கள், உழவுக் கருவி கள் ஆகியவையும் கிடைத்தன. இக்காலத்திய வீடு கள், சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டவை என்பது அகழாய்வின்மூலம் புலப்படுகிறது. வடஇந்தியப் பள பளப்பான கறுப்பு மட்கலன்கள் 'மௌரியர் கால மட்கலன்கள்' எனக் குறிக்கப்பெறுகின்றன. இக்காலப் பண்பாட்டு மண்ணடுக்குகள், மௌரியப் பேரரசின் காலத்தனவாகக் கருதப்படுகின்றன. ஐந்தாவது பண் பாட்டுக் காலம் கி.மு. 200 முதல் கி.பி. 300 வரை யாகும். இப்பண்பாட்டு மண்ணடுக்குகளில் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட வீடு, மணிவகைகள், சுடுமண் பொம்மைகள் ஆகியவை கிடைத்துள்ளன. ஆறாவது பண்பாட்டின் காலம் கி.பி. 600 முதல் கி.பி. 1200 வரை எனவும், ஏழாவது பண்பாட்டின் காலம் கி.பி. 1200 முதல் 1500 வரை எனவும் தொல் லியல் அறிஞர்களால் இங்கு நடந்த அகழாய்வின்

மூலம் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்பண் பாட்டுக்கால மண்ணடுக்குகளில் கண்ணாடி போன்று மெருகிடப்பட்ட மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன.

**அத்வைத சித்தாந்தி** கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புலவர். அத்துவிதக் கொள்கையில் இவர் பெற்றிருந்த புலமைச் சிறப்பால் 'அத்வைத சித்தாந்தி' என்னும் சிறப்புப் பெயரே இயற்பெயர் போல வழங்கலாயிற்று; 'வேதாந்த சங்கை நிவாரணம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். இந்நூல் மெய்ப்பொருள் நாட்டமுடையவர்களுக்குப் பயன்படத்தக்கது. செய்யுளால் ஆகிய இந்நூல் அத்துவிதக் கொள்கையை விளக்குவதாக உள்ளது.

**அத்வைதானந்தர்** இராமகிருட்டிண பரமகம்சரின் சீடர்களுள் ஒருவர். அவர் மேற்கு வங்காள மாநிலத்தில் இருபத்துநான்கு பர்க்கானா என்னும் மாவட்டத்தில் சகத்தால் என்னும் ஊரில் பிறந்தவர். எனினும், கல்கத்தா மாநகருக்கருகில் சிந்தி என்னுமிடத்தில் பெரும்பாலும் வாழ்ந்து வந்தவர். தம் துணைவியார் காலமானவுடன் அவர் துறவியானார். அவருடைய தொடக்கக் காலப் பெயர் கோபால சந்திரகோசு என்பதாகும். இராமகிருட்டிணரின் சீடர்களுள் அவர் வயது முதிர்ந்தவராக இருந்தமையால், சீடர்கள் அவரை அன்பாகவும் கனிவாகவும் நடத்தினர். இந்தியாவின் பல பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்யுங்கால், அவர் கேதார்நாத், பத்ரி நாராயணன், அரித்துவாரம், துவாரகை, இராமேசுவரம் போன்ற இடங்களுக்குச் சென்றவர். பழுத்த பழமாய் நீண்ட காலம் நல்வாழ்வு வாழ்ந்த அப்பெரியார் 1909-ஆம் ஆண்டு திசம்பர் 28-ஆம் நாள், தம் எண்பத்தொன்றாம் வயதில் காலமானார்.

**அதங்கோட்டாசான்** தலைச்சங்கத் தலைமைப் புலவராகிய அகத்தியருடைய பன்னிரு மாணவர்களுள் இரண்டாமவராக வைத்து எண்ணப்படுபவர். முதல் மாணாக்கர் தொல்காப்பியர். அவர் எழுதிய தொல்காப்பியம் என்னும் நூல், நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களத்தில் தலைமைப் புலவராக இருந்த அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டது. இச்செய்தியினைத் தொல்காப்பியப் பாயிரம் இயற்றிய பனம்பாரனார் கூற்றால் அறியலாம். "அதங்கோட்டாசாற்கு அரில்தபத் தெரிந்து" என்பது அப்பாயிரப்பகுதி. பனம்பாரனார் இவரை, "அறங்கரைநாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசான்" என அப்பாயிரத்துள் பாராட்டியுள்ளார். இதனால் இவரது வடமொழிப் புலமை நன்கு புலனாகும். தொல்காப்பியம் அரங்கேற்றப் படுங்கால், இவர் அதில் குற்றங்கூற, அதற்குத் தொல்காப்பியர் விளக்கங் கூறினார் என்பர். அதங்கோடு என்பது ஓர் ஊர். அவ்வூரினராதலின் இவர் அதங்கோட்டாசான் என்னும் சிறப்புப் பெயர் பெற்றார் எனத்தெரிகிறது. இவரது இயற்பெயர் தெரியவில்லை. அதங்கோடு என்பது சேர நாட்டிலுள்ள திருவிதாங்கோடு என்று சிலர் கருதுவர். ஆர்.கி.

**அதர்வ வேதம்** வடமொழி வேதங்களுள் ஒன்று. வேதங்களைக் குறிக்கும் 'திரய்வித்தியா' என்னும் தொடர், அறிவு நூல்களாகிய இருக்கு, யசுர், சாமம் ஆகிய மூன்று வேதங்களைக் குறிப்பிடுகிறது. வடமொழி இலக்கியங்கள் பல, மூன்று வேதங்களையே குறிப்பிடுகின்றன. வேதங்களில் நான்காவதாக வைத்து எண்ணப்படுவது அதர்வ வேதம். இவ்வேதத்தில் மிகப் பழைய கருத்துகள் காணப்படுகின்றன. இக்கருத்துகள் ஏனைய வேதங்களிற் கூறப்பட்டிருக்கும் கருத்துகளின் வேறானவை. உயர்நிலை நில்லாத கீழோர்க்குரியது இவ்வேதம் என்ற கருத்து, முன்னர் நிலவியிருந்தது. ஆனால் நாளடைவில் ஏனைய வேதங்களிலிருந்து சில பகுதிகளை இவ்வேதம் தன் உறுப்பாக ஏற்றது. அவை கூறும் கருத்துகள் பல அதர்வ வேதத்தில் இடம் பெறலாயின. இவ்வாறு தொடக்க நிலையிலிருந்து வேறாகி விரிந்துருவாகிய 'அதர்வ வேதம்' வேதங்களில் நான்காம் இடத்தைப் பெற்றது,

'அதர்வம்' என்னும் பெயர், பிற வேதங்களின் பெயர்களைப் போல் எடுத்து விளக்கத் தக்க முறையில் அமையவில்லை. இவ்வேதத்திற்கு 'அதர்வாங்கிரசு', 'பிரமவேதம்' என்னும் வேறு பெயர்களும் உண்டு. மேலும் 'பேசசானி', 'யாது' என்னும் பெயர்களும் ஒரு காலத்தில் இவ்வேதத்திற்கு வழங்கப்பட்டு வந்தன. எனினும் இப்பெயர்கள் இக்காலத்தே வழக்கில் இல்லை.

இராமாயணத்திலும் வடமொழி நூல்களிலும் மகாபாரதத்திலும் 'அதர்வவேதம்' தனி வேதமாக விளக்கப்படுகிறது. தசகுமார சரிதம், கிராதார்ச்சுனீ, சுச்ருதர் ஆகியவற்றில் இவ்வேதம் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. கிரியை முறையின் தோற்றுவாயாகவும் அதனை விரித்து விளக்கும் நூலாகவும் இவ்வேதம் அமைந்துள்ளதனை விட்டுணுபுராணம் குறிப்பிடுகிறது. மச்ச புராணம், மார்க்கண்டேய புராணம் ஆகிய இரண்டும் அதர்வத்தைப் பற்றிக் கொண்டுள்ள மதிப்பைக் கூறும் பகுதிகளை உரையாசிரியர் சாயனர் தம் உரையில் எடுத்து விளக்கியுள்ளார்.

அதர்வ வேதத்தில் ஒன்பது பிரிவுகள் காணப்படுகின்றன. இவை சாகைகள் அல்லது கிளைகள் என்று சொல்லப்படுகின்றன. இவை பைப்பலாதம், தௌடம், மௌடாயனம், சௌநகியம், சாசலம், சலதம், பிரமவாதம், தேவதரிசம், சரணவைதயம் என்பனவா

கும். இவற்றுள் சௌநகியம், பைப்பலாதம் என்னும் இரு சாகைகள் குறிப்பிடத்தக்கவையாகும். சௌநகியச் சாகையைச் சார்ந்த அதர்வ வேதமே இன்று எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. அதர்வ சங்கிதையில் எழுநூற்று முப்பத்தொரு சூக்தங்கள் உள்ளன. ஏறக்குறைய ஆறாயிரம் பாட்டுகள் காணப்படுகின்றன. இவ்வேதம் இருபது காண்டங்களை உடையது. அதர்வ வேதத்தில் காணப்படும் பாடல்களுள் ஏழில் ஒரு பங்கு இருக்கு வேதப் பாடல்களாக உள்ளன. முதல் ஏழு காண்டங்களிலும் சிறு சூக்தங்களே உள்ளன. முதற் காண்டத்தில்நந் நான்கு பாடல்களை உடைய சூக்தங்களும், இரண்டாம் காண்டத்தில் ஐந்து பாடல்களுள்ள சூக்தங்களும், மூன்றாம் காண்டத்தில் ஆறு பாடல்கள் உள்ள சூக்தங்களும், நான்காம் காண்டத்தில் ஏழு பாடல்களமைந்த சூக்தங்களும் இருக்கின்றன. ஐந்தாம் காண்டத்தில் எட்டுப் பாடல்களுக்கு மிகாதபடி சூக்தங்கள் உள்ளன. ஆறாங்காண்டத்தில் நூற்று நாற்பத்திரண்டு சூக்தங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் மூன்று பாடல்களை உடையன. ஏழாங் காண்டத்தில் உள்ள சூக்தங்கள் நூற்றுப் பதினெட்டிலும் இரண்டொரு பாட்டுகள் இருக்கின்றன. அடுத்து வரும் ஏழு காண்டங்களும் பதினேழாம், பதினெட்டாம் காண்டங்களும் மிக நீண்ட சூக்தங்களை உடையவை. இக்காண்டங்களில் உள்ள மிகச் சிறிய சூக்தத்தில் இருபத்தொரு பாடல்களும், மிகப்பெரிய சூக்தத்தில் எண்பத்தொன்பது பாடல்களும் உள்ளன. இவ்வேதத்தின் பதினைந்தாம் பதினாறாம் காண்டங்கள் உரைநடையில் அமைந்த மொழி அமைப்பிலும், நடையிலும் பிராமணங்களை நிகர்த்துக் காணப்படுகின்றன. சூக்தங்களின் அளவையே அடிப்படையாகக் கொண்டு அதர்வ வேதம் அமைக்கப்பட்டுள்ளது.

அதர்வ வேதம் தெய்வங்களைக் கூறியபோதிலும், அவற்றின் இயல்பு கூறுமிடத்துப் பிற வேதங்களினின்றும் வேறுபடுகிறது. அதர்வ வேதம் அரக்கர்களை அழிப்பதாக அமையும் தெய்வ இயல்பினை விளக்குகிறது. மேலும், இவ் வேதங் கூறும் தெய்வங்களுக்குச் சிறப்பியல்புகள் எவையும் இல்லை. இவ்வேதத்தில் உள்ள மந்திரங்கள் பேராற்றல் வாய்ந்தவை. சில நோய் நீக்க வல்லன; சில நீண்ட வாழ்வை அளிப்பன; சில செல்வச் செழிப்பைத் தருவன; சில கு[illegible]களைக் களைவன. ஒன்றியிருக்கும் காதலரைப் [illegible]க்கவல்ல மந்திரங்கள் சில; பிரிந்த காதலரை ஒன்று சேர்ப்பன சில; பகைவருக்குத் தீங்கு விளைவிக்கும் தனிநோக்குடையவை சில; பகைவரை அழித்து அரசருக்கு வெற்றி நல்குவதற்கெனச் சில மந்திரங்கள் உள்ளன. அரசன், அரசு கட்டில் ஏறுங்கால் நிகழ்த்தும் கிரியைகளில் பயன்படுத்தும் மந்திரங்களும் அதர்வவேதத்தில் உள்ளன.

அதர்வ சங்கிதை, அக்கால மக்களின் சமயத்தை விளக்கிக் கூற மிகவும் பயன்படும். அதர்வ வேதம் வேட்பவர்களைப் பற்றிக் கூறாது பொதுமக்களிடையே காணப்பட்ட பழக்க வழக்கங்களையே கூறுகிறது. மாந்திரிகம் நிகழ்த்தப்படும் முறையும் இங்குக் கூறப் படுகின்றன. வேள்வி முறை பற்றிக் கூறும் சில பாடல்களும் மந்திரங்களும் இதில் இடம் பெற்றுள்ளன. இதனால்தான் அதர்வ வேதம் தனி இடம் பெற்றது. அதர்வ வேதத்தில் தத்துவக் கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. இவற்றுள் சில உலக அமைப்பை விளக்குவதற்காகப் பாடப்பட்டன. ஆனால் இவ்வகைப் பாடல்கள் கூட ஏனைய அதர்வ மந்திரங்கள் போல் மந்திரங்களாகப் பயன்படுத்தப்பட்டன. ஆராய்ச்சியில் ஈடுபடும்பொழுது உண்மைகளை எடுத்துக்கூறும் இப்பாடல்கள், உச்சரிப்பவர்பால் மந்திர ஆற்றலை வளரச் செய்து, எண்ணிய கருமங்களை நிறைவேற்றுவதற்குப் பயன்படுகின்றன. உபநிடதம் கூறும் முக்கியப்பொருள்களையும், உலகை ஆக்கவும் காக்கவும் வல்ல பிரசாபதியையும் உலகத் தோற்றத்துக்குக் காரணமான பரம்பொருளையும், பிரமம், தபசு, அசத்து, பிராணன், மனசு போன்ற உயர்ந்த தத்துவக் கருத்துகளையும் சுட்டும் சொற்களை உடையன இப்பாடல்கள்.

அதர்வ வேதத்தின் பதின்மூன்றாவது காண்டத்தில் உரோகித சூக்தங்கள் இருக்கின்றன. செந்நிறத்தவனான சூரியனைக் குறித்து இவை பாடப்பட்டன. நாளடைவில் சூரியனது ஆன்ம சக்தியே படைத்தற்கு முதல் தெய்வமாக உயர்த்தப்பட்டது.

அதர்வ வேதத்தில் காணப்படும் மொழியமைப்பு இருக்கு வேதத்தின் மொழியமைப்பினின்றும் மிகுதியாக வேறுபடவில்லை. யாப்பு முறையும் அப்படியே. இருந்தும் அதர்வ வேதத்தில் வரும் சில சொல்லுருவங்கள் மிகப் பிற்காலந் தொட்டு வழங்கிவரும் அளவிற்கு அது கூறும் கருத்து மிகவும் தொன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது.

**அதுவர்யூ** என்போர் யாகங்களை நடத்தும் வேதகாலப் புரோகிதர்களுள் ஒருவகையினர். இருக்கு வேதகாலத்தில் இருக்கு சம்கிதைகளைப் பாடியவர்களை ஓத்ரி (Hotri) என்றனர். ஆனால் பிந்தைய வேதகாலத்தில் யசுர்வேத சம்கிதை, மந்திரங்களைக் கொண்டு விளங்கியது. இந்த மந்திரங்களை உச்சாடனம் செய்த புரோகிதர்களை அதவர்யூ (Adhvaryu) பூசாரிகள் என்றனர். யசுர் வேத யாகங்களைச் செய்யும்போது அது தொடர்பான உடலுழைப்புப் பணிகளையும் அவர்கள் செய்யக் கடமைப்

பட்டவர்கள். இருக்குவேத காலத்தில் ஏழு சாதிகளாகப் பிரிந்து இருந்த பூசாரிகள் பிந்தைய வேத காலத்தில் பதினேழு சாதிகளாக உயர்ந்தனர். அக்காலத்தில் அவர்களின் செல்வாக்கும் உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**அதாய்-தின்-கா-சோப்ரா** என்பது ஒரு மசூதியின் பெயர். சாகம்பரியைத் தலைநகராகக் கொண்ட சாகமன அரசர்களுள் ஒருவரான விக்கிரக ராசா விசாலதேவர் என்பார், சிறந்த கவிஞரும் இலக்கியப் புரவலருமாவார். அவர் எழுதிய அரகலி நாடகத்தின் சில பகுதிகள், அதாய்-தின்-கா-சோப்ரா



அதாய்-தின்-கா-சோப்ரா

என்னும் மசூதியின் சுவரில் பதிக்கப்பட்டுள்ள கற்பலகை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்னர்த்தான் இந்நாடகப் பட்டயம் கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல் கண்டுபிடிக்கப்பட்ட 'லலிதா விக்கிரகராசா' என்னும் பிறிதொரு நாடகம், விக்கிரகராசாவின் மேல் மகாகவி சோமதேவர் என்பவரால் எழுதப்பெற்றதாகும். அதுவும் அங்கேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**அதானா** துருக்கி நாட்டின் நான்காவது பெருநகரம். செய்கான் ஆற்றங்கரையில் அமைந்துள்ள இந்நகரம், மத்திய தரைக்கடலுக்கு வடக்கே 48 கி.மீ. தொலைவிலும், துருக்கிக் குடியரசின் தலைநகரான அங்காராவின் தென்கிழக்கில் 386 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. பெருமளவில் பருத்தி உற்பத்தியாகும் மாவட்டத்தின் மையமாக அதானா (Adana) அமைந்துள்ளது. இங்குள்ள பஞ்சாலைகள் சிறப்பாகப் பருத்தி ஆடைகளை நெய்கின்றன. இந்நகர் பண்டைய உரோமானியரின் குடியேற்றப் பகுதியாய் இருந்தது. எனவே, இஃது ஓர் இராணுவத் தளமாகவும் இருந்திருக்கக் கூடும். மக்கள் தொகை 5,74,515 (1980).

**அதிகச் சலுகையுறும் நாடுகள்:** பன்னாட்டு அரசியல், வாணிகத் தொடர்பான துறைகளில் சில நாடுகள் உயர்நிலைச் சலுகையைப் பெற்று வருவதுண்டு. அந்நாடுகள் பொதுவாகத் தம் பொருளாதார முன்னேற்றத்தின் காரணமாகப் பிற நாடுகளைக் காட்டிலும் உயர்நிலையை அடைந்துள்ளன. தடையற்ற, ஆதாயம் ஈட்டக்கூடிய வாணிக நடவடிக்கைகளுக்காக நாடுகள், பிற நாடுகளுடன் சிறப்பான இரு கருத்துகளின் அடிப்படையில் ஒப்பந்தங்கள் செய்து கொள்கின்றன. அவை: (1) ஒப்பந்தம் செய்து கொள்ளும் நாடுகளுக்கிடையே இறக்குமதி வரிவீதம் குறைவாயிருத்தல். (2) அவ் வீதத்தை விட அந்நாட்டில் வேறு நாட்டுப் பொருள்களின் மீது விதிக்கப்படும் இறக்குமதி வரிகளின் வீதம் குறைவாக இல்லாதிருத்தல். அப்படிக் குறைவாயிருப்பின் ஒப்பந்த நாட்டுப் பொருள்களின் இறக்குமதி வரிகளும் அதே அளவிற்குக் குறைக்கப்படும். அதாவது ஓர் ஒப்பந்த நாடு அதன் பொருள்களுக்கு அளிக்கும் சலுகைகளைப் பெறுவதுடன் அந்நாட்டில் வேறு நாட்டுப் பொருள்களுக்கு அளிக்கப்படும் சலுகைகளையும் பெற வேண்டும். அச் சலுகைகளைப் பெறுவதற்கான வாணிக ஒப்பந்தத்தின் ஓர் உட்பிரிவு விதியை அதிகச்சலுகை நாட்டு விதி (Most-Favoured Nation Treatment) எனவும், அவ்விதிக்குட்பட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடும் நாடுகளை அதிகச் சலுகையுறும் நாடுகள் எனவும் குறிப்பிடுகின்றனர்.

அதிகச் சலுகை நாட்டு விதி, வாணிக நாடுகளுக்கிடையே அளிக்கப்படும் சமத்துவச் சலுகைகள் தொடர்பாகக் கூறுகிறது. தடையிலா வாணிகத்தில் (Free Trade) இணைந்திருந்த நாடுகளுக்கு இச்சலுகை விதி, மிகவும் பொருந்துவதாய் அமைந்திருந்தது. இவ்வாணிக ஒப்பந்தம் ஐரோப்பிய நாடுகளில் பதினேழாம் நூற்றாண்டிலிருந்து பரவலாக வழக்கத்திலுள்ளது. இது ஒப்பந்த நாடுகளுக்குத் தனிப்பட்ட சலுகைகளை அளிக்காமல் அதிகச்சலுகை நாட்டுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளேயே அளித்து வந்தது

பிரான்சு கி.பி. 1535–ஆம் ஆண்டில் ஒருமுக ஒப்பந்தத்தைத் (Unilateral) துருக்கி நாட்டுடன் ஏற்படுத்திக் கொண்டதிலிருந்து இவ்விதி தோன்றியது. இதன் பிறகு தொடர்ந்து பல நாடுகள் இவ்விதியைப் பயன்படுத்தின. பின்னர் கி.பி. 1641-ஆம் ஆண்டு நெதர்லாந்தும் போர்ச்சுகல் நாடும் இருமுக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ள இசைந்தன. இதுபோன்றே கி.பி. 1654–ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஆலிவர் கிராம்வெல் (Oliver Cromwell) சுவீடன் நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். இரிச்சர்டு காப்டென் (Richard-Cobden), மைக்கேல் கெவாலியர் (Michael Chavalier) ஆகியோரின் முயற்சியால் கி.பி. 1860–ஆம் ஆண்டு ஆங்கிலேய பிரெஞ்சு ஒப்பந்தம் ஏற்பட்டது. இச்சலுகை இதற்கு முன்பே இருநூற்றாண்டுகளாகப் பல வகைகளில் பழக்கத்திலிருந்ததாகவும் அறியப்படுகிறது.

அதிகச் சலுகை ஒப்பந்தம், பன்னாட்டுப் பொருளாதாரச் சட்ட திட்டங்களுக்குட்பட்ட கொள்கையாக அமைந்து, வாணிகத்திற்குட்பட்ட நாடுகளிடையே சமாதானத் திட்டமாகவும் கட்டுப்பாடற்ற வாணிகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் உள்ளதென்ற ஒரு கருத்தும், நாடுகளிடையே காணப்படும் வாணிகச் சலுகைகளுக்கு இது முட்டுக்கட்டையாக விளங்குகிறது என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. அதிகச் சலுகை நாட்டு விதி, (1) கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டு விதி, (2) கட்டுப்பட்ட அதிகச் சலுகை நாட்டு விதி என இரு வகைப்படும்.

**கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை:** இது இரு ஒப்பந்த நாடுகள், வேறோர் அயல் நாட்டிற்கு வாணிகத்தையும் தொழிலையும் பற்றிய எல்லா உதவிகளையும் தாம் அளித்துள்ள அல்லது அளிக்கவிருக்கும் சலுகைகளுடன் உடனடியாகக் கட்டுப்பாடின்றி அளிப்பதுடன், அந்நாட்டு வாணிகத்தையும் தொழிலையும் எல்லா வகையிலும் உயர் சலுகை பெறும் நாட்டு வாணிகத்துடனும் தொழிலுடனும் ஒத்த நிலையில் நடத்திக் கொள்ள அனுமதிப்பதும் ஆகும். இதற்குச் சான்றாக 1911–ஆம் ஆண்டில் பிரிட்டனுக்கும் பொலிவியாவுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தைக் கூறலாம். இக் கருத்து, சர்வதேசச்சங்க (League of Nations) நாடுகளிடையே வாணிக ஒப்பந்தங்களின் போது பயன்படுத்துவதற்கென உருவாக்கப்பட்ட மாதிரி உயர் சலுகை நாட்டு விதியின் உட்பிரிவில், (Model Most-favoured Nation-treatment Clause) தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விளங்கக் கூறினால் 'A' என்னும் நாடு 'B' என்னும் நாட்டுடன் அதிகச் சலுகைத் தொடர்பு கொண்டால் 'B' பிறநாடுகளுக்கு முன்னர் அளித்த அல்லது இனி அளிக்கப்போகும் சுங்க வரிச் சலுகைகளையெல்லாம் 'A'க்கும் அளிக்கும். அதே நேரத்தில் 'B'க்கு 'C' என்னும் நாட்டுடன் அதிகச் சலுகைத் தொடர்பு இருக்குமானால் 'A'-க்கு 'B' கொடுக்கும் அனைத்துச் சலுகைகளும் 'C'க்கும் கொடுக்கப்படும். இவ்வாறு அதிகச் சலுகை நாட்டு விதியின் உட்பிரிவு, ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு அளிக்கும் சிறப்புச் சலுகைகளை, அந்த இரு நாடுகளுக்கு மட்டுமே உரிமைப்படுத்தாமல், அதிகச் சலுகைத் தொடர்புடைய பிற எல்லா நாடுகளுக்கும் உரிமைப்படுத்துகிறது. அமெரிக்க அதிபர் உட்ரோவில்சன் (Woodrow Wilson) செருமனியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் 14 கூறுகளில் மூன்றாவது கூறாகக் கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டு விதி கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா 1945–ஆம் ஆண்டு வெளியிட்ட பன்னாட்டு வாணிக, வேலை விரிவாக்கம் என்ற திட்ட வரைவு (Proposals for the expansion of world trade and employment) இலண்டன், செனிவா, அவானா (Hawana) போன்ற இடங்களில் கூடிய மாநாடுகளில், உலக வாணிக ஆவணமாக விரிவாக்கப்பட்டது. 1948–ஆம் ஆண்டு ஏற்படுத்திய சுங்க வரி வாணிகப் பொது ஒப்பந்தத்தில், கட்டுப்பாடற்ற கொள்கை புகுத்தப்பட்டது.

அதிகச் சலுகை நாட்டு விதியின் உட்பிரிவை மேற்கொள்ளும் பல நாடுகளில், சுங்கவரிகள் ஒப்பந்தச் சுங்க வரிகள், பொதுச் சுங்க வரிகள் என இருவகைப்படும். அந்நாடுகளுடன் அதிகச்சலுகை வாணிக ஒப்பந்தங்கள் செய்து கொண்ட நாடுகளின் பொருள்கள் மீது விதிக்கப்படும் சுங்க வரிகள், ஒப்பந்தச் சுங்க வரிகள் ஆகும். வாணிக ஒப்பந்தங்கள் செய்து கொள்ளாத நாடுகளின் மீது விதிக்கப்படும் சுங்க வரிகள் பொதுச் சுங்க வரிகள் ஆகும். அவ்வகையில் பொதுச் சுங்க வரிகளின் வீதம் ஒப்பந்தச் சுங்க வரிகளின் வீதத்தை விட மிகுதியாக இருக்கும். பிற நாடுகளுடன் அவற்றின் சுங்க வரிகளைக் குறைக்கப் பேரஞ் செய்வதற்குப் பொதுச் சுங்க வரிகள் பயன்படுவதால் அவற்றைப் பேரச் சுங்க வரிகள் (Bargaining Tariff) என்றும் கூறுவதுண்டு. ஒப்பந்தச் சுங்க வரிகள் ஒப்பந்தக் காலம் வரையிலேயே செல்லுபடியாகும். ஒப்பந்தக் காலம் முடிந்தவுடன் மீண்டும் ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளவோ மாற்றியமைக்கவோ வேண்டும்.

மேற்கூறிய வகைகளுக்குப் பதிலாக வேறு வகைச் சலுகைகளும் வழக்கத்திலுள்ளன. அவை உயர் அளவுச் சுங்க வரிகள் (Maximum Tariff), குறைந்த அளவுச் சுங்க வரிகள் (Minimum Tariff) என்பன. பிரான்சு மற்றும் அதன் தொடர்பு கொண்ட நாடுகளில் நடைமுறையில் உயர்ந்த அளவுச் சுங்க வரிகள் எனப்படுவன பொதுச் சுங்க வரிகளே. ஒப்பந்தச் சுங்க வரிகள் ஒரு குறிப்பிட்ட வீதத்திலேயே விதிக்கப்படுபவை. ஒப்

பந்தக் காலம் முடிவதற்குள் மாற்ற இயலாது. குறைந்த அளவுச் சுங்கவரி வீத அளவை ஒப்பந்தங்கள் குறிப்பிடா. ஆனால் ஒப்பந்தக் காலம் முடியுமுன் வரி வீதத்தை மாற்றிக் கொள்ளலாம். ஆகையால் இவ்வரிகளை ஒப்பந்த வரிகளுக்கு மாறாக, ஒப்பந்தக் காலத்திலேயே உள்நாட்டுத் தொழில்களுக்குத் தொழிற்காப்பு அளிக்கும் நோக்கமுடன் உயர்த்திக் கொள்ளலாம். ஆனால் அவை, ஒப்பந்த வரிகளைப் போன்று பிறநாடுகளிலிருந்து சுங்க வரிகளை ஒட்டிய சலுகைகளைப் பெறப் பயன்படா.

அதிகச் சலுகைத் தொடர்புடைய நாடுகள் வேறு நாடுகளுக்கு அளிக்கப்படும் சலுகைகளனைத்தையும் தாமும் பெற உரிமையுண்டு. எனினும், இவ்விதிக்குப் பின்வரும் விலக்குகளைக் குறிப்பிடுதல் மிகவும் இன்றியமையாதது.

1) எல்லைப்புற வாணிகம் (Frontier Trade) பெரும்பாலும் தடையிலா வாணிகமாயிருக்கும். அவ்விதமான வாணிகத்தில் ஈடுபடும் இரண்டு நாடுகளும் பிற நாட்டுப் பொருள்களின் மீது சுங்க வரி விதிக்காது. ஆனால் இச்சலுகை அந்தந்த நாடுகளுடன் தொடர்பு கொண்டிருக்கும் பிறநாடுகளுக்கு அளிக்கப்பட வேண்டியதில்லை.

2) குடியேற்ற நாட்டுச் சலுகை: பிரிட்டன், தன் ஆட்சியுரிமை (Dominion) பெற்ற நாடுகளுக்கும் குடியேற்ற நாடுகளுக்கும் சுங்கவரிச் சலுகைகள் அளிக்கிறது. இச்சலுகை கூட, பிரிட்டனுடனும் ஆட்சியுரிமை பெற்ற நாடுகளுடனும் அதிகச் சலுகைத் தொடர்புடைய பிற நாடுகளுக்கு அளிக்கப்படுவதில்லை. இதையொத்த சலுகைகளை அமெரிக்கா, பிரான்சு, இத்தாலி, இசுபெயின் (Spain) போன்ற நாடுகளும் அளித்து வருகின்றன. ஆயினும், இசுபெயின் தன்னுடைய குடியேற்ற நாடுகளுக்களிக்கும் சலுகைகளைப் பிற நாடுகளுக்கும் கொடுப்பதன் மூலம் தனித்து விளங்குகிறது.

3) மண்டலச் சலுகைகள்: சில நாடுகள், அடுத்துள்ள நாடுகள் என்பதாலும் வரலாற்றுத் தொடர்புடைய நாடுகள் என்பதாலும் ஒன்றுக்கொன்று சுங்கவரிச் சலுகைகள் அளிப்பதுண்டு. இவையே மண்டலச் சலுகைகள் எனப்படும். இசுபெயின், போர்ச்சுகல், நார்வே, சுவீடன், அமெரிக்கா, கியூபா, பால்டிக், சில தென் அமெரிக்க நாடுகள், மத்திய அமெரிக்க நாடுகள் போன்றவை மண்டலச் சலுகைகள் அளித்துள்ளன. இச் சலுகைகள் அதிகச்சலுகைத் தொடர்புடைய வேறு நாடுகளுக்கு அளிக்கப்படுவதில்லை.

4) சுங்க ஒன்றியங்கள்: சுங்க ஒன்றியங்களிலுள்ள நாடுகளுக்கிடையே சுங்க வரிகள் நீக்கப்பட்டுத் தடையிலா வாணிகம் நிறுவப்படும். இத் தடையிலா வாணிகச் சலுகையை அந்நாடுகள் உச்சச்சலுகைத் தொடர்புடைய வேறு நாடுகளுக்கு அளிப்பதில்லை.

மேற்கூறிய வெளிப்படையான நான்கு விலக்குகளைத் தவிர சில மறைவான (Veiled) முறைகளிலும் உச்சச்சலுகைத் தொடர்புடைய நாடுகளுக்குரிய சலுகைகள் மறுக்கப்படலாம். அவை 1. பொருள்களை வகைப்படுத்துவதில் வேறுபாடு. 2. அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பு பெற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் ஒரே தன்மையான பொருள்களைச் சில வேறுபாடுகள் காட்டி ஒன்றை உயர்ந்த சுங்க வரி அட்டவணையிலும் (Customs Schedule) மற்றொன்றைத் தாழ்ந்த சுங்க வரி அட்டவணையிலும் சேர்க்கலாம். இப் பாகுபாட்டினால் ஒரு பொருளுக்கு அளிக்கும் சலுகை மற்றொன்றிற்கு அளிக்கப்படாமல் இருக்கலாம். இது அதிகச் சலுகைத் தொடர்பு பெற்ற நாடுகளின் ஒரே தன்மையான பொருளைச் சுகாதாரக் காரணங்களால் வேறுபடுத்தி, ஒன்றுக்களிக்கும் சலுகைகளை மற்றொன்றுக்கு அளிக்காமல் விட்டு விடலாம்.

**நன்மைகள்:** கட்டுப்பாடற்ற அதிகச்சலுகையின் அடிப்படையில் சுங்க வரிச் சலுகைகள் எல்லா ஒப்பந்த நாடுகளுக்கும் சமமாக வழங்கப்படுவதால், நாடுகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் சச்சரவுகள் குறைந்து, அமைதி ஓங்க வாய்ப்புண்டு. ஒரு பொருள் எந்த நாட்டிலிருந்து வந்தாலும் அதன் மீது ஒரே தன்மையான இறக்குமதி வரி விதிக்கப்படுவதால், சுங்க அதிகாரிகளுக்குப் பொருள்கள் எங்கிருந்து வருகின்றன என்பதை அறியவேண்டிய இடர்ப்பாடு இல்லை. கட்டுப்பாடான அதிகச் சலுகைத் தொடர்பில் சலுகைகளைப் பெறுவதற்குப் பதில் சலுகைகளைக் கொடுக்க வேண்டும். நாடுகளின் தரம் பொறுத்துச் சலுகைகள் வழங்கப்படும். கட்டுப்பாடற்ற அதிகச் சலுகைத் தொடர்பில், சலுகைகள் பதில் சலுகைகள் இல்லாமலே கொடுக்கப்படுவதால், சிறியநாடுகள் அதிக நன்மையைப் பெறும்.

**கட்டுப்பாடான அதிகச் சலுகை:** இதன்படி இரண்டு ஒப்பந்த நாடுகள், வாணிகம், கப்பல் போக்குவரத்து ஆகியவற்றோடு தொடர்புடைய எல்லா நடவடிக்கைகளையும் வேறு நாட்டுக்கு அளித்துள்ள, அளிக்கப் போகிற சலுகைகளையெல்லாம் கட்டுப்பாடுகளுடன் தம்முள் ஒன்றுக்கொன்று அளித்துக் கொள்வதாக ஒப்பந்தம் செய்து கொள்வதாகும். அமெரிக்காவின் வாணிக ஒப்பந்தங்களில் 1922–ஆம் ஆண்டுக்கு முன் இக் கட்டுப்பாட்டு விதி காணப்பட்டது. முதல் உலகப் போருக்கு முன் பல ஆண்டுகள் அமெரிக்காவும் அதைப் பின்பற்றிச் சில தென் அமெரிக்க நாடுகளும் கட்டுப்பாடான அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பை ஆதரித்தன. போருக்குப் பின் சிறிது

காலம் பிரான்சிலும் மத்திய கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இதற்கு ஆதரவளிக்கப்பட்டது. கட்டுப் பட்ட அதிகச் சலுகையின் நன்மைகளைக் கொண்டு இது விரும்பப்பட்டது. இதன்படி ஒருநாடு, தான் அளிக் கும் சலுகைக்குப் பதில் சலுகை பெற்றுக்கொள்கிறது. பிற நாடுகளிலிருந்து சுங்கவரிச் சலுகைகளை எளிதில் பெறுவதால், கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பை விடப் பயனளிப்பது, மிகுந்த தொழிற் காப்புப் பெற்றுள்ள நாடுகளிலிருந்து சலுகைகளைப் பெறவும் உதவுகிறது.

சிக்கல்கள்: 1) நாடுகளுக்கிடையே ஒரே சீரான சுங்க வரிமுறை இருப்பதில்லை. சலுகை பெறுகின்ற நாடுகள் ஒரே தன்மையான பதில் சலுகையை அளிக்க இயலாது. 2) ஒரு நாட்டின் சலுகைக்குப் பிறநாட்டின் பதில் சலுகை சமமானது என்று ஒப்புக்கொள்ள வேண்டும். இந்நிலையில் நாடுகளி டையே கருத்து வேறுபாடுகள் தோன்றலாம். 3) நாடு கள் பல சலுகைகளைக் கொடுக்கும்போது எந்தச் சலுகை எதற்குப் பதிலாகக் கொடுக்கப்பட்டது என் பதை உறுதியாக அறிய இயலாது. 4) ஒரு நாட்டின் சலுகையின் மதிப்புக்கும் பிறநாட்டின் பதில் சலுகை களின் மதிப்புக்கும் நிறைய வேறுபாடு இருக்கலாம். இதைப் பற்றிய சிக்கலை ஒரு முறை அமெரிக்கா எழுப்பியது.

அமெரிக்காவின் சுங்கவரி முறையில் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், பரிமாற்றக் கொள்கை (Principle of Reciprocity) அமைக்கப்பெற்றது. அதன் விளக் கப்படி வெளிநாடுகளில் அமெரிக்கப் பொருள்களின் மீது மிகுதியான வரிகள் விதிக்கப்படுவதாகக் கருதினால், அமெரிக்காவில் அந்நாட்டுப் பொருள்களின் மீது வழக் கமாக விதிக்கப்படும் வரிகளுடன் கூடுதலான தண்ட வரி (Penalty Tax) களும் விதிக்கப்படும். பிற நாடுகளில் அமெரிக்கப் பொருள்களுடைய இறக்குமதி வரிகள் அமைவதைப்போல், அமெரிக்காவில் அந்நாடுகளின் பொருள்களுக்கு இறக்குமதி வரிகள் அமையும். அமெ ரிக்காவிற்கும் இங்கிலாந்திற்கும் 1938-இல் ஏற்பட்ட சுங்க வரிப் பரிமாற்றக் கொள்கையின்படி, அமெரிக்கா, இறக்குமதி செய்த கட்டிடக் கற்கள் மீது சலுகை அளித்தது. இதன்படி அதிகச் சலுகை நாட்டு விதி யைத் தொடர்ந்து செயல்படுத்தியது. ஆனால் பரி மாற்றச் சமநிலையை உறுதி செய்வதென்பது எளி தன்று. முதல் உலகப் போருக்கு முன் நீண்ட கால மாகக் கட்டுப்பட்ட அதிகச் சலுகை நாட்டு விதி, அமெரிக்காவில் நடைமுறையாய் இருந்து வந்தது. இரண்டொரு வாணிக ஒப்பந்தங்களே செய்யப்பட்ட போதிலும், அமெரிக்கப் பொருள்கள் பல நாடுகளில் அதிக சலுகைகளைப் பெற்றன. அவ்வாறு சலுகை பெறுவதற்கு அமெரிக்கா பிற நாடுகளோடு பேரஞ் செய்யவில்லை. அப்போதைய சூழ்நிலையும் அமெரிக் காவின் சிறப்பான ஏற்றுமதிப் பொருள்களுமே இதற் கான தனிக் காரணங்களாகும். முதல் உலகப் போருக் குப் பின், அமெரிக்க ஏற்றுமதிகளில் எந்திரக் கருவிகள் மிகுதியானபடியால் இப்பொருள்களுக்கு அயல்நாட் டுச் சந்தைகளில் போட்டி மிகுதியாயிருந்தது. இந் நிலையில் கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை நாட்டுத் தொடர்பு, அமெரிக்காவுக்குத் துணையான நடை முறையாயிற்று. ஆகவே 1923-ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்கா இம் முறையை ஆதரித்து வருகிறது.

சுங்கவரிப் பேரங்கள்: சுங்கவரிப் பேரங்கள், வன் கவர் பேரங்கள் (Aggressive Bargains), சமரசப் பேரங்கள் (Conciliatory Bargains) என இருவகைப் படும். வன்கவர் பேரஞ் செய்யும் நாடு, அதன் சுங்க வரிகளைக் குறைப்பது அதன் பொருளாதாரத்திற்கு நலமாய் இருந்தபோதிலும், அவற்றைக் குறைக்காது, பிறநாடுகளிலிருந்து சுங்கவரிச் சலுகைகளைப் பெற முயலும். சமரசப் பேரஞ் செய்யும் நாடு அதன் சுங்க வரிகளைக் குறைக்காமலிருப்பது அதன் பொருளா தாரத்திற்கு நலமாயிருப்பினும், அவற்றைக் குறைத் துப் பிற நாடுகளிலிருந்து சுங்க வரிச் சலுகைகளைப் பெறும். சுங்க ஒன்றியமும் காமன்வெல்த்திலுள்ள சுங்க வரிச் சலுகை முறையும் சமரசப் பேரத்திற்குத் தக்க சான்றுகளாகும்.

இப்போதைய நிலை: இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சி, குறைந்த அளவிலேயே உள்ளது. ஆகவே வளர்ச்சி குறைந்த நாடுகளின் சிறப்புத் தொழில்களுக்குச் சுங்க வரிகளா லும் இறக்குமதிப் பங்கீட்டாலும் தொழிற்காப்பு அளிக்கப்படலாம். இதற்கு உதவியாக 1947-ஆம் ஆண்டில் உருவாகிய சுங்கவரி வாணிகப் பொது ஒப்பந்தத்தில் (GATT) தேவையான ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. உலகின் பெரும்பான்மையான நாடு கள் பொருளாதார வளர்ச்சி குன்றிய நாடுகள் ஆத லால், அவற்றுக்குச் சில சிறப்புச் சலுகைகள் ஒப்பந் தத்தில் வகை செய்யப்பட்டுள்ளன. இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னர் இல்லாத அள வுக்கான ஊக்கம் இப்போது அளிக்கப்படுகின்றது. அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, செருமனி போன்ற வளர்ச்சிய டைந்த நாடுகளின் உதவி சிறப்பானது. மூலதனம், நுட்ப அறிவு ஆகியவை அரசுகளாலும் தனியாராலும் அளிக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் உலக வங்கி (World Bank), பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation), ஏற்றுமதி இறக்குமதி வங்கி (Export Import Bank) போன்றவை குறிப்பிடத் தக்கவை.

க.சொ.

துணை நூல்கள்:

**Sodersten, B. O.,** "International Economics", Macmillan, Great Britain, 1973.

**Haterler**, G. V., "International Trade", William Hodge & Company Limited, London, 1965.

*அதிகப் பற்று* என்பது வங்கியில் நடப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர் ஒருவர் தமது கணக்கில் பண இருப்பு எதுவும் இல்லாத நிலையில் வங்கி அனுமதித்த ஓர் எல்லைவரை பணத்தை அவ்வங்கியிலிருந்து பெற்றுப் பயன்படுத்தும் தொகையைக் குறிக்கும். இவ்வாறு பணத்தை வங்கியிலிருந்து, தான் பெறுவதன் மூலமோ, மற்றவர்களுக்குக் காசோலைகளாக விடுப்பதன் மூலமோ அதிகப் பற்றுத் தொகையைப் (Over-Draft) பயன்படுத்தலாம். இவ்வதிகப்பற்றை வாடிக்கையாளர் எப்போது வேண்டுமானாலும் பகுதி பகுதியாகவோ மொத்தமகாவோ பெறலாம். பணமாகவோ, வங்கி ஏற்கும்ஆவணங்கள் மூலமாகவோ பணத்தைத் தங்கள் கணக்கில் செலுத்துவதன் மூலம் அதிகப்பற்றைக் குறைத்துக் கொள்ளலாம்.

குறுகிய காலத்திற்குப் பணம் தேவையுள்ளோர் பெரும்பாலும் வங்கிகளிடமிருந்து இந்த வசதியைப் பெற முயல்வர். வணிகர், தொழில் முனைப்பாளர், தனி மனிதர், கூட்டு வணிகப் பங்காளி ஆகியோர் அதிகப்பற்று வசதியை அவ்வப்போது பெற்றுக் கொள்கின்றனர். அரசுகளும் தம் உடனடி நிதித் தேவையை ஈடு செய்ய அதிகப் பற்று வசதியைப் பயன்படுத்திக் கொள்கின்றன. பிணைய அதிகப் பற்று (Secured Over-Draft) வசதியை அனுமதிப்பதற்கே வங்கிகள் பெரும்பாலும் விரும்புகின்றன. இருப்பினும் மாத ஊதியம் பெறும் நிரந்தர ஊழியர், நாணயமும் நம்பிக்கையும் மிக்க வாடிக்கையாளர் ஆகியோர்க்கும் சிறிய அள்வில் அதிகப்பற்று வசதியைப் பரவலாகக் கொடுப்பதை வங்கிகள் விரும்புகின்றன.

**வகைகள்:** அதிகப் பற்றை நடைமுறை அடிப்படையிலும், பிணைய அடிப்படையிலும் வகைப் படுத்தலாம். நடைமுறை அடிப்படையில் அதிகப் பற்றைச் சட்ட முறைப்படி அமைந்த அதிகப்பற்று, அளித்த அதிகப் பற்று (Actual Over-Draft) என இரு வகைப்படுத்தலாம். நடப்புக் கணக்கில், வைப்பாளரால் செலுத்தப்பட்டிருக்கும் தொகைக்கும் அதிகமான அளவிற்குக் காசோலைகளை வைப்பாளர் பிறர்க்கு விடுவதன் மூலம் தோற்றுவிக்கும் அதிகப்பற்று சட்டப்படி அமைந்த அதிகப்பற்றாகும். வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கிலுள்ள இருப்புக்கும் அதிகமாக விடுத்த காசோலைகளுக்கு வங்கி பணம் கொடுப்பதன் மூலம் வாடிக்கையாளர் கணக்கில் தோற்றுவிக்கும் அதிகப் பற்று 'அளித்த அதிகப்பற்று' எனப்படும்.

வங்கி ஏற்றுக் கொள்ளத்தக்கதொரு பிணையத்தின் அடிப்படையில் வழங்கப்பெறும் அதிகப் பற்று 'பிணைய அதிகப்பற்று' எனப்படும். வாடிக்கையாளரால் கொடுக்கப்படும் பிணையத்தின் மதிப்பு ஓரளவுக்கே இருக்குமானால், அந்த அடிப்படையிலான அதிகப் பற்று 'பகுதிப் பிணைய அதிகப்பற்று' எனப் படும். எவ்விதப் பிணயமும் இல்லாமல் தோற்றுவிக்கும் அதிகப்பற்று, 'பிணையமிலா அதிகப் பற்று' அல்லது 'தடையற்ற அதிகப் பற்று' எனப்படும்.

**கால அளவு:** வாடிக்கையாளருக்கு ஒரு நாள் முதல் ஓர் ஆண்டு வரை அதிகப் பற்று வசதியை வங்கிகள் அனுமதிக்கின்றன. இக்கால அளவை வங்கியின் நன்மை கருதி குறைக்கவோ, மறுக்கவோ செய்யலாம். இவ்வாறு செய்யும்போது வங்கி அதற்கான காரணத்தை வாடிக்கையாளருக்கு விளக்க வேண்டும். பயன்படுத்திய அதிகப் பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய காலக் கெடுவை வாடிக்கையாளருக்குத் தெரிவிக்கவும் வேண்டும். வாடிக்கையாளருக்கு அனுமதிக்கும் கால அளவை அவ்வப்போது நிலவும்சூழ்நிலைகளையும், வாடிக்கையாளரின் தன்மையையும், செலுத்தும் திறனையும் கருத்தில் கொண்டு, வங்கி அவ்வப்போது வரையறுத்துக் கொள்கிறது. தகுதியானவர்களுக்கு மட்டுமே வங்கிகள் இந்த வசதியைக் கொடுப்பதால், மறுத்தல், காலத்தைக் குறைத்தல் ஆகியவைகளுக்கான வாய்ப்புகள் நடைமுறையில் மிகவும் குறைவே.

தொகைக் கடன்களுக்கு, கணக்கில் பற்றாக உள்ள முழுத் தொகைக்கும் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என வங்கி வட்டியை வசூலிக்கும். ஆனால், அதிகப் பற்றில் அன்றாடம் கணக்கில் பற்று எவ்வளவு இருக்கிறதோ அந்தத் தொகைக்கு மட்டுமே வங்கி வட்டியை வசூலிக்கும். இந்த வட்டியையும் மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என வங்கி வசூலிக்கும். இவ்விருவகைக் கடன்களில் அதிகப் பற்றுக்காகச் செலுத்தத் தக்க மொத்த வட்டி குறைவாக இருப்பதால், இவ்வகைக் கடனையே வாடிக்கையாளர்கள் பெரும்பாலும் விரும்புகின்றனர். ஆனால், ஆதாயம் பெறும் நோக்கத்துடன் வணிக வங்கிகள் செயல்படுவதால், வாடிக்கையாளர்களுக்குக் கிடைக்கும் இந்த வட்டிச் சலுகையின் ஒரு பகுதியை வேறொரு வடிவத்தில் வாடிக்கையாளரிடமிருந்து வங்கி பெறுகிறது. அதாவது அதிகப் பற்றுக்கான நடப்புக் கணக்கை வைத்திருப்பதற்கானதொரு 'தரகு' என்ற வடிவத்தில் வங்கி பெறுகிறது.

மேலும், வாடிக்கையாளர் தேவைக்கேற்ப வங்கிகள் பணத்தை இருப்பில் வைத்திருக்க வேண்டும். அதனைச் சுட்டிக் காட்டி, வாடிக்கையாளர் அப்பணத்தைப் பெற்றாலும் பெறாவிட்டாலும், அனுமதித்த தொகையில் நான்கில் ஒரு பங்கு அல்லது ஒரு பங்குத் தொகைக்கான வட்டியைக் குறைந்த அளவு வட்டியாக வங்கிகள் பெற்றுக் கொள்கின்றன. வாடிக்கையாளர் வட்டியைச் செலுத்தாவிட்டால், அவரது பற்றுக் கணக்கில் அந்தத் தொகையையும் பற்றாகச் சேர்த்துக்கொண்டு வாடிக்கையாளருக்கு அதனைத் தெரிவிக்கும்.

**திரும்பச் செலுத்தல்:** வங்கி கேட்டதும், அல்லது காலக்-கெடு முடிந்ததும் அதிகப் பற்றாக உள்ள தொகையை வாடிக்கையாளர் வங்கிக்குத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும் என்பது விதி. ஆனால், குறிப்பிட்ட கால அளவுகளில் வாடிக்கையாளர் செயல்பட்ட விதம், வாடிக்கையாளரின் செலுத்தும் திறன், நாட்டின் பொதுவான நிதி நிலைமை போன்ற பலவற்றை மதிப்பீடு செய்துகொண்டு, அதன் அடிப்படையில் அதிகப்பற்று வசதியை வாடிக்கையாளர் தொடர்ந்து அனுபவிப்பதற்கு வங்கி இசைவதும் உண்டு.

**இந்தியாவில் அதிகப்பற்று:** இந்தியாவில் வங்கிகள் அளிக்கும் அதிகப்பற்றில் ஏறத்தாழ ஐந்தில் நான்கு பங்கு, மூலப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், வாக்குறுதிச் சீட்டுகள் (Promissory Notes), அடைமான ஒப்பந்த ஆவணங்கள் (Hypothecation Agreement), தனியாள் வாக்குறுதி (Guarantees), ஆயுள் காப்பீட்டு ஒப்பந்தம், வங்கி நிலை வைப்புச் சீட்டு ஆகியவற்றின் பேரிலும், இவை போன்ற ஏதாவதொரு பிணையத்தின் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. அதிகப் பற்றாக அனுமதிக்கும் தொகை, காலம் ஆகியவை இந்தியாவின் பல பகுதிகளிலும் பல வகையாக உள்ளன.

வணிக வங்கிகள் அளவுக்கு மீறி அதிகப் பற்றை அனுமதிப்பதைக் கட்டுப்படுத்துவதற்காக, இந்தியாவின் மைய இருப்பு வங்கி (Reserve Bank of India) 1970-ஆம் ஆண்டில் 10 இலட்சம் உரூபாய், அல்லது அனுமதித்துள்ள அதிகப் பற்றுகளில் பயன்படுத்தாமல் இருக்கும் தொகைக்கு ஒரு விழுக்காடு (1%) கட்டணத்தைப் பொறுப்புக் கட்டணமாக வாடிக்கையாளர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறு அட்டவணைப்படுத்தப்பட்ட (Scheduled) வங்கிகளுக்கு ஆணையிட்டது. தொடக்கத்தில் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை பெற்றுக் கொள்ளுமாறு இருந்த இக்கட்டணத்தை 1971-ஆம் ஆண்டிலிருந்து மாதந்தோறும் பெறும் ஏற்பாடு நடைமுறைக்கு வந்தது. உணவு தானியக் கொள்முதல், உணவுப் பொருள்களைப் பாதுகாத்து வைத்தல், ஏற்றுமதிச் சரக்குகள், வணிக உறுதிக் கடிதங்கள் அடிப்படையில் இறக்குமதி செய்யும் பண்டங்கள், வங்கிகளுக்கிடையே கொடுக்கப்படும் கடன்களில் ஒரு சில வகை அதிகப் பற்றுகள் ஆகியவற்றிற்கு இக்கட்டணத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்போது இந்தக் கட்டுப்பாடுகளை மைய இருப்பு வங்கி நீக்கிவிட்டது.

இந்திய வணிக வங்கிகள் உழவர்களுக்குப் பெரும்பாலும் காலக் கடன்களையே (Term Loans) வழங்குகின்றன; அதிகப் பற்று வசதியைக் கொடுப்பதில்லை. அட்டவணை வங்கிகள் அதிகப் பற்று வசதி தேவைப்படும்போது, இந்திய மைய இருப்பு வங்கியின் வழி அல்லது பாரத மாநில வங்கியின் வழி இந்த வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. அட்டவணை வங்கியின் ஒவ்வொரு கிளையும் அதன் தலைமை வங்கியின் அனுமதியுடன் இந்த வசதியைப் பெறுகிறது. ஒவ்வொரு நாளும் எவ்வளவு தொகையை அதிகப் பற்றாகப் பெற்றிருக்கிறது என்ற விவரத்தைத் தலைமை வங்கிக்கு கம்பிச்செய்தி அல்லது தொலைபேசி மூலம் உடனுக்குடன் தெரிவிக்கிறது.

கூட்டுறவு அமைப்புகள், வங்கிகள் ஆகியவை மாநில அளவில் உள்ள தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து இந்த வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகள், இந்தியாவில் மைய இருப்பு வங்கியிடமிருந்து அல்லது அதன் பிற அமைப்புகளிடமிருந்து இவ் வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பில் கடன்கள் என்ற தலைப்பில் ஓர் அங்கமாக அதிகப் பற்று இனம் இடம் பெறுகிறது.

இந்தியாவில் தற்போதுள்ள வங்கி வீதம் 10 விழுக்காடு. இதோடு 8 விழுக்காடு அதிகம் சேர்த்து, அதிகப் பற்றுகளுக்கு 18 விழுக்காடு வட்டி விதிக்கப்படுகிறது. அட்டவணை வங்கிகள் இந்த வசதியைப் பெறுவதற்காக இலட்ச ரூபாய் அதிகப் பற்றுத் தொகைக்கு, நாள் ஒன்றுக்குத் 'தரகு' என்ற வடிவத்தில் 59/- உரூபாயைச் செலுத்துகின்றன.

இந்திய மாநில அரசுகளுக்கு நிதித் தேவை ஏற்படும்போது, மைய அரசின் ஒப்புதலோடு, இந்திய மைய இருப்பு வங்கியிலிருந்து இடைக்காலமாக அதிகப் பற்று வசதியைப் பெற்றுக் கொள்கின்றன. இவ்வாறு பெறும் அதிகப்பற்றுத் தொகையை, மைய அரசு மாநில அரசுகளுக்குக் கொடையாகவும் உதவியாகவும் (Grants & Aids), வழங்கும் நிதியைப் பயன்படுத்தியும், அல்லது பற்றுத் தொகையைத் திருப்பிச் செலுத்

தியும், அதிகப்பற்றை மாநில அரசுகள் குறைத்துக் கொள்கின்றன அல்லது நீக்கிக் கொள்கின்றன. அவ்வப்போது இந்தியாவில் ஏற்படுத்தப்படும் நிதிக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், அதிகப் பற்றாக உள்ள தொகையில், ஒரு பகுதியைக் குறைப்பதும், அல்லது அதிகப் பற்றுத் தொகை முழுவதையும் நீக்கிவிடுவதும் உண்டு. மொத்தத்தில் இந்திய மைய இருப்பு வங்கியிடமிருந்து மாநில அரசுகள் அளவுக்கு மீறி அதிகப் பற்று வசதியைப் பெறுவதை மைய அரசு விரும்புவதில்லை.

உலக நாடுகளும் அதிகப் பற்றும்: ஆசுதிரேலியாவில் வங்கிகள் வழங்கும் கடன்களில் பெரும் பகுதி அதிகப் பற்று என்ற வடிவில்தான் வழங்கப்படுகின்றது. கோட்பாட்டளவில் இவ்வதிகப் பற்றுகள் குறுங்காலத்திற்கே அனுமதிக்கப்பட்டாலும் நடைமுறையில் இவை நெடுங்காலத்திற்கு அனுமதிக்கப்படுகின்றன.

வாடிக்கையாளரின் நடப்புக் கணக்கில், அவர்தம் பணி மூலதனத் தேவையை ஈடு செய்வதற்காக அதிகப் பற்று வசதியை வங்கிகள் வழங்கினாலும், ஆசுதிரேலிய (Australia) நாட்டில் பேரளவில் உள்ள வேளாண்மைத் துறையில் ஈடுபட்டுள்ள பெருமக்களின், 'நிலையானமூலதன'த் தேவையை ஈடு செய்யவும் இவ்வசதியை வங்கிகள் வழங்குகின்றன. இவ்வதிகப்பற்றுக்கென வாங்கும் வட்டி வீதத்தை அந்நாட்டின் மைய வங்கி வரையறுக்கிறது.

பிரேசில் நாட்டு வங்கிகள் பிணையத்தின் அடிப்படையில்தான் குறுங்காலக் கடன்களைக் கொடுக்க விரும்புகின்றன. ஏறத்தாழ 80 விழுக்காடு அளவு கடன்கள் இந்த அடிப்படையில்தான் வழங்கப்படுகின்றன. அதிகப் பற்று வசதி இந்நாட்டில் மிகக் குறைவான அளவிலேயே பயன்படுகிறது.

கனடாவில் ஒரு சில பகுதிகள் மட்டுமே இவ்வகைக் கடன்கள், சிறப்பான நிதியாக்க முறையாகக் கையாளப்படுகின்றன. பெரும்பாலான பகுதிகளில் யாரும் அதிகப் பற்றை விரும்புவதில்லை. ஆனால், வாடிக்கையாளருக்கும், வங்கியின் கிளை மேலாளருக்கும் இடையே உள்ள நல்ல உறவின் அடிப்படையில் அமையப் பெற்றுள்ள அதிகப் பற்றுமுறை வழக்கத்தில் உள்ளது. கடன் பெறுவதில் குறைவான கட்டுப்பாடு, சட்ட அடிப்படையிலான இடர்கள், இவை போன்ற பல குறைகள் இருந்தாலும், இவ்வகை அதிகப் பற்று அந்நாட்டில் பரவலாகப் பயன்பட்டு வருகிறது. மொத்தத்தில், வாக்குறுதிச் சீட்டு அல்லது அதனைப் போன்றதொரு பிணையம் அல்லது பிணையங்களின் அடிப்படையில், கடன்களை வழங்குவதையே அந்நாட்டு வங்கிகள் விரும்புகின்றன.

கியூபாவில் வங்கிகள் அளிக்கும் கடன்களில் பெரும்பாலானவை குறுங்காலக் கடன்களே. கனடாவில் உள்ளதைப் போல், முன் அமைந்த பழக்க அடிப்படையிலான அதிகப் பற்றும், அமெரிக்காவைப் போல் வணிக ஒப்புதல்களைப் பெறும் வழக்கமும் அந்நாட்டில் உள்ளன. இவ்விரண்டில், இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளதே அதிகமான அளவில் உள்ளது.

அமெரிக்காவில் உள்ள வங்கிகள் அதிகப் பற்று வழங்குவதை விரும்புவதில்லை. அதிகப் பற்றை மிகவும் மோசமான வகைக் கடன், ஒழுங்கற்ற வகைக் கடன் என்றெல்லாம் அமெரிக்க வங்கியினர் கருதுகின்றனர். கடந்த காலங்களில் வங்கிகளுக்கிடையே ஏற்பட்ட தோல்விகள், வங்கிகளுக்கிடையே இருந்த தேவையற்ற கடும் போட்டி, கடன் பெறுபவர் தம் நிலை குறித்துத் தவறான மதிப்பீடு செய்யும் வாய்ப்புப் போன்ற பல குறைகள், அதிகப் பற்றுக் கடன்களில் இருப்பதைச் சுட்டிக் காட்டி, அமெரிக்காவின் நீதி மன்றங்களும், ஒப்புதல் அளிக்கும் நிலையில் உள்ள மேலதிகாரிகளும் அதிகப் பற்று வடிவத்திலான கடன்களைக் கொடுப்பதில் ஆர்வம் காட்டவில்லை. எனவே, அதிகப் பற்று அமெரிக்காவில் பரவலாகக் கையாளப்பட்டாலும், மிக மிகக் குறைந்த அளவில் தான் இருக்கிறது.

சப்பானில் அதிகப் பற்று என்ற வடிவத்திலான கடன் வசதிகளைக் கொடுப்பதை வங்கிகள் பெரும்பாலும் விரும்புவதில்லை.

இங்கிலாந்தின் வங்கிகள் வணிக நிறுவனங்களுக்கும், தொழிலதிபர்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் பேரளவில் குறுங்காலக் கடன்களைக் கொடுத்து உதவுகின்றன. இவை, முழுத் தொகையையும் பெற்றுக் கொள்ளும் வண்ணம் உள்ள தொகைக் கடன்கள், தேவைக்குத் தகுந்தாற் போன்று அவ்வப்போது பெற்றுக் கொள்ளும் அதிகப் பற்றுகள் என்ற இரு வடிவத்தில் வழங்கப்படுகின்றன. வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பு அதிகப் பற்று, பணக் கடன் (Cash Credit) ஆகிய இரண்டையும் வேறுபடுத்தாமல் ஒரே இனமாகத்தான் காட்டுகிறது. என். எஸ். பா.

துணை நூல்கள்:

**Benjamin Haggort Backhard (ed.)**, "Banking Systems" Times of India Press, Bombay, 1967.

**Davar, S.R.**, "Law and Practice of Banking: Bankers' Edition", Progressive Corporation (PVT), Bombay, 1972.

**Rufus Wixon, (Ed.)**, "Accountants Hand Book" (IV Ed.), The Ronald Press Company, 1957.

**Tannan**, **M.L.**, "Banking Law and Practice in India", Thacker & Company, Bombay, 1973.

கருப்பன், க., "இந்தியாவில் பாங்கியல் சட்டமும் நடைமுறையும்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1982.

***அதிகமான்*** ஆதி என்பவளுக்கும் பகவன் என்பவனுக்கும் பிறந்த மக்கள் எழுவருள் ஒருவன். ஏனைய அறுவர் பெயர்கள் வருமாறு:— ஔவையார், உப்பை, உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர். பெற்றோர் செய்து கொண்ட ஒப்பந்தப்படி, அதிகமான் குழந்தையாகப் பிறந்தபோது, அவனை விட்டுச் செல்லத் தயங்கிய தாயிடம் அவன் "கருப்பைக்குள் முட்டைக்கும்" எனத் தொடங்கும் வெண்பாவினைப் பாடியதாகவும், அதனைக் கேட்ட தாய் தெளிவு பெற்று, அக்குழந்தையை அங்கேயே விடுத்துக் கணவனுடன் வேற்றிடம் சென்றதாகவும் கூறப்படுகிறது.

***அதிகார அளிப்பு***: சட்டமியற்றும் அதிகாரம் சட்ட மன்றத்திற்குத்தான் உண்டு என்ற போதிலும் நடைமுறையில் ஆட்சிநிருவாக அங்கங்களுக்குச் சட்டம் இயற்றும் பணியை மேற்கொள்ளவேண்டிய இன்றியமையாமை ஏற்படுகிறது. சட்டமியற்றும் அதிகாரத்தைச் சட்டமன்றம், அதனால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலமாக, அரசுக்கும் அரசு ஆட்சி நிருவாக அங்கத்திற்கும் மற்றும் மேலாண்மைத் துறை முகவர்களுக்கும் வழங்குகிறது. அவ்வாறு சட்டமன்றம், ஆட்சி நிருவாக அங்கத்திற்கும் மற்றைய நிருவாகத்துறை முகவர்களுக்கும் சட்டத்தின்மூலம் சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்குதல், அதிகார அளிப்பு (Deligation of Power) எனப்பெயர் பெறும்.

தொடக்கக் காலத்தில் மக்கள் மிக மோசமான சூழ்நிலையில் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பின்றி வாழ்ந்து வந்தார்கள். தங்கள் உடைமைகளையும் உயிர்களையும் பாதுகாக்க வேண்டி, அவற்றைப் பாதுகாக்கும் தகுதி படைத்த ஒருவரிடம் சமூதாய ஒப்பந்தம் (Social Contract) செய்துகொண்டனர். அவ்வொப்பந்தப்படி அவருக்கு அனைத்து அதிகாரங்களையும் வழங்கினர். அதிகாரம் பெற்ற அவர் அவர்களைப் பாதுகாக்க வேண்டும். ஒப்பந்தப்படி அவர் அதிகாரம் எல்லையற்றது; முடிவில்லாதது; எல்லா வல்லமையும் பெற்றது. இவ்வாறு ஆப்சு (Hobbes Thomas, 1588–1679), அதிகாரம் மக்களால் சமுதாய ஒப்பந்தத்தின் மூலமாக ஒரு ஆற்றல் வாய்ந்த மனிதனுக்கு அளிக்கப்பட்டதென்று கூறுகிறார். இலாக்கு (Locke, John, 1632–1704) என்பவர் மக்கள், அதிகாரத்தை ஆற்றல் பெற்றவரிடத்தில் ஒப்படைத்தாலும் அவர் தகுதியற்ற நிலையை அடைவாரானால் அவரை நீக்கும் உரிமையை மக்களே பெற்றிருந்தார்கள் என்று கூறுகிறார். உரூசோ (Rousseau, Jean Jacques, 1712–78), 'ஒவ்வொரு மனிதனும் அவனே ஆட்சி செய்பவனும், ஆளப்படுபவனுமாவான்' என்று கூறுகிறார். மேலும், தனிப்பேரரசாண்மை மக்களிடமே உறைந்து இருந்தது என்றும், அதை மக்கள் தங்களைப் பாதுகாக்கும் ஒருவரிடம் சமுதாய ஒப்பந்தத்தின் வாயிலாக அளித்தார்கள் என்றும் அவர் கூறுகிறார். ஒப்பந்தத்தின் வாயிலாக அவருக்கு அனைத்து அதிகாரங்களும் அளிக்கப்பட்டன. ஆனால், அவர் தம் கடமைகளை நிறைவேற்றத் தவறினால் அவரை நீக்கும் அதிகாரத்தை மக்கள் தங்களிடமே வைத்திருந்தார்கள் எனக் கூறுகிறார். இம்மூன்று அறிஞர்களின் கருத்துப்படி, மக்கள் எவரிடம் சமுதாய ஒப்பந்தம் செய்து கொண்டார்களோ, அவரிடம் மக்களிடமிருந்த தனிப் பேரரசாண்மை ஒப்படைக்கப்பட்டது முதல் அவர் மக்களை ஆளத் தலைப்பட்டார்; தலைவரெனப்பட்டார்; பின்னர் அரசர் எனப்பட்டார். ஆனால் ஆசுடினும் (Austin), பெந்தமும் (Bentham) இந்தத் தனிப் பேரரசு அதிகாரம் எல்லையற்றது என்றும் பிரிக்க இயலாததென்றும் சமுதாயத்தில் இன்றியமையாததென்றும் கூறுகிறார்கள். மக்கள் அரசனுக்கு அளித்த அதிகாரம், அதிகார ஒப்படைப்பு என்று இடைசி (Dicey) கூறுகிறார். நாளடைவில் தனிமனிதனின் அரசாட்சி மறைந்து மக்களாட்சி தொடங்கியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆணையாளர் சட்டமன்றத்தில் அமர்ந்து ஆட்சி செய்யத் தொடங்கினர். அதிகார ஒப்படைப்பு அரசனுக்குக் கொடுக்கப்பட்டது என்ற நிலை மாறிச் சட்டமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டது என்ற நிலை உருவாயிற்று. மக்களால் தேர்வு செய்யப்பட்டவர்களிடம் வழங்கப்பட்ட அதிகாரத்தை அவர்கள் மீட்டளிக்க இயலாது; ஆகவே அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை ஆட்சி நிருவாகப் பிரிவுகளிடம் ஒப்படைத்தல் கூடாது.

சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்ட சட்டம் இயற்றும் அதிகாரத்தை ஆட்சி நிருவாகப்பிரிவு ஏற்கக் கூடாது. ஆட்சி நிருவாகப் பிரிவு, சட்டமியற்றும் அதிகாரத்தை மேற்கொள்ளுமானால் அது அதிகாரங்களின் பிரிவிற்கு மாறானதாகும். சட்டம் இயற்றுவதைச் சட்டமன்றமே செய்துவருதல் வேண்டும். அவ்வதிகாரத்தைச் சட்டமன்றம், நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கக்கூடாது. முதலாவதாக, அவ்வாறு அதிகார ஒப்படைப்புச் செய்வதற்கு மக்கள் அதற்கு அதிகாரம் கொடுக்கவில்லை; இரண்டாவதாக, அவ்வாறு அதிகார ஒப்படைவுசெய்தல் அதிகாரங்களின் பிரிவிற்கு முரணானதாகும். நிருவாகத்துறை முகவர்களுக்குச் சட்டம் இயற்றும் அதிகாரம் அளிக்கப்பட்

டால், அவை தன்னதிகாரப் போக்கில் செயல்படத் தொடங்கிச் சட்டத்தின் ஆட்சியை அழித்து மக்களைத் துயரத்திற்கு ஆளாக்கிவிடும். சட்டமன்றங்களும் நிருவாகத்துறை முகவர் நிலைகளும் தனித்தனி அதிகாரங்களோடு உரிமையுடன் செயல்பட வேண்டும்.

சமுதாய அமைப்பில் சட்டமன்றத்தின் பணி நாளும் பெருகிவருகிறது. மக்கள் அரசு, குடியாட்சி வழியில் சட்டங்கள் பல இயற்றி, மக்கள் அனைத்துத் துறைகளிலும் மேம்பாடு அடைய வழிகாண வேண்டி உள்ளது. இயற்றப்பட்ட சட்டங்கள் அனைத்துச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துமாறு இருத்தல் வேண்டியுள்ளது. அனைத்துச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துமாறு சட்டம் இயற்றுதல் இயலாது. ஆகவே சட்டமன்றம் அனைத்துச் சூழ்நிலைக்கும் ஏற்பச் சட்டம் இயற்ற இயலுவதில்லை. முதலாவதாகச் சட்டமன்றத்திற்கு நாட்டு மக்களுக்குத் தேவையான அனைத்துச் சட்டங்களையும் முழுமையாகச் செய்வதற்குரிய நேரமில்லை. இரண்டாவதாக, எல்லாச் சட்டங்களையும் செய்வதற்குச் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குப் போதுமான தொழில் நுட்ப அறிவு இருப்பதில்லை. மூன்றாவதாக, அமைதிக் காலங்களில் இயற்றப்படும் சட்டங்கள், அவசர காலச் சூழ்நிலைக்குப் பொருந்துவதாக அமைவதில்லை; அவசரகாலச் சூழ்நிலையை நிருவகிப்பதற்குச் சட்டமன்றம் உடனடியாகக் கூடிச் சட்டம் இயற்ற இயலாது; மேலும் அவசரகாலச் சூழ்நிலைகளை நிருவகிக்கச் சட்டமன்றம் முன்கூட்டியே சட்டங்களை இயற்றிவைத்தல் இயலாது; இறுதியாக மாறிவரும் சூழ்நிலைகளுக்கு வளைந்து கொடுக்கும் முறையில் சட்டம் இயற்ற இயலாது.

இக்காரணங்களால் சட்டமன்றம், அனைத்துச் சட்டங்களையும் தானே இயற்ற முடியாத நிலையில் உள்ளது. ஆனால், இம்மன்றம் சமுதாயத்தின் தேவைகளைப் புறக்கணிக்கவும் இயலாது. தேவைக்கேற்பச் சட்டங்கள் செய்து சமுதாயத்தை மேம்பாடு அடையச் செய்வது சட்டமன்றத்தின் கடமையாகவும் உள்ளது. இந்நிலைமையை நிருவகிக்கச் சட்டமன்றம், சட்டமியற்றும் அதிகாரங்கள் சிலவற்றை நிருவாகத் துறை முகவர்களுக்கு வழங்க நேரிட்டது.

பொதுக் கோட்பாடுகள்: சட்டமன்றம் இயற்றும் அனைத்து அதிகாரங்களையும் நிருவாகத் துறை நிலைகளுக்கு வழங்கலாம் என்றால், சட்டமன்றம் தன் பணியை முழுமையாகச் செய்வதாகாது. சட்ட மன்றம், தன் பணியினைச் செம்மையாக ஆற்ற இயலாத நிலையில், தன் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய தேவை இல்லாத நிலையில், சில சட்டம் இயற்றும் அதிகாரங்களை மட்டும் நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்கலாம். மிக இன்றியமையாத சட்டங்களும் சிறப்புச் சட்டங்களும் சட்டமன்றத்தினாலேயே இயற்றப்படுதல் வேண்டும். நிருவாகத் துறை முகவருக்கு வழங்கப்பட்ட பணியைச் சில சூழ்நிலைகளில் அவர் தாமே செய்யாமல் வேறு ஒருவர் மூலம் நிறைவேற்றலாம். சட்டமன்றம், அதிகார ஒப்படைப்பினை நிருவாகத் துறை முகவர்களுக்கு வழங்க வேண்டுமானால், சட்டங்கள் இயற்றி அவை மூலமாக அதிகாரத்தை ஒப்படைத்தல் வேண்டும். இயற்றப்பட்ட சட்டங்கள், அவற்றின் இலக்கு, கொள்கை, திட்டங்கள் முதலியவற்றுடன் வழிகாட்டும் நெறிகளையும் தெளிவுபடக் கூறி இருக்க வேண்டும்.

சட்டமன்றத்தால் இயற்றப்படும் சட்டங்கள், நிலைமுறைச் சட்டங்கள் (Substantive Laws), அரசின் வருவாய்க்குரிய சட்டங்கள் (Fiscal Laws), நடைமுறை பற்றிய துணைச் சட்டங்கள் (Adjective Laws), மற்றும் நலச் சட்டங்கள் (Welfare Laws) என்று பல வகைப்படும்.

விதிகள் செய்தல்: சட்டமன்றம், சட்டமியற்றும் அதிகாரங்கள் சிலவற்றை நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்குகிறது. அவ்வாறு சட்டமன்றம், சட்டமியற்றும் அதிகாரத்தை வழங்கும்பொழுது அது சில பொதுக் கோட்பாடுகளுக்கு (General Principles) உட்பட்டே வழங்குகிறது. நிருவாகத்துறை முகவர் நிலைகளும் சட்டமன்றத்திடமிருந்து பெற்ற சட்டமியற்றும் அதிகாரங்களைக் கொண்டு, சட்டங்களைத் தோற்றுவாய்ச் சட்டத்தின் கீழ் (Parent Act) இயற்றுதல் வேண்டும். நிருவாகத் துறை முகவர்கள் தோற்றுவாய்ச் சட்டத்தின்கீழ்ச் செய்யும் சட்டங்களுக்கு, ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி செய்யப்பட்ட விதிகள் (Delegated Legislation) என்பது பெயர். ஆட்சி நிருவாகப் பிரிவுகள் இயற்றும் விதிகள், தோற்றுவாய்ச் சட்டத்தை முழுமை பெறச் செய்கின்றன. சூழ்நிலைக்கேற்பவும் மாறிவரும் தன்மைக்கேற்பவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சட்டமன்றம், பொதுக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் சட்டத்தில் குறித்துவிட்டு, அதன்படி மற்ற விதிகள் செய்யும் அதிகாரங்கள் யாவற்றையும் அதன்கீழே உள்ள நிருவாகத்துறை முகவர்களுக்கு அளித்துவருகின்ற நிலைதான் அனைத்துக் குடியரசு நாடுகளிலும் மிகுந்த அளவில் காணப்படுகிறது. சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட அனைத்துச் சட்டங்களும் இன்று இவ்வாறு விதிகள் செய்யும் அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கின்றன.

**விதிசெய்தலும், நிபந்தனைக்குக் கட்டுப்பட்டுச் சட்டமாக்கலும்:** தோற்றுவாய்ச் சட்டத்தின் மூலம் சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற நிருவாகத்துறை முகவர்கள் விதிகளைச் செய்கின்றனர். இச்சட்டம், நிருவாகத்துறை முகவர்களால் இயற்றப்பட்ட விதி களினால் முழுமை பெறுகிறது. பல்வேறு வகைப்பட்ட விதிகள் செய்யும் அதிகாரங்கள், நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. நிருவாகத்துறை முகவர்கள், தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற் கேற்ப விதிகளை இயற்றுகின்றனர். இவ்வாறு செய் யப்படும் விதிகள், கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுச் சட்ட மியற்றலிலிருந்து வேறுபட்டனவாகும்.

கட்டுப்பாட்டின் மீது சட்டமாக்குதலுக்கு எந்த விதக் கட்டுப்பாடும் சட்டமன்றம் விதிப்பதில்லை. தோற்றுவாய்ச் சட்டம், சட்டமன்றத்தை விட்டு வெளிவரும்பொழுதே முழுமைபெற்று விளங்குகிறது. அதனுடன் விதிகள் செய்து எதையும் விளக்க வேண் டிய தேவையில்லை. நிருவாகத்துறை முகவர், தோற் றுவாய்ச் சட்டத்தில் குறிக்கப்பட்டுள்ள செயல் இலக் கிற்கு ஏற்பவும், கொள்கைக்கு ஏற்பவும் வழிகாட்டும் நெறிகளின்படியும் தரத்திட்டங்களின்படியும் விதிகள் செய்யவேண்டும். ஆக, கட்டுப்பாட்டுக்குட்பட்டுச் சட்ட மியற்றலும் (Conditional Legislation) விதி கள் செய்யும் அதிகாரமும் (Delegated Legislation) ஒன்றல்ல; வெவ்வேறாகும்.

**இங்கிலாந்து நாட்டில் அதிகார ஒப்படைப்பு:** இங்கிலாந்து நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டம் எழுதா அரசியலமைப்புச் சட்டமெனக் (Unwritten Constitution) கூறுவர். அரசியலமைப்புச் சட்டம் என்று ஒன்று இல்லாததால், நாடாளுமன்றம் இயற் றும் சட்டங்கள் அரசியலமைப்புச் சட்டத்திற்கேற்ப இருக்கின்றனவா என்று உறுதி செய்யக்கூடியது எது வும் இல்லை. நாடாளுமன்றத்தின் நடப்புமுறையி னையும் சட்டம் செய்யும் போக்கினையும் கட்டுப் படுத்தச் சட்டம் எதுவும் இல்லை. நாடாளுமன்றம் எந்தச் சட்டத்தை வேண்டுமானாலும் செய்யலாம்; எவ்வாறு வேண்டுமானாலும் செய்யலாம். அது, எல்லையற்ற–கட்டுப்பாடற்ற அதிகாரத்தோடு சட்டம் செய்யும் உரிமையைக் கொண்டு விளங்குகிறது. நாடாளுமன்றம் செய்யும் சட்டங்களை நீதிமன்றம், நீதிமுறை மறுஆய்வு (Judicial Review) செய்தல் இய லாது. நாடாளுமன்றம் இயற்றும் எத்தகைய சட்ட மும் செல்லும். அவை நாட்டில் நடைமுறைப்படுத்தப் படும். இவ்வாறாக இங்கிலாந்து நாடாளுமன்றம் எல்லா அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டு சட்டமியற்றும் அதிகாரம் பெற்ற மன்றமாகத் திகழ் கிறது.

இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம் எந்தச் சட் டத்தை வேண்டுமானாலும் இயற்றி, எவ்வாறு வேண்டுமானாலும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். நாடாளுமன்றம் எந்த அதிகாரத்தை வேண்டுமானாலும் நிருவாகத் துறை முகவர்களுக்கு அளிக்கலாம். நிருவாகத்துறை முகவர் தோற்றுவாய்ச் சட்டத்தின் மூலம் எந்த விதியை வேண்டுமானாலும் ஆக்கலாம். இவ்விதிகள் தோற்றுவாய்ச் சட்டத்திற் குட்பட்டிருந்தாலோ தோற்றுவாய்ச் சட்டத்தின் மூலம் பாதுகாக்கப்பட்டி ருந்தாலோ அவை செல்லும்; நீதிமன்றம் தலையிட இயலாது. ஆனால், நடைமுறையில் இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம், சட்டங்களின் பொதுக் கோட்பாடுகளை விவரித்த பின்னரே, அச்சட்டங்களின் கீழ் மற்ற விவரங்களை இணைக்கும் அதிகாரங்களை நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்குகிறது. இம் முறையே, தொன்று தொட்டு நடைமுறையில் செயல் பட்டு வருகிறது. பொதுவாக எந்தச் சட்டமும் நாடாளுமன்றத்தால் முழுமையாகச் செய்யப்படுவ தில்லை. சட்டங்கள் அனைத்தும் நிருவாகத்துறை முகவர்களால் செய்யப்பட்ட விதிகள் மூலமே முழுமை பெறுகின்றன இதனால் நாடாளுமன்றத்தால் செய் யப்பட்ட சட்டங்களின் அளவைவிட, நிருவாகத்துறை முகவர்களால் செய்யப்பட்ட விதிகளின் அளவே மிகுதி யாக அந்நாட்டில் இருந்து வந்தது. இந்த நூற்றாண் டின் தொடக்கம் முதல், மேற்கூறிய பழக்கத்தில் சிறிது மாறுதல் ஏற்பட்டது. நாடாளுமன்றம் பெயரளவில் சட்டங்கள் இயற்றத் தொடங்கியது. அவ்வாறு இயற் றிய சட்டங்கள் மூலம் அனைத்து அதிகாரங்களும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்பட்டன. தோற்றுவாய்ச் சட்டத்தையே திருத்துவதற்கும் மாற்றுவதற்குமான அதிகாரங்களும் நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்பட்டன. நிருவாகத்துறை முகவர்கள், செய்யும் விதிகள் மூலம் தோற்று வாய்ச் சட்டத்தையே குறைக்கவும் கூட்டவும் மாற்ற வும் திருத்தவும் முடியும். தோற்றுவாய்ச் சட்டத்தின் விதிக்கூறு, அச்சட்டத்தையே திருத்தும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவருக்கு வழங்குமாயின், அதனை 'எட்டாம் என்றி (Henry) விதிக்கூறு' எனக் கூறுவர்.

சட்டங்கள் செய்யும் அதிகாரமும் அதனை நடை முறைப்படுத்தும் அதிகாரமும் நிருவாகத்துறை முக வர்கள் பெற்றிருந்ததால், அது தன்னதிகாரப் போக் கிற்கு வழி வகுத்தது. இந்த அதிகாரம் பற்றி ஈவர்ட்டு (Lord Hewart), இடைசி (Dicey) முதலியவர்கள் தங் களுடைய நூல்களின் மூலம் எதிர்ப்புகளைத் தெரிவித்த னர். இவ்வெதிர்ப்புகளின் விளைவாகக் குறைகளைக் கண்டறிய, 1939-ஆம் ஆண்டு தானோமோர் குழு (Donoughmore Committee) அமைக்கப்பெற்றது. இக் குழு, நிருவாகத்துறை முகவர்களுக்கு நாடாளு மன்றத்தால் வழங்கப்பட்ட அதிகார ஒப்படைப்புக் குறித்தும் விதிகள் செய்யும் அதிகாரம் குறித்தும்

அவற்றால் ஏற்படும் விளைவுகள் குறித்தும் நடைமுறைத் தன்மையை ஆராய்ந்து ஓர் அறிக்கையினைக் கொடுக்குமாறு பணிக்கப்பட்டது. இக்குழு தன்னுடைய அறிக்கையில், அதிகார ஒப்படைப்போ விதிகள் செய்யும் அதிகாரமோ இன்றி ஆட்சி நடைபெற இயலாதெனக் கருத்தறிவித்தது. நிருவாகத்துறை முகவர்களுக்குச் சட்டமியற்றும் அதிகாரங்களை அளித்ததன் வாயிலாக நாடாளுமன்றம் தவறு செய்யவில்லை என்றும், ஆனால் அதிகாரங்களை ஒப்படைக்கையில் நாடாளுமன்றம் அதிகக் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், நிருவாகத்துறை முகவர்கள் இயற்கை நியதிக்கு ஏற்பச் செயல்படவேண்டும் என்றும் இக்குழு கூறிற்று. அதன் அடிப்படையில், இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றம் செயல்படத் தொடங்கியது. நாடாளுமன்றம் தோற்றுவாய்ச் சட்டத்தில் பொதுக் கோட்பாடுகளைத் தெள்ளத் தெளியக் கூறி, மற்ற விதிகளை விதிகளின் மூலம் சேர்க்கும் அதிகாரத்தை நிருவாகத்துறை முகவர்களுக்கு வழங்கலாயிற்று. ஆனால், இன்றும் நாடாளுமன்றம் செய்யும் அதிகார ஒப்படைப்பின் மீது நீதிமன்றம் நீதிமுறை மறு ஆய்வினை மேற்கொள்ள இயலாது.

அமெரிக்க நாட்டில் அதிகார ஒப்படைப்பு: அமெரிக்க நாட்டில், அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டம் இலாக்கு (Locke),மாண்டெசுக்கியூ (Montesquieu) போன்றவர்களின் கருத்திற்கேற்பவும் அதிகாரங்களின் பிரிவுக் கோட்பாட்டிற்கு இசைந்தும் இயற்றப்பட்டது ஆகும். இவ்வரசியலமைப்புச் சட்டத்தில் சட்டமியற்றும் அதிகாரம், நீதிவழங்கும் அதிகாரம், மேலாண்மை அதிகாரம் ஆகிய மூன்றும் தனித்தனியே மூன்று அரசியல் பிரிவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திடமும், நீதிமுறை நீதி மன்றத்திடமும் மேலாண்மை அதிகாரம் ஆட்சி நிருவாக அங்கத்தினர்களிடமும் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளன. ஒரு பிரிவு மற்றோர் பிரிவின் அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடாது. குறிப்பாக, ஆட்சி நிருவாகப் பிரிவில் மற்ற இரு பிரிவின் அதிகாரங்கள் குவிந்திருக்குமாயின் அந்தப் பிரிவு, தன் அதிகாரப் போக்கில் செயல்பட வழி வகுக்குமென அமெரிக்க மக்கள் கருதினார்கள். இதனை மனத்தில் கொண்டு, நீதிபதிகளும் சட்டவியல் அறிஞர்களும் அமெரிக்காவில் அதிகார ஒப்படைப்புக் கூடாது என்றும், அவ்வாறு செய்வது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றும் கூறி வந்தார்கள். ஆனால், நாளடைவில் அதிகார ஒப்படைப்புச் செய்யாமல் அரசின் பணிகளை நிறைவேற்ற முடியாது என்ற நிலை ஏற்பட்டது. நாடாளுமன்றமே அனைத்துச் சட்டங்களையும் இயற்றுவதென்பது இயலாததொன்றாயிற்று. சட்டமன்றம் நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்தால்தான் ஆட்சி தடையின்றிச் செயல்படும் என்ற நிலை உருவாயிற்று. இந்நிலையில் அமெரிக்க நாடாளுமன்றம் நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யத் தொடங்கிற்று.

இந்தியாவில் அதிகார ஒப்படைவு: வாணிகநோக்கத்தோடு இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர் பின்னாளில் அரசியலில் ஈடுபட்டனர். இங்கிலாந்து நாடாளுமன்றத்தால் கி.பி. 1833-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்தியச் சட்ட மன்றச் சட்டம் (The Indian Council Act of 1833), இந்திய ஆட்சி முறையிலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் அமைப்பிலும் பல மாறுதல்களை ஏற்படுத்தியது. கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து வந்த இந்திய ஆட்சி, இங்கிலாந்து நாட்டு மன்னரின் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனி இந்திய அரசின் பொறுப்புரிமை அமைப்பாக மாற்றப்பட்டது. தலைமை ஆளுநர் சட்டமன்றத்தில் இருக்கையில் அவரிடம் இந்திய அரசின் சட்டமியற்றும் அனைத்து அதிகாரங்களையும் ஒப்புவித்ததும், ஆட்சி நிருவாகத்தலைவரான அவர் சட்டங்கள் (1833-ஆம் ஆண்டுச் சட்டம்) செய்தார். இங்கிலாந்து நாட்டு நாடாளுமன்றத்தால் செய்யப்பட்ட சட்டங்களின்கீழ் விதிகள் இயற்றினார்; சட்டங்களைத் திருத்தினார்; மாற்றினார். இவ்வாறாகச் சட்டமியற்றும் அனைத்து அதிகாரங்களும் அவரிடமே இருந்தன. சட்டங்கள் செய்யும் அதிகாரமும் அவற்றைச் செயற்படுத்தும் அதிகாரமும் அவரிடமே இருந்தன. இவ்வாறாகத் தலைமை ஆளுநரிடமே அனைத்து அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன. இந்த அதிகார ஒப்படைவு எந்தக் கோட்பாட்டிற்கும் உட்பட்டிருக்கவில்லை.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1950-ஆம் ஆண்டு சனவரி 26-ஆம் நாள் செயல்முறைக்கு வருகையில், அதிகார ஒப்படைவு பற்றி நீதிமன்றங்களின் தெளிவான கருத்து எதுவுமில்லை. இந்தியாவில், அதிகார ஒப்படைவு பற்றி உரிய விளக்கம் பெற இந்தியக் குடியரசுத் தலைவர் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 143-ஆம் பிரிவின் கீழ் இந்திய உச்ச நீதிமன்றத்தைக் கருத்து வழங்குமாறு தில்லிச் சட்டங்கள் வழக்கில் (In Re Delhi Laws Act Case A.I.R. 1951, S.C. 332) கேட்டுக்கொண்டார். உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் இவ்வழக்கை விசாரித்தார்கள். அவர்கள் அனைவரும் தங்களுடைய கருத்துகளை தனித்தனியே அளித்தார்கள். இவ்வழக்கில் பெரும்பான்மை நீதிபதிகளால் தெரிவிக்கப்பட்ட கருத்துகள்:

1. அதிகார ஒப்படைவு செய்யப்படாமல் மேலாண்மை, ஆட்சி நடத்துதல் இயலாதது.
2. இந்தியச் சட்டமன்றங்கள், அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ்ச் செயல்படுவதால் ஒரு வரம் பிற்குட்பட்டே அதிகார ஒப்படைவு செய்ய இயலும். இந்தியச் சட்டமன்றங்கள், தங்கள் விருப்பப்படி அனைத்து அதிகாரங்களையும் அதிகார ஒப்படைவு செய்ய இயலாது.
3. இந்தியச் சட்டமன்றங்கள் இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங்களை நிருவாகத் துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்தல் கூடாது; அவ்வாறு செய்தால் அது இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்ட தாகும்.
4. இன்றியமையாத சட்டமியற்றும் அதிகாரங் களைத் தவிர மற்றச் சட்டமியற்றும் அதிகாரங் களை நிருவாகத்துறை முகவர்களுக்கு அதிகார ஒப்படைவு செய்யலாம். அவ்வாறு செய்யும் போது, தோற்றுவாய்ச் சட்டத்தில் நிருவாகத் துறை முகவர்கள் செயல்படக் கொள்கை, தரத் திட்டம், வழிகாட்டும் நெறிகள் ஆகியவை அவர்களுக்குக் குறிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையெனில், நிருவாகத்துறை முகவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அவ்வதி கார ஒப்படைவு அரசியல் சட்டத்திற்கு முரண் பட்டதாகும்.
5. கட்டுப்பாட்டுக்குட்பட்டுச் சட்டமியற்றல் அரசி யல் அமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்டதன்று. தோற்றுவாய்ச் சட்டத்தில் கட்டுப்பாடுகள் கொடுக்கப்பட்டிருந்தால், அக்கட்டுப்பாடுக ளுக்கு உட்பட்டு விதிகள் செய்யலாம்.
6. ஓரிடத்தில் நிலவிவரும் சட்டத்தைத் தேர்ந் தெடுக்கும் அதிகாரமும் அதை மற்றோர் இடத் திற்கு, அவ்விடத்திற்கேற்ற மாறுபாடுகளு டனோ வரையறைகளுடனோ விரிவாக்கம் செய்யும் அதிகாரமும் நிருவாக முகவர்களுக்கு, சட்டமன்றம் வழங்கலாம்.

விதிகள் செய்யும் அதிகாரத்தின்மீது நீதிமன்றங் கள் மறு ஆய்வு செய்யவும், சட்டமன்றங்களை நீதி முறை மறு ஆய்வு மூலம் கட்டுப்படுத்தும் விதிகள் செய்யவும் அதிகாரத்தைப் பெற்றிருக்கின்றன. விதி கள் செய்யும் அதிகாரம் தோற்றுவாய்ச் சட்டத்தி னால் நிருவாக அரசுக்கு ஒப்படைக்கப்படலாம். அவ் வதிகாரத்தைப் பெற்ற அரசு, அதை விதிகள் மூலம் நிருவாகத்துறை முகவர்களுக்கு ஒப்படைக்கலாம். நிரு வாகத்துறை முகவர் நிலையும், தான் இயற்றும் துணை விதிகளினால் அதன் கீழ்ப் பணிபுரியும் அலு வலர்களுக்கு ஆணைகள் பிறப்பிக்கும் அதிகாரத்தை யும் அவற்றை நிறைவேற்றும் அதிகாரத்தையும் அளிக்கலாம். இவ்வாறாக விதிகள் செய்யும் அதி காரம் படிப்படியாக நிருவாக அரசின்கீழ் உள்ளவர் களுக்கு அளிக்கப்படுவது, விதிகள் செய்யும் அதிகாரத் தின் உள் ஒப்படைவு எனப்படும்.

துணை நூல்கள்:

திருமலை, பு.சு., "இந்திய அரசியலமைப்புச் சட்டம்", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

கிருஷ்ணசாமி, ச., "நிருவாக முறைச் சட்டம்", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1979.

**Jain Kagzi**, M.C., "The Constitution of India", 2nd Vol., Metropolitan Book Co., Private Ltd., New Delhi, 1984.

**அதிகார ஆவணம்**: ஒருவர் தம் சார்பில் அல்லது தம் பெயரில் வேறு ஒருவரோ ஒன்றுக்கு மேற்பட்டவரோ நடவடிக்கை எடுப்பதற்கு அவருக்கு உரிமை வழங்கி எழுதிக் கொடுக்கும் ஒரு முறை ஆவ ணம் ஆகும். குறிப்பிட்ட ஒரு நடவடிக்கை எடுப்ப தற்கு மட்டிலும், அதிகாரம் வழங்கும் ஆவணத்திற்கு, 'சிறப்பு அதிகார ஆவணம்' (Special Power of Attorney) என்றும், பொதுவாகச் சில நடவடிக்கைகள் எடுக்க எழுதிக்கொடுக்கப்படும் ஆவணத்திற்குப் பொது அதிகார ஆவணம் என்றும் பெயர். அதிகாரம் வழங் குபவர் 'முதல்வர்' (Principal); அதிகாரம் பெறுபவர் 'முகவர்'. சட்டப்படி ஒப்பந்தங்கள் செய்துகொள்ளும் தகுதியுடையவர்கள் யாரும் தங்களுக்கு ஓர் அதிகார முகவரை நியமித்துக் கொள்ளலாம். திருமணமான பெண்களுக்கு மட்டும் இவ்வுரிமை இல்லை. யார் வேண்டுமாயினும் முகவர் ஆகலாம். ஆனால் சட்டப்படி ஒப்பந்தம் செய்துகொள்ளும் தகுதி அவரிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் தம் முதல்வருக்குப் பொறுப்பாளியாவார். முகவர் நியமனத்துக்கு ஊதி யம் தேவையில்லை. தமக்குத் தாமே நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலாத ஒருவர் தமக்கு ஒரு முகவரை நியமித்துக் கொள்கிறார். தம் முதல்வரின் ஆணைக்கு ஒப்ப, அல்லது நடைமுறை வழக்கங்கட்கு உட்பட்டு ஒரு முகவர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதற்கு மாறுபட்டு அவர் செயல்படுவாராயின், தம் செயலின் விளைவுகட்கெல்லாம் தாமே தம் முதல் வருக்குப் பொறுப்பாளியாவர். ஒரு முகவர் தம் முதல் வருக்குக் கணக்கு வழக்குகளை முறைப்படி ஒப்படைக் கக் கடமைப்பட்டவர். தம் முகவர் எடுக்கும் நடவடிக் கைகள் சட்டத்துக்குட்பட்டிருக்கும்போது, அவருக்கு ஏதேனும் ஊறுவிளையுமாயின் அதற்கு முதல்வர் ஈடு செய்யக் கடமைப்பட்டவராவார்.

உத்தரவு பெற்ற ஒரு முகவர் நடவடிக்கையை எடுக்கும்போது அதற்கு உறுதுணையாக நியாயமான வேறு எந்தச் செயலையும் தாம் மேற்கொள்ளலாம். தம்மைக் கலந்து கொள்ளாமலோ தம் உத்தரவின்றியோ தம்முடைய முகவர் எடுத்துக்கொள்ளும் நியாயமான நடவடிக்கைகளை எல்லாம் முதல்வர் அங்கீகரிக்கலாம்; அவை அவருடைய ஆணையின்படி எடுக்கப்பட்டவையாகவே கொள்ளப்படும். முகவர் எடுக்கும் நடவடிக்கைகள் அனைத்தும் முதல்வரால் எடுக்கப்பட்டவை போலவே சட்டப்படி செல்லுபடியாகத் தக்கன. தாம் பெற்ற ஆணைக்குப் புறம்பாக ஒரு முகவர் செய்யும் தவறுகளும் மோசடிகளும் அவருடைய முதல்வரைக் கட்டுப்படுத்தா. காலங்குறிக்கப்பெறாத அதிகார ஆவணங்கள் கீழ்க்கண்ட காரணங்களினால் முறிவு பெறும். முதல்வர் தாம் வழங்கிய ஆணையை மீளவும் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்; தாம் பெற்ற ஆணையை முகவரே விட்டுக் கொடுத்தல்; தொடர்புடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முற்றுப் பெறுதல்; முதல்வரோ முகவரோ இறந்து போதல் அல்லது புத்திசுவாதீனத்தை இழத்தல்; முதல்வர் தாம் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்க இயலாதவர் (Insolvent) என்று நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்படுதல்.

அதிகார ஆவணத்தின்மேல் கட்டண முத்திரை வில்லை ஒட்டப்படவேண்டும். ஆவணத்திற்குச் சான்றோ பதிவோ தேவை இல்லை. ஆனால் ஓர் ஆவணத்தைப் பதிவுக்குச் சமர்ப்பிக்க உத்தரவு வழங்கி எழுதப்படும் அதிகார ஆவணத்துக்குச் சாட்சியும் பதிவும் தேவை.

அதிகார ஆவணத்தைப் பற்றிய சட்டம் 1882-இல் இயற்றப்பட்ட அதிகார ஆவணச் சட்டத்திலும் ஒப்பந்தச் சட்டத்தின் (Contract Act) பத்தாம் பகுதியிலும் உள்ளது.

**பகராள், செயலுரிமைச் சட்டம், 1882 (சட்டம் 7, 1882) [The power of Attorneys Act, 1882 (Act VII of 1882)]:** பகராள் செயலுரிமைச் சட்டம், மாற்றுரிமையரின் பொதுவான அதிகார ஆவணத்தைக் கட்டுப்படுத்துகிறது. இந்தச் சட்டம் ஒருவர் சட்டப்படி மாற்றுரிமையரின் பத்திரத்தை எழுதுவதை அனுமதிப்பதுடன், அதிகாரம் கொடுக்கும் கொடையாளி அல்லது முதல்வர், அதிகாரம் கொடுக்கும் ஒருவருக்காகவும் கொடை பெறுபவர் மாற்றுரிமையர் அல்லது முகவர் தரப்பிலும் நடவடிக்கை எடுக்கலாம். இந்தச் சட்டம் அதிகாரமளிக்கும் நபர் (கொடையாளி அல்லது முதல்வர்) இறந்தது தெரியாமல், கொடைபெறுபவர் மாற்றுரிமையர் அல்லது முகவர், அதிகாரமளிக்கப்படும் நபருக்கு (கொடையாளி அல்லது முதல்வருக்கு)ச் செலுத்த வேண்டிய பணத்தைச் செலுத்தினால் அவருக்குப் பாதுகாப்பளிக்கிறது. மேலும் இந்தச் சட்டம் இந்தப் பத்திரத்தை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்து வைக்கவும் செயல் முறையை ஏற்படுத்தியுள்ளது. உண்மையொப்பு நகல் சான்றிட்ட படி வழங்கவும் வழிவகை செய்துள்ளது.

பதிவு செய்வது: எழுதப்படும் ஆவணமானது அதற்கேற்ற மதிப்புள்ள நீதித்துறை சாரா முத்திரைத் தாளில் எழுதப்படவேண்டும். இந்தியப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காக ஒரு ஆவணத்தைப் பதிவு செய்யும் அலுவலரின் முன் தாக்கல் செய்து அதிகாரமளிக்கும் அதிகார ஆவணம் முதல்வர் வசிக்கும் இடம் எந்தப் பதிவாளர் அல்லது சார்புப் பதிவாளர் அதிகார எல்லைக்குட்பட்டதோ அவரால் அத்தாட்சிக் கையொப்பம் செய்யப்படவேண்டும்.

இந்தியப் பதிவுச் சட்டம் அமுலாகாத இடமாக இருந்தால், ஆவணத்தைக் குற்றவியல் நீதிபதியிடம் தாக்கல் செய்து, அத்தாட்சிக் கையொப்பம் பெறப்படவேண்டும். பொது அதிகார ஆவணம் இந்திய எல்லைக்கு வெளியே எழுதப்பட்டிருந்தால், அந்த ஆவணத்தைச் சான்றுறுதி அலுவலர், நீதிபதி, குற்றவியல் நீதிபதி, இந்திய நாட்டுப் பேராளர் அல்லது குடியரசுத் தலைவரின் பேராளர் முன்பு கையொப்பமிட்டு, அவருடைய அத்தாட்சிக் கையொப்பம் பெறப்பட வேண்டும் (பதிவுச் சட்டம் பி. 32, 33).

முத்திரை வரி: பொது அதிகார ஆவணம் இந்திய முத்திரை வரிச்சட்டத்தின் கீழ் செயல்படுகிறது. ஆவணத்தை முறிவு செய்வதென்பது, அதே அட்டவணையின் கீழ் பிரிவுக் கூறு 17-இன் கீழ் கூறப்பட்டுள்ளது.

ஈ.ப.

**அதிகாரக் குவிப்பு** என்பது, பொது ஆட்சி இயலில் (Public Administration) காணப்படும் அமைப்புப் பற்றிய (Organisation) ஒரு சீரிய கோட்பாடாகும். பொதுவாக, ஆட்சித்துறையை (Administrative Department), மேல்மட்டத்திலுள்ள மேலாண்மை நிலை என்றும் (Top Management), நடுமட்டத்திலுள்ள மேலாண்மை நிலை என்றும் (Middle Management), கீழ்மட்டத்திலுள்ள களநிலையங்கள் என்றும் (Field Establishments) பிரிப்பர். நடுமட்டத்திலுள்ள அதிகாரிகளுக்கும் களநிலைய அதிகாரிகளுக்கு மிடையே உள்ள தொடர்பு, அதிகாரக் குவிப்பு என்ற கோட்பாட்டினாலோ (Centralisation of Powers) அதிகாரப்பரவல் என்ற கோட்பாட்டினாலோ (Decentralisation of Powers) உருவாக்கப்படுகிறது. மேல்நிலையிலுள்ள அதிகாரி தனக்குக் கீழ்நிலையிலுள்ள அதிகாரிக்குத் தன் அதிகாரங்களுள் சிலவற்றையோ

முழுவதையுமோ வழங்காமல், அதிகாரங்களனைத்தையும் பொறுப்புகளையும் தன்னிடமே வைத்துக் கையாளுவாரேயானால், அஃது அதிகாரக் குவிப்பு முறை ஆகும். இதற்குத் தக்க எடுத்துக்காட்டாக, ஆங்கிலக் கிழக்கிந்திய வாணிகக் கழகத்தாரால் ஏற்படுத்தப்பட்ட இந்திய ஆட்சிமுறையையும், அக்கழகம் கி.பி. 1857-ஆம் ஆண்டில் மறைந்த பின்னர், இந்தியப் பேரரசில் ஆங்கிலேயரால் நிறுவப்பட்டு 1947-ஆம் ஆண்டுவரை செயல்பட்ட, ஆங்கிலோ-இந்திய ஆட்சி முறையையும் கூறலாம். ஆங்கிலேயர் நம்நாட்டிற்கு அயலவராகையினால், இங்குத் தமது பேரரசாட்சியைப் (Imperial Rule) பாதுகாப்பாக நீடித்து வைக்கும் பொருட்டு, அடுக்கு ஆட்சி முறையில் அமைந்த (Hierarchical system) அதிகார வருக்கத்தை (Bureaucracy) நிறுவி, அதிகாரக் குவிப்புமுறையைப் பின்பற்றினர். அஃதாவது, பல்வேறு வகைப்பட்ட அதிகாரிகளை ஒன்றின்கீழ் ஒன்றாகப் பலபடிகளில் அமைத்து, ஒவ்வோர் அதிகாரியிடமும் ஆட்சி அதிகாரத்தைக் குவித்து (Centralise) வைத்தனர். இதைக் கீழ்வரும் ஒரு வரைவின் மூலம் காணலாம்.

| | | |
|---|---|---|
| மேல்நிலை …… | 1. | இங்கிலாந்தில் இருந்த இந்தியச் செயலாளர் (Secretary of State for India in England) |
| அதற்கடுத்த கீழடுக்கு …… | 2. | இந்தியாவின் அரசப்பிரதிநிதி, ஆளுநர் தலைவர் (Viceroy and Governor General of India) |
| இரண்டாவதற்குக் கீழ்ப்பட்ட அடுக்கு …… | 3. | மாநில ஆளுநர் (Governor of a Province) |
| எல்லாவற்றுக்கும் கீழான அடுக்கு …… | 4. | மாவட்ட ஆட்சியர் (Collector of a District) |

இந்த அடுக்காட்சி முறையில் எல்லா இந்திய ஆட்சி அதிகாரமும் மேல்நிலையிலுள்ள (எண் 1) இந்தியச் செயலரிடமும், அடுத்தபடியாக (எண் 2) அரசப் பிரதிநிதியிடமும், அதற்கடுத்த கீழடுக்கில் (எண் 3) மாகாண ஆளுநரிடமும், இறுதியாக (எண் 4) மாவட்ட ஆட்சியரிடமும் குவித்து வைக்கப்பட்டு, ஒவ்வோர் அடுக்கிலுள்ள அதிகாரியும், தம் செயல்களுக்குத் தமக்கு அடுத்த மேலடுக்கில் உள்ள மேலதிகாரிக்குப் பொறுப்பாக இருக்குமாறு ஆக்கப்பட்டார். ஆகையால் அதிகாரக் குவிப்புமுறை என்பது, அடுக்கடுக்காக அமைந்து பணிபுரியும் அதிகாரிகளுடைய ஆட்சிமுறையை ஏற்படுத்துகிறது என்பதும் இதில் ஒவ்வோர் அதிகாரியும் தம் செயல்களைப் பொறுத்தவரையில் தமக்கு அடுத்த மேலடுக்கு அதிகாரிக்குத்தான் பொறுப்பாக இருக்கிறாரே தவிர, தமது செயலால் பாதிக்கப்படும் மக்களுக்குப் பொறுப்பாக இல்லை என்பதும், இவ்வகையாகப் பார்க்கும் போது அதிகாரக்குவிப்பு முறையானது குடியாட்சி இயல்பு உடையது அன்று (Undemocratic) என்பதும், எனவே இது தேசியவாதிகளால் (Nationalists) எப்பொழுதும் வெறுக்கப்படுகிறது என்பதும் தெரிய வருகின்றன. சட்டம் இயற்றும் அதிகாரம், நிருவாக அதிகாரம், நீதி அதிகாரம் முதலியவை எல்லாம் மேலே கூறப்பட்ட மேல்மட்ட மூவகை அதிகாரிகளிடமே நெடுங்காலமாகக் குவித்து வைக்கப்பட்டிருந்தன; இந்தியர்களுக்கு மைய, மாநிலச் சட்ட, நிருவாக மன்றங்களில் நெடுங்காலமாகப் பங்கு இல்லை. 1885-ஆம் ஆண்டுத் தோன்றிய இந்தியத்தேசிய காங்கிரசு, இத்தகைய அதிகாரக் குவிப்புமுறை பொது மக்களுக்கு எவ்வளவு நன்மை பயப்பதாக இருப்பினும் அது மக்களைச் சுய ஆட்சிமுறைக்குத் தக்கவராக ஆக்காது என்று கூறி, ஆங்கில நாட்டிலும், பிற குடியேற்ற நாடுகளிலும் உள்ள அமைப்பைப் போன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்கள். சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாக அமைப்பு, சட்டத்தின் ஆட்சி என்ற நீதிமுறை முதலியன எல்லாம் இந்நாட்டில் நிறுவப்படுதல் வேண்டுமென்று கிளர்ச்சிகள் செய்தது. 1919-ஆம் ஆண்டில் இந்திய அரசாங்கச் சட்டத்தின் மூலமாக ஓரளவு அதிகாரப்பரவலும் (Decentralisation) 1935-ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலமாக மேலும் சிறிது அதிகாரப்பரவலும் ஏற்பட்டன. எனினும் 1947-ஆம் ஆண்டில் இந்தியா முழு விடுதலை பெறும் வரையிலும் மேற்கூறிய நான்கு அதிகாரிகளிடம் அதிகாரங்கள் குவித்துத்தான் வைக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றங்களும் பொறுப்புள்ள நிருவாகக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தச் சட்டத்தையும் தள்ளுபடி செய்யவும் அதனால் மறுக்கப்பட்ட மசோதாவைச் சட்டமாக விளம்பரம் செய்யவும், நிருவாக ஆணைகளை விடுக்கவும், முதல் மூன்று அடுக்குகளிலும் உள்ள அதிகாரிகள் (இவர்கள் யாவரும் ஆங்கிலேயரே) – முழு அதிகாரம் பெற்றிருந்தனர். அதிகாரக் குவிப்பு முறை, இவ்வாறு அடுக்காக அதிகாரிகளின் ஆட்சியாக இருந்தாலும் சில நன்மைகளையும் பயப்பதாக இருந்தது; அதனால் தான் குடியாட்சிக்கு மாறாகவும் சில நன்மைகளைச் செய்தும் இருந்த ஆங்கில ஆட்சியை "நன்மை செய்த வல்லாட்சி" (Benevolent Despotism) என்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர். மேலதிகாரிகளின் ஆணைகளைப் பெற்றுக் களஅதிகாரிகள் குறைந்த காலத்தில் திறமையாகப் பணிகளை நிறைவேற்றி, மேலவர்களுக்குத்

தெரிவித்துப் பொறுப்பாக இருந்தனர். இப்பணிகள் பல பொது மக்களுக்கு நன்மை பயப்பனவாக இருந்தன. எனவே அதிகாரக் குவிப்புமுறை ஆட்சியில் ஆளப்படுவோருக்குப் பங்கு இல்லை (Participation) என்ற குறையைத் தவிர, அதில் விரைந்து செயலாற்றுதல், திறமையாகச் செயலாற்றுதல், சிக்கனமாகச் (குறைந்த செலவில்)செயலாற்றுதல் என்னும் பலசிறப்புகளும் காணப்படுகின்றன. எனவே நாட்டின் பாது காப்பு, ஒருமைப்பாடு முதலியவற்றுக்கு உகந்த ஓர் அமைப்பாக அதிகாரக் குவிப்பு முறை கருதப்படுகின்றது. குடிமக்களுக்குக் கூடுதலான அளவில் பங்கு இருக்கத்தக்க ஓர் ஆட்சி அமைப்பு, கூட்டாட்சி அமைப்பு (Federal System) ஆகும். இதில் அதிகாரக் குவிப்பு முறை இல்லை; அதிகாரங்களை மைய, மாநில அரசுகளுக்கிடையே பங்கீடு செய்கின்ற அதிகாரப் பரவல் முறை கையாளப்படுகின்றது. சுதந்திர இந்திய அரசியலமைப்பு முறையிலே, அதிகாரக் குவிப்பு முறையும், அதிகாரப்பரவல் முறையும் முரண்பாடு இல்லாமல் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன.

மேல்நிலையிலுள்ள அதிகாரி தன் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கீழ்நிலை அதிகாரிகளுக்கு வழங்காமல் தானே வைத்துக் கொண்டு கையாளுவாராயின், அது அதிகாரக் குவிப்பு (Centralisation) எனப்படும். மேல்நிலை அதிகாரி, தனக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளுக்குத் தன் அதிகாரங்களை வழங்கி, அவ்வதிகாரங்களைக் கையாளுதற்கான பொறுப்பைத் தன்னிடமே வைத்துக் கொள்ளுவாரே யானால், இது அதிகார அளிப்பு (Delegation of Power) எனப்படும்;இதற்கும் அதிகாரக் குவிப்புக்கும் இடையே பெருவேறுபாடு இல்லை. பெருமளவில் இவ்வகையில்தான் இந்திய அலுவலரும் அதிகாரிகளும் பணிபுரிகின்றனர். மேலதிகாரி, கீழ்நிலை அதிகாரிக்கு அல்லது அதிகாரிகளுக்கு அதிகாரத்தையும் பொறுப்பையும் வழங்குவாரேயானால், அது அதிகாரப்பரவல் முறை (Decentralisation of Power) எனப்படும்; இதில் கீழதிகாரி தனது அதிகாரத்தைக் கையாளுதலில் மேலதிகாரிக்குப் பொறுப்பாக இல்லாமல் மக்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார். அதிகாரப் பரவல் என்ற கோட்பாடு (Decentralisation), இப்போது தமிழ் நாட்டில், உள்ளாட்சி அரசாங்க முறையில் (Local Government) செயல்படும் மூன்றடுக்கு அமைப்பில் (Three Tier System) காணப்படுகிறது. இதில் மேலடுக்கில் மாவட்ட வளர்ச்சி மன்றம் (District Development Council) செயல்படுகிறது. வளர்ச்சிப் பணிகளும் அதிகாரங்களும் நிதி ஆதாரங்களும் இதற்குக் கொடுக்கப்படாமல், இதற்குக் கீழே இரண்டாம் அடுக்கிலுள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கும் (Panchayat Union Councils) , அவற்றிற்கும் கீழடுக்கிலுள்ள ஊராட்சிகளுக்கும் (Village Panchayats) பரவலாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு, அதிகாரங்களும் பொறுப்புகளும் கீழ்நிலை ஆட்சிக் கூறுகளுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதால், இது அதிகாரப் பரவல் முறையே (Decentralisation) ஆகும்.

கள அலுவலகங்களை ஏற்படுத்தி, அவைகளுக்கு எவ்வளவு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் வழங்குதல் வேண்டும் என்னும் சிக்கல் தோன்றுகிறது. அதிகாரக் குவிப்பையுடைய ஆட்சி அமைப்பிலே கள அலுவலகங்கள், மேல்நிலை அல்லது மைய அலுவலகங்களின் செயலிகளாக மட்டுமே (Executive Agencies) செயல்படுகின்றன. அவைகளுக்குத் தம் முயற்சி அதிகாரமோ (Initiative) தங்களுடைய உள்நிலை ஆட்சியைக் கட்டுப்படுத்தும் அதிகாரமோ கிடையாது. இதற்கு மாறாக அதிகாரப் பரவல் என்ற கோட்பாட்டையுடைய ஆட்சி அமைப்பிலே, கள அலுவலகங்களுக்குச் சில குறிப்பிட்ட செயல்களில் தாங்களே முடிவுகளைச் செய்யும் அதிகாரமும், தங்களுடைய நிறுவன அமைப்பின்மீது தங்களுடைய முழுக்கட்டுப்பாட்டை நிறுவும் அதிகாரமும் இருக்கின்றன. இத்தகைய அதிகாரப்பரவல் முறையிலும், கள அதிகாரியின் முடிவுகளுக்கு எதிராக மேல்நிலையிலுள்ள மைய அதிகாரிக்கு முறையீடு செய்துகொள்ள வழியும் இருக்கிறது.

ஓர் ஆட்சித்துறையில் அதிகாரக்குவிப்பு அல்லது அதிகாரப் பரவல் கையாளப்படுவது நான்கு காரணிகளைப் பொறுத்திருக்கிறது. முதலாவது ஆட்சிப் பொறுப்பு என்ற காரணி (Factor of Administrative Responsibility): ஆட்சிப் பொறுப்பு என்பது, அதிகாரப் பரவல்முறைக்கு உகந்ததன்று; அது அதிகாரக் குவிப்பு முறைக்குத்தான் உகந்தது. எவ்வாறெனில் ஒவ்வொரு ஆட்சித்துறையின் தலைவரும் தமது துறையில் உள்ள எல்லா ஆட்சிச் செயல்களுக்கும் நிருவாகத்திற்கே (Executive) பொறுப்பு உடையவராக இருக்கிறார். மேலும் அவர், நடுவண் வரவு செலவுத்திட்ட அதிகாரிக்கும் கணக்கு அதிகாரிக்கும் தணிக்கை அதிகாரிக்கும் ஆட்சேர்ப்பு நிறுவனத்துக்கும் தமது துறையின் எல்லா ஆட்சிச் செயல்களுக்கும் பொறுப்பாக இருந்து, தமது துறையின் செயல்கள் சட்டத்திற்கு ஒத்தவையா, தமது துறைக்கு உரியவையா என்று தீர்மானிப்பதில் நீதிமன்றத்துக்குப் பொறுப்பாக இருக்கிறார். இதனால் இந்தக் காரணி கூடுதலான அளவில் அதிகாரக் குவிப்பை ஏற்படுத்துகிறது என்று கூறுவர். கள நிலை அதிகாரிகள், மேல்நிலை அதிகாரிகளுக்குப் பொறுப்பாக இருக்கவேண்டிய காரணத்தால் அவர்களுக்குக் கூடுதலான அளவில் தன்விருப்ப அதிகாரம் (Discretionary Power) வழங்கப்படுவதில்லை. இரண்டாவது ஆட்சியியல் பற்றிய காரணிகள் (Administrative factors): இவை அதிகாரப் பரவல் முறையை மிகுதியாகத் தடுப்பதாய், அதிகாரக் குவிப்பு முறைக்கே ஏற்றவையாக இருக்கின்றன. ஓர் ஆட்சி நிறுவன

மானது நெடுங்காலமாக இருந்து பணியாற்றி இருப்பின், அதற்குப் பட்டறிவு மிகுதியாக இருக்குமாகையால், அவ்வாட்சி நிறுவனம் வெற்றியான அதிகாரப் பரவல் முறைக்கு ஏற்றதாக இருக்கும்; அவ்வாறில்லாமல் அது சிறிது காலத்திற்கு முன்னர்த்தான் தோன்றிப் பணிபுரிந்து வந்திருக்குமாயின், அது அதிகாரக் குவிப்புக்குத்தான் ஏற்றதாக இருக்கும். ஆட்சி நிறுவனத்தின் கொள்கைகளும் செயல்முறைகளும் திட்டவட்டமாக அமைந்து, அதனுடைய கள அதிகாரிகள் திறமை மிக்கவர்களாக இருந்தாலும், அந்நிறுவனம் விரைவாகவும் சிக்கனமாகவும் செயல்பட்டாலும், அங்கு அதிகாரக் குவிப்பு ஏற்படாமல் அதிகாரப்பரவல் ஏற்படுகிறது. மூன்றாவது ஆட்சி அமைப்புச் செய்கின்ற பணியின் இயல்பு (Functional-Factors): இதைப் பொறுத்தும் அதிகாரக் குவிப்பு அல்லது அதிகாரப் பரவல் ஏற்பட இயலும். பணிஇயல் காரணியைப் பின்வருமாறு விளக்கலாம். ஓர் ஆட்சித்துறை ஆற்றுகின்ற பணி, வல்லுநரால் அல்லது திறமையாளரால் மட்டுமே (Experts or Technically Trained Persons) செய்யப்பட வேண்டிய பணியாக இருந்தாலும், அல்லது செய்யப்பட வேண்டிய பணி நாடு முழுவதிலும் ஒரே சீராகச் (Uniform) செய்யப்படவேண்டிய பணியாக இருந்தாலும், அப்பொழுது அந்த ஆட்சி நிறுவனத்தில், அதிகாரக் குவிப்புத்தான் மிகுந்து காணப்படும். எடுத்துக்காட்டாக வருமான வரி வாங்கும் பணி ஒரே சீராக நாடு முழுவதிலும் நடைபெற வேண்டிய பணியாக இருப்பதால், அதனைச் செய்யும் ஆட்சி நிறுவனமானது, அதிகாரக் குவிப்பை உடையதாக இருக்கிறது. வேளாண்மை, வனத்துறை முதலிய பணிகளில் பல நோக்குமுறை கையாளப்படவேண்டியிருப்பதால், இப்பணிகளைச் செய்யும் ஆட்சித் துறைகள், அதிகாரப் பரவல் முறையில் அமைந்திருக்கின்றன. தொழில் நுட்பவியலுடைய பணிகளெல்லாம் (Technical Services) அதிகாரக் குவிப்புக் கொள்கையில் தான் அமைக்கப்பட இயலும். இவ்வாட்சித்துறைகளில் மேல்நிலை அதிகாரிகள், கள அதிகாரங்களை வழங்க மாட்டார்கள்; எனவே இவற்றில் உள்ள கள அதிகாரிகள், பொதுவான ஆட்சியாளரே தவிர (Generalists), தனிப்பட்ட பயிற்சியோ தொழில்நுட்ப அறிவோ (Special Training) பெற்றவர்களல்லர். தொழில்நுட்ப அறிவும் (Technical Knowledge) தனிப் பயிற்சியும் அதிகாரக் குவிப்புக்குத்தான் வழிவகுக்கும். நான்காவது, நாடு முழுவதிலுமுள்ள மக்களை வளர்ச்சித் திட்டம் போன்ற ஒரு திட்டப்பணியில் ஈடுபடுத்த வேண்டியிருக்கும்போதும், கூட்டாட்சி அரசியலமைப்பையுடைய நாட்டில், கூட்டாட்சி அரசாங்க நிறுவனங்கள், மாநில அரசு நிறுவனங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றுக்கிடையே, சிலபணிகளில் – எடுத்துக்காட்டாக, கல்வித் திட்டம் பற்றிய பணிகள், சுகாதாரம் பற்றிய பணிகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய பணிகள் ஆகியவற்றில் – ஒத்துழைப்பை ஏற்படுத்தவேண்டிய நிலை தோன்றும்போதும், இவ்வகைப் பணிகளைச் செய்யும் ஆட்சித் துறைகள், அதிகாரக் குவிப்பை ஒட்டியே செயல்படுகின்றன.

முதலாவதாக, இம்முறை துறைமுழுவதும் ஒரு கட்டுப்பாட்டிலிருப்பதற்கு வழி ஏற்படுத்துகிறது. களநிறுவனங்களை மேல்நிலை அலுவலகம், தனது முழுக்கட்டுப்பாட்டில் வைத்து, ஆணைகளை விடுத்துச் செயல்படுமாறு தூண்டுகிறது. இரண்டாவதாக, அதிகாரக் குவிப்பு முறையானது, ஆட்சித்துறையின் கொள்கையிலும் (Policy) முறையிலும் (Method), தொழில் நுணுக்கத்திலும் (Technique) வேறுபாடுகள் இல்லாத, ஒரேவகையான அல்லது சீரான தன்மை Uniformity) தோன்றுவதற்கு வழிவகுக்கிறது. மூன்றாவதாக, அதிகாரக் குவிப்புமுறையில் செயல்படும் ஆட்சிநிறுவனத்தால் ஆட்சேர்ப்பு, பணியாளர்களைக் கண்காணித்தல், செயல்களுக்கு வேண்டிய தளவாடப் பொருள்களை வாங்குதல் முதலியவற்றில் தவறுகள் ஏற்படாவண்ணம் தடுத்தல் இயலும்.

ஆனால் அதிகாரக் குவிப்பு முறையில் பல குறைபாடுகளும் இருக்கின்றன. 1. இந்த முறையில் எதனையும் பற்றி உடனடியாகத் தீர்மானம் செய்யவோ விரைவாக நடவடிக்கை எடுக்கவோ இயலாது; ஏனெனில் தீர்மானம் செய்யும் களங்களில் அதிகாரம் பரவலாக்கப்படாமல், மேல்நிலை அதிகாரியிடம்தான் குவிக்கப்பட்டிருக்கிறது. எனவே இந்த முறை சிவப்பு நாடா அல்லது காலந்தாழ்த்தல் என்னும் குறை தோன்ற வழிவகுக்கிறது. 2. அதிகாரக்குவிப்பினால் செயலாற்றும் அலுவலர் எண்ணிக்கை பெருகுகிறது. அதனால் ஆட்சிச் செலவு பெருகவும் வழி ஏற்படுகிறது. 3. இதில் நடுவண் அலுவலகம், கிளை அல்லது உள்ளூர் நிலைகளைப் பற்றி நன்றாக அறிந்து கொள்ளாமல், தவறான முடிவெடுத்துச் செயற்படக்கூடிய குறைபாடும் தோன்றுகிறது. 4. அதிகாரக் குவிப்பு முறை ஆட்சியானது, சட்டங்களை ஒட்டியே செயல்படும் முறையையும் மேற்சான்றுகளை அல்லது முன்நிகழ்வுகளை (Precedents) ஒட்டியே செயற்படும் வழக்கத்தையும் ஏற்படுத்துகிறபடியால், பலமாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இக்காலத்தில், அது முன்னேற்றத்துக்கு ஒரு தடையாக இருக்கிறது. இதற்குமாறாக அதிகாரப் பரவல் முறை மேற்கூறிய குறைபாடுகளை நீக்குகிறது.

அதிகாரப் பரவல்முறை, சூழ்நிலைகளுக்கேற்ப ஆட்சி இயந்திரம் நெகிழும் தன்மையையும் (Flexibility) திறமையை வெளிப்படுத்தக் கூடிய தன்மையையும் உடையதாய், ஓரளவு செலவில் சிக்கனத்தையும் ஏற்படுத்துகிறது. அது ஆட்சிமுறையைக் குடி

யாட்சி இயல்புடையதாக (Democratic) ஆக்குகிறது. அப்போது, குடிமக்கள் ஆட்சி முறையை எளிதில் அணுக முடிகிறது. மேலும் இத்தகைய ஆட்சிமுறையில், பயிற்சி இல்லாமல் புதிதாகச் சேருபவர்களுக்குப் பயிற்சி பெற வாய்ப்பு இருக்கிறது. அரசு, பொது நல வாழ்வுக்குரிய பல பணிகளை ஏற்கும்போது, அதன் ஆட்சி அமைப்புக்கு அதிகாரப்பரவல் மூறை தேவைப் படுகிறது. பா.சு.

துணை நூல்கள்:

**Meyer, P.**, "Administrative Organization", 1957.

**Gladden, E.N.**, "Essentials of Public Administration", 1962.

**Pfiffner, N.M., & Presthus, R.V.**, "Public Administration", 1960.

**White, L D.**, "Introduction to the study of Public Administration", 1965.

**Pylee, M.V.**, "Constitutional government in India."

**அதிகார சங்கிரகம்** வேதாந்த தேசிகர் எழுதிய நூல்களுள் ஒன்று. உயர்வற உயர்ந்து நிற்கும் உலகளந்த பெருமான் தொண்டர் தம் பெருமைகளைக் கூறும் சிற்றிலக்கியம். இதில் பத்து ஆழ்வார்கள், மதுர கவிகள், எட்டு ஆசாரியர்கள், நாதமுனிகள் ஆகியோர் வைணவ சித்தாந்த வளர்ச்சிக்குச் செய்த தொண்டுகளைக் கூறிப் பின் ஒவ்வொரு பகுதியிலும் பொருளைச் சுருக்கி, அந்தாதித் தொடையில் இதன் ஆசிரியர் அமைத்துள்ளார். கோயில் (திருவரங்கம்) திருமலை (திருப்பதி), பெருமாள் கோயில் (காஞ்சிபுரம்) ஆகிய திருப்பதிகட்கும் ஒவ்வொரு பாடல் இயற்றியுள்ளார். இறுதியில் திருவரங்கப் பெருமானின் பெருமையைப் பாடி ஆசாரியர்களின் கருணையை நினைத்து முடித்துள்ளார். த.கோ.

**அதிகாரப் பங்கீடு** அரசியல் கலையில் பயன்படும் ஒரு கோட்பாடாகும். அரசியலமைப்புச் சட்டம், கூட்டாட்சி நாடுகளில் அரசாங்க அதிகாரத்தை, மத்திய அரசின் அதிகாரங்களாகவும் மாநில அரசுகளின் அதிகாரங்களாகவும் வரையறுத்துக் கூறுகிறது. மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்களை வரையறுத்துப் பங்கீடு செய்வதைத்தான், அதிகாரப் பங்கீடு (Divison of Power) என்கிறோம். எடுத்துக்காட்டாக, இந்திய நாடு ஒரு கூட்டாட்சி நாடாகும். இங்கு இருவகை அரசுகளைக் காண்கிறோம். இந்தியா முழுமைக்கும் இயங்கும் அரசை மத்திய அரசு என்றும், இந்தியாவின் 22 மாநிலங்களின் அரசுகளை மாநில அரசுகள் என்றும் கூறுகிறோம். இந்தியாவின் அரசியலமைப்புத் திட்டம், நாடு முழுமைக்குமான அதிகாரங்கள் இவை இவை என்றும், மாநிலங்களுக்கான அதிகாரங்கள் இவைஇவை என்றும் வரையறுத்துக்கூறுகிறது. மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்படும் பொதுத்துறைப் பட்டியலும் (Concurrent List) வரையறுக்கப்பட்டு, அதிகாரங்கள் மூன்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசுக்கான அதிகாரங்களை ஒன்றிய அரசாங்கப்பட்டியல் (Union List) வரையறுத்துக் கூறுகிறது. மாநில அரசுகளின் அதிகாரங்களை மாநில அரசாங்கப் பட்டியல் (State List) வரையறுக்கிறது. இரு அரசுகளிலும் தலையிடும் வாய்ப்பைப் பெற்ற துறைகளுக்கான அதிகாரங்களைப் பொதுத்துறைப் பட்டியல் வரையறுத்துள்ளது.

அதிகாரப் பங்கீடு, உலக நாடுகளில் விதவிதமாக அமைக்கப்பட்டுள்ளது.

அ. அமெரிக்க ஐக்கிய நாட்டில் அரசியல் அமைப்புத் திட்டம், 1. மத்திய அரசுக்கான அதிகாரங்களைத் தொகுத்துக் கூறுகிறது. 2. மத்திய அரசு சில செயல்களைச் செய்யக்கூடாதெனத் தடுக்கிறது. 3. மாநில அரசுகள் சில செயல்களைச் செய்யக்கூடாதெனத் தடுக்கிறது. 4. எஞ்சிய அதிகாரங்களை மாநிலங்களுக்கு அளிக்கிறது.

ஆ. கானடாவின் அரசியல் அமைப்புத் திட்டத்தின் படி அதிகாரப் பங்கீடு, அமெரிக்க ஐக்கிய நாட்டுப் பங்கீட்டு முறைக்கு நேர் எதிரிடையானது. இங்கு மாநிலங்களின் அதிகாரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் நடுவண் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. மாநிலங்களுக்கு 29 அதிகாரங்கள் வகைப்படுத்தப்பட்டுக் கூறப்பட்டுள்ளன. கானடாவும் கூட்டாட்சி அமைப்புள்ள நாடு.

இ. ஆசுதிரேலியாவிலும் கூட்டாட்சி அமைப்பு முறையே நிலவுகிறது. மத்திய மாநில அதிகாரங்கள், சுவிட்சர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போன்று பங்கிடப்பட்டுள்ளன. அதன்படி 1. மத்திய அல்லது கூட்டாட்சி அரசாங்க அதிகாரங்கள் இவை இவையென வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. 2. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. 3. மத்திய மாநில அரசுகள் செய்யத் தகாதன வெனச் சில அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

ஈ. சுவிட்சர்லாந்தில், மத்திய-மாநில அதிகாரப் பங்கீட்டு அடிப்படையில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் காணப்படுவதைப் போன்று அமைந்துள்ளது. மத்திய அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படாத அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படவில்லையானால் அவை மாநிலங்களைச் சாரும். மத்திய அதிகாரங்கள் ஒருவகையில் மத்திய அரசுக்கே இருப்பது போலவும், ஒரு வகையில் பொதுத் துறைக்கே இருப்பது போலவும் அமைக்கப்பட்டுள்ளன.

**உ. பாகிசுதான்** அரசியல் அமைப்பு கூட்டாட்சி முறையில் அமைந்துள்ளது. இதன் அமைப்பு முறை இந்திய அரசியலமைப்புத் திட்டத்தைப் போல் அமைந்துள்ளது. மத்திய அரசின் அதிகாரங்கள் சிறப்பதிகாரங்களாகக் கொடுக்கப்பட்டிருப்பதுடன், பொதுத்துறைப்பட்டியல் அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. மாநில அதிகாரங்கள் இந்தியாவில் கொடுக்கப்பட்டிருப்பதுபோல் பாகிசுதான் மாநிலங்களுக்குக் கொடுக்கப்படவில்லை.

**ஊ. பங்களாதேசம்,** இங்கிலாந்து போன்றவை ஒருறுப்பு (Unitary) நாடுகள். எனவே இவற்றில் அதிகாரப் பங்கீடு கிடையாது.

**எ. சோவியத்து உருசியா** ஒரு கூட்டாட்சி நாடாகும். மத்திய–மாநில அதிகாரங்கள் கொள்கையளவில் அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் போல் வரையறுக்கப்பட்டுள்ளன. அதன்படி, மத்திய அரசின் அதிகாரங்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. சோவியத்து உருசியாவில் மாநிலங்களுக்குக் கூட்டாட்சியை விட்டுப் பிரிந்து செல்லும் அதிகாரம் ஏட்டளவில் கொடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும் இதை ஒரு மாநிலமும் இன்றுவரை செயல்படுத்தவில்லை; ஆதலின், செயல்படுத்த அனுமதிக்கப்படவில்லையென்பது பொருத்தமாகும்.

துணை நூல்கள்:

**Appadorai**, A., "Substance of Politics", Oxford University Press, London, 1975.

**Strong**, C.F., "Modern Political Constitutions", Sidwick & Jackson, 1930.

**அதிகாரப் பிரிவினை** என்பது அரசின் பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் ஒரு கோட்பாடாகும். எல்லா நாடுகளிலும் அரசுப் பணிகள் மூன்று பிரிவாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை: சட்டமியற்றுதல், செயற்படுத்துதல், விளக்கமளித்தல் எனப்படும். இம்மூன்று பணிகளையும் செயற்படுத்துகிற அரசின் அங்கங்கள் சட்டமன்றம், நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியன. சட்டமன்றம் நாட்டிற்குத் தேவையான சட்டங்களை நிறைவேற்றுகிறது. தேவைப்படும் போது முன்பே நடைமுறையில் உள்ள சட்டங்களில் மாற்றமோ திருத்தமோ கொண்டு வருகிறது. சட்டமன்றத்தினால் இயற்றப்பட்ட சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்து செயல்படுத்தும் பணியை நிருவாகத்துறை செய்கிறது. நீதித்துறை, சட்டங்களை மீறுபவர்களைத் தண்டிக்கிறது; தேவையேற்படின் சட்டங்களுக்கு விளக்கமளிக்கிறது.

அரசுப் பணிகள் மூன்றையும் ஒருவரோ ஒரு நிறுவனமோ பல நிறுவனங்களோ செலுத்தலாம். அரசாங்கத்தின் மூன்று பணிகளையும் தனித்தனி நிறுவனங்கள் ஆற்ற வேண்டும். ஒவ்வொரு அங்கமும் தனித்தனியாகச் செயல்பட வேண்டும். ஒவ்வொன்றின் அதிகார எல்லையும் வரையறுக்கப்பட வேண்டும். ஆனால் அதனுடைய அதிகார எல்லைக்குள் அவை உரிமையுடன் இருக்க வேண்டும். இக்கொள்கையின் படி சட்டமன்றம், சட்டங்களை இயற்றும் பணியை மட்டும் செய்ய வேண்டும். நிருவாகத்துறை, இயற்றப்பட்ட சட்டங்களைச் செயல்படுத்துவதில் ஈடுபட வேண்டும். நீதித்துறை, சட்டங்களை விளக்கி, மீறப்படும் போது தண்டனை அளிக்க வேண்டும். இக்கோட்பாட்டின்படி அரசு அதிகாரங்கள் தனி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டால், அத்தகைய நிலை கொடுங்கோன்மைக்கு வழிவகுத்துவிடும். தனிமனித சுதந்திரத்திற்கும் ஊறு விளைவிக்கக் கூடும். முற்காலத்தில் அரசன் அல்லது தலைவன் எல்லா அதிகாரத்தையும் செலுத்தி வந்தான். அரசனே சட்டம் இயற்றுவோனாகவும் செயற்படுத்துபவனாகவும் நீதிபதியாகவும் விளங்கினான். மன்னர்களே எல்லா அதிகாரங்களையும் குவித்துக் கொண்டு கொடுங்கோலாட்சி புரிந்த இடைக்கால அரசியல் நிலைக்கு எதிராகத் தோன்றி வளர்ந்ததாகும் இக்கோட்பாடு.

அரசுப் பணிகளைச் சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் என முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கும் முறை மிகத் தொன்மையானது. அரிசுடாட்டிலின் காலத்திலிருந்தே அரசின் பணிகளைப் பகுக்கும் முறை காணப்படுகிறது.

அரிசுடாட்டில் அரசின் பணிகள் மூவகைப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். மூவகையான பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், தொடர்புடைய நிறுவனங்களின் அமைப்பு, அவற்றிற்குரிய பணிகள் ஆகிய வற்றைப்பற்றி விவரித்துக் கூறினாரேயன்றி அவை எவ்வாறு பிரிக்கப்பட்டுள்ளன, அவற்றிற்கிடையே எத்தகைய உறவுநிலை காணப்படவேண்டும் என்பதை அவர் தெளிவு படுத்தவில்லை. உரோமானிய அறிஞர்களான சிசரோ, பொலிபியசு போன்றோர் உரோமானிய அரசியலமைப்பில் சமநிலைத் தடையீடு(Check and Balance) காணப்பட்டதாகப் புகழ்ந்து கூறியுள்ளனர். உரோமானிய அரசியலமைப்பின் சிறப்பிற்குக் காரணம், அந்நாட்டில் 'கான்சல்கள்', செனட்சபை, 'கொமிசியா' அவை ஆகிய இம்மூன்றிற்கும் இடையே நிலவி வந்த அதிகாரச் சமநிலையேயாகும் என்ற கருத்தினை உடையவர்களாகத் திகழ்ந்தனர். உரோமானியக் குடியரசில் சர்வாதிகார ஆட்சி வலுப்பெற்ற போதும், இடைக்கால ஐரோப்பாவில் படைமானிய அடிப்படையை ஒட்டிச் சமுதாயமும் அரசாங்கமும் செயற்படத் தொடங்கியபோதும், அதிகாரப் பகுப்பு என்ற கொள்கை மெல்ல மறையத் தொடங்கியது.

அக்காலத்தில் அரசனே சட்டங்களை இயற்றுவோனாக, அவற்றைச் செயற்படுத்துவோனாக, நீதிபதியாகத் திகழ்ந்தான்.

பிரெஞ்சு அரசியல் அறிஞர் போதின் (Bodin) என்பவர் 16-ஆம் நூற்றாண்டில் தமது குடியரசு என்ற நூலில், நீதித்துறை சுதந்திரமாக அரசின் பிற பிரிவுகளின் கட்டுப்பாடில்லாமல் செயற்படவேண்டிய தன் இன்றியமையாமையை எடுத்துக் கூறியுள்ளார். அவருடைய கருத்துப்படி நிருவாக அதிகாரமும், நீதித்துறை அதிகாரமும் ஒருவரிடமே இருந்தால் அது வல்லாட்சிக்கு வழிவகுக்கும். எனவே நீதி வழங்கும் அதிகாரம் சுதந்திரமாகச் செயற்படும் நீதிபதிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டுமெனக் கருதினார். மக்களின் உரிமையைக் காப்பதற்காக அவற்றை வெவ்வேறு துறைகளாகப் பிரிக்க வேண்டுமெனக் கூறினார். 17-ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில், அரசருக்கும் பாராளுமன்றத்திற்குமிடையே போராட்டம் வலுத்த போது, அதிகாரப் பகுப்பு வேண்டும் என்ற கருத்திற்கு ஆதரவு கிடைத்தது. சான் லாக் (John Locke) என்பவர் தம்முடைய 'சிவில் அரசாங்கம்' என்ற நூலில் அரசாங்கத்தின் பணிகளை மூவகையாகப் பகுத்தார். சட்டமன்றம், நிருவாகம், அயல்நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுக் குழுக்கள் என்பன அவை. நிருவாக அமைப்பும் அயல்நாட்டுக்கு அனுப்பப்படும் தூதுக் குழுக்களும் இணைவதை ஓரளவேனும் ஏற்றுக் கொண்ட சான் லாக், சட்டமன்றமும் நிருவாகமும் இணைந்து செயற்படுவதை விரும்பவில்லை. சட்டமியற்றும் அதிகாரமும் நிருவாக அதிகாரமும் ஒருவரிடமே குவிந்திருத்தல், வல்லாட்சிக்கு வழிவகுக்கும் என்பது இவருடைய கருத்தாகும்.

அரசியல் அறிஞர்கள், அதிகாரம் பகுக்கப்படவேண்டும் என்பது பற்றிப் பழங்காலமுதலே சிந்தித்து வந்த போதிலும், தெளிவான-வரையறுத்த ஒரு சிந்தனை இது குறித்து ஏற்படவில்லை. தெளிவான ஒரு விளக்கத்தை அளித்தவர் 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்சு நாட்டு அரசியல் தத்துவ ஞானியான மாண்டெசுகியூ (Montesque) என்பவராவார். மாண்டெசுகியூ அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டைத் தெளிவாக்கியதோடு அரசியலில் இக்கோட்பாடு முதன்மை வாய்ந்தது என்பதையும் நிலைநாட்டினார்.

இவர் சட்டங்களின் உட்பொருள் (Spirit of the Laws) என்ற தம்முடைய நூலை 1748-ஆம் ஆண்டில் வெளியிட்டார். இவர் வாழ்ந்த காலம் பிரான்சில் பதினாறாம் உலூயி அரசோச்சிய காலம். 'நானேஅரசு' என்று அம்மன்னன் இறுமாந்த கருத்துடையவனாகத் திகழ்ந்தவன். எல்லா அதிகாரங்களையும் தன்னிடம் குவித்துக் கொண்டிருந்தான். அவனது விருப்பமே நாட்டின் சட்டமாகச் செயற்படுத்தப்பட்டது. இத்தகைய சர்வாதிகார ஆட்சியில் மக்கள் உரிமை என்ற சொல்லிற்கு இடமில்லை. மக்கள் உரிமைகளற்று இருப்பதற்குக் காரணம் அரசனிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பதே எனமாண்டெசுகியூ கருதினார். மாண்டெசுகியூ, இங்கிலாந்து நாட்டிற்குச் சென்றிருந்த போது, அந்நாட்டு மக்களின் உரிமையுடன் கூடிய வாழ்க்கை அவரைக் கவர்ந்தது. அந்நாட்டு மக்களின் உரிமையோடு இணைந்த வாழ்விற்கான காரணங்களை ஆராய முற்பட்டபோது அந்நாட்டின் அரசியலமைப்பு, 'அதிகாரப் பிரிவினை' என்ற சிறந்த அடிப்படையின் மேல் அமைந்திருப்பதே என்ற முடிவிற்கு வந்தார். உரோமானிய நாட்டு வரலாற்று அறிவும், இங்கிலாந்து நாட்டு அரசியல் அறிவும் கற்றுத் தேர்ந்திருந்த இவர், ஓர் அரிய அரசியல் கோட்பாட்டினை உலகிற்கு அளித்தார். அதுவே அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பதாகும்.

யாரிடம் வரம்புக்கு மீறி அதிகாரம் இருக்கிறதோ அவர் அவ்வதிகாரத்தைத் தவறான வழியில் பயன்படுத்துவார். சட்டமியற்றும் அதிகாரமும் நீதியும் நிருவாகமும் ஒருவரிடமே குவிந்திருந்ததால், அங்கு மக்கள் உரிமை என்ற பேச்சிற்கே இடமில்லை; அங்கு மக்களின் உரிமைகள் பாதிக்கப்படும் வாய்ப்புண்டு. இம்மூன்று அதிகாரங்களும் ஒருவரிடமே குவிக்கப்பட்டிருந்தால் அந்நாட்டு மக்களுக்குச் சுதந்திரத்துடன் கூடிய உரிமை கிடைக்க வாய்ப்பில்லை. கொடுங்கோன்மையான சட்டங்கள் இரக்கமற்ற முறையில் செயற்படுத்தப்பட்டு மக்கள் கொடுமையான முறையில் தண்டிக்கப்படுவர். இந்த நிலையைப் போக்க அதிகாரங்கள் தனித்தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்று மாண்டெசுகியூ வலியுறுத்தினார்.

'மாண்டெசுகியூவின் அதிகாரப் பிரிவினை' என்பது ஓர் அரசாங்கத்தின் அனைத்துப் பிரிவின் அதிகாரங்களும் ஒருவரிடமோ ஒரு நிறுவனத்திடமோ இருத்தல் கூடாது என்கிறது. அதிகாரம் குவிக்கப்பட்டிருந்தால் மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படும். எனவே மக்கள் சுதந்திர உணர்வுடன் வாழ வேண்டுமென்றால் 'அதிகாரப் பிரிவுமுறை' ஓர் அரசாங்கத்தில் இருக்க வேண்டும் என்பதாகும். அரசாங்கத்தின் ஒவ்வொரு பிரிவும் அதன் சட்ட வரம்பிற்குள் செயற்படுவதுடன், வேறொரு பிரிவிற்குள் அடங்காமல் நிற்பதுமாகும் என்பது மாண்டெசுகியூ கோட்பாட்டின் சாரம். சட்டம் அனுமதிக்கும் வரம்பைத் தாண்டி ஒரு பிரிவு செயற்படும்போது வேறொரு பிரிவினால் இதனுடைய ஊடுருவல் தடுக்கப்படும். ஒரு பிரிவானது இன்னொரு பிரிவிற்கு இணையாகச் செயற்படுமளவு ஓர் அரசாங்கத்தில் அதிகாரப் பிரிவினை செயற்பட வேண்டும். கொடுங்கோலாட்சியைத் தவிர்க்கவும் தனி மனித சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இப்படி

ஒரு தடை இன்றியமையாதது என்று மாண்டெசுகியூ கருதுகிறார்.

மாண்டெசுகியூவிற்குப் பிறகு, ஆங்கில அறிஞரான பிளாக்கிசுடோன் (Black Stone) தம்முடைய இங்கிலாந்து நாட்டுச் சட்டங்களைப் பற்றிய கருத்துரையில் "எப்போதெல்லாம் சட்டமியற்றும் அதிகாரமும், அதனை நடைமுறைப்படுத்தும் அதிகாரமும் ஒரே மனிதனிடமோ ஒரே குழுவினிடமோ ஒப்படைக்கப் படுகிறதோ அப்போது பொதுச் சுதந்திரம் நிலவ முடியாது" என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

இக்கோட்பாடானது பிரெஞ்சுப் புரட்சிக்கு ஒரு காரணமாக விளங்கியது. புரட்சிக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட கி.பி. 1791-ஆம் ஆண்டு அரசியலமைப்பு, சட்டமன்றம், நிருவாகம் இரண்டையும் சுதந்திர அமைப்பாக ஆக்கியது. நீதிபதிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சுதந்திரமாகச் செயற் பட்டனர்.

அமெரிக்க நாட்டின் அரசியலமைப்பைத் தீட்டியவர்களின் உள்ளத்தையும் இக்கோட்பாடு கவர்ந்தது. சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திடமும், நிருவாக அதிகாரங்கள் தலைவரிடமும், நீதித்துறை அதிகாரங்கள் தலைமை நீதிமன்றத்திடமும் இருக்கும் என்பது அரசியலமைப்பின் முதல் மூன்று விதிகளில் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு அதிகாரப் பிரிவினை அரசியலமைப்பின் முதல் மூன்று விதிகளில் கூறப்பட்டு, அது கடைப்பிடிக்கப்பட வேண்டிய நெறி தலைமை நீதிமன்றத்தால் விளக்கப்பட்டிருந்தாலும், அதிகாரப் பிரிவினை என்னும் சொற்றொடர், அமெரிக்க அரசியலமைப்பின் எப்பகுதியிலும் காணப்படவில்லை.

அதிகாரப் பிரிவினையைப் பொதுவாக இன்று எல்லா அரசுகளும் ஏற்றுக்கொண்ட போதிலும், நடைமுறையில் அது செயற்படுத்தப்படும்போது சில இடர்ப்பாடுகள் உள்ளன. ஒரு நாட்டு அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்தனியே இயங்கினால், அவற்றிற்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. இத்தகைய சூழ்நிலையில் ஒரு நாட்டின் அரசாங்கத்தைச் சுமுகமாக நடத்திச் செல்ல இயலாது.

எந்தவொரு அரசாங்கமும், சட்டமன்ற, நிருவாக, நீதித்துறைகள் முற்றிலும் தனித்தனியாக இயங்குமாறு அமைக்கப்படவில்லை. ஓர் எல்லை வரை இக்கோட்பாடு ஒப்புக் கொள்ளப்படுகிறது. அரசாங்கம் என்பது முழுமையான ஓர் அமைப்பு. அது முற்றும் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட இயலாதது. இக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ள அமெரிக்காவில் கூட அரசின் ஒவ்வொரு பிரிவிற்கும் இடையே தொடர்புகள் உள்ளன. அமெரிக்கக் காங்கிரசு சட்டங்களை இயற்றுகிறது. நிருவாகத்திற்குத் தலைவராக உள்ள அமெரிக்க அதிபர் தேவை ஏற்பட்டால், சட்டங்களை மறுப்பாணை செய்யும் அதிகாரம் பெற்றுள்ளார்; காங்கிரசுக்குச் செய்திகள் அனுப்புகிறார். தலைவர் அயல்நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளையும், உயர் பதவிகளுக்குச் செய்யும் நியமனங்களையும் செனட் சபை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். நீதித்துறைப் பணிகள் சில நேரங்களில் சட்டமன்றத்தாலும், நிருவாகத் துறையாலும் செய்யப்படுகின்றன. செனட் சபையின் தலைமையில், பிரதிநிதிகள் சபையானது தலைவர் மீதான தேசத் துரோகக் குற்றச்சாட்டை விசாரிக்கலாம். குற்ற விசாரணை மூலம் தலைவரைப் பதவியிலிருந்து நீக்க முடியும். தலைவர்தான் நீதிபதிகளை நியமிக்கிறார். அரசியலமைப்பின் விதிகளுக்கு மாறாகக் காங்கிரசின் சட்டங்கள் இருந்தால், அவற்றிற்குத் தடைவிதிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு. இது நீதி மறுஆய்வு (Judicial Review) என்று சொல்லப்படுகிறது. எனவே அமெரிக்க அரசியலமைப்பு செயற்படும் விதத்தை ஆழ்ந்து நோக்கும்போது, அங்குச் சமநிலைத் தடையீடுகள் உள்ளன என்பது தெளிவாகிறது.

இங்கிலாந்து நாட்டு அரசியலைப் பார்த்துத்தான் மாண்டெசுகியூ இக்கொள்கையை அமைத்தார். இங்கிலாந்து மக்களின் உரிமை, சுதந்திரம் பாதுகாக்கப் படுவதற்குக் காரணம், அங்கு அதிகாரப்பிரிவினை இருப்பதுதான் என்று அவர் கருதினார். சட்டத்துறையும் நிருவாகத்துறையும் இணைந்து செயற்படும் பாராளுமன்ற முறையிலான அரசாங்கம் அன்று இங்கிலாந்தில் செயற்பட்டது. பாராளுமன்ற அரசாங்கம் இக்கோட்பாட்டிற்கு மாறானது. இங்கிலாந்து நாட்டின் மேல்சபையானது (பிரபுக்கள் சபை,) சட்டமன்றத்தின் ஒரு பகுதியாகவும் சில வேளைகளில் நீதிமன்றமாகவும் திகழ்கிறது. பிரபுக்கள் சபையின் தலைவராக உள்ள சான்சலர் பிரபு, அமைச்சர் குழுவின் உறுப்பினராகவும் நீதித்துறையின் தலைவராகவும் பணியாற்றுகிறார். எனவே இங்கிலாந்து நாட்டில் கூட அதிகாரப் பிரிவினை முழுமையான அளவில் இல்லை. இருப்பினும் அதிகாரப் பிரிவினைக்குரிய கூறுகள் பற்றிய மேலோட்டமான சில கருத்துகள் அவ்வரசியல் அமைப்பில் இருந்ததை மாண்டெசுகியு உணர்ந்திருக்கலாம். அதை அடிப்படையாக வைத்துத்தான் 'அதிகாரப் பிரிவினை' பற்றிய சிந்தனையை வளர்த்து முழுமைப்படுத்தினார்.

அரசாங்கத்தின் மூன்று பிரிவுகளும் சமமான அதிகாரம் உடையன என்று இக்கோட்பாடு கூறுகிறது. நடைமுறையில் மூன்று பிரிவுகளுக்கும் சமமான அதி

காரமில்லை. சட்டத்துறை பிற துறைகளைவிட மேலானது. ஏனெனில் அது உருவாக்கும் வரம்பிற்குள் அனைத்து அரசாங்கப் பணிகளும் நடைபெறுகின்றன. நாட்டின் நிதிநிலை இதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

மாண்டெசுகியூ தமது கோட்பாட்டிற்கு 'அதிகாரப் பிரிவினை' என்று பெயர் தந்துள்ளார். உண்மையில் அதிகாரம் என்ற சொல்லுக்குப் பதிலாகப் பணி என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஒரு மக்களாட்சி நாட்டில் அதிகாரங்கள் மக்களிடம் உள்ளன. மக்களால் தரப்பட்ட சில பணிகளைச் செய்வதே அரசின் கடமையாகும்.

இக்காலச் சூழ்நிலையில் அரசாங்கம் ஒழுங்காக இயங்க வேண்டுமெனில், அதிகாரப் பிரிவினையை விட, வெவ்வேறு துறைகளுக்கிடையே இணக்கமும் ஒத்துழைப்பும் நிலவ வேண்டியது இன்றியமையாததாகும்.

முழுமையான அதிகாரப் பிரிவினை என்பது நடைமுறைக் கொவ்வாதது. அரசின் ஒவ்வொரு அங்கமும் ஓரளவு சுதந்திரத்துடன் தனித்துச் செயற்படுவது விரும்பத்தக்கதே. நடைமுறையில் மக்கள் அரசியல் அறிவு பெற்று விழிப்பாயிருத்தலே தனிமனிதனின் உரிமைகளைக் காக்கும் தலைசிறந்த வழியாகும். மக்களின் நிலைத்த விழிப்பான உணர்வே மக்களின் உரிமையைப் பாதுகாக்கும். எஸ்.அ.

துணை நூல்கள்:

Strong, C.F., "Modern Political Constitutions," Sidwicks & Jackson, 1930.

Wheare, K.C., "Modern Constitutions," Oxford University Press, London, 1951.

Appadorai, A., "The Substance of Politics," Oxford University Press, London, 1975.

**அதிகாரப் பொருளாதாரம்** என்பது அரசியல் தலைமைப் பொறுப்பில் இருப்பவரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் அவரது முழு ஆதிக்கத்தில் இயங்கும் ஒரு பொருளாதார அமைப்பாகும். இந்த அமைப்பில் அடங்கும் பொருளாதார நடவடிக்கைகளான உற்பத்தி, நுகர்ச்சி (Consumption), விலை வரையறை, வேலைப் பாகுபாடு, உற்பத்தியான பொருள்களைப் பகிர்ந்தளிக்கும் முறை, கூலி வரையறை, சேமிப்பு, முதலீடு ஆகிய அனைத்தும் அரசியல் தலைமையாளரின் ஆணைப்படி இயங்கும். அதிகாரப் பொருளாதார அமைப்பில் அரசியல் தலைமையாளர், அதன் நண்பராகவும் தத்துவ ஞானியாகவும் வழிகாட்டியாகவும் கணப்படுவார். இதில் தலைமை ஆளுநர் முழுப் பொறுப்பையும் ஏற்று, மக்களின் பொருளாதார நலனுக்காகப் பாடுபடக் கூடியவராக இருப்பார்.

அதிகாரப் பொருளாதாரம் (Authoritarian Economy) அண்மைக் காலத்தில் தோன்றியது இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை மக்களாட்சி அரசியல் அமைப்பின் கீழ் தனியார் முயற்சியில் இயங்கும் முதலாளித்துவப் பொருளாதார அமைப்புதான் உலகம் முழுவதும் இருந்து வந்தது. இந்த அமைப்பின் கீழ் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் தனியார் ஆதாயத்திற்காகத் தனியாரால் மேற்கொள்ளப்பட்டன. அரசு தலையிடாக் கொள்கையை (Laissez Faire) நம்பியதால், பொருளாதார அமைப்பைத் தனியாரிடம் விட்டு வைத்திருந்தது. ஆனால், இரண்டு உலகப் போர்களும் உலகப் பொருளாதார மந்தமும், முதலாளித்துவப் பொருளாதாரத்தின் அழிவுகளையும் திறமையின்மையையும் காட்டின.

இரு உலகப் போர்களும் பல நாடுகளின் பொருளாதார அமைப்புகளைப் பெரிதும் சீர்குலையச் செய்தன. மக்கள் வீடுகளை இழந்தனர்; நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன; பண்ணைகளும் தொழிற்சாலைகளும் அழிக்கப்பட்டன; உற்பத்தி விரைவாகக் குறைந்தது; உணவுப் பற்றாக்குறை நாட்டைப் பீடித்தது; வேலையின்மையும் வறுமையும் தலைவிரித்தாடின; விலைவாசிகளும் குதிரை வேகத்தில் உயர்ந்தன. போரில் வெற்றி பெற்ற நாடுகளுக்கு அளிக்க வேண்டிய தொகையின் சுமை மேலோங்கியது. இப்போர்களுக்குப் பின் உருவாகிய சிக்கல்களை முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு எவ்வகையிலும் தீர்க்க முடியாது என்று தெளிவாகத் தெரிந்தவுடன், அரசின் தலையீடு பொருளாதாரத் துறையில் மிகுந்தது.

போரினால் நலிவுற்ற நாடுகளுக்கு 1930-ஆம் ஆண்டில் உலகில் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தம் மேலும் ஒரு பெரும் தடையாக அமைந்தது. உற்பத்தி சுணக்கமுற்று, மீண்டும் வேலையின்மையும் வறுமையும் மிகுந்து காணப்பட்டன. இலட்சக் கணக்கான மக்கள் உணவும் உடையும் இன்றி நலிவுற்றபோது கோதுமை, காப்பி, பருத்தி முதலியவை கடலில் வீசப்பட்டும் எரிக்கப்பட்டும் வீணாயின. உள்நாட்டுப் பொருள்களின் விலைகள், முதலீட்டு மதிப்பு ஆகியவை வீழ்ச்சியடைந்து உலகமெங்கும் தேக்க நிலை காணப்பட்டது.

இவ்விரு நிகழ்ச்சிகளின் விளைவாக மக்களின் துன்பமும் துயரமும் அலை அலையாக மேலோங்கின. இவ்விளைவுகள் ஒவ்வொரு மனிதனின் மனத்திலும் நாளேடுகளின் முதல் பக்கங்களிலும் பெரிதாகத் தோன்றின. மக்களிடையே வெறுப்பு மிகுந்துவிட்ட காலத்தில் பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிகாட்டும் ஒரு மீட்பன் (Saviour) தேவைப்பட்டான்.

அது மீட்பு அரசியல் மனிதன் (Homo Politicus) என்ற வடிவில் உருவெடுத்தது. மக்களின் ஒப்புதல் அவனுக்குக் கிடைத்தது. எனவே, அரசியல் மனிதனின் ஆதிக்கம் எங்கும் நிறைந்திருந்தது. இந்நிலையில்தான் அரசியல் மனிதன், பொருளாதார அமைப்பைக் கட்டுப்படுத்தி அனைத்தையும் தனது அதிகாரத்தின்கீழ்க் கொணர்ந்தான்.

இவ்வதிகாரம் தழுவிய பொருளாதார அமைப்பு ஒரு நாட்டில் போர்க் காலங்களில் தோன்றி அமைதிக் காலங்களில் மறைந்து விடுவதில்லை. அமைதிக் காலங்களிலும் இப்பொருளாதார அமைப்பு இருக்கக் கூடும். பொதுவாக, வல்லாட்சி நாடுகளில் எல்லாம் அதிகாரப் பொருளாதாரம் அமைக்கப்படுவது வழக்கம். சோவியத்து உருசியா, சீனா, செருமனி, இத்தாலி, சூடான், பாகிசுதான், பர்மா, வியட்நாம், அர்செண்டைனா, துருக்கி, அங்கேரி, செக்கோசுலோவேகியா, யூகோசுலோவேகியா, எகிப்து, தான்சானியா, இலிபியா, நைசீரியா ஆகிய நாடுகள் இத்தகைய பொருளாதார அமைப்பை அவற்றின் வரலாற்றில் ஏதேனும் ஒரு காலத்தில் பெற்றிருந்தன.

அதிகாரப் பொருளாதாரத்தின் சிறப்புக் கூறுகள்: பொருளாதாரத்தின் மீது அதிகாரம் செலுத்தும் நிருவாகத்தின் தன்மையைப் பொறுத்து, அதிகாரப் பொருளாதாரம் மூன்று வகையாக அமையலாம். ஒன்று, சோவியத்து உருசியா, சீனா போன்ற நாடுகளில் உள்ளது போல் ஒரு கட்சியின் அதிகாரம். இவ்வதிகாரப் பொருளாதாரத்திற்கு அதிகார சமத்துவப் பொருளாதாரம் (Authoritarian Socialism) என்பது பெயர். மற்றொன்று, செருமனியில் அதிகாரம் செலுத்திய இட்லர், இத்தாலியின் முசோலினி போன்றவர்களின் தனி மனித ஆதிக்கம் பெற்ற பொருளாதாரம். இது, அதிகாரம் தழுவிய தனியார் முயற்சிப் பொருளாதாரம் (Authoritarian Free Enterprise System) என்று அழைக்கப்பட்டது. மூன்றாவதாக, பாகிசுதானின் அயூப்கான், சியா (zia) போன்ற படைத் தலைவர்களின் ஆட்சிக்குட்பட்ட அதிகாரம். இம்முறைக்குப் படைவலி முதலாளித்துவ அமைப்பு (Military-Based Capitalist Economy) என்பது பெயர். இம்மூன்று அமைப்புகளுக்குள்ளும் பல வகைகளில் ஒற்றுமை இருப்பதால், இவை அனைத்தும் அதிகாரப் பொருளாதாரம் என்றே அழைக்கப்படுகின்றன.

அதிகாரச் சமதரும அமைப்பில், பொருள் உற்பத்திக்கு மூலமான நிலம், காடுகள், சுரங்கங்கள், பள்ளிகள், வங்கிகள் மற்ற வளங்கள் அனைத்தும் அரசின் பொதுவுடைமையாக இருக்கும். தனியாருக்குச் சொத்துரிமை இவ்வமைப்பில் இல்லையாதலின், தனியார் சுரண்டல் ஏற்பட வழியில்லை. இப் பொருளாதாரத்தின் உற்பத்தி, ஆதாயத்தையோ தனி மனிதன் நலனைக் கருதியோ அமையாது. உற்பத்தி என்பது மக்களுக்காக, மக்கள் நலன் கருதி, மக்கள் அனைவராலும் மேற்கொள்ளப்படும்.

ஆனால், மற்ற இரு அதிகாரப் பொருளாதார அமைப்புகளிலும் முதலாளித்துவத்தின்வெளித்தோற்றம் மட்டும் காக்கப்படும். இங்கே, உற்பத்திக் காரணிகள் தனியாரிடம் இருக்க அனுமதிக்கப்படுகின்றன. சில முக்கியத்தொழிற்சாலைகள் கூட நாட்டுடைமையாக்கப்படுவதில்லை. எனவே, தனியார் தொழில் முயற்சி, பொருளாதாரத்தில் காணப்படுவது போல உற்பத்தியாகும் சமூக வருமானம், தனியார்களாலேயே வாரம், கூலி, வட்டி, ஆதாயம் என்ற முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. ஆயினும், இப் பொருளாதாரத்தில் காணப்படும் கொடூரமான அதிகாரக் கட்டுப்பாடானது, தனியார் தொழில் முயற்சிகளையும் அதனால் ஆதாயம் பெறுதலையும் பெரிதும் பாதித்துவிடுகிறது. ஆகவே, இத்தகைய பொருளாதாரத்தில் பெயரளவில்தான் முதலாளித்துவக் கூறுகள் காணப்படுகின்றனவே தவிர, உண்மையில் அவை அழிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அயூப்கான் பாகிசுதானில் பொறுப்பேற்றபோது பொருள்களின் விலையிலும் ஆதாயத்தின் மேலும் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தார். நிலச் சீர்திருத்தங்களைக் கடுமையாக மேற்கொண்டதன் மூலம் தனியாரிடம் நில உடைமை குவிந்திருப்பதைக் கட்டுப்படுத்தினார். செருமனியின் அதிகாரப் பொருளாதார அமைப்பில் தனியார் சொத்துரிமை எந்நேரத்திலும் அரசால் பறிமுதல் செய்யப்படக்கூடிய நிலை இருந்தது. தனியார் தங்கள் சொத்துகளை எவ்விதம் அனுபவிக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கூட அரசு விதித்தது. ஒவ்வொரு தனியார் நிறுவனமும் அரசின் பங்கேற்புடன், அரசால் கட்டுப்படுத்தப்பட்ட பொது நிறுவனமாகவே (Public Trust) இயங்கியது. சுருங்கக் கூறின், செருமனியின் ஒவ்வொரு தனித் தொழில் நிறுவனத்திலும் அரசு ஒரு கூட்டாளியாக (Partner) இருந்தது. இட்லர் பதவிக்கு வந்தபோது தனியார் உற்பத்தி அனைத்தும் அவரது மையக் குழுவிடம் இருந்ததால், தனியார் சொத்துரிமைக்கு (Private Ownership) உதட்டளவு மதிப்புதான் இருந்தது.

உற்பத்திக் காரணிகள் அரசின் ஆளுகைக்குக் கீழ் இருப்பதால் அவற்றைச் சிறந்த முறையில் பங்கிட்டு வல்லாட்சியாளரின் (Dictator) சமூக, பொருளாதாரக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குப் பொருளாதாரத்தில் ஓர் அமைப்புத் தேவைப்படுகிறது. அந்த அமைப்பு மையத் திட்டக்குழு என்ற பெயரில் செயற்

படுகிறது (Central Planning Board). அனைத்துப் பொருளாதார முடிவுகளையும் இக்குழு திட்டங்களாக வகுக்கும். இக்குழுவின் திட்டங்களுக்கும் வகுக்கப் பட்ட குறிக்கோள்களுக்கும் ஏற்பத் தொழில் முயற்சி மேற்கொள்வோர் பொருள் உற்பத்தியில் ஈடுபடுவர். எனவே, அதிகாரம் தழுவிய பொருளாதாரம் என்பது எப்போதும் மையத் திட்டமிட்ட அதிகாரப் பொருளா தாரமாகவே (Centrally Planned Command Economy) விளங்கும். ஆனால், உலகிலுள்ள திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) அனைத்தும் அதி காரப் பொருளாதாரமாக இருக்குமென்பதில்லை.

இத்தகைய திட்டமிடப்பட்ட அதிகாரப் பொருளா தாரத்தில் விலைச் செயற்பாட்டின் (Price Mechanism) பெருமை குறைந்து காணப்படும். பொதுவாக அங் காடி விலை, பொருள்களின் தேவையாலும் (Demand) பொருள்களின் அளிப்பாலும் (Supply) வரையறுக்கப் படும். ஆனால், இவை அதிகாரப் பொருளாதாரத்தில் தனித்து இயங்குவதற்கு மறுக்கப்படுவதுடன், பொருள் களின் விலைகளையும் திட்டக்குழுவே தீர்மானிக்கும். இங்கு மேற்கொள்ளப்படும் விலை முறையானது அதி கார விலைமுறை எனப்படும் (Authoritarian Price System). திட்ட அதிகாரிகள் பொதுமக்களின் விருப்ப அளவுகோலுக்கு (Scale of Preference) ஏற்பவும் பொருளாதார முன்னேற்றத் தேவைகளுக்கு ஏற்பவும் விலைகளை உறுதி செய்வர். ஆனால், உறுதி செய் யப்பட்ட விலை மறுபடியும் அலுவலர்களால் மாற்றப் படாதவரை ஒரே நிலையில் இருக்கும். எனவே அதி காரப் பொருளாதாரத்தில் விலைவாசிகள் ஏற்ற இறக்கங்களுக்கு ஏற்ப உற்பத்தி முறை இயங்காது. இதனைக் கருத்தில் கொண்டுதான், சில பொருளியல் அறிஞர்கள், அதிகாரப் பொருளாதாரம் விலைக் கரு வியின் உதவியின்றியே தங்கு தடையில்லாமல் செயற் பட முடியும் என்று கூறுகின்றனர். இருப்பினும், கீழ்க் காணும் காரணங்களுக்காக, அதிகாரப் பொருளாதா ரத்திலும் விலைக்கருவியின் பங்கு இன்றியமையாத தாகிறது. (1) பொருளாதாரத்தில் இயங்கும் ஒவ் வொரு தொழில் நிறுவனமும் மற்ற நிறுவனத்தின் பொருள்களை வாங்குவதற்கு மாற்று விலைமுறை (Transfer Price) தேவைப்படுகிறது. (2) பல்வேறு இயற்பியல் அளவுகளைக் (Physical Units) கொண்ட பண்டங்களை ஒரு முடிவான அடிப்படையில் ஒப்பிட் டுப் பார்ப்பதற்கு விலை தேவைப்படுகிறது. (3) உற் பத்தி முறைகளில் மேற்கொள்ளப்படும் செலவினங் களை ஆய்ந்து, மிகக் குறைந்த செலவினம் கொண்ட, ஆனால், நிறைந்த பயன் தருகிற உற்பத்தி முறை யைச் செயற்படுத்துவதற்கு விலை சிறந்த கருவியா கிறது. ஆனால், மேற் கூறியது போல் முக்கிய முடிவு களும் வளங்களின் பங்கீடும் (Allocation of Resources) இவ் விலைகளைப் பொறுத்து அமையா. எனவே, அதிகாரப் பொருளாதாரத்தில் பணத்தின் செயற்பாடு குறைந்தே காணப்படும். அது கணக்கின் அலகாகவே (Unit of Account) இருக்கும். நிருவாக நிறுவனங்களுக்குள் ஏற்படும் அனைத்து நடவடிக் கைகளும் காசோலைகளின் (Cheque) மூலமாகத்தான் நிகழும்.

அதிகாரப் பொருளாதாரத்தில், விலைக் கருவி யின் பங்கு குறைந்து காணப்படுவதால் ஆதாயம் கட்டுப்படுத்தப்பட்டும் கட்டுப்படுத்தப்படாமலும் இருக்கும். மேலும், உழைப்போர் கூலிகளில் ஏற்றத் தாழ்வு குறைந்தே காணப்படும். இக்காரணங்களால் வருமானமும் செல்வமும் ஒரு சிலரிடையே குவிந்து, பொருளாதார ஏற்றத் தாழ்வு (Economic inequality) குறைந்தே காணப்படுகிறது. பொருளாதாரச் சமநிலை, சம உரிமை, சமவாய்ப்பு ஆகியவை நிறைந்து காணப்படும். பெரும்பாலும், 'திறமைக் கேற்ப உழைத்துத் தேவைக்கேற்பப் பெறுதல்' என்ற கொள்கை இப் பொருளாதாரத்தில் காணப்படும்.

ஆனால், அதிகாரப் பொருளாதாரத்தில் தனி மனித உரிமை பெரிதும் கட்டுப்படுத்தப்படும் அல்லது அழிக்கப்படும். பொதுவாக, நாட்டின் அரசியல் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கான முயற்சியில் தனி மனித விருப்புகள் தடையாக இருப்பது அனு மதிக்கப்படுவதில்லை. முதலாளித்துவப் பொருளா தார அமைப்பில் அரசனாகக் கருதப்படும் ஒரு நுகர் வோன் அதிகாரப் பொருளாதாரத்தில், ஏறக்குறைய ஓர் அடிமையாகக் காணப்படுகிறான். அவன் என்ன உட்கொள்ள வேண்டும், எத்துணி உடுத்த வேண்டும், எவ்வகை வீட்டில் வசிக்க வேண்டும் என்ற அனைத் தையும் அரசே முடிவு செய்கிறது. அரசால் முடிவு செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களில் எவற்றையேனும் வாங்கிக் கொள்ள நுகர்வோருக்கு முழு உரிமை உண்டு. அதிகாரச் சமநிலைப் பொரு ளாதாரத்தில் அனைத்துப் பொருள்களும் பங்கீட்டுப் பண்டசாலைகள் (Ration Shops) மூலமாகவே பிரித்தளிக்கப்படும். ஆகவே, பொருள்களின் பங்கீடு அரசால் முடிவு செய்யப்படும். ஆனால், மற்ற இரு அமைப்புகளிலும் பொருள்கள், தனியார் கடைகளில் அரசு விலைக்கு அளிக்கப்படும்.

இதுபோன்றே தொழிலாளர் வேலைவாய்ப்பும் அவர்களின் விருப்பத்திற்கிணங்க அமையாது. கூலியின் ஏற்ற இறக்கத்திற்குத் தக்கவாறு இடம்பெயர முடி யாது. அரசாங்கம் வரையறை செய்யும் தொழில் களுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் தொழி லாளருக்கு உரிமை அளிக்கப்படும். பெரும்பாலும், தொழிலாளர் திட்ட ஆணைக்கேற்றவாறே செயல் படவேண்டும். திட்டங்களின் குறிக்கோள்களை அடை

வதற்கேற்றவாறு தொழில் முறை வகுக்கப்பட்டுக் கூலிகள் உறுதி செய்யப்படும். தொழிலாளர்களோ அவர்களை வேலைக்கு ஏற்றுக்கொள்ளும் தொழில் நிறுவனங்களோ இத்தொழில்முறைக் கட்டுப்பாட்டை எதிர்க்க முடியாது. எடுத்துக்காட்டாக, செருமனியில் 1935–இல் தொழிலாளர் பதிவேடு (Labour Register) ஒன்று உருவாக்கப்பட்டுத் தொழிலாளர் தகுதி, தொழிற் பயிற்சி, தேர்ச்சி ஆகியவை தொடர்பான விவரங்கள் அதில் கொடுக்கப்பட்டன. அப்பதிவேட்டை ஒவ்வொரு தொழிலாளியும் வேலையளிப்போரிடம் வேலையில் சேரும்போது கொடுத்திட வேண்டும். வேலையளிப்போர் ஒரு சில நேரங்களில் அப்பதி வேட்டைத் திருப்பிக் கொடுக்க மறுப்பதன் மூலம் ஒரு தொழிலாளியை அதே தொழிலில் தொடர்ந்து இருக்கச் செய்து விடலாம். ஆகவே, தொழிலாளி தான் விரும்பும் வேலைக்குச் செல்ல முடியாது. பதி வேடுகளின் துணையோடு அரசு, தன் திட்டங்களை நிறைவேற்றிடத் தேவைப்படும் தகுதியான தொழி லாளர்களைத் தேவைப்படும் தொழில் துறையில் தனித்தனியாகவோ கூட்டமாகவோ ஈடுபடுத்தியது.

அதிகாரப் பொருளாதாரத்தில் சேமிப்பதற்கான உரிமை அளிக்கப்பட்டாலும் தனி மனிதன் சேமிப்புக் குறைவாகவே காணப்படும். இப் பொருளாதாரத்தில் தனி மனிதன் வருமானம் குறைவாக இருப்பதும் அரசின் விரிந்த சமூகப் பாதுகாப்பு இருப்பதுமே இதற்குக் காரணங்களாகும். முதலீட்டு முடிவுகள் மையமாக எடுக்கப்படுவதால், தனியார் முதலீடு சம நிலைச் சமுதாய அதிகாரப் பொருளாதாரத்தில் இராது. மற்ற அதிகாரப் பொருளாதார அமைப்பு களில் தனியார் முதலீட்டு உரிமை அரசின் உற்பத்தித் திட்டங்களுக்கேற்ப அரசின் ஆணையுடன் அமையும்.

அதிகாரப் பொருளாதாரத்தின் குறிக்கோள்கள்: முழுமையான சமுதாயக் கண்காணிப்பை அதிகாரப் பொருளாதாரம் ஒன்றினால்தான் பெறமுடியும் என்பதே இதன் குறிக்கோள். இக் குறிக்கோள் சமயத் திற்கேற்றவாறு ஒரு நாட்டுக்குள்ளும், நாட்டுக்கு நாடும் வேறுபடும். அதிகாரம் தழுவிய பொருளா தாரத்தின் பொதுவான குறிக்கோள்கள் வருமாறு:

போர்க் கொடுமையால் மிகவும் பாதிக்கப்பட்ட பொருளாதாரங்களின் சிறப்பு மிக்க குறிக்கோள் நாட்டுப் பாதுகாப்பாகும். எடுத்துக்காட்டாக, முதல் உலகப் போரில் சீரழிவுக்கு ஆளான மேற்குச் செரு மனி, தன் பொருளாதார வளங்களை நாட்டின் படைபலத்தைப் பெருக்கப் பயன்படுத்தியது. இட்லர் தன் போர் முயற்சியில் சொன்னது இதுவே: ''ஐரோப்பாவிலே தலைசிறந்தவர்களாக விளங்கப் பிறந்தவர்கள் செருமானிய மக்கள்; வன்முறையின் மூலமே எதனையும் சாதிக்க முடியும்; நான் செரு மானிய மக்களை ஓநாய்க் கூட்டங்களாக உருவாக்க விரும்புகிறேன்; செருமனி ஒரு நாடு அன்று; அது நாட்டுருவில் உள்ள ஒரு படைவீடு''. இத்தகைய தேசியப் பாதுகாப்பு செருமனியில் முன்னுரிமை பெற் றது போல, துருக்கி நாட்டுக் கமால் பாட்சாவும் ''ஐரோப்பாவின் நோயாளி'' என்ற அவமதிப்பைப் போக்குவதே துருக்கி நாட்டு அதிகாரம் தழுவிய பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகக் கொண் டார். இத்தாலி, மறுமுறையும் உரோமாபுரிப் பேர ரசை நிறுவவும் இத்தாலியை வலிமைமிக்க நாடாக மாற்றிடவும் தன் அதிகாரம் தழுவிய பொருளா தாரத்தைப் பயன்படுத்தியது. பின்னர், சோவியத்து உருசியாவும் இதே பாதையைப் பின்பற்றி உருசி யாவை வலிமை மிகுந்ததாக்க முயன்றது. ஆகவே, அதிகாரம் தழுவிய பொருளாதாரத்தின் நோக்கம் குறுகிய நாட்டுப்பற்றை வளர்த்துத் தத்தம் நாட்டுப் படைபலத்தைப் பெருக்க வேண்டும் என்பதாகும். உற்பத்தி, நுகர்வு, முதலீடு ஆகிய அனைத்தும் இக் குறிக்கோளை அடைவதற்காகவே முடுக்கிவிடப்பட் டன. மற்ற நோக்கங்கள் அனைத்தும் இரண்டாந்தர நோக்கங்களாகக் கருதப்பட்டன.

அதிகாரம் தழுவிய பொருளாதாரம், தனியார் தொழில் முயற்சி, முதலாளித்துவம் சார்ந்த பொரு ளாதாரத்தினால் ஏற்படும் அழிவுகள் ஆகியவற்றைத் தடுத்து நிறுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டது. முதலாளித்துவ அங்காடி விலைகளின் மாற்றங்களால் நேரும் பொருளாதார மந்தம் (Economic Depression) முற்றுரிமைகள் (Monopolies), ஏற்றத்தாழ்வுகள், முதலாளித்துவச் சுரண்டல்கள் ஆகியவற்றைக் களை வதை நோக்கமாகக் கொண்டு அதிகாரம் தழுவிய பொருளாதாரம் இயங்கும்.


இதுபோலவே, விலையேற்றம் அல்லது பணவீக் கம் (Inflation) என்ற கடும் சிக்கலையும் தீர்ப்பது ஒரு குறிக்கோளாகும். விலையேற்றம் என்பது எல் லாப் பகுதியினரையும் பாதிக்கத் தக்கது. ஆயினும், குறிப்பிட்ட வருமானமுள்ளவர், ஏழைத் தொழி லாளர், வேளாண்மைக் கூலிகள் ஆகியோர் இச்சிக்க லால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். செருமனி 1923-இல் கடுமையான விலையேற்றத்தால் பாதிக்கப்பட்ட போது, மக்கள் ஓரிணை மிதியடி வாங்க ஒருவண்டிக் காகித நோட்டுகளைக் கொண்டு செல்ல வேண்டிய நிலைமையிருந்தது. பணத்தின் மதிப்பு வீழ்ச்சியுற்று மக்களிடையே மதிப்பற்றுப்போன காரணத்தால், செருமானியர் காகிதப் பணத்தைச் சுருட்டாகப் (Cigar) பயன்படுத்தினர்.

இப்பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களா வன: (1) விரைவான தொழில் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் (2) தொழில்

களைத் தகுந்த இடங்களில் மாற்றியமைத்தல் (3) வேளாண்மையில் புதிய உத்திகளைக் கையாளு தல், தரத்தை உயர்த்துதல் (4) விபத்து நேரிடின் உதவித்தொகை, ஓய்வூதியம் வழங்குதல், (5) பொரு ளாதாரத் தன்னிறைவு காணுதல்.

அதிகாரப் பொருளாதாரத்தின் குறிக்கோள்களை வளமைப் பங்கீட்டின் மூலம் அடையும் முறை: மேற் கூறிய குறிக்கோள்களை அடைவதற்கு நாட்டின் வளங்கள் நல்ல முறையில் பயன்படுத்தப் பெறல் வேண்டும். நாட்டின் வளங்களைப் பங்கிட்டு, அவற் றின் மூலம் உச்ச விளைவுகளை ஏற்படுத்துவது தலைமையாட்சியாளரின் முதன்மை நோக்கமாக இருக்கவேண்டும். இச்சிக்கலைத் தீர்க்கும்போது, முத லில் தலைமை ஆட்சியாளர் பொது நோக்கங்களை வகுப்பார். பிறகு அவர் மையத் திட்டக் குழுவிடம் ஒப்படைப்பார். திட்டக்குழு, நுகர்வுப் பொருள்கள் (Consumer Goods), மூலதனப் பொருள்கள் (Capital Goods) ஆகியவற்றின் தேவைகளை அறிந்து அவற் றின் உற்பத்தியைப் பற்றியும் தேவைப்படும் உற்பத் திக் காரணிகளைப் பற்றியும் அறிந்து, தற்போதைய எதிர்கால உற்பத்திக் காரணிகளின் அளிப்போடு (Supply) ஒப்பிட்டு ஒரு நீண்டகாலத் திட்டத்தைத் தீட்டும். ஆனால், செய்முறையை எளிமைப்படுத்துவதற் காக நீண்ட காலத் திட்டங்கள், வல்லுநர்களின் உதவி கொண்டு குறுகிய காலத் திட்டங்களாக மாற்றிய மைக்கப்படும். இத்திட்டங்களின் இடைக்கால உற் பத்தி இலக்குகள் உறுதிசெய்யப்பட்டுத் தொழிற் சாலைகளின் நிருவாகிகளுக்கு அனுப்பி வைக்கப்படும். நிருவாகிகள் உள்ளீடு, வெளியீடு உற்பத்தி உறவு களை (Input-Output Relations) அறிந்தவர்கள். அவர் கள் திட்டக்குழுவினால் அனுப்பப்படும் குறியீடுகளை மதிப்பிட்ட பின், அவற்றின் வாய்ப்புக் கூறுகள் தொடர்பான அறிவுரைகளைத் திட்டக்குழுவிற்குத் திருப்பி அனுப்புவர். இவ் அறிவுரைகளின் அடிப்படை யில் திட்டக்குழு இறுதித் திட்டத்தை உருவாக்கும். இத்திட்டங்கள் ஏற்புடையதாயின், அவை அலுவலக உற்பத்தித் திட்டங்களாக மாறுகின்றன. திட்டத் தின் விரிவான உற்பத்தி இலக்குகள் கட்டாய அறி வுரைகளாக மாறுகின்றன. உண்மையில் அவை ஆணை களாக (Commands) இருப்பதால், அவற்றைச் சிறந்த முறையில் நிறைவேற்றுவது ஒவ்வொருவரின் கடமை யாகிறது. பின்னர், மையத் திட்டக்குழு திட்டங்களின் குறியீடுகள் எவ்வாறு எட்டப்படுகின்றன என்பதைக் கூர்ந்து கவனித்து எங்கெங்குச் சமமின்மை (Imbalances) ஏற்படுகிறதோ, அங்கெல்லாம் அதனை நீக்கு வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் தேவையான உற்பத்திக் கருவிகளைப் பெறுவதற்கான வாங்கும் திறன் வழங்கப்படும். இத் திறன் தொழில் நுட்பத் தைக் கொண்டும் திட்டப் பங்களவைக் (Plan Quota) கொண்டும் உறுதி செய்யப்படும். வாங்கும் திறன் (Purchasing Power) உதவிகொண்டு ஒவ்வொரு தொழில் நிறுவனமும் உற்பத்திக் காரணிகளை அமர்த்தித் தம் உற்பத்தியைத் தொடங்க வேண்டும். ஆனால், தங்கள் முயற்சியில் ஒரு முக்கியக் கருத்தை மனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, உற்பத்திப் பண்டங்களை மிகக் குறைந்த செலவில் உருவாக்க வேண்டும். நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பண்டங் களுக்கு விலையைத் திட்டக்குழு முன்னதாகவே வரை யறை செய்துவிடுகிறது. அந்த விலையோடு நிறுவனத் தின் இறுதிநிலைச் செலவு (Marginal Cost) சம மாகும்போது, அந்நிறுவனத்தின் சராசரிச் செலவு (Average Cost) தனது குறைந்த அளவை எட்டும். அந்த அளவு வரும்வரை ஒவ்வொரு நிறுவனமும் தனது உற்பத்தியைப் பெருக்க வேண்டும். எனவே, இவ்வமைப்பில் செயல்படும் அரசுத் தொழில் நிரு வாகிகள் ஏறக்குறைய நிறைவுப் போட்டியில் காணப் படும் தனி நிறுவனங்களைப் போலவே நடந்துகொள்ள வேண்டியிருக்கும். எவ்வாறு ஒரு நிருவாகி, தன் பண்டங்களைக் குறைந்த சராசரிச் செலவில் உற்பத்தி செய்கிறார் என்பதைப் பின்வரும் நிறைவுப் போட்டி விளக்கப் படத்தின் மூலம் உணர்த்தலாம்.




அதிகாரப் பொருளாதாரம்

மேலே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் OX என்ற படுகிடைக்கோடு உற்பத்தியைக் காட்டுகிறது. OY என்ற செங்குத்துக்கோடு பண்டத்தின் விலையையும் செலவையும் காட்டுகிறது. PR என்ற படுகிடைக் கோடு உற்பத்தியின் எல்லா நிலையிலும் விலை ஒன்றே என்பதைக் காட்டுகிறது. இவ்விலை, திட்டக் குழு வினால் முடிவு செய்யப்படுவதால் இதனை மாற்று வதற்குத் தொழில் நிருவாகிக்கு உரிமையில்லை தொழிற்சாலையின் உற்பத்திச் செலவுகள், ATC என்ற சராசரி மொத்தச் செலவு வளைகோட்டின் மூலமாகவும், MC என்ற இறுதிநிலைச் செலவு வளை

கோட்டின் மூலமாகவும் காட்டப்பட்டுள்ளன. OM என்ற உற்பத்தி நிகழும்போது, பண்டத்தின் சராசரிச் செலவு மிகக் குறைந்த அளவை எட்டுகிறது. அந்த உற்பத்தியில் இறுதிநிலைச் செலவும் சராசரிச் செலவும் சமப்படுகிறது. உற்பத்தியின் இந்நிலையே உகந்த அளவு உற்பத்தி (Optimum Output) எனப்படுகிறது. உற்பத்தி அளவும் ஏறக்குறைய திட்டக்குழு வரையறுத்த உற்பத்தியாகவே இருக்கும். பொருள்களை விற்பதன்மூலம் கிடைக்கும் வருமானத்தின் துணை கொண்டு ஒவ்வொரு தொழில் நிறுவனமும் தனது பணநெகிழ்வுத் தன்மையைப் (Liquidity) பாதுகாத்துக் கொள்ளும். அரசு வங்கி எல்லா நிறுவனங்களின் வரவு செலவுக் கணக்குகளைத் தன்னகத்தே வைத்திருப்பதனால், நிறுவனங்கள் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட வாங்கும் திறனைத் திட்டக் குறிக்கோளுக்காகப் பயன்படுத்தி உள்ளனவா? இல்லையா என்பதைக் கண்காணிக்க இயலும்.

இரண்டாம் சிக்கலான காரணி விகிதங்களையும் (Factor Proportions) குழுவே தீர்மானிக்கும். தொழிற் சிறப்புக்குத் தக்கவாறு உழைப்பு மிகுதியாகத் தேவைப்பட்டு எந்திரங்கள் குறைவாகத் தேவைப்பட்டால், அதற்கேற்ப விகிதங்கள் முடிவு செய்யப்படும். எப்படியிருப்பினும், தொழிலாளர்களுக்குத் தீங்கு ஏற்படா வகையில் புதிய நுட்பங்களைப் பயன்படுத்தி அதிகாரப் பொருளாதாரத்தில் உற்பத்தி பெருக்கப்படும். மூன்றாவது, இறுதியான மூலதனக் குவிப்புப் பற்றியும் திட்டக் குழுவே முடிவு செய்யும். நுகர்வின் அளவைக் குறைப்பதன் மூலம் நாட்டின் முதலீட்டைப் பெருக்குவதற்கான மூலதனக் குவிப்பை (Capital Accumulation) குழு வலியுறுத்தலாம். நுகர்வைக் குறைப்பதற்கு, நுகர்வுப் பொருள்களின் விலையை உயர்த்தலாம். அதற்காக விற்பனைப் புரள் வரியை (Turn-over Tax) மக்கள் மீது சுமத்தலாம். இதன் மூலம் அரசு பெறும் தொகை எதிர்கால முதலீட்டிற்காக ஒதுக்கப்படும்.

தொழிற்சாலைகளிடையே இருக்க வேண்டிய சமநிலை அமையக் குழுவே முடிவு செய்கிறது. தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் உற்பத்திக் காரணிகளின் அளவு, அவற்றாலான உற்பத்தியின் அளவு ஆகியவை குறித்துப் புள்ளி விவரங்கள் முதலில் திரட்டப்படும். அவ்விவரங்களின் அடிப்படையில் ஒவ்வொரு தொழிற்சாலையின் கையிருப்பும் கணக்கிடப்படும். இக்கையிருப்பின் உதவியால் எந்தெந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு உற்பத்திக் காரணிகள் அல்லது உற்பத்தி தேவைப்படும் என்ற நிலையறிந்து, அனைத்துத் தொழிற்சாலைகளின் சமநிலை கொணரப்படும். நாட்டின் வருமானத்தை எவ்வகையில் பகிர்ந்தளிப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பும் மையக் குழுவிடம் ஒப்படைக்கப்படும். இப் பொருளாதாரத்தில் தனியார் உடைமை ஒடுக்கப்படுவதால் வட்டி, ஆதாயம், வாரம் என்ற வருவாய்கள் (பயன்கள்) மீது கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். சமநிலைப் பொருளாதாரத்தில் இவ் வெகுமதிகள் தோன்றா. வருமானம், கூலியாகி உழைக்கும் இனத்திற்குப் போக மீதம் அரசின் எதிர்கால முதலீட்டிற்காக வைத்துக் கொள்ளப்படும். எனவே, தனியார் பொருளாதாரத்தில் காணப்படுவது போல வருமானம் பிரித்தளிக்கப்படாது.

அதிகாரப் பொருளாதாரம் மனிதனால், மனிதத் தேவைக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் அமைப்பாகும். எனவே, அவற்றில் நிறைகளும் குறைகளும் இருப்பது இயற்கையே. இவ் அமைப்பு, எங்கெங்கு நிலை பெற்றிருக்கிறதோ அங்கெல்லாம் வறுமையில் வாடும் மக்களுக்கு நல்வாழ்வை அளிக்க முன்வருகிறது. இது எல்லாத் தரப்பு மக்களின் நலனையும் காக்கும் ஓர் அமைப்பாகும். பொதுமக்களின் நலம், 'ஒவ்வொருவரும் ஒவ்வொருவரது நலத்திற்காக' என்ற உன்னத அடிப்படையில் இயங்குகிறது. எனவே, எளிய மனிதனுக்கு இவ் அமைப்பு ஒரு நற்பேறாக அமைகிறது. பல பேரரசுகள் இந்த அமைப்பின் மூலமாகத்தான் தங்களது அரசியல் கூட்டமைப்பையே உருவாக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக, முதல் உலகப் போரில் அவமானப் படுத்தப்பட்ட செருமனி, இரண்டாம் உலகப் போரில் தலைநிமிர்ந்து நின்று உலகிற்கே ஓர் அறைகூவல் விடுத்தது. அதுபோன்றே, பாகிசுதான் பொருளாதாரம் இராணுவ ஆட்சிக்கு வந்த பின்னரே தன் பொருளாதார மறுமலர்ச்சியை எட்டியது. அயூப்கான் ஆட்சியில் இருந்த 10 ஆண்டுகளை (1958-1968) பாகிசுதானின் சீரமைப்புப் பத்தாண்டுகள் என்றும், இந்தக் காலத்தில்தான் பாகிசுதானில் ஒரு பொருளாதார அற்புதம் நிகழ்ந்தது என்றும் அறிஞர் கூறுகின்றனர். பாகிசுதானின் தேசிய வருமானமும் முன்பு இருந்த இரண்டு விழுக்காட்டைவிட 5.4 விழுக்காடாக உயர்ந்தது. சோவியத்து உருசியா, சீனா ஆகிய நாடுகளின் அரசியல் சிறப்புக்கு அவர்கள் ஏற்படுத்திக் கொண்ட அதிகாரப் பொருளாதார முறையே முக்கியக்காரணமாகும்.

இருப்பினும், இந்த அமைப்பின் நீண்ட நாள் விளைவுகள் ஒரு கேள்விக் குறியாகத்தான் உள்ளது. இந்த அமைப்பு பெரும்பாலும் அச்சம், பாதுகாப்பின்மை ஆகியவற்றின் பயனாகத்தான் ஏற்பட்டது. அது ஒரு நெருக்கடி காலச் சித்தாந்தம் மட்டும்தான். அந்த நேரத்தில் மக்கள் தங்களின் அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுத்து, நாட்டின் நலனுக்காகப் பாடுபடுவது இயற்கை. ஆனால், இத் தியாகத்தை மக்கள் நீண்ட நாட்களுக்குச் செய்வார்களா? என்

பதே இந்தப் பொருளாதாரத்தின் வெற்றியைக் குலைக்கக் கூடும். மேலும், அதிகாரங்கள் ஒருவரிடம் குவிந்திருப்பதால், அவருடைய தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் நாட்டில் பஞ்சத்தையோ போரையோ உண்டாக்கலாம். மேலும், திட்டமிடுவதில் பல சிக்கல்கள் உள்ளன. எனவே, அதிகாரப் பொருளாதாரம் சிறந்ததா? இல்லையா என்ற கேள்வி கொள்கைச் சிக்கல் உடையதாகும். எம். இரா.

துணை நூல்கள்:

**Dickinson, H D.**, "Economics of Socialism", **Oxford** University Press, New York, 1939.

**Gustav Stoeper**, "German Economy 1870-1940", Reynal and Hitch Cock, New York, 1940.

**Halm, G.N.**, "Economic Systems: A Comparative Analysis", Oxford and I.B.M. Publishing Company, Calcutta, 1978.

**Maurice Dobb**, "Soviet Economic Development: Since 1917", International Publishers, New York, 1948.

**Schumpeter J.A.**, "Capitalism, Socialism & Democracy", Harper and Row Publishers, New York, 1942.

**William N. Loucks**, "Comparative Economic Systems", Harper and Row Publishers, New York, 1965.

**அதிகார வரம்பு**: நீதிமன்றங்களின் அதிகார எல்லையை இரு கூறுகளாகப் பிரிக்கலாம். ஒன்று நிதிவழி அதிகார வரம்பு (Pecuniary Jurisdiction); மற்றொன்று நிலவரை அதிகார வரம்பு (Territorial Jurisdiction). ஒவ்வொரு நீதிமன்றமும் இந்த இரு வகைப்பட்ட அதிகார எல்லைக்குள்தான் இயங்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தொகைக்கென்றோ சொத்தின் குறிப்பிட்ட மதிப்பிற்கென்றோ அமையும் நீதிமன்ற அதிகாரம் (வழக்கு) மதிப்பு முறை அதிகார வரம்பு எனப்படும். ஒரு மாவட்டம் அல்லது இதற்கு உட்பட்ட எல்லைக்குள் மட்டுமே வழக்குகளை ஏற்றுத் தீர்ப்புகளையும் உத்தரவுகளையும் நீதிமன்றம் நிறைவேற்ற இயலும் என்ற வரம்பு, 'நிலவரை அதிகார வரம்பு' அல்லது 'வட்டார அதிகார வரம்பு' எனப்படும். இந்த இருவகை அதிகார எல்லையைத் தாண்டி எந்த ஒரு வழக்கும் அந்தக் குறிப்பிட்ட நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்பட்டதன்று. இவ்விதமாக நடைமுறையிலிருக்கும் அதிகார எல்லை, வரையறுக்கப்பட்ட அதிகார எல்லை (Limited Jurisdiction) என்று வழங்கப்படுகிறது. வரையறுக்கப்படாத அதிகார எல்லை வரம்பில்லா அதிகாரம் என்று கூறப்படும்.

இந்திய நீதிமன்றங்கள் மொத்தத்தில் செலுத்துகின்ற அதிகார வரம்பைக் கீழ்க்கண்டவாறு பல்வேறு வகையாகப் பிரிக்கலாம். முதலேற்பு அதிகார வரம்பு (Original Jurisdiction) என்பது ஒரு நடவடிக்கையை முதல் எடுப்பில் ஏற்கும் நீதிமன்றத்தின் அதிகாரம். இந்த அதிகார வரம்பில் முதல் வழக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேர்முக விசாரணைக்கு உட்பட்டவை. பெரும்பான்மையாக எல்லாத் தரப்பட்ட நீதிமன்றங்களும் இந்த முதலேற்பு அதிகார வரம்பு கொண்டிருக்கின்றன. ஆனால், அது அதற்குரிய நிதிநிலை அதிகார வரம்புக்கும் வட்டார அதிகார வரம்புக்கும் கட்டுப்பட்டுச் செயற்படும்.

மேலேற்பு அதிகார வரம்பு (Appellate Jurisdiction) கீழ் நீதிமன்றங்களின் தீர்ப்புகள்மீது வரும் மேல்முறையீடுகளை வளர்ப்பதற்குள்ள அதிகாரம். இந்த மேலேற்பு அதிகார வரம்பைச் செலுத்துவதில் மேல் வழக்காக விசாரணை நீதிமன்றத் தீர்ப்பை (Trial Court) எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்டவற்றை ஆய்ந்து முடிவு கூறவேண்டும். மேல் வழக்கை ஆய்வதில் நேரடி விசாரணையில்லாததால், ஏற்கெனவே எடுக்கப்பட்ட சான்றுகளைக் கொண்டு, அதனடிப்படையில் முடிவு கூறப்படும். இந்த அதிகாரம், சமூக உரிமை நடைமுறைச் சட்டத்தின் 96-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. இதை அடுத்து இரண்டாவது மேல் வழக்குக்கான அதிகார வரம்பு உயர்நீதிமன்றத்திற்கு மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றது (பிரிவு 100).

இந்திய உச்ச நீதிமன்றத்தின் முதலேற்பு அதிகார வரம்பு, மேல் வழக்கு விசாரணை அதிகார வரம்புகள் குறித்துச் சமூக உரிமை நடைமுறைச் சட்டத்தின் 109, 110-ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது; மேலும் இந்திய அரசியல் சட்டத்தின் 132, 133, 136-ஆகிய பிரிவுகளிலும் கூறப்பட்டுள்ளது.

இந்திய நீதிமன்றங்களில் உயர்ந்தது நாட்டின் தலைநகரான புதுதில்லியில் இயங்கிவரும் உச்ச நீதிமன்றம். இந்நாட்டு மக்களின் உரிமையியல் வழக்குகளிலும் குற்றவியல் வழக்குகளிலும் அரசியல் சட்டம் பற்றிய வழக்குகளிலும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானது.

உச்ச நீதிமன்றத்திற்குக்கீழ் பலதரப்பட்ட நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

நீதிமன்றங்கள் அதிகார வரம்பின் அடிப்படையில் பல வகைப்படும்.

1. வரையறுக்கப்பட்ட அதிகாரமுள்ளவை.
2. வரையறுக்கப்படாத அதிகாரமுள்ளவை.
3. மேல் முறையீட்டு நீதிமன்றங்கள்.

4. தனி நீதிமன்றங்கள்.
5. சிறப்பு அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள்.

**வரையறுக்கப்பட்ட அதிகாரமுள்ள நீதிமன்றங்கள்:** உரிமையியல் வழக்குகளில் வழக்கைப் பற்றிய சொத்து மதிப்பு உரூ. 15,000/-உம் அதற்குக் குறைவாகவும் உள்ள சொத்துகளைப் பற்றிய வழக்குகள் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்படவேண்டும்.

குற்றவியல் வழக்குகளில் ஓர் ஆண்டு தண்டனை பெறத்தக்க குற்றங்கள், இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிபதியால் விசாரிக்கப்படவேண்டும். குற்றவியல் வழக்குகளில் மூன்று ஆண்டுகள் தண்டனை பெறத்தக்க குற்றங்கள் முதல் வகுப்புக் குற்றவியல் நீதிபதியால் விசாரிக்கப்படவேண்டும்.

**வரையறுக்கப்படாத அதிகாரமுள்ள நீதிமன்றங்கள்:** உரிமையியல் வழக்குகளில் உரூ. 15,000/-க்கு மேல் சொத்து மதிப்புள்ள வழக்குகள் உரிமையியல் சார்பு நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்படவேண்டும். குற்றவியல் வழக்குகளில் மாவட்டக் குற்றவியல் நீதிபதி, மரணதண்டனைவரை விதிக்கப்படத் தக்க குற்றவியல் வழக்குகளை ஏற்று நடத்த அதிகாரம் உண்டு.

**மேல் முறையீட்டு நீதிமன்றங்கள்:** உரிமையியல் வழக்குகளில் மாவட்ட உரிமையியல் மன்றத்தின் தீர்ப்பின் பேரில், மாவட்ட உரிமையியல் சார்பு நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்யலாம்.

உரிமையியல் சார்பு நீதிமன்றங்களின் தீர்ப்பின் பேரில் உரூ. 50,000/- சொத்து மதிப்புள்ள வழக்குகளைப் பொறுத்து, மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு உண்டு.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் மேல் முறையீட்டுத் தீர்ப்பின் பேரில், சட்ட நுணுக்கங்கள் இருப்பின் அவற்றைப் பொறுத்து உயர் நீதிமன்றத்திற்கு இரண்டாவது மேல் முறையீடு செய்ய வாய்ப்புண்டு.

உரிமையியல் சார்பு நீதிமன்றங்களின் தீர்ப்பின் பேரில் உரூ. 50,000/-க்கு மேல் மதிப்புள்ள வழக்குகளைப் பொறுத்து உயர்நீதிமன்றத்திற்கு முதல் மேல்முறையீடு உண்டு. மாவட்டக் குற்றவியல் நீதிபதியின் குற்றவியல் வழக்குகள் தீர்ப்பின் பேரிலும் உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு உண்டு.

உரிமையியல் வழக்கு மேல் முறையீடுகளில் உரூ. 20,000/-க்குக் கீழ் மதிப்புள்ளவை ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியால் விசாரிக்கப்படும். அந்தத் தீர்ப்பின் பேரில் இரு நீதிபதிகள் கொண்ட குழுவிற்கு மேல் முறையீடு செய்யலாம்.

உரிமையியல் வழக்குகளில் உரூ. 20,000/-க்கு மேல் சொத்து மதிப்புள்ள வழக்குகள் இரு நீதிபதிகள் கொண்ட குழுவால் விசாரணை செய்யப்படும்.

உயர்நீதிமன்றத்தின் உரிமையியல் தீர்ப்புகளின் பேரிலும் குற்றவியல் தீர்ப்புகளின் பேரிலும் உச்ச நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டிய சட்ட நுணுக்கங்கள் உண்டு என்று உயர்நீதிமன்றமோ உச்ச நீதிமன்றமோ கருதினால் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்ய வாய்ப்பு உண்டு.

**தனி நீதிமன்றங்கள்:** ஒரு சில வழக்குகளைத் தீர்வு செய்யத் தனித்தனி நீதிமன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. தொழில் வழக்குகளைத் தீர்க்க ஏற்படுத்தப்பட்ட 'தொழில் வழக்கு மன்றம்' போன்றவை தனி நீதிமன்றங்களாகும். பல சிறப்புச் சட்டங்களின் கீழ்த் தொடரப்பட்ட வழக்குகளைத் தீர்வு செய்ய இத்தகைய நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**சிறப்பு அதிகாரம் பெற்ற நீதிமன்றங்கள்:** சட்ட விதிகளால் தீர்க்க இயலாத தவறுகளைத் தீர்க்கும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உண்டு. இத்தகைய வழக்குகள் ஓர் உயர்நீதிமன்ற நீதிபதியாலோ முக்கிய வழக்காக இருக்குமானால் இரு நீதிபதிகளாலோ விசாரிக்கப்படும்.

ஒரு நீதிபதியின் தீர்ப்பின் பேரில் இரு நீதிபதிகள் கொண்ட குழுவிற்கு மேல் முறையீடு உண்டு.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின்பேரில் உச்ச நீதிமன்றத்திற்கு மேல் முறையீடும் உண்டு.

இவை தவிர உயர் நீதிமன்றத்திற்குக் கப்பல் போக்குவரத்தைப் பற்றிய வழக்குகளை விசாரிக்க அதிகாரம் உண்டு.

**நீதிமன்றங்களின் அதிகார வரம்பின் அமைப்பைக் காட்டும் அட்டவணை:**

உரிமையியல்

உச்ச நீதிமன்றம்
↓
உயர்நீதிமன்றம்
↓
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
↓
உரிமையியல் சார்பு நீதிமன்றம்
↓
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
(சொத்து மதிப்பு உரூ. 15,000/- வரை)

குற்றவியல்

உச்ச நீதிமன்றம்
↓
உயர் நீதிமன்றம்
↓
மாவட்டக் குற்றவியல் நீதிமன்றம்
↓
முதல் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றம்
↓
இரண்டாம் வகுப்புக் குற்றவியல் நீதிமன்றம்

ஆர்.செ.

**அதிகார வருக்கம்** என்பது, அரசாங்கத்தின் நிருவாக அமைப்பைக் குறிக்கக் கூடியதாகும். இஃது அரசாங்க நிருவாகத்தில் இடம்பெறுகிற அரசாங்கத் துறைகள், அரசாங்க இணையங்கள், அரசாங்கச் செயலாண்மைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. அதிகார வருக்கம் (Bureaucracy) என்பது, பரந்தவகையில் பல பொருள்தரும் வகையில் பயன்படுத்தப் படுவதும் உண்டு. எடுத்துக்காட்டாகச் சமூகவியலில் இது, பொது அமைப்புகளின் அதிகாரங்களைப் பயன்படுத்துகிற விதத்தையும், அமைப்பின் செயல்களின் தனித்தன்மையையும் விளக்கும் வண்ணம் பயன்படுத்தப் படுகிறது. மாக்சு வீபர் (Max weber) அதிகார வருக்கத்தைச் சமூக அமைப்பாகக் கருதி, அதற்குக் குறிப்பிட்ட பண்புநலன்கள் உள்ளன என வரையறுத்துள்ளார். நிருவாகத் திறமைகளைச் சமூக நிறுவனம், அதிகார வருக்கம் ஆகியவை மிகுதியாக்கும் என்பது மாக்சு வீபரின் கருத்து. பீட்டர் பிளா (Peter Blau) இக்கருத்தைச் சிறிது மாற்றியமைத்து, நிருவாகத் திறமைகளை உயர்த்தும் நிருவாக அமைப்பு அதிகார வருக்கம் என்கிறார். கூட்டான பெரிய நிருவாக அமைப்புகளில் திறமையையும் நிலைத்தன்மையையும் பாதுகாக்க உதவும் ஒருவகை நிருவாக அமைப்பு முறைதான், அதிகார வருக்கம் எனப் பிரான்சிசு (Francis),இசுடோன் (Stone) ஆகியோர் கூறியுள்ளனர். ஆகவே அதிகார வருக்கம் என்பது, அரசுப் பணியின் திறமையை உயர்த்துவதில் தொடர்புடையது என்பதால், அரசுப் பணியின் திறமையின்மையை வெளிப்படுத்தி, அதன்மூலம் நிருவாகத் திறமையை உயர்த்த முயற்சி செய்யும் வேறுபட்ட அரசியல் முறைகளைக் குறிப்பிடுவது, அதிகார வருக்கமென அரசியல் அறிவியல் கூறுகிறது. அரசியல் கட்சிகள், சட்டமன்ற அவைகள், அரசாங்கத்தின் ஆட்சித்துறை ஆகியன அதிகார வருக்கமென அரசியல் அறிவியல் விளக்குகிறது.

அரசாங்கப் பணியாளர்களை அரசனுக்குத் தரவல்ல உதவியாளர்கள், அரசாங்கத்திற்குப் பணிபுரியக் கூடிய அலுவலர்கள் ஆகிய இருதிறத்தாரும் தனித் தனியாகப் பிரியாமல், அரசனுடைய அரசாங்கத்தில் பணிபுரிந்தனர். இதுதான் அன்றைய நிருவாக முறை தொடக்கக்கால நிருவாகம் இன்றுபோல் ஓரிடத்தில் தலைநகர் அமைத்து அங்கிருந்து ஆட்சி செய்யப்படவில்லை. மாறாக, அரசன் ஒவ்வோர் ஊராகச் சென்று நிருவாகத்தை நடத்தி வந்தான். நீதி வழங்கலும் நிதி வசூலித்தலும் அரசனுடைய தலையாய பணிகளாக இருந்தன. அவனுடைய உதவியாளர்களும் தொடர்ந்து பயணம் செய்தனர். அரசனுடைய தேவைகளை நிறைவு செய்வதும் நாட்டை ஆள்வதும் இணைந்தே சென்று கொண்டிருந்தன. மேலும் அப்போது போக்குவரத்தும் பிற தொடர்புகளும் வளர்ச்சி பெறவில்லை.

அரசன் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று நிருவகிப்பது என்பது இயலாததாயிற்று. நிருவாகமும் வளர்ந்துகொண்டே இருந்ததால் ஊர் விட்டு ஊர் செல்லும் அலுவலர்களின் மூலமாக நிருவகித்தல் முடியாமலிருந்தது. இக்காரணங்களால் துறைகளின் தலைமையிடங்கள், குறிப்பிட்ட இடங்களில் அமைக்கப்பட்டு அவ்விடங்கள் ஒவ்வொன்றிலும், ஒரு குறிப்பிட்ட சில வேலைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவ்விடங்களில் பணியாற்றிய பணியாளர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வேலைகளைச் செய்து, அவற்றை எழுத்து வடிவமாக ஆவணங்களில் (Records) பதிவு செய்து பாதுகாத்தனர். எனவே, இவ்வாறு பல்வேறு இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் என்றும், அரசனுடன் சென்று அவனுக்கு உதவி செய்பவர்கள் என்றும் இருவகையினராக அலுவலர்கள் பிரிக்கப்பட்டனர். துறைகளைப் பல்வேறு இடங்களில் நிலையாக முதன்முதலாக அமைத்த அரசன் இரண்டாம் என்றி.

நிதித்துறை, முதன்முதலாகத் தனியாக இயங்கத் தொடங்கிய துறையாகும். நிருவாகம் நிலையாகப் பல இடங்களிலிருந்து செய்ய வழிவகுத்தாலும், திறமையான பணியாளர்கள் கிடைக்கவில்லை. பணியினைத் திறம்பட நடத்தப் போதுமான மூலப் பொருள்கள் (Resources) கிடைக்காததால், நிருவாகப் பணி தொடக்க நிலையில்தான் இருந்தது. இருப்பினும் பணியாளர்கள் எல்லாவகைச் செயல்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இதனால் மிகுதியான சிக்கல்கள் எழுந்ததால் நிதித்துறை தனியாகப் பிரிக்கப்பட்டது.

நிதித்துறையில் முதன் முதலாக மத குருமார்கள் அரசனுடைய அலுவலகச் செய்திகளை எழுதும் பணியில் ஈடுபட்டார்கள். மதத் தொடர்பான வேலைகள் முடிந்த பின்னர், இவர்கள் நிதித்துறைப் பணியில்

ஈடுபட்டார்கள். மத குருமார்களுள் ஒருவர் வேந்தராகத் (Chancellor) திகழ்ந்தார். இவர்தாம் அரசனுடைய முத்திரையைப் பாதுகாத்தார். அஞ்சல்போக்குவரத்துகளில் அரசனுடைய முத்திரை இன்றியமையாது தேவைப்பட்டதால், இவர் நம்பிக்கைக்குரிய எழுத்தராக மாறினார். நாளடைவில் இவர்கள் அரசன் சார்பில் கடிதங்களுக்குப் பதில் எழுதக் கூடியவர்களாகவும் மாறினர். பின்னர் இவ்வலுவலகம் தலைமை அமைச்சர் அலுவலகமாக மாறியது. இது போலவே பல துறைகளிலும் பிற செயலாண்மைகளும் அரசாங்கத்தில் ஏற்படுத்தப்பட்டன.

அதிகார வருக்கத்தை நான்கு வகைகளாகப் பிரிக்கலாமென மார்க்சு (Marx) கூறுகிறார். அவை காவல் அதிகார வருக்கம், இன அதிகார வருக்கம், மரபார்ந்த ஆதரவு அதிகார வருக்கம், தகுதி அதிகார வருக்கம் ஆகியனவாகும். காவல் அதிகார வருக்கம் பொதுமக்களின் நலன்களுக்குக் காவலாகத் திகழக் கூடியதாகும். இது சீனாவில் சுங் மரபு தொடங்கிய காலத்தில் (கி.பி. 960) நிலவியிருந்தது; பிரெசியாவில் (Prussia) கி.பி. 1640-இலிருந்து 1740 வரை நிலவியிருந்தது. ஆனால் இந்த அதிகார வருக்கம், பொதுமக்கள் கருத்தினின்று தனித்தும் ஏனென்று கேளாத நிலையுடையதாயுமிருந்தது. உயர் இனத்தவர்கள் மட்டுமே நிருவாகியாக வரலாமென்ற நிலையை உருவாக்கியது இன அதிகார வருக்கம். இதனால் இந்தியாவில் பிராமணர்கள், சத்திரியர்கள் ஆகியோர் மட்டுமே நிருவாகத்திற்கு வர முடிந்தது. இதனால் மக்களோடு நிருவாகம் இயைந்து செல்லவில்லை. மூன்றாவதாக மரபார்ந்த ஆதரவு அதிகார வருக்கத்தில், அரசாங்கப் பதவிகள் தனிச்சலுகையாகவோ அரசியல் பரிசளிப்பாகவோ வழங்கப்பட்டன. ஆளும் கட்சி தனது கட்சிக்காரர்களுக்கு உயர் பதவிகளை வழங்குவது, மரபார்ந்த ஆதரவு அதிகார வருக்கம். இதனால் நிருவாகத்தில் பொது நலனைக்காட்டிலும் கட்சிக் கண்ணோட்டம் மேலோங்கியது. அமெரிக்கக் குடியரசுத் தலைவர் காரிபீல்டு இதற்குப் பலியானார். எனவே புதிய அதிகார வருக்கம் உருவானது. இதுதான் தகுதி அதிகார வருக்கம். அரசாங்கப் பணியில் திறமையானவர்களைச் சேர்க்க வேண்டுமென்று தகுதி அடிப்படையில் ஆள் சேர்ப்பு நடைபெற்றது. இது குறித்து மாக்சு வீபர் விளக்கமாகக் கூறியுள்ளார்.

மாக்சு வீபர் அதிகார வருக்கத்தின் தன்மைகளைக் கீழ்க்கண்டவாறு விவரிக்கின்றார்: ஒரு நிருவாக அமைப்பிலுள்ள பணியாளர்கள், ஒப்பந்தத்தாலோ கட்டாயத்தாலோ சில சட்டவரையறைகளைத் (Legal Norms) தங்களுக்குள் வரையறுத்துக் கொண்டு, அவற்றை ஏற்றுச் செயல்படுத்துகின்றனர். இச்சட்ட வரையறைகள், நிருவாக அமைப்புத் திறமையாகச் செயற்படுவதற்காக உருவாக்கப்படுகின்றன. இச்சட்டவரையறைகளைப் பணியாளர்கள் ஏற்பதால், அவர்களுக்குள் கீழ்ப்படிதல் என்ற தன்மை உருவாகிறது. இதனால் பணியாளர்கள் சட்டத்தின் கட்டுப்பாடுகளுக்கு இலக்காகின்றனர். இக்கட்டுப்பாடுகள் எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உருவாக்கப்படுகின்றன. இக்கட்டுப்பாட்டினைப் பணியாளர்கள் ஏற்றுக்கொள்ளாமல் நடுநிலை வகித்தாலும் பரவாயில்லை; ஆனால் மனநிறைவில்லாமலோ ஏற்றுக் கொள்ளாமலோ இருக்கக்கூடாது. நிருவாக அமைப்பில் அதிகாரம்பெற்ற ஒருவர் அலுவலகத்திற்கு வந்துவிட்டால் அவர் ஆணைகள் இட அதிகாரம் பெற்றவராகி விடுகிறார். அவர் நிருவாக அமைப்பின்கண் உள்ள பிறரோடு ஒப்புநோக்கும்போது பதவியிலும் சிறிது உயர்வு பெற்றவராகி விடுகிறார். இருப்பினும், அவர் தம்முடைய சொந்த விருப்பங்களை நிறைவேற்றத் தனிப்பட்ட ஆணைகளை வழங்க முடியாது. ஆனால் அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்ற ஆணையிடும் அதிகாரம், ஆளில்லாத் தன்மையில் உருவாக்கப்படுகின்றது. இந்த ஆளில்லாத்தன்மை அதிகாரம், அமைப்பின் அதிகாரிகளுக்கு மட்டுமன்று, தேர்தல்மூலம் தேர்ந்தெடுக்கப்படும் தலைமைப் பதவிகளுக்கும் பொருந்தும். அமைப்பின் ஆளில்லாத் தன்மையால்தான் பணியாளர்கள் அவர்களுக்கு மேலுள்ள அதிகாரிகளின் ஆணைகளுக்குக் கட்டுப்படுகின்றனர். தனிப்பட்ட அதிகாரிக்குப் பணியாளர்கள் கீழ்ப்படிவது கிடையாது. அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்குமிடையே உள்ள தொடர்புகளைச் சட்டப்படி வரையறுத்து நன்முறையில் நடைபெறச் செய்யக் கீழ்க்கண்ட அம்சங்கள் இடம்பெற வேண்டுமென மாக்சு வீபர் கூறுகின்றார். அலுவலகப் பணிகள் வரையறுக்கப்பட்டு முறையாகத் தொடர்ந்து செய்யப்பட வேண்டும். அலுவலகப் பணிகள் ஒவ்வொன்றும் செயல்களின் தன்மையில் பிரிக்கப்படுவதால், ஒவ்வொரு செயலைச் செய்யவும் பொருத்தமான அதிகாரங்கள் ஒவ்வொரு பிரிவிற்கும் கொடுக்க வேண்டும். அலுவலகப் பணிகள் பிரிக்கப்படுவதால் வேலைப் பங்கீட்டுமுறை வளர்கிறது. வேலைப்பங்கீட்டின் மூலம் தனித்தன்மை வளரும். ஒவ்வொரு செயலைச் செய்யவும் பொருத்தமான அதிகாரங்கள் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்படுவதால், பணியாளர்கள் வேலை செய்ய மறுக்கும்போது அவர்களைக் கட்டாயப்படுத்தி, வேலையைச் செய்யவைக்கும் அதிகாரத்தையும் அதிகாரிகள் கொண்டிருக்க வேண்டும். இதனையே நிருவாக உறுப்பு (Administrative Organ) என்பர்.

குடியரசுத்தலைவர், அமைச்சரவை போன்றவை நிருவாக உறுப்பில் அடங்கும். நிருவாக அமைப்பில் அலுவலகங்கள் அடுக்கு வரிசையாக ஏணி போல்

ஒன்றின்கீழ் ஒன்றாக அமைப்பு முழுவதையும் இணைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு அலுவலகமும் அதற்குக்கீழ் உள்ள அலுவலகத்தைக் கண்காணிக்கவும் கட்டுப்படுத்தவும் கூடிய பொறுப்பினைப் பெற்றிருக்க வேண்டும். அமைப்பின் உயர் அலுவலகங்கள், அதன் கீழ் அலுவலகங்களின் குறைபாடுகளைக் களைவதாகவும் மேல் விசாரணை (Appeal) செய்யும் இடங்களாகவும் இருக்க வேண்டும். அமைப்பின் பணிகளைச் செய்வதால், அந்த ஒழுங்கு விதிகள் தொழில் நுட்பம் நிறைந்தனவாகவோ சட்டப்படி செய்யப்பட்டனவாகவோ இருக்க வேண்டும். எனவே இவ்வொழுங்கு விதிகளைச் செயற்படுத்தப் பயிற்சி பெற்ற திறமையாளர்கள் இருக்க வேண்டும் அமைப்பில் தகுதி நிறைந்தவர்கள் இருந்தால்தான் அமைப்புத் திறமையாகச் செயல்பட முடியும். இது நிருவாக அமைப்புக்கு மட்டுமன்று; அரசியல், சமயம், பொருளாதாரம் மற்றும் எல்லா அமைப்புகளுக்கும் பொருந்தும். அமைப்பில் இருக்கிற மூலப் பொருள்கள் அதில் பணியாற்றும் பணியாளர்களிடமிருந்து வேறுபட்டன. அமைப்பின் மூலப் பொருள்கள் தங்களுடையன வெனச் சொந்தம் கொண்டாடக் கூடாது பணியாளர்கள் அமைப்பில் பணியாற்றுவதால் அவர்களுக்குப் பணமாகவோ வேறு பொருள்களாகவோ ஊதியம் போலக் (Compensation) கொடுக்க வேண்டும். பணியாளர்கள் வாழ்கின்ற இடத்தையும் அலுவலகத்தையும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டும். அலுவலகம் பொதுத் தன்மை பெற்றிருப்பதால் பணியாளர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதுடன், தன் விருப்பப்படியே அமைப்புச் செயற்படும் வண்ணம் பொருத்தமாக அமைக்கப்படுதல் வேண்டும். நிருவாகச் செயல்கள், நிருவாக முடிவுகள், ஒழுங்கு விதிகள் போன்றவற்றை உருவாக்கி, அவை செயற்படுவதை எழுதிப் பதிவு செய்ய வேண்டும். வாய்மொழி ஒழுங்கு விதிகளைக்கூட எழுத்தால் பதிவு செய்ய வேண்டும். அலுவலகம் என்பது, நிருவாக அமைப்பின் செயல்கள், ஒழுங்கு விதிகள், நடைமுறை விதிகள் ஆகியவற்றைக் கொண்டதாகும்.

அமைப்பின் நிருவாகப் பணியாளர்கள் எங்ஙனம் பணி அமர்த்தப்படல் வேண்டுமென்பதையும், அவர்கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதையும் வீபரே கூறுகிறார். அமைப்பின் பணியாளர்கள் தனிப்பட்ட முறையில் அமைப்பிலிருந்து பிரிந்து உரிமையோடு செயற்பட வேண்டும். நிருவாக அமைப்பின் கடமையை, அஃதாவது ஆள்தன்மையற்ற பொதுச் செயல்களைச் செய்யக் கடமைப்பட்டவர்களாக இருக்க வேண்டும். அமைப்பில் அலுவலகப் பதவிகள், ஒன்றின்கீழ் ஒன்றாக அடுக்கு வரிசையாகத் தெளிவாக ஏற்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு அலுவலகப் பதவிக்கும் சட்டப்படி தகுதிகள் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். அலுவலகப் பதவிகளுக்குப் பணியாளர்கள் ஒப்பந்த முறையில் பணி அமர்த்தப்படவேண்டும். பணியாளர்களைத் தொழில் நுட்பத் தகுதி அடிப்படையில் பணி அமர்த்த வேண்டும். தேர்தல் மூலம் பணியில் அமர்த்தக் கூடாது. பணியளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும். ஓய்வூதியங்கள் உட்பட அனைத்தும் ஊதியத்தில் இடம்பெற வேண்டும். பணியாளர்களுக்கு ஊதிய விகிதங்களைப் பதவிகளை வரிசைப்படுத்தியதற் கேற்பப் பொருத்தமாக வரையறுக்க வேண்டும். பணியாளர்களுக்கு அலுவலகப் பணியே அவர்களது பணியாக இருக்க வேண்டும். பணியாளர்களை பிற பணிகள் செய்ய அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் அவர்களது அலுவலக ஈடுபாடு, பொறுப்புணர்வு ஆகியன சிதறலுக்கு இடம் கொடுத்தால், அமைப்பு செம்மையாக இயங்க முடியாது. பணியாளர்கள் தங்களது பணியை வாழ்க்கைப் பணியாக (Career Service) ஏற்பதால் பணியமைவு முறை, பதவி உயர்வுகள் பெறும் வகையில் அமைய வேண்டும். பதவி உயர்வுகள் தகுதியின் அடிப்படையிலோ (Merit) பதவி முதன்மையின் (Seniority) மூலமோ வழங்கப்படலாம். பதவி உயர்வுகள் உயர் அதிகாரிகளின் கணிப்பின் பேரில் வழங்கப்பட வேண்டும். ஏனெனில் பணியமைவு முறையில், கண்காணிப்பு அதிகாரத்தோடு அமைப்பை இயக்கக் கூடியவர்களாகவும் இவர்கள் திகழ்கின்றனர். அலுவலகப் பணியாளர்கள், ஒருங்கிணைந்த ஒழுங்கு முறைக் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டும் என்பது பற்றியும், தனிப்பட்ட அலுவலர்கள் ஆற்ற வேண்டும் பணிபற்றியும் வீபர் கூறியுள்ளார்.

அதிகார வருக்கம் ஆள்தன்மையற்றதாக நெகிழ்வில்லாத் தன்மையுடன் இருப்பதால், பல குறைகளுக்கு இலக்காகியுள்ளது. நிருவாக அமைப்புகள் மனிதர்களுக்காக மனிதர்களைக் கொண்டு இயங்குவதால், இயந்திரங்கள் போல நிருவாகத்தை இயக்க முடியாது. ஏனெனில் மனிதர்கள் இயந்திரங்கள் போலச் செயற்படக்கூடியவர்கள் அல்லர். தவிர, தனி மனிதன் தனக்குத் தேவையான செயல்களைத் தானே செய்து கொண்டு வருவானேயானால், சிக்கல் ஏதுமின்றிச் சீராகச் செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும். மனிதர்கள் கூடி அவர்களது சிக்கல்களை அல்லது தேவைகளை நிறைவு செய்ய வேண்டிவரும்போது, அவர்களுள் ஒரிருவர் வேலை செய்ய இயலாமல் இருக்கலாம். அல்லது வேலை செய்வதற்குரிய போதுமான தகுதிகள் நிரம்பாதவராகவும் இருக்கலாம். அல்லது தகுதியும் ஆற்றலும் நிறைந்தவர்கள் பணி செய்ய மறுக்கும்போது, அமைப்பின் வேலைகளைத் தாக்கும்

சிக்கல்கள் எழுகின்றன. அமைப்புச் சிறிதாக இருந்தால், சிக்கல்களை எளிதில் அறிந்து கொண்டு அவற்றை விரைவில் நீக்கிவிடலாம். மேலும் சிறிய அமைப்புகளில் சிக்கலும் குறைவாகத்தான் இருக்கும். சிறிய அமைப்பே பெரிதாக வளரும்போது சிக்கல்களும் மிகுகின்றன. அமைப்பில் சிக்கல்கள், அதில் சேர்கின்ற சேர்க்கைகளைப் (Composition) பொறுத்தே மிகுதியாகின்றன. எனவே நிருவாக அமைப்பின் சிக்கல், அமைப்பின் அளவைப் பொறுத்தே அமைகிறது. இரண்டாவதாக அமைப்பின் உருவத்தைப் பொறுத்தும் சிக்கல் அமைகிறது. அமைப்பிலுள்ள அடுக்கு வரிசை, கட்டுப்பாட்டு அளவு அல்லது வீச்சுப் போன்றவை அமைவதற்கிணங்கச் சிக்கல் அமைகிறது. மூன்றாவதாக, அமைப்பில் உள்ள பிரிவுகள் அனைத்தும் தனித்தன்மை பெற்றுச் செயற்படுவது கடினம். ஒரு பகுதி தனித்தன்மை பெறுவது, அமைப்பின் பெரும் பகுதிக்கு மனநிறைவின்மையை உண்டாக்கி விடுகிறது. இதனாலும் சிக்கல் மிகுகிறது. அமைப்பின் ஒழுங்கு விதிகளும் வரையறுப்புகளும் கடுமையாக இருப்பதால், நெகிழ்வின்மை இல்லாததும் ஒரு பெரிய சிக்கலாக உருவெடுத்து விடுகிறது. அமைப்பு தனித்தன்மைகளைப் பல வகைகளில் பெறுவதால், அத்துணைத் தனித்தன்மைகளையும்மேலாதிக்கம்செய்யக் கூடிய தலைமை கிடைப்பதென்பது அரிது. எனவே தனித்தன்மைகள் வளர்ந்து தனித்தனிப் பிரிவுபோலச் செயற்படுவதாலும் சிக்கல்கள் மிகுதியாகின்றன. அமைப்பின் திறமையை மிகுவிப்பதற்காக உருவாக்கப் பட்ட ஆலோசனைப் பிரிவினாலும் சிக்கல் உருவாகிறது. இந்தச் சிக்கல்களை அறிந்து, அவற்றைக் களையவும் வேண்டும்; அவை மறுபடியும் எழாதவாறு பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இதற்காக நிருவாக அமைப்பிலுள்ள ஒவ்வொருவர் பணி, பொறுப்பு ஆகியன குறித்தும் விளக்க வேண்டும். நிருவாகத்தை ஒட்டு மொத்தமாகக் கணிக்கும் அரசியல் ஆட்சியாளர்கள், பணியாளர்களையும் நிருவாக அமைப்பையும் முழுமையாகத் தெரிந்து ஆட்சி செலுத்த வேண்டும்.

என்.எஸ்.ச.

**அதிகை,** தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. இது திருவதிகை வீரட்டானம் எனவும் வழங்கப்படும். இது தென்னார்க்காடு மாவட்டம் பண்ணுருட்டிக்கு அருகில் ஒருகல் தொலைவில் கெடில ஆற்றின் வடகரையில் அமைந்துள்ளது. மூவர் தேவாரமும் பெற்ற இத்தலம், சிவபெருமான் தன் வீரம் விளங்குமாறு செயற்பட்டுத் திகழ்ந்த அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்று. இங்கிருந்து அவர் முப்புரங்களையும் எரித்தருளினார் என்பது கூறப்பட்டுள்ளது. திருநாவுக்கரசு நாயனாருடைய தமக்கையாராகிய திலகவதியார் சிவபெருமானைவழிபட்டிருந்ததும், திருநாவுக்கரசர் ‘‘கூற்றாயினவாறு விலக்ககிலீர்’’ என்னுந் திருப்பதிகம் பாடித் தாமுற்ற சூலைநோய் தீரப் பெற்றதும் இத்திருநகரிலாகும். அவர் தாம் மேற்கொண்ட உழவாரத் தொண்டினை இங்குத் தொடங்கினார். மகேந்திரவர்மன் காலத்தில் இங்கே சமணப் பள்ளிகளும் பாழிகளும் இருந்தன.

இங்குள்ள திருக்கோயிலின் கருவறை மேலுள்ள கோபுரம் தேர்போல, நிழல் தரையில் சாயாதவாறு அமைக்கப் பெற்றுள்ளது. இங்குத் திருநாவுக்கரசர் திலகவதியார் ஆகியோர் திருவுருவச் சிலைகள் உள்ளன.

இறைவன் – வீரட்டேசுரர்; இறைவி – திரிபுரசுந்தரி.

இவ்வூர் அதிஅரையமங்கலம், அதிராச மங்கலம், அதிராச மங்களியபுரம் என்னும் பெயர்களால் வழங்கப்பட்டமை கல்வெட்டுகளால் தெரியவருகிறது. மணவிற் கூத்தனான காலிங்கராயன் இவ்வூர்க் கோயிலுக்குப் பொன்வேய்ந்து, நூற்றுக்கால்மண்டபம், மடைப் பள்ளி போன்றவற்றை அமைத்துத் திருப்பணி புரிந்த செய்தியினையும் கல்வெட்டுகள் கூறுகின்றன. உண்மை விளக்கம் என்னும் சைவ சித்தாந்த சாத்திர நூலாசிரியராகிய மனவாசகம் கடந்தார் இவ்வூரில் பிறந்தார்.

**அதிதாரத்தாயி** என்பது கருநாடக இசையில் தாரத்தாயிக்கு மேல் உள்ள ஒலி எல்லையினைக் குறிக்கும். இதைக் குரலால் பாடமுடியாது. இசைக் கருவிகளிலும் சிலவற்றால்தான் இசைக்க முடியும். இதைச் சுரங்கட்கு மேலே இரண்டு புள்ளிகள் வைத்துக் குறிப்பிடுவர்.

எ.டு:- ரிரி, ககக, மம

**அதிபத்த நாயனார்,** பெரியபுராணம் சிறப்பிக்கும் சைவ நாயன்மார்கள் அறுபத்து மூவருள் ஒருவர். அலைவளமும் கலைவளமும் தவமும் சோழ நாட்டுக் கடற்கரையில் அமைந்துள்ளது நாகப்பட்டினமென்னும் துறைமுக நகரம். அங்கு வாழ்ந்த பரதவர் குலத்தில் தோன்றியவர் அதிபத்தர். அவர் மீன் பிடிக்கும் தொழில் செய்து பெருஞ் செல்வராகத் திகழ்ந்தார். நாள்தோறும் அவர் பிடிக்கும் மீன்களுள் தலைமையான மீன் ஒன்றினைச் ‘சிவபெருமானுக்கு ஆகுக’ என்று அன்புடன் கடலில் விட்டு வந்தார். ஒரு நாளில் ஒரு மீனே கிடைப்பினும் அதனையும் அவ்வாறேவிட்டுவிடுவதனை அவர் கொள்கையாகக்கொண்டொழுகினார். பல நாட்களாக அவருக்கு நாள்தோறும் ஒரு மீனே கிடைத்துவந்தது. தம் கொள்கைக்கு மாறுபடாமல் அதனையும் முறைப்படி அவர் கடலில்

விட்டு மகிழ்ந்தார். அதனால் அவர் செல்வமிழந்து வறுமையால் தளர்வுற்றார். சுற்றத்தார் வாடினர். ஆயினும் அதிபத்தர் தம் கொள்கையினின்று மாறாது, திருத்தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்தார்.

ஒரு நாள் பசும்பொன் மயமான நவமணி ஒளியோடு கூடிய உறுப்புகள் பொருந்திய மீன் ஒன்றினை இறைவன், அவர் வலையில் அகப்படுமாறு செய்தார். விலை மதிக்க முடியாததாக அது சுடர் விட்டுத் திகழ்ந்தது. பரதவர் வாயிலாக இதனை யறிந்த அதிபத்தர், ''என்னை ஆளுடையவர்க்கு ஆவதிது – அவர் பொற்கழல் சேர்க'' என்று அதனைக் கடலில் புகவிடுத்தனர். இங்ஙனம் பொருட் பற்றினை முற்றிலும் துறந்து விளங்கிய அதிபத்தருக்கு இறைவன் காட்சியளித்துச் சிவலோகத்தில் அடியார்களுடன் இனிதிருக்கும் பேற்றினை அருளினார். இவரைச் சுந்தரமூர்த்தி நாயனார் 'விரிதிரை சூழ் கடல்நாகை அதிபத்தர்க்கு அடியேன்' என்று தம் திருத்தொண்டத் தொகையில் போற்றிப் பரவியுள்ளார். இவருடைய வரலாற்றினைச் சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் விரிவாகப் பாடியுள்ளார்கள். ஈ.வே.மா.

**அதிமதுரகவி (கி.பி. 15 நூ.)** விசயநகரப் பேரரசின் சார்பாகச் சோழநாட்டின் ஒருபகுதியை ஆண்டு வந்த திருமலைராயன் என்பானின் அவைக்களத் தலைமைப் புலவராய் வீற்றிருந்தவர். அவ்வவையில் இருந்த 64 தண்டிகைப் புலவர்களுக்கு இவர் தலைவர். ஒருகால் காளமேகப்புலவர் அரசவைக்கு வந்த போது, அவரை இப்புலவரும் அரசனும் உரிய மரியாதையுடன் வரவேற்காமலும் அவையில் இடங்கொடாமலும் இகழ்ந்தனர். அப்போது காளமேகப்புலவர், கலைமகளைக் குறித்து ''வெள்ளைக் கலையுடுத்து'' என்று தொடங்கும் வெண்பாவினைப் பாடிப் பரவ, அரசனது அரியணை விரிந்து அவருக்கு இடங் கொடுத்தது. அதனைக் கண்டு பொறாத அதிமதுரகவி, அவரையழிக்கும் தீய எண்ணத்துடன் அவரை எமகண்டம் பாடுமாறு அறைகூவினார். காளமேகம் அதற்கிணங்கி எமகண்டம் பாடி வெற்றி பெற்றார். பின்னர் இருவரும் நட்புப் பூண்டு வாழ்ந்தனர். இவர் மிக இனிமையான கவிகளை இயற்றியதால் 'அதிமதுரகவி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவர் கோவலூரைச் சார்ந்தவர். ஆர்.கி.

**அதியமான்கள்** தமிழகக் குறுநில மன்னர்கள். இவர்கள் தகடூரைத் தலைநகராகக் கொண்டு, அதனைச் சூழ்ந்த பகுதிகளை ஆண்டு வந்தார்கள். இன்றைய தருமபுரியே அன்றைய தகடூர். இவர்கள் அதியன், அதிகன், அதிகமான், அதிகைமான், அதியேந்திரன் முதலான பெயர்களாலும் அழைக்கப் பெற்றார்கள். இவர்கள் சேரர் மரபைச் சார்ந்தவர்கள். இவர்கள் சங்காலம் முதல் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி புரிந்தார்கள். கொங்கு நாட்டின் ஒரு பகுதியை இவர்கள் ஆண்டார்கள். இது தகடூர் நாடு என்று குறிக்கப்பட்டது. சங்க காலத்தில் அதியமான் நெடுமிடல், அதியமான் நெடுமான் அஞ்சி, அதியமான் பொகுட்டெழினி, அதியமான் அஞ்சி, அதியமான் எழினி முதலானோர் ஆண்டனர்.

சங்கத் தொகை நூல்கள் அதியமான் நெடுமான் அஞ்சியின் பெருமையைக் கூறுகின்றன. அதியமான் நெடுமான் அஞ்சி, மலையமான் திருமுடிக்காரியை வென்று, திருக்கோவலூரைக் கைப்பற்றினான் என்று ஔவையாரும் பரணரும் பாடியுள்ளனர். இதனைத் திருக்கோவலூர்ப் பகுதியில் கிடைக்கும் கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன. மாமன்னன் அசோகனின் கல்வெட்டில் இவர்கள் குறிக்கப் பெறுவதால், இவர்களின் கீர்த்தி புலனாகும்.

சங்க காலத்தை அடுத்து, புகழ்ச்சோழனின் ஆட்சிக் காலத்தில் ஒருவன் தகடூர்ப் பகுதியை ஆண்டதாகப் பெரியபுராணம் கூறும். அதியமான்கள் கி.பி 6-ஆம் நூற்றாண்டளவில், பல்லவரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டார்கள். இறுதியில் மேலைக் கங்க வேந்தனான துர்விநீதன் கி.பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தகடூர்ப் பகுதியை வென்றான். கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதியமான்கள் மீண்டும் பல்லவரின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. தகடூர் நாட்டில் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், நுளம்ப பல்லவரின் ஆட்சி ஏற்பட்டது. முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலம் முதல் இவர்கள் சோழரது ஆதிக்கத்திற்கு உட்பட்டார்கள்.

அதியமான் மன்னருள் அதியேந்திரன் என்று குறிக்கப் பெறும் குணசீலன், ஒரு புகழ்மிக்க அரசன். இவனைப்பற்றி நாமக்கல் குகைக்கோயில் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அதியேந்திர விட்டுணுக்கிரகம் என்னும் குடைவரைக் கோயிலை நாமக்கல்லில் குடைவித்தவன் இவனேயாவான். தெளிணியார் என்னும் அதியர் தலைவன் மேலைக்கங்க வேந்தனான சிரீபுருசனுடன் போரிட்டுள்ளான். வலிமதுரன் என்பான், தகடூர் நாட்டின் தலைவனாக மேலைக் கங்க வேந்தனான கோவிசய நரசிம்மவர்மனது கீழ்முட்டுகூர் கல்வெட்டில் குறிக்கப் பெற்றுள்ளான்.

அதியர், நெடுங்காலம் சோழருக்கு அடங்கியிருந்து, அவர்தம் ஆதிக்கத்தை விரிவுபடுத்துவதில் உதவிவந்தனர். படைத்தலைவன் வீரராசேந்திர அதிகைமான் என்பான், முதலாம் குலோத்துங்கனது ஆட்சிக்காலத்தில் போற்றத் தக்கவனாகத் திகழ்ந்தான்.

இவன் இவ்வேந்தனது இரண்டாம் கலிங்கப் படையெடுப்பில் கலந்துகொண்டு வடகலிங்க வேந்தரை வெற்றி கொண்டான். இப்படைத்தலைவன் விக்கிரம சோழனது காலத்திலும் பணிபுரிந்தான். பொன்பற்றி உடையான் சேந்தன் கோணம்பியான அதியமானும் முதலாம் குலோத்துங்கனது நம்பிக்கைக்குப் பாத்திரமான அரசியல் தலைவன் ஆவான். ம.இரா.

**அதியமான் கோட்டை** தர்மபுரி மாவட்டத்தில், தர்மபுரி வட்டத்தில் அமைந்துள்ள சிற்றூர். இவ்வூர் தர்மபுரியிலிருந்து மேற்காகச் சேலம் செல்லும் நெடுஞ்சாலையில் எட்டுக்கி.மீ. தொலைவிலுள்ளது. சங்க நூல்களில் கூறப்படும் அதியமான்கள் என்னும் குறுநில மன்னர்களின் தலையாய நகரமாக இவ்வூர் கருதப்படுகிறது. சங்ககாலத்தில் இவ்வூரில் மக்கள் குடியிருந்ததற்கான சான்றுகளாக அவர்கள் பயன்படுத்திய கருப்புசிவப்பு வண்ணம் கொண்ட மட்கலச் சிதைவுகள் கிடைத்துள்ளன. இங்கு முற்காலத்தில் கோட்டை ஒன்று இருந்ததற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஊரினைச் சுற்றிக் கோட்டைச் சுவர் போன்ற மண்மேடு காணப்படுகிறது. இவ்வூரில் ஒய்சாளர் காலத்திய கோயில் ஒன்றும், பிற்காலச்சோழர் காலக் கோயிலொன்றும் உள்ளன. சமண தீர்த்தங்கரரின் சிலையொன்றும் சமணத்தோடு உள்ள தொடர்பைப்பறைசாற்றிக் கொண்டுள்ளது. இவ்வூரில்



சுடுமண் பொம்மைகள்

சோழர், ஒய்சாளர், விசயநகர அரசர் ஆகியோரின் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இங்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினர் 1981,1982-ஆம் ஆண்டுகளில் அகழாய்வினை மேற்கொண்டனர். இவ்வூரில் ஐந்து குழிகள் தோண்டப்பட்டன. குழிகளின் அடிமட்டத்தில் இரும்புக் காலத்தைச் சேர்ந்த கருப்பு சிவப்பு மட்கலன்கள் கிடைத்தன. சோழர் காலத்தைச் சார்ந்த செங்கல் மேடையின் ஒரு பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அகழாய்வில் கருப்பு சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள், சிவப்புக் கலவை பூசப்பட்ட மட்கலன்கள், ரௌலட்டட் என்னும் உரோமானிய நாட்டு மட்கலத் துண்டுகள் ஆகியவை கிடைத்தன. மணிகள், இரும்புக் கருவிகள், செம்பு, பித்தளைப் பொருள்கள், சுடுமண் பொம்மைகள், கண்ணாடி வளையல்கள், பொன்னை உருக்குகின்ற சிமிளிகள் ஆகியனவும் கிடைத்தன.

**அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினி**, சங்ககாலத்தில் வாழ்ந்த ஒரு மன்னன்; வீரமிக்கவன்; அக்காலத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் ஒருவன். எழினி என்பது இவன் இயற்பெயராகும். தன் எதிரியொடு தகடூரில் போர் செய்து இறந்தவன் என்பது இவன் பெயரிலமைந்த அடையினால் தெரிகிறது. இவன் இறந்தபோது அரிசில் கிழார் கையறு நிலைத்துறையில் ஒரு பாடல் (புறம். 230) இயற்றினார். அதில், அவர் எழினியை, 'விலங்கு பகை கடிந்த கலங்காச் செங்கோல்' உடையவன் என்றும், 'வையகம் புகழ்ந்த வயங்குவினை யொள்வாள்' உடையவன் என்றும், பொய்யாதவன் என்றும் பாராட்டியுள்ளார்.

**அதியமான் நெடுமானஞ்சி**, எழினி என்றும் (புறம். 158), அஞ்சி என்றும் (புறம். 91), வழங்கப்பட்டுச் சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளலும் பெரு வீரனுமாவான். கடைஎழு வள்ளல்களுள் ஒருவன். இவன் ஔவையாருக்களித்த நெல்லிக்கனிக் கொடையினை 'அமிழ்துவிளை தீங்கனி ஔவைக்கீந்த' எனச் சிறுபாணாற்றுப்படை (சிறு. 101-103) பாராட்டுகிறது. தமக்களித்த இக்கொடைச் சிறப்பினை ஔவையாரும் புறப்பாடலில் போற்றியுள்ளார் (புறம். 91). இவன் மழவர்கள் என்னும் வீரர்களுக்குத் தலைவனாக விளங்கினான் (புறம். 88, 90). இவன் ஔவையாரைத் தன்னுடைய அரசியல் தூதுவராகத் தொண்டைமான்பால் அனுப்பினான் (புறம். 95). அதியர் குடியில் தோன்றிச் சிறந்தவனாக இவன் விளங்கியமையால், அதியர் கோமான் எனப்பட்டான் (புறம். 91). இவன் முன்னோர் தேவர்களை வழிபட்டு, விண்ணுலகிலிருந்து கரும்பினை இவ்வுலகிற்குக் கொண்டுவந்தனர் என்று கூறப்பட்டுள்ளது (புறம். 99). இவன் சேரர் குடியினைச் சார்ந்தவனாதலின், பனந்தோட்டினாலாகிய மாலையினை அணிந்திருந்தான் (புறம். 99); ஏழு மன்னர்களோடு போர் செய்து வென்றான். இவனது கோவலூர் வெற்றியைப் பரணர் பாராட்டியுள்ள செய்தியினை ஔவையார் புகழ்ந்துள்ளார் (புறம். 99). குதிரைமலை இவனுக்குரியது. இவன் மகன் பொகுட்டெழினி எனப்படுவான். இப்பொகுட்டெழினியும் புலவர் போற்றும் பெருவீரனாக விளங்கினான் (புறம். 102). பெருஞ்சேரலிரும்பொறை பெரும் படையொடு சென்று தகடூரை முற்றுகையிட்டு அழித்து. அதிகமானையும் ஏனை இரு பெருவேந்தரையும் வென்றான் என்று

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்துப் பதிகம் கூறுகிறது. அதிகமான் என்று அப்பதிகம் குறிப்பிடுவது இந்த அதியமானையேயாகும். சேரமான் வரும்வரை அதியமான் தகடூர்க் கோட்டையின் உள்ளே இருந்த செய்தி, தொல்காப்பியப் புறத்திணை நூற்பா ஒன்றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய குறிப்பாலும் அறிய முடிகிறது (தொல்.புறம். 7. நச்.). அதியமான், மார்பில் வேல்பட்டு மாய்ந்தபோது, ஔவையார் பெரிதும் இரங்கிக் கையறுநிலைச் செய்யுளொன்று பாடியுள்ளார். அதன்கண் இவனது பெருங்கொடையும் பெருவீரமும் சிறப்பிக்கப்பட்டுள்ளன. 'ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ? இனிப் பாடுநருமில்லை, பாடுநர்க்கு ஒன்று ஈகுநருமில்லை' (புறம். 235) என்று ஏங்கியுரைக்கும் கூற்றில் ஔவையார் எய்திய அவலத்தின் ஆழம் புலனாகிறது. இவனை ஔவையார், பரணர், பெருஞ்சித்திரனார், பொன்முடியார் ஆகியோர் பாடியுள்ளனர்.

**அதியன் விண்ணத்தனார்**, சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர் இயற்றிய பாடல் ஒன்று அகநானூற்றின் 301-ஆம் பாடலாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. இவர் அதியமான் நெடுமானஞ்சியின் இனத்தினைச் சேர்ந்தவராக இருத்தல் கூடும். அதியன் என்பது குடிப்பெயர். இக்குடி சேரர் குடியொடு தொடர்புடையது. சிலர் அதியன் என்பான் விண்ணத்தனாரின் தந்தை என்பர். விண்ணத்தனார் என்பதனை விண்ணன் + அத்தன் எனக்கொண்டு விண்ணன் என்பானின் தந்தை என்று பொருள் கொள்வர். அவ்வாறாயின் அதியன் விண்ணத்தனார் என்னும் பெயர், தந்தை-மகன்-பெயரன் என்னும் முறையில் மூவரையும் சுட்டி அமைந்த ஒன்றாகக் கொள்ளப்படும். தலைவன் பிரிந்த காலத்தில் தலைவி உயிர் நீங்கும் அளவிற்கு வருந்தினாளாக, அது கண்டு தோழி ஆறுதல் கூறி வற்புறுத்த, அதற்கு விடையாகத் தலைவி கூறுவதாக அமைந்துள்ளது இவர் பாட்டு.

இவர் இப்பாடலில், ஊர் தோறும் சென்று பரிசில் பெற்று வந்த பாணர் முதலியோர் ஊர் மன்றத்தில் மகிழ்வுடன் தங்கிப் பண்ணிசைத்து மகிழ்வுறுத்தி நீங்கிய பின், மறுநாள் அம்மன்றினைக் காணும் ஊரார்க்கு அஃது இன்னாததாக விளங்கும் என்பதனை, "இரும்பேர் ஒக்கல் கோடியர் இறந்த, புன்தலை மன்றம் காணின் வழிநாள், அழுங்கல் மூதூர்க்கு இன்னாதாகும்" எனக் காட்டியுள்ளார்.

**அதிர்ச்சி மருத்துவம்**: காண்க: உளமருத்துவ முறைகள்.

**அதிரதர்** தேர்ப்பாகனாகப் பிறந்தவர்; திருதராட்டிரரின் நண்பர்; இராதா என்பாளின் கணவர்; கர்ணனின் வளர்ப்புத் தந்தை. அதிரதர் கர்ணனை வாசுசேனன் என்றழைத்ததோடு, அவரை அத்தினாபுரத்திற்கு அனுப்பித் துரோணாசாரியாரின் கீழ்க் கல்வி கற்கக் கூறியவர். கர்ணன் விளையாட்டரங்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தஞான்று, அதிரதர் அரங்கத்தில் நின்று கர்ணனை அங்க நாட்டு அரசரென வாழ்த்தினார். அதிரதர் என்று கர்ணனுக்கு அடைமொழிப் பெயரும் உண்டு.

**அதிர வீசியாடுவார்** என்பது சிவபெருமானுக்கு அவர் ஆடுங்கோலம் ஒன்றினால் அமைந்த பெயராகும். ஆடல் வல்லானாகிய சிவபெருமான் மதுரையம்பதியில் கால் மாறி ஆடிய அமைப்பில் உள்ளார். நடனக்கலை பயின்ற சிவபக்தனான பாண்டியனின் வேண்டுகோளுக்கிணங்கிக் கூத்தர் பெருமானாகிய சிவபெருமான் மதுரையில், இயல்புக்கு மாறாகக் கால் மாறி ஆடி அருளினார். மன்னன் வேண்டியவாறு என்றும் யாவரும் காண இறைவன் மதுரை மன்றில் கான்மாறி ஆடிய கோலத்தில் காட்சியளிக்கின்றார் என்பது புராண வரலாறு. தமிழிலுள்ள இரண்டு திருவிளையாடற் புராணங்களும் இத்திருவிளையாடலைப் பாடிப் போற்றுகின்றன. இந்நடனக்கோலத்தில் சிவபெருமானுடைய இடக் கால் சற்றே வளைந்து முயலகன் மீது சிறிதே ஊன்றப்பட்டு விளங்கும். வலக் கால் உயர்த்தி வீசி ஆடும் பாங்கில் விளங்கும். இந்த நடனக் கோலம் அதிர வீசியாடுதல் எனப்படும். சிவபெருமானது இத்திருக்கோலத்தைச் சுட்டித் திருஞானசம்பந்தர் 'அதிரவீசி ஆடுவாய் அழகன் நீ புயங்கன் நீ' என்று போற்றுகின்றார். இதனைப் பெரும்பற்றப் புலியூர் நம்பி தம் திருவிளையாடற் புராணத்தில், "முன்னம், மெய்ப்பட ஆடுங்கூத்தை விட்டு மேல் வலத்தாள் குஞ்சித்து, அப்பெரும் புதுமைக் கூத்தை ஆடினான் அதிரவீசி" என்றும், அதனால் சிவபெருமான் 'அதிரவீசி ஆடுவார்' என வழங்கப்பட்டார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**அதிராசேந்திரன்** தஞ்சைச் சோழ அரசர்களுள் ஒருவன். இவன் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவன். வேங்கிச் சாளுக்கிய அரசர் விக்கிரமாதித்தியர், அதிராசேந்திரனைச் சோழ அரசனாகக் கங்கைகொண்ட சோழபுரத்தில் முடி சூட்டுவித்தார். மக்கள் கிளர்ந்தெழுந்த கலகமொன்றில் இவன் உயிர் துறந்தான். இவன் சைவ சமயத்தினன்; குறுகிய காலமே ஆட்சி செய்தவன்.

**அதிராம்பட்டினம்** தஞ்சாவூர் மாவட்டத்தில், பட்டுக்கோட்டை வட்டத்திலுள்ள துறைமுகப் பட்டினம். இங்கு முசுலிம்கள் மிகுதியாக வாழ்கின்றனர். இவ்வூர் அதிவீரராம பாண்டியனுடைய பெயரைக் கொண்டது என்பர். இங்கிருந்து இலங்கைக்குத் தேங்காய், அரிசி போன்ற பொருள்கள் ஏற்றுமதியாகின்றன. இங்கு உப்பளங்களும் உள்ளன. இவ்

வூரில் சிவன் கோயிலும் புகைவண்டி நிலையமும் உள்ளன. இங்கு ஒரு கல்லூரியும் உள்ளது.

**அதிராவடிகள்** சைவத் திருமுறை நூல்களுள் பதினோராந் திருமுறையினைப் பாடியருளிய ஆசிரியர்களுள் ஒருவர். இறை நினைவின் உறைப்பால் வினைத் துன்பங்களைக் கண்டு கலங்காத மனம் உடையவர் என்பதால் இவர் அதிராவடிகள் என்னும் பெயரால் அழைக்கப் பெற்றார். இவர் நூலாகிய 'மூத்த பிள்ளையார் திருமும்மணிக் கோவை' பதினோராந் திருமுறையில் 25-ஆம் நூலாகத் தொகுக்கப் பெற்றுள்ளது. இது, அகவல், வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய மூவகைச் செய்யுட்கள் முறையே அடுத்தடுத்து வருமாறு அமைந்த 30 பாடல்களைக் கொண்டது. மூவகையான மணிகளைக் கொண்டு அமையும் அணிக்கோவை போல்வதாதலின் இவ்வகை நூல்கள், மும்மணிக் கோவை எனப்பட்டன. இதன் செய்யுட்கள் அந்தாதியாக அமைந்துள்ளன. இந்நூலின் இறுதியிலுள்ள 7 செய்யுட்கள் கிடைக்காமையால், இதன்கண் இப்பொழுது 23 செய்யுட்களே உள்ளன. மூத்த பிள்ளையார் என்பது விநாயகரைக் குறிக்கும். யானைமுகக் கடவுளாகிய மூத்த பிள்ளையாரின் திருவடித் துணையன்றி உயிர்களுக்கு வேறு துணையில்லை. அவர், தம்மை அன்பினால் வழிபடும் மெய்யடியார்களின் பிறவிப் பிணியைப் போக்க வல்லவர்; அவருடைய திருவடியைச் சிந்தித்து வாழ்வார்க்கு மனக் கவலை இல்லை என்பன போன்ற கருத்துகளை ஆசிரியர் இந்நூலில் விளக்கியுள்ளார். அதிராவடிகள் பிறந்த ஊர், பெற்றோர் பெயர் போன்றவற்றை அறிய இயலவில்லை. இவ்வாசிரியர் வாழ்ந்த காலம் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கமுமாம் என்று கருதப்படுகிறது. சப்பாணி கொட்டுதல், செங்கீரையாடுதல் என்று பிள்ளைத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறும் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளை மூத்த பிள்ளையார் மேற்கொண்டு உலக உயிர்களுக்கு இன்பஞ்செய்தார் என ஆசிரியர் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

**அதிலாபாத்து,** தில்லிக்கருகில் இருக்கும் ஒரு சிறு கோட்டை. இது துக்ளகாபாத்திற்குத் தெற்கே அமைந்துள்ளது. இக்கோட்டை முகம்மது-பின்-துக்ளக்கு என்பவரால் கட்டப்பட்டது. இதன் சுவர்கள் துக்ளகாபாத்துக் கோட்டையின் சுவர்களுடன் இணைந்துள்ளன. இக்கோட்டை இருவாயில்களைக் கொண்டது. ஒரு நுழைவாயில், தென்கிழக்குப் பகுதியில் உள்ள இரண்டு காவல் அரண்களுக்கு இடையில் இருக்கும் புற அரணிலும், மற்றொன்று, தென்மேற்கிலும் அமைந்துள்ளன. இதன் இரு பிரிவுகளும் ஒரு வெளிச் சுவர் மூலம் தடுக்கப்பட்டுள்ளன. இதன் உள் அரண், சுவர்களுடனும் காவல் அரண்களுடனும் வாயில்களுடனும் காட்சி அளிக்கிறது. இதனுள் அரண்மனை உள்ளது. இவ்வரண் முகமதாபாத்து என்றும் அழைக்கப்படுகிறது.

**அதிவீரராமபாண்டியன்** விசயநகர வேந்தர் காலத்து வாழ்ந்த பாண்டிய அரசத் தலைமுறையினைச் சேர்ந்த மன்னர். இவர் கி.பி. 1564-1603 ஆகிய ஆண்டுகளில், தென்காசியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தார். இவர், நாட்டுக் காவலராக மட்டுமல்லாமல், ஏட்டுப் பாவலராகவும் சிறந்து விளங்கினார்.

சில வரலாற்றறிஞர் இவரைத் திருநெல்வேலிப் பெருமாள் புதல்வர் என்று கூறுவர். எனினும் இவர் திருநெல்வேலிப் பெருமாளின் ஏற்பு மகனும், வரதுங்கராமரின் இளவலும், பராக்கிரம பாண்டியனின் மூன்றாம் புதல்வருமாவார் என்று சிலர் முடிவு செய்து தெளிவுபடுத்தியுள்ளனர். இவர் இயற்பெயர் அதிவீரராமன்; சடையவர்மன் என்ற பட்டப் பெயருடையார்; தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் மிகவுடையவர்.

இவர் பல நூல்களை எழுதியுள்ளார். அவை:- 1. நைடதம் 2. காசிகாண்டம், 3. கூர்மபுராணம் 4. கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி 5. கருவை வெண்பா அந்தாதி 6. கருவைக் கலித்துறையந்தாதி 7. வெற்றிவேற்கை என்னும் நறுந்தொகை.

1. **நைடதம்:** மகாபாரதத்தில் முதலாவதாக நளன் கதை இடம் பெற்றுள்ளது. ஈதன்றி நளோதயம் என்னும் ஒரு நூலும் வடமொழியில் வழங்குகிறது. புரவலனும் புலவனுமாக விளங்கிய அர்சர், வடமொழியில் நைடதத்தைச் சிறப்புற எழுதியுள்ளார். தமிழில் புகழேந்தி, வெண்பா யாப்பில் நளன் வரலாற்றை எழுதியுள்ளார். வடமொழி, தமிழ் நூல்களை எல்லாம் அடியொற்றி எழுதப்பட்ட நூலே நைடதம் ஆகும். இந்நூல் நாட்டுப்படலம் தொடங்கி அரசாட்சிப் படலம் என்னும் இருபத்தெட்டாவது படலத்துடன் நிறைவுறுகிறது. 1173 விருத்தச் செய்யுட்களால் இந்நூல் அமைந்துள்ளது. புலவர் பலரும் போற்றி வந்த சிறந்த நூல் என்பதால், "நைடதம் புலவர்க்கு ஔடதம்" என்னும் பழமொழியும் தோன்றுவதாயிற்று.

நூலின் நடை, வேட்டை நாய் நடைபோலிருக்கிறதென்றும் நூலின் சுவை கரும்பினை அடியிலிருந்து தொடங்கி நுனிவரை தின்பது போல், போகப் போகச் சுவை குறைகிறது என்றும் இவர்தம் அண்ணியாரால் குறைகூறப் பட்டது என்பர். இக்குறையைக் களையவே காசிகாண்டம் இயற்றப்பெற்றது.

2. **காசிகாண்டம்:** காசி நகரப் பெருமையைப் பறைசாற்றும் நூல். பூர்வகாண்டம், உத்தரகாண்டம்

என்னும் இரு பெரும் பிரிவினது; 100 அத்தியாயங் களை உடையது; 2526 விருத்தங்களால் இயன்றது; வடமொழி நூலிலிருந்து மொழிபெயர்க்கப் பெற்றது.

3. **கூர்மபுராணம்:** வடமொழியில் உள்ள பதினெண் புராணங்களுள் ஒன்றான கூர்ம புராணத்தின் மொழிபெயர்ப்பு. உத்தரகாண்டம், பூர்வகாண்டம் என்னும் இரு பெரும் பிரிவு கொண்டது. இதன்கண் 97 அத்தியாயங்களும் 3717 விருத்தங்களும் உள்ளன. இது, சைவ வைணவத் தெய்வங்கள் பற்றியும் சிவ பூசை மரபுகள் பற்றியும் விளக்குவது.

4. **அந்தாதி நூல்கள்:** கரிவலம் வந்த நல்லூர் என்பது புகழ் பெற்ற ஊராகும். இங்குள்ள சிவன் கோயில் பாடல் பெற்றது. இவ்வூர்ப் பெயரே கருவை என மருவி வழங்குகிறது. கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி, கருவை வெண்பா அந்தாதி, கருவைக் கலித்துறை அந்தாதி என மூன்று அந்தாதி நூல்களும், அதிவீரராம பாண்டியரால் இயற்றப் பெற்றன. எளிய பாடல்களைக் கொண்ட இந்நூல்கள், சிவநெறி பற்றிச் சாற்றுபவை ஆகும். திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி, 'குட்டித் திருவாசகம்' எனப் புகழப்படுகிறது.

5. **வெற்றிவேற்கை:** எளிய தமிழில் எழுதப் பட்ட இந்த அறநூலில் எண்பத்திரண்டு அறமொழிகள் இடம் பெற்றுள்ளன. 'எழுத்தறிவித்தவன் இறைவன்', 'பெரியோரெல்லாம் பெரியரும் அல்லர்', 'பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால் மெய் போலும்மே மெய்போலும்மே' என்பன போன்ற மரபு மீறிய சிந்தனைகள் சிலவற்றை அதிவீரராம பாண்டியர் சிந்தித்து, அவற்றை எளிமையான மொழியில், இனிமையான முறையில் இதன்கண் வெளியிட்டுள்ளார்.

க.ப.அ.

**அதினா**, போர், அறிவு, அறிவியல், கலைகள் ஆகியவற்றிற்குரிய கிரேக்கப் பெண்தெய்வம். சீயசு என்னும் (Zeus) முதன்மைக் கடவுள் அல்லது கடவுள்களின் அரசன், இவள் நெற்றியிலிருந்து தோன்றியவன் என்று கிரேக்கப் புராணக்கதை கூறுகிறது. இவள் போருக்குச் செல்வதுபோல் கவசங்கள் அணிந்து படைக் கருவிகளைக் கொண்டிருப்பவள். கிரேக்கர்கள் கலைக்கும் கைத் தொழிலுக்கும் கடவுளாக இவளை வணங்கினர். அதினா (Athena) கன்னித் தெய்வமாவாள். இவளது கோயில் ஒன்று ஆதென்சிலுள்ள அக்கராபாலிசில் உள்ளது. இக்கோயில் பார்த்தினான் (Parthenon) கோயில் எனக் கூறப்படுகிறது. இவள் மரங்களில் தலைசிறந்த மரமாகிய ஒலிவ மரத்தை (Olive Tree) உண்டாக்கியதால் சிறந்த தெய்வமாகக் கருதப்படுகிறாள். இதனால் ஆதென்சு என்னும் கிரேக்க நகர அரசின் (City State) தலைநகரத்திற்கு இவளுடைய பெயர் சூட்டப்பட்டது. உரோமானிய தேவதை மினர்வா, அதினாவின் உருவத்தையும் பண்புகளையும் கொண்டுள்ளவளாகக் கருதப்படுகிறாள். தொன்மைக்காலச் சிற்பிகள் அதினாவின் சிற்பங்களை



அதினா சிலை

வடிக்கும்பொழுது கவசத்துடன் கையில் மந்திரக் கேடயம் ஒன்றையும் பெற்றிருப்பதுபோல் வடித்துள்ளார்கள்.

**அதீசர்** என்பவர் புத்தசமயத் துறவியும் கொள்கைப் பரப்புநருமாவார். இவர் இயற்பெயர் சந்திரகர்ப்பர் என்பதாகும். கி.பி. 981–ஆம் ஆண்டில் வங்காள மாநிலத்தில் சகோர் என்னும் ஊரில் இவர் பிறந்தவராகக் கருதப்பெறுகிறார். தம் 31–ஆம் வயதில் இவர் புத்தசமயத்தை மேற்கொண்டார். காலப்போக்கில் இவர் புத்த சமயத்தில் வல்லுநரானார். திபேத்து நாட்டு அரசரின் அழைப்பினை ஏற்று இவர் திபேத்து நாட்டிற்குப் போந்தார். அங்குப் பன்னீராண்டுகள் தங்கி, வடமொழியிலும் திபேத்திய மொழியிலும் நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதிப் பௌத்த சமயத்தை வளர்த்தார். கி.பி. 1054–ஆம் ஆண்டில் தம் 73–ஆம் வயதில் திபேத்திலேயே காலமானார். திபேத்தியர்கள் இவரைப் போதி சத்துவர் என வழிபடுகிறார்கள்.

**அந்தகக்கவி வீரராகவ முதலியார்** பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். பிறவிக்குருடராக இருந்தும் ஞானக் கண்ணைத் தம் முயற்சியால் பெற்றுப் பெருங் கவிஞராக விளங்கியமையால், "அந்தகக் கவி" என்னும் சிறப்புப் பெயர்

பெற்றுத் திகழ்ந்தார். வீரராகவன் என்பது இவர் தம் இயற்பெயராகும். இவர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள பூதூரில் பிறந்தார் என்று சிலரும் பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தார் என்று வேறு சிலரும் கருதுகின்றனர். இவருடைய தந்தையார் பெயர் வடுகநாத முதலியார்.

கண்களில்லாமையால் தம் மனத்தையே ஏடாகக் கொண்டு எழுதிப் பன்னூறு நூல்களைப் பயின்று புலமை எய்தினார் என்னும் செய்தியை, ''ஏடாயிரம் கோடி எழுதாது தன் மனத்து எழுதிப் படித்த விரகன்'' என்று இவர் தம்மைப் பற்றிக் கூறியுள்ளது கொண்டு அறிய முடிகிறது. மேலும் காஞ்சியில் இவர் கல்வி பயின்றார் என்பதும், வீணைப் பயிற்சியும் நன்கு பெற்றிருந்தார் என்பதும், ''கவி வீரராகவன் கச்சியிலே தன் நெஞ்சம் ஏடெனக் கற்றான் ஒருமுத் தமிழையுமே'' என்று இவரைப் புரந்த ஈழத்து அரசன் பரராச சிங்கன் கூறுவதனால் தெளிவாகின்றன.

பழுத்த மரங்களைத் தேடிப் பறவைகள் செல்வது போலத் தம்மைப் பேணத் தக்க வள்ளல்களைத் தேடிப் புலவர்கள் செல்வது இயல்பு. அந்தகக்கவி வீரராகவ முதலியாரும் தம்மைப் பேணும் அரசர்களை நாடிச் சென்றார். முதலாவதாகச் சோழ நாடு சென்று சிலகாலம் தங்கியிருந்தார். பின்னர் ஈழநாடு சென்று அந்நாட்டு மன்னன் பரராசசிங்கன்பால் பல ஆண்டுகள் தங்கியிருந்தார். இவருடைய இயல் இசைத் தமிழ்ப் புலமையை நன்குணர்ந்து போற்றிய அம்மன்னன், இவரைப் பாராட்டிப் பல பாடல்கள் இயற்றியதோடு, இவருக்கு யானையும் வளநாடும் பொன்னும் பொற்பந்தரும் அளித்துச் சிறப்பித்தான்.

உலா, கோவை, பிள்ளைத்தமிழ், கலம்பகம், மாலை, புராணம் ஆகிய இலக்கிய வகைகளில் அமைந்த இவருடைய படைப்புகள் கிடைத்துள்ளன.

திருவாரூர் உலா, கயத்தாற்றரசன் உலா என்னும் இவருடைய இரண்டு உலா நூல்களும் இலக்கிய நயமிக்கனவாக இவர் காலப் புலவர்களால் பாராட்டப் பெற்றன. உலா நூல்களுள் மிக்க சிறப்புடையதாய்க் கருதப்படும் திருவாரூருலா, திருவாரூரில் கோயில் கொண்டுள்ள தியாகேசப் பெருமான் மீது பாடப் பெற்றது. இவர் கயத்தாற்றரசன் மீது பாடிய உலாவினைக் கற்றுச் சுவைத்த அக்காலப் புலவர் ஒருவர், ''வீரராகவனாம் வேளாளன் பேசும் கவிகேட்டபின், ஒட்டக் கூத்தன் கவியும் ஓங்கிய கம்பன் கவியும், பட்டப் பகல் விளக்காய்ப் பட்டதே'' எனப் பாராட்டியுள்ளமை, அந்நூலின் பெருமையை நன்குணர்த்துகிறது.

அனந்தை அரசன் சந்திரவாண மகிபாலன் இவரை அழைத்துத் தம்மீது கோவை நூல் ஒன்று பாட வேண்டும் எனக்கேட்டுக் கொண்டதற்கிணங்க, இவர் சந்திரவாணன் கோவை என்னும் அகப்பொருள் கோவை நூலை இயற்றினார் என்னும் செய்தி கூறப்படுகிறது. ''மின்னு மாளிகை யனந்தை யாதிபதி'' எனத் தொடங்கும் இவருடைய சீட்டுக்கவியும் இதனை உறுதி செய்கிறது.

சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம் என்னும் இரு நூல்களும் சேயூர் முருகப் பெருமான் மீது இவர் கொண்டிருந்த பத்தியையும், இவர்தம் கவிதைத் திறத்தையும் காட்டுவனவாயுள்ளன.

திருக்கழுக்குன்றப் புராணம், திருக்கழுக்குன்ற மாலை ஆகிய இரு நூல்களையும் இவர் திம்மய்ய அப்பய்யன் என்னும் வள்ளலின் வேண்டுகோட்கிணங்கப் பாடினார் என்பதனை, ''இந்நாள் இருந்த பேர்'' எனத்தொடங்கும் இவரது சீட்டுக்கவி உணர்த்துகிறது.

சீட்டுக்கவி என்னும் ஓர் இலக்கிய வகையிற் சிறந்த பல பாடல்களை இவர் இயற்றியுள்ளார். இவர் காலத்திலிருந்த பல சிற்றரசர்களையும் வள்ளல்களையும் தம் சீட்டுக் கவியால் பாடிப் போற்றியுள்ளார். சந்திரவாண மகிபாலன், ஈழநாட்டு அரசன் பரராச சிங்கன், திம்மய்ய அப்பய்யன், சேலம் செழியதரையன், சிரயன் தினகரன் ஆகியோர் இவரால் புகழப்பட்டவருள் சிலராவர். நிரஞ்சன கவிஞர் என்னும் புலவர் ஒருவர், ''சீட்டுக்கவி யென்று சொல்வார் சிலர், அந்தச் சீட்டுக்கவி காட்டுக்கு எரித்த நிலவாகிப்போம் ... நாட்டுக்கு இலக்கியம் கவி வீரராகவன் நற்கவியே'' எனப் பாராட்டியிருப்பது கொண்டு, இவர்தம் புலமையையும் புகழையும் உணர்தல் கூடும். அ.அ.ம.


## அந்தபாலர்

**அந்தபாலர்** நாட்டின் எல்லைகளைக் கண்காணிக்க நியமிக்கப் பெற்ற அரசு ஊழியர். கௌடில்யர் தாம் எழுதிய அர்த்த சாத்திரத்தில் 18 வகையான அரசாங்கப் பணியாளர்களுள் அந்தபாலரும் ஒருவர் என்று குறிப்பிட்டுள்ளார். இவர், தலைச் சுமையாக வணிகப் பொருள்களைக் கொண்டு வரும் சிறு வணிகர்களிடம் ஒன்றேகால் பணம் சாலை வரியாக வாங்கும் உரிமையினைப் பெற்றிருந்தார்.

## அந்தமான்-நிக்கோபார் தீவுகள்

**அந்தமான்-நிக்கோபார் தீவுகள்** இந்தியக் குடியரசின் நேரடி ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாகும் (Union Territory). இத் தீவுகள் வங்கக் கடலில் ஏறத்தாழ 800 கி.மீ. தூரத்திற்கு வடக்கு-தெற்காகப் பரவிக் கிடக்கின்றன. அந்தமான் தீவுகளையும் நிக்கோபார் தீவுகளையும் பத்துப் பாகைக் கடற்சந்தி ஒன்று பிரிக்கிறது. இச் சந்தி, ஏறத்தாழ 150 கி.மீ. அகலமுள்ள நீர்ப்பரப்பாகும். இதன் வடக்கில் அந்தமான் தீவுகளும் தெற்கில் நிக்கோபார் தீவுகளும் உள்ளன. அந்தமான்-நிக்கோபார் தீவுகள் 6-14-ஆம் குறுக்குக் கோடுகளுக்குஇடையிலும் 92-94-ஆம் பாகை நெடுங்

கோடுகளுக்கிடையிலும் அமைந்துள்ளன. அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் மொத்தப் பரப்பு 8,136சதுரக் கி.மீ. இவற்றில், அந்தமான் தீவுகளின் பரப்பு 6,401 சதுரக்கி.மீ. நிக்கோபார் தீவுகளின் பரப்பு 1,645சதுரக் கி.மீ. ஆகும். இத் தீவுக்கூட்டங்களில் மொத்தம் 293 தீவுகள் உள்ளன. அந்தமான் தீவுகளின் எண்ணிக்கை மட்டில் 204 ஆகும். இத்தீவுகள் கல்கத்தாவிலிருந்து 1255 கி.மீ. தெற்கிலும், சென்னையிலிருந்து 1,190 கி.மீ. கிழக்கிலும், பர்மாவின் நெகிராய்சு முனைக்கு (Cape Negrais) மேற்கிலும், ஏறத்தாழ 193 கி.மீ. அகலமும் 467 கி.மீ. நீளமும் கொண்டு பரந்து கிடக்கின்றன.




அந்தமான் - நிக்கோபார் தீவுகள்

அந்தமான் தீவினைப் பெரிய அந்தமான், சிறிய அந்தமான், சிறு தீவுகள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். பெரிய அந்தமான், ஒரே தீவாகக் கருதப் பட்டாலும், இது குறுகிய கடல் நீரோடைகளால் வடக்கு அந்தமான், மத்திய அந்தமான், பரடாங்கு, தென் அந்தமான் என்று நான்கு தனித் தீவுகளாகப் பகுக்கப்படுகிறது. பெரிய அந்தமான், 256 கி.மீ. நீளமும் 32 கி.மீ. அகலமும் கொண்டதாகும். இதன் தெற்கில் அமைந்திருக்கும் சிறிய அந்தமான் 42 கி.மீ. நீளமும் 26 கி.மீ. அகலமும் உடைது.

அந்தமான் தீவுகளின் கடற்கரையில் சிறு சிறு கடற்கழிகளும் வளைகுடாக்களும் உள்ளமையால் இயற்கைத் துறைமுகங்கள் பல அங்கு உள்ளன. ஆண்டுக்கு எட்டு மாதங்கள் அங்கு மழைக்காலம். திசம்பர் முதல் மார்ச்சு முடிய நான்கு மாதங்கள் மழை பொழிவதில்லை. நில நடுக்கோட்டுக்கு மிக அண்மையில் வடக்கே 10-14-ஆம் பாகைக் குறுக்குக் கோடுகளுக்கிடையில் அமைந்துள்ளமையால், இத் தீவுகளில் வெப்பம் மிகுதி. எனினும், கடல் சூழ்ந்துள்ளதால் இவ் வெப்பம் ஓரளவு தணிகிறது.

வரலாறு: கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோமானிய நிலநூலாசிரியர் தாலமி தமது முதல் உலகப் படத்தில் இத் தீவுகளை நற்பேற்றுத் தீவுகள் (Lands of Good Fortune) என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவுக்கு வந்த சீனப் பயணியான இத்சிங் (Itsing) என்பவர் கி.பி. 672 ஆம் ஆண்டளவில் அந்தமான் தீவுகளின் வழியாகவே வந்தார் எனத் தெரிகிறது. பின்னர்ப் பல அரபு நாட்டுப் பயணிகள் இத் தீவுகளைக் கண்டு குறிப்புகள் எழுதியுள்ளனர். இராசேந்திர சோழனது கடற்படை, கடாரப் படையெடுப்பு நிகழ்த்தியபோது, நக்கவாரம் (நிக்கோபார்) வழியாகச் சென்றது. வணிகக் கப்பல்களும் போர்க் கப்பல்களும் அந்தமான் நிந்கோபார் தீவுகளுக்கு அடிக்கடி சென்று வந்தன. 1286-இல் மார்க்கோபோலோவும், 1322-இல் ஒடோரிக் என்ற கிறித்தவத் துறவியும், 1430-இல் நிக்கோலோ காண்டியும் இத் தீவுகளுக்கு வருகை தந்தனர். பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியத் தலைமை ஆளுநரான (Viceroy) காரன்வாலிசுப் பெருமகனாரின் ஆணையின்படி கேப்டன் ஆர்ச்சிபால்டு பிளேர் என்பவர் அந்தமான் சென்று, தென்கிழக்குக் கரையில் குற்றவாளிகள் குடியிருப்பு ஒன்றை 1789-இல் நிறுவினார். அப்போது அது போர்ட்டு காரன்வாலிசு எனப் பெயரிடப்பட்டது. அக் குடியிருப்பு, சில ஆண்டுகளில் பெரிய அந்தமானின் வடகிழக்குப் பகுதிக்கு மாற்றப்பட்டது. தென்கிழக்கில் 1858-இல் ஒரு புதிய குடியிருப்பை ஆங்கிலேயர் நிறுவினர். அதற்குப் போர்ட்டு பிளேர் (Port Blaire) எனப் பெயரிட்டனர். முதல் இந்திய விடுதலைப் போரில் சிறை பிடிக்கப்பட்ட இந்தியர்களில் பலரைக் கொன்றபின், எஞ்சியவர்களை இங்குத்தான் ஆங்கிலேய அரசு குடியமர்த்திற்று. அவர்களுள் மிகப் பலர் அத் தீவுகளின் மழைப் பகுதியாகிய நிலப்பரப்பில் பல்வேறு கொள்ளை நோய்களுக்கு ஆளாகி மடிந்தனர். உயிருடன் இருந்த ஒரு முகமதியக் குற்றவாளி 1872-இல் போர்ட்டு பிளேருக்கு வந்த தலைமை ஆளுநர் மேயோவைக் கொலை செய்தான். 1866-இல்

தொடங்கி 1910-இல் கட்டிமுடிக்கப்பட்ட 'செல்லுலர்' சிறைச் சாலை என்ற கொடிய சிறைச்சாலையில்தான் விடுதலைப் போராட்ட வீரர்கள் (வாசுதேவ பல்வந்த பட்கே, வீர சாவர்க்கர் போன்றோர்) 1938 வரை அடைக்கப்பட்டுக் கிடந்தனர். 1941-இல் நிலநடுக்கத் தாலும், சப்பானியரின் குண்டு வீச்சினாலும் இச் சிறைக்கூடம் சேதமுற்றது. இன்றும் இச்சிறைக்கூடம் உள்ளது.

சப்பானியர் 1942 மார்ச்சு 23-இல் இத் தீவுகளைக் கைப்பற்றினர். அவர்களின் கொடுமைகள் காரணமாக, அவற்றின் மக்கள் தொகை 34,000 ஆக இருந்தது 18,000 ஆகக் குறைந்தது. சுபாசு சந்திர போசின் இந்தியத்தேசியப் படையின் தளமாகவும் அந்தமான் சிறிது காலம் இருந்தது. 1945 அக்டோபர் 8-இல் அந்தமான் தீவுகளை ஆங்கில ஆட்சிக்குட்பட்ட இந்திய அரசு மீண்டும் பெற்றது. அன்று முதல் குற்றவாளிகள் குடியிருப்புக் கலைக்கப்பட்டுச் சில கைதிகள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

**அந்தமான் பழங்குடிகள்:** அந்தமான் தீவின் மக்கள், வளர்ச்சியற்ற மேம்படாத பண்பாட்டைக் கொண்ட முதுபழங்குடியாகவும், தென்கிழக்கு ஆசியாவின் நீக்கிரோ இனப் பேராளர்களில் தொன்மையானவர்களாகவும் திகழ்கின்றனர். இத்தனிமைத் தீவினை எவ்வாறு இவர்கள் தாயகமாகக் கொண்டனர் என்பதும் எங்கிருந்து வந்தனர் என்பதும் ஏன் உலகப் பண்பாட்டில் மிகவும் குன்றிய நிலையை ஏற்றுள்ளனர் என்பதும் மானிடவியலாளரால் ஆராயப்பட்டு வருகின்றன.

அந்தமானின் நான்கு பெரும் முதுபழங்குடிகளாகப் பெரிய அந்தமானியர், சாரவா, ஓஞ்சி, சென்டினல்கள் காணப்பட்டாலும் இவர்களிடையே கிளைக் குழுக்களும் காணப்படுகின்றன. பெரிய அந்தமானியர் தாங்கள் பேசும் மொழி அல்லது கிளை மொழியின் அடிப்படையில் வடபகுதிக் குழுவினர், தென்பகுதிக் குழுவினர் எனப் பாகுபடுகின்றனர். வடபகுதிக் குழுவினர் அகா-காரி, அகா-கோரோ, அகா-டோ, அகா-சேரு என நான்கு குழுக்களாகவும், தென்பகுதிக் குழுவினர் அகா-கேடே, அகா-கோல், அகா-பீ, ஓகோ-சீவாசு, அ-புசீக்வார், அகார்-பாலே என ஆறு குழுக்களாகவும் காணப்படுகின்றனர். தென் அந்தமானின் மேற்குப் பகுதியில் சரவாக்களும், வட சென்டினல் தீவில் சென்டினல்களும், சிறிய அந்தமானில் ஓஞ்சி மக்களும் வாழ்கின்றனர். முற்கால இன ஒப்பாய்வியல் வழக்கில் சிறிய அந்தமானியருக்கு (ஓஞ்சி) மின்கோபி என்ற பெயரும் இருந்தது.

நீக்கிரோ இனத்தின் முக்கியமான பேராளராகத் திகழும் அந்தமானியர் கருமை நிறத் தோலும் அடர்ந்து சுருண்ட தலை முடியும் ஏறத்தாழ 145 செ.மீ. உயரமும் உள்ள உடல் அமைப்பைக் கொண்டுள்ளனர். ஓஞ்சி பெண்களின் இடைப்பகுதி மிகுந்த வளர்ச்சி பெற்றிருப்பதால் நெடுந்தூரம் செல்லும்பொழுது குழந்தைகளை இடையின்மேல் நிற்க வைத்தே கொண்டு செல்கின்றனர்.



அந்தமான் ஓஞ்சி இனப் பெண்கள்

இத்தீவின் அனைத்துப் பிரிவுகளின் மொத்த மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 1,88,254 ஆகும். ஆனால் குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட நான்கு முதுபழங்குடியினரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இதனை அடுத்த பக்கத்திலுள்ள பட்டியலில் காணலாம்.

பெரிய அந்தமானில் அதிக நிலப்பரப்பும் காட்டுப் பகுதியும் இருப்பதால் பெரும்பாலான சாரவாப் பழங்குடியினர் காட்டுவாசிகளாகவும், கடலோரச் சாரவாக்கள் கரையோரவாசிகளாகவும் வாழ்கின்றனர். சிறிய அந்தமானின் பெரும்பகுதி நிலப்பரப்பு, கடலோரத்தைச் சார்ந்திருப்பதால் ஓஞ்சியினர் கரையோரவாசிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

கரையோரவாசிகளின் பொருளாதார அமைப்பு மீன்பிடிக்கும் தொழிலைச் சார்ந்ததாகும். பெண்கள் கடலோரத்தில் வலை கொண்டும் ஆண்கள் சிறுபடகில் சென்றும் கடலில் மீன்பிடிப்பது இவர்களிடையே காணப்படும் பொருளாதாரச் செயல்முறைப் பாகுபாடாகும்.

காட்டுவாசிகளின் முதன்மைத் தொழில் வேட்டையாடுதலும் உணவு சேகரித்தலுமாகும். இவர்கள் வேட்டை முறையை மூன்று கால நிலைகளாக

அந்தமான் முதுபழங்குடிகளின் மக்கள் தொகை

| முதுபழங்குடி | ஆண்டு | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | 1901 | 1911 | 1921 | 1931 | 1951 | 1961 | 1971 |
| பெரிய அந்தமானியர் | 625 | 455 | 209 | 90 | 23 | 19 | 24 |
| ஓஞ்சி | 672 | 631 | 346 | 250 | 150 | 129 | 112 |
| சாரவா | 468 | 114 | — | 70 | 56 | 56 | 25 |
| சென்டினல்கள் | 385 | 117 | 117 | — | — | 50 | 100 |

அமைத்து, ஒரு சில நாள் வேட்டையைத் தங்கள் நிரந்தரக் குடியிருப்புப் பகுதியிலிருந்தும், ஓரிரு வார வேட்டையை வேட்டைத் தளத்திற்கு அருகில் சாங்-தரங்கா என்ற எளிமையான குடிசையை வாழ்விடமாகக் கொண்டும், ஓரிருமாதவேட்டையைச் சாங்-தொர்ங்கா என்ற இடைக்காலக் குடிசையைத் தங்குமிடமாகக் கொண்டும் மேற்கொள்கின்றனர். இவர்களின் அன்பளிப்புப் பரிமாற்றம் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. இவர்களுக்கு மிகவும் பிடித்தமானது டென்டாலியம் கிளிஞ்சல் (Dentalium Octogonum) ஆகும்.

அந்தமான் தீவினர் தங்கள் குடியிருப்புப் பகுதியில் பெரிய சமூகக் குடில்களை அமைத்துப் பொதுச் சமையற் கூடமாகவும், நடனமாடும் இடமாகவும் கைம்பெண்கள், ஆண், பெண், தங்கும் இளையவர் கூடமாகவும் பயன்படுத்துகின்றனர். வீட்டில் பெண்களும் சமூகக் குடில்களில் ஆண்களும் சமைக்கின்றனர். அந்தமானியருக்கு நெருப்பு உண்டுபண்ணத் தெரியாது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தீவினரிடையே பூப்புச்சடங்கு முறை கடினமானதாகும். பெண்கள் பூப்பெய்தியவுடன் கடலில் இரண்டு மணி நேரம் நீராடியபின் மூன்று நாள்களுக்குத் தனிக் குடிலில் அமர்த்தப்படுகின்றனர். பின் ஒரு மாத காலத்திற்கு நாள்தோறும் காலையில் நீராடிய பின்னரே அன்றாடச் செயல்களில் ஈடுபட வைக்கின்றனர். ஆண்களுக்கு உடலின் பெரும் பகுதியில் வெட்டுக் கோடுகளை வரைகின்றனர். பெண்களுக்குப் பொதுவாக நெற்றியில் மட்டுமே இவ்விதக் கோடுகளை வரைகின்றனர்.

திருமணத்திற்கு முன் பாகுபாடில்லாக் கலவி காணப்பட்டாலும் குருதி உறவுடையோருடன் கலவியை ஏற்பதில்லை. ஒருதார மணத்தையும் நடுவணுக் குடும்பத்தையும் ஏற்றுள்ளனர். குழந்தை பிறப்பதற்கு முன்னரே பெயர் சூட்டும் முறை காணப்படுவதால் இரு பாலாரும் பொதுவான பெயர்களையே கொண்டுள்ளனர்.

அந்தமான் தீவினர் தங்கள் திறந்த மேனியைப் பல வண்ணப் பூச்சுகளால் அணிசெய்து கொள்கின்றனர். அன்றாட வாழ்வில் ‘ஒது’ (Odu) என்னும் சாதாரணக் களிமண்ணாலும் ‘தொல் ஒது’ (Tol-Odu) என்ற வெண்மைக் களிமண்ணாலும் அணிசெய்துகொள்கின்றனர். விழாக்காலங்களில் விலங்குகளின் கொழுப்பு மற்றும் சிவப்பு ஆக்சைடு ஆகியவற்றை எரித்துக் கிடைக்கும் ‘கெயிப்’ (Keyib) என்னும் சிவந்த வண்ணத்தைக்கொண்டு அணிசெய்து கொள்கின்றனர்.



அநதமான் ஒஞ்சி இளைஞன்

அந்தமானியரிடம் ஒருங்கிணைந்த கட்டுக்கோப்பான ஆட்சியமைப்பு இல்லையாதலால் சமுதாயச்

செயற்பாடுகளை அக்குழுவினரின் முதியவர்கள் கண்காணிக்கின்றனர். இக்குழுவின் மூத்த ஆடவரை 'மய்யா' (Maia) அல்லது 'மய்' (Mai) என்னும் மதிப்பு விளியாலும் மூத்த பெண்டிரை 'மிமி' (Mimi) என்னும் மதிப்பு விளியாலும் அழைக்கின்றனர். வேட்டைத்திறன், போர்த் திறன், கொடை உள்ளம், அன்புள்ளம் கொண்ட இளையவர்களுக்கு முதியவர்களைப் போன்றே மதிப்பளித்துச் சமுதாயச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் பொறுப்பையும் அளிக்கின்றனர்.

ஆவியுலகக் கோட்பாட்டுச் சமயத்தை இத்தீவினர் கொண்டுள்ளனர். காடு, புயல், கடல் ஆகியவைகளுக்கு ஆவி உண்டென்று நம்புகின்றனர். நில நடுக்கம் ஏற்படுவதற்கு முன்னோர்களின் ஆவியே காரணம் என்று நம்புவதால், முன்னோர் வழிபாடும் இவர்களிடையே காணப்படுகிறது. இயற்கைக்கப்பாற்பட்ட ஆற்றலுடையோர், இச்சமுதாயத்தில் சிறப்பிடம் வகிக்கின்றனர்.

இறந்தவர்களுக்குச் செய்யும் இறுதிச் சடங்குகளில் இருவித வழக்குகள் உள்ளன. இறந்தவர்களுடன் அவர்கள் பயன்படுத்திய அம்பு, வில் போன்றவற்றை வைத்துப் புதைகுழியில் இடுவர்; அல்லது பைகசு லேசிபரா (Ficus laccifera) மரத்தினால் கட்டப்பட்ட மேடைமீது இறந்தவரின் உடலை வைத்துக் கிளிஞ்சலில் தாய்ப்பாலிட்டுச் சுடுமிடத்திற்குக் கீழே புதைப்பர். இவ்விடத்தைத் துக்ககாலமான மூன்று மாதம் வரை காப்பர். உடல் அழுகியவுடன் எலும்புகளை இறந்தவரின் மனைவி தோண்டி எடுத்துக் கடலில் கழுவி வண்ணக் களிமண்ணால் அணிசெய்து புதைப்பாள். குறிப்பிட்ட எலும்புத்துண்டுகளைப் புதைத்து விடாமல் தாங்கள் நோயுறும் காலத்தில் அணிந்து கொள்வர்.

மேன், வித்தியார்த்தி, பவுமிக்கு முதலான மானிடவியலாரின் அண்மைக்கால ஆய்வுகளின்படி, 10 முது பழங்குடிகளாக இருந்த பெரிய அந்தமானியர், இப்பொழுது பல்வேறு கலப்பினத்தவராக உள்ளனர். தனித்தனி மொழி அல்லது கிளை மொழியைக் கொண்டிருந்த இவர்கள், இனம், மொழி, பண்பாடு ஆகிய அனைத்துக் கூறுகளிலும் கலந்து நீக்கிரிட்டோ இனத் தனிப் பண்புகளை இழந்து வருகின்றனர் என்றும், 'செரு' (Jeru) என்னும் கிளை மொழியையே இவர்கள் பேசுகின்றனர் என்றும் தெரிகிறது. வேட்டையாடுதலும் உணவுப் பொருள் சேகரித்தலும் ஆகிய தொன்மை நிலையினைக் கொண்ட அனைத்து மனிதக் குழுக்களிலும் குறைந்த இனப்பெருக்கத் திறனும், அதிகக் குழந்தைச் சாவும் காணப்படுவதால், அக்குழுக்களின் எண்ணிக்கை குறைய நேரிடும் என்ற பொது நியதிக்கேற்ப, அந்தமான் தீவினரும் மேற்கண்ட குறைந்த மக்கள்தொகையைக் கொண்டுள்ளனர்.

நிக்கோபார் பழங்குடிகள்: நிக்கோபார் பகுதியில் பத்தொன்பது தீவுகள் உள்ளன. இவை வங்காளக் குடாக்கடலின் தென் கோடியில் வடக்கு நில நேர்க் கோட்டில் ஆறாவதற்கும் பத்தாவதற்கும் இடையிலும், கிழக்கு நிரைகோட்டில், 92° 40-க்கும் 94°-க்கும் இடையிலும் இருக்கின்றன. இப்பத்தொன்பது தீவுகளுள், பன்னிரண்டு தீவுகளிலேயே மக்கள் வாழுகின்றனர். இத்தீவுகளில் நிக்கோபாரி, சோம்பென் ஆகிய இரு பழங்குடிகளே வாழ்கின்றனர். கார் நிக்கோபார் என்னும் வடகோடித் தீவின் நான்கில் மூன்று பகுதியில் நிக்கோபாரிகள் வாழ்கின்றனர். இங்கே பிக்லபாடி என்னும் சிற்றூர் உள்ளது. இவ்வூரே, தம் மூதாதையர்களின் பிறப்பிடம் என நிக்கோபாரிகள் எண்ணுகின்றனர். தீவின் நாட்டாண்மைக்காரன் இந்த ஊரைச் சேர்ந்தவனாகவே இருப்பான். தீவின் சமூக நிகழ்ச்சிகள் அனைத்தும் இந்த ஊரிலேயே நிகழும்.

நிக்கோபாரிகளுடன், ஆங்கிலேய ஆட்சிக் காலத்திலேயே, கிறித்தவத் தொண்டர்கள் தொடர்பு கொண்டு அவர்களை நாகரிகப்படுத்தினர். 1895-இல், இங்கே வந்து சேர்ந்த தமிழ் நாட்டுக் கிறித்தவப் பாதிரியார் வேதப்பன் சாலமனும், அவர்தம் மனைவியும் பல தொண்டுகளைச் செய்தனர். பேச்சு மொழியாக மட்டும் இருந்த நிக்கோபாரி மொழிக்கு இரிச்சர்டுசன் என்ற பாதிரியார் உரோமன் எழுத்துகளைக் கொண்டு முதன்முதல் எழுத்துருவம் அமைத்துக் கொடுத்தார். 'ழகரம்' என்ற வளைநா ஒலி, இம் மக்களிடம் உள்ளது.

அந்தமான் நிக்கோபார் பழங்குடிகளிலேயே, நிக்கோபாரிகளில் பலர், நகர்ப் பண்பாட்டை ஏற்றுக் கொண்டு வருகின்றனர்; கல்விகற்றுப் பொதுவாழ்வில் கலந்து சிறந்து வாழ்கின்றனர்.

சோம்பென்: பெரிய நிக்கோபாரில் வாழும் சோம்பென் பழங்குடியினர், நிக்கோபார் மக்களை விடச் சிறிதே உயரமானவர்கள். மூக்கும் தாடையும் அவர்களைவிட எடுப்பாக அமையப்பெற்றுவர்கள்.

சோம்பென் மக்களைப் பற்றி விரிவான செய்திகள் கிடைக்கவில்லை. தேன்திரட்டுவது இவர்களது முதன்மைத் தொழில். பரண் கட்டி அதன்மேல் வீடுகளை அமைத்து வாழ்கின்றனர். சாரவாக்களைப் போலப் பிறமக்களின் வருகையைச் சோம்பென்களும் வெறுக்கின்றனர்.

நிக்கோபாரிகளும் சோம்பென்களும் பிற அந்தமான் தீவுப் பழங்குடிகளும் பேரளவு நிர்வாண மக்களாகவே வாழ்ந்து வந்தனர். எனவேதான், பிற்

காலச் சோழர்களின் வெற்றியைப் பேசும் கல்வெட்டுகள், 'நக்கவாரம்' என்று இப்பகுதியைக் குறிப்பிடுகின்றன. ''தேனக்க வார்பொழில் மானக்கவாரம்'' என்பது, முதல் இராசேந்திர சோழனின் (1012-1044) மெய்க்கீர்த்தித் தொடராகும். மணிமேகலை 'நக்கசாரணர்நாகர் வாழ்மலை' (ஆதிரை பிச்சையிட்ட காதை-15) என்று குறிப்பிடும் பகுதியும் இதுவே ஆகலாம். நக்கம் என்றால் அம்மணம் என்று பொருள். இங்கு வாழும் மக்கள், பெரும்பாலோர் அண்மைக்காலம் வரை அம்மணமாகவே வாழ்ந்தவராவர். ஒருசில மாற்றங்கள் அண்மைக் காலத்தில்தான் இவர்களிடத்து நிகழத் தொடங்கியுள்ளன.

இன்றைய நிலைமை: குற்றவாளிகளை ஆயிரக் கணக்கில் கொண்டுவந்து குடியமர்த்தியதால் இங்கு இந்தியர்களின் எண்ணிக்கை பெருகியது. இவர்களில் பத்தானியர், பஞ்சாபியர், சிந்தியர், வங்காளியர், தமிழர், தெலுங்கர், மலையாளிகள், மராட்டியர் முதலிய பலரும் இருந்தனர். குறிப்பாக, 1952க்குப் பின் இந்தியாவிலிருந்து அங்குச் சென்று குடியமர்த்தப்பட்டோரின் எண்ணிக்கை பன்மடங்கு பெருகியுள்ளது.

இன்று வங்காளம், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசுவோரே பெருந்தொகையினர் ஆவர். அவர்கள், தமக்குள் தாய்மொழி பேசினும் இந்தியையே பொது மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் கொண்டுள்ளார்கள். எனினும் தாய்மொழிப் பள்ளிகள் அங்கு நிறைய உள்ளன. இந்து, முசுலிம், கிறித்தவர் போன்ற பாகுபாட்டு உணர்வு அவர்களிடையே மிகவும் குறைவு. எனவே, கலப்புத் திருமணங்கள் அங்கு நடக்கின்றன. இங்குள்ள தமிழர், முருகனுக்கும் சிவனுக்கும் கோயில்கள் கட்டியுள்ளனர். பொங்கல் போன்ற திருவிழாக்கள், தீ மிதித்து வழிபடுதல், சூரிய வணக்கம் முதலியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

இங்குத் தென்னை, கமுகு மரங்கள், நெல், பருப்பு வகைகள், கரும்பு, ரப்பர், எண்ணெய்ப்பனை, காய்கறிகள் முதலியன பயிராகின்றன. எனினும், விளைநிலம் குறைவாக இருப்பதால், உணவுப் பொருள்கள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே பெறப்படுகின்றன. மரம் அறுத்தல், ஒட்டுப்பலகை (Ply wood) செய்தல், தீக்குச்சி செய்தல் போன்ற மரத்தொழில்கள் இங்கு நடைபெறுகின்றன. உயர்தர மரங்கள் பல இங்கிருந்து ஏற்றுமதியாகின்றன. மீன் ஏற்றுமதியும் மிகுதி.

ஆட்சி முறை: அந்தமான் நிக்கோபார் தீவுகள் விடுதலைக்குப்பின் 'டி' வகை மாநிலமாக இருந்தன. 1958 நவம்பரில் இத்தீவுகள் இந்தியக் குடியரசின் நேரடி ஆட்சிக்குட்பட்ட பகுதியாக ஆக்கப்பட்டன. இவற்றின் தலைவர், துணை ஆளுநர் (Lieutenant Governor) எனப்படுவார். இவரை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். இத்தீவுகளுக்கென தனிச் சட்டமன்றம் இல்லை. எனவே அமைச்சரவையும் இல்லை. தில்லியிலுள்ள நாடாளுமன்றத்தில் இப்பகுதிக்கு ஓர் உறுப்பினர் உள்ளார். துணை ஆளுநருக்கு உதவ ஆலோசனைக் குழு ஒன்று உண்டு. இதில் அந்தமான் நிக்கோபார் நாடாளுமன்ற உறுப்பினரும் வேறு நால்வரும் உள்ளனர்.

1958-இல் போர்ட்டு பிளேர் நகராட்சி அமைக்கப்பட்டு, அதற்கான தேர்தல் நடைபெற்றது. அந்நகராட்சி மன்றத்தில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் அறுவரும் துணை ஆளுநரால் நியமிக்கப்படும் உறுப்பினர் மூவருமாக மொத்தம் ஒன்பது பேர் உள்ளனர். மத்திய அரசின் உள்நாட்டு அமைச்சருக்கு இத்தீவுகளின் செயல்முறை பற்றி ஆலோசனை கூற, 1961-ஆம் ஆண்டு முதல், ஒரு குழு இயங்கி வருகிறது. இதில் துணை ஆளுநர், நாடாளுமன்ற உறுப்பினர், போர்ட்டு பிளேர் நகராட்சியின் துணைத் தலைவர், மத்திய அரசால் நியமிக்கப்படும் ஐவர் ஆகியோர் உறுப்பினராக உள்ளனர். அந்தமான் நிக்கோபார் தீவுகளில் தலைமை ஆணையாளர் ஆட்சி மாறி 1982-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 11-ஆம் நாள் துணை ஆளுநர் ஆட்சி தொடங்கியது. துணை ஆளுநரின் கீழ் ஓரளவு மக்கள் பேராளரும் பங்கு கொள்ளும் 'கருத்துரை மன்றம்' உருவாக்கப்பட்டது. போர்ட்டு பிளேரில் ஒரு வானொலி நிலையமும் உண்டு; இந்தி. வங்காளம், தமிழ், மலையாளம் ஆகிய மொழிகளில் ஒலிபரப்புகள் நிகழ்கின்றன.

இத்தீவுகளின் மக்களுக்கென அரசு ஒரு கலைக் கல்லூரியை நடத்துகிறது; பல பள்ளிகளையும் நிறுவியுள்ளது. இந்தியா முழுவதிலும் கற்றோரின் விழுக்காடு 39.17 ஆகும். ஆனால், அந்தமான் நிக்கோபாரிலோ இது 51.27. ஆண்களில் படித்தவர்கள் விழுக்காடு 58.44; பெண்களில் 41.85. இந்திய நாட்டிலேயே மக்கள் நெருக்கம் குறைவான பகுதி இத்தீவுக் கூட்டமே. ஒரு சதுரக்கிலோ மீட்டர் பரப்பில் 23பேர் வாழ்கின்றனர். கல்கத்தாவிலிருந்து விமானங்களும், சென்னையிலிருந்தும் கல்கத்தாவிலிருந்தும் கப்பல்களும் போர்ட்டு பிளேருக்குச் செல்கின்றன. இர.ஆ.

**Mathur**, L.P., "History of the Andaman and Nicobar Islands", Sterling Publications, Delhi, 1968.

**Portman**, M.L., "A History of our Relations with the Andamanese", Vol. II, Goa Privating Press, Calcutta, 1899.

**Probhat Kumar**, "Land and People of the Andamans: A Geographical and Social-Economic Study", Post Graduate Book Mart, Calcutta, 1962.

**Radcliffe-Brown, A.R.**, "The Andaman Islanders", Free Press, New York, 1964.

**Colonel Hodson, T.C.**, "The Primitive Culture of India", The Royal Asiatic Society, London, 1922.

**Edward Horace Man.**, "Aboriginal Inhabitants of the Andaman Islands", Sanskaran Prakashak, Delhi, 1883.

Andaman and Nicobar Islands A Glance Statostoca; Bureau, Andaman and Nicobar Administration, Port Blair, 1981.

**Mathur G.K.**, Nicobar Islands (Tamil), National Book Trust, New Delhi-16, 1974.

Lidio Cipriani-The Andaman Islanders, Weidenfeld and Nicolson 20, New Bond Street, London, W.1.,1966.

**அந்தர காந்தாரம்** என்பது, கருநாடக இசையில் 'க' என்ற சுரத்தின் ஒரு குறிப்பிட்ட ஒலி வேறுபாட்டைக் குறிக்கும் இசை நுணுக்கத்தினைக் குறிக்கும். காந்தார சுரத்தின் மெலியது வலியது என்ற வேறுபாடுகளில் இது வலியதைக் குறிக்கும். இது ஒரு இயல்பு சுரமாகும். தம்பூராவைச் சீராகச் சுருதி கூட்டி மீட்டினால் அந்தர காந்தாரம் தெளிவாகக் கேட்கும். இது சங்கராபரண இராகத்தின் முழுமையான நியாசச் சுரமாகும். இந்துசுதானி இசையில் இது "பிலாவல் தட்" என்ற இராகத்திலும், மேனாட்டு இசையில் 'மேசர் இசுகேல்' (Major Scale) என்ற பிரிவிலும் அமைந்துள்ளது. காந்தாரம் என்பதைப் பஞ்சமரபு நூல் கைக்கிளை என்று குறிப்பிட்டுள்ளது. காண்க: இசை.

**அந்தராத்து** இலட்சத்தீவுகள், மினிகாய், அமின்திவி ஆகிய தீவுக்கூட்டத்தில் உள்ள ஒரு தீவு. உப்பங்கழியற்ற இத்தீவின் இடையே நீர்த்தேக்கமுள்ள வட்டவடிவமான பவழப்பாறையொன்று தீவு முழுவதையும் கவர்ந்துள்ளது. வடகிழக்கு ஓரத்தில் உள்ள தட்டையான பவழப்பாறையைத் தவிர்த்து, வட்டவடிவமான இத்தீவு முழுமையும் ஓதத்தின் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறது. இதன் வடபக்கத்தில் சிறு படகுத்துறையொன்று இருந்தது. அதனை 1909-ஆம் ஆண்டில் உடைத்துத் தகர்த்து விட்டார்கள். படகுத் துறையைச் சுற்றிலும் போக்குவரத்திற்குப் பயன்படும் படகுகளை நிறுத்தப் பெரிய சாவடிகள் கட்டப்பெற்றுள்ளன. இத்தீவுமக்கள் இசுலாம் சமயத்தவர்களாகி விட்டனர். இன்றும் அவர்கள் முசுலிம்களாகவே வாழ்கிறார்கள். இத்தீவு கொப்பரைத் தேங்காய் உற்பத்தியில் சீரிய இடத்தைப் பெற்றுள்ளது.

**அந்தரி**[1] தமிழகத்தே பழங்காலத்தில் வழங்கிய தோற்கருவிகளுள் ஒன்று. அடியார்க்கு நல்லார், சிலப்பதிகார அரங்கேற்றுகாதை உரையில் பல்வேறு தோற்கருவிகளின் பெயர்களைத் தொகுத்துக் குறிப்பிடும்போது இதனையும் சுட்டியுள்ளார்.

அந்தரி[2] என்பது கொற்றவை அல்லது பார்வதியின் பெயர்களுள் ஒன்று. இதனைச் சிலப்பதிகாரம் "சங்கரி அந்தரி நீலி சடாமுடி" என்று குறிப்பிடுகிறது. கொற்றவைக்கு உரியதாகக் கருதப்படும் மந்திரம் 'அந்தரி மந்திரம்' எனப்படும். கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளோடு மதுரை செல்லுங்கால், காட்டு வழியின் இடையே ஓரிடத்தில் தங்கினர். நீர் வேட்கை கொண்ட கோவலன் அவர்களை விட்டுத் தனியே சிறிது தூரம் சென்று, ஒரு பொய்கைக் கரையில் நின்றான். அவனைக் கண்டு அவன்மீது மையல் கொண்ட வனசாரிணி என்னும் கானுறை தெய்வம், மாதவியின் தோழியாகிய வயந்த மாலையின் வடிவங்கொண்டு, அவன்பால் சென்று அவனை மயக்கும் வகையில், மாயக் கண்ணீர் வடித்து அடியில் விழுந்து வணங்கி வேண்டியது. அப்பகுதியில் மயக்கும் தெய்வம் உண்டு என முன்னரே அறிந்திருந்த கோவலன், வணங்கிய வயந்த மாலையின் உண்மையை உணர விரும்பித் தானறிந்து வைத்த மந்திரத்தினை நாவில் ஓதி, அத்தெய்வத்தின் வஞ்சகத்தை அறிந்தான் (சிலப். காடுகாண். 189-200). கோவலன் ஓதியது 'பாய் கலைப் பாவை மந்திரம்' என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார். அதனை "அந்தரி மந்திரம்" என்று அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார்.

சிலப்பதிகாரக் காலத்தில், கொற்றவைக் கோலமாகிய 'அந்தரி கோலம்' பாடுவதற்காகவே சில பாணர்கள் இருந்துள்ளார்கள். கொற்றவை, அசுரர்களோடு போரிட்ட போர்க்கோலத்தை அவர்கள் பாடுவார்கள். அவர்கள் 'அந்தரி கோலம் பாடும் பாணர்' எனவும், 'அம்பணவர்' எனவும் அழைக்கப் பெற்றார்கள் (சிலப். புறஞ். 104-105-உரை).

**அந்தாதி இலக்கியம்** என்பது, 96 வகைப் பிரபந்தங்கள் என்று தமிழ் மொழியில் தொகைப் படுத்திக் கூறப்படும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும். அந்தாதி என்னும் சொல் அந்தம் - ஆதி என்று பிரியும். அந்தம் - முடிவு என்றும், ஆதி தொடக்கம் என்றும் பொருள்படும். அதனால், ஒன்

றின் முடிவு மற்றொன்றின் தொடக்கமாக அமைவது என்பது இப்பெயர்ப் பொருளாகும்.

அந்தாதி, அந்தாதித் தொடை என்றும் செய்யுள் அந்தாதி என்றும் பாகுபடும். ஒரு செய்யுளின் இரண்டடிக்கு இடையே அமைந்துள்ள அந்தாதி அமைப்பு அந்தாதித் தொடை என்றும், ஒரு செய்யுளின் இறுதி அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமைவது செய்யுளந்தாதி என்றும் சொல்லப்படும். செய்யுளந்தாதியில் ஒரு செய்யுளின் முடிவிலுள்ள எழுத்தோ அசையோ, சீரோ, சொல்லோ, அடியோ அடுத்த செய்யுளின் தொடக்கமாக அமையும். இவற்றுள் எது அமைகிறதோ அதன் பெயரால் அந்த அந்தாதி பெயர் பெறும். சான்றாக, ஒரு பாடலின் இறுதிச் சொல் அடுத்த பாடலின் தொடக்கத்தில் அமைகின்ற போது அந்தச் சொல்லமைப்பு, சொல்லந்தாதி எனப் படும்.

எழுது பொருள், எழுதப்படுபொருள், எழுது கருவிகள் போன்றன பழங்காலத்தில் கிடைப்பது அரிதாக இருந்தது. அதனால் ஏடெழுதி இலக்கியங்களைப் படிப்பதைவிட மனனம் செய்து படிப்பதைப் பெரிதும் விரும்பினர். விரிவாக எழுதப்படும் செய்திகள், திட்பமும் நுட்பமும் பொருந்தச் செய்யுளாக அமைக்கப்பட்டன. இவ்வாறு அமைக்கப்படும் செய்யுளை முழுதுமாக மனத்திற் கொள்வதற்கு அதன் உறுப்புகளாகிய எதுகை, மோனை, முரண் முதலிய தொடைகளும், அவற்றின் வகைகளும் பிறவும் உதவின. இத்தகைய செய்யுட்கள் பலவற்றைத் தொடர்ந்து நினைவிற் கொள்வதற்கு அந்தாதிமுறை பேருதவியாக அமைந்தது.

அந்தாதி யாப்பமைப்பில் நூல்கள் பிற்காலத்தில் தான் தோன்றின என்றாலும், சங்க இலக்கியங்களில் அந்தாதி அமைப்பிற்கான கருக்கள் அமைந்து காணப் படுகின்றன. பதிற்றுப்பத்தின் நான்காம் பத்தும், ஐங்குறு நூற்றின் தொண்டிப் பத்தும் அந்தாதி யாப்பு முறையில் அமைந்துள்ளன. மேலும், தொகைநூற் செய்யுள்கள் சிலவற்றின் சில அடிகளில், அந்தாதி அமைப்பினைக் காணமுடிகிறது (புறம். 2; நற். 95; சிறு. 14-28). அவ்வாறே சிலப்பதிகாரத்தின் கானல் வரிப் பாடல்கள் சிலவற்றின் இடையே, அந்தாதி யாப்பு அமைந்து காணப்படுகின்றது (2-4; 11-13; 20-23; 25-27; 34; 36; 43-46-48).

பல சிற்றிலக்கிய வகைகளைத் தோற்றுவித்தவர்கள் பக்திக் கவிஞர்கள். அதற்குப் பக்திப் பொருண்மை காரணம். அவ்வகையில் அந்தாதி இலக்கியத்தை முதலில் தோற்றுவித்தவர் காரைக்கால் அம்மையார் ஆவர். அவர் இயற்றியுள்ள அற்புதத் திருவந்தாதி இதுகாறும் தமிழிற் கிடைத்துள்ள அந்தாதி இலக்கியங்களுள் முதலாவதாக அமைந்து விளங்குகிறது. ஆழ்வார்களின் பக்திப் பனுவல்களிலும், நாயன்மார்களின் பதிகங்களிலும் அந்தாதி அமைப்புப் பயின்று வந்துள்ளது.

பதினோராம் திருமுறையிலுள்ள பல நூல்கள் அந்தாதி இலக்கிய வகையில் அமைந்துள்ளமையால் அத்திருமுறை 'அந்தாதி மாலை' என்றும் சொல்லப் படுகிறது. திருவாசகத்தில் திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், பிரார்த்தனைப் பத்து, குழைத்தபத்து, யாத்திரைப்பத்து ஆகியன அந்தாதி முறையில் அமைந்துள்ளன. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துள் முதலாழ்வார்களின் அருளிச்செயல்கள், திருவாய்மொழி முதலிய பல பிரபந்தங்கள் அந்தாதி யாப்பில் அமைந்துள்ளன. திருமந்திரத்தில் பல பகுதிகளை அந்தாதி அமைப்பில் திருமூலர் படைத்துள்ளார். திருஞானசம்பந்தர், 'பிரமபுரத்துறை' என்று தொடங்கும் பதிகத்தை இயமக அந்தாதி என்னும் வகையில் பாடியுள்ளார்.

அந்தாதித் தொடையின் நடைநலமும் ஓசைநயமும் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. எளிதில் உள்ளத்தில் தங்குவனவாகவும் அமைந்தன. எனவே, அந்தாதித்தொடை அமைந்த நூல்களைப் புலவர்கள் படைக்கத் தொடங்கினர். கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் இவ்வகை இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றிப் பரவலாயின. அந்தாதி நூல்கள் தொடக்கத்தில் எளிமையும் இனிமையும் மிக்கனவாய்ப் படைக்கப்பட்டன. அவற்றில் நடைநலமும் தொடை நலமும் சிறந்திருந்தன.

இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள், ஒலியந்தாதி, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, கலியந்தாதி என்று அந்தாதியை நான்காகப் பகுத்துக் கொண்டு இலக்கணம் தந்துள்ளன. மேலும், இயமக அந்தாதி, திரிபு அந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, சிலேடையந்தாதி போன்றனவும் அந்தாதி இலக்கியங்களின் வகைகளாக அமைந்துள்ளன.

ஒலியின் அடிப்படையில் பெயர்பெற்றது ஒலியந்தாதி. இதனை ஒலியலந்தாதி எனவும் கூறுவர். இதன் ஒவ்வொரு அடியிலும் பதினாறு கலை வைப்புகள் அமையவேண்டும். நான்கு அடிகளிலும் ($16\times4=64$) அறுபத்து நான்கு கலை வைப்புகள் அமைய அந்தாதி யாப்பில் பாடப்படும். வெண்பா, கலித்துறை, அகவல் போன்றன இவ்வகை அந்தாதிகளில் யாப்பாக அமைகின்றன. இது முப்பது பாடல்களைக் கொண்டு அமைகிறது.

பதிற்றந்தாதி என்பது பத்துப் பாடல்களைக் கொண்டது என்று பொருள்படும். வெண்பா அல்லது கலித்துறை இதன் யாப்பாக அமைகிறது.

நூறு பாடல்களைக் கொண்ட அந்தாதி நூற்றந்தாதி எனப்படும். நூறு வெண்பாக்கள் அல்லது நூறு கலித்துறைப் பாக்கள் இவ்வகை அந்தாதிகளில் இடம்பெறும். வெண்பா நூறு கொண்டது வெண்பா அந்தாதி என்றும், கலித்துறைப் பாக்கள் நூறு கொண்டது கலித்துறை அந்தாதி என்றும் பெயர் பெறும். ஒவ்வொரு பத்துப் பாடலும் தனித்தனிச் சந்தங்களில் அமைக்கவும் படும். இவ்வாறு அமையும் அந்தாதி பதிற்றுப்பத்து அந்தாதி எனப்பெயர் பெறும். குட்டித் திருவாசகம் என்னும் திருக்கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி இவ்வாறமைந்ததாகும். திருவாசகத்திலுள்ள திருச்சதகம் இவ்வாறு அமைந்துள்ள போதிலும் இப்பெயர் பெறாது திருச்சதகம் எனவே பெயர் பெற்றுள்ளது. நமக்குக் கிடைக்கின்ற அந்தாதிகளுள், இவ்வகை அந்தாதிகள் மிகுதியான எண்ணிக்கையில் உள்ளன. இவ்விரண்டிலும் முதலில் தோன்றிய வெண்பா அந்தாதிகள் எண்ணிக்கையில் மிகுந்தும், கலித்துறை அந்தாதிகள் அதனை அடுத்தும் காணப்படுகின்றன.

ஒலியந்தாதி போன்று கலியந்தாதியிலும் கலை வைப்பு இடம் பெறுகிறது. ஒலியந்தாதியில் அறுபத்து நான்கு கலை வைப்பு அமைய, கலியந்தாதியில் அக்கலை வைப்பு முப்பத்திரண்டாகக் குறைகிறது.

இயமக அந்தாதி என்பது சொல்லணியால் பெயர் பெற்றது. பாட்டின் நான்கு அடிகளிலும் முதற் சீரில் வந்த எழுத்துகளே திரும்ப வரும். ஆனால் அவற்றைப் பிரித்துப் பொருள் காணும் போது நான்கு முதற்சீர்களும் நான்கு வேறு பொருள்களைத் தரும். இத்தகைய மடக்கை வடமொழியாளர் இயமகம் என்றுரைப்பர். இவ்வகைப் பாடல்களில் அமைந்த அந்தாதி இயமக அந்தாதி எனப்பட்டது. இந்த இயமகம், ஐந்தெழுத்திற்கு மேற்பட அமைவது சிறப்பானதாகவும், அதற்குக் குறைவது சிறப்பற்றதாகவும் கருதப்படுகிறது.

திரிபந்தாதி என்பது சொல்லணி வகையில் பெயர் பெற்றதாகும். ஒரு செய்யுளின் நான்கடிகளிலுமுள்ள முதல் எழுத்துகள் மட்டும் மாறுபட்டுத் திரிந்துஅமையும். ஏனைய எழுத்துகள் பலவும் ஒத்து வரப் பொருள் வேறுபட்டு அமையும். இத்திரிபு அந்தாதியும் ஐந்து எழுத்திற்குக் குறைவாக வரின் சிறப்பற்றதாகக் கருதப்படும். இவ்வகை அந்தாதிகளைப் படைப்பது எளிதன்று. இதற்குச் சொற்பயிற்சி, பொருள் கொள்ளும் முறை போன்றவற்றில் மிக்க புலமையும் பழக்கமும் தேவைப்படுகின்றன.

இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டாத எழுத்துகளை அமைத்து அந்தாதிமுறையில் பாடப்படுவது நிரோட்டக யமக அந்தாதியாகும். ப, ம இரண்டும் இதழொலிகள். எனவே இவ்வகை அந்தாதியில் இவ்விரு எழுத்துகளும் இடம்பெறாத சொற்கள் பயின்றுவரும். இதழ்கள் ஒன்றோடொன்று ஒட்டாமல் அகல்வதால் இதனை இதழகல் அந்தாதி என்றும் கூறுவர். இதற்கு வரையறை நூறு பாடல்கள்.

சிலேடை வெண்பா (திருக்குற்றாலச் சிலேடை வெண்பா), சிலேடை மாலை (திருவரங்கச் சிலேடை மாலை), சிலேடை உலா (சிலேடை உலா, தத்துவ ராயர்), சிலேடைப் பதிகம் (சிலேடைப் பதிகம்) போன்ற சிற்றிலக்கிய வகைகள் பலவும் சிலேடை முறையில் அமைக்கப்பட்டுள்ளமை போன்று, சிலேடை வகையில் அமைந்த செய்யுட்களாலாகிய அந்தாதி சிலேடை அந்தாதி எனப்படும். ஒன்றிற்கு மேற்பட்ட பொருள்தருமாறு அமைந்த பாடல்களைக் கொண்ட அமைப்பில் இயற்றப்படுவது இது. இவ்வகை அந்தாதிகள் எண்ணிக்கையில் குறைந்தே காணப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட அந்தாதி வகைகளேயன்றி, வேறு சில அந்தாதி வகைகளையும் காணலாம். இவை பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் வாழ்ந்த தமிழ்ப் புலவர் பெருமக்களால் உருவாக்கப்பட்டவை. இவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றின் பெயர்கள் வருமாறு:– உயிரெழுத்து அந்தாதி, ஓரெழுத்து அந்தாதி, ஓரெழுத்து இயமக அந்தாதி, பஞ்சாட்சர அந்தாதி, ஆறெழுத்து அந்தாதி, கொம்பிலா வெண்பா அந்தாதி, ஒலியல் அந்தாதி, முதலொலியல் அந்தாதி, நடுவொலியல் அந்தாதி, சந்தக்கலித்துறை அந்தாதி, கலிவிருத்த அந்தாதி, இயமகக் கலித்துறை அந்தாதி, ஒரு தொடைச்செய்யுள் நிரோட்டக அந்தாதி, நிரோட்டகத் தலைச் செய்யுள் அந்தாதி, தலையணிச் சீரிதழகல் அந்தாதி, இரு சொல் இயமக அந்தாதி, நூற்றெட்டு வெண்பா அந்தாதி, சதகத்து அந்தாதி, பல்சந்த அந்தாதி, திரிபு வெண்பா அந்தாதி.

அந்தாதித் துறையில் நூல்கள் பெருகப்பெருக அருஞ்சொற்களும், கடினச் சொற் புணர்ச்சிகளும் பாடல்களில் இடம் பெறலாயின. அந்தாதி நூல் இரட்டுற மொழிதல், மூன்றுற மொழிதல், நான்குற மொழிதல், ஐந்துற மொழிதல், ஆறுற மொழிதல் எனப் பலவகையில் சென்றது. அதற்குப் பலவகையாகச் சொற்களைப் பிரித்துப் பொருள் கொள்ள வேண்டியிருந்தது. அதனால் இது சுவைப்போர்க்குப் பல இன்னல்களைத் தந்தது. திரிபு, மடக்கு (இயமகம்) போன்றன இப்பாடல்களில் மிகுதியாக அமைந்து இவற்றைப் படைக்கின்ற புலவரைச் சோதனை செய்யும் புலமைக் கருவிகளாய் அமைந்துவிட்டன. இதனால் இயல்பாக நுகரும் கவியின்பம் தடைபட்டது; உணர்வு குன்றியது. ஆற்றொழுக்கு நடையின்றிக்

கரடு முரடான சந்திகள் வந்து, படிப்பாரை மேலும் படிக்கத் தூண்டாது தடுக்கும் தடைகளாக இவ்வகை யாப்பு அமையலாயிற்று.

அந்தாதி இலக்கியம் தொடக்கக் காலத்தில் வெண்பாவை யாப்பாகக் கொண்டமைந்தது. முதல் அந்தாதியான காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, வெண்பா யாப்பில் அமைந்துள்ளது. அடுத்து, அந்தாதி அமைப்பில் பாடல்களை அமைத்த முதல் ஆழ்வார்கள் மூவரும் வெண்பாவையே பயன் படுத்தியுள்ளனர். பின்னர் அந்தாதி இலக்கியங்கள் பெருகியபோது, பாவினங்களாகிய விருத்தம், கட்ட ளைக் கலித்துறை போன்றனவும் அந்தாதிப் படைப் பாளர்களால் பயன்படுத்தப் பட்டுள்ளன. தா.அ.

அந்தாதி இலக்கியங்களேயல்லாமல், இரட்டை மணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, நவ மணிமாலை, அட்டமங்கலம், ஒருபா ஒருபஃது முத லான வேறு பல சிற்றிலக்கிய வகைகளும் அந்தாதி யாப்பில் அமைந்துள்ளன. அவற்றினை அந்தாதி என்ற பெயராற் குறிப்பிடுவதில்லை.

இறைவன் பெயர், திருத்தலப் பெயர், அடியார் பெயர், பாவகை, செய்யுள் எண், இயல்பு போன்ற வற்றின் அடிப்படையில் அழகரந்தாதி, அருணை அந் தாதி, திருத்தொண்டர் திருவந்தாதி, வெண்பா அந் தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, சிவபூசை அந்தாதி என் பனவாக அந்தாதி இலக்கியங்கள் பெயர் பெறுகின் றன. அந்தாதி இலக்கியவகை பிற்காலத்தில் தோன்றி வளர்ந்ததாயினும், இன்று கிடைத்துள்ள 850-க்கும் மேற்பட்ட அந்தாதிப் பெயர்களால் இவ்விலக்கிய வகை மக்களிடையே பெற்றுள்ள செல்வாக்கினை உணரமுடிகிறது.

**அந்தாம் பிரயோன்சா** மேனாட்டிலிருந்து தமிழகம் போந்து, கிறித்தவ சமயத்திற்கும் தமிழுக் கும் தொண்டு புரிந்த பாதிரியார்களுள் ஒருவர்; போர்ச்சுகல் நாட்டுக் குவார்டா நகரில் கி.பி.1626-இல் தோன்றினார். பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இவர் கல்லூரிக் கல்விக்குப் பின்னர்க் கிறித்தவ சபை யில் சேர்ந்து சமய குருவானார். சமய ஊழியத்திற் காகக்கி.பி. 1647-இல் கொச்சி வந்து சேர்ந்தார். பின் னர் இவர் கி.பி. 1653-இல் மதுரை வந்து, தமிழகத் தில் தம் சமய ஊழியத்தைத் தொடங்கினார். இவர் தமிழில் பரமானந்தசாமி என அழைக்கப்பட்டார். தமிழில் புலமை சான்ற இவர் 'தமிழ் – போர்ச்சுகீசிய அகராதி' ஒன்றினை உருவாக்கினார். இவ்வகராதி இவர் காலமாகி மூன்றாண்டுகட்குப் பின்னர் அச்சி டப்பட்டது. இதன் ஒருபடி இப்போது வத்திகன் நூல கத்தில் உள்ளதாகக் கூறப்படுகிறது. 'போர்ச்சுகீசிய – தமிழ் அகராதி' ஒன்றையும் இவர் இயற்றியதாகத் தெரிகிறது. தம் 40-ஆம் அகவையில் இறந்த இவரது உடலம் திருச்சி மாவட்டத்தில் முசிரிக்கு அருகிலுள்ள தொட்டியம் என்னும் ஊரில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

**அந்தாளிக் குறிஞ்சி** தேவாரப் பண்களுள் ஒன்று. இசைத் தமிழ்ப் பதிகங்களாகிய தேவாரத் தைத் திருமுறைகளாகப் பகுத்துத் தொகுத்தபோது, திருவருள் துணைகொண்டு திருநீலகண்டயாழ்ப்பா ணர் மரபில் வந்த ஒரு பாடினியாரால் அப்பதிகங்க ளுக்கு இசை அமைக்கப்பட்டது. திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப்பதிகங்கள் முதன் மூன்று திருமுறை களாய்ச் செவ்வழி முதலிய 22 பண்களில் அடங்கின. தமிழ் மக்கள் பண்டைக் காலத்தில் நூற்று மூன்று பண்களை வகுத்துக் காட்டியுள்ளனர். அவற்றுள் 38-ஆவது பண் அந்தாளிக் குறிஞ்சி என்பதாகும். இது குறிஞ்சிப் பெரும்பண்ணின் நைவளம் என்னும் திறத் தின் புறநிலையாய் அமையும். ஞானசம்பந்தரின் மூன் றாவது திருமுறையின் இறுதியிலமைந்துள்ள 124, 125 ஆகிய இரு பதிகங்கள் மட்டுமே, தேவாரத்தில் அந் தாளிக் குறிஞ்சியில் அமைந்துள்ளன. அவர் திருநல் லூர்ப் பெருமணத்தில் தம் திருமணம் காண வந்த வர் அனைவரையும் உடன்கொண்டு, அவ்வூர்த் திருக் கோயிலில் தோன்றிய சோதியில் புக்கபோது பாடிய திருப்பதிகம், 'கல்லூர்ப் பெருமணம்' என்னும் இறுதிப் பதிகமாகும். அதனால் ஞானசம்பந்தர் இறுதியாகப் பாடிய பண் அந்தாளிக் குறிஞ்சியாகும். திருமுறை கண்ட புராணம் 'அந்தாளிக்கு ஒன்றாக்கி' என்பத னால் ஞானசம்பந்தரின் இரு அந்தாளிக் குறிஞ்சிப் பண்களும் ஒரே கட்டளையமைப்புடையனவாயின என்பது புலனாகிறது. 124-ஆம் பதிகமாகிய திருக்கரு காவூர் வெள்ளடைப் பதிகம், தானனா தானன தானா தானனா — ''சுண்ணவெண்ணீறணி மார்பிற் றோல்புனைந்து'' என்னும் அமைப்புடையது.

**அந்தி இளங்கீரனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் ஒரே பாடல் அகநானூறு 71-ஆம் பாடலாக அமைந்துள்ளது. பாலைத் திணையில மைந்த இப்பாடல், தலைவன் பொருள் வயின் பிரிந்த விடத்து ஆற்றாளாகிய தலைமகளுக்குத் தோழி கூறியதாக அமைந்துள்ளது. இவர் பெயரிலுள்ள அந்தி என்னும் அடை, இவர் பாடிய பாடலிலுள்ள சொல் லாட்சிச் சிறப்பால் அமைந்ததாகலாம். இளங்கீரனார் என்னும் மற்றொரு புலவரொடு இவரை வேறுபடுத்தி அறிதற்கு இவ்வடை பயன்படுகிறது. மாலைக் காலத் தோற்றத்தினைத் தம் பாடலில் அழகுறச் சித்திரித் துள்ளார். 'மையில் மானினம் மருளப் பையென, வெந்து ஆறுபொன்னின் அந்தி பூப்ப' என்னும் தொடரிலுள்ள 'வெந்தாறு பொன்' என்னும் உவமை மாலைக் காலத்தின் செக்கர் வான எழில் காட்சியினை விளக்குவதாக அமைந்து விளங்குகிறது. இவருடைய

பெயர் அந்தில் இளங்கீரனார் என்று சில ஏடுகளில் காணப்படுகிறது. அப்பாடத்திலுள்ள 'அந்தில்' என்பதனை அம்+தில் எனக் கொண்டு 'அழகு விழையுமிடம்' எனப் பொருள் காண்பாருமுளர்.

**அந்திமான்** இடையெழு வள்ளல்களுள் ஒருவன். வரையாது வழங்கி வரலாற்றிலும் புராணங்களிலும் இடம் பெற்றுத் திகழும் வள்ளல்கள் சிலரைத் தொகைப்படுத்தித் தலைஎழுவள்ளல், இடையெழு வள்ளல், கடையெழுவள்ளல் என்று கூறுவது மரபு. எழினி முதலாகக் கூறப்படும் கடை எழு வள்ளல்கள் எழுவரும், சங்க காலத்தில் சிறந்த வள்ளல்களாய் வாழ்ந்த வரலாற்று மக்களாவர். முதல் இடை ஆகிய இருவகையில் அடங்குபவர்கள் புராண இதிகாச மாந்தர்கள். இடையெழு வள்ளல்களின் பெயர்கள் வருமாறு:- அக்குரூரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்த வக்கிரன்.

**அந்தியூர்**: கொங்கு நாட்டில் பாயும் பவானி ஆற்றின் வடகரையிலுள்ள நிலப்பகுதி, பண்டு வடகரைநாடு எனப்பட்டது. இவ்வடகரை நாட்டின் மையமாக விளங்குவது அந்தியூர். இவ்வூர் பெரியார் மாவட்டப் பவானியிலிருந்து வடமேற்கே 16 கி.மீ. தொலைவிலுள்ளது. சங்ககால முதற்கொண்டே இது வரலாற்று முதன்மை பெற்று வந்துள்ளது.

கொங்கு நாட்டை ஆண்ட சேரர், வடகரை நாட்டையும் ஆண்டு வந்தனர். இவர்களுள் அந்துவன் பொறையன் (கி.பி. 92 – 112) என்பான் குறிப்பிடத்தக்கவன் ஆவான். இவனது பெயராலேயே இது அந்தியூர் (அந்துவன் ஊர்) எனப்பெயர் பெற்றது. அந்தியூரைக் கி.பி.1750–இல் இயற்றப்பட்ட 'நண்ணாவூர்ச் சங்கமேசுவர சுவாமி வேதநாயகியம்மன் விறலி விடுதூது' குறிப்பிடுகின்றது. திப்பு இதனைக் கி.பி. 1797–98–இல் 'அகமதாபாத்' என்று குறிப்பிட்டுள்ளான். அந்தியூருக்கு 18-10-1800–இல் வருகைபுரிந்த டாக்டர் புக்காணன் இவ்வூரின் நிலைமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை, கணைக்கால் இரும்பொறை முதலான கொங்குச்சேரரும் வடகரை நாட்டை ஆண்டுள்ளனர். வேடர் தலைவனான கண்டீரக்கோப்பெருநற்கிள்ளி என்ற வள்ளலும் இப்பகுதியை ஆண்டுள்ளான். இவனால் ஆளப்பட்டு வந்த தோட்டிமலை, இன்றைய பருகூர் மலையில் அமைந்திருந்தது.

சங்க காலத்தை அடுத்து இப்பகுதி, இரெட்டிகுல மன்னர், கங்கர், இராட்டிரகூடர், சேர சோழ பாண்டியர், போசளர், விசய நகரத்தார், மதுரை நாயக்கர் முதலான வேந்தராலும், ஐதர்அலி, திப்பு சுல்தான் ஆகிய சுல்தான்களாலும் ஆளப்பட்டு வந்தது. இறுதியாக ஆங்கிலேயரால் கைப்பற்றிக் கொள்ளப்பட்டது.

அந்தியூரில் பெரிய கோட்டை ஒன்றும் பேரேரி ஒன்றும் இருந்தன. இப்பெருங்கோட்டை $1\frac{1}{2}$ கி.மீ. நீளமும் அகலமுங் கொண்டது; மூன்று சுற்று மதில்களைக் கொண்டிருந்தது. கோட்டையின் உட்புறத்திருந்த அரண்மனை, ஆசுதான மண்டபம், அந்தப்புரம், அலுவலகங்கள் ஆகியன அழிந்துவிட்டன. செல்வக்கடுங்கோ வாழியாதனுடன் தொடர்புடைய செல்லீசுவரர் கோயில், அழகரசப் பெருமாள் கோயில், வீரபத்திரர் கோயில், பத்திரகாளியம்மன் கோயில் என்பவை மட்டும் இன்றுமுள்ளன. இக்கோயில்களில் கவின்மிகு சிற்பங்களும் கல்வெட்டுகளும் உள்ளன. இக்கோட்டையில் கி.பி. 1798–இல் திப்பு சுல்தானின் சமாபந்தி நடைபெற்றது. திப்பு சுல்தானது வீழ்ச்சியின் விளைவாக அந்தியூர்க் கோட்டையும் வீழ்ந்தது.

கணைக்காலிரும்பொறை சிறையிலிருக்கும் தோற்றம், பத்திரகாளியம்மன் கோயிலின் வெளிப்புறத்தில் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளது. பத்திரகாளியம்மன் கோயில், புதுப்பாளையம் குருநாதசுவாமி கோயில், அழகரசப் பெருமாள் கோயில் முதலானவற்றில் பாண்டியரது மீன் சின்னம் காணப்படுகின்றது. கன்னட மொழிக் கல்வெட்டுகள் சில இங்குப் பொறிக்கப்பட்டுள்ளன.

செல்லீசுவரர் திருக்கோயிலில், திரிபுவனச் சக்கரவர்த்திகள் கோனேரின்மை கொண்டான் வீரபாண்டிய தேவரின் (கி.பி. 1265–1285) பதினைந்தாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டும், சிரீமன் மகாமண்டலேசுவரன் வீரநஞ்சராய உடையாரின் (கி.பி. 1489–1500) கல்வெட்டும் காணப்படுகின்றன. உடையாரின் கல்வெட்டில் ஊர்ப் பேராளர்கள் ஐவர் குறிக்கப் பெறுகின்றனர். இவர்களுள் பாசறை வேட்டுவன் குறும்பன், பொன்னாங் கட்டியார் வேங்கடநாதன் ஆகிய இருவரும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். அந்தியூர்க் குளத்திற்கு மேல்பால் உள்ள நிலப்பகுதி, கி.பி. 1178–ஆம் ஆண்டில் காவேரி வல்லபன் கோரவி கோதை என்னும் சேரமன்னரால், ஈரோடு திருத்தொண்டீசுவரருக்குத் தேவதானமாக அளிக்கப்பட்ட செய்தி ஈரோட்டுக் கல்வெட்டால் அறியப்படுகின்றது.

கோட்டைப் பகுதியில், ஆயிரக்கணக்கான உருண்டை வடிவிலான பீரங்கி எறிகற்கள், உரோமாபுரி நாணயங்கள், யானைத் தந்தங்கள், உடைவாள், பழைமை மிக்க எலும்புத் துண்டுகள், பல வகையான நாணயங்கள், அகல் விளக்குகள், மட்

பாண்டங்கள், மண்ணால் செய்து சுடப்பட்ட பொம்மைகள், வளையல்கள் போன்ற அணிகலன்கள் ஆகியவை இன்றும் காணக்கிடக்கின்றன. ம.இரா.

**அந்திரோகிலிசு** பண்டைய உரோமானியர் காலக் கதையினில் வரும் தலைவன். இவன் ஒரு முதலாளியிடம் அடிமையாய் இருந்தான். அங்கிருந்து தப்பித்துச் சென்று ஒரு குகையினில் ஒளிந்திருந்தான். அக்குகையில் முள்ளடிபட்டு வருந்திக்கொண்டிருந்த சிங்கத்தின் உள்ளங்காலிலிருந்த முள்ளினை எடுத்து அதன் நண்பனானான். பின்னர் முதலாளியிடம் பிடிபட்டு உரோமாபுரியிலிருந்த ஓர் அரங்கத்தில் சிங்கத்துடன் போரிடும் தண்டனையைப் பெற்றான். சிங்கத்திடம் போரிட அந்திரோகிலிசு (Androcles) முயன்ற பொழுது, சிங்கம் அவனைத் தாக்க முன்வரவில்லை. அச்சிங்கமே அவன் குகையில் காப்பாற்றிய சிங்கமாகும். எனவே, அவனை அடையாளம் கண்டு அச்சிங்கம் போரிட மறுத்தது. இக்கதையைப் பெர்னார்டு என்னும் அண்மைக்கால ஆங்கிலக் கவிஞர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

**அந்துவஞ்செள்ளை** பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்தின் தலைவனாகத் திகழும் இளஞ்சேரலிரும் பொறைக்குத் தாயும், குட்டுவன் இரும்பொறைக்கு மனைவியுமாவாள். மக்கள் தாய முறைப்படி இவள் வேளிர் மரபினனான மையூர் கிழானுக்கு மகள் முறையினளாவாள். பதிற்றுப்பத்தின் ஒன்பதாம் பதிகம், ''மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளை'' என்று இவளைக் குறிப்பிடுகிறது.

**அந்துவன்[1]** சங்க காலச் சேர மன்னர்களுள் ஒருவன். இவன் அந்துவஞ்சேரல் இரும்பொறை என அழைக்கப்படுவான். சங்ககாலச் சேரமன்னர், உதியஞ் சேரல் மரபினர் என்றும் அந்துவஞ்சேரலிரும்பொறை மரபினர் என்றும் இருவகைப்படுவர். மூத்த மரபினரான உதியஞ் சேரல் மரபினர் வஞ்சியிலிருந்தும் அந்துவஞ்சேரலிரும்பொறை மரபினர் தொண்டியிலிருந்தும் ஆண்டனர். 'அந்துவஞ்சேரல் இரும்பொறை' என வழங்கப்பெற்ற அந்துவன், பதிற்றுப்பத்து ஏழாம் பத்தின் தலைவனாகிய செல்வக் கடுங்கோ வாழியாதனின் தந்தையாவான். இவன் தளராத நெஞ்சுரம் உடையவன்; பகைவரை வென்று சிறைப்படுத்தியவன்; நுட்பமான அறிவுடையவன்.

**அந்துவன்[2]** கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். நல்லந்துவன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என வழங்கப் பெறும் இவர், மதுரையைச் சார்ந்தவர். கலித்தொகை நூலைத் தொகுத்தவரும் அதன் கண்ணுள்ள 33 நெய்தற் கலிப்பாடல்களை எழுதியவரும் 'ஆறறி அந்தணர்க்கு' எனத் தொடங்கும் அதன் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவரும் இவரேயாவர். அகநானூறு 43-ஆம் பாடலும், நற்றிணை 88-ஆம் பாடலும் இவரால் இயற்றப்பட்டன. 8-ஆம் பரிபாடலில் திருப்பரங்குன்றத்தினை அழகுறப் பாடியுள்ளார். அப்பாடலின் சிறப்புணர்ந்து சங்கப் புலவராகிய மதுரை மருதன் இளநாகன், தம் அகநானூற்றுப் பாடலொன்றில் (அகம்.59) அக்குன்றினையும், அதனைப் பாடிய அந்துவனையும் 'சூர்மருங்கறுத்த சுடரிலை நெடுவேல், சினமிகு முருகன் தண்பரங்குன்றத்து அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை' என்று சிறப்பித்துப் பாராட்டியுள்ளார். நல்லந்துவனார் என்னும் இவர் பெயரை நவ்வந்துவனார் என்று கலித்தொகைப் பதிப்பாசிரியர் இ. வை. அனந்தராமையர் வலியுறுத்துவர். காண்க: ஆசிரியர் நல்லந்துவனார்.

**அந்துவன் கீரன்** கொடையிற் சிறந்த ஒரு குறுநில மன்னன். இவன் பெயர் கீரன். இவன் தந்தை அந்துவன். 'அந்துவனுக்கு மகனாகிய கீரன்' என்பது இவன் பெயர் விளக்கம். காவட்டனார் என்னும் புலவர் இவனைப் பெருங்காஞ்சித் துறையிலமைந்துள்ள புறநானூற்றுப் பாடலில் பாடியுள்ளார். இதன்கண் ஆசிரியர், உலகப் பற்று மிகுந்தவனாய் விளங்கிய இவனுக்கு, யாக்கை செல்வம் ஆகியவற்றின் நிலையாமையினை வலியுறுத்திக் காட்டிக் கொடையால் நிலைத்த புகழினைத் தேடுமாறு அறிவுறுத்தியுள்ளார் (புறம். 359). அர.சி.

**அந்துவன் சாத்தன்** சங்க காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர்களுள் ஒருவன். சாத்தன் என்பது இவன் பெயர். அந்துவன் இவன் தந்தை. இவன் ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனின் ஆருயிர் நண்பன்.

ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தான் பாடிய புறநானூற்று வஞ்சினப் பாட்டில், 'உரைசால் அந்துவன் சாத்தன்' என்று இவனைப் பாராட்டிக் குறிப்பிட்டுள்ளான். பகைவரை வெல்லாவிடில், கண்போன்ற என் நண்பர்களுள் ஒருவனாகிய புகழ் மிக்க அந்துவன் சாத்தனோடும் பிற நண்பர்களோடும் கூடி மகிழும் பேற்றை இழப்பேனாக என்பது இப் பாண்டியனின் வஞ்சினமாகும். அர.சி.

**அந்தோணிக்குட்டி அண்ணாவியார்** கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிறித்தவப் புலவர்களுள் ஒருவர். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மணப்பாறை என்னும் ஊரைச் சேர்ந்தவர். இவரை ஈழவ வகுப்பினர் என்றும், பரவ வகுப்பினர் என்றும் சொல்லுவார்கள். இவர் வீரமாமுனிவருடன் சேர்ந்து தமிழ்த் தொண்டும் சமயத்தொண்டும் புரிந்துள்ளார். இவருடைய தீய ஒழுக்கத்தினால் பாதிரிமார்கள் இவரைத் தம் குழுவிலிருந்து நீக்கி விட்டார்கள். பிறகு

தம்முடைய தவற்றினை உணர்ந்து பாவ மன்னிப்புப் பெற்றுச் சமயப் பணிபுரியத் தொடங்கினார். இவர் 'கிறித்தவ சங்கீதம்' என்னும் நூலினை இயற்றியுள்ளார். இதில் பேரின்பக் காதல், பாலத்தியானம், பச்சாத்தாபம், தன்மேல் குற்றம் சுமத்தல், ஆசைப்பத்து, அருள்வாசகம், சேசுநாதர் மரணம், திருப்புகழ், ஆனந்த மஞ்சரி, கீர்த்தனை முதலிய பாடல்கள் உள்ளன. பேரின்பக் காதல் என்னும் பகுதிக்கு முன்சி அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் என்பார் பொழிப்புரை எழுதியுள்ளார்.

**அந்தோணி கோபு:** முதலாம் எலிசபெத்து அரசியாரின் ஆட்சிக் காலத்தில் கி.பி. 1587-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் அந்தோணி கோபு **(Antony Cope)** என்பார் காம்ன்சு அவையில் சமயத் தொடர்பான சீர்திருத்தம் கோரி, மிகப் பரந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கோரும் முன்வரைவு ஒன்றையும், நூல் ஒன்றையும் தாக்கல் செய்தார். இம்முன்வரைவின்படி அரசாங்கத்தைப் பாதிக்கும் எல்லாச் சட்டங்களையும் நீக்குதல் செய்ய வேண்டுமெனத் திருச்சபை கோரியது. புதிதானதொரு பொது வழிபாட்டை நிலைநாட்ட வேண்டிய விவரங்கள், இத்துடன் இணைக்கப்பெற்றிருந்த நூலில் கொடுக்கப் பட்டிருந்தன. அம்முன்வரைவு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அந்தோணி கோப்பிற்கும், அவருடைய முன்வரைவை ஆதரித்த ஏனைய உறுப்பினர்களுக்கும் சிறைத் தண்டனை கிடைத்தது. பாராளுமன்றம் கலைக்கப்பட்ட மூன்று வாரங்களுக்குப் பின்னர்ச் சிறையிலிருந்த அந்தோணி கோபு விடுதலை ஆனார்.

**அந்தோணிப்பிள்ளை தாமசு** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். கிறித்தவ சமயத்தவர்; பிறமொழிக்கும் தமிழ் மொழிக்குமான இருமொழி அகராதி இயற்றும் முயற்சி மேற்கொண்டவர். 'இந்துத்தானும் தமிழுமான சொன்மாலை' என்னும் நூலினைச் செய்துள்ளார். கி.பி. 1878-இல் வெளியான இந்நூல், தமிழிலமைந்துள்ள இருமொழி அகராதிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

**அந்தோனினசு பயசு** (கி.பி. 86-161) உரோமானியப் பேரரசர்களுள் ஒருவர். இவர் கி.பி.138 முதல் 161 வரை பேரரசராக இருந்தவர்; நேர்மைக்கும் மென்மைக்கும் பெயர் பெற்றவர்; உரோமானிய வரலாற்றில் அந்தோனினசு பயசு (Antoninus Pius) ஆட்சிக் காலத்தை அமைதிக்காலம் என்று கூறுவர்.

அந்தோனினசின் பதவிப் பெயர் டைடசு ஏலியசு அந்தோனினசு என்பதாம். இவர் செல்வமும் செல்வாக்கும் மிக்கதோர் குடும்பத்தில் பிறந்தார். பேரரசராவதற்கு முன்னர் இவர் இத்தாலியில் மேல் முறையீடுகள் நீதிமன்றத்தை நிருவகித்து வந்தார். மேற்கு ஆசியா மைனரில் ஆசியாவின் ஆளுநராகப் பணியாற்றி வந்தார். சட்டத்துறையில் இவருக்கு இருந்த அனுபவம், செல்வம், புகழ், செனட்டு அவையில்



அந்தோனினசு பயசு

இவருக்கிருந்த செல்வாக்கு ஆகியவற்றைக் கருத்திற் கொண்ட பேரரசர் ஆட்ரியன் (Hadrian), அந்தோனினசைத் தமக்கு அடுத்த பேரரசராகத் தேர்ந்தெடுத்தார். அந்தோனினசு பயசு வடபிரிட்டனில் அந்தோனைன் சுவரைக் கட்டினார்.

**அந்தோனைன் சுவர்** உரோமானிய ஆட்சியின்போது இங்கிலாந்தில் கி.பி. 140-ஆம் ஆண்டில் அந்தோனினசு பயசு (Antoninus Pius) என்பவரால் கட்டப் பெற்றது. அந்தோனினசு கட்டியதால் இப்பெயர் பெற்றது. இச்சுவர் மண்கட்டிகளால் கட்டப்பட்டது. இச்சுவரின் அழிவுச்சின்னங்கள் போர்த்துக் கழிமுகத்திலிருந்து கிளைடு (Clyde) ஆற்றுக் கழிமுகம் வரை நீண்டு செல்கின்றதை இன்றும் காணலாம்.

**அநந்த கவிராயர்**[1] கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இப்புலவர் சேது நாட்டில் இரகுநாத சேதுபதியின் அவைக்களப் புலவராக விளங்கினார். இவர் அவ்வரசர்மேல் ஒருதுறைக் கோவை பாடிய பொன்னாங்கால் அமிர்த கவிராயருக்கு உறவினராவார். இவ்விருவரும் சேதுபதி முன்னர் விரைந்து வண்ணம் பாடுவதில் போட்டியிட்டனர். அப்போட்டியில் அநந்த கவிராயர் தோல்வியடைந்தார். அதனால் போட்டி ஒப்பந்தப்படி அமிர்தகவிராயர், அநந்த கவிராயரின் காதினை அறுக்கச் சென்றார். அப்போது அநந்த கவிராயர்,

அநந்தனுக்குக் காது இருந்தால் தானே அறுக்க முடியும் என்று நயம்பட உரைத்தார். இந்நயமிக்க பேச்சைக் கேட்டு மகிழ்ந்த சேதுபதி மன்னர், அநந்த கவிராயருக்குச் சிறப்புச் செய்தார் என்ற செய்தி கூறப்படுகிறது.

இரகுநாத சேதுபதி மன்னரை அநந்த கவிராயர் பல பாடல்கள் பாடிப் பாராட்டியுள்ளார். அதற்காகச் சேதுபதி மன்னர் மானூர் என்ற ஊரைப் பரிசாக அளித்தார். அப்போது அநந்த கவிராயர் 'அரசர் பல கலைகளையெல்லாம் வைத்துக்கொண்டு ஒரு மானைத் தந்துள்ளார்' என்று சிலேடையாகக் கூறக்கேட்ட அரசர் மனமகிழ்ந்து, மானோடு கலையினையும் தருகிறேன் என்று கூறிக் கலையூரையும் பரிசாக வழங்கினார் என்பர்.

**அநந்த கவிராயர்**[3] கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவருடைய வேறு பெயர் அநந்ததேவன். பொன்னாங்கால் அமிர்த கவிராயரின் உறவினராகிய அநந்த கவிராயர் இவரினும் வேறானவர். இருவரும் வெவ்வேறு நூற்றாண்டுகளில் வாழ்ந்தவராவர். இவர் உத்தர ராமாயண நாடகம், மதுரைப் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் நூல்களை எழுதியுள்ளார். உத்தர ராமாயண நாடகம், கும்பகோணம் சாரங்கபாணிப் பெருமாள் கோயில் சிங்கார மண்டபத்தில் கி.பி. 1810–இல் அரங்கேற்றப் பெற்றது.

**அநந்த கிருட்டிண ஐயங்கார்** (19–நூ) திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரிக்கு அருகில் உள்ள தென் திருப்பேரையில் வாழ்ந்த ஒரு புலவர்; வைணவ அந்தணர். பெற்றோர் சீனிவாச ஐயங்கார், குழைக்காத . ர்ச்சியார் ஆவர். தந்தையும் ஒரு கவிஞர். விரைந்து கவிபாடும் வல்லமை பெற்றிருந்தமையால் அபிநவ காளமேகம் என்றும், அபிநவ பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் என்றும் பாராட்டப் பெற்றார். இவர் வடமொழி தென்மொழிகளில் வல்லவராகத் திகழ்ந்தார். வானமாமலை மடத்துப் பரமகம்சே த்தியாதி சின்னக்கவியன் இராமானுச சீயர் சுவாமிகள் இவரைத் தம் அவைப்புலவராக ஆக்கிக் கொண்டார்.

தனிப்பா மஞ்சரி, மகுடதாரண வைபவ வெண்பா மாலை, திருவரங்கச் சிலேடை மாலை, திருப்பேரைக் கலம்பகம், கண்ணன் கிளிக்கண்ணி, பத்மநாப சுவாமி சந்திரன் பாமாலை, வேள்வி விளக்கமாலை, திவ்யதேசப் பாமாலை, மணவாள மாமுனி ஊசல் திருநாமம், நீதிவெண்பா நாற்பது, கற்பக விநாயகர் பதிகம், வேண்டும் நீதி ஆகியன இவர் எழுதிய நூல்களாகும். தனிப்பா மஞ்சரி, இவர் இயற்றிய தனிப்பாடல்களின் தொகுப்பாகும். மகுடதாரண வைபவ வெண்பாமாலை, அப்போது இந்தியாவை ஆண்ட ஆங்கில அரசர் 5-ஆம் சார்சு மாமன்னர் தில்லியில் முடிசூட்டிக் கொண்ட சிறப்பைக் கூறுவதாகும்.

த.கு.மு.

**அநந்த நாத நயினார்** கி.பி. 20–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். இவர் 'திருக்குறள் ஆராய்ச்சியும் சைனசமய சித்தாந்த விளக்கமும்' என்னும் நூலினை எழுதியுள்ளார். இந்நூலுக்குத் திரு. வி. கல்யாணசுந்தரனார் அணிந்துரை நல்கியுள்ளார். அவ்வணிந்துரையில் சமண சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் உள்ள ஒற்றுமையினை விளக்கியுள்ளார். பிற சமயக் கொள்கைகளைத் திருக்குறள் கருத்துகளோடு ஒப்பிட்டு ஆராயும் முயற்சியில் உருவாகும் தமிழ் நூல்களுள் இதுவும் ஒன்றாகும்.

**அநந்த பாரதி ஐயங்கார்** (கி.பி. 1786–1846) தஞ்சை மாவட்ட உமையாள்புரத்தில் தோன்றிய கவிஞர். தாய் இலட்சுமி; தந்தை சீனிவாச ஐயங்கார். இவர் தம் 13–ஆம் வயதில் தம்மூரிலுள்ள யானை மேலழகர்மீது 'யானைமேலழகர் நொண்டிச் சிந்து' பாடியுள்ளார்; திருக்கோயிலில் கணக்கர், தலைமைக் கணக்கர் (சம்பிரதி) ஆகிய தொழில் செய்து வந்தார்; திருவள்ளூரில் ஆசிரியராகப் பணியாற்றினார். திருவிடை மருதூர் இறைவன் மீது இவர் இயற்றிய நாடகத்தைக் கண்டு வியந்த அக்கோயில் அறங்காவலர் ஐயாறப்பத் தம்பிரான் இவருக்குக் 'கவிராச சாமி' என்று பட்டமளித்து, ஒரு வீடும் தோட்டமும் பரிசாக வழங்கினார். இவர் வைணவராயினும் சமயவேறுபாடின்றிச் சைவசமயத்தெய்வங்களைப் பாடியுள்ளார். சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடாதுவிட்ட உத்தரகாண்டத்தை 'உத்தர ராமாயணக் கீர்த்தனை' என்னும் பெயரில் பாடினார்.

**இவர் நூல்கள்:** யானை மேலழகர் நொண்டிச் சிந்து, உத்தரராமாயணக் கீர்த்தனை, பாகவத தசமசுகந்த நாடகம், மருதூர் வெண்பா, முப்பால் திரட்டு, இடபவாகனக் கீர்த்தனை, கல்லணை வைபவக் கீர்த்தனை, திருவிடைமருதூர் நொண்டி நாடகம், வேதாந்த தேசிகர் கீர்த்தனை ஆகியவையாம். திருக்குடந்தைக் கும்பேசுவரசாமி மீது பாடிய இடபவாகன சேவைக்கீர்த்தனையையும், மத்தியார்ச்சுனம் பெருநலமாமுலை அம்மன்மீது பாடிய இடபவாகன சேவைக்கீர்த்தனையையும், மத்தியார்ச்சுனம் மருதீசர் மீது பாடிய இடபவாகன சேவைக்கீர்த்தனையையும் தொகுத்துக் 'கீர்த்தனைக் கொத்து' என்னும் பெயரில் வெளியிட்டார். இவர் தேசிகப் பிரபந்தம் என்னும் நூலையும் செய்துள்ளார்.

த.கு.மு.

**அநந்தராமையர், இ. வை., (20. நூ.)** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இடையாற்று மங்கலத்தில் தோன்றி விளங்கிய ஒரு புலவர். பெற்றோர் தையலம்மாள், வைத்தீசுவர ஐயர் ஆவர். இளமையில் இவரைக் கல்வி கற்க அனுப்பாத தந்தையார், மருத்துவர் ஒருவரின் சொற்படி பின்னர் முறையாகக் கல்வி கற்க உதவி செய்தார். இவர், தமிழ் வடமொழிகளில் புலமை மிக்கவராகத் திகழ்ந்தார். கும்பகோணம் நகர உயர்நிலைப் பள்ளி, மயிலை பி.எசு. உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றிலும் தமிழாசிரியராக விளங்கினார். பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித் துறையில் பணிசெய்தார். தமிழ்ப் பேரகராதி ஆசிரியர் குழுவிலும் இவர் உறுப்பினராக இருந்தார். இவர் கவிஞராகவும் விளங்கிப் பல தனிப்பாடல்களை இயற்றியுள்ளார். வீரவன புராணத்தின் சிறப்புப்பாயிரம் இவர் செய்ததாகும்.



அநந்தராமையர், இ.வை.

இவர் சிறந்த பதிப்பாசிரியர். அக்காலத்தில் உ.வே.சா. பதிப்புப் பணிகளுக்கு இவர் துணையாக இருந்துள்ளார். கலித்தொகையை அதன் நச்சினார்க்கினியர் உரையோடு ஆராய்ந்து தம் அரிய குறிப்புகளுடன் பதிப்பித்துள்ளார். அருஞ்சொற்பொருள், ஒப்புமைப் பகுதி, சொற்குறிப்பு அகராதி போன்றவற்றால் இப்பதிப்பு ஆய்வாளர்க்குப் பயன்படும் சிறந்த பதிப்பாகத் திகழ்கிறது. களவழி நாற்பது, கைந்நிலை, ஐந்திணை எழுபது, ஏம்பல் முத்தையாசாமி பிள்ளைத் தமிழ் என்னும் நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

**அநாகத நாதம் - ஆகத நாதம்:** கருநாடக இசையில் ஒலி அநாகத நாதம் என்றும் ஆகத நாதம் என்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. மனித முயற்சியின்றி இயற்கையிலேயே கேட்கப்படும் ஒலி அநாகத நாதமாகும். மனிதனின் முயற்சியினால் எழுப்பப்படும் ஒலி ஆகத நாதமாகும். நாம் கேட்கும் இசை, பாடும் பாடல், இசைக்கருவிகளில் வாசிக்கப்படும் இசை ஆகிய இவை ஆகத நாதத்தைச் சேர்ந்தவையாகும்.

அநாகத நாதத்தின் உட்பொருளைப் பண்டைக் காலத்து மெய்யுணர்வாளர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். யோகத்திறனால் உணர்ந்து அனுபவிக்கக் கூடிய இயல்பான அடிப்படை ஒலி என்றும் இதனைக் கொள்ளலாம். விண்வெளியினின்று தனித்துத் தோன்றும் இசையும், நம் உடலில் உற்பத்தியாகும் இசையொலியும் அநாகத நாதம் என்னும் பிரிவைச் சேர்ந்தவையாகும். சிறந்த இயலிசைப் புலவராகத் திகழ்ந்த தியாகையர் ஆகத நாதத்தின் பெருமையை விளக்கிக் காட்டும் நூற்றுக்கணக்கான கீர்த்தனங்களை இயற்றியுள்ளார். இவர் அநாகத நாதத்தை உணர்ந்து தம்முடைய அனுபவங்களைச் ''சுரராகசுதாரச'' போன்ற கீர்த்தனங்களில் வெளியிட்டிருக்கிறார். காண்க: இயலிசைப்புலவர்கள், இசை.

**அநார்யண்யன்** இட்சுவாகு மரபைச் சார்ந்தவர்; அயோத்தியின் அரசர்களுள் ஒருவர். அநார்யண்யன் இராவணனுடன் போரிட்டவர். விதி வலியால் இராவணன் தோற்பான் என்றும், அயோத்தியின் இராமன் அவனை அழிப்பான் என்றும், தன் வழித் தோன்றுபவனே இராமன் என்றும் வருவதுரைத் தவரும் இவரேயாவர்.

**அநிருத்தன்[1]** என்பது திருமாலின் வியூகங்களில் - நிலைகளில் ஒன்றாகும். திருமால் பலதேவனாக விரிந்து, பின் சங்கர்சனன், வாசுதேவன், பிரத்தியும்னன், அநிருத்தன் என்னும் வியூகங்களை எடுத்து, நான்கு திசைகளிலும் பரவியுள்ளார் என்று பதும புராணம் கூறுகிறது. அநிருத்தன், திருமால் தோற்றத்திற்கு மூலம் எனப்படுகிறது. அநிருத்தன் சுவேதத்தீவு என்னும் உலகத்தில் உள்ள பாற்கடலில் ஐராவதிபுரம் என்னும் இடத்தில், அனந்தன் என்னும் பாம்பிருக்கையில் எழுந்தருளியிருப்பதாகவும் பதும புராணம் கூறுகிறது. இவர் நான்கு கைகளையுடையவர்; அவற்றில் சங்கு, சக்கரம், தண்டு, தாமரை ஆகியவற்றை ஏந்தியிருப்பவர்; மனம் என்னும் அந்தக்கரணத்தை ஆளுகிற தெய்வம். மனக் கவலைகளினின்றும் விடுபடுவதற்கு மக்கள் அநிருத்தனை வணங்கவேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. திருமாலை அநிருத்தன் உருவில் தியானம் செய்தால் உலகப்பற்றை விடுத்து அவனை அடையலாம் என்று சைதனிய சரிதாமிருதம் என்னும் நூல் கூறுகிறது. இவருடைய மூச்சிலிருந்து இருக்குவேதம் தோன்றியது. திருமால் தசரதன் மகனாக வந்தபோது அநிருத்தன் சத்துருக்கனனாகத் தோன்றினான்.

அநிருத்தன்[2] அநிருத்தன் கண்ணனின் பெயரன். தண்டவக்கிரன் மகளைத் தூக்கிச் சென்று மணந்ததால் சிறைப்படுத்தப்பட்டான். பலராமன் துவாரகையிலிருந்து படையுடன் வந்து போரிட்டு இவனைச் சிறை மீட்டான்.

பாணாசுரன் மகள் உசை அநிருத்தனைக் கனவில் கண்டு கூடி அவனையே திருமணம் செய்துகொள்ள உறுதி கொண்டாள். ஆனால் அவன் யார் என்பது அவளுக்குத் தெரியவில்லை. அவளுடைய தோழி சித்திரலேகை, தான் வரைந்து காட்டிய ஓவியங்களால் அவனை அடையாளம் காட்ட வேண்டினாள். சித்திரலேகை தன் மாய ஆற்றலால் உறங்கிக் கொண்டிருந்த அநிருத்தனைக் கட்டிலோடு தூக்கிவந்து அவளிடம் சேர்த்தாள். அவள்பால் இன்பந் துய்த்து மீளுகையில் அநிருத்தன் பாணாசுரனால் சிறைப்படுத்தப் பட்டுக் கண்ணனால் விடுவிக்கப்பெற்றான். பின்னர்ப் பாணாசுரன் அளிக்க உசையினை மணந்து கொண்டான்.

அநிருத்தன்[3]: அநிருத்தன் மன்மதனின் மகன்.

ந.மா.

**அநுபூதி நெறிக் கொள்கை:** அநுபூதி என்பது நேரடிக் கடவுள் உணர்வு. சாதாரணமாக நம்முடைய பட்டறிவுகள் புலன் மூலம் கிடைப்பவை. அறிவு புலன் வழியாகவும் தருக்க முறைகளாலும் கிடைக்கிறது. ஆனால் அநுபூதி நிலை புலன் கடந்த அனுபவம். அநுபூதிமான்கள் இறைவனை நேரில் கண்டவர்களாகக் கருதப்படுகிறார்கள். உன்னத நிலையினின்றும் அறிந்து வெளியிடப்பட்ட உண்மைகள் அநுபூதி நெறிக்கொள்கை (Mysticism) என்று கூறப்படுகின்றன.

எல்லாச் சமயத்தைச் சார்ந்த அநுபூதியாளர்களும் வெளியிடுகின்ற கருத்துகளில் சில அடிப்படை ஒற்றுமைகள் இருக்கின்றன. அவை: (1) உலகில் காணப்படும் பிரிவுகளும் வேறுபாடுகளும் மெய்யல்ல; உலகம் பாகுபாடுகளற்ற ஒருமைப்பாடுடையது. (2) தீமை நிலையானதன்று; அது ஒரு மாயை. (3) காலமும் ஒரு மாயையே. மெய்ப்பொருள், இடம் காலம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டது. (4) அநுபூதி அனுபவம் எல்லோரும் நுகரக்கூடியதே. இடையறாத தியானம், பக்தி, துறவு மூலமாக இந்தப் பேரின்ப நிலையை இவ்வுலகிலேயே எய்தலாம்.

எல்லா அநுபூதியாளர்களும் பன்மையைக் கடந்து, மெய்ப்பொருளுடன் ஒன்றிய நிலையை அனுபவித்தவர்கள். சிலர் இதை 'நாயக-நாயகி' பாவமாகக் கூறுகின்றனர். ஆண்டாள், தெய்வத்திரு காதரீன், தெய்வத்திரு தெரசா ஆகியோரை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். 'எனை மணந்த மணவாளா' என்கிறார் வள்ளலார். மதுசூதனன் கைத்தலம் பற்றத் தாம் கண்ட அனுபவத்தைக் கூறுகிறாள் ஆண்டாள். காதரீன் கையில் கடவுள் கொடுத்த கணையாழி காட்சியளித்தது.

அநுபூதி அனுபவம் இரண்டு வழிகளில் வெளிப்படுகிறது. (1) புறவயமானது; பொருள்களிலுள்ள வேறுபாடுகள் மறைந்து எல்லாப்பொருள்களும் ஒன்றாகவே தெரிவது. புல், மரம், கல் எல்லாம் ஒன்றே என்று மெசுட்டர் ஏக்கார்ட்டு (Meister Eckhart) கூறுகிறார். எல்லாப் பொருள்களிலும் இறைவனைக் காண்கிறார். யாக்கோபு போமே, (Jacob Bohme) 'இவ்வொளியில் என் ஆன்மா எல்லாப் பொருள்களையும் ஊடுருவிப் பார்த்தது. புல்லிலும் செடியிலும் இறைவனைக் கண்டேன்' என்கிறார். 'பார்க்கின்ற மலரூடு நீயே யிருத்தி' என்கிறார் தாயுமானார். இவ்வாறு இயற்கையெல்லாம் இறைவனாகக் காண்பது ஒருவகை அருட்காட்சி.

(2) இரண்டாவது வகை 'அகவயமானது' (Introvertive). இது, மனத்தை உள்முகப்படுத்தி ஆன்ம விசாரணை செய்வதன் பயனாக ஏற்படுவது. புலன்கள், உணர்வுகள், எண்ணங்கள் எல்லாம் அடங்கிய பிறகு ஆன்மாவில் ஒன்றிய நிலை. தன்னையறிந்தின்புற்ற நிலை வாக்கு, செயல், சிந்தையற்ற நிலையில் கிட்டுகின்ற சிதையாத ஆனந்தம் ஆகியவை பற்றி உபநிடதங்கள் மிக விரிவாகக் கூறுகின்றன.

அநுபூதி, 'ஐக்கியம்' அல்லது 'சங்கமம்' என்பது இருவேறு பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது. சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே. இரண்டும் வேறுபட்டவையல்ல என்ற முற்றொருமையை வேதாந்தங்கள் வலியுறுத்துகின்றன. ஆனால் கிறித்தவமும் இசுலாமும்(Christianity and Islam) இதைத் தெய்வ இகழ்ச்சியாகக் கருதும். அவற்றில் மனிதன் கடவுளிலிருந்து வேறுபட்டவன். எனவே கிறித்தவமும் இசுலாமியமும், 'ஒன்றுபட்ட நிலை' யைத்தான் ஐக்கியம் என்று கூறுமே தவிர, ஆன்மாவும் கடவுளும் ஒன்றென்றோ, இயற்கையும் இறைவனும் ஒன்று என்றோ குறிப்பிடுவதில்லை. கிறித்தவ அநுபூதிச் செல்வர் ஏக்கார்ட்டு இயற்கையும் கடவுளும் ஒன்று என்ற கருத்துத் தொனிக்குமாறு கூறினார் என்பதற்காகத் திருச்சபை அவர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. யூத அநுபூதிமான்களும் கடவுளுடன் கலந்து விடுவதாகக் கூறவில்லை. யூத சமயம் கூறும் 'செகோவா' மனிதனிலிருந்து அப்பாற்பட்டவர். அங்கு 'ஐக்கியம்' என்பது கடவுளுடன் நேர்முகத் தொடர்பு என்ற பொருளிலேயே கையாளப்படுகிறது. ஆனால் அதிலும் ஆபிரகாம்

பென் சாமுவேல் அபுலாபியா (Abraham ben Samuel) விதிவிலக்காகக் கருதப்படுகிறார். அவர் கடவுளுடன் ஒன்றுபட்டாரென நம்பப்படுகிறது. எனினும் பொதுவாக யூத சமயத்தில் கடவுளுடன் ஒன்றிய நிலை என்ற கருத்து ஊக்குவிக்கப்படவில்லை.

இசுலாமிய அநுபூதி நெறியினரான 'சூபி' (Sufi) யினரும் கடவுளுடன் கலந்துவிடுகின்ற நெறியைக் குறிப்பிடுகின்றனர். அதனால் அங்கும் அநுபூதியாளர்களுக்கும் மதக்குருமார்களுக்கும் பூசல் ஏற்பட்டது. அல்கல்லாசு (அல்-ஹல்லாஜ்) என்னும் அநுபூதிமான் தாமும் இறைவனும் ஒன்று என்ற கருத்தில் பேசினார் என்பதற்காகப் பாக்தாத்தில் சிலுவையில் அறையப்பட்டார். அல்பிசுதாமி என்ற சூபி 'நான் கடவுளைத் தேடிக்கொண்டிருந்தேன். அப்போது கடவுள் ''நீயே நான்'' என்று எனக்குள் கூறினார்' என்கிறார்.

இந்து சமயத் தத்துவ சாத்திரங்கள் அநுபூதி நிலையின் மிக உயர்ந்த வெளிப்பாடுகள். ஆன்மாவும் பரம்பொருளும் ஒன்றே; இரண்டல்ல; வேறுபாடுகளெல்லாம் மாயையே என்கிறார் ஆதிசங்கரர். ஆன்மா ஆண்டவனின் வடிவம். குளத்து நீரும் கங்கை நீரும் அடிப்படையில் ஒன்றே என்கின்றன இந்து சமய நூல்கள். 'சித்தந் தெளிந்து சிவமானோர்' என்கிறார் தாயுமான சுவாமிகள். புத்தசமயம் கூறும் 'நிருவாணம்' இரண்டற்ற நிலையை விளக்கும் அநுபூதிக் கருத்தே. நிருவாண நிலையில் 'தான்' என்ற தனித்தன்மை அழிந்து உயிர் உலகத்தோடு ஒன்றாகக் கலந்து விடுகிறது. 'எல்லைக்குட்பட்டது' தன் தளைகளைத் தகர்த்துவிட்டு 'எல்லையற்றதில்' கலந்து விடுகிறது.

அநுபூதி நிலையை விளக்குவதற்கு அநுபூதியாளர்கள் பெரும்பாலும் எதிர்மறைச் சொற்களையே பயன்படுத்துகின்றனர். பிரமம் இதுவன்று, இதுவன்று (நேதி, நேதி) என்கின்றன உபநிடதங்கள். கடவுள் எவ்வாறு இருக்கிறார் என்று கூறமுடியாது. எவ்வாறு இல்லை என்றுதான் கூறமுடியும் என்கிறார் மோசசு (Moses). தெய்வத்திரு பால் (St.Paul) சொல்வதற்கரிய காட்சியைத் தாம் கண்டதாகவும் கேட்டதாகவும் கூறுகிறார். பாகுபாடுகள் அற்ற கடவுளை உடன்பாட்டுக் குணங்களால் குறிப்பிட முடியாது; எதிர்மறைச் சொற்களைக் கொண்டே கூறமுடியும் என்கிறார் தையோனிசியசு. இதை 'நிருவாணம்' என்பர் புத்த சமயத்தினர்.

அநுபூதியாளர்கள் கூறும் சில கருத்துகள் முன்னுக்குப் பின் முரணாகத் தெரிகின்றன. அதனால் அது உண்மையானதுதானா என்ற ஐயப்பாடும் எழுகிறது. பரம்பொருள் குணமற்றது, மாசற்றது என்று கூறும் அதே உபநிடதங்கள், நற்குணங்களையுடைய பிரமத்தையும் கூறுகின்றன. ஒரே பரம்பொருள் எப்படிக் குணங்களற்றதாகவும் குணங்களைக் கொண்டதாகவும் இருக்கமுடியும்? 'கடவுளைப் பார்ப்பது என்பது கடவுள் ஏதோ ஓரிடத்தில் நிற்பது போல மனிதர்கள் கற்பனை செய்கிறார்கள்; ஆனால் அது அப்படிப்பட்டதன்று. கடவுள் ஒரு வெறுமை; ஆழங்காணமுடியாத பாதாளம்; தனக்குள்ளே கலக்கின்ற நீரோடை' என்று ஏக்கார்ட்டு கூறுகிறார். 'கடவுள் இயங்குவதுமன்று, இயங்காததுமன்று; உள்ளதுமன்று இல்லாததுமன்று' என்கிறார் தையோனிசியசு. 'நிறைவு' என்கிறார் ஒருவர். அதையே 'வெறுமை' என்று குறிப்பிடுகிறார் மற்றொருவர். பேரொளியாகத் திகழ்வதே சொல்வதற்கரிய இருளாகவும் விளங்குகிறது.

இவ்வாறு முரண்பட்ட கருத்துகள் ஏன் நிலவுகின்றன? எல்லா அநுபூதிமான்களும் தம் அனுபவம், வாக்கு மனம் எட்டாதது என்பதில் ஒருமித்த கருத்துடையவர்கள். நினைவிற்கும் அரிய இந்த வியக்கத்தக்க அனுபவத்தை விளக்குவதற்குச் சொற்களே இல்லை. எனவே மொழியின் இயலாமையே முரண்பட்ட கருத்துகள் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம். பேசாத மோனநிலையைப் பேசுவதால் ஏற்படும் இடர்ப்பாடு இது. இந்த அநுபூதி நிலை எண்ணத்திற்கு அப்பாற்பட்டது ஏனென்றால் எண்ணமும் ஒரு வரம்பிற்குட்பட்டதே. எண்ணும் பொழுது நாம் சொற்களைப் பயன்படுத்தவில்லை என்றாலும் சொற்கள் தரும் வடிவங்களைப் பயன்படுத்துகிறோம். சொற்களும் அவைதரும் வடிவங்களும் ஒரு வரம்புவரை மட்டுமே பயன்படுத்த முடிந்தவை. ஆழ்ந்த உணர்ச்சிகளை அவை வெளிப்படுத்த இயலா. நெடுங்காலம் பிரிந்திருந்த நண்பர்கள் ஒருவரை ஒருவர் காணும்பொழுது பேசமுடிவதில்லை. அங்குப் பேச்சற்ற நிலையே மொழியாகி விடுகிறது. அதனால்தான் உபநிடதங்களும் பேச்சற்ற நிலையில்தான் பிரமத்தை அறியமுடியும் என்கின்றன. தாமசு அக்குவீனசு (Thomas Aquinas) என்பவர், சம்மா தியோலாசிகா (Summa Theologica) என்னும் நூலில் பார்சு தெர்சியா (Pars Tertia) என்ற பகுதியை எழுதிக்கொண்டிருந்தபொழுது அநுபூதி நிலையைப் பெற்றார். தாம் அதுவரை எழுதியதனைத்தும் வீண் என்றுணர்ந்து எழுதிக்கொண்டிருந்த நூலை முடிக்காமல் விட்டுவிட்டார்.

இலக்கியம் கூடச் சில காலங்களில் இலக்கணத்தை மீறிவிடுகிறது. இலக்கணம் நம் எண்ணங்களின் வெளியீட்டை ஒரு வரம்புக்குட்படுத்துகிறது. ஆனால் ஆழ்ந்த உணர்ச்சிகள் இலக்கண வரம்பை

மீறிப் பீறிடுகின்றன. அவ்வாறே கட்டற்ற பேரின்ப அநுபூதி அனுபவத்தையும் வரம்புக்குட்பட்ட சொற்களின் மூலம் வெளிப்படுத்தும்பொழுது இந்த முரண்பாடுகள் தோன்றுவதாகக் கருதலாம். அநுபூதியாளர்களின் அனுபவம் மொழிமூலம் வெளிப்படுவது அன்று என்று கருதினாலும் தவறில்லை. ஏனென்றால் சாதாரண அறிவில், அறிவோனுக்கும் (Subject) அறியப்படுகின்ற பொருளுக்கும் (Object) வேறுபாடு இருக்கிறது. ஆனால் அநுபூதி அனுபவத்தில் இந்த வேறுபாடுகள் அழிந்துவிடுகின்றன. ஒன்று மற்றொன்றில் கரைந்து விடுகிறது. எனவே, அன்றாட வாழ்க்கை, அறிவியல் அறிவு ஆகியவற்றுக்கு அடிப்படையான 'முரணாமை' (Law of non- contradiction) என்னும் சிந்தனை விதியே, அறிவுக்கு அறிவான ஆண்டவனைக் காண்கின்ற அனுபவத்திற்கும் அளவுகோல் என்று கூறமுடியாது. ஜெ. மு.

**அநுராதபுரம்** இலங்கையின் வடக்கு மையப் பகுதியில் உள்ள பழம்பெரும் நகரம். இன்று ஆய்வாளர்களையும் சுற்றுலாவினரையும் கவர்ந்து ஈர்க்கக்கூடிய நிலையில் உள்ள அந்நகரம், இலங்கையின் தலைநகராக ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகத் திகழ்ந்தது.

ஈழநாட்டு வரலாற்றுச் செய்திக் கோவையின்படி அந்நாட்டின் முதல் மன்னன் இந்தியாவைச் சேர்ந்த விசயன் ஆவான். அவனுக்குப் பின் அவன் உடன் பிறந்தானின் மகனான பாண்டுவாசு என்பானும் அவனைச் சேர்ந்த சில துறவிகளும் அநுராதபுரத்தை அமைத்ததாக மகாவம்சம் என்னும் நூல் கூறுகிறது. அந்நகரம் கி.மு. 4–ஆம் நூற்றாண்டில் உண்டாயிற்று என்ற கருத்தும் நிலவுகிறது.

அரசியல் வரலாறு: வரலாற்றின்படி அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட ஈழநாட்டின் முதல் அரசன் தேவனாம்பிரியதிசாவை, (கி.மு. 247–207) இந்தியாவின் மௌரியப் பேரரசனாகிய அசோகன் அனுப்பிய சமயப் பரப்புக் குழுவினர், புத்தசமயத்திற்கு மாற்றினர். தன் தலைநகரில் ''மகா விகாரம்'' என்ற மடத்தை அவன் கட்டினான். புத்தகயாவிலிருந்து எடுத்துச் சென்ற போதிமரக் கன்றையும் அவ்வரசன் நட்டு வளர்த்தான்; ஒரு பெரிய தூபியையும் நிறுவினான். அவன் நட்டமரம் ''உலகில் இன்றுள்ள மரங்கள் யாவற்றிலும் மிகப் பழைமையானது''. திசாவின் ஆட்சிக் காலத்திலிருந்து, அநுராதபுர (இலங்கை) – இந்தியத் தொடர்பு வரலாற்று முறையிலும் பண்பாட்டு முறையிலும் மிகுதியாகியது.

கி.மு. 2–ஆம் நூற்றாண்டில் தமிழினத்தைச் சேர்ந்த எல்லாளன் (எல்லாரன்) என்பான் (கி.மு. 145 – 101) அரசுரிமையைக் கைப்பற்றி, ஆட்சி முறையைச் செம்மைப்படுத்தினான். முதலாவது சிங்கள மன்னன் விசயன் காலத்திலிருந்தே அவர்கள் இந்திய மன்னர்களுடன் மணவினைத் தொடர்பு கொண்டிருந்தனர். முதல் தொடர்பு பாண்டிய நாட்டு மன்னன் மகளுடன் கொண்ட மணவினை உறவாகும். இத்தகைய மணவினைத் தொடர்பு காரணமாகவே சிங்களவர், தமிழ் நாட்டு அரசுரிமைக்கும், தமிழர் அநுராதபுர அரசுரிமைக்கும் போட்டியிட்டுப் போரிட்ட பல நிகழ்ச்சிகளைக் காணலாம்.

எல்லாளனின் தமிழ் ஆட்சியை முடிவுறச் செய்த துட்டகைமனு (துத்தகமணி எனவும் கூறுவர்) என்பவன் இலங்கை, தமிழராட்சியினின்று விடுபட்டு உரிமை நாடாகவும் ஒரு பௌத்த நாடாகவும் விளங்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் செயலாற்றினான். ஆனால், மீண்டும் அநுராதபுரம், தமிழரால் கைப்பற்றப்பெற்று வட்டகமணி என்பானாட்சியின் கீழ் வந்தது. ஆயினும் விரைவில் இது மாறிச் சிங்களவர் ஆட்சி மீண்டும் ஏற்பட்டது.

தொடக்க முதல் இலம்பகர்ணர், மோரியர் என்ற இரண்டு வலிமை வாய்ந்த குலங்கள், அநுராதபுர அரியணையைத் தம் வசப்படுத்திக் கொள்வதில் போட்டியிட்டுப் போரிட்டு வந்ததால், தமிழ்ச் சேர சோழ பாண்டிய நாட்டு மன்னர்களும் சில சமயங்களில் தமது ஆட்சியை அங்கே நிறுவினர். இவ்வாறு, முதல் ஆயிரம் ஆண்டுக் காலத்தில் அநுராதபுர அரசியலில் ஒரு நிலையான தன்மை இல்லை. இலங்கைத் தீவு முழுவதையும் இணைத்து ஒன்றுபடுத்தி, நிலையான ஓர் ஆட்சியைப் பல ஆண்டுகள் தொடர்ந்து நிறுவ இயலாமல் போயிற்று. சேனா, குட்டிகா (கி.மு. 177–155) முதலியோர் ஆட்சிக்குப் பிறகு, கி.மு. 43–இல் பாண்டிய அரசகுல ஆட்சி மீண்டும் ஏற்பட்டுச் சிறிது காலம் நீடித்தது. கி.பி. 174 முதல் 196 வரை அங்கு ஆட்சி புரிந்த முதலாம் கயவாகு (சிலப்பதிகாரத்தில் சிறப்பிக்கப்படுபவன்), தமிழ் நாட்டுச் சேரருடன் நட்புறவு பூண்டிருந்தான். கரிகாற் சோழன், ஈழநாட்டுக்கு இடையூறு செய்து கயவாகுவிடமிருந்து இழப்பீடு பெற்றான். கயவாகு கண்ணகி (பத்தினித் தெய்வ) வழிபாட்டு முறையை இலங்கையில் புகுத்தினான். கயவாகுவுக்குப் பின் போந்த அபயநாகா (கி.பி. 285–293) தன் ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்ளத் தமிழ் நாட்டுப் படையின் உதவியை நாடியதாக மகாவம்சம் குறிக்கும். சிரிசங்காபோ (கி.பி. 300–302) துறவியாக மாறிக் காட்டில் வாழ்ந்தான். அவன் உயிரைப் பறித்துக் கொள்ள விழைந்த கொடுங்கோலன் தன் உடன் பிறந்தானின் தலையைக் கொணர்வோர்க்கு இரண்டாயிரம் பொற்காசுகள் பரிசு வழங்குவதாக அறிவித்திருந்ததை

அறிந்த அத்துறவி மன்னன், ஓர் ஏழை அப்பொருளைப் பெற்றுக் கொள்ளட்டும் என்று தன் தலையையே தந்தான்.



அநுராதபுரம்-தூபாராம தூபி

அக்குலத்தின் இறுதி மன்னனான மகாசேனன் (334–362) பல தூபிகளையும் மடங்களையும் கட்டியதுடன், நீர்ப்பாசனத்திற்கான ஏற்பாடுகளையும் செய்தான். கி.பி. 4–ஆம் நூற்றாண்டிலிருந்து 6–ஆம் நூற்றாண்டு வரை அந்நாட்டில் பல சிறந்த குளங்கள் வெட்டப்பட்டதால், அக்காலம் ''குளங்கள் வெட்டப்பட்ட காலம்'' என்றே குறிக்கப்படுகிறது.

மேகவர்மன் கி.பி. 379 வரை ஆட்சி புரிந்தான். அவன் இந்தியாவின் சமுத்திரகுப்த மன்னனுடன் நட்புறவு பூண்டிருந்தான். புத்தரின் நினைவுச் சின்னமான பல், கலிங்க நாட்டிலிருந்து இவனால் பெறப்பட்டது. பின்போந்த புத்தசாரன், பத்து ஊர்களுக்கு ஒரு மருத்துவமனை என்ற முறையில் மருத்துவ மனைகளைக் கட்டிப் புகழடைந்தான். வடமொழியில் சிறந்ததோர் மருத்துவ நூலும் இவனால் இயற்றப்பட்டது. மொக்கலானா (கி.பி.491–508) என்பான், அவனுடன் அரசுரிமைக்காகப் போட்டியிட்ட கசியபன் என்பானை விரட்டத் தமிழர்களைப் படையில் அமர்த்தியிருந்தான். பின்னர் அநுராதபுரத்தில் ஆட்சி புரிந்தவர்களும் தமிழர் படையையே நம்பியிருந்தனர். இதனால் தமிழரசர் படையின் செல்வாக்கு உயர்ந்து அவர்கள் அரசர்களை ஆக்குவோராகவும் அழிப்போராகவும் ஆயினர். அரசவையில் தமிழரின் செல்வாக்குப் பெருகியது. தென்னிந்தியாவில் தமிழ் நாட்டு அரசர்கள் வலிமை பெற்றிருந்த காரணத்தால், இலங்கையில் தமிழரின் செல்வாக்கைக் குறைக்க இயலவில்லை. கி.பி.5,6,–ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட பாண்டியர், பல்லவர், சோழர் ஆகியோரின் எழுச்சியின் காரணமாக, இலங்கைச் சிங்களவர்க்கும் தமிழ் நாட்டுக்குமிடையே பகைமையும் உறவும் நிலவின.

இந்து சமயத்தை ஆதரித்த தமிழ் மன்னர்கள், சிங்களவரின் பௌத்த சமயத்தைத் தாக்கினர். இலங்கையில் தங்கியிருந்த தமிழர்களின் உதவியும் அவர்களுக்குக் கிடைத்தது. ஆரிய இனத்தவரான சிங்களவர்க்கும் தமிழருக்கும் பகைமை இருந்த போதிலும், சில காலங்களில் ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். ஆனால் நெருக்கடி நிலை இருந்துகொண்டே இருந்தது. அநுராதபுர வரலாற்றில் தென்னிந்தியத் தலையீடு சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. இந்த அச்சுறுத்தல் காரணமாகவே அங்கே நிலைத்த அரசு ஏற்பட முடியவில்லை. முடிவில் அவ்வரசும் அழிந்தது. ஈழம் கி.பி. 6,7,8–ஆம் நூற்றாண்டுகளில், உள்நாட்டுப் போர்களாலும் துயருற்றது. பல்லவன் சிம்மவிட்டுணு (575–600) ஈழத்தை வென்றதாகக் கூறிக் கொள்கிறான். கி.பி. 7–ஆம் நூற்றாண்டில் அநுராதபுர அரசுக்கும் பல்லவர்களுக்குமிடையே நட்புறவு நிலவியது. தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்த முதலாம் நரசிம்மவர்ம பல்லவனும் (கி.பி.630–655) இலங்கை மன்னன் மானவர்மனும் சேர்ந்து, சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியை வென்றதால், உள்நாட்டுப் போரால் பட்டமிழந்த மானவர்மனை, அநுராதபுர அரியணையில் மீண்டும் அமர்த்திப் புகழ் கொண்டதும் பல்லவப் பேரரசன் நரசிம்மவர்மனேயாவன்.

பல்லவர் வீழ்ச்சிக்குப் பிறகு தலைமை நிலை எய்திய சோழரும் பாண்டியரும் அநுராதபுர அரசுடன் வேறுவகையான உறவு பூண்டிருந்தனர். போராட்டமும் தொடர்ந்தது. அநுராதபுரத்தில், முதலாம் சேனன் (கி.பி. 833–853) ஆட்சி புரிந்து கொண்டிருந்த காலத்தில் பாண்டிய மன்னன் சிரீமாற சிரீவல்லபன் (கி.பி. 815–860) ஈழத்தில் படையெடுத்து, அங்கிருந்த தமிழர்களின் உதவி பெற்று வெற்றி எய்தினான். பெருந்தொகையை இழப்பீடாகப் பெற்ற பிறகே பாண்டியப் படை வெளியேறியது. வஞ்சந் தீர்க்கக் காத்துக் கொண்டிருந்த ஈழமன்னன் இரண்டாம் சேனன், பாண்டிய நாட்டில் ஏற்பட்ட அரியணைப் போட்டியைப் பயன்படுத்திக் கொண்டு, அரியணை வேண்டிய ஒரு பாண்டிய இளவரசனுக்கு உதவி செய்ய, மதுரையைத்தாக்கிச் சூறையாடினான்.

தமிழகத்தில் சோழர் தலைமை நிலையில் இருந்த தருணத்தில், சிங்களவர், தமது பழைய கொள்கையை மாற்றிக் கொண்டு சோழரின் பகைவர்களான பாண்டியருடன் இணைந்து கொண்டனர். இதைக்கண்ட இராசஇராச சோழன் (கி.பி 983–1014) அநுராதபுரத்தைத் தாக்கி அதைத் தம் நேர் ஆட்சியின் கீழ்க்

கொணர்ந்தான். அநுராதபுர சிங்களவ மன்னர்களுள் இறுதியானவன் கி.பி. 982-இல் அரியணையேறிய ஐந்தாம்மகிந்தன். அவன் கி.பி.1017-இல் சோழரால் பிடிக்கப் பட்டுக் கைதியாகித் தென்னிந்தியாவில் மாண்டான். இராசராசனின் மகன் இராசேந்திர சோழன் (1012-1044) ஆட்சியில் இலங்கைத் தீவு முழுவதும் சோழப் பேரரசுக்கு உட்பட்டது. பண்டைய காலம் முதல் ஈழமண்டலத்தின் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் சோழரால் அழிக்கப்பெற்றது. இதற்கு முன் ஈழத்தின்மீது படையெடுத்துச் சென்ற தமிழரசர்கள், அதன் வடபகுதியை மட்டும் கைப்பற்றுவதைத் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். ஆனால் இராசராசனோ அம்மண்டலம் முழுவதையுமே கைப்பற்றித் தன் ஆட்சிக்கு உட்படுத்த விரும்பியதால், பழைய தலைநகரை விடுத்து, நாட்டின் நடுவில் உள்ள (அநுராதபுரத்தின் தென்கிழக்கில் உள்ள) பொலன்னருவா என்னும் நகரைச் சனநாதமங்கலம் என்ற புதிய பெயருடன் தலைநகராக்கிக் கொண்டான்.

அநுராதபுரம் ஒரு தலைநகராக இருந்ததுடன், ஒரு வாணிக மையமாகவும் (கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரை) திகழ்ந்தது. மிகப் பழங்காலத்திலேயே யவனர் அங்கே குடியேற்றங்கள் அமைத்திருந்தனர். உரோமானிய நாணயங்கள் கி.பி.4-ஆம் நூற்றாண்டிற்குரியன கண்டுபிடிக்கப் பட்டுள்ளனவாதலின், உரோமானியருடன் வாணிக உறவு இருந்தமை புலனாகிறது. பாரசீக வணிகரும் கி.பி.5-ஆம் நூற்றாண்டில் அங்கே குடியேறினர். தமிழர் குடியேற்றங்களும் இருந்தன. அநுராதபுரத்தைத் தமிழரசர்கள் தாக்கியதன் நோக்கம், அதன் வாணிகத்தைத் தம் வசப்படுத்திக் கொள்ளலே. முத்து, மாணிக்கம், விலை உயர்ந்த நிறக் கற்கள், தந்தம், மணப்பொருள்கள் முதலியன சிறப்பான வாணிகப் பொருள்களாகும். தமிழ் மன்னர்களிடமிருந்து பல உரிமைப் பட்டயங்களைப் பெற்றுச் சிறப்பு வாணிகத்தில் அவர்களே ஆதிக்கம் செலுத்தினார்கள். உள்நாட்டு வாணிகம் சிறந்த முறையில் அமைந்திருந்தது. பெரும்பான்மையும் பண்டமாற்று முறை நிலவியது. ஓரளவு நாணய முறையும் வழக்கிலிருந்தது. அநுராதபுரத்துக்கு மிக்க புகழ் தந்தது அதன் பண்டைக்கால நீர்ப்பாசன முறை. அதை அவர்கள் அமைத்துக் கண்காணித்த முறையை இக்காலத்திய பொறியியல் வல்லுநர்களும் வியந்து பாராட்டுகிறார்கள். இதனாலும், கிராமங்களில் நல்லமுறையில் செயற்பட்டு வந்த பொருளாதார அமைப்பினாலுமே, அந்நகரம் கடுமையான அரசியல் குழப்பங்களை நீண்ட காலம் தாங்க முடிந்தது. இராசரதம் (அரசரின் தேசம்) எனப்பெறும் இலங்கையின் வடபகுதியில் தான், நாகரிகம் மிகுதியாகச் சிறப்புற்றிருந்தது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு வரை பாரசீகர், அநுராதபுரத்துடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். பாரசீகக் கிறித்தவரில் நெசுத்தோரியப் பிரிவினர் தம் குடியேற்றத்தையே அங்கு அமைத்திருந்தனர். அநுராதபுர-சீன வாணிகத் தொடர்பு கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டது. அநுராதபுரம் ஒரு வறட்சிப் பகுதியாக இருந்ததோடு, நீர்ப்பாசன வசதிகளும் படையெழுச்சிகளின் விளைவாக அழிவுற்றதால், அந்நகர் தலைநகராகத் தொடர்ந்து இருக்க முடியவில்லை.

இலக்கியம்: பிராகிருத-தமிழ்க் கலப்பே சிங்கள மொழி. இதுவே மக்களின் சிறப்பு மொழியாகும். சிங்கள இலக்கியம் வளரப் பாலிமொழியும் உதவியது. சிங்களரின் பௌத்த சமயம் பாலி மொழித் தொடர்புடையது.

அநுராதபுர மன்னர்களின் காலத்தில் சிறப்பான சிங்கள நூல்கள் பாலி மொழியிலேயே இருந்தன. அநுராதபுரத்தில் 5 சிறப்பு வாய்ந்த தூபிகள் இருந்தன. முதலாம் தூபி, சிறிய, ஆனால் கவர்ச்சிகரமான திருப்பரமா தூபி. மன்னன் துட்டகை மனுவால் நிரிசவேதி, மகாதூபி என இரண்டு தூபிகள் எழுப்பப் பெற்றன. பின்னர் எழுந்த அபயகிரி தூபி, மிகப் பெரிய தூபி. இதனைப் பண்டைக்காலத்தில் புகழ் பெற்ற மற்ற உலக நினைவுச் சின்னங்களுடன் ஒப்பிடலாம். உருவனவலிசயே என்ற மன்னனால் இது கட்டப்பெற்றது. கயவாகு மன்னன் கி.பி. இரண்டாம் நூற்றாண்டில், அபயகிரி தூபியை 93 மீட்டர் உயரத்துக்கு உயர்த்தினான். சதாவனே என்ற தூபி 133 மீட்டர் உயரமுள்ளது. இதனை அக்காலத்தின் அற்புதங்களுள் ஒன்றாகக் கூறலாம். பௌத்த உலகிலேயே இதுதான் மிகப் பெரியது. இவற்றைத் தவிர, பல சிறிய தூபிகளும் அக்காலத்தில் எழுப்பப் பெற்றன. அநுராதபுரத்தைச் சேர்ந்த துப்பராமா என்னுமிடத்தில், தூபியைச் சுற்றி மிக்க வேலைப் பாட்டுடன் நான்கு வட்டங்கள் கல்லினால் கட்டப் பெற்றிருப்பது, அக்காலக் கட்டிடக்கலைச் சிறப்புக்குச் சிறந்த சான்றாகும். மகா விகாரத்தைச் சேர்ந்த துறவிகள் தங்குவதற்காக, துட்டகைமனு மன்னனால் தொடங்கப்பெற்ற, பிரேசன் அல்லது லோவமகாயாய மாளிகைக் கட்டிடம், பிறகு ஒன்பது அடுக்குகளையுடைய மாடிக்கட்டிடமாக வளர்ந்தது. அதன் சிதறுற்ற சின்னங்களை இன்றும் அநுராதபுரத்தில் காணலாம். அங்குத் தாந்திரிய மகாயான பௌத்தர்களின் பொருட்டுக் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் விசயராமாதூபி எழுப்பப்பெற்றது. இதைச் சுற்றியுள்ள பகுதியில் ஏற்பட்ட மடாலயம், தெற்கு வடக்கில் 96 மீட்டர், கிழக்கு மேற்கில் 89 மீட்டர் பரப்பினைக் கொண்டு சிறப்பாகத் திகழ்ந்தது. பௌத்தக் கட்டிடங்களில் இந்துக் கடவுளையும் காணலாம். இவை

யெல்லாம் இன்று சிதைந்து 1600 கற்றூண்கள், அழிவுற்ற நிலையில் பழங்காலப் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. கட்டிடக் கலையைப் போலவே சிற்பத் துறையிலும் அக்கால அநுராதபுரம் சிறப்புற்றிருந்தது. அதிலும் இந்தியப் பண்பைக் காணலாம். அநுராதபுரத்து இசுருமுனிவர் கோயிலுக்கு மாமல்லபுரத் தேர்களை ஒத்த பெருஞ் சிறப்பு உண்டு. அரசர்களின் குளியலறைகளில் எழில் மிக்க சிற்பங்கள் திகழ்ந்தன. அபயகிரி விகார வழிபாட்டில் கல்லாலாகிய ஒரு புத்த உருவமும், அநுராதபுர வெண்கல உருவங்களுள் சிலவும், பல்லவர் கலைப் பண்புகளைப் பெற்றுள்ளன. மகா மேக வனம் எனப்படும் அரசர் பூங்காவில், தெற்கில் இயற்கையாக இருந்த கற்பாறையை உளியால் செதுக்கித் தரையிலும் சுவரிலும் அதை இணைத்திருக்கும் அற்புதத்தை அநுராதபுரத்தில் இன்றும் காணலாம். டி.பா.

துணை நூல்கள்:

சபாநாதன் முதலியார், க., "யாழ்ப்பாண வைபவ மாலை", கொழும்பு, 1953.

**Arunachalam**, P., "Sketches of Ceylon History", Colombo, 1906.

**Ariyapala, M.B.**, "Society in Mediaeval Ceylon", Colombo, 1956.

**Burrows**, S.M., "Buried Cities of Ceylon."

**Cane, H.W.**, "The Book of Ceylon", London, 1913.

**Mendis**, G.C., "Early History of Ceylon", Calcutta, 1940.

**Navaratna**, C.S., "Tamils and Ceylon", Jaffna, 1958.

**Parker**, H., "Ancient Ceylon", London, 1909.

**Pillai**, K.K., "South India and Srilanka", Madras, 1975.

**Srinivasa Ayyaugar**, P.T., "History of the Tamils from the Earliest Times to 600 A.D.", Madras, 1929.

**Wijesekere, N D.**, "The People of Ceylon", Colombo, 1951.

**அநுருத்தர்[1]** புத்தரின் முதன்மையான சீடர்களுள் ஒருவர். பழங்காலத்திலேயே பெருஞ்சிறப்புடன் விளங்கிய காஞ்சிபுரத்தில் இவர் பிறந்தார். அக்காலத்தில் காஞ்சிபுரத்தில் புத்த சமயச் செல்வாக்கு மிக்கிருந்தது. அநுருத்தர் காஞ்சிபுரத்தில் விளங்கிய பல்வேறு புத்த விகாரங்களுள் ஒன்றாகிய 'மூல சோம் விகாரை' என்னும் புத்தப் பள்ளிக்குத் தலைவராக விளங்கினார். காஞ்சியில் விளங்கிய இவரைப் பாண்டிய நாட்டவர் என்றும் கூறுகின்றனர். இவர் அபிதம்மாத்த சங்கிரகம், பரமார்த்த வினிச்சயம், நாமரூபப் பரிச்சேதம் ஆகிய புத்த சமய நூல்களை இயற்றியுள்ளார். இவற்றில் அபிதம்மாத்த சங்கிரகம், சிரீலங்கா, பர்மா ஆகிய தேசங்களில் உள்ள புத்த சமயத்தவர்களால் நெடுங்காலமாகப் போற்றிக் கற்கப்படுகிறது. இவரைத் தலைவராகக் கொண்டொழுகிய பிக்குகள், சூத்திர பிடகத்தைச் சார்ந்த அங்குத்தர நிகாயப் பகுதிகளைப் பாராயணம் செய்து வந்தார்கள்.

**அநுருத்தர்[2]** ஒரு தமிழ்ப் புலவர், கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் இப்பெயரில் வாழ்ந்துள்ளார். இவர் பெரும்பிடுகு முத்தரையன் என்னும் ஒரு சிற்றரசனைப் பாடியுள்ளார். கட்டளைக் கலித்துறைச் செய்யுளில் அமைந்த இவரது பாடல், திருச்சிக்கு அருகில் செந்தலை என்னும் ஊரிலுள்ள சிவன் கோயிற் சாசனத்தில் சிதைவுற்றுக் காணப்படுவதாக மு. இராகவையங்கார் குறிப்பிட்டுள்ளார். மேலுமவர் தம் நூலில் இவரைப் பற்றிக் குறிப்பிடுங்கால், ஆசாரியர் அநிருத்தர் என்பதனால் முத்தரையற்கு ஆசிரியராகவோ சமண சமய முனிவர்களுள் ஒருவராகவோ இவர் இருந்திருக்கலாம் என்னும் கருத்தினையும் தெரிவித்துள்ளார்.

**அநேகதா கால்வாய்** மேற்கு இந்தியக் தீவுக் கூட்டத்தில் உள்ள இலீவார்டு தீவுகளின் வடகோடியில் உள்ளது. மேற்கிலுள்ள வர்சின் தீவுகளுக்கும் கிழக்கிலுள்ள அங்குலா, செயின்ட்டு மார்ட்டின் ஆகிய தீவுகளுக்கும் இடையில் உள்ள நீர்வழி. பனாமா கால்வாய்க்குச் செல்லும் கப்பல்கள் இந்நீர் வழியாகச் செல்கின்றன. பிரிட்டிசு வர்சின் தீவுகளுள் ஒன்றான அநேகதா தீவின் பெயரிலிருந்தே இக்கால்வாயின் பெயரும் அமைந்துள்ளது.

**அப்சரசுகள்** அழகு மிகு தேவ அணங்குகள் எழுவர். இவர்கள் பாற்கடலைக் கடைந்தபொழுது வெளிப்பட்டவர்கள். இரம்பை, விபுலா, ஊர்வசி, திலோத்தமை முதலானோர் அப்சரசுகளுள் (Apsaras) சிலர். ஊர்வசியின் அழகினை மட்டும் வேதம் கூறுகிறது. இதிகாசங்களுள் அப்சரசுகள் அனைவரைப் பற்றியும் கூறப்பட்டுள்ளன. அனைவரையும் கவரக் கூடிய வகையில் சிரித்த முகத்துடனும் மெல்லிய



புவனேசுவரில் உள்ள அப்சரசுச் சிற்பம்

அணிகலன்களைக்கொண்ட இடையுடனும் நின்ற வாறு இவர்கள் சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளனர்.

**அப்சல்கான்** பீசப்பூர் அரசாங்கத்தின் படைத் தளபதி. கி.பி. 1659–ஆம் ஆண்டில் சிவாசியின் பெருகி வளரும் ஆதிக்கத்தையும் ஆற்றலையும் கட்டுப்படுத் தவும் அடக்கவும், முடியுமானால் சிவாசியைக் கொல் லவும் அனுப்பப்பட்ட படைத்தலைவர். அப்சல்கானின் (Afzalkhan) இயற்பெயர் அப்துல்லா பட்டாரி. இவர் உயர்குடியில் பிறந்த படைவீரர். இவர் தம் சொந் தக் குதிரையைவிட்டு இறங்காமலே சிவாசியைக் கை விலங்கிட்டுச் சிறைப்படுத்திக் கொண்டு வரப்போவ தாக அரண்மனை அவையில் தற்புகழ்ச்சியுடன் கூறி னார். கி.பி. 1659–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் பீசப்பூரை விட்டுப் புறப்பட்டுப் பண்டரிபுரத்தைச் சென்று அடையுமுன், வழியில் இருந்த கோவில்களை அழித்துப் பண்டரிபுரத்துக் கோவிலில் குடிகொண் டிருந்த விட்டோபாவின் திருவுருவத்தையும் இவர் அழித்தார். சிவாசியின் அமைச்சர்கள், அப்சல் கானிடம் அடிபணிந்து விடுவது நல்லது எனக் கூறிய போதிலும், சிவாசி அவ்வுரையைப் புறக்கணித்து விட்டு, அப்சல்கானுடன் போரிடுவதே சரியென முடிவு செய்து அதற்கான தந்திர முறைகளைக் கையாண் டார். அப்சல்கானின் தூதராகச் சிவாசியைக் காண வந்த கிருட்டினாசி பாசுக்கர் மூலம் கானின் நோக் கத்தைக் குறிப்பால் அறிந்து கொண்ட சிவாசி, கானை நேரில் கண்டு உரையாடிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்னும் முடிவுக்கு வந்தார். உரையாடலின்போது தமக்குத் தீங்கு நேராது பார்க்கும் பொறுப்பு கானைச் சார்ந்தது என்னும் வாக்குறுதியைப் பெற, சிவாசி பந்தாசி கோபிநாத்து என்பவரைத் தன் தூதுவராக அனுப்பினார். பந்தாசி கோபிநாத்து அப்சல்கானை நேரில் சந்தித்தார்; கானின் நயவஞ்சகத் திட்டத்தையும் அறிந்தார். அப்சல்கான் சிவாசியை நட்பு முறையில் சந்தித்துச் சிவாசியைச் சிறையிடத் திட்டம் தீட்டியுள்ளதைக் கோபிநாத்து சிவாசியிடம் கூறினார்.

இறுதியில் பிரதாப்கட்டுக் கோட்டையிலிருந்து ஒன் றரைக் கி.மீ. தொலைவிலுள்ள பார் என்னும் கிரா மத்தில் இரு தலைவர்களும் சந்திப்பதென முடிவா யிற்று. குறித்த நாளான கி.பி. 1659–ஆம் ஆண்டு நவம்பர் 2–ஆம் நாள் இருவரும் சந்தித்தார்கள். கான் பல்லக்கில் புறப்பட்டுச் சென்றார். சிவாசி தம் படைகளை வழிநெடுகிலும் இருந்த காடுகளினூடே மறைந்திருக்க ஏற்பாடு செய்துவிட்டுக் கவசமணிந்து, தலையைக் காக்க உலோகத் தொப்பியணிந்து, இடக் கைவிரல்களில் புலிநகத்தையும், வலச் சட்டைக் கைக்குக் கீழ் கூரிய சிறு பிச்சுவாவையும் அணிந்து புறப்பட்டார். சிவாசிக்கு உறுதுணையாக சிவ்மகலா, சம்பூசி காவ்சி என்னும் இரு வீரர்கள் சென்றனர்.

அப்சல்கான், உரையாடல் நடக்கத் திட்டமிடப் பெற்ற இடத்திற்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட துப் பாக்கி வீரர்களுடன் வந்தார். சிவாசியின் தூதரான கோபிநாத்து, கானின் படைகள் அவருடன் இருப்ப தால் சிவாசி பேச்சுவார்த்தைக்கு வரத் தயங்கக்கூடும் என்றும், எனவே படைகளைத் தள்ளியிருக்கச் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். உடனே இவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டது. அப்சல் கானும், சிவாசியைப்போல இரு வீரர்களுடன் கூடா ரத்துக்குள் வந்து சேர்ந்தார் சையது பந்தா என்னும் பெயர் கொண்ட உடைவாளேந்திய வீரனை மூன் றாம் பணியாளாகக் கொண்டுவர விரும்பிய கானின் ஆசைக்கு, சிவாசி எதிர்ப்புத் தெரிவித்து அவனையும் அனுப்பிவிட்டார். சிவாசி கூடாரத்தின் எல்லை வந் தடைந்ததும் அப்சல்கானுக்கு வணக்கம் செலுத்தி னார். சில அடிகள் முன்னேறி வந்த அப்சல்கான் சிவாசியைக் கட்டித் தழுவிக் கொண்டார். சிவாசி உயரம் குறைந்தவரானபடியால் அவர் கானின் தோளுயரத்தில் நின்றார். கான் சிறிது வளைந்து சிவாசியைத் தம் கைப்பிடியில் மடக்கிக் கழுத்தை

நெருக்கிக்கொண்டு, ஒரு கையால் உடைவாளை உருவி சிவாசியை ஒரு பக்கத்தில் தாக்கினார். ஆனால் சிவாசி கவசமணிந்திருந்தபடியால் உடைவாள் வெட்டு அவரை ஒன்றும் செய்யவில்லை. இந்த அதிர்ச்சியிலிருந்து தம்மை மீட்டுக் கொண்ட சிவாசி தம் புலி நகத்தால் அப்சல்கானின் வயிற்றைக் கிழித்துத் தம் சிறு பிச்சுவாவினால் அப்சல்கானின் அள்ளையில் குத்தினார். அப்சல்கான் மரணகாயமுற்றார். கானின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்ட சிவாசி, கூடாரத்தின் கீழே போடப்பட்டிருந்த மேடையினருகிலேயே இருந்த தம் இரு துணைவர்களை நாடி ஓடினார். அப்சல்கான் அலறித் துடித்துக் கூச்சல் எழுப்பவே, சையது பந்தா சிவாசியைக் கொல்லும் நோக்குடன் அவருடைய தலையை வெட்ட வாளை வீசினார். தலையைக் காக்கச் சிவாசி அணிந்திருந்த உலோகத் தொப்பி அவரைக் காத்தது. சிவ்மகலா சையது பந்தாவின் வலக் கையைத் துண்டித்து விட்டுப் பின்னர் அவனைக் கொன்றுவிட்டார். அப்சல் கானும் பிரதாப்கட்டுக் கோட்டையில் உயிர் துறந்தார். பீசப்பூர் படைவீரர் தலைதப்பிப் புறமுதுகு காட்டி ஓடினர். அப்சல்கானின் மரணம் பீசப்பூரின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

**அப்துர் இரகிமான் (கி.பி. 1844-1901)** ஆப்கானிசுதான் அமீராக ஆங்கிலேயரின் துணையுடன் அரியணை ஏறியவர்; அப்சல்கானின் மகன்; தோசுத்து முகமது கானின் பெயரர். தோசுத்து முகமதுகான் கி.பி. 1853-இல் இறப்பதற்கு முன்னர்த் தம்முடைய மூன்றாம் மகன் சூர்அலியைத் தம் வாரிசாக நியமித்துச் சென்றார். அரியணை ஏறிய சூர்அலியை அவருடைய மூத்த சகோதரர்களான அப்சல்கானும் ஆசம் கானும் எதிர்த்துக் கலகம் செய்தனர். அப்துர் இரகிமான் கான் என்பவர் அவர்களை ஆதரித்து உள்நாட்டுப் போரில் பங்கு கொண்டார். இப்போர் ஐந்தாண்டுகள் நீடித்தது. சூர்அலி இறுதியில் வெற்றி வாகை சூடினார். எனவே அப்துர் இரகிமான்கான் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டார். அவர் சாமர்கண்டில் செனரல் கான்சுடன்டின் காப்மன் என்பாரிடம் தஞ்சம் புகுந்தார். இரண்டாம் ஆங்கில-ஆப்கானியப் போரின்போது சூர்அலி இறக்கவே, அவருடைய மகன் நாடு கடத்தப்பட்டார். ஆங்கிலேயர் அப்துர் இரகிமான் கானை அமீராக ஏற்றுக்கொண்டனர். இதற்காக அவர் ஆப்கானிசுதானத்தின் வெளியுறவுக் கொள்கையை ஆங்கிலேயரின் வசம் ஒப்படைத்தார். அவர் வலிமைமிக்க தேசிய இராணுவத்தை உருவாக்கினார். அவரது காலத்தில் வரி வசூலிப்பு தீவிரமாக்கப்பட்டது. கி.பி. 1893-இல் அவர் துராண்டுக் கோட்டையினை இந்திய - ஆப்கானிய எல்லையாக ஏற்றுக்கொண்டார்.

**அப்துர் இரகிமான், முகமது (கி.பி. 1898-1945)** கேரள மாநிலத்தைச் சார்ந்த தேசியத் தலைவர்; மாப்பிள்ளை முசுலிம்; கேரளத்தில் கொடுங்களூருக்கு அருகில் அழிக்கோடு என்னும் ஊரில் கி.பி. 1898-இல் பிறந்தார். ஒத்துழையாமை இயக்கத்தின் போது இவர் காந்தியடிகளின் ஆணைப்படி கல்லூரியை விட்டு வெளியேறினார். கோழிக்கோடு கேரளா கிலாபத்துக் குழுவின் பொதுச் செயலாளரானார். மாப்பிள்ளை கலவரத்தின்போது (1921) இந்து-முசுலிம் ஒற்றுமைக்காக உழைத்தார். இவர் 1922-இல் கைது செய்யப்பெற்று இரண்டாண்டுகள் சிறையில் வாடினார்.

மலையாள மொழியில் வாரம் மும்முறை வெளியீடான 'அல் அமீன்' என்னும் தேசிய இதழின் ஆசிரியராக 1929 இல் பணியாற்றினார். அந்த ஆண்டிலேயே கேரளா மாநிலக் காங்கிரசுக் குழுவின் தலைவரானார். அகில இந்தியக் காங்கிரசுக் குழுவின் உறுப்பினராகி உப்புச் சத்தியாக்கிரகத்தில் முசுலிம்களும் பங்கேற்க வேண்டுமென வேண்டினார். காவல் துறையால் கொடுமைக்குட்படுத்தப்பெற்று 9 மாதங்கள் சிறையில் இருந்தார்.

கோழிக்கோடு நகராட்சிக் குழுவின் உறுப்பினராக 1931-34 வரையிலும் பணியாற்றினார். சென்னைச் சட்டமன்றப் பேரவையின் உறுப்பினராக 1937-இல் தேர்ந்தெடுக்கப்பெற்றார். திரிபுரா மாநாட்டின் போது காங்கிரசிலிருந்து விலகிக் கேரளா பார்வார்டு பிளாக் கட்சியின் தலைவரானார். இவர் 1940-இல் கைது செய்யப்பெற்று 1945 வரை சிறையில் வாடினார். பின்னர் அச்சு புனிதப் பயணம் (Haj Pilgrimage) செய்தார். இவர் 1945 நவம்பர் 22-ஆம் நாள் காலமானார்.

**அப்துர் இரகீம்** பைராம்கானின் மகன்; அக்பருடைய அரண்மனையில் கான்-இ-கானா (தலைமைப் பிரபுவாக) பதவி பெற்றவர்; பல போர்களில் பங்கு கொண்டவர். அக்பரின் பாட்டனாரான பாபர் எழுதிய வாழ்க்கைக் குறிப்பைப் (Memoirs) பாரசீக மொழியாக்கம் செய்தவர். மாசிர்-இ-ரகீம் என்னும் நூலை எழுதிய அப்துல் பாகி (Abdul Bagi) போன்ற பல இலக்கிய ஆசிரியர்களைப் பேணிகாத்த புரவலர். இவர் சகாங்கீரின் ஆட்சிக்காலத்தில் காலமானார்.

**அப்துர் இரசாக்கு** 15-ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வருகைபுரிந்த பயணி; பாரசீக மொழி வல்லுநர். சலாலுதீன் அப்துர் இரசாக்கு என்பது அவருடைய முழுப் பெயர். கொராசனில் எராட்டு என்னும் ஊரில் கி.பி. 1413-ஆம் ஆண்டு பிறந்தார். அங்கு அவர்தம் தந்தை சலாலுதீன் இரசாக்கு,

தைமூன் பேரரசரான சாருக்கு என்பாரின் காசியாகப் பணியாற்றினார். கி. பி. 1441-ஆம் ஆண்டில் சாருக்கு, அப்துர் இரசாக்கை இந்தியாவின் தக்காணத்தில் அரசோச்சிய விசயநகர அரசர்களின் அவைக்குத் தூதுவராக அனுப்பினார். பின்னர்க் கிலானுக்கு (Ghilan)த் தூதராக அவர் அனுப்பப் பெற்றார். மீண்டும் அவரைச் சாருக்கு எகிப்து நாட்டிற்குத் தூதராக அனுப்பினார். கி.பி. 1442-ஆம் ஆண்டு சனவரித் திங்களில் எராட்டிலிருந்து புறப்பட்டுக் கொகிசுதான் மற்றும் கிர்மான் வழியாக ஆர்மசுக்குச் சென்றார். பின்னர்க் கடல்வழியாக இந்தியாவுக்குப் புறப்பட்டுக் கோழிக்கோடு சென்றடைந்தார். வரும்வழியில் சூறாவளி ஏற்பட்டதால் பல நாட்கள் அவர் மசுகட்டில் தங்கினார். பின்னர் மங்களூர், பேலூர் வழியாக விசயநகர் சென்றார். அப்போது விசயநகரை இரண்டாம் தேவராயர் ஆண்டு வந்தார். விசயநகர் அரண்மனையில் கி.பி. 1442–43-ஆம் ஆண்டுகளில் தங்கியிருந்தார். அவர் எழுதிய 'பாரசீக வரலாறு' என்னும் நூல் இரண்டு தொகுதிகளைக் கொண்டது. அந்நூல் மத்திய ஆசிய வரலாற்றைக் குறிப்பதாகும். அதன் முதல் தொகுதியில், இந்தியாவில் தைமூரின் படையெடுப்புகளைக் குறித்து எழுதியுள்ளார். இரண்டாம் தொகுதியில் தைமூரின் வழித்தோன்றல்கள் சாருக்கு என்பார் முதல், சுல்தான் ஆசன் மிர்சா என்பார் வரை (கி.பி. 1404 முதல் கி.பி. 1470 வரை) வரலாற்றைத் தொகுத்துக் கூறியுள்ளார். இந்தத் தொகுதியில்தான் அப்துர் இரசாக்கு தம்முடைய இந்தியப் பயணத்தையும் விசயநகரப் பேரரசுக்கு வந்த விவரங்களையும் விசயநகர் அரண்மனையில் பணியாற்றிய முறையையும் விசயநகர அரசரின் தனிப்பட்ட வாழ்க்கை முறையையும் அவர்கள் ஆண்ட நாடுகள் பற்றிய செய்திகளையும் பொதுவாகத் தக்காண மக்களின் சமூக-பொருளாதார நிலைமையையும் அழகுபடக் குறிப்பிட்டுள்ளார். அவருடைய பயணக் குறிப்புகள் விசயநகரப் பேரரசின் தொடக்ககால வரலாற்றை அறிய உதவும் வரலாற்றுச் சான்று நூலாகக் கருதப்படுகிறது. தம் பணி முடிவுற்றதும் மீண்டும் கோழிக்கோடு வழியாக அவர் கப்பற்பயணம் செய்து அராபியாவிலுள்ள கலாகட்டு (Kalahat) சென்றடைந்தார். பின்னர்க் கொராசன் அரண்மனையைச் சிறப்பிக்கும் அவைக்களப் புலவராகப் பணியாற்றி, கி. பி. 1482-ஆம் ஆண்டு காலமானார். காலமாவதற்கு முன்னர்ப் பத்தாண்டுகள் சுல்தான் சாருக்கின் அரண்மனைத் துறையொன்றின் கண்காணிப்பாளராகப் பணியாற்றினார். இந்தியாவைப் பற்றி அவர் எழுதிய குறிப்புகளை "15-ஆம் நூற்றாண்டில் இந்தியா" என்னும் தலைப்பில் ஆர். எச். மேசர் என்பார் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்.

**அப்துல் அசிசு (கி.பி. 1830–1876)** துருக்கி நாட்டின் 32-ஆம் சுல்தான். இவர் இரண்டாம் மாமூதின் மகன்; இவருடைய தமையனார் முதலாம் அப்துல் மெட்சித்து என்பாரை அடுத்து இவர் கி. பி. 1861-ஆம் ஆண்டு சூன் மாதம் 20-ஆம் நாள் சுல்தானாக முடிசூட்டிக் கொண்டார். துருக்கியில் மேல்நாட்டு நாகரிகத்தின் செல்வாக்குப் பெருகி வளர்ந்தது இவருடைய ஆட்சியின் சிறப்பாகும். இவர் வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கி, இருப்புப் பாதைகளை நிறுவியும், போர்ப்படைகளைத் திருத்தி அமைத்தும், பொது மக்களுக்கான கல்வியைப் புதுமைப்படுத்தியும், பெருக்கியும் சீரிய பணிகளைச் செய்தார்.

கிரீட்டுத்தீவில் கி.பி. 1866-இல் ஏற்பட்ட புரட்சியின் போது சுல்தானின் அரசாங்கம் பல தொல்லைகளுக்கு ஆளானது. வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொண்ட முதல் துருக்கிய சுல்தான் இவரே. கி.பி. 1874-ஆம் ஆண்டில் நிருவாகத் திறமின்மை, அந்நிய நாட்டுக் கடன், அரசரின் வீண் செலவு ஆகிய காரணங்களின் விளைவாக அரசாங்கம் திவாலாகி விட்டதென்று அறிவிக்கப்பெற்றது. அப்துல் அசிசு கி.பி. 1870-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் நாள் பதவியிலிருந்து நீக்கப்பெற்று, சூன் 4-ஆம் நாள் தற்கொலை செய்து கொண்டு உயிர் துறந்தார்.

**அப்துல் அமீது** புகழ்மிக்க வரலாற்று ஆசிரியர். மொகலாய மன்னர்கள் சாசகான் (கி.பி. 1627–1658), அவுரங்கசீப்பு (1659–1707), ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் வாழ்ந்தவர். இவர் எழுதிய சிறப்பான வரலாற்று நூல் பாதுசாநாமா என்பதாகும். இவர் இலாகூரில் பிறந்தவராதலால் அப்துல் அமீது லாகூரி என்று அழைக்கப்பட்டார்.

**அப்துல் அமீது (இரண்டாம்) (கி. பி. 1842–1918)** உதுமானியப் பேரரசின் முப்பத்து நான்காம் சுல்தான். அப்துல் அமீது நாட்டில் அரசியல் அமைப்புத் திட்டத்தின் அடிப்படையில் மாறுதல்களும் முற்போக்குக் கருத்துகளும் அரசுக்குத் தேவை என்று வாக்களித்திருந்தார். இவர் கி.பி. 1876-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாள் சுல்தானாக அரியணை ஏறினார். இவர் கொடுத்த வாக்குறுதிகளின்படி கி.பி. 1876-ஆம் ஆண்டு திசம்பர் 23-ஆம் நாள் முதல் உதுமானிய அரசியல் அமைப்புத் திட்டம் வெளியிடப்பட்டது. அதன்படி ஈரவை நாடாளுமன்றம் உருவாகி, கி.பி. 1877 மார்ச்சு மாதம் 17-ஆம் நாள் கூடியது. இந்நாடாளுமன்றம் ஓராண்டுக்காலமே நீடித்தது. அப்துல் அமீது உருசியாவின்மீது மேற்கொண்ட போரைக் காரணங்காட்டி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பெர்லின் உடன்படிக்கை, உருசிய–துருக்கியப் போரை முடிவுக்குக் கொணர்ந்தது. இதனால் உதுமானியப் பேரரசு பல பகுதிகளை இழக்கலாயிற்று. மேலும் முசுலிம்களல்லாத குடிமக்கள் தேசியக் கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

அப்துல் அமீது மேலைநாட்டுப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டு ஒரு சில துறைகளில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்தார். நிருவாக, சட்ட, கல்விச் சீர்திருத்தங்கள் விரைவு படுத்தப்பட்டன. கல்வியில் இவருடைய சாதனை குறிப்பிடத்தக்கதாகும். சமயம் சாராத பள்ளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி, இசுதான்புல் பல்கலைக் கழகத்தை, கி.பி. 1900-ஆம் ஆண்டில் நிலைநாட்டினார்.

பிற துறைகளில் இவர் செய்த சீர்திருத்தங்கள் பெருமளவு வெற்றிபெறவில்லையாயினும், போக்குவரத்துத் துறையில் பெருமுன்னேற்றம் ஏற்பட்டது. இருப்புப்பாதை, தந்திப் போக்குவரத்துகள் பெருகி வளர்ந்தன.

இருப்பினும், இவருடைய ஆட்சிக்குக் கடும் எதிர்ப்புகள் தோன்றின. மேலைநாட்டவர்கள் இவரைக் 'கண்டனத்திற்காளான அப்துல்' என்றும், 'குருதிவெறியர் அப்துல்' என்றும் சாடினர். இவருக்கெதிராக 1908 ஆம் ஆண்டில் கலகம் மூண்டது. இவர் கி.பி. 1876 ஆம் ஆண்டு அரசியல் அமைப்புத் திட்டத்தை மீண்டும் புதுப்பித்தார். இவர் கி.பி. 1909-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ஆம் நாள் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். வலிமை வாய்ந்த சுல்தான்களில் இறுதியானவரெனக் கருதப்பட்ட இரண்டாம் அப்துல் அமீது, கி.பி. 1918-ஆம் ஆண்டு பிப்பிரவரி 10-ஆம் நாள் இசுதான்புல் நகரில் காலமானார்.

**அப்துல் அமீதுகான் (கி. பி. 1896-1966)** சென்னை மாநகரில் வாழ்ந்த முசுலிம் அரசியல்வாதி. இவர் கி.பி. 1896-ஆம் ஆண்டில் தாதா கான் என்னும் பணக்கார வணிகரின் மகனாகப் பிறந்தார். இவர் 1921-இல் சென்னையில் கிலாபத்து இயக்கத்தை அமைத்தார். எனினும் காங்கிரசுக் கட்சியின் நேரடி நடவடிக்கையை ஏற்றுக் கொள்ளாதவர். சட்ட முறையிலான கிளர்ச்சியை நம்பிய இவர், சுயராச்சியக் கட்சியில் சேர்ந்து அதற்காக நிதி வசூலித்தார். சென்னை மாநகராட்சியின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுச் சனநாயக முனிசிபல் கட்சியின் தலைவரானார். இவர் 1935-36-இல் சென்னை மாநகரத் தந்தையானார் (Mayor).

தொடக்கத்தில் இவர் காங்கிரசு, முசுலிம் லீக் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருந்தார். சில ஆண்டுகள் தமிழ்நாடு காங்கிரசுக் குழுவின் செயலராகச் சர் சண்முகம் செட்டியாருடன் இணைந்து செயல்பட்டார். பின்னர் 1937-இல் காங்கிரசிலிருந்து விலகி, முசுலிம் லீகின் கொள்கைகளையும் திட்டங்களையும் ஏற்றுக்கொண்டு செயற்பட்டார்.

இவர் சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக 1927-முதல் 36 வரையிலும் பணியாற்றினார். சென்னை மாநகரத்திலிருந்து சட்டமன்றப் பேரவை உறுப்பினராக 1937-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1946-இல் கர்னூல் முசுலிம் கிராமப்புறத் தொகுதியிலிருந்து மீண்டும் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1937-இல் முசுலிம் லீகின் சட்டமன்றக் கட்சியின் தலைவரானார்.

அகில இந்திய முசுலிம் லீகின் ஆண்டு மாநாடுகளில் தீவிரப் பங்கு கொண்ட இவர், பாகிசுதான் பிரிவினைக்கு உறுதுணையாக இருந்தார்.

இவர் 1947-இல் நாடு பிரிவினைக்குப் பின்னர் மீண்டும் காங்கிரசில் சேர்ந்தார். இவர் 1938 முதல் 1966 வரை- (காலமாகும் வரை) ஆர்க்காடு இளவரசரின் திவானாகப் பணியாற்றினார்.

பல நிறுவனங்களின் இயக்குநராகவும், 'டெக்கான் டைம்சு' என்னும் ஆங்கில முசுலிம் இதழின் கௌரவ ஆசிரியராகவும் பணியாற்றினார். அண்ணாமலை, சென்னைப் பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் இருந்தார். இவர் 1966-ஆம் ஆண்டு பிப்பிரவரி 14-ஆம் நாள் காலமானார்.

**அப்துல் அமீது மரைக்காயர்[1]** கி. பி. 20-ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இலங்கையின் தென் பகுதியில் வேர்விலைக்கு அருகிலுள்ள மக்கூன் என்னும் ஊரைச் சார்ந்தவர். தோத்திர புஞ்சம், பாலகர் தாலாட்டு என்னும் நூல்களை இவர் இயற்றியுள்ளார். மேலும், செய்கு அசுரப் ஒலியுல்லா அவர்களைப் புகழ்ந்து பல பாடல்கள் இயற்றியுள்ளார்.

அப்துல் அமீது மரைக்காயர்[2] இலங்கையின் தென் பகுதியிலுள்ள மக்கூன் என்னும் ஊரில் கி. பி. 20-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியப் புலவர்களுள் ஒருவர். இவர் இலங்காபுரி மக்கூன் புலவர் என்றும் அழைக்கப்பட்டார். இவர் செய்கு முகம்மது அப்துல் சலாம் சாயபு அவர்கள் இயற்றிய மெய்ஞ் ஞான வினாவிடை என்னும் நூலைப் பாராட்டிச் சிறப்புப் பாயிரம் பாடியுள்ளார்.

**அப்துல் காதர் (கி.பி. 1808-1883)** அல்சீரிய தேசியத் தலைவர். அல்சீரியாவில் பிரெஞ்சியருக்கெதிராக அராபியரின் கிளர்ச்சி இயக்கத்தைத் தலைமை தாங்கி நடத்தியவர்; ஆழ்ந்த சமயப்பற்றுள்ள முசுலிம். இவர் தம் 20-ஆம் வயதில் மெக்காவிற்குப் புனிதப் பயணம் மேற்கொண்டார். கி.பி. 1832-ஆம் ஆண்டில் இவரை அராபியர்களின் சுல்தானாக அறிவித்தார்கள். அல்சியர்சைப் பிரான்சு கைப்பற்றிக் கொண்டதை அடுத்துக் கி.பி. 1830-ஆம் ஆண்டு வாக்கில் அராபியரின் கிளர்ச்சி இயக்கத்தைத் தலைமையேற்று நடத்திய இவருடைய தந்தையாருக்கு மாறாக அப்துல் காதரே தலைவரானார். அப்துல்

காதரின் படைகள் கி.பி. 1833–ஆம் ஆண்டில் தோற்றுப்போயின. இருப்பினும் பிரெஞ்சுப் படைத்தலைவரான செனரல் லூயி ஏ. டெசுமைகேல்சு, அப்துல் காதரை அராபியர்களின் அரசராக ஏற்றுக்கொண்டார்.

தம் அதிகாரத்தை உறுதி செய்து கொண்டபின்னர், அப்துல்காதர் தொடர்ந்து பிரெஞ்சியரை எதிர்த்துப் போரிட்டார். இவர் வெற்றிபெறவில்லையென்றாலும், பிரெஞ்சியர் உறுதியாக வெற்றி பெறுவதைத் தடுத்து நிறுத்துவதில் வெற்றி கண்டார். தப்னா உடன்படிக்கை 1937–ஆம் ஆண்டு மே மாதம் 30–ஆம் நாள் கையெழுத்தாயிற்று. இது அப்துல் காதருக்குச் சாதகமாக அமைந்தது. இவர் அதிகாரம் புதிய இடங்களுக்கு விரவிப் பரந்தது. ஓரான் மாநிலத்திலும், அல்சியர்சு மாநிலத்தின் ஒரு பகுதியிலும் இவர் ஆதிக்கம் பரவியது.

இவர் கி.பி. 1839–ஆம் ஆண்டில், உடன்படிக்கையைப் பிரான்சு மீறிவிட்டது என்று குற்றஞ்சாட்டிப் போரை மீண்டும் தொடங்கினார். செனரல் பூகிடு (Bugeaud) இவரைக் கி.பி. 1843–இல் மொராக்கோவிற்கு விரட்டி அடிததார். மொராக்கோவின் சுல்தானான அப்துர் ரகிமான் என்பாரின் உதவியுடன் பிரான்சிற்கெதிராகப் புனிதப்போரை நடத்த இவர் முயன்றார். இவர் படைகளைக் கி.பி. 1844 ஆகசுட்டு 14–ஆம் நாள் பிரெஞ்சியர், அய்லி போரில் தோற்கடித்தனர். பின்னர் மொராக்கோ சுல்தான், அப்துல் காதருக்கு உதவி செய்ய மறுத்துவிட்டார்.

பிரெஞ்சியருக்கு எதிராகவே செயற்பட்ட அப்துல் காதர், கி.பி. 1847–இல் சிறைபிடிக்கப்பட்டு, பிரான்சில் ஐந்தாண்டுகள் சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும்போது இவர் சமய நூலொன்றை எழுதினார். அந்நூல் 1858–ஆம் ஆண்டில் பிரெஞ்சு மொழியில் ''புத்திசாலிகளுக்கு நினைவூட்டலும், கருத்தின்றி இருப்போர்க்கு எச்சரிக்கையும்'' என்னும் தலைப்பில் வெளியாயிற்று.

பிரெஞ்சு மன்னர் மூன்றாம் நெப்போலியன் கி.பி. 1852–ஆம் ஆண்டு அக்டோபர் 16 ஆம் நாள் இவரை விடுதலை செய்தார். கி.பி. 1855–ஆம் ஆண்டில் சிரியா நாட்டின் தலைநகரான தெமாசுகசில் இவர் தங்கி வாழலானார். கலகம் செய்த முசுலிம் வெறியர் கூட்டத்தினரிடமிருந்து ஆயிரக்கணக்கான கிறித்தவர்களைக் காத்தவர் என்னும் காரணத்திற்காக, கி.பி. 1860–இல் மூன்றாம் நெப்போலியன் 'கிராண்டு கிராசு' (Grand Cross) என்னும் விருதினை வழங்கி இவரைப் பாராட்டினார். பிரெஞ்சியரின் உதவி ஊதியம் பெற்றுக்கொண்டு தம் இறுதி ஆண்டுகளை அப்துல் காதர் தெமாசுகசில் கழித்தார். இவர் கி.பி. 1883–ஆம் ஆண்டு மே மாதம் 25–ஆம் நாள் நள்ளிரவில் காலமானார்.

**அப்துல்இரகுமான் புலவர்** கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவரை நாவலர் பெருமான், புலவர் நாயகம், ஆரிபுபுல்லா, சித்தயோகீசுவரர், திருவருட் சித்தர் எனப் பல சிறப்புப் பெயர்களால் மக்கள் வழங்கிப் போற்றினர். இவர் பாண்டிய நாட்டிலுள்ள பெருநாழி என்னும் ஊரில் பிறந்தவர். இளமையிலேயே தந்தையை இழந்த இவர் தம் முயற்சியாலும் கேள்வியறிவாலும் புலமை மிகப் பெற்றார். பர்மாவிற்குச் சென்று சீறாப்புராணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி மிகுந்த பொருள் ஈட்டினார். பிறகு அங்கிருந்து தம் ஊருக்கு வந்தார். வந்த இடத்தில் கடும் வறட்சி ஏற்பட்டதும் இவர் தம் குடும்பத்தினருடன் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பட்டமங்கலம் என்னும் ஊருக்கு வந்து தங்கினார். இவரிடம் இங்குப் பல மாணவர்கள் தமிழ் கற்றனர். புலவர் தம் இறுதிக்காலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள அகரங்கடம் பனூரில் வாழ்ந்து வந்தார். இவர் தனிப்பாடல் பல இயற்றியுள்ளார். வழிநடைச் சிந்து, கும்மி, பிரபந்தம் ஆகிய பல இலக்கிய வகைகளில் நூல்கள் இயற்றியுள்ளார்.

**அப்துல்காதிர் புலவர் அருள்வாக்கியார்** கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர். இவர் இலங்கையிலுள்ள கண்டிக்கருகில் தெல்தோட்டையைச் சேர்ந்த போப்பிட்டியில் ஆ.பி. அல்லாப் பிச்சை இராவுத்தருக்கும் அவ்வா உம்மா அம்மையாருக்கும் மகனாகக் கி.பி. 1866–இல் தோன்றினார். இலங்கையிலிருந்த இராணி கல்லூரியில் பயின்ற இவர், தமிழ் கற்க விரும்பித் தமிழ்நாட்டிலுள்ள திருப்புத்தூர்த் தமிழ் வித்தியா சாலைத் தலைமையாசிரியராக விளங்கிய முகம்மது முத்துப்பாவாப் புலவரிடம் பயின்றார். இவருக்குச் செய்யுள் புனையும் திறம் இளமையிலேயே இருந்தது. இதனால் 'யாழ்ப்பாண சங்கன்', 'மெய்ஞ்ஞான அருள்வாக்கி' என்ற பட்டங்கள் இவருக்கு அளிக்கப்பட்டன. சீறாப்புராணம், இராமாயணம் ஆகிய தலைப்புகளில் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றியமையால் 'வித்வதீபம்' என்ற பட்டமும் அளிக்கப்பட்டது. திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றினை நடத்திய இவர், சமுதாய நலனில் பங்குகொண்டு, பல பள்ளிவாசல்களை நிறுவுவதற்குத் துணைபுரிந்தார். இவர் எழுதி வெளியிட்டுள்ள நூல்கள் வருமாறு: கண்டிக்கலம்பகம், கண்டி பதிற்றுப்பத்தந்தாதி, கண்டி நகர்ப்பதிகம், சலவாத்துப் பதிகம், தேவாரப் பதிகம்,

பதாயிக்குப் பதிகம், பிரான்மலைப் பதிகம், திருபகு தந்தாதி, மெய்ஞ்ஞானக் குறவஞ்சி, மெய்ஞ்ஞானக் கோவை, கோட்டாற்றுப் புராணம், உமரொலி யுல்லா பிள்ளைத்தமிழ், காரணப்பிள்ளைத்தமிழ், சித்திரக் கவிபுஞ்சம், பிரபந்த புஞ்சம், ஆரியமாலை, பேரின்ப ரஞ்சிதமாலை, ஞானப்பிரகாச மாலை, புது மொழிமாலை, திருமதீனத்துமாலை, விநோதபத மஞ்சரி, நவமணித்தீபம், சந்தத்திருப்புகழ்.

**அப்துல்லா** தென் ஆப்பிரிக்காவைச் சார்ந்த வணிகர்; தாதா என்றும் அழைக்கப் பெறுகிறார். காந்தி அடிகளை வழக்குரைஞராகத் தென் ஆப்பிரிக் காவிற்கு அழைத்து, தம் வழக்கை வாதிடும்படி கேட்டுக் கொண்டவர். காந்தியடிகள் தென் ஆப்பி ரிக்காவில் தங்கியிருந்தபோது, நேட்டால் இந்தியக் காங்கிரசு என்னும் இயக்கத்தை, கி.பி. 1894 ஆம் ஆண்டு மே திங்கள் 22 ஆம் நாள் தாதா அப்துல் லாவின் இல்லத்தில் தோற்றுவித்தார்.

**அப்துல்லா, சேக் முகம்மது (கி.பி.1905–1982)** சம்மு-காசுமீர் மாநிலத்தின் முதல் தலைமை அமைச்சராயிருந்தவர். இவர் கி பி. 1905-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 5-ஆம் நாள் காசுமீரின் தலைநக ரான சிரீநகரிலுள்ள சவுரா என்னுமிடத்தில் பிறந் தார். இவர் தந்தையின் பெயர் சேக் முகம்மது இபு ராகிம். இவர் குடும்பத்தார் கம்பளம் நெய்வதைத் தொழிலாகக் கொண்டவர்கள். இவர் சிரீநகரிலுள்ள அரசுப் பள்ளியிலும் சம்முவிலுள்ள வேல்சு இளவரசர் கல்லூரியிலும் இலாகூரிலுள்ள இசுலாமியக் கல்லூரி யிலும் படித்துப் பட்டம் பெற்று, இறுதியாகக் கி.பி.



அப்துல்லா சேக் முகம்மது

1930–ஆம் ஆண்டு அலிகார் முசுலிம் பல்கலைக் கழ கத்தில் இயற்பியலில் மூதறிவியல் (M.Sc.,) பட்டம் பெற்றார். இவர் 1932–ஆம் ஆண்டு அக்பர் சகான் என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவருக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். அக்பர் சகானின் தந்தை ஆரி நீடவ் (Harry Neduo) கிறித்துவ சமயத்திலிருந்து முசுலிம் சமயத்தைத் தழுவியவர்.

அப்துல்லா கி. பி. 1931–ஆம் ஆண்டு சிரீநகர் அர சுப்பள்ளியில் ஆசிரியர் பணியில் அமர்ந்தார். ஆனால், அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால் ஒருசில மாதங்களுக்குள் பணியிலிருந்து நீக்கப்பட்டார். அரசுப் பணிகளிலும் படையிலும் முசுலிம்களுக்கு இட ஒதுக்கீடு கோரித் தொடங்கப்பட்ட படிப்பறைக்கட்சி (Reading room party)யில் ஆர்வம் காட்டினார். அதே நோக்கத்தோடு, முசுலிம் இளைஞர் கழகத்தைத் தொடங்கினார்.

அப்துல்லா (Abdullah, Sheikh Muhammed) முதன்முதலில் கி.பி. 1931–ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 21–ஆம் நாள், அரசியல் அடிப்படையில் கைது செய்யப்பட்டார். இவரது ஆயுளில் ஏறத்தாழ 16 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து இருக்கி றார். வாரம் இருமுறை வெளியான, காசுமீர் முசல் மான், மசுலூம் காசுமீரி (Kashmir Mussalman and Mazlum Kashmiri) என்ற இரு செய்தித் தாள்களின் ஆசிரியராகப்பணியாற்றினார். இவர் 1932-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் அனைத்துச் சம்மு–காசுமீர் முசுலிம்கள் கழகம் என்ற கட்சியைத் தொடங்கி அதன் தலைவரானார். பின்னர் 1935–ஆம் ஆண்டு தமது நண்பர் பிரேம்நாத் பசாசு என்பவருடன் சேர்ந்து கம்தர்து (Hamdard) என்ற வாரச் செய்தித் தாளைத் தொடங்கி, அதன்மூலம் முசுலிம்கள் கழ கத்தில் சமய வேற்றுமை இருக்கக்கூடாது என்று வலி யுறுத்தினார். அக்கட்சி 1939–ஆம் ஆண்டு அனைத்துச் சம்மு–காசுமீர் தேசியக் கட்சியாக மாறியது. அப் பொழுது முதல் 1942–44 ஆண்டுகள் நீங்கலாக 1953-ஆம் ஆண்டு வரை அப்துல்லா அதன் தவைராக இருந்தார். ஆங்கில ஆட்சிக்கு உட்பட்ட இந்தியரை இந்தியத் தேசிய காங்கிரசு பெரிதும் கவர்ந்தது. ஒரு காலக்கட்டத்தில் இந்தியத்தேசிய காங்கிரசு கட்சி யின் ஆசியும் ஆதரவும் பெற்ற அனைத்திந்திய அரசு மக்கள் குழு என்ற கட்சியின் தலைவராக்கப்பட்டார். முசுலிம் லீக் தலைவர் முகம்மதலி சின்னாவின் பிரிவி னைக் கொள்கையை அப்துல்லா எதிர்த்தார். சின்னா 1944–ஆம் ஆண்டில் காசுமீர் சென்றபொழுது அப் துல்லா, தமது கட்சி சமயச் சார்பற்றது என்பதை அவருக்குத் தெளிவு படுத்தினார். இவர் 1946–ஆம் ஆண்டு ஆங்கில அமைச்சுத் தூதுக்குழுவிடம் காசுமீ ரின் சுதந்திரத்தைப்பற்றியும் மக்களாட்சி பற்றியும் அறிக்கையொன்றை அளித்தார். ஆங்கிலேயருக்கு

எதிராகக் காங்கிரசுக் கட்சியினர் 'வெள்ளையனே வெளியேறு' என்று குரல் எழுப்பியது போன்று, 'காசுமீரை விட்டு வெளியேறு' என்று அரசருக்கு எதிராக அப்துல்லா குரல் எழுப்பினார். காசுமீர் அரசரால் கைது செய்யப்பட்டு, இவர் ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றார். ஆனால் இந்திய விடுதலைக்குப்பின் ஏற்பட்ட சமயக் கலவரங்களின் போது 1947-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 29-ஆம் நாள் விடுதலை பெற்றுக் கலவரங்களை அடக்க அமைதிப்படையொன்றை இவர் உருவாக்கினார்; காசுமீர் அரசு இந்தியாவுடன் இணைவதற்கு உடன்பட்டார்.

பாகிசுதானியர்கள் 1947-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ஆம் நாள், காசுமீரைத் தாக்கியபொழுது, அப்துல்லா காசுமீர் மக்களிடையே தேசிய உணர்வை எழச்செய்து, அவர்களை ஒன்று திரட்டிப் பாகிசுதானியர்களை எதிர்த்தார். காசுமீர் அரசர் இந்தியாவிடம் பாதுகாப்புக் கேட்டபொழுது, இந்தியாவின் வற்புறுத்தலின்பேரில் அப்துல்லா, 1947-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31-ஆம் நாள் அவசரகால ஆட்சியின் (Emergency Administration) தலைவராக அமர்த்தப்பட்டார். இவர் 1948-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள், 5-ஆம் நாள் முதலமைச்சராக அமர்த்தப்பட்டார். பின்னர் 1968-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் அவைக்குச் சென்ற இந்தியக் குழுவின் உறுப்பினராக இருந்தார். இவர் 1949-ஆம் ஆண்டு சூன் திங்கள் கூடிய இந்திய அரசியல் அமைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கி அதில் கையொப்பமிட்டவர்களுள் அப்துல்லாவும் ஒருவர் ஆவார்.

காசுமீர் ஒரு தனிநாடு என்று தமது கருத்துகளை வெளிப்படையாகப் பேசியதால் 1953-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 9-ஆம் நாள் பதவி நீக்கம் செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். இவர் 1958-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 10-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் ஏப்பிரல் திங்கள் 29-ஆம் நாள் கைது செய்யப்பட்டு, ஆறாண்டுகள் சிறையில் இருந்தார். இவர் 1958-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 24-ஆம் நாள் ''காசுமீர் சதி'' வழக்கில் விசாரணை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பெற்றார். அப்துல்லா 1965-ஆம் ஆண்டில் 'அச்சு' (Haj) புனிதப்பயணம்மேற்கொண்டு இங்கிலாந்து, பிரான்சு, அல்சீரியா, எகிப்து, சவூதி அரேபியா போன்ற நாடுகளுக்குச் சென்று, காசுமீர் பிரிவினைக்கு உதவி தேடி வந்தார். இவர் தாயகம் திரும்பியவுடன் 1965-ஆம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள் கைது செய்யப்பட்டுத் தமிழ்நாட்டிலுள்ள உதகமண்டலத்திலும் கோடைக் கானலிலும் சிறை வைக்கப்பட்டார். இவர் 1968-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 2-ஆம் நாள் விடுதலை செய்யப்பட்டார். காசுமீர் அரசையும் அது இந்தியாவுடன் இணைந்திருப்பதையும் குறைகூறிக் கொண்டே இருந்தவர் இவர். மாநிலத்தில் இவருடைய கொள்கையைப் பரப்புவதைத் தடை செய்ய இந்திய அரசு, இவரை 1971-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் காசுமீர் மாநிலத்திலிருந்து வெளியேறச் செய்தது. இவர் 1972-ஆம் ஆண்டு சூலை மாதம் வரை அம்மாநிலத்திற்குள் அனுமதிக்கப்படவில்லை. இவர் 1975 ஆம் ஆண்டு இந்திய அரசுடன் பேச்சு நடத்தி, அவ்வாண்டு பிப்பிரவரி 14 ஆம் நாள் காசுமீர் முதலமைச்சராகப் பதவியேற்றார். மறுபடியும் 1977-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 9 ஆம் நாள் மாநில முதலமைச்சராகப் பதவியேற்றார். தமக்குப் பின் தம் மூத்தமகன் பரூக் அப்துல்லாவே பதவிபெற வேண்டுமென்ற தம் விருப்பத்தை 1981-ஆம் ஆண்டு நடந்த ஒரு விழாவில் தெரிவித்தார். சம்மு-காசுமீர் முதல் அமைச்சரான அப்துல்லா சேக் முகம்மது 1982-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம்நாள் தம் 77-ஆம் வயதில் காலமானார். மு.அ.ர.

**அப்பர்**: கி.பி. ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்து சமய சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்த பெரியவர். நடுநாட்டில் (இப்போதைய தென்னார்க்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி) திருவாமூரில், புகழனார் (தந்தை) மாதினியார் (தாய்) இருவருக்கும் இரண்டாம் மகவாய்த் தோன்றினார். இவருக்கு மூத்தவர் திலகவதியார். இவர் இளமையில் பெற்றோரை இழந்தார். தமக்கையார் திலகவதியாருக்கு மணம் பேசிய பல்லவர் தளபதியாகிய கலிப்பகையார் வடபுலத்தில் சாளுக்கியருடன் நடைபெற்ற போரில் வீர மரணமுற்றார். மணமுடியாவிடினும் கணவனாக வரிக்கப் பெற்றவரோடு உயிரை இணைக்க நினைத்த திலகவதியார், (பெ.தி.32) அவ்வாறு செய்யாது, 'தம்பியார் உளராக வேண்டும்' என்ற காரணத்தால் அருள்தாங்கித் திருவதிகையில் இறைபணி செய்து வாழ்ந்து வந்தார்.

தாய் தந்தையர் 'அப்பரு'க்கு இட்ட பெயர் மருள் நீக்கியார் என்பதாகும் (பெ.தி.20). இளமையில் கற்றுச் சிறந்த அறிவாளியாகி நின்ற இவர், பிறசமய நூல்களையும் கற்றார். பின் சமண சமயம் புகுந்து அவர்தம் நூல்களில் வல்லவராகித் 'தருமசேனர்' என்ற பட்டத்துடன் தலைமைப் பதவி வகித்தார். பின் தமக்கு உண்டான சூலை நோயின் காரணமாகத் தமக்கையாரைத் திருவதிகை வீரட்டானத்தே கண்டு மீண்டும் சைவராகித் தேவாரம் பாடத் தொடங்கினார். தம் முதற் பாடலிலேயே தம்மை வருத்திய சூலை நோயினை, 'தோற்றாதென் வயிற்றி னகம் படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன்'

(4.1.1) என்று பாடியுள்ளார். இவர் பாடல்களில் இது போன்ற இவர்தம் வாழ்க்கை பற்றிய அகச் சான்றுகள் பல உள்ளன.



அப்பர்

சைவத்திரு முறைகள் பன்னிரண்டில், சம்பந்தர் பாடியவை முதல் மூன்று திருமுறைகளாகவும், இவர் தம் பாடல்கள் 4,5,6–ஆம் திருமுறைகளாகவும் அமையினும், இவர்தம் 'கூற்றாயினவாறு' என்ற பாடலே திருமுறைகளுள்– தேவாரங்களுள்– முதற்பாடலாகும். பதினாறு ஆண்டுகளே வாழ்ந்த ஞானசம்பந்தர் இவர் தம் பிற்காலத்தே (பல்லவ நரசிம்மன் காலத்தில்) தோன்றிப் பாட்டிசைத்தவர். இவர், தந்தையான மகேந்திரப் பல்லவன் காலத்திலும், மகன் நரசிம்மன் காலத்திலும் வாழ்ந்தவர்.

சமணம் விட்டு மீண்டும் சைவ சமயம் சார்ந்த காரணத்தால் இவர் பல இன்னல்களுக்கு மன்னனாலும் மற்றவராலும் உட்பட்டாலும், ஒவ்வொன்றிலும் இறை நம்பிக்கையின் காரணத்தால் வெற்றி பெற்றார் வெப்பம் மிகுந்த நீற்றறை இனிய குளிர்ப் பொய்கையாயிற்று; விடம் அமுதமாயிற்று; வெஞ்சினத்தோடு கொல்ல வந்த யானை வலம் வந்து வணங்கிற்று; கல்லே தெப்பமாயிற்று, தெப்பம் கரை சேர்ந்த இடம் இன்றும் 'கரையேற விட்ட குப்பம்' என்று (கடலூர் அருகில்) வழங்கப்பெறுகிறது.

பின் இவர் பலப்பல இடங்களுக்குச் சென்று இறைவனைப்பாடிப் பரவினார். இவர் பிற்காலத்தில் வாழ்ந்த ஞானசம்பந்தரோடு சிலகாலம் ஒன்றி வாழ்ந்தார்; அப்பூதி அடிகளார், முருகநாயனார் போன்றாரோடும் கலந்திருந்தார். பிற்காலத்தில் இவர் பல அற்புதங்களைச் செய்தார். இறைவன் திருவடியினை நல்லூரில் சூட்டப் பெற்றார். அப்பூதி அடிகளார்தம், விடத்தால் இறந்த மகனை உயிர்ப்பித்தார். திருமறைக் காட்டில் பலகாலம் மூடிக்கிடந்த கதவினைப் பாடித் திறப்பித்தார். திருவீழிமிழலையில் வாசியில்லாக் காசு பெற்றார்.

இவர் கயிலைவரையும் சென்று இறைவனைக் காண முயன்றார்; பின் திருவையாற்றில் கயிலைக் கோலத்தைக் கண்டார். இவர் கண்ட கயிலைக் காட்சியை இவரே பாடுகின்றார். 'சராசர மெல்லாம் காதல் துணையொடும் கூடக்' கண்டதே (பெ.தி. 384) கயிலைக் காட்சி என்கின்றார். எல்லா உயிர்களும்– காதல் வயப்பட்டுக் கலந்து வாழும் தெய்வ வாழ்வே கயிலைக் காட்சி என்கின்றார். 'காதல் மடப்பிடியோடும் களிறு வருவது, கோழிபெடையொடு கூடிக் குளிர்ந்து வருவது, வரிக்குயில் பெடையொடு ஆடி வைகி வருவது (4.3.1,2,3) கயிலைக் காட்சி என்று அவரே கூறுகின்றார்.

தமிழ்நாட்டில் பல தலங்களையும் வட நாட்டுத் திருப்பருப்பதம், காசி முதலிய தலங்களையும் (இன்றைய மரபில் காசி முதல் இராமேச்சுரம் வரையில்) நடந்தே சென்று கண்டு இறையருள் பெற்ற அப்பர், சோழநாட்டில் திருப்புகலூரில் தம் எண்பத்தொன்றாம் வயதில் இறைநிலை உற்றார். 'புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே' என அவரே பாடித் தாம் இறைநிலை உற்ற தன்மையினைச் சுட்டுகிறார்.

இவ்வாறு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மகேந்திரன், நரசிங்கன் போன்ற பல்லவப் பெருமன்னர்கள் ஆண்ட காலத்தில் வாழ்ந்த அப்பருக்கு 'மருள் நீக்கியார்' என்ற முதற் பெயரும், 'நாவுக்கரசர்' என்ற, சிறந்த பாட்டிசைத்த காரணத்தால் இறைவன் இட்ட பெயரும், அதே பொருள் பொதிந்த 'வாகீசர்' என்ற பெயரும் உள்ளன. 'அப்பர்' என்னும் பெயர் இவருக்கு ஞானசம்பந்தர் இட்டதாகும். இரண்டுக்கும் மேற்பட்ட இடங்களில் சம்பந்தர் இவரை அழைக்கும் போதும், சுட்டும்போதும் 'அப்பர்' என்றே குறிப்பார் (பெ.தி. 234.396). அடுத்த தலைமுறையினரான சம்பந்தருக்கு இவர் அப்பர் ஆனதோடு, வரும் தலைமுறைகளுக்கெல்லாம் அப்பராகவே என்றும் வாழ்ந்து வருகிறார்.

இவர் வெறும் சமயத் தலைவராக மட்டும் இருந்திருப்பராயின் இன்றளவும் போற்றப்பெறுவரா என்பது ஐயமே. இவர் சிறந்த சமுதாயச் சீர்திருத்தக் காரராக ஏழாம் நூற்றாண்டில் விளங்கினார். அவ்வாறு சிறந்த சீர்திருத்தவாதியாக இவர் விளங்கினதால் இவரைச் சேக்கிழார் 'பெரியார்' (பெரியவர்)

(பெ.தி. 424) எனவே அழைத்தார். இவர் செய்த சீர் திருத்தங்களையும் கொள்கைகளையும் பிறவற்றை யும்தாம் இன்றுவரை பல பெரியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இவர் நாவரசராக இருந்தா லும் வெறும் சொல்லால் சீர்திருத்தம் பேசிக்கொண் டிராது, தாமே தொண்டராய்-உழவாரப்படை கொண்டு தெருவுதொறும் ஊர்தொறும் கோயில் தொறும் புறத்தூய்மை செய்து, பாட்டால் மக்கள் அகத்தூய்மை பெற வழிகாட்டினார். நாடே இவர் செயலால் திசை திரும்பியது.

அண்ணல் காந்தி அடிகளார் ஆங்கிலப் பேரரசை எதிர்த்தது போன்று இவர் அக்காலப் பெரு மன்ன ராய் வாழ்ந்த பல்லவ மன்னனை எதிர்த்து வெற்றி கொண்டார். ''நாமார்க்கும் குடியல்லோம்'' (6.98.1), ''நாவலந் தீவகத்தினுக்குக் காவலரே ஏவி விடுத் தாரேனும் கடவமல்லோம்'' (6.98.6), ''பாராண்டு பகடேறி வருவார் சொல்லும் பணி கேட்கக் கட வோமோ'' (6.98.3), ''அஞ்சுவது யாதொன்று மில்லை அஞ்சவருவதும் இல்லை'' (4.2.1) என்பன இவர் வாக்கு. எனவே கொடுமைக்கு அஞ்சாது, நாட்டு மக்கள் வாழ்வுக்கு வழி வகுத்த முதல் சீர்திருத்தவாதி அப்பரேயாவர்.

இவர் கலையுள்ளம் பெற்றவர். இவர் பிறந்த தால் பல கலைத்துறைகள் தழைத்தன என்பதை இவர் பிறக்கும் நிலையிலேயே 'அலகில் கலைத்துறை தழைப்ப அவதாரஞ் செய்தார்' (பெ.தி.10) என்கி றார் சேக்கிழார். இவர் இளமையில் 'காவளர்த்தும் குளந்தொட்டும்' (பெ.தி.36) சமூகப்பணிகள் செய் தார் இன்றைய காடு வளர்ப்பதையும் ஏரி ஆழப் படுத்தலையும் ஒத்தன இவை. இவர் ஊர்வாழச் செய்த துப்புரவுப் பணியினைச் சேக்கிழார் 'பார் வாழத் திருவீதிப் பணி செய்து' (பெ.தி.225) என்கி றார். மேலும் தமிழகத்தோடு இருந்து விடாது, இமயம் வரை அந்த நாளில்-நடந்து சென்று, நாடே ஒன்றெனக் காட்டி ஒருமை உணர்வை வளர்த்தார். 'ஆரியந் தமிழோ டிசையானவன்' (5.18.3), ''செந்த மிழோ டாரியனை'' (6.46.10), ''வடமொழியும் தென் தமிழும் ஆயினான்காண்'' (திருச்சிவபுரம் 1), ''ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்'' (திருமறைக்காடு 5) என்பன இவர் வாக்கு. இதனால் வடக்கு தெற்கு இடவேறுபாட்டினை மட்டுமன்றி, மொழி வேறு பாட்டினையும் நீக்கி நாட்டு ஒருமைப்பாட்டுக்கு உழைத்த முதற்றொண்டர் அப்பரே ஆவர்.

சாதி வேறுபாட்டைச் சாடியவர் இவர். அந்தண ராகிய சம்பந்தரோடும் பாணரோடும் வேளாளராகிய இவர் ஒருங்கிருந்து உண்டு உடுத்துத் தொண்டு செய் தார். அந்தணராகிய அப்பூதியார் மகன் விடத்தால் மறைய, விடந்தீர்த்து உயிர் பெற்றெழச் செய்தார். 'ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே' என்று (6.95.10) பாடிச் சாதிச் சழக்கை வேரறுத்தார். அப்படியே சமய வேறு பாடுகளையும் கண்டித்து யாண்டும் ஒரே இறைவனே உள்ளான் எனக் காட்டுகிறார். 'சமயம் ஆறினுக்கும் தலைவன்' (கச்சி ஏகாம்பரர் தாண்டகம்), 'மிக்க சம யங்கள் ஆறின் உருவாகி' (4.14.3), 'வேறொரு சமயம் செய்தே எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்' (4.60.9), 'ஆறொன்றிய சமயங்கள்' (4.100.4), 'இவர் தேவர் அவர்தேவர் என்று சொல்லி இரண்டாட்டாது, (6.61.3), 'ஒருருவம் மூவுருவமான நாளோ' (6.34.9) என்பன இவர் வாக்கு. இவற்றால் இவர் பரந்த பாரதத்தினைச் சமயத்தாலும் மொழி யாலும் வேறுபாடின்றி இணைக்கப் பாடுபட்ட முதல் தொண்டர் என்பது தெளிவாகும்.

அப்படியே வெறும் சாத்திரங்களையும் சடங்கு களையும் பற்றி வாழ்வது தவறு என்றும் கண்டிக் கிறார். 'கங்கையாடிலென் (5.99.2)' 'குறிகளும் அடை யாளமும்' (5.90.6) ' சாத்திரம் பல பேசும் சழக்கர் காள் ' (5.60.3) என்ற இவர் பாடல்கள் பொருளற்ற சடங்குகள் தேவை இல்லை என்பதை விளக்குவன வாம். கடுஞ்சொல், பொய், வஞ்சனை உடையவருக்கு இறைவன் அருளான் என்பதையும் இவர் சுட்டிக் காட்டுகிறார் (5.48 9; 6.50.4; 4.61.7).

'சத்தியாக்கிரகம்' என்றும் 'உண்ணாவிரதம்' என்றும் இன்று நாம் பேசும் பலவும் அப்பர் கைக் கொண்டவையே. 'இடுக்கட்பட்டிறக்கினும் இரந்து யாரையும் விடுக்கிற்பிரான் என வினவுவோ மல்லோம்' (4.11.3) என்ற சுயமரியாதைக்காரராய் அப்பர் வாழ்ந்து வந்தார். பழையாறையில் இறைவன் இருக்கு மிடத்தைச் சிலர் மறைத்து வைக்க, அவ்விறைவனைக் காணாது அவ்விடத்தைவிட்டு அகலமாட்டேன் என்று 'சத்தியாக்கிரகம்' செய்ததோடு 'உண்ணாவிரதமும்' மேற்கொண்டார் (பெ தி. 296). உடனே அந்நாட்டு அரசன் உணர்ந்து வந்து அச் சிலரை அகற்றி இறை வனை அப்பர் காணுமாறு செய்தான். எனவே இன்று நாம் கொள்ளும் செயலெல்லாம் அன்று அப்பர் தந்த வையே. வீண்பொழுது போக்குவாரையும் அப்பர் கண்டிக்கிறார் (5.35.2; 5.21.8).

இவர் செய்த மற்றொரு தொண்டு மிகச் சிறந்த தாகும். சோழநாட்டுத் திருவீழிமிழலையில் கொடும் பஞ்சம் உண்டாயிற்று. பெருஞ்செல்வர்களெல்லாம் வாளாயிருப்ப இவர் நாள்தொறும் இறைவனை வேண்டி வாசி இல்லாத காசு வாங்கி, உணவுப் பொருள்களைப் பெற்று 'எல்லாம் எய்தி உண்கவென இரண்டு பொழுதும் பறைநிகழ்த்திச், சொல்லால்

சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை தொலைத் `திட்டார்' (பெ.தி. 259). இரண்டு பொழுதும் உயிர் வேறுபாடுஇன்றி எல்லாரும் எல்லாமும் வருக என அழைத்துச் சோறிட்டுப் பஞ்சத்தை நீக்கினார். சமு தாயத் தொண்டில் இதனினும் சிறந்தது உளதோ? மேலும் நாட்டில் உழவு சிறக்க வேண்டும் என்ற உண்மையினைப் பாட்டில் உணர்த்தியவர் இவர் (4.78.2).


மற்றும் இவர் தமக்கென ஒன்றையும் சேர்த்து வைத்துக் கொள்ளாததோடு, மணிகளையும் பொன் னையும் ஓட்டினைப் போலவே நோக்கினார் என்பதை யும், வெற்றுக் காமக்களியாட்டை வெறுப்பவர் என் பதையும் சேக்கிழார் காட்டுகிறார் (பெ.தி. 417, 424).

கொண்ட கொள்கையினை விடாது பற்றி வெற்றி பெற்றவர் அப்பர் என்பதைப் பெருமன்னன் பல்ல வனை வென்று நின்றதாலும், எல்லா உறுப்புகளை யும் இழந்த நிலையிலும் மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்' (பெ.தி. 366) என்று உறுதி கொண்டு நின்ற தாலும் அறியலாம்.

சமய சமுதாயத் துறைகளுடன் அறிவியல் துறை யிலும் அப்பர் சிறந்திருந்தார் என்பதை அவர் பாடல் வழியே காணல் நன்று உலகு வட்ட உருண்டையாக உள்ளதையும் (6.18 6) நிலம், நீர், தீ, வளி, வான் ஆகிய இவை ஒன்றிலொன்று எவ்வாறு ஒடுங்குகின்ற தென்பதையும் (6.54.5) தாய்வயிற்றில் கரு படிப்படி யாக எவ்வாறு வளர்ந்து நரம்பு, எலும்பு முதலியன பெற்று முற்றுருவம் எய்துகிறது என்பதையும் (6.25.2) மின்னல் இடிகளின் தோற்ற வேகங்கள் பற்றியும் (6.64.8.) நீராவி பற்றியும் (6.55.5) வேறு பல உண்மை களையும் அறிவியல் அறிஞர்கள் வியக்கும் வண்ணம் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே அப்பரடி கள் சுட்டிக்காட்டி விளங்க வைத்தார் என்பது வியத் தற்குரியது.

இந்த வகையில் எதிலும் தன்னலமற்று, அதே வேளையில் தன்மானத்துடன் கொள்கையினையும் விடாது, உலக வாழ்வே-பிற உயிர்வாழ்வே தம் வாழ்வு எனக்கொண்டு, தொண்டே தம் வாழ்வாகப் பிறர்வாழத் தாம் வாழ்ந்து பிறர் வாடத் தாம் வாடி அவ்வாட்டத்திற்கு வழிகண்டு உதவி, என்றும் யாண்டும் உலக உயிர்களை ஓம்புதலே உயர்ந்த மெய்ச்சமயம் என்பதை உலகுக்கு உணர்த்திய சமயத் தலைவர் – சமுதாயச் சீர்திருத்தவாதி – பெரியார் அப்பரடிகளாவார்கள். அ.மு.ப.

**அப்பலேச்சியன் மலைகள்** வட அமெரிக் காவின் (அமெரிக்க ஐக்கிய நாடுகளில்) இரண்டாவது மிக நீளமான மலைத்தொடர். இதன் நீளம் 2,400 கி.மீ. ஆகும். இராக்கி மலைத்தொடர் முதலிடத் தைப் பெறும். வட அமெரிக்காவின் கிழக்குப் பக்கத் தில் செயின்ட் இலாரன்சு ஆற்றிலிருந்து, அலபாமா வரை இம்மலைகள் பரவியுள்ளன. இம்மலைப்பள்ளத் தாக்குகள் செழிப்பு மிக்கவை. இங்குக் கனிப் பொருள் களும் கிடைக்கின்றன. இரும்பு, கரி, துத்தநாகம்,




அப்பலேச்சியன் மலைகள்

பெட்ரோலியம் போன்றவை அவற்றுள் சில. இம் மலைத் தொடரிலுள்ள மிச்சேல் உச்சி மிக உயர மானதாகும்.

**அப்பனையங்கார்** பாண்டித்துரைத்தேவர் அவர்களால் நிறுவப்பட்ட மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைமையாசிரியராகவும், 'செந்தமிழ்' இதழ் ஆசிரிய ராகவும் விளங்கிய தமிழறிஞர், இவர் திருநாராயணய் யங்காரின் மகன். தந்தையைப் போலவே தமிழ்ப் புலமையுடையவர். இவர் மதுரைச் சேதுபதி உயர் நிலைப் பள்ளியில் சில ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணி ஆற்றினார்; பின்னர் இராமேசுவரம் தேவத் தானப் பாடசாலையில் தமிழ்ப் பேராசிரியராக முப் பது ஆண்டுகள் பணிபுரிந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1952-ஆம் ஆண்டிலிருந்து தலைமையாசிரிய ராகவும், 'செந்தமிழ்' இதழ் ஆசிரியராகவும் இருந்து ஏழு ஆண்டுகள் அரிய தமிழ்த் தொண்டு ஆற்றியுள் ளார். சிந்தாமணி, சிலப்பதிகாரம், திருக்குறள், புறப் பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் முதலிய் அரிய பெரிய தமிழ் நூல்களை இவர் நுணுகி ஆராய்ந்து கண்டறிந்த நயங்கள், ஆராய்ச்சிகள், 'செந் தமிழ்', 'அரிசமயதிவாகரம்' முதலிய இதழ்களில் கட்

டுரைகளாக வெளிவந்துள்ளன. திவ்வியப்பிரபந்த விபாக்கியானங்களிலும் பிற நூல்களிலும் தாம் கண்ட அரிய கருத்துகளை இனிய பொருட்செறிவுடைய கவிதைகளாக ஆக்கியுள்ளார். வேங்கடத்துறைவான் கவிராயர் இயற்றிய மாறன்கோவையின் முதல் நூறு பாடல்களுக்கு விரிவுரையும், எஞ்சியவற்றிற்குக் குறிப்புரையும் எழுதியுள்ளார். அரங்கராமாநுசதாசர் என்பவரால் நடத்தப்பெற்ற அரிசமய திவாகரம் என்னும் இதழில், 'கூடல்மான்மியம்', 'இராமசெயத் திருப்புகழ்' முதலிய நூல்கள் இப்பெருமகனாரால் ஆராய்ந்து வெளியிடப்பட்டன. இப்பெரியாரின் தோற்றம், கி.பி. 1898; மறைவு கி பி. 1964.

இராம.பொ.

**அப்பாச்சாமிப்பிள்ளை** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர், வேதாந்த தத்துவத்தை வினா விடை முறையில் விளக்கும் வகையில் 'நவநீத சாரம்' (கி.பி. 1859) என்னும் நூலை எழுதியுள்ளார். பஞ்சீ கரண வேதாந்த சார மகா வாக்கிய போதக சங்கிரகம் (கி.பி. 1876) என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார். நா.ஜெ.

**அப்பாச்சாமிப் பிள்ளை. ச., (20-நூ)** திருவரங்கத்திற்கு அருகிலுள்ள சீரங்கராசபுரத்தினைச் சேர்ந்த புலவர். தந்தை பெயர் சண்முகயோகி; தாயார் காமாட்சியம்மாள். இவர் சோழிய வேளாள மரபினர்.

காலக்கணிதம், மருத்துவம், வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய துறைகளிலும், இலக்கண இலக்கியங்களிலும் புலமை மிக்கவர்; சேதுபதி மன்னரால் பாராட்டப் பெற்றவர். திருவரங்கத்திற்கு அருகில் நொச்சியம் என்னும் ஊரில் மெய்கண்டார் மடம் அமைத்துத் தொண்டாற்றினார். இவர் இல்லறம் மேற்கொண்டிருந்து பின்னர்த் துறவறம் பூண்டொழுகினார்.

வைத்திய சந்தான சிந்தாமணி என்னும் நூலை இவர் ஆக்கியுள்ளார். உடல்நலம் பேணுதல் குறித்தும், மக்கட்பேறு போற்றுதல் குறித்தும் விரிவாக அமைந்த நூலொன்றும் இவர் இயற்றியுள்ளார்.

நா.ஜெ.

**அப்பாச்சாமிப் பிள்ளை, சி.,** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; தமிழும் ஆங்கிலமும் பயின்றவர். ஆங்கிலம் தமிழ்ச் சொற்றொடர் குறித்த நூலொன்றினை இவர் எழுதியுள்ளார். இந்நூல் போர்ப்புசு என்பவர் எழுதிய "இந்துத்தான் சொற்றொடர்" என்னும் நூலமைப்பினைப் பின்பற்றி எழுதப்பட்டது. இது நடுத்தரப் பள்ளி மாணவரின் மொழியாக்கப் பயிற்சிக்கு உரிய ஆங்கிலப் பகுதியாகும். இதில் அவற்றிற்குரிய தமிழ் மொழிபெயர்ப்புப் பகுதிகளும் அடங்கியுள்ளன. நா.ஜெ.

**அப்பாச்சாமி முதலியார்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். இவர் எழுதிய நூல் கபாலீசர் குறுங்கழிநெடில் ஆகும். இந்நூல் சென்னை மயிலாப்பூரில் எழுந்தருளியுள்ள கபாலீசரை வாழ்த்தும் வகையில் அமைந்தது. இதிலுள்ள பாடல்கள் பதினொன்று.

**அப்பாச்சாமி முதலியார், அ.,** தொண்டை நாட்டில் கி.பி 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; பேறை என்னும் ஊரில் வாழ்ந்த சம்பந்தம் பிள்ளையிடம் இலக்கிய இலக்கணங்களைப் பயின்றார். இவர் நாகப்பட்டினத்து ஐயாத்துரை ஞானியார் இயற்றிய தில்லைச் சிவகாமசுந்தரி சதகம், நடராசர் சதகம் ஆகிய இரண்டு நூல்களையும் பாராட்டிச் சிறப்புப்பாயிரம் அளித்துள்ளார்.

**அப்பாச்சாமி முதலியார், வீ.,** சென்னையைச் சேர்ந்த பொன்னேரிக் கருகிலுள்ள கன்னிப்புத்தூரில் வேளாளர் மரபில் பிறந்தவர். சிறந்த சிவபக்தராகிய இவர் தந்தை பெயர் வீராசாமி முதலியார். தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்ற இவர் ஆங்கில ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்றுச் சிதம்பரம், விருத்தாசலம் ஆகிய இடங்களில் பணிபுரிந்தார். இவர் சைவசித்தாந்தத் தொடர்புடைய சுத்தாத்துவித சைவசித்தாந்த பரபோதம், ஆத்ம போர்தப் பிரசங்காமிருதம் எனப் பெயர் பெறும் நூல்களை இயற்றியுள்ளார்.

**அப்பாசி** விசயநகரப் பேரரசினை ஆட்சி புரிந்த கிருட்டிண தேவராயருடைய அமைச்சர்களுள் ஒருவர். இவர் காலம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டாகும்; நியோகிப் பார்ப்பன மரபினைச் சேர்ந்தவர். இளமையில் பெற்றோரை இழந்தமையால் கல்வி பெறும் வாய்ப்பு இல்லாமல் தம் போக்கில் இவர் திரிந்து கொண்டிருந்தார். ஒருநாள் காட்டு வழியில் தம்மையறியாது உறங்கிக் கொண்டிருந்தார். அப்பொழுது பாம்பு ஒன்று இவருடைய முகத்தில் வெயில் படாமல் தன் படத்தால் மறைத்து நிழல் செய்து கொண்டிருந்தது. வழிப்போக்கனாக அவ்வழிச் சென்ற பட்டுமூர்த்தி என்பான் அதனைக் கண்டு வியப்படைந்தான். எதிர்கால உணர்ச்சியுடையஅவன் இவர் விழித்தெழும் வரையில் காத்திருந்தான். விழித்தெழுந்தபின் இவரைப் பார்த்து "அப்பா உனக்கு எதிர்காலத்தில் ஆட்சிச் செல்வம் உண்டாகும், அப்போது எனக்கு உதவுவாயா என்று கேட்டான். அப்பாசி (Appaji) அம்மனிதனைப் பார்த்து எழுத்து அறியாத எனக்கு அரசாட்சிச் செல்வம் எவ்வாறு உண்டாகப் போகிறது? அவ்வாறு உண்டாகுங் காலத்தில் உனக்கு உதவி செய்வேன் என்று கூறினார் சின்னாளில் அப்பாசி அரசியல் அலுவலிற் சேர்ந்து தம்முடைய நுண்ணறிவினால் படிப்படி

யாக உயர்ந்து அமைச்சராகிப் பின்னர் அரசருமாகி விளங்கினார். அப்போது ஆட்சிச் செல்வம் உண்டா கும் என்று கூறியவன் வர, அவனுக்கு வேண்டிய உதவி செய்தார்.சாளுவதிம்மராசு அப்பாசி என்பது இவரது முழுப் பெயராகும். இவருடைய நுண்ணறி வினை விளக்கும் பல கதைகள் உள்ளன. த.கோ.

**அப்பாசித்து மரபு** கி.பி. 750 முதல் கி.பி. 1258 வரை இசுலாமியப் பேரரசை ஆண்ட 37 கலீபாக் களைக் (Caliph) கொண்ட இரண்டாவது பெரிய மரபாகும். இம்மரபினர் முகம்மது நபியின் மாம னான அல்-அப்பாசு (Al-Abbas) என்பவரின் வழித் தோன்றல்களாகக் கருதப்படுகின்றனர். கி.பி. 750-இல் நடைபெற்ற மகாசாப் (Magasa) போரின்போது உம்மையத் (Ummayyad) மரபினரின் படைகளைத் தோற்கடித்து, அப்பாசித்துகள் (Abbasids) ஆட்சி யைக் கைப்பற்றினர். அப்போது உம்மையத் மரபின் கலீபாவான இரண்டாம் மர்வான் (Marwan II) எகிப்துக்குத் தப்பியோடினார். அவர் அங்கேயே படு கொலை செய்யப்பட்டார். இதன் பிறகு உம்மையத் அரச குடும்பத்தினர் கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டனர். என்றாலும் அவ்வரச மர பினரில் ஒருவராகக் கருதப்பட்ட அப்துர் இரகுமான் என்பவர் மாறுவேடத்தில் இசுபெயினுக்குத் (Spain) தப்பிச் சென்று அங்குத் தம்மை ஒரு சுதந்தர அர சராக அறிவிப்புச் செய்து கொண்டார். கார்டோ வாவில் அவர் உம்மயத்து மரபினைச் சார்ந்த போட்டி கலீபா அரசு ஒன்றைத் தோற்றுவித்தார்.

கி.பி. 750 முதல் கி.பி. 754 வரை ஆண்ட அபுல் அப்பாசு என்பவரே இம்மரபின் முதல் கலீபா ஆவார். இவர் தலைநகரைச் சிரியாவிலிருந்து ஈராக்கினுக்கு மாற்றினார். இவருக்கு அசு-சபா (இரத்தம் சிந்துபவர்) என்ற சிறப்புப் பட்டப்பெயரும் உண்டு. ஏனெனில் இரும்புக் கரம் கொண்டு பேரரசை ஆள முற்பட்டவர் இவரேயாவர்.

இவருக்குப் பிறகு கலீபாவாகப் பொறுப்பேற்ற வர் இவர்தம் சகோதரரான அல்-மன்சூர் (Al-Mansur) என்பவராவார். இவர் கி.பி. 754 முதல் கி.பி. 775 வரை ஆண்டார். அப்பாசித்து மரபினரின் ஆட்சியை நிலைபெறச் செய்தவர் இவரேயாவார். பாக்தாத்தை ஒரு வலிமை வாய்ந்த தலைநகராகவும் இவர் மாற்றினார்.

அப்பாசித்துப் பேரரசு புகழின் உச்சநிலையை அடைந்தது, அதன் ஐந்தாவது கலீபாவும், கி.பி.786 முதல் கி.பி. 809 வரை ஆண்டவருமான ஆரூன்-அல் -இரசீத் (Harun-Al-Rashid) என்பவரின் ஆட்சிக் காலத்திலேயாகும். இவர் உரோமானியப் பேரரசை வெற்றி கொண்டார். இவர் உரோமானியப் பேரரச ரான சார்லமனுடன் (Charlemagne) தூதர் உறவை ஏற்படுத்திக் கொண்டார்.

இவருக்குப் பிறகு பட்டத்திற்கு வந்த அல்-மமூன் (Al-Mamun) (கி.பி. 813-833) ஆட்சிக் காலத்தின் போது, கிரேக்க மொழிகளிலிருந்த அறிவியல், தத்துவ இலக்கியங்கள் அராபிய மொழியில் பெயர்க்கப்பட்ட காரணத்தினால், கிரேக்க நாடுகளுடன் முசுலிம்களுக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. யூக்லிட் (Euclid), தாலமி, (Ptolomy) இப்போகிரடிசு (Hippocrates), காலன் (Gallen) போன்றவர்களின் அறிவியற் படைப்பு கள் அராபிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டன. இவருக்குப் பிறகு அப்பாசித்துப் பேரரசு வீழ்ச்சி யடையத் தொடங்கியது.

கி.பி. 1180 முதல் கி.பி. 1225 வரை ஆண்ட அன்நாசிர் (An-Nasir) என்பவர் ஓரளவிற்குப் பேரரசு இழந்த பெருமைகளை மீட்டார். ஆனால், அவ் வெற்றியும் அப்போதைக்கு மட்டும் நிலைக்கக் கூடிய ஒன்றாகவே விளங்கியது. கி.பி. 1258-இல் கூலாகு (Hulagu) என்னும் செங்கிசுகானின் (Genghis-Khan) பேரப் பிள்ளையும், மங்கோலிய இனத்தலைவரின் தலைமையிலான மங்கோலியப் படையினரும் பாக் தாத்தைத் தாக்கிக் கைப்பற்றி அந்நகரைத் தீக்கிரை யாக்கினர். அப்பாசித்து மரபினரின் இறுதிக் கலீ பாவான அல்-முசுடாசிம் (Al-Mustaasim) என்பவர் கொலை செய்யப்பட்டார்.

புதிய அப்பாசித்து மரபு அராபியப் பேரரசில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அப்பாசித்து மரபி னர் முசுலிம்களின் சமத்துவத்தை ஏற்றுக் கொண்ட னர். இசுலாமிய சமய நடவடிக்கையைப் பேரரசு ஏற்றுக் கொண்டதோடல்லாமல், சமயத் துரோக நடவடிக்கைகளிலிருந்து சமயத்தைக் காக்கும் பொறுப் பையும் ஏற்றுக் கொண்டது. இசுலாமிய சமயத்தை மக்கள் தழுவச் செய்வதற்கான பணிகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டன. என்றாலும் அராபியப் பேரரசில் சொராசுடிரர்கள், (Zoroastrians) கிறித்த வர்கள், யூதர்கள் ஆகியோர் பல நூற்றாண்டு களாகவே வாழ்ந்து வந்தனர்.

அப்பாசித்துப் பேரரசின் ஆட்சி மொழியாக விளங்கிய அராபிய மொழி, மேற்கு ஆசியாவின் பாட மொழியாகவும் விளங்கியது. இதன் விளைவாக அரேபியர்களின் இலக்கியங்களும் சமயமும் மேற்கு ஆசிய மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அப்பாசித்து அரசில் அராபியர்கள் அராபியரல்லா தவருடன் அதிகாரங்களையும் உரிமைகளையும் பகிர்ந்துகொள்ள வேண்டியதாயிற்று. தொண்டு, பற்று ஆகியவற்றின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்

பட்ட போர் வீரர்களைக் கொண்ட அதே சமயத்தில், அராபியத் தன்மையை இழக்காத படை உதவியையே கலீபாக்கள் நம்பியிருந்தனர். அராபியர்கள் சிறந்த பதவிகளாகக் கருதப்பட்ட ஆளுநர்களாகவும், படைத் தலைவர்களாகவும், அவையோர்களாகவும், சமய அறிஞர்களாகவும் விளங்கினர். ஆயினும் பாரசீக எழுத்தாளர்கள் நன்கு வலிமைப்படுத்தப்பட்ட ஆட்சித் துறையின் முதுகெலும்பாக விளங்கினர். அரசாங்கத்தின் இறுதி நோக்கம், வரி தண்டல் செய்வதாக விளங்கியது. அராபிய சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு பிரிவினர்களும் ஒற்றுமையுடன் வாழ்ந்தனர். சமய அறிஞர்கள் அரசினால் சிறப்பிக்கப்பட்டார்கள்.

துணை நூல்கள்:


1. **Hitti, Philip, K.**, "History of the Arabs," 9th ed, New York. 1966.
2. **Brocklemann, Carl.**, "History of the Islamic Peoples", New York, 1947.


***அப்பாலும் அடிசார்ந்தார்*** என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ள ஒன்பது வகைத் தொகையடியார்களுள் ஒருசாராரைக் குறிக்கிறது. சுந்தரர் அவர்களை 'அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்' என்று பரவியுள்ளார். சேக்கிழார் அடிகள் தம் பெரியபுராணத்தில், தமிழ் மூவேந்தர் நாட்டினுக்கு அப்பாலுள்ள நாட்டில் விளங்கிச் சிவபெருமான் திருவடியடைந்த அடியார்களையும், திருத்தொண்டத் தொகையிற் குறிப்பிடப் பெற்றுள்ள சிவனடியார்களின் காலத்திற்கு முன்னும் பின்னும் வாழ்ந்த சிவனடி சேர்ந்த அடியார்களையும் உள்ளடக்கி, இவர்களனைவரையும் 'அப்பாலும்' அடிசார்ந்தார்' என்னும் தொகைப்படுத்திப் போற்றியுள்ளார். அப்பாலும் என்னும் சொல்லுக்குச் சைவ சமயத்திற்கு அப்பாலும் நின்று வழிபட்டு இறையருள் எய்திய அடியார் எனக் கொண்டு, இதனால் சைவ சமயம் உலகத்தின் எவ்விடத்திலும் தோன்றி விளங்கும் அடியார்களையும் தன்னொடு இணைத்துப் போற்றும் விரிந்த நோக்குடையது என்னும் கருத்தும் கூறப்படுகிறது. இக்கருத்துடையோர், 'புத்தன் மறவாதோடி எறி சல்லிப் புதுமலர்கள் ஆக்கினான்காண்', என்னும் அப்பர் திருவாக்கினைத் தம் கருத்திற்கு அரணாக்குவர்.

***அப்பாலோ*** கிரேக்கர்களுக்கும் உரோமானியர்களுக்கும் உரிய முதன்மைக் கடவுள்களுள் ஒருவர். சீயசு (Zeus) என்னும் தெய்வங்களின் அரசனுக்கும் இலிடோ (Leto) எனும் பெண் தெய்வத்திற்கும் பிறந்தவர். உரோமர் புராணங்கள் இவர் பெற்றோர் சூபிடர் (Jupiter), இலாடோனா (Latona) என்று கூறுகின்றன.



அப்பாலோ

அப்பாலோ (Appollo) ஒளி, புனிதம், சூரியன், கவிதை, உடல்நலம், ஆணழகு ஆகியவற்றிற்குக் கடவுளாவார். கிரீசு நாட்டிலுள்ள தெல்பி (Delphi) நகரம் அப்பாலோவின் வழிபாட்டுத் தலங்களில் முதன்மையானது. இந்நகரத்தில் அப்பாலோ தெய்வத்தை வழிபட்டு எதிர்காலத்தைப் பற்றிக் குறிசொல்லப்படும் வழக்கம் இன்றும் நிலவி வருகிறது. அழகும் இளமையும் பேரறிவும் வலிமையும் மிக்கவர் அப்பாலோ. உரோமானியர்கள் கி.மு. 280-இல் 30 மீட்டர் உயரமுள்ள அப்பாலோ சிலை ஒன்றை உரோம் நகரில் அமைத்தனர். உலக விந்தைகளில் ஒன்றாக இச்சிலை கருதப்பட்டது. கி.மு. 226-இல் ஏற்பட்ட நில நடுக்கத்தால் இச்சிலை கீழே விழுந்தது அராபியர்கள் கி.பி. 653-இல் உரோமாபுரியைக் கைப்பற்றியபோது இச்சிலையை உலோகமாக உடைத்து விற்றனர்.

***அப்பாவுப்பிள்ளை***[1] கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; இராமநாதபுரம் மாவட்டம் குன்றக்குடியைச் சேர்ந்தவர். இவர் காலச் சூழல், இடச்சூழல் ஆகியவற்றினுக்கு ஏற்பத் திறம்படப் பேசும் நாத்திறம் கொண்டவர். இவர் முறையூர் சண்முகஞ் செட்டியாரைப் புகழ்ந்து தனிப் பாடல்களைப் பாடியுள்ளார்.

அப்பாவுப்பிள்ளை[2] கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். முத்துசாமிப் பிள்ளை என்னும் பெயரும் இவருக்குண்டு. இவர் திரிசிரபுரத்தைச் சார்ந்தவர்.

இந்திர சபா, சத்திய பாச அரிச்சந்திர விலாசம், சித்திராங்கி விலாசம், சோழ விலாசம், நள விலாசம், பத்மினி சபா என்னும் நூல்களை இவர் எழுதியுள்ளார். நா.ஜெ.

***அப்பாவுப் பிள்ளை***, சி., கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் 'இண்டியா சக்கரவர்த்தினி விக்டோரியா இரா

சாத்தியின் திருமுடி சூபிலித் திருநாள் அலங்காரப் பதம்', சிங்காரக் கும்மி (கி.பி. 1887), சுகாதார விளக்கம் (கி.பி. 1899) என்னும் நூல்களை எழுதியுள்ளார். இசைப்பாடல்கள் 12 பக்கங்களில் இயற்றியுள்ளார். இவர் சுகாதர விளக்கம் என்னும் நூலில், நோய் பற்றிய விளக்கக் குறிப்புகளையும், உடல் நலம் பேணுதல் குறித்த செய்திகளையும் ஆறு இயல்களில் தெரிவித்துள்ளார். நா.ஜெ.

**அப்பாவையர்[1]** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இலக்கியப்புலவர்களுள் ஒருவர்; தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள பண்ணுருட்டியினைச் சேர்ந்தவர். அந்தணர் மரபில் வந்த இவர்தம் தந்தையார் பெயர் மணி ஐயர். பொம்மபுர ஆதீனப் புலவராகத் திகழ்ந்த நமச்சிவாய நாவலரிடம் கல்வி கற்றார். திருநாவுக்கரசிடம் ஈடுபாடு மிகக் கொண்ட இவர் திருநாவுக்கரசு சுவாமிகள் பிள்ளைத்தமிழ், திருநாவுக்கரசு சுவாமிகள் இரட்டைமணிமாலை, திருவதிகைப் புராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத் தமிழ், புட்பாசல புராணம், தாண்ட மாலை முதலிய நூல்களையும் ஆக்கியுள்ளார். பிரகாசரின் வரலாற்றுக் குறிப்புகள், அவரைப் றி அமைந்த பிள்ளைத் தமிழில் மிகுதியாக இட பெற்றுள்ளன. தாண்டவமாலை, சோதிடக்கலை பற்றிய நூலாகும். இதில் கோராசாரம், பாராசாரியம் முதலிய வடமொழிச் சோதிட நூல்களின் பொருள் சுருக்கித் தரப்பட்டுள்ளது. பிள்ளைத் தமிழ் மாலை முதலிய சிற்றிலக்கியங்கள், புராணம் ஆகிய இலக்கிய வகைகள் இவரால் பாடப்பெற்றுள்ளன. நெல்லிக் குப்பத்தில் விளங்கிய வணிகரான தாண்டவராயர் இப்புலவரை ஆதரித்து வந்தார்.

அப்பாவையர்[2] கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு புலவர். இவர் திந்தியம் என வழங்கப் பெறும் திருநயம் என்னும் ஊரினர். திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் நெருங்கிய நண்பரான இவர், தமிழ்ப் புலமைமிக்க பரம்பரையில் வந்த பெருமைக்குரியவர். திருவிளையாடற் கீர்த்தனம் என்னும் நூல் இவரது படைப்பாகும். இயற்றமிழ் நூலினை இசைத் தமிழ்ப் படுத்தி வழங்கிய பெருமைக்குரியவர் இவர்.

**அப்பியாச கானம்**: என்பது கருநாடக இசை பயில்வோர் தொடக்கநிலையில் பெறும் பயிற்சியைக் குறிக்கும். கருநாடக இசையில் நல்ல இசை அறிவு பெறத் தொடக்கநிலைப் பாடங்களான சரளிவரிசை, சண்டை வரிசை, அலங்காரம், கீதம், வருணம் முதலியவற்றில் தொடக்கத்தில் நன்கு பயிற்சி பெற வேண்டும். இவற்றில் நல்ல பயிற்சி பெற்றால்தான் கீர்த்தனைகளை அழகுபடுத்தி மெருகேற்றிப் பாடவும், இசைக்கருவிகளில் வாசிக்கவும் முடியும். இந்த அப்பியாச கானங்களை முதன்முதலில் முறைப்படி தொகுத்தவர் புரந்ததாசர் ஆவார். காண்க:இசை.

**அப்பிள்ளையார்** கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். வைணவ சமயச் சார்புடைய இவர் அப்புள்ளையார் எனவும் அழைக்கப்படுவர். 'ஆழ்வார்கள் வாழித் திருநாமம்', என்னும் இவரது நூல் ஆழ்வார்களுக்கு வாழ்த்துக் கூறுவதாக அமைந்துள்ளது. திருவந்தாதி, திருவிருத்தம் ஆகியவற்றிற்கு உரை கண்டுள்ளார்.

**அப்புக்கல்** வடஆர்க்காடு மாவட்டம், வேலூர் வட்டத்தில் அணைக்கட்டு என்னுமிடத்திலிருந்து தெற்கில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சிற்றூர். இங்கு முன்பு மக்கள் வாழ்ந்து அழிந்த பகுதி மண்மேடாக இருக்கிறது. அண்மைக் காலத்தில் சில பகுதிகள் வயல்களாகத் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. இங்குள்ள மலையடிவாரப் பகுதியில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் 1977, 1979 ஆகிய இரு ஆண்டுகளில் அகழாய்வினை மேற்கொண்டனர்.

இங்கு ஆறு ஆய்வுக் குழிகள் இட்டு அகழாய்வு செய்து ஏறத்தாழ $4\frac{1}{2}$ மீட்டர் திண்மையுள்ள பல்வேறு கால மண்ணடுக்குகளும், ஏராளமான பழம் பொருள்களும் வெளிக் கொணரப்பட்டன. இவை அனைத்தும் மூன்று காலக் கட்டத்திற்குரிய பண்பாடுகளைச் சார்ந்தவை என வரையறை செய்யப்பட்டுள்ளன. இவை: 1. இரும்புக்காலம் (ஏறக்குறைய கி.மு. 400 முதல் கி.பி. 300 வரை), 2. வரலாற்றுத் தொடக்கக்காலம் (கி.பி. 300 முதல் 900 வரை), 3. பிந்திய வரலாற்றுக் காலம் (கி.பி. 900 முதல் 1600 வரை).



அப்புக்கல் அகழாய்வு

இரும்புக்காலத்தைச் சார்ந்த மண்ணடுக்குகளில் இரும்பினால் செய்த அம்புமுனைகள், கத்திகளின் சிதைந்த பாகங்கள் முதலியனவும் சுடுமண் மணிகள், சங்கு வளையல்கள் முதலியனவும் கிடைத்திருக்கின் றன. இந்தக் காலக்கட்டத்தைச் சார்ந்த மட்பாண்டங் களுள் சிறப்பு மிக்கவை கறுப்பு சிவப்பு நிற மட்கலன் களும், தனிக் கறுப்பு மட்பாண்டங்களுமாகும். இவை நேர்த்தியான களிமண்ணால், மெல்லிய வெட்டுத் தோற்றத்தினை உடையனவாக வனையப் பெற்றிருக் கின்றன. முதலாவது ஆய்வுக் குழியின் கடைசி மண் ணடுக்கில் இத்தகைய மட்கலன்களுடன், கருங்கல்லால் சரிவரச் செய்யப்படாத சில பொருள்கள் கிடைத் திருப்பது, புதிய கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சி யினை விளக்குபவையாக இருக்கலாம். ஆய்வுக் குழி யில் கிடைக்கப்பெற்ற கரித் துண்டுகளைக் கரிமம் 14 (கார்பன் 14) முறைப்படி சோதனை செய்ததன் மூலம், இங்கு இரும்புக் காலப் பண்பாடு, கி.மு. 400–இலிருந்து கி.பி. 300 –வரையிலான காலத்தைச்சார்ந்ததெனக் கணிக்கப்பட்டுள்ளது.

இக்காலப் பண்பாட்டை அடுத்து, முந்திய வர லாற்றுக்கால மண்ணடுக்குகள் காணப்பட்டன. இவற் றில் சுடுமண் பானைகள், மணிகள் ஆகியவையும், சங்கு வளைகளும், விலையுயர்ந்த சிவப்புக்கல் (Agate), பளிங்கு, பழுப்புநிற மணிக்கல் (Jasper), முதலிய விலைமதிப்பு மிக்க கற்களால் செய்யப்பட்ட மணிக ளும், கண்ணாடியால் செய்த வளையல்களும், மணி களும் கிடைத்திருக்கின்றன. மேலும் சிவப்புக் கலவை பூசப்பட்ட மட்பாண்டங்களும், சாதாரண சிவப்பு மட்கலன்களும், மிகக் குறைந்த அளவில் கறுப்பு–சிவப்பு மட்கலத் துண்டுகளும் இந்த மண்ணடுக்குக ளில் இடம் பெற்றிருந்தன. இந்த மண்ணடுக்குகளில் பண்டைய மக்கள் வாழ்ந்த குடிசை வீடுகளின் அடித் தளப் பகுதிகளும், அவற்றிற்கு அருகில் கூரையினைத் தாங்குவதற்கெனக் குச்சிகள் நடப்பட்டதற்கு அறிகுறி யாகக் குச்சிநடு குழிகளும் (Postholes) காணப்பட் டமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய சான்றுக ளைக் கொண்ட இரண்டாவது பண்பாட்டின் காலம் கி.பி.–300–இலிருந்து கி.பி. 900–க்கு இடைப்பட்டது என வறையறை செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவது காலப் பண்பாட்டிற்குரிய மண்ண டுக்குகளில் சாதாரணச் சிவப்பு நிற மட்கலன்களே மிகுதியாக உள்ளன. மேலும் இவற்றில் கண்ணாடி வளையல்கள், மணிகள், பச்சைமணிகள், சுடுமண் பொம்மைகள், இரும்பினாலான அரிவாள், கத்திகள் ஆகியவற்றின் சிதைந்த பாகங்கள் முதலியவை கிடைத்திருக்கின்றன. முன்பு வாழ்ந்த மக்களைப் போன்று இந்தப் பண்பாட்டு மக்களும் குடிசை வீடு களில் வாழ்ந்தனர் என்பதற்கு வீட்டின் அடித்தளப் பகுதிகள் அகழாய்வுகளில் தெரியவந்தன. ஒரு பகுதியில் மிகுந்த அளவில் பானைகளும் சட்டிகளும் குவித்த வண்ணம் வைக்கப்பட்டிருந்தன. பெரும்பா லும் இப்பகுதி சமையல் செய்யப்பட்ட இடமாக இருந்திருக்க வேண்டும். இந்தப் பண்பாட்டிற்குரிய மட்கலன்களையும் பிற பொருள்களையும் ஒப்பிட்டு நோக்கி இவற்றின் காலம் கி.பி. 900–இலிருந்து கி.பி. 1600 வரை எனக் கணிக்கப்பட்டிருக்கிறது. அப்புக் கல் அகழாய்வுகளின் மூலம் இங்கு உலோக காலத்திலிருந்து (கி.மு. 400) கி.பி.16– ஆம் நூற் றாண்டு வரையிலும் மக்கள் தொடர்ந்து வாழ்ந்தன ரென்ற உண்மை நிலைநாட்டப் பெறுகிறது.

கே.வி.இரா.

**அப்புக்குட்டி ஐயர்** யாழ்ப்பாணத்து நல் லூரைச் சேர்ந்த தமிழ்ப் புலவர். இவர் தந்தையார் சிகிவாகன ஐயர் ஆவார். இவர் கி.பி. 1797–ஆம் ஆண்டில் பிறந்தார்; வடமொழியிலும் புலமை பெற் றவர். சூது புராணம், நல்லூர்ச் சுப்பிரமணியர் பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களை இயற்றியுள்ள இவர் பல தனிப்பாடல்களையும் பாடியுள்ளார்.

வி.பா.

**அப்புவையங்கார்**, ரெ. கி.பி. 20–ஆம் நூற் றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். நரசிம்மாச்சாரியார் என்னும் வேறு பெயர் கொண்ட இவர், கவிபூடணம் என்னும் சிறப்புப் பெயர் கொண் டவர்; இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சீவில்லிபுத்தூரினர். இவர் தந்தையார் பெயர் இரகுநாத ஐயங்கார்; வைணவ அந்தணர்.

இவர் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் தேர்ச்சி மிக்கவர். வில்லிபுத்தூர் இந்து உயர்நிலைப் பள்ளித் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர், மதுரைத் தமிழ்ச் சங்க உறுப்பினராகவும் சேற்றூர்ச் சமத்தானத்தின் அரண்மனைப் புலவராக வும் விளங்கினார்.

சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப் பாமாலை, திருவேங்கடமுடையான் பதிற்றுப்பத்தந்தாதி, வான மாமலைப் பஞ்சரத்தினம், தென்புதுவை மணிவண் ணன் உலா, புதுவைச் சிலேடை வெண்பா, வரமங் கைக் கலம்பகம், புதுவைப் புராணம் ஆகியன இவர் தம் நூல்களாகும்.

நா.ஜெ.

**அப்பூதி அடிகள்** பெரியபுராணத்தில் சேக் கிழார் சுவாமிகள்போற்றும் அறுபத்து மூன்று நாயன் மார்களுள் ஒருவர்; சோழ நாட்டில் வயல்வளம் மலிந்த திங்களூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். திருநாவுக்கரசரின் சிறப்பினைக் கேட்டறிந்து, அவ ரைக் காணா முன்னரே அவர்பால் மிக்க அன்பு கூர்ந்து தம் மக்களுக்கும் மனையிடத்துள்ள பொருள்

களுக்கும் திருநாவுக்கரசு என்னும் பெயரினையே இட்டு வழங்கிப் போற்றி வந்தார். அறங்கருதித் தாம் அமைத்த மடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள் முதலிய வற்றிற்கும் அப்பெயரையே சூட்டியிருந்தார்.

இறைழிவபாட்டுப் பயணத்தில் திருநாவுக்கரசர் திருப்பழனஞ் சென்று இறைவனை வழிபட்டு ஒரு நாள் திங்களூரை எய்தி, வேனில் வெப்ப மிகுதியால் அங்கு அப்பூதி அமைத்திருந்த தண்ணீர்ப் பந்தலைச் சேர்ந் தார். அதன்கண் எவ்விடத்தும் தம் பெயரே எழுதப் பட்டிருந்தமைகண்டு, அம்மடத்திற்குரியாரைப் பற் றிக் கேட்டறிந்து அப்பூதியின் இல்லத்திற்குச் சென் றார். வந்தவர் திருநாவுக்கரசர் என அறியாமலேயே அவரை வரவேற்றுப் போற்றிய அப்பூதியிடம் நும் முடைய தண்ணீர்ப் பந்தலில் நும் பெயரை எழுதா மல் வேறொருவர் பெயர் எழுதிய காரணமென்ன என்று வினவினார். திருநாவுக்கரசரை வேறொருவர் எனக் கூறக்கேட்டு வெகுண்ட அப்பூதி, இறைவனால் அருளப்பெற்று இறைத் தொண்டில் திகழும் அவரை அறியாமல் சிவவேடம் கொண்டு வந்துள்ள நீர்யார்? எவ்வூரினர்?' என்று எதிர் வினவினார். வந்தவர் திரு நாவுக்கரசர் என்று அறிந்தவுடன் அடிபணிந்து அரு நிதியம் பெற்றவர்போல் போற்றித் தம்மில்லத்தில் திருவமுது கொள்ளுமாறு வேண்டினார். அமுது படைக்க வேண்டிக் கொல்லைப் புறத்திலிருந்து ஒரு வாழையிலை கொய்து வருமாறு அப்பூதி தம் மகன் மூத்த திருநாவுக்கரசினை அனுப்பினார். அங்கிருந்த அரவத்தால் தீண்டப்பட்டு மைந்தன் இறந்த செய்தி யினை மறைத்து, நாவுக்கரசருக்குத் திருவமுது படைக்க முற்பட்டார். அனைவருக்கும் திருநீறளித்த நாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசினைக் காணாது அழைத்து வரவேண்டினார். 'அவன் இப்போது உத வான்' என்று கூறிய அப்பூதியின் உள்ளத்தில் நிகழ்ந்த தடுமாற்றத்தைக் கூர்ந்துணர்ந்து, அதன் கார ணத்தைக் கேட்டறிந்தார். அறிந்து அவர்பால் கருணைமிகக் கொண்டு, இறந்த மைந்தன் உடலைத் திருக்கோயிலின் முன்னர்க் கொணர்வித்து, 'ஒன்று கொலாம்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, உயிர் பெற்றெழச் செய்தார். இதனைக் கண்டு மகிழ்ந்த அப்பூதி, அடியவர் அமுதுண்ணக் காலந் தாழ்த்தியமைக்கு வருந்தி விரைந்து அமுது படைத்தார். திருநாவுக்கரசர் வேண்டிக் கொண்ட வாறு அப்பூதியும் புதல்வர்களும் ஒருங்கே உண்டு மகிழ்ந்தனர். அவர் அப்பூதியோடு பலநாள் தங்கிப் பின்னர்த் திருப்பழனத்திற்கு மீண்டு, தம் பதிகத் தொண்டினைத் தொடர்ந்தார். நாவுக்கரசரின் திருப் பெயரை நாளும் ஏத்தித் தொண்டு புரிந்து சிவபெரு மான் திருவடி நிழல் எய்தினார். திருநாவுக்கரசர் தம் தேவாரத்தில் குறிப்பிட்டுப் பாடிய அடியார் களுள் அப்பூதி ஒருவர். இவரை 'அஞ்சிப் போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி' என்று தம் தேவா ரத்தில் சிறப்பித்துள்ளார். சுந்தரர் இவரை 'ஒரு நம்பி அப்பூதி' என்று குறிப்பிட்டுள்ளார். 'நாவுக் கரசு' என்னும் நாம பஞ்சாட்சரத்தை–பெயர்த் திருவைந் தெழுத்தை–ஓதிச் சிவத்தொண்டு புரிந்து இறைவனடி சேர்ந்தவர் அப்பூதியடிகள்.

**அப்பூலியா** இத்தாலியின் தென்கிழக்கு மாநி லம். இதனைப் பூக்லியா (Puglia) என இத்தாலியர் குறிப்பிடுகின்றனர். பரப்பளவு–19,347 சதுரக் கி.மீ. மக்கள் தொகை 38,49,598 (1981). அப்பூலியா (Apulia) மாநிலத்தின் வடமேற்கிலும் கிழக்கிலும் ஏட்ரி யாட்டிக் கடலும் ஒட்ராண்டோ நீர்ப்பிரிவும், தெற் கில் டேரன்டோ வளைகுடாவும், மேற்கில் பசிலி கோடா (Basilicata) கேம்பேனியா (Campania) பகு திகளும், வடமேற்கில் மொலிசுப் பகுதியும் (Molise) எல்லைகளாக உள்ளன. இம்மாநிலம் போக்கியா (Foggia), பாரி (Bari), பிரின்டிசி (Brindisi), லீசி (Lecce), டேரன்டோ (Taranto) போன்ற நகரங் களைக் கொண்டது. மக்கள் தொகை மிகுதியாக உள்ள நகரம் பாரி நகரமாகும். மக்களில் பெரும் பாலோர் நகரங்களில் வசிக்கின்றனர். கிராமங்கள் மிகக் குறைவு, இத்தாலியிலுள்ள வறண்ட மாநிலங் களில் இதுவுமொன்று. இம்மாநிலம் ஆண்டில் 65 நாள்களே மழையைப் பெறுகிறது. மழையளவு 50 செ.மீ. வறட்சியும் பாறைகளும் மிக்க மாநிலம் என இதைக் கொள்ளலாம்.

**அப்பையதீட்சிதர்** தமிழகத்தில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் விளங்கிய சிறந்த சமய அறிஞ ரும் வடமொழிப் புலவருமாவார். வடஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அடையபாளையம் என்னும் சிற் றூரில் பிறந்தவர். தந்தையார் இ. ரெங்கராச தீட்சி தர். அப்பைய தீட்சிதரின் இளமையில் பெற்றோர் இட்ட பெயர் விநாயக சுப்பிரமணியன். வடமொழி வேதங்களிலும் வேதாந்தத்திலும் புலமை நிறைந்த வர். வேலூரிலிருந்து அரசாட்சி செய்த பொம்மன் என்ற சிற்றரசன், இவர் தம் சிறப்புணர்ந்து இவரைக் கனகாபிடேகம் செய்து பெருமைப்படுத்தினான். திரு மணம் புரிந்து கொண்டு, இல்லறம் நடத்திய ஒரு சித்தர் போலவும் யோகி போலவும் திகழ்ந்தார். இவர் சிவபெருமான்பால் ஈடுபாடு மிக்கவராக விளங்கி னார். இவர் ஒரு சிறந்த வேதாந்தியுமாவார்.

தம்மை மறந்த நிலையிலிருக்கும்போது தாம் என்ன பேசுகிறோம் என்று அறிய விரும்பினார். இவர் மயக்கந்தரும் மருந்தினை உண்டு மயங்கி அந்நிலை யில் தாம் பேசுவதனை எழுதி வைக்குமாறு தம் மாண வரிடம் கூறினார். அவ்வாறு இவர் பேச எழுதப்

பெற்றதே 'ஆத்துமார்ப்பண சுருதி' என்னும் நூல். இவர் வடமொழியில் 104 நூல்கள் எழுதியுள்ளார். அவை சைவம், வேதாந்தம், பக்தி, இலக்கணம் பற்றிய நூல்களாகும்.


காஞ்சியில் இருந்த தாத்தாச்சாரியார் என்பவர் தீட்சிதரிடம் உட்பகை கொண்டார். தீட்சிதரைக் கொல்வதற்குச் சூழ்ச்சி செய்தார். தீட்சிதரைப் பார்த்துச் சிவபெருமான் நஞ்சுண்டதைப் போல் நீரும் உண்ணும் பார்ப்போம்' என்று கூறி நஞ்சைக் கொடுத்தார். தீட்சிதர் அதனைச் சிவபெருமானுக்குரிமையாக்கி உண்டார். அதனால் எத்தகைய தீங்கும் ஏற்படாமல் இருந்தார். அரசன் தீட்சிதருக்கும், தாத்தாச்சாரியருக்கும் விலையுயர்ந்த சால்வைகளைப் பரிசாக வழங்கினான். தாத்தாச்சாரியர் அதனை வாங்கித் தாம் அணிந்து கொள்ள, தீட்சிதர் சிவத்தீ வளர்த்து அதிலிட்டுச் சிவனுரிமையாக்கினார், இதனையறிந்த தாத்தாச்சாரியார் அரசரிடம், 'தாங்கள் கொடுத்த சால்வையை அவர் நெருப்பிலிட்டுக் கொளுத்திவிட்டார்' என்று சினம் உண்டாகுமாறு கூறினார். அரசர் தீட்சிதரிடம் 'நாம் உமக்குக் கொடுத்த சால்வை எங்கே? என்று வினவினார். 'சிவபெருமானுக்கு அணிந்துவிட்டேன்' என்று விடை கூறினார். அதனைப் பார்க்க வேண்டுமென்று அரசன் கூறத் தீட்சிதர் அரசரைச் சிவன் கோயிலுக்கு அழைத்துச் சென்று, சால்வை சிவபெருமான்மீது இருத்தலைக் காண்பித்தார். அரசர் முன்னிலும் அன்புடையவராக இருந்தார். இதையுணர்ந்த தாத்தாச்சாரியார். தீட்சிதரைச் சொற்போருக்கு அழைத்தார். தீட்சிதரோடு ஏழு நாள்கள் சொற்போரிட்டுத் தோற்றார். சொற்போரைக் கேட்டுக்கொண்டு நடுநிலையாளர்களாக இருந்த மார்த்தவரிருவரும் சைவர்களாயினர். பிறகு தீட்சிதர், இன்னும் எவரேனும் சொற்போரிடுவார் உளரா என வினவ, வரநந்தி என்னும் புத்தன் சொற்போரிட்டுத் தோற்றான். தோற்றதனால் மிகுந்த நாணமடைந்த தாத்தாச்சாரியார் தீட்சிதரைக் கொல்ல வழி தேடினார். தீட்சிதர் ஒருநாள் நீராடுதற் பொருட்டு ஆற்றிற்குச் சென்றார். தாத்தாச்சாரியார் இதனையறிந்து சிலரையனுப்பிக் கொலை செய்யத் தூண்டினார். சென்றோர், தீட்சிதரைச் சூழ்ந்து சூலமேந்திய கையினராய்ப் பலர் நிற்கக் கண்டு அஞ்சித் தாங்கள் வந்த காரியத்தைத் தீட்சிதரிடம் கூறினார். தீட்சிதர் சிவனடியார்கட்குத் தீமை செய்ய எண்ணும் பொல்லாதவர்களைக் குறித்துச் சிவபெருமானிடம் முறையிட்டார். அவ்வளவில் தாத்தாச்சாரியுடைய தலையில் இடிவிழுந்து அவர் மாண்டார்.

இவர் 'சித்திர மீமாம்சை' என்னும் பெயரில் பொருளணிகள் பற்றிக் கூறும் நூலொன்று எழுதியுள்ளார். அதன்கண் உவமை அணியின் வழியாகப் பல பொருளணிகள் தோன்றும் என்னும் கருத்து ஓர் அழகிய உருவகத்தால் கூறப்பட்டுள்ளது. வடமொழியில் கூறப்பட்டுள்ள இக்கருத்தினை 'உவமை என்னும் தவலரும் கூத்தி' எனத் தொடங்கும் நூற்பா யாப்பில் தம் 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலில் வி.கோ. சூரியநாராயண சாத்திரியார் எடுத்துக் காட்டியுள்ளார்.

இவர் தம் இறுதிக் காலத்தைச் சிதம்பரத்திற்கு வந்து நடராசப் பெருமானை வழிபடுவதில் கழித்தார். இவர் தம் 73-ஆம் வயதில் காலமானார்.

**அப்போசுதலர் நடபடிகள்**: கிறித்தவ திருச்சபை (Church) தொடங்கப் பட்டதையும் அதன் முதல் கட்ட வரலாற்றையும் விளக்கமாகக் கூறும் அப்போசுதலர் நடபடிகள் (The Acts), திருமறையிலுள்ள (Bible) புதிய ஏற்பாட்டின் ஐந்தாம் நூலாகும். சிலுவையில் அறையப்பட்ட (Crucification) இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் (Resurrection) பின் நடந்த நிகழ்ச்சிகளையும், இயேசுவைப் பின்பற்றி மதம் மாறினவர்கள் அக்கால அரசியல் சமூகச் சூழ்நிலைகளினால் பலவிதமான தண்டனைகளை அனுபவித்துக் கிறித்தவ சபையை நிலைநாட்டின முறைகளையும் இது விளக்குகிறது. சிறப்பாக, பேதுரு (Peter), இசுதேவான் (Stephen), பவுல் (Paul) போன்றோர், கடினமான எதிர்ப்புகளினிடையில் இயேசுவின் கொள்கைகளை எருசலேம் (Jerusalem), யூதா (Judaea), கிரீசு (Greece), உரோம் (Rome) முதலிய இடங்களில் பரவச் செய்தனர். இவற்றின் விளைவாகப் பல இன்னல்களை அனுபவித்து இம்மூவரும் இரத்த சாட்சியாக மரணமடைந்தனர். இது இக்காலக் கிறித்தவ சீடர்களுக்குச் சிறந்த வழிகாட்டும் நூலாக அமைகிறது. இருபத்தெட்டு 'அதிகாரங்களைக் கொண்ட இந்நூலை உலூக்கா (St. Luke) என்பவர் அருளியதாகக் கருதப்படுகிறது.

**அப்ரடைட்டி** கிரேக்கநாட்டில் காதலுக்கும் அழகுக்கும் உள்ள தேவதை. இவளை வீனசு (பெண் தேவதை) என்கின்றனர். இவள் துணைவர் ஈராசு (Eros) என்று சில கதைகளும் இவள் மகன் என்று சில கதைகளும் கூறும். இவள் கடல் நுரையிலிருந்து பிறந்ததால் அப்ரடைட்டி (Aphrodite) எனப் பெயர் பெற்றாள். அப்ரடைட்டி, கிபாசுட்டசு (Hephaestus) என்ற நொண்டியை மணந்தாள். இவள் ஏரசு (Ares) என்ற கிரேக்கக் கடவுளுடனும், அன்சிசு (Anchises) என்ற இளவரசனுடனும் காதல் கொண்டாள். அடோனிசு (Adonis) என்னும் கிரேக்கப் புராண இளைஞன் மீதும் இவள் காதல் கொண்டாள். அடோனிசு இவளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்


அப்ரடைட்டி

காலத்தில் பயிர் பச்சைகள் செழுமையாக வளரும். அதற்கேற்ப அப்பருவம் மாறுபடும். ஆறு மாதங்களுக்குப்பின் அடோனிசு பாதாள உலகத்திற்குச் சென்றபின் பயிர்கள் வாடி பருவ நிலையும் மாறி விடும் (காண்க: அடோனிசு - (Adonis) இவளுடைய ஒட்டியாணத்தை அணிபவர் காதலிக்கப்படுவர். ஏட்ரியன் என்னும் உரோமநாட்டு அரசன் இவளுக்குக் கோயில் எடுப்பித்தான். இவளது சிலை, உருவங்களில் உலகப் புகழ்பெற்றது. பாரிசில் லூவர் அருங்காட்சியகத்திலுள்ளது.

**அபசுட்டனாய்** வடமேற்கு இந்தியாவில் அலெக்சாந்தர் படையெடுத்த காலத்தில் வாழ்ந்திருந்த ஓர் இனம். இவர்கள் வலிமை மிகுந்தபடையை வைத்திருந்தனர்; குடியாட்சி முறை அரசை உடையவர்கள். வடமொழியில் அம்பசுத்ததா என்னும் பெயரின் கிரேக்கமொழி வடிவமே அபசுட்டனாய். இவர்களைப்பற்றி அய்த்திரேய பிராமணமும் மகாபாரதமும் பிரகசுபதியின் பொருள் நூலும் குறிப்பிடுகின்றன.

**அபட்தாமசு (கி.பி. 1738-1766):** இறையியலில் நம்பிக்கை கொண்ட அறிவியல் தத்துவ அறிஞர். இவர் செருமனியில் உல்ம் (ULM) என்னுமிடத்தில் பிறந்தார்; ஆல் (Halle) பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை முடித்தார்; பிராங்பர்ட்டுப் (Frank furt) பல்கலைக்கழகத்தில் 1760-ஆம் ஆண்டு தத்துவப் பேராசிரியரானார். இவர் பணியிலிருந்து கொண்டு தமது கருத்துகளை மக்களுக்கு மேடைப் பேச்சுகள் வாயிலாகவும் பிரெஞ்சு, ஆங்கில நூல்களின் வாயிலாகவும் வெளிப்படுத்தினார். வரலாற்றுச் சிறப்புமிக்க ஏழாண்டுப் போரில் உருசிய நாட்டு (Russia) மக்களுக்கு இவர் ஆதரவு அளித்தார்.

கல்வியின் வாயிலாகவே அற ஒழுக்கங்களைப் பெறலாம் என்றும், மனித சிந்தனையின் வாயிலாகப் பெறும் அறிவே சிறந்ததாகும் என்றும் இவர் கூறினார். சமுதாய அமைப்பில் போர் வீரர்கள் முதல் நிலையிலும், ஓவியர்கள், அலுவலர்கள், மதகுருமார்கள்போன்றோர் இரண்டாம் நிலையிலும் கருதப்படுகின்றனர் என அபட் தாமசு (Abbot Thomas) கூறியுள்ளார். இவர் புக்சுபர்க்கு(Buckse Burg) என்னுமிடத்தில் காலமானார்.

**அபட் பிரான்சிசு இலிங்வுட்டு (கி.பி. 1836-1903):** அமெரிக்க நாட்டைச் சார்ந்த தத்துவ அறிஞர் இவர் ஆர்வார்டு பல்கலைக்கழகத்தில் (Harvard University) பட்டப்படிப்பை முடித்தார்; கிறித்துவ சமயத்தில் சேர்ந்து பேரிசு, கம்மிப்பியர் முதலான கிறித்துவ திருச்சபைகளின் சமயக் கொள்கைகளைப் பரப்பும் பணியை மேற்கொண்டார்.

இவர் சுதந்திர, சமயத் தொடர்பான வார இதழ் (Free Religion) வாயிலாகக் கிறித்துவ சமயக் கருத்துகளை வெளிப்படுத்தினார். இவர் கி.பி. 1970-ஆம் ஆண்டில் தேசிய முற்போக்குக் கழகத்தின் தலைவரானார். அக்கழகத்தில் பிளவுகள் ஏற்படலாயின.

அபட் (Abbot, Francis Ellingwood), பேராசிரியர் சோசியா இராய்சினுடைய (Josiah Royce) உண்மைப் பகுப்பாய்வுக் கருத்துகளுக்கு ஆதரவு அளித்தார்.

அபட், தத்துவ இயலினைச் சார்ந்த "முக்கூற்று முடிவுத் தத்துவம்" (Syllogistic Philosophy) என்னும் நூலினையும், அமெரிக்க நாட்டைப் பற்றிய கருத்துகளையும், அறிவியல் சார்ந்த உண்மைக் கோட்பாட்டின் கருத்துகளையும் கட்டுரைகளின் வாயிலாக வெளிப்படுத்தினார். இமானுவேல் கான்ட்டு (Kant), ஏகல் (Hegal) ஆகியோரின் கருத்துகளும், இவரால் கூறப்பட்ட கருத்துகளும் ஒற்றுமையுடையனவாக இருந்தன. இவர் புறப்பொருள்கள் பறறிய உண்மைக் கருத்துகளை வெளிப்படுத்தினார். இவர் தம் மனைவியின் கல்லறையின் அருகில் தற்கொலை செய்து கொண்டார்.

**அபநேந்திரநாத தாகூர், டாக்டர் (கி.பி. 1871-1951)** புகழ்பெற்ற இந்திய ஓவியர். இவர் கல்கத்தாவில் பிறந்து வடமொழிக் கல்லூரியில் கல்வி பயின்று பின்னர்ச் சேவியர் கல்லூரியில் கல்வி பயின்ற

வர். இளமைப் பருவத்திலேயே சித்திரங்கள் வரைந்தார். இத்தாலிய ஓவியர்களிடம் ஓவியப் பயிற்சி பெற்றார். நாற்பது வயதில் ஏவல் (Hewell) என்பவருடன் சேர்ந்து இந்திய ஓவியக் கலையின் மறுமலர்ச்சிக்கு அடிகோலினார். கீழ்நாட்டுக் கலை இந்தியச் சங்கம் ஒன்றைத் தம் சகோதரர் சுகநேந்திர நாதருடன் சேர்ந்தமைத்தார். இரவீந்திரநாத தாகூர் காலமானதற்குப் பின் விசுவபாரதியில் ஆசிரியராக இருந்தார். இவரது ஓவியங்கள் மேனாட்டு முறையில் வரையப்பட்டிருப்பினும் இந்திய ஓவியங்களின் சிறப்பு மாறாமல் காணப்படுகின்றன. இவர் நீரோவியம் தீட்டுவதில் திறமையானவர். 'பயணத்தின் முடிவு' என்னும் ஓவியம் இவர் வரைந்த ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கதாகக் கருதப்படுகிறது.

**அபப்தா** மலைப்பாங்கான வடகிழக்குச் சூடானிலும் தென்கிழக்கு எகிப்திலும் வாழ்கிற அராபிய மொழி பேசும் இனத்தவர். இவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 20,000. இவர்கள் பெரும்பாலும் முல்லைநில நாடோடிகள். ஆனால் அண்மைக்காலத்தில் இவர்கள் ஒரேயிடத்தில் தங்கி வாழும் நிலையான வாழ்க்கையை மேற்கொண்டுள்ளனர். இவர்கள் சமயம் இசுலாம். சூடானிலிருந்து எகிப்து செல்லும் வழியில் நூபியப் பாலைவனத்தின் குறுக்கே செல்லும் வழித்தடங்களைக் காக்கும் காப்பாளர்களாக இவர்கள் விளங்குகின்றனர்.

**அபயநாகன்** கி.பி. 291 முதல் 299 வரை இலங்கையை ஆண்ட அரசர். சிங்களவரும் யாழ்ப்பாண அரசர்களும் தமக்குள் போர் புரியத் தென்னிந்தியாவிலிருந்து தமிழ்மொழி பேசும் படைவீரர்களைக் கொணர்ந்தனர். அவர்களுக்கு இலங்கை அரசர்கள் இடைக்காலத்தில் நிலங்களை மானியமாக அளித்தார்கள் எனக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன. இலங்கை மக்கள் போராடத் தகுதியற்றவர்கள் என்பது மார்க்கோபோலோ என்பாரின் கூற்று. எனவே படை வீரர்கள் இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அபயநாகன் தமிழ்மொழி பேசுவோரைப் படைவீரர்களாகக் கொண்டு வந்தவர்களுள் ஒருவர்.

**அபாதான்** மேற்கு ஆசியாவில் ஈரான் நாட்டிலுள்ள ஒரு நகரம்; மேற்காசியாவின் பெட்ரோல் வளமுள்ள பகுதி; பெட்ரோல் சுத்தம் செய்யப்பெற்று பெட்ரோலியப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பெறும் தலையாய ஊர். தைகிரீசு-யூப்ரெடீசு ஆறுகள் இணைந்து சாட்டல் ஆரபு என்னும் பெயரில் ஓடும் ஆற்றினையொட்டியுள்ள 64 கி.மீ. நீளமுள்ள தீவையும் அபாதான் (Abadan) என்றே குறிப்பிடுவர். ஆங்கில-பாரசீக எண்ணெய் வாணிகக்குழு இங்கு 1909-இல் பெட்ரோல் சுத்திகரிப்பு ஆலையைத் தொடங்கியது. தென்மேற்கு ஈரானிலிருந்து பெட்ரோல் குழாய்கள் மூலம், பெட்ரோல் கொண்டுவரப்பட்டு இங்குச் சுத்தம் செய்யப்படுகிறது. பெட்ரோல் சுத்திகரிப்புப் பணி தொடங்குமுன் அபாதான் தீவில் களிமண் வயல்களும் பேரீச்சைப் பழத் தோட்டங்களும் மல்கியிருந்தன. வெப்பமும் ஈரக்கசிவும் கொண்ட கோடைக்காலத் தட்பவெப்ப நிலை இங்குத் தென்படினும், காலப்போக்கில் மக்கள் தொகை பெருகி வளர்ந்துள்ளது. மக்கள்தொகை 2,96,081 (1976).

**அபிக்ஞான சாகுந்தலம்** காளிதாச மகாகவியால் இயற்றப்பட்ட வடமொழி நாடக நூலாகும். மகாகவி காளிதாசர் கி.மு 56-இல் சகரர்களை விரட்டிச் சகத்தை ஏற்படுத்திய ஒரு விக்கிரமாதித்தனுடைய அரசரவையில் கவியாகத் திகழ்ந்தார். இந்த நாடகத்தில் ஏழு அங்கங்கள் உள. முதன் மூன்று அங்கங்களிலும் உணரப்பட்ட சிருங்காரச் சுவை, ஏனைய அங்கங்களில் உணரப்படும் சாந்தச் சுவைக்கு அங்கமாகும் என்பார் டாக்டர் பி.எசு. சுப்பிரமணிய சாத்திரியார். இந் நாடகத்துள் நான்காம் அங்கமே மிகச் சிறந்தது எனவும், அதிலும் நான்கு சுலோகங்கள் சிறந்தன எனவும் இலக்கியச் சுவைஞர் கூறுவர்.

பிரத்தாவனை என்னும் முன்னுரைக்குப் பின் கண்வரின் ஆசிரம எல்லைக்குள் புகும் மானை வேகமாகத் துரத்திப் பிடிக்கும் வேட்கையுடன் தேரில் மன்னன் துசியந்தன் விரைகிறான். மானை விரட்டி அடிக்க வேண்டாமென ஆசிரம முனிவர் கூறுவதையொட்டித் தேரிலிருந்து இறங்கி ஆசிரமத் தலைவரை வணங்கிப் போக எண்ணுகிறான் அரசன். ஆனால் ஆசிரமத் தலைவரான கண்வர் அங்கில்லை. அவர் வளர்ப்பு மகள் சகுந்தலை, தன் தோழியருடன் ஆசிரமச் செடிகளுக்குத் தண்ணீர் வார்க்கும்பொழுது தேனீ அவளைத் துன்புறுத்த, உதவியை நாடுகிறாள். அரசனே அவளைக் காக்க வேண்டும் எனத் தோழியர் கூற, அரசன் வீரத்துடன் முன் வருகிறான். சகுந்தலை, விசுவாமித்திரர் - மேனகை ஆகியோரின் மகளெனவும், தக்கவொருவனுக்கு மணம் முடிக்கும் நாள் வரை அவள் கண்வரின் வளர்ப்பு மகளாக இருப்பாள் எனவும் தோழியர் வாயிலாகத் துசியந்தன் அறிகிறான். அரசன் அவளைக் காதலிக்க அவளும் அவன்பால் காதல் கொள்கிறாள். காட்டு யானை ஆசிரமத்தைத் தாக்குகிற ஒலிகேட்டு அரசன் அப்பால் செல்கிறான்.

வேட்டையாடுதலை வெறுக்கும் விதூடகனை மகிழ்வித்தற்கு அல்லாமல், சகுந்தலையை எண்ணி வேட்டையை நிறுத்துகிறான் அரசன். மனத்தைத் தேற்றும்வகையில் அவன் விதூடகனுடன் உரையாடிக்

கொண்டிருக்கும்பொழுது, அரக்கர் தொல்லையி லிருந்து ஆசிரமத்தைப் பாதுகாக்க முனிவர் வேண்டுகி றார். அதே சமயம் தன் அன்னையின் விருப்பப்படி சடங்கில் கலந்து கொள்ளத் தனக்காக நண்பனை நகருக்கு அனுப்புகிறான். சகுந்தலை பற்றிய செய்தி யைப் பொருட்படுத்த வேண்டாமெனவும் கூறுகி றான்.

மூன்றாமங்கத்தின் தொடக்கத்தில் துசியந்தன் காட்டிய வீரச் செயலைப் புகழ்ந்த வண்ணம் ஒரு ஆசிரமச் சிறுவன், சகுந்தலை நோய்வாய்ப்பட்டுள்ள தையும், கண்வரின் உயிருக்குயிரான அவள் துயர் கண்டு தோழியர் மிக்க துன்பமெய்திய செய்தியையும் தெரிவிக்கிறான். காதல் நோய்வாய்ப்பட்ட சகுந்தலை தோழியரின் விருப்பத்திற் கிணங்கக் காதற் கடிதம் வரைகிறாள். அவள் பேச்சை ஒற்றுக் கேட்டு அரசன் அங்கு வர, இருவரும் தத்தம் கருத்தை ஒருவருக் கொருவர் வெளிப்படுத்துகின்றனர். கௌதமி அங் குத் திடீரென வர இருவரும் பிரிகின்றனர்.

நான்காமங்கத்தின் தொடக்கத்தில் சகுந்தலை யின் தோழியர் பேசிக்கொள்வதிலிருந்து, அரசன் சகுந்தலையைக் காதலித்து மணந்து நாடு திரும்பிய தும் அவளை மறந்தே போய் விட்டான் என்பதும், 'தீர்த்த யாத்திரை' சென்ற கண்வர் இதுபற்றி அறி யார் என்பதும் தெரிகின்றன. எதிர்பாராமல் ஆசிரமம் வந்த துருவாசர், சகுந்தலை நினைவிழந்து, தம்மை எதிர்கொண்டு ஏற்காதது கண்டு சினந்து 'அவளை அரசன் மறப்பான்' எனச் சாபமிடுகிறார். ஆனால், அடையாளம் கண்டு, மீண்டும் பழைய நினைவுடன் அவளை ஏற்றுக் கொள்வான் எனச் சாப நீக்கமும் கூறுகிறார். கண்வருக்கு அசரீரி வாயிலாகச் சகுந்தலை யின் திருமணம் பற்றியும், அவள் தாய்மை அடைந் தமை பற்றியும் தெரியவருகிது. அவர் அவளைச் துசி யந்தனிடம் சேர்ப்பிக்க ஏற்பாடு செய்கிறார். ஆசிரமம் முழுவதும் சகுந்தலையைப் பிரிய நேர்ந்துள்ளதனை எண்ணிச் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்கிறது. அவள் புறப்பட்டுச் செல்கிறாள்.

ஐந்தாம் அங்கத்தில், அரசு அலுவல்களில் ஈடு பட்ட அரசனுக்கு, பெண்மணியுடன் வந்துள்ள முனி வர் வரவும், அவர் அவனைக் காண விழையும் செய் தியும் அறிவிக்கப்படுகின்றன. அரசன் அவர்களை உவந்து வரவேற்கிறான். அரசனின் மனைவியைத் தான் முனிவர் அழைத்து வந்துள்ளார். எனினும் துருவாச முனிவரின் சாபப் பயனாக அவளை அவன் நினைவு கூர்ந்து ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சகுந்தலை கணவனருகில் இருப்பதையே வலியுறுத்தி முனிவர் திரும்புகிறார். அரச வேதியர், அவளுக்குப் பிள்ளை பிறக்கும் வரை பாதுகாப்பு அளிக்க முன் வர, வானிலிருந்து ஒரு பெண்ணுருவ ஒளி சகுந்த லையை மேலுலகம் எடுத்துச் சென்றது. அரசன் வியப் போடு நோக்கிய வண்ணமிருந்தான்.

ஆறாம் அங்கத்தில் மீனவர் வாயிலாகக் கிடைத்த அடையாள மோதிரம் கண்டவுடன், மீண்டும் பழைய நினைவு கொண்ட அரசன் தன் மடமையை நினைந் தும், வாரிசு இல்லாமல் இறந்தவரின் சொத்து யாரு டையது என்ற அரசாங்க அலுவல் காரணமாகத் தன் வாரிசு இல்லாத நிலையை எண்ணியும் துயரத்தில் ஆழ்கிறான். இந்திரனின் தேரோட்டியால் அச்சுறுத் தப் பெற்ற விதூடகன் ஓலமிட, உணர்ச்சி பொங்கக் கிளம்புகிறான் அரசன். அவன் உதவியைத் தேவர் நாடுகின்றனர்.

ஏழாம் அங்கத்தில், வாகை சூடிய அரசன், மாதலி தேர் ஓட்ட, ஏமகூடத்தினருகில் மரீசி முனிவர் ஆசிரமம் வருகிறான். அங்கே வேடிக்கையாகச் சிங் கத்தை இழுத்து வரும் ஒரு வீரச் சிறுவனையும், உடனிருக்கும் இரு தவசியரையும் காண்கிறான். தவ சியர் சிறுவனிடமிருந்து சிங்கத்தை விடுவிக்க அவனை வேண்டுகின்றனர். அரசன் அச்சிறுவன் வாயிலாக, தானே அவன் தந்தை என அறிந்து வியப்புறுகிறான். சகுந்தலை அப்பொழுது துறவறம் பூண்டிருந்தாள். மட்டிலா மகிழ்ச்சி கொண்ட தம்பியருக்குச் சிகரம் வைத்தாற்போல் மரீசி முனிவர் 'அவள் கணவன் சற் றும் மாசில்லாதவன், தூய நற்பண்புள்ள பொறுப் பாளன்' என்று கூறுகிறார். இதுவரை அவள் அடக்கி வைத்திருந்த துயரம் அவளையாட்கொள்கிறது.

இவ்வுட்பொருள் வியாச மகாபாரதத்தினின்று எடுக்கப்பட்டது. ஆயினும் சுவைக்கேற்பச் சில மாறு தல்கள் செய்யப்பட்டன. இங்கு மகாபாரதத்தில் உள் ளதைப் போல் சகுந்தலை தனிமையில் இல்லாமல் பிரியம்வதை, அனுசூயை ஆகிய தோழியருடன் இருக் கிறாள். ஆதலின் அவள் துசியந்தனை 'நீர்யார்?' எனக் கேட்காமல் தோழி அதனைக் கேட்கிறாள். அவ்வாறே சகுந்தலை கண்வரின் மகள் எனக் கூறுதல் எங்ஙனம்? என்று துசியந்தன் சகுந்தலையை நேரில் கேட்காது தோழிகளைக் கேட்கிறான். இது பண்பாட் டிற் கிசைந்தது. துசியந்தன் சகுந்தலையை மணக்க விரும்பி அவளைக் கேட்கிறான். கண்வரே தன்னை மணம் செய்விக்க வேண்டுமென முதலில் கூறினாள். தானே அவள் மணம் செய்து கொள்ளலாம் என்று துசியந்தன் கூறியதைக் கேட்டுத் தனக்குப் பிறக்கும் பிள்ளைக்கு அரசினைக் கொடுக்க வேண்டும் என்ற இசைவுடன் அவள் அவனை மணந்தாள் என்பது மகா பாரதத்தில் உள்ள செய்தி. துசியந்தனைக் கண்ட வுடன் அவன்பால் மையல்கொண்டு, அவனுக்குக் காம வோலை எழுதிக் கந்தருவ முறையில் மணந்தாள் என

இந்நாடகம் கூறுவது இயல்பானது. கண்வருக்கும் பொது மக்களுக்கும் பயந்து, துசியந்தன் சகுந்தலையைத் தன்னிடம் அழைக்காமலிருந்து பின் மறந்தே போனான் என்ற மகாபாரதக் கூற்றைத் துருவாச முனிவரின் சாபத்தாலே, அவளை அவன் மறந்தான் என்று மாற்றிய முறை நாடகத்தின் சிறப்பு.

சகுந்தலையின் புதல்வன் சருவதமனன், வேதம் சாத்திரம் ஆகியவற்றைக் கற்று இளவரசாக ஆகும் தகுதியைப் பெற்ற பின்பு, கண்வர், அவ்விருவரையும் துசியந்தனிடம் அனுப்புவதாக மகாபாரதம் கூற, நாடகத்தில் துசியந்தன் மோதிரம் கொடுத்துப் போவதும், துருவாசர் சாபமிடுவதும், அடையாளங் கண்டு சாபம் நீங்கப் பெறும் என்று அவர் கூறுவதும், நான்காமங்கத்தில் கருவுற்றவளாய் இருக்கும் பொழுதே சகுந்தலை துசியந்தனிடம் அனுப்பப் படுகிறாள் என்பதும், துருவாசரின் சாப வலிமையால் மோதிரம் (அடையாளம்) நழுவிச் சசீ தீர்த்தத்தில் விழுந்தது என்பதும் சுவையை மேன்மேலும் வளரச் செய்ய ஏதுவாகின்றன.

மேலும், அத்தினாபுரம் வந்தவுடன் முனிவர்கள் சகுந்தலையைக் குழந்தையுடன் விட்டுவிட்டுத் திரும்பினார்கள். சகுந்தலை தானே குழந்தையுடன் துசியந்தன் அரசவை சென்று, அரசன் தன்னை மணந்ததாக அறிவிக்க, அவன் அதனை மறுத்தான். பலமுறை சகுந்தலை கூறியும் அவன் மதியாதிருந்தான். அவள் குழந்தையுடன் காட்டிற்குத் திரும்பும் போது அசரீரியின் கூற்றால் துசியந்தன் அவ்விருவரையும் ஏற்கிறான் என்று மகாபாரதம் கூறுவதை முழுமையாக மாற்றிச் சாரங்கரவன், சாரத்துவதன், கௌதமி ஆகியோருடன் துசியந்தன் அவை சென்று மன்றாடியும், மோதிரமின்மையால் தன்னை மணந்ததை உறுதிப்படுத்த முடியாமல் சகுந்தலை ஆகாயம் புகுந்தாள். பிறகு மீனவர் வழியாக மோதிரத்தையடைந்து, அரசன் தன் செயலுக்காகத் தன்னையே நொந்து வெறுக்கப் பின் இந்திரனுக்காக உதவி செய்து திரும்பும் வழியில் மரீசி முனிவரின் ஆசிரமத்தில் சருவதமனன் வாயிலாகச் சகுந்தலையை அடைந்தான் என நாடகம் கூறுகிறது. ஆக, நாடகத்தின் உச்சக் கட்டமான ஐந்து, ஆறு, ஏழு ஆகிய அங்கங்கள் கவியின் கற்பனையால் மெருகேற்றப்பட்டு மிளிர்கின்றன.

கண்வ முனிவரின் ஆசிரமத்தில் எளிதாகத் தோன்றிய சகுந்தலை-துசியந்தன் ஆகியோரது சிருங்காரம், தியாகம் தவம் ஆகியவற்றால் தூய்மைபெற்று விண்ணகரத்தில் மரீசிமுனிவர் ஆசிரமத்தில் முதிர்ந்து புடம் இடப்பட்ட தங்கமெனச் சுடர் விட்டொளிர்கிறது.

இந்நாடகத்தில், இயற்கையில் உள்ள பொருள்களின் அழகை அனுபவிக்கத் தக்கவாறு வருணிப்பதும், 'இயற்கைப் பொருள்கள் வேறு, மனித இனம் வேறு' என்றில்லாமல் உள்ளப் பாசத்தின் மேலீட்டினால் ஒன்றுக்கொன்று உறவாடி, இன்ப துன்பங்களைப் பகிர்ந்து, உலகமே ஒரு குடும்பம் என்று திரண்ட உறவு உணர்வுடன் அமைதி கொள்ளும் பாங்கை அழகுறச் சித்திரிப்பதும், பல்வகைப்பட்ட நிலையில் மக்களின் மன நிலையைக் கண்டு அறிந்து நிழற்படம் பிடித்தாற்போல் காட்டியிருப்பதும், உலகமே ஆனந்த மயமாக ஆவதற்குச் சிறந்த காரணம், கணவனும் மனைவியும் மனமொத்து வாழ்தல் ஆகும் என்பதனைக் குறிப்பாகக் காட்டியிருப்பதும், மனிதப் பேறுகளில் அவரவர் தருமமே மேலானது என்பதை வலியுறுத்தியுள்ளதும் அறிந்து மகிழ்தற்குரியனவாகும்.

எஸ்.சீ.

**அபிகேய்ல் இசுமித்து ஆடம்சு (கி.பி. 1744-1818)** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இரண்டாம் குடியரசுத் தலைவர் சான் ஆடம்சு என்பாரின் மனைவியார்; ஆறாவது அமெரிக்கக் குடியரசுத் தலைவரான சான் குவின்சி ஆடம்சின் தாயார். இவருடைய கடிதங்கள் இவரது காலத்தில் நிலவிய சமூக நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

அபிகேய்ல் இசுமித் (Abigail Smith Adams) மசாசுசெட்சு மாநிலத்தில் வேமத் என்னும் ஊரில் பிறந்தவர். இவர் ஆடம்சைக்கி.பி. 1764-இல் மணந்து கொண்டார்; ஐந்து மக்களைப் பெற்றார்; கணவர் ஐரோப்பாவில் பணியாற்றிய போது வீட்டுப் பண்ணையைக் கண்காணித்தார்.



அபிகேய்ல் இசுமித்து ஆடம்சு

அபிகேய்ல் ஆடம்சு பெண்கள் உரிமைக்காகப் பாடுபட்டவர்; அடிமைத்தனத்தை எதிர்த்தவர். இவருடைய கடிதங்கள் அமெரிக்கப் புரட்சியின் போது

பாசுட்டன் பகுதியில் இருந்த பிரிட்டிசுப் படைவீரர்களைப் பற்றியும், கப்பல்களைப் பற்றியும், அரிய தகவல்களைத் தருகின்றன. தம் கணவர் கி.பி. 1800–ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாடுகளின் குடியரசுத் தலைவரானபோது கணவன்–மனைவியராய் வெள்ளை மாளிகையில் குடியேறிய முதல் பெண்மணி ஆவார்.

**அபிசாரம்** கி.மு. 326–ஆம் ஆண்டில் அலெக்சாந்தர் வடமேற்கு இந்தியாவில் நுழைந்தபோது நிலவிய அரசுகளுள் ஒன்று. அதன் அரசர் அபிசாரசு திறமை மிக்கவர். அபிசாரம் (Abisara) என்பது பூஞ்ச், நவசேரா மாவட்டங்களைக் கொண்ட பகுதியாகும். அலெக்சாந்தரை எதிர்ப்பதால் பலன் ஒன்றுமில்லை என்றுணர்ந்த அபிசாரசு அவரிடம் சரண் புகுந்தார்.

**அபிசான்** மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள ஐவரி கோசுட்டு என்னும் நாட்டின் தலைநகர்; அந்நாட்டின் மிகப் பெரிய நகரம். மேற்கு ஆப்பிரிக்கக் கடற்கரையில் அமைந்துள்ள சுறுசுறுப்பு மிக்க துறைமுகப் பட்டணங்களுள் ஒன்று. நாட்டின் தென் பகுதியில் உப்பங்கழியொன்றின் மீது இந்நகரம் எழுந்துள்ளது. கினி வளைகுடாவையும் இவ்வுப்பங்கழியையும் கால்வாய் ஒன்று இணைக்கிறது. கினி வளைகுடா அட்லாண்டிக்குக் பெருங்கடலின் கிளையாகும்.

அபிசானில் (Abidjan) வானைமுட்டும் அலுவலகக் கட்டடங்களும், வீட்டு வசதி வாரிய மாளிகைகளும், தனியார் குடித்தன வீடுகளும் நிறைந்துள்ளன. அத்துடன் மக்கள் நெருக்கம் மிகுந்த பல சேரிப் பகுதிகளும் இங்குண்டு. அபிசான் துறைமுகம் மேற்கு ஆப்பிரிக்காவின் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களின் மையமாகும். பேருந்து வண்டிகளுக்கான மாற்று உறுப்புகள், பீர், சோப்பு போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. கோகோ கொட்டை, காப்பிக் கொட்டை, பேரீச்சம்பழம், தாவர எண்ணெய் போன்றவற்றை அபிசான் பதப்படுத்துகிறது.

அபிசானும், ஐவரி கோசுட்டு நாட்டின் பிற பகுதிகளும் கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கறுப்பு ஆப்பிரிக்கர்களின் கட்டுப்பாட்டை அகற்றி, பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. பிரான்சிடமிருந்து ஐவரி கோசுட்டு 1960–ஆம் ஆண்டில் விடுதலை பெற்றது. அபிசானின் மக்கள் தொகை 13,88,321(1975).

**அபித் அலி (கி.பி. 1898–1973)** இந்திய நாட்டின் விடுதலைக்குப் போராடிய சுதந்தர வீரரும் தொழிற்சங்கத் தலைவருமாவார். இவர் கி.பி. 1898-ஆம் ஆண்டில் பிறந்தார். இந்தியத் தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசின் உறுப்பினராய்த் திகழ்ந்த இவர், பம்பாய்ச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக 1940 முதல் 1952 வரை பணியாற்றினார். பின்னர், 1952 முதல் 1962 வரை மத்திய தொழில்துறைத் துணை அமைச்சராகவும் பதவி வகித்தார். இந்தியத் தொழிலாளர்களின் பேராளராகப் பன்னாட்டு மாநாடுகள் பலவற்றில் கலந்து கொண்டார். இந்தியத் தேசிய தொழிற் சங்கக் காங்கிரசின் பன்னாட்டுப் பேராளராகவும், பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் நிருவாகக் குழுவின் உறுப்பினராகவும், 1967–ஆம் ஆண்டில் கூடிய பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் துணைத் தலைவராகவும், ஐ.சி.எப்.டி.யு வின் நிருவாகக் கழக உறுப்பினராகவும், செனிவாவில் 1953, 1961–ஆம் ஆண்டுகளில் கூடிய பன்னாட்டுத் தொழிலாளர் நிறுவனத்தின் இந்தியக் குழுத் தலைவராகவும் பணியாற்றினார். இந்தியச் சுதந்தரப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றுப் பன்னிரு முறை சிறை சென்றார். இவர் 1973–ஆம் ஆண்டு சூன் திங்கள் 27–ஆம் நாள் பம்பாயில் மாரடைப்பால் காலமானார்.

**அபிதம்மம்** என்பது பௌத்த சமயத் தொகுப்புகளுள் ஒன்று. திரிபிடகம் என்பது பௌத்தர்களின் மூன்று ஆகமங்கள் எனப் பொருள்படும். விநய பிடகம், சூத்திரபிடகம், அபிதம்ம பிடகம் என்பன அம் மூன்று பிடகங்கள். பௌத்த சமயத்தை விளக்கும் மூன்று நூல்களுள் ஒன்றான அபிதம்மம், தருமத்தைக் குறித்த நுணுக்கமான விளக்கங்களையும் நுட்பங்களையும் எடுத்தியம்புகிறது. பௌத்த சமயத்தின் உள நூல் கருத்துகளையும் தத்துவங்களையும் விளக்கும் அடிப்படையை அபிதம்மம் எடுத்துரைக்கிறது.

**அபிதம்மாவதாரம்,** கி.பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தசமயப் பெரியார்களுள் ஒருவரான புத்ததத்த தேரர் என்னும் பௌத்த சமய ஆசாரியாரால் பாலி மொழியில் எழுதப்பட்ட நூலாகும். இந்நூலாசிரியர் புத்த சமயத்தை மேற்கொண்டு வாழ்ந்த ஒரு தமிழர். சோழ நாட்டு உறையூரில் பிறந்த இவர் காவிரிப்பூம்பட்டினம், பூதமங்கலம், காஞ்சிபுரம், சிரீலங்காவில் அநுராதபுரம் முதலிய இடங்களிலுள்ள புத்த விகாரங்களில் இருந்துள்ளார். இவர் உறையூரில் இருந்தபோது தம் மாணவருள் ஒருவரான சுமதி என்பாரின் வேண்டுகோளை ஏற்று, அபிதம்மாவதாரம் என்னும் நூலினை இயற்றியுள்ளார். இந்த நூல், புத்த சமயப் புனித நூலான திரிபிடகத்திலுள்ள அபிதம்ம பிடகத்திற்குப் பாயிரம் போல அமைந்ததாகும். இவர் உறையூரிலிருக்கும் போது இந்நூலைச் செய்தார் என்னும் செய்தி, இந்நூலின் இறுதியில் அமைந்துள்ள, ‘உரகபுர நிவாசிகேன ஆசாரியேன பத்தந்த, புத்ததத்தேன கதோ அபிதம்மாவதாரோ நாமாயன்’ என்னும் பகுதியால் அறியப்படுகிறது. உரகபுரம் என்பது உறையூரின் மறு பெயராகும். சோழ நாட்டையும் காவிரிப்பூம் பட்டி

னத்தையும் இந்நூல் சிறப்பித்துக் கூறுகிறது. அதில் காவிரிப்பூம் பட்டினம் செல்வர்கள் செறிந்த நகரம் என்றும், அங்குள்ள பௌத்தப் பள்ளிகளுள் ஒன்று கணதாசரால் கட்டப்பட்டது என்றும், அதில் இந்நூலாசிரியர் தங்கி இருந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நூலாசிரியர் தங்கியிருந்த புத்தப்பள்ளி வெண்சுதை தீற்றப் பெற்றுக் கயிலாயம் போல வெண்ணிறமாக விளங்கியது என்று கூறப்பட்டுள்ளது. பாலி மொழியில் அமைந்துள்ள இந்நூல் சொற்சுவை, பொருட்சுவை மலிந்துள்ளதாக அறிஞர்கள் கருதுகிறார்கள். பழங்காலத்தில் புத்த சமயத்தை மேற்கொண்டிருந்த தமிழர்களில் சிலர் அச்சமய நூலறிவில் உயர்ந்து, அச்சமயத்திற்குரிய மொழியாகக் கருதப்படும் பாலி மொழியில் சிறந்த நூலை உருவாக்கும் திறம் பெற்றுத் திகழ்ந்தமைக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாக உள்ளது.

**அபிதாசு¹** எகிப்தின் தொன்மையான நகரம். கெய்ரோவிலிருந்து தெற்காக 512 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. எகிப்து நாட்டு அரச குடும்பத்தினர்களைப் புதைக்கும் இடமாக இது இருந்தது அபிதாசு (Abydos) என்னும் கிரேக்கச் சொல் அப்து என்னும் எகிப்தியப் பெயரிலிருந்து வந்தது என்பர். இந்நகரத்தில் ஓசிரிசு (Osiris) என்னும் தெய்வத்தின் கோயில் உள்ளது. இதனருகில் எகிப்திய அரசர்களின் கல்லறைகளும் நினைவுச் சின்னங்களும் உள்ளன. இத்தெய்வத்தின் நினைவாக நிலத்திற்குக் கீழே கோயிலமைத்து எகிப்திய மன்னரொருவர் விழா நடத்தினார். இரண்டாம் இராமேசெசும் (Ramesses II) இத்தெய்வத்தின் நினைவாகக் கோயிலொன்றை இந்நகரத்தில் கட்டியுள்ளார். எகிப்திய நாகரிகத்தின் பழம்பெருமையை இங்குச் சிதைவுண்டிருக்கும் கோயில்களும் கட்டிடங்களும் உணர்த்துகின்றன.

அபிதாசு² ஆசியா மைனரிலுள்ள பண்டைய நகரம். இந்நகர் எல்லசுபாண்ட்டு (Hellespont) நீர்ப்பிரிவிற்குக் கிழக்கே 1.6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குக் கி.மு. 675-இல் கிரேக்கர்கள் குடியேறினார்கள். முதலாம் செர்செசு (Xerxes I) என்னும் பாரசீக அரசர், கி.மு. 480-இல் எல்லசுபாண்ட்டு நீர்ப் பிரிவினைப் படகின் மூலம் கடந்து, அபிதாசின் வழியாகக் கிரீசின் மீது படையெடுத்தார். இந்நகர மக்கள், மாசிடோனிய அரசர் ஐந்தாம் பிலிப்புடன் போராடிப் பெரும் புகழ் பெற்றவர்கள். ஆனால் போரில் இந்நகரம் பிலிப்பின் வசமாயிற்று.

**அபிதான கோசம்**: கலைக்களஞ்சிய அமைப்பில் உருவாகியுள்ள இந்நூல், யாழ்ப்பாணத்து மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளையால் எழுதப்பெற்றது. தமிழில், வீரமாமுனிவரின் சதுரகராதி தோன்றிய பின்னர்த் தமிழ்ச் சொற்கள், பெயர்கள் ஆகியவற்றிற்குப் பொருள் காணும் கருவிநூல் முயற்சியில் புதிய திருப்பம் உண்டாகியது. நூற்பாக்களாலும் செய்யுட்களாலும் அமைந்த திவாகரம், சூடாமணி நிகண்டு போன்ற பொருள் காணுதற்கமைந்த நூல்களின் அமைப்பு மாறிச் சொற்களை அகரவரிசையில் அமைத்து, அவற்றிற்கெதிரே அவற்றின் பொருள் தரும் அகராதி அமைப்புத் தோன்றி வளர்வதாயிற்று. தமிழகத்தில் அச்சியற்றும் வசதிகள் பெருகியபோது பலவகையான அகராதிகள் தமிழில் தோன்றலாயின. சொற்பொருளையேயன்றி ஆசிரியர், நூல், ஊர், மூலிகை போன்றவற்றின் விளக்கம் தரும் கலைக் களஞ்சியம் போன்ற பல நூல்களும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் தோன்றின. அவ்வகையில் தமிழில் முதலில் தோன்றிய நூலாகக் கருதத்தக்கது அபிதான கோசம் ஆகும். இது கி.பி. 1902-ல் யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பெற்றது. "வேத ஆகம புராண இதிகாசங்களில் கூறப்பட்டுள்ள தெய்வங்கள் தேவர்கள், இருடிகள், முனிவர்கள், அசுரர், யட்சர், கந்திருவர், கின்னரர், அவதாரபுருடர், பத்தர், அரசர், வள்ளல், வித்துவான்கள்" ஆகியோர் பற்றியும், "புண்ணிய சேத்திரம், நதி, தடாகம், விருட்சம்" முதலியன பற்றியும் அமைந்த விளக்கக் குறிப்புகள் இதன்கண் இடம்பெற்றுள்ளன என்று இதன் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இந்த அடிப்படையில் இதனினும் விரிவாக அபிதான சிந்தாமணி, என்னும் நூல் பின்னர்த் தமிழகத்தில் வெளிவந்துள்ளது.

**அபிதான சிந்தாமணி** தமிழ் மொழியில், கலைக் களஞ்சிய முறையில் முதன் முதலாகத் தமிழகத்தில் தோன்றிய நூல். ஆ.சிங்காரவேல் முதலியார் தாம் கி.பி. 1890-ஆம் ஆண்டு முதலாகத் தொகுத்த குறிப்புகளைக் கொண்டு கி.பி. 1910-ஆம் ஆண்டில் இந்நூலை வெளியிட்டார். யாழ்ப்பாணத்து மானிப்பாயில் வாழ்ந்த ஆ. முத்துத்தம்பி பிள்ளையால் அபிதான கோசம் என்னும் பெயரில் ஒரு நூல் கி.பி. 1902-ஆம் ஆண்டு வெளிவந்தது. யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்ட அந்நூல் ஆயிரம் பெயர்களுக்கு விளக்கம் தந்துள்ளது. அபிதான சிந்தாமணி, மேலும் பல பெயர்களுக்கு மிகுதியான விளக்கந்தருகின்றது. இந்நூல் சீமூக ஆண்டில் (1934-35) நூலாசிரியருக்கு மகனாகிய ஆ. சிவப்பிரகாச முதலியரால் திருத்தப் பெற்று விரிந்த நூலாக வெளியிடப்பட்டது. இது மீண்டும் கி.பி. 1982-ஆம் ஆண்டில் புது தில்லியைச் சேர்ந்த நூல் வெளியீட்டு நிறுவனம் ஒன்றினால் மறுதோன்றிப் பதிப்பாக வெளியிடப் பெற்றுள்ளது. இந்நூலில் தமிழ் இலக்கணம், இலக்கியம், கல்வெட்டு, வரலாறு, சோதிடம், கலை, பல்வகைச் சமயம், நிமித்தம், தானம், கனாநிலை, மருத்துவம், நாடு, அரசர், புல

வர்கள், நூல்கள் பற்றியும், வடமொழியில் உள்ள வேதம், சுருதி, இதிகாச, புராணச் செய்திகள் பற்றியும் விளக்கம் தரப்பெற்றுள்ளன. பொருள் விளக்கம், விவரத் தொகுப்பு ஆகிய முறைகளில் தமிழ் பயில்வோர், பயிற்றுவோர், ஆய்வோர் போன்ற அனைவர்க்கும் துணை செய்யும் ஒரு களஞ்சியமே இந்நூலாகும். பொதுவாக அமைந்த விரிவான நூற்பகுதியோடு வேதம் திருமுறை அரசர் முனிவர் முதலிய பிரிவுகள் பற்றிய பரம்பரைச் செய்திகளை 48 தலைப்புகளிலும், சமயம், மடம், கோயில் பற்றிய செய்திகளை 15 தலைப்புகளிலும், சோதிடம் பற்றிய செய்திகளை 4 தலைப்புகளிலும், சாதி, நாடு பற்றிய செய்திகளை 7 தலைப்புகளிலும், பிறவற்றை அநுபந்தப் பகுதியிலும் இந்நூல் கூறுகிறது. பரந்த அறிவுத் திறம் சான்ற செய்திகளை இந்நூல் அகரவரிசையில் சுருக்கமும், விளக்கமும், தெளிவும் பொருந்தச் செப்பம் செய்து வழங்குகிறது. அ.அ.

**அபிநந்தனர்**: சமணத் தீர்த்தங்கரர்களில் நாலாமவர். இட்சுவாகு மரபில் தோன்றிய சுயம்பர மன்னரின் புதல்வர். இவர் தாயின் பெயர் சித்தார்த்தா தேவி. இவர் வளர் பிறையில் துவாதசி, புனர்பூச நட்சத்திரத்தில் பிறந்தார்.

**அபிநயம்** பரதநாட்டியக் கலையின் உறுப்புகளுள் ஒன்றாகும். இது அவிநயம் என்றும் கூறப்படும். அபிநயம் ஆடலுக்கான கதையையொட்டிய ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பதாகவோ ஒரு குறிப்பிட்ட மனிதரைக் குறிப்பதாவோ இருக்கலாம். அபிநயத்தின் குறிக்கோள், ஒரு செய்தியை ஆடல் மூலம் மற்றவர்களுக்கு உணர்த்துவதாகும். ஆடலைத்தவிர நடிப்பு, நாடகம் இவற்றின் வாயிலாகவும் ஒரு செய்தியைப் பிறருக்கு உணர்த்தலாம். அபிநயம் என்னும் வடமொழிச் சொல் 'நிகழ்ச்சியை அவையினருக்கு உணர்த்துதல்' என்று பொருள்படும்.

ஆடற்கலையில் ஆகாரியம், வாசிகம், ஆங்கிகம், சாத்துவிகம் என்னும் நான்குவிதமான அபிநயங்கள் அடங்கியுள்ளன.

முக ஒப்பனை, உடை, அணி, அலங்காரம், மேடை அமைப்பு ஆகியவற்றின் ஒருங்கிணைவே ஆகாரியம் ஆகும். ஆடற்கலைஞரின் உடைகளும் அணிகலன்களும் பண்டைய மரபினை ஒட்டி அமைந்திருக்கும். வாசிகம் என்பது ஆடலுக்கான பாடலைக் குறிக்கும். பண்டைய காலத்தில் ஆடற் கலைஞர்கள் தாமே ஆடலுக்கான பாடலைப் பாடி வந்தார்கள். இக்காலத்தில், ஆடல் நிகழ்ச்சியில் இசைக்கருவியாளரும் பாடகரும் அரங்கின் ஒரு பகுதியில் அமர்ந்திருக்கின்றனர். ஆடற்கலைஞர்கள் பாடுவதில்லை. குறவஞ்சி நாட்டியம், பாகவத மேள நாடகம் போன்றவைகளில் குறிப்பிட்ட சில கலைஞர்களுக்கு மட்டும் பேசவேண்டிய உரைநடைப் பகுதிகள் உள்ளன. ஆங்கிகம் என்பது உடல் உறுப்புகளின் அசைவுகளும், அவை தெரியப் படுத்தும் மனவெழுச்சிகளும் ஆகும். அங்கங்களால் செய்யப்படுவது ஆங்கிகம். பரதமுனிவர் நாட்டிய சாத்திரத்தில் ஆங்கிக அபிநயத்தை உடல் உறுப்புகளை அடிப்படையாகக் கொண்டு பாகுபாடு செய்கிறார். ஆங்கிக அபிநயம், 'அங்கம்', 'உபாங்கம்', 'பிரத்தியங்கம்' என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டது. தலை, கை, மார்பு விலாப்பக்கங்கள், இடுப்பு, கால் என்னும் ஆறும் அங்கங்கள் ஆகும். கண், புருவம், மூக்கு, உதடு, கன்னம், முகவாய்க் கட்டை என்னும் ஆறும் உபாங்கங்கள் ஆகும். கழுத்து, முழுக்கைகள், முதுகு, வயிறு, தொடை, கணுக்கால் என்னும் ஆறும் பிரத்தியங்கங்கள் ஆகும். உடல் உறுப்புகள் எல்லாவற்றினாலும் விளக்கப்படுவது ஆங்கிக அபிநயம். ஆங்கிக அபிநயத்தில் காதல் போன்ற உணர்ச்சிகளை உணர்த்துதல் கைசிகி விருத்தியின் பாற்படும். அழகிய ஆடைகளும் அவற்றிற்கு இயைந்த இசையும் ஒருங்கிணையப் பெற்ற ஆடலும் ஆகிய இவையாவும் சேர்ந்தது கைசிகி ஆகும். இது தாண்டவம் இலாசியம் என்னும் இரு ஆடல் வகைகளுள் இலாசியத்தின் பாற்படும். இக்காலத்தில் இந்தியத் திரைப்படங்களிலும் நாடகங்களிலும் தலைவி மகிழ்ச்சி, துயரம் ஆகிய உணர்ச்சிகளைக் காட்டும்பொழுது, மென்மையாகப் பாடுவதும் அதற்கேற்ற விதத்தில் ஆடுவதும் இந்தக் கைசிகி விருத்தியின் பாற்படும். ஆங்கிக அபிநயம் பதார்த்த அபிநயம், வாக்கியார்த்த அபிநயம் என இரு வகைப்படும். வாக்கியார்த்த அபிநயம் பாடலில் வரும் எல்லாச் சொற்களின் பொருளையும் உணர்த்துதல் ஆகும். பதார்த்த அபிநயம் என்பது ஒரு சொற்றொடரின் பொருளைப் பொதுவாகக் குறிப்பிடுதல் ஆகும். இவ்விருவகைப்பட்ட அபிநயங்களையும் உணர்த்துவதற்குச் சாகம், அங்குரம், நிருத்தம் ஆகிய மூன்று முறைகள் உள்ளன. உணர்த்தப்பட வேண்டிய பொருள் அனைத்தையும் உணர்த்துதல் சாகம் எனப்படும். இதற்குரிய கையசைவுகள் பல உள்ளன. இக்கையசைவுகள் அபிநய அத்தம், நிருத்த அத்தம் என இருவகைப்படும். அபிநய அத்தம் பதார்த்த அபிநயத்தை உணர்த்தப் பயன்படுத்தப் படுகிறது. அபிநய அத்தங்களைப் பயன்படுத்தும் முறை அங்குரம் எனப்படும். ஆடல் நிகழ்ச்சியின் தொடக்கத்தில் சரீ, கதி ஆகிய இரு கால் அசைவுகளும் பொருந்திய கரணங்கள் அமைந்த அங்ககரங்கள் இறை அருள் வேண்டும் முறையில் செய்யப்படுகின்றன. அங்ககரங்களில் கை அசைவுகள் அடங்கியுள்ளன. வில், அம்பு, வாள் போன்ற போர்க்கருவிகளை ஏந்திப் போர் செய்யும் முறையைக் குறிப்பிடும் அபிநயங்கள் மண்டலங்கள் எனப்படும். நிருத்தங்களுக்கு உடற்பயிற்சியே அடிப்படை ஆகும். உடலின்

ஒவ்வொரு உறுப்பிற்கும் உரிய பயிற்சியை நாட்டிய சாத்திரம் விளக்குகிறது. இப்பயிற்சிகள் உடலை ஆடலுக்குத் தக்க முறையில் வளைந்து கொடுக்கக் கூடியதாக மாற்றுகின்றன. சதிர் என்ற ஆடல் நுண் முறையின் அடவுகளுக்கான கால் அசைவுகளைக் காட்டிலும் பன்மடங்கு கடினமான பயிற்சிகளும் நாட்டியசாத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவைகளுக்குப்பின் உடல் நிலை அல்லது தானம் என்பது செய்யப்படுகிறது. சரீ, நிருத்த அத்தம், தானம் ஆகிய மூன்றும் சேர்ந்தது கரணம் எனப்படும் (காண்க: அடவு). அபிநய அத்தங்கள் பொருள் உணர்த்துவன. நிருத்த அத்தங்கள் ஆடலுக்கு அழகு சேர்க்கின்றன. கரல்களின் முழுமையான அசைவு சரீ எனப்படும். நாட்டிய சாத்திரத்தில் 16 பூசரீக்களும் (நிலத்தில் நகருதல்) 16 ஆகாச சரீக்களும் (நிலத்தினின்று மேல் எழும்புதல்) விளக்கப்பட்டுள்ளன. உடலை மென்மையாக எழுப்பிச் செய்யப்படும் அபிநயம் 'ஆகாசசரீ' எனப்படும். இது மேனாட்டு நடனங்களில் மரபுக் குழு நடனம் (Classical Ballet) ஆட்டத்தை ஓரளவு ஒத்திருக்கிறது. ஆனால் இம்முறைகள் பெரும்பாலும் பழக்கத்தில் இல்லை. அபிநயங்கள் நான்கு விருத்திகளில் (வழிகளில், உணர்த்தப்படுகின்றன. அவை பாரதி, ஆரபடி, சாத்துவதி, கைசிகி என்பன. பாரதி என்பது வாசிக அபிநயத்தின் பாற்படும். இது ஆடலுக்கான பாடலின் சொல்லழகினையொட்டியது. சினம், வெறுப்பு, வியப்பு போன்ற உணர்ச்சிகளை உணர்த்துவது ஆரபடி ஆகும். இது நாட்டிய தருமி முறையின் பாற்படும். இதற்குப் பெருமளவில் அரங்கு அமைப்புகளும் ஆடை அணிகலன்களும் ஒப்பனையும் தேவைப்படும். ஆரபடி விருத்தியில் ஆகாரிய அபிநயம் பயன்படுத்தப்படுகிறது. சாத்துவதி விருத்தி மனவெழுச்சியின் அடிப்படை உணர்வுகளைத் தெரியப்படுத்துதல் சாத்துவிக அபிநயம் ஆகும். இது உலக தருமியின் பாற்படும். உணர்ச்சிகளைக் காட்டுவதற்கு அளவுக்கு உட்பட்ட அபிநயங்களைப் பயன்படுத்துதல் இதன் பாற்படும்.

மற்றொரு பாகுபாட்டின்படி ஆங்கிக அபிநயம், மூவகைகளாகப் பிரிக்கப்படுகிறது. இவை முகசம், சாரீரம், சேட்டாகிருதம் என்பனவாம். முகசம் என்பது முகத்தின் உறுப்புகளால் காட்டப்படும் அபிநயம். சாரீரம் என்பது உடலின் உறுப்புகளால் காட்டப்படுவது. சேட்டாகிருதம் என்பது உடல் முழுவதும் செய்யும் நடை போன்ற அசைவுகளால் காட்டப்படும் அபிநயம்.

சிலப்பதிகார உரையில் அபிநயம் பற்றி விரிவான விளக்கங்கள் காணப்படுகின்றன. மாதவி ஆடிய கூத்து வகைகளுக்கு அடியார்க்கு நல்லார் கொடுத்துள்ள விளக்கங்களினின்று பின்வருவனவற்றை அறியலாம்

அபிநயம் இருபத்து நான்கு வகைப்படும் என்றும், அந்த அபிநயங்களை எவ்வாறு ஆடல் கலைஞர்கள் உணர்த்துதல் வேண்டும் என்றும் அடியார்க்கு நல்லார் விளக்கியுள்ளார்.

அவர் கருத்துப்படி வெகுண்டோன் அபிநயமாக மடித்த வாய், அலர்ந்த மார்பு. தடித்த புருவம், சுட்டிய விரல், கன்றின உள்ளம், கைபுடைத்திடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஐயமுற்றோன் அபிநயமாக வாடிய உடல் உறுப்புகள், மயங்கிய நோக்கம், புலன்கள் தகர்தல், பேசாதிருத்தல், பிறழ்ந்த செயல், வான் திசை நோக்கல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மடியுற்றோன் அபிநயமாக நொடித்தலுடன் கொட்டாவி மிகவுடைமை, முதுகு நிமிர்த்தல், காரணமின்றி ஆழ்ந்து மடிந்திருத்தல், பிணியின்றியே சோர்ந்த நிலை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.களித்தோன் அபிநயமாகக் கவிழ்ந்தும் சோர்ந்தும் தாழ்ந்தும் தளர்ந்தும் தெளிவற்ற சொல் பேசுதல், களிமிக்க நோக்கு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். உவந்தோன் அபிநயமாக இனிய நோக்கு, இனிய உள்ளம், சினமில்லாத புன்முறுவல் ஆகியவற்றைக்குறிப்பிடலாம். அழுக்காறு உடையோன் அபிநயம் கூம்பிய வாய், சுருக்கமாகப் பேசுதல் ஆகியனவாகும். மகிழ்ச்சியுடையோன் அபிநயம் துன்பம் நீங்கிய யாக்கை, தயங்கிய பெரு மகிழ்வு, அழகுணர்வு, சொற்பொலிவு, மலரும் அணிகலனை மார்பில் அணிதல் ஆகியனவாகும். தெய்வமுற்றோன் அபிநயம் கலக்கம், கடித்த பற்கள், துடித்த புருவம், துளங்கிய நிலை, சிவந்த முகம், செருக்கு நிலை ஆகியனவாகும். பற்களைக் கடித்து இறுகிய நுரை சேர்ந்த வாய், பேச முற்பட்டும் பேச இயலாமை, உரைக்கத் தொடங்கியும் உணர்விலாமை, விழிக்க முற்பட்டும் விழிக்க இயலாமை, ஒழுங்கிலாமை, முகம் ஒளியிழத்தல் ஆகியன ஞஞ்ஞையுற்றோன் அபிநயமாகும். முன்னர் நிகழ்ந்ததை உணராத நிலை, கன்னத்தில் கை, எக்காரியத்தையும் முடிக்க இயலாமை, பிறர் சொல்வதனை உணரமுடியாத நிலைமை ஆகியன சிந்தைவயப்பட்டவன் அபிநயமாகும். இருபுறமும் நிமிர்ந்தும் கவிழ்ந்தும் படுத்திருத்தல் உறக்கமில்லாதவன் அபிநயமாகும். குறுங்கொட்டாவி, உயிர்ப்பு, தூங்கிய முகம், தூங்கிய உடல் இன்துயில் கொண்டு எழுந்தவன் அபிநயமாகும். அச்சம், துணிவு இழந்த நிலை, விறைத்த உடல், கண்ணின் கருமணி மறைந்து வெண்மணி தோன்றல் ஆகியவை செத்தோன் நிலை அபிநயமாகும். மழையில் நனைந்தவன் அபிநயமாக மெய்நடுக்கம், தளர்ந்த பேச்சு, போர்வை வேண்டல், சித்தம் கலங்கிய நிலை, விழிகளில் நீர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நாணமுற்றோன் நிலையில் இறைஞ்சிய தலை, மறைந்த செயல், வாடிய முகம், வளைந்த உடல், கீழ்நோக்கு

ஆகியவற்றைக் குறிப்பிடலாம். வருத்தமுற்றோன் அபிநயமாகத் துயருடைமை, சோர்ந்த உடல் சோர்ந்த தலை, உலர்ந்த வாய், குறுகிய உடல் ஆகியவற்றைக் கூறலாம்.

கண்ணீரை விரல் நுனியால் தெறித்தல், வளைந்த புருவம், வாடிய முகம், வெளிச்சத்தைக் கண்டு கூசும் விழிகள் ஆகியன கண்ணோயுற்றோன் அபிநயமாகும். தலைநோவுற்றோன் அபிநயமாகத் தலையை ஆட்டுதலும், வளைந்து அமர்தலும், பெருவிரல்களால் நெற்றியைப் பிடித்தல், ஒடுங்கிய கண்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அழல்திறம் பட்டோன் அபிநயம் அழல், வெயில், சுடர் இவைகளைக் கண்டு அஞ்சுதல், நிழல், நீர் ஆகியவற்றை விரும்பல், குளிர் நீர் வேண்டல் ஆகியனவாகும். சீதமுற்றோன் அபிநயமாக ஈரப்போர்வையை விலக்குதல், வெயிலும் தழலும் வேண்டல், தெளிவில்லாத பேச்சு ஆகியனவும், வெப்பமுற்றோன் அபிநயமாகத் தாகம், வெம்மை, அச்சமுற்ற இயக்கம், வெம்பிய விழி, நீருண் வேட்கை ஆகியனவும், நஞ்சுண்டோன் அபிநயமாகப் பற்களைக் கடித்தல், வாயில் நுரை, பிறர் முகம் நோக்கி ஒன்று கூற முயன்றும் கூற இயலாமை ஆகியனவும் கூறப்படும்.

சிலப்பதிகாரத்தில் ஒற்றைக்கை அபிநயம் பிண்டி என்றும், இரட்டைக்கை அபிநயம் பிணையல் அல்லது இணைக்கை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒற்றைக்கை எனப்படும் பிண்டி முப்பத்து மூன்று வகைப்படும். அவையாவன: பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, பதுமகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, குடங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிர சூடம், பிசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம் மகரமுகம், வலம்புரி என்பனவாம். பிணையல் எனப்படும் இரட்டைக்கை பதினைந்து வகைப்படும். அவையாவன: அஞ்சலி, புட்பாஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கற்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், அபயவத்தம், சயந்தம், வருத்தமானம் என்பனவாம். இவை தவிர வீரம், அச்சம், இழிப்பு, அற்புதம், காமம், அவலம், நகை, நடுவுநிலைமை, உருத்திரம் ஆகிய ஒன்பது சுவைகளுக்கும் ஏற்ற அபிநயங்களையும் அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிய சாத்திரத்தின் 8,9-ஆம் அதிகாரங்களில் பரதர், உடல் உறுப்புகளின் செய்கைகளைப் பல வகைகளாக வகுத்து, எந்தெந்தச் செயலை எந்தெந்த மனவெழுச்சியில் அல்லது கருத்தில் காட்ட வேண்டும் என்பதனைத் தெளிவாகக் கூறியுள்ளார். உடல் உறுப்புகளுள் கைகளின் அசைவுகளுக்கே ஆடலில் சிறந்த இடம் தரப்படுகிறது. இவை நிருத்த அத்தங்கள் எனப்படும். அத்தங்கள் அசம்யுத அத்தம் (ஒற்றைக் கை அபிநயம்) சம்யுத அத்தம், (இரட்டைக்கை அபிநயம்), நிருத்தம் என மூவகைப்படும். கையசைவுகளின் விளக்கங்களை நந்திகேசுரர் எழுதிய அபிநய தருப்பணம் என்னும் நூலில் விரிவாகக் காணலாம். அத்தங்களைப் பயன்படுத்தும் முறை 'வினியோகங்கள்' எனப்படும். நாட்டிய சாத்திரம் 24 ஒற்றைக் கைகள், 13 இரட்டைக் கைகள், 27 நிருத்தக் கைகள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. அபிநய தருப்பணம் 28 ஒற்றைக் கைகளையும், 23 இரட்டைக் கைகளையும், 13 நிருத்தக் கைகளையும் குறிப்பிடுகிறது. இவற்றைப் பயன்படுத்தும் முறைகளும் (வினியோகங்கள்) இந்நூல்களில் வேறுபடுகின்றன. அபிநய தருப்பணம், ஆடற் கலைஞர், ஆடலுக்கான பாடலைப் பாடியவாறு உடல் உறுப்புகளால் அதன் விளக்கத்தைத் தெரியப் படுத்த வேண்டும் என்றும், அதற்கேற்பக் கால்கள் தாளமிட வேண்டும் என்றும் குறிப்பிடுகிறது. கைகள் செல்லும் வழிக் கண்கள் செல்ல வேண்டும்; கண்கள் செல்லும் வழி மனம் செல்ல வேண்டும்; மனம் செல்லும் வழி மனநிலை செல்லுதல் வேண்டும். மனநிலை அமையப்பெறின் ஆடலுக்கு நயம் ஏற்படும் என்று அபிநய தருப்பணம் கூறுகிறது.

அபிநய தருப்பணம், நாட்டிய சாத்திரம் ஆகிய நூல்களைத் தவிர சுபங்கரர் எழுதிய அத்தமுத்தாவளி, சாரங்க தேவர் எழுதிய சங்கீதரத்னாகரம் போன்ற பல நூல்கள் அபிநயத்தின் விளக்கங்களைத் தருகின்றன. அபிநய தருப்பணம் தென்னகத்தில் பெரும்பாலான நட்டுவனார்களால் பின்பற்றபட்டு வருகிறது. கேரளத்தில் கதகளி அபிநயத்திற்காக 'அத்த இலட்சண தீபிகை' என்னும் நூல் தொகுக்கப்பட்டது. வங்காளம், அசாம், நேப்பாளம் போன்ற இடங்களில் அத்த முத்தாவளி பின்பற்றப்பட்டு வந்துள்ளது. பதாகை (பெருவிரலை வளைத்து மற்ற விரல்களைச் சேர்த்து வைத்தல்) என்னும் ஒற்றைக்கை அபிநயம் கொண்டு மேகம், தடுத்தல், வீரம், நிலவு, கடும்வெயில், அலை, சமத்துவம், மவுனம், பனைஓலை, கவசம், அருள் செய்தல், சிறந்த அரசன், ஒருமாதம், ஓர் ஆண்டு, மழை நாள் போன்றவற்றுள் ஏதேனும் ஒன்றைக் குறிக்கப் பயன்படுத்தலாம் என்று அபிநய தருப்பணம் கூறுகிறது. கணவன், மனைவி, தாய், தந்தை, மாமன், மாமி, மைத்துனர், கொழுந்தன், நாத்தி, அண்ணன், தம்பி, மருமகன், மருமகள் போன்ற உறவுமுறைகளையும், திருமால், திருமாலின் பத்துப் பிறப்புகள், சிவன், இந்திரன், எமன், வருணன், வாயு, குபேரன், திருமகள், கலைமகள், பார்வதி, ஆகிய தேவர்களையும் நவக்கிரகங்களையும் குறிப்பிடவும்

பெருங்கடல்கள் மாநதிகள் ஏழுலுகங்கள் ஆகிய வற்றைக் குறிப்பிடவும் உரிய கை அசைவுகளை அபிநய தருப்பணம் விளக்குகிறது.

அபிநயம், உலக தருமி, நாட்டிய தருமி என இரு வகைகளில் அமையும். உலகதருமி என்னும் முறை அன்றாட வாழ்க்கையில் காணப்படும் நிகழ்ச்சிகளுடன் ஒட்டி அமையும் அபிநயங்களைக் குறிக்கும். தனிப் பட்ட கலைக்கூறு கொண்ட அபிநயம் நாட்டியதருமி எனப்படும். கண்ணீர் பெருகுவதைக் காட்டுவதற்கு ஆடற்கலைஞர் கைகளால் கண்ணீர் வருவதாகக் காட்டுவதுடன் முகக்குறிப்பையும் இணைத்து அபி நயம் செய்வர். இது உலகதருமி எனப்படும் அபிநய முறை ஆகும். இவ்வாறன்றி வேறுசில குறிப்பிட்ட அபிநயங்களினால் கண்ணீர் பெருகுவதைக் காட்டுவது நாட்டிய தருமி முறை ஆகும்.

சாத்துவிகம் என்பது மனவெழுச்சிகளின் வாயி லாக ஒருவன் அடையும் உடல் மாற்றங்களைக் குறிக் கின்றது. மகிழ்ச்சி அல்லது துயரத்தில் கண்ணீர் விடுதல், வியர்வை, மயிர் சிலிர்த்தல், உடல் அசை வற்றிருத்தல், குரல் மாற்றம், உடல் வெளுத்தல், நடுக்கம், மெய்ம்மறத்தல் என்னும் எட்டு வகை மாற்றங்கள் சாத்துவிகம் எனப்படும். வடமொழி நூல்கள் இதனை இராசாபிநயம் என்று கூறுகின்றன. அபிநயத்தில் சாத்துவிக அபிநயமே தலையாய இடத்தைப் பெறுகிறது. காதல், வீரம், இரக்கம், வியப்பு, சினம், நகைச்சுவை, அச்சம், வெறுப்பு, அமைதி ஆகிய நவரசங்களும் இதில் அடங்கும்.

பரதர், பெண்களுக்கு இயல்பாகவே சாமானிய அபிநயம் எனப்படும் இயல்பு அபிநயம் அமைந் துள்ளது என்று கூறுகிறார். நாட்டிய சாத்திரத்தில் சாமானிய அபிநயம் என்பது பற்றி விளக்கம் தரும் பொழுது பரதர் பெண்களிடம் பின்வரும் பத்து இயல்பான நளினங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின் றார். அவை, விளையாட்டுக் காட்டல்(லீலை), சிருங் காரம் (விலாசம்), உடை அலங்கோலம் (விச்சிதி), குழப்பம் (விப்பிரமம்), உளக்கூறு மாற்ற நிலை (கில கிஞ்சிதம்), அன்பு காட்டுதல் (மத்தயிதம்), பொய்க் கோபம் கொள்ளல் (குத்தமிதம்), அசட்டை கொண் டது போல் இருத்தல் (விபோகம்), நெகிழ்வு (இலலி தம்), மனவெழுச்சியின்மை (விகிரும்) என்பனவா கும். இந்தப் பத்து நளினங்களும் சாத்துவிக அபி நயத்தில் அடங்குவன. பலவகைப்பட்ட உளநிலை களை அபிநயத்தில் மிகுதிப்படுத்திக் காட்டுவதற்கு இவை பயன்படுகின்றன. பாட்டுடைத்தலைவி அல் லது வெகுளித்தனமான இளம் பெண் காதல் வயப் படும்பொழுது இத்தகைய நளினங்களைக் காண லாம். இவையன்றிக் கற்றுக் கொள்ளப்படும் சில நளினங்களையும் அபிநயத்தின் வாயிலாகக் காட்ட லாம். இந்த நளினங்கள் அழகு, ஈர்ப்பு, மென்மை, பொலிவு, தன்னடக்கம், மனஉறுதி, பெருந்தன்மை என்பனவாகும். ஆடற்கலைஞர் இச்சுவைகளைத் திறம்படத் தம் அபிநயத்தின் வழி வெளிப்படுத்துதல் ஆங்கிக அபிநயத்திற்கு அழகு சேர்ப்பதாகும். எடுத் துக்காட்டாகச் சிருங்காரச் சுவையைக் காட்டும் பொழுது ஆடற்கலைஞர், ஒரு சுரத்தின் அதிர்வு களைப் போல ஒன்றன்பின் ஒன்றாக, மிகுந்த வேகத் துடன் இந்த நளினங்களைத் தம் அபிநயத்தில் காட்டுவர். காதலனை எதிர்பார்த்து நிற்கும் பாட்டு டைத்தலைவி பின்வரும் பல்வேறு நிலைகளில் இருப்ப தாகப் பரதர் கூறுகிறார். அவை அலங்கார வயம் (பாட்டுடைத் தலைவி கூடலை எண்ணித் தன்னை அலங்கரித்துக் கொள்ளும் நிலை, காதலனைத் தன் வயப்படுத்தும் நிலை, ஊடல் காரணமாகக் காதல னைப் பிரிந்து நிற்கும் நிலை, பிரிந்த காரணத்தினால் சோர்வு கொண்ட நிலை, காதலனால் ஏமாற்றப் பட்ட நிலை, அடிக்கடி தன்னைப் பிரிந்து வெளி யூர் செல்லும் காதலனைக் கொண்டவள் நிலை, காதலனைச் சந்திப்பதற்குத் தானே தேடிச் செல்ப வள் நிலை என்பனவாகும். காதலனைப் பிரிந்த காத லியின் மனவெழுச்சிகளை ஏக்கம், கவலை, காதலன் புகழ் கூறுதல், நினைவு கூர்தல், துயர், அழுகை (விலாபம்), பைத்தியம், நோய், செயலற்ற நிலை, சாவு ஆகியவற்றை ஆடற்கலைஞர் சாத்துவிக அபி நய வரிசையில் காட்டுவர். இவற்றுள் இறுதியில் கூறப் பட்ட 'சாவு'க்குரிய அபிநயத்தைப் பொதுவாக அபிநயத்தின் வழிக்காட்டுவது மரபில்லை. இத்தகைய நிலைகளை ஆடற்கலைஞர் அபிநயத்தில் காட்டு வது மிகவும் கடினம். இக்காலத்து ஆடற்கலைஞ ருள் மிகச் சிலரே இவற்றை அபிநயத்தின் வழிக் காட்டவல்லவராய் இருக்கின்றனர். எடுத்துக்காட் டாகச் சாவளி, பதம், வருணம் போன்ற ஆடற் பகுதி களிலும் செயதேவர் இயற்றிய கீதகோவிந்தப் பாடல்களுள் புகழ்பெற்ற அட்டபதிகளுக்கான ஆடல் களிலும் மேற்குறிப்பிட்ட பல்வேறு பாட்டுடைத் தலைவியின் நிலைகளை அபிநயமாகக் காட்டுகின்ற னர். இத்தகைய ஆடற் பகுதிகளின் நுட்பமான அழ கினைச் சுவைப்பது கலை உணர்வு படைத்தவர் களுக்கே இயலும்.

துணை நூல்கள் :

**Sunil Kothari**, "Bharatha Natyam: Indian Classical Dance Art", 1981.

Dances of India: "Bharathiya Natya and Nritta", (Ed.) Vivekanadnda Kendra Patrika, 1981.

"சிலப்பதிகாரம்-அடியார்க்குநல்லார் உரை".

**அபிநவகுப்தர்** சைவ சமயப் பிரிவான காசுமீர சைவ சமயத்தை உருவாக்கியவர்; வடமொழிப் புலமை சான்றவர். கி.பி. 8-ஆம் நூற்றாண்டில், காசுமீர நாட்டு மன்னனாகத் திகழ்ந்த இலலிதாதித்தனால் இவர்தம் முன்னோர் கானியகுப்சத்திலிருந்து காசுமீரத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இவர் தந்தையார் நரசிம்ம குப்தர், தாயார் விமலகலை. கி.பி. 11–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவர் இளமையில் தம் தந்தையாரிடம் இலக்கணத்தையும், இலட்சுமண குப்தரிடம் திரிக தரிசனத்தையும், சம்புநாதரிடம் குலநெறியையும் கற்றார். திரிகம், குலம் என்பவை அத்துவித சைவமாகிய காசுமீர சைவத்தின் கோட்பாடுகளை விளக்குவன. இவர் தம் வாழ்வின் பெரும் பகுதியைச் சமய வளர்ச்சிப் பணியிலேயே கழித்தார். இவர் உருவாக்கிய காசுமீர சைவம், இவர் பெயரால் அபிநவகுப்தாசாரிய மதம் எனவும் கூறப்படும்.

தென்னாட்டுச் சைவ சித்தாந்தத்தில் 28 சைவ ஆகமங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது போல, காசுமீர சைவத்தில் 64 அத்விதுத ஆகமங்கள் அடிப்படை நூல்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. சைவ சித்தாந்திகளும் காசுமீர சைவ சமயத்தினரும் ஆணவம், கன்மம், மாயை, 36 தத்துவங்கள், துரியாதீத நிலை, சிவபரம்பொருள் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டுள்ளனர். அத்துவைதிகள் பிரமம் ஒன்றே உள்பொருள்; உலகம் பொய் (மித்யை) என்று சொல்வர். காசுமீர சைவர் சிவன் ஒருவனே பரம்பொருள் என்பதன்றிச் சிவனின் உருவம் உலகம் என்பதால் உலகமும் உண்மைப் பொருளே, மாயை அன்று என்பர். காசுமீரத்தில் பழமையாக இருந்த துவித சமயம் மாறிக் கி.பி. 8–ஆம் நூற்றாண்டில் அத்துவித சமயம் தோன்றியது. இதற்குக் காரணம் ஆதி சங்கரர் காசுமீரத்திற்குச் சென்றதேயாகும்.

அபிநவகுப்தர் 38 சாத்திர தோத்திர நூல்களை இயற்றியுள்ளார். 'உருத்ர யாமள தந்திரம்' என்னும் நூலிற்கு உரை எழுதியுள்ளார். 'தந்திராலோகம்' என்பது இவருடைய பட்டறிவு, சிவாகமங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் எழுதப்பட்ட மிகவும் விரிவான நூல் ஆகும். மேலும் பகவத் கீதைக்கு அத்துவித சைவ மரபை ஒட்டி எழுதப் பெற்ற பகவத் கீதார்த்த சங்கிரகம், உத்பலாசாரியரின் 'ஈசுவரபிரத்யபிக்ஞை' என்னும் நூலின் உரைக்கு எழுதப்பட்ட 'ஈசுவர பிரத்யபிக்ஞா விவிருதி விமர்சனி' ஆகியன இவர்தம் உரை நூல்களுள் சிலவாகும்.

மேற்கூறிய தத்துவ நூல்களன்றி, கிரமன் தோத்திரம், பைரவத் தவம் முதலிய தோத்திர நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவற்றை இன்றும் காசுமீரப் பண்டிதர்கள் போற்றுகிறார்கள். அத்துவிதத்திற்குச் சங்கரரைப் போலக் காசுமீர சைவத்திற்கு இவர் ஒரு வடிவைக் கொடுத்தவராவார்.

அபிநவகுப்தருக்குத் தொனிக் கொள்கையைக் கற்பித்தவர் இந்துராசர்; நாட்டிய இயல் கற்பித்தவர் பட்டதோதர். அவர் எழுதிய அலங்கார நூல்கள், பரதரின் நாட்டிய சாத்திர உரையான அபிநவபாரதியும், ஆனந்தவர்த்தனரின் தொனியாலோகத்தின் உரையான உலோசனமும் ஆகும். தம் ஆசிரியர் பட்டதோதர் எழுதிய காவியகௌதுகமும், அந்நூலுக்கு அபிநவகுப்தர் எழுதிய உரையும் கிடைக்கவில்லை.

'அமைதி' என்ற ஒன்று ஒப்புக்கொள்ளத்தக்கதன்று என்னும் கருத்தை மறுத்துப் பட்டதோதர் அது உண்டு என எவ்வாறு நிறுவியிருக்கிறார் என்பதை இவர்தம் உரையில் குறிப்பிட்டு, அதற்குத் தம் உடன்பாட்டையும் தெரிவித்துள்ளார். எல்லாச் சுவைகளிலும் முதன்மையானது அமைதி என்றும் அது முத்திப் பேற்றை அளிக்கும் என்றும் இவர் கூறியுள்ளார்.

அபிநவபாரதியில் பரதரின் காவிய இலக்கணங்களைப் பற்றிப் பலருடைய கருத்துகளைக் கூறும்போது உடலுக்கு உடற்கூற்றிலக்கணம் போன்றது காவியப் பாங்கு என்றும், உடலில் அணியும் அணிகளைப் போன்றன காவியத்திற்கு அலங்காரங்கள் என்றும் கூறியுள்ளார். சுவையே காவியத்தின் உயிர் நாடி என்பது அபிநவகுப்தரின் கருத்தாகும். பி.தி.

**அபிநவ பம்பா** ஒய்சள மன்னர் முதலாம் வல்லாளரின அவையைச் சார்ந்த சமண சமய ஒன்பதின்மருள் ஒருவர். அவருடன் அவையில் சிறப்புற விளங்கியவர் காந்தி என்னும் பெண்மணியாவார். அவர் பெண் கவிஞரும் சொல்லாற்றல் மிக்கவருமாவார். அவர்தம் கருத்தைக் கவரும் கவிதைகளும் ஆற்றல் மிகுந்த பேச்சுத்திறனும் அனைவரையும் கவர்ந்தன. காந்தி அம்மையார், அபிநவ பம்பாவினால் முடிக்கப் பெறாத கவிதைகளை அரசரின் அவையிலேயே பாடி முடித்தவர் என்று புகழப்பெற்றவர். முதலாம் வல்லாளர் கி.பி. 1100 முதல் 1106 வரை அரசாண்டார்.

**அபிநவபாரத சங்கம்**: இந்த அமைப்பை 1906–இல் தோற்றுவித்தவர் புரட்சி வீரர்களின் இளவரசர் எனப் புகழப் பெற்ற விநாயக தாமோதர சாவர்க்கர். இதை உருவாக்குவதில் சாவர்க்கரின் அண்ணன் அவருக்கு உறுதுணையாக இருந்தார். இந்திய நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இதன் கிளைகள் இருந்தன. படைக்கலம் தாங்கிப் போர்புரிந்து

அந்நியராட்சியை அகற்ற வேண்டுமென்பது இச்சங்கத்தின் தலையாய குறிக்கோள். பாரிசுடர் பட்டம் பெற இங்கிலாந்து சென்றபோது சாவர்க்கர் இலண்டனிலும் அபிநவ பாரத சங்கத்தின் (Abhinav Bharat Society) கிளையைத் தொடங்கினார். தமிழ் நாட்டைச் சார்ந்த வ.வே.சு. அய்யர், தி.செள.செள. இராசன் போன்றோர் இச்சங்கத்தின் உறுப்பினர்களாயிருந்தனர். சாவர்க்கரின் சகோதரர்கள் புரட்சியாளர்களாதலால் சிறைப் படுத்தப் பெற்றனர்.

**அபிபுல்லா, சர், எம்** முசுலிம் தலைவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1898–ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரசுக் கட்சியின் மேடையில் தோன்றித் தம் திறமைகளையும் சொல்லாற்றலையும் நிலைநாட்டினார். பிற்காலத்தில் சென்னை, மத்திய அரசுகளின் உறுப்பினராயிருந்தார். தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்பட்ட இந்தியக் குழுவின் தலைவராகச் சர் முகமது அபிபுல்லா சென்றார்.

**அபிமன்யு** பாண்டவ வீரர்களுள் சிறந்த வில்வீரனாகிய அருச்சுனனுக்குச் சுபத்திரையிடம் பிறந்த பெருவீரன். பதின்மூன்றே ஆண்டு நிறைந்த இவ்விளங் காளையைப் பாரதப் போரின் பதின்மூன்றாம் நாளன்று பகைவர், சூழ்ச்சியால் கொன்றனர். அப்போரில் பகைவரால் தேரையும், தேர்ப்பாகனையும், குதிரையையும், வலக்கையையும் இழந்த இவன் இடக்கையால் சக்கரப்படையைச் சுழற்றியும் தண்டினால் பொருதும் அவருள் பலரைச் சிதறடித்தும் கொன்றும் வெற்றியுடன் விளங்கினான். பகைவர், இவனை முறையான போரில் வெல்ல இயலாமை கண்டு, துணைவர்களை இவனிடமிருந்து பிரித்துத் தனியே வைத்துச் சூழ்ந்து கொண்டு போரிட்டனர். போரினால் இளைத்திருந்த இவனைச் சயத்திரதன் என்பவன் தண்டு கொண்டு தாக்கிக் கொன்றான். தன் மகனைக் கொன்ற சயத்திரதனை அருச்சுனன் மறுநாள் பொழுது சாய்வதற்குள் கொல்வதாகச் சூளுரைத்துக் கண்ணபிரான் உதவியால் அவ்வாறே செய்து முடித்தான். அப்போது கருவுற்றிருந்த அபிமன்யுவின் மனைவி உத்தரைக்குப் பிறந்தவனே பரிட்சித்து என்னும் பாண்டவர் கான்முளையாவான். ஆர்.கி.

**அபிமன்யு சுந்தரி மாலை** தமிழில் வழங்கும் நெடிய கதைப் பாடல்களுள் ஒன்று. இது அருச்சுனன் மகனான அபிமன்யுவும் கண்ணன் மகள் சுந்தரியும் காதல் மணம் கொண்ட கதையைக் கூறுவது. இதனைப் புகழேந்திப் புலவர் பாடினார் என்று கருதுகின்றனர்.

இக்கதைப் பாடல் 6600 அடிகள் கொண்டமைந்துள்ளது. கி.பி. 1871–இல் கருணானந்த சுவாமிகள் இதனை முதன்முதலாக வெளியிட்டார். இது மகா பாரதக் கிளைக் கதைகளுள் ஒன்றினை அடிப்படையாகக் கொண்டெழுந்த கதைப்பாடல்.

அருச்சுனன் மனைவி சுபத்திரை அபிமன்யுவையும், கண்ணன் மனைவி அலர்மேலுமங்கை சுந்தரியையும் பெற்றனர். இவர்கள் கருவுற்றிருந்த போதே இருவரும் தமக்குப் பிறக்கும் பிள்ளைகள் ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பின், அவர்களிருவருக்கும் மணமுடித்து வைக்கவேண்டும் என்று உறுதி செய்து கொண்டனர். அவ்வாறே அவர்களுக்குப் பிள்ளைகள் பிறந்தபோது, ஆண் பெண்ணாக இருக்கக் கண்டு தங்கள் எண்ணப்படி ஆனதே என்று மகிழ்ந்தனர். இவர்களின் முடிவுக்கு எதிராகச் சகுனி சூழ்ச்சி செய்தான்; துரியோதனன் மகன் இலக்குணனுக்குச் சுந்தரியை மணம் செய்து வைக்கத் திட்டமிட்டான். கண்ணனும் வேறு வழி இல்லாமல் சகுனியின் திட்டத்திற்கு இசைவளித்து விட்டான். அபிமன்யுவும் சுந்தரியும் ஒருவரை ஒருவர் மனமார விரும்பினர். இலக்குணற்கும் சுந்தரிக்கும் திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. அபிமன்யு காட்டில் அலைந்து கொண்டிருந்தான். சுந்தரி அவனுக்குச் செய்தி அனுப்பிப் பல்வேறு போராட்டங்களுக்குப் பின் அவனையே மணந்து கொண்டாள்.

இக்கதை காதலின் வலிமையையும், உறவின் பிணைப்பையும், உண்மை வெல்லும் என்ற கருத்தினையும் விளக்குவதாக அமைந்துள்ளது. சு.ச.

**அபிமான சோழ இராசாதிராசன் (கி.பி. 1080–1100)** கொங்குச் சோழ மரபைச் சார்ந்த வேந்தன். இவன் நடுக்கொங்கு, தென் கொங்கு பகுதிகளை ஆட்சி புரிந்தவன். இவன் கொங்குச் சோழ வேந்தனான விக்கிரமசோழனுக்குப் (கி.பி. 1004–1045) பின் ஆட்சிபுரிந்தவன்; புகழ்மிக்கவன். இவன் பரகேசரி பட்ட முடையவன். இவன் கல்வெட்டுகள் தாராபுரம், தாராபுரம் வட்டம் கண்ணபுரம், பிரமியம், திருமுருகன் பூண்டி, விசயமங்கலம் முதலான இடங்களில் காணப்படுகின்றன. இவ்வேந்தன், தன் 12–ஆம் ஆட்சியாண்டில், அபிமான சோழபட்டருக்கும், தவசியர், தேவரடியார், மேளக்காரர், கோயில் பணியாளர் ஆகியோருக்கும் பல வரிசைகளை வழங்கியமை திருமுருகன் பூண்டி உடையார் ஆலயக் கல்வெட்டின் மூலம் புலனாகும். பத்திமானான இவன், கோயிலில் திருமுழுக்காட்டு நடத்தியதுடன், நாள்தோறும் வழிபாடு நிகழ நிலங்களை வழங்கியுள்ளான்.

ம.இரா.

**அபிராமி அந்தாதி** அபிராமிபட்டரால் பாடப்பெற்ற பத்தி நலஞ்சான்ற அந்தாதி நூல். இதனை மெய்யன்போடு ஓதி வழிபடுவார்க்கு அபிராமி அம்பிகையின் திருவருள் கைகூடும்.

ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்து, அசை, சீர், அடி ஆகிய நான்கனுள் ஒன்று, அடுத்த செய்யுளுக்கு முதலாக அமையுமாறு பாடப்பெறுவது அந்தாதி. இவ்வமைப்பில் அமைந்த அபிராமி அந்தாதி நூலின் இறுதிப் பாடலின் இறுதிச்சீரும் முதற்செய்யுளின் முதற்சீரும் மண்டலித்து ஒன்றாக அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

அபிராமி அந்தாதியைப் பாடிய அபிராமிபட்டர், சோழ நாட்டுத் திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் தோன்றியவர் காலக் கணிதம் கற்றுத் தேர்ந்த பட்டர், தஞ்சைச் சரபோசி மன்னனிடத்தில் சோதிடங் கூறும் தொழில் செய்தவர். இவரும், இவருடைய முன்னோரும் பின்னோரும் திருக்கடவூரில் எழுந்தருளியுள்ள அபிராமியம்மை மீது ஆராத அன்பு கொண்டு விளங்கியவர்கள். அம்மம்மையை நாளும் வழிபடும் தொண்டு பூண்ட அபிராமி பட்டர், அவளை உன்னி ஒடுங்கும் நிலையில் ஒன்றினார். இவர்பால் அழுக்காறு கொண்ட சிலர், இவர் ஊனும் கள்ளும் உண்டு மனம் மிக மயங்கினார் என்று நாட்டு மன்னனிடமும் புறங் கூறினர். அபிராமிபட்டர் அறிவு மயங்கிக் கிடக்கும் சமயத்தே அவரைத் தன்னிடம் அழைத்து வருமாறு பணித்தான் மன்னன். அவ்வாறே அரசனிடம் பட்டரை அழைத்துச் சென்றனர். பட்டரின் அறிவு மயங்கிய நிலையைக் கண்ட அரசன் பட்டரைப் பார்த்து, இற்றை நாளின் ஐந்து றுப்புகளை – பஞ்சாங்கம் – கூறு மாறு கேட்டனன். அறிவு மயங்கியிருந்த பட்டர் மறுநாள் அமாவாசை நாள் என்பதை மறந்து, நிறைமதி நாள் (பௌர்ணமி) என்று கூறினார். அதற்கு அரசன், தன் அவையோரைச் சான்றாக வைத்து, ‘நாளை, கதிரவன் மறைந்தபின் கிழக்குத் திக்கில் முழுமதி தோன்றுதல் வேண்டும்; இல்லையேல் பட்டரை என் வாளுக்கு இரையாக்குவேன்’ என்றும், ‘அந்தணன் ஒருவனைக் கொன்று விட்டான் மன்னன் என்று உலகோர் பழி நூற்றினும் அஞ்சேன்’ என்றும் கடுஞ்சினத்துடன் கூறினன். தம் தவற்றினையுணர்ந்த அபிராமி பட்டர், அரசன் தம்மைக் கொலை புரிவதற்கு முன்னர்த் தாம் அபிராமியின் தாளைப் பற்றி, நாளைக்கு முழுமதி தோன்றுமாறு செய்வோம், இல்லையேல் உலகமறியுமாறு இறந்தொழிவோம் என்று முடிவு செய்து, மறுநாட்காலை ஒரு பெரிய தீக்குழியை உண்டாக்கினார். நூறு கால்களோடு கூடிய ஒற்றைவார் உறியொன்றை அமைத்துத் தாம் அவ்வுறியின் மேலடுக்கில் அமர்ந்து, இறைவியைப் புகழ்ந்து பாடத் தொடங்கினார். கதிரவன் உதிக்குங்காலை, ‘உதிக்கின்ற செங்கதி ருச்சி’ எனத் தொடங்கும் இவ்வந்தாதியின் முதற்பாடலைப் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாட்டு முடியுந்தோறும் உறியின் அடுக்கு ஒன்றை அறுத்துக் கொண்டே வந்தார். இவ்வாறு 99 கால்கள் அறுக்கப்பட்டும், அன்னை அபிராமி தோன்றாதிருக்கவே பட்டருக்குக் கவலை தோன்றியது. இறைவி அருள் புரியாத நிலையில், அரசன் வாளால் மடிவதைவிடத் தாமே தீயில் வீழ்ந்து மாய்தலே சாலச் சிறந்ததென முடிவு செய்து, ‘குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ்’ எனத் தொடங்கும் இறுதிச் செய்யுளையும் பாடி முடித்து உறியின் இறுதிக் காலையும் கொய்தார். அவர் தீயில் விழுமுன் அம்மை தோன்றித் தன் கையால் தாங்கிப் பட்டரைத் தரையில் விடுத்தாள். ‘அஞ்சற்க’ என்று குரல் கொடுத்த அம்மை, தன் இடக் காதில் அணிந்திருந்த குண்டலத்தை வலக் கையால் வாங்கிக் கிழக்கு நோக்கி விசினாள். அக் குண்டலம் திங்களின் இடத்தில் தங்கி அதுவேயாய் ஒளிவிசியது. மதிமறை நாளில் முழுமதி ஒளிவிடுதலைக் கண்ட மன்னனும் மக்களும் வியந்தனர். இந்நிகழ்ச்சி பட்டரால் விளைந்ததெனக் கண்ட மன்னன், ஓடிச் சென்று பட்டரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினான். இறைவியின் திருவருளைப் பெற்ற அபிராமி பட்டர் சரபோசி மன்னனை மன்னித்து நட்புக் கொண்டார்.

அபிராமியந்தாதி என்னும் இந்நூல் காப்புச் செய்யுளையும், இறுதியில் விளங்கும் நூற்பயனையும் சேர்த்து நூற்று இரண்டு செய்யுள்களைக் கொண்டிலங்குகிறது. இந்நூலுள், அபிராமிபட்டர், தாம் அதுகாறும் தேவியின்பால் பெற்ற பெரும்பேறுகளையும், பின்னர்ப் பெற வேண்டிய பேறுகளையும் விளக்கியுள்ளார். மற்றவர்களைவிடத் தாமடைந்த பேறு மிகச் சிறந்ததென்பதையும், மிக எளிதாகத் தாம் அவள் அருளைப் பெற்றுவிட்டதையும் பல செய்யுட்களில் விளக்கியுள்ளார். இந்நூலின் பெரும்பாலான செய்யுட்கள் அபிராமி தேவியின் உருவையும், திருவையும், பேரருள் திறத்தையும் விளக்கி நிற்பன. பல செய்யுள்கள் அவளைத் தொழுது நின்ற அடியவர் பெற்ற/பெறும் பேறுகளை விளக்குவன.

அபிராமிபட்டர், அம்மையின் திருவடிகளைத் தம் சென்னியில் சுமந்தும், சிந்தையுள்ளே அவள் திருமந்திரம் உணர்த்தும், பரம ஆகம பத்ததியை அடியாருடன் கூடிச் சொல்லியும் மெய்யடியாராக விளங்கியவர். இவ்வாறு முப்போதும் முக்கரணங்களாலும் வணங்கி வாழ்த்தும் இவர், ‘மத்தினாற் கடையப்படும் தயிரைப் போல் பிறப்பு இறப்புகளிற் பட்டுச் சுழலுகின்ற தம் உயிரைத் தளர்வற்ற சிவகதியில் செலுத்த’ வேண்டுகிறார்.

புவனம் பதினான்கையும் தோற்றுவித்தவள், அவற்றைக் காத்தவள், பின் மறையச்செய்தவள், கறைக் கண்டன் சிவனின் மூத்தவள், முகுந்தனுக்கு

இளையவள் ஆகிய அம்மையே ஒப்பற்ற தெய்வமென்றும், ஏனைய தெய்வங்கள் அல்லவென்றும், பிற எத்தெய்வத்தையும் வணங்குதல் கூடாதென்றும் கருதும் கொள்கையுடையவர் பட்டர். இத்தகைய நம்பிக்கையும் கொள்கையும் உடைமையினால்தான், நாளும் வந்தனை செய்கிற வானவர் தானவர்களினும் நாள்தோறும் சிந்தனை செய்கிற திசைமுகர் நாரணர்களினும், எப்போதும் பந்திக்கும் பரமானந்தரினும் மிகுதியாகக் கோயில்கள் தோறும் இறைவியைச் சந்திக்கிற தமக்கு அவள் திருவருள் கிட்டிற்று என்கிறார். இத்தகைய எளியமுறையில் தேவியின் திருவருள் கிட்டியதால்தான் பட்டருக்கு, 'நின்பாதம் பணிந்த பின்னே இனியொருவரைப் பணியேன்' என்று இறைச் செருக்கோடு சொல்லும் துணிவு வந்தது.

சிவன் உருவில் பகுதி கொண்ட இறைவி அன்பு செய்ய வைத்ததைத் தாம் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறார். அதனால் 'இனி எண்ணுவதற்குச் சமயங்களுமில்லை, ஈன்றெடுக்கத் தாயுமில்லை, பெண்டிர்பால் கொள்ளும் காமமும் இல்லை' என்று முடிந்த முடிபாகக் கூறும் நிலை எய்தி விளங்கினார். அபிராமி தேவியின் திருவடிகளை அல்லும் பகலும் வழிபடும் அடியவர்க்கே, அழியா அரசும், தவநெறியும், சிவலோகமும் கிட்டும் என்பதைத் தமது வாழ்வில் உணர்ந்த பட்டர், 'மலமாயையால் ஏற்படும் துன்பத்தைத் துறந்து ஒரு மாத்திரைப் பொழுதேனும் சிவயோகத்திருப்பவர், குடரும் நிணமும் குருதியும் பொருந்திய உடலை எடுத்துப் பின்னரும் பிறக்க நினையார்' என்று உறுதியாக நம்புகிறார்.

திருத்தில்லைக் கூத்தன் தேவியாம் அபிராமியின் திருவடிகட்கு அடைக்கலமானோர், பெறவியலாப் பேறுகளோ அன்றிப் பொருள்களோ இல்லை என்று இயம்பிய பட்டர், அவளது கடைக்கண் நோக்கே 'தனந்தரும், கல்விதரும், ஒரு நாளுந்தளர்வறியா மனந்தரும், தெய்வ வடிவந்தரும், வஞ்சமில்லா இனந்தரும், இன்னும் நல்லன எல்லாம் தரும்' என்று இயம்புவது எண்ணி இன்புறத் தக்கது. இதற்கு மாறான ஒரு நிலையினையும் காட்டுகிறார் பட்டர் பெருமான். ஒரு கணமேனும் அவ்வபிராமியை மனத்தால் வழிபாடு செய்யாதவர், வண்மை, குலம், கல்வி, கோத்திரம், குணம் என்பனவெல்லாம் குன்றி, குடில்கள்தொறும் உணவிற்காகப் பாத்திரங்கொண்டு பிச்சையேற்கும் நிலைக்கு ஆளாவர் என்றுங்கடிந்து கூறுகிறார்.

அபிராமி அன்னை வணங்கித் தாம் பெற்ற பேறுகளையெல்லாம் உலகிற்கெடுத்தியம்பிய பட்டர் பெருமான், உலகோர் உய்திபெறுதற்கும் எளிய வழியினை எடுத்தியம்புகிறார். கயவர் தம்பால் ஒரு காலத்திலும் தம்மைச் செல்லாமை வைத்தவள் திரிபுரசுந்தரியென்றும், உலகோரே, நீங்களும் இல்லாமை சொல்லி ஒருவர் பால் சென்று இழிவு பட்டு நில்லாமை வேண்டின், எம்போன்று அவள் பாதங்களைப் பணிமின்கள் என்றும் இயம்புவது எல்லார்க்கும் இனிய, எளிய வழியேயாகும்.

சிவகாமசுந்தரியின் சீறடியைச் சாரும் தவமுடையார் படையாத தனமில்லையே என்ற சிறந்தவழியைக் கண்டுகொண்ட பட்டர்பெருமான், பழிக்கே சுழன்று வெம்பாவங்களே செய்து பாழ் நரகக் குழியில் அழுந்தும் கயவர் தம்மோடு இனிக்கூட்டுறவே இல்லை என்ற முடிவிற்கு வருதலும் இயல்பேயாகும்.

யான், எனது என்னும் செருக்கினை ஒழித்து ஆன்மசுத்தி பெற்ற பெரியோர், தம் வாழ்வில் எது சேரினும், எது நிகழினும் கவலையுறார். எல்லாம் இறையருளே என்று இறையின்பால் ஒப்புவித்து விட்டு வாளாயிருப்பர். இத்தகையோருள் அபிராமி பட்டரும் ஒருவர். இதனை, 'அபிராமி அன்னையே எனக்கென்று உள்ள எல்லாவற்றையும் உனக்கே கொடுத்துவிட்டேன், ஆதலால் நன்று, தீது எது வரினும் அவற்றைப் பற்றி நானறிவது ஒன்றுமில்லை, உனக்கே நான் பாரம்' என்பதால் அறியலாம்.

நூலின் இறுதியில் பட்டர்பெருமான், 'முக்கண்ணியைத் தொழுவோர்க்கு ஒரு தீங்கில்லையே' என்று நூற்பயனை மட்டும் கூறினாரில்லை; தாம் பெற்ற பெரும் பயனையும், உலகோர் பெறவேண்டிய பெரும் பயனையும் கூறினார் என்றே கொள்ளுதல் வேண்டும்.

சுப. கோ.

**அபிராமிபட்டர்** அபிராமி அந்தாதி இயற்றிய ஆசிரியர் பெயராகும். இவருடைய இயற்பெயர் சுப்பிரமணிய ஐயர். ஊர், சோழ நாட்டிலுள்ள திருக்கடவூர். தந்தை பெயர் அமிர்தலிங்க ஐயர். அபிராமி என்பது திருக்கடவூர் அம்பிகை பெயராகும். இவர் அபிராமி அம்மன் கோயிலின் புகழ் பெற்ற அருச்சகராகக் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் சரபோசி மன்னர் காலத்தில் திகழ்ந்தவர். இவர் எழுதிய அபிராமி அந்தாதி பக்தி இலக்கியங்களுள் பெயர் பெற்ற ஒன்றாகும். இந்நூற்பாடல்களை ஓதிவரின் அம்மன் அருள் வாய்க்கும் என்னும் நம்பிக்கை உள்ளது.

அபிராமிபட்டரைப் பற்றிச் சில நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. அவர் அகத்தே, அம்பிகை மேல் பேரன்பினராகத் திகழ்ந்தார்; புறத்தே, குறையுடையவர் போல் காணப்பட்டார். அறிவினை மயக்கும் சில பொருள்களை உண்ணும் பழக்கத்தினராகவும் இருந்தார். எனவே, இவர்மேல் வெறுப்பு வளர்ந்தது.

தஞ்சாவூர் வேதியர் சிலர் பட்டரைப் பற்றி மன்னர் சரபோசியிடம் முறையிட்டனர். மன்னர் திருக்கடவூர் சென்றபோது, பட்டரை அழைத்துவரப் பணித்தார். பட்டர் அழைத்துவரப் பட்டார். "கையில் என்ன வைத்திருக்கிறீர்" என்று பட்டரை நோக்கி அரசர் வினவினார். "பஞ்சாங்கம்" என்று பதிலிறுத்தார் பட்டர். உடனே, "நாளை என்ன திதி?" என்று கேட்டார் மன்னர். மறுநாள் அமாவாசை; ஆனால் வாய்தவறிப் "பௌர்ணமி" என்று விடையளித்து விட்டார் பட்டர். "நாளை மதிகெட்ட நாள், நீங்கள் மதியைக் காட்ட முடியுமா?" என்று அரசர் கேட்க, "காட்ட முடியும்; காட்டுவேன்" என்று மறுமொழி யளித்தார் பட்டர்.

மறு நாள் நூறு கயிறுகளில் தொங்குமாறு உறி யொன்று கட்டப்பெற்றது. உறிக்குக் கீழே நெருப்பு மூட்டப் பெற்றது. உறிமேல் அமர்ந்து பட்டர், அபி ராமி அம்மனைப் பாடத் தொடங்கினார். 'உதிக் கின்ற ...... செங்கதிர்' என்பது முதற் பாடல். முதற் பாடல் பாடப் பெற்றவுடன், உறிக் கயிறு நூறனுள் ஒன்று வெட்டப் பெற்றது. அம்மன், காட்சி அளிக்க வில்லை. இறுதியில் அம்மை அருள் காட்டினாள். அம்மை, தன் கைகளை நீட்டிப் பட்டரைப் பற்றி நிலத்தில் விட்டாள்; தன் இடக்காதில் அணிந்திருந்த குண்டலத்தை வானவெளியில் எறிந்து, அதன் மிகு ஒளியை, நிலவுதயமாகக் காட்டினாள். மன்னன் வியந்தான்; பட்டரின் ஆற்றலைப் போற்றினான்.

அபிராமி பட்டர் அச்சமயத்துப் பாடிய பத்திப் பனுவலே அபிராமி அந்தாதி என்று போற்றப்படு கிறது. அந்நூலைப் பாடி அம்மனைப் பரவுவதால், தீங்குகள் நீங்கும்; தெய்வம் தாங்கும் என்பது மக்கள் நம்பிக்கையாயிற்று. க.ப.அ.

**அபிவில்லி** பிரான்சில் சோம் பள்ளதாக்கின் முகப்பிலிருந்து 19 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள தொன்மையான நகரம். பௌச்சர்-டி-பெர்த் (Boucher de Perth) என்னும் அறிஞர், கி.பி.1841-ஆம் ஆண்டு இந்நகரத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலக் கற்கருவிகளையும், அக்கால விலங்குகளான யானை இனப் புதைப்படிவ எலும்புகளையும், காண்டாமிரு கத்தின் எலும்புகளையும் கண்டெடுத்தார். உலகத் தொல் பழங்காலத்தின் கற்கருவிகளிலேயே மிகவும் தொன்மை வாய்ந்த கைக்கோடரிகள், அபிவில்லி (Abbeville)யில் கண்டெடுக்கப்பட்டன. எனவே அவற்றை அபிவில்லியன் கைக்கோடரிகள் என்று சொல் கின்றனர். இக்கைக்கோடரிகள் கரடு முரடுத் தன்மை மிக்கனவாகவும் பருமனாகவும் காணப்படும். தாக்கு விசைத் திறன் மிகுந்துள்ள இக்கோடரிகளின் வெட் டுப் பகுதி ஒழுங்கற்ற தன்மையுடையது. இருபக்கமும் சில்லுகளைப் பெயர்த்தெடுத்த முகப்பினை இக்கோ டரிகள் கொண்டுள்ளன.

இடைக்காலத்தின் முற்பகுதியில் இந்நகரம் கம் பளி ஆடைகள் விற்கும் வாணிக நகரமாக விளங் கியது. பிற்காலத்தில் இது சணல் வாணிகத்தில் சிறந்த புகழ் பெற்றது. பன்னிரண்டாம் உலூயி, செயின்ட்டு உல்ப்ரான் (St. Wulfran) என்னும் கோயிலை இங்குக் கட்டினார். இந்நகரத்திலுள்ள அருங்காட்சியகம், சிறந்த கலைப்பொருள்களைப் பெற்றுள்ளது. கே.இரா.

**அபினிப் போர்** சீனர்களுக்கும் ஆங்கிலேயர் களுக்கும் கி.பி.1839-இல் நடைபெற்றது. சீனர்கள் பெரிதும் விரும்பிய அபினி (Opium) என்னும் மயக்கப் பொருளை ஆங்கில வாணிகர்கள் மிகுதியாகக் கொண்டு வந்து குவித்தார்கள். அதனை விரும்பி உண்ட சீனர்களின் உடலும் உள்ளமும் பெரிதும் நலி வடைந்தன. எனவே சீன அரசு, ஆங்கிலேயரின் அபினி வாணிகத்திற்குத் தடை விதித்தது. சீன அரசு கி.பி. 1839-ஆம் ஆண்டில் உரூபா 60 இலட்சம் பெறுமான முள்ள அபினியைப் பறிமுதல் செய்தது. இதை எதிர்த்து ஆங்கிலேயர் சீனரோடு போர் தொடுத்து அவர்களை வென்றனர். இதையே அபினிப் போர் (Opium war) என்பர். இரண்டு அபினிப் போர் களுள் முதல் அபினிப் போர் நான்கிங் (Nanking) உடன்படிக்கையின்படி முடிவுற்றது.

**அபினைன் மலைத்தொடர்** இத்தாலிய முந் நீரகத்தின் முதுகெலும்பாகும். இம்மலைத்தொடர் ஆல்ப்சு மலையின் தொடர்ச்சியாகும். இத்தொட ரின் மொத்த நீளம் சற்றேறக்குறைய 1350 கி.மீ.



அபினைன் மலைத்தொடரின் ஒரு பகுதி

மலைத்தொடரின் கிளைகளும் அடிவாரங்களும் இத் தாலிய முந்நீரகத்தின் (Peninsula) பெரும்பரப்பினைக் கொண்டுள்ளன. அபினைன் (Apennines) மலையுச்சி களுள் பெரியது கிரான் சாசோ என்பதாகும்; இதன்

உயரம் 3154 மீ. இம்மலைத்தொடரின் பகுதியாகத் தான் வெசூவியசு (Vesuvius) என்னும் எரிமலை நேபில்சு நகருக்கருகில் உள்ளது. அபினைன் மலைத் தொடர் இத்தாலிய முந்நீரகத்திற்கு நீர்வளத்தைத் தருவதாகும். உரோமானியர் இத்தொடரின் கணவாய் களில் வசதியான சாலைகளை உருவாக்கினர்.

**அபீயன்** கி.பி.2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க வரலாற்றாசிரியர். இவர் கிரேக்கர்கள் உரோமாபுரியை வெற்றிகண்ட வரலாற்றைத் தொகுத்தெழுதியவர். இவரை அபியனோ என்று கிரேக்க மொழியில் கூறினர் இவர் அலெக்சாந்திரியாவில் பிறந்து உரோமானியக் குடிமகனாகி, அங்குச் சென்று வழக்குரைஞராகப் பணியாற்றினார்.

எட்ரியன், அந்தோனியசு பயசு போன்ற உரோமானியப் பேரசர்களுக்கு இவர் அதிகார முறையிலமைந்த பணிகளைச் செய்தார். பின்னர் அபீயன் உரோமானியப் பேரரசின் மாநிலக் கருவூலச் சிறப்பு அலுவலராகப் பொறுப்பேற்றார்.

உரோமானியர் வரலாற்றை இவர் 'ரோமைக்கா' என்னும் நூலில் எழுதினார். அது கிரேக்க மொழியில் எழுதப்பெற்ற நூலாகும். மிகத் தொன்மையான காலத்திலிருந்து கி.பி. 70-ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உரோமானியப் போர்களை அந்நூல் குறிப்பிடுகிறது. இவர் எழுதிய 24 நூல்களுள் 10 நூல்களே இன்று நிலைத்துள்ளன. உரோமானிய உள்நாட்டுப் போர்களைக் குறித்து இவர் எழுதியுள்ள நூல்கள் சிறந்த மூலச் சான்றுகளாக அமைந்துள்ளன. இவருக்கு முன்னர் வாழ்ந்த ஆசிரியர்கள் எழுதிய குறிப்புகளை இவர் தொகுத்தளித்துள்ளார்.

**அபுகீர் விரிகுடா** மத்தியதரைக் கடலில் அமைந்துள்ளது. அலெக்சாந்திரியாவிற்கு 22 கி.மீ. வடகிழக்கேயுள்ள எகிப்திய சிற்றூரே அபுகீர் என்பதாகும். இச்சிற்றூர், அபுகீர் விரிகுடா (Abukir Bay) வில் உள்ளது. ஆங்கிலப் படைகளுக்கும் பிரெஞ்சுப் படைகளுக்குமிடையே கி.பி. 1798 முதல் கி.பி. 1801-வரை பல போர்கள் இங்கு நடைபெற்றன. அவற்றுள் ஒன்று கி.பி. 1798-ஆம் ஆண்டு ஆகசுடு முதலாம் நாள் நடைபெற்ற நைல் ஆற்றுப்போராகும்.

மத்தியதரைக் கடல் துறைமுகங்களின் வாயிலாக பிரெஞ்சுப் படைகள் படையெடுக்கக்கூடும் எனக் கருதிய ஆங்கில அரசு, கடற்படைத் தளபதி ஓராசியோ நெல்சன் (Horatio Nelson) என்பாரின் தலைமையில், ஏறத்தாழ 14 போர்க் கப்பல்களைக் கொண்ட கப்பற் படையொன்றைப் பகைவரின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக அனுப்பியது.

ஆங்கிலக் கப்பற்படையின் கண்காணிப்பிலிருந்து தப்பிய பிரெஞ்சுப் படை முதலில் மால்டாவை நோக்கிச் சென்று அப்பகுதியைக் கைப்பற்றியது. பிறகு எகிப்தைக் கைப்பற்றுவதற்காக நெப்போலியன் பெரும் பிரெஞ்சுப் படையுடன் புறப்பட்டுச் சென்றார். எகிப்தை அடைந்த நெப்போலியன் அலெக்சாந்திரியா துறைமுகத்தில் மக்கள் ஒருவரும் இல்லாதிருப்பதைக் கண்டு சிசிலிக்குத் திரும்பினார். மீண்டும் எகிப்தைக் கைப்பற்ற எண்ணம் கொண்ட நெப்போலியன், அபுகீர் விரிகுடா என்னுமிடத்தில் தளபதி புரூசு என்பவரின் தலைமையில், ஒரு பெரும் பிரெஞ்சுப் படையை முற்றுகையிட்டு, எகிப்தை நோக்கிச் சென்றார். பிரெஞ்சுப் படைகள் எந்தத் தாக்குதலையும் சமாளிக்கும் நிலையில் இருந்தும்கூட, நெல்சன் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கும்படி தம் படைகளுக்குக் கட்டளையிட்டார்.


இரவு வருவதற்குச் சில மணி நேரத்திற்கு முன்னரே போர் தொடங்கியது. போர் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆங்கிலத் தளபதி நெல்சனுக்குத் தலையில் அடிபட்டது. இரவு 10 மணிக்குப் போர் உச்சக்கட்டத்தை அடைந்தது. தோல்வியைத் தழுவிக் கொண்டிருந்த பிரெஞ்சுப் படைகளின் தளபதி புரூசு, அபுகீர் விரிகுடாவில் முகாமிட்டிருந்த போர்க்கப்பல்களிலேயே பெரிய கப்பலாகக் கருதப்பட்ட ஓரியண்ட்டு என்ற கப்பலை வெடிவைத்துத் தகர்த்தார் இதனால் கப்பலிலிருந்த படைத்தலைவர் உள்பட அனைவரும் மூழ்கி இறந்தனர். பிரெஞ்சுக் கப்பற்படையைச் சேர்ந்த இரண்டு கப்பல்கள் மட்டுமே அழிவிலிருந்து தப்பி ஓடின. ஆகசுடு 2-ஆம் தேதி காலையிலேயே பிரெஞ்சுப் படைகள் விரிகுடாவிலிருந்து வெளியேறத் தொடங்கின. இப்போரினால் ஆங்கிலேயர் தரப்பில் 218 பேர் கொல்லப்பட்டனர்; 677 பேர் காயப்படுத்தப்பட்டனர். ஆனால் பிரெஞ்சுக்காரர்கள் தரப்பில் ஏற்பட்ட இழப்போ இதைப்போலப் பத்து மடங்காகும்.

இப்போரில் பிரெஞ்சுப் படைகளுக்கு ஏற்பட்ட தோல்வியின் விளைவாக நெப்போலியன் தலைமையில் எகிப்திலிருந்த பிரெஞ்சுப் படை தனிமைப்படுத்தப்பட்டது. பிரெஞ்சுப் படைகளின் அழிவையும், மால்டா மீண்டும் ஆங்கிலப் படைகளால் கைப்பற்றப்படும் என்பதையும் இவ்வெற்றி உறுதி செய்தது. மேலும் இப்போரில் ஆங்கிலேயருக்குக் கிடைத்த வெற்றி மத்தியதரைகடல் பகுதியில் ஆங்கிலேயரின் செல்வாக்கை நிலைநாட்டவும் உதவியது. அ.கா.

**அபு சிம்பல்** எகிப்து நாட்டில் நைல் ஆற்றின் மேற்குக் கரையில் அமைந்துள்ள பழைமையான தொரு நகரம். இந்நகரம் எகிப்தின் தலைநகரான கெய்ரோவிற்குத் தெற்கே 1227 கி.மீ. தொலைவில் உள்ளது. அபு சிம்பலில் (Abu Simbal) இரண்டு பழைமையான குடைவரைக் கோயில்கள் உள்ளன. கி.மு. 1250-

ஆம் ஆண்டு இரண்டாம் இராமேசெசு (Ramesses II) என்னும் அரசர் இக்கோயில்களை அமைத்தார். செங்குத்தான மணற் பாறைகளைக் குடைந்து இக் கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குடவரைக் கோயில்களுக்கு முன் முகப்பு மேடை போன்று அமைக் கப்பட்டு அதன்மீது மிகப்பெரிய உருவில் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்முகப்பு மேடையிலுள்ள சிற்பங்கள் வாயிலின் இருபுறமும் அமைக்கப்பட்டு மற்றுமொரு நுழைவு வாயில்போன்று காட்சி அளிக் கின்றன. இக்கோயில்களின் உட்பக்கம் எகிப்தியக் கோயில்களில் பொதுவாகக் காணப்படும் உள்ளறை கள் உள்ளன. இதனுள் பல எகிப்திய,சமயச் சிற்பங் களும் போர் விளக்கச் சிற்பங்களும் உள்ளன. இங்கு உள்ள சிறிய கோயில், ஆதோர் (Hathor) என்னும் கடவுளுக்கும் தெய்வமாகக் கருதப்பட்ட அரசி நெபி ரகி (Neferaki) என்பவளுக்கும் அமைக்கப்பட்ட கோயிலாகும். நெபிரகி இரண்டாம் இராமேசெசுவின் மனைவி. இங்குள்ள மிகப்பெரிய சிற்பங்களில் எகிப்தி யர்கள் வழிபட்ட இறையுருவங்களான பட்டா (Patah), ஆமன்–ரி (Amon–Re), ரீ–ஆரக்தி (Re–Harakti), அரசர் இராமேசெசுவின் திருவுருவம் ஆகியவை குறிப்பிடத் தக்கவை. ரீ–ஆரக்தி என்னும் எகிப்தியக் கடவுளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டு இக்கோயில் அமைக்கப் பட்டுள்ளது.

இக்கோயிலின் நுழைவாயிலுக்கு மேல் உள்ள மாடக் குழியில் சூரியனின் உருவம் செதுக்கப்பட்டுள் ளது. இக்கடவுள் தம் தலையில் வட்ட வடிவ மகுடம் அணிந்துள்ளார். இது பார்ப்பதற்குச் சூரியனே உதய மாவது போன்று அமைந்துள்ளது. இச்சின்னத்தைக் கி.பி. 1812–ஆம் ஆண்டில் பர்க்ஆர்டு (J.L. Burckh-arot) என்னும் சுவிட்சர்லாந்து நாட்டுப்பயணி கண்டு பிடித்தார். எனினும் அதனை அடைத்திருந்த மணல் 1910–ஆம் ஆண்டு வரை அகற்றப்படவில்லை. கி.பி. 1960–ஆம் ஆண்டு அபு சிம்பலிலுள்ள பழைமைச் சின்னங்களை அசுவான் அணையின் வெள்ளத்திலி ருந்து பாதுகாக்க ஐக்கிய நாட்டுக்கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் (யுனெசுகோ UNESCO)



அபுசிம்பல்

முடிவு செய்து ஒரு திட்டத்தை வகுத்தது. இத் திட்டத்தைச் செயலாக்க 51 உலக நாடுகள், பண உதவியும் பிற உதவிகளும் செய்ய முன்வந்தன. செருமனி, பிரான்சு, எகிப்து, இத்தாலி, சுவிட்சர் லாந்து ஆகிய நாடுகளிலிருந்து வல்லுநர்கள் பலர் வரவழைக்கப்பெற்று, இச்சின்னங்களைப் பாதுகாக் கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். தொல்லியலுக் காக ஐக்கிய நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் திட்டமொன்றை வகுத்துச் செயலாக்கியது இதுவே முதல் முறையாகும். இக்கோயில்களை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க முதலில் அவற்றைச் சுற்றியுள்ள மலைகள் வெட்டப்பட்டன. கோயில்கள் உட்பட அனைத்துப் பழைமைச் சின்னங்களும் அழிவு றாமல் வெட்டி எடுக்கப்பட்டுப் பிறிதொரு இடத் திற்குக் கொண்டு செல்லப்பட்டன. அப்புதிய இடத் தில் இக்கோயில்களையும் சிற்பங்களையும் பழைமை மாறாவண்ணம் வல்லுநர்கள் நிலைநாட்டியுள்ளனர். இத்திட்டப் பணிகள் 1966-ஆம் ஆண்டு முடிவடைந் தன.

**அபு செயித்து** அராபிய எழுத்தாளர்களுள் ஒருவர். இவர் இந்தியாவில் பல இடங்களுக்கும் பய ணம் செய்தார். பிரதிகார அரசர்கள் கூர்ச்சர மர பினைச் சார்ந்தவர்கள் என்று உறுதி செய்யும் இராட் டிரகூட ஆவணங்களை அபு செயித்தும் ஏற்றுக் கொண்டு, பிரதிகாரர்கள் கூர்ச்சர மரபினைச் சார்ந் தவர்கள் என்று தம் குறிப்புகளில் கூறியுள்ளார்.

**அபுதாபி** பாரசீக வளைகுடாவின் தென் கடற் கரையில் உள்ளதோர் ஊர். 'ஐக்கிய அராபிய எமி ரேட்சு' (UAE) என்னும் அராபிய நாட்டின் மிகப் பெரிய ஊராகும். ஐக்கிய அராபிய எமிரேட்சு நாட் டின் மேற்கிலும் தெற்கிலும் சவுதி அரேபியாவும், கிழக்கில் ஓமனும், வடக்கில் ஐக்கிய அராபிய எமி ரேசுட்களில் ஒன்றான துபாயும் அமைந்துள்ளன. அபுதாபி (Abu Dhabi) ஐக்கிய அராபிய எமிரேட்சின் தலைநகர்.

அபுதாபியின் பரப்பளவு ஏறத்தாழ 1,03,600 ச.கி.மீ. அதன் முக்கால் பாகத்தைச் சவுதி அரேபியா உரிமை கொண்டாடுகிறது.

**அபுல்-இ-ஆசன்** கோல்கொண்டா அரசின் இறுதிச் சுல்தான். இவர் கி.பி. 1687-ஆம் ஆண்டில் மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பினால் தோற்க டிக்கப்பெற்றுப் பதவியிலிருந்து விலக்கப்பட்டவர். பின்னர்த் தௌலதாபாத்துக் காட்டில் சிறை வைக் கப்பட்டுச் சிறையிலேயே மாண்டார்.

**அபுல்பாசல்** மொகலாய மன்னர் அக்பரின் அவையை அணிசெய்த அறிஞர்களுள் தலைசிறந்த வர். இவர் தந்தை சேக் முபாரக்; அக்பரின் சமயப் புரட்சிக்கு வித்திட்டவர். இவர் அண்ணன் பெய்சி அரசவைக் கவிஞர். அபுல் பாசல் அக்பரின் ஆணைக்கிணங்கி அக்பர் நாமா, அயினி அக்பரி என் னும் வரலாற்று நூல்களை எழுதினார். மேலும், இவர் விவிலியத்தைப் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்; நாளடைவில் அரசரின் மிக நெருங்கிய நண்பரானார். அரசரின் அணுக்கச் செயலராகவும் அரசுச் செயலராகவும் இவர் பணியாற்றினார். அக் பரின் புதிய சமயமான தீன் இலாகியின் சமய குரு (High priest) என்று அபுல் பாசல் குறிக்கப்படுகிறார்.

அரசவையில் முதன்மைபெற்ற அபுல் பாசல் போர்க்களத்திலும் தலைமை வகித்தார். இவர் கி.பி. 1585-ஆம் ஆண்டு 1000 வீரர்களின் மன்சப்தாரராக வும், கி.பி. 1592-ஆம் ஆண்டு 3000 வீரர்களின் மன் சப்தாரராகவும், கி.பி. 1601-ஆம் ஆண்டு 5000 வீரர் களின் மன்சப்தாரராகவும் பதவி உயர்வு பெற்றார். அக்பரின் தக்காணப் போர்களிலும் இவர் பங்கு கொண்டார்.

இவர் மகன் அப்துல் இரகுமான் மொகலாய அரசவையில் சிறப்புற்று விளங்கினார். அக்பரின் அரசவையில் அபுல் பாசலின் செல்வாக்கைக் கண்டு பொறாமையுற்ற அக்பரின் மகன் இளவரசர் சலீம் இவரைக் கி.பி. 1602-ஆம் ஆண்டு ஒரு சூழ்ச்சியால் கொலை செய்தார். இவர் கொல்லப்பட்டபோது வயது 52. இவரது மரணத்தால் மீளாத் துயருற்ற அக்பர், உடல் நலம் கெட்டு விரைவில் கால மானார். இவரது உருவப்படம் தில்லியிலுள்ள அருங் காட்சியத்தில் உள்ளது. மு. அ. ர.

**அபுல் பெய்சி** மொகலாய மன்னர் அக்பரின் அரசவைக் கவிஞர் (Poet Laureate). இவர் தந்தை சேக் முபாரக், அக்பரின் புதிய சமயக் கோட்பாட் டிற்கு வித்திட்டவர். தம் தந்தையால் வித்திடப் பட்ட அக்பரின் சமயக் கோட்பாட்டைப் பெய்சி வள ரச் செய்தார். "அரசர் இறைவனுக்கு ஒப்பானவர்", "அவரிடம் இறைமைத்தன்மை உண்டு" என்ற கருத் துகளை அக்பருக்கு வலியுறுத்தியவரும் இவரே. இவர் தம்பி அபுல் பாசல் அக்பரின் நெருங்கிய நண்பராக வும் செயலராகவும் இருந்தார்.

அக்பரின் தூதராகத் தக்காணத்தில் உள்ள காந் தேசம் (Kandesh) என்ற பகுதிக்கு அபுல் பெய்சி அனுப்பப்பட்டார். இவர் கி.பி. 1567-ஆம் ஆண்டு, ஏறத்தாழத் தம் இருபதாம் வயதில், அக்பரின் அவை யில் பணி மேற்கொண்டு கி.பி. 1595-ஆம் ஆண்டு தாம் இறக்கும்வரை பணியாற்றினார்.

இவரால் எழுதப்பட்ட மடல்களின் தொகுப்பு, வக்கியத்து (Wakiyat) அல்லது நிகழ்ச்சிகள் என்று

சொல்லப்படுகிறது. இத்தொகுப்பு அக்பரின் ஆட்சிக் காலத்தை அறிய உதவும் வரலாற்றுச் சான்றாகப் பயன்படுகிறது. குறிப்பாக, அக்பர் தக்காணத்திலுள்ள அரசுகளுடன் கொண்டிருந்த அரசியல் உறவை அறிய இத்தொகுப்பு உதவுகிறது. இவர் இயற்றிய பாரசீகப் பாக்கள் 'சிந்தாமணிகள்' என்றும், 'சிந்தனைக் குவியல்கள்' என்றும் பாராட்டப் பெறுகின்றன. ''இந்திய முசுலிம் புலவர்களுள், அமீர் குசுருவுக்கு அடுத்தபடியாகக் குறிப்பிடத்தக்கவர் பெய்சியே'' எனப் பிளாக் மேன் (Black Man) என்ற புகழ்பெற்ற மேனாட்டு வரலாற்றாசிரியர் குறிப்பிடுகிறார். மு.அ.ர.

**அபெர்டீன்**: வட இசுகாட்லாந்திலுள்ள புகழ் மிக்க வாணிகத் துறைமுகப்பட்டினம். இது டீ (Dee) என்னும் ஆற்றங்கரையில் அமைந்துள்ள அழகுமிக்க நகரம். இங்குள்ள கட்டடங்கள் சாம்பல் நிறமான கருங்கற்களால் கட்டப்பட்டு அழகும் பளபளப்பும் மிக்கனவாக விளங்குதலால், இதனைக்கருங்கல் நகரம் என்றும், கடலையடுத்த வெள்ளி நகரம் என்றும் கூறுவர். காகித ஆலைகளும், நூற்பாலைகளும் இங்குள்ள சிறப்பான தொழிற்சாலைகளாகும். இந்நகரம் மீன் வாணிகத்தில் சிறந்து விளங்குகிறது. இந்நகரம் கி.பி. 700–இல் அமைக்கப்பட்டது; கி.பி. 1337–இல் தீவாய்ப்பட்டு அழிந்ததால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. இந்நகரம் கருங்கற்கள் வாணிகத்தில் சிறந்து விளங்குகிறது. இந்நகரம் 12–ஆம் நூற்றாண்டு முதல் 14–ஆம் நூற்றாண்டு வரை இசுகாட்லாந்திய மன்னர்களின் இருப்பிடமாக விளங்கி வந்தது. இம்மன்னர்களுள் இராபர்ட்டு புரூசு என்பவர், தாம் இழந்துவிட்ட அரியணையைத் திரும்பப் பெறச் செய்த முயற்சிகளுக்கு இந்நகரத்தினர் பெரிதும் உதவினர். இந்தப் பெயருள்ள நகரங்கள் அமெரிக்காவில் வடகிழக்கு மிசிசிப்பியில் ஒன்றும், தெற்குத் தக்கோட்டாவில் (South Dakota) ஒன்றும், கிரேசு ஆர்பரில் ஒன்றும் உள்ளன.

**அபேதானந்த சுவாமி** (கி.பி. 1866–1939) இராமகிருட்டிண பரமஅம்சரின் சீடர். இவர் கி.பி. 1866–ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2–ஆம் நாள் கல்கத்தா நகரில் பிறந்தார். காளிப் பிரசாத் சந்திரா என்பது இவருடைய இயற்பெயர். தட்சிணேசுவரத்தில் இராமகிருட்டிணரின் அணுக்கச் சீடர்களுள் ஒருவராய்த் திகழ்ந்த இவர், காலப்போக்கில் பரமஅம்சரின் தெய்விக, சிறந்த கோட்பாடுகளைப் பரப்பக் கருவியாகத் திகழ்ந்தார். சொற்பொழிவாற்றும் திறம்படைத்த இவர், தம் சொல்லோவியத்தால் கேட்டவர்களைத் தம்பால் ஈர்த்துக் கொண்ட துறவி. இவர் 1939–ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 8–ஆம் நாள் காலமானார்.



**அம்காரா** ஆப்பிரிக்காவிலுள்ள எத்தியோப்பியாவில் வாழும் பழங்குடிகளாவர். ஏறக்குறைய ஐம்பது இலட்சத்திற்கும் மிகுதியான அம்காரா (Amhara) பழங்குடியினர் இங்கு வாழ்கிறார்கள். எத்தியோப்பியாவின் மக்கள் தொகையில் இவர்கள் நான்கில் ஒரு பகுதியே ஆயினும், அந்நாட்டு அரசியலில் மேலாதிக்கம் கொண்டு விளங்குகின்றனர். இந்த



அம்காரா சமயத் தலைவன்

நிலையினை இவர்கள் அடைய நாட்டின் பல மாநிலங்களிலும் இருந்த பிரபுக்களோடு பல்வேறு போராட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. கிறித்து பிறப்பதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அராபிய மக்கள் செங்கடல் வழியே எத்தியோப்பியாவிற்கு வந்து அங்கு முன்னரே குடியேறி இருந்த மக்களோடு கலந்திருக்கக் கூடும் என்பது கருதப்படுகிறது. கி.பி. 330–இல் எத்தியோப்பியாவில் 'அக்சம்' எனும் வடபகுதியை ஆண்டுவந்த அசானா என்னும்

மன்னன் கிறித்தவ சமயத்தைத் தழுவியதாகவும், ஆனால் அம்மாற்றம் அப்போது பொதுமக்களிடையே எவ்வித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை என்பதாகவும் கூறுகின்றனர். கிறித்தவக் கருத்துகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றிய கீசு எனும் மொழியில் எழுதப்பட்டன. இம் மொழியினின்றும் உருவாகிய சில மொழிகளுள் இறுதியாகத் தோன்றியது அம்காரா மொழியாகும். அம்காரா மொழி இறுதியாகத் தோன்றியதைப் போலவே, எத்தியோப்பியாவின் வரலாற்றிலும் அம்காரா மக்கள் பிற்காலத்தில்தான் சிறப்புப் பெற்று விளங்கினர். இக்காலத்தில் அம்காரா பழங்குடிகளிடையே கிறித்தவ சமயம் நன்கு வேரூன்றிக் காணப்படுகிறது. இம்மக்களின் வாழ்க்கையில் திருச்சபை முதன்மைப் பங்கு பெறுகிறது. குழந்தை பிறந்த முதல் வாரத்தில் பாதிரியார் புனித நீரைத் தெளிப்பார்; ஆண் குழந்தைகளுக்குச் சுன்னத்துச் செய்யப்படும்; திருமணங்களைப் பாதிரியார் முன்னின்று நடத்தி வைப்பார்; மணமுறிவு ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் பாதிரியார்கள் மிகவும் உறுதியாக இருப்பார்கள். இறந்தவர் ஆன்மாவின் தந்தையாகப் பாதிரியார் கருதப்படுகிறார். இறந்தபின் நாற்பதாவது நாளில் பாதிரியார் சாவுச் சடங்குகளை நடத்தி வைப்பார். அம்காரா மக்கள் தம் நாள்பணியைக் கடவுள் வழிபாட்டுக்குப் பின்னர் அல்லது திரு நூலில் (Bible) ஏதேனும் சில பகுதியைப் படித்த பின்னர்த் தொடங்குவர். இவர்களின் முதன்மைத் தொழில் வேளாண்மை ஆகும். கால்நடை வளர்ப்பைச் சிறுவர்கள் மேற் கொள்ளுகின்றனர். குடும்பம், தந்தையின் தலைமை அமைப்பைக் கொண்டதாகும். குழந்தைகளைக் கடும் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பெற்றோரின் அதிகாரம் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள கல்வி, பொருளாதாரம் போன்ற வளர்ச்சியினால் மாறி வருகிறது. ஆ.செ.

**அம்பபாலி** கி.பி. ஆறாம் நூற்றாண்டில் வைசாலியில் வாழ்ந்த பரத்தையருள் ஒருத்தி. இவள் அரசருடைய தோட்டத்தில் மாமரத்தடியில் கண்டெடுக்கப் பெற்றவளாதலால் அம்பபாலி எனப்பெயர் பெற்றாள். ஆம் என்றால் மாமரம். அம்பபாலி நன்கு வளர்ந்து அழகான பெண்ணானாள். இவளுடைய அழகில் சொக்கிப் போன பல இளவரசர்கள் இவளை அடையத் தமக்குள் போராடிக் கொண்டனர். உள்நாட்டுப் போரைத் தவிர்க்க இவளைப் பரத்தையாக அறிவித்தனர். இவளை அனுபவிக்க விரும்பியவர் இரவொன்றுக்கு 50 பொற்காசுகளை வழங்கவேண்டும். இவளுடைய கவர்ச்சியான கட்டழகினால் ஈர்க்கப்பட்டவர்களுள் பலர் இவளை விரும்பி அடைய முற்பட்டனர். இவளுடைய புரவலர்களாகச் செல்வந்தர்கள் பலர் இருந்தனர். பிம்பிசார மன்னரும் அவர்களுள் ஒருவர். பிம்பிசாரருக்கு இவள் மூலம் விமலா கொண்டண்ணா என்ற மகன் பிறந்தான்.

அம்பபாலி புத்தரைப் பற்றியும் அவர் ஆற்றி வந்த அறிவுரை பற்றியும் கேட்டறிந்தாள். வைசாலிக் கருகில் இருந்த கோட்டிக் கிராமத்திற்குச் சொற்பொழிவாற்ற வந்த புத்தரின் வருகையை அறிந்த அம்பபாலி, புத்தரைக்காணத் தம் பணியாட்கள் புடைசூழ வந்து சேர்ந்தாள். புத்தரின் அறிவுரைகளைச் செவிமடுத்த இவள் பெருமகிழ்ச்சியுற்று, புத்தரையும் அவருடைய சீடர்களையும் தம் பெருமனைக்கு எழுந்தருளி விருந்துண்ண வேண்டினாள். இவளுடைய அழைப்பினை ஏற்றுக்கொண்டார் புத்தர். இதனையறிந்த இளவரசர்கள் தம் வீடுகளுக்கும் புத்தர் பிரானை விருந்துண்ண அழைத்தனர். முதன்முதலில் அம்பபாலி தம்மை விருந்துண்ண அழைப்பு விடுத்துள்ளதையும், தாம் வர இசைந்துவிட்டதையும் கூறிய புத்தர், இளவரசர்களின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. அம்பபாலி கொடுத்த விருந்திற்குப் புத்தர் வந்திருந்தார். அவருடைய போதனைகளின் செல்வாக்கிற்கு ஆட்பட்ட அம்பபாலி காலப்போக்கில் புத்தரின் சீரிய சீடர்களுள் ஒருத்தியாக மாறினாள்.

அம்பபாலி பிக்குணியாக மாறியதைக் குறித்துப் பல கதைகள் உண்டு. இவள் மகன் விமலா கொண்டண்ணாவும் புத்த சமயத்தில் சேர்ந்து அருகதர் என்று போற்றப்பட்டார். தம் மகன் புத்த பிக்குவாக மாறியபின், அவர் ஆற்றிய அழகான சொற்பொழிவு ஒன்றினைக் கேட்ட அம்பபாலி, மெய்ம்மறந்து பிக்குணியானாள். இவளுடைய மாளிகையில் விருந்துண்ண வந்த புத்தருக்கு அம்பபாலி மாந்தோட்டம் ஒன்றினைப் பரிசாக வழங்கினாள். அங்கு இவளே பிற்காலத்தில் விகாரை ஒன்றைக் கட்டினாள்.

**அம்பர்** தஞ்சை மாவட்டத்தில் பேரளத்தை அடுத்துள்ள பூந்தோட்டம் அருகில் உள்ள ஊர். சோமாசி மாற நாயனார் வீடு பேறெய்திய இடம். கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயிலாகிய பெருந் திருக்கோயில் இங்குள்ளது. இது திருஞான சம்பந்தரால் பாடப் பெற்றதாகும். இத்தலத்தில் திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஒரு சேர இருந்து வழிபட்டதாகப் பெரிய புராணம் பேசுகிறது. அருணகிரிநாதரின் திருப்புகழும் இவ்வூருக்கு உண்டு. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அம்பர்ப் புராணம் என்னும் ஒரு தலபுராணம் பாடியுள்ளார். திருக்கோயிலில் இலிங்கத் திருமேனிக்குப் பின்புறம் அம்மையப்பர் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இறைவன் - பிரம்மபுரீசுவரர்; இறைவி - பூங்குழலம்மை. புன்னை இத்தலத்திற்குரிய மரமாகும். இவ்வூருக்கு அருகில் முக்கால் கல் தொலைவில் அம்பர் மாகாளம் என்னும் பிறிதொரு தேவாரப் பாடல்

பெற்ற ஊர் உள்ளது. அம்பருக்கும் அம்பர் மாகாளத்திற்கும் இடையில் சோமாசி மாற நாயனார் வேள்வி இயற்றிய மண்டபம் இருக்கிறது.

**அம்பர்கிழான் அருவந்தை** சங்க காலத்தில் வாழ்ந்த ஒரு கொடையாளி. அம்பர் என்பது சோழ நாட்டுத் தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ள ஓர் ஊர். இதன் அருகே காவிரியின் கிளையாறுகளுள் ஒன்றாகிய அரிசிலாறு பாய்கிறது. அம்பர், நெல் வயல்களும் பூஞ்சோலைகளும் நிறைந்தது. இதன் தலைவனாக விளங்கியவன் அருவந்தை. கல்லாடனார் இவனைப் புறநானூற்றில் பாடியுள்ளார் (385). பாடாண்டிணை வாழ்த்தியலில் அமைந்த அப்பாடலில், 'அடுத்த வீட்டானைப் பாடிய பாடலைக் கேட்டே, அப்பாணன் மீது அன்பு மிகக் கொண்டு அரும்பொருள் வழங்கிய அருளாளன் அருவந்தை'' என்று இவனைப் போற்றியுள்ளார். திவாகர நிகண்டின் ஆசிரியர் திவாகரர் பேணிய சேந்தனைப் பற்றி அந்நூலில் 19 இடங்களில் குறிப்புகள் உள்ளன. இச்சேந்தன் அம்பர் ஊரினைச் சேர்ந்தவன் என்றும், அருவந்தை மரபில் வந்தவன் என்றும் கூறப்படுகிறான். அருவந்தைச் சேந்தன் எனப்படும் இவனைக் 'கற்ற நாவினன், கேட்ட செவியினன், முற்றுணர்ந்த மூதறிவாளன், நாகரிக நாட்டத்தன்' என்று திவாகரம் பாராட்டுகிறது. சங்க காலந் தொட்டே அம்பர், புலவர் பாடும் புகழ் பெற்றுத் திகழ்கிறது. அருவந்தையின் சிறப்பால் இடைக்காலத்தில் அம்பருக்கு, 'அம்பர் அருவந்தை' எனப்பெயர் வழங்கியமையினைத் திருப்பழனக் கல்வெட்டால் அறிதல் கூடும்.

**அம்பர் சர்க்கா** கதர் நூலை நூற்கும் ஒரு பொறி. கையால் தக்கிளியில் நூல் நூற்பதற்கு மாறாகச் சர்க்காவினால் கதர்நூல் நூற்கும் முறையைக் காந்தியடிகள் போற்றினார். அதைத் திருத்தி வேகமாக நூல் நூற்கும் அமைப்பில் உருவாக்கப் பட்டது அம்பர் சர்க்கா. சர்வசேவா சங்கத்தின் பிரயோக சமிதி என்னும் நிறுவனம் இச்சர்க்காவை உருவாக்கியது. இதன் பாகங்கள் அனைத்தும் உலோகத்தாலானவை. ஆறு நூற்கண்டுகளை இப்பொறி இயக்கவல்லது. கோவையைச் சார்ந்த டெக்சூடுல் வணிகக் குழுவினர் இதை உற்பத்தி செய்கின்றனர். குசராத்து மாநிலம் இராசகோட்டிலும் அம்பர் சர்க்கா விலைக்குக் கிடைக்கின்றது. எட்டு மணி நேரம் இதில் நூல் நூற்றால் ஐந்து ரூபாய்க்குக் குறையாமல் கூலி கிட்டும். நம் நாட்டில் ஏறக்குறைய 250 மையங்களில், அம்பர் சர்க்காவினால் கதர் நூல் நூற்கிறார்கள்.

**அம்பர் மாகாளம்** தஞ்சை மாவட்டத்தில் பேரளத்தை அடுத்துள்ள பூந்தோட்டத்திற்கு அருகிலுள்ள ஊர்; 'கோயில் திருமாகாளம்' எனவும் வழங்கும். இவ்வூர், அம்பர் என்னும் ஊருக்கருகில் முக்கால் கல் தொலைவில் உள்ளது. சோமாசி மாற நாயனார் வேள்வி செய்த மண்டபம் அருகில் இருக்கிறது. அவ்வேள்வியில், அவியினைச் சிவபெருமான் ஏற்றுக் கொண்டார் எனக் கூறப்படுகிறது. அம்பன், அம்பாசுரன் என்னும் அரக்கர்களைக் கொன்ற பாவம் தீரக் காளி இறைவனை வழிபட்ட இடம் என்பது மரபு வழிச் செய்தி. திருக்கோயிலின் தென்புற வெளிச் சுற்றில் காளி கோயில் உள்ளது. இறைவன்' மாகாள நாதர்; இறைவி, அச்சந்தவிர்த்த நாயகி. இவ்வூருக்குத் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகம் உண்டு. ''காளி ஏத்தும் அழகனார் அரிவையோடிருப்பிடம் அம்பர் மாகாளந் தானே'' என்பது திருஞான சம்பந்தர் திருவாக்கு.

**அம்பரீடன்[1]** அம்பரீடன் நபாகன் என்பாளின் மைந்தன். இவன் பலஆண்டுகள் திருமாலை நினைந்து தவம் மேற்கொண்டான். திருமால் இந்திரன் உருக்கொண்டு இவன் எதிரே வந்தான். இவனோ 'யாம் உம்மை நினைந்து தவம் மேற்கொள்ளவில்லை; உம் இருப்பிடம் சேர்க' என்றான். இந்நிலையில் திருமால் தம் உருவைக் காட்டி இவனை மகிழச் செய்து வேண்டிய வரங்கள் நல்கினார்.

திருமாலிடம் பெற்ற சிறப்புகளால் இவன் மிகுந்த ஈகைக் குணமுடையவனாக விளங்கினான். எவர் வந்து எது கேட்பினும் இல்லையெனாது வழங்கும் வள்ளல் தன்மை உடையவனாக விளங்கினான். வறியவர்கள் இவனைத் தம் உயிரென மதித்தார்கள்.

இவன் இந்திரனுடன் ஓர் இருக்கையில் இருந்தவன். இவன் படைத்தலைவன் சுவேதன்.

இவன் மகள் சீமதி; நல்ல அழகி. அவளைப் பருவதன், நாரதன் என்ற இருவரும் விரும்பினர். அவர்கள் இருவரும் இவன்பால் சென்றார்கள். ஆனால் திருமாலின் மாயையால் அவளை இழந்து, அதனால் சினமுற்று, இருட்டினை ஏவினர். அதனை இவன் திருமால் அளித்த சக்கரப் படையால் காத்துக் கொண்டான்.

இவன் ஒரு காலத்தில் வேளவிப் பசுவொன்றை இழந்து அதற்கு மாற்றாக நரப்பசு ஒன்றினைக் கொள்ளக் கருதி இருசிகன் மகனாகிய சுநச்சேபனை விலைகொடுத்து வாங்கினான். சுநச்சேபன் இதனை விசுவாமித்திரரிடம் தெரிவிக்க அவர் ஒரு மந்திரத்தை அவனுக்கு அருளினார். அம்பரீடன் செய்த வேள்வியில் அவன் இந்த மந்திரத்தைப் பயன்படுத்த, தேவர்கள் அம்பரீடனுக்குக் காட்சி கொடுத்து 'அவி பெற்றோம்' எனக்கூறி அவனைக் காத்தனர்.

அம்பரீடன் பலருக்கும் கொடுத்தே உணவு உண்ணும் பழக்கமுடையவன். ஏகாதசி நோன்பு மேற்

கொள்வது இவன் வழக்கம். நோன்பின் முடிவில் அறுபது பசுக்களைத் தானமாக வழங்குவான். துவாதசியில் பலரோடும் உணவு உண்பது இவன் மேற்கொண்ட பழக்கங்களுள் ஒன்று. இந்நிலையில் துருவாச முனிவர் அங்கு வந்தார். இவன் அவரையும் அருகில் வைத்து உணவு உண்ணக் கருதினான். அவரோ காளிந்தி ஆற்றில் நீராடி வருவதாகச் சென்றார். சென்றவர் குறித்த காலத்தில் வரவில்லை. அம்பரீடன் நோன்பு முறையைத் தவறவிடக் கூடாது என்று கருதிச் சிறிது நீர் குடித்தான். நீராடித் திரும்பிய முனிவர் செய்தியறிந்து அவன் தம்மை அவமதித்தான் என்று சினந்து அவனைக் கொல்லக் கருதினார். அவர் தமது சடையில் ஒன்றைப் பறித்துச் சினத்துடன் பூமியில் வீச அதிலிருந்து ஒரு பூதம் தோன்றி அம்பரீடனை எதிர்த்தது. அம்பரீடன் அப்பூதத்தைத் திருமாலின் சக்கரப்படையால் கொன்றான். அச்சக்கரப்படை முனிவரைத் துரத்த, முனிவர் மும்மூர்த்திகளிடமும் ஓடித் தம்மைக் காக்க வேண்டினார். திருமால் முனிவரை அம்பரீடனிடமே அடைக்கலப்படுத்த, அவன் சக்கரப்படையை வேண்டி முனிவரைக் கொல்லாது காப்பாற்றினான். தவத்தினும் பசிப்பிணி நீக்கமே மேன்மையானது என்னும் உண்மையினை விளக்க இக்கதை கூறப்பெறுகிறது.

அம்பரீடன்[2] அம்பரீடன் சூரிய மரபினைச் சேர்ந்த இக்குவாகு வழிவந்தவன். மாந்தாதா என்ற அரசனின் பிள்ளைகள் மூவருள் அம்பரீடன் ஒருவன். புருகுச்சன், முசுகுந்தன் என்போர் இவன் உடன்பிறந்தோராவர். இவன் மகன் இயவனாச்வன்.

வெ.ப.

**அம்பலத்தாடுமையர்** தமிழில் பாரத நூலினை இயற்றிய புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆதிபருவத்தாதிபருவம் என்னும் தம் பாரத நூலை இயற்றினார். வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்திலுள்ள ஆதிபருவத்தின் முதற் சருக்கத்தை மட்டுமே பாடுபொருளாகக் கொண்டு அதனை விரித்தும், புதியன புகுத்தியும் இவர் தம் நூலினைச் செய்துள்ளார். சந்த நயம் மிக்க விருத்த யாப்பில் அமைந்த இவரது நூல் 569 பாடல்கள் கொண்டுள்ளது. இவற்றுள் 177 பாடல்கள் வில்லிபுத்தூரார் பாடிய பாடல்களாகும். ‘முன்னோர் மொழிபொருளே யன்றி அவர் மொழியும் பொன்னேபோல் போற்றுவம்’ என்பதற்கு எடுத்துக்காட்டாகத் தமக்கு முற்பட்ட புலவர்களின் கருத்துகளையேயன்றி அவர்தம் பாடல்கள் பலவற்றையும் அப்படியே மேற்கொண்டு இவர் தம் நூலினை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. இவரை ஆதரித்தவர் மடுவை மன்னனாகிய திருமலைராயர் மகனார் திம்மபூபதி ஆவார். அவர் வேண்டுகோளை ஏற்று, இவர் இந்த நூலில் இயற்றிய செய்தியினைத் ‘திருமலை பெற்றருளுமணி பண்டகுல விளக்காகும், திம்மபூபன் பரிவோடு பாரதத்து ஆதி பருவத்தாதிதனைப் பகருகென்றான்’ என்று நூலின் முற்பகுதியில் இவரே குறிப்பிட்டுள்ளார். தம்மை ஆதரித்த திம்மபூபதியின் கொடை, படை ஆற்றல், சுற்றம் பேணும் சிறப்பு முதலிய பண்புகளைப் போற்றி நூலுள் ஏழு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். தமக்கு முந்தியோர் பாடல்களை அப்படியே எடுத்துத் தம் நூலுள் இணைத்து நூலை அமைப்பதில் இவர் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார் எனத் தெரிகிறது. காண்க: ஆதிபருவத்தாதிபருவம்.

**அம்பலவாசி** என்பது கேரள மாநிலத்துச் சாதிகளுள் ஒன்று. குறிப்பாகக் கோவில் பணியாட்களை அம்பலவாசிகள் என்பர். அம்பலவாசி சாதியில் பல்வேறு உட்பிரிவுகள் உண்டு.

**அம்பலவாண அடிகள்** கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். அம்பலவாண சுவாமிகள் என்னும் பெயர் கொண்ட இவர் பூங்கோடு என்னும் ஊரினர். இவர் திருக்கோவிலூர் ஞானியார் மடாலயத்தினைத் தோற்றுவித்த ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் மாணவர். வேதாந்த சாரத் திரட்டு இவரது நூலாகும்.

நா.ஜெ.

**அம்பலவாணக் கவிராயர்[1]** அறப்பளீசுர சதகம் பாடிய புலவர். தந்தையார் இராம நாடகக் கீர்த்தனையைப் பாடிய சீர்காழி அருணாசலக் கவிராயராவார். அம்பலவாணக் கவிராயர் சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லுக்கு அருகே உள்ள சதுரகிரியில் வீற்றிருக்கும் அறப்பளீசுரர் மீது ‘அறப்பளீசுர சதகம்’ என்னும் அறநூலைப் பாடியுள்ளார். இவர் காலம் கி.பி.18-ஆம் நூற்றாண்டு.

அம்பலவாணக் கவிராயர்[2] மருதூரில் விளங்கிய கவிஞர். ஆதித்தபுரி புராணம் பாடியுள்ளார்.

ஏ.சி.பா.

**அம்பலவாண தேசிகர்,** திருவாவடுதுறைத் திருமடத்தின் மூன்றாவது தலைவராக விளங்கியவர். கி.பி.15-ஆம் நூற்றாண்டினரான இவர், அத்திருமடத்தினை நிறுவிய பஞ்சாக்கர தேசிகர் என்னும் நமச்சிவாய மூர்த்திகளிடம் உபதேசம் பெற்றார். இவர் பண்டார சாத்திரம் என்னும் சாத்திரத் தொகையில் அடங்கும் தசகாரியம், சன்மார்க்க சித்தியார், சிவாச்சிரமத் தெளிவு, சித்தாந்தப் பஃறொடை, சித்தாந்த சிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேச வெண்பா, நிட்டை விளக்கம், அதிசய மாலை, நமச்சிவாய மாலை என்னும் பத்து நூல்களைச் செய்துள்ளார். மேலும் பாசாண்ட நிராகரணம், பூப்பிள்ளை

அட்டவணை, அனுபோக வெண்பா, சிவஞானபோத சம்பிரதாய உரை ஆகியவற்றையும் எழுதியுள்ளார். இவர் மாணவர்களுள் ஒருவர் வைணவ அந்தணராக இருந்து சைவ சமயம் சார்ந்து, தீக்கை பெற்று உலகுடைய நாயனார் என்னும் பெயரில் விளங்கியுள்ளார். அவர் தம் ஆசிரியர் மீது பல பாடல்கள் பாடியுள்ளார்.

**அம்பலவாண தேசிகர் கலம்பகம்**, திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவராக விளங்கிய அம்பலவாண தேசிகர் மீது மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய கலம்பக நூலாகும். கலம்பகம் என்பது பல்வேறு வகையான பா, பாவினங்களும் அகப்பொருள் புறப் பொருள் துறைகள் சிலவும், சுவை பலவும் நிரம்பிய இலக்கிய வகையாகும். எனவே, இதனைக் கலம்பக மாலை என்றும் சிறப்பிப்பர். தேவர் மீதும், முனிவர் அரசர் முதலிய சிறப்புடை மாந்தர்மீதும் இந்தச் சிற்றிலக்கியம் பாடப்பெறுவது மரபு. முனிவரைக் குறித்துப் பாடும்போது அவரைத் தேவரைப் போல வைத்துப் பாடுவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய அம்பலவாண தேசிகர் கலம்பகம் இதற்குத் தக்கதொரு எடுத்துக்காட்டாகும்.

திருவாவடுதுறை அம்பலவாண தேசிகர், அத்திருமடத்தின் 15–ஆம் குரவராகக் கி.பி.1845 முதல் கி.பி. 1868 வரையில் அருளாட்சி புரிந்தவர்; தம் மடத்தில் தமிழ்ப்புலவராய் விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு 'மகாவித்துவான்' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தவர் இவரே. இவர்தம் தவநிலையும் தண்ணருளும் பற்றிப் பேசுமிடத்துப் பிள்ளை இவரைச் சிவவடிவமாகவே போற்றியுள்ளார்.

'குருவே சிவம் எனக் கூறினன் நந்தி' (திருமந். 6.1.9.) எனத் திருமூலர் கூறியுள்ளார். இருபாவிருபதில் ஆதிக்குருமூர்த்தியாகிய மெய்கண்டாரைச் சிவமெனவே கொண்டு அருணந்தி சிவாச்சாரியாரும் தொன்மை மரபைப் போற்றிப் புகழ்ந்துள்ளார். திருவாவடுதுறைத் திருமடத்தின் தலைவர் சடையின்றி மழித்த தலையுடன் உருத்திராக்கம், திருநீறு, கண்டிகை முதலிய சிவவேடப் பொலிவுடன் காட்சி தருவர். 'பாடுந் துறைசைப் பதியம் பலவாணன்' (அ.க.12) எனத்தொடங்கும் பாடலில் சிவபெருமானே மானிடச்சட்டை தாங்கி அம்பலவாண தேசிகர் வடிவில் குருநாதனாய் வந்து அருள்புரிகிறார் என்பதைப் பத்தி ஈடுபாடும் சிலேடை நயமும் அமையப் பாடியுள்ளார். இப்பாடலில், 'என் பணி கொள் ஏந்தல்' என்னும் தொடர் 'என் பணிகொள் ஏந்தல்' என்றும், 'என்பு அணிகொள் ஏந்தல்' என்றும் பிரிந்து சிலேடைப் பொருள் படுவதாக உள்ளது.

அகம், புறம் பற்றிய பொருள் எதுவாயினும் பாடல்களை அம்பலவாண தேசிகரின் அரும்பெருங் குணங்கள் வெளிப்பட அமைத்துள்ள திறம் கண்டு மகிழத்தகும். இந்நூற்கண் சைவ மரபுகளும் திருவாவடுதுறைத் திருமடத்தின் மரபுகளும் விளக்கமுற மகாவித்துவான் அவர்கள் அங்கங்கே எடுத்துரைத்துள்ளார். மு.ச.

**அம்பலவாண நாவலர்** ஈழத்து யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவர் யாழ்ப்பாணத்திலுள்ள வட்டுக்கோட்டை என்னும் ஊரில் ஆறுமுகம் பிள்ளைக்கும் சுந்தரவல்லி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்; வேளாண் மரபினர். இவர் அப்பைய தீட்சிதர் இயற்றிய 'பிரமதருக்க சுதவம்' என்னும் வடமொழி நூலைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். இவர் மதுரையில் விளங்கும் திருஞானசம்பந்தர் திருமடத்தின் தலைவரிடம் காவியுடை பெற்று, மணவாத் துறவியாய்த் திகழ்ந்தார். வட்டுக்கோட்டையில் சைவத் தமிழ்ப்பள்ளி ஒன்றைத் தோற்றுவித்துத் தாமே அப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார். சிதம்பரத்தில் 'ஆறுமுக நாவலர் சந்தான ஞானசம்பந்த சாமித் திருமடம்' என்னும் பெயரில் ஒரு மடத்தையும் ஏற்படுத்தினார். இவர் சமயச் சொற்பொழிவாற்றுவதில் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களின் வழியைப் பின்பற்றினார். திருவாவடுதுறைத் திருமடத்தின்தலைவர் அம்பலவாண தேசிகர் இவரது கல்வியறிவைப் பாராட்டி இவருக்கு நாவலர் என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார். இவர் வாழ்ந்த காலம் 20–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். இவர் அகோர சிவாச்சாரியார் பத்ததி, அருணாசல மான்மியம், சற்குரு மணிமாலை, திருவாதிரைத் திருநாள் மகிமைப் பிரபாவம், திருச்சுழியல் புராணம், நடன வாத்திய இரஞ்சனம், சண்முக சடாட்சரப் பதிகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். ஏ.சி.பா.

**அம்பலவாண பண்டிதர்** யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்களுள் ஒருவர்; வேளாண் மரபினர். இவருடைய ஊர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கோப்பாய் ஆகும். இவர் தந்தையார் கோப்பாய் அருளம்பல முதலியார் ஆவார். இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். சொல்வன்மையும் கல்விப் பயிற்சியும் மிக்க இவர் கவி பாடும் ஆற்றலும் பெற்றிருந்தார். சேனாதிராய முதலியாரிடம் கல்வி பயின்றார். தம் ஆசிரியர் இயற்றிய நல்லை வெண்பா, நிராவிக் கலிவெண்பா முதலியவற்றை ஆராய்ந்து அச்சிட்டார். சிறந்த தமிழறிஞராகத் திகழ்ந்த சி.வை. தாமோதரம்

பிள்ளை அவர்களால் பெரிதும் பாராட்டப் பெற்றார். இவர் காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டாகும்.

ஏ.சி.பா.

**அம்பலவாணர் திருக்கூத்து** என்பது தில்லைப் பொன்னம்பலத்தில் சிவபெருமான் நிகழ்த்துகின்ற ஆனந்தத் திருக்கூத்தினைக் குறிக்கும். இதனைத் திருமூலர் 'தேனுந்தும் ஆனந்த மாநடம்' எனப் போற்றியுள்ளார். சிவபெருமான் ஆடுகின்ற ஆனந்தத் திருநடனம் அதைக் காண்பார்க்குப் பெரு விருப்பத்தையும் மகிழ்ச்சியையும் தோற்றுவிப்பதாகும். 'அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே - அவர் ஆட்டங் கண்டு நாட்டங் கொண்டேன் பாங்கிமாரே' என்று வள்ளற்பெருமானாராகிய இராமலிங்க அடிகளார் தாம் இக்கூத்தினில் ஈடுபட்டு நின்றமையைப் புலப்படுத்தியுள்ளார்.

பொன்னம்பலம் போலவே திருவாலங்காடு, மதுரை, திருநெல்வேலி, திருக்குற்றாலம் ஆகிய ஊர்களிலும் சிவபெருமானின் நடனத் திருக்கோலம் சிறப்பாகப் பேசப்படும். அம்பலம் என்பதைப் பொது என்றும், சபை என்றும் சொல்வது உண்டு. திருவாலங்காட்டில் உள்ளது மணியம்பலம்; காரைக்காலம்மையார் அப்பன் திருவடியின் கீழ் நின்று பாட, அங்கு அவர் நடனமிடுகிறார். மதுரையில் வெள்ளியம்பலம். இங்கு மட்டும் இடக்காலை ஊன்றி வலக்காலைத் தூக்கித் தொண்டனுக்காகக் கால் மாறி ஆடுகிறார். திருநெல்வேலியில் இறைவன் நடமிடும் இடம் தாமிர சபை என்றும், திருக்குற்றாலத்தில் சித்திரசபை என்றும் போற்றப் பெறும்.

'தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன்' என்னும் மணிவாசகர் வாக்கிற்கு இயைய, தமிழ் நாட்டிலுள்ள திருக்கோயில்களில் எல்லாம் கூத்தப் பெருமான் திருவுருவங்கள், தென்திசை நோக்கியே அமைக்கப் பெற்றிருக்கின்றன.

சிவபெருமானின் திருநடனச் சிறப்பையும் அதில் பொதிந்துள்ள உட்பொருள்களையும் உலகறியச் செய்த பெருமை கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களுக்கே உரியதாகும். "சிவபெருமானின் ஆடல்கள் எல்லாவற்றிலும் பொதிந்துள்ள ஆழமான கருத்து ஒன்றேயாகும். அது இறைவன் பேராற்றலை வெளிப்படுத்துவது" என்று அவர் குறிப்பிடுகின்றார்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலையும் புரிந்து, சாட்டை இல்லாப் பம்பரம் போல் எல்லா உலகங்களையும் இறைவன் இயங்கச் செய்து வருகிறான். இறைவனின் ஐந்தொழிலும் எவ்வெவ்வாற்றால் எவ்வெவ்வாறு இயக்கப்படுகின்றன என்பதை,

'தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் — ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'

என்னும் உண்மை விளக்கப் பாடலால் விளக்கமுறக் காணலாம். தோற்றம்-படைப்பு; திதி-காப்பு; சங்காரம்-அழிப்பு; திரோதம்-மறைப்பு; முத்தி-அருள்புரிகை.

உண்மை விளக்கம் உரைக்கும் உட்கோளினைப் 'பூமலிகற்பகப்புத்தேள்' எனத் தொடங்கும் சிதம்பர மும்மணிக்கோவைப் பாடல் ஒன்று விளக்கமுற எடுத்துரைக்கிறது.

இறைவனின் ஐந்தொழில்களிலும் தலையாயது அருளல் என்பதும், மற்ற நான்கும் அதற்குத் துணை செய்வனவே என்பதும், சிவகாமியம்மை இடையறாமல் ஆனந்தக் கூத்தைக் கண்டு கொண்டிருப்பது உயிர்கள் உய்வதற்காகவே என்பதும் இப்பாடலில் நன்கு தெளிவாக்கப்பட்டுள்ளன. ஆனந்தக் கூத்தனின் சிற்பம், ஓவியம் எதிலும் தவறாமல் அம்மையாரும் இடம் பெறுவது இக்காரணத்தாலேதான்.

அம்பலக்கூத்தை ஒரு முறை கண்டவரும் வீடு பேற்றை அடைவர் என நூல்கள் பலவும் கூறுகின்றன. கருவிகள் யாவும் சடப்பொருள்கள் என்பதனையும், கதிரவன் வெளிச்சத்தால் கண் காண்பதைப் போல, இறைவனின் திருவருளால் உயிர்கள் செயல்படுகின்றன என்பதனையும், அநுபவ முறையில் உணர்வதே நடன தரிசனம் எனப்படும் என்பதனையும் சிவஞான தீபப் பாடலொன்று குறிப்பிடுகின்றது.

கூத்தப்பெருமான் திருமேனிகளின் தோற்ற அமைப்பில் சின்னஞ்சிறு வேறுபாடுகள் காணப்படினும் எல்லாவற்றிற்கும் அடிப்படை ஒன்றேயாம். பெருமான் தாமரைப் பீடத்தின்மேல் பாம்பைப் பிடித்துள்ள குறளன் முயலகனின் முதுகு வளைந்து நெளியும் வண்ணம் வலக்காலை ஊன்றியுள்ளார். இடக்கால் தூக்கிய திருவடியாகும். பெருமானை நான்கு கைகளுடனும் மின்போல் ஒளிவிடும் செஞ்சடையுடனும் அமைத்துள்ளனர். சடைக்கற்றையின் அடிப்பாகம் பரந்தாடும் நிலையில் காணப்பெறும். தலையின் மேல் சீறும் பாம்பும் மண்டையோடும் கங்கையும் காட்சி தருகின்றன. சடைமுடியின் மேலாக இளம் பிறையும் கொன்றை மாலையும் தோற்றமளிக்கின்றன. பெருமானின் வலக்காதில் குண்டலமும் இடக்காதில் தோடும் இலங்குகின்றன. இடையில் சுற்றிய புலித்தோலாடை துடைகளைச் சுற்றி இறுக்கமாக உள்ளது. இடுப்பில் சுற்றிக் கட்டிய மேலாடை பறக்கிறது. திருமார்பிலே பூணூல் திகழ்ந்து ஒளி செய்கிறது. இடக்கையில் தாங்கிய தீ, கொழுந்து விட்டு எரிகிறது. கீழேயுள்ள வலக்கை அஞ்சேல் என்று அடைக்கலம் அளிக்கிறது.

இடக்கையோ நல்லபாம்பைப் பிடித்துள்ள முயலகனை நோக்கியுள்ளது. பீடத்தின் இடப்பக்கத்திலிருந்து சுடர்களுள்ள திருவாசி ஆடுங்கூத்தனைச் சுற்றி வலப்பக்கம் வந்து சேருகிறது. இந்தத் திருவாசி துடியும் அனலும் ஏந்திய கைகளைத் தொட்டுச் செல்கிறது. சிவகாமி அம்மையார் திருநடனம் கண்டு களித்து அண்மையில் நிற்கிறார். புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதரும், பாம்புக்கால் முனிவராகிய பதஞ்சலி முனிவரும் திருநடனத்தைப் போற்றித் தொழுது இருபாலும் நிற்கின்றனர்.

மனிதப்பிறவி பெற்றார் காணவேண்டும் பெரும்பேறு இந்த நடனத்திருக்கோலமே என்று திருநாவுக்கரசர் இக்கோலத்தைக் 'குனித்த புருவமும்' எனத் தொடங்கும் தம் தேவாரத்தில் போற்றியுள்ளார். மேலுமவர் தம் முன்னே வந்து வணங்கும் மெய்யடியார்களை, எப்பொழுது வந்தாய் என்று நலம் உசாவுவது போலப் பெருமானின் அருட்கண் நோக்கும் அடைக்கலமருளும் திருக்கரமும் காணப்பெறுகின்றன என்பதனை 'என்று வந்தாய் என்னும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே' என்று குறிப்பிட்டுள்ளார்.

நடனக்கலை பிறந்தது எம்பெருமானின் திருநடனத்திலிருந்துதான் என்பர். சங்க நூல்களுள் ஒன்றாகிய கலித்தொகை, சிவபெருமான் ஆடிய கொடுகொட்டி, பாண்டரங்கம், காபாலம் என்னும் மூன்று கூத்துகளைத் தெரிவிக்கின்றது. இவற்றுள் முதலிரண்டினைச் சிலப்பதிகாரமும் சிறப்பாக எடுத்துக் கூறுகிறது. இறைவனின் ஆடல் திருக்கோலம் மிகப் பழங்காலம் முதலே பாரதநாடெங்கும் பரவியிருந்தமைக்குச் சிற்பங்களும் சித்திரங்களும் சான்றாக உள்ளன

சிவபெருமான் மாலைக் காலத்தில் மேருமலையின் உச்சியில் ஆடுகின்ற மாலைப் பெருங்கூத்து, ஊழிமுடிவில் அவன் ஆடுகின்ற ஊழிக்கூத்து என்பனவும் பேசப்படும். சிவபெருமான் திருக்கூத்தில் நூற்றெட்டு வேறுபட்ட வகைமைகள் அடங்கியுள்ளன என்பர். அவற்றுள் எழுவகைத் தாண்டவத்தை மிகச் சிறப்பாக எடுத்துரைப்பர். அவற்றுள்ளும் ஐந்தொழிலையும் ஒருசேரச் செய்யும் கூத்தே அம்பலவாணனின் ஆனந்தத் திருக்கூத்து என்பதனை 'எங்குஞ் சிதம்பரம் எங்குந் திருநடம்' என்று சிவயோகியாராகிய திருமூலர் தம் ஞானக் கண்ணால் கண்டு காட்டியுள்ளார். உலகங்களின் இயக்கத்திற்கு அச்சாணியாய் அம்பலவாணன் திருக்கூத்தே நிலைபெற்றுள்ளது. மு.ச.

**அம்பாசமுத்திரம்** திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு வட்டத்தின் பெயர். அம்பாசமுத்திரம் என்னும் பெயரில் நகரம் ஒன்றும் உள்ளது. கைத்தறி நெசவாளர்கள் மிகுதியாக வாழும் இவ்வூரில் பஞ்சாலை ஒன்றுமுண்டு. இது குற்றாலத்திற்கு அருகிலுள்ள ஊர். இதனை அம்பை என்றும் கூறுவர். அம்பை வட்டத்தில்தான் பொதிகை மலை அமைந்துள்ளது. இம்மலையிலிருந்து தாமிரவருணியும் அதன் துணையாறுகளும் உற்பத்தியாகின்றன. இவ்வூரைச் செழிப்பான கழனிகள் சூழ்ந்துள்ளன. நெல்லைக்கும் தென்காசிக்குமிடையே ஓடும் இருப்புப் பாதைத் தொடர், அம்பாசமுத்திரம் வழியாகச் செல்வதால், இங்கு ஓர் இரயில் நிலையமும் இருக்கிறது. பாபநாசத் தலத்துக்குச் செல்லும் பயணிகள் இங்கு இறங்கியே போவர். நல்ல கருங்கல் கிடைக்கும். இவ்வூரிலிருந்து, கற்கள் வெளியிடங்களுக்கு ஏற்றுமதியாகின்றன. கன்னியாகுமரி விவேகானந்தர் நினைவுச்சின்ன மண்டபத்திற்கு அம்பாசமுத்திரக் கற்சுரங்கங்களிலிருந்து கற்கள் சென்றன. இவ்வூருக்கு அருகிலுள்ள பத்தமடையில் கோரைப்பாய்கள் நெய்கிறார்கள். இவ்வூரின் மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 29,736 ஆகும்.

**அம்பாய்னா** கிழக்கிந்தியத் தீவுக்கூட்டங்களுள் ஒரு தீவு. இத்தீவின் நீளம் ஏறத்தாழ 50 கி.மீ. முதல் 58 கி.மீ. வரை ஆகும். அம்பாய்னா (Amboyna) தீவு மொலுக்கசு (Moluccus) தீவுகளிலேயே மிகப் பெரிய தீவாகும். இத்தீவு பெரிய நகரமாகவும் திகழ்கிறது. இத்தீவைக் கி பி. 1605-ஆம் ஆண்டு போர்ச்சுகீசியரிடமிருந்து தச்சுக்காரர்கள் (Dutch) கைப்பற்றினர். அவர்களுக்குப் போட்டியாக ஆங்கிலேய வணிகர்களும் அங்கு வரலாயினர். கி.பி. 1623-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 16-ஆம் நாள் தச்சுக்காரர்கள் இத்தீவில் இருந்த 18 ஆங்கிலேயர்களைப் படுகொலை செய்தனர். மேலும் 18 ஆங்கிலேயர்களுள் ஒன்பது பேரைத் தூக்கிலிட்டுக் கொன்றனர். ஆங்கிலேயர்களைப் பயமுறுத்தவே இவ்வாறு செய்யப்பட்டது. ஆங்கிலேயருக்கு உதவி புரிந்த ஒரு போர்ச்சுகீசியரையும் 9 சப்பானியர்களையும் கூட அவர்கள் படுகொலை செய்தனர். இந்நிகழ்ச்சி வரலாற்றில் 'அம்பாய்னா படுகொலை' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதற்குப்பின் ஆங்கிலேயர் கிழக்கிந்தியத் தீவுகளை விடுத்து, இந்தியாவின் மீது தமது முழுக் கவனத்தையும் செலுத்தலாயினர். அம்பாய்னாவைக் கி.பி. 1796-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 16-ஆம் நாள் ஆங்கிலேயர்கள் தச்சுக்காரர்களிடமிருந்து மீண்டும் கைப்பற்றினர்.

அம்பாய்னா மக்கள் மலாய் இனத்தின் வழிவந்தவர்களாவர். இவர்கள் கறுப்பாகவும் தடித்துக் குள்ளமாகவும் இருப்பர். இம்மக்களுள் பெரும்பாலோர் கிறித்துவ மதத்தைத் தழுவியவர்கள். இவர்கள் மலையேறும் திறமை பெற்றவர்கள்; சிலர் படைவீரர்களாகவும் பணி புரிகின்றனர். அம்பாய்னாவிலும் அதனைச் சுற்றியுள்ள தீவுக் கூட்டங்களிலும் நறுமணப் பொருள்கள் பெருமளவில் விளைகின்றன. அடிக்கடி இத்தீவில் நில நடுக்கம் ஏற்படுகிறது.


அம்பாய்னாவைப் போர்ச்சுக்கீசியப் படைத்தளபதி அந்தோனியோ-டி-ஆபிரு (Antonio-de-Aberu) என்பவர் கண்டுபிடித்தார் என்றும், அவர் கி.பி. 1811-ஆம் ஆண்டு மலாக்காவை விட்டுச் சென்றார் என்றும் கூறுவர். அதற்குமுன் கி.பி. 1506-ஆம் ஆண்டு போலக்னாவைச் சேர்ந்த உலுடோவிகா வார்த்தோமா (Ludovica Varthomma) என்பவர் இத்தீவில் தமது உரிமையை நிலைநாட்டியிருந்தார்.

**அம்பாலா** அரியானா மாநிலத்திலுள்ள ஒரு நகரம். அதே பெயரில் மாவட்டம் ஒன்றும் அம் மாநிலத்திலுள்ளது. தில்லியிலிருந்து 200 கி.மீ. வடமேற்கே அமைந்துள்ள இங்கு, இந்திய விமானப்படைப் பயிற்சிக் கழகம் ஒன்று இயங்கி வருகிறது. கோதுமை, பருத்தி, மூங்கில், தானியங்கள், நறுமணப் பொருள்கள் விற்கும் வாணிக மையமாக அம்பாலா விளங்குகிறது. இங்கு இருப்புப்பாதைச் சந்திப்பும் விமானத் தளமும் உள்ளன. அறிவியல் தொடர்பான உற்பத்திக் கருவிகள் செய்யும் தொழிற்சாலைகள் இங்குள்ளன.

**அம்பி** கருநாடக மாநிலத்தில் பெல்லாரி மாவட்டத்தில் ஆசுபெட்டு அல்லது கொசப்பேட்டை (Hospet) வட்டத்தில் துங்கபத்திரை ஆற்றங்கரையில் அமைந்துள்ள நகரம். கி.பி. 1336-ஆம் ஆண்டு விசய நகரப் பேரரசை ஏற்படுத்திய அரியரர்-புக்கர் எனும் இரு சகோதரர்கள் இந்நகரை உருவாக்கி அதற்கு விசய நகரம் (வெற்றித் திருநகர்) எனப் பெயரிட்டனர். இந்நகரமே இப்பேரரசின் தலைநகரமாய் விளங்கி வந்தது. கி.பி. 1565-ஆம் ஆண்டு நடைபெற்ற தலைக்கோட்டைப்போரில் விசயநகரப் பேரரசு தோல்வியுற்றதை அடுத்து அம்பி (Hampi) தக்காணச் சுல்தான்களால் அழிக்கப்பட்டது. விசய நகரப் பேரரசர்களின் அவைக்கு வருகை புரிந்த அப்துர் ரசாக்கு (Abdur Razzak), சீசர் பிரடரிக்கு (Caesar Frederick) போன்றோர் இந்நகரின் அழகினையும் கட்டிடத் திறனையும் தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர். இன்று பெரும்பரப்பில் சிதைவுகளைக் கொண்டிலங்கும் எஞ்சிய சின்னங்கள் இந்நகரத்தின் தொன்மையினையும் மாண்பினையும் உணர்த்துகின்றன.

இங்குள்ள கோயில்களுள் சிறப்பானவை விருபாட்சகர் கோயில், விட்டலசாமி கோயில், கிருட்டிணர் கோயில், அசாரா இராமசாமி கோயில் என்பனவாம். இங்கிருக்கும் ஏமகூட மலையின் (Hemakuta Hill) மீது அமைந்துள்ள சமணக் கோயில் விசய நகரப் பேரரசிற்கு முன் ஏற்பட்ட கோயிலாகும்.

கோயில்கள் : விருபாட்சகர் கோயில் விசய நகரப் பேரரசர்களின் செப்பேடுகளில் பம்பாபதி கோயிலென்று அழைக்கப்படுகிறது. இதன் கீழைக் கோபுரம் விசயநகரப் பேரரசுக்காலக் கோபுரங்களிலேயே தலைசிறந்த கோபுரமாகக் கருதப்படுகிறது. கோபுரத்தின் உயரம் ஏறத்தாழ 55 மீட்டர்களாம். கோயிலின் மூலவர் பம்பாபதி என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலின் அரங்க மண்டபம் என்னும் மண்டபத்தின் உட்கூரைகளில் ஓவியங்களைக் காணலாம். அர்ச்சுனன் மீன் மீது அம்பெய்து திரௌபதி



விட்டலசாமி கோயிலும் ஒரே கல்லினாலான தேரும்

யைத் திருமணம் செய்தல், திரிபுராந்தகர், வித்தியா ரணிய துறவி பல்லக்கில் நகர்வலம் வருதல் போன் றவை ஓவியங்களுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

விசயநகரப் பேரரசின் கட்டிடக் கலைத்திறனுக் குச் சிறந்த சான்றாக விளங்கும் மற்றொரு கோயில் விட்டலசாமி அல்லது விட்டோபா கோயிலாகும். இக்கோயில் கட்டும் பணி கி.பி. 1513-ஆம் ஆண்டு கிருட்டிண தேவராயரால் தொடங்கப்பட்டது. அவ ருக்குப் பின் வந்த அச்சுதராயரால் அப்பணி தொட ரப்பெற்று, முழுமையாகக் கட்டப்படாத நிலையில் உள்ளது. இக்கோயில் செவ்வக வடிவமைப்பில் 170 மீட்டர் நீளமும் 104 மீட்டர் அகலமும் கொண்டது. இக்கோயிலின் மூலவரான விட்டோபா, கிருட்டிண ரின் திருவுருவங்களுள் ஒன்றாகும். கோயிலைச் சுற் றிச் சுற்று மண்டபம் ஒன்றும் உள்ளது. இதன் கூரை களை மூன்று வரிசைகளாலான தூண்கள் தாங்குகின் றன. இக்கோயிலில் மூன்று நுழை வாயில்கள் கோபு ரங்களுடன் உள்ளன. இவற்றில் கீழைக்கோபுரமும் தெற்குக் கோபுரமும் சிறந்த கோபுரங்களாகும். இங் குள்ள கல்தேர் ஒரே கல்லினாலானது. இத்தேர் காண்பவரின் கண்களையும் கருத்துகளையும் ஈர்ப் பது. சக்கரங்களோடு கூடிய இத்தேரை யானைகள் இழுத்துச் செல்வது போன்று அமைத்துள்ளார்கள். இக்கோயிலின் மகா மண்டபம் 6 தூண்களைக் கொண்டுள்ளது. தூண்கள், குதிரைகள், போர் வீரர் கள், மற்றும் பிற உருவங்கள் ஆகியவற்றையும் கொண்டு இம்மகாமண்டபம் விளங்குகின்றது. இவை விசயநகரக் காலத்துப் பாணியில் அமைக்கப்பெற் றவை. மகா மண்டபத்திற்குச் செல்லப் படிக்கட்டு களுடன் கூடிய மூன்று வாயில்கள் மண்டபத்தின் மூன்று பக்கங்களிலும் உள்ளன. இவ்வாயில்களில் யானைச் சிற்பங்கள் உள்ளன. திருமண மண்டபம், திருவிழா மண்டபம் போன்றவை இங்குள்ள பிற மண்டபங்க ளாகும். இக்கோயிலின் சுவர்கள் மாடக்குழிகளுட னும் சுவருடன் ஒட்டிய இடைத்தூண்களுடனும் உள்ளன. குள்ளமான உருவமைப்புள்ள சிறு தெய் வங்கள், யாழி போன்றவை வரிசையாகச் செதுக்கப் பட்டுள்ளன.

கிருட்டிண தேவராயரால் கட்டப்பட்ட மற் றொரு கோயில் கிருட்டிணர் கோயிலாகும். கிருட் டிண தேவராயர் ஒரிசாவின் கசபதிகளை வென்றதன் நினைவாக உதயகிரியிலிருந்து எடுத்து வந்த கிருட் டிணரின் உருவச்சிலையை வைத்து இக் கோயிலைக் கி.பி.1513–ஆம் ஆண்டு கட்டினார். அமர்ந்த நிலை யில் குழந்தை வடிவில் கிருட்டிணர் சிலை வடிக்கப் பட்டுள்ளது. இன்று இக்கிருட்டிணர் உருவச் சிலை சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தின் கண்காணிப்பிலுள்ளது. சிறிய கோயிலாக இருப்பி னும் நுண்ணிய சிற்பங்களைக் கொண்டு விளங்கும்



அம்பி துலாபாரம்

அசாரா இராமசாமி கோயில் கிருட்டிண தேவராய ரின் காலத்தைச் சார்ந்தது. இராமர் விசயநகர அர சர்களின் குலதெய்வமாவார். அசார் என்றால் ஆயி ரம் என்று பொருள். இராமரின் ஆயிரம் திருவுருவங் கள் கொண்டுள்ள கோயில் என இதனைக் கொள்ள லாம். இராமாயணக் கதையைச் சிற்ப வடிவில் இங் குச் செதுக்கி வைத்துள்ளார்கள். இக் கோயிலிலுள்ள உக்கிர நரசிம்மரின் சிற்பம் ஒரே கல்லினால் ஆனது. 7மீட்டர் உயரமுள்ள இச்சிற்பம் கி.பி. 1528–ஆம் ஆண்டைச் சார்ந்தது. இக்கோயிலின் குறிப்பிடத்தக்க மற்றொரு சிற்பம் கணேசர் சிற்பமாகும். ஒரே கல்லினாலான இச்சிற்பம் ஏறத்தாழ மூன்று மீட்டர் உயரமுடையது.



நரசிம்மர்

நீராடும் மண்டபம் அரசகுலப் பெண்கள் குளிக் கும் இடமாகும். இது சுதை வேலைப்பாடுகள் கொண்டிலங்குகிறது. இம்மண்டபம் மாடிமுகப்புகளு



தாமரை மண்டபம்

டன் உள்ளது. இந்து-இசுலாமிய ஒருங்கிணைந்த கட்டிடக் கலைத் திறனுக்கு இந்நீராடும் மண்டபமும் சிறந்த எடுத்துக்காட்டாகும். மகாநவமி திப்பா எனப்படும் அழிந்த நிலையிலுள்ள கல்மேடையொன்று இங்குள்ள பழைமைச் சின்னமாகும். முன்பு இம்மேடை தூண்களுடன் கூடிய மண்டபமாக இருந்ததற்கான சிதைவுகள் இன்னும் இருக்கின்றன. இம்மேடையின் பக்கங்களில் போதிகைச் சிற்பங்களாகக் குதிரைகள், நடன உருவங்கள், இசைக் கலைஞர்கள் போன்ற சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கிருட்டிண தேவராயர் ஒரிசாவின் கசபதியை வெற்றி கொண்டதன் நினைவாக நவராத்திரி விழா நடைபெறுவதற்காக இம்மண்டபம் கட்டப்பட்டதெனக் கூறப்படுகின்றது.

அரசமாளிகை, அரசவை போன்றவற்றின் அழிவுச் சின்னங்கள் இன்றும் நிலைத்துள்ளன. அரசவையின் அடித்தளம், அதனுடன் கூடிய படிக்கட்டுகள் போன்றவை எஞ்சியுள்ள கட்டிடங்கள் ஆகும். தாமரை மண்டபம் (Lotus Mahal) இரண்டு அடுக்குகளைக் கொண்டது. கீழறை, 24 சதுரத் தூண்களைக் கொண்டும் மலர் உருவறைகளைக் கொண்ட மேல்வளைவுகளைக் கொண்டும் அமைந்துள்ளது. தாமரை இதழ்களை விரித்து வைத்தாற்போன்று காட்சியளிக்கும் இம்மண்டபம் இந்து-இசுலாமிய ஒருங்கிணைந்த கட்டிடக் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இங்குள்ள அந்தப்புரம், அரசிகள் வாழ்ந்த மாளிகையையும் பெண் காவலர்கள் தங்கிய இடங்களையும் அவற்றின் சிதைவுகளையும் கொண்டு காட்சியளிக்கின்றது. அம்பியின் அழிவுச் சின்னங்கள் விசயநகரின் பழைமையையும் சிறப்பினையும் இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இராமர் சுக்கிரீவனுடன் மழைக்காலத்தில் தங்கியிருந்த 'பம்பா' என்னும் இடம் இந்நகரமே என்றும் நம்பப்பட்டு வருகிறது. இந்திய அரசுத் தொல்லியல்துறையினரின் அருங்காட்சியகம் ஒன்றும் இங்குள்ளது.

துணை நூல்கள்:

**Sivaramamurti**, C., "The Art of India", India Book House, Bombay, 1977.

**George Michell**, **Vasundhara Filliozet**, "Splenders of the Vijayanagar Empire", Hampi Marg Publications, Bombay, 1981.

"Archaeological Remains Monuments and Museums", Archaeological Survey of India Publication, New Delhi, 1964.

**அம்பி** கி.மு. 4-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தட்சசீலத்தை ஆண்ட அரசர்; மகா அலெக்சாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்த போது அவரை வரவேற்றவர். நாட்டைக் காட்டிக்

கொடுத்தவர் என்று இவரைக் குறை கூறுவோரு முளர். அண்டை நாட்டு அரசரான போரசு என்பாரின் வலிமையைக் கண்டு பொறாமையும் அச்சமும் கொண்டிருந்த அம்பி, அலெக்சாந்தருக்கு அடிபணிந்தார். தமக்கு உறுதுணையாக நின்ற அம்பியை அலெக்சாந்தர், தட்ச சீலத்தின் முடிமன்னராக்கினார். மேலும் அவரைச் சீனாப் ஆறு சிந்துவுடன் கலக்கும் வரையிலுள்ள சிந்து சமவெளியின் ஆளுநராகவும் அமர்த்தினார். ஆனால் அவர் ஆட்சி நீண்ட காலம் நீடிக்கவில்லை. பின்னர் அவர் சந்திரகுப்த மௌரியரால் தோற்கடிக்கப்பட்டார். பஞ்சாபு பகுதி கிரேக்கரின் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது.

**அம்பிகாபதி**[1] கவிச்சக்கரவர்த்தி கம்பரின் மகன். தமக்குத் தம் பெற்றோர் ஏகம்ப நாதர் எனப் பெயரிட்டதுபோலத் தாமும் தம் மைந்தனுக்குச் சிவ பெருமானுடைய பெயராகிய அம்பிகாபதி என்பதனைக் கம்பர் சூட்டினார். குலோத்துங்க சோழனின் அவைக்களப் புலவராக விளங்கினார் என்றும், தம் தந்தை இயற்றிய கம்பராமாயணத்திற்குக் 'கம்ப நாடன்' எனத் தொடங்கும் சிறப்புப்பாயிரம் அளித்தார் என்றும், இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர். அம்பிகாபதி கோவை என்னும் அகப்பொருள் கோவையினை இவர் பாடினார் என்னும் கருத்தினை ஏற்க மறுப்பாருமுளர். தன் மகளை அம்பிகாபதி காதலிக்கும் செய்தியின் உண்மை அறிய விரும்பிய சோழ மன்னன், விருந்து ஒன்றினை அமைத்துத் தன் மகளை உணவு பரிமாற ஏவினான். அவளது தளர்ந்த நடைநிலை கண்ட அம்பிகாபதி, 'இட்ட அடிநோவ' எனத் தொடங்கிப் பாட முற்பட்டான். இரண்டடிகள் பாடக் கேட்ட கம்பர், தம் மகன் அதனை முடிக்குமுன்னர்க் 'கொட்டிக் கிழங்கோ கிழங்கு' என்று தொடர்ந்து, வேறு பொருளில் பாடி முடித்தார். மேலும் ஐயுற்ற மன்னன் அம்பிகாபதியின் மார்பில் சாந்து பூசித் தன் மகளிடம் சுண்ணம் பெற்று வர அனுப்பினான். அவளால் தழுவப்பெற்ற குறியறிந்து உண்மையுணர்ந்த மன்னன், நூறு பேரின்பப் பாடல் பாடினால் தன் மகளை மணஞ்செய்து கொடுப்பதாகக் கூறினான். அவையில் கடவுள் வாழ்த்திற்குப் பின் தொண்ணூற்றொன்பது பாடல் பாடிமுடித்தபோது நூறு முடிந்ததென்று எண்ணி அரசகுமரி வெளிப்பட்டாள். அவளைக் கண்ணுற்ற அம்பிகாபதி 'சற்றே பருத்ததனம்' எனத் தொடங்கும் சிற்றின்பப் பொருளமைந்த பாடலைப் பாட, சினங் கொண்ட அரசனால் அம்பிகாபதி கொலை செய்விக்கப் பெற்றான் என்றும், அரசகுமரியும் இறந்தாள் என்றும், கம்பர் சினந்து சோழ குலம் அழியப் பாடினார் என்றும், வரலாறு கூறப்படுகிறது. இவ்வரலாற்றின் உண்மை எவ்வாறாயினும் தமிழ் இலக்கிய உலகில் அம்பிகாபதி, அரசகுமரி ஆகியோரின் காதல், சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. அம்பிகாபதி பாடிய பாடல்கள் 'பலதுறைக் காரிகை' என்னும் பெயரால் அழைக்கப்படுகின்றன. இவற்றை வேறு புலவர்கள் பாடியனவாகக் கூறுவாருமுளர். இவர் பாடிய பேரின்பப் பாடல்கள் இன்று கிடைக்கவில்லை.

அம்பிகாபதி[2] பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர் வீரசோழன் என்று வழங்கப்படும் வீரை நகரினராதலால் வீரை அம்பிகாபதி எனவும் வழங்கப் பெறுவார். அந்தணர் மரபில் தோன்றிய இவர் தந்தை பெயர் வீரைக்கவிராச பண்டிதர் எனப்படுவார். புலவர் புராண ஆசிரியரான தண்டபாணி சுவாமிகளும் 'சவுந்தரிய லகரி'ப் பதிப்பாசிரியரான அனவரத விநாயகம் பிள்ளையவர்களும் இவர் கவிராச பண்டிதரின் மகன் என்னும் செய்தியினைக் குறிப்பிடவில்லை. இவர் பாண்டிய மன்னரொருவர்பால் இருந்தபோது, தென்காசி, மதுரை, நெல்லை, கருவை ஆகிய நான்கு ஊர்களும் அங்குள்ள இறைவன் இறைவியர் பெயர்களும் அமையத் தாம் கோயிலுக்குச் சென்று வருவதற்குள் பாடுமாறு அரசர் வேண்டினார். இவர் அத்தகைய பாடலை உடனே பாடியமை கேட்டுப் பாராட்டினார். புலமையை வியந்த அரசரின் கண்ணேறு பட்டுப் புலவர் இறந்தார் என்பது கூறப்படுகிறது. நெல்லை வருக்கக் கோவை, பராபரை மாலை, ஆகிய நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

அம்பிகாபதி[3] அம்பிகாபதி கோவையினை இயற்றிய புலவர். இவர் கம்பர் மகன் அம்பிகாபதியினின்றும் வீரை அம்பிகாபதியினின்றும் வேறானவர் என்றும் கூறுவர். அம்பிகாபதி கோவைச் செய்யுள்களை இலக்கண விளக்க ஆசிரியர் வைத்தியநாத தேசிகர் மேற்கோளாக எடுத்தாள்வதால் இவருடைய காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனலாம்.

அம்பிகாபதி[4] தமிழில் தண்டியலங்காரம் இயற்றிய தண்டி என்பவரின் தந்தை அம்பிகாபதி என்று பேசப்பெறுகிறார். இவர் காவிரி நாட்டினைச் சேர்ந்தவர் என்பதனைப் 'பூவிரி தண்பொழிற் காவிரி நாட்டு வம்பவிழ் தெரியல் அம்பிகாபதி' என்று தண்டியலங்காரப் பாயிரப் பகுதி உணர்த்துகிறது.

**அம்பிகாபதிகோவை** கோவை என்னும் சிற்றிலக்கிய வகையினைச் சார்ந்த நூலாகும். கோவை என்பது அகப்பொருள் இலக்கண மரபை ஒரு கோவைப் பட விளக்கிக் கூறும் சிற்றிலக்கிய வகையாகும். இந்நூல் பிற கோவை இலக்கியங்களின் அடிப்படையிலமைந்து, நம்பியகப் பொருள் என்னும் இலக்கண நூல் கூறும் அகத்திணைத் துறைகளை நிரல்பட விளக்கி நிற்கிறது.

இந்நூலின் பெயர்க் காரணத்தை ஆராய நூலினுள் அகச்சான்று இல்லை. அவையடக்கத்தில்

மட்டும், 'அருள் அம்பிகாபதி பொன்னடித் தாமரை சூட்டியகப் பொருள் அம்பிகாபதி கம்புனைந்தேன்' (அம்பிகாபதி கோவை-1) எனக் கவிக் கூற்றாக ஈரடிகள் இடம் பெற்றுள்ளன. இதனால் ஆசிரியர் நூலுக்குச் சூட்டிய பெயர் 'அம்பிகாபதிகம்' எனத் தெரிகிறது. இத்தொடரில் வரும் 'கம்' என்பதற்குத் 'தலை' எனப் பொருள் கொண்டு வேறு விளக்கம் கூறுவாருமுளர். கவிஞர், அம்பிகாபதியின் பொன்னடி பணிந்து நூலைக் கூறப்புகுவதாக இங்குக் குறிப்பிடு தலின், அம்பிகாபதி என்பது அம்பிகையின் – உமை யின் – பதியாகிய சிவனைக் குறிப்பதாகலாம் என்றும், கி.பி. 1899–இல் வெளிவந்த இந்நூலின் முதல் பதிப் பில், ''கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் குமாரர் அம்பிகாபதி இயற்றிய அம்பிகாபதி கோவை'' எனக் குறிக்கப்பட்டிருத்தலின் நூல் எழுதிய ஆசிரியரின் பெயரால் இந்நூல் வழங்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. எனினும் தஞ்சை வாணன் கோவை, நந்திக் கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களில் தஞ்சை வாணன், நந்தி ஆகியோர் பாட்டுடைத் தலைவராக அமையப் பாடல்தோறும் அவர்கள் புகழ் பேசப்படுதல் போல, இந்நூலில் யாண்டும் அம்பிகையின் பதியாகிய சிவன் அல்லது கம்பரின் மகனாகிய அம்பிகாபதி குறிக்கப் பெற்றுப் புகழப் படவில்லை. நூலின் ஆசிரியரைப் பற்றியோ, நூற் பெயர்க் காரணம் பற்றியோ உய்த்தறிய வேறு அகச் சான்று இல்லை. நூல் எழுந்த காலம் பற்றி அறிதற் கும் குறிப்புக் கிட்டவில்லை.

இந்நூல் பெரிதும் நம்பியகப் பொருளின் துறை களை மனத்துட் கொண்டு பாடப்பட்டுள்ளது. நம்பி யகப் பொருளில் இயற்கைப் புணர்ச்சி முதலாகப் பொருள் வயிற்பிரிவு ஈறாக உள்ள 32 இயல்களுள் 25 இயல்கள் அங்ஙனமே பெயர் மாறாமல் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. விடுபட்ட துறைகளுள் தூதிற் பிரிவு பகை தணி வினைப் பிரிவு என்றும், துணைவயிற் பிரிவு உற்றுழிப் பிரிவு என்றும் பெயர் கொண்டு இடம் பெற்றுள்ளன. இயல்களின் உள்ளே அமைந்த துறைத் தலைப்புகளும் நம்பியகப் பொருள் நூற்பாக் களில் இடம்பெற்ற தொடர்களைக் கொண்டே பெரி தும் அமைந்து விளங்குகின்றன.

இந்நூலுக்கென அமைந்த தனித்தன்மைகள் சில உள. அகத்திணை இலக்கண இலக்கிய மரபுகளைப் பெரிதும் அடியொற்றிச் செல்லும் போக்கு இந்நூலில் காணப்படுகிறது. அகமாந்தரின் உணர்வு எழும் பின் புலம், கூற்று நிகழும் சூழல், ஒரு மாந்தர் பற்றி இன் னொரு மாந்தர் கொள்ளும் கருத்து, தலைவன் தலைவி பற்றிச் சமுதாயம் கொள்ளும் கருத்து போன்ற அனைத்தும் அக இலக்கியங்களினின்றும் முரண்படாதவாறு புனையப்பட்டுள்ளன. இவை போன்றே பிரியும் தலைவன் தெய்வத்தை வைத்துத் தெளிவு செய்வது, வரைவு கடாவும் தோழி அன்னை அறிந்தமையைக் காரணம் காட்டுவது, இற்செறிப்புத் துயரைச் சுட்டுவது, ஊராரின் அலர் மிகையை எடுத்துக் கூறுவது, அறத்தொடு நிற்கும் தோழி வெறிவிலக்குவது, பரத்தையிற் பிரிந்து வந்த தலை வனைப் புதல்வன் தழுவுவது கண்டு தலைவி புலப் பது முதலியனவும் மரபை நோக்கி அமைக்கப்பட்டுள் ளன. இவற்றை விளக்க அகத்திணைப் புலவர்கள் கையாளும் உவமைகள் கூடப் பிறழாமல் அமைக்கப் பெற்றுள்ளன. தலைவியை மானிட மகளா என ஐயுறும் தலைவன், தலைவியின் கூந்தலில் வண்டு மொய்த்தல், மாலை வாடுதல், சந்தனம் புலர்தல் ஆகியன கண்டு மானிட மகளே எனத் துணிவதாக அக இலக்கண இலக்கியங்கள் கூறுவது மரபு. இந் நூலில் இம் மூன்று குறியீடுகளும் ஒருங்கே குறிப் பிடப்பட்டுள்ளன.

அகத்திணை இலக்கணமும் இலக்கியமும் மாறு பட்டு விளங்கும் சூழல்களில் இந்நூல் இலக்கிய மரபை நோக்காது, இலக்கண மரபைப் பின் பற்றி நிற்றலை உணரமுடிகிறது. தலைவன் தலைவியைப் பாங்கனின் துணை கொண்டு கூட முயலும் பாங்கற் கூட்டம் பற்றிச் சங்க இலக்கியங்கள் விரிவாகப் பேச வில்லை. எனினும் நம்பியகப் பொருள் பாங்கற் கூட் டத்தின் துறைகளை மிக விரிவாக எடுத்துரைக்கிறது. இலக்கியங்கள் பெரிதும் போற்றி நிற்காத பாங்கற் கூட்டத்தினை, இலக்கண மரபைப் பின்பற்றிக் கூறும் கொள்கையால் இந்நூல் விரிவாக எடுத்துரைக்கிறது. இதேபோன்று அவர் பரவிய சூழலில் தலைவன் மேற் கொள்ளும் சிறு பிரிவாகிய ஒருவழித் தணத்தலின் போது, தலைவி கையற்று நின்று காமம் மிக்க கழி படர் கிளவி கூறுவது இலக்கண மரபை ஒட்டியதே யாகும். அகத்துறைகளை வகுத்தும் தொகுத்தும் கூறும் இலக்கண நூற்பாக்களை விளக்குவதற்கு அமைந்த எடுத்துக்காட்டுப் பாடல்களாக இவற்றின் பாடல்கள் அமைந்து விளங்குகின்றமைக்கு, இலக்கண மரபைப் பெரிதும் பின்பற்றும் இக்கொள்கை காரண மாகிறது. இந்நூலில் புதுமையாகச் சில செய்திகள் அமைந்துள்ளன. தலைவன் பொருட்டுத் தலைவியி டம் காமக்கிழத்தி வாயில் வேண்டுவதாக ஒரு துறை அமைத்துள்ளார் ஆசிரியர். இத்துறை அக இலக்கண இலக்கியங்களில் காணப்படாத ஒன்று.

இல்லறத்திற்கு அடித்தளமாக அமையும் களவு இல்லற வாழ்வை விளக்கும் கற்பு எனும் இரு பிரிவை விளக்குவதோடு, அக இலக்கண இலக்கியங்கள் நின்று விடுவது மரபு. அம்பிகாபதி கோவை இல்லறம் காத்துத் துறவறம் தாங்குவதை வற்புறுத்தும் துற வற இயலையும் கொண்டு முடிந்துள்ளது.

இந்நூலுள்காணப்படும் குறைபாடுகள் சில உள. இந்நூலாசிரியர் நூல் முழுவதற்கும் ஒரு தொடர்பு காட்டும் நோக்கமோ முழுப் பார்வை பார்க்கும் விருப்பமோ கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. அறத்தொடு நிற்றல் என்ற இயலில், தலைவி தலைவனோடு தான் கொண்ட காதல் உறவைத் தோழிக்கு அறிவிப்பதாகத் துறை ஒன்று உள்ளது. ஆனால் பகற்குறி, இரவுக் குறிகளில் எல்லாம் தோழி, தலைவனையும் தலைவியையும் முன்னர்க் கூட்டி வைத்ததாக நூலின் முற்பகுதியில் பாடல்கள் உள்ளன. அதே போன்று, உடன் போய தலைவன் தலைவியர் மீண்ட மீட்சி பற்றிக் குறித்த புலவர், அடுத்த இயலில் உடன் போக்கில் தோன்றிய இடையீடு பற்றிப் பேசியுள்ளார். நூலை முழுமையாக நோக்காததால் தோன்றிய இம்முரண்பாட்டிற்கு, இலக்கண இயல்களை விளக்கும் உட்கிடக்கை கொண்டு ஆசிரியர் நூலின் பொருளமைதியை அமைத்துக் கொண்டமையினைக் காரணமாக்கலாம் போலும். நம்பியகப் பொருளின் இலக்கணத் துறைகளுக்கு ஏற்ற, மிகப் பொருந்தி வருகின்ற எடுத்துக்காட்டுப் பாடல்களை எழுதுவதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி நின்றமையும் ஒரு காரணமாகும். ஆ.இரா.

**அம்பிகை பாகர்** கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இணுவில் இவர் ஊராகும்; வேளாள மரபினர். ஆறுமுக நாவலரவர்கள்பால் தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களையும், கந்த புராணம் தணிகைப் புராணம் போன்ற சமய இலக்கிய நூல்களையும் கற்ற இவர், இணுவில் நடராசையர் என்பாரிடம் சைவசித்தாந்த சாத்திரங்களைப் பயின்றார். தாமோதரம் பிள்ளையவர்களோடு தமிழகம் போந்து, அவர் மேற்கொண்ட நூல் வெளியீட்டுப் பணிக்கு உதவினார். தம் ஊரில் தமிழ்க் கல்விக்கூடம் ஒன்று நிறுவிக் கல்வித் தொண்டு புரிந்தார். இணுவை அந்தாதி என்னும் நூலை இயற்றினார். மேலுமிவர் சூளாமணி வசனம் என்னும் உரைநடை நூலும், தணிகைப் புராண உரையும் இயற்றியுள்ளார்.

**அம்பிரியா** இத்தாலியிலுள்ள ஒரு மாநிலம். இதன் வடமேற்கே தசுக்கனியும் (Tuscany) வடகிழக்கில் மார்சசும் (Marches) தென்கிழக்கிலும் தென்மேற்கிலும் இலாட்டியமும் (Latium) எல்லைகளாக அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 8,456 சதுர கி.மீ. மக்கள்தொகை 8,03,988 (1981). இங்குள்ள மிகப் பெரிய நகரங்கள் பெருகியா (Perugia) வும் தெர்னி (Terni) யும் ஆகும். பெருகியா இம்மாநிலத்தின் தலைநகரமாக விளங்குகிறது. அம்பிரியா (Umbria) மலைப்பாங்கான செழிப்புள்ள மாநிலம். இரும்பு, எஃகு, சணல், இரசாயனப் பொருள் தயாரித்தல் போன்ற தொழிற்சாலைகள் இங்குள்ளன. கைவினைப்பொருள்கள் தயாரித்தல், மரச்செதுக்கு வேலைப்பாடு, மட்பாண்டத்தொழில் போன்றவை இங்கு நடைபெறும் சிறுதொழில்களாகும். இம்மாநிலத்தில் வரலாற்றுப் புகழ்வாய்ந்த இடங்கள் பல உள்ளன. அவை பொலிக்னோ (Poligno), சுபாலிடோ (Spoleto), ஓர்விடோ (Orvieto), அசிசி (Assisi), தோடி (Todi), சிட்டா–டி–கேசடிலோ (Citta di Castello), கூபியோ (Gubbio) போன்ற நகரங்களாகும். இவற்றைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளின் மூலம் நாட்டின் வருவாய் பெருகியுள்ளது.

இந்நகரத்தில் அம்பிரியர் என்னும் பழங்குடியினர் ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து வாழ்ந்து வருகின்றனர். எபிருசுக்கர்களும் (Epiruscans) இங்கு வாழ்ந்தனர். ஆனிபால் (Hannibal) என்னும் வட ஆப்பிரிக்காவைச் சார்ந்த படைத்தலைவர் இப்பகுதியை வென்றார். இம் மாநிலம் கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் ஓவியக் கலையில் சிறந்து விளங்கியது. இம் மாநிலம் கி.பி. 1808–ஆம் ஆண்டில் பிரெஞ்சுப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. இது கி.பி. 1861–ஆம் ஆண்டு இத்தாலியுடன் இணைந்தது.

**அம்பேத்கர்** இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்புத் திட்டத்தை உருவாக்கிய பேரறிஞர்; அரிசன மக்களின் தனிப் பெரும் தலைவர். மராட்டிய மாநிலத்திலுள்ள இரத்தினகிரி மாவட்டத்தில் மோ என்னும் வட்டத்தில் அம்பாவடே என்னும் சிற்றூரில் இவர் 1891–ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் 14–ஆம் நாள் பிறந்தார். இவர் தந்தையின் பெயர் இராம்சி மலோசி சக்பால்; தாயார் பெயர் பீமாபாய். இவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர். இராம்சி சக்பால் இராணுவப் பணியால் 'சுபேதார் மேசர்' என்னும் தகுதியைப் பெற்றார். இவர்களுக்குப் பதினான்கு குழந்தைகள் பிறந்தன. பதினான்காம் குழந்தையாகப் பிறந்தவரே 'பீமாராவ் இராம்சி' என்று அழைக்கப்பட்ட அம்பேத்கர் (Ambedkar).

தீண்டாமைக் கொடுமை, அறிவுக் கோயிலான பள்ளியிலும் குடிகொண்டிருப்பதைப் பீமாராவ் இராம்சி கண்டார். பள்ளியில் மாணவர்கள் உட்கார மரப்பலகைகள் உண்டு. ஆனால், உயர்ந்த சாதி மாணவர்களே அவற்றில் உட்காரலாம். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் பள்ளியின் ஒரு மூலையில் கோணிப் பையைத் தரையில் விரித்து உட்கார வேண்டும். ஆசிரியர்களோ உயர்சாதி மாணவர்களோ தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களைத் தீண்ட மாட்டார்கள். அவர்கள் வைத்திருக்கும் பொருள்களையும் தொட மாட்டார்கள். அரசுக்குச் சொந்தமான எல்பின்சுடன் (Elphinston) உயர்நிலைப் பள்ளியில் படித்த காலத்தில் அம்பேத்கர் தீண்டாமையால் பல்வேறு கொடுமை

களுக்கு ஆளானார். அதே பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய ஒருவர் அம்பேத்கர் என்ற பெயர் கொண்டவர். இவர் பார்ப்பன இனத்தவர். பீமா ராவ் இராம்சி படிப்பில் காட்டிய ஆர்வத்தையும் கூர்மையான அறிவுத் திறனையும் கண்ட ஆசிரியர் அம்பேத்கர், பீமாராவ்மீது அன்பு செலுத்தினார். படிக்கவேண்டிய நல்ல நூல்களைக் கொடுத்தும் தாம் கொண்டுவந்த உணவைக் கொடுத்தும் அவர் பீமா ராவுக்கு உதவினார்.

சிறு வயதில் நல்வழிப்படுத்திய ஆசிரியராகிய அம்பேத்கர் செய்த உதவிகளுக்கு அடையாளமாகத் தமது பெயருடன் 'அம்பேத்கர்' என்னும் பெயரைப் பீமாராவ் இணைத்துக் கொண்டார். பீமாராவ் இராம்சி அம்பேத்கர் என்ற பெயர் நாளடைவில் சுருக்கம்பெற்று அம்பேத்கர் என்று வழங்கலாயிற்று. அம்பேத்கருக்குப் பள்ளிப் படிப்பில் இருந்து தொடர்ந்து உதவி செய்து வந்தவர் கிருட்டிணாசி அர்சுன் கெலுசுகர் என்பவராவர்.

அம்பேத்கரின் மேற்படிப்புக்குப் பரோடா மன்னர் சாயாசி கெயிக்வாடு (Jayaji Gaikwad) என்பவரின் உதவியைப் பெறத் துணை செய்தவரும் கெலுசுகரே யாவார். அக்காலத்திலேயே சமூகச் சீர்திருத்தப் பணி களை மேற்கொண்டவர் பரோடா மன்னர். அவர் உதவியால் மேற்படிப்பிற்காக அம்பேத்கர் அமெ ரிக்கா சென்றார். படித்து முடித்தபின் பரோடா சமசுதானத்தில் பத்து ஆண்டுகள் பணி புரிய வேண் டும் என்ற ஒப்பந்தத்துடன் அம்பேத்கர் அமெரிக்கா சென்று, அங்குள்ள கொலம்பியாப் பல்கலைக் கழகத் தில் அரசியல், தத்துவம், சமூகவியல் ஆகிய பாடங் களைத் தேர்ந்தெடுத்துப் பயின்றார். 'பண்டைய இந்தியர் வாணிகம்' என்னும் ஆய்வுக் கட்டுரைக் காக 1915-ஆம் ஆண்டு முதுகலை (எம். ஏ.) பட்டம் பெற்றார். தொடர்ந்து ஆய்வினை மேற்கொண்டு 'இந்தியாவின் தேசியப் பங்கு-வரலாறு மற்றும் ஆய்வுக் கட்டுரை' எனும் ஆய்வுத் தொகுதியைக் கொலம்பி யாப் பல்கலைக் கழகத்தில் தந்து, அவ்வாய்வுக் கட்டு ரைக்காக டாக்டர் பட்டம் பெற்றார். இதே ஆய்வுக் கட்டுரைதான் பிற்காலத்தில் ''ஆங்கில இந்தியாவின் மாநில நிதி வளர்ச்சி', எனும் தலைப்பில் நூலாக வெளிவந்தது.

டாக்டர் பட்டம் பெற்றபின் ஒப்பந்தப்படி பரோடா சமசுதானத்தில் அம்பேத்கர் ''இராணுவச் செயலாளர்'' பொறுப்பை ஏற்றார். தீண்டாமையைப் பெரிதும் கடைப்பிடிக்கும் மக்களிடையே இருந்து அம்பேத்கரால் பணியாற்ற முடியவில்லை. அவருக் குத் தங்க இடம் கொடுக்க ஒருவரும் முன்வரவில்லை. பரோடாவில் பணியாற்ற முடியாத நிலையில் அவர்



அம்பேத்கர்

பம்பாய்க்குத் திரும்பி, சைடன் (Sidon) கல்லூரியில் பொருளாதாரத் துறையில் பகுதிநேரப் பேராசிரி யராகப் பணியாற்றினார். பம்பாய்ச் சைடன் கல்லூ ரியில் பணியாற்றியபோது கோலாப்பூர் மன்னரின் நட்பு அவருக்குக் கிடைத்தது. அவருடைய உதவி யுடன் ''ஊமைகளின் தலைவன்'' என்ற இதழைத் தொடங்கினார் அம்பேத்கர்.

அம்பேத்கர் இலண்டன் சென்று மேலும் படிக்க விரும்பினார். நேவல் பதேனா என்ற தம் நண்பரிட மும் கெலுசுகரிடமும் நிதி உதவி பெற்று இலண்டன் சென்றார். இலண்டன்பல்கலைக்கழகத்தில்பொருளா தாரம், சட்டம் ஆகிய இரண்டு துறைகளிலும் பயிலுவ தற்கு அம்பேத்கர் பதிவு செய்து கொண்டார். இலண் டன் அருங்காட்சியகத்தில் உள்ள நூலகத்தைத் தம் படிப்புக்காக முழுநேரமும் பயன்படுத்திக்கொண்டார் அம்பேத்கர். இவ்வாறு ஓய்வின்றிக் கற்று, அறிவியல் முதுகலைப் பட்டமும், பாரிசுடர் பட்டமும் பெற்றார் அவர். 'நாணயத்தின் சிக்கல்' என்னும் ஆய்வுக் கட் டுரையை அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் அளித்து 'அறிவியல் வல்லுநர்' என்ற பட்டத்தைப் பெற்றார்.

இந்தியாவிற்குத் திரும்பிய அம்பேத்கர் வழக்கறி ஞர் தொழிலை நடத்தியபோதும் சமூகத் தொண் டையே முதன்மையாகக் கொண்டார். அவர் தாழ்த் தப்பட்ட ஏழைகளுக்காகப் பணம் வாங்காமல் நீதி மன்றத்தில் வாதாடி நீதி பெற்றுத் தந்தார். தாழ்த் தப்பட்டவரின் நலனுக்காக அம்பேத்கர் கழகம் ஒன்றைத் தொடங்கினார்; அதன் சார்பில் மாணவர் விடுதி ஒன்றையும் ஏற்படுத்தினார்; பம்பாய் நகரில்

படிப்பகமும் விளையாட்டுக் கழகமும் நிறுவினார். இந்நிலையில் அவர் பம்பாய் மாநிலச் சட்டமன்ற மேலவை உறுப்பினராய் ஆளுநரால் அமர்த்தப் பெற்றார். இந்தியாவிலேயே சட்டமன்றத்திற்கு முதன் முதலாக அமர்த்தப்பெற்ற தாழ்த்தப்பட்ட இனத்தவர் டாக்டர் அம்பேத்கரேயாவார். மேலவை உறுப்பினரானதைப் பாராட்டி நடந்த கூட்டத்தில் தமக்களித்த பணமுடிப்பை அம்பேத்கர் தாழ்த்தப்பட்டோர் கழகத்திற்கே அளித்தார்.

அம்பேத்கர் செய்த தொண்டின் திறத்தால் 1923–ஆம் ஆண்டு எசு.கே. போலே (S. K. Bhole) என்பார், அரசு நிதியிலிருந்து கட்டப்பட்ட பள்ளி, மருத்துவமனை, அலுவலகம், நீர்நிலை, நீதிமன்றம் போன்ற பொது அமைப்புகளெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோருக்கும் உரிமையுள்ளதாக்கப்பட வேண்டுமெனத் தீர்மானம் கொணர்ந்தார். அதனை அரசு ஏற்றது. அதுவே நாட்டில் முதல் முறையாகத் தீண்டாமை ஒழிப்புப் பற்றிய முதல் ஆணையாகத் திகழ்ந்தது.

அரசின் தீர்மானத்திற்கு எதிராகப் பம்பாய் மாநிலத்தில் மகாத்து என்னும் ஊரிலுள்ள நகரசபை செயற்பட்டு வருவதை அம்பேத்கர் அறிந்தார். பொதுக் குளத்தைத் தாழ்த்தப்பட்டோர் பயன்படுத்தக் கூடாது என்று மற்றோர் ஆணையையும் அந்த நகரசபை நிறைவேற்றியது. இதை அறிந்த அம்பேத்கர் 1927–ஆம் ஆண்டில் இரண்டு நாள் மாநாடு ஒன்றைக் கூட்டினார். இரண்டாம் நாள் மாநாட்டுப் பந்தலில் இருந்து ஊர்வலம் கிளம்பிப் பொதுக் குளத்தை அடைந்தது. முதலில் டாக்டர் அம்பேத்கர் குளத்தில் இறங்கித் தண்ணீரை அள்ளிப் பருகினார். பின் அனைவரும் பருகினர். பொதுக் குளத்தில் தாழ்த்தப்பட்டோர் நீர் எடுத்தனர் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட சாதி இந்துக்கள் மனம் கொதித்தெழுந்தனர். சிறு சிறு குழுக்களாகத் திரும்பிய தாழ்த்தப்பட்டோரைக் கழி, கத்தி, அரிவாள்களைக் கொண்டு தாக்கிக் குருதி பெருக அடித்து நொறுக்கினர். செய்தியறிந்த அம்பேத்கர் பதறி ஓடி வந்தார். பழிக்குப் பழி வாங்கத் துடித்த மக்களை அமைதி கொள்ளச் செய்தார். தாக்குதல் நடத்தியோர் கைது செய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர். அதன் பின்னரும் அவ்வூரின் சாதி இந்துக்கள் நீதிமன்றத்தில் 'ஊர்க்குளத்தில் தாழ்த்தப்பட்டவருக்கு உரிமை இல்லை' என்று வழக்குத்தொடுத்து வாதாடினார்கள். இறுதியில், 'தாழ்த்தப்பட்டவருக்கு ஊர்க்குளத்தில் உரிமை உண்டு' என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

அம்பேத்கர் 1928–ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். பொதுப் பணிகளில் ஈடுபட்டதால் முன்பு தாம் மேற்கொண்ட வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. இந்த ஆண்டில்தான் சைமன்குழு இந்தியாவிற்கு வந்தது. அக்குழுவில் இந்தியர் எவரும் இல்லாததால் சைமன் குழுவிற்கு உதவிபுரிய டாக்டர் அம்பேத்கர் உட்பட்ட ஓர் இந்தியக் குழுவை அரசு அமர்த்தியது. டாக்டர் அம்பேத்கரும் சைமன் குழுவிடம் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலையினை விளக்கினார்.

அம்பேத்கரின் பொதுத் தொண்டு தொடர்ந்தது. அவர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக மேலும் மாணவர் விடுதிகளைத் தொடங்கினார். அவர் தூண்டுதலால் அரசும் ஐந்து மாணவர் விடுதிகளைத் தொடங்கியது. பின்னர் அவர் சித்தார்த்தர் கல்லூரியை நிறுவினார்; மக்கள் கல்விக்கழகம் என்ற அமைப்பையும் தொடங்கினார்.

இந்தியர்க்கு உரிமை வழங்குவது பற்றி முடிவெடுக்க ஆங்கில அரசு இலண்டன் நகரில் இருமுறை வட்டமேசை மாநாடு கூட்டியது. அம்பேத்கர் இரு மாநாடுகளிலும் கலந்துகொண்டு, தாழ்த்தப்பட்டோரின் நிலையை எடுத்து விளக்கினார். தாழ்த்தப்பட்டோருக்குத் தனிச் சலுகைகள் வழங்க அரசும் முடிவு செய்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் உறுப்பினர்களைத் தாழ்த்தப்பட்ட மக்களே தேர்வு செய்யும் உரிமையை அம்பேத்கர் வேண்டினார். இவரது வேண்டுகோளை எதிர்த்து எரவாடாச் சிறையில் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். 21 நாள் வரை காந்தியடிகள் உண்ணாவிரதம் இருந்தார். அடிகளாரின் உடல்நிலை சீர்கெட்டது. டாக்டர் இராசேந்திர பிரசாத், இராசாசி போன்றவர்களின் முயற்சியால் அம்பேத்கரும் காந்தியடிகளும் எரவாடாச்சிறையில்சந்தித்தனர். அவ்விருவரும் 1932–ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 24–ஆம் நாளில் செய்து கொண்ட 'பூனா ஒப்பந்தம்' குறிப்பிடத்தக்கதாகும்.

அம்பேத்கர் பின்னர் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றார். வங்காள சட்டமன்றத்திலிருந்து அரசியல் அமைப்புச் சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அரசியலமைப்புச் சபை 1947–ஆம் ஆண்டில் - 'தீண்டாமை பெருங்குற்றம்; அதைக் கடைப்பிடிப்பவர்கள் குற்றவாளிகள்' என்று அறிவித்தது. அம்பேத்கரின் குறிக்கோள் ஓரளவு நிறைவேறியது.

நேரு 1947–ஆம் ஆண்டு தாம் அமைத்த அமைச்சரவையில் அம்பேத்கரைச் சட்ட அமைச்சராக்கினார். இந்தியாவின் அரசியல் சட்டம் அமைப்பதற்கான முன் வரைவுக் குழுவின் தலைவராக அம்பேத்கர் அமர்த்தப்பட்டார். வரைவுக் குழுவின் உறுப்பி

னர்கள் பல காரணங்களால் உதவாவிடினும் அம்பேத்கர் தனியாகவே அரசியல் சட்டத்தை இயற்றி அளித்தார்.

பின்னர் அம்பேத்கர் கருத்து வேறுபாடு காரணமாக அமைச்சரவையிலிருந்து விலகினார். இவர் பிறகு புத்த சமயத்தில் அக்கறை செலுத்தினார். இந்தியாவிலும் பிற நாடுகளிலும் நடந்த புத்த சமய மாநாடுகளில் அவர் கலந்து கொண்டார். அவர் 1956-ஆம் ஆண்டில் பல்லாயிரக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களோடு சாதிப் பிரிவற்ற புத்த சமயத்தைத் தழுவினார். அம்பேத்கரின் திறமையை அறிந்து அமெரிக்காவின் கொலம்பியாப் பல்கலைக்கழகம் அவருக்குச் சிறப்புப் பட்டம் அளித்தது; உசுமானியாப் பல்கலைக்கழகம் இலக்கியத்தில் டாக்டர் பட்டம் வழங்கியது. அம்பேத்கரின் மக்கள் ஐவருள் இப்போது இருவர் உளர்.

அம்பேத்கர் 1956-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 6-ஆம் நாள் மறைந்தார். இந்திய வரலாற்றில் டாக்டர் அம்பேத்கர் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றார். டாக்டர் அம்பேத்கரின் சிறப்பான பணியினைப் பாராட்டும் வகையில் தில்லியில் உள்ள இந்திய நாடாளுமன்றக் கட்டிடத்தின் முன்னால் அவருடைய முழு உருவச் சிலையினை இந்திய அரசே நிறுவியுள்ளது. பி.வி.

துணை நூல்கள்:

**Keer**, **Dhananjay**, "Dr. Ambedkar".

**Thangaraj**, P., "Selected Thoughts of Dr. Ambedkar".


இராமசந்திரன், க.நா., "டாக்டர் அம்பேத்கர்".

நாட்டுக்குழைத்த நல்லவர், "டாக்டர் அம்பேத்கர்" பழனியப்பா பதிப்பகம், சென்னை,

தமிழ்மறையான், "படமும் பாடமும்".

பூவண்ணன், "டாக்டர் அம்பேத்கர்".

**அம்போல்டு (கி.பி.1679-1859)** செருமானிய நிலவியலாரும் அறிவியலாரும் ஆவார். அலெக்சாந்தர் வான் அம்போல்டு (Humboldt) என்பது இவருடைய முழுப்பெயர். இவர் நிலவியலை இக்கால முறைப்படி நிலைநாட்ட உதவியவர்; செடி கொடிகளின் நிலவியலையும், தட்பவெப்ப இயலையும் முதன்முதலாக ஆய்வு நடத்தி வழிகாட்டியவர். தட்பவெப்பச் சமக் கோடுகளுக்கான முதல் வரைபடத்தை வரைந்தவரும் இவரே. இவர் அமெரிக்காவில் இசுபானியருக்குச் (Spanish) சொந்தமான பகுதிகளில் விரிவாகப் பயணம் செய்தார். இவருடைய பருப்பொருள் படைப்பைப் பற்றிய (Physical Universe) ஐந்து தொகுதி கொண்ட நூலுக்கு அண்டம் (Cosmos) என்பது பெயர். அந்நூலைக் கி.பி.1845 க்கும் 1862 க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் இவர் எழுதினார்.



அம்போல்டு

அம்போல்டு, பெர்லின் நகரில் கி.பி. 1769-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14-ஆம் நாள் பிறந்தார்; கோட்டின்சன் பல்கலைக் கழகத்தில் மண்ணியல், உயிரியல், அரசியல், கலை போன்ற பாடங்களைக் கற்றார்; சுரங்கங்களைப் பற்றியும், உலோகத் தொழில்களைப் பற்றியும் பிரிபர்குச் சுரங்கப் பள்ளியில் பயின்றார். இவர் கி.பி.1792-இலிருந்து கி.பி.1797 வரை பிரசியாவில் சுரங்க மதிப்பீட்டாளராகப் பணிபுரிந்தார். அப்பதவியை விட்டு விலகி இயற்கையை ஆராயத் தொடங்கினார். இவர் மெக்சிகோ, நடு அமெரிக்கா, தென் அமெரிக்கா போன்ற பகுதிகளுக்குக் கி.பி. 1799 முதல் 1804 வரை ஆய்வுப் பயணம் செய்தார். அடுத்த இருபதாண்டுகளை இவர் பாரிசு மாநகரில் கழித்தார். அக்காலத்தில் பாரிசு நகரம் நிலவியல் கல்வியில் தலைசிறந்த இடமாக விளங்கியது.

வாழ்வில் எஞ்சிய ஆண்டுகளுள் பெரும்பாலானவற்றை அம்போல்டு பெர்லினில் கழித்தார். அப்போது அண்டத்தின் அடிப்படை பற்றி இவர் பெர்லின் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவாற்றினார். இவர் உருசியாவின் சார் மன்னரின் சார்பாக, யூரல் மலைத் தொடரையும், நடு ஆசியாவையும் பார்வையிட்டு, அங்குக் காணப்படும் கனிம மூலங்களைப் பற்றி அறிக்கை விடுதற்பொருட்டுக் கி.பி.1829-ஆம் ஆண்டில் சிறப்பான பயணமொன்றை மேற்கொண்டார். அம்போல்டு கி.பி. 1856-ஆம் ஆண்டில் காலமானார்.

**அம்போல்டு ஆறு** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் மாநிலங்களுள் ஒன்றான நிவாடாவில் பாயும் மிக நீளமான ஆறாகும். இந்த ஆறு அம்மாநிலத்தின் தென்மேற்காக 467 கி.மீ. தொலைவு ஓடுகிறது. இந்த ஆறு வடமேற்கு நிவாடாவில் உள்ள எல்கோ மாவட்டத்தில் தோன்றி, இம்மாநிலத்தின் மேற்குப் பகுதியிலுள்ள அம்போல்டு ஏரியில் கலக்கிறது. இந்த ஆறு ஓடிவரும்போது அல்கலி என்னும் காரப்பொருளைக் கரைத்துக் கொண்டு வருவதால், அம்போல்டு ஏரி

உப்புநீர் ஏரியாக உள்ளது. ஆற்றுநீரைக் கொண்டு பள்ளத்தாக்கின் பகுதிகளில் நீர்ப்பாசனம் நடைபெறுவதால் இப்பகுதி பண்ணைத் தொழிலுக்கு ஏற்றதாகும். ஆற்றின் பள்ளத்தாக்கில் இரண்டு இருப்புப் பாதைத் தொடர்கள், கிழக்கிலிருந்து மேற்காக அமைக்கப்பெற்று, நிவாடா மலைப்பகுதிகளைக் கடக்கப் பயன்படுகின்றன.

**அம்மள்ளனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். இவருடைய ஒரே பாடல் நற்றிணை 82-ஆம் பாடலாக அமைந்துள்ளது. குறிஞ்சித் திணையில் தலைவன் கூற்றாக அமைந்துள்ள இப்பாடல் பாங்கியின் துணையொடு தலைவியைக் கூடிய தலைவன்,தன் மனநிலை தலைவிக்குப் புலப்படுமாறு, அவள் நலத்தைப் பாராட்டிக் கூறுவதாக அமைந்துள்ளது. இப்பாடலில் முருகனைக் கூடிக் கவின்மிக்கு விளங்கும் வள்ளி, தலைவியின் அழகினுக்கு உவமையாகக் காட்டப் பட்டுள்ளாள். 'தான் எய்திய காமநோயும், அதனால் உண்டாகிய உடல்தளர்ச்சியும் நீங்குமாறு தழுவிக்கிடந்த, மூங்கிலை ஒத்த தோள்களை உடையவளே' என்று தலைவன் தலைவியைச் சுட்டுவது நயமிக்கதாக உள்ளது.

**அம்மானை** தமிழ்நாட்டில் பெண்கள் விளையாடும் விளையாட்டுகளுள் ஒன்று. பழங்கால முதற்கொண்டே இந்த விளையாட்டு இருந்து வருகிறது. பூநாடியும், புனல் தேடியும் பெண்கள் சென்ற காலத்தில் கூட்டாக இவ்விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். பருவம் அடைந்த பெண் பெரும்பாலும் வீட்டிற்குள் வைக்கப்பட்டிருந்தாள். "இற்செறிப்பு" என்னும் குறியீட்டுச் சொல், பெண்கள் வீட்டிற்குள் இருத்தி வைக்கப்பட்ட நிலையைக் காட்டும் இலக்கணச் சொல் எனலாம். இந்நிலையில் இற்செறிக்கப்பட்ட பெண்கள் இல்லிலிருந்தவாறே அம்மானை விளையாட்டுகளில் ஈடுபட்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. பெண்கள் வாய்விட்டுப் பாடிக் கொண்டும், தங்களுக்குள் பந்தயம் கூறிக்கொண்டும் விளையாடுவார்கள். திருமணமாகாத பெண்கள் வெண்மணலில் அமர்ந்து பொன்னால் செய்யப்பெற்ற அம்மானைக் காய்களைக் கொண்டு விளையாடியதாகப் பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது.

கைக்குள் அடங்கத்தக்க மென்மையான காய்கள் மூன்றை வைத்துக் கொண்டு, இரண்டு கைகளாலும் பெண்கள் இவ்விளையாட்டினை விளையாடுவார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு காய் இருக்க, மேலே ஒன்று இருக்கும். ஒரு பெண் ஒரு கையில் இருக்கும் அம்மானைக் காயை மேலே வீசி, அந்தக் கையால் மேலுள்ள அம்மானைக் காயைப் பிடித்தல் வேண்டும். இப்படி ஆடும் பொழுது வலம், இடம் என்று பாராமல் இரண்டு கைகளும் ஒரே வேகத்தில், துடிப்பில் செயல்படுதல் வேண்டும். கைகள் இயங்கும் வேகத்திற்குத் தக்கவாறு கண்பார்வையும் அவற்றோடு இணைதல் இன்றியமையாததாகும். இருந்த இடத்தைவிட்டு எழுந்திராமல் கைகளும், கண்களும், சிந்தையும் ஒரே குறிக்கோளை வைத்து விளையாடும் இவ்விளையாட்டில் பெண்கள் சிறந்து விளங்கினார்கள். இப்படிச் சிறப்பாக ஆடும்பொழுது காய் தவறிக் கீழே விழுந்துவிட்டால் வேறு ஒரு பெண் ஆடுவாள். ஒரு நேரத்தில் ஒரே ஒரு பெண் மட்டுமே இவ்விளையாட்டில் ஈடுபட வேண்டும். ஒருத்தி ஆடுவதும், பாடிக்கொண்டே ஆடுவதும், மற்ற இரண்டு பெண்களும் சேர்ந்து பாடுவதும் பந்தயம் போட்டு ஆடுவதும் உண்டு. மூன்று பேர் ஆடும் இந்த ஆட்டத்தைச் சுற்றிலும் வேறு பெண்கள் அமர்ந்து கண்டின்புற்றுப் பாராட்டுவதும் உண்டு. பெரும்பாலும் மூன்று பெண்கள் சேர்ந்து, ஒருவருக்குப் பிறகு மற்றொருவராக ஆடுவது வழக்கம். இவ்வாறு விளையாடும் பொழுது அவர்களால் பாடப்பெறும் பாட்டு "அம்மானை" எனப்படும்.

பெரும்பான்மையான அம்மானைக்காய்கள் மரக்கட்டையால் ஆனவை; உருண்டையாக இருக்கும்; வழவழப்பான மேல் பூச்சுப் பூசப்பட்டிருக்கும்; வெவ்வேறு நிறம் தீட்டப் பெற்றிருக்கும். கனமில்லாத மரக்கட்டைகளால் அம்மானைக் காய்கள் செய்யப்படும். இலக்கியங்களில் வேறு வகையான அம்மானைக் காய்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. முத்து, மாணிக்கம், மரகதம், பவளம், நீலம் ஆகிய மணிகள் பதித்த அம்மானைக் காய்களையும், பொன்னாலும், வெள்ளியாலும், பளிங்கினாலும் செய்த அம்மானைக் காய்களையும் கொண்டு அம்மானை ஆடப் பெற்றதாக மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் கூறுகிறது. அம்மானையை அம்மனையென்றும் சொல்லுவதுண்டு. உலாக்களிலும் அம்மானை பற்றிய செய்திகள் உள்ளன. மணிவாசகரின் திருவாசகத்தில் வரும் திருஅம்மானையும் நோக்கத்தக்கது.

இசையோடு பாடப்பெறும் பாடல் வகைகளுள் ஒன்று வரிப்பாடல்கள். வரிப்பாடல்களில் இசைக்கு மட்டுமல்லாது, பாடப்பெறும் பொருளுக்கும் கருத்துக்கும் முதன்மை உண்டு. வரிப்பாடல்கள் வழிச் சில கதைகளும்,புராண,இதிகாச, வரலாறு, மரபு, நீதி முதலியன பற்றிய செய்திகளும் வெளிப்படுவதுண்டு. பெண்கள் அம்மானை ஆடும்பொழுது பாடும் பாடல் அம்மானை வரி என்று வழங்கப்பெறும். தொழில் செய்வாரும் விளையாடுவாரும் பாடும் நாட்டுப்புறப் பாடல்களை வரிப் பாடல்கள் என்று கூறுவார்கள். அவ்வகையில் அம்மானைப் பாட்டுக்கு அம்மானைவரி என்று பெயர் வந்தது. பாடிக்கொண்டே விளையாடுவதால் இதனையும் கூத்தின் வகையுள் சேர்த்துள்ளார்கள். அவற்றைப்

பல்வரிக் கூத்து என்று வகைப்படுத்தினர் புலவர். சாழல், கழல், தெள்ளேணம், உந்தி முதலிய மகளிர் விளையாடல்கள் இந்தப் பல்வரிக் கூத்தில் சேர்ந்தவை. நாட்டுப்பாடலாக வழங்கும் அம்மானைப் பாட்டே அம்மானை வரியாகும். இந்தப் பாடல்கள் கற்பனையாக அமையும். அந்தந்த இடத்திற்குத் தக்கவாறு அப்பொழுதே பாடல்கள் புனைந்து பாடப்படும். சில பாடல்கள் அவர்கள் நினைவிலிருந்தும் வரலாம். இந்த அமைப்பைப் பின்பற்றியே புலவர்கள் இலக்கியங்களில் அமைத்தார்கள். அத்தகு வகையில் இப்பொழுது கிடைப்பனவற்றுள் மிகப்பழமையானது சிலம்பில் இடம்பெற்றுள்ள அம்மானை வரியாகும். அதன் வாழ்த்துக் காதையில் பெண்கள் அம்மானை ஆடிச் சோழன் புகழ் பாடும் பாங்கில் அமைந்த அம்மானை வரிப்பாடல்கள் நான்கு உள்ளன. மூன்று பெண்கள் சேர்ந்து அம்மானை ஆடும் பொழுது ஒரு பெண் ஒரு கேள்வி கேட்பதும், மற்றொருத்தி அதற்கு விடையிறுப்பதும், மூன்றாமவள் சோழன் புகார் நகரைப் பாடும்படி சொல்லுவதுமாக அமைந்துள்ளது இவ்வரிப் பாடல்.

தமிழ்ச் சிற்றிலக்கிய வகையுள் ஒன்றாகிய கலம்பகத்தில் அம்மானை என்ற ஓர் உறுப்பு உண்டு. அது மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்திருக்கும். விளையாட்டைத் தொடங்கும் பெண் ஒரு செய்தியைச் சொல்ல, இரண்டாமவள் ஒரு வினாவை எழுப்புவாள். மூன்றாமவள் அதற்கு விடை கூறுவாள். அவள் விடையில் பெரும்பாலும் சிலேடை நயம் அமைந்திருக்கும். இவ்வகையில் சில புலவர்கள் தனித்தனியே பல அம்மானைப் பாடல்களைப் பாடியுள்ளார்கள். இரட்டையர், பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் முதலியவர்கள் ஈற்றடியில் சிலேடை நயம் அமைய அம்மானைப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். இத்தகு பாடல்களையெல்லாம் தொகுத்து மூவர் அம்மானை என்னும் பெயரில் வெளியிட்டுள்ளார்கள். பாடல்கள் பெரும்பாலும் தெய்வங்களைப் பற்றியனவாகவே உள்ளன.

அம்மானை என்னுஞ் சொல் பொதுவாகத் 'தாய்' என்னும் பொருளைத் தருகிறது. பேச்சு வழக்கில் அம்மா என அழைப்பது போல இலக்கிய வழக்கில் 'அம்மானை' என வருகிறது. பாட்டின் முடிவில் 'அம்மானாய்' என வருவதால், இப்பாட்டும் விளையாட்டும் அம்மானை என்னும் பெயரைப் பெற்றதாகலாம்.

இவ்விளையாட்டினை மூவர் ஆடாமல் இருவர் மட்டுமே ஆடுவதை 'மனோன்மணீயம்' சுட்டுகிறது. ஒருத்தி மட்டுமே ஆடுவதாகத் திருவாசகத்தில் உள்ள திருவம்மானைப் பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாட்டும் ஆறு அடிகளையுடைய தரவு கொச்சகக் கலிப்பாவாகும். அண்ட முதல் ஆன செம்மேனியானை, கண்டம் கரியானை, துண்டப் பிறையானைப் பாடுவதாக அமைகிறது. விளையாடிக் கொண்டே அப்பாலுக்கு அப்பாலுமாய் விளங்கும் இறைவனிடம் சிந்தை சேரும் நோக்கத்தை நிறைவேற்றியுள்ளார் மணிவாசகர்.

சிற்றிலக்கியங்களுள் ஒன்றாகிய பிள்ளைத் தமிழில் அம்மானைப் பருவம் ஒரு பருவமாக அமைக்கப்பட்டுள்ளது. இது பெண்டிர்க்கே உரியதாகும். பாட்டுடைத் தலைவியைத் தாயரும், செவிலியரும் அம்மானை ஆடும்படி சொல்லும் முறையில் இப் பருவப் பாடல்கள் அமைந்திருக்கும். ஆசிரிய விருத்தங்களாகப் பாடல்கள் அமையும்.

அல்லி அரசாணி மாலை, பவளக்கொடி மாலை போன்ற கதைப்பாட்டுகளும் அம்மானை வரிசையில் அமைந்துள்ளன. கள்ளழகர் அம்மானை, வைகுந்த அம்மானை, கித்தேரி அம்மன் அம்மானை, ஆண்டவன் அம்மானை போன்றன இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். நாடோடிப் பாடல் இயல்புகள் அம்மானைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளன. கொச்சை மொழிகள், அனைவருக்கும் விளங்கும் உவமைகள், உலக வழக்குச் சொற்கள், ஒரு குறிப்பிட்ட சொல்லையே மீண்டும் மீண்டும் சொல்லுதல், சில வகையான அமைப்புகள் போல்வன அம்மானைப் பாடல்களிலும் இடம்பெற்றுள்ளன.

அம்மானைப் பாடல்கள் பொழுது போக்குக்காக எழுந்தவையெனினும் அவற்றின் வளர்ச்சி பக்தியையும் தமிழ்ப் பண்பாட்டையும் எடுத்து விளக்குவதாக அமைந்துள்ளது. சு.சி.

**அம்மானை வரி** என்பது சிலப்பதிகாரக் காலத்திற்கும் முன்னரே இருந்து தமிழகத்தில் விளங்கிய இசைப்பாட்டு வகையாகும். அம்மானை என்னும் விளையாட்டினை மகளிர் விளையாடும் பொழுது அவர்கள் பாடிய பாட்டு—அம்மானை வரிப்பாட்டு. இப்பாடலின் ஈற்றடியில் ''அம்மானை'' என்னும் சொல் வரப்பெறும். இப்பாடல் — ஆடற்பாடல்; பண்ணுடன் கூடியது; தாளத்திற்குப் பொருந்தப் பாடப்படுவது. இதனைப் பாடும்பொழுது பாடலின் அடிகள் மடக்காகவும், வினாவை எழுப்புவனவாகவும், வினாவிற்கு விடை பகர்வனவாகவும் அமைக்கப் பட்டிருக்கும்.

அம்மானை வரிப்பாட்டு என்பது தெய்வத்தையோ மாந்தரையோ இயற்கையையோ புகழ்ந்து பாடப்படுவது. இது சிற்றூர் மகளிரின் ஆடல்வரிப் பாட்டு.அம்மானை அம்மனை அம்மானைவரி என்றும் வழங்கப்பெறும் (சிலப். 3:13) பல்வரிக்கூத்து); ''அம்மனை பந்து, கழங்கு ஆடல் ஆலிக்கும் ...... கோத்தவரிக் கூ த்தின் குலம்'' என்று–சிலப்பதிகா

மேற்கோள் கூறுவதாலும், "அம்மனை தங்கையிற் கொண்டங்கணியிழையார் தம்மனையில் பாடும் தகை" (சிலப். 29:19,) என்பதாலும் 'அம்மனை' என்பது ஒருவகை விளையாட்டிற்குரிய உருண்டைக் காய் என அறியலாகும்.

இனி, திருவாசகத்தில் இடம்பெற்றுள்ள திருவம் மானையில் அம்மானை என்னும் சொல் ஒவ்வொரு பாடலின் ஈற்று வரியில் மட்டும் "அம்மானாய்" என் னும் மாற்று வடிவுடன் இடம்பெற்றுள்ளது. எ.டு:- சிலப்பதிகாரத்தில் புகார்நகரைப் போற்றிப் பாடிய அம்மானை வரிப்பாடல் அமைப்பு வருமாறு:- ஒருபகுதி மகளிர் வினா:- புறவு நிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக் குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் யார் அம்மானை? மறுபகுதி மகளிர் விடை:- குறைவில் உடம்பு அரிந்த கொற்றவன் முன் வந்த கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை: அனைத்து மகளிர் போற்றுதல்:- காவலன் பூம்புகார் பாடே லோர் அம்மானை.

வீ.ப.கா.சு.

**அம்மூவனார்** அகப்பொருளை மட்டும் பாடிய சங்கப் புலவர்களுள் ஒருவர். அம்மூவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார். நற்றிணையில் பத்தும், குறுந் தொகையில் பதினொன்றும், ஐங்குறுநூற்றில் நெய் தற் பாடல் நூறும், அகநானூற்றில் ஆறும் ஆக நூற் றிருபத்தேழு பாடல்கள் இவர் பாடியனவாக அமைந் துள்ளன. அகநானூற்று 35-ஆம் பாடலைக் குடவாயிற் கீரத்தனார் பாடியது என்று கருதுவோருமுளர். கபி லரை அடுத்து மிகுதியான சங்கப் பாடல்களைப் பாடியவர் இவர். இவருடைய பாடல்களில் குறுந் தொகை 327-ஆம் பாடல் ஒன்று மட்டும் குறிஞ்சித் திணையில் அமைந்துள்ளது. தான் கூறுவதனைக் கேட்குமளவு அண்மையில் தலைவன் இருக்க, தலைவி அவனுடைய மலையிலிருந்து வரும் ஆற்றினொடு பேசுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. பிற பாடல் கள் அனைத்தும் நெய்தல் திணைப் பாடல்களாக உள்ளன. தொண்டி, மாந்தை முதலிய மேலைக் கடற் கரை ஊர்களைச் சிறப்பித்துப் பாடியிருப்பதால் இவர் சேரநாட்டைச் சேர்ந்த மேலைக் கடற்கரைப் பகுதியினைச் சார்ந்தவராதல் கூடும் எனத் தெரி கிறது. 'இம்மை மாறி மறுமை யாயினும் நீயாகியர் என் கணவனை, யானாகியர் நின் நெஞ்சு நேர் பவளே' என்றும், 'சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவின் பிறப்புப் பிறிதாகுவதாயின் மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே' என்றும் கூறும் தலைவியின் கருத் துகள் தமிழகப் பண்பாட்டினை எடுத்துக் காட்டும் நன்மணிகளாகத் திகழ்கின்றன.

**அம்மெய்ய நாகனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். நாகனார் என்பது இப்புலவரின் இயற்பெயர். அம்மெய்யன் என்பது இவர் தந்தை பெயராக இருத்தல் கூடும். இவருடைய ஒரே பாடல் நற்றிணை 252-ஆம் செய்யுளாக அமைந்துள்ளது. பாலைத் திணையில் தோழி கூற்றாக அமைந்துள்ள இப்பாடல், 'தலைவன் பொருள் தேடி வருவதற்காகப் பிரிந்து செல்வான்' என்று வருந்திய தலைவியிடம் கூறியதாக அமைந்துள்ளது. தலைவியின் அடிகளுக்கு, வேட்டை மேற் செல்லும் நாயின் நாக்கினை உவமையாகக் கூறியிருப்பது நயமிக்கதாகும்.

**அம்மைச்சி** கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த ஒரு பெண் புலவர். தேவ ரடியாள் மரபில் வந்த இவள், காத்தான் என்னும் இயற்பெயருடைய வருணகுலாதித்தன் மீது அகப் பொருட்சுவை மலிந்த மடல் ஒன்று பாடினாள். இது வருணகுலாதித்தன் மடல் என வழங்கப்படுகிறது. இவள்பால் பொறாமை கொண்ட அந்தணர் சிலர் இவளது வீட்டினை, தேரைச் செலுத்தி இடிக்க முற் பட்டனர் என்றும், அவ்வாறு வீடு இடிந்தபோது 'பெருமாள் திருநாளை' எனத் தொடங்கும் வெண் பாவினை இவ்வம்மையார் பாடினார் என்றும், தமிழ் நாவலர் சரிதையால் அறிய முடிகிறது. அந்தகக்கவி வீரராகவ முதலியார், இவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த புலவராவார். அந்தகக்கவி, தாம் பாடிய சந்திரவாணன் கோவை என்னும் நூலை அரங்கேற் றிய பொழுது அம்மைச்சி, அவ்வரங்கேற்றத்தில் பங்கு பற்றி ஒரு பாடலுக்குத் தடையெழுப்பினாள் என்பது கூறப்படுகிறது.

**அம்மைய நாயக்கனூர்ப் போர்** கி.பி. 1736-ஆம் ஆண்டில் நடைபெற்றது. மதுரை நாயக்க மன் னர் விசயரங்க சொக்கநாதனுக்குப் பின், அவர் மனைவி இராணி மீனாட்சி கி.பி. 1732-இல் அரியணை யேறினாள். திருமலை நாயக்கரின் தம்பி குமார முத்துவின் வழிவந்த பங்காரு திருமலையின் மகனான விசயகுமாரனை இவர் மகன்மை எடுத்துக்கொண்டு ஆட்சி புரிந்தார். இவருடன் பிறந்தவரான வேங்கட பெருமாள் நாயக்கரும் ஆட்சி புரிவதில் இவளுக்கு உதவி புரிந்தார். பங்காரு திருமலை, தளவாய் வேங் கடாச்சாரியாவின் துணையுடன் மீனாட்சியை ஆட்சி யிலிருந்து இறக்கச் சூழ்ச்சி செய்தார். இத்தருணத் தில் ஆர்க்காட்டு நவாப் தோசுத்து அலிகான், (Dost Alikhan) மதுரை நாட்டில் நடந்த கட்சிக் கலகத்தைப் பயன்படுத்தி அதனைக் கைப்பற்றிக் கப்பம் வாங்கத் திட்டமிட்டான்; எனவே அவன் தன் மகன் சப்தர் அலிகான், மருமகன் சந்தா சாகேப் ஆகியோர் தலை மையில் படையொன்றினை அனுப்பினான். படையும் திருச்சிக்கு வந்தது. பங்காரு திருமலை படைத்தலை வர் இருவருக்கும் கையூட்டு அளித்து, அவர்களை மீனாட்சிக்கெதிராகத் தூண்டினான். திருச்சியைக் கைப்பற்றுவது எளிதன்று எனக் கருதிய சப்தர் அலி

கான், மீனாட்சிக்கும் பங்காருவுக்கும் இடையில் உடன்படிக்கை செய்து வைப்பதாகப் பாவனை செய்து, அரசைப் பங்காருவிடமே ஒப்படைத்தான். இத்தீர்ப்பைச் செயல்படுத்தும்படி சந்தா சாகேப்பிடம் கூறிவிட்டு, அவன் ஆர்க்காடு சென்றான்.

நிலைமை மோசமாகி விட்டதைக் கண்ட மீனாட்சி, ஒரு கோடி உரூபா தருவதாக உறுதியளித்துச் சந்தா சாகேப்பிடம் உதவி கேட்டாள்; மேலும் பங்காருவிடம் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அவனும் குர்-ஆனின் மீது சத்தியம் செய்து கொடுத்தான். அவளும் அவனைக் கள்ளமின்றிக் கோட்டைக்குள் அனுமதித்தாள்.

இதற்கிடையில் மீனாட்சி பங்காருவிடம் அமைதி உடன்பாடு செய்து கொண்டாள்; சந்தா சாகேப் மதுரை நாட்டைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான். அவன் கி.பி.1736-இல் புதுப்படையுடன் திருச்சிக்கு வந்தான். கோட்டைக்குள் புகுந்து மீனாட்சியிடம் நல்லவன் போல் பேசி நடித்து, ஆட்சியையும் படைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு, திருச்சிக் கோட்டையை வலுப்படுத்தினான். மீனாட்சியை வஞ்சகமாகச் சிறைப்படுத்தினான். அவளோ நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டாள்.

இராணியின் இறப்பைப் பற்றிக் கவலைப்படாது, மறுகணமே இராவணையன், கோவிந்தையன் என்ற படைத்தலைவர்களைத் தம் வயப்படுத்திய சந்தா சாகேப் அவர்களிடம் திண்டுக்கல்லைக் கைப்பற்றும்படி ஆணையிட்டான். அப்போது திண்டுக்கல் பங்காருவிடம் இருந்தது. சந்தா சாகேப்பின் 80000 குதிரை வீரர்களும் காலாட் படையினரும் பங்காருவை வென்று, திண்டுக்கல்லைக் கைப்பற்றி மதுரைக்கு முன்னேறினர்.

பங்காரு திருமலை தம்மாலியன்றவரை பெரும் படை திரட்டி, சில பாளையக்காரர்களது துணையுடன் சந்தாசாகேபின் படையுடன் அம்மையநாயக்கனூர் என்னுமிடத்தில் மோதினான். கடுமையான முறையில் பங்காருவின் படை முசுலிம் படையினை எதிர்த்த போதிலும் இறுதியில் தோல்வி கண்டது. பங்காரு திருமலை சிவகங்கைக்கு ஓடினான்; மதுரையும் சந்தா சாகேப் வசமானது.

இப்போரின் விளைவாக மதுரைநாடு முழுவதும் சந்தா சாகேபின் கைக்குள் வந்தது. சந்தா சாகேப் வஞ்சகமாகவே மீனாட்சியை வெல்ல முடிந்தது; பங்காருவை ஒழிக்க முடிந்தது. மீனாட்சியுடன் மதுரை நாயக்கர் அரசும் வீழ்ந்தது; சூழ்ச்சி வென்றது. இதனை அடுத்துச் சந்தா சாகேப் தமது உடன் பிறந்தோர்களுள் ஒருவனை மதுரையிலும் மற்றொருவனைத் திண்டுக்கல்லிலும் ஆளுநர்களாக அமர்த்தினான்.

ம. இரா.

**அம்ரி** பாகிசுதானில் டாடு மாவட்டத்தில் அமைந்துள்ள நகரம். சிந்துவெளி நாகரிகத்திற்கும் முற்பட்ட பண்பாட்டைக் கொண்டுள்ளது இந்நகரம். 1929-ஆம் ஆண்டு முதன் முதலாகச் சிந்துப் பகுதிகளைக் கள ஆய்வு செய்த என்.சி.மசும்தார் அம்ரியில் (Amri) அரப்பா நாகரிகத்தின் தடயங்கள் இருந்த மண்மேட்டில் சோதனைக் குழிகளை வெட்டி அகழாய்வு செய்தார். இவ்வாய்வின் பயனாக அரப்பா காலத்திற்கும் முந்தைய நாகரிகத்தின் தடயங்கள் கண்டெடுக்கப்பட்டன. அந்நாகரிகம் அது முதல் 'அம்ரி நாகரிகம்' என வழங்கப்பட்டது. மசும்தாருக்குப் பின் சே. எம். கேசல் (J.M. Casal) என்பவர் 1959-இல் அம்ரியின் பல்வேறு இடங்களில் அகழாய்வு மேற்கொண்டார். இப்பணி 1962 வரை நடைபெற்றது. இவ்வகழாய்வு இரண்டு மண்மேடுகளில் நடைபெற்றது. இவ்வகழாய்வின் பயனாக அம்ரி நாகரிகத்து மக்கள் இங்குப் பல காலம் வாழ்ந்திருந்தமை புலனாகியது.

இங்குக் கிடைத்துள்ள தொல்பொருள்களைக் கொண்டு பின்வருமாறு காலப்பாகுபாடு செய்யலாம்.

**முதல் பண்பாட்டுக் காலம் அல்லது அம்ரி நாகரிகம்**: இப்பண்பாட்டுக் காலம் முழுமையும் "அம்ரி நாகரிகம்" எனப்படும். இது சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட மக்கள் வாழ்ந்த காலமாகும். இக்காலப் படிவுகளில் ஒன்பது மட்டங்கள் ஒன்றன்மேல் ஒன்றாக கிடைத்துள்ளன. இக்காலத்தினை அகழ்வாராய்ச்சியாளர்கள் முதற்காலம்-அ (Period-I A), முதற்காலம்-ஆ (Period I B), முதற்காலம்-இ (Period-I C), முதற்காலம்-ஈ (Period-I D) என நான்கு துணைக் காலங்களாகப் பிரித்துள்ளனர். இக்காலத்தின் தொடக்க முதல் இறுதி வரையிலும், இரு வண்ண ஓவியங்கள் கொண்ட பானை ஓடுகள் காணப்படுகின்றன. இவை அம்ரி நாகரிகத்திற்கே உரிய சிறப்புப் பண்பாடாகும். இவ்விரு வண்ண ஓவியங்கள் கொண்ட மட்பாண்டங்களை பலுசிசுதான் பகுதியிலிருந்த மக்கள் பயன்படுத்தினர். எனவே அம்ரி நாகரிக மக்கள் பலுசிசுதானுடன் தொடர்புடையவர்கள் என அறிஞர்கள் கருதுகின்றனர். இப்பண்பாட்டு மண்ணடுக்குகளின் அடிப்பகுதியில் கிடைக்கும் பானைகள் கையால் செய்யப்பட்டவை. செங்கல்லின் செந்நிறத்தை ஒத்தவை. இப்பானை ஓடுகளின்மீது கருப்பு வண்ணத்தில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. ஓவியங்கள் பெரும்பாலும் வடிவியல் உருக்கொண்டவை. முதல் பண்பாட்டு மண்ணின் மேலடுக்குகளில் காணப்படும் பானைகள் சக்கரத்தின்



அம்ரி மண்மேடு அருகில் சிந்து நதியின் தோற்றம்

உதவியுடன் செய்யப்பட்டவை. இரு வண்ண ஓவியங்களைக் கொண்டவை. அம்ரி நாகரிகத்தின் காலம் ஏறத்தாழக் கி.மு. 3700 முதல் கி.மு. 3000 வரை இங்குச் சிறந்திருந்தது.

இரண்டாவது பண்பாட்டுக் காலப் படிவுகளில் அம்ரி நாகரிகத்துத் தொல் பொருள்களும், அரப்பா காலத்திய தொல்பொருள்களும் கிடைக்கின்றன. ஆகவே இக்காலத்தினை இவ்விரு நாகரிகத்திற்கும் இடைப்பட்ட காலம் எனலாம்.

மூன்றாவது பண்பாட்டுக் காலப்படிவுகளில் அம்ரி நாகரிகத்திற்குரிய தொல்பொருள் வழக்கொழிந்து அரப்பா நாகரிகத்துச் சின்னங்களே பெரிதும் காணப்படுகின்றன. இக்காலத்தில் கிடைக்கும் ஓடுகள் மொகஞ்சதாரோ, சங்குதாரோ ஆகிய இடங்களில் கிடைக்கும் பானை ஓடுகளைப் பெரிதும் ஒத்துள்ளது. இக்காலத்தினை நான்கு துணைப்பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். மூன்றாவது பண்பாட்டுக் கால மண்ணடுக்குகளில் அரப்பா நாகரிகத்திற்கே உரித்தான கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட சிவப்பு ஓடுகள் அதிகம் கிடைத்தன. சூக்கர் (Jhukar) நாகரிகத்தின் சின்னங்களும் காணப்படுகின்றன. மூன்றாவது காலப்படிவுகளில் அரப்பா நாகரிகத்தின் படிப்படியான வளர்ச்சி நிலைகளை நன்கு அறியலாம். கி.மு. 2000-க்குப் பின் அரப்பா நாகரிகம் சிறிது சிறிதாக இங்கு மறையத் தொடங்கின.

நான்காவது காலப்படிவுகளில் கிடைக்கும் தொல்பொருள்களைக் கொண்டு இக்காலப் பண்பாட்டினை, சங்கர் பண்பாடு (Jhangar Culture) என அழைக்கின்றனர். இந்நாகரிகம் அம்ரிக்கு நீண்டகால இடைவெளிக்குப்பின் வந்திருக்க வேண்டும். இந்நாகரிகத்தின் காலத்தினை ஏறத்தாழக் கி.மு. முதல் ஆயிரத்தின் இடைப்பகுதி எனக் கொள்ளலாம். சங்கர் நாகரிகத்தை அடுத்து நீண்டகால இடைவெளிக்குப் பின் இசுலாம் காலத்திய தடயங்கள் இங்குக் கிடைக்கின்றன. இது ஐந்தாவது காலப் பண்பாடாகும். ஆகவே சங்கர் நாகரிகத்திற்குப் பின் நீண்டகாலமாக, அதாவது முசுலிம்கள் காலம்வரை இவ்விடத்தை மக்கள் வாழ்விடமாகக் கொள்ளவில்லை எனத் தெரிகிறது. டி.த.

துணை நூல்கள்:

Bridget and Raymond Allchin, "The Birth of Indian Civilization, India and Pakistan before 500 B.C." 1968.

**Casal, J.M. Fovilles, "Amri", 2 Vol., Paris, 1964.**

***அம்லாட் விதி*** என்பது மொழியில் வழங்கும் சொற்களின் மூல வடிவங்களை அறிய உதவும் ஒலி மாற்ற விதிகளில் ஒன்றாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளை வகைப்படுத்தும் பொழுது ஒலி மாற்றங்களை வரலாற்று மொழியியலாளர்கள் அடிப்படையாகக் கொள்கிறார்கள். செருமானியக் குடும்ப மொழிகளில் (Germanic Language) கோதிக்கு (Gothic) மொழியைத் தவிர்த்து ஏனைய மொழிகளைப் பிரிப்பது அம்லாட் விதியாகும். அம்லாட்

என்பது பலவகை ஒலி மாற்றங்களில் ஒருவகை. ஓர சையில் (Syllable) உள்ள உயிரொலி அடுத்த அசையில் வருகிற உயிரொலி அல்லது உயிர்மெய்யொலிக் கொப்ப மாற்றப்படுகிறது. இது பெரும்பாலும் அடிச் சொல்லில் (Stem) உள்ள பின்னுயிரொலி (Back Vowel) விகுதியில் உள்ள உயர் முன்னுயிர் ஒலி (High Front Vowel) அல்லது உயிர்மெய்யொலியால் முன்னுயிரொலியாக மாற்றப்படுகிறது. கோதிக்கு மொழியின் /hafjan/ என்ற வடிவம் பழைய ஐசுலாண்டிக்(Old Icelandic)மொழியில் /hefja/ என்ற வடிவத்தோடு தொடர்புடையது. அடிச்சொல்லில் உயராத (Unraised) உயிரொலி உள்ளதைக் கோதிக்கின் வடிவம் காட்டுகிறது. கோதிக்கு பழைய ஐசுலாண்டிக், பழைய சேக்சன் (Old Saxon) ஆகிய மொழிகளின் சொற்களில் அடுத்து வருகின்ற அசையில் /J/ காணப்படுகிறது. இவ்வொலியின் செல்வாக்கில் கோதிக்குத் தவிர்த்த ஏனைய மொழிகளில் அடிச்சொல்லின் உயிரொலி /e/ ஆக மாறுகிறது.

செருமானிய மொழியில் –lic, – tin போன்ற விகுதிகள் சேரும்பொழுது அடிச்சொல்லில் உள்ள உயிரொலி முன்னுயிராக மாறுகிறது.

| | | | |
|---|---|---|---|
| Yār | Year | Y$\bar{æ}$lic, | annual |
| gūt | good | gūtic | kind |
| nōt | need | nōtice | necessary |
| got | god | gȯtin | goddess |
| hunt | dog | hündin | bitch |

இவ்வொலி மாற்றத்தை

$$V \quad (-\text{back}) \quad / \underline{\qquad} \; C_0 \begin{bmatrix} V \\ +\text{high} \\ -\text{back} \end{bmatrix}$$

என ஆக்க வொலியியல் (Generative Phonology) காட்டும்.

துணை நூல்கள் :

**Bloomfield**, L., "Language", Motilal Banarsidass, Delhi, 1963.

**Hockett**, C.F., "A Course in Modern Linguistics", The Macmillan Company, New York, 1966.

**Schane**, S.A., "Generative Phonology", Printice — Hall, Inc. New Jersey, 1973.

*அமர்தாசர்* சீக்கிய சமயத்தின் மூன்றாம் குருவாக (கி.பி. 1552–1574) இருந்தவர். இவர் கி.பி. 1479–இல் அமிருதசரசு மாவட்டத்தில் உள்ள வாசர்கி என்ற சிற்றூரில் எளிமையான குடும்பத்தில் பிறந்தார். இவரிடம் இறை ஈடுபாடு, அறநெறியில் உறுதித் தன்மை போன்றவை நிறைந்திருந்தன. இளமைக் காலத்தில் தமது வாழ்வைக் கடின உழைப்பினால் பெற்ற ஊதியத்தைக் கொண்டு நடத்தினார். பொருள்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சுமந்து சென்று, அதனால் கிடைத்த ஊதியத்தைக் கொண்டு வாழ்ந்து வந்தார். இவருக்குப் பக்கீர் சமுதாயத்தவரின் தொடர்பு ஏற்பட்டது. அதனால் இவர் கடூர் வரவேண்டியவரானார். அப்போது குரு அங்கதரைப் பார்த்து அவரையே தம் குருவாகக் கொண்டார். அதன் பிறகு தம் அனைத்து நலன்களையும் துறந்துவிட்டு அருள்மிக்க குரு அங்கதர்க்கு மனம், மொழி, மெய் ஆகியவற்றால் தூய்மையான பணிகள் புரிந்தார். அங்கதரின் இல்லத்தில் கிடைக்கப்பெற்ற உணவை உண்டாரில்லை. இவர் உப்பையும் எண்ணெயையும் விற்று அதனால் கிடைக்கும் சிறிய ஊதியத் தொகையில் உணவைப் பெற்றார். இவர் குருவுக்குப் பணிவிடைகள்புரிந்தபோது எப்போதும் தமது பார்வையைக் குருவின் மீது வைத்திருந்தார். இரவு நேரங்களில் தம் குருவுக்குப் புனிதப் பணிகள் செய்யத் தூய நீரினைக் கோண்ட்வால் என்ற ஆற்றிலிருந்து கொண்டு வரும்போது தம் பார்வையைக் குரு அங்கதர் மீது செலுத்தியவண்ணம் பின்நோக்கி நடந்து சென்றார்.

அமர்தாசர் குருவாக மட்டும் இல்லாமல் நல்லதொரு கவிஞராகவும் விளங்கினார். இவர் சிறந்த கல்விமான்; நேர்மையாளர்; நல்லாசான். அறநெறிகளை மக்களுக்கு எடுத்துக்கூறும் இவருடைய முறை அனைவரையும் கவர்ந்தது. இதனால் மிகுதியான சீடர்கள் இவர் கூறும் புதிய கருத்துகளை ஏற்கலாயினர். இவர் அழகான பாடல்களை இயற்றி ஆதி கிரந்தத்தில் சேர்த்துள்ளார். அவை அனைத்தும் தூய்மையோடும் எளிமையோடும் கூடிய செறிந்த கருத்துக்களைக் கொண்டதாக விளங்கின.

கணவன் இறந்தவுடன் மனைவியும் உடன்கட்டையேறும் கொடிய வழக்கத்தை இவர் வன்மையாகக் கண்டித்தார். தம் சீடர்களுக்குக் கைம்பெண்ணை மறுமணம் செய்து கொள்ளும்படி அறிவுறுத்தினார். அங்கதர் தொடங்கிய இலவச உணவு மையத்தை மேலும் சிறப்புறச் செய்தார்; பெரிய கிணறு ஒன்றைத் தோண்டினார். இவர் அறநெறிப் பேரரசை இருபத்திரண்டு பிரிவுகளாகப் பிரித்தார். புதியதொரு சமூகமும் பண்பாடும் தோன்றிடப் பலவழிகளை மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

சீக்கியர்கள் இந்துக்களின் புனித இடங்களுக்குப் பயணம் மேற்கொள்ளுதலைத் தவிர்க்கக் கூறினார்.

இவர் அமைத்த பெருங்கிணற்றில் இவர் சீடர்கள் குளித்துத் தம் பாவங்களைப் போக்கிக் கொள்ளச் சொன்னார். இப்பெருங் கிணறானது இவர் செய்துள்ள பணிகளுள் குறிப்பிடத்தக்கதாகும். சீக்கியர்கள் பிரயாகை, அரித்துவாரம், வாரணாசி, பூரி ஆகிய இடங்களில் மேற்கொண்ட புனித நீராட்டினை விட்டு அமர்தாசரின் புனித கிணறான படோலியில் குளித்தனர். இலவச உணவு மையம், தீண்டாமையை ஒழித்து எல்லா இனத்தவரையும் அரவணைத்து உணவு வழங்கிற்று. மக்கள் எளிமையாகக் கொண்டாடப் புதிய பிறப்பு, இறப்புச் சடங்குகள் பின்பற்றப்பட்டன. இவர் பஞ்சாபி மொழியை அனைவரும் அறியும்படி செய்தார். மக்கள் அறிந்த மொழியால் அறக்கருத்துகள் கற்பிக்கப் பட்டதால் மக்கள் பலர் அவற்றைப் பின்பற்றலாயினர். இவர் மது அருந்துவதை ஒழித்தார். இவர் புதியதொரு வணக்கமுறையைப் பின்பற்றினார். சீக்கியர்கள் ஒருவரையொருவர் சந்தித்தபோது அவ்வணக்க முறையைக் கடைப்பிடித்தனர்.

சீக்கிய சமயம் வளர்ச்சிபெற, அமர்தாசரின் அறிவுரைகள் ஒரு திருப்பு மையமாக அமைந்தன எனில் மிகையாகாது. வழக்கொழிந்த பழைய செயல் முறைகளைக் கைவிட்டுப் புதிய நெறிமுறைகளை இவர் புகுத்தலானார். இவர் காலத்தில் பிள்ளைப் பருவத்தில் இருந்த சீக்கிய சமயம் நன்கு வளர்ச்சி பெற்றுப் பெரும்பாலான இடங்களில் பரவிற்று. இந்துக்களின் பழக்க வழக்கங்களில் இருந்து சீக்கியர்கள் விடுபட்டனர். சீக்கிய வாழ்க்கை முறையைத் தனியானதொரு சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட புதியதொரு சமயமாக உருப்பெறச் செய்தமைக்கு அமர்தாசரே காரணமாவர். தி.வீ.

**அமர்நாத்** சம்மு-காசுமீர் மாநிலத்தின் தென் பகுதியில் சிரீநகரிலிருந்து 150 கி. மீ. தொலைவிலுள்ள இமயமலை நகரம். இதன் உயரம் 5774 மீட்டர்களாம். இயற்கையழகு மிக்க அமர்நாத் இந்துக்களின் புண்ணியத்தலங்களுள் ஒன்று. அங்கு 4635 மீட்டர் உயரத்தில் 50 மீட்டர் அகலமும் 30 மீட்டர் உயரமும் கொண்டதொரு குகை உள்ளது. இங்குள்ள பனிக்கட்டி இலிங்கம் சந்திரனின் கலைகளுக்கேற்ப உருமாறும் தன்மை கொண்டது. ஆண்டுதோறும் ஆவணி மாத முழுநிலவன்று இந்த இலிங்கம் மிகப் பெரும் தோற்றம் அளிக்கிறது. இதை வழிபடப் பல்லாயிரவர் பொறுக்க முடியாத கடுங்குளிரையும் போக்குவரத்து வசதிகள் குறைந்த வழிகளையும் கடந்து இறைநோக்குடன் பன்னூறு ஆண்டுகளாக இங்கு வருகின்றனர்.

பயணிகள் பகல்கம் (Pahalgam) என்னுமிடத்தில் தங்கிப் பயணத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் திரட்டிக்கொண்டு கால்நடையாகப் பயணம் மேற்கொள்வர். பணம் படைத்தோர் தூக்கும் நாற்காலிகளில் அமர்ந்தோ பல்லக்கு, குதிரை மீதோ பயணம் செய்வர்.

பகல்கம் என்னுமிடத்திலிருந்து 20 கி.மீ. சென்றால் வழியில் சேசநாகம் (Seshnag) என்னும் எழில் மிகுந்த ஏரி வரும். பயணிகள் இங்குத் தங்கிக் களைப்பாறுவர். அமர்நாத் செல்லும் வழியில் தென்படும் ஓடைகளில் வரும் குளிர்ந்த நீரில் நீராடும் பழக்கமும் பலரிடமுண்டு. சிவன் பெயரைக் கூறிக்கொண்டு அமர்நாத்தைப் பயணிகள் நெருங்கும் காட்சி உணர்ச்சி மிக்கது. ஆண்டுச் செல்வோர் பனிக்கட்டி இலிங்கத்தை வழிபட்டுத் திரும்புவர்.

**அமர்நீதி நாயனார்** பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர் புராணங் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். இவர் சோழ நாட்டில் பழையாறு என்னும் ஊரில், வணிக மரபில் தோன்றியவர். வணிகத்தால் பெற்ற பெருஞ் செல்வங் கொண்டு, சிவனடியார்கட்கு உணவும், உடையும், கோவணமும் உதவுதலைத் தம் கடனாகக் கொண்டு ஒழுகி வந்தார். திருநல்லூரில் விழாக் காலங்களில் சிவனடியார்கட்கு, உணவளிக்கத் திருமடம் அமைத்தார். ஒரு சமயம் சிவபெருமான் இவர் அன்பினைச் சோதிக்க, அந்தணப் பிரமசாரியாகத் திருநல்லூர்த் திருமடம் வந்தார். நாயனார் இவரை உணவருந்த வேண்டியபோது, காவிரியில் நீராடி வருவதாகச் சொல்லி, இவரிடம் தாம் கொண்டு வந்த கோவணத்தை வைத்திருக்கும்படி சொல்லிச் சென்றார். அவர் சென்றவுடன் அக்கோவணம் மறைந்தது. திரும்பி வந்து பிரமசாரி தம் கோவணத்தைக் கேட்டபோது நாயனார் காணாது வருந்திப் புதிய கோவணம் கொடுக்க முன்வந்தார். தம்மிடமுள்ள பிறிதொரு கோவணத்தைக் கொடுத்து அதன் எடைக்குத் தக்கதனைத் தமக்குக் கொடுக்குமாறு பிரமசாரி கூறினார். அதனைத் துலாக்கோலின் ஒரு தட்டில் இட்டு, மற்றொரு தட்டில் தம்மிடமுள்ள பொருள் அனைத்தையும் அமர்நீதியார் வைத்தும் அத்தட்டுத் தாழவில்லை. பிறகு அந்தணரை வணங்கி, நாங்கள் அன்பினில் திருவெண்ணீற்று மெய்யடிமை பிழைத்திலோமென்றால் இத்தட்டு நேர்நிற்க வேண்டும் என்று சொல்லி, ஐந்தெழுத்தினை ஓதித் தாமும், தம் மனைவியும், மகனும் தட்டில் ஏறினர். தட்டு இப்போது ஒத்து நேர் நின்றது. உடனே சிவபெருமான் காட்சி கொடுத்து அவர்களைத் தம் உலகுக்கு அழைத்துக் கொண்டார். இவர் முத்தியடைந்த நாள் ஆனிப் பூசம். இவர் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோருக்கு முற்பட்டவர். திருநாவுக்கரசர், தம் தேவாரத்தில் இவரைப் பாடியுள்ளார்.

''அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்'' என்று இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் போற்றியுள்ளார்.

வீ.பா.

**அமரகண்டகம்** மத்தியப் பிரதேசத்தில் உள்ளதொரு குன்று. காளிதாசர் தாம் எழுதிய மேகதூதத்தில் அமரக்கூடம் என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது இந்துக்களுக்குப் புனிதத் தீர்த்தத் தலமாகும். மத்தியப் பிரதேசத்தில் நருமதை ஆறும் சோணை ஆறும் இக் குன்றில் உற்பத்தியாகின்றன.

**அமரர்**[1] என்ற சொல் சாவற்றவர் என்று பொருள்படும். இறந்தவர்களை அமரர் என்றும் கூறுவர். அமரர் என்னும் பெயரில் பல அறிஞர்கள் இருந்தனர். அமரகோசம் என்னும் வடமொழி அகராதியைத் தொகுத்தவரின் பெயர் அமரர் என்பதாகும். வடமொழியில் சீரிய அகராதியைத் தொகுத்த அவர், தாம் தொகுத்த நூலுக்குத் தம் பெயரையே சூட்டினார். கோசம் என்பது அகராதியாகும். எனவே அமரரால் தொகுக்கப் பெற்ற கோசம் 'அமரகோசம்' என்று பெயர் பெற்றது. அமரர் கி.பி. 4–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அமரகோசத்தில் பல சுவையான விவரங்கள் உள்ளன. ஒரு பொருள் பன்மொழிக்கு நிறைய எடுத்துக்காட்டுகளை அமரர் கையாண்டுள்ளார்.

**அமரர்**[2] சமணரான கூல்லா என்ற படைத்தலைவரின் சகோதரர்களுள் ஒருவரை அமரர் என்றழைப்பர். அவருடைய குடும்பம் வாசிகுலம் என்பதைச் சார்ந்ததாகும். கூல்லாவைப் பற்றிய கல்வெட்டுப் பட்டயங்கள் கி.பி. 1159–இலிருந்து 1163 வரையுள்ள காலத்தில் தோன்றியவை. அவற்றில் கூல்லாவின் தந்தையார் பெயர் இயக்சராசா என்றும், தாயார் பெயர் லோகாம்பிகை என்றும் குறிப்பிடப் பெற்றுள்ளன. கூல்லாவின் மனைவியின் பெயர் பத்மாவதி என்றும் கூல்லாவின் தம்பியர் இலட்சுமணன், அமரர் என்றும் கல்வெட்டுகள் கூறுகின்றன.

**அமராவதி** ஆந்திர மாநிலத்தில் கோதாவரி கிருட்டிணா ஆறுகளுக்கிடையே உள்ள ஊர். இன்று ஒரு சிற்றூராக இருப்பினும், கி.மு. 200 முதல் கி.பி. 400 வரை தலைசிறந்த பௌத்தத் தலமாயும் பௌத்தச் சிற்பக் கலையின் தலைமைப் பீடமாயும் விளங்கியது. அசோகர் காலத்தில் தென்னிந்தியாவில் பரவிய பௌத்தம், கோதாவரி, கிருட்டிணா ஆறுகளுக்கிடையேயுள்ள செழிப்பான பகுதியில் வேரூன்றி, இப்பகுதியை ஆண்ட சாதவாகனர்களின் காலத்தில் (கி.மு. 200–கி.பி. 200) மிகச் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றது. இவர்களது ஆதரவினால் தென்னிந்தியக்கலை – குறிப்பாகப் பௌத்தக்கலை 'தன் உச்ச நிலையை அடைந்தது. அமராவதியிலிருந்த பெரும் தூபி இவர்களது காலத்துக் கலை மேம்பாட்டிற்கு ஓர் அருமையான எடுத்துக்காட்டாகும்.

அமராவதி கலைப்பாணி: அமராவதியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் வளர்ச்சிபெற்ற இந்தப் பௌத்தக் கட்டிட, சிற்பக் கலைகளை அமராவதிக் கலைப்பாணி என்பர். இக்கலையில் விளைந்த படைப்புகள் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்ட குடைவரைகளாகவும், செங்கற்களால் கட்டப்பட்ட கட்டுமானங்களாகவும் இருந்தன. இவற்றின் இடிபாடுகளையே இன்று நாம் காணமுடிகின்றது. இப்பகுதியில் குண்டபள்ளி (கிருட்டிணா மாவட்டம்), சங்கராமக்குன்றுகள் (விசாகப்பட்டினம் மாவட்டம்) ஆகிய இரு இடங்களில் குடைவரைச் சைத்தியங்கள் காணப்படுகின்றன. 18′ விட்டமும் 15′ உயரமும் கொண்ட ஒரு குடிசை வடிவமாகக் கி.மு. 200–இல் குடையப்பட்டது. இதனைச் சுற்றி வேறு பல பௌத்தக் கட்டிடங்களின் இடிபாடுகளை இன்றும் நாம் காணலாம். அவற்றுள் பல ஒற்றைக் கல்லாலான தூபிகள். இவையாவும், ஒரு காலத்தில் குண்டபள்ளியில் ஒரு பரந்த பௌத்த சங்கராமம் (துறவிகள் வாழுமிடம்) இருந்தது என்பதைக் காட்டுகின்றன.



அமராவதி சைத்தியம்

சங்கராமக் குன்றுகளிலும் குடைவரைகள், ஒற்றைக்கல் தூபிகள் போன்ற பல பௌத்தக் கட்டிடங்களின் இடிபாடுகளைக் காணலாம். இவை யாவும் குண்டபள்ளியின் காலத்திற்கு ஓரிரண்டு நூற்றாண்டு

கள் பிற்பட்டவை. (ஏறக்குறைய கி.பி. 300) இப் பகுதியில் காணப்படும் செங்கற் கட்டுமானத் தூபி களும், அவற்றில் காணப்படும் புடைப்புச்சிற்பங் களுமே உலகக் கலைஞர்களின் கவனத்தை ஈர்த்துள் ளன. இச்செங்கற் கட்டுமானங்களில்தான் அமராவதிக் கலைஞர்கள் தங்கள் தனித்திறமையை வெளிப்படுத்தி யுள்ளனர். இத்துறையில் இவர்களுக்கு நீண்டகாலப் பயிற்சி இருந்திருக்கிறது என்பது புலனாகிறது.

இன்று இத்தூபிகள் யாவும் சிதைந்துள்ளன. இந்த இடிபாடுகள் கி.பி. 200 ஐச் சார்ந்தவை எனி னும் இவற்றின் அடித்தளங்கள் கி.மு. 200 ஐச் சார்ந்தவையாகும். அதாவது, இக்கட்டுமானங்கள், காலந்தோறும் புதுப்பிக்கப்பட்டும் விரிவுபடுத்தப் பட்டும் இறுதியாகக் கி.பி. 300–இல் முழு நிலை அடைந்தன. இவற்றிற்கு இணையாக வேறு தூபிகள் இந்தியாவில் வேறெங்கும் இல்லை என்னும் அளவிற்கு இவை அழகும் தோற்றப் பொலிவும் நிரம்பப் பெற் றிருந்தன. இவற்றிற்குரிய காரணங்கள் மூன்று. 1. தொடக்கக் காலத்தில் அமராவதிக் கலைமரபுத் தூபி களும் சாஞ்சித் தூபிகளைப் போலக் குட்டையான அரைக் கோள வடிவத்திலிருந்தன. ஆனால் விரிவு படுத்தப்பெற்றபோது இவற்றிற்கு உயரமான மேடைகளை அமைத்து, அரைக்கோளத்தின் உயரத் தையும் கூட்டினர்; 2. புத்தரது வாழ்க்கை நிகழ்ச்சி களைச் சித்திரிக்கும் பல அழகிய புடைப்புச்சிற்பங் களைக் கொண்ட சலவைக் கற்பலகைகளால் இந்தத் தூபிகளின் மேற்பரப்பு அழகுற அணி செய்யப்பட்டது. இத்தகைய வேலைப்பாடுகள் தூபியின் கீழ்ப் பகுதி களில் செய்யப்பெற்றும் மேல் பகுதிகளில் வெண் சாந்து பூசப்பெற்றும் அழகுபடுத்தப் பட்டன. 3. தூபியின் மேடை திருச்சுற்றாகவும் பயன்பட்டது. இம்மேடைமீது ஏறுவதற்கென அதன் நான்கு திசை களிலும் சதுரமான புடைப்புகளை உருவாக்கி அவற் றில் படிக்கட்டுகளை அமைத்தனர். இப்புடைப்புகளுள் ஒவ்வொன்றும் 'ஆரியகத்தம்ப' அல்லது 'ஆயகத்தம்ப' எனப்படும் ஐந்து அழகிய தியானி புத்தர்களைக் குறிப்பது. இப்புடைப்புகள் தென்னிந்தியத் தூபி களுக்கே உரிய தனித்தன்மை கொண்டவை. இவை தூபியின் அழகை மேம்படுத்தும் சிறந்த உத்திகளாக அமைந்தன.

தொடக்ககாலத்தில் இந்தக் கட்டுமானத் தூபி களின் உட்புறம் முழுதும், செங்கற்களால் நிரப்பப் பெற்றுத் திண்மையான அமைப்பாக உருவாக்கப் பெற்றது. இதற்குப் பட்டிப்பொருலுத் தூபி ஒரு நல்ல எடுத்துக்காட்டு. ஆனால் பிற்காலத்தில் அமைக் கப்பட்ட தூபிகளின் அடித்தள அமைப்பு, ஒரு பெரிய வண்டிச்சக்கரத்தின் ஆரக்கால்களைப் போன்று பல குறுக்குச் சுவர்களையும் கொண்டிருந்தது. ஆரக்கால் களுக்கிடையேயுள்ள பகுதியைக் கற்களையும் மண் ணையுமிட்டு நிரப்பினர். இதனால் செங்கற்கள் மிச்சப்பட்டதுடன் கட்டிடமும் நன்கு உறுதிப்பட்டது. இவற்றில் பயன்படுத்தப்பட்ட செங்கற்கள் 23″×18″×4″ என்ற அளவில் மிகப்பெரியனவாய் இருந் தன. இந்தத் தூபிகளின் அரைக்கோள உட்புறத்தில் பெரிய அறைகள் அமைக்கப்படாமல் வெறும் புறக்காட்சிப் பொருள்களாக மட்டுமே அமைந்த படியால், இந்தத் தூபிகளை மேனாட்டு அறிஞர்கள் உயர்ந்த கட்டிடக்கலை அமைப்பு என ஏற்கத் தயங்குகின்றனர். எனினும் அவர்கள் இவற்றில் அமைக்கப்பட்டிருந்த சிற்பங்களின் வடிவழகை ஒருமனப்பட்டு வியக்கின்றனர். ஏனெனில் இச் சிற்பங்களில், அழகும் ஒரு நாடகத்தைப் போன்ற காட்சியமைப்பும் ஆன்மீக அமைதியும் ஒருங்கிணைந் துள்ளன.

புடைப்புச் சிற்பங்கள்: தூபிகளின் மேடைகளிலும், மேடைமீது அமைக்கப்பட்ட கைப்பிடிச்சுவர்களிலும், அரைக்கோளத்தின் கீழ்ப்பகுதியிலும் கணக்கற்ற புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. இச் சிற்பங்கள் புத்தரது வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவர் பல முற்பிறவிகளில் (போதிசத்துவராக) நிகழ்த் தியதாகக் கூறப்பெறும் சாதகக் கதைகளின் நிகழ்ச்சி களையும் சித்திரிக்கின்றன. உலகத்தின் பல பகுதிகளில் நாம் காணும் தொகுப்புச் சிற்ப வகைகளுள் அமரா வதிச் சிற்பங்களே மிகச் சிறந்தவை என அறிஞர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த அமராவதிக் கலை மரபு நான்கு நூற்றாண்டுகளாகப் படிப்படியாக வளர்ந்துள்ளதே இதற்குக் காரணம். இத்தகைய வளர்ச்சிக் காலத்தில் இக்கலைமரபில் பல மாறுதல் கள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாகத் தொடக்கக் காலத்தில் அமராவதிக் கலைஞர்கள், இந்தியாவின் பிற பகுதிக் கலைஞர்களைப் போலப் புத்தரை மனித உருவில் காட்டாது, தாமரை, சிம்மாசனம், யானை, மிதியடிகள், அரசமரம், தருமசக்கரம், தூபி போன்ற சின்னங்கள் மூலமாகக் காட்டினர். ஆனால் பிற்காலத் தில் மகாயானக் கருத்துகளின்படி அவரை மனித உருவில், நின்ற அல்லது அமர்ந்த நிலையில் காட்டி னர். இத்தகைய மாறுதலுக்கு உரோமானியத் தாக் கமும் ஒரு காரணமாகும். மேலும் வடக்கே மதுரா, காந்தாரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்கள் தங்கள் உலகப் புகழ்மிக்க படைப்புகளில் சித்திரிக் காத, புத்தரது வாழ்க்கை பற்றிய நுண்ணிய செய்தி களை அமராவதிக் கலைஞர்கள் சித்திரித்துள்ளனர். அத்துடன் பல நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் ஒருபெரும் வட்டவடிவக் கற்பலகையில் தந்தச் சிற்பங்களைப் போல் நுணுக்கமாகச் செதுக்கியுள் ளனர். இவ்வட்டக் கற்சிற்பங்களே அமராவதிக் கலையின் மிகச் சிறந்த படைப்புகளாகவும், 'இந்தியக்

கலைப் படைப்புகளுள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக வும் கருதப்படுகின்றன. ஏனெனில் இதிலுள்ள உருவங்கள் அழகும் உயிர்த்துடிப்பும் மிக்கனவாகவும், கற்பலகையில் வட்ட அமைதியுள் நன்கு பொருந் துவனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன.



அமராவதி-நளகிரியை அடிமைப்படுத்துவதைக் காட்டும் சிற்பம்

வடக்கே புகழ்மிக்க சாஞ்சித் தூபியினை அமைத்த கலைஞர்கள், மரம் செடி கொடிகளையும் பறவைக ளையும் விலங்குகளையும் சித்திரிக்கின்றனர். இங்கு மனிதன், உடல் பருக்காதவனாகவும், நல்ல உயர முள்ளவனாகவும், உறுதியான உடலழகுடன் கூடிய வனாகவும், படுத்த, நின்ற, அமர்ந்த, ஓடுகிற, பறக் கின்ற, ஆடுகின்ற நிலைகளில் உள்ளனவாகவும் சித்திரிக்கப்படுகிறான். எனினும் கால்கள் மெலிந்துள்ள மையை ஒரு குறை என்பர். பௌத்த சமயம் துறவை வற்புறுத்தியபோதிலும் அமராவதிச் சிற்பங்களில் வாழ்க்கையின் பல இனிய நிலைகள் காட்டப்படுவது வியப்பிற்குரியதே. பல சிற்பங்கள் மானிட வாழ்வின் பரபரப்பையும், அதன் இடையே அமைதியே உரு வாக நிற்கும் புத்தரின் உருவத்தையும் காட்டி, அவ ரது அமைதித் தத்துவத்தைத் திறம்பட வெளிப் படுத்துகின்றன. இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகச் சென்னை அருங்காட்சியகத்திலுள்ள "மதம்பிடித்த நளகிரியானை"ச் சிற்பத்தைக் கூறலாம். இதில் தேவ தத்தனால் புத்தரைக் கொல்லும் பொருட்டு ஏவப் பட்ட, மதம் பிடித்த நளகிரி என்னும் யானை வழி யில் ஒருவனைக் காலால் மிதித்துக் கொன்றும், மற்றவனை அவனது காலைத்தன் துதிக்கையில் பற் றித் தூக்கியும், அச்சத்தால் சிதறி ஓடும் மக்களைத் தாக்கியும் ஓடி வருகிறது. அது புத்தரைக் கண்டதும் மதம் நீங்கி அவர் கால்களில் வீழ்ந்து பணிகின்றது. இவ்வழகிய சிலையில் புத்தர் நின்றிருந்த பகுதி சிதைந்துள்ளது. இச்சிற்பங்களின் மூலம் அக்காலத்து அரண்மனைகள், கோட்டை கொத்தளங்கள், மாளி கைகள், தூபிகள், தோரண வாயில்கள், மக்களின் ஆடை அணிகலன்கள் முதலிய பலவற்றையும் பற்றி அறிய முடிகின்றது. ஒரு சிற்பத்தில் அமராவதித் தூபி யின் வடிவமே படம் பிடித்துக் காட்டியதுபோன்று அழகுறச் செதுக்கப்பட்டுள்ளது. இதுவே முற்றும் அழிந்து போன இந்த அழகிய தூபியின் உருவத்தை அறிய நமக்கு உதவுகிறது.

அமராவதிச் சிற்பங்கள், வட இந்தியாவின் பார் குத்து, சாஞ்சி ஆகிய கலைப்படைப்புகளுக்கும், பிற் கால இந்துப் பாணிக்குமிடையே ஒரு பாலம் போல் அமைகின்றன. எடுத்துக்காட்டாகக் கி.பி. 6-ஆம் நூற் றாண்டைச் சார்ந்த ஐகொளே, பாதாமிச் சிற்பங் களில் குப்தர் கலைமரபு, அமராவதிக் கலைமரபு ஆகியவற்றின் இணைவினைக் காணலாம். அமரா வதிக் கலைமரபு இந்தியாவுடன் நின்றுவிடாது கடல் கடந்து இலங்கை, சுமத்திரா, சாவா, கம்போடியா போன்ற தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவியது. இலங்கையிலுள்ள அனுராதபுரத்துத் தூபியும், அதன் சிலைகளும் அமராவதிக் கலை மரபைச் சார்ந்தவை. இத்தகைய உயர்ந்த கலைப்படைப்புகள் காலப் போக்கில் போற்றுவாரற்றுச் சிதையலாயின. அத் துடன் 18-ஆம் நூற்றாண்டின் முடிவில், ஆந்திரத்தி லுள்ள சிந்தபள்ளிச் சமீன்தாரான ராசா வாசுதேவ ரெட்டி என்பவர் தம் தலைநகரை அமராவதிக்கு மாற்றிப் பலரை அங்குக் குடியேற்றினார். இவர்கள் தங்களுக்கு வீடு கட்டுவதற்காக அமராவதித் தூபியின் செங்கற்களைப் பெயர்த்தும், சுண்ணாம்பிற்காகச் சலவைக்கற்களை நீறாக்கியும் அவற்றைப் பாழ் படுத்திவிட்டனர்.

கி.பி. 1797-இல் கர்னல் காலின் மக்கன்சி என்ப வரே இந்த இடிபாடுகளின் சிறப்பினைக் கண்டு பிடித்துக் கி.பி. 1816-இல் இங்கு எஞ்சிய பல அழகிய சிற்பங்களை அழிவிலிருந்து காத்து, கல்கத்தா, சென்னை அருங்காட்சியகங்களுக்கு அனுப்பி வைத் தார். கி.பி. 1830-இல் மசூலிப்பட்டணத்தில் மாவட்ட ஆளுநராக இருந்த இராபர்ட்சன் 33 சிலைகளைக் கண்டுபிடித்தார். அவற்றைச் சென்னை ஆளுநரான பிரடரிக் ஆடம் சென்னை அருங்காட்சியகத்தில் வைத்துப் பாதுகாப்புச் செய்தார். கி.பி.1845-இல் சர்

வால்டர் எலியட் என்பவரும், கி.பி. 1876-இல் சீவல் என்பவரும், கி.பி. 1881-இல் பர்கெசு என்பவரும் 1905 முதல் 1909 வரை அலெக்சாண்டர் ரே என்ற அறிஞரும் இப்பகுதிகளில் பல அரிய சிலைகளைக் கண்டுபிடித்துச் சென்னைக்கு அனுப்பினர். இவற்றுள் பல இன்று சென்னை அருங்காட்சியகத்திலும், சில கல்கத்தாவிலுள்ள தேசிய அருங்காட்சியகத்திலும் மற்றும் சில இலண்டனிலுள்ள பிரிட்டன் அருங் காட்சியகத்திலும் உள்ளன. ஆர்.வெ.

துணை நூல்கள்:

**Barrett Douglas**, "Sculpture from Amaravati in the British Museum," London, 1954.

**Brown Percy**, "Indian Architecture, Buddhist and Hindu", 2nd Ed., Bombay, 1949.

**Burgess, J.**, "The Buddhist Stupas of Amaravati and Jaggayyapeta," (Arch. Surve. S. India), London, 1887.

**Sivaramamurthi, C.**, "Amaravati Sculptures in the Madras Government Museum", Madras, 1977.

**அமராவதி ஆறு** காவிரியில் கலக்கும் ஆறு களுள் ஒன்று. கோவை மாவட்டத்தில் உடுமலைப் பேட்டை, தாராபுரம் வட்டங்களின் வழியாகப் பாய்ந்து கரூரினருகே காவிரியுடன் கலக்கிறது. அம ராவதி தேவேந்திரனின் தலைநகர். இதனைப் பூவுல கில் புண்ணியம் செய்பவர்கள் இறந்தபின் சென் றடையும் சுவர்க்கம் என்று புராணங்கள் கூறும்.

**அமனுல்லாகான்** ஆப்கானிசுதானத்தின் அமீர். ஆப்கானிசுதானத்தின் அமீரான அபிபுல்லா கானின் மகனான இவர், 1919 முதல் 1929 வரை அரசராகவும் இருந்தார். அபிபுல்லா கொலையுண்ட போது படைகள் அமனுல்லாவை ஆதரித்ததால், இவரே அமீரானார்.

அமனுல்லாகான் கி.பி. 1919-இல் இந்தியாவின் மீது படையெடுத்தார். இதைத்தான் மூன்றாம் ஆங்கில-ஆப்கானியப்போர் என்பர். போருக்குப் பின் னர் ஏற்பட்ட உடன்படிக்கை அமனுல்லாகானுக்கு வெற்றியென்று கூறுவர். அதன்படி ஆப்கானிசுதானம் சுதந்தரம் பெற்றது. இவர் தம்மை 1924-இல் அரச ரென அறிவித்துக் கொண்டார். புதிய அரசியல் சட் டம் ஒன்றையும் இவர் நாட்டிற்கு அளித்தார்.

அமனுல்லாகான் ஆப்கானிசுதானத்தை ஐரோப் பிய மயமாக்க விரும்பிப் பல சீர்திருத்தங்களை மேற் கொண்டார். பெண்ணுரிமை வழங்கிய அமனுல்லா கான் இசுலாமிய சமய குருமார்களான முல்லாக் களின் சீற்றத்திற்கு ஆளானார். அவர்கள் செய்த கலகத்தைத்தான் கோசுட்டுக் (Khozt) கலகம் என்பர். இக்கலகம் 1924 மார்ச்சு முதல் 1925 சனவரி வரை நடைபெற்று, அடுத்து வந்த புரட்சிக்கு அடிகோலிற்று. சீர்திருத்தத்தை விரும்பாத மக்கள் 1928-இல் புரட்சி செய்தனர். அப்புரட்சி வெற்றி பெறவில்லை. ஆனால் அமனுல்லாகான் 1929 சனவரி 14-ஆம் நாள் முடி துறந்தார். முடி துறந்த அமனுல்லாகான் உரோமாபுரிக்குச் சென்று 1941-ஆம் ஆண்டு செரு மானியரின் உதவியுடன் ஆட்சியைக் கைப்பற்ற முயன்றார்.

அமனுல்லாகானுக்குப் பின்னர் நாதர்சா என்பார் ஆப்கானிசுதானத்தின் ஆட்சியைப் பற்றினார்.

**அமாசெசு** எகிப்திய அரசர்களுள் ஒருவர். இவர் 26-ஆம் வமிசத்தைச் சார்ந்தவராய்க் கி.மு. 570 முதல் 526 வரை ஆட்சி நடத்தியவர். இவருக்கு முன் னர் ஆட்சி நடத்தியவரின் கூலிப்பட்டாளத்தைத் தம் சொந்த இன மக்களின் படையைக் கொண்டு தோற் கடித்துவிட்டு, ஏப்ரிசு என்பாருக்குப்பின் அரசு கட்டி லில் ஏறினார்.

அமாசெசு நேர்மைக்கும் நீதிக்கும் பெயர் பெற்ற வர். பாபிலோனியாவைச் சார்ந்த நெபுகத்நேசர் (Nebuchadnezzar) என்பாரின் படையெடுப்பிலிருந்து எகிப்தைக் காத்தார். நெபுகத்நேசர் எகிப்தைச்சூறை யாடிய போதிலும், பின்வாங்க நேரிட்டது. பாரசீகப் பேரரசர் மகா சைரசு என்பாரின் படையெடுப்பி லிருந்து எகிப்து நாட்டைக் காப்பாற்றியவரும் இவரே. கிரேக்கர்களுடன் நட்புறவைப் பேணிக்காத்த அமா செசு, அவர்களுடன் வாணிகத்தையும் பெருக்கிக் கொண்டார். மேலும் கிரேக்கக் குடியேற்றங்களை எகிப்தில் நிலைநாட்டுவதற்கும் ஆதரவு நல்கினார். நௌகிராட்டிசு என்னும் சீரிய துறைமுகத்தை அவர் களுக்குக் கொடுத்து, அதைச் சிறந்த நகரமாக்கவும் பாடுபட்டார். தெல்பித் (Delphi) திருக்கோயில் தீக் கிரையான பின்னர், அதனை மீண்டும் நிலைபெறச் செய்ய மிகுந்த பொருளுதவி செய்தார். மெம்பிசு நகரில் ஐசிசு என்ற தெய்வத்திற்குக் கோயில் கட்டிய இவர், வல்கன் கோயிலுக்கு முன்னால் பெரும் உரு வம் ஒன்றையும் நிறுத்தினார். கிரேக்க நாட்டின் தலைசிறந்த குடிமக்களான பிதகோரசு, பாலிகிரேட் டிசு, சோலன் போன்றவர்கள் அவருடைய அரண் மனைக்கு வருகை புரிந்தார்கள் என்று எரடோடசு (Herodotus) என்னும் வரலாற்று வல்லுநர் கூறு கிறார். அமாசெசு மன்னரை இரண்டாம் ஆமோசு என்றும் கூறுவர்.

**அமாத்தியர்** என்னும் சொல் அமைச்சரைக் குறிக்கும். அரசருக்கு உறுதுணை நின்றவர்கள் மந் திரி, புரோகிதர் ஆகியோர் என்று கௌடில்யர் குறிப் பிட்டுள்ளார். அரசாங்கத் துறைகளைக் கவனித்து வந்தவர்கள் அமாத்தியர் எனப்பட்டனர். அமாத்தி

யர் என்னும் சொல்லைக் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கல்கணரும் பயன்படுத்தியுள்ளார். காசுமீரத்திலும், நேபாளத்திலும் கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு வரை அமாத்தியர் என்ற பெயரைப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

'அமாவாசை' என்பது இரவில் சந்திரன் தோன்றாத, மதி மறை நாளைக் குறிக்கும் பெயராகும்.

நாட்டில் வான கணித — சோதிட நூல்களின் படி கணிக்கப்பட்ட 'பஞ்சாங்கம்' என்ற நாள்குறிப்பு ஆண்டுதோறும் வெளியிடப்படுகிறது. பஞ்ச அங்கம் பஞ்சாங்கம். ஐந்து உறுப்புகளைக் கொண்டிருப்பதால் இஃது இப்பெயரால் குறிக்கப்படுகிறது. ஐந்துறுப்புகளாவன:- நட்சத்திரம், திதி, வாரம்,யோகம், கரணம் என்பன.

இவற்றுள் நட்சத்திரங்கள் அசுவனி முதல் இரேவதி ஈறாக இருபத்தேழு ஆகும். திதிகள் பதினைந்து என வரையறுக்கப்பட்டுள்ளன. பிரதமை முதலாகத் தொடங்கும் இப்பதினைந்து திதிகளும் தொடக்க நிலையில் 'சுக்கில பக்க'த்திற்குரியவை. பின்னர் வரும் பதினைந்து திதிகளும், கிருட்டிண பக்க'த்திற்குரியவை. ஒரு பக்கம் என்பது பதினைந்து நாள்கள் கொண்டது. முதல் பதினான்கு திதிகளுடன் பதினைந்தாவதாக முழுமதி நாளைச் (பௌர்ணமி) சேர்த்தால் அது சுக்கில பட்சமாகி விடுகிறது. இதனை வளர்பிறை நாள்கள் அல்லது முற்பக்கம் எனக் குறிக்கின்றனர்.

அவ்வாறே முதல் பதினான்கு திதிகளுடன் பதினைந்தாவதாக மதிமறைநாளைச் (அமாவாசை) சேர்ந்தால் அது கிருட்டிண பக்கமாகிவிடுகிறது. இதனைத் தேய்பிறை நாள்கள் அல்லது பிற்பக்கம் என்று சொல்லுகின்றனர்.

'அமாவாசை' என்னும் வடசொல் வழக்கு காலப் போக்கில் தமிழில் தோன்றியதாகும்.

இச்சொல் அமாவாசை, அமாவசி,அமாவாசி,அமாவாசியை, அமவாசி, அமாமசி எனப் பல்வேறு வடிவங்களில் வழங்கப்படுகிறது. அமாவாசையைச் சூரியனும் சந்திரனும் கூடும் நாள் என்னும் கருத்தில் இரவிமதி யோகம் எனவும் கூறுவர். ''இந்துவோ டிரவிக் கூட்டம் அமாவாசை அமையும் என்ப'' என்பது சூடாமணி நிகண்டு.

அமாவாசையன்று இரவு, உலகம் இருண்டு கிடக்கும்; வெண்நிலவைக் காண முடியாது. அமாவாசை கழித்து மூன்றாம் நாள்தான் பிறைத் திங்களைக் காணமுடியும். அது வளர்ந்து பதினாறு கலைகளும் நிறைந்து முழு நிலவாகிறது. இதனை அடியொற்றி எழுந்த புராணக் கதைகள் எண்ணற்றவை.

அமாவாசையன்று இரவு உலகம் இருண்டிருப்பது ஏன் என்பதற்கான காரணத்தைப் புவி இயல் வல்லுநர்கள் நன்கு ஆய்ந்து விளக்கம் தந்துள்ளனர்.

இப் புவி ஓர் உருண்டை வடிவமான கோளம். அது தன்னைத் தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகிறது. அது தன்னைத் தானே சுற்றுவதற்கு 24 மணி நேரமும், சூரியனைச் சுற்றி வர $365\frac{1}{4}$ நாள்களும் ஆகின்றன. சந்திரன் புவியைச் சுற்றுகிறது. அது புவியினை ஒரு முறை சுற்றி வர ஒரு திங்கள் ஆகிறது. அவ்வாறு சுற்றி வரும்போது திங்களுக்கு ஒரு முறை சந்திரன் புவிக்கும் சூரியனுக்கும் நடுவில் வருகிறது. ஒரு குறிப்பிட்ட நேர்கோட்டில் இம்மூன்றும் வரும்போது சந்திரனின் நிழல் புவியின் மீது விழுவதால் புவி இருள் படுகிறது. இவ்வாறு இருண்ட நாள் 'அமாவாசை' என்று சொல்லப்படுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்கள் அமாவாசை, பௌர்ணமி என்னும் இரண்டையும் 'உவா' என்ற பெயரால் குறிப்பிடுகின்றன.

''உவவு மதி உருவின் ஓங்கல் வெண்குடை'' என்னும் புறநானூற்றுப் பாடற்பகுதி கொண்டும், ''ஓவாதிரண்டு உவவும் அட்டமியும் பட்டினிவிட்டு ஒழுக்கம் காத்தல் தாவாத் தவம்'' என்னும் சீவகசிந்தாமணிப் பகுதி கொண்டும் உணர்தல் கூடும்.

பிற்கால இலக்கண உரையாசிரியர்கள் உம்மைத் தொகைக்கு 'உவாப் பதினான்கு' என்பதனை எடுத்துக்காட்டாகக் கூறியுள்ளனர். இது உவாவும் பதினான்கும் என விரியும். இது கொண்டு பதினான்காம் திதியை அடுத்துப் பதினைந்தாம் நாளாக உவா - அதாவது அமாவாசை அல்லது பௌர்ணமி வருகிறது என்பது அறியப்படுகிறது. இந்துக்களுள் பெரும்பாலோர் இறந்த முன்னோர்க்கு, அமாவாசை நாளில் திதி கொடுப்பதும், நோன்பிருப்பதும் கடமையாகக் கொண்டுள்ளனர்.

ஆ.ந.

**அமிசசுரம்:** கருநாடக இசையில் இராகங்களுக்கு அடிப்படையான ஒலிகள் அமிச சுரங்கள் எனப்படும். இராகத்திலாவது, சங்கதியிலாவது இராக வடிவத்தை அல்லது அந்த இராகத்தின் களையைக் காட்டும் படியாக அடிக்கடி உபயோகிக்கும் உயிர் நிலையான சுரங்கள் என்று இவற்றை விளக்கலாம். அமிச சுரத்தில் நின்று இராக விளக்கம் செய்யலாம். எ.டு. கல்யாணி இராகத்தில் நிசாதம், சங்கராபரணத்தில் காந்தாரம் ஆகியன அமிச சுரங்களாகும். இவை இந்த இராகங்களின் நியாச சுரங்களும் ஆகும். ஆனால், மற்ற நியாச சுரங்களைப் போலன்றி

இவற்றை நீண்ட ஒலியாகவும் பாடலாம். காண்க: இசை.

**அமித்திரகட்டா**, மௌரிய அரசர் பிந்து சாரரின் விருதுப் பெயர். பிந்துசாரர் சந்திரகுப்த மௌரியனின் மகனும், அசோகரின் தந்தையுமாவார். மித்திரன் என்றால் நண்பன்; அமித்திரன் என்றால் பகைவன்; கட்டா என்றால் கொன்றவன் என்பது பொருள். பிந்துசாரர் தம் பகைவர்களை அழித்த தால் அவரை 'அமித்திரகட்டா' என்று கிரேக்க நூலாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். கிரேக்க நூலாசிரியர் அதேனாய் என்பவர் பிந்துசாரரை அமித்திரசேடசு என்றும், அல்லிட்ரோசோடசு என் றும் கூறுவர். மேற்கூறிய இரு சொற்களும் அமித்திர கட்டா என்னும் வடமொழிச் சொற்களின் திரி பாகும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கருது கிறார்கள்.

**அமிதசாகரர்** யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை என்னும் இரு யாப்பு நூல்களைச் செய்தவர். இவரை அமிதசாகரர், அமுதசாகரர், அமிர்தசாகரர் எனப்பலவாறாக வழங்குகின்றனர். ஆனால் 'அளப் பருங் கடற்பெயர் அமிதசாகரர்' என்னும் தொடர் கொண்டு அமிதசாகரர் என்னும் பெயரே சரியான வழக்கு என்பது நிறுவப்பெற்றுள்ளது. குணசாகரர் என்பவர் இவர் ஆசிரியர் என்று தெரிகிறது. இவர் யாப்பருங்கலக்காரிகை உரையாசிரியரான குணசாகர ரின் வேறானவர் என்பர். இவர் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி.

யாப்பருங்கலத்திலும், யாப்பருங்கலக்காரிகை யிலும் அருகதேவனுக்கு வணக்கங் கூறுகின்றமையால் இவர் சமணராவர். சமண சமய சங்கங்களுள் ஒன் றாக விளங்குகிற நந்திக்கணத்தின் ஒரு கூறாகிய அருங் கலான்வயம் என்ற பிரிவினை இவர் சார்ந்தவர். இப் பிரிவினர் மிகுதியாக வாழ்ந்த இடமாகிய திருவாரூ ருக்குப் பக்கத்திலுள்ள தீபங்குடி என்னும் ஊரில் வாழ்ந்த துறவியாக இவர் இருத்தல் கூடும். இவர் துறவி என்பதை 'அமிதசாகரமுனி' எனவும் 'அருந் தவத்தோன்' எனவும் வழங்கப் பெறும் தொடர்கள் உணர்த்துகின்றன.

யாப்பருங்கலக்காரிகையை இவர் அரங்கேற்றிய இடம் தொண்டை நாட்டிலுள்ள குளத்தூர் என்பது நீடூர்க் கல்வெட்டுகளால் அறியப்பெறுகிறது. அதன் பின்னர் இவ்வூர் காரிகைக்குளத்தூர் என்றே வழங்கப் பெறுகிறது.

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இருநூல்களும் யாப்பைப் பற்றி மட்டுமே இலக் கணங்கூறுகிற நூல்களாகும். தொல்காப்பியம் செய் யுளியலைச் சில இடங்களில் தழுவியும், சில இடங்களில் வேறுபட்டும், இந்நூல்களிரண்டும் செய்யப்பெற்றுள் ளன. சங்கயாப்பு, காக்கை பாடினியம், அவிநயம் போன்ற பல்வேறு நூல்கள் அமிதசாகரருக்கு முன் வழங்கிவந்தன என்பது, இந்நூல்களின் உரைகளுள் காணப்பெறும் எடுத்துக் காட்டுகளால் விளங்குகிறது.

யாப்பருங்கலம் உறுப்பியல், செய்யுளியல், ஒழி பியல் என்னும் மூன்று இயல்களாகச் செய்யப்பெற் றுள்ளது. அவற்றுள் உறுப்பியல் எழுத்தோத்து, அசையோத்து, சீரோத்து, தளையோத்து, அடி யோத்து, தொடையோத்து என்னும் ஆறு ஒத்துகளை யும், ஐம்பத்து மூன்று நூற்பாக்களையும் கொண்டுள் ளது. செய்யுளியலில் நாற்பது நூற்பாக்களும், ஒழி பியலில் மூன்று நூற்பாக்களும் உள்ளன.

யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலத்தினைச் சுருக்கமாகவும் எளிமையாகவும் செய்யப்பெற்ற நூலாக அமைந்துள்ளது. இந்நூல் கட்டளைக் கலித் துறை என்னும் பாவகையால் செய்யப்பெற்றுள்ளது. இது உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களில் நாற்பத்து நான்கு காரிகைகளால் (கட்டளைக் கலித்துறை) ஆக்கப் பெற்றுள்ளது. தொல்காப்பியச் செய்யுளியல் அசை, சீர்களுக்குரிய வாய்பாடுகளை வகுத்துரைக்கவில்லை. ஆனால் காரிகை ஆசிரியர் வாய்பாடுகளை எளிமையாக மனங் கொள்ளும் வகையில் விரித்துரைத்துள்ளார்; தளை யின் இலக்கணத்தையும் அறுதியிட்டுக் கூறியுள்ளார். இவர் காலத்தில் வளர்ந்த பாக்களின் வகைகளை யும் இனங்களையும் இனங்கண்டு கொள்ளும் வகை யில் விரித்துரைத்துள்ளார். வண்ணங்களை நூறு என வகுத்துக் காட்டியுள்ளார். பிற்கால யாப்பு நூல் களால் பெரிதும் பின்பற்றப்படுவதாக இந்நூல் விளங்கு வது குறிப்பிடத்தக்கது.

சு.சு.

**அமிர்தகவிராயர்** இராமநாதபுர அரசரான சேதுபதியின் அவைப் புலவர்; இராமநாதபுர மாவட் டம் சிவகங்கை வட்டத்தில் பொன்னாங்கால் என் னும் ஊரினர்; வேளாண் மரபினர்; சைவ சமயத்தைச் சார்ந்தவர். கி.பி. 1646 முதல் கி பி. 1672 வரை இராம நாதபுரத்தை ஆண்ட திருமலை சேதுபதி காலத்தில் அவைப் புலவராக விளங்கினார்.

திருமலை சேதுபதி பெருங் கல்வியாளர்; இசை யில் ஈடுபாடுள்ளவர். ஒருநாள் மாலைப் பொழுதில் தம் புலவர் பெருமக்களோடு பூங்காவில் அமர்ந்து அளவளாவிக்கொண்டிருந்த சேதுபதி புலவர்களைப் பார்த்து அகப்பொருள் துறையுள் ஏதேனும் ஒன்று பற்றிப் பல பாடல் பாட இயலுமா? எனக் கேட்டார். அதற்கு ஒவ்வொரு புலவரும் பத்து, இருபது, முப்பது எனக்கூற, அமிர்த கவிராயர் 'நான் நூறுபாடுவேன்' எனக் கூறினர். அதனைச் செவிமடுத்த புலவர்கள்

நானூறு பாடுமாறு கூறினர். அக்கூற்றினை ஏற்றுக் கொண்ட அமிர்த கவிராயர் 'நாணிக் கண் புதைத்தல்' என்னும் துறையில் நானூறு பாடல்களைப் பதினைந்து நாள்களில் பாடினார் என்பர். தலைவன் தன்னைப் பார்ப்பதை அறிந்த தலைவி நாணித் தன் கண்களைக் கைகளால் மூடிக் கொண்டாள் என்பதே இத்துறையின் பொருளாகும். இப்பாடல்கள் அனைத்தும் சிலேடை நயம் பொருந்தியுள்ளன. 'ஐந்தாங் குலத்தவர் பார்ப்பாரைச் சேர்தல் அதிசயமே' என்பது ஒரு பாடலின் அடியாகும். இதில் ஐந்தாங்குலம் என்பது கையையும், பார்ப்பார் என்பது கண்ணையும் குறிக்கும். இதுபோன்று சுவையுடைய நானூறு பாடல்களுக்கும் பாடல் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பொன் தேங்காயைக் கொடுத்ததோடு பொன்னாங்கால் என்னும் ஊரையும் சேதுபதி அளித்தார் என்பது கூறப்படுகிறது. ஒவ்வொரு பாடலிலும் முதல் இரண்டடிகளில் அரசனுடைய பெருமைகளும் பின்னிரண்டடிகளில் துறைப்பொருளும் அமையுமாறு பாடியுள்ளார். இந்நூல் 'நாணிக் கண் புதைத்தல் என்னும் ஒருதுறைக் கோவை' எனவும் 'இரகுநாத சேதுபதி ஒரு துறைக்கோவை' எனவும் வழங்கப்படுகிறது. இதன்கண் இப்பொழுது 311 பாடல்கள் காணப்படுகின்றன. சொக்கலிங்கம் பிள்ளை என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். அமிர்த கவிராயர் காலம் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு. சு.சு.

**அமிர்தசரசு** பஞ்சாபு மாநிலத்தில் சலந்தர் நகருக்கு 70 கி.மீ. வடமேற்கில் உள்ள நகரம். இந்நகரில்தான் சாலியன் வாலாபாக்குப் படுகொலை நடந்தது. சாலியன் வாலாபாக்கு இவ்வூரின் ஒரு பகுதியாகும். இங்கு இந்திய தேசியக் காங்கிரசின் ஆண்டு மாநாடுகள் இருமுறை நடைபெற்றன. முதல்மாநாடு 1919-ஆம் ஆண்டில் கூடியபோது மோதிலால்நேரு அதன் தலைவராயிருந்தார். மீண்டும் 1956-இல் இரண்டாம் முறையாக மாநாடு கூட்டப்பெற்றபோது யு.என்.தேபர் என்பார் தலைமை தாங்கினார். பட்டு, தங்கம், வெள்ளிச்சரிகை நூல்கள், தோல் பொருள்கள், கம்பள நெசவு போன்றவை இந்நகரின் சிறப்பான தொழில்களாம்.

இந்நகரிலுள்ள பொற்கோயில் சீக்கியர்களின் புண்ணியத் தலமாகும். இப்பொற்கோயிலைக் கி.பி 1577-ஆம் ஆண்டில் சீக்கியர்களின் 4-ஆம் குருவான இராமதாசு என்பார் கட்டத் தொடங்கினார். 5-ஆம் குருவான அர்சூன்தேவர் இதைக் கட்டிமுடித்தார். 1984-ஆம் ஆண்டு சூன் மாதத்தில் இந்திய அரசு படைவீரர்களைக் கோயிலுக்குள் அனுப்பி அங்குக் குடிகொண்டிருந்த சமூகவிரோத தீவிரவாதிகளை அகற்றியது. இதனைப் பொற்கோயில் இராணுவ நடவடிக்கை (Operation Blue Star) எனக் குறிப்பிட்டனர்.



அமிர்தசரசு பொற்கோயில்

பிந்தரன்வாலே என்ற தீவிரவாதி கொல்லப்பட்டதுடன், பல சமூகவிரோதிகளும் இறந்தனர். இந்த நடவடிக்கையே பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரின் கொலைக்குக் காரணமாயிற்று. இடிபட்ட கோயிலின் பகுதிகள் புதுப்பிக்கப்பட்டன.

இந்தியாவின் தலைமை அமைச்சரான இராசீவ் காந்திக்கும் அகாலிகளின் தலைவர் அர்சந்த் லோங்கோவாலுக்கும் இடையே நடைபெற்ற பேச்சின் பயனாக 1985-ஆம் ஆண்டு சூலை மாதம் 23-ஆம் நாள் பஞ்சாபின் சிக்கல் தீர்த்துவைக்கப்பட்டது.

**அமிர்தபசார்** வங்காளத்தில் செசூர் மாவட்டத்திலுள்ள சிற்றூர். பழைய வங்காளி நாளிதழான அமிர்தபசார் பத்திரிகா என்னும் செய்தித்தாள் இங்கிருந்தே தொடங்கப்பட்டது. கல்கத்தாவிலிருந்து வெளியாகும் இச்செய்தித்தாள் கிழக்கிந்தியாவின் தலைசிறந்த ஏடாகக் கருதப்படுகிறது.

**அமிர்தம் பிள்ளை** சோழ நாட்டில் திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள சிந்தாமணியில் வாழ்ந்த அழகியநாதப் பிள்ளை மகனாவார். இவர் 'அமிர்த கவி' என்னும் சிறப்புப் பெயர் கொண்டவர். இவரது காலம் 1845 முதல் 1899 வரையிலாகும். உறையூர் முத்துவீர உபாத்தியாயரிடம் இலக்கண இலக்கியக் கல்வி கற்ற இவர், ஐந்திலக்கணப் புலமை

யும் செய்யுளியற்றும் ஆற்றலும் பெற்று விளங்கினார். மறைமலையடிகளாரின் ஆசிரியரான நாராயணசாமிப் பிள்ளையுடன் ஒருங்கு கற்றவரான இவர், கல்வி கற்பித்தலைத் தம் பணியாகக் கொண்டிருந்தார். சேலம் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

கி.பி. 1889–இல் ‘தமிழ்ச் செல்வன்’ என்னும் பத்திரிகையினைத் தொடங்கி அதன் ஆசிரியராகவுமிருந்தார். பெண்மை நெறி விளக்கம், யாப்பிலக்கண வினா–விடை, தமிழ்விடுதூது (இரத்தினம்பிள்ளை என்னும் வள்ளல் மேல் பாடியது–மறைமலையடிகளார் முன்னுரை பெற்றது), செங்கோன் தரைச் செலவு ஆகியன இவர்தம் நூல்களாகும். நா.ஜெ.

**அமிர்தலிங்க சுவாமிகள்** குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனத்தைச் சேர்ந்தவர். அமிர்தலிங்கத் தம்பிரான் என வழங்கப்பெறும் இவர் தல புராணம் இயற்றவல்ல கவிஞராகவும் விளங்கினார்; கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருமயிலைத் தலபுராணம் பாடியுள்ளார். பாயிரத்தோடு 13 சருக்கங்களையும் 665 செய்யுள்களையும் கொண்ட இந்நூலுக்குக் காஞ்சிபுரம் சபாபதி உரையெழுதியுள்ளார்.

**அமிருத ரஞ்சனி** என்பது சிரீ வேதாந்த தேசிகரால் செய்யப்பட்ட நூல். இவர் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் மரபுவழிப் புனிதம் முதல் பயன்கள் வரையிலுள்ள 17 மறைபொருட் செய்திகளை மணிமிடைபவள (மணிப்பிரவாள) நடையில் விளக்குகிறது இந்நூல்.அப்பாடல்கள் பல்வேறு யாப்பினவாகும். சாவா மருந்தாகிய அமிழ்தத்தைப்போல் இந்நூல் இடையறாது ஓதுபவர் உள்ளத்தை மகிழ்விப்பதால் இப்பெயர் பெற்றது போலும். இதில் சிரீ தேசிகன் ஆசாரியனது அருள் பெற்று வாழும் வகை கூறி, அறிவுடைப் பொருள், அறிவற்ற பொருள், இறைவன் என்னும் மூன்று தத்துவங்களின் வடிவத்தைக் காட்டித் திருமந்திரம், மேன்மை, முடிவுப் புகழ் என்னும் மூன்று மருமங்களின் பொருளைச் சுருக்கி வெளியிட்டுள்ளார். த.கோ.

**அமீது** (கி. பி. 19–நூ) இலங்கைத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். சாகி துரை என்னும் வேறு பெயர் கொண்ட இவர், இலங்கையிலுள்ள காலி என்னும் ஊரினர். இசுலாமியப் பெண்களுக்கான சமயப் பாடல்களைக் கொண்ட ‘ஞானப்பெண் கும்மி’ என்னும் நூலை இவர் கி.பி. 1892–இல் இயற்றினார். நா. ஜெ.

**அமீர் குசுரு** தில்லி சுல்தானிய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். அமீர் குசுருவின் சொந்தப் பெயர் முகமது ஆசன் என்பதாம். அவர் பாட்டியாலா என்னும் ஊரில் கி.பி. 1253–ஆம் ஆண்டு பிறந்தார். துருக்கிய அகதியான அவருடைய தந்தையார் சில ஆண்டுகளுக்கு முன் அவ்வூரில் தஞ்சம் புகுந்தார். அடிமை வமிச அரசர் பால்பனின் மூத்த மகனான இளவரசர் முகமது கானின் ஆட்சிக் காலத்தில்,அரசவைக் கவிஞராக அமீர் குசுரு பணியில் அமர்ந்தார். பால்பன் முதல் கியாசுதீன் துக்ளக் வரை, அடுத்தடுத்துப் பதவிக்கு வந்த அரசர்களுக்கும் அவர் தொடர்ந்து அரசவைக் கவிஞராகவே நீடித்தார். பிற்காலத்தில் அவர் உலக வாழ்வைப் புறக்கணித்து விட்டுச் சேக் நிசாமுத்தீன் ஆலியா என்பாரின் சீடரானார். அவர் வளமாக எழுதும் இலக்கிய மேதை. நான்கு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈரடிக் குறள்களை எழுதியவர் அமீர் குசுரு. பாரசீக மொழியில் மிகுதியாகக் கவிபாடிய இந்தியக் கவிஞர்களுள் அவர் முதலிடம் வகிப்பவர் எனில் மிகையன்று. உரை நடை நூல்கள் பலவற்றையும் அவர் பதித்துள்ளார். “இந்தியாவின் கிளி” (Tufi-e-Hind) என்றும் பொது மக்கள் அவரை அழைத்தனர்.

அமீர் குசுரு முறையாக வரலாறு கற்ற வரலாற்றறிஞரல்லர் எனினும் அவர் ஆறு வரலாற்று நூல்களை எழுதியிருக்கிறார். அவருடைய வரலாற்று நூல்கள் செய்யுட் கவிதைகளாக எழுதப்பட்டுச் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. அவை. 1) கிரான் அசு சாதெயின், 2) மிப்தாவுசு புடுவா, 3) கசைனுல் புடுவா, 4) தேவல்ராணி கிசிர்கனி, 5) நுசிபிர், 6) துக்ளக் நாமா என்பன. பிறவிக் கவிஞரும் தலைசிறந்த எழுத்தாளருமான அமீர்குசுருவை இந்திய–முசுலிம் பண்பாட்டின் சீரிய எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அத்துடன் இலக்கியத்தில் தொண்ணூற்றிரண்டு தனி நூல்களையும் அவர் எழுதியுள்ளார். அவற்றுள் மேலே குறிப்பிடப் பெற்றுள்ள வரலாற்று நூல்களும், ஐந்து கவிதைத் தொகுப்புகளும் ஆறு புதினங்களும் சேக் நிசாமுத்தீன் என்பாரின் சூபி தத்துவத்தை விளக்கும் நான்கு தொகுதிகளும் எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகளும் அடங்கும். உரைநடையிலும் செய்யுள் நடையிலும் எழுதப் பெற்ற இவ்வாய்வுக் கட்டுரைகள், இறைமையியல், தத்துவம், கலை, இலக்கியத் திறனாய்வு, பண்பாடு ஆகியவற்றைச் சுட்டும் பல்வேறு கருப்பொருள்களைக் கொண்டுள்ளன. இந்திச் சொற்களைத் தடையில்லாமல் பயன்படுத்திய முதல் முசுலிம் கவிஞர் அமீர் குசுருவேயாவர்.

‘கிரான் அசு சாதெயின்’ என்னும் வரலாற்று நூல், அயோத்தி சுல்தான் கைகோபாத்து என்பாருக்கும், வங்காளத்தின் ஆளுநரான அவருடைய தந்தை புக்ராகானுக்கும் இடையே நேர்ந்த சந்திப்பைப் பற்றி ஆசிரியர் அமீர் குசுரு நேரில் கேட்டதை விளக்கிக்

கூறும் நூல். அமீர் குசுரு சைகோபாத்தின் பயணக் குழுவில் ஓர் உறுப்பினராயிருந்தார். அரசியல் நிலை, அரண்மனைச் சூழ்நிலை, அக்காலத்தில் நிலவிய சமூகப் பண்பாட்டு வாழ்க்கைமுறை போன்றவற்றை அந் நூல் தெற்றென விளக்குகிறது.

'மிப்டாவுல் புடுவா' என்னும் நூல் சலாலுத் தீன் கில்சியின் இராணுவப் படையெடுப்பைக் கவிதை நடையில் விளக்கும் நூலாகும். 'கசைனுல் புடுவா'வை 'தரீக்-இ-இலாகி' என்றும் கூறுவர். இந்நூல் உரை நடையில் எழுதப்பெற்ற வரலாற்று வரைவியல் பற்றிய தொகுப்பாகும். அலாவுதீன் கில்சியின் வெற்றி களையும் சாதனைகளையும் விளக்கும் இந்நூல், அவருடைய தக்காணப் படையெடுப்புகளை விளக்க மாகக் கூறுகிறது. இந்தியாவின்மீது படையெடுத்த மங்கோலியப் படையெடுப்புகளையும் அவற்றைத் தடுத்து நிறுத்த அலாவுதீன் மேற் கொண்ட கடுமை யான நடவடிக்கைகளையும் நேரில் கண்டவர் கூறும் கூற்றுப் போன்றுள்ள இந்நூல், வரலாற்று மதிப்பு மிக்கதாகும்.

'தேவல் ராணி கிசிர் கனி' என்னும் பிறிதொரு நூலை அசுகா என்றும் கூறுவர். இதுவும் செய்யுள் வடிவில் வந்த நூலேயாகும். இந்நூல், அலாவுதீன் கில்சியின் மகன் கிசிர்கானுக்கும் குசராத்து மன்னர் இராணா ரன் என்பாரின் மகள் தேவல்ராணிக்கு மிடையே எழுந்த காதலை வடித்துக் கொடுக்கும் காதல் கவிதைக் களஞ்சியமாகும். அலாவுதீன், குசராத்து மீது எடுத்த படையெடுப்புகளைப் பற்றி யும் இந்நூலில் சிறு குறிப்புகள் உள்ளன.

'நுசிபிர்' என்னும் கவிதைத் தொகுப்பு, முபாரக் சா கில்சியின் ஆட்சிக் காலத்தைக் குறிப்பிட்டுள்ளது. அவர் அலாவுதீனை அடுத்துப் பதவிக்கு வந்த தகுதி யும் திறமையுமற்ற அரசராவார்.

'துக்ளக் நாமா' என்னும் நூலும் வரலாற்றுக் கவிதைத் தொகுப்பேயாகும். குசுருகானைக் கியாசு தீன் துக்ளக் வெற்றி கண்டதை நினைவு கூறும் வகை யாகக் கி.பி. 1320-ஆம் ஆண்டு வாக்கில் அமீர் குசுரு எழுதியது இந்நூல். துக்ளக் வமிசம் நிலைநாட்டப் பெற்ற வரலாற்றையும் இந்நூல் விளக்குகிறது. கியாசுதீன் துக்ளக்கின் ஆட்சிக் காலத்தைச் சுட்டிக் காட்டும் வரலாற்றுக்கு இந்நூலே (ம' தன் நூலாகும்.

மேற்கூறிய நூல்களை அமீர் குசுரு, ஆட்சி செய்த அரசர்களின் கட்டளைகளின்படியோ அவற்றை அவர்களுக்கு வழங்கும் முகத்தாலோ எழுதினார். தம் இலக்கியத் திறனை வெளிக்காட்டிக் காலமெல்லாம் நிலைத்து நிற்கும் பெரும் புகழை ஈட்டுவதுடன் தம் இலக்கியங்களுக்கு உரிய வெகுமதிகளையும் பெற வேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந் தது. இதன் விளைவாக அந்நூல்கள் நல்லனவற்றை மட்டும் சுட்டிக்காட்டும் வகையில் எழுதப்பெற்றுள் ளன. எனவே இவை நடுநிலையின்றி எழுதப்பெற் றவை. மன்னர்களின் சாதனைகளை உயர்வு நவிற்சி யுடன் சுட்டிக் காட்டும் அதே சமயத்தில் குற்றங் குறைகளைப் புறக்கணித்து விடுகிறார் அமீர்குசுரு. இவை இவருடைய நூலில் காணப்படும் குறைபாடு களாம். மேலும் இந்நூல்கள் தவறான செய்திகளை யும், பிழையான நிலநூல் விவரங்களையும் கூறுவ துடன், கால வரிசையினைத் தவறான முறையிலும் தருகின்றன; சிறு செய்திகளை மிகைப்படுத்திக் கவிதை நடையில், இலக்கிய மிடுக்கொடு தருகின்றன. இதன் காரணமாக அவரை 'வேண்டுமென்றே புனைந் துரைக்கும் பொய்யர்' என்று குறை கூறக் கூடாது. ஏனெனில் அவர் செய்திகளைத் திரித்துக் கூறும் குற்றத்தைச் செய்யவில்லை.

மேற்கூறிய நூல்களைத் தவிர, 'இசாசு-இ-குசுராவி' என்னும் அமீர் குசுருவின் தொகுப்பு நூல் ஒன்றும் குறிப்பிடத்தக்கது. அது பல்வேறு விவரங் களைக் கொண்ட மிகப்பெரும் தொகுப்பாகும். அதில் பல்வகைப்பட்ட ஆவணங்கள், தனியாருக்கு எழுதப் பெற்ற கடிதங்கள், ஆய்வுக் கட்டுரைகள் முதலியன அடங்கும். அவர் அவற்றைத் தம் நண்பர்களுக்கும் தம் மேலாளர்களுக்கும் எழுதி, தம் இலக்கிய அறிவை யும் மதிநுட்பத்தையும் வெளிக்காட்டி மனம் மகிழ்ந் தார். இந்நூல் அக்காலச் சமூகப் பண்பாட்டு வர லாற்றை அறிய உதவும் சீரிய சான்று நூலாகும். தில்லிச் சுல்தானிய அரசர்களின் கொடிகட்டிப் பறந்த சீரிய காலத்தை அஃதாவது நாற்பது ஆண்டுக் காலத் தையும் இந்துசுதானத்தின் மக்களின் வாழ்க்கையை யும் நிலைமைகளையும் படம் பிடித்துக்காட்டும் அறிவுக் களஞ்சியம் இந்நூல் என்றால் அது மிகையா காது. அமீர் குசுரு கி.பி. 1325-ஆம் ஆண்டு கால மானார்.

துணை நூல்கள்:

Mehta, J.L., "Advanced Study in the History of Medieval India, Vol. I (1000--1526)", Sterling Publishers, New Delhi.

Srivastava, A.L., "History of India (1000-1707 A.D)", Shivalal Agarwala & Company, Agra.

***அமுத குண்டலி*** பழந்தமிழ்நாட்டில் இயற்றப் பட்டு வந்த தோற்கருவிகளுள் ஒன்றாகும். இது இடைக்கருவியாகும்; புறமுழவு வகையின் பாற்படும். வேறொரு வகைப்படுத்தலில் இது புறப் புறமுழவு வகையைச் சேர்ந்ததாகும். வயிரவன், முருகன், துர்க்கை ஆகிய கடவுளர் மூவர்க்கும் இயற்றப்படும் தோற்கருவிகளுள் அமுதகுண்டலியும் ஒன்றாகும்.

**அமுதசுரபி** என்பது எடுக்க எடுக்கக் குறையாத உணவு சுரக்கும் ஓர் அரிய பாத்திரம். இது மணிமேகலைக் காப்பியத்தில் இடம் பெற்றுள்ளது. அமுதம் என்பது உணவு எனவும், சுரபி என்பது இடையறாது சுரப்பிப்பது எனவும் பொருள்படும். இது சிறப்புடையவர்க்கல்லது மற்றவர்க்குச் சுரவாது. இதன் இயல்பு, 'வாங்குநர் கையகம் வருந்துதல் அல்லது, தான் தொலைவில்லாத் தகைமையது' ஆகும் எனக் கூறப்பட்டுள்ளது. சமயங்களும் அறநூல்களும் பசிப்பிணி அகற்றுவதனைத் தலையாய சமய ஒழுக்கமாகவும் அறமாகவும் போற்றுகின்றன. பசிப்பிணியகற்றும் பேரறத்தைத் தம் சமயக்கோட்பாடாகவும் காப்பியக் கொள்கையாகவும் ஏற்றுக்கொண்ட சாத்தனார், அதனைச் செயற்படுத்தற்குரிய அரிய கருவியாக இவ்வமுதசுரபியைத் தம் காப்பியத்துள் படைத்துள்ளார்.

கிளைக்கதைகள் மிக்க மணிமேகலையில் அமுதசுரபி பற்றிய செய்திகள், பாத்திரம்பெற்ற காதை முதலாக வரும் பல காதைகளில் இடம்பெறுகின்றன. மதுரையில் விளங்கிய சிந்தாதேவி என்னும் தெய்வம் 'நாடு வறங்கூரினு மிவ்வோடு வறங்கூராது' என்று அமுதசுரபியின் இயல்பினைக் கூறி, அதனை அறநெஞ்சினனாகிய ஆபுத்திரனிடம் கொடுத்தது. பசிப் பிணியின் கொடுமையுணர்ந்த ஆபுத்திரன் அத்துயர் துடைப்பதனைக் கடமையாகக் கொண்டு 'காணார், கேளார், கால் முடம்பட்டோர், பேணுநர், இல்லோர், பிணிநடுக்குற்றோர் யாவரும் வருகவென' அழைத்து உணவளித்துப் பசி நோயைப் போக்கினான். இதனையறிந்து இந்திரன் மழை பெய்வித்து வளம் பெருக்க, அமுதசுரபியால் உணவுபெறுவோர் எவரும் இலராயினர். பசித்தோரை நாடி ஆபுத்திரன் சாவக நாட்டிற்குச் சென்ற வழியில் மணிபல்லவத் தீவில் இறங்கினான். அங்கு மக்கள் இல்லாமையால், 'மன்னுயிர்காக்கும் இப்பாத்திரம் கொண்டு என்னுயிர் காக்க யான் விரும்பேன்' என்று கூறி, அதனைக் கோமுகிப் பொய்கையில் எறிந்து உயிர் துறந்தான். மணிமேகலா தெய்வத்தால் அவ்விடம் சேர்ந்த மணிமேகலைக்கு அப்பாத்திரம் கிடைத்தது. அறவண அடிகள் வாயிலாக, அதன் வரலாறுணர்ந்த மணிமேகலை, மண்ணுலகில் வாழும் மக்களின் பசியைப் போக்க முற்பட்டாள். முதன்முதலில் அப்பாத்திரத்தில் உணவு பெறுதற்குக் கற்புடைப் பெண்ணாகிய ஆதிரையிடம் சென்றாள். அவள் 'பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுகெனச்' சோறிட்டாள். அச்சோற்றினை அளித்து யானைத்தீ நோயால் துயருறும் காயசண்டிகையின் நீங்காத பெரும் பசியினை நீக்கினாள். காயசண்டிகை வேண்டியவாறு உலக அறவி என்னும் பொதுவிடத்திற்குச் சென்று உணவினை ஏற்போர் எல்லோரும் வருகவென அழைத்து அனைவர்க்கும் உணவளித்தாள்.

**அமுத பாணியார் (கி.பி. 17-நூ.)** துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளின் வழிமுறையைச் சேர்ந்தவர். இவர் தந்தையார் கனகசபாபதி சிவாசாரியார்; தாயார் நித்திய சௌபாக்கியவதி அம்மையார். இளமையிலேயே பெற்றோரை இழந்த இவர், சிவஞான பாலையர் ஆதரவில் வளர்ந்தார்.

கருணையர் மகள் சிவாம்பிகையை மணமுடிக்கச் சிவஞான பாலையர் விரும்பினார். அமுதபாணியாருக்கு நான்மறை ஆகமக் கல்வியின்மை காரணமாகப் பெண் கொடுக்க மறுத்தனர். திருவள்ளுவரின் பெருமை, திருக்குறள் சிறப்பு ஆகியன விளங்க 'வள்ளுவர் பிள்ளைத் தமிழ்' என்னும் நூலினை இவர் இயற்றினார். இந்நூல் வாயிலாக இவர் தம் அரிய ஆற்றலுணர்ந்த கருணையர் இசைவளிக்கத் திருமணம் நடந்தேறியது.

வீர சைவரான இவர் அத்துவித நூல்கள் பல இயற்றியுள்ளார். தாம் எழுதியுள்ள மணிவாசகர் வரலாற்று நூலில், மணிவாசகரை வீரசைவரெனக் குறிப்பிட்டுள்ளார். அக்கருத்திற்கு எழுந்த மறுப்பும் எதிர்ப்பும் நீங்கும் வகையில், பெட்டியில் அவ் வரலாற்றை வைத்து நீரில் விட்டு உண்மையுணர்த்தினார். நா. ஜெ.

**அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்** சிவஞான முனிவரால் இயற்றப்பெற்றது. இவர் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சார்ந்த பெரும்புலவர்; பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; இலக்கணம், இலக்கியம், தருக்கம், சைவ சித்தாந்தம் ஆகிய பலதுறைகளில் வல்லவராய்த் திகழ்ந்து பல நூல்களைப் படைத்தவர். இவர் இயற்றிய பதினைந்து இலக்கிய நூல்களுள் இரண்டு பிள்ளைத் தமிழ் நூல்கள். ஒன்று செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ்; மற்றொன்று குளத்தூர் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்.

குளத்தூர் காஞ்சிபுரத்திற்கு அருகேயுள்ள சிவத்தலம் ஆகும். அங்குக் கோயில் கொண்டிருக்கும் சோமேசர்மீது பதிற்றுப்பத்து பாடியுள்ளார். அங்குள்ள அமுதாம்பிகை அம்மைமீது பாடப்பெற்றதே இப்பிள்ளைத் தமிழ்நூல்.

ஏனைய பல பிள்ளைத்தமிழ் நூல்களைப் போன்றே இதுவும் பருவத்திற்குப் பத்துப் பத்துப் பாடல்களாக நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. இப்பாடல்கள் தவிர ஆசிரியர் கருத்தாக ஒன்றும், அவையடக்கமாக ஒன்றும், விநாயகக் கடவுள் வணக்கமாக ஒன்றும் ஆக மூன்று பாடல்கள் முதலில் இடம் பெற்றுள்ளன.

இப்பாடல்கள் ஆசிரிய விருத்தத்தில் அமைந் தவை. மன வாக்கிற்கு எட்டாத இறைவனது சிற் சத்தியாகிய அம்மையைக் குழந்தையாக வைத்து, மூன்று திங்கள் முதலாக இருபத்தொரு திங்கள் ஈறாக உள்ள காலத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைப் பாடியிருப்பதாக ஆசிரியர் உரைத்துள்ளார். மலை யரையன் பாவையாகவும், பாண்டியன் புதல்வி தடாதகைப் பிராட்டியாகவும் தோன்றியதனால், அவ்வப்போது அம்மையின் அருகில் இருப்பவராகிய தோழியர், அம்மையின் சிறப்புப் பற்றிப் புகழ்ந்து பாடும் பிள்ளைக் கவியாக அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் அமைந்துள்ளது.

இந்நூலில் சைவசித்தாந்தக் கருத்துகள் ஆங் காங்கே இடம் பெற்றுள்ளன. அம்மை இறைவனைக் காஞ்சீபுரத்தில் வழிபாடு செய்யும்போது சைவக் கிரியை முறைப்படி கைதட்டுவதைச் சுட்டிக்காட்டிச் 'சப்பாணி கொட்டியருள்க' என்று கூறும் பாடலில், பூசனை முறைகள் பலவும் குறிக்கப்பட்டுள்ளன.

அம்மை இந்தப் பிரபஞ்சத்தையே சிற்றிலாகவும் உயிர்களின் வினைப்பயனைச் சிறுசோறாகவும் கொண்டு, உயிராகிய பாவைகட்கு மலநோயாகிய பசி நீங்கும்படி, அவற்றிற்குப் பன்முறை அச்சோற் றினை ஊட்டிப் பரமானந்தம் என்னும் வீட்டில் குடி கொண்டிருக்கின்றாள் என்ற கருத்து வருகைப் பரு வத்தில் இடம் பெற்றுள்ளது.

அம்மை வணங்குமுறையால் தன் திருவுளப்படி நிற்கும் மாந்தர்க்கு ஆணவமல மறைப்பு, மாயைப் பிணிப்பு, வினைப்பற்று முதலியவற்றை ஒழித்து, குணம் குறி கடந்த பேரானந்த வெள்ளப் பெருங் கடலில் திளைத்து ஆடும் பேறு கொடுப்பவள் என்ற சித்தாந்தக் கருத்தை அம்புலிப் பருவத்தில் காணலாம்.

இவ்வுலகில் வாழும் உயிர்களாகிய பயிர்கள் மல மாகிய கொடிய தழலின் வெம்மையால் வாடாமல் மெய்ஞ்ஞானமாகிய மலரும், பேரின்பமாகிய செழுங் கனியும் கொண்டு தழைத்து ஓங்குமாறு அருளாகிய சூல்கொண்டு விளங்கும் கருமுகிலாக, அம்மையை ஆசிரியர் ஊசல் பருவத்தில் உருவகம் செய்துள்ளார்.

நீலமணி பதித்த அம்மனைக்காய் மேலே செல் வது அடியார்களது பாசம் நீங்கி ஓடுவது போன்றது என்றும், பவளம் பதித்த அம்மனைக்காய் மும்மலம் நீங்கிய காலத்துத் தோன்றும் சிவப்பேரொளி போன் றது என்றும், முத்துப்பதித்த அம்மனைக்காய் அம்மை யின் புகழ் பரவுவது போலப் பரந்து சென்றது என் றும், சித்தாந்தக் கருத்துகளை உவமையாக்கிக் கூறி யுள்ளார்.

செங்கீரை என்பதன் இலக்கணத்தை இப்பிள்ளைத் தமிழின் முதற் பாட்டிலே சிவஞான முனிவர், ''இருகை மலரும் புவிபதித்தொரு முழந்தாளிருத்தி ஒருதாள் மேல் நிமிர்த்துத் திருமுக நிமிர்ந்தொரு செங்கீரையாடியருளே'' என்று தெளிவாக விளக்கி யுள்ளார். சிலேடை முதலிய நயங்கள் பல பாடல் களில் காணப்படுகின்றன.

குளத்தூர்ப் பதியை உயர்வு நவிற்சி அணி அமை யப் புனைந்து கூறும் பாடல்களையும் மிகுதியாகக் காணலாம். சைவ சித்தாந்த நூல்களைக் கற்கப் புகுவார், முதலில் பயின்று உணர்தற்கு ஏற்ற எளிய இலக்கிய நூலாக இது திகழ்கிறது. மு.அ.

**அமெரிக்க – இந்திய மொழிகள்** 1700-க் கும் மிகுதியானவை என்றும், அவற்றைப் பேசும் இந்தியப் பழங்குடிகள் 400-க்கும் மிகுதியானவை என் றும் ஆய்வாளர் கருதுகின்றனர். இதுவரை எல்லா இந்திய மொழிகளையும் ஆராய்ந்து யாரும் வகைப் படுத்தவில்லை. 1970–ஆம் ஆண்டுக் கணக்கின்படி, எசுகிமோக்கள், மற்றும் அலுயித்து (Aluet) மக்களைத் தவிர்த்து, அமெரிக்காவில்7,92, 730 பேர்களும் கனடா நாட்டில் 2,00,000 பேர்களும் இலத்தின் அமெரிக் காவில் 13,00,000 பேர்களும் வாழ்கின்றனர் எனத் தெரிகிறது. கவுதமாலா, பெரு, பொலிவியா நாடுக ளில் இந்திய மக்கள் தொகை 50 விழுக்காடு எனக் கணக்கிடப்படுகிறது. இன்றைய அமெரிக்க–இந்திய மக்கள் 25,000 –40,000 ஆண்டுகட்கு முன்னர், 'அலா சுகா' வழியாக அமெரிக்காவில் குடியேறினர் என்றும் பின்னர் அங்கிருந்து கனடா, தென்னமெரிக்கா மெக் சிகோ முதலிய பல நாடுகளுக்குப் பரவினர் என்றும் வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள். இவர்கள் மங்கோலிய இனத்தவர்கள்; நடுத்தர உயரமும் நேரான முடியும், சிவந்த நிறமும், கரிய கண்களும் கொண்டவர்கள். அமெரிக்காவில் குடியேறிய இந்தி யர்கள் முதிர்ந்த மனிதக் கூறுகளையும் வளர்ந்த மொழிக் கூறுகளையும் கொண்டிருந்தனர். சில பழங் குடி மக்களின் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு அவர்களையும், அவர்கள் மொழிகளின் இலக் கணக் கூறுகளைக் கொண்டு மொழிக் குடும்பங்களை யும் வகைப்படுத்தும் முயற்சி காலங்காலமாக நடந்து வருகிறது. எந்த முடிவும் இதுவரை இறுதியானதாக அமையவில்லை. அமெரிக்க மானிடவியல் ஆய்வாளர் எரால்டு திரைவர் (Harold Driver), மொழிகளைப் பண்பாட்டு ஒற்றுமையின் அடிப்படையில் வகைப் படுத்தினார். எட்வர்டு சபீர் என்பார், அமெரிக்க இந்திய மொழிகளைப் பத்துப் பெரும் குழுக்களாகப் பிரித்துள்ளார். இவரது மொழிப்பிரிவே இப்போது பலராலும் ஓரளவு ஏற்றுக்கொள்ளப்படுகிறது என லாம்.

எசுகிமோ – அலியுத்துப் பெருங்குழு: இக்குழு வினைச் சார்ந்த மொழிகள் பெரும்பாலும் கிரீன்

லாந்து, உருசியா, அலாசுகா ஆகிய பகுதிகளில் மிகுதியாகப் பேசப்படுகின்றன. எசுகிமோமொழி இப்பெருங் குழுவினைச் சார்ந்தது. எசுகிமோ மொழிக்கும், உராலிக்கு அல்டாய்க்கு மொழிகட்கும் உறவுகள் இருக்கலாம் எனச் சிலர் கருதுகின்றனர். எசுகிமோ மொழி, உயிர் எழுத்துகளான அ,இ,உ, எனும் மூன்றை மட்டுமே கொண்டுள்ளது. இது மிகச் சிறந்த உட்பிணைப்பு மொழியாகும். இம்மொழியில் இலக்கணக் கூறுகள் அனைத்தும் இடை ஒட்டுகளாலும் பின் ஒட்டுகளாலும் உணர்த்தப்படுகின்றன. வினைச் சொல்லில் ஒட்டுகள் மிகுதியாக வருவதைக் காணலாம். எண் பாகுபாட்டில் /–க்./ ஒட்டு இருமையினையும் /–த்./ ஒட்டு பன்மையினையும் குறிக்கும் (இக்லு 'வீடு'; 'இக்லுக் இரு வீடுகள்'; இக்லுத் 'பலவீடுகள்').

அல்கோன்கியன் – வாகசன் பெருங்குழு (Algonguean – Wakashan Phylum) வடஅமெரிக்க நாடுகளில் இப்பெருங்குழுவினைச் சார்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. அல்கோன்கியன், வாகசன், கிமெக்குவான் (Chimakuan), சாலிசு (Salish) ஆகிய நான்கு மொழிக் குடும்பங்களும் வியோத் (Wiyot), யுரோக்கு (Yurok), குத்தெணாய் (Kutenai) ஆகிய மூன்று தனி மொழிகளும் இதில் அடங்கும். வியோத்து, யுரோக்கு மொழிகள் பெரும்பாலும் வழக்கிழந்துவிட்டன.

சாலிசு மொழிக் குடும்பம் 16–க்கும் மேற்பட்ட மொழிகளைக் கொண்டுள்ளது. கடற்கரையோரம் பேசப்படும் மொழிகள், உட்பகுதிகளில் பேசப்படும் மொழிகள் என இவை பிரிக்கப்படுகின்றன. இவ்விரு பெரும் பிரிவுகளுக்குள் பண்பாட்டு வேறுபாடுகளும் உள்ளன. பொதுவாக, சாலிசு இந்தியர்களைத் தட்டைத் தலையர்கள் (Flat Heads) என்று கூறுவர்.

வாகசன் மொழிக் குடும்பத்தில் 6 மொழிகள் உள்ளன. இவை கனடா நாட்டைச் சார்ந்த வான்கூவர் தீவுகள், பிரிட்டீசு கொலம்பியா ஆகிய இடங்களில் வழங்குகின்றன. அவற்றுள் நோதிகா (Noatka) என்னும் மொழி தலைசிறந்தது. வாசிங்டன் மாநிலத்தில் "குவலெத்து" (Quileute) ஆற்றின் கழிமுகப்பகுதியில் வாழ்கிற இந்தியர்கள் பேசும் குவலெத்து மொழி கிமெக்குவான் மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது.

பர்கசு எனும் மொழி, அல்கோன்சின் இனத்தைச் சார்ந்த மொழிகளில் குறிப்பிடத்தக்கதாகும். இம் மொழியில் மூன்று வகையாக, அண்மை, சேய்மை, இடை நிலை எனச் சுட்டுப் பெயர்கள் பகுக்கப்படுகின்றன.

நா–தென் பெருங்குழு (Na– Dene Phylum): இப்பெருங்குழு சீன – திபெத்திய மொழிக் குடும்பத்தோடு தொடர்புடையது எனக் கருதுவர். இதில், அதபாசுகன் (Athapascan) மொழிக் குடும்பமும், திலிங்கத்து (Tlingate), அய்டா (Haida) எனும் இரு தனி மொழிகளும் அடங்கும். இம்மொழிகள் பெரும்பாலும் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா, மெக்சிகோ ஆகிய பகுதிகளில் பேசப்படுகின்றன. அதபாசுகன் மொழிக் குடும்பத்தை வட அதபாசுகன் (North Athapascan), பசிபிக் அதபாசுகன் (Pacific Athapascan), தென் மேற்கு அதபாசுகன் (Southwest Athapascan) என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிப்பர். இதில் கட்சின் (Kutchin), தானனா (Tanana), கோயுகான் (Koyukon), அபசியன் (Apachean) ஆகிய மொழிகள் அடங்கும். அதபாசுகன் மொழிகள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் 400–க்கும் குறைவான இந்தியர்களால் பேசப்படுகின்றன. இலிப்பன் (Lipan), வைலகி (Wailaki) போன்ற மொழிகள் பேச்சுவழக்கு ஒழிந்தன. மெக்சிகோ பகுதியில் பேசப்படும் நவகோ (Navahao) எனும் மொழியினை 85,000–க்கும் மிகுதியான மக்கள் பேசுகின்றனர்.

பெனூசியன் பெருங்குழு: (Penutuion Phylum) இப்பெருங் குழுவினை இலத்தீன் அமெரிக்காவில் பேசப்படும் மொழிக்குடும்பம் என்றும், வடஅமெரிக்காவில் பேசப்படும் மொழிக்குடும்பம் என்றும் பிரிப்பர். இலத்தீன் அமெரிக்காவில் பேசப்படும் மொழிக் குழுவில், மிக்சொகோக் குடும்பம் (Mixe Zoque family) மயன் குடும்பம் (Mayon family), தேர்ததன்சுகன் மொழிகள் முதலியன அடங்கும். வடஅமெரிக்கக் குழுவினை 8 மொழிக் குடும்பங்களாகவும், 3 தனி மொழிகளாகவும் பிரிப்பர்.

வட கலிபோர்னியாவில் உள்ள சாக்கிரமாண்டோ எனும் பள்ளத்தாக்கில் மைது என்னும் மொழி பேசப்படுகிறது. இம்மொழியின் பெயர்ச் சொற்களில் ஒரு சிலவற்றைத் தவிர, ஏனைய சொற்கள் பால் காட்டுவதில்லை. அமெரிக்க-இந்திய மொழிகள் பெரும்பாலானவற்றில் வேற்றுமைகள் காணப்படுவதில்லை. ஆனால், மைது மொழியில் பல்வேறு வேற்றுமைப் பொருள்களும் பல்வேறு உருபுகளும் காட்டப்படுகின்றன. இறந்த காலத்தை மைது மொழியில் மிகப் பழங்காலம், பழங்காலம், அண்மைக்காலம் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

சினூக்கு எனும் மொழி, வடஅமெரிக்க மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது. கொலம்பியா ஆற்றின் இரு கரையோரப் பகுதிகளில் சினூக்கு இந்தியர்கள் வாழ்கின்றனர். சினூக்கு மொழிகளிலும் பல்வேறு பிரிவுகள் உள்ளன.

கோக்கன் – சியோவின் பெருங்குழு: (Hokan–Siouan Phylum): இப்பெருங் குழுவினை வடஅமெரிக்க மொழிக் குடும்பங்கள், இலத்தீன் அமெரிக்க மொழிக்

குடும்பங்கள் எனப் பிரிக்கலாம். வடஅமெரிக்கப் பகுதியில் எட்டு மொழிக் குடும்பங்கள் உள்ளன. அவை போமோ (Pomo), உக்கி (Yuki), சசுதான் (Shastan), உயுமான் (Yuman), இராக்கியன் (Iroquoian), சியோவான் (Siovan), கத்தோவன் (Caddoan), மசுக்கோகியன் (Maskogean) ஆகியவையாம். இவை தவிர, வாசோ (Washo), கரோக்கு (Karok), கேரசு (Keres), உயுச்சி (Yuchi), சூனிகா (Junica), சித்திமச்சா (Chitimacha), தோங்கவா (Tonkawa), நட்சே (Natchez) எனும் எட்டுத் தனிமொழிகளும் இப்பெருங் குழுவினைச் சார்ந்தனவாகும்

அசுடெக் - தனோவன் பெருங்குழு (Aztec-Tanoan Phylum): இப்பெருங் குழுவில் உட்டோ அசுடெகன் (Uto-Aztecan), தனோவன் (Tanoan) எனும் இரண்டு மொழிக் குடும்பங்களும், கியோவா, குனி ஆகிய இரு தனி மொழிகளும் அடங்கும் இம்மொழிகள் அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிகளிலும், கௌத்தமாலா, கோசுடாரிக்கா, நிக்கராகுவா ஆகிய பகுதிகளிலும் பெருமளவு பேசப்படுகின்றன.

அமெரிக்க இந்திய மொழிகளில் அதபாசுகன் மொழிகளுக்கு அடுத்தபடியாக, மிகப்பரந்த நிலப்பரப்பில் உட்டோ - அசுடெகன் மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பேசப்படுகின்றன. ஏறக்குறைய 22 மொழிகள் இம்மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவையாகும். சூனி மொழியில் ஆண்களின் பேச்சிற்கும் பெண்களின் பேச்சிற்கும் மிகுந்த வேற்றுமை காணப்படுகிறது அவ்வாறே, முதியவர்கள் பேச்சுக்கும் இளையவர்கள் பேச்சுக்கும் வேறுபாடு உள்ளது.

மேக்ரோ - ஒட்டோ மாங்குவன் பெருங்குழு (Macro - Otomanguvan): இக்குழுவில் 5 பிரிவுகளும் அவற்றைச் சார்ந்த 18 மொழிகளும் அடங்கும். இம்மொழி மெக்சிகோ, அமெரிக்கா ஆகிய பகுதிகளில் பேசப்படுகிறது.

மேக்ரோ-சிப்சன் பெருங்குழு (Macro-Chibchan Phylum): இப்பெருங்குழு சிப்சன் (Chibchan), பயசன் (Paezan) எனும் இரு பெரும் பிரிவாகப் பிரிக்கப்படும். சிப்சன் மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த காரா, சில்சா, குனா ஆகிய மொழிகள் மத்திய அமெரிக்கா, கொலம்பியா, வெனிசூலா ஆகிய பகுதிகளிலும், பயசன் மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த மரா, சிராசரா ஆகிய மொழிகள் சிலி, (Chile) தென் அமெரிக்காவின் வடபகுதி, அமேசான் நதிக்கரை ஆகிய பகுதிகளிலும் பேசப்படுகின்றன. கிரீன்பர்க்கு எனும் அறிஞர் இம்மொழிகளை விரிவாக ஆய்ந்துள்ளார்.

கே-பானா காரிபு பெருங்குழு (Ge-Pano Carib Phylum): கரிபான், கௌசுரான் (Guaycuruan) ஆகிய மொழிக் குடும்பங்கள் இதில் அடங்கும். கே மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பிரேசில், பொலிவியா ஆகிய நாடுகளிலும், கோனிபோ (Conibo), சிபியோ (Shipibo) ஆகிய பானா மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மொழிகள் பெருவியன், மான்டானாப் பகுதிகளிலும் பேசப்படுகின்றன.

ஆண்டியன் - நிலநடுக்கோட்டுப் பெருங்குழு: (Andean Equatorial Phylum) இப்பெருங் குழுவில், அண்டியன் (Andean), மேக்ரோ - துக்கனோவன் (Macro-Tucanoan), . நிலநடுக்கோட்டு மொழிகள் (Equatorial). சிவரோவன் (Jivarovan), கண்டோசியன் (Condoshian), எசுமரால்தா (Esmeralda) ஆகிய தனி மொழிகள் அடங்கும். குவச்சா (Quecha) எனும் மொழி பொலிவியா நாட்டில் மிகுதியாகப் பேசப்படுகிறது. கௌராணி (Guarani) மொழி, பாராகுவே (Paraguay) நாட்டில் இரண்டாம் மொழியாக அனைவராலும் பேசப்படுகிறது. சான்ரூபின் என்ற மொழியியல் அறிஞர், பராகுவேயில் இருமொழியியல் (Bilingualism in Paraguay) எனும் நூலில், கௌராணி மொழி நிலையினை நன்கு ஆராய்ந்துள்ளார்.

இப்பெருங் குழுவினைச் சார்ந்த மொழிகள் வெனிசூலா, பிரேசில், பொலிவியா. பராகுவே, சிலி ஆர்செண்டைனா ஆகிய நாடுகளிலும் பேசப்படுகின்றன.

எஸ்.ஆ.

துணை நூல்:

அகத்தியலிங்கம். ச, ''உலகமொழிகள்: மூன்றாம் பகுதி'' பாரி நிலையம், சென்னை, 1972.

***அமெரிக்க இந்தியர்*** எனப்படுபவர்கள் அமெரிக்காக் கண்டத்தில் முதன்முதலில் குடியேறிய ஆரியர்களாவார்கள். இவர்கள் குடியேறிய காலத்தைத் துல்லியமாக வரையறுக்க இயலவில்லை. வரலாறு, தொல்லியல், தொல்லுயிரியல், மானிடவியல் ஆகிய துறைகளின் ஆய்வுகள் சரியான காலக்கட்டத்தை உறுதிப்படுத்த வில்லையாயினும், இவர்கள் பனியாற்றுக் காலத்தில் தரை வழியாக அமெரிக்கக் கண்டத்தை அடைந்திருக்கலாம் என்பதைப் புலப்படுத்துகின்றன.

அமெரிக்காவை முதன் முதலில் அடைந்த அமெரிக்க இந்தியப் பழங்குடியினர் கி.மு. 8000 க்கும் கி.மு. 2600 க்கும் இடைப்பட்ட காலக் கட்டத்தில் காணப்பட்ட தரைவழிப் பாலத்தின் ஊடே, சைபீரியாவிலிருந்து அலாசுகாவை அடைந்திருக்க வேண்டும் என்று மானிடவியலார் கருதுகின்றனர். இதற்கு முந்தைய காலத்திலேயே அஃதாவது கி.மு. 50,000 க்கும் கி.மு. 40,000 க்கும் இடைப்பட்ட காலத்திலேயே காணப்பட்ட தரைவழிப் பாலத்தின் வழியே இந்தக் குடியேற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் சில

அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். எவவாறிருப் பினும் புத்துலகப் பரப்பிற்கு மனிதர் பெருமளவில் 'டியேறிய நிகழ்ச்சி, பிற்காலத்திலேயே நடைபெற்றி ' வேண்டும் என்பதில் எல்லா அறிஞர்களும் ஒத்த தினைக் கொண்டுள்ளனர். இவ்வாறு தரை வழ ப குடியேறிய மக்கள் வடஅமெரிக்காவினுள் புகுந்து, அங்கிருந்து அலாசுகாவின் உட்பகுதி வழியே கிழக்கு நோக்கி முன்னேறத் தொடங்கினர். பின்னர்ப் பாறையடர்ந்த மலைகள் நிறைந்த கிழக்குப் பகுதியை யும் அதனைத் தொடர்ந்து தென் அமெரிக்காவையும் இறுதியாக கி.மு. 8000-இல் மெகல்லன் நீர்க் கூடலை யும் அடைந்தனர்.

## அமெரிக்க இந்தியர்கள் வரலாறு (கால அடிப்படையில்)

| | | |
|---|---|---|
| கி.மு. 50,000–40,000 | — | முற்கால இந்தியர்கள் சைபீரியா விலிருந்து (Siberia) அலாசுகா விற்குச் (Alaska) சென்றிருக்க வேண்டும். |
| கி.மு. 20,000–10,000 | — | பெருமளவில் இந்தியர்கள் சைபீ ரியாவிலிருந்து அலாசுகாவிற்குச் செல்லல். |
| கி.மு. 10,500 | — | இலியோனோ பண்பாடு. |
| கி.மு. 8,000 | — | பால்சம் பண்பாடு. மேற்கு-வட அமெரிக்கப் பகுதிகளில் நிலவும் பாலைவனப் பண்பாடு. |
| கி.மு. 7,000 | — | பிளானோ பண்பாடு. |
| கி.மு. 5,000 | — | மெக்சிகோவில் காட்டுத் தாவரங் களை நாட்டுத் தாவரங்களாகப் பயிரிடுதல். |
| கி.மு. 3,000 | — | உணவிற்காக மக்காச்சோளமும் பீன்சும் பயிரிடுதல். |
| கி.மு. 2,000 | — | மெக்சிகோவிலும் மத்திய அமெ ரிக்காவிலும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு, இடம் விட்டு இடம் நகராமல் நிலையான கிராம வாழ்க்கையை அமைத்துக் கொள்ளல். |
| கி.பி. 1,000 | — | பியூப்லோ (Pueblo) பண்பாடு அதன் உச்ச நிலையை அடைந் திருத்தல். |
| கி.பி. 1,300 | — | ஓப்பி (Hopi), சுனி (Zuni) பகுதி களில் மக்கள்தொகை பெருகு தல். பியூப்லோ இந்தியர் இரியோ கிராண்டே பகுதிக்கு இடம் பெயர்தல். |
| கி.பி. 1,400 | — | இரியோ கிராண்டே பகுதியில் மக்கள்தொகை பெருகுதல். |
| கி.பி. 1,540 | — | புதிய மெக்சிகோவில் பியூப்லோ இந்தியரை இசுபெயின் (Spain) நாட்டினர் தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வருதல். |
| கி.பி. 1,600 | — | இராக்குவிசு (Iroquois) இந்தியர் கூட்டமைப்பு நிறுவப்படுதல். |
| கி.பி. 1,650 | — | அமெரிக்க இந்தியர் குதிரையைப் பயன்படுத்தத் தொடங்குதல். |
| கி.பி. 1,680 | — | பியூப்லோ இந்தியர் இசுபெயின் நாட்டினரை வெளியேற்றுதல். |
| கி.பி. 1,700 | — | காட்டெருமையை வேட்டை யாடக் குதிரைகள் பயன்படுத்தப் படுதல். |
| கி.பி. 1,775 | — | அமெரிக்கப் புரட்சி: இராக்குவிசு இந்தியரின் ஆறு நாடுகள் நடு நிலை வகிப்பதாக அறிவித்தல். |
| கி.பி. 1,863 | — | நவகோசு (Navaho) ஆதிக்கக் காரரை முற்றுகையிட்டுச் சிறை வைத்தல். |
| கி.பி. 1,868 | — | நவகோசு உரிமை ஏற்றுக்கொள் ளப் படுதல். |
| கி.பி. 1,961 | — | அமெரிக்க இந்தியர்களின் சிகாக்கோ மாநாடு. |

அமெரிக்க இந்தியர்கள் உடற்கூறு அளவில் ஐரோப்பியர், ஆப்பிரிக்கர், ஆசுத்திரேலியர் உள்ளிட்ட பிற பெரிய இனக்குழுக்களைக் காட்டிலும் நடு, கிழக்கு ஆசியாவைச் சார்ந்த மங்கலாய்டுகளைப் பெரிதும் ஒத்திருக்கின்றார்கள். அவர்கள் குறிப்பாக இந்தோ னேசியா, திபெத்து, இந்தியாவின் மேற்குப்பகுதி மற் றும் நடு ஆசியாவைச் சார்ந்த ஒதுங்கு மங்கலாய்டு களை (Marginal Mongoloids)ப் பெரிதும் ஒத்திருக் கின்றார்கள். எனவே ஆசியாவின் பெரும்பகுதிகளி லும், வடக்கு கிழக்கு இந்தியாவிலும் முன்னர் வசித்து வந்த முற்கால ஒதுங்கு மங்கலாய்டு கூட்டத்தினரின் வழி வந்தோரே அமெரிக்க இந்தியராவர் என்பது கருதப்படுகிறது. அமெரிக்க இந்தியர் அனைவருமே ஆசியாவிலிருந்து இடப்பெயர்ச்சி அடைந்ததால் உடற் கூற்று அமைப்பில் மிகுந்த வேறுபாட்டைக் கொண்டி ருக்கவில்லை. இருப்பினும் பன்னிரண்டாயிரம் ஆண்டு கட்கு முன்னரே பெரும் நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த

இவர்கள், இயற்கைச் சூழ்நிலைக்கேற்பப் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட கிளைக் குழுக்களாகக் காணப்படுகின்றார்கள்.

ஐரோப்பியர்கள், அமெரிக்க இந்தியர்களை முதன் முதலில் இனங்கண்டு கொண்டபொழுது வட அமெரிக்கா, தென்அமெரிக்கா, மற்றும் கிரீன்லாந்து தீவிலிருந்து தியாரா டெல் பியூகோ (Tierra del Fuego) வரை உள்ள தீவுகளில் அமெரிக்க இந்தியர்கள் காணப்பட்டார்கள். இப்பரந்த நிலப்பரப்பின் பல்வேறு இயற்கைச் சூழ்நிலைகளை ஒட்டிய தகவமைப்பு, சிறுகுடும்பக் குழுக்களிலிருந்து அரச குடும்பங்களைக் கொண்ட மெக்சிகோ, பெரு ஆகிய உயர்ந்த நாகரிகம் வரையிலான பல்வேறு அமெரிக்க இந்தியப் பண்பாடுகளை உருவாக்கியது.

தொல்லியல் ஆய்வுகளும் இருபதாம் நூற்றாண்டின் அகழாய்வுகளும் முற்கால அமெரிக்க இந்தியரின் சீரிய வரலாற்றினை அறிய உதவுகின்றன. இது பழைய உலகப் பண்பாட்டினை ஒப்பிட்டுப் பார்க்க வழி கோலியுள்ளது. அமெரிக்க இந்தியரின் தொல்லுலகச் சிற்றூர்களில் கி.மு. 6,000 க்கும் முன்னரே செங்கற்களால் கட்டப்பட்ட இருப்பிடங்கள், பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வாழும் பரப்புக் கொண்டதாய் இருந்தன. இவர்களின் தொடக்ககால வேளாண்மை கி.மு. 5,000 ஆண்டுகட்கு முன்னரே தோன்றியிருக்க வேண்டும். மேலும் பழைய உலகத்தில் கி.மு. 3,500-இல் இருந்து வெண்கலமும், கி.மு. 1,500-இல் இருந்து இரும்பும் தொழிற்கலையில் பயன்படுத்தப்பட்டு வந்தன. அமெரிக்க இந்தியர்கள் ஒரு சில அறிவியல் கலைகளில் தேர்ச்சி பெற்று பழைய உலகத்தவரைக் காட்டிலும் சிறந்து விளங்கினர். உரோமானியர், கிரேக்கர், மற்றும் தொல்லுலக நாகரிகங்களில் நிலவிய ஆண்டுக் குறியீட்டு முறையைக் காட்டிலும், மாயா ஆண்டுக் குறியீட்டு முறை சிறந்ததாகவும் துல்லியமானதாகவும் விளங்கியது. இதுபோலவே கணிதம், வானவியல் முதலான துறைகளிலும் தொல்லுலகத்தவரைக் காட்டிலும் இவர்கள் சிறந்து விளங்கினார்கள்.

அமெரிக்க இந்தியர்கள் வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய இருபெரும் நிலப்பரப்பில் வாழ்ந்து வருவதால் இவர்களை வடஅமெரிக்க இந்தியர்களென வும் தென் அமெரிக்க இந்தியர்களெனவும் பிரித்து அறிதல் வேண்டும்.

ஒரு பகுதியில் அடுத்தடுத்துள்ள மக்களின் பண்பாட்டுக் கோலங்களுக்கிடையே (Cultural Patterns) தெளிவான ஒப்புமைகள் காணப்படின் அப்பகுதி, பண்பாட்டுப் பரப்பு (Cultural Area) எனப்படும். பரந்த நிலப்பரப்பில் நூற்றுக்கணக்கான பழங்குடியினரின் பண்பாடுகளை அறிய முற்படும்பொழுது மானிடவியலார் இப்பண்பாட்டுப் பரப்புக் கோட்பாட்டினை முன்வைத்து ஆராய்வர். வடஅமெரிக்காவை 1. நடு அமெரிக்கா, 2. தென்மேற்கு அமெரிக்கா, 3. கிழக்கத்தியக் காட்டுப் பகுதி, 4. சமவெளி, 5. பெரிய நதிப்படுகை, 6. கலிபோர்னியா, 7. தாழ் ஆர்க்டிக், 8. வடமேற்குக் கடற்கரை, 9. ஆர்க்டிக் பகுதி என்னும் பண்பாட்டுப் பரப்புகளாகப் பகுத்துள்ளனர்.



அமெரிக்க இந்தியப் பழங்குடி
நன்றி: அரசு அருங்காட்சியகம், சென்னை.

மிகப்பெரிய விலங்குகளை வேட்டையாடுதல் நடு அமெரிக்கப் பண்பாட்டின் முதன்மைக் கூறாக வி... கியது எனத் தொல்லியல் சான்றுகள் தெரிவி... றன. பாலைவனப் பண்பாடும் இப்பகுதியில் கா...ப் பட்டதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். மேம்பட்ட வாழ்க்கையைக் கொண்டிருந்தவர்கள் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு நிலையான வாழ்க்கையை மேற்கொண்டிருந்தனர்.

நடு அமெரிக்கப் பகுதியில் தோன்றிய ஆல்மக் (Olmec) நாகரிகம் புகழ் பெற்றதாகும். கி.மு. 1500 முதல் கி.பி. 300 வரையிலான காலத்திற்குட்பட்ட இந்நாகரிகத்தில் வழிபாட்டுக் கூடங்கள் சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன. ஆல்மக்கு நாகரிகம் பின் தோன்றிய புகழ்பெற்ற நாகரிகத்திற்கு அடிக்கல்லாக அமைந்தது எனலாம். கி.மு. 1,000 முதல் கி.பி. 1,517

வரையிலான காலத்திற்குட்பட்ட மாயா பண்பாடு உயர்ந்த நிலையில் இருந்தது. கி.பி. 300 முதல் 900 வரையிலான காலத்தில் மாயா இந்தியர் இருநூற்றுக்கும் மேற்பட்ட வழிபாட்டு மையங்களை அமைத்து, அவற்றில் 228 அடி உயரம் வரையிலான மிகப்பெரிய பிரமிடுகளைக் கற்களால் கட்டியிருந்தனர். அமெரிக்க இந்தியர்களிலேயே மாயா இந்தியர் பெரிதும் அறிவாற்றல் வாய்ந்தவராக விளங்கினர். இவர்கள் கணிதம், வானவியல், ஆண்டுக் குறியீட்டு முறை போன்ற துறைகளில் மேம்பட்டிருந்தாலும், எழுத்து முறையில் எகிப்தியரைப் போல் வளர்ச்சியடைந்த நிலையை எட்டவில்லை.

கி.மு. 600 முதல் கி.பி. 900 வரையிலான காலக் கட்டத்தைச் சார்ந்த சபோடக்குநாகரிகம் இரண்டாவதாகவும், கி.மு. 200-க்கும் கி.பி. 600-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்த டியோடிகுவாக்கன் நாகரிகம் மூன்றாவதாகவும் விளங்கின. கி.பி. 1502 வரை புகழ்பெறாத நடு மெக்சிகோ அசுதக் (Aztec) பழங்குடியினர் போர்ப் படைகளை அமைத்து அரசாட்சியை ஏற்படுத்திக் கொண்டனர். வட அமெரிக்காவில் இசுபெயின் (Spain) ஆதிக்கம் இருந்தும் அசுதக் ஆட்சி ஓங்கிய நிலையில் இருந்தது.

நடு அமெரிக்கக் குடிகளிடையே தகுதி வழியிலும் வகுப்பு முறையிலும் நுண்மையான பாகுபாடுகள் காணப்பட்டன மாயா, ஆல்மக்கு,தொல்டக்கு ஆகிய ஆதிக்குடிகள் நடு அமெரிக்கக் குடிகளுள் குறிப்பிடத் தக்கனவாகும்.

கி.மு. 10,000 -இல் பெரிய வேட்டையாளர்களே தென்மேற்கு அமெரிக்கப் பகுதியைக் கைக்கொண்டிருந்தனர். அரிசோனாப் பகுதியை இசுபெயின் நாட்டினர் கண்டுபிடித்த பொழுது அங்கு வாழ்ந்த டியூப்லோ இந்தியர்கள் 70 முதல் 80 தனிச் சிற்றூர்களில் வாழ்ந்து வந்தனர். இவர்களின் வீடுகள் 2 முதல் 6 அடுக்குகள் கொண்டனவாக இருந்தன. இப்பகுதியில் வாழும் சுனி, ஒப்பி (Hopi), நவகோ, அப்பாச்சி, (Apachi) முதலிய ஆதிக்குடிகள் தாய்வழிக் குடும்ப அமைப்பையும் கூட்டுக்குடும்ப அமைப்பையும் கொண்டிருக்கின்றன.

மிசிசிப்பி, செயிண்ட் லாரன்சு ஆறுகளுக்கும் மெக்சிகோ வளைகுடாவிற்கும் உட்பட்ட கிழக்குக் காட்டுப் பகுதியில் குறிப்பிடத்தக்க ஆதிக்குடிகளாகச் சாவ்னீ, இராக்குவிசு, பாக்சு ஆகியோர் வாழ்கின்றனர். மிகப்பெரிய விலங்குகளை வேட்டையாடி வந்த இவர்கள் படிப்படியாகத் தோட்டத் தொழிலில் ஈடுபடத் தொடங்கினர். கி.மு. 1, 000-க்கும் கி.பி. 700-க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர்கள் அமைத்த புதைகுழிக் கோயில்கள், மண்மேடுகள் புகழ்பெற்றவை. இதனால் இக்காலத்தைப் 'புதைகுழிக் கோயில்கள் காலம்' என்றே அழைத்தனர். கிழக்கத்திய காட்டுப் பகுதிப் பண்பாட்டில் பெண்களே பயிர்த்தொழிற் பணியில் பெரும் பங்கேற்கின்றனர். கால்வழிக் குழுவின் தலைவனே ஆட்சிக் குழுவின் உறுப்பினராகிறான்.

சமவெளிப் பகுதியில் குடியேற்றம் அடைந்த குரோ, பாவ்னீ, ஓமகா, கியோவா பழங்குடியினர் கி.மு. 10,000 முதல் கி.மு. 4,000 வரையில் பெரிய வேட்டையைக் கொண்டிருந்தாலும், பின்னர்ச் சூரிய காந்தி, மக்காச் சோளம், புகையிலை, பீன்சு மற்றும் பல தோட்டப் பயிர்களைப் பயிரிடத் தொடங்கினர். இவர்கள் தந்தைவழிக் குடும்பமுறையையும், கூட்டுக் குடும்ப முறையையும் கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஆண்டிற்கு ஒருமுறை காட்டெருமை வேட்டையின் பொழுதோ சூரிய நடனத்தின் பொழுதோ ஒன்றாகக் கூடுவர்.

பெரியநதிப் படுகைப் பண்பாட்டுப் பரப்பு, பன்னாக், செசேவா ஆகிய பழங்குடிகளைக் கொண்டிருக்கிறது.

பாலைவனப் பண்பாட்டைக் கொண்டிருந்த கலிபோர்னியாப் பகுதி பழங்குடிகளான விண்டன், போமோ, மைடு முதலான பழங்குடிகள் கூட்டுக் குடும்ப முறையுடன் வாழ்கின்றனர்.

அலாசுகா மற்றும் கனடாவின் வடக்குக் காட்டுப் பகுதித் தொடர்ச்சி தாழ் ஆர்க்டிக் பகுதியில் அடங்கும். பொக்கிசு, கரிபோ ஆகிய பழங்குடியினர் தம் சிறிய வீடுகளைத் தரைக்குச் சற்றுக் கீழாக அமைக்கின்றனர். மீன்பிடித்தல், வேட்டையாடுதல் ஆகியவற்றை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். குளிர்காலத்தில் டொபோக்கன்சிலும், கோடையில் சிறிய படகிலும் சவாரி செய்கின்றனர். இப்பெரும் பகுதியில் அத்தாப்பாசுக்கன் (Athapascan), அல்கோன்கியன் (Alkonkian) எனும் இரு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகளே பேசப்படுகின்றன.

சினூக், அய்டா, குவாகியூட்டில் முதலான பழங்குடிகளைக் கொண்டே வடமேற்குக் கடற்கரைப் பண்பாட்டுப் பரப்பு, தாய்வழி-கூட்டுக் குடும்ப முறையையும் சொத்து அடிப்படையில் விரிவடைந்த தகுதி முறையையும் கொண்டிருக்கிறது. சேமித்து வைத்துள்ள உணவுப் பொருள்களை மழைக் காலத்தில் விருந்துண்ணும் விரயச் சடங்கு (Potlat Ching) நிகழ்ச்சியில் பண்டமளித்து இன்புறுகின்றனர். பெருமளவில் பண்டமளித்தலில் மிகுதியான செல்வாக்குக் கிடைக்கும் என்பதால் இப் பண்டமளிப்பு முறை இவர்களிடையே புகழ் பெற்று விளங்குகிறது.

கி.மு. 6,000–க்கும் கி.மு.1,000–க்கும் இடைப்பட்ட காலத்தில் சைபீரியாவிற்கும் அலாசுகாவிற்கும் இடையே நிலவிய தரைவழிப் பாலத்தினூடே மரங்களற்ற ஆர்க்டிக் பகுதியில் வந்தடைந்த மக்கள் வட அமெரிக்க இந்தியர்களைக் காட்டிலும் சைபீரியர்களையே பெரிதும் ஒத்திருக்கின்றனர்.

வடஅமெரிக்க இந்தியப் பண்பாட்டுப் பரப்புகள் 500 முதல் 1000 மொழிகளைக் கொண்டிருந்தன. பெரும்பாலான மொழிகள் ஏட்டில் பதிவு செய்யப் படாமலேயே மறைந்துவிட்டன. இப்பொழுது பேசப் படும் 221 மொழிகளை எட்டு மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தியுள்ளனர்.

அவை: 1) எசுகிமோ – அலியட் (Eskimo–Aleut), 2) நடீனீ (Nadene), 3) அல்கான்குயியன் (Algonguian), 4) அசுதெக்கு– தனோவன் (Aztec – Tanoan), 5) ஒகன் — சியோவன் (Hokan — Sionan), 6) பெனூடியன் (இவ்வகைபாடு கேள்விக்குறியாய் உள்ளது) (Penutian), 7) கோகுய்டிகான் (Coahuitecan), 8) மாயன் (Mayon) என்பனவாகும்.

காரிப், சிப்கா, இன்கா, அமேசான், சேக்கோ, அரொவ்கான், பிட்டகோனியா, யூகியன் ஆகிய எட்டுப் பண்பாட்டுப் பரப்புகளைத் தென் அமெரிக்கா கொண்டிருந்தாலும் இப்பகுதிகளில் பழங்குடியினரின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது. இதனால் தென்அமெரிக்க இந்தியரைச் சுருக்கமாகக் கீழ்வரும் நான்கு பண்பாட்டுப் பரப்புகளின் வழி அறியலாம்

முதலாவது, ஆண்டின் நாகரிகமாகும். உலகில் மிக்க எண்ணிக்கையைக் கொண்ட தொல்லியல் படிமப் பகுதிகளில் மத்திய ஆண்டீசு கடற்கரைப் பகுதியும் ஒன்றாகத் திகழ்கிறது. ஆண்டீசு நாகரிகத்தில் சிறந்து விளங்கும் இன்கா, சிம்மூ, தியாகுவானாகா ஆகிய இம்முப்பழங்குடிகளும் கி.பி. 1,000இல் இருந்து கி.பி. 1532–இல் இசுபெயின் நாட்டினர் இப்பகுதியைக் கைப்பற்றிய வரையில் மாறி மாறி ஒருவர் மற்றொருவரைக் கைப்பற்றி ஆட்சி செய்தனர். இறுதியில் இன்காவின் செல்வாக்கு இசுபெயின் நாட்டினரால் முறியடிக்கப்பட்டது.

இரண்டாவது, தலைமையுரிமை (Chiefdoms) ஆகும். தென் அமெரிக்க இந்தியர்களில் குறைந்த எண்ணிக்கையுள்ள பல்வேறு பழங்குடிகள் தலைமையுரிமை அமைப்பை ஏற்றுள்ளன. இசுபெயின் நாட்டின் வரலாற்றுப் பதிவாளர்களும், பின் வந்த ஆராய்ச்சியாளர்களும் இவ்வமைப்பை நன்கு ஆராய்ந்து நாடு, ஆட்சி மண்டலம், அரசாட்சி எனப் பல்வேறு பெயர்களைச் சூட்டினர். அடிப்படையில் இச்சிறு பழங்குடிகள் கூட்டுச் சமூகமாக அமைந்து மத்திய தலைமையை அமைத்துச் செயல்படுகின்றன. இத்தலைமையில் இருபிரிவுகள் காணப்படுகின்றன. பெரிய ஆண்டிசு, அவெனிசுலா, கிழக்கு பொலிவியா ஆகிய பகுதிகளில் தெய்வத்தன்மையுற்ற ஆளுநர் (Theocratic Chiefdom) தலைமையுரிமையை ஏற்கிறார். சிப்பேகா (Chibeha) பழங்குடிகளிடையே படைப்பிரிவு ஆளுநர் (Militiaristic Chiefdom) தலைமை நிலையை அடைகிறார்.

மூன்றாவது. வெப்பமண்டலக் காட்டுப்பகுதியாகும். அமேசான் மற்றும் அதன் கிளை நதிகளின் பகுதிகளிலும், பிரேசிலின் கடற்கரைப் பகுதியிலும், பிராகுவே, பனாமா, மற்றும் கொலம்பியன் தாழ் நிலப் பகுதியிலும் வாழ்ந்து வரும் அனைவருமே ஒத்த சூழ்நிலையை ஏற்றிருப்பதால் சமூக, பொருளாதார அமைப்பில் ஒத்துக் காணப்படுகின்றனர். வகுப்பு முறை பெருமளவில் உறவு முறையோடு ஒன்றிக் காணப்படுகிறது. காட்டை எரித்து வேளாண்மை செய்யும் இவர்கள் இப்பொழுது நிலையான சமநிலங்களில் பயிரிடுகின்றனர். காரிப், அராக்கன், உடுப்பியன் ஆகிய பழங்குடிகள் குறிப்பிடத்தக்கவை. இப்பகுதியில் பல மொழிகள் பேசப்படுகின்றன.

நான்காவது, வேட்டையாடுதல், மற்றும் உணவு சேகரிக்கும் நாடோடிகள் ஆவர். பட்டகோனியா முதல் டீலியன் ஆர்ச்சிபீலகோ, கிரான் சாகோ காட்டுப்பகுதி வரையிலான இப்பரப்புகளில் சோனோ யாகான், ஓனா, சிரியோனா ஆகிய நாடோடிகள் சிறு குழுக்களாகக் காணப்படுகின்றனர். சானோ மற்றும் யாகான் பழங்குடியினர் ஆண்டு முழுவதும் சிறு படகைக் கொண்டு மீன்பிடித்தல், கிளிஞ்சல் சேகரித்தல் ஆகியவற்றை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். ஓனா நாடோடிகள் நாயைத் தவிர எவ்வித விலங்குகளையும் வளர்ப்பதில்லை. இவர்கள் வேட்டையாடுதலையே முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். பொலிவியாவில் வாழும் சிரியோனா குடிகள் ஒருசில காட்டுப்பயிர்களைப் பயிரிட்டாலும் வேட்டையாடுதலையும் உணவு சேகரித்தலையுமே முதன்மைத் தொழில்களாகக் கொண்டுள்ளனர்.

தென் அமெரிக்க இந்தியரின் மொழிகள், கீ–பனோ–காரிப் (Ge–Pano–Carib), மாக்ரோ–சிப்சான் (Macro-Chibchan) ஆண்டீன் நடுநிலைக்கோடு (Andean Equotorial), ஓக்கன் (Hokan) ஆகிய நான்கு குடும்பமாகப் பகுக்கப்பட்டுள்ளன. சீ.ப.

துணை நூல்கள்:

**Driver, H.E.**, "Indians of North America", Chicago, The University of Chicago Press, 1969.

**Eggan, F.**, "Social Anthropology of North American Tribes", The University of Chicago press, Chicago, 1937.

**Gross, D.R.**, "Peoples and Cultures of Native South America: An Anthropological reader", The Natural History press, New York, 1973. press, 1973.

**Steward, J.H.**, ed. "Handbook of South American Indians" Bureau of American Ethnology, 6Vols., Washington, 1946-1950.

**Steward, J.H., and Farm, I.C.**, "Native peoples of South America", Mcgraw Hill Book Company, New York, 1959.

**Wissler, C.**, "The American Indian: An introduction to the Anthropology of the New World", D.C. Memurtric, New York, 1917.

**அமெரிக்க இலக்கியம்** இன்றைய உலக இலக்கியங்களுள் தனித்தன்மை வாய்ந்தது. மரபு காக்கும் இலக்கியம் ஒருவகை; மரபினை உருவாக்கும் இலக்கியம் மற்றொரு வகை. இது கால, இடச் சூழல்களுடன் நெருங்கிப் பிணைந்து உருவாவது. அமெரிக்க இலக்கியம் இவ்வகையைச் சார்ந்தது. ஆங்கில மறுமலர்ச்சி இயக்கத்தின் பக்கக் கிளையாகக் கி.பி. 1600–க்குப் பின் தோன்றிய அமெரிக்க இலக்கியம், மெதுவாகப் புத்துயிர் பெற்று இந்நூற்றாண்டில் அனைத்து நாடுகளும் ஏற்கும் நிலை எய்தியுள்ளது. "அமெரிக்கர் எழுதும் நூல்களை யார் படிக்கிறார்கள்?" என்ற ஏளன மதிப்பீட்டைச் சிட்னிசுமித்து (Sydney Smith) 1820–இல் அறிவித்தார். அறிவித்த 30 ஆண்டுகளுக்குள் இர்விங், போ (Poe) ஆகியோர் சிறுகதை இலக்கியத்தைச் செழுமையாக்கினர்; வால்டு விட்மன் (Walt Whitman) யாப்பிலக்கணக் கட்டுப்பாடற்ற கவிதை வகையினை உருவாக்கினார். என்றிசேம்சு (Henry James) இலக்கியக் கோட்பாடுகளை உருவாக்கினார். ஓ நீல் (O' Neill) என்பவர் புதுமையான நாடகக்கலை நுணுக்க உத்திகளைக் கையாண்டு வெற்றி கண்டார். துணிச்சல் வாய்ந்த புதுமையான பாடுபொருள்களைக் கொண்டு இலக்கியங்கள் விரிவாக்கப்பட்டன. ஏளன மதிப்பீட்டிற்குப் பின், 150 ஆண்டுகளில் வேறொரு மதிப்பீட்டாளரான சூலியன் மிச்சல் (Julien Mitchell), "அமெரிக்க நெடும் புனைகதை எழுத்தாளர்களுக்கு மட்டும் எப்படி நம்மைவிடச் செம்மையாக எழுத முடிகிறது" என்று வியந்து போற்றும் அளவுக்கு அமெரிக்க இலக்கியம் வளர்ச்சி அடைந்துள்ளது.

மனிதரின் தனித்தன்மையில் அமெரிக்க எழுத்தாளர்க்கு ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. குடியாட்சிக் கொள்கை போற்றலும், மக்கள் சமநிலை (Equality) பேணலும் உரம் கொண்டு எழுதுவதால், அமெரிக்கரிடையே பழமையின் ஆணையுரிமை (Authority) ஒதுக்கப்படும் போக்கு காணப்படும். பிற நாட்டினர், பொதுவாக, அவரவர் நாட்டு இலக்கிய மரபுகளை அமைவாய்வு செய்யாமல், அப்படியே ஏற்றுப் பின்பற்றும் போக்குடையராவர். ஆனால், அமெரிக்கர் தம் தேவைக்கு ஏற்ற படைப்புகளில் மட்டும் மிக்க கவனம் செலுத்துவர். மரபு வழி இலக்கியக் கோட்பாடுகளை விடுத்துத் தன்னிறைவு அளிக்கும் திசைகளில் இலக்கிய முயற்சி மேற்கொள்வர்.

தொடக்கத்திலிருந்தே விறுவிறுப்பான ஒருவகை நகைத்திறக் கீறல், அவர்தம் இலக்கியத்தைச் சிலிர்ப்படையச் செய்து வந்துள்ளது. அமெரிக்கர்க்கே உரிய சொல் துடுக்கு, நகைச்சுவைத் திறம் முதலியன தூவப்பட்டு வருதலால், இலக்கியத்தில் உணர்ச்சிவயப் (Sentimentalism) படாமலும், சாரம் இழக்காமலும் பொருள் துடிப்புகாக்கப்படுகிறது. கடுமையான சோதனைக் காலங்களில், தம்மையே நோக்கி நகும் திறமுடையவர் அமெரிக்கர் என்பதை, அவர்தம் இலக்கியம் காட்டுகிறது. இந் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஆங்கில இலக்கியச் சார்பற்றுத் தனித்து இயங்கும் ஆற்றலை அது பெற்றிருப்பது குறிப்பிடத்தகும். அன்றியும் இலக்கியத்தைத் தம் நாட்டின் தன்னியல்பு அறிய உதவும் சாதனமாகவும் அமெரிக்கர் உருவாக்கியுள்ளனர்.

இலக்கிய இனங்கள்: அமெரிக்கர் வந்தேறிகளாய்க் குடியமர்ந்த காலத்தில், சமயக் கோட்பாடு சார்ந்த நூல்களே பெரும்பாலும் தோன்றின. பின்னர், அரசியல் புரட்சிக் காலத்தில் மேம்பட்டு வளர்ந்தவை அரசியல் சார்ந்த நூல்களாம். தன்னாட்சிக் காலத்தில் முனைப்பாக எடுத்தாளப்பட்டவை அமெரிக்க நாட்டுக்கே உரிய பாடுபொருள்களாம் (Themes). அதற்குப் பின்னர், 19–ஆம் நூற்றாண்டில் ஆதார்ன் (Hawthorne), மெல்வில், எமர்சன்(Emerson),தோரோ (Thoreau), விட்மன் (Whitman) ஆகியோர் அமெரிக்க இலக்கிய மறுமலர்ச்சியின் முன்னோடிகளாவர். உள்நாட்டுப்போருக்குப்பின் என்றி சேம்சின்(Henry James) இலக்கியக் கோட்பாடுகளும், மார்க்கு டுவெயினின் (Mark Twain) நகையியலும் யாவரும் படித்தின்புறும்படி நாடெங்கும் பரவிப் புகழ் எய்தின. முதல் உலகப் போருக்குப் பின் உருவான சூழலில் "மீட்பற்ற தலைமுறை" ("Lost Generation") என்றழைக்கப்பட்ட எழுத்தாளர்கள் தோன்றினர். அதன் பின், 1930–40 காலப்பகுதியில் நீக்ரோ இன எழுத்தாளரின் நூல்கள் திறனாய்வாளரின் ஆழ்ந்த கவனத்தை ஈர்த்தன. இரண்டாம் உலகப் போருக்குப் பின், அமெரிக்கத் தென்னக எழுத்தாளரும் (Southern Writers)

யூத இன எழுத்தாளரும், நடுத்தர வகுப்பினரின் ஒழுக்க முறிவினைக் (Moral Bankruptcy) கண்டனம் செய்த ''பீட்'' (Beat) இயக்க எழுத்தாளரும், பெண்மை எழுச்சி இயக்க எழுத்தாளரும், இருள்சூழ் நகையியல் (Black Humour) எழுத்தாளரும், அமெரிக்கருக்கே உரித்தான ஆடல் பாடல் உரை (Musical Comedy) நிரம்பிய பொழுது போக்கு எழுத்தாளரும் தோன்றினர்.

பொதுப்போக்கும் கோட்பாடுகளும்: அமெரிக்க இலக்கியம் தோன்றிய காலம் இடைக்கால ஆங்கில மொழி மாறி, இன்று வழங்கும் ஆங்கிலம் உருவான காலம். கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் குடியேறிய பெரும் பண்ணையாளர், புதுப்புலம் தேடி ஆய்வோர் (Explorers) ஆகியோர், தாம் இலக்கியப் படைப்பாளர் என்ற எண்ணமில்லாமலும், பயன் நோக்கம் கருதியும் உருவாக்கியவையே அவர்தம் தொடக்கக்கால இலக்கியங்கள். பயண இலக்கியம், பருவ இதழ்கள், கவிதை ஆகியவை அன்றைய இலக்கிய வகைகள் ஆகும்.

தூய்மைக் கோட்பாடு (Puritanism), மரபுக் கோட்பாடு (Anglicanism), கத்தோலிக்கச் சமயக் கோட்பாடு (Catholicism), நண்பர் கழகச் சார்புக் கோட்பாடு (Quakerism) என்ற கோட்பாட்டுச் சுற்றோட்டத்தில் அவ்விலக்கியங்கள் தோன்றின.

18-ஆம் நூற்றாண்டு: இனி, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில், 'நாம் அமெரிக்க நாட்டினர்' என்ற உணர்வு மெல்ல மலர்கிறது. அமெரிக்கப் புரட்சிப் போர்க் காலம் வந்ததும், தாம் வந்தேறு குடியினர் என்ற மனப்பாங்கு மறையத் தொடங்கிற்று. இக்கால இலக்கிய வகைகளாக நிகழ்ச்சிப் பதிவுகள், அன்றாடக் குறிப்பேடுகள், சமய, அரசியல் கட்டுரைகள், கவிதை, அங்கத இலக்கியம், ஒழுக்க முறைமை சார்ந்த கதைகள், நெடும் புனைகதைகள், நாடகங்கள் ஆகியவற்றைக் கொள்ளலாம்.

கலைத் தொழிலாளர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் எழுத்துப் பணியைப் பிழைப்புக்குரிய வழியாகக் கொண்டனர். எனினும், எழுத்தாளர் பலர் இலக்கியத்தைத் துணைத் தொழிலாகவே கருதினர். இக்கால இலக்கியங்கள் மேலெழுந்த சில தனிக் கொள்கைகள் (isms), தேசியக் கோட்பாடு (Nationalism), கட்டற்ற கற்பனைப் பண்புக் கோட்பாடு (Romanticism) புலன் நுகர்வு கடந்த அறிவு மூலக் கோட்பாடு (Transcendentalism), புறவாய்மையியல் கோட்பாடு (Realism) – புலனால் அறியப்படும் பொருள்களுக்குப் புறவாய்மை உண்டு எனும் கொள்கை, வட்டார மரபுக் கொள்கை (Regionalism) முதலியவற்றைக் கொண்டிருந்தன. மரபுப் பண்புகளை விலக்கி இயல்பு நிலையையே பின்பற்றும் இயற்கைக் கோட்பாடு (Naturalism) இந்நூற்றாண்டின் இறுதியில் தோன்றியது.

20-ஆம் நூற்றாண்டு: இனி 20-ஆம் நூற்றாண்டில், இலக்கியப் போக்கில், இடையிடையே சுருக்கிக் கூற இயலாதபடி உள்ளார்ந்த தனி நலத்தரமும் (Individuality), வியத்தகு பரந்த இலக்கெல்லையும் (Large Scope), அதனுள் வகை வளமும் (Variety) மிக்க பெருந்திறல் எழுத்தாளர் பலர் தோன்றினர்.

இறைவன் புகழ்-பாடல் ஒருபுறமும், இலக்கற்ற அகநிலைச் சோர்வு மறுபுறமும் வலித்திழுக்க, இந்த இழுவையாடலின் மேலெழுந்த தனிக் கொள்கைகள் (Isms) பல இந்நூற்றாண்டில் தோன்றின. இந்தக் கோட்பாட்டுச் சுற்றோட்டங்கள் ஒவ்வொன்றிலும் வெவ்வேறு வடிவமும் வெவ்வேறு அசையழுத்தமும் (Emphasis) ஏற்பட, வளத்திற்கு வாய்ப்புப் பெருகியது. போர், இனவெறுப்பு, இலக்கற்ற அகநிலை (Spiritual Aimlessness), உணர்வுத்தொய்வு (Depression) போன்ற கேடுகள் எழுத்தாளர்களின் பாடுபொருள்கள் ஆயின.

படைப்பாளர்: இன்கிரீசு மாத்தர் (Increase Mather), காட்டன் மாத்தர் (Cotton Mather) ஆகிய தந்தையும் மகனும் நூற்றுக் கணக்கான சமய ஆய்வுக் கட்டுரை (Tracts) களாலும், சமய மேடைப் (Pulpit) பேச்சுகளாலும் சமயச் சார்பு ஆட்சியை (Theocracy) நிலைநிறுத்த அரும்பாடுபட்டனர். காட்டன் மாத்தர் மட்டும் ஏறத்தாழ 450 நூல்களை எழுதியுள்ளார்.

இவற்றுள் சிறந்தது ''அமெரிக்காவில் கிறித்து ஆற்றிய அற்புதங்கள்'' (Magnalia Christi Americana) எனப் பொருள்படும் 1200 பக்கங்களையுடைய இந்நூல் பல இலக்கிய வகைகளை உள்ளடக்கியதாகும். ஓமர் (Homer), மில்டன் (Milton) ஆகியோர் எழுதிய வீரமகா காவியங்களை விட இஃது அளவில் பெரியது. வீரகாவியம், வரலாறு, வாழ்க்கை வரலாறு, பாத்திரப் பண்போவியம், புலம்பற் காவியம் (Jeremiad) ஆகிய இலக்கியக் கூறுகளை இஃது உள்ளடக்கியது.

தனித்தூய்மைச் சமயப் பிரிவினருள் (Puritans) தலையாய சொற்பொழிவாளர் சோனாதன் எட்வர்ட்சு (Jonathan Edwards) ஆவார். சில வேளைகளில் சமயப் பற்றுடையோர்க்கு உள்ள இசிவு (Hysteria) ஏற்படும் வண்ணம், பேரூழி மீளாப் பெருநரகு பற்றி இவர் சித்திரிப்பார். மற்றும், இவர் 'மிகப்பெரிய விழிப்பூட்டல்' (The Great Awakening) என்ற இயக்கத்தின் தலைவராவார்.

இக்காலத்துக் கவிதைகளும் சமயச் சார்புடையனவே. முதன் முதலாக அமெரிக்காவில் பதிப்பிக்கப் பட்ட நூல் 'தெய்வப் புகழ் மாலை' (The Bay Psalm Book) ஆகும்.

சமயச் சார்பிலக்கியம் எழுந்த காலத்தில், சமயச் சார்பற்ற இலக்கியம் சிறுதுளி போல் இங்கும் அங்குமாகத் தோன்றியது. இவ்விலக்கியப் படைப்பாளரான சிலர் உவில்லியம் பிராட்போர்டு (William Bradford) போன்று வீறார்ந்த உயர் உணர்வுடனும் (Solemnity), மற்றும் சிலர் சான் சுமித் (John Smith) போன்று தன்முனைப்பு ஆர்ப்பாட்டமுடனும் எழுதினர்.

சான் சுமித்து பல இலக்கிய வகைகளுக்கு முன்னோடியாவார். இன்றைய புனைகதைகளோ இதழ்களோ செய்தி முறைகளோ எழாத காலத்தில், விறுவிறுப்பாக நிகழிடத்தினின்றும் நேரடியாகச் செய்தியறிவிக்கும் செய்தியாளராகவும், பயண ஊக்குவிப்பு இலக்கியம், விளம்பரக்கலை ஆகியவற்றின் முன்னோடியாகவும் விளங்கினார். சாமுவேல் சிவால் (Samuel Sewall) அக் காலத்திய நடப்புகளைச் செவ்வையாகக் குறித்து வைத்தவராவார். “ஜோசபின் விற்பனை” (“The Selling of Joseph”) என்னும் இவரது நூல் அடிமை ஒழிப்புச் சிற்றேடுகளின் முன்னோடியாகும். பெஞ்சமின் பிராங்லின் (Benjamin Franklin) மனிதரின் தவறிழைக்கும் பாங்கினைப் பற்றி நகுதிறம் சார்ந்த ஐயுறவுப் பார்வையில் (Humorous and Sceptical) எழுதினார்.

அமெரிக்கப் புரட்சியும், தன்னாட்சிப் பாங்கும் பண்பார்ந்த அரசியல் இலக்கியத்தை உருவாக்கின. தாமசு செபர்சன் (Thomas Jefferson) என்பவர் இதன் முன்னோடியாவார். “மனிதனின் உரிமைகள்” (“Rights of Man”) என்னும் நூல் எழுதியமைக்காக, இங்கிலாந்திலிருந்து நாடு கடத்தப்பட்ட புரட்சியாளர் தாமசு பெயின் (Thomas Paine 1737–1809) அமெரிக்கருடைய தன்னுரிமைத் தீயினைக் கொழுந்து விட்டெரியச் செய்தார். “இயல்பான நல்லறிவு” (“Commonsense”), “நெருக்கடி நிலை” (“The Crisis”) என்ற தொடர்ச் சிற்றேடுகள் ஆகியன இவர் எழுதியவற்றுள் அடங்கும்.

புரட்சிக் காலத்திற்குப் பின்னர் எழுந்த ஊக்கம் மிக்க எழுத்தாளர்கள் தத்தம் நூல்கள் இங்கிலாந்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று விரும்பினார்கள்.

அமெரிக்காவின் முதல் எழுத்தாளரான வாசிங்டன் இர்விங்கின் (Washington Irving 1783–1859) அங்கத நூல்கள் உள்நாட்டிலும் இங்கிலாந்திலும் பாராட்டப்பட்டன. இவற்றுள், குறிப்பிடத்தக்கவை மரபுவழிக் கதைகளாகும். இர்விங், கூப்பர், பிரையண்ட்டு ஆகியோர் நியூயார்க் வட்டாரத்தை இலக்கிய முதன்மை வாய்ந்த இடமாக்கினர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில், பெரும்பான்மையான அமெரிக்கர் திறந்த வெளி வாழ்வியலில் ஊக்கங் காட்டிய புலவர்களை விரும்பிப் படித்தனர். இப்புலவருள் குறிப்பிடத்தக்கவர்கள் உவில்லியம் குல்லன் பிரையண்ட்டு (William Cullen Bryont), என்றி வாட்சுவர்த் லாங்பெலோ (Henry Wordsworth Longfellow), சான் கிரீன்லீப் விட்டியர் (John Greenleaf Whittier) ஆகியோராவர். இவர்தம் கவிதைகள் எதிரொலிக்கும் நல்லார்வ நம்பிக்கையும், வெற்றுச் சொல்லோட்டமும் வாசகர்க்குச் சலிப்பையும் அமைவின்மையையும் (Impatience) உண்டாக்கின. அதனால் வாசகர்கள் தம் சோர்வு உணர்ச்சிச் சுமையினைத் தணிக்க விரும்பி அங்கதப்பாணி எழுத்தாளரை ஆதரித்தனர். 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், நகுதிறல் பாணியில் எழுந்த நூல்களில் உருவான கதைமாந்தர்கள், கூர்த்த மதியும் ஒழுக்கக் கேடும் ஒருங்கிணையப் பெற்று, நூலாசிரியரின் சார்பில் குரல் கொடுத்தார்கள். 1850--60–ஆம் காலப்பகுதியில் வியப்பூட்டும் அளவில் விரைந்து வெளிப்பட்ட படைப்பாற்றல், “அமெரிக்க மறுமலர்ச்சி” என வழங்கப் பெற்றது. இக்காலத்தில் தோன்றிய படைப்பாளர்கள் நதேனியல் ஆதார்ன் (Nathaniel Hawthorne, 1824–1864), எமர்சன் (Ralph Waldo Emerson, 1803–1882), தோரோ (Henry David Thoreau 1817–1862), விட்மன் (Walt Whitman, 1819–1892) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

கி.பி. 1830–ஆம் ஆண்டளவில் அடிமை ஒழிப்பு ஒரு தீவிரவாதப் பொருளாக எழுந்தது. இரு எதிர்க்கட்சியினரும் பல கட்டுரைகள், கதைகள், சிற்றேடுகள் (Pamphlets), கவிதைகள் ஆகியன இயற்றினர். உவில்லியம் லாய்டு காரிசன் (William Lloyd Garri--son), என்பவர் “தளைநீக்கு தலைவன்” (The Liberator) என்ற பத்திரிகையின் வாயிலாக, அடிமை ஒழிப்புப் போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தினார்.

ஆரியட் பீச்சர் இசுடோவ் (Harriet Beecher St–owe, 1811–1896) எழுதிய “மூத்தார் தாமின் சிறு குடில்” (Uncle Tom’s Cabin) என்னும் நூல் அடிமை ஒழிப்பு இயக்கத்திற்குப் பெரியதோர் உந்து சக்தியாகத் திகழ்ந்தது. உள்நாட்டுப் போரின் அடிப்படை நோக்கத்திற்கு இந்நூல் மிகவும் துணை புரிந்ததாக ஆபிரகாம் இலிங்கன் கருதினார். உள்நாட்டுப் போர் முடிவுற்றபோது இலக்கியத்தில் புதிய திருப்பங்களும் வளர்ச்சியும் நேர்ந்தன. உட்பொருளும் பாணியும் பெரும்பாலும் வட்டார வழக்கில் இருப்பினும், வாசகர்கள் மட்டும் படிப்படியாகத் தேசிய மனப்பான்மையுடையவராக வளர்ந்தனர்.

கி.பி.19–ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்த புனை கதை இலக்கியத்துள் மூன்று தனிமரபுக் குழுக்கள் (Schools) தோன்றின. முதற்குழுவைச் சார்ந்தோர் இயற்கோட்பாட்டினர் (Naturalists) எனப்படுவர்.

இவருள் சிறப்பானவர் இசுடீபன் கிரேய்ன் (Stephen Crane) ஆவார். இரண்டாம் குழுவினர் புற வாய்மை யியல் கோட்பாட்டினர் (Realists) ஆவர். இவ்வகை யினருள் குறிப்பிடத்தக்கவர் உவில்லியம் இடீன் ஆவல்சு (William Dean Howells) ஆவார். மூன்றாம் குழுவினர் அகநிலை உணர்வுக்குரிய (Psychological fiction) கதைகளை உருவாக்குவோராவர். இவர் களுள் குறிப்பிடத்தக்கவர் என்றி சேம்சு ஆவார்.

20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்க இலக்கியம் அவர்களின் "இரண்டாம் மறுமலர்ச்சி" என்று எண் ணத் தக்கவாறு வியக்கத்தக்க வகையில் எழுச்சி பெற் றது. இந் நூற்றாண்டின் முற்பகுதியில் உவில்லா காத்தர் (Willa Cather), எட்வின் ஆல்டிங்டன் இரா பின்சன் (Edwin Aldington Robinson), கார்ல் சான்ட் பர்க்கு(Carl Sand Burg), இராபர்ட்டுபிராசுடு (Robert Frost, 1874-1963) போன்ற புலவர் தோற்றுவித்த பாணி மிக்க எளிமை வாய்ந்து விளங்கியது. இவர் தம் படைப்பின் உட்பொருள் அமெரிக்க நாடும் மக்களும் ஆகும். எவ்விடத்திலும் எக்காலத்திலும் இடர்களைக் கண்டு அஞ்சாமலும் சலிப்புறாமலும் ஏற்றமைவுப் பண்போடு வாழும் வகை (Endurance) தெரிந்தவர் அமெரிக்கர் என்பதை இவர்கள் தங்கள் படைப்புகளில் எடுத்துக்காட்டுவாராயினர்.

முதல் உலகப் போரினால் ஏற்பட்ட பெருஞ் சுழற் சிக்குப் பின்னர், ஏசுரா பவுண்டு (Ezra Pound, 1885-1972), எலியட் (T.S.Eliot, 1888-1965) ஆகியோர் 19-ஆம் நூற்றாண்டின் கூட்டற்ற கற்பனைப் பண்பிலக்கியத் தில் (Romantic Literature) உண்டான மேன்மினுக்குப் பிடியிலிருந்து இலக்கியத்தைப் பிரித்தெடுக்க முயன் றனர்; இவர்கள் இலக்கியத்தில் துல்லிய சொல்லாட் சியின் இன்றியமையாமையினையும் மேம்பாட்டினை யும் வலியுறுத்தினர். புனைகதை இலக்கியமும், வியப் புறும் வண்ணம் உயிர்த் துடிப்புத் திருப்பங்களுடன் மாறியது. இவ்வழி, போருக்குப் பின் எழுந்த ஐந்தன் தொகுதி (Quintet) எழுத்தாளர் பெயர்கள் வரு மாறு:- செர்வுட் ஆண்டர்சன் (Sherwood Anderson, 1876-1941), இசுகாட் பிட் செரால்டு (Scott Fitzgerald 1896-1940) எர்னசுடு எமிங்வே (Ernest Hemingway, 1898-1961) சான் டாசுபேசாசு (John Dos Passos, 1896-1970) வில்லியம் பாக்னர் (William Faulkner, 1897-1962). இந்த ஐவர் படைத்த பாணி யினைப் பின்பற்றியும் தழுவியும் பலர் எழுதினர். அப்படைப்புப் பாணியில், ஆண்டர்சனின் சமுதாயக் காட்சியின் நேர்தாக்கக் கருத்துப் பதிவீடும் (dead-level observation), இடாசு பேசாசுவின் திரைப்படப் பண்பார்ந்த கலைநுட்ப உத்திகளும், எமிங்வேயின் சொல் வித்தகமும், பாக்னரின் பல்திறக் கூட்டொ ருமை (Complexity) யும், மற்றும் பழங்கதை மரபுத் தன்மையும் (mythic quality) ஆகிய பண்புகள் அமைந் தன. இதனோடு வெளிப்படையாக எழுதுகிற போக் கும் எழுந்தது; இஃது ஓர் இழிவழக்கு வழிவந்த புதுப்போக்காகும். இதனால் நெறிமுறைத் தணிக் கையாளருக்கும் (Censorship) நூல் வெளியீட்டாளருக் கும் இடையே கசப்பான பூசல் தொடர்ந்தது.

இதேகாலக்கட்டத்தில் நாடகக் கலையில் புத்து யிர்ப்பு ஏற்படுத்திய பெருமை யூசின் ஓ நீல் (Eugene O' Neill, 1888-1950) என்பாரைச் சாரும். புற வாய்மை சார்ந்த பொருள் பற்றித் துணிச்சலான உத்தி களுடன் நாடகக்கலையில் புரட்சி ஏற்படுத்தினார்.

நீக்ரோ இன எழுத்தாளர்: 1930-ஆம் ஆண்டள வில் மனந்திறந்த துணிச்சலுள்ள நீக்ரோ இன எழுத் தாளர் பலர் தழைத்தோங்கினர். இரிச்சர்டு ரைட் (Richard Wright), இரால்பு எலிசன் (Ralph Ellison) ஆகியோரின்படைப்புகளால்இவர்தம் முன்னோடிகளா கும் கறுப்பர் இனத்தின் அவலநிலைப்பாடு உருவெழுப் பிக் காட்டப்பட்டது. இதனை அடுத்துக் கசப்பான சொற் கோப்புக் கலையாற்றல் (Bitter rhetoric) மிக்க இளம் எழுத்தாளர் பலர் தோன்றினர்.

"பீட்" இயக்கம்: 1950-ஆம் ஆண்டளவில் எழுந்த ஒரு சிறு குழுவினர் "பீட் இயக்கத்தவர்" (Beat Movement) என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் நடுத்தர வகுப்பின் நெறிமுறை முறிவினைக் (Moral Bankruptcy) கண்டனம் செய்து எழுதினார்கள். தனித்துவமே மாந்தர் வாழ்வின் உயர் இலக்கு (Highest goal) என்னும் அடிப்படை கொண்டவர். சாக் கிரோக்கு (Jack Kerokac) எழுதிய "சாலை வழியே" ("On the Road") என்ற தன் வரலாறு, இவ்வியக் கத்தின் சிறப்பான நூலாகும். சமுதாயத்தின் உரி மைப் பறிப்பு, தீங்கிழைப்பு முதலிய நேர்மைக் கேடு கள் தீவிரமாகவும் திறம்படவும எழுதப் பெற்றன. இவர் வழியில் இலாரென்சு பெர்லிங்கெட்டி (Laurance Ferlinghetti) அங்கதத் திறனாய்வுடன் அமெரிக்க நாகரிகம் பற்றி எழுதினார். பேச்சு வழக்கில் எழுது வதுடன் கொச்சை மரபு கொண்டு, தூய்மை வெறுத் தல் இவர் வழியாகும்.

இரு உலகப் போர்களும், இலக்கிய, சமுதாயத் திறனாய்வு நோக்கி, எழுத்தாளரை ஊக்குவித்தன. கவிஞர் எலியட் (T.S. Eliot), புனைகதையாசிரியர் வாரன் (R.P. Warren), எட்மண்டு வில்சன் (Edmund Wilson), இலையனல் திரில்லிங் (Lionel Trilling), வான் விக் புரூக்சு (Van Wyck Brooks, 1886-1963) முதலியோர் ஆற்றல் மிக்க திறனாய்வாளருள் அடங் குவர்.

தென்னில இலக்கியம்: இரண்டாம் உலகப் போருக்குப் பின் எழுந்த தென்னிலப் புனைகதை

இலக்கியம் வறுமை மிக்க, சாதி நீக்கம் செய்து தள்ளி வைக்கப்பட்ட, ஆதரிப்போரின்றித் துயரார்ந்த மக்களைப் பற்றிய கதைகளாகும். இவ்வகை இலக்கியப் படைப்பாளர், தம் படைப்புகளில் உதிரியான, புதிரான, மிகையான கதை மாந்தர்களைப் பரிவிரக்கத்துடன் கையாண்டனர். உவில்லியம் பாக்னர் என்பார் தொடங்கிய மரபில், கார்சன் மக்கல்லர்சு (Carson Macallers) எழுதி வந்தார். இவர்களும், இவர்களைப் பின்பற்றி எழுதிய உடோரா வெல்டி (Eudora Welty), துருமன் கபோடே (Truman Capote) போன்றவர்களும் தென்னில எழுத்தாளர் வகையைச் சேர்ந்தவராவார்கள்.

யூத இன இலக்கியம்: யூத இன எழுத்தாளர் போருக்குப் பின்னர் அமெரிக்காவில் உள்ள யூத இனத்தினரின் வாழ்க்கைச் சிக்கல்கள் பற்றி எழுதினர். யூத இன மரபுக்கும் இக்கால அமெரிக்க வாழ்விற்கும் இடையே எழுந்த இழுவை நிலை பற்றியே பெரும்பாலோர் எழுதியுள்ளனர். ஐசாக் பாசவிசு சிங்கர் (Issac Bashevis Singer) தம் கதைகளில் ஐரோப்பிய யூதர்கள் அமெரிக்கச் சூழலில் ஒத்திணைந்து வாழ்வதில் உள்ள சிக்கல்களைச் சித்திரித்தார். பெர்னார்டு மாலமுடு (Bernard Malamud) நியூயார்க் நகரத்து ஏழை யூதர் பற்றி எழுதினார்.

பெண் இன எழுச்சி: அமெரிக்க நாட்டில் 1960–70–ஆம் ஆண்டுகளில் பெண்ணினத்தை வேறுபடுத்தி, ஒருசார்பாய் நடத்தும் நலம் சுரண்டல் முறைமையினைக் (Exploitation) கடுமையாக எதிர்த்துப் பெண்ணுரிமை (Women's Liberation) பேணும் இயக்கம் தோன்றியது. அதன் பெயரால், பல இலக்கிய வகைகள் உருவாயின. பெண்ணினத்தின் நோக்கில் பல சமுதாய, சட்ட வாதப் பொருள்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. செல்லும் சொல்லும், செல்வாக்கும் மிக்க பல பெண் எழுத்தாளர் தோன்றினர். அதுகாறும் கண்டிராத அளவு ஒளிவு மறைவு அற்ற முறையில், பெண்ணின உணர்வுகளைப் பற்றி அமையும் புனைகதைகள் வெளிவந்தன. பெரும்பாலான பெண் எழுத்தாளர் பெண்ணுரிமை இயக்கத்தோடு நேரடியாக இணையாது நின்று எழுதிப் பாராட்டுப் பெற்றுள்ளனர். மேரி மக்கார்தி (Mary Macarthy) புனைகதைகளில் பெண்களின் தனிப்பட்ட வாழ்வுமுறை பற்றியும், உழைத்து அலுவலாற்றும் (Career) பெண்கள் வாழ்வுமுறை பற்றியும் எழுதியுள்ளார்.

இருள் சூழ்ந்த நகையியல்: அமெரிக்கரின் நகையியல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய ஒன்று. கையறவுற்று, மனச்சோர்வடைந்த (Gloom, despair) காலங்களில், வாழ்வை ஒளிர்விக்கும் திறம் இவரைச் சாரும். இராபர்ட்டு பெஞ்சிலி (Robert Benchley) என்பவர் நகுதேர்வியல் ஓவியப்பாணி (Humorous sketch) யை உருவாக்கியவராகக் கருதப்படுகிறார். இரிங் லார்டனர் (Ring Lardner) அறிவு குறைந்த தற்பெருமையாளரைப் பற்றிக் கசப்பும் கேலியும் கலந்த கதைகள் எழுதினார். சேம்சு தர்பர் (James Thurber, 1894–1961) என்பவர் அமெரிக்க ஆண்களுக்கும், அவர்தம் விட்டுக்கொடாத மனைவிமார்களுக்கும், முன்கோபமுள்ள நாய்களுக்கும் உள்ள தொடர்பில் ஏற்படும் சோதனைகள் பற்றிக் கழிமகிழ்வுக் கதைகள் பல எழுதியுள்ளார்.

மிக அண்மையில் எழுந்த இலக்கிய வகையில் நகையியல் ஒருபுறமும், கொடூரக் கனாக் காட்சி மறுபுறமும் கொண்ட ஒருவகைப் படைப்பு தோன்றியது. உயர்நோக்கும் நகையியலும் கலந்து 1960–ஆம் ஆண்டளவில் தோன்றிய இஃது, "இருள் சூழ்ந்த நகையியல்" (Black Humour) சார்ந்த இலக்கியம் எனப்பட்டது. இதன்கண், சோர்வுறச் செய்யும் துயரார்ந்த பொருள் பற்றியும், வன்செயல், வன்னடத்தை, திருவினை அழிக்கும் கேடுகள், குமுறல்கள் ஆகியன பற்றியும் எழுதுகையில், மிக்க மகிழ்ச்சிக் காலக் கூறுகளும் கலந்து எழுதப்பெறும். இந்த "இருள் சூழ்ந்த நகையியல்" பாணியை உருவாக்க உதவியவர் விளாடிமீர் நபகாவ் (Vladimir Nabakow, 1899–1977) ஆவார்.

புனைவற்ற கதையிலக்கியம்: இது புனைகதை உத்திகளோடு மெய்ந்நிகழ்வு காட்டும் (Documentary) பாணியில் உண்மை நிகழ்ச்சிகள் பற்றியும் மக்களைப் பற்றியும் எழுதப்பெறுவதாகும். "புனைவற்ற கதையிலக்கியம்" (non-fiction novel) என்னும் சொற்றொடரை முதன் முதலில் பயன்படுத்தியவர் வாட்ரூமன் கபோட்டே (Truman capote) என்பவர்.

உவில்லியம் இசுடிரான் (William Styron, 1925) எழுதிய "நாட்டர்னரின் குறை ஏற்பு" (Confessions of Nat Turner) என்னும் நூல் 1831–ஆம் ஆண்டில் வர்சீனியாவில் நடந்த அடிமையினத்தின் எழுச்சி பற்றியது. 1967–ஆம் ஆண்டில் இடெட்ராய்டு (Detroit) கலகத்தில் பல கறுப்பர் கொல்லப்பட்டதைச் சான் எர்சி (John Hersey) என்பவர் தம் நூலில் சித்திரித்துள்ளார். இவ்விலக்கியவகை சீரிய முறையில் கையாளப்பட்டு வருகிறது. இவ்வாறு முடிவிலா வகைவளம் மிக்குத் துணிவார்ந்த வளர்ச்சி கொண்ட இலக்கியம் அமெரிக்க இலக்கியம் ஆகும். ந.ச.

துணை நூல்கள்:

**Brooks, Van Wyck & Bettmann,** O.L., "Our Literary Heritage, Hutton", 1956.

"Makers and Finders: A history of the writer in America", 1800–1915, Dutton, 1936–'52.

"Cambridge History of American Literature", 3Vs in one, Macmillan, '54.

**Cunliffe, Marcus**, "The Literature of the united States", 3rd ed., Penguin, 1976.

**Gohdes, Clarence**, "Bibliographical guide to the Study of the Literature of the United States of America", 2nd ed., Durham, Duke Univ. Press, 1963.

**Hart, J.D.**, "Oxford Companion to American Literature", 4th ed., Oxford, 1965.

**Jones, Howard, M.**, "Guide to American Literature and its Background Since 1890", 3rd ed., Harvard Univ. Press, 1964.

**Meserole, Harrison, T.**, et al, eds. "American Literature : Tradition and Innovation", 4Vs Health, 1974.

**Parrington, Vernon, L.**, "Main Currents in American Thought", Harcout, 1958.

**Scherman, D. E, & Redlich, Rosemary.**, "America: the Land & its Writers", Dodd, 1956.

**Spiller, R. E.**, et al, "Literary History of the United States", 4th ed., 2 Vs., Macmillan, 1974.

**Wilson, Edmund, ed.**, "The shock of Recognition: The Development of Literature in the United States recorded by The Men who made it", Octagon, 1974, (reprint of 1943 ed.)

"Parriotic gore : studies in the Literature of American Civil war", 1962.

**Benet, W.R & Pearson**, N H **eds**, Oxford Anthollogy of American Literature", 2 Vs, Oxford, 1938.

**Fadiman, Clifton.**, ed. "American Treasury, Harper, 1955.

**Foerster, Norman, ed.**, "American Poetry and Prose", Houghton, 1960.

**Untermeyer, Louis.**, ed. "The Britannica Library of Great American writing", 2Vs., Lippincott, 1960.

***அமெரிக்க உளவியல் சங்கம்*** அமெரிக்கா விலுள்ள வாசிங்டன் நகரத்தில் (Washington D.C.) 1892-ஆம் ஆண்டு இச்சங்கம் நிறுவப்பட்டது. இச் சங்கம் பின்வரும் பன்னிரண்டு குறிக்கோள்களை மைய மாகக் கொண்டு, உளவியலார்கள் ஒருங்கிணைந்து செயற்பட உதவுகிறது: அக்குறிக்கோள்களாவன 1. பொதுப்பணி செய்வதன் வாயிலாகச் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவது, 2. உளவியலார் தங்கள் ஆற்றலைப் பொதுமக்களின் நலனுக்கு ஈடு படுத்துவது, 3. இதன் வாயிலாகத் தங்கள் செயற்திற னைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவது, 4. தங்கள் துயர்களைப் பெரிதாகக் கருதாமல் உள நோயாளிகளைக் காப்பதே முதற்கடமையாகக் கொள் வது, 5. தங்களின் தனித்திறமைகளை வளர்த்து அத்துறைகளில் சிறந்து விளங்குவது, 6. தங்களுடன் தொடர்புள்ள மற்றத் தொழில் துறைகளுடன் இணைந்து செயலாற்றுவது, 7. உளவியல் துறையில் ஆய்வு, கற்பித்தல், செயல் நிறைவேற்றல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வது, 8. இத்தகைய செயற் பாடுகளில் ஈடுபட்டிருக்கும் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வது, 9. நடைமுறைக்கு இயலாத வற்றை உளவியல் தொழிலில் பயன்படுத்துவதைத் தவிர்ப்பது, 10. தங்கள் பயிற்சியினை எதிர்காலச் செயல்திட்டங்களுக்குப் பயனுடையதாக ஆக்குவது, 11. ஆய்ந்து முடிவு செய்யாத நுண்முறைகளைக் கையாள்வதைத் தவிர்ப்பது, 12. சமூகப் பொருளா தாரப் பாகுபாடின்றித் தேவைப்படுபவர்களுக்குத் தங்கள் பணியினைக் கிடைக்கச் செய்வது ஆகியனவாம்.

அமெரிக்க உளவியல் சங்கம் (American Psychological Association) 47,000-த்திற்கும் மேற்பட்ட உளவியலார்களை உறுப்பினர்களாகக் கொண்டுள் ளது. மேலும் இச்சங்கம், சோதனை உளவியல், ஒப்புமை உளவியல், வளர்ச்சி உளவியல், உளநோய் நீக்கு உளவியல் (Clinical Psychology), தொழிலக உளவியல், கல்வி உளவியல் போன்ற 38 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு. அவ்வத்துறைகளில் திறமை வாய்ந்த வர்களை உறுப்பினர்களாகக் கொண்டிருக்கிறது.

உளவியல் துறையில் பல ஆய்வுகளை மேற் கொண்டு அவைகளைச் செயற்படுத்திப் பார்ப்பதன் வாயிலாக உளவியலில் பல முன்னேற்றங்களை ஏற் படுத்தி, அவற்றைச் சமூகத்திற்குப் பயனுள்ளனவாக ஆக்குவதே இச்சங்கத்தின் தலையாய குறிக்கோளா கும். இக்குறிக்கோளை அமெரிக்க உளவியல் சங்கத் தின் நிருவாகக் குழு, துறைப்பகுதிகளின் பிரதிநிதிகள், சங்க உறுப்பினர்கள் ஆகியோர் முனைந்து செயல் படுத்தி வருகின்றனர்.

இச்சங்கம் பதினெட்டு ஆய்வு இதழ்கள், செய்தித் தாள்கள், நூல்கள், அறிக்கைகள், கால இதழ்கள், மாதச் செய்தித் தாள்கள் (APA Monitor) ஆகிய வற்றை வெளியிடுகிறது. இவ்வெளியீடுகள், உளவி யல் துறையில் ஏற்படுகிற முன்னேற்றத்தைப் பற்றிய


செய்தியை அறிய உதவுகின்றன. ஒவ்வோராண்டும் இச்சங்கம் கோடைக்கால இறுதியில் பொதுக் கூட்டம் நடத்திச் செய்திகளைப் பரிமாறிக் கொள்கிறது.

துணை நூல்:

**Alan, S. Bellack and Michal Hersen**, "Introduction to Clinical Psychology", Oxford University Press, New York, 1980.

**அமெரிக்க ஐக்கிய நாடு** வட அமெரிக்கக் கண்டத்தின் மத்தியில் உள்ள பரந்த நாடு. இது வலிமை பொருந்திய உலக வல்லரசு. அமெரிக்கா என்று சொன்னாலும் அது அமெரிக்க ஐக்கிய நாட்டையே குறிக்கும். இதன் தலைநகரம் வாசிங்டன். ஐம்பது மாநிலங்கள் இந்நாட்டில் உள்ளன. மக்கள் தொகை இருபத்து மூன்று கோடி. இங்குப் பேசப்படும் முக்கிய மொழி ஆங்கிலம். இதன் தேசியக் கொடியில் பதின்மூன்று பட்டைகள் உள்ளன. அவற்றுள் ஏழு சிவப்பு நிறமும் ஆறு வெள்ளை நிறமும் கொண்டவை. கொடியின் மேல் இடப்பக்கத்தில் நீல நிறப் பின்னணியில், ஐம்பது வெள்ளை விண்மீன்கள் உள்ளன. பட்டைகள் அந்நாடு சுதந்திரம் பெற்றபோது இருந்த பதின்மூன்று மாநிலங்களையும், விண்மீன்கள் இன்றுள்ள மாநிலங்களையும் குறிக்கின்றன. இந்நாட்டைப் பற்றிய விவரங்கள் 1. நிலவியல், 2. வரலாறு, 3. பொருளாதார வளர்ச்சி, 4. பண்பாடு ஆகிய தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1. நிலவியல் : வடக்கே கனடாவும், தெற்கே மெக்சிகோவும் மெக்சிகோ வளைகுடாவும், கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும் மேற்கே பசிபிக் பெருங்கடலும் அமெரிக்க ஐக்கிய நாட்டின் எல்லைகளாக உள்ளன. இந்நாட்டின் ஒரு மாநிலமாகிய அலாசுகா வட அமெரிக்கக் கண்டத்தின் வடமேற்கே உள்ளது. மற்றொரு மாநிலமாகிய அவாய், இந்நாட்டின் மேற்கே ஏறத்தாழ மூவாயிரம் கிலோ மீட்டருக்கு அப்பால் பசிபிக் பெருங்கடலில் உள்ளது. உருசியா கனடா ஆகியவற்றிற்கு அடுத்ததாக, நிலப்பரப்பில் அமெரிக்கா மிகப்பெரிய நாடாகும். இந்நாடு கிழக்கு மேற்காக 4800 கிலோ மீட்டரும், தெற்கு வடக்காக 2400 கிலோ மீட்டரும் பரவியுள்ளது. பெரு மலை




அமெரிக்க ஐக்கிய நாடு - இயற்கை அமைப்பு

களும் ஆறுகளும் சமவெளிகளும் கொண்ட அமெரிக்க ஐக்கிய நாடு, ஆறு இயற்கைப் பிரிவுகளாகப் பிரிக்கப் படுகின்றது. 1. அட்லாண்டிக்கு மற்றும் வளைகுடாக் கடற்கரைச் சமவெளி, 2. அப்பலேச்சியன் மேட்டு நிலங்கள், 3. உள்நாட்டுச் சமவெளிகள், 4. இராக்கி மலைகள், 5. உள்நாட்டு மேட்டு நிலங்கள், 6. பசிபிக் கடற்கரை.

1. அட்லாண்டிக்கு மற்றும் வளைகுடா கடற்கரைச் சமவெளி: இது மசாசுசெட்சு மாநிலத்திலிருந்து தெக்சாசு (Texas) மாநிலம் வரை பரவியுள்ளது இதன் அகலம் பத்துக் கிலோ மீட்டரிலிருந்து 800 கிலோ மீட்டர் வரை உள்ளது. இப்பகுதியில் இரியோகிராண்டி; கொலராடோ, பிராசோசு, இரெட், மிசிசிப்பி அலபாமா, அலடமகா, சவன்னா, போடோமேக், தெலாவர் (Delaware), அட்சன் முதலான ஆறுகள் ஓடுகின்றன. மணற்பாங்கான கடற்கரைகளும், வளைகுடாக்களும் சிறிய தீவுகளும் இப்பகுதிக்கு அழகூட்டுகின்றன. அமெரிக்காவின் சிறந்த நகரங்களான பாசுடன், நியூயார்க்கு, பிலடெல்பியா, பால்டிமோர், வாசிங்டன், நியு ஆர்லியன்சு முதலானவை இங்கே அமைந்துள்ளன.

2. அப்பலேச்சியன் மேட்டு நிலங்கள்: அலபாமா மாநிலத்திலிருந்து மெயின் மாநிலம் வரை இப்பகுதி பரவியுள்ளது. வடகிழக்கிலுள்ள நியு இங்கிலாந்து பகுதியில் பரந்த மலைகளும் 4000 அடிக்குமேல் உயரமுள்ள மலையுச்சிகளும் உள்ளன. மேற்கே அல்லிகெனி மலைகளும், அதன் தென்கிழக்கே பாறைத் தொடர்களும், பீட்மாண்டு மேட்டு நிலமும் இருக்கின்றன. தென்னசி (Tennessee), ஒகையோ முதலான ஆறுகள் இப்பகுதியிலிருந்து தொடங்குகின்றன.

3. உள்நாட்டுச் சமவெளிகள்: இப்பகுதி நாட்டின் மிகப்பெரிய இயற்கை அமைப்புப் பகுதியாகும்; கிழக்கு மேற்காக 1900 கி.மீ. தூரமும், வடக்கு தெற்காக 2100 கி.மீ. தூரமும் பரவியுள்ளது. முக்கிய ஆறுகளான மிசிசிப்பி, மிசூரி, பிளேட்டு, அர்கன்சாசு முதலானவை இங்கே ஓடுகின்றன. இவற்றின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. பெரும்பாலான உணவுப் பயிர்களும் வணிகப் பயிர்களும், இப்பகுதியில் விளைவிக்கப்படுகின்றன.

4. இராக்கி மலைகள்: வடக்கே கனடா நாட்டிலிருந்து தெற்கே நியூ மெக்சிகோ மாநிலம் வரை இம் மலைகள் பரவியுள்ளன. இதில் மலைத் தொடர்களும் பள்ளத்தாக்குகளும் மலையுச்சிகளும் இருக்கின்றன. எல்பெர்ட்டு,மாசிவ், ஆர்வார்ட்டு, பைக்சு முதலான மலையுச்சிகள் 14,000 அடி உயரத்திற்கு மேல் உள்ளன.


5. உள்நாட்டு மேட்டு நிலங்கள்: இவை இராக்கி மலைகளுக்கு மேற்கே, ஓரிகன் மாநிலத்திலிருந்து அரிசோனா மற்றும் நியூமெக்சிகோ மாநிலங்கள் வரை பரவியுள்ளன. இப்பகுதியின் வடக்கே கொலம்பியா மேட்டு நிலமும், மத்தியில் பெரும் வடிகால் நிலமும், இதன் தெற்கே கொலராடோ மேட்டு நிலமும் உள்ளன. பெரிய உப்பு ஏரி இங்கு உள்ளது.

6. பசிபிக்குக் கடற்கரை: கனடா நாட்டிலிருந்து மெக்சிகோ நாடு வரை பரவியுள்ளது. பல உயர்ந்த மலைத்தொடர்களும், வளமான பள்ளத்தாக்குகளும் இங்கு உள்ளன. மலைத்தொடர்கள் 2000 முதல் 9000 அடிவரை உயர்ந்துள்ளன. வடக்கேயுள்ள காசுகேட்டு மலைத்தொடர்களில் 14,400 அடி உயரமுள்ள இரெய்னியசு எரிமலை உள்ளது. சிர்ரா நெவேடா மலைத் தொடர்களில் உள்ள இலிட்னே மலை (14,500 அடி) அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள இரண்டாவது உயரமான மலையாகும். (அலாசுகாவில் உள்ள மாகின்லி மலையின் உயரம் 20,300 அடி) இம்மலையின் தெற்கேயுள்ள சாவுப் பள்ளத்தாக்கு கடல்மட்டத்திலிருந்து 280 அடி கீழ் மட்டத்தில் உள்ளது. கடற்கரையில் உள்ள இலாசு ஏஞ்சல்சும் சான் பிரான்சிசுகோவும் முக்கிய நகரங்களாகும்.

ஏரிகள்: அமெரிக்க ஐக்கிய நாட்டின் வடகிழக்கே சுபீரியர், ஈரோன், மிசிகன், ஈரி, ஒன்டேரியோ முதலான பரந்த ஏரிகள் கடல்களைப் போல் உள்ளன. அவற்றுள் மிசிகன் ஏரி மட்டுமே இந்நாட்டின் முழு அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கிறது. மற்றவற்றை அமெரிக்கா கனடா ஆகிய இரு நாடுகளும் பயன்படுத்துகின்றன. போக்குவரத்துக்கும் மீன் பிடிக்கும் தொழிலுக்கும் இவை பயன்படுகின்றன.

தட்ப வெப்ப நிலையும் மழையும்: நாடு மிகப் பரந்திருப்பதால் தட்பவெப்பநிலையில் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. அலாசுகாவில் 80°பா. வெப்பநிலையும் கலிபோர்னியாவில் 134°பா. வெப்பநிலையும் நிலவுகின்றது. பொதுவாக அமெரிக்கா குளிர் நாடாகும். மழை அளவிலும் மிகுந்த வேறுபாடு காணப்படுகிறது. அவாய்த் தீவுகளில் 460 அங்குலம் மழை பெய்கிறது. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் சில இடங்களில் இரண்டு அங்குல மழை கூடப் பெய்வதில்லை. இருப்பினும் அமெரிக்காவில் நீர்வளம் மிகுதியாக உள்ளது.

2. வரலாறு: கண்டுபிடிப்பு: கான்சுடான்டிநோபிள் என்ற நகரத்தைத் துருக்கியர்கள் கி.பி. 1453-ஆம் ஆண்டில் கைப்பற்றிக் கொண்டார்கள். அதையடுத்து ஐரோப்பிய நாடுகளையும் ஆசிய நாடுகளையும் இணைக்கும் வாணிகத் தொடர்பான நில வழிகளையும் நீர்வழிகளையும் அவர்கள் மூடிவிட்டார்கள். எனவே ஐரோப்பிய வணிகர்கள், வளம் கொழிக்கும் இந்தியா முதலான ஆசிய நாடுகளுடன்




அமெரிக்க ஐக்கிய நாடு - பதின்மூன்று குடியேற்ற நாடுகள்

வாணிகம் செய்ய முடியவில்லை. இந்த நிலையில் இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் காணப் போர்ச்சுகலும் இசுபெயினும் (Spain) முயற்சிகளை மேற்கொண்டன. போர்ச்சுகல் ஆப்பிரிக்காவைச் சுற்றிச் சென்று, கிழக்கு நோக்கிச் செல்லும் கடல் வழியைக் காண முயன்றுவந்தது. அப்பொழுது ஐரோப்பாவிலிருந்து மேற்கு நோக்கிச் சென்று, இந்தியாவுக்குக் கடல்வழி காண இசுபெயின் முயன்றது. அந்த முயற்சியின் விளைவாகக் கி.பி. 1492-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இசுபெயின் நாட்டினால் அனுப்பப்பட்ட கிரிசுடபர் கொலம்பசும் அவருடன் சென்ற மாலுமிகளும் பகாமா தீவுகளைக் கண்டு பிடித்தார்கள். இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் கண்டுபிடித்துவிட்டதாகவும், அத்தீவுகள் இந்தியாவுக்கு அருகிலுள்ள தீவுகள் என்றும் கொலம்பசு கருதினார். இசுபெயின் நாடு இந்தக் கண்டுபிடிப்பை மகிழ்ச்சியுடன் வரவேற்றது. அதன்பின்னர்க் கி.பி. 1493, 1498, 1502–4 ஆகிய ஆண்டுகளில் மேலும் மூன்று பயணங்களைக் கொலம்பசு மேற்கொண்டு அத்தீவுகளையும் பெருநிலப் பரப்பின் பல பகுதிகளையும் ஆராய்ந்து அறிந்தார். தாம் கண்டது புதியதொரு கண்டம் என்பதை அறியாமலேயே கொலம்பசு கி.பி. 1506-ஆம் ஆண்டு இறந்து விட்டார். இத்தாலி நாட்டைச் சேர்ந்த அமெரிகோ வெசுபுசி (Amerigo Vespucci) என்பவர், கொலம்பசு சென்று வந்தது ஒரு புதிய பெருநிலக் கண்டம் என்பதைக் கி.பி. 1570–ஆம் ஆண்டு தெளிவு படுத்தினார். அதையடுத்து அப்புதிய கண்டம் அமெரிக்கா என்று பெயரிடப்பட்டது.

இங்கிலாந்தின் 13 குடியேற்றங்கள் (1607-1732): இசுபெயின் கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இறுதிக்குள் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காஆகியவற்றின் பெரும்பகுதியில் தன் குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. தென் அமெரிக்காவின் கிழக்குப் பகுதியாகிய பிரேசில் பகுதியில், போர்ச்சுகலும் வடக்குப் பகுதியில் இங்கிலாந்து, பிரான்சு, நெதர்லாந்து ஆகியநாடுகளும் குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டன. வடஅமெரிக்காவின் வடக்குப் பகுதியிலும் தெற்குப் பகுதியிலும் பிரான்சு தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. இந்த ஐரோப்பிய நாடுகள், புதிய கண்டத்திலிருந்து பெருஞ் செல்வங்களைக் கொண்டு சென்றன. இந்தநிலையில் வட அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைக்கும் பணியை அரசி எலிசபெத்து (கி.பி. 1556–1603) காலத்திலிருந்து இங்கிலாந்து மிகுதிப் படுத்தியது. வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் இங்கிலாந்து மொத்தம் 16 குடியேற்றங்களை (Colonies) அமைத்தது. அவற்றுள் மூன்று சிறிய குடியேற்றங்கள், அண்டைக் குடியேற்றங்களுடன் இணைக்கப்பட்டதால், அமெரிக்க ஐக்கிய நாடு கி.பி. 1776–ஆம் ஆண்டு சுதந்தரம் பெற்றபோது, 13 குடியேற்ற மாநிலங்கள் இருந்தன. அவை, 1. வெர்சீனியா: சர் வால்ட்டர்




அமெரிக்க ஐக்கியநாடு - மாநிலங்கள்

ராலே, கி.பி. 1584-ஆம் ஆண்டு இங்கிலாந்தின் அரசி எலிசபெத்தின் நினைவாக இக்குடியேற்றத்தை அமைத்தார். எனினும், கி.பி. 1607-ஆம் ஆண்டுதான் இது ஒரு சிறந்த குடியேற்றமாக அமைக்கப்பட்டது. பல ஆங்கிலேயர்கள் அங்கே சென்று குடியேறி அதை விரிவுபடுத்தினார்கள். 2. பிளிமத்: ஆங்கிலத் திருச்சபையின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாத பலர், மேபிளவர் (May Flower) என்ற கப்பலில் கி.பி. 1620-ஆம் ஆண்டு வட அமெரிக்கா சென்று, இக்குடியேற்றத்தை அமைத்தார்கள். அவர்கள் 'புனிதப்பயணத் தந்தையர்' என்று குறிக்கப்படுகின்றனர். இக்குடியேற்றம் கி பி. 1691-ஆம் ஆண்டு மசாசுசெட்சு மாநிலத்துடன் இணைக்கப்பட்டது. 3. மசாசுசெட்சு: இது கி.பி. 1630-ஆம் ஆண்டு சான் விந்த்ரோப்பு முதலானவர்களால் அமைக்கப்பட்டது. அவர்கள் இங்கே உருவாக்கிய பாசுடன் (Boston) நகரம் பிற்கால வரலாற்றில் புகழ் பெற்றது. 4. மேரிலாந்து: இங்கிலாந்திலிருந்து சென்ற கத்தோலிக்கர்களால் கி.பி. 1634-ஆம் ஆண்டு இது அமைக்கப்பட்டது. 5. உரோடுத் தீவு: (Rhode Island) மசாசுசெட்சு குடியேற்றத்தில் இருந்த புராடெசுடெண்டு குருக்களுள் சில தூய்மையாளர்கள் கி.பி 1636-ஆம் ஆண்டில், உரோசர் வில்லியம்சு தலைமையில் உரோடு தீவுக்குச் சென்று அதை விரிவுபடுத்தினார்கள் 6. கனெக்டிகட்டு: கி பி. 1636-ஆம் ஆண்டு மசாசுசெட்சு குடியேற்றத்திலிருந்து தாமசு உக்கர் தலைமையில் சென்ற குருமார்கள், கனெக்டிகட் ஆற்றுப் பகுதியில் கி.பி. 1636-ஆம் ஆண்டு இதை அமைத்தார்கள். 7. நியு ஏவன்: 1638-ஆம் ஆண்டு மசாசுசெட்சு குடியேற்றத்திலிருந்து சென்றவர்கள் இதை அமைத்தார்கள். இது கி.பி. 1662-ஆம் ஆண்டு கனெக்டிகட்டுடன் இணைக்கப்பட்டது. 8. மெயின்: இது கி பி. 1639-ஆம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து சென்ற சர் பெர்னாண்டோ கார்செசு என்பவரால் அமைக்கப்பட்டது. இது கி.பி 1677-இல் மசாசுசெட்சுடன் இணைக்கப்பட்டது. 9. நியூ ஆம்சயர் (New Hamshire): சான் பேசன் என்பவரால் கி.பி. 1639-ஆம் ஆண்டில் இது அமைக்கப்பட்டது. 10. வடகரோலினா. 11. தென்கரோலினா: ஆங்கில அரசில்

பணிபுரிந்த உயர் அலுவலர்களால் கி.பி. 1670-ஆம் ஆண்டு அளவில் கரோலினா குடியேற்றம் அமைக்கப்பட்டது. அது விரைவாக விரிவடைந்ததால், கி.பி. 1691-இல் இரண்டு குடியேற்றங்களாகப் பிரிக்கப்பட்டது. 12. நியூயார்க்கு: இங்கிலாந்தின் அரசர் இரண்டாம் சார்லசின் உடன் பிறந்தவராகிய யார்க்கு கோமகனால் இது கி.பி. 1663-இல் அமைக்கப்பட்டது. இங்கு ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டிருந்த தச்சு (Datch) நாட்டின் அதிகாரம் ஒடுக்கப்பட்டது. 13. நியூசெர்சி(New Jersey): நியூயார்க்குக்குடியேற்றத்தின் ஒரு பகுதி கி.பி. 1664-ஆம் ஆண்டு நியூ செர்சி குடியேற்றமாக அமைக்கப்பட்டது. 14. பென்சில்வேனியா: வில்லியம் பென் என்பவரால் கி.பி. 1681-இல் அமைக்கப்பட்டது. அவரால் இங்கு உருவாக்கப்பட்ட பிலடெல்பியா நகரம் பிற்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்றது. 15. தெலாவர்: (Delaware) முதலில் இங்குச் சுவீடன் நாட்டினர் குடியேறியிருந்தனர். இது கி.பி. 1664-இல் ஆங்கிலேயர்களால் பெறப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. 16. சியார்சியா (Georgia) கி.பி. 1732-இல் ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்ட கடைசிக் குடியேற்றமாகும். சேம்சு ஓகல்தோர்ப்பு(James Oglethorpe) இதன் வளர்ச்சிக்கு முக்கியமானவராக இருந்தார்.

இவ்வாறு அமைக்கப்பட்ட குடியேற்றங்கள் பலவற்றை ஆங்கில அரசே ஏற்று ஆட்சி செய்தது. ஒவ்வொரு குடியேற்றத்திலும் நிருவாகத் தலைவராக ஒவ்வோர் ஆளுநர் இருந்தார். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம் இருந்தது. நீதிமன்றங்களும் இருந்தன. பொருளாதார நிலையில் வடக்கு மாநிலங்களில், தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது. மத்திய மாநிலங்களில் உணவு வகைப் பயிர்கள் விளைவு செய்யப்பட்டன. தென் மாநிலங்களில் தோட்டப் பயிர்கள் பயிரிடப்பட்டன. இக்குடியேற்றங்களில் வாழ்ந்த மக்களுள் புராடசுடண்டுகளும் கத்தோலிக்கர்களும் இருந்தனர். பெரும்பாலோர் இங்கிலாந்திலிருந்து சென்று இங்கே குடியேறினார்கள். என்றாலும், பல ஆயிரம் மக்கள் மற்ற ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் சென்று குடியேறினார்கள். ஆலைகளிலும் வயல்களிலும் உழைக்க, ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து நீக்கிரோக்களையும் அவர்கள் அழைத்துச் சென்றார்கள். குடியேற்றங்களின் பல இடங்களில் பள்ளிகளும் கல்லூரிகளும் அமைக்கப்பட்டன. ஒன்பது புகழ்மிக்க கல்லூரிகள் கி.பி. 1775-ஆம் ஆண்டுக்குள் இயங்கி வந்தன. ஐம்பது செய்தி ஏடுகள் வெளியிடப்பட்டன. ஐரோப்பிய நாடுகளின் அரசியல், சட்டம், தத்துவம், சமயம் முதலான துறைகளின் உயர்கல்வியை அக்கல்லூரிகள் கற்பித்தன. பாசுடன், நியூயார்க்கு,பிலடெல்பியா, சார்சுடன் முதலானவை புகழ்மிக்க நகரங்களாகவும் பண்பாட்டு மையங்களாகவும் விளங்கின.

## அமெரிக்கச் சுதந்தரப் போர் (கி.பி. 1775-1781)

பதின்மூன்று அமெரிக்கக் குடியேற்றங்களின் வளங்களைத் தன் நலனுக்குப் பயன்படுத்த ஆங்கில அரசு விரும்பியது. இதனால் கி.பி. 17-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே பல வாணிகக் கட்டுப்பாடுகளை அவற்றின்மீது ஆங்கில அரசு திணித்தது. இயற்கையாகவே சுதந்தர வேட்கை மிகுந்த அமெரிக்கர்கள் அத்தகைய கட்டுப்பாடுகளை ஏற்க மறுத்தனர். சான் லாக் (John Locke), மாண்டெசுகியு (Montesquieu), வால்டேர் (Voltaire), உரூசோ (Rousseau) முதலானவர்களின் அரசியல் தத்துவங்களை அறிந்திருந்த அமெரிக்க அறிஞர்கள், ஆங்கிலப் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களை ஏற்க மறுத்தனர். ஆங்கில அரசு கி.பி. 1764-இல் சர்க்கரைச் சட்டத்தை இயற்றி, சர்க்கரை இறக்குமதி வரியை உயர்த்தியது. இதன்மூலம்அரசுக்கு நாற்பத்தைந்தாயிரம் பவுன் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இதை அமெரிக்கர்கள் வன்மையாக எதிர்த்தார்கள். எனினும், அடுத்த ஆண்டே (கி.பி. 1765) முத்திரைச் சட்டத்தை ஆங்கில அரசு இயற்றியது. அதன்படி அரசு முத்திரையிடப்பட்ட தாள்களில்தான் பணம் மற்றும் சட்டமுறையிலான பத்திரங்கள் எழுதப்படவேண்டும் என ஆங்கில அரசு ஆணையிட்டது. அதன்மூலம் ஆண்டுக்கு அறுபதாயிரம் பவுன் வருவாயை அரசு எதிர்பார்த்தது. ஆனால் அதை எதிர்த்துப் பதின்மூன்று குடியேற்றங்களிலும் வன்முறை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. எனவே ஆங்கில அரசு முத்திரைச் சட்டத்தைக் கி.பி. 1766-ஆம் ஆண்டு விலக்கிக் கொண்டது. அதை அமெரிக்கர்கள் பெரும் வெற்றியாகக் கருதினார்கள். ஆனால் அடுத்த ஆண்டே (கி.பி. 1767) தலைமை அமைச்சர் வில்லியம் பிட்டு (William Pitt) நிதி அமைச்சர் சார்லசு டவுன்செண்டு (Charles Townshend) ஆகியோர் தூண்டுதலால் பாராளுமன்றம் 'டவுன்செண்டு சட்டங்களை' இயற்றியது. அதன்படி அமெரிக்கர்கள் இறக்குமதி செய்த கண்ணாடி, காகிதம் முதலான பல வகையான பொருள்களின் மீது இறக்குமதி வரி விதிக்கப்பட்டது. அதை அமெரிக்கர்கள் மிக வன்மையாக எதிர்த்தார்கள். ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அமெரிக்கர்களுக்கு இடமில்லையென்றால் வரி கொடுக்க முடியாது (No taxation without representation) என்று அவர்கள் உயர் குரல் எழுப்பினார்கள். எனவே டவுன்செண்டு சட்டங்களையும் ஆங்கில அரசு விலக்கிக் கொண்டது. பின்னர்க் கி. பி. 1773-ஆம் ஆண்டு மே மாதம் தலைமை அமைச்சர் நார்த்து(North) தின் அமைச்சரவை, தேயிலைச் சட்டத்தை இயற்றியது. அதன்படி இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தேயிலையை அமெரிக்காவில் விற்க ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு முழுதனியுரிமை கொடுக்கப்பட்டது. அதனால் தேயிலை வாணிகம் செய்து வந்த அமெரிக்க வணிகர்கள், தங்கள் தொழிலை இழக்க வேண்

டியவராயினர். எனவே அமெரிக்கர்கள் அச்சட்டத்தை எதிர்த்தார்கள். அமெரிக்காவிற்குச் சென்ற தேயிலைக் கப்பல்களை அவர்கள் புறக்கணித்தார்கள். அவர்கள் கி.பி. 1773–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 16-ஆம் நாள் பாசுடன் துறைமுகத்தில் கப்பல்களிலிருந்த தேயிலை முழுவதையும் கடலில் எறிந்துவிட்டார்கள். இதுவே புகழ்மிக்க பாசுடன் தேநீர் விருந்து (Boston Tea Party) என்று சொல்லப்படுகிறது. அந்த நிகழ்ச்சியை அடுத்து மசாசுசெட்சு மாநில ஆளுநர், அமெரிக்கர்களின் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார். அமெரிக்கர்கள், சுதந்தரப் போருக்குத் தயாரானார்கள்.

ஆங்கிலப் படைகள் கி.பி. 1775–ஆம் ஆண்டு ஏப்ரல் 19–ஆம் நாள் லெக்சிங்டன் என்ற இடத்தில் அமெரிக்கர்களின் மீது சுட்டன. அதையடுத்து அமெரிக்கச் சுதந்தரப் போர் தொடங்கிவிட்டது. அதே ஆண்டு மே மாதம் சார்சு வாசிங்டன் அமெரிக்கப் படைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே அமெரிக்க ஐக்கிய நாடு சுதந்தரம் பெற்றுவிட்டதாகக் கி.பி. 1776–ஆம் ஆண்டு சூலை 4-ஆம் நாள் சுதந்திரப் பேரறிக்கை வெளியிடப் பட்டது. அதை எழுதியவர் தாமசு செப்பர்சன் (Thomes Jefferson) ஆவார். ஆங்கிலப் படைகள் கி.பி. 1777–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சாரடோகா என்ற இடத்தில் அமெரிக்கப் படைகளால் தோற்கடிக்கப்பட்டன. இது போரின் திருப்பு முனையாகும். அமெரிக்காவின் இவ்வெற்றிக்குப் பின்னர், பிரான்சு இசுபெயின், நெதர்லாந்து ஆகிய நாடுகள் அமெரிக்கர்களுக்கு நேரடியாக உதவி செய்தன. படைத் தலைவர் இலபாயத் (Lafayette) தலைமையில் பெரும் படையைப் பிரான்சு, அமெரிக்காவுக்கு அனுப்பியது. ஆங்கிலப் படைத்தலைவர் காரன்வாலிசு கி.பி. 1781–ஆம் ஆண்டு அக்டோபர் 19–ஆம் நாள், யார்க்டவுன் என்ற இடத்தில் சார்சு வாசிங்டனிடம் சரணடைந்தார். அதனோடு போர் முடிவுற்றது.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது போரின் வெற்றிக்குச் சான் டிக்கின்சன், பெஞ்சமின் பிராங்க்லின், தாமசு செப்பர்சன், சான் ஆடம்சு, சாமுவேல் ஆடம்சு, தாமசு பெயின் முதலான அறிஞர்கள் அமெரிக்க மக்களை வழிநடத்திச் சென்றனர். இங்கிலாந்து கி.பி.1783- ஆம் ஆண்டு செய்து கொள்ளப் பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி, அமெரிக்காவின் சுதந்தரத்தை ஏற்றுக்கொண்டது. அமெரிக்க ஐக்கிய நாடு சுதந்தரம் பெற்றபோது, இங்கிலாந்தில் மூன்றாம் சார்சு (கி.பி. 1760-1820)மன்னராகவும் நார்த்து பிரபு தலைமை அமைச்சராகவும் இருந்தனர்.

அரசியல் சட்டம் (கி.பி. 1789): சுதந்தரப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, சுதந்தரப் பேரறிக்கை வெளியிடப்பட்ட பின்னர், சான் டிக்கின்சன் (John Dickinson) தலைமையில் பதின்மூன்று பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. அது சுதந்தர நாட்டிற்கு வேண்டிய புதிய அரசியல் சட்டத்தை எழுதி முடித்தது (நவ.1776). அச்சட்டம் போர் முடிந்த பின்னர்க் கி.பி. 1781–ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. அதன்படி அமெரிக்க ஐக்கிய நாடு ஓர் இணைப் பரசாகச் (Confederation) செயற்பட்டது. மத்திய அரசு பிலடெல்பியாவில் செயற்பட்டது. இணைப் பரசு அமைப்பில் மத்திய அரசியல் சட்டமன்றம் மட்டும் இருந்தது. நீதித்துறையும் நிருவாகத்துறையும் இல்லை. அயல்நாட்டு விவகாரங்கள், பாதுகாப்பு முதலான இன்றியமையாத் துறைகளை மட்டுமே மத்திய அரசு கவனித்துக் கொண்டது. மற்ற எல்லா அதிகாரங்களையும் மாநில அரசுகளே கவனித்துக் கொண்டன. இத்தகைய அமைப்பில் நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டன. மத்திய அரசு வலிமையாக இல்லை. எனவே புதிய அரசியல் சட்டத்தை எழுத எல்லா மாநிலப் பிரதிநிதிகளையும் கொண்ட மாநாடு கி.பி. 1787–ஆம் ஆண்டு மே மாதம் பிலடெல்பியாவில் கூட்டப்பட்டது.

இந்தப் பிலடெல்பியா மாநாடுதான், இப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடைமுறையில் உள்ள அரசியல் சட்டத்தை எழுதிமுடித்தது. இம்மாநாட்டில் ஐம்பத்தைந்து அரசியல் அறிஞர்கள் கலந்துகொண்டார்கள். சார்சு வாசிங்டன் தலைமை தாங்கினார். சேம்சு மேடிசன், சார்சு மேசன், பெஞ்சமின் பிராங்க்லின், அலெக்சாண்டர் ஆமில்டன், சான் டிக்கின்சன் முதலானவர்கள் இதில் பங்கு கொண்ட குறிப்பிடத்தக்க அறிஞர்களாவர். அவர்கள் எழுதி முடித்த புதிய அரசியல் சட்டம் கி.பி. 1789–ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் நடைமுறைக்கு வந்தது.

புதிய அரசியல் சட்டத்தில் ஏழு பிரிவுகள் உள்ளன. முதல் பிரிவு, அமெரிக்க ஐக்கிய நாட்டின் சட்டப் பேரவையைப் பற்றிக் கூறுகிறது. அது காங்கிரசு என்று சொல்லப்படுகிறது. அதன் மேலவை செனெட் என்றும் கீழவை பிரதிநிதிகள் அவை என்றும் சொல்லப்படுகின்றன. மேலவை உறுப்பினர்களின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகள்; கீழவை உறுப்பினர்களின் பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள். அவர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், அவர்களின் அதிகாரங்கள் யாவை என்பனவற்றை முதல் பிரிவு விளக்குகின்றது. இரண்டாம் பிரிவு, நாட்டின் நிருவாகத் தலைவராகிய குடியரசுத் தலைவரின் தேர்தல் முறை, அவர் அதிகாரங்கள் முதலானவற்றை விவரிக்கின்றது. மூன்றாம் பிரிவு, அந்நாட்டின் நீதித்துறை அமைப்பை விளக்குகிறது. நான்காம் பிரிவு, அமெரிக்கர்களின் சிறப்புச் சலுகைகள் யாவை என்பதை விளக்குகின்றது. ஐந்தாம் பிரிவு, அரசியல் திருத்தச் சட்டம் எவ்

வாறு கொண்டுவருவது என்பதை விளக்குகிறது. ஆறாம் பிரிவு, அரசியல் சட்டத்தையும் அதற்கேற்ப இயற்றப்படும் சட்டங்களையும் அமெரிக்கர்கள் மதிக்க வேண்டுமெனக் கூறுகிறது. ஏழாம் பிரிவு, பதின்மூன்றுள் ஒன்பது மாநிலங்கள் இந்த அரசியல் சட்டத்தை ஏற்றுக்கொண்டால் இது நடைமுறைக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்று கூறுகின்றது. இந்த அரசியல் சட்டத்தில் அமெரிக்கர்களின் அடிப்படை உரிமைகள் யாவை என்பது கூறப்படவில்லை. எனவே, பின்னர் (செப். 1789) இயற்றப்பட்ட முதல் பத்து அரசியல் திருத்தச் சட்டங்கள், அடிப்படை உரிமைகள் யாவை என்பதை விளக்குகின்றன. இதுவரை மொத்தம் இருபத்து நான்கு அரசியல் திருத்தச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

வாசிங்டன் முதல் இலிங்கன் வரை கி.பி.(1789-1865): அமெரிக்க ஐக்கிய நாட்டின் முதல் குடியரசுத் தலைவராகச் சார்சு வாசிங்டன் (கி.பி.1789-97) பொறுப்பேற்றார். நாட்டின் தலைநகரமாக நியூயார்க் தேர்ந்தெடுக்கப்பட்டது. அப்பொழுது புதிய நாட்டின் மக்கள் தொகை நாற்பது லட்சமாக இருந்தது. அவர்களுள் எட்டு லட்சம் பேர் நீக்கிரோக்கள். வாசிங்டன் அமர்த்திய அமைச்சர்களுள் உள்நாட்டு அமைச்சர் தாமசு செப்பர்சன், நிதி அமைச்சர் அலெக்சாண்டர் அமில்டன் ஆகியோர் மிகச் சிறந்தவர்களாவர். வாசிங்டனின் ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவின் தலைமை நீதிமன்றமும் மற்றக் கீழ் நீதிமன்றங்களும் அமைக்கப்பட்டன. அமெரிக்கர்களின் அடிப்படை உரிமைகள் பற்றிய பத்து அரசியல் திருத்தச் சட்டங்கள் (செப். 1791) கொண்டுவரப்பட்டன. நிதி அமைச்சர் ஆமில்டனின் முயற்சியால் ஐக்கிய அமெரிக்க வங்கி (1791) அமைக்கப்பட்டது. ஆமில்டன் நடைமுறைப்படுத்திய பணம் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளைத் தாமசு செப்பர்சன் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆமில்டன் தொழிலதிபர்களை ஆதரித்தார். செப்பர்சன் வேளாண்மை செய்பவர்களை ஆதரித்தார். பிரான்சில் கி.பி 1789-ஆம் ஆண்டு சூன் மாதம் புரட்சி தொடங்கியது. அப்புரட்சியின் போது பல முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அப் புரட்சி ஒரு பயங்கர இயக்கமாக மாறியது. நூற்றுக்கணக்கான பிரபுக்கள் கொல்லப்பட்டனர். அரசர் பதினாறாம் லூயி கொல்லப்பட்டார். இப் புரட்சியைச் செப்பர்சன் ஆதரித்தார். மாறாக, ஆமில்டன் வன்மையாகக் கண்டித்தார். இந்த நிலையில் அமெரிக்க அரசு, கி.பி. 1793-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடுநிலை அறிக்கையை வெளியிட்டது. பொதுவாக வாசிங்டன், ஆமில்டனின் கருத்துகளை ஆதரித்தார். அமெரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டபோது, அந்நாட்டில் அரசியல் கட்சிகள் இல்லை. மேற்கூறப்பட்ட கருத்து வேறுபாடுகளால், செப்பர்சன் மற்றும் சேம்சு மேடிசன் முதலானவர்கள் மக்களாட்சிக் குடியரசுக் கட்சியினர் என்று குறிக்கப்பட்டார்கள். வாசிங்டன் மற்றும் ஆமில்டன் முதலானவர்கள் கூட்டாட்சிக் கட்சியினர் என்று சொல்லப்பட்டனர். இவ்வரசியல் கட்சிகளின் எழுச்சி, வாசிங்டனின் ஆட்சிக் கால முக்கிய நிகழ்ச்சியாகும். மேலும் இங்கிலாந்துடனும் இசுபெயினுடனும் நல்லுறவு உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டன.

இரண்டு முறை குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய வாசிங்டன் மூன்றாவது முறை போட்டியிட மறுத்துவிட்டார். எனவே கூட்டாட்சிக் கட்சியைச் சேர்ந்த சான் ஆடம்சு (கி.பி. 1797-1801) குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கும் பிரான்சுக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தன. அவற்றைப் போக்கவும் நல்லுறவு உடன்படிக்கையைச் செய்துகொள்ளவும் ஆடம்சு ஒரு தூதுக் குழுவை அனுப்பினார் (கி.பி. 1797). அது பிரான்சில் மூவர் கொண்ட தூதுக் குழுவைச் சந்தித்தது. பிரான்சின் தூதுக்குழு உறுப்பினர்களின் பெயர்கள் தரப்படவில்லை. அவர்கள் X, Y, Z என்றே குறிப்பிடப்பட்டார்கள். அவர்கள் பெருந்தொகையைக் கையூட்டாகக் கேட்டார்கள். ஆனால், அத்தொகையைக் கொடுக்க அமெரிக்க அரசு மறுத்துவிட்டது. பின்னர் நெப்போலியன் பிரான்சின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன், இரு நாடுகளுக்குமிடையே நல்லுறவு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது (கி.பி. 1799). வளர்ந்து வந்த மக்களாட்சிக் குடியரசுக் கட்சியை ஒடுக்க ஆடம்சு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். எனினும் கி.பி. 1800-ஆம் ஆண்டு நடைபெற்ற குடியரசுத் தலைவர் தேர்தலில், அக்கட்சியின் வேட்பாளர் தாமசு செப்பர்சன் வெற்றிபெற்றார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாலும் பதவிப் பொறுப்பு ஏற்க மூன்று மாதங்கள் இருந்தன. அந்த இடைக் காலத்தில் ஆடம்சு, தம் ஆதரவாளர்கள் பலரை நீதிபதிகளாகவும் உயர் அதிகாரிகளாகவும் அமர்த்திவிட்டார். அவர்கள் 'நள்ளிரவு நீதிபதிகள்' என்று ஏளனமாகக் குறிக்கப்பட்டார்கள் அவர்கள் அடுத்த முப்பதாண்டுக் காலத்தில் பணக்கார வருக்கத்தினருக்குச் சாதகமாகத் தீர்ப்புகளை வழங்கினார்கள்.

தாமசு செப்பர்சனின் (கி.பி. 1801-1809) வெற்றி ஏழை எளியவர்களின் வெற்றியாகக் கருதப்பட்டது. அவர் காலத்தில்தான் வாசிங்டன், நாட்டின் புதிய தலைநகரமாயிற்று. சுதந்தரப் பேரறிக்கையை (கி.பி. 1776) எழுதிய அவர், மனிதனின் அடிப்படை உரிமைகளைக் காப்பதில் அக்கறை கொண்டார். எனவே ஆடம்சு காலத்தில் கொண்டுவரப்பட்ட பல சட்டங்களை அவர் விலக்கிக்கொண்டார். நீதிமன்றங்களோடு அவர் நீண்ட போராட்டம் நடத்தவேண்டியதாயிற்று. அவர் கி.பி. 1803-ஆம் ஆண்டு பிரான்சுக்குச் சொந்

மான இலூசியானா என்ற பெருநிலப் பகுதியை வாங்கித் தம் நாட்டுடன் சேர்த்துக் கொண்டார். இது செப்பர்சனின் மிகப் பெரிய வெற்றியாகக் கருதப்பட்டது. இப்பகுதி, பின்னர்ப் பதின்மூன்று மாநிலங்களாக அமைக்கப்பட்டது. செப்பர்சன் குடியரசுத் தலைவராக இருந்தபோதுதான், பிரான்சின் பேரரசர் நெப்போலியன் இங்கிலாந்துக்கு எதிராகக் கண்டத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார் (கி.பி. 1806–7). அதனால் நடுநிலை நாடான அமெரிக்கா பெருந்தொல்லைக்குட்பட்டது.

செப்பர்சனுக்குப்பின்னர் அவருடைய நண்பரும் மக்களாட்சிக் குடியரசுக் கட்சியின் சிறந்த தலைவருமான சேம்சு மேடிசன் (கி.பி. 1809-17) குடியரசுத் தலைவரானார். அவர் காலத்தில் அமெரிக்கா, இங்கிலாந்துடன் கி.பி. 1812–15–ஆம் ஆண்டுகளில் ஒரு பெரிய போரை நடத்தியது. ஆங்கிலேயர்கள் கனடாவிலிருந்து, அமெரிக்கர்களுக்கு எதிராகச் சிவப்பிந்தியர்களுக்குப் போர்க் கருவிகளைக் கொடுத்துதவியதால் இப்போர் மூண்டது. ஆங்கிலப் படை, அமெரிக்கப் படைகளைப் பல இடங்களில் தோற்கடித்தாலும், இறுதியில் அமெரிக்காதான், இப்போரில் வென்றது.

சேம்சு மன்ரோவின் (கி.பி. 1817–25) ஆட்சிக் காலம் ‘நல்லுறவுக் காலம்’ என்று சொல்லப்படுகிறது. உள்நாட்டு நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை அரசியல் கட்சிகளிடையேயும் மக்களிடையேயும் நல்லுறவு நிலவியதாலும், பொருளாதார வளம் ஏற்பட்டதாலும் அவர் காலம் அவ்வாறு சொல்லப்படுகிறது நெடுஞ்சாலைகளும் கால்வாய்களும் அமைக்கப்பட்டன. இசுபெயினின் ஆட்சிக்குட்பட்டிருந்த புளோரிடா (Florida) வை அமெரிக்க அரசு விலைக்கு வாங்கியது. இலத்தீன் அமெரிக்க நாடுகளுள் பெரும்பாலானவை, ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து கி.பி. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விடுதலை பெற்றன. அந்த ஐரோப்பிய நாடுகள் மீண்டும் தங்கள் ஆதிக்கத்தை இலத்தீன் அமெரிக்கா நாடுகளின்மீது ஏற்படுத்த முயன்றன. அப்பொழுதுதான் கி.பி.1823–ஆம் ஆண்டு, புகழ்மிக்க மன்ரோ கொள்கையைக் குடியரசுத் தலைவர் வெளியிட்டார். அக்கொள்கை, அமெரிக்கக் கண்டத்தில் ஐரோப்பிய நாடுகள் இனி குடியேற்றங்களை அமைக்கக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் அதை அமெரிக்காவுக்கு எதிரான பகைமை நடவடிக்கையாகக் கருதப்படும் என்றும், அதே போல அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளின் விவகாரங்களில் தலையிடாது என்றும் தெளிவுபடுத்தியது. அமெரிக்காவின் பிற்கால அயல்நாட்டு உறவு வரலாற்றில் இக்கொள்கை அடிப்படையாக விளங்கியது. எனினும் இலத்தீன் அமெரிக்க நாடுகள், மன்ரோ கொள்கையை வரவேற்கவில்லை.

ஆண்ட்ரு சாக்சன் (கி.பி. 1829–37) ஏழை எளியவர்களின் நண்பனாக விளங்கினார். முதல் முறையாக ஏழைக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் அந்நாட்டின் குடியரசுத் தலைவர் ஆனார். அவர் காலத்திலிருந்துதான் கட்சித் தொண்டர்களுக்கும் தலைவர்களுக்கும் அரசு உயர் பதவிகளைத் தரும் வழக்கம் (Spoils System) தொடங்கியது. பணக்கார வருக்கத்தினரை அவர் வெறுத்தார். அமெரிக்க வங்கி மூடப்படுவதற்கு அவர் காரணமாக இருந்தார்.

கி.பி. 1837முதல் 1861 வரை ஆட்சி செய்த குடியரசுத் தலைவர்களுள் முக்கியமானவர்களாகக் குறிப்பிடத்தக்கவர்கள் யாரும் இல்லை. எனினும் அக்காலக் கட்டத்தில் அமெரிக்கா மேற்குநோக்கி விரிவடைந்தது. அமெரிக்கா கி.பி. 1776–இல் சுதந்தரம் பெற்றபோது, பதின்மூன்று மாநிலங்களைக்கொண்ட சிறிய நாடாக இருந்தது. அந்நாட்டில் 1861–ஆம் ஆண்டு முப்பத்து மூன்று மாநிலங்கள் இருந்தன. அதாவது அமெரிக்கா மேற்கு நோக்கி விரிவடைந்து கொண்டே சென்றது. இங்கிலாந்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி (கி.பி. 1783) அமெரிக்காவின் நிலப்பரப்பு மிசிசிப்பி ஆறு வரை விரிவடைந்தது. அமெரிக்கா கி.பி. 1803-ஆம் ஆண்டு இலூசியானா என்ற பெருநிலப்பரப்பைப் பிரான்சிடமிருந்து விலைக்கு வாங்கியது. அது கி.பி. 1819–ஆம் ஆண்டு இசுபெயினிடமிருந்து புளோரிடாவைப் பெற்றது. தெக்சாசு (Texas) என்ற பகுதி, கி.பி. 1845–இல் அமெரிக்காவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. அது அதற்கு முன் மெக்சிகோவின் ஒரு பகுதியாக இருந்தது. ஓரிகான் என்ற பகுதி கி.பி. 1846–ஆம் ஆண்டு, ஆங்கில ஆதிக்கத்தினின்று விடுவிக்கப்பட்டு, அமெரிக்காவோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது. அமெரிக்கா, மெக்சிகோவுடன் போர் தொடுத்துக் கி.பி. 1848–ஆம் ஆண்டு கலிபோர்னியா நியூமெக்சிகோ ஆகிய பகுதிகளைக் கைப்பற்றிக்கொண்டது. இங்ஙனம், கி.பி. 1850–ஆம் ஆண்டுக்குள் அட்லாண்டிக்குக் கடல் முதல் பசிபிக்குப் பெருங்கடல் வரை அமெரிக்கா விரிவடைந்தது. மக்கள் புதிய நிலப்பகுதிகளில் எல்லாம் சென்று குடியேறுவதற்கு மத்திய அரசு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுத்தது.

அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாற்றில் உள்நாட்டுப் போர் (கி.பி. 1861–65) குறிப்பிடத்தக்கதொரு நிகழ்ச்சி ஆகும். அப்போருக்குப் பல காரணங்கள் இருந்தாலும் நீக்கிரோ அடிமை முறையே சிறந்த காரணமாகும். தென் மாநிலங்கள் அடிமைமுறை தொடர்ந்து இருக்கவேண்டும் என விரும்பின. ஆனால், வடமாநிலங்கள் அடிமை முறையை ஒழிக்க விரும்பின. அடிமை முறையை ஒழிப்பதைத் தம் குறிக்கோளாகக் கொண்ட ஆபிரகாம் லிங்கன் குடி

யரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் (கி.பி. 1860) உள்நாட்டுப் போர் தொடங்கிவிட்டது. பதினொரு தென் மாநிலங்கள், செப்பர்சன் டேவிசு (Jafferson Davis) என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்து, மத்திய அரசை எதிர்த்துப் போரை நடத்தின. குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற ஆபிரகாம் லிங்கன் நாட்டின் ஒற்றுமையைக் காக்கத் தென் மாநிலங்கள் மீது போர் தொடுக்கவேண்டிய தாயிற்று. இறுதியில் தென் மாநிலங்கள் தோற்கடிக்கப்பட்டன. போர் கி.பி. 1865 ஏப்ரல் மாதம் முடிவுற்றது. ஆனால் அடுத்த ஒரு வாரத்திற்குள் ஆபிரகாம் லிங்கன், சான் வில்கீசு பூத்து என்பவனால் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும் நாட்டின் ஒற்றுமை காப்பாற்றப்பட்டது. போர் நடைபெற்றுக் கொண்டிருந்தபோதே இலிங்கன் கி.பி. 1863 சனவரி முதல் நீக்கிரோ அடிமை முறையை ஒழித்தார்.

புனரமைப்புத் திட்டம் முதல் புதிய பொருளாதாரக் கொள்கை வரை (கி.பி. 1865–1945): உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர் நாட்டின் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்தவும், சீரழிந்த பொருளாதார நிலையைச் செம்மைப்படுத்தவும், விடுதலை பெற்ற நீக்கிரோக்களுக்குப் புது வாழ்வு தரவும் மாற்றியமைக்கும் திட்டம் (Reconstruction Programme கி.பி. 1865–77) மேற்கொள்ளப்பட்டது. அத்திட்டக் காலத்தில் பல இலட்சம் தாலர்கள் (Dollars) செலவு செய்யப்பட்டன; பல ஊழல்களும் முறைகேடுகளும் நடைபெற்றன. அப்பொழுது ஆண்ட்ரு சான்சனும், யுலிசிசு கிராண்ட்டும் (Ulysses Grant) குடியரசுத் தலைவர்களாக இருந்தார்கள்.

உள்நாட்டுப் போர் முடிந்த பின்னர்க் கி.பி. 1865 முதல் 1900 வரை அந்நாட்டில் வியத்தகு தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. புகைவண்டித் தொழில் துறையில் கார்னிலியசு வாண்டர்பில்டு (கி.பி. 1794–1877), இரும்பு எஃகுத் தொழிலிலும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலிலும் ஆண்ட்ரு கார்னீசு (Andrew Carneige) (கி.பி. 1835–1919), எண்ணெய்த் தொழிலில் சான் ராக்பெல்லர் (கி.பி. 1839–1937), மின் சக்தி, மின் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தியில் தாமசு ஆல்வா எடிசன் (கி.பி. 1847–1931), தொலைபேசித் தொழிலில் அலெக்சாண்டர் கிரகாம் பெல் (கி.பி. 1847–1922), வங்கித் தொழில் வளர்ச்சியில் சே.பி. மார்கன் (கி.பி. 1837–1913) போன்றவர்கள் குறிப்பிடத்தக்க நற்பணியைச் செய்தனர். அவர்களின் அயராத முயற்சிகளால் அமெரிக்கா கி.பி. 19–ஆம் நூற்றாண்டு முடிவதற்குள் பெருந்தொழில் வளர்ச்சி பெற்ற நாடாக மாறியது. அதன் விளைவாகத் தொழிலாளர் இயக்கங்களும் குடியானவர் இயக்கங்களும் வலுப்பெற்றன.

தொழில் வளர்ச்சி ஏற்பட்டுவந்த அதேகாலத்தில், அமெரிக்கா ஒரு ஏகாதிபத்திய நாடாகவும் மாறியது. அதாவது அமெரிக்காவின் எல்லைகளுக்கப்பால் இருந்த பல நிலப்பகுதிகளை அந்நாடு கைப்பற்றிக்கொண்டு அங்கெல்லாம் தன் அரசியலையும் பொருளாதார ஆதிக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டது. அமெரிக்கா, கி.பி. 1867–ஆம் ஆண்டு அலாசுகாவை உருசியாவிடமிருந்து எழுபத்திரண்டு இலட்சம் தாலருக்கு வாங்கியது. அதே ஆண்டு மிட்வே தீவுகளையும் அந்நாடு கைப்பற்றிக்கொண்டது. சமோவா தீவின் பெரும் பகுதி கி.பி. 1878–ஆம் ஆண்டில் அந்நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்பட்டது. அவாய்த் தீவுகள் கி.பி. 1875 முதல் அமெரிக்காவின் பாதுகாப்பில் இருந்தன. அத்தீவுகளைக் கி.பி. 1898–ஆம் ஆண்டு அமெரிக்கா தன்னுடன் இணைத்துக்கொண்டது. அதே ஆண்டு கியூபா சிக்கலின் விளைவாக, இசுபெயின் தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்து அந்நாட்டின் குடியேற்றங்களாக இருந்த கியூபா, பிலிப்பீன்சு, குவாம் தீவு ஆகியவற்றை அமெரிக்கா கைப்பற்றிக் கொண்டது. சீனாவில் வாணிகம் செய்யக் கி.பி. 1899–இல் வெளியிடப்பட்ட திறந்த கதவுக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இங்கிலாந்து, பிரான்சு, உருசியா, அமெரிக்கா முதலான நாடுகள் உரிமைகள் பெற்றன. கடற்படைத் தலைவர் மாத்யூ சி. பெர்ரியைக் (Mathew C. Perry) கி.பி. 1853–ஆம் ஆண்டு சப்பானுக்கு அனுப்பி, அதனுடன் வாணிகம் செய்ய அமெரிக்கா உரிமை பெற்றது. அதன் பின்னர் இரு நாடுகளுக்கிடையே உறவுகள் வளர்ந்தும் தேய்ந்தும் வந்தன.

தியோடர் உரூசுவெல்ட்டு (கி.பி. 1901–1909) குடியரசுத் தலைவராக இருந்தபோது, பொதுமக்களின் நலனுக்காகப் பல முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்நடவடிக்கைகள், அடுத்துவந்த வில்லியம் தாப்ட்டு(Taft), உட்ரோ வில்சன் ஆகியவர்களின் ஆட்சியில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. எனவே, 1901 முதல் 1921 வரையிலான காலம் முற்போக்குக் காலம் (Progressive Period) என்று குறிக்கப்படுகின்றது. பனாமா நாட்டின் வழியாகப் பனாமா கால்வாய் வெட்டத் தொடங்கப்பட்டது. இது உரூசுவெல்டின் குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்படுகிறது.

உட்ரோ வில்சன் (1913–21) குடியரசுத் தலைவராக இருந்தபோது, உள்நாட்டில் கொண்டுவந்த பொருளாதாரச் சீர்திருத்தங்கள் ‘புதிய விடுதலை’ (New Freedom) எனப் பெயர் பெற்றன. அவர் ஆட்சிக்காலத்தில்தான் முதல் உலகப்போர் (1914–18) நடைபெற்றது. அப்பொழுது அமெரிக்க ஐக்கிய நாடு நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றிப் போரில் ஈடுபடவில்லை. இருப்பினும், அமெரிக்காவுக்கு எதிரான செருமனியின் சதித்திட்டத்தை அறிந்து, 1917–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமெரிக்கா போரில் இறங்கியது. இறுதியாக அமெரிக்கா செருமனியைத் தோற்

கடித்தது. போர் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே வில்சன், 1918-ஆம் ஆண்டு சனவரி மாதம் வெளியிட்ட 14 கோட்பாடுகள் புகழ்மிக்கவை ஆகும். போர் முடிந்த பின்னர், 1919-ஆம் ஆண்டு பாரிசில் நடைபெற்ற அமைதி மாநாட்டில், வில்சன் மிகவும் இன்றியமையாத பணியைச் செய்தார். பன்னாட்டுச் சங்கம் (League of Nations) ஏற்பட அவர் காரணமாக இருந்தார். ஆனால், அமெரிக்கா அதில் உறுப்பு நாடாகச் சேர்வதை அந்நாட்டுச் சட்டமன்றம் அனுமதிக்கவில்லை.

அஞ்சத்தக்க பொருளாதார மந்தநிலை (1929-ஆம் ஆண்டு முதல்): இது 1921-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட வியத்தகு தொழில் வளர்ச்சியினால் ஏற்பட்டது. கடைகளில் பொருள்கள் தேங்கிக் கிடந்தன; பல தொழிற்சாலைகள் மூடப்பட்டன; ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள்; பொருள்களை வாங்க மக்களிடம் பணம் இல்லை. இந்த மந்தநிலை, அமெரிக்காவை மட்டுமன்றி மற்ற உலக நாடுகளையும் தாக்கியது. இந்தப் பொருளாதாரச் சீர்குலைவைச் சரிப்படுத்த அப்பொழுது குடியரசுத் தலைவராக இருந்தஎர்பர்ட்டு ஊவர் (Herbert Hoover) (1929–33) மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

இந்த நிலையில் பிராங்ளின் டி. உரூசுவெல்ட்டு (1933–45) குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் கொண்டுவந்த புதிய பொருளாதாரக் கொள்கையை (New Deal) நடைமுறைப்படுத்தி நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்படுத்தினார். அக்காலத்தில் அவர் அமைத்த தென்னசிப் பள்ளத் தாக்குத் திட்டம் (Tennessee Valley Project) அவர் பெருமையை இன்றும் பறைசாற்றி வருகிறது. உரூசுவெல்ட்டின் ஆட்சிக்காலத்தில்தான் இரண்டாம் உலக போர் (1939–45) நடைபெற்றது. செருமனி, இத்தாலி, சப்பான் ஆகிய அச்சு நாடுகளை எதிர்த்து இங்கிலாந்து, பிரான்சு, உருசியா முதலான நாடுகள் போரிட்டுவந்தபோது, அமெரிக்கா போரில் இறங்கவில்லை. சப்பான் 1941–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7–ஆம் நாள் அமெரிக்காவின் படைத்தளமாகிய பேர்ல் (Pearl) துறைமுகத்தைத் தாக்கிப் பெருஞ் சேதத்தை ஏற்படுத்தியது. உடனே அமெரிக்கா அச்சு நாடுகளின்மீது போர் தொடுத்தது. செருமனியையும் இத்தாலியையும் தாக்கத் தளபதி ஐசனோவரையும், சப்பானைத் தாக்கத் தளபதி மெக்கார்த்தரையும் அமெரிக்கா அனுப்பியது. அமெரிக்கா 1945 மே மாதம் முதல் வாரத்திற்குள் செருமனியையும் இத்தாலியையும் தோற்கடித்து, நட்பு நாடுகளுக்கு வெற்றியைத் தேடித்தந்தது. எனினும் சப்பான் தொடர்ந்து போரிட்டு வந்தது. எனவே, 1945–ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 6–ஆம் நாள் இரோசிமா (Hiroshima) நகரத்தின் மீதும், 9–ஆம் நாள் நாகசாகி நகரத்தின் மீதும் அமெரிக்கா அணுக்குண்டைப் போட்டுத் தாக்கியது. அதனால் ஏற்பட்ட பயங்கரமான அழிவைக் கண்ட சப்பான் அடுத்த சில நாட்களுள் சரணடைந்தது. இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது.

துரூமன் முதல் ரீகன் வரை (Truman to Reagan) (1945–1985): உரூசுவெல்ட்டுக்குப் பின்னர் ஆரி எசு. துரூமன் (1945–53) குடியரசுத் தலைவரானார். அவர் காலத்தில்தான் ஐக்கிய நாடுகள் மன்றம் (United Nations Organisation) 1945-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அமைக்கப்பட்டது. அதன் தலைமையகம் நியூயார்க் ஆகும். அவர் காலத்தில் அயல்நாட்டுத் துறையில் பல முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்குச் செருமனி 1948-ஆம் ஆண்டு சூன் மாதம் உருவாக்கப்பட்டது. அமெரிக்கப் படைகள் 1952–வரை சப்பானில் இருந்தன. அக்காலத்தில் சப்பானுக்குப் புதிய அரசியல் சட்டம் கொடுக்கப்பட்டு, முற்போக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சீனாவில் மா சே துங்கின் தலைமையில் வளர்ந்து வந்த பொதுவுடைமைச் செல்வாக்கை முறியடிக்க, அந்நாட்டின் தலைவர் சியாங் கே சேக்குக்கு (Chiang Kai-Shek) அமெரிக்கா பல வழிகளில் உதவியது. இருப்பினும், சீனா 1949-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பொதுவுடைமை நாடாக மாறியது. ஐரோப்பிய நாடுகளிலும் மத்திய கிழக்கு ஆசிய நாடுகளிலும் பொதுவுடைமை பரவாமல் தடுக்க, அமெரிக்கா பல கோடி தாலர் மதிப்புள்ள பொருளாதார உதவியைச் செய்தது. வட அட்லாண்டிக்கு ஒப்பந்தம் 1949-இல் செய்துகொள்ளப்பட்டது. அமெரிக்கா 1950-முதல் 1953-வரை நடைபெற்ற கொரியப் போரில், தென் கொரியாவுக்குப் போர்க்கருவிகளைக் கொடுத்துதவியது.

ஐசனோவர் (1953-1961) குடியரசுத் தலைவராக இருந்த போது இலிட்டில் ராக் (Little Rock) என்ற நகரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி (செப். 1957) நீக்கிரோ இயக்கத்தின் திருப்புமுனையாக அமைந்தது. விண்வெளியை ஆராயச் செயற்கைக் கோள்கள் 1957-இல் அனுப்பப்பட்டன. அயல் நாட்டு நடவடிக்கைகளுள் குறிப்பிடத்தக்கது, கொரியப் போர் நிறுத்தப்பட்டதாகும் (சூலை 1953). தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பாதுகாப்புக்காக 1954-இல், தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஒப்பந்த நிறுவனம் அமைக்கப்பட்டது. பொதுவுடைமைச் சீனாவுக்கு எதிராகத் தேசிய சீனாவின் தலைவர் சியாங் கே சேக்குக்கு அமெரிக்கா உதவி செய்தது. சூயசுக் கால்வாய்த் தொடர்பாக 1956-ஆம் ஆண்டு இங்கிலாந்து, பிரான்சு, இசுரேல் ஆகிய நாடுகள் எகிப்தைத் தாக்கியபோது அமெரிக்கா தலையிட்டுப் போரை நிறுத்தியது.

சான் எப். கென்னடி (1961-63) காலத்தில் நீக்கிரோக்களுக்குப் பல சிவில் உரிமைகளைத் தர அவர் முயன்றார். ஆனால், அத்தகைய சட்டத்தைக் காங்கிரசு ஏற்க மறுத்தது. எனவே, நீக்கிரோக்களின் மிகச் சிறந்த தலைவர் மார்ட்டின் லூதர் கிங், இரண்டு இலட்சம் மக்கள் கொண்ட மிகப் பெரிய ஊர்வலத்தை வாசிங்டன் நகரத்தில் நடத்தி நீக்கிரோக்களின் சிவில் உரிமைகளுக்காகப் போராடினார். அயல் நாட்டுக் கொள்கையில் வெற்றியும் தோல்வியும் ஏற்பட்டன. பிடெல் காசுட்ரோவினால் (Fidel Castro) ஆட்சி செய்யப்பட்ட கியூபாவைக் கைப்பற்ற அமெரிக்கப் படை முயன்று தோல்வியடைந்தது (1961). அமெரிக்கா, உருசியா, இங்கிலாந்து ஆகிய மூன்று நாடுகள், 1963-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதத்தில், செய்துகொண்ட அணுச் சோதனைத் தடுப்பு ஒப்பந்தம் கென்னடியின் குறிப்பிடத்தக்க வெற்றியாகக் கருதப்பட்டது. கென்னடி சுட்டுக் கொல்லப் பட்டதையடுத்து (நவ. 1963), இலிண்டன் சான்சன் (1963–69) குடியரசுத் தலைவரானார். அவர் காலத்தில் நீக்கிரோக்களுக்குச் சிவில் உரிமைகளை வழங்க விரிவான சட்டம் இயற்றப்பட்டது (1964).

இரிச்சர்டு எம். நிக்சன் (1969–74) காலத்தில் அமெரிக்க அறிவியல் அறிஞர்கள் நிலவுக்கு மனிதனை அனுப்பி வியத்தகு சாதனையைச் செய்தார்கள் (சூலை 1969). சீனாவுக்கும் (பிப். 1972) உருசியாவுக்கும் (மே 1972) நிக்சன் நல்லெண்ணப் பயணத்தை மேற்கொண்டார். அமெரிக்கா 1955 முதல் வியட்நாம் போரில் ஈடுபட்டிருந்தது. நிக்சன் அப்போரை நிறுத்தி, அமெரிக்கப்படைகளை வியட்நாமிலிருந்து விலக்கிக் கொண்டார் (1973). வாட்டர்கேட்டு ஊழலை அடுத்து அவர் பதவி விலகினார். அவருக்குப் பின் செரால்டு போர்டு (Gerald Ford) (1974–77), சிம்மி கார்ட்டர் (Jimmy Carter) (1977–81) உரொனால்டு ரீகன் (Roanald Reagan) (1981), ஆகியோர் குடியரசுத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். உரொனால்டு ரீகன் இரண்டாவது முறையாகக் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

3. பொருளாதார வளர்ச்சி: அமெரிக்காவின் மொத்த நிலப்பரப்பில் 86 விழுக்காட்டுப் பகுதி நாட்டுப்புறங்களாகும். எனினும் மொத்த உழைக்கும் மக்கள் தொகையுள் 3.5 விழுக்காட்டினரே வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அந்நாட்டில் குடியானவர்கள் பரந்த உழுநிலங்களுக்கு உரிமையாளர்களாக உள்ளனர். வேளாண்மை 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதுமை மயமாக்கப்பட்டது. விதைகள் விதைத்தல், களை எடுத்தல், அறுவடை செய்தல் முதலான எல்லாவகைப் பணிகளுக்கும் இயந்திரங்களே பயன்படுத்தப்பட்டன. அதனால் அக்காலத்திலேயே அந்நாட்டில் வேளாண்மைப் புரட்சி தொடங்கிவிட்டது. நாட்டின் மத்தியில் உள்ள வடக்கு தகோடா, தெற்கு தகோடா, (Dakota) நெப்ராசுகா, மிசுரி, அர்கன்சா முதலான மாநிலங்களில் உள்ள சம வெளிப் பகுதிகளில் மிகுதியான அளவில் கோதுமை உற்பத்தி செய்யப்படுகிறது. நெப்ராசுகா, அயோவா, இல்லினாய்சு, இண்டியானா முதலான மாநிலங்களில் மிகுதியான அளவு மக்காச்சோளம் (Corn) உற்பத்தி செய்யப்படுகிறது. அரிசோனா முதல் வெர்சினியா வரை இருக்கின்ற மாநிலங்களில் எல்லாம் பருத்தி விளைவிக்கப்படுகிறது. இங்குப் பலவகையான பழ வகைகளும் காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன. மோன்டானா முதல் நியூமெக்சிகோ வரை உள்ள மாநிலங்களில் கால் நடைகளும் அது தொடர்பான தொழில்களும் வளம் பெற்றுள்ளன.

அமெரிக்காவில் இயற்கைச் செல்வங்கள் பெருமளவு உள்ளன. அப்பலேச்சியன் மலைப் பள்ளத்தாக்குகளில் பரவியுள்ள பென்சில்வேனியா, மேற்கு வெர்சீனியா, கெண்டகி ஆகிய மாநிலங்களில் மிகப் பேரளவிலும், இண்டியானா, இல்லினாய்சு, ஆக்லகாமா, அயோவா போன்ற மாநிலங்களில் தேவையான அளவிலும் நிலக்கரி கிடைக்கின்றது. தெக்சாசு, இலூசியானா மாநிலங்கள் உலக எண்ணெய் உற்பத்தி மையங்களில் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. பென்சில்வேனியாவில் கி.பி. 1859 – இலேயே எண்ணெய் எடுக்கப்பட்டது. இராக்கி மலைத்தொடர்களிலும் இல்லினாய்சு, இண்டியானா, அலாசுகா, கலிபோர்னியா ஆகிய இடங்களிலும் எண்ணெய் வயல்கள் உள்ளன. மெக்சிகோ வளைகுடாவில் கடலிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. இந்த இடங்களில் எல்லாம் இயற்கை எரி வாயுவும் கிடைக்கிறது. உள்நாட்டில் உள்ள எண்ணெய் எரிவாயு ஆகியவற்றைப் பிற்கால அமெரிக்க மக்களுக்குப் பாதுகாப்பதற்காக இப்பொழுது அரபு நாடுகளிலிருந்து அவற்றை அமெரிக்கா இறக்குமதி செய்கின்றது.

நீர்மின்சக்தி, அந்நாட்டின் பல பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக, மேற்கேயுள்ள ஆறுகளின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. கொலொராடோ ஆற்றின் குறுக்கே பல அணைகள் உள்ளன. அப்பகுதியில் உள்ள ஊவர் (Hoover) அணை மிகப் பெரியதாகும். நாட்டின் கிழக்கேயுள்ள தென்னசி ஆற்றில் முப்பத்து மூன்று அணைகள் கட்டப்பட்டுள்ளன. எப்.டி. உரூசுவெல்ட்டு (F.D. Roosevelt) கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கையின் போது, இந்தத் தென்னசிப் பள்ளத்தாக்குத் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டம் நீர்மின் சக்திக்கு மட்டுமன்றி வெள்ளத் தடுப்பு, மீன்வளம் பெருக்குதல் முதலான பல நோக்கங்களுக்காகவும் அமைக்கப்பட்டது.

அமெரிக்காவின் மேற்கே கோர்டில்லேரா (Cordillera) பகுதியில் செம்பு, துத்தநாகம், வெள்ளி, ஈயம் முதலான உலோகத் தாதுகள் கிடைக்கின்றன. கலிபோர்னியா, அலாசுகா, யூடா, தெற்குக் கோடா ஆகிய மாநிலங்களில் தங்கம் கிடைக்கின்றது. சுபீரியர் ஏரிக்கரைப் பகுதிகளில் பெருமளவு இரும்புத் தாது கிடைக்கிறது.

இயற்கைச் செல்வங்கள் மிகுதியாகக் கிடைப்பதால், அமெரிக்காவில் வியத்தகு தொழில்வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. சிகாகோ நகரம், இரும்பு, எஃகுக் கருவிகள் உற்பத்தி செய்யப்படும் புகழ்மிக்க மையமாக உள்ளது. மேலும் அங்கு அச்சுத் தொழில், மருந்துகள் உற்பத்தி, மின்கருவிகள் உற்பத்தி, போக்குவரத்துக் கருவிகள் உற்பத்தி முதலான பல தொழில்கள் நடைபெறுகின்றன. கிளீவுலாந்து நகரத்திலும் இரும்பு எஃகு ஆலைகளும் இரசாயனத் தொழிற்கூடங்களும் மிகுதியாக உள்ளன. பிட்சுபர்க்கு நகரம், எல்லாப் பொருள்களும் உற்பத்தி செய்யப்படும் பெருந்தொழில் மையமாக விளங்குகிறது. பர்மிங்காம் நகரத்திலும் எல்லாவிதமான பொருள்களும் செய்யப்படுகின்றன. டெட்ராய்ட்டு நகரத்தில் மோட்டார் கார்கள் செய்யப்படுகின்றன. விசிதர், கன்சாசு ஆகிய நகரங்களில் விமானங்கள் செய்யப்படுகின்றன. உலகத்திலேயே மிகப்பெரிய விமானத் தொழிற்சாலை சியாடல் நகரத்தில் உள்ளது. தெக்சாசு மாநிலத்தில் உள்ள ஊசுடன் நகரத்தில் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் உள்ளது. அந்நகரத்தைச் சுற்றிலும் பல்வேறு வகையான மின்கருவிகள் செய்யப்படுகின்றன. ஆலிவுடு நகரம் திரைப்படத் தொழிலுக்கு மிகவும் புகழ்பெற்றது. அமெரிக்காவில் செய்யப்படாத பொருள் எதுவுமே இல்லை என்று சொல்லுமளவுக்கு அந்நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

4. பண்பாடு: அமெரிக்க ஐக்கிய நாடு 'குடியேறியவர்களின் நாடு' (Nation of Immigrants) என்று சொல்லப்படுகின்றது. ஏனெனில் எல்லா நாடுகளிலிருந்தும் மக்கள் அந்நாட்டில் குடியேறி அமெரிக்கக் குடிமக்களாக மாறியுள்ளனர். ஐரோப்பிய நாடுகளிலிருந்தும், ஆசிய நாடுகளில் குறிப்பாகச் சீனா, சப்பான் முதலான நாடுகளிலிருந்தும் பல ஆயிரம் மக்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலும் இந்நூற்றாண்டிலும் அந்நாட்டிற்குச் சென்று குடியேறியுள்ளனர். ஆப்பிரிக்காவிலிருந்து வெள்ளையர்களால் கொண்டு செல்லப்பட்ட நீக்கிரோக்களின் எண்ணிக்கை இப்பொழுது இரண்டு கோடியைக் கடந்துள்ளது. அவர்களும் அமெரிக்கக் குடிகளே ஆவர். மொத்த மக்கள் தொகை இருபத்து மூன்று கோடி (1980) ஆகும். அவர்களுள் பெரும்பான்மையினர் புராடசுடண்டுகள்; மற்றையோர் கத்தோலிக்கர்களும் யூதர்களுமாவர். அமெரிக்காவின் ஆதிகுடிகளான செவ்விந்தியர்கள் இப்பொழுது சில ஆயிரம் மக்களே உள்ளனர்.

அமெரிக்கா கி.பி. 19-ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கிய வளம் பெற்றது. வாசிங்டன் இர்விங் சுவையான பல இலக்கியங்களைப் படைத்துள்ளார். எமர்சன் தத்துவக் கவிஞராகவும் எழுத்தாளராகவும் விளங்குகிறார். எட்கார் ஆலன் போ பல கவிதைகளையும் சிறு கதைகளையும் எழுதியுள்ளார். வால்ட்டு விட்மன் மக்களாட்சி முறையைப் பற்றியும் ஊழல் சமுதாயத்தைச் சாடியும் எழுதியுள்ளார். மார்க்கு டுவெயின் பயணக் கட்டுரைகளையும் இளைஞர்களைப் பற்றியும் அமெரிக்க ஊழல்களைப் பற்றியும் தெளிவாக எழுதியுள்ளார். எச். டபிள்யூ. லாங்பெலோ (Long Fellow) அந்நூற்றாண்டின் மிகச் சிறந்த கவிஞராவர். அவர் ஆர்வார்டு பல்கலைக் கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார். சின்கிலெய்ர் லெவிசு, யூசீன் ஓநீல், வில்லியம் பாக்னெர், ஏர் இனெசுட்டு எமிங்வே, சான் இசுடெயின்பெக் முதலான எழுத்தாளர்கள் 20-ஆம் நூற்றாண்டில் சிறந்த இலக்கியப் பணிக்காக நோபல் பரிசு கொடுக்கப்பட்டார்கள். இந்த நூற்றாண்டின் அமெரிக்கக் கவிஞர்களுள் இராபர்ட்டு பிராசுட் (Robert-Prachute), எசுரா பவுண்டு (Ezra Pound), டி.எசு. எலியட்டு (T.S. Eliot) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

அமெரிக்காவின் வரலாற்றைச் சிறப்பாக எழுதியவர்களுள் சார்சு பான்கிரோப்டு (George Foncroft) குறிப்பிடத்தக்கவர் ஆவார். சே பி. மாக்மாசுடர் (Mc Masudar) அந்நாட்டின் பொருளாதாரம், பண்பாடு ஆகியவற்றின் வரலாற்றை எழுதியுள்ளார். எச்.எசு. சம்மேசர் இந்நூற்றாண்டின் புகழ்மிக்க அமெரிக்க வரலாற்றாசிரியராவார்.

அமெரிக்க ஓவியக்கலை சே.எசு. கோப்லே, பெஞ்சமின் வெசுட்டு முதலானவர்களால் ஏற்றம் பெற்றது. சி. இசுடுவர்டு, சி. டபுள்யூ. பீல் ஆகியோர் வரைந்துள்ள சார்சு வாசிங்டனின் உருவப்படங்கள் புகழ் பெற்றவை ஆகும். சான் தரம்புல் (John Trumfull) போன்றவர்கள் அமெரிக்க விடுதலைப் புரட்சியின் நிகழ்ச்சிகளை வண்ண ஓவியங்களாகத் தீட்டினார்கள். பல ஓவியக் கலைக்கூடங்கள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் நிறுவப்பட்டன. பணக்காரர்களும் அக்கலையை ஆதரிக்கத் தொடங்கினார்கள். புகழ் மிக்க ஐரோப்பிய ஓவியங்கள் விலைக்கு வாங்கப்பட்டுக் கலைக்கூடங்களில் வைக்கப்பட்டன. ஐரோப்பியக் கலைஞர் பிகாசோவின் பாணியில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து புதிய ஓவியக் கலை வளரத் தொடங்கியது. பின்னர் அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறையை விளக்கும் ஓவியங்கள்



நியூயார்க்கு - ஐக்கிய நாடுகள் அவை - தலைமையகம்

வரையப்பட்டன. குடியரசுத் தலைவர் எப்.டி. உருசு வெல்ட்டின் காலத்தில் ஐயாயிரம் ஓவியக் கலைஞர்களுக்கு முழுநேர வேலைவாய்ப்புக் கொடுக்கப்பட்டது. அவர்கள் பொதுக்கட்டடங்களில் அழகிய வண்ணச் சுவர் ஓவியங்களை வரைந்தார்கள்.

கட்டடக் கலையின் வளர்ச்சி வியக்கத்தக்கதாகும். விடுதலைப் போருக்குமுன் சிகப்புச் செங்கற்களால் அரசுக் கட்டடங்களும் வீடுகளும் மிக உயர்ந்த தோற்றத்துடன் கட்டப்பட்டன. பிலடெல்பியா நகரத்தில் உள்ள சுதந்தர மாளிகையும், வில்லியம்சுபர்க்கு நகரத்தில் உள்ள ஆளுநர் மாளிகையும் அவ்வாறு கட்டப்பட்டுள்ளன. விடுதலைப் போருக்குப் பின்னர்க் கட்டப்பட்ட கட்டடங்களுள், பல்கலை நிபுணர் தாமசு செப்பர்சன் அமைத்த வெர்சீனியா பல்கலைக் கழகக் கட்டடங்கள் குறிப்பிடத்தக்கவை ஆகும். அவை உரோமானிய – கிரேக்கப் பாணியில் அமைக்கப்பட்டவையாகும். வேறு பல பொதுக் கட்டடங்களும் கிறித்தவக் கோயில்களும் அப்பாணியில் அமைக்கப்பட்டன. விண்ணை முட்டும் கட்டடங்கள் இந்நூற்றாண்டில் கட்டப்பட்டு வருகின்றன. அத்தகைய கட்டடங்களின் வடிவமைப்பைத் தொடங்கி வைத்தவர் இலூயி சல்லிவான் என்ற கட்டடக் கலைஞர். அவரிடம் பயிற்சி பெற்றவர்கள் சிகாகோ, நியூயார்க்கு போன்ற நகரங்களிலும் அத்தகைய கட்டடங்களுக்கு வடிவமைத்து வருகிறார்கள்.

சிற்பக் கலையையும் அமெரிக்கர்கள் பெரிதும் ஆதரித்தார்கள். சிற்பங்கள் முதலில் மரத்தால் செய்யப்பட்டன; பின்னர்க் கல்லாலும், வெண்கலத்தாலும் செய்யப்பட்டன. வாசிங்டனின் சிலைகள் பல செய்யப்பட்டுள்ளன. உள்நாட்டுப் போருக்குப் பின்னர்ச் சலவைக் கற்களால் ஆக்கப்பட்ட பல நினைவுச்சின்னங்கள் எழுப்பப்பட்டன. இந்நூற்றாண்டின் சிற்பிகளுள் அலெக்சாண்டர் கால்டர் மிகச் சிறந்தவராகக் கருதப்படுகிறார்.



அமெரிக்கத் தலைநகர் - வாசிங்டன்

அமெரிக்கர்கள் நாடகக்கலையிலும் தேர்ச்சி பெற்றவர்கள். அதற்காகப் பல நாடகக் குழுக்கள் உள்ளன. யுசின் ஓ நீல் மிகச் சிறந்த நாடகங்களை அமெரிக்கர்களுக்கு வழங்கினார். முக்கியமாகச் சமயச் சார்பான நாடகங்களுக்கு அவர் சிறப்பிடம் தந்தார். பாலே (Ballet) என்ற நடனம் அந்நாட்டில் மிகவும் புகழ்பெற்றது. செல்வி ஐ. தங்கன் (I. Duncan) அந்நடனத்தை அமெரிக்கரிடையே விரைவாகப் பரவச்செய்தார். அந்நாட்டில் இசைக் கலைஞர்களும் பலவிதமான இசைப் பாணிகளை அமைத்துள்ளனர். அவற்றுள் சாசு (Jazz) என்பது மிகவும் புகழ் பெற்றது. அது அமெரிக்க நாகரிகத்திற்கு நீக்கிரோக்களின் கொடையாகும்.

அமெரிக்க மக்கள் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கின்றனர். குறிப்பாகக் கால்பந்து, கூடைப்பந்து, ஆக்கி, குதிரை ஓட்டம், மோட்டார் கார் ஓட்டம் முதலானவற்றில் திரளாகக் கலந்து கொள்கிறார்கள். பேசுபால் (Base Ball) மட்டைப்பந்து விளையாட்டு இந்நாட்டின் தேசிய விளையாட்டாகும். சுற்றுலாச் செல்வதில் அமெரிக்கர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர்.

அமெரிக்கர்களின் பண்பாட்டுச் சிறப்புகளை போற்றிக் காக்க நாடு முழுவதும் 5,500 கலைக்கூடங்கள் உள்ளன. நியூயார்க்கு நகரில் உள்ள பெருநகரக் கலைக்கூடம், சிகாகோவில் உள்ள இயற்கை வரலாற்றுக் கலைக்கூடம், வாசிங்டன் நகரில் உள்ள இசுமித்சோனியன் நிறுவனம் முதலானவை அவற்றுள் மிகவும் சிறந்தனவாகும். ந.ப.

## அமெரிக்க ஐக்கிய நாட்டின் குடியரசுத் தலைவர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1. | சார்சு வாசிங்டன் | 1789–97 | கூட். |
| 2. | சான் ஆடம்சு | 1797–1801 | கூட். |
| 3. | தாமசு செப்பர்சன் | 1801–09 | மக்/குடி. |

| | | | |
|---|---|---|---|
| 4. | சேம்சு மாடிசன் | 1809–17 | மக்/குடி. |
| 5. | சேம்சு மன்ரோ | 1817–25 | மக்/குடி. |
| 6. | சான் குவின்சி ஆடம்சு | 1825–29 | மக்/குடி. |
| 7. | ஆன்ட்ரூ சாக்சன் | 1829–37 | மக். |
| 8. | மார்டின் வான் பூரன் | 1837–41 | மக். |
| 9. | வில்லியம் ஆரிசன் | 1841 | விக். |
| 10. | சான் டைலர் (John Tyler) | 1841–45 | விக். |
| 11. | சேம்சு போக்கு | 1845–49 | மக். |
| 12. | சேக்கரி டேலர் (Zachary Taylor) | 1849–50 | விக். |
| 13. | மில்லார்டு பில்மோர் | 1850–53 | விக். |
| 14. | பிராங்க்ளின் பியர்சு | 1853–57 | மக். |
| 15. | சேம்சு புகாநன் | 1857–61 | மக். |
| 16. | ஆபிரகாம் லிங்கன் | 1861–65 | குடி. |
| 17. | ஆண்ட்ரூ சான்சன் | 1865–69 | யூனி. |
| 18. | யு.எச். கிராண்டு | 1869–77 | குடி. |
| 19. | ரூதர் போர்டு ஏல் | 1877–81 | குடி. |
| 20. | சேம்சு கார்பீல்டு | 1881 | குடி. |
| 21. | செசுடர் ஆர்தர் | 1881–85 | குடி. |
| 22. | குரோவர் கிளீவுலாந்து | 1885–89 | மக். |
| 23. | பெஞ்சமின் ஆரிசன் | 1889–93 | குடி. |
| 24. | குரோவர் கிளீவுலாந்து | 1893–97 | மக். |
| 25. | வில்லியம் மெக்கன்சி | 1897–1901 | குடி. |
| 26. | தியோடர் உரூசுவெல்ட்டு | 1901–09 | குடி. |
| 27. | வில்லியம் தாப்டு (William Taft) | 1909–13 | குடி. |
| 28. | உட்ரோ வில்சன் | 1913–21 | மக். |
| 29. | வாரன் ஆர்டிங் | 1921–23 | குடி. |
| 30. | கால்வின் கூல்ட்சு | 1923–29 | குடி. |
| 31. | எர்பர்ட்டு ஊவர் | 1929–33 | குடி. |
| 32. | பிராங்க்ளின் உரூசுவெல்ட்டு | 1933–45 | மக். |
| 33. | ஆரி துரூமன் (Harry Truman) | 1945–53 | மக். |
| 34. | துவைட்டு ஐசனோவர் (Dwight Eisenhower) | 1953–61 | குடி. |
| 35. | சான் கென்னடி | 1961–63 | மக். |
| 36. | இலிண்டன் சான்சன் | 1963–69 | மக். |
| 37. | இரிச்சர்டு நிக்சன் | 1969–74 | குடி. |
| 38. | செரால்டு போர்டு | 1974–77 | குடி. |
| 39. | சிம்மி கார்ட்டர் | 1977–81 | மக். |
| 40. | உரொனால்டு ரீகன் | 1981– | குடி. |

குறிப்பு:
- கூட்: கூட்டாட்சிக் கட்சி
- மக் : மக்களாட்சிக் கட்சி
- மக்-குடி: மக்களாட்சிக் குடியரசுக் கட்சி
- விக்: விக்கு கட்சி
- யூனி: யூனியன் கட்சி
- குடி: குடியரசுக் கட்சி

அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்கள்:

| | |
|---|---|
| அலபாமா | 1819 |
| அலாசுகா | 1959 |
| அரிசோனா | 1912 |
| அர்கன்சா | 1836 |
| கலிபோர்னியா | 1850 |
| கொலராடோ | 1876 |
| கனெக்டிகட் | 1788 |
| தெலவெர் | 1787 |
| புளோரிடா | 1845 |
| சார்சியா | 1788 |
| அவாய் | 1959 |
| இதாகோ | 1890 |
| இல்லினாய்சு | 1818 |
| இண்டியானா | 1816 |
| அயாவா | 1846 |
| கன்சாசு | 1861 |
| கெண்டகி | 1792 |
| இலூசியானா | 1812 |
| மெயின் | 1820 |
| மேரிலாந்து (Maryland) | 1788 |
| மசாசுசெட்சு | 1788 |
| மிச்சிகன் | 1837 |
| மின்னிசோட்டா | 1858 |
| மிசிசிப்பி | 1817 |
| மிசூரி | 1821 |
| மோன்டானா | 1889 |
| நெப்ராசுகா | 1867 |
| நெவாடா | 1864 |
| நியூஆம்ப்சயர் (New Hampshire) | 1788 |
| நியூசெர்சி | 1787 |
| நியூமெக்சிகோ | 1912 |
| நியூயார்க்கு | 1788 |
| வட கரோலினா | 1789 |
| வட தகோடா (North Dakota) | 1889 |
| ஒகையோ | 1803 |

| | |
|---|---|
| ஆக்லகாமா | 1907 |
| ஆரிகான் | 1859 |
| பென்சில்வேனியா | 1787 |
| உரோடுத் தீவு | 1790 |
| தென் கரோலினா | 1788 |
| தென் தகோடா (South Dakota) | 1889 |
| தென்னசி | 1796 |
| தெக்சாசு | 1845 |
| உட்டா | 1896 |
| வெர்மாண்டு | 1791 |
| வெர்சீனியா | 1788 |
| வாசிங்டன் | 1889 |
| மேற்கு வெர்சீனியா | 1863 |
| விசுகான்சின் | 1848 |
| வையோமிங் | 1890 |

குறிப்பு:- மேற் குறிப்பிடப்பட்டுள்ள ஆண்டுகள், மாநிலங்கள் மத்திய அரசுடன் இணைந்த ஆண்டாகும்.

**அமெரிக்கச் சமூகவியல் சங்கம்** அமெரிக்காவிலுள்ள வாழ்க்கைத் தொழில்சார்ந்த சமூகவியலார்களின் சங்கமாகும். இதில் சமூகவியலார், சமூகவியல் அறிஞர்கள், சமூகவியல் சார்ந்த ஆய்வை மேற்கொண்டிருப்பவர்கள், பள்ளி, கல்லூரி ஆசிரியர்கள் ஆகியவர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள். அமெரிக்கச் சமூகவியல் சங்கம் (American Sociological Association) 1905-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. 1921-ஆம் ஆண்டிற்குப் பிறகு, இச்சங்கத்திலுள்ள உறுப்பினர்கள் கல்விசார் சமூகவியல், சமூகவியல்சார் உளவியல், சமூகக் கோட்பாடுகள் போன்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றனர். இச்சங்கம் பல்வேறு ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. நிருவாக அலுவலகம் அமெரிக்க நாட்டு வாசிங்டன் நகரில் அமைந்துள்ளது.

**அமெரிக்கசு வெசுபூசியசு** புதிய நாடுகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டுப் புகழ்பெற்றவர். இத்தாலியில் பிளாரென்சு நகரத்தில் இவர் கி.பி. 1454-இல் பிறந்தார். இவர் அந்நகரத்தின் புகழ்பெற்ற வங்கி வணிகக் குடும்பமான மெடீசியின் (Medici) ஆதரவைப் பெற்றவர். புதிய நாடுகளைக் கண்டறியும் ஆர்வத்தோடு செயற்பட்ட இசுபெயின் அரசு, யானெசு பிர்சோன் என்ற கடல் மாலுமிக்கு ஓர் உரிமம் வழங்கியது. பிர்சோன், கொலம்பசின் முதற் சடற்பயணத்தில் ஒரு கப்பலுக்குத் தலைமை தாங்கி நடத்திய அனுபவசாலி.

பிர்சோன் கி.பி. 1499-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 14-ஆம் நாள் தம் கப்பற் பயணத்தைத் தொடங்கினார். இவர் கப்பலில் பயணம் செய்த அமெரிக்கசு வெசுபூசியசு (Americus Vespuccius), தம் பயணம் குறித்த தகவல்களை விவரித்துப் பின் நாளில் பல கட்டுரைகளை எழுதினார். பொது மக்களின் கவனத்தை மிகவும் கவர்ந்த 'கடிதம்' என்ற ஒரு கட்டுரையில், அட்லாண்டிக்குப் பெருங்கடலின் அக்கரையில் தாம் பயணம் செய்து கண்டறிந்த புதிய உலகத்தைப் பற்றி விவரித்திருந்தார். இவரது காலத்தைச் சார்ந்த கொலம்பசு தாம் கண்டறிந்த புதிய நிலப் பகுதியைப் "புது உலகம்" என்று குறிப்பிட்டார். இந்தச் சொற்றொடரைத்தான் அமெரிக்கசு வெசுபூசியசு தம் கட்டுரையில் எடுத்து ஆண்டார். இக் கட்டுரை இவருக்கு மிகுந்த புகழைத் தேடித்தந்தது.

நான்காண்டுகளுக்குப் பின் வால்சுமுல்லர் என்ற செருமானியப் பேராசிரியர் ஒருவர், புவியியல் பற்றிய ஒரு சுருக்கமான தொகுப்பை வெளியிட்டார். அதில் அவர், வெசுபூசியசின் பயண நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுப் புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள "உலகின் நான்காவது பகுதி"யாகிய இதற்கு அமெரிக்கசு வெசுபூசியசின் (Americus Vespuccius) சாதனையை நினைவிற்கொள்ளும் வகையில் "அமெரிக்கா" என்ற பெயரைச் சூட்ட வேண்டுமெனப் பாதி விளையாட்டாகவும் பாதி அழுத்தமாகவும் எழுதினார். இந்தக் கருத்துப் பின்னர்ச் செயற்படுத்தப்பட்டது. முதலில் இந்திய மக்கள் வாழும் பகுதி எனத் தவறாகக் கருதப்பட்டது இந்தப் பரந்த நிலம். இதனை முதலில் கண்டறிந்தவர் கொலம்பசு என்பதே உண்மை. இருப்பினும் கண்டுபிடிப்பாளர் எனப் போலியாகக் கருதப்பட்ட அமெரிக்கசு வெசுபூசியசின் நினைவைப்போற்றும் வகையில் "புதிய உலகம்" அமெரிக்கா என்னும் பெயரினைப் பெற்றது.

அமெரிக்கசு பயணம் செய்தது நடு அமெரிக்காவின் கரையோரப் பகுதிகளாகும். ஆனால் கொலம்பசு கி.பி. 1492-ஆம் ஆண்டிலேயே மேற்கு இந்தியத் தீவுகளையும் அவற்றுக்கு அப்பால் அமைந்திருந்த பெரும் நிலப்பகுதியையும் கண்டறிந்தார். அமெரிக்கசு கி.பி. 1512-இல் செவில் (Seville) என்ற ஊரில் காலமானார். அ.தி.

**அமெரிக்கத் தத்துவம் (பயன் வழிக் கொள்கை)** என்பது பரந்துபட்ட பல்பொருள் சார்புடைய தத்துவமாகும். பல்வேறு துறைகளைத் தொட்டுச் செல்வதாய் இருப்பினும், அமெரிக்கத் தத்துவ வரலாற்றின் ஊடுபாவாக எப்போதும் இழையோடுவதாகப் பயன்பாட்டுக் கருத்தே (Ideas of Practicality) நிலவி வந்துள்ளது. எனவேதான் சிறப்பான அமெரிக்கத் தத்துவத்தின் படிநிலைகள் பல

வாயினும் பொதுப்பொருளில் பயன்வழிக் கொள்கையே (Pragmatism) அமெரிக்கத் தத்துவம் என்னும் பெயரால் குறிப்பிடப்படுகிறது. அறிவியல் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட தத்துவ இயல் கி.பி. 1900-க்கு முன் எதுவும் முற்றாக வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. எனினும் வெவ்வேறு தத்துவக் கருத்தாக்க வளர்ச்சிகள், மக்கள் மனவெழுச்சி இயல்புகளுக்கேற்ப வடிவம் பெறாமலுமில்லை. பயன்வழிக் கொள்கை கி.பி.19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வடிவம் பெற்றதாயினும், அமெரிக்க அனுபவ வரலாறு முழுவதிலும் இத்தன்மை வேரோடியிருந்தது என்பதே உண்மை. சில ஆராய்ச்சியாளர்கள் 'பயன் வழிக்கொள்கை' என்னும் தத்துவம், அமெரிக்க வாழ்வியலின் அடிப்படைத் தன்மையின் வடிவமைப்பு மட்டுமே என்று கூட விவாதிக்கின்றனர்.

**வைதிகச் சமயப் பற்றாளர் தத்துவம்:** அமெரிக்கக் குடியேற்றக் காலத்தில், வைதிகச் சமயப் பற்றாளர் (Puritans) தத்துவக் கோட்பாட்டுத் துறையில் செல்வாக்குச் செலுத்தினர். கடவுளே முழுமுதல்வர் என்றும் மனிதர்கள் இயல்பிலேயே பாவிகள் என்றும் அவர்களின் உயிர் கடவுளின் விருப்பத்தைப் பொறுத்ததே என்றும் கருதினர். யார் யாருக்கு உயிர் மீட்பு அளிப்பது என்று கடவுளே முன்முடிவெடுத்து வைத்திருக்கிறார் என்பதால், மனிதனின் எந்த நற்செயலும் இதற்கு மாறாக அவனுக்கு விடுதலை அல்லது முக்தியைப் பெற்றுத் தந்துவிடாது என்றும் அவர்கள் நம்பினார்கள். எனவே அவர்களிடையே மனிதனின் செயற்பாட்டு விடுதலைக் கோட்பாட்டுக்கும் கடவுளின் அருளுக்கும் இடையிலான முரண்பாடு பற்றிய விவாதம், பெரிதும் சிறப்புப் பெற்றிருந்தது. எனினும் நல்லொழுக்கம், நேர்மை, நிதானம், உழைப்பு, எளிமை ஆகிய பண்புகள் பெரிதும் போற்றப்பட்டன. இந்த வைதிகச் சமயப்பற்றாளரின் கோட்பாடுகள், சமயச் சார்பைவிடச் சூழ்நிலைச் சார்பிலேயே பெரிதும் உறுதிப்படுத்தப்பட்டன. இவர்கள் மத நிறுவனங்களான கோயில்களின் அதிகாரத்தைவிடத் தனிமனிதனுக்கும் கடவுளுக்கும் இடையிலான நேரடி உறவையே பெரிதாகக் கருதினார்கள். அதேநேரத்தில் சமயநெறிக்குப் புறம்பான செயற்பாடுகள் அவர்களுக்குக் கசப்பாகவும் இருந்தன. அமெரிக்கர்கள் கி.பி. 1700 முழுவதிலும் தங்கள் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்வதிலும் சமயச்சார்புடைய பக்தியிலும் மட்டுமே ஈடுபாடு கொண்டிருந்ததால் தத்துவக்கொள்கைக் கோட்பாடு போன்றவற்றின் ஆக்கத்திலும் ஆய்விலும் அக்கறை கொள்ளவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாக எழுந்த தத்துவ ஆராய்ச்சிகள் கூடக் கடவுளின் முடிவெடுக்கும் தன்மையை நிலைநாட்டுதற்கும், பொருள் முதல்வாதத்தையும் மனிதனின் முத்திக்கான விடுதலைச் செயற்பாட்டுரிமையையும் மறுப்பதற்குமாகவே வெளிப்பட்டன. சொனாதன் எட்வர்டுசு என்பாரின் கருத்துகளும் கிங் கல்லூரி நிறுவனரான சாமுவேல் சான்சன் என்பாரின் கருத்துகளும் இவ்வகையில் சிறப்பிடம் பெற்றன. மற்றொரு பக்கம் இதே காலங்களில் அறிவியல் பற்றிய தத்துவம் அமெரிக்காவில் விரிவாக்கம் பெற்று வந்தது. பெஞ்சமின் பிராங்கிளின் போன்றோர் இத்துறையில் பேரார்வம் காட்டினர். கோள்களின் அமைப்பு விதிகள், நியூட்டனின் ஆய்வடிப்படையில் பிராங்கிளின் அவர்களால் செழுமையாக விளக்கப்பட்டபோது ஐரோப்பியர்களால் அவர் 'அமெரிக்காவின் முதல் தத்துவ ஞானி' என்று குறிப்பிடப் பெற்றார்.

அமெரிக்க விடுதலைப் போராட்டக் காலத்தில், அமெரிக்க மக்களின் வாழ்வில் அறிவுபூர்வமான ஆய்வுக் கருத்துகள் முதன்மை பெறத்தொடங்கின. தத்துவத் துறையில் உலகாயதச் சார்பு, விடுதலை உணர்வு, செயற்பாட்டு வேகம் ஆகியவை பற்றிய கருத்தோட்டங்கள் மேலோங்கின. மனிதத்துவம், இயற்கையான தனித்த ஒழுக்கமுறை, நாட்டுணர்வு, தற்சார்பு, புரட்சி மனப்பான்மை ஆகியவை எழுச்சி பெறலாயின. நியூட்டனின் உலகாயதக் கருத்துகளால் தாக்கம் பெற்ற பெஞ்சமின் ரசு, சோசப் பிரிசுட்லி போன்றோர் கி.பி.18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகாயதத் தத்துவங்களில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர். பொருள்களுக்குப் பொருந்துகிற அளவு, தன்மை ஆகியவை பற்றிய வரையறை விதிகளை அவர்கள் உலகம் முழுவதற்கும், தனி மனிதனுக்கும் பொருந்துவதாக விரிவுபடுத்தினர். உலகாயதத்தோடு நெருங்கிய தொடர்புடைய இயற்கைச் சமயமும் இக்காலக் கட்டத்தில் புத்துணர்ச்சி பெற்றது. கடவுள் நம்பிக்கை பெற்றிருந்த இயற்கைச் சமயவாதிகள் நேரடியாகக் கடவுள் தோன்றி அருள் செய்வார் என்னும் கருத்தை வன்மையாக மறுத்தனர். தாமசு செபர்சு, தாமசு பெயின், ஈதன் ஆலன், உலிகிபால்மக் போன்றோர் இத்தத்துவக் கருத்தை ஏற்ற சிறந்த வல்லுநர் ஆவர். இவர்கள் கடவுளுடைய நல்ல தன்மையின் வெளிப்பாடே அனைத்தின் ஆக்கமும் (மனிதனின் தோற்றம் உட்பட) என்று விளக்கினார்கள்.

**மக்கட்பண்புக் கோட்பாடுகள்:** இயற்கைச் சமயவாதிகள், மனிதன் பகுத்தறிவுள்ளவன் ஆதலால் இவ்வுலகிலேயே நல்வாழ்வை நுகர இயலுமென்றும், கடவுளின் அரசியல் வரும்வரை காத்திருக்க வேண்டியதில்லை என்றும் தெரிவித்தனர். ஒழுக்கவியற் கோட்பாடு, கடவுள் நம்பிக்கையைப் பொறுத்ததாக இல்லாமல், மக்கட்பண்புநெறியாக (Theory of Humanism) இருப்பதென விளக்கினார்கள். இந்தத் தெளிவுகள் அறிவியல், பகுத்தறிவு, கல்வி ஆகிய மனித முன்னேற்றக்கருவிகளிடம் நம்பிக்கையை விளைவித்தன.

சூழ்நிலைகளே மனித உணர்வுகளின் வடிவாக்க ஆற்றல்களாக இருக்கின்றன என்றும், சமூகச் சூழ் நிலையைச் செப்பனிடுவதன் மூலம் சமுதாய நீதி யைப் பெறலாம் என்றும் மக்கட்பண்புக் கோட்பாட் டாளர் கூறினர்.

முற்போக்கான தத்துவக் கருத்தாக்க வளர்ச்சிக்கு இணையாகப் பழைமைவாதப் பிடிப்புகளும் வளர்ச்சி பெற்று வருவது, அமெரிக்கத் தத்துவ வரலாற்றில் தவிர்க்கப்படவியலாத இயல்பாகும். விடுதலைப் போராட்டத்திற்கும் உள்நாட்டுப் போருக்கும் இடைப் பட்ட காலத்தில் விடுதலை நன்மைகளை நிலை நிறுத்திக் கொள்வதிலும், அடிமைகள் தொடர்பான சமூகச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதிலும் அமெ ரிக்கர்கள் ஈடுபட வேண்டியதாயிற்று. எனவே தத் துவக் கருத்தாக்க வளர்ச்சி, இக்காலக்கட்டத்தில் பெரி தும் தடைபட்டிருந்தது. விடுதலை உணர்வு, உரிமை வளர்ச்சி, மனித சமத்துவம் ஆகிய செபர்சனின் கோட்பாடுகள் தென்அமெரிக்கப் பழைமை வாதி களால் முழுமையாக விலக்கப்பட்டன.

தனிஉரிமைக் கோட்பாட்டாளர்: மனிதனின் சுதந் தர உணர்வும் அறிவாற்றலும் பகுத்தறிவும் பெற்றி ருந்த வரவேற்புக்கு எதிராகத் தத்துவவியலில் மனித னின் சிறுமையும் கடவுளிடம் முழுமையான சார்பு பெற்றிருக்கும் தன்மையும் மையமிட்ட பழைமைக் கோட்பாடுகள் கி.பி. 1900-இன் தொடக்கத்தில் மேலோங்கின. அறிவியலில் மேற்கொள்ளப்பட்ட ஆர்வத்திற்கு மாறாக வைதிக சமயத்தில் கொள்ளப் பட்ட ஆர்வம் மிகுந்தது. கடவுளின் முடிவுகளின் படியே எல்லாம் நடக்கும் என்றும், இருக்கும் அமைப்பே ஒத்துக்கொள்ளத்தக்கது என்றும் வலி யுறுத்துவதே தத்துவத்தின் நோக்கம் என்பது அறி வுறுத்தப்பட்டது. இக்காலக்கட்டத்தில் 'தத்துவமென் பது இறையியல், ஒழுக்கவியல், அரசியல் ஆகியவற் றைப்பற்றிய செயற்பாட்டு அறவியலாக அணுகப் பட்டது' என்று நோவா போர்டர் விளக்கங் கூறி னார்.

எனினும் இசுகாட்டிசு மெய்ம்மையியல் (Scottish Realism) தத்துவக் கருத்து முதல் வாதம் (Philosophical Idealis) ஆகிய இருகோட்பாடுகளும் இக்காலத் தில் அமெரிக்காவில் வளர்ச்சி பெறலாயின. பொது அறிவின்பாற்பட்ட மெய்ம்மை தனித்தன்மையியல் அமெரிக்கத் தத்துவமாகக் கருதப்பட்டது. அனுபவங் கடந்த அறிவு நிலைத் தத்துவம் (Transcendentalism) பாசுடனில் (Boston) தொடங்கியது. உள்நாட்டுப் போருக்கு முந்திய காலத்தில் இதன் தாக்கம் சிறப் புற்றிருந்தது. எமர்சன், என்றி, டேவிட், தொரோ, வில்லியம் எல்லெறி சென்னிசி, தியோடர் பார்க்கர் போன்ற வல்லுநர்கள் இத்தத்துவத்தை வளர்த்தார் கள். இவர்கள் சோர்வுவாதத்தையும் (Pessimism) கால்வனிய மனத்தளர்ச்சியையும் எதிர்ப்பதைச் சிறப் புப் பணியாக மேற்கொண்டார்கள். இவர்கள் தனி உரிமை கோட்பாட்டாளர் (Unitarians) என்றும் கூறப்பட்டார்கள் இந்தத் தனிஉரிமைக்கோட்பாட்டா ளர்கள் கடவுள், அன்பும் நீதியும் கொண்டவர் என் றும் நற்செயல்களால் மனிதர் நல்லவராக இயலும் என்றும் கூறினர். அதேநேரத்தில் இயற்கைச் சமய வாதிகளின் பகுத்தறிவுக் கோட்பாடுகளை இவர்கள் மறுத்தனர். சுருக்கமாகக் கூறினால், விவிலிய வெளிப் பாடுகளை அப்படியே கண்மூடித்தனமாக ஏற்க மறுத்த இவர்கள், பகுத்தறிவுக் கோட்பாடுகளின் ஆய்வு வெளிப்பாடுகளை ஆராய்ந்து ஏற்பதைப் பரிந்துரை செய்தார்கள்.

யூகமுறைத் தத்துவம்: உள்நாட்டுப் போருக்குப் பின், எதிர்காலத்தைக் கணிப்பதான யூகமுறைத் தத் துவம் (Speculative Philosophy) அமெரிக்காவில் செல் வாக்குப்பெற்றது. இந்த யூகமுறைக் கருத்து முதல் வாதத் தத்துவம் செருமனியிலிருந்து குடியேறியவர் களால் வளப்படுத்தப்பட்டது. வில்லியம் டி. ஆரிசு, என்றி சி. பிராக்மேயர் போன்ற தத்துவ இயலாளர்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவர்கள். அறிவாய் வின் மூலம் அனுபவங் கடந்த மெய்யியலை உணர் வது இயலக் கூடியதே என்று ஏகலின் கோட்பாட்டு வழியில் அறிவுறுத்த முனைந்தனர் இந்த யூகமுறைக் கருத்துமுதல் வாதிகள்.

அமெரிக்கக் கருத்துமுதல் வாதத்திற்காக வாதிட்ட வர்களில் இறுதியானவர் சோசிய இராய்சு ஆவார். பிரபஞ்சத்தில் தனிமுதலைக் (Absolute) கண்டறி வதை முதன்மை நோக்கமாக அவர் கொண்டிருந் தார். இராய்சைப் பொறுத்தவரை மனம் என்பது உச்ச உண்மையாயினும், மனம் உணர்வு வழிப்பட்ட தன்று. 'தனி முதல்' மனம் என்பதே உச்ச உண்மை அல்லது உள்பொருளென்றும் அது தனிமனித மனங் களைவிட மிகப்பெரியது என்றும் அது பிரபஞ்சத்தின் அறிவு முழுமையே என்றும் அவர் கருதினார். பொருள்கள் அனைத்தின் இருப்பும், பிரிதலும் அந்தத் தனி முதலின் அனுபவமாக இருப்பதாக அவர் விளக் கினார்.

தார்வின் கோட்பாட்டுத் தத்துவம்: அமெரிக் கத் தத்துவ வரலாற்றில் தார்வின் (Darwin) பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டின் அறிமுகம் ஒரு மாபெரும் திருப்பத்தை ஏற்படுத்தியது. சமயம், புலன் கடந்த மெய்யியல், அறவியல் ஆகியவற்றின் மரபுக் கோட் பாடுகளுக்குப் புதிய சூளுரைகளை இது தோற்றுவித் தது. இவ்வாறாகத் தத்துவ இயலுக்குப் புத்துணர்ச்சி ஊட்டப்பட்டது. சான் பிசுகே, பிரான்சிசு ஈ அப் பாட்டு, சான்சே ரைட்டு, பியர்சு, வில்லியம் சேம்சு,

சான் தூயி போன்றோர் அப்புதிய நிலைக்கு ஆதர வாளராக விளங்கினர். தத்துவத்தில் இயற்கையின் நிலைபேறான முறைமையாகக் கருதப்பட்டனவற்றை, எப்போதும் மாறுதலுக்குட்படும் இயங்கியல் முறை யாக மாற்றிய பெருமை தார்வின் கோட்பாட்டுத் தாக்கத்திற்கே உரியதாகும். மனத்திற்குப் புறம்பான பொருளுலகுக்குரிய அடிப்படையில் மனிதனுக்கும் இயற்கைக்கும், மனத்திற்கும் உடலுக்கும் இடையி லான தொடர்புகள் ஆராயப்படலாயின.

தத்துவ வரலாற்றின் பொற்காலம்: அமெரிக்காவில் கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில், ஆக்க அடிப்படையில், ஆழமான, உயிரோட்டமுள்ள ஆர்வ எழுச்சி தத்துவத்துறையில் தோன்றியது. இந்நாட்டு வரலாற்றில், கி பி. 1880-க்கும் 1940-க்கும் இடையிலான காலப்பகுதி, தத்துவ வரலாற்றின் 'பொற்காலம்' என்றே கூறப்படுகின்றது. ஏனெனில் இந்தக் காலப் பகுதியில்தான் அமெரிக்காவின் மிகச்சிறந்த மூல தத் துவ இயலாளர்களும் இயக்கங்களும் தோன்ற முடிந் தன. மிகச்சிறந்த தத்துவ இயலாளர்களான பியர்சு, சேம்சு, தூயி, இராய்சு, சார்சு சந்தயனா, ஆல்பிரட்டு, நார்த் ஒயிட்கெட்டு ஆகியோர் இக்காலத்தவரே. பயன் வழிக் கொள்கை, மெய்யியல், இயற்பியல் ஆகிய தத் துவ இயல்களும் இக்காலத்தவையே.

அமெரிக்கத் தத்துவங்களில் மிகச்சிறந்ததும் மிக்க செல்வாக்குடையதும் தனித்தன்மை வாய்ந்ததுமான 'பயன்வழிக்கொள்கை' என்னும் தத்துவ இயல், சார்லசு பியர்சு என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இத்தத்துவ இயலைச் சேம்சு, தூயி ஆகியோர் செழு மைப்படுத்தினர். இம்மூவரின் பயன்வழிக் கொள்கை களும் தத்துவார்த்தத்தில் வெவ்வேறு பரிணாமம் உடையவை. பியர்சின் பயன்வழிக் கொள்கை அறிவி யல் சார்ந்ததாகவும், சேம்சின் பயன்வழிக் கொள்கை சமயத்தைச் சார்ந்ததாகவும், தூயியின் பயன்வழிக் கொள்கை அறவியல் சார்ந்ததாகவும் இருந்தன.

பயன்வழிக் கொள்கை: சார்லசு பியர்சு: பயன் வழிக்கொள்கை என்பது,அடிப்படையில் கருத்துப்படி வக் கூற்றுகளில் தோன்றும் குழப்பங்களைத் தீர்த்துத் தெளிவுபடுத்துகிற ஒரு முறை என்று பியர்சு கருதி னார். அவர், தாம் எழுதிய 'நம் கருத்துகளைத் தெளிவாக்குவது எப்படி' என்ற கட்டுரையில் பயன் வழிக் கொள்கையின் சாரத்தை விளக்கினார். ஒரு கூற்றின் பொருளும் உண்மையும் அதன் நடைமுறை விளைவுகளைப் பொறுத்தே அமைகின்றன என்பது அவருடைய கோட்பாடாகும். இத்தகு பயன்வழி முறை, எல்லாக் கருத்துப் படிவக் கூற்றுகளுக்கும் பயன்படுத்தப்பட வேண்டியதில்லையென்றும், அறிவி யல் கூற்றுகளில் கடினமான கருத்துப்படிவங்களுக் கும் மறைபொருளாக உள்ள கருத்துப் படிவங்களுக் கும் மட்டும் பயன்படுத்தப்பட்டால் போதும் என்றும் அவர் விளக்கினார். கருத்துகள் சார்புநிலை வாக்கி யங்களாக (Hypothetical Statements) வெளிப்படுத்தப் பட்டால் அவற்றின் பொருள் நன்றாகத் தெளிவாகும் என்று பியர்சு கருதினார். எடுத்துக்காட்டாக, ஒரு பொருள் உடையும் தன்மையுடையது எனக் கூற வேண்டியிருந்தால், 'அதன் மீது அடித்தால், அது சிதறிப் போகும்' என்று கூறுவதன் மூலம் அதன் பொருள் தெளிவாகும் என விவரித்தார். விளைவு களை விளக்காத எந்தக் கூற்றும் பொருளற்றதே என்பது பியர்சின் கோட்பாடாகும்.

வில்லியம் சேம்சு: பியர்சின் பயன்வழிக்கொள் கை விளக்கங்கள் மற்ற இயக்கங்களுக்குப் பரவாமல் இருந்தன. கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் வில் லியம் சேம்சு தம்முடைய புகழ்பெற்ற விரிவுரைகளை நிகழ்த்திய நேரத்தில் பியர்சின் கோட்பாடுகளை விவ ரித்தபோதுதான் அவருடைய பயன்வழிக்கொள்கை யின் சிறப்புகள் வெளிப்பட்டன. கருத்துகளின் பொருள்களைக் கணிப்பது மட்டுமே பயன்வழிக் கொள்கையின் தத்துவம் என்ற பியர்சின் கோட்பாட் டோடு நிறுத்தாமல், சேம்சு அதை 'உண்மை' பற்றிய ஒரு தத்துவக் கோட்பாடாகவே செம்மைப் படுத்தி னார். இக்கருத்து வளர்ச்சி பியர்சின் விளக்கங்களி லேயே மறைவாய்ப் பொதிந்திருந்ததாகச் சேம்சு தெரி வித்தார். தாம் 1907-இல் வெளியிட்ட பயன்வழிக் கொள்கை என்ற விரிவுரை நூலில், தம் கோட்பாட் டைக் கீழ் வருமாறு விளக்கினார் சேம்சு. நடத்தையில் நல்லது என்பது எப்படி ஏற்புடையதோ, இசைவான தோ அப்படியே சிந்தனையில் உண்மை என்பது ஏற் புடையதும் இசைவானதும் ஆகும். ஏற்புடைமையே அனைத்தையும் உறுதி செய்யும். நம்பிக்கைகளும் உண்மையான கூற்றுகளும் பயன் அடிப்படையிலேயே உறுதி செய்யப்படுகின்றன. "அது பயனுடையது; ஏனெனில் அது உண்மையானது"; "அது உண்மையா னது – ஏனெனில் பயனுடையது" என்கிற இரு கூற்று களும் ஒரே பொருளுடையவை. மத நம்பிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் சேம்சு எழுதினார். பயன் வழிக் கொள்கையின் அடிப்படையில், நம் வாழ்வுக் குப் பயன்படுகிற எந்தக் கருதுகோளையும் நாம் விலக்க முடியாது. கடவுள் பற்றிய கருதுகோள், அதன் முழுமைப் பொருளில் நிறைவு அளிக்கும் அள வில் பயனுள்ளதாக இருக்கும்வரை அது உண்மையே. நம் அனுபவம் இதை நிலைபெறுத்துகிறது. நன்கு ஆராயும் முறையான அறிவியலுக்குப் பயன்படும் கோட்பாடாகப் பயன்வழிக் கொள்கை பியர்சு அவர் களால் வடிக்கப்பட்டது. இதைச் சமய நம்பிக்கையை வலியுறுத்தச் சேம்சு பயன்படுத்திக் கொண்டதில் பியர் சுக்கும் மற்றச்சில தத்துவ இயலாளர்களுக்கும் உடன் பாடில்லை.

**தூயி:** பயன்வழிக் கொள்கையாளர்களில் பொது வாழ்வில் மிகவும் செல்வாக்குப் பெற்றவராயிருந்தவர் சான் தூயி (John Dewey)யே ஆவார். தத்துவக் கருத்துவாதத்தில் பியர்சு, சேம்சு இருவரின் கொள்கைகளிடமும் இவருக்கு வேறுபாடு இருந்தது. பியர்சைவிடப் பரந்துபட்ட துறைகளில் பயன்வழிக் கொள்கை பயன்படுத்தப்படவேண்டும் என்று தூயி கருதினார். மேலும் சேம்சு சமய நம்பிக்கைகளை நெறிமுறையானவையே என்று நிலைநிறுத்தப் பயன்வழிக் கொள்கையைப் பயன்படுத்தியதில் இவருக்கு உடன்பாடில்லை. தூயியைப் பொறுத்தவரை பயன்வழிக் கொள்கை என்பது, சிந்தனை அனைத்துக்குமான பிரதிபலிப்பும் விளைவுகளின் சோதனை வரன்முறையும் அதன்வழிச் சிந்தனையின் பொருளைப் பெறுவதுமேயாகும். மொழி என்பது மனிதனின் நோக்கங்களுக்கான நுகர்ச்சியைச் சொல்வடிவில் கருத்தாக்கமாக மாற்றுவதே என்று தூயி விளக்கினார். ஒரு கருத்தின் பொருள் என்பது, நடைமுறைப்படவிருக்கும் செயல்திட்டம் அல்லது ஒரு செயலின் விளைவு என்று அவர் விவரித்தார். பியர்சு, சேம்சு ஆகியோரின் பயன்வழிக் கொள்கைகளிலிருந்து தம் கோட்பாடு வேறுபட்டது என்று காட்டுவதற்காகத் தூயி தமது கொள்கைக்குக் கருவிவழிக்கொள்கை (Instrumentalism) என்று பெயரிட்டார்.

தூயியின் தத்துவ வளர்ச்சியின் போக்கில் சூழ்நிலை (Situation) பற்றிய கருத்து வடிவம் (Concept) மையக் கருத்தாக விளங்கியது. "ஒரு பொருளில் ஏற்படுகிற தொடக்க அனுபவம், சில ஐயங்கள் அல்லது சிக்கல்களை எழுப்பும். இச்சிக்கல்கள் அப்பொருள் பற்றிய ஆராய்ச்சிக்கு (Inquiry) வழிகோலும். இவ்ஆராய்ச்சி, சிந்தனையில் ஒரு சாயலை (Reflection) ஏற்படுத்தும். இச்சாயல் ஐயத்தை அல்லது சிக்கலைத் தீர்க்கும். தீர்மானிக்கப்படாத சூழ்நிலையைத் தீர்மானிக்கப்பட்ட முடிவெடுத்த சூழ்நிலையாக மாற்றுவது பொருள் பற்றிய ஆராய்ச்சியாகும்" என்று 'ஆராய்ச்சி பற்றிய கோட்பாடு–தருக்கவியல்' என்ற நூலில் தூயி விளக்கினார். ஆராய்ச்சி மூலம் பெறப்பட்ட கருத்துகள், கருதுகோள்கள் (Hypothesis) ஆகும். வேறு வகையில் கூறுவதாயின் அவை நன்கு ஆராய்தலின் விளைவுகளால் ஆராயப்பட்ட செயல்திட்டங்கள் (Plans of actions) ஆகும். நிறைவான முடிவுகளின் ஆராய்ச்சியால் பெறப்படுவதே அறிவெனப்படுகின்றது என்று தூயி விரித்துரைத்தார். சூழ்நிலைகளின் சூளுரைகளுக்குப் பொருந்திக் கொள்ளும் முறையே சிந்தனையென்றும் விளக்கினார்.

**பயன்வழிக் கொள்கையின் தாக்கம்:** புலன் கடந்த மெய்ப்பொருளியலின் மரபுவழிக் கருத்துகளை (Traditional concepts in metaphysics) வீழ்ச்சியடையச் செய்தது பயன்வழிக் கொள்கையின் பெரிய சாதனையாகும். கருத்து முதல் வாதிகளின் (Idealists) உயர்நிலைக் கோட்பாடுகளான தனிமுதல் (Absolute) போன்றவற்றைப் பயன்வழிக் கொள்கையாளர்கள் மறுத்தனர். பயன்வழிக் கொள்கையின் தாக்கம் தத்துவ இயலோடு நின்றுவிடாமல், சமூக அறிவியல் சட்டஇயல், வரலாற்றியல், அரசியல், கல்வியியல் ஆகிய அனைத்திலும் தன் தாக்கத்தை ஏற்படுத்தியது. இத்துறைகளில் பயன்வழிக்கொள்கையாளர் தம் கருத்துகளில் நடைமுறை விளைவு குறித்த (Practical Consequences) அடிப்படை விதிகளையே புகுத்தி நிறைவு கண்டனர்.

**அமெரிக்கத் தத்துவத்தின் இக்காலநிலை:** மெய்ம்மையியல், இயற்கைவாதம் (Naturalism) ஆகிய தத்துவ இயல்களும் ஓரளவு அமெரிக்கத் தத்துவத்தில் தம் தாக்கத்தை ஏற்படுத்தின. இக்காலத் தத்துவ இயலான அளவையியல் நேர்காட்சி இயல் (Logical Positivism), அமெரிக்கத் தத்துவத்துறையில் அண்மைக்காலத்தில் செல்வாக்குப் பெற்றுள்ளது. அளவைமுறை அனுபவ இயல் (Logical Empiricism) என்று அழைக்கப்படும் இவ்வியல், புலன்கடந்த மெய்ப்பொருளியலைப் (Metaphysics) பொருளற்றதாக்க முனையும் தத்துவமாயுள்ளது. அடிப்படை அறிவியல் கோட்பாடுகளின் செல்வாக்கைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்ட அளவைமுறை நேர்காட்சி இயல், கருத்துகளை மொழியியல் (Linguistic) முறையில் ஆய்வுசெய்து அவற்றின் உண்மையை நிறுவ வேண்டும் என வலியுறுத்துகிறது. ஒப்பிட்டுச் சரிபார்க்க இயலாத எதையும் புறக்கணிக்க வேண்டும் என்று கருதும் இவ்வியல், கருத்து முதல்வாதம் (Idealism), புலன்கடந்த மெய்ப்பொருளியல் (Metaphysics) ஆகியவற்றின் வினாக்களே பொருத்தமற்றவை எனப் புறக்கணிப்பதால், அவற்றின் விடைகளை ஏற்பதில்லை என்பது கூறாமலே விளங்கும்.

இவற்றைத்தவிர, புதிய தாமிசம் (New–Thomism) மார்க்சியம் (Marxism) போன்ற தத்துவ இயல்களும் அமெரிக்கத் தத்துவத்துறையில் எல்லா இடங்களிலும் இடம் பெற்றுள்ளன. எனினும் அமெரிக்கத் தத்துவம் பெருமளவு பயன்வழிக்கொள்கை வழிப்பட்டதாகவே செல்வாக்குப் பெற்று வருகிறது. **வீ.சே.**

துணை நூல்கள்:

**Anderson, P.R. and Fisch, M.H.**, (Editors)., "Philosophy in America From the Puritans to James", New York, 1939.

**Fisch, M.H.**, (Editor) "Classic American Philosophers", New York, 1951.

**Mueldor, W.G., Sears, Laurence and Schlalach, A.V.** (Editors) – "The Development of American Philosophy", New York, 1960.

**அமெரிக்க தாலர்**: அமெரிக்க நாட்டில் நடைமுறையில் வழங்கிவரும் செலாவணி தாலர் (Dollar) எனப்படும். ஒவ்வொரு நாட்டின் செலாவணியும் அந்த நாட்டின் எல்லைக்குள் தாராளமாக ஏற்றுக்கொள்ளப்படும். உலகம் முழுமையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பன்னாட்டுச் செலாவணி என்று ஒன்று இல்லை. இருப்பினும், முதல் உலகப் போருக்கு முன்பு பிரிட்டனின் 'பவுண்டு தெர்லிங்கும்', (Pound sterling) அப்போருக்குப் பின்னர் அமெரிக்க தாலரும் பன்னாட்டுச் செலாவணியாக உருவாகி, பன்னாட்டு வாணிகத்திலும் உலக நிதி அமைப்புகளிலும் சிறப்பான பங்கு பெற்று வருகின்றன. குறிப்பாக, 1947–இல் பிரிட்டன்வுட்சு (Bretton woods) என்னுமிடத்தில் பன்னாட்டுப் பண ஆக்க நிதி அமைப்பிலும் (International Monetary Fund), 1973 மார்ச்சுக்குப் பின்பு எழுந்த மிதப்பு மாற்றுவீத அமைப்பிலும் (Floating Exchange Rate) அமெரிக்க தாலர்,முக்கியப் பங்கு பெற்று உலகப் பொருளாதாரத்தைப் பன்னாட்டு மயமாக்கியது. போருக்குப் பின்னால் ஏற்படுத்தப்பட்ட பன்னாட்டு நிதி அமைப்புகளின் வரலாறு அமெரிக்க தாலரை அடிப்படையாகக் கொண்டதால், அந்தத் தாலரின் பகுப்பாய்வு பணவியலின் அறிவுக்கு அடிகோலுகிறது.

போருக்கு இடைப்பட்ட காலத்தில், பிரிட்டனின் பவுண்டு தெர்லிங்' (Pound sterling) பன்னாட்டுச் செலாவணியாகத் தனது செல்வாக்கை நிலைநிறுத்தத் தவறியபோது, அமெரிக்க தாலர் உலக நாடுகளுக்குத் தலையாய செலாவணியாகப் பயன்படத் தொடங்கியது. இருப்பினும் உலக நாடுகளின் வாணிகத் தேவைகளுக்கேற்ப ஆதார நாணயமான (Key Currency) தாலரை உற்பத்தி செய்யும் நாடாகத் தன்னை ஆக்கிக் கொள்வதில் ஐக்கிய அமெரிக்கா தயக்கம் காட்டியது. பன்னாட்டுப் பண ஆக்க நிதி, வரையறுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு வசதிகளைத் தவிர (Quota rights). வளர்ந்து வரும் உலக வாணிகத் தேவைகளுக்கேற்பப் பன்னாட்டு நீர்மையை (International Liquidity) அதாவது பன்னாட்டுச் செலாவணியின் பணநெகிழ்வு நிலையைப் பெருக்குவதற்கான கருவி எதுவும் இல்லை. இந்த நிலையில் ஐக்கிய அமெரிக்கா உலக நாடுகளுக்கு வங்கியாக ஆதார நாணயத்தை உற்பத்தி செய்யும் காப்பு இருப்பு மையமாக (Reserve Centre) ஆயிற்று. அதற்கான தகுதி மிதமிஞ்சிய பொருளாதார வலிமையால், தனக்கு இருப்பதை முழுமையாக உணர்ந்தது. உலக தேசிய வருமானத்தின் கணிசமான ஒரு பகுதியை உருவாக்கும் திறனையும், உலகத்து மைய வங்கிகளின் தங்க இருப்பில் மூன்றில் இரண்டு பங்கு தங்கத்தையும் நன்கு வளர்ச்சியுற்ற பண அங்காடியையும் அமெரிக்கா தன்னகத்தே கொண்டிருந்தது. அமெரிக்க தாலர் மட்டுமே 1 அவுன்சு தங்கம் 35 தாலர் என்ற விகிதக் கணக்கில் மாற்றப்படத்தக்க செலாவணியாக இருந்தது.

பிரிட்டன்வுட்சு பண அமைப்பு முறையில் ஏனைய நாடுகளில் செலாவணிகளின் மாற்று வீதங்கள் (The exchange rate of the currencies of n–1 Countries) அமெரிக்க தாலரில் வரையறுக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்டன. அந்தந்த நாட்டு மைய வங்கிகள் அயல் நாட்டு மாற்று அங்காடியில் (Foreign Exchange Market) தங்கள் செலாவணிகளின் மாற்று வீதத்தில் அவ்வப்பொழுது ஏற்படும் ஏற்ற இறக்கங்களை ஒரு விழுக்காட்டிற்குள்ளாகக் கட்டுப்படுத்தி, செலாவணிகளின் நிலையான மாற்று வீதத்தைக் (Fixed exchange rate) காப்பாற்றி வந்தன. அமெரிக்க தாலர் மைய வங்கிகளின் காப்பு இருப்பு நாணயமாகவும் (Reserve Currency), அயல்நாட்டு அங்காடியில் பயன்படுத்தக்கூடிய தலையீடு நாணயமாகவும் (Intervention Currency) செயற்படத் தொடங்கியது. அயல்நாட்டுச் செலுத்துநிலையில் அடிப்படையான சமன்கேடு (Fundamental disequilibrium in balance of payments) நிகழும்போது, மாற்று வீதங்களில் தக்க மாற்றம் ஏற்பட வேண்டும் எனக் கொள்கை முறையில் தீர்மானிக்கப்பட்டது. தங்கத்தின் அடிப்படையில் நிலையாகப் பிணைக்கப்பட்ட தாலரும் (Fixed gold-dollar link) செலாவணிகளின் நிலையான மாற்று வீதங்களும் பிரிட்டன்வுட்சு அமைப்பின் சிறப்புக் கூறுகளாகக் கருதப்பட்டன.

அமெரிக்க தாலர் பன்னாட்டுச் செலாவணியாக, ஆதார நாணயமாக, $n^{th}$ நாணயமாகச் செயலாற்றிய தன் மூலம் ஏனைய நாடுகள் (n–1 countries), தங்களின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் அடிப்படையான சமன்கேட்டை நிறைவு செய்யப் பன்னாட்டுப் பணவாக்கநிதியின் அனுமதி பெற்றுச் சூழ்நிலைக் கேற்பச் செலாவணிகளின் மாற்று வீதங்களை மதிப்புக் குறைக்கவோ (Devalue), மதிப்பு ஏற்றம் செய்யவோ (Revalue) மாற்றுவீத உரிமை (Exchange rate autonomy) பெற்றன. அமெரிக்கா இந்த உரிமையை இழந்திருந்தது எனினும், அதனால் பாதிக்கப்படவில்லை. ஆனால், தனது அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் பற்றாக்குறையை தாலர் நோட்டுகளை அடித்துத் தீர்த்துக் கொள்ள இயலும். எனவே மற்ற நாடுகளுக்கு இல்லாத சிறப்பு வசதி அமெரிக்காவிற்கு மட்டும் இருந்தது. ஆராயின் அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்படும் ஒட்டு மொத்தமான பற்றாக்குறை வழியாக

(Via the overall deficit in balance of payment) அமெரிக்கா உலகப் பொருளாதாரத்தின் தாலர் தேவைகளை நிறைவு செய்தது புலனாகும். உலகப் பொருளாதாரத்தின் தேவைக்கு அதிகமாக, அமெரிக்கா தன்னுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலைப் பற்றாக் குறை மூலம் தாலரை உற்பத்தி செய்து, உலகப் பணவீக்கத்தை (World Inflation) அதிகமாக்கினால், அந்த உபரியான தாலர்களைத் (Excess Dollars) தங்கமாக மாற்றிக் கொள்ளக் கூடிய உரிமையை ஏனைய மைய வங்கிகள் பெற்றிருந்த காரணத்தால், ஐக்கிய அமெரிக்காவின் மித மிஞ்சிய பண ஆக்க உரிமையைக் கட்டுப்படுத்துவதற்கான கடிவாளம் மற்ற நாடுகளிடம் இருந்துவந்தது.

மார்சல் நிதி உதவித் திட்டத்தின் வாயிலாகப் (Marshall-Aid Programme) போரால் பாதிக்கப்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சப்பானுக்கும் கணிசமான தாலர் தொகையைக் கொடையாக அமெரிக்கா அளித்தது. இந்தக் கணிசமான நிதி உதவி அந்த நாடுகளின் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றை நிலைக்குக் கொண்டுவந்து, பொருளாதாரத்தை வலிமைப்படுத்துவதற்கும் தங்களுக்குள் செலாவணி மாற்று உரிமையை நிறைவேற்றிக் கொள்வதற்கும் வழி கோலியது. இந்த முறையில் அமெரிக்க தாலர் உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தைப் (Capitalist World Economy) பன்னாட்டு மயமாக்கி, பல நாடுகளின் பணம், மற்றும் பொருள் அங்காடிகளை இணைத்தது.

அமெரிக்காவின் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் 1960-ஆம் ஆண்டுத் தொடக்கம் வரை, ஏற்பட்ட பற்றாக்குறை மிதமான அளவில் இருந்தது. தாலர் தேவை அதிகமாக இருந்த நிலையில் இந்தப் பற்றாக் குறை, பன்னாட்டு நீர்மையைப் பண நெகிழ்வு நிலையைப் பெருக்கும் சிறந்த கருவியாக விளங்கியது. இதனை நலம் விளைவிக்கும் சமன்கேடு என்று (Beneficial Disequilibrium) நிபுணர்கள் பகுத்தாய்வு செய்தனர். மேற்கு ஐரோப்பாவும் சப்பானும் பொருளாதாரம், அரசியல், படைபலம் ஆகியவற்றுக்கு அமெரிக்காவையே சார்ந்து இருந்தன. எனவே, அமெரிக்கா உலகப் பொருளாதாரத்தில் செலாவணியில் விட்ட தாலர் நோட்டுகளால் சிக்கல் ஏதும் எழவில்லை. அமெரிக்காவும் (1965 வரை) தனது பணக் கொள்கையைப் (Monetary Policy) பொறுப்புடனும் நிதானத்துடனும் கடைப்பிடித்தது. அயல்நாட்டுச் செலுத்து நிலையில் நடப்புக் கணக்கில் உபரி இருந்தது. மற்ற நாடுகளோடு ஒப்பு நோக்கும் போது அமெரிக்காவில் பணவீக்கம் மிதமாக இருந்தது. உலக நாடுகளிடையே வட்டிவீதங்களும் செலாவணிகளின் மாற்று வீதங்களும் அதிகமான ஏற்ற இறக்கங்களுக்கு ஆட்படவில்லை. எனினும், 1959 வரை ஐக்கிய அமெரிக்கா சுமார் 10 பிலியன் தாலர் பெறுமான தங்கத்தை இழந்தது. ஏனைய மைய வங்கிகளிடம் தங்கத்தின் இருப்பு, தாலரின் இருப்பைவிடக் குறைவாக இருந்த காரணத்தால், அதனை ஈடுசெய்யத் தாலரைத் தங்கமாக மாற்றுவதற்கான வசதியைப் பயன்படுத்திக் கொண்டதே ஒழிய வேறு காரணங்கள் இல்லை.

தாலரின் மீது 1960-ஆம் ஆண்டுத் தொடக்கத்திலிருந்தே அவநம்பிக்கை ஏற்பட்டுத் 'தாலர் நெருக்கடி' (Dollar Crisis) தொடர ஆரம்பித்தது. இது 1965-க்கு மேல் தீவிரமடையத் தொடங்கியது. மேலும் 1667-ஆம் ஆண்டுப் பவுண்டு மதிப்பு குறைப்புக்குப் பின் உலக நாடுகளின் கவனம் தாலரின்பால் திரும்பியது. அமெரிக்கா 1965-ஆம் ஆண்டு முதல் அரசாங்க நிதி, பணம் பற்றிய கொள்கையில் நிதானத்தை இழக்கத் தொடங்கியது; பணவீக்கத்தை உண்டு பண்ணும் நாடாகவும் மாறியது. அதிகமான பணவீக்கத்தைத் தடுக்க 1966-இல் கையாண்ட கடன் கட்டுப்பாடும் வெற்றி பெறவில்லை. வியட்நாம் போரைச் சமாளிக்க 1967-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வரி விதிக்காமல், தாலர் நோட்டுகளை அச்சடித்து, போர்ச் செலவுகளை ஈடுசெய்ய ஆரம்பித்தபோது, மற்ற நாடுகள் பொறுமையுடன் சகித்துக் கொள்ள முடியவில்லை. வெளி நாடுகளில் அமெரிக்காவின் முதலீடும் அதிகமாக ஏற்படுத்தப்பட்டது. அமெரிக்கா உலகப் பொருளாதாரத்தின் நலத்தைக் கருத்தில் கொண்டு நடக்காமல், தனது நாட்டு நலத்தையே கருத்தில் கொண்டு செயலாற்றிய போது தன் வாணிகக் கூட்டாளிகளுக்கு, குறிப்பாகச் செருமனிக்கும் சப்பானுக்கும் இது ஒத்து வரவில்லை. பொருளாதார முறையில் அமெரிக்காவைச் சார்ந்து இருக்கவேண்டிய கட்டாய நிலையில் அவை உரிமைக் குரல் எழுப்பின.

அமெரிக்கா, தன்னுடைய அயல்நாட்டுச் செலுத்து நிலைப் பற்றாக் குறையின் மூலம் ஏற்றுமதி செய்த பணவீக்கத்தைச் செருமனியும் சப்பானும் தங்களுடைய செலாவணிகளின் மதிப்பை ஏற்றித் (Revaluation) தடுத்து நிறுத்தி இருக்க முடியும். ஆனால் அது தங்களது ஏற்றுமதியைப் பெரிதும் பாதிக்கும் என்ற காரணத்தால் அந்த நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. மேலும், 1968-இல், அதிகார பூர்வமற்ற முறையில் அமெரிக்கா, மற்ற நாடுகளிடம் தங்களது உபரி தாலர் நோட்டுகளைத் தங்கமாக மாற்ற வேண்டா என்று கேட்டுக் கொண்டதால், தாலரைத் தங்கமாக மாற்றிக் கொள்ளக்கூடிய உரிமையையும் பயன்படுத்த முடியவில்லை. இந்நிலையில், அயல் நாட்டு மைய வங்கிகளுக்கு, அமெரிக்கா தர வேண்டிய 'நீர்மைப் பொறுப்பு' (Liquid Liabilities of the U.S.)

தங்க இருப்பின் அளவைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக இருந்தது. இறுதி நடப்புக் கணக்கில் 1960-ஆம் ஆண்டுவாக்கில் செலுத்துநிலை பற்றாக்குறை அதிகமாகத் தோன்ற ஆரம்பித்தது. அமெரிக்க மக்களுக்குத் தாலர் மீது அவநம்பிக்கை ஏற்பட்டது. அதன் நாள்கள் எண்ணப்படுவதை உலக நாடுகள் உணர ஆரம்பித்தன. அதன் மதிப்புக் குறைவு பற்றிய நிச்சயத் தன்மை ஏற்பட்டும், அது எப்போது நடக்கும் என்பது மட்டும் கேள்விக் குறியாக இருந்தது.

தங்கக் கையிருப்புப் பற்றாக்குறை நிலையில் அமெரிக்க அதிபர் இரிச்சர்டு நிக்சன் 1971 ஆகஸ்ட்டு 15-இல் தாலரைத் தங்கமாக மாற்றுவதற்கான உறுதிமொழியைச் சில காலம் நிறுத்துவதென்று முடிவு செய்து, 90 நாள் விலை, கூலிக் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தார். இறக்குமதிகள் மீது 10 விழுக்காடு மேல்-வரி (Sur-Charge) விதித்தார். சுமித்சோனியன் ஒப்பந்தம் (Smithsonian Agreement) 1971 திசம்பரில் ஏற்பட்டது. அதன்படி, அமெரிக்க தாலரின் மதிப்பு 10 விழுக்காடு தங்கத்தில் குறைக்கப்பட்டது. இறக்குமதிகள் மீது விதித்த வரியை அமெரிக்கா விலக்கிக் கொண்டது. செருமானிய மார்க்கு (Mark), சப்பானிய என்(Yen), சுவிட்சர்லாந்தின் பிராங்கு (Franc), பிரான்சின் பிராங்கு போன்ற செலாவணிகள் மதிப்பேற்றம் கண்டன. ஆனால், அமெரிக்கப் பணக் கொள்கையின் பொறுப்பற்ற தன்மையும், அயல்நாட்டுச் செலுத்து நிலையில் தொடர்ந்து நிலவி வந்த அதிகப் பற்றாக் குறையும், மூலதன வெளி ஓட்டமும் (Capital Out-flow) அமெரிக்க தாலர் மீது மீண்டும் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்தன. உலக வைப்பு நிதி (World Reserve), 1969-இல் 79 பிலியன் தாலராக இருந்து அடுத்த மூன்று ஆண்டுக் காலத்திற்குள் இரு மடங்காக உயர்ந்து, 178 பிலியன் தாலரை எட்டியது. எனவே மறுபடியும் 1975 பிப்பிரவரியில் தாலரின் மதிப்பை 10 விழுக்காடு குறைக்க வேண்டியதாயிற்று. இரு முறை தாலரின் மதிப்பைக் குறைத்தும் அமெரிக்காவில் பணவீக்கம் அதிகமாகப் பரவிய நிலையில், வலிமையான செலாவணிகளை நோக்கி மூலதனம் ஓட ஆரம்பித்தது. மாற்று வீதங்களில் எதிர்ப்புகள் அதிகமாயின. தாலரின் மதிப்பு அதிகமான ஏற்ற இறக்கங்களுக்கு உட்பட்டது. உலகப் பொருளாதாரம் 1973-இல் பிரிட்டன் உட்சு அமைப்பின் முக்கியக் கூறான, நிலையான மாற்று வீத முறையிலிருந்து நழுவி, நீர்மையான அல்லது மிதப்பு மாற்று வீத (Floating Exchange Rates) முறையை நாடிச் சுழலத் தொடங்கியது.

இந்தச் செலாவணி நெருக்கடியின் ஊடே பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வும் ஏற்பட்டது. இதற்கு அரசியல், பொருளாதார முறையில் பல காரணங்கள் இருப்பினும், தாலரின் தொடர்ச்சியான மதிப்பிறக்கமும் ஒரு சிறப்புக் காரணம். பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு (Opec-Organisation of Petroleum Exporting Countries) விரும்பியிருந்தால் எண்ணெய் விலையைத் தங்களது செலாவணியிலோ தங்கத்திலோ மதிப்பிட்டு, மேலும் சிக்கலைத் தோற்றுவித்திட முடியும். அவ்வாறு செய்யாமல் எண்ணெய் விலையைத் தாலரிலேயே மதிப்பிட்டு, தங்களுடைய வருமானத்தைத் தாலரில் பெற்றுக் கொள்ளும் வழக்கத்தைத் தொடர்ந்து கடைப் பிடித்துவந்தன. எண்ணெய் விலை மிகுதியான நிலையில், இறக்குமதிகளை ஈடுசெய்ய ஏராளமான தாலர்கள் உலக நாடுகளுக்குத் தேவைப்பட்டன, ஏற்கெனவே, பல ஆண்டுகளாகப் பெருகியிருந்த தாலர் குவியல் (Dollar Glut) சிக்கலைத் தீர்க்க உதவியது. மிதமிஞ்சிய தாலர் குவியலைப் பற்றிய பதற்றமும் தணிய ஆரம்பித்தது.

பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வை உலகப் பொருளாதாரத்தின் மீது விதிக்கப்பட்ட ஒரு ஆயத் தீர்வை என்று கூறலாம். இது 1974-75-இல் உலக நாடுகளிடையே பொருளாதார மந்த நிலைமையை உருவாக்கியது. மற்ற நாடுகளோடு ஒப்பிடும்போது அமெரிக்கா உலகப் பொருளாதார மந்த நிலையிலிருந்து விரைவில் மீண்ட காரணத்தால், அதன் இறக்குமதித் தேவைகள் ஏற்றுமதியை விட அதிகமாக இருந்தன. எனவே, அமெரிக்காவின் வாணிக இடைவெளி விரிவடைந்தது. அயல்நாட்டுச் செலுத்து நிலை வணிகக் கணக்கில் 1971, 1972, 1974-ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறை முன்பே தோன்ற ஆரம்பித்துவிட்டது. வணிகக் கணக்கில் 1975-இல் 9 பிலியன் தாலர், உபரி தோன்றி, மறுபடியும் 1977, 1978, 1979-ஆம் ஆண்டுகளில் முறையே 9.2 பிலியன் தாலர், 33.76 பிலியன் தாலர், 29.45 பிலியன் தாலர் என்ற அளவில் பற்றாக்குறை வளர ஆரம்பித்தது.

அதிபர் கார்ட்டர் (Carter) பதவிக் காலத்தில், அமெரிக்கா பிற நாடுகளிலிருந்து அதிகமான பொருள்களை வாங்கி நுகர ஆரம்பித்தது. அரசுச் செலவுகளும் பன்மடங்கு பெருகின. வரவு செலவுத் திட்டத்தில் தொடர்ந்து நிலவிய பற்றாக்குறையும் உற்பத்திக் குறைவும், கடுமையான பணவீக்கமும், 1975 முதற்கொண்டு தாலரை அயல்நாட்டு மாற்று அங்காடியில் வீழ்ச்சியடையச் செய்தன. தாலரின் மதிப்பிறக்கம் 1977, 78-ஆம் ஆண்டுகளில் அதிகரித்து, அமெரிக்கப் பொருளாதாரத்தை வலுவடையச் செய்யும் என்ற நம்பிக்கை அரசு வட்டாரங்களில் நிலவியதோடு மட்டுமன்றி அது பெரிதாகப் பரப்பவும்பட்டது. தொழில் வளர்ச்சியுற்ற 10 நாடுகளின் மைய வங்கிகள் 1977-இல் ஏறத்தாழ 40 பிலியன் தாலரை அயல்நாட்டு மாற்றுச் சந்தையில் வாங்கியும், அதன்

வீழ்ச்சியைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் உள்ளதைவிட அமெரிக்காவில் குறுகிய கால வைப்புத்தொகையின்மீது வட்டி வீதத்தை உயர்த்தியும், அமெரிக்காவை நோக்கி மூலதன உள்ளோட்டம் வரவில்லை. அதற்கு மாறாக, மற்ற நாடுகளில் வட்டி வீதங்கள் குறைவாக இருப்பினும், அமெரிக்காவை விட்டு, அந்த நாடுகளை நோக்கி மூலதன ஓட்டம் நடைபெற்றது.

செலாவணியின் மதிப்பிறக்கத் தொடர்பான நெறிமுறைகளைக் கடைப்பிடித்தால் ஒழிய, அயல் நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமன்கேட்டைத் தாலர் மதிப்பிறக்கத்தால் ஈடுசெய்ய முடியாது என்ற உண்மையை அமெரிக்கா 1970-இன் இறுதியில் உணர ஆரம்பித்தது. மேலும், நீர்மையான மாற்றுவீத அமைப்பு முறையிலும், தாலரைத் தங்கமாக மாற்ற இயலாத சூழ்நிலையிலும், அமெரிக்க தாலர் பன்னாட்டுச் செலாவணியாக உலக நாடுகளிடையே இடைவிடாது செயலாற்றி வருவதால் தொடர்ச்சியான தாலர் மதிப்பிறக்கம், உலகப் பொருளாதாரம், நிதி ஆகியவற்றின் சமநிலைக்கு ஊறு விளைவிக்கும் என்ற உண்மையை 1973 இறுதியில் கார்ட்டர் அரசாங்கம் உணர ஆரம்பித்தது. தாலரை மீட்க, மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

செலாவணிகளின் மாற்று வீதங்களில் ஏற்ற இறக்கங்கள் 1970-இல் அதிகம் காணப்பட்டன. பணவீக்கம் எல்லா நாடுகளிலும் ஒரே விகிதக் கணக்கில் இல்லாத நிலையில், இது தவிர்க்க முடியாத ஒன்று ஆயிற்று. மேலும், பெட்ரோலிய எண்ணெய் விலை உயர்வால் உலக மந்த நிலையிலிருந்து எல்லா நாடுகளும் ஒரே சமயத்தில் மீள இயலவில்லை. இந்தச் சூழ்நிலையில், அமெரிக்க தாலர் அயல் நாட்டு மாற்று அங்காடியில் வீழ்ச்சி அடைந்தது.

அதிபர் கார்ட்டருக்குப் பின் வந்த இரீகன் (Reagan) அரசாங்கம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி, அமெரிக்க தாலரை வலிமையடையச் செய்ய வேண்டியதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. இடைக்கால மீட்பு நடவடிக்கையாக, வட்டிவீதத்தை உயர்த்தி அமெரிக்காவை நோக்கி மூலதன உள்ளோட்டத்தை வரவழைத்தது. அதனால் 1980-இலிருந்தே தாலர் வலிமையடையத் தொடங்கியது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளில் தாலர் அடைந்து வரும் மதிப்பேற்றம், 1970-இன் இறுதியில் காணப்பட்ட மதிப்பிறக்கத்தின் மறு வெளிப்பாடு ஆகும். ஆனால், வலிமையான தாலரும் சிக்கல்களை ஏற்படுத்தியிருக்கிறது. இது அமெரிக்காவின் ஏற்றுமதியைப் பாதித்து அதன் தொடர்பான வேலை வாய்ப்பைக் குறைத்திருக்கிறது. உயர் வட்டிவீதம் காரணமாக அமெரிக்காவை நோக்கிப்பாயும் மூலதன ஓட்டத்தைத் தடுத்து நிறுத்த, மற்ற ஐரோப்பிய நாடுகளும், சப்பானும் வட்டிவீதத்தை உயர்த்த வேண்டியதாயிற்று. மேலும், வளர்ந்து வரும் நாடுகளின் கடன் சுமையும் இதனால் அதிகமாயிற்று. இவையெல்லாம் தவிர்க்க முடியாதவை. உலகப் பொருளாதாரச் சமநிலைக்கும் வலுவிற்கும் தாலர் வலிமையோடு இருக்க வேண்டும். வரவு செலவுத் திட்டத்தின் (Budget) பற்றாக்குறையைக் குறைப்பதோடன்றிப் பணவீக்கத்தையும் குறைத்தால் மட்டுமே தாலர் வலிமையடையும்என்பதை அமெரிக்கா உணர ஆரம்பித்தது. பணவியல் ஆய்வாளர்களின் கணிப்பில் இன்னும் பல ஆண்டுகளுக்குத் தாலர் பன்னாட்டுப் பண அமைப்புகளிலும், வாணிகத்திலும் பெரும் பங்கு வகித்து வரும். எனவே, அமெரிக்க தாலரின் மதிப்பு அதிக ஏற்ற இறக்கங்களுக்குட்படாமல் பாதுகாக்கப்படுவது அமெரிக்க நிருவாகத்தின் திறமையைச் சார்ந்தது. டி.ச.

துணை நூல்கள்:

**Corgen, W.M,**, ''Inflation, Exchange Rates and the World Economy'', Clarendon Press, Oxford, 1977.

**Ronald MC. Kinnon, I.**, ''Money In International Exchange'', Oxford University Press, 1979.

**Bo Sodersten.**, ''International Economics'', The Macmillan Press, 1980.

**Yeager, L.B.**, ''International Monetary Relations Theory, History and Policy'', Allied Publishers (Pvt.), 1978.

*அமெரிக்க நாட்டுப் பள்ளிக் கல்வி முறை*: அமெரிக்க ஐக்கிய நாட்டுக் குடியரசில் 50 மாநிலங்கள் உள்ளன. இவற்றுள் அவாய் (Hawai) தீவுகளும் அடங்கும். அமெரிக்க நாட்டு மக்களாட்சித் தத்துவத்தைத் தாங்கி நிற்கும் தூண்களுள் ஒன்றாகக் கல்வி கருதப்படுகிறது. ஆகவே ஆரம்பப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளிக் கல்வி இந்நாட்டில் எல்லோருக்கும் இலவசமாக்கப்பட்டுள்ளது. அமெரிக்கக் குடியரசில் வாழும் ஒவ்வொரு குடிமகனும், அந்நாட்டின் சமுதாய மேம்பாட்டிற்காகப் பயனுள்ள பங்கினை ஆற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன், அமெரிக்கக் கல்விமுறை அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் மாணவர்கள் மக்களாட்சிப் பண்புகளை வளர்த்துக் கொள்ளும் வகையில் கல்வி கற்பிக்கப்படுகிறது.

பொதுப் பள்ளிகள் என்று குறிக்கப்படும் அரசுப் பள்ளிகளில் பள்ளிக் கல்வி வழங்கப்படுகிறது. தொலை தூரத்தில் அல்லது ஒதுக்குப்புறமாக வாழும் குழந்தைகள் கூட, எளிதில் அணுகிக் கல்வி கற்கும் வகையில், பொதுப் பள்ளிகள் அமைந்துள்ளன.

இனம், மதம், தேசியப் பின்னணி, பால் பாகுபாடுகள் இன்றிக் கல்வியின் எந்த நிலையிலும் சேருவதற்கும் படிப்பதற்கும் அமெரிக்கக் குழந்தைக்கு வாய்ப்புகள் உள்ளன. அமெரிக்கக் கல்வியில் குழந்தையின் அறிவு வளர்ச்சி தடைப்படாமல் வளரும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. குழந்தையின் வளர்ச்சிக்கும் சமுதாய நன்மைக்கும் உதவக்கூடிய பண்புகளை இப்பள்ளிகள் ஊக்குவிக்கின்றன.

அமெரிக்கக் குடியரசில் உள்ள எல்லா மாநிலங்களும், தத்தமக்கு ஏற்றவாறு கல்விமுறைகளை உருவாக்கி நடைமுறைப்படுத்த அதிகாரங்கள் பெற்றுள்ளன. அதனால், கல்விமுறைகளும் கல்வித் திட்டங்களும் மாநிலந்தோறும் மாறுபடுகின்றன. ஆயினும், ஒரு மாநிலத்தில் உள்ள பள்ளிக் குழந்தை பிற மாநிலத்திலுள்ள பள்ளியிலும் எளிதில் சேர்ந்து பயிலும் வகையில் கல்விமுறையில் பொது அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ளன. கல்வி அளிக்கும் முதல் பொறுப்பு மாநிலத்திற்கே உரியது என்றாலும், ஐக்கியக் குடியரசின் கல்விக் கழகமே மாநிலங்களுக்கு இடையே கல்வித் தொடர்பான செய்திகளையும், அனுபவங்களையும் வழங்கும் பணியில் ஈடுபடுகிறது. அனைத்துப் பள்ளிகளிலும் நடைபெறும் கல்விப் பணிகளின் புள்ளி விவரங்களையும் இந்தக் கழகமே சேகரித்து மாநிலங்களுக்கு வழங்கி வருகிறது. இதனால் மாநிலங்கள் அவ்வப்போது தமக்குள் வேண்டும் மாற்றங்களைச் செய்துகொள்ள முடிகிறது. மாணவர்களை மாநிலங்களுக்கிடையே பரிமாறுதல், மானியம் வழங்குதல், மாநிலக் கல்விச் சிக்கல்களுக்குத் தீர்வு காணல் போன்றவற்றில் இக்கல்விக் கழகம் துணை நிற்கிறது.

தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிக்கான கல்வி நிதியைப் பள்ளி மன்றங்களும் அந்தந்த மாநிலமும் வழங்குகின்றன. கல்வி மன்றங்கள் சொத்துவரி விதிப்பதன் மூலம் கல்வி நிதிக்கு மூன்றில் ஒரு பங்கினை வழங்குகின்றன; அந்தந்த மாநிலங்கள் மூன்றில் இரண்டு பங்கினை வழங்கும். மூன்றிலிருந்து நான்கு விழுக்காடு வரை ஐக்கியக் குடியரசு, நிதி வழங்குகிறது.

மூன்று வகையான கல்விமுறை அமைப்புகள் அமெரிக்க நாட்டில் நிலவுகின்றன. எட்டாண்டுத் தொடக்கநிலைக் கல்வியும், நான்காண்டு உயர்நிலைப் பள்ளிக் கல்வியும் கொண்டது முதல் வகை. ஆறு ஆண்டுத் தொடக்கக் கல்வியும், மூன்று ஆண்டு இளநிலை உயர் பள்ளிக் கல்வியும் மற்றும் மூன்று ஆண்டு முதுநிலை உயர் பள்ளிக்கல்வியும் கொண்டது இரண்டாம் வகை. ஆறு ஆண்டுத் தொடக்கக்கல்வியும், அதைத் தொடர்ந்து ஆறு ஆண்டு உயர்நிலைக் கல்வியும் கொண்டது மூன்றாவது வகை. இவையன்றி வேறுசில கல்வித்திட்ட அமைப்புகளும் உள்ளன. அவை தொடக்கக் கல்வி–உயர்நிலைக் கல்வி 7-5; 6-2-4; 6-4-2 என்ற ஆண்டு வரையறையில் அமைக்கப்பட்டுள்ளன. ஆகமொத்தம் தொடக்கக் கல்வியும் உயர்கல்வியும் 12 ஆண்டுகளில் முடிகின்றன.

முறையான தொடக்கக் கல்வியினை, அமெரிக்கக் குழந்தைகள் ஆறு வயதில் முதல் வகுப்பில் சேர்வதன் மூலம் பெறுகின்றனர். வகுப்புகள் காலையிலும் மாலையிலும் நடைபெறுகின்றன. வாரத்திற்கு ஐந்து நாள்கள் மட்டுமே பள்ளி நாட்கள்ஆகும். பொதுவாக செப்தம்பர் மாதம் தொடங்கி, மே மாதம் அல்லது சூன் முதல் வாரம் வரை ஒரு கல்வியாண்டு நிகழ்கிறது. மூன்று அல்லது நான்கு வயது நிரம்பிய குழந்தைகள் தொடக்கப் பள்ளிக்கு வருவதற்கு முன்னரே அரசு, அல்லது தனியார் நடத்தும் மழலையர் பள்ளிகளில் சேர்ந்து பயிலுகின்றனர். மழலையர் பள்ளிகளில் குழந்தை விளையாட்டு முதலிடம் பெறுகிறது.

தொடக்கப் பள்ளிகளில், குழந்தைகளுக்குப் படிக்கவும் எழுதவும் கணக்குப் போடவும் பயிற்சி தருவதோடு வரலாறு, புவியியல், அடிப்படை அறிவியல், குடியியல், இசை போன்றவையும் கற்பிக்கப்படுகின்றன. அமெரிக்கப் பள்ளிகள், குழந்தைகள் பாடங்களை மனனம் செய்யும் பழக்கத்தை ஊக்குவிப்பதில்லை.

தொடக்கப் பள்ளிகளில் உரையாடல், பங்கேற்றல் போன்ற முறைகளால் கற்பித்தல் நடைபெறுகிறது. கல்வி கற்றலும், கற்பித்தலும் வகுப்பறையோடு மட்டும் நின்றுவிடுவதில்லை. நூலகம், அருங்காட்சியகம், கோயில்கள், தொழிற்சாலைகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் ஆகியவற்றுக்குச் சுற்றுலாச் செல்லுதல், தினமும் விளையாட்டுப் போன்றவை தொடக்கக் கல்வியில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றன.

நாட்டுப்புறங்களில் பழங்கால முறையில் ஏற்படுத்தப்பட்ட ஓரறை – ஓராசிரியர் பள்ளிகள் முன்பு இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் 50-80 மாணவர் வரை படித்தனர். இப்பள்ளிகள் காலப்போக்கில் மறைந்து மையப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டன. தொலை தூரத்தில் உள்ள பிள்ளைகளும் எளிதில் வந்துபோகும் வகையில் மையப்பள்ளிகள் அமைக்கப்பட்டன. அவர்களுக்கு இலவச ஊர்தி வசதிகளும் செய்து தரப்பட்டன.

மீத்திறக் குழந்தைகளின் கல்வித் திறனை வளர்க்கும் வகையில் தொடக்கக் கல்வி அமைந்துள்ளது. தொடக்கப் பள்ளி நிலையிலேயே, கண் பார்வையற்ற, காது கேளாத குழந்தைகளைத் தனியே பிரித்து, அவர்களுக்கு உகந்த கல்வி அளிக்கப்படுகிறது.

அமெரிக்க உயர்நிலைப் பள்ளியில் இருநிலைகள் உள்ளன. அவை 1) இளநிலை உயர் பள்ளி (Junior High School) 2) முதுநிலை உயர் பள்ளி (Senior High School) ஆகும். இப்பள்ளிகளில் படிக்கும் கால அளவு மாநிலந்தோறும் மாறுபடும். உயர்நிலைப் பள்ளிகளில் பொதுக் கல்வியும் (General Education), சிறப்புக் கல்வியும் (Specical Education) வழங்கப்படு கின்றன. பொதுக் கல்வி, மாணவர்களைக் கல்லூரிக் கல்விக்கு ஆயத்தம் செய்கிறது. சிறப்புக் கல்வி வாழ்க்கைக்கு உதவும் வகையில் தொழிற் கல்வியாகத் தரப்படுகிறது. மொழி, கணிதம், அறிவியல், அமெரிக்க மற்றும் வெளிநாட்டு வரலாறு, சமூக அறிவியல் போன்ற பாடங்கள் பொதுக்கல்வி முறையில் கற்பிக்கப்படுகின்றன. தட்டச்சு, சுருக்கெழுத்து, வேளாண்மை, கால்நடை வளர்த்தல், வானொலி பழுதுபார்த்தல் போன்ற பாடங்கள் தொழிற் கல்வியாகத் தரப்படுகின்றன. தொழிற்கல்வி பயில்வோருக்கு ஆங்கிலம், சமூக அறிவியல், வரலாறு ஆகிய மூன்று பாடமும் கட்டாயமாகப் பயிற்றுவிக்கப்படு கின்றன. பொதுக் கல்வியும் தொழிற் கல்வியும் பொதுவாக அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும் கற்பிக்கப்படுகின்றன. தொழிற் கல்விக்கென்றே தனியாக உயர்நிலைப் பள்ளிகளும் உண்டு.

உயர்நிலைப் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களும் உடற் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெற ஊக்குவிக்கப்படுகின்றனர். பள்ளிகளுக்குள்ளேயும் மற்றும் பள்ளிகளுக்கிடையேயும் நடத்தப்படும் விளையாட்டுகள் அமெரிக்க உயர்நிலைப் பள்ளிக் கல்வியின் சிறப்புக் கூறு ஆகும். இவையல்லாமல் நாடகம், இசையாக்கம் ஆகியவற்றில் மாணவர்கள் பங்கு கொள்ளவும், சொற்பொழிவுக்குழு, சிறு நாடகக்குழு, இசைக்குழு ஆகியவற்றில் சேரவும் மாணவர்கள் தூண்டப்படுகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளியும் ஆண்டுமலர் வெளியிடுகிறது. பல பள்ளிகளில் செய்தித்தாள்களும் பதிப்பித்து வெளியிடப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் தன்னாட்சி மன்றங்கள் இயங்கி வருகின்றன. தன்னாட்சி மன்றங்களின் உறுப்பினர்களை மாணவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். பள்ளியின் பொதுவான நடைமுறைகள், மாணவர்களின் நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் தன்னாட்சி மன்றம் பெரும்பங்கு வகிக்கிறது.

மாணவர்களின் பெற்றோர்களும், பொதுமக்களும் பள்ளி நலன்களில் மிகுந்த அக்கறை காட்டுவதோடு பள்ளி நடத்தும் விழாக்கள், சுற்றுலாக்கள், நாடகங்கள் ஆகியவற்றை நடத்தி வைப்பதில் ஆசிரியர்களுக்குத் துணையாக நிற்கின்றனர். பொதுமக்களில் பலர், தங்கள் நிறுவனங்கள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் உறுதுணையாக உள்ளனர். பள்ளிகள் நடத்துவதில் பொதுமக்கள் துணையாக இருப்பதால், பள்ளியும் சமுதாயமும் மிகுந்த தொடர்பு கொண்டுள்ளன. பள்ளி முடிந்த வேளையில் பள்ளி வளாகம், பொதுமக்கள் விருப்பப்படி அவர்களது நலனுக்காகப் பயன்படுத்தப் படுகிறது.

அமெரிக்காவில் உள்ள தொண்ணூறு விழுக்காடு தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகள் இலவசக் கல்வி வழங்கும் பொதுப் பள்ளிகள் ஆகும். அவை மாநில மற்றும் உள்ளாட்சித் துறையினரால் நிருவகிக்கப்படுகின்றன. இப்பள்ளிகளுக்கான செலவு வட்டார வரி விதிப்பின் மூலம் ஈடு செய்யப்படுகிறது. உரோமன் கத்தோலிக்கர்களாலும் பிற திருச்சபைக் குழுக்களாலும் நடத்தப்படும் பள்ளிகளில் சமயக் கல்வி அளிக்கப்படுகிறது. இலவசமாக நடத்தப்படும் அரசுப் பொதுப்பள்ளியில், எந்த அமெரிக்கக் குழந்தையும் சேர்ந்து பயிலலாம். தங்கள் பிள்ளைகள் முற்றிலும் தனிப்பட்ட சமூக, கல்விச் சூழலில் பயில வேண்டும் என விரும்பும் பெற்றோர்கள், பொதுப்பள்ளிகளுக்கு இணையாக நடத்தப்படும் தனியார் பள்ளிகளில் குழந்தைகளைப் பயிற்றுவிக்கின்றனர்.

பொதுவாக, அரசு நடத்தும் தொடக்கநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் இருபால் மாணவரும் சேர்ந்தே பயிலுகின்றனர். இவர்களுக்குத் தனித்தனிப் பள்ளிகளும் உண்டு. திருச்சபைப் பள்ளிகளில் பொதுவாக இருபாலாரும் பயிலுகின்றனர்.

பொதுப் பள்ளிகளைக் கல்வி மன்றம் (Board of Education) என்ற அமைப்பு மேற்பார்வை செய்து நடத்துகிறது. ஒவ்வொரு கல்வி மன்றத்திற்கும் 5 அல்லது 9 உள்ளூர்க் குடிமக்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இம்மன்ற உறுப்பினர்களே, பள்ளி நடத்துவதற்குத் தேவையான பணம், பள்ளியின் பொதுவசதி, வருகைப் பதிவு முறை போன்ற செயல்களைத் தீர்மானிக்கின்றனர். இவ்வாறு செய்வதால், உள்ளூர் மக்கள் பள்ளியை நடத்துவதில் சிறப்பாகப் பங்கு கொள்கின்றனர்.

தென் அமெரிக்க மாநிலங்களில் உள்ள பள்ளிகளில் 1950-60 களில் இனப்பாகுபாடு பெரிய சிக்கலாக இருந்தது. ஆனால், இன்று அனைத்துப் பள்ளிகளும் இனப் பாகுபாடு இன்றி ஒருமைப்பாட்டுடன் செயல்பட முயல்கின்றன. கறுப்பரின் குழந்தைகள், இன்று ஊர்திகளில் வெள்ளை அமெரிக்கக் குழந்தைகளோடு பள்ளிகளுக்குச் செல்கின்றனர். இது இனப் பாகுபாடு பள்ளிகளில் நீங்கி ஒருமைப்பாடு வளர வழியமைக்கிறது.

ஈ.ஞா.வே.

**அமெரிக்க நூலகச் சங்கம்**: அமெரிக்க நூலகச் சங்கம், தொழில்துறை உறுப்பினர்களைக் கொண்ட ஓர் அமைப்பு. நூலகர்களின் முன்னேற்றம், நூலகங்களின் வளர்ச்சி ஆகியவை இதன் நோக்க மாகும்.

பிலடெல்பியா நகரில் (Philadelphia) கி.பி. 1876–இல் நடைபெற்ற நாட்டு நூற்றாண்டு விழாவின்போது, நூலகத் துறையில் ஆர்வம் கொண்ட 103 பேர் ஒன்றாகக் கூடினர். கூட்டத்தின் முடிவில் மெல்வில் தூவி (Melvil Dewey) என்பவர், அமெரிக்க நூலகச் சங்கம் அமைக்கும் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

நூலகத்தில் ஆர்வம்கொண்ட தனிப்பட்டவரோ நிலையமோ அமைப்போ இச்சங்கத்தில் உறுப்பின ராகலாம். இது நூலக இயக்கத்தில் மிகப் பழைமை யானது; மிகவும் பெரியது; வட அமெரிக்க நூலக இயக்கத்தில் முதன்மைக் கருத்துரை வழங்கும் சிறப் பும் பெற்றது.

இச்சங்கம் 1983–ஆம் ஆண்டில் 37,000 உறுப் பினர்களைக் கொண்டிருந்தது. இதன் தலைமையகம் சிகாகோ நகரத்தில் இருக்கிறது இதற்கு வாசிங்டனி லும் ஓர் அலுவலகம் உளது. இந்த அலுவலகம், நூலகர்கள், நூலகங்கள், அமெரிக்க அரசு ஆகியவற் றிற்கிடையில் உறவுப் பாலமாகச் செயற்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட 225 உறுப்பினர்கள் அடங் கிய குழுவால் அமெரிக்க நூலகச் சங்கம், நிருவகிக் கப்படுகிறது. அக்குழுவுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட செயல்துறை வாரியம், நிலைப்படுத்தப்பட்ட அதன் கொள்கைகளையும்; திட்டங்களையும் நடைமுறைப் படுத்துகிறது.

அமெரிக்க நூலகச் சங்கம் 13 பிரிவுகளை உடை யது. இவற்றில் நூலக வகைப் பிரிவுகள் 5; செயலாண் மைப் பிரிவுகள் 8.

அமெரிக்கப் பள்ளி நூலகர்கள் சங்கம், மாநில நூலகங்களின் சங்கம், கல்லூரி மற்றும் ஆய்வு நூல கங்களின் சங்கம், மருத்துவமனை மற்றும் நிலைய நூலகங்களின் சங்கம், பொது நூலகச் சங்கம் ஆகி யவை நூலகப் பிரிவுகளாகும்.

இலாபம் எதிர்நோக்காத வெளியீட்டுத் திட்டங் களே அமெரிக்க நூலகச் சங்கத்தின் மிகச் சிறப்பான செயலாகும். பெரும்பான்மையான சிறப்பான தொழில்துறை இலக்கியங்களையும் மிகப்பல பருவ ஏடுகளையும், 200–க்கும் மேற்பட்ட நூல்களையும் இது வெளியிட்டிருக்கிறது.

முதியோர் தொண்டுப் பிரிவு, அறங்காவற் பிரிவு, சிறுவர் தொண்டுப் பிரிவு, நூலக ஆட்சிப் பிரிவு, நூலகக் கல்விப் பிரிவு, இளநிலை முதியோர் தொண் டுப் பிரிவு ஆகியவை இச்சங்கத்தின் செயலாண்மைப் பிரிவுகள் ஆகும்.

பணியாளர்களின் சேவை மூலமாகவும் வெளியீட் டுப் பகுதி மூலமாகவும் இச்சங்கம், குறிப்பிட்ட இலக்கு களையும், தரங்களையும் ஏற்படுத்தியிருக்கிறது. நூல கம் பற்றிப் பொதுமக்களிடையே ஆதரவு உண்டாக்கி யிருக்கிறது. பொது நூலகப் பணிக்குத் தர வரையறை களை இச்சங்கம் மேற்கொண்டிருக்கிறது. இவ்வகை யான தரவரையறைகள், 1956–ஆம் ஆண்டில் வெளி யிடப்பட்டன. தனிப்பட்ட நூலகங்களும் சமுதாயங் களும் தங்கள் பணியை மதிப்பீடு செய்துகொள்வதற் கும் முன்னேற்றத்திற்குரிய திட்டங்களை உருவாக்கிக் கொள்வதற்கும் உரிய 70 வழிகாட்டும் கொள்கைகள் இத் தரவரையறைக்கண் அடங்கியுள்ளன.

இச்சங்கம், கி.பி. 1866–இல் நூற்பட்டியலுக்குத் துணையான வெளியீட்டை மேற்பார்வை செய்ய ஒரு பிரிவை ஏற்படுத்தியது. இதற்கு 1904–இல் ஆண்ட்ரூ கார்னீசு (Andrew Carnegis) 1,00,000 தாலர் கொடை யாக வழங்கினார். அதனால் இதன் வெளியீட்டுப் பிரிவு குறிப்பிடத்தக்க முறையில் தன் திட்டங்களை விரிவாக்கியது. நூல் மதிப்பீட்டுப் பருவ ஏடுகள், நூற்பட்டிகள், கட்டணம் பற்றிய சிறு சுவடிகள், கல்லூரி நூலகங்களுக்குரிய விருப்ப நூல்கள் ஆகிய வற்றையும் இச்சங்கம் வெளியிட்டுள்ளது.

நூலகர்களின் கல்வித் தகுதிகள், ஊதியம், பணி நிலைமைகள், பொது நலம் ஆகியவற்றைப்பற்றி இச் சங்கம் அக்கறை காட்டுகிறது. நூலகப் பணியின்விரிவு, முன்னேற்றம் ஆகியவை பற்றியும் கவனம் செலுத்து கிறது. நூலகத் தொழிலின் நிலையினை உயர்த்துவ திலும் இது நாட்டம் கொள்கிறது. நூலகத் துறை பற்றிய தகவல் அறிவிப்பு மையம் ஒன்றும் உள்ளது. இச்சங்கம் மாநாடுகளை நடத்துகிறது; நூலக வெளி யீடுகளை வழங்குகிறது; எதிர்காலப் பள்ளி நூலகம், கல்லூரி நூலகம், பொது நூலகம் முதலியவற்றைத் திட்டமிடுகிறது. நூலகப் பணியின் முன்னேற்றம், விரிவு ஆகியவற்றின் மூலம் நூல்களின் பயனையும் நன்மையையும் மிகுதிப்படுத்துகிறது.

நூலகர்களின் பரிமாற்றம், வெளியீடுகளின் பரி மாற்றம், அறிவுத்துறை பற்றிய அயல்நாட்டு நூல் களையும், பருவ ஏடுகளையும் இறக்குமதி செய்தல், போர் நடைபெற்ற இடங்களில் அழிந்துவிட்ட நூல கங்களுக்கு மறுவாழ்வு தரும் முயற்சிகள் ஆகியவை இச்சங்கத்தின் உலகம் தழுவிய நடவடிக்கைகள் ஆகும்.

இச்சங்கம் தொடக்கக் காலத்தில், படிப்போர், மாணவர், அறிஞர் ஆகியோருக்கு நூலகப் பொருள் கள் மிகவும் எளிதாகக் கிடைக்கும் வகையில், நூல்

வகைமுறை நூற்பட்டி, பிறவகைச் செயற் சட்டங்கள் ஆகியவற்றை உண்டாக்கியது.

மிகச் சிறந்த செயலாக்கமுடைய நூலாசிரியர்கள், ஓவியர்கள், நூலகர்கள், நூலக வாரிய உறுப்பினர்கள் ஆகியோருக்கு ஆண்டுதோறும் பரிசுகளையும் சான்றிதழ்களையும் இச் சங்கம் வழங்குகிறது. நூலகத்தில் நூல்களை நேரடியாக எடுத்துக்கொள்ளும் உரிமையைக் காப்பாற்றுவதில் இச்சங்கம் தெளிவாகக் கருத்துரை வழங்குகிறது. மண்டல நூலக நடவடிக்கைகளுக்கு மாநில அரசும் மைய அரசும் மிகுந்த அளவில் பொருள் உதவி கொடுத்துப் பங்குகொள்ள வேண்டும் என்பதற்காக, 1935- இல் இருந்து இச்சங்கம் சிறந்த முறையில் பணியாற்றிக் கொண்டு வருகிறது. நூலகப் பணிகள் முன்னேற்றத்தின்பொருட்டுப் பொருள் உதவி வழங்குவதற்காக, அரசு சட்டவரைவினை அறிமுகப் படுத்துவதற்கு இது காரணமாக இருந்தது. இச்சங்கம் 1955-இல் பொது நூலகங்களுக்கு 55 மிலியன் தாலர் பொருள் உதவியினை அரசு ஆண்டுதோறும் வழங்கவேண்டும் என்னும் சட்ட வரைவினைச் சட்டமாக அமைப்பதில் வெற்றிபெற்றது.

முதல் உலகப் பெரும்போரின்போது, போர்த் துறையின் வேண்டுகோளின்படி உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் படை வீரர்களுக்கு இச்சங்கம் நூலகப் பணி ஆற்றியது.

இதில் 220 அலுவலர்கள் பணிபுரிகிறார்கள். நிருவாக வாரியத்தின் மேற்பார்வையில் ஒரு நிருவாக இயக்குநர் இதை நடத்துகிறார்.

இச்சங்கத்திற்கு இரண்டு வகைகளில் பண உதவி கிடைக்கிறது. ஒன்று, உறுப்பினர் கட்டணம்; மற்றொன்று, ஏறக்குறைய ஆண்டுதோறும் கிடைக்கும் 3½ மிலியன் தாலர் கொடையும், சிறப்புத் திட்டங்களுக்காக அவ்வப்போது வழங்கப்படும் நன்கொடையும் ஆகும்.

அமெரிக்காவில், 50, கிழக்கு உரான் (Huron) தெரு, சிகாகோ, இல்லினாய்சு என்ற முகவரியில் அமைந்திருக்கும் இச்சங்கம், தன் கல்விப்பணியைத் திட்டமிட்டுச் செய்து வருகிறது. பி.ஏ.மோ.

**அமெரிக்கப் பொருளியல் கருத்துகள்:** பொருளியல் சிந்தனையில் முதலாளித்துவம் முதல் இன்றைய அளிப்புப் பொருளாதாரம் வரை (Supply Side Economy) சீரியபொருளியல் கருத்துகளையும் கோட்பாடுகளையும் அமெரிக்கர் வகுத்துள்ளனர். இதன் காரணமாகவே பன்னாட்டுச் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வகையில் இக்கருத்துகள் அமைந்துள்ளன. உலகப் பொருளாதாரப் பெருமந்த (Great Depression) காலங்களிலும், பணவியல் நெருக்கடி நேரங்களிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பல, இக்கோட்பாடுகளின் அடிப்படையிலேயே அமைந்திருந்தன. மேலும், உலகப் பொருளாதார அங்காடி அமைப்பின் செயற்பாட்டிற்கும் இவை அடிப்படையாக, இருந்துவருகின்றன. அமெரிக்கா கி.பி.19-ஆம் நூற்றாண்டில் விடுதலை அடைந்தவுடனேயே, அதன் பொருளியற் கொள்கையைப் பற்றி இரு விதமான கருத்துகள் நிலவின. புதிய பொருளாதார முன்னேற்றக் காலத்தைத் தொடங்குவதற்காகவும், அமெரிக்கத் தொழில்களைக் காப்பாற்றுவதற்காகவும் அரசு நேரடியாகத் தலையிட வேண்டும் என்ற கொள்கையை அலெக்சாண்டர் ஆமில்டன் (Alexander Hamilton) வலியுறுத்தினார். ஆனால், தாமசு செபர்சன் (Thomas Jefferson) இதற்கு எதிர்மாறான தலையிடாக் கொள்கையின் நன்மையைத் தெளிவுபடுத்தினார். அமெரிக்கரின் பொருளாதாரக் கருத்துகள் பெருமளவுக்கு இங்கிலாந்தின் பொருளாதார அறிஞர்களாலேயே உருவாக்கப்பட்டன. ஆதம் சுமித்து (Adam Smith), தாமசு மால்துசு (Thomas Malthus), தேவிடு இரிக்கார்டோ (David Ricardo) ஆகியோரின் கருத்துகளையே அமெரிக்கர் பின்பற்றி வந்தனர்.

என்றி சார்லசு கேரி (Henry Charles Carey 1793-1869) என்பவர் அமெரிக்காவின் தனித் தன்மையான பொருளாதாரக் கருத்தை முதலில் வெளியிட்டவர். இவர் பொருளாதாரமும் சமூகவியலும் பயிற்றுவித்த பேராசிரியர். இவருடைய "அரசியல் பொருளாதாரக் கொள்கைகள்" (Principles of Political Economy) என்ற நூல் கி.பி.1840-இல் வெளியிடப்பட்டது. ஆதம் சுமித்தின் தலையிடாக் கொள்கைக்கு எதிராக இவர் "ஆர்வங்களுக்குள் இசைவு" (Harmony of Interests) என்ற கொள்கையை வெளியிட்டார். இதன்படி, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் தனித்தனி ஆர்வங்களிருந்தாலும், அந்த ஆர்வங்களுக்குள் இசைவு ஏற்படுத்தும் கொள்கைதான் சிறந்த பொருளாதாரக் கொள்கை என்றார். ஆகவே, அமெரிக்காவுக்குப் பாதுகாப்புக் கொள்கைதான் சிறந்தது (Protectionist Policy) என்று வாதிட்டார். மால்துசின் கருத்துக்கு எதிராக, மக்கள்தொகைப் பெருக்கம் ஒரு முக்கியமான சிக்கல் அன்று என்று கூறினார். தேவிடு இரிக்கார்டோவுக்கும் எதிராக 'நிலவுடைமையாளர்கள் நிலத்தில் முதலீடு செய்து பெறுகிற வருவாய், உழைப்புக்குக் கிடைக்கும் பலன்; உழைக்காமல் கிடைக்கும் ஊதியம் அன்று' என்று விளக்கினார். பாதுகாப்புக் கொள்கை, உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையே இசைவு ஏற்படுத்துகிறதென்றும், இரிக்கார்டோவின் கருத்துக்கு மாறாகக் குடியானவர்கள் வளமில்லாத இடங்களிலிருந்து வளம் நிறைந்த இடங்களுக்கு மாறுகிறார்கள் என்

றும், வளர்வீத விளைவு விதி இயல்பானது என்றும், இங்கிலாந்தின் பொருளாதாரக் கொள்கைகளை அப்படியே பின்பற்றிய காலத்தில், தமக்கெனத் தனியான கருத்துகளை உருவாக்கிவெளியிட்ட முதல் அமெரிக்சத் தேசியப்பொருளியல் வல்லுநர் என என்றி கேரி கருதப்படுகிறார்.

என்றி சார்சு (Henry George, 1839-1897) என்பவர் 19-ஆம் நூற்றாண்டில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த பொருளியல் அறிஞர். "முன்னேற்றமும் வறுமையும்" (Progress and Poverty) என்பது இவரது புகழ்பெற்ற நூல். இவர் கருத்துப்படி எல்லாவிதமான முற்றுரிமைகளுமே இடர் விளைவிப்பவை. நிலம் மாற்றுவதற்கோ உருவாக்குவதற்கோ முடியாத ஒன்று. எனவே, இயற்கை இதனை ஒரு முற்றுரிமையாக உருவாக்கியிருக்கிறது. மக்கள் தொகை பெருகப் பெருக, நிலத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே செல்கிறது. இதன் காரணமாக நிலத்தின் வாரமும் மிகுகிறது. நிலத்தின் வாரம் உயர உயர, கூலிகளும் வட்டியும் குறைந்து கொண்டே செல்லும். புதிய தொழில்கள், நகர்ப் புறத்திலுள்ள நிலத்துக்கும், கனிவளங்கள் நிறைந்துள்ள நிலத்துக்கும் மதிப்பை உயர்த்தி வாரங்களையும் உயர்த்துகின்றன. எனவே, நிலச் சொந்தக்காரர்களுக்கு வருவாய் பெருகிக் கொண்டே செல்கிறது. அதே சமயம் உழைப்பாளர்களின் கூலி குறைந்து கொண்டே செல்கிறது. இதன் விளைவாகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. வாணிக மந்தங்களும் வாணிகச் சுழற்சியும் இதன் விளைவுகளே. வறுமையின் பெருக்கமும் இதன் காரணமாகவே ஏற்படுகிறது. எனவே, நிலத்தின்மீது தனியார் சொத்துரிமையை ஒழித்து விட வேண்டும். இல்லாவிட்டால் நிலத்தின் வாரம் முழுவதையும் அரசு வரி மூலம் பெற்றுவிட வேண்டும். அரசின் செலவுகளுக்காக நிலவரி ஒன்று மட்டும் போதும். வேறு வரிகளே தேவையில்லையென்று என்றி சார்சு வாதிட்டார். இவர் தடையிலா வாணிகத்தையும் தொழிற்சங்கங்களையும் இரயில், சாலைகள், தந்தி போன்றவற்றைப் பொதுவுடைமையாக்குவதையும் ஆதரித்தார். அதே சமயம் 'கூலி பற்றிய இரும்புச் சட்டம்' (Iron law of wages), கூலி நிதிக் (Wages Fund) கொள்கை போன்றவற்றை எதிர்த்தார். எனினும், இவருடைய பொருளாதார எண்ணங்கள் ஆதம் சுமித்து, இரிக்கார்டோ, சே. எசு. மில் போன்ற தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கோட்பாடுகளால் மிகவும் தாக்குதலுக்குள்ளாயின.

சே.பி. கிளார்க்கு (J.B. Clark, 1847-1938) அமெரிக்காவில் தாமாக 'இறுதிநிலைப் பயன்பாட்டுக் கொள்கையை' (Marginal Utility Theory) உருவாக்கியவர். 'செல்வத்தின் தத்துவம்' (Philosophy of wealth), 'செல்வத்தின் பகிர்வு' (Distribution of Wealth) ஆகியவை இவருடைய சிறந்த நூல்களாம். புதுத் தொன்மைப் பொருளாதாரம் அமெரிக்காவில் இவரோடு தொடங்கியது. கற்பனையான இயங்கா நிலையை (Static State) உருவாக்கிப் போட்டிச் சமநிலையை மெய்ப்பித்தார். பொதுவாகச் சொன்னால், தொன்மைப் பொருளியலுக்கும் இறுதிநிலைப் பள்ளிப் (Marginal School) பொருளியலுக்கும் இவர் பாலமாக இருந்தாரென்று கூறலாம். இவர் மகன் சான் மாரிசு கிளார்க்கு (J.M.Clark) பிற்காலத்தில் ஒரு புகழ்பெற்ற பொருளியல் அறிஞராக விளங்கினார்.

வில்லியம் கிரகாம் சம்னர் (William Graham Sumner, 1840-1910) என்பார் தலையிடாக் கொள்கையையும், தடையிலா வாணிகத்தையும், நல்ல வங்கியமைப்பையும் தனி மனித உரிமையையும் ஆதரித்த தொன்மைப் பொருளியலாரின் கோட்பாடுகளை அமெரிக்காவில் பெரிதும் பரவச் செய்த பொருளியல் பேராசிரியராவர்.

பிரான்சிசு அமாசா வாக்கர் (Francis Amasa Walker, 1840-1894) 'பன்னாட்டு இரு உலோகக் கொள்கையை' (International Bimetalism) ஆதரித்தவர். இவர் ஆதாயக் கோட்பாடுகளில் மிக்க கவனம் செலுத்தினார். இவருடைய 'ஆதாயத்தின் இயங்கு நிலைக்கொள்கை' (Dynamic Theory of Profits) சிறப்புப் பெற்றது.

இரிச்சர்டு தியடோர் எலி (Richard Theodore Eli, 1854-1943) தனி மனிதன் உரிமைக்கும் சமத்துவ வாதத்துக்கும் இடைப்பட்ட கொள்கையைப் பின்பற்றினார். 'அரசியல் பொருளாதாரத்தின் கடந்த காலமும் நிகழ்காலமும்' (The Past and Present of Political Economy) என்பது இவருடைய புகழ்பெற்ற நூலாகும். செருமனியில் தோன்றிய வரலாற்றுப் பள்ளி (Historical School) இவருடைய கருத்துகளைத் தாக்கியது. சமநிலைச் சமுதாயக் கொள்கைகளை ஆதரித்தார் என்ற ஐயத்தின் பேரில் வேலைநீக்கம் செய்யப்பட்டு, பின்னர் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டார். இரிக்கார்டோ, மில் (Mill) போன்றவர்கள் பயன்படுத்திய தத்துவங்களிலிருந்து பொருளாதாரச் சிந்தனைகளை ஊகித்து உணரும் பகுத்துணர்வு முறையை (Pure Deduction) இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. நடைமுறை உலகைக் கூர்ந்து கவனித்து, அதன் இயல்புகளையும் தெரிந்து கொண்டு, பகுத்துணர்வு முறை, தொகுத்துணர்வு முறை (Induction) இரண்டையும் பயன்படுத்த வேண்டும் என்று எலி கூறினார். இவர் அமெரிக்கப் பொருளியல் கழகம் (American Economic Association) உருவாகக் காரணமாக இருந்ததால் இவர் நினைவாக

'எலி சொற்பொழிவுகள்' ஆண்டு தோறும் நிகழ்த்தப் படுகின்றன.

தான்சுதீன் வெப்ளன் (Thornstein Veblen, 1857-1929), வெசுலி கிளேர் மிச்செல் (Wesly Clair Mitchell 1974-1948), சான் ஆர். காமன்சு (John R. Commons, 1862-1945) ஆகியவர்கள் 20-ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவின் அமைப்புப் பள்ளியினைச் (Institutional School) சார்ந்தவர்கள் எனலாம். வெப்ளன், ஏல் (yale) பல்கலைக்கழகத்தில் 1884-இல் தத்துவத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றார்; பொருளாதாரம், சமூக வியல் ஆகியவற்றில் மிகுந்த நாட்டம் காட்டினார். இவரது ''ஓய்வு வருக்கக் கொள்கை'' (The Theory of Leisure Class) மேல்நிலையிலுள்ளவர்கள் தங்கள் உயர்நிலையை வெளிப்படுத்துவதற்காகச் செய்யும் பகட்டு நுகர்ச்சி (Conspicuous Consumption) என்று சொல்லலாம். ஒருவரது செல்வம் வளர வளர, அவர் தாம் உயர்குலத்தைச் சேர்ந்தவர் என்று மெய்ப்பிக்க விரும்புகிறார். இதற்காக அவர் மிகக் கடினமான உழைப்பைக் கூட மேற்கொள்ள வேண்டியிருக்கலாம். மனித நடவடிக்கைகள் எவ்வாறு பிறர் தங்களுக்கு மரியாதை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு திசை திருப்பப்படுகின்றன என்பதையும், அதன் பொருளாதார விளைவுகள் யாவை என்பதையும் நன்கு விளக்கியுள்ளார். ''அமெரிக்காவின் உயர்நிலைக் கல்வி'' (Higher Learning in America) என்னும் நூல் பல்கலைக்கழகப் படிப்பு, செல்வம் சேர்க்கும் நடவடிக்கையால் எவ்வாறு தாக்குதல் உறுகின்றது என்பதை விளக்குகிறது. தொழில் (Industry) தொழில் நுட்பத்தையும், வாணிகம் (Business) நிதி சேர்த்தலையும் அடிப்படையாகக் கொண்டவை. எனவே, இவற்றிடையே ஓர் இணக்கமான வளர்ச்சி ஏற்பட வழியில்லை. அமெரிக்க ''வணிக தேசியம்'' (Business Nationalism) என்ற புதிய முதலாளித்துவத்தை உருவாக்கக் கூடும் என்பது இவரது கருத்து. வளரும் தொழில் நுணுக்க அறிவு, 18-ஆம் நூற்றாண்டின் வணிக அமைப்புகளை 20-ஆம் நூற்றாண்டுக்கு ஏற்காத வகையில் மாற்றிவிடும்; இதன் விளைவுகள் நன்மையானதாக இருக்க வேண்டுமென்பதில்லை என்பன போன்ற கருத்துகளை இவருடைய ''மறைவுச் சொத்துரிமை'' (Absentee Ownership, 1923) என்னும் நூல் விளக்குகிறது. இவருடைய கொள்கைகள் பிற்காலத்தில் பெர்லி, மீன்சு (Berle and Means), சே.கே. கால்பிரெய்த்து (J.K.Galbraith) போன்றவர்களால் விரிவாக்கப்பட்டுள்ளன. சே. பி. கிளார்க்கு போன்றவர்களின் பொருளாதார வாதங்களை இவர் தகர்த்தெறிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வெசுலி கிளேர் மிச்செல் என்பார், ''கிரீன் பேக்சின் வரலாறு'' (A History of Green Backs), ''குறியீட்டு எண்களை உருவாக்குதலும் பயன்படுத்தலும்'' (The making and using of Index Numbers), புகழ் பெற்ற ''வாணிகச் சுழற்சிகள்'' (Business Cycles) ஆகிய நூல்களை எழுதியவர். இவர் 1920-இல் பொருளாதார ஆய்வுகளின் தேசியத் துறையரங்கத்தைத் (National Bureau of Economic Research) தொடங்கி, 1945 வரை அதன் இயக்குநராக (Director) இருந்தார். வாணிகச் சுழற்சிக்கு ஒரு குறிப்பிட்ட காரணந்தான் இருக்க முடியுமென்பதை இவர் ஏற்றுக் கொள்ளவில்லை. வாணிகச் சுழற்சிகளை ஆராய்ந்து விவரிக்க முடியுமே தவிர, முடிவுகளைக் கூற இயலாது என இவர் கருதினார். வணிகச் சுழற்சிகளுக்குச் சிறந்த காரணிகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டலாமே தவிர, இவையே வணிகச் சுழற்சிகளை ஏற்படுத்துகின்றன என்று எவற்றையும் முடிவாகக் காட்ட முடியாது என்பது இவரது கருத்து.

சான் ஆர் காமன்சு, செருமானிய வரலாற்றுப் பள்ளியையும் வளர்ந்துவரும் இறுதிநிலைப் பள்ளியையும் சேர்ந்த கருத்துகளை ஒருங்கிணைக்க முயன்றார். இவர் சமூக நலத்தைப் பெருக்க அரசுத் தலையீடு தேவையென்ற எண்ணம் கொண்டவர். ''செல்வத்தின் பகிர்வு'' (The Distribution of Wealth), ''முதலாளித்துவத்தின் சட்ட அடிப்படை'' (Legal Foundations of Capitalism) ஆகிய இவருடைய நூல்கள் புகழ்பெற்றவை. உரூசுவெல்டின் (Roosevelt) புதுமுறைப் (New Deal) பொருளாதாரக் கொள்கையில் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் இவருடைய கருத்துகளின் அடிப்படையில் விரிவடைந்தன என்று கருதப்படுகிறது.

சான் மாரிசு கிளார்க்கு நல்ல கணித வல்லுநராக இருந்தாலும், பொருளியலில் கணிதத்தைப் பயன்படுத்தவில்லை. இவர் இயக்கநிலை, இயங்காநிலை, சமநிலை ஆகியவற்றை நன்கு ஆராய்ந்தார். ''நடைமுறைப் படுத்தத் தக்க போட்டியை நோக்கி'' (Towards a Concept of Workable Competition) என்ற நூலை 1940-இல் வெளியிட்டார்.

பொதுவாகக் கூறினால், அமைப்புப் பள்ளியைச் சேர்ந்தவர்கள், தனி மனித நடவடிக்கை முழுக்க முழுக்க அறிவுசார்ந்த உச்சப் பயன்பாட்டைத் தேடும் நடவடிக்கைகளாலேயே உறுதி செய்யப்படுகிறது என்னும் புதுத் தொன்மைப் பொருளாதாரக் கருத்தை மறுத்து, சமுதாய அமைப்புகளும் சூழ்நிலைகளும் தனி மனித நடவடிக்கைகளைப் பெருமளவுக்கு உருவாக்குகின்றன என்னும் கருத்தை ஆதரித்தார்கள்.

இக்காலத்தைச் சேர்ந்தவரே 1859-இல் பிறந்து, 1940-இல் காலஞ்சென்ற பிரான்க்கு வில்லியம் தாசிக்கு (Frank William Taussig) என்பவர். ஆர்வர்

டின் (Harvard) புகழ்பெற்ற பேராசிரியரான இவர், பொருளியல் கொள்கைகளை நடைமுறை உலகுக்குப் பயன்படுத்துவதில் புகழ்பெற்றவர். இவருடைய "பொருளியல் கோட்பாடுகள்" (Principles of Economics) அமெரிக்கக் கல்லூரிகளில் நெடுங்காலம் பாடப் புத்தகமாகப் பயன்படுத்தப்பட்டன. இவர் "பொருளாதாரத்தின் காலாண்டு இதழ்" (Quarterly Journal of Economics) என்னும் புகழ்பெற்ற ஆராய்ச்சி இதழின் ஆசிரியராக (கி.பி. 1869–1936) இருந்தார். இவர் பன்னாட்டு வாணிகம், செலுத்துச் சமநிலை ஆகிய துறைகளில் வல்லுநர்; புதுத் தொன்மைப் பொருளியல் கோட்பாட்டினரின் (Neo-Classical Economic Theorists) பிரிவைச் சேர்ந்தவர். இரிக்கார்டோ கருத்திலிருந்து இறுதிநிலைக் கருத்து வரை பொருளியல் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது; அவற்றுள் வேறுபாடில்லை என்பது இவர் தந்த விளக்கம்.

எட்வின் ஆர். ஏ செலிக்மேன் (Edwin R.A. Seligman, 1861-1939) கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் புகழ்பெற்ற பேராசிரியர்; அமெரிக்கப் பொருளாதாரக் கழகத்தை எலி என்பவரோடு சேர்ந்து நிறுவியவர். பொது நிதியியலில் இவர் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தார். "வரிவிதிப்பின் மாற்றமும் தாக்குதலும்" (Shifting and Incidence of Taxation) என்னும் நூல் 1892–இல் இவரால் வெளியிடப் பெற்றது. அறிஞர்அம்பேத்கர் இவரது மேற்பார்வையில் தனது முதல் 'டாக்டர்' பட்டத்தைப் பெற்றார்.

இர்விங்கு பிசர் (Irving Fisher, 1864–1947) அமெரிக்காவின் மிகப் புகழ் பெற்ற பொருளாதார வல்லுநர்களுள் ஒருவர். கணிதம் பயின்று 1892–இலிருந்து 1895 வரை கணிதம் கற்பித்துக் கொண்டிருந்த இவர், அதற்குப் பின்னரே பொருளியலில் நுழைந்தார். காணக்கூடிய அட்டவணை முறையைக் (Visible Card Index System) கண்டுபிடித்துப் பெரும் பொருள் ஈட்டினார். மேலும், இவர் "முதலீடு, வருவாய் ஆகியவற்றின் தன்மை" (The Nature of Capital and Income), "பணத்தின் வாங்கும் ஆற்றல்" (The Purchasing Power of Money), "வட்டிக் கொள்கை" (The Theory of Interest) ஆகிய புகழ்பெற்ற நூல்களை வெளியிட்டார். உலகப் புகழ் பெற்ற 'பண அளவுச் சமன்பாடு' (Quantity Theory of Equation) இவரின் அரிய கண்டுபிடிப்பு. ஆனாலும், குறுகிய காலத்தில் இந்தச் சமன்பாடு உண்மையாக இருக்க முடியாது என்பதை இவரே தெரிவித்திருக்கிறார். மதிப்பு உறுதி செய்வதில் கடந்த காலச் செலவுகளுக்கு (Past cost) எவ்விதச் சிறப்பும் இல்லை என்பதை விளக்கியிருக்கிறார். விலைகள் குறையும்போது தங்கத்தின் மதிப்பை உயர்த்தியும், விலைகள் மிகும் போது தங்கத்தின் மதிப்பைத் தாழ்த்தியும் விலைவாசிகளைச் சமன்பாடு செய்ய முடியும் என்று கருதினார். பணவீக்கத்தைத் தடுப்பதற்கு நூறு விழுக்காடு சேம வளத்தொகையை (100% Reserve)த் தங்கள் வைப்புகளுக்கு எதிராக வங்கிகள் வைத்திருக்க வேண்டுமென்று பரிந்துரை செய்தார். குறியீட்டு எண்களை (Index Numbers) எவ்வாறு உருவாக்குவது என்று 1922–இல் இவர் எழுதிய நூல் மிகவும் புகழ்பெற்றது. இவரை முதல் தலைவராகக் கொண்டு 'பன்னாட்டுப் பொருளாதார அளவையியல் கழகம் (International Econometric Society) 1930–இல் தொடங்கப்பட்டது. கணிதப் பொருளியலுக்கும் (Mathematical Economics), பொருளாதார அளவை இயலுக்கும் (Econometrics) அமெரிக்காவில் வித்திட்டவர்களுள் இர்விங்கு பிசரும் ஒருவர். அமெரிக்காவின் வளமையும் செழிப்பும் தொடர்ந்து பெருகிக் கொண்டே இருக்கும் என்று இவர் கூறியது, சில மாதங்களுக்குள் பெருமந்தம் வந்ததால் ஏளனத்திற்கு உரியதாக மாறிவிட்டது. ஆனால், பொருளியலின் அடிப்படைத் தத்துவங்களுக்கு இவர் மாபெரும் தொண்டு செய்திருக்கிறார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

சோசப்பு அலாய் சும்பீட்டர் (Joseph Alois Schumpeter) 1893–இல் முரேலியாவில் பிறந்து, 1909–இல் உருசியாவில் மாணவர்களுக்கு நூல் கொடுக்க மறுத்த நூலகரோடு போரிட்டு, ஆசுதிரியாவில் (Austria) நிதியமைச்சராகப் பணியாற்றிப் பின் ஆர்வர்டு பல்கலைக் கழகத்தின் பேராசிரியராக இருந்தார். இவர்பொருளாதாரக் கோட்பாடுகளை மிக்க ஈடுபாட்டோடு ஆராய்ந்தார். இர்விங்கு பிசரோடு சேர்ந்து பொருளாதார அளவை இயல் கழகத்தைத் தொடங்கியவர்களுள் இவரும் ஒருவர். வணிகச் சுழற்சிகளுக்குப் புதுமுறை (Innovation) எவ்வாறு காரணமாகியிருக்கிறது என்பதை விளக்கினார். தொழில் முயல்வோர் புதுமுறை காணுவதால் எவ்வாறு பழையன கழிந்து புதியன புகுகின்றன; அதன் காரணமாக அழிவின் மீது புதிய உருவாக்கம் (Creative Destruction) எவ்வாறு நிகழ்கிறது; இதனால் வணிகச் சுழல்கள் எவ்வாறு உருவாகின்றன என்பனவற்றை இவர் விளக்கினார். இவருடைய புகழ்பெற்ற நூல்கள் "பொருளாதார முன்னேற்றத்தின் கொள்கை" (The Theory of Economic Development, 1912); "வணிகச் சுழற்சிகள்" Business Cycles, 1939); "முதலாளித்துவம், சமதருமம், மக்களாட்சி" (Capitalism, Socialism and Democracy, 1942); "பொருளியல் ஆய்வுகளின் வரலாறு" (History of Economic Analysis, 1954) ஆகியவை ஆகும்.

பிரான்கு ஐமேன் நைட்டு (Frank Hyman Knight) 1921–இல் வெளியிட்ட "இடருக்கும், எதிர்பாரா நிகழ்ச்சிகளுக்கும் ஆதாயத்துக்கும் உள்ள தொடர்பு'

(Risk, Uncertainity and profit) என்ற நூல் மிகுந்த செல்வாக்குப் பெற்றது. நிறைவுப் போட்டி (Perfect Competition) என்பது ஒரு கற்பனைக் கோட்பாடு தான்; வாரம் (Rent) ஒரு பகிர்வுப் பங்கு; ஆதாயம் (Profit) நிறைகுறை அறிவினால் உருவாகிறது. இடர் தாங்கலை ஏற்பது (Risk Bearing) எதிர்பாராமையை ஏற்பதிலிருந்து வேறுபட்டது. மிகையான ஆதாயங் களுக்கு எதிர்பாராமை ஏற்பே காரணம். ஓர் இலட்சம் மக்கள்தொகையுள்ள ஒரு நகரத்தில் நாள் தோறும் சராசரி எத்தனை பேர் இறக்கக்கூடும் என் பதை நெடுங்காலப் புள்ளி விவரங்களின் மூலம் அறிந்துகொள்ள இயலும். எதிர்பாராத நிகழ்ச்சியாக இருப்பது, காப்பு (Insurance) நிறுவனத்துக்கு எதிர் பார்க்கக்கூடிய ஒரு இன்னலாக மாறுகிறது. அந்த இன்னலைத் தவிர்ப்பதற்காக ஓர் ஒப்பந்தத் தொகையை வாங்கிக் கொண்டு அந்த நிறுவனம் இன்னலை ஏற்கிறது. இதுபோலத்தான் அறிவு வளர்ச்சி எதிர்பாராச் செயல்களையும் எதிர் பார்க் கும் செயல்களாக மாற்றக்கூடும். எனினும், எதிர் பாரா இன்னல்களை ஏற்பவர்களே மிகையான ஆதா யத்தை அடையமுடியும் என்று இவர் கூறினார். அமெரிக்காவின் மக்களுரிமைக் கொள்கையை மிகவும் ஆதரித்த இவர், தடையிலா அங்காடி இயக்கம் பெரு நன்மைகளைத் தரக் கூடியதாக இருப்பினும், நடை முறை உலகில் இது செயற்படாது என்று கருதினார். "சிக்காகோ குழு" (Chicago School) என்று இப்போது அழைக்கப்படும் பொருளியல் கோட்பாடுகளுக்கு அடிப்படை வித்திட்டவர் இவர். அன்றியும் தனி மனித உரிமையை அரசுத் தலையீட்டிலிருந்து காப் பாற்ற வேண்டும் என்பதையும் இவர் வலியுறுத்தினார்.

இவர் காலத்தவர்களுள், சேக்கப் வைனர் (Jacob Viner) ஒரு புகழ்பெற்ற ஆசிரியர். நீண்ட காலச் செலவு வளைகோடு, குறுகிய காலச் செலவு வளைகோடுகளின் அடிமட்டத்தைத் தொட்டுச் செல் லும் என்னும் தவறான கருத்தை இவர் நிறுவிய தால் எழுந்த சிக்கல்கள், புதிய நீண்ட காலச் செலவு வளைகோட்டுத் தத்துவம் உருவாகக் காரணமாக இருந்தன.

கோட்பிரைடு எபெர்லெர் (Gottfried Heberler) என்பவர் பன்னாட்டு வாணிகத்திலும் வாணிகச் சுழல் தத்துவத்திலும் கவனம் செலுத்தினார். இவ ருடைய "வளமையும் மந்தமும்" (Prosperity and Depression) என்னும் நூல் வணிகச் சுழற்சி பற்றிய ஒரு சிறப்பான பாடநூல். இவருடைய 'பன்னாட்டு வாணிகக் கொள்கை' (Theory of International Trade) 'உற்பத்தி வாய்ப்பு எல்லை' (Production Possibility Frontier) ஆகிய நூல்கள் வாணிகக் கோட்பாடுகளை முதன் முதலாக அறிமுகப்படுத்தின. கணிதப் பொரு ளியலில் இர்விங்கு பிசரைப் போலவே, எரால்டு ஆட்டலிங்கு (Harold-Hoteling) என்பவரும் ஒரு முன் னோடி.

எட்வர்டு சேம்பர்லின் (Edward Chamberlin) 'முற் றுரிமைப் போட்டிக் கோட்பாடு' (The Theory of Monopolistic Competition) என்னும் நூலின் மூலம், பொருளாதார நுண்ணியலில் ஒரு புரட்சியை உரு வாக்கினார். புதுத் தொன்மைப் பொருளியலார், நிறைவுப் போட்டியை அனுமானமாகக் கொண்டிருந் தனர். ஆனால், சேம்பர்லின், பொருள் பேத (Product Differentiation) முற்றுரிமைப் போட்டி நடைமுறை உலகில் விரவிக் கிடக்கிறது என்பதை விளக்கி, அதன் காரணங்களையும் விளைவுகளையும் ஆராய்ந்தார். பொருள் பேத முற்றுரிமைப் போட்டி எவ்வாறு விற் பனைச் செலவுகளை (Selling Cost) மிகச் செய்கிறது; அதன் பொருளாதார விளைவுகள் எத்தகையன என்று நன்கு விளக்கினார்.

இங்கிலாந்தில் கீன்சு பிரபுவின் (Keynes) "வேலை வாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக் கொள்கை" (General Theory of Employment, Interest and Money) என்னும் நூல் 1936-இல் வெளியாகியது. அமெரிக்கப் பொருளாதாரக் கருத்துகள் (American Economic Thought) கீன்சின் தத்துவங்களால் மிகவும் தாக்குண் டன. கீன்சின் தத்துவங்களை அமெரிக்காவில் பரப் பியவர்களுள் ஆல்வின் ஏன்சென் (Alwin Hansen) மிகச் சிறந்தவர். வளர்ந்துவிட்ட சமுதாயங்களில் 'நீண்டகாலத் தேக்கம்' (Seculer Stagnation) ஏற்படும் வாய்ப்புகள் மிகுதி என்று இவர் வாதிட்டார். "வாணிகச் சுழற்சிகளும் தேசிய வருவாயும்" (Business Cycles and National Income) என்பது இவ ருடைய புகழ்பெற்ற நூலாகும்.

கீன்சின் தத்துவங்கள் வெளியான பின், பொருளி யல் கருத்துகளின் புவிஈர்ப்பு மையம் இங்கிலாந்தி லிருந்து அமெரிக்காவுக்கு மாறிவிட்டது என்று கூற லாம். பால் அந்தோணி சாமுவேல்சன் (Paul Antony Samuelson) தம்முடைய மாணவப் பருவத்திலேயே 'வெளிப்படைத் தேர்வுக் கொள்கை'யினை (Revealed Preference Theory) நுகர்ச்சிக் கோட்பாட்டில் அறிமுகப் படுத்தினார். அவர் 'டாக்டர்' பட்டத்துக்காக ஆய்வு கள் செய்து, பின்னர் திருத்தி வெளியிட்ட "பொருளி யல் ஆய்வுகளின் அடிப்படை" (Foundations of Economic Analysis), கணிதப் பொருளியலுக்கு இன்றியமை யாத ஓர் அடிப்படை நூல். கணிதப் பொருளியல் உலகெங்கும் பரவுவதற்குச் சாமுவேல்சனின் கட்டுரை கள் சிறந்த காரணமாய் அமைந்தன. பொது நிதியிய லில் (Public Finance) தனியார் பொருள், பொதுப் பொருள் இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைச் சுட்டிக்காட்டி, தனியார் பொருள்களைப் போல் அல்

லாமல், பொதுப் பொருள் அளிப்பு வளைகோடு செங்குத்துக் கூடுதலால் (Vertical Summation) உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார். பன்னாட்டு வாணிகத்தில் எக்சுதர்–ஒலின் (Heckscher-Ohlin) கோட்பாட்டைத் திருத்தியமைத்தார். முதல் கோட்பாட்டில் (Capital Theory) இவரும் இவருடைய உடன் ஆசிரியரான சோலேவேயும் இணைந்து உற்பத்திச் சார்புக் கொள்கையைப் பயன்படுத்தி (Production Function), உற்பத்திக் காரணிகளைப் பதிலீடு செய்து, வளர்ச்சியை உருவாக்கலாம் என்று வாதிட்டனர். நலப் பொருளியலிலும் (Welfare Economics) பொருளியலின் பல்வேறு துறைகளிலும் சாமுவேல்சன் புதிய கருத்துகளைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார். இவருடைய 'பொருளியல்' (Economics) என்னும் பாடநூல், இதுவரை பதினொரு பதிப்புகளில் வெளிவந்து உலகெங்கும் பயன்படுகிறது. பொருளியலுக்காக நோபல் பரிசு பெற்ற முதல் அமெரிக்கர் இவர்தான்.

இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு முன்பிருந்தே அமெரிக்காவில் கணிதப் பொருளியல் வேகமாக வளர்ந்தது. சாமுவேல்சன், சோலோ, அவுதாக்கர் (Houthakkar), போன்றவர்கள் இதில் சிறந்த பங்கேற்றனர். பொருளியலின் அடிப்படைக் கருத்துகளை அப்படியே கணித 'மொழி' யில் வெளியிடுவதுதான் கணிதப் பொருளியல். கருதுகோள்கள் சரியாக இருந்தால், கணிதத் தேற்றங்கள் மூலம் மிகத் துல்லியமான முடிவுகளைப் பெறமுடியும். வான் நெய்மான் மற்றும் மார்கன்சுடெர்ன் என்போரின் (Von-Neiumann & Morgenstern) விளையாட்டுக் கோட்பாடு (Games Theory), இலீப் சிக்கின் (Leipsig) 'நேர்கோட்டு அமைப்புத் திட்டம்' (Linear Programming) ஆகியவை அமெரிக்கக் கணிதப் பொருளியலார் உலகுக்கு அளித்த கொடைகளாம். இலியாண்டிபு 'உள்ளீடு–வெளியீடு பட்டியல்' (Input Output Table) மூலம் உற்பத்திக் காரணிகளுக்கும் முடிவு பெற்ற பண்டங்களுக்கும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புகள் இருக்கின்றன என்பதை விளக்கி, ஓர் இயக்கமிலா நிலையில் (Static State) எவ்வாறு இவற்றைச் சமன்பாடுகளாக மாற்றிப் பொருளாதார அமைப்பை ஆராய முடியும் என்று விளக்கம் கொடுத்திருக்கிறார். சேம்சு தோபின் (James Tobin) முதலீடு செய்யும்போது எல்லா முதலீட்டையும் ஒரே அங்காடியில் செய்யாமல், பல்வேறு அங்காடிகளில் செய்வதால் ஒரு 'முதலீட்டுச் சமன்பாடு' (Portfolio Balance) கிடைக்கும் என்பதை விளக்கியுள்ளார்.

கணிதப் பொருளாதாரத்தைப் போலவே பொருளாதார அளவை இயலும் (Econometrics) அமெரிக்காவில் மிகவும் வளர்ச்சி பெற்றுள்ளது. ஆய்வின் மூலம் கோட்பாடுகளை மெய்ப்பிக்க இயலாத பொருளாதார இயலில், புள்ளி விவரங்களையும், நிகழ்ச்சித் தகவுக் கோட்பாட்டையும் (Theory of probability) பயன்படுத்தி, அவற்றின் மூலம் பொருளாதாரக் கோட்பாடுகளை மெய்ப்பித்து, அக் கோட்பாடுகளைக் கருவிகளாகப் பயன்படுத்தி, நடைமுறை உலகின் சிக்கல்களைத் தீர்ப்பதற்காகப் பொருளாதார அளவையியல் பயன்படுத்தப்படுகிறது. இலாரன்சு கிளேயின் (Lawrence Klein), கோல்டு பர்கர் (Gold Berger) வான் நெய்மான் (Von Neiumann) போன்றவர்கள் பொருளாதார அளவையியலில் புகழ்பெற்றவர்கள். சைமன் குசனெட்சு (Simon kuznuts), எட்வர்டு தெனிசன் போன்றோர் வரலாற்றுப் பொருளியலில் கணித அளவை முறைகளைப் பின்பற்றித் தேசிய வருவாய் வளர்ச்சியையும் அதன் பங்கீட்டையும் நுட்பமாக விளக்கியுள்ளார்கள்.

கீன்சின் தத்துவங்கள் தொன்மைப் பொருளியலாரின் தத்துவங்களுக்கு எதிர்மாறாகச் சில கொள்கைகளைக் கூறிய போதிலும், கீன்சின் தத்துவங்களையும் புதுத் தொன்மைப் பொருளியலாரின் தத்துவங்களையும் இணைத்து ஒரு புதுத் தொன்மைக் கூட்டிணைப்பை (Neo-Classical synthesis) அமெரிக்கா உருவாக்கியுள்ளது. பெருக்கியையும் ஊக்கியையும் (Multiplier and Accelerator) இணைப்பதன் மூலம் வணிகச் சுழலுக்கு விடை காணலாம் என்ற சாமுவேல்சனின் முயற்சியைத் தொடர்ந்து, இந்தப் புதுத் தொன்மைக் கூட்டிணைப்பு, பல்வேறு வகைகளில் பொருளாதாரத்திற்குப் புது விளக்கங்கள் கொடுக்கிறது. சேம்சு தோபின், பிரான்கோ மாடிகிலியானி (Franco Modigliani), வில்லியம் பௌமால் (William Baumal) போன்றவர்கள் இதில் சிறந்த பங்கு பெறுகிறார்கள். கீன்சின் நுகர்ச்சிச் சார்புக் கோட்பாட்டைச் சேம்சு தியூசன்பரி மாற்றிப் புது விளக்கம் கொடுத்துள்ளார். இந்த விளக்கத்துக்கு "ஒப்புமை வருவாய்க் கோட்பாடு" (Relative Income Hypothesis) என்று கூறலாம். இதைத் தொடர்ந்து மில்டன் பிரைடுமேன் "நிலை வருவாய்க் கோட்பாட்டையும் (Permanent Income Hypothesis) பிரான்கோ மாடிகிலியானியும் ஆண்டோவும் இணைந்து "வாழ்க்கைச் சுழற் கோட்பாட்டை"யும் (Life cycle Hypothesis) கொடுத்துள்ளார்கள். இவ்வாறு பல வழிகளிலும் கீன்சின் அடிப்படைத் தத்துவங்கள் ஆராயப்பட்டுப் புதிய கருத்துகள் தோன்றியுள்ளன.

மேலே குறிப்பிட்டவர்களுள் மில்டன் பிரைடுமேன் தவிர, மற்றவர்கள் அனைவருமே கீன்சைப் பின்பற்றி நாட்டின் ஒட்டுமொத்தத் தேவையை, அரசின் நிதிக் கொள்கையும் பணக் கொள்கையும்இணைத்துக்கட்டுப்

படுத்த முடியும்; கட்டுப்படுத்த வேண்டும் என்னும் கருத்தைக் கொண்டவர்கள். பொதுவாக இவர்களை 'கீன்சிய வாதிகள்' என்று குறிப்பிடலாம். முழு வேலைவாய்ப்பு இல்லாதபோதும், போதுமான பொருளாதார வளர்ச்சி இல்லாதபோதும், தொடர்ந்து விலைவாசி ஏற்றத்தின் போதும் அரசு, பணக் கொள்கையையும் நிதிக் கொள்கையையும் வருவாய்க் கொள்கையையும் (Monetary, Fiscal and Income Policies) பயன்படுத்தி, மொத்தத் தொகுப்புத் தேவையை (Total Aggregate Demand) மாற்றியமைத்து, அரசின் பொருளாதார இலக்குகளை எய்த வேண்டும் என்பது கீன்சிய வாதிகளின் கொள்கையாகும். வேறொரு விதமாகக் கூறினால், கீன்சியவாதிகள், முழு வேலை வாய்ப்புக்காகவும், விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், அரசின் தலையீடு தேவையானது என்று கருதுகிறார்கள். அங்காடியின் தன்னிச்சையான செயல்கள் முழு நன்மையை விளைவிக்காமல் போகக் கூடும் என்பது மட்டுமன்றி, அங்காடி அமைப்பின் இயக்கமே அவ்வப்போது செயலற்று விடும் என்பதால், அரசு அவ்வப்போது தலையிட்டு அங்காடி அமைப்பை இயங்கச் செய்யவேண்டும் என்பதோடு கூட, அங்காடி அமைப்பின் தீய விளைவுகளைத் தடுக்க வேண்டும் என்பதும் கீன்சிய வாதிகளின் செயலாக்கக் கொள்கையாகும்.

பணவியல் வாதம் (Monetarism) கீன்சிய வாதத்திற்குப் பதிலாக உருவாகியது. இர்விங்கு பிசர், என்றி சைமன் ஆகியோர் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் உருவாக்கிய கோட்பாடுகளின் அடிப்படையில் இக்காலத்திற்கேற்பப் பணவாதம் வளர்ந்திருக்கிறது. மில்டன் பிரைடுமேன் (Milton Friedman), அலன் மெல்சர் (Allan Meltzer), கார்ல் பிரன்னர் (Karl Brunner), இலெயிபு ஓல்சன் (Leif-Olson), தேவிடு மிசல்மான் (David Meiselman) ஆகியோரைப் பணவாத வல்லுநர்களாகக் குறிப்பிடலாம். இவர்களனைவரும் கீன்சின் தத்துவங்களால் பாதிக்கப்பட்டிருப்பினும், கீன்சின் முடிவுகளைப் பெருமளவுக்கு ஏற்றுக் கொள்ளாமல், தொன்மைப் பொருளியல் அறிஞரின் முடிவுகள் எந்த அளவுக்குச் சரியானவை என்று தங்கள் ஆய்வின் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

பணவாதத்தின் பேராளராக மில்டன் பிரைடுமேனை எடுத்துக் கொண்டால், 'பணக் கொள்கையின் மறு விளக்க அறிக்கை' (A Re-Statement of Quantity Theory of Money) மூலம், மில்டன் பிரைடுமேன் பணக் கோட்பாட்டை, முதல் கோட்பாட்டின் ஒரு பகுதியாகக் காட்டினார் என்பது தெளிவாகிறது. பண அளிப்புக்கும் விலை மாற்றத்துக்கும் நேர்முகத் தொடர்பு இருக்கிறதென்று கூறுகிறார். வருவாய்ப் பணமாற்ற வேகம் (Income Velocity of Money) ஒப்பீட்டடிப்படையில் மாறாமலேயே இருக்கிறது என்று கூறுகிறார். மில்டன் பிரைடுமேனும் அன்னாசுகுவாட்சும் சேர்ந்து எழுதிய வரலாற்றுப் பொருளியல் நூலான ''அமெரிக்கப் பணத்தின் வரலாறு'' (A Monetary History of United States) மேற்கூறிய முடிவுகளை மெய்ப்பிக்கிறது. இது மட்டுமன்றி, விலையேற்ற விகிதத்துக்கும் வேலையில்லாத் திண்டாட்ட விகிதத்துக்கும் தொடர்பிருக்கிறதென்கிற 'பிலிப்சு வளைகோடு' தத்துவத்தை இவர் மறுக்கிறார். விலைவாசி ஏற்றமும் வீழ்ச்சியும் இல்லாத ஒரு முழு வேலைவாய்ப்புச் சமநிலை ஏற்பட வேண்டுமென்றால், மக்கள் தொகை வளரும் விகிதத்தோடு பொருளாதாரம் வளரும் விகிதத்தைக் கூட்டி வரும் தொகை அளவுக்கு, ஆண்டுதோறும் பணஅளிப்பு கூட்டப்படவேண்டும்; மற்றபடி அரசு பணக் கொள்கையையோ நிதிக் கொள்கையையோ பயன்படுத்தி ஒட்டுமொத்தத் தேவையைப் பாதிக்கக்கூடாது என்பது இவர் கருத்து. வேறொரு விதமாகக் கூறினால், பணவாதத்தினர் அரசின் தலையீட்டை மிகுதியாக ஏற்படுத்துவதில்லை. அதுமட்டு மன்றி, பணக் கொள்கை நிதிக் கொள்கையைவிடப்பலம் வாய்ந்தது என்றும் கருதுகிறார்கள்.

கீன்சிய வாதிகளும் பணவாதிகளும் பேரினப் பொருளியல் (Macro Economics) பகுதியில் மிகுந்த அக்கறை செலுத்தியிருக்கிறார்கள். தேசிய வருவாயின் அளவு, தேசிய வருவாயை வரையறுக்கும் காரணிகள், தேசிய வருவாயை மாற்றக்கூடிய கருவிகள், தேசிய வருவாய்ப் பகிர்வு, அது எப்படி மாற்றப்பட வேண்டும் என்பன போன்ற சிக்கலான கேள்விகளுக்குக் கீன்சிய வாதம் விடைகள் கண்டுபிடிக்க முயன்றிருக்கிறது. இவர்களிடையே ஏற்பட்டிருந்த விவாதம் பொருளியலில் எழுந்த சிக்கல்களைத் தெளிவுபடுத்த உதவியுள்ளது.

பொருளாதார நுண்ணியல் அடிப்படையில் சாமுவேல்சன் வெளிப்படைத் தேர்வுக் கோட்பாட்டைக் கொடுத்தார். சார்சுஇசுதிக்ளர் (George Stigler) என்பவரின் ''விலைக் கோட்பாடு'' (Price Theory), எண்டர்சன் மற்றும் குவாண்ட்டு (Quandt) என்போரின் ''நுண்ணினப் பொருளியற் கோட்பாடு'' போன்றவை நுண்ணியலுக்குப் பல புதிய கருத்துகளை வழங்கிய சிறந்த பாட நூல்கள். உற்பத்தியாளர் உபரிக் கோட்பாட்டைக் கொடுத்த கென்னத் பௌல்டிங்கு (Kenneth Boulding), ஆர்மன் அல்சியன் (Aarmon Alchien), இருகளப் பிரிவு மாதிரியை ஆய்ந்த சி.ஈ. பெர்கூசன் (C.E. Ferguson), ஆர். என். பிசப்பு (R.N. Bishop), மடிப்புத் தேவை வளைகோட்டைக் கொடுத்த (Kinked Demand Curve) பால். எம். சுவீசி

(Paul M. Swizy), சேக் கிர்சிலீபர் (Jack Hirshlifer) போன்றவர்கள் பொருளாதார நுண்ணியலில் புதுக் கருத்துகளைத் தந்து புகழ்பெற்றவர்கள்.

நிறுவனங்கள் உச்ச ஆதாயத்தைக் கருதித்தான் இயங்குகின்றன என்ற புதுத் தொன்மைப் பொருளாதாரக் கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் "உச்சம் தேடும் நடவடிக்கையை" (Maximising Behaviour) மாற்றி, மனநிறைவு பெறும் நடவடிக்கை (Satisfying Behaviour) எவ்வாறு நிறுவனங்களை இயங்கச் செய்கிறது என்று விளக்கியவர் எர்பர் சைமன் (Herber Simon). இவர் கணக்கு எந்திரத் தொழில் நுட்பம், (Computer Technology) தொழில் மனோதத்துவம் போன்ற பல்வேறு துறைகளில் புகழ்பெற்றவர். பொருளியல் ஆசிரியராக இல்லாமலேயே பொருளியல் துறையில் நோபல் பரிசு பெற்றவர். இவரைப் பின்பற்றிச் கோகனும் (Cohen), சிசர்ட்டும் (Cycert) "நிறுவனத்தின் கோட்பாடு" (Theory of the Firm) என்ற நூலை எழுதியுள்ளனர். ஓ. வில்லியம்சன் (O. Williamson) எவ்வாறு நிருவாகம், பங்குதாரர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஆதாயத்தைத் தாமே பங்கிட்டுக் கொள்கிறது என்பதை விளக்கியுள்ளார்.

பொருளாதார நுண்ணியலின் மற்றொரு பெரும் பிரிவான நலப் பொருளியலில் ஆப்ராம் பெர்க்சன் (Abram-Bergson) என்பவர், 'சமுதாய நலச் சார்பு' (Social Welfare Function) என்பதனை அறிமுகப் படுத்தினார். சாமுவேல்சன், தைபார் இசுகிடாவிசுகி (Tibor Scitovisky), எப். எம். பேடார் (F.M. Bator) போன்றவர்கள் நலப் பொருளாதாரத்துக்குப் புதிய விளக்கங்களைக் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாகக் கூறும்போது இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு "பகுதிச் சமநிலை ஆய்வுமுறை" (Partial Equilibrium View) மிகுதியும் பயன்படுத்தப்படாமல் 'பொதுச் சமநிலை ஆய்வு முறை' (General Equilibrium theory) ஆழ்ந்து ஆராயப்படுகிறது எனலாம். கென்னத்து எரோவும், செரால்டு தெப்ரூவும் பல்வேறு அங்கங்களில் பல்வேறு விலைகள் எவ்வாறு ஒரே சமயத்தில் சமன் பாடடைந்து, பொதுச் சமநிலையை அடைய முடியும் என்பதைக் கணித முறையில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பொருளாதாரப் பேரியல், மற்றும் நுண்ணினப் பொருளியல் தவிர, பல்வேறு துறைகளிலும் அமெரிக்கர்கள் பொருளாதாரத்துக்குப் புதிய கருத்துகளை வழங்கியுள்ளார்கள். மண்டலப் பொருளியல், வால்டர் இசார்டு (Walter Isard), பிரைடுமேன் போன்றவர்களால் வளர்க்கப்பட்டது. அது இட நெருக்கடியும் பங்கீடும், அதனால் விளையக்கூடிய போக்குவரத்துச் செலவுகளும், நகர் மயமாக்கலும் பொருளாதாரத்திற்கு எவ்வித விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குகிறது.

நோபல் பரிசுபெற்ற தியோடார் சுல்ட்சு தொடங்கி வைத்த 'மனித முதல் கோட்பாடு' (Human Capital Theory) அடிப்படையில் கூறுவதெல்லாம் மிக எளிய கருத்துதான். சேமிப்பைப் பயன்படுத்திப் பருப்பொருள் முதலை (Material Capital) உருவாக்கலாம். அதே சேமிப்பைப் பயன்படுத்தித் தொழில் நுட்ப அறிவு, கல்வி, மருத்துவ வசதிகள் போன்றவற்றைச் செய்து தரலாம். செலவிடப்படும் இந்த முதலும் பருப்பொருள் முதலைப் போலவே பயன்தரத் தக்கது; மனித முதல், பருப்பொருள் முதலை விட, மிகுதியாகப் பயன் தரத்தக்கதென்று சுல்ட்சு தெரிவித்துள்ளார். இவரைப் பின்பற்றிக் கேரி பெக்கர் (Gary Becker) பொருளாதார ஆய்வு முறையான 'உச்சம் தேடும் நடவடிக்கை'யைத் திருமணம், குழந்தை பெறுதல், இன நிறபேதம் காட்டல் போன்ற பொருளாதாரம் அல்லாத கருத்துகளிலும் பயன்படுத்திச் சில முக்கிய முடிவுகளைக் கண்டார். மின்சர் (J. Mincer), சுவீகிரிலிச்சசு (Zvuciriliches) போன்றவர்கள் இந்தத் துறையில் பல புதிய கருத்துகளை வழங்கியுள்ளார்கள்.

அமெரிக்காவில் வேகமாக வளரும் மற்றொரு பிரிவு சொத்துரிமைப் பொருளியல். கிடைப்பருமை மிகுந்த உலகத்தில், சொத்துரிமையின் அளவும் விரிவும், மக்கள் நடவடிக்கையையும், உற்பத்திக் காரணிகளின் இயக்கத்தையும் வரையறுக்கும் காரணிகளில் முக்கியமானவை என்பதுதான் சொத்துரிமைப் பொருளியலின் (Economics of Property Rights) அடிப்படைத் தத்துவம். எரால்டு டெம்செட்சு (Harold Demsetz), எசு. சியூங் (S. Cheung), ஓ. வில்லியம்சன் (O. Williamson), பியூருபோட்டன் (Furuboten), பெசோவிச் (Pejovich) போன்றவர்கள் இந்தப் பிரிவில் முக்கியமானவர்கள்.

பொருளியல் ஆய்வுகளின் முடிவுகளைச் சமூகவியலில் பயன்படுத்தியது போன்றே சட்டத்திலும் பயன்படுத்த முடியுமா என்பதை அடிப்படையாகக் கொண்டு, சட்டம் மற்றும் பொருளாதாரப் பள்ளிகள் (School of Law and Economics) தோன்றியுள்ளன. தண்டனை, குற்றத்தைக் குறைக்குமா என்கிற கேள்விக்குப் பொருளாதார அடிப்படை ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி, விடை காணச் சட்டம் மற்றும் பொருளாதாரப் பள்ளி முயற்சி செய்கிறது. அது மட்டுமன்றிப் பொருளாதார நடவடிக்கைகளைச் சட்டங்கள் எவ்வாறு பாதிக்கின்றன என்றும் அரசு கட்டுப்பாடுகளின் பொருளியல் விளைவுகள்

யாவை என்றும் இது ஆழ்ந்து விவாதிக்கிறது. ரொனால்டு கோசு (Ronald Coase), இரிச்சர்டு போசுனர் (Richard Bosner), என்றி மான் (Henry Mann), ஆரான் டைரக்டர்( Alron Director) போன்றவர்கள் இந்தத் துறையில் முக்கியமானவர்கள்.

பொருளியலின் ஆய்வுகளை அரசியல் நடவடிக்கைகளுக்கும் தேர்தல் நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்த முடியுமா என்று ஆய்வது 'பொதுத் தேர்வுப் பொருளியல்' (The Economics of Public Choice). சேம்சு புக்கனன்(James Buchnan), கார்டன் துல்லோக் (Gorton Tullock)கென்னத்துஎரோ (Kenneth Arrow), சான் ரால்சு (John Rawls) போன்றவர்கள் இந்தப் பகுதிக்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார்கள். சான் ரால்சின் 'நீதிக் கோட்பாடு' (A Theory of Justice) என்னும் புகழ் மிக்க நூல், பொதுத் தேர்வுக் கோட்பாட் டில் மக்கள், அரசுகளைத்தேர்ந்தெடுக்கும்போது எவ்வாறு செயற்படுகிறார்கள் என்று தத்துவ அடிப்படையில் விளக்கம் காண முயல்கிறது. கென்னத்து எரோவின் 'நடக்கவியலாத் தேற்றம்' (Impossibility Theorem), பொதுத் தேர்தல்களில், மக்கள் தேர்தல் முறைகளால் ஒரு நிச்சயமான முடிவு பெறுவது சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நடக்க இயலாது என்று கூறுகிறது. புக்கனனும் துல்லோக்கும், மக்கள் எவ்வாறு தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி நலக் குழுக்களை உருவாக்குகிறார்கள் என்பதைப் பொருளியல் முறையில் ஆய்ந்திருக்கிறார்கள்.

பொது நிதியியலில் இரிச்சர்டு முசுகிரேவ் (Richard Musgrave), பொதுச் சமநிலைக் கருத்தைப் பயன்படுத்தி, வரி விழுக்காடு, புரட்டுகைத் தாக்கம் பற்றி (Shifting and Incidence of Taxation) புதிய விளக்கங்கள் கொடுத்துள்ளார். ஈ.டி. பேகன் (E. D. Fagan), வால்டர் புளூம் (Walter Blum) போன்றவர்கள் வளர்வீத வரிவிதிப்பைத் தீவிரமாக ஆராய்ந்துள்ளனர். சேம்சு புக்கானன், சோசப் ஏ. புச்மேன் (Joseph A. Puchman), கார்ல் சூப் (Carl Shoup) முதலியோர் பொது நிதியியலுக்கும் புதிய ஆய்வு முடிவுகள் பலவற்றைத் தந்துள்ள பேரறிஞர்கள் ஆவர்.

வேளாண்மைப் பொருளியல் (Agricultural Economics), பொருளாதாரக் கருத்துகள், குறிப்பாக 'உச்சம் தேடும் நடவடிக்கை' எந்த அளவுக்கு வேளாண்மைக்குப் பொருந்தும் என்று ஆராய்கிறது. தியோடார் சுல்ட்சு, மரபுவழி வேளாண்மை கூட 'உச்சம் தேடும் நடவடிக்கை'யின் மறு வடிவம் என்று விளக்கம் கொடுத்துள்ளார். உற்பத்திச் சார்பு ஆய்வுகளை எடி (Heady), நெர்லோவு (Nerlove), எவன்சன் (Evenson) போன்றவர்கள் வேளாண்மைத் துறையில் ஆழ்ந்து பயன்படுத்தி, வேளாண் உற்பத்தித் திறனை அளந்து கண்டுபிடித்து, அதன் மூலம் உற்பத்திப் பெருக்கத்திற்கு வழிகாட்டியிருக்கின்றனர்.

இனி, சியார்சிசு திக்ளரைத்து என்பவர் தகவல் பொருளியலின் (Economics of Information) முன்னோடி எனலாம். விவரங்கள் செலவில்லாமல் கிடைப்பதில்லை. எனவே, தகவல்கள் பெறுவதிலும் உச்சம் தேடும் நடவடிக்கை இயங்குகிறது. தகவல் தேடுவதன் எல்லைகளைப் பொருளியல் எவ்வாறு கட்டுப்படுத்துகிறது என்பதை இவர் விளக்கியுள்ளார்.

பௌல்டிங்கின் 'கொடைப் பொருளியல் கோட்பாடு' (Grant Economy), பொருளாதார நடவடிக்கைகள், இருவழி மாற்று நடவடிக்கைகள் (Two-Way Economy) மாத்திரம் அல்லாமல், ஒரு வழி மானிய நடவடிக்கைகளாலும் பாதிக்கப்படுகின்றன என்று ஆராய்கிறது.

இந்தியாவில் அமெரிக்காவின் தூதுவராக இருந்த சான் கென்னத் கால்பிரெய்த்து (John Kenneth Galbreith) ஒரு தனிவகைப் பொருளியல் தத்துவத்தை அளித்திருக்கிறார். அமெரிக்கா ஒரு செல்வம் மிக்க சமுதாயம் (The affluent Society). இதில் தனியார் துறைப் பொருள்கள் வளர்கிற வேகத்தில் பொதுப் பொருள்கள் வளர்வதில்லை. தனியார் நுகர்ச்சிப் பண்டங்கள் விற்பனைக்காக அழகிய உறைகளில் போடப்படுகின்றன. நுகர்வோர் அந்த உறைகளைக் குப்பைத்தொட்டிகளில் விட்டெறிந்து விடுவார்கள். பண்டங்களின் விற்பனை மிகுந்து கொண்டே போகும்போது தெருக்களில் குப்பையும் மிகுதியாகிறது. இது போலவே தனிப்பட்டவர், தம் பண்டங்களை விற்பதற்காக நாட்டின் உற்பத்திக் காரணிகள், மற்றும் விற்பனைச் செலவுகள் மூலம் மிகுதியாக வீண்செலவு செய்கின்றார். ஒரு தொழில்நுட்ப அமைப்பு (Techno structure) நாட்டின் பெரிய நிறுவனங்களை எல்லாம் தன் கட்டுக்குள் வைத்துக் கொள்கிறது. தொழில் நுட்ப அமைப்புக்கும் தளவாடத் தொழில் இணைப்புக்கும் (Military Industrial Complex) நெருங்கிய தொடர்பிருக்கிறது என்பன போன்ற சிறந்த கருத்துகளைக் கால்பிரெய்த்து வழங்கியுள்ளார்.

எண்ணெய்ச் செல்வர் இராக்பெல்லரின் நன்கொடை மூலம் தொடங்கப்பட்ட சிக்காகோப் பள்ளி, அங்காடி நடவடிக்கைகளின் தம்விருப்பச் செயல்களால் அரசின் நடுவாட்சி வலுத் தளர்த்தப்பட்டுத் தனிமனித உரிமை உச்சம் பெறுகிறது என்னும் கொள்கையை ஏற்றுக் கொள்கிறது. இர்விங் பிசர், எப்.எச். நைட்டு, என்றி சைமன் போன்றவர்கள் இந்தப் பள்ளியின் முன்னோடிகள். மில்டன் பிரைடுமேன்! )தான் இதன் இப்போதைய மிகச் சிறந்த பேராளர். செரு

மனியில் பிறந்து, இங்கிலாந்தின் குடிமகனான, நோபல் பரிசு பெற்ற எப்.ஏ. வான் ஏயக் (F.A. Von Hayek) மற்றொரு மிகச் சிறந்த உறுப்பினர் எனினும், இவர் அமெரிக்கக் குடிமகன் அல்லர் என்பது குறிப்பிடத்தக்கது. தனிப்பட்டவர் உரிமையில் அரசுத் தலையீடு எதிர்பாராத தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் பெரிதும் நம்புகிறார்கள். எனவே, ஒட்டுமொத்தத் தேவையை அரசு நடவடிக்கைகள் மூலம் இவர்கள் எதிர்பார்க்கிறார்கள். பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை வரிகள் மூலம் குறைக்க முயல்வதையும், வேலையில்லாத் திண்டாட்டத் துன்பத்தைச் சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் மூலம் குறைக்க முயல்வதையும், நன்னோக்கத்தோடு மேற்கொள்ளப்படும் தவறான கொள்கைகள் என்று இவர்கள் கருதுகிறார்கள்; குறைந்த அளவுக் கூலிச் சட்டங்களை (Minimum Wage Laws) எதிர்க்கிறார்கள். இவர்களை அமெரிக்காவின் வலது சாரியினர் எனலாம். சேம்சு புக்கானன், சியார்சு இசுடிக்ளர், தியோடார் சூல்ட்சு போன்றவர்கள் இந்தப் பள்ளியின் சார்பாளர்களே.

அங்காடி நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ளும் முதலாளித்துவ எண்ணங்களுக்கு எதிராக மார்க்சியவாத அடிப்படையை ஏற்றுக் கொள்ளும் பழைய இடது சாரியான (Old Left) பால் சுவீசி, பால் பேரன் (Paual Baron) போன்றவர்களும், வருக்க பேதங்கள் செல்வத்தை ஒரு சிலரிடம் குவித்து, மிகப் பலரை ஏழைகளாக்கிக் கொண்டே செல்கின்றன என்கிற கருத்தை வலியுறுத்தி, ''சிறப்புப் பொருளியலின்'' (Main Stream Economics) அடிப்படைத் தத்துவங்களான பொதுச் சமநிலைக்கோட்பாடு, உச்சம் தேடும் நடவடிக்கை ஆகியவற்றை மறுத்து, முதலாளித்துவ அமைப்பு முறைதான் புதிய உலகின் பல்வேறு சமுதாயப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு அடிப்படை என்று கூறுகின்றனர். அதன் விளைவுகள், நகரங்களின் நலிவிலிருந்து (Urban Decay), பால் பேதம் வரை (Sex Discrimination) பல்வகைத் தீமையான விளைவுகளை உருவாக்கி இருக்கின்றன என்ற கருத்துகளை வழங்கியவர் சான் சி.கர்லி (John C. Gurley), சோசப் இசுடெயிண்டல் (Joseph Steindel), எர்பர்ட்டு கின்டிசு (Herbert Gintis) சாமுவேல் சி.பவுல்சு (Samuel C.Bowles) ஆகியோர். தாமசு வெயிசு காப்பு (Thomas Weisskopf) போன்ற புதிய இடதுசாரியினரும் (New Left) அமெரிக்க இளம் தலைமுறையினரிடையே செல்வாக்கு அடைந்திருக்கிறார்கள்.

அமெரிக்காவின் பொருளியல் கருத்துகளில் அண்மைக் காலத்தில் சிறப்பிடம் பெற்றிருப்பவை, 'அறிவுசார் எதிர்பார்ப்புக் கோட்பாடும் (Rational Expectations Theory), 'அளிப்புப் பொருளியலுமாம் (Supply side Economics). சான் எப்.முத்து (John F.Muth) அறிவுசார் எதிர்பார்ப்புக் கொள்கையின் தந்தை. 'அறிவுசார் எதிர்பார்ப்புகள்', 'பொருத்தமாக்கும் எதிர்பார்ப்பு' களிலிருந்து (Adaptative Expectations) வேறுபடுகின்றன. அரசு பண அளவை மிகுதிப்படுத்தியுள்ளது என்று தெரிந்த பிறகு, விலைவாசிகள் ஏறக்கூடும் என்று எதிர்பார்ப்பது பொருத்தமான எதிர்பார்ப்பாகும். ஆனால், ஆண்டு தோறும் அரசு பண அளவைக் கூட்டிக் கொண்டே வந்திருக்கிறது. அரசின் நடவடிக்கைகள் மிகுந்துகொண்டே செல்வதால், பண அளிப்பும் தொடர்ந்து கூடிக்கொண்டே இருக்கிறது. எனவே, ஒவ்வோர் ஆண்டிலும், அதற்கு முந்திய ஆண்டைவிட, பண அளிப்பு மிகுந்து, அதனால் விலைவாசிகள் ஏறக்கூடும் என எதிர் பார்ப்பது 'அறிவுசார் எதிர்பார்ப்பாகும்'. பொருளியல் அலகுகள் தங்களுக்குக் கிடைத்திருக்கும் எல்லா வகையான செய்திகளையும் உள்ளடக்கி, மேற் கொள்ளக்கூடிய எதிர்பார்ப்புகள்தாம் 'அறிவுசார் எதிர்பார்ப்புகள்' எனப்படும். இந்த 'அறிவுசார் எதிர்பார்ப்பு' இருக்கும் போது மத்திய வங்கி பண அளிப்பைக் கூட்டியவுடனேயே, விலைவாசிகள் அதே வீதத்தில் உயர்ந்து விடக் கூடும். மத்திய வங்கியின் நடவடிக்கைக்கும், அதன் விளைவாக மற்ற வங்கிகளின் நடவடிக்கைக்கும் மற்ற வங்கிகளிலிருந்து முதலீடுசெய்வோரின் நடவடிக்கைகளுக்கும் பின்பே, அதாவது, ஓர் இடைவெளிக்குப் பின்னரே, விலைவாசிகள் ஏறக்கூடும் என்கிற நம்பிக்கையை இந்தக் கொள்கை தகர்த்தெறிகிறது. 'அறிவுசார் எதிர்பார்ப்புக் கோட்பாடு' ஒட்டுமொத்தத் தேவையைப் பொதுவான மனிதர்கள் ஊகித்துணர்வார்கள் என்பதால், அந்த நடவடிக்கைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வார்கள் என்றும், அதனால், அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்பார்க்கும் விளைவுகள் இராவென்றும் கூறுகிறது. இவர்கள் முடிவுகள் பெரும்பாலும் பணவாதக் கொள்கையினரின் முடிவுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன. ஆர்.சே.பேரோ (R.J. Barro), டி.சே. சார்சண்ட் (T.J. Sargent) என். வாலசு (N.Wallace), ஆர்.இ. லூகாசு (R.E.Lucas) போன்றவர்கள் 'அறிவுசார் எதிர்பார்ப்புக் கொள்கையில்' புகழ்பெற்ற ஆய்வாளர்கள்.

அளிப்புப் பொருளியல், வாசிங்டன் டி.சி.யில் உள்ள ஒரு உணவு விடுதி மேசையின்மேல் உருவானதாகக் கருதப்படுகிறது. ஆர்தர் இலேபர் (Arthur Laffer) என்னும் இளம் பொருளியல் அறிஞர், குடியரசுத் தலைவர் நிக்சன் அமைத்திருந்த பொருளியல் ஆலோசனைக் குழுவுக்கு ஓர் உதவியாளர். அவரும் அவர் நண்பர்களும் உணவு விடுதியில் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருக்கும்போது, திடீரென்று இலேபருக்கு 'இலேபர் வளைகோடு' பற்றிய சிந்தனை வந்ததென்றும், அவர் சிற்றுண்டிக் காகிதக் கைக்குட்

டையில் அதனை முதன் முதலில் வரைந்தார் என்றும் சொல்லப்படுகிறது. இந்த இலேபர் வளைகோடு, வரி விகிதத்துக்கும் அரசு வருவாய்க்கும் தொடர்பு காண்கிறது. செங்குத்து அச்சில் அரசு வருவாயும், படுகிடை அச்சில் வரி விகிதமும் வரையப்படும்போது, யூ (U) வடிவத்தில் இருக்கிறது என்று இலேபர் வளைகோடு காட்டுகிறது. வரிவீதம் மிகுதியாக மிகுதியாக, அரசு வருவாயும் மிகுந்து கொண்டேபோய், ஒரு குறிப்பிட்ட வரிவீதத்தில் உச்சத்தை அடைந்து, அதற்கு மேலும் வரிவீதம் உயர்த்தப்படுமானால், அரசு வருவாய் குறையத் தொடங்குகிறது என்று இலேபர் கருதுகிறார். வரிகளே இல்லாத நாட்டில் பொதுப் பொருள்கள் கிடைக்கமாட்டா. சாலை, தெருவிளக்குகள், போக்குவரத்து வசதிகள், சுகாதார வசதிகள் போன்றவை இரா. எனவே, அந்நாட்டில் வரிவீதம் மிகுதியாக மிகுதியாக, பொதுப் பொருள்கள் அளிப்பும் மிகும். பொதுப் பொருள்கள் பொருளாதாரத்தின் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதால் நாட்டு வருவாயே மிகும். நாட்டு வருவாய் மிகுவதால் அரசின் வருவாயும் மிகும். ஆனால், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் வரிவீதம் மிகுந்தால் தனியார் நுகர்ச்சியும் சேமிப்பும் குறைக்கப்பட வேண்டி வரும். இதனால், உற்பத்தியின் அளவும் நாட்டு வருவாயின் அளவும் குறையும். அதே சமயம், வரி ஏய்ப்பு நடவடிக்கைகள் மிகத் தொடங்கும். மிக்க வரிவிதிப்பு, தனிப்பட்டவர் ஊக்கத்தைப் பெரிதும் குறைத்துவிடும். இதன் காரணமாக நாட்டு வருவாயும், அரசின் வருவாயும் வீழ்ந்து விடும். அளிப்புப் பொருளியலின் தொடக்கப் பொருளியல்வாதிகள், தனிப்பட்டவர் நடவடிக்கைகளில் அரசின் எல்லாத் தலையீடுகளுமே தனி மனிதர் ஊக்கத்தைக் குறைத்து உற்பத்தியையும் குறைக்கின்றன என்று விளக்கம் கூறுகிறார்கள். தொன்மைப் பொருளியல் அறிஞர் சே.பி. சேயின் (J.B. Say) விதியான 'அளிப்பு', அதற்கான தேவையை உருவாக்குகிறது என்பதை இவர்கள் ஏற்றுக்கொண்டு மெய்ப்பிக்கிறார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அரசின் நிதி நடவடிக்கை மூலம் சமன்படச் செய்யும் முயற்சியை இவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மிகும்போதுதான் பொருளீட்ட வேண்டுமென்கிற தனி மனித ஊக்கமும் மேம்படுகிறது. இதனால், நாட்டின் செல்வமே வளர்ந்து வறுமை ஒழிக்கப்படும் என்று இவர்கள் கருதுகிறார்கள். அளிப்புப் பொருளியல் என்பது, தொன்மைப் பொருளியல் கருத்துகளுக்குப் புதிய உடைமாற்றம் செய்து வெளியிடப்பட்டிருக்கும் எண்ணங்களேயாம். 'அளிப்புப் பொருளியல்' இப்போதைய குடியரசுத் தலைவர் இரீகனால் மிகவும் பாராட்டப்பட்டுள்ளது. அளிப்புப் பொருளியல் கருத்தினை வழங்கியுள்ள இலேபர் தவிர, முண்டெல் (Mundell), சார்சு கில்டெர் (George Gilder), கெய்த்து மார்சுடன் (Keith Marsden) போன்றவர்கள் சிறப்பானவர்கள்.

சாமுவேல்சன் கூறியுள்ளபடி இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, பெரும்பாலான அமெரிக்கப் பொருளியல் அறிஞர்கள் அங்காடி இயக்கத்தில் அரசு தலையீட்டை ஏற்றுக்கொள்ளும் சிறப்புப் பொருளியலைச் சார்ந்தவர்கள். இவர்களே புதுத் தொன்மை ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி வளர்த்தவர்கள். இவர்களுக்கு எதிராகச் சிக்காக்கோக்குழுவினர் வருக்கபேதமற்ற சமுதாய அமைப்புக் கருத்துகளை வழங்கினர். இவ்விரு கருத்துகளையும் ஏற்றுக்கொள்ளாது, தனி வழியில் சென்றவர்கள் கால்பிரெய்த்து, ஆர். ஏ. எயில்புரோனர் (R.A. Heilbroner) போன்றவர்கள். இவர்களுக்கிடையே எழுந்த மாறுபட்ட ஆய்வு முடிவுகள் காரணமாகவே அமெரிக்கப் பொருளியல் கருத்துகள் இவ்வளவு விரிவடைந்துள்ளன.

அமெரிக்கர்கள் பொருளியல் பற்றிப் பல்வேறு சிறந்த கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆனால், அமெரிக்கர்கள் என்று சொல்லும்போது, அமெரிக்காவில் பிறந்தவர்களை மட்டும் கருத இயலாது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் பொருளியல் வல்லுநர்கள் அமெரிக்காவில் குடியேறி, அமெரிக்கப் பொருளியல் எண்ணங்களைச் சிறப்படையச் செய்துள்ளனர். கனடாவில் பிறந்த கால்பிரெய்த்து, முரேலியாவில் பிறந்த சூம்பீட்டர், ஆசுத்திரேலியாவில் (Australia) பிறந்த பான் நெய்மான், பிரான்சில் பிறந்த செரால்டு தெப்ரூ போன்ற பலரும் அமெரிக்கப் பொருளாதார இயலுக்குச் செய்துள்ள தொண்டு மிகப் பெரிது. கனடியக் குடிமகனான ஆரி சான்சன் (Harry Johnson) அமெரிக்காவில் நீண்டகாலம் வாழ்ந்தவர். உலகின் பல்வேறு திசைகளிலிருந்தும் சிறந்த பேரறிஞர்களைத் தன்னிடம் ஈர்த்துக் கொண்டதால், அமெரிக்கப் பொருளியல் அதன் இயற்கை வளர்ச்சியோடு மேன்மேலும் வலிவு பெற்றிருக்கிறது. எஸ்.நீ.

துணை நூல்கள்:

**Schumpeter, J.A.**, "History of Economic Analysis", Oxford University Press, London, 1974.

"Readings in Economic Analysis", George Allen & Unwin London, 1979.

Survey Articles, "Journal of Economic Literature", American Economic Association, U.S.A.

*அமெரிக்க மைய வங்கி முறை* **(Federal Reserve System of U.S.A.)** :இருபதாம் நூற்றாண்டின் பணமாற்று முறை (Exchange System) மைய நிதிக்

கட்டுப்பாட்டை வலியுறுத்தியதால் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மைய வங்கி முறை உருவாயிற்று. அங்கு 1900 ஆண்டளவில் நிலவிய குழப்பமிகு செலாவணியும் நலிவுற்ற வணிக வங்கிகளின் செயல் திறனும் நிதி இருப்பைக் குலைத்துப் பல சிக்கல்களை உருவாக்கின. காசோலைகளை மீட்பதில் கூட செலவு அதிகமானதை உணர்ந்த அமெரிக்க அரசு நாட்டின் வங்கி அமைப்பினை முற்றிலும் மாற்றியமைக்கும் வகையில் கூட்டு இருப்பு அமைப்புச் சட்டத்தை (Federal Reserve System Act) 1913–இல் செயற்படுத்தியது.

**கூட்டு இருப்பு அமைப்பு (Federal Reserve System):** வங்கிகளின் வளம் எளிதில் இயங்கும் தன்மையைப் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1913–ஆம் ஆண்டுச் சட்டப்படி நாடு 12 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மண்டலம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மண்டல வங்கி (Regional Bank) நிறுவப்பட்டது. இச்சட்டத்தின்படி வங்கியின் கட்டுப்பாட்டிற்குள் வரும் வணிக வங்கிகள் யாவும் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிணையாக மாவட்ட வங்கியில் (District Bank) ஒதுக்கீடு செய்ய வேண்டும். இத் தொகை, வங்கிகள் அமையப் பெறும் இடத்திற்கேற்றவாறு ஊரகம், நகரம், மாநகரம் என முறையே வேறுபட்டு வங்கிகளின் வளத்தில் 12 விழுக்காடு, 15 விழுக்காடு, 18 விழுக்காடு என வரையறுக்கப்பட்டது. செலாவணியை நெகிழ்ச்சியுடையதாக்கி மாவட்ட வங்கிகள் ஒரு புதிய வகைப் பணத் தாளினை வெளியிட அனுமதித்தது. இவ்வகைப் பணம், தங்கம் அல்லது வணிக உறுதிச் சீட்டின் (Commercial Paper) மேல் அளிக்கப்பட்டது. பொருளாதாரம் செழிப்புறும் காலங்களிலும் வாணிக நடவடிக்கைகள் தீவிரமாகச் செயல்படும் நேரங்களிலும் நாட்டின் செலாவணி விரிவடையும் நிலை ஏற்படும். பண அங்காடியில் சிக்கல் ஏற்படும் வேளையில் மாவட்ட வங்கிகள், வணிக வங்கிகளுக்கு ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து முன்பணம் அளித்து, வணிக உறுதிச் சீட்டுகளுக்கு மறு கழிவு (Rediscount) செய்து கொடுக்கின்றன. வங்கிகளின் இருப்பு நிதியில் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில், தங்களின் ஒதுக்கீட்டுத் தொகையிலிருந்து கடன் பெறவும் வாய்ப்புண்டு. வாடிக்கையாளர் எவ்விதச் செலவுமின்றி, துரிதமாகத் தங்களின் காசோலைகளைப் பணமாக மாற்றிடும் வசதியினை இச்சட்டம் உருவாக்கிக் கொடுத்தது. ஆரம்ப காலத்தில் இக் கூட்டு இருப்பு அமை-ஆளுமை அதிகாரம் 12 மாவட்ட வங்கிகளின் பொறுப்பாக இருந்தது. உறுப்பு வங்கிகள் மூன்றில் இரண்டு பகுதி இயக்குநர்களைத் தேர்ந்தெடுத்தன. கூட்டு இருப்பு வாரியம் (Federal Reserve Board) மேலாண்மை அலுவல்களைக் கவனித்தது. ஆனால், நிதி நடவடிக்கைகளில் குறைந்த அளவிலேயே தன் கட்டுப்பாட்டைக் கொண்டு விளங்கியது. மறு கழிவு செய்து தரும் அதிகாரமும் மையக் கட்டுப்பாடின்றி 12 மாவட்ட வங்கிகளுக்கும் பரவலாக்கப்பட்டிருந்தது. இக்காரணங்களால் 1913–இல் இயற்றப்பட்ட சட்டம், முழுமையாக வணிக வங்கி அமைப்பு முறையைச் சீர்படுத்தவும், பண அங்காடிச் சிக்கல்களைத் தவிர்க்கவுமான சிறப்பு நோக்கங்களுடன் திகழ்ந்தது. இருப்பினும், இதன் செயற்பாடு வணிக வங்கிகளின் இயக்கத்தை முறைப்படுத்த உதவியதைத் தவிரப் பொருளாதாரத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை.

முதல் உலகப் போரின்போது அரசின் நிதித் தேவைகளுக்கு ஆதரவாகத் தன் நிதிக் கொள்கையை மாற்றியமைத்துத் துணை நிற்க நேர்ந்தது. மலிவுப் பணக் கொள்கை பின்பற்றப்பட்டு உறுப்பு வங்கிகளின் ஒதுக்கீட்டுத் தொகையின் அளவும் குறைக்கப்பட்டது. பொதுமக்களிடம் நம்பிக்கையிழந்த வணிக வங்கிகள் அதனை மீண்டும் பெறுவது கடினமாயிருந்தது. போரின் காரணமாக ஏற்பட்ட பண வீக்கத்தினால் நியூயார்க்கு நகரின் பணக் கழிவு வீதம் 7 விழுக்காடாக உயர்ந்தது. போருக்குப் பின்னர் ஏற்பட்ட ஊக்கமும் செழிப்பும் கோட்பாட்டளவில் வலுவூட்டுவனவாக இருந்தது. மறு கழிவு வீதத்தைக் குறைத்தால் தங்கம் நாட்டை விட்டு வெளியேறும் என்ற எண்ணத்தில் அது குறைக்கப்படாமலிருந்தது.

பின்னர் ஏற்பட்ட வாணிக மந்தநிலையால் வணிக வங்கிகள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. அரசு இந்நிலையில் தங்கத்தைப் பாதுகாத்துப் பணப் பரிமாற்ற முறையை நிலைப்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியைத் தூண்டவும் மைய வங்கியின் தேவையை உணர்ந்தது. இருப்பு அங்காடியில் (Stock Market) பங்கு மூலங்களின் விலை,1927–இல் ஏறியதால் பொருளாதாரம் சீர்குலைந்தது. பண மதிப்புத் தாழ்வுற்று இன்றியமையாப் பண்டங்களின் விலை கட்டுக்கடங்காமல் ஏறியது. இதன் காரணமாகக் கூட்டு இருப்பு அமைப்பின் (Federal Reserve System) மூலம் பண அளிப்பைக் கட்டுப்படுத்தப் 'பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை' (Tight Money Policy) பின்பற்றப்பட்டது. இதனால், நாடு 1929–இல் பொருளாதார வளர்ச்சியை அடைந்தது.

தொடர்ந்து பின்பற்றப்பட்ட பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை பல வகைகளில் வணிக வங்கிகளைப் பாதித்தது. பல வணிக வங்கிகள் செயலிழந்தும், நிதி நடவடிக்கைகளை நிறுத்தியும் தொழில்களை மூடின. உறுதியாக நின்ற சில வங்கிகளும் தங்களுக்குள் கூட்டு ஒப்பந்தங்கள் (Mergers) செய்து கொண்டன. பன்னாட்டுத் தங்க நாணயத்

திட்டம் (International Gold Standard) கி.பி. 1930-இல் முற்றிலுமாகச் சிதைந்து முறிவடைந்தது. மேற்கொண்டு நிலைமை மோசமாகாமல் தடுக்க நாடுகள் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தின; காப்பு வரிச் சட்டங்களை நிறைவேற்றின. இதனால், தங்கம் நாட்டைவிட்டு வெளிச் செல்வது தடை செய்யப்பட்டது. தங்கத்திற்குக் குறிப்பிட்ட மதிப்பையும், மாற்று விகிதத்தையும் அரசுகள் தங்கள் செலாவணிக்கு வரையறுத்தன. இவற்றால், அமெரிக்க மைய வங்கி முறை சீரமைக்கப்பட்டுத் தங்க நாணய மாற்றுத் திட்டம் (Gold Exchange Standard) உருவாக்கப்பட்டது.

மைய வங்கி முறை அமைப்பு: குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட 7 உறுப்பினர்கள் ஆளுநர் குழுவில் இடம் பெறுகின்றனர். இந்நியமனம் அமெரிக்கச்செனட்டு(Senate) எனப்படும் மேலவையால் அங்கீகரிக்கப்படுகிறது. ஆளுநர் குழு உறுப்பினர்களின் பதவிக் காலம் 14 ஆண்டுகள் ஆகும். சில தனிப்பட்ட தவறுகளுக்காக அன்றி, வேறு எவ்விதக் காரணங்களாலும் இவர்கள் பதவியிலிருந்து விலக்கப்படுவதில்லை.

குறிப்பிட்ட நிலப்பகுதிகளுக்கென 12 கூட்டு இருப்பு வங்கிகள் (Federal Reserve Banks) செயற்படுகின்றன. இவ்வங்கிகளின் இருப்பு அந்தந்தப் பகுதிகளின் உறுப்பு வங்கிக்குச் சொந்தமானவை. வைக்கப்படும் இருப்பு நிதிக்காக உறுப்பு வங்கிகள் 6 விழுக்காடு பங்குத் தொகையைப் பெறுகின்றன. நாட்டில் உள்ள 12 கூட்டு இருப்பு வங்கிகளில் அதிகப்படியான உடைமையைப் பெற்றுத் திகழ்வது நியூயார்க்குக் கூட்டு இருப்பு வங்கி (Federal Reserve Bank of Newyork) ஆகும். கூட்டு இருப்பு வங்கி ஒவ்வொன்றுக்கும் 9 இயக்குநர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களில் அறுவரை மாவட்ட உறுப்பு வங்கிகளும் மூவரை ஆளுநர் குழுவும் தேர்வு செய்யும். ஆளுநர் குழு நியமிக்கும் மூவரும் பொது மக்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுவர். வங்கியின் இயக்குநர்கள் தங்களின் ,தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள். தலைவரைத் தேர்வு செய்வது ஆளுநர் குழுவால் அங்கீகரிக்கப்படுகிறது. கூட்டு வெளி அங்காடிக் குழு என்ற அமைப்பு (Federal Open Market Committee) கொள்கை உருவாக்கத்தில் சிறப்புப் பங்கினை வகிக்கிறது. இதில் ஏழு குழு உறுப்பினர்களும் ஐந்து இருப்பு வங்கிகளின் தலைவரும் அடங்குவர். நியூயார்க்கு வங்கியின் தலைவர் எப்பொழுதும் இதன் உறுப்பினர். பணவியல் கொள்கைகள் குறித்த எல்லாவிதக் கூறுகளையும் இக்குழு பரிசீலிக்கிறது. குழுவின் கூட்டம் 3 வாரங்களுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. அனைத்து இருப்பு வங்கிகளின் தலைவர்களும் இக்குழுவின் கூட்டத்தில் கலந்து கொள்வர்.

உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்ட வணிக வங்கிகளின் மேல் மட்டுமே கூட்டு இருப்பு அமைப்பு தன் கட்டுப்பாட்டைக் கொண்டு செயற்படுகிறது. அரசுரிமை பெற்ற வங்கிகள் கட்டாயமாக உறுப்பினராக வேண்டும் எனவும், உறுப்பு வங்கிகள் யாவும் (கூட்டு வைப்புக் காப்பீட்டுக் கழகத்தில் (Federal Deposit Insurance Corporation) காப்பீடு செய்யப்பட வேண்டும் எனவும் வேண்டப்படுகிறது. நாட்டிலுள்ள 13,500 வணிக வங்கிகளில் 6000 மட்டுமே உறுப்பு வங்கிகள். ஆயினும், இவ்வங்கிகளின் வைப்புத் தொகை மொத்த வங்கி வைப்புத் தொகையில் 85 விழுக்காடாக உள்ளது.

செயற்பாடு: கூட்டு இருப்பு அமைப்பின் நடவடிக்கைகள், வணிக வங்கிகளின் இருப்பு நிலையையும், அவற்றின் கடன்கள், வைப்புகள் ஆகியவற்றைப் பெருக்கும் திறமையையும் பெரிதும் பாதிக்கின்றன. தேவைப்படும்போது உறுப்பு வங்கிகளின் வைப்பில் மாறுதலையும் செய்கின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் பிணைய ஆவணங்களை (Pledged Documents) விற்பதன் மூலமோ வாங்குவதன் மூலமோ வணிக வங்கிகளின் இருப்பு நிலையை மாற்றியமைக்கின்றன. இம்மாற்றத்தை உறுப்பு வங்கிகளுக்குக் கடன் கொடுப்பதன் மூலமும் செய்கின்றன. பிணைய ஆவணங்களைக் கடனாகப் பெறும்போது வரம்புத் தேவைகளை (Marginal Requirements) ஆளுநர் குழுவே தீர்மானிக்கிறது. இது கடன் வாங்கும் விலையில் உயர்ந்த அளவு 20 விழுக்காடு எனக் கொண்டுள்ளது.

கழிவு வீதத்தின் (Discount Rate) மூலம் கடன் வரன்முறைகளை மாற்றியமைக்கிறது. வங்கிகள் கூட்டு இருப்பு வங்கியிலிருந்து கடன் பெறும்போது இக்கழிவுத் தொகையினைச் செலுத்துகின்றன. கழிவு வீதம் உயரும்போது வங்கிகள் தங்களின் வட்டி வீதத்தை உயர்த்தி, வாடிக்கையாளரிடம் அதிக வட்டியை வாங்குகின்றன. அமெரிக்கக் கூட்டு இருப்பு, நாட்டின் தீர்வகமாகச் செயற்பட்டு, ஓராண்டில் மட்டும் நூறாயிரங்கோடி (Trillion) உரூபாய் அளவிற்கான காசோலைகளைக் கையாள்கிறது. மேலும், அரசாங்கத்தின் வங்கியாகவும் நாட்டில் செயற்பட்டு வருகிறது.

இவ்வமைப்புத் திறமையாகச் செயற்பட, இருப்பு வங்கிளை (Reserve Banks) ஆளுநர் குழுவும், உறுப்பு வங்கிளை (Member Banks) இருப்பு வங்கிகளும், கண்காணிக்கின்றன. ஆளுநர் குழு, வங்கிப் பிடிப்பு வணிகக் கழகங்களின் (Bank-holding Companies) நட-

வடிக்கைகளை ஒழுங்கு படுத்துகிறது. மாநில உறுப்பு வங்கிக் கிளைகளை நிறுவுவது, வங்கி இணைப்பை (Bank mergers) ஏற்படுத்துவது ஆகியவை குறித்து ஆளுநர் குழுவே முடிவு செய்கிறது. பன்னாட்டு நிதி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளும் கழகங்களின் செயற்பாட்டையும், வெளிநாடுகளில் செயலாற்றும் உறுப்பு வங்கிகளின் நடவடிக்கைகளையும் கண்காணிக் கிறது.

அமெரிக்கக் கூட்டு இருப்பு அமைப்பு ஒரு முழுமை யான மையவங்கியாகக் செயற்பட்டாலும், பிற நாட்டு மைய வங்கிகளைப் போன்று ஆதிக்க உரிமை கொண்டு இயங்கவில்லை. அமெரிக்கக் கருவூலமும் (Treasury). செலாவணிக் கட்டுப்பாட்டு அதிகாரியும் சில சிறப்புமிக்க அதிகாரங்களைப் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகக் கருதப்படுகிறது.

துணை நூல்கள்:

**Herman Kross, E.**, "American Economic Development", Prentice Hall of India, (PVT), New Delhi, 1977.

**Milton Friedman and Anna Jacobson** Schwartz, "A Monetary History of the United States", 1867-1960, Princeton University Press, Princeton, N.J., 1963.

***அமெரிக்கா,*** கிறிசுதாபர் கொலம்பசினால் (Christopher Columbus) கி.பி. 1492-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட பெருநிலப் பகுதி. வளமான இயற்கைச் செல்வங்கள் அங்கே கிடைக்கின்றன. ஐரோப்பிய நாடுகள் அப்பெருநிலப்பகுதியில் குடி யேற்றங்களை அமைத்துக் கொண்டன. பின்னர் அக் குடியேற்றங்கள் அனைத்தும் விடுதலை பெற்றன.


நிலவியல்: பரந்த பசிபிக்குப் பெருங்கடலுக்கும் அட்லாண்டிக்குப் பெருங்கடலுக்கும் இடையே உள்ள பெருநிலப்பரப்பு அமெரிக்கா ஆகும். வடக்கேயுள்ள கிரீன்லாந்தும் கரிபியன் கடலிலுள்ள மேற்கிந்தியத் தீவுகளும் அமெரிக்காவைச் சேர்ந்த பகுதிகளே ஆகும். வடக்கே 83° 39′ பாகை வடக்கு நில நேர்கோட்டி லிருந்து தெற்கே 55° 59′ பாகை தெற்கு நில நேர் கோடு வரை, அப்பெருநிலப் பரப்புப் பரவியுள்ளது. வடக்குத் தெற்காக ஏறத்தாழ 15,000 கி.மீ. நீள முள்ளது. விரிவான பகுதியில் வட அமெரிக்காவின் அகலம் 4,800 கி.மீ; தென் அமெரிக்காவின் அகலம் 5,000 கி.மீ. ஆகும். உலகத்தின் மொத்த நிலப்பரப் பில் 28 விழுக்காட்டுப் பகுதி அமெரிக்காவின் நிலப் பரப்பாகும். அமெரிக்கா என்னும் நிலப்பரப்பு, நிலவியல் அடிப்படையில் வட அமெரிக்கக் கண்டம் என்றும், தென் அமெரிக்கக் கண்டம் என்றும் பிரிக்கப்படுகிறது. வட அமெரிக்கக் கண்டத்தில் யூகோன், பிரேசர், கொலம்பியா, கொலராடோ, மிசிசிப்பி, மிசூரி, அர்கன்சாசு, இரெட்டு, ஓகையோ, தென்னசி முதலான ஆறுகளும், சுபீரியர், ஊரோன் (Huron), மிச்சிகன் (Michigan), கிரேட் (Great), பியர், கிரேட் சுலாவ், ஈரி (Erie), வின்னிபெக், (Winnipeg), ஆன்டேரியோ (Ontario), அதபாசுகா (Athabasca) முதலான ஏரிகளும் உள்ளன. மேற்கே உயர்ந்த இராக்கி மலைத்தொடர்களும், கிழக்கே அப்பலேச் சியன் மேட்டு நிலங்களும் உள்ளன. காலநிலையில் மிகுந்த வேறுபாடு உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட் டில் உள்ள சாவுப் பள்ளத்தாக்கில் (Death Valley) 134 பாகை வெப்பமும், கனடாவில் உள்ள இசுநாக் என்ற இடத்தில் 80 பாகை வெப்பமும் நிலவுகிறது. மழை அளவிலும் வேறுபாடு உள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள வாசிங்டன் மாநிலத்தில் 300 செ.மீ. வரை மழை பெய்கிறது. சாவுப் பள்ளத் தாக்குப் பகுதியில் ஏறத்தாழ 13 செ.மீ. மழை பெய்கிறது. இயற்கைச் செல்வங்களுள் கனடாவில் நிக்கல், அமெரிக்க ஐக்கிய நாட்டில் எண்ணெய், இரும்புத் தாது முதலானவை மிகுதியாகக் கிடைக் கின்றன.

தென் அமெரிக்காவில் அமேசான், ஓரினாகோ, பரானாபராகுவே முதலான ஆறுகளும், திதிகாகா (Titicaca), நிகராகுவா முதலான ஏரிகளும் உள்ளன. மேற்கே ஆண்டீசு (Andes) மலைத்தொடர்களும் கிழக்கே பிரேசில் மலைகளும் உள்ளன. ஆர்செண் டீனாவில் சில இடங்களில் 120 பாகை வெப்பமும் வேறு சில இடங்களில் 27.4 பாகை வெப்பமும் நிலவு கிறது. சிலி நாட்டில் சில இடங்களில் 260 செ. மீ. வரை மழை பெய்கிறது. அக்கண்டத்தில் இயற்கைச் செல்வங்களும் மிகுதியாக உள்ளன. பொலிவியாவில் தகரமும், சிலியில் செம்பும், பிரேசிலில் மாங்கனீசும், வெனிசுலாவில் இரும்புத் தாதுவும் மிகுதியாகக் கிடைக்கின்றன. நிலவியல் அடிப்படையில் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா என்று அமெரிக்கா பிரிக்கப்பட்டாலும், பண்பாட்டு அடிப்படையில், அது வட அமெரிக்கா எனவும் இலத்தீன் அமெரிக்கா என வும் பிரிக்கப்படுகிறது. வட அமெரிக்காவில் அமெரிக்க ஐக்கியநாடும் கனடாவும் மட்டுமே உள்ளன. இலத் தீன் அமெரிக்காவில் மெக்சிகோவும் அதற்குத் தெற்கே உள்ள நாடுகளும் உள்ளன. அந்நாடுகளில் பேசப்படும் இசுபானிய, போர்ச்சுகீசிய மொழிகள், இலத்தீன் மொழியிலிருந்து பிறந்தவை ஆகும். இலத்தீன் அமெரிக்காவில் இன்று ஏறத்தாழ முப்பது நாடுகள் உள்ளன.



அமெரிக்காவில் கரையிறங்கிய கிறிசுதாபர் கொலம்பசும் அவர் குழுவினரும்

வரலாறு: வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள பழங்குடிகள் செவ்விந்தியர்களாவர். ஏறத்தாழப் பதினைந்தாயிரம் அல்லது இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர்கள், ஆசியாக் கண்டத்திருந்து பேரிங் நீர்ப்பிரிவு (Bering Strait) வழியாகச் சென்று, அலாசுகா முதல் ஆர்செண்டீனா வரை குடியேறினார்கள் என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். அவர்களுள் பல பிரிவினர் இருந்தனர். காலப்போக்கில் சில பிரிவினர் முதிர்ந்த நாகரிகங்களை உருவாக்கினார்கள். அவர்களுள் மாயன்கள், அசுதெக்குகள் (Aztecs), இன்காக்கள் (Incas) ஆகியோர் சிறப்பானவர்கள். மாயாக்கள் (Mayas) மத்திய அமெரிக்காவில் உள்ள யூகாடான், அதன் தெற்குப் பகுதி ஆகியவற்றில் ஏறத்தாழ கி.மு. 10–ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8–ஆம் நூற்றாண்டு வரை மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தார்கள். இவர்கள் கருங்கற்களால் பெரும் கட்டடங்களைக் கட்டினார்கள்; சித்திர வடிவ எழுத்துகளை எழுதினார்கள்; வேளாண்மையை நன்கு அறிந்திருந்தார்கள். நகர அரசுகள் சிறப்பாகச் செயற்பட்டன. தால்டெக் என்ற இனத்தினரால் கி.பி. 10–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாயன்களின் நாகரிகம் வீழ்த்தப்பட்டது. அசுதெக்குகள் (Aztecs) கி. பி. 13–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெக்சிகோவின் தெற்குப் பகுதியில் எழுச்சி பெற்றனர். அவர்களின் அரசர் தலைமைச் சமய குருவாகவும் இருந்தார். நாடு



மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப் பட்டது. தங்கம் வெள்ளி ஆகியவை மிகுதியாக அவர்களால் பயன்படுத்தப்பட்டன. பல கலைகளை அவர்கள் அறிந்திருந்தார்கள். தென் அமெரிக்காவின் மேற்கில் பெரு, சிலி போன்ற பகுதிகளில், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில், இன்காக்கள் எழுச்சி பெற்றனர். வேளாண்மை, கட்டடக்கலை, சிற்பக்கலை முதலான வற்றில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இவ்விரண்டு பேரரசுகளும் கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் வளம் பெற்றிருந்தன.

அமெரிக்கக் கண்டங்களைப் பற்றியும் அங்கு ஏற்றம் பெற்றிருந்த எழில்மிகு பேரரசுகளைப் பற்றியும் ஐரோப்பியர்கள் அறிந்திருக்கவில்லை. கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த பிரென்டன் முனிவர் வட அமெரிக்கக் கண்டத்திற்குச் சென்றார் என்னும் செய்தி கூறப்படுகிறது. அதே நூற்றாண்டில் புத்த சமயப் பரப்பாளர்கள் இன்றைய மேற்குக் கனடாப் பகுதிக்குச் சென்றதாகச் சிலர் கூறுகின்றனர். இறுதியில் இசுகாண்டினேவியக் கடற்கொள்ளைக்காரர்களாகிய வைக்கிங்குகள் (Vikings) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் கிரீன்லாந்துக்குச் சென்று வந்ததாகக் கருதப்படுகிறது. இலீப் எரிக்சன் (Leif Ericsson) கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வட அமெரிக்கக் கண்டத்தின் கிழக்குப் பகுதிக்குச் சென்று வந்ததாகவும் சிலர் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றுகளுக்கெல்லாம் போதுமான சான்றுகள் இல்லை.

துருக்கியர்கள் கி.பி. 1453-ஆம் ஆண்டு கான்சுடாண்டிநோபிளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். அதன் பின்னர் ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வரும் நிலவழிகளையும் கடல் வழிகளையும் அவர்கள் மூடிவிட்டார்கள். எனவே ஐரோப்பாவிலிருந்து மேற்குத் திசையில் சென்று இந்தியாவுக்குக் கடல்வழி கண்டுபிடிக்க இசுபெயின் நாடு முயன்றது. அந்நாட்டின் அரசர் பெர்டினான்டும் அரசி இசபெல்லாவும், கி.பி. 1492-ஆம் ஆண்டு ஆகசுட்டு மாதம் 3-ஆம் நாள், கிறிசுதாபர் கொலம்பசு தலைமையில், 88 பேர் கொண்ட ஒரு குழுவை அனுப்பினார்கள். அவர்கள் சாந்த மேரியா, நைனா, பிண்டா ஆகிய மூன்று கப்பல்களில் பயணம் செய்தார்கள். அறுபத்தொன்பது நாள்கள் அட்லாண்டிக்குக் கடலில் பயணம் செய்த பின்னர், பகாமாத் தீவுகளில் இறங்கினார்கள். தாம் இந்தியாவுக்கு அருகில் உள்ள சில தீவுகளுக்கு வந்திருப்பதாகவும், இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் கண்டுபிடித்து விட்டதாகவும் கொலம்பசு தவறாகக் கருதினார். அங்கிருந்த மக்களைச் செவ்விந்தியர்கள் என்று குறிப்பிட்டனர். அப்பெயரே புதிய உலகமாகிய அமெரிக்காவில் வாழ்ந்த மக்களுக்கு நிலைத்துவிட்டது. கொலம்பசு கி.பி. 1493-ஆம் ஆண்டு சனவரி மாதம் இசுபெயின் நாட்டிற்குத் திரும்பிய போது, இந்தியாவுக்குப் புதிய கடல்வழியைக் கண்டுபிடித்ததற்காகச் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டு வானளாவப் புகழப்பட்டார். அதன் பின்னர், கி.பி. 1493, 1498, 1502-4 ஆகிய ஆண்டுகளில் மத்திய அமெரிக்கா, தென் அமெரிக்காவின் வடபகுதி ஆகியவற்றிற்குச் சென்று அப்பகுதிகளை ஆராய்ந்தறிந்தார். கொலம்பசு மேற்கொண்ட முதல் கடல்வழிப் பயணத்திற்குப் பின்னர், இங்கிலாந்து கி.பி. 1497-ஆம் ஆண்டு சான் காபட் (John Cabot) என்பவரை அனுப்பியது. அவர் நியூபவுண்டுலாந்து (Newfoundland) பகுதிக்குச் சென்று வந்தார். போர்ச்சுகல் கி.பி. 1500-ஆம் ஆண்டு பெட்ரோ கேப்ரல் (Pedro Cabral) என்பவரை, இந்தியாவுக்குச் சென்று வரும்படி அனுப்பியது. அவருடைய கப்பல் புயலால் தாக்கப்பட்டுப் பிரேசில் பகுதிக்குத் தள்ளப்பட்டது. தாம் சென்று வந்தது அமெரிக்கா என்பதை அறியாமலேயே கி.பி. 1506-ஆம் ஆண்டில் கொலம்பசு இறந்துவிட்டார். இத்தாலிய மாலுமி அமெரிகோ வெசுபுசி (Amerigo Vespucci) என்பவர், கொலம்பசு சென்று வந்தது ஒரு புதிய பெருநிலக்கண்டம் என்பதைக் கி.பி. 1507-ஆம் ஆண்டு விளக்கினார். எனவே அப்புதிய உலகம் அவர் பெயரையே கொண்டு அமெரிக்கா என அழைக்கப் பெற்றது.

கொலம்பசு கண்டுபிடித்தது ஒரு புதிய பெருநிலக் கண்டம் என்பதை அறிந்த ஐரோப்பிய நாடுகள், அக்கண்டத்தில் தங்கள் மேலாண்மையை ஏற்படுத்திக் கொள்ளப் போட்டியிட்டன. அவற்றுள் இசுபெயின், பிரான்சு, இங்கிலாந்து, நெதர்லாந்து ஆகியவை முதலிடம் பெற்றன. இசுபெயின் நாட்டினால் அனுப்பப்பட்ட கொலம்பசு அப்புதிய கண்டத்தைக் கண்டுபிடித்ததால் அக்கண்டத்தில் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள இசுபெயின் சீரிய உரிமை பெற்றிருந்தது. அந்நாடு கி.பி. 1513-ஆம் ஆண்டு பால்போ (Balboa)வை அனுப்பியது. அவர் பனாமா என்னும் குறுகிய நிலப் பகுதியைக்கண்டறிந்து,பசிபிக்குக்கடற்கரைவரை சென்று திரும்பினார். அதே ஆண்டு, பான்சு டி இலியோன் (Ponce de leon) புளோரிடா பகுதியையும், கியூபாத் தீவையும் ஆய்ந்து அவற்றின் நில அமைப்பை அறிந்தார். எராண்டோ கார்டெசு (Herando Cortes) கி.பி. 1519-ஆம் ஆண்டு, 550 பேர் கொண்ட படையுடன் சென்று கியூபாவில் இறங்கினார். பின்னர், மெக்சிகோவின் தெற்குப் பகுதியில் வளம் பெற்றிருந்த அசுதெக் பேரரசைக் கண்டு பெருவியப்புக் கொண்டார். அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் அப்பேரரசை அழித்துவிட்டு அங்கே இசுபெயின் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. அங்கி

ருந்து தங்கம் வெள்ளி முதலான செல்வங்களை இசுபெயின் எடுத்துச் சென்றது. இசுபெயின் நாட்டு அரசர் ஐந்தாம் சார்லசினால் கி.பி. 1519-ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட பெர்டினான்ட்டு மெகல்லன் (Ferdinand Magellan), தென் அமெரிக்காவின் பரந்த கிழக்குக் கடற்கரையின் ஐந்து பகுதிகளில் இறங்கி, அவற்றின் நிலவியலை அறிந்தார். பிரான்சிசுகோ பிசாரோ (Francisco Pizarro) கி.பி. 1513-ஆம் ஆண்டு, பனாமா பகுதி வழியாகப் பெரு (Peru) பகுதிக்குச் சென்றார். அங்கே இன்காக்கள் அமைத்திருந்த வளமான பேரரசைக் கண்டு வியந்தார். அப்பேரரசை வீழ்த்தி, அங்குக் கிடைத்த தங்கம், வெள்ளி முதலான செல்வங்களை எல்லாம் இசுபெயினுக்கு எடுத்துச் சென்றார். மென்டோசா (Mendoza) கி.பி. 1535-இல் ஆர்செண்டினாப் பகுதியின் பல இடங்களுக்குச் சென்று ஆராய்ந்தார். எராண்டோ டி சோடோ (Herando do Soto) கி.பி. 1539-42-ஆம் ஆண்டுகளில், வட அமெரிக்காவில் உள்ள பிளோரிடா வழியாக, மிசிசிப்பி ஆற்றுப் பகுதிக்குச் சில நூறு வீரர்களுடன் சென்று, பல பகுதிகளை ஆராய்ந்தார். கொரொனாடோ (Coronado), கி.பி. 1540-42-ஆம் ஆண்டுகளில் வடமேற்கு மெக்சிகோவின், பல பகுதிகளின் நிலவியலை அறிந்தார். மெனன்டெசு (Menendez) கி.பி. 1565-ஆம் ஆண்டு புளோரிடாவுக்குச் சென்று, அப்பகுதியை இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தினார். வடக்கே இரியோ கிராண்டி ஆற்றிலும் கலிபோர்னியோ வளைகுடாவிலிருந்து தெற்கே ஆர்செண்டினா வரை உள்ள பகுதியிலும் இசுபெயின் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது. ஏறத்தாழ இரண்டு இலட்சம் இசுபானியர்கள், அப்பகுதிகளில் குடியேறினார்கள். இசுபெயினின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட பகுதிகள், புதிய இசுபெயின், புதிய கிரானடா, பெரு என்ற மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஆளுநர்கள் நியமிக்கப்பட்டு, ஆட்சி செய்யப்பட்டன. அப்பகுதிகளில் இசுபானிய மொழி, ஆட்சி முறை, பண்பாடு, கிறித்தவ சமயம் முதலானவை புகுத்தப்பட்டன. அப்பகுதிகளின் இயற்கைச் செல்வங்களை இசுபெயின் நாடு அடுத்த இரண்டு நூற்றாண்டுக் காலத்தில் சுரண்டிச் சென்றது.

போர்ச்சுகல் நாட்டினால் அனுப்பப்பட்ட கேப்ரல், கி.பி. 1500-ஆம் ஆண்டு, பிரேசில் பகுதியைக் கண்டறிந்தார். எனவே, அப்பகுதியில் போர்ச்சுகல், தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கி.பி. 1549-ஆம் ஆண்டு முதல் அங்கு ஒரு ஆளுநரை நியமித்து, ஆட்சி செய்தது. அங்கு அப்பொழுது சர்க்கரை மிகுதியாக உற்பத்தி செய்யப்பட்டது. புதிய உலகமாகிய அமெரிக்காவின் இந்தப் பகுதியில் மட்டுமே போர்ச்சுகல் தன் ஆதிக்கத்தை ஏற்படுத்திக்கொண்டது.

பிரான்சு நாடு, கி.பி. 1524-ஆம் ஆண்டு வெர்ரசானோ (Verrazano) என்பவரை அனுப்பியது. அவர் வட அமெரிக்காவின் கிழக்குக் கரையோரம் பயணம் செய்து அதன் நிலவியலை அறிந்து, தாயகம் திரும்பினார். புதிய நிலப் பகுதி மக்கள் குடியேற்றத்திற்கு ஏற்றதாக உள்ளது என்று பிரெஞ்சு அரசுக்குத் தெரிவித்தார். சாகியுசு கார்டியர் என்பவர் கி.பி. 1534-35-ஆம் ஆண்டுகளில் நியூபவுண்டுலாந்து பகுதிக்குச் சென்று வந்தார். அவர் கி.பி. 1541-ஆம் ஆண்டுக்குள் மூன்று முறை அப்பகுதிக்குப் பயணங்கள் மேற்கொண்டார். செயின்டு லாரன்சு (St. Laurence) ஆற்றின் வழியே பயணம் செய்து, அப்பகுதியில் நிலவியலை அறிந்தார். இன்றைய கியுபெக்குக்குடியேற்றத்திற்கு ஏற்றதாக உள்ளது என அவர் தெரிவித்தார். எனினும், பிரான்சு அங்கே குடியேற்றத்தை அமைக்க அடுத்த அறுபது ஆண்டுகளில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிரெஞ்சு வணிகர்களால் கி.பி. 1605 ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட சாமுவேல் டி சாம்ப்லெய்ன் (Samvel de Champlain), கனடாவில் உள்ள இன்றைய நோவாசு கோசியா (Nova Scotia) பகுதியில் குடியேற்றத்தை அமைத்தார். அதன் பின்னர்ப் பிரான்சிலிருந்து பலர் சென்று அங்கே குடியேற்றங்களை விரிவுபடுத்தினார்கள். தனிப்பட்ட வணிகக் கம்பெனிகளால் அமைக்கப்பட்ட இக்குடியேற்றங்களை எல்லாம் பிரெஞ்சு அரசே, கி.பி. 1663-ஆம் ஆண்டு எடுத்துக்கொண்டு, ஆளுநர்களை அமர்த்தி, ஆட்சி செய்யத் தொடங்கியது. அடுத்த சில ஆண்டுகளுக்குள் மிசிசிப்பி ஆற்றுச் சமவெளி முழுவதிலும் பிரான்சு தன் அதிகாரத்தை நிலைநாட்டியது. எனினும், பின்னர் நடைபெற்ற ஏழாண்டுப் போரில் இங்கிலாந்தினால் பிரான்சு பல இடங்களில் தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்துச் செய்துகொள்ளப்பட்ட பாரிசு உடன்படிக்கையின்படி (கி.பி. 1763), புதிய உலகில் தனக்கிருந்த எல்லாக் குடியேற்றங்களையும் பிரான்சு இங்கிலாந்துக்குக் கொடுத்துவிட்டது.

நெதர்லாந்து நாடும் புதிய உலகமாகிய அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தது. தச்சு (Dutch) வணிகர்களால் கி.பி 1609-ஆம் ஆண்டு என்றி அட்சன் அனுப்பப்பட்டார். அவர், பின்னர்த் தம் பெயரால் குறிக்கப்பட்ட, அட்சன் ஆற்றுப் பகுதியின் நிலவியலை ஆய்ந்தறிந்தார். தச்சு மேற்கிந்திய வணிகக் குழுவைச் சார்ந்த வணிகர்கள், கி.பி. 1624-இல், இன்று நியூயார்க்கு (New York) நகரம் அமைந்துள்ள மன்காட்டன் தீவில் குடியேற்றத்தை அமைத்துப் பின்னர்

உள்நாட்டிலும் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினார்கள். ஆனால் தச்சுக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த பகுதிகள் முழுவதையும் கி.பி. 1664–ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள்.

வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில் கி.பி. 1607–ஆம் ஆண்டிலிருந்து குடியேற்றங்களை அமைக்க, இங்கிலாந்து தொடங்கியது. வெர்சீனியா (1607), பிளிமத்து (1620), மசாசுசெட்சு (1930), மேரிலாந்து (1634), உரோடுத் தீவு (Rhode Island , 1636), கனெக்டிகட்டு (1636), நியூ ஏவன் (1638), மெயின் (1639), நியூ ஏம்ப்சயர் (New Hampshire , 1639), வட கரோலினா (1670), தென் கரோலினா (1691), நியூயார்க்கு (1664), நியூ செர்சி (New Jersey , 1664), பென்சில் வேனியா (1681), தெலாவர் (Delaware , 1703), சியார்சியா (Georgia , 1732) ஆகிய பதினாறு குடியேற்றங்களை இங்கிலாந்து அமைத்தது. அவற்றுள் பிளிமத், நியூஏவன், மெயின் ஆகிய மூன்றும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அண்டை மாநிலங்களுடன் இணைக்கப்பட்டன. எனவே, வட அமெரிக்காவின் கிழக்குக் கரையில், கி.பி. 1750-ஆம் ஆண்டளவில், பதின்மூன்று ஆங்கிலக் குடியேற்றங்கள் இருந்தன.

**அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெறுதல்:** அமெரிக்க நாடு ஐரோப்பிய நாடுகளின் பிடியிலிருந்து விடுபட முதலில் சுதந்திர இயக்கம் நடத்தியது, இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்டிருந்தன பதின்மூன்று குடியேற்றங்களே ஆகும். அமெரிக்க ஐக்கிய நாடு என்ற பெயரில் கி.பி. 1776–ஆம் ஆண்டு அப்பதின்மூன்று குடியேற்றங்களும் விடுதலை பெற்றன. (அமெரிக்க ஐக்கிய நாட்டைப் பற்றிய தனிக் கட்டுரையைப் பார்க்க.)

இசுபெயின் நாட்டை மாவீரன் நெப்போலியன் கி.பி. 1808–ஆம் ஆண்டில் கைப்பற்றிக்கொண்டான். அப்பொழுது இசுபெயின் நாட்டின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த அமெரிக்க நாடுகளில் எல்லாம் விடுதலை இயக்கங்கள் தோன்றின. பிரான்சிசுகோ டி மிராண்டா (Franscies De Miranda), சைமன் பொலிவர், சான் மார்ட்டின் (John Martin) முதலானவர்கள் விடுதலை இயக்கத் தலைவர்களாக இருந்தார்கள். மெக்சிகோ முதல் ஆர்செண்டீனா வரை உள்ள பெரும்பாலான இலத்தீன் அமெரிக்க நாடுகள், கி.பி. 1825–ஆம் ஆண்டுக்குள்ளாக விடுதலை பெற்றுவிட்டன.

துணை நூல்கள்:


**Hayes, C.J.H. Moon, P T. and Wayland, J.W.,** ''World History'', 1955.

**Wallbank, T.W. and Taylor, A.M.,** ''Civilization Past and Present'', 2 Volumes, 1955.

**Williams, M.M.,** ''The People and Politics of Latin America''.

**அமேசான் ஆறு** உலகில் இரண்டாவது நீண்ட ஆறுகளுள் ஒன்று. இது தென் அமெரிக்காவின் சிறப்பான ஆறு. ஆப்பிரிக்காவில் பாயும் நைல் ஆறு தான் இதைவிட நீண்டது. அமேசான் ஆற்றின் நீளம் 6437 கி.மீ. இந்த ஆறு கொண்டு வரும் பொருள்கள் மற்ற ஆறுகள் கொண்டுவருபவைகளை விட மிகுதியானவை. அமேசான் ஆற்றின் அகலம் 2.4 கிலோ மீட்டரிலிருந்து 10 கிலோ மீட்டர் வரையும், ஆழம் 12 மீட்டரிலிருந்து 91 மீட்டர் வரையும் உள்ளன. அமேசான் ஆற்றின் வடிகால் நிலத்தின் பரப்பு 62,20,000 சதுரக் கி.மீ. வெப்ப மண்டலக் காடுகளை உலகிலேயே மிகுதியாகக் கொண்ட பகுதி இவ்வடிகால் நிலத்தில்தான் இருக்கின்றது. வெப்ப நிலை சராசரி 85° (பாகை) பாரன்கீட் (29° செண்டிகிரேட்) உள்ளது. ஆற்றுப் பாய்ச்சலின் தாழ்நிலப் பகுதிகளில் மழை 130 செண்டி மீட்டரும், பெரு நாட்டில் ஆண்டீசு மலைப் பகுதிகளில் 305 செண்டி மீட்டரும் பொழிகின்றது. பரா ஆற்றின் வழியாகப் பெரும்பாலான கப்பல்கள் அமேசான் ஆற்றில் நுழைகின்றன. பெரிய கடல் கப்பல்கள் 3700 கி.மீ. தொலைவு செல்லுகின்றன.

அமேசான் ஆறு, பெருநாட்டில் ஆண்டீசு மலைத் தொடரில் சிற்றோடையாக, அபுரிமாக்கு ஆறு என்னும் பெயருடன் தொடங்குகிறது. கடல் மட்டத்திற்கு மேல் 5240 மீட்டர் உயரத்தில் அபுரிமாக்கு அமைந்துள்ளது. வடமேற்காக ஒடி உக்கயாலி ஆற்றில் கலந்து, பெரு நாட்டில் பாயும் அமேசானின் கிளையாறாகிறது. உக்கயாலி, ஆண்டீசு தொடர் வழியாக வடக்காகப் பாய்ந்து கிழக்கில் திரும்பி, மரனோன் ஆற்றில் கலந்து, அமேசானின் மேல் கிளையாகின்றது. பின்னர்த் தொடர்ந்து பிரேசில் நாட்டின் குறுக்கே கிழக்காகப் பாய்ந்து, இறுதியில் அட்லாண்டிக்குப் பெருங்கடலில் மரசோ தீவுக்கு வடபால் கலக்கின்றது. இந்த ஆறு 200–க்கு மேற்பட்ட துணையாறுகளைக் கொண்டது. வெள்ளைக்காரர்கள் வருவதற்கு முன்னர், அமேசான் ஆற்று வடிகாற் பகுதியில், அமெரிக்க இந்தியர்கள் வாழ்ந்தனர். வின்செண்ட்டு பின்சோன் என்ற இசுபானிய புதுநில ஆய்வாளர்தான், அமேசானை முதல் முதலாகக் கண்டவர். கி.பி. 1500–இல் அவர் கப்பல் மூலம் இன்று பிரேசில் என்று சொல்லப்படும் கடற்கரையை வந்தடைந்தார். பிரான்சிசுகோ டி ஒரெலானா என்ற மற்றொரு இசுபானியர் கி.பி. 1541–இல் இவ்வாற்றலைக் கண்டுபிடிக்கச்சென்ற குழுவின்




அமேசான் ஆறு

தலைவராவார். அவருடைய பயணம் பெரு நாட்டில் நேபோ ஆற்றில் தொடங்கி, அட்லாண்டிக்குப் பெருங் கடலில் முடிவுற்றது.

அமைச்சரவை :(மாநிலம்) மத்திய அரசினைப் போலவே மாநிலங்களிலும் அமைச்சரவை மூலம் ஆட்சி நடைபெறுகிறது.

மாநில ஆளுநர், தம் கடமைகளைச் செய்வதற் கும் அறிவுரை வழங்குவதற்கும் துணையாக இருக்க ஓர் அமைச்சரவையை வைத்துக் கொள்வார். இவ்வவை யின் முதல்வராக முதலமைச்சர் இருப்பார். ஆளுநருக் கென அரசியல் சட்டம் வழங்கியுள்ள தன் விருப்புரி மையை அவர் பயன்படுத்திச் செயற்படும்போது அமைச்சரவை (Council of Ministers) அறிவுரையும் உதவியும் வழங்காது.

மாநில முதலமைச்சரை ஆளுநர் நியமனம் செய் கிறார். அம் முதலமைச்சரின் பரிந்துரையின்பேரில் மற்ற அமைச்சர்களை அமர்த்துகிறார். ஆளுநரின் விருப்பத்தின்பேரில் அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ஏற்று நடத்துகிறார்கள். இவ்வாறு பதவி அமர்த்தப் படுவது ஆளுநரின் மூலமாக இருப்பினும், மாநில அமைச்சர்களின்மேல் கையூட்டுக் குற்றச்சாட்டுகள் இருக்கும் போது அக்குற்றச் சாட்டுகளை விசாரணை செய்ய விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் (Commissions of Enquiries Act) மத்திய அரசு, ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்தி விசாரணை செய் கிறது. மாநில முதலமைச்சர்கள் மாநிலச் சட்ட சபைக்குப் பொறுப்புள்ளவர்களாவார்கள். மாநிலச் சட்டசபை, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றை இயற்றி அமைச்சரவையை வெளியேற்றலாம்.

அமைச்சராகவும் முதலமைச்சராகவும் அமர்த்தப் படுபவர் சட்டசபையின் உறுப்பினராக இருக்கவேண்டு மென்பது இங்கிலாந்து நாட்டின் மரபு. இந்தியாவி லும் அவ்வாறே கடைப்பிடிக்கப்படுகிறது. ஆனால், அமைச்சரான ஆறு மாதக் காலத்திற்குள், சட்ட சபையின் இரண்டு சபைகளில் ஏதேனும் ஒன்றில் உறுப்பினராக ஆனாலும் போதுமானது. இல்லை யெனில், ஆறுமாதங்கள் முடிந்தவுடன் அவர் அமைச் சர் பதவியை இழந்துவிடுவார். சில சமயங்களில் மேல் சபை உறுப்பினர்களை முதலமைச்சராக நியமனம் செய்துவிடுகின்றனர். காலஞ்சென்ற திரு. இராச கோபாலாச்சாரி அவர்கள் தமிழ்நாடு முதலமைச்ச ராக நியமனம் செய்யப்பட்டார். திரு. மொரார்சி தேசாய் 1952–ஆம் ஆண்டு முதலமைச்சராக நியமனம் செய்யப்பட்டார். திரு சி.பி. குப்தா 1960–ஆம் ஆண்டு உத்தரப் பிரதேச முதலமைச்சராக நியமிக்கப்பட் டார். திரு. மண்டல், பீகார் முதலமைச்சராக 1968-ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்டார். ஆனால் முதலமைச்சர்கள் சட்டசபையினின்று தேர்ந்தெடுக்கப் படுபவராக (Chosen from Legislative Assembly) இருப்பதே மிகவும் பொருத்தமானது என்றும், அமைச் சரான பின்னர், சட்டசபையின் உறுப்பினராகிவிடு வதே மக்களாட்சியில் மிகவும் சிறப்பானதாகும் என் றும் கருதப்பட்டது.

ஆளுநரின் விருப்புரிமை என்பது மிகவும் விரி வானது. முதலமைச்சரின் கருத்துரையின்பேரில் அமைச்சர்களை அவர் பதவி நீக்கம் செய்யலாம். முதலமைச்சர் ஆளுநருக்கு என்ன கருத்துரை அளித் தார் என்பதை எந்த நீதிமன்றமும் விசாரணை செய் யக் கூடாது. மாநிலச் செயலாட்சி நடவடிக்கை

களும் மாநில ஆளுநரின் பெயரில் நடைபெறுகிறது. இவ்விதி அனைத்து நிருவாகச் செயல்களுக்கும் பொருந்தாது.

மாநிலத்தின் தலைவர் என்ற முறையில், ஆளுநர் செயலாற்றுவதற்குத் தேவையான செய்திகளை அவருக்கு முதல் அமைச்சர் அறிவிக்க வேண்டும். நிருவாகம் தொடர்பாகவும் சட்டம் இயற்றுவது தொடர்பாகவும் அமைச்சரவை வகுக்கும் முடிவுகளை ஆளுநருக்குத் தெரியப்படுத்த வேண்டும். இவை தொடர்பாக ஆளுநர் கேட்கும் பிற தகவல்களையும் முதலமைச்சர் தெரிக்க வேண்டும். ஆய்வு செய்யும் படி ஆளுநர் குறிப்பிடுகிற எந்த ஒரு செய்தியையும் அமைச்சரவையில் முதலமைச்சர், முன் வைக்க வேண்டும்.

ஆளுநர், அரசாங்கத்தின் பணிகளைச் செம்மையாக நிறைவேற்றுவதற்குரிய அலுவல் விதிகளை ஏற்படுத்திக் கொள்ள இயலும். அரசியல் சட்டத்தின் கீழ்த் தம் விருப்புரிமைக்குட்பட்ட அரசின் அலுவல்களைத் தவிரப் பிற பணிகளை அமைச்சர்களுக்குப் பகிர்ந்தளிப்பார். தம் விருப்புரிமைக்குட்பட்ட அரசின் பணிகளை அமைச்சர்களுக்கு அளிக்க வேண்டியது இல்லையென அரசியல் சட்டம் தெளிவாகக் கூறுகிறது. மேலும், அரசியல் அமைப்புச் சட்டம் மாநில முதலமைச்சருக்குச் சில சிறப்புக் கடமைகளையும் வரையறுத்துக் கூறுகிறது.

மாநில அரசின் செயலாட்சித் தொடர்பான அமைச்சரவையின் அனைத்து முடிவுகளையும், என்னென்ன சட்டங்களை அமைச்சரவை இயற்றப் போகிறது என்ற திட்டங்களையும் ஆளுநருக்கு அவ்வப்பொழுது அறிவிக்க வேண்டும் (பிரிவு 167). மேற்கூறிய மாநிலச் செயலாட்சித் தொடர்பு பற்றியும், அமைச்சரவை மேற்கொள்ளப்போகும் விதிமுறைகள் பற்றியும், ஆளுநர் வினவும் செய்திகள், விவரங்கள் ஆகியவை பற்றியும் அவ்வப்பொழுது ஆளுநருக்கு அமைச்சரவை தெரிவிக்கும். அமைச்சர் ஒருவரால் முடிவு எடுக்கப்பட்டு, ஆனால் அமைச்சரவையின் முடிவுக்குக் கொண்டு வரப்படாத செயல்களை ஆளுநர் வினவினால் அவற்றை அவருக்கு அனுப்பிவைத்தல் அமைச்சரவையின் பணிகளுள் ஒன்றாகும்.

**அமைச்சரவைக் குழு**: (மையம்) மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கத்திலும் நடைபெற்று வரும் அரசியல் முறை, அமைச்சரவைக் குழு அரசியல் முறை எனப்படும்.

அமைச்சரவைக் குழு (Cabinet) அரசியல் முறையென்றாலும் பொறுப்புள்ள சட்டசபை அரசியல் முறையென்றாலும் ஒன்றே. இதற்கு வேறுபட்டது குடியரசுத் தலைவர் அரசியல் முறை. இவ்விரு அரசியல் முறைகளுக்கும் வேறுபாடு உண்டு.

குடியரசுத் தலைவர் அரசியல் முறையில், நாட்டின் நிருவாகத் தலைவர் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர். அவருக்குக் குடியரசுத் தலைவர் என்பது பெயர். குறிப்பிட்ட காலத்திடையில் அவரைப் பெரும்பாலும் நீக்க இயலாது. அவர் நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களை உடையவர். அவ்வதிகாரங்களைச் செலுத்துவதில் அவர் பிற அலுவலர் எவருக்கும் பொறுப்பாளரல்லர். அவருக்குத் துணை செய்ய அமைச்சர்கள் உண்டு. ஆனால், அவர்கள் எத்துணைத் திறமையும் சிறப்பு முடையவர்களாயினும், அவருக்குட்பட்ட அலுவர்களே. அவர்களுக்குத் தனிமையாக யாதொரு அதிகாரமும் இல்லை. அவர்கள் சட்டசபையின் உறுப்பினர்கள் அல்லர். அவர்களுக்குச் சட்டமன்ற அனுபவமும் தேவையில்லை.

அமைச்சரவைக் குழு அரசியல் முறையில், நாட்டின் நிருவாகத் தலைவர், மக்கள் சட்டசபையில் பெரும்பான்மையோர் கட்சித் தலைவராகவோ அச் சட்ட சபையில் பெரும்பான்மையோருடைய துணை பெற்றவராகவோ இருக்கும் காரணத்தாலேயே அப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இந்தியஅரசியல் அமைப்புச் சட்டத்தின் 74, 75-ஆவது பிரிவுகள், அமைச்சரவைக் குழுவின் அமைப்பு, தன்மை, தகுதி போன்றவற்றைக் கூறுகின்றன. இச் சட்டத்தின்படி இந்தியாவின் அரசு அமைப்பில், அமைச்சரவைக் குழு, தலைமை அமைச்சரை முதன்மையாகக் கொண்டு விளங்கும். இக் குழுவின் பணி, இந்தியக் குடியரசுத் தலைவருக்கு ஆலோசனை கூற உதவுவதாகும். குடியரசுத் தலைவருக்கு இக் குழு என்ன ஆலோசனை கூறியது? அதன் தன்மை என்ன? என்பதை எந்த நீதிமன்றமும் விசாரணை செய்யத் தகுதியற்றது ஆகும்.

இவ்வமைச்சரவைக் குழுவின் பணியை அரசியல் சட்டம் பொதுவாகவும் விளக்கமில்லாத வகையிலும் கூறி, மற்றவற்றை மரபு வழிகளாலும், அரசியல் சட்டப் பழக்கவழக்க முறையாலும் கடைப்பிடிக்கும்படி அறிவுறுத்தியுள்ளது. இங்கிலாந்து நாட்டு அரசு முறையைப் பின்பற்றிச் செயற்படுவதால், இங்கிலாந்து நாட்டு மரபு வழிகளையும் பழக்க வழக்கங்களையும் இந்திய அமைச்சரவைக் குழு பின்பற்றிச் செயற்படுகிறது.

தலைமை அமைச்சர் குடியரசுத் தலைவரால் அமர்த்தப்படுகிறார். பொதுவாக உறுப்பினர் பெரும்

பாலோரைக் கொண்ட கட்சித் தலைவரையே தலைமையமைச்சராக அமர்த்துவது வழக்கம். அவரது ஆலோசனையின்பேரில் மற்ற அமைச்சர்கள் அமர்த்தப்படுகின்றனர். எத்துணை அமைச்சர்களை அமர்த்தலாம் என்பது அரசியல் சட்டத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. பொதுவாக, இவ்வாறு அமர்த்தப்படும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினராக இருக்க வேண்டும். உறுப்பினர் அல்லாத ஒருவரையும் அமைச்சராக அமர்த்தல் செய்யலாம்; ஆனால் அவர் அமர்த்தப்பட்ட ஆறு மாதத்திற்குள் நாடாளுமன்ற உறுப்பினராதல் வேண்டும். இல்லையெனில், அமைச்சராக அமர்த்தப்பட்டபோதிலும் ஆறுமாதம் முடிந்தவுடன், அமைச்சர் பதவியை இழந்துவிடுவார்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், குடியரசுத் தலைவருக்குக் கட்டுப்பாடற்ற முறையில் தம் விருப்பம் போல் தலைமையமைச்சரை அமர்த்தும் பணி வழங்கப்பட்டிருந்த போதிலும், குடியரசுத் தலைவர் தாம் விரும்பும் ஒருவரைத் தலைமையமைச்சராக அமர்த்த மாட்டார். குடியரசுத் தலைவரின் விருப்பு வெறுப்புகளை ஒரு சில மரபுகளும் வழக்காறுகளும் நெறிப்படுத்துகின்றன. நாடாளுமன்ற மக்களாட்சி அமைப்பு நீடித்து நிற்கவும் சீராகப் பணியாற்றவும் அமைச்சரவையின் தலைமையேற்றிருக்கும் தலைமை அமைச்சர் (Prime Minister) நாடாளுமன்றத்தின் நம்பிக்கைக்கும் நல்லெண்ணத்திற்கும் உட்பட்டிருக்க வேண்டும். மேலும், அமைச்சரவைக்குழு, முழுவதும் மொத்தமாக நாடாளுமன்றத்திற்கு அரசியல் அடிப்படையிலும் நிருவாக அடிப்படையிலும் பொறுப்புள்ளதாக நடந்து கொள்ள வேண்டும். மக்கள் சபைக்கு மிகப் பொறுப்புள்ள அமைச்சரவைக் குழுவாக இருக்க வேண்டும். நாடாளுமன்றத்தின் ஆதரவு பெரும்பான்மையான அளவில் இருந்தாலொழிய நிலையான அமைச்சரவையை அமைத்துச் சிறந்த பணிகளைச் செய்ய இயலாது. அரசின் சிறந்த கொள்கைகளை நிறைவேற்ற இயலாமல் போய்விடும். சுருங்கக் கூறினால், மக்கள் சபையின் ஆதரவைப் பெரும்பான்மையாகப் பெற்று, அதன் நம்பிக்கைக்குரிய ஒருவரை மட்டுமே தலைமை அமைச்சராக அமர்த்தலாம். அவ்வாறாயின் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகள் பெற்றுப் பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்ற கட்சியின் தலைவரையே தலைமை அமைச்சராக அமர்த்துவதுதான் முறை. குடியரசுத் தலைவரும் அவ்வாறே செய்வார்.

இக்குழு, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவாகும். இக்குழு மக்களின் எண்ணங்களை உண்மையாக வெளிப்படுத்துகிறது. இச்சபையே, அரசின் நிதி நிருவாகத்தையும் பொது நிருவாகத்தையும் முறைப்படுத்திக் கட்டுப்படுத்துகிறது. அரசின் இன்றியமையாத முடிவுகளைத் தீர்மானிக்கும் அவையும் இது தான். அரசினைச் சிறந்த முறையில் நெறிப்படுத்திச் செல்லும் தலைமை அமைச்சர், பொதுமக்கள் சபையின் ஆதரவும் அரவணைப்பும் இல்லாமல் செயற்பட முடியாது.

தலைமை அமைச்சரைப் பணி அமர்த்துவது தொடர்பாகக் குடியரசுத் தலைவருக்கு மிகக் குறைந்த விருப்புரிமைதான் உண்டு. குறிப்பிட்ட கட்சி தகுந்த பெரும்பான்மை பெற்றிருப்பின் அக்கட்சித் தலைவரை மட்டுமே குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சராக அமர்த்திக் கொள்ள முடியும். அத்தகு பெரும்பான்மையைப் பெற்றிருக்கும் அக்கட்சித் தலைவரை அந்தக் குடியரசுத் தலைவர் தலைமை அமைச்சராக அமர்த்தாமல் விடமுடியாது. தகுந்த பெரும்பான்மையை எந்தக் கட்சியும் பெறவில்லையானால், தம் விருப்புரிமையைக் குடியரசுத் தலைவர் பயன்படுத்தித் தலைமை அமைச்சரை அமர்த்தலாம். இது தொடர்பாக, எந்தக் கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது என்பதைக் கண்டு, அது நிலையான அமைச்சரவையை அமைக்க இயலுமா என்று கவனிக்க வேண்டும். இங்கும்கூட இரு கட்சிகள் கூடிப் பெரும்பான்மை ஏற்படுத்திக்கொண்டு அமைச்சரவை அமைக்க ஆயத்தமானால் குடியரசுத் தலைவருக்கு வேறு வழியில்லை. அக் கட்சிகளில் எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒருவரை அழைத்துத் தலைமை அமைச்சராக அமர்த்துவது தான் குடியரசுத் தலைவரின் பணியாகும்.

அமைச்சரவையின் மற்ற அமைச்சர்கள், தலைமை அமைச்சரின் பரிந்துரைப்படி நியமனம் செய்யப்படுகிறார்கள். தம் அமைச்சர்களைத் தேர்வு செய்வதில் தலைமை அமைச்சரின் விருப்பே முடிவானது; இது பற்றி அரசியல் அமைப்புச் சட்டம் குறுக்கே நிற்பதில்லை. பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி அமைச்சர்கள் ஊதியம் பெறுகிறார்கள்.

மக்கள் சபையின் பெரும்பான்மை ஆதரவு நீடித்து இருக்கும் வரை அமைச்சரவைக் குழு நிலைத்து நிற்கும். இப்பெரும்பான்மை ஆதரவையும் நம்பிக்கையையும் அமைச்சரவைக் குழு இழக்குமாயின், அமைச்சரவைக் குழு பதவி விலகல் வேண்டும். பெரும்பான்மை இழந்த அமைச்சரவைக் குழு தானே பதவி விலகவில்லையெனில் பாராளுமன்றம் கலைப்புக்கு முயற்சி செய்யும். இவ்விரண்டும் நடைபெறாமையினால் பதவியில் தொடர்ந்து இருப்பார்களானால் குடியரசுத் தலைவர் அமைச்சரவையைப் பதவி நீக்கம் செய்து வெளியேற்றுவார். பின்னர்ப் பெரும்பான்மைத் துணை பெற்ற அமைச்சரவையைப் பதவியில் இருத்துவார். அது அவரது அரசியல் சட்டக் கடமையாகும்.

தலைமை அமைச்சரின் பரிந்துரையின்பேரில் அமர்த்தப்படும் பிற அமைச்சர்கள் ஒவ்வொருவரும் தமக்கு அளிக்கப்பட்ட குறிப்பிட்ட துறைகளையே நிருவகிப்பர். ஆயினும் அனைத்து அமைச்சர்களும் கூட்டாக அனைத்துப் பணிகளையும் செய்வதாகக் கருதப்படுவர். சில வேளைகளில், அமைச்சரவையில் எந்தத் துறையும் (இலாக்கா) அளிக்கப்படாத அமைச்சரும் இருக்கக்கூடும்.

அமைச்சரவைக் குழு மரபுப்படி செயற்படுகிறது. ஆங்கிலேய நாட்டு அமைச்சரவையினைப் போன்றே இக்குழுவும் செயற்படுகிறது. அமைச்சரவைக் குழுவின் பணிகளாவன:

1. பாராளுமன்றத்தின்முன் வைக்கப்படும் கொள்கைகள், திட்டங்கள் பற்றி முடிவெடுத்தல்.

2. நாடாளுமன்றம் நெறிப்படுத்தும் வகையில் நாட்டின் முதன்மைச் செயலாட்சிக் குழு என்ற முறையில், நாடு முழுவதும் மேலாண்மை செய்தல்.

3. நாட்டின் நலன் கருதிப் பல்வேறு துறையைச் சார்ந்தவர்களுடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்.

மேற்கூறிய அமைச்சரவைக் குழுவின் பணிகளை நாடாளுமன்றம் ஆதரிக்கும் வரையில்தான், இக்குழு, அமைச்சர் பதவியை வகிக்கும். ஏதேனும் முக்கியமான பொருள்பற்றி நாடாளுமன்றத்தில் இக்குழு தோல்வியுற்றால் அல்லது அவர்கள் மேல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகல் செய்ய வேண்டும். ஆனால் எந்தத் தோல்வி, நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு ஒப்பானதென்று உறுதிசெய்வது அமைச்சரவையின் உரிமை. மேலும், நாடாளுமன்றம் தம் விருப்பப்படி அமைச்சர்களின் துறைகளை மாற்றலாம். அவர்களைப் பதவியை விட்டும் விலக்கலாம். துறைமாற்றத்தால் தம் பெருமைக்கு இழுக்கு ஏற்பட்டுவிட்டதென்று ஒரு அமைச்சர் தம் பதவியை விட்டு விலகலாம்.

அமைச்சரவைக் குழுவின் செயல்முறைகள் அனைத்தும் மறைபொருளானவையே ஆகும். நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பாகவுள்ள அரசே மக்களாட்சி முறைக்கு ஏற்றதாக இருக்கிறது. இந்த அரசுதான் நிருவாகத் துறைக்கும் சட்டத் துறைக்கும் வரிவசூல் துறைக்கும் முரண்கள் ஏற்படாதவாறு நடைபெறுகிறது. மக்களுக்கும் தம்மைத்தாமே ஆட்சி செய்து கொள்ளும் மனநிறைவினை அளிக்கிறது.

**அமைப்பாவணம்**: ஒரு நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கும் நோக்கம், நிறுவனத்தின் பெயர், பதிவலுவலகம் போன்ற செய்திகள் அடங்கிய ஆவணமே அமைப்பாவணம் (Memorandum of Association) எனப்படும். இதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை விடுத்து, வேறு எந்த நோக்கத்திற்கும் நிறுவனம் தொழிலை நடத்தக்கூடாது. எனவே, இதனை நிறுவனத்தின் பட்டயம் என்றும் கூறுவர்.

ஒரு நிறுவனத்தை அமைப்பதற்குப் பதிவாளரிடம் பல ஆவணங்கள் கொடுக்கப்பட வேண்டும். அவற்றுள் அமைப்பாவணம் ஒன்றாகும். நிறுவனச் சட்டத்தில் அமைப்பாவணத்தைக் குறித்துத் தெளிவான இலக்கணம் கூறப்படவில்லை. அதனைப் பற்றி நிறுவனச் சட்டத்தின் 2 (28) பிரிவில், கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அமைப்பாவணம் என்பது மூலமாக வரையப்பட்டதும் (as originally framed) அவ்வப்போது செய்யப்பட்டுள்ள மாறுதல்களுடன் விளங்குவதும் ஆகிய அமைப்பாகும். இந்த இலக்கணம் அமைப்பாவணத்தின் தன்மையையும் பயன் திறனையும் தெளிவுறுத்தவில்லை. எனவே, நீதிமன்றங்கள் வழக்குகளில் வழங்கியுள்ள தீர்ப்புகளைக் கொண்டுதான் அதன் தன்மையையும் கடமையையும் உணர முடிகிறது. அதன்படி அமைப்பாவணம் ஒரு நிறுவனத்தின் அமைப்பைத் (Constitution) தெரிவிக்கிறது. இது நிறுவனத்தின் உயிர்நாடியும் அடிப்படையுமான ஆவணமுமாகும். இது நிறுவனம் வெளி உலகோடு கொண்டுள்ள தொடர்பையும் செயற்படும் முறையினையும் தெளிவாக விளக்குகிறது. இதன் நோக்கம், பங்குதாரர்களும் கடன்காரர்களும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அனைவரும் நிறுவனம் எவ்வகையான செயல்களில் ஈடுபடலாம் என்பதைத் தெளிவாக விளக்குதலேயாகும். மேலும், இது ஒரு பொது ஆவணமாகையால் (Public Document) இதில் குறிப்பிடப்பட்ட யாவும் பொதுமக்களுக்கு ஆக்கத் தன்மை அமைந்த அறிக்கையாகும். சில காலம் வரை இது சிறிதும் மாற்ற முடியாத பட்டயமாகக் (Unalterable Charter) கருதப்பட்டு வந்தது. இதனால், பல இன்னல்களும் இடையூறுகளும் ஏற்படவே, இப்பொழுது நிறுவனச் சட்டம், குறிப்பிட்டுள்ள அளவு மாறுதலைச் செய்யலாம் என்ற நிலையை அடைந்துள்ளது. இப்பொழுதும் நிறுவனச் சட்டத்தின் 16-ஆம் பிரிவு குறிப்பிட்ட அளவைத் தவிர அமைப்பாவணத்தை மாறுதல் செய்யக்கூடாது என்று கூறுவது, இது ஒரு மாற்ற முடியாத ஆவணமென்பதை வலியுறுத்தவேயாம்.

அமைப்பாவணம் ஆறு சிறப்புப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை வருமாறு:

1. பெயர்ப் பிரிவு: நிறுவனத்தின் பெயர் இன்னதென்று இதில் குறிப்பிடவேண்டும். வரையறுத்த பொது நிறுவனமாக இருந்தால் 'வரையறுக்கப்பட்டது' (Limited) என்றும், தனி நிறுவனமாக இருந்தால் 'தனி வரையறுக்கப்பட்டது' (Private Limited)

என்றும், நிறுவனத்தின் பெயருக்குப் பின்னால் குறிப்பிட வேண்டும். இந்நிறுவனத்தின் பெயர், இதற்கு முன்னரே உள்ள ஒரு நிறுவனத்தின் பெயராகவோ அரசுத் தொடர்புள்ளதாகவோ இருக்கக் கூடாது. அரசினரின் சின்னம், பெயர் தவறாகப் பயன்படுத்தும் தடைச் சட்டத்தின் (1950) பிரிவு 20-இன்படி ஏற்கக் கூடாத பெயராக இருத்தல் கூடாது. நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் வட்டார மொழியில் தெளிவாக எழுதப்பட்ட பெயர்ப்பலகை தொங்கவிடப்பட வேண்டும். நிறுவனத்தின் எல்லாக் கடிதங்களிலும் மாற்றுமுறை ஆவணங்களிலும் சீட்டுகளிலும் நிறுவனத்தின் பெயரும் இடமும் இடப்பட்டிருக்க வேண்டும். நிறுவனத்தின் முத்திரையிலும் இவை குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்.

2. இடப்பிரிவு: எந்த மாநிலத்தில் நிறுவனத்தின் பதிவு அலுவலகம் அமைந்துள்ளது என்பது இப்பிரிவில் குறிப்பிடப்பட வேண்டும். நிறுவனத்தின் நடவடிக்கை எல்லைக்குள் அமைந்துள்ள நீதிமன்றத்தை முடிவு செய்திட இது உதவும். எங்கு நிறுவனம் அமைந்துள்ளது என்பதை நிறுவனம் தோன்றிய 30 நாள்களுக்குள் பதிவாளரிடம் அறிவிக்க வேண்டும்.

3. நோக்கப் பிரிவு: நிறுவனம் மேற்கொள்ளக் கூடிய தொழில்களைக் குறிப்பிடுவது நோக்கப் பிரிவு (Object-Clause) ஆகும். இதில் காணும் நோக்கங்களைத் தவிர வேறு நோக்கங்களுக்கு நிறுவனம் தொழிற்படக்கூடாது. எனவே, இப்பிரிவை மிகவும் அக்கறையுடன் அமைக்க வேண்டும். இந்நோக்கங்கள் மிகவும் முதன்மையான நோக்கங்கள் என்றும், துணையான நோக்கங்கள் என்றும் இரு வகைப்படும். வணிக நோக்கமற்ற நிறுவனமாயின் அதன் நோக்கங்கள் எந்தெந்த மாநிலங்களுக்குப் பரவக் கூடியன என்றும் குறிப்பிட வேண்டும். இப்பிரிவில் குறிப்பிடாத நோக்கங்களை நிறுவனம் நிறைவேற்றினால் அவை அதிகார வரம்பிழந்த (Ultra-vires) நோக்கங்களாக மாறிவிடும்.

4. முதல் பிரிவு: இப்பிரிவில் நிறுவனத்தின் மொத்த முதல் எவ்வளவு என்பதனை அறியலாம். இம்முதலை 'அனுமதித்த முதல்' (Authorised Capital) அல்லது 'பதிவு செய்த முதல்' (Registered Capital) அல்லது பெயரளவு முதல்' (Nominal Capital) என்று கூறுவார்கள். இங்கு நிறுவனம் வெளியிடும் பங்கு வகைகள், பங்குகளின் மதிப்புப் போன்றவை வெளியிடப்படும். ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்த அளவு ஒரு பங்காவது எடுத்திருக்கவேண்டும். அவர்களின் பெயருக்கு எதிரில் எத்தனை பங்குகள் எடுத்துள்ளார்கள் என்று குறிப்பிட வேண்டும். முதல் (Capital) என்பது நிறுவனத்தின் கடன் அன்று; பங்குதாரர்களின் கடனுமன்று. இவற்றை விளக்குவது முதல் பிரிவு (Capital Clause) ஆகும்.

5. பொறுப்புப் பிரிவு: இப்பிரிவில் பங்குதாரர்களின் பொறுப்பு (Liability) வரையறுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்று குறிப்பிட வேண்டும். வரையறுக்கப்பட்ட பொறுப்பு, பங்குகளின் எண்ணிக்கையை அல்லது தொகையை ஒட்டித்தான் அமையும். மேலும், இயக்குநர்கள், நிருவாக முகவர், மேலாளர் ஆகிய இவர்களின் பொறுப்பு வரையறுக்கப்படாமலிருக்க வேண்டுமானால், அவர்கள் பதவி ஏற்பதற்கு முன் அவர்களிடம் தெரிவிக்க வேண்டும். எனவே, இப்பிரிவினால் பங்குதாரர்கள் ஒரு முறை ஒரு பங்கின் முழு அளவைச் செலுத்திவிட்டால் பின்னர் அவர் பணம் செலுத்த வேண்டிய தேவையில்லை.

6. சங்கப் பிரிவு: இப்பகுதியில், கையெழுத்திட்ட ஆதரவாளர்கள் அனைவரும் சேர்ந்து ஒரு நிறுவனமாகப் பதிவாக்கப்படுவதற்குரிய இசைவினைத் தெரிவித்து, ஒவ்வொருவரும் தம் கையெழுத்துக்கு எதிராகத் தாம் ஏற்றுக் கொள்ளும் பங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும். இங்குக் குறைந்த அளவு எழுவர் கையெழுத்திட வேண்டும். இவ்வாறு அமைப்பாவணத்தில் கையெழுத்திட்டவர்களே, நிறுவனத்திற்கு இயக்குநர்கள் அமர்த்தப்படும் வரையில் இயக்குநர்களாகத் திகழ்கிறார்கள். தனி நிறுவனத்தின் அமைப்பு முறையேட்டில் இருவரும், பொது நிறுவன முறையேட்டில் எழுவரும் கட்டாயமாகக் கையெழுத்திட வேண்டும். ஒவ்வோர் ஆதரவாளரும் (Subscriber) குறைந்தது ஒரு பங்கு எடுத்துக் கொள்ள வேண்டும்.

**அமைப்பாவணத்தின் திருத்தம்:** மேற்கண்ட பிரிவுகளைக் கொண்டுள்ள அமைப்பாவணம் மிகவும் இன்றியமையாதது. இதனை எளிதில் திருத்த முடியாது. இருந்தாலும், சில வேளைகளில் அமைப்பாவணத்தின் விதிகளை உறுப்பினர்களின் இசைவுடன் திருத்தலாம்.

ஒரு நிறுவனம், தன்னுடைய பெயரை ஒரு சிறப்புத் தீர்மானம் போட்டும் மத்திய அரசின் முன் அனுமதி பெற்றும் மாற்றிவிடலாம். ஒரு நிறுவனத்தின் பெயர் வேறு ஒரு நிறுவனத்தின் பெயர் போலத்தோன்றினாலும், தானாகவோ, மத்திய அரசின் ஆணையுடனோ மாற்றிடலாம். இவ்விரு நிலைகளிலும் ஒரு சாதாரணத் தீர்மானமும் மத்திய அரசின் அனுமதியும் பெற வேண்டும். ஆனால், சில வேளைகளில் நிறுவனம் தன் பெயருக்குப் பின்னால் 'தனி' (Private) என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளவும் அல்லது நீக்கி விடவும் மத்தியஅரசின்அனுமதி தேவையில்லை.

நிறுவனத்தின் அலுவலகத்தை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு மாற்றிட ஒரு சிறப்புத் தீர்மானம் தேவை. மேலும் இதனை 30 நாள்களுக்குள் பதிவாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதனை உறுதி செய்யும் பொருட்டுப் பின்னர் நிறுவனம் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். நீதிமன்றத்தின் உறுதிச் சான்றையும் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும். அம்மாநிலத்திற்குள்ளாகவே மாற்றம் செய்தால், ஒரு சிறப்புத் தீர்மானம் மட்டும் போதும். ஒரு நகரத்திற்குள்ளாகவே மாற்ற வேண்டியிருந்தால், இயக்குநர் குழுவின் தீர்மானமும் பொது மக்களுக்கு அறிவிக்கப்பட வேண்டும். இச்செய்தி பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

நிறுவனத்தின் நோக்கங்களை ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் மட்டுமே மாறுதல் செய்யலாம். அவையாவன: 1. வாணிகத்தை மிகச் சிக்கனமாகவும், திறமையாகவும் செய்வது. 2. புதிய வளர்ச்சி முறைகளில் சிறப்பான நோக்கத்தை நிறைவேற்றுவது. 3. வாணிகம் பரவியுள்ள இடத்தை மேலும் விரிவு செய்வது அல்லது அதனை மாற்றுவது. 4. எளிதாகவும் ஆதாயமுள்ளதாகவும் நடத்துவதற்குரிய எந்த வாணிகத்தையும் மேற்கொள்வது. 5. அமைப்பாவணத்தில் குறிப்பிடப் பெற்றுள்ள நோக்கங்களில் எதனையும் கட்டுப்படுத்துவது அல்லது விட்டுவிடுவது. 6. மேற்கண்ட பணிகளில் ஒரு பகுதியையோ, முழுவதையுமோ விற்பது அல்லது கழித்துவிடுவது. 7. மற்றொரு நிறுவனத்துடன் இணைவது.

நோக்கங்கள் மூன்று விதமான பயன்களைத் தருகின்றன. முதலாவதாக, நிறுவனம் பங்குத் தொகையைக் குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டுமே பயன்படுத்தும் என்பதைத் தெளிவாக்குகிறது. இரண்டாவதாக, நிறுவனம், குறிப்பிட்ட தொழில்களைத் தவிர, நிலையற்ற தொழில்களில் ஈடுபட்டு முதலை இழக்காத வகையில் கடன்காரர்களுக்கும் கடனீட்டுப் பத்திரதாரர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது. மூன்றாவதாக, நிறுவனம், குறிப்பிட்ட தொழில்களைத் தவிர வேறு தொழில்கள் செய்வதைத் தடை செய்கிறது.

நிறுவனத்தின் இயக்குநர்களின் அல்லது மேலாளர்களின் பொறுப்பை வரையறுக்கப்படாததாக மாற்றச் செயல்முறை விதிகளில் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். தொடர்புடையவர்களின் ஒப்புதலும் சிறப்புத் தீர்மானமும் இவர்களின் பொறுப்பை மாற்றத் தேவை.

முதல் பிரிவு திருத்தம்: ஒரு நிறுவனம் தான் அனுமதித்த முதலை (Authorised Capital) மிகுதிப்படுத்தவும், முதலின் அமைப்பைத் (Capital Structure) திருத்தி அமைக்கவும், முதலைக் குறைக்கவும் இப்பிரிவைத் திருத்தலாம். முதல் இரண்டினையும் செயல்முறை விதிகளில்குறிப்பிடப் பட்டுள்ள விதிகளின்படி சாதாரண அல்லது சிறப்புத் தீர்மானத்துடன் மாற்றலாம். இவ்வாறு மாற்றப்பட்ட படியொன்றைப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும். முதல் குறைப்பிற்கு செயல்முறை விதிகள் அனுமதிக்க வேண்டும். நீதிமன்ற உறுதிச் சான்றை அல்லது அதன் படியொன்றைச் சான்றீட்டுப் பதிவாளரிடம் கொடுக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையற்ற முதல் மாற்றம்: கீழ்க்காணும் வழிகளில் பங்குகளால் வரையறுத்த நிறுவனம் தனது முதலை மாற்றிக் கொள்ளலாம். ஆனால், அதன் நடைமுறை விதிகள் அவ்வாறு செய்ய அனுமதித்திருக்க வேண்டும். நடைமுறை விதிகள் அனுமதிக்காவிட்டால், அவை அனுமதிக்கும்படி அவற்றைத் திருத்திவிட்டுப் பின்பு தேவையான முதல் மாற்றத்தைச் செய்து கொள்ளலாம்.

1. தேவையான தொகைக்குப் புதிய பங்குகளை வெளியிட்டுத் தனது பங்கு முதலை மிகுதிப்படுத்திக் கொள்ளலாம். இதனால், அந்நிறுவனத்தின் ஒப்புக் கொண்ட முதலின் அளவு உயர்கிறது. பங்குதாரர்களைக் கொண்ட பொதுக் கூட்டத்தில் சாதாரணத் தீர்மானம் இயற்றி, இம் மாற்றத்தைச் செய்து கொள்ளலாம். முதலை மிகுதிப்படுத்தித் தீர்மானம் இயற்றிய 30 நாள்களுக்குள் அது பற்றிப் பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும்.

2. பங்கு முதல் முழுவதையுமோ அதன் ஒரு பகுதியையோ தொகுத்து மிகுந்த முகமதிப்புடைய (Face-Value) பங்குகளாக மாற்றலாம். பங்குதாரர்களைக் கொண்ட பொதுக் கூட்டத்தில் சாதாரணத் தீர்மானம் இயற்றி இம் மாற்றத்தைச் செய்து கொள்ளலாம். இது பற்றிய அறிக்கை 30 நாள்களுக்குள் பதிவாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

3. முற்றும் செலுத்திய பங்குகள் எவற்றையும் பங்குக் கோவையாகவும், அப்பங்குக் கோவையைத் திரும்பவும் எத்தகைய முகமதிப்பும் கொண்ட அல்லது செலுத்திய பங்குகளாகவும் மாற்றலாம். இதற்கும் நிறுவனத்தின் சாதாரணத் தீர்மானமே போதுமானது. இம்மாற்றம் பற்றிய அறிக்கையும் பதிவாளருக்கு அனுப்பப்படவேண்டும்.

4. அந்நிறுவனம் தன் பங்குகள் எவற்றையேனும் சிறு சிறு பங்குகளாக மேலும் பகுக்கலாம். ஆனால், இச்சிறு பங்கு ஒவ்வொன்றின் மீதும் செலுத்திய தொகை, இன்னும் செலுத்த வேண்டிய தொகை, இவையிரண்டிற்குமிடையே உள்ள விகிதம், அவ்வாறு பகுக்கப்படுவதற்கு முன்பிருந்த விகிதத்திற்கு மாறு

படாமல் இருக்க வேண்டும். நிறுவனத்தின் நடைமுறை விதிகளுக்கிணங்கச் சாதாரணத் தீர்மானமும் பதிவாளருக்குரிய அறிக்கையும் வழங்கப்படவேண்டும்.

5. யாரும் எடுத்துக் கொள்ளாத அல்லது எடுத்துக் கொள்ள ஏற்புத்தராத பங்குகள் இருந்தால், நிறுவனம் அவற்றை நீக்கித் தனது பங்கு முதலைச் சுருக்கிக் கொள்ளலாம். இதற்கு நிறுவனத்தின் நடைமுறை விதிகளுக்கேற்பச் சாதாரணத் தீர்மானம் போதுமானது. நீதிமன்றத்தின் ஒப்புதல் தேவையில்லை. மேற்கூறிய ஒவ்வொன்றிலும் நிறுவனங்கள் தமது அமைப்பாவணத்தையும் உரிய வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

நீதிமன்றத்தின் ஒப்புதலோடு செய்ய வேண்டிய முதல் மாற்றம்: நீதி மன்றத்தின் ஒப்புதலின்றி நிறுவனங்கள் தமது பங்குமுதலைக் குறைக்க இயலாது. ஒரு நிறுவனம் தனது பங்குமுதலைக் குறைக்க வேண்டுமானால், முதலாவதாக அதன் நடைமுறை விதிகள் அதற்கு அதிகாரம் வழங்கியிருக்க வேண்டும். இரண்டாவது, அதுபற்றி அந்நிறுவனம் சிறப்புத் தீர்மானம் இயற்ற வேண்டும். மூன்றாவது, அதனை நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும். நீதிமன்றம் அதனை உறுதி செய்யுமுன், அதனால் கடனாளிகளுக்குத் தீங்கு ஏற்படுவதில்லை என்று மனநிறைவு பெற விரும்பும்.

ஒரு நிறுவனம் தனது பங்கு முதலைக் கீழ்க் காணும் வழிகளில் குறைக்க எண்ணலாம். அவை 1. செலுத்தாமலுள்ள முதல் பற்றிய உறுப்பினர்களுடைய பொறுப்பைக் குறைப்பது அல்லது அழிப்பது, 2. இழந்த அல்லது தேவையற்ற முதலைக் கணக்கு – நீக்கம் (Writing off) செய்வது, 3. அதன் தேவைக்கு மிகுதியாக உள்ள முதலைத் திருப்பிக் கொடுப்பது ஆகியவையாம்.

இவ்வழிகளிலோ வேறு எவ்வழிகளிலோ ஒரு நிறுவனம் தனது பங்கு முதலைக் குறைக்க எண்ணினாலும், மேற்கூறிய கட்டுப்பாட்டிற்குட்பட்டே அதனைச் செய்ய வேண்டும். மேலும், நீதிமன்றத்தின் ஆணையின் சான்றளிக்கப்பட்ட படி ஒன்றையும், நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ள பங்கு விவரந்தாங்கிய குறிப்பு (Minute) ஒன்றையும், பதிவாளரிடம் கொடுத்துப் பதிவுச் சான்றிதழ் பெற வேண்டும். நீதிமன்றம் முதல் குறைப்பை உறுதி செய்யும்பொழுது அந்நிறுவனத்தைத் தனது பெயரின் இறுதியில் அனைவரும் புரிந்து கொள்ளுமாறு 'குறைக்கப்பட்டது' (and reduced) என்ற சொல்லைக் குறிப்பிட்ட காலம்வரை சேர்த்து வருமாறு கட்டளையிடலாம். முதல் குறைப்புக்கான காரணங்களை வெளியிடுமாறும் கூறலாம்.

கே.என்.இரா.

துணை நூல்கள்:

பாலகிருஷ்ண சங்கரய்யர் வி.கே., ''நிறுவனச் சட்டவியல்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.

இராமானுசம் கே.என்., ''வணிகவியல் சட்டம்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.

**Kapoor.**, ''Company. Law'', S. Chand & Company, Delhi, 1978.

***அமைப்பியல்சார் மானிடவியல்***: சமூகத்தின் 'தேவையே கண்டுபிடிப்புகளுக்குத் தாய்' எனக் கூறுவதுண்டு. இக்கூற்று, மானிடவியல் ஆய்வுமுறைக்கும் பொருத்தமானதாகும். மனிதரையும், அவர் சார்ந்த பண்பாடுகளையும் ஆராய முற்பட்ட பொழுது பல்வேறு ஆய்வுப் போக்குகளைப் பல்வேறு மானிடவியல் அறிஞர்கள் உருவாக்கினார்கள். வரலாற்று அணுகுமுறை (Historical Approach), பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டு அணுகுமுறை (Cultural Diffusionistic Approach), செயற்பாட்டியல் அணுகுமுறை (Functionalistic Approach), அமைப்பியல் அணுகுமுறை(Structuralistic Approach), அமைப்பியல்,செயற்பாட்டியல் அணுகுமுறை (Structural Functionalistic Approach) என்பன அவற்றுள் சிலவாகும். மேற்குறித்த அணுகுமுறைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலக்கட்டத்தில் ஒரு சில சூழல்களில் உருவாக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டன. சான்றாக, உலகின் பல பகுதிகளில், பழங்குடியினர் குடியேற்ற மேலாண்மை நாட்டினரின் பிடியினின்று தன்னுரிமை பெறுகிற நிலையில், அவர்கள் உறுப்பினர்களாகத் திகழும் பல்வேறு சிறு சமுதாயங்கள் (Ethnos) தமக்குள் புதிய தொழிற் கருவிகளை அறிமுகப்படுத்தின. இந்தச் சூழலில், பிணந் தின்னிகள், விலங்குகளுள் ஒரு வகையினர் என்றெல்லாம் பழங்குடியினரைப் பழி கூறி ஏளனஞ் செய்ததைத் தடுக்க வேண்டியது அப்போதைய மானிடவியலாரின் உடனடிச் செயலாக இருந்தது. அப்பொழுது முகிழ்த்ததே கிளாட் இலெவி–இசுட்ராசுவின் (Claude Levi-Strauss) அமைப்பியல் அணுகுமுறை. இதுவே, காலப்போக்கில் 'அமைப்பியல்சார் மானிடவியல்' (Structural Anthropology) எனத் தனிப்பெரும் பிரிவாக அறிஞர்களால் ஏற்கப்பட்டது. இவ்வாறு உருவான அமைப்பியல்சார் மானிடவியலானது, செயற்பாட்டியலை (Functionalism) அறிமுகப்படுத்திய மலிநோசுகி (Malinowski), அமைப்புச் செயற்பாட்டியலை (Structural Functionalism) ஆய்வுலகின் முன் வைத்த இராட்கிளிப்பிரௌன் (Radcliff Brown), சமுதாயவியலாளராகிய தர்க்கைம் (Durkhiem) ஆகியோரின் ஆய்வுக் கருத்துகளினின்று

நேரடியாகக் கிளைத்தவொன்றே. இன்னும் சொல்லப் போனால், மலினோசுகி, இராட்கிளிப்பிரௌன், தர்க்கைம் ஆகியோருடைய அணுகுமுறைக்கும், செருமானியப் பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டினரின் (German Cultural Diffusionists) அணுகுமுறைக்கும் இடையே ஒரு புது உருவாக்கத்தைப் பெற்று, அமைப்பியல்சார் மானிடவியல் விளங்கி வருகிறது எனலாம்.

அமைப்பியல் அணுகுமுறை என்பதற்கு, அமைப்புகள் பற்றிய அறிதல் முறை என்று மட்டும் சொல்வது விளக்கம் தந்ததாக அமையாது. ஏனெனில், 'அமைப்பு' (Structure) என்றால் என்ன எனும் வினா அடுத்து எழுகிறது. அனைத்துச் சமுதாய இயல் நிகழ்ச்சிகளும் (Social Phenomena) ஒரு குறிப்பிட்ட அளவு ஒழுங்கு முறையைக் கொண்டுள்ளன அல்லது வெளிப்படுத்துகின்றன என்பது வெளிப்படை. இத்தகு ஒழுங்கு முறையே 'அமைப்பு' என்பார் இலெவி-இசுட்ராசு. இதனையே, 'விதிக்கு அடிப்படையாக அமையும் மனநிலை' என்றும் இவர் உரைப்பார். எடுத்துக் காட்டாக ஒரு பழங்குடிக் குழு, பிறிதொரு குழுவிற்கு ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தால், அப் பெண்ணை ஏற்றுக் கொண்ட குழு, ஈடாக மற்றொரு பெண்ணைத் தர வேண்டும் என்ற முறை அவர்களிடையே ஒரு விதியாக நிலவுகிறது. இங்கு, 'ஒன்று பெற்றால், அதற்கு ஈடாக மற்றொன்றைத் தருதல் வேண்டும்' என்ற விதிக்கு அடிப்படையாகும் மனநிலையின் பெயரே 'அமைப்பு' என்று சொல்லப்படுகிறது. இத்தகைய அமைப்புப் பற்றிய கருத்தாக்கம் (Conception) இலெவி-இசுட்ராசுக்கு உருப்பெற்றது, நினைவிலி மனம் (Unconcious mind) மற்றும் அமைப்புசார் மொழியியல் கருத்தாக்கம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே என்பது நினைவு கூர வேண்டியதொன்றாகும். சான்றாக, ''நம்மால் காணமுடியாததாக உருவாவது நம் செயல்களிலும் பழக்கங்களிலும் உருவாகி இருப்பது'' எனும் அமைப்புப் பற்றிய இவரது வரையறை, பிராய்டின் (Freud) நினைவிலி மனக் கருத்தாக்கத்தைத் தழுவியதே. இது போன்றே, ''மொழியில், ஒலிகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளின் வழியே ஒரு வகை ஒழுங்கு ஏற்படும்'' எனும் அமைப்பு மொழியியல் கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே, ''நாம் பார்க்கும் பண்பாட்டு அமைப்பில் காணப்படும் முதன்மைக்கூறு ஒன்றே என்று அறிந்து கொண்டால், முழுமையாக மனிதப் பண்பாடு அனைத்தையும் காணவியலும்'' என்ற முடிவுக்கு வருகிறார் இலெவி-இசுட்ராசு. அவர் இவ்விரு கருத்தாக்கங்களையும் தம் கோட்பாட்டில் திறம்படக் காட்டுகிறார். அடிமன நிலையில் கிடக்கிற அமைப்புகளை மட்டுமே ஆய்வு செய்ய வேண்டுமே ஒழிய, வெளிப்படையாகத் தெரிகிற பொருள்களை நேரடியாக ஆய்வு செய்வதில் பயனில்லை என்கிறார். அது போல், ஓர் ஆய்வானது, ஒன்றின் கூறுகளைக் குறித்துத் தெரிந்து கொள்வதைவிட அந்தக் கூறுகளுக்கு இடையில் உள்ள உறவை ஆய்வு செய்வதாக அமைய வேண்டும் என்கிறார். இக் கருத்துகளையே, பொராரோப் (Bororo) பழங்குடியினரின் சமுதாய அமைப்பின்வழி நமக்குத் தெளிவுபடுத்துகிறார்.

பொராரோப் பழங்குடியினரிடையே இரு பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒவ்வொரு பிரிவும் கிராமத்தின் இடப் புறமும் வலப் புறமும் சிறு பிரிவுகளை மையமாகக் கொண்டு விளங்குகிறது. இவ்வாறு, தங்களுக்குள் இரு பெரும் பிரிவுகள் இருப்பதை இந்தப் பழங்குடியினர் அறிவர் என்றாலும், இலெவி-இசுட்ராசு, இரண்டாகப் பிரிந்துள்ள இவர்களின் மேம்போக்கான அமைப்புகளுக்குள் (Superficial Structure or Surface Structure) வேறு ஒரு நிலைமுறைமையும் (Ranking) இருப்பதைக் கண்டுபிடிக்கிறார். அதாவது, ஒவ்வொரு பிரிவும் மேல்மட்டம், நடுமட்டம், கீழ்மட்டம் என மூன்று அடுக்குகளாக மேலும் பாகுபடுத்தப்படுகிறது. மேல்மட்டம் மேல் மட்டத்தோடும், நடு மட்டம் நடு மட்டத்தோடும், கீழ்மட்டம் கீழ்மட்டத்தோடும் மட்டுமே திருமண உறவு கொள்கின்றன. இவ்வாறு, வெளித் தோற்றத்தில் இரு பெரும் பிரிவுகளாகத் தோன்றும் பொராரோப் பழங்குடியினர், உண்மையில் மூன்று அகமண முறையைப் பின்பற்றும் ஒழுங்கமைப்பு கொண்டுள்ளதைப் புலப்படுத்துகின்றார். இதனால், உண்மையான அமைப்பு மேல் மட்டத்திற்குப் புரியாத நினைவிலி மட்டத்திலேயே (Unconcious level) காணப்படும் என்ற ஆய்வு உண்மையையும் உலகுக்கு வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு, 'அமைப்பு' என்பதனை நிறுவிய பிறகு 'அமைப்பியல் குறித்த வரையறைக்கு வருகிறார் இலெவி-இசுட்ராசு. அனைத்து மனிதருக்கும் பொதுமையான, உள்ளீடு பரவியுள்ள, ஆழ்ந்த தன்னியல்பான உளவியல்-உயிரியல் தன்மையின் அமைப்புகளைப் பிரித்தறிவதே 'அமைப்பியல்' என்பது இவர் தம் முடிந்த முடிவு. பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும் புறநிலை நடத்தையில் (Surface Behaviour) இந்த மறைபொருளாயுள்ள அக அமைப்புகள் (Infrastructures) மிகச் சிறிதே காட்டப்படுகின்றன. பண்பாட்டால் கட்டுப்படுத்தப்பட்ட வெளிப்படையான நடத்தை கண்டுணரக் கூடியதே. ஆனால், சூழ்நிலை அமைப்புகள் அதாவது, முதலில் சரியான பண்பாட்டு மாற்றுவிதிகளைக் கண்டுபிடித்து, பின் ஒரு தொகுதியின் மாற்று விதிகளை ஏனைத் தொகுதிகளின் விதிகளோடு பொருத்திப் பார்க்க வேண்டும். பண்பாட்டின் அடிப்படை அமைப்பை மறைத்த நிலையில், பல

அடுக்குகள் காணப்படுவதால், புதைநிலை நடத்தைகளை அறியும் முயற்சியிலும் பல மாற்றுவிதிகளைக் கைக்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகு பண்பாட்டு மாற்று விதிகள், கலை, மொழி ஆகிய பரப்புகளில் – அதிலும் குறிப்பாகத் தொன்மங்களில் – மிகவும் பரவலாக நடத்தப்படுகின்றன என்று இலெவி-இசுட்ராசு கருதுகிறார். இந்த ஆய்வு நெறிமுறையை அமைப்பு மொழியியலின் (Structural Linguistics) அடிப்படையில் உருவாக்கினார். அமைப்பு மொழியியலில் மொழியை ஆராய்வது போன்று, இலெவி-இசுட்ராசு சமுதாயச் செயல் முறை வடிவங்களை ஆராயத் தலைப்பட்டார். தாய்மொழியாளனுக்கு அம்மொழியின் இலக்கணம் அவன் அறியாமலேயே அமைவது போன்று, ஒருவன் தான் சார்ந்துள்ள சமுதாயத்திற்குரிய செயல்முறைகளும் உறவுமுறைகளும் (Communicational Network) அவனையறியாதே அவனிடத்திலிருந்து வெளிப்படுகின்றன என்பது இலெவி-இசுட்ராசு கண்ட அமைப்பு மானிடவியலின் மையக் கருத்தாகும். எனவே, சமுதாயங்களைச் சார்ந்த புறநிலை இலக்கணங்கள் தமக்குள் வேறுபடுவது போன்றே, சமுதாயங்களும் தத்தமக்குள் வேறுபடுகின்றன. என்றாலும் இவற்றினூடே ஒரு அடிப்படை அமைப்புப் புதைநிலையாக இழையோடக் காணலாம்.

'அடிப்படைச் சிந்தனை, வேற்றிணைகளாக (Sets of contra ts) நிலவுகின்றது என அமைப்பியல்சார் மானிடவியலின் வழி நின்று மொழிவார் இலெவி-இசுட்ராசு. இரவு பகல், கருமை வெண்மை, பிறப்பு இறப்பு, ஆவி உடல் என்பன இவர் காட்டும் வேற்றிணைகளுள் சிலவாகும். இத்தகைய இருமை நிலையானது, மேற்கட்டுமானத்தில் (Super structure) பல்வேறு வழிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. குலக்குறி, உறவுமுறை, தொன்மக்கதை, கலை, ஓவியம், சாதி முதலியன பற்றிய ஆய்வுகள் அனைத்தும் மேற்கட்டுமானத்தைச் சார்ந்தவை. பெரும்பாலான மானிடவியற் சிக்கல்களைத் தீர்க்க இந்த மேற்கட்டுமானத்தையே இலெவி-இசுட்ராசு பயன்படுத்துகிறார். இதற்குக் காரணம், "செயற்பாடானது, சிந்தனையிலிருந்து நேரடியாகத் தூண்டப்படுவதில்லை; சிந்தனைக்கும் செயலுக்கும் இடையில் கருத்துகளாலான ஓர் உலகம் உண்டு. இந்தக் கருத்துகளாலான உலகம் செயற்படும்பொழுது, உருவம், உள்ளடக்கம் என ஒன்று இன்னொன்றைச் சார்ந்த நிலையிலேயே அமைப்புப் பெற்று விடுகிறது". இலெவி-இசுட்ராசு குலக்குறி, உறவுமுறை, தொன்மக்கதை முதலான மேற்கட்டுமான எடுத்துக்காட்டுகளைக் கொண்டு இவற்றை விளக்குகிறார்.

ஒரு குறிப்பிட்ட விலங்கையோ பறவையையோ பொருளையோ தங்கள் குலக்குழு முழுமைக்கும் வழிகாட்டியாக, வணக்கத்திற்குரியதாக, மூதாதையராகக் காண்பதே குலக்குறி வழிபாடு. எளிய நாகரிகம் கொண்ட பழங்குடியினர் தம் குழம்பிய சிந்தனையினை வெளிப்பாடு செய்த முறை என இந்தக் குலக்குறி முறையினைப் பிரேசர் (Frazer) குறிப்பிடுகிறார். சிலர், தம் மூதாதையரைப் போன்ற பண்பினைக் கொண்ட விலங்குகளை வணங்கினர் என்றனர். வேறு சிலரோ, பழங்குடியினர் தமக்கு உணவாகும் விலங்குகளையும், பறவைகளையும் குலக்குறியாகக் கொண்டனர் என்றனர். இலெவி-இசுட்ராசு இந்தக் கோட்பாடுகள் அனைத்தையும் தகர்த்தெறிந்து விட்டு, குலக்குறி என்பது ஒரு மொழி என்றார். எடுத்துக்காட்டாக, ஒரு பழங்குடிக் குழு கரடியையும், மற்றொரு குழு சிங்கத்தையும் குலக்குறியாகக் கொண்டிருக்கின்றன எனக் கொள்வோம். இங்குப் பழங்குடியினருக்கும் கரடி, சிங்கம் முதலிய விலங்குகளுக்கும் உள்ள தொடர்பைவிட, அவற்றினிடையே உள்ள வேறுபாடே முதன்மையானது. இதுவே, இரு குழுக்களுக்கும் இடையே உள்ள வேறுபாடும் ஆகும். இவ்வாறு, வேறுபடுத்துதற்கே குலக்குறிகள் பயன்படுகின்றன என்பார் இலெவி-இசுட்ராசு. இத்தகைய அணுகுமுறையில், அவர் ஒலியன் பற்றிய மொழியியல் அறிவினை உள்ளொளி தரும் அறிவாகப் பயன்படுத்தியுள்ளார்.

உறவுமுறை பற்றிய தமது ஆய்வில் இலெவி-இசுட்ராசு "ஒரு உறவுப் பெயர், மொத்த உறவுமுறை அமைப்பில் கொள்ளும் தொடர்பைக் கணக்கில் எடுத்ததாக அமைய வேண்டும்" என்கிறார். இந்த அணுகுமுறையும் மொழியியல் காட்டும் ஒலித்துணுக்கின் அடியொற்றும் இவர் கண்டனவே தாய் மாமன்-, மருமகனுடன் மட்டும் தொடர்புடையதன்று என்றும் பல குடும்ப உறுப்பினர்களுடன் தொடர்புடைய ஒன்றாகும் என்றும் காட்டுகிறார். தொங்கா (Tonga) எனும் பாலினேசியப் பழங்குடியினரின் உறவுமுறை அமைப்பைக் காட்டி, இலெவி-இசுட்ராசு இதனை விளக்குகிறார். இப் பழங்குடியினரின் சமுதாயத்தில் மருமகனுக்கும் தாய் மாமனுக்கும் இடையே நல்லுறவு நிலவினால், அவன் தாய்க்கும் தந்தைக்கும் இடையே நல்லுறவு இருக்கிறது என்பது வெளிக்காட்டப்பட்டதாகும்.

பழங்குடியினரின் உளப் படைப்புகளான தொன்மக் கதைகளை ஆய்வதன் வழி, அவ்வுள்ளங்களின் செயல்படும் செய்யொழுங்கையும் (Logic) விதிமுறையையும் அறிந்து கொள்ளும் ஆவலே தொன்மக்கதை ஆய்வில் அவரை ஈடுபட வைத்தது எனலாம். "தோற்றங்கள் பொதுவாகத் தரும் குழப்பத்தில் ஓர் ஒழுங்கைக் காண்பதையே தொன்மக் கதை ஆய்வில் நான்

மெய்ப்பித்துக் காட்டுகிறேன்'' எனும் இவரது கூற்று இதனை மெய்ப்பிக்கும். தம் தொன்மக் கதைகள் ஆய்வின் வழி, இயற்கை, பண்பாடு என்ற இரண்டையும் ஒன்றாக இணைக்கும் செயலைத் தொன்மக் கதைகள் செய்துள்ளன என்ற முடிவைக் காட்டுகிறார். இயற்கையின் ஓர் உறுப்பாய் விலங்கினம், மனிதர்களுடன் குருதி உறவு கொண்டனவாக வளர்க்கப்படுகின்றன; மனிதர்கள் பறவைகளை மணம் புரிந்து கொள்கின்றனர்; மனிதனும் விலங்கும் சேர்ந்து சதி செய்கின்றனர் என்பன நாம் காணும் தொன்மக் கதைகளில் பயின்று வருபவையே.

''தொன்மக் கதை ஒரு அமைப்பியல் ஆய்வு'' (The Structural Study of Myth) எனும் தமது புகழ் வாய்ந்த ஆய்வுக்கட்டுரையில், 'தொன்மக் கதை ஒரு மொழி' (Myth is a Language) என உரைக்கிறார் இலெவி-இசுட்ராசு. எனவே, ஏனைய மொழிகளைப் போன்று, தொன்மக் கதையும் உறுப்புகளால் ஆனது என உணர வைக்கும் இவர், மொழியின் உறுப்புகளான, ஒலியன் (Phoneme), உருபன் (Morpheme) போன்ற பெயர்களின் அடிப்படையில் தொன்மக்கதையின் உறுப்புகளுக்கு 'மித்தீம்' (Mytheme) எனப் பெயரிடுகிறார். இம் முறையை, மேலும் விரிவாக்கித் தொன்மக் கதையில் பயின்று வரும் செய்திகளைத் தனித்தனி மித்தீம்களாகக்-கதைத் துணுக்குகளாகப் பிரித்துக் கொள்கிறார். இவ்வாறு, பகுத்துக் கொள்ளப்பட்ட ஒவ்வொரு கதைத் துணுக்கும், தனித்த உறவுகள் அன்று; உறவுகளின்தொகுப்புகளே என்பது இன்றியமையாத செய்தியாகும்

தொன்மக் கதையை, இத்தகைய அமைப்பியல் முறையில் ஆய்வு செய்ய இலெவி-இசுட்ராசு 'ஒடிப்பசு' (Oedipus) எனும் கிரேக்கத் தொன்மக் கதையை எடுத்துக் கொள்கிறார். 'தீபசு' (Thebes) நாட்டை ஆண்டு வந்த அரசன் இலெயோசுக்கும் (Laius) அவன் துணைவி சொகாத்தா (Jocasta) என்பவளுக்கும் பிறந்தவன் 'ஒடிப்பசு'. தந்தையைக் கொன்று தாயை ஒடிப்பசு மணப்பான் என வானிலிருந்து வந்துற்ற செய்தி கேட்டு, இலெயோசு தன் மகனையே கொல்ல ஏற்பாடு செய்கிறான். அந்த ஏற்பாட்டின்படி, மலை மீதிருந்து ஒடிப்பசு உருட்டப் படுகிறான். ஆனால், இதிலிருந்து தப்பிப் பிழைக்கும் ஒடிப்பசு, காளைப் பருவத்தில் திரும்பி வந்து, தந்தையைக் கொல்கிறான். அந்நிலையில், அந்த நாட்டைச் 'சுபிங்சு' (Sphinx) எனும் அரக்கன், சுற்றி வளைத்துக் கொள்கிறான். தன் கேள்விகளுக்கு விடையளித்தாலேயே அந் நாட்டை விட்டு நீங்குவேன் எனச் சுபிங்சு கூறுகிறான். சுபிங்சின் கேள்விகளுக்கு விடை கூறுபவர் அந் நாட்டின் அரசியை மணக்கலாம் என அறிவிக்கப் படுகிறது. ஒடிப்பசு, சுபிங்சின் கேள்விகளுக்குத் தக்க விடைகளைக் கூறி, இறுதியில் அவனையும் கொல்கிறான். தன் மகன் என்று அறியாத அரசியும், கட்டளைப்படி ஒடிப்பசை மணக்கிறாள். பின்னர், உண்மையறிந்து தற்கொலை செய்து கொள்கிறாள். தான் அறியாமல் செய்த பெரும் பிழைக்காக, ஒடிப்பசு தன் கண்ணைக் குத்திக் கொள்கிறான். இந்தத் தொன்மக் கதையின் சுருக்கத்தை மேலும் சிறு சிறு கூறுகளாகப் பிரித்தெடுக்கிறார் இலெவி-இசுட்ராசு. அவ்வாறு பிரித்த கதைத் துணுக்குகளைச் சில விதி முறைகளின் அடிப்படையில் இணைக்கிறார். இந்த இணைகளில், கதைப் போக்கானது, இடம், காலம் எனும் இரு வேறு தளங்களில்நடைபெறுவதாய்ப்பிரிக்கப்படுகிறது. சான்றாக, மகன் தந்தையைக் கொல்வது மனிதன் மனிதனுடன் போராடுதல் என்ற வரிசைக்குள்ளும், ஒடிப்பசு சுபிங்சைக் கொல்வது மனிதன் தனக்கப்பாற்பட்ட சக்தியுடன் போராடுதல் என்ற வரிசைக்குள்ளும் இடப்படுகின்றன. மேற் கூறியவற்றால், சமுதாயப் பண்பாட்டுப் பின்னணியிலிருந்து தொன்மக் கதையை அகழ்ந்தெடுத்து, எத்தகைய ஆய்வு முறையைக் கைக்கொண்டாவது ஆராய்ச்சியாளன் பகுத்தாய்ந்து மதிப்பீடு செய்யும் நிலையில், உலகளாவிய கலை வடிவாக அதனை அமைப்பியல் அணுகுமுறை கொண்டாடுகிறது என்பது பெறப்படும்.

அமெரிக்க இந்தியப் பழங்குடியினரின் ஓவியங்களில், உருவங்கள் ஒருவகையாகச் சித்திரிக்கப்படுகின்றன. அதாவது, ஓர் உருவம் இரண்டாகப்பிரிக்கப்பட்டு இரு பிளவுகளும் வேறு கோணத்தில் இணைக்கப்பட்டிருப்பது போல் காட்சி தருகிறது. இத்தகைய ஓவியங்கள் சீன நாட்டிலும் காணப்படுகின்றன. இதற்கு, ஈரிடங்களிலும் ஒரே நேரத்தில் இத்தகைய ஓவியங்கள் பரவியிருக்கலாம் அல்லது ஒரு காலக் கட்டத்தில் எப்படியோ சென்றிருக்கலாம் எனும் விளக்கங்களை ஒதுக்கிவிட்டுச் சமுதாய அடிப்படையில் விளக்கம் கூறுகிறார் இலெவி-இசுட்ராசு. பிளவு படுத்தப்பட்ட உருவ அமைப்புக் கொண்ட ஓவியங்கள், அச் சமுதாய மக்களிடையே உள்ள பிளவைக் காட்டுகின்றன என்கிறார். எந்தப் பண்பாடு, இத்தகைய பிளவைக் கொண்டிருக்கிறதோ அதனை 'முகமூடிப் பண்பாடு' அல்லது 'பச்சை குத்தும் பண்பாடு' என குறிப்பிடுகிறார் இலெவி-இசுட்ராசு. ஏனெனில் இச் சமுதாயத்தினருக்கு முகத்தில் பச்சை குத்தலும் முக மூடி வரைதலும் பழக்கமாகும். இரு குழுக்களுக்கிடையே சண்டையும் சச்சரவும் நிலவிக் கொண்டிருக்கும். இச் சமுதாயத்தைச் சார்ந்த மனிதர்களும் தத்தமக்குள் கருத்து மாறுபட்டுத் திகழ்வர். இத் தன்மைகளால், மனித சமுதாயத்தின் சிதைவுற்ற பண்பே அவர்தம் கலைகளிலும் சிதைவுத் தன்மையைக்

கொணர்கிறது என்ற உண்மையை இலெவி-இசுட்ராசு முன் வைக்கிறார்.

ஒழுங்கு படுத்துதல் என்பது கலைக்கு மட்டுமன்றி அறிவியலுக்கும் இன்றியமையாததொன்றாகும் என்பார் இலெவி-இசுட்ராசு. தம்மைச் சுற்றியுள்ள விலங்கு, தாவர உலகங்களைப் பழங்குடியினர் வகைப்பாடு செய்யும் பாங்கு, இத்தகைய 'ஒழுங்கு படுத்துதல்' எனும் அழகியல் வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சியின் வெளிப்பாடே என்றும் இவர் சுட்டுகிறார். எடுத்துக்காட்டாக, பிலிப்பைன்சுத் தீவைச் சார்ந்த சானுனோப் (Shanunope) பழங்குடியினர் தங்களைச் சுற்றியுள்ள இடங்களிலுள்ள தாவர வகைகளில் தொண்ணூறு விழுக்காட்டினை அறிந்து வைத்துள்ளனர். பன்னிரண்டு வகைப் பாம்புகளையும் அறுபது வகை மீன்களையும் இனம் பிரித்துக் காட்டுகின்றனர்; ஆயிரக்கணக்கான பூச்சிகளை நூற்றெட்டு வகைகளாக இனம் காண்கின்றனர். இவ்வாறு, இத்தகு பாகுபாட்டு அறிவுவழி நோக்கினால் பழங்குடியினர் நாகரிகம் பெற்றவர்களைவிட அறிவு மேம்பட்டவர்களாக இலெவி இசுட்ராசு தெளிவாக்குகிறார்.

இனி அமைப்பியல்சார் மானிடவியல் எதிர்நோக்கிய தாக்குதல்களையும் அவற்றிற்கு அமைப்பியல் சார் மானிடவியலார் கூறும் விளக்கங்களையும் அறிதல் வேண்டும்.

எடுகோள்களை அறிவியல் வழிநின்று ஆய்ந்து மதிப்பிடும் நேர்காட்சியியலில் (Positivism) தம்மை முழுமூச்சாக ஈடுபடுத்திக் கொண்டோரிடமிருந்து இலெவி-இசுட்ராசின் அமைப்பியல் கோட்பாட்டிற்கு மிகப் பெரிய அளவில் எதிர்ப்புக் குரல் தோன்றியது. இலெவி-இசுட்ராசு காட்டிய மாற்று வடிவங்களைப் போன்று மிகச் சிலராலேயே உருவநேர்படி காட்ட (Replicate) இயன்றதனால், உலகளாவிய அமைப்புகளை உருவாக்கிய அளவிற்கு அவற்றைக் கண்டுபிடித்தாரா என வினா எழுப்பினர். உண்மையில், அறிவியல் வழியினின்று சற்று விலகி வந்தாலொழிய இலெவி-இசுட்ராசு அமைப்பியல் கோட்பாடுகளைப் பயன் கொள்ளல் என்பது இயலாதவொன்றேயாகும். இதனாலேயே மக்களைப் பற்றிய மெய்ப்பிக்கவியலாத கருதுகோள்களை உருவாக்கியவர் இலெவி-இசுட்ராசு என்றே நேர்காட்சியியலார் கருதுகின்றனர்.

மூடப்பெற்றதும் மன அடிப்படையில் முடிவுசெய்யப் பட்டதுமாகிய ஆராய்ச்சித் தன்மையை உருவாக்கியவர் இலெவி-இசுட்ராசு என்பது மற்றொரு குற்றச்சாட்டு. இருப்பினும், இது உண்மைக்குப் புறம்பானதாகும். இலெவி-இசுட்ராசு புதைநிலை அமைப்புகளில் மிகவும் ஈடுபட்டிருந்தார் என்பதனால், பிற குழுக்களுக்குத் தக அமைதலை அல்லது பரந்துபட்ட சுற்றுப்புறச் சுழல் நிலைகளுக் கேற்ப அமைதலை, புறநிலை அல்லது பண்பாட்டு வகைக்கு விளக்கமாக முடிவு கட்டி விடவில்லை. உண்மையில், புறநிலை வேறுபாடு அமைந்துள்ளமைக்கு உள்ள அடிப்படைக் காரணம் வேண்டுமென்றே இவரது 'மாதிரி' யில் நீக்கப்படவில்லை. புறநிலை வேறுபாட்டினை உணர்ந்த பின்னர்ப் பண்பாட்டு வேற்றுமைகளை விளக்க இவர் முற்படவில்லை. ஏனெனில், புதைநிலை அமைப்புகளைத் தீர்வுபடுத்துவன (Determinative) விளைவை உருவாக்குவன எனக் கருதாது, 'புறநிலை வேறுபாட்டிற்கு, இவை அடிப்படைத் தளத்தை அமைத்துக் கொடுப்பன என்றே கண்டார்.

மேற்போக்காகப் பார்க்கும்பொழுது, பாசுடியனின் மனித குல உளப்பாட்டு ஒற்றுமைக் கோட்பாட்டினைச் (Doctrine of Psychic Unity of Mankind) சீர்திருத்தித் தன் அமைப்பியல் மானிடவியலை இலெவி-இசுட்ராசு படைத்திருப்பதாகத் தோன்றும். கவனமாக ஒப்பீடு செய்தால், இது தவறான ஒரு முடிவு என்பது புலப்படும். ஏனெனில், ஒரே தன்மைத்தான தூண்டுதல்களுக்கு மாந்தர் அனைவரும் ஒரு படித்தான எதிர்வினை புரிந்து, உலக முழுமையும் ஒரு வகையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றனர் என்பது மனித குலத்தின் உளப்பாட்டு ஒற்றுமைக் கோட்பாட்டின் மையக் கருத்தாகும். இதற்கு மாறாக, உலகளாவிய பல புதைநிலை அமைப்புகள் காணப்படினும், மனித எதிர்வினைகள் பெரிதும் மாறுபட்டவை என்பது இலெவி-இசுட்ராசின் கருத்தாகும். இதனாலேயே புறநிலை அமைப்புகளும் பரந்துபட்ட பண்பாட்டு நடத்தையைக் கொண்டிருக்கின்றன என்ற செய்தி அமைப்பு, மானிடவியலில் பெரிதும் பேசப்படுகிறது. இந்நிலையில், மூடிய அமைப்பு ஒன்றினை இலெவி-இசுட்ராசு உருவாக்கினார் என்றோ, உளவியல்--உயிரியல் அறுதியிடுபவர் (Psychic--biological) determinist) என்றோ கூறுதற்கு வழியில்லை. உலகளாவிய உளம் (Mental Endowment) சார்ந்த கொடையாக இருக்கிறதென்று இவர் அறுதியிட்டுக் கூறினும், பண்பாடுகள் தத்தம் சமுதாய இயற்பியல் சூழல்களால் உருவாக்கப்படுகின்றன எனவும் அழுத்தந்திருத்தமாக அறிவுறுத்துகிறார். இருத்தல் கொள்கையை (Existentialism) அறிமுகப்படுத்தியவரும், இலெவி-இசுட்ராசு சம காலத்தவருமான சார்த்தர், இலெவி-இசுட்ராசு 'அமைப்புகள்' இயக்கமற்றவை, தேங்கிக் கிடப்பவை என்று குறை கூறுகிறார். இதற்கு இலெவி-இசுட்ராசு ''இருவரிடையே தொடர்பினை ஏற்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது என்பதற்காக, மொழி மாறாமல் இருக்கிறது என்று சொல்ல முடியாதது போல், அமைப்பு என்பது ஒரு குறியீடு, அதன்வழியே எப்போதும் மாறும் செய்திகள்

சென்றுகொண்டே இருக்கின்றன'' என்று மறுமொழி கூறுகிறார்.

''இலெவி-இசுட்ராசின் கருத்துக் கொடையாகிய 'அமைப்புகளில்' மனிதச் செயலுக்கு இடமில்லை, எனவே, மாற்றத்திற்கும் இடமில்லை, மாற்றம் என்பது கூட, ஒரு அமைப்பு இருந்த இடத்தில் இன்னொரு அமைப்பு அமையும். அவ்வளவே. இதனால் மனிதனின் செயலூக்கம் இலெவி-இசுட்ராசு கோட்பாட்டால் தடைசெய்யப்படுகிறது'' என்பது, இருத்தல் கொள்கையாளர்கள், அமைப்பியலின் மீது சுமத்தும் மற்றொரு குற்றச்சாட்டாகும். இதற்கு, ''பழங்குடியினர் நம்மைப் போல் நன்றாக வாழவில்லை, சிந்திக்கவில்லை என்பதற்காக, அவர்தம் சமுதாயங்களை நாம் மாற்றம் செய்யக் கூடாது. அதே நேரத்தில், ஒரு சமுதாயத்துக்குள்ளிருந்து வரும் மாற்றத்தை ஆதரிக்க வேண்டும்'' என இலெவி-இசுட்ராசு விடையளிக்கிறார். இதனால், ஒவ்வொருவரும் தத்தம் சமுதாயத்தை மாற்றுவதை இவர் ஊக்குவிக்கிறார் என்பது புலப்படும், இத்தகைய 'தன்னிலை மாற்றமானது' பன்னிறங்காட்டி ஒரு கோணத்திலிருந்து இன்னொரு கோணத்திற்கு மாறும்பொழுது ஏற்படும் திடீர் மாற்றம் போன்றது என்றும் சுட்டுகிறார்.

இலெவி இசுட்ராசு அமைப்பியல் கோட்பாட்டிற்கு ஊறு விளைக்க முயன்றோர் அனைவருக்கும் தக்க மறுமொழி அளிப்பதிலேயே தம் ஆராய்ச்சிப் பொழுதின் பெரும்பகுதியைச் செலவிட்டாரென. எட்மண்டு இலீச்சு (Edmund Leach) எனும் மானிடவியலார், ''மானிடவியலை மீள நினைதல்'' (Rethinking Anthropology) எனும் தன் ஆய்வுப் படைப்பில் கூறுகிறார். இவர் இராட்கிளிப் பிரௌனின் அமைப்பியல் செயற்பாட்டியல் அணுகுமுறையை 'வண்ணத்துப்பூச்சி திரட்டுதல்' என்கிறார். ஏனெனில், சமுதாய அமைப்புகளை முதலில் வகைப்படுத்திவிட்டுப் பின்னர் அவற்றிற்கிடையே 'ஒப்பீடு' செய்கிறார் இராட்கிளிப் பிரௌன். இத்தகையை அணுகுமுறை பொருளற்ற ஒன்று என்பது இலீச்சின் கூற்று. ஏனெனில், உண்மை நிலைக்குச் சற்றும் பொருந்தாத 'பகுப்பாய்வு வகைகளில்' தரப்பட்ட தகவல்கள் இங்கு வலிந்து திணிக்கப் படுகின்றன. எடுத்துக் காட்டாகத் 'தந்தை வழி' 'தாய்வழி' எனும் கருத்தாக்கங்களை, அத்தகைய பகுப்பாய்வுக் கூறுகளே இல்லாத சமுதாயங்களில் பயன்படுத்தும் 'செயற்கை நிலை அமைப்பியல்-செயல்பாட்டியல்' அணுகுமுறையில் காணலாம். இத்தகைய பொருளற்ற வகைகளைப் பொதுமைப் படுத்துதற்கு உயிர்ப்பூட்டும் உய்த்துணர் பணியின் (Inspired guesswork) அடிப்படையில் அமைந்த ஒரு மானிடவியலை மாற்று ஆராய்ச்சி மாதிரியாக இலீச் அறிமுகப்படுத்துகிறார். இது, ஆய்வின் பரப்பில் புத்தொளிகளையும், எதிர்பாரா முடிவுகளையும் நோக்கி நம்மை நம்பிக்கையுடன் இட்டுச் செல்கிறது. ஒப்பீட்டை விடப் பொதுமைப்படுத்துதலே ஒரு கொள்கையின் குறிக்கோளாக அமையவேண்டும் என இலீச் அறிவுறுத்துகிறார். இந்த அடிப்படையிலேயே, ஆய்வாளனின் நோக்கில் விளக்கப்படுவனவும் இறுதியில் சிதைக்கப்படுவனவும் ஆகிய புறநிலைத் தோற்றங்களுக்குக் கீழே, அடிப்படை அமைவுநிலைகள் புதைந்திருப்பதையும் இவையே ஆய்வின் கருப்பொருளாக அமைவதையும் காட்டுகிறார். இதனுடன் நில்லாது, புறநிலைவுச் சிதைவுகளால் தெளிவின்றி மறைக்கப்படும் புதைநிலை அமைவுநிலைகளுக்குள்ளும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன என்கிறார். இதனுடன் மட்டுமன்றி இலெவி-இசுட்ராசின் ஆய்வுப்பணி இனத்தின்பால் விருப்பு வெறுப்புகளைத் (Ethnocentric Biases) தவிர்த்திருப்பதாகவும் இலீச் கருதுகிறார்.

கோபால் சரணா (Gopal Sarana) எனும் இந்திய மானிடவியலார், ''அமைப்பியல்சார் மானிடவியலும் மொழியியலும்'' என்னும் தமது ஆய்வுரையில், இலெவி -இசுட்ராசின் தொன்மக் கதை ஆராய்ச்சியைக் குறித்த திறனாய்வை நிகழ்த்தியிருக்கிறார். முதலாவதாக, இலெவி-இசுட்ராசின் அமைப்பு மொழியியலின் அடிப்படையில் தொன்மக் கதை ஆய்வைச் செய்துள்ளதாகக் கருதமுடியாது என்று சுட்டுகிறார். ஏனெனில், இரண்டு ஆய்வுப் போக்குகளுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உள்ளது என்பது வெளிப்படை என்கிறார். மற்றொரு சான்றையும் தம் கூற்றுக்கு அரணாகக் காட்டுகிறார். அதாவது, ஒரு மொழியின் ஒலி அடிப்படை அலகுகள் என்று எவற்றைக் கூறலாம் என்பதில் மொழியாளரிடையே இரு வேறு கருத்துகளுக்கு இடமிருக்க வாய்ப்பில்லை. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொன்மக் கதைத் தொடர்பின் ஆய்வில் ஆராய்ச்சியாளரிடையே ஒருமித்த கருத்தினைக் காண்பது எளிதன்று. இந்த அடிப்படையிலேயே, ''மொழியின் அடிப்படை அலகு குறித்த கருத்தாக்கத்தினை அடியொற்றித் தொன்மக் கதையில் இலெவி-இசுட்ராசு அறிமுகப்படுத்தும் 'மித்தீம்' எனப்படும் கதைத் துணுக்குகள், பெரிய வெற்றியைப் பெறவில்லை'' என்று மொழிகிறார் சரணா. மேலும் தொன்மக் கதை ஆய்வில் இலெவி-இசுட்ராசு தேவையில்லாமல் இறங்குகிறார் என்றும் இவர் குறை கூறுகிறார். மேலும், இசுட்ராசின் ஆய்வு, மொழியியலின் அடிப்படை விதிக்கு முற்றிலும் முரணானது-இயல்பில்லாதது என்பதும் சரணாவின் வாதம்.

இலெவி-இசுட்ராசு கண்ட, 'அமைப்பியல்சார் மானிடவியல் அணுகுமுறை'க்கு எதிர்ப்புக் குரல்கள் எழுந்தாலும், பழங்குடியினரின் பண்பாட்டாய்வுடன் நில்லாது, அவர்தம் 'மனம்', 'அறிவியல் நோக்கு' முதலியன குறித்து இவர் ஆற்றிய ஆராய்ச்சிப் பணிகளும், அவற்றின் வழி இவர் கண்ட அமைப்பியல் உண்மைகளும் மானிடவியல் துறையில் ஒரு திருப்பத்தையே உண்டாக்கின என்பது வெளிப்படை. மானிடவியல் துறை ஆராய்ச்சியில் அதுவரை நிலவிய புரியாதவற்றிற்குத் தக்க விடைகள் தந்தும் தெளிவற்றிருந்த பல உண்மைகளுக்கு உள்ளொளி வழங்கியும் அமைப்பியல் சார் மானிடவியல் சிறந்து விளங்குவதற்கு இசுட்ராசு பெருந்தொண்டாற்றினார் என்பது மிகையன்று. இது ஒரு தனிப்பெருந்துறையாகக் கருதப்படுவது இதன் சிறப்பை உணர்த்தும். மானிடவியலில் மட்டுமன்றி, நாட்டுப்புறவியல் உள்ளிட்ட ஏனைத் துறைகளிலும் இன்று 'அமைப்பியல்சார் அணுகுமுறை' கைக்கொள்ளப்படுதல் இதன் பெருமையைப் பறைசாற்றும். சி.ம.

துணை நூல்கள்:


தமிழவன், ''ஸ்ட்ரக்சுரலிசம்'', பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1981.

**Lane, Michael.**, **(Ed)**, ''Structuralism: A Reader,'' Jonathen Cape, London, 1970.

**Levi-Strauss, Claude.**, ''Structural Anthropology'', Basic Books, New York, 1963.

**Levi-Strauss Claude.**, ''The Savage Mind.'' University of Chicago Press, Chicago , 1966.

**Sarana, Gopala.**, ''Structuralism (Mimeo)'', Two extention Lectures delivered at Jodhpur University in September, 1970.


**அமைப்பு** என்பது பொருள் நிறைந்த மொழிக்கூறுகள் ஒன்றுசேர்ந்து ஒரு வடிவத்தை உருவாக்குவதனைக் குறிப்பிடுகிறது. அமைப்புகளை (Structures) மொழியின் முழுவடிவமாகவும் தனித் தனிக் கூறுகளாகவும் பகுத்தாராயலாம். மொழியியல் ஆய்வுகளில், ஒலியனியல் (Phonology), உருபனியல் (Morphology), தொடரியல் (Syntax), பொருளியல் (Semantics) எனப் பல்வேறு நிலைகளில் மொழியை ஆராய்கிறார்கள். சான்றாக, 'அவன் மரத்தை வெட்டினான்' எனும் வாக்கிய அமைப்பைப் பின் வருமாறு விளக்கலாம்.

தொடரியல் நிலை: இவ்வாக்கியத்தை முதலில் 'எழுவாய் + பயனிலை' எனப் பிரிக்கலாம். எழுவாயாக ஒரு பெயர்த் தொடர் வரும். இங்கு 'அவன்' என்னும் பெயர்ப் பதிலி எழுவாயாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. பயனிலையில் ஒரு வேற்றுமைத் தொடரும், ஒரு வினைமுற்றும் இருக்கின்றன. வேற்றுமைத் தொடரில் ஒரு பெயரும் வேற்றுமையுருபும் இருக்கும். சில வேளைகளில் வேற்றுமை உருபு மறைந்து நின்றும் பொருள் தரும். இங்கு வேற்றுமைத் தொடர் செயப் படுபொருளாகப் பயன்பெறுகிறது. வினைச்சொல் காலத்தையும் பால், எண் இயைபையும் காட்டி, வினைமுற்று அமைப்பைப் பெறுகிறது. இங்கு, வெட்டினான்' வினைமுற்றாகும். தொடரமைப்பை (1) எழுவாய் + பயனிலை; (2) எழுவாய் + செயப்படு பொருள் + வினைமுற்று எனப் பகுத்துக் காட்டலாம்.

உருபனியல் நிலை: இது சொற் பகுப்பாய்வாகும். பகுதி, விகுதி, சாரியை போன்ற கூறுகளை ஆராய்வது உருபனியல் நிலை. (சந்தி, விகாரம் புணரியல் நிலையில் வரும்).

செயப்படுபொருளாக வருகிற 'மரத்தை'ப் பார்க்கலாம். 'மரம்' என்ற பகுதியோடு 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்கும்போது 'மரத்தை' என ஆகிறது. தமிழில் பொதுவாக, வேற்றுமை உருபைச் சேர்க்கும்போது சொல்லின் ஈற்றொலி அல்லது ஈற்றெழுத்து அடிப்படையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சான்றாக /–அம்–/ இல் முடியும் சொல்லோடு வேற்றுமை உருபு சேர்க்கும்போது அது /–த்த்–/ எனும் சாரியை பெறுகிறது. இதனுடன் சில வேளைகளில் /–இன்–/ சாரியையும் பெறும். /–இன்–/ சாரியையை விட்டுவிடலாம்.

'மரம் + த்த் + இன் + ஐ = மரத்தினை' இதை 'மரத்தை' என எழுதுவதே பெருவழக்கு. எனவே, வேற்றுமைத் தொடரமைப்பு, பெயர் + சாரியை + (சாரியை) + வேற்றுமை உருபு எனவரும்.

வினைமுற்று காலம், பால், எண் இயைபு காட்டும். வினைமுற்று அமைப்பு 'வினையடி+காலம் + பால் எண் இயைபு' என வரும். இங்கு வினையடியான 'வெட்டு'டன் இறந்தகால விகுதியான/–இன்–/ சேர்க்கப்படுகிறது. எழுவாயும் வினையும் இயைபைக் காட்ட வேண்டும் என்பது தமிழில் விதியாகும். இதற்காகவே பால்எண் இயைபு விகுதி சேர்க்கப் படுகிறது. இங்கு எழுவாய் 'அவன்' ஆக இருப்பதால் /–ஆன்/ விகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இது ஆண்பால் ஒருமையைக் காட்டுகிறது.

ஒலியனியல் நிலை: சொற்கள் ஒலியன்களால் ஆனவை. சொற்களின் 'அசை' நிலையும் ஆராய்ச்சிக் குட்பட்டதே. சொல்லின் ஓர் ஒலி அதன் பொருளையே மாற்றிவிடலாம். சான்றாக, 'படி' எனும்

சொல்லில் மெய்யெழுத்தான 'ப்'க்குப் பதிலாக'க்' சேர்த்தால் அது 'கடி' என மாறுகிறது. இதிலிருந்து ஒலியன்கள் (Phonemes) பொருளை மாற்றும் ஆற்றலுடையவை எனத் தெளியலாம். மேற்சொன்ன வாக்கியத்தின் ஒலியன்களை /அ+வ்+அ+ன்/, /ம்+அ+ர்+அ+த்+த்+ஐ/, /வ்+எ+ட்+ட்+இ+ன்+ஆ+ன்/ எனக் குறிக்கலாம். வாக்கியத்தின் குரலிசையும் (Intonation) வினா, ஏவல் என வாக்கிய அமைப்பிற்கேற்றவாறு மாறும்.

பொருளியல் நிலை: வாக்கியம் பகு சொற்களையும் பகாச் சொற்களையும் கொண்டு அமையும். மேற்கண்ட வாக்கியத்தில் மூன்று சொற்கள் அமைந்துள்ளன. 'அவன்', 'மரத்தை', 'வெட்டினான்' எனும் இம் மூன்று சொற்களுக்கும் இடையிலுள்ள உறவைத் 'தொடரியல் உறவு' (Syntagmatic Relations) எனலாம். 'அவன்' எனும் சொல்லை, 'நான், நீ, அவள்' போன்றவற்றாலும் 'மரத்தை' என்பதைப் 'பழத்தை, காயை' போன்றவற்றாலும், 'வெட்டினான்' என்பதை 'அடித்தான்', 'வெட்டுகிறான்', போன்றவற்றாலும் பதிலீடு செய்யலாம். இவ்வுறவு அடுக்கியல் உறவு (Paradigmatic Relation) எனப்படும்.

ஒவ்வொரு வாக்கியத்திற்கும் ஓர் அக அமைப்பும் (Deep Structure) ஒரு புற அமைப்பும் (Surface Structure) இருக்கின்றன என மாற்றிலக்கணம் கூறுகிறது.

அணுகுமுறை: ஒரு மொழியின் ஒலிகள், இலக்கணக் கூறுகள், சொற்கள் முதலியவற்றின் அமைப்பை ஆராய்வதற்காக உருவாக்கப்பட்ட ஓர் அணுகுமுறை. 'அமைப்பியல் அணுகுமுறை' (Structural Approach). மொழியை விளக்க அதன் அமைப்பையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்னும் அணுகுமுறைக்கு வித்திட்டவர் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த பெர்டினன்ட்டு டி சசூர் ஆவர் (Fertinant de Saussure). இவர் தம் ஆய்வில் மொழிப்புறவியல்பு (Extrinsic Approach) மொழி அகவியல்பு (Intrinsic Approach) என்னும் இரு அணுகுமுறைகளைக் கையாண்டார். இவற்றுள், மொழி அகவியல்பே மொழியமைப்பை விளக்க அடிப்படையானது.

மொழியமைப்பியல் அணுகுமுறை ஒரு மொழியின் அமைப்பை விளக்கும்போது அம்மொழியின் வரலாற்றைத் தன் ஆய்வில் சேர்ப்பதில்லை, அதனால் வரலாற்றுமுறை மொழியியல் (Diachronic Linguistics), நிலைமுறை மொழியியல் (Synchronic Linguistics) என்று இரு பிரிவுகளாகக் கொண்டு ஆராயத் தொடங்கினர்.

சசூரின் அமைப்பியல் அணுகுமுறையிலிருந்து வேறுபட்டு, மொழியியலார் மூன்று குழுக்களாகப் பிரிந்தனர். முதலாவதாக என். எஸ். துருபட்சுகோய், உரோமன் யாகோப்சன் ஆகியோரின் பிராக் குழு, செயற்பாட்டு மொழியியல் (Prague School–Functional Linguistics) எனும் பெயரில் ஆராயத் தொடங்கியது.

இரண்டாவதாக இலூயிசு எம்சுலேவின், கோபன்கேகன் குழு (Louis Hjelmslev), மொழிக்கணிதம் (Glossematics) என்னும் பெயரில் ஆராயத் தொடங்கியது.

மூன்றாவதாக இலியனார்டு புளூம் பீல்டு, ஏரிசு ஆகியோரின் அமெரிக்கக் குழு, விளக்க மொழியியல் (Descriptive Linguistics) எனும் பெயரில் ஆராயத் தொடங்கியது.

இம்மூன்று குழுக்களிலும் அமெரிக்கக் குழுவே அமைப்பு மொழியியலைச் சிறப்பாக வளர்த்தது. எல்லா மொழிகளுக்கும் பொருந்துமாறு ஒரு பொதுவான அமைப்பு விளக்கச் செய்முறையையும், விதிமுறைகளையும் உருவாக்கியவர் புளூம் பீல்டு ஆவார். ஒலிகள் சேர்ந்து சொற்பொருளை உருவாக்கும் முறைகளை ஆராய்வதையே மொழியியல் தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. அமைப்பியல் அணுகுமுறையில் மொழியமைப்பு ஒன்றுதான் சிறப்புத் தன்மை பெறுகிறது. சொற்பொருளாய்வைத் தன் ஆய்வில் சேர்ப்பதில்லை. எனவே, மொழி விளக்கத்திற்கான செய்முறைகளையே அமைப்பியல் அணுகுமுறை எனக் கூறலாம். இச் செய்முறைகளே மொழியமைப்பை ஆராய்வதற்கும், தரவுகளிலிருந்து (Data) ஓர் இலக்கணத்தை உருவாக்குவதற்கும் உதவுகின்றன.

அமைப்பு மொழியியலின் முதன்மையான குறிக்கோள்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில், இனத்தின் மொழியை விளக்குதல்; பேச்சு வழக்கை விளக்குதல்; சொற்களின் பொருளைவிட எளிதில் உணர்ந்து, நிறுவக்கூடிய மொழியின் அமைப்பை விளக்குதல்; முறையான புறவயம் சார்ந்த செய்முறைகளைக் கையாண்டு ஆராய்ந்து ஓர் இலக்கணத்தை உருவாக்குதல்; வருமுறைக் கூறுகளால் (Distributions) விளக்குதல்; மொழியை ஒலியனியல், உருபனியல், தொடரியல் எனப் பல நிலைகளாகப் பிரித்து ஆராய்தல் ஆகியனவாகும்.

இக் குறிக்கோள்களைத் தெளிவுறுத்த ஒவ்வொரு நிலையிலும் வரும் மிகச் சிறிய கூறுகளையும் விளக்க வேண்டும். மேலும் அக்கூறுகளைப் பாகுபாடு செய்ய வெண்டும். ஒவ்வொரு பிரிவிலும் வருகிற கூறுகளை

இணைக்கத் தேவையான விதிகளையும் தர வேண்டும்.

சான்று: ஒலியனியலின் சிறுகூறு 'ஒலியன்கள்'. /க/ என்பது மூன்று சூழல்களில் மூன்று விதமாக ஒலிக்கப் படுகிறது. சொல்முதலிலும் (கப்பல்), மெய் இரட்டித் தலிலும் (பக்கம்), வல்லினமெய் மயக்கங்களிலும் (கடற்கரை) (k) என்றும்; மெல்லினத்துடன் வரும் போது, (தங்கம், கண்கள்) (g) என்றும்; சொல் நடுவில் தனி உயிர்மெய்யாக வரும்போது (பகல், அகம்) (h) என்றும் ஒலிக்கப்படுகிறது. எனவே, /க/ மூன்று ஒலிகளின் தொகுப்பாகும். இதுவே ஒலியன் எனப் படுகிறது.

இவ்வாறு ஆராயும் ஒவ்வொரு நிலையும் அடுத்த உயர்நிலைக்கு அடிப்படையாகிறது. இத்துடன் வருமுறைகளையும் தரவேண்டும். மூன்று வருமுறைகள் உள்ளன. அவை, துணை நிலையாக வழங்கல் (Complementary), உறழ்வு நிலையாக வழங்கல் (Contrastive), கட்டில்லாமல் வழங்கல் (Free Variation) என்பனவாகும். இவ்வாறு ஆராய்வதற்குப் பதிலீடு செய்தல் (Substitution), அண்மை உறுப்புப் பகுப்பாய்வு (Immediate Constituent Analysis) என்று இரண்டு உத்திகள் உள்ளன.

மயக்கம்: ஒரு சொல் அல்லது ஒரு தொடர் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைத் தருதல் பொருட் பன்மையாகும். பொருள்கள் பலவாகக் கிடைப்பதன் விளைவே பொருள் மயக்கம் (Ambiguity). தொடர்களின் அமைப்பால் நேர்ந்தபொருள் மயக்கம் அமைப்பு மயக்கம் (Structural Ambiguity) எனப்படுகிறது. ஒலி (அல்லது எழுத்து), தொடரமைப்பு, சொல் ஆகிய மூன்றின் காரணமாகப் பொருள்மயக்கம் ஏற்படலாம்.

'புலிகொல் யானை' எனும் தொடரில் அமைப்பு மயக்கம் உள்ளது. 'புலியைக் கொன்ற யானை', 'புலியால் கொல்லப்பட்ட யானை' என்று இரு பொருள்கள் வருகின்றன. பொருள் மயக்கத்திற்குக் காரணம் இரண்டாம் வேற்றுமை உருபான '–ஐ', மூன்றாம் வேற்றுமை உருபான '–ஆல்' ஆகிய இரண்டும் மறைந்து நின்று பொருள் தருவதே என்பது தொல்காப்பியர் கருத்தாகும். இக்கால மொழியியலார் இதை வேறுவகையாக ஆராய்கின்றனர்.

இவ்வாறு பொருள்மயக்கம் ஏன் வருகிறது என்பதற்குரிய தெளிவான காரணத்தை மரபு இலக்கணமும், விளக்க மொழியியலும் (Descriptive Linguistics) தரவில்லை. இந்நிலையில் இவற்றைச் சிறப்பாக மாற்றிலக்கணமே(Transformational Linguistics) விளக்குகிறது.

வழுவற்ற வாக்கியங்களை உருவாக்குவதனை விளக்குவதாலும் அதற்குத் தேவையான விதிகளைத் தருவதாலும் மட்டும் ஒரு மொழியின் இலக்கணம் சிறப்படைந்து விடுவதில்லை. அது விளக்க வேண்டிய பகுதிகள் மிகுதியாக உள்ளன. சில வாக்கியங்களுக்கு ஒரே அமைப்பு இருந்தாலும் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள் இருப்பது; வெவ்வேறு அமைப்புகளைக் கொண்டிருந்தாலும் ஒரே பொருளைத் தருவது; வாக்கிய அமைப்புகள் வேறுபட்டிருந்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்பிருப்பது போன்ற பலவற்றையும் இலக்கணம் விளக்க வேண்டும்.

ஒரு கூற்றில் (Utterance) அமைந்திருக்கும் இலக்கணக் கூறுகளையும் அவற்றின் இயல்புகளையும் ஒன்றுக்கொன்றுள்ள தொடர்புகளையும் அமைப்பு விளக்குகிறது. இவ்வாறு அமைகின்ற வாக்கியத்திற்கு 'அகஅமைப்பு' (Deep Structure), 'புறஅமைப்பு' (Surface Structure) என இரண்டு அமைப்புகள் உள்ளன என மாற்றிலக்கணம் கூறுகிறது. அகஅமைப்பில் மாற்று விதிகள் (Transformational Rules) செயற்பட்டுப் புற அமைப்பு வருகிறது. இப்புற அமைப்பே நாம் பார்க்கும் அல்லது கேட்கும் வாக்கியமாகும். சில வேளைகளில் இரண்டு அல்லது மேற்பட்ட அக வாக்கியங்களிலிருந்து ஒரேயொரு வாக்கியத்தையோ தொடரையோ மாற்றுவிதிகள் வருவிப்பதுண்டு. இவ்வாறு இரண்டு அடிப்படை வாக்கியங்களிலிருந்து வருகிற ஒரு வாக்கியத்தில் பொருள் மயக்கம் இருக்கும். இது அமைப்பொற்றுமை (Constructional homonemity) எனப்படும்.

'புலிகொல் யானை' இருபொருளைத் தருவதற்கு, 'புலி யானையைக் கொன்றது'; 'யானை புலியைக் கொன்றது' எனும் இரண்டு அக வாக்கியங்களிலிருந்து அத்தொடர் வந்ததுதான் காரணமாகும்.

இதைப்போன்றே 'நான் ஓர் அழகான பெண்ணையும் ஆணையும் பார்த்தேன்' என்ற வாக்கியத்தில் அழகான எனும் பெயரடை 'பெண்' எனும் பெயருக்கு அடையாக வந்தால் ஒரு பொருளையும், பெண் - ஆண் எனும் இரு பெயர்களுக்கும் அடையானால் இன்னொரு பொருளையும் தருகிறது. இங்கும் இவ்வாறு பொருள் மயக்கம் ஏற்பட்டதற்கு வாக்கியத்தின் அகஅமைப்பு வேறுபாடுகளே காரணம் ஆகும். விளக்க மொழியியலார் இதைப் போன்ற வாக்கியங்களின் பொருள் மயக்கத்தை அண்மை உறுப்புப் பகுப்பாய்வால் (Immediate Constituent Analysis) விளக்குவர்.

ஒலி காரணமான பொருள் மயக்கத்திற்குச் 'செம்பொன்பதின்றொடி என்னும்' சொற்றொடரைக் கூற

லாம். 'செம்பு + ஒன்பதின் + தொடி; 'செம்பொன் + பதின் + தொடி' என இருவகையாகப் பிரிப்பதற்கு ஒலியும் புணர்ச்சியும் காரணமாகும்.

சொல் காரணமான பொருள் மயக்கத்திற்குப் 'படி' எனும் சொல்லை எடுத்துக் கொள்ளலாம். அது பெயராக வரும்போது 'படிக்கட்டு'; 'அளவு' என்றும், வினையாக வரும்போது 'படித்தேன்' 'படிந்தது' என்றும் இரு பொருள்களைத் தரும்.

பொருள் மயக்கத்தை நீக்குவதற்குப் பல வழிகள் கூறப்பட்டுள்ளன. அமைப்பு மயக்கத்தைப் போக்க, மறைந்து நின்று பொருள்தரும் இலக்கணக் கூறு களை வெளிப்படையாகத் தருதல், பேசுவோரது கருத்தைத் தெரிந்து கொண்டு அதற்கேற்றவாறு தெளிதல், வாக்கிய அமைப்பின் சூழலுக்கேற்றவாறு புரிந்து கொள்ளுதல் முதலியன தேவையாகும்.

அமைப்பு மயக்கமே இலக்கணங்கள் சுட்டும் 'சிலேடை' தரும் பொருள் வேறுபாட்டிற்குக் காரணம் ஆகும். பி.ந.

**அமைப்புக் கிளைமொழியியல்:** ஒரு மொழிக்கு எத்தனை கிளைமொழிகள் உள்ளன என்பது அம்மொழி எவ்வளவு மக்களால் எவ்வளவு காலமாக எந்தெந்த இடங்களில் பேசப் படுகிறது என்பதனைப் பொறுத்துள்ளது. ஒரு மொழியின் வழக்கில் உள்ள பல கிளைமொழிகள் ஒன்றுக்கொன்று எந்த அளவில் புரிந்து கொள்ளும் நிலையில் உள்ளன; அமைப்பால் ஒற்றுமை உடையன எவை, வேறுபட்டன எவை என்பதை அறியவேண்டும். இதற்கு உதவியாக அமைவது அமைப்புக்கிளை மொழியியல் (Structural Dialectology) ஆகும். கிளை மொழிகளின் அமைப்பிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அறிய அக் கிளைமொழிகளை ஒப்பீடு செய்யவேண்டும்.

ஒப்புநோக்க எடுத்துக்கொள்ளப்படும் கிளை மொழிகள் அனைத்தும் ஒரே நெறிமுறையில் ஆராய்ந்து விளக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு கிளை மொழிக்கு விளக்க மொழியியல் முறையில் இலக்கணம் அமைந்து, மற்றொரு கிளைமொழிக்கு மாற்றிலக்கண முறையில் அது அமைந்திருக்குமானால், அவ்விரண்டினையும் ஒப்பிடுவது இயலாது. ஆதலால்தான் ஒப்புநோக்கஎடுத்துக்கொள்ளப்படும் கிளைமொழிகள் அனைத்தும் ஒரே நெறிமுறையில் இலக்கணம், சொல்லகராதி முதலியவற்றைப் பெற்றிருக்கவேண்டும்.

ஒரே குடும்பத்தில் உள்ள இரண்டு அல்லது பல மொழிகளை ஒப்பிடுதல் என்பது முன்னரே ஒப்பிலக்கண முறையில் கையாளப்பட்டு வருகிறது. 'ஒரு குடும்பத்தைச் சார்ந்த மொழி வழக்குகளுக்குத் தமக்கென முந்திய ஒருங்கிணைந்த நிலை ஒன்று உண்டு எனக் கணித்துக்கொண்டு, ஒலிமாற்ற விதிகள் வழியாக அவற்றின் இப்பொழுதுள்ள வடிவம், முன்னர்ப் பெற்றிருந்ததாகக் கற்பனை செய்யும் வடிவம் ஆகிய வற்றை நுணுகி ஆராய்ந்தனர். இதன் வாயிலாக இருமொழிகளுக்கும் உள்ள அமைப்பு, ஒலி முதலியன வற்றின் ஒற்றுமை வேற்றுமைகளை அறிந்து மொழி பயிற்றுவிக்க வழி கோலினர். இதேபோல் கிளை மொழியின் ஒப்பீட்டியலில் உள்ள குறைகளை நீக்கி அவைகளின் பொதுத்தன்மை, ஒவ்வொன்றின் பிறப்புத்தன்மை முதலியவற்றைத் தெளிவாக எடுத்துக் காட்டும் விதத்தில் ஒரு புதிய கொள்கையை வகுக்க வேண்டியது இன்றியமையாததாயிற்று. அமைப்பு மொழியியலாரின் கொள்கைப்படி, இரண்டு அமைப்புகள் முழுவதும் ஒத்தனவாக இருக்க முடியும்; அல்லது இரண்டும் மாறுபட்டனவாக இருக்க முடியும். இவற்றைத் தவிர்த்து இரண்டும் ஒரு பாதி ஒற்றுமையும் ஒருபாதி வேற்றுமையும் உடையனவாக இருக்க முடியாது என்றனர். ஆனால் 'கிளைமொழியியல் என்பது தொடர்புள்ள மொழிக்கூறுகளையும் ஒன்றிற்கு இணையான மொழி வழக்குகளையும் கண்டறிவதாகும்' என வில்லியம் மூல்டன் கூறுகிறார். கிளைமொழியியலின்அடிப்படைக் கொள்கையே தொடர்புடைய அமைப்பும் வேற்றுமை அமைப்பும் கலந்து விளங்குவதாகும்.

ஆதலால் அமைப்பு மொழியியலாரின் இந்த இக்கட்டான கொள்கையிலிருந்து விடுபட்டுச் செயல் திறனுடைய புதிய கொள்கை ஒன்றினை யூரில் வெயின்டிரிக்கு உருவாக்கினார். இதுவே இருமை முறை எனப்படும். இம்முறை ஒப்பீடு இரண்டு கிளை மொழிகளை ஒப்பிடமட்டுமே பயன்படும் என்று கொள்ள வேண்டியதில்லை. இம் முறையின் அடிப்படையில் பல கிளைமொழிகளையும் ஒரே நேரத்தில் ஒப்பிட்டு ஆராயலாம்.

இருமை முறை வாயிலாக இதுவரை அறிய முடியாத பல புதுச் செய்திகளை அறிய முடிகிறது. வழக்கமாக இருந்துவந்த பழைய ஒப்பீட்டுமுறை எந்த அளவு குறைபாடானது என்பதை இதன் வாயிலாக அறிந்துகொள்ளலாம். ஒரு மொழிக் கூற்றினை ஒன்றுக்கு மேற்பட்ட பல நிலைகளில் ஒப்பிடல் வேண்டும் என்று பால்மர் கூறினார். இது கிளை மொழிகளை ஒப்பிடுதலுக்கும் பொருந்தும்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் வழங்கும் மீனவர் பேச்சுத்தமிழ், அரிசனர் பேச்சுத்தமிழ் ஆகிய இரண்டு மொழிகளின் ஒலியன்கள், விளக்க மொழியியல் அடிப்படையில் அமைக்கப் பட்டவை. அவற்றின்

துணைகொண்டு இரு கிளைமொழிகளிலும் உள்ள ஒலியன்களை இருமை முறையில் ஒப்பிட்டுக் காணலாம்.

மீனவர் பேச்சு (மீ)
அரிசனர் பேச்சு (அ)

உயிரொலியன்கள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீ. | அ | ஆ | இ | ஈ | உ | ɨ | ஊ | எ | ஏ | ɛ | ஒ ஓ |
| அ. | அ | ஆ | இ | ஈ | உ | | ஊ | எ | ஏ | | ஒ ஓ |

மெய்யொலியன்கள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மீ. | க் | ச் | ட் | த் | ப் | ஜ் | ஷ் | ம் | ன் | ண் | ஞ் | ங் | ல் | ள் |
| அ. | க் | ச் | ட் | த் | ப் | | ஷ் | ம் | ன் | ண் | | | ல் | ள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மீ. | ழ் | ர் | ற் | வ் | ய் |
| அ. | ழ் | ர் | | வ் | ய் |

இவ் வட்டவணைகளிலிருந்து மீனவர் பேச்சில் மட்டும் / ɛ, ɨ, ஜ் ஞ், ங், ற் / ஒலியன்கள் உள்ளன என்று அறியமுடிகிறது. இந்த ஒலியன்களை நீக்கி விட்டு எஞ்சியவற்றை நோக்கினால் அவை அனைத்தும் எண்ணிக்கையாலும் இயல்பாலும் ஒத்து விளங்குகின்றன என்பது புலனாகும். இருந்தாலும் அந்த ஒப்புமை முழுமையானதா என்று காணவேண்டும். அவை உண்மையில் முழு ஒப்புமை உடையனவாக இருந்தால், அதாவது, அ, ஆ, இ என்பன இரு கிளை மொழிகளிலும் ஒன்றாக இருந்தால் - அவற்றைப் பின் வருமாறு காட்டுதல் கூடும்.

மீ. அ. // அ ≈ இ ≈ உ ≈ எ ≈ ஒ ≈ ஆ ≈ ஈ ≈ ஊ ≈ ஏ ≈ ஓ //

| | | | |
|---|---|---|---|
| மீனவர் பேச்சு | துணி, | தோணி, | அவன் |
| அரிசனர் பேச்சு | துணி, | தோணி, | அவன் |

இவ்விரு கிளைமொழிகளிலும் மேலே உள்ள மூன்று எடுத்துக்காட்டுகளும் ஒத்த வடிவங்கள் போன்றுள்ளன. ஆனால், கீழே கொடுத்துள்ள பட்டியலை நோக்கும்போது அவை மாறுபடும் விதம் நன்றாகத் தெரிகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| மீ. | ஓதம், | ஆழு, | ஆது, | கெழுத்தி |
| அ. | ஓரம், | ஆள், | ஆறு, | கெளுத்தி |

முதல் பட்டியலில் /த்/ ஒலியன் துணி, தோணி என்ற சொற்களில் இரு கிளைமொழிகளிலும் ஒத்துள்ளது. இரண்டாம் பட்டியலில் மீனவர் பேச்சில் உள்ள /த்/ அரிசனர் பேச்சில் உள்ள /ர், ற்/ என்ற ஒலியன்கட்கு இணையாக இருக்கிறது. அவ்வாறானால், ஒலியனியல் அட்டவணையில் உள்ள உருவம், எண்ணிக்கை ஆகிய ஒற்றுமையின் அடிப்படையில் அவை ஒத்த அமைப்பினைக் கொண்டவை எனக் கூறமுடியாது. எனவே ஒலியன்களைத் தனித்தனியே மட்டும் ஒப்பிடாமல், அவை வருமிடங்களையும் ஒப்பிட்டுக் காண்பதுடன், அவை சொல் நிலையில் வழங்கும் இயல்புகளையும் ஒப்பிடுதல் நல்லது. இருமை முறை இதனையே வற்புறுத்துகிறது.

உயிரொலியன்கள்.

மீ. அ. // இ ≈ ஈ ≈ $\dfrac{\text{மீ. /எ} \sim \text{ɛ}}{\text{அ. /எ/}}$ ≈ ஏ ≈ அ ≈ ஆ

ஒ ≈ ஓ ≈ $\dfrac{\text{மீ. /உ} \sim \text{இ/}}{\text{அ. /உ/}}$ ≈ ஊ

மெய்யொலியன்கள்

மீ. அ. // ப் ≈ $\dfrac{\text{மீ. / த்} \sim \text{ர்} \sim \text{ற்}}{\text{அ. / த் /}}$

≈ ட் ≈ $\dfrac{\text{மீ. / ச்} \sim \text{ஜ்/}}{\text{அ. / ச் /}}$ ≈

ஷ் ≈ ம் ≈ ண் ≈ $\dfrac{\text{மீ. / ன்} \sim \text{ஞ்} \sim \text{ங்}}{\text{அ. / ன் /}}$

≈ ல் ≈ $\dfrac{\text{மீ. /ழ்} \sim \text{ள்}}{\text{அ. /ள்/}}$ ≈

ழ் ≈ $\dfrac{\text{மீ. /ர்} \sim \text{ற்} \sim \text{த்/}}{\text{அ. /ர்/}}$ ≈ ல் ≈ ய்

இப்படத்தில் உள்ளவற்றை விரித்துக் கூறினால் ≈ இ ≈ என்பது இகரம் மீனவர் பேச்சில் எந்தெந்த சொற்களில் எந்தெந்த இடங்களில் வருகிறதோ, அதே சொற்களில் அதே இடங்களில் அரிசனர் பேச்சிலும் வரும்.

≈ $\dfrac{\text{மீ. /எ—ɛ}}{\text{அ. /எ/}}$ என்பது அரிசனர் பேச்சில் எகரம் வருமிடங்களில் மீனவர் பேச்சில் எகரம் அல்லது ஒலிப்புடைய ɛ வரும் என்பதைக் குறிக்கும். அதாவது மீனவர் பேச்சில் இரண்டு ஒலியன்கள் வருமிடங்களில், அரிசனர் பேச்சில் ஒரே ஒலியன் வருகிறது. இவைகளை முறையே ஒத்த இணைகள்(எ ≈ எ) மாறுபட்ட இணைகள் (எ≈ɛ) எனலாம்.

ஒத்த இணைகள்

| | மீனவர் பேச்சு | அரிசனர் பேச்சு |
|---|---|---|
| /அ/ | கரண்டி | கரண்டி |
| /ஆ/ | ராசா | ராசா |
| /இ/ | கிழி | கிளி |
| /ஈ/ | மீதி | மீதி |
| /உ/ | உரி | உரி |
| /ஊ/ | தூறி | தூரி |
| /எ/ | எலி | எலி |
| /ஏ/ | ஏத்தொம் | ஏத்தொம் |

மாறுபட்ட இணைகள்

| | | | |
|---|---|---|---|
| /ழ்/ | தேழு | /ள்/ | தேளு |
| | கொவ்ழெ | | கொவ்ளெ |
| | ராசாழி | | ராசாளி |
| | ஆழு | | ஆளு |
| /ப்/ | சிறு பானெ | /வ/ | சிறுவானெ |
| /ஞ்/ | மஞ்செ | /ன்/ | மன்செ |
| /த்/ | அதெவான் | /ர்/ | அரெவான் |

இங்கு எடுத்துக் காட்டிய சொற்களில் ஒலியன்கள் சொற்பொருளிலும் வடிவிலும் வருமிடங்களிலும் தனித்தனி ஒப்புமை பெற்றிருக்கின்றன. பழைய முறையில் ஒலியன் வடிவம் மட்டுமே ஒப்பிடப்பட்டது. ஆதலால் அது வருமிடத்தாலும் பிற ஒலியன்களுடன் கூட்டுச்சேரும் முறையாலும் வேறுபட்டு விளங்குவதைக் காட்டாததால் பழைய ஒப்பீட்டு முறை குறைபாடு உடையதாக இருந்தது. மீனவர் பேச்சிலும் அரிசனர் பேச்சிலும் ளகரமும் ழகரமும் உண்டு. ஆனால், இரு கிளைமொழிகளிலும் அவை ஒத்த இயல்புடையன என்று கூறமுடியாது. ஏனெனில் மீனவர் பேச்சில் ளகரம் இரட்டித்தே வரும். எடுத்துக்காட்டாக 'வெள்ளி', 'பள்ளம்' என்பன. ஆனால், தனித்து வருமிடங்களில்லை. அது இன்று ழகரமாக மாறிவிட்டது. இம்மாற்றம் அரிசனர் பேச்சில் நிகழவில்லை.

இருமை முறையில் ஒப்பிடும்பொழுது மட்டுமே இதனை அறிய முடிகிறது.

| மீனவர் | அரிசனர் |
|---|---|
| ள்ள் | ள்ள் |
| ழ் | ள் |
| ழ் | ழ் |

$$\text{மீ. அ.} \;//\; \text{ழ்} \;\approx\; \frac{\text{மீ.} \;/-\text{ழ்}-/}{\text{அ.} \;/-\text{ள்}-/} \;\approx\; \frac{\text{மீ.} \;/\text{ள்ள்}/}{\text{அ.} \;/\text{ள்ள்}/} \;//$$

ஆகும்

தனி ஒலியன்கள் மட்டுமேயன்றிக் கூட்டு ஒலியன்கள் அல்லது அடுத்து வரும் இரண்டு அல்லது மூன்று ஒலியன்களையும் இம்முறையில் ஒப்பிடலாம். மொழியின் எந்த ஒரு கூற்றினையும் இம்முறையில் ஒப்பிடலாம். எனவே புற அமைப்பில் மொழிக்கூறுகள் வேறுபட்டனவாக இருந்தாலும் தொடர் அமைப்புப் பெற்றுள்ளன என்பது அமைப்புக் கிளைமொழியியலார் கருத்து. இதனடிப்படையில் மொழிக் கூறுகள் உறுதிப் படுத்தப்பட்ட செயல்களோடு வேறுபடுகின்றன. மொழியின் இரு நிலையில் குறைந்த அளவு ஒற்றுமை இலக்கண முறையாகவும், குறைந்தஅளவு வேற்றுமை ஒலிநிலை அல்லது சொல் நிலை முறையாகவும் இருக்கிறது. எனவே மொழி வழக்குகளில் ஒற்றுமை வேற்றுமைகளைத் தெரிந்துகொள்ள உதவுவது அமைப்புக் கிளைமொழியியலே ஆகும். கே.அ.

துணை நூல்கள்:

**William. G. Moulton.,** "Structural Dialectology", Language, 1968.

**Uriel Weinreich,** "Is a Structural Dialectology Possible", 1954.

**Srinivasa Varma, G.** "Kilaimoliyiyal", Annamalai nagar, 1977.

**அமைப்புக்கோட்பாடு**: இக் கோட்பாட்டின் படி உள்ளத்திலுள்ள நிலைகளும் அவற்றின் அளவுகளுமே உளவியலின் ஆராய்ச்சிப் பொருள்களாகும். உளக்கூறுகளின் இயல்புகளையும் அளவுகளையும் அறிவதே உளவியலின் இறுதி நோக்கம் ஆகும். இதனை அகக்காட்சிக் கொள்கை என்றும் கூறலாம். இக்கொள்கையே உளவியலை விரிவு படுத்துதலில் முதன்முதலாகத் தோன்றியது. இதன் தோற்றுவிப்புக்கு உண்ட்டு(Wilhelm Wundt) காரணமாக இருந்தார். ஆயினும் திச்சனரால் (E.B. Titchner, 1867-1977) இது ஒரு நிலையான கொள்கையாக நிலைநிறுத்தப்பட்டது. அகக்காட்சிக் கொள்கை, உளவியலின் எல்லை, பிரிவுகள் ஆகியவை பற்றிச் சில நிலையான கருத்துகளைக் கொண்டுள்ளது. விரைவாக வளர்ந்து வரும் உளவியல் துறை ஒரு பயன் முறை அறிவியலாகத் திகழ்வதில் அமைப்புக் கோட்பாடு (Structuralism) இடையூறாக நிற்கிறது. எனவே, நனவு நிலையின் தன்மையையும் அமைப்பையும் ஆய்கின்ற தூய அறிவியலாகத் திகழ்ந்தால் மட்டுமே, உளவியல் ஒரு

பயனுள்ள அறிவியலாக வளர முடியும் என்று திச்சனர் எடுத்துரைத்தார். இவர் கூற்றுப்படி, புலன் உணர்ச்சிகள், சாயல்கள் ஆகிய அடிப்படை மூலப் பொருள்களைக் கொண்டு நனவு நிலை உண்டாக்கப் படுகிறது எனலாம்.

திச்சனர், உளவியலின் நோக்கம், அனுபவ நிலையைப்பற்றிய என்ன? எப்படி? ஏன்? எனும் மூன்று கேள்விகளுக்கும் விடை தருவதேயாகும் என எண்ணுகிறார். உளச்செயல்முறையில், அகக்காட்சி மூலம் தெரிந்து கொள்வது என்ன? எப்படி ஒரு சிக்கலைப் பகுத்தறிவது? எவ்வாறு உளச்செயல்முறைகள் ஒன்றற்கொன்று இணைந்து செயல்படுகின்றன என்பனவற்றை அறிவதே உளவியலின் நோக்கமாக இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். உண்ட்டின் கருத்தினைப் போன்றே திச்சனர் உளவியலை உள வேதியியல் என்று கருதுகிறார். திச்சனர், உடல்–உள்ளம் என்பது வேறுபட்ட, ஆனால், இணைந்த தன்மையுடைய இரு கூறுகள் என்பதை வலியுறுத்துகிறார். உளவியல் துறையின் உதவியால் நனவு அனுபவங்களை மட்டுமே அகக்காட்சியின் மூலம் உணரமுடியும் என்று வலியுறுத்தி வந்ததால் மனித நடத்தைகள் பற்றிய பல்வேறு சிக்கல்களையும், மனித வேறுபாடுகளையும் இத்துடன் இணைத்துக் கூறவில்லை. ஆதலின் விலங்கு உளவியல், குழந்தை உளவியல் ஆகியவற்றைத் துறையின் பகுதிகளாக இக்கோட்பாடு இணைக்கவில்லை. பிற்காலத்தில் இக்கோட்பாட்டைக் குறைகூறியதற்கு முதன்மையான காரணம் இதன் குறுகிய வரையறையாகும். சா. சா.

துணை நூல்கள்:


**Woodworth, R.S. & Marquis, D.G.,** "Psychology", Methusen, London, 1959.

**Flugel, I.C.,** "A Hundred years of Psychology", Ronald, Macmillan, New York, 1933.

**Woodworth, R.S.,** "Contemporary Schools of Psychology", Ronald, New York, 1948.

**Chapline and Krawice,** "Systems and Theories of Psychology", Holt Rinehart and Winston, 1974.


**அமைப்பு முறைவழிக் கற்பித்தல்:** கற்பித்தலுக்கான குறிக்கோளை முறைப்படி இனங்கண்டு, அதை நிறைவேற்றுவதற்காக அறிவியல் நுட்பம் சார்ந்த வகையில் செயற்படும் தன்மையே, அமைப்பு முறை வழிக் கற்பித்தலாகும் (Systems Design in Instruction). ஒரு குறிப்பிட்ட கற்பித்தல் செயலைக் குறிப்பிட்ட கால அளவில் நிறைவேற்ற உதவும் ஒரு திட்டமே அமைப்பு முறை (Systems Design) எனப் படும். இம் முறையில் கற்பிக்கும் சூழல், கற்பிக்கும் முறை, கற்பித்தலுக்கு உதவும் துணைப் பொருள்கள் ஆகியவற்றை முன்கூட்டியே முடிவெடுத்தல் தலையாயதாகும். அமைப்புமுறை வழிக் கற்பித்தலில் மிகுதியாகக் கல்வித் தொழில் நுட்பவியல் (Educational Technology) பயன்படுத்தப்படுகின்றது. கல்வித்திடப் பொறிகளான (Educational Hardwares) கணிப்பொறி (Computer), தொலைக் காட்சிப் பெட்டி (Television) திரைப்பட ஒளியுருப்படிவுக் கருவி (Projector) ஆகியனவும், கல்வி மென் பொருள்களான (Educational Softwares) பாடநூல், ஆசிரியர் கையேடு போன்றனவும் கல்வித் தொழில் நுட்பவியலில் அடங்கும்.

கற்பித்தல் செயலை அடுக்கடுக்கான படிகளாகப் பகுத்து, ஒவ்வொரு படியிலும் குறிக்கோளுக்கும் குறிக்கோளை அடையக் கூடிய ஒவ்வொரு கற்பித்தல் நிகழ்ச்சிக்கும், அமைப்பு முறை வழிக் கற்பித்தலில் தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது.


அமைப்பு முறை வழிக் கற்பித்தலில் ஒரு பாடத்தையோ (Lesson) ஒரு தொடர் பயிற்சியையோ (Course), முழுக் கல்வித் திட்டத்தையோ (Curriculum) கற்பிக்க இயலும்.

அமைப்பு வகைகள்: அமைப்பு, திறந்த அமைப்பாகவோ (Open System) மூடிய அமைப்பாகவோ (Closed System) இருக்கலாம். செய்தவற்றையே செய்யக்கூடிய பெரும்பாலான தானியங்கி இயக்கத்தால் ஏற்படும் செயல்கள் பற்றிய அமைப்பை மூடிய அமைப்பு எனவும், நடத்தை இலக்குகளை ஒட்டி ஏற்படும் பிற அமைப்புகளின் செயல் விளைவுகளால் பாதிக்கப்படும் செயல்கள் பற்றிய அமைப்பைத் திறந்த அமைப்பு எனவும் குறிப்பிடலாம். கல்வி அமைப்பு ஒரு திறந்த அமைப்பாகவே செயற்படுகிறது.

அமைப்பின் உட்கூறுகள்: ஒவ்வொரு அமைப்பும் உள்ளீடு (Input), செயற்பாங்கு (Process), வெளியீடு (Output) என்ற அடிப்படையான உட்கூறுகளைப் பெற்றிருக்கிறது. இவ்வடிப்படை உட்கூறுகளின் கூட்டமைப்பைப் பின்வரும் படவிளக்கம் மூலம் எளிதில் காணலாம்.


உள்ளீடு ⟶ செயற்பாங்கு ⟶ வெளியீடு

பதனிடப்படாமல் முதலில் அளிக்கப்படும் பொருள்கள் உள்ளீடு என்றும், அம்மூலப் பொருள்களைப் பதனிடப்படுத்தும் முறை செயற்பாங்கு என்றும், பதனிடப்பட்ட பின் எண்ணிய விளைவுகளைப் பெற்ற பொருள்கள் வெளியீடு என்றும் வழங்கப் பெறும். இயற்கையான திறன்களோடு(உள்ளீடு) வரும் மாணவர், பள்ளியில் நிகழும் கற்பித்தல் (செயற்பாங்கு) மூலம் புதிய திறன்களோடு (வெளியீடு) வெளி வருவதும் ஓர் அமைப்பு ஆகும். பாடம் கற்பித்தபின், மாணவர் திறன்கள் அளந்தறியப்படுகின்றன. அத்திறன்கள், கற்பித்தலின் நோக்கங்களை எட்டியுள்ளனவா என்று ஒப்பீடு செய்யப்படுகிறது. இதன் அடிப்படையில் மறுபடியும் மாணவர்களுக்குக் கற்பித்தல் என்ற பின்னூட்டல் (Feed back) நடைபெறுகிறது. கல்வி கற்பித்தலில், ஆசிரியரே தம் கற்பித்தலை நேர் படுத்திக்கொள்ளக் கூடிய அமைப்பின் மாதிரியைப் பின்வரும் படம் விளக்குகிறது.





**கல்வி நிலையம் ஓர் அமைப்பு:** சமூக அமைப்பு என்பதை ஓர் அமைப்பாகக் கொண்டால் கல்வி என்பதை அதன் துணை அமைப்பாகக் கொள்ளலாம். கல்வியையே ஓர் அமைப்பாகக் கொண்டால் மேலும் அதைப் பல்வேறு துணை அமைப்புகளாகப் பிரிக்கலாம். பள்ளிக்கல்வி என்ற அமைப்பானது கல்வி என்ற அமைப்பின் துணை அமைப்பாகும்.

எடுத்துக்காட்டாக, கல்வி நிலையத்தை அமைப்பு எனக்கொண்டால், திட்ட இலக்குகள், திட்டங்கள் கட்டுப்பாடுகள் (Controls), விதிகள், விதிமுறைகள், அமைப்பின் கூறுகள், கற்பித்தலின் தொழில் நுணுக்கம், நிலையச் சூழல், மனிதச் செயற்பாடுகள் போன்றவை பள்ளி அமைப்பின் உள்ளீடு ஆகும். இவ்வுள்ளீடுகளின் ஒன்றிணைந்த உறவுகளின் செயற்பாட்டில் விளையும் பள்ளிச் சூழ்நிலை, வெளியீடு எனப்படும். இதனைப் பின்வரும் கருத்தியல் மாதிரி மூலம் அறியலாம்.




பள்ளிக்கூடத்தை ஓர் அமைப்பாகக் கொண்டால் வகுப்பறைப் பாடம் பயிற்றல் என்பது ஒரு துணை அமைப்பாகும். பின்வரும் வரிசை முறையான படங்கள், வகுப்பறைப் பாடம் பயிற்றலையும் அதன் வரிசை முறையான வழிகளையும் குறிக்கின்றன.




மாணவரின் நுழைவு நடத்தை என்பது, அம்மாணவர் கற்பித்தலுக்கு முன் இயல்பாகப் பெற்றுள்ள திறன்களைக் குறிக்கும். மாணவரின் நிறைவு நடத்தை என்பது, அம்மாணவர் கற்பித்தலுக்குப்பின் பெற்ற புதிய திறன்களைக் குறிக்கும்.

மாணவரின் நுழைவு நடத்தை (Entry Behaviour) உள்ளீடாகவும், பாடம் பயிற்றல் செயற்பாங்காகவும், மாணாக்கரின் நிறைவு நடத்தை (Terminal Behaviour) வெளியீடாகவும் கொண்ட பாடம் பயிற்றுதல் அமைப்பின் பல்வேறு நிலைகளைக் கீழ்க்கண்ட பட விளக்கம் மூலம் காணலாம்.

பாடம் பயிற்றல் — படிநிலைகள்



பள்ளிப்பாடம் பயிற்றல் ஓர் அமைப்பு ஆகும். மாணாக்கர்கள் தங்களுடைய அறிவு, திறன், திறமை, மனப்பாங்கு, ஊக்கம் எனப் பற்பல பண்பு நலன் களுடன் பள்ளிக்கு வருகின்றனர். இம்மாணாக்கர்களி டம் புதிய அறிவுத் திறன்கள், விரும்பத்தக்க மனப் பாங்கு, நிறை நலன்கள் ஏற்பட வேண்டும் என்பதே கல்வி கற்பித்தலின் திட்ட இலக்குகள். இத்தகு திறன் களை ''வெளியீடு'' ஆக மாணவர் பெறுவதற்கு ஆசிரியர், மாணாக்கர், பாடங்கள் என முக்கூற்று உறவு இன்றியமையாதது. இம்முக்கூற்று உறவைத் திட்டங்கள், மாதிரிகள், குறிக்கோள்கள், கட்டுப்பாடு கள், உத்திகள், மனிதச் செயற்பாடுகள், சூழ்நிலை என்ற பல்வேறு உட்கூறுகள் உண்டாக்குகின்றன. மாணவர்கள் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ''வெளியீடுகள்'' மாணவர்களிடம் ஏற்பட்டுள்ளனவா என்று அறிய முடிகிறது. மீள் கற்பித்தல் என்னும் ''பின்னூட்டல் வளையம்'' ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு உட்கூற்றிலும் விரும்பத்தகு கல்வி விளைவு கள் ஏற்படுத்த ஏதுவாக அமைகிறது.

கற்பித்தல் அமைப்பின் முதன்மையான கூறு களாகக் கருதப்படுபவை பல்வேறு பண்பு நலன்களு டன் கூடிய மாணாக்கர், ஆசிரியர் மற்றும் அனைத்துக் கற்பித்தல் நுட்பவியலின் கூறுகளும் ஆகும்.

ஆசிரியர் (பேசுநர்), மாணவர் (கேட்குநர்) என்ற இரு தலையாய உட்கூறுகளும் இடையறாத, ஒன் றோடு ஒன்று பின்னிய உறவு (Interaction) கொண் டுள்ளன என்பதே கற்பித்தல் அமைப்பு அணுகுவியலின் அடிப்படைத் தன்மையாகும். ஓர் அமைப்பிற்கு வரை வடிவம் (Design) கொடுக்கும் பொழுது ஆசிரியர்களின் எவ்வகையான பண்புகள் (Teacher Variables) இன்றி யமையாதவை? மாணவர்களின் எவவகையான பண்பு கள் (Learner Variables) தேவையானவையாக, ஏற்ற வையாகக் கருதப்பட வேண்டும்? எவ்வகையான வகுப்பறைப் பண்புகள் (Situational Variables) எடுத் துக் கொள்ளப்பட வேண்டும்? என்ற வினாக்கள் எப்பொழுதும் எழுகின்றன. மேலும் இக்கற்பித்தல் அமைப்பிற்கு எல்லைகளை எவ்வாறு வரையறுப்பது என்ற கேள்வியும் எழுகிறது.


கற்பித்தல் அமைப்பியலின் மற்றொரு சான்றாக, உளவியல் அடிப்படையில் அமைக்கப்பட்ட இராபர்ட்டு கிளேசர் (Robert Glaser) என்பாரின் கற்பித்தல் பற்றிய கருத்துரு மாதிரியைக் கூறலாம். பாடத்திட்டத்தின்படி பாடப் பகுதிகளை இம்முறை யில் ஆசிரியர் மாணவரின் திறன் வேறுபாட்டிற்குத் தகுந்தாற்போல வரிசைப்படுத்த வேண்டும். மேலும் இப்பாடப் பகுதிகளை அறிந்து கொள்ள மாணவர் களிடம் எவ்வகையான நிறைநிலைத் துலங்கல்கள் (கற்றல் திறன்கள்) ஏற்படும் எனத் தீர்மானித்தல் வேண்டும். பின், மாணாக்கரின் நுழைவு நடத்தைத் தகுதியிலிருந்து மாணாக்கர்களை நிறை நடத்தைக்குக் கொண்டு வருவதற்குக் கற்பித்தல் செயல்முறைகளை எவ்வகைத் துணைப் பொருட்களைக் கொண்டு எவ் வாறு நடத்துதல் வேண்டும் என்றும் ஆய்வு செய்ய வேண்டும். பின் இப்பாடம் கற்பிப்பதன் மூலமாக வரையறுத்த இலக்குகளை, மாணாக்கர்கள் தம் நிறை நிலை நடத்தையினை `வெளிப்படுத்தும் பாங்கினை அளவிடவும் மதிப்பிடவும் வேண்டும். கிளேசரின் கற் பித்தல் வரைபட விளக்கத்தைப் பின்வரும் கருத்தி யல் மாதிரி விளக்குகிறது.

**கற்பித்தல் அமைப்பின் வளர்ச்சி:** கல்வி இலக்கு களை அடைய வரையப்படும் எந்தக் கற்பித்தல் அமைப்பிலும் மூன்று அடிப்படை நிலைகள், வரைதல் (Design), வளர்ச்சி (Development), மதிப்பிடுதல் (Evaluation) ஆகியனவாகும்.

இம்மூன்று அடிப்படை நிலைகளிலும் காணப் படும் செயல்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்த லாம்.

1. இயலுமா என்பதை அறிய, சிறிய அளவில் செய்து பார்த்தல்; 2. செயல் பகுப்புகளை ஆய்தல்; 3. கற்றல் குறிக்கோள்களை விரிவுபடுத்தல்; 4. இறுதி நடத்தைத் தேர்வைத் தயாரித்தல்; 5. இறுதி நடத்தைத் தேர்வைத் தகுதிப்படுத்தல் (Validation); 6. கற்றல் குறிக்கோள்களைத் தகுதிப்படுத்தல்; 7. கல்வி வளர்ச்சிப்படிகளைத் தயாரித்தல்; 8. கல்வி வளர்ச்சி நிலைகளைத் தயாரித்தல்; 9. ஒவ்வொரு பாடத்தையும் தயாரித்தல்; 10. தயாரித்த பாடத் தைத் தகுதிப்படுத்தல்; 11. அமைப்பை மேற்கொள் ளல் மற்றும் தேர்விடல்; 12. மேல்தொடரல்.

**கல்வியில் அமைப்பு முறை:** கல்வியில் அமைப்பு முறை அணுகலைப் பயன்படுத்தும்போது நோக்கங்



கள் தெளிவாகக் குறிக்கப்படுகின்றன; அமைப்பில் ஈடுபடுவோரின் பங்குகளும் பொறுப்புகளும் தெளிவாகச் சுட்டப்படுகின்றன. பயனுடைய வழிகள் இனங்காணப்படுதலோடு இடையூறுகள் என்ன என்று முன்னரே தெளியப்படுகின்றன. பாடத் திட்டம் வரைதல், பயிற்றுவிக்கும் பொருள்கள், அவற்றைப் பயன்படுத்தல் முதலியன சிறந்த முறையில் அமைக்கப்படுகின்றன. பின்னூட்டல் வளையம், உள்ளீட்டையும், செயற்பாட்டையும் ஆராய்ந்து ஆசிரியர்கட்கும் மாணாக்கர்கட்கும் தேவைப்பட்ட மாற்றங்களை உடனுக்குடன் தெரிவிக்கிறது. ஜெ.கோ.பி.

துணை நூல்கள்:

**Albert F. Eiss**, ''Evaluation of Instructional Systems'', Gordon & Breach, Science Publishers, New York, 1970.

**Bangbart, Frank**. W., ''Educational System Analysis'', Collier Macmillan, London, 1969.

**Kaufman, R. A**, ''Educational System Planning'', Prentice Hall, New Jercy, 1972.

**அமைப்பு மொழியியல்** என்ற சிந்தனையை மொழியியலில் பல்வேறு கோணங்களில் அணுகலாம். மொழியியலில் பல உட்பிரிவுகள் உள்ளன. மொழியை அணுகும் முறைகளில் அது தனித்து இயங்குகிறது என்ற பாவனையில் அணுகுவது ஒரு முறை. மொழி சமுதாயத்தோடும் மனத்தோடும் தொடர்புடையதாக இருப்பினும், அவற்றினின்று அதனைப் பிரித்து அதன் அமைப்பை ஆராய முடியுமென்பது இவ்வணுகுமுறையாகும். ஆகையால் 'மொழியமைப்பை விவரிக்க ஒரு தனி அணுகுமுறையையும் கோட்பாட்டையும் உருவாக்க முடியு'மென்பது இக்கொள்கை உடையவர்கள் நம்பிக்கை. இரண்டாவது அணுகுமுறை மொழியைத் தனித்த ஒரு ஒழுங்காக (Autonomous System) அணுகாமல் சமுதாயம், பண்பாடு, மனம் முதலியவற்றுடன் தொடர்புபடுத்திக் காண்பதாகும். இவ்விரு அணுகுமுறைகளும் முற்றிலும் வேறுபட்டவையாகத் தோன்றினாலும் இவற்றை ஒருங்கிணைத்து ஒட்டுமொத்தமாகப் பார்ப்பது, மனிதனை மொழிவழிப் புரிந்து கொள்ளும் முயற்சியில் மிகத் தேவையாகிறது.

மொழி ஆய்வு என்பது, காலப் போக்கில் மொழி அடைகிற மாற்றங்களை மட்டும் குறிப்பது என்று கருதப்பட்டது. ஒலியியல், உருபியல், பொருண்மையியல் (Semantics) போன்ற நிலைகளில் ஏற்பட்ட மாற்றங்களை ஆராய்வது மொழி ஆய்வு என்று கூறப்பட்டது. மொழியை முழுமையாக வரலாற்று அடிப்படையில் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், பல்வேறு காலக்கட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு காலக்கட்டத்தையும் தனித்தனியாக விவரித்துக் காண வேண்டும். பின்னர், இவ்வாறு தனித்தனியாகப் பிரிக்கப்பட்ட காலக்கட்டத்தின் மொழியமைப்பை ஒப்பிட்டு, மொழியை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆகையால் மொழியியலில் சமதளப் (Synchronic) பார்வை வலியுறுத்தப்பட்டுச் சமதளப் பார்வையும் காலப் (Diachronic) பார்வையும் வேறுபடுத்திக் காட்டப்பட்டன. இதற்கு அடிக்கல் நாட்டியவர் சசூர் (Ferdinand De Saussure) என்னும் மொழியியல் அறிஞராவார்.

காலப் பார்வையில் மொழியைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யும் முன்னர்ச் சமதளப் பார்வையில் மொழியை முதலில் அணுகவேண்டும். சமதளப் பார்வையில் மொழியை விவரிக்க வேண்டும். மொழியின் அமைப்பு என்பதை எவ்வாறு புரிந்து கொள்வது? மொழியைப் பொறுத்தவரை, அமைப்பு என்று கூறும்பொழுது அதன் பல்வேறு நிலைகளையும் (Levels) உணர்ந்திருக்க வேண்டும். ஒவ்வொரு நிலையும் அதனதன் அலகுகளைக் (Units) கொண்டு விவரிக்கப்படுகிறது.


ஒலியனியல் நிலையில் (Phonological Level) ஒலியன்(Phoneme) என்பது விவரிப்பின் அலகாக உள்ளது. மொழியின் ஒலியியல் அமைப்பை விவரிக்க வேண்டு மென்றால், அம்மொழியில் உள்ள ஒலியன்களைக் கண்டுபிடிக்க வேண்டும். ஆகையால், அமைப்பு மொழியியல் கோட்பாடு (Structural Linguistic Theory) மொழியில் உள்ள ஒலியன்களைக் கண்டுபிடிப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளையும் வழிமுறைகளையும் வகுக்க வேண்டி வந்தது. இக்கொள்கைகளும் வழிமுறைகளும் ஒலியனியலுக்கும் ஒலியியலுக்கும் ஒரு குறிப்பிட்ட தொடர்பை நிறுவுகின்றன. ஒலியன் என்பது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றொலிகளைக் (Allophones) கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக /k/ என்ற தமிழ் ஒலியனுக்கு மூன்று மாற்றொலிகள் ( (k) (g) (h) ) உள்ளன என்று மொழியியல் அறிஞர்கள் கூறுவார்கள். இதைப் பின்வருமாறு காட்டலாம்.

ஒலியன்




மாற்றொலிகள்

இது மொழியின் ஒலி நிலைக்கும் (Phonetic level) ஒலியனியல் நிலைக்கும் காணப்படுகிற தொடர்பின் இயல்பைச் சுட்டுகின்றது. ஓர் ஒலியனுக்கு ஒரு மாற்றொலி மட்டுமிருப்பின் அதைப் பின்வருமாறு காட்டலாம்.




ஒரு மாற்றொலி ஓர் ஒலியனின் உறுப்பாகக் கருதப்பட்டால் அஃது எல்லா இடங்களிலும் அவ்வொலியனின் உறுப்பே. ஆனால், அமைப்பு மொழியியலுக்குள் சிலர் இக்கருத்தை ஏற்றுக்கொள்வதில்லை. குறிப்பிட்ட சூழல்களை அடிப்படையாக வைத்துக்கொண்டு ஓர் ஒலியை இரண்டு ஒலியன்களின் உறுப்பாகவும் கருதலாம். இச் சூழலைப் பின்வருமாறு விளக்கலாம்.




அமைப்பு என்பதை மொழியின் மையமாகக் கொண்டு பார்க்கும் பொழுது, முதலில் ஒவ்வொரு நிலையிலும் கண்டுபிடிக்கப்பட்ட அலகுகளுக்கிடையிலான தொடர்பை விவரிக்க வேண்டும். அடுத்து, மொழியின் எல்லா நிலைகளையும் தொடர்பு படுத்த வேண்டும். முதலில் அலகுகளுக்கிடையிலான தொடர்பை இரு பரிமாணங்களை அடிப்படையாகக் கொண்டு, மொழியின் ஒலியனியல் அமைப்பும் உருபியல் அமைப்பும் விவரிக்கப்படுகின்றன.

அலகுகளுக்கிடையே உள்ள தொடர்பை விவரிக்க அமைந்த இரு பரிமாணங்களில் ஒன்றை வாய்பாட்டுத் தொடர்பு(Paradigmatic Relationship) என்றும், மற்றொன்றைச் சேர்க்கை நிலைத் தொடர்பு (Syntagmatic Relationship)என்றும் கூறுவார்கள். பதிலிடு முறை (Substitution Method) என்ற செயல் முறையைப் பயன்படுத்தி இவ்விருவகைத் தொடர்புகளையும் விவரிக்க வேண்டியுள்ளது.

அமைப்பு மொழியியலின் விவரிப்பு, இவ்விரு தொடர்புகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்டது. உருபியல் நிலையை எடுத்துக்காட்டாகக் கொண்டு இதைப் பின்வருமாறு விளக்கலாம். ‘திறமையாக வாதிடும் மொழியியலாளர்’ என்னும் தொடரில் மொழியியலாளர் என்ற சொல், பெயர் (Noun) வகையைச் சார்ந்தது என்று கூறுவார்கள். பெயர் என்னும் வகைக்குள் அடக்கப்படும் சொற்கள் தொடரிலும் வாக்கியத்திலும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வருவதென்பது அவ்வகையின் இலக்கணக் கூறுகளுள் ஒன்று. மொழியியலாளர் என்னும் சொல் வருகிற இடத்தில் அரசியல்வாதி, பேராசிரியர், வழக்கறிஞர் போன்ற சொற்களைப் பயன் படுத்தித் தொடர்களைத் தோற்றுவிக்கலாம்.

திறமையாக வாதிடும் [ மொழியியலாளர்<br>பேராசிரியர்<br>வழக்கறிஞர்<br>அரசியல்வாதி<br>.<br>.<br>. ]

இவ்வாறு பதிலிடுமுறையைப் பயன்படுத்தி மொழியில் உள்ள சொற்களைச் சில இலக்கண வகைகளாகப் பிரிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட இலக்கண வகையுள் அடக்கப்படுகிற சொற்களின் இடையிலான தொடர்பு, வாய்பாட்டுத் தொடர்பு என்று கூறப்படுகிறது. ஒலியனியல் நிலையில் சொற்களின் முதலில் வருகின்ற ஒலியன்களை ஒரு வகையாகவும், இடையில் வருபவற்றை இன்னொரு வகையாகவும் இறுதியில் வருபவற்றை மற்றொரு வகையாகவும் பிரிப்பது, ஒலியன்களுக்கிடையிலான வாய்பாட்டுத் தொடர்பைக் காட்டுகிறது. மொழியின் எல்லா நிலைகளிலும் அலகுகளுக்கிடையிலான தொடர்பை, இம்முறையில் காட்ட முயல்வதனை வாய்பாட்டுத் தொடர்பு அடிப்படையில் அமைப்பை விளக்குவதாகக் கொள்வர்.

ஒலியன் நிலையில் சேர்க்கை நிலைத் தொடர்பைப் பின்வருமாறு விளக்கலாம். எல்லா ஒலியன்களும் எல்லா ஒலியன்களோடும் இணைந்து வருவதில்லை. சான்றாகத் தமிழில் மஞ்சள், அங்கம், பந்தம் போன்ற சொற்களைக் காணலாம். இவற்றில் ஞ்ச, ங்க,ந்த போன்ற ஒலியன்களின் சேர்க்கையைச் சொற்களில் தமிழ் அனுமதிக்கிறது. ஆனால் ஞ்க், ங்ச, ண்த, ம்த் போன்ற சொற்களின் சேர்க்கையை தமிழ் அனுமதிப்பதில்லை. வடமொழியில் க்ர, த்ர போன்ற சேர்க்கைகள் சொற்களில் உள்ளன. தமிழ் இத்தகைய சொற்களைப் பயன்படுத்தும்பொழுது அதன் ஒலியனின் சேர்க்கைக்குத் தக்கவாறு மாற்றிவிடுகிறது.

க்ராமம் ———→ கிராமம்

புத்ரன் ———→ புத்திரன்

காவ்ய ———→ காவிய

ஒவ்வொரு மொழியும் அதற்குரிய முறையில் ஒலியன்களின் சேர்க்கையை அனுமதிக்கிறது. இதனால் எல்லா ஒலியன்களும் எல்லா ஒலியன்களோடும் ஒரு மொழியில் இணைந்து வருவதில்லை என்பது தெரிகிறது. ஒலியன்கள் இணைந்து வருவதிலும் ஒரு சில கட்டுப்பாடுகள் (Constraints) உள்ளன.

இப்பொழுது சேர்க்கைநிலைத் தொடர்பைத் தொடரியல் நிலையில் விளக்கலாம். ஒரு குறிப்பிட்ட தொடருக்குள் உள்ள சொற்கள், ஒரு குறிப்பிட்ட வரிசை முறையில் வருகிற கட்டுப்பாடும் இத்தொடர்பைச் சேர்ந்ததுதான். எடுத்துக்காட்டாக, 'அந்த அழகிய மலர்' என்னும் தொடரை எடுத்துக் கொள்ளலாம். இதில் அழகிய என்ற சொல் மலர் என்ற பெயருக்கு முன்னால் வருகிறது. மலர் என்ற பெயரை அடுத்து அழகிய என்ற சொல் பெயர்த் தொடரில் (Noun Phrase) வரத் தமிழ் அனுமதிப்பதில்லை. தொடர் வழுவாகக் கருதப்படும். வாக்கிய நிலையிலும், பல்வேறு இடங்களில் வருகின்ற சொற்களுக்கிடையேயும் இத்தகைய சேர்க்கை நிலைத் தொடர்பைக் காணலாம். மேலே சுட்டிய தொடரில் அடுத்தடுத்து வருகிற சொற்களுக்கிடையிலான தொடர்பு சுட்டப்பட்டது. சேர்க்கை நிலைத் தொடர்பை வாக்கியத்தில் அடுத்தடுத்து வருகிற சொற்களுக்கிடையில் மட்டுமன்றி அடுத்தடுத்து வராமல் இடைவிட்டு வருகிற சொற்களுக்கிடையிலும் காணலாம். சொற்களுக்கிடையில் மட்டுமன்றிச் சொற்களுக்கும், விகுதிகளுக்குமிடையில்கூட இத்தொடர்பு காணப்படலாம்.

கண்ணன் நேற்று வந்தான்.

சோம்சுகி நாளை போராட்டத்தில் குதிப்பார்.

மேற்கண்டவற்றுள் முதல் வாக்கியத்தில் உள்ள 'நேற்று' என்ற சொல்லுக்கும் வினையில் உள்ள 'ந்த' என்ற விகுதிக்கும் சேர்க்கை நிலைத் தொடர்பிருக்கிறது, இதுபோன்றே இரண்டாம் வாக்கியத்தில் உள்ள 'நாளை' என்பதும் 'ப்ப' என்பதும் சேர்க்கை நிலைத் தொடர்பில் உள்ளன. ஆனால், 'கண்ணன் நேற்று வருவான்;'சோம்சுகி நாளை போராட்டத்தில் குதித்தார்' என்னும் வாக்கியங்களில் நேற்று என்பது வ் என்பதுடனும் நாளை என்பது த்த என்பதுடனும் சேர்க்கைநிலைத் தொடர்பில் இயைந்து வருவதில்லை; ஆகையால் இவை வழு வாக்கியங்கள்.

இத்தகைய தொடர்பை வாக்கியத்தில் எழுவாயாகச் செயற்படுகிற பெயருக்கும் வினையில் வருகின்ற விகுதிக்கும் இடையிலும் காணலாம். 'சித்திரா சிரிக்கிறாள்' 'ஆனந்த் படிக்கிறான்' 'சித்திரா சிரிப்பான்' 'ஆனந்த் படிக்கிறாள்' மேற்கண்டவற்றுள் முதல் வாக்கியத்தில் வரும் சித்திரா என்பது பெண்ணைக் குறிக்கின்ற பெயர்ச் சொல்; இது எழுவாயாகச் செயற்படுவதால் – ஆள் என்ற விகுதி வினையோடுவருகிறது. இவ்விதி 'சித்திரா சிரிப்பான்', 'ஆனந்த் படிக்கிறாள்' ஆகிய வாக்கியங்களில் மீறப்படுவதால் அவை வழுவாக்கியங்கள். எழுவாய்க்கும் வினையோடு வருகிற விகுதிக்குமிடையே உள்ள தொடர்பு சேர்க்கை நிலைத் தொடர்பென்று கூறப்படும்.


தொடரியலை விரிவாக ஆராய முற்பட்ட அமைப்பு மொழியியல் மூன்றாவது பரிமாணமாக வேறொரு தொடர்பையும் வலியுறுத்த வேண்டி வந்தது. குறிப்பாக வாக்கிய அமைப்பை விவரிக்கும் பொழுது சொற்களுக்கிடையே வாய்பாட்டுத் தொடர்பும் சேர்க்கை நிலைத் தொடர்பும் மட்டுமன்றி அவற்றிற்கிடையேயுள்ள படிநிலைத் தொடர்பையும் (Hierarchical Relationship) காட்ட வேண்டியிருக்கிறது. சொற்கள் இணைந்து தொடர்களையும் தொடர்கள் இணைந்து வாக்கியத்தையும் தோற்றுவிக்கின்றன. வாக்கியம் மேலிருந்து ஒவ்வொரு கட்டத்திலும் இரண்டிரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இப்பிரிவு சொல் நிலையை அடையும்வரை தொடர்கிறது. இதேமுறை சொல்லில் தொடங்கி வாக்கியத்தில் முடிக்கப்படுவதும் உண்டு. இதைப் பின்வரும் வாக்கியம் மூலம் விளக்கல் கூடும்.

'உருசியா இந்தியாவை ஆதரிக்கிறது'.

இவ்வாக்கியத்தை,




எனவும்,




எனவும் காட்டலாம். இத்தகைய வாக்கியப் பகுப்பிற்குப் பதிலிடுமுறை (Substitution Method) அடிப்படையாக உள்ளது.

அமெரிக்க நாட்டில் அமைப்பு மொழியியலுக்கு வித்தூன்றியவர்கள் புளூம்பீல்டு (Bloomfield), சபீர் (Sapir) போன்ற அறிஞர்கள். அமெரிக்க நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் வளர்ந்த மொழியியலை அமைப்பு மொழியியல் என்று குறிப்பிட்டாலும் இந்

நாடுகளில் வளர்ந்த மொழியியலுக்குள் சில வேறு பாடுகள் உண்டு.

அமைப்பு மொழியியலை வளர்த்த புளூம்பீல்டு, உளவியலில் செல்வாக்காக விளங்கிய புறநடத்தை (Behaviour) ஆய்வினால் மிகுதியாகப் பாதிக்கப் பட்டவர். மொழியையும் புறநடத்தைகளுள் ஒன்றா கவே அமைப்பியல் மொழியியலாளர்கள் கருதுகிறார் கள். ஆய்வுக்குரிய பொருள் புறத்தில் நோக்கக் கூடியதாக இருக்கவேண்டும். அதனால்தான் மனமும் அதனோடு தொடர்புடையவும் ஆய்வுக்குரிய பொருள் களாக எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. மேலும், அமெரிக்க நாட்டில் மொழியை ஆராய்ந்தவர்கள் தொடக்கக் காலத்தில் மானிடவியல் துறையிலிருந்து வந்தவர்கள். ஒரு குறிப்பிட்ட இன மக்களின் பண் பாட்டைப் புரிந்துகொள்வதற்கு மொழியமைப்பு (மொழியின் சொற்களும் அவற்றின் அமைப்பும்) உதவியாக உள்ளது. மானிடவியலாளர்கள் பல்வேறு இன மக்களின் பண்பாடுகளை ஆராயும்பொழுது அவற்றிற்கிடையே உயர்வு தாழ்வு கற்பிப்பதில்லை. ஒவ்வொரு பண்பாடும் அதனதன் தன்மையில் உயர்ந் தது. இத்தகைய கருத்தோட்டம் அமைப்பு மொழி யியல் சிந்தனையிலும் காணப்படும்.

ஒவ்வொரு மொழியும் அதற்குரிய அமைப்பை உடையது. ஆகையால், ஒரு மொழியை விவரிக்கும் பொழுது இன்னொரு மொழியின் அமைப்பு அதைப் பாதிக்கக்கூடாது. மொழிகள் எண்ணற்ற முறைகளில் வேறுபடலாம். கிரேக்கம், இலத்தீன் போன்ற மொழி களின் இலக்கணங்கள் ஐரோப்பிய நாட்டு மொழி களுக்கு இலக்கணம் எழுதியவர்களைப் பாதித்ததால் இத்தகைய கருத்து அமைப்பு மொழியியலில் வலுப் பெறத் தொடங்கியது. இத்தகைய போக்கைத்தமிழி லக்கணக்காரர்களிடையேயும் காணலாம். தமிழின் அமைப்பை விளக்க முற்பட்டவர்கள் வடமொழியின் இலக்கணங்களால் பாதிக்கப்பட்டார்கள். வடமொழி யின் அமைப்புக் கூறுகள் தமிழ் மொழியின் மேல் ஏற்றப்பட்டன. இது போன்ற போக்குகள் ஐரோப் பிய நாடுகளில் காணப்பட்டதால் ஒவ்வொரு மொழி யும் மற்ற மொழிகளின் அமைப்பிற்கும் அம்மொழி களில் காணப்படுகிற இலக்கணப் பாகுபாடுகளுக்கும் உட்படுத்தப்படாமல் விவரிக்கப்பட வேண்டுமென்பது வலியுறுத்தப்பட்டது.

ஒரு மொழியின் விவரிப்பு இன்னொரு மொழி யால் பாதிக்கப்படக் கூடாது என்பதோடு, தொடர் புடைய இன்னொரு கருத்தையும் இங்குக் குறிப்பிட வேண்டும். அமைப்பின் அடிப்படையில் எல்லா மொழிகளும் சமமானவையே. அமைப்பை அடிப் படையாகக் கொண்டு மொழிகளுக்கிடையில் உயர்வு தாழ்வு கற்பித்துப் பேசுவது பொருளற்றது. ஒவ் வொரு மொழியும் அம்மொழி பேசும் சமுதாய மக் களுக்குப் பயன்படும் விதத்தில் செயற்பட்டுக்கொண் டிருக்கிறது. ஆகையால், சமுதாயத் தேவைகளுக் கேற்ற வகையில் மொழி செயற்படுகிறது. எல்லா மொழிகளும் எல்லாச் செய்திகளையும் வெளியிடக் கூடிய இயல்புடையவை. மொழிகளுக்கிடையே அமைப்பை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த மொழிகள் எனச் சிலவற்றையும், வளராத மொழிகள் எனச் சிலவற்றையும் கூற இயலாது. அமைப்பு மொழியியல் வளர்ச்சியில் வெளிப்பட்ட கருத்து களுள் இது முதன்மையானது.

அமைப்பு மொழியியல் மொழியைப் புறநடத்தை களுள் ஒன்றாகக் கருதி அணுகுவதால் மொழியியலா ளரின் உணர்வோ கருத்தோ மொழி விவரிப்பைப் பாதிப்பதில்லை. மொழியை ஆராய்வோரும் மொழித் தரவுகளைத் (Linguistic Data) தருவோரும் வெவ் வேறான ஆட்களாக இருப்பதனால் அகவய அணுகு முறை (Subjective Approach) இங்குத் தவிர்க்கப் படுகிறது. உள்நோக்கிய தரவுகளை (Introspective Data) அமைப்பு மொழியியல் ஏற்றுக்கொள்வதில்லை. இதன் அணுகுமுறை புறவயம் (Objective) ஆனது.

அமைப்பு மொழியியலைப் புரிந்துகொள்ள, அண் மையில் மிகவும் விரைவாக வளர்ந்த மாற்றிலக்கணச் சிந்தனையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லது. அமைப்பு மொழியியல் கோட்பாடு ஒவ்வொரு நிலை யிலும் உள்ள அலகுகளைக் கண்டுபிடிப்பதற்குரிய வழிமுறைகளை வகுப்பதில் கவனம் செலுத்தியது. இரண்டாம் உலகப் போரின் சூழலாலும் தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட பல்வேறு நாட்டு மக்களின் மொழியும் பண்பாடும் அறியப்பட வேண்டிய கட்டா யத்தாலும், ஐரோப்பிய நாட்டு அறிஞர்களும் பல் வேறு மொழிகளை ஆராய வேண்டிய நிலைக்கு உள்ளானார்கள். இம்மொழிகள் இவர்களுக்குத் தெரி யாததால், மொழி தெரியாத ஒருவர், அமைப்பு மொழியியல் கோட்பாடு வகுத்தளித்த வழிமுறை களை இயந்திர கதியில் பின்பற்றி இலக்கணத்தை உருவாக்க வேண்டுமென்பது இவ்வாய்வுகளின் எதிர் பார்ப்பு. சிறப்பான இலக்கணம் உருவாக, வகுக்கப் படுகின்ற வழிமுறைகள் புறவயமானவையாக இருக்க வேண்டும். அலகுகளைக் கண்டுபிடிக்கிற வழிமுறை களுக்கு முதன்மை கொடுப்பதை விட, ஒன்றுக்கு மேற் பட்ட ஆய்வுகள் நமக்குக் கிடைக்கும்பொழுது ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்கிற வழிமுறைகளை (Evaluation Procedure) வகுப்பதில் மாற்றிலக்கணம் கவனம் செலுத்துகிறது.

அமைப்பு மொழியியல் சிந்தனையிலிருந்து மாற் றிலக்கணம் கிளைத்ததால், அமைப்பு மொழியியலின்

கூறுகள் சில மாற்றிலக்கணப் பின்னணியிலும் காணப் படுகின்றன. பியாசே (Jean Piaget – 1971 ) போன்ற வர்கள் சோம்சுகியின் மாற்றிலக்கணச் சிந்தனையைக் கூட அமைப்பியல் (Structuralism) என்ற கொள்கை யின் அடித்தளத்தைக்கொண்டது என்று கூறுவார்கள். சமுதாய மொழியியலோடும் (Socio-linguistics) ஒப் பிட்டுப் பார்ப்பதன்மூலம் சில வேறுபாடுகளை உணர லாம். மொழி ஆய்வுக்குரிய தரவுகள் ஒருவரிட மிருந்தோ மூன்று நான்கு பேரிடமிருந்தோ திரட்டப் பட்டாலும், எழுதப்படுகிற இலக்கணம் அம்மொழி பேசும் மக்கள் எல்லோருக்கும் பொதுமையானது. மக்கள் ஒரே மாதிரியான இலக்கணத்தோடு வேறு பாடின்றிப் பேசுகிறார்கள் என்பது இவ்வணுகலின் அனுமானம் (Assumption). இத்தகைய அனுமானமே ஆய்வில் மேற்கொண்டுள்ள உத்தியாகும். மொழி பேசுபவர்கள் சாதி, கல்வி, பொருளாதார நிலைமை, வாழுமிடம் முதலியவற்றால் வேறுபட்டுப் பேசு கிறார்கள் என்பது ஒதுக்கி வைக்கப்படுகிறது. தனி மனிதன் சமுதாயப் பொதுமைகளைப் பின்பற்ற வேண்டிய கட்டாயத்திற்குள்ளாகிறான் என்பது காட் டப்படுகிறது. இதில் அவனுக்குச் சுதந்திரம் இல்லை. மொழி பேசுதல் என்பது ஒரு சமுதாய நிகழ்வாகக் கருதப்படுகிறது. பேச்சில் உள்ள வேறுபாடுகளை இவ்வணுகல் அறியாததன்று. ஆய்வின் மையப் பொரு ளாகக் கருதப்படாமல் இது ஒதுக்கிவைக்கப்படு கிறது. சமுதாய நிலையில் மொழிப் பொதுமை களைக் காண்பது அமைப்பு மொழியியலின் குறிக் கோள். இன்னொரு முதன்மையான கூறிலும் அமைப்பு மொழியியல் சமுதாய மொழியியலினின்று வேறுபடுகிறது. மொழியின் செயற்பாடு (Language Function) சமுதாய மொழியியலின் முதன்மையான ஆய்வாக அமைகிறது. மொழியின் செயற்பாட்டைப் புரிந்துகொள்ளச் சமுதாயப் பின்புலத்தையும் மொழி பயன்படுத்துகிற பரப்பையும் (Domains) தெரிந்து கொள்ள வேண்டும். அமைப்பு மொழியியல், மொழி யின் அமைப்பைப் (Structure of Language) புரிந்து கொள்ளக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது.

அமைப்பு மொழியியல் என்ற சிந்தனை விளக்கு வதற்குச் சிக்கலானது. அமைப்பு மொழியியல் என்பது வேறுபடாத ஒருமித்த கொள்கைகளையும் கோட் பாடுகளையும் கொண்டதன்று. அமெரிக்க மொழியி யலுக்கும் இங்கிலாந்து நாட்டு மொழியியலுக்குமே வேறுபாடு உண்டு. இதேபோல் பிராக் சிந்தனை இவ் விரு நாட்டு அமைப்பு மொழியியல் சிந்தனையிலிருந் தும் மாறுபடும். இங்கு விவரிக்கப்பட்ட அமைப்பு மொழியியல் அமெரிக்க நாட்டு மொழியியலின் செல் வாக்கை அதிகமாகக் கொண்டிருக்கும். இச்சிந்தனை யைத் தெளிவாகப் புரிந்துகொள்ள மாற்றிலக்கணம், சமுதாய மொழியியல் போன்ற மற்ற சிந்தனை களோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது. அமைப்பியல் என்ற தத்துவத்தின் கூறாகவும் அமைப்பு மொழி யியல் சிந்தனையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கி.அ.

துணை நூல்கள்:

**Bloomfield, L.**, "Language" 'Motilal Banarsidass, Delhi, 1963.

**Gleason, H.A.**, "Introduction to Descriptive Linguistics", Oxford & IBH Publishing Co., Calcutta, 1966.

**Hockett, C.F.**; "A Course in Modern Linguistics", The Macmillan Company, New York, 1958.

**Piaget, J.**, "Structuralism", Routledge and Kegan Paul, Translated by Maschlar, C , London, 1971.

**Rangan, K.**, "Some remarks on the goals and methods of taxonomic linguistics, transformational generative grammer and sociolinguistics in International Journal of Dravidian Linguistics", 10.2. pp. 414-436, 1981.

முத்துச் சண்முகன், "இக்கால மொழியியல்", மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், மதுரை, 1980.

தமிழவன், "ஸ்ட்ரக்சுரலிசம்", பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி, 1982.

திருமலை, மா.சு. & கி. கருணாகரன் "மொழிஇயல்", பாரி நிலையம், சென்னை, 1970.

**அமோகவருசர், முதலாம்**, இராட்டிரகூட அரசர்களுள் ஒருவர். இவர் தந்தையார் மூன்றாம் கோவிந்தர், கி.பி. 814-ஆம் ஆண்டில் இறந்ததும் அமோகவருசர் பட்டம் ஏற்றார். அப்பொழுது இவர் இளம்பருவத்தினராக இருந்தார். அரசு கட்டில் ஏறிய போது நாட்டில் குழப்பமான சூழ்நிலை நிலவியது. சீரூர்ப் பட்டயத்தின்படி, கி.பி. 821-ஆம் ஆண்டில் அமோகவருசர் வேங்கி நாட்டை வெற்றி கண்டார். பின்னர், இவர் அங்கம், வங்கம், மகதம் போன்ற நாடுகளைக் கைப்பற்றித் தம் செல்வாக்கினைப் பெருக்கினார் என்பது சிலர் கருத்தாகும். அது உண்மையன்று; வெறும் தற்புகழ்ச்சிச் சொற்களே யன்றி அதற்கெல்லாம் தக்க ஆதாரமில்லை என்பது பிறிதொரு கருத்தாகும். அமோகவருசர் சமணக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டார் என்பதை அவர் பின்பற்றிய சியாத்வாதக் கோட்பாட்டின் மூலம் அறி


யலாம். அமோகவருசர் தம் இறுதிநாட்களைச் சமயச் சிந்தனைகளில் செலுத்தினார். மான்ய கேடா (இக்காலத்தில் அதை மால்கேட் என்பர்) அவரது தலைநகரமாகும்.

**அமோகவருசர், இரண்டாம்**, இராட்டிரகூட அரசர் மூன்றாம் இந்திரனின் மகன்; தம் தந்தைக்குப் பின் பட்டத்திற்கு வந்தவர். இரண்டாம் அமோக வருசரின் முடிசூட்டு விழா கி.பி. 918–ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்றிருக்க வேண்டும்.


**அமோகவருசர், மூன்றாம்**, இராட்டிரகூட அரசர்; நான்காம் கோவிந்தருக்குப் பின் முடிசூட்டிக் கொண்டவர்; நான்காம் கோவிந்தரின் தந்தை வழியில் வந்தவர். இவரை மூன்றாம் அமோகவருசபட்டிகா என்றும் கூறுவர். இவர் கி.பி. 936–இல் அரியணை ஏறினார். இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஒரு சிலவே. அவற்றில் இவர் ஒழுக்க சீலர் என்றும், திரிபுரி காலச்சூரி முதலாம் கேயூரவருச யுவராசனின் மருமகன் என்றும், கங்க இளவரசர் இரண்டாம் பூதுகரின் மாமனார் என்றும் கூறப்படுகிறார். மூன்றாம் அமோகவருசர் ஆட்சி கி.பி. 940–ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் சீர்குலைந்துவிட்டது.

**அய்.எசு-எல்.எம் படிவம்**: முதலீடு (Investment), சேமிப்பு (Savings), பணத்தின் நீர்மை விருப்பம் (Liquidity preference), பண அளிப்பு (Money supply) ஆகியவற்றின் செயற்பாட்டால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்களை இப் படிவம் விளக்க முற்படுகிறது. பொருளியல் அறிஞர்களான இக்சு (Hicks), ஆன்சன் (Hansen) ஆகிய இருவர், தொன்மைப் பொருளியல் கோட்பாட்டையும், கீன்சு (Keynes) வின் வட்டிக் கோட்பாட்டையும் ஆராய்ந்து, அவற்றின் தொடர்புகளையும் வேறுபாடுகளையும் பகுத்து, உருவாக்கிய ஒரு கருத்துக் கூட்டாக்கமே அய்.எசு–எல்.எம் படிவம் (IS-LM Model) ஆகும். இதன் மூலம் உறுதியான, போதிய அளவு விளக்கமான வட்டிக் கோட்பாடு ஒன்றும் உருவானது.

**அய். எசு. வளைகோடு**: இவ் வளைகோடு சேமிப்பு-முதலீடு-வட்டிக் கோட்பாட்டின் மறு உருவமே. கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் (படம்.1) I என்ற நேர்கோடு முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் எதிரிடைத் தொடர்புள்ளதை விளக்கும் வகையில் மேலிருந்து கீழாகச் சரிந்து செல்கிறது. சேமிப்பிற்கும் வட்டி வீதத்திற்கும் நேரிடையாக உள்ள தொடர்பை SY வளை கோடுகள், கீழிருந்து மேலாகச் செல்வதன் மூலம் விளக்குகின்றன. வருமானம் கூடக் கூட சேமிப்பு வளைகோடு வலப்புறம் நோக்கி நகர்ந்து செல்கிறது. சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலைப் படுத்தும் வட்டி வீதம் குறைந்து செல்கிறது.





படம் - 1





படம் - 2

படம்–2இல் வருமானம் (Y) 'X' அச்சிலும், அதற்கான வட்டி வீதம் 'Y' அச்சிலும் அளவிடப்பட்டுள்ளன. வருமானம் $Y_1$ ஆக இருக்கும்போது, தொடர்புடைய சேமிப்பு வளைகோடு $S_1 Y_1$ ஆகவும், சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலைப்படுத்தும் வட்டி வீதம் $r_5$ ஆகவும் உள்ளன. இதுபோன்ற $r_1$ $r_2$ $r_3$ $r_4$ என்ற வட்டி வீதங்களில் வருமான அளவு மாறுகிறது. வருமானம் கூடக் கூட வட்டி வீதம் குறைந்து கொண்டே செல்வதால் IS வளைகோடு கீழ்நோக்கிச் செல்கிறது.

**எல்.எம். வளைகோடு**: கீன்சின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே LM வளைகோடு உருவாக்கப்படுகிறது. இக்கோட்பாட்டின்படி, பல வருமான அளவுகளில் நீர்மை விருப்ப வளைகோட்டுத் தொகுப்பு ஒன்றைப் பெற இயலும். அரசால் முடிவு செய்யப்பட்ட பண அளிப்போடு இவ் வளைகோடுகள் ஒன்றிணைந்து LM வளைகோட்டைத் தருகின்றன. இவ்வளைகோடு, வேறுபட்ட வருமான அளவுகளில் வட்டிவீதம் எவ்வகையில் அமைகிறதென்பதைப் புலப்படுத்துகிறது. இருப்பினும், நீர்மை விருப்ப வளைகோடுகள் மட்டுமே சரியான வட்டிவீத அளவைத் தெரிவிப்பதில்லை.




படம் - 3




படம் - 4

படம்–3,4-இல் நீர்மை விருப்ப வளைகோட்டுத் தொகுப்பின் மூலம் LM வளைகோடு உருவாவதைக் காணலாம். வருமானம் உயர உயர நீர்மை விருப்ப வளைகோடு கீழிருந்து மேலாகச்செல்கிறது. ஆகவே பணத்தின் அளிப்பையும் தேவையையும் சமநிலைப் படுத்தும் வட்டிவீதம் உயர்கிறது. படம்–4இல் வட்டி வீதம் எவ்வாறு பல வருமான நிலைகளில் முடிவு செய்யப்படுகிறதென்பது விளக்கப்படுகிறது.

இதில், IS வளைகோடும் LM வளைகோடும் வருமானம், வட்டிவீதம் ஆகிய இரு மாறிகளை (Variables)ச் சார்ந்தவை. படம்–5இல் வருமானமும் வட்டி வீதமும் IS, LM என்ற இரு வளைகோடுகளும் வெட்டிச் செல்லும் 'E' என்ற புள்ளியில் வரையறுக்கப்படுகின்றன.




படம் - 5


இங்குச் சமநிலை வட்டிவீதம் $Or_3$ என்றும், வருமான அளவு $OY_3$ என்றும் முடிவு செய்யப்படுகின்றன. மேலும், இவ்விடத்திலேயே வருமானமும் வட்டிவீதமும் ஒன்றையொன்று சார்ந்து (1) முதலீடும் சேமிப்பும் சமநிலையடைகின்றன; (2) பணத்தின் தேவையும் அளிப்பும் சமநிலையடைகின்றன. இதில் LM வளைகோடு பணத்தை மாறாக் காரணியாகக் கொண்டு வரையப்பட்டிருப்பதைக் கருத்திற்கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

இவ்வகையில் ஒரு முடிவான வட்டிக்கோட்பாடென்பது கீழ் வரும் நான்கு கூறுகளை அடிப்படையாகக் கொண்டது. அவை, 1) முதலீட்டுத் தேவைச் சார்பு (Investment Demand Function), 2) சேமிப்புச் சார்பு (Savings Function or Consumption Function), 3) நீர்மை விருப்பச் சார்பு (Liquidity Preference Function), 4) பணத்தின் அளிப்பு (Supply of Money) என்பனவாம். ஆகவே, இக்சு,ஆன்சன் கருத்துப்படி, பணவியல், மற்றும் உண்மைக் காரணிகளாக உற்பத்தித் திறன் (Productivity), சிக்கனம் (Thrift) போன்றவையும், முழுவதும் பணவியல் காரணிகளான பணத்தின் தேவையும் (நீர்மை விருப்பம்), அளிப்பும் வட்டி வீதத்தை முடிவு செய்வதில் சிறப்புப் பங்கு வகிக்கின்றன. இக் காரணிகளில் ஏற்படும் எந்த ஒரு மாறுதலும் IS, LM வளைகோடுகளை மாற்றியமைப்பதுடன், வட்டிவீதம், வருமானம் ஆகியவற்றின் சமநிலையிலும் மாற்றங்களை நிகழ்த்தும்.

அய். எசு. எல். எம் படிவச் செயற்பாட்டில் அரசின் தலையீட்டால் தாக்கங்கள் பல நிகழலாம். அரசின் தலையீடு பணவாக்க முறையாலும் நிதிக் கொள்கை முறையாலும் ஏற்படும். சிறப்பாக, அரசு தன் செலவை உயர்த்தலாம் அல்லது குறைக்கலாம். அதைப்போலவே, பண அளிப்பையும் வரி வீதங்களையும் உயர்த்தவோ குறைக்கவோ செய்யலாம். அரசின் செலவுகள் உயரும் போது IS சார்பு வலப்புறம் நகர, சமநிலை வருமானமும் வட்டி வீதமும் உயரும். கூடுதலான வட்டி உயர்வினால் முதலீடு பாதிக்கப்பட்டுக் குறையத் தொடங்கும். இதன் விளைவாக ஊக வாணிகத்திற்கான (Speculation) பணத் தேவை குறையும்.

மாறாக, அரசின் செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டுக் குறைக்கப்பட்டால், இதற்கு நேர்மாறான விளைவு

கள் உண்டாகும். அரசின் வரிகள் உயர்வதால் மக்களின் வருமானம் குறைக்கப்படுகிறது. இதன் காரணமாக IS சார்பு, இடப்புறமாகக் கீழ் நோக்கி நகர, வட்டிவீதம், நுகர்வு, சேமிப்பு, பேரத்திற்கான பணத் தேவை ஆகியவை குறைகின்றன. முதலீட்டிற்கும் ஊக வாணிகத்திற்குமான பணத்தேவைகள் உயர்கின்றன. வரிவீதம் குறைக்கப்படும்போது, இதற்கு நேர் மாறான விளைவுகள் ஏற்படும். கீழே கொடுக்கப்பட்டுள்ள படம்-6 இக்கருத்துகளை மிகத் தெளிவாக உணர்த்தும். அரசின் நிதிக் கொள்கை வாயிலாக அரசின் செலவுகள், வரிவிதிப்பு ஆகியவற்றில் மாற்றங்களை நிகழ்த்தி, வருமான அளவை மாற்ற முடியும். இம் முறையோடு பணவாக்கு முறையும் சேர்ந்து செயற்படும். பண அளிப்பை ஒழுங்குபடுத்த இவ்விரு முறைகளும் சேர்ந்து செயற்படுதல் இன்றியமையாதது. பொதுவாக, ஒரு நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அந்நாட்டின் நிதிக் கொள்கையும் பணவாக்குக் கொள்கையும் அமையும்.




படம் - 6

மா. செ. சே. ச.

துணை நூல்கள்:

**Dillard D.**, "Economics of John M. Keynes Lockwood", London, 1966.

**Rangarajan C. & Dholakia B.H.**, "Principles of Macro Economics", Tata - McGraw Hill, New Delhi, 1982.

**Carl Pointdexter J.**, "Macro Economics", The Dryden Press, Illinois, 1976.


**அய்கொளே** கருநாடக மாநிலம் பீசப்பூர் மாவட்டத்தில் பாதாமி வட்டத்தில் உள்ள சிற்றூர். சாளுக்கியரின் தலைநகரமாக விளங்கிய பாதாமி அல்லது வாதாபியிலிருந்து கிழக்காக, 20 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. வாதாபிச் சாளுக்கியர்கள் காலத்திலிருந்து (கி.பி. 7-ஆம் நூற்றாண்டு) 14-ஆம் நூற்றாண்டு வரை அய்கொளே (Aihole) பெருநகரமாக விளங்கியது. இவ்வூர் அய்யாவொளே, அய்யாவொளி என்று பழங்கன்னடத்திலும், ஆரியபுரா என்று வடமொழியிலும் குறிக்கப்படும். நானாதேசி திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர் ஐந்நூற்றுவர் என்ற வணிகக் குழுக்கள் இவ்விடத்திலிருந்து பணியாற்றின. அவர்தம் சிறப்புத் தெய்வமான அய்யாப் பொழில் நாச்சியார் எனும் தேவியின் முதல் உறைவிடமாக இவ்வூர் திகழ்ந்தது. இவ்வூர் மிகப் பழங் காலத்திலிருந்தே மக்களின் உறைவிடமாக இருந்திருக்க வேண்டும். அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குபவை அய்கொளேயிலுள்ள மேகுடி மலைமீது பெருங்கற்காலத்தைச் சேர்ந்த பழைமைச் சின்னங்களான கல் திட்டைகள் (Dolmens) ஆகும். இக் கல் திட்டைகள் கற்பலகைகளைக் கொண்டு அமைக்கப்பட்டவை. இப்போது இவ்வூரில் அழிந்துபட்ட நிலையிலுள்ள கோட்டை மதிலும் ஏறத்தாழ எழுபதுக்கும் மேற்பட்ட கற்கோயில்களும் சான்றுகளாக உள்ளன.

**மேகுடிக் கோயில்:** இக்கோயில் ஒரு குன்றின் மீது அமைந்துள்ள சமணக் கோயிலாகும். மேகுடிக் கோயில் செவ்வக வடிவில் அமைந்துள்ளது. கருவறை சதுரவடிவமானது. கருவறையின் முன், மண்டபம் உள்ளது. கருவறையினைச் சுற்றி நடைபாதையும் அதன் வெளிச் சுவர்களில் சாளரங்களும் உள்ளன. கருவறையில் தீர்த்தங்கரரின் உருவம் காணப்படுகிறது. இக்கோயில் சிற்பங்களில் சிறப்பு வாய்ந்தது இயக்கி அம்பிகைச் சிற்பமாகும். சிங்கத்தின்மீது இரண்டு குழந்தைகளுடன் அமர்ந்துள்ள வண்ணம் செதுக்கப்பட்டுள்ளது. இரு குழந்தைகளில் ஒரு குழந்தை அம்பிகையின் மடியில் அமர்ந்துள்ளது. இச் சிற்பம் மிக நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளது. கருவறையின்மீது ஒரு மாடிக் கருவறையும் உள்ளது. இது பிற்காலத்தில் கட்டப்பட்டது. கனத்த தூண்களை இக்கோயில் கொண்டுள்ளது.

**இலாட்கான் கோயில்:** இக்கோயில் இவ்வூரிலுள்ள அனைத்துக் கோயில்களிலும் மிகப் பழைமையானதாகும். சதுரமான கருவறையுடன் 12 தூண்களுடன் கூடிய முக மண்டபத்தைக் கொண்டது. இம் முகமண்டபம் கைப்பிடிச்சுவருடன் அமைந்துள்ளது. கோயிலின் வெளிச்சுவரில் கலை வேலைப்பாடு கொண்ட சாளரங்கள் தூண்களுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ளன. திருமாலுக்காக அமைக்கப்பட்ட இக்கோயில் மேற்குப் பக்கம் பார்த்தவண்ணம் கட்டப்பட்டுள்ளது. மேற்கு முகப்பில் கருடனின் உருவம் காணப்படுகிறது. ஆனால், இப்பொழுது கருவறையில் சிவலிங்கம் உள்ளது. தூண்களமைந்த மண்டபத்தின் நடுவில் சிவலிங்கத்தைப் பார்த்தவாறு நந்தி அமைக்கப்பட்டுள்ளது. கருவறையின்மீது சற்றுப்



துர்க்கை கோயில்




இலாட்கான் கோயில்

பிற்பட்ட காலத்தில் கட்டப்பெற்ற மாடிக் கருவறை உள்ளது.


கோண்டுகுடிக் கோயில்: இக்கோயிலின் கூரை, மையப்பகுதி சமதளமாகவும் ஓரங்கள் சரிவாகவும் அமைக்கப்பட்டுள்ளது. சமதளக் கூரையின்மீது சிகரம் கட்டப்பட்டுள்ளது. சிகரத்தின் நான்கு பக்கங்களிலும் நடராசர், வராகர், பைரவர், வாமனர் ஆகிய சிற்பங்கள் உள்ளன. சிகரத்தின் கீழேயுள்ள எட்டு மூலைகளில் காவல் வீரர்களின் சிற்பங்களும் அவற்றிற்கு நடுவில் பிரம்மாவின் சிற்பமும் உள்ளன. கோயிலின் முகப்பிலுள்ள வாயிற்படியின் உத்தரத்தில் கருடனின் உருவமுள்ளது. இக்கருடனின் உருவத்திலிருந்து இக்கோயில் திருமால் கோயில் என்பது புலனாகும். ஆனால், இப்பொழுது சிவனுடைய கோயிலாகவே இதுவும் காட்சியளிக்கிறது. கருவறையின் அருகில் இருக்கும் கூரைகளில் சிவன், அவரது தேவி, தாமரையின் மேலுள்ள பிரமன், பாம்பணையில் படுத்திருக்கும் பரந்தாமன் ஆகியோருடைய சிற்பங்கள் காணப்படுகின்றன.

துர்க்கை கோயில்: கோயிற் கட்டடக் கலையில், மிகவும் சிறந்து விளங்குவது இந்த ஊரிலுள்ள




துர்க்கை கோயில்

▲
தரைப்படம்
▼




இலாட்கான் கோயில்

துர்க்கை கோயிலாகும். இக்கோயில் தூங்கானை மாட அமைப்பைப் பெற்றுள்ளது. இரு வரிசையாக அமைக்கப்பட்ட தூண்கள் இக்கோயிலின் மையப் பகுதியையும் புறப்பகுதியையும் பிரிக்கின்றன. சதுர வடிவத்தில் அழகுடன் அமைந்த புடைப்புச் சிற்பங்களைக் கொண்டு தூண்கள் திகழ்கின்றன. இக் கோயில் உயர்ந்த பீடத்துடன் கட்டப்பட்டுள்ளது. பீடப்பகுதிகளில் குள்ளமான உருவமுடைய பொதிகைச் சிற்பங்

கள், வேடிக்கைத் தோற்றங்களுடன் காட்சியளிக்கின்றன. தூண்களின் தலைப்புப் பகுதிகளிலும் சிற்பங்கள் உள்ளன. கோயிலின் பழைய மேற்கட்டு அழிந்து போய் அவ்விடத்தில் சற்றும் பொருத்தமில்லாத நாகரம் என்னும் ஒருவகைக் கலைப்பாணியிலமைந்த சிறிய சதுரச் சிகரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயில் வட இந்தியக் கலைப்பாணியான நாகரமும், தென்னிந்தியக் கலைப்பாணியான திராவிடமும் ஒருங்கே இணைத்துக்கட்டப்பட்ட கோயிலாகக் காட்சி அளிக்கிறது. கோயிலின் நுழைவு வாயில் உத்திரத்தில் கருடனின் உருவமுள்ளது. கருவறையைச் சுற்றி அமைந்துள்ள திருச்சுற்றில், கருவறையின் வெளிச் சுவர்களில் நரசிம்மர், மகிடாசுரமர்த்தினி, வராகர், திருமால், அர்த்தநாரி, சிவன் ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயில் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது.

உச்சிமல்லிகுடி கோயில்: இக்கோயில் கருவறையும் சிகரமும் வட இந்தியப் பாணியைச் சார்ந்து காட்சியளிக்கிறது. இக்கோயிலின் முகப்பிலுள்ள அரைவட்டக் கூட்டில் நடனமாடும் நடராசர் உள்ளார். முக மண்டபத் தூண்கள் சிற்பங்களெவையுமின்றி உள்ளன. முக மண்டபத்தை அடுத்துத் தூண்களுடன் கூடிய மற்றொரு மண்டபம் சுற்றுச் சுவர்களுடன் உள்ளது. இது கருவறையைச் சுற்றிச் செல்கிறது. முகமண்டபக் கூரையில் கார்த்திகேயனின் சிற்பம் உள்ளது. அவர் மயில்வாகனத்தில் அமர்ந்துள்ளார்.

உச்சகப்பய்யாக் கோயில்: அய்கொளேயிலிருந்து தென்மேற்காகச் சற்றுத் தூரத்தில் உச்சகப்பய்யாக் கோயிலமைந்துள்ளது. இது மிகப் பெரிய கோயிலாகும். இதன் சிகரம் வடஇந்தியக் கோயில் கலைப் பாணி முறையில் அமைக்கப்பட்டது. கருவறையின் வெளிப்பக்கமுள்ள மூன்று மாடக் குழிகளில் இரண்டில் மட்டும் நரசிம்மரின் சிற்பமும் பைரவரின் சிற்பமும் உள்ளன. மற்றொரு மாடக்குழியில் எந்தச் சிற்பமும் இல்லை. இக்கோயிலின் மண்டபக்கூரை சமதளங்களுடன் செவ்வக வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கூரையினைப் பெரிய தூண்கள் தாங்குகின்றன. தூண்களில் கணங்களின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. சுவருடன் ஒட்டிய தூண்களில் சிவனுடைய சூலமும் பாம்பும் இருக்கின்றன. கூரையில் சிவன், பார்வதி, பாம்புப் படுக்கையில் திருமால், பிரமன் அவர்களைச் சுற்றி வழிபடும் மக்கள் ஆகியோரின் உருவங்கள் இருந்தன. ஆனால், இப்பொழுது இச்சிற்பங்கள் அமைந்த தொகுதி (Panel) பம்பாய் வேல்சு இளவரசர் அருங்காட்சியகத்தில் உள்ளது. இச்சிற்பங்கள் சாளுக்கியரின் சிற்பக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாம்.

இக்கற்றளிகளை யடுத்து மேலும் இரண்டு சிறப்பு மிக்க குடைதளிகள் உள்ளன. இக்குடைதளிகள் வாதாபியிலுள்ள குடைதளிகளைவிட அளவில் சிறியனவாகவும் வேலைப்பாடு குறைந்தும் காணப்படுகின்றன. இவ்விரண்டு குடைதளிகளுள் சிவனுக்குரிய இராவுலகுடி அல்லது இராவுல்பாடி குடைதளி, மற்றொரு குடைதளியைக் காட்டிலும் மேம்பட்டது. இராவுலகுடி குடைதளி, இரண்டு தூண்களுடன்கூடிய பெரிய அறைகளையும், குகையின் இறுதியிலும் இரு பக்கங்களிலும் தெய்வங்கள் உள்ள சிறு அறைகளையும் கொண்டுள்ளது. குடைதளியின் மூலைகளிலுள்ள சுவர்களில் அர்த்தநாரீசுவரர், கங்காதரர், பகீரதர் சிற்பங்கள் உள்ளன. குடைதளியின் உட்கூரையில் அமைந்துள்ள தாமரைப் பூவின் அமைப்பு, காண்பவரின் கருத்தைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. குடைதளியிலுள்ள கருவறை இடைக் கூடத்துடன் அமைந்துள்ளது. இவ்விடைக் கூடத்தின் நுழைவு வாயில் அழிந்துபட்டிருக்கிறது. இக்கோயில் சுவரின் இடப் பக்கத்தில் பத்துக் கைகளுடைய நடனமாடும் சிவனும் தேவி பார்வதியும் கணபதியும் ஏழு பெண் தெய்வங்களும் சிற்ப வடிவிலுள்ளன. இச்சிற்பங்கள் அணிந்துள்ள ஆடைகளும் அணிகளும் உயர்ந்த தலையணிகளும் மிக நேர்த்தியான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.

சமணர் குகைக்கோயில்: இக்குகைக்கோயில் அய்கொளேயின் தென்மேற்கே அமைந்துள்ளது; தாழ்வாரமும் அதையடுத்து மண்டபமும் கொண்டமைந்துள்ளது. கூரைகளில் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பல உள்ளன. குடைதளியின் உள்ளே உள்ள கருவறையில் அமர்ந்த நிலையிலுள்ள தீர்த்தங்கரரின் உருவம் உள்ளது. காவல் தெய்வங்களும் குள்ளமான உருவமுடைய பணியாளர் சிற்பங்களும் நுழைவு வாயிலின் இரு பக்கங்களிலும் செதுக்கப்பட்டுள்ளன. தாழ்வாரத்தின் சுவர்களில் பார்சுவநாதர் உள்ளார். பாம்புத் தலை அவரது தலைக்கு மேலே உள்ளது. தவத்துடன் இருக்கும் கோமதீசுவரர் தம் சகோதரிகளுக்கிடையே நின்ற வண்ணம் காட்சியளிக்கின்றார்.

அய்கொளேயில் உள்ள கோயில்கள் யாவும், தென்னகத்தின் கோயிற் கட்டடக் கலையான திராவிடப் பாணியைக் கொண்டுள்ளன. விமானங்கள் உண்ணாழிகையின் மேற்கட்டுகளாக மேலே போகப் போகக் குறுகி அமைந்துள்ளன. பிரத்தரம் என்று கூறப்படும் கூடங்களைச் சுற்றிலும் சாலை, பஞ்சரம் ஆகியவை கொண்ட ஆரங்களைக் கொண்ட தளங்களையும் மேல் உச்சியில் கிரிவம், சிகரம், தூபி அமைப்புகளையும் பெற்று விளங்குகின்றன. உண்ணாழிகையின் பிரத்தரத்தின்மேல் சிறு விமான வடிவங்களைக்

கொண்ட ஆரம் இக்கோயில்களின் தனிச்சிறப்பாகும். இக்கோயில்களில் பிற சிறப்புக் கூறுகள் சுகநாசி அல்லது கிளிமூக்கு என்ற உறுப்பாகும். இவ்வுறுப்பு அர்த்தமண்டபம் அல்லது மேல் கட்டின் முன்புள்ள அந்தராளத்தின்மீது மூக்குப் போன்று நீண்டிருக்கும். இவ்வுறுப்பு வடநாட்டுக் கோயில்களில் பொதுவாகக் காணப்படுகிறது. வட நாட்டுக் கோயிற்கலைப் பாணி யான நாகரக் கலைப்பாணியையும் இங்குள்ள கோயில்கள் கொண்டுள்ளன. தளங்களின் மேலே படிப்படியாகக் குறுகி உயர்ந்து செல்லும் தளங்களைக் கொண்டு இங்குள்ள கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. நெல்லிக்கனி (ஆமலகம்) போன்ற வடிவமுள்ள உறுப் பினை ஒவ்வொரு .தளத்தின் நான்கு மூலைகளிலும், மேல் தளத்தின் உச்சியிலும் பெற்றுத் திகழ்கின்றன. இங்குள்ள கோயில்களனைத்தும் சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் காட்சியளிக்கின்றன. நுட்ப மாகச் செதுக்கத்தக்க முறையில் இக்கோயில்கள் செம் மணற் கல் (Red Sandstone) கொண்டு கட்டப் பட்டுள்ளன.

துணை நூல்கள்:

**Sivaramamurti**, C., "The Art of India", Harry N. Abrams, Incorporated, 1977.

"Archaeological Remains Monument and Museums, Archaeological Survey of India," Part I, 1964.

**அய்கொளே கல்வெட்டுச் சாசனம்** சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசியினால் வெளி யிடப் பெற்றது. இச்சாசனம் அய்கொளேயில் உள்ள மேகுடி என்னும் சமணக் கோயிலின் சுவரில் இருக் கிறது; செய்யுள் வடிவில் வடமொழியில் எழுதப் பட்டுள்ளது. இந்தச் சாசனத்தில் 17 வரிகளில் 37 செய்யுள்கள் உள்ளன. இக்கல்வெட்டை முதன் முதலில் பிளீட்டு (Fleet) என்பவர் இண்டியன் ஆண்டி குவரி (Indian Antiquary) எனும் நூலில் பதிப்பித்தார். பின்னர் டாக்டர் கில்கார்ன் என்பவர் மறுபதிப்பை 'எபிகிராபிகா இண்டிகா' ஆறாம் தொகுதியில் வெளியிட்டார். இச்சாசனம் மேலைச் சாளுக்கியர் களின் வரலாற்றைத் தெளிவாக அறிதற்குரிய சிறந்த சான்றாகும். இரண்டாம் புலிகேசிக்கு முன்னர் ஆண்ட சாளுக்கிய அரசர்களின் மரபுவழிப் பட்டியலை இது தருகிறது. சாளுக்கிய அரசர்கள் செயசிம்மன், இரண ரங்கா, முதலாம் புலிகேசி, கீர்த்திவர்மன், மங்கலேசன், இரண்டாம் புலிகேசி ஆகியோர் அடுத்தடுத்துப் பட்ட மேற்று அரசாண்டதையும் அவர்களுடைய வெற்றி களையும் இச்சாசனம் தெளிவுபடக் கூறுகிறது.

இக்கல்வெட்டு வாசகத்தை இயற்றியவர் இரவி கீர்த்தி ஆவார். இச்சானத்தின் 37-ஆம் செய்யுளில் இவர்தாம் காளிதாசரையும் பாரவியையும் நன்கு அறிந்தவர் என்று பகர்கின்றார். இக்கல்வெட்டின் நடை காளிதாசரின் இரகுவம்சம், குமாரசம்பவம் போன்ற நூல்களிலுள்ள செய்யுள் நடையினை ஒத்துள் ளது. அலகாபாத்துக் கற்றூண் சாசனத்திற்கு இணை யானதாக இக்கல்வெட்டுக் கருதப்படுகிறது.

இந்திய வரலாற்றில், காலக் கணிப்பிற்கு இச் சாசனம் முக்கியமானது. முதன் முதலில் இக்கல் வெட்டில்தான் சக ஆண்டும், கலி ஆண்டும் குறிப் பிடப்பட்டுள்ளன. சக ஆண்டு 556 என்றும் கலி ஆண்டு 3735 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன்மூலம் இக்கல்வெட்டு,கி.பி. 634 அல்லது 635-ஆம் ஆண்டைச் சேர்ந்தது என்று அறியலாம். மேலும் கலி ஆண்டு 3735 என்ற குறிப்பிலிருந்து மாபாரதப்போர் நடை பெற்ற காலத்தைக் கி.மு. 3101 என அறுதி செய்யலாம்.

**அய்டான்** ஒரு கிறித்தவப் பாதிரியார். இவர் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அயோனாவிலிருந்து வர வழைக்கப்பட்டவர். ஆங்கில-சாக்சானியர் காலத்தில் ஆசுவால்டு இளவரசர், நார்த்தம்பிரியாவில் கிறித் தவச் சமயத்தை நிலைநாட்டும் நோக்குடன் அய் டான் பாதிரியாரைக் கொண்டு வந்தார். அய்டான் எளிமைக்கும் சீரிய பணிகளுக்கும் பெயர் பெற்றவர். இறைவனும் பொருள் படைத்தோரும் அளித்த பெரும் செல்வத்தை அவர் ஏழை எளியோருக்குக் கொடுத்து இன்பம் கண்டவர். அய்டானும் அவரு டைய துறவிகளும் இங்கிலாந்தின் வட பகுதியிலும் நடுப் பகுதியிலும் வாழ்ந்தவர்களைக் கிறித்தவச் சமயத்திற்கு மதம் மாற்றினார்கள்.

**அய்பா** இசுரேல் நாட்டிலுள்ள துறைமுக நக ரம்; செய்பொருள் உற்பத்திகளின் தலைசிறந்த மைய மும் பண்பாட்டு மையமுமாகும்.வட இசுரேலில் உள்ள கார்மெல் மவுண்டு என்னும் இடத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள இடங்களையும் தன்னகத்தே கொண் டுள்ளது அய்பா (Haifa) நகரம். மத்திய தரைக்கட லின் கிழக்குக் கோடியில் அய்பா விரிகுடாவின் எல் லையில் இந்நகரம் அமைந்துள்ளது.

அய்பாவை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதற்பிரிவு தாழ்நிலப் பகுதியாகும். கார்மெல் மவுண்டைச் சுற்றியுள்ள தாழ்நிலப் பிரிவு, துறைமுக வசதிகளும் சேமிப்புக் கிடங்குகளும் குடியிருக்கும் வீடுகளும் அங்கொன்றும் இங்கொன்றுமான சேரிகளும் கொண்டு விளங்குகிறது. இரண்டாவது பிரிவான மலைச்சரிவுகளில் அய்பா நகரின் சிறந்த வாணிகத் தலங்கள் அமைந்து உள்ளன. மூன்றாம் பிரிவான மேல் மட்டப் பிரிவில் பெரும் வீடுகளும், தங்கும் கட்டடங்களும், தோட்டங்களும், பூங்காக்களும் மலை யுச்சியில் அமைக்கப்பட்டுள்ளன.

அய்பாவில் பல சமயத் தொடர்பான சின்னங்களைக் காணலாம். பகாய்க் கோயில், கார்மெல் மவுண்டின் , காவல் தெய்வமான அன்னையின் மடாலயம், எலிசாவின் குகை போன்றவை அச்சின்னங்களுள் சில. விவிலிய நூலில் தீர்க்கதரிசியாகச் சித்திரிக்கப்படும் எலிசா, தம் பகைவர்களிடமிருந்து தப்ப இங்குள்ள குகையில்தான் ஒளிந்துகொண்டார் என்னும் செய்தி சொல்லப்படுகிறது.

அய்பாவில் இரு பல்கலைக் கழகங்கள் உள்ளன. எண்ணெய் சுத்திகரிப்புத் தொழில், சிமெண்டு உற்பத்தித் தொழில் பல்வகை இரசாயனத் தொழில்கள், மின்நுட்பக் கருவிகள் கண்ணாடி எஃகு துணிமணி உற்பத்தி போன்றவை இந்நகரின் சிறப்பான செய்பொருள்களாகும். அய்பாவிற்குக் கப்பற் போக்குவரத்தும் இருப்புப் பாதைப் போக்குவரத்தும் இருப்பதால் இது ஒரு போக்குவரத்து மையமாகும்.

கடந்த 3000 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் இங்கு வாழ்ந்து வந்துள்ளார்கள். அய்பா கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி வரை சிறுநகரமாகவே இருந்தது. அப்போதுதான் இது முதன்முறையாகத் துறைமுகமாகப் பயன்படுத்தப்பட்டது.

அய்பா நகரின் மக்கள் தொகை 2,30,000 (1981); மாவட்டத்தின் மக்கள் தொகை 5,57,400 ஆகும்.

**அய்யப்புழல்** தென்னிந்தியாவில் இடைக்காலத்தில் பணியாற்றிய வாணிகக் குழுக்களுள் ஒன்று. அக்காலத்தில் வாணிகத் தொடர்பான பொருளாதார நடவடிக்கைகளை நிருவகிக்கப் பல வாணிகக் குழுக்கள் இருந்தன. இவை உற்பத்தியை முறைப்படுத்தவும் விற்பனையை ஊக்குவிக்கவும் செயற்பட்டன. வேளாண்மைப் பொருள் உற்பத்தியைக் கண்காணிக்கவும் கைவினைப்பொருள் உற்பத்தியைச் சீரமைக்கவும் தனித்தனியான குழுக்கள் இருந்தன. இக்குழு ஒவ்வொன்றும் தனக்கென ஒரு நிருவாக அமைப்பைக் கொண்டிருந்தது. இவ்வாணிகக் குழுக்களுள் அய்யப்புழல் என்னும் குழு, சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. அய்கொளே (Aihole) என்னும் ஊர்ப் பெயரின் அடிப்படையில் ‘அய்யப்புழல்’ என்னும் வாணிகக் குழுவின் பெயர் தோன்றியது. அய்கொளே, கருநாடக மாநிலத்தில் பிசப்பூர் மாவட்டத்தில் பாதாமி வட்டத்தில் உள்ளது. இவ்வூரே இக்குழுவின் தலைமை இடமாகும். அய்கொளே என்னும் ஊரோடு தொடர்புடைய வாணிகக் கூட்டத்தார் இவர் என்ற பொருளிலேயே அய்யப்புழல் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாணிகக் கூட்டத்தினர் தங்களை ‘அய்வோலுபுரத்தின் ஐநூற்றுவர்’ என்று விளித்துக்கொண்டனர். இப்பெயருக்கு, ஐநூற்றுவர் கொண்ட ஆட்சிக் குழுவினைப் பெற்ற வாணிகக் குழு என்பதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. பல அரசர்களிடமிருந்து பல காலங்களில் பெற்ற 500 உரிமைச் சாசனங்களின் சான்றுகளில் தங்கள் வாணிக நடவடிக்கைகளை மேற்கொண்டதனால் இப் பெயரைப் பெற்றனர் எனவும் குறிப்பர்.

தோற்றமும் வளர்ச்சியும்: இக்குழுவின் தோற்றத்தைப் பற்றிச் சரியாக அறிய முடியவில்லை. இக்குழு சற்றேறக்குறைய 8-ஆம் நூற்றாண்டில் தோன்றியிருக்கலாம். இக்கூட்டத்தாரைப் பற்றிய செய்திகளைத் தரும் தொடக்கக்காலக் கல்வெட்டுகள் இக்காலத்தைச் சார்ந்தன என்பதைக் கொண்டு இவ்வாறு கணிக்கலாம். கருநாடகத்தில் கிடைக்கும் கல்வெட்டுகள்தாம் முதன்முதலில் இவர்களைப் பற்றிய செய்திகளைத் தருகின்றன. பிற்காலக் கல்வெட்டுகள், இவர்களது தோற்றத்தைப் பற்றிய மரபுவழிச் செய்திகள் சிலவற்றைத் தருகின்றன. அவை இக்கூட்டத்தாரின் முன்தோன்றல்கள் என்று பலதேவர், வாசுதேவர், கண்டளி, மூலபத்திரர் ஆகியோரைக் குறிக்கின்றன. இவர்கள் நான்கு சமயங்களையும், ஆறு தரிசனங்களையும் அறிந்திருந்தனர். ஏறத்தாழக் கி.பி. 9–10–ஆம் நூற்றாண்டுகளில் இக்கூட்டத்தார் தமிழகத்திலும் ஆந்திரப் பகுதிகளோடும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். இக்காலத்தில் ஏற்பட்ட நிலையான ஆட்சிகள் இவர் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன. இக்காலக் கட்டத்தில் தமிழ்நாட்டில், அய்யப்புழல் கூட்டத்தார் ஐநூற்றுவர் நானாதேசிகள், திசையாயிரத்து ஐநூற்றுவர் என்பாரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். ஐநூற்றுவர் என்னும் பெயர் ஒப்புமையைக் கொண்டு அய்யப்புழல் கூட்டத்தாரும் ஐநூற்றுவரும் ஒருவரே எனக் கொள்ளலாம். திசையாயிரத்து ஐநூற்றுவர், எல்லாத் திசைகளிலும் சென்று வாணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். வீரவளஞ்சியர் என்னும் மற்றுமோர் வணிகக் கூட்டத்தாருடனும் அய்யப்புழல் கூட்டத்தார் தொடர்பு கொண்டிருக்கலாம். எட்டு நாடுகளைச் சார்ந்த 16 செட்டிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர். கவேரர், காத்திரிகள், செட்டிகள், செட்டிகுத்தர், அங்காரர், வீரர், வீரவணிசர், கண்டிகர், கவுண்டர், கவுண்ட சுவாமி ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்கள் என்று கருநாடகச் செப்பேடு உரைக்கும். இக்கூட்டத்தில் வாணிகர்கள் தவிர வீரர்களும் இருந்தனர்.

அய்யப்புழல் நிருவாகத்தில், ஏறக்குறைய 12–ஆம் நூற்றாண்டளவில் சில மாறுதல்கள் ஏற்பட்டன. அய்யப்புழல் வாணிகர்களின் இருப்பிடங்களான சில ஊர்களில் இவர்களுக்கிருந்த சில உரிமைகள் மாற்றியமைக்கப்பட்டன. இதனால் எறிவீரபட்டண வணிகள் அதிக சலுகைகளைப் பெற்றனர். இச்சலுகை

மாற்றத்தின் காரணங்கள் தெளிவாகத் தெரிந்தில. பதின்மூன்று, பதினான்காம் நூற்றாண்டுகளில் இவ் வணிகக் குழுவின் செயற்பாடுகளில் ஒருவகைத் தேக்கம் காணப்படுகிறது. சில இடங்களில் இவ்வணிகக் கூட்டத் தாரின் சிறப்புரிமைகள் பாதிக்கப்பட்டன. கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட பொது வான ஆட்சிச் சீர்கேடுகளினால் நிலையற்றதன்மை தோன்றியது. இதன் விளைவாக இவ்வணிகக் குழுவின் சிறப்புச் சலுகைகள் பாதிக்கப்பட்டிருக்கலாம். விசய நகரப் பேரரசுக் காலத்தில் இவ்வணிகக் குழுவின் நட வடிக்கைகள் பற்றிச் சில செய்திகளே தெரியவந்துள் ளன. எனினும் முன்போல இவ்வணிகக் குழு தன் பரந்துபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இயல வில்லை. ஆயினும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு வரை இவ் வணிகக் குழு ஓரளவு செல்வாக்குடன் செயற் பட்டது.

சிறப்புத் தன்மைகள்: சிறப்புச் சலுகைகள் பல வற்றைப் பல்வேறு மன்னர்களிடமிருந்து உரிமைச் சாசனங்கள் மூலம் பெற்றிருந்தனர் குற்றவாளிகளை விசாரணை செய்துதண்டிக்கவும் வீ ்ச்செயலை மதித்து வீரர்களுக்கு விருதுகளை வழங்கவும் உரிமை பெற்றி ருந்தனர். தங்களுக்கு என்று தனியான முத்திரை, கொடி போன்றவற்றையும் இவர்கள் பெற்றிருந்தனர். இவர்களின் சிறப்பான பணி வாணிகம் செய்தலாகும். இதனையே இவர்கள் கல்வெட்டுகள் வீரபனஞ்ச தருமத்தை' மேற்கொண்டவர்கள் என்று குறிக்கும். இத்தருமக் கோட்பாடுகள் 500 வீரசாசனங்களில் எழுதப்பட்டுள்ளன என்பர். இவர்கள் சேர சோழ பாண்டிய, மலைய, மகத, கோசல, சௌராட்டிர, இலாட நாடுகளில் வாணிகம் மேற்கொண்டனர்; மேலும், பாரசீகம், காம்போசம், நேபாளம் ஆகிய தொலைதூர நாடுகளுடனும் வாணிகம் செய்தனர்.

இவர்கள் வடக்கே சோலாப்பூரிலிருந்து தெற்கே குமரிவரை பல வணிகமையங்களை அமைத்திருந்த னர்: முப்பத்தாறு மையங்களைச் சிறப்பாகக் குறிக் கின்றனர். அவற்றுள் காவிரிக்குத் தென்கரையில் பதினெட்டும், வடகரையில் பதினெட்டும் அமைந் துள்ளன. தமிழகத்தில் கோயமுத்தூர், திருநெல்வேலி, கருநாடகத்தில் பீசப்பூர், பெங்களூர், சித்தல்துருகம், மைசூர், சிமோகா, ஆசன், ஆந்திர மாநிலத்தில் சித்தூர், கர்நூல், பெல்லாரி, அனந்தப்பூர் ஆகிய மாவட்டப் பகுதிகளில் இக்குழுவின் பணிகள் சிறப்பாக நடைபெற்றன. சிறப்பாகக் கருநாடகத்தில் இவர் களின் வாணிக நடவடிக்கைகள் பெருமளவு இருந்தன. சிறப்பான வாணிகமையங்களை 'அய்யவோலு' அய்யப் புழல்' என்று அழைத்தனர். மராட்டிய மாநிலத்தில் மிராசு, கருநாடக மாநிலத்தில் கொள்ளேகால், அரிசிக்கரை, நிட்டூர், அல்லூர், தமிழகத்தில் திரு முருகன் பூண்டி, ஆந்திராவில் குண்டூர் ஆகியவை சிறப்பான மையங்களாகும். உயர்ந்த நவரத்தினக் கற்கள், முத்துகள், பவளம், கோமேதகம், கெம்பு, வைடூரியம் போன்றவை சிறப்பான வாணிகப் பொருள்களாகும். நறுமணப் பொருள்கள், மருந்துகள், மருந்துப் பொருள்கள் ஆகியவற்றிலும் இவர்கள் வாணிகம் செய்தனர். யானை குதிரை ஆகியவையும் இவர்கள்தம் வாணிகப் பொருள்களாகும். நிலவழியா கவும் கடல் வழியாகவும் வாணிகத்தை மேற்கொண் டனர். கழுதைகள், எருமைகள் ஆகியவற்றைச் சுமை தூக்கவும் போக்குவரத்துக்கும் பயன்படுத்தினர். சில சமயம் தலைமீதும் பொருள்களைச் சுமந்து சென்று விற்றனர்.

இவர்கள் பலநாட்டுப் பகுதிகளில் பரவிக்கிடந்த காரணத்தால், பல்வேறு சமயக்கொள்கைகளைப் பின் பற்றினர். திருமாலை வழிபடுவோர் எனக் கல்வெட்டு கள் குறிக்கும். சிவனையும் வழிபட்டனர் இவர்கள். காளிகாதேவி, பரமேசுவரி ஆகியதேவிகளின்அருளைப் பெற்றவர்கள் என்றும், பகவதிதேவியின் மக்கள் என் றும் கூறிக்கொள்கின்றனர். எனவே இவர்கள் இந்துக் கள் எனக் குறிக்கப்படுவர். சமண சமய இயக்கிகளில் ஒருவரான பத்மாவதி தேவியின் அருள் பெற்றவர்கள் எனத் தம்மைக் கூறிக் கொள்வதால் இவர்களில் ஒரு சாரார், சமண சமயத்தைச் சேர்ந்தவர் என்றும் கருதலாம். ப.ச.

துணை நூல்கள்:


**Nilakanta Sastri, K.A.**, "A History of South India", Oxford, 1983.

**Appadorai, A.**, "Economic Conditions in Southern India", (1000-1500 A.D.)

**Gururajachar, S.**, "Some Aspects of Economic and Social life in Karnataka", University of Mysore, Mysore, 1974.

**Mahalingam, T.V.**, "South Indian Polity", University of Madras, Madras, 1967.

**Kenneth R. Hali.**, "Trade and Statecraft in the Age of Cholas", Abhinar, New Delhi, 1980.

**Nagaraja Rao (Editor), M. S.**, "The Chalukyas of Badami", Bangalore, 1978.


**அய்யனார்** அரிக்கும் அரனுக்கும் மகனாகப் பிறந்தவர். இவருக்கு ஆயுதம் வளை, செண்டு; வாக னம் குதிரை, யானையாகும். இவரைச் சாத்தா என் றும் அழைப்பர்.

தாருகாவனத்து இருடிகள் அவர்தம் மனைவியர் ஆகியோரின் ஆணவ இறுமாப்பினை அடக்குவதற்கு



அய்யனார்

அரியும் அரனும் எழுந்தருளிய காலத்து, மோகினியாகி நின்ற மகாவிட்டுணுவின்பால் அரனுக்கு மகனாகத் தோன்றியவர்.

சிற்றூரைப் பாதுகாக்க ஊருணிக் கரையில் இவருக்குக் கோயில் அமைக்கப்பெற்று வழிபாடு நடைபெற்று வருகிறது. மழை வேண்டிக் காவல் தெய்வமாகிய இவரை வழிபடுவதும் உண்டு. திருட்டு, தொத்துநோய், பேய்பூதங்கள், புயற்காற்று, வெள்ளம் முதலிய இயற்கையின் கொடுமைகளிலிருந்து ஊர் மக்களைக் காப்பாற்றுவதும், அவர்களுக்குக் குழந்தைப் பேறு அளிப்பதுவும் இத்தெய்வத்தின் செயல்களாகக் கருதப்படுகின்றன.

அய்யனாரின் சிலை கரடுமுரடான கல் உருவமாகவோ களிமண் உருவமாகவோ அமைக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் சுடப்பட்ட மண் உருவங்களாக அமைக்கப்படும். இச்சிலை அமைப்பு கிராமியக் கலைக்கு நல்ல எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

இவரது அருளைப் பெறச் சிறப்புக் கொடுத்தல், தீ மிதித்தல், சந்தனக் குடம் எடுத்தல் போன்ற சடங்குகளை ஊர்மக்கள் செய்வர். கண் முதலிய உறுப்புகளை வெள்ளியில் செய்து வைப்பர். மண் குதிரைகளையும் காணிக்கையாக்குவர். தீராத வழக்குகளைத் தீர்த்து வைப்பதும், காணாமல் போகும் பொருள்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதும் இவர் தம் அருட்செயலாகும் என்பது நம்பிக்கை. சு.ச.

**அயக்கிரீவர்** திருமாலின் ஒரு வடிவம். தனது தவ வலிமையால் மனிதர்களாலோ விலங்கினங்களாலோ அழிக்கமுடியாத வரத்தினைப் பெற்றுத் தேவர்களுக்குத் தீங்கிழைத்து வந்தான் ஓர் அரக்கன். தேவர்கள் சக்திமிகுந்த தேவியிடம் முறையிட்டனர். தேவி அவர்களைத் திருமாலிடம் செல்லும்படி கூற, திருமால் மனித உடலும் குதிரையின் முகமும் பெற்றவராகத் தோன்றி அவ்வரக்கனை அழித்தார். இவ்வடிவத்தையே அயக்கிரீவர் என்று குறிப்பிடுகின்றனர். இவ்வரலாற்றைத் 'தேவி பாகவதம்' எனும் நூல் குறிப்பிடுகிறது.



அயக்கிரீவர்

அயக்கிரீவர் எட்டுக் கைகளைக் கொண்டவராக நிலத்தாயின் விரிந்த உள்ளங்கைகளின் மேல் நின்றவாறு காட்சியளிப்பார். இவர் தம் நான்கு கைகளில் சங்கு, சக்கரம், கதை, தாமரைமலர் ஆகியவற்றையும், பிற நான்கு கைகளில் மனித உருவமாகச் சித்திரிக்கப்பட்ட நான்கு வேதங்களையும் கொண்டுள்ளார். இவர் பல்வேறு அணிகலன்களை அணிந்து காட்சியளிக்கிறார். இவர் கலைமகளுக்கு இணையான தகுதிகளைப் பெற்றவராகக் கருதப்படுகிறார்.

துணை நூல் :

**GopinathaRao**, **T.A.**, "Elements of Hindu Iconography", Vol. I, Part I, Indological Book House, Delhi, 1971.

**அயர்லாந்து** இங்கிலாந்து நாட்டிற்கு மேற்கே அட்லாண்டிக்குக் கடலில் 80 கி.மீ. தொலைவில் உள்ள தீவு. வடக்கிலிருந்து தெற்காக 475 கி.மீ. நீளமும் கிழக்கிலிருந்து மேற்காக 275 கி.மீ. அகலமும் உடைய பரப்பளவினைக் கொண்டு விளங்குகிறது. அயர்லாந்துக் குடியரசு, அந்நாட்டு ஐரிசு மொழியில் 'அயர்' எனக் குறிக்கப் பெறுகிறது. ஆங்கிலத்தில் அயர்லாந்து (Ireland) எனப்பெறுகிறது. 32 நாட்டுப் பகுதிகள் கொண்ட அயர்லாந்தில் 26 நாடுகளே, அயர்லாந்துக் குடியரசில் அடங்கியுள்ளன. வடகிழக்கில் உள்ள மீதி ஆறு நாடுகள், இங்கிலாந்தின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளன.




அயர்லாந்து

நிலவியல், மொழி, சமயம், கொடி: இந்நாட்டின் தட்பவெப்பநிலை இனிமை தருவது. ஆட்சி மொழியாக 'ஐரிசு' மொழி விளங்கியபோதிலும் பொதுவாகப் பேசப்பெறும் மொழி ஆங்கிலமாகும். அரசு ஆவணங்கள் ஆங்கிலம் ஐரிசு ஆகிய இருமொழிகளிலும் அச்சிடப்பெறுகின்றன. இம்மக்களின் சமய நிலையினைப் பொறுத்தவரையில் 95 விழுக்காட்டினர் உரோமானியக் கத்தோலிக்கர்; 5 விழுக்காட்டினர் புராட்டசுடண்டு கிறித்தவச் சமயப் பிரிவினர். இந்நாட்டின் தேசியக்கொடி, இரண்டுக்கு ஒன்று என்ற அளவில், மேலும் கீழுமாகச் சமமான பச்சை, வெள்ளை, ஆரஞ்சு நிறப் பட்டைகளைக் கொண்டது. இதன் தலைநகர் தப்ளின் (Dublin) ஆகும்.

வரலாற்றுப் பின்னணி: பன்னெடுங்காலமாக அருகருகே அமைந்த இரு தீவுகளான இங்கிலாந்தும் அயர்லாந்தும் இயற்கையாகவே நெருங்கிய தொடர்புடையன. ஆங்கிலேயர், ஐரிசு நாட்டவர்களைக் காட்டுமிராண்டிகளாகக் கருதி, அவர்கள் உணர்வுகளை மதித்து நடக்கவில்லை. மூர்க்கத் தனமான படையெடுப்புகளை நடத்தி அவர்களை அடிமை கொண்டனர். அயர்லாந்தினருள் பெரும்பாலோர் கத்தோலிக்கர். ஆங்கிலேயர் புராட்டசுடண்டுப் பிரிவினர். அயர்லாந்தினர் அயல் சமயத்தையும், அயல்மொழியையும் எதிர்த்துக் குரல் கொடுத்தனர்; விடுதலைப் போரினைத் தொடங்கினர். முதலில் அயர்லாந்தை ஒன்றுபடுத்திப் பின்னர் விடுதலைப் போரில் ஈடுபட்

டனர். டியூடர்கள் (Tudors), இசுடுவர்டுகள் (Stuarts) இங்கிலாந்தை ஆண்டபோது, அயர்லாந்தின் மீது படையெடுக்கத் தீவிர முயற்சிகள் மேற்கொண்டனர். கிராம்வெல் இங்கிலாந்து நாட்டினை ஆண்ட காலத்தில் அயர்லாந்து அடக்குமுறைக்குப் பெரிதும் ஆளாயிற்று. நாட்டின் மூன்றில் இரண்டு பகுதி நிலங்கள் ஆங்கிலேயரின் கீழ் இருந்தன.

கிராம்வெல் ஆண்ட காலத்தில் அயர்லாந்து அடக்குமுறைக்கு ஆளாகியதால், ஆங்கிலநாட்டு நில உரிமையாளர்கள் அயர்லாந்துப் பெண்களை மணந்து அங்குத் தங்கியதால், அவர்தம் பிள்ளைகள் அயர்லாந்தினராகவே வாழ்ந்தனர். ஆதலால் அயர்லாந்து அயர்லாந்தாகவே, கத்தோலிக்கச் சமய நாடாகவே விளங்கிற்று. இதனால் இங்கிலாந்தின் புராட்டசுடண்டுக் கொள்கை வெகுவாகப் பரவவில்லை.

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவுகள் அயர்லாந்திலும் எதிரொலித்தன. இப்புரட்சியின் எண்ண விதைகள் அயர்லாந்து மண்ணில் முளைத்துப் பயிராயின. 'ஐக்கிய அயர்லாந்தியர்' என்னும் சங்கம் கி.பி. 1791-இல் நிறுவப்பட்டது. அச்சங்கத் தலைவர்களான உல்ப்டோன் (Wolfe Tone) பிட்செரால்டு (Fitzgerald) பிரபு முதலானோர், தெற்கு அயர்லாந்தில் வாழ்ந்த கத்தோலிக்கரையும், வடக்கு அயர்லாந்தில் வாழ்ந்த புராட்டசுடண்டுகளையும் இணைக்க முயன்ற போதிலும், இரு சமயப் பிரிவினருக்குமிடையே காழ்ப்புணர்வு ஏற்பட்டு, உள்நாட்டுப்போர் தொடங்கியது. அதைக் காரணம் காட்டி ஆங்கில அரசுப் படைகள் அயர்லாந்தைப் பிடித்தன. உல்ப்டோன் கைதாகிச் சிறையிலே தற்கொலை செய்து கொண்டார். பிட்செரால்டு போரிட்டு மாண்டார். அயர்லாந்தை இங்கிலாந்துடன் இணைப்பது என்ற முன்வரைவு கி.பி. 1800-இல் நிறைவேற்றப்பட்டது. இணைப்பினால் இன்னல் தீரவில்லை; சிக்கல்கள் அறுபடவில்லை.

இணைப்பிற்குப்பின் அயர்லாந்தினர் நான்கு வகையான குறைபாடுகளைக் கூறினர். அவையாவன: சமயக் குறைகள், வாணிகக் குறைகள், அரசியற் குறைகள், வேளாண்மைக் குறைகள். தேனியல் ஓகொனெல் (Daniel O Connell) என்ற கத்தோலிக்கத் தலைவர், கத்தோலிக்கர் விடுதலை பெற அவர்களை ஒன்றுபடுத்திடக் கி.பி. 1823-இல் கத்தோலிக்க மன்றம் ஒன்றை நிறுவினார். அவர் தேர்தல் களத்தில் கி.பி.1828-இல் பெற்ற வெற்றி, சிறிது மாறுதலை விளைவித்தது. அவர், தனி அயர்லாந்துச் சுதந்திர நாட்டை ஏற்படுத்தவும் ஐக்கியச் சட்டத்தை நீக்கவும் இளைய அயர்லாந்து இயக்கத்தை உருவாக்கிய போதிலும் கி.பி. 1848-க்குப் பின்னர் அவ்வியக்கம் செயற்படவில்லை. 'பெனியன்சு' (The Fenians) என்ற புரட்சிச் சங்கங்கள் கி.பி. 1859-இலும், ஐசக்பட் என்பவரின் தன்னாட்சி (Home Rule) இயக்கம் கி.பி. 1870-இலும் தோன்றின. அயர்லாந்தின் குறைதீர்க்க, ஆங்கில அரசு பல்வேறு சலுகை வாய்ப்புகளை அளித்தபோதிலும் அயர்லாந்தினர் தன்னாட்சி வேண்டியே போராடினர். ஆர்தர் கிரிபித் (Arthur-Griffith) என்பவரால் 1904-இல் உருவாக்கப்பட்ட சின்பியன்னர்கள் (Sinn Fein) இயக்கம், 1918-இல் முதல் உலகப் போருக்குப் பின் நடைபெற்ற தேர்தலில், வெற்றி பெற்றதன் விளைவாக, ஆர்தர் கிரிபித், மைக்கேல் காலின்சு (Michael Collins) முதலானோர் குடியரசு ஆட்சியை நிறுவினர்.

இத்தருணத்தில் ஆங்கில அரசு, வடஅயர்லாந்திற்கும் தென் அயர்லாந்திற்குமாக இரண்டு தனித்தனி ஆட்சியை ஏற்படுத்த முன் வந்தது. ஆங்கிலப் பிரதமர் இலாயிடு சார்சு (Lloyd George) 1921-ஆம் ஆண்டு பேரரசுக்குள் அடங்கிய தொமினியன் (Dominion) தகுதிபெற்ற ஐரிசுத் தனி நாட்டினை ஏற்படுத்தச் சம்மதித்தார். ஐரிசுப் பேராளர்கள் இவ்வுடன்படிக்கைக்கு ஆதரவு தெரிவித்தபோதிலும் தீவிரவாதிகள் டிவேலரா (De Valera) தலைமையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவே, இரு சாராருக்குள்ளும் உள்நாட்டுப் போர் மூண்டது. சுதந்திரவாதிகள் வெற்றி பெறவே, தொமினியன் தகுதி பெற்ற அரசு உருவாக்கப்பட்டது; காமன்வெல்த்தின் (Commonwealth) சுயேச்சை உறுப்பினர் நாடாகவும் ஆகியது. 26 தெற்கு நாடுகளும் 1922-இல் தொமினியன் தகுதி பெற்றன. அயர்லாந்தை, 'இறைமை வாய்ந்த, விடுதலை பெற்ற மக்களாட்சி அரசு' என 1937-இல் உருவான அரசியல் சட்டம் அறிவித்தது. அயர்லாந்து 1949, ஏப்பிரல் 18-இல் குடியரசாயிற்று. காமன்வெல்த்தில் அது கொண்டிருந்த உறவு அறுபட்டது.

அயர்லாந்துப் பிரிவினை ஒரு சிக்கலாக இருந்து வந்தது. ஆட்சியில் 44 ஆண்டுகள் இருந்த 'பியன்னா பெயில்' (Fianna Fail) என்னும் கட்சி 1973-இல் தோற்றது. தொழிற்கட்சி, பைன்கேயல் (Fine Gael) ஆகியவை இணைந்து, ஆட்சி அமைத்தன. இங்கிலாந்தின் தூதுவர் மவுண்டுபேட்டன் 1979 ஆகசுட்டில் அயர்லாந்துக் குடியரசுப் படை என்னும் அமைப்பினால் கொல்லப்பட்டார். சாக்லிஞ்சு 1977 தேர்தல் வெற்றியினால் அடைந்த தலைமை அமைச்சர் பதவியினை விட்டு விலகினார். சார்லசு கௌகே (Charles Haughey) அவருக்குப்பின் பதவியேற்றார். தேர்தலை நடத்தித் தம் நிலையைப் பலப்படுத்த விரும்பிய அவர் 1981-இல் தோற்றார். பைன் கேயல் (Fine Gael) கட்

சியைச் சேர்ந்த டாக்டர் காரட் பிட்செரால்டு தொழிற்கட்சியுடன் இணைந்து கூட்டணி அரசினை அமைத்தார். அயர்லாந்துப் பாராளுமன்றம் 'தயல்' (Dail) 1982-இல் வரவுசெலவுத் திட்டத்தை ஏற்க வில்லை. மீண்டும் நடைபெற்ற தேர்தலில் பியன்னா பெயில் சிறுபெரும்பான்மை பெற்று வென்றது. தொழிலாளர் கட்சியின் மூன்று உறுப்பினர்களையும், இரண்டு சுயேச்சைகளையும் சேர்த்துச் சார்லசு கௌகே மீண்டும் தலைமை அமைச்சரானார். கௌகே, நவம்பரில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் போது சுயேச்சைகள் ஆதரவினை இழந்துவிடவே, தயல் (Dail) கலைக்கப் பெற்றது. தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் மீண்டும் அறுதிப் பெரும்பான்மையினைப் பியன்னாபெயில் பெறவில்லை.

அரசு: அயர்லாந்து நாட்டில் சட்டமியற்றும் அதிகாரம், செனடு அல்லது செனடு ஐரியன் (Senad Eireann) பேராளர்கள் சபை, தயல் ஐரியன் (Dail-Eireann) சபை ஆகிய இரு சபைகளிடத்தும் உள்ளது. ஐரிசுச் சுதந்திர நாட்டின் முதல் அரசியல் சட்டம் 1922, திசம்பர் 6-இல் செயற்படத் தொடங்கியது. அடுத்த புதிய சட்டம் 1937 சூன் 14-இல் நாடாளுமன்றத்தினால் ஏற்கப்பெற்று, 1937 திசம்பர் 29-இல்



தப்ளின் நெல்சன் தூண்

செயற்பட்டது. அயர்லாந்து 1948 ஏப்பிரல் 18-இல் குடியரசாயிற்று.

அயர்லாந்து அரசியல் சட்டம், அந்நாட்டினை இறைமை வாய்ந்த, சுதந்திரமான, மக்களாட்சி அரசு என அறிவிக்கிறது. நாட்டின் தலைவர் குடியரசுத் தலைவர். இவருடைய பதவிக்காலம் ஏழு ஆண்டுகளாகும். நாடாளுமன்றத்தை அரசின் கருத்துப்படி கூட்டுவது, கலைப்பது, நீதிபதிகளை அமர்த்துவது முதலியன இவர் பணிகளாகும். நேரடியாக மக்களால் இவர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

அயர்லாந்தின் அரசு 'தயல்' என்ற நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புடையது. செனடு சபையில் 60 உறுப்பினர்களும், மக்கள் அவையில் 166 உறுப்பினர்களும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். மக்களின் அடிப்படை உரிமைகள், கல்வி உரிமைகள் ஆகியவை அரசியல் சட்டத்தில் வழங்கப் பெற்றுள்ளன. மக்களிடையே நேரடியாகக் கருத்து வாக்குப் பெற்றே (Referendum) எந்த அரசியற் சட்ட மாற்றங்களும் மேற்கொள்ளப்படும்.

அரசியற் கட்சிகள்: பியன்னா பெயில், பைன் கேயல், தொழிற்கட்சி, தொழிலாளர் கட்சி, சின் பெயின், ஐரிசுக் குடியரசுச் சமதருமக் கட்சி, அயர்லாந்துப் பொதுவுடைமைக் கட்சி, சமதருமக் கட்சி ஆகிய அரசியல் இயக்கங்கள் குறிப்பிடத்தக்கவை.

பரப்பும் மக்கள் தொகையும்: மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டு ஏப்பிரல் 3-ஆம் நாள் எடுக்கப்பெற்ற கணக்கின்படி 34,43,405 ஆகும். அயர்லாந்தின் மொத்தப் பரப்பு 17,367,211 ஏக்கர் (70282.6 ச. கி.மீ.) ஆகும். இலெயின்சுடர், முன்சுடர், கன்னாட்டு, உல்சுடர் (பகுதி) ஆகிய மாநிலங்கள் உள்ளன. தப்ளின், கார்க், இலைமெரிக், கால்வே, வாட்டர்போர்டு முதலியன தலையாய நகரங்களாகும். இந்நாட்டின் பிறப்பு விகிதம் 1981-இல் 1000-க்கு 21.0 ஆகவும், இறப்பு விகிதம் 9.7 ஆகவும் இருந்தது.

பொருளாதார நிலை: அயர்லாந்து நாட்டுப் பொருளாதாரம் பெரிதும் வேளாண்மையையே சார்ந்துள்ளது. நாட்டின் 20 விழுக்காடு மக்கள் வேளாண்மையையே தொழிலாகக் கொண்டவர்கள். நாட்டின் 30 விழுக்காடு ஏற்றுமதியில் வேளாண்மைப் பொருள்கள் அடங்கும். இந்நாடு 1973-இல் ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவில் சேர்ந்ததனால், வேளாண்மை ஏற்றுமதி ஏற்றம் பெற்றது. முதல் ஐந்து ஆண்டுகளில் உழவர் வருவாய், 142 விழுக்காடாக அதிகரித்தது. ஆயினும் 1978-80-இல் 40 விழுக்காடு இறங்கியது. உழவுக்கு அடுத்த பெரிய தொழில் சுற்றுலாத் தொழில்தான். சுற்றுலா வருவாய் 1981-இல் 18 விழுக்காட்டிற்கு மேல் அதிகரித்தது.

தொழில் விரிவாக்கம் 1960 முதலே ஏற்பட்டது. தொழில் வளர்ப்பு நிறுவனம் (Industrial Development Authority) 15,000 பேருக்கு வேலை வாய்ப்பு நோக்குடன் தொடங்கப்பெற்றது. ஏற்றுமதிச் சலுகைகளை வழங்கின் அது 1965-க்குள் 35,000 பேருக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குமெனப்பொருளியல் வல்லுநர்கள் கருதினர். கம்ப்யூடர், எலெக்டிரானிக் (மின்னணு) முதலிய துறைகளில் வளர்ச்சிபெற ஐ.டி.ஏ. கவனம் செலுத்துகிறது.

குறிப்பிடத்தக்க ஏற்றுமதிப்பொருள்கள் மாட்டிறைச்சி, இரசாயனப் பொருள்கள், பால்பொருள்கள், துணி வகைகள், கால்நடை உயிரினங்கள் ஆகும். இங்கிலாந்து ஐம்பது சதவீதப் பொருள்களை இந்நாட்டிற்கு ஏற்றுமதி செய்து, 40 சதவீதப் பொருள்களை இறக்குமதி செய்துகொள்கிறது. ஐரோப்பாவின் மிகப் பெரிய துத்தநாகச் சுரங்கங்கள் 1977-இல் நவான் என்னுமிடத்தில் தோண்டப் பெற்றன. யுரேனியம் தோண்டும் வேலை 1979-இல் தொடங்கப் பெற்றது. இலைமெரிக்கில் அலுமினிய உற்பத்தித் தொழிற்சாலை தொடங்கப்பெற்றது.

ஐ.டி.ஏ. நிறுவனத்தின் முயற்சியிருப்பினும் 1982 மத்தியில் 13.5 விழுக்காடு வேலையின்மை நிலை நிலவியது. கூலி உயர்வினால் 1981-இல் 23 விழுக்காடு பணவீக்கமும், 1982- இறுதியில் 17 விழுக்காடு குறைவு நிலையும் உருவாயிற்று. ஐரோப்பியப் பணமுறையில் 1979-இல் அயர்லாந்து சேர்ந்தது. இதனால் பணமதிப்புக் குறைவு ஏற்பட்டது.

**போக்குவரத்து:** அரசினால் நிருவகிக்கப்படும் போக்குவரத்து இருப்புப் பாதை 1795 மைல் தூரத்திற்குப் போடப்பட்டுள்ளது போக்குவரத்துச் சாலைகள் 1980-இல் 57, 684 மைல்கள் இருந்தன. தப்ளின் (Dublin), தன் லாங்கைரே, கார்க்கு (Cork), வாட்டர் போர்டு (Waterford), இலைமெரிக் (Limerick), போய்ன்சு, நியூராசு (Newross), துரோகேதா (Drogheda) முதலானவை குறிப்பிடத்தக்க துறைமுகங்களாகும். சான்னன் (Shannon), தப்ளின், கார்க்கு முதலானவை பன்னாட்டுப் போக்குவரத்து விமான நிலையங்களாகும். தேசிய விமானப்பணி 'ஏர்லிங்க்சு' என்பதனால் நடைபெறுகிறது.

**சமூக நலம்:** அயர்லாந்து அரசு, சமூக நலனில் அக்கறை செலுத்திக் காப்பீட்டுத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. சமூக நலக் காப்பீட்டுத் திட்டம் கட்டாயமாக மேற்கொள்ளப்பெறுகிறது. விதவையர், ஓய்வுபெற்றோர் முதலானவர் பயன்பெறும் வகையில் காப்பீட்டுத் திட்டங்கள் உள்ளன. சமூக நலக் காப்பீட்டுச் செலவினை அரசு, தொழில்புரிவோர், தொழில் நிறுவனர் ஆகிய முத்தரப்பினரும் ஏற்றுக் கொள்கின்றனர். அரசின் ஓய்வூதியம் பெறாத பிரிவினரின் நலனை அரசே ஓய்வூதியம் வழங்கிக் கவனிக்கிறது. குறைந்த வருவாய் பெறும் நலிந்த பிரிவினருக்கு இலவச மருத்துவச் சிகிச்சை அளிக்கப் பெறுகிறது. சமுதாயத்தில் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு மருத்துவ ஆலோசனைக்கு மட்டும் கட்டணம் பெறப்படுகிறது. குறைந்த அளவுக் கட்டணத்தில் மருந்துகள் வழங்கப்பெறுகின்றன. மருத்துவச் செலவுக்கென மொத்தச் செலவினத்தில் 18 விழுக்காடு 1981-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பெற்றது.

**கல்வி நலம்:** அயர்லாந்தில் ஆறு வயது முதல் பதினைந்து வயது வரை உள்ள ஆடவர், மகளிர் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டும். பன்னிரண்டு வயது வரை உள்ள சிறார்கள் தேசியப் பள்ளிகளில் பயிலுகின்றனர். கல்வித்துறை, நாட்டின் கல்வியினை நிருவகிக்கிறது.

நான்கு வகையான கல்விச் சாலைகள் இந்நாட்டில் உள்ளன. அவை இடைநிலைப்பள்ளிகள், தொழிற்பள்ளிகள், முழுமைப்பள்ளிகள் (Comprehensive Schools), சமூகப் பள்ளிகள் என நால்வகைப்படும். கிராமப்புறங்களில் 9 மண்டலத் தொழில் நுணுக்கப் பள்ளிகளும் இடைநிலைப்பள்ளிகளும், தொழிற்பள்ளிகளுக்கு மாற்றாகத் தொடங்கப் பெற்றுள்ளன. அரசின் வருவாயில் 16 விழுக்காடு கல்விக்குச் செலவிடப் பெறுகிறது. தப்ளின் நகரில் 1980-இல் 'உயர்கல்வி தேசியக் கல்வியகம்' திறக்கப் பெற்றது. மாணவர் கல்விக்கு அரசு உதவித் தொகை வழங்குகிறது.

**நீதிமுறை:** நீதிமுறை உச்சநீதிமன்றம், குற்றவியல் மேல்முறையீட்டு நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள், சுற்று மாவட்ட நீதிமன்றங்கள் என நான்கு பிரிவினதாகச் செயற்படுகிறது. உயர் நீதிமன்றம் ஆறு நீதிபதிகளைக் கொண்டுள்ளது. குற்றவியல் மேல் முறையீட்டு நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதியும், இரண்டு உயர் நீதிமன்ற நீதிபதிகளும் முறை வழங்குவர்.

இங்கிலாந்தின் பிடியிலிருந்து விடுபட்டு விடுதலை பெற்ற அயர்லாந்து, பல்வகையிலும் தன் தனித்தன்மையைக் காத்து முன்னேறிட முயன்று வருகிறது.

ந.க.ம.

***அயல் இனமையக் கொள்கை:*** காண்க. இனமையக் கொள்கை.

***அயல்நாட்டு உதவி:*** பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகளில் முதலீடு மிகவும் குறைவாக உள்ளது. மக்களின் வருவாய் குறைவாக இருப்பதால் சேமிப்பும் குறைந்து, போதுமான அளவு மூலதனம் கிடைப்பதில்லை. கடந்த நூற்றாண்டில் பொருளாதார வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ச்சி

அடையாத நாடுகளுக்கு உதவி புரிய வேண்டியதன் இன்றியமையாமையை உணர்ந்தன. பிற நாடுகளின் வறுமையை நீக்குவதன் வாயிலாகத் தன்னாட்டு வளத்தினைப் பாதுகாத்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கு அந்நாடுகள் வந்தன. அரசாங்கங்களுக் கிடையே நிதி உதவி செய்வதன் வாயிலாக, வளர்ச்சி குன்றிய நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தைக் காண முயன்றன. இதனால், அயல்நாட்டு உதவி (Foreign Aid), கடன்கள் (Loans), கொடைகள் (Grants) முதலிய வசதிகள் ஏற்பட்டன; பன்னாட்டு நிதி நிறுவனங்கள் உருவாகி வளர்ந்தன. இந்தியா போன்ற பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளுக்கு; அயல்நாட்டு உதவி, முன்னேற் றத்தின் முதன்மைக் கட்டங்களில் வேண்டி இருப்ப தால், இந்நாடுகள் அயல்நாட்டு உதவியைப் பெரும் பாலும் எதிர்பார்க்கின்றன. இந்நாடுகளுக்கு அயல் நாட்டு உதவி, வளர்ச்சிக் காலங்களில் மூவகை இடை வெளிகளை அகற்றுவதற்குத் தேவைப்படுகிறது. அவை (1) சேமிப்பு முதலீட்டு இடைவெளி, (2) அயற் செலாவணி இடைவெளி, (3) தொழில் நுணுக்க இடைவெளி ஆகியவையாம்.

சேமிப்பு-முதலீட்டு இடைவெளி: இந்தியத் திட் டத்தில் அயல்நாட்டு உதவி, உள்நாட்டு முதலீட்டை மேலும் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிகர சேமிப்பு, முதலீட்டை விடக் கூடுதலாக இருந்தது. நிகர தேசிய வருமானத்தில் 1950-51-ஆம் ஆண்டு உள்நாட்டுச் சேமிப்பு 4.98 விழுக்காடாகவும், முதலீடு 4.94 விழுக் காடாகவும் இருந்தன. ஆனால், இன்றுவரை உள் நாட்டுச் சேமிப்பு, உள்நாட்டு முதலீட்டைவிடக் குறைந்து கொண்டே வருகிறது. ஐந்தாம் ஐந்தாண் டுத் திட்டத்தின் இறுதியில் 0.8 விழுக்காடு இடை வெளி, சேமிப்புக்கும் முதலீட்டிற்கும் இருந்தது. அத னால், இந்த இடைவெளியை 1984-85-ஆம் ஆண்டிற் குள் ஆறாம் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில், 0.6 விழுக்காடாகக் குறைக்க முயல்கிறார்கள்.

அயற்செலாவணி இடைவெளி: அயற்செலாவணி சிறப்பாக வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தேவைப்படுகிறது. ஆறாம் ஐந்தாண் டுத் திட்டத்தில், வாணிகச் செலுத்துநிலைகளை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னுரிமை (Priority) கொடுக் கப்பட்டிருக்கிறது. உரூ. 5889 கோடி அயல்நாட்டு உதவியாக அரசு வாங்க முடிவு செய்துள்ளது. அயற் செலாவணி இடைவெளி முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உரூ. 198 கோடியிலிருந்து மூன்றாம் ஐந் தாண்டுத் திட்டத்தில் உரூ. 2825.3 கோடியாக மிகு திப்பட்டது.

தொழில் நுணுக்க இடைவெளி: அயல்நாட்டு உதவி, இந்தியாவிற்கும் மற்றப் பொருளாதார முன் னேற்றம் அடைந்த நாடுகளுக்குமுள்ள தொழில் நுட்ப அறிவின் இடைவெளியைப் போக்குவதற்கு உதவுகி றது. அயல்நாட்டுத் தொழில் நுணுக்க அறிவைப் பெறுதற்குச் சில வரையறைகள் உள்ளன. சிறப்பாக, ஒரு குறிப்பிட்ட தொழில் நுணுக்க அறிவானது இந் தியாவில் செயற்படாமல் இருந்தால்தான், அந்த நுணுக்கத்தைப் பிறரிடமிருந்து பெற முடியும். இவ் வரையறையின் முக்கிய நோக்கம் இத்துறையில் நாடு தன்னிறைவை அடைய வேண்டும் என்பதேயாகும். ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் உள்நாட்டுச் சேமிப்பைப் பெருக்கி, முதலீட்டை மிகுதிப்படுத்துவ தாகும். வளர்ந்து வரும் இறக்குமதிச் செலவைக் குறைக்க ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தியை மிகுதியாக்கி, அயல்நாட்டுச் செலாவணியையும் பெருக்க வேண்டும். இதற்கு உள்நாட்டிலேயே தொழில் நுணுக்க அறிவை நன்கு வளர்ப்பதற்கு முயல வேண்டும். அயல்நாட்டு உதவி இந்நோக்கத்தை நிறைவு செய்வதற்கேயாகும்.

முதலாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்து இந்தியா பல்வேறு நாடுகளின் அயல்நாட்டு உதவி யைப் பெற்றுவருகிறது. அயல் நாட்டுப் பொருளா தார அங்காடிகளிலிருந்தும் திட்டமிட்ட மையப் பொருளாதாரங்களிலிருந்தும் பன்னாட்டு நிறுவனங் களிலிருந்தும் இவ்வுதவி இந்தியாவுக்குக் கிடைக்கிறது. அயல்நாட்டு உதவியை இரண்டு கோணங்களில் ஆராயலாம். முதலாவது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட உதவி. இரண் டாவது, அந்த உதவி எந்த அளவிற்குப் பயன்படுத் தப்படுகிறது என்பது. இவ்விரண்டு உதவிகளும், பொருளாதாரம் எந்த அளவிற்கு இவற்றைப் பயன் படுத்த முடியும் என்பதைக் காட்டுகின்றன. ஒரு பொருளாதாரம் இவ்விரண்டு உதவிகளையும் மிகுந்த அளவில் பயன்படுத்தினால், அது பொருளாதார முன் னேற்றம் அடைந்து வருவதைக் குறிக்கும். 1982-83-ஆம் ஆண்டு இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட உதவி உரூ. 34,811.5 கோடியாகும். இதில் உரூ. 27.055 கோடி பயன்படுத்தப்பட்டது. ஒதுக்கப்பட்ட உதவி என்பது, ஒரு குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்தப்படுவதற் காகக் கொடுக்கப்படுவது. ஆனால், சில வேளைகளில் அந்த உதவி குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்தப் படாமற் போகலாம். இவ்வுதவி, பொதுவாக நிகழ் காலத்திற்கான திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், நீண்டகாலப் பொருளாதாரச் செயல்களில் ஈடுபடு வதற்கும் கொடுக்கப்படுவதாகும். இவ்வுதவியில் ஒரு பகுதி, அதே காலத்தில் பயன்படுத்துவதற்கும் வழங் கப்படுகிறது.

அயல்நாட்டு உதவி அதிக அளவில் வழங்கப்பட்டாலும், சீரிய முறையில் வழங்கப்படாவிட்டால் அதனால் யாதொரு பலனும் அடைய முடியாது. அயல் நாட்டுக் கடன்கள் பெற்றால் கட்டாயமாக அவற்றை முதலும் வட்டியுமாகத் திருப்பித் தர வேண்டும். ஆனால், கொடைகளாகப் பெற்றதனைத் திருப்பித் தர வேண்டியதில்லை. பொதுவாக, நாடுகள் கொடைகளை மிகுதியாக நம்பி இருக்கக் கூடாது. பெரிய கடன் தொகையை மற்ற நாடுகளிடம் இருந்து பெறும் பொழுது நாட்டின் கடன் சுமை மிகுதியாகிறது. இந்தியாவில் 1974–75 வரை அயல்நாட்டு உதவி கடன் வாயிலாகப் பெறப்பட்டது. ஆனால், 1975–76–ஆம் ஆண்டிலிருந்து அயல்நாட்டு உதவி கொடை வாயிலாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனால் கொடைகளின் அளவு மிகுந்து கொண்டே செல்கிறது. 1974–75–ஆம் ஆண்டு 7.0 விழுக்காட்டில் இருந்த கொடையின் அளவு, 1975–76, 1976-77–இல் 15.4 விழுக்காடாகவும், 1977–78–ஆம் ஆண்டு 20.2 விழுக்காடாகவும், 1978–79–ஆம் ஆண்டு 21.6 விழுக்காடாகவும், 1979–80–ஆம் ஆண்டு 22.3 விழுக்காடாகவும், 1980–81-ஆம் ஆண்டு 18.3 விழுக்காடாகவும், 1981–82–ஆம் ஆண்டு 17.3 விழுக்காடாகவும் உயர்வு பெற்றது. இவ்வாறு கொடைகளின் அளவு மிகுதிப்படுவதற்குக் காரணம், இந்தியாவின் கடன் பளு நாளுக்கு நாள் மிகுதியாகிக் கொண்டு வருவதேயாகும்.

அயல்நாட்டு உதவியின் நெகிழ்ச்சித் தன்மையை அறிவதற்குக் கட்டுப்பட்ட, கட்டுபடாத கடன்கள் (Tied & Untied Credits) உதவுகின்றன. கட்டுப்படாத கடனை ஒரு நாடு பெறும்போது அது விரும்பிய திட்டங்களில் முதலீடு செய்வதன் வாயிலாகப் பொருளாதார முன்னேற்றம் அடையலாம். அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்குக் கிடைக்கும் உதவி பெரும்பாலும் கட்டுப்பட்ட உதவியேயாகும். அமெரிக்க உதவியை இந்தியா, அமெரிக்கப் பொருள்கள், பணிகள் மீதுதான் செலவிட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. பொதுவுடைமை நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் உதவியும் இவ்வகையைச் சார்ந்ததே. கட்டுப்பட்ட கடனில் பல குறைபாடுகள் உள்ளன. கடன் பெற்ற நாடு, கட்டாயமாக உதவி அளித்த நாட்டின் பொருள்களையும் கருவிகளையும் வாங்க நேரிடுகிறது. இதனால், நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களின் செலவு 30 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக மிகுதிப் படுத்தப்படுகிறது. ஏனென்றால், பன்னாட்டு விலைகளை விட உதவி அளிக்கும் நாட்டுப் பொருள்களின் விலை மிகக் கூடுதலாக உள்ளது. மேலும், அயல் நாட்டு உதவியை அளிக்கும் நாடுகள் பொருள்களையும் கருவிகளையும் தங்கள் கப்பல்களிலேயே ஏற்றுமதி செய்வதால், உதவியைப் பெறும் நாடுகள், கப்பல் கட்டணங்களையும் செலுத்த வேண்டியுள்ளன. இதனால், கடன் உதவிபெறும் நாடு, கடன்பெறும் முக்கிய நோக்கத்தையே இழந்துவிடுகிறது. மேலும், கடன் அளிக்கும் நாடு, கட்டாயமாக மூலதனம் செறிந்த உற்பத்தி (Capital Intensive Technique) முறையையே கையாள வேண்டும் என்று உதவி பெறும் நாட்டைக் கட்டாயப்படுத்துவதால், உழைப்பு (Labour) மிகுதியாகப் பயன்படுத்தும் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறையைக் (Labour Intensive Technique) கையாள முடியாமல் போய்விடுகிறது.

கட்டுப்படாத கடன்கள் பொது நோக்கத்திற்காகக் கொடுக்கப்படுவதாகும். இதனைத் திட்டமில்லாத உதவி என்றும் குறிப்பிடுகின்றனர். ஆலன் கார்லின் (Alan Carlin) என்ற பொருளாதார வல்லுநரின் கருத்துப்படி, கட்டுப்படாத உதவி என்பது, உதவியைப் பெறும் நாடு, தான் பெறும் உதவியை ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு மட்டும் செலவிடாமல் பல வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவிடுவதாகும். இதனால், இவ்வுதவி கட்டுப்பட்ட உதவியை விட மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. மேலும், இவ்வுதவியைப் பெறுவதால், உதவியின் செலவும் குறைவாக இருக்கும்.

ஆனால், இப்பொழுது இந்தியாவில் கட்டுப்பட்ட கடனின் அளவே பெருகி வருகிறது. கட்டுப்பட்ட கடனின் அளவு, 1976–77–ஆம் ஆண்டு, 55.4 விழுக்காடாகவும், 1977-78-ஆம் ஆண்டு 22.4 விழுக்காடாகவும், 78–79-ஆம் ஆண்டு 24.2 விழுக்காடாகவும், 1979–80–ஆம் ஆண்டு 21.3 விழுக்காடாகவும், 1980–81–ஆம் ஆண்டு 17.4 விழுக்காடாகவும், 1981–82–இல் 29.3 விழுக்காடாகவும் உயர்ந்தது. கட்டுப்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்தும் பொழுது இந்தியாவின் செலவு இருமடங்கு மிகுதியாகிறது. இக் கடனை அடைப்பதற்கு இந்தியா, தன் முக்கிய பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. ஆனால், ஏற்றுமதியின் மதிப்பு, தான் வாங்கும் கடனின் அளவைவிட மிகுதியாக இருப்பதால் இந்தியாவுக்கு மிகுந்த இழப்பு ஏற்படுகிறது. மேலும், இக் கடனை அடைப்பதற்கு அயற் செலாவணி பெருமளவில் தேவைப்படுகிறது. இந்தியச் செலாவணியால் கடனைத் திருப்பிக் கொடுத்தால் வெளிநாட்டுக் கடன் தொல்லையைச் சிறிதளவு குறைக்க முடியும். அன்றியும் கடனைத் திருப்பிச் செலுத்தும்பொழுது அக் கடன், நீண்டகாலக் கடனாகவோ, குறுகியகாலக் கடனாகவோ இருக்கலாம். நீண்டகாலக் கடனை விடக் குறுகியகாலக் கடனைத் திருப்பிச் செலுத்துவது மிகவும் கடினமாகும். கொடைகள் வாயிலாகப் பெறும் கடனைத் திருப்பிச் செலுத்தும் கடப்பாடு இல்லை. எடுத்துக்காட்டாக, அமெரிக்காவிலிருந்து பொதுச் சட்டம் 480 (P.L. 480) வாயிலாகவும், பொதுச்சட்

டம் 665 (P.L. 665) வாயிலாகவும் வரும் உதவிகளைக் கூறலாம்.

எந்தத் துறையில் இந்தியா மிகுதியாக அயற் செலாவணியைச் செலவழிக்கத் திட்டமிடுகிறதோ, அந்தத் துறைக்கு முதலிடம் கொடுத்து அயல்நாட்டு உதவி வாயிலாக அத்துறையை முன்னேற்றமடையச் செய்கிறது. மேலும் இதன் வாயிலாக, மூலதனப் பொருள்கள் உற்பத்தி செய்யும் துறையையும், பொருளாதார நடவடிக்கையையும் விரிவுபடுத்தி, நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துகிறது. உள்நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும்பொழுது, உணவுப்பொருள்களை இறக்குமதி செய்து, நாட்டின் பொருளாதாரத்தை நிலைப்படுத்துகிறது. இந்தியாவில், அயல்நாட்டு உதவி, போக்குவரத்து வளர்ச்சி, மின்திட்டங்கள், இரும்பு உற்பத்தி, தொழில்துறை முன்னேற்றம், வேளாண்மை முன்னேற்றம், உணவுப் பொருள்கள் உதவி, எண்ணெய், மற்றும் எரிபொருள், ஆற்றல் (Energy) பொருள்கள் வாங்குவது, உயர்கல்வி அளித்தல், குடிநீர் வசதி, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், நகர முன்னேற்றம் ஆகியவற்றிற்காகவும் வாங்கப்படுகிறது. மேலும், குறுகிய காலக் கடன்களை முதலும் வட்டியும் சேர்த்து அடைக்க வேண்டியிருப்பதால் இவ் உதவி தேவைப்படுகின்றது. பற்றாக்குறையின் காரணமாக இறக்குமதிப் பொருள்களின் அளவு ஏற்றுமதிப் பொருள்களின் அளவை விட மிகுதியாக இருப்பதால், இறக்குமதிப் பொருள்களுக்கு அயற் செலாவணியைச் செலுத்த வேண்டிய தேவை ஏற்படுகிறது.

அயல்நாட்டு உதவியை வரையறுக்கும் காரணிகள்: அயல்நாட்டு உதவியைச் சிறப்பான முறையில் பயன்படுத்த வேண்டுமானால், பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகளில், அகக் கட்டுமான (Infrastructure) வசதிகளான போக்குவரத்து, மின்சாரம், உழைப்புத் திறன் ஆகியவை கண்டிப்பாக இருத்தல் வேண்டும். மேலும், அயல்நாட்டு உதவியை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டங்களை இந்நாடுகள் உருவாக்க வேண்டும். பொதுவாகப் பொருளாதார வளர்ச்சி அடையாத நாடுகளில் நிலையான அரசியல் அமைப்பினைக் காண முடியாது. எனவே, இவ்வுதவியை நிலையான அரசியல் அமைப்புள்ள நாடுகளும், சட்டமும் ஒழுங்கும் நன்றாகக் காப்பாற்றப்படும் நாடுகளுமே பெற முடியும். அந்நாடுகளில் பணவீக்கமும் மிகுதியாக இருக்கக்கூடாது. மேலும், அந்நாடுகளின் ஏற்றுமதி மிகுதியாகவும் இறக்குமதி குறைவாகவும் வளர்ச்சிக் காலங்களில் இருந்தால், மிகையான அயல்நாட்டு உதவியைப் பெற முடியும்.

நர்சுகு (Nurske) என்ற பொருளாதார வல்லுநரின் கருத்துப்படி, வீட்டில்தான் மூலதனம் உருவாக்கப்படுகிறது என்பதற்குத் தகுந்தாற்போல், அந்நாட்டு மக்கள் திறமைசாலிகளாகவும் உழைப்பாளிகளாகவும் வலுவுள்ளவர்களாகவும் இருந்தால், அயல்நாட்டு உதவியைப் பெருமளவில் அடையமுடியும். பொருளாதார, சமூக, அரசியல் காரணிகள் அயல்நாட்டு உதவியை உறுதிப்படுத்துகின்றன. அயல்நாட்டு உதவி அளிக்கும் நிறுவனங்கள் 1. பன்னாட்டு வளர்ச்சி மறுசீரமைப்பு வங்கி, 2. பன்னாட்டு நிதி நிறுவனம், 3. பன்னாட்டு வளர்ச்சிக் குழு, 4. ஆசிய வளர்ச்சி வங்கி முதலியனவாகும்.

இந்தியா 1949-ஆம் ஆண்டில் பன்னாட்டு வளர்ச்சி மறுசீரமைப்பு வங்கியில் உறுப்பினராகச் சேர்ந்தது. அவ்வங்கியின் வாயிலாக 1970 சூன் 30 வரை இந்தியாவுக்கு உரு. 18418.52 மிலியன் கடனுதவியாகக் கிடைத்துள்ளது. இதனால், இந்தியாவில் தொழிற்சாலைகளும் போக்குவரத்தும் பெரிதும் பயனடைந்தன. மேலும், தொடர் வண்டிப் போக்குவரத்து, உரத் தொழிற்சாலை, வேளாண்மை, நிலக்கரிச் சுரங்கங்கள் ஆகியவை நல்ல பலனை அடைந்தன. கூட்டுறவுத் துறையில் உள்ள புல்புர் உரத் தொழிற்சாலைக்கு மட்டும் உரு. 1,253.5 மிலியன் கடனுதவியாகக் கிடைத்தது.

இந்தியாவில் கடுமையான அயற் செலாவணித் தட்டுப்பாடு ஏற்பட்டதன் விளைவாக, இந்திய நிதி உதவிக் கூட்டிணைப்பு (Indian Consortium) 1957-58-இல் நிறுவப்பட்டது. இதன் சிறப்பு நோக்கம், பல்வேறு மூலங்களிலிருந்து கிடைக்கும் அயல்நாட்டு உதவியை ஒன்றுதிரட்டி நாட்டிற்கு அளிப்பதாகும். இக் கூட்டிணைப்பின் சிறப்பு உறுப்பு நாடுகளாக இருப்பவை உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சிக் கழகம், அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சப்பான், ஐரோப்பியக் கழகம் ஆகியவையாம். எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து அயற் செலாவணியும் பெட்ரோலும் (கல்லெண்ணெய்) அயல்நாட்டு உதவியாக இந்தியாவுக்கு வழங்கப்படுகின்றன. எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளிலிருந்து 1974-75, 1975-76-ஆம் ஆண்டுகளில் இந்தியாவுக்குப் பெருமளவு அயல்நாட்டு உதவி கிடைத்துள்ளது. இந்திய நிதி உதவிக் கூட்டிணைப்பு உறுப்பினர்களிடமிருந்து 1982-83-ஆம் ஆண்டுவரை 90 விழுக்காடு அயல்நாட்டு உதவி கிடைத்துள்ளது. கடன்கள், கொடைகள், பொருள்கள் மூலமாக இவ்வுதவி கிடைத்துள்ளது.

பன்னாட்டு வளர்ச்சிக் கழகத்திலிருந்து 40 விழுக்காடு அளவுக் கடன் இந்தியாவுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதாவது 1976 சூன் 30 வரை உரு. 47457·05.

மிலியன் உதவி இந்தியாவுக்கு அளிக்கப்பட்டது. இதில் உரூ. 15,295 மிலியன் அயல்நாட்டிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது. மேலும் இக் கழகத்தினால் வேளாண்மை, நீர்ப்பாசனம், உரத் தொழிற்சாலை, இரயில் தொடர் வண்டிப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து ஆகியன முன்னேற்றம் அடைந்தன.

பொதுவுடைமை நாடுகளில் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் முதன்மை இடம் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சோவியத் உருசியா உரூ. 6,470 மிலியன் கடனாக அளித்துள்ளது. செக்கோசுலவேகியா, போலந்து, யூகோசுலேவியா போன்ற நாடுகள் 1981-82 ஆண்டு வரை உரூ. 14,230 மிலியன் கடனாக அளித்துள்ளது. இதில் உரூ. 61 மிலியன் கொடைகளாகும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளால் அளிக்கப்படும் கடன்கள் மற்ற நாட்டுக் கடன்களிலிருந்து மாறுபடுகின்றன. ஏனென்றால், இக் கடன்கள் குறுகிய காலக் கடன்களேயாகும். இக் கடன் கொடுக்கப்பட்ட ஓராண்டிற்குள் முதல் தவணையைத் திருப்பிச் செலுத்திவிட வேண்டும். மேலும், இவை கட்டுப்பட்ட கடன்களாகவே இந்தியாவுக்கு அளிக்கப்படுகின்றன. இக் கடன்களுக்கு வட்டி வீதம் 2.5 விழுக்காட்டிலிருந்து 3 விழுக்காடு வரை விதிக்கப்படுகிறது. இந்தியச் செலாவணியில் வட்டியும் முதலும் கடன் அளித்த நாடுகளுக்குத் திருப்பிச் செலுத்தப்படுகின்றன. இச் செலாவணியை அந் நாடுகள் இந்தியாவிலிருந்து பொருள்கள் வாங்குவதற்குப் பயன்படுத்துகின்றன.

மேலும், ஆசுத்திரேலியா, நியூசிலாந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளும் இந்தியாவுக்குக் கொடைகள் வாயிலாக உதவி புரிகின்றன. இதில், எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள், தனிப்பட்ட நிதி (Special Fund), அபுதாபி நிதி (Abudhabi Fund), சௌதி அரேபியா நிதி (Saudi Arabia Fund), குவைத்து நிதி (Kuwait Fund) ஆகியவற்றின் வாயிலாக இந்தியாவிற்குப் பெரும் உதவி அளித்துள்ளன. இதுவரை, இந்நாடுகள் உரூ. 17,104 மிலியன் மதிப்புள்ள கடனுதவி இந்தியாவுக்கு அளித்துள்ளன.

**அயல்நாட்டு உதவியின் பங்கு:** அயல்நாட்டு உதவி உள்நாட்டு மூலதனத்தை மிகுதியாக்குவதற்குத் தேவைப்படுகிறது. முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் உள்நாட்டு வளங்கள் குறைவாகக் காணப்படுவதால், தேசிய வருவாயும் குறைவாக இருக்கும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 1951-ஆம் ஆண்டு தேசிய வருமானம் 5 விழுக்காடாக இருந்தது. மேலும், ஆள் வருமானம் (Per Capita Income) குறைவாகவும், வாங்கும் திறன் மிகுதியாகவும் இருப்பதால், சேமிப்பையும் முதலீட்டையும் மிகுதிப்படுத்த முடியாது. உள்நாட்டு மூலதனத்தை மிகுதிப்படுத்த வேண்டுமானால் அயல்நாட்டு உதவி கண்டிப்பாக வேண்டும். இத்திட்டங்கள் நீண்ட காலத் திட்டங்களாக இருப்பதாலும், பெரும் முதலீடு வேண்டியிருப்பதாலும், உள்நாட்டு மூலதனத்தைக் கொண்டு இவற்றை நிறைவேற்ற முடியாது இதனால், உள்நாட்டு முதலீடு வீணாக்கப்பட்டு, இன்றியமையாத் திட்டங்களில் பயன்படுத்தப்படாமல் போய்விடும். அயல்நாட்டு உதவியையும் உள்நாட்டு மூலதனத்தில் சேர்த்துக் கொண்டால், திட்டமிட்டபடி அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளையும் செயற்படுத்த முடியும். மேலும், அயல்நாட்டு மூலதனம் வாயிலாக நாட்டில் முதலீடு செய்யும் போது, உள்நாட்டில் மிகுதியாகச் சேமிப்பு வைத்துள்ளவர்களும், தங்கள் சேமிப்பை அதே துறையில் முதலீடு செய்து மிகுந்த ஆதாயத்தைப் பெறமுடியும்.

ஒருநாடு பொருளாதார முன்னேற்றத்தில் தொடக்க நிலையில் இருக்கும்பொழுது, அயல்நாட்டிலிருந்து தொழில் நுணுக்கங்களையும் எந்திரங்கள் போன்ற பொருள்களையும் இறக்குமதி செய்ய நேரிடுகிறது. இத்தகைய தொழில் நுணுக்கத்தையும் எந்திரங்களையும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ள நீண்டகாலம் பிடிக்கும். இந்தியா போன்ற பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு, அயற் செலாவணியும் தங்கமும் தேவைப்படுகின்றன. ஆனால், இந்நாடுகளில் இவை போதுமான அளவு கிடைப்பதில்லை. எனவே, இந்நாடுகளுக்கு அயல்நாட்டு உதவி கண்டிப்பாகத் தேவைப்படுகிறது.

ஏற்றுமதியை மிகுதிப்படுத்தலின் மூலம் நாட்டில் அயற் செலாவணியைப் பெருக்கலாம். இந்நாடுகளில் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் பல இடர்ப்பாடுகள் உள்ளன. முதலாவதாக, இந்நாடுகள் பெரும்பாலும் வேளாண்மை நாடுகளாகவே இருப்பதால், தொழில்துறையில் இன்னும் முழுமையான முன்னேற்றம் அடையவில்லை. அதனால், இவற்றின் ஏற்றுமதிப் பொருள்கள் பெரும்பாலும் மூலப் பொருள்களாகவே உள்ளன. அயற் செலாவணியைப் பெருக்க வேண்டுமானால் உற்பத்திப் பொருள்களை மிகுதியாக வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டும், மேலும், ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் உலக அங்காடியில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மூலப் பொருள்களின் விலை நெகிழ்ச்சியும் வருவாய் நெகிழ்ச்சியும் மிகவும் குறைவாக இருப்பதால், இப் பொருள்களின் விலை குறைந்தாலும், இவற்றின் தேவை பெருகுவதில்லை.

பொருளாதார வளர்ச்சி பெற்ற நாடுகளின் வருவாய் பெருகினாலும் இப்பொருள்களின் தேவை பெருகுவதில்லை. அந் நாடுகள் இப்பொருள்களைத் தங்கள் நாட்டிலேயே உற்பத்தி செய்வதோடு, அயல்நாடுகளுக்கும் இவற்றை ஏற்றுமதி செய்கின்றன. இதனால், இந்தியா போன்ற நாடுகள் உற்பத்தித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இதற்கு அயல்நாட்டு உதவி வேண்டும். இல்லாவிடில் நாட்டின் ஏற்றுமதியைப் பெருக்க முடியாது.

இவ்வாறு, தொடக்க நிலையில் தொழில் துறையை முன்னேற்றம் அடையச் செய்யும்பொழுது, செலுத்து நிலையிலும் (Balance of Payments) உள்நாட்டு விலைகளிலும் மாற்றங்கள் ஏற்படும். முன்னேற்றம் என்பது உற்பத்திக் காரணிகளை முதலீட்டுப் பொருள்களை உற்பத்தி செய்யும் துறைக்குப் பயன்படுத்துவதாகும். இதனால், நுகர்வுப் பொருள்களை உற்பத்தி செய்யும் துறைக்கு, உற்பத்திக் காரணிகள் மிகவும் குறைந்த அளவு பயன்படுத்தப்படுகின்றன. நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி குறைகிறது. உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபடுபவர்களின் வருவாய் உயரும். இவர்களின் வருவாய் உயர்வதனால் நுகர்வுப் பொருள்களை வாங்க முற்படுவார்கள். ஆனால், நுகர்வுப் பொருள்களின் உற்பத்தி குறைவாக இருப்பதால், அங்காடியில் இதன் அளிப்பு குறைகிறது. இப்பொருள்களின் விலைகள் உயர்கின்றன. மக்கள் தங்கள் வருமானத்தில் பாதியை அயல்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப் பொருள்கள் மீதும், எஞ்சிய வருமானத்தை அயல்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் மீதும் செலவிடுகிறார்கள். இதனால், நாடு பொருளாதார முன்னேற்றம் அடையும் காலத்தில் மூலதனப் பொருள்களின் தேவை மிகையாவதோடு, நுகர்வுப் பொருள்களின் தேவையும் மிகுதியாகிறது. மேலும், இந்த நுகர்வுப் பொருள்கள் உணவுப் பொருள்களாக இருந்தால், இந்தியா போன்ற நாடுகள் கட்டாயமாக அயல்நாட்டு உதவியை எதிர்பார்க்க வேண்டியிருக்கும். இவ்வாறு அல்லாமல் நுகர்வுப் பொருள்களின் பற்றாக்குறை நாட்டில் மிகுதியாகிக் கொண்டே சென்றால், பொருள்களின் விலையும் உற்பத்திச் செலவும் மிகுதியாகிக்கொண்டே வந்து, இறுதியில் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையே பாதித்துவிடும். அமெரிக்கா, கனடா, பிரான்சு போன்ற பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைந்த நாடுகள், தங்கள் முன்னேற்றத்தின் தொடக்க நிலையில் அயல்நாட்டு உதவியையே எதிர்பார்த்திருந்தன. அயல்நாட்டு உதவி, பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகளில், பொருளாதார முன்னேற்றத்திற்கும் உணவுப் பற்றாக்குறையைப் போக்குவதற்கும் தொழில் துறையை முன்னேற்றுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் அயல்நாட்டு உதவி தேவைப்பட்டாலும், அவ்வுதவி பாதுகாப்பான நிலையில் அந்நாடுகளுக்கு அளிக்கப்பட வேண்டும். சில வேளைகளில் அளவுக்கு மிகுந்த உதவியைப் பெறுவது அரசியல் குழப்பங்களும் வேறு பல சிக்கல்களும் ஏற்படுத்துவதற்குக் காரணமாய் இருக்கும். உதவியை அளிக்கும் நாடு போர்க் காலங்களில் தன் உதவியை நிறுத்திக் கொள்ளலாம். உதவியைப் பெறும் நாட்டின் கடன் சுமை மிகுந்து கொண்டே செல்லும். இதனால், உதவியைப் பெறும் நாடு, முடிந்த அளவு உள்நாட்டு மூலதனத்தையும் உற்பத்திக் காரணிகளையும் கொண்டே பொருளாதார வளர்ச்சியை அடைய முற்படவேண்டும். மற்ற நாட்டின் உதவியைப் பெற்றாலும் எந்த நோக்கத்திற்காகக் கடன் வாங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்கே செலவிட வேண்டும்.

அயல்நாட்டு உதவியைப் பெருமளவில் பயன்படுத்திய துறை இந்தியப் போக்குவரத்துத் துறையேயாகும். இதனால், இரயில் போக்கு வரத்து வளர்ச்சி அடைந்தது. மேலும், தொழில் துறை முன்னேற்றம், தொழில்நுணுக்க முன்னேற்றம் ஆகியன அயல்நாட்டு உதவியால் பெருமளவு இந்தியாவில் வளர்ச்சி அடைந்தன. இரும்பு, எஃகுத் தொழிற்சாலை, கனரக இரசாயனத் தொழிற்சாலை, எந்திரங்கள் செய்தல் போன்றவைகளின் வளர்ச்சி இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகும். அரசாங்கத்தின் பொதுத் துறையை வலுப்படுத்துவதற்கும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கும் இவ் உதவி பயன்படுகிறது.

சிக்கல்களும் இடையூறுகளும்: அயல்நாட்டு உதவியைப் பெறுவதால் நாட்டில் கடன் சுமை மிகுகிறது. பெற்ற கடனை வட்டியும் முதலுமாகத் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளது. இரண்டாம், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டங்களில், இவ்வகையான கடன்கள் (15,25 ஆண்டுக் கடன்கள்) முடிவு பெற்றுச் செலுத்தப்படும் நிலையில் உள்ளன. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 23.8 கோடியாக இருந்த அயல்நாட்டுக் கடன், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 119.4 கோடியாகவும், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ, 542.6 கோடியாகவும் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 2455 கோடியாகவும், ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 3770 கோடியாகவும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 2733 கோடியாகவும் ஆகியுள்ளது. அயல்நாட்டு உதவி, அரசியலையும் சார்ந்துள்ளது. உதவி அளிக்கும் நாட்டிற்கும் உதவிபெறும் நாட்டிற்

கும் ஏதாவது அரசியல் குழப்பங்கள் நேரிட்டால், உதவி அளிக்கும் நாடு உடனே உதவியை நிறுத்தி விடும். எடுத்துக்காட்டாக, இந்தியாவிற்கு 1965, 1971-ஆம் ஆண்டுகளில் அயல் நாட்டு உதவி தடையுற்றதால், அயற்செலாவணித் தட்டுப்பாடு மிகுதியாக உண்டாகியது. இதனால் இந்தியா யாரையும் எதிர்பாராமல் தானே தன்னிறைவை உண்டாக்க வேண்டும் என்று கருதியது.

இந்தியா போன்ற பொருளாதார முன்னேற்றம் அடைந்து வரும் நாடுகளில் அயல்நாட்டு உதவி, கட்டுப்பட்ட உதவியாகவே கருதப்படுகிறது. அதனால், சில குறிப்பிட்ட திட்டங்களுக்கு மட்டுமே அவ்வுதவியைப் பயன்படுத்த முடியும். ஆகையால், இந்நாடுகள் தங்களுக்குப் பயன்தரும் திட்டங்களில் ஈடுபடமுடியாது; தாம் விரும்பிய தொழில் நுணுக்கங்களையும் உற்பத்தியில் புகுத்த முடியாது. எடுத்துக்காட்டாக, அமெரிக்க நாடு அளிக்கும் உதவி யாவும் கட்டுப்பட்ட கடன்களாகவே இருப்பதால், அந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களின் விலை, பன்னாட்டு அங்காடிகளின் விலையை விட மிகவும் கூடுதலாகவே இருக்கிறது. இதனால், நாட்டின் உற்பத்திச் செலவு மிகுந்து ஆதாயம் குறைகிறது. கட்டுப்பட்ட கடனால் குறிப்பிட்ட மூலப் பொருள்களின் இறக்குமதி தாமதப்பட்டால், அம் மூலப் பொருள்களைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள், தங்கள் திறமைக்குக் குறைவாகவே பணி செய்ய நேரிடுகிறது. இதனால், கட்டுப்பட்ட கடனை விடக் கட்டுப்படாத கடனே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

மொத்த அயல்நாட்டு உதவியான உரூ. 27,055 கோடியிலிருந்து 1981-82-ஆம் ஆண்டுகளில் உரூ.20.020 கோடியை இந்தியா பயன்படுத்தியது. இதில், 74 விழுக்காட்டுக் கடனை அயற் செலாவணியால் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. இந்தியாவில் 1972-73-ஆம் ஆண்டு நடந்த பொருளாதார ஆய்வுகள் (Economic Survey) வாயிலாகக் கடன் சுமையை அயற் செலாவணியில் திருப்பிக் கொடுத்தால், கடன் வாங்கப்பட்ட தொகையின் நுகர்ச்சித் திறன் குறைந்து விடும் என்பதும், மிக்க பலன் கிடைக்காது என்பதும், தெரியவந்தன. மேலும், வளர்ச்சி அடைந்த நாடுகள், தனியார் துறைக்கே அதிகச் சிறப்பிடம் கொடுப்பதால், பொதுத் துறைக்குச் சிறப்பிடம் கொடுக்கும் இந்தியா போன்ற நாடுகளுக்கு உதவி அளிக்கத் தயங்குகின்றன. அயல்நாட்டு உதவியைப் பெறும் நாடு எப்பொழுதும் உதவி கொடுக்கும் நாட்டின் ஆணையைப் பின்பற்றியே நடக்க வேண்டும். அன்றியும், அளிக்கப்பட்ட உதவியால் அதைப் பெற்ற நாடு வளர்ச்சி அடைகின்றதா என்பதை நன்கு அறிந்த பிறகே உதவி நல்கும் நாடுகள் மேலும் உதவியை அளிக்க முன்வரும்.

அயல்நாட்டு உதவி சில வேளைகளில் குறிப்பிட்ட காலத்தில் கிடைப்பதில்லை. இதனால், பொருளாதார முன்னேற்றம் அடையாத நாடுகள், தங்கள் பொருளாதார வளர்ச்சிக்காகத் திட்டமிட்டபடி செயல்களில் ஈடுபட முடிவதில்லை. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில், அயல்நாடுகள் குறிப்பிட்டபடி தங்கள் உதவியை அளிக்காததால், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்குச் சிறிது கால தாமதம் ஏற்பட்டது. மேலும், இந்தியாவுக்குக் கிடைக்கும் கடன்களில் பாதிக்கு மேல் கட்டுப்பட்ட கடன்களாக இருப்பதால், குறிப்பிட்ட திட்டத்திற்கு மட்டும்தான் அக்கடனைப் பயன்படுத்த முடிகிறது. கட்டுப்படாத கடன்கள் இந்தியாவிற்கு மிகவும் குறைந்த அளவே கிடைக்கின்றன.

அடுத்த பக்கத்தின் அட்டவணையில் இந்தியாவுக்குக் கிடைத்த கொடைகளும் கட்டுப்பாடற்ற கடன்களும், குறிக்கப்பட்டுள்ளன.

அயல்நாட்டு உதவி நாட்டின் தொழில் நுணுக்க வளர்ச்சியையும், வேளாண்மை, தொழில்துறை முன்னேற்றத்தையும் பாதிக்கவல்லது. எப்பொழுதும் அயல்நாட்டுத் தொழில் நுணுக்கத்தை நம்பி இருந்தால், நாட்டில் திறமையான தொழில் நுணுக்க வல்லுநர்களை உருவாக்க முடியாது. இந்தியா 1965-66 வரை வேளாண்மைப் பொருள்களுக்குப் பெரிதும் அயல்நாட்டு உதவியையே நம்பி இருந்ததால், நாட்டில் வேளாண்மை வளர்ச்சி அடையவில்லை.

முடிவாக, அயல்நாட்டு உதவியை முழுவதும் பயன்படுத்துவதற்குச் சில தடைகள் உள்ளன. ஏனெனில் ஓர் அரசாங்கத்திலிருந்து வேறு அரசாங்கத்திற்கு உதவி மாற்றப்படும்போது குறித்த காலத்தில் அது கிடைப்பதில்லை. மேலும், ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியில் தொடக்க நிலையில் இருக்கும் பொழுது அயல்நாட்டு உதவியை முழுமையாகப் பயன்படுத்தவும் முடியாது. ஆனால், பின் சிறிது சிறிதாக இதன் பயன்பாட்டை அதிகரித்துக் கொள்ளலாம் எடுத்துக்காட்டாக, இந்தியாவில் முதலாம் ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் அயல்நாட்டு உதவி 53 விழுக்காடும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 56 விழுக்காடும், மூன்றாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் 100 விழுக்காடும் பெற்றது. 1964-ஆம் ஆண்டு வி.கே.ஆர்.வி ராவ் தலைமையில் அயல் நாட்டு உதவியைப் பயன்படுத்துவதற்கான குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவர் கருத்து, பயன்படுத்தும் வீதத்தை உயர்த்த வேண்டும் என்பதாகும். அயல்நாட்டு உதவியைக் கடன் வாயிலாக அடைந்தால் நாட்டில் கடன் சுமை மிகுந்து

| காலம் | கட்டுப்பாடற்ற கடன் (உரூபாய் கோடியில்) | மொத்த உதவியில் கட்டுப்பாடற்ற கடனின் அளவு (விழுக்காட்டில்) | கொடைகள் (உரூபாய் கோடியில்) | மொத்த உதவியில் கொடைகளின் அளவு (விழுக்காட்டில்) |
|---|---|---|---|---|
| 3-ஆம் ஐந்தாண்டுத்திட்டம் வரை | 1761.6 | 39.1 | 336.9 | 7.5 |
| 1966 67 | 183.1 | 16.2 | 97.1 | 8.9 |
| 1970—71 | 160.6 | 20.3 | 43.5 | 5.5 |
| 1975—76 | 854.8 | 46.5 | 283.3 | 15.4 |
| 1977—78 | 288.4 | 22.4 | 260.6 | 20.2 |
| 1978—79 | 306.2 | 24.2 | 273.4 | 21.6 |
| 1979—80 | 291.3 | 21.3 | 304.5 | 22.3 |
| 1980—81 | 376.5 | 17.4 | 396.4 | 18.3 |

கொண்டே செல்லும். இதனால், சில வேளைகளில் கடனை வட்டியும் முதலுமாகச் சேர்த்து அடைப்பதற்கு அயல்நாட்டு உதவியையே பயன்படுத்த வேண்டியுள்ளது. இவ்வாறு செய்வதால், பொருளாதார வளர்ச்சிக்காக வாங்கப்பட்ட கடன், கடனை அடைப்பதற்காகவே பயன் படுத்தப்படும் நிலை ஏற்படுகிறது; நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதில்லை. இவ்வாறு அயல்நாட்டுக் கடனைப் பெறுவதிலும் அதனைப் பயன்படுத்துவதிலும் சில சிக்கல்களும் இடையூறுகளும் உண்டாகின்றன.

டி.கா

துணை நூல்கள்:

**Benjamin Higgins**., "Economic Development, Principles, Problems and Policies", University Press, Allahabad, 1959.

**Taneja, M.L.**, & **Chopra, P.N** ,"Economics of Development and Planning" (With Special reference to India), S. Neigin & Co., Jullender, 1980.

**Alak Ghosh**., "Indian Economy Its Nature and Problem", East End Printers, Calcutta, 1957.

**Agarwal, A.N.**, "Indian Economy, Problems of Development and Planning", Vikas Publishing House, New Delhi, 1975.

இராக்னர் நர்க்சு, (தமிழாக்கம் மா. குமாரசுவாமி), "வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்", தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1974.

**அயல்நாட்டுக் கடன்**: பன்னாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகள், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கும் எளிய நாடுகளுக்கும் கடன் அளிக்கின்றன. இவவகையில் ஓர் அரசு வெளிநாட்டில் உள்ள தனியார்கள், அரசுகள், பன்னாட்டு நிதி நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து பெறும் கடன்கள் அயல் நாட்டுக் கடன்களாகும் (Foreign Debts). ஆனால், இப்போது தனியாரிடமிருந்து கடன் பெறுவது மிகுதியாகக் குறைந்து விட்டது. மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்யவும் அயற் செலாவணிச் சிக்கலைத் தீர்க்கவும் வெளிநாட்டு அரசுகளிடமிருந்து ஒப்பந்தங்களின் அடிப்படையில் அரசு கடன் பெறுகிறது. பன்னாட்டு மறு அமைப்பு வளர்ச்சி வங்கி (International Bank for Reconstruction and Development), பன்னாட்டுப் பணவாக்க நிதி (International Monetary Fund), பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் (International Development Association) போன்ற உலக நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் கடன் வழங்குகின்றன. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான எந்திரங்கள், மூலப் பொருள்கள், தொழில்நுட்பம் போன்றவற்றை இறக்குமதி செய்ய அயற் செலாவணி தேவைப்படும். அயல்நாட்டுக் கடன் அயற் செலாவணித் தேவையை நிறைவு செய்கிறது. ஆனால், இக்கடனே பின்னர்ப் பெரும் பளுவாவதால் பல சிக்கல்கள் தோன்றலாம். கடன் வழங்கும் நாட்டிலிருந்து மிகுதியான விலைக்குப் பொருள்களை இறக்குமதி செய்யும்படியும் நேரலாம். அரசியல் உள்நோக்கத்தோடு அயல்நாட்டுக் கடன் வழங்கப்பட

லாம். ஆகவே, கூடியவரை அயல் நாட்டுக் கடனைத் தவிர்ப்பதே சிறப்பாகக் கருதப்படுகிறது. இரண்டாம் உலகப்போர் முடிவுற்ற பின்பு வளர்ச்சியடைந்த நாடுகள், பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுவதில் ஆர்வம் கொண்டன. பன்னாட்டு நிதி நிறுவனங்களாகிய நீண்டகாலக் கடன்களை வழங்கும் 'உலக வங்கி' (World Bank), குறுங்காலக் கடன்களை வழங்கும் பன்னாட்டுப் பணவாக்க நிதி, பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம், அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கி (Export, Import Bank of U.S.A.) போன்றவைகளிடமிருந்து பின்தங்கிய நாடுகள் அவற்றின் முன்னேற்றத் திட்டங்களுக்கான கடன்களைப் பெறுகின்றன. ஆனால், இவ்வகைப் பன்னாட்டு நிதி நிறுவனங்கள் சில கட்டுப்பாடுகளுடன் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றும் திட்டங்களுக்கென்றே கடனுதவி அளிக்கின்றன. இவை கட்டுப்பட்ட, கட்டுப்படாத கடன்கள் என்ற வகையில் அமைகின்றன. (காண்க: அயல்நாட்டு உதவி).

அயல்நாட்டுக் கடன்கள் பொதுவாக நுகர்வு, முதலீடு ஆகியவற்றின் மீது செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஏற்றுமதியின் அளவை உடனடியாகப் பெருக்க முடியாததன் காரணமாக இக் கடன்கள் பெறப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் கடன்கள் பல இறக்குமதிப் பொருள்களில் முதலீடு செய்யப்படுகின்றன. நுகர்பொருள்கள் இறக்குமதி செய்யப் பெற்றால் உள்நாட்டில் பண்டங்களின் பற்றாக்குறை நீங்குவதோடு, பணவீக்க நிலை இருந்தால் அதுவும் குறையும். பொதுவாக நாட்டின் பொருளாதாரக் குறைபாடுகள், அயல்நாட்டுச் செலுத்துநிலையில் கேடான விளைவுகளை ஏற்படுத்துவதால், அயல்நாட்டுக் கடன் பொருளாதாரக் குறைபாடுகளை முற்றிலும் களையும் எனக் கூற இயலாது. அயல்நாட்டுக் கடன்கள், போருக்காகவும் படைப்பலத்தை மிகுதிப்படுத்தவும் செலவிடும்பொழுது பொருளாதார வளர்ச்சி தோன்றுவதில்லை. ஆனால், குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் ஒரு நாடு அயல்நாட்டு உதவியைப் பெறுவது வரவேற்கப்படும்.

வளர்ச்சியடைந்த நாடுகள் அளிக்கும் கடன்களிலும், கொடைகளிலும் ஆறில் ஐந்து பங்கு இருமுக ஒப்பந்தக் கடன்களாகப் (Bilateral Loans) பின்தங்கிய நாடுகளுக்குச் செல்கின்றன. அமெரிக்கா வெளிநாடுகளுக்குக் கடன் அளிப்பதில் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. 'ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனம்', 'பொதுச் சட்டம் 480' 'ஏற்றுமதி இறக்குமதி வங்கி' ஆகியவற்றின் மூலம் அமெரிக்கா கடன்களையும் கொடைகளையும் (Grants) கொடுத்து வருகிறது. ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனம், கொடைகளையும், நீண்டகால முன்னேற்றக் கடன்களையும் தருகிறது. சமுதாயவளர்ச்சி, பயிர்ப் பாதுகாப்பு, கைவினைப் பயிற்சி, பால் பண்ணை முன்னேற்றம், உயர் கல்வி, மலேரியா பெரியம்மை ஒழிப்பு ஆகியவற்றுக்கும் கொடை அளிக்கிறது. அமெரிக்க அரசு பொதுச் சட்டம் 480-இன் கீழ்ப் பல வளர்ச்சியடையா நாடுகளுக்கு வேளாண்மைப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ்க்கோதுமை, அரிசி, பருத்தி, பால் பவுடர், சோளம் போன்றவை ஏற்றுமதியாகின்றன. இவற்றில் ஒரு பகுதி பணமின்றித் தரப்படுகிறது. மீதமுள்ள பகுதிக்கான பணத்தைத் தொடர்புடைய நாட்டின் செலாவணியில் பெற்றுக் கொள்கிறது. இவ்வகையில் இந்தியா உரூபாய் நாணயத்தை அளித்து இவற்றைப் பெறுகிறது. இத்தொகையில் 80.2 விழுக்காடு முன்னேற்றத் திட்டங்களுக்காக அமெரிக்க அரசால் செலவிடப்படுகிறது. மீதியுள்ள தொகையில் 13.2 விழுக்காடு அமெரிக்கத் தூதரகங்களை நடத்தச் செலவிடப்படுகிறது. தனியார் துறைக்குக் கடனளிப்பதற்கென 6.6 விழுக்காடு ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனத்திடம் தரப்படுகிறது. ஏற்றுமதி இறக்குமதி வங்கி தனியார் நிறுவனங்களுக்கும், அரசுகளுக்கும் கடன் வசதிகளைச் செய்து தருகிறது. மூலதனப் பொருள்களையும், நுகர்பொருள்களையும் ஏற்றுமதி செய்ய 7 ஆண்டுகளில் திருப்பித் தரத்தக்க ஏற்றுமதிக் கடன்களையும், 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகளுக்குள் திருப்ப வேண்டிய குறிப்பிட்ட முன்னேற்ற முதலீட்டிற்கான உறுதியளிக்கப்பட்ட கடன்களையும் இவ்வங்கி வழங்குகிறது. இதைத் தவிர, அமெரிக்காவின் பிறிதொரு அமைப்பான 'அமைதி அணிகள்' வளர்ச்சியடையா நாடுகளின் ஊரகங்களுக்கு அமெரிக்க இளைஞர்களையும் பெண்களையும் அனுப்பி உழவர்களுக்குத் தொழில்நுட்ப உதவியை நாட்டுப்புற வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் அளிக்கிறது. இக்கடன்கள் ஒரு விழுக்காடு முதல் 2.5 விழுக்காடு வட்டியை மட்டுமே கொண்டுள்ளது குறிப்பிட வேண்டிய ஒன்று.

வளர்ச்சியடையா நாடுகளின் முன்னேற்றத்திற்காக இங்கிலாந்தும் பல வழிகளில் உதவுகிறது. கொழும்புத் திட்டத்திற்கு உதவியதோடு, இரண்டாம் உலகப் போரின்போது இந்தியா, பாகிசுத்தான் போன்ற காமன்வெல்த்து நாடுகள் சேமித்த இசுடெர்லிங்கு இருப்புகளைத் (Sterling Balances) திருப்பித் தருகிறது. காமன் வெல்த்து நாடுகளுக்குக் குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கான கடன்களைத் தருகிறது. ஐந்து விழுக்காடு அல்லது ஆறு விழுக்காடு வட்டி கொண்ட இக் கடன்களை 25 ஆண்டுகளில் திருப்பித் தரலாம். 'காமன்வெல்த்து முன்னேற்ற நிதி நிறுவனம்', 'குடியேற்ற நாடுகளின் முன்னேற்றக்

கழகம்' என்ற இங்கிலாந்தின் இரு நிதி நிறுவனங்களும் தனியார் துறைக்கும், பொதுத்துறைக்கும் கடன் வசதிகளைச் செய்து தருகின்றன. செருமனி நாட்டின் 'மறு அமைப்பு வங்கி' (The Bank for Reconstruction) என்ற நிதி நிறுவனம், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கு மூலதனக் கடன்களோடு பெருமளவில் கொடைகளையும் வழங்கியுள்ளது. ஐந்து விழுக்காடு வட்டிவிகிதம் கொண்ட இக் கடன்கள் 20 ஆண்டுகளில் திருப்பித் தரப்படும் வகையில் அமைகின்றன.

வளர்ச்சியடையாத நாடுகளின் முன்னேற்றத்திற்காகக் கனடா, கொடைகளுடன் நீண்டகாலக் கடன்களையும், மத்தியகாலக் கடன்களையும் அளித்து உதவுகிறது. மத்தியகாலக் கடன்கள் 6 விழுக்காடு வட்டியில் 10 முதல் 20 ஆண்டுகளில் திருப்பித் தரப்படவேண்டும். 'சிறப்பு முன்னேற்றக் கடன் திட்டத்தின்' மூலம் (Special Development Loan Programme) நீண்டகாலக் கடன்கள் 3/4 முதல் 1 விழுக்காடு வட்டி வீதத்தில் அளிக்கப்படுகின்றன. இக்கடன்கள் 40 முதல் 50 ஆண்டுகளில் திருப்பித் தரப்படவேண்டும். வளர்ச்சி குன்றிய நாடுகளின் பொதுத் துறைகளுக்குச் சோவியத்து நாடு உதவிசெய்து வருகிறது. மின்சாரத் திட்டங்கள், சுரங்கத் தொழில், பிறவகைப் பெரிய தொழில்கள் ஆகியவற்றைப் பொதுத் துறையில் வளர்க்க இவ்வுதவி அளிக்கப்படுகிறது. எந்திரக் கருவிகள், தொழில் நுட்ப அறிவு ஆகியவை இதன் மூலம் கிடைக்கப்பெறும். இக் கடன்களுக்கு $2\frac{1}{2}$ விழுக்காடு வட்டி செலுத்தப்படுவதுடன் 12 ஆண்டுகளில் கடன் திரும்பச் செலுத்தப்படவேண்டும்.

இந்தியாவில் இரும்பு, எஃகுத் தொழில் வளர்ச்சிக்குச் சோவியத்து நாடு பெருமளவில் உதவியுள்ளது. மத்திய பிரதேசத்தில் பிலாய், பீகாரில் பொகாரோ ஆகிய இடங்களில் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளையும், துர்க்காபூரில் நிலக்கரி – சுரங்கத் தொழிலையும், நெய்வேலியில் பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்யும் தொழிலையும், அரித்துவாரில் (Hardwar) பெரிய அனல் மின்சாரத் திட்டத்தினையும் ஏற்படுத்த உதவியுள்ளது. குசராத்து மாநிலத்தில் கொயாலி (Koyali) என்னுமிடத்தில் எண்ணெய் தூய்மை செய்யும் ஆலையை ஏற்படுத்தி உள்ளது. மேலும், மருந்துத் தொழில்களும் நுண்கருவிகள் உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்களும் தொடங்கப்பட்டன. மேற்குறிப்பிட்ட நாடுகள் தவிர சீனா, பல்கேரியா, செக்கோசுலோவாகியா, போலந்து, அங்கேரி, உருமேனியா, யூகோசுலாவியா, கிழக்குச் செருமனி போன்ற நாடுகளும் வளர்ச்சியடையா நாடுகளுக்குக் கடனளித்து உதவுகின்றன. அவை அளிக்கின்ற கடன்களின் அளவும் மிகுந்து வருகிறது.

இவை தவிர, சில மண்டல நிறுவனங்களும் வளர்ச்சியடையா நாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. ஐக்கிய நாடுகளின் அமைப்புகளாகிய 'இலத்தீன் அமெரிக்காவிற்கான பொருளாதாரக்குழு', 'ஆசிய தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் குழு', 'ஆப்பிரிக்காவிற்கான பொருளாதாரக் குழு' ஆகியவை இதில் சிறப்பான இடத்தைப் பெறுகின்றன. இவற்றுடன் கொழும்புத் திட்டம் (Colombo Plan), அமெரிக்க முன்னேற்ற வங்கி (Inter-American Development Bank), ஐரோப்பியப் பொருளாதாரச் சமுதாயம் (European Economic Community), இந்திய உதவி மன்றம் (Aid-India Club), ஐரோப்பியக் கூட்டுறவு மற்றும் வளர்ச்சி நிறுவனம் (Organisation for European Cooperation and Development) பன்னாட்டுப் பணவாக்க நிதி, பன்னாட்டு மறு அமைப்பு வளர்ச்சி வங்கி அல்லது உலக வங்கி போன்ற அமைப்புகளும் அயல்நாட்டு முதலீடுகளை ஊக்குவிக்கின்றன. கொழும்புத் திட்டத்தினால் இந்தியா தொழில் நுட்ப அறிவையும் கருவிகளையும் பெற்றுத் தொழில் நுட்பத் துறையில் முன்னேறியுள்ளது.

உலக வங்கியிடமிருந்து கடன் வசதிகளை இந்தியா மிகுதியாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது. இக்கடன்கள் இரயில் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, துறைமுக விரிவாக்கம், நிலக்கரிச் சுரங்க வளர்ச்சி ஆகியவற்றிற்குப் பயன்பட்டுள்ளன. இவ்வங்கியின் மூலம் குறிப்பிட்ட திட்டங்களுக்காகப் பெறப்படும் கடன் அத்திட்டங்களுக்காகவே செலவிடப்பட வேண்டும். இவ்வங்கி, ஒரு நாட்டின் தனியார், வேறொரு நாட்டில் முதலீடு செய்ய ஊக்கமளிக்கிறது. அன்றியும், வெளிநாட்டுச் செலாவணியில் சமநிலை ஏற்படவும் பன்னாட்டு வாணிகத்தில் சமன்பாடான வளர்ச்சி தோன்றவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கிறது.

பன்னாட்டு நிதிக் கழகம் (International Finance Corporation) மின்சாரக் கருவிகள், காரின் பாகங்கள், போக்குவரத்து, பஞ்சாலை, சிமெண்டு, காகிதம், உர உற்பத்தி போன்ற தொழில்களின் வளர்ச்சிக்கு நிதி உதவி அளிக்கிறது. பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம் இந்திய மக்களின் வாழ்க்கைத் தர உயர்வுக்கும் சமுதாய மாற்றத்திற்கும் 19 வகைக் கடன்களை, ஏறக்குறைய 675 மிலியன் தாலர் அளவிற்குக் கொடுத்துள்ளது. பன்னாட்டுப் பண நிதி, இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்கெனப் பெரிதும் உதவுகிறது. இது 1982–ஆம் ஆண்டில் 5 மிலியன் தாலர் கடனைத் தவணை முறையில் பெற்றுள்ளது. நிறைவான பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டு வந்தபின், மீதமுள்ள தவணைத் தொகையைப் பெறு

வதாகவும் உறுதியளித்துள்ளது. ஆனால், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து இந்தியா பெறும் மூலதனம் பெரிய அளவினதாகும். இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது 647 கோடி உரூபாய் கடனைச் சோவியத்து நாடு அளித்தது. அதற்குப் பின்னர்ச் செக்கோசுலோவாகியா, போலந்து, யூகோசுலாவியா ஆகிய நாடுகள், 1981-82 வரையில் உரூ. 1423 கோடி கடன் உதவி அளித்துள்ளன. இக் கடனில் 6.1 கோடி உரூபாய் கொடையாகக் கொடுக்கப்பட்டது. இந்த நாடுகளுள் அதிக அளவு கடனளித்த நாடாகச் சோவியத்து உருசியா விளங்குகிறது. சோவியத்து நாட்டிலிருந்து இந்தியா கடனாகப் பெற்ற மூலதனம் உரூ. 1215.3 கோடி ஆகும். இந்நாடுகள் தரும் கடன்கள் 2.5 விழுக்காடு முதல் 3 விழுக்காடு வரை வட்டியைக் கொண்டவை. குறுகிய காலத்தில் திருப்பித் தரப்பட வேண்டியவை. ஆயினும், இவற்றை உரூபாயாகவோ ஏற்றுமதிப் பொருள்களாகவோ திருப்பித் தரலாம். கடனளித்த நாடுகள் தங்களின் கடனளவிற்கு இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்து கொள்வதால் இதன் சுமை மிகுதியாக உணரப்படுவதில்லை.

உலக வங்கி, பன்னாட்டு வளர்ச்சிச் சங்கம், பன்னாட்டுப்பண நிதி, மற்றும் தனிப்பட்ட நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, சப்பான் போன்ற நாடுகள் ஆகியவற்றிலிருந்து இந்தியா 1982-83 வரை பெற்றுள்ள கடன்கள், கொடைகள், பொருளுதவி ஆகியவை அயல்நாட்டு மொத்த உதவியில் 90% ஆகும். எண்ணெய் விலை உயரத் தொடங்கியதிலிருந்து (1972-73) வளர்ச்சியடைந்து வரும் நாடுகளின் இன்னல்களைத் தீர்க்க, பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (Organisation of Petroleum Exporting Countries) கடனுதவி அளித்து வருகிறது. இந்தியாவிற்கு 1983 வரை உறுதியளிக்கப்பட்ட கடனின் அளவு உரூ. 1710.4 கோடி ஆகும். இதில் 1981-82-வரை இந்தியா பயன்படுத்திய கடனின் அளவு உரூ. 1276.2 கோடி ஆகும்.

இதைத் தவிர, வேகமாக வளர்ந்து வரும் பன்னாட்டு நிறுவனங்கள் (Multinational Organisations) இந்தியா பெறும் அயல் நாட்டுக் கடனில் பெரும் பங்கை முதலீடாகவும், தொழில்நுட்ப உதவியாகவும் கொடுத்து உதவி வருகின்றன.

இந்தியாவுக்கு 1982-83-ஆம் ஆண்டு வரை உறுதியளிக்கப்பட்ட அயல்நாட்டு மொத்த உதவி உரூ. 34,811.5 கோடி ஆகும். இதில் இந்தியா பயன்படுத்திய அயல்நாட்டு உதவியின் அளவு உரூ. 27,055 கோடி என்று மதிப்பிடப்படுகிறது. எண்ணெய் உற்பத்தி செய்யாத நாடுகளின் நிதிப் பற்றாக்குறை அயல்நாட்டுக் கடன்களின் மூலம் ஈடு செய்யப்படுகிறது. அத்தகைய பற்றாக்குறையானது வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் •1979-இல் 58 பிலியனாகவும் 1980-இல் 84 பிலியன் உரூபாயாகவும் கூடியுள்ளது. இந் நாடுகளின் அயல்நாட்டுக்கடன், பன்னாட்டுப் பண நிதி மூலமாக 1979-இல் 37 பிலியனிலிருந்து 61 பிலியன் உரூபாயாக 1980-இல் உயர்ந்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளின் அயல்நாட்டுக் கடன் எல்லா வழிகளிலும் சேர்த்து, 1971-இல் 81 பில்லியன் உரூபாயாக இருந்தது. ஆனால், 1980-இல் 456 பிலியன் உரூபாயாக உயர்ந்தது. சராசரிக் கடன் பளு விகிதம் அதன் ஏற்றுமதி மூலம் வரும் வருமானத்தைச் சார்ந்து, 9 விழுக்காடிலிருந்து 12 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதுவே தனித்தனியாகப் பார்க்கும் பொழுது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபடுகிறது. ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியாவின் அயல்நாட்டுக் கடன் மிக வேகமாக உயர்ந்துள்ளது. 1950-51-இல் 32.03 கோடி உரூபாயாக இருந்த அயல்நாட்டுக் கடன், 1960-61-இல் 760.96 கோடி உரூபாயாகவும் 1973-74-இல் 7,560.86 கோடி உரூபாயாகவும் 1979-80-இல் 9,977.9 கோடி உரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

அயல்நாட்டுக் கடன் இன்று இந்தியாவிற்குப் பெரும் சுமையாக அமைந்துள்ளது. கடனையும் அதற்குத் தர வேண்டிய வட்டியையும் கொடுப்பதென்பது சிக்கல் மிகுந்த ஒன்றாகும். அயல்நாட்டிலிருந்து ஈட்டப்படும் இந்தியச் செலாவணியில் பெரும் பகுதி அயல்நாட்டுக் கடனைத் தீர்க்கவே செலவாகிறது. ஏற்றுமதி வருவாயில் பெரும் பகுதி அயல் நாட்டுக் கடன் பணிகளுக்குச் செல்வதால் செலுத்து நிலை வலுவற்றதாகவும் உள்ளது. ஏற்றுமதியைக் கூட்டி அயற் செலாவணி வருவாயைப் பெருக்க இந்தியா முயல்கிறது. அயல் நாட்டுக் கடனைத் தீர்ப்பதில் இருவகைச் சிக்கல்கள் உள்ளன. அவை, கடன் பணத்தை அரசு ஏதாவது ஒரு வழியில் பெறுதலும், கடனை அயல் நாட்டுச் செலாவணியில் கொடுத்தலும் வேண்டும். அயல்நாட்டுச் செலாவணியை ஏற்றுமதியின் மூலமே பெறமுடியும். ஏற்றுமதியைப் பெருக்க வெளிநாட்டினர் விரும்பும் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில்களை வளர்க்க வேண்டும். உள்நாட்டுத் தங்கத்தைச் சேர்த்துக் கொடுத்து அயல்நாட்டுக் கடனைத் தீர்க்கலாம். சில வேளைகளில் அயல்நாட்டுக் கடனை அயல்நாட்டிலிருந்து வாங்கப் பெறும் புதுக் கடன் வழியாகத் தீர்க்க இயலும். ஆனால், இது கடனைத் தீர்க்கும் பொறுப்பை எதிர் காலத்திற்கு மாற்றிடும் செயலாக இருக்குமே தவிர, கடனைத் தீர்ப்பதாகாது. கடன் பெற்ற நாடு தன் இயற்கை வளங்களைப் பெருக்கிப் பயன்படுத்திக் கிடைக்கிற தொகையால் கடனை

அடைக்கலாம். இம்முறையால் நாட்டின் எதிர்காலப் பொருளாதார வளர்ச்சிக்குக் கேடு விளையும் என்பது தெளிவு. அயல்நாட்டுக் கடனைத் திரும்பக் கொடுக்கும் பொழுது வாங்கும் சக்தி ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதால், அதனையொட்டிய சில சிக்கல்கள் எழக்கூடும். அயற் செலாவணியை மிகுதியாகப் பெறுவதன் மூலமே அயல்நாட்டுக் கடனைத் தீர்க்க இயலும். இதற்கு இறக்குமதியின் அளவைக் குறைத்து ஏற்றுமதியின் அளவைப் பெருக்க வேண்டும்.

அயல்நாட்டுக் கடன், நாட்டின் சேமிப்பு, வருமானச் சுழற்சி, வளர்ச்சி வீதம் ஆகியவற்றைப் பாதிக்கும். ஒரு நாடு குறிப்பிட்ட அளவுதான் உள்நாட்டுக் கடன், வரிவிதிப்பு ஆகியவற்றினால் பணம் திரட்ட முடிகிறது. குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்து வரும் நாடு, நீண்ட காலப் பொருளாதார முன்னேற்றத்திற்காக அயல்நாட்டுக் கடனைப் பெறலாம். அயல்நாட்டுக் கடனையே நீண்டகாலத்திற்கு மூலதனமாகக் கொண்டு திட்டமிடுவது முன்னேற்றத்தைப் பாதிக்கும்.

என்.இரா.

துணை நூல்கள்:

Baner, B.T., "Two views on Aid to Developing Countries", Occasional Paper No. 9, The Institute of Economic Affairs, London, 1966.

Prasad, D.N., " External Resources in Economic Development of India", Sterling Publisher, New Delhi, 1972.

Khan. M.S., "India's Economic Development and International Economic Relation", Bombay, 1966.

**அயல்நாட்டுக் கொள்கை** என்பது இறைமை உடைய அரசுகளுக்கிடையே போர், அமைதி முதலிய எல்லாத் துறைகளிலும் உள்ள உறவுகளை அல்லது தொடர்புகளை எடுத்துக்காட்டும் விதிகளைக் குறிக்கிறது. ஒவ்வொரு நாடும் தன் பாதுகாப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் உறுதிசெய்து கொள்ளும்பொருட்டு, மற்ற நாடுகளுடன் சிறப்பாக அண்டை நாடுகளுடன் ஒப்பந்தங்களைப் பேசி முடித்தல் வேண்டும். ஆகையால் ஒப்பந்தங்களைப் பேசி முடிக்கும் அரசியல் தந்திரக் கலையும் அயல்நாட்டுக் கொள்கையோடு (Foreign policy) இணைந்ததுதான்.

பண்டைக்காலத்தில் வலிய அரசுகள் வலிமையற்ற அரசுகளை வென்று இணைக்கும் நோக்கத்தோடு தம் படை வலிமையைக் காட்டி, அவற்றை அச்சுறுத்திப் பணிய வைத்தன. சிறிய வலிமையற்ற நாடுகள் தம் சுதந்திரத்தையும் பொருள்வளத்தையும் பாதுகாக்கும் பொருட்டு, வலுத்தாக்குதலுக் கெதிராகத் தற்காப்பு ஒப்பந்தங்களைத் (Defensive alliances) தமக்குள் செய்துகொண்டன. இந்த வகையான அயல்நாட்டு ஒப்பந்தம் அல்லது கொள்கை இக்காலத்திலும் சில சிறிய நாடுகளிடையே காணப்படுகிறது. ஒரு வலிமிக்க நாட்டின் படைவலிமைக்கு எதிராக அல்லது இணையாக வேறு பல சிறிய நாடுகள் ஒரு கூட்டாக இணைதல் வேண்டுமென்ற அயல்நாட்டுக் கொள்கையை இங்கிலாந்து கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் உருவாக்கிற்று. இவ் வகையான அயல்நாட்டுக் கொள்கை, சக்தி சமநிலைக் கொள்கை (Balance of Power) எனப்படும். இந்தக் கொள்கையே, கி.பி. 17, 18,19- ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சுக்கெதிராகப் பிரிட்டனின் அயல்நாட்டுக் கொள்கையையும், 20-ஆம் நூற்றாண்டில் செருமனிக்கு எதிராகப் பிரிட்டன், பிரான்சு ஆகியவற்றின் அயல்நாட்டுக்கொள்கையையும் உருவாக்கிற்று. சர்வதேச சங்கம் நிலைநாட்ட முயன்ற கூட்டுப்பாதுகாப்பு என்ற கோட்பாடும், இந்த நோக்கத்தையே உடையது. வியன்னா ஒப்பந்தம் (கி.பி. 1815), வெர்செய்ல்சு ஒப்பந்தம் (கி.பி 1919), கி.பி. 1945-க்குப் பின் நடைபெற்ற பல ஒப்பந்தங்கள், ஐக்கிய நாடுகள் அவை முதலியவை எல்லாம் சக்தி சமநிலைக் கொள்கையை நோக்கமாக உடையவையே என்று ஆசிரியர் மர்கந்த்தால் (Mar) என்பவர் குறிப்பிடுகிறார்.

ஒரு நாட்டு அரசாங்கத்தின் நலன்கள் வேறு நாடுகளில் எடுத்துச் சொல்லப்படுவதற்கும், அயல்நாட்டுக் கொள்கைக்கு ஆதாரமான இன்றியமையாத செய்திகளைத் திரட்டித் தருவதற்கும், அயல்நாட்டுப் பணிகளையே தன் தொழிலாகக் கொண்டுள்ள அயல்நாட்டுப் பணியகம் (Foreign Office) தோன்றிற்று. இவ்வாறு தோன்றிய பின்னர்த்தான் அயல்நாட்டுக் கொள்கையும் முறையான வடிவம் பெற்றது. கொள்கை என்பது நோக்கத்தையும், அதனை அடைவதற்காக வழியையும் காட்டும் ஒரு விதியாகும். அயல்நாடுகளோடு உள்ள உறவு அல்லது தொடர்பு என்பது, ஒரு கொள்கையின் வடிவத்தில் கையாளப்படுகிறது.

முதன்முதலாகத் இக்கால இயந்திரங்களைக் கண்டுபிடித்து அவற்றினுதவியால் தொழில்துறையிலும், வாணிகத்திலும் முன்னேறத் தொடங்கிய இங்கிலாந்து நாடு, கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தனது வாணிகம் வளருவதற்காகக் குடியேற்ற நாடுகளை நிறுவும் கொள்கையையும் (Policy of Colonisation) தடையற்ற வாணிகக் கொள்கையையும் (FreeTrade) கடைப்பிடித்தது. இது மேற்கத்திய நாடுகளுக்கிடையே போட்டியையும் போர்களையும் தோற்றுவித்தது. இச்சூழ்நிலைகளில் அமைதியை நிலைநாட்டுதற்காக

அரசியல் தந்திரக் கலை மிகவும் பயன்பட்டது. ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதற்காக அயல்நாட்டு அமைச்சர்கள், தூதுவர்கள், சார்பாளர்கள் முதலிய அதிகாரிகள் அமர்த்தப்பட்டனர். இவர்களுள் சிலருக்கு ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதற்கு முழு அதிகாரங்களும், சிலருக்குச் செய்திகளை மட்டுமே அளிக்கும் அதிகாரங்களும் இருந்தன.

இப்பொழுது பழைய குடியேற்ற நாட்டுமுறை அல்லது பேரரசு ஆதிக்க முறை மறைந்து, சுதந்திர அரசு முறைகள் (Free State Systems) தோன்றியுள்ளபடியால், பெருமளவில் அயல்நாட்டுக் கொள்கையானது, இராணுவ ஒப்பந்தங்களில் கூட்டுச்சேராமலிருத்தல், நல்லுறவு, உள்நாட்டு நிலைகளில் தலையிடாமை, ஒன்றுக்கொன்று நாட்டு எல்லைக்கு மதிப்புக் கொடுத்தல், அமைதியான உடன்வாழ்க்கை ஒத்துழைப்பு, ஒன்றுக்கொன்று வாணிகத்தில் உதவி செய்தல் முதலிய நல்ல குறிக்கோள்களை உடையதாக இருக்கிறது. இந்தியத் தலைமை அமைச்சர் நேரு வகுத்த ஐந்துநெறிக் கோட்பாடும் இத்தகைய நல்ல நோக்கங்களை உடையதே. அயல்நாட்டுக் கொள்கையின் நோக்கங்களை அதை ஏற்றுக்கொண்டுள்ள இரண்டு நாடுகளும் உண்மையாக நிறைவேற்றி வைத்தால்தான் அக்கொள்கை வெற்றியாகச் செயல்படும். எனவேதான் அக்கொள்கையை ஏற்றுக்கொள்ளும் இருநாடுகளுக்கும் பயன்தரத்தக்கதான நோக்கங்கள் அக்கொள்கையில் அடங்கி இருத்தல் வேண்டும். நோக்கங்களும், பொருளாதார வளர்ச்சியில் ஒத்துழைப்பு, தொழில் நுட்பக்கலையில் பயிற்சி, கலை இலக்கியத் துறைகளில் பரிவர்த்தனை, அறிவியற் கல்வி, பொருளாதாரம் முதலியவற்றில் உதவி முதலியவை சார்ந்ததாக இருக்குமானால், நல்லுறவை வளர்க்கும் அயல்நாட்டுக் கொள்கை உருவாகும்.

**அயல்நாட்டுச் செலுத்துநிலை** என்பது நாடுகளுக்கிடையே கொடுக்கல் வாங்கலினால் எழும் பணச் செலுத்துநிலையைக் குறிக்கும். வணிகத் தொடர்பு தொன்மைக் காலத்தில் தொடங்கி அண்மைக் காலம் வரை பல்வேறு மாறுதல்களையும் வளர்ச்சி நிலைகளையும் அடைந்துவந்துள்ளது. இக் காலக் கட்டங்களில் ஏற்றத் தாழ்வுகள் தோன்றியுள்ளன. பல நாடுகளுக்கு மத்தியில் வாணிக நிலை மதிப்பில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்ட நிலையில்தான் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை என்ற கோட்பாடு உருவாகியது.

அயல்நாட்டுச் செலுத்துநிலை (Balance of Payments) என்ற தொடர் முதன்முதலில் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில், ஆங்கிலப் பொருளாதார நூல்களில் வணிகக் கோட்பாட்டினர் (Mercantilists) காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பு அயல்நாட்டுச் செலுத்துநிலை என்ற கருத்து "மிகுதியான நிலை (Over–Plus), மிகுதியான மதிப்புநிலை (Over–Value), கணக்குச் சமநிலை (Balance of Accounts), செலுத்தல் சமநிலை (Balance of Remittance), மொத்தச் செலுத்தல் சமநிலை (Grand Balance of Payments) ஆகிய தொடர்களால் குறிப்பிடப்பட்டது.

முதன் முதலில் அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பது வரவினங்களைக் காட்டிலும் செலுத்தல்கள் (Payments) மிகுதியாக உள்ள நிலையைக் குறித்தது. தங்கத் திட்டக் காலத்தில் (Gold Standard) இக் கலைச்சொல், பன்னாட்டு வாணிகத்தால் ஒரு நாட்டினின்று நடைபெற்ற தங்கத்தின் வெளியேற்றத்தைக் குறித்தது. பின்னர், இக் கலைச்சொல் புதிய, நடுநிலையான பொருளில் பயன்படுத்தப்பட்டது. இப்புதிய பொருளின்படி, இச்சொல் பன்னாட்டுக் கணக்கில் ஏற்படும் சமநிலையையே குறித்தது. அச் சமநிலை உடன்பாடாகவும் (Positive) எதிர் மறையாகவும் (Nagative) இருக்கலாம். இக்கருத்து ஒரு நாட்டின் அயல்நாட்டு வாணிகத்தில் ஏற்படும் தங்கத்தின் வெளியேற்றத்தையும் (Outflow of Gold) தங்கத்தின் உள்ளிறக்கத்தையும் (Inflow of Gold) குறித்தது. வணிகக் கோட்பாட்டினர் தங்கத்தின் உள்ளிறக்கத்தை "உதவியான நிலை" (Favourable Condition) என்றும், அதன் வெளியேற்றத்தைக் "கேடான நிலை" (Unfavourable Condition) என்றும் குறிப்பிட்டனர்.

தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வணிகக் கோட்பாட்டினரின் இக்கருத்தை மறுத்தனர். தொன்மைப் பொருளியல் அறிஞர்கள், ஒரு நாட்டின் உண்மையான செல்வம் வெறும் தங்கத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதன்று; அது பொருள்களையும் அடிப்படையாகக் கொண்டதாகும் என்ற உறுதியான கருத்தைக் கூறினர். எனவே, தங்கத்தின் உள்ளிறக்கத்தையும் அதன் வெளியேற்றத்தையும் மட்டும் அடிப்படையாகக் கொண்டு அயல்நாட்டுச் செலுத்தல் நிலையைக் குறிப்பது முழுமையான விளக்கமாக அமையாது என்பது இவர்களின் கருத்தாகும். அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில் செயற்பாடான நிலை (Active), செயற்பாடற்ற நிலை (Passive), உடன்பாடான நிலை, எதிர்மறையான நிலை ஆகிய தொடர்கள் அயல்நாட்டுச் செலுத்தல்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டன. ஆனால், இவ்விளக்கங்கள் நிலைபெறவில்லை. காரணம், இவையும் முன்பு குறிப்பிட்ட விளக்கங்களைப் போலவே அரைகுறை விளக்கங்களாகவே அமைந்திருந்தன.

இவ்வாறு, பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு விளக்கங்களை உள்ளடக்கிய "அயல்நாட்டுச்

செலுத்துநிலை'' 20-ஆம் நூற்றாண்டில் ஒரு புதிய விளக்கத்தைப் பெற்றது. காரணம், பன்னாட்டுப் பொருளாதார உறவுகளில் இந்நூற்றாண்டில் ஏற்பட்ட பல்வேறு மாறுதல்களே ஆகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின், பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்ட .எல்லா நாடுகளும் தங்கள் நாட்டின் தொழில் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, பல்துறை முன்னேற்றங்கள் ஆகியவற்றுக்காகப் பிற நாடுகளைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக மாறுபட்ட அரசியல் கொள்கைகளையுடைய முதலாளித்துவ நாடுகளும் சமநிலைச் சமுதாய நாடுகளும் கூடத் தங்களிடையே பன்னாட்டு வாணிக உறவை வளர்த்துக் கொண்டு வருகின்றன. எனவே, 'அயல்நாட்டுச் செலுத்துநிலை' பன்னாட்டு வாணிக வளர்ச்சியினால் மேன்மேலும் புதிய விளக்கங்களைப் பெற்று முதன்மைநிலை அடைந்து வருகிறது.

பி.டி எல்சுவொர்த்து (P.T. Ellsworth) என்ற பொருளாதார அறிஞர், 'பன்னாட்டுப் பொருளாதாரம்' என்ற நூலில் (The International Economy) அயல்நாட்டுச் செலுத்துநிலை பற்றி விளக்கமளித்துள்ளார். ''அயல்நாட்டுச் செலுத்துநிலை என்பது மிகவும் சிறந்த கோட்பாடாகும். ஒரு நாடு வெளிநாட்டாருடன் கொள்ளும் எல்லா நிகழ்ச்சிகளும் இதில் அடங்கியுள்ளன. பொருள்களையும் பணிகளையும் ஏற்றுமதி இறக்குமதி செய்யும் நடப்புச் செயல்களும், வெளிநாட்டுச் சொத்துகளை வாங்குவது, விற்பது, வெளிநாட்டாரிடமிருந்து கடன் வாங்குவது, அவர்களுக்குக் கடன் கொடுப்பது போன்ற நிதி பற்றிய செயல்களும் இதில் அடங்கியுள்ளன. ஒரு பொருளாதார அமைப்பிற்கும் உலகில் உள்ள மற்ற எல்லாப் பொருளாதாரங்களுக்கும் இடையில் நடக்கும் நிகழ்ச்சிகளின் முழுக் கணக்காகும்'' என்று எல்சுவொர்த்து கூறினார்.

சார்லசு பி. கிண்டில் பெர்க்கர் (Charles P. Kindle Berger) என்ற பொருளாதார அறிஞர், அயல்நாட்டுச் செலுத்துநிலையின் பயன்பாட்டினைக் குறிப்பிடும் போது, ஒரு நாட்டின் பன்னாட்டுப் பொருளாதார உறவு நிலையில் மேற்கொள்ளப்படும் பணவியல், நிதியியல், செலாவணி ஆகிய கொள்கைகளுக்கு வழிகாட்டியாக அயல்நாட்டுச் செலுத்தல் நிலை செயற்படுகிறது என்று குறிப்பிடுகிறார்.

அயல்நாட்டுச் செலுத்தல் நிலையில், அயல்நாட்டு வாணிக நிலையும் அடங்கியுள்ளது. அயல்நாட்டு வாணிக நிலை (Balance of Trade), கண்ணுக்குப் புலனாகும் இனங்களின் ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றின் மதிப்புகளை மட்டும் குறிக்கும். ஆனால் அயல்நாட்டுச் செலுத்தல் நிலை என்பது, கண்ணுக்குப் புலனாகும் (Visible) இனங்களின் ஏற்றுமதி, இறக்குமதி ஆகியவற்றின் மதிப்புகளையும், கண்ணுக்குப் புலனாகா (Invisible) இனங்களின் ஏற்றுமதி, இறக்குமதி மதிப்புகளையும் சேர்த்துக் குறிப்பிடுவதாகும்.

கண்ணுக்குப் புலனாகும் இனங்கள் என்பவை ஒரு நாட்டின் துறைமுகத்தில், விமானத் தளக் கூடத்தில் கணக்கீடு செய்யப்படும் பொருள்சார் பண்டங்களாகும். சில எடுத்துக்காட்டுகள்: உணவு தானியங்களின் ஏற்றுமதி, இறக்குமதி, இரசாயனப் பொருள்கள், சணல், துணிகள், ஆலைக் கச்சாப் பொருள்கள் போன்றவையாகும்.

கண்ணுக்குப் புலனாகாத இனங்களும் ஒரு நாட்டின் வாணிகக் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கும். சில எடுத்துக்காட்டுகள்: காப்பீட்டுச் செலவுகள், அயல்நாட்டுக் கடனுக்குச் செலுத்தப்படும் வட்டி, அயல்நாட்டுக் கப்பல்களுக்குச் செலுத்தப்படும் கட்டணம், அயல்நாட்டுத் தூதரகச் செலவு, அயல் நாடுகளுக்குச் செலுத்தும் இன்பப் பயணங்களின் செலவு போன்றவை.

அயல்நாட்டுச் செலுத்துநிலைக் குறிப்பு (Balance of Payments Account) என்பது, ஒரு நாடு பிற நாட்டினருக்குச் செலுத்த வேண்டிய முழுத் தொகையினையும் பிற நாட்டினரிடமிருந்து பெறவேண்டிய முழுத் தொகையினையும் குறிக்கும். இதில் பிற நாட்டவருக்குச் செலுத்தவேண்டிய தொகை இனங்கள் பற்று எனவும், பிற நாட்டவரிடமிருந்து பெற வேண்டிய தொகை இனங்கள் வரவு எனவும் கொள்ளப்படுகின்றன. தங்கத்தின் பெயர்ச்சி, கடன் பேரங்கள், முதலீடுகள் ஆகியன மூலதனக் கணக்கிலும் (Capital Account) மற்றவைகள் நடப்புக் கணக்கிலும் அடங்குகின்றன.

அயல்நாட்டுச் செலுத்துநிலையில் பாதகமான சமனற்ற நிலை ஏற்படப் பல காரணங்கள் உள்ளன. பருவமழை பொய்த்தல், மிகுதியான அளவில் எந்திரங்கள் இறக்குமதி செய்தல், கச்சாப் பொருள்களின் இறக்குமதி, பணவீக்கத்தால் ஏற்படும் ஏற்றுமதிக் குறைவு, வணிகச் சூழலில் தோன்றும் மந்த நிலை, மக்கள்தொகைப் பெருக்கம், நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்படும் மந்த நிலையாலும் பணவீக்க நிலையாலும் ஏற்படும் இறக்குமதி மிகுதி, வெளிநாட்டில் கடன் வாங்கு நிலைமை போன்ற காரணங்களால் கேடான செலுத்துநிலை, சமனற்ற சீர்கேட்டை நீண்டகாலம் இருக்கச் செய்தால், உள்நாட்டில் பொருளாதாரம் நிலையற்றதாகிப் பல சிக்கல்கள் தோன்றும். கேடான அயல்நாட்டுச் செலுத்துநிலையைக் குறுகிய கால நடவடிக்கைகள் மூலமும் நீண்டகாலத் தொடர் முயற்சிகளின் மூலமும் ஈடு செய்யலாம்.

பன்னாட்டுப் பண நிதியிலிருந்து (International Monetary Fund) கடன் பெறுதல், அயல்நாடுகளிலிருந்து கடன் பெறுதல் போன்ற செயற்பாடுகள் குறுகிய கால நடவடிக்கைகளாகும். உற்பத்தியைப் பெருக்குதல், இறக்குமதிகளைக் குறைத்தல், பணத் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒழுங்கு செய்தல், நாணய மதிப்பைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகள் நீண்டகால நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன. கடந்த 30 ஆண்டுகளில், 20-க்கு மேற்பட்ட நாடுகள், நாணய மதிப்புக் குறைப்பு முறையைக் கடைப்பிடித்துள்ளன. இந்தியா இரண்டு முறை நாணய மதிப்புக் குறைப்பைச் செய்துள்ளது. மாற்று மதிப்பிறக்கத்தின் மூலமாக நாட்டுப் பணத்தின் புற மதிப்பை ஒரு குறிப்பிட்ட அயல்நாட்டுப் பணத்தினோடு குறைத்துக் கொள்ளும் முறையும் உள்ளது. இதனால், பணத்தின் மாற்று வீதம் பாதிக்கப்பட்டு அயல்நாட்டுப் பணத்தின் ஓர் அலகிற்கு முன்னைவிட கூடுதல் அலகுகள் உள்நாட்டுப் பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஒரு நாட்டில் கேடான செலுத்துநிலை ஏற்பட்டவுடன், மாற்று மதிப்பிறக்கம் (Exchange Depreciation) தோன்றி, உள்நாட்டுப் பணத்தின் மதிப்பு, அங்காடி அமைப்புகளினால் தானாகவே குறைக்கப்பட்டுவிடும். இந்தச் செயலினால் ஏற்படும் விளைவுகள் நாணய மதிப்பின் குறைவு (Devaluation) விளைவுகளை ஒத்திருக்கும். இந்தச் செயல் தானாகவே ஏற்படக்கூடியது. ஆனால், நாணய மதிப்புக் குறைவு என்பது அரசினால் விரும்பிக் கையாளப்படும் நடவடிக்கையாகும்.

நாணய மாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control) முறையை இரண்டாம் உலகப் போருக்குப் பின் பல நாடுகள் கடைப்பிடித்து அயல்நாட்டுச் செலுத்து நிலையில் உள்ள சிக்கல்களைப் போக்கின. இம்முறையின்படி மக்களால் ஈட்டப்படும் அயல்நாட்டுச் செலாவணியை முற்றிலுமாக மைய வங்கி பெற்றுக் கொண்டு, இன்றியமையாத் தேவைகளுக்கு மட்டும் அதனைப் பங்கீடு செய்கிறது. இந் நடவடிக்கையின் மூலம், இறக்குமதியைக் கட்டுப்படுத்தி, ஏற்றுமதியை ஊக்கப்டுத்திச் செலுத்துநிலை, சமன் நிலைக்குக் கொண்டுவரப்படுகிறது. பணவாட்ட (Deflation) முறையின் மூலமும் செலுத்துநிலையில் சமனற்ற நிலையை ஈடுசெய்யலாம். நாட்டில் வழங்கும் பணத்தின் அளவைக் குறைப்பதன் மூலம் விலைக்குறைப்பை ஏற்படுத்தலாம். இதனால், பொருள்களின் ஏற்றுமதி பெருகும். ஆனால், வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் அமைதியின்மை, அமைப்பற்ற பண அங்காடி ஆகிய தன்மைகளையுடைய வளர்ச்சி குறைந்த பொருளாதார அமைப்பில் இம்முறை பயன்தராது; தீமையே விளைக்கும்.

பணத் தொடர்புடைய நடவடிக்கைகள் மூலமும் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் ஏற்படும் சமனற்ற நிலையை ஒழுங்குபடுத்தலாம். ஏற்றுமதிகளை ஊக்குவிக்க உதவித் தொகைகள் வழங்குதல், ஏற்றுமதி வரிகுறைப்புச் செய்தல், இறக்குமதி வரிகளை மிகுதிப் படுத்துதல், இறக்குமதிப் பொருள்களுக்கு ஈடான பொருள்களை உற்பத்தி செய்தல், இறக்குமதிக்கு வரம்புகள் கொண்டு வருதல் ஆகியவை பணத் தொடர்புடைய நடவடிக்கைகளாகக் கருதப்படுகின்றன.

இந்தியப் பொருளாதாரத்தில் அயல்நாட்டுச் செலுத்துநிலை மிகச்சிறந்த பங்கினைப் பெற்றுள்ளது. இங்கு வெள்ளையர் ஆட்சி நடைபெற்றபோது, இந்தியப் பொருளாதாரம், இங்கிலாந்துப் பொருளாதாரத்தின் நன்மைக்காகவே செயற்படுத்தப் பட்டது. அயல்நாட்டுச் செலுத்துநிலை, சுரண்டல் பொருளாதார அமைப்போடு சேர்ந்து இயங்கியது. இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்துநிலை, 1939-ஆம் ஆண்டிலிருந்து சமனற்ற நிலையில் இருந்து வந்தது.

விடுதலைக்குப் பின் இந்தியா, திட்டமிட்ட பொருளாதார முறையை அறிமுகப்படுத்தியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளத்தைப் பெருக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அயல் நாட்டுத் தொழில்நுட்ப உதவி பெறப்பட்டதுடன் அயல்நாட்டு எந்திரங்கள் பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. மேலும், தொழில் துறைக்குத் தேவையான எரிபொருள் (Energy) இந்தியாவில் கிடைக்கவில்லை. எனவே, வெளிநாட்டிலிருந்து பெட்ரோலியப் பொருள்கள் தொடர்ந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இந்த இறக்குமதிகளுக்காக அளவிறந்த அயற் செலாவணி செலவு செய்யப்படுகிறது. திட்டக் காலங்களில் இந்தியாவில் எதிர்பார்த்த அளவில் வேளாண்மை வளர்ச்சி, தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை. எதிர்பார்த்த அளவிற்கு ஏற்றுமதியும் பெருகவில்லை. இதன் காரணமாக அயல்நாட்டுச் செலுத்து நிலையில் கேடான நிலை ஏற்பட்டது. இந்நிலையை அப்போதைக்கு ஈடுசெய்து, நீண்டகாலப் போக்கில் செலுத்துநிலையில் துணையான போக்கை ஏற்படுத்துவதற்குப் பன்னாட்டுப் பண நிதியிலிருந்து 3,000 கோடி உரூபாயை 1981-ஆம் ஆண்டு, இந்திய அரசு கடனாகப் பெற ஒப்பந்தம் செய்தது. இந்தக் கடனைப் பகுதி பகுதியாகப் பெற முடிவு செய்தது. இந்திய அரசு மீதி 1500 கோடி உரூபாயை 1984-ஆம் ஆண்டில் கடனாகப் பெறப் போவதில்லை என்று கூறிவிட்டது. இந்தியப்பொருளாதாரம் எதிர்பார்த்த அளவில் செயற்படத் தொடங்கியதாலும், ஏற்றுமதிகள் தொடர்ந்து பெருகியதாலும், இறக்குமதிகள் குறைந்து வந்ததாலும், விலைவாசிகள் கட்டுப்பட்டதாலும், பன்னாட்டுப் பண நிதியிலிருந்து வரவேண்

டிய கடனில் ஒரு பகுதியை வேண்டாமென்று இந்திய அரசு கூறியது. கீழ்வரும் அட்டவணை இந்தியாவின் இப்போதைய அயல்நாட்டுச் செலுத்துநிலையை விளக்குகிறது.

"Economic Survey", Government of India., 1983-84

**Katrak. H.**, "International Trade and the Balance of Payments", Fontana/Collius, 1971.

இந்திய அயல்நாட்டுச் செலுத்துநிலை
1966—67 முதல் 1981-82 வரை
உரூபாய் கோடியில்

| ஆண்டு | வணிக நிலை | புலப்படாத இனங்கள் (நிகரம்) | பணம்சார் தங்க நடவடிக்கை (நிகரம்) | செலுத்துநிலை |
|---|---|---|---|---|
| 1966—67 | — 904.6 | — 138.2 | — | — 1042.8 |
| 1967—68 | — 797.8 | — 153.4 | — | — 951.2 |
| 1968—69 | — 373.1 | — 134.4 | — | — 507.5 |
| 1969—70 | — 178.4 | — 149.1 | — | — 327.5 |
| 1970—71 | — 317.7 | — 169.2 | 13.1 | — 473.8 |
| 1971—72 | — 438.2 | — 137.4 | — | — 575.6 |
| 1972—73 | — 251.0 | — 13.81 | — | — 389.1 |
| 1973—74 | — 378.6 | — 76.4 | — | — 455.0 |
| 1974—75 | — 977.2 | — 216.6 | — | — 760.6 |
| 1975—76 | — 566.5 | 510.2 | — | — 56.3 |
| 1976—77 | — 316.2 | 824.0 | 5.3 | 1145.5 |
| 1977—78 | — 107.5 | 1422.1 | 5.3 | 1319.9 |
| 1978—79 | — 1842.6 | 1571.4 | 26.4 | — 244.8 |
| 1979—80 | — 3374.3 | 2603.2 | 5.2 | — 765.9 |
| 1980—81 | — 5967.2 | 3748.6 | — | — 2238.6 |
| 1981—82 | — 6121.0 | 3303 1 | — | — 2817.9 |

ஆதாரம்: இந்திய மைய அரசுப் பொருளாதார ஆய்வுகள்; 1977-78, 1983-84,

மு.நா.

துணை நூல்கள்:

**Charles, P. Kindle Berger**, "International Economics", 1968.

"Report on Currency and Finance Reserve Bank of India", 1983-84.

**அயல்நாட்டு மூலதனம்:** ஒரு நாட்டின் மூலதனம் பற்றாக்குறை நிலையில் இருக்கும்போது அயல்நாட்டு மூலதனத்தால் (Foreign Capital) உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்திப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த இயலும். நாட்டின் உற்பத்தியைப் பெருக்க நிலம், உழைப்பு, மூலதனம்,

தொழில் அமைப்பு என்ற நான்கு உற்பத்திக் காரணிகள் தேவை. மூலதனம் என்பது, கட்டடம், எந்திரக் கருவிகள், மூலப் பொருள் போன்ற உற்பத்திக் கூறுகளைக் குறிக்கிறது. இதைத் தவிர, தொழில் நுட்பக் கல்வி, சுகாதாரம், திறன் மிகுப்பு ஆகியவற்றிற்கு முதலீடு செய்வதும் மூலதனம் என்றே கூறப்படும். வளர்ச்சி குறைந்த பிற்பட்ட நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தத் தேவையான மூலதனம் கிடைப்பதில்லை. எனவேதான், அத்தகைய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க அயல்நாட்டு மூலதனத்தின் தேவை எழுகிறது. பொருளாதார வளர்ச்சியில் அயல்நாட்டு மூலதனம் சிறந்த பங்கேற்கிறது.

பொதுவாக வளர்ச்சி குறைந்த நாடுகள், அயல் நாடுகளிலிருந்து எந்திரம், கருவிகள், துணைக் கருவிகள், மூலப் பொருள்கள் போன்றவற்றை இறக்குமதி செய்து விரைவான வளர்ச்சி அடைய முயற்சி செய்கின்றன. உள்நாட்டில் எந்த அளவுக்கு மூலதனத்தைச் சேகரிக்க முடியும் என்பதைப் பொறுத்தே அயல்நாட்டு மூலதனத்தின் அளவும் அமையும். ஆகவே, அரசு மூலதன ஆக்கத்தை வேகப்படுத்த நான்கு வழிமுறைகளைப் பின்பற்றுகிறது. அவை வரிவிதிப்பு, உள்நாட்டில் கடன் வாங்குதல், பற்றாக்குறை நிதியாக்கம், அயல்நாட்டிலிருந்து மூலதனம் பெறுதல் என்பன. இவற்றுள் அயல்நாட்டு மூலதனம், முதலீட்டில் இறுதிநிலைப் பங்கினைப் பெறுகிறது. இருப்பினும், இதன் சிறப்புறு நிலைக்குக் காரணம், வளர்ச்சி குறைந்த நாடுகளில் நுகர்வு (Consumption) குறைந்த நிலையில் உள்ளதோடு, மூலதனம் பற்றாக்குறையில் உள்ளதேயாகும்.

வளர்ச்சியடைந்த நாடுகளும் பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்கக் கட்டத்தில் அயல்நாட்டு மூலதனத்தைச் சார்ந்தே இருந்தன. இங்கிலாந்து, ஆலந்து (Holland) நாட்டிலிருந்து 17,18-ஆம் நூற்றாண்டுகளில் கடனுதவி பெற்றது. அதனால், இங்கிலாந்து இந்தியாவைச் சுரண்டிப் பொருளாதார உபரியைப் பெற்றது. அமெரிக்கா 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பன்னாட்டுப் பண அங்காடியிலிருந்து மிகுதியான கடன்களைப் பெற்றது. கனடா 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், மிகுந்த அளவு அயல்நாட்டு மூலதனத்தை ஏற்றுக்கொண்டது. உருசியா தன் பொருளாதார வளர்ச்சியின் தொடக்கக் காலங்களில் அமெரிக்க நாட்டின் உதவியைப் பெரிதும் நம்பியிருந்தது. உருசியா மிகுதியாக உதவி புரிந்ததால்தான் சீனா விரைவான வளர்ச்சியைப் பெற முடிந்தது.

இந்தியாவின் தொழில் முன்னேற்றத்திற்கு அயல்நாட்டு மூலதனம் பெரிதும் உதவியுள்ளது. முதலீடு செய்வோர் 19-ஆம் நூற்றாண்டிலும், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்திலும் தொழில்களில் தங்கள் மூலதனத்தை முதலீடு செய்யத் தயங்கினர். சேமிப்பு வீதம் குறைந்த அளவிலும் தொழில் நுணுக்க முன்னேற்றம் ஏற்படாத நிலையிலும் இருந்தமையால், வாணிகம் செய்ய வந்த கிழக்கிந்திய வணிகக் குழுவைச் சார்ந்த ஆங்கிலேயர் முதலீடு செய்ய முன்வந்தனர். காப்பி, தேயிலை, சணல், நிலக்கரி, சருக்கரை, போன்ற பெரிய தொழில்கள் வளர்ந்தமைக்கு ஆங்கிலேயரின் மூலதனமே காரணமாகும். திட்டங்களை நிறைவேற்றவும் 1947-ஆம் ஆண்டிற்குப் பின் அயல்நாட்டு மூலதனம் பெறப்பட்டது. வளர்ச்சியடையாத எந்த நாடும் அயல்நாட்டு மூலதனத்தைப் பெறாமல் விரைவான தொழில் முன்னேற்றத்தைப் பெற இயலாது.

சப்பான், அயல்நாட்டுத் தனியார் முதலால், பொருளாதார வளர்ச்சியைப் பெறவில்லை. ஆனால், அயல்நாட்டு வல்லுநர்களை வேலைக்கமர்த்திச் சப்பானியர் அவர்களிடமிருந்து தொழில் நுட்பத்தையும் தொழில் துணிவாற்றலையும் கற்றறிந்தனர். மேலும், உள்நாட்டு மக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தொழில் நுட்பத்தில் பயிற்சி பெறச் செய்தனர். இத்தகைய முயற்சிகளால் சப்பான் விரைவான தொழில் வளர்ச்சியைப் பெற முடிந்தது. அயல்நாட்டு மூலதனம், பொருளாதார வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் தோன்றுகிற குறைகள், இடர்ப்பாடுகள் ஆகியவற்றை நீக்குவதோடு, தொழில் நுட்பப் பணிகளையும் தோற்றுவிக்கின்றது. இதன் மூலம் உள்நாட்டு முதலாக்கத்தை வேகப்படுத்த முடிகிறது. குறிப்பாக, உள்நாட்டு நுகர்ச்சியைக் குறைக்காமலேயே வளர்ச்சிக்கான மூலதனத்தைச் சேகரிக்க முடிகிறது. அயல்நாட்டு மூலதனம், நாட்டில் பணவீக்க நிலை ஏற்படாமல் தடுக்க உதவுகிறது. வளர்ந்து வரும் நாடுகளில் பணவீக்கமில்லாமல் முதலாக்கத்தைப்பெருகச்செய்வது கடினம். ஆனால், அயல்நாட்டு உதவி, முதலீட்டுப் பொருள்களாகக் (Capital Goods) கிடைப்பதால் பொருளாதார வளர்ச்சியின்போது பணவீக்கத்திற்கு எதிர் சக்தியாகச் செயற்படுகிறது. அயல்நாட்டு மூலதனம், பற்றாக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்ற வேண்டிய தேவையைக் குறைக்கிறது.

அயல்நாட்டு மூலதனம், ஓரளவிற்கு அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலைக் (Balance of Payments) குறைகளைத் தீர்க்கவும் உதவுகிறது. எனவே, அதனை அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலையைச் சமப்படுத்தும் கருவி எனக் கூறலாம் அன்றியும் அது பன்னாட்டு வேலைப் பகுப்பை (Division of Labour) விரிவுபடுத்திப் பன்னாட்டு வாணிகம் சிறப்பாக நடைபெறத் துணை புரிகிறது. இதனால் ஏழை நாடுகளில்

சேமிப்பு, முதலீடு, உற்பத்தி ஆகியவை மிகுந்து, ஏற்றுமதியின் அளவு மிகுதிப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் வட்டிவீதத்தைக் குறைத்து மூதலீட்டைப் பெருக்க அயல்நாட்டு மூலதனம் துணை செய்கிறது. இதனால், முதலீட்டு அங்காடியிலும் பண அங்காடியிலும் வட்டி வீதங்கள் குறைய, பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான நிதியைக் குறைந்த வட்டிக்குக் கிடைக்கச் செய்கிறது. வளர்ச்சியுறா நாடுகள் அயல்நாட்டு மூலதனம் பெறாத நிலையில் சிறிதளவு உற்பத்தியை மட்டுமே மேற்கொள்ள முடியும்; பேரளவு வளர்ச்சியைப் பெற இயலாது. அயல்நாட்டு மூலதனத்தால் குறிப்பிட்ட சில துறைகள் சீரான வளர்ச்சி பெறச் சிறந்த வாய்ப்பு ஏற்படுகிறது. பேரளவு உற்பத்தி, தொடர் சங்கிலியாகப் பல்வேறு வகையான தொழில்கள் ஏற்பட வகைசெய்கிறது. பல்வேறு தொழில்கள் தோன்றுவதால் சந்தையின் அளவு விரிவடைகிறது. அயல்நாட்டு மூலதனத்தைப் பெறும் ஒரு நிறுவனம், பொருளாதார முறையில் பல வசதிகளையும் பெற்றுவிடுவதால், அந்நிறுவனம் வளர்ச்சி அடைவது மட்டுமல்லாமல், அது வெளிநாடுகளில் கூட முதலீடு செய்யவும் முடிகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியத் தொழில் நிறுவனங்கள் வெளிநாட்டு மூலதனத்தைப் பெற்றுப் பயனடைந்து, பின் அவை கென்யா, உகாண்டா, நேபாளம், எதியோப்பியா போன்ற நாடுகளில் முதலீடு செய்து வருகின்றன.

அயல்நாட்டு முதலீட்டால் அறிவியல் கல்வி, தொழில் நுட்பம், புதுமையான அமைப்பு முறை ஆகிய யாவும் வளர்ச்சியடையாத நாடுகளில் வளரத் தொடங்குகின்றன. மூலதனத்தைப் பெறுகின்ற நாட்டின் வளங்கள், மூலதனத்தை அளிக்கின்ற நாட்டின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படலாம். விடுதலையடைவதற்கு முன், இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இருப்புப் பாதைகளை அமைத்தது ஆதாய நோக்கம் ஆகும். இந்தியாவின் மூலப் பொருள்கள் இங்கிலாந்தின் தொழில் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறே பல குடியேற்ற நாடுகளின் வளங்கள், குடியேற்ற ஆதிக்க நாடுகளின் நன்மைக்கே பயனளித்தன. வெளிநாட்டு மூலதனத்தை ஏற்றுக் கொள்ளும் நிலையால் ஒரு நாட்டின் உரிமைக்குக் கேடு விளையலாம். பொருளாதாரத் துறையில் செல்வாக்கைப் பெற்று, அரசியலைக் கைப்பற்ற ஒரு நாடு முயற்சி செய்யலாம். பாதுகாப்புத் தொழில்கள் (Defence Industries), மூலத் தொழில்கள் (Key Industries) ஆகியவற்றில் அயல்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்துவதால் பல இடர்கள் ஏற்படும். அயல்நாட்டு முதலீட்டாளர்கள், உள்நாட்டில் தொழில்கள் வளர்வதைப் பல வழிகளிலும் தடுப்பார்கள். தங்கள் தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம், ஏற்றுமதி முதலியன பாதிக்கப்படுமெனக் கருதிப் புதிதாகத் தோன்றும் தொழில் நிறுவனங்களுக்குப் பல இடையூறுகளைத் தோற்றுவிப்பார்கள். அயல்நாட்டு மூலதனத்தைக் கொண்ட நிறுவனங்களில் சிறந்த வேலை வாய்ப்புகள் அயல் நாட்டவருக்கே அளிக்கப்படுகின்றன. உள்நாட்டில் உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலோ, தொழில் நுட்ப அறிவைப் பரப்புவதிலோ அயல் நாட்டு நிறுவனங்கள் மிக்க ஆர்வம் கொள்வதில்லை. அந்நிறுவனங்கள் ஆதாய நோக்கோடு செயற்படுபவை. முதலீடு செய்யப்பட்டுள்ள நாட்டின் பொருளாதார முன்னேற்றம் அவற்றின் உள்நோக்கமாக அமைவதில்லை.

வளர்ச்சியடையாத நாடுகளுக்குச் செல்லும் அயல் நாட்டு மூலதனத்தின் அளவு, பல காரணிகளைப் பொறுத்தது. வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குரிய மூலதன உபரி இருத்தல் வேண்டும். ஆனால், இந்நாடுகளில் உபரி மூலதனம் மிகப் பெரிய அளவில் இருக்குமென எதிர்பார்க்க இயலாது. அமெரிக்காவைத் தவிரப் பிற நாடுகள் மிகக் குறைந்த மூலதனத்தை மட்டுமே அளிக்கத்தக்க நிலையில் உள்ளன. எனவே, இந்நிலையில் வளர்ச்சியடையாத நாடுகளுக்குப் பன்னாட்டு அளவில் அமைந்துள்ள நிதிக் கழகங்கள் உதவுகின்றன. பொருளாதார முன்னேற்றத்திற்கான அயல்நாட்டு மூலதனத்தின் அளவு, இயற்கை வளங்கள், பிற வசதிகள் ஆகியவற்றைப் பொறுத்தும் அமையும் அயல்நாட்டு மூலதனத்தைச் சிறப்பாகப் பயன்படுத்திப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற, மக்கள் வளமும் இயற்கை வளமும் நிரம்பப் பெற்றதாக ஒரு நாடு இருத்தல் வேண்டும். வளங்கள் இல்லாமல் அயல்நாட்டு மூலதனம் மட்டும் முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியாது. அயல்நாட்டு மூலதனத்தை ஏற்கும் திறனைக் கொண்டதாக ஒரு நாட்டின் பொருளாதாரம் அமைய வேண்டும். எந்த அளவிற்கு வேண்டுமானாலும் அயல்நாட்டு மூலதனத்தை ஏற்கும் ஆற்றல் எல்லாப் பொருளாதாரத்திற்கும் இருப்பதில்லை. பேராசிரியர் இக்கின்சு (Higgins) கருத்துப்படி, ஒரு நாட்டின் மூலதனத்தை ஏற்கும் திறன் கீழ்க்கண்ட காரணிகளைச் சார்ந்து அமையும். அவை, பயன்படுத்தப்படாத ஆற்றல், தொழில் நுணுக்க முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள், சிறப்பாகத் தீட்டப்பெற்ற முன்னேற்றத் திட்டம், குறைந்த அளவு உள்நாட்டு நிதி வசதிகள், விரைவாகவும் திறமையாகவும் திட்டங்களை நிறைவேற்றும் நிருவாகிகள், மக்களின் ஆதரவைக் கொண்டு இணைந்த அரசுகள் ஆகியவைகளாகும். அயல் நாட்டு மூலதனத்தின் அளவு ஒரு நாட்டின் மீளஅடைக்கும் திறனைப் பொறுத்தும் அமையும். இறுதியாக, மூலதனத்தைக் கடனாகப் பெற்ற ஒரு நாட்டிற்கு முன்னேற வேண்டு

மென்ற விருப்பும் முயற்சியும் இருத்தல் இன்றியமையாதது. மூலதனத் திரட்சியைப் போன்றே இவ்வகை 'விருப்புத் திரட்சியும்', மிகுந்த முதலீட்டிற்கு ஊக்கமளித்து, உற்பத்தியின் அளவை உயர்த்த உதவும். எனவே, முன்னேறுவதற்கான விருப்பமும் முயற்சியும் அயல்நாட்டு மூலதனத்தின் அளவை வரையறுக்கும் காரணிகள் ஆகின்றன.

அயல்நாட்டு மூலதனத்தைத் தனியார் மூலதனம் (Private Capital) எனவும், பொது மூலதனம் (Public Capital) எனவும் பிரிக்கலாம். அயல்நாட்டுத் தனியார் மூலதனத்தை நேரடி அல்லது மறைமுக முதலீடுகளாகப் பகுக்கலாம். நேரடி முதலீடு செய்கின்ற அயல்நாட்டு நிறுவனங்கள், முதலீட்டைப் பெற்ற நாட்டில் அம்முதலீட்டினால் ஏற்பட்ட சொத்துகளின் மீது கட்டுப்பாட்டு உரிமையைக் கொள்கின்றன. நேரடி முதலீடுகள் பல வழிகளில் செய்யப்படலாம். முதலீடு செய்கின்ற அயல்நாட்டு நிறுவனத்தின் கிளை நிறுவனமாக அது அமையலாம். முதலீட்டைச் செய்கின்ற நாட்டின் நிறுவனம், முழுநிதியையும் அளித்து ஒரு நிறுவனத்தை அயல்நாட்டு மூலதனத்தைப் பெறுகின்ற நாட்டில் அமைக்கலாம். தனிப்பட்ட சில நோக்கங்களுக்காக முதலீட்டைப் பெறும் நாட்டில் கழகங்களும் அமைக்கப்படுகின்றன. முதலீட்டைச் செய்கின்ற நாட்டவர் நிலையான சொத்துகளையும், முதலீடு செய்யப்படுகின்ற நாடுகளில் ஏற்படுத்திக் கொள்ளலாம்.

மறைமுக முதலீடுகள், மாற்றத்தக்க கடனுறுதிச் சீட்டுகளைக் கொண்டு செய்யப்படுகின்றன முதலீட்டைப் பெறுகின்ற நாட்டின் அரசே இப்பத்திரங்களை வெளியிடலாம். பங்குகளையும் பாதுகாப்பான கடன் பத்திரங்களையும் அயல்நாட்டு மூலதனத்தைப் பெற விற்பனை செய்யலாம். பங்குகளையும் கடனுறுதிச் சீட்டுகளையும் பெற்ற பங்குதாரர்கள் ஆதாயத்தில் மட்டும் பங்கு பெறும் உரிமையைப் பெறுவர். நிறுவனத்தைக் கட்டுப்படுத்த முடியாது. அண்மைக் காலத்தில் "பலநிலை மறைமுக முதலீடுகள்" (Multilateral Indirect Investments) செய்யப்பட்டு வருகின்றன. வளர்ச்சியடையாத நாட்டின் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு நிதியைப் பெறப் "பன்னாட்டு மறு அமைப்பு வளர்ச்சி வங்கி" (International Bank for Reconstruction and Development) கடன் பத்திரங்களை விற்று உதவுகிறது.

பன்னாட்டுக் கழகங்கள் (Multi-national Corporations) உலக முழுவதிலும் பல நாடுகள் மூலதனம் பெற உதவி வந்துள்ளன. இக்கழகங்கள், 1967-ஆம் ஆண்டு 105 பிலியன் தாலரும் (Dollar), 1971-இல் 158 பிலியன் தாலரும், 1976-இல் 287 பிலியன் தாலரும் முதலீடுகளாகப் பல நாடுகளுக்கு உதவியுள்ளன. இவை தனியார் துறை, பொதுத் துறை இரண்டிற்கும் உதவியுள்ளன. இந்திய அரசு 1948 முதல் 1971 வரை 3742 ஒப்பந்தங்களை இக்கழகங்களுடன் மேற்கொண்டுள்ளது. 1956 முதல் 1965 வரை மேலும் 2524 தொழில் நுணுக்க ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இந்திய மைய இருப்பு வங்கி, (Reserve Bank of India) 877 தனியார் துறை வணிகக் கழகங்களைக் கணக்கிலெடுத்து ஆராய்ந்ததில், 1964–70 வரை 1,098 தொழில் நுணுக்க ஒப்பந்தங்களைத் தனியார் துறையுடன் மேற்கொண்டுள்ள விவரம் கிடைத்துள்ளது. இதன்மூலம் தனியார் துறைக்குக் கிடைத்த அயல்நாட்டு மூலதனம் உரூ. 305.8 கோடியாகும். இந்திய மைய இருப்பு வங்கி 41 பொதுத்துறை நிறுவனங்களை ஆராய்ந்ததில், 39 பொதுத் துறை நிறுவனங்கள், 163 தொழில் நுணுக்க ஒப்பந்தங்களை இக்கழகத்துடன் மேற்கொண்டிருப்பது புலனாயிற்று. பாரத கனரகத் தொழில் (BHEL) நிறுவனத்திற்கு 1974-ஆம் ஆண்டு வரை 12 வகையில் தொழில் நுணுக்க ஒத்துழைப்பு இக்கழகத்திலிருந்து கிடைத்துள்ளது. இக்கழகங்கள் பல நாடுகளில் பணிபுரிகின்றன. இவை பல நாட்டில் நிருவாகத்தை மேற்கொண்டு, தொழில் துறை ஆராய்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றிற்கு உதவுவதோடு, தம்முடைய உற்பத்திப் பொருள் பிற நாடுகளின் மொத்த விற்பனையில் 25% இடம்பெறும் வகையில் ஏற்பாடும் செய்துள்ளன. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின், மொத்த முதலீட்டின் அளவில் ஐந்தில் ஒரு பகுதி, அயல்நாட்டு மூலதனத்தின் மூலம் பெறப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தியா உரூ. 201.67 கோடி அளவிற்கு வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்தியது. ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசாங்கம் மேற்கொள்ளத் திட்டமிட்ட பொதுச் செலவு உரூ.42,300 கோடியாகும். இத்திட்டத்தின் நாட்டு மொத்த முதலீட்டில் அயல்நாட்டு மூலதனம் 9% பங்காகும். ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் தொடக்கத்திலேயே வாணிகச் செலுத்து நிலை (Balance of Payments) மிகவும் சிக்கலுக்குரியதாக இருந்தது. எனவே, அயல்நாட்டு மூலதனத்தைச் சார்ந்து இத்திட்டம் தொடங்கியது. இத்திட்டம் 1980 முதல் 1985 வரை, எதிர்பார்க்கும் அயல்நாட்டு மூலதனம் உரூ. 10,929 கோடி ஆகும். மொத்த முதலீட்டில் அயல்நாட்டு மூலதனம் 6.2 விழுக்காடாகும்.

இந்தியா அயல்நாட்டு மூலதனம் பெற்ற போது இரு வகைகளில் மேற்கொண்டது. ஒன்று, 1974–75-ஆம் ஆண்டு வரை அயல்நாட்டு மூலதனத்தைப் பெரும்பாலும் கடனாகப் பெற்றது. இரண்டு, 1975-76 முதல் அயல்நாட்டு மூலதனக் கொடைகளின் (Grants) பங்கு மிகுந்து வருகின்றது. மொத்த அயல்நாட்டு மூலதனத்தில் 1974–75- இல் 7 விழுக்காடாக இருந்த கொடையின் அளவு, 1975-76 மற்றும் 1976–77–இல் 15.4 விழுக்காடாகவும், 1977–78–இல் 20.2

விழுக்காடாகவும், 1979–80–இல் 22.3 விழுக்காடாக வும் உயர்ந்து வருகிறது. 1980–81–இல் 18.3 விழுக் காடாகவும், 1981–82–இல் 17.3 விழுக்காடாகவும் குறைந்து வருகிறது. இவ்வாறு இந்தியா மிகுந்த கொடையைச் சார்ந்திருந்ததால் கடனும், கடனை வட்டியுடன் திருப்பியடைத்தற்குரிய சுமையும் குறையலாயின.

இந்தியாவின் அயல்நாட்டு மூலதனக் கொள்கை: விடுதலை பெற்ற ஓர் ஆண்டிற்குள் (1948–இல்) அரசாங்கம் வெளியிட்ட தொழிற் கொள்கையில் அயல்நாட்டு மூலதனத்தைப் பற்றி இந்திய அரசின் கொள்கை பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது: 1. தொழிற் கொள்கையைப் பின்பற்றுவதில் அயல் நாட்டு நிறுவனங்களுக்கும் இந்திய நிறுவனங்களுக்கும் இடையே எவ்விதப் பாகுபாடும் செய்யப்பட மாட்டாது. 2. வெளிநாட்டு முதலீடு செய்பவர்கள் இந்தியாவில் கிடைக்கும் ஆதாயத்தைத் தங்கள் நாடுகளுக்கு அனுப்பவும் அல்லது மூலதனத்தை இந்தியாவில் இருந்து எடுத்துச் செல்லவும் ஏற்ற வசதிகள் அளிக்கப்படும். 3. தொழில்களை நாட் டுடைமையாக்கினால் சமமான, நிலையான இழப் பீட்டுத் தொகை வழங்கப்படும் என்பன ஆகும். இத் தொழிற் கொள்கையின்படி அயல்நாட்டினருக்கு முதலீடு செய்ய வசதிகள் அளிக்கப்படுகின்றன. கூட்டு முயற்சியிலும் சில நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள் ளன. இவ்வகை நிறுவனங்கள் மிகுந்த அளவு மூல தனத் தேவை கொண்டவையாகவும், முன்னேற்ற மடைந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றத்தக்கவை யாகவும் இருக்கின்றன. இவை ஏற்றுமதிப் பொருள் களையும் இறக்குமதிப் பொருள்களையும் உற்பத்தி செய்பவைகளாக உள்ளன. இந்தியாவில் தொழில் நிறுவுவோருக்குப் பயிற்சி அளிப்பவையாகவும் தொழில் நுணுக்க அறிவை உழைப்பாளர்களுக்கு அளிப்பவையாகவும் இவை அமைகின்றன. மேலும், அயற்செலாவணியை ஈட்டித் தருபவையாகவும் இவை இருக்கின்றன.

இக் கொள்கைகள், ஐந்தாண்டுத் திட்டங்கள் முழுவதிலும் பின்பற்றப் பட்டன. இருப்பினும், அயல்நாட்டு மூலதனத்தைப் பொறுத்த வரை இரண்டு தெளிவான நிலைகளை இந்தியாவில் காண லாம். அயல்நாட்டு மூலதனத்திற்கு 1951 முதல் 1965 வரை மிகுந்த கட்டுப்பாடுகள் அமைக்கப்பட வில்லை. எளிதாக இந்தியாவில் அயல்நாட்டினர் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டனர். ஆனால், 1965 முதல் தொழில் முன்னேற்றத்தில் அயல்நாட்டு மூலதனம் பங்கு பெறுவது பின்வருமாறு கட்டுப்படுத்தப்பட்டது. அதன்படி 1. அயல்நாட்டு மூலதனம் பெறும் துறை, திட்டக் குறிக்கோளை அடைய உதவுவதாக இருக்க வேண்டும். 2. அயல்நாட்டிலிருந்து பெறும் தொழில் நுணுக்க அறிவு இந்தியாவில் கிடைக்காததாக இருக்க வேண்டும். 3. அயல்நாட்டு உதவி பெறாதபோது அம் மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்வ தற்கு அயற் செலாவணி வீணாவதைத் தவிர்க்கக் கூடிய நிலை இருந்தால், உதவியை அனுமதிக்கலாம். 4. தொழில் அமைச்சகம் உரிமம் (Licence) வழங்கும் போது, அயல்நாட்டு நிறுவனம் உள்நாட்டு நிறு வனங்களோடு போட்டியிடாததாக இருக்கவேண்டும் என்பதைக் கருத்திற் கொள்ளவேண்டும்.

இவற்றைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் தொழில் நிறுவனங்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து, 1968-இல் பின்வருமாறு இரண்டு பட்டியல் களை வெளியிட்டது. பட்டியல் 1. (அ) அயல்நாட்டு மூலதனம் அனுமதிக்கப்படக்கூடிய தொழில் நிறு வனங்கள், (ஆ) அயல்நாட்டுத் தொழில் நுணுக்க உதவிபெறும் ஒப்பந்தங்கள் தேவைப்படாத துறைகள். பட்டியல் 2. அயல்நாட்டு உதவி எவ்வகையிலும் தேவைப்படாத தொழில் நிறுவனங்கள். இந்தப் பட்டியல் பின்வரும் ஆண்டுகளில் திருத்தி அமைக்கப் பட்டது. 1969–70–ஆம் ஆண்டு நான்காம் ஐந்தாண் டுத் திட்டத் தொடக்கத்தில்மிக்க நெருக்கடி நிலை யைத் தவிர்க்க மட்டும் அயல்நாட்டு மூலதனம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென வலியுறுத்திக் கூறப் பட்டது. 1973–இல் அயல்நாட்டுத் தனியார் மூல தனம் 19 தொழில்களில் மட்டும் அனுமதிக்கப் பட்டது. மேலும், அயல்நாட்டு மூலதனம் உள்நாட் டுக்கு வருவதைத் தடை செய்தது மட்டுமல்லாமல், அயல்நாட்டு மூலதனத்துடன் செயற்படும் இந்திய நிறுவனங்களை முடிந்தவரை 'இந்திய மயமாக்குந் திட்டம்' மேற்கொள்ளவும்பட்டது.

இந்த நோக்கத்தோடு அயல்நாட்டு மூலதன வரவைக் கட்டுப்படுத்த அயற்செலாவணிக் கட்டுப் பாட்டுச் சட்டம் (Foreign Exchange Regulation Act) 1973–ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. அதன்படி 1. இந்திய நிறுவனங்களில் அயல் நாட்டு மூலதனம் 40 சதவிகிதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. 2. நுணுகிய அடிப்படைத் தொழில்களில் மட்டும் 74 சதவிகித அயல் நாட்டு மூலதனம் அனுமதிக்கப்பட்டது. ஏற்று மதித் துறைகளுக்கும் புதிய தொழில் முறைகளைப் பின்பற்றும் துறைகளுக்கும் கட்டுப்பாடு தளர்த்தப் பட்டது. 3. இந்தியாவில் உள்ள அயல்நாட்டு நிறு வனங்களின் கிளைகள் இந்திய நிறுவனங்களாக மாற்றப்படுதல் வேண்டும். அதில் குறைந்த அளவு 26 விழுக்காடேனும் இந்திய மூலதனம் பங்கு பெற்றி ருக்க வேண்டும் என வலியுறுத்துகிறது. 4. இதைத் தவிர அயற்செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்,

அயல்நாட்டு முதலீட்டாளருக்குக் கொடுக்கவேண்டிய "உரிமைப் பங்கு" (Royalty) எவ்வளவு இருத்தல் வேண்டும்; அயல்நாட்டாருடன் செய்யும் ஒப்பந்தத்திற்கான கால அளவு எவ்வளவு என்பன போன்ற பலவற்றிற்கும் வரையறை குறிப்பிடப் பட்டுள்ளது. முன்பு கட்டுப்படுத்தப்படாமல் அனுமதிக்கப்பட்ட அயல்நாட்டு மூலதனம், இப்போது கட்டுப்பாட்டுடன் அனுமதிக்கப்படுகிறது. எனினும், 6-ஆம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நாடு எதிர்பார்க்கும் அல்லது சார்ந்து நிற்கும் அயல் நாட்டு மூலதனத்தின் அளவு உரூ.10,029 கோடி ஆகும்.

அயல் நாட்டு மூலதனத்தைப் பெற்றதால் இந்தியப் பொருளாதாரத்தில் விளைந்த நன்மைகள்: 1.அயற்செலாவணிப் பற்றாக்குறை நிலையைத் தீர்க்க அயல் நாட்டு மூலதனம் உதவியது. 2. அயல்நாட்டு மூலதனத்தைப் பயன்படுத்தியதால் இந்தியாவில் முதலீட்டு வீதமும், அதனால் சேமிப்பு வீதமும் உயர்ந்தன. 3. நாட்டில் திறமை குறைந்த உழைப்பாளர்களைத் திறமை மிக்கவர்களாக மாற்றவும் தொழில் நுட்ப அறிவு பரவவும், தொழில் உற்பத்தி முறைகளில் சீரிய முன்னேற்றங்கள் ஏற்படவும் அயல் நாட்டு மூலதனம் உதவியுள்ளது. உற்பத்திப்பொருள்களின் அளவையும் தரத்தையும் உயர்த்தத் தொழில் நுட்பப் பயிற்சிகள் உதவியுள்ளன. இப்போது பிறநாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி அளிக்கும் அளவுக்கு இந்தியா முன்னேறியுள்ளது. எடுத்துக்காட்டாக, தோகாவில் (Doha) உள்ள இயற்கை வாயுவின் வளத்தைப் பயன்படுத்தி, அங்குத் தொழில் நுணுக்க உதவியை அளிக்க, இந்தியா தயாராக இருப்பதாகக் குடியரசுத் தலைவர் செயில்சிங் 1983-ஆம் ஆண்டு திசம்பர் 19-ஆம் தேதி உறுதியளித்திருக்கிறார். 4. பெருகுகின்ற மக்கள் தொகைக்குப் போதுமான உணவை இறக்குமதி செய்யவும், அதன்மூலம் விலைகளைக் கட்டுப்பாடு செய்யவும் அயல்நாட்டு மூலதனம் உதவியுள்ளது. 5. வேளாண்மை வளர்ச்சிக்குத் தேவையான நீர்ப்பாசன வசதிகள், அணைகள், மின்சாரத் திட்டங்கள் ஆகியவை அயல் நாட்டு மூலதனத்தால் ஏற்பட்டவை. 6. பல இரும்பு, எஃகுத் தொழிற்சாலைகள் நாட்டில் அயல்நாட்டு உதவியால் ஏற்பட்டன. 7. அயல்நாட்டு மூலதனத்தால் சாலைப் போக்குவரத்து, துறைமுக முன்னேற்றம், இருப்புப் பாதைப் போக்குவரத்து, ஆகாய விமானப் போக்குவரத்து ஆகியவை மேம்படுத்தப்பட்டு, அதனால் வாணிகம் வளர்ந்து, பிற தொழில் உற்பத்தி உயர வாய்ப்பு ஏற்பட்டது. தமிழ் நாட்டில் நுங்கம்பாக்கத்தில் கட்டப்பட்ட சுரங்கப் பாதைக்கு அமெரிக்கா உதவியது; இப்பாதை கட்டுவதற்கு முன் இரயில் போக்குவரத்திற்குச் சாலை அடைக்கப்பட்டதால் ஏற்பட்ட 10 இலட்சம் உரூபாய் இழப்பு இதனால் தவிர்க்கப் பட்டிருக்கிறது. இதே போன்று சென்னை ஓட்டேரிப் பகுதியிலும் சுரங்கப் பாதை அமெரிக்க உதவியுடன் கட்டப்பட்டுவிடும் என்பது கூறப்படுகிறது.

சிக்கல்கள்: 1. இந்தியா அயல்நாட்டு மூலதனத்தைக் கடனாகப் பெறுவதால் அக் கடனை வட்டியுடன் திருப்பித்தரும் சுமை மிகுகிறது. முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 23.8 கோடியும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 119.4 கோடியும், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 524.6 கோடியும், நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உரூ. 2455 கோடியும்(நான்கு மடங்கு உயர்வு), ஐந்தாம் ஐந்தாண்டுத்திட்டத்தில் உரூ. 3770 கோடியும், ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும் (1983 வரை) உரூ. 2733 கோடியும் இந்தியா கடனைத் திரும்பச் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. 2. அயல்நாட்டு மூலதனம் கிடைப்பதில் உறுதியற்ற தன்மை இருக்கிறது. 3. அயல்நாட்டு முதலீட்டாளரின் தலையீடு ஒரு சில துறைகளில் பெருகுவது இடர்ப்பாடாக உள்ளது. அதன்பின் அயல்நாட்டு அரசியல் தலையீடு ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டியுள்ளது. 4. ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காகக் கொடுக்கப்படும் மூலதனமும் அத்திட்டத்தின் ஒரு பகுதிக்கு மட்டுமே உதவுகிறது. முழுமையான நிதி உதவி கிடைப்பதில்லை. 5. அயல்நாட்டிலிருந்து கிடைக்கும் புதிய கருவிகள், தொழில் நுட்ப அறிவு ஆகியவை இந்தியாவில் சில துறைகளுக்குப் பொருந்துவனவாக இல்லை. 6. அயல்நாட்டு மூலதனத்தை முதலீடு செய்பவர்களுக்கு இந்தியாவிலிருந்து அளிக்கப்படும் ஆதாயப் பங்கு, உரிமைப்பங்கு ஆகியவற்றை உற்று நோக்கினால், நாட்டிலிருந்து அயல் நாட்டிற்கு அனுப்பப்படும் பணத்தின் அளவு மிகுந்து வருவது தெளிவாகும். இது நாட்டிற்கு ஏற்படும் இழப்பு. இவை பற்றிய புள்ளி விவரங்கள் முழுமையாகக் கிடைப்பதில்லை. ஆனால், 1956–57-இலிருந்து 1966–67 வரை மட்டும் வெளிநாட்டுத் தனியார் நிறுவனம் உரூ. 388.2 கோடியை ஆதாயப் பங்காகப் பெற்றது. பன்னாட்டுக் கழகங்கள் (Multinational Corporations) மூலம் பயன்பெறும் கால்டெக்சு (Caltex) நிறுவனத்தின் 1968–70-இன் மொத்த மூலதனம் உரூ. 16.92 கோடி. ஆனால் அது தன் கழகத்திற்கு அனுப்பிய ஆதாயப்பங்கு உரூ. 43 கோடி. அதே ஆண்டில் எசோ (ESSO) நிறுவனத்தின் மொத்த மூலதனம் உரூ. 29.58 கோடி. அது அயல்நாட்டு முதலீட்டாளருக்கு அனுப்பிய ஆதாயப் பங்கு உரூ. 83 கோடி ஆகும். இந்த எடுத்துக்காட்டுகள், முழுநிலையைப் படம்பிடித்துக் காட்டாவிட்டாலும் இந்தியாவிற்கு அயல்நாட்டு மூலதனத்தால் ஏற்படக் கூடிய பண இழப்பைத் தெரிந்து கொள்ள உதவுகின்றன.

அயல்நாட்டு மூலதனம், திட்டம் நிறைவேற்றலுக்கு இந்தியாவுக்கு உதவப்பட்டுள்ளது. அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறன் உயர்ந்துள்ளது. ஆனால், அதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் உயர்ந்த செலவையும் வருந்தொகையை மீளச் செலுத்தும் நிலையையும் இந்தியா மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, அயல்நாட்டு மூலதனத்தைப் பெறுவதில் கவனத்துடன் செயற்பட வேண்டும். இயன்றவரை தன்னிறைவு பெற வேண்டும் என்ற ஐந்தாண்டுத் திட்டக் குறிக்கோளை அடைய இந்தியா முனைய வேண்டும். காண்க: அயல்நாட்டு உதவி, அயல்நாட்டுக் கடன். ச.கி.

துணை நூல்கள்:

ச. அன்சர் அலி, ''இந்தியப் பொருளாதார வளர்ச்சிப் பிரச்சினைகள்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதற்பதிப்பு – 1972.

சபாநாயகம், எஸ்., ''பொருளாதார முன்னேற்றமும் திட்டமும்'', தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், முதற் பதிப்பு–1972.

இராக்னர் நர்க்சு, தமிழாக்கம், குமாரசுவாமி, மா., ''வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்'', தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1967.

ராவ், வி.கே. ஆர்.வி., தமிழாக்கம், சுப்பிரமணியம் எம்.கே., ''பொருளாதார வளர்ச்சிக் கட்டுரைகள்'', தமிழ் வெளியீட்டுக் கழகம், தமிழ்நாடு அரசாங்கம், 1967.

**Ruddar Datt**, **K.P.M. Sundaram**, ''Indian Economy'', S. Chand & Co. Pvt. Ltd., New Delhi, 1981.

**Ishwar Dhingra**. C., ''The Indian Economy Resources Planning & Development Problem'', Sultan Chand & Sons, 23 Daryar Ganj, New Delhi, 1983.

***அயல்நாட்டு வாணிகம்***: பொருள்களைக் கொள்முதல் செய்வதும் விற்பதும் ஒரு நாட்டிற்கும் பிற நாடுகளுக்கும் இடையில் நடைபெற்றால், அது அயல்நாட்டு வாணிகம் (Foreign Trade) அல்லது பன்னாட்டு வாணிகம் (International Trade) அல்லது புற வாணிகம் (External Trade) எனப்படும். ஒரு நாட்டின் தொழில் வளர, வேலை வாய்ப்புகள் பெருக, வணிக நடவடிக்கைகள் வளர வாணிகம் செழித்தோங்க வேண்டும். அயல்நாட்டு வாணிகம் மூன்று வகைப்படும். உள்நாட்டுப் பொருளை வெளிநாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதியாகும். நாட்டில் கிடைக்காத பொருள்களை வெளிநாட்டிலிருந்து கொள்முதல் செய்வது இறக்குமதியாகும். ஒரு நாட்டிலிருந்து பொருள்களை இறக்குமதி செய்து, அவற்றையே மற்றொரு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் வாணிகம் மறு ஏற்றுமதி வாணிகம் (Entrepot Trade) எனப்படும். மறு ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது இறக்குமதி வரி செலுத்தாமல் இருப்பதற்கு அவற்றைப் பிணைப்பண்டகங்களில் வைக்க வேண்டும். இறக்குமதி வரி செலுத்தி இருந்தால் அவற்றை மறு ஏற்றுமதி செய்தவுடன் திரும்பப் பெறலாம். ஆனால், அவற்றை ஏற்றுமதி செய்யும்போது ஏற்றுமதி வரி செலுத்த வேண்டியதில்லை என்றாலும், கப்பல் பட்டியல் (Shipping Bill) அமைத்துச் சுங்க அலுவலகத்தில் கொடுக்க வேண்டும்.

நாடுகளில் இயற்கை வளங்களும் கனிச் செல்வங்களும் சம அளவில் இருப்பதில்லை. நாட்டிற்கு நாடு தட்பவெப்பநிலை, மக்கள் இயல்பு, வளங்களின் தரம் போன்றவை வேறுபடுகின்றன. எனவே, ஒவ்வொரு நாடும் ஒரு சில பொருள்களை உற்பத்தி செய்வதற்குச் சிறப்பிடம் தருகிறது. பிற நாட்டோடு உறவு கொண்டு தனக்குத் தேவையான பொருள்களை வாங்கவும், தான் உற்பத்தி செய்தவற்றைப் பிற நாட்டிற்குக் கொடுக்கவும் வேண்டிய நிலை ஏற்படுகிறது. எந்த நாடும் எல்லாத் தேவைகளையும் தானே உற்பத்தி செய்து தனித்து வாழ இயலாது. அயல் நாட்டு வாணிகம் மிகவும் பழைமையானது. 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்பது தமிழ் முதுமொழி. முற்காலத்தில் ஒரு நாட்டு மக்கள் தங்கள் நாட்டுப் பொருள்களை மற்றொரு நாட்டிற்குப் பாய்மரக் கப்பல்களில் எடுத்துச் சென்று விற்றுவிட்டுத் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வந்தனர். தமிழ்நாட்டில் சங்ககாலம் தொட்டே அயல்நாட்டு வாணிகம் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளது. பூம்புகாரில் அராபியக் குதிரைகளும் அயல்நாட்டுப் பொருள்களும் மிகுதியாகக் காணப்பட்டதாகவும், கிரேக்க நாட்டின் பேரழகி கிளியோபாத்ரா தமிழ்நாட்டு முத்துகளை மிகவும் விரும்பியதாகவும் வரலாறு கூறுகிறது. இந்தியாவை 200 ஆண்டுகள் ஆட்சி புரிந்த ஆங்கிலேயர்களும் இங்கு வாணிகம் செய்யவே வந்தனர். எனவே, அயல்நாட்டு வாணிகம், பொருள் கொள்முதலிலும் விற்பனையிலும் மட்டும் அடங்காமல், நாகரிகத்தையும் பண்பாட்டையும் கல்வி அறிவையும் நல்லெண்ணத்தையும் நாடுகளிடையே பரப்பவும் செய்கிறது.

அறிவியல் வளர்ச்சியின் காரணமாக உலகில் காலமும் இடமும் குறுகிவிட்டன. நாகரிக வளர்ச்சி, மக்கள் பெருக்கம் போன்றவையும் சேர்ந்து அயல்நாட்டு வாணிகத்தின் அளவை உயர்த்தியுள்ளன. போக்குவரத்துத் தொடர்பு வசதி போன்றவைகளின் புரட்சியான வளர்ச்சி, பிற நாடுகளுக்கு நேரடியாகப்

போகாமலேயே அங்குக் கிடைக்கும் பொருள்கள் தங்கள் நாட்டில் கிடைத்திட வழி செய்கிறது. மேலும், ஒவ்வொரு நாடும் அடைந்துள்ள வேலைப்பகுப்பு (Division of Labour) அயல்நாட்டு வாணிகத்தை ஊக்குவிக்கிறது. எனினும், அயல்நாட்டு வாணிகம் எவ்வளவு வளர்ந்துள்ளதோ அவ்வளவு சிக்கல் உடையதாகவும் உள்ளது.

அயல்நாட்டு வாணிகச் சிக்கல்கள்: 1) நாட்டிற்கு நாடு அரசும் சட்டதிட்டங்களும் சுங்க விதிமுறைகளும் நாணயமும் வங்கியும் மாறுபடுகின்றன. கொள்முதல் செய்வோர், பொருளின் விலையைத் தம் நாட்டு நாணயத்தில் செலுத்த முடியாது. எந்த நாட்டிலிருந்து பொருளைக் கொள்முதல் செய்கிறாரோ அந்த நாட்டு நாணயமாக மாற்றி விற்போருக்குச் செலுத்த வேண்டும். 2) அயல்நாட்டு வாணிகத்தில் (Foreign Trade) ஒவ்வொரு நாடும் கட்டுப்பாடுகளையும் ஒழுங்கு விதிகளையும் புகுத்தி உள்ளது. அதாவது சுங்க விதிகள், உரிமத்தடைக் கட்டுப்பாடு (Licence Restriction) நாணயமாற்றுக் கட்டுப்பாடு (Exchange Control) போன்றவை சிறப்பானவை. இத்தகைய கட்டுப்பாடுகள் பொருள்கள் எளிதாக ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் செல்வதைக் கட்டுப்படுத்துகின்றன. 3) பொருள்கள் கொள்முதல் செய்வோரைச் சென்றடைய பல நாட்கள் ஆகலாம்; பல மாதங்களும் ஆகலாம். ஆனால், விற்போர் பொருளை அனுப்பியவுடன் பணம் பெற விரும்புவர். கொள்முதல் செய்வோரோ பொருளைப் பெறுவதற்குமுன் பணம் தரத் தயங்குவர். எனவே, இவர்களிடையே அயலார் ஒருவர் குறுக்கிட்டு இச்சிக்கலைப் போக்கவேண்டிய நிலை உள்ளது. பயண இடைக்காலத்தில் அனைத்துலக அங்காடியில் விலை மாற்றம் ஏற்பட வாய்ப்பும் உள்ளது. 4) நேரில் பார்த்துப் பொருளை அறிந்திடவும், கொள்முதல் செய்வோரின் நாணயத் தகைமையை அறிவதற்கும் அயல்நாட்டு வாணிகத்தில் வாய்ப்புக் குறைவு. 5) பொருள்களை அனுப்புவதற்கும் கப்பல் தொடர்பான ஆவணங்களை (Shipping Documents)ப் பெறுவதற்கும் விற்போர் பற்பல முறைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். 6) பொருள்களை உலகத்தின் பல பாகங்களுக்கு எடுத்துச் செல்ல நீண்ட தூரம் செல்ல வேண்டி இருப்பதால் இடையூறுகள் மிகுதி. 7) ஒருசில பொருள்களுக்கு ஏற்றுமதி இறக்குமதி அனுமதிக்கப்படாமலும், குறிப்பிட்ட அளவுக்குமேல் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்யக்கூடாது எனவும் விதிகள் இருக்கின்றன. 8) நாடுகளிடையே ஏற்படும் அரசியல் காரணங்களாலும் ஏற்றுமதி இறக்குமதி பாதிக்கப்படும்.

அயற் செலாவணி மாற்றுக் கட்டுப்பாடு: அயல்நாட்டு வாணிகத்தில் இறக்குமதிக்கான பணம், ஏற்றுமதி செய்யும் நாட்டின் நாணயத்தில் கொடுக்கப்படவேண்டும். ஒரு நாடு தனது ஏற்றுமதியினால் வெளிநாட்டு நாணயங்களை ஈட்டுகிறது. பிற நாடுகளிலிருந்து கடனோ உதவியோ பெற்றாலும் மாற்று நாணயங்கள் பெருகுகின்றன. இறக்குமதியால் அயல்நாட்டு நாணயத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது. ஒரு நாட்டின் இறக்குமதி, ஏற்றுமதியைக் காட்டிலும் மிகுதியாக இருக்கும்பொழுது வெளிநாட்டு நாணயங்களின் தேவை அவற்றின் இருப்பைக் காட்டிலும் மிகுதியாக உள்ளது. இதனால், அந்நாட்டு நாணயத்தின் வெளிமதிப்புக் குறைகிறது. எனவே, ஒவ்வொரு நாட்டின் அரசும் தனது அயற்செலாவணி வரவு செலவு மீது கட்டுப்பாடுகளை விதித்துச் செயற்படுத்தும் பொறுப்பை அதன் மைய வங்கியிடம் ஒப்படைத்துள்ளது. இத்தகைய நாணய மாற்றுக் கட்டுப்பாட்டின் நோக்கம், அந்நாட்டு நாணயத்தின் வெளிமதிப்பைக் காப்பதும் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் (Balance of Payments) ஏற்படும் சீர்கேட்டைப் போக்குவதுமாகும். இக்கட்டுப்பாட்டைச் செயற்படுத்தும் மைய வங்கி ஏற்றுமதி மூலம் நாட்டிற்குள் வரும் அயற்செலாவணித் தொகையைத் தான் பெற்று, அதன் இருப்பை வைத்துக்கொண்டு, இறக்குமதியாளர்க்குத் தேவையான அயற்செலாவணியை வழங்குகிறது. எனவே, இறக்குமதியாளர் அரசிடமிருந்து இறக்குமதி உரிமம் பெறுவதோடு மட்டுமல்லாமல், மைய வங்கியிடமிருந்து தேவையான அயற்செலாவணியைப் பெறவும் வேண்டும். இந்தியாவில் 1947-ஆம் ஆண்டு அயற்செலாவணி ஒழுங்குச் சட்டத்தின்கீழ் (The Foreign Exchange RegulationAct 1947) நாணய மாற்றுக் கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது. இதனைச் செயற்படுத்துவது இந்திய மைய இருப்பு வங்கியின் (Reserve Bank of India) பொறுப்பாகும். இருப்பு வங்கியின் ஆணைக்குட்பட்டு அயற்செலாவணிகள் வாங்கும் அல்லது விற்கும் பணிகளை அதிகாரம் பெற்ற வணிகர்கள் (Authorised Dealers) எனப்படும் நாணய மாற்று வங்கிகள் (Exchange Banks) மட்டும் செய்து வந்த பணியினை, இப்போது வணிக வங்கிகளும் செய்து வருகின்றன. இக்கட்டுப்பாட்டின்படி ஏற்றுமதியாளர்கள் தங்கள் பொருள்களின் முழு மதிப்பிற்கு ஈடான அயற்செலாவணியை இருப்பு வங்கியிடம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தந்து விடுவதாக உறுதிமொழி கூறுகிறார்கள்.

இறக்குமதியாளர், முதலாவதாக அரசிடமிருந்து இறக்குமதி உரிமம் பெறவேண்டும். பின்னரே தேவையான அயற்செலாவணிக்குக் குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் அனுப்பவேண்டும். இவ்விண்ணப்பத்தையும் இறக்குமதி உரிமத்தையும் நாணயமாற்று வங்கியிடமோ வணிக வங்கியிடமோ தர வேண்டும். அவ்

வங்கி, விண்ணப்பத்தில் தக்கவாறு மேல் எழுதி, இந்திய மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி வைக்கும். மைய இருப்பு வங்கியின் நாணய மாற்றுக் கட்டுப் பாட்டுத் துறை, அவ்விண்ணப்பங்களை ஆராய்ந்து அயற் செலாவணியை ஒதுக்குகிறது. இவ்வாறு மைய இருப்பு வங்கி அயற்செலாவணி ஒதுக்கீடு செய்வதை அறிவித்தால், இறக்குமதியாளர் எந்த வங்கி மூலம் விண்ணப்பத்தை அனுப்பினாரோ அந்த வங்கி மூலம் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அயற்செலாவணி யைப் பெறலாம்.

ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு: தடையற்ற வாணிகம் பொருளாதார நிலையில் முன்னேறாத நாடுகளுக்கு மிகவும் கெடுதலாக முடிகிறது. அந்நாடு களால் முன்னேறிய நாடுகளோடு போட்டியிட முடிய வில்லை. எனவே, அவற்றின் உள்நாட்டுத் தொழில் கள் பாதிக்கப்படுகின்றன. நாட்டின் அடிப்படைத் தொழில், பாதுகாப்புப் போன்றவற்றைப் பிற நாட்டுப் போட்டிகளிலிருந்து காத்தே ஆகவேண்டும். தன் தேவைகளுக்குப் பிறநாடுகளை நம்பியிருப்பது எவ்வளவு இடையூறானது என்பதை நடந்து முடிந்து விட்ட உலகப் போர்கள் உணர்த்தியுள்ளன. முன் னேறிய நாடுகள், தங்களின் ஏற்றுமதி இறக்குமதி யின் மீது பல கட்டுப்பாடுகளை விதித்து, அவற்றின் தொழில்களுக்குப் பாதுகாப்புத் தேடிக் கொண்டன. அந்நாடுகள் இறக்குமதி வரி, இறக்குமதி ஒதுக்கீடு, அரசாங்கக் கொடை (Bounty) போன்றவற்றைப் பயன்படுத்தின.

ஒவ்வொரு நாடும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதற்குத் தேவைப்படும் பொருள்கள் ஒவ்வொன் றிலும் மிகுந்த அளவு எவ்வளவு இறக்குமதி செய்ய வேண்டும் என்று வரையறை செய்கிறது. இவ்வரம்புக் குட்பட்டு இறக்குமதியாளர்க்கு அரசு அலுவலர் இறக்கு மதிப் பங்கீடு வழங்குகின்றனர். இது ஒரு நாட்டு இறக்குமதிக் கொள்கைக்கு உச்சவரம்பு விதிக்கிறது. சிவப்பு ஏடு என்ற இறக்குமதிக் கட்டுப்பாடு ஏட்டில் இக் கோட்பாடு அறிவிக்கப்படுகிறது. இதற்குட்பட்டுத் தான் இறக்குமதி உரிமங்கள் வழங்கப்படுகின்றன. இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் திறந்த பொது உரிமப் பொருள்கள் (Open general licence goods) என்றும், தடைக்குட்பட்ட உரிமப் பொருள்கள் என் றும் பாகுபாடு செய்யப்படுகின்றன. திறந்த பொது உரிமப் பொருள்களை இறக்குமதி செய்ய உரிமம் தேவை இல்லை. இறக்குமதியாளர் தம் பெயர் களைப் பதிவு செய்திருந்தாலே போதும். ஆனால் தடைக்குட்பட்ட உரிமப் பொருள்களை இறக்குமதி செய்யத் தனி உரிமம் தேவை. இந்திய அரசின் ஏற்று மதி இறக்குமதித் தலைமைக் கட்டுப்பாடு அலுவலர் (The Chief Controller of Exports and Imports) இட மிருந்தோ அவருக்குக் கீழுள்ள வட்டார உரிம அலு வலரிடமிருந்தோ உரிமம் பெறலாம். மைய அரசின் அனுமதியின்றி நம்நாட்டுக்குள் எந்தப் பொருளையும் இறக்குமதி செய்ய முடியாது. இந்திய அரசு தனது ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையை 1947-ஆம் ஆண்டு ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அறிவித்தது. நிலையான இறக்குமதியாளர், புதிய இறக்குமதியாளர் போன்றோர்க்கு வழங்கப்படும் உரி மம், நுகர்வோர்க்கும் சொந்தத் தொழிலுக்கு எந் திரத் தளவாடங்களை வாங்குவோர்க்கும் வழங்கப் படுகிறது.

அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்டுள்ள முகவர் கள்: இறக்குமதியாளர் எந்த நாட்டிலிருந்து இறக்கு மதி செய்ய விரும்புகின்றனரோ, அங்குள்ள ஏற்றுமதி வணிகருக்கோ (Export Merchants), கழிவு முகவர் களுக்கோ தங்களின் கேட்பாணையை (Indent) அனுப்பிப் பொருள்களைப் பெறலாம். அவர்கள் அந் நாட்டிலுள்ள உற்பத்தியாளர்களிடமிருந்து பொருள் களை வாங்கிக் காப்பீடு செய்து கப்பல் மூலமாக அனுப்பிவிடுவார்கள். ஏற்றுமதி வணிகர் முதல்வர் (Principal) என்ற நிலையில், பொருள்களில் தமது வணிகப் பெயரைப் பொறித்து அனுப்புகிறார். கொள் முதல் விலைக்கும் விற்பனை விலைக்கும் உள்ள வேறு பாடு இவரது ஆதாயமாகவோ இழப்பாகவோ இருக் கும். ஆனால், கழிவு முகவர் என்ற நிலையில் பணி யாற்றுவதால் அவருக்குக் கழிவு கிடைக்கிறது. ஏற்று மதி வணிகர், முதல்வர் என்ற நிலையில் தாமே ஏற்று மதி செய்வதுபோல் பிறருக்காகவும் ஏற்றுமதி செய் வார். ஏற்றுமதி முகவர் என்பவர், உற்பத்தியாளரின் முகவராகப் பணியாற்றுகிறார். அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உரிமை இவருக்கு உண்டு. ஏற்று மதித் தொடர்பான பொறுப்புகள், சிக்கல்கள் போன்றவற்றை இவரே ஏற்கின்றார். இறக்குமதி யாளரோடு தொடர்பு கொள்ளல், ஏற்றுமதி உரிமம் பெறுதல், கட்டுதல், காப்பீடு செய்தல், கப்பலில் இடம் பெறுதல், கொள்முதல் செய்வோரின் நாண யம் அறிதல், பணம் வாங்குதல், சுங்க நடவடிக்கை களை நிறைவேற்றல் போன்றவற்றை இவர்தாம் கவனிக்கிறார். மேலும், கொள்முதல் செய்வோர் பணம் செலுத்தத் தவறினால் ஏற்படும் இழப்பை யும், நாணயமாற்று விகிதத்தில் ஏற்படும் இழப்பை யும் இவரே ஏற்கிறார்.

அயல்நாட்டு வாணிகத்தில் பணம் செலுத்தும் முறைகள்: அயல்நாட்டு வாணிகத்தில் பணம் செலுத்த ஏற்றுமதியாளர்க்கும் இறக்குமதியாளர்க் கும் நடுவே இருந்து உதவி புரிவன வங்கிகளாகும். 1) வங்கிப்பற்றுச் சீட்டு (Bank Draft), 2) தந்தி, 3) ஆவணங்களுக்கு எதிராகப் பணம் (Remit-

tance against Documents), 4) அயல்நாட்டு மாற்றுச் சீட்டுமூலம் செலுத்துதல் (Payment through Foreign Exchange Bills) ஆகிய முறைகளில் பணம் செலுத்தப் படுகிறது.

பற்றுச்சீட்டு: இறக்குமதியாளர் அவர் நாட்டில் உள்ள வங்கியிடம் மொத்தப் பணத்தைச் செலுத்தி ஏற்றுமதியாளர் பெயருக்குப் பற்றுச்சீட்டு ஒன்றை அனுப்புவார். ஏற்றுமதியாளர் அதனைப் பெற்று, வங்கியில் கொடுத்துப் பணத்தை வாங்கிக் கொள்ள லாம். பற்றுச்சீட்டில் இருக்கும் செலாவணி, அவர் கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தைப் பொறுத் துள்ளது.

தந்தி: இறக்குமதியாளர் மொத்தப் பணத்தை அவர் நாட்டிலுள்ள வங்கியிடம் செலுத்திவிடுவார். வங்கி, ஏற்றுமதியாளர் நாட்டிலுள்ள தனது கிளை அல்லது தொடர்பு வங்கியிடம் (Correspondent Bank) தந்தி வழியாக அச்செய்தியைத் தெரிவிக்கும். அக் கிளை, ஏற்றுமதியளர்க்கு அச்செய்தியைத் தெரிவித்து அவர் கணக்கில் அந்தத் தொகையை வரவு வைக் கும்.

ஆவணங்களுக்கு எதிராகப் பணம்: ஏற்றுமதி யாளர் இறக்குமதியாளருக்குக் கடன் தர விரும்பாத நிலையில் இம்முறை கையாளப்படுகிறது. இறக்கு மதியாளர், இறக்குமதித் தொடர்பான சரக்குரிமை ஆவணங்கள் அவர்களிடம் தரப்படும் போது, அதற் குரிய பணம் முழுவதையும் செலுத்த ஒப்புக் கொள் கிறார். எனவே, ஏற்றுமதியாளர் கப்பலில் சரக்கை ஏற்றிவிட்டு அது பற்றிய செய்தியை இவருக்குத் தெரிவிப்பார். மேலும், கப்பல் சரக்குக் கட்டணச் சீட்டு, ஈட்டுறுதிப் பத்திரம் போன்ற கப்பல் சரக் குரிமை ஆவணங்களைத் தமது வங்கி மூலம் இறக்கு மதியாளர் சுட்டும் வங்கி ஒன்றுக்கு அனுப்பச் செய் வார். அந்த வங்கி இறக்குமதியாளரிடம் பணத்தைப் பெற்றுக்கொண்டு மேற்கூறிய ஆவணங்களை இறக்கு மதியாளரிடம் சேர்ப்பிக்கும்.

அயல்நாட்டு மாற்றுச்சீட்டு மூலம் பணம் செலுத் தல்: ஏற்றுமதியாளர், இறக்குமதியாளர் மீதோ அவருடைய வங்கியின் மீதோ மாற்றுச் சீட்டு எழுது வார். பொதுவாக இது மூன்று படிகளாக அனுப்பப் படும். ஒரு படியின் மீது பணம் செலுத்தப்பட்டு விட்டால் மற்றவை தாமாகவே நீக்கப்பட்டுவிடும். ஒற்றை மாற்றுச் சீட்டு எழுதுவதும் உண்டு. பொது வாக இவை சரக்குவிலை, கட்டுதல், காப்பீடு போன்ற செலவுகள் அடங்கிய தொகைக்கு எழுதப் படும், சில சமயங்களில் வட்டியும் சேர்க்கப்படும். இம்மாற்றுச் சீட்டுகள் கப்பலின் ஆவணங்களுடன் இணைக்கப்படுவதால் ஆவண மாற்றுச் சீட்டுகள் (Documentary Bills) என்று இவை சொல்லப்படும். இவை பணம் பெற்றுக் கொண்டு ஆவணங்கள் தரும் மாற்றுச் சீட்டுகள் (Documents against Payment Bills -A.P. Bills) எனவும், ஏற்புக்கு எதிராக ஆவணங்கள் தரும் மாற்றுச் சீட்டுகள் (Documents against Acce-ptance-D.A. Bills) எனவும் சொல்லப்படுகின்றன. முதல் வகையில் இறக்குமதியின் பணத்தைச் செலுத்தி விட்டுத்தான் கப்பலின் ஆவணங்களைப் பெற முடி யும். இரண்டாம் வகையில் இறக்குமதியாளர் அதனை ஏற்றுக் கொண்டு ஆவணங்களைப் பெற முடி யும். இம்மாற்றுச்சீட்டு இறக்குமதியாளரின் விற்பனை நிலையங்களுக்குத் தேவையின்போது உற்றுழி உதவு வதாகக் (Drawee in Case of need) கருதப்படும்.

வாணிக உறுதிக் கடிதம்: இறக்குமதியாளரின் வேண்டுகோளுக்கு இணங்கி, வங்கி ஏற்றுமதியாளர் பெயருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை வரை இறக்குமதி யாளர் மீது எழுதும் மாற்றுச்சீட்டை ஏற்பதாகவோ அதன் தொகையைச் செலுத்துவதாகவோ உறுதி யளித்து, வெளிநாட்டிலுள்ள தனது கிளைக்கு அல்லது முகமை வங்கிக்கு எழுதுவதுதான் வாணிக உறுதிக் கடிதம் (Letter of Credit). அவ்வங்கிகள் மாற்றுச் சீட்டுகளை ஏற்கும்பொழுதோ தொகையைச் செலுத் தும்பொழுதோ அதன் தொடர்பான ஆவணங்க ளைப் பெற்றுக்கொண்டு இறக்குமதியாளர் வங்கிக்கு அனுப்பிவைக்கும். இறக்குமதியாளர் வங்கி, இறக்கு மதியாளரிடமிருந்து பொறுப்புச் சீட்டு அல்லது பொறுப்புச் சான்றிதழ் பெற்றுக்கொண்டு ஆவணங் களைத் தரும். அவற்றைக் கொண்டு அவர் வந்துள்ள பொருளைப் பெறுவார். இத்தகைய வாணிக உறுதிக் கடிதங்கள் மாற்றுமுறை ஆவணங்கள் அல்ல. எனவே, பணம் செலுத்தும் வங்கிகள் விழிப்பாக இருக்க வேண்டும். வாணிக உறுதிக் கடிதங்கள், திறப்பு வாணிக உறுதிக் கடிதம் (Open letter of credit), கட்டுப்பாடான வாணிக உறுதிக் கடிதம் (Qualified letter of credit), உறுதி செய்யப்பட்ட வாணிக உறு திக் கடிதம் (Confirmed letter of credit), நீக்கம் செய்யத் தக்க வாணிக உறுதிக் கடிதம் (Revokable letter of credit), சுற்று வாணிக உறுதிக் கடிதம் (Circular letter of credit), சுழல் வாணிக உறுதிக் கடிதம் (Revolving letter of credit) எனப் பலவகைப் படும்.

இறக்குமதி: இறக்குமதி நடவடிக்கைகள் நாட் டின் இறக்குமதிக் கோட்பாட்டைப் பொறுத்துள்ளன. மேலும், இந்நடவடிக்கைகள் நாட்டிற்கு நாடு வேறு படுகின்றன. இந்தியாவில் இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி உரிமம், அயற்செலாவணி பெறுதல், விற் பனை ஆணை அனுப்புதல், ஏற்றுமதியாளர்க்குப் பணம் செலுத்துதல், கப்பலின் ஆவணங்களைப் பெறு தல், சுங்க விதிமுறைகளைச் செய்தல் முதலியன

தேவை. இந்தியாவில் 1947-ஆம் ஆண்டு இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு பற்றிய விதிகள் செயலாக்கப் பட்டன. மத்திய அரசு, ஒவ்வொரு பொருளையும் எவ்வளவு இறக்குமதி செய்யலாம் என்று குறிப்பிட்டு, ஒவ்வோர் அரையாண்டுப் பகுதியிலும் அடுத்த ஆறு மாதங்களுக்கு உண்டான இறக்குமதிக் கோட்பாட் டைச் சிவப்பு ஏடு (Red Book) மூலமாகத் தெரிவிக் கிறது. ஆனால், சிவப்பு ஏட்டில் இறக்குமதி செய் யும் பொருள் இடம் பெறுவது அவ்வளவு எளிதன்று. அதற்குப் பல தகுதிகள் வேண்டும். இறக்குமதியாளர் அவர் இறக்குமதி செய்யும் பொருள், திறந்த பொது உரிமைப்பட்டியலில் இருக்கின்றதா என்று பார்க்க வேண்டும். அதில் இடம் பெற்றிருந்தால் தனி உரி மம் பெறாமல் இறக்குமதி செய்யலாம். எனினும், அவர் நிலையான இறக்குமதியாளர் என அரசாங்கத் தின் ஒப்புதல் பெற வேண்டும். மேற்கூறிய பட்டிய லில் இல்லாத பொருள்களை இறக்குமதி செய்யத் தனி உரிமம் பெற வேண்டும். அதற்காக இறக்கு மதிக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலர் அல்லது அவரின் கீழ் உள்ள வட்டாரக் கட்டுப்பாட்டு அலுவலர் ஆகியவர்களுள் ஒருவருக்கு முறையாக விண்ணப்பம் செய்யவேண்டும். இறக்குமதியாளர் தமது சொந்தத் தொழிலுக்காக மூலப் பொருள், எந்திரங்கள் போன் றவற்றைப் பெற வேண்டுமானால் மைய அரசாங்கத் தொழில் நுட்ப வளர்ச்சித் தலைவர் மூலமாகவோ மாநிலத் தொழில் வளர்ச்சி இயக்குநர் மூலமாகவோ விண்ணப்பம் செய்யவேண்டும். அவ்விண்ணப்பத்தை ஆய்ந்து இறக்குமதி உரிமம் வழங்கப்படும்.

இறக்குமதி அனுமதி பெற்றபின் அவருக்குத் தேவை யான அயற்செலாவணி வேண்டி, இந்திய மைய இருப்பு வங்கிக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். அத் தகைய விண்ணப்பத்தை முதலாவதாக 'அனுமதித்த வங்கி' என்று சொல்லப்படும் வங்கியிடம் அவர், தமது இறக்குமதி உரிமத்தை இணைத்துத் தரவேண்டும். அவ்வங்கி அதில் தகுந்தபடி மேல் எழுதி மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி வைத்து விடும். மைய இருப்பு வங்கி, அயற்செலாவணியை வழங்க ஒப்புதல் அளித்தபின் அந்த வங்கி மூலமாக அவர் அனு மதிக்கப்பட்ட அயற்செலாவணியைப் பெறலாம். எந்தப் பொருளை எந்த அளவு என்ன விலைக்கு எந்தத் துறைமுகத்திற்கு அனுப்புவது என்பது பற்றி விற்பனையாளருக்கு இறக்குமதியாளர் விடுக்கும் கட்டளைதான் விற்பனை ஆணையாகும். அதில் கட்டுதல், குறியிடுதல், கப்பலில் ஏற்றுதல், காப்பீடு செய்தல், விலைப்பட்டியல் அமைத்தல் போன்ற விவரங்களும், பணம் செலுத்தும் முறை, சரக்கு வந்து சேர வேண்டிய காலம், போன்றவைகளும் குறிப் பிடப்பட வேண்டும். ஏற்றுமதியாளருக்குப் பணம் செலுத்துவதற்கு இறக்குமதியாளர் ஏற்பாடு செய்ய வேண்டும். பணம் செலுத்தும் முறையைப் பற்றி அவர் முன்னரே விற்பனை ஆணையில் தெரிவித்து இருப்பார். அதன்படி பணம் செலுத்த வேண்டும். ஏற்றுமதியாளர் சரக்குகளைக் கப்பலில் ஏற்றியவுடன் அது எந்தத் துறைமுகத்திற்குப் போய்ச் சேரவேண் டுமோ அதற்கு அந்தக் கப்பல் எப்பொழுது போய்ச் சேரும் என்பது பற்றி இறக்குமதியாளருக்குத் தெரி விக்க வேண்டும். மேலும், அவர் கப்பல் சீட்டு, ஈட் டுறுதி, திட்ட ஆவணம், விலைப்பட்டியல், பொருள் பட்டியல் சீட்டு, தோற்றுவாய்ச் சான்றிதழ் போன்ற கப்பலின் ஆவணங்களை, வங்கி மூலமா கவோ நேராகவோ இறக்குமதியாளருக்கு அனுப்ப வேண்டும். முன்னரே அவர் பணம் பெற்றிருந் தால் அவற்றை நேராக இறக்குமதியாளருக்கு அனுப்பிவிடுவார். பணம் பெறாதபோதும் அல்லது அவற்றின் பேரில் வங்கியிடமிருந்து கடன் பெற்ற போதும் அவற்றை வங்கி மூலமாகவே அனுப்புவார்.

துறைமுகத்திற்குக் கப்பல் வந்து சேர்ந்ததை அறிந்தவுடன் இறக்குமதியாளர், அந்தக் கப்பல் நிறுவனத்திற்குச் சென்று கப்பல் தீர்வை போன்ற வற்றைச் செலுத்திக் கொடுப்பாணையோ (Delivery Order) கொடுப்பு மேலெழுத்தையோ கப்பல் சீட்டின் பின்புறத்தில் எழுதப்பட்டுப் பெற்றிடுவார். பிறகு நுழைவுப் பட்டியலில் மூன்று படிவங்களும் பொறுப் பாண்மைக் கட்டணச் சீட்டில் (Port Trust Dues Receipt) இரண்டு படிவங்களும் அமைத்துத் துறை முக அலுவலகத்தில் தந்து, துறைமுகக் கட்டணம் செலுத்த வேண்டும். அந்த அலுவலகம், பொறுப் பாண்மைக் கட்டணச் சீட்டில் ஒரு படிவமும் நுழைவுப் பட்டியலில் இரு படிவமும் திரும்பத் தரும். அவற்றை அவர் சுங்க அலுவலகத்தில் தந்து, இறக்குமதி வரி செலுத்த வேண்டும். தடையற்ற பொருளுக்கு அது தேவையில்லை. வரிக்குட்பட்ட பொருளாக இருந்தால் வரி செலுத்த வேண்டும். வரி செலுத்த முடியாத நிலை ஏற்பட்டால் சரக்குகளைப் பிணையப் பண்ட கத்தில் (Bonded Ware-house) வைத்துவிட்டுச் சுங்க அலுவலகத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும். பின்னர்ப் பொருள்களை வரி செலுத்திவிட்டு முழுமை யாகவோ பகுதியாகவோ எடுத்துக்கொள்ளலாம். இவ்வாறாகச் சுங்க முறைகளை நிறைவேற்றித் துறைமுகத்திலிருந்து பொருள்களை எடுப்பது ஒரு எளிதான காரியமன்று. எனவே, இறக்குமதியாளர் தீர்வு முகவர்களை (Clearing Agents) அமர்த்திப் பொருள்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

ஏற்றுமதி: ஏற்றுமதி நடவடிக்கைகளும் ஒவ் வொரு நாட்டின் சட்டங்களுக்குட்பட்டன. இந்தியா வில் வெளிநாட்டிலிருந்து விற்பனை ஆணை, இறக்கு

மதியாளரின் நாணயம் பற்றி அறிதல், ஏற்றுமதி, உரிமம், கப்பலின் ஆணை, சரக்குக் கட்டுதல், குறியிடுதல், அயற்செலாவணி, சுங்க முறைகள், கடல் காப்பீடு, கப்பலின் ஆவணங்கள், பணம் வாங்குதல், கப்பல் சீட்டுப் பெறுதல் போன்ற முறைகளைப் பின்பற்ற வேண்டும். அயல்நாட்டு இறக்குமதியாளரிடமிருந்து வரும் ஆவணங்களுக்கு முழு விவரம் தந்து பதிலெழுத வேண்டும். அதாவது, சரக்கு அனுப்பப்படும் காலம், பணம் செலுத்தும் முறை போன்றவற்றை உடனடியாக எழுத வேண்டும். தனது விலைப்புள்ளி (Quotation), விற்பனைக் கட்டுப்பாடுகள் (Terms of Sale) போன்றவற்றை அனுப்ப வேண்டும். மாதிரிப் பொருள் பட்டியலும் (Proforma Invoice) அனுப்புவதுண்டு. பல்வேறு கடிதப் போக்குவரத்திற்குப் பிறகு ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரின் கட்டுப்பாடுகளுக்கு இணங்கும்போது விற்பனை ஆணை வந்துவிடும். அதில் கட்டுதல், குறியிடுதல், விலை, காப்பீடு, பணம் செலுத்தும் முறை, இறக்குமதி உரிமம் போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும். மேற்கூறிய விவரங்கள் இல்லாமல் ஏற்றுமதியாளரின் பொறுப்பிலே விடப் பட்டிருந்தால் அது திறந்த விற்பனை ஆணை (Open Indent) எனப்படும்.

ஏற்றுமதியாளர் இறக்குமதியாளரின் நாணயம் பற்றி விசாரித்து அறிய வேண்டும். அவர் இறக்குமதியாளர் மீது வரையும் மாற்றுச் சீட்டை அவர் தம் வங்கி ஒன்று ஏற்குமாறோ, பணம் செலுத்துமாறோ உள்ள அவரது நாட்டின் வங்கியிடமிருந்து வாணிக உறுதிக் கடிதம் ஒன்று பெற்று அனுப்புமாறு இறக்குமதியாளரைக் கேட்க வேண்டும். ஏற்றுமதியாளருடைய பொருள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டிற்கு உட்படாத பொருளாக இருந்தால், அதாவது, திறப்புப் பொது உரிமப் பட்டியலில் உள்ள பொருளாக இருந்தால், தனி ஏற்றுமதி உரிமம் தேவை இல்லை. தம்மை ஓர் ஏற்றுமதியாளர் என்று பதிவு செய்து இருந்தாலே போதும். அவ்வாறில்லாமல் அப்பொருள் கட்டுப்பாட்டிற் குட்பட்டதாயின் உரிய விண்ணப்பம் செய்து அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி ஏற்றுமதி உரிமம் பெற வேண்டும். விற்கும் ஆணை பெற்றவுடன் சரக்கு அனுப்ப வேண்டிய காலத்திற்கு முன்னதாகவே தகுந்த கப்பலில் இடம்பெற முயற்சி செய்ய வேண்டும். அதற்காக அவர் கப்பல் கழகத்தோடு தொடர்பு கொண்டு ஒப்பந்தம் செய்த பின்னர்க் கப்பலின் ஆணையைப் பெற வேண்டும். ஏற்றுமதியாளருக்குக் கப்பலில் முழு இடமும் தேவை என்றால், அந்தக் கப்பலையே வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய ஒப்பந்தம் தனிக்கப்பல் வாடகை ஒப்பந்தம் (Charter Party) எனப்படும். சில நாடுகள் பொருள்களைத் தங்கள் கப்பல்களிலேயே ஏற்றிச் செல்ல வேண்டும் என்று கட்டளை விதிப்பதும் உண்டு. ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களை முறையாக, நன்றாகக் கட்டுதல் செய்ய வேண்டும். அது நன்கு அமையாவிட்டால், கப்பல் தலைவர், கப்பல் சரக்குச் சீட்டில் குறிப்பிடுவார். இறக்குமதியாளர் கட்டுதல் பற்றி ஒன்றும் கூறவில்லை என்றால், சரக்கிற்கேற்பப் பொருளைக் கட்டியனுப்புவது ஏற்றுமதியாளரின் கடமையாகும். அவ்வாறு கட்டப்பட்டுள்ள பொருள்கள் மீது ஒரு தனிக் குறியும், விற்கும் ஆணை எண்ணும், போய்ச் சேரவேண்டிய துறைமுகத்தின் பெயரும் எழுதப்பட வேண்டும். வட்டம், முக்கோணம், நீண்ட சதுரம் போன்றவடிவத்தில் தனிக் குறி இடலாம். இவ்வாறு கட்டுதல் செய்யப் பட்ட பொருள்களைக் கப்பலில் ஏற்றிச் சுங்க முறைகளை நிறைவேற்றிக் கப்பலில் ஏற்றும் பொறுப்பைத் தாமாகவே மேற்கொள்ளலாம்அல்லது அப்பொறுப்பை அவர் அனுப்பீட்டு முகவரிடம் (Forwarding Agent) ஒப்படைத்தும் விடலாம். ஏற்றுமதியாளர் ஏற்றுமதி மூலம் அவர் பெறும் அயற் செலாவணி முழுவதையும் மைய இருப்பு வங்கியிடம் ஒப்படைத்துவிட வேண்டும். அதற்காக அவர் 4 அரசு ஆணைப் படிவங்களை நிறைவு செய்து கையெழுத்திட வேண்டும். அப்படிவங்களில் ஒன்றை வைத்துக் கொண்டு ஏனையவற்றை நாணய மாற்று வங்கியிடம் தர வேண்டும். அவ்வங்கியும் அரசு ஆணைப் படிவம் ஒன்றை வைத்துக் கொண்டு ஏனையவற்றை மைய இருப்பு வங்கிக்கு அனுப்பி விடும். நேபாளம், பூட்டான், திபெத்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு இது தேவையில்லை. ஏற்றுமதி செய்த நாடுகளிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அது பற்றிய மாற்றுச் சீட்டுகள் செலுத்தப்படாமலும், பணம் மைய இருப்பு வங்கியிடம் ஒப்படைக்கப் படாமலும் இருந்தால், அதன் காரணத்தை மைய இருப்பு வங்கிக்கு ஏற்றுமதியாளர் தெரிவிக்க வேண்டும். அவர் தரும் பதில் அவ்வங்கிக்கு நிறைவு தரவில்லை என்றால், பொருள்களை உடனடியாக விற்குமாறு அது ஆணை பிறப்பிக்கலாம். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் வரி இல்லாதவை, வரிக்குட்பட்டவை, மறு ஏற்றுமதிக்கான அல்லது பிணையக் கிடங்குகளில் உள்ள சரக்குகள் என மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வகைக்கும் ஒரு ஏற்றுமதிப் பட்டியல் அமைக்க வேண்டும். ஏற்றுமதியாளர் சுங்க அலுவலகம் சென்று தக்க படிவங்கள் பெற்று மூன்று படிவங்களாக அவற்றை அமைக்க வேண்டும். இப்பட்டியலில் பொருள் விவரம், அளவு, கட்டுதல், குறி, சேர வேண்டிய துறைமுகம், கப்பல் பெயர் ஆகியவைகளை எழுத வேண்டும். அதனுடன் ஏற்றுமதி உரிமத்தையும் அரசு ஆணைப்படிவத்தையும் இணைத்துச் சுங்க அலுவலகத்தில் தர வேண்டும். உரிய ஏற்றுமதி வரி செலுத்தியபின் ஏற்

றுமதிப் பட்டியலில் இரண்டு படிவங்களையும், ஏற்று மதி உரிமம், அரசு ஆணைப்படிவம் ஆகியவற்றையும் ஏற்றுமதியாளர்களுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும். அவர் இவற்றை இறக்குமதிக் கட்டண அலுவலகத் தில் தந்து, அங்குச் செலுத்த வேண்டிய கட்டணம் செலுத்திச் சுங்க ஏற்றுமதி அனுமதிச் சீட்டுப் (Custom Export Pass) பெறவேண்டும். அவர் பொருள்களைத் துறைமுக நிறுவனத்தாரிடமோ கப் பலிலோ சேர்க்க வேண்டும். பொருளுடன் கப்பலின் ஆணையையும் கப்பல் அலுவலரிடம் தர வேண்டும். அவர் பொருளையும் எண்ணிக்கையையும் ஒப்பு நோக்கிச் சீட்டுத் தருவார். பிறகு ஏற்றுமதியாளர் கப்பல் சரக்குச் சீட்டுப் படிவங்கள் மூன்று அல்லது ஐந்து பெற்று, அவற்றை நிறைவு செய்து தர வேண் டும். துறைமுகச் சீட்டு ஆகியவற்றை இணைத்துக் கப்பல் நிறுவன அலுவலகத்தில் தரவேண்டும். தீர்வு சம்பந்தமான குறிப்பு ஒன்றை எழுதி அவர் செலுத்த வேண்டிய தீர்வுகளையும் இதர கட்டணங்களையும் செலுத்த வேண்டும். பின்னர் ஏற்றுமதியாளர் அதில் குறிப்பிட்டுள்ள தொகையைச் செலுத்திக் கப்பல் சரக்குச் சீட்டு (Bill of Lading) பெறலாம். அவ்வாறு செலுத்தப்படாமல் இருந்தால், அதாவது, இறக்கு மதியாளர் செலுத்துவார் என அறிவித்தால், 'தீர்வு செலுத்தப்பட வேண்டும்' (Freight Forward) என்று எழுதப்பட்ட கப்பல் சீட்டைப் பெறுவார். ஏற்றுமதி செய்யப்படும் பொருள்கள் பலவித இடையூறுகளுக்கு உட்படுவதால் அவற்றுக்கெதிராகக் காப்பீடு செய் வது மிகவும் தேவை. இலாயிட்சு ஒப்புறுதியாளரி டமோ (Lloyds Underwriter) கடற்காப்பீடு நிறுவனத் திடமோ காப்பீடு செய்ய வேண்டும். அக்காப்பீட்டுத் திட்ட ஆவணத்தை இறக்குமதியாளருக்கு அனுப்ப வேண்டும். ஏற்றுமதியாளர் வாணிகப் பட்டியல் சீட்டு (Commercial Invoice), அயல்நாட்டு விலைப் பட்டியல் (Consular Invoice), தோற்றுவாய்ச் சான்றிதழ் (Certificate of Origin) ஆகியவற்றையும் இணைக்க வேண்டும்.

ஏற்றுமதியாளர் ஒப்புக்கொள்ளப்பட்ட விலைப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு வாணிகப் பட் டியல் சீட்டு மூன்று படிகள் அமைக்க வேண்டும். பொருள் விவரம், அளவு, தன்மை, விலை, செலவுகள் போன்றவற்றோடு இறக்குமதியாளரிடம் இருந்து வர வேண்டிய தொகையையும் இது காட்டும். ஏற்றுமதியாளர் அவர் நாட்டில் உள்ள இறக்கு மதியாளர் நாட்டைச் சேர்ந்த வாணிகத் தூதுவர் களிடமிருந்து பெறவேண்டும். இதற்கான தாளினை அத்தூதுவர் அலுவலகத்தில் பெற்று, பொருள் விவ ரங்கள், விலை போன்றவற்றைக் குறிப்பிட்டு விவரங் கள் அனைத்தும் மெய்யானவை என்ற உறுதிமொழி யையும் எழுதி, வாணிகத் தூதுவரின் கையெழுத்துப் பெறவேண்டும். சில நேரங்களில் அவர் அமைத்த வாணிகப் பட்டியலிலேயே மேற்கூறியவரின் கையெழுத்தைப் பெறலாம். அவ்வாறெனின், அது வாணிகப் பட்டியல் சீட்டாகவும் அயல்நாட்டு விலைப் பட்டியலாகவும் செயற்படும். இதனை இறக்கு மதியாளருக்கு அனுப்புவதன் நோக்கம், அவருடைய நாட்டில் பொருள்களின் மதிப்புக்கணக்கிடப்படுவதை யும், வரி விதிக்கப்படுவதையும் எளிதாக்குவது ஆகும் நாடுகள், தங்களுக்குள் உடன்படிக்கை செய்து கொண்டு இறக்குமதியாகும் பொருள்கள் மீது குறைந்த அளவு இறக்குமதி வரி விதிக்கும் கொள்கையைப் பின் பற்றுகின்றன. அந்நாடுகளில் உள்ள இறக்குமதியாளர் இந்தச் சிறப்புரிமை பெற வேண்டுமானால், இறக்கு மதி செய்யப்படும் பொருள் இந்த உடன்படிக்கைக்கு உட்பட்ட நாடு ஒன்றில் உருவாக்கப்பட்டது என்ற சான்றிதழைப் பெற வேண்டும். அத்தகைய சான்று தான் தோற்றுவாய்ச் சான்றிதழ். கப்பலின் ஆவணங் கள் மேற்கூறிய மூன்று ஆவணங்களையும் கப்பல் சீட் டையும், காப்பீட்டுத் திட்ட ஆவணத்தையும் குறிப்ப தாகும், இவற்றை ஏற்றுமதியாளர் இறக்குமதியாள ருக்கு அனுப்ப வேண்டும்.

**இந்திய அரசு வாணிகக் கழகம்:** மேற் கூறிய அயல்நாட்டு வாணிக முறைகள் தனியார் துறையால் மட்டும் கையாளப்படுவனவாகும். ஆனால், இன்று அயல் நாட்டு வாணிகம் பல்வேறு நாடுகளில் அரசு அளவில் – அதுவும் குறிப்பாகப் பொதுவுடைமைக் கோட்பாடுடைய அரசுகளின் அளவில் நடந்து வரு கிறது. இந்தியா தன்னுடைய அரசு வாணிகக் கழகத் தின் மூலம் அந்நாடுகளோடு வாணிகம் செய்கிறது. அரசு வாணிகக் கழகம், பொதுவுடைமைக் கோட் பாடுடைய நாடுகளுடன் வாணிகம் செய்வதற்காகவே தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்டது. அரசாங்கங்க ளிடையே நடக்கும் அயல்நாட்டு வாணிகத்தில் மேற் கூறிய முறைகள் பின்பற்றத் தேவையில்லை. மேலும், அவற்றிடையே ஏற்படுவது வெறும் வாணிக உடன் பாடுதான். இந்திய அரசு வாணிகக் கழகம் 1958–ஆம் ஆண்டு மே மாதம் வரையறுக்கப்பட்ட தனி நிறுவன மாகத் தொடங்கப்பட்டது. இதன் பணி, பொருள் களையும் விளை பொருளையும் ஏற்றுமதி இறக்கு மதி செய்வதாகும். அரசு கட்டுப்படுத்திய வாணி கத்தை மற்ற நாடுகளுடன் செய்ய இது ஒரு முகவ ராகப் பணி புரிகிறது. இதனால், அயல்நாட்டு வாணி கத்தில் இந்திய வணிகர்களின் வலிமை கூடுகிறது. ஏற்றுமதியாளருக்கும் இக்கழகம் இடையூறுகளைக் களைந்து ஒப்பந்தங்களைச் செயற்படுத்த உதவி செய் கிறது. தரக்கட்டுப்பாட்டினைச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறது. கொள்முதல் செய்வோரையும்

விற்பனையாளரையும் ஒருங்கிணைக்கிறது. தகராறுகளை நன்முறையில் தீர்த்து வைக்கிறது.

**இந்தியாவின் அயல்நாட்டு வாணிகம்:** கடந்த பத்தாண்டுகளாக இந்தியாவில் அயல்நாட்டு வாணிகத்தில் மாபெரும் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பத்தாண்டுகளுக்கு முன்னர் ஏற்றுமதியைவிட இறக்குமதி மிகுதியாக இருந்தாலும் அயல்நாட்டு வாணிக இடைவெளி ஏற்று நடத்தத்தக்க அளவில் இருந்தது. எண்ணெய் விலை ஏற்றத்தால் ஏற்பட்ட அதிர்ச்சியையும் தாங்கிச் செயற்பட்டது. கீழ்வரும் அட்டவணை இந்தியாவின் அயல்நாட்டு வாணிக வளர்ச்சியைக் குறிக்கிறது.

னாட்டுப் பண நிதி (International Monetary Fund) இந்தியாவிற்கு 58 மிலியன் தாலரைக் கடனாக வழங்கியது. அதன் நோக்கம், ஏற்றுமதியைப் பெருக்கவும் இறக்குமதிக் கோட்பாட்டைக்கட்டுப்பாடின்றி வைத்திருக்கவும் வேண்டும் என்பதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்றுமதி பெருகினாலும் இறக்குமதி குறையவில்லை. வழக்கமாக ஏற்றுமதி செய்யும் இந்தியப் பொருள்களுக்கு உலக அங்காடியில் தேவை குறைந்துவிட்டது. புதிய பொருள்களான பொறியியல் பொருள்களுக்கும் இரசாயனப் பொருள்களுக்கும் அவ்வாறே தேவை குறைந்துவிட்டது. மாறாக, இந்தியாவின் இறக்குமதிப் பொருள்களான பெட்ரோலியம், சிமிண்டு, இரசாயன உரங்கள் ஆகியவை இறக்குமதி

(உரூபாய் கோடியில்)

| ஆண்டு | ஏற்றுமதி | இறக்குமதி | அயல்நாட்டு வாணிக இருப்பு நிலை |
|---|---|---|---|
| 1971—72 | 1608 | 1825 | — 217 |
| 1972—73 | 1971 | 1867 | 104 |
| 1973—74 | 2523 | 2955 | — 432 |
| 1974—75 | 3329 | 4519 | — 1190 |
| 1975—76 | 4043 | 5265 | — 1222 |
| 1976—77 | 5146 | 5074 | 72 |
| 1977—78 | 5404 | 6025 | — 621 |
| 1978—79 | 5726 | 6814 | — 1088 |
| 1979—80 | 6459 | 8908 | — 2449 |
| 1980—81 | 6711 | 12524 | — 5813 |
| 1981—82 | 7803 | 13671 | — 5868 |
| 1982—83 | 8814 | 14261 | — 5447 |
| 1983—84 | 2014 | 3123 | — 1109 |

(நன்றி: 'தி எகனாமிக் டைம்சு' - 30-11-'83, பக். 6)

அட்டவணை, இறக்குமதி ஏற்றுமதியை விட மிக்க அளவிலேயே இருப்பதைக் காட்டுகிறது. 1972-73-லும், 1976-77-லும் ஏற்றுமதி, இறக்குமதியைவிட மிகுதியாக உள்ளது. 1970-ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்றுமதி உயர்ந்து இருந்தாலும் அதைவிட இறக்குமதி மதிப்பு மிகுந்து விட்டது. 1981-ஆம் ஆண்டில் பன் செய்யும் அளவு குறைந்தும் இறக்குமதியின் மதிப்புக் குறையவில்லை. இறக்குமதி விகிதம் 1981-82, 1982-83-இல் குறைந்தாலும் இறக்குமதி மதிப்புக் குறையவில்லை.

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் மதிப்பீட்டைச் செய்த திட்டக் குழுவும் ஏற்றுமதி இறக்குமதி மதிப்

பைக் குறைக்க முயன்றது. அதன்படி 1979-80-ஆம் ஆண்டின் ஏற்றுமதி மதிப்பு உரூபாய் 41,978 கோடியிலிருந்து, 34,903 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல் இறக்குமதியும் உரூபாய் 58,851 கோடியிலிருந்து உரூபாய் 55,392 கோடிக்குக் குறைக்கப்பட்டது. ஏற்றுமதி விகிதம் 4 விழுக்காடு உயர்ந்தது. ஆனால் நம்முடைய இறக்குமதியோ 6 விழுக்காடு உயர்ந்துள்ளது. திட்டக் குழுவின் இடைக்கால மதிப்பீட்டின்படி இந்தியாவின் அயல்நாட்டு வாணிகச் செலுத்து இருப்புநிலை நன்மை பயப்பதாக இல்லை. அயல்நாட்டு வாணிகத்தில் ஏற்பட்ட இடைவெளியும் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள நெருக்கடியுமே இவற்றை ஏற்று நடத்தி அயல்நாட்டு வாணிகத்தைத் திருத்தி அமைக்கும் திட்டத்தைத் திட்டக் குழு செய்துள்ளது. அதற்காகக் கீழ்க்கண்ட ஆய்வுக் கருத்துகளைத் தெரிவித்துள்ளது. 1) நீண்டகாலத் திட்டத்தில் ஏற்றுமதியில் ஆதாயம் ஈட்டும் சூழ்நிலையை ஏற்படுத்தும் திட்டங்களைச் செயற்படுத்தல், 2) அடிப்படைப் புதிய தொழில்களாக இரயில்வே, விசை உற்பத்தி, இரும்பு, இரசாயன உரம், சிமிண்டு, நிலக்கரி, தூய்மை செய்யப்படாத எண்ணெய் (Crude Oil) போன்றவற்றின் உற்பத்தியில் முன்னேற்றம் காண்பது, 3) மிகுந்த அளவு இறக்குமதியைத் தவிர்த்து மாற்றுப் பொருள்களைக் கையாள்வது, 4) அதற்காகச் சிறந்த நிருவாகம், தொழில் அமைதி, கருவிகளைத் தக்க காலத்தில் அளித்தல், உற்பத்தித் திறனை வளர்த்தல் போன்ற ஏற்பாடுகளைச் செய்தல், 5) நாட்டுச் செல்வங்களை ஒன்று திரட்டிச் சிறந்த நிருவாகத்தால் அவற்றைப் பயனுடையனவாக மாற்றி அமைக்கத் திட்டமிடல்.

இத் திட்டக்குழுவின் பரிந்துரைகளை மைய அரசு ஏற்று நடைமுறையில் பின்பற்றினால், நன்மை பயப்பதாக இல்லாத அயல்நாட்டு வாணிகச் செலுத்துநிலை இருப்பு, நன்மை பயப்பதாக மாறிவிடும். வருங்கால அயல்நாட்டு வாணிகம், ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைத்து, நாட்டிற்கு மிகுந்த அளவு அயற் செலாவணியை ஈட்டித் தருமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சியும் அந்த நாட்டின் அயல்நாட்டு வாணிகக் கோட்பாடு, அதன் வளர்ச்சி, அது ஈட்டும் வருமானம் போன்றவற்றைப் பொறுத்துத்தான் உள்ளன என்பது தெளிவான சித்தாந்தம். எம்.ஓ.மா.

துணை நூல்கள்:

**Keshkamat**, V.V., "Finance of Foreign Trade, Foreign Exchange and Exchange Control in India", Vivek Publications, Bombay, 1973.

**Ellsworth**, "The International Economy", Mac Millan Company, New York, 1963.

**Sidney, J. Wells.**, "International Economics", George Allen & Unwin Limited, London, 1969.

சுப்பிரமணியம். எம். கே., "பன்னாட்டு வாணிபம்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1978.

***அயலார்***: அயலார் தாம் வாழும் நாட்டின் குடியாக இல்லாதவர். அவரை அயலார், அயல் நாட்டார் என்றும் கூறுவர். அவருடைய சட்ட நிலைமை நாட்டுக்கு நாடு வேறுபடுவதுண்டு. அயலார் தாம் வாழும் நாட்டின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவர். அவர் வாழும் நாட்டின் அரசு அவருடைய உடல், பொருள், மானம் மூன்றையும் பாதுகாக்கக் கடமைப்பட்டதாகும். அயலார் அடிபட்டாலும் அவதூறு செய்யப் பட்டாலும் திருடப்பட்டாலும், நீதி மன்றங்களில் வழக்குத் தொடரலாம். அயலார் சில வரையறை கட்டளைகளுக்குட்பட்டுத் தொழில்களிலும் வாணிகத்திலும் ஈடுபடலாம். குறிப்பிட்ட பதவிகள், தொழில் போன்றவற்றை மேற்கொள்ளுவதிலிருந்து முற்றிலும் தடைப்படுத்தலாம். எடுத்துக்காட்டாக, நீதிபதி வழக்கறிஞர். மற்றுமுள்ளோர் சொத்து வாங்கலாம், விற்கலாம். ஆனால் அவர் தங்கியுள்ள நாட்டுக்கு அந்த உரிமைகளைப் பறித்துக் கொள்ளவும் அவர்களை வெளியேற்றவும் உரிமை உண்டு. இந்த உரிமைகள் பெறுவதால் அவர்கள் தங்கும் காலம் முழுவதும் தங்கியிருக்கும் நாட்டுக்கு நம்பிக்கை உடையவர்களாக இருக்கவேண்டும். நாட்டை விட்டு அயலாரை அகன்று விடும்படி கூற எப்பொழுதும் அரசுக்கு அதிகாரமுண்டு. அயலார் தேர்தலில் வேட்பாளராக நிற்கவும், வாக்களிக்கவும், அரசில் பணியாற்றவும், இராணுவத்தில் பணியாற்றவும் முடியாது.

இந்தியாவில் ஓர் அயலார் வாழ்ந்து வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இந்த அரசு அவருக்குச் சட்டத்துக்கு மாறாகத் தீங்கு ஏதாவது செய்தால், அதுபற்றி நீதிமன்றத்தில் அரசின்மீது வழக்குத் தொடுக்க அவருக்கு உரிமையுண்டு. அவர் நாட்டில் வாழும்போது இந்தியாவிலுள்ள யாரோ ஒரு தனி மனிதரால் அவருக்குத் தீங்கு விளைந்தால் அதுபற்றி அவர் இந்திய நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். ஆனால் அயல்நாட்டு அரசர் மீதும், அயல்நாட்டுத் தூதர் மீதும் இந்திய நீதி மன்றங்களில் வழக்குத் தொடர முடியாது. அரசு அயலாரைக் காவல் துறையிலும், நெருப்பணைப்புப் படையிலும் சேருமாறு கட்டாயப்படுத்தலாம். ஆனால் இராணுவத்தில் சேருமாறு கட்டாயப்படுத்த முடியாது.

ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு வந்துள்ள அயலார், தம் தாய் நாட்டிலோ வேறு ஒரு

நாட்டிலோ செய்த குற்றத்துக்காக அந்த நாடுகள் அவர் தங்கியுள்ள நாட்டுக்கு வந்து அவரைக் கைது செய்ய முடியாது. ஆனால் அந்நாடுகள், அவரைக் கைது செய்து தங்களிடம் ஒப்புவிக்குமாறு அவர் தங்கியுள்ள நாட்டிடம் கேட்கலாம். அவ்வாறு ஒப்படைப்பதை 'அயலார் ஒப்படைப்பு' என்பர். ஆனால் அரசியற் குற்றவாளிகளை அவ்வாறு ஒப்படைக்கலாகாது. இவ்வாறு பிற நாட்டில் தங்கும் அயலாரை 'அயல் நண்பர்' என்று கூறுவர்.

ஒரு நாட்டுடன் போர் தொடுத்துள்ள மக்கள் 'அயற் பகைவர்' எனப்படுவர். அயற் பகைவர்கள் அரசின் இசைவின்றி நீதிமன்றங்களில் வழக்குத் தொடரவும் வணிகமும் தொழிலும் செய்யவும் சொத்து வைத்திருக்கவும் முடியாது.

அயலாரை அனுமதிப்பது பற்றி நான்கு வகையான கருத்துகள் நிலவி வருகின்றன. அவை: (1)ஒவ்வொரு நாடும் அயலாரையும் தன் நாட்டில் அனுமதிக்கக் கடமைப்பட்டது. (2) ஒரு நாடு அயலாரை அனுமதிக்கக் கடமைப்பட்டிருந்தாலும் விரும்பத்தகாதவர்களை அனுமதிக்க மறுக்கும் உரிமையும் அதற்கு உண்டு. (3) ஒரு நாடு அயலாரை அனுமதிக்கக் கடமைப்பட்டு இருந்தாலும், அவர்களைச் சில கட்டுப்பாடுகளின் மேல் அனுமதிக்கலாம். (4) ஒரு நாடு அயலாரை அனுமதிக்க வேண்டியதில்லை. அவர்களை உள்ளே விடாமல் புறக்கணிக்கவும் உரிமை உண்டு. நடைமுறையில் நாடுகள் கடைசிக் கருத்தையே பின்பற்றுகின்றன. முதல் கருத்து, யாராலும் என்றுமே பன்னாட்டுச் சட்ட விதியாகக் கருதப்படவில்லை.

அயலாரை, நாடுகள் அனுமதிக்க வேண்டியதில்லை. ஆனால், அனுமதித்து விட்டால், அவர்களுக்குப் பன்னாட்டுச் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் குறைந்த அளவுச் சலுகைகளான உடல் உரிமை உடைமைப் பாதுகாப்புகளை வழங்க வேண்டும். அவர்களை வெளியேற்றும் உரிமையும் நாடுகளுக்கு உண்டு. இவை அரசாட்சியால் வரும் உரிமையாகும். அந்நாடு அயலாருக்கு அரசியல் உரிமைகள், சில தொழில் உரிமைகள் முதலியவற்றை மறுக்கலாம். அயலாரை ஒரு நாடு அதன் எல்லைக்குள் அனுமதிக்கக் கடமைப்பட்டிருக்கவில்லையென்றாலும், அவர்கள் துன்புறுத்தப்படும்போது அவர்களுடைய உயிரைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு நாட்டிடம் அடைக்கலம் வேண்டுவார்களானால், அந்த நாடு அடைக்கலம் கொடுப்பதே முறைமை. பொதுவாக உலக அரங்கில், இன்றைய நாடுகள் இதனை ஏற்றுப் பின்பற்றி வருகின்றன. எடுத்துக் காட்டாக பங்களா தேசம் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டபொழுது, இந்தியா அந்த மக்களுக்கு அடைக்கலம் கொடுத்தது நினைவு கூரத்தக்கது.

ஒரு நாட்டின் உள்நாட்டுக் குடிகளைப் பொறுத்தவரையில் உள்நாட்டுச் சட்டங்களையும், அயலவர்களைப் பொறுத்தவரையில் பன்னாட்டுச் சட்டத்தையும் கடைப்பிடிக்க வேண்டும். ஒரு நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்ட அயலார், தூதுவர் போன்ற சலுகை பெற்ற பிரிவினராக இருந்தாலொழிய மற்றவர்கள் எல்லோரும் புகும் நாட்டின் சட்டத்திற்கும் அந்நாட்டின் ஆதிக்கத்திற்கும் தங்களை உட்படுத்திக் கொண்டவர்களாவார்கள். இருப்பினும் அவர்கள் தங்கள் நாட்டு அரசின் நேரடி மேலாண்மைக்கும் உட்பட்டவர்கள். சில வேளைகளில் ஒரு நாட்டிற்குள் அயலாராக நுழைபவர்களுக்கு, அந்நாட்டு மக்கள் துய்க்கும் உரிமைகளை விடச் சிறிது குறைவான உரிமைகளே வழங்குவதுண்டு. அதாவது வாக்குரிமை, சில தொழிலில் ஈடுபடுதல் போன்ற உரிமைகளை அவர்கள் பெற முடியாது. எடுத்துக்காட்டாக, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில், 14-ஆம் பிரிவிலும் வேறு பிரிவிலும் உள்ள உரிமைகள், இந்தியக் குடிமக்கள், அயலார் அனைவருக்கும் உரியவை. ஆனால் 19-ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே உரியவை.

**அயற் செலாவணி**: ஒரு நாட்டைச் சார்ந்த நுகர்வோர், உற்பத்தியாளர் ஆகியோருக்கு மற்றொரு நாட்டின் பணம் வழங்குதல் அயற் செலாவணி யாகும் (Foreign Exchange). அயற் செலாவணியும் பன்னாட்டு வணிகமும் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. பல்வேறு நாடுகளிடையே ஒரு பொதுவான பணம் இல்லாமையால், பன்னாட்டுச் செலுத்து முறையில் ஒரு குறிப்பிடத்தக்க சிக்கல் ஏற்படுகிறது. ஒரு நாட்டின் பணம் அந்த நாட்டுக்குள் மட்டுமே ஒப்புக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இந்தியாவின் உரூபாய் இந்தியாவிலும், அமெரிக்க தாலர் (Dollar) அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், பவுண்டு இசுடெர்லிங்கு (Pound Sterling) இங்கிலாந்திலும் அந்தந்த நாட்டு மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், பன்னாட்டு வாணிகத்தில் பொருள்களை வாங்கும் போதும் விற்கும் போதும் ஒரு நாட்டின் பணம் இன்னொரு நாட்டின் பணத்திற்கு மாற்றிக் கொள்ளப்படுகிறது. பேராசிரியர் இசுகேமல் (Scammell) என்பவரின் கருத்துப்படி, "பண்டமாற்று முறையில் இயங்கி வந்துள்ள ஒரு பொருளாதார அமைப்பில் பணம் பயன்படுத்தப்பட்டால் என்ன விளைவு ஏற்படுமோ, அதே விளைவைப் பன்னாட்டுப் பொருளாதாரத்தில் அயற் செலாவணி அங்காடியானது ஏற்படுத்துகிறது". எனவே, அயற் செலாவணி ஏற்படும் விதம் பற்றியும், அதன் இன்றியமையாமை பற்றியும் அறிந்து கொள்வது தேவையாகும்.

வரையறை: அயற் செலாவணி என்பது பன்னாட்டு வாணிகத்தில் பணம் மாற்றப்படும் விதத்தை விளக்கும் அறிவியலும் கலையும் ஆகும். உள்நாட்டு வழக்கத்தில் கடன் கருவிகள் (Credit Instruments) எவ்வாறு உலோக நாணயங்களைச் சிக்கனப்படுத்து கின்றனவோ, அவ்வாறே பன்னாட்டு வாணிகத்தில் தங்கத்தைப் பயன்படுத்துவதை அயற் செலாவணி சிக்கனப்படுத்துகிறது.

அயற் செலாவணி அங்காடியில் (Market) அயற் செலாவணி வாங்கவும், விற்கவும் படுகிறது. இந்தியாவின் அயற் செலாவணி அங்காடியில், அயற் செலாவணிகள் குறிப்பிடப்பட்ட வரைவோலைகளை (Drafts) உரூபாய்க்குப் பெற்றுக் கொள்ளலாம். அமெரிக்க தாலர், பிரான்சின் பிராங்கு, பிரிட்டனின் பவுண்டு இசுடெர்லிங்கு, சப்பானின் 'என்' போன்ற செலாவணிகளை உரூபாய் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம். இத்தகைய விலைகளே அயற் செலாவணி வீதங்கள் அல்லது மாற்று வீதங்கள் எனக் குறிப்பிடப்படு கின்றன. அதாவது, ஒரு நாட்டின் பணம் மற்றொரு நாட்டின் பணத்திற்கு எந்த விகிதத்தில் மாற்றிக் கொள்ளப்படுகிறதோ, அதுவே அயற் செலாவணி மாற்று வீதம் எனப்படும். இந்தியாவின் அயற் செலாவணிஅங்காடியில் அமெரிக்க தாலருக்கான தேவை கூடினாலோ, தாலரின் அளிப்புக் குறைந்தாலோ, தாலரின் உரூபாய் விலை அதிகரிக்கும். இது அயற் செலாவணி மாற்று வீதம் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டும். இதனால், இந்தியர்களுக்கு அமெரிக்கத் தாலரின் விலை அதிகமாகி, அமெரிக்கர்களுக்கு இந்திய உரூபாயின் விலை குறைகிறது.

ஒவ்வொரு செலாவணிக்கும் பன்னாட்டு அளவில் அங்காடி இருக்கிறது. இவ்வங்காடியில் உலகின் பல்வேறு நிதி மையங்களுக்கிடையே பல விதங்களிலும் தொடர்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு நாடும், முந்திய இரவில் தொலைபேசி, தந்தி ஆகியவற்றின் மூலமாக வந்து சேரும் ஆணைகளுடன் (Orders) வாணிகம் தொடங்குகிறது. சில வேறுபாடுகளின் காரணமாக, பல அயற் செலாவணிகட்குத் தேவை தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கிறது. உலகில் உள்ள பல்வேறு செலாவணி அங்காடிகளில் நிலவக்கூடிய மாற்று விகிதங்களைச் செலாவணி அங்காடியில் உள்ள வணிகர் பலரும் தெரிந்து கொள்கின்றனர். மேலும், ஒரு நாட்டின் செலாவணி அங்காடி மூடப்படும்போது, மற்றொரு செலாவணி அங்காடி திறக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இலண்டனில் அங்காடி பிற்பகல் 3 மணிக்கு மூடப்படும்போது நியூயார்க்கிலுள்ள செலாவணி அங்காடி திறக்கப் படுகிறது. நியூயார்க்கு அங்காடி திறக்கப்பட்ட 4 மணி நேரம் கழித்தே சான்பிரான்சிசுகோ அங்காடி திறக்கப்படுகிறது. தோக்கியோவிலுள்ள (Tokyo) அங்காடி திறந்து மூடும்போது பன்னாட்டுச் செலாவணி அங்காடி முற்றுப் பெற்ற நிலை அடைகிறது.

அயற் செலாவணிகளுக்கான கருவிகள்: அயற் செலாவணி அங்காடியில் கீழ்க்காணும் கருவிகள் வழக்கத்தில் உள்ளன. (1) அயல் வாணிக உண்டியல். பன்னாட்டு வணிகத்தில் கடனைத் தீர்க்கப் பயன் படுத்தப்படும் ஒரு கடன் கருவி அயல் வாணிக உண்டியல் (Foreign Bills of Exchange). எடுத்துக் காட்டாக 'ஏ' என்பவன் (எழுதுபவன்), 'பி' க்கு (எழுதப்படுபவன்) ஒரு குறிப்பிட்ட தொகையை அவனுக்கோ, அவன் சொல்லும் ஆளுக்கோ ஒரு குறிப் பிட்ட தேதிக்குள் தருமாறு எழுதிக் கொடுக்கும் கடன் கருவியாகும். (2) வங்கி வரைவோலை: ஒரு வங்கி தன்னுடைய கிளைவங்கிக்கோ, வேறு ஒரு வங்கிக்கோ காசோலை உடையவருக்கு, அதில் குறிப்பிட்ட தொகையைக் கேட்கும் காலத்தில் கொடுக்கப் பணிப் பதற்கான ஓர் ஆணை வங்கி வரைவோலை (Bank Draft) எனப்படும். (3) தொலைபேசி மூலம் பணம் மாற்றும் முறை: ஒரு வங்கி, தன் கிளை வங்கிக்கோ வேறு ஒரு வங்கிக்கோ, ஒரு குறிப்பிட்ட தொகையை, ஒரு குறிப்பிட்ட ஆளுக்குத் தனது வைப்புத் தொகையிலிருந்து தொலைபேசி மூலம் கொடுக்கச் சொல்லும் ஓர் ஆணை, தொலைபேசி மூலம் பணம் மாற்றும் முறை (Telegraph Transfer) எனப்படும். இது மிக்க விரைவில் பணம் செலுத்தும் முறையாகும். (4) கடனுறுதிக் கடிதம்: ஓர் ஆளுக்கு, ஒரு குறிப் பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு காசோலையையோ, உண்டியலையோ எடுத்துக் கொள்ளும் உரிமையை அளிக்கும் கருவி கடனுறுதிக் கடிதம் (Letter of Credit) எனப்படும். (5) பயணிகள் காசோலை: ஒரு வங்கியால் கொடுக்கப்பட்ட பயணிகளின் காசோலையைக் கொண்டு, ஒரு பயணி அதன் கிளை வங்கியிலோ, தொடர்புடைய வேறு ஒரு வங்கியிலோ பணமாக மாற்றிக் கொள்ளப் பயன்படும் கருவி பயணிகள் காசோலை (Traveller's Cheque) எனப்படும்.

அயற் செலாவணி வீதம் வரையறுத்தல் முறை: அயற் செலாவணி வீதம் வரையறுக்கப்படும் வகையினை விளக்க மூன்று கோட்பாடுகள் உள்ளன.

(1) தங்கச்சாலை கோட்பாடு: இரு நாடுகள் ஒரே திட்டத்தை மேற்கொண்டிருந்தபோது, இரு நாடுகளிலும் உள்ள இரு நாணயங்களின் தங்கச் சாலை விகிதங்களுக்குச் சமமாக மாற்றுவீதம் வரை யறுக்கப்பட்டது. இரு நாடுகள் ஒரே திட்டத்தை மேற்கொண்டிருந்தபோது, வரையறுக்கப் பட்ட மாற்று வீதத்தை விளக்குகின்ற கோட்பாட்டிற்குத்

தங்கச்சாலைச் சமன்பாட்டு மாற்றுக் கோட்பாடு என்பது பெயர். இரு நாடுகள் தங்க நாணயத் திட்டத்தில் இருந்தபோது, இரண்டு நாடுகளுடைய நாணயங்களின் மாற்று விகிதத்திற்கு அடிப்படை, தங்கச் சாலைச் சமன்பாட்டு மாற்று வீதம் ஆகும். இதுவே, சமநிலை மாற்று வீதம் (Par Exchange Value) ஆகும். அங்காடியிலுள்ள மாற்று வீதம், இந்தச் சமநிலை மாற்று வீதத்திற்கு ஒரு குறிப்பிட்ட எல்லைகளுக்கிடையே மாறாதிருந்தது. இந்த எல்லைகளுக்குத் 'தங்கப் புள்ளிகள்' (Specie Points) என்பது பெயர். இவை தங்க ஏற்றுமதிப் புள்ளி என்றும், தங்க இறக்குமதிப் புள்ளி என்றும் அழைக்கப்பட்டன. தங்கத்தை ஏற்றுமதி செய்வதில் ஏற்படக்கூடிய காப்புத் தொகை (Insurance), போக்குவரத்துச் செலவு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தங்க ஏற்றுமதி, இறக்குமதிப் புள்ளிகள் வரையறுக்கப்படுகின்றன.

தங்கச்சாலைக் கோட்பாட்டில் (Mint Par Value) சமன்பாட்டு மாற்று வீதம் எவ்வாறு வரையறுக்கப் படுகிறது என்பதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டு விளக்குகிறது.

| | | |
|---|---|---|
| உரூபாய் | 1 = | 200 மில்லி கிராம் (தங்கம் உள்ளடக்கியது) |
| அமெரிக்க தாலர் | 1 = | 1.5 கிராம் (தங்கம் உள்ளடக்கியது) |

$$1 \text{ தாலர்} = \frac{1500}{200} = 7.5 \text{ உரூபாய்}$$

எனவே, ஒரு தாலருக்கு உரூ. 7.50 சமமாகும். இக் கோட்பாடு இன்று நடைமுறையில் இல்லை. இதன் குறைபாடுகள் பின் வருமாறு:

(1) இன்று உலகின் எந்த நாடும் தங்கச் சட்டத்தை நாணய முறைக்கு அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

(2) பெரும்பான்மையான நாடுகள் தங்கத்தை ஏற்றுமதி செய்வதையோ இறக்குமதி செய்வதையோ அனுமதிப்பதில்லை.

(3) இன்று அனைத்து நாடுகளும் காகிதப் பண முறையையே (Paper Currency Standard) கொண்டுள்ளன.

2. **வாங்குதிறன் சமன்பாட்டுக் கோட்பாடு:** இப்போது எந்த நாட்டிலும் தங்கத் திட்டம் வழக்கில் இல்லை. எனவே, எந்த நாட்டுச் செலாவணியையும் தங்கமாக மாற்ற இயலாது. ஆகையால், செலாவணிகள் மாற்ற இயலாத பணத்தாளாக உள்ளன. மாற்ற முடியாத பணத்தாளாக உள்ள செலாவணிகளுக்கிடையே எவ்வாறு மாற்று வீதங்கள் வரையறுக்கப் படுகின்றன என்பதை, வாங்கும் திறன் கோட்பாடு (Purchasing Power Parity Theory) விளக்கம் தர முயலுகிறது. கசுடவ் காசல் (Gustav Cassel) என்பவர் 1916-ஆம் ஆண்டு நவீன முறைக்குப் பொருந்துமாறு இக்கோட்பாட்டைத் திருத்தியமைத்தார்.

இக்கோட்பாட்டின் அடிப்படைக் கருத்தாவது: ஒரு நாட்டிலுள்ள மக்களுக்கு அயற் செலாவணி தேவைப் படுகிறது. ஏனெனில், அச்செலாவணி அயல்நாட்டுப் பொருள்களையும் தேவைகளையும் வாங்கும் திறன் பெற்றுள்ளது. உள்நாட்டுச் செலாவணி ஒன்றை வெளிநாட்டுச் செலாவணியாக மாற்றும் போது, உள்நாட்டு வாங்கும் திறனும் வெளிநாட்டு வாங்கும் திறனும் ஒன்றுக்கொன்று மாற்றப்படுகின்றன. இதனால், இச் செலாவணிகளுக்கிடையே மாற்று வீதம் வரையறுக்கப்படுவதில் வாங்கும் திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. எனவே, இரு செலாவணிகளுக்கு மிடையே உள்ள சமநிலை மாற்று வீதமானது, சம அளவிலுள்ள வாங்கும் திறன்களினுடைய மாற்று வீதத்தைக் கொண்டிருக்கும். ஆகவே, செலாவணிகளுடைய வாங்கும் திறன்களுக்கிடையே உள்ள சமன்பாடுதான் மாற்று வீதத்தை வரையறுக்கும்.

வாங்கும் திறன் கோட்பாடு தனித் தனியான முறை, ஒப்பீட்டு முறை என இருவகைப்படும். அவை பின்வருமாறு:

**தனித்தனி முறை:** தனித் தனியான முறையில் இரு நாடுகளின் செலாவணிகள், வாங்கும் திறன் சமமாக இருக்கும் வண்ணம், மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது. ஒரு செலாவணியின் வாங்கும் திறன் என்பது, செலாவணியினுடைய ஓர் அலகு (Unit) எவ்வளவு பொருள்களையும் சேவைகளையும் பெறுகிறது என்பதாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் ஒரு உரூபாய், 1 அலகு கோதுமையை வாங்கினால், 1 உரூபாயின் வாங்கும் திறன் 1 அலகு கோதுமை. ஓர் அமெரிக்க தாலர் அமெரிக்காவில் 8 அலகு கோதுமையை வாங்கினால், அமெரிக்க தாலரின் வாங்கும் திறன் 8 அலகு கோதுமை. இந்தியாவில் 8 அலகு கோதுமையை உரூபாய் 8க்கு வாங்கலாம். எனவே, உரூ. 8-இன் வாங்கும் திறனும், 1 அமெரிக்க தாலரின் வாங்கும் திறனும் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கிறது. வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாட்டின்படி அமெரிக்க தாலர்- இந்திய உரூபாயின் மாற்று விகிதம் $1 = உரூ. 8. ஆகும்.

ஓர் அமெரிக்க தாலர் 8 அலகு கோதுமையை வாங்குவதற்குப் பதிலாக, அமெரிக்காவில் 10 அலகு கோதுமையை வாங்குவதாகவும், இந்தியாவில் ஒரு உரூபாய் அதே 1 அலகு கோதுமையை வாங்குவதாகவும் கொண்டால், வாங்கும் திறன் சமன்

பாட்டுக் கோட்பாட்டின்படி அமெரிக்க தாலர்-இந்திய உருபாயின் மாற்று வீதம் $1 = உரூ. 10 ஆகும்.


ஒப்பீட்டுமுறை: தனித்தனியான முறையிலுள்ள சில குறைபாடுகள் காரணமாக ஒப்பீட்டு முறை உருவாக்கப்பட்டுள்ளது. இக்கோட்பாடானது, மாற்று வீதங்களை வரையறுக்கும் கடுமையான முறைக்கு மாறாக, பொதுவானதொரு போக்கை வலியுறுத்துகிறது. மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ஒரு குறிப்பிட்ட நாட்டில் விலைகள் உயருமானால், மாற்று வீதம் வீழ்ச்சி அடையும் போக்குத் தோன்றும். இதுபோல், மற்ற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒரு குறிப்பிட்ட நாட்டில் விலைகள் குறையுமானால், மாற்று வீதத்தில் உயரும் போக்குத் தென்படும்.

செலுத்துநிலைக் கோட்பாடு: மாற்ற முடியாத பண அமைப்பு முறையில் மாற்று வீதம் எவ்வாறு வரையறுக்கப்படுகிறது என்பதை விளக்கும் மற்றுமொரு கொள்கைக்குச் 'செலுத்துநிலைக் கோட்பாடு (Balance of Payments Theory) என்பது பெயர். இரு செலாவணிகளின் வாங்கும் திறன்களும் சமமாகின்ற புள்ளியில் மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது என்று, வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு வலியுறுத்திக் கூறுகிறது. பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளில், புலனாகும் இனங்களும் (Visible Items), புலனாகாத இனங்களும் (Invisible Items) அடங்கியுள்ளன. மாற்று வீதம் இவ்விரு இனங்களையும், அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால், வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு புலனாகும் இனங்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாடு இவ்விரு இனங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது.

இக்கோட்பாட்டின்படி, அயற் செலாவணிக்கான தேவை ஒரு புறமும் (உள் நாட்டவர்களால்), அயற் செலாவணிக்கான அளிப்பு (வெளி நாட்டவர்களால்) மறுபுறமுமாக மாற்றுவீதம் வரையறுக்கப்படுகிறது. அதாவது, மாற்றுவீதத்திற்கும், அயற் செலாவணியின் தேவைக்கும் அளிப்புக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்று வலியுறுத்திக் கூறுகிறது. அயல் செலாவணிக்கான தேவையும் அளிப்பும் ஒரு புள்ளியில் சமமாகும்போது, மாற்று வீதம் சமநிலை அடைகிறது. எனவே, இக்கோட்பாட்டிற்கு 'மாற்று வீதம் வரையறுப்பதற்கான தேவை அளிப்புக் கோட்பாடு' என்ற வேறு பெயரும் உண்டு.

அயற் செலாவணிக்கான தேவையை வரையறுக்கும் காரணிகள்: இறக்குமதிகளின் மதிப்பு, மூலதனப் பெயர்ச்சியின் அளவு, வெளிநாட்டுக்குத் தரப்படும் கொடைகள், நன்கொடைகளின் அளவு ஆகிய காரணிகள் அயற் செலாவணித் தேவையை வரையறுக்கின்றன.

அயற் செலாவணிக்கான அளிப்பை வரையறுக்கும் காரணிகள்: ஏற்றுமதிகளின் மதிப்பு, நாட்டிற்குள் வரும் மூலதனத்தின் அளவு, ஏற்றுக் கொள்கிற கொடைகள், நன்கொடைகளின் அளவு ஆகிய காரணிகள் அயற் செலாவணிக்கான அளிப்பை வரையறுக்கின்றன. அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கோட்பாட்டின்படி, அயற் செலாவணிக்கான மொத்தத் தேவையும், மொத்த அளிப்பும் ஒன்றுக்கொன்று சமமாகும் புள்ளியில் மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது. அயற் செலாவணித் தேவைக் கோடும் (Demand Curve), அயற் செலாவணி அளிப்புக் கோடும் (Supply Curve) ஒன்றுக்கொன்று வெட்டும் புள்ளியில் மாற்று வீதம் வரையறுக்கப்படுகிறது. இதனைக் கீழ்வரும் படம் காட்டும்.



அயற் செலாவணி அளவு

வரைபடத்தில் 'P' என்பது சமநிலைப் புள்ளி ஆகும். 'OR' சமநிலை மாற்று வீதத்தைக் குறிக்கும் இந்த மாற்று வீதத்தில் அயற் செலாவணியின் தேவையும், அளிப்பும் 'OQ' இல் சமமாக இருக்கின்றன.

ஒரு நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கணக்கில் தேவையின் பக்கம் உள்ள இனங்கள் செலவினங்களாகும். அளிப்புப் பக்கம் உள்ள இனங்கள் ஒரு நாட்டினுடைய அயல்நாட்டுச் செலுத்துநிலைக் கணக்கில் வரவினங்களைக் குறிக்கும். ஆகையால், அயற் செலாவணிக்கான தேவை அளிப்பு ஆகியவற்றுக்கிடையே ஏதாவது வேறுபாடு இருக்குமானால், அது நாட்டின் அயல்நாட்டுச் செலுத்துநிலையில் உபரியோ பற்றாக்குறையோ இருப்பதைக் காட்டும். தேவையைக் காட்டிலும், அளிப்பு அதிகம் இருந்தால், அது உபரி அல்லது அயல்நாட்டுச் செலுத்துநிலைக்குத் துணையாக (Favourable Balance of Payments) இருக்கிறது என்பது பொருள்.

பேராசிரியர் குரிகரா (Kurihara) என்பவர் இக் கோட்பாட்டின் இன்றியமையாமையைத் தனது "பணக் கோட்பாடு, மற்றும் அரசுக் கொள்கை" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். தேவையையும் அளிப்பையும் இது வலியுறுத்துவதால், சமநிலை ஆய்விற்கு இக்கோட்பாடு வழி வகுத்துள்ளது. வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு, பொது விலை மட்டத்தை மாத்திரம் வலியுறுத்துகிறது. அன்றியும், இக்கோட்பாடு பல காரணிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்வதால் நடைமுறைக்கு மிகவும் பொருத்தமாக உள்ளது.

பல நாடுகள் தத்தம் செலாவணிகளில் பன்னாட்டு வாணிகத்தை மேற் கொள்வதில்லை; மாறாக, அமெரிக்க தாலர், இங்கிலாந்தின் பவுண்டு முதலிய செலாவணிகளில் மட்டும் வாணிபத்தை மேற்கொள்கின்றன. தங்களின் ஏற்றுமதிப் பொருளுக்குத் தாங்கள் பெறும் விலையை மேற் குறிப்பிட்ட செலாவணிகளிலோ, இந்தச் செலாவணிகட்கு மாற்றிக் கொள்ளத் தக்க வேறு செலாவணிகளிலோ நாடுகள் பெற விரும்புகின்றன. தங்கள் இறக்குமதிப் பொருளுக்கும் இதே செலாவணிகளில் தொகையைச் செலுத்துகின்றன.

அயற் செலாவணி அங்காடியின் மற்றொரு கூறு, அதில் பங்கேற்கும் நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது தனி மனிதர் பற்றியதாகும். ஒவ்வொரு செலாவணிக்கும் உரிய அங்காடியில் செயற்படக் கூடிய வாங்குவோரும், விற்போரும் பலவகைப்படுவர்.

1) வாடிக்கையாளர்கள்: வாணிகத்திற்காகவோ, நிதித்தேவைக்காகவோ, வெளிநாட்டுப் பயணத்திற்காகவோ, தங்கள் நாட்டுச் செலாவணியைத் தவிர்த்து, இதர செலாவணியைப் பெற விரும்புவோரே இவ்வங்காடியின் வாடிக்கையாளராவர்.

2) வணிக வங்கிகள்: வணிக வங்கிகள் தலைமையகத்திலிருக்கும் தங்கள் அந்நியச் செலாவணிப் பிரிவின் மூலம் வங்கிகளுக்கான அயற் செலாவணி அங்காடியில் ஈடுபடுகின்றன. இத்தகைய வங்கிகளின் கிளைகள் அன்றாடப் பேரங்கட்குத் தேவைப்படும் முக்கியமான செலாவணிகளை இருப்பாக வைத்துள்ளன. கைவசம் இருக்கும் அயற் செலாவணிகள், பேரங்கட்குப் போதவில்லையெனில், கிளைகள் தமக்கு வேண்டிய அயற் செலாவணியைத் தமது மைய அலுவலகத்திடமிருந்தோ, பிற அயற் செலாவணி வங்கிகளிடமிருந்தோ கடனாகப் பெற்றுக் கொள்கின்றன.

3) மைய வங்கிகள்: ஒரு நாட்டின் மைய வங்கி அந்நாட்டின் அயற் செலாவணியைப் பாதுகாக்கும் நிறுவனமாக மட்டுமன்றி, செலாவணி மாற்று வீதத்தை நிலைப்படுத்தக்கூடிய ஓர் அமைப்பாகவும் இருந்து வருகிறது. இதற்கு மைய வங்கி, அயற் செலாவணி அங்காடியில் தனது நாட்டுச் செலாவணியையே வாங்கவும் விற்கவும் செய்கிறது. தனது பணம் மிதமிஞ்சிச் செலாவணி அங்காடியில் விற்கப்பட்டிருந்தால், மைய வங்கி, தனது இருப்பிலுள்ள அயற் செலாவணியை விற்றுத் தனது பணத்தையே திரும்ப வாங்கிக் கொள்கிறது. மாறாக, தனது பணம் செலாவணி அங்காடியில் அதிகம் விற்கப்படவில்லை எனில், மைய வங்கி அதனை விற்க முற்படுகிறது. அதன் மூலமாக, அது பிற செலாவணிகளைப் பெற்றுத் தனது அயற் செலாவணி இருப்புகளோடு சேர்த்துக் கொள்கிறது இதனை மைய வங்கியின் தலையீடு என்று கூறலாம். அயற் செலாவணி அங்காடியில் மைய வங்கி இவ்வாறு தலையிடுவதன் காரணமாக, அதன் மைய வங்கியே மிகப் பெரும் வாடிக்கையாளராக இருப்பதுண்டு.

இம்மூன்று தரப்பினரும், உலகின் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ள அயற் செலாவணி அங்காடிகளில் பங்கேற்கின்றனர். இம்மூன்று தரப்பினரிடையே பல கட்டங்களில் அயற் செலாவணிப் பேரங்கள் நடைபெறுகின்றன. (1) வங்கிகளுக்கும் வாடிக்கையாளர்க்குமிடையே பேரங்கள் நடைபெறுகின்றன. (2) ஓர் அங்காடிப் பகுதிக்குள்ளாகவே, வங்கிகளுக்கு இடையில் இத்தகைய பேரங்கள் நடைபெறுகின்றன. (3) பல மையங்களிலுள்ள வங்கிகளின் தலைமையகங்களிடையே அயற் செலாவணிப் பேரங்கள் நடைபெறுகின்றன. (4) வங்கிகளுக்கிடையே நடைபெறும் பேரங்களில், மைய வங்கிகள் தமது செலாவணியின் மதிப்பைக் கூட்டவோ, குறைக்கவோ தம் கைவசம் உள்ள அயற்செலாவணிகளைப் பயன்படுத்துகின்றன. (5) இவையன்றி, மைய வங்கிகள் தமக்குள்ளாக அயற் செலாவணிக் கடன்வசதியையும் வேண்டும்போது ஏற்படுத்திக் கொள்கின்றன. இது அதிகப் பற்றுமுறை (Swap) என்று அழைக்கப்படுகிறது.

அயற் செலாவணி அங்காடிகள் தீர்வகப் பணி (Clearing Function), கடனளிக்கும் பணி (Credit Function), மதிப்பு மாற்றங்களுக்கெதிரான பாதுகாப்பு (Hedging Function) ஆகிய மூவகைப் பணிகளை ஆற்றுகின்றன. தீர்வகப் பணிகள் மூலமாக அயற் செலாவணி அங்காடியில் பன்னாட்டு அளவில் வாங்கும் திறன் மாற்றிக் கொள்ளப்படுகிறது. எடுத்துக்காட்டாக, உள்நாட்டுப் பணம் மட்டுமே பயன்படுத்தப்படும் பொழுது, ஓர் அமெரிக்க ஏற்றுமதியாளர், தம் பொருள்களை ஓர் ஆங்கில இறக்குமதியாளருக்கு அனுப்புகிறார். இதில் இரு நாடுகளும் மாறி மாறிச் செலுத்துரிமைகளை அளித்திருக்கும். இத்தகைய செலுத்துரிமைகள் அயற் செலாவணி அங்காடி

யின் மூலமாகத் தீர்க்கப்படுகின்றன. ஏற்றுமதியும் இறக்குமதியும் மதிப்பில் சமமாக இருக்க நேரிட்டால், இரு தரப்பினரும் கொடுக்க வேண்டிய பாக்கித் தொகை எதுவுமின்றி, செலுத்துரிமைகளும் முழுமையாகத் தீர்க்கப்பட்டிருக்கும். அதாவது, அமெரிக்காவில், இறக்குமதியாளர் ஏற்றுமதியாளருக்குச் செலுத்துரிமைகளைக் கொடுப்பதன் மூலம் இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட பரிமாற்றம் முழுமை பெறுகிறது. அமெரிக்காவில், ஓர் இறக்குமதியாளர் தாம் கொடுக்க வேண்டிய பணத்தை ஏற்றுமதியாளருக்குக் (ஆங்கிலேயர்) கொடுத்துவிடுகிறார். அவ்வாறே, இங்கிலாந்தின் இறக்குமதியாளர் தாம் அனுப்பவேண்டிய பணத்தை இங்கிலாந்தின் ஏற்றுமதியாளருக்கு (அமெரிக்கர்) கொடுத்து விடுகிறார்.

ஆனால், இரு நாடுகளின் ஏற்றுமதியும் இறக்குமதியும் மதிப்பில் சமமாக இல்லையெனில், அந்த மதிப்பு மாறுபாட்டுக்கு உரிய பணத்தை இறக்குமதியாளர் கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, பிரிட்டனின் இறக்குமதியாளர் அமெரிக்க ஏற்றுமதியாளருக்குத் தாம் கொடுக்கவேண்டிய தாலரைப் பிரிட்டனில் உள்ள அயற் செலாவணி அங்காடியில் பிரிட்டனின் பவுண்டு இசுடெர்லிங்கைக் கொடுத்து வாங்கக் கூடும். ஏற்றுமதி வருவாய் மூலமாக அமெரிக்காவின் தாலர் இங்கிலாந்தின் அயற் செலாவணி அங்காடிக்கு வருகிறது. இவ்வாறு வரக்கூடிய தாலரைப் பிரிட்டனின் இறக்குமதியாளர் பவுண்டு இசுடெர்லிங்கைக் கொடுத்து வாங்கி அமெரிக்க ஏற்றுமதியாளருக்கு அனுப்புகின்றனர். இவ்வாறு, அயற் செலாவணிப் பேரமானது இலண்டன் அயற் செலாவணி அங்காடி மூலமாக நடைபெறுகின்றது.

பொதுவாக, இன்றைய வாணிக உலகில் (உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாணிகம் இரண்டிலும்) கடன் முறை வாணிகம் மிகுதியாக வழக்கில் உள்ளது. இது பன்னாட்டு வாணிகத்தில் மிகுந்து காணப்படுகிறது. பன்னாட்டு வாணிகத்தில் பொருள்கள் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு அனுப்பப் படுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும். ஏற்றுமதி செய்யப்பட்ட ஒரு பொருள், வேறொரு நாட்டில் திரும்ப விற்கப்படுவதற்குள், வாரங்கள் பல கடந்து விடும். இக்காலத்தில், யாரேனும் ஒருவர் அப்பொருள்களுக்குரிய மதிப்புக்குச் சமமான நிதிச் சுமையை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

எடுத்துக்காட்டாக, £.10,000 மதிப்புள்ள பிரிட்டனின் கார்கள் கனடாவைச் சேர்ந்த ஒரு வணிகரால் வாங்கப்படுகின்றன. கார்கள் இங்கிலாந்திலிருந்து கனடாவை அடைய ஆறு வாரங்கள் அல்லது அதற்கு மேலும் ஆகக்கூடும். எனவே, கனடாவில் இறக்குமதியாளர் அதுவரை காத்திருக்க வேண்டும். இந்த வாணிகம் பல முறைகளில் செயற்படக் கூடும். ஆனால், அடிப்படையில் அவை அனைத்தும் ஒரே கொள்கை உடையன. இம்முறைகளின் மூலமாக, ஏற்றுமதி செய்வோர் உடனுக்குடன் தமது பொருளுக்குரிய பணத்தைப் பெறவும், பொருளை வாங்குவோர் அல்லது இறக்குமதி செய்வோர் பொருளுக்குரிய பணம் செலுத்துவதை ஒத்திப் போடவும் ஏதுவாகிறது.

இவற்றில் எளிய முறை, கனடாவின் இறக்குமதியாளர், ஒரு கனடா வங்கியில் இறக்குமதிப் பொருளின் மதிப்பைக் கடனாகப் பெற்று, பிரிட்டன் ஏற்றுமதியாளருக்குப் பவுண்டு இசுடெர்லிங்காகவோ, தாலராகவோ செலுத்துதலாகும். பின்னர், தாம் இறக்குமதி செய்த பொருள்களை விற்று, வங்கிக்குத் தர வேண்டிய கடனைத் தீர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு, வங்கியிடம் கடன் பெறுவதற்கு அவர் தாம் பெற்ற இறக்குமதி ஒப்பந்தச் சீட்டை அல்லது அனுமதிச் சீட்டை ஆதாரமாகப் பயன்படுத்தலாம். வங்கியும் இதற்கு மிக எளிய முறையில் ஒரு கடன் ஏற்பாடு செய்கிறது.

அயற் செலாவணி அங்காடியின் மற்றொரு பணி, அங்காடியில் தோன்றக் கூடிய இடர்ப்பாடுகளுக்கு எதிராகப் பாதுகாப்பு அளிப்பதாகும். குறிப்பாக, ஒரு செலாவணியில் கடன்முறைப் பேரம் மேற்கொள்ளப்படும் போது, அக் கடன் தீர்க்கப்படுவதற்குள்ளாக, அதன் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களினின்று பாதுகாப்பு அளிப்பதாகும்.

ஒரு பொருளின் விலை, அதன் தேவை, அளிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்படுவது போன்று, ஒரு செலாவணியின் மதிப்பும் அதன் தேவை, அளிப்பு ஆகியவற்றால் வரையறுக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, தேவை மாறாதிருக்க ஒரு செலாவணியில் அளிப்பு மிகுந்தால் அதன் மதிப்புக் குறையும்; அவ்வாறே அதன் அளிப்புக் குறைந்தால் அதன் மதிப்புக் கூடும். மற்றவை மாறாதிருக்க, ஒரு பொருளுக்கான தேவை அதிகரிக்கும் போது, அதன் மதிப்பும் கூடுகிறது. தேவை குறையும்போது அதன் மதிப்புக் குறைகிறது. அவ்வாறே, ஓர் அயற் செலாவணி அங்காடியில், ஒரு செலாவணிக்கான தேவை திடீரென அதிகரித்தால், அதன் மாற்று மதிப்புக் கூடும்; தேவை குறைந்தால் அதன் மதிப்பும் குறையும். ஒரு செலாவணியின் தேவை, அளிப்புகளைப் பல்வேறு காரணிகள் வரையறுக்கின்றன. ஒரு நாட்டின் செலுத்துநிலை அந்நாட்டுச் செலாவணியின் மதிப்பை வரையறுக்கும் ஒரு முக்கியமான கூறாகும். ஒரு நாடு சாதகமான செலுத்து நிலையைப் பெற்றிருப்பின் அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்பு உயரும். குறிப்பிட்ட ஒரு நாட்டுக்குப் பணம் தர வேண்டிய பிற நாடுகள், தம் செலாவணிகளை

அந்நாட்டின் செலாவணிக்கு மாற்ற விரும்புகின்றன. எனவே, அயற் செலாவணி அங்காடியில் பிற செலாவணிகளின் அளிப்புக் கூடி, குறிப்பிட்ட ஒரு நாட்டுச் செலாவணியின் தேவை மிகுதியாகிறது. ஆகவே, அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்பு உயருகிறது.

ஒரு குறிப்பிட்ட நாடு பாதகமான செலுத்து நிலையில் இருக்குமாயின், அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்புத் தாழ்ந்துவிடும். அந்நாட்டின் ஏற்றுமதி, அதன் இறக்குமதியை விடக் குறைவாக இருப்பதால், அந்நாடு பிற நாடுகளுக்குத் தரவேண்டிய தொகை மிகுதியாக இருக்கும். எனவே, தனது செலாவணி அங்காடியில், அந்நாட்டின் அளிப்புக் கூடி, பிற நாடுகளின் செலாவணிகளுக்கான தேவை அதிகரிக்கிறது. இவ்வாறு, அங்காடியில் குறிப்பிட்ட அச்செலாவணியின் மதிப்புக் குறைகிறது. காண்க: அயல்நாட்டுச் செலுத்து நிலை.

ஒரு செலாவணியின் மாற்று மதிப்பை அயற் செலாவணி அங்காடியின் ஊக வாணிகப் பேரங்களும் (Speculative Dealings) வரையறுக்கின்றன. ஒரு செலாவணியின் மாற்று மதிப்பு உயரக் கூடிய நிலையிலிருந்தால் வணிகர் அதனைப் பெருமளவில் வாங்கி வைக்க முற்படுவர். இதன் காரணமாக, அச்செலாவணியின் மாற்று மதிப்பு மேலும் உயரக்கூடும். மாறாக, ஒரு செலாவணியின் மாற்று மதிப்புக் குறைவதாகத் தெரிந்தால், வணிகர் அச்செலாவணியை விற்க முற்படுவர். எனவே, அதன் அளிப்புக் குறைந்து, அதன் மதிப்பு மேலும் வீழ்ச்சியடையக் கூடும்.

மூலதனப் பெயர்ச்சிகளும் ஒரு செலாவணியின் மாற்று மதிப்பை மாற்ற வல்லவை. ஒரு நாட்டுக்குள் அயல்நாட்டு மூலதனம் வருகையில், அந்நாட்டுச் செலாவணிக்கான தேவை அதிகரிக்கிறது. எனவே, அதன் மாற்று மதிப்பும் உயருகிறது. மாறாக, ஒரு நாட்டினின்று மூலதனம் வெளியேறும் போது, அந்நாட்டின் செலாவணியும் வெளியேறி, பன்னாட்டுச் செலாவணி அங்காடியில் அதன் அளிப்புக் கூடுகிறது. எனவே, அதன் மாற்று மதிப்புக் குறைகிறது.

ஒரு நாட்டின் வட்டி வீத மாற்றங்களினாலும் அந்நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்புப் பாதிக்கப்படலாம். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டின் வங்கி வீதம் (Bank Rate) உயர்ந்து, அதனைத் தொடர்ந்து அங்காடி வட்டி வீதங்களும் உயரும்போது, வெளிநாட்டு மூலதனம் அந்நாட்டுக்குள் மிகுதியாக வந்து சேருகிறது. மாறாக, வட்டி வீதங்கள் குறையும்போது அந்நாட்டின் மூலதனம் வெளியேறக் கூடும். இவ்வாறு வட்டி வீத மாற்றங்களையொட்டி மூலதனம் நாட்டுக்குள் வருகையில், அந்நாட்டுச் செலாவணி மதிப்பு உயருகிறது. மூலதனம் வெளியேறுகையில், அந்நாட்டுச் செலாவணி மதிப்புக் குறைகிறது.

ஒரு நாட்டில் இறக்குமதி வரிகள் கூட்டப்பட்டாலோ, அன்றி இறக்குமதி வரி வீதங்கள் உயர்த்தப்பட்டாலோ, இறக்குமதிகள் குறைந்து அந்நாட்டுச் செலாவணியின் மதிப்பும் உயரக் கூடும். மாறாக, இறக்குமதி வரிகள் வெகுவாகக் குறைக்கப்பட்டால், இறக்குமதிகள் பெருகி, அந்நாட்டுச் செலாவணியின் மதிப்புக் குறையக்கூடும்.

ஒரு நாட்டில் நிலவும் விலைகளின் போக்கும் அந்நாட்டுச் செலாவணியின் மதிப்பைப் பாதிக்கும். எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் பணவீக்கப் போக்கு (Inflation) நிலவுமாயின், ஏற்றுமதி குறைந்து, இறக்குமதி கூடி, அந்நாட்டுச் செலாவணியின் மதிப்புக் குறையும். விலைகள் இறங்குமுகமாக இருக்கும் போது, ஏற்றுமதி கூடி, இறக்குமதி குறைந்து, அந்நாட்டுச் செலாவணி மதிப்பு உயரும். இவ்வாறு, ஒரு நாட்டுச் செலாவணியின் மாற்று மதிப்பு, மேற் குறிப்பிட்ட பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகின்றன.

ஒரு நாட்டின் செலாவணி மாற்று வீதம், மாறாமல் நிலையாக இருக்க வேண்டுமா, நெகிழ்வுள்ள செலாவணி மாற்று வீதமாக இருக்கவேண்டுமா என்பதில் கருத்துவேறுபாடு பொருளியல் அறிஞர்களிடையே இருந்து வருகிறது. சில வல்லுநர்கள் நிலையான செலாவணி மாற்று வீதம் (Stable Exchange Rate) இருக்க வேண்டும் என்று, பின்வரும் காரணங்களால் வலியுறுத்துகின்றனர்: (1) நிலையான செலாவணி மாற்று வீதம், பன்னாட்டு முதலீடுகளையும், வாணிகத்தையும் தூண்டி, வளர்ச்சி பெற உதவுகிறது. (2) பன்னாட்டு வாணிகத்தில் ஈடுபட்டிருக்கும் வணிகர்கள் மத்தியில், நிலையான மாற்று வீதம் நம்பிக்கையை உண்டாக்குகிறது. அயல் நாடுகளிலிருந்து பொருள்களைப் பெறும்போது, தாம் எவ்வளவு பணம் தர வேண்டும் என்பதையும், அயல்நாட்டுக்குப் பொருள்களை அனுப்பும்போது, தமக்கு எவ்வளவு அயற் செலாவணி வரும் என்பதையும் வணிகர்கள் நுட்பமாகத் தெரிந்து கொள்கின்றனர். (3) நிலையான செலாவணி மாற்று வீதம், ஒரு நாட்டின் தொழில்களை வளர்த்து, பொருளாதாரத்தை விரைவில் முன்னேற்றம் அடையச் செய்கிறது. (4) பன்னாட்டு வாணிகத்தையே பெரிதும் நம்பி இருக்கும் நாடுகளுக்கு, நிலையான செலாவணி வீதம் பெரிதும் உதவுகிறது. (5) ஒரு நாட்டின் வேலைவாய்ப்பு, கடன், வட்டி வீதம் ஆகியவை சீரான நிலையில் இருக்க உதவுகிறது. (6) நிலையான செலாவணி மாற்று வீதங்கள், ஒரு நாட்டிலிருந்து மூலதனம் வெளியேறுவதைத் தடை செய்கிறது. விரைவான

மாற்றங்களும், முன்னேற்றமும் அடைந்து வரும் இவ்வுலகில், நிலையான செலாவணி வீதம் நடைமுறைக்கு ஏற்றதன்று. செலாவணி மாற்று வீதம், முன்னேறி வரும் நாட்டின் தேவைக்கு ஏற்ப, மாற்றிக் கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும்.

நெகிழ்வுள்ள செலாவணி மாற்று வீதங்கட்குப் (Flexible Exchange Rate) பொருளியல் அறிஞர்கள் பலரும், நிதி வல்லுநர்கள் பலரும் 1969-ஆம் ஆண்டிலிருந்து ஆதரவு தெரிவித்துள்ளனர். செருமனி 1969-இல் தனது செலாவணியை, அயற் செலாவணி அங்காடியில் மிதக்கவிட்டது. பிரிட்டன், ஆலந்து, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகள் தங்களுடைய செலாவணிகளை 1970-இல் மிதக்க விட்டன. அமெரிக்காவின் வலுவிழந்துவிட்ட செலுத்து நிலையைச் சீரமைக்க 1971-ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் நிக்சன் மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளில் மிதக்கும் செலாவணிக் கொள்கையும் (Floating Currency) ஒரு பகுதியாக விளங்கியது. இருப்பினும், பன்னாட்டு நிதிக் கழகம் நிலைத்த மாற்று வீத முறைக்கு வலுவான ஆதரவு தெரிவிக்கிறது.

நெகிழ்வுள்ள மாற்று வீதம் பல நன்மைகளைப் பெற்றுள்ளது. முதலில், இது ஓர் எளிமையான முறையாகும். ஒரு செலாவணிக்கான தேவையும், அளிப்பும் எப்படி இருந்தாலும் அந்தத் தேவை, அளிப்புகளைச் சமன் செய்ய ஒரு செலாவணி வீதம் நிலவவேண்டும். இந்த மாற்று வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள், தேவை, அளிப்புகளால் தூண்டப் பெற்றவையாக இருக்கும். இதன் காரணமாக, அந்த நாட்டின் ஏற்றுமதி இறக்குமதி ஆகியவற்றில் தக்க மாற்றங்கள் ஏற்படலாம்; அல்லது, குறுகிய கால ஊக வாணிக அடிப்படையிலான மூலதனப் பெயர்ச்சி ஏற்படலாம்; அல்லது இவை இரண்டுமே ஏற்படலாம்.

அடுத்து, நெகிழ்வுள்ள மாற்றுவீத முறையில் செலுத்து நிலையில் தோன்றும் மாற்றங்கள், இணக்கமான சீரமைப்புப் பெறுகின்றன. இதனை நெகிழ்வற்ற மாற்று வீத முறையில் காண இயலாது. நெகிழ்வுள்ள மாற்றுவீத முறையின்கீழ், ஒரு பற்றாக்குறை நாட்டுச் செலாவணியின் மதிப்புத் தானாகக் குறைந்துவிடும். அதனைத் தொடர்ந்து, சீரமைவுச் சக்திகள் அயற் செலாவணி அங்காடி மூலமாகச் செயற்படத் தொடங்குகின்றன. இவ்விளைவுகள் பின்னர்ப் பொருளாதார அமைப்புக்குள் பரவுகின்றன.

அன்றியும், வேலை நிறைவுச் சூழ்நிலையில், கட்டுப்பாடற்ற மாற்று விகிதங்கள் நிலவுவது மிகப் பொருத்தமாக இருக்கும். ஆனால், இன்றையப் பொருளாதார அமைப்புகளில், வேலை நிறைவுநிலை (Full Employment Level) நிலவினாலும், வருமான ஏற்றத்தாழ்வுகள் மூலமாகப் பொருளாதார அமைப்புச் சீரமைவு பெற இயலாது. எனவே, செலாவணி மாற்றுவீத மாற்றங்கள், அல்லது செலாவணிக் கட்டுப்பாடு முறைகள் ஆகிய இருவகை முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்ற வேண்டியிருக்கும்.

முடிவாக, நெகிழ்வுள்ள மாற்றுவீத முறையில் நாடுகளின் நீர்மைத் தேவை (Liquidity) வெகுவாகக் குறைக்கப் படுகிறது. எனவே, பன்னாட்டு நீர்மைச் சிக்கல் தவிர்க்கப்படுகிறது. இருப்பினும், நடைமுறையில் நெகிழ்வுள்ள மாற்று வீத முறையிலும் ஓரளவுக்கு மைய வங்கியின் குறுக்கீடு இருக்கத்தான் செய்யும். அன்றாட மாற்று வீதத்தை நிலைப்படுத்த இத்தகைய குறுக்கீடு இருக்கத்தான் செய்யும்.

சில நாடுகளின் அயல்நாட்டு வாணிக அமைப்பு, அவற்றின் செலாவணி மாற்றுவீதச் சீரமைவுக்கு ஏற்ப அமைந்திருக்கலாம். ஆனால், எல்லா நாடுகளின் வாணிக அமைப்பும் அவ்வாறு இருப்பதில்லை. அன்றாடம் மாறும் அளவிற்கு இருக்கக்கூடிய செலாவணி மாற்று விதிமுறை, பன்னாட்டு வாணிகத்தின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும். மேலும், அடிக்கடி மாறக் கூடிய செலாவணி மாற்று வீதங்கள், பன்னாட்டு மூலதனத்தின் வளர்ச்சியையும் பாதிக்கிறது. இத்தகைய முறையின்கீழ், பன்னாட்டு அளவில் மேற்கொள்ளப் படக் கூடிய கொடுக்கல், வாங்கல் ஒப்பந்தங்களுக்கு ஓர் அடிப்படையில்லாமல் போய்விடக் கூடும். கட்டுப்பாடற்ற செலாவணி மாற்று வீதத்தில், சில அங்காடிக் கூறுகள் பல்வேறு தீமைகளை உருவாக்கக் கூடும் எனவும் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரு மாற்று வீதங்களில், எந்த ஒரு முறையும் முற்றிலும் குறைபாடற்றதன்று. எனவே, எம் முறையில் நன்மைகள் மிகுதியாக இருக்கின்றனவோ, அம்முறையை ஒரு நாடு மேற்கொள்வது நன்று. ந. து.

துணை நூல்கள்:


Bosdersten., "International Economics", Mc. Millan, London, 1971.

Scammell. W.M., "International Trade and Payments", Mc. Millan, London, 1974.

Srivasthava. S.K., "Monetary Economics", Atmaram & Sons, New Delhi, 1972.

Mithani. D.M., "Introduction to International Economics", Vota & Company, Bombay, 1979.


**அயன்மையும் கல்வியும்**: செருமானியத் தத்துவ அறிஞரான எகல் (Hegal) 'அயன்மை' என்னும் கோட்பாட்டை முதன் முதலாக விரிவாகவும் முறையாகவும் விளக்கினார். அவர் 'அயன்மை'

(Alienation) என்னும் கோட்பாட்டினால் மனிதனின் மகிழ்ச்சியற்ற மனநிலையினைப் பகுத்தாய்ந்து, அதனை விவரிக்கும் ஒரு சிந்தனைப் போக்கைக் குறிப்பிட்டார். அத்தகு மனநிலைக்குச் சமயம் தந்த விளக்கத்தை ஏற்க, எகலின் பகுத்தறிவு மறுத்துவிட்டது. அவர் அதற்குரிய விடையை வரலாற்றுப் போக்கில் காண விழைந்தார்.

எகலின் சிந்தனையில், 'அயன்மை' என்னும் சொல் சமுதாய உறவின் திரிபும் முறிவும் ஆகவும், தன்வயம் இழந்து மனவலியும் நலனும் குன்றுதலாகவும், இவற்றுக்கு மருந்தாக மனமுவந்து செய்யும் உரிமை மாற்றமாகவும் விளக்கம் பெறுகிறது.

வரலாற்றின் ஓட்டத்திற்கும் சமுதாய வளர்ச்சிக்கும் அயன்மையை இன்றியமையாததாக எகல் கருதுகிறார். ஒவ்வொரு தனி மனிதனும் தன் வளர்ச்சிப் பருவங்களில் தன் இன வளர்ச்சி நிலைகளைக் கண்டு, கடந்து, இன வரலாற்றில் இன்றைய எல்லைக் கோட்டை அடைந்து, இயைபுற்று, அயன்மைத் தன்மையைக் கடப்பது இயற்கை நியதி என்பது வரலாற்று வழிப் பகுத்தறிவு கண்ட சிந்தனை முடிபு.

அயன்மையை விஞ்சும் பணியில் கல்விக்கே முழுப் பங்கும் பொறுப்பும் உண்டு. பிறக்கும் ஒவ்வொரு மனித உயிரையும், இளமைப் பருவம் தொடங்கி, இன வளர்ச்சியின் நிலைகளில் தோய்ந்து, வரலாற்றின் இன்றைய எல்லைக் கோட்டை அடையச் செய்வது கல்வியே. அயன்மையை,வரலாறு அறிந்து உலகத்தோடு ஒட்டி ஒழுக உதவும் சிந்தனை உளியாக எகல் கண்டார். ஆனால், அவர் வழி வந்த, சிந்தனையில் அவரை விஞ்சிய காரல் மார்க்சு (Karl Marks) இதே கருத்தை – அயன்மையை – புரட்சி செய்து புதியதோர் உலகம் சமைக்கத் தூண்டும் வரலாற்று நெம்புகோலாகக் கொண்டார். தாம் விரும்பும் உலகப் புரட்சி மட்டும் நிகழ்ந்து விட்டால், அயன்மையற்ற உலகம் உதித்து விடுமென்று அவர் கனவு கண்டார். அக் கனவை அவர் வரலாற்றுப் போக்கிலும் சான்று கொண்டு நிறுவ முயன்றார். கல்வியாளர்க்குப் புரட்சிக் கனலைத் தூண்டும் புதுக்கல்வி புகட்ட வேண்டுமென்று அவர் கூறினார்.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இருத்தல் கொள்கை அறிஞர்கள் (Existentialists) எகலின் அறிவு முதல் வாதம், உலகத்தோடு ஒட்ட ஒழுகி அயன்மையைத் தவிர்த்து விஞ்ச உதவாது என்றும், மார்க்சின் வழி வரலாற்றுப் புரட்சி நிகழ்ந்து சமுதாயங்களிலும் அயன்மை ஒழிக்கப்படவில்லை என்றும் கண்டார்கள். பின், அயன்மையை விஞ்சுவதற்கு வழிதான் என்ன? இதில் கல்வியின் பங்கு என்ன? என்ற கேள்விகள் எழுந்தன.

எகல், மார்க்சு, இருத்தல் கொள்கையர் என்னும் இம்முத்திறத்தார் சிந்தனையிலும் குறைபடும் அயன்மை, குறைபடா அயன்மை ஆகிய இரண்டையும் பாகுபடுத்தி, வாழ்விலும், வரலாற்றுப் போக்கிலும் வேறுபடுத்தி அறியும் அறிவு (Discrimination) காணப்படவில்லை. குறைபடும் அயன்மை, சமுதாய மாற்றத்தால் தீர்க்கப்பட வேண்டும். குறைபடா அயன்மை, தனி மனிதன் வலிமை, செம்மை ஆகியன பெறுவதால் உண்டாகவேண்டும். எது குறைபடும் வகை, எது குறைபடா வகை என்பது ஒவ்வொரு தனி மனிதனும் தன் சூழ்நிலையைத் துருவிக் கூர்ந்து பிரித்தறிந்து செயற்பட வேண்டுமேயன்றி, இதற்குக் கொள்கை வாய்பாடுகள் வழிகாட்டியாக முடியா. எத்துணை உயர்ந்த கொள்கையும் சில சமயங்களில் மனிதனை அறிவிழந்தவனாக்கி விடும். அது அயன்மையற்ற கனவுச் சமுதாயத்தை உருவாக்க உதவும் எனக் கொள்ளுதல் கானல் நீரின் பின்னே செல்வது போலாகும்.

கொள்கை, வரலாற்றுச் சிந்தனை ஆகியவற்றை விடுத்துத் தனிமனிதன் தன் போக்கில் இயங்குவதும் அயன்மையாகும். தேவிடு ரீசுமென் (David Riesman) என்பவர், இவ்வழி அயன்மையுற்ற மனிதர்களை மரபு வழிச் செல்பவர், தம் மைய வழிச் செல்பவர் (Self centred), அண்டை அயலார் வழிச் செல்பவர் என்று மூவகையாகப் பிரித்து விளக்குகிறார். இம் மூவகையினரும் அயன்மை நிலைக்கு உணர்வற்றுச் செயற்படுபவராவர். கொள்கை வழிச் செல்வோரும், உணர்விழந்து செயற்படுவோரும், அயன்மை ஆக்கும் நிலைக்கும், அயன்மை ஆன நிலைக்கும் பாகுபாடு அறியாதவர் ஆவர்.

இங்கு, கல்வியின் பங்கு அயன்மை ஆக்கும் நிலையை அயன்மை ஆக்கா வண்ணம் எதிர்கொள்ள இளைஞரை உருவாக்குவதாம். வளரும் குழந்தை பெற்றோர் வயமும், பெற்றோர் பொதுவாக மரபு வயமும் உள்ளனர். குழந்தை வளர்ந்து இளைஞனாகும்போது, அவன் மரபு வயமும் தன்வயமும் பெற வேண்டும். தன்வயநிலை தன் மைய நிலையினின்றும் வேறுபட்டது. தன் மைய நிலையில் சிந்தித்துச் செயற்படுவோர், எக்காலத்தும் எச் சமுதாயத்திலிருந்தும் அயன்மையுற்றவர்களே. ஆனால், தன் வயத்தோடு செயல்படுவோர் அவ்வப்போது சமுதாயத்துடன் முரண்பாடு கொண்டாலும், அவர் நாளையச் சமுதாயத்தின் முன்னோடிகளாவர். தேவையான சமூக மாற்றம் இவ்வாறு தன்வயம் பெற்ற தலைவர்களாலேயே நிகழ்கிறது.

தன்வயமுற்றவர் மரபுகள் கூறும் நெறிமுறைகளை அறிவைக் கொண்டு பாகுபடுத்தித் தக்கன ஏற்று,

தகாதன தவிர்த்துச் செல்வர். இதை விடுத்துக் கண் மூடித்தனமாக மரபுவழித் தடத்தில் செல்வதும், வேரறுந்த புரட்சிப் பாதையில் தறிகெட்டு ஓடுவதும் கல்வியின் தோல்விக்கு அடையாளமாகும். இத்தகைய, தன்வயத்தைத் தூண்டி வளர்க்கும் கல்வி தான்பழையன கழிந்து புதியன புகுதற்கும் சமுதாயம் தேய்ந்து அழியாமல் உடைந்து குலையாமல் தழைத்துவளர்தற்கும், தனி மனிதன் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் பிறவிப் பேறுகளை அடைதற்கும் உதவும். வீடு பேற்றை அடைவது, அயன்மையை உறுதியாகவும் இறுதியாகவும் கடக்கும் வழியாகும்.

அயன்மை என்னும் கோட்பாடு தமிழுக்குப் புதிய தன்று. அயன்மை அனுபவம் மனித இன முழுமைக்கும் பொது. "கூலிக்கு மாரடித்தல்", "இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன?", "அழுதாலும், பின்னை அவளே பெறவேண்டும்" என்னும் தமிழ்ப் பழமொழிகள், இந்த அனுபவத்தின் பல்வேறு வகைகளையும் பகுதிகளையும் தமிழர் உணர்ந்திருந்த பான்மைக்குச் சான்றுகளாகும். திருமூலர், மாணிக்க வாசகர், தாயுமானவர், வள்ளலார் போன்ற சமய குரவர்கள் அயன்மை நிலையைக் கடந்து, உலகெலாம் தன்மயமான வீடுபேற்று நிலையை எய்திப்பெற்றஅனுபவத்தைத்தமிழ் மொழியில் அழியாத இலக்கியமாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். சமய குரவர்கள் இன்புற்றுப் பாடி வைத்தவை அயன்மை கடந்த அரிய ஆராய்ச்சிக் கருப்பொருள்கள் ஆகும். இரா.க.

**அயிசா** (கி.பி. 614–678) இசுலாம் சமயத்தை நிலைநாட்டிய நபிகள் நாயகத்தின் அன்புக்குப் பாத்திரமான அவருடைய மனைவியார் அயிசா அம்மையார். இவ்வம்மையாரின் தந்தையார் அபுபக்கர். இவர் நபிகள் நாயகத்தின் முதன்மை ஆலோசகர். அயிசா கி.பி. 614–ஆம் ஆண்டளவில் மெக்காவில் பிறந்தார். அவர் கி.பி. 622–ஆம் ஆண்டில் மதீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் நபிகள் நாயகத்திற்கு மணம் செய்விக்க உறுதி செய்யப்பெற்றார். திருமணம் கி.பி. 623–இல் நடந்தேறியது. அப்போது நபிகள் நாயகத்திற்கு 50 வயது; அவர்களுக்குப் பிள்ளைப்பேறு கிட்டவில்லை. நபிகள் நாயகத்திற்கு மனைவியர் பலர். எனினும் இறுதி நாட்களில் நபிகள் அயிசாவிடமே சென்று தங்கலானார். காலிபாக்களின் ஆட்சியின் போது அயிசா பங்கு கொள்ளவில்லை. மதீனாவில் அமைதியாகக் காலத்தைக் கழித்து, கி.பி. 678–ஆம் ஆண்டில் அயிசா காலமானார்.

**அயினி அக்பரி** ஒரு நூல். இது மொகலாய அரசர்களின் ஆட்சிமுறை பற்றி அறிந்து கொள்வதற்கு இப்போது சிறப்பாகக் கிடைத்துள்ள மூலநூல். வரலாற்றுக்குப் பெரிதும் பயன்படும் இதுபோன்ற நூல் இதற்கு முன்பு இந்தியாவில் எழுதப்பட்டதில்லை. பிற்காலத்தில் இந்நூலை எடுத்துக்காட்டாகக் கொண்டு பல நிருவாக வழிகாட்டி நூல்கள் தோன்றலாயின.

அயினி அக்பரி, தன் பெயருக்கு ஏற்றபடி, அக்பரின் ஆட்சிக்காலத்திலிருந்த எல்லாத் துறைகளையும் பற்றிய முழுமையான விளக்கங்களைத் தருகிறது. இந்நூல் அக்பரின் பண்புகளையும், அன்றாடப் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைக்கிறது. அக்பரின் அரண்மனைப்பகுதிகள், குதிரைக் கொட்டில், ஆடை அணிகள், படைக்கலங்கள், வேட்டையாடும் குழு, அக்பர் வெளியிடங்களுக்குச் செல்லும்போது பாசறை அமைக்கப்பட்ட முறை முதலியவை பற்றிய விளக்கங்கள் இந்நூலில் காணப்பெறுகின்றன.

இந்நூல் மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலிரண்டு பகுதிகள் வரலாற்றுக்கு மிகவும் பயன்படுவன. இப்பகுதிகள் ஆட்சிமுறை, நீதி, நிருவாகம் பற்றிய செய்திகளை அலுவலகங்களிருந்தும், அரசுப் பதிவேடுகளிலிருந்தும் தொகுத்துத் தருகின்றன.

இம்மாபெரும் நூலை எழுதுவதற்கும், பலவகையான புள்ளிவிவரங்களைத் தொகுப்பதற்கும் அபுல் பாசலும் அவருடைய துணையாளர்களும் ஏழாண்டுகள் கடுமையான முயற்சி மேற்கொண்டனர்.

பாரசீக மொழியில் எழுதப்பெற்ற அயினி அக்பரியை ஆங்கிலத்தில் மூவர் மொழி பெயர்த்துள்ளனர். அவர்கள் பிளாக்மன், காரட், கிளாட்வின் என்பவராவர். இவர்தம் மொழி பெயர்ப்புகளுள் தலைசிறந்தது பிளாக்மன் என்பவருடையதே. ஆனால் இவரது மொழிபெயர்ப்பு நூல் முழுமைக்கும் கிடைக்காமற்போனது வருந்தத்தக்கது.

ஆட்சியமைப்பு: அக்பரின் பேரரசு 15 சுபாக்களாக (மாநிலங்களாக)ப் பிரிக்கப்பட்டிருந்தது. ஏறக்குறைய மூவாயிரம் பர்கானாக்கள் இருந்தன (2–113). சுபாக்கள் சர்க்கார்களாகவும், சர்க்கார்கள் பர்கானாக்கள் அல்லது மகல்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. சான்றாக, அலகாபாத் என்ற சுபாவானது 117 பர்கானாக்களையும், 10 சர்க்கார்களையும் தன்னுட் கொண்டதாக இருந்தது (2–160).

அரசுத்துறைத் தலைவர்கள்: ஒவ்வொரு சுபாவுக்கும் தலைவராகத் திவான்கள் இருந்தனர். அவர்கள் திவானி சசு என்று அழைக்கப்பட்டனர். சாகீர்களின் கணக்கு வழக்குகளைத் திவானி சசு என்பவர் கவனித்து வந்தார். பொது அற நிலையங்களைக் கண்காணித்து வந்தவர் திவானி சாதத் எனப்பட்டார். பல திவான்களுக்கும் தலைவராக இருந்த

வர் திவானி குல் என்பவர். கருவூலங்களின் பொறுப்புத் தலைவருக்கு முசுரிஃபி திவான் அல்லது வசீர் என்பது பெயர். மீரீசாமன் என்பவர் பேரரசின் கிடங்குகளுக்கும் தொழிலகங்களுக்கும் தலைவராகப் பணியாற்றினார்.

மீர் அர்சு என்பவர் அரண்மனைத் தொடர்பான பல அலுவலர்களைக் கண்காணித்து வந்தார். பேரரசின் சொந்தப் பணத்தை நிருவகித்து வந்தவர் மீர்மல் எனப்பட்டார். அந்தப் பணத்தின் ஒரு பகுதியைப் பணப்பையில் போட்டுக்கொண்டு பேரரசர் செல்லுமிடங்களுக்கெல்லாம் இவர் செல்வார். பொது மக்களுக்குப் பேட்டியளிக்கப்படும் மண்டபத்தில் ஏழைகளுக்கு வழங்குவதற்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு தங்க, வெள்ளி நாணயங்களை வைத்திருப்பார் (1-14).

அக்பர் நிருவாகச் செய்திகளைப் பற்றிய முடிவெடுப்பதற்காகத் தம் நம்பிக்கைக்குரியவர்களைக் கலந்து ஆலோசிப்பார். ஆனால், இறுதிமுடிவெடுப்பது அக்பர் தான்.

அக்பரின் ஆட்சித்துறை அலுவலகங்களில் பெரும்பாலும் முகமதியர்களே பணியில் அமர்ந்திருந்தனர். ஏறக்குறைய 30 விழுக்காடு இந்துக்களும் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.

**அக்பரின் தரிசனம்:** அக்பர் தம்மை இறைவனின் சாயல் என்றே முறைப்படி அழைத்துக் கொண்டார். அவர் காலையில் ஒருமுறையும், மாலையில் ஒரு முறையும் மக்களுக்குக் காட்சி தருவது வழக்கம் (1-115). சில சமயங்களில் ஆட்சித் தொடர்பான அல்லது பொதுவருமானத்தைப் பற்றிய செய்திகள் விவாதத்துக்கு வரும். அப்போது அரசர் ஒவ்வொரு துறைக்கும் ஏற்ற ஆணைகளை வழங்குவார் (1-164). காலையில் கூட்டப்பெறும் அரசவையில் ஒவ்வோர் அதிகாரியும் அவரவர் இடர்ப்பாடுகளையும் அல்லது தேவைகளையும் அரசரிடம் கூறி அவரது கருத்தை நாடினர். அரசாங்கச் செய்திகளை விவாதிக்காத காலங்களில் அவர் நாவன்மைமிக்க மெய்யறிஞர்களோடும், சீலம் மிக்க சூபிகளோடும், நடுநிலைமை மிக்க வரலாற்று ஆசிரியர்களோடும் உரையாடல் நிகழ்த்துவது வழக்கம் (1-164).

**அறிஞர்களைப் போற்றுதல்:** அக்பர் எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும், கவிஞர்களையும் கலைஞர்களையும் அறிஞர்களையும் ஆதரித்தார். வடமொழிக் கல்வியை வளர்த்தார். குறிப்பாக இலக்கணம், தருக்கம், வேதாந்தம், பதஞ்சலி யோகம் முதலிய துறைகளைப் போற்றினார் (1-279). பாரசீக அறிஞர்களை மட்டுமன்றி இந்துக்களையும் ஆதரித்தார். அபுல் பாசல் குறிப்பிட்டுள்ள தலைமைசான்ற 21 அறிஞர்களுள் 9 பேர் இந்துக்கள். சந்திரசேனர் என்ற இந்து மருத்துவர் அக்பரால் ஆதரிக்கப்பட்டார்.

அக்பரால் போற்றப்பெற்ற 59 புகழ்பெற்ற பாரசீகக் கவிஞர்களின் பெயர்கள் அயினி அக்பரியில் குறிக்கப்பட்டுள்ளன.

**கலை வளர்க்கும் கண்ணாளர்:** அக்பர் கட்டிடக் கலைக்கு உயிரூட்டினார். தம் எண்ணத்தில் உருவான அவற்றிற்குக் கல்லினாலும் களிமண்ணாலும் ஆடை அணிவித்தார் என்று அபுல் பாசல் குறிப்பிட்டுள்ளார்.

ஆக்ராக் கோட்டையில், வங்காளம், குசராத்துக் கட்டிடங்களின் பாணிகளை ஒட்டி, மிகச்சிறந்த கட்டிடக்கலை வல்லுநரைக் கொண்டு 500 கட்டிடங்களைக் கட்டினார்.

அக்பர் ஓவியங்களை எழுத ஊக்கமளித்தார். தம் உருவப்படம் வரையப்படுவதற்காக அக்பரும் கலைஞர்கள் முன் அமர்ந்திருந்திருக்கிறார். நாட்டிலுள்ள பெருமக்களின் உருவப்படங்களும் வரையப்படவேண்டுமென்ற கட்டளையும் இட்டிருந்தார். இவ்வாறு எழுதப்பட்ட படங்களைக் கொண்டு ஒரு பெரும் படத்தொகுப்பு உருவாக்கப்பட்டது.

அக்பர் இசைக் கலைஞர்; இசைப்புலமையும் பெற்றிருந்தார். இலால் கலாவந்து என்பவரிடம் இந்து வாய்ப்பாட்டினைச் சிறந்த முறையில் கற்றுக் கொண்டார். இவரே 200 பாரசீகப் பழைய இராகங்களுக்கு இசையமைத்தார்.

**விளையாட்டுகள்:** மற்போர், போலோ, புறாக்களைப் பறக்க விடுதல் ஆகியவை பெரும்பாலோரால் விரும்பப்பட்ட பொழுதுபோக்கான விளையாட்டுகளாகும். அக்பரின் ஆட்சிக் காலத்தில் பாரசீகம், துர்ரான், வடஇந்தியா, மேற்கு இந்தியா ஆகிய இடங்களிலிருந்து வந்த மற்போர் வீரர்கள் குத்துச் சண்டைகள் செய்துகாட்டினர். அக்காலத்திலிருந்த சிலம்ப ஆட்டக்காரர்களின் பட்டியலை அபுல் பாசல் கொடுத்திருக்கிறார்.

**நிலவரியும், பிறவரிகளும்:** நில அளவை, நிலவருமானம் பற்றிய கொள்கைகள் மிகத் தெளிவாக வகுக்கப்பட்டிருந்தன. வரிதிரட்டுபவர் உழவர்களுக்குத் தோழர்களாக இருக்க வேண்டும்; தேவைப்பட்டவர்களுக்கு முன்பணம் அளிக்க வேண்டும்; அப்பணத்தை மெல்ல மெல்லத் திரட்ட வேண்டும்; சிலசமயம் வரிவிலக்கு அளிக்க வேண்டும்; உழவர்களுக்கு எல்லா வசதிகளும் அளிக்கப்படவேண்டும்; விளைச்சல் நடைபெற்ற நிலத்திற்கு மட்டும் வரிவிதிக்க வேண்டும்; இடைத் தரகரின்றி உழவர்களிடமிருந்து நேரடியாக வரி திரட்ட வேண்டும்; கெடுபிடி இல்லாமல் கடன்

நிலுவையைத் திரட்ட வேண்டும் என்று அக்பர் விதித்திருந்தார். குறைந்தது 20 தடவையாவது அக்பர் வரிதிரட்டலை விலக்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

முந்தைய இந்து, மொகலாய ஆட்சிக் காலங்களில் பல்வேறு வரிகள் திரட்டப்பட்டன.

தானம் வழங்குதல்: ஏழைகளுக்குத் தானம் வழங்குவதற்காகக் காசுகள் (தாம்கள்) பல மூட்டைகளில் வைக்கப்பட்டிருந்தன. வெள்ளி, தங்கக் காசுகளும் திவானிஆம் என்ற இடத்தில் ஏழைகளுக்கு வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்தன.

ஆண்டுக்கு இருமுறை அக்பரின் எடைக்கு எடை நிறுத்துத் தங்க, வெள்ளி நாணயங்கள் துலாதானமாக வழங்கப்பட்டன.

இந்துக்களுக்குப் பதவி: அக்பரின் கீழ் 500–இலிருந்து 5000 வரை எண்ணிக்கை கொண்ட குதிரை வீரர்களுக்குத் தலைவர் என்ற மன்சப்தாரிப் பதவிகள் மொத்தம் 252 இருந்தன. அவற்றுள் 32 பதவிகள் இந்துக்களின் வசம் இருந்தன. 200 முதல் 400 வரை எண்ணிக்கை கொண்ட மன்சப்தாரிப் பதவிகள் 163 இருந்தன. அவற்றுள் 25 பதவிகளில் இந்துக்கள் அமர்ந்திருந்தனர்.

பஞ்சம்: அக்பர் அரியணை ஏறிய ஆண்டில் இந்தியாவின் வடக்கு மாநிலங்களில், குறிப்பாக ஆக்ராவிலும், தில்லியிலும் மிகக் கடுமையான பஞ்சம் பரவியது; தலை நகரம் சூறையாடப்பட்டது. அதலி என்ற அரசரின் அமைச்சரும் அரியணைக்கு உரிமை பாராட்டியவருமான ஏமு, மக்களின் துன்பங்களைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் தின்று கொண்டிருந்தபோது அவர் தம் யானைகளுக்கு அரிசி, சர்க்கரை, வெண்ணெய் ஆகியவற்றை உணவாக அளித்தார்.

வெள்ளம்: 1584–85–இல் அக்பரின் ஆட்சிக் காலத்தில் பயங்கரமான வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. ஒருநாள் மாலை 3 மணிக்குத் திடுமெனப் பக்லா சர்க்காரில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு இரண்டு இலட்சம் மக்கள் உயிரிழந்தனர் (2–123).

சீர்திருத்தங்கள்: அக்பர் இளமைத் திருமணங்கள், உடன்கட்டை ஏறுதல் முதலியவற்றைத் தடை செய்தார். சூதாட்டங்களை ஓர் ஒழுங்குக்குள் கொண்டுவந்தார். பரத்தையர்கள் நகரங்களின் ஒரு பகுதியில் மட்டும் இருக்கவேண்டும் என்று விதித்தார். பல்வேறு நிறுத்தல் அளவைகள், முகத்தல் அளவைகள் முதலியவற்றை முறைப்படுத்தினார். இறைச்சிக்காக எருதுகள், எருமைகள், குதிரைகள், ஒட்டகங்கள் முதலியவற்றைக் கொல்வதற்குத் தடை விதித்தார். பசுவதையைத் தடுத்தார். அடிமைகளை விற்பனை செய்வதையும், ஒருவரது தனிப்பட்ட சுதந்திரத்தைக் கெடுப்பதையும் அக்பர் தடுத்தார்.

நீதிவழங்குவதில் ஒரு மாநிலத்தின் சுபேதாரோ அல்லது ஆளுநரோ ஒரு தனிப்பட்ட மனிதனின் சமயக் கொள்கையில் தலையிடக்கூடாது என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார் (3–138).

குடும்பச் செலவு: பேரரசக் குடும்பம் மிகவும் ஆடம்பரமாக நடத்தப்பட்டு வந்தது. 1595–இல் நூற்றுக்கு மேற்பட்ட தனித்தனி அலுவலகங்களையும் பணிமனைகளையும் கொண்டிருந்த அக்பரது இல்லம், மாளிகை முதலியவற்றிக்காக ஆண்டு தோறும் 77,29,670 ரூபாய் செலவழிக்கப்பட்டது.

அந்தப்புரம்: அந்தப்புரத்தின் உட்பகுதியானது சுறுசுறுப்பு வாய்ந்த மடந்தையரால் காக்கப்பட்டு வந்தது. அவர்களில் பெரிதும் நம்பிக்கைக்கு உகந்தவர்கள் அரசரின் அறையைச் சுற்றியும் காவலர்களாக அமர்த்தப்பட்டிருந்தனர். வேலியடைப்புக்கு வெளியே அலிகள் காவலாளிகளாய் அமர்த்தப்பட்டிருந்தனர். சிறிது தூரத்துக்கு அப்பால் நம்பிக்கைக்குரிய இராசபுத்திரக் காவலர்கள் பணி புரிந்தனர். அவர்களுக்கும் அப்பால் வாயிற்காப்போர் நின்றிருந்தனர்.

கருவூலம்: பேரரசின் கருவூலத்தில் பன்னிரண்டு பிரிவுகள் இருந்தன. அவற்றில் 9 பிரிவுகள் காசு பணங்களைத் திரட்டி வழங்கிவந்தன. விலை உயர்ந்த கற்கள், தங்கம், கல்வைத்த நகைகள் ஆகியவற்றைத் திரட்டவும், வழங்கவும் தனியே வேறு மூன்று கருவூலங்கள் இருந்தன.

பேரரசுத் தொழிலகம் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே பொருட் காப்பாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். நாள்வாரியாகவும் மாதவாரியாகவும் காலாண்டு வாரியாகவும் ஆண்டுவாரியாகவும் ஏற்படுகின்ற வரவு செலவுக் கணக்குகளை ஒழுங்காக வைத்துக் கொள்ளுவதும், கருவூலக் காப்புத்தலைவரிடம் அக்கணக்குகளை ஒப்புவிப்பதும் அவருடைய கடமைகளாகும்.

குறிப்பிடத்தக்க வேறு சில செய்திகள்: அக்பர் காலத்தில் இருந்ததைப் போன்றே அவருக்குப் பின்பும் பீரங்கிப் படை பேரரசுக் குடும்பத்துறையின் ஒரு பகுதியாகவே கருதப்பட்டது. சிறப்பான நகரங்களில் நூற்றுக்கணக்கான மசூதிகள் கட்டப்பட்டிருந்தன. ஆமதாபாத்தில் மட்டும் கற்களால் கட்டப்பட்ட ஆயிரம் மசூதிகள் இருந்தன.

செல்வக் குடும்பத்தினர் அணிவதற்கேற்ற வெல்வெட்டு, சிவப்புத்துணி, ஆகியவை அக்பர் காலத்தில் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அக்பர் தோற்றுவித்த புதிய மதமான தீன்

இலாகி பற்றிய பல செய்திகள் அயினி அக்பரியில் உள்ளன. இறந்துபோனவருக்குரிய நாளில் விருந்து படைப்பதைக் காட்டிலும் ஒருவர் தமது பிறந்த நாளில் பலருக்கும் விருந்து படைக்க வேண்டும் என்பதும், புலால் உண்பதைத் தவிர்க்க வேண்டும் என்பதும் இம்மதத்தின் சில கோட்பாடுகளாகும். மொகலாயர் ஆட்சியில் ஆட்களைக் கடத்தல் பரவியிருந்தது. குறிப்பாக அது வங்காளத்தில் மிகுதியாயிருந்தது.

குதிரைகள் என்றால் அக்பருக்குக் கொள்ளை ஆசை. ஒரு சமயம் அரசுக்குச் சொந்தமான குதிரை இலாயங்களில் 12,000 குதிரைகள் இருந்தன. படையின் பெரும் பகுதி குதிரை வீரர்களையே கொண்டிருந்தது.

நூலைப்பற்றிய திறனாய்வு: வரலாற்றாசிரியர் திரு சாதுநாத் சர்க்காரின் கருத்துப்படி அயினி அக்பரி, மொகலாயரின் ஆட்சி உயர்வடைந்து கொண்டிருக்கும்போது எழுதப்பட்டதாதலின், இதில் சில குறைகளும் உள்ளன. சில சமயங்களில் அபுல் பாசல் உண்மையான ஆட்சிநிலை பற்றி விளக்காமல், ஆட்சிநிலை எப்படி இருக்க வேண்டும் என்று கூறுகிறார். மேலும், சொல்லவந்த கருத்தை நேரடியாகச் சொல்லாமல் அலங்காரச் சொற்களில் உண்மைகள் ஒளிந்து கொள்ளுமாறு செய்துவிடுகிறார். அதனால் காவல் துறை, நீதித்துறை, தேசிய வளங்களின் வளர்ச்சி நிலை, வறுமை ஒழிப்புப்பணி, கல்வி, மருத்துவ வசதி முதலியன பற்றிய சரியான கருத்துகளை அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியவில்லை. ஆனால், புள்ளி விவரங்களைப் பொறுத்தவரை அவர் தெளிவாகவும் விளக்கமாகவும் கூறுகிறார். எஸ்.கி.

துணை நூல்கள்:

**Smith**, V.A., "Akbar the Great Mugul, 1542-1605", S. Chand & Co., Delhi, 1972.

**Mahajan**, V.D., "Mugal Rule in India", S. Chand & Co., Delhi, 1972.

**Jaffar**, S. M., "The Mughel Empire", ESS ESS Publications, Delhi, 1974.

**Edwards, S.M., & Garrett, H.L.O.**, "Mughal Rule in India", S. Chand & Co., Delhi, 1972.

சின்கா, எச்.என்., "இந்திய ஆட்சி அமைப்பு முறை வளர்ச்சி", பாகங்கள் II & III, தமிழாக்கம் உசுமான் செரீப் & கி.ர. அநுமந்தன்.

**அயினி சதுருத்தீன்** (கி.பி. 1878-1954): தட்சிக், உசக் ஆகிய இருமொழி எழுத்தாளர். ஒரு கவிஞருமாவார். கைவினைஞரின் மகனான இவர், தம் 11-ஆம் வயதில் பெற்றோரை இழந்தார். இசுலாமிய சமயப் பள்ளியில் பயிலத் தெருப் பெருக்கல், மூட்டை தூக்குதல் முதலிய பல வேலைகளைச் செய்தார். இவர் தம் 18-ஆம் வயதில் கவிதை எழுதத் தொடங்கினார். விழாக்களும் சந்தைகளும் இவரைக் கவிஞராக்கின.

சார் மன்னர் ஆட்சியில் நிலவிய நிலமானிய ஆதிக்கத்தை எதிர்க்கத் தொடங்கினார். 1905-இல் புக்காராவில் புதிய கல்வி முறையைப் பின்பற்றிக் கல்வித் துறைத் தலைவரானார். சமயவாணரின் எதிர்ப்புக்கிடையே எழுத்தறிவற்ற சிறுவர்கட்கு மறைமுகமாகக் கல்வி கற்பித்தார். 1917-இல் இவரைச் சிறையிலிட்டுச் சித்திரவதை செய்தனர். பின்னர்ப் புரட்சியாளர் இவரை விடுதலை செய்தனர்.

கவிஞரான அயினி சிறந்த உரைநடையாளருமாவார். உசுபெக் கலைக்களஞ்சியமாக விளங்கிப் பல நூல்களை எழுதினார். ஆழ்ந்த அறிவுக் கருவூலங்களாகத் திகழும் இவர்தம் படைப்புகள் 36 மொழிகளில் வெளிவந்துள்ளன. 1980-க்குள்ளாக 300 வெளியீடுகள் வந்துள்ளன. த.கோ.

**அயினு** சப்பானின் பழங்குடிகள். இன்றும் ஏறக்குறைய 20 ஆயிரம் அயினு (Ainu) மக்கள் வாழ்கிறார்கள். பெரும்பாலோர் ஒகைடோ தீவில் வசிக்கின்றனர். ஒகைடோ சப்பானின் வட கோடியில் இருக்கும் பெரும் தீவாகும். கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதிவரை அயினுக்களில் சிலர் சகாலின், குரைல் தீவுகளில் வாழ்ந்தனர். அத்தீவுகள் இப்போது உருசியாவிற்குச் சொந்தமாகிவிட்டன. அவர்களுடைய தொடக்கம் பற்றிய விவரங்கள் கிடைத்தில. இப்பழங்குடிகளின் தோற்றம், மொழி, பண்பாடு ஆகியன நீண்ட காலமாக ஐயப்பாடாகவே இருந்து வந்தன. காக்கசாயிடு மக்களின் தோற்றத்தைப் பெற்றுள்ளனர். தொல்பொருள் ஆராய்ச்சிக் குறிப்புகளின் வாயிலாக இம் மக்கள் கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முன் காக்கசாயிடு பகுதியின் வடகிழக்குப் பகுதியில் வாழ்ந்து வந்தனர் என்பது தெரிய வருகிறது. அயினு பழங்குடிகளில் ஒரு சில குழுவினர் குறில் தீவுகளிலும் உருசியத் தீவுகளில் ஒன்றான சக்காலின் தீவிலும் வாழ்ந்திருக்கிறார்கள். அக்காய்டு என்ற பகுதியே இவர்களின் தாயகமாகவும் இருந்திருக்கிறது. பல நூற்றாண்டுகளாக வேட்டையாடுதல், மீன் பிடித்தல் ஆகியவற்றால் வாழ்ந்துவந்த இம் மக்களின் வாழ்க்கைமுறை இப்போது மாற்றம் அடைந்து, சப்பானிய மக்களின் வாழ்வோடு இணைந்து காணப்படுகிறது. இவர்களின் வீடுகள் மரபு வழியில் கூரையால் வேயப்பட்டு ஒரே ஒரு அறையினைக் கொண்டவை. புனித சன்னல் என்று கூறப்படும் ஒரு சன்னல் வீட்டின் பின்புறமும், மேற்

குப் புறத்தில் ஒரு கதவும் இவ் வீடுகளில் காணப்படு கின்றன. தேர்ந்த தொழில் நுட்ப வல்லவர்களான அயினு பழங்குடிகள் பிரார்த்தனைக் குச்சிகளை ஒவ் வோர் இல்லங்களிலும் வைத்திருக்கின்றனர். இதனை இம்மக்கள் புனிதமான அடையாளமாகக் கொள்கின் றனர். இவ்வினப் பெண்களுக்கு வாயைச் சுற்றிப் பரந்த அளவில் பச்சை குத்துதல் வழக்கமாக உள் ளது. சப்பானிய அரசு இவர்களுடைய பொருளாதா ரத்தை உயர்த்தப் பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது.

*அயுக்தர்* என்போர் பணியாளர்கள் பாணினி, 'அட்டாத்தியாயி' என்னும் நூலில், அயுக்தர் என்ற பணியாட்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கௌடில் யர் யுக்தர், உபயுக்தர் எனக் குறிப்பிட்டுள்ள பணி யாட்கள் அயுக்தருடன் தொடர்புடையவர்களாக இருக்கலாம். கௌடிலியரின் கருத்துப்படி யுக்தர் எனப்படுவோர் அரசாங்கப் பணியாளர்களெனவும், உபயுக்தர் எனப்படுவோர் அவர்களுக்குக் கீழ்நிலை யில் பணிபுரிந்த பணியாளர்கள் எனவும் கருதப்படு கின்றனர். அயுக்தர் என்போர், குப்தரின் கல்வெட்டுச் சாசனங்களில் தெளிவாகக் குறிக்கப்பட்டுள்ளனர். அயுக்தர் என்ற சொல்லும் அயுக்தகா என்ற சொல் லும் நிலத்தீர்வை வாங்கும் பணியாட்களைக் குறிப்ப தாகவும் கூறலாம். இச் சொற்கள் பொது நிருவாகத் துறைப் பணியாளர்களையும் குறிக்கும்.


*அயூதியா* என்பது ஒரு நகரினைக் குறிக்கும் பெயர். இந்நகரம், கி.பி.14-ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் முதல் இரண்டு நூற்றாண்டுகள் வரை தாய்லாந்து நாட்டின் தலைநகராய் இருந்தது. இது அழிந்துபட்டதற்குப் பின்னர்ப் பாங்காக்குத்தலைநகர மானது. இந்நகரில் செழித்த அயூதியாக் (Ayuthia) கலை, கைத்தொழில் வேலைப்பாடுகள் மிக்கதொரு கலையாகும். இக்கலை இன்று நாடோடிக் கலையாக உருமாறியுள்ளது. தாய்லாந்து நாட்டின் ஓவியங்கள் புத்தரின் சாதகக் கதைகளைக் கொண்டு திகழ்கின் றன. அரக்குப் பூசிய பொருள்களில் ஓவியம் வரையும் கலை இணையற்றதாக இங்கு நிலவியது. பிற்காலத் தில் அயூதியாக் கலைஞர்கள் தீச்சுடரையும், புராணத் தேவதைகளையும், விலங்குகளையும் பெருமளவில் ஓவியங்களாக வரைந்தனர். அயூதியா என்னும் பெயர் அயோத்தியா என்னும் சொல்லிலிருந்து பிறந்ததா கும்.

*அயோத்தி* பண்டைய இந்திய நகரங்களுள் ஒன்று. இது உத்தரப்பிரதேச மாநிலத்தின் மையக் கிழக்குப் பகுதியில் பைசாபாத்து மாவட்டத்தில் அமைந்துள்ளது; இந்து, சமண, பௌத்த சமயங்களு டன் தொடர்புள்ள நகரம். முத்தி நகரங்கள் என்று கருதப்படும் ஏழு நகரங்களுள் இதுவும் ஒன்று. இதனை அயோசிகா, ஆயுத், அசொத்யா, வினிதா என்னும் பெயர்களாலும் குறிப்பர். பின்னர் இந்நகரைச் சாகே தம் என்று கூறினர். இந்த நகரத்தைச் சிறப்பாக ஆண்ட அரசர்களை இராமாயணமும் மகாபாரத மும், சமண, பௌத்த இலக்கியங்களும் குறிப்பிடுகின் றன. இது கோசல நாட்டின் தலைசிறந்த நகரமாக இராமாயணத்தில் குறிக்கப்படுகிறது. பிற்காலத்தில் குப்தப் பேரரசர் இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமா தித்தரால் இந்நகர் வெற்றி கொள்ளப்பெற்றுச் சீர்மை பெற்றது. இராமர் பிறந்த இந்நகரில் பல கோயில்கள் உள்ளன. இராமன் அனுமன் ஆகியோருக்குக் கோயில் கள் எழுப்பப்பட்டுள்ளன. சமணக் கோயில்களும் உள் ளன. சமண சமயத் தீர்த்தங்கரர்களான இடபர், அசிதர், அபிநந்தனர், சுமதி, ஆதிகுரு, ஆனந்தர், அசலபானு போன்றோரின் பிறந்த ஊராக இது கருதப்படுகிறது. இவ்வூரில்தான் ஆதிகுரு ஞானம் பெற்றார். பல திருவிழாக்கள் இவ்வூரில் ஆண்டு தோறும் நடைபெறுகின்றன. அயோத்தி, வடமதுரை, அரித்துவாரம், காசி, காஞ்சி, அவந்திகாபுரி, துவா ரகை ஆகியவற்றை முத்திநகரங்கள் என்பர். அவற் றில் முதலில் கூறப்படுவது அயோத்தி. அயோத்தியை தைத்திரிய ஆரணியகம் என்னும் நூலும் குறிப்பிட் டுள்ளது.

*அயோத்திதாச கவிராச பண்டிதர், வி.,* கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சென்னையில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர். வல்லக காளத்தி நகர் அயோத் திதாச கவிராச பண்டிதர் என்ற வேறு பெயரும் இவ ருக்கு உண்டு. இவர் பல நூல்கள் இயற்றியுள்ளார். தன்வந்திரி பகவான் இயற்றிய 'பால வாகடம்' என் னும் 'சிமிட்டு ரத்தினச் சுருக்கம்' நூலை ஏட்டுப் பிர திகள் கொண்டு ஆராய்ந்து கி.பி.1869-இல் வெளியிட் டார். இதில் 360 பாடல்கள் அடங்கியுள்ளன.

நா.ஜெ.

*அயோவா* என்பது அமெரிக்க ஐக்கிய நாட்டி லுள்ள மாநிலங்களுள் ஒன்று. கூலங்கள் (தானியங்கள்)




அயோவா

விளையும் மாநிலம் என்ற பெயரும் இதற்குண்டு. இம்மாநிலத்தில் கூலங்களும் சோயாபீன்சும் மிகுதி யாக விளைகின்றன. இம்மாநிலம் கலிபோர்னியா வுக்கும் மாசசுசெட்சுக்கும் (Massachusetts) இடையி லுள்ளது. அயோவா (Iowa), சிடர் (Cedar), கிளியர் வாப்சிபினிகோன் (Wapsipinicon), சுவிப்ட் (Swift) போன்ற ஆறுகளும், கிளியர் ஓகோபோசி (Okopoji), இசுபிரிட் (Spirit), இசுடார்ம் (Storm) போன்ற ஏரி களும் இம்மாநிலத்தில் உள்ளன. இங்கு வேளாண் மையே முதன்மையான தொழிலாகும். இங்குத் தேன் எடுத்தலும், கால்நடை வளர்த்தலும் மிக்க அளவில் நடைபெறுகின்றன. நிலக்கரிச் சுரங்கங்கள் மாநிலத் தின் பரப்பில் மூன்றில் ஒரு பங்கினைக் கொண்டுள் ளன. உணவுப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழி லும், இறைச்சியைப் பதஞ்செய்து புட்டிகளில் அடைக் கும் தொழிலும் இம்மாநிலத்தில் பெருமளவில் நிகழ் கின்றன.



அயோவா - மாநிலச் சட்ட மன்றம்

அயோவா கி.பி. 1846-ஆம் ஆண்டுத் திசம்பர் மாதம் 28-ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 29-ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது. இதன் பரப்பளவு 1,45,700 சதுரக் கி.மீ. ஆகும். இங்குள்ள மக்கள்தொகை 29,13,387 (1980). மாநிலத்தின் தலை நகர் தமாயின் (Desmoines) ஆகும். கி.பி. 1857-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட அரசியலமைப்புத் திட்டம் இங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இது இதுவரை 37 திருத்தங்களைப் பெற்றுள்ளது. அயோவா மாநிலச் செனட்டு அவை 50 உறுப்பினர்களையும் மக்கள் அவை 100 உறுப்பினர்களையும் கொண் டுள்ளன. செனட்டு உறுப்பினர்கள் 4 ஆண்டுகள் பதவி யில் இருக்கலாம். அவர்களுள் பாதிப்பேர் 2 ஆண்டு களில் வெளியேறுவர். ஆளுநரும் துணை ஆளுநரும் 4 ஆண்டுக் காலத்திற்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படு வர். அயோவா 99 ஆட்சிப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.

**அயோனியக் கடல்** என்பது மத்தியத் தரைக் கடலின் ஆழமிக்க பகுதியாகும். இக்கடல் இத்தாலி யையும் சிசிலியையும், அல்பேனியாவிலிருந்தும் கிரீசி லிருந்தும் பிரிக்கிறது. இக்கடலையும் ஏட்ரியாடிக், (Adriatic) கடலையும் ஆட்ராண்டோ நீர்ப்பிரிவு (Strait of Otranto) இணைக்கிறது. கிரீசின் மேலைக் கடற்கரையில் இக்கடல் குடைந்துள்ள கடல்பிரிவைக் காரிந்து வளைகுடா (Bay of Corinth) என்பர். பண் டைய கிரேக்கக் கதைகளில் 'அயோ' என்னும் தேவ தையின் பெயரால் இக்கடல் பெயரிடப் பட்டது. அயோவினைச் சூபிடர் (Jupitor) என்பவன் ஓர் எரு மையாக மாற்றிவிட்டான். தம்மைக் கடிக்க வந்த ஓர் உண்ணியிடமிருந்து தப்பி இக்கடலை நீந்திக் கடந்து செல்ல அயோ முயன்றதால் இக்கடல் இப் பெயர் பெற்றது. இக்கடலின் அகலம் 676 கி.மீ. சில பகுதிகளில் அயோனியக் கடலின் (Ionian Sea) ஆழம் 5093 மீட்டர் ஆகும்.

**அயோனியத் தீவுகள்** கிரீசு, அல்பேனியா நாடுகளின் மேலைக் கடற்கரையை அடுத்து அமைந் துள்ள தீவுகள். இத்தீவுகள் கி.பி. 1864-ஆம் ஆண்டு முதல் கிரீசின் பகுதியாக உள்ளன. இத்தீவுக் கூட்ட டம் (Ionian Islands) பெருந் தீவுகளையும், பல சிறு தீவுகளையும் கொண்டனவாகும். செரிகோ, கார்ப்பூ, பாக்சி (Paxoi), இலெவ்காசு (Levkos), இதக்கா, செபலோனியா, சான்டே என்பவை அயோ னியக் கடலில் அமைந்துள்ள தீவுகளாகும். இத்தீவு களின் மொத்தப் பரப்பளவு 2,307 சதுரக் கி.மீ. இவற் றுள் செபலோனியா 783 சதுரக் கி.மீ. பரப்புடையது. இங்குள்ள மலைப்பகுதிகளில் கோதுமை பயிராகிறது. அயோனிய மக்கள் திறமைமிக்க மாலுமிகளாவர். மீன் பிடித்தல் இங்குச் சிறப்பாக நடைபெறுகிறது. இதக்கா தீவு 96 சதுரக் கி.மீ. பரப்பினைக் கொண் டது. ஓமர் தம் ஓடிசி என்னும் காவியத்தில் (Odeyssy) இதக்கா தீவைக் குறிப்பிட்டுள்ளார். இத்தீவில் யூலி சசு (Ulysses) பிறந்தார் என ஓமர் கூறியுள்ளார்.


உரோமானியர் இப்பகுதியில் தங்கள் மேலாண் மையினை முதன்முதலில் நிலைநாட்டினர். பின்னர் இது பைசாண்டியப் (Byzantine) பேரரசிற்குட்பட்டது. கி.பி. 1300-ஆம் ஆண்டளவில் இத்தீவுகளை வெனீசி யர்கள் கைப்பற்றினர். அதன்பின்னர்க் கி.பி. 1700-ஆம் ஆண்டு துருக்கியர் இத்தீவுகளைத் தாக்கினர். கி.பி 1797-இல் நெப்போலியன் இத்தீவுகளைத் தம் வசப்படுத்தினார். கி.பி. 1815-இல் வியன்னா காங் கிரசு இத்தீவுகளின் மேலாண்மை உரிமையைப் பிரிட்

டனுக்கு அளித்தது. ஆனால், இத்தீவுகளின் மக்கள் கிரீசோடு சேர விரும்பினர். இது இக்காலத்தில் கிரீசின் பகுதியாக உள்ளது.

**அயோனியா** ஆசியா மைனரின் மேற்குக் கரையோரமுள்ள பழம்பகுதி. இது பண்டைக்காலத்தில் கிரேக்கர்களின் வசம் இருந்தது. கி.மு. 1100-இல் வெளிநாட்டுப் படையெடுப்பாளருக்கு அஞ்சிய அயோனியர் என்னும் கிரேக்கர்கள் ஈசியக் கடலைக் (Agean Sea) கடந்து இங்குக் குடியேறியதால் இப்பகுதி அயோனியா எனப்பட்டது. இம்மக்கள் 12 சுதந்திர நகரங்களை உருவாக்கிக் கூட்டாட்சி முறையை அமைத்தனர். எபிசசு (Ephesus) நகரத்தில், பெண் தெய்வமான தயானாவுக்கு (Diana) கோயில் ஒன்று உள்ளது. இங்குள்ள மயிலிடசு (Miletus) நகரம் பல கிரேக்கத் தத்துவ அறிஞர்களின் பிறந்த இடமாகத் திகழ்ந்தது. கி.மு. 600-இலிருந்து கி.மு. 500 வரை வாழ்ந்த பல அயோனியர்கள் கிரேக்கப் பண்பாட்டின் தலைவர்களாய் விளங்கினர். இப்பகுதி மேலைநாட்டுத் தத்துவம் இலக்கியம் ஆகிய வற்றின் பிறப்பிடமாக விளங்கியது. மயிலிடசு, எபிசசு, மாக்னீசியா போன்ற இடங்களில் பண்டைய நகரங்களின் சிதைவுகள் பல இன்னும் உள்ளன.

**அர்க்கன்சா** அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் ஒன்றாகும். அர்க்கன்சா (Arkansas) வேளாண்மைக்கு உகந்த மண் வளத்தையும், மிகுதியான கனிமச் சுரங்கங்களையும், அடர்ந்த காடுகளையும் கொண்டிலங்குவதால் இதனை ''நல்வாய்ப்பு மிக்க நிலம்'' (Land of Opportunity) என்று குறிப்பிடுவர்.

அர்க்கன்சாவின் வடக்கே மிசௌரி ஆறும், தெற்கே இலூசியானாவும், தென்மேற்கே தெக்சாசும், கிழக்கே தென்னசி, மிசிசிபி ஆறுகளும், மேற்கே ஆக்கிலகாமா (Oklahoma) வும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாநிலத்தின் பரப்பளவு 1,37,539 சதுர கி.மீ. கி.பி. 1980-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்குப்படி இம்மாநிலத்தின் மக்கள் தொகை 22,86,435 ஆகும்.



அர்க்கன்சா

இம்மாநிலம் இரு பிரிவுகளாக அமைந்துள்ளது. அவை வடமேற்கே அமைந்துள்ள மேட்டுநிலப்பகுதி (High Lands), தென்கிழக்கே அமைந்துள்ள தாழ்ந்த நிலப்பகுதி (Low Lands) ஆகும்.

மேட்டுநிலப்பகுதி ஓசார்க் (Ozark area) மலைப் பகுதியையும் ஓவசிதா மேட்டு நிலப் பகுதியையும் (Ovachita High Lands) கொண்டிலங்குகிறது. தாழ்ந்த நிலப்பகுதி மிசிசிபி ஆற்று வண்டல் சமவெளியையும் (Mississippi Aluvial Plain), வளைகுடா கடற்கரைச் சமவெளியையும் (Gulf Coastal Plain) கொண்டமைந்துள்ளது.

இது நீர் வளம் மிக்க மாநிலமாகும். கிழக்கே பாயும் மிசிசிபி ஆறும் தென்கிழக்கில் பாயும் அர்க்கன்சா ஆறும் இம்மாநிலத்தின் சிறப்பான ஆறுகளாகும். இவ்விரு ஆறுகளில் அணைகளைக் கட்டி நீரைத் தேக்கி வைத்துள்ளனர். இவ்வணைகளே ஏரிகள் போன்று செயற்படுகின்றன. மேட்டு நிலப் பகுதிகளில் இவ்வேரிகள் பெரும் எண்ணிக்கையில் உள்ளன. இவ்வணைகளிலிருந்து நீர்மின்சக்தியினைப் பெறுகின்றனர். ஆறுகளின் வெள்ளப் பெருக்கினைத் தடுக்கக் கட்டப்பட்டிருக்கும் இவ்வணைகள் சுற்றுலாப் பகுதிகளாகவும் விளங்குகின்றன.

ஈரக் கசிவான வெப்ப மண்டலம் போன்று (Humid Subtropical Climate) அமைந்துள்ள தட்பவெப்பத்தை இம்மாநிலம் கொண்டுள்ளது. கோடைக் காலத்தில் மிகுதியான வெப்பமும், குளிர் காலத்தில் குறைந்த அளவு குளிரும் நிலவுகின்றன.

இயற்கைச் செல்வங்களால் இம்மாநிலம் பொருளாதார மேம்பாட்டினை எய்தியுள்ளது. இதனால் பல தொழிற்சாலைகள் இங்கு உருவாகியுள்ளன.

இம்மாநிலத்தின் ஆற்றுப் பகுதிகளில் வளம் மிகுந்த வண்டல் மண் நிறைந்து காணப்படுகிறது. வேளாண்மைக்கு உகந்த மண்வளம் நிரம்ப உள்ளது. பெருமளவில் சுண்ணாம்புக் கல் இம்மாநிலத்தின் வடக்குப் பகுதிகளில் கிடைக்கிறது.

அர்க்கன்சாவில் முதன்முதல் குடியேறியவர்கள் விரிந்து பரந்து கிடந்த காடுகளை அழித்துக் குடியேற்றத்தினை அமைத்தார்கள். இக்காலத்தில் இம்மாநிலத்திலுள்ள காடுகளில் ஓக், பைன், கிக்கோரி (Hickory) போன்ற மரவகைகள் மிகுந்து காணப்படுகின்றன. இக்காடுகள் மண் அரிப்பினைத் தடுக்கும் தடுப்புகளாவும், விலங்குகளின் இருப்பிடமாகவும்,

கால்நடைகளின் மேய்ச்சல் நிலங்களாகவும் விளங்கு கின்றன. காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களும், மரம் அறுக்கும் தொழிலும் மாநிலத்தின் பொருளா தார நிலைமையைப் பெருமளவிற்கு உயர்த்தி யுள்ளன.

கனிமங்கள் இம்மாநிலத்தின் வளைகுடாக் கடற் கரைச் சமவெளியிலும் அர்க்கன்சா வெளிப்பகுதி களிலும் கிடைக்கின்றன. பெட்ரோலியம், இயற்கை வாயு, எரிவாயு எண்ணெய், நிலக்கரி, வைரங்கள், பாக்சைட்டு, மாங்கனீசு, ஈயம், துத்தநாகம் போன் றவை இங்குக் கிடைக்கும் கனிமங்களாகும். இங்குக் கிடைக்கும் களிமண் போன்றதொரு கனிமத்திலி ருந்து அலுமினியம் உண்டாக்கப்படுகிறது.

இக்காலத்தில் இம்மாநிலத்தில் உள்ள மக்கள் ஐரோப்பிய நாடுகளில் இருந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்களாவர். இப் பகுதிகளில் பழங் குடிகள் பெருமளவில் வாழ்கின்றனர். தாழ்நிலப் பகுதிகளில் உள்ள பருத்தித் தோட்டங்களில் அவர் கள் அடிமைகளாக வேலை செய்கிறார்கள். இம் மாநிலத்தின் மக்கள் தொகையில் 50 விழுக்காட்டி னர் நகரங்களில் வாழ்கின்றனர். மேட்டுநிலப் பகு தியை விடத் தாழ்நிலப் பகுதிகளில் மக்கள் நெருக்கம் மிகுதியாக உள்ளது.

மாநில அளவில் பொருள்கள் உற்பத்தியில் முதலிடம் பெறும் அர்க்கன்சா, வேளாண்மைத் துறை யில் இரண்டாவது இடத்தினைப் பெறுகிறது. சுரங்கத் தொழிலில் மூன்றாவது இடத்தினைப் பெற்றுள்ளது.

பருத்தி உற்பத்தியில் அமெரிக்க ஐக்கிய நாடு களிலேயே இம் மாநிலம் சிறந்த இடத்தினைப் பெற் றுள்ளது. சோயாபீன்சும் இங்கு மிகுதியாக விளை கிறது. இம்மாநிலத்தில் விளைகிற வேளாண்மைப் பொருள்களுள் நெல் மூன்றாம் இடத்தைப் பெறு கிறது. வேளாண்மைத் தொழிலுடன் மீன் வளர்த் தல், கோழி வளர்த்தல், கால்நடைகள் வளர்த்தல் போன்ற பிற தொழில்களிலும் இம்மாநில மக்கள் ஈடுபட்டுள்ளனர். இங்குள்ள பழத் தோட்டங்களில் கிடைக்கும் பழங்களால் மாநிலத்தின் வருவாய் சீரான முறையில் பெருகியுள்ளது.

காடுகளிலிருந்து கிடைக்கும் மரவகைகளால் காகிதம் செய்தல், மரம் அறுத்தல், இருப்புப் பாதைக்குரிய குறுக்குக் கட்டைகள் செய்தல், மரப் பொருள்கள் செய்தல் போன்ற தொழில்கள் வளர்ந் துள்ளன.

சுரங்கத் தொழில் சிறந்து விளங்கும் இம்மாநிலத் தில் பெட்ரோல் எடுத்தல் முதலிடம் பெறுகிறது. பாரைட் (Barite) எனப்படும் ஒருவகைக் கனிமம் காகிதம் செய்வதற்குப் பயன்படுகிறது. போர்ட் சுமித்து (Port smith) என்னும் இடத்தில் இயற்கை வாயு எடுக்கும் தொழிற்சாலை 1901-ஆம் ஆண்டு ஏற் படுத்தப்பட்டது. கனிமங்கள் கிடைக்கும் இடங்களி லேயே அவற்றைப் பயன்படுத்தும் தொழிற்சாலை களும் உருவாகியுள்ளன. மின் கருவிகள் தயாரித்தல், குளிர்பதனப் பெட்டிகள் செய்தல், காற்றுப் பதனப் பெட்டிகள் (Air Conditioner) செய்தல், மின் விளக்குகள் செய்தல் போன்ற பிற தொழில்களும் இங்கு நடைபெறுகின்றன. உலோகத் தொழிற் கூடங் களும், நெசவாலைகளும் இரசாயனத் தொழிற் சாலைகளும் நாட்டின் பெரு நகரங்களில் அமைந் துள்ளன.

இம்மாநிலத்தில் வானொலி நிலையங்களும் தொலைக்காட்சி நிலையங்களும் மாநகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. இவை மக்களின் பொழுது போக்குச் சாதனங்களாகவும் செய்தி நிலையங்களா கவும் பயன்படுகின்றன. அர்க்கன்சா சுவடி (Arkansas Gazette) என்னும் செய்தித்தாள் இம் மாநிலத்தின் தொன்மையான செய்தித்தாள் ஆகும். இது கி.பி. 1819-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. வேறு பல செய்தித்தாள்களும் இம்மாநிலத்திலிருந்து வெளி வருகின்றன.

பெருவழிச்சாலைகள் நகரங்களை இணைக்கின் றன. மாநிலத்தில் 1,20,000 கிலோமீட்டர் நீளமுள்ள சாலைகள் போடப்பட்டுள்ளன. இம் மாநிலத்தில் பாயும் ஆறுகளில் கப்பல் போக்குவரத்தும் நடை பெறுகிறது. மிசிசிபி ஆறு சிறந்த போக்குவரத்து ஆறாகப் பயன்படுகிறது. மாநிலத்தில் ஏறத்தாழ 244 விமானத் தளங்கள் உள்ளன. வானவூர்திகள் வாயிலாகப் பிற இடங்களுக்குச் செல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

தனியார் நிறுவனங்களின் உதவி பெற்றும் மாநில அரசின் உதவி பெற்றும் கல்விக் கூடங்கள் செயலாற்று



அர்க்கன்சா மாநிலச் சட்டமன்றம்

கின்றன. இம்மாநிலத்தில் 31 உயர் கல்விக்கூடங்களும், ஒன்பது பல்கலைக் கழகங்களும், ஒரு மருத்துவக் கல்லூரியும், பன்னிரண்டு தனியார் கல்லூரிகளும், ஒன்பது இளநிலைக் கல்லூரிகளும், எண்ணற்ற தொழிற் கல்விக் கூடங்களும் உள்ளன. அர்க்கன்சா பல்கலைக் கழகமே இம்மாநிலத்தின் பெரிய பல் கலைக் கழகமாகும். நூல் நிலையங்கள் பல மாநிலத்தின் பல்வேறு இடங்களில் மக்கள் நலங்கருதி அமைக்கப் பட்டுள்ளன.

இலிட்டில் ராக் (Little Rock) இம்மாநிலத் தலைநகரம் ஆகும். இந்நகரம் கி.பி. 1820-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. அர்க்கன்சா ஆற்றின் கரையிலுள்ள இந்நகரம் இம்மாநிலத்தின் மைய மாகும். இது இம்மாநிலத்திலுள்ள பிற நகரங்களை விடச் சிறந்த மாநகரமும், மக்கள் நெருக்கம் மிகுந்த நகரமுமாகும். பிற நகரங்களுடன் இது சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது.

ஆட் இசுபிரிங்சு (Hot Springs) என்னும் நகரம் சுற்றுலாப் பயணிகளின் கருத்தைக் கவரும் அழகிய நகரம். இந்நகரத்தில் இயற்கையாக அமைந் துள்ள வெந்நீர் ஊற்றுகளில் நீராடச் சுற்றுலாப் பயணிகள் திரளாக வருகை புரிகின்றனர். இவ்வூற்று களில் நீராடுவதால் உடல்நோயாளர் தம் பிணி நீங்கும் என்று நம்புகின்றனர். இந்நகரத்தில் ‘ஆட் இசுபிரிங்சு தேசியப் பூங்கா’ ஒன்றினை 1921-ஆம் ஆண்டு நிறுவியுள்ளனர். இப்பூங்காவிற்கு அருகில் உடல்நலப் பொழுது போக்கிடமும் உள்ளது. இது சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற இடமாக விளங்கு கிறது. இந்நகரத்தில் 47 எரிவாயு ஊற்றுகள் உள்ளன. பெயிட்டிவிலி (Fayetteville) வளர்ந்து வரும் நகர மாகும். அர்க்கன்சா பல்கலைக் கழகம் இந்நகரத்தில் உள்ளது. பல மரவேலைத் தொழிற்சாலைகள் இந் நகரத்திலுள்ளன.

நார்த் லிட்டில் ராக் (North Little Rock), போர்ட் இசுமித் (Fort Smith), பைன் பிளப் (Pine Bluff), எல்டோரடோ (Eldorado), சோன்சுபரோ (Jonesboro), பிளய்தவிலி (Blytheville) போன்றவை இம்மாநிலத்தின் பிற நகரங்களாகும்.

அர்க்கன்சாவின் பழங்குடிகள் செவ்விந்தியர் களாவர். இவர்கள் ஓரிடத்தில் நிலையான வாழ்க்கை யினை அமைத்திடாமல் ஊர் ஊராகச் சுற்றித் திரிந்து வந்தார்கள். இவர்கள் வேட்டையாடியும் மீன்பிடித் தும் தம் வாழ்க்கையை நடத்தினார்கள். இப்பகுதிக்கு முதன் முதல் வந்த ஐரோப்பியர் இசுபானியர்களா வர். பிரெஞ்சுக்காரர்கள் அவர்களை அடுத்து வந்தார் கள். இப்பகுதியில் நாளடைவில் பல குடியேற்றங்கள் ஏற்படலாயின. அமெரிக்க ஐக்கிய நாடு இப்பகுதி யினை இலூசியானாவின் ஒரு பகுதியாகக் கி.பி. 1803-ஆம் ஆண்டு இணைத்தது. கி.பி. 1819-ஆம் ஆண்டு அர்க்கன்சா தனிப்பகுதியாகப் பிரிக்கப்பட்டு, கி.பி. 1836-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டின் 25-வது மாநிலமாக உருவாக்கப்பட்டது.

கி.பி. 1861-இல் நடந்த அமெரிக்க ஐக்கிய நாட்டு உள்நாட்டுப் போரின் பொழுது, அர்க்கன்சா மக்கள் தமக்குள் கருத்து வேறுபாடு கொண்டு செயற்பட்டனர். உள்நாட்டுப் போரின்போது இம்மா நிலத்தின் பல்வேறு இடங்களில் போர்கள் நிகழ்ந்தன. இச்சமயத்தில் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இருந்து பிரிந்து செயற்பட்ட அர்க்கன்சா மீண்டும் கி.பி. 1868-ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைக்கப்பட்டது.


**அர்கேடியா** என்பது கிரீசு நாட்டின் நடு மேட்டு மாவட்டம் ஆகும். இம்மேட்டு நிலத்தைப் பெலப்போனசசு (Peloponnessos) என்பர். பண்டைக் காலத்தில் அர்கேடிய மக்கள் கடற்கரைத் தொடர் பேதுமின்றி மலைத் தொடர்களால் தடுக்கப்பெற்றி ருந்தனர். அவர்கள் எளிமையான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அவர்கள் நாகரிகம் முதிர்ச்சி பெறாதிருந் தது. அதனால், அர்கேடியா (Arcatia) என்னும் சொல் இலட்சிய எளிமைக்கும், கிராமப்புற அழகிற் கும், போதுமென்னும் மனப்பாங்கிற்கும் எடுத்துக் காட்டாக அமைந்திருந்தது. இக்கால அர்கேடியா நாப்பிலியா வளைகுடா வரை நீண்டுள்ளமையால் 64 கி.மீ. கடற்கரை இதற்குச் சொந்தமாயுள்ளது. மாவட்டத்தின் பெரும்பகுதியில் காடுகள் நிறைந் துள்ளன. இங்கு மண் வளம் குறைவு. அதனால் விளை பொருள்களும் குறைவேயாகும்.

**அர்ச்சுனர் குரு (கி.பி. 1563-1606)** சீக்கியர் களின் ஐந்தாம் குரு. குரு இராமதாசரின் மூன்றாம் மகன். அர்ச்சுனர் சீக்கிய மக்களை ஒன்றிணைத்த குருமார்களுள் தலை சிறந்தவர். இவர் கி.பி. 1581 முதல் கி.பி. 1606 வரை சீக்கிய குருவாய் இருந்தார். ‘ஆதி கிரந்தம்’ என்னும் சீக்கியரின் புனித நூலைத் தொகுக்கும் பணியினை மேற்கொண்டவரும் இவரே யாவார். இவர் காலத்தில் சீக்கிய சமயம் விரைந்து பரவியது. பிற சமயத்தவர்களை இவர் குறைகூறிப் பேசுகிறார் என்று சிலர் மொகலாயப் பேரரசர் அக்பரிடம் முறையிட்டனர். அக்பர் அதனைப் பொருட்படுத்தவில்லை. கி.பி. 1606-ஆம் ஆண்டில் சகாங்கீருக்கும் (Jahangir) அவர் மகன் குசுருவிற்கும் (Khusru) நடந்த சிக்கலில் குசுருவிற்காக வருந்திய குரு அர்ச்சுனர் அவருக்கு 5,000 உரூபா உதவி அளித் தார். சினம் கொண்ட சகாங்கீர் 2 இலட்சம் உரூபா தண்டம் செலுத்துமாறு இவருக்கு ஆணையிட்டார். இவருடைய மாணவர்கள் அதனை அளிக்க முன் வந்தும், அப்பணத்தை அர்ச்சுனர் கட்ட மறுத்ததால்,

சகாங்கீர் இவரை இலாகூர்ச் சிறையிலடைத்துத் துன்புறுத்திக் கொன்றார்.

**அர்சர்** இந்தியாவை ஆண்ட பேரரசர்களுள் ஒருவர். இவர் கி.பி. 606 முதல் 647 வரை வட இந்தியாவை ஆண்டவர். இவருடைய ஆட்சியை அறிந்து கொள்ள உதவும் அடிப்படைச் சான்றுகளாக இரு நூல்கள் உள்ளன. அவை பாணர் என்பார் எழுதிய **'அர்ச சரிதம்'** என்னும் நூலும், யுவான் சுவாங் என்ற சீனப் பயணி எழுதிய 'சி-யூ-கி' என்னும் நூலுமாகும். இலக்கியச் சான்றுகளே சிறப்பாக உள்ளன. கல்வெட்டுகளும், அர்சரின் **(Harsha)** காலத்தில் வாழ்ந்தவர்கள் எழுதிவைத்தவைகளும் இவருடைய ஆட்சியை அறிந்து கொள்ள ஓரளவு பயன்படுகின்றன. இவர் கால நாணயங்கள் கிடைத்தில. திபெத்தில் உள்ள சீனக் குறிப்புகள் அர்சரின் இறுதிக்காலத்தை அறிய உதவுகின்றன.

அர்சரின் மரபினை நிலைநாட்டியவர் தானேசுவரத்தையாண்ட புசியபூதி என்பவராவார். அவர் ஒரு சைவர். அவர் மரபில் வந்த பிரபாகர வர்த்தனர் (கி.பி. 583–600) என்பாரே முதன்முதலாகத் தம்மை மகாராசாதிராசர் என்றும், பரம பட்டாரகர் என்றும் கூறிக்கொண்டார். அவர் பெரும் வீரர் என்பதை அர்ச சரிதம் விளக்குகிறது. அவருடைய தாயார் பெயர் மகாசேன குப்தா என்பதாகும். அவர் மனைவி




அர்சர் பேரரசு

யின் பெயர் யசோமதி. பிரபாகர வர்த்தனர் கி.பி. 605-ஆம் ஆண்டில் காலமானபோது, அவர்தம் மூத்த மகன் இராச்சிய வர்த்தனர் தம் 19-ஆம் வயதில் அரச ரானார். அவருடைய தங்கையின் பெயர் இராச்சிய சிரீ என்பதாகும் இராச்சிய வர்த்தனரின் தம்பியே அர்சர்.

இராச்சிய வர்த்தனர் மாளவத்தின் மீது படை யெடுத்து அதன் அரசரைக் கொன்றுவிட்டார். எனி னும் கி.பி. 606-ஆம் ஆண்டில் மாளவ அரசரின் நண்ப ரான சசாங்கர் என்பவரால் இராச்சிய வர்த்தனரும் கொல்லப்பட்டார். அப்போது அர்சருக்கு வயது 16.

அர்சர் கி.பி. 606-ஆம் ஆண்டில் அரசராக முடி சூட்டிக்கொண்டார். அவருடைய மைத்துனரையும், அண்ணனையும் கொலை செய்யக் காரணமானவர் களைத் தண்டித்துக் கணவனை இழந்த கைம்பெண் ணான தம் தங்கை இராச்சிய சிரீயையும் அர்சர் காப் பாற்றினார். பின்னர்த் தம் பகைவர்களைத் தோற் கடித்துக் கி.பி. 612-ஆம் ஆண்டிற்குள் பேரரசராக நிலைபெற்றார். தொடக்கத்தில் இவர் சைவராக இருந்து பின்னர்ப் புத்த சமயத்தைச் சார்ந்தாரெனி னும், அர்சர் தம் படை அளவைக் குறைக்கவில்லை என்பதை நினைவிற் கொள்ள வேண்டும். கி.பி. 606-இல் பேரரசராக முடிசூட்டிக் கொண்ட அர்சர், தம் பெயரில் 'அர்சர் ஆண்டு' என்னும் புதியதொரு ஆண் டினைத் தொடங்கினார். அர்சருக்கும் சாளுக்கிய மரபினைச் சார்ந்த இரண்டாம் புலிகேசிக்கும் நடை பெற்ற போரில் அர்சர் தோல்வியுற்றார். இதைச் சீனப் பயணி குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் புலிகேசி யின் அய்கொளே (Aihole) கல்வெட்டுச் சாசனமும் இதனைக் குறிப்பிட்டுள்ளது. இப்போர் நடைபெற்ற ஆண்டினைக் குறித்துத் திட்டவட்டமான முடிவு சொல்ல இயலவில்லை. கி.பி. 612 என்பார் சிலர்; கி.பி. 630 என்பார் வேறுசிலர்.

கி.பி. 635-ஆம் ஆண்டில் வல்லபியை ஆண்ட இரண்டாம் துருவசேனரை அர்சர் தோற்கடித்தார். எனினும் தோற்ற அவ்வரசனுக்குத் தம் மகளை மணம் செய்து கொடுத்தார்.

கி.பி. 643-இல் அர்சர் கஞ்சம் மாவட்டத்தின் மீது படையெடுத்தார். அதே ஆண்டில் அவர் யுவான் சுவாங்கைப் பாராட்டிச் சிறப்புச் செய்து விருது வழங்கினார். அவ்வாண்டில் அவரைக் கொல்ல நடை பெற்ற சூழ்ச்சியிலிருந்தும் தப்பினார். சீனாவிலிருந்து தூதுக் குழு ஒன்று அவரைக் காண அவ்வாண்டில் வந்தது. கி.பி. 646-இல் சீனாவிலிருந்து வந்த இரண் டாம் தூதுக்குழு இந்தியா வந்து சேருமுன் அர்சர் கி.பி. 647-இல் காலமானார்.

அர்சரின் பேரரசு குப்தர்களின் பேரரசினைவிடப் பரப்பில் பெரிது கிழக்கே பிரும்மபுத்திரா ஆற்றிலிருந்து மேற்கில் கத்தியவார் வரையிலும், வடக்கில் இமய மலைச் சாரலிலிருந்து தெற்கில் விந்தியமலை வரை யிலும் அர்சரின் பேரரசுப் பரவியிருந்தது. அதில் கலிங்கத்தைச் சேர்ந்த கஞ்சமும், குசராத்தைச் சேர்ந்த கட்சும் அடங்கியிருந்தன. இராசபுதனம், சிந்து, பஞ்சாபின் பெரும்பகுதி, நேபாளம் ஆகியவை இவருடைய பேரரசில் அடங்கவில்லை.

அர்சரின் முப்பாட்டனார் சைவர்; பிரபாகர வர்த்தனரும் அவருடைய தந்தையரான ஆதித்ய வர்த்தனரும் சூரியனை வழிபட்டவர்கள். இராச்சிய வர்த்தனரும், இராச்சிய சிரீயும் பௌத்தர்கள். தம் ஆட்சித் தொடக்கத்தில் அர்சர் சைவராகவே இருந் தார். பின்னர் இவர் புத்த சமயத்தைச் சார்ந்தார். தம்மாட்சியின் பிற்பகுதியில் அர்சர் உறுதியாகப் பௌத்த சமயப் பற்றுக் கொண்டவரானார் என்பதில் ஐயமில்லை. யுவான் சுவாங்கும் இதைத் தெளிவாகக் கூறியுள்ளார். பௌத்த சமயம் சார்ந்த அர்சர், அதில் ஈனயானத்தைப் பின்பற்றினார் என்றும், யுவான் சுவாங்குடன் தொடர்பு கொண்ட பின்னர் அவர் மகாயான பௌத்தர் ஆனார் என்றும் அறிஞர் கூறுகின்றனர்.

புத்த சமயத்தைப் பரப்ப, அர்சர் பல வழிகளை மேற்கொண்டார். கௌதம புத்தரின் நினைவுச் சின்னமாகக் காச்மீர மன்னரிடமிருந்து பெற்ற பல் ஒன்றைக் காக்கக் கோவில் கட்டினார். புலால் உண் ணும் பழக்கத்தைக் விட்டொழித்தார். கங்கையாற் றின் கரையில் ஆயிரக்கணக்கான தூபிகளைக் (Stupas) கட்டுவித்தார். பயணிகள் தங்கிச் செல் லும் சத்திரங்களைப் பேரரசின் பல பகுதிகளில் கட்டி னார். பௌத்தர்கள் புனிதமாகக் கருதிய இடங் களில் பௌத்த மடாலயங்கள் கட்டப்பட்டன. ஐந் தாண்டுகளுக்கொருமுறை மாநாடுகளைக் கூட்டுவித் துத் தாம் தொகுத்த பொருள்களைச் சமயக் கொடையாக நல்கினார். ஆண்டுக்கொருமுறை பௌத்த சமயத் துறவியர் அனைவரையும் ஒன்றாகக் கூட்டி, 21 நாள்களுக்கு அவர்களுக்குத் தேவையான பொருள்கள் அனைத்தையும் கொடுத்துதவினார். மடாலயங்களையும், வழிபாட்டிடங்களையும் அழகு படுத்தினார். பௌத்த சமயத்தில் புதிதாகச் சேர்ந்த வர்களை ஒன்றுகூட்டி, ஆய்வு நடத்தி, அவரவர் தகுதிக்கும் திறமைக்குமேற்பப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார். தவறிழைத்தோர் தண்டிக்கப் பெற்ற னர். ஒழுக்கத்தில் வீழ்ச்சியுற்றவர்கள் நாடு கடத்தப் பெற்றனர். அரண்மனையில் நாள்தோறும் 1,000 புத்தத் துறவிகளும், 500 அந்தணர்களும் அறுசுவை உணவுண்டனர்.

பேரரசர் அர்சர் நாள்தோறும் மூன்றிலொரு பங்கு நேரத்தை அரசாங்கப் பணிக்கும், ஏனைய நேரத்தைச் சமயப் பணிக்கும் செலவிட்டார்.

அர்சர் யுவான் சுவாங்கை வங்காளத்தில் சந்தித்தார். அப்போது அவர் கஞ்சம் படையெடுப்பிலிருந்து திரும்பி வந்தார். யுவான் சுவாங்கைப் போற்றிப் பாராட்டச் சமயப் பேரவை ஒன்றைக் கூட்ட அர்சர் முடிவு செய்தார். அதனைக் கன்னோசி மாநாடென்பர். அதில் கலந்து கொள்ள இருபது மன்னர்களும், நாலந்தாப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆயிரம் அறிஞர் பெருமக்களும், ஈனயான மகாயான பௌத்தர்கள் மூவாயிரவரும், வந்திருந்தனர். கண்ணைக் கவரும் பெரும் ஊர்வலம் நடத்தப் பெற்றுப் புத்தரின் சிலை ஒன்று நாட்டப்பெற்றது. யுவான் சுவாங் மகாயான புத்த சமயக் கொள்கைகளை எடுத்துரைத்தார். அதனை அழகியதோர் ஆய்வுக் கட்டுரையாகவும் கொள்ளலாம். அவரை எதிர்த்துப் பேசுவார் ஒருவருமின்றி, அவர் கூறிய கருத்துகள் அவையோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஐந்து நாள்களுக்குப் பின்னர் யுவான் சுவாங்கைக் கொல்ல மேற்கொள்ளப்பட்ட சதித் திட்டம் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. அர்சர் யுவான்சுவாங்கிற்கு விலை மதிப்பற்ற பல பொருள்களைப் பரிசாக வழங்கிப் பாராட்டினார். ஆனால் அவர் அவற்றை ஏற்க மறுத்துவிட்டார். மாநாட்டின் நிறைவு நாளன்று யுவான் சுவாங் யானை மீதமர்த்தப்பட்டு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டார். அர்சர் மகாயான புத்த சமயத்தை அரியணையேற்றினார் எனில் அது மிகையாகாது.

அர்சரின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்த மற்றொரு சிறப்பு நிகழ்ச்சி பிரயாகையில் (அலகாபாத்) நடைபெற்ற ஆறாம் ஐந்தாண்டு மாநாடாகும். கங்கையும், யமுனையும், சரசுவதியும் கலக்கும் முக்கூடல் சந்திப்பில் நடைபெற்ற இவ்விழாவைக் கும்பமேளாவினோடு ஒப்பிடலாம். புத்தர், சூரியன், சிவன் போன்ற தெய்வங்கள் போற்றப்பட்டன. ஐந்து இலட்சம் மக்கள் நன்கொடைகள் பெற்றனர்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் அனைத்திலும் பங்கு கொண்டு விட்டு யுவான் சுவாங் நாடு திரும்பினார். நூற்றுக் கணக்கான பௌத்த சமய நூல்களையும், எண்ணற்ற புத்தரின் திருவுருவச் சிலைகளையும், சமய நினைவுச் சின்னங்களையும் உடன் கொண்டு சென்றார்.

அர்சரின் நிருவாகம் பெரும்பாலும் குப்தர் கால நிருவாகத்தை ஒத்திருந்தது. யுவான் சுவாங்கின் குறிப்புகளிலிருந்து அவற்றை விரிவாக அறியலாம். அர்சர் ஓரிடத்தில் தொடர்ந்து தங்காமல் வெவ்வேறு இடங்களில் தங்கினார். நாடு முழுதும் சுற்றி வந்து நாட்டைப் பார்வையிட்டார். போர்த்திறன் பெற்ற அர்சர், நிருவாகத்திலும் வல்லுநராக விளங்கினார்.

அரசு மக்களின் நல்வாழ்வுக்கான பல முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தியது என்பது யுவான் சுவாங்கின் கருத்து. அரசு மக்களிடம் பெருந்தன்மையாக நடந்து கொண்டது. குடும்பங்கள் பதிவு செய்யப்படவில்லை. கட்டாயக் கடன்களைத் தனிப்பட்டவர் கொடுக்கத் தேவையில்லை. அரசுக்குச் சொந்தமான நில வருமானத்தின் ஒருபகுதி அரசாங்கச் செலவினங்களுக்கும், வழிபாட்டிற்கும், மற்றொரு பகுதி பொதுப் பணியில் ஈடுபட்டுள்ள பெரியவர்களுக்கும், மூன்றாம் பகுதி உயர்ந்த அறிவாளர்களுக்கும், எஞ்சிய பகுதி சமயச்சார்பு கொண்ட குழுக்களுக்குமாகப் பயன்படுத்தப்பட்டன. வரிச்சுமை குறைவாக இருந்தது. மக்கள் மரபாக வந்த தத்தம் தொழில்களையே செய்து வாழ்ந்தனர்; ஆறில் ஒரு பங்கு கடமை செலுத்தினர்.

கொடுங்குற்றம் புரிந்தோர்க்குக் கடுந்தண்டனை விதிக்கப்பட்டது. உடலுறுப்புகளை வெட்டித் தண்டனை வழங்கும் வழக்கம் நடைமுறையிலிருந்தது.

படை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப் பெற்றிருந்தது. அவை காலாட்படை, குதிரைப்படை, யானைப் படை, தேர்ப்படை என்பனவாம். பொதுவான ஆவணங்கள் கண்காணிக்கப்பட்டன.

பொருளாதார நிலை: வணிகக் குழுக்கள் செயற்பட்டன. நகரங்கள் திட்டமிடப்பெற்றுக் கட்டப்பெற்றன. பாடலிபுத்திரம் நலியத் தொடங்கியிருந்தது. தானேசுவரம், மதுரா, கன்னோசி, அலகாபாத்து, அயோத்தி, வாரணாசி, தாம்லுக் போன்றவை பெரு நகரங்கள்; செல்வச் செழிப்பானவை. பொன், வெள்ளி நாணயங்கள் செலாவணியில் இருந்தன. உள்நாட்டு வாணிகம் செழித்தோங்கியது. இந்தியர்கள் தென் கிழக்கு ஆசியாவின் பல இடங்களுக்குங் குடியேறிக் குடியேற்றங்களை அமைத்து, இந்தியப் பண்பாட்டையும், வாணிகத்தையும் பரப்பினார்கள்.

சமூக நிலை: நால்வகைச் சாதிமுறை நிலைத்திருந்ததைச் சீனப் பயணி குறிப்பிட்டுள்ளார். அவர் வைசியர்களை வணிகர்கள் என்றும், சூத்திரர்களை உழவர்கள் என்றும் சுட்டுகிறார். தீண்டாமை நீடித்திருந்தது. கசாப்புக் கடைக்காரர்கள், மீனவர்கள், பொதுமேடைகளில் ஆடிப்பாடுவோர், தூக்கிலிடுவோர், கழிவறைத் துப்புரவாளர்கள் போன்றோர் தீண்டத்தகாதவர்கள். அவர்கள் ஊருக்கு வெளியே வாழ்ந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சாதிகளிடையே பல வகைக் கலப்புகள் ஏற்பட்டன. கைம்பெண் மறுமணம் விலக்கப்பட்டது. அந்தணரும், சத்திரியரும் எளிமையாக வாழ்ந்தனர். அரசர்கள், பிரபுக்கள், செல்வர்கள் ஆடம்பரமாகக் காலம் கழித்தார்கள். மக்கள் நேர்மையாகவும், ஒழுக்கமுள்ளவர்களாகவும் வாழ்ந்தார்கள். அல்வழிச் செல்வோர் அருநரகடையும் அச்சம் குடிகொண்டிருந்தது.

இறந்தவர் உடலைப் புதைத்தல், காட்டில் விடுதல் போன்றவை அவர்களின் ஈமச்சடங்குகள்.

அர்சரே தலைசிறந்த எழுத்தாளராவார். அவர் வடமொழியில் இரத்தினாவளி, பிரியதரிசிகா, நாகானந்தம் என்னும் மூன்று நாடகங்களை எழுதியுள்ளார். பாணர் அர்ச சரிதத்துடன், காதம்பரி என்னும் காதல் கதையையும் வடித்துள்ளார். சுபந்து என்பாரின் வாசவதத்தை என்னும் நூலை விட இது உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. பார்வதி பரிணயம், சண்டி சதகம் என்னும் நூல்களும் பாணர் எழுதியவையே என்பாருமுளர். அவருடைய உறவினர் மயூரர் என்பார் அட்டகம் ஒன்றை எழுதியுள்ளார். அது காம சாத்திரத்தை விடச் சிறப்பானதெனக் கருதப்படுகிறது. மாதங்க திவாகர் என்பார் பிறிதொரு அரண்மனைக் கவிஞர்.

புத்த, சமய நூல்களும் இக்காலத்தில் எழுதப்பெற்றன. அர்சர் வாழ்ந்த காலத்தில் மகாயான புத்த சமயத்தைப் போதிக்க நாலந்தாப் பல்கலைக் கழகமும், ஈனயான புத்தசமயத்தைக் கற்பிக்க வல்லபி பல்கலைக் கழகமும் சிறப்பாகப் பணியாற்றின.

அர்சர் சிறந்த மன்னராகப் பணியாற்றிக் கி.பி. 647-இல் காலமானார்.

துணை நூல்கள்:

**Sathyanathiar, R**, 'History of India", Vol. I.

**Majumdar, R.C., and others**, "An Advanced History of India", Macmillan, 1973.

**Mukerji, R.K.**, "Ancient India".

**அர்சுமத் பானு பேகம்** சாசகானுடைய (Shah Jahan) அன்புத் துணைவியார். இவர் நினைவாகக் கட்டப்பெற்றது தாசுமகால் சின்னம். மொகலாயப் பேரரசி நூர்சகானுடைய அண்ணன், ஆசப்கானின் மகள். அர்சுமத் பானுபேகம் கி.பி. 1592-இல் பிறந்தாள். நூர்சகானின் தூண்டுதலால் 16 வயதான அர்சுமத் பானுபேகத்திற்கும் 20 வயதான இளவரசன் குர்ரத்திற்கும் (சாசகான்) கி.பி. 1612 ஏப்பிரலில் திருமணம் நடைபெற்றது. பலதார மணப்பழக்கம் நிரம்பிய மொகலாய அரண்மனையில், இந்தத் திருமணம் வெற்றி மிக்கதாக விளங்கியது. பேரழகுமிக்க அர்சுமத் பானுபேகம், தம் கணவரிடம் பேரன்பு கொண்டிருந்தார். சகாங்கீருக்கு எதிராக இளவரசன் சாசகான் கிளர்ச்சி செய்து தோற்ற பின் அவருடன் சேர்ந்து எல்லாத் துன்பங்களையும் அனுபவித்தார். கி.பி. 1627 நவம்பர் மாதத்தில் சகாங்கீர் இறந்தபின், இவர்தம் தந்தை ஆசப்கானின் முயற்சிகளால்தான் கி.பி. 1628-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் சாசகான் மொகலாயப் பேரரசராக முடிந்தது. மாலிகா-இ- சமானி என்ற பட்டப் பெயருடன் அர்சுமத் பானு பேகம் பட்டத்து அரசியானார். சாசகான் இவளுக்கு ஆக்ராவில் அரண்மனை ஒன்றை அமைத்துக் கொடுத்தார். சொர்க்கத்தில் உள்ளது போன்ற மாளிகை என்று, அதனைச் சாசகான் நாமா வருணிக்கிறது. அர்சுமத் உயர்கல்வி, ஒழுக்கநெறி, எளியோருக்கு உதவும் கனிந்த உள்ளம் ஆகியவற்றைக் கொண்டிருந்தார். இசுலாமிய சமயத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட அர்சுமத் இறைவழிபாடு, நோன்பு ஆகியவற்றைத் தவறாமல் பின்பற்றி வந்தார். சாசகான் கிறித்தவர்கள், இந்துக்கள் ஆகியோரிடம் கடுமையாக நடந்து கொண்டதற்கு இவரும் ஓரளவு காரணமாவார். மும்தாசுமகால் (அரண்மனை ஆபரணம்) என்று அன்புடன் அழைக்கப்பெற்றார். ஏறத்தாழ 19 ஆண்டுகள் இவர்கள் நடத்திய இன்பமான இல்லற வாழ்வின் பலனாக 6 பெண் குழந்தைகளும், 8 ஆண் குழந்தைகளும் பிறந்தனர். அவர்களுள் எழுவர் குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டனர். மற்றவர்களின் பெயர்கள் சகானரா, தாரா சூகா, சூசா, இரோசனாரா, அவுரங்கசீப், மூரத்பக்சி, குத்சியா என்பனவாகும். அர்சுமத் பானுபேகம் பதினான்காவது குழந்தைப் பேற்றின்போது தம் 39-ஆம் வயதில், கி.பி. 1631 சூன் 7-ஆம் நாள் பர்கான்பூரில் இறந்துவிட்டார். அருகிலிருந்த சைனாபாத்துத் தோட்டத்தில் இவருடைய உடல் புதைக்கப்பட்டது. ஆறு மாதங்களுக்குப் பின் தக்காணத்திலிருந்து திரும்பிய சாசகான் இவள் உடலை ஆக்ராவிற்குக் கொண்டு சென்று, அங்கிருந்த தோட்டத்தில் புதைத்தார். இவருடைய கல்லறையின் மீதுதான் உலக விந்தைகளுள் ஒன்றான தாசுமகாலை, கி.பி. 1632-இல் சாசகான் கட்டத் தொடங்கி, கி.பி 1653-இல் முடித்தார். இவள் இறந்தபின் 35 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த சாசகான், அர்சுமத்தின் மீது கொண்டிருந்த அன்பின் அடையாளமாக மறுமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்து வந்தார். அ.இரா.

**அர்த்த சாத்திரம் (பொருள் நூல்)**: முடியாட்சி நிலவிய பண்டைய இந்தியாவில் மன்னர்கள் நேரிய முறையில் ஆட்சி செய்வதற்கும், மக்களை நெறிப்படுத்திக் காப்பதற்கும் அவர்களுக்கு அதிகாரங்கள் பல இருந்தன. அரசியலறிஞர், சமயக் கணக்கர், புலவர் எனப் பல திறத்தவர் அரசனுக்குரிய அதிகாரங்களை வகுத்தும் தொகுத்தும் எழுதியுள்ளனர். திருவள்ளுவர் அரசியல் 25 அதிகாரங்களில் மன்னனுக்குரிய உரிமைகளையும் கடமைகளையும் கூறி, அமைச்சியல், அரணியல், கூழியல், படையியல், நட்பியல், குடியியல் ஆகிய ஆறு இயல்களில் அவனுடைய அங்கங்கள் பற்றி விவரித்துள்ளார். இத்தகைய பொருள்

நூல்களை விரிவாகவும் விளக்கமாகவும் வடமொழியிலும் பலர் இயற்றியுள்ளனர். அவற்றுள் சிறந்ததாகவும் செறிவுடையதாகவும் இன்றுவரை கொள்ளப்படுவது கௌடலியரின் அர்த்த சாத்திரமேயாகும். அரசனின் மேன்மை, அவனது அதிகாரம், ஏனைய நாடுகளை அவன் கைக்கொள்ள வேண்டிய வழிமுறைகள் ஆகியவற்றைக் கௌடலியர் விரிவாகக் கூறுகிறார். அரசியலை, அரசன், அமைச்சரவை, நாடு, அரண், படை, செல்வம், நட்பு, பகை ஆகிய எட்டு உறுப்புகளாகப் பகுக்கிறார். இவ்வெட்டு உறுப்புகளிலும் பொதுவாக அரசியல் தத்துவம், பொருளியல், அரச தந்திரம், வெளி நாட்டுறவு ஆகியன சிறப்புற மிளிர்கின்றன.

**அர்த்த சாத்திர வரலாறு:** வட மொழியில் பல அர்த்த சாத்திரங்கள் பல காலங்களில் பலரால் இயற்றப்பெற்றிருக்கின்றன. கௌடலியரே பல பொருள் நூலாசிரியரைத் தம் நூலில் குறித்துள்ளார். மாநவர் (மநு), பார்கசுபத்தியர், ஔசநசர், பாரத்துவாசர், விசாலாக்சர், பராசரர், பிசுநர், கௌணபதந்தர், வாதவியாதி, பாகுதந்தீ புத்திரர் ஆகிய பொருள் நூல் வல்லுநர் பதின்மரைக் கௌடலியர் தம் நூலில் சுட்டியுள்ளார். தேவர்களின் வாழ்க்கை முறையை ஒட்டிப் பொருள்நூல் செய்த தேவ குருவாகிய வியாழனின் கொள்கையினையும், அசுரர்களின் வாழ்க்கை முறையை ஒட்டிப் பொருள் நூல் செய்த அசுர குருவாகிய வெள்ளியின் கொள்கையினையும், இவ்விருவருக்கும் பின் வந்தோரின் கொள்கையினையும் தொகுத்தும் பகுத்தும், அறிந்தும் ஆய்ந்தும் அர்த்த சாத்திரத்தை ஆக்கியிருப்பதாகக் கௌடலியர் தம் ஆசிரிய வணக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். எனவே, கௌடலியரின் அர்த்த சாத்திரம், அதற்கு முன் வடமொழியில் அரசியல் குறித்து வழங்கி வந்த கருத்துகளின் நெறிமுறையான தொகுப்பு என்பதே பொருந்தும். வைதிகக் கோட்பாடுகள் பல இந்நூலின் அடிக்கருத்தாகவும் ஆக்கத் துணையாகவும் விளங்குகின்றன. இந்நூலை அரச நீதி அல்லது தண்ட நீதி என்றும் கூறுவர்.

**நூலாசிரியர்:** இந்நூலாசிரியர் கௌடலியருக்குச் சாணக்கியர், விட்டுணு குப்தர் ஆகிய பெயர்களும் உண்டு. காமந்தகர் தமது நீதிசாத்திரத்தில் இம்மூன்று பெயர்களையும் காரணப் பெயர்களாகக் குறிப்பிடுகிறார். இவர் வட நாட்டில் தக்கசீலத்தில் பிறந்தவர் என்றும், தமிழ் நாட்டில் பிறந்தவர் என்றும் இரு வேறு கருத்துகளை நூல்கள் குறிப்பிடுகின்றன. சந்திரகுப்த மௌரியனிடம் (கி.மு. 325–297) இவர் அமைச்சராக இருந்தார் என்று கருதுவதால் அவன் காலத்திலேயே இந்நூல் எழுதப் பெற்றிருக்கலாம் என்பர். இதனால் கௌடலியரின் காலம் கி.மு. 4–ஆம் நூற்றாண்டு என்று வரையறுப்பர். ஆனால், சந்திரகுப்தன் காலத்தில் சாணக்கியர் என்ற பொருள் நூலாசிரியரோ, அரசியல் வல்லுநரோ எவரும் இருந்ததில்லையென்றும், சந்திரகுப்தனைப் பற்றியோ அவனது அரசியலைப் பற்றியோ கௌடலியர் தம் நூலில் எதுவும் கூறவில்லையென்றும், இதனால், அப்பேரரசன் காலத்தில் இவர் வாழ்ந்திருக்க முடியாது என்றும் விண்டர் நிட்சு, சாலி, கீத் ஆகிய மேனாட்டு ஆய்வாளர் கருதுகின்றனர். கி.மு. முதல் நூற்றாண்டில் இயற்றப்பெற்ற ‘சுச்சுருத சங்கிதை’ நூல்களுக்குப்பின் இந்நூல் இயற்றப் பெற்றிருக்கலாம் என்பர். ‘யாக்ஞவல்கிய சுமிருதி’யை அர்த்த சாத்திரம் பெரிதும் தழுவியிருத்தலைக் கொண்டும், நடை எளிமையைக் கொண்டும், இதன் காலத்தைக் கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்குக் கொண்டு வருவர் சிலர்.

**நூல் அமைப்பு:** இந்நூல் அதிகரணம், பிரகரணம், அத்தியாயம் ஆகிய மூவகைப் பிரிவினைத் தன்னுட் கொண்டு திகழ்கிறது. ஒன்றோ சிலவோ அமைந்த பிரகரணங்களைத் தன்னுட் கொண்டது அத்தியாயம். பிரகரணங்கள், அத்தியாயங்கள் ஆகியவற்றில் சில வற்றையோ பலவற்றையோ தன்னுட் கொண்டது அதிகரணமாகும். பத்துக் குறளைக் கொண்டது ஓர் அதிகாரம் என்றும், சில பல அதிகாரங்களைக் கொண்டது ஓர் இயல் என்றும், இவையிரண்டையும் தன்னுட் கொண்டது அறத்துப்பால் அல்லது பொருட்பால் அல்லது காமத்துப்பால் என்றும் திருக்குறள் அமைந்திருப்பதுபோல் இந்நூலின் அமைப்புமுள்ளது. 15 அதிகரணங்களாகச் செறிந்தும், 150 அத்தியாயங்களாக விரிந்தும், 180 பிரகரணங்களாகப் பரந்தும் மொத்தம் 6000 சுலோகங்களில் அர்த்த சாத்திரம் அமைந்துள்ளது. இந்நூலின் முதல் அத்தியாயம் நூற் பொருளைச் சுட்டிக்காட்டும் பதிகம்போல் அமைந்துள்ளது.

பயிற்சி பகர்தல், தொழில்தலைவர் செயல்முறை, அறநிலையாட்சி, சிறுபகை களைதல், வஞ்சித்து ஒறுத்தல், மண்டல யோனி, அறுவகைக் குணங்கள், வீதனம் விளம்பல், போர்ச்செலவு மேற்கொள்வோன் செயல், போர் நிகழ்ச்சி, குழுஉச் செயல், ஆற்றலிலான் செயல், பகையரண் எய்தும் வழி, மறைவுச் செயல், தந்திரவுத்தி ஆகிய பதினைந்து பெரும் பிரிவில் அரசியல் நுட்பங்களும் நெறிகளும் விளக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் அரசியல் நெறிகளாய அரசு, அரசமைத்தல், நாடமைத்தல், அமைச்சரை அமைத்தல், படையமைத்தல், ஒற்று, தூது, வழக்குரை வரைதல், இறைப்பொருள் தொகுக்கும் நெறி, வணிகம், தண்ட விதிகள், போர் புரிதல், சந்து செய்தல் ஆகியவற்றை விளக்குகின்றன. அரசியலை நடத்துவதற்கும், அதனை நிலை நிறுத்துதற்கும் ஓர் அரசன் எத்தகைய வழிமுறைகளையும் கையாளலாம் என்

பது கௌடலியரின் அர்த்த சாத்திரத்தில் தொனிப் பதை அறியலாம். 'இந்நூல் இந்தியாவிற்கு மட்டு மன்றி உலகம் முழுமைக்கும் நிருவாகத்துறைக் கலை யினையும், அரசியல் சூழ்ச்சித் திறன்களையும் சுட்டிக் காட்டும் மிக அழகான கையேடு' என்று கூறுகிறார் பிளிட் என்னும் அறிஞர். பிளேட்டோ, அரிசு டாட்டில், மற்றும் ஏனைய மேனாட்டு அறிஞர்களின் நூல்களுடன் இதனை ஒப்பிட்டுக் கூறலாம்.

இந்நூலின் சிறப்பு, பல காலம் மக்களாலும், அர சியல் துறை வல்லுநராலும் அறியப்படாமலேயே இருந்தது. இந்நூற் பொருள் முற்றிலும் மறக்கப்பட்ட சூழ்நிலையில் கி.பி. 1909-ஆம் ஆண்டு மீண்டும் பதிப் பிக்கப் பெற்றுப் புத்துயிர் ஊட்டப் பெற்றது. பல இடங்களில், குறிப்பாகத் தமிழ் நாட்டில் திருப்பாப் புலியூர், இடப்பள்ளி போன்ற இடங்களில் கிடைத்த இந்நூற்படிகளை வேறு படிகள் பலவற்றோடு ஒப் பிட்டுச் செவ்விய வடிவில் இந்நூலைப் பதிப்பித்துள் ளனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயி லாக இந்நூல் தமிழில் வெளிவந்துள்ளது.

**அர்த்தநாரீசுவரர்** பாதிப் பெண் உருவம் கொண்ட சிவபெருமான். இவர் தான் ஒரு பாதி யாகவும் பார்வதி மற்றொரு பாதியாகவும் இலங்கு பவர். ஆணும் பெண்ணும் இணைதல் என்னும் சமய உண்மையைக் கூற அர்த்தநாரீசுவரராகக் காட்சி யளிக்கிறார். அர்த்தநாரீசுவரர் என்னும் வடசொல் லுக்கு ஆண் பாதி, பெண் பாதியுமான இறைவன் என்பது பொருள். புராணங்கள் அர்த்தநாரீசுவரர் தோற்றம் பற்றிக் கூறுகின்றன. உலகில் மானிட இனங்களைத் தோற்றுவிக்கப் படைப்புக் கடவுளான பிரமன், பிரசாபதிகள் என்னும் ஆண் இனத்தைத் தோற்றுவித்து, மானிட இனங்களை உலகில் ஏற் படுத்தும்படி கட்டளையிட்டான். அவர்களால் அக் கட்டளையை நிறைவேற்ற முடியவில்லை. இதனால் பெரிதும் குழப்பமடைந்த பிரமன், சிவனை வழிபட்டு இனப்பெருக்கம் ஏற்பட வழிவகுக்கும்படி அவரிடம் வேண்டினான். சிவன் அர்த்தநாரீசுவரர் உருவம் கொண்டு பிரமனுக்குக் காட்சியளித்தார். அர்த்தநாரீ சுவரர் உருவத்தைக் கண்ட பிரமன் தன் தவற்றினை உணர்ந்து, இனப்பெருக்கம் உலகில் தோன்ற, பெண் களும் இன்றியமையாதவர்கள் என்பதையும், ஆணும் பெண்ணும் இணைந்தே அதனைச் செய்தல் முடியும் என்னும் உண்மையினையும் அறிந்தான்.


அர்த்தநாரீசுவரர்

அர்த்தநாரீசுவரர் பற்றி மற்றொரு கதையும் நிலவுகிறது. பிருங்கி முனிவர் என்பவர் சிவனிடம் மிகுந்த பத்தி பூண்டவர். சிவன் கைலாய மலையில் தம் துணைவியான பார்வதியுடன் அமர்ந்திருக்கை யில் பிருங்கி முனிவர் சிவனை மட்டும் நாடோறும் வலம் வந்து வணங்கி வந்தார். இவ்வாறு சிவனை மட்டும் வலம் வந்து வழிபட்டுச் சென்ற பிருங்கி முனிவரின் மீது பார்வதி சினங் கொண்டு, பிருங்கி யின் உடலில் தசைகளும் குருதியும் அற்றுப் போகும் படி சாபமிட்டாள். இதனால் பிருங்கி முனிவர் ஓர் எலும்புக்கூடு போலானார். நிற்கவும் முடியாமல் இருந்த பிருங்கியின் நிலையினைக் கண்ட சிவன் மன மிரங்கி, அவருக்கு மூன்றாவது காலை வழங்கி னார். இதனால் பெருமகிழ்ச்சியுற்ற பிருங்கி முனிவர் சிவன் தம்பால் காட்டிய பரிவை நினைத்து, மூன்று கால்களால் நடனம் ஆடினார். மேலும் பிருங்கி முனி வர் தமது வழிபாட்டு நிலையில் சிறிதும் மாறாது பார்வதியை வணங்காமல் சிவனை மட்டும் வழிபட்டு வந்தார். இதனால் மேலும் சினங் கொண்ட பார்வதி சிவனைக் குறித்து நோன்பு நோற்று, அவரிடமிருந்து ஒரு வரத்தினைப் பெற்றாள். அவ்வரத்தின்படி சிவ னுடைய இடப்பாகம் முழுவதிலும் பார்வதி இடம் பெற்றதால், சிவனும் பார்வதியும் இணைந்த நிலை ஏற்பட்டது. இதனைக் கண்ட பிருங்கி முனிவர் மனம் தளராது சிவனை மட்டும் வழிபட ஒரு வண்டுருவம் எடுத்து, சிவன் பார்வதி இணைந்த உடலினைத் துளைத்து வலம் வந்து, சிவனை மட்டும் வணங்கிச் சென்றார். இம்முனிவரின் சிவபக்தியைக் கண்ட பார் வதி அவரைப் பாராட்டி அவருக்கு அருள் செய்தாள். இவ்விணைந்த உருவமே அர்த்தநாரீசுவரர் எனப் பட்டது.

சிற்பங்களில் அர்த்தநாரீசுவரரின் வலப்பாகம் சிவ னுடைய சிறப்புக் கூறுகளைப் பெற்றும், இடப்பாகம் பார்வதியின் சிறப்புக் கூறுகளைப் பெற்றும் இலங் கும். பாதி ஆணும் பாதி பெண்ணும் இணைந்தது போன்று இச்சிற்பங்கள் காணப்படும். வலப்பக்க ஆண்தலையில் சடை முடியும் பிறைமதியும், வலக்

காதில் மகரகுண்டலம் அல்லது பாம்புக் குண்டலமும் காட்சியளிக்கும். நெற்றிக் கண்ணில் பாதி, அர்த்தநாரீசுவரரின் வலப்பக்க நெற்றியில் காணப்படும். வலப்பக்கம் ஆணின் மார்பினைக் கொண்டு விளங்கும். வலப்பக்கம் முழுவதும் திருநீறு பூசப்பட்டு, இடை புலித்தோலாடையுடன் விளங்கும். பாம்பாலான பூணூல் வலப்பக்க மார்பில் காணப்படும். வலப்பக்கம் முழுமையும் ஆண்மைக்கே உரித்தான அமைப்புகளைப் பெற்று அச்சத்தைத் தருவதைப் போன்று காணப்படும். அர்த்தநாரீசுவரர் வலக்காலைச் சிறிது வளைத்து நின்றுகொண்டிருப்பார்.

இடப்பாகம் பெண்மைக்கு உரித்தான அழகினையும் பொலிவினையும் பெற்று, பார்வதியின் சிறப்புக் கூறுகளைக் கொண்டிருக்கும். இப்பக்கத்துத் தலையில் கரண்ட மகுடமும், நன்றாகச் சீவப்பட்டு ஒரு கயிற்றினால் கட்டப்பட்ட தலைமுடியும் காட்சியளிக்கும். இடப்பக்கக் காதுகளில் 'வாலிகா' என்னும் குண்டலம் இருக்கும். இடக்கண்ணில் மை பூசப்பட்டிருக்கும். இடப்பக்க நெற்றியில் பொட்டிடப்பட்டிருக்கும். இடப்பக்கக் கைகளில் பெண்களணியும் வளையல்களும் விளங்கும். இடப்பக்கம் பெண்ணின் உருண்டு திரண்ட பருத்த மார்பினைக் கொண்டு விளங்கும். இடப்பக்கக் கழுத்தில் பெண்கள் அணியும் கழுத்தணிகள் இருக்கும். பெண்கள் அணியும் வெண்மையான ஆடை இடப்பக்க இடையில் திகழும். இடப்பக்கக் கணுக்கால்சிலம்புடனும் பாதம் மருதாணியிட்ட சிவப்புடனும் காட்சியளிக்கும். பெண்மை உறுப்புகளைப் பெற்ற இடப்பக்கம் முழுமையும், கருநிறம் அல்லது கிளிப்பச்சை நிறங்கொண்டு விளங்கும். அர்த்தநாரீசுவரருக்கு அருகில் நந்தி காணப்படும்.

அர்த்தநாரீசுவரரின் சிற்பங்கள் நான்கு, மூன்று அல்லது இரண்டு கைகளைப் பெற்றுக் காணப்படுகின்றன. நான்கு கைகள் உள்ள அர்த்தநாரீசுவரரின் வலக் கைகளுள் ஒன்று மழு அல்லது சூலத்தையும், மற்றொன்று வரத முத்திரை அல்லது அபய முத்திரையையும் கொண்டிருக்கும். இடப்பக்கக் கைகளுள் ஒன்று சிறிது வளைந்து சென்று நந்தியின் தலையினைத் தொட்டுக் கொண்டிருக்கும். மற்றொரு கை காடக முத்திரையுடன் நீலோற்பலம் எனும் மலரினைப் பெற்றிருக்கும். நான்கு கைகளுடைய அர்த்தநாரீசுவரரின் சிற்பம் பாதாமியில் உள்ள குடைவறைக் கோயிலிலும் மாமல்லபுரத்தில் உள்ள தருமராசா இரதக்கோயிலிலும் உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் காணப்படும் அர்த்தநாரீசுவரரின் வெண்கலச்சிலை, நான்கு கைகளைக் கொண்டது.

மூன்று கைகள் உள்ள அர்த்தநாரீசுவரரின் இரண்டு கைகள் வலப்பக்கமும், ஒரு கை இடப்பக்கமும் காணப்படும். வலப்பக்கக் கைகளில் சூலமும், அட்சமாலையும், இடப்பக்கக் கையில் மலர் அல்லது கண்ணாடி அல்லது கிளியும் இருக்கும். கும்பகோணத்திலுள்ள நாகேசுவர சுவாமி கோயிலின் அர்த்தநாரீசுவரரின் சிற்பமும், காஞ்சிக் கைலாசநாதர் கோயிலிலுள்ள அர்த்தநாரீசுவரரின் சிற்பமும் மூன்று கைகளையுடைய சிற்பங்களாகும்.

இரு கைகளுடனும் அர்த்தநாரீசுவரர் காணப்படுவார். அவ் உருவச் சிலையின் வலப்பக்கக் கை வரத முத்திரை அல்லது கபாலம் என்னும் மண்டை ஓட்டைக் கொண்டு விளங்கும். இடப்பக்கக் கை, கீழ் நோக்கி வளைந்து நந்தியின் தலையினைத் தொடுவது போல் அமைந்திருக்கும்.

மூன்று தலைகளையும், எட்டுக் கைகளையும் கொண்ட அர்த்தநாரீசுவரரின் உருவம் பாதாமியில் உள்ள கற்பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

துணை நூல்கள் :

**Gopinatha Rao, T.A.**, "Elements of Hindu Iconography", Vol. II – Part I, Indological Book House, Varanasi, 1971.

**Gupte, R.S.**, "Iconography of the Hindu & Buddhists and Jains", Taraporevala Sons & Co., PVT, Ltd, Bombay, 1980.

**அர்தயாள்** (**கி.பி. 1887–1938**) என்பார் தலைசிறந்ததேசபக்தரும், புரட்சிவாதியுமாவார். கி.பி.1887-ஆம் ஆண்டில் தில்லி மாநகரில் அர்தயாள் (Har Dayal) பிறந்தார். இவர் இலாகூரிலிருந்த பஞ்சாப் பல்கலைக் கழகத்திலும், ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி கற்றார். இவருடைய புரட்சிக் கருத்துகளை ஏற்றுக்கொள்ளாத ஆங்கில அரசு இவரைக் கி.பி. 1908-ஆம் ஆண்டில் சிறைப்படுத்த விரும்பியது. ஆனால் இவர் சிறைப்படாமல் தப்பியோடி, மேற்கிந்



அர்தயாள்

தியத்தீவுக்கூட்டத்திலிருந்த மார்ட்டிநிக் (Martinique) என்னும் தீவில் தஞ்சம் புகுந்தார். அங்கிருந்து அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு இவர் ' புரட்சி ' (Ghadar-Revolution) என்னும் செய்தித்தாளை வெளியிட்டார். ஆங்கில வல்லாட்சிக் கெதிராக அமெரிக்க ஐக்கிய நாடு, செருமனி போன்ற நாடுகளின் உதவியைப் பெற இருமுறை அரும்பாடு பட்டார். ஆனால் இவர் இருமுறையும் தோல்வி கண்டார். 1938–ஆம் ஆண்டில் ஆங்கில அரசு இவரை இந்தியாவுக்குத் திரும்ப அனுமதித்தது. மீண்டும் இவர் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு 1938–இல் இவர் காலமானார்.

**அர்துணா** (Arthuna) இராசசுதான் மாநிலத்தில் 'பானசுவாரா' நகரத்திற்கு மேற்கே 39 கி.மீ. தொலைவில் உள்ள சிற்றூர். இவ்வூரின் பழைய பெயர் 'உத்தூணகா' என்பதாகும். தம்பரசிம்மன் என்ற அரசன் கி.பி.9-ஆம் நூற்றாண்டில் இந்நகரைத் தனது தலைநகரமாக்கிக் கொண்டு ஆட்சி செய்தான். கி.பி.11, 12– ஆம் நூற்றாண்டுகளில் இவ்வூர், தாரா நகரில் அரசாண்ட பரமார அரசர்களின் கீழ் ஆட்சி செய்தவர்களின் தலைநகரமாக விளங்கியது. இங்குப் பன்னிரண்டு இந்துக் கோயில்களும் பல சமணக் கோயில்களும் உள்ளன. இவ்வூரில் 'மண்டலேசா' என்ற சிவன் கோயில் உள்ளது. இங்குச் சிவனடியார்கள் வாழ்ந்த மடங்களும் உள்ளன. அனுமன் கோயில், வராகர் கோயில், விட்டுணுக் கோயில் போன்றவை மிகத் தொன்மையான கோயில்களாகும்.

**அர்பன்** என்னும் பெயரில் எட்டுப் போப்பாண்டவர்கள் வாழ்ந்திருந்தார்கள். கிறித்தவ சமயவளர்ச்சியில் – குறிப்பாக உரோமன் கத்தோலிக்கச் சமய வளர்ச்சியில் போப் (Pope) அல்லது போப்பாண்டவர்களுக்குப் பெரும் பங்குண்டு. புனித பீட்டர் (St.Peter) தொடங்கிப் பல்வேறு போப்பாண்டவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் தலைமைக் குருமார்களாக விளங்கினர். அவர்களிற் பலர் அத் திருச்சபையின் வளர்ச்சிக்கும்,வலிமைக்கும், பெருமைக்கும், புகழுக்கும் தோன்றாத் துணையாக நின்றுள்ளனர். தம் சமயப் பற்றாலும் தியாகத்தாலும் ஒழுக்க சீலத்தாலும் ஓயாத உழைப்பாலும் அவர்கள் கிறித்தவ சமயத்தை உலகச் சமயமாக மிளிரச் செய்துள்ளனர். ஆயினும் சிற்சில சமயங்களில் அதன் புகழ் மங்கவும் சீர்குலையவும் சிலர் காரணமாக அமைந்துவிட்டனர். இங்ஙனம் போப்பாண்டவர்களாக விளங்கியவர்களில் எண்மர் அர்பன் எனும் பெயர் பெற்றவர்கள். அவர்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| முதலாம் அர்பன் | கி.பி. 222–230 |
| இரண்டாம் அர்பன் | கி.பி. 1088–1099 |
| மூன்றாம் அர்பன் | கி.பி. 1185–1187 |
| நான்காம் அர்பன் | கி.பி. 1261-1264 |
| ஐந்தாம் அர்பன் | கி.பி. 1362–1370 |
| ஆறாம் அர்பன் | கி.பி. 1378–1389 |
| ஏழாம் அர்பன் | கி.பி. 1590– — |
| எட்டாம் அர்பன் | கி.பி. 1623–1644. |

முதலாம் காலிக்சுடசு என்பாரை அடுத்துப் போப்பாண்டவராகப் பதவியேற்ற முதலாம் அர்பன் காலத்திலும் திருச்சபையில் ஏற்பட்டிருந்த பிளவு தொடர்ந்தது. அவருக்குப் போட்டியாக, போப்பாக விளங்கியவர் இப்போலிடசு என்பார். எனினும் உரோமானியப்பேரரசர் அலெக்சாந்தர் செவாசு கிறித்தவச் சமய எதிர்ப்புக் கொள்கையைக் கடைப்பிடிக்காத காரணத்தால் முதலாம் அர்பனின் பதவிக்காலம் அமைதியாகவே கழிந்தது. ஆயினும் அவரது பணிகள் குறித்துத் தெளிவாக ஒன்றும் தெரியவில்லை.

இரண்டாம் அர்பன் பிரான்சு நாட்டவர். புகழ் மிக்க போப்பாண்டவர்களுள் ஒருவரான இவர் தொடக்கக் காலத்தில் புருனோவின் சீடராக வாழ்ந்து பின்னர் உரோமாபுரியில் கார்டினலாகப் பணியாற்றினார். பிரான்சு, செருமனி போன்ற நாடுகளில் ஏழாம் விக்டரின் பிரதிநிதியாக (Delegate) இருந்து அவர்தம் திருச்சபைச்சீர்திருத்த முயற்சிகளுக்கு உறுதுணையாக விளங்கினார். கி.பி. 1088–இல் போப்பாண்டவராகப் பதவியேற்ற நாளிலிருந்து இவர் கிரகரியைப் போலவே குருமார்கள் திருமணம் செய்துகொள்ளலாகாது என்றும், திருசபைப் பதவிகளை விற்பனைப் பொருளாக்கக்கூடாது என்றும் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதில் விடாப்பிடியாக இருந்தார். ஆனால் இவர் அரசியலில் மிக்க ஈடுபாடு காட்டியமையால் பேரரசர் நான்காம் என்றியுடன் மோதல் ஏற்பட்டது. பேரரசரின் ஆதரவு பெற்ற மூன்றாம் கிளமண்ட்டு உரோமாபுரி நகரில் ஆதிக்கம் செலுத்தலானார். இரண்டாம் அர்பன் நாடுகடத்தப்பட்டுப் பல்வேறு இன்னல்களுக்கு ஆளானார். இருப்பினும் துன்பத்தில் துவண்டு விடாமல் துணிவுடன் செயல்பட்ட இவர் சமய மாநாடுகள் இரண்டினைக் கூட்டலானார். பேரரசரின் வலிமை குன்றியவுடன் உரோமாபுரியில் அர்பன் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டார்.

இரண்டாம் அர்பன் காலத்தில் சிலுவைப் போர்கள் (Crusades) தொடங்கின. உண்மையில் முதலாம் சிலுவைப் போருக்கு இவரே முதல் காரணமாகவும் தூண்டுகோலாகவும் விளங்கினார். கி.பி. 1095–இல் கிளர்மாண்ட் எனுமிடத்தில் கூட்டிய சமய மாநாட்டில் புனித நகரமாகிய எருசலத்தை முகமதியரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பது கிறித்தவர்களின் கடமை என அறைகூவல் விடுத்து, புனிதப் போரில் ஈடுபடுபவர்களுக்குச் சிலுவைகளை அடையாளச் சின்னங்களாக வழங்கினார். அதனால் ஐரோப்பா

விலிருந்து பல பிரபுக்களும், பாமரமக்களும் ஆர்வத்துடன் போருக்குப் புறப்பட்டனர். இப்போரின் விளைவாகப் போப்பாண்டவரின் மதிப்பும் செல்வாக்கும் பன்மடங்கு உயர்ந்தன. ஆயினும் உரோமானியத் திருச்சபையையும் கீழைத் திருச்சபையையும் ஒருங்கிணைக்கும் முயற்சியில் இவர் தோல்வியே கண்டார். அதேபோன்று சிலுவைப்போரில் கிறித்தவ வீரர்கள் பெற்ற வெற்றிச் செய்தியைக் கேட்கும் முன்னரே இவர் கி.பி. 1099–ஆம் ஆண்டு சூலைத் திங்களில் காலமானார். இங்ஙனம், தம் சீர்திருத்தங்களாலும் அரசியல் வெற்றிகளாலும் இரண்டாம் அர்பன் மேற்கு ஐரோப்பாவில் போப்பாண்டவரின் பெருமையைப் பன்மடங்கு பெருக்கியதுடன், கிறித்தவ உலகம் தம் தலைமையை ஏற்றுக் கொள்ளச் செய்வதில் பெரிய வெற்றியும் பெற்றார்.

மூன்றாம் அர்பன் இத்தாலியிலுள்ள மிலான் நகரில் பிறந்தார். இவர் கி.பி. 1185–இல் போப்பாண்டவரானார். இவரும் பேரரசர் பிரடரிக் பார்பரோசாவுடன் (Fredrick Barborossa) ஆதிக்கப் போட்டியிலீடுபட்டார். இதற்கிடையில் பிரடரிக்கின் மகனான இளவரசர் என்றி, கான்சுடன்சு (Constance) சீமாட்டியை மணந்ததால் சிக்கல் மிகுதியாகியது. இத்திருமணத்தினால் பேரரசரின் பிடியிலிருந்த வட இத்தாலியும், சிசிலியும் ஒருங்கிணைந்து நடு இத்தாலியில் போப்பாண்டவர் நாடுகளின் சுதந்திரத்தைப் பாதிக்கலாம் என்று அஞ்சியதால் அர்பன் இளவரசர் என்றி கான்சுடன்சு சீமாட்டியை மணப்பதை விரும்பவில்லை. இவர் அஞ்சியதைப்போலவே இத்திருமணத்தின் விளைவாக இவருக்குப்பின் வந்த போப்பாண்டவர்கள் தென்இத்தாலிய ஆதிக்கத்திற்காக ஓகன்சுடாபன் (Hohenstefen) அரச குடும்பத்துடன் கடுமையான போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருந்தது.

பிரஞ்சுக்காரரான நான்காம் அர்பன் கி.பி. 1261-இல் பதவியேற்ற நாளிலிருந்து பிரஞ்சு மன்னரை ஆத



நான்காம் அர்பன்

ரிக்கலானார். இவர் காலத்தில் சிசிலி நாட்டில் அரசுரிமைப் போட்டியெழுந்தது. மாமன்னர் பிரடரிக்கின் மகன் மான்பிரடும், பிரஞ்சு மன்னர் ஒன்பதாம் லூயியின் இளவலான சார்லசும் சிசிலியின்மீது அரசுரிமை கொண்டாடினர். இப்போட்டியில் போப்பாண்டவர் சார்லசை ஆதரித்தார். ஆயினும் சார்லசு சிசிலிக்கு வருமுன்னரே கி.பி. 1264–இல் அர்பன் உயிர்நீத்தார். இருப்பினும் இவர் எடுத்த முடிவினால் பிற்காலத்தில் பெரும் விளைவுகள் தோன்றின.

புரோவன்சில் பிறந்து, பெனிடிக்டு மடாலயத் தலைவராகவும், சமயச் சட்ட அறிஞராகவும் விளங்கிய ஐந்தாம் அர்பன் கி.பி. 1362-இல் போப்பாண்டவரானார். ஒழுக்க சீலராக விளங்கிய இவர் ஆடம்பரமற்ற எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். அறிவு வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு ஆரஞ்சு, காரகோ, வியன்னா ஆகியவிடங்களில் அவர் புதிய பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தார். அவர் அவிக்னானைத் (Avignon) தலைமைப் பீடமாகக் கொண்டிருந்த காலத்தில் இத்தாலியில் அமைதியை நிலைநாட்டுவதில் பெற்றி பெற்றார். கி.பி. 1267–இல் கார்டினல் அல்பர்னோசின் உதவியுடன் தமது தலைமைப்பீடத்தை உரோமாபுரிக்கே மாற்றினார். ஆயினும் அந்நகரில் ஏற்பட்ட கொந்தளிப்புக் காரணமாக அவர் அவிக்னானுக்கே திரும்ப நேர்ந்தது.

ஆறாம் அர்பன் பதினோராம் கிரிகரியையடுத்துக் கி.பி. 1378–இல் பதவியேற்றார். தொடர்ந்து பிரஞ்சு மன்னர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டு அவிக்னானில் செயல்பட்டுவந்த பிரஞ்சுப் போப்பாண்டவர்களை உரோமாபுரி நகர மக்கள் பொறுத்ததுடன், பிரஞ்சு நாட்டைச் சாராத ஒருவர் போப்பாண்டவராக விளங்க வேண்டுமென்று கிளர்ச்சியும் செய்துவந்தனர். அதன் விளைவாகத்தான் நேபிள்சு நகரத்தவரான ஆறாம் அர்பன் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உரோமாபுரி நகரிலேயே பதவியேற்ற இவர் ஆழ்ந்த சமயப்பற்றுக் கொண்டவர். திறமைசாலி. ஆயினும், இவர் பதவிக்கு வந்தபின்னர் முன்கோபமும், முரட்டுத்தனமும் வேண்டாத பிடிவாதமும் கொண்டவராக மாறிவிட்டார். சீர்திருத்தங்களில் ஆர்வம் காட்டிய போதிலும் மற்றவர்களை அரவணைத்துச் செல்லாமல் பிறர் மனம் புண்படும் வகையில் நடந்து கொண்டார்; இவருக்கு மனநலம் கெட்டுவிட்டது என்று கூடச் சிலர் கருதினர். ஏற்கனவே அவர்மீது வெறுப்புக் கொண்டிருந்த பிரஞ்சுக் கார்டினல்கள் அனக்னி எனுமிடத்தில் கூடி அர்பனின் தேர்தல் செல்லாது என அறிவித்ததுடன் தங்களுள் ஒருவரான இராபர்ட்டுஎன்பவரைப் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுத்தனர். இப்போட்டிப் போப்பாண்டவரான ஏழாம் கிளமண்டைச் சமய வரம்பிலிருந்து



ஆறாம் அர்பன்

அர்பன் நீக்கி வைத்தபோதிலும் இவர் அவிக்னானில் இருந்துகொண்டு ஆட்சி செலுத்தினார். இங்ஙனம் திருச்சபையில் பெரும்பிளவு (Schism) ஏற்பட்டது. அடுத்த நாற்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்த இப்பிள வினால் திருச்சபையில் போட்டி, பூசல்களும் குழப் பங்களும் தோன்றியதுடன் போப்பாண்டவர் பதவி யின் புகழும் குன்றியது. இதற்கிடையில் ஆறாம் அர் பன் துராசேன மன்னரால் சிறையிடப்பட்டார். சிறை யிலிருந்து செனோவா நகருக்குத் தப்பியோடிய அர் பன் தவறி விழுந்து,அதன்விளைவாய்க்கி.பி. 1389-இல் காலமானார்.

கி.பி. 1590-ஆம் ஆண்டு செப்டம்பர் பதினெட் டாம் நாள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழாம் அர்பன்



ஏழாம் அர்பன்

பன்னிரு நாட்களே பதவியிலிருந்தார். உரோமாபுரி நகரில் பிறந்த அவர் ஈகைக் குணமும் எளிமையும் ஒழுக்கசீலமும் மிகுந்தவராக விளங்கினார்.

எட்டாம் அர்பன், இப் பெயர்கொண்ட போப் பாண்டவர்களுள் இறுதியானவர். அரசியலில் அதிக ஆர்வம் கொண்டதுடன், போப்பாண்டவரின் செல் வத்தைப் பெருக்குவதிலும் கண்ணும் கருத்துமாக இருந்தார். அவர் பதவிக்கு வருமுன்னர்ப் பாரிசில் போப்பாண்டவரின் தூதராகவும் கார்டினலாகவும் பணியாற்றிப் புகழ்பெற்றார். மேலும் அரசியல் உல கில் நண்பர் பலரைப் பெற்றிருந்ததால் எளிதாகப் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ ரது பதவிக் காலம் பரபரப்பான, பல சிறப்பு நிகழ்ச் சிகள் நிறைந்த காலமாக இருந்தது. கத்தோலிக்க அரசுகளுக்கும், பிராடசுடண்டு அரசுகளுக்குமிடையே நடைபெற்ற முப்பதாண்டுப் போர் மிக முக்கிய நிகழ்ச் சிகளில் ஒன்றாகும். கிறித்தவ உலகை இரண்டாகப் பிளந்ததும் மார்டின் லூதர் தோற்றுவித்ததுமான பிராடசுடண்டு சமயத்தை அடியோடு அழித்துவிட வேண்டுமென்று எட்டாம் அர்பன் விரும்பியபோதிலும் அரசியல் காரணங்களால் கத்தோலிக்க ஆதரவாளர்க



எட்டாம் அர்பன்

ளுக்கு இவர் முழு ஆதரவு தரவில்லை. சிறப்பாக, இத் தாலியில் ஆப்சுபர்க் மரபினரின் செல்வாக்கு வளர் வதை விருப்பாததால் கத்தோலிக்க நாடுகளுக்குத் தலைமை ஏற்றிருந்த அம்மரபினருக்கு ஆதரவு தராமல் அவர்களுக்கெதிரான பிரஞ்சு அரசுடன் சேர்ந்து கொண்டார். இருப்பினும் எட்டாம் அர்பன் காலத்தில் போப்பாண்டவரின் நாடு வலிவும் பொலிவும் பெற்று விளங்கியது. அர்பினோ கோமக நாட்டைத் தம் நாட்டுடன் இணைத்துக் கொள்வதில் இவர் வெற்றி கண்டார். வடக்கு இத்தாலியில் பார்மாவின் மீது தம் படைகளை ஏவினார். அப்படையெடுப்பு படு தோல்வி அடைந்த போதிலும் அர்பினோ கோட்டை யைக் கட்டியும் செயின்ட் அஞ்சிலோ கோட்டை கொத்தளம் அமைத்தும், டிவோலி படைக்கலக் கிடங்கினை விரிவுபடுத்தியும் தம் நாட்டின் வலிமை யைப் பெருக்கினார். மேலும் சிவிடா வெச்சியாவைச் சிறந்த துறைமுகமாக மாற்றி வாணிப வளத்தைப் பெருக்கினார்.

ஆயினும் எட்டாம் அர்பனிடம் சில குறைபாடு கள் காணப்பட்டன. இவர் தம் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் பல சலுகைகளையும் பதவிகளையும் வழங்கினார். அறிவியல் வளர்ச்சியிலோ முன்னேற றக் கருத்துகளிலோ இவருக்கு நம்பிக்கையில்லை.

மாறாகத் தொலைநோக்காடியைக் கண்டு பிடித்த அறிவியல் மேதையான கலிலியோவை இவர் துன்புறுத்தினார். பூமி சூரியனைச் சுற்றி வருகின்றது என்ற கொள்கையைக் கலிலியோ கைவிடுமாறு செய்ததில் எட்டாம் அர்பனுக்குப் பெரும் பங்குண்டு. அதே போன்று சேன்சன் சமயப் (Jansenism) பிரிவினரின் கொள்கையைக் கண்டனம் செய்து, அவர்களைப் பல துன்பங்களுக்கு ஆளாக்கினார். இத்தகைய இவரது செயல்களாலும், கொள்கைகளாலும் பிற்காலத்தில் வந்தவர்கள் பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. எனினும் அக்கால அரசியல் சூழ்நிலையை நன்குணர்ந்து ஹாப்சுபர்க்கு (Hapsburg) களின் செல்வாக்கைக் குறைத்துப் போப்பாண்டவரின் வலிமையையும் செல்வாக்கையும் வளர்ப்பதில் இவர் வெற்றி கண்டார். பல்வேறு ஆணைகள் வாயிலாகக் கத்தோலிக்கச்சமயம் பரவ வழி செய்தார். மேலும் இலாசரிசுட்டு புதிய மடாலயங்களை ஆதரித்துக் கத்தோலிக்க சமயத்திற்கு ஆக்கம் தேடினார். இவ்வாறு வலிவோடும் பொலிவோடும் வாழ்ந்து கத்தோலிக்க சமயத்தை வளர்த்த எட்டாம் அர்பன் கி.பி. 1644-இல் காலமானார்.

**அர்மீனிய சோவியத்துக் குடியரசு** என்பது சோவியத்து உருசியாவின் மிகச்சிறிய குடியரசுகளுள் ஒன்று. இதன் பரப்பளவு 29,800 ச.கி.மீ. இதன் வடக்கில் சார்சியா (Georgia) வும், கிழக்கில் அசர்பைசானும், தெற்கில் துருக்கியும், மேற்கில் ஈரானும் எல்லைகளாய் அமைந்துள்ளன. அர்மீனியக் குடியரசு மலைப்பாங்கான நாடு; எனினும் இங்குக் காடுகள் மிகக் குறைவு. கரை புரண்டோடும் கொந்தளிப்பான ஆறுகள் பலவற்றையும், மிக்க செழிப்பான மண் வகைகளையும் கொண்டிருந்தாலும் இக்குடியரசு வறட்சியும் மிக்கதாகும்.

அர்மீனிய சோவியத்து சோசலிசுடுக் குடியரசின் தலைநகர் ஏரவான் என்னும் நகரமாகும். இலெனினாகன், (Leninakan) கிரோவாகன் (Kirovakan) ஏனைய பெருநகரங்களாம்.

அர்மீனியா 1920-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29-ஆம் நாள் சோவியத்து சோசலிசுடுக் குடியரசாக அறிவிக்கப்பட்டது.

அரக்சு ஆற்றுப் பள்ளத்தாக்கு செழிப்பான விளைநிலங்கொண்டது. பருத்தி, பழவகைகள்-குறிப்பாகத் திராட்சை முதலியன சிறப்பான விளைபொருள்கள். உயரம் மிகுந்த பகுதிகளில், தானிய வகைகள், பீட் சர்க்கரைக் கிழங்கு, உருளைக்கிழங்கு போன்றவை விளைகின்றன. செம்மறியாடு போன்ற ஆட்டினங்கள் சிறப்பான கால்நடைகள் ஆகும். செம்பு, வெள்ளி, எரிமலை சாம்பற் செறிவால் ஏற்படும் பரறைவகை முதலியவை சிறப்பான கனிமப் பொருள்களாம்.




அர்மீனிய சோவியத்து சோசலிசுடுக் குடியரசு

பண்டைய ஏரவானுக்கருகில் நீர் மின்திட்டம் உருவாக்கப் பெற்றமையால் இக்காலத்தில் இந்நகரம் சிறந்த தொழிற்சாலை நகரமாக உருமாறியுள்ளது. அலுமினியம், செயற்கை ரப்பர், இயந்திரங்கள் முதலானவை இங்குக் கிடைக்கும் பொருள்களுள் சில. உணவுப் பொருள்களைப் பதப்படுத்துதல், ஒயின், பிராந்தி தயாரித்தல், தகர அடைப்புகளில் பழங்களைப் பதப்படுத்தி அடைத்தல் ஆகியன அர்மீனியாவின் ஏனைய தொழில்களாகும். 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி அர்மீனியாவின் மக்கள் தொகை 31,20,000 ஆகும்.

அர்மீனிய சோவியத்து சோசலிசுடுக் குடியரசு என்பது பண்டைய அர்மீனிய அரசின் ஒரு சிறு பகுதியே யாகும். பண்டைய அர்மீனியா கருங்கடலுக்கும் காசுபியன் கடலுக்கும் இடைப்பட்ட உயர்ந்த மேட்டு நிலப்பகுதியின் குறுக்கில் விரிந்து பரந்து, மேற்கில் ஆசியாமைனர் வரை பரவியிருந்தது. மேட்டு நிலத்தின் பெரும்பகுதி இன்றைய மேற்கத்திய துருக்கியாக இருக்கிறது. இதன் பிறிதொரு சிறுபகுதி ஈரானில் இருக்கிறது. அராராத் மலைத்தொடர் விவிலியத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குத் துருக்கி, ஈரான், அர்மீனியா ஆகிய மூன்று பகுதிகளும் சந்திக்கின்றன.

அர்மீனியர்கள் தம்மை ''ஆய்'' (Hai) என்றும், தம் நாட்டை ஆயசுத்தான் (Haiastan) என்றும் கூறினர். ஆய்க் என்று கூறப்பெறும் தம் புராணகால மூதாதையின் பெயரில் தம்மையும் தம் நாட்டையும் கூறிக்கொண்டனர். பாரசீகர்கள் இதனை அர்மீனா என்று, ஆய்க்கின் வழித்தோன்றலான அரம் என்பாரின் பெயரால் அழைத்தனர். பண்டைய எபிரேயர்கள் இதனை அராராத் நிலம் என்றனர்.

பண்டைக் காலத்தில் அர்மீனியாவை அசிரியாவும் பாரசீகமும் அடுத்தடுத்து வெற்றி கொண்டன. அவர்களையடுத்து உள்ளூர் மன்னர்களே ஆண்டனர். மகா அலெக்சாந்தரின் வெற்றிக்குப் பின்னர் இதைக் கிரேக்க மரபு ஒன்று ஆண்டது. அம்மரபினைச் சார்ந்த மன்னர்களுள் ஒருவரான டைகிரேனசு (Tigranes) என்பார் இதை வலிமைமிக்க அரசாக்கினார். அர்மீனியாவைப் பாரசீகர்களின் செல்வாக்கிலிருந்து மீட்டு அது மேற்கத்திய நாகரிகத்தைப் பின்பற்றுமாறு செய்தார். அவர் இறந்து பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் அர்மீனியா ஓரளவு விடுதலை பெற்ற நாடாகவே உரோமாபுரிக்கும், பார்த்தியாவுக்கும் நடு இடைநாடாக விளங்கியது.

கி.பி. 303-ஆம் ஆண்டுக்கு முன்னர் அர்மீனிய அரசர் திரிடேடிசு (Tiridates) என்பவர் கிறித்தவக் கிரிகரி என்னும் சமயப் பரப்புநரால் கிறித்தவச்சமயத்திற்கு மத மாற்றம் செய்யப்பட்டார். மதம் மாறியவுடனேயே அவ்வரசர் கிறித்தவச் சமயத்தை நாட்டுச் சமயமாக்கி, பண்டைய பாரசீக சமயமான சொராசுடிரியத்தை (Zoroastrian) வேரொடு களைய நடவடிக்கை மேற்கொண்டார்.

**அர்மீனிய மொழி** இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பங்களிலிருந்து பிரிந்து விளங்கும் ஒரு தனிமொழியாகும். இம் மொழி பேசும் மக்களுள் பெரும்பான்மையோர் சோவியத்துக் குடியரசு நாட்டில் வாழ்கின்றனர். சோவியத்துக் குடியரசு நாட்டின் மற்றப் பகுதிகளில் – குறிப்பாக அசேர்பான், சியார்சியன் ஆகிய இடங்களில் வாழும் ஏறத்தாழ 17 இலட்சம் மக்கள் இம்மொழியினைப் பேசுகிறார்கள். மேலும் போலந்து, சிரியா, எகிப்து, இலெபனான், அமெரிக்கா, ஈரான், ஈராக், துருக்கி போன்ற இடங்களிலும் இம்மொழி பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இட்டைட்டுப் பேரரசு வீழ்ச்சியுற்ற காலத்துப் பிரிசியார்கள் (Phrgians), திசலி (Thessaly), திரேசு (Thrace) போன்ற இடங்களிலிருந்து பிரிந்து வந்த மக்களே அர்மீனியர் என்று குறிக்கப்படுகின்றனர். ஆசியா மைனரில் வாழ்ந்து வந்த அர்மீனிய மக்கள் பல்வேறு ஆட்சியாளர்களின் ஆட்சிக்குட்பட்டனர். கி.மு. 6-ஆம் நூற்றாண்டுவரை மெட்சு ஆதிக்கத்தின் கீழும், கி.மு. 5-ஆம் நூற்றாண்டுவரை பெர்சியரின் கீழும் வாழ்ந்து வந்தனர். இதன் பின்னர் அராபியர்களின் செல்வாக்கு முதல் உலகப்போர் வரையிலும் நீடித்தது. பன்னெடுங்காலமாகப் பல்வேறு வேற்று அரசின் கீழ் வாழ்ந்த இம் மக்கள் தம் மொழியையும் தங்கள் சமயத்தினையும் பாதுகாத்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அர்மீனிய மொழியில் (Armenian Language) பார்தியன் மொழிச் சொற்களும், பெர்சியன் மொழிச் சொற்களும் மிகுதியாகக் கலந்துள்ளன. மேலும் இதன் சொற்களஞ்சியத்தில் இரானிய மொழியின் கிளைமொழிச் சொற்களும் கலந்துள்ளன. துருக்கியச் சொற்கள் பெரும்பாலும் அர்மீனிய வட்டார மொழியில் காணப்படுகின்றன. இதனை இந்தோ இரானிய மொழிகளுள் ஒன்றாகவே பலர் கருதினர். எனினும் இரசுக்கு, சுப்சுமென் போன்ற அறிஞர்கள், இதனை இந்தோ-ஐரோப்பிய மொழியுடன் தொடர்புடையது என்று கூறுகின்றனர்.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்தே இம்மொழியில் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. பெரும்பாலும் இவ்விலக்கியங்கள் சிரியாக்கு அல்லது கிரேக்க மொழியிலுள்ள மொழிபெயர்ப்புகளாகவே உள்ளன. மெசுராப் என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட எழுத்து முறையில் எழுதப்பட்டுள்ள இம் மொழி இலக்கியங்கள், தொடர்ச்சியாக அதே எழுத்து முறையில் எவ்வித மாற்றமும் இல்லாமல் காணப்படுகின்றன. பழைய இலக்கியங்கள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தனவாக இருப்பினும், பழைய வடிவங்கள் பதினைந்தாம் நூற்றாண்டு வரை பாதுகாக்கப்பட்டுள்ளன.

இம்மொழியில் கிழக்கு, மேற்கு என்ற இரு கிளைமொழிகள் உள்ளன. கிழக்குக் கிளைமொழியே இலக்கிய மொழியோடு மிகுந்த தொடர்புடையதாக உள்ளது.

இலக்கிய மொழியும், இக்கால மொழியும் ஒரே எழுத்து முறையினைக் கொண்டுள்ளன. தொடக்கத்தில் இம் மொழியில் 36 எழுத்துகள் இருந்தன. இப்போது அவை 38 ஆக மிக்குள்ளன. இம்மொழியின் நெடுங்கணக்கு முறை பெரும்பாலும் கிரேக்க மொழியின் தாக்கத்தால் ஏற்பட்டதாகும். கிரேக்க மொழியின் தாக்கம் உயிரெழுத்துகளில் காணப்படுகின்றது.

**அர்மீனியர்**: கருங்கடல், காசபியன் கடல், ஆகியவற்றிற்கும் உருசியா, துருக்கி நாடுகளுக்கும் இடையில் அர்மீனிய நாடு அமைந்துள்ளது. அரசியல் அடிப்படையில் அர்மீனியர்கள் (Armenian) உருசிய அர்மீனியர்கள், துருக்கி அர்மீனியர்கள் என்றே குறிப்பிடப்படுகின்றார்கள். இருப்பினும் அர்மீனிய மக்கள் துருக்கி, பிரான்சு, சிரியா, உருசியா, அமெரிக்கா முதலான நாடுகளிலும் வாழ்கிறார்கள். உருசியப் பகுதியும் துருக்கிப் பகுதியும் இணையும் மேற்கத்தியப் பீடபூமியே இவர்கள் மிகுதியான அளவில் வாழுமிடமாகும். இப்பீடபூமி 4000 அடி முதல் 6000 அடி வரை உயரமானதாக உள்ளது. இதனாலேயே அர்மீனியர்கள் மேட்டுநில மக்கள் என

அழைக்கப்படுகிறார்கள். இவர்களது வரலாறு குறிப்பிடத்தக்கதாகும். இவர்கள் நெடுங்காலமாகச் சுதந்திரத்திற்காகப் போராடி வந்தனர். கி.பி. 1894–ஆம் ஆண்டு ஓட்டோமான் பேரரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். 1915–ஆம் ஆண்டு துருக்கியர் 1,75,000 அர்மீனியர்களைச் சிரியாவிற்கும் மெசபடோமியாவிற்கும் நாடு கடத்தினர். இந் நிகழ்ச்சியில் துருக்கிய மக்களின் கொடுமையால் 6,00,000 அர்மீனியர் கொல்லப்பட்டனர். இக்கொலை நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் அர்மீனியர் அனைவரும் ஒற்றுமையை ஏற்றுக் கூட்டுணர்வுடன் வாழ முற்பட்டனர். இதன் பின்னர்த் தம் அண்டை மக்களான சார்சியா (Georgia), அசர்பெய்சன் (Azerbaijan) முதலானோரைப் போலவே தங்களையும் உருசிய மக்களெனவே கூறிக் கொள்ள முற்பட்டனர். இவர்கள் தோற்றத்திலும் மொழியிலும் இந்திய-செருமனியைச் சார்ந்தவர்கள்.

அர்மீனியர் அடிப்படையில் வேளாண்மையை முதன்மைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். புகையிலை, பருத்தி நெல் முதலான பயிர்களை விளைவிக்கின்றனர். இவர்கள் வாழும் சில பகுதிகள் வறண்ட பீடபூமியாகவும், எரிமலை வெடித்த குன்றுகளாகவும், அரைப் பாலைவனமாகவும் இருப்பதால் இப்பகுதிகளில் பயிர்த்தொழில் செய்ய இயலவில்லை. துருக்கிய அர்மீனியர் பயிர்த்தொழிலில் பண்டைய முறைகளையே கையாளுகின்றனர். உருசிய அர்மீனியர்களுக்கு உருசியாவின் அரசமைப்பு மிகுந்த ஊக்கமளிப்பதாலும், நவீன முறைகளில் பயிர்த்தொழில் செய்வதாலும் மேம்பட்ட வாழ்க்கை அமைப்பை மேற்கொண்டுள்ளனர். கல்வியிலும் அர்மீனியர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளார்கள். கல்விச்சாலைகளும், பல்கலைக் கழகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அர்மீனியர் கிறித்தவ மதத்தைச் சார்ந்துள்ளனர். இவர்கள் தமக்குரிய வளமுற்ற பண்டைய பண்பாட்டை இன்றளவும் நிலைநிறுத்தி வருகின்றனர். திருக்கோயில் (Church), நெடுங்கணக்கு (Alphabet), கலை, இலக்கியம், முதலான பண்பாட்டுக் கூறுகளைத் தமக்கென்று அமைத்து வாழ்ந்து வருகின்றனர். வணிகம் செய்வதில் அர்மீனியர் மிக வல்லவராவர். தங்களுக்குச் சொந்தமான வணிகத்தில் முழு ஈடுபாடுடனும் மிக்க ஆற்றலுடனும் முழுக் கவனத்தையும் செலுத்தும் இயல்புள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களது திறமையைக் கணக்கிட்டு மூன்று யூதர் அல்லது மூன்று கிரேக்கர்களுக்கு ஓர் அர்மீனியர் நிகரானவர் என்பர். உருசிய அரசின் முன்னேற்றத் திட்டங்களில் வளர்ச்சியடைய முடியும் என்று நம்புவதால் தங்கள் குழந்தைகளை உருசிய மொழியில் பயிற்றுவிக்கின்றனர்.

**அரக்கர்**: இவர்களை இராக்கதர் என்று பிங்கல நிகண்டு விளக்கும். பதினெண் கணங்களில் ஒன்றாகிய நிருதர் கணம் என்பது அரக்கர் கணம் ஆகும். சுரராகிய தேவர்க்குப் பகைவராகிய அசுரர் எனப்படுவோரினும் அரக்கர் வேறானவர் என்று கொள்ளப்படுவர்.

ஒரு கற்பத்தில் பிரமன் தன் தொண்டையிலிருந்து அரக்கரைப் படைத்தான் என்பது கூறப்படுகிறது. பிரமனால் படைக்கப்பட்ட நவப்பிரசாபதிகளுள் ஒருவனாகிய புலத்தியன் வழியில் வந்தவர் ஆதலின் அரக்கர் 'புலத்தியன் மரபினர்' எனப்படுவர்.

காசிபர், தக்கன் பெண்கள் பதின் மூவரை மணக்க, அவர்களுள் ஒருத்தியாகிய சுரசை என்ற சிங்கிகைபால் அவருக்குப் பிறந்தவர்கள் இராக்கதர்கள் என்றும் கூறுவர். காசிபர் மகன் இரட்சசு என்பவன் மரபினர் இவர்கள் என்று விட்டுணுபுராணம் கூறும்.

நான்முகன் கடல்களைப் படைத்து அவற்றைக் காக்க இராட்சதர் ஆகிய அரக்கரைப் படைத்தான் என்று வான்மீகி கூறுவர். அரக்கர், முனிவர்கள் தவம் செய்வதற்கு இயலாதவாறு இடையூறுகளை அவர்களுக்கு உண்டாக்கித் துன்புறுத்தினர்; வேள்விகளையும் செய்யவிடாமல் அழித்து வந்தனர்.

அரக்கர்களின் கருநிறத்தையும் கொடிய செயலையும் கருதி ''ஆல காலந் திரண்டன்ன ஆக்கையர்'' என்று கம்பர் குறிப்பர்.


**அரக்கான்** என்பது பர்மாவிலுள்ள ஒரு மாநிலம். இது வங்கக் கடலின் வடகிழக்குக் கரையோரத்தில் அமைந்துள்ளது. அரக்கான்யோமா மலைத் தொடர் இப்பகுதியினைப் பர்மாவிலிருந்து பிரிக்கிறது. இப்பகுதி அக்கியாபு, வட அரக்கான் மலைப்பகுதி, சாண்டோவே (Sandoway), கியாக்ப்யூ (Kyaukpyu) என்னும் நான்கு பகுதிகளைக் கொண்டது. அரக்கானின் பரப்பளவு 36,762 ச.கி.மீ. ஆகும். மக்கள் தொகை 18,47,000 (அண்மைக்கால மதிப்பீடு). இங்கு வாழும் மக்கள் நன்செய்ப் பயிர்களை விளைவிக்கின்றனர். புகையிலை, பழங்கள் மிளகாய் போன்றவை ஓரளவே பயிராகின்றன. இங்குள்ள யோமா மலைத்தொடர் சிறப்புடையது. அரக்கானிய மக்கள் பர்மியர்களின் வழி வந்தவர்கள். தம் நாட்டுப் பண்பாடு மிகத் தொன்மையானது என்று இவர்கள் நம்புகிறார்கள். முன்னர்ப் போர்ச்சுகீசியரிடம் இருந்த இப்பகுதி பின்னர்க் கி.பி. 1826–இல் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. இங்குள்ளவரில் பெரும்பாலோர் பௌத்த சமயத்தவர். இப்பகுதிவாழ் மக்கள் தனிப் பண்பாட்டையும் மொழியினையும் கொண்டுள்ளனர். அரக்கான் நகரம் முன்பு இம் மாநிலத்தலைநகரமாயிருந்தது; பின்னர் அக்கியாபு (Akyab) தலைநகரமானது.

**அரக்கேனிய இந்தியர்** தென் அமெரிக்காவில் வாழும் பழங்குடி மரபைச் சார்ந்தவர்கள். இவர்கள் பல குழுவினராகப் பிரிந்திருந்தனர். சிலி நாட்டின் மத்திய மேட்டு நிலப்பகுதிகளில் ஆண்டீசு (Andes) மலைத் தொடரின் கிழக்கில் வாழ்ந்தவர்கள். இவர்கள் வாழ்க்கை பல வகையாக அமைந்திருந்தது. இவர்களில் பெரும்பாலோர் மரக்கறி உண்பவராவர். இவர்கள் பெரும்பாலும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தொடக்கத்தில் அரக்கேனியர்கள் சிலி கடற்கரைப் பகுதியில் வாழ்ந்தனர். கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இசுபானியரிடமிருந்து குதிரைகளைப் பெற்று ஆர்செண்டீனாவிற்குப் (Argentira) புறப்பட்டுச் சென்றனர். சிலி நாட்டிற்கு வந்த இசுபானியருடன் இவர்கள் போராடி, மலைப்பகுதிகளுக்குப் புகலிடம் தேடி ஓடினார்கள். கி.பி. 1879-ஆம் ஆண்டில் ஆர்செண்டீனாப் படைவீரர்கள் இவர்களைத் தோற்கடித்தனர். கி.பி. 1883-ஆம் ஆண்டளவில் சிலிநாட்டுப் படைவீரர்கள் ஏனைய பழங்குடி மக்களையும் வெற்றி கண்டனர். இக்காலத்தில் சற்றேறக்குறைய 3 இலட்சம் அரக்கேனியர்கள் வாழ்ந்து வருகின்றனர்; பெரும்பாலோர் குடியானவர்கள். அவர்களை அரக்கேனிய இந்தியர்கள் என்று அழைப்பதற்கான காரணம் தெரியவில்லை.

**அரங்கநாத முதலியார் (கி.பி. 1844-1893)** செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூரை அடுத்த பூண்டி என்னும் ஊரில் சைவ வேளாள மரபில் தோன்றியவர். தந்தை சுப்பராய முதலியார். சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியிலும் அரசினர் கல்லூரியிலும் பயின்றார். நுண்ணறிவும் நினைவாற்றலும் மிக்கவர். கணிதத்தில் பி ஏ.பட்டம் பெற்ற இவர் கும்பகோணம் கல்லூரியில் கணித ஆசிரியராக இருந்தார். பின்னர்ச் சென்னை மாநிலக் கல்லூரியில் ஆசிரியராக இருந்த போது ஆங்கிலம் முதலிய பாடங்களையும் கற்பித்தார். கணிதத்தில் எம்.ஏ , பட்டமும் பெற்றார். அரசினர் இவருக்கு இராவ்பகதூர் பட்டம் வழங்கினர்.

இவர் சொற்பொழிவாற்றுவதில் வல்லவர். தொழுவூர் வேலாயுத முதலியாரிடமும் திருமணம் சுப்பராய முதலியாரிடமும் தமிழ் கற்றார். சதுரங்க விளையாட்டில் திறமையுமிக்கவர். சென்னை உயர்நீதி மன்றத்தில் முதல் 'செரீப்பாக' (Sheriff) இருந்தார். இவர் செய்த கச்சிக்கலம்பகம், ஞானப்பிரகாசர் இயற்றிய கச்சிகலம்பகத்தின் வேறாகும். இந்நூல் சிதம்பரம் ஈசானிய மடம் இராமலிங்கசாமிகள் தலைமையில், சென்னைத் தொண்டை மண்டலம் உயர்நிலைப் பள்ளியில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.



அரங்கநாத முதலியார்

இவர் வித்துவான் தியாகராசச் செட்டியாரிடத்தில் மதிப்புடையவர். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரவர்களின் சிந்தாமணிப் பதிப்புக்குப் பொருளதவி செய்தவர்களுள் இவரும் ஒருவராவார். த.கு.மு.

**அரங்கம்**[1] ஆற்றிடைக்குறையாக, நாற்புறமும் நீர் சூழ அமையும் தீவு போல விளங்கும் நிலப்பகுதி. திருச்சிக்கு அருகிலுள்ள திருவரங்கம் (சீரங்கம்) என்னும் நகரம் இவ்வாறமைந்ததாகும். இது காவிரி கொள்ளிடம் ஆகிய ஆறுகளின் நடுவே நெடிய தீவு போல அமைந்துள்ளது. 'பொன்னி ஆறு ஒழுகிப் பொன்கொழித்து அணிசெய்யும் அலையார் திருவரங்கம்' என்று ஆன்றோர் போற்றிப் பரவும் இத் திருப்பதியில் திருமாலின் கிடந்த கோலம் பொலிவுற விளங்கும் திருக்கோயில் அமைந்துள்ளது. இதனுள் திருவரங்க நாதராகிய அழகிய மணவாளப் பெருமாள், பள்ளி கொண்டருளும் காட்சி ஆழ்வார்க்கும், அடியார்க்கும் ஆராத இன்பம் அளிக்கும் அருட்காட்சியாகும்.

**அரங்கம்**[2] இசை, நாடகம், நாட்டியம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு அமைக்கப்பட்ட மேடை; அரங்கு எனவும் வழங்கப்படும். இளங்கோவடிகள் தம் சிலப்பதிகார அரங்கேற்று காதையில் நாட்டியக் கலை நிகழ்ச்சி நிகழ்த்துதற்கு அமைக்கப்படும் அரங்கத்தின் அமைப்பு முறையினை அதன் நீள அகல உயர அளவுகளுடன் விளக்கமாகக் காட்டியுள்ளார். காண்க: அரங்கு.

**அரங்கமைப்பு**: நாடகம் சிறப்புற அமைவதற்குச் சிறந்த அரங்கமைப்பு இன்றியமையாததாகும். நாகரிகம் முன்னேறி வரும் இந்நாளில் எதனைப் பற்றி

யும் கேட்பதைவிட, காட்சிகளாகப் பார்ப்பதையே மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். மதம் கொண்ட யானையை ஒருவன் அடக்குகிறான் என்ற செய்தியைக் கேட்பதை விட அக்காட்சியை நேரிடையாக மேடையில் பார்க்கும்போது மக்கள் அதிக மனச் சிலிர்ப்பு அடைகிறார்கள். அரசன் அரண்மனைக் கொலு மண்டபத்தில் வீற்றிருத்தல், செல்வந்தரின் மாளிகைக்குள் நள்ளிரவில் திருடன் நுழைதல், ஒரு பெருங் கட்டிடம் சரிந்து விழுதல் போன்ற நிகழ்ச்சிகளைத் திட்டமிட்டு அமைக்கப்பெற்ற காட்சிகளாக்கிக் காட்ட அரங்கில்தான் முடியும்.

அரங்கைக் கட்டுவதற்கு முன்னரும் செப்பனிடும் பொழுதும், பொறியாளர்கள் நாடகத்துறையில் அனுபவமுள்ளவர்கள் ஆகியோரின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் போற்றிக் கொள்ள வேண்டும்.

நாடக அரங்குகளே இல்லாத ஊர்களில் தென்னங்கீற்றினாலும், பலகைகளாலும் நாடக மேடையை மட்டும் அமைத்து விடுகிறார்கள். மக்கள் திறந்த வெளி அரங்கிலிருந்து கொண்டுதான் நாடகத்தைக் காண்கிறார்கள். இந்த முறை, கோடைக்காலங்களில்தான் இயலும். திடீரென்று காற்றோ மழையோ வந்துவிட்டால் நிகழ்ச்சிகள் தடைப்பட்டுப் போகும். பொதுவாகப் பொருட்காட்சிகளில் இத்தகைய மேடைகளைத்தான் அமைத்துக் கொடுக்கிறார்கள். பொருட்காட்சியில் இருக்கும் திறந்தவெளிக் கலை அரங்கில் நாடகம் மிகுதியாகப் பாதிக்கப்படும். ஒலி பெருக்கியின் வாயிலாகச் செய்யப்படும் விளம்பரதாரர்களின் ஒலி, அரங்கின் வெளியில் கடைகளுக்காக இணைக்கப்பட்டிருக்கும் மின் விளக்குகளின் ஒளி போன்ற குறுக்கீடுகள் அந்நாடக அரங்கில் ஊடுருவி நாடகத்தின் தரத்தைக் குறைக்கும். எனவே, நாடகம் தொடங்கியவுடன் இவைகளை நிறுத்திவிட வேண்டும்.

பொதுவாக நாடக அரங்குகளில் தீ அணைப்புக் கருவிகள் எப்பொழுதும் ஆயத்த நிலையில் இருத்தல் வேண்டும். குறிப்பாகக் கீற்றுக் கொட்டகை அரங்குகளில் இவை மிகவும் இன்றியமையாதனவாகும். நெருப்புத் தொடர்பான எப்பொருள்களையும் மேடையில் பயன்படுத்தாமல் இருப்பது நலம். மேடையில் புகைபிடித்தலையும் தவிர்க்க வேண்டும். இத்தகைய கொட்டகை அரங்குகளில் கீற்றுகளை மிகவும் நெருக்கமாக வேய்ந்து காட்சி அமைப்புகளை மழையில் சேதமடையாவண்ணம் பாதுகாக்க வேண்டும்.

நாடக மேடை 60 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்டதாக அமைந்திருந்தால் தான் பெரிய நாடகங்களை நடத்த முடியும். (வெளிப்புறத்திலிருந்து பார்க்கையில்) இரு புறமும் 15 அடி அகலத்தில் மறைப்புச் சுவர் எழுப்ப வேண்டும். இதுவே நாடக அரங்கின் முகப்பு ஆகும். இதனால் நமக்குத் தெரியும் காட்சி 30 அடி அகலத்திலிருக்கும். நாடக மேடையின் அகலம் 60 அடி இருந்தால்தான் அரங்கின் இருபுறமிருக்கும் அவையோருக்குக் காட்சிகள் நன்கு தெரியும். அன்றியும் இதனால், அந்தக் காட்சிக்கு மட்டும் தேவைப்படாத காட்சி அமைப்புகளை நன்றாக உள்ளே மறைத்து வைக்கவும் முடியும். மேடையின் உட்புறம் காட்சி அமைப்பாளர்களும் நடிகர்களும் எளிதாக நடமாட ஏதுவாயிருக்கும் தரையிலிருந்து நாடக மேடை 3 அடிக்கு மேலிருக்கக் கூடாது. அதற்கு மேலிருந்தால் முன் வரிசைகளில் அமர்ந்து நாடகம் பார்ப்போர்கள் கழுத்து வலியால் துன்புற நேரிடும். மேடையின் உயரம் மேடைத் தளத்திலிருந்து 18 அடி தான் இருக்க வேண்டும். அதற்கு மேல் 4 அடி விட்டுப் பரண் அமைக்க வேண்டும். அதற்கு மேல் 5 அடி பரப்பு விட்டுப் பந்தலோ நிரந்தரத் தளமோ அமைத்தல் வேண்டும். இந்த 5 அடி, காட்சி அமைப்பாளர்கள் மேலிருந்தபடி வேலை செய்யப் பயன்படும். இப்பரண் மூங்கிற் கம்புகளால் அமைக்கப்பட்டால் அவ்வப்போது மாற்றிக் கட்டிக் கொள்ளவும், கயிறுகள் எளிதாக இழுபடவும் வாய்ப்பாக இருக்கும்.

60 அடி அகலமான நாடக மேடையில் 50 அடி அகலத்திற்கு நல்ல வழுவழுப்பான பலகைகளால் மேடை போடப்பட வேண்டும். சிமண்ட்டு அல்லது கான்க்ரீட்டினால் மேடை அமைக்கப்பட்டால் எதிரொலி கேட்கும். அடிக்கடி பழுதுபார்ப்பதும் கடினம். மேடையில் உட்புறம் இருபக்கமும் திரைக் கயிறு கட்டவும் தட்டிகளுக்காகக் கம்பிகள் கட்டவும் இரும்புக் குழாய்கள் அல்லது சவுக்குக் கம்புகள் அமைக்கப்பட வேண்டும். அவற்றை மேடையிலிருந்து 4½ அடியிலும், 9 அடியிலும், 13½ அடியிலும் ஒன்றன்மேல் ஒன்றாக அமைக்க வேண்டும். மேடையிலிருந்து 15 அடி உயரத்தில் இருபக்கமும் மச்சுத் தாழ்வாரம் போல் 5 அடிகள் அகலத்திற்குக் கான்கிரீட்டில் தளம் அமைக்க வேண்டும். ஓரிரு நிகழ்ச்சிகளுக்காகச் செய்யப்படும் ஓலைக் கொட்டகைகளுக்கு இது தேவையில்லை. தளத்திற்கு முன் சுவர் எழுப்பாமல், படுதாக்கள், தட்டிகளின் கம்பிகள் கட்ட இரும்புக் குழாய்கள்தாம் பொருத்த வேண்டும். அதன் உயரம் 3½ அடியாகத்தான் இருத்தல் வேண்டும். இத்தகைய அமைப்பு, சென்னை இராசா அண்ணாமலை மன்றத்தில் காணப்படுகிறது. நாடக மேடையின் பின்புறம் 30 அடி அகலத்திற்கும்18 அடி உயரத்திற்கும் நுழைவு வாயில் வைத்தால், காட்சி அமைப்புகளைக் கொண்டு வரவும், நாடகம் முடிந்தபின்


அவற்றைத் திரும்பக் கொண்டு போகவும், பேருந்துகளில் ஏற்றவும் இறக்கவும் எளிதாக இருக்கும்.

அவரவர்கள் வசதிக்கேற்ப ஒப்பனை, ஆடை அறைகளை அரங்கின் இருபுறங்களிலும் அமைத்துக் கொள்ளலாம். அந்த அறைகளிலிருக்கும் விளக்கின் வெளிச்சம், மேடைக்கு வராத அளவிற்குக் குவியாடங்களைக் கொண்டோ திரைகளைக் கொண்டோ தடுக்கப்படவேண்டும். ஒப்பனை அறையிலுள்ள கண்ணாடிகளின் பின்னணி மங்கலான நிறத்தில் அமைதல் வேண்டும். ஒப்பனை அறைகளில் மின்விசிறிகளும் அமைக்கப்பட வேண்டும். மேடைக்கு அருகிலேயே நடிகர்களுக்குக் குடிநீர் மற்றும் கழிவுநீர் அறை வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

வேண்டும். வெளியிலிருந்து எந்த வெளிச்சமும், ஒலியும் நாடக அரங்கினுள் புகுந்து, நாடகத்தைக் கெடுக்காத அளவிற்குத் தடுப்பு இருக்க வேண்டும்.

ஒரு புதிய நாடக அரங்கை அமைப்புதற்குமுன், ஒலிபெருக்கி விற்பன்னர்களை வைத்து அரங்கில் எதிரொலி வராத அளவிற்கு ஆராய்ந்து வேண்டிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அரங்கு நிகழ்ச்சியில் பங்கேற்பவர்கள் அரங்கின் எப்பகுதியில் இருந்தாலும் தக்க வேறுபாடுகளுடன் அவையினருக்கு ஒலி கேட்குமளவிற்கு ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட வேண்டும். ஆர். எஸ். ம.

**அரங்கு** என்பது ஆடல், இசை, நடனம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெறும் இடம் ஆகும்.




மேல் பார்வை

1. பின் கதவு 2. மரப்பலகை 3. பக்கமாடி வரிசை
4. வாத்தியக் குழு 5. பார்வையாளர்கள் 6. ஒப்பனை அறை
7. உடை அலங்கார அறை 8. அரங்கு முகப்பு

நாடக அரங்கிலிருந்து 5 அடி அகலத்தில் பின்னணி இசைக் குழுவிற்கு இடம் ஒதுக்கப்பட வேண்டும். இசைக் குழுவிற்கு முன் தடுப்புச் சுவர் 2½ அடி உயரத்தில் 40 அடி அகலத்தில் இருக்க வேண்டும். இசைக்குழுத் தடுப்பிலிருந்து 8 அடி விடுத்தே அவையினரின் முதல் வரிசை நாற்காலிகள் அமைக்கப்பட

நடித்துக் காட்டும் இயல்பு மனித இனத்தின் இயல்பூக்கங்களுள் ஒன்று. காலநிலை மாறுதல்களுக்கும் காலத்தொடு ஒட்டிய தொழில்களுக்கும் ஏற்பப் பண்டைய மக்களின் நடிப்புசார் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. வேட்டையாடுதல், மழைக் காலத்தின் வருகை போன்றவை நடித்துக் காட்டப்பட்டன.

பண்டைய மக்களின் இத்தகைய நிகழ்ச்சிகள் பெரும்பாலும் அனைவரும் ஓரிடத்தில் குழுமியிருந்து பங்கு ஏற்று நடத்துமாறு அமைந்திருந்தன. ஒரு சில பண்டையச் சமூகங்களில் சடங்குகளாகவே கருதப்பட்டு வந்தன.

மிகப் பழைமையான அரங்க நிகழ்ச்சி கி.மு. 19-ஆம் நூற்றாண்டு எகிப்தில் அபிதாசு (Abydos) என்ற இடத்தில் நடத்தப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன.

கிரேக்க அரங்குகள்: மாபெரும் தயனிசியா (The Great Dionysia) என்று கூறப்பட்ட துன்பியல் நாடகப் போட்டியைப் பிசிசுடிராடசு (Pisistratus) என்னும் ஏதென்சு மன்னன் கி.மு. 534-இல் தொடங்கி வைத்தான். இது தயனிசசு (Dionysus) என்ற கிரேக்க திராட்சை மதுக் கடவுளுக்காக ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்பட்ட நாடகப் போட்டியாகும். அட்டிகா என்னும் நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகளில் 10 பழங்குடிகள் பங்கேற்று வந்தனர். ஏதென்சு நகரத்தில் பெரிகிளிசு (Pericles) என்னும் மன்னனின் காலத்தில் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் இசுகிலசு (Aeschylus), சோபோகிளிசு (Sophocles), யுரிபிடிசு (Eruipides) ஆகிய பழம்பெரும் நாடக ஆசிரியர்கள் திகழ்ந்தார்கள். ஏதென்சு நகரத்தில் இலினே (Lenaea) என்று அழைக்கப்பட்ட இன்பியல் நாடகங்களும் நிகழ்த்தப்பட்டன. அரிசுடோபனிசு (Aristophanes, கி.மு. 450 - கி.மு. 385) என்ற நாடக ஆசிரியரின் 11 நகைச்சுவை நாடகங்கள் அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கின. ஏதென்சு நகரத்தில் அக்கிராபாலிசு (Acropolis) மலைச் சரிவுகள் இந்நிகழ்ச்சிகளுக்கு இயற்கையாக அமைந்த திறந்த வெளி அரங்காகப் பயன்பட்டது.

கிரேக்க அரங்குகளில் 14,000 மக்கள் அமரக்கூடிய அவையோர் இடமும் (Theatron), நடனம் செய்யும் இடமும் (Dancing Circle) இவைகளுக்கு நடுவில் தைமீல் (Thymele) எனப்பட்ட பீடமும், தைமீலுக்குப் பின்புறம் அமைந்த நடிகர்கள் வேடம் புனைவதற்கான கீன் (Skene) எனப்படும் குடிலும் ஆகிய நான்கு பெரும்பகுதிகள் காணப்பட்டன. கீனுக்கும் அவையோருக்கும் இடையில், இசையணியினர் வருதற்குரிய பரடாசு (Parados) எனப்பட்ட நுழைவாயில் இருந்தது. துன்பியல் நாடகப் போட்டிக்கான விதிகளின்படி ஒவ்வொரு நாடக ஆசிரியனும் மூன்று துன்பியல் நாடகங்களும், அவற்றுக்குப் பின் நிகழ்த்தப்படவேண்டிய நையாண்டி நாடகமும் (Satire play) ஆக நான்கு நாடகங்கள் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஒருசில நாடகங்களைத்தவிர, பெரும்பாலான நாடகங்கள் ஈடிபசு, டிராய் படையெடுப்பு அட்டிரியசின் கதை, (Atreus) எர்குலிசு (Hercules) வீரச்செயல்கள் போன்ற கிரேக்கப் பழங் கதைகளையொட்டி அமைந்திருந்தன. இக்கதைகள் பெரும்பாலும் ஒரே வகையான அமைப்பில் நாடகமாக்கப்பட்டன. பயிற்சி பெற்ற நடிகர்கள் இந்நாடகங்களில் பங்கேற்றனர்.

உரோமானிய அரங்குகள்: கி.மு. 55-ஆம் ஆண்டுக்குப்பின் உரோம் நகரத்தில் நிலையான அரங்கு கட்டப்பட்டது. அதற்கு முன் நாடகங்கள் தெருக்களிலும் பொது இடங்களிலும் நிகழ்த்தப்பட்டன. பிளாடசு (Plautus), தெரென்சு (Terence) ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் திறந்தவெளி அரங்குகள் நடைமுறைக்கு வரலாயின (கி.மு. முதல் நூற்றாண்டு). நிகழ்ச்சி நடைபெறும் இடங்கள் இரண்டடுக்குகள் கொண்டனவாகவும் அலங்கார வேலைப்பாடுகளுடன் கூடியனவாகவும் இருந்தன. அரங்குகள் பெரும்பாலும் கிரேக்க அரங்குகளைப் போன்றே அமைந்திருந்தன.

இடைக்கால அரங்குகள்: ஐரோப்பாவில் திருச்சபையும் பொதுமக்களும் இணைந்து அரங்குகளை அமைத்தனர். அரங்க நிகழ்ச்சிகள் பெரும்பாலும் பழைய புதிய ஏற்பாடுகளில் (Old and New Testaments) காணப்படும் நிகழ்ச்சிகளை ஒட்டியே அமைக்கப்பட்டன. இவைகளைத் தவிர மகான்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. நடிகர்கள் ஒருமேடையிலிருந்து மற்றொரு மேடைக்குச் செல்லுவதற்கு ஏற்றாற்போல் வரிசையாக வட்ட வடிவமாக மேடைகள் பல காட்சிகளுக்காக அமைக்கப்பட்டிருந்தன. இங்கிலாந்தில் பெரிய வண்டிகளில் மேடை அமைக்கப்பட்டு வந்தன. ஓர் இடத்தில் நாடகம் முடிந்த பின்னர் இவ்வண்டியை மற்ற இடங்களுக்கு நகர்த்திச் சென்று அங்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

இத்தகைய மேடை அமைப்புகளும் அரங்குகளும் கி.பி.16 ஆம்-நூற்றாண்டு வரையில் நீடித்தன.

மறுமலர்ச்சிக்கால அரங்குகள்: ஐரோப்பிய நாடுகளில் இக்காலத்தில் இசை நாடகங்களும் நகைச்சுவை நாடகங்களும் பெரும்பாலும் புகழ்பெற்று வந்தன. அவையோர் அமர்வதற்கென அமைக்கப்பட்ட கொட்டகைகளுடன், நிகழ்ச்சி நடைபெறும் மேடைகளும் இணைந்து அரங்குகள் உருவாக்கப்பட்டன. இத்தகைய அரங்குகள் இத்தாலி, பிரான்சு ஆகிய இரு நாடுகளிலும் பரவலாயின. இங்கிலாந்தில் சேக்சுபியர் (Shakespeare) என்னும் புகழ்பெற்ற நாடக ஆசிரியரின் நாடகங்களை நிகழ்த்துவதற்காக மாபெரும் அரங்குகள் உருவாக்கப்பட்டன. இந்த அரங்குகளில் 2500 பேர்களுக்கு மேல் அமர்ந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வசதிகள் இருந்தன.

தமிழ்நாட்டு அரங்குகள்: பண்டைத் தமிழ்நாட்டில் அரங்குகள் எவ்வாறு அமைக்கப்பட்டன என்பது

பற்றிச் சிலப்பதிகாரத்தில் விரிவான குறிப்புகள் காணப்படுகின்றன.

அரங்குகள் நாடக நூலாசிரியர் வகுத்த இயல்புகளி னின்று வழுவாத முறையில் அமைக்கப்பட்டன. துவர், வரி, வளை, பொருத்தன் முதலிய நிலக்குற்றங்கள் இல்லாத இடத்தை அரங்கு அமைப்பதற்குத் தேர்ந் தெடுத்தனர். நல்ல வலிமையான மூங்கில்களைத் தேர்ந்தெடுத்துக் கால்கள் அமைத்தனர்.

ஏழுமுழ அகலமும் எட்டுமுழ நீளமும் ஒருமுழ உயர மும் கொண்டு அரங்கின் மேடை அமைக்கப்படும். அரங்கில் தூண்களுக்கு மேல், பலகைகள் வைத்துக் கட்டப்படும். இந்த உத்திரப் பலகைகளுக்கும் அரங் கின் அகலத்துக்கும் இடையே நான்கு முழம் இடை வெளி இருக்கும். அரங்கின் உள்ளே வருதற்கும் அரங் கினின்று வெளியில் செல்வதற்கும் இருபக்கங்களிலும் நுழைவாயில்கள் இருக்கும். அரங்கில் இருக்கும் தூண் களின் நிழல் மேடையின் மீதோ அவையினர் மீதோ படாதவாறு ஒளியமைப்பு இருக்கும். அரங்கின் இடது பக்கத் தூணில் உருவு திரையாக ஒருமுக எழினியும், வலத்தூணில் உருவு திரையாகப் பொருமுக எழினி யும், மேற்கட்டும் திரையாகக் கரந்துவரல் எழினியும் அமைக்கப்பட்டிருக்கும். அரங்கின் சித்திர விதானத் தில் ஓவியங்கள் காணப்படும்.

பாரிசு மாநகரத்தில் கி.பி. 1548-ஆம் ஆண்டு முதல்முறையாக ஒரு நிலையான அரங்கு அமைக்கப் பட்டது. இவ்வரங்கில் அவையோர் மூன்று பக்கங்களி லும் இருந்த படிக்கட்டமைப்புகளில் அமர்ந்து நிகழ்ச் சிகளைக் காண வசதி இருந்தது. நான்காவது பக்கத் தில் மேடை அமைப்பு இருந்தது. இக்காலத்தில் இங்கி லாந்தில் குளோப் (Globe), அன்னப்பறவை ஆகிய அரங்குகள் புகழ்பெற்று விளங்கின.

கிரேக்க அரங்குகளில் பெரியக்டாய் (Periaktoi) என்று அழைக்கப்பட்ட முப்பட்டைக் கண்ணாடி மேடைகள் இருந்தன. இக்கண்ணாடிகளில் வெவ்வேறு காட்சிகள் தீட்டப்பட்டிருந்தன. தேவைக்கு ஏற்ப இக் காட்சிகள் மாற்றி அமைக்கப்பட்டன. காட்சிகள் விரைவில் மாறிமாறி அமைக்கப்பட்ட அரங்குகள் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சி லும் விளங்கின.

ஐரோப்பிய அரங்குகள் பல புதிய முன்னேற்றங் களைக் கி.பி.18-ஆம் நூற்றாண்டில் அடைந்தன. ஒளி ஒலி அமைப்புகள் சிறந்து விளங்கின. பல்வேறு வகை யான நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைந்திருப்பது இக் காலத்திய அரங்குகளின் சிறப்பியல்புகளுள் ஒன்றா கும். நியுயார்க்கு இலிங்கன் சதுக்கத்தில் உள்ள விவி யன் போமான் அரங்கு (Vivian Beaumont Theater) ஒரு சிறிய பொத்தானை அழுத்தியவுடன் முற்றிலும் வேறு விதமான மேடையைத் தோற்றுவிக்கக் கூடிய தாக இருக்கிறது. பண்டைய சப்பானிய நாட்டில் சிண்டோ வழிபாட்டு முறைக்காக அமைக்கப்பட்ட நோ (No) அரங்குகளில் சமயச்சார்பான நடனங்கள் நிகழ்த்தப்பட்டன. பன்ராகு (Bunraku) என்று கூறப் படும் சப்பானியப் பாவைக் கூத்துகளில் நிகழ்ச்சி நடை பெறும்பொழுது கதையை ஒருவர் அவையினருக்கு எடுத்துரைப்பார். இவற்றைத் தவிர கபூகி (Kabuki) எனப்படும் நிகழ்ச்சிகளும் சப்பானில் நிகழ்த்தப்பட் டன.

***அரசகேசரி*** கி.பி.16-ஆம் நூற்றாண்டின் இறு தியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நல்லூரில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்; அரச பரம்பரையினர்; பரராசசேகர மன்னர்தம் மருகராவர். இராமேசுவரத்தில் விளங் கும் இராமேசுவரரைப் பூசை செய்யும் பஞ்சக்கிராம வேதிய மரபினர் என்பாருமுளர். சைவராக விளங்கிய இவர் ஆழ்வார் திருநகரி அட்டாவதானம் இராமா நுசக் கவிராயரிடம் கல்வி கற்றார். சீவக சிந்தாமணி சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநா னூறு ஆகிய இலக்கியங்களில் தேர்ச்சிமிக்க இவர் வடமொழிப் புலமை நிறைந்தவர்.

காளிதாசரது வடமொழி நூலான இரகுவமி சத்தை 26 பகுதிகள் கொண்ட நூலாக 2404 செய் யுள்களில் தமிழாக்கம் செய்துள்ளார். சொல் நயம், பொருள் நயம், கற்பனையலங்காரம் ஆகியன சிறப் புற வாய்ந்த இந்நூல் திருவாரூரில் பரராசசேகர மன்னன் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யப் பெற் றது. சுன்னாகம் குமாரசாமிப் புலவரது இரகுவமிசக் கருப்பொருள் என்ற உரையும், திக்குவிசயப் படலம் வரை புன்னையம்பதிக் கணேசையர் எழுதிய உரை யும் இந்நூலுக்கு உள்ளன. நா.ஜெ.

***அரசஞ் சண்முகனார்*** கி.பி.1868-ஆம் ஆண் டுச் செப்டம்பர்த் திங்கள் பதினைந்தாம் நாள் பிறந் தார். தந்தையார் அரசப்பப்பிள்ளை; தாயார் பார் வதியம்மையார். சைவ வேளாளர். சோழவந்தான் என்னும் ஊரினர். இவர் துணைவியார் பெயர் காளி யம்மை. இவர்தம் தொடக்கக் கல்வியினை அழகர் சாமி தேசிகரிடமும் தருக்கம், சோதிடம், இலக்கண இலக்கியக் கல்வி ஆகியவற்றைச் சிவப்பிரகாச சுவாமி களிடமும் கற்றார்.

மதுரை, சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் கி.பி. 1890-இல் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றி னார். கி.பி.1902 முதல் 1906 வரை பாண்டித்துரைத் தேவர் நிறுவிய தமிழ்ச் சங்கத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

வித்துவரத்தினம், தமிழமிர்த சஞ்சீவி, தொல் காப்பியத் தொண்டன் என்னும் சிறப்புப் பெயர்



அரசஞ் சண்முகனார்

களைக் கொண்ட இவர் செந்தமிழ், விவேகபானு, ஞானசாகரம், ஞானசித்தி, விவேகோதயம் என்னும் ஏடுகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார். இவர் சொற் பொழிவு, நூலாய்வு, உரைகள், மறுப்புகள் ஆகிவற் றில் ஆர்வமும் முயற்சியும் காட்டினார்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர், மறைமலை யடிகள், பாண்டித்துரைத் தேவர், மு.ரா. அருணா சலக் கவிராயர், ரா. இராகவையங்கார், மு. இராக வையங்கார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், ந.மு. வேங்கடசாமி நாட்டார், மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆகிய பெருமக்களுடன் நெருங்கிய நட்பும் தொடர்பும் கொண்டு தமிழ்த் தொண்டாற்றினார். 47 ஆண்டுகள் வாழ்ந்த இவர், 1915 சனவரி 11-ஆம் நாள் மறைந்தார்.

அரசஞ்சண்முகனார் படைப்புகளாவன: முப்பது கொச்சகக் கலிப்பாவிலான சிதம்பரவிநாயகர் மாலை, நோய்தீரும் வகையில் சொக்கலிங்கப் பெருமான்மேல் பாடிய பத்துப் பதிகங்கள், மாலை மாற்று மாலை, ஏகபாத நூற்றந்தாதி, நவமணிக் காரிகை நிகண்டு, தொல்காப்பியப் பாயிர விருத்தி, தொல்காப்பிய விருத்தி, இன்னிசையிருநூறு, வள்ளுவர் நேரிசை, பஞ்ச தந்திர வெண்பா, மதுரைச் சிலேடை நுண் பொருட் கோவை, திருக்குறளாராய்ச்சி, திருக்குறட் சண்முக விருத்தி, முதற்குறள் விருத்தி, மீனாட்சி யம்மை சந்தத் திருவடி மாலை, சிதம்பர விநாயகர் மாலை, இசை நுணுக்கச் சிற்றுரை ஆகியனவாகும்.

நா.ஜெ.

**அரசவில்லி** என்பது ஓர் ஊர். ஆந்திரப் பிர தேசம் சீகாகுள மாவட்டத்தில் உள்ள சமய, சுற் றுலாச் சிறப்பு மிக்க ஒரு மையம். சீகாகுளம் நகருக்கு ஏறக்குறைய இரு கிலோ மீட்டர் தொலைவில் உள் ளது. சீகாகுளத்திலிருந்து பேருந்து வழியாகச் சென்று இவ்வூரை அடையலாம். இவ்வூரின் பெயர் ஆந்திர வரலாற்று ஏடுகளில் காணப்படுகிறது. கல்வெட்டு களில் இதனை அர்சவல்லி என்று குறிப்பிட்டுள்ள னர்.

**அரசாங்க அமைப்பு** அரசியல் கலையில் சீரிய இடத்தைப் பெறுகிறது. இன்றைய நிலையில் எல்லா அரசாங்கங்களும் நிருவாகம், சட்டமியற்றுதல், நீதி செலுத்துதல் ஆகிய பணிகளை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகின்றன. பண்டைக் காலத் தில் மன்னனே இப்பணிகள் யாவற்றையும் ஆற்றி வந்தான். ஆனால், நாகரிக முதிர்ச்சி அடைந்துள்ள இக்கால நிலையில், ஒவ்வொரு அரசாங்கத்திலும் இப்பணிகளை ஆற்ற நிருவாகத் துறை, சட்டமன்றம், நீதித்துறை ஆகிய மூன்று தனிப்பகுதிகள் அமைந்துள் ளன. இப்பகுதிகளும், அவற்றின் அமைப்பு, அதி காரங்கள், அவற்றிடையே நிலவும் தொடர்புகள் ஆகியவற்றைக் குறித்து ஒவ்வொரு நாட்டின் அரசிய லமைப்புச் சட்டத்திலும் விவரிக்கப்பட்டுள்ளன. பிரிட்டனில் மட்டும்தான் அதன் அரசாங்க அமைப்பு, தொன்றுதொட்டு வழங்கிவரும் வழக்காறுகளாலும் பாராளுமன்றம் அவ்வப்போது இயற்றிய சட்டங்க ளாலும் படிப்படியாக வளர்ச்சியடைந்திருக்கிறது. அதனால்தான் பிரிட்டனின் அரசாங்க அமைப்புக் குறித்து எந்த ஓர் ஆவணத்திலிருந்தும் முழுமை யாக அறிய முடியாத நிலை உருவாகியுள்ளது.

அரசாங்க அமைப்புகளைப் பல்வேறு அடிப்படை களைக் கொண்டு வகைப்படுத்தலாம். பண்டைக் கிரேக்க நாட்டு அறிஞர் அரிசுடாட்டில் அவர் காலத் தைச் சேர்ந்த பல்வேறு அரசாங்க அமைப்புகளை ஆராய்ந்து அவற்றை எண்ணிக்கை, குணம் ஆகிய இரண்டு அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்தி னார். முதலாவதாக ஒரு மனிதனால் நடத்தப்படும் ஆட்சியை முடியாட்சி எனவும், உயர்குடியினரால் நடத்தப்படும் ஆட்சியை உயர்குடி ஆட்சி எனவும், எல்லா மக்களாலும் கட்டுப் படுத்துகிற ஆட்சியை அமைப்பொழுங்குடைய அரசியல் சமுதாயம் (Polity) எனவும் வகைப்படுத்தினார். இவற்றை அரிசுடாட் டில் இயல்பான அரசியல் அமைப்புகளாகக் கருதி னார். இவ்வமைப்புகள் நெறி கோணிய நிலையை அடைந்தால் அரிசுடாட்டில் அவற்றை முறையே கொடுங்கோலாட்சி, சிறுகுழுவாட்சி, கும்பலாட்சி என வகைப்படுத்தினார். ஆனால், இக்கால அரசாங்க அமைப்புகள் அதிக சிக்கல் வாய்ந்தவையாக உள்ள தால் அரிசுடாட்டிலின் பாகுபாட்டுக்குள் இன்றைய அரசாங்க அமைப்புகளைக் கொண்டுவர இயலாது.

இக்கால அரசியல் அறிவியலார், அரசியலமைப்பு களில் மக்களுரிமைகளுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சிறப்பு அரசாங்க அமைப்புகளை மாற்றியமைக்கும் முறை, நிருவாகத்துறையின் பொறுப்புத்தன்மை, சட்டமன்றத்தின் இயல்பு, நீதித்துறையின் அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு பாகுபாடு செய்கின்றனர்.

மக்களாட்சி நிலவும் அரசாங்க அமைப்புகளில் குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அவ்வுரிமைகளை அரசாங்கம் செயற்படுத்தத் தவறுமானால், குடிமக்கள் நீதி மன்றங்கள் வாயிலாக அவற்றை நிலைநாட்டிக் கொள்ளலாம். இந்திய அரசாங்க அமைப்பில் நீதி மன்றங்கள் வாயிலாகச் செயற்படுத்திக் கொள்ளக்கூடிய அடிப்படை உரிமைகளும், அரசாங்கம் தன் கொள்கைகளை வகுத்து அவற்றைச் செயற்படுத்துங்கால் கவனத்தில் கொள்ளவேண்டிய நெறிமுறைக் கோட்பாடுகளும் இடம்பெற்றுள்ளன. அயர்லாந்து நாட்டு அரசாங்க அமைப்பிலும், இந்தியாவில் உள்ளது போன்று அடிப்படை உரிமைகள், நெறிமுறைக் கோட்பாடுகள் ஆகிய இரண்டுவகை உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்க ஐக்கிய நாடுகளின் அரசாங்க அமைப்பு ஏற்படுங்கால், அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்படவில்லையெனினும், கி.பி. 1791–ஆம் ஆண்டுத் திருத்தங்கள் வாயிலாகப் பொதுவாக உரிமைகள் மசோதா என்று வழங்கப்படும் அடிப்படை உரிமைகள் சேர்க்கப்பட்டன. அதன் பிறகு மேலும் சில திருத்தங்கள் வாயிலாக அமெரிக்கக் குடிமக்களுக்குப் பல உரிமைகள் வழங்கப்பட்டன. இவையாவும் நீதி மன்றங்கள் வாயிலாக நிலை நாட்டத் தக்கவை. பிரான்சு நாட்டு அரசாங்க அமைப்பிலும் கி.பி. 1789, 1946 ஆகிய ஆண்டுகளில் மனித உரிமைகள் பேரறிவிப்பு மீண்டும் உறுதி செய்யப்பட்டு, அவை நீதித்துறை வாயிலாகச் செயற்படத்தக்கவையாக ஆக்கப்பட்டுள்ளன. எழுதப்படாத அரசாங்க அமைப்புக் கொண்டுள்ள பிரிட்டனில் எந்த ஒரு குறிப்பிட்ட சட்டத்திலும் மக்கள் உரிமைகள் இடம் பெறவில்லையெனினும், சட்டத்தின் உயர்வு என்னும் அடிப்படையில் மக்களுக்கு எல்லா உரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளன.

ஒரு தனி மனிதனின் அல்லது ஒரு குறிப்பிட்ட கட்சியின் எதேச்சாதிகாரம் நிலவிய அல்லது நிலவும் நாசி செருமனி, சோவியத்து உருசியா போன்ற நாடுகளின் அரசாங்க அமைப்புகளில் நீதித்துறையின் வாயிலாக நிலை நிறுத்தக்கூடிய அடிப்படை உரிமைகள் மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கவில்லை. சோவியத்து உருசியா அரசாங்க அமைப்பில் மற்ற மக்களாட்சி நாடுகளைவிட அதிக எண்ணிக்கையிலான அடிப்படை உரிமைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனினும் அவற்றை நிலைநாட்ட நீதி மன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

அரசாங்க அமைப்புகளைச் சட்டமன்றம் சாதாரணச் சட்டங்கள் இயற்றுவதற்கு மேற்கொள்ளும் அதே நடைமுறையைக் கொண்டு மாற்றியமைக்க அதிகாரம் பெற்றிருக்குமானால், அது நெகிழ்வுத்தன்மையுள்ளது எனக் கருதப்படுகிறது. பிரிட்டனின் அரசாங்க அமைப்பு மட்டும்தான் இவ்வகையைச் சேர்ந்தது.

மற்ற அரசாங்க அமைப்புகள் சிலவற்றில் சட்டமன்றங்களுக்கே அவற்றை மாற்றியமைக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பினும், குறிப்பிட்ட தனி நடை முறையைக் கொண்டோ குறிப்பிட்ட தனிப் பெரும்பான்மையுடனோதான் அவ்வதிகாரத்தைச் செயற்படுத்த முடியும். இவ்வகையான அரசாங்க அமைப்புகள் நெகிழ்வுத் தன்மையற்றவை. இந்திய அரசாங்க அமைப்பில் பல்வேறு பிரிவுகளின் சிறப்புத் தன்மையையொத்து, மாற்றியமைக்க மூன்றுவிதமான முறைகள் நிருணயிக்கப்பட்டுள்ளன. சில பிரிவுகளை இந்தியப் பாராளுமன்றம் சாதாரணச் சட்டமியற்றும் நடைமுறையைக் கொண்டு மாற்றியமைக்கலாம். சிலவற்றைச் சாதாரணச்சட்டமியற்றும் நடைமுறையைக் கொண்டு, சிறப்புப் பெரும்பான்மையுடன் மாற்றியமைக்கலாம். இன்னும் சிறப்பு மிக்கனவாகக் கருதப்படும் பிரிவுகளைச் சிறப்புப் பெரும்பான்மையுடன், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாநிலச் சட்டமன்றங்களின் ஒப்புதலோடு மாற்றியமைக்கலாம். ஐக்கிய அமெரிக்க நாடுகளின் அரசாங்க அமைப்பை மாற்றியமைக்கச் சிறப்பு நடைமுறை விதிக்கப்பட்டு உள்ளது. மாற்றியமைப்பதற்கான தொடக்க நடவடிக்கையை மூன்றில் இரண்டு பங்கு அறுதிப் பெரும்பான்மையுடன் அமெரிக்கக் காங்கிரசோ, அல்லது மூன்றில் இரண்டு எண்ணிக்கையுள்ள மாநிலச்சட்ட மன்றங்களின் மனுக்கள் வாயிலாகக் கூட்டப்படும் சிறப்பு அவையோதான் எடுக்க வேண்டும். அதேபோன்று மாற்றம் இறுதியாக உறுதி செய்யப்படுவதற்கு நான்கில் மூன்று அறுதிப் பெரும்பான்மை மாநிலச் சட்ட மன்றங்களின் இசைவோ அல்லது நான்கில் மூன்று அறுதிப் பெரும்பான்மை மாநிலச் சிறப்பு அவைகளின் இசைவோ தேவைப்படுகிறது.

நாடு முழுமைக்கும் இறைமையதிகாரம் கொண்ட ஒரே சட்டமன்றமும் ஒரே மைய அரசாங்கமும் செயற்படுமானால் அதை ஒற்றையாட்சி எனக் கருதுகிறோம். மைய ஆட்சியானது கட்டுப்பாடற்ற உயர் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். பிரிட்டனின் அரசாங்க அமைப்பானது ஒற்றையாட்சி வகையைச் சேர்ந்தது. அந்நாட்டுப் பாராளுமன்றம் நாடு முழுமைக்கும் சட்டங்களை இயற்றக்கூடிய அதிகாரம்

பெற்றிருக்கும் ஒரே சட்டமன்றமாகும். வேறு சட்ட மன்றங்கள் அந்நாட்டில் இல்லை. மைய ஆட்சியானது ஊராக ஆட்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவோ மாற்றியமைக்கவோ முழுமையாக ஒழிக்கவோ உயர் அதிகாரம் பெற்றுள்ளது. இது போன்றுதான் பிரான்சு நாட்டிலும் ஒற்றையாட்சி நிலவுகிறது.

ஆனால், ஐக்கிய அமெரிக்க நாடுகள், சோவியத்து உருசியா, இந்தியா, சுவிட்சர்லாந்து முதலிய நாடுகளில் கூட்டாட்சிமுறை நிலவுகிறது. மையச் சட்டமன்றமும், மைய அரசாங்கமும் மட்டுமன்றி, இந்நாடுகளில் மாநிலச் சட்ட மன்றங்களும், மாநில அரசுகளும் உள்ளன. இவை அரசாங்க அமைப்பின் வாயிலாகத் தத்தமக்கு அளிக்கப்பட்டுள்ள சட்டமியற்றும் அதிகாரங்களையும், செயல்துறை அதிகாரங்களையும் கொண்டுள்ளன. அரசாங்க அமைப்பை மாற்றாமல் ஒன்றையொன்று ஒழிக்கவோ மாற்றியமைக்கவோ இயலாது. அரசாங்க அமைப்பானது இறைமை வாய்ந்தது. மைய அரசாங்கமோ மாநில அரசாங்கங்களோ அரசாங்க அமைப்பு வரம்புகளை மீறுமானால் அல்லது அதற்கான முயற்சியை மேற்கொண்டால் பாதிக்கப்பட்ட அரசாங்கம் உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்து, வரம்பு மீறுதலைத் தடுக்கலாம்.

இந்தியக் கூட்டாட்சியில் 22 மாநிலங்களும், ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கூட்டாட்சியில் 50 மாநிலங்களும், சுவிட்சர்லாந்தில் 22 மாநிலங்களும், சோவியத்து உருசியாவில் 15 மாநிலங்களும், சில சுயாட்சியுள்ள பிரதேசங்களும் உள்ளன. பொதுவாக நோக்குங்கால் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கூட்டாட்சியில் எஞ்சியுள்ள (Residuary) அதிகாரங்கள் மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருப்பதால் மாநிலங்கள் வலிமை பெற்றவையாக உள்ளன. இந்தியாவில் கூட்டாட்சி அரசாங்கம் வலிமையுள்ளதாகவும், மாநில அரசாங்கங்கள் வலிமை குறைந்தவையாகவும் காணப்படுகின்றன. சோவியத்து உருசியாவில் மாநிலங்களுக்கு மற்ற எந்தக் கூட்டாட்சியிலும் அளிக்கப்படாத பிரிந்து செல்லும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்நாட்டு அரசாங்கம் செயற்படும் விதத்திலிருந்து, இவ்வுரிமையை எந்த ஒரு மாநிலமாவது செயற்படுத்த அனுமதிக்கப்படுமா என்பது பெருத்த ஐயத்திற்கு உட்பட்டதாகும்.

நிருவாகத்துறை சட்டங்கள் வடிவில் ஆக்கப்பட்டுள்ள மக்களின் விருப்பத்தை நடைமுறைப் படுத்துகிறது. அது உண்மை நிருவாகத்துறை, பெயரளவு நிருவாகத்துறை என இருவகைப்படும். மேற்கோளாகப் பிரிட்டன் நாட்டு அரசர் அல்லது அரசியார், இந்தியக் குடியரசுத் தலைவர் ஆகியோர் பெயரளவு நிருவாகத் துறை வகையைச் சேர்ந்தவர்கள். அரசாங்கச் செயல்கள் அனைத்தும் அவர்களின் பெயரால் நடைபெற்றாலும், உண்மையில் அவற்றிற்கான முடிவுகளை அவர்கள் எடுப்பதில்லை. அரசாங்கச் செயல்களுக்கு அவர்கள் பொறுப்பு உடையவர் ஆகார். எல்லா முடிவுகளும் தலைமை அமைச்சராலும், அவருடைய துணை அமைச்சர்களாலுமே எடுக்கப்படுகின்றன. ஆகவே, அவற்றிற்கு அவர்கள்தாம் பொறுப்பு வாய்ந்தவர்களாவார்கள்.

மேலும், உண்மை நிருவாகத் துறையைப் பாராளுமன்றமுறை நிருவாகத்துறை, குடியரசுத் தலைவர் நிருவாகத்துறை, பன்மை நிருவாகத்துறை என வகைப்படுத்தலாம் இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் பாராளுமன்றமுறை நிருவாகத்துறை அமைந்துள்ளது. உண்மை நிருவாகத்துறைத் தலைவரான தலைமை அமைச்சரும் அவருடைய துணை அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினரிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை வலிமை பெற்றிருக்கும் கட்சியைச் சார்ந்தவர்களாகவும் அதன் ஆதரவு பெற்றவர்களாகவும் இருக்கவேண்டும். பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையைத் தொடர்ந்து பெற்றிருந்தால்தான் பதவியில் நீடிக்கமுடியும். அரசாங்கத்தை எதிர்த்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றுவது, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றுவது, நிதி மசோதா போன்ற சிறப்பான மசோதாக்களை நிராகரிப்பது, அமைச்சர்களின் ஊதியத்தைக் குறைக்கும் தீர்மானம் நிறைவேற்றுவது போன்றவற்றால் நிருவாகத்துறை உறுப்பினர்களைப் பாராளுமன்றம் நீக்கம் செய்யலாம். அமைச்சர்களை வினாக்கள் கேட்பது, விவாதங்களின்போது கருத்துகள் தெரிவிப்பது போன்றவற்றின் வாயிலாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் நிருவாகத்துறையைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளலாம். பாராளுமன்றமுறை நிருவாகத் துறையில் தலைமை அமைச்சருக்கு அதிகாரங்களும் செல்வாக்கும் மிகுதி. பெரும்பான்மைக் கட்சியின் தலைவராக விளங்கும் அவர், தம் துணை அமைச்சர்களைத் தேர்ந்தெடுக்கவும் பதவி விலக்கவும் அதிகாரம் பெற்றிருக்கிறார். அவர் பதவி விலகினால் அமைச்சரவை முழுவதும் பதவி விலகியதாகப் பொருள்படும். சில சமயங்களில் சட்டமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துமாறு பெயரளவு நிருவாகத்துறைத் தலைவருக்கு அவர் கருத்துரைக்கலாம்.

ஐக்கிய அமெரிக்க நாடுகளில் உண்மை நிருவாகத் துறைத் தலைவரான குடியரசுத் தலைவர் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவருடைய பதவி சட்டமன்றத்தில் அவர் பெற்றிருக்கும்

ஆதரவையும், நம்பிக்கையையும் பொறுத்ததில்லை. சட்ட மன்றம் நாட்டுத் துரோகக் குற்றச்சாட்டுக் கொண்டுவராமல் அவரைப் பதவியிலிருந்து நீக்க முடியாது. அவர் பதவிக்காலம் முடியும்வரை சட்ட மன்றத்தின் ஆதரவில்லாமல் கூட ஆட்சியில் நிலைத்திருக்கலாம். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் குடியரசுத் தலைவருடைய அமைச்சர்கள் அந்நாட்டுச் சட்ட மன்றமான காங்கிரசின் உறுப்பினர்கள் அல்லர். அமெரிக்கக் குடியரசுத் தலைவரே அவர்களைப் பதவியிலமர்த்தலாம்; பதவி நீக்கமும் செய்யலாம்.

சுவிட்சர்லாந்தில் பன்மை நிருவாகத்துறையானது வழக்கில் உள்ளது. ஏழு உறுப்பினர்களைக் கொண்ட கூட்டாட்சிக் குழு என்று வழங்கப்படும் இந்நிருவாகத் துறை கட்சிச் சார்பற்ற தன்மையில் கூட்டாட்சிச் சட்டமன்றத்தால் நான்காண்டு காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. நிருவாகத்துறை உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவே இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. நிருவாகக் குழுவுக்குத் தலைமை வகிக்கும் குடியரசுத் தலைவரையும் துணைத் தலைவரையும் சட்டமன்றம் ஓராண்டுக் காலப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கிறது. வழக்கமாகத் துணைத்தலைவர் அவர் பதவிக்காலம் முடிந்தவுடன் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். இவ்வாறு அதிபர் பதவியானது சுழல்முறையில் உறுப்பினர்களிடையே வழங்கப்படுகிறது. செயற்குழுவுக்குத் தலைமை வகிக்கும் குடியரசுத் தலைவர் சுவிட்சர்லாந்துக் கூட்டாட்சித் தலைவராகக் கருதப்பட்ட போதிலும், அவருக்கு மற்ற உறுப்பினர்களைவிட எவ்விதத்திலும் அதிக அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க நடவடிக்கைகள் குடியரசுத் தலைவரின் பெயரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அம்மன்றத்திற்குப் பொறுப்புள்ளதாக இருந்தபோதிலும், அது கொண்டுவரும் இன்றியமையாத மசோதாக்கள் சட்டமன்றத்தில் தோற்றுவிட்டாலும், அது பதவி விலகுவது இல்லை. ஆகவே, நான்காண்டுப் பதவிக்காலம் முடியும் வரை சுவிட்சர்லாந்து நிருவாகக் குழு நிரந்தரத் தன்மை பெற்றுள்ளது.

சட்ட மன்றம் அரசாங்க அமைப்பின் மற்றொரு சிறப்பான துறையாகும். சட்டங்களை இயற்றுவது அதன் இன்றியமையாப் பணியாகும். ஆனால், இக்காலச் சட்ட மன்றங்கள் பலவிதப் பணிகளை ஆற்றுகின்றன. நிருவாகத்துறையின் பணிகளைக் குற்றங்காண்கிறது. சில நாடுகளில் நிருவாகத்துறையைப் பதவியில் அமர்த்துவது, நீக்குவது ஆகிய செயல்களைப் புரிகிறது; அரசின் நிதியைக் கட்டுப்படுத்துகிறது. பொது நலத்தைப் பாதிக்கக்கூடிய இன்றியமையாச் சிக்கல்களை விவாதிக்கிறது.

வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு பெயர்களைச் சட்ட மன்றங்கள் கொண்டுள்ளன. இந்தியாவிலும், பிரிட்டனிலும் பாராளுமன்றம் என்ற பெயரும், அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 'காங்கிரசு' என்ற பெயரும், சோவியத்து உருசியாவில் 'சுப்ரீம் சோவியத்து' என்ற பெயரும், பிரான்சு நாட்டில் 'தேசிய அவை' என்ற பெயரும் வழக்கில் உள்ளன. இந்நாடுகளில் எல்லாம் சட்ட மன்றங்கள் மேலவை, கீழவை என ஈரவைகளைக் கொண்டவையாக உள்ளன. பொதுவாக மேலவையானது மக்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவோ, பிரிட்டனில் உள்ளது போன்று மரபுவழியாக வரும் உரிமையின் பெயரால் உறுப்பினர்களாக ஆனவர்களைக் கொண்டதாகவோ உள்ளது. 1913–ஆம் ஆண்டுவரை அமெரிக்க ஐக்கிய நாடுகளில் செனட்டு என்று வழங்கப்படும் மேலவை உறுப்பினர்கள் மாநிலச் சட்டமன்றங்களால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுது, அவர்கள் மாநில மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

கீழவைதான் பொதுவாக மக்களால் நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதாகும். நாடு முழுவதும் மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தொகுதியிலிருந்து ஓர் உறுப்பினரோ ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களோ தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பொதுவாகக் குறிப்பிட்ட வயது வந்தோர் யாவரும் வாக்குரிமைத் தகுதி பெறுகிறார்கள்.

பாராளுமன்ற முறை நிருவாகத்துறை வழக்கில் உள்ள நாடுகளில் கீழவை வலிமை பெற்றதாக உள்ளது. நிருவாகத்துறை உறுப்பினர்கள் அதன் ஆதரவைப் பெற்றிருக்க வேண்டும்; இல்லையேல், பதவி விலக வேண்டும். மேலும், ஐக்கிய அமெரிக்க நாடுகள் உட்பட எல்லா மக்களாட்சி நாடுகளிலும் நிதி மசோதாக்கள் முதலாவதாகக் கீழவையில்தான் கொண்டுவரப்பட வேண்டும். இந்தியா, பிரிட்டன் முதலிய நாடுகளில் கீழவை நிறைவேற்றிய நிதி மசோதாவில், மேலவை, கீழவையின் இசைவுபெறாத எம்மாற்றத்தையும் கொண்டுவர இயலாது. இவ்வாறு மக்களால் நேரிடையாகத்தேர்ந்தெடுக்கப்படும்கீழவை அரசாங்க அமைப்பில் மிக உயர்வு பெற்றுள்ளது. மற்ற மசோதாக்களைப் பொறுத்தவரை இரு அவைகளுக்கிடையே கருத்து வேற்றுமை தோன்றுமானால், அக்கருத்து வேற்றுமைகளைத் தீர்த்து வைக்கச் சில வழிகள் பின்பற்றப்படுகின்றன. பிரிட்டன், இந்தியா போன்ற நாடுகளில் இரு அவைகளுக்கிடையே மசோதாக்களைக் குறித்துக் கருத்து வேற்றுமைகளைக் களையமுடியாத நிலை ஏற்படுமானால், கீழவை சிறப்பு

நடைமுறையைப் பின்பற்றித் தன்னுடைய கருத்தை நிலைநாட்டிக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

நீதித் துறை அரசாங்க அமைப்பில் மூன்றாவது பிரிவாகும். அதன் பணி நீதி செலுத்துதல் ஆகும். அதாவது, சட்டமன்றம் இயற்றும் சட்டங்களுக்கு விளக்கம் கூறுவதும், அதன் முன்வரும் வழக்குகளுக் குத் தீர்ப்பு வழங்குவதும் நீதித்துறையின் கடமை யாகும். கூட்டாட்சி அமைப்புள்ள நாடுகளில் அர சாங்க அமைப்பு விதிகள் மீறப்படுகின்றன என்ற குற்றச் சாட்டு மைய அரசாங்கத்தாலோ மாநில அரசாங்கத்தாலோ கொண்டுவரப்படும்போது, அவ் விதிகளுக்கு விளக்கங்கூறி, அத்து மீறுதலைத் தடுத் தலும் அதன் பணியாகும். மேலும், மக்களாட்சி நில வும் நாடுகளில் மக்களின் அடிப்படை உரிமைகளை நிருவாகத் துறை, சட்டமன்றம் ஆகியவற்றின் தாக் குதலிலிருந்து பாதுகாத்தலும் நீதித்துறையின் பணி யாகும்.

நிருவாகத்துறையினரால் நீதி மன்றங்களின் நடு வர்கள் நியமனம் செய்யப்பட்டபோதிலும், நடுவர்கள் முழுச் சுதந்திரத்துடன் இயங்கத் தக்க வகையில் அவர்களுடைய பதவிக்காலம், ஊதியம் ஆகியவை அரசாங்க அமைப்புகளால் உறுதிப்படுத்தப்பட்டுள் ளன. அவர்களை எளிதில் பதவியிலிருந்து நீக்க முடி யாது. பிரிட்டன், அதனைச் சார்ந்த பொதுநல அரசு நாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள் ஆகியவற்றில் சட்ட ஆதிக்கம் நிலைத்துள்ளது. 'யாவருக்கும் ஒரே சட்டம்; யாவரும் சட்டத்தின் முன் சமம்' என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் நீதித்துறை இயங்கு கிறது. இந்நாடுகளில் ஒரே அமைப்புக் கொண்ட நீதி மன்றங்கள்தாம் இயங்குகின்றன.

ஆனால், பிரான்சு போன்ற சில ஐரோப்பிய நாடுகளில் சாதாரணச் சட்டம், அதற்கான நீதி மன் றங்கள், ஆட்சித் துறைச் சட்டம், ஆட்சித் துறை நீதி மன்றங்கள் என இரு வகையான சட்டங்களும், நீதி மன்றங்களும் இயங்குகின்றன. ஆட்சித்துறைச் சட்ட மும், ஆட்சித்துறை நீதிமன்றங்களும், ஆட்சித்துறை யைச் சேர்ந்தவர்களுக்கும், மற்ற குடிமக்களுக்கும் இடையே எழும் சட்டமீறுதல் வழக்குகளை விசாரித் துத் தீர்ப்புக் கூறப் பயன்படுகின்றன. இம்முறையில் ஆட்சித் துறையைச் சார்ந்தவர்கள், தங்கள் பணி களை ஆற்றும் வகையில் சட்டமீறுதல் செய்தால், அதற்கான விளைவிலிருந்து அவர்களுக்குப் பாது காப்பு அளிக்கப்படுகிறது. அதே வகையில், அது போன்ற சட்டமீறுதலால் பாதிக்கப்பட்ட குடிமக் களுக்கும் இழப்பீடு அளிக்கப்படுகிறது.

இவ்வாறு உலக நாடுகளின் அரசாங்க அமைப்பு கள் தங்கள் வரலாற்றுப் பின்னணிக்குத் தக்கவாறு ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுகின்றன. பாராளுமன்ற முறையும், அமைச்சரவை முறையும் முதன்முதலில் பிரிட்டனில் தோன்றின. அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பெரும்பாலான நாடுகள் அந்நாட்டு அர சாங்க அமைப்பை ஏற்றுள்ளன. இதற்கு அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஓரளவு விலக்காகும். இந்தியா தன் அரசாங்க அமைப்பில் பிரிட்டனைப் பின்பற்றிய போதிலும் ஏனைய உலக நாடுகளிலிருந்தும் சில கூறு களைப் பின்பற்றியுள்ளது குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடுகளிலிருந்து கூட்டாட்சி முறையைப் பின் பற்றியுள்ளது. என்.வி.கே.

துணை நூல்கள்:

**Appadorai**, A., "The Substance of Politics", Oxford University Press, London, 1972.

**Strong**, C.F., "Modern Political Constitutions", Sidwick & Jackson, London, 1972.

**Wheare**, K.C., "Modern Constitutions", Oxford University Press, London, 1966.

**அரசாங்கக் கடனுறுதிச் சீட்டு**: கடன் தொகையைக் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொடுப்பதற்கும் குறிப்பிட்ட வட்டி வீதத்தில் வட்டி யைக் கொடுக்கவும் உறுதி அளிப்பவை கடனுறுதிச் சீட்டுகள். இவை நிறுவனங்களால் அல்லது அரசு களால் வெளியிடப்படுகின்றன; தனிப்பட்டவர்களால் ஒப்பு அளிக்கப்பட்ட கடன் சீட்டுகளினின்றும் வேறா னவை. அரசால் வெளியிடப்படும் கடனுறுதிச் சீட்டு கள் (Govt. Bonds) அரசின் முத்திரையுடன் வெளி யிடப்படுகின்றன. சட்டப்படி ஓராண்டிற்கும் கூடு தலான முதிர்வுக் காலத்தையுடைய கடனுறுதிச் சீட்டுகள் பொதுவாக நீண்டகாலச் சீட்டுகளாகவே இருக்கின்றன.

அரசின் மேலுள்ள நம்பிக்கையினாலும் அரசின் உறுதிமொழி காப்பாற்றப்படும் என்ற எதிர்பார்ப் பினாலும் மக்கள் கடனுறுதிச் சீட்டுகளை வாங்கு கின்றனர். அன்றியும் அரசுக்கு வரி வாங்கும் உரிமை இருப்பதால், கடன் தொகையைத் திருப்பிக் கொடுக் கும் ஆற்றல் போதுமான அளவிற்கு இருக்கிறது என மக்கள் நம்புகின்றனர். இந் நம்பிக்கையின் அடிப் படையில்தான் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் மக்களால் வாங்கப்படுகின்றன.

அரசின் வரவு-செலவுத் திட்டம் சமநிலையான தாக எப்பொழுதும் அமைவதில்லை. உபரி வரவு-செலவுத் திட்டத்தின்போது அரசின் செலவை விட வருவாய் கூடுதலாக இருப்பதால், நாட்டின் வரு மானப் பெருக்கம் தடைப்படுகிறது, பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தின் வரு வாயை விடக் கூடுதலாகச் செலவு செய்யப்படுவதால் வருமானப் பெருக்கம் ஊக்குவிக்கப்படுகிறது. நிதிக்

கொள்கையின் செயற்பாடு, திட்டமிட்ட வருமான மாற்றத்தால் ஏற்படுகிறது. இத்தகைய வருமான மாற்றம் ஓராண்டுக் கால வரவு செலவால் ஏற்படு வதைப் போலவே நீண்டகால அளவிலும் ஏற்படு கிறது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நீண்ட கால முதலாக்கம் (Capital Formation) தேவையான தால், அவற்றை உருவாக்கும் முயற்சியில் நிகழ்காலக் குடிமக்கள் மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியும் ஓரள வுக்குப் பங்குகொள்ள வேண்டியது இன்றியமையா தது. கடன் பத்திரங்களை அரசாங்கம் வெளியிடு வதும், அதன் வாயிலாகக் குறிப்பிட்ட தொகையைக் கடனாகப் பெறுவதும், முதலாக்க நடவடிக்கைகளை நிறைவேற்றுவதும் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றி யமையாதவையாகும். நீண்டகாலக் கடன் தொகை யைத் திருப்பிக் கொடுக்கும் பொழுது எதிர்காலத்தில் வரி வருவாயிலிருந்து பெறப்படும் தொகையைக் கொண்டுதான் கடனுறுதிச் சீட்டுகளைத் தீர்க்க இயலும். எனவே, முதலாக்கச் செலவால் ஏற்படும் கடன் சுமையின் ஒரு பங்கு எதிர்காலச் சந்ததியின ருக்கு மாற்றப்படுகிறது. முதலாக்கத்தின் பலனை அனுபவிப்பதிலும் அதன் சுமையை ஏற்பதிலும் எதிர் காலத்தில் வரி செலுத்துவோருக்குப் பங்கு தரப்படு கிறது. இவ்வாறு கடனுறுதிச் சீட்டுகள், நிகழ்கால - எதிர்காலச் சந்ததியினரிடையே வருமான மாற் றத்தை ஏற்படுத்த உதவுகின்றன.

அரசாங்கத்தின் கடன்களைக் குறுகிய காலக் கடன்கள் என்றும் நீண்டகாலக் கடன்கள் என்றும் இருவகைப் படுத்தலாம். இவற்றுள் குறுகியகாலக் கடன்கள், பண அங்காடி (Money Market) யின் கூறாகவும், நீண்டகாலக் கடன்கள் முதல் அங்காடி (Capital Market) யின் கூறாகவும் உள்ளன. குறுகிய காலக் கடன்கள் ஓராண்டிற்குள் திருப்பிக் கொடுக்கப் படுவன. அரசாங்கத்தின் குறுகியகாலக் கடன் ஒப்புதல் களை, நிதி நிறுவனங்களான வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மைய இருப்பு வங்கி முதலியன விரும்பி ஏற்கின்றன.இத்தகைய கடன்களைச் சிறப்பு மிதவைக் கடன்கள் (Special Floating Loans) என்பர். இவற்றுள் வழிவகை முன்பணம் (Ways and means of Advance) ஒன்றாகும். இது மைய இருப்பு வங்கி யினால் அவ்வப்பொழுது வழங்கப்படும் கடன் ஆகும். தனியார் துறையில் தொழில் நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் அதிகப்பற்று (Over-draft) வழங்கு வதைப் போல, அரசுகளுக்கு (குறிப்பாக மாநில அரசு களுக்கு) மைய இருப்பு வங்கி அளித்து உதவுகிறது.

குறுகியகாலக் கடன்களில் அடுத்து வருவது கரு வூல உண்டியல்கள் (Treasury Bills) ஆகும். இவை வரையறுக்கப்பட்ட கடன் ஒப்புதல்கள். இவை 90 நாட்களில் முதிர்வு அடையக்கூடியவை. எளிதாக உடைமை மாற்றம் செய்யப்படக் கூடியவை. கருவூல உண்டியல்களை அரசுகளின் பல்வேறு துறைகள், மைய இருப்பு வங்கி, வணிக வங்கிகள், (வெளிநாட்டு வங்கிகள் உட்பட) கூட்டுறவு வங்கிகள் முதலியன விரும்பி வாங்கிக் கொள்கின்றன. அடுத்து வருவது சிறப்பு மிதவைக் கடன் என்பது. இது இந்தியாவில் சிறப்பிடம் பெறவில்லை. அரசாங்கத்தின் நீண்ட காலக் கடன்கள், நிலையான கடன்கள் (Permanent debts) என்றும், நிதியக் கடன்கள் (Funded debts) என்றும் சொல்லப்படுகின்றன. குறைந்தது 15 முதல் 30 ஆண்டுகள் கால வரையறையுள்ள கடனுறுதிச் சீட்டுகள் நிலைக் கடன்கள் எனப்படுகின்றன. மேற் படிக் கடன் தொகைக்கான வட்டியை ஆண்டுதோறும் செலுத்தவும், அது முதிர்வடையும் பொழுது அதனைத் திருப்பிக் கொடுக்கவும், சிறப்பு நிதியம் ஒன்றை உருவாக்கவும், அதனை ஏற்று நடத்தவும் வேண்டியிருப்பதால் அவை நிதியக் கடன்கள் எனப் படுகின்றன.

அரசாங்கக் கடன்களை உள்நாட்டுக் கடன்கள் என்றும், வெளிநாட்டுக் கடன்கள் என்றும் இருவகைப் படுத்தலாம். உள்நாட்டுக் கடன்களை உரூபாய்க் கடன்கள் என்றும் வெளிநாட்டுக் கடன்களை அயற் செலாவணிக் கடன்கள் என்றும் கூறலாம். நீண்டகால நோக்கில் ஒரு நாட்டிற்கு உள்நாட்டுக் கடன் தொகை சுமை உடைதாகக் கூறமுடியாது. ஏனெனில், மக்களுள் ஒரு சாரார் செலுத்தும் வரித் தொகையிலிருந்து மற்றொரு பிரிவினருக்கு (அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளை வைத்திருப்பவர்களுக்கு) வருமான மாற் றம் செய்யப்படுகிறது. நாட்டை ஓர் அலகாக எடுத்துக்கொண்டால், அதனைச் சுமை என்று கூறு வதற்கில்லை. ஆனால், வெளிநாட்டுக் கடன்கள் அப்படிப்பட்டவையல்ல. அவற்றிற்கான வட்டித் தொகையைச் செலுத்தும் பொழுதும், அசல் தொகை யைத் திருப்பிக் கொடுக்கும் பொழுதும் நாட்டு மக்களின் வருமானம் பிறநாட்டு மக்களுக்கு மாற்றப் படுகிறது. எனவே, வெளிநாட்டுக் கடன் தொகையை ஈடு செய்யும் அளவிற்கு உள்நாட்டில் மூலதன ஆக்கம், தொழில் நுட்ப வளர்ச்சி முதலியன ஏற்பட்டிருக்கு மேயானால் நாட்டின் உற்பத்தித் திறனும், உற்பத்தி அளவும் விரிவாக்கம் செய்யப்படுகின்ற காரணத்தி னால் வெளிநாட்டுக் கடன் சுமை அகற்றப்படுகிறது. அவ்வாறு இன்றி, வெளிநாட்டுக் கடன் தொகையின் விளைவாக ஒரு நாட்டில் மூலதன ஆக்கம் ஏற்படுத் தப்படவில்லையானால், அக்கடன் அந்நாட்டிற்குச் சுமையாகவே இருக்கும்.

அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள், நிதிக் கொள் கையைச் செயற்படுத்தும் கருவியாக இருப்பதைப் போலவே, மைய வங்கியின் பணக் கொள்கையை

நிலைநிறுத்தும் கருவியாகவும் செயற்படுகின்றன. மைய வங்கியின் சிறப்பான பொறுப்புகளில் பணத் தொகையைக் கட்டுப்படுத்தக்கூடிய இரண்டு பணிகளை இங்கே எடுத்துக் கூறலாம். அவை திறந்த அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations), வங்கிவீதக் கொள்கைகள் (Bank rate policy) ஆகும். அரசாங்க நாணயச் சாலை (Mint) யில் வெளியிடப் படும் காசுகளும் (Coins) மைய இருப்பு வங்கியின் பணத் தாள் வெளியீடும் (Currency notes) பணமாகக் (Cash) கருதப்படுகின்றன. இவற்றுள் மைய வங்கியின் கடன் பொறுப்புகள் (Liabilities) பெருமளவில் உள்ளன. எப்பொழுதெல்லாம் மைய இருப்பு வங்கியின் சொத்துகள் (Assets) மிகுகின்றனவோ, அப்பொழுதெல்லாம் அதன் பொறுப்புகளும் அதே அளவிற்கு மிகும். அப்பொழுது நாட்டின் பண அளவு மிகுதியாகும். ஒவ்வொரு நாட்டிலும் பணத்தொகையைப் போலப் பன்மடங்கு வங்கி வைப்புகள் (Bank deposits) உள்ளன. இவை உடனடிப் பணத் தொகையின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன. மைய இருப்பு வங்கியின் பொறுப்புகள், உடனடிப் பணமாக இருப்பதால் அப்பணத்தின் அளவு மிகும் நிலையில் வங்கியின் வைப்புகளும் (வங்கியின் பொறுப்புகளும்) மிகுகின்றன. அதாவது, நாட்டின் மொத்தப் பண அளிப்பு உயரும்.

நாட்டின் பண அளவினைக் கட்டுப்படுத்த, வங்கிகளின் பொறுப்புகளான வைப்புகளைக் குறைக்க வேண்டும். வங்கியின் வைப்புகளைத் தோற்றுவிக்க உடனடிப் பணம் அடிப்படையாக உள்ளது. எனவே, மைய இருப்பு வங்கியின் கடன் பொறுப்புகளைக் குறைக்க வேண்டும். அதாவது, மைய இருப்பு வங்கியின் சொத்துக்களைக் குறைத்தால்தான் அதன் பொறுப்பான உடனடிப் பண அளவைக் கட்டுப் படுத்த இயலும். மைய இருப்பு வங்கியின் பொறுப்புகள் குறைவதால் பணத்தின் அளவு குறைந்து, வணிக வங்கிகளின் வைப்புத் தொகையைக் குறைக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்படும். இவ்வாறு வெளி அங்காடி நடவடிக்கைகளின் வாயிலாக மைய இருப்பு வங்கி, நாட்டின் பண அளவினைக் கட்டுப் படுத்த முடியும். இதைப் போலவே மைய இருப்பு வங்கி, கூடுதலான சொத்துகளை வாங்கும் பொழுது உடனடியாகவோ சிறிது காலம் தாழ்த்தியோ நாட்டின் பண அளவை உயர்த்த முடியும்.

அங்காடி நடவடிக்கைகளை விடச் சிறப்புத் தன்மை வாய்ந்தவை வங்கி வீத (Bank rate) நடவடிக்கைகள் ஆகும். ஒவ்வொரு நாட்டின் மைய வங்கியும், அந்நாட்டின் வணிக வங்கிகளுக்கு இறுதிநிலைக் கடன் நல்கும் அமைப்பாக உள்ளது. இங்ஙனம் வணிக வங்கிகளுக்கு நேரடியாகவும், இதர நிதி நிறுவனங்களுக்கு மறைமுகமாகவும் மைய இருப்பு வங்கி கடன் கொடுத்து உதவுகிறது. இத்தகைய கடன் தொகையின் அளவு, அதனைப் பெறுவதற்கான கட்டுப்பாடுகள், அதற்கான வட்டிவீதம், கால அளவு, ஈடாக ஏற்றுக்கொள்ளப்படும் கடனுறுதிச் சீட்டுகள் முதலியவற்றை வரையறுப்பதன் மூலம் மைய இருப்பு வங்கி தனது வங்கி வீதக் கொள்கையை நடைமுறைப் படுத்துகிறது. மைய இருப்பு வங்கியின் இந் நடவடிக்கை வட்டி வீதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. வட்டிவீதம் என்பது பண அங்காடியிலும் மூலதன அங்காடியிலும் ஆற்றல் வாய்ந்த ஒரு கருவியாகும். நீண்டகால, குறுகியகால வட்டி வீதங்களை முறைப்படுத்துவதும் மைய இருப்பு வங்கியின் வரம்புக்குட்பட்ட நடவடிக்கையே ஆகும். நாட்டில் குறுகிய காலக் கடன் தொகையின் அளவைக் குறைத்து, அதற்குப் பதிலாக நீண்டகாலக் கடனுறுதிச் சீட்டுகளை வெளியிடுவதன் மூலமாக, வணிக வங்கிகளின் கடன் அளிக்கும் ஆற்றலைக் கட்டுப்படுத்த முடியும். குறுகிய காலக் கடனுறுதிச் சீட்டுகள் அங்காடியிலிருந்து அகற்றப்படுவதால் குறுகிய கால வட்டிவீதம் உயரவும். நீண்டகாலக் கடனுறுதிச் சீட்டுகளின் விலையுயர்ந்து நீண்டகால வட்டிவீதங்கள் குறையவும் கூடும் இங்ஙனம் வட்டிவீதக் கூட்டமைப்புகளை (Structure of Interest Rates) குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவ்வப்போது மாற்றியமைப்பதே பண அளவுக் கட்டுப்பாட்டின் முதன்மையான நடவடிக்கையாகக் கருதப்படுகிறது.

பண அளவின் நிருவாகத்தில் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் ஓரிடத்தைப் பெற்றிருப்பதைப் போலவே, பண அளவுக் கோட்பாடுகளிலும், (Quantity Theory of Value) பணவியற் கோட்பாடுகளிலும் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. பணம் ஏன் தேவைப்படுகிறது என்ற வினாவிற்கு அதன் நீர்மைத்தன்மையே (Liquidity) காரணமாகக் கூறப்படுகிறது. ஏனைய சொத்துகளைவிட, பணத்தை அனைவரும் விரும்பி ஏற்பதால் அதற்கு நீர்மை நிலை ஏற்படுகிறது. ஒருவர் தனது வருமானத்தில் ஒரு பகுதியை நீர்மை மிகுந்த உடனடிப் பணமாக வைத்துக் கொள்வதில் ஒரு வகையான மறை முகச் செலவு ஏற்படுகிறது. பணமாக வைத்துக் கொள்ளதற்குப் பதிலாக வட்டி வருமானம் நல்கக் கூடியதும் இடரிழப்பு இல்லாததுமான அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளில் முதலீடு செய்வது விரும்பப் படுகிறது. அதனால் உண்டாகும் வருமான இழப்பு, உடனடிப் பணத் தேவைக்கான வாய்ப்புச் செலவாகக் (Opportunity Cost) கருதப்படும்.

பணவியற் கோட்பாடுகளில் பணம், நீர்மைத் தன்மை மிக்கதும் வருமானம் நல்காததுமான சொத்

தாகவும் உள்ளது. அதற்கு நேர் எதிரான வகையில் அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகள் உள்ளன. இவை வருமானம் நல்கக் கூடியவை. ஆனால் நீர்மைத் தன்மை ஏதும் இல்லாதவை.

இந்தியாவில் மைய அரசும் மாநில அரசுகளும் நீண்ட காலக் கடனுறுதிச் சீட்டுகளை வெளியிடுகின்றன. இவ்வகையில் 1981-ஆம் ஆண்டில் மட்டும் 18,683.5 கோடி உரூபாய் அளவிற்கு இச் சீட்டுகள் விற்பனையாகியுள்ளன.

றன. அரசின் கொடையை, இங்கிலாந்தில் ஊக்கக் கொடை (Subsidy) என்றும், அமெரிக்காவில் உதவி (aid) என்றும், பிரான்சு, செருமனி, பெல்சியம், சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் உதவுகை (Subvention) என்றும் கூறுகிறார்கள். இந்தியாவில், அரசாங்கக் கொடைகளும் உதவிகளும் (Grants & Aids) நான்கு வகைகளில் வழங்கப்படுகின்றன. அவை: (1) மைய அரசு, மாநில அரசுகளுக்கு வழங்கும் கொடைகளும் உதவிகளும், (2) மாநில அரசுகள் உள்ளாட்சி

மைய, மாநில அரசுகளில் கடனுறுதிக் சீட்டு உடைமையாளர் விவரம்.

(உரூபாய் கோடிகளில்)

| விவரம் | 1979 மார்ச் முடிவில் தொகை/ விழுக்காடு | | 1980 மார்ச்சு முடிவில் தொகை/ விழுக்காடு | | 1981 மார்ச்சு முடிவில் தொகை/ விழுக்காடு | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தக் கடனுறுதிச் சீட்டுகள் அவற்றில் | 13628.4 | 100.0 | 15738.5 | 100.0 | 18583.6 | 100.0 |
| 1. மாநில அரசுகள் | 231.1 | 1.7 | 242.8 | 1.5 | 244.0 | 1.3 |
| 2. இந்திய மைய இருப்பு வங்கி (சொந்தக் கணக்கு) | 2213.4 | 16.2 | 2628.7 | 16.7 | 3858.4 | 20.7 |
| 3. வணிக வங்கிகள் | 6033.3 | 44.3 | 7319.7 | 46.5 | 8523.4 | 45.6 |
| 4. ஆயுள் காப்பீட்டுக் கழகம் | 1820.4 | 13.3 | 2018.6 | 12.8 | 2250.0 | 12.0 |
| 5. தொழிலாளர் சேம நல நிதி | 774.0 | 5.7 | 862.0 | 5.5 | 855.8 | 4.6 |
| 6. விலக்களிக்கப்பட்ட நிறுவன சேமநல நிதி | 1483.6 | 10.9 | 1718.5 | 10.9 | 1729.7 | 9.2 |
| 7. நிலக்கரிச் சுரங்கச் சேமநல நிதி | 130.8 | 1.0 | 167.8 | 1.1 | 199.7 | 1.1 |
| 8. அசாம் தேயிலைத் தோட்டச் சேமநல நிதி | 11.4 | 0.1 | 11.4 | 0.1 | 11.3 | 0.1 |
| 9. பிற வகை உடைமையாளர் | 928.4 | 6.8 | 769.0 | 4.9 | 1011 .3 | 5.4 |

Source: RBI: Report on Currency and Finance, 1981-82, Vol. II, pp. 120-121

எம்.தி.

**அரசாங்கக் கொடையும் உதவிகளும்** கூட்டாட்சி அமைப்பு முறையில் (Federal Set-up) மைய அரசு, மாநில அரசுகளின் பணிகள் சிறப்பதற்காக அவ்வப்போது அளிக்கும் நிதி, மற்றும் பொருள் உதவிகள், கொடைகள் (Grants) என்று கூறப்படுகின்

நிறுவனங்களுக்கு அளிக்கும் கொடைகளும் உதவிகளும், (3) மாநில அரசு, பிற வளர்ச்சி அமைப்புகளுக்கு வழங்கும் உதவிகள், (4) மைய, மாநில அரசுகள் தனிப்பட்டவர்களுக்கு நேரிடையாகக் கொடுக்கும் ஊக்கக் கொடைகளும் உதவிகளும்.

மைய அரசு, பின்வரும் நோக்கங்களுடன் மாநிலங்களுக்குக் கொடைகளும் உதவிகளும் அளிக்கிறது. (1) மாநில அரசுகளின் நிதி நெருக்கடியைக் குறைத்து, வரவுக்கும் செலவுக்கும் சமநிலையை ஏற்படுத்தல். (2) மாநில அரசுகளின் பணியில் அளவு, தரம் ஆகியவற்றில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்து, மண்டலங்களுக்கிடையிலான வளர்ச்சியைச் சமப்படுத்தல் ( Balanced Regional Development). (3) பொதுநலப் பணிகளான கல்வி, சுகாதாரம் போன்றவற்றில் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சீரான முன்னேற்றத்தைக் கொணர்தல். (4) தேசிய முதன்மை வாய்ந்த பணிகளை மாநிலங்களிடையே மேம்படுத்தல் அல்லது அப்பணிகளில் ஈடுபட மாநில அரசுகளை ஊக்குவித்தல். (5) மாநில அரசுகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்புகளை ஈடுசெய்தல். (6) மைய, மாநில உறவுகளைச் சீராக்குதல். மைய அரசு அளிக்கும் கொடையின் அளவு பல காரணிகளின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்தின் பொதுத் தேவை, சிறப்புத் தேவை, மாநிலத்தின் நிதித் திறமை ஆகியவற்றை வரவு செலவு அறிக்கையிலிருந்து ஆராய்ந்து, அதன் அடிப்படையில் கொடையின் அளவு முடிவு செய்யப்படுகிறது. நிதி வசதியைப் பெருக்குவதற்கு ஒவ்வொரு மாநில அரசும் எவ்வளவு முயற்சிகள் மேற்கொள்கின்றனவோ, அவற்றைப் பொறுத்தும் கொடையின் அளவு முடிவு செய்யப்படும். எடுத்துக்காட்டாக, எந்த மாநில அரசு தன் வரிகளின் மூலம் உச்ச வருவாய் பெறுகிறதோ, அந்த மாநிலம் மிகுந்த கொடையைப் பெறும். செலவினைக் கட்டுப்படுத்தித் தனது வருவாயைத் திறமையாகப் பயன்படுத்தி, மக்களின் நலனை உச்சப்படுத்துகிற மாநில அரசு மிகுந்த கொடையைப் பெறும். மேலும் சமூகப் பணிகளின் நிலையைப் பொறுத்து, அவை குறைந்த நிலையில் உள்ள மாநிலங்களுக்கு மிகுந்த கொடை வழங்கப்படும்.

**கட்டுப்பாடற்ற கொடைகள்:** இந்தக் கொடைகளை ஒரு மாநில அரசு தனது விருப்பம்போல் செலவு செய்து கொள்ளலாம். கொடைகளின் நோக்கங்கள் பற்றி அல்லது அவை எவ்வாறு செலவிடப்பட வேண்டும் என்ற முறையைப் பற்றி மைய அரசு, மாநில அரசுகளுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் விதிக்காது. அரசியலமைப்புச் சட்டமும் எவ்வளவு தொகை வழங்கலாம் என்று வரையறுக்காது. பெரும்பாலும், இக் கொடைகள் மாநில அரசுகளின் தேவைக்கேற்ப, மாநிலங்களுக்கிடையே சமநிலை ஏற்படுத்த அளிக்கப்படும். இவை மொத்தக் கொடையாகவோ (Block Grant), பொதுக் கொடையாகவோ (General Grant), தனிப்பட்டவர் அடிப்படையிலோ, எல்லா மாநிலங்களுக்கும் சம அளவிலோ மாறுபட்ட அளவிலோ அளிக்கப்படும். மற்றக் கொடைகளுக்கு இல்லாத நெகிழ்ச்சி அல்லது மாறும் தன்மை இதற்கு உண்டு. மாநிலத் தனியாட்சி (State Autonomy) க்கு ஊறு செய்யாமல், மாநிலங்களின் நிதி நிலையையும் பொருளாதார நிலையையும் இவை நிலைப்படுத்தும். எனவே, இந்தக் கொடைகள் கூட்டாட்சி அமைப்பின் நோக்கத்தைப் பாதுகாக்க உதவுகின்றன. ஆயினும், இந்தக் கொடைகளின் அளவு போதுமானதன்று.

**கட்டுப்பாடுற்ற கொடைகள்:** மைய அரசு மாநிலங்களுக்குச் சில கட்டுப்பாடுகளின் அடிப்படையில் வழங்கும் கொடைகளைக் கட்டுப்பாடுற்ற கொடைகள் எனலாம். எடுத்துக்காட்டாக, மாநில அரசுகள், தங்களது திட்டம், மற்றும் வரவு-செலவு அறிக்கையைச் செயற்படுத்து முன், மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்புமாறு கட்டுப்பாடு விதிக்கலாம். வேலைவாய்ப்பினை உருவாக்குவது, பணிகளின் தகுதியைப் பேணுவது, மாநில நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கை கொடுப்பது, கொடைகளைத் திரும்பிப் பெற்றுக் கொள்வது ஆகியவை குறித்துச் சில வரையறைகள் விதிக்கப்படலாம். அவற்றிற்கு உட்பட்டுத்தான் ஒரு மாநில அரசு, கொடைகளைச் செலவிடல் வேண்டும். ஒரு மாநில அரசு பெறும் கொடைகளில், கட்டுப்பாடுற்ற கொடைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. கட்டுப்பாடுற்ற கொடைகள், சட்ட முறையில் அமைந்த கொடைகள் (Statutory Grants), சட்ட முறையில் அமையாக்கொடைகள் (Non-Statutory Grants), மைய அரசின் திட்டங்களுக்கான கொடைகள் (Central Schemes Grants), மைய அரசின் உதவி பெற்ற மாநிலத் திட்டங்களுக்கான கொடைகள் (Centrally Aided State Schemes Grants), திட்டம், மற்றும் திட்டம் சார்பற்ற கொடைகள் (Plan and Non-plan Grants), இணைக் கொடைகள் (Matching Grants) என ஆறு வகைப்படும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275-ஆம் பிரிவின்படி நாடாளுமன்றம் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அளிக்க வேண்டிய கொடைகளை முடிவு செய்கிறது. இச் சட்டத்தின்படி அரசு, மாநில மைய அரசுகளுக்குக் கட்டாயமாக வழங்கக்கூடிய கொடைகள் சட்ட முறையிலமைந்த கொடைகள் எனப்படும். இவை மாநில வருவாய்க் கணக்கில் ஏற்படும் திட்டத்திற்கு அப்பாற்பட்ட செலவினங்களை ஏற்று நடத்துவதற்கும் நிருவாகத்தின் திறமையை உயர்த்துவதற்கும், மது விலக்கை அமுல்படுத்துவதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுசெய்வதற்கும் அளிக்கப்படும். மைய அரசின் வரவு செலவு அறிக்கையில் இந்தக் கொடைகள் திட்டச் சார்பற்ற கொடைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். சட்ட முறையில்லாக் கொடைகளின் அளவை மைய, மாநில அரசுகள்,

கலந்து, ஆராய்ந்து, முடிவு எடுக்கின்றன. மைய அரசும் மாநில அரசுகளும் ஒரு திட்டமிட்ட வளர்ச்சிக்கான பொறுப்பை ஏற்று, அதனைச் செயல்படுத்த இந்தக் கொடைகள் வகை செய்கின்றன.

மைய அரசு, மாநிலங்களுக்கிடையே சிறப்பிடம் பெறுவதும், பொருளாதார முறையில் சிறப்பிடம் பெறுவதுமான பணிகளை எல்லா மாநிலங்களிலும் மேற்கொள்ளும். இத்திட்டங்கள், மாநில அரசின் நெருங்கிய தோழமையுடன் மைய அரசினால் நேரடியாகச் செயல்படுத்தப்படும். ஆனால், திட்டங்களுக்குத் தேவைப்படும் முழு நிதி வசதியையும் மைய அரசு, மாநில அரசுக்குக் கொடையாக வழங்கும். இதனை மைய அரசின் திட்டங்களுக்கான கொடைகள் என்று கூறலாம். மாநில அரசுகளின் திட்டங்களான வேளாண்மை வளர்ச்சி, பின்தங்கிய மக்கள், பின்தங்கிய பகுதிகளின் முன்னேற்றம், கல்வி, வீட்டு வசதி தொழிலாளர் வேலைவாய்ப்புப் போன்றவற்றின் செயல்பாட்டிற்கு மைய அரசு, அரசியலமைப்புச் சட்ட 282-ஆம் பிரிவின்படி வழங்கும் கொடைகள் மைய அரசின் உதவி பெற்ற மாநிலத் திட்டங்களுக்கான கொடைகள் எனப்படும்.

இக் கொடைகளைத் தன் விருப்பக் கொடைகள் (Discretionary Grants) என்று கூறுவது மிகவும் பொருந்தும். பாராளுமன்றம் இக் கொடைகளைக் கட்டுப்படுத்தாது. அவை மைய அரசின் முழு அதிகாரத்திற்கு உட்பட்டவை. திட்டக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மாநிலங்களுக்கு அளிக்கக்கூடிய உதவித் தொகையைத் திட்ட முறையிலமைந்த கொடைகள் எனலாம். ஒவ்வொரு மாநிலத்தின் திட்ட அளவை முடிவு செய்த பின்பு, மாநில அரசு எவ்வளவு ஏற்றுக்கொள்ள முடியும் என்று கணித்த பிறகு, திட்டக் கொடையின் அளவு முடிவு செய்யப்படும். திட்ட அளவுக்கும் காலத்திற்கும் அப்பாற்பட்டுச் சில திட்டப் பணிகளுக்காகத் தொடர்ந்து ஏற்படும் செலவினங்களை ஏற்று நடத்த அளிக்கப்படும் கொடைகளைத் திட்டச் சார்பற்ற கொடைகள் என்று கூறலாம்.

இக் கொடைகள் சில குறிப்பிட்ட பணிகளுக்காக வழங்கப்படுபவை. அப்பணிகளின் மொத்தச் செலவில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டை மைய அரசு கொடையாக அளிக்கும். அதற்கு இணையான செலவினை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்ளும். திட்டக் குழு முடிவு செய்யும் மாநிலச் செலவிற்கிணங்க இந்தக் கொடைகள் அளிக்கப்படும்.

**ஈட்டுக் கொடைகள்:** இவை மாநில அரசுகள் மேற்கொள்ளும் இழப்புகளை ஈடு செய்வதற்காக மைய அரசினால் அளிக்கப்படுபவை.

**மைய அரசின் கொடைகளின் அளவு**

**1951–52 முதல் 1984–85 வரை**

| திட்டக் காலம் | மாநிலங்களுக்கு அளிக்கப் பட்ட கொடைத்தொகை (உருபாய் கோடிக் கணக்கில்) |
|---|---|
| முதல் திட்டம் | 214.8 |
| இரண்டாம் திட்டம் | 700.4 |
| மூன்றாம் திட்டம் | 1,302.9 |
| நான்காம் திட்டம் | 3,875.2 |
| ஐந்தாம் திட்டம் | 8,098.5 |
| ஆறாம் திட்டம் (1983–84 வரை) | 15,037.4 |
| 1984–85 மட்டும் | 5,050.0 |

ஆதாரம்: மைய இருப்பு வங்கியின் அறிக்கைகள்.

இந்த அட்டவணையிலிருந்து ஒவ்வொரு திட்டக் காலத்திலும் மைய அரசின் கொடையளவு மிகுந்துள்ளதைக் காணலாம். இருப்பினும், மைய அரசு சிக்கனமாகக் கொடைகள் வழங்குவதாகவும், இதனால் மாநிலங்கள் வளர்ச்சி குன்றுவதாகவும், மாநில அரசுகள் பல காலமாகக் குறை கூறிவருகின்றன. இக் கருத்துப் பற்றி அண்மையில் தென்மாநில முதலமைச்சர்கள் கூடி ஆராய்ந்தனர். இதன் எதிரொலியாக மைய அரசு சர்க்காரியா ஆணையத்தை (Sarkaria Commission) நிறுவியுள்ளது. இருப்பினும், கொடைகளின் சிக்கல்களையும், மத்திய–மாநில உறவுகளில் ஏற்படும் சிக்கல்களையும் நிலையான அடிப்படையில் தீர்க்க ஒரு பொதுச் செலவு ஆணையம் (Public Expenditure Commission) அமைக்க அரசு ஆராய்ந்து வருகிறது.

**மாநில அரசின் கொடைகளும் உதவிகளும்:** இந்திய அரசியலமைப்பு 40-ஆம் பிரிவு மாநில அரசு, உள்ளாட்சி நிறுவனங்களை ஏற்படுத்தி, அவை தன்னாட்சி நடத்துகிற மண்டலங்களாக இயங்குவதற்குத் தேவையான அதிகாரங்களையும் நிதி வசதியினையும் ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் பணிக்கிறது. எனவே, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகளான மாவட்டம், வட்டம், ஊராட்சி ஒன்றியம், ஊரகங்கள் ஆகியவற்றிற்குப் பல உதவிகளையும் கொடைகளையும் அளித்து வருகிறது. அவற்றையும் அரசுக் கொடைகள் என்று கூறலாம். பணித் திறமையை ஊக்குவிப்பதற்காக மாநில அரசுகள் கொடைகள் வழங்குகின்றன. மாநில அரசு வழங்கும் கொடைகளைப் பல மாநிலங்களிலும் வெவ்வேறு வகையில் குறிப்பிடுகிறார்கள். மாநில அரசின் கொடைகளும் ஏறக்குறைய

மையக் கொடை வகைகளை ஒத்தவையே. எடுத்துக் காட்டாக, மாநில அரசின் கொடைகளைக் கட்டுப் பாடுற்ற கொடை, கட்டுப்பாடற்ற கொடை, சிறப் புக் கொடை (Special Grant), பொதுக் கொடை, பற்றாக்குறைக் கொடை (Deficiency Grant), தூண் டத்தக்க அல்லது உதவிக் கொடை (Stimulating or Support Grant) என்றும் பிரிக்கலாம். தமிழகத்தில் உள்ளது போல, எல்லா மாநிலக் கொடைகளையும் இரு பெரும் பிரிவில் அடக்கலாம். அவை: சட்ட முறை யிலமைந்த கொடைகள், சட்ட முறையிலமையாக் கொடைகள் என்பன.

மாநில அரசு சில கொடைகளைக் கட்டாயம் கொடுக்க வேண்டும் என்று சட்ட முறையாக வரை யறுக்கப்பட்டுள்ளது. அவை நிலத் தீர்வை, மண்டலச் சாலைகள் கொடை, மண்டலச் சிறப்புத் தீர்வை (Special cess), மேல் வரி(Surcharge)களை ஈடுகட்டும் கொடை, மண்டலக் கல்விக் கொடை ஆகியவையாம். இக் கொடைகள் பெரும்பாலும் ஊராட்சி எல்லையில் உள்ள மக்கள் தொகையின் அடிப்படையில் ஒவ்வொரு வருக்கும் எவ்வளவு என்று முடிவு செய்து வழங்கப் படுகின்றன.

சட்ட முறையிலமையாக் கொடைகளில் சிறப் பானவை: ஊரக வேலைகள் கொடை, மதிய உணவுத் திட்டக் கொடை, முதியோர் எழுத்தறிவுக் கல்விக் கொடை, சமூகக் கல்விக் கொடை, கல்விக்கொடை, உதவி பெறும் பள்ளிக் கொடை, விலையேற்றக் கொடை, மண்டல நீர்ப்பாசனக் கொடை, குடி மரா மத்துக் கொடை, பெண்கள், குழந்தைகள் கொடை, தாய்சேய் நலக் கொடை, குறைந்த அளவுத் தேவைத் திட்டம் (Minimum Needs Programme), ஏரி, குளம் ஆகியவற்றை ஆழப்படுத்துதல், உலர்கழிப்பிடங் களைத் துப்புரவுக் கழிப்பிடங்களாக மாற்றுதல், இரவு தங்குமிடம் கட்டுதல், வருவாய் தரக்கூடிய வகைப்பாடுகள் ஆகியவற்றிற்காக உள்ளாட்சிக் கொடைகள் வழங்கப்படுகின்றன.

மாநில அரசுக்குட்பட்டு இயங்கும் பல நிறுவனங் களுக்கும் மாநில அரசு உதவி அளிக்கிறது. அவற்றுள் தலையாயது கூட்டுறவுத்துறை. அதன் வளர்ச்சியைப் பேணுவதற்கும் பின்வரும் நோக்கங்களுக்கும் அரசு உதவிகள் அளிக்கப்படுகின்றன. கூட்டுறவு அலுவலகங் கள், கிடங்குகள் கட்டுவதற்கு, பணியாளர் ஊதியம், நிருவாகப் பணியாளர் உதவி ஆகியவற்றிற்கு (Man-agerial Subsidy), கட்டிடங்களுக்கு மரச்சாமான் களும் எந்திரங்களும் வாங்குவதற்கு, உறுப்பினர்கள் பங்கு மூலதனத்திற்கு (Share Capital Subsidy), உறுப்பினர்கள் வீட்டு வசதி, கல்வி வசதி ஆகியவற் றிற்கு, நிறுவனங்களின் மூலதனத்திற்கு, ஏற்றுமதி செய்யப்படும் பொருள்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு, கிளைச் சங்கங்கள், மன்றங்கள் ஆகியவை அமைப்ப தற்கு, துணிகள் விற்பனை மீதான தள்ளுபடிக்கு, அனைத்து இந்தியக் கூட்டுறவு விழாக்கள், கண்காட்சி கள், மாநாடுகள் நடத்துவதற்கு, அரசு உதவிகள் அளிக்கப்படுகின்றன. அரசு உதவிபெறும் மற்றைய நிறுவனங்கள்: அரசு அல்லாத தொடக்க, இடை நிலைப் பள்ளிகள், குழந்தை வளர்ப்பு நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஆசிரியர் நலனுக்கான தேசிய நிதி ஏற்பாட்டு நிறுவனம், இலக்கியப் பண் பாட்டுப் பணிக் கழகங்கள், தன்னியக்க நிறுவனங் கள் (Voluntary Organisation), மாநிலச் சமூக நல ஆராய்ச்சி வாரியம், மகிளா மண்டல்கள், சமயம் மற்றும் அறநிலையங்கள், தொழிலாளர் சேமிப்பு நிறுவனம், தேசியப் பணித்திட்டம், மக்களுக்குக் குறைந்த விலையில் உணவுப் பொருள்களைப் பங்கீடு செய்வதற்கான இந்திய உணவுக் கழகம், ஏற்றுமதி நிறுவனங்கள் ஆகியவையாகும்.

தனிப்பட்டவர்களுக்கு அளிக்கும் ஊக்கக் கொடை களும் உதவிகளும்: நாட்டிலுள்ள மக்களை வளர்ச்சிப் பாதையில் ஊக்குவிப்பதற்காக அரசு அளிக்கும் பல வகை உதவிகளையும் அரசுக் கொடை என்று கருத லாம். தனிப்பட்டவர்களை ஊக்கப்படுத்த அளிக்கும் கொடைகளை உற்பத்தி ஊக்க உதவிக் கொடை (Production Subsidy), நுகர்ச்சி ஊக்க உதவிக்கொடை (Consumption Subsidy), காரணி உதவிக்கொடை (Factor Subsidy), சிறப்பு உதவிக் கொடை (Special-Subsidy) என நான்கு வகையாகப் பிரிக்கலாம். இந்தக் கொடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரின் ஆக்கத் திறனை உயர்த்தி, நாட்டின் மொத்த வருவாயையும் பொருளாதாரவளர்ச்சியையும் மிகுமாறுசெய்கின்றன. தேவை என்று கருதப்படும் ஆக்கத் துறைகளில் தனி யார் முதலீட்டை ஊக்குவிக்கிறது. வறுமையில் வாடும், நலிந்த, பின் தங்கிய தாழ்த்தப்பட்டோருக்கு வேலைவாய்ப்பினையும் வருவாயினையும் மிகச் செய்து, அவர்களது வாழ்க்கை நிலையை உயர்த்து கிறது. மற்றும், வருவாய் ஏற்றத்தாழ்வுகளைச் சமு தாயத்தில் களைந்து, சமப் பங்கீட்டினை ஏற்படுத்தி, சமூக நீதியை நிலைநாட்டுகிறது. அரசு தனிப்பட்ட வர்களுக்கு வழங்கும் சில கொடைகளைப் பின்வரு மாறு சுருக்கித் தரலாம்:

வேளாண்மையினருக்குக் கொடை: பயிர், இரசா யன உரச் செயல்முறை விளக்கத் திட்டம், பல பயிர் களின் பெருக்கத் திட்டம் ஆகியவற்றிற்காகத் தேவைப் படும் விதைகள், பூச்சிக் கொல்லிகள், தாவரப் பொருள்கள், பயிர்ப் பாதுகாப்புப் பொருள்கள், நீர்ப் பாசனக் கருவிகள் ஆகியவற்றைக் குறைந்த விலை

யில் அளித்தல், அட்டவணைப்படுத்தப்பட்ட பழங்குடி உழவர்கள் தம் நிலங்களில் ஆக்கத்திறனைப் பெருக்கவும், அவர்களுக்கு வேலைவாய்ப்பினை மேம்படுத்தவும் அவர்களுக்குத் தேவைப்படும் உரம், விதை, கருவிப் பொருள்கள் ஆகியவற்றை வாங்கக் கொடை அளித்தல், கலப்பு இனப் பசுக்கள், சிறந்த கோழி வகைகள் ஆகியவைகளைக் குறைந்த விலையில் வழங்குதல் ஆகியவையாம். வறட்சி, வெள்ளம் ஆகியவற்றால் வரும் துயர்நீக்கு கொடை (Drought – Flood Relief Grant), மீனவர்களுக்குத் தேவையான வலை, நூல், கட்டுமரங்கள், படகுகள், வீடு, போக்குவரத்து வசதிகள்போன்றவற்றை நல்குதல், மீனவர்களுக்கான சேமிப்பு-துயர்நீக்கு திட்டம் (Savings Cum Relief Scheme), காப்பீட்டுத் திட்டம் (Insurance Scheme), புயல் இடர்காப்புத் திட்டம் (Cyclone Relief) ஆகியவற்றிற்கான உதவிகளை அளித்தல் முதலியன மேற்குறிப்பிடப்பெற்ற கொடையில் அடங்கும்.

தொழில் முனைவோருக்குக் கொடைகள்: மின்சாரக் கட்டணக் கொடை, சிறு தொழிலகங்களின் மூலப் பொருள்கள் மீதான விற்பனை வரிச் செலவினைத் திருப்பித் தருதல், குடிசை மற்றும் ஊரகத் தொழில் செய்வோருக்கு விற்பனை உதவி, தொழில் முனைவோருக்கு அளிக்கும் நிருவாகப் பயிற்சிச் செலவிற் பெரும்பகுதியைக் கொடையாக வழங்கல், தொழில் தொடங்க முனையும் அட்டவணை இனத்தவர் மற்றும் பழங்குடியினருக்கு வாடகை உதவித் தொகை (Rent Subsidy), வட்டி உதவித் தொகை (Interest Subsidy), சிறப்பு முதலீட்டு உதவித் தொகை (Special Investment Subsidy) ஆகியவையாம்.

மாணவர்களுக்குக் கொடைகள்: ஏழைக் குழந்தைகள், அட்டவணைப்படுத்தப் பட்ட இனம் மற்றும் பழங்குடி வகுப்பு மாணவர்கள், விடுதலைக்குப் பாடுபட்டோரின் குழந்தைகள் ஆகியோருக்கு எழுது பொருள்கள், பாடப் புத்தகங்கள், மதிய உணவு, சீருடைகள் ஆகியவை இலவசமாக அளித்தல், பல நிலைகளில் பயிலும் மாணவர்களுக்கும் மாணவ விளையாட்டு வீரர்களுக்கும் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த சிறந்த மாணவர்களுக்கும் கல்வி வசதி, பயிற்சி உதவித் தொகை, ஊக்குவிப்புத் தொகை வழங்கல் ஆகியவையாம்.

சமூக நலக் கொடைகள்: (1) அட்டவணைப்படுத்தப்பட்ட இனத்தவர் மற்றும் பழங்குடியினர் தொழில் தொடங்க, கடும்பிணி போக்க, நீத்தார் கடன் செய்ய, தொழில் செய்முறைப் பயிற்சிகளில் பங்குகொள்ள, சட்ட உதவி (Legal Aid) பெறக் கொடைகள் வழங்கப்படுகின்றன. நலிந்த பிரிவினர் வீட்டு மனை பெற்று அவற்றில் வீடு கட்டிக்கொள்ள உதவி செய்தல், கலப்புத் திருமணம், விதவைத் திருமணம் ஆகியவற்றிற்கு ஊக்கத் தொகை அளித்தல், விதவைகள், காப்போரற்ற பெண்கள், முதியவர்கள் ஆகியோருக்கு நிதி உதவி வழங்கல், ஓய்வு ஊதியம் வழங்கல், உடல் ஊனமுற்றவர்கள், சிகை, சலவைத் தொழிலாளர்களுக்கு வேண்டிய கருவிகளை உதவியாகவோ குறைந்த விலையிலோ வழங்குதல். திக்கற்ற மற்றும் வாழ்விழந்த பெண்கள், அட்டவணைப் படுத்தப்பட்ட இனத்தவர் பெண்களுக்குத் திருமணம் செய்ய உதவி வழங்கல் ஆகியவை சமூகக் கொடைகளாம். மேற்கூறிய அரசுக் கொடைகளும் உதவிகளும் மக்கள் வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்கின்றன.

எம்.இரா.

துணை நூல்கள்:

**Hemalata Rao**, "Centre – State Financial Relation", Allied Publishers, New Delhi, 1981.

**Veera Raghavachariyar**, "Union State Financial Relation", Sterling Publishers, New Delhi, 1969.

**Venkata Rao, Niru Hazavika**, "Local Self-Government in India", S. Chand & Company, New Delhi, 1980.

**Raja Chellaiah & Others**, "Trends and Issues in Indian Federal Finance", Allied Publishers, New Delhi, 1981.

***அரசாங்கச் செலவு*** என்பது பொது நிதியியலின்படி மத்திய, மாநில அமைப்புகள் செலவிடுவதாகும். இது தனிப்பட்டவர் செலவினின்றும் முற்றிலும் வேறுபடும். அரசு, தனியார் துறை போல் ஆதாயம் தரும் தொழில் துறைகளில் ஈடுபடினும், அரசுச் செலவின் நோக்கம் ஆதாயமன்று. நாட்டு மக்களை வெளிநாட்டுப் படையெடுப்பினின்றும் பாதுகாப்பதும், உள்நாட்டில் நீதியை நிலைநாட்டி மக்களைப் பேணுவதும், பொது அமைப்புகளை (Public Institutions) நிறுவுவதும் அரசின் சிறந்த கடமைகள் எனப் பொருளியல் வல்லுநர் கூறுவர். இப் பொதுப் பணிகள் சமுதாயத்திற்கு மிகுந்த நன்மை பயப்பினும், தனியாரால் ஏற்று நிறைவேற்றத் தக்கன அல்ல என்பதால், அரசாங்கச் செலவின் தனித் தன்மை புலனாகும். இதனை ஆராய்ந்த ஆதம் சுமித்தின் ஆய்வுதான் அரசாங்கச் செலவைப் பற்றிய சிறப்பான முதல் ஆய்வாகும். இரிக்கார்டோ, மில் போன்றோர் "அரசாங்கச் செலவு" பற்றி ஆய்வு செய்யவில்லை. ஏறத்தாழ நூறு ஆண்டுக் காலம் இதைப் பற்றிய சிந்தனை வல்லுநர்களிடம் இருந்து பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலிராய் போலியூ (Leroy Beaulieu) அரசாங்கச் செலவு பற்றி ஆராய்வது பொது நிதியியலின் நோக்

கமன்று, அரசாங்க வருவாயே இன்றியமையாதது எனக் கருதினார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் செலவினங்கள் மிகுதிப்படவே, அரசாங்கச் செலவின் நோக்கம், அதன் வரன்முறை, எல்லை பற்றி ஆராய முற்பட்டனர். உலகப் போருக்குப் பின் அரசாங்கச் செலவு பற்றிய விவாதம் வல்லுநர்களிடையே ஏற்பட்டுச் சிக்கனம் கடைப்பிடிக்க வேண்டியதன் தேவை வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கச் செலவின் இயல்பு, அளவு, நோக்கம் யாவும் நடைமுறை வழக்கத்தில் இருக்கும் பொருளியல் முறைகளைப் பொறுத்து அமையும். அரசாங்கத்தின் கடமைகள், அரசியல் சூழ்நிலையில் பெறப்படும் அழுத்தம், செல்வாக்கான குழுக்களின் ஆதரவு, உறுதி ஆகிய இவற்றைப்பொறுத்துத்தான் ஒரு பின் தங்கிய (Primitive) அரசாங்கத்தின் செலவு முடிவு செய்யப்படும். பொருளாதாரச் சூழ்நிலையில்பொதுச் செலவு பற்றிய சிக்கல்கள் இல்லை. ஒரு காலத்தில் தனி மனிதனின் கடமையாக இருந்த செலவு, பொருளாதாரச் சூழ்நிலை முன்னேறியிருக்கும் இக்காலத்தில், அரசின் செலவினங்கள் வளர்வதை விரும்பவில்லை. இக்காலத்துக் குடியாட்சி அரசாங்கச் செலவு வரம்பின்றி உயர்வதற்குக் காரணமாகிறது என்றால் அது மிகையாகாது. பொது உடைமை, சமதருமப் பொருளியல், நலப் பொருளியற் கோட்பாடுகள் ஆகியவற்றின் மனப்பான்மையால் அரசாங்கச் செலவு பன்மடங்கு உயர்ந்துள்ளது.

ஆதிகாலத்தில் சமுதாயப் போக்கில் பொது வாழ்க்கையும் தனிப்பட்டவர் வாழ்க்கையும் ஒன்றுபட்டு இணைந்திருந்தன. இப்போது அரசாங்கச் செலவின் மிகுதிப்பாட்டிற்குச் சமுதாயச் சிக்கல்கள் காரணம். அரசியல் அமைப்புகளுக்கும் குறிப்பாக மதச் சடங்குகளுக்கும் மிக்க செலவு ஏற்பட்டு, அதனை அரசே ஏற்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அக்காலத்தில் மக்களே முன்வந்து படைக்கலமேந்திப் போரிட்டனர். அதனால், போர்க்கால வரி ஏதுமில்லை; செலவுமில்லை. பிற்காலத்தில் போருக்கான செலவு மிகுந்த சூழ்நிலையில் அதற்கான மதிப்பு அளவிட முடியாததாக வளர்ந்து விட்டது.

ஏதன்சு, இசுபார்ட்டா (Sparta) ஆகிய நாடுகளில் பொதுப்பணிக்கு மிக்க சிறப்பிடம் கொடுத்தனர். குழந்தைகளுக்கும் முதியவர்களுக்கும் அரசாங்கம் மிகுந்த பாதுகாப்புக் கொடுத்தது. உரோம் நாட்டில் சாலைகள், கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு மிகுதியான பொருளை அரசாங்கம் செலவு செய்தது. மேலும், அக்காலத்தில் உரோமில் வேலையற்றோர்க்கு அரசாங்கம் துயர்துடைப்பு நிதி அளித்தது.

''நிலப்பண்ணை'' (படைமானிய) முறை காலத்தில் சமுதாய அமைப்புச் சிறியதாக இருந்தது. அரசாங்கச் செலவும் தனியார் செலவும் ஒருங்கிணைந்திருந்தன. மன்னன் நலமே மக்கள் நலமாகக் கருதப்பட்டு வந்தது. அரசியல் சட்ட அமைப்பு வந்த பின்பு பெரும் மாற்றம் ஏற்பட்டது. பாதுகாப்பு, பொதுக் கடன் செலவு, அரசாங்கச் செலவுகள் யாவும் பொது மக்களே தாங்கிக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்பட்டது.

இன்றைய தொழில் மயமான சமுதாயத்தில் அரசாங்கச் செலவு மிகுதியாக உள்ளது. ஆதம் சுமித்து அரசாங்கச்செலவின் கீழ்ச் சாலைகள், பொதுக் கட்டிடங்கள், பாலங்கள், கல்வி நிறுவனங்கள் ஆகிய வற்றைக் குறிப்பிடுகிறார். பொதுக்கல்வி முதலாளித்துவ அரசாங்கத்தின் அதிகாரப் போக்கை மிகவும் குறைக்க முற்படுகிறது. இது பொருளாதாரச் சக்திகளை உயரச் செய்கிறது. அரசாங்கச் செலவும் வரிகளும் மிகுந்து தொழிலும் வாணிகமும் முன்னேறுகின்றன.

அரசாங்கச் செலவு இக்காலத்தில் மக்கள்தொகை மிகுவதை விட மிகுதியாக உள்ளது. புதுச் செலவுகளும் மிகுந்து வருகின்றன. இதனை அடால்பு வாக்னர் (Adolf Wagner) ''வளர்ந்து செல் அரசு நடவடிக்கைகளின் விதி'' (Law of increasing state activities) எனக் குறிப்பிடுகிறார். வெவ்வேறு நாடுகளையும் வெவ்வேறு காலங்களையும் ஒப்பிட்டு ஆராய்கையில், மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகளில் சீரான வளர்ச்சி காணப்படுகிறது.

பொதுவாகப் பொது நிதியியல் அறிஞர்கள் அரசாங்கச் செலவு மிகுந்து வருகிறது என்றும், குறிப்பாகச் சில நாடுகளில் தொழில் புரட்சிக்குப் பின்னரே இவ்வாறு ஏற்பட்டுள்ளது என்றும் கருதுகின்றனர். ஆயினும், மிகுந்து வரும் விலைவாசி உயர்வை அவர்கள் தங்கள் கணிப்பில் கொண்டு வருவதில்லை. கோம்சுடாக் என்னும் ஆசிரியர், மேலை நாடுகளின் செலவினங்கள் 19-ஆம் நூற்றாண்டில் இரண்டு முதல் இருபது மடங்குகள் வரை மிகுந்துள்ளனதாகக் கணித்திருக்கிறார். வி.டி. இலேய்டன் (V.T. Layton) இங்கிலாந்தின் மத்திய அரசுச் செலவு 1918-இலிருந்து 1923-வரை உள்ள காலப் பகுதியில் ஐந்து விழுக்காடு உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கூட்டரசு அமைப்பில் நிருவாகத்திற்கும், நாட்டுப் பாதுகாப்புக்கும் அரசாங்கச் செலவு மிகுந்ததோடு, தொழிலாளர் துயர் துடைப்புக்கும் விதவைகள், திக்கற்றோர் ஆகியோரின் மறுவாழ்விற்கும் சமூகப் பணிகளுக்கும் செலவு மிகுந்தது. அரசாங்கச் செலவு அரசாங்க வருவாயை வரையறை செய்கிறது.

அரசாங்கச் செலவின் பெரும்பகுதி நாட்டுப் பாதுகாப்புக்கெனச் செலவிடப்படுகிறது. எல்லா நாடுகளி

லும் இது நடைமுறையில் காணப்படும் உண்மை. இந்நூற்றாண்டில் நிகழ்ந்த இரு பெரும் போர்களும் அதனைத் தொடர்ந்து அவ்வப்போது நிலவிவரும் போர் ஆயத்த நடவடிக்கைகளும் போர்ச் சூழ்நிலைகளும் பாதுகாப்புச் செலவினங்கள் வளர்வதற்குக் காரணமாகின்றன. இச்செலவு மிகுதியாக இருப்பதால் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கிறது. செலவு விரிவாகவும் வேறுபட்டனவாகவும் இருப்பதால் பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளையும் பாதிக்கிறது. நிருவாகத்தையும் அமைதியையும் பாதுகாப்பது அரசின் தலையாய கடமைகளுள் ஒன்றாதலால், அரசாங்கச் செலவு கணிசமாக உயர்வதில் வியப்பில்லை.

பொருளாதார, சமுதாய நோக்கங்களுக்கான செலவினங்களும் வளர்ந்து வருகின்றன. ஆதம்சுமித்து காலத்தில் சமுதாயப் பணிக்கான செலவினங்கள் மிகக் குறைவு. பொதுமக்களின் கல்விக்கான அரசாங்கச் செலவை ஆதம்சுமித்து ஆதரித்தார். தலையிடாக் கொள்கையைப் பெரிதும் ஆதரித்த அவர், பாதுகாப்பு வரிகள், உதவித்தொகை வழங்கல் (Subsidy) சிறுதொழில்களுக்கு ஊக்கமூட்டுதல், கொடை வழங்கல் (Bounty) ஆகியவற்றைக் கடுமையாக எதிர்த்தார்.

இக்காலத்தில் சமுதாயத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படையானது எனக் கருதப்படும் தொழில் துறைகளை நிறுவுவதற்கும் வளர்ப்பதற்கும் உதவிகளும் நன்கொடைகளும் வரிச் சலுகைகளும் அளிக்க அரசாங்கம் முன் வருவதால் அதன் செலவும் மிகுதியாகிறது. அரசே இத்துறைகளில் நேரடியாகவும் இறங்கத் தொடங்கிவிட்டது. இந்தியாவில் அரசுத் துறை மிக வேகமாக வளர்ந்து வருகிறது. சமதருமச் சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் மிகச் சிறந்த தொழிற்சாலைகள் பலவற்றை அரசுத் துறைக்கீழ் கொண்டு வர அரசினர் கடுமையாகச் செயல்படுகின்றனர். சமுதாயப் பணிக்கான செலவினங்கள் இக்காலத்தில் மிகுந்து வருகின்றன. பொது நலம், மருத்துவ வசதி வழங்கல், நோய்களைத் தடுக்கும் வழிகளைக் கையாளுதல் ஆகியவற்றிற்கெனச் செலவினங்கள் வளர்ந்து வருகின்றன. மேலும், பொதுக் கடனுக்கான வட்டியைச் செலுத்துவதும் அரசாங்கச் செலவின் ஒரு சிறந்த கூறாகும்.

அரசாங்கச் செலவுக் கோட்பாடுகள் நன்மைவிதி: அரசாங்கச் செலவு பொதுமக்களுக்குச் சமுதாய உச்ச நன்மையைப் பயக்க வேண்டும். மிகப் பலருக்கு மிகப் பெரும் மகிழ்ச்சி தருவது அரசாங்கச் செலவின் நோக்கமாக இருக்க வேண்டும். இச் சமுதாய நன்மையை மிகுதிப்படுத்தப் பேராசிரியர் பிகு (A.C.Pigou) இரு பெரும் கோட்பாடுகளை விதிக்கிறார். முதலாவதாக அரசாங்கச் செலவின் கடைசித் துளி நாணயத்தின் மறுப்பு, தன்னிழப்பு, இறுதிநிலைப் பயன்பாடு ஆகியவை அதனைத் திரட்ட எடுத்துக் கொள்ளும் இறுதிநிலைத் தியாகத்திற்கு இணையாக இருத்தல் வேண்டும். இரண்டாவதாக, அரசாங்கம் மொத்தத் தொகையாகப் பல்வேறு வழிகளில் செலவு செய்யும் போது அவ்வகைச் செலவுகளின் இறுதிநிலைப் பயன்கள் சமமாக இருக்க வேண்டும். பல்வேறு வழிகளில் செலவிடும்போது பதிலீட்டுக் கோட்பாடு செயல்படுத்தப்படல் வேண்டும். இது செயல்படுத்த முடியாத கருத்தாயிருப்பினும் ஒரு சிறந்த கருத்து என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. சமுதாயத்தை உள்நாட்டுக் குழப்பத்திலிருந்தும் வெளிநாட்டுப் படையெடுப்பிலிருந்தும் பாதுகாப்பது, உற்பத்தியளவையும் வேலைவாய்ப்பையும் தொழில் அமைப்பையும் மிகுதிப்படுத்துவது, சமுதாயத்தில் காணப்படும் வருவாய்ப் பகிர்வின் ஏற்றத்தாழ்வினைக் குறைப்பது ஆகியவை அரசின் செலவைத் திட்டமிடுவதற்கு அடிப்படையான முயற்சிகளாகும்.

சிக்கன விதி: சிக்கனமும் எளிமையும் தனிப்பட்டவர் செலவில் கடைப்பிடிப்பது மட்டும் போதாது. பொது நிதியிலும், குறிப்பாக அரசாங்கச் செலவிலும் கடைப்பிடிக்கப்படல் வேண்டும். சிக்கனம் என்பது செலவழிக்காமல் இருப்பதோ தேவைக்கு மிகவும் குறைவாகச் செலவழிக்க முயற்சி செய்வதோ அன்று. எங்கு, எவ்வளவு நிதி நியாயமாக ஒதுக்கப்பட்டுச் செலவு செய்யப்படல் வேண்டும் என்பதைச் சிக்கனம் குறிக்கிறது. எங்குச் செலவு செய்தல் தவறோ அங்குச் செலவு செய்வதைத் தவிர்க்கவேண்டும். பேரறிஞர் எட்மண்டு பர்க்கு பகர்ந்தது போல் சிக்கனம் என்பது வெறும் சேமிப்பன்று; செலவைத் தெளிவாக தேர்ந்தெடுப்பதே என்பது இச் சிக்கன விதியின் விளக்கமாகும்.

அனுமதி விதி: இவ்விதி முறையான அனுமதி பெறாமல் எச்செலவும் மேற்கொள்ளல் தவறு என இயம்புகிறது. எச்செலவிற்கும் அனுமதி தேவை. எந்த நோக்கத்திற்காக எவ்வளவு அளவில் அனுமதிக்கப்படுகின்றதோ அதனைக் கண்காணிப்பது அரசின் கடமையாகும். பொதுக் கடன்கள் எழுப்பப்பட்டால், நோக்கம் நிறைவேறும் வகையில் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க வேண்டும்.

உபரி விதி: பற்றாக்குறை ஏற்பட்டுச் சிக்கல் உண்டாகிவிடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்துவது உபரி விதியின் நோக்கமாகும். மிதமான உபரி விரும்பத்தக்கது; நலம் பயக்கும் மிக்க உபரி வீண் செலவை உண்டு பண்ணும்; நாட்டை இக்கட்டான பாதையில் அழைத்துச் செல்லும் சமமான வரவு செலவுத் திட்டம், விரும்பத்தக்க நல்ல முறை என்

பது ஒரு சாரார் எண்ணம். இக்காலத்தில் பற்றாக் குறை வரவு செலவுத் திட்டம் பொருளாதார முன்னேற்றத்தை வளர்க்கும் எனக் கருதப்படுகிறது.

பொது நிதியியலில் அரசாங்கச் செலவுகளை வகைப்படுத்துவது பற்றிப் பல்வேறு பொருளியல் வல்லுநர்கள் பன்னெடுங்காலமாகப் பல்வேறு கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளனர். சே.எசு. மில் என்பார் அரசாங்கச் செலவைக் கட்டாய அலுவல், கட்டாயமற்ற அலுவல் என இரு பிரிவாகப் பிரிக்கிறார். உரோசர் என்பார் தனியார் செலவினங்களின் பாகுபாட்டை ஒட்டியே அரசாங்கச் செலவையும் வகைப் படுத்துகிறார். இவர் செலவைக் கட்டாயச் செலவுகள், பயனுள்ள செலவுகள், ஆடம்பரச் செலவுகள் என மூன்றாகப் பிரிக்கிறார்.

பின்னர், 19-ஆம் நூற்றாண்டின் பொருளியல் வல்லுநர்கள் செலவினங்கள் அளிக்கும் நன்மைகளின் அடிப்படையில் செலவைப் பிரிக்க முற்பட்டனர். கோகன் (Cohen), பிளன் (Flehen) என்ற அறிஞர்களின் பகுத்தாய்வின் முடிவுகளின்படி, மக்களுக்குப் பொதுவாக நன்மை பயக்கும் பாதுகாப்புப் போன்ற செலவினங்கள், சிலருக்கு மட்டுமே குறிப்பாக, ஏழைகளுக்கு உதவி வழங்கல் தொடர்பான செலவினங்கள் தனிப்பட்ட சிலருக்கு நன்மை தரும் செவினங்கள், அனைவருக்கும் பயன்தரும் நிதி நிருவாகம் போன்ற செலவினங்கள் ஆகியவை ஆராயப்பட்டன.

நிக்கல்சன் என்பவர் அரசாங்கச் செலவைப் பொதுச் சேவைகளுக்குக் கிடைக்கக் கூடிய வருவாய்க்கு ஏற்றாற்போல் பின்வருமாறு பாகுபாடு செய்கிறார்: (1) எவ்வித வருவாயும் தேடித்தராத செலவினங்கள் (2) மறைமுகமாக வருவாய் தேடித் தரக்கூடிய செலவினங்கள் (3) ஓரளவு வருவாய் தரக்கூடிய செலவினங்கள் (4) செய்யப்பட்ட செலவுகள் அல்லது அதற்கு மிகுதியாக வருவாய் தேடித் தரக்கூடிய செலவினங்கள். முதற் பாகுபாட்டில் ஏழைகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகையும் போரில் உண்டான இழப்புகளும் அடங்கும். இரண்டாம் பாகுபாட்டில் கல்வி, சுகாதாரம் போன்ற மறைமுக வருமானம் தரக்கூடிய செலவினங்கள் குறிக்கப் பெறும். மூன்றாம் பாகுபாடு கட்டணம் பெறும் கல்வியைக் குறிக்கும்.

எச்.சி. ஆதம்சு (H.C. Adams) அரசாங்கச் செலவுகளைப் பணிகள் அடிப்படையில் மூன்றாகப் பிரிக்கிறார். அவை பாதுகாப்புப் பணிகள், வாணிகப் பணிகள், வளர்ச்சிக்கான பணிகள் எனப்படும். பாதுகாப்புச் செலவினங்கள் சமுதாய முன்னேற்றம் மிகும் போது குறையும் என்கிறார்.

பேராசிரியர் பிகு என்பவர் அரசாங்கச் செலவைச் சமுதாயத்தில் மக்களிடையே வருவாயை மீண்டும் பங்கீடு செய்யத் தக்க மாற்றம் காணும் செலவினங்களாகவும் (Transfer-expenditure), சமுதாயத்தின் உற்பத்திச் சாதனங்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதைத் தீர்மானிக்கத்தக்க மாற்றங் காணும் செலவினங்களாகவும் பாகுபாடு செய்கிறார்.

அரசாங்கச் செலவைப் பற்றித் திட்டவட்டமான விதிகள் இல்லாதது பெரிய குறையாகும். சே.பி.சே என்பார் எல்லா நிதித் திட்டங்களிலும் மிகச் சிறந்த நிதித்திட்டம் மிகக் குறைவாகச் செலவிடுதல் எனக் குறிப்பிட்டார். மேலும், தால்டன் (Dalton) என்பவர் மன நிறைவு தரக்கூடியதும், முழுமையானதும், முறையானதுமான அரசாங்கச் செலவு முறைக் கோட்பாடு இல்லாதது பெருங்குறை என்று வருந்தினார்.

இருப்பினும், காலப் போக்கில் அரசாங்கச் செலவுகள் வளர்ந்து கொண்டு போகின்றனவேயன்றிக் குறைந்தபாடில்லை. காரணம் யாதெனில், நலம் சார் நாடுகளாக (Welfare State) இக்கால நாடுகள் கருதப் படுவதால் செலவினங்கள் வளர்ந்து விட்டன. வெறும் காவல்துறை நாடாக (Police State) இருந்தால் செலவு குறையும். இக்காலப் போர்களும், போர் ஆயுதங்களும் செலவை மிகுதிப்படுத்துகின்றன. மேலும், மக்கள்தொகை வளர்ச்சியினாலும் நாட்டுப்புற மக்கள் நகர்ப்புறங்களில் வேலை தேடி வாழ்க்கைத் தரத்தை உயர்த்த நினைத்துக் குவிவதாலும் அரசாங்கத்தின் செலவு உயர்கிறது. குடியாட்சி முறையில் தேர்தல் நடப்பதும் செலவு மிகுதியாகக் காரணமாகிறது. விலைவாசி உயர்வும் அரசாங்கச் செலவு மிகுதற்குக் காரணமாக உள்ளது. மேலும், 'குழாய் நிரப்புகைக் கோட்பாட்டின்' படி (Pump - Priming) பொருளாதார மந்தக்காலத்தில் பொருளாதார மீட்சித் திட்டம் செயல்படுத்தப்படும். இதுவும் அரசாங்கச் செலவு மிகுதியாகக் காரணமாகிறது. வணிகச் சுழல்களை ஈடு செய்யும் (Counter Cyclical Expenditure) அரசாங்கச் செலவும், நடைமுறை முதலீட்டிற்கும் சேமிப்பிற்கும் இடையில் சமநிலை இன்மையை நெறிப்படுத்துகிறது.

பொதுவாக, முன்னேற்றம் காணும் நாடுகளின் அரசாங்கச் செலவுகளைத் தவிர்க்க முடியாது. சான் ஆட்லர் (John Adler) கருத்துப்படி, உற்பத்தியில் உயர்ந்து வரும் விகிதாச்சார அளவை, முதல் ஆக்கத்திற்கு (Capital Formation) ஒதுக்கினால் வளர்ச்சி குன்றிய நாடு வளர்ச்சி பெறும். இக்காலப் பொருளியல் வல்லுநர்களின் முயற்சியால், அரசாங்கச் செலவு பற்றிய சிக்கல்கள் அறிவியல் அணுகுமுறையில் ஆராயப்படுகின்றன. அதன்படி, நடைமுறையில் ஏற்படும் தேவைக்கேற்ற அரசாங்கச் செலவு இன்றியமையாதது. இதில், பயன் இப்படித்தான் வர வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லை. எவ்வாறு அரசாங்க நிதி

செலவு செய்யப்படவேண்டும் என்றும், நாட்டுப் பொருளாதாரம் நிருவகிக்கப்பட வேண்டுமென்றும் கவனிக்க வேண்டும். குறிப்பிட்ட சமூக அரசியல் அமைப்பில் எவ்விதச் சக்திகள் எவ்வெவ்வாறு அரசாங்கச் செலவைக் கட்டாயப்படுத்துகின்றன என்பது மட்டுமன்றி அளவையும் வரையறுக்கின்றன. இச் சூழ்நிலையில் அரசாங்கச் செலவு எப்படி இருந்தால் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதை மசுகிரேவ் (Musgrave) என்பார் ஒரு புதுக் கண்ணோட்டத்தில் அணுகுகிறார்.

அரசு நிதி, ஒதுக்கீடு (Allocation), பகிர்வு (Distribution), நிலைநிறுத்தல் (Stabilization) என மூன்று கிளைகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகிறது.

ஒதுக்கீடு (Allocation): அரசாங்கச் செலவின் தலையாய சிக்கல், எவ்வாறு அளவையும் முறையையும் வரையறுப்பது என்பதே. கையிருப்பு நிதியைக் கொண்டு எவ்வாறு தனியார் விருப்பங்களையும் சமூகப் பொது விருப்பங்களையும் நிறைவேற்றுவது என்பது கேள்விக்குறியாகிறது. நாட்டு நிதி, அரசுச் செலவுகளுக்கு ஒதுக்கப்படின் சமூக விருப்பங்கள் நிறைவுறும். ஆனால், தனியார் தேவைகள், விருப்பங்கள் அந்த அளவு நிறைவுறா. எத்தன்மைப்பட்ட தனியார் தேவைகள் ஒத்திப்போடப்படலாம் அல்லது தவிர்க்கப்படலாம் என்பது முடிவு செய்யப்பட வேண்டிய சிக்கல். அரசாங்கச் செலவை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. வாய்ப்புச் செலவு (Opportunity Cost) முறை மூலம்தான், அதன் ஆக்கமும், அதனால் பெறப்படும் நலனும் கணிக்கப்பட்டு உணரப்பெறும். ஆகவே, அரசாங்கச் செலவு அரசாங்க வருவாயைப் பொறுத்து அமையும். இந்த இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களே. பொதுமக்கள் யாவரும் தங்களால் இயன்றவரை வரி செலுத்த வேண்டும் என்பது ஆதம் சுமித்தின் கொள்கை.

தகுதிக்கேற்ப வரி (Ability to pay) என்னும் கொள்கை ஆங்கிலநாட்டு நிதி வல்லுநர்களைக் கவர்ந்தது. சே.எசு.மில் (1848) என்பவரால் 'சம இழப்பு' (Equal Sacrifice) என்ற முறையில் உருவாக்கப்பட்டு, பின் எட்சுவொர்த்து என்பவரால் 'மிகக் குறைந்த மொத்த இழப்பு' (Least Total Sacrifice) என்று திருத்தியமைக்கப்பட்டு, இறுதியில் ஏ.சி.பிகு என்பவரால் மொத்த, நேர்விகித, எல்லைநிலை (Total Direct Proportional Marginal Sacrifice) இழப்பாக மாற்றியமைக்கப்பட்டது. இக் கொள்கை சீர்திருத்தவாதிகளிடம் நல்ல செல்வாக்குப் பெற்றது. பழமை விரும்பிகள் அரசாங்கச் செலவைக் கண்மூடித்தனமாக எதிர்த்தாலும், இக்கருத்தை மட்டும் உவந்து, வியந்து வரவேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாராட்டு ஒரு பக்கம் இருக்க, இக் கொள்கையில் (தகுதிக்கேற்ப வரி) பல்வேறு கடும் குறைபாடுகள் காணப்பட்டன. இயல்புக்கு ஏற்ப வரி விதிக்கும் கொள்கைக்கு இது பயன்பட்டதே தவிர, அரசாங்கச் செலவு எப்படி இருக்க வேண்டும் என்பதை வரையறை செய்யவில்லை. உயர் அளவில் ஒரு குறிப்பிட்ட வரி எவ்வாறு விதிக்கப்படவேண்டும் என்று மட்டுமே இது முடிவு செய்கிறது. வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி (Budget) இது கவலைப்படவில்லை. 'வாய்ப்புச் செலவு' முறை பற்றியும் இது செயல்படவில்லை. ஆகவே, இக் கொள்கையின் நேர்மை, செயல்திறன் முதலியன ஐயப்பாட்டிற்கு இடமளிக்கின்றன. சம இழப்பு (Equal Sacrifice) என்பது, மக்களிடையே பயன்பாட்டு ஒப்பீட்டுத் தேவையை நிலைநிறுத்துகிறது. ஆனால், இது காலப் போக்கில் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. "பாரிடோ உத்தம நிலைக் கொள்கை" (Pareto Optimality) யின் படி, 'அ' என்னும் தனி மனிதனின் நிலை முன்னேறும் போது, அதே சமுதாயத்தில் வாழும் 'கி' யின் பொருளாதார நிலை குறைபடாதிருப்பின் அரசாங்கச் செலவு மூலம் சமுதாயத்தில் பொருளாதார நிலை உயர்கிறது என்று உணரலாம். இருப்பினும், இது செயலாற்றும்போது இக்கருத்தும் குறைபாடுடையதாக இருக்கிறது. குறிப்பாகப் பொருளாதாரத்தில் விளங்கும் அடிப்படைப் பொருட் பங்கீட்டு நிலை பற்றி ஒன்றும் இது கூறவில்லை. மிகுதியான ஏற்றத் தாழ்வு இருப்பினும் அதனை இது கண்டு கொள்ளவில்லை.

"பயன் கொள்கை" (Benefit Theory) தொடக்கத்திலிருந்தே வரவையும் செலவையும் நிதி வரவு-செலவுத் திட்டத்தில் இணைத்தே செயலாற்றி வந்தது. வரவு-செலவு அமைப்புகளுக்கு ஒரு குறிப்பிட்ட செலவுத் திட்டம் மக்கள் சபையில் நிறைவேற்றப்பட குறிப்பிட்ட வரித்திட்டம் ஒன்று அதனுடன் இணைந்திருக்க வேண்டும். அப்போதுதான் அது ஒரே மனத்துடன் வரவேற்கப்படும். அப்போது பெரும்பான்மையோர் தங்கள் வாக்குகளை அளிக்க முன்வருவர். ஆகவே, ஒரு வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு மிக்க நலம் பயக்கும் நிலையில் இருக்க வேண்டும். தனியாரை மையமாகக் கொண்டது இக்கொள்கையின் போக்கு. ஆனால், நடைமுறையில் பொது விருப்பங்களும் தனியார் விருப்பங்களும் ஒன்றுக் கொன்று ஈடுபாடு கொண்டவை. பிரிக்க முடியாதவை. தனிப்பட்ட முறையிலும் கணிக்க இயலாதவை.

பொது விருப்பங்கள் நிறைவு செய்யப்படின், அவை ஒரு குறிப்பிட்டவருக்கு மாத்திரம் போய்ச் சேருவதில்லை. யாவருக்கும் பொதுவாயிருப்பதால், எவரையும் நுகர்வதிலிருந்து விலக்க முடியாது. தேசப்

பாதுகாப்பான நன்மைகளோ சாக்கடையைத் துப்புரவு செய்வதன் பலனோ தனி ஒருவனுக்கு மாத்திரம் பயன் அளிப்பதன்று. சமுதாயத்தில் வாழும் அனைவரும் ஒரே அளவில் பயன் பெறுகின்றனர். தனியார் எந்த அளவு பயன் பெறுவார்கள் என்பதைக் கணித்து அதற்கேற்ப வரி பெறல் வேண்டும். இலிண்டால் என்னும் பொது நிதியியல் வல்லுநர், தனியார் தங்கள் தேவைக்கேற்பச் சமுதாய விருப்பப் பொருள்களையும் தொண்டுகளையும் துய்த்து அதற்கேற்ப விலையையும், அதாவது, வரியையும் செலுத்த முன்வருவர் என்கிறார். போவன் (Bowen) என்பவர் தம் 1948-ஆம் ஆண்டு ஆய்வுப்படி, தனியார் தேவையை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கும்போது உற்பத்தி அளவு, மொத்தத் தேவை, மொத்த அளிப்பு ஆகியவை சந்திக்கும் இடத்தில் தீர்மானிக்கப்படுகின்றன என்கிறார். ஆகவே, அரசாங்கச் செலவும், அதற்கேற்ப வரி பெறுவதும், அங்காடியில் நடைபெறும் கொடுக்கல்-வாங்கல் போல அமைகிறது. இதையே சாமுவேல்சன் (P.A. Samuvelson) பொது நலக் கொள்கைப்படி (Welfare) ஆராய்ந்து, சமூகப் பொருள் என்பது, 'அ'யின் நுகர்ச்சியில் 'கி'யின் நுகர்ச்சி பாதிக்கப்படாமல் இருப்பதே என்றார்.

சமுதாயப் பணியும் பொருளும் யாவர்க்கும் கிடைக்க வேண்டும். சிலர் அதற்குரிய விலையை வரி மூலம் கொடுக்கவில்லை என்பதற்காக ஒதுக்கப்படக் கூடாது. ஏனெனில், ஏழைகள் துய்ப்பதை வரி கொடுப்போர் தவிர்க்க முயற்சி செய்யலாம். சமூக விருப்பங்கள், அரசின் வரவு-செலவுத் திட்டம் மூலம் செயல்படுத்தப்படல் வேண்டும். சமூக விருப்பத்தை நிறைவு செய்யும் பொருளையும் பணியையும் அரசாங்கமே உற்பத்தி செய்து, சமத்துவச் சமுதாயம் அமைக்கப் பங்கீடு செய்தால் சமுதாயப் பணிகள் நிறைவு பெறும்.

**பங்கீட்டு முறை:** நலம் சார் பொருளாதாரச் சமுதாயத்தில் வெவ்வேறு திட்டங்கள் அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தின்கீழ்க் கையாளப்படும் போது அதன் நன்மை தீமைகளை எளிதில் கண்டு பிடிக்க முடியாது. பங்கீடு என்று வரும்போது சமுதாயத்தில் செயற்படும் அரசியல் முறையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். சமத்துவ முறை நாடுகளில் மூலதனத்திற்குக் கிடைக்கும் வருவாய் நேரடியாக அரசாங்கத்தைச் சாரும். மேலும், தொழிலாளர்களின் ஊதியம் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டது அன்று. முதலாளித்துவ அரசியல் அமைப்பு நாடுகளிலும் கூட வலியமையற்றோருக்கும் ஏழைகளுக்கும் அரசாங்கம் பொருளாதாரப் பங்கீட்டில் தலையிட வேண்டிய தேவை இருக்கிறது. ஆகவே தான் முதியோர்கள், விதவைகள், திக்கற்றோர் போன்றோருக்கு அரசாங்கம் நேரடியாக உதவி செய்கிறது. சமுதாயத்தின் கீழ்மட்டத்தில் இருக்கும் ஏழைக் குழந்தைகளின் வாழ்வு வளம் பெற இலவசக் கல்வித் திட்டங்கள் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட வேண்டியிருக்கிறது. வரி விதித்து அதன் மூலம் மக்களிடையே நிதியுதவி பெற்று, ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்துச் சமுதாய நிலையை உயர்த்துவதும் அரசாங்கச் செலவின் ஒரு பகுதியே.

பொருளாதார உறுதிப்பாடு வளர்ச்சி முதலியவற்றைப் பேணவும் அரசாங்கச் செலவு பயன்படுகிறது. மொத்தத் தேவை (Aggregate Demand) ஒரு அங்காடிப் பொருளாதாரத்தில் கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். பணவீக்கம் அல்லது வேலையில்லாத் திண்டாட்டமும் இருக்கலாம். இதனை ஈடு கட்ட அரசிறைக் கொள்கை தக்கதொரு அரசாங்கச் செலவு முறையை அல்லது பணக்கொள்கையைக் கண்டு பிடித்துச் செயலாற்ற வேண்டும். பொதுநிதித் துறையில் அரசாங்கச் செலவை மிகுதிப்படுத்தியோ வரியைக் குறைத்தோ சமநிதித்திட்ட வளர்ச்சியைப் பெற வழிகோலமுடியும். அரசாங்கச் செலவுக் கொள்கை, ஒதுக்கீடு, பகிர்ந்தளிப்பு முறைகளில் குறுக்கிடக் கூடாது. அரசின் செலவினங்கள் சமுதாயத்தில் செயற்படும் ஒதுக்கீடு முறையைக் கெடுக்காமலும், பகிர்ந்தளிப்பு முறையை மாற்றாமலும் செயற்பட வேண்டும்.

எல்.கா.ந.

துணை நூல்கள்:

**Taylor**, P.E., "The Economics of Public Finance", Oxford & IBH Publishing Company, 3rd Edition, 1968.

**Groves**, H.M., "Financing Government", Henry Holt & Company, New York, 1950.

**Prest**, A.R., "Public Finance in Theory and Practice", ELBS & Weidenfeld and Nicolson, 1974.

**Carl. S. Shoup**, "Public Finance", Wiedenfeld and Nicholson, 1969.

**Musgrave & Shoup**, "Readings in Economics of Taxation", AEA, 1959.

***அரசாங்கப் பொருளாதாரக் கட்டுப்பாடும் ஒழுங்குகளும்:*** பன்னெடுங் காலமாகவே அரசு எந்தக் காலத்தில் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தலையிட வேண்டும், எந்தக் காலத்தில் தலையிடக் கூடாது என்று உறுதி செய்வது மிகவும் சிக்கலான ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. அரசின் கட்டுப்பாடுகள் தேவையா, இல்லையா என்ற முடிவுக்குப் பிறகுதான், எந்த அளவுக்குக்

கட்டுப்படுத்துவது, எப்படிக் கட்டுப்படுத்துவது என்னும் முடிவுகள் எடுக்க முடியும்.

ஆடம் சுமித்து கி.பி. 1776-இல் அவருடைய ''நாடுகளின் செல்வம்'' (Wealth of Nations) என்னும் புகழ்பெற்ற நூலில் 'கண்காணாக் கைக் கோட்பாட்டை' (Theory of Invisibls Hand) விளக்கியிருக்கிறார். இக் கோட்பாட்டின்படி, தனியாருடைய தன்னல நடவடிக்கைகள் சமுதாயத்தின் பொதுவான கண்காணாத நடவடிக்கைகளாக மாற்றப்படுகின்றன. உணவுப்பண்டத் தயாரிப்பாளரோ விற்போரோ மக்களின் பட்டினியைப் பார்த்துப் பரிதாபப்பட்டுத் தங்களுடைய பொருள்களை அங்காடிக்குக் கொண்டு வருவதில்லை. அந்தப் பொருள்களை விற்பதனால் கிடைக்கும் ஆதாயத்தைக் கருதியும் தன்னலத்தாலும் அந்தப் பொருள்கள் அங்காடிக்கு வருகின்றன. ஆனால், அவை அங்காடியில் விற்பனைக்கு வருவதனால்தான், அவை தேவைப்படுபவர்களுக்கு வேண்டும்போது, வசதியான இடத்தில், விரும்புகிற வகையில் கிடைக்கின்றன. இந்தக் கூற்றை மறுப்பவர்கள், வேலைநிறுத்தங்கள், கதவடைப்புகள் நிகழ்வதால் அங்காடிகளில் இன்றியமையாப் பொருள்கள் கூடக் கிடைக்காமல் அவதிப்படும்போதுதான் அதன் முழு உண்மையையும் உணர முடிகிறது. தன்னலத்தினால் உந்தப்பட்டு மேற்கொள்ளப்படும் அங்காடி நடவடிக்கைகள், எந்த அரசின் கட்டுப்பாட்டினாலோ கட்டளையினாலோ மேற்கொள்ளப்படுவதில்லை. அவை தன்னிச்சையாக நிகழ்பவை. அங்காடியின் சிறப்பியல்பே, கட்டுப்படுத்தப்படாத, தன்விருப்பமான நடவடிக்கைதான்.

இந்தக் கண்காணாத கைத்தேற்றத்தின் அடிப்படையில், ஆடம் சுமித்து என்பவர் அரசின் கட்டுப்பாடுகளும் தலையீடுகளும் பல காலங்களில் தேவையற்றவையென்றும், அவை எதிர்பார்க்கும் நற்பலன்களைத் தருவதற்குப் பதிலாக எதிர்பாரத தீய விளைவுகளை உண்டாக்கலாம் என்றும் எச்சரித்தார். எனினும், அவர் தனியார் நடவடிக்கைகளில் பலவற்றை அரசு கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டார். எடுத்துக்காட்டாகக் கல்வி வசதி வழங்குவதில் தனியார் நடவடிக்கை போதுமான அளவு ஊக்கத்தோடு செயல்படாது என்பதால், அரசு இந்தத் துறையில் ஈடுபடுவது இன்றியமையாதது என்று வலியுறுத்தினார். ஆடம்சுமித்தின் இந்தக் கண்காணாத கைக் கோட்பாடு முதலாளித்துவ சமுதாய வளர்ச்சிக்கு ஓர் அடிப்படைத் தத்துவமாக மாறிவிட்டது. எர்பர்ட்டு இசுபென்சர் (Herbert Spencer) 19-ஆம் நூற்றாண்டில் சமுதாயத் தார்வின் கொள்கை (Social Darvinism) யை வெளியிட்டார். இந்தக் கொள்கை 19-ஆம் நூற்றாண்டின் விலங்கியல் வல்லுநரான தார்வினின் தத்துவப்படி திறமை மிக்க உயிரினங்கள் தொடர்ந்து வாழ்கின்றன; திறமையற்றவை வாழ்க்கைப் போராட்டத்தில் தோற்று அழிந்து விடுகின்றன. இதைப் போலவே, சமுதாயத்திலும் திறமை மிக்கவர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வார்கள்; திறமையற்றவர்கள் அழிந்து போவார்கள் என்று சமுதாயத் தார்வின் கோட்பாடு கூறியது. திறமையற்றவர்களுக்கு ஆதரவு அளிப்பதால் சமுதாயத்தின் மொத்த நலந்தான் குறையுமே தவிர, ஆதரவு பெற்றவர்களுக்குப் பெரு நன்மை விளையப் போவதில்லை என்பதும் இக்கோட்பாட்டின் கருத்தாகும். இந்த வாதங்கள் அனைத்துமே அரசுகள் தலையிடாக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்குத் தத்துவ விளக்கம் தந்தன.

உலகெங்கிலும் கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதல் தலையிடாக் கொள்கை பெருமளவுக்கு நடைமுறைப் படுத்தப்பட்டது. உலக வாணிகமும் உலகச் செல்வமும் பன்மடங்கு விரிவடைந்தன. தலையிடாக் கொள்கையின் மிகப்பெரிய நன்மையாக முதலீட்டின் பெருக்கம் விளைந்தது எனலாம். ஆனால், முதல் உலகப் போருக்குப் பின் தலையிடாக் கொள்கையின் ஆதிக்கம் குறையத் தொடங்கியது. கீன்சு பிரபுவின் (Lord Keynes) ''தலையிடாக் கொள்கையின் முடிவு'' (The End of Laissez Faire) என்னும் கட்டுரை (1926) மிகவும் புகழ்பெற்றது. பின்னர் 1929, 1930 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட உலகப் பெருமந்தம் தலையிடாக் கொள்கையை ஆழ்குழியில் புதைத்தது என்றே கூறலாம். கீன்சு பிரபுவின் பொதுக்கோட்பாடு (General Theory - 1936) முதலீட்டை அரசாங்கம் கட்டுப்படுத்துவது இன்றியமையாதது என்று வாதிட்டது.

தத்துவ அடிப்படையிலும் பேராசிரியர்கள் சாமுவேல்சன், டி. கிராசி போன்றவர்கள், ஆடம்சுமித்தின் கண்காணாத முறை, செயற்படுத்த முடியாத பல தீவிரமான எடுகோள்களின் அடிப்படையில் உருவாகியிருக்கிறது என்பதை விளக்கினார்கள். கண்காணாத கைத்தேற்றம் முழுமையாக வெற்றி பெற்று, அரசின் தலையீடில்லாத ஒரு தன் விருப்பமான அங்காடி அமைப்பு உருவாக வேண்டுமென்றால் (1) சொத்து அனைவருக்கும் தொடக்கத்தில் சமமாகப் பங்கிடப் பட்டிருத்தல் வேண்டும். (2) அனைவருக்கும் அங்காடியைப் பற்றிய முழு அறிவும் இருந்திருக்க வேண்டும். (3) சமூகப் பொருள்களின் (Social Goods) தேவையும் அளிப்பும் இருக்கக் கூடாது. (4) புறச்சிக்கனங்கள் (External Economics) செயற்படக்கூடாது.

இந்த அனுமானங்கள் அனைத்துமே நடைமுறை உலகில் காண முடியாதவை. எனவே, தத்துவ அடிப்படையில் அரசின் பொருளாதாரக் கட்டுப்பாடும்

ஒழுங்கு முறைகளும் (Govt. Control of Economy and Regulations) இன்றியமையாதவை என்பதைப் பொருளியல் அறிஞர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.

**கட்டுப்பாடுகளின் அளவு:** அரசின் கட்டுப்பாடுகள் தேவை என்பதை அனைவரும் ஒப்புக் கொண்டாலும், எந்த அளவுக்குக் கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும் என்பதில் பெரிய வேறுபாடுகள் நிலவுகின்றன. சமநிலைச் சமுதாயவாதிகள் (Socialists) உற்பத்திக் காரணிகளின் சொத்துரிமை முழுவதும் அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்கிறார்கள். அதன் அடிப்படையில் அங்காடி நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்படும் எல்லாச் செயல்களும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும். இதற்கு எதிரிடையாக நோபல் பரிசு பெற்ற பிரைட்ரிக்கு வான் எய்க்கு (F. V. Hayek), மில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) போன்ற பொருளியல் வல்லுநர்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாடு எந்த அளவுக்குக் குறைந்திருக்கிறதோ, அந்த அளவுக்குப் பொதுமக்கள் நலம் விரிவடையும் என்னும் கருத்தினை விளக்குகிறார்கள். அமெரிக்காவில் அண்மைக் காலத்தில் புகழ்பெற்றுள்ள அளிப்புப் பொருளியல்வாதிகள் (Supply side Economists) இவர்களைவிட ஒருபடி மேலே போய், அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் தனியாருடைய ஊக்கத்தையும் தன்முயற்சியையும் குறைத்து, நாட்டின் செல்வம் வளர்வதைத் தடுக்கிறது என்று கூறுகிறார்கள். அமெரிக்க அதிபர் இரீகன் (Reagan) இந்த அடிப்படையில் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிற சில நடவடிக்கைகள் 'இரீகனாமிக்சு' (Reaganomics) அல்லது இரீகன் பொருளாதாரம் என்னும் பெயரைப் பெற்றுள்ளது.

**அரசாங்கத் தலையீடு பற்றிச் சில கருத்துகள்:** அரசாங்கப் பொருளாதாரத்தில் தத்துவ அடிப்படையிலும் நடைமுறை அடிப்படையிலும் சில சிக்கல்கள் உருவாகின்றன. ஏ.சி.பிகு (A.C.Pigou) அங்காடி இயக்கத்தின் காரணமாகப் பொதுப் பொருள்களின் அளிப்பு குறைவாகவே இருக்கும் என்று வாதிடுகிறார். அவர் தனிப்பட்டவரின் உற்பத்திச் செலவையும், அதிலிருந்து பெறக்கூடிய நன்மையையும் ஒப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக, சிமிண்டு உற்பத்தியாளர் அதன் உற்பத்திச் செலவைக் கணக்கிடும்போது, அதற்கான கச்சாப் பொருட்செலவு, உழைப்புக் கூலி, முதலுக்கு வட்டி, நிலத்துக்கு வாரம், நியாயமான ஆதாயம் ஆகியவற்றைத்தாம் கூட்டிக் கொள்கிறார்களே தவிர, சிமிண்டுத் தொழிற் சாலையிலிருந்து வெளியேறும் ஏராளமான தூசிகளால் சுற்று வட்டாரத்தில் வாழும் மக்களுக்கு நேரிடும் இடையூறுகள், நலக்குறைவு, தூய்மைக் குறைவு ஆகியவற்றினால் ஏற்படும் செலவுகளைக் கணக்கில் கொள்வதில்லை. இத்தகைய காரணங்களால் சமுதாயத்தின் செலவுக் கணக்கும், தனியார் செலவுக் கணக்கும் வேறுபடுகிறது. சமுதாயத்தின் செலவுக் கணக்கில் சிமிண்டுத் தொழிற்சாலையின் தூசி, மற்றும் புகையினால் ஏற்பட்ட தூய்மைக் கேட்டால் உண்டாகும் மருத்துவச் செலவு, சுற்றுப் புறத்தைத் தூய்மைப் படுத்துவதற்கான செலவு ஆகியவையும் சிமிண்டு உற்பத்திச் செலவுகளோடு கூட்டப்பட வேண்டியிருக்கும். இத்தகைய சூழ்நிலையில் தனியார் உற்பத்தி கூடுதலாகவும், இதற்கு மாறாகப் பொதுப் பொருள் உற்பத்தி குறைவாகவும் இருக்கும். எந்தெந்தப் பொருள்களில் தனியார் செலவைவிடச் சமுதாயச் செலவு மிகுதியாக இருக்கிறதோ, அப்பொருள்களின் அளிப்புக் குறைவாக இருக்கும். பிகு என்பவரின் இந்த வாதம் மிகுந்த விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. எனினும், இந்த வாதத்தின் அடிப்படை உண்மை பெருமளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், தனியார் செலவுகள் சமுதாயச் செலவுகளைவிடக் குறைவாக உள்ள உற்பத்திப் பண்டங்களின் மீது வரிகள் விதித்து, சமுதாய நன்மை தனிப்பட்டவர் நன்மையை விட மிகுதியாக இருக்கும் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அந்த வரிப்பணம் செலவு செய்யப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, சிமிண்டு உற்பத்திமீது வரி விதித்து, அந்த வரிப் பணத்தை மருத்துவ மனைகளைப் போற்றுவதில் செலவிட வேண்டும்.

கால்பிரெய்த்து (J.K Galbraith) கருத்துப்படி தனியார் பொருள்களை விற்பதற்காக ஏராளமான விளம்பரங்கள் செய்யப்படுகின்றன. தனியார் அந்தப் பண்டங்களைப் பெருமளவில் வாங்குகிறார்கள் ஆனால், பொதுப் பொருள், விற்பனை விளம்பரங்களால் ஊக்குவிக்கப்படுவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் விளம்பரங்களால் கவரப்பட்ட ஒருவர், தெருவில் சோளப்பொரி வாங்கிச் சாப்பிட்டுவிட்டு அதன் பொட்டலங்களைத் தெருவில் வீசியெறிந்து விட்டுப் போய்விடலாம். அதனால், தனியார் நுகர்ச்சி மிகுகிறது. அதே சமயத்தில் தெருவைத் துப்புரவு செய்ய வேண்டிய பொதுப் பணியும் மிகுகிறது. தனியார் தங்கள் பொருள்களில் எடுத்துக்கொள்ளும் அளவுக்குப் பொதுப் பொருள்களின் மீது அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. ஒருவர் தம்வீட்டுச் சுவரில் எதனையும் கிறுக்க விரும்புவதில்லை. ஆனால், மகாபலிபுரத்துக்குச் சென்றால், அங்குள்ள பாறைகளில் தம் பெயரை எழுதி அலங்கோலப்படுத்துகிறார். இதிலிருந்து தனியார் தம் பொருள்களின் மீது வைத்திருக்கிற அக்கறை, பொதுப் பொருள்களின் மீது வைப்பதில்லை என்று தெரிகிறது. ஒருவர் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கும் போது, அவர் செலவு செய்வதால் ஏற்படும் இழப்

பையும், செலவு செய்து வாங்கப்போகிற பொருள்கள் தரக்கூடிய நன்மையையும் உடனடியாக உணர முடிகிறது. ஆனால், அரசு வரிவிதித்து, அதனால் சமூக நன்மைக்கான பணிகளைச் செய்யும்போது, தனியார் வரிப்பளுவை உணருகிற அளவு, அதிலிருந்து பெறக்கூடிய சமுதாய நன்மையை உடனடியாக உணரமுடிவதில்லை. இவை அனைத்தும் அரசின் பணிகள் ஏன் போதுமான அளவு வளர்வதில்லை என்பதைச் சுட்டிக்காட்டி, அரசின் தலையீடும் கட்டுப்பாடுகளும் இன்றியமையாதவை என்று தெளிவு படுத்துகின்றன.

இதற்கு எதிரிடையாக வேறு சிலர், அரசின் செலவுகள் தேவைக்கு மிகுதியாகச் செய்யப்படுகின்றன என்றும் வீணடிக்கப்படுகின்றன என்றும் கூறுகின்றனர். அரசின் செலவுகள் வீணடிக்கப்படும் வாய்ப்பு மிகுதியாக உள்ளது என்பதைமில்ட்டன் பிரைடுமேன் (Milton Friedman) கீழ்வரும் பட்டியலில் சுட்டிக் காட்டுகிறார்.

| நீங்கள் செலவு செய்கிறீர்கள் | | |
|---|---|---|
| யாருடைய பணம் | யாருக்காகச் செலவிடப்படுகிறது | |
| | உங்களுக்காக | மற்றவர்களுக்காக |
| உங்களுடையது | I | II |
| மற்றவர்களுடையது | III | IV |

இந்தப் பட்டியலில் முதல் கட்டம், உங்கள் பணத்தை உங்களுக்காகவே செலவிடுவதைக் காட்டுகிறது. நீங்கள் சிக்கனமாகச் செலவழிப்பதோடு, செலவழிக்கும் ஒவ்வொரு உருபாய்க்கும் அதற்குரிய மதிப்பைப் பெற முயல்வீர்கள். உங்கள் குடும்பத்துக்கு உணவும் காய்கறிகளும் வாங்கினால் தரமான அரிசியையும் சிறந்த காய்கறிகளையும் பேரம் பேசி வாங்குவீர்கள். இரண்டாம் கட்டம், உங்கள் பணத்தை அடுத்தவர்களுக்காகச் செலவிடும்போது என்ன நடக்கிறது? உங்கள் பணத்தைச் செலவழிப்பதால் நீங்கள் சிக்கனமாக இருக்க விரும்புவீர்கள். ஆனால், அடுத்தவர்களுக்காகச் செலவழிப்பதால், அப்படிச் செலவிடும்போது உங்கள் மதிப்பு எவ்வளவு உயர்கிறது என்றுதான் பார்ப்பீர்களே தவிர, யாருக்காக அந்தப் பணம் செலவிடப்படுகிறதோ, அவருக்கு அதனால் முழு மனநிறைவு ஏற்படுகிறதா என்பதைப் பற்றிக் கவலைப்பட மாட்டீர்கள். ஒரு தனியாருக்குப் பரிசு கொடுக்க வேண்டுமென்றால், வெள்ளித் தட்டு பரிசளிப்பீர்கள். அதில், அவர் நாள்தோறும் உணவருந்தப் போவதில்லை. உங்களுக்காக வாங்கினால், நீங்கள் எவர்சில்வர் தட்டை வாங்கி, நாள்தோறும் பயன்படுத்துவீர்கள். அதாவது, வெள்ளித்தட்டு மற்றவர்கள் முன்னிலையில் உங்கள் மதிப்புக்காகத் தரப்படுகிறதே தவிர, பரிசு பெறுகிறவரின் முழுப் பயனுக்காக அன்று. மூன்றாம் பிரிவு, மற்றவர்களின் பணத்தை உங்களுக்காகச் செலவழிப்பதைக் காட்டுகிறது வேறொருவர் உங்களுக்கு விருந்து கொடுப்பதாகச் சொன்னால், நீங்கள் ஐந்து நட்சத்திர உணவு விடுதியில் உணவு பெற விரும்புவீர்கள். அப்போது சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது உங்கள் நோக்கமாக இராது. ஆனால், பணத்துக்கான முழு மதிப்பையும் பெறும் நோக்கம் உங்களுக்கு இருக்கும். நான்காம் பிரிவு, மற்றவர் பணத்தை மற்றவர்களுக்காக நீங்கள் செலவழிப்பதைக் காட்டுகிறது. மற்றவர் பணம் என்பதனால் சிக்கனமும் இருப்பதில்லை. உங்களைத் தவிர மற்றவர்களுக்காகச் செலவு செய்வதால் பணத்தின் முழு மதிப்பையும் பெறும் நோக்கமும் இருப்பதில்லை. சுருக்கமாகச் சொன்னால், மற்றவர்கள் பணத்தை மற்றவர்களுக்காகச் செலவழிக்கும்போது அந்தப் பணம் வீணாவதற்கு பல வாய்ப்புகள் இருக்கின்றன. அரசுத் துறையில் நிதியமைச்சர், மற்றவர்களிடமிருந்து பெறுகிற வரிப்பணத்தைத் தனக்கு அல்லது பொது மக்களுக்குச் செலவழிக்கிறார். அவர் பொதுநல நோக்கோடு நல்ல முறையில் செலவழிக்கக்கூடும். ஆனால், அது நான்காம் பிரிவைச் சேர்ந்ததாகையால் அவர் சிக்கனமாகவும் இல்லாமல், பணத்தின் முழு மதிப்பையும் பெறாமல் வீணடிக்கும் வாய்ப்புகள் மிகுதியாக இருக்கின்றன. கோலாகலமான, பயனற்ற விழாக்களில் பொதுமக்களின் வரிப்பணம் அள்ளி இறைக்கப்படலாம். அதாவது, அரசின் இன்றியமையாக் கடமைகளைச் செய்வதைத் தவிர, மற்றச் செயல்களில் அரசு ஈடுபடுமானால், அங்கெல்லாம் பொது மக்களின் பணம் வீணாக்கப்படும் வாய்ப்புகள் மிகுதி.

சேம்சு எம். புக்கானன், கார்டன் துல்லோக் (James M Buchnan and Gorton Tullock) ஆகியோர் பெரும்பான்மை வாக்கினால் ஏற்படுகிற கூட்டு அரசுகளில் பொதுப்பணிகள் தேவைக்கு மிகுதியாக மேற்கொள்ளப் படுகின்றன என்று கூறுகின்றனர். வரிப்பளு எல்லோர் மீதும் விழுகிறது. ஆனால், பொதுப்பணிகளோ நாட்டின் ஒரு பகுதியினருக்கு மாத்திரமே பயனளிக்கின்றன. நாட்டின் எல்லா மக்களும் வரி செலுத்தி, அதன் மூலம் உருவாகிற ஒரு தொழிற் பள்ளியில் ஒரு சில மாணவர்கள் மாத்திரமே பயிற்சி பெற முடிகிறது. இந்தச் சூழ்நிலையில் நன்மைகள் பெறக்கூடிய குழுக்கள் எல்லாம் ஒன்று திரண்டு 51 விழுக்காட்டுக்கு மேல் வாக்குகளைக் கைப்பற்றி விட்டால், மற்ற 49 விழுக்காடு மக்களும் விரும்பாத பணிகளைக் கட்சி செய்யக் கூடும். பெரும்

பான்மை வாக்குகளால் வந்த அரசு, தங்கள் தலைவர்களுக்கு நினைவுக் கூடங்கள் அமைக்கக் கூடும். இதனை மற்ற 49 விழுக்காடு மக்களும் விரும்பாவிட்டாலும், இந்த நினைவுக் கூடங்களை அமைக்கும் செலவுக்காக அவர்களும் வரிகளைச் செலுத்தியே தீருவார்கள். இதுபோன்ற காரணங்களால் அரசுத் துறையின் தேவையற்ற செலவுகள் மிகுகின்றன என்று கூறுகிறார்கள்.

அரசுப் பொருளாதாரத்தில் ஆற்றல் உட்குழுக்களின் (Pressure Groups) பங்கு வேறு சில சிக்கல்களை உருவாக்குகிறது. காரல் மார்க்சின் தத்துவப்படி முதலாளித்துவ அரசு, முதலாளிகளின் இனத்தை ஊக்குவிக்கிறது. முதலாளித்துவ நாடுகளின் அரசுகள், தனியாரின் சொத்துரிமையைப் பாதுகாக்கவும், தனியாரின் வருவாயைப் பெருக்கி, வருவாய் ஏற்றத் தாழ்வுகளை மிகுவிக்கவும் தேவையான ஏற்பாடுகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ செய்து கொண்டேயிருக்கும் இந்தக் கருத்தின் அடிப்படையில் பொருளாதாரத்தில், அரசு தனியார் துறை மீது ஆதிக்கம் செலுத்துவது ஒரு கட்டுக்குள்தான் இருக்கும் என்பது வெளிப்படை. தனியார் துறை மீது அரசு ஆதிக்கம் செலுத்தினாலும், அந்த ஆதிக்கத்தின் காரணமாகத் தனியார் துறைக்குத்தான் மிகுந்த ஆதாயம் கிடைக்கிறது என்று மார்க்சீயவாதிகள் தெரிவிக்கிறார்கள். இந்திய அரசுத் திட்டங்களால் போக்குவரத்து வசதிகள், மின்சார உற்பத்தி, வங்கிக் கடனுதவி போன்ற அகக் கட்டுமான வசதிகள் பெருகியுள்ளன. இப்படிப் பெருகிய அடிப்படை வசதிகள் அனைத்தும் தனியார் துறை முதலாளிகளுக்கு, மேலும் முதலை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்புகளை நல்கியுள்ளன. கடந்த 30 ஆண்டுகளில், சமதருமத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும், இந்தியாவின் மிகப்பெரிய பணக்காரர்களின் செல்வம் மேலும் வளர்ந்துள்ளது. அரசாங்கத்தின் குறிக்கோள்கள் எத்தகையனவாக இருப்பினும், நடைமுறையில் அரசுப் பொருளாதாரத்தின் இயக்கம் தனியார் செல்வக் குவிப்பை ஊக்குவித்து மிகச் செய்கிறது. ஆதலின், இது சமப்படுத்துவதாக அமையாது என்பது மார்க்சீயவாதிகளின் வாதமாகும்.

புரட்சியின் அடிப்படையில் அரசின் பங்கைப் பற்றிய மார்க்சீய வாதத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், உட்குழுக்களின் ஆதிக்க ஆற்றலால் அரசாங்கம் செயல்படுவதை மாற்றியமைக்கலாம் என்னும் கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். ஒரு சில ஆற்றல் உட்குழுக்கள், தங்களுடைய நன்மைக்காக, சட்டமன்ற நடவடிக்கைகளிலும் அவற்றின் முடிவுகளிலும் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய நடவடிக்கைகளை ஊடுவழி (Lobbying) என்று குறிப்பிடுகிறார்கள். இத்தகைய ஆற்றல் உட்குழுக்களின் செல்வாக்கு நடவடிக்கைகளினால், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்குக் கொடைகள் மிகுதிப்படுத்தப்படலாம் அல்லது வரிப்பளு குறைக்கப்படலாம். தொழிலாளர்கள் வேலையிழப்பார்கள் என்னும் காரணத்தால் நலிந்த தொழிற்கூடங்கள் (Sick Mills) அரசுடைமையாக்கப்படலாம். சட்டமன்றத்தின் முடிவுகள் அக்குழுக்களின் மிகையான செல்வாக்கினால் உறுதியாகப் பாதிக்கப்படுகின்றன.

மேற்கூறிய சிக்கல்கள் அனைத்துமே, அரசாங்கத்தின் தலையீடுகளும் கட்டுப்படுத்தல்களும் ஒழுங்குமுறைகளும் எவ்வாறு உருவாகக் கூடும் என்பதைக் குறியிட்டுக் காட்டுகின்றன. கட்டுப்பாடுகள் இல்லாவிட்டால், பொதுப் பணிகள் அளிப்புக் குறைவாகவும், தனிப்பொருள்கள் அளிப்பு மிகுதியாகவும் இருக்க வாய்ப்புள்ளது. கட்டுபாடுகள் அனுமதிக்கப்பட்டால், அரசின் தலையீடு மிகுதியாகிப் பொதுப்பணம் வீணடிக்கப்படுகிறது. ஆற்றல் உட்குழுக்கள், கட்டுப்பாடுகளைத் தங்களுக்குச் சாதகமாகத் தங்கள் தனி வளர்ச்சிக்காகத் திசை திருப்பிவிடக் கூடும். மத்திய, மாநில வேற்றுமையுணர்வு காரணமாக இரண்டு அரசுகளுமே தேவையற்ற கட்டுப்பாடுகளை உருவாக்கிச் செயல்படுத்தக் கூடும். எனவே, கட்டுப்பாடுகளுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஓர் எல்லையை அல்லது வரையறையை எளிதில் கூற இயலாது.

அரசின் கட்டுப்பாடுகளுக்கும் தலையீட்டிற்கும் எதிராகக் கூறப்படும் காரணங்கள்: அரசின் கட்டுப்பாடுகள், தனியார் உரிமையைக் குறைக்கின்றன. மேலும், அரசின் ஆற்றலைஅதிகப்படுத்துகின்றன. இதனை எதிர்த்துத் தனி மனிதர் எளிதில் போரிட முடிவதில்லை. எனவே, அரசின் கட்டுப்பாடுகள், அரசுக்கு வேண்டாதவர்களின் நசுக்குதலுக்காகப் பயன்படுத்தப்படலாம். அரசிடம், ஆட்சிப்பணிகள் முன்னரே அளவிறந்து குவிந்து கிடக்கின்றன. அவற்றோடு புதிய கட்டுப்பாடுகளைக் கண்காணிக்கும் பணியும் சேரும்போது, புதிய பணிகளை நிருவாகம் தள்ளிவைப்பதிலும் புறக்கணிப்பதிலும் திறமையை வீணடிக்கக்கூடும். அரசு எடுத்துக்கொள்ளும் அக்கறையை விடத் தனியார் தங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் அதிக அக்கறை எடுத்துக்கொள்கிறார்கள். அரசின் கட்டுப்பாடுகள் காரணமாக நன்மை அடைந்தவர்கள், நிலையாக அந்த நன்மைகளைத் தொடர்ந்து பெற விரும்புகிறார்கள். கட்டுப்பாடுகள் உற்பத்திக் காரணிகளின் இயல்பான நடவடிக்கைகளைக் குறைத்து, சமுதாய நன்மையைக் குலைத்து விடக்கூடும். எடுத்துக்காட்டாக, மின்சார உற்பத்தி அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செய்யப்படுவ

தால், தமிழ்நாடு ஆண்டுதோறும் மின்சார வெட்டி னால் தாக்கப்படுகிறது. தொழிலர்களை மின்சார உற்பத்தி செய்ய அனுமதிப்பதுதான் நல்லது என்று ஒரு கருத்து நிலவுகிறது. கட்டுப்பாடுகள் மக்கள் செல்வத்தை வீணாக்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரக்கூடும். சிறந்த விஞ்ஞானிகள் கூட, இறக்குமதிக் கட்டுப்பாட்டின் விதிகளின்படி ஒருசில இன்றியமை யாக் கருவிகளை வாங்க முடியாமல் போவதாலும், வேண்டிய காலத்தில் கிடைக்காமல் போவதாலும், அவர்களுடைய புதிய கண்டுபிடிப்புகள் தடைப்படு கின்றன.

கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கும் அல்லது அவற்றிலிருந்து விடுபடுவதற்கும் கையூட்டுக் கொடுத் தல் போன்ற தூண்டுகோல்களை உருவாக்கி ஊழல் களைப் பெருக்குவர். கறுப்புப்பணம் உருவாவதற்கு அரசின் கட்டுப்பாடுதான் அடிப்படைக் காரணம் என்று கருதப்படுகிறது. இத்தகைய வாதங்களில் ஓரளவு உண்மையிருக்கிறது. எனினும், கட்டுப்பாடில்லாத, தன்விருப்பமான அங்காடி அமைப்பில் வலுவுள்ளவர் கள் முன்னேறுவார்கள், வலுவற்றவர்கள் நசுக்கப் படுவார்கள்; பரிதாபத்திற்குரியவர்கள் பலியிடப்படு வார்கள் என்பது வெளிப்படை. இந்த நிலையைத் தடுக்க வேண்டுமானால், அரசின் தலையீடும் கட்டுப் பாடுகளும் இன்றியமையாதவை.

அரசின் ஒழுங்கு நடவடிக்கைகள்: அரசாங்கத் தின் தலையீடு, அரசின் கட்டுபாடுகள், சில குறிப்பிட்ட துறைகளில் தவிர்க்க முடியாதவை. மருத்துவ, பொறி யியல் கல்லூரிகளின் பாடத் திட்டங்களை உறுதி செய்து, அவற்றின் தரத்தைக் காப்பாற்றுவது அரசின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில், தரக் கட்டுப்பாடு இல்லாவிட்டால் வெளிவரும் மருத்துவர் கள் சமுதாயத்துக்கே கேடு விளைவிக்கக் கூடும். அது போலவே மருந்துகள், நுகர்வோர் பண்டங்கள் போன்றவற்றிற்குத் தர வரையறை செய்வதும் அவற்றைக் கண்காணிப்பதும் அரசின் கடமைகளாக உள்ளன. உரிமம் வழங்கி உற்பத்தியைக் கட்டுப் படுத்துவதும், பங்கீட்டு மூலம் பகிர்வைக் கட்டுப் படுத்துவீதும், மதுவிலக்குச் சட்டங்கள் மூலம் நுகர்ச் சியைக் கட்டுப்படுத்துவதும் தேவையெனக் கருதும் அரசின் நடவடிக்கைகள், வேலைநேரம், வேலை செய்யுமிடத்தின் சுகாதார வாய்ப்புகள், இன்னல் தவிர்ப்பு, கூலி போன்றவற்றைக் கட்டுப்படுத்தி, உழைப்பு ஆற்றலையும் கட்டுப்படுத்துகின்றன. இன்றி யமையாப் பொருள்களான உணவுப் பண்டங்கள், சர்க்கரை, சிமிண்டு, இரும்பு போன்றவற்றின் விலை களை அரசு கட்டுப்படுத்துகிறது. அதுபோலவே, வளர் வீத வரிகளின் மூலமும் தனியார் நிறுவனங்களில் சம்பளங்களின் மீது உச்சவரம்புவிதிப்பதன்மூலமும் வருவாய் ஏற்றத்தாழ்வை அரசு கட்டுப்படுத்துகிறது. போக்குவரத்துத் தடங்களுக்கு அனுமதி வழங்கியும் (Route Permits), பேருந்துகளில் செல்லக்கூடிய பயணி களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தியும், பயணச் சீட்டுகளின் கட்டணங்களைக் கட்டுப்படுத்தியும், மற் றும் போக்குவரத்து வசதிகளை அரசுடைமையாக்கி யும், அரசு போக்குவரத்தைக் கண்காணிக்கிறது. திரைப்படங்களுக்கும் இதழ்களுக்கும் தணிக்கை விதி களை ஏற்படுத்தி, அருவருப்பான, மற்றும் பாதிக்கும் கருத்து வேற்றுமைகள் பரவுதலை அரசு கட்டுப் படுத்துகிறது. அதுபோலவே, உரிமை விதிகள், மற்றும் செய்தித் தொடர்புகள் ஆகியவற்றைச் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தலாம். தனியார் தம் வாக்குரிமை களை விலைக்கு விற்கக்கூடாது. எவரும் பிற சாதி யார், மதத்தினர் ஆகியோரைப் புண்படுத்தும் வகை யில் பேசக்கூடாது; எழுதக்கூடாது. இவை மக்களின் அரசியல் சமுதாய உரிமைகளைக் காப்பாற்றுவதற் காக மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டு மக்கள் வெளிநாடுகள் செல்வதானால் அனுமதிச்சீட்டு வாங்க வேண்டும் என்பதும், வெளிநாட்டினர் நம் நாட்டுக்கு வர வேண்டுமானால் நுழைவுச்சீட்டுப் பெறவேண்டும் என்பதும் பன்னாட்டு உறவு நிலைபெற அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகளாம். உள்நாட்டிலேயே குடும்பக் கட்டுப்பாட்டினை நன்கு விளக்கஞ் செய்து ஊக்குவிப்பதும், தாய்மையடைந்த பெண்களுக்கு மருத்துவவசதிகள் செய்து தருவதும் மக்கள் தொகைக் கட்டுப்பாடு, மற்றும் நல்வாழ்விற்கான கட்டுப்பாடு களாம். பொருட்கொடைகள், சுங்கவரிகள் மூலம் வெளி நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுத் தொழில் துறைக்கு வாய்ப்புகளைப் பெருக்குதல், சாதகமான வணிகச் சமநிலை பெற்று மிக்க அயற் செலவணியைப் பெருக்குதல், உள்நாட்டிலேயே எல்லாவிதமான பொருள்களையும் உண்டாக்க ஊக்குவித்தல், இறக்குமதிப் பொருள்களின் மீது சுங்க வரி விதித்தல் மற்றும் ஏற்றுமதி செய்யும் நிறுவனங் களுக்கு உதவிகள் செய்தல் ஆகியவை நேரிடையான பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும். விடுதலைக்கு முன், நாட்டில் பல்வேறு வகையான எடைகள் (weights) வழங்கியிருந்தாலும், இப்போது எல்லா இடங்களிலும் ‘மெட்ரிக்’ முறை நடை முறைக்கு வந்திருக்கிறது. இதனால், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் பொருள்களின் விலைகளை அவற்றின் எடைகளோடு ஒப்பிட்டு அறிந்து கொள்வது எளிதாகிறது. இத்தகைய கட்டுப்பாடுகள் உள்நாட்டு வாணிகத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்புகள் ஏற் படுத்தித் தருகின்றன. மத்திய வங்கி பண அளிப்பை யும், வங்கிகளின் அமைப்பையும் தன் கட்டுப்பாட்டுக் குள் வைத்திருக்கிறது. அதுபோலவே நிதிகள், சேமிப்

புச் சீட்டுகள் (Chits) போன்றவற்றையும் அரசின் சட்டங்கள் கட்டுப்படுத்துகின்றன.

**தொழில், வாணிகம் மீதான கட்டுப்பாடுகள்:** உற்பத்தி, பகிர்வு, நுகர்ச்சி ஆகியவற்றின் மீதான கட்டுப்பாடுகள் தொழில்களையும் வாணிகத்தையும் பெருமளவில் தாக்கக் கூடியவை. பலவகைச் சட்டங்கள் மூலமாகவும் அமைப்புகளின் மூலமாகவும் அரசு, தனியார்துறை நிறுவனங்கள் முற்றுரிமை ஆதாயத்தைப் பெறாமல் தடுக்க முயற்சி செய்கிறது. இதற்காகப் பலவகைத் தொழில் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. முதலாவதாக, தொழிலில் நுழைவதற்கே உரிமம் வழங்குவதில் கட்டுப்பாடுகள் இருக்கின்றன. மிகப் பெரிய நிறுவனங்கள் புதிய உரிமங்கள் பெறுவதைக் கடினமாக்கும் சட்டங்கள் உள்ளன. வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் தொழில் தொடங்குவதைக் கட்டுப்படுத்தும் அயற் செலாவணி ஒழுங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளது. வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், இந்தியாவில் தொழிலில் முதலீடு செய்வதைக் கட்டுப்படுத்தும் சட்டங்களும் உள்ளன. தொழிற்சாலைகளில் உற்பத்தியான பொருள்கள் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கும், அவற்றின் தரத்தைப் பாதுகாப்பதற்கும், அவற்றால் வரக் கூடிய இன்னல்களைத் தவிர்ப்பதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அளிப்பை விடத் தேவை மிகுதியான பொருள்களுக்குக் கட்டுப்பாடுகள் மிகத் தேவை. முன் பதிவு விண்ணப்பமும் தேவைகளின் முதன்மையும் ஆராயப்படுகின்றன. சிமிண்டு, சருக்கரை போன்ற பொருள்கள் பங்கீட்டு முறையில் பலருக்கும் கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளன. மருந்துகள், குளிர்பானங்கள் போன்ற பல நுகர்வுப் பண்டங்கள் கடுமையான தரக்கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. வேளாண்மைக்குரிய மருந்துகள் இடர் பயப்பவையாயின், அவற்றை விற்பவர்கள், வாங்குபவர்கள், உற்பத்தியாளர்கள் அனைவருமே அரசின் விதிகளுக்கு உட்பட்டுத்தான் செயற்படவேண்டும்.

நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள், கணக்கு முறைகள் (Financial Practices, Accounting Method) ஆகியவை கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவின் கம்பெனிச் சட்டம், பொதுப்பங்கு நிறுவனங்கள் எப்படிப் பங்குகளை விற்பனைக்குக் கொண்டு வர வேண்டும், வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கு எத்தகைய முறைகளைக் கையாள வேண்டும் என்பன போன்ற பலவகை ஒழுங்குமுறைகளைச் செய்திருக்கிறது. நிறுவனங்களின் கணக்கு முறைகள் எத்தகையவாக இருக்கவேண்டும் என்று வரையறை செய்யப்பட்டுள்ளன.

விலை வரையறை செய்வதில் அரசு, பல விதமான வழிகளைக் கையாள்கிறது. பெரும்பாலான விலைகள், அங்காடியாலேயே உறுதிசெய்யப்படுகின்றன. ஆனால் அரிசி, சர்க்கரை போன்ற இன்றியமையாப் பொருள்களுக்கு அரசு விலைக்கட்டுப்பாடு செய்துள்ளது. சில பொருள்கள் பொதுப் பங்கீட்டு முறையில் விற்கப்படுமானால் குறைந்த விலையும், தனியார் அங்காடியில் விற்கப்படுமானால் மிக்க விலையுமாக இருப்பதை அரசே அனுமதிக்கிறது. பெருநகர்ப் பேருந்துகள், இரயில்வேக்கள், மருத்துவ விடுதிகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் வெறும் ஆதாயத்தை மாத்திரம் கருத்தில் கொள்ளாமல், சமூக நலத்தை முதன்மையாகக் கருதி விலை வரையறுக்கப்படுகிறது. மின்சாரத்தை அளித்தலில் வேளாண்மைக்குக் குறைந்தகட்டணமும் தொழிலுக்கு, கூடுதலான கட்டணமும் வீட்டு உபயோகத்துக்கு மிகக் கூடுதலான கட்டணமுமாக அரசு வரையறை செய்திருக்கிறது. விலை வரையறை செய்தலில் அரசின் கட்டுப்பாடு மிக இன்றியமையாததாக விளங்குகிறது.

**விலைக் கட்டுப்பாடும் நுகர்வோர் பொருள் பங்கீட்டில் ஒழுங்கு முறைகளும்:** அரசு விலைகளைப் பல விதங்களில் கட்டுப்படுத்துகிறது. என்றாலும், அதற்குப் பலவித நோக்கங்கள் இருக்கக்கூடும். போர்க் காலங்களில் மிகுதியான பணப்புழக்கம் இருக்கும் போது எல்லாவகை உற்பத்திக் காரணிகளும் போர்முனைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இன்றியமையாப் பண்டங்கள் கிடைப்பதற்கு அருமையாக மாறி விடுகின்றன. அதனைக் கட்டுப்படுத்துவதற்காக எல்லா நாடுகளிலும் பங்கீட்டு முறைகள் வருகின்றன. அதுபோலவே, அமைதிக் காலத்திலும் பணவீக்கத்தினாலும் விலைவாசி ஏற்றத்தினாலும் சராசரி மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்கள் குறைந்த விலையில் கிடைக்காமல் போகும்போது, விளையக் கூடிய துன்பத்திலிருந்து காப்பாற்றுவதற்காக விலைக் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறைக்கு வருகின்றன. விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு விலைக் கட்டுப்பாடு ஒரு முக்கியக் கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. இன்றியமையாத சில பண்டங்களையும், மூலப் பொருள்களையும் பகிர்வு செய்வதற்கு விலைக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது. சில சக்தி வாய்ந்த, பெரிய நிறுவனங்களும் பல சக்தி குறைந்த சிறிய நிறுவனங்களும் மிகவும் தேவையான சில மூலப் பொருள்களுக்குப் போட்டியிடும்போது, விலைக் கட்டுப்பாடு இல்லாவிட்டால், பெரிய நிறுவனங்கள் மிகுந்த விலைகொடுத்து, அந்த மூலப் பொருள்கள் முழுவதையுமே தங்கள் வசமாக்கிக் கொள்ளக்கூடும். இதனைத் தடுத்துத் தக்க முறையில் பகிர்வு செய்வதற்கு விலைக் கட்டுப்பாடு இன்றியமையாதது. சில சூழ்நிலைகளில் விலைகளைக் கொடைகள் வழங்கி மாற்றியமைக்க வேண்டி வரலாம். கைத்தறித் தொழிலை வளர்ப்பதற்காகக் கைத்தறித் துணியின்

அங்காடி விலையில் ஓரளவு அரசே உதவித்தொகை கொடுப்பதனால், அங்காடி விலையை விட உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்கலாம். இதன் காரணமாகக் கைத்தறித் துறையில் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது. நுகர்வோர் சில பொருள்களை நுகராமல் குறைப்பதற்கும் அரசின் விலைக் கட்டுப்பாடு பயன்படுத்தப்படலாம். சீமைச்சாராய வகைகளின் விலைகளை உயர்த்துவதனால் அவற்றின் நுகர்ச்சி தடைப்படுத்தப்படுமானால், அரசு அந்த நோக்கத்தோடு அவற்றின் விலைகளை உயர்த்தக்கூடும்.

**நல அரசுகளும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும்:** சமநிலைச் சமுதாய அரசுகள் (Socialist States) தனி மனிதரின் பொருளாதார நடவடிக்கைகள் முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும். காவல் அரசுகள் அவற்றில் தலையிடா. எனவே, தனி மனிதர் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற இடர்ப்பாடுகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். தனி மனிதர், மரபு வழியாலோ தடையிலாத அங்காடி அமைப்பாலோ உருவாகிற எல்லா இடர்ப்பாடுகளையும் தாங்கிக் கொள்ள வேண்டும் என்கிற நிலை மாறி, தனி மனிதனுக்கு வருகிற துன்பங்களைக் கூடிய அளவுக்கு அரசு தவிர்க்க வேண்டும் என்கிற நிலை வரும்போது, நல அரசுகள் உருவாகின்றன. இந்த அரசுகள் வறுமையை ஒரு சமுதாயத் துயரமாகக் கருதி, அதனை அறவே ஒழிக்க முயல்கின்றன. இதற்காக ஏழை மக்களின் வருவாயைப் பெருக்க முயற்சியை மேற்கொள்கின்றன. இத்தகைய முயற்சிகளால் தனியார்களின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. எனவே, நல அரசுகளின் செயற்பாடு விரிய விரிய, அரசின் கட்டுப்பாடுகளும் மிகுந்து கொண்டே செல்கின்றன. ஏழைகளின் வருவாயைப் பெருக்குவதற்காக நல அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் வளர்ந்துவிட்டன. பொதுப்பணிகளான மருத்துவம், கல்வி, சாலையமைப்பு, அணைக்கட்டுகள் போன்றவற்றை அரசு செய்யும்போது பலவகைக் கட்டுப்பாடுகள் கூடவே உருவாகின்றன. எடுத்துக்காட்டாகப் பொது மருத்துவ வசதியைப் பெருக்கும் அரசு, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் தனிப்பட்ட முறையில் மருத்துவத் தொழில் நடத்த முழுமையான தடையோ பகுதிக் கட்டுப்பாடோ விதிக்க வேண்டிவரும். வளர்விகித வரி முறைகளாலும் தொழிலாளர் நன்மைக்காகத் தொழில் நிறுவனர்கள் பங்கு கொடுக்கும்படியும் அரசு நடவடிக்கைகள் எடுக்கிறது. பெரிய நிறுவனங்களில் வழங்கும் பாதுகாப்புச் சேமநல நிதி (Contributory Provident Fund) செயற்படும்போது, தொழிலாளர் சேமநல நிதிக்கு எவ்வளவு தொகை செலுத்துகிறாரோ அதே அளவுக்குத் தொழில் நிறுவனர்களும் செலுத்த வேண்டும் என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

உழைப்பாளர் சட்டங்கள் மூலம் கூட்டுப் பேர முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. ஊக்கத்தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் தொழிற் கூடங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. வேலை நேரத்தின் உச்சவரம்பு விதிக்கப்பட்டுள்ளது. நுகர்வோரைப் பாதுகாக்கத் தரவரையறைகள் செய்யப்பட்டுள்ளன. இவையனைத்தும், செல்வ வளம் குவிந்தவர்களுடன் போட்டியிடும் ஆற்றலை ஏழைத் தொழிலாளர்களுக்கும் உண்டாக்கி வாய்ப்புகளைப் பெருக்கும் முறைகளாகும். நன்கு அமையப்பெற்ற நிறுவனங்களில் (Organised Sector) குறைந்த அளவுக் கூலி வரையறை இருப்பதால், ஏழைத் தொழிலாளி தனது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளும் அளவுக்குக் கூலி கிடைக்க வகைகள் செய்யப்பட்டுள்ளன. 'வேலையில்லா நிலையிலிருந்து காப்புறுதி, பெண்களுக்கு மகப்பேற்றுக் காப்புறுதி, இடர் காப்புறுதி, நோய்க்காலக் காப்புறுதி போன்ற பல சமூகப் பாதுகாப்புச் சட்டங்கள் நிறைவேற்றப்படும் போது அவை கட்டுப்பாடுகளாகத் தோன்றினும், தொழிலாளர்களுக்கு வரக்கூடிய பெரிய இடர்ப்பாடுகளைத் தவிர்த்துத் தொழிலாளர்கள் இன்னல் அடையாமலிருக்க உதவுகின்றன.

**இந்திய அரசியல் அமைப்புச் சட்டமும் கட்டுப்பாடுகளும்:** இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் ஒரு நலம் தரும் அரசை உருவாக்க விழைகிறது. இதன் அடிப்படையில் மக்களுக்குச் சில அடிப்படை உரிமைகளும் சில கடமைகளும் அதில் வரையறுக்கப்பட்டுள்ளன. அரசியல் அமைப்புச் சட்டத்தின் நான்காம் பகுதி, அரசுக் கொள்கைகளுக்கு வழிகாட்டும் விதிகளை (Directive Principles of State Policy) அமைத்துள்ளது. அரசியல் அமைப்பு 36 ஆம் விதியிலிருந்து 51-ஆம் விதிவரை இவை கூறப்பட்டுள்ளன. இவற்றை அரசின் குறிக்கோள்களாக அரசியல் அமைப்புச் சட்டம் குறிப்பிடுகிறது. அவற்றுள் முக்கியமானவை, நாட்டின் மூலவளப் பொருட்காரணிகள் (Material Resources) சமமான முறையில் பங்கிடப்படுதலும், செல்வம் ஒரு சிலரிடம் குவிவதைத் தடுத்தலும், எல்லோருக்கும் வேலைவாய்ப்புத் தருதலும், ஆண், பெண் பாகுபாடின்றி வேலைக்குச் சமமான கூலி வழங்குதலும், குழந்தைகள் கடுமையான வேலைகளில் அமர்த்தப்படுதலைத் தடுத்தலும், வேலைவாய்ப்பற்றவர்கள், முதியவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், உடல் ஊனமுற்றவர்கள் ஆகியோர்க்கும் பாதுகாப்பு நல்குதலும், அனைவருக்கும் வாழ்வுத் தரம் நல்கும் கூலி தருதலும், எல்லாக் குழந்தைகளுக்கும் படிப்பு வசதிகள் செய்து தருதலும் ஆகும்.

இவற்றை நோக்கமாகக் கொண்டு தொழிற் கொள்கை 1948-இல் வெளியிடப்பட்டது. இதன்படி ஒரு சில துறைகள் அரசுக்கு மாத்திரம் முற்றுரிமை யாகவும், வேறு சில துறைகள் தனியாருக்கும் அரசுக் கும் பொதுவாகவும், மற்றவை தனியாருக்கு மாத் திரம் உரியவாகவும் வரையறுக்கப்பட்டன. ஆனால், எல்லாத் துறைகளிலுமே அரசு தலையிட உரிமை பெற்றிருக்கிறது என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள் ளது. மேலும், அரசு திட்டங்களை அமைத்து, அரசி யல் அமைப்புச் சட்டத்தின் இலக்குகளை அடைய முயல்கிறது. அதற்கு உறுதுணையாக 1951-இல் தொழில் முன்னேற்றக் கட்டுப்பாட்டுச் சட்டம் (The Industries Development and Regulation Act), 1956-இல் கம்பெனிச் சட்டத் திருத்தம், 1948-இல் தொழி லாளர் அரசு பாதுகாப்புச் சட்டம் (Employees State Insurance Act), குறைந்த அளவுக் கூலிச் சட்டம் (Minimum Wages Act, 1948), 1956-இல் இன்றியமை யாப் பொருள்கள் சட்டம் (Essential Commodities Act, 1956), முற்றுரிமை, வாணிகத்தடைச் சட்டம் (MRTP), வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் (FERA), மற்றும் 1949-ஆம் ஆண்டு முதல் அரசு கள் வேளாண்மையைக் கட்டுப்படுத்திய 'சமீன்' (Zamin) ஒழிப்புச் சட்டங்கள், உச்சவரம்புச் சட்டங்கள், குத்தகைப் பாதுகாப்புச் சட்டங்கள், போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் மாநிலப் போக்குவரத்துச் சட்டங்கள், வணிகத்தைக் கட்டுப்படுத்தும் கடைச்சட்டங்கள் (Shop Acts), எடைகளையும் தரத்தையும் கட்டுப்படுத் தும் 'எடைகள், அளவு கருவிகள் சட்டங்கள்', உணவுப் பொருள் கலப்படத் தடுப்புச் சட்டங்கள், மருந்து வகைத்தரக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் போன்ற எண்ணற்ற கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் நடைமுறைக்கு வந்துள்ளன. இவை உற்பத்தியைப் பெருக்கவும் தரங்களைக் காப்பாற்றவும் பொருளா தார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் மேற்கொள் ளப்பட்ட முயற்சிகள். நம் நாட்டுக் கட்டுப்பாடுகளின் பட்டியல் மிக நீண்டது. வேளாண்மை, தொழில்கள், உழைப்பாளர் அளிப்பு - நலம், போக்குவரத்து, மின் சக்தி, பொருள் விற்பனை, தரக்கட்டுப்பாடு, கல்வித் துறையில் மாணவர் அனுமதி, கல்வித்தரம், மருத்துவ வசதிகள் போன்ற எல்லாப் பகுதிகளுக்குமே பல்வேறு கட்டுப்பாடுகள் மத்திய அரசாலும் மாநில அரசு களாலும் அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்தக் கட்டுப்பாடுகள் அனைத்தும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமை களுக்கு (Fundamental Rights) உட்பட்டவையாகவே இருக்க வேண்டும். மக்களின் அடிப்படை உரிமை களைப் பறிக்கக்கூடிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட் டால், பாதிக்கப்பட்டவர்கள் வழக்குமன்றம் சென்று அக்கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெறும் உரிமை பெற்றிருக்கிறார்கள். இந்திய அரசுகளின் கட்டுப் பாட்டுச் சட்டங்கள் அனைத்துமே மாநில உயர்நீதி மன்றங்களாலும், இந்திய உச்சநீதி மன்றத்தினாலும் பல்வேறு காலங்களில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

கட்டுப்பாடுகள், ஒழுங்குமுறைகள் பற்றிய ஆய்வுக் குழுவின் கருத்துகள்: இந்திய அரசு விதித்திருக்கும் கட்டுப்பாடுகளின் ஒழுங்குமுறைகளின் நடைமுறை விளைவுகளைக் குறித்துப் பல ஆய்வுக் குழுக்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ பல்வேறு கருத்து களை வெளிப்படுத்தியுள்ளன. 1965-இல் முற்றுரிமை ஆய்வுக் குழுவின் அறிக்கை (Monopolies Inquiry Committee Report - 1965) வெளிவந்தது. முற்றுரிமை நிறுவனங்கள், அரசுகளின் கட்டுப்பாடுகளிலும் ஒழுங்கு முறைகளிலும் இருக்கும் இடைவெளிகளை நன்கு தெரிந்து கொண்டு, அவற்றைத் தங்களுக்கு உதவி யாகப் பயன்படுத்துகின்றன என்று தெரிவித்தது. பி.கே. ஆச்சாரியாவின் (P.K. Acharya) "தொழில் திட்டங்களும் உரிமம் வழங்கும் கொள்கைகளும் பற்றிய இறுதி அறிக்கை" (Industrial Planning and Licensing Policy-Final Report) 1967-இல் வெளிவந் தது. மாறுபடும் தேவைக்கேற்பவும் உற்பத்தித் திற னுக்கும் வெளியீட்டிற்கும் உள்ள தொடர்புக்கேற்ப வும் உரிமம் வழங்குவதில் ஒருங்கிணைப்பு ஏற்பட வில்லையென்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஒரே பொருளின் உற்பத்திக்குப் பெரிய நிறுவனங்கள் பல் வேறு பெயர்களில் விண்ணப்பங்கள் செய்து தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி உரிமங்களைப் பெற்று விடுவதால், சிறிய நிறுவனங்கள் அவற்றுடன் போட்டி யிட முடியாமல் போய்விடுகிறது என்பதையும் அவர் விளக்கியிருக்கிறார்.

தொழில் உரிமக் கொள்கை விசாரணை அறிக்கை (Industrial Licensing Policy Inquiry Report) 1969-இல் வெளிவந்தது. தொழில் உரிமங்களைப் பெறு வதன் மூலம், பெரிய முற்றுரிமை நிறுவனங்கள், தொழில் வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம் போன்றவற்றிடமிருந்து குறைந்த வட்டியில் கட னுதவி பெற்றுத் தங்கள் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள முடியும் என்பதை இந்த அறிக்கை தெளி வாக்குகிறது.

'நேர்முக வரிகள் ஆய்வுக் குழு அறிக்கை (Direct Taxes Enquiry Committee Report) 1971-இல் வெளி வந்தது. 'வாஞ்சுக் குழு' (Wanchoo-Committee) எனப் பெயர் பெற்ற இந்தக் குழு, இந்தியாவில் ஓர் இணைப் பொருளாதாரம் (Parallel Economy), சட்ட முறை யிலமைந்த பொருளாதாரத்திற்கு இணையாகச் சட் டத்திற்குப் புறம்பான விதத்தில் இயங்குகிறது என் றும், கறுப்புப் பண நடமாட்டம் இந்த இணைப் பொருளாதாரத்தில் மிகுதியாக இருக்கிறது என்றும்

அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அரசு உற்பத்தியையும் பகிர்வையும் கட்டுப்படுத்த மேற்கொண்ட ஒவ்வொரு முயற்சியையும் இணைப் பொருளாதார இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் தங்கள் ஆதாயத்திற்காகவும் செல்வக் குவிப்புக்காகவும் திசை திருப்ப முடிந்திருக்கிறது என்றும் இந்த அறிக்கை கூறுகிறது

திரு. வாதிலால் தாக்லி (Mr. Vadilal Dakli) தலைமையில் 1978 பிப்பிரவரியில் அமைக்கப்பட்ட "கட்டுப்பாடுகள், உதவித்தொகைக் குழு" (The Committee on Controls and Subsidies) அதன் அறிக்கையை 1979–மே மாதம் அளித்தது. தேவையற்ற பல கட்டுப்பாடுகள் அரசின் சட்டங்களாக இருக்கின்றன வென்றும், ஒரு சில கட்டுப்பாடுகள் இருப்பினும் அவை ஒன்று திரட்டப்பட்டு வெளியிடப்படாமையால் மேலதிகாரிகள் கூட அவை பற்றி முழுமையாக அறிந்திருக்க வில்லையென்றும், தேவையற்ற கட்டுப்பாடுகளை உடனடியாக நீக்க வேண்டுமென்றும், ஆண்டு தோறும் பாராளுமன்றத்திற்கு நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் பற்றி அறிக்கைகள் தர வேண்டுமென்றும், ஒரே பொருளைப் பற்றிப் பல கட்டுப்பாடுகள் இருந்தால் அவையனைத்தும் ஒருங்கிணைக்கப் பட்டு வெளியிடப்பட வேண்டுமென்றும், கட்டுப்பாடுகள் எளிமையாக்கப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

இந்தியாவின் கலப்புப் பொருளாதாரத்தில் ஒழுங்கான வருவாய்ப் பகிர்வு ஏற்படுத்தும் நோக்கத்தோடு மத்திய, மாநில அரசுகள், அங்காடி நடவடிக்கைகளின் மீது கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் விதித்து வழி நடத்த முயல்கின்றன. உச்ச வரம்புச் சட்டங்களும் உரிமம் வழங்கும் முறைகளும் இன்றியமையாப் பொருள்கள் பற்றிய சட்டங்களும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்கத்தோடு தான் கொண்டு வரப்பட்டன. ஆனால், இவை போன்ற கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் அரசுகளின் பல்வேறு துறைகளால் செயற்படுத்தப்படுகின்றன. ஒரு துறை, மற்றொரு துறைக்கு எதிர்மறையாகச் செயற்படுகிறது. இதனைச் சாதகமாக்கிக் கொண்டு, பொருளாதார வலுவுள்ளவர்கள், இந்தக் கட்டுப்பாடுகள், ஒழுங்கு முறைகளின் நோக்கங்களைத் தோல்வியடையச் செய்யக் கூடிய வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். இதனைத் தவிர்ப்பதற்காக அரசுகள் மேலும் மேலும் புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டு வருகின்றன. அளவுக்கு மீறிய கட்டுப்பாடுகள் முற்றிலும் எதிர்பாராத விளைவுகளை ஏற்படுத்துகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்குப் பதிலாகக் கட்டுப்பாடுகள், அவை மிகுமாறு செய்ய வழி வகுக்கின்றன. கட்டுப்பாடுகளையும் ஒழுங்குமுறைகளையும் முழுவதும் கைவிடுவதனால் பொருளாதார வலுவற்றவர்கள் ஒரேயடியாகக் கைவிடப்படுவார்கள். சக்தி உள்ளவர்கள், சக்தி இல்லாதவர்களை நசுக்குவதால் பொருளாதார உரிமை பாழ்படுகிறது. எனவே, கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் வேண்டும். ஆனால், அந்தக் கட்டுப்பாடுகளும் ஒழுங்குமுறைகளும் நடைமுறையில் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்றுகின்றனவா என்று தொடர்ந்து கண்காணித்துக் கொண்டேயிருக்க வேண்டும். கட்டுப்பாடுகளிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அவற்றை நிறைவேற்றுவதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். இவையனைத்தையும் தொடர்ந்து செய்து கொண்டேயிராவிடில், அவை எதிர்மறையான விளைவுகளைக் கொடுக்கக் கூடும்; கொடுக்கின்றன. எஸ்.நீ.

துணை நூல்கள்:

**Keynes, J.M.**, "General Theory of Employment Interest & Money", Mc.Millan, London, 1936.

**Pigou. A.C.**, "Economics of Welfare", Mc.Millan, London, 1932.

**Hayek, F A.**, "The Road To Serfdom", The Chicago University Press, Chicago, 1969.

**Milton Androse Frieudman**, "Free To Choose", Harcount, Brace, Jahonavich, New York, 1980.

**Galbraith, J.K.**, "Affluent Society", Houghton, Mifflin Boston, 1958.

**Marx, K.**, "Capital", Foreign Publishing House, Vol–I, Moscow, 1961.

**அரசாங்கப் பொருளாதாரக் கோட்பாடுகள்**: புதிய அரசியல் அமைப்பில் ஆட்சி செய்யும் பொறுப்போடு ஏனைய துறைகளின் முன்னேற்றத்திற்கும் அவற்றின் வளர்ச்சிக்குமுரிய திட்டங்களில் ஈடுபடுவது அரசிற்கு, ஓர் இன்றியமையாத் தேவையாக மாறியுள்ளது. இத்திட்டங்களின் சீரான செயல்முறைக்கும் அவற்றின் வெற்றிக்கும் அரசாங்கம் கையாளும் பொருளாதாரக் கோட்பாடுகளே (Economic Principles) காரணமாகின்றன.

உற்பத்திக் காரணி இட ஒதுக்கீடு: ஒருவர் ஒரு பேனாவைப் பயன்படுத்தும்போது, மற்றவர்களுக்கு அந்தப் பேனா அதே நேரத்தில் பயன்படுவதில்லை. அதாவது, தனியார் பொருள்கள் ஒன்றுக்கொன்று போட்டித் தொடர்பு கொண்டவை (Rival Relationship). ஆனால், பொதுப் பொருள்கள் (Public Utilities) ஒருவர் பயன்படுத்தும்போது மற்றவர்களும்

பயன்படுத்தக் கூடியவை. பொதுச்சாலையில் ஒருவர் நடக்கும்போது மற்றவர்களும் நடக்கலாம். அங்காடி யில் போட்டித் தொடர்பு கொண்ட தனிப் பொருள் களை விற்றலும் வாங்கலும் செய்யலாம். ஆனால், பொதுப்பொருள் விற்பனையை அங்காடி முறையாகச் செய்ய இயலாது. இதுதான் அங்காடித் தோல்வி (Market Failure) எனப்படும். அங்காடித் தோல்வி காரணமாக அரசாங்கமே பொதுப் பொருள்களை உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்கிறது. இதுமட்டுமன்றிப் பல காரணங்களுக்காகத் தனியார் பயன்படுத்தும் பொருள்களான மின்சாரம், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றையும் அரசே உற்பத்தி செய்கிறது. எனவே, அரசு பொதுப் பொருள்கள் உற்பத்தி, பகிர்ந்தளித்தல் ஆகியவற்றிற்காகவும், சில குறிப் பிட்ட தனியார் பொருள் உற்பத்திக்காகவும் நிலம், உழைப்பு, முதல் போன்ற உற்பத்திக் காரணிகளை ஒதுக்கீடு (Allocation) செய்ய வேண்டியிருக்கிறது.

பங்கீட்டுப் பணி: தனியார் சொத்துரிமை காரண மாகவும், அங்காடியின் விலை வரையறையில் முற்றுரி மையாளரின் முழுச் செல்வாக்குக் காரணமாகவும் தனியார் வருவாய்களில் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு கள் காணப்படுகின்றன. ஏதோ ஓர் அடிப்படையில், இந்த ஏற்றத் தாழ்வுகள் நியாயமற்றவை என்று சமுதாயம் கருதும்போது, அரசு தனது அதிகாரத் தைப் பயன்படுத்தித் திட்டங்கள், சட்டங்கள், வரிகள் ஆகியவற்றின் மூலம் வருமானப் பகிர்வைச் சமுதாயம் நியாயமானது என்று ஏற்றுக் கொள்ளத்தக்க வகை யில் பங்கீட்டுப் பணி (Distribution Function) ஆற்று கிறது.

உறுதிநிலைப்படுத்தல் பணி: பொருளாதார இயக்கத்தின்போது வேலையில்லாத் திண்டாட்டம், விலை உயர்வு, அயற் செலாவணிப் பற்றாக்குறை போன்ற பற்பல இடர்ப்பாடுகள் தோன்றக் கூடும். வணிகச் சுழல்கள் (Trade Cycles) காரணமாக மந்தங் களும் மிக்க வேகத்துடன் இயங்கி மாறி மாறி வரக் கூடும். இவற்றைத் தடுத்துப் பொருளாதார இயக் கத்தை ஒரே சீரான நிலைக்கு உறுதிப்படுத்துவதும் (Stabilisation Function) அரசின் தலையாய பணி களில் ஒன்றாக உள்ளது.

ஒருங்கிணைத்தல் பணி: மேலே குறிப்பிட்ட பணிகளை அரசு செயற்படுத்தும்போது, அவை ஒன்றுக்கொன்று எதிரான விளைவுகளை உண்டாக்க லாம். எடுத்துக்காட்டாக, பொதுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அரசு நிதிக் கொள்கையைப் பயன்படுத்தும்போது, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்து வதற்காகப் பண அளிப்பைக் (Money Supply) குறைக்கலாம். இக்காலங்களில் அரசின் நிதிக் (Fiscal) கொள்கையும் பணக்(Monetary) கொள்கையும்ஒன்றுக் கொன்று முரண்பட்ட வகையில் செயற்படலாம். இதனைத் தவிர்ப்பதற்கு அரசின் பணிகளை நிறை வேற்றும் எல்லாவகைக் கருவிகளும் ஒன்றோடொன்று இசைந்து இணக்கமான ஒருங்கமைந்த முறையில் (Coordination Function) செயற்பட வேண்டும்.

புதிய கால அரசுகளின் பணிகளைப் பழங்கால அரசுகளின் பணிகளோடு ஒப்பிட்டால், புதிய கால அரசுகள், காவல் அரசுகளிலிருந்து (Police States), நல அரசுகளாக (Welfare States) மாறியிருக்கின்றன. காவல் அரசுகளின் தலையாய பணிகள், வெளி நாட்டுப் படையெடுப்பிலிருந்து பாதுகாத்தல், உள் நாட்டில் சட்டம் ஒழுங்கைக் காத்தல், நீதி நிருவாகம் புரிதல், எதிர்பாராத இயற்கை இடையூறுகளின்போது உதவி நல்கல், வெளிநாட்டு வாணிகத்தைக் கட்டுப் படுத்தல், கல்வி, வறுமை நீக்கம் போன்ற சில பொதுத் திட்டங்களில் ஈடுபடுதல் முதலியனவாம். இந்நிலையில் அரசுகள் தனியார் துறையில் தலை யிடாக் கொள்கையைக் (Laissez Faire) கடைப்பிடித் தன. ஆனால், புதிய கால அரசுகளோ, நாட்டு மக்க ளின் நலம் கருதி உற்பத்தி, பங்கீடு, முதலிய பல்வேறு பகுதிகளிலும் தம் பணிகளை விரிவாக்கியுள்ளன. சமூக நலம் பெருக வேண்டுமானால், ஒவ்வொரு தனிப்பட்டவரின் உண்மை வருவாயும் பெருக வேண் டும். இந்த இலக்கை அடைவதற்குப் பொருளாதார முன்னேற்றமும் வளர்ச்சியும் இன்றியமையாதவை. முன்னேற்றம் என்பது, முயற்சி அல்லது பயிற்சி மூல மாக முன்னர் இருந்த நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்குச் செல்லுதல். வளர்ச்சி என்பது, முன்பு உள்ளடங்கியுள்ள ஆற்றல்களை வெளிப்படுவதற்குத் துணையான சூழ்நிலைகளை ஏற்படுத்துதல். மக்களின் உண்மை வருவாய் பெருக வேண்டுமானால், அவர் களிடையே மறைந்து கிடக்கும் ஆற்றல்களைப் பொருளாதார வளர்ச்சி மூலம் வெளிக் கொணர்தல் வேண்டும். அது போலவே, ஊக்குவித்தல் மூலமும் தூண்டுதல் மூலமும் பொருளாதார முன்னேற்றத் தைப் பெறவேண்டும். பொருளாதார முன்னேற்ற மும் வளர்ச்சியும் ஒன்றுக்கொன்று தொடர்புடை யவை. இக்கால அரசுகளின் திட்டங்களும் வரவு செலவுக் கொள்கையும், பொருளாதார முன்னேற் றத்தையும் வளர்ச்சியையும் அடைவதை இலக்காகக் கொண்டுள்ளன.

இந்திய ஐந்தாண்டுத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சியைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டுள் ளன. அடுத்த பக்கத்தில் உள்ள பட்டியல், இந்தியப் பொருளாதாரத்தின் ஆண்டு வளர்ச்சிப் புள்ளி விவரங்களை விழுக்காடுகளில் காட்டுகிறது.

| திட்டங்கள் | தேசிய வருவாய் | தனியார் வருவாய் | வேளாண்மை உற்பத்தி | தொழில் உற்பத்தி |
|---|---|---|---|---|
| | (1970—71 விலைகளில்) | | | |
| முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951-56) | 3.6 | 1.7 | 4.3 | 7.4 |
| இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1956-61) | 4.1 | 2.0 | 4.1 | 6.6 |
| மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (1961—66) | 2.4 | 0.1 | 1.0 | 2.0 |
| மூன்று ஆண்டுத் திட்டங்கள் (1966-69) | 4.1 | 1.8 | 6.9 | 2.6 |
| நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் (1969-74) | 3.4 | 1.1 | 3.1 | 3.7 |
| ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1974-79) | 5.4 | 3.3 | 4.6 | 6.2 |
| 1977-78 | 8.6 | 6.3 | 14.4 | 3.3 |
| 1978-79 | 5.8 | 3.8 | 3.5 | 7.6 |
| 1979-80 | 4.9 | 6.8 | 15.5 | 1.4 |
| 1980-81 | 7.0 | 5.0 | 17.0 | 4.1 |
| 1981-82 | 4.0 | 2.0 | 3.0 | 8.0 |

குறிப்பு: 1979-80க்கும் பின்னர் புள்ளி விவரங்கள் விரைவு மதிப்பீட்டின் (Quick Estimate) அடிப்படையில் தரப்பட்டவை.

வாக்னரின் விதி (Wagner's Law) : செருமானியப் பொருளியல் அறிஞர் அடால்பு வாக்னர் (Adolph Wagner) 19-ஆம் நூற்றாண்டில் ''வளரும் பொதுச் செலவு'' விதியைக் கூறினார். வளரும் புதிய எந்திரச் சமுதாயங்களில், சமூக முன்னேற்றத்திற்காகத் தொழில் இயக்கத்தில் சமூகக் கண்ணோட்டத்தின் சிறப்புத்தன்மை மிகுமென்றும், அதன் காரணமாகத் தொடர்ந்து பொதுத்துறையின் வளர்ச்சியும் மிகுமென்றும் அவருடைய விதி கூறுகிறது. உலக வணிக மந்தத்தைத் (1929-33) தொடர்ந்து, சே.எம். கீன்சு பிரபு, முதலீட்டில் சமுதாயத் தலையீடு இன்றியமையாதது என்று வாதிட்டார். அதன் விளைவாக, முழு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவது அரசுகளின் தலையாய கடமைகளுள் ஒன்று என்பதைத் தத்துவ அடிப்படையில் பெரும்பாலான பொருளியல் அறிஞர்கள் ஏற்றுக்கொண்டனர். மேலும், தலையிடாக் கொள்கை வலுவிழந்து, அரசின் தலையீடு இன்றியமையாதது என்ற கருத்து வலுப்பெற்றது. இதனால், கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy) விரிவடைந்தது.

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறையும் அரசுத் துறையும் ஒருங்கே இயங்குகின்றன. உருசியா, சீனா போன்ற நாடுகளில் அரசுத்துறையின் பங்கு மிகுதியாகவும், தனியார் துறையின் பங்கு மிகக் குறைவாகவும் காணப்படுகிறது. அமெரிக்க நாட்டில் தனியார் துறையின் பங்கு மிகுதியாகவும், அரசின் பங்கு குறைவாகவும் காணப்படுகிறது. அமெரிக்காவில் தந்தி, தொலைபேசிப் பணிகள், இரயில்வேக்கள் விமானப் போக்குவரத்து, கல்வி நிறுவனங்கள், மருத்துவ வசதி ஆகியவை தனியார் துறையிலேயே இருக்கின்றன. ஆனால், இந்தியாவில் அரசு வெளியிட்டிருக்கும் தொழிற் கொள்கைக்கு ஏற்ப (Indian Industrial policy) அரசு ஈடுபட வேண்டிய பகுதிகள், தனி

யார் துறை ஈடுபட வேண்டிய பகுதிகள் ஆகிய இரண்டுமே, ஈடுபட உரிமை பெற்ற பகுதிகள் என்று வரையறை செய்யப்பட்டுக் கலப்புப் பொருளாதாரம் இயங்குகிறது. எனவே, உலக நாடுகளுள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், உருசியா, சீனா ஆகியவற்றில் அரசுத்துறை மிகச் செல்வாக்குள்ளதாகவும், மேற்கு ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா ஆகியவற்றில் தனியார் துறை செல்வாக்குள்ளதாகவும், மற்றப் பெரும்பாலான நாடுகளில் இரண்டு துறைகளுமே கலந்து செல்வாக்குள்ளனவாகவும் விளங்குகின்றன.

கலப்புப் பொருளாதாரத்தில் தனியார் துறை முழுமையாகவோ சிறப்பாகவோ கொடுக்காத அல்லது கொடுக்க இயலாத பொதுப் பொருள்களின் பொறுப்பை அரசு ஏற்கும். பெரும்பாலும், அத்தகைய பொதுப் பொருள்கள் விற்பனைக்குரியவை அல்ல. எடுத்துக்காட்டு: கலங்கரை விளக்கம். தனியார் நலத்தைவிடப் பள்ளிக் கூடங்கள், சேரி ஒழிப்புப் போன்றவற்றில் பொதுநலம் மிகுதியாக இருப்பதால், தனியார் துறை இவை ஆதாயமற்றதாகக் கருதி, அவற்றில் ஈடுபடாமல் இருக்கும். இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் மிகுந்த செலவு கருதித் தனியார் துறை, அதில் ஈடுபடாமல் இருக்கும். புதிய காடுகள் வளர்த்தல், மண் அரிப்பைத் தடுத்தல், புகையால் வரும் பேரிடரைக் குறைத்தல் போன்றவையும் அரசின் பொறுப்பில் வரும். அங்காடி இயக்கத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவும், பொதுமக்களுக்கு வரக்கூடிய இடையூறுகளைக் குறைப்பதற்காகவும் எடுக்கப்படும் நடவடிக்கைகளான காலநிலை அறிவிப்புகள், உணவு, மருந்துகளுக்குத் தரங்கள் வரையறை செய்தல், பண்டங்களின் தரங்களையும் எடைகளையும் வரையறை செய்தல், தரத்தையும் அளவையும் வெளியிடும்படி வணிகர்களைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றையும் அரசு மேற்கொண்டு நடத்தும்.

மேலும் முற்றுரிமை தரக்கூடிய நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல், மின்சார உற்பத்தி, சாலைப் போக்குவரத்து போன்றவற்றை அரசுடைமையாக்குதல், அல்லது தனியார் துறையோடு கூட்டாக நிருவகித்தல், தனியார் துறை சிறப்பாகவும் நம்பிக்கையோடும் செய்யத் தவறுகிற அஞ்சல், தந்தி ஆகியவற்றையும் அரசே ஏற்று நடத்துதல், நாட்டின் பாதுகாப்புக் கருதித் தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்கும் அணுசக்தி போன்ற துறைகளையும் பிற புதிய நிறுவனங்களையும் நாட்டில் வளரச் செய்தல், பொருளாதார வாழ்க்கையில் ஏற்படும் தேவையற்ற பேரிடரைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளான குறைந்த அளவுக் கூலிச் சட்டங்கள், சமுதாயப் பாதுகாப்புச் (Social Security) சட்டங்கள், ஊக்க ஊதிய விதிகள் (Bonus Laws), பொருளாதார ஆதிக்கம் குவிதலைத் தடுப்பதற்கான முற்றுரிமை எதிர்ப்புச் சட்டங்கள் (Antimonopoly Laws) ஆகியவற்றைக் கலப்புப் பொருளாதார அரசு ஏற்று நடத்த வேண்டும். பொதுநலம்கருதிச் செய்யப்பட வேண்டிய மருத்துவ விடுதிகள் அமைத்தல், முழு வேலைவாய்ப்புக் கருதியும் விலைவாசிகளைக் கட்டுப்படுத்தக் கருதியும் நிதி, பணக்கொள்கைகளைப் பயன்படுத்தல், அரசு பின்பற்றும் வரிக்கொள்கைகள், பற்றாக் குறைப் பொருளியல், மைய வங்கி நடவடிக்கைகள், நாட்டின் எல்லாப் பகுதிகளின் முன்னேற்றத்தையும் கருதி அவற்றிடையே ஒரு சமன்பாடு காண மேற்கொள்ளும் வட்டார வளர்ச்சிப் பணிகள் போன்ற நடவடிக்கைகள், தேசத்தின் பாதுகாப்பு, வாணிகம், நட்புக் கருதி மற்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் ஆகிய யாவற்றையும் கலப்புப் பொருளாதார அரசு தன் பொறுப்பில் எடுத்துச் செயற்படுத்தும்.

கலப்புப் பொருளாதார அரசின் ஆதிக்கம் மிகுதியாகிக் கொண்டேயிருப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அரசு பெரும்பாலான பொருளாதாரத் துறைகளில், அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் விதிகளை உருவாக்குகிறது. எடுத்துக்காட்டு: நிருவாகம், தொழிலாளர்களுக்கிடையே தொடர்புகள், ஏற்றுமதி – இறக்குமதித் தொடர்புகள், மூலப் பொருட் பங்கீடு, உணவுப் பண்டங்களின் பங்கீடு, உற்பத்திக் காரணிகளை அரசு தன் கட்டுக்குள் மிகுந்த அளவில் வைத்திருப்பதாலோ அல்லது முழுமையான அளவில் நாட்டுடைமையாக்கி விட்டதாலோ வருகிற விளைவுகள், அணுசக்தி, மின்சார சக்தி, அஞ்சல், தந்தித் துறைகள், இரயில்வே, விமானப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, தனியார் துறையை உரிமம் வழங்குதல் மூலமாகக் கட்டுப்படுத்தல், விலை வரையறை செய்தலில் அரசு நேரடியான அல்லது மறைமுகமான பங்கு வகித்தல், வேளாண்மைப் பொருள்களின் விலை வரையறை, வெளிநாட்டுச் செலாவணியின் மதிப்பு வரையறை, குறைந்த அளவுக் கூலி வரையறை, அரசின் வழியாகச் செலவிடப்படும் தேசிய வருவாயின் பங்கு மிகுந்துகொண்டே செல்லுதல், இந்தியாவின் தேசிய வருவாயில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு அரசு வழியாகச் செலவிடப்படுதல், பொருளாதார அமைப்பின் ஒட்டுமொத்தமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தல், பணநிதிக் கொள்கைகள், தனியாரின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்கு உதவிகள் அளித்தல் அல்லது தடை செய்தல், கல்விக் கொடைகள், மதுவிலக்கு, எதிர்பாராத புயல் மற்றும் வெள்ளம் போன்ற பேரிடர்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்தல், தனியார் முயற்சியைச் சில பகுதிகளில் ஆதரித்துச் சில பகுதிகளில், தடுத்தல், பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலை அமைப்பதற்குக் கொடைகளை

அளித்தல், நகர மையங்களில் தொழிற்சாலைகள் அமைப்பதைக் கட்டுப்படுத்தல், மாநில அரசு நடவடிக்கைகளை மத்திய அரசு தன் கட்டுக்குள் கொண்டு வர முயற்சிசெய்தல், உதவித் தொகை வழங்குதல், நிதிப்பங்கீடு செய்தல், அரசுத் துறைகளிலும் படைத் துறைகளிலும் மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருக்குதல் ஆகியவை காரணங்களாம்.

உலகின் எல்லா நாடுகளிலுமே சில பொதுவான பொருளாதார நோக்கங்கள் காணப்படுகின்றன. அவையாவன 1) முழு வேலைவாய்ப்பைப் பெறுதல், 2) பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், 3) விலையில் ஏற்ற இறக்கம் இல்லாமல் சமன்படச் செய்தல், 4) அயற் செலாவணியில் சமன்பாடு பெறுதல் போன்றவை. இந்த இலக்குகளை எய்துவதற்காக எல்லா நாடுகளுமே பொருளாதாரத் திட்டங்களை (Economic Planning) மேற்கொள்கின்றன. ஆனால், இந்தத் திட்டங்கள் அந்தந்த நாட்டின் பொருளாதார அமைப்புக்கும் பொருளாதாரக் கலப்புக்கும் ஏற்றவாறு வேறுபடுகின்றன. எந்தெந்த நாடுகளில் உற்பத்திக் காரணிகள் அரசுக்குச் சொந்தமாக இருக்கின்றனவோ (Ownership of means of Production) அந்த நாடுகளில் மையத் திட்டம் (Centralised Planning) செயற்படுகிறது. எடுத்துக்காட்டாக உருசியாவின் திட்டம், அந்த நாட்டின் உற்பத்திக் காரணிகளின் இயக்கம், பண்டங்களின் உற்பத்தி, அவற்றின் பகிர்வு, தேசிய வருவாயின் பங்கீடு ஆகிய அனைத்தையுமே முழுமையாகக் கட்டுப்படுத்துகிறது.

இந்தியா போன்ற நாடுகளில் அரசுத் துறையும் தனியார் துறையும் ஒருங்கிணைந்து செயற்படுவதால், அவற்றின் திட்டங்கள் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டுவர முடிவதில்லை. பின்தங்கிய நாடுகளில் பொருளாதாரத்தைப் புதுமைப்படுத்திப் பொருளாதார வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்த அடிப்படைச் சமுதாய மூலதனம் (Social overhead capital) முழுவதையும் அரசுத் துறைதான் செய்ய வேண்டியிருக்கிறது. அதே சமயம்சொத்துரிமையை ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதனால், தனியார் துறையும்இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, அவற்றின் திட்டங்கள், பொதுத் துறைப்பகுதி (Public sector section), தனியார் துறைப் பகுதி (Private Sector section) என்னும் இரண்டு பகுதிகளையும் தனித் தனியாகப் பிரித்துக் காட்டுகின்றன. பொதுத்துறைப்பகுதியைப் பொறுத்த அளவில், மத்திய, மாநில அரசுகள் அவற்றை நிறைவேற்றும் பொறுப்பை ஏற்றுக் கொள்கின்றன. தனியார்துறைப் பகுதியைப் பொறுத்த அளவில், திட்ட இலக்குகளை எய்துவதற்காக அவற்றில் ஈடுபடுத்தப் படுவதற்காகப் பல்வேறுவகை ஊக்குவிப்புகளையும் (Incentives) கட்டுப்பாடுகளையும் (Regulations) அரசு மேற்கொள்கிறது. அரசுத்துறைப் பகுதித் திட்டமானது வெற்றி பெறுவதும், வெற்றி பெறாமல் போவதும் அரசின் திறமையைச் சார்ந்தே அமையும். ஆனால், தனியார்துறைப் பகுதி வெற்றி பெறுதலும், வெற்றி பெறாமல் போவதும் அரசின் திறனோடு தனியார் துறையின் ஒத்துழைப்பையும் தனியார் துறையின் வாய்ப்புகளையும் சார்ந்தே அமையும்.

அமெரிக்கா, பிரான்சு போன்ற நாடுகளும் ஓரளவு திட்டங்களை வகுக்கின்றன. ஆனால், இந்தத் திட்டங்கள் மையமாக்கப்பட்ட திட்டங்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. இந்த நாடுகளில் தனியார் சொத்துரிமை பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு மதிக்கப்படுகிறது. எனவே, இந்த நாடுகளின் திட்டங்கள், அரசு மேற்கொள்ளும் உற்பத்தி, மற்றும் பணிகளுக்காக உள்ள சிறிய பகுதிக்காகவும் தனியார் துறை மேற்கொள்கிற பெரிய பகுதிக்காகவும் சேர்த்து அமைக்கப்படுகின்றன. தனியார் சொத்துரிமை இருப்பதால் தனியார் துறைக்கு இருக்கிற வாய்ப்புகளைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் (Indicative Planning) இந்த நாடுகளின் திட்டங்கள் மிகுதியான அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலைவாய்ப்பின்மையும் வறுமையும்:** இந்திய மக்கள் தொகை 1980-81-ஆம் ஆண்டில் 68.4 கோடி. இதில் உழைக்கும் மக்கள் தொகை 27 கோடி. உழைக்கும் மக்களுள் 2-3 கோடி மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை, மற்றும் தனியார் பட்டறைகள் போன்ற ஒழுங்குற்ற துறையிலும் (Organised Sector) மற்றவர்கள் வேளாண்மை, அன்றாடக் கூலிவேலை போன்ற ஒழுங்குறாத் துறையிலும் (Unorganised Sector) வேலை செய்கிறார்கள். கீழ்வரும் பட்டியல் 1980-இல் வேலை வாய்ப்பு இல்லாதவர் நிலையைக் காட்டுகிறது.

| வயதுப்பிரிவு | 5 | 15 | 15-59 |
|---|---|---|---|
| | | கோடிகளில் | |
| முழுமையாக வேலை வாய்ப்பற்றவர்கள் | 1.2 | 1.14 | 1.13 |
| வாரமுழுவதும் சராசரி வேலை வாய்ப்பற்றவர்கள் | 1.2 | 1.16 | 1.14 |
| அன்றாடக் கூலியாகச் சராசரி வேலை வாய்ப்பற்றவர்கள் | 2.1 | 2.0 | 1.9 |

ஆதாரம்: Statistical outline of India-1982.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் புதிய வேலை வாய்ப்புகள் முறையே 0.7 கோடி, 1.0 கோடி, 1.45 கோடி அளவில் மிகுந்தன. ஆனால், உழைக்கும் மக்கள் தொகைக்குப் புதிதாகக் கூட்டப்பட்டவர்களின் எண்ணிக்கை இதே காலத்தில் 0.9 கோடி, 1.17 கோடி, 1.7 கோடியாக இருந்தது. அதாவது, ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்ட இறுதியிலும், வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் மேலும் மிகுந்து கொண்டே வந்திருக்கிறது. அதுபோலவே, படித்து, வேலையில்லாமல், வேலைவாய்ப்பு நிறுவனங்களில் பதிவுசெய்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கையும் தொடர்ந்து மிகுந்துகொண்டே வந்திருக்கிறது. இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தை, ஒழுங்கமைதி பெற்ற பிரிவை விரிவாக்கி வளர்ச்சியுறச் செய்வதன் மூலம் ஒழித்துவிட முடியும் என்னும் நம்பிக்கையை, நான்கு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் நடைமுறையிலிருந்தே இழந்து விட்டதால், கடந்த இரண்டு திட்டக் காலங்களில் ஒழுங்கமைதி பெறாத வேளாண்மை, மற்றும் அதனைச் சார்ந்த துறைகளின் வளர்ச்சியின் மூலம்தான் முழு வேலை வாய்ப்புப் பெறமுடியும் என்னும் கருத்து வளர்ந்திருக்கிறது. எனவே, திட்டங்கள் அவற்றிற்கு ஏற்றமுறையில் மாற்றப் பட்டுள்ளன.

சிற்றூர்களில் (1977–78) அன்றைய விலைகளில் மாத வருவாய் தலைக்கு உரூ. 65 க்குக் குறைவாகவும், நகர்ப்புறங்களில் மாத வருவாய் தலைக்கு உரூ. 75க்குக் குறைவாகவும் உடையவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழிருப்பவர்களாகக் கருதப்பட்டு, இந்திய மக்கள் தொகையில் 48.13 விழுக்காடு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்வதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அதே அளவீட்டின்படி, அதே ஆண்டில், தமிழ் நாட்டில் மக்கள் தொகையில் 52% வறுமைக் கோட்டிற்குக் கீழிருப்பதாகக் கணக்கிட்டுள்ளார்கள்.

வேலைவாய்ப்பின்மையும் வறுமையும் நாட்டின் மிகப் பெரிய பொருளாதாரச் சிக்கல்கள். இந்திய அரசின் திட்டங்களும் வரவுசெலவுத் திட்டங்களும் இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளன. மத்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் (Budget) கிட்டத்தட்ட 17. 5% வருவாய், முதலீட்டு வரவாக (Revenue and Capital receipts) அமைகிறது. மத்திய அரசு 1979–இல், 179 பொதுத் துறை நிறுவனங்களில் உரூ. 15, 600 கோடிக்கு மேல் முதலீடு செய்திருந்தது. அஞ்சல், தந்தித்துறை, இரயில்வேக்கள், கனரகத் துறையைச் சேர்ந்த 18 பெரிய நிறுவனங்கள், தொழில் வங்கிகள் போன்றவையும் இவற்றுள் அடங்கும்.

மத்திய அரசின் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980–85) வறுமையை ஒழிப்பதைத் தலையாய குறிக்கோளாகக் கொண்டது. நாட்டு வருவாயின் வளர்ச்சி வீதத்தை மிகுதிப்படுத்தல், தொழில்களைப் புதுமைப் படுத்தல், பொருளாதாரத் தொழில் நுட்பத் தன்னிறைவு பெறுதல், ஆற்றல் (Energy) துறையின் விரைவான முன்னேற்றம், செல்வம்–மற்றும் செலாவணி ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், வட்டார வளர்ச்சியில் சமன்பாடு காணுதல், மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல், இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் போன்றவை திட்டத்தின் மற்றக் குறிக்கோள்கள். இந்தப் பட்டியலே, இந்திய மக்களின் வாழ்க்கையில் அரசின் தலையீடு எவ்வளவு பங்கு உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட உதவுகிறது.

இந்திய வளர்ச்சியைக் கீழ்வரும் விவரங்கள் ஓரளவு தெளிவாக்கும். இந்த வளர்ச்சி அரசின் நேரடியான நடவடிக்கைகளாலும் அரசு உருவாக்கிய அடிப்படைச் சமுதாய மூலதன (Social Overhead Capital) உதவியோடு தனியார் துறையின் நடவடிக்கைகளாலும் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியில் எந்த அளவுக்கு அரசுக்குப் பங்கிருக்கிறது என்று தனிப் படுத்திக் காட்ட இயலாது.

| வ.எண். | விவரம் | அளவை | 1950–51 | 1980–81. |
|---|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை | கோடி | 35.9 | 68.0 |
| 2. | கல்வி பெற்றவர்கள் | சதவிகிதம் | 16.67 | 36.17 |
| 3. | தேசிய வருவாய் | 1970–71 விலைகளில் | 16,731 | 47,431 |
| 4. | நெடுஞ்சாலைகளின் நீளம் | ’000 கி.மீ. | 157 | 630 |
| 5. | இரயில்வேக்களின் சரக்கு எடுத்துச்சென்ற அளவு | மிலியன் மெட்ரிக் டன்கள் | 93 | 218 |

| வ.எண். | விவரம் | அளவை | 1950–51 | 1980–81 |
|---|---|---|---|---|
| 6. | மத்திய அரசு நிறுவனங்கள் (Central Govt. Undertaking) | எண்ணிக்கை | 5 | 186 |
| 7. | மத்திய அரசு நிறுவனங்களில் முதலீடு | கோடிகள் | 29 | 18,226 |
| 8. | அரசு கூட்டுப் பங்குக் கம்பெனிகள் | எண்ணிக்கை | 142 (1960-இல்) | 836 |
| 9. | அரசு கூட்டுப் பங்கு கம்பெனிகளில் முதலீடு (Paid up Capital) | கோடிகள் | 547 (1960-இல்) | 10,159 |
| 10. | அரசு அல்லாத கூட்டுப் பங்குக் கம்பெனிகள் | எண்ணிக்கை | 26,007 (1960-இல்) | 57,674 |
| 11. | அரசு அல்லாத கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் முதலீடு (Paid up Capital) | கோடிகள் | 1,272 (1960-இல்) | 3,708 |
| 12. | பள்ளி மாணவர்கள் | மிலியன் | 24 | (99) |
| 13. | மருத்துவ விடுதிப் படுக்கைகள் | '000 | 113 | (322) |
| 14. | மருத்துவர்கள் | '000 | 56 | (177) |
| 15. | உணவுப் பொருள் உற்பத்தி | மிலியன் மெட்ரிக் டன்கள் | 50.8 | 129.9 |
| 16. | மொத்த நீர்ப்பாசன வசதி பெற்ற நிலப்பரப்பு | மிலியன் எக்டேர்கள் | 22.6 | 53.0 |
| 17. | வேளாண்மை உற்பத்தி | மடங்குச் சுட்டு எண் 1967 100 | 58.5 | 136.0 |
| 18. | உயிர்ச்சத்து உரம் உற்பத்தி (Nitrogeneous) | '000 மெட்ரிக் டன் | 56 | 3,678 |
| 19. | மின்சார உற்பத்தி | மிலியன். கி.வா. | 5.1 | 111.6 |
| 20. | மின்சார வசதிபெற்ற கிராமங்கள் | '000 | 3 | 272 |
| 21. | தொழில் உற்பத்தி | மடங்குச் சுட்டு எண் 1970 100 | 29.1 | 150.7 |

| வ.எண். | விவரம் | அளவை | 1950–51 | 1980–81 |
|---|---|---|---|---|
| 22. | உருக்கு உற்பத்தி | மிலியன் மெட்ரிக் டன்கள் | 1.5 | 7.4 |
| 23. | பருத்தித்துணி உற்பத்தி | மிலியன் மீட்டர்கள் | 4.2 | 9.7 |
| 24. | ஏற்றுமதி (மதிப்பு) | கோடி உரூ. | 601 | 6,704 |
| 25. | இறக்குமதி (மதிப்பு) | கோடி உரூ. | 650 | 12,330 |
| 26. | ஒழுங்கமைதி பெற்ற துறையில் வேலை வாய்ப்பு (Organised sector employment) | மிலியன் | 12.1 (1960–61–இல்) | 22.5 |
| 27. | பதிவுபெற்ற வேலை தேடுவோர் (Registered job seekers) | கோடி உரூ. | 0.3 | 16.2 |
| 28. | பண அளிப்பு | கோடி உரூ. | 2,021 | 23,268 |
| 29. | எந்திரத் தொழிலாளர் விலைவாசி (Industrial Workers Consumer Price Index) | மடங்குச் சுட்டுஎண் 1960 100 | 83 | 401 |

குறிப்பு: 1980-81 பற்றிய பெரும்பாலான புள்ளி விவரங்கள் இப்போதைக்கானவை (Provisional). அடைப்புக் குறிகளுக்குள் இருப்பவை 1978–79–ஆம் ஆண்டுக்கானவை.

ஆதாரம்: ‘Statistical Outline of India’–1982.

தமிழ்நாடு அரசு: இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் உள்ள கூட்டாட்சி அமைப்பில் (Federal setup) மாநில அரசுகளுக்குத்தான் கல்வி, மருத்துவம், சாலைப் போக்குவரத்து, ஊரக மின்சாரப் பகிர்வு போன்ற தலைசிறந்த சமூகப் பணிகளைச் செய்யும் பொறுப்பு வரையறை செய்யப்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தமிழக அரசின் பொருளாதாரத்தை ஒரு மாநில அரசின் பொருளாதார எடுத்துக்காட்டாகக் கொண்டு கீழ்வரும் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் தேசிய வருவாய் 1970-71–இலிருந்து 1979–80 வரை 3.7% ஆண்டு வளர்ச்சி வீதம் கொண்டிருந்தது. ஆனால், 1980–81–இல் பருவமழை தவறியதன் காரணமாகவும் வாணிக மந்தத்தின் காரணமாகவும் அதன் வளர்ச்சிவீதம் 8.12% குறைந்துவிட்டது. இதன் காரணமாக, 1970–71-க்கும் 1980–81-க்கும் இடையே மாநிலத் தேசிய வருவாயின் ஆண்டு வளர்ச்சி வீதம் 2.4% ஆகக் குறைந்துவிட்டது.

தமிழ்நாடு அரசு 1980–81–இல் மாநிலத் தேசிய வருவாயில் 13.9% வரிகள் மூலம் வருவாயாகப் பெற்றது. அது மட்டுமன்றி, மத்திய அரசின் வரிகளில் தமிழ்நாட்டின் பங்காக, மேலும் மாநிலத் தேசிய வருவாயில் 4.8% க்குச் சமமான அளவு தனது பங்காகப் பெற்றிருக்கிறது. அதாவது, தமிழ்நாட்டின் மொத்தத் தேசிய வருவாயில் கிட்டத்தட்ட 18.7% மத்திய, மாநில அரசு வரிகளின் மூலம் தமிழ்நாட்டு அரசுக்கு வருவாயாகக் கிடைக்கிறது. 1980–81–இல் தமிழ்நாட்டு மாநிலத் தேசிய வருவாயில் 26.6% தமிழ்நாட்டு அரசின் வரவு செலவுத் திட்டத்தின் வருவாய்க் கணக்கு (Revenue Account), முதலீட்டுக் கணக்கு (Capital Account) ஆகியஇரண்டிலும் வந்த வரவுக்குள் அடங்கி இருந்தன. அதாவது, தமிழ்நாட்டு மாநிலத் தேசிய வருவாயில் கால் பங்குக்கு மேல், தமிழ்நாட்டு அரசின நேரடியான கட்டுப்பாட்டுக்குள் அடங்கியிருந்தது.

தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் காட்டக் கீழ்வரும் புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

| வ.எண் | விவரம் | அளவை | 1950–51 | 1970–71 | 1980–81 |
|---|---|---|---|---|---|
| 1. | மக்கள் தொகை | கோடி | 3.01 | 4.12 | 4.84 |
| 2. | கல்வி பெற்றோர் | சதவிகிதம் | 20.85 | 39.46 | 46.76 |
| 3. | தனியாள் வருவாய் 1970-71 விலைகளில் | உரூ. | 381.18 | 581 | 632 |
| 4. | மின்சாரம்பெற்ற சிற்றூர்கள் | சதவிகிதம் | —— | 89 | 99 |
| 5. | மின்சார இறவைக் குழாய்கள் | '000 | —— | 5.94 (1971–72) | 9.19 |
| 6. | சாலைகளின் நீளம் | கி.மீ. | 34,115 | 73,905 | 1,07,35 |
| 7. | அரசுத் துறைகளில் வேலை வாய்ப்பு (மத்திய மாநிலப் பொதுத் துறைகள்) | '000 | ... | 934.2 (1972) | 1218.9 |
| 8. | மொத்த வேலைவாய்ப்பு (அரசுத் துறை, தனியார்துறை) | '000 | ... | 1576.0 (1972) | 1903.5 |
| 9. | படித்து வேலை தேடுவோர் | '000 | —— | 215 | 599 |
| 10. | நீர்ப்பாசன வசதி | '000 | 888 | 2590 | 2998.1 |
| 11. | மாநிலத் தேசிய வருவாய் (1970–71 விலைகளில்) | கோடி | 1149.19 | 2371 | 3032 |
| 12. | உணவு தானிய உற்பத்தி | '000 மெட்ரிக் டன்கள் | 3,143 | 6,884 | 5,651 |
| 13. | வேளாண்மை உற்பத்தி | மடங்குச் சுட்டு எண் 1969–70 100 | | 114.2 | 112.4 |
| 14. | எல்லா வகை மோட்டார் வாகனங்கள் (இசுகூட்டர், பேருந்துகள் உட்பட) | '000 | 33.5 | 125.7 | 321 |
| 15. | எந்திரத் தொழில் உற்பத்தி | மடங்குச் சுட்டு எண் 1970– | —— | 100 | 201.7 |
| 16. | மின்சார உற்பத்தி (Capacity) அளவு | 100 | 156 | 1,965 | 2,929 |
| 17. | மின்சார உற்பத்தி வெளியீடு (Output) | | 630 | 5,121 | 7,371 |
| 18. | பல்கலைக்கழகங்கள் | எண்ணிக்கை | 2 | 4 | 5 |

| வ.எண் | விவரம் | அளவை | 1950–51 | 1970–71 | 1980–81 |
|---|---|---|---|---|---|
| 19. | கலை–அறிவியல் கல்லூரிகள் | எண்ணிக்கை | 48(1956–57) | 161 | 187 |
| 20. | அவற்றில் படித்த மாணவர்கள் | எண்ணிக்கை | 44,794 (1960–61) | 1,65,856 | 1,56,661 |
| 21. | தொடக்கநிலைப் பள்ளிகள் I இலிருந்து VIII வரை | எண்ணிக்கை | 25,268 (1956–57) | 27,421 | 33,415 |
| 22. | நடுநிலைப் பள்ளி | எண்ணிக்கை | 894(1956–57) | 2609 | 2069 |
| 23. | மேல்நிலைப் பள்ளி | எண்ணிக்கை | —— | —— | 1300 |
| 24. | பொறியியற் கல்லூரிகள் | எண்ணிக்கை | 7 | 12 | 14 |
| 25. | மருத்துவக் கல்லூரிகள் | எண்ணிக்கை | 3 | 9 | 9 |
| 26. | அடிப்படைச் சுகாதார மையங்கள் | எண்ணிக்கை | 784 | —— | 2,123 |
| 27. | அரசு மருத்துவ, விடுதிப் படுக்கைகள் எண்ணிக்கை | எண்ணிக்கை | 24,603 (1960 61) | 39,954 | 47,062. |

எஸ்.நீ.

**அரசாங்கம்**, அரசு என்னும் இரு சொற்களும் ஒரே பொருள் உடையன போல் பழக்கத்தில் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இது சரியாகாது. அரசாங்கம் (Government), அரசு (State) ஆகிய இரண்டையும் கி.பி. 16–ஆம் நூற்றாண்டு வரையிலும் ஒன்றாகக் கருதிப் பழக்கத்தில் கொண்டிருந்தனர். பிரான்சு நாட்டுப் பதினான்காம் லூயி மன்னன் ‘நானே அரசு’ (I am the State) என்று கூறியதிலிருந்து அரசும், அரசாங்கமும் ஒன்றுதான் என்று அரசன் உணர்ந்ததை அறியலாம். மனித சமூகத்தில் குடும்பம் எப்போது தோன்றியதோ, அதற்கு முன்னரே அரசாங்கம் தோன்றிவிட்டதென மாக் ஐவர் (Mac Iver) என்பார் கூறியதிலிருந்து அரசாங்கம், குடும்பத்திற்கு முன்னரே தோன்றியதென்பதை உணரலாம். ஒழுங்கு படுத்தப் பட்ட வாழ்க்கை என்பது அரசாங்கம் தோன்றிய பின்னரே ஏற்பட்டிருக்க முடியும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் வரையறை. அரசாங்கம் இல்லாமல் அரசு தோன்றாது. அரசு என்பதில் அரசாங்கம் ஓர் அங்கம். அரசாங்கம் தவிர மக்கள், நிலப்பரப்பு, இறைமை ஆகிய மூன்றும் இருந்தால்தான் அது அரசு. அரசாங்கம் அரசில் இருப்பதால்தான், மக்களைக் கட்டுப்படுத்தி, ஒன்றுபட்ட கூட்டுச் செயல்கள் வாயிலாக அவர்களை ஒற்றுமைப்படுத்தி நிருவகிக்க முடிகிறது. இல்லையேல் கட்டுப்படுத்தப்பட்ட, ஒழுங்குமுறை மக்கள் வாழ்வு மலராது. எனவே அரசாங்கம் மக்களுக்காகப் பொதுக் கொள்கைகளை உருவாக்கி, பொது விவகாரங்களை ஒழுங்குபடுத்தி, பொதுநலனை மேம்படுத்த உதவக் கூடிய செயலாண்மை அரசாங்கம் ஆகும். அரசாங்கம் என்பது மக்களுடைய விவகாரங்களை வழிநடத்தப் பொறுப்புக்கொண்ட அரசியலமைப்பால் அமைக்கப்பட்ட அமைப்பு ஆகும்.

அரசாங்கங்கள் எப்படி இருந்தால் மக்களுக்கு மிகுதியான நன்மை கிடைக்குமென்ற நிலையில் அரசாங்கத்தை வகைப்படுத்தியுள்ளார்கள் அரசியல் அறிஞர்கள். அரசாங்கத்தில் ஒருவர் மட்டுமே வீற்றிருந்து ஆட்சிபுரிந்தால் அந்த அரசாங்கம் மன்னராட்சி (Monarchy) அரசாங்கம் என்று கூறப்படும். இதில் ஒருவரே ஆட்சியை மேற்கொள்வதால் அவர் ‘நாமே நன்மைக்கும், தீமைக்கும் பொறுப்பாக இருப்போ

மென எண்ணி, நன்மைகளை மிகுதியாகச் செய்து தங்கள் புகழை நிலைநிறுத்த எண்ணுவர். நாட்டின் நிருவாகத்தையும் எளிதாகக் கவனிப்பரெனினும், தனி மனிதரால் எல்லா நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த இயலாது. தவிர, அரசன் தன்னுடைய விருப்பத்திற்கேற்ப ஆட்சி செய்ய முற்பட்டால், 'எதேச்சாதிகாரம்' தோன்றிவிடக்கூடும். தனிமனித னால் ஆளப்படாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சில ரால் ஆட்சி புரிவது பிரபுக்கள் ஆட்சி (Aristocracy) எனப்படும். இந்தச் சிலர் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த வர்களாகவோ, பொருளாதார மேம்பாடு கொண்ட வர்களாகவோ அல்லது தனிப்பட்ட சிறந்த பண்பு நலன்கள் கொண்டவர்களாகவோ இருக்கலாம். தனி ஒரு மனிதனைக் காட்டிலும் சிலர் சிக்கல்களை நன்கு ஆராய்ந்து, நல்ல முடிவுகளை மேற்கொள்ளலாம். இதனால் அரசாங்க அதிகாரங்கள் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட சிலர் கையில் வந்து விடுகின்றன.

அரசாங்கத்தை ஒருவரோ ஒரு சிலரோ நடத் தாமல், பெரும்பாலோரால் ஆளப்படும் ஆட்சி மக்க ளாட்சி என்று கூறப்படும். மக்களாட்சியில் பேராளர் கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களால் ஆட்சி நடை பெறும். எனவே மக்களுடைய கருத்துகளுக்கேற்ப ஆட்சி நிகழும். மக்களின் எண்ணங்கள் நிறைவேற்றப் படுவதால் அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பர். ஆனால் மக்கள் தேர்ந்தெடுக்கும் பேராளர்களின் தன்மைக் கேற்ப மக்களாட்சி மாண்பு அமையும். மக்கள் பேரா ளர்கள் தம் தேவைகளை மட்டும் நிறைவேற்றி, மக் களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்கத் தவறினால் நல் லாட்சி அமையாது. மேற்கூறிய மன்னராட்சி, பிரபுக் கள் ஆட்சி, மக்களாட்சி ஆகிய மூன்று வகை அரசாங் கங்களிலும் மக்களாட்சி சிறந்த அரசாங்கமாகுமென் பது பெரும்பான்மையோர் கருத்து. இவ்வாறு அர சாங்கத்தில் ஆளக்கூடிய தன்மைகளை வைத்து மூன்று வகைகளாக அரசியல் அறிஞர்கள், குறிப்பாக அரிசு டாட்டில் வகைப்படுத்தியுள்ளார். இந்நாளில் அரசாங் கங்களை அரசியலமைப்பு முறையில் வகைப்படுத்து கின்றார்கள் அரசியல் அறிஞர்கள். அரசாங்க முறை மையைச் சட்டப்படி எழுதி, அதன் அடிப்படையில் அரசாங்கம் இயங்கினால் அது எழுதப்பட்ட அரசிய லமைப்புக் கொண்ட அரசாங்கம் எனப்படும். அர சாங்க முறைமை எழுதப்படாமல் வழக்கங்கள், மரபு கள், வழக்காறுகள் ஆகியவற்றால் நடைமுறையில் வளர்ச்சி பெற்றுச் செயற்பட்டால் அது எழுதப் படாத அரசியலமைப்பு அரசாங்கம் எனப்படும். அரசி யலமைப்புத் திருத்தமும், சாதாரணச் சட்டங்களின் திருத்தங்களும் ஒன்றுபோல் இருந்தால், அது நெகிழ் வான (Flexible) அரசியலமைப்பு எனப்படும். அரசிய லமைப்புத் திருத்தங்களுக்கு வேறு சிறப்பு முறைகள் வரையறுக்கப்பட்டால் அது நெகிழ்வற்ற (Regid) அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகிறது. அரசிய லமைப்பால் இரண்டுவிதமான அதாவது மத்திய, மாநில அரசாங்கங்களைக் குறிப்பிட்டு, அவற்றிற் கிடையே சட்டபூர்வ முறையான அதிகாரப் பகிர்வு கள் செய்து, அரசாங்கம் ஒவ்வொன்றும் வரையறுக் கப்பட்ட அதிகார எல்லைக்குள் செயற்பட்டால் அது கூட்டாட்சி அரசியலமைப்பாகும். இந்த இரண்டு அர சாங்கங்களுக்கிடையே எழும் சிக்கல்களை. வலுவான நீதிமன்றம் தீர்த்துவைக்கும். இரண்டு விதமான அர சாங்கங்கள் இல்லாமல் ஒரே அரசாங்கம் மட்டும் இருந்து செயற்பட்டால், அதற்கு ஒற்றையாட்சி அரசி யலமைப்பு என்று பெயர்.

அரசாங்கங்களில் ஆட்சித் துறையை வைத்து, பாராளுமன்ற முறை அரசாங்கம், குடியரசுத் தலை வர் முறை அரசாங்கம், பன்முக ஆட்சித்துறை அர சாங்கமென மூன்று வகைகளாகப் பிரிப்பர். பாராளு மன்ற முறை அரசாங்கத்தில் இரண்டு ஆட்சித் துறை கள் இருக்கும். ஒன்று பெயரளவிலான ஆட்சித்துறை. மற்றொன்று உண்மையான ஆட்சித்துறை. இங்கிலாந் தில் அரசியார் பெயரளவிலான ஆட்சித் துறைத் தலைவர். தலைமை அமைச்சரும் அவரது அமைச் சரவையும் உண்மையான ஆட்சித்துறை. பாராளு மன்ற முறை அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும் பான்மை இடங்களைப் பெற்ற ஒரு கட்சியின் தலை வரையோ, கட்சிகளின் தலைவரையோ அமைச் சரவையை அமைக்கும்படி பெயரளவு ஆட்சித் துறைத் தலைவர் கேட்டுக் கொள்வார். எடுத்துக் காட்டாக, இந்தியாவில் பெயரளவு ஆட்சித்துறைத் தலைவர் குடியரசுத் தலைவர். உண்மையான ஆட் சித் துறைத் தலைவர் தலைமை அமைச்சரும் அவ ரது தலைமையில் இயங்கும் அமைச்சரவையுமாகும். குடியரசுத் தலைவர் பெரும்பான்மை இடங்களைப் பெற்ற கட்சியின் தலைவரைப் பிரதமராக நியமிக் கிறார். பிரதமரது ஆலோசனையின்படி பிற அமைச் சர்களைக் குடியரசுத் தலைவர் நியமிக்கிறார். இந்த அமைச்சரவை பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாக இயங்க வேண்டும். எனவே, அமைச்சரவையின் பதவிக் காலம் பாராளுமன்றக் கீழவையின் நம்பிக்கை இருக் கும் வரையிலென முடிவுசெய்யப்பட்டுள்ளது. அமைச் சரவை கூட்டுப்பொறுப்பாக இயங்கும். ஒருவரது பொறுப்பு அனைவரது பொறுப்பு என்று பொதுமைப் படுத்தி இயங்கவல்லது.மேலும் அது எல்லோருடைய பொறுப்புத்தான் என்றும், தனிமனிதர் திறமையில் செயற்படும் வண்ணம் தனிப்பொறுப்பும் வழங்கப்பட் டுள்ளது. ஆகவே அமைச்சர்கள் தனிப்பொறுப்புட னும் கூட்டுப்பொறுப்புடனும் செயல்படவேண்டும். அமைச்சர்கள் கட்டாயமாகப் பாராளுமன்ற உறுப் பினர்களாக இருக்கவேண்டும்.

குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தில் குடியரசுத் தலைவரைப் பாராளுமன்றம் தேர்ந்தெடுக்காமல், மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். எனவே, குடியரசுத் தலைவர் குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட காலத்திற்குப் பதவியில் இருப்பார். குடியரசுத் தலைவர் தமக்கு உதவியாக ஒரு அமைச்சரவையை உருவாக்குகிறார். இது குடியரசுத் தலைவருக்குப் பொறுப்பாக இயங்குகிறது. இந்த அமைச்சரவை உறுப்பினர்கள் பாராளு மன்ற உறுப்பினர்களாக இருக்க வேண்டியதில்லை. குடியரசுத் தலைவர் இந்த அமைச்சர்களை நியமிக்கவும் நீக்கவும் முழு அதிகாரம் பெற்றிருப்பதால், இந்த அமைச்சரவையை சமையற்கட்டு அமைச்சரவை (Kitchen Cabinet) என்றழைப்பர். இந்த அமைச்சரவையின் முடிவுகளைக் குடியரசுத் தலைவர் ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். இது குடியரசுத் தலைவரின் விருப்பம். இவ்வாறு ஆட்சித் துறையும் சட்டமன்றமும் தனித்தனியாக இயங்குகின்றன. பாராளுமன்ற முறை அரசாங்கத்தில் பாராளுமன்றமும் ஆட்சித் துறையும் கிட்டத்தட்ட இணைந்து செயற்படும்.

குடியரசுத் தலைவர் முறை, பாராளுமன்ற முறை ஆகியவற்றைத் தவிர்த்துப் பன்முக ஆட்சித்துறை (Plural executive) அல்லது கூட்டு ஆட்சித்துறை (Collegial executive) என்ற ஆட்சித்துறையும் உண்டு. இந்த ஆட்சித்துறையில் பலர் இடம் பெற்றிருப்பர். இடம் பெற்றுள்ள அனைவரும் சமமான அதிகாரத்தைப் பெற்றிருப்பர். இந்த அனைவரும் சேர்ந்து ஒன்றுபட்டுச் செயற்படக்கூடியவர்கள். அதாவது இந்தியாவில் குடியரசுத் தலைவர் ஒருவர் ஆற்றக் கூடிய பணியைச் சோவியத் உருசியாவில் பிரசீடியம் (Presidium) ஆற்றுகிறது. இதேபோல் சுவிட்சர்லாந்தில் கூட்டாட்சி மன்றம் செயற்படுகிறது. ஆனால் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவரை வரவேற்பதாயின், யார் முதலில் வரவேற்பது என்ற சிக்கலில் ஓர் இக்கட்டான சூழ்நிலை உருவாகிவிடும். எனவே இந்தமாதிரியான நடைமுறைச்சிக்கல்களைத் தவிர்க்க, பன்முக ஆட்சித்துறை அவர்களுள் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கிறது. பன்முக ஆட்சித்துறையில் பகுதி வாரியாக, கட்சி வாரியாக, தேசிய வாரியாக, சமய வாரியாக, மொழி வாரியாகப் பன்முகப் பண்புகள் அரசியலமைப்பு வழி இடம்பெற வழிவகுக்கப்பட்டுள்ளது. பன்முக ஆட்சித்துறை உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கவேண்டியதில்லை. பன்முக ஆட்சித் துறை பாராளுமன்ற நம்பிக்கையில்லாமல் கூட இயங்கமுடியும். கட்டுப் பொறுப்பு என்பது பன்முக ஆட்சித் துறையில் கிடையாது. அமைச்சர்களுக்கிடையே கூட கருத்து வேறுபாடுகள் தோன்றி, ஒரு அமைச்சர் மற்றொரு அமைச்சரை எதிர்த்துச் சட்டமன்றத்தில் பேசுவதுண்டு. ஒவ்வொரு அமைச்சரும் ஒருதுறைக்குப் பொறுப்பாக இருப்பர். அந்தத் துறையின் தவறுகளுக்குப் பொறுப்புகளை அந்தந்த அமைச்சர்கள் ஏற்றுப் பதவியிலிருந்து விலக வேண்டும். பன்முக ஆட்சித்துறையில் எவரும் உயர்ந்தவராகக் கருதப்படுவதில்லை. எல்லோரும் ஒத்த அதிகாரம் படைத்தவர்கள். பன்முக ஆட்சித் துறையில் தலைவர் ஒருவர் இருப்பார். அவர் சில மரபுவழியில் வந்த (Ceremonial) கடமைகளைச் செய்வார். இது அவர் மீது சுமத்தப்பட்ட கடமைகள். மொத்தத்தில், ஒரே குரலில் (One voice) செயற்படுவது பன்முக ஆட்சித் துறை. ஒரே குரலில் இயங்க முயல்வது பாராளுமன்ற முறை.

அரசாங்க அதிகாரங்களைச் சட்டமன்றம், ஆட்சித் துறை, நீதி மன்றம் என்று மூன்றாகப் பிரிக்கலாம். அதாவது சட்டமியற்றுதல் அச்சட்டங்களைச் செயற்படுத்துதல், சட்டங்களுக்கு விளக்கமளித்தல், அரசியலமைப்புச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது ஆகியன இந்த மூன்று அதிகாரங்கள். இந்த மூன்று அதிகாரங்களும் ஒருவரிடம் இருந்தால், அவரது விருப்பப்படி இயங்குவதுதான் சட்டம். அதனை அவர் நினைத்தால் செயல் படுத்துவார். அவர் சொல்வது தான் நீதி என்று ஆகிவிடும். இது சருவாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும். தொடக்கக் காலத்தில் அரசர்கள் இந்த மூன்று அதிகாரங்களையும் கொண்டிருந்தனர். எனவேதான், அரசர்கள் எதேச்சாதிகாரிகளாகத் திகழ்ந்தனர். மக்கள் குறைகளும் நீக்கப்படமாட்டா. மக்கள் எண்ணங்களும் நிறைவேற்றப்படமாட்டா. ஆகவேதான் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதிமன்றம் ஆகிய மூன்றும் ஒருவரிடமோ, ஓர் அமைப்பிடமோ அமையாமல், தனித்தனியாக அமையும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு அரசாங்க அதிகாரங்கள் பிரிக்கப்படுவதற்கு அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு (Theory of Seperation of Powers) என்பது பெயர்.

அரசாங்கத்தின் அதிகாரங்களைத் தனித்தனியாகப் பிரிப்பது, தவறுகள் நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதற்காகத்தான். இவ்வாறு தனித்தனியாகப் பிரித்த பின்னர், அவை தாம் விரும்பும் வகையில் செயற்பட்டால், அவ்வமைப்புகள் நிச்சயமாகத் தான் தோன்றித்தனமான அமைப்புகளாகத்தான் இருக்கும். அவ்வாறு இல்லாமல், ஒன்றோடொன்று ஒத்துழைத்துச் செயற்படும் வண்ணம் அவை அமைய வேண்டும். சட்டம் இயற்றுவதற்கு ஆட்சித் துறையின் உதவி தேவைப்படலாம். ஆட்சித்துறை சட்டவரைவு செய்யவேண்டிய செய்திகளைத் தருகிறது. ஆட்சித் துறையின் சிக்கலைச் சட்டமன்றம் கவனிக்க வேண்டியிருக்கும். நீதி மன்றம், ஆட்சித் துறை, சட்ட மன்றம்

ஆகியவற்றின் தவறுகளைக் கண்டிக்க வேண்டும். அதே நேரத்தில், ஆட்சித் துறை, சட்ட மன்றம் ஆகியவற்றிற்கு உறுதுணைபுரியக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நீதிபதி ஒரு வழக்கை விசாரித்து வழங்கிய தீர்ப்பின் கூறு, ஒரு புதிய சட்டத்திற்கு (Precedent) முன்னோடியாகத் திகழலாம். இந்த முன்னோடி, சட்ட மன்றம், ஆட்சித் துறை ஆகிய இரண்டும் செய்யும் பணிகளுக்கு ஒப்பானதாகும்.

மக்களுடைய எண்ணங்கள், விருப்பங்கள் ஆகியவற்றைத் திரட்டி மக்கள் பேராளர்கள் சட்டமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றுகின்றனர். இந்தச் சட்டங்களை ஆட்சித் துறை செயற்படுத்த வேண்டும். இந்த ஆட்சித் துறையின் தலைவர்கள் எல்லா நாடுகளிலும் அரசியல் தலைமையாளர்களாகத்தான் இருப்பர். இவர்களுக்குக் கீழ் ஒரு நிரந்தர நிருவாக அமைப்பு உள்ளது. இதுதான் பொது நிருவாகம் என்பதாகும். இதனை அரசாங்கத்தின் நான்காவது பிரிவு என்று கூறுவர். அரசுப் பணியாளர்கள் (Civil Servants) பொது நிருவாகத்தை நடத்தி வருகின்றனர். இவர்கள் நடுநிலைமையுடன், கட்சிச் சார்பின்றி, நேர்மையுடன் திறமையாகப் பணியாற்றி வருகின்றனர். ஒரு நாட்டின் வளர்ச்சி அந்நாட்டின் அரசுப் பணியாளர்களைப் பொறுத்துள்ளது என்றால் அது மிகையாகாது. என்.எஸ்.ச.

துணை நூல்கள்:

**Herman Finer.,** "The Theory and Practice of Modern Government", Methuen & Co., London, 1956.

**Strong C.F.,** "Modern Political Constitutions", The English Language Book Society, London, 1975.

**Wneare K. C.,** "Modern Constitutions", Oxford University Press, London, 1966.

***அரசாங்க வரவு-செலவுத் திட்டக் கோட்பாடுகள்:*** அரசாங்க வரவு-செவுத் திட்டமே (Govt. Budget) அரசின் கொள்கையை விளக்கும் சிறந்த ஆவணமாக அமைந்துள்ளது. இந்தியாவின் வரவு-செலவுத் திட்டம், ஐந்தாண்டுப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஓர் உறுதுணையான கருவியாக உதவுகிறது. திட்டங்களின் அளவையும் கொள்கைகளையும் பின்புற்றி வரவு-செலவுத் திட்டங்கள் அமைக்கப்படுகின்றன. அனைத்திற்கும் அடிப்படை சமூக-பொருளாதார முன்னேற்றக் கொள்கையேயாகும். பின்தங்கிய நிலையிலுள்ள இந்தியாவில் பொருளாதாரம் விரைந்து வளர்ச்சியடைதல் வேண்டும்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதி வரை, ஒரு சிறந்த வரவு-செலவுத் திட்டம் என்பது மிகக் குறைவான வரிப் பளுவையும் அதற்கொப்பக் குறைந்த செலவினங்களையும் கொண்டதாக அமையவேண்டும் என்று எண்ணப்பட்டது. மேற்சொன்ன கருத்துக்கு மாறாக 1930-ஆம் ஆண்டுக்குப் பின்னர் அரசாங்கச் செலவினங்களின் அளவும் வரி விகிதங்களும் வரி விதிக்கும் அளவும் பெருமளவுக்கு மிகுந்துள்ளன.

இந்தியாவில் மத்திய அரசும் எல்லா மாநில அரசுகளும் ஒரே வகையான வரவு செலவுத் திட்ட முறையினைப் பின்பற்றுகின்றன; நாடு தன்னுரிமை பெற்ற பின்பு அரசாங்க வரவு-செலவுத் திட்டங்களின் அளவு ஆண்டுதோறும் விரிவடைந்து வருகிறது. மக்களாட்சி முறை பின்பற்றப்படுவதால் ஆக்கநல அரசின் பல்வேறு பணிகள் விரிவடைந்துள்ளன. ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் ஆண்டுதோறும் வளர்ந்துகொண்டே வருகின்றன. ஆகையால், நாட்டின் அரசாங்க வரவு-செலவுத் திட்டங்களின் விரிவடையும் போக்கு, சமூக, பொருளாதார முன்னேற்றப் போக்கினையே காட்டுவதாக உள்ளது. முந்தைய ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தோடு ஓரளவிற்கேனும் ஒத்த நிலையில், வருகின்ற ஆண்டின் வரவு செலவுத் திட்டம் அமைதல் வேண்டும் என்பதும் ஒரு நல்ல கோட்பாடே (Principle). வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதால் நிதி அளவையில் ஒருமைப்பாடு இருக்க வழி இல்லை. ஆனால், ஒப்பிட்டுப் பார்க்க வழி செய்யும் வகையில் இனங்களில் ஒருமைப்பாடு இருக்கலாம். வரவு-செலவுத் திட்டத்தில் நெகிழ்வுத் தன்மை (Flexibility) இருத்தல் வேண்டும். ஒரு வரையறுக்கப்பட்ட அளவு வரை, ஒரு துறைக்கு ஒதுக்கிய பணத்தை இன்றியமையாத தேவை ஏற்பட்டால் வேறு துறைகளுக்கு மாற்றிச் செலவிடும் அதிகாரம் நிருவாகத்தினருக்குத் தரப்படல் வேண்டும் என்பதும் ஒரு கோட்பாடு ஆகும். வரவு-செலவுத் திட்டத்தினை முறையாகச் செயற்படுத்துவது நிருவாகத்தின் தலையாய கடமையாகும். செயற்பாட்டில் தவறுகளோ குறைகளோ ஏற்பட்டால் தொடர்புடைய அலுவலர்கள் அதற்கான பொறுப்பேற்க வேண்டும். மதிப்பீடுகள் (Estimates) முடிந்த அளவிற்கு உண்மையாக (Accurate) இருத்தல் வேண்டும். குத்துமதிப்பு மதிப்பீடுகள் (Rough Estimates) வரவு-செலவுத் திட்டத்திற்கு எந்த வகையிலும் ஏற்புடையவை அல்ல. நுட்பமாக மதிப்பீடு செய்யப்படாத கூறுகள், வரவு-செலவுத் திட்டத்தின் உருவ அமைப்பினையே கெடுக்கும். செயற்படுத்த முடியாத வேலைத் திட்டத்தினை உருவாக்குவதில் உண்மையும் நடைமுறையில் இயலுந்தன்மையும் போற்றப்படுதல் வேண்டும். வரவு-செலவுத் திட்டங்கள், தெளிவான வகையில் (Clarity) பொது மக்களும்

புரிந்து கொள்ளும் முறையில் வெளியிடப் படவேண்டும். பிறிதொரு கோட்பாடு கால வரம்பினைக் குறித்ததாகும். வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப் பட்டுள்ள பணத்தினைக் குறிப்பிட்ட ஓராண்டுக் காலத்திற்குள் செலவிடுதல் வேண்டும். அவ்வாறு செலவிடப் படவில்லையானால் அப்பணத்தினைப் பின்னர்ப் பயன்படுத்த முடியாது. அது காலங்கடந்த, கெடுத் தீர்ந்த (Lapsed) தொகையாகிவிடும். நாடாளுமன்ற அல்லது சட்டமன்றத்தின் முன் வைக்கப்படும் வரை, வரவு-செலவுத்திட்டம் மறையான (Secret) ஆவணமாகும். மன்றத்தில் வெளியான பிறகு, பொது மக்களும் அதனை அறிந்து பயன் பெறுமாறு செயற் படத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மக்களாட்சி முறை பின்பற்றப்படும் நாடுகளில் இது தலைசிறந்த கோட்பாடாக அமையும்.

குறிப்பிட்ட ஓராண்டில் அரசின் வரவுகளும் செலவுகளும் சமமாக இருக்கும் வகையில் உருவாக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம், ''சமநிலையுடைய வரவு-செலவுத் திட்டம்'' என்று சொல்லப்படும். அவ்வாறு அமையாதவை ''சம நிலை அற்ற வரவு-செலவுத் திட்டங்களாகும்''. திட்டத்தில் செலவினங்களைவிட வரவினங்கள் மிகுதியாக இருந்தால் அத் திட்டம் ''உபரி வரவு-செலவுத் திட்டம்'' என்று சொல்லப்படும்.

வரவு-செலவுத் திட்டங்கள் வரவும் செலவும் சம நிலை உடையனவாக இருத்தல் வேண்டும் என்ற கருத்து, இப்பொழுது பொருளாதார நிதியியல் வல்லுநர்களால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனால், 20-ஆம் நுற்றாண்டிற்கு முன் பொருளாதார வல்லுநர்கள், பெரும்பாலும் சமநிலை உடைய வரவு-செலவுத் திட்டங்களே நல்லவை என்றும், அவ்வாறு இல்லாதிருந்தால் அரசு விரைவில் வரவும் செலவும் சமநிலை அடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். இரிக்கார்டோ, மில், மால்தசு ஆகியோர் இக்கருத்தினையே வலியுறுத்தினர். இன்றும் இலட்சு (Lutz) என்பவர், சம நிலைத் திட்டத்தின் தேவையினைப் போற்றுபவராக இருக்கிறார் ஆனால், பெரும்பாலும் இக்காலப் பொருளாதாரப்-பேரறிஞர்கள், குறிப்பாக, கீன்சீன் (Keynes) கருத்தைச் சார்ந்தவர்கள், வரவு-செலவுத் திட்டம் சம் நிலை உள்ளதாக இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்றும், நாட்டின் பொருளாதார நலத்தினையும் மேம்பாட்டினையும் கருத்தில் கொண்டு, பற்றாக் குறை வரவு-செலவுத் திட்டங்களை மேற்கொள்வது தேவையானது என்றும் கூறுகிறார்கள். பேராசிரியர் ஆல்வின் ஏன்சன் (Alvin Hansen), பேராசிரியர் கிக்சு (Hicks), பேராசிரியர் தால்டன் (Dalton) ஆகியோர் இவர்களுள் குறிப்பிடத்தக்க சிலராவர். பொருளியல் வல்லுநர்களுள் சிலர், அரசின் எல்லா வரவுகளும் செலவுகளும் சமநிலை உடையனவாக இருத்தல் வேண்டும் என்று சொல்லாமல், குறிப்பிட்ட சில வரவுகளும் செலவுகளும் மட்டும் சமமாக இருந்தால் போதும் என்ற ஒரு கருத்தினையும் கூறுகிறார்கள்.

மரபு வழிப் பொருளாதாரச் சிந்தனையாளர் களின் கருத்து, மக்களாட்சி மலர்ந்து ஆக்கநல அரசு அமைய ஏற்புடையதாக இல்லை. அரசின் வரவு-செலவுத் திட்டம் சமநிலையில் இருக்க வேண்டுமா, வேண்டாமா என்ற விவாதம் நீண்ட காலமாக நடைபெற்று வருவதாகும். கூர்ந்து நோக்கும் போது, தொடர்புடைய நிதி ஆண்டில், அரசின் பொதுக் கடன் தேவையற்ற பெருஞ்சுமையாக இல்லாதிருந்தால், உருவாக்கப்படும் வரவு-செலவுத் திட்டம் பற்றாக்குறைத் திட்டமாக இருந்தாலும், அதனால் நாட்டிற்குத் தீங்கில்லை என்று தெளியலாம். மேலும், ஓராண்டு என்ற கணக்கிற்கு உண்மையில் எவ்விதப் புனிதத்தன்மையும் இல்லையென்றே சொல்லலாம். காலச் சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளாமல், அரசு தனது வரவு- செலவுத் திட்டத்தினை ஒவ்வோராண்டும் சமநிலைப்படுத்த வேண்டும் என்பது ஒரு தவறான வாதமாகும். ஓர் ஆண்டு என்பது என்ன கணக்கு? அது ஒரு மாதமாகவோ ஒரு வாரமாகவோ ஒரு மணி நேரமாகவோ கூட இருக்கலாம். பொதுவாகப் பார்க்குமிடத்து, இக்காலவரம்பு, நீண்ட காலமாக இருப்பது நல்லது என்று தெரிகிறது. அத்தகைய ஒரு நீண்ட காலத்தில் அரசின் வரவு-செலவுத் திட்டம் சமநிலை பெறுவது போதுமானதாகும். அது ஒவ்வோராண்டும் சமநிலைப் பட வேண்டிய தேவையில்லை. ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளின் கணக்குகளிலிருந்து தெரியவரும் நிதிப் பற்றாக்குறை, அரசின் நிதி நொடிப்பினைக் காட்டுவதாக எடுத்துக் கொள்ளமுடியாது. ஆகவே, ஆக்க நல அரசு ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பற்றாக் குறை வரவு-செலவுத் திட்டத்தினை மேற்கொள்ளலாம். ஆனால், கவனிக்கப்பட வேண்டியது, நிதிப் பற்றாக்குறை மிகப் பேரளவில் இருக்கக் கூடாது என்பது தான். எச். எச். அசுகுத் (H. H. Asquith) என்ற பொருளாதார நிபுணர் கூறியுள்ளது போல, அரசு தனது வரவு செலவுத் திட்டத்தினை ஓராண் டுக்கு என்று இல்லாமல் பல ஆண்டுகள் சேர்ந்த ஒரு கால அளவுக்கு (A term of years) உருவாக்குதல் வேண்டும். ஓராண்டு வரவு-செலவுத் திட்டம் என்பது, ஏதோ தன்னளவில் தனித்து நிற்கும் திட்டமன்று. அது அரசின் ஒருங்கிணைந்த நிதிக் கொள்கையின் ஓர் அங்கமேயாகும். நலப் பொருளாதாரம் (Welfare Economy) சார்ந்த நிதிக்கொள்கையினைப் பின்பற்றும்

அரசுகள்,' தொடர்ந்து பல ஆண்டுகளுக்குப் பற்றாக் குறை வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்குதல் தவறாகாது. ஆக்கநலம் பேணும் அரசு மேற்கொள்ளும் பல நலத் திட்டங்கள் ஓராண்டிற்கு மேற்பட்ட காலப் பகுதியினை உடையனவாக உள்ளன. கல்வி, பொதுப் பணிகள், நாட்டின் பாதுகாப்புப் போன்ற வற்றிற்கான செலவினங்கள் ஆண்டுதோறும் தொடரும் செலவினங்களாகும் (Recurring Expenditure). இத்தகைய செலவினங்கள் தொடரும் வரவு-செலவுத் திட்டங்கள் (Recurring Budgets) எனப் படும். இவையன்றிப் பிற நீண்ட காலப் பொருளாதாரத் திட்டச் செலவுகள், அரசு, வணிக நிறுவனங்களைச் செயற்படுத்தும் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள் முதலியன ''நீண்ட கால வரவு செலவுத் திட்டங்களின்'' (Long-term Budgets) கீழ்வரும். இத்தகைய கருத்துகள் பல்லாண்டுகளாகப் பல நாடுகளில் பேசப்பட்டு வந்த போதிலும், இப்பொழுது பெரும்பாலும் உலகின் எல்லா நாடுகளிலும் ஓராண்டிற்கான ''ஆண்டு வரவு-செலவுத் திட்டங்களே'' (Annual Budgets) நடைமுறையில் உள்ளன. நமது நாட்டில் அரசின வரவு-செலவுத் திட்டங்கள், இப்பொழுது ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் கருவிகளாகத் தக்க முறையில் செயற்படுகின்றன.

சமநிலையற்ற அரசாங்க வரவு-செலவுத் திட்டங்கள் பண வீக்கத்திற்கு வழி கோலும் என்று பொதுவாகச் சொல்லுவதற்கில்லை. அத்தகைய ஒரு நிலையில் தனது நிதிப்பற்றாக் குறையினை ஈடுகட்ட, அரசு பணத்தாளினை (Currency Note) அச்சிடும் தேவை ஏற்படலாம். மற்றும், நாட்டின் மைய வங்கியிடமிருந்து (Central Bank) அரசு கடன் வாங்கும் போதும் ஏற்படலாம். ஆதலின், நிதிப்பற்றாக் குறையினை இயல்பான முறையில் பெறப்படும் கடன்கள் மூலமாகவும் அரசின் சொத்துகளை விற்பதன் மூலமாகவும் ஈடுகட்டும்போது பணவீக்கம் ஏற்படாது.

அரசாங்க வரவு-செலவுத் திட்டங்களில் ஏற்படும் நிதிப்பற்றாக் குறையினைப் ''பண வாட்டக் கொள்கை'' (Deflationary Policy) யைப் பின்பற்றுவதன் மூலமாகவோ 'நாணய மதிப்பின் மீட்டுயர்வு' (Reflationary Policy) கொள்கையினைப் பின்பற்றுவதன் மூலமாகவோ போக்கலாம். பணவாட்டக் கொள்கை, செலவினங்களைக் குறைத்து வரவினங்களைப் பெருக்கும். இக்கொள்கையினால் விலைவாசிகளின் வீழ்ச்சி ஏற்படும். நாணய மதிப்பின் மீட்டுயர்வுக் கொள்கையைப் பின்பற்றும்பொழுது விலைவாசிகளின் ஏற்றத்தினால், வாணிகமும் தொழிலும் மிகுதியும் வளரும். அதனால், அரசின் வரவினங்களும் பெருகும். பணவாட்டக் கொள்கையினைப் பின்பற்றுவதால், பல இடர்ப்பாடுகள் ஏற்படலாம். இக்கொள்கையினால் விலைவாசிகளின் வீழ்ச்சி தொடர்ந்து ஏற்படலாம். அது தனிப்பட்டவர்களின் வரவு-செலவுத் திட்டங்களைத் தாக்கும். பொது மக்களிடையே இக்கொள்கைக்கு எதிர்ப்பும் கிளம்பும். ஆனால், நாணய மதிப்பின் மீட்டுயர்வுக் கொள்கை பொருளாதார விரிவாக்கக் (Expansionist Policy) கொள்கையாகும். இக்கொள்கையைப் பின்பற்றுவதால் விலைவாசிகள் ஏற்றமுறும். நாணயப் புழக்கமும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும். ஆகையால் பொருளாதாரத்தினைக் கட்டுப்படுத்தும் கொள்கையினைவிட (Restrictionist Policy) விரிவாக்கம் செய்யும் கொள்கையே நலம் பயப்பதாகக் கருதப்படுகின்றது.

அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவினங்களை ஏற்கும் பொழுது, கருதப்பட வேண்டிய ஓர் அடிப்படைக் கோட்பாட்டினையும் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட மூலதனச் செலவினால் ஏற்படும் சொத்து ஒரு சில ஆண்டுகளே நிலைக்கக்கூடியதாக இருக்குமானால், பெற்ற கடனையும், உரிய வட்டியையும் அந்தச் சொத்தின் ஆயுட் காலத்துக்குள் ஆண்டுத் தவணைகளில் செலுத்தி வர வகை செய்யவேண்டும் இனி வரும் தலைமுறையினருக்கும் பயன்தரும் சொத்து ஒன்றை ஏற்படுத்தும்போது, அதன் முழுப் பளுவையும் இந்தத் தலைமுறையினர் மீதே சுமத்தக்கூடாது.

அரசாங்க வரவு-செலவுத் திட்டக் கோட்பாடுகள், பல்லாண்டுகளாக அரசினராலும், உள்ளாட்சியினராலும், அறக்கட்டளைகளாலும், தனிப்பட்டவர்களாலும், தத்தம் அலுவல்களில் வெற்றியுடன் பின்பற்றப்பட்டவையாகும். அறம் வழுவாப் பொருளியல் பேரறிஞரான திருவள்ளுவரின் திருக்குறளிலும் அத்தகைய அடிப்படையான கோட்பாடுகள் பல அறிவுறுத்தப்பட்டிருக்கின்றன. தே.ந.

துணை நூல்கள் :


**Dr. Hugh, Dalton.**, ''Principles of Public Finance'', Allied Publishers, New Delhi, 1978.

**Hicks, Ursula, K.**, ''Development Finances: Planning and Control'', Clarendon Press, Oxford, 1965.

**Joseph L. Hebert, Ed.**, ''Experiences in Zero-Base Budgeting'', PBI (a Petrocell Book), New York, 1977.

**Raja J. Chelliah.**, ''Fiscal Policy in Underdeveloped Countries with Special Reference to India'', George Allen and Unwin (India) Private Ltd, Bombay, 1976.

**அரசாங்க வரவு-செலவுத் திட்டம்** என்பது, அரசாங்கத்தின் ஒரு குறிப்பிட்ட நிதி ஆண்டிற்கான "ஆண்டு நிதி நிலை அறிக்கை" (Annual Financial Statement) ஆகும். ஆண்டுக்கொரு முறை உருவாக்கப்படும் இத்திட்ட அறிக்கை, அடுத்த ஆண்டிற்கான செலவினங்களையும், எதிர் பார்க்கப்படுகிற வரவினங்களையும் மதிப்பீடு செய்து, சுருக்கமான முறையில் அரசின் நிதி நிலையினைத் தெரிவிக்கும் ஒரு ஆவணமாகும். ஆகவே, அரசாங்க வரவு-செலவுத் திட்டம், சிக்கனம், நிருவாகத்தில் ஒழுங்குமுறை ஆகியவற்றைக் கடைப்பிடிக்க அரசாங்கத்திற்கு இன்றியமையாத ஒரு கருவியாக இருக்கிறது. அரசாங்கத்தின் செலவுகளையும் வருவாய்களையும் சட்டமன்றம், தக்க அளவுக்குக் கண்காணிக்கவும் இத்திட்டம் பயன்படுகிறது. இந்தியாவில் வரவு-செலவுத் திட்டங்கள், ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான ஒரு நல்ல கருவியாகவும் உதவுகின்றன. மேலும், வரவு-செலவுத் திட்ட உரை (Budget Speech) அரசாங்கத்தின் கொள்கை விளக்க அறிக்கையாக அமைந்து, மக்கள் ஆண்டுதோறும் பிப்பிரவரி மாதக் கடைசி வாரம் அல்லது மார்ச்சு மாதம் முதல் வாரத்தில் ஆவலுடன் எதிர்பார்க்கும் ஒரு சிறந்த அரசு ஆவணமாக விளங்குகிறது. அரசின் கொள்கை பற்றிய பொதுமக்களின் கருத்துரைகளை அரசு பெறுவதற்கு இந்த அறிக்கையும் வரவு-செலவுத் திட்ட உரையும் உதவுகின்றன.

**நிதிநிலை அறிக்கை உரை:** இதன் தலையாய நோக்கம், அரசின் கொள்கைகள், பணித் திட்டங்கள் ஆகியவை, எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதையும், வரவு-செலவுத் திட்ட ஆண்டில் மேலும் அவற்றை எப்படிச் செயற்படுத்துவது என்பதையும் குறிப்பிடுவதாகும்.

**கொடை வேண்டல்களும் விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும்:** இது ஒரே முழு ஆவணமாகவோ பகுதி பகுதியாகவோ வெளியிடப்படும். இதன் முன்னுரை நூலின் பொருளடக்கமாக உள்ளது.

**வருவாய் வரவு-செலவுத் திட்டம்:** இதனுள் வருவாய்க் கணக்கிலுள்ள வரவினங்களின் மதிப்பீடுகள் தரப்படுகின்றன. இப்போதைய வரிகள் மூலம் கிடைக்கக் கூடிய வருவாய் மதிப்பீடுகள் (Estimates of Revenue), அரசின் வணிக நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஆதாயம் (Profits), அரசு முதலீடுகளுக்குக் கிடைக்கும் வட்டி (Interest), இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் கொடைகள் (Grants) முதலியன சேர்ந்தது அரசின் ஆண்டு வருமானம்.

**ஆண்டுத் திட்டம்:** ஐந்தாண்டுத் திட்டப் பணிகளுக்கான செலவு, வெவ்வேறு கொடைகளுடன் விரிவான மதிப்பீடுகளில் கொடுக்கப்படுகிறது. வெவ்வேறு திட்டப் பணிகளுக்காகச் செய்துள்ள நிதி ஒதுக்கீட்டைப் பார்த்தவுடன் கண்டு கொள்ள, இந்தத் தனி ஆவணமும் உருவாக்கப்படுகிறது.

**திட்டச் செயலாக்க விளக்க அறிக்கைகள்:** நல வளர்ச்சிப் பணிகள் பெருகி வருவதன் சிறப்புத் தன்மையைக் கருத்தில் கொண்டு, செலவையே நோக்கமாகக் கொண்ட, ஒரு தலைநோக்காக அமைந்த வரவு-செலவுத் திட்ட அமைப்பு முறை, பல்வேறு பணித் திட்டங்களின் கீழ் ஆற்றிய செயலாக்கங்களை விரிவாகச் சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்வதற்குத் தகுந்ததாயில்லை. ஆகவே, ஒவ்வொரு துறையின் திட்டங்களுக்கும் பணிகளுக்கும் திட்ட இலக்குகளுக்கும், திட்டச் செயலாக்கங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கும் திட்டச் செயலாக்க விளக்க அறிக்கைகளை (Performance Budgets) உருவாக்கவேண்டும். இயல்பான வரவு-செலவுத் திட்ட அறிக்கை தொடர்பான ஆவணங்களைத் தவிர, ஒரு சில இன்றியமையாத வளர்ச்சித் துறைகளின் செயலாக்கங்களைப் பற்றிய "திட்டச் செயலாக்க விளக்க அறிக்கைகளும்" இப்போது இந்தியாவில் வெளியிடப்படுகின்றன.

இந்திய நாட்டின் அரசியலமைப்பில் எந்த இடத்திலும் "பட்செட்" (Budget) என்னும் சொல் பயன்படுத்தப்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு, இங்கிலாந்தின் நிதி அமைச்சர், ஆண்டு நிதிச் செயற்குறிப்புகளை ஒரு தோல் பையில் எடுத்துக் கொண்டு மக்களவைக்குச் (House of Commons) சென்றார். அத்தோல் பைக்குத்தான் 'பட்செட்' என்று பெயர். இந்தப் பைக்கு உரிய பெயர் நாளடைவில் பழக்கம் காரணமாக அதன் உள்ளே இருந்த ஆண்டு நிதிச் செயற்குறிப்புகளுக்கு ஆகுபெயராக மாறியது. இந்திய அரசியலமைப்பில் "பட்செட்" என்பதற்கு "ஆண்டு நிதி நிலை அறிக்கை" என்னும் பெயரே கொடுக்கப்பட்டுள்ளது. எனினும், இந்திய நாட்டு மக்களிடையே பொதுவாகப் "பட்செட்" என்னும் சொல்லே பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது.

**வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்படும் முறையும் செயற்படுத்தப்படும் முறையும்:** வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்க, ஒவ்வொரு நாட்டிலும் அந்நாட்டின் அரசியல் அமைப்புக்கு ஏற்ற ஒரு முறை பின்பற்றப்படுகிறது. இந்தியா ஒரு கூட்டரசு (Federal Government). எனவே, மத்திய அரசும் மாநில அரசும் தனித்தனியே வரவு-செலவுத் திட்டங்களை உருவாக்குகின்றன. மத்திய அரசின் திட்டம் நாடாளுமன்றத்திலும், மாநில அரசுகளின் திட்டங்கள் தொடர்புடைய சட்டமன்றங்களிலும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன. இந்தியாவின் நிதியாண்டு ஏப்பிரல் முதல் தேதி முதல் மார்ச்சு 31-ஆம் தேதி வரையிலான காலமாகும். இந்திய இரயில்வே நிறுவனத்திற்

கும் அதுபோன்ற ஒரு சில நிறுவனங்களுக்கும் தனியே வரவு - செலவுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன.

பொதுவாக, வரவு-செலவுத் திட்டம் மூன்று நிலைகளில், உருவாக்கமும் செயலாக்கமும் பெறுகிறது. இந்தியாவில் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்குவதற்கான பணிகள், பெரும்பாலும் தலைமைச் செயலக நிதித் துறையில் அக்டோபர்த் திங்களில் தொடங்கப்படுகின்றன. பல்வேறு துறைத் தலைவர்களிடமிருந்து, குறிப்பிட்ட நாளுக்கு முன்னதாக வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் பெறப்பட்டு, நிதித் துறையில் ஆய்வு செய்யப்பட்டு, அமைச்சரவையால் முடிவு செய்யப்படுகின்றன.

இப்போது நடைபெற்று வரும் பணிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு வரவு-செலவுத் திட்டத்தின் முதற் பகுதியிலும், புதிய திட்டங்களைத் தொடங்குவதற்கு இரண்டாம் பகுதியிலுமாகச் செலவுத் தேவைகள் வைக்கப்படுகின்றன. முன்பு கிடைத்த வருமானத்தைக் கருத்தில் கொண்டு, நிதித்துறை அந்த ஆண்டில் கிடைக்கக் கூடிய வருவாயை மதிப்பிடுகிறது. இப்போதைய பணிகளை நீட்டிக்கத் தேவையான அளவுக்கு வகை செய்து, வரவு-செலவுத் திட்டத்தின் 1-ஆம் பகுதியை, நிதி அமைச்சரே அப்போதைக்கு முடிவு செய்து, பின்னர் ஒப்புதலுக்கு அமைச்சரவை முன் வைக்கிறார். வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்கும் பணியில் சிறந்த கட்டம் புதிய திட்டச் செலவுகள் பற்றிய ஆய்வேயாகும். அண்மைக் காலத்தில் இதற்காக மீதமிருக்கும் தொகை மிகவும் குறைவாகவும் திட்டங்கள் பலவாகவும் உள்ளன. நல அரசுக் கோட்பாடு வலியுறுத்தப்படுவதும், நாட்டுத் திட்டத்தில் பல திட்டங்கள் சேர்க்கப்படுவதும் பல துறைத் தலைவர்களின் வேண்டுகோள்களாகும். ஆனால், கிடைக்கக்கூடிய நிதி வசதிகளுக்குள், அரசு தனதுசெலவுகளை அடக்கிக் கொள்ள வேண்டும். திட்டங்களைத் தெரிந்தெடுக்கும் பணியைத் தொடர்புள்ள செயலகத் துறைகள் முதலில் செய்கின்றன. பின்னர்த் தெரிந்தெடுக்கப்பட்ட திட்டங்கள் நிலை நிதிக் குழுவின் (Standing Finance Committee) ஆய்வுக்கு உட்படுகின்றன. முதலமைச்சர் அந்தக் குழுவிற்குத் தலைமை தாங்குகிறார். இன்றியமையாதவை என்று நிலை நிதிக்குழு கருதும் திட்டங்கள், வரவு-செலவுத் திட்டத்தின் 2-ஆம் பகுதியில் சேர்க்கப்பட்டு, அமைச்சரவை முன் வைக்கப்படுகின்றன. இவை "இரண்டாம் பகுதித் திட்டங்கள்" எனப்படும். இதற்கிடையே, இப்போதுள்ள வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய்க்கும், வரவு-செலவுத் திட்டத்தின் 1, 2-ஆம் பகுதிகளுக்கான செலவிற்கும் இடையேயுள்ள இடைவெளியை ஈடுகட்டக் கூடுதல் வரி விதிப்புச் செயற் குறிப்புகளை நிதித்துறை ஆராய்கிறது. இப்புதிய வரித் திட்டங்கள் அமைச்சரவையால் ஆய்வு செய்யப்பட்டு, குறைக்கக் கூடிய செலவினங்கள், விதிக்கக் கூடிய புதுவரிகள் ஆகியவை பற்றி இறுதி முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பின்பு வரி விதிப்புச் சட்ட வரைவுகள் உருவாக்கப்பட்டு, வரவு-செலவுத் திட்டம் மக்கள் அவையில் வைக்கப்பட்டு வெளியிடப்படுகிறது. வரவு-செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தின் முன் வைக்கும் வரை, அதனை மறைபொருளாக வைத்திருப்பதன் நோக்கம், புதிய வரி விதிப்புத் திட்டங்கள் பொது மக்களுக்குத் தெரியாமல் இருக்க வேண்டும் என்பதேயாகும். புதிய வரிகள் பல, பங்கு அங்காடியின் நிலையையும் அன்றாடத் தேவைப் பொருள்களின் விலைகளையும் பாதிக்கக்கூடியவை. அவற்றைப் பற்றிய விவரங்கள் முன்பாகவே வெளியாகுமானால், சமூக விரோத சக்திகள் பண்டங்களைப் பதுக்கி வைத்துக் கொள்ள ஏதுவாகும். அமைச்சரவையால் முடிவு செய்யப்பட்ட வரவு செலவுத் திட்டமும் அதனைச் சார்ந்த பிற வெளியீடுகளும் வழக்கமாக, பிப்பிரவரித் திங்கள் கடைசி வாரத்தில் அல்லது மார்ச்சுத் திங்கள் முதல் வாரத்தில் நாடாளுமன்றத்தில் அல்லது தொடர்புடைய சட்ட மன்றங்களில் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றன. நிதி ஒதுக்கச் சட்ட வரைவு (Appropriation Bill), புதிய நிதி ஆண்டு தொடங்குவதற்கு முன்னதாக அதாவது, ஏப்பிரல் முதல் தேதிக்கு முன்னதாக நிறைவேற்றப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்துக்கு முன்பு முழு ஆண்டுக்குமான நிதி ஒதுக்கச் சட்ட வரைவை நிறைவேற்ற இயலாவிட்டால், புதிய ஆண்டின் முதல் சில திங்களுக்கான நிருவாகத் தேவைகள், சட்டமன்றத்திலிருந்து முன்பணம் ஒன்றைப் பெறுவதன் மூலம் நிறைவு செய்யப்படுகின்றன. "உடனடிச் செலவுக்கான கொடை அனுமதி" (Vote on account) மூலம் பெறப்படும் இத்தொகை, நிதி ஒதுக்கச் சட்ட வரைவில் ஒதுக்கியுள்ள தொகையுடன் பின்னர்ச் சேர்க்கப்படுகிறது. நாடாளுமன்றம் அல்லது தொடர்புடைய சட்டமன்ற ஒப்புதல் பெறுதல் மிக இன்றியமையாததாகும். அரசு செய்யும் செலவுகள் அனைத்தும், நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தின் திட்டவட்டமான ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும் என்பது நாடாளுமன்ற அரசு முறையின் தலையாய கொள்கையாகும். பணம் சம்பந்தப்பட்டவரை, நிருவாகத்தினர் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் விருப்பங்களை நிறைவேற்றும் பேராளர்களேயாவர். நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றக் கூட்டம் எல்லாக் காலங்களிலும் நடந்து கொண்டிருப்பதென்பது இயலாத ஒன்று, நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும்

அன்றாடம், அரசின் பல்வேறு துறைகளில் இலட்சக் கணக்கில் ஏற்படக்கூடிய வரவு-செலவுகளை ஆராய்ந்து கொண்டிருப்பதென்பதும் நடைமுறையில் இயலாது. ஆதலின், வரப்போகும் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்க வேண்டும் என்னும் முறை வகுக்கப்பட்டது. வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம், கொடை வேண்டுதல்கள் மீது வாக்கெடுப்பு, நிதி ஒதுக்கச் சட்ட முன்வரைவு நிறைவேற்றம் முதலிய சட்டப்படியான நடவடிக்கைகள் மூலம் நிதி நிலை அறிக்கையை ஆராயவும் மாற்றவும் திருத்தவும் முடிவாகத் தன் ஒப்புதலை அளிக்கவும் நாடாளுமன்றத்திற்கு அல்லது சட்டமன்றத்திற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை முடிந்ததும் அடுத்த நிலையான ஆட்சியாளர் வழி வகுத்தல் (Executive Implementation) தொடங்குகிறது. குடியரசுத் தலைவர் அல்லது தொடர்புடைய மாநில அரசின் ஆளுநருடைய ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், நிதி நிலை அறிக்கையில் குறிப்பிட்ட நிதி வரம்புக்குட்பட்டுச் செயற்பட, நிருவாகத்தினருக்குப் போதிய அதிகாரமளிக்கப்படுகிறது.

**வரவு-செலவுத் திட்டத்தின் உட்பிரிவுகள்:** இந்தியாவில் நடைமுறையிலுள்ள அரசாங்க வரவு-செலவுத் திட்டம், வருவாய் வரவு-செலவுத் திட்டம், மூலதன வரவு செலவுத் திட்டம் என இருபிரிவாக உருவாக்கப்படுகிறது. இப்போதைய வரிகள் மூலம் கிடைக்கக்கூடிய வருமான மதிப்பீடு, அரசின் வணிக நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் ஆதாயம், அரசு முதலீடுகளுக்குக் கிடைக்கும் வட்டி, இந்திய அரசிடமிருந்து கிடைக்கும் கொடை ஆகியவை அனைத்தும் சேர்ந்து அரசின் ஆண்டு வருவாய் ஆகிறது. இவ்வாறே அரசின் பல்வேறு துறைகளை நடத்த ஆகும் செலவு, அரசு வாங்கிய கடன்களுக்கு வட்டி, கடன்களைத் தீர்க்கத் தொகை கொடுத்தல், பஞ்சத்துயர் தணிப்பு, நிலக்கிழார்களுக்குச் சேர வேண்டிய ஈட்டுத் தொகை நிலுவை முதலியவற்றின் மதிப்பீடுகள் ஆகியவை வருவாய்க் கணக்குச் செலவினங்கள் (Revenue Account Disbursement) எனப்படும். வருவாய்க் கணக்குச் செலவினங்கள் என்பதில் அடங்கும் மொத்தச் செலவை, வருவாய்க் கணக்கு வரவினங்கள் என்பதில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த வருவாயிலிருந்து கழித்தால், ஆண்டுக்கான "வருவாய் மிகுதி" (Revenue Surplus) கிடைக்கிறது. வருவாயை விடச் செலவு மிகுதியாக இருக்குமானால், "வருவாய்ப் பற்றாக்குறை" (Revenue Deficit) ஏற்படுகிறது.

மூலதனக் கணக்குகள் (Capital Accounts), வருவாய்த் திட்ட மதிப்பீட்டின் கீழ் வாராத அரசு வரவு செலவுகளைக் குறிப்பிடுகின்றன. வருவாய் தரக்கூடிய அல்லது தொடர் செலவைத் (Recurring Expenditure) தவிர்க்கிற முறையில், ஒரு நிலையான சொத்தினை உருவாக்கவோ அடையவோ செய்யப்படும் செலவு, மூலதனச் செலவாக வகைப்படுத்தப்படுகிறது. அரசுக்கு வருவாய் தரும் இனங்களாக இருப்பதாலும் நிலையான உடைமைகளாதலாலும் பாசனத் திட்டங்கள் இப்பிரிவின் கீழ் வருகின்றன. கட்டிடங்களும் மூலதனச் சொத்தாகக் கருதப்படும். அரசின் ஆண்டு வருவாயிலிருந்து மூலதனச் செலவுகளைச் செய்து கொள்ளலாம். அன்றிப் பொது மக்களிடமிருந்தோ மத்திய அரசிடமிருந்தோ வேறு வகையிலோ கடன் பெறுகிற பணத்தின் மூலமும் இதனைச் செய்யலாம்.

ஓர் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம், வருவாய்க் கணக்கும், மூலதனக் கணக்கும் சமன்படுத்தப்பட்டிருந்தாலொழிய, சாதாரண நிதிக் கோட்பாடுகளை யொட்டி நடந்ததாகாது. வருவாய்த் திட்ட மதிப்பீட்டில் கண்டுள்ள இயல்பான நிருவாகச் செலவுகளுக்கு மட்டுமன்றி, மூலதனக் கணக்கில் கூறப்பட்ட மூலதனப் பணிகளுக்கான செலவுகளுக்கும் அரசு வகை செய்ய வேண்டும். இச் செலவினங்களுக்கெல்லாம் தொகை ஒதுக்கிய பிறகு, ஆண்டு முடிவில், இறுதி இருப்பாகக் குறிப்பிட்ட அளவுள்ள தொகை யாவது அரசிடம் இருக்க வேண்டும். வருவாய்க் கணக்கில் பற்றாக் குறையோ உபரியோ இருக்கலாம். ஆனால், எல்லாக் கணக்குகளையும் சேர்த்துப் பார்க்கும்போது பற்றாக்குறை இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால், அதிகப்பற்று (Over Draft) வாங்க வேண்டிவரும்.

**எதிர்பாராச் செலவு நிதியும் துணை நிதிநிலை அறிக்கையும்:** ஆண்டு நடப்பின்போது, மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்படாத சில புதிய செலவுகள் ஏற்படலாம். அவ்வேளைகளில் மீண்டும் சட்டமன்றம் கூட்டப்பட்டு அதற்கு ஒப்புதல் பெறும் வரை அந்தச் செலவுகளை ஒத்திப் போட முடியாது. அப்பொழுது நாடாளு மன்றம் அல்லது சட்டமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி, நிருவாகம் இத்தகைய திடீர் தேவைகளுக்கெனத் தனியாக வைக்கப்பட்டுள்ள 'எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து' (Contingency Fund) பணம் எடுத்துக் கொள்ளலாம். அதற்குப்பின் கூடும் நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தின் கூட்டத் தொடரில் 'துணை நிதி நிலை அறிக்கை' (Supplementary Financial Statement) ஒன்று வைக்கப்படுகிறது. போதிய ஒப்புதல் பெறாமல் செய்யப்பட்ட செலவு விவரங்களும் அதில் தெரிவிக்கப்படுகின்றன. இந்தத் துணைக் கொடை வேண்டுகோள்கள் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தால் ஏற்கப்பட்டதும் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து எடுக்கப்பட்ட பணம் மீண்டும் அந்நிதியில் சேர்க்கப்படுகிறது.

புதுப்பணிகளுக்குப் பணம் பெறும் முறை: வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாத செலவினங்களை ஆண்டு நடப்பின்போது அரசு அனுமதிப்பது என்ற வழக்கம், நாடு விடுதலை அடைவதற்கு முந்தைய காலத்தில் இல்லை. வளர்ச்சித் துறைகள் புதிய திட்டங்களை மிகுதியாக நிறைவேற்ற வேண்டியுள்ளதால், அந்த நிலை இப்போது மாறிவிட்டது. இந்நாளில் புதிய பணித்திட்டங்களை அவ்வப்பொழுது நிறைவேற்றுவதன் தேவை தொடர்ந்து உணரப்பட்டு வருகின்றது. எனவே, ஆண்டு நடுவில் தேவையான பணிகளுக்கு ஆணை வழங்குவது தவிர்க்க முடியாததாகியுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்படாத இத்தகைய ஆணைகளுக்கு நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் ஒப்புதல் அளிப்பதுதான் முறை. ஆனால், நடைமுறையில் ஒவ்வொரு செலவினத்துக்கும் நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றத்தில் தனித்துணைக் கொடை வேண்டுகோள் கொண்டு வருவதென்பது இயலாது. எனவே, சட்டமன்றப் பொதுக் கணக்கு ஆய்வுக்குழு, இது குறித்து விதிகளை வகுத்திருக்கிறது. ''புதுப்பணிகள்'' என்னும் தலைப்பில் சட்டமன்றத்தின் தனி ஒப்புதல் பெறவேண்டிய இனங்கள் எவை என்பது பற்றிப் பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் உரூ. 5 இலட்சத்துக்குமேல் செலவாகக்கூடிய பணிகள், ஆண்டிற்கு உரூ. 2 இலட்சம் தொடர்ந்து செலவாகும் புதுப்பணியாளர் அமைப்புகள், எந்தப் புதியதொரு செயல் நோக்கத்திற்கும் அதன் செலவு எவ்வளவு சிறியதானாலும் கடன் அளித்தல், புதிய அரசுத்துறை வணிக நிறுவனம் அமைத்தல் ஆகியவை எல்லாம் ''புதுப்பணிகள்'' என்பதனுள் அடங்கும். புதுப்பணிகளாக இல்லாத தனிச் செலவினங்களைப் பொறுத்த வரையில், பொது வரவு-செலவுத் திட்டத்தில் பொருத்தமான தலைப்பின் கீழ் முன்னரே ஒப்புதலளிக்கப்பட்ட கொடையிலிருந்து ஈடுகட்ட முடியாமல் இருக்கும் அளவிற்கு மட்டும் மொத்தமாகச் சட்டமன்றத்தில் ஒப்புதல் பெற வேண்டும்.

வரவு-செலவுத் திட்டத்தின் சிறப்புக் கூறுகள்: அரசாங்கத்தின் எல்லாச் செலவினங்களுக்குமான பணம் ஒரே ஒரு ''தொகு நிதியிலிருந்து'' (Consolidated Fund) பெறப்படுகிறது. அரசின் வருவாய்க் கணக்கு வரவினங்கள் அனைத்தும், அதாவது, அரசின், உரிய ஆண்டுக்கான இயல்பான வருமானம், தொகு நிதியின் ஒரு பகுதியாக அமைகிறது. வங்கிகளிடமிருந்தும் இந்திய அரசிடமிருந்தும் பொது மக்கள் முதலானோரிடமிருந்தும் வாங்கப்படும் கடனும், இத்தொகுநிதியில் சேருகிறது. கடன் திருப்பிச் செலுத்தப்படுகிற வகையில் அரசுக்குக் கிடைக்கும் பணமும் தொகு நிதியில் சேர்க்கப்படுகிறது. இந்த ஆதாரங்களிலிருந்து கொடுக்கப்படும் தொகைகள் யாவும் தொகு நிதித் தலைப்பில் காட்டப்படும். ஆனால், தொகு நிதியிலிருந்து செய்யப்படும் செலவுகள் எல்லாம் சட்டமன்றத்தின்முன் வைக்கப்பட்டு, அதன் ஒப்புதலைப்பெற வேண்டுமென்பதில்லை. எடுத்துக்காட்டாக, ''சாட்டிய செலவுகளுக்கு'' (Charged Expenditure) சட்ட மன்றத்தின் அனுமதி தேவையில்லை. இச்சாட்டிய செலவுகள் தொகு நிதியில் முதல் பொறுப்பாக இருப்பவை. குடியரசுத் தலைவர், ஆளுநர், சட்டமன்றப் பேரவைத் தலைவர், சட்டமன்ற மேலவைத் தலைவர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், அரசு அலுவலர், தேர்வு ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் ஊதியம் போன்றவை இதில் அடங்கும். நீதிமன்றத்தில் அரசுக்கு எதிராகத் தீர்ப்புக் கூறப்பட்ட தொகைகளும் சாட்டிய செலவில் வரும்.

அரசின் எல்லாச் செலவினங்களையும் எல்லா வரவினங்களையும் ஒன்றுவிடாமல் கணக்கில் எடுத்துக்கொண்டு, எல்லாவற்றையும் உள்ளடக்கி ஒருங்கிணைத்த ஒரு திட்டமே அரசாங்க வரவு-செலவுத் திட்டம். அது ஒரு குறிப்பிட்ட அரசின் ஓராண்டிற்கான ஒட்டு மொத்தமான வரவு-செலவுத் திட்டமாக அமைதல் வேண்டும்.

அரசாங்க வரவு-செலவுத் திட்ட வகைகள்: அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் பல வகைகள் உள்ளன. ஆனால், வருவாய்க் கணக்கு வரவு-செலவுத் திட்டம் (Revenue Account Budget), மூலதனக் கணக்கு வரவு-செலவுத் திட்டம் (Capital Account Budget) ஆகிய இரண்டும் பொது வரவு-செலவுத் திட்டத்தின் இரு பகுதிகளாகும். பொதுவாக, அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்கள் யாவும் இந்த இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகின்றன. இந்தியாவில் இந்த இரு முறைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இவை இரண்டும், ஒருங்கிணைந்த ஒரே ஒரு வரவு-செலவுத் திட்டமாகத்தான் உருவாக்கப்படுகின்றன. சில நாடுகளில் இவை தனித்தனித் திட்டங்களாகவும் வெளியிடப்படுவதுண்டு. அரசாங்கத்தின் செலவினங்களையும் அச்செலவினங்கள் மூலம் அடைந்த சாதனைகளையும் அறிவிக்கும் சாதனைத் திட்டங்கள், அமெரிக்க நாட்டில் பின்பற்றப்படுகின்றன. இந்திய நாட்டிலும், குறிப்பாகத் தமிழ் நாட்டில் இச்சாதனைத் திட்டங்கள் இப்பொழுது உருவாக்கப்படுகின்றன.

பொருளாதார ஆய்வுக்காக வரவு-செலவுத் திட்டங்களை இரு வகையாக உருவாக்கலாம். அவை, பண முறை வரவு-செலவுத் திட்டங்கள் (Financial Budgets), பொருள் இலக்கு முறை வரவு-செலவுத் திட்டங்

கள் (Physical Targets Budgets) என்பனவாம். திட்டக் குழுவினர் நாட்டின் வளர்ச்சிக்கான நீண்ட காலக் கொள்கைகளை முடிவு செய்வதற்கு இவ்வகைத் திட்டங்கள் உதவும்.

"முழுவேலை வாய்ப்பு வரவு-செலவுத் திட்டம்" (Full Employment Budgets) என்றும், "வாணிகச் சுழல் வரவு-செலவுத் திட்டம்" (Trade Cyclical Budget) என்றும், "அவசரக்கால வரவு-செலவுத் திட்டம்" (Emergency Budget) என்றும் மேலும் சில வகைத் திட்டங்கள் உள்ளன. நாட்டில் முழுவேலை வாய்ப்பு நிலையினை உருவாக்கி நாட்டிலுள்ள உழைப்பு ஆற்றலைக் கணக்கிட்டு, மனித ஆற்றலைப் பெரும்பாலும் பயன்படுத்தும் அடிப்படையில், செலவினங்கள் அமைக்கப்படும் வரவு-செலவுத் திட்டம் "முழுவேலை வாய்ப்பு வரவு-செலவுத் திட்டம்" என்று சொல்லப்படும். ஓர் ஆண்டுக் காலத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் ஒரு வாணிகச் சுழலின் காலத்துக்காக உருவாக்கப்படும் வரவு-செலவுத் திட்டம், "வாணிகச் சுழல் வரவு-செலவுத்திட்டம்" எனப்படும். ஆனால், இத்தகைய திட்டம் இப்பொழுது எங்கும் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. இம் முறையினை முன்பு மேற்கொண்ட சுவீடன் நாடும் பின்னர் அதனைக் கைவிட்டது. எதிர்பாராத பொருளாதார நெருக்கடி காரணமாகவோ போர்க்கால அவசரநிலை காரணமாகவோ வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கையின் கொடிய இன்னல்களாலோ இயல்பான வரவு-செலவுத் திட்டத்தினை அப்பொழுதைக்குக் கைவிட்டு, பொருளாதார அவசர நிலையைக் கருத்திற் கொண்டு விரைந்து செயலாற்ற உடனடியாக உருவாக்கப்படும் வரவு செலவுத் திட்டமே "அவசரக்கால வரவு-செலவுத் திட்டமாகும்".

**இந்திய அரசாங்க வரவு-செலவத் திட்டம்:** நாடாளுமன்றம், மாநிலச் சட்டமன்றங்கள் ஆகியவற்றின் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடர்கள் பிப்பிரவரி அல்லது மார்ச்சுத் திங்களில் தொடங்கும். புதிய வரிகள் பற்றிய அறிவிப்பும் வரவு-செலவுத் திட்ட உரையில் கொடுக்கப்படும். வரவு செலவுத் திட்டத்தில் முந்தைய ஆண்டின் வரவு செலவுகளின் கணக்குகளும் (Accounts or Actuals), நடப்பு ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் (Revised Estimates), வருகின்ற ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும் (Budget Estimates) இடம்பெறும்.

கீழ்வரும் அட்டவணைகளிலிருந்து 1950-51 நிதியாண்டிலும் 1984-85 நிதியாண்டிலும் இந்திய அரசின் வரவு-செலவுத் திட்ட நிலையினை அறியலாம்.

அட்டவணை — I

இந்திய அரசின் வரவு-செலவுத் திட்ட நிலை

| இனம் | உரூபாய் கோடிக் கணக்கில் | |
|---|---|---|
| | 1950 - 51 (கணக்குகள்) | 1984 - 85 (திட்ட மதிப்பீடுகள்) |
| (1) | (2) | (3) |
| 1) வருவாய்க் கணக்கு: | | |
| அ) வரவுகள் | 405.86 | 23,744 + 273* |
| ஆ) செலவுகள் | 346.64 | 26,342 |
| இ) பற்றாக்குறை (—) அல்லது உபரி (+) | (+) 59.22 | (—) 2,598 + 273* |
| 2) மூலதனக் கணக்கு | | |
| அ) வரவுகள் | 106.03 | 16,757 |
| ஆ) செலவுகள் | 184.17 | 16,194 |
| இ) பற்றாக்குறை (—) அல்லது உபரி (+) | (—) 78.14 | (+) 563 |
| 3) நிகரப் பற்றாக்குறை: | (—) 3.66 | (—) 1,762 |

(* வரவு-செலவுத் திட்டச் செயற்குறிப்புகளின் விளைவுகள்)

அட்டவணை — II
இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டம்
(ஒரு கண்ணோட்டம்)

| இனம் (1) | 1983–84 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (2) | 1983–84 திருத்த மதிப்பீடு (3) | 1984-85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு (4) |
|---|---|---|---|
| | | (உருபாய் | கோடிக்கணக்கில்) |
| I வருவாய்க் கணக்கு வரவுகள்: | | | |
| 1) வரி வருவாய் | 20,638 | 20,946 | 22,993 + 194* |
| 1 (க) வரி வருவாயில் மாநிலங்களின் பங்குத்தொகை | 5,178 | 5,246 | 5,739— 79* |
| 1 (உ) நிகர வரி வருவாய் | 15,460 | 15,700 | 17,254 + 273* |
| 2) வரி அல்லாத வருவாய் | 5,134 | 5,264 | 6,490 |
| வருவாய்க் கணக்கு வரவுகள் –மொத்தம் | 20,594 | 20,964 | 23,744 + 273* |
| II வருவாய்க் கணக்குச் செலவுகள்: | | | |
| 1) பொதுவான பணிகள் | 7,173 | 7,008 | 8,306 |
| 2) பாதுகாப்புப் பணிகள் | 5,364 | 5,754 | 6,076 |
| 3) சமூக, சமுதாயப் பணிகள் | 1,444 | 1,478 | 1,677 |
| 4) பொருளாதாரப் பணிகள் | 4,194 | 4,451 | 5,094 |
| 5) மாநிலங்களுக்கு உதவி, கொடைகள் முதலியன | 4,244 | 4,648 | 5,189 |
| வருவாய்க் கணக்குச் செலவுகள்–மொத்தம் | 22,419 | 23,339 | 26,342 |
| III மூலதனக் கணக்கு வரவுகள்: | | | |
| 1) கடன் மீட்பினங்கள் | 3,267 | 3,873 | 3,905 |
| 2) அங்காடிக் கடன்கள் (நிகரம்) | 4,000 | 4,000 | 4,100 |
| 3) சிறு சேமிப்புகள் (நிகரம்) | 1,700 | 2,200 | 2,400 |
| 4) வெளிக் கடன்கள் (நிகரம்) | 1,605 | 1,629 | 1,793 |
| 5) பிற வரவுகள் (நிகரம்) | 2,084 | 4,263 | 4,559 |
| மூலதனக் கணக்கு வரவுகள்– மொத்தம் | 12,656 | 15,965 | 16,757 |
| IV மூலதனக் கணக்குச் செலவுகள்: | | | |
| 1) பொதுவான பணிகள் | 235 | 737 | 227 |
| 2) பாதுகாப்புப் பணிகள் | 607 | 596 | 724 |
| 3) சமூக, சமுதாயப் பணிகள் | 223 | 246 | 322 |
| 4) பொருளாதாரப் பணிகள் | 3,718 | 4,663 | 4,921 |
| 5) கடன்களும் முன்பணங்களும் | 7,634 | 9,443 | 9,890 |
| மூலதனக் கணக்குச் செலவுகள்– மொத்தம் | 12,417 | 15,685 | 16,194 |

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| V வரவுகள் (பெரு மொத்தம்) (வருவாய்க் கணக்கு + மூலதனக் கணக்கு) | 33,250 | 36,929 | 40,501 + 273* |
| VI செலவுகள் (பெரு மொத்தம்) (வருவாய்க் கணக்கு + மூலதனக் கணக்கு) | 34,836 | 39,024 | 42,536 |
| VII வருவாய்க் கணக்கில் உபரி (+) அல்லது பற்றாக்குறை (–) | — 1,825 | — 2,375 | — 2,598 + 273* |
| VIII மூலதனக் கணக்கில் உபரி (+) அல்லது பற்றாக்குறை (—) | + 239 | + 280 | + 563 |
| XI நிகர உபரி (+) அல்லது பற்றாக்குறை (—) | — 1,586 | — 1,695 | — 1,762 |

* வரவு-செலவுத் திட்டச் செயற்குறிப்புகளின் விளைவுகள்.

மாநிலங்களின் அதிகப்பற்றுக் கணக்கில் ரூ. 400 கோடி வரவு உள்ளிட்டது.

அட்டவணை — II — A

இந்திய அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்தாண்டுத் திட்டச் செலவினத்தின் பங்கு

| 1984-85 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் | | |
|---|---|---|
| திட்டம் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
| (1) | (2) | (3) |
| (உருபாய் கோடிக் கணக்கில்) | | |
| 16,470 | 26,066 | 42,536 |

தமிழ்நாடு அரசின் வரவு-செலவுத் திட்டமும் பிற மாநில அரசுகளின் வரவு-செலவுத் திட்டங்களும்:

இவை பெரும்பாலும் மைய அரசின் வரவு-செலவுத் திட்ட அமைப்பினைப் பின்பற்றியே அமைந்துள்ளன.

தமிழக அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இருப்பவை கீழ்க்கண்டவையாகும்.

அறிக்கை I ... தமிழ்நாட்டின் தொகு நிதி: வருவாய்க் கணக்கு வரவினங்களும் செலவினங்களும்; மூலதனக் கணக்கு வரவினங்களும் செலவினங்களும்.

அறிக்கை I ... அ) தமிழ்நாட்டின் தொகு நிதிக்குச் "சாட்டப்படும்" செலவினங்கள்.

அறிக்கை II ... தமிழ்நாட்டின் எதிர்பாராச் செலவு நிதி: வரவினங்களும் செலவினங்களும்.

அறிக்கை III ... தமிழ்நாட்டின் பொதுக் கணக்கு: வரவினங்களும் செலவினங்களும்.

மேற்கூறிய அறிக்கைகளுக்குக் கீழ்க்காணும் விரிவான அறிக்கைகள் உறுதுணையாக உள்ளன. இவையும் இதே தொகுதியில் அச்சிடப்படுகின்றன.

I தமிழ்நாட்டின் தொகு நிதி (Consolidated Fund of TamilNadu)

அறிக்கை I ... வருவாய்க் கணக்கு - வரவினங்கள்
- (அ) வரி வருவாய்
- (ஆ) வரி வருவாய் அல்லாத பிற வருவாய்
- (இ) உதவிக் கொடைகளும் உதவித் தொகைகளும்

அறிக்கை I . வருவாய்க் கணக்குச் செலவினங்கள்:
- (அ) பொதுவான பணிகள்
- (ஆ) சமூக - சமுதாயப் பணிகள்
- (இ) பொருளாதாரப் பணிகள்
- (ஈ) உதவிக் கொடைகளும் உதவித் தொகைகளும்.

அறிக்கை I ... மூலதனக்கணக்கு - செலவினங்கள்
- (அ) பொதுவான பணிகளின் மூலதனக் கணக்கு.

(ஆ) சமூக சமுதாய நலப் பணிகளின் மூலதனக் கணக்கு.

(இ) பொருளாதாரப் பணிகளின் மூல தனக்கணக்கு.

அறிக்கை ... I வரவினங்களும் செலவினங்களும்:

(ஈ) பொதுக்கடன்.

(உ) கடன்களும் முன்பணங்களும்.

(ஊ) மாநிலங்களுக்கிடையிலான கடன் தீர்ப்பு ஏற்பாடு.

(எ) எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றுவது.

அறிக்கை ... I தமிழ் நாட்டின் தொகு நிதிக்குச் ''சாட்டப்படும்'' செலவினங்கள்:

அறிக்கை .. II தமிழ் நாட்டின் எதிர்பாராச் செலவு நிதி (Contingency Fund of Tamil Nadu).

அறிக்கை .. III தமிழ் நாட்டின் பொதுக் கணக்கு (Public Account of Tamil Nadu).

(ஏ) சிறு சேமிப்பு, வருங்கால வைப்பு நிதி முதலியவை.

(ஐ) சேம நிதிகள்.

(ஒ) அனாமத்தும் பல்வகையும்.

(ஓ) செலுத்தப்படுபவை (Remittances).

பொதுக்கணக்கு: வணிகர் ஒருவர் கருவூலத்திலும், வழக்குத் தொடரும் ஒருவர் நீதிமன்றத்திலும் ஒப்படைக்கும் தொகைகள் அரசுக்குச் சொந்தமானவையல்ல. ஆனால், அரசுப் பணத்தைப் போலவே இவற்றிற்கும் கணக்கு வைக்க வேண்டும். இதையொத்துப் பல்வகைக் கொடுக்கல் வாங்கல்கள், தொகு நிதியிலிருந்து வேறுபட்டுப் ''பொதுக்கணக்கின்'' (Public Account) கீழ் வைக்கப்படுகின்றன. இவை சாதாரண வங்கி அலுவல்கள் போன்றவையாதலால் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க நாடாளுமன்றம் அல்லது மாநிலச் சட்டமன்றத்தின் ஒப்புதலைப் பெறவேண்டிய தேவையில்லை.

கணக்குத் தலைப்பு: பொதுவான பணிகள், சமூக-சமுதாய நலப்பணிகள், பொருளாதாரப் பணிகள் போன்ற பல்வேறு ''பெருங் கணக்குத் தலைப்புகளின்'' கீழ் (Major-Heads of Account) அரசின் வரவினங்களும் செலவினங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பெருந் தலைப்பு ஒவ்வொன்றும் தனிப்பட்ட அலுவலைப் பொதுவாகக் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக, ''நிலவரி'', ''மருத்துவம்'' முதலியன பெருந்தலைப்பின் கீழ் ''உட் பெருந் தலைப்புகள்'' ஆகும். அந்த உட் பெருந்தலைப்புகள், திட்டங்களின் கிளை வகைப்பாட்டினைக் குறிக்கின்றன. ஒவ்வொரு ''பெருந் தலைப்பு'' அல்லது ''உட் பெருந் தலைப்பின்'' கீழ் உள்ள ''சிறு தலைப்புகள்'' தனிப்பட்ட திட்டங்களைக் குறிப்பிடுகின்றன. சிறு தலைப்பின்கீழ் உள்ள ''தொகுதி உள் தலைப்பு'' திட்டத்தில் சேராத பணிகளை அல்லது மாநிலத் திட்டப் பணிகளின் கீழ்ப் பல்வேறு திட்டப் பணிகளின் தொகுதி வகைப்பாட்டினைக் குறிக்கிறது. ஒவ்வொரு ''தொகுதி உள்தலைப்பின்கீழ்'' உள்ள ''உள்தலைப்புகள்'' தனிப்பட்ட திட்டங்களைக் குறிப்பிடுகின்றன. ஒவ்வொரு திட்டப் பணிக்கான செலவு விவரங்கள், ''சம்பளங்கள்'' ''பயணச் செலவுகள்'' முதலியன திட்டவட்டமான செலவு வகைப்பாட்டின் கீழ்ப் பற்றெழுதப்படுகின்றன. இவ்வாறு ''பெருந் தலைப்பு'' (Major Head), ''சிறு தலைப்பு'' (Minor Head), ''தொகுதி உள் தலைப்பு'' (Group Sub-Head), ''உள் தலைப்பு'' (Sub-Head), ''நுணுக்கத் தலைப்பு'' (Detailed Head) ஆகியவை வரவு-செலவுத் திட்டத்தில் அமைந்துள்ளன. இந்தியா முழுவதிலும் அரசுத்துறைக் கணக்குகளில், ஒரே மாதிரியான பெருந் தலைப்புகளும் சிறு தலைப்புகளும் பின்பற்றப்படுகின்றன.

மறு நிதி ஒதுக்கம்: சட்டமன்றம் அனுமதித்த கொடை வேண்டுகோளைப் பொறுத்தவரை, அரசு நிருவாகம் அந்த அளவுக்கு மேல் செலவிட முடியாது. கொடை வேண்டுகோளில் குறிப்பிடப்பட்ட தொகை பல செலவினங்களுக்கானது. நிருவாகத்தினர் அதனை மொத்தக் கொடைத் தொகைக்கு மேற்படாதவாறு பல்வேறு நுணுக்கப் பிரிவுகளுள் மாற்றியமைத்துக் கொள்ளலாம். கொடைக்குள் இவ்வாறு மாற்றிப் பகிர்ந்து கொள்வதற்கு ''மறு நிதி ஒதுக்கம்'' (Reappropriation) என்று பெயர். அனுமதிக்கப்பட்ட இனங்களும், சாட்டிய செலவினங்களும் ஒரே கொடை வேண்டுகோளின் கீழ் வந்தாலும் கூட அவற்றிடையே மறு நிதி ஒதுக்கத்திற்கு அனுமதி இல்லை.

## அட்டவணை - III

கீழே காணும் அட்டவணையில் தமிழக அரசின் 1984-85-ஆம் நிதியாண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் சுருக்கமான முறையில் தரப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசின் வரவு-செலவுத் திட்டம் (1984-85-ஆம் நிதியாண்டின் திட்ட மதிப்பீடுகள் (Budget Estimates).

| இனம் | வரவுகள் உருபாய் கோடிக்கணக்கில் | செலவுகள் உருபாய் கோடிக்கணக்கில் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| I தமிழ்நாடு தொகு நிதி (Consolidated Fund of Tamil nadu) | | |
| (க) வருவாய்க் கணக்கு வரவுகள் | | |
| 1. வரி வருவாய் | 1,355.38 | |
| 2. வரி அல்லாத வருவாய் | 179.86 | |
| 3. மத்திய அரசிடமிருந்து உதவிக் கொடைகளும் பங்குத் தொகைகளும் | 530.19 | |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் | | 2,065.43 |
| (உ) மூலதனக் கணக்கு வரவுகள் | | |
| 1. பொதுக் கடன் (Public Debt) | | |
| (i) மாநில அரசின் உள்நாட்டுக்கடன்கள் | 385.84 | |
| (ii) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்களும் முன் பணங்களும் | 192.06 | |
| மொத்தம்-பொதுக்கடன் | 577.90 | |
| 2. கடன்களும் முன் பணங்களும் | 72.48 | |
| மொத்தம்-மூலதனக் கணக்கு வரவுகள் | 650.38 | |
| (க) வருவாய்க் கணக்கு-செலவுகள் | | |
| 1. பொதுவான பணிகள் | | 457.64 |
| 2. சமூக, சமுதாயப் பணிகள் | | 873.94 |
| 3. பொருளாதாரப் பணிகள் | | 590.07 |
| 4. உதவிக் கொடைகளும் பங்குத் தொகைகளும் | | 24.73 |
| மொத்தம்-வருவாய்க் கணக்குச் செலவுகள் | | 1,946.38 |
| வருவாய்க் கணக்கில் செலவினத்துக் கூடுதலாய் உள்ள வருவாய் (உபரி) (+) | 119.05 | |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| (உ) மூலதனக் கணக்குச் செலவுகள் | | |
| 1. பொதுவான பணிகள் | | 12.07 |
| 2. சமூக, சமுதாயப் பணிகள் | | 46.58 |
| 3. பொருளாதாரப் பணிகள் | | 119.78 |
| மொத்தம்-வருவாய்க் கணக்கின் கீழே வராத மூலதனச் செலவுகள் | | 178.43 |
| பிற மூலதனச் செலவுகள்: | | |
| 4. பொதுக்கடன் | | 432.14 |
| 5. கடன்களும் முன் பணங்களும் | | 345.40 |
| 6. எதிர்பாராச் செலவு நிதிக்கு மாற்றம் | | ... |
| மொத்தம் - மூலதனக் கணக்குச் செலவுகள் | | 955.97 |
| மூலதனக் கணக்கில் வருவாய்க்குக் கூடுதலாய் உள்ள செலவு (பற்றாக்குறை) | | — 3,05.59 |
| I. தமிழ்நாடு தொகுநிதி (Consolidated Fund of Tamil Nadu): | | |
| (க) பெருமொத்தம் — வரவுகள் (வருவாய்க்கணக்கு + மூலதனக்கணக்கு) | 2,715.81 | |
| (உ) பெருமொத்தம் — செலவுகள் (வருவாய்க் கணக்கு + மூலதனக்கணக்கு) | | 2,902.35 |
| மொத்தம்–தொகுநிதி (நிகரம்) (வருவாய்க்குக் கூடுதலாய் உள்ள செலவு (பற்றாக்குறை) | | — 1,86.54 |
| II. தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (Contingency Fund of Tamil Nadu): | | |
| எதிர்பாராத செலவு நிதி (நிகரம்) | | ... |
| III தமிழ்நாடு பொதுக் கணக்கு (Public Account of Tamil Nadu) | 2,226.73 | 2,112.38 |
| பொதுக்கணக்கு (நிகரம்) | +114.35 | |
| வரவு—செலவுகளின் நிகர மொத்தம் (I + II + III) | | —72.19 |
| (க) தொடக்கப்பண இருப்பு (Opening Cash Balance) | | —1,29.31 |
| (உ) முடிவுப் பண இருப்பு (Closing Cash Balance) | | —2,01.50* |

*வரவு—செலவுத் திட்டச் செயற் குறிப்புகளின் விளைவுகள் இதில் அடங்கவில்லை.

கீழ்க்காணும் அட்டவணையில் தமிழ்நாடு அரசின் வரவு-செலவுத் திட்டம், 1974-75-இல் இருந்ததை விட எந்த அளவுக்குத் தற்பொழுது வளர்ந்திருக் கிறது என்பதனைக் காட்டும் வகையில் சில புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

இருந்துவரும் கணக்குகளைத் தொகுக்கிறார்கள். அரசின் எல்லாச் செலவுகளையும் அவர் கண்காணிக் கிறார். ஒவ்வொரு கொடை வேண்டுகோளுக்கும் சட்டமன்றம் அனுமதிக்கும் அளவுக்குமேல் செலவு கள் ஆகாதபடி அவர் கூர்ந்து கண்காணிக்கிறார்.

அட்டவணை IV

தமிழக அரசின் வரவு-செலவுத் திட்டங்களிலிருந்து சில விவரங்கள்

| இனம் | 1974-75 (கணக்குகள்) | 1977-78 (கணக்குகள்) | 1984-85 (திட்ட மதிப்பீடுகள்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | உரூபாய் கோடிக் கணக்கில் | | |
| 1. வருவாய்க் கணக்கு வரவுகள் | 520.29 | 682.05 | 2,065.43 |
| 2. வருவாய்க் கணக்கு செலவுகள் | 528.36 | 706.12 | 1,946.38 |
| 3. வருவாய் மிகுதி ( + ) அல்லது பற்றாக் குறை ( — ). | — 8.07 | — 24.07 | + 119.05 |
| 4. வருவாய்க் கணக்கில் வராத மூலதனச் செலவுகள் | 39.55 | 40.53 | 178.43 |

**வரவு-செலவுத் திட்டம் செயலாக்கப்படுவதைக் கண்காணித்தல்:** அரசு நிருவாகம் பொதுப்பணம் செலவிடுவதை நாடாளுமன்றம் அல்லது சட்டமன்றம் கண்காணிக்க வேண்டும். செலவு நடைமுறைகளைத் தொடர்ந்து கண்காணிக்க, நாடாளுமன்றம் அல்லது சட்ட மன்றத்தின் சார்பில் யாரேனும் இருந்தால் மட்டுமே இந்த ஏற்பாடு திறம்பட இயங்க முடியும். இந்த அலுவலை இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவர் (Comptroller and Auditor-General of India) செய்கிறார். இவர் இந்திய அரசியலமைப்பின் கீழ், அரசு நிருவாகத்திடமிருந்தும் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றங்களின் அதிகாரத்திலிருந்தும் விலகித் தனித்துப் பணியாற்றுகிறார். இவர் இந்தியக் குடியரசுத் தலைவருக்கு மட்டுமே பதிலளிக்கக் கட மைப்பட்டவர். இவரது பேராளராகிய மாநிலக் கணக் காய்வுத் தலைவர் (Accountant-General), சம்பந்தப் பட்ட சட்ட மன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் துணைநிதிநிலை அறிக்கை யையும் வைத்துக் கண்காணிக்கிறார். அவரது மேற் பார்வையின்கீழ்ப் பணியாற்றும் அலுவலர்கள், எல்லா அரசுக் கருவூலங்களிலும் (Government Treasuries)

நிதியாண்டின் முடிவுக்குப் பின்னர், விரைவில் அந்த ஆண்டின் வரவு செலவுகளை ஆராய்ந்து, மாநிலக் கணக்காய்வுத் தலைவர் ஓர் அறிக்கை வெளி யிடுகிறார். வரவு-செலவுத் திட்டத்தில் சட்ட மன்றம் ஒப்புதலளித்த கொடைக்குமேல் செலவிடுவது, கொடைகளைச் செலவிடாமலேயே விட்டுவிடுவது, குறித்த காலத்திற்குள் வரிகளை வசூலிக்கத் தவறு வது, மற்றும் வீண்செலவு போன்ற நிதி முறைகேடு களை ஆட்சியாளர்கள் செய்திருப்பார்களேயானால் அவற்றையும் அவர் எடுத்துக் காட்டுகிறார். "பொதுக் கணக்கு ஆய்வுக் குழு" (Public Accounts Committee) என்னும் நாடாளுமன்றம் அல்லது தொடர் புடைய சட்டமன்றக்குழு, இந்த அறிக்கையை ஆய்வு செய்கிறது. எதிர்க்கட்சித் தலைவர், இக் குழு வின் தலைவராக இருப்பது வழக்கம். இந்தக் குழு வின் ஆய்வுகளுக்கு மாநிலக் கணக்காய்வுத் தலைவர் உதவி செய்கிறார். அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மறுப்புகள் பற்றி அரசு நிருவாகம் கொடுக்கும் விளக் கங்களை இக்குழு ஆராய்கிறது. இந்தக் குழுவின் பரிந்துரைகள், சட்ட மன்றத்தின்முன் வைக்கப்படு கின்றன. இவ்வாறு, அரசினரின் செலவுகளை நாடாளு

மன்றம் அல்லது தொடர்புடைய மாநிலச்சட்ட மன்றம் தக்க அளவுக்குக் கண்காணித்து வருகிறது.

அயல்நாடுகளின் அரசாங்க வரவு-செலவுத் திட்டங்கள்: இந்தியாவின் வரவு-செலவுத் திட்டம் பெரும்பாலும் இங்கிலாந்து நாட்டுத் திட்டத்தினைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். இங்கிலாந்து நாட்டின் நிதியாண்டும் ஏப்பிரல் முதல் நாள்தான் தொடங்குகிறது. வரவு செலவுத் திட்ட முறையே முதன் முதலில் இங்கிலாந்து நாட்டில்தான் உருவானது. அம்முறை, மற்ற அயல்நாடுகளில் தத்தம் தேவைக்கேற்ற மாற்றங்களுடன் பின்பற்றப்படுகிறது.

பிரான்சு நாட்டின் நிதியாண்டு, சனவரித் திங்கள் முதல் நாள் தொடங்குகிறது. அந்நாட்டுப் பேராளர்களின் மன்றத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் வரைவு எந்த உரையுமின்றி வைக்கப்படுகிறது. மன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டம் பேரவையின் (Senate) ஒப்புதலுக்கு அனுப்பப்படுகிறது. சோவியத்து நாட்டின் நிதியாண்டும் சனவரித் திங்கள் முதல் நாள்தான் தொடங்குகிறது. நாட்டின் பொருளாதாரத் திட்டத்துடன் முழுதும் பொருந்தும் வகையில் ஆண்டின் வரவு-செலவுத் திட்டம் உருவாக்கப்படுகிறது. திட்ட மதிப்பீடுகளில் வருவாய்ச் செலவினம், மூலதனச் செலவினம் என்று திட்ட வட்டமான பிரிவுகள் இல்லை. அமெரிக்க நாட்டின் நிதியாண்டு சூலைத் திங்கள் முதல்நாள் தொடங்குகிறது. குடியரசுத் தலைவரின் கீழ் இயங்கும் வரவு-செலவுத் திட்ட இயக்ககம் (Bureau of the Budget), வரவு-செலவுத் திட்டத்தினை உருவாக்கும் பணியினை மேற்கொள்கிறது. அமெரிக்க நாட்டின் வரவு-செலவுத் திட்டம் குடியரசுத் தலைவரின் உரையுடன் சனவரித் திங்களில் அமெரிக்க நாட்டின் மக்கள் பேரவைக்கு (Congress) அனுப்பப்படுகிறது. அதனுடைய ஒப்புதலுக்குப் பின் செயலாக்கப்படுகிறது

தே.ந.

துணை நூல்கள்;

**Bhargava, R.N.**, "Indian Public Finance", Orient Longmans, Bombay, 1970.

**Lal, G.S.**, "Financial Administration in India", H.P.J. Kapoor, Delhi, 1969.

**Premchand, A.**, "Control of Public Expenditure in India", Allied Publishers, Bombay, 1970.

**Sonachalam, Prof. K S.**, "Tamil Nadu Finance in the Planning Era", Economics Department, University of Madras, 1973.

**Venkataraman, M.** "States Finances in India", George Allen and Unwin, London, 1968.

**அரசாங்க வருவாய்**: ஒரு நாட்டின் வருவாய் அதன் இயற்கை வளங்கள், மொத்த உற்பத்தி, மூலதனம் ஆகியவற்றைப் பொறுத்தும், அதன் அயல் நாட்டுச்செலுத்து நிலையைப் (Balance of Payments) பொறுத்தும் அமைகிறது. அரசாங்க வருவாய், அது திரட்டப்படும் வழிமுறைகளைக் கொண்டு ஆராயப்படும். தனிப்பட்டவருக்குக் கிடைக்கும் தனிப்பட்ட சிறப்பு நலன்களுக்காகவும் சமூக நலன்களுக்காகவும் அரசாங்கம் கையாளும் செலவினை ஈடுகட்டக் கட்டாயமாகத் தனிப்பட்டவர்களிடமிருந்து பெறும் தொகை, வரிகள் (Taxes) எனப்படும். வரிகள் சமுதாயத்தின் பொது நன்மையைக் கருதி விதிக்கப்படுகின்றன. தனிப்பட்டவருக்குச் சிறப்பு நலன் தருவதற்கென்று, வரிக்கு நிகரான பலன் எதுவும் வரிசெலுத்துவோருக்குத் தரப்படுவதில்லை. ஒரு நிருவாகத்தின் முழு அதிகாரத்தினால் விதிக்கப்பட்டுச் சட்டப்படியான கட்டாயத்தால் பெறப்படுபவையே வரிகளாகும். இதில் தனிப்பட்டவருக்கும் அரசுக்கும் எவ்வித வணிக பேரமும் இல்லை.

நிருவாக வருமானங்கள்: சமுதாய நன்மையை முதன்மையாகக் கொண்டு அரசாங்கம் செய்யும் பலவிதப் பணிகளுக்குரிய செலவினை ஈடுகட்ட, இப்பணிகளினால் நன்மைகளைப் பெறும் தனிப்பட்டவர்களால் செலுத்தப்படும் தொகை, கட்டணங்கள் (fees) எனப்படுகின்றன. குறிப்பாக, நீதிமன்றக் கட்டணங்கள், பதிவுக் கட்டணங்கள் ஆகியவை இதனுள் அடங்கும். பாதுகாப்பான ஒரு சமுதாயத்தை ஏற்படுத்துவதன் பொருட்டுச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி, சமுதாய நன்மையைப் பொது நோக்கமாகக் கொண்டு, அரசாங்கம் சில பணிகளைச் செய்கிறது. வழக்கின் பொருட்டு நீதிமன்றங்களுக்குச்செல்பவர்கள் அல்லது தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்து கொள்பவர்கள், இப்பணிகளின் சிறப்பு நலன்களைப் பெறுகின்றனர். அதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கட்டணமாகச் செலுத்துகின்றனர்.

கட்டணம் வரியினின்று வேறுபடும். ஒரு பொதுச் சுமையின் உறுப்பே வரியாகும். ஆனால், கட்டணமோ ஒரு குறிப்பிட்ட சிறப்புச் சலுகைக்காகப் பெறப்படுகிறது. வரி விதிப்புக்கு வரி செலுத்துவோரின் செலுத்துந் திறனே அடிப்படை. மாறாகத் தனி ஒருவருக்குக் கிட்டும் சிறப்புப் பலனே கட்டணத்தின் அடிப்படை. வரியைப் பொறுத்தவரை, பலனை நேரடியாக அளவிட முடியாது. ஆனால், கட்டணத்தால் கிடைக்கும் பலனை அளவிட்டு விடலாம். வரி போலன்றிக் கட்டணம் தனிப்பட்டவருக்குக் கிடைக்கும் குறிப்பிட்டதொரு பணியின் செலவை மிஞ்சாது. ஒரு கட்டணத்திற்குரிய சில குறிப்பிட்ட பணிகளை அரசாங்கமும் திரும்பச் செய்துவிடுகிறது. ஆனால்,

வரிக்காக அரசாங்கம் எவ்விதச் சிறப்புப் பணியையும் நல்குவதில்லை. கட்டணம் பெறப்படும் சிறப்புப் பலனின் செலவைவிட மிகுதியாயின் அது வரியாக மாறிவிடும். மேலும் கட்டணங்கள் நிலையற்றவை.

உரிமம் (Licence) வழங்குதல் என்பது, மக்களைச் சில அலுவல்களைச் செய்துகொள்ள அனுமதிப்பதாகும். அனுமதியின்றி அவற்றைச் செய்துகொள்ள முடியாது. தானியங்கி ஊர்தி (Automobile) ஓட்டவும் ஒரு வணிக நிறுவனத்தைத் தொடங்கவும் உரிமம் தேவை. உரிமம் என்பது கட்டணங்களுடன் ஒப்பிடத் தக்கது.

தண்டங்களின் (Fines) நோக்கம் ஒரு செயலைத் தடை செய்வதாகும். ஒரு சட்டத்தையோ நெறியையோ மீறுவது தண்டத்தின் மூலம் தடுக்கப்படும். அரசாங்கச் சட்டங்களை மீறியமைக்காகத் தண்டம் விதிக்கப்படும். அது அத்து மீறலைத் தடுக்கும் ஆற்றலுடையது. இவ்வாற்றல் வெற்றியடையாத நிலையில் அடிக்கடி மக்கள் அத்துமீறிச் சென்று பணத்தைத் தண்டமாகச் செலுத்தத் தொடங்கிவிட்டால் அது வரியாக மாறிவிடும். மது அருந்தக்கூடாது என்று சட்டமியற்றிவிட்டு, அதனை மீறுபவர்களுக்குத் தண்டம் விதித்து, அதன் மூலம் மதுப்பழக்கம் ஒழிக்கப்படின், அரசாங்கத்தின் நோக்கம் வெற்றி பெறுவதாகும். தண்டத்தைப் பொருட்படுத்தாமல் குடிப்பதும் அதற்கு உடனே தண்டம் செலுத்த முன்வருவதுமான ஒரு நிலை இருப்பின் 'தண்டம்' செயலிழந்து சாதாரண 'வரி' யாக மாறும் புதுமையைக் காணமுடியும்.

பறிமுதல்கள்: இவை தண்டங்களுக்கு இணையானவை. நீதி மன்றங்களில் தோன்ற மறுக்கும் நேரத்திலும், ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி ஒரு வேலையை முடிக்காமல் இருக்கும் நேரத்திலும் பறிமுதல் (Forfeiture) செய்யப்படுகிறது.

இறையுரிமைகள்: இவை வாரிசு, மற்றும் தன்னாவணம் இன்றி இறந்தவர் செல்வங்கள் அரசாங்கத்துக்குச் சேர்வதைக் குறிக்கும்.

தனித் தீர்வைகள்: இவை பொதுநல நோக்குடன் மேற்கொள்ளப்படும் சிறப்பு வளர்ச்சிப் பணியின் செலவை ஈடுகட்ட விதிக்கப்படும் ஒரு கட்டாயத் தொகையாகும். சாலைகள், பூங்காக்கள் அமைத்தல் போன்ற பொதுத் திட்டங்கள் செயலாற்றப்படும் போது, சுற்றுப்புறத்தில் உள்ளவர்களின் சொத்து மதிப்பு உயரும். ஆகவே, அரசாங்கம், இச் சொத்துகளின் உரிமையாளர்கள் பெறும் நன்மைக்காக ஒரு தனித் தொகையைச் செலுத்தும்படி கட்டாயப் படுத்துகிறது. தனித் தீர்வைகளுக்கு ஒரு சிறப்பான குறிக்கோள் உண்டு. அதன் சிறப்புப் பலன் அளவிடப் படக் கூடியது. தீர்வைகள் வளர் வீதத்தில் இன்றி, பெறுகிற பலன்களின் விகிதத்தில் விளங்கும். அவை குறிப்பிட்ட வட்டார வளர்ச்சிக்காக விதிக்கப்பட்டுச் சமுதாயத்தின் நிலையான மூலதனத்தை மிகுந்திடச் செய்கின்றன.எக்குறிக்கோளுக்காகவிதிக்கப்படுகிறதோ அதற்காகவே பயன்படுத்தப்படும். தனித் தீர்வைகளும் கட்டணங்களும் பணியின் அடக்கச் செலவை மிஞ்சாதவை.

பிற வகைகள்: அரசு தனக்குச் சொந்தமான நிலம், கட்டிடங்கள், காடுகள், சுரங்கங்கள் முதலிய வற்றின் மூலம் வருமானம் பெறலாம். சொத்துகளை விற்பதாலும், நிலங்களிலிருந்து குத்தகை பெறுவதாலும் வருவாய் கிடைக்க வாய்ப்புண்டு.

வணிக வருவாய் அரசு நடத்தும் வணிக நிறுவனங்கள் மூலம் கிடைப்பதாகும். தனியார் துறை போல் அரசாங்கமும் தொழில் நடத்தி அதன் மூலம் ஆதாயம் பெறுகிறது. அஞ்சல் துறையும், இரயில் வேத் துறையும் நடத்தப்படுவதன் மூலம் அரசாங்கத்துக்கு வருவாய் கிடைக்கிறது; செலுத்தப்படும் தொகைக்கு ஈடான பலனையும் அளிக்கின்றன.

மேலும், சில குறிப்பிட்ட பணிகளைக் குறிப்பிட்ட முறையில் செய்வதற்கு அரசாங்கம், மற்றொரு அரசாங்கத்துக்குக் கொடைகளும் உதவிகளும் வழங்கலாம். போர்க் காலங்களில், நாட்டுப்பற்று எழுச்சி பெற்று மக்களாகவே மனமுவந்து எவ்விதக் கட்டாயமுமின்றி அரசாங்கத்துக்கு நன்கொடை அளிக்கின்றனர். ஆனால், இவை போதிய அளவில் இல்லாதிருப்பதால் இவற்றை நம்பி எந்த அரசாங்கமும் செயற்பட முடியாது. காண்க: வரிகள். எல்.கா.ந.

**அரசிதழ்**: அரசாங்கத்தின் ஆணைகளையும் அறிக்கைகளையும் அரசு அலுவலகங்களுக்கும் பொது மக்களுக்கும் வாரந்தோறும் அறிவிக்கும் பருவ ஏடே அரசிதழ் எனப்படும்.

இது ஆங்கிலத்தில் 'கெசட்' (Gazette) எனப்படும். 'கெசட்' என்பது இத்தாலி நாட்டு வெனிசு நகரத்தில் 16-ஆம் நூற்றாண்டில் வழங்கி வந்த ஒரு செப்பு நாணயம். வெனிசு நகரத்தில் முதன் முதல் வெளியான செய்தித் தாள் 'கெசட்' என்ற காசுக்கு விற்கப்பட்டதால், இது 'கெசட்' என்ற பெயரைப் பெற்றிருந்தது. நாட்டு நடப்புப் பற்றிய செய்திகளே இதில் இடம் பெற்றிருந்தன. இதை அரசே வெளியிட்டது.

முதலாம் எலிசபெத்து அரசியார் ஆட்சிக்கு வந்த பிறகு, 'கெசட்' வேகமான வளர்ச்சியைப் பெற்றது. பலரும் விரும்பிப் படிக்கும் நிலைமையும் ஏற்பட்டது. வெட்டிப் பேச்சுச் செய்திகளும், அடிப்படை இல்லாத அரசியல் துணுக்குகளும், நாடு கண்டுபிடிப்பு, பரபரப் பூட்டும் கொலைக் குற்றங்கள், ஆவலைத் தூண்டும்

மாய மந்திரங்கள் ஆகியவை பற்றிய செய்திகளும் இதில் இடம்பெற்றன.

இக்காலச் செய்தித் தாள்களின் முன்னோடியாக விளங்கும் அரசிதழ், அமெரிக்காவில் குடியேற்ற நாடுகள் உருவானபோது அங்கும் செல்வாக்கடைந்தது. அமெரிக்கா விடுதலை பெறும் முன்பு, பெரும்பாலும் ஒவ்வொரு மாநிலமும் ஓர் அரசிதழை வெளியிட்டது. சிந்தனையாளரும் சிறந்த அரசியல் வல்லுநருமான பெஞ்சமின் பிராங்கிளின் (Benjamin Franclin) 'பென்சில்வேனியா' என்ற அரசிதழை நடத்திவந்தார். தாமசு செபர்சன் (Thomas Jefferson) என்ற அரசியல் அறிஞர், 'தேசிய அரசிதழ்' என்ற செய்தித் தாளைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டிருந்தார். பின்னர்ச் சில நகரங்கள் தம் பெயரோடு அரசிதழ் என்ற சொல்லைச் சேர்த்துச் செய்தித்தாள்களை வெளியிட்டு வந்திருக்கின்றன.

அரசிதழை வெளியிட்ட முறை மேலை நாடுகளுக்கு மட்டுமே சொந்தமன்று. சீனாவிலும் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்த ஆன் மன்னர் பரம்பரை ஆட்சியில், அரசு ஆணைகள் செய்தி மடலாக மாநில ஆட்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டன. இது 'தி பா' (Ti Pao) என்று கூறப்பட்டது. அடுத்து வந்த தான்கு மன்னர் பரம்பரை ஆட்சியில் ஏறக்குறைய 300 ஆண்டுகள்வரை இது 'சா பா' (Tsa Pao) என்னும் பெயரில் வழங்கப் பெற்றது. பின்னால் வந்த மன்னர்கள் காலத்தில், பல வகைப்பட்ட அரசிதழ்களும் அறிக்கைகளும் வெளியிடப்பட்டன.

பழந் தமிழ்நாட்டில், அரசிதழ் என்ற ஒன்று தனியாக வெளியிடப்படவில்லை. ஆனால், அரசாணைகளை மக்களுக்கும் அரசு அலுவலகங்களுக்கும் அனுப்பி வைக்கும் பழக்கம் இருந்தது. சிலப்பதிகாரம் கூறும் எண்பேராயத்தின் ஒரு பிரிவினரான கருமகாரர் இப்பணியைச் செய்து வந்தனர்.

பிற்காலச் சோழ, பாண்டிய வேந்தர்கள் காலத்தில், அரசன் வாயிலிருந்து வரும் ஆணைகளை, ஓலையில் எழுதுவதற்கென்றே தனியாக அலுவலர்கள் இருந்தார்கள். அவர்கள் 'திருமந்திரஓலை' என்று அழைக்கப்பட்டனர். அவர்களின் தலைவர், 'திருமந்திர ஓலைநாயகம்' எனப்பட்டார். அவர் திருமந்திரஓலை சொன்னதையும் எழுதியிருப்பதையும் ஒப்புநோக்கி அரசாணை ஓலையில் கையொப்பம் இடுவார். அவற்றைப் பணியாளர் மூலம் உரியவர்களுக்குச் சேர்த்து, அது பற்றி அரசன் கேட்கும் கேள்விகளுக்கு மாற்றம் தெரிவிப்பது 'விடையிலதிகாரி' என்பவரின் கடமை. அரசன் ஆணைப்படி, ஆங்காங்கே சென்று ஆராயும் முறையைக் கொண்டிருந்த அதிகாரிகளும் உண்டு. அவர்களுக்குக் கருமத் தலைவர் என்பது பெயர்.

தமிழகத்தில் 'மதராசு-கெசட்' (Madras Gazette) என்ற வார ஏடு கி.பி. 1795 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இதனை வில்லியம்சு என்பவர் தொடங்கி நடத்தினார். இதற்குக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசு பணஉதவி அளித்தது. இதில் தமிழுக்கும் இடம் ஒதுக்கும்படி அரசு ஆணையிட்டது. அதனால், இதில் தமிழ் விளம்பரங்களும் வெளியிடப்பட்டன.

அந்த ஏட்டிற்கு, கி.பி. 1799-ஆம் ஆண்டில் அஞ்சல் கட்டண விதிவிலக்கு வழங்கப்பட்டது. ஆகையால், அரசு அனுமதியின்படி அந்த வார ஏட்டைப் படிக்க விரும்புவோரிடமிருந்து, அஞ்சல் செலவுக்கான தொகை பெற்றுக் கொள்ளும் முறை வழக்கத்திற்கு வந்தது. அரசாங்கத்தின் தணிக்கை முறையும் அப்போது வழக்கில் இருந்தது.

தனியாரால் நடத்தப்பட்ட அரசிதழ், சென்னைக் கோட்டையில் அரசு சொந்தமாக அச்சகத்தைத் தொடங்கியதும் அரசாலேயே வெளியிடப்பட்டது. முதல் இதழ், 1832-ஆம் ஆண்டில் வாரத்திற்கு இரண்டு முறை வெளிவந்தது. 6 முதல் 10 பக்கங்கள் கொண்ட இதில் பகுதிகளோ பிரிவுகளோ இல்லை. ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், உருது ஆகிய மொழிகள் இதில் இடம் பெற்றிருந்தன. வேலை நியமனங்கள், சட்டங்கள், நீதித் துறை, போர்த் துறை, அஞ்சல் துறை ஆகிய பல துறைச் செய்திகள், கப்பல்களின் வருகையும் புறப்பாடும், அவற்றில் வந்தோரும் சென்றோருமாகிய உயர் அலுவலர்களின் பெயர்ப் பட்டியல், விளம்பரங்கள் முதலியன இதில் வந்தன. இதழின் முகப்பில் இரட்டைச் சிங்கம், அரசின் கொடிகள், ஈட்டிகள் ஆகியவை அடங்கிய இலச்சினை காட்சி அளித்தது.

இப்பொழுது அரசிதழ்களை மத்திய அரசும் மாநில அரசுகளும் வெளியிடுகின்றன. மாவட்ட அரசிதழ்களும் சிறிய அளவில் வெளிவருகின்றன.

மத்திய அரசினுடைய அரசிதழ் நான்கு பகுதிகளாக வெளியாகிறது. இறுதிப் பகுதியினைத் தவிர மற்றவற்றிற்கு உட்பிரிவுகள் உண்டு. இந்த அரசிதழில் பின்வருபவை அறிவிக்கப்படுகின்றன.

முதல் பகுதி: பாதுகாப்பு அமைச்சகம், மற்ற அமைச்சகங்கள் ஆகியவற்றின் அலுவலர் பணி அமர்த்தம், பணி உயர்வு, விடுமுறை பற்றிய அறிவிக்கைகள், இவற்றின் கட்டளைகள் முதலியவை.

இரண்டாம் பகுதி: அமைச்சகங்கள், மத்திய அரசின் நேர்முக ஆளுகைக்குரிய நிலப் பகுதிகள் ஆகியவற்றின் சட்டங்கள், சட்டமுறை விதிகள், கட்டளைகள் முதலியனவும், இவற்றின் இந்தி மொழிபெயர்ப்பும்.

மூன்றாம் பகுதி: உயர்நீதி மன்றம், தணிக்கைத் துறைத் தலைமை, இருப்புப் பாதை, போக்கு வரத்துத் துறை, சட்டப்படி அமைந்த அமைப்புகள் ஆகியவற்றின் அறிக்கைகள், அறிவிப்புகள் முதலியன.

நான்காம் பகுதி: தனிப்பட்டவராலும் தனியார் அமைப்புகளாலும் வெளியிடப்படும் விளம்பரங்களும் அறிவிப்புகளும். இவற்றின் இணைப்புகளும் தனிச் சிறப்புப் பகுதிகளும் தேவையானபோது வெளிவரும்.

தமிழ்நாடு அரசு வெளியிடும் அரசிதழில் ஆறு பகுதிகள் உள்ளன. அவற்றில் கீழ்க்கண்ட செய்திகள் வெளியிடப்படுகின்றன:-

முதல் பகுதி: முதல் வேலை நியமனம், ஓய்வு பெறுதல், குற்றவியல் நடுவரைப் பதவியில் அமர்த்துதல் ஆகியவற்றைப் பற்றித் தமிழக அரசின் தலைமைச் செயலகத் துறைகள் வெளியிடும் அறிக்கைகளும் கட்டளைகளும்.

இரண்டாம் பகுதி, முதற் பிரிவு: தலைமைச் செயலகத்தின் துறைகள், பொது மக்களுக்கு அறிவிக்கும் சிறப்பியல்பான அல்லது குறிப்பிடத்தக்க அறிக்கைகளும் கட்டளைகளும் இப்பிரிவில் இணைப்புகளும் தனிச்சிறப்புப் பகுதிகளும் தேவையானபோது வெளிவரும்.

இரண்டாம் பிரிவு: தலைமைச் செயலகத்தின் துறைகள், பொதுமக்களின் ஒரு பிரிவினருக்கு வெளியிடும் அறிக்கைகளும் கட்டளைகளும் (சட்டங்களிலிருந்து விதி விலக்குப் போன்றவை). இப்பிரிவில் அவ்வப்போது இணைப்புகள் வெளியாகும்.

மூன்றாம் பகுதி, முதல் பிரிவு (அ): தலைமைச் செயலகத்தின் துறைகள் பொதுவாக வெளியிடும் சட்ட முறையான விதிகள், அறிக்கைகள், கட்டளைகள், ஒழுங்கு முறை விதிகள் முதலியன. இதன் இணைப்பில், அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழி பெயர்ப்புகள் இடம் பெறும்.

முதல் பிரிவு (ஆ): தலைமைச் செயலகத்தின் துறைகள், வெளியிடும் பணிமுறை விதிகள் (இதில் ஒரு வேலைக்கென்றே அமைந்த விதிகளும் ஒழுங்கு முறை விதிகளும் திருத்தங்களும் அடங்கும்).

இரண்டாம் பிரிவு: துறைத் தலைமையகங்கள் வெளியிடும் சட்டமுறையான விதிகளும் கட்டளைகளும்.

நான்காம் பகுதி, முதல் பிரிவு: தமிழக அரசின் சட்ட முன் வரைவுகள்.

இரண்டாம் பிரிவு: தமிழக அரசின் சட்டங்களும் நெருக்கடி நிலைச் சட்டங்களும்.

மூன்றாம் பிரிவு: மைய அரசின் சட்ட முன் வரைவுகள்.

நான்காம் பிரிவு: மைய அரசின் சட்டங்களும் நெருக்கடி நிலைச் சட்டங்களும்.

ஐந்தாம் பகுதி, முதல் பிரிவு: பொதுத் (தேர்தல்) துறை பற்றிய அரசாங்க அறிவிக்கைகள்.

இரண்டாம் பிரிவு: மாவட்ட ஆட்சியாளர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், மற்றத்துறைத் தலைவர்கள், தேர்தல் தீர்ப்பாயங்கள் ஆகியோர் வெளியிடும் வேட்பாளர் பட்டியல் தொடர்பான அறிக்கைகள்.

மூன்றாம் பிரிவு: சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதி நீக்கச் சிக்கல்களைப் பற்றித் தமிழ்நாட்டு ஆளுநர் எடுக்கும் முடிவுகள்.

நான்காம் பிரிவு: இந்திய அரசின் ஆணையாளரிடமிருந்து வரும் அறிக்கைகள்.

ஆறாம் பகுதி, முதல் பிரிவு: பொதுமக்களுக்குத் துறைத் தலைவர்களால் வெளியிடப்படும் அறிக்கைகள். இதிலும் இணைப்புகள் வரும்.

இரண்டாம் பிரிவு: பொதுமக்களில் ஒரு பிரிவினருக்குத் துறைத் தலைவர்களிடமிருந்து வரும் அறிக்கைகள். இதிலும் இணைப்புகள் வரும்.

மூன்றாம் பிரிவு (அ): மத்திய மாநில அரசுகளின் பண மீட்பு நிறுவனங்களைப்பற்றி வழங்கப்படும் அறிக்கைகள்

மூன்றாம் பிரிவு (ஆ): அரசு போன்ற அமைப்புகளும் பொதுத் துறையாக மேற்கொண்ட நிலையங்களும் வெளியிடும் அறிக்கைகள்.

நான்காம் பிரிவு: தனிப்பட்டவர்களும் தனியார் நிறுவனங்களும் அறிவிக்கும் விளம்பரங்கள். செய்தித்தாள் என்று பொது நிலையில் இருந்த அரசிதழ், அரசே வெளியிடும் அரசிதழாக மாறிவிட்டது. இது வாரந்தோறும் வெளிவருகிறது. இதன் ஒவ்வொரு பிரிவிலும் மாநில அரசின் இலச்சினை, குறிக்கோளுரை ஆகிய இரண்டும் இருக்கும். தமிழக அரசிதழில், ''வாய்மையே வெல்லும்'' என்னும் குறிக்கோளுரையும் இருக்கிறது.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் பக்கத்தில், பிரிவின் எண், தலைநகரின் பெயர், கிழமை, ஆங்கில நாள் மாதம், ஆண்டு, தமிழ்நாள் மாதம், இந்துமத ஆண்டு, திருவள்ளுவராண்டு ஆகியவை குறிக்கப்படுகின்றன. இதன் கீழ் பகுதி எண்ணும் பிரிவு எண்ணும் வரும். இதையடுத்து, பகுதியோ பிரிவோ தெரிவிக்கும் ஆணை, அறிக்கை பற்றிய தலைப்பு ஆகியவை அச்சாகியிருக்கும். மேலும் அப்பகுதியிலேயே பதிவெண்ணும் தமிழ்நாட்டரசின் காப்புரிமையும் காணப்படும்.

ஒவ்வொரு பிரிவிற்கும் தனியாக விலை உண்டு. தனிப்பட்ட பக்க எண் உண்டு. இந்த எண், வாரந் தோறும் முறையாகத் தொடர்ந்து வரும்.

அரசிதழில் அறிவிப்புப் பெறாத அரசு அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் எனப் படுவார்கள்

அரசிதழ்கள் ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்படுகின்றன. ஆகவே, அவை ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்படுகின்றன. அவை அங்கு 1832-ஆம் ஆண்டிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன.

அரசிதழின் சிறப்பு வெளியீடு: அரசிதழின் ஒரு பகுதியாகச் சிறப்பு வெளியீடு அமைந்திருக்கிறது. இது குறிப்பிட்ட நாளில் வெளிவருவதில்லை. இன்றியமையாமை கருதி, அடுத்தடுத்த நாளிலும் இது வெளியிடப்படலாம். அரசிதழின் பல்வேறு பாகங்களின் சார்பாகவும் அரசுத்துறை பலவற்றின் காரணமாகவும் இது வெளிவருகிறது. இதன் பக்கங்கள் தொடர்ச்சியாக இருப்பதில்லை. ஆனால், வெளியீட்டு எண் வரிசையாக வரும். ஏறத்தாழ 400 வெளியீடுகள் ஓர் ஆண்டில் வரலாம். இது ஒரு பக்க வெளியீடாகவும் வரக்கூடும். 30 பக்கத்திற்கு மேற்பட்ட பகுதியாகவும் வெளிவரலாம். பக்கத்தின் அளவைப் பொறுத்து இதன் விலை மாறுபடுகிறது.

இதில், பொது நன்மை கருதி நிலத்தைக் கைப்பற்றுதல், நிலத்தைக் குறிப்பிட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்தல், விலை அறுதியிடல் அறிவிப்பு, இடைக்காலத் தேர்தல் அறிவிப்பு, அதன் முடிவு, சட்டமன்ற அவைகளின் தொடக்கம் பற்றிய ஆளுநரின் ஆணைச் சட்டமுன்வடிவு (Bill), சட்டங்களின் திருத்தம், நெருக்கடி நிலைச் சட்டம், குறிப்பிடத்தக்கவரின் மரணச் செய்தி முதலியன இடம் பெறும். நா.இரா.

**அரசியல் அதிகாரத்துவம்** என்பது அதிகாரம் முழுவதும் ஒரே ஆளும் நிறுவனத்திடமோ அல்லது ஒரே ஆளிடமோ குவிக்கப்பட்ட அரசாங்க முறையைக் குறிக்கும். இந்த அரசாங்க அமைப்பின் முக்கியக் கூறு, இதில் ஆளுபவர், ஒழுங்காக அமைக்கப்பட்ட வேறு எந்த நிறுவனத்தாலும்,- அது நீதிமன்றம், சட்டமன்றம், சமய நிறுவனம், பொருளாதார நிறுவனம், தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனம் எதுவாக இருந்தாலும் அதனால் உண்டாகும் எந்தத் தடைக்கும் உள்ளாகாமல் இயங்குவதே ஆகும். இந்த அரசியல் அதிகாரத்துவ (Political Authoritarianism) ஆட்சி முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கி.பி. 1643 முதல் 1715 வரை ஆண்ட பிரஞ்சு மன்னன் பதினான்காம் லூயியின் ஆட்சியைக் கூறுவர். இவன் ஒரு முறை "அரசு என்பது என்ன? நானே அரசு" என இறுமாப்புடன் கூறிய தொடர், அதிகாரத்துவ ஆட்சி முறையைக் குறிப்பிடுகிறது. இவனுடைய அதிகாரங்களுக்கு அந்நாட்டில் எவ்விதத் தடையும் இல்லை. பாசிச, நாசிச, கம்யூனிச, எதேச்சாதிகார அமைப்புகள் அரசியல் அதிகாரத்துவத்திற்கு இக்கால எடுத்துக்காட்டுகள் ஆகும். இருபதாம் நூற்றாண்டில் இத் தொடர், மேற்கத்திய குடியாட்சி அரசாங்க முறைக்கு நேர்மாறான இயல்புடைய அரசாங்க அமைப்பைக் குறிக்கிறது. மேற்கத்திய குடியாட்சி முறையில் அரசாங்கமானது, சுதந்திரமான தேர்தல்களினால் கட்டுப்படுத்தப்படுகிறது. வரலாற்றின் தொடக்கத்தில் இந்த இயல்புடைய அரசாங்கம், முடியாட்சியில் அதாவது அரசனுடைய எதேச்சாதிகார ஆட்சியில் காணப்பட்டது. இடைக்காலத்தில் திருச்சபை, நிலமானியப் பிரபுக்கள், சில வழக்கங்கள் ஆகியவற்றை அரசர் கட்டுப்படுத்தினார். கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் அரச எதேச்சாதிகாரம் தோன்றி, கி.பி. 1718-இல் நன்கு வளர்ந்திருந்தது.

கோட்பாட்டளவில் அரசர்களுடைய அதிகாரம் கடவுளிடமிருந்து பெறப்படுகிறது என்ற கருத்தும், மனிதருடைய தீவினைகளுக்காகக் கடவுள் கொடுங்கோலரசனுடைய ஆட்சியை ஒரு தண்டனையாக நிறுவுதல் கூடுமென்ற கருத்தும், அதிகாரத்துவத்துக்கு அடிப்படையாக அமைந்தன. புதிய தேசிய அரசர்கள் அரசின் தலைமையையும், திருச்சபையின் தலைமையையும் ஒருங்கே பெற்றனர். ஒழுங்குக்கும் கட்டுப்பாட்டுக்கும் இன்றியமையாது வேண்டப்படுவது, யாவரும் ஒரு ஆட்சியாளருக்கு முழுவதும்கீழ்ப்படிதலே. இதற்கு மாறுபட்ட நிலை குழப்பம்தான். இக்குழப்பமும் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதாலும் அல்லது பிரிப்பதாலும் தோன்றுகிறது. உயிரும், உடைமையும் திறமாகப் பாதுகாக்கப்பட வேண்டுமெனில் முழுமையான, வரம்பற்ற அதிகாரம் (அல்லது அதிகாரத்துவம்) இருத்தல் வேண்டும். இந்தப் பொருளிலேதான் ஆப்சு (Hobbes) என்பவர் சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு விளக்கம் எழுதும்போது, தன்னலத்துக்காகத்தான் மக்கள் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படிகிறார்களென்று குறிப்பிட்டார். பொதுநல விருப்பம் என்பது (General Will) முழு அதிகாரமுடையது என்று உரூசோ (Rousseau) குறிப்பிட்டார். அது மக்களுடைய பெயரால், முழுமையான அல்லது வரம்பில்லாத அதிகாரத்தோடு ஆளுகிற ஒரு தலைமைத் தன்மையையே நடைமுறையில் குறிப்பிடுகிறது.

இந்த நூற்றாண்டில் அதிகாரத்துவத்தின் வடிவங்களாகக் கருதப்படும் பாசிச, நாசிச, பொதுவுடைமை அமைப்புகள் அரச நிலைகளில் உள்ளவை அல்ல; ஆயினும் அவையெல்லாம் அரசுக்கு உரிமையாக்கப்படுகிற முழு அதிகாரத்தின் வடிவங்களே; அல்லது அவை அரசைக் கட்டுப்படுத்தும் சமூக, பொருளாதார இயக்கத்

துக்குக் கொடுக்கப்படுகிற முழு அதிகாரத்தின் வடிவங்களே. அதிகாரக் குவிப்பு என்பதில் இந்த நூற்றாண்டின் அமைப்புகள், பண்டைய அரச எதேச்சதிகார வடிவங்களை ஒத்திருந்தாலும், அவை ஒரு வகையில் புதுமையாகவும் இருக்கின்றன; அதாவது அவை வரம்பில்லா அரசில் அதிகாரத்தைச் சமூகம் முழுவதும் பரவச் செய்வதாகவும், தனி ஆட்களின் வாழ்வில் தாக்கத்தை (impact) உண்டுபண்ணுவதாகவும் இருக்கின்றன. எனவே எதேச்சாதிகாரிகளுக்கு மக்களாதரவைத் தேடிக்கொள்ளும் முயற்சியும் இக்கால அதிகாரத்துவத்தில் காணப்படுகிறது.

எவ்வடிவிலிருந்தாலும், குடியாட்சி அரசாங்கமுறைக்கும் எதேச்சாதிகார அரசாங்கத்துக்கும் இடையே உள்ள வேறுபாடு, அரசாங்க முடிபுகளுக்கு இருக்கும் மக்களுடைய ஆதரவின் அளவிலேயே (Degree) காணப்படுகிறது. எதேச்சாதிகாரிகள் வரம்பற்ற அதிகாரங்களைக் கையாளுகிறார்கள்; குடியாட்சி அமைப்புக்களோ அரசியலமைப்புகளுக்குட்பட்ட செயல்முறைகளைக் கொண்டு (Constitutional practices) செயற்படுகின்றன. எதேச்சாதிகாரத்தில் காணப்பட முடியாத ஒன்று, அரசியலதிகாரத்தைக் கையாளுதலில் கட்டுப்பாடு அல்லது தடை என்பது இல்லாமையே ஆகும். ஆட்சியாளர் செயல்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு அரசியலமைப்பு நிறுவனம் எதுவும் அதில் கிடையாது. மாற்று ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய சுதந்திரமுடைய வாக்காளர் எவராலும், சருவாதிகார நாட்டில் ஆட்சியாளர் தடைப்படுத்தப்பட மாட்டார். அதுமட்டுமன்று, ஆட்சியாளருடைய சொந்த விருப்பத்தைத் தவிர, வேறு மேலான எந்த ஒரு சட்டமோ அல்லது வழக்கமோ அவரைக் கட்டுப்படுத்தாது. அவ்வரசாங்க முறையில் சட்டம் என்பது ஆளுவோருடைய விருப்பம் ஒன்றிலிருந்துதான் தோன்றுகிறதாகையால், நீதி அல்லது முறைமை என்பதும் இவ்வாறு ஆளுபவருடைய விருப்பத்தினின்றும் தோன்றிய சட்டத்தைத் தவிர வேறு அன்று. எதேச்சாதிகார ஆட்சியாளர் முழு உண்மையை அறிந்தவராதலின், அவர் அத்தகைய ஆட்சி செலுத்தத் தகுதியுடையவர் என்றும் ஒரு காரணம் காட்டப்படுகிறது. சரியானது, நீதியானது என்பது என்ன என்று முழுமையாக அறிந்தவருக்கு அதிகாரப்பங்கீடு, அதிகாரக் கட்டுப்பாடு முதலிய விதிகளெல்லாம் தேவை இல்லை.

அரசின் எதேச்சாதிகாரம் என்னும் கருத்து, எகல் என்ற செருமானியச்சிந்தனையாளரால் வகுக்கப்பட்டது. அரசின் அதிகாரக் குவிப்பால் பல நன்மைகள் செய்யப்பட்டிருந்தாலும், அதனால் பெரும் அழிவைத் தரும் போர்களும் வலியோர் மெலியோரை அடிமைப்படுத்துதலும் நிகழ்ந்துள்ளன என்பதனை வரலாறு காட்டுகிறது. அதிகாரத்துவம் அடிமைத்தனத்தை வளர்க்கும்; குடியாட்சிப் பண்பு மக்களுக்கு இயல்பான சுதந்திர உணர்வையும், தன் விருப்பத்தின் பேரில் அதிகாரத்துக்குக் கீழ்ப்படியும் இயல்பையும் வளர்க்கும். அரசுக்கு வல்லந்தம் மட்டும் ஆதாரம் ஆகாது, மக்களுடைய விருப்பமும் ஆதாரம் ஆகும்.

பா.சு.

**அரசியல் உணர்வற்ற கொள்கை** என்பது அரசியல் உலகில் இருந்துகொண்டு அரசியலைப் பற்றித் தெரியாமலும், தெரிந்திருந்தாலும் அரசியலில் ஆர்வமோ அக்கறையோ செலுத்தாமலும் இருக்கும் நிலையைக் குறிப்பதாகும். அரசியல் உணர்வற்ற கொள்கை (Apolitical) புதிதான கொள்கை அன்று. மனிதன் அரசியலில் பங்குபெறத் தொடங்கிய காலத்திலிருந்தே தொடர்ந்து வருவது இது. மனிதன் சமூகமாக வாழ விரும்பியதால் அரசியல் மனிதனுக்குத் தேவைப்பட்டது. சமூகம் என்பது மனிதன் தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள ஏற்பட்ட அமைப்பு. அச்சமூகத்தை ஒழுங்குப்படுத்தவும் அச்சமூகத்தில் தோன்றும் சிக்கல்கள், தீமைகள் ஆகியவற்றைக் களையவும் அமைக்கப்பட்டது அரசு. இவ்வண்ணம் அமைக்கப்பட்ட அரசு நடவடிக்கைகளில் மக்கள் அனைவரும் பங்கு பெற்றால்தான் அரசு சிறப்பாகச் செயற்பட முடியும். மாறாக, அரசு நடவடிக்கைகளை அறிவதற்கு வாய்ப்பில்லாமல் இருப்பது, அரசு நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்வதற்குரிய குறைந்த அளவு அறிவுகூட இல்லாமல் இருப்பது, அரசு நடவடிக்கைகளைப் பற்றித் தெரிந்திருந்தாலும் அவற்றைப் பற்றி நினைக்காமல் இருப்பது, நினைத்தாலும் 'நமக்கென்ன' என்று வாளா இருப்பது ஆகிய இவை போன்ற நிலைகளை அரசியல் உணர்வற்ற கொள்கை என்று குறிப்பிடலாம்.

மனிதன் சமூகத்தோடு இணைந்து வாழக் கூடியவன் எனவும் தனித்து அவனால் வாழ இயலாது எனவும் கருதிச் சமூகத்தை ஏற்படுத்தினான் என்னும்போது, சமூகம் ஏற்பட்ட பின்னர் ஏன் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ஒருவன் இருக்கிறான் என்ற கேள்வி, அரசியல் அறிஞர்களின் குறிப்பாக அரசியல் சமூகவியல் அறிஞர்களின் கவனத்தை மிகுதியாகக் கவர்ந்தது. மனிதனுடைய இயல்பான பண்பு, மனப்பாங்கு, கருத்து ஆகியவற்றை அறிந்து, அவற்றிற்கேற்ப அரசின் நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்ற புது அணுகுமுறை அரசியல் அறிவியலில் தோன்றியது. கிரகாம் வாலசு (Graham Wallace) என்பாரது 'அரசியலில் மனித இயல்பு' (Human nature in Politics) என்னும் நூலும், பென்ட்லியின் (F. Bently's) 'அரசாங்கச்

செயல் முறை' (The Process of Government) என்னும் நூலும் 1908-ஆம் ஆண்டில் வெளிவந்தன. இந்த நூல்கள் அரசியல் சிக்கல்களைப் புதிய கோணத்தில் அலசி ஆராய்ந்துள்ளன. பின்னர், அரசியலில் வாக்களிப்பவர்களின் நிலையை அறிந்து கொள்ள, வாக்களிக்கும் நடத்தை (Voting Behaviour) என்ற ஆய்வு அரும்பியது. வாக்களிக்கும் நடத்தை ஆய்வு, வேட்பாளர்களின் ஆர்வம், நடத்தை, நம்பிக்கை கருத்து போன்றவற்றை அறிந்து, ஏன் சிலர் வாக்களிப்பதில்லை? வாக்களிக்க ஆர்வங்கொள்வதில்லை என்று ஆராயும் உணர்வைத் தூண்டிற்று. அவ் ஆய்வு, மனிதர்கள் அரசியல் முறைமையிலிருந்து அல்லது நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்வதன் காரணங்களையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் வெளியிட்டது. அரசியல் நடவடிக்கையிலிருந்து விலகிச் செல்வதால், சமூக பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படுகின்றதென்பதையும் சுட்டிக் காட்டியது, இந்த வாக்களிக்கும் நடத்தை ஆய்வு. வால்டர் லிப்மெனின் (Walter Lippman) "பொதுமக்கள் கருத்து" (Public Opinion) என்னும் நூல் 1922-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூல் வாக்களிக்கும் நடத்தை பொதுமக்கள் கருத்து ஆகியவை குறித்துத் தெளிவாக விளக்கியுள்ளது.

அரசியல் உணர்வற்ற கொள்கை கிரேக்க நகர அரசுகளிலேயே இருந்துள்ளது. கிரேக்க நகர அரசுகளின் ஆளுகை எல்லை சிறிய அளவில் இருந்தாலும், அரசுகளுக்கு எடுத்துக் காட்டாக அமைந்து, அரசியல் அறிவினை உணர்த்தியது என்பதை அறியலாம். அப்படிப்பட்ட கிரேக்க நகர அரசுகளில் ஒன்றான ஆதன்சில் எல்லா மக்களும் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபெறவில்லை. அந்நகர அரசிலுள்ள அடிமைகள், வெளிநாட்டினர், பெண்கள் போன்றோர்கள் அரசியல் நடவடிக்கைகளில் பங்கு பெற முடியாது. பங்கு பெறத் தகுதி பெற்ற அனைவரும் அரசியல் நடவடிக்கைகளில் பங்குபெறவில்லை என்பதைச் சில எடுத்துக்காட்டுகள் தெரிவிக்கின்றன. 40,000 மக்கள் பங்குபெறக் கூடிய அந்த ஆதன்சு நகர அரசில் 18,000 இருக்கைகள் தாம் கூட்ட அரங்கில் இருந்துள்ளன. தவிர, கூட்டங்களுக்குக் குறைவெண் (Quorum) ணும் நாளடைவில் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் மக்கள் கூட்டங்களில் கலந்து கொண்டனரா? இல்லையா? என்பதை அறிந்து கொள்ள அடையாளங்களும் இடப்பட்டுள்ளன. சாயங்கள் தோய வைத்து, கூட்டத்திற்கு வந்தவர்களுக்குச் சாய அடையாளமிட்டனர். தவிர, கூட்டங்களில் கலந்துகொண்ட நாள்களுக்கான படியும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே, அரசியல் நடவடிக்கைகளில் மக்கள் தாமாக விரும்பிப் பங்குபெறுவதை விடுத்து, பங்கு பெறுவதற்குரிய ஊக்குவிப்புகள் செய்யப்பட்டிருந்தன. இவற்றை அரசியல் உணர்வற்ற கொள்கையை நீக்குவதற்குரிய வழிகளாக எடுத்துக் கொள்ளலாம். கிரேக்க நகர அரசுகளில் அரசியலில் பங்கு பெறாதவர்கள்மீது தண்டனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இன்றைய நாளில், சமூகக் காரணிகள் சில அரசியல் உணர்வற்ற கொள்கைக்கு வித்திடுகின்றன. புதிதாக ஓரிடத்தில் குடியிருப்பவன் அரசியல் நடவடிக்கைகளில் விலகிச் செல்வதாகப் பல ஆய்வுகள் மெய்ப்பித்துள்ளன. ஏனெனில் அவனுடைய தொடர்பு குறைவாக இருப்பதால், அரசியல் நடவடிக்கைகளில் ஆர்வம் செலுத்துவதில்லை. குடும்பப் பொறுப்பின் காரணமாக 50 வயதிற்கு மேற்பட்டோர்கள் அரசியல் நடவடிக்கைகளில் மிகுந்த கவனம் செலுத்துவதில்லை. இவைபோன்றே இனம் (Race), சமயம் (Religion), பால் (Sex), தொழில் (Occupation) போன்ற காரணிகளாலும் அரசியல் நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவது குறைவாக உள்ளது. வளர்ந்து வரக்கூடிய சமூகச் சூழ்நிலையில் அந்தந்த நாடுகளில் நிலவும் பண்பாட்டுத் தன்மைகளைப் பொறுத்து, அரசியல் உணர்வற்ற கொள்கை நிலவி வருகிறது.

அரசியல் உணர்வற்ற கொள்கை தோன்றுவதற்கு இராபர்ட்டு அ. தால் (Robert A. Dahl) என்பார் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறியுள்ளார். அவை, 1. அரசியல் பங்கேற்பில் கிடைக்கும் நன்மை பிற பங்கேற்புகளைக் காட்டிலும் குறைவாக இருக்கும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை தோன்றுகிறது. ஒரு மனிதன் அரசியலில் முழுமையாகத் தன் நேரத்தைச் செலவழித்து நல்ல பெயர் வாங்குவதைக் காட்டிலும் சமூகப்பணி, பொருளாதாரச் செயல்கள் ஆகியவற்றில் இறங்கினால் விரைவாக நற்பெயரையும் பொருளையும் திரட்டி விடலாம் என்று எண்ணினால், அது அவனது அரசியல் உணர்வற்ற கொள்கையை வெளிப்படுத்துகிறது. 2. அரசியலில் மனிதனுக்கு அனைத்து நடவடிக்கைகளும் ஒன்றுபோல் தோன்றினால், மனிதனிடம் அரசியல் உணர்வற்ற கொள்கை தோன்றுகிறது என்று கருதலாம். எடுத்துக்காட்டாக, அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பதால், எந்தக் கட்சியைத் தேர்ந்தெடுப்பது என்ற கேள்வி எழுந்தால், எல்லாமே ஒன்றுதான் என்று கட்சியைத் தேர்வு செய்யாமல் விடுவது அரசியல் உணர்வற்ற கொள்கையாகும். 3. தனிமனிதன் முயற்சியால் பெரிய மாற்றங்களைச் செய்ய முடியாது என்று எண்ணும் போது, அரசியல் உணர்வற்ற கொள்கை உருவாகிறது. என்னுடைய ஒரு வாக்குத்தான் அரசியல் முடிவினை மாற்றி விடுமா? என்று எண்ணுவது, ஏற்கெனவே ஒரு முடிவினைப் பெரும்பாலோர் வர

வேற்கும்போது தன்னுடைய உதவியை நல்கினாலும், நல்காவிட்டாலும் முடிவு தெரிந்த முடிவுதான் என்று எண்ணுவது அரசியல் உணர்வற்ற கொள்கையாகும். 4. எதிர்பார்க்கக்கூடிய அரசியல் முடிவு தன்னுடைய பங்கேற்பு இல்லாமலேயே மனத்திற்குகந்த நல்ல முடிவாகத்தான் வரும் என்று அளவுக்குமீறிய தன்னம்பிக்கை ஏற்படும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை ஏற்படும். 5. அரசியல் முறைமையில் தன்னுடைய அரசியல் அறிவு மிகவும் குறைவு என உணரும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை உருவாகிறது. இந்தியா போன்று பரந்துவிரிந்து பல்வேறு பகுதிகளைக் கொண்ட நாட்டில், ஏராளமான மக்கள் தொகையும் இருப்பதால், அந்நாட்டில் ஒருவரது அரசியல் அறிவு குறைவாக இருத்தல் கூடும். இதனாலும் அரசியல் உணர்வற்ற கொள்கை அமைகிறது. 6. அரசியலில் பங்கேற்றால் பல சிக்கல்களுக்கு இலக்காகலாமென எண்ணும்போது அரசியல் உணர்வற்ற கொள்கை உருவாகிறது. தேர்தல் விதிகள் நியாயமான, சுதந்திரமான தேர்தலுக்கு வழி வகுத்தாலும், அச்சுறுத்தல், வன்முறை போன்றவற்றால் தேர்தல் ஊறுசெய்யப் படுகின்றதென்பது உண்மை. அச்சுறுத்தல், வன்முறை, போராட்டம், தள்ளிவைத்தல் போன்றவற்றாலும் அரசியல் உணர்வற்ற கொள்கை ஏற்படும்.

அரசியல் அறிஞர்களின் கவனத்தை இருபதாம் நூற்றாண்டில் மிகவும் கவர்ந்து, அரசியல் சமூக ஆராய்ச்சியில் ஓர் உந்து சக்தியாக விளங்குவது அரசியல் உணர்வற்ற கொள்கை எனலாம். எகல் (Hegel) எனும் செருமானிய அறிஞர், மதம் மற்றும் ஆன்மீகம் ஆகியவைகளிலிருந்து மனிதன் விலகியிருத்தலால் தான் இந்நிலை தோன்றுகிறது என்று கூறியிருந்தாலும், சிக்மண்டு பிராய்டு (Sigmond Freuid) போன்ற உளவியலறிஞரும், மாக்சு வீபர் (Max Webre) போன்ற சமூகவியலறிஞரும் இதனைத் திறனற்ற, உதவியற்ற, மற்றவர்களை வெறுக்கிற ஒரு மனநிலையை உணர்த்துவதாகக் குறிப்பிடுகின்றனர். பார்சன்சு (Parsons) போன்ற சமூகவியலர்கள், இக்கொள்கையை, வாழ்வின் செய்கைகளிலிருந்து பிரிந்து இருக்கும் ஓர் உணர்வு என்கிறார்கள். மார்க்சு (Marx) இக்கொள்கையின் பொருளைப் பொருளாதாரத்தால், முதலாளித்துவ முறையின் தீமையாக உழைப்பாளிகளை முதலாளிகள் சுரண்டுவதைக் குறித்துக் கூறுகிறார். காந்தி அடிகள் சர்வோதயம் எனும் கருத்து வாயிலாகவும், இலாசுவெல் (Lasswell) சுதந்திர மனிதர்களின் பொது நல அமைப்பு எனும் கருத்து வாயிலாகவும் இச்சிக்கல்களுக்குத் தீர்வுகாண முயற்சி செய்கின்றனர். அற, ஆன்மீக, சமுதாய, பொருளாதார, கல்வி, ஒழுக்க, அரசியல் அம்சங்கள் தனித்தனியாக மனித வாழ்வில் சிதைந்து விடாமல் அவையனைத்தும் ஒன்றியிணைந்து அன்பினால் மனிதர்கள் அனைவரும் வாழ்வில் உண்மையில் பற்றுக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமானால், அதிகாரக் குவிப்பு நீங்கி, மனிதன் கூட்டுறவினால் தன்னைத்தானே ஆட்சி செய்து கொள்ளும் முறையைக் காந்தியடிகள் வலியுறுத்துகிறார்.

அரசியல் உணர்வற்ற கொள்கையை நீக்குவதற்குரிய வழிமுறைகளைக் கண்டுபிடித்து, அவற்றை நீக்கினால்தான் அரசியல் முறை சீராகச் செயல்படும். எனவே மக்களுடைய மனப்பாங்குகளை அறிந்து, அவற்றிற்கேற்ற அரசியல் முறைமையை அமைத்தால் அரசாங்கம் செம்மையாகச் செயல்படும். மக்களும் தாங்களாகவே தங்கள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் கொடுத்து, நம்முடைய அரசு என்ற சமுதாய உணர்வோடு (Community) உறவு கொண்டாடினால் தான் அரசாங்கம் சிறப்பாகச் செயல்படும். சி.ஞா.

**அரசியல் கட்சிகள்** என்பன ஒரு குறிப்பிட்ட அரசியல் அமைப்புக்குள் அதிகாரத்தைக் கைப்பற்றவும் அதைச் செயற்படுத்தவும் அமைத்துக் கொள்ளுகின்ற குழுக்களாகும்.

புரட்சி, பிரபுத்துவம், முடியாட்சி போன்ற ஆட்சி அமைப்புகள் தோன்றுவதற்கு முந்திய பண்டை நாட்களிலேயே தன்னலக் குழுக்கள் (Cliques), தன்னலக் கும்பல்கள் (Factions) ஆகிய சமூக அமைப்புகள் குறிப்பிட்ட பிரபுவையோ செல்வாக்கான மனிதரையோ சுற்றி உருவாகிச் செயல்பட்டன. பாராளுமன்ற ஆட்சி அமைப்பு முறையின் தோற்றமும், அரசியல் கட்சிகளின் தோற்றமும் தொடக்கக்காலத்தில் இம்முறையை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்பது மட்டுமன்றி, வங்கியதிபர்கள், தொழிலதிபர்கள், வணிகர்கள் போன்ற செல்வர்களைச் சுற்றிப் புதிய தன்னலக் குழுக்கள் மற்றும் தன்னலக் கும்பல்களை உருவாக்கவும் வழிகோலியது. பிரபுக்களின் ஆதரவில் நடைபெற்று வந்த ஆட்சிகள் பின்னர்த் தொழிலதிபர் வணிகர்களின் ஆதரவில் நடைபெறத் தொடங்கியபோது பின்னவர்கள் தங்கள் குழுக்களை, அமைப்பு அளவிலான நிறுவனங்களாக முறைப்படுத்தி அவற்றின் வாயிலாக அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டனர். குறுகிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்தக் கட்சிகளே கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்கா ஆகியவற்றில் பொது மக்களின் ஆதரவிலான சிறியதும் பெரிதுமான அரசியல் கட்சிகளாக உருமாறின. இவ்வாறாக இக்கால முறையிலான அரசியல் கட்சிகள், பிரதிநிதித்துவம், பாராளுமன்ற முறை ஆகிய அமைப்புகளின் வளர்ச்சிப் பயனாய்க் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகிய பகுதிகளில் தோன்றின. சட்ட மன்றங்களில் ஒத்த கருத்துகளையும் கொள்கைகளையும் அணுகு முறைகளையும் கொண்ட உறுப்பினர்கள் இணைந்து

செயல்பட முனைந்த போதும், பொதுமக்கள் வாக்குரிமை பெறத் தொடங்கிய போதும் அவர்களிடையே கட்சிகள் அமைக்கப்பட்டன.

உலகம் முழுவதிலும் கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் அரசியல் கட்சிகள் பரவத் தொடங்கின. ஆப்பிரிக்காவில் சிலபோது இனம் அல்லது பழங்குடிப் பிரிவுகளின் அடிப்படையில் கட்சிகள் உருவாக்கப்பட்டன. ஆசியாவில் சில பகுதிகளில் சமய அடிப்படையில் கட்சிகள் உருவாயின. ஓரளவு அரசியல், இராணுவத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது அரசியல் கட்சிகள் என்பவை மாறுபட்ட அரசியல் சூழ்நிலைகளிலும் செயல்படுகின்றன.

பணிமுறைப்படிவம் (Cadre), பலநாடுகளில் கட்சிகளின் அடிப்படையிலானவை என்றும் மக்களின் கூட்டத்தையே (Mass) அமைப்பாகக் கொண்டவை என்றும் பிரிக்கப்படும்இவை இரண்டின் கலப்பிலான கட்சிகள் பல உண்டு.

அமைப்பு அடிப்படைக் கட்சிகள் என்பவை அரசியல் உணர்வு கொண்ட செயல் வீரர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டவை. இவை கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் பல்வேறு காரணங்களை நோக்கமாகக் கொண்டு தோன்றின.

மக்கள் கூட்ட அடிப்படைக் கட்சிகள் என்பவை, ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கட்சிக்காரர்களாகக் கொண்டு திகழ்பவை. இங்கு உறுப்பினர்களின் எண்ணிக்கை இன்றியமையாததன்று. கி.பி 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஐரோப்பாவின் சோசலிசக் கட்சிகள் இவ்வாறு தோன்றின.

எவ்வகைக் கட்சியாயினும், எவ்வகை அரசியல் அமைப்பாயினும், அவை ஒரு செயலில் பொதுவாகின்றன. ஏதேனும் ஓர் அளவில்-ஆளுங்கட்சியாகவோ எதிர்க்கட்சியாகவோ-நாட்டின் அரசியல் அதிகாரத்தில் பங்கு பெறுவதன் வாயிலாக நாட்டின் கொள்கைகளை நிருணயிக்கின்றன.

புரட்சிக் கட்சிகளை, சட்டவரம்புக்குட்பட்ட கட்சிகளினின்று கோட்பாடு அடிப்படையில் பிரிப்பது எளிதெனினும், நடைமுறையில் எளிதன்று.

தேர்தலில் வெற்றி பெற்றதும் அந்தக் கட்சி அரசாங்கத்தில் எந்த அளவிற்குத் தலையிடலாம் என்னும் சிக்கல் எழுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மீது அந்தக் கட்சியின் பிடி மெலிதான ஒன்றே. ஏனெனில் சட்டமன்றத் தகுதி அவர்களுக்கென்று சில தன்னுரிமைகளை — மன்ற நடவடிக்கை, அரசில் பங்கு, குறிப்பாக வாக்குரிமை — ஆகியவற்றை வழங்குகிறது.

கட்டுறுதியான (Rigid), நெகிழ்வான (Flexible) கட்சிகள் என்பனவற்றை அவற்றின் கட்டுப்பாடான, ஒன்றிணைக்கப்பட்ட செயலின் அடிப்படையில் வேறுபடுத்தலாம். அதுபோலவே ஆளுங்கட்சி, ஆட்சியில் இல்லாக் கட்சி ஆகியவற்றிற்கும் இப்பாகுபாடு பொருந்தும். எடுத்துக்காட்டாக, ஆளும் கட்சியின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரும் போது எதிர்க்கட்சிகள் இணைந்து செயல்படுவதும், ஆளுங்கட்சி மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயல்படுவதும் இயல்பு.

மிகுதியான மக்கள் தொகை கொண்ட நாட்டில், பிரதிநிதித்துவ மக்களாட்சி என்பது அரசியல் கட்சிகளின்றிச் செயல்பட இயலாது. தங்கள் பேராளரின் அரசியல் கொள்கை என்ன என்பதை வாக்காளர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள, வேட்பாளர்களின் கட்சிகள்தாம் எளிமையான சான்றாகும். மேலும் தனி மனிதர்களின் வாக்குறுதிகளைக் காட்டிலும் அவர்கள் சார்ந்துள்ள அரசியல் கட்சிகளின் நீண்ட நாள் கொள்கைகளே வேட்பாளரை மக்களுக்கு எளிதாக அடையாளம் காட்டவல்லன. மக்களிடையே திகழும் பல்வேறு கருத்துகளைச் சில கொள்கைகளின் அடிப்படையில் இணைத்துச் செயல்படும் ஆற்றல் கட்சிகளுக்கு உண்டு.

மற்ற எல்லா அமைப்புகளையும் போலவே கட்சிகளும் தம் உறுப்பினர்களைத் தலைவர்களின் உட்கட்சி வட்டத்தின் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்படி பார்த்துக் கொள்கிறது. 'பணிமுறைப்படிவக்' கட்சிகளில் இச் செயலை அதிகாரம் மிக்க குழுக்களும், 'மக்கள் கூட்டுக்' கட்சிகளில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களும் நடைமுறைப் படுத்துகிறார்கள்.

மக்களாட்சி அரசியல் முறையில், பிரதிநிதித்துவம் என்பது, இதுபோன்ற உட்குழுக்களின் போட்டிச் செயல்பாட்டின் அடிப்படையிலேயே பெரும்பாலும் நடைபெறுகிறது. எந்தப் புதிய மக்களாட்சியும் கட்சிகளின்றிச் செயல்பட முடியாது என்னும்போது மேற்கூறிய குழு மனப்பான்மை தேவையானதொரு குறைபாடாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

கட்சி முறைகள், 'ஒற்றைக் கட்சி', 'இரு கட்சி' மற்றும் 'பல கட்சி' முறை எனப் பல வகைப்படும். இப்பாகுபாடு ஒரு நாட்டில் நிலவும் கட்சிகளின் எண்ணிக்கையாலன்றி, அக்கட்சிகள் வெளிக்காட்டும் வேறுபாடான தன்மைகளால் பாகுபடுத்தப்படுகின்றன. 'இருகட்சி', 'பலகட்சி' முறைகள், பல கூறுபாடுகளுடைய ஒரு சமுதாயத்தின் மாறுபாடான அரசியல் விருப்பு, வெறுப்புகளை நடைமுறைப்படுத்தும் மக்களாட்சி சாதனங்களாகப் பயன்படுகின்றன. பொது

வாக, அடிப்படையில் மாறுபாடான கருத்துகளைப் பொறுத்துக் கொள்ளாத சூழ்நிலைகளிலேயே ஒற்றைக் கட்சி முறை செயல்படுகிறது.

ஆங்கிலோ-சாக்சன் நாடுகளில் 'இரு கட்சி' முறையே இயல்பானதென்றும் 'பலகட்சி' முறை விதிவிலக்கானது என்றும் கருதுகின்றனர். 'இரு கட்சி' முறை கிரேட் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் செயல்படுகிறது. எனினும் பலகட்சிகள் அங்கே நிலவுகின்றன. கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் சமதருமக் கொள்கை, பழமையாளர் கட்சி, தாராளக் கொள்கையாளர் கட்சி ஆகிய இரண்டினுக்கும் புதிய பொதுச் சவாலாகத் தோன்றியது.

சரிவிகிதப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறை, பல கட்சிகள் தோன்றிச் செயல்படுவதற்கானசிறந்தகாரணங்களில் ஒன்றாகும். அரசியல் கருத்து மாறுபாடுகளின் ஆழமான பிளவுகள் மற்றொரு காரணமாகும்.

பலகட்சி முறையில் பாராளுமன்றப் பெரும்பான்மை என்பது பொதுவாகக் கூட்டணியால் மட்டுமே பெறப்படுவதாகிறது. நிலையற்ற தன்மையும், பலக்குறைவும் அத்தகைய அரசுகளில் ஏற்பட மிகுந்த வாய்ப்புள்ளது.

கிரேட் பிரிட்டனிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் 'இரு கட்சி முறை' செயல்படுகிறது. எனினும் இரண்டிற்கும் அடிப்படையில் வேறுபாடு உள்ளது. அமெரிக்கக் கட்சிகளில் குடியரசுக் கட்சியும், சனநாயகக் கட்சியும் ஒரே தாராளக் கொள்கைகளையுடைய இருவகையான கட்சிகளாகவே செயல்படுகின்றன. அவை நெகிழ்வுத் தன்மையுடையனவாகவும் இருக்கின்றன.

கிரேட் பிரிட்டன் தொடர்ந்து இரு கட்சி முறையைப் பின்பற்றி வருகிறது. 1914-க்கு முன்பாகப் பழைமைக் கட்சியும் தாராளக் கொள்கைக் கட்சியும், 1935-இலிருந்து பழைமைக் கட்சியும், தொழிலாளர் கட்சியும் செயல்பட்டு வருகின்றன. அமெரிக்க நாட்டுக் கட்சிகள் போலன்றிப் பிரிட்டனிலுள்ள கட்சிகள் கூட்டுறுதியும் கட்டுப்பாடும் கொண்டு விளங்குகின்றன. அதேபோல் இருகட்சியும் மக்களாட்சிப் பண்பில் நம்பிக்கையுடையவையாகவே திகழ்கின்றன.

'ஒற்றைக்கட்சி' முறைக்கு வரலாற்றில் பொதுவுடைமை நாடு, பாசிச நாடு, வளர்ந்து வரும் நாடுகள் ஆகியவற்றில் எடுத்துக்காட்டுகள் கிடைக்கின்றன.

பொதுவுடைமை நாடுகளில் இக்கட்சி, நகர்ப்புறத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், அறிவாளிகள் ஆகியோரின் ஒன்றிணைந்த முனைப்பாகி, 'தொழிலாள சருவாதிகார'த்தை உருவாக்கச் செயல்படுகிறது. இந்நாடுகளில் அரசின் அதிகார முறையிலான தலைமையைவிடக் கட்சித் தலைமையே உண்மையான வலிமை மிக்க பகுதியாகிறது. ஆனால் பாசிசக் கட்சிகள், செருமனி நீங்கலாக, மற்ற நாடுகளில் முதன்மையான பங்கினை ஆற்றவில்லை. செருமனி கூடத் தேசிய சோசலிசக் கட்சி, தொடக்கத்தில் பெருஞ்சிறப்பினைப் பெற்றிருந்த போதிலும், பின்னர் இட்லர் தம் சிறப்புப் படையையும், கெசுட்டாபோமே என்ற இரகசியக் காவல் துறையையுமே பெரிதும் நம்பியிருந்தார் என்பது புலனாகிறது. ஆட்சிப் பொறுப்பிலமர்ந்த பின்னர் இத்தாலி, செருமனி நாட்டின் பாசிசக் கட்சிகளின் மக்கள் தொடர்பு குறையத் தொடங்கியதைக் காணமுடிகிறது.

ஆப்பிரிக்க, ஆசிய, இலத்தீன் அமெரிக்காவிலுள்ள சில வளர்ந்துவரும் நாடுகளிலும் ஒற்றைக் கட்சி ஆட்சி முறை நிலவுகிறது. இது பெரும்பாலும் சற்றே சோசலிசம் அல்லது குறைந்த பட்ச முற்போக்கு நோக்கமுடையது என அறிவிக்கப்படுகிறது.

இந்தியாவில் அரசியல் கட்சிகள் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே தோன்றத் தொடங்கின. மேனாட்டுக் கல்வி கற்றவர்கள் இணைந்து, இந்திய நிருவாகப் பதவிகளில் உரிமை பெறும் பொருட்டும், இந்தியத் தன்மைகளைக் காக்கும் பொருட்டும் இந்திய தேசிய காங்கிரசைக் கி.பி. 1885-இல் பம்பாயில் தொடங்கினார்கள். மிதவாத அமைப்பாக இருந்த இது பின்னர்த் தீவிரவாதிகள் வசமாகியது. 1920-க்குப் பின்னர்க் காந்தி அடிகளின் வழி காட்டுதலில் 'அகிம்சை', 'சத்தியாக்கிரகம்' என்னும் வழிமுறைகளைப் பின்பற்றும் விடுதலை இயக்கமாக இவ்வமைப்பு மாறியது. இக்கால நிலையில் முசுலிம் லீக்கு, இலிபரல் கட்சி ஆகியவையும் 1920-க்கும் முன்னர்த் தோன்றின. இந்தியத்தேசியக் காங்கிரசு 1935-இல் இந்திய அரசியல் சட்டம் வந்த பிறகே சட்டசபைத் தேர்தல்களில் கலந்துகொண்டு ஒரு முழுமையான அரசியல் கட்சியாக மாறியது.

பொருளாதார, சமூகத் துறைகளில் ஏற்பட்ட கருத்து மாறுபாடுகளுக்கேற்பப் புதிய கட்சிகள் தோன்றும் சூழல்கள் உருவாயின. அதன்படி பெரும்பாலும் தொழிலாளர்களைக் கொண்ட கம்யூனிசுட்டுக் கட்சி இந்தியாவில் தோன்றியது. காங்கிரசுக் கட்சியினின்று பிரிந்து வந்த சிலர் புதிய கட்சிகளைத் தோற்றுவித்தனர். எம். என். இராய் தோற்றுவித்த தீவிர சனநாயகக் கட்சியும், சுபாசு சந்திரபோசு தோற்றுவித்த முன்னேற்றக் கட்சியும் இவ்வகையைச் சேர்ந்தனவாகும். 1952-இல் தோனறிய பிரசா கட்சி, 1952-இல் சோசலிசுட்டுக் கட்சியோடு இணைந்து பிரசா சோசலிசுட்டுக் கட்சியாக உருவாகியது. பின்னர் இராசாசியால் சுதந்திராக் கட்சி, தனியுடைமைப் பொருளாதார நோக்கோடு தோன்றி அவரோடு மறைந்தது. 1977-ஆம் ஆண்டில் நெருக்கடிக் கால

முடிவில் காங்கிரசை எதிர்த்துப் பல்வேறு கட்சிகள் இணைந்து சனதாக் கட்சி என ஒரு கட்சியாக உருவாகி, முதன் முதலாகக் காங்கிரசு அல்லாத ஆட்சியை மையத்தில் தோற்றுவித்தபோதிலும், விரைவில் கட்சியின், உட்பூசலால் வீழ்ந்து சிதறி, மீண்டும் பலகட்சி முறைக்கு வழிவகுத்தது.

தமிழகத்தில் 1916-இல் பார்ப்பனர் அல்லாதாரால் தோற்றுவிக்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நீதிக் கட்சி என விளங்கி மாநில அரசைக் கைப்பற்றியது. சமூகச் சீர்திருத்தத்தை முதன்மையாகக் கொண்டு பெரியார், ஈ.வே.இராமசாமியால் தோற்றுவிக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் 1944-இல் திராவிடர் கழகம் எனப் பெயர் பெற்று விளங்கி வருகிறது. இக்கழகத்தினின்று அரசியல் இயக்கமாகப் பிரிந்த திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு வலுவான பணிமுறைவடிவம் பெற்ற கட்சியாக விளங்கி மாநில ஆட்சியைக் கைப்பற்றியது. இதனின்று பிரிந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தனிக் கட்சியாக இயங்கி மாநில ஆட்சியை ஏற்று நடத்தி வருகிறது.

அரசியல் கட்சிகள் வீழ்ச்சி நிலையில் உள்ளன என்று மேலை நாடுகளில் உள்ள சில பழைமை வாத வட்டாரங்கள் நீண்ட காலமாகச் சொல்லி வருகின்றன. அவர்கள் கருத்துப்படி அரசியல் கட்சிகள் என்பவை பிரிவு சக்திகள், தேசிய ஒற்றுமையின் எதிரிகள், ஊழலுக்கு ஊற்றுக் கண்கள் என்றெல்லாம் வருணிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அளவிலும் எண்ணிக்கையிலும் அரசியல் கட்சிகள் வீழ்ச்சி பெறவில்லை. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பா, வட அமெரிக்கா ஆகியவற்றில் மட்டுமே நடைமுறையிலிருந்த அரசியல் கட்சிமுறை இப்போது உலகின் எல்லா நாடுகளிலும் தோன்றிச் செயல்பட்டு வருகிறது. எனவே, பெருமளவு தொழில் மயமாக்கப்பட்ட ஒரு நாட்டில் அரசியல் கட்சிகளின்றி மக்களாட்சி செயல்படுவதென்பது இன்று இயலாத காரியமாகும். புதிய உலகில், அவை ஒரே உண்மையின் இரண்டு தோற்றங்களாகவும், ஒரே ஆடையின் உள் வெளிப் பகுதிகளாகவும் திகழ்கின்றன.

பெ.செ.

துணை நூல்கள்:

**Maurice Duverger**, "Les Partis Politiques", 1951, Eng. Trans., Political Parties: Their organization and activity in the Modern State, 2nd ed., 1964.

**Joseph, G.**, "Lapalombara and Myron Weiner", (eds), Political Parties and Political Development, 1966.

**Samuel, J.**, "Eldersveld, Political Parties: A behavioral Analysis," 1964.

***அரசியல் கருத்துகள்*** மனித வாழ்க்கையின் மேம்பாட்டிற்கு இன்றியமையாதவை என்பதை வரலாற்று ஏடுகள் நமக்கு எடுத்துரைக்கின்றன. அரசு (State) எங்ஙனம் உருவாகியது அல்லது உருவாக்கப்பட்டது என்பதற்குத் தத்துவ முறையான கோட்பாடுகள் பல உண்டு. ஆனால் காலப் போக்கில் ஏற்பட்ட சமுதாய அமைப்பே அரசு என்பதில் ஐயப்பாடில்லை. அரசு தோன்றியது முதல் இன்றுவரை மனிதன் அரசியல் உணர்வுகளால் உந்தப்பட்டவனாய், மக்கள் வாழ்வு நலம்பெற, செழிப்புற அரசு எப்படிச் செயல்படவேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்பவனாய் வாழ்ந்து வந்துள்ளான். மனிதச் சிந்தனையில் விளைந்த அரசியற் கருத்துகள் பலப்பல.

அரசியல் ஆய்வுக் கூடமாகப் பண்டைக் கிரேக்கம் விளங்கியது. மலைகள் நிறைந்த கிரேக்கத்தில் தனித்தியங்கும் நகர அரசுகள் (City States) தோன்றலாயின. எனவே, அவ்வரசுகள் ஒற்றுமையுணர்வோடு ஒன்றுபட்டு வாழ்வது அரிதாயிற்று. முதற்கண் முடியாட்சி (Monarchy) அமைக்கப்பெற்று, பின்னர்ச் சிலராட்சி (Oligarchy) தோன்றி, அவ்வாட்சி மக்கள் ஆதரவு பெற்ற தனிப்பட்டவர்களால் கவிழ்க்கப்பட்டுத் தனியார் ஆட்சி (Tyranny) உருவாகி, இறுதியில் மக்களாட்சி (Democracy) நிறுவப்பட்டது. முடியாட்சி என்பது மன்னராட்சியாகும். சிலராட்சி என்பது செல்வம் கொழித்த உயர்குடி மக்கள் சுயநலத்தைக் கருதி ஆட்சி புரிவதாகும். தனியார் ஆட்சியினை ஆங்கிலத்தில் 'டிரன்னி' (Tyranny) என்பார்கள். பொதுவாகக் கூறின், அத்தகைய ஆட்சி கொடுங்கோலாட்சியைக் குறிக்கும். ஆனால் கிரேக்கத்தில் சிலராட்சியைக் கவிழ்த்துத் தனியார் ஆட்சியை நிறுவியவர்கள் கொடுங்கோலர் அல்லர். அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய விதந்தான் முறைகேடானதே தவிர அவர்கள் ஆட்சிமுறை மக்கள் நலனைப் பேணிக்காக்கும் ஆட்சியாகவே விளங்கியது. எனினும், படை பலத்தையே அவ்வாட்சி நம்பியிருந்ததால் அதனை மக்கள் வெறுக்கலாயினர். இவ்வண்ணம் மக்களாட்சி மலரத்துவங்கியது.

கிரேக்கத்தில் சிறந்தோங்கி விளங்கிய நகர அரசுகள் இசுபார்ட்டா (Sparta), ஆதென்சு (Athens) என்பவையாகும். இவ்விரு அரசுகளும் கிரேக்க அரசியல் வானில் இரு துருவங்களாக விளங்கின. முடியாட்சி, உயர்குடியாட்சி (Aristocracy), மக்களாட்சி இம்மூன்று ஆட்சி முறைகளின் இயல்புகளைக் கொண்டதாக இசுபார்ட்டா செயல்பட்டது. இதற்கு மாறாக ஆதென்சு நகர அரசு மக்களாட்சியின் சின்னமாகச்

சிறப்புற்றிருந்தது. குறிப்பாகக் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த பெரிக்கிளீசு (Pericles) காலத்தில் மக்களாட்சி ஆதென்சில் உச்சக் கட்டத்தை அடைந்தது. இசுபார்ட்டாவில் குடிமக்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தார்கள். ஆதென்சு மக்கள் பல்வேறு துறைகளில் கலைத்திறன் படைத்தவர்களாக இருந்தனர். அனைத்துக்குடி மக்களும் பங்கேற்கும் நேர்முக மக்களாட்சியாக ஆதென்சு சிறப்புற்று விளங்கியது. என்றாலும் மகளிரும் அடிமைகளும் அரசியலில் பங்கேற்க உரிமைகள் பெற்றிருக்கவில்லை. நல்ல குடிமகன் என்பான் ஆளுகின்ற தகுதி பெற்றவனாகவும், பிறருடைய ஆட்சிக்குட்பட்டுக் கட்டுக்கோப்புடன் செயற்படும் தகுதி பெற்றவனாகவும் இருத்தல் வேண்டும் என்ற அரிய கோட்பாட்டினை எடுத்துரைத்தவர்கள் பண்டைக் கிரேக்க மக்களாவர்.

கிரேக்கத்தில் தம்மை அரசியல் மேதைகள் என முதன்முதல் பறைசாற்றிக் கொண்டவர்கள் சோபிசுடுகள் (Sophists) ஆவர். இவர்கள் கி.மு. 5-ஆம் நூற்றாண்டில் ஆதென்சு நகரத்தில் வாழ்ந்த சிந்தனையாளர்கள் ஆவர். மரபுவழிச் சமய, அறநெறிக் கோட்பாடுகளைத் தகர்த்தெறிந்து மனிதன் கட்டுப்பாடற்ற உரிமையுடன் வாழ்ந்து மேம்பாடடைய வேண்டும் என்ற கருத்தினை வலியுறுத்தினார்.

ஆதென்சு நகரத்தைச் சார்ந்த சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீசு ஆவார். 'வாதமுறைப்படி உண்மையை ஆய்தல் வேண்டும்; ஐயம், வினா, விடை, அறிவுரை என்னும் முறையைப் பின்பற்ற வேண்டும்' என்று ஆதென்சு நகர இளைஞர்கட்கு அறிவுரை புகட்டினார். அவர்தம் கருத்துகள் சோபிசுடுகளின் கருத்துகளுக்கு மாறானவையாகும். அரசு என்பது இயல்பாக உருவாகிய தவிர்க்க முடியாத அமைப்பாகும். சட்டம் புனிதத் தன்மை வாய்ந்தது. நிலையான தன்மை பெற்றது. அதிகாரம் என்பது என்றென்றும் நிலைத்திருக்கும் உரிமைக்குட்பட்டதாகும். அறிவிற் சிறந்தவர்கள் ஆட்சி செலுத்தும் பொதுநலக் கருவியாக அரசாங்கம் விளங்குதல் வேண்டும். எழுத்து வடிவில் சாக்ரட்டீசு தம் அரிய கருத்துகளை விட்டுச் செல்லவில்லை என்றாலும், அவர்தம் கருத்துகளை உலகறியச் செய்யச் செனோபன் (Xenophon) பிளேட்டோ (Plato) ஆகிய இரு மாணவர்களைப் பெற்றிருந்தார்.

பிளேட்டோ இயற்றிய குடியரசு (The Republic) என்னும் நூல் மிக்கபுகழ் பெற்றதாகும். ஒழுங்கு என்பது ஒவ்வொரு குடிமகனும் குடியுரிமைக்குரிய தம் பணிகளைச் செவ்வனே செய்வதாகும் என்றார். ஒரு குடிமகனின் தலையாய கடமை நாட்டிற்குத் தன்னை உரிமைப்படுத்துதலாகும். பிளேட்டோ வரைந்த குடியரசில் ஆட்சியாளர்கள் தன்னலமற்றவர்கள். தமக்கென மனைவி, மக்கள் சொத்துகளைப் பெற்றிராதவர்கள். நல்லாட்சி புரியும் வண்ணம் அதற்குரிய கல்வியறிவைப் பெற்றவர்கள். இவ்வகையில் பொதுவுடைமைக் கருத்துகளை அன்றே வெளியிட்டவர் பிளேட்டோ என்பது கருதப்படுகிறது.

பிளேட்டோவின் தலை சிறந்த மாணவர் அரிசுடாட்டில் (Aristotle) ஆவார். ஆனால் ஆசிரியர் கூறிய கருத்துகளை அப்படியே ஏற்றுக்கொள்ளாதவர். அவர் எழுதிய அரசியல் (Politics) என்னும் நூல், பிளேட்டோவின் குடியரசு நூலின் இலக்கியச் சிறப்பைப் பெற்றிராவிட்டாலும், அரசியல் கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. 'மனிதன் அரசியல் பிராணி என்னும் தத்துவத்தைப் போதித்த அறிஞர் அரிசுடாட்டில், எந்த மனிதனும் ஓரரசின் கட்டுக்கோப்பிற்குள்தான் சிறப்புற வாழ்ந்திட முடியும் என்றார். ஆட்சியாளர்கள் மனைவி மக்களைப் பெற்றிருத்தல் கூடாது, தனிச்சொத்துகள் கொண்டவர்களாகயிருத்தல் கூடாது என்ற பிளேட்டோவின் கருத்துகளை அரிசுடாட்டில் ஏற்க மறுத்தார். என்றாலும் கல்வியறிவின் முதன்மைத் தன்மையைப் பிளேட்டோவைப் போன்றே வற்புறுத்தினார். அரசு ஒருவராட்சி, சிலராட்சி, பலராட்சி என மூவகைப்படும். இவ்வாட்சி முறை ஒவ்வொன்றும் நல்லாட்சியாகவும், அதற்கு நேர்மாறானதாகவும் அமையலாம். புரட்சி தோன்றுவதற்கு முதன்மையான காரணம் சமத்துவம் இல்லாமையாகும். இவ்வரிய கருத்துகள், கிரேக்க இயல்புடையனவாகவும், எங்கும் எப்பொழுதும் இன்றுவரை ஒப்புக் கொள்ளக்கூடியனவாகவும் திகழ்கின்றன.

எபிக்யூரசு (Epicurus, கி.மு. 312-270) ஆதென்சு நகரத்தைச் சார்ந்தவர் அல்லர். இவர் சேமாசு என்னும் தீவில் பிறந்தவர். ஆனால் தம் பதினெட்டாம் வயதில் ஆதென்சை அடைந்து, அந்நகரைத் தம் பிறப்பிடமாக்கிக் கொண்டு, அங்கே தம் கருத்துகளைப் பரப்பினார். அரசியலில் மக்கள் பங்கேற்பதை இவர் விரும்பவில்லை. இன்பம்தான் மனிதனின் குறிக்கோள். மனித இன்பத்திற்கு வழிவகுக்கும் கருவி அரசாகும். ஆட்சிமுறை வேறுபாடுகள் முதன்மை வாய்ந்தவை அல்ல. இக்கருத்துகளை மேற்கொண்ட எபிக்யூரியர்கள் நாளடைவில் அறநெறி தவறியவர்களாய்ச் சமுதாயக் கடமையுணர்வு இழந்தவர்களாய்ச் சீரழிந்தனர்.

சினோ (Zeno, கி.மு. 340-260) என்பவர் இசுடாய்க்குகளின் (Stoics) தலைவர். எபிக்யூரிசைப் போன்று ஏதென்சு நகரத்தைச் சார்ந்தவர் அல்லர் என்றாலும், அவரைப் போன்றே தம் கருத்துகளை அந்நகரில் பரப்பியவர். சைப்ரசு தீவில் பிறந்த சினோ 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் கோட்பாட்டிற்கு இணங்க மனித இனம் ஒரே குலம் என்றும்,

மனிதனின் குறிக்கோள் கடமையேயன்றி இன்பம் அன்று என்றும், மக்கள் சமத்துவம் வாய்ந்தவர்களாக இருத்தல் இன்றியமையாதது என்றும், அரசு இயல் பான அமைப்பாகும் என்றும், இயற்கைச் சட்டம் என்ப தொன்று உண்டு என்றும், அச்சட்டமே நிலையானது உயர்வானது என்றும் கற்பித்தார். இத்தகைய அர சியற் கருத்துகள் உரோமானிய அறிஞர்களிடையே பரவலாயின. உரோமானிய இசுடாய்க்குகளில் தலை சிறந்தவர் செனிக்கா (Seneca கி.பி. 3-65) என்பவரா வார்.

இத்தாலியில் சிறுநகரமாக அமைந்திருந்த உரோம் பிற்காலத்தில் (கி.மு. முதல் நூற்றாண்டில்) பெரும் பேரரசின் தலைநகரமாகியது. ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களையும் உள்ளிட்ட பேரரசாக உரோமானியப் பேரரசு விளங் கியது. இப்பரந்து விரிந்த பேரரசு அனைத்திலும் அமைதியை நிலைநாட்டிய பெருமை பண்டை உரோமாபுரியைச் சாரும். ஒருவரிடத்திலோ ஓரி டத்திலோ அத்துணை அதிகாரமும் குவிக்கப்பட்டிருத் தலாகாது என்றும், அரசு பதவியேற்றிருப்பவர்கள் நீண்ட காலம் பதவி வகித்தலாகாது என்றும், அதிகாரம் வரம்புடையதாக இருத்தல் வேண்டும் என்றும் உரோ மானியர்கள் கருதினார்கள். சட்டம் மூவகைப்படும். முதலாவது, எழுதப்படாத சட்டம். இது இயற்கைச் சட்டம் எனப்படும். இரண்டாவது, அரசால் இயற்றப் பட்ட சட்டமாகும். மூன்றாவது, உரோமானியப் பேரரசில் வாழும் எல்லா மக்களையும் கட்டுப்படுத்து வது. இறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ள சட்டக் கருத்து, பின்னர்ப் பன்னாட்டுச் சட்டத்திற்கு வித் திட்டது.

உரோமானிய அரசியல் தத்துவ மேதைகளில் முதன்மையானவர் எனக் கருதப்படும் பாலிபியசு (Polybius – கி.மு.205-122) என்பார் ஒரு கிரேக்கர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவர் உரோமானி யப் பேரரசின் வளர்ச்சியினையும், உரோமானிய அரசி யல் அமைப்புச் சட்டத்தின் சிறப்புக் கூறுகளையும், அச்சட்டத்தின் ஈடு இணையற்ற நிலைத் தன்மையி னையும் விவரித்துள்ளார். ஆனால் அவர் இறக்கும் போது அவர் போற்றிப் புகழ்ந்த உரோமாபுரி உட் பூசலுக்கும் கலவரத்திற்கும் ஆளாகியது.

மாவீரன் சூலியசு சீசர் (Julius Caesar) வாழ்ந்த காலத்தில் குடியரசுக் கோட்பாட்டினைத் தீவிரமாகப் பறைசாற்றியவர் சிசரோ (Cicero) ஆவார். இவர் உரோமானியக் குடியரசு அரசியல் அமைப்புச் சட்டத் தின் சிறப்பினை விளக்கினார். உரோமானியக் குடி யரசின் சீர்கேடுற்ற நிலைக்கு முதன்மையான காரண மாக இருந்தவர்கள் மக்களை மயக்கும் தலைவர்க ளாக விளங்கிய மரையசும் (Marius) சீசரும் போன்ற வர்களாவர் என்று குறிப்பிட்டார். அரசியற் செயல் களும், சட்டங்களும் அறநெறியையொட்டியனவாகவே அமைந்திருத்தல் வேண்டுமென்றார். அவர் வலியுறுத் திய சட்டக் கருத்துச் சுதந்திரம், சமத்துவம், சகோ தரத்துவம் என்ற கோட்பாட்டின் அடித்தளமாக விளங்கியது.

உரோமானியப் பேரரசு சிதைந்த காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் கிறித்தவ மதம் பரவியது. கி.பி 313-ஆம் ஆண்டு உரோமானியப் பேரரசர் கான் சுடன்டைன் (Constantine) சட்ட முறையில் கிறித் தவ மதத்திற்கு ஒப்புதல் அளித்தார். அதுகாறும் உரோமானியப் பேரரசில் கிறித்தவர்கள் துன்புறுத் தப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இடைக்காலம் முழுவதிலும் இயற்கைச் சட்டமும், தெய்விகச் சட்டமும் ஒரு பொருளின் இருமுகங்களா கக் கிறித்தவ அறிஞர்களால் கருதப்பட்டன. அச் சட்டத்தை மனிதனுடைய அறிவு ஒன்றை மட்டும் கொண்டு தெரிந்துகொள்ள முடியாது. அது இறை வனால் வெளிப்படுத்தப்படுவதாகும். அதனை ஆக மங்கள் வாயிலாக மக்கள் உணர்வர். தெய்விகத் துறையில் திருச்சபை, தன்னைப் பேராளர் என்று கருதுகிறது. சமயச் சார்பற்ற உலகியல் விவகாரங் களில் புனித உரோமானியப் பேரரசு (Holy Roman Empire) தன்னைப் பேராளர் என்று கருதுகிறது.

புனிதர் அகசுடின் (St. Augustine) இறைநகர் (City of God) என்னும் நூலில் மண்ணகருக்கும் விண்ணகருக்கும் வேறுபாடு கண்டார். அவர் பேரர சரது அதிகாரம், இறைவனால் அளிக்கப்பட்டது என் றும், மக்கள் பேரரசருக்கு அடிபணிந்திருத்தல் வேண் டும் என்றும், அதே நேரத்தில் பேரரசர் சமயச் சார் புடைய அதிகாரங்களைப் பெற்றவரல்லர் என்றும் குறிப்பிட்டார்.

உண்மையில் இடைக்காலம் முழுவதும் போப்பின் அதிகாரம் உயர்ந்ததா, பேரரசின் அதிகாரம் உயர்ந் ததா என்ற விவாதம் நடைபெற்றது. பாதுவாவைச் சார்ந்த மார்சிலியசு (கி.பி 1270-1342) என்பார், டிபென்சார் பாசிசு (Defensor Pacis, கி.பி.1324) என் னும் நூலில், திருச்சபைக்கு முழு அதிகாரம் உண்டு என்னும் கொள்கையை மறுத்தார். திருச்சபை என் பது, அரசின் பல்வேறு துறைகளில் ஒன்றாகும் என்று கருதினார். அக்கருத்திற்கு மாறாக இத்தாலிய அறி ஞர் தாந்தே(Dante, 1265-1361) டி மானர்க்கியா (De Monarchia) என்னும் நூலில் பேரரசிற்குச் சமயச் சார்பற்ற விவகாரங்களில் முழு அதிகாரம் உண்டு என்றாலும், அவ்வதிகாரம் இறைவனிடமிருந்தே நேரடியாகப் பெறப்படுகிறது என்றும், பேரரசின் அதி

காரத்திற் கிணையாகப் போப்பிற்குச் சமய விவகாரங் களில் முழு அதிகாரம் உண்டு என்றும் குறிப்பிட்டார். இடைக்கால அரசியல் தத்துவ மேதைகளில் சிறப்பு வாய்ந்தவர் புனிதர் தாமசு அக்வைனசு (St. Thomas Aquinas, கி.பி. 1227–1274) ஆவார். இவர் இயற் றிய இறையியற் களஞ்சியம் (Summa Theologica) என்னும் நூலில், மனிதர்களால் இயற்றப்படும் சட் டங்கள் தெய்விகச் சட்டங்களினின்றும் தோன்றுபவை என்று கூறினார். ஆயினும், சாலிசுபரியைச் சேர்ந்த சான் (John of Salisbury) கூறியதுபோல், கொடுங் கோலனைக் கொல்வதில் குற்றமில்லை என்று கருத வில்லை. கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாடிலின் கருத்து களையும், கிறித்தவச் சமயக் கருத்துகளையும் ஒருங் கிணைத்த வண்ணம் அரசியற் கருத்துகளை எடுத் துரைத்த பெருமை அவரைச் சாரும்.

இடைக்கால ஐரோப்பாவில் மறுமலர்ச்சி (Renaissance) தோன்றிய காலத்தில் இத்தாலியைச் சார்ந்த மாக்கியவெல்லி (Machiavelli, கி.பி. 1469 –1527), "தி பிரின்ஸ்" (The Prince) என்னும் புகழ் மிக்க நூலை இயற்றினார். அவர் அந்நூலில், அரசன் என்பான் தன் குறிக்கோளை அடைய எவ்வித வழிமுறைகளை யும் கடைப்பிடிக்கலாம் என்று எடுத்துரைத்தார். சிங்கத்தின் கொடூரத்தையும் குள்ளநரியின் நயவஞ்ச கத்தையும் அரசன் பெற்றிருத்தல் வேண்டும் என் றார். எனவே அவர் இயற்றிய நூல் கொடுங்கோல ரின் வேதம் எனப் பழிக்கப்பட்டது. அன்று சீர்கேடுற்ற இத்தாலி ஒன்றுபட, முன்னேற்றப் பாதையில் செல்ல மாக்கியவல்லி அக்கருத்துகளை வலியுறுத்தினார். ஆனால் சமயத்தையோ அறநெறியையோ அவர் பழிக்கவில்லை. அன்றைய இத்தாலியில் சமய, அற நெறிச் சார்புடைய கோட்பாடுகளின் அடிப்படையில் அரசன் செயல்பட்டானேயானால், அவன் கொண்ட இலட்சியத்தை அடைய இயலாது என்பது அவர் கொள்கை. இக்காலத்தில் அரசு முற்றிலும் சமயச் சார்பற்ற பண்புகளைப் பெற்றிருப்பதாகும் என்ற கருத்தினைக் கூறியிருப்பவர்களில் மாக்கியவல்லியே முதல்வர். அவர் கருத்துகள், அரசியல் துறையில் தேசியக் கோட்பாடு வளரப் பெரிதும் துணை புரிந்தன.

அரசுகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் தேசியக் கோட்பாட்டின் அடிப்படையில் தோன்றலாயின. அத்துடன் இறைவழி உரிமைக் கோட்பாடும் (Divine Right Theory) தோன்றிற்று. அதாவது அரசன் என்பான் இறைவனின் பேராளனாக மண்ணுலகில் ஆட்சிபுரிவான். இதன் கருத்து மக்களுக்கோ மக்கள் பிரதிநிதித்துவ மன்றத்திற்கோ அவன் கட்டுப்பட்ட வனல்லன் என்பதாகும்.

பதினாறாம் நூற்றாண்டின் அரசியற் கொள்கை, அக்கால ஐரோப்பாவில் தோன்றிய சமயச் சீர்திருத் தத்தையொட்டியதேயாகும். அவ்வியக்கத்தைத் தொடங்கியவர் மார்ட்டின் லூதர் (Martin Luther கி.பி. 1483-1546) ஆவார். அரசாங்கத்திற்கு அடி பணிந்து நடக்க வேண்டியது மக்களின் கடமையென் றும், ஒவ்வொரு நாட்டிலும் திருச்சபையின் அதிகா ரமும் அரசியல் ஆட்சியும் தனிப்பட்ட முறையில் வேறுபட்டிருக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினர். ஆனால் மதச் சீர்திருத்தமே இவரது முதன்மையான நோக்கமாகும். செருமனியில் நடைபெற்ற சமயப் புரட்சிக்கு வழி வகுத்தவர் இவரேயாவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமயச் சீர்திருத்தக் காலத்தில் ஐரோப்பாவில் தோன்றிய தலைவர்களில் சிறந்தவர்கள் சுவிங்லி (Zwingli), கால்வின் (Calvin) என்பவர்கள் ஆவர். அரசியலும் சமயமும் ஒன்றோடொன்று தொடர்பு டையவை என்பது சுவிங்லின் கருத்தாகும். சுவிட்சர் லாந்தில் நடப்பிலிருந்த குடியரசு போன்ற ஆட்சி முறையைப் பரவச் செய்வதே அவர் குறிக்கோளா யிற்று. கால்வின் அறிவுரைகள் அரசியற் கொள்கை களைப் பெரிதும் தாக்கின. சமய வழியிலும் அரசியற் றுறையிலும் கட்டுப்பாடுற்ற வாழ்வின் பெருமையை எடுத்துக் காட்டினார். பிரபுக்கள் ஆட்சியை அவர் விரும்பியபோதிலும், கொடுங்கோலாட்சியை அகற்ற மக்களுக்குரிமையுண்டென அவர் எடுத்துரைத்தார். திருச்சபையில் மக்கள் ஆட்சியை அவர் ஆதரித்தார். இக்கருத்து அரசாங்கத் துறையிலும் பரவிற்று.

பொதுவுடைமைக் கருத்துகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டில் ஆனபாப்டிசுடுகள் (Anabaptists) என் பவர்களால் செர்மனி, நெதர்லாந்து முதலிய நாடு களில் பரப்பப்பட்டன. இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த சர் தாமசு மோர் (Sir Thomas More, கி.பி. 1480–1535), பொதுவுடைமைக் கருத்தைக் கொண்ட இலக்கியல் அரசு (Utopia, கி.பி. 1516) என்ற கற் பனை நூலை இயற்றினார். பொதுவுடைமையை மேற்கொண்ட ஒரு புதுநாடு எவ்விதம் செயல்பட வேண்டுமென்று தம் நூலில் விளக்கினார். மன்னனின் ஆதிக்கத்தைக் குறைக்க வேண்டுமென்று தச்சு நாட் டவரான இராசுமசு (Erasmus, கி.பி. 1466–1536) எடுத்துரைத்தார். ஆனால் பிரெஞ்சு நாட்டுக்கார ரான சான் போதான் (Jean Bodin, கி.பி. 1530–1596) அரசு இறைமைக் கோட்பாட்டை விளக்கி, அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் உரிமை மக்களுக்கில்லை என்றார்.

அரசியல் ஒப்பந்தக் கொள்கைகள் கி.பி. 16–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பரவின. குறிப்பாக இங்கி

லாந்து நாட்டவர்களான தாமசு ஆப்சு (Thomas Hobbes, கி.பி. 1588-1679), சான் லாக்கு (John Locke, கி.பி. 1632-1704) ஆகியோரும், பிரெஞ்சு நாட்டவரான உரூசோ (Rousseau, கி.பி 1712-1778) என்பாரும் அரசியல் ஒப்பந்தக் கொள்கையை விளக்கியவர்களுள் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆவர். ஆப்சு (Hobbes), லெவையதன் (Leviathan, கி.பி. 1651) என்னும் நூலில், அரசியல் உடன்பாட்டுக் கொள்கையின் மூலம் மன்னனின் வல்லாட்சிக்கு துணை நல்கினார். அரசு ஏற்படுவதற்கு முன்னால், மனிதன் இயற்கை நிலையில் இருந்தான். அந்நிலை உயிருக்கும் உடைமைக்கும் உறுதியளிக்க முடியாத போர் நிலையாக இருந்தது. அந்த இழிநிலையிலிருந்து விடுபட மக்கள் சமுதாய உடன்படிக்கை செய்து கொண்டு அவ்வுரிமைகளை எல்லாம் நாடாளும் தலைவனிடம் ஒப்புவித்தனர் என்பது ஆப்சு எடுத்துரைத்த கோட்பாடாகும். இசுடுவர்ட்டு மன்னரான முதலாம் சார்லசுக்கும் நாடாளுமன்றத்திற்குமிடையே நடைபெற்ற உள்நாட்டுப் போரின் விளைவாக மன்னர் தோல்வியுற்றுத் தூக்கிலிடப்பட்ட போது ஆப்சு தம் நூலை இயற்றி, மன்னரின் வல்லாட்சியினை வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. பின்னர்க் கி.பி. 1688-ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் இரத்தம் சிந்தாப் புரட்சியொன்று நடைபெற்றது. இரண்டாம் சேம்சு மன்னனின் வல்லாட்சிப் போக்கைக் கண்டித்து அந்நாட்டு நாடாளுமன்றம், ஆலந்து அதிபரான வில்லியம் என்பவரை மன்னராக முடிசூட்டியதே அப்புரட்சியாகும். அப்புரட்சிக்குத் துணை நின்று குடிமுறை அரசாங்கம் (Civil Government, கி.பி. 1690) என்ற தலைப்பில், இரு நூல்களை இயற்றினார். அரசியல் உடன்படிக்கையின் இன்றியமையாமையை எடுத்துரைத்த இலாக்கு (Locke) மக்கள் தம் உரிமைகள் அனைத்தையும் யாரிடமும் ஒப்படைத்துவிட மாட்டார்களென்றும், முறைகேடான ஆட்சியினைக் கவிழ்க்குமுரிமையினை அவர்கள் பெற்றிருப்பார்களென்றும் வலியுறுத்தினார். பிரெஞ்சு அரசியல் தத்துவ மேதையான உரூசோ தாம் இயற்றிய சமூக ஒப்பந்தம் (Social Contract, கி.பி. 1762) என்ற நூலில், சுதந்திரத்துடன் பிறந்த மனிதன் எங்குப் பார்ப்பினும் விலங்கிடப்பட்டவனாகக் காணப்படுகிறான் என்று சுட்டிக்காட்டினார். அரசியல் ஒப்பந்தக் கோட்பாட்டினை ஏற்றுக் கொண்ட உரூசோ, மக்கட் பொதுவிருப்பம் (General Will) என்ற கருத்தின் சிறப்பினை விளக்கினார். குடியரசே மேன்மையான ஆட்சிமுறையென்பது அவரது கருத்தாகும். உரூசோ இயற்றிய நூல் கி.பி. 1789-ஆம் ஆண்டு நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சியின் வேதநூலாக அமைந்தது என்பர்.

பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவர்களில் மான்டெசிக்யூ (Montesquieu, கி.பி. 1689-1755) என்பாரும் தலைசிறந்தவராவர். அவர் இயற்றிய சட்டங்களின் சாரம் (Spirit of the Laws கி.பி. 1742) என்ற நூலில், அதிகாரப் பிரிவினைக் கொள்கையை விளக்கினார். அரசு அதிகாரம் நிருவாகப் பகுதி, சட்டமியற்றும் பகுதி, நீதிப்பகுதி என மூன்றாகப் பிரிக்கப்படவேண்டுமென்றும், அதற்கு மாறாக எல்லா அதிகாரங்களும் ஒருவரிடத்தோ ஓர் அமைப்பினிடத்தோ குவிக்கப்பட்டிருக்குமாயின் தனி மனிதனின் உரிமைகள் பறிக்கப்படும் என்றும் நம்பினார். பிரான்சில் நிலவிய அரசியல் சூழ்நிலையே அவர் கருத்துக்குப் பின்னணியாக அமைந்திருந்தது.

பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்ற காலத்தே செருமனியில் இமானுவெல் கான்ட் (Emmanuel Kant, கி.பி. 1724-1804) கருத்தியற் கொள்கையைப் (Idealism) பரப்பினார். அவர் உரூசோ, மான்டெசுக்யூ ஆகியோரின் கருத்துகளை ஒருங்கிணைக்கப் பெரிதும் பாடுபட்டார். அரசியற் கலை, நீதி நெறியைத் தழுவியது என்பதுதான் அவருடைய தலைசிறந்த கொள்கையாகும். இங்கிலாந்தில் மூவர் சீர்திருத்தக் கொள்கையைப் பரப்பினர். எட்மண்ட் பர்க் (Edmund Burke, கி.பி. 1729-1797), அமெரிக்கக் குடியேற்ற நாட்டிற்கு ஆதரவு அளித்தும், பிரெஞ்சுப் புரட்சியைக் கண்டித்தும் தம் கருத்துகளை எடுத்துரைத்தார். சீர்திருத்த மாற்றங்களை அவர் விரும்பிய போதிலும், முடியாட்சி போன்ற மரபுவழி அமைப்புகளைத் தகர்த்தெறியும் கருத்துகளை அவர் ஏற்க மறுத்தார். வில்லியம் காட்வின் (William Godwin, கி.பி. 1756-1836) தனியுரிமைக் கோட்பாட்டினைக் கொண்டவர். செரிமி பெந்தம் (Jeremy Bentham, கி.பி. 1748-1832) பயனெறிமுறைக் கோட்பாட்டை (Utilitarianism) விளக்கியவர். பெரும்பான்மையான மக்களின் மகிழ்ச்சியைப் பெருமளவில் போற்றுவதே அரசின் கடமையென எடுத்துரைத்தார். அக்கோட்பாட்டின் அடிப்படையிலேதான் அரசை மதிப்பிடவேண்டுமென்பது அவர் கருத்தாகும்.

தனியுரிமைக் கோட்பாடு (Individualism) 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் முக்கிய ஐரோப்பிய அரசியற் கருத்தாக விளங்கியது. அம்போல்ட்டு (Humboldt, கி.பி. 1769-1835) என்ற செருமானியர், அரசாங்கம் தவிர்க்க முடியாத தீங்கென்றும், உயிரையும் உடைமையையும் கட்டிக்காப்பதே அதன் தலைசிறந்த பணியென்றும், கட்டுப்பாடற்ற தனியுரிமை மானிட வளர்ச்சிக்கு இன்றியமையாததென்றும் கூறினார். குறிப்பாக இங்கிலாந்தில் பெந்தம் (Bentham) என்பாரின் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. சேம்சு மில் (James Mill, கி.பி. 1773-1836) மக்கள் விழிப்

புடன் இருக்க வேண்டிய தேவையினையும் நிருவாகத் துறையைக் கட்டுப்படுத்தும் ஓரவை கொண்ட பிரதிநிதித்துவ மன்றத்தின் தேவையையும், வாக்குப்பெட்டியில் வாக்களிக்கும் முறையின் சிறப்புத்தன்மையினையும் எடுத்துரைத்தார். சேம்சு மில்லின் மகன் சான் இசுடுவர்ட் மில் (John Stuart Mill, கி.பி. 1806-1873) பயனெறி முறைக் கோட்பாட்டைக் கொண்ட தனியுரிமைக் கொள்கையாளர். அவர் சுதந்திரம் (On Liberty, கி.பி. 1759), பிரதிநிதித்துவ அரசாங்கம் (Representative Government, கி.பி. 1861) என்னும் நூல்களை இயற்றினார். எர்பெர்ட் இசுபென்சர் (Herbert Spencer, கி.பி. 1802-1903) மனிதனும் அரசும் (Man Versus the State, கி.பி. 1884) என்னும் நூலில் தனியுரிமைக் கோட்பாட்டை வலியுறுத்தினார்.

காண்டின் (Kant) கருத்தியற் கொள்கையை பிக்டே (Fichte, கி.பி. 1762-18:4) ஏகல் (Hegel, கி.பி. 1770-1831), கிரீன் (Green, கி.பி. 1848-1923) ஆகியோர் பரப்பினர். பிக்டே மக்கள், இறை ஆகிய இரண்டினையும், சமுதாய ஒருமைப்பாட்டினையும் வலியுறுத்தினார். அரசு கடவுள் தன்மை கொண்டது; அதற்குப் பணிந்திருப்பது உண்மையான சுதந்திரமாகும் என்ற கருத்துகளை ஏகல் வலியுறுத்தினார். செருமானியரான ஏகலின் கொள்கையை இங்கிலாந்தில் பின்பற்றியவர்களில் தலைசிறந்தவர்கள் கிரீன், (Green) பொசான்கே (Bosanquet) ஆகிய இருவர். வலிமைக்கு மாறாத மக்களின் விருப்பம் அரசின் அடித்தளமாக விளங்கவேண்டும் எனக் கிரீன் வலியுறுத்தினார். ஏகலை மிகவும் பின்பற்றிய பொசான்கே அரசுக்கு எதிராகவோ புறம்பாகவோ எதுவும் இருக்க முடியாது என்றார்.

தனியுரிமைக் கோட்பாடு பரவிய கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில், பொதுநலக் கூட்டுத் தத்துவம் (Socialism) மூவகையில் தோன்றலாயிற்று. முதலில் பிரான்சு நாட்டைச் சார்ந்த செயிண்ட் சைமன் (Saint Simon, கி.பி. 1760-1825) நிலம், உற்பத்திக் கருவிகள் அனைத்தும் பொதுச் சொத்தாக இருத்தல் வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டிருந்தார். பொரியர் (Fourier), புரௌதான் (Proudhon), லூயி பிளாங்க் (Louis Blanc) ஆகியோர் அத்தகைய கருத்தினைப் பரப்பினர். இரண்டாவது வகையான பொது நலக் கூட்டுத் தத்துவத்தினை இங்கிலாந்தில் காணலாம். மோர், ஆரிங்டன் (Harrington) ஆகியோர் இயற்றிய நூல்களிலும் சார்டிசுடுகளின் (Chartists) கோரிக்கைகளிலும் பொதுநலக் கூட்டுத் தத்துவத் தன்மையினை உணர முடிகிறது. அதேபோன்று செருமனியில் காரல் மார்லோ (Karl Marlo) இராட்பெர்டசு (Rodbertus), பெர்டினாண்டு லெசால்(Ferdinand Lassale) ஆகியோர் அத்தகைய தத்துவக் கோட்பாட்டினை இயம்பினர்.

மேற்கூறிய மூவகைத் தன்மைகளும் காரல் மார்க்சு (Karl Marx, கி.பி. 1818-1883) பறைசாற்றிய பொதுவுடைமைக் (Communism) கொள்கையில் ஒருங்கிணைந்தன. மார்க்சும் அவரது நண்பர் எங்கெல்சும் (Engels) கூட்டாக இயற்றிய பொதுவுடைமை அறிவிப்பில் அக்கொள்கை முதன்முதல் விரித்துரைக்கப்பட்டது. பின்னர் அவரது மூலதனம் (Capital) என்னும் நூலில் பொதுவுடைமைக் கொள்கையின் தத்துவ விரிவாக்கம் காணப்படும். 1917-ஆம் ஆண்டு லெனின் தலைமையிலான போல்செவிக் (Bolshevik) புரட்சிக்குப்பின் உருசியா உலகிலேயே முதல் பொதுவுடைமை நாடாகத் தோற்றம் பெற்றது.

பொதுவுடைமை, முதலாளித்துவக் கொள்கைகளின் வேறுபாடு ஒருபுறமிருக்க, முதலாம் இரண்டாம் உலகப் போர்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இத்தாலியில் பாசிசக் (Fascist) கொள்கையும், செருமனியில் நாசிசக் (Nazism) கொள்கையும் உருவாயின. பாசிச இத்தாலியில் முசோலினி (Mussolini) எல்லாம் அரசுக்குட்பட்டதாயிருத்தல் வேண்டும் என்றும், எதுவும் அரசுக்கு எதிராகவும், அதற்கப் பாற்பட்டதாகவும் இருத்தல் கூடாதென்றும் ஒரு கோட்பாட்டினை நிலைநாட்டினார். அதே வல்லாட்சிக் (Totalitarian) கோட்பாட்டினை இட்லர் Hitler) தலைமையிலான நாசிச செருமனி கொண்டிருந்த போதிலும், தலைமைக் (Leadership) கொள்கை பாசிசத்தைவிட நாசிசக் கொள்கையில் மிகுதியாகக் காணப்படும். மற்றும் இனப்பெருமை செருமனியில் பெரிதாகக் கொண்டாடப்பட்டது.

மார்க்சிசம், முதலாளித்துவம் வன்முறைப் புரட்சியால் தூக்கியெறியப்பட்டுப் பின்னர் அரசு மறைந்துவிடும் என்ற தத்துவத்தை அறிவித்தது. ஆனால் இங்கிலாந்தில், அரசின் வாயிலாகக் காலப்போக்கில் பொதுநலக் கோட்பாட்டுத் தத்துவத்தைச் செயற்படுத்தலாம் என்ற கொள்கை வேரூன்றியது இதனைப் பேபியன் பொதுநலக் (Fabian Socialism) கோட்பாடு என்பர். பிரான்சில் பொதுவேலை நிறுத்தம் (General Strike) தொழிலாளரின் சிறந்த கருவியாகக் கருதப்பட்டது. அக்கோட்பாட்டினைச் சிண்டிகலிசம் (Syndicalism) என்பர்.

அரசு இன்றியமையாத அமைப்பன்று, அதை முற்றிலும் நீக்கிவிடலாம் என்று கூறுவது ஆட்சி வேண்டாக் கொள்கை (Anarchism) ஆகும். அரசு என்பது சமுதாய அமைப்புகளில் காணப்பெறும் ஓர் அமைப்பே தவிர, அதற்குத் தனிப்பண்பு ஒன்றுமில்லை

என்பது பன்மைவாதம் ஆகும். ஆசுடின் (Austin, கி.பி. 1790–1859) கூறிய ஒருமை இறையாண்மைக் கோட்பாட்டிற்கு எதிராகத் தோன்றியதே பன்மை வாதமாகும்.

அரிய அரசியற் கருத்துகளை இருபதாம் நூற்றாண்டில் வெளிப்படுத்தியவர்களுள் முதன்மையானவர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த எரால்டு லாசுகி (Harold Laski) ஆவார். அவர் இயற்றிய நூல்களுள் புகழ் மிக்கவை, இறையாண்மைச் சிக்கல் (Problem of Sovereignty, 1917), இக்கால அரசியலில் அதிகாரம் (Authority in the Modern State, 1919), அரசியல் இலக்கணம் (Grammer of Politics, 1951) ஆகியவையாம். லாசுகி பன்மை வாதத்தை (Pluralism) வலியுறுத்தினார்; அதிகாரம் பன்முகப்படுத்தப்பட வேண்டுமென்பது அவர் கருத்தாகும்.

பண்டை இருக்கு வேதத்தில் இராச்சியம், இராட்டிரம், சத்திரியன் ஆகிய சொற்கள் இடம்பெற்றிருப்பினும் அதில் அரசியல் தொடர்பான கருத்துகள் ஒன்றுமில்லை. ஆனால் பிராமணங்களில் அக்கருத்துகள் மிகுதியாக உள்ளன. எடுத்துக்காட்டாக ஐதரேய பிராமணம், பகைவர்களை வென்று நாட்டின் அமைதியைக் காக்கும் பொருட்டு அரசன் ஏற்பட்டான் என்று கூறுவதோடு, பல அரசர்களை வென்று பேரரசை உருவாக்கி முடி சூட்டிக் கொண்ட மன்னர்களின் பெயர்களையும் குறிக்கிறது.

முதன்முதல் கி.மு. 660–300–இல் எழுதப்பெற்ற பௌதாயன, கௌதம, ஆபசுதம்ப தரும சூத்திரங்களில் அரசியல் கருத்துகள் ஆராயப்பட்டன எனலாம். இந்நூல்களில் சத்திரிய அரசர்களுடைய கடமைகளும், அவர்களுக்கும் அவர்களுடைய குடிமக்களுக்குமிடையேயான உறவுமுறைகளும் கூறப்பட்டுள்ளன. இராமாயணத்தில் இராம அரசின் சிறப்பும், முறையற்ற அரசின் கொடுமைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மகாபாரதத்தில் அரசநீதி, வீடுமரால் தருமனுக்கு எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. மனுசுமிருதி, கௌடிலிய அர்த்தசாத்திரம் ஆகிய நூல்களிலும் அத்தகைய கொள்கைகள் காணப்படுகின்றன.

பண்டைய இந்தியாவில் அரசனில்லாத குடியரசும் நிலவியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கதாகும். அக்குடியரசுகள், வட இந்தியாவில் இமயமலைச் சாரல்களிலும், கோசல நாடு, மிதிலை நாடு, பஞ்சாபு, சிந்து முதலிய பகுதிகளிலும் நிலவியிருந்தன. கௌடில்யன் தனது நூலில் அரசர்கள் அத்தகைய அரசுகளைச் சீர்குலைத்துத் தம் வசப்படுத்திக் கொள்வதற்கான பல சூழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறான்.

தமிழகத்தில் முற்காலத்தில் நிலவியிருந்தது, முடியரசாகும். நாட்டுக் குடிகளுக்கு அரசனே உயிர்; அவன் கடவுளுக்கு ஒப்பானவன் என்னும் கருத்தைப் பழைய தமிழ் நூல்களிற் காணலாம். அரசு என்பது அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறு உறுப்புகளைக் கொண்டதாகும் என்று கூறுகிறது திருக்குறள். திருக்குறளில் பொருட்பால் என்னும் இரண்டாம் பகுதியில் அரசியல், அங்கவியல், குடியியல் ஆகியவை கூறப்படுகின்றன. அரசனே அச்சந் தீர்ப்பவன்; அறங்காப்பவன்; முறைசெய்பவன்; குறை தீர்ப்பவன்; அவனே இறைவனாவான் என்பவை பண்டைத் தமிழர் அரசியற் கருத்துகளாகும். சங்ககாலந் தொட்டு உள்ள தமிழ் நூல்கள் பலவும் இத்தகைய கருத்துகளையே பலவாறாக எடுத்துக் கூறுகின்றன.

கி.பி. 13–ஆம் நூற்றாண்டில் முகம்மதியரது ஆட்சி வட இந்தியாவில் நிறுவப்பட்டது. இசுலாமியர் அல்லாதவர் சசியா (Jizya) என்னும் தலைவரியைச் செலுத்தித் தாழ்மையுடன் நடக்க வேண்டுமென்பது இசுலாமிய அரசியற் கொள்கையாக இருந்தது. தென்னாட்டில் இசுலாமியரின் அரசு வலிமையை எதிர்க்கும் வண்ணம் விசயநகர அரசு ஏற்படுத்தப்பட்டது. விசயநகர மன்னர்களுள் தலைசிறந்தவரான கிருட்டிண தேவராயர் தாம் இயற்றிய "ஆமுக்தமால்யதா" என்னும் நூலில் பல அரசியற் கருத்துகளைக் கூறியுள்ளார். மொகலாய மன்னர்களுள் புகழ்மிக்க அக்பர் (கி.பி. 1556–1605) சமய அடிப்படையில் மக்களைப் பிரிக்காமல் இந்துக்களையும் இசுலாமியரையும் ஒன்றுபடுத்த முயற்சி மேற்கொண்டார். அக்பருடைய நன்னோக்கம் அவர்தம் பின் தோன்றல்களிடம் காணப்படவில்லை. குறிப்பாக, ஔரங்கசீப் (கி.பி. 1658–1707), சமயச் சார்பான ஆட்சியை நிறுவி, இந்துக்களின் பகைமையைத் தேடிக் கொண்டார். சிவாசி (1630–1680) இந்து மதத்தைக் காப்பாற்றும் நோக்கோடு மராத்திய அரசை நிறுவி மொகலாயப் பேரரசை எதிர்த்துப் போரிட்டார்.

ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவில் வேரூன்றிய போது இந்தியர், மேனாட்டு முறையில் குடிமை உரிமைகளையும், கடமைகளையும், ஆட்சித் தத்துவங்களையும் ஆராயத் தலைப்பட்டனர். மேனாட்டுக் கல்வியின் விளைவாக இந்தியர்கள் சமூகச் சீர்திருத்தங்களை வேண்டுவராயினர். இராசாராம் மோகன் ராய் போன்றவர்கள் இந்தியர்களுடைய முன்னேற்றம் ஆங்கிலக் கல்வியை ஏற்பதினாலேயே ஏற்படும் எனக் கருதினர். கி.பி. 1857–ஆம் ஆண்டுப் பெருங்கலகத்திற்குப் பின்னர் இந்தியரிடையே தேசிய உணர்வு வலுப் பெறலாயிற்று. அவ்வகையில் கி.பி. 1885–ஆம் ஆண்டு இந்தியத்தேசிய காங்கிரசு, கியூம் (Hume) என்பார் முயற்சியினால் நிறுவப்பட்டது. ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்துக்களையும் இசுலாமியரையும் பிரித்தாளும் கொள்கையைப் பின்பற்றினர். ஒருபுறம்

அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொண்டபோதிலும், தேசிய இயக்கத்தை ஒடுக்க நடவடிக்கைகள் மேற் கொண்டனர். கோகலே போன்றவர்கள் மிதவாதி களாகவும் திலகர் போன்றவர்கள் தீவிரவாதிகளாக வும் அரவிந்தர் போன்றோர் புரட்சிக்காரர்களாகவும் விளங்கினர். "சுதந்திரம் எனது பிறப்புரிமை, அதை நான் பெற்றே தீருவேன்" என முழங்கினார் திலகர். அன்னி பெசன்ட் (Annie Besant) அம்மையார் 1916-இல் தன்னாட்சி இயக்கத்தைத் துவக்கினார். காந்தி யடிகள் 1919-ஆம் ஆண்டு முதல் இந்திய விடுதலைப் போராட்டத்தின் தன்னிகரில்லாத் தலைவராக விளங் கினார். சத்தியாக்கிரகம் என்ற புதியதோர் அரசியல் சித்தாந்தத்தின் அடிப்படையில் நாட்டு விடுதலையைப் பெற்றுத் தந்தார். தென்னாட்டில் சமத்துவச் சீர் திருத்தக் கொள்கையைப் பார்ப்பனரல்லாத இயக்கம் பரப்பியது. அத்தகைய பகுத்தறிவுத் தந்தையாக விளங்கியவர் ஈ.வே. இராமசாமிப் பெரியார் ஆவார். 1947-ஆம் ஆண்டு நாடு விடுதலைபெற்ற பின்னர் மக்களாட்சிக் கருத்துகளைக் கொண்ட குடியரசு அரசியலமைப்புச் சட்டம், 1950 சனவரி 26-இல் நிறை வேற்றப்பட்டது. சமதரும, சமயச் சார்பற்ற கொள் கையையும் அச்சட்டம் வகுத்துள்ளது.

பண்டைச் சீனாவில் இலாவோசு (Lao-tsu, பிறப்பு, கி.மு. 604), கன்பூசியசு (Confucius, கி.மு. 551-479) முதலியவர்கள் சட்டம், அரசாங்கம் என்பவற்றைப் பற்றிக் கூறியுள்ளவைகளையே சீன அரசியல் கருத்து கள் எனக் கூறலாம். அவர்கள் கொள்கையினைத் தாவோக் (Taoism) கொள்கை என்பர். அரசு, குடி களுடைய நடவடிக்கைகளில் தலையிடக் கூடாதென் பதும், வல்லந்தத்திற்கு அடிப்படையான போர்ப்படை களை அமைக்கக்கூடாதென்பதும் அவர்களுடைய தலைசிறந்த கருத்துகளாகும். சட்டங்களால் ஆட்சி புரிவதைக் காட்டிலும் ஒழுக்கத்தால் சீர்திருத்துவதே சிறந்தது என்பது கன்பூசியசின் கோட்பாடாகும். சீனர்கள் தனித் தத்துவத்தில் நம்பிக்கை கொண்ட வர்களாதலால் தேசிய அரசாங்கம் என்னும் கோட் பாட்டை அவர்கள் முற்றிலும் புறக்கணித்தனர். 1911-ஆம் ஆண்டுச் சீனப் புரட்சி நடைபெற்றவரை பொது மக்களின் கருத்து (Public Opinion) என்பது, சீனா அதுவரை கேட்டிராத ஒன்றாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் புரட்சிகரமான அரசியற் கருத்துகள் பரப்பப்பட்டன. காங்க்-யூ-வே (Kang-Yu-Wei, கி.பி. 1858-1927) என்பவர், சட்டங் கள் தேவையில்லை என்னும் பண்டைய கருத்துக்கு மாறாக, இலவசக் கட்டாயக் கல்வி, 20 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கெல்லாம் வேலை தருதல், நிலம், இருப்புப் பாதை (Railway), தொழிற்சாலை முதலிய வற்றைத் தேசிய மயமாக்குதல் முதலிய சோசியலிசக் கருத்துகளைக் கூறினார். சன்யாட்சென் (Sun Yat-sen, கி.பி. 1866-1925) மக்களாட்சி (Democracy), தேசியம் (Nationalism), மக்கள் வாழ்வு (People's Living) என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தேசியக் (Kuomin-tang) கட்சியைத் தொடங்கினார். பின்னர் மா சே துங் ( Mao Tse-tung, கி.பி. 1893-1976) பொதுவுடை மைக் கொள்கைகளைப் பரப்பி 1949-ஆம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றினார்.

இசுலாமிய நெறி, சமய, அரசியல், சமூக, குடும்ப நிலைகளையெல்லாம் ஒருவழிப்படுத்துவதற்கான விதி களைக் கூறியுள்ளது. அந்நெறிக்குச்'சரியத்' (Shariat) என்று பெயர். அச்சொல் இசுலாமிய வேதநூலான குர்ஆனிலேயே இடம் பெற்றுள்ளது. இசுலாமிய அர சியற் கொள்கைப்படி அரசாளும் தலைவர் மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவரைக் கலிபா (Caliph) என்பர். ஒவ்வொரு முசுலிம் குடிமகனும் கலிபா ஆவதற்கு உரியவர். கலிபா சட்டப்படியும் நீதி வழுவாமலும் ஆட்சிபுரிகின்றவரை மக்கள் கீழ்ப் படிந்து நடப்பர். அவர் கொடுங்கோலராய் மாறிவிட் டால் அவரைப் பதவியில் இருந்து நீக்கிவிடும் உரிமை பொது மக்களுக்கு உண்டு.

இசுலாமிய அமைப்பு ஒரு குடியரசு அமைப்பா கும். அதில், சாதி, மதம், இனம், இடம், மொழி முதலிய வேறுபாடுகள் இல்லை. நீதியையும் அற நிலையையும் ஒழுக்க நெறியையும் இசுலாம் கற்பிக் கிறது. ந.கு.நா.

துணை நூல்:

**Appadorai**, A., "The Substance of Politics", Oxford University Press, London, 1972.

***அரசியல் கலை*** சமுதாய அமைப்பின் பொதுத் தன்மைகளைப் பற்றிய செய்தித் திரள் ஆகும். அரசு என்பது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட் டம் அடங்கிய ஒரு வகைச் சமுதாய அமைப்பு. மனி தன் தன் இனத்தவரான மனிதரோடு கூடி ஒரு கூட்ட மாக அல்லது ஒரு சமுதாயமாக வாழும் இயல்புடைய வன்; இத்தகைய சமுதாய அமைப்புக்கு இன்றியமை யாத தேவைகளை நிறைவு செய்வதற்காக அதிலுள்ள மக்களால் பின்பற்றப்படும் சட்ட விதிகள், செயல்கள், அதிகாரங்கள் ஆகியவையெல்லாம் அரசியலில் சேரும். ஆகையால், ஒருவகைப்பட்ட மக்கட் சமுதாயமாகிய அரசு என்ற சமுதாய அமைப்பின் பொதுத் தன்மை களைப் பற்றிய செய்தித் திரளே அரசியல் (Politics) ஆகும். குடும்பம், சமய நிறுவனம் அல்லது திருச்சபை (Church), தொழிலாளர்கள் அமைத்துள்ள தொழிற் சங்கங்கள் (Trade Unions) போன்றவையும், சமுதாய அமைப்புகள்தாம் என்றாலும், இவைகளுக்கு இல் லாத ஒரு தனிப்பட்ட இயல்பு (Special Characteri-

stic) அரசு என்னும் சமுதாய அமைப்புக்கு உண்டு. அதாவது தன் நில எல்லைகளுக்குள் வாழும் யாவரையும் தன் சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்குமாறு கட்டாயப் படுத்தக்கூடிய ஆற்றல் (Coercive power of Sovereignty) அரசு எனும் சமுதாய அமைப்பு ஒன்றுக்குத்தான் இருக்கிறது. அரசு எனும் சமுதாய அமைப்பு, பண்டைய கிரேக்க நாட்டிலிருந்ததைப் போன்று பரப்பளவிலும், குடிமக்கள் தொகையிலும் மிகச் சிறியதாக இருக்கலாம்; அல்லது இக்காலத்தில் காணப்படுவதைப் போன்று பரப்பளவிலும் மக்கள் தொகையிலும் மிகப்பெரியதாகவும் இருக்கலாம். எவ்வளவினதாயிருந்தாலும், அரசு என்னும் சமுதாய அமைப்புக்குத் திட்டவட்டமான நில எல்லை, குடிமக்களடங்கிய சமுதாயம், அரசாங்கம் என்னும் நிருவாக நிறுவனம், பிற அரசுகளினின்றும் சுதந்திரமாக இயங்கித் தன் சட்ட திட்டங்களுக்குக் கீழ்ப்படியுமாறு தன் குடிமக்களைக் கட்டாயப் படுத்தும் ஆற்றல் அல்லது இறைமை (Sovereignty) ஆகிய நான்கு இயல்புகளும் இன்றியமையாதன ஆகும். எனவே, அரசு என்னும் சமுதாய அமைப்பு, பல்வேறு சமுதாய அமைப்புகளைவிட உயர்வானதும், முழுவளர்ச்சி பெற்றதும், எப்பொழுதும் நிலைத்து நிற்கக்கூடியது மான சமுதாய அமைப்பு என்று அரசியலைச் சமய நூல்களினின்றும் முதன்முதலில் பிரித்தறிந்து, சட்டம், நீதி, தனி ஆளுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள தொடர்புகள், அரசாங்கங்களின் வகைகள் (Types of Constitutions), அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சி அல்லது அரசாங்கம் (Constitutional Government) முதலிய கருத்துகளை எல்லாம் ஆராய்ந்து, தம் கோட்பாடுகளை இக்கால உலகத்துக்கு அளித்துச் சென்ற கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் ஆவார். சுருங்கக் கூறின், அரசியல் கலை என்ற தொடருக்கு அரசு என்ற சமுதாய அமைப்பைப் பற்றிய எல்லாச் செய்திகளும் அடங்கிய ஓர் பாடத் துறை அல்லது கல்வித்துறை (Discipline) என்று பொருள் கூறலாம்.

அரசியல் கலை என்ற சொற்றொடருக்குப் பொதுவாக மேற்கூறியவாறு சுருக்கமாகப் பொருள் கொண்டபோதிலும், இக்காலத்தில், குறிப்பாக இரண்டாவது உலகப் போருக்குப் பிற்பட்ட காலத்தில்-பல்வேறு புதிய அணுகுமுறைகளின் விளைவாகப் புதிய கருத்துகள் அத்தொடரில் காணப்படுகின்றன. அரசு என்ற சமுதாய அமைப்புக்கு டபிள்யு.வில்சன் என்னும் ஆசிரியர், ''ஒரு குறிப்பிட்ட நில எல்லைக்குள் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து வாழ்தற்காக அமைக்கப்பட்ட ஒரு மக்கள் கூட்டமே அரசு'' என்று இலக்கணம் வகுக்கிறார். இவ்விலக்கணம் வகுக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகட்கு மேலாகிறது. இக்கால அரசை ஓர் முறையாகக் (System) கருதி, அண்மையில் வாழ்ந்த மாக்சு வீபர் (Max Weber) என்ற செருமானியச்சமூக இயலாசிரியர், ''ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதிக்குள் வல்லந்தத்தைச் (Force) சட்டபூர்வமான முறையில் கையாளுவதற்குத் தனி உரிமை பெற்றுள்ள ஒரு மனித சமூகமே அல்லது கூட்டமே அரசு'' என்று இலக்கணம் வகுக்கிறார். அரிசுடாட்டில் அரசியல் கலையைச் சமய நூல்களிலிருந்து பிரித்து, பல ஆய்வு முறைகளை வகுத்த போதிலும், அவருடைய அணுகு முறையை (Approach) இக்கால அறிவியல் அணுகு முறையாகக் கருதுவதில்லை. அவருக்குப் பின்னர் அண்மைக் காலம் வரையில் இருந்த அரசியல் சிந்தனையாளர்களெல்லாம் (மாக்கியவெல்லி, Machiaveli), சேம்சு பிரைசு பிரபு (Lord James Bryce)முதலியோரெல்லாம் அரசியல் கலையைப் பழைய மரபார்ந்த அணுகு முறையை ஒட்டியே ஆய்வு செய்தனர்; பழைய மரபார்ந்த அணுகு முறையில் அரசியல் நிறுவனங்களை ஒப்பீடு செய்தல் மிகவும் குறைவாகவே கையாளப்பட்டது. நிறுவனங்களைப் பற்றிய விவரணங்களே (Descriptions) அதில் இடம்பெற்றன. அதில் ஒரு சில நாடுகள் அல்லது அரசுகளைப்பற்றிய ஆய்வே மிகுதியும் காணப்பட்டது. எடுத்துக்காட்டாகப் பாராளுமன்றக் குடியாட்சி முறையைப் பற்றிய ஆய்வுக்கு, பிரிட்டிசு ஆட்சிமுறை ஒன்றுதான் எடுத்துக் கொள்ளப்பட்டது. அரசியலோடு தொடர்பில்லாத நிறுவனங்களெல்லாம் பழைய அணுகு முறையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் விடப்பட்டன. எல்லாவற்றிற்கும் மேலாகப் பழைய அணுகு முறையிலே ஒழுக்கமுறை விதிகளை ஒட்டியே அரசியல் நிறுவனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன. ஆனால் இதற்கு மாறாக இப்பொழுது புதிய அணுகு முறையில், உயிரியல் விஞ்ஞான இயல்களில் (Biological Sciences) கையாளப்படுகிற, முறை அமைவுப் பகுப்பாய்வு (System Analysis) கையாளப்படுகிறது. இதன் விளைவாக மனிதரின் நடக்கையைப் பற்றிய (Human Behaviour) ஒருமைப்படுத்தப்பட்ட பொது அமைவுகள் பகுப்பாய்வுக் கோட்பாடு (General Systems Theory) தோன்றிற்று. அதாவது, பல்வேறு இயல்களிலும் காணப்படுகிற சில பொதுவான பொருள்களை ஒழுங்கு படுத்தினால் ஒரு பொதுக் கோட்பாடு உருவாகும். அந்தப் பொதுக் கோட்பாடு ஒவ்வொரு பாடத்தின் சிக்கல்களை நன்கு அறிந்துகொள்ளவும், பல்வேறு பாடத் துறைகளும் ஒன்றோடொன்று தொடர்புகொள்ளவும், தீவிர ஆராய்ச்சிக்கு வழி காட்டுகிறது. இவ்வாறு புதிய அணுகு முறை,அரசியல் கலையின் பாட எல்லையை மிகவும் விரிவாக ஆக்கியுள்ளது. அதில், வளரும் நாடுகளின் (Developing Countries) அரசு முறைகளைப் பற்றிய ஆய்வும் அடங்கியுள்ளது. அதில் மனித அனுபவத்தை மட்டுமே

வைத்து அரசியல் முறை அமைவுகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன; ஒழுக்க விதிகளை வைத்து மதிப்பீடு செய்யப்படுவதில்லை. இப்புதிய போக்கை, தேவிடு ஈசுட்டன் (David Easton) என்னும் அமெரிக்க ஆசிரியர் தாம் எழுதியுள்ள "அரசியல் வாழ்வைப் பற்றிய ஒரு முறை அமைவுப் பகுப்பாய்வு" (A System Analysis of Political Life by David Easton, 1965) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். எனினும், இவ்வாசிரியரே அரசியல் முறையமைவுப் பகுப்பாய்வுக்கு ஒழுக்க விதிக் கோட்பாடு ஓர் அளவு கோலாகும் என்று ஒப்புக் கொண்டுள்ளார். இலியோ இசுட்ராசு (Leo Strass) முதலிய இக்கால ஆசிரியர்களும் ஒழுக்க விதிக் கோட்பாட்டை அரசியல் ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது என்று கருதுகின்றனர். எவ்வாறாயினும் அரசியல் கலையின் ஆய்வு அளவு அல்லது எல்லை புதிய அணுகு முறையின் விளைவாக மிகவும் விரிவடைந்துள்ளதென்பதில் ஐயமில்லை. சமூக இயல் (Sociology), உயிரியல் (Biology), பொருளியல் (Economics), உள இயல் (Psychology) முதலிய பல்வேறு இயல்களிலிருந்தும் செய்திகள் கையாளப்படுகின்றன. எடுத்துக்காட்டாகச் சமூக வகுப்புகளைப் பற்றிய செய்திகளைச் சமூக இயலிலிருந்தும், மனிதரின் நடக்கை பற்றிய செய்திகளை (Human Behaviour) உளவியலிலிருந்தும், உள்ளீடு வெளிப்பாடு ஆய்வு முறையைப் (Input Output Analysis) பொருளியலிலிருந்தும், அரசு முறையின் அமைப்புப் பணி ஆய்வு முறையை (Structural - Functional Analysis) உயிரியலிலிருந்தும் கையாண்டுள்ளனர். இவ்வாறு அரசியல் கலையின் எல்லையை இக்காலத்தில் விரிவாக ஆக்கிய ஆசிரியாகள் தேவிடு ஈசுட்டன், கேபிரியேல் ஆல்மண்டு (Gabriel Almond), (இவருடைய கோட்பாட்டின்படி, அரசியல் விஞ்ஞான ஆய்வுக்கு வழக்கமாக எடுத்துக் கொள்ளப்பட்ட சட்டமன்றம் (Legislature), நிருவாகத்துறை (Executive), நீதித்துறை (Judiciary) முதலிய நிறுவனங்கள் மட்டுமல்லாமல், அரசியல் அம்சமுடைய உறவுமுறை, சாதிமுறை, கொலை, ஆர்ப்பாட்டங்கள், அரசியல் கட்சிகள், தன்னலக் குழுக்கள் (Interest Groups) முதலியவெல்லாமே எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்) காரல்டாசு (Karl-Dash), எரால்ட்டு லாசுவெல் (Herald Laswell), இராபர்ட்டு டால் (Robert Dohl), தேவிடு ஆப்டர் (David Apter) முதலியோர் ஆவர். இவர்களுடைய கருத்துப்படி அரசியல் என்ற சொல் ஆட்சித் தொடர்பான தீர்மானங்களைச் செய்தல் (Decision Making) என்ற கருத்தைக் குறிக்கிறது. அரசியல் என்ற சொல்லுக்கு அதிகாரத்தைப் பயன்படுத்துதல் என்று இராபர்ட்டு டால் என்பவரும், 'தீர்மானம் எடுத்தல்' என்று சூன் பிளாண்டல் என்பவரும், தகுதியுடையோர் செயல் தகவைப் பங்கிடு செய்தல் (Allocation of Political Values) என்று தேவிடு ஈட்டனும் குறிப்பிடுகின்றனர். இக்காலக் கருத்தின்படி, அரசு அல்லது அரசியல் முறையமைவு என்னும் இயந்திரம், மக்களிடமிருந்து கோரிக்கைகளைப் பெற்று (Inputs), அவற்றைத் தீர்மானங்களாகவும் செயல்களாகவும் மாற்றி, அவற்றை மக்கள் சமுதாயமாகிய சூழலுக்கே திரும்பவும் அளிக்கிறது. இத்தகைய உள்ளீடு வெளிப்பாடு முறை இக்கால ஒப்பீட்டு அரசியலில் ஓர் இன்றியமையாத பகுதியாக இருக்கிறது.

அரசியல் கலை (Politics) என்ற பாடம் அல்லது பாடத்துறை, பல்வேறு அரசியல் தொடர்புடைய துறைகளைப் பற்றிய செய்திகளையும், அரசியல் கோட்பாடுகளையும் பற்றிய ஒரு கல்வித்துறை ஆகும். அதில் அரசாங்கம் அல்லது முறை அமைவு (Government or System), உட்பகுதி அரசியல் (Local Politics), அரசியல் விஞ்ஞானம் (Political Science), ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics) முதலிய பிரிவுகள் அடங்கும். இவை ஒவ்வொன்றின் செய்தித் திரளையும் நாம் சுருக்கமாகக் குறிப்பிடலாம். அரசியல் விஞ்ஞானம் என்பது, சர்வதேசச்சட்டம் (International Law), சர்வதேச உறவுகள் (International Relations), மனிதருடைய அரசியல் நடக்கை (Political Behaviour), அரசியல் கோட்பாடு (Political Theory), ஒப்பீட்டு அரசியல் (Comparative Politics), பொதுத் துறை ஆட்சி இயல் (Public Administration), பொது மக்கள் சட்டம் (Public Law) முதலிய துறைகளைக் குறிக்கும். இதில், அரசியல் கோட்பாடு என்ற துறையில் அடங்கிய கருத்துக் கோட்பாடுகள் அரசியலதிகாரம் (Authority), கருத்து ஒருமைப்பாடு (Consensus), குடியாட்சி (Democracy), குடிமக்களுடைய கடமைகள் (Duties), சமத்துவம் (Equality), சுதந்திரம் (Freedom), பொதுநல விருப்பம் (General Will), கொள்கைகள் (Ideologies), நீதி (Justice), பெரும்பாலோர் ஆட்சி (Majority Rule), தேசிய நலன் இயற்கைச் சட்டம் (Natural Law), இயற்கை உரிமைகள் (Natural Rights), அதிகாரம் (Power), பொறுப்பு (Responsibility), சமுதாய ஒப்பந்தம் (Social Contract), இறைமை (Sovereignty), அரசு (State), பழைமைக் கோட்பாடு (Conservation), அரசிலாக் கோட்பாடு (Anarchism), அரசியலமைப்புகள் (Constitutions), அரசியலமைப்பில் பற்றுடைமை (Constitutionalism), தாராளக் கோட்பாடு (Liberalism), மார்க்சிய அல்லது புரட்சி இயல்புடைய பொதுவுடைமைக் கோட்பாடு (Marxism), இராணுவக் கோட்பாடு (Militarism), அமைதிக் கோட்பாடு (Pacifism), பன்முகக் கோட்பாடு (Pluralism), சமதருமம் (Socialism), சருவாதிகாரக் கோட்பாடு (Totalitarianism), பயன்வழிக் கோட்பாடு (Utilitarianism) முதலியவை ஆகும்.

அரசாங்கம் என்ற பகுதியில் சட்டமன்றம் ஓரவை, ஈரவை மன்ற முறைகள், அமைப்பு, வாக்குரிமைத் தகுதிகள், உரிமைகள், சிறுபான்மையோர் பிரதிநிதித்துவம், சட்ட மன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும், நிருவாகம் அல்லது ஆட்சித்துறையின் வகைகள் (Types of Executive), பாராளுமன்ற அல்லது கேபினெட்டு வகை (Parliamentary or Cabinet Type), நிருவாகத்தின் இயல்புகள், பாராளுமன்றத்துக்கும் நிருவாகத்துக்குமுள்ள தொடர்புகள், நிருவாகத்தின் அமைப்பு, பணிகள், தலைவர் அல்லது சனாதிபதி வகை நிருவாகத்தின் இயல்புகள் (Characteristics of Presidential Type of Executive), இதன் அமைப்புப் பணிகள், அதிகாரங்கள், இதற்கும் அரசாங்கத்தின் மற்ற உறுப்புகளாகிய சட்டமன்றம் நீதிமன்றம் ஆகியவற்றுக்குமுள்ள தொடர்புகள், கழக முறை நிர்வாகத்தின் தனிப்பட்ட இயல்புகள் (Characteristics of Collegiate Type of Executive), அதன் அமைப்பு, அதிகாரம், பணிகள், மற்ற உறுப்புக்களோடு அதற்குள்ள தொடர்பு, நீதித்துறையின் அமைப்பு, அதிகாரங்கள், பணிகள், ஒற்றை அரசு முறையிலும் (Unitary State) கூட்டாட்சி முறையிலும் நீதித்துறையின் நிலை, நீதித்துறையின் சுதந்திரத்துக்கான கோட்பாடுகள், முதலியவையெல்லாம் கூறப்படுகின்றன.

உட்பகுதி அரசியல் என்ற பிரிவில் அரசின் அல்லது நாட்டின் பல்வேறு உட்பகுதிகளில் அமைக்கப்பட்டுச் செயற்படும் உள்ளூர் அரசாங்கங்களின் (Local Governments) அமைப்பு, அதிகாரங்கள், பணிகள், அவற்றின் வருமான ஆதாரங்கள், செலவினங்கள், உள்ளூரரசாங்கங்களுக்கும், மாநில அல்லது நடுவண் அரசாங்கத்துக்குமுள்ள தொடர்பு ஆகியவை கூறப்படுகின்றன.

ஒப்பீட்டு அரசியல் என்ற பிரிவு அரசியல் நடக்கையைப் போல (Political Behaviour) இக்காலத்தில் தோன்றியுள்ள ஓர் இயக்கமாகும் (Movement). இது அரசியலின் ஒரு துணைப் பகுதியாக ஆகுமென்பதைவிட, இது அரசியல் விஞ்ஞானத்திற்குப் பல புதிய செய்திகளை அளித்து அதை மேலும் விளக்கம் பெறச் செய்கிறது என்பதே சரி என்று கேபிரியேல் ஆல்மண்டு என்னும் இக்கால அரசியல் பேராசிரியர் ஒருவர் கூறுகிறார். இப்பிரிவு பற்றி அரிய கருத்துகளை அளித்துள்ள ஏனைய பேராசிரியர்களின் பெயர்கள் மேலே குறிப்பிடப்பட்டன.

அரசியல் ஒரு விஞ்ஞானமா அல்லது கலையா என்ற ஓர் ஆய்வு சிறிது காலம் வரை குறிப்பாக ஆசிரியர்களிடையே இருந்து வந்தது. விஞ்ஞானம் என்பது உயிரற்ற பொருள்கள், மனிதரல்லாத உயிரினங்கள் ஆகியவற்றின் தன்மைகளைப் பற்றிய சட்டங்களின் தொகுப்பு. இச்சட்டங்களினுதவியால் காரிய காரண ஆய்வுகளைத் துல்லியமாகச் செய்து, விளைவுகளை முன்னதாகக் கூறுதல் எளிது, ஆகையால் விஞ்ஞானச் சட்டங்கள் ஒரே சீராகவும், ஆய்வுக்குகந்தவையாகவும் இருக்கின்றன. ஆனால் இதற்கு மாறாக மனிதரின் நடக்கையைப் பற்றிக் கூறும் அரசியலில் காணப்படும் விதிகளும் கோட்பாடுகளும், சட்டங்களும், விஞ்ஞான விதிகளைப் போன்று ஒரே சீராகவும், விளைவுகளை முன்னதாக அறிவிக்கக்கூடிய அளவுக்குத் துல்லியமாகவும் இல்லை. ஏனெனில் மனிதருடைய நடக்கையைத் தூண்டும் காரணிகள் பலவாக இருக்கின்றன. எனவே, ஒரு சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில்தான் அரசியல் விதிகள் குறிப்பிட்ட விளைவுகளைத் தரும் என்று கூற இயலும். எனவேதான், விஞ்ஞானம் என்ற சொல் பௌதிகம், இரசாயனம், முதலியவற்றுக்கே பொருந்தும் என்றும், அரசியலுக்குப் பொருந்தாது என்றும் ஆங்கில அரசியல் ஆசிரியர் சர் எர்னசுட்டு பார்க்கர் (Sir Earnest Parker) என்பவர் கூறுகிறார். மேலும் இக்காலத்தில் அரசியலை ஓர் கலையாகக் கருதுவதற்குப் பல காரணங்களைக் கூறலாம். அரசியலில் கூறப்படும் செய்திகளின் தன்மையை வைத்து, அது அதிகாரத்தைப் பற்றிக் கூறும் (Power) ஒரு கல்விப் பிரிவு என்றும், பணிகளைப் பற்றிக் கூறும் (Functions) பாடம் என்றும், நடக்கையைப் பற்றிக் கூறும் பாடம் என்றும், தீர்மானம் எடுத்தலைப் பற்றி ஆய்வு செய்யும் கல்வி என்றும் (Decision-making) இக்கால ஆசிரியர்கள் கருதுகின்றனர். எனவே அரசியலை ஒரு கலையாகக் கொள்ளுதல் பொருத்தமுடையது.

இக்கல்வித் துறைக்குப் பழங்காலத்தில் பல அரிய கருத்துகளை அளித்த சிந்தனையாளர்கள் சாக்ரட்டீசு (Socrates), பிளேட்டோ (Plato), அரிசுடாட்டில் (Aristotle), சீனோ (Zeno), எபிக்யூரசு (Epicurus), சிசரோ (Cicero), பாலிபியசு (Polybius), செயின்ட் அகசுடின் (St. Augustine), செயின்ட் தாமசு (St. Thomas), அக்வினசு (Aquinas), மார்சிலியோ, தாந்தே (Dante), மாக்கிய வெல்லி முதலியோராவர். கி.பி. 15-முதல் 20-ஆம் நூற்றாண்டு வரை இக்கல்வித் துறைக்குப் பல ஒப்பரிய கோட்பாடுகளை அளித்தோர் – சீன் போடின் (Jean Bodin) (இறைமை அதிகாரக் கோட்பாடு), இயூகோ குரோசியசு (Hugo Grotius) (சர்வதேசச் சட்டம் பற்றிய கோட்பாடு), தாமசு ஆப்சு (Thomas Hobbes) (அரசாங்கக் கோட்பாடு), சான்லாக் (John Locke) (இயற்கை உரிமைகள்), அரசியலமைப்புக்கு உட்பட்ட அரசாங்கம்), சீன் சாக் ரூசோ (Jean Jacques Rossueau) (மக்கள் இறைமை அதிகாரக் கோட்பாடும், குடியாட்சிக் கோட்பாடும்), சான் இசுடூவர்ட்டு மில் (John Stuart Mill) (பிரதிநிதித்துவ அரசாங்கம், சுதந்திரம்), பெந்தம் (Bentham) (பயன்வழிக் கோட்பாடு), மாண்ட்டசுக்யூ (சட்டம், அதி

காரப் பிரிவினைக் கோட்பாடு, ஏகல் (Hegel), டி. எச். கிரீன் (T.H.Green), (அரசு பற்றிய இலட்சியக் கோட்பாடு), காரல் மார்க்சு (Karl Marx) (பொதுவுடைமைக் கோட்பாடு), இமானுவல் கான்ட் (Immanual Kant) (அரசின் பணிகள்) முதலியோராவர். இருபதாம் நூற்றாண்டில் நுட்பமாகப் பல ஆய்வுகள் செய்த அரசியலாசிரியர்களும், அவர்கள் அளித்துள்ள புதிய செய்திகளும் வருமாறு: வால்ட்டர் பேசட் (Walter Pagehot) குடியாட்சி அரசாங்கம்; பென்ட்லி, லோவல் (Bentley, Lovell) அரசியல் குழுக்கள்; மெரியம் (Merriam) அரசியலதிகாரம்; கேய் (Key), இலின்ட்சே (Lindsay) அரசியல் கட்சிகள்; மிக்கேல்சு (Michaels), மோசுக்கா (Mosca), பரேட்டோ (Paretto), இரைசு (Rice), அரசியலில் உயர்ந்தோர் குழாம் பற்றிய கோட்பாடு (Elite Theory in Politics); கிரகாம் வாலசு: பன்முகக் கோட்பாடு; இலிப்மன்: பொது மக்கள் கருத்து (Public Opinion).

நெடுங்காலமாக அரசியல் என்பதற்குப் பொருத்தமான பாடச் செய்தித் திரள் (Subject matter) அமையாத காரணத்தால் அஃதொரு தனித்த, ஆராய்ச்சிக்குரிய பாடத் துறையாகக் (Autonomous discipline) கருதப்படாமலிருந்தது. ஆனால், இப்போது (இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்) இந்நிலை மாறி, கோட்பாடுகளடங்கிய பாடத் துறையாகத் திட்டவட்டமான வடிவம் கொடுக்கப்பட்டுப் பல்வேறு பாடத் துறைகளையும் தழுவியதாக அமைந்துள்ளது. அரசியல் நிறுவனங்கள் எல்லாம் மக்கள் செயல்களின் வெளித் தோற்றங்களே அல்லது வெளிப்பாடுகளே என்று இக்கால அரசியற்கலை கருதுவதனால் அரசியற் கலை என்பது மனிதருடைய தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் காட்டும் ஒரு நடக்கை இயல் (Behavioural Science) ஆக விளங்குகிறது. பா.சூ.

துணை நூல்:

**Appadorai**, A., "A Substance of Politics", Oxford University Press, 1972.

**அரசியல் குழப்பம்** என்பது தீவிர நிலையிலுள்ள தனியார் சுதந்திரக் கோட்பாட்டை எடுத்துக் காட்டுகிற சமூக அமைப்புப் பற்றிய ஒரு கோட்பாடு ஆகும். எல்லா அரசாங்கமும், சட்டமும் மனிதருடைய சுதந்திரத்தை அழிப்பன. எனவே மக்களின் விருப்பத்தின்பேரில் அமைக்கப்படுகிற அரசாங்கத்தைத் தவிர மற்ற, இப்போதுள்ள அரசாங்கங்கள் ஒழிக்கப்படுதல் வேண்டும். ஒழுங்கில்லாததொரு சமுதாயத்தை நிறுவுதல் வேண்டும் என்று குழப்பவாதிகள் (Anarchists) கூறுவதில்லை. ஒழுங்கு என்பது தம்மைத் தாமே ஆண்டுகொள்ளும் குழுக்கள் மூலமே தோன்றுகிறது. குழுவினின்று கிடைக்கும் நற்பயன்களெல்லாம் கட்டுப்பாடில்லாத சுதந்திரமான முறையின் வாயிலாகவே வருகின்றன. தனியார் உரிமைகளை மதிக்கும் இயல்பு மனிதனிடத்தில் சுதந்திரமான சூழ்நிலையில் காணப்படுகிறது. குற்றங்களை ஒடுக்குதல் என்னும் செயல், மக்களாலே அமைக்கப்பட்ட கவனக் குழுக்களுக்கு விடப்படலாம். இத்தகைய குழுக்கள் கலிபோர்னியாவில் மாநில அரசாங்கம் அமைக்கப்படுவதற்கு முற்பட்ட காலத்தில் இருந்தன. உருசிய நாட்டு குரோபோட்கின் (கி.பி. 1842–1921), "தொழிலாளரால் தோற்றுவிக்கப்பட்ட செல்வத்தை முறையற்ற வகையில் பகிர்வதாலும், இப்போதைய வருக்கச்சலுகைகளாலும் (Class Privileges) குற்றம் தோன்றுகிறது" என்று கூறினார். கட்டாய அரசாங்க முறைகளையும், குடியாட்சியில் பெரும்பாலானவருடைய எதேச்சாதிகாரத்தையும் எல்லாக் குழப்பவாதிகளும் எதிர்க்கின்றனர். பிரவுதான் (கி.பி 1809–1865) என்ற பிரெஞ்சு சிந்தனையாளர் குழப்ப இயல் தனியார் உரிமைக் கோட்பாட்டை (Anarchist Individualism) வகுத்தார். குரோபோட்கின் குழப்ப இயல்பான பொதுவுடைமைக் கோட்பாட்டாளர் (Anarchist Communist) பிரவுதான் (Prouthon) வல்லந்தத்தை ஆதரிக்கவில்லை. ஆனால் குழப்ப இயல் தோற்றுவித்த வல்லந்தத்தைப் பாக்கூனின் (கி.பி. 1814 1876) என்பவர் ஆதரித்தார். இவர் அமைதியான புரட்சியை எதிர்த்தார். அச்சுறுத்தும் நோக்கத்தோடு சமூக சீர்திருத்தத்தை அடையவும், அரசையே ஒழிக்கவும் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சூழ்ச்சிகள் செய்யப்பட்டன. செருமானிய அரசர்களைக் கொல்ல முயற்சிகள் நடந்தன. ஆசுதிரியப் பேரரசர், பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர், இத்தாலிய அரசர், அமெரிக்க ஐக்கிய நாட்டுக் குடியரசுத் தலைவர் ஆகியோர் கொல்லவும் பட்டனர். குரோபோட்கினும் பிரவுதானைப் போல் சொத்துரிமையை மறுத்தார். சுருங்கச் சொல்லின் குழப்ப இயல் கருத்து தனிப் பொதுவுடைமைக் கோட்பாடாக (Pure Communism) ஆயிற்று.

அரசியல் குழப்பம் (Anarchy) என்ற கருத்தும் ஆட்சிவேண்டாக் கோட்பாட்டைப்போல் மறுப்புக்கு உரியதாகும். தனியார் சொத்துரிமையைப் பெருமளவில் கட்டுப்படுத்துதல்தான் மனித இயல்புக்கு ஏற்ற கோட்பாடு என்பதும், தனியார் சொத்துரிமையை அறவே ஒழித்தல் நடைமுறையில் இயலாது என்பதும், சங்கங்கள் மட்டுமே கட்டுப்பாடு ஏதுமின்றிப் பொருளுற்பத்தி, பகிர்வு முதலியவற்றைச் செவ்வனே செய்தல் இயலாதென்பதும், சங்கங்களிடையே ஏற்படும் முரண்பாட்டை நீக்குவதற்கும், அவைகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தற்கும், அவற்றை விட வலிமை மிக்க தலைமையான அதிகாரத்தை உடைய ஓர் அரசு தேவை என்பதும் வரலாற்றிலிருந்து தெரியவருகின்றன. பா.சூ.

**அரசியல்சார் சமூகவியல்** சமூக நிறுவனங்களுக்கும் அரசியலுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி ஆராய்ந்து அறிவதனை நோக்காகக்கொண்டது.

அரசியல்சார் சமூகவியலின் வளர்ச்சிக்குக் காரல் மார்க்சு (Karl Marx) முன்னோடியாக விளங்கினார். வகுப்புச் சமூக அமைப்புகளை ஆராய்ந்த மார்க்சு, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளே வகுப்புப் பிரிவினையை மனித வரலாற்றில் முதன்முதலில் தோற்றுவித்தன என்றார். மக்களுள் சிறு பிரிவினரான பெருஞ்செல்வர்கள் (Bourgeoise), பெரும்பிரிவினரான பாட்டாளிமக்களை (Proletariat) அடக்கி ஆண்டு, தங்கள் நலனுக்காக அவர்களை உழைக்கக் கட்டாயப் படுத்தும் நிலைமை தோன்றும்போதுதான், சமூகத்தில் சிறைச்சாலைகள், காவற் படைகள், இராணுவம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வன்முறை தோன்றுகிறது. பாடுபடும் பாட்டாளிகளைக் கட்டாயப் படுத்துவதாக அரசு செயற்படுகிறது என்று மார்க்சு குறிப்பிடுகிறார். அரசு என்பது, வகுப்பு ஆட்சிக்கான வன்முறையோடு ஒடுக்குவதற்கான உறுப்பு ஆகும். வகுப்புகளுக்கிடையிலான மோதலை மட்டுப்படுத்துவதன் வாயிலாக இந்த ஒடுக்குமுறையைச் சட்ட முறையானதாக்கி, நிலையான ஆதிக்க 'ஒழுங்கை' உருவாக்குவதே அரசு என்பது மார்க்சின் கொள்கையாகும். நிலையான இராணுவமும், காவல் படையுமே அரசு அதிகாரத்தின் முதன்மையான கருவிகளாகும். ஆண்டைகளும், அடிமைகளுமே சமூக வரலாற்றில் முதலில் தோன்றிய வகுப்பினர் என்பது மார்க்சின் கருத்தாகும். காலப்போக்கில், பெரும்பாலான நாடுகளில் அடிமைமுறை பண்ணை அடிமை முறையாக (Farm Slavery System) வளர்ந்தது. இங்கே நிலக்கிழார்களும் (Feudal Lords) பண்ணை அடிமைகளும் (Farm Slaves) முதன்மையான வகுப்புகளாக விளங்கினர். பின்னர், இந்தச் சமுதாயத்தில் வணிகம் வளர்ச்சியுற்று அதன் விளைவாக உலகச் சந்தை (World Market) தோன்றியது. உற்பத்திக்கான அடிப்படைப் பொருள்களைத் (Means of Production) தம் கைகளில் குவித்துக் கொண்ட ஒரு வகுப்பு, உழைப்பையே நம்பி வாழும் மற்றொரு வகுப்பைப் பயன்படுத்திப் பெரும்பொருள் ஈட்டத் தொடங்கிற்று. இதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்த நிலமானிய முறை காலப்போக்கில் அழிந்துவிட்டது. இவ்வாறு முதலாளி–தொழிலாளர் வகுப்புகள் நிலைபெற்றன.

வகுப்புச் சமூகத்தின் வெவ்வேறு வடிவங்களான அடிமைச் சமூகம், நிலமானியச் சங்கம், முதலாளிச் சங்கம் ஆகிய இவை ஒவ்வொன்றுமே ஆளும் வகுப்பின் வல்லாட்சி என்கிறார் மார்க்சு. முதலாளித்துவ சங்கத்தில் இது பெரும்பாலும் மக்களாட்சியாக இருக்கலாம்; இது அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையைக் கொண்ட நாடாளுமன்றத் தேர்தல்களையும் அனுமதிக்கலாம்; ஆயினும் இது இன்னும் ஒரு வல்லாட்சியாகவே இருக்கின்றது. நாடாளுமன்ற வடிவங்கள் என்ற முகமூடி அணிந்த முதலாளி வகுப்பு வல்லாட்சியே இது என்று இதனை இலெனின் (Lenin) விளக்குகிறார்.

முடிவில் பாட்டாளி வகுப்புப் புரட்சியினால் அரசியல் அதிகாரத்தை அவர்கள் கைப்பற்றுவரென்றும் உற்பத்திக்கான மூலப்பொருள்களை, சாதனங்களை அரசுடைமையாக்குவரென்றும், அந்த நிலையில் வகுப்பிலாப் பொதுவுடைமைச் சமுதாயம் அமையும் என்றும் வருங்கால நிகழ்வை மார்க்சு கணிக்கிறார்.

அரசியல் கொள்கைகள், பொருளாதார அடிப்படையில் எழுகின்றவையே எனும் கருத்தினை மார்க்சு வலியுறுத்துகிறார். ஆதலின், எந்தக் கட்டத்திலும் ஆளும் வகுப்பினரின் கருத்துகள் அரசின் கருத்துகளாகும் என்றும், சமுதாயத்தின் பொருளாற்றலைக் கட்டுப்படுத்தும் வகுப்பே அறிவாற்றலையும் கட்டுப்படுத்துவதாக இருக்கும் என்றும் கூறுகிறார். அரசியல் ஒழுங்குமுறை என்பது, அரசையும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களையுமே சார்ந்திருக்கும் என்கிறார். சமூகத்தில் அரசியல் சட்டங்கள் சிறப்பிடம் பெற்றவை. அவை அரசியல் ஒழுங்குமுறையை நிலைபெறச் செய்கின்றன என்றும் குறிப்பிடுகிறார். ஆள்பவர்களும் அரசு இயங்குமுறைகளும் சட்டங்களும் ஆளும் வர்க்கத்தினரின் விருப்பத்திற்காகவே செயற்படுகின்றன என்பது மார்க்சின் கருத்தாகும்.

அரசியலுக்கும் சமூகவியலுக்கும உள்ள தொடர்பினைச் செருமானியச் சமூகவியலறிஞரான மேக்சு வெபரின்(Max Weber) சமூகப் படிநிலை (Social Stratification) பற்றிய விளக்கத்தில் காணலாம். சமூக ஏற்ற நிலை (Social Status), உடைமைகள் (Property) ஆகியவற்றின் அடிப்படையில்தான் வகுப்புகள் உருவாகின்றன என்பது வெபரின் கருத்தாகும். பல ஏற்ற நிலைக் குழுக்கள் (Status Groups) அரசு இயங்குமுறைகளைக் கட்டுப்படுத்தும் நிலைக்குப் போட்டியிடுகின்றன என்றாலும் அவை செல்வாக்கு மிக்குடையனவாக இருப்பதில்லை. சமூக ஏற்றத்தாழ்வுகளும் ஏற்றநிலைக் குழுக்களும் தோன்றுவதற்கு அரசின் அதிகார வருக்க ஆட்சிமுறை (State Bureaucracy) ஊக்கமளிப்பதுடன் நாட்டுவளர்ச்சியிலும் செல்வாக்கை உண்டாக்குகிறது என்கிறார். அதிகாரவருக்கத்தாருக்கும் அரசிற்கும் அரசின் அலுவலர்களுக்குமிடையே போராட்டங்கள் ஏற்படுகின்றன என்னும் இவருடைய கருத்து, மார்க்சின் வகுப்புப் போராட்டக் கொள்கையினின்றும் மாறுபடுகிறது. இத்தகைய போராட்டங்கள் சில சமயங்களில் குழுக்களை ஈடுபடுத்தி அரசியல் நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும்

என வெபர் குறிக்கிறார். அரசும் அதன் நிறுவனங்களும் ஒரு தனிப்பட்ட வகுப்புக் கட்டுப்பாட்டின் கீழ் வாராவென்றாலும், இக்கால அரசில் பெரும்பான்மையான பதவிகள் வழக்கறிஞர்களால் ஏற்கப்படலாம் என்றுகூறுகிறார். கல்வி அறிவுடன் அரசியலையும் சட்ட நுணுக்கங்களையும் அறிந்து, அரசியல் அறிவுடையவர்களாக அவர்கள் இருப்பதுதான் இதற்குக் காரணமெனக் கூறும் அவர், வழக்கறிஞர்கள் இல்லாமல் இருக்கும் மக்களாட்சி போலியானதாகும் என்றும் சுட்டுகிறார். திறமையுள்ள, பொறுப்புடைய ஆட்சியாளர்கள்தாம், சிறந்த மக்களாட்சியின் தலையாய கூறுகளாவர் என்பது இவரின் கருத்தாகும். பண்டைக் கிரேக்கத்தின் நேரடி மக்களாட்சியிலிருந்து (Direct Democracy) இன்றைய மக்கள் திரள் ஆட்சி (Mass Democracy) வரையில் சீர்தூக்கிப் பார்த்தால், சிறுபான்மையினரான மக்களாட்சி, மேட்டுக் குடியினரால் (Democratic Elitist) வழக்கறிஞர்கள் துணையுடன் ஆளப்படும் ஆட்சியாக உள்ளதென்றும் அதுவே ஆற்றல் வாய்ந்ததாக இருக்குமென்றும் குறிப்பிடுகிறார். இத்தகைய வாய்ப்பு அளிக்கப்படவில்லையென்றால் அரசு சிறப்புற அமையாதென்றும் நம்புகிறார்.

தலையாய இரு வழிமுறைகள் வாயிலாக அரசியல் தலைவர்கள் தேர்தெடுக்கப்படுவர். ஒன்று, வலுவான அரசியல் கட்சிகள் திறமையான தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்குத் தேர்தல் முறையைப் பின்பற்றுவதாகும். மற்றொன்று, தேர்தலின்றி அவர்களை நாடாளுமன்றத்திலிருந்தே விரும்பித் தேர்தெடுப்பதாகும்.

ஆட்சியாளர்கள் நிருவாகக் கருவிகளான தண்டித்தல், தண்டத்தொகை விதித்தல், வரி வாங்குதல், போர்முறை போன்றவைகளால் மக்களிடம் ஆதிக்கம் செலுத்தி, அவர்களைக் கீழ்ப்படிய வைக்கிறார்கள். இதுபோலவே அவர்கள் பொருள் திறம் (Material), குறியீட்டுப் பண்பு கொண்ட பட்டம், பதவி போன்றவற்றின் கட்டுப்படுத்தும் தன்மையால் தங்கள் கீழ்ப் பணிபுரியும் பணியாளர்களிடமும் ஆதிக்கம் செலுத்துவர்.

முறைமை நிலையென்னும் (Legitimacy) கோட்பாட்டினைப் பயன்படுத்தி வெபர் மூன்றுவகைத் தலைமைகளை (Leadership) விளக்குகிறார். அவை (1) மரபுவழியிலான (Traditional) முறைமைநிலை. இதில் தலைவர்கட்குத் தொண்டர்கள் கீழ்ப்படிந்து நடப்பர். (2) கவர்ச்சி நோக்கின் (Charismatic) அடிப்படையிலான முறைமை நிலை. இதில் தொண்டர்கள் தலைவரிடம் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வர். (3) பகுத்தறிவுச் சட்ட அடிப்படையிலான (Rational-Legal) முறைமை நிலை. இதில் தலைவர் சட்டப்படி செல்வாக்குடையவராக இருப்பார். அவர் கீழ்ப் பணிபுரிபவர்களும் சட்டத்துக்குட்பட்டுத் தலைவருக்குக் கீழ்ப்படிவர்.

அமெரிக்கச் சமூகவியலறிஞரான தால்காட் பார்சன்சு (Talcot Parsons) அரசியல் ஒழுங்குமுறை, சமூக ஒழுங்குமுறையின் ஒரு பகுதியாகும் என்று உணர்த்துகிறார். அது பயன் மதிப்புகள் (Values) ஏற்புத்தரங்கள் (Norms), பங்குகள் (Roles) ஆகியவற்றை அமைப்புக் கூறுகளாகக் (Structural Elements) கொண்டிருப்பதுடன், தனக்கென ஒரு எல்லையையும் பெற்றிருக்கிறது என்கிறார். அரசியல் ஒழுங்குமுறையின் இன்றியமையாச் சூழ்நிலைகள் சமுதாயத்தின் மற்றைய துணை அமைப்புகளே (Sub-systems) என்றும், அவை குறிக்கோளினை அடைதற்கு அதிகாரத்தைப் பயன்படுத்திச் செயலாற்றுகின்றன என்றும், வளங்களைப் (Resources) பக்குவமாக மற்றத் துணை அமைப்புகளிடம் பரிமாறிக் கொள்வதை நிலை பெறச் செய்வதற்கு அவை அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன என்றும் கூறுகிறார்.

வளர்ந்த நாடுகளில் அதிகாரம் எல்லோருக்கும் பரவலாக வழங்கப்பட்டிருக்கிறது என்று பார்சன் குறிப்பிடுகிறார். உரிமைகளும் கடமைகளும் அதிகாரம் உள்ளவர்கள் அது இல்லாதவர்கள் ஆகியோர்களுக்கான பங்குகளை இணைக்கின்றன என்றும், இதனால் முன்னவர்களின் பங்குகள் பின்னவர்களின் பங்குகளைக் கட்டுப்படுத்துகின்றனவென்றும், பின்னவர்கள் முன்னவர்களுக்குக் கீழ்ப்படிதல் கடமையாகுமென்றும், இதுவே சிறந்த சமூக மதிப்பீடாகுமென்றும் விளக்குகிறார்.

கிரேக்க அறிஞரான அரிசுடாட்டில் (Aristotle) தம் அரசியல் (Politics) என்னும் நூலில் பல ஆட்சிமுறைகளைத் தெளிவுபடுத்துகிறார். முடியாட்சி (Monarchy), உயர்குடி ஆட்சி – பிரபுக்கள் ஆட்சி (Aristocracy), ஆட்சி அமைப்பு முறை (Polity) என்று அரசுமுறைகளை அவர் மூன்றாகப் பகுக்கிறார். இதற்கு மாறான கொடுங்கோலாட்சி (Tyranny), சிறுகுழு ஆட்சி (Oligarchy), மக்களாட்சி (Democracy) ஆகியவற்றையும் விளக்குகிறார். இதில் முடியாட்சியும் உயர்குடி ஆட்சியும் முழுமை பெற்ற, நேர்மையான, சிறந்த அரசு முறைகள் எனக் குறிப்பிடுகிறார். ஆனால், பின்னர்க் குறிப்பிட்ட மூன்றுவகை ஆட்சிமுறைகளும் சீர் கெட்டவைகளாக இருந்தபோதிலும் மக்களாட்சி மட்டுமே பொறுத்துக் கொள்ளக் கூடியதென்றும் உணர்த்துகிறார்.

இருவகை ஆட்சிமுறைகளை இருபதாம் நூற்றாண்டில் காணலாம். அவை புதிய மக்களாட்சியும் (Modern Democracy), வல்லாட்சியும் (Totalitarianism)

ஆகும். இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட ஆட்சி முறை, சார் மன்னர்கள் ஆண்ட உருசியா, இட்லரின் ஆட்சியில் இருந்த செருமனி ஆகிய நாடுகளில் இருந்து வந்தது. புதிய மக்களாட்சியைப் பற்றி இரு வகைக் கருத்துகள் நிலவி வருகின்றன. அவற்றுள் ஒன்று, பண்டைய கிரேக்கக் கருத்தினை ஒத்திருக்கிறது. பல்வேறு காலங்களில் மக்களாட்சி வளர்ச்சி பெற்று வந்ததனை வரலாறு விளக்கும். மக்களாட்சிச் சமுதாயத்தை உருவாக்கிய அரசியல் அறிஞர்கள் கி.பி. 18, 19–ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த உரூசோ (Rousseau), மான்டெசுகியூ (Montesquieu), சான் இசுடூவர்ட்டு மில் (John Stuart Mill) போன்றோரார் வர். இதற்கு 20–ஆம் நூற்றாண்டினர்களான சான் தூயி (John Dewey), இராபர்ட்டு மெக்கைவர் (Robert MacIver) போன்றோர்களும் துணை நிற்கிறார்கள். இரண்டாவது, புதிய மக்களாட்சியின் கருத்துகளைப் பற்றியதாகும். அறவியல் நோக்குடைய மக்களாட்சியில் பொதிந்துள்ள பொதுவான கருத்துகள், பெர்னார்டு பிரில்சன் (Bernard Berelson), இராபர்ட்டு தால் (Robert Dahl), சோசப்பு கிம்பிடர் (Joseph Schimpeter) ஆகியவர்களின் விளக்கங்களில் வெளிப்படுகின்றன.

நாடும் மக்களும் ஒரு தனிப்பட்ட அரசியல் கட்சியாலும் அதைக் கட்டுப்படுத்துபவர்களாலும் ஆதிக்கம் செலுத்தப்படும் என்னும் கருத்தே வல்லாட்சியியலாகும். காரல் பிரடரிக்கு (Carl Friedrich), செபிக்நியூவ் பிரிசிசின்சுகி (Zbigniew Brzezinski) எனும் அறிஞர்கள் வல்லாட்சி நிலவும் சமுதாயங்களைப் பற்றி விரித்து விளக்கியுள்ளார்கள்.

அரசியலில் அதிகாரத்தைச் சிறந்ததாக அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். அதிகாரமெனும் வாய்ப்பு வளத்தினைப் பொதுவான முடிவெடுப்பதற்கு மக்கள் பயன்படுத்தலாம். கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் சிறுபான்மையினர், அரசியலில் வாய்ப்பு வளங்களைக் கட்டுப்படுத்துவதுடன் சமுதாயத்தில் அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தவும் செய்கிறார்கள். இந்த வாய்ப்பு வளங்களின் இயல்புகள் எண்ணிக்கைகள் சமுதாயத்திற்குச் சமுதாயம் மாறுபடுவதாக இருப்பினும், மக்களைக் கட்டுப்படுத்தும் மேட்டுக் குடியினரின்போக்கு மாறுபடுவதில்லை. அரசியல் வாய்ப்பு வளங்களைப் பெற்றிருக்கும் குடிமக்கள் ஒன்றாகச் செயற்பட்டால், மேட்டுக் குடியினரின் அதிகாரத்தையும் அவர்கள் வாய்ப்பு வளங்களையும் எதிர்க்கும் திறம் பெறலாம். ஆனால் குடிமக்கள் வாய்ப்பு வளங்களான வாக்குரிமை, கூட்டமைப்பதற்கான திறமை, பொதுவான முடிவுகளைப் பற்றிப் பேசும் ஆற்றல் ஆகியவைகளை ஒரு குறிப்பிட்ட அளவுக்குக்கூடக் கையாளுவதில்லை. இது புதிய மக்களாட்சியின் பெருங்குறையாக இருக்கிறது. இதனைச் செப்பமிடுதல் குடிமக்களின் பொறுப்பு ஆகும். கோ.க.

**அரசியல்சார் மானிடவியல்:** மானிடவியலின் பெரும் பிரிவுகளுள் ஒன்றான பண்பாட்டு மானிடவியல், பல துணைப் பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. இத் துணைப் பிரிவுகளுள் ஒன்றான அரசியல் சார் மானிடவியல் சமுதாய அமைப்பில் பொதுச் செயற்பாடுகளின் முறைமை, அமைப்பு, செயற்படும் முறை, நிருவாக அமைப்பு முதலானவற்றையும், இவ்வமைப்புகளின் செயற்பாடுகளைக் கட்டமைத்து நிற்கும் ஆட்சியுரிமை, அதிகார அமைப்பு முதலானவற்றையும் அறியும் பெரும் பரப்பினைக் கொண்டிருக்கிறது. அரசியல்சார் மானிடவியலின் பரப்பு வெவ்வேறு காலக்கட்டங்களில் விரிவடைந்துகொண்டு வந்ததால் இத்துறையின் வரம்பை அறிய ஒன்றுக்கும் மேற்பட்ட தெளிவான வரையறைகளைக் காணவேண்டும்.

தொடக்கக் காலத்தில், ஆதிக்குடிகள், பழங்குடிகள், கிராமச் சமூகம் முதலான சிறு சமூகங்களையே முதன்மையாக அறிய முற்பட்டிருந்த பண்பாட்டு மானிடவியலார், அச் சமூகத்தின் ஒவ்வொரு அமைப்பையும் பெரும்பாலும் தனி நிலையில் நின்றே ஆராய்ந்து வந்தனர். கி.பி. 19–ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை இச் சிறுகுழுக்களின் ஆட்சிமுறையையும் அதிகார அமைப்பையும், இவை உறவுமுறைக் குழு, சமயம், பொருளாதாரம் முதலான சமூக அமைப்புகளுடன் கொண்டிருந்த தொடர்பினையும் மட்டுமே ஆராய்ந்தறிந்தனர்.

பண்பாட்டு மானிடவியலார் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தே வாழ்க்கையமைப்பில் ஒருபடித்தான நிலையினைக் கொண்டிருந்த சிறு குழுக்களையும், தொழில் துறையை மையமாகக் கொண்ட விரிவடைந்த வாழ்க்கையமைப்பைப் பெற்றுள்ள நகரம் சார்ந்த சமூகங்களையும் ஆராய முற்பட்டனர். இதனால் இத்துறையின் பரப்பும் இதன் அனைத்துத் துணைப் பிரிவுகளின் பரப்புகளும் விரிவடையத் தொடங்கின.

வேட்டையாடி உணவு தேடும் சமூகம் முதல், நாடோடி, ஆயர்குடி, வேளாண்மை, கிராமம் மற்றும் நகரச் சமூகம் வரையிலும், ஆதிக்குடி பண்பாட்டிலிருந்து நகர்ப்புறப் பண்பாடு வரையிலும், வேட்டையாடி உணவு சேகரிக்கும் பொருளாதார அமைப்பிலிருந்து தொழிற்பகுப்பும், தொழிற்புரட்சியும் கொண்ட மின்னணுச் சக்தியால் இயங்கும் இயந்திர மனிதன் ஈட்டும் பொருளாதார முறை வரையிலும், அம்பெய்து போரிட்ட முறையிலிருந்து அணு ஆயுதப் போர்முறை வரையிலுமான இத்துணை வேறுபாடுகளினூடே நூற்றுக்கும் மேற்பட்ட சமூக, சமய

அமைப்புகளைக்கொண்டுள்ள மக்களின் அரசியலமைப்பு, ஆட்சியமைப்பு, அதிகார அமைப்பு முதலானவற்றை அறிவதே இன்றைய வளர்நிலை அரசியல்சார் மானிடவியலின் பரப்பாகும்.

தலைவனற்ற ஆதிக்குடி, வயது அடிப்படையிலான குழுத் தலைவன், மறைநிலை சமூகத் தலைவன் (Secret Society's Chief), கால்வழித் தலைவன், படையுரிமை ஆளுநர், தெய்வத் தன்மையற்ற ஆளுநர், நடுவண் தலைமை, ஆதிக்குடி ஆட்சிக்குழு, நிலமானிய ஆட்சி, அடிமையாட்சி, பண்ணையடிமை முறை, பணித்துறை ஆட்சி, பல்பதவியாண்மை, குடியேற்ற ஆதிக்க அரசு, கிராமப் பஞ்சாயத்து, குடியரசாட்சி, மக்களாட்சி,பொதுவுடைமைஆட்சி, இராணுவ ஆட்சி முதலான பல்வேறு அமைப்புகளைக் கொண்ட ஆட்சி முறையின் அரசியலமைப்பு, அதிகார அமைப்புச் சட்ட முறைகள், முதலானவற்றையும் இந்த அமைப்பின் விளைவுகளைச் சார்ந்து செயற்படும் சமூக, பொருளாதார, சமய அமைப்புகளையும் அறிவதே அரசியல் சார் மானிடவியலின் பரப்பாகும்.

பொது வாழ்க்கை, தனி வாழ்க்கை, சமூக-பண்பாட்டு அமைப்புகள் ஆகிய அனைத்தும் அரசியலமைப்பிற்கு முழுமையாகக் கட்டுப்பட்டே இயங்க வேண்டியிருப்பதால், அரசியலே வாழ்க்கையின் கருவாக அமைகிறது. சிறு தலைமையமைப்பிலிருந்து சிக்கலான ஆட்சியமைப்புவரை உள்ள ஆட்சியமைப்புகள் அனைத்தும், வாழ்வின் குறிப்பிட்ட காலக்கட்டங்களில் முதன்மையான முடிவுகளைக் கொண்டுவருகின்றன. ஒரு குறிப்பிட்ட பரப்பில் வாழும் பலதரப்பட்ட வகுப்பினர், தாம் வாழும் பரப்பால் ஒன்றாகக் காணப்படினும் ஒரே அரசியல் போக்குகளை ஏற்பதில்லை. இதன்வழி, அவர்கள் வகுப்பு, குழு, கட்சி, உட்கட்சி என்று பாகுபட்டு அந்தந்த அமைப்பின் தகுதி நிலைக்கேற்பச் செயற்படுகின்றனர். இவ்வேறுபாடே மாநிலம், இனம், நாடு.இவற்றின் அடிப்படையில் மாறுபடின் போர் நடப்பும் எளிதாகிறது. பரந்த அடிப்படையில் காணும்பொழுது, நாட்டுப் பண்பு பற்றிய ஆய்வினையும் அரசியல் மானிடவியல் ஏற்று நிற்கக் காணலாம். ஆதிக்குடி, சிற்றூர், நகர சமூகங்கள் அனைத்தையும் குடியரசு, மக்களாட்சி ஆகிய ஆட்சியமைப்புகள் உள்ளடக்கிக் காண்பதால், இவ்வாட்சி முறையில் மக்களின் மனப்பாங்கு, வாக்கெடுப்பில் பங்கேற்று ஆட்சியைத் தேர்ந்தெடுக்கும் முறை, வாழும் பரப்பு, வகுப்பு, இனம், மொழி, சமயம் முதலான கூறுகளின் பிரதிபலிப்பு ஆகியவற்றை அறிந்து, அரசியலமைப்புடனும் பண்பாட்டுடனும் ஒன்றிணைத்து அரசியல் சார் மானிடவியல் ஒப்பிட்டாய்கிறது.

வரலாறு, அரசியல், அரசியற் பொருளாதாரம், அரசியல் சமூகவியல் முதலான வாழ்வியல் பிரிவுகளும் அரசியலமைப்பையும், அதிகார அமைப்பையும் முதன்மையான நிலையில் ஆய்ந்தறிந்தாலும், அரசியல் சார் மானிடவியல் தனித்தன்மை கொண்ட விரிவான தொரு பரப்பாக விளங்குகிறது. மனிதன் தோன்றிய காலம் முதற்கொண்டு படிமுறை வளர்ச்சியினூடே அவன் பங்குகொண்டு செயல்புரியும் ஒவ்வொரு அமைப்பையும் முழுமையாக அறியும் துறையாக மானிடவியல் இருப்பதனாலும், இவ்வமைப்புகளையே பண்பாட்டு ஒப்பாய்வுகள் முறையில் ஆராயும் பரப்பினைக் கொண்டிருப்பதனாலும் இந்த ஆய்வுப் பரப்பை அறிய முற்படும் பிறவாழ்வியல் பிரிவுகளிடமிருந்து இது தனித்து நிற்கிறது.

மானிடவியல், அரசியல் வகைபாடுகளையும் அதன் ஏனைய கூறுகளையும் கி.பி. 1861-ஆம் ஆண்டு மெய்னி (Maine) எழுதி வெளிவந்த 'தொன்மைச் சட்டம்' படைப்பிலிருந்தே ஆராயத்தொடங்கியது. இந் நூலில் மெய்னி, தொன்மைச் சமூகத்தை உறவு முறைக் குழுக்களாகவும் வாழிடப் பரப்புச் சார்ந்த குழுக்களாகவும் பாகுபடுத்துகிறார். தொன்மைச் சமூகத்தில் உறவுமுறை கொண்ட குழுக்களே அதிகார அமைப்பில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பது இவரது கருத்தாகும். பண்பாட்டு மானிடவியலில் முதன்மையான துணைப் பிரிவுகளுள் ஒன்றான அரசியல்சார் மானிடவியல் அமைவதற்கு 1940-ஆம் ஆண்டு போர்ட்சு(Fortes), எவான்சு பிரிட்ச்சர்டு (Evans-Pritchard) ஆகியோர் தொகுத்து வெளியிட்ட 'ஆப்பிரிக்க அரசியல் முறைகள்' என்ற நூலே தூண்டுகோலாய் அமைந்தது. இதன் பின், 1959-ஆம் ஆண்டு ஈசுடன் தாம் எழுதிய கட்டுரைகளில், அரசியல் அமைப்பு அதன் செயல்முறை முதலான சார்புடைய வேற்றுமைக் காரணிகளை, அவை செயற்படும் சமூக அமைப்புகளையும், பொதுவாழ்வின் செயற்பாடுகளையும் மானிடவியல் நோக்கில் ஆராய்வதே அரசியல் மானிடவியலின் பங்கு எனத் தெளிவாகச் சுட்டினார். மேலும், அரசியல் அறிஞர்தம் ஆய்வின் நிலைக்கும் மானிடவியலாரின் ஆய்வு நிலைக்குமிடைப்பட்ட களத்தை இவர் அறுதியிட்டார். பொதுவாக அரசியலமைப்பை ஆராயும்பொழுது குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்களையே (Institutions) அரசியல் அறிஞர்கள் எடுத்தாள்கின்றனர். சமூகத்தின் அனைத்து அமைப்புகளைக் குறித்த கள விவரங்களையும், பண்பாட்டிற்கிடையே இவ்வமைப்புகள் தொடர்பான ஒப்பீட்டாய்வுத் திறனையும் மானிடவியல் ஆய்வுப் பரப்புக் கொண்டுள்ளமையால், ஏனைய வாழ்வியல் பிரிவுகளைவிட அரசியல் மானிடவியலில், அனைத்துப் பகுதிகளையும் தெளிவாக அறிய முடிவதைச் சுட்டுகிறார். இக்காலத்தில், மாறுபட்ட அனைத்து அரசியல் அமைப்புகளையும், வகைபாடுகளையும் அறியும்

ஒருபடித்தான ஆய்வுகளே மிகுந்திருந்தன. 1960-க்குப் பின்னரே, அரசியல் மாற்றங்கள், தலைமை முறை அமைப்பு, சமூக அமைப்பு, கட்சி, உட்கட்சி வேறுபாடு, சட்டவகைகள், மாதிரியான விதிகள் (Normative Rules), முறைமை நிலைமை (Legitimacy) முதலான வற்றைப் பற்றிய கோட்பாடுகள் வகுக்கப்படலாயின. எட்மண்டு இலீச்சு (Edmund Leach)என்பவரால் 1954-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'மேட்டுநில பர்மாவின் அரசியல் முறை' எனும் நூலே இம்மாற்றத்திற்குத் துணை நின்றது. பிரடரிக் பார்த்து (Fredrick Barth) பாதன் (Pathan), 1959-இல் மக்களிடையே மேற் கொண்ட ஆராய்ச்சியின் விளைவாக வகுத்த 'விளை யாட்டுக் கொள்கை'யும் தொன்மைச் சமூக அரசியல மைப்புகளின் வேறுபட்ட நிலையினை அறிய முற் பட்டது.

எந்த ஒரு மனித சமூகத்திலும் அதனைச் சார்ந்த உறுப்பினர்களோ குழுக்களோ சமநிலையில் நடத்தப் படுவதில்லை. அனைத்துச் சமூகங்களிலுமே சமூக உரிமைகளிலும், சமூகப் பயன்பாடுகளிலும் சமநிலை யின்மை நிலவுகிறது. இவையே ஆற்றலையும் ஆணை யுரிமையையும் செயற்படுத்த வழிகோலுகின்றன. இதனாலேயே மக்கள் தம் சமூகங்களில் காணப்படும் சமநிலையின்மையையும், அதனைச் சார்ந்த அதிகார அமைப்பையும் ஆணையுரிமையையும் அறிய வினா எழுப்புகின்றனர். இம்மாதிரியான காலக்கட்டங்களி லேயே அரசியல் கோட்பாடுகள் வகுக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பழங்குடித் தன்மையிலிருந்து விடு பட்டு நகரச் சமூகமும், மாநிலங்களும் உருவான பொழுதே, கிரேக்கச் சிந்தனையாளரான பிளேட் டோவின் அரசியல் சிந்தனை தோன்றியது. இந்த நிலைமாறுபாடு எளிய சமூக முறைகளைச் சிக்கலான வலையமைவு கொண்ட சமூக மாற்றத்திற்குக் கொண்டு சென்றதால் பிளேட்டோ காலத்திய கிரேக் கர்கள், எவ்வகையான சமூக முறை நிலைப்படுத்தப் பட வேண்டும்? அதன் தெளிவான வழி என்ன? இவ் வழிமுறைகளை அமைக்கும் பொழுது அதன் வரம்பு எவ்வாறு நிருணயிக்கப்பட வேண்டும்? இவ்விதிமுறை களைச் செயற்படுத்தி ஆள்பவர் யார்? எவ்வாறு சமூக உரிமைகளைப் பங்கீடு செய்வது முதலான வினாக்களை எழுப்பினர். இவ்வனைத்துத் தொடர் பினையும் ஒன்றிணைத்து அறிவதே அரசியல் துறை என்பது வரையறுக்கப்பட்டது.

மானிடவியலார் தொடக்கக் காலத்தில் சிறு குழுக்களிடையேயும், சிறு சமூகத்தினரிடையேயும் காணப்பட்ட அதிகார அமைப்புகளை ஆராயும் பொழுது, இச் சமூகங்களின் வலையமைவின் இரு காரணிகளாகப் 'புறத்தோற்றப் பிணைப்பு' (Surface Relationship), 'உள்ளமைந்த பிணைப்பு' (Organic Solidarity) ஆகியனவற்றை ஆழ்ந்தறியலாயினர். மக் கள் தனியாகவோ கூட்டாகவோ சமூக வாழ்வில் ஈடுபடும்பொழுது புறத்தோற்றப் பிணைப்புகளான 'கூட்டுறவு', 'இணைப்பு', 'தொடர்பு', 'பிணைப்பு', 'கூட்டு' முதலான சமூக முறைமைகளையேற்றுச் செயற்படுகின்றனர். வாழும் நிலப்பரப்பாலோ உற வுத் தொடர்பாலோ பண்பாட்டாலோ ஒன்றுபட்ட குழுக்களிடையே காணப்படும் 'நம்மவர் உணர்வை' அடிப்படையாகக் கொண்டே உள்ளமைந்த பிணைப்பு செயற்படுகிறது. புறத்தோற்றப் பிணைப்பும், உள்ள மைந்த பிணைப்பும் ஒன்றிணைந்து செயற்படும் பொழுது 'போட்டி', 'சண்டை', 'வாதம்', 'சச்சரவு', 'கருத்து வேறுபாடு', 'உட்பூசல்', 'சொற்போர்', முத லான மேம்போக்கான குழப்பங்கள் சமூகத்தில் ஏற் பட்டு இவையே சமூக முரண்பாடாகவும் சமூகப் போராட்டமாகவும் உருப் பெறுகின்றன.மேற்கண்ட சமூக முறைகளை உள்ளடக்கிச் செயற்பட்ட அரசி யல் அமைப்பை ஆராய்ந்த மானிடவியலார், உடனி ணக்கத்திற்குரிய முறைமை நிலைமை (Consensual Legitimacy), ஆதாரமும் முறைமை நிலைமையும், ஆற்றலும் முறைமை நிலைமையும், அதிகார முறைமை முதலான கருதுகோள்களை வகுத்தனர்.

இது தவிர்த்து, வகுப்பு முரண்பாட்டையும் சமூக மாற்றத்தையும் ஏற்றுள்ள சமூகத் தொடர்புகளின் வழி அமைந்த உற்பத்தியமைப்பே, சமூக வாழ்வை நிருணயிக்கின்றது என்ற 'வரலாற்றுப் பொருள் முதல் வாதம்' (Historical Materialism), 'வகுப்பு' (Class), 'சுரண்டுதல்' (Exploitation) 'உடைமை மாற்றம்' (Alienation),'அரசு', 'தனிமனிதர் கருத்தாய்வு' (Ideology)முதலான கோட்பாடுகளை முன்வைத்து ஆராய்ந் தனர். இக்கோட்பாடுகளின் குறைந்தபட்ச வரையறை களைக் காரல் மார்க்சு குறிப்பிடுவதாவது:

வகுப்பு: ஒருபடித்தான மக்களைக் கொண்ட இக் குழு, முதலாளிகளாகவோ உற்பத்தியில் பங்கேற்கும் தொழிலாளிகளாகவோ முரண்பாடுடைய குழுவா கவோ சமூகத்தில் இயங்கவல்லது. தொழிலாளிகள் அல்லது வேலையாட்கள் ஈட்டு உற்பத்தித் திறனுக்குக் குறைவாக ஊதியமளிப்பது அல்லது ஒருசாராரின் உடைமைகளை அதிகார உரிமைகொண்ட குழுவினர் தன்வசப்படுத்துதலே சுரண்டுதல் எனப்படும். ஒருவன் தம் வாழ்வின் விதியைக் கட்டுப்படுத்தும் ஆற்றலை இழக்கும் நிலைமையே உடைமை மாற்றமாகும். குறிப் பாக, இது தான் பங்குகொண்டுள்ள தொழில் செயற் பாடுகளிலும், பங்குபெற்ற உற்பத்திப் பொருட்களின் மீதும் கொண்டுள்ள உரிமையைக் கைவிடுவதாகும்.

அரசு: ஒரு சமூக நிறுவனமான இவ்வமைப்பு, அதி காரத்தையும் சட்டத்தையும் துணைக்கொண்டு

பொருளாதாரம், சமூகம் முதலிய அமைப்புகளில் கருத்து வேறுபாடு கொண்டுள்ள குழுவினரைக் கீழ்ப் படிய வைக்க அதிகார வகுப்பினரால் பயன்படுத்தப் படும் ஒரு கருவியாகும்.

தனிமனிதர் கருத்தாய்வு என்பது,ஒருசில வகுப் பினரின் எதிர்ப்பை அடக்கவும் உழைக்கும் வகுப்பின ரின் புரட்சியான செயற்பாடுகளைக் குறைக்கவும் சில ஆதிக்க வகுப்பினர் தம் கருத்தைச் செயற்படுத்து வதாகும்.

அரசியலமைப்பு, அதன் வளர்ச்சி நிலைகள், அவ் வமைப்பு செயற்படும் முறைகள், அதன் பண்புகள் முதலான வகைபாட்டாய்வுகளைக் கொண்ட துணைப் பரப்பு, முதன்மையாக நான்கு கோட்பாடு களைக் கொண்டுள்ளது. அவை 'பகுத்தறிவாக்கம்', 'ஆணையுரிமை', 'தகுதிநிலைக் குழு', 'அரசியல் கட்சி' என்பனவாகும். இனி, சமூகவியலாரான மாக்சு வெப் பர் (Max Weber) வகுத்த இக்கோட்பாடுகளின் தத்துவங்களை மானிடவியலில் ஏற்றுக்கொண்டு ஆராய்வதனைக் காணலாம்.

பகுத்தறிவாக்கக் கோட்பாடு, அரசியல் முறை களில் காணப்படும் மாற்றங்களின் அமைப்புகளை மிகத் தெளிவான அளவைகளுடன் அறிவியல் நோக் கோடு ஆராய்கிறது. ஆணையுரிமை, தலைவனின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கும் அதிகார முறைகளை அறிவதாகும். 'மரபுவழி' 'அருங்கொடைத் தலைமை' (Charismatic), 'சட்டம் சார்ந்த' (Legal) எனும் இம் மூன்று அடிப்படை ஆணையுரிமை முறைகளையே இக்கோட்பாடு சுட்டுகிறது. பொதுவான சமூகப் பண்புகளைக் கொண்ட ஒரு குழுவின் வாழ்க்கை ஆதாரங்களை இயல்பான அல்லது எதிரிடையான அளவைகளைக் கொண்டு அக்குழுவின் சமூகத் தகுதி யினை மதிப்பிடலாம் என்பதே தகுதிநிலைக் குழுக் கோட்பாட்டின் அடிப்படையாகும். அரசியல் கட்சி, ஆற்றலையும் ஆணையுரிமையையும் அவற்றைச் சார்ந்த எந்தக் கூட்டுரிமை அமைப்பையும் (Corporate Body) செயற்படுத்த விழையும் தனியமைப்பா கும்.

எமில் தர்க்கைமின் (Durkheim) வினைசெயற் பாடு முறையைச் சார்ந்த ஆய்வுகளையும், கோட் பாடுகளையும், அவரது சமகால மானிடவியலாரும் உளவியல் அமைப்பில் அரசியல் பற்றிய ஆய்வுகளை அறிய முற்பட்டவர்களும், அவரது 'சமூக ஒருமைப் பாட்டுணர்வு' (Social Solidarity), 'சமூக ஒழுங்கு உணர்வின்மை' (Anomie), 'ஒன்றிணைந்த கருத்து நிலை' (Collective Conscience) முதலான கோட்பாடு களை ஏற்று ஆய்வு செய்தனர். இக்கோட்பாடுகளின் வழிச் சமூக முறைகள், சமூக அமைப்புகள், சமூகக் கட்டமைப்பில்லங்கள் முதலான கூறுகள், சமூகக் கட்டுப்பாட்டை அமைப்பதில் கொண்டிருக்கும் தொடர்புகள், செயற்பாட்டியல் முறையில் ஆராயப் படுகின்றன. மேலும், இந்த ஆய்வுகள், சமூகத்தில் உள்ள உறுப்பினர்கள் தம் சமூகத்தின்பால் கொண் டிருக்கும் பொதுவான உள்ளுணர்வுக் கருத்துகளும், நம்பிக்கைகளும் அச்சமூகத்தின் கட்டுப்பாட்டை அமைப்பதில் கொண்டுள்ள தொடர்புகளை வெளிப் படுத்துகின்றன.

'தன்னலத்தன்மை' (Factionalism), இன்றைய முதன்மையான ஆய்வுகளுள் ஒன்றாக ஆராயப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த முரண்பாட்டுடன் பொது வான உடைமைகளின் மீது ஆற்றலைப்பெற விழையும் குழுக்களின் அரசியல் செயற்பாடுகளைத் தன்னலத் தன்மைக் கோட்பாடு ஆராய்கிறது. சீகல், பீல்சு, பிர்த்து பிரெஞ்சு,பென்டன் முதலானோர் இக்கோட் பாட்டை முன் வைத்துத் 'தன்னலம் சார்ந்த அரசி யல்' எனும் உட்பிரிவையே இந்த ஆய்வுப் பரப்பில் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்கு ஐரோப்பாவில் கி.பி. 18-ஆம் நூற்றாண் டின் இடைக் காலத்திலிருந்தே பெருமளவு சமூக மாற்றமும் ஆய்வுணர்வும் காணப்பட்டன. பிரெஞ் சுப் புரட்சியும் தொழில்மயமாக்கமும்,சமூக மற்றும் அரசியல் படிநிலையமைப்புகளை வெகுவாக மாற்றி யமைத்தன.

இவ்வாறு அமைந்த மாற்றம் காரல் மார்க்சு (1818-1883), மாக்சு வெப்பர் (1864-1920), எமில் தர்க்கைம் (1858-1917) ஆகியோரிடையே ஆய்வுணர்வுக் கிளர்ச் சியைத் தூண்டியது.இவர்களின் ஆய்வுகளில் அறிமுகப் படுத்தப்பட்ட அணுகு முறைகள், கோட்பாடுகள் மற்றும் எடுகோள்களே அரசியல்சார் அறிவியல், அரசி யல் சார் சமூகவியல், அரசியல் சார் மானிடவியல் மற் றும் அரசியல் சார்ந்த ஆய்வுப் பரப்புகளைக் கொண் டுள்ள அனைத்துப்பிரிவுகளிலும் உட்கருவாக அமைந் திருக்கின்றன.எடுத்துக்காட்டாக,மார்க்சின் 'உடைமை மாற்றம்', வெப்பரின் 'பணித்துறை யாண்மை', தர்க்கைமின் 'அன்னோமி' கோட்பாடுகள் அனைத்தும் அரசியல் இயல்நிகழ்ச்சிகளைச் சார்ந்த பண்புகளை என்றென்றும் ஆராயும் தன்மை வாய்ந்தவை. இம் மூவரின் அணுகு முறைகள் ஒப்பீட்டாய்வாளர்களுக்கு விரிந்த ஆய்வுப் பரப்பினை அமைத்துத் தந்துள்ளன எனலாம். அரசியல் அமைப்பிற்கும் பொருளாதார அமைப்பிற்கும் உள்ள தொடர்புகளை மார்க்சும், குடியாட்சி முறைக்கும் பணித்துறை ஆட்சி முறைக்கு முள்ள தொடர்புகளை வெப்பரும், வளரும் சமூக உள்ளமைப்புகளின் செயற் பிணைப்புகள் மற்றும் அர சியல் முறைகளைத் தர்க்கைமும் ஒன்றுபடுத்திப் பகுத்தாய்ந்தனர்.

மரபுவழிச் சார்ந்த கட்டுப்பாட்டுணர்வுகளைக் கொண்ட தொன்மைச் சமூகங்களில் குடும்பம், வட்டாரக் குழு, உறவுமுறை மற்றும் சமய அடிப்படையிலமைந்த அதிகார அமைப்பே இக்குடிகளில் எழும் முரண்பாடுகளைக் கண்காணிக்கின்றது. வளர்ச்சியடைந்த சட்ட முறைகளைக் கொண்டிராத இக்குழுக்கள், மந்திரம், இயற்கைக்கப்பாற்பட்ட சக்திகளின் அடிப்படையிலான 'குறிகூறல்' 'சோதனை முறை', 'தெய்வ ஆணைமொழி' 'மீளாப்பழிக்கு உட்படுத்துதல்' முதலான சட்ட முறைமைகளைக் கொண்டிருக்கின்றன. தலைவனற்ற ஆதிக்குடி எனும் எளிய அதிகார அமைப்பிலிருந்து ஆதிக்குடி அரசாட்சி வரை காணப்படும் பல்வேறு அமைப்புகளை எசுகிமோ (Eskimo), இபுகாவு (Ifugao), நுயர் (Nuer), அசாந்தி (Ashanti) முதலான குடிகளின் சட்டப் பண்பாடுகளை மிக விரிவாக ஆராய்ந்து வெளியிட்டுள்ள முடிவுகளிலிருந்து அறியலாம். எசுகிமோ சட்டம், இபுகாவு சட்டம், நுயர் சட்டம், அசாந்திச் சட்டம் முதலான அமைப்புகளில் தனியார் சட்டம், பொதுச்சட்டம், கொடுங்கோன்மைச் சட்டம் முதலிய தொன்மைச் சட்டங்கள் காணப்படினும், அவை இன்றைய சட்ட முறைகளில் காணப்படும் குற்றச் சட்டம், சொத்துரிமைச் சட்டம், ஒழுங்குமுறைச் சட்டம் முதலானவற்றிற்கு ஈடான சட்டமுறைகளையும் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான வேறுபட்ட அமைப்புகளை அறிவதற்காக அரசியல்சார் மானிடவியலார் ஆதிக்குடி அதிகார அமைப்பை 'நாடற்ற அமைப்பு', 'நாடு அமைப்பு' எனப் பகுத்தாராய்கின்றனர். நாடற்ற அமைப்பில், தலைவனற்ற மிகச்சிறிய குழுக்கள், கிளைக்கால்வழிக் குழுத்தலைவன், வயது அடிப்படைக் குழு, சிற்றூர் ஆட்சிக் குழு, சிற்றூர்த் தலைவன், கூட்டியக்கம் மற்றும் வட்டாரக்குழுத் தலைவன் ஆகியோர் தலைமையமைப்பை ஏற்று ஆள்கின்றனர். நாடு அமைப்பில், தலைமையுரிமை, அரசாட்சி, ஆட்சிக்குழு முதலான அமைப்புகள் அரசியல், அதிகாரம் மற்றும் ஆணையுரிமைகளைச் செயற்படுத்துகின்றன.

மெய்னி, எவான்சு பிரிட்சார்டு, லீச், ஈசுடன், மார்க்சு, வெப்பர், தர்க்கைம் முதலான அறிஞர்கள் தொடங்கி இன்றைய வளர்நிலை ஆய்வாளர்கள் வரை அனைவருமே குடும்பம், உறவுமுறை, சமயம் இவற்றின் அடிப்படையிலான ஆய்வு முதன்மையானது என்கின்றனர். தொன்மைக் காலத்தில் குடும்பம், உறவுமுறை உறுப்பினர்கள் நேரிடையாக அதிகார அமைப்பில் பங்கு கொண்டனர். இன்றைய சமூக அமைப்பில் 'அரசியல் சமூக வருக்கம்' ஒவ்வொரு உறுப்பினரிடையேயும் அரசியல் உணர்வுகளைப் பல வயது நிலைகளில் பண்பேற்றுகிறது. குடும்பம், உறவுமுறை, சமயம் எனும் சமூக அமைப்புகள் அரசியல் சமூக ஆக்கத்துடன் பல்வேறு குழு மக்கள் செயற்படும் முறையை ஆராய அடிப்படையாக அமைகின்றன. இந்த அமைப்பின் அனைத்துக் கூறுகளிலும் மானிடவியல் பரப்பு ஏற்றுள்ள முதிர்ச்சி நிலையே, அரசியல் சார் மானிடவியல், தான் சார்ந்திருக்கும் நாட்டின் அரசமைப்பைத் தேர்ந்தெடுத்தல், மாணவர் கிளர்ச்சி, வன்முறை, அரசியல் இயக்கங்கள், அவ்வியக்கங்களின் செயற்பாடுகள் முதலிய ஆய்வுப் பரப்புகளைத் தன்னகத்தேகொண்டிருக்க அடிப்படையாகிறது. சீ.ப.

துணை நூல்கள்:

**Durkheim**, **E.**, "The Rules of Sociological Method", Free press, New York, 1950.

**Easton, D.**, "Political Anthropology", Biennial Review of Anthropology, 1959.

**ortes,M., and E.E.**, Evans Pritchard, (Eds) "African Political Systems", Oxford University Press, London, 1940.

**Karl Marx** , "Economic and Philosophical Method', Free press, New York, 1940.

Max Weber , "The Theory of Social and Economic Organisation", Free Press, New york, 1964.

**Middleton, J.**, and **David Tait** , "Tribes without Rulers", Routledge and Kegan Paul, London, 1958.

**Swartz, J., Turner, V.W., and Tuden A.**, "Politica Anthropology," Aldine Publishing Company, Chicago, 1966.

**அரசியல் தத்துவம்** பொதுவாக மக்களின் அன்றாட வாழ்க்கை எவ்வாறு நடைபெற்று வருகிறது என்பதனை உற்று நோக்கினால், ஒவ்வொரு ஆடவரும் பெண்டிரும் தத்தமக்கு வேண்டிய நன்மைகளைத் தங்கள் விருப்பப்படி பெறவே வாழ்கிறார்கள் என்பதனைக் காணலாம். இருந்தபோதிலும், ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடியே அவர்களுடைய விருப்பங்களை நிறைவு செய்து கொள்வதற்கு முடிவதில்லை என்பது உண்மையாகும். எல்லோரும் நன்மை பெறவேண்டுமாயின் பொது நலனை (Common Good) மையமாகக் கொண்ட நேர்மையான ஒரு சமுதாய அமைப்பை எல்லோரும் விரும்பி ஏற்படுத்திக் கொண்டு, நல்வாழ்வு (Good Life) வாழவேண்டும். இதுவே அரசியல் வாழ்வு (Political Life) என்று சிறப்பாகக் கூறப்படுவதாகும்.

அவ்வகையான சமுதாய அமைப்பைக் கொண்ட அரசியல் வாழ்வு மக்களிடத்தில் அமையப் பெற்றால்

தான் அனைவரும் நல்வாழ்வு பெறமுடியும். அப்போதுதான் அவர்கள் மக்கள் (People) என்று பொதுவாகவும், குடிமக்கள் (Citizens) என்று சிறப்பாகவும் சொல்லப்படுவதற்குத் தகுதி பெறுவர். இல்லையேல், அவர்களை ஓர் கூட்டம் என்றுதான் கூறமுடியும். எனவே அரசியல் வாழ்வு என்பது, குடிமக்களின் ஒருங்கிணைந்த உறுதியான வாழ்வு மட்டுமன்று; உயர்தரமான வாழ்வும் ஆகும். அவ்வுயரிய வாழ்வை நாடுபவர்களே உயர்ந்த, நாகரிகமான மக்கள் எனப்படுவர். இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமென்றால், மனிதனை மனிதனாக்குவது மக்கள் சமுதாய அமைப்பே. மக்கள் சமுதாயம் என்பது, சில ஒழுங்கு முறைகளை அமைத்துக்கொண்டு, அவற்றை முறைப்படி பின்பற்றி ஒன்றுபட்டு வாழ்வதாகும். அவ்வாறு அனைவருக்கும் பயன்தரும் ஒழுங்கு முறைகளைக் கட்டிக்காப்பது அரசின் கடமையுமாகும். இவ்வாறான அமைப்புகளைக் கொண்ட மக்கள் அரசியல் வாழ்வு வாழ்பவர்கள் என்றும், அவர்கள் வாழும் இடம் பொருள் முதலியனவற்றின் தொகுப்பே 'நாடு' (State) என்றும் சொல்லப்படும்.

அரசியல் தோற்றம், ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போன்றது. எவ்வாறெனின், மக்களின் கூட்டு வாழ்க்கை அமையப்பெறாமல் அரசியல் வாழ்வு தோன்றுவது இயலாது. அதைப் போலவே பொதுவான நேர்மையான அரசியல் ஒழுங்கு முறைகள் இல்லையேல் சமூக வாழ்க்கை பயனற்றதாகிவிடும். இக்கருத்தினைச் சிறிது விளக்கமாகவே விரித்துக் கூறலாம். மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபடுவதற்கு அவனுடைய சிந்திக்கும் திறமையே காரணமாகும். இருந்தபோதிலும் பெரும்பாலான ஆடவரும் பெண்டிரும் தங்களுடைய சிந்தனையைச் செம்மையாக வளர்க்காமலும் தம்மைப் பயன்படுத்தாமலும் வாழ்நாள்களை வீணாக்கிவிடுகிறார்கள். அதன் காரணமாகப் பெறுதற்கரிய வாழ்க்கைப் பயன்களை அவர்கள் இழக்கிறார்கள்.

மக்கள் தம் சிந்தனையைச் செம்மையாக வளர்த்து, வாழ்க்கைப் பாதையிலே ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து, தீமைகளைக் களைந்து, நன்மையையே நாடுதல் வேண்டும். அந்நிலையில்தான் அவர்களும் நல்வாழ்வினைப் பெற்று, மற்றவர்களுக்கும் நல்வழி காட்டிட இயலும். அவ்வாறான உயர்ந்த கருத்தினை அறிஞர்கள் காலங் காலமாகக் கூறிச் சென்றுள்ளனர். அரிசுடாட்டிலும் திருவள்ளுவரும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாவர். பொது நோக்கினையும் (Altruism) பொது நலனையும்(Common Good) மையமாகக்கொண்ட முயற்சிகளினால் தான், சிறந்த அரசியல் வாழ்வை மட்டுமன்றி, பல பொது நன்மைகளாகிய இயல், இசை, பிற கலைகள் ஆகியவற்றையும் மக்கள் அடையமுடியும். இத்தகைய உயர்ந்த கோட்பாடுகளை மக்கள் தங்கள் வாழ்வில் பெற்று இன்புறுவதில் இன்னல்களும் ஏற்படுவதற்குரிய வாய்ப்பிருக்கிறது. அவ்வின்னல்களை நீக்குவதற்குரிய வழிகளைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியதும் இன்றியமையாதது. ஆங்கில அரசியல் அறிஞர் எர்னசுட்டு பார்க்கர் (Ernest Barker), அரசியல் வாழ்வில் ஏற்படும் சில இன்றியமையாத சிக்கல்களைத் தெளிவுபடுத்துகிறார். அவர், ஒரு தனிப்பட்ட ஆணோ பெண்ணோ தன்னுடைய விருப்பு வெறுப்புகளை முழுவதும் வெளியிட்டு அவற்றிற்கு முழு மன நிறைவினைப் பெறச் சமுதாயத்திலே வாய்ப்பு உண்டா? அத்தகைய சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் சமுதாயச் சட்ட திட்டங்களின் வரையறை என்ன? தனிப்பட்டவரின் உரிமைக்கும் மக்களின் பொது உரிமைக்கும் ஏதாவது இடையூறு உண்டா? அவ்வாறு ஏற்படுவதாயிருந்தால் அனைவரின் சொந்த உரிமைகள் பாதிக்கப்படுமா? அவ்வாறில்லையேல், அரசுரிமைக்கும் மக்கள் உரிமைக்கும் வரையறுக்கப்படும் ஒழுங்கு முறைகள் யாவை? என்பன போன்ற பொருள் பொதிந்த வினாக்களை எழுப்பி, அவற்றிற்கு விடைகளைத் தேடுவதன் வாயிலாக அரசியல் வாழ்வு, அரசின் அதிகார வரம்பு, நாட்டின் உரிமை, மக்களின் கடமை, தனி மனிதனின் உரிமை போன்ற தலையாய அரசியல் சிக்கல்களை முறைப்படுத்தி வகுத்து விளக்கித் தெளிவு படுத்தியுள்ளார்.

அரசியல் வாழ்வின் தோற்றத்தைப் பற்றி ஆராயும் பொழுது குறிப்பாகக் கவனிக்க வேண்டியன அரசியலின் கோட்பாடுகளும் அவற்றின் வரையறைகளுமே யாகும். இவற்றையே ஒரு நாட்டின் உரிமைச் சிக்கலாகவும் எடுத்துக் கொள்ளலாம். அரசு அல்லது அரசாங்கத்தின் மூலமாகத்தான், ஒரு நாட்டின் உரிமைகளும் சட்ட திட்டங்களும் வெளியிடப்படுகின்றன; நிறைவேற்றப்படுகின்றன. இதனையே அரசியல் அமைப்பு என்றும் கூறலாம். இவ்விளக்கங்களிலிருந்து, அரசியல் வாழ்வும் அரசியல் அமைப்பும் எவ்வாறு ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன என்பதும் நன்கு விளங்கும். எனவே அரசியல் வாழ்வையும் அரசியல் அமைப்பையும் ஒரு நாணயத்தின் இருபக்கங்களாகக் கருதலாம்.

வரலாற்று அடிப்படையில் நோக்கினால், அரசாங்கம் அல்லது ஆட்சி முறை பல்வேறு முறைகளிலே நெடுங்காலமாகவே மக்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. என்பது தெரியவருகிறது. எடுத்துக்காட்டாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே புகழ் பெற்று விளங்கிய கிரேக்க நாட்டிலும் தமிழ் நாட்டிலும் முடியாட்சி – மன்னர் ஆட்சி - (Mona rchy) தான்

பெரும்பாலும் வழக்கில் இருந்தது. பன்னெடுங்காலம் வாழ்ந்த பின்பு மக்களிடத்திலும் மன்னர்களிடத்தி லும் இயற்கையாக ஏற்பட்ட மாறுதல்களுக்கேற்ப, முடிஆட்சி சிதைந்து உயர்குடி அல்லது பெருஞ்செல் வர் ஆட்சியும் அதன் பின்பு வல்லாட்சியும், அரசி யல் கொந்தளிப்பும் குமுறல்களும் அடக்கு முறைக ளும் ஏற்பட்ட பின்பு இறுதியாக, மக்கள்–ஆட்சி அமைந்தது.

வரலாற்று உண்மைகளை உற்றுநோக்கும் பொழுது, மக்களாட்சி எவ்வாறு அமைந்தது? மக்க ளுக்கு எவ்வாறு பயன்பட்டது? எவ்வாறு பழுதுபட் டது? என்பன போன்ற உண்மைகளும் நன்கு தெரிய வருகின்றன. அவ்வுண்மைகள் ஓர் உயரிய படிப்பினை யாகவும் உள்ளன. அப்படிப்பினையால் எவ்விதம், இன்றைய உலகத்தின் பல பாகங்களில் இயங்கிவரும் மக்கள் ஆட்சியை நன்னெறியில் நடத்தி நலங்கள் பல பெறமுடியுமென்று அறிந்து கொள்ளலாம். மேலும், மேலே குறிப்பிட்ட அரசியல் வாழ்வின் தோற்றம், ஆட்சிமுறை ஆகிய இரண்டும் இணை பிரியாதவை என்பதும் நன்கு புலனாகிறது. அப்பிரிவுகளும் மக்கள் தம்முடைய நலன் கருதி அமைத்துக் கொண்டவை யாகும். ஏனெனில், அவ்விரு பிரிவுகளையும் ஒருங் கிணைத்துப் பார்க்கும்போதுதான் முழு உண்மை தெளிவாகப் புலப்படுகிறது. அந்த உண்மைதான் நாடு என்று குறிப்பிடப்படுகிறது. அதன் காரணமாகத்தான் அரிசுடாட்டில் 'மக்களின் அடிப்படைத் தேவைகளை அமைத்துக் கொடுப்பதற்கே நாடு தோன்றுகிறது' என்று கூறினார். இந்த அடிப்படை உண்மையையே தெளிவாகக் கூறுகிறார் திருவள்ளுவர். "குன்றாத விளையுளைச் செய்வோரும், அறவோரும், கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாகும்" (குறள் 731) என்கிறார். புகழ்மிக்க அரசியல் அறிஞர் களான அரிசுடாட்டில், திருவள்ளுவர் போன்றவர்கள் கூறியுள்ள அடிப்படைக் கருத்துகள், இக்காலத்திலும் அரசியல் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக் கின்றன.

இவ்வாறு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறிய அரசியல் கருத்துகளைத் தத்துவ முறையிலே ஆராயும்பொழுதுதான் அரசியல் தத்துவம் பெறப்படு கின்றதென்றும் சுருக்கமாகக் கூறலாம். எனினும், தத் துவம் என்பது என்னவென்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்; அப்போதுதான் தத்துவ முறையில் அரசி யல் விளக்கம் அமைவதும் அதன் சிறப்பும் எளிதில் விளங்கும். மெய்ப்பொருளியல் (Philosophy) என்ப தும் தத்துவம் என்பதும் ஒருபொருட் சொற்களே. அவற்றில் முதலில் குறிப்பிட்ட மெய்ப்பொருளியல் என்பது, மிகவும் தெளிவாக அதன்பொருளை விளக்கி நிற்பதாகும். மெய்ப்பொருள் என்பது, என்றும் நிலைத்து நிற்பதும் அழியாத்தன்மை பெற்றதுமாகிய தன்னிகரில்லாத் தனிப்பெரும் பொருளாகும். இத னையே தொல்காப்பியர் கடவுள் என்றும் கந்தழி என்றும் கூறுகிறார். அந்தக் கருத்தினையே மேலும் விளக்கமாக விரித்துக் கூறுகிறார் திருவள்ளுவர். 'மொழிகளின் எழுத்துகளெல்லாம் எவ்வாறு அக ரத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றனவோ அவ்வாறே உலகமும் இறைவனை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது' (குறள் 1). கிரேக்கப் பேரறிஞர் அரிசுடாட்டில் இறைவனையே உலக இயக்கத்தின் முதல் இயக்குநர் (Prime Mover) என்று குறிப்பிட் டுள்ளார். பலகோடி உயிரினங்களும் அவற்றிலே முதன்மை பெறும் மனித இனமும் அவர்களின் இடம், பொருள், காலம் முதலியவற்றின் தொகுப்பாக விளங்கும் உலகமும் இதனைச் சார்ந்த மற்ற அண் டங்களும் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டதாயும், அவை யாவும் முறையோடு செயற்பட இயக்குவதாயும் ஒரு பெரும்பொருள் இருந்து இயக்கிக் கொண்டிருக்கிறது என்பது விளங்கும். அவ்வொப்பற்ற உயரிய பழம் பொருளை வாழ்த்தி, வணங்கிப் போற்றுவதே மனித வாழ்வின் தலையாய பணியாகவும் பேறாகவும் கரு தப்படுகிறது. அப்பெரும்பொருளால் அளிக்கப்படு வதே பெரு வாழ்வாகும். அதனை மக்களினம் பெற்று வாழ்வதற்கு அரசியல் வாழ்வும் உதவியாக அமைய வேண்டும். இக்கருத்தினை வலியுறுத்தி, அர சியல் வாழ்வு அறவாழ்வின் அடிப்படையில்தான் அமையவேண்டும் என்று அறிவுறுத்தினார் அரிசுடாட் டில். அந்த உயரிய அடிப்படையின் கீழ் அமையும் அரசியல் வாழ்வின் தொகுப்பினையே 'அரசியல் தத் துவம் (Political Philosophy) என்று கூறுகின்றனர்.

ஒரு கவிஞன், மலரின் அழகை வருணிக்கும்போது எவ்வாறு அதனை முழுமையாக எடுத்துக் கொள் கிறானோ அவ்வாறே தத்துவப் பேராசிரியரும் அர சியலை மக்கள் சமுதாயம், அரசு, நாடு என்று பாகு பாடின்றி அனைத்தையும் முழுமையாக எடுத்துக் கொண்டு, தம்முடைய சிந்தையில் அதனுடைய நன்மை தீமைகளை எடைபோடுகிறார். அதன் விளைவாக, அரசு எவ்விதம் இயங்குகிறது என்பதை விட அரசு ஏன் இயங்குகிறது என்ற முதல் வினாவை எழுப்புகிறார். மக்களின் நன்மைக்காகவும் அவர்களின் நல்வாழ்வுக்காகவும்தான் அரசு அமைகிறது, அமைய வேண்டும் என்ற பேருண்மை சுட்டிக்காட்டப்படுகிறது. இவ்விளக்கங்களின் மூலமாக மக்கள் நன்மை பெறுவ தும் நலமடைவதுந்தான் அரசின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்பதும் அரசியல் தத்துவத்தின் அடிப்படைக் கூறாகும். அவ்வாறில்லையேல், மக்கள், மாக்களாக – ஆகிவிடுவார்கள்; நாடு, காடாகிவிடும்.

இவ்வுண்மையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் அரிசுடாட்டில். 'நாடு நிலைபெற்று வாழவேண்டு மென்றால், மக்கள் வாழ்வை நல்ல முறையிலே அடைவதற்கு அமைப்புகள் ஏற்படவேண்டும்'. 'மக்க ளின் அடிப்படைத் தேவைகளை நல்ல முறையில் அமைத்துக் கொடுப்பதற்கே நாடு தோன்றுகிறது'. பொதுவாகக் கூறினால், மக்களின் அடிப்படைத் தேவைகள், உண்பதும் உடுப்பதுமாகியவைகளாகும். இவற்றினை மட்டும் மக்கள் பெற்றுவிடுவதால், அவர்கள் பெருவாழ்வு பெற்றவர்கள் என்று சொல் லவே முடியாது. ஏனெனில், அடிப்படைத் தேவை களையும் அமைத்துக் கொண்டு, அதற்கு மேலும் சிந்தனையால் சிறப்புற்று வாழ்வதற்குரிய வழிமுறை களை அமைத்துக் கொடுத்தால்தான் நாடு நிலைத்து வாழமுடியும் என்பது அரிசுடாட்டிலின் சிறந்த கருத் தாகும்.

மக்களின் அன்றாடத் தேவைகளின் இன்றியமை யாமையினை எவரும் புறக்கணிக்கவியலாது; கூடாது. ஆனால், உடம்பின் தேவைகளை மட்டும் பேணிப் பாதுகாப்பதுடன் மனித வாழ்வின் எல்லையை எட்டிப் பிடித்துவிட முடியாது. ஏனெனில், மனிதன் உடம்பை மட்டும் பெறவில்லை; உள்ளத்தையும் சிந்தனையை யும் பெற்றிருக்கிறான். அச்சிந்தனையைச் செம்மை யாக வளர்ப்பதில்தான் மனிதன் மனிதனாகிறான். அப்பொழுதுதான் நன்மை, தீமை, நலிவு, பொலிவு, அழகு, அழகின்மை, நீதி, அநீதி, உண்மை, பொய் என்பன போன்ற மனித வாழ்க்கையின் இரு வரை யறைகளையும் உணரமுடியும். இவை யாவும் உணர்ந்து உய்யும்பொழுதுதான் மனிதன் மனிதனா கிறான். அதற்காகத்தான் மக்களுடன் சேர்ந்து நாட் டில் வாழ்கிறான். எனவே, நல்ல பல அமைப்புகளை ஏற்படுத்துவதும் அவற்றிற்கு இடையூறாகத் தோன் றும் எதிர்ப்புகளையும் எதிரிகளையும் வீழ்த்துவதும் அழிப்பதும் நாட்டின், அரசின் தலையாய கடமையும் பணியுமாகும் என்ற உண்மையை அரசியல் தத்துவம் அறிவுறுத்துகிறது. அறிவுப் பாதையிலேயே அரசு நடத்தப்படுவதே நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக் களின் நல்வாழ்விற்கும் என்றும் துணை புரிவதாக அமையும். அவ்விதமான உயரிய சூழ்நிலைகள் நல்ல முறையிலே அமைந்தால், அது அந்நாட்டு மக்களின் பெருவாழ்வு மட்டுமன்று. அந்நாட்டின், பேரழகுமா கும் என்பதனைத் திருவள்ளுவர், 'நோயின்மை, செல்வம், பொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் ஆகிய இவ்வைந்தும் நாட்டிற்கு அழகு செய் வன' என்று தம் திருக்குறளில் விளக்கியுள்ளார். (குறள் 738). மு.மு.

**அரசியல் தந்திரம்** என்பது இறைமை உடைய அரசுகளுக்கிடையே ஒப்பந்தங்களையும், உடன்பாடுகளையும் பேசிமுடிப்பதில் உள்ள பல்வேறு செயல்முறைகளைச் (Processes) சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய முறைகளைக் கையாளுபவர் இராசதந்திரி அல்லது அரசியல் சூழ்வலியாளர் (Diplomat) எனப் பட்டனர். இத்தகையோர் அவரவருடைய அரசாங் கங்கள் அமைத்துள்ள அரசியல் தந்திரப் பணிகளில் தேச உறவு தந்திரம் முதலியன புரிவதை இத்தொடர் குறிப்பிடுகிறது. அரசியல் தந்திரம் என்பதை அரசாங் கத் தூதுவர்கள் வழக்கமாகச் செய்கிற பிரச்சாரம், உளவு வேலை, மற்ற அலுவலாளரைக் கண்காணித் தல் முதலியவற்றோடு இணைத்து எண்ணுவது தான் வழக்கம். பொருளாதார நிலைமைகள், பிரச்சாரம், உளவு முதலிய முறைகள், தூதுவர்களை வலுவாக் கவோ வலுவிழக்கவோ செய்யலாம்.

பண்டைக் காலமுதல் இறைமையுடைய அரசுகள் ஒவ்வொன்றும் தத்தம் நலனைக் காப்பாற்றும் பொருட்டு மற்றவைகளுடன் போர் வாயிலாக இன்றி, பேச்சு உடன்படிக்கை வாயிலாகத் தொடர்பு கொள்ளுதல் வழக்கமாயிருந்தது; இதற்காக அவை தங்களுக்கிடையே தூதுவர்களைப் பரிமாறிக் கொண் டன. கி.பி. 1000-ஆம் ஆண்டில் பைசாண்டிய அரசும், போப்பின் வாட்டிகன் அரசும், அயல்நாடுகளி லுள்ள தூதுவர் மூலம் அவற்றைப் பற்றிய செய்தி களைச் சேகரித்து வைத்திருந்தன. அரசியல் தந் திரத்தை அரசியல் கொள்கையோடும் சர்வதேச உறவுகளோடும் ஒன்றாகக் கருதும் இயல்பும் வளர்ந் தது. ஆகையால் அரசியல் தந்திரம் என்பதில், தீர்மானம் செய்யும் முறை (Decision Making Process), தீர்மானம் செய்தலில் உதவி செய்யும் நிறு வனம், பேசிமுடிப்பவர்களுக்குக் குறிப்புகள் அனுப்பும் நிறுவனம், பேசிமுடிக்கும் திறத்தின் இயல்பு ஆகியவை அடங்கியுள்ளன. பேசிமுடிக்கும் கலையைப் பற்றி முறையாக ஆய்வு செய்து எழுதிய ஆசிரியர்கள் சூல்சு காம்பன் (Jules Camban) என்ற பிரஞ்சு ஆசிரியரும், சர் எரால்டு நிக்கல்சன் என்ற ஆங்கில ஆசிரியரும் ஆவர். பேசிமுடிக்கும் கலையை (Art of Negotia- tion) அதன் விளைவோடும் இணைத்துக் கூறுகிறார் பிரட் இக்கிள் (Fred Ikle) என்ற ஆசிரியர். இவர் தாம் எழுதியுள்ள "நாடுகள் எவ்வாறு பேசி முடிக் கின்றன?" (How Nations Negotiate?) என்ற நூலில் குறிப்பிடும் சில கருத்துகளைக் கீழே குறிப் பிடலாம். "பேசிமுடிப்பதென்ற செயலுக்கு முன்ன தாகத் தேசிய நலன்களில் அல்லது மதிப்பீடுகளில் வேறுபாடு இருத்தல் வேண்டும்; அதே சமயத்தில் எல்லாக் கட்சியினருக்கும் பொதுவான நலன்களும் இருத்தல் வேண்டும். இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட கட்சிகள் (அல்லது நாடுகள்-Parties) ஒன்றுக் கொன்று முரணான நலன்களைப் பொதுவான நலன்

களாக இணைக்கும் செயல்நயமே அனைத்து நாட்டு உறவுகளுக்கு ஊடும் (Warp) பாவும் (Woof) போலாகும். தனி ஆட்களும் குழுக்களும் அரசாங்கங்களும் இச்செயலில் எப்போதும் ஈடுபட்டுள்ளனர். குறுகிய பொருளிலே பேசிமுடித்தல் என்பது, ஒன்றுக்கொன்று முரணாக இருக்கும் நலன்களிலே ஒரு பொதுவான நலனை அல்லது ஈடுபாட்டை அடைவதென்று ஒப்பந்தம் செய்து கொள்ளுவதற்காகத் திட்டங்கள் வகுத்தல் ஆகும். இந்தத் திட்டங்கள், ஒப்பந்தங்களின் பிரிவுகளைப் பற்றிக் கூறுவதோடு மட்டுமல்லாமல், விவாதிப்பதற்குரிய தலைப்புகளையும் தொழில் நுட்பச் செய்திகளையும் சட்ட நுணுக்கங்களையும் கூறுகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் அரசியல் தந்திரக் கலைக்கு இன்றியமையாதவையாக இருப்பவை தேசிய அரசுமுறையும் நிலையான தூதுவரகங்களும் ஆகும். கி.பி 1848-ஆம் ஆண்டுக்குப்பின் பல தேசிய அரசுகள் (Nation State) அரசியல் ஒப்பந்தங்களைப் பேசி முடிக்கும் பணி நிறுவனங்களை அமைத்தன. இந்த ஒப்பந்தங்களைப் பேசி முடிப்பதற்கு முன்னோடியாக இரண்டு சர்வதேச மாநாடுகள் (Conferences) ஒன்று செருமனியில் மன்சுட்டர் நகரத்திலும், மற்றொன்று ஆசுனபிரக்கு நகரத்திலுமாக நடந்தன. இதேமுறை பிற்பட்ட காலங்களிலும் பின்பற்றப்பட்டது. இதில் பல நாடுகளின் தலைவர்கள், அயலுறவு அமைச்சர்கள் கலந்துகொண்டனர். இதுவே சர்வதேச அரசியல்தந்திரம் (International Diplomacy) எனப்படும். கி பி 1818-ஆம் ஆண்டில் அரசியல் தந்திரிகளின் நடக்கை விதி தொகுக்கப்பட்டது.

தன் அரசாங்கத்தின் சார்பாக வேற்றுநாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஓர் அரசியல் தந்திரிக்குக் கீழ்வரும் தகுதிகள் இருத்தல் வேண்டுமென்று, பிராங்காய் டி கால்லியரசு என்ற ஆசிரியர் குறிப்பிடுகிறார். திறமான தந்திரியின் வெற்றி, அவரால் நிறைவேற்ற இயலாத வாக்குறுதிகளில் காணப்படுவது அன்று; எனவே அவர் வாக்குறுதிகளை அளிக்குமுன் அவற்றை அவரால் நிறைவேற்ற இயலுமா என்றறிந்து கொள்ளுதல் வேண்டும்; எதனையும் கூர்ந்தாராயும் திறமுடையவராக (Discernment) இருத்தல்வேண்டும்; எதனையும் அதன்மீது பற்று அல்லது விருப்புக்கொள்ளாமல் ஆயும் திறம்; எதனையும் பிழையில்லாமல் துல்லியமாக அறியும் திறம்; அமைதி, பொறுமை, நல்லியல்பு, அடக்கமுடைமை, இலத்தீன் அல்லது பிரெஞ்சுமொழி அறிவு உடையவரா யிருத்தல் வேண்டும். (1918-ஆம் ஆண்டுவரை நாடுகள் ஒன்றுக்கொன்று இலத்தீன் அல்லது பிரஞ்சுமொழியில் தமக்குள் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டன. 1918-ஆம் ஆண்டிற்குப்பின் ஆங்கில மொழியே நாடுகளுக்கிடையே நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் கையாளப்படுகிறது). சர் எரால்டு நிக்கல்சன் என்ற ஆசிரியர் பின்வரும் தகுதிகள் ஓர் அரசியல் தந்திரிக்கு இருத்தல் வேண்டுமென்று குறிப்பிடுகிறார். அவை அறிவுடைமை, கூர்ந்தாராய்தல், கட்டுப்பாடு, விருந்தோம்புதல், பிறரைத் தன்வயம் ஈர்க்கும் ஆற்றல், சுறுசுறுப்பு, உரன் (Courage), திறன் (Tact) ஆகியவையாம்.

இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர்ப் பல புதிய தேசிய அரசுகள் ஆசியா ஆப்பிரிக்காக் கண்டங்களில் தோன்றியுள்ளமையால், ஒவ்வொன்றும் மற்றவற்றுடன் தொடர்புகொள்ளும்போது மேற்கத்திய அரசியல் தந்திரக் கலையைப் பின்பற்றுகிறது. பேச்சு வார்த்தை நடத்தும் உரிமைபெற்ற அதிகாரிகள் தூதுவர்கள் (Ambassadors), அரசாங்கச் சார்பாளர்கள் (Legates) எனப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளனர். பொதுவாகப் பேச்சுவார்த்தை நடத்தும் முழு அதிகாரம் தூதுவருக்கு உண்டு. பா.சு.

**அரசியல் நிலைபேறும் பொருளாதார முன்னேற்றமும்**: நிலையான அரசியல் அமைப்பு, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. வளம் நிறைந்த நாடுகளில் கூடப் பொருளாதார முன்னேற்றத்திட்டங்கள், அரசின் கண்காணிப்பில் மட்டுமே நிறைவேற்றப்படுகின்றன. அரசு தனக்குப் போதுமான அதிகாரத்தைப் பெற்றிருக்கும்போது, இத் திட்டங்களை விரைவில் செயற்படுத்துகிறது. இயற்கை வளங்கள் அரிதாகவும் பற்றாக்குறை மிகுதியாகவும் உள்ள வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் அரசே பொருளாதாரத் திட்டங்களை வகுத்து, அவற்றை நிறைவேற்றி வருகிறது. வரலாற்றைப் படித்தால் வலிமையும் நிலைபேறும் மிக்க அரசு மட்டுமே நாட்டின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாயிருந்தமை புலப்படும்.

நிலையான அரசியல் ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதி அளிக்கிறது. முன்னேற்றமடைந்த நாடுகளில், முதலாளித்துவ நாடானாலும் பொதுவுடைமை நாடானாலும், சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் முதலிடம் அளிக்கப்படுகிறது. மக்கள் ஆட்சியில் பொருளாதார வளர்ச்சிக்கும் நிலைபேற்றுக்கும் நேரடித் தொடர்பு உண்டு. ஏனெனில், மக்கள் ஆட்சியில் அரசியல் கட்சி தன்னுடைய பெரும்பான்மையை இழந்துவிட்டால், எதிர்க்கட்சி ஆட்சிக்கு வருவதை முழுமையாக மக்கள் ஏற்றுக் கொள்கின்றனர். எதிர்க் கட்சிகள் மக்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெறும்வரையிலும், தங்களுடைய தாழ்ந்த நிலையினை ஏற்றுக் கொள்ளும்.

தேர்தலுக்குப் பிறகு, பெரும்பான்மை வாக்குகள் பெற்ற கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப் படுகிறது. இங்குச் சட்டமும் ஒழுங்கும் ஒரு பெரும் சிக்கலாக இல்லை. கட்சித் தலைவர்கள் அரசுத் தலைவர்களாகப் பொறுப்பேற்றவுடன் பொருளா தார முன்னேற்றம் பற்றிய கவனத்தை மேற்கொள்ளு கின்றனர். கட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் அவர்களின் அணுகுமுறைகள் வேறுபடலாம். அவர் களது கொள்கை வேறுபட்டதாக அமையலாம். ஆனால், முடிவான குறிக்கோள், மக்களின் உயர்ந்த வாழ்க்கை, மிகுதியான வேலைவாய்ப்புகள், மிகுதி யான பொருள் உற்பத்தி, நிறைந்த பணிகள், நல் வாழ்வு முறைகள் ஆகியவற்றைப் பெற வேண்டு மென்பதே. பொதுவுடைமை நாட்டில் அரசியல் நிலை பேறு என்பது, எப்பொழுதும் சில முறைகளோடு இணைந்து இருக்கும். இந்தியாவில் உள்ள பொருளா தார முன்னேற்றம், சிறப்பாக அரசியல் நிலைபேற் றால் ஏற்பட்டதாகும். அண்மைக் காலத்தில் அண்டை நாடான இலங்கையில் அஞ்சத்தக்க இனப் போர் மூண்டது. அந்த இனப் போர் அந்நாட்டின் பொருளா தார முன்னேற்றத்தைப் பெருமளவு பாதித்தது. அங்கு ஏற்பட்ட அரசியல் கிளர்ச்சியின் காரணமாகப் பல தொழிற்சாலைகள் மிகக் கடுமையான நலிவுக்குள் ளாயின. சிரீலங்கையின் நிதி அமைச்சர் கூற்றுப்படி, ‘‘சிரீலங்கா தனது முன்னைய பொருளாதார நிலையை மீண்டும் அடைவதற்குப் பல ஆண்டுகள் ஆகும்’’. இது, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றின் தேவை யையும், முழுமையான பாதுகாப்பின் இன்றியமை யாமையையும் மனத்தில் தெளிவாகப் பதியச் செய் கிறது; அன்றியும் சட்டமும் ஒழுங்கும் முழுமையான பாதுகாப்பும் இல்லையானால் பொருளாதார முன் னேற்றம் ஏற்படாது என்பதையும் உணர்த்துகிறது.

அடிக்கடி ஏற்படும் ஆட்சி மாற்றங்களும் இராணு வப் புரட்சிகளும் பொருளாதார முன்னேற்றத்தின் வழிமுறைகளுக்கு முட்டுக்கட்டையாய் அமைதல் கூடும். இந்தியாவின் இரண்டு அண்டை நாடுகளான பாகிசுத்தானும், பங்களாதேசமும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தங்களால் இயன்ற அளவு முயன்று கொண்டிருக்கின்றன. அந்நாடுகளில் அரசியல் சுதந்திரம், தனி மனிதன் உரிமைகள் ஆகியவை கெட்டுப் பெரும் கிளர்ச்சிகள் திரும்பத் திரும்ப நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. பாகிசுத் தானிலும், பங்களாதேசத்திலும் முழுமையான அர சியல் நிலைபேற்றினை ஓர் இராணுவ ஆட்சியால் கூட நிலை நிறுத்த முடியவில்லை.

மத்திய அமெரிக்காவில் உள்ள நிலைமை, இதற் குப் பெரிதும் மாறுபட்டதன்று. எல் சல்வேடாரில் (El Salvador) ஏற்பட்ட உள்நாட்டுக் கலகம் அள விறந்த உயிர்களின் அழிவுக்குக் காரணமாயுள்ளது. இதற்கு அண்டை மாநிலமான நிக்கரா குவாயில் உள்ள அரசு, அமெரிக்கர்களின் உதவிபெற்ற கலகக் காரர்களால் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படுகிறது. அமெரிக்கர்களின் உதவிபெற்ற இந்தக் கலகக்காரர்கள் எண்ணெய் நிறுவனங்களுக்கும் ஏனைய அரசாங்கச் சொத்துகளுக்கும் மிகப் பெரும் அழிவுக்குக் காரண மாக உள்ளனர். இதுபோன்ற சூழ்நிலையில் பொரு ளாதாரம், பாதுகாப்புத் தேவையை அடிப்படையாகக் கொண்டதாகத் திட்டமிடப்படுகிறது. மேற்கு ஆசி யாவில் உள்ள இலெபனான் (Lebanon) ஒரு காலத் தில் (1960) வங்கிகளின் வளர்ச்சி, சுற்றுலா, ஏனைய தொழில்துறை ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றம் கண்டிருந்தது. இலெபனான் நாட்டில் உள்நாட்டுக் கலகம் அந்நாட்டுப் பொருளாதாரத் தைக் கடுமையான இழப்பிற்கு உள்ளாக்கியது. அர சின் சட்டத்தால் பெய்ரூட்டு (Beirut) நகரம் கூடத் தன்னுடைய ஆணையைச் செலுத்த முடியவில்லை. இசுலாமியர், கிறித்துவர், படைப் பிரிவினர் ஆகியவர் களுக்கு இடையில் நாடு பிளவுண்டு காணப்படுகிறது. இலெபனானில் அரசியல் நிலைபேறும் இல்லை; பாது காப்பும் இல்லை. அரசு நிலைபேறாக இல்லாவிட் டால், அரசியல் பாதுகாப்பும் பொருளாதார முன் னேற்றமும் இருக்க முடியா. இது ஆப்பிரிக்காவில் உள்ள சில நாடுகளுக்கும் பொருந்தும். முன்னர், பெல்சியம் காங்கோ என்று சொல்லப்பட்ட சயரெ (Zaire) போன்ற நாடுகளை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். அங்கே தோன்றிய அஞ்சத்தக்க அரசி யல், நிலையற்ற தன்மையை உருவாக்கியது. இப் பொழுது அங்கு அமைதியின் சாயல் காணப்படுகிறது. 1960–ஆம் ஆண்டில் இந்த நாடு விடுதலை பெற்ற நேரத்தில், 680000 மைல் தூரத்திற்கு நல்ல சாலைகள் இருந்தன. ஆனால் இன்று, வெறும் 6200 மைல் தூரத் திற்கு மட்டுமே பயணம் செய்யத்தக்க சாலைகள் உள்ளன.

அரசியல் நிலைபேறில்லாமை, இலட்சக்கணக்கான மக்களை நாடற்றோர்களாக மாற்றுகிறது. எத்தி யோப்பிய நாட்டோடு ஏற்பட்ட போரின் காரணமாக, 7 இலட்சம் சோமாலியர்கள் நாடற்றோர்களாகத் தங்கள் பொருளாதார ஆதரவை இழந்து வாழ்கிறார் கள். அங்கோலா, உருவாண்டா (Ruanda) ஆகிய வற்றிலிருந்து துரத்தப்பட்ட 335000 த்துக்கும் மிகுதி யான மக்கள் இப்பொழுது சயரெவில் (Zaire) வாழ் கின்றனர். தென் ஆப்பிரிக்காவின் அரசியல் நிலை இனவெறியாக மாறியதால் அந்நாட்டுப் பழங்குடி மக்கள் பொருளாதார அடிப்படையின்றி வாழ்கின்ற னர். இயற்கை வளம் நிறைந்த ஆப்பிரிக்காவின் அரசி யல் நிலைபேறற்ற தன்மை, பழங்குடி மக்களின் பூசல்

களினால் மேலும் சீர்கேடு அடைந்துள்ளது. சிம்பாபே (Zimbabwe) என்ற நாடு இதற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். அங்குள்ள இரண்டு பழங்குடி மக்களான சோனா இனத்தவரும் மாட்டபெல் (Matabele) இனத்தவரும், எப்பொழுதும் மோதிக் கொண்டே இருக்கின்றனர். இப்பொழுது சோனா இனத்தவர் பெரும்பான்மையாகக் காணப்படுகின்றனர். ஆகவே, அந்தப் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த இராபர்ட்டு முகாபே என்பவர், சிம்பாபே என்னும் நாட்டின் தலைமை அமைச்சராக உள்ளார். இது மாட்டாபெல் இனத்தவரிடையே அமைதியின்மையை உண்டு பண்ணியுள்ளது. சமூகச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கே நாட்டின் வளமும் அரசியல் வலிமையும் வீணாகிக் கொண்டிருக்கின்றன. பெரும்பாலான ஆப்பிரிக்க நாடுகளில் இந்தப் பழங்குடி மக்களின் சிக்கல் காணப்படுகிறது. கென்யா போன்ற சகிப்புத் தன்மை கொண்ட நாட்டில் கூடப் பழங்குடி மக்களின் அமைதியின்மை காரணமாகக் கடந்த காலத்தில் கடுமையான பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றியுள்ளன. அரசியல் நிலைபேறு இல்லாமற் போனால் பொருளாதார முன்னேற்றம் ஏற்படவே முடியாது.

பல்வேறு சாதி, இனம், மத வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும், நாட்டின் பொருளாதார முன்னேற்ற நோக்கில் நன்கு புரிந்து கொள்ளும் ஒற்றுமைத் தன்மை காணப்படுகிற நாடுகளுள் இந்தியாவும் ஒன்று. ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்ளும் தன்மையானது, இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியுள்ளது. பின்தங்கிய நாடுகளில் அரசியல் நிலைபேறு அற்ற தன்மை, மக்களைப் பின்தங்கிய நிலைக்கும் வறுமைக்கும் இழுத்துச் சென்று வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் மேலும் பெருக்குகிறது; மேலும் முறைகேடற்ற ஊழல்களுக்கும் காரணமாக உள்ளது.

ஆப்பிரிக்காவிலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் கையூட்டு (Bribery), அளவு கடந்து காணப்படுகிறது. குடிமக்களுடைய உணர்வு நிலையின் அடிப்படையிலும் அப்பழுக்கில்லாத நேர்மையின் அடிப்படையிலும் அரசின் அடிப்படை வலிமை அமைய வேண்டும். இது மிக நீண்ட பாதையாகத் தென்படலாம். ஆனால், இந்தப் பாதையைக் கடக்காத வரையில் பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவருதல் என்பது முடியாத காரியம். நிலைபேறில்லாத சமுதாயம் முன்னேற்றம் இல்லாத சமுதாயம். அரசியல் நிலைபேற்றினால் ஏற்படும் பயன்களை மிகுந்த உற்பத்தியிலும் நிறைந்த வேலை வாய்ப்புகளிலும், மிகுதியான அளவு உயர்ந்துள்ள தனிப்பட்டவர் வருவாயிலும் தெளிவாகக் காணலாம். அரசியல் குழப்பங்கள் மனிதனைச் சீர்கேடுஅடையச் செய்கின்றன. ஒழுங்கான அரசு அமைய அரசியல் நிலைபேறு முதன்மையாகத் தேவைப்படுகிறது. ஓர் ஒழுங்கான அரசு படிப்படியாகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துகிறது. அந்தக் கட்டுப்பாடே வெற்றிக்குரிய திறவுகோலாகும். கட்டுப்பாட்டோடு கூடிய சமுதாயமே நிலையான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தும். இந்தக் கட்டுப்பாட்டோடு கூடிய சமுதாயமே, எல்லா மனித இனமும் விரும்புகின்ற குறிக்கோளும் ஆகும்.

அரசியல் நிலைபேறில்லாவிட்டால் நாட்டிற்கு ஒருவித மதிப்பும் உலக நாடுகளிடையே இராது. அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, மேற்கு ஐரோப்பா, உருசியா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் எப்பொழுதும் அரசியல் நிலைபேறு நிலவி வருகிறது. ஆகவே, இந் நாடுகள் உலக நாடுகளின் மத்தியில் எப்பொழுதும் ஒரு தனி மதிப்பைப் பெறுகின்றன. இவ்வண்ணமே இந்தியா, சீனா போன்ற நாடுகளும் நிலையான அரசியல் அமைப்பதில் வெற்றி கண்டிருக்கின்றன. இதனால் பொருளாதார முன்னேற்றமும் எல்லாத் துறை வளர்ச்சியும் இந்நாடுகள் பெற்றுள்ளன. முன்னோட்டமான பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் பொறுப்புணர்ச்சியுடன் பொருளாதாரத் திட்டங்கள் செயற்பட வேண்டும்.

இந்திய அரசு மக்கள் தேவைகளைப் பெரிதும் தெரிந்துகொண்டு செயற்படுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. பலவகைச் சிக்கல்களின் மத்தியிலும் பற்றாக்குறையிலும் மத்திய அரசு மக்கள் தேவைகளையும் குறைகளையும் உற்றுக் கவனித்து வேண்டிய பணிகளைச் செய்து வருகிறது. பல மாநிலங்களில் அவ்வப்போது சிக்கல்கள் வராமலில்லை. ஆப்பிரிக்காவையோ தென் அமெரிக்காவையோ ஆராய்வோமானால், இந்தியாவில் ஒரு நிலைபேறான அரசு இருக்கிறது என்பது மறுக்க முடியாத செய்தியாகும். நிலைபேறான அரசே பொருளாதார முன்னேற்றத்திற்குச் சிறந்த காரணம். இந்தியர்கள் இயற்கையாகவே நிலைபேற்றினை விரும்புகிறவர்கள். எங்கே நிலைபேறில்லையோ அங்கே சிக்கல்கள் காணப்படுகின்றன. அதைத் தீர்க்க ஆவன செய்வதற்கும் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கும் அரசியற் தலைவர்கள் ஒருபோதும் தயங்கினதில்லை. இவ்வித மனப்பான்மையால் இந்தியாவில் ஒரு நல்ல அரசியல் சூழ்நிலை எதிர்காலத்தில் உருவாவதற்கு அடித்தளமிடப்பட்டுள்ளது. மரபைத் தழுவி நிற்கும் மக்களாட்சியுள்ள எந்த நாடும் காலப் போக்கில் பொருளாதார முன்னேற்றம் காணும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை.

டி. கே. சா. சு.

**அரசியல் பொருளாதாரக் கொள்கை:** இன்று பொருளியல் என்று அறியக் கூடிய சமூக அறி

வியல், அதன் தொடக்கக் காலத்தில் ''அரசியல் பொருளாதாரக் கொள்கை'' என்று அழைக்கப்பட்டு வந்தது. கி. பி. 17-ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் ஐரோப்பியச் சிற்றரசர்கள், குறுநில மன்னர்கள் ஆகியோரின் வருவாய், நாட்டின்வளம் ஆகிய வற்றை ஆராய்ந்து அறிவதற்காக மேற்கொள்ளப் பட்ட ஆய்வுகள்தாம், அரசியல் பொருளாதாரக் கொள்கையின் (Political Economy) தொடக்கம் என லாம். ஆயினும் அந்த ஆய்வுகள் ஓர் 'இயல்' என்னும் தரத்தைப் பெறவில்லை. கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தனியுரிமைக் கோட்பாடும் (Individualism), தாராளக் கொள்கை (Liberalism) யும் எழுந்த பொழுது அரசியல், பொருளாதாரச் சிக்கல்களை அலசி ஆராய்வதற்காக அரசியல் பொருளாதாரக் கொள்கை என்னும் ஒரு தனி இயல், வல்லுநர்களால் உருவாக்கப்பட்டது.

வரலாற்று ரீதியாக, அரசியல் பொருளாதாரக் கொள்கையின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் நான்கு காலக் கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு காலக் கட்டத்திலும் நிலவிய அரசியல், பொருளாதார சமூக அமைப்புகள், நம்பிக்கைகள் அக்காலக் கட்டத்தில் நிலவிய அரசியல் பொருளாதாரக் கொள்கையின் தன்மையை நிருணயித்தன. முதல் காலக் கட்டம் கிரேக்க நகர அரசுகள் காலப்பகுதி ஆகும். அந்நகர அரசுகளில் மக்களாட்சி நிலவிய போதிலும் அடிமைகளுக்கும் வணிகர்களுக்கும் அரசியல் உரிமை மறுக்கப் பட்டது. குடியுரிமையுடையவர்களுக்கு அரசியலில் ஈடுபடுவதற்குத் தேவையான ஓய்வும், நேரமும் கிடைக்கச் செய்ய அடிமை முறை இன்றியமையாதது என அரிசுடாட்டில் வற்புறுத்தினார். ஆட்சியாளர்களுக்குத் தனியாகச் சொத்து இருக்கக் கூடாது எனப் பிளாட்டோ (Plato) வாதிட்டார். ஆனால் தனியார் சொத்துரிமையை அரிசுடாட்டில் ஆதரித்தார். இரு அறிஞர்களும் தொழிற் பாகுபட்டு முறை (Division of Labour)யை வற்புறுத்தி, அதன் நன்மைகளைச் சுட்டிக் காட்டினர்.

இடைக்காலம், அரசியல் பொருளாதாரக் கொள்கை வளர்ச்சியின் இரண்டாம் கட்டமாகும். இடைக் காலத்தில் மிக வலுவான நிறுவனமாகக் கத்தோலிக்கத் திருச்சபை விளங்கியது. திருச்சபையின் தலையான நோக்கம் மறுமை, அறவொழுக்கம் ஆகிய வற்றைப் பற்றிய கருத்துகளை மக்களிடைப் பரப்பு வதைப் பற்றியே இருந்தது. இம்மையைப் பற்றி அது அதிக அக்கறை காட்டவில்லை. வணிகம் செய்வது, வட்டி வாங்குவது ஆகிய செயல்கள் இழிதொழிலாகக் கருதப்பட்டன. ஆயினும் இடைக் காலத்தின் பிற்பகுதியில் மக்களின் கவனம் அதிகமாக இம்மையிலுள்ள அரசியல் பொருளாதாரச் சிக்கல்களுக் குத் திரும்பியது. அதில் அவர்கள் அதிக அக்கறை காட்டத் தொடங்கினர்.

அரசியல் பொருளாதாரக் கொள்கை வளர்ச்சி யின் மூன்றாம் கட்டம் கி.பி. 16,17,18-ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய வணிகத்துவம் (Mercantilism) ஆகும். வணிகத்துவத்தைப் ''பொருளாதாரதேசியம்'' (Economic Nationalism) என்றுசொல்லலாம். வணிக வாதிகளின் ஒரே குறிக்கோள் நாட்டு நலனைப் பேணுதல் ஆகும். ஒரு நாட்டின் பலம், பாதுகாப்பு ஆகியவை, அந்நாட்டின் இருப்பிலுள்ள தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் அளவைப் பொறுத்திருக் கின்றன. எனவே அவற்றின் அளவைப் பெருக்க வேண்டும் என்றும், அதற்கான சிறந்த வழி ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர். வணிகத்துவம் அதன் குறிக்கோள்களை அடையத் தடையிலா வாணிகக் (Free Trade) கொள்கையை வலியுறுத்தியது. கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் தாமசு மன் (Thomas Mun), சர் சோசையா சைல்டு (Sir Josiah Child) போன்ற அறிஞர்கள், இங்கிலாந்தில் வணிகத்துவக் கொள்கையின் தீவிர ஆதரவாளர்களாகத் திகழ்ந்தனர்.

அக்கொள்கை நிலவிய காலத்தில் வாணிகத்திற்கு மிக்க முதன்மை அளிக்கப்பட்டமையால், விவசாயம் அடியோடு புறக்கணிக்கப்பட்டது. தொழில்களும் மிகுதியான அரசாங்கக் கட்டுப்பாடுகளுக்கு இலக்காகின. அந்நிலைக்கு எதிராகப் பிரான்சில் கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஓர் எதிர்ப்பு இயக்கம் தோன்றியது. இயற்கை வாதிகள் (Physiocrats) எனப் பெற்ற அந்த எதிர்ப்பு வாதிகள், விவசாயத்தை அடிப் படையாகக் கொண்ட ஓர் இயற்கையான சமூக அமைப்பை அமைக்க வேண்டுமென்று வாதிட்டனர். மக்களின் பொருளாதார வாழ்க்கையில் அரசாங்கம் தலையிடக் கூடாது என்றும், அரசாங்கம் மிகக் குறைவான அடிப்படைப் பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டுமென்றும் இவர்கள் வற்புறுத்தினர். எனவே இவர்களுடைய கருத்துகள் ''தலையிடாக் கொள்கை'' (Laissez Faire) எனப்பட்டன. ஏறத்தாழ கால் நூற்றாண்டுகளே இயற்கைவாதிகள் செல்வாக் கோடு விளங்கிய போதிலும், அரசியல் பொருளாதாரக் கொள்கை ஓர் இயலாக மாற, அவர்களின் கருத்துகள் பெரிதும் உதவின. பிராங்காய் குசுனே (Francois Quesnay), தர்காட் (Turgot) ஆகியோர் இயற்கைவாதிகளில் புகழ் பெற்றவராவர்.

அரசியல் பொருளாதாரக் கொள்கைக்கு முறையான விளக்கம் அளித்து அதனை ஓர் இயலாக மாற்றிய பெருமை, இங்கிலாந்தைச் சார்ந்த ஆடம் சுமித்து (Adam Smith) என்பவரையே சாரும்.

அரசியல் பொருளாதாரக் கொள்கையின் தந்தை என அவர் போற்றப்படுகிறார். கி.பி. 1776-ஆம் ஆண்டில் வெளிவந்த அவரது நூல் (An Inquiry into the Nature and Causes of the Wealth of the Nation) அவருடைய ஆழ்ந்த அறிவிற்கும், ஆய்வுத் திறனுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. தொழில் பகுப்பு முறையின் நன்மைகளை எடுத்துக்காட்டி அதன் வாயிலாகத்தான் ஒரு நாட்டின் செல்வத்தைப் பெருக்கமுடியும் என்று அவர் விளக்கினார். மேலுமவர் நாட்டின் செல்வ வளர்ச்சிக்கு வணிகம் இன்றியமையாத ஒரு கருவியாகும் என்று கூறித் தடையிலா வாணிகத்தின் நன்மைகளைச் சுட்டிக் காட்டினார். வெளிநாட்டு வாணிகத்தின் வாயிலாகத் தங்கம், வெள்ளி ஆகியவற்றைச் சேர்ப்பதில்தான் ஒரு நாட்டின் பலம் அடங்கியிருக்கிறது என்னும் வணிக வாதிகளின் வாதத்தை அவர் மறுத்தார். மாறாக, ஒரு நாட்டின் செல்வம் அந்நாட்டு மக்களின் உழைப்பில்தான் (Labour) இருக்கிறது என அவர் வாதிட்டார். ஒரு பொருளின் மதிப்பு (Value) அதனை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உழைப்பினால் ஏற்படுகிறது எனக் கூறி, சுமித்து "உழைப்பு மதிப்புக் கோட்பாட்டை" (Labour theory of value) உருவாக்கினார். தொழில் வளர்ச்சிக்கு மூலதனத்தின் (Capital) இன்றியமையாமையினையும் அவர் உணர்ந்திருந்தார். பொருளாதாரத் துறையில் அரசாங்கம் தலையிடாக் கொள்கையை அவர் ஆதரித்தார்.

ஆடம் சுமித்தின் நூலும், பொருளாதாரக் கருத்துகளும் இங்கிலாந்தில் மட்டுமன்றி, மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பெரும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தன. சுமித்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கேற்பப் பல நாடுகளும் அவற்றின் வணிகக் கொள்கையில் தீவிர மாற்றங்களைப் புகுத்தின. பிரான்சில் ஜே.பி.சே (J.B. Say) என்பாரும் செருமனியில் காரல் என்றிச் ரா (Karl Heinrich Rau), என்பாரும், சுமித்தின் அரசியல் பொருளாதாரக் கொள்கையைப் பரப்பினர்.

சுமித்தின் காலத்தில் தொன்மை அரசியல் பொருளாதாரக் கோட்பாடு (Classical School of Political Economy) தொடங்கியது. அவர் காலத்திற்குப் பிறகு இங்கிலாந்தில் ஏற்பட்ட பல மாற்றங்களும்,-தொழிற்புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியப் போர்கள், மக்கள் தொகைப் பெருக்கம், வெளிநாட்டு வாணிக வளர்ச்சி ஆகியனவும் நாட்டில் அரசியல், பொருளாதாரச் சிக்கல்கள் பலவற்றை உண்டு பண்ணின. அரசாங்கம், பாராளுமன்றம், சிந்தனையாளர்கள், ஆகியோரின் கவனம் அவற்றைச்சமாளிப்பதில் திரும்பியது. அவர்களின் விவாதங்களிலிருந்து தொன்மை அரசியல் பொருளாதாரக் கொள்கை புதிய பலகோட்பாடுகளைப் பெற்று முறையாக வளரத் தொடங்கியது. தாமசு இராபர்ட்டு மால்தசு (Thomas Robert Malthus), தேவிட் ரிக்கார்டோ (David Ricardo), சான் இசுடுவர்ட்டு மில் (John Stuart Mill) போன்ற வல்லுநர்கள் புதிய கோட்பாடுகளைத் தொன்மை அரசியல் பொருளாதாரக் கொள்கைக்கு வழங்கி, அதன் வளர்ச்சியைப் பேணினர். உணவுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்க விகிதம், மக்கள் தொகைப் பெருக்க விகிதம் ஆகிய இரண்டுக்குமிடையேயுள்ள இடைவெளியைச் சுட்டிக் காட்டும் மக்கள் தொகைக் கோட்பாட்டை (Theory of Population) மால்தசு வழங்கினார். பொருளாதாரச் சிக்கல்களை ஆராய, ரிக்காட்டோவும் மில்லும், மதிப்புக் கோட்பாட்டை (Theory of Value)யும் பகிர்வுக் கோட்பாட்டை (Theory of Distribution)யும் கையாண்டனர். பொருள்கள் ஏன் ஒரு குறிப்பிட்ட விலையில் மாற்றம் (Exchange) செய்யப்படுகின்றன, ஏன் சில பொருள்கள் அதிக விலையிலும், சில பொருள்கள் குறைந்த விலையிலும் விற்கப்படுகின்றன என்பதை மதிப்புக் கொள்கை விளக்க முயன்றது. தேசிய வருமானத்தை நிலத்திற்கு வாரம், தொழிலாளிக்கு ஊதியம், மூலதனத்திற்கு வட்டி, தொழிலில் முனைவோருக்கு இலாபம் என்ற நான்கு உற்பத்திக் காரணிகளுக்கிடையே பங்கீடு செய்வதைப் பகிர்வுக் கோட்பாடு விளக்கியது.

தொன்மைப் பொருளாதார வல்லுநர்கள் உருவாக்கிய மற்றொரு கோட்பாடு "குறைந்து செல் விளைவு விதி" (Law of diminishing return) ஆகும். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் வளமற்ற நிலங்களிலும் விவசாயம் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது; அதனோடு ஆழ்ந்த வேளாண்மை (Intensive Cultivation)யும் மேற்கொள்ள வேண்டி வருகிறது. அவ்வாறு செய்யும்போது வேளாண்மைக்குப் பயன்படுத்தும் உழைப்பு, மூலதனம் ஆகியவற்றின் அளவிற்கேற்ப உற்பத்தியின் அளவு பெருகுவதில்லை என்ற கருத்தைத்தான் அவர்கள் குறைந்து செல்விளைவு விதி என்று குறிப்பிட்டனர்.

அரசியல் பொருளாதாரக் கொள்கை வளர்ச்சியின் இறுதிச்சட்டம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்குகிறது. கி.பி. 1850-ஆம் ஆண்டிற்குள் இங்கிலாந்தில் தொழிற் புரட்சியின் தீமைகள் வெளிப்படத் தொடங்கின. அப்புரட்சியின் விளைவாக ஆலை முறை (Factory System)யும், முதலாளித்துவ முறை (Capitalism)யும் எழுந்தன. அவ்விரண்டு முறைகளும் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்கும், செல்வம் ஒரு சிறுபான்மையினரிடம் சென்று குவிவதற்கும் வழி கோலின. தொழிலாளர்களின் நிலை நாளுக்கு நாள் மோசமடைந்தது. அந்த

அவல நிலையிலிருந்து அவர்களைக் காப்பாற்றத் தொன்மைப் பொருளாதாரக் கொள்கையினால் இயலவில்லை. மாறாக தனியுரிமைக் கோட்பாடு, அரசின் தலையிடாக் கொள்கை போன்றவை தொழிலாளர்களின் நிலையை மேலும் சீர்கேடடையச் செய்ய உதவின. அந்நிலையிலிருந்து தொழிலாளர்களைக் காப்பாற்றும்பொருட்டு அரசியல் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் சமதருமக் கோட்பாட்டை (Socialism) உருவாக்கினார்கள். பொருளாதாரத் துறையில் காணக் கூடிய இழிவுகளை அகற்ற அரசு அதில் தீவிரமாகத் தலையிட வேண்டும்; உற்பத்திக் கருவிகள், வளங்கள் அனைத்தும் அரசுடைமையாக்கப் பட வேண்டும் என்பன சமதருமக் கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கைகள் ஆகும்.

சமதருமக் கோட்பாடுகள் பல உருவங்களில் தோன்றி வளர்ந்துள்ளன. அவற்றில் சில மறைந்தும் போய்விட்டன. ஆயினும் காரல் மார்க்சு உருவாக்கிய விஞ்ஞான சமதருமக் கோட்பாடு (Scientific Socialism) இன்று ஒரு வலுவான அரசியல் பொருளாதாரக் கோட்பாடாகத் திகழ்கிறது. கி.பி. 1848-ஆம் ஆண்டில் வெளிவந்த பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto) என்னும் நூலில் மார்க்சு அவருடைய விஞ்ஞான சமதருமக் கோட்பாட்டின் கொள்கைகளை விரிவாக விளக்கியுள்ளார்.

மனிதனுடைய சிந்தனை, செயல் ஆகியவை பொருளாதாரச் சக்திகளால் நிருணயிக்கப்படுகின்றன என்று மார்க்சு உலகுக்குப் பறை சாற்றினார். முதலாளித்துவ சமூகம் சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர்கள் என இரு வகுப்புகளைக் கொண்டது என்பதும், அவ்விரு வகுப்புகளுக்கிடையே வருக்கப் போராட்டம் (Class War) ஏற்பட்டுச் சுரண்டப்பட்ட பாட்டாளி வருக்கம், சுரண்டும் முதலாளி வருக்கத்தைத் தோற்கடித்து, அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிப் பாட்டாளி வருக்கத்தின் சருவாதிகார ஆட்சி (Dictatorship of the Proletariat) யை நிறுவும்; அந்த ஆட்சி முதலாளித்துவ முறையை அடியோடு ஒழித்துக்கட்டி, ஒரு பொதுவுடைமைச் சமூகத்தை அமைப்பதற்குப் பாடுபடும் என்பதும் மார்க்சின் சமதருமக் கொள்கையின் கோட்பாடாகும். காரல் மார்க்சின் காலத்திலிருந்து விஞ்ஞான சமதருமக் கோட்பாடு எனப்படும் பொதுவுடைமைக் கோட்பாடு (Communism) அரசியல் பொருளாதாரக் கொள்கையில் ஒரு முக்கியமான பகுதியாக மாறிவிட்டது.

அரசியல் பொருளாதாரக் கொள்கை கி.பி. 20-ஆம் நூற்றாண்டில் "பொருளியல்" (Economics) என்னும் பெயருடன் ஒரு விஞ்ஞான இயலாக மாறியது. பொருளாதார வல்லுநர்கள் புதியபல உத்திகளையும் ஆய்வு முறைகளையும் கையாண்டு பொருளியலில் மிகுதியான புதிய கோட்பாடுகளையும் கருத்துகளையும் புகுத்தினர். அவற்றில் நலப் பொருளாதாரம் (Welfare Economics), நவீன பொருளாதாரம் (New Economics) ஆகிய இரண்டும் மிகச் சிறந்த கோட்பாடுகளாகும். நாட்டின் பொருளாதார நிலைமை, அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை ஆகியவை மக்களின் நலனை எப்படிப் பாதிக்கிறது என்பதை நலப் பொருளாதாரம் நுணுக்கமாக ஆய்கிறது. அதற்காக நாட்டிற் காணும் முற்றுரிமை (Monopoly), வரி விதிப்பு முறை (Taxation System), இறக்குமதிக் கொள்கை, விலைவாசிகளின் மீதுள்ள கட்டுப்பாடு, அரசாங்கத்தின் சமதருமக் கொள்கை ஆகியவற்றை நலப் பொருளாதாரம் ஆராய்கிறது. நலப் பொருளாதாரக் கருத்தைப் பற்றி விரிவான விளக்கத்தைக் கொடுத்தவர் இங்கிலாந்தைச் சார்ந்த ஏ.சி. பிகு (A.C. Pigou) ஆவார். அவருடைய "நலப் பொருளாதாரம்" (கி.பி. 1920 Economics of Welfare) என்னும் நூல் இன்றும் அக் கோட்பாட்டின் இலக்கணமாகத் திகழ்கிறது.

அடுத்து முதன்மையான முக்கியக் கோட்பாடாக விளங்கும் நவீன பொருளாதாரத்தைப் பொருளியலுக்கு வழங்கியவர் இங்கிலாந்தின் பொருளியல் மேதை ஜே.எம். கெயின்சு (J.M. Keynes) ஆவார். அவருடைய நூல் (The General Theory of Employment, Interest and Money 1936) நவீன பொருளாதாரக் கோட்பாட்டை விரிவாக ஆராய்கிறது. பொருள்களின் மீது நுகர்வோருக்கு 'ஆற்றலுள்ள தேவை தான் (Effective Demend) வேலை நிலைமையின் அளவை நிருணயிக்கிறது; ஆற்றலுள்ள தேவை குறையுமானால் பொருள்களின் உற்பத்தி அளவைக் குறைக்க வேண்டி வரும்; அது வேலையின்மைக்கும் (Unemployment), பொருளாதார வீழ்ச்சிக்கும் (Economic Depression) வழி கோலும்; ஆற்றலுள்ள தேவையின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் அளவை விட அதிகமாக இருப்பின் பணவீக்கம் (Inflation) ஏற்படும். எனவே கெயின்சு ஆற்றலுள்ள தேவையை நிருணயிக்கக்கூடிய காரணங்களை ஆழமாக ஆராய்கிறார். 1930 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபொழுது, அமெரிக்க அரசாங்கம் கெயின்சினுடைய பொருளாதாரக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்துப் பொருளாதார மறுமலர்ச்சியை உண்டுபண்ணுவதில் வெற்றி பெற்றதிலிருந்து நவீன பொருளாதாரக் கொள்கையின் திறன் நன்கு வெளிப்படுகிறது.

பொருளியலின் கொள்கைகளும் கோட்பாடுகளும் நிரந்தரமானவையல்ல; காலம், சூழ்நிலைகளுக்கேற்ப அவை மாறுபட்டுக் கொண்டேயிருக்கும். பொருளியலின் ஆய்வு முறையில் பலவியல் அணுகுமுறை (Inter-

disciplinary approach) கடைப்பிடிக்கப்பட்டதின் விளைவாகப் பொருளியல், இன்று விரிவான ஒரு விஞ் ஞான இயலாக மாறிப் பல புதிய இயல்களைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றது. எஸ்.மு.

**அரசியல் முறைமைக்கு உட்படுகை** அல்லது அரசியலமைப்பில் பற்றுடைமை (Constitutionalism) என்பது, அரசாங்கத்தை நிறுவி, அதற்கு அதிகாரத்தையும் பணிகளையும் அளிக்கிற அரசியலமைப்புச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் முற்றிலும் உடன்பட்டு அல்லது கீழ்ப்படிந்து இருக்கும் நிலையைக் குறிப்பிடுகிறது. அரசாங்கத்தைவிட சட்டத்துக்கு இருக்கும் மேலான நிலையை இக்கருத்து உணர்த்துகிறது. இதிலிருந்து அரசாங்க அதிகாரங்கள் கட்டுப்பாடு அல்லது வரம்பு அற்றவை அல்ல என்பதும், அவையெல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தின் விதிகளால் வரம்புக்குட்படுத்தப்பட்டுள்ளன என்பதும் தெரிகின்றன. அரசியலமைப்பு என்பது அரசாங்கத்தின் அதிகாரங்களும், குடிகளின் உரிமைகளும், இவைகளை முரண்பாடின்றி இணைப்பதற்குரிய விதிகளும் அடங்கிய சட்டத்தொகுப்பு ஆகும். அரசியலமைப்பு விதிகளுக்கு முழுதுமாகக் கட்டுப்பட்டிருக்கும் நிலையே அரசியல் முறைமைக்கு உட்படுகை (Constitutionalism) எனப்படும். இதிலிருந்து நாட்டின் அடிப்படைச் சட்டமாக ஓர் அரசியலமைப்புச் சட்டம் இருக்கிறது என்பதனையும், அரசாங்கத்தின் தன்விருப்பமான அல்லது எதேச்சாதிகாரமான செயல்களுக்கு வரம்புகள் உண்டு என்பதனையும், ஆளப்படுவோரின் உரிமைகளுக்குப் பொறுப்பு அல்லது உத்தரவாதம் அளித்தல் என்பதனையும், நாட்டின் இறைமை, அதிகாரம் செயற்படும் வழிகளை வரையறுத்துக் கூறுதல் என்பதனையும் உய்த்துணரக் கூடும்.

அரசியல் முறைமைக்கு உட்படுகை என்ற கருத்து, அரசியலமைப்புக்கு உட்பட்ட அல்லது அரசியலமைப்புச் சட்டத்தினால் வரம்புபடுத்தப்பட்ட அதிகாரங்களை உடைய அரசாங்கம் (Constitutional Government) என்ற கருத்தினுக்குத் தோற்றுவாயாக இருக்கிறது. எனவே, அரசியலமைப்புக்குஉட்பட்ட அரசாங்கம் என்னும் கருத்து, எதேச்சாதிகார அரசாங்கத்துக்கு மாறான குடியாட்சி அரசாங்க முறையையும் உணர்த்துகிறது. குடியாட்சி அரசாங்கங்கள் எல்லாம் அரசியலமைப்புச் சட்டத்தால் வரம்புபடுத்தப்பட்ட அதிகாரங்களை உடைய அரசாங்கங்கள் தாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட எல்லா அரசாங்கங்களும் குடியாட்சி அரசாங்கங்கள் ஆகமாட்டா. ஓர் அரசாங்கத்துக்கு அடிப்படையாக ஓர் அரசியலமைப்புச் சட்டம் இருக்கலாம். ஆனால் அச்சட்டத்தில் சுதந்திரமான தேர்தல்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றம், சட்டமன்றத்துக்குப் பொறுப்பான நிருவாகம், நீதிமன்றத்தின் சுதந்திரம் முதலிய குடியாட்சிக் கூறுகள் கூறப்படாமலிருக்கலாம். அதாவது, எதேச்சாதிகார அரசாங்கத்துக்கு (மக்களால் கட்டுப்படுத்தப்படாத அரசாங்கத்தை நிறுவுவதற்கு) ஓர் அரசியலமைப்புச் சட்டத்திலேயே வழிசெய்யப்பட்டிருத்தல் கூடும். எடுத்துக்காட்டாகப் பிரிட்டிசாரின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் செயற்பட்ட அரசாங்கங்கள் எதேச்சாதிகாரமாக (அதாவது மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமல்) செயற்படுவதற்குக் கி.பி. 1861, 1892, 1909-ஆம் ஆண்டுகளில் பிரிட்டிசுப் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்தியக் கவுன்சில்கள் சட்டங்கள் (Indian Councils acts) வழிசெய்தன. எனவே இந்திய அரசாங்கத்தை நிறுவிய இவையெல்லாம் அரசியலமைப்புச் சட்டங்கள் (Constitutional laws) என்றும், இவற்றின்படி அமைக்கப்பட்ட இந்திய அரசாங்கம் ஒரு குடியாட்சி அரசாங்கம் ஆகாது என்றும், அது ஓர் எதேச்சாதிகார அரசாங்கமே என்றும் கூறலாம்.

அரசியல் முறைமைக்கு உட்படுகை என்பதைப் பற்றி மூன்றுவகையான கருத்துகள் இருக்கின்றன. முதலாவது அரசியலமைப்புக்கு உட்படுகைபற்றி மேற்கத்தியக் கருத்து, அரசியலமைப்பு என்பது ஒரு குறிக்கோளை மட்டும் கூறுவது ஆகாது; அது அந்த நோக்கத்தை அடையும் வழிகளையும் கூறுவது ஆகும். அது கூறும் நோக்கம் மக்களுடைய பாதுகாப்பும் மக்களுடைய உரிமைகளைக் காப்பதும் ஆகும்; அது மதிப்பீட்டு ஆய்வுக்கு உட்படாததாகவும் (Value free), மதிப்பீட்டாய்வுக்கு உட்பட்டும் (Value laden), குறிக்கோளியல்பு உடையதாகவும் (Normative), செயலறிவு சார்ந்ததாகவும் (Empirical) இருக்கிறது. இக்கருத்தின்படி அரசாங்கம், அரசியலமைப்பின் குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டிய கடமையினால் கட்டுப்படுத்தப்படுகிறது. இதில் அரசுக்கு ஓர் அரசியலமைப்புச் சட்டம் உண்டு. இந்தச் சட்டத்தின் வாயிலாக அரசாங்கம் ஒரு வரம்புக்குட்பட்ட அரசாங்கமாகச் செயற்படுகிறது. இதற்கு எடுத்துக் காட்டுகளாக, பிரிட்டிசு, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றின் அரசாங்கங்களைக் கூறலாம். இவற்றில் அரசியலமைப்புச் சட்டமே தலைமையானது; அதனால் வரம்புக்கு உட்படுத்தப்பட்டுத்தான் அரசாங்கம் இயங்குகிறது. பிரிட்டனில் வயதுவந்தோருக்கு வாக்குரிமை, சுதந்திரமான தேர்தல்கள், பாராளுமன்றத்துக்குப் பொறுப்புடைய நிருவாகம், சுதந்திரமான நீதித்துறை ஆகிய குடியாட்சிக் கூறுகளை உடைய அரசியலமைப்பு இருக்கிறது. இதற்கு ஏற்பவே அரசாங்கம் செயற்படுதல் வேண்டும்;எனவே அரசியலமைப்புத்தான் அரசாங்கத்தைவிட உயர்வானது. அதுவே குறிக்கோளும் ஆகும். அமெரிக்க நாட்டிலும் குடியாட்சி அரசாங்கத்தை நிறுவியுள்ள அரசியலமைப்புச்சட்டந்தான் மேலானது.

அரசியலமைப்புக்கு உட்படுகையைப்பற்றி சோவியத்தின் கருத்து இண்டாவது வகையாகும். இதன்படி அரசியலமைப்பு என்பது ஒரு நோக்கம் அல்லது குறிக்கோள் அன்று; அது ''விஞ்ஞான சோசலிசம்'' என்னும் குறிக்கோளை அடைவதற்குரிய ஒரு வழியேதான். எனவே அஃது அரசாங்கத்தைவிட மேலானது ஆகாது. தொழிலாளருடைய சருவாதிகாரத்தினால் கையாளப்படக்கூடிய ஒரு கருவியாகத்தான் உள்ளது. சோவியத்துச் சட்டத்துக்குட்பட்டவையே மற்றெல்லாச் சட்டப் பிரிவுகளும் ஆகும். எனவே இது மேற்கத்திய அரசியலமைப்புக்கு உட்படுகையை ஒத்துக்கொள்ளவில்லை.

அரசியலமைப்புக்கு உட்படுகையைப் பற்றிய மூன்றாவது கருத்து வளர்ந்து வரும் நாடுகளில் (Developing Countries) காணப்படுகிறது. இது மேற்கத்தியக் கருத்துக்கும்சோவியத்துக்கருத்துக்கும் இடைப்பட்ட கருத்தாகும். இது அரசியலமைப்பை உயர்வானதாகக் கருதினாலும், அதனை ஆளும் கட்சியார் தம் விருப்பம்போல் மாற்றக் கூடியதாகவும் கருதுகிறது.

அரசியலமைப்புக்கு உட்படுகை என்ற போக்கு வெற்றியாகச் செயற்படுவதைப் போர், நெருக்கடி நிலை, சமூக- பொருளாதார நிலைகள் சீர்கெடுதல் ஆகிய காரணிகள் தடுக்கின்றன. போர்க்காலத்தில் நாட்டின் பாதுகாப்புக்கு வேண்டியவற்றைச் செய்யும் போது அரசாங்கம் துல்லியமாக அரசியலமைப்பு விதிகளைப் பின்பற்ற இயலாமல் சூழ்நிலைகள் தடுக்கின்றன. கட்சிப் பூசல்கள், வேலை நிறுத்தங்கள், கலகங்கள் முதலியவற்றால் அரசாங்கம், அரசியலமைப்பு விதிகளை ஒட்டிச் செயற்பட முடியாமற் போகிறது. பல்வேறு சமூக வகுப்புகளுக்கிடையேயும், நல்லுறவு ஏற்படாமல் வகுப்புப் பூசல் தோன்றும்போதும், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய வகுப்பாருக்குத் தங்கள் உரிமைகளைக் கையாளக் கூடிய ஆர்வம் இல்லாத நிலையிலும், அரசாங்கம் அரசியலமைப்பு விதிகளையொட்டிச் செயற்பட முடியாத நிலைமை உண்டாகிறது. அரசியலமைப்புக்கு உட்படுகை என்ற நிலையை வளர்ப்பதற்கு ஏற்ற காரணிகளும் இருக்கின்றன. அவற்றுள் முதலாவது, தேசியம் என்னும் உணர்வு ஆகும். இந்த உணர்வு மக்களிடையே, அவர்கள் எல்லோரும் ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்தையும் ஒற்றுமையையும் தோற்றுவிக்கிறது. இதனால் நாட்டின் அரசியலமைப்பைப் பின்பற்றியே அரசாங்கம் செயற்படுதல் வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். இரண்டாவது, குடியாட்சி முறையும், வரம்புக்குட்பட்ட அரசாங்கம் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதால் அரசியலமைப்புக்கு உட்படும் போக்கைக் குடியாட்சி முறை வலுப்படுத்துகிறது. மூன்றாவது, சோசலிசக் கோட்பாடு அரசியலமைப்புக்கு உட்படுகை என்ற போக்கை வலுப்படுத்துகிறது. சோசலிசக் கருத்துகளை அரசியலமைப்புக்குள் புகுத்தினால், அக்கருத்துகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் செயற்படுகிறது. நான்காவது, கூட்டாட்சி அரசியலமைப்பும் இத்தகைய நிலைக்குச் சாதகமாக இருக்கிறது. இவ்வரசியலமைப்பில், நடுவண் அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் அரசியலமைப்புச் சட்டத்தினால் தத்தமக்குக் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கையாள வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றன. ஆகையால் இவை அரசியலமைப்பு விதிகளுக்கு மாறாகச் செயற்படுதல் இயலாது என்பது தெளிவாகத் தெரிகிறது. ஐந்தாவது, சர்வதேசக் கோட்பாடு (Internationalism), ஒரு நாட்டின் அரசாங்கம், மற்ற நாடுகளின் அரசாங்கங்களின் உரிமைகளை மதித்து நடத்தல் வேண்டும் என்றும், அப்பொழுது தான் அதனுடைய உரிமைகள் மற்றவற்றால் மதிக்கப்படும் என்றும் தெளிவாக உணர்த்துகிறது.

பா.சு.

**அரசியல் விடுதலையும் பொருளாதார முன்னேற்றமும்**: இங்கிலாந்து, பிரான்சு, செருமனி, ஆலந்து, பெல்சியம் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகள், கி.பி. 18,19-ஆம் நூற்றாண்டுகளில் ஆசியா, ஆப்பிரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகள், தென் அமெரிக்க மண்டல நாடுகள் ஆகியவற்றைத் தங்கள் தலைமையின் கீழ்க் கொண்டு வந்தன. இத்தலைமை வாணிக வளர்ச்சியினாலும் பொருளாதாரச் சுரண்டுதல் காரணமாகவும் வளர்ச்சியடைந்தது. அரசியல் விடுதலையை இழந்த இந்தியா, பர்மா, இலங்கை, அரேபியா, மலேசியா, இந்தோனேசியா, ஆப்பிரிக்கா தென்அமெரிக்காவில் உள்ள பல நாடுகள் ஆகியவை குடியேற்ற நாடுகள் என்ற அடிமை நிலைக்குள் வந்தன. குடியேற்ற ஆட்சியில் அகப்பட்ட நாடுகள் எவ்விதப் பொருளாதார முன்னேற்றமும் அடைய முடியவில்லை. குடியேற்ற ஆட்சியாளர்கள் நாட்டைச் சுரண்டிச் செல்வத்தைத் தங்கள் நாடுகளில் குவித்ததன் காரணமாக மக்களிடையே வெறுப்புணர்ச்சி தோன்றியது.

உரிமை இழந்த நாடுகளுக்கு மேலாதிக்கத்தின் கீழ் இருக்கக்கூடிய நிலை ஏற்பட்டது. பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிகளைத் தேர்வு செய்வதற்குரிய உரிமை, இந் நாடுகளுக்கு இல்லை. குடியேற்ற நாடுகள் மூலப் பொருள்களை மட்டும் உற்பத்தி செய்யும் நாடுகளாக இருந்தன. இவை குடியேற்றச் சக்திகளின் உற்பத்தித் தொழில் துறைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்களை மட்டும் வழங்கி வந்தன. மேலும், குடியேற்றச் சக்திகள், இந்நாடுகளைத் தாங்கள் உற்

பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்கான அங்காடிகளாகப் பயன்படுத்தின. குடியேற்ற நாடுகளில் தொழில் துறைகள் ஊக்குவிக்கப்படவில்லை. வழிவழியாக வந்த தொழில்களை நசுக்கி, மிகுந்த கட்டுப்பாடுகளைப் புகுத்தின. இக் கட்டுப்பாடுகள் வல்லரசுகள் உற்பத்திசெய்யும் பொருள்களோடு போட்டி போட்டு விற்கக் கூடிய விலை, தரம் ஆகியவற்றை இழக்கச் செய்தன.

வல்லரசுகளின் நிருவாகத்திற்கு உதவுகின்ற முறையிலேயே கல்வி முறை உருவாக்கப்பட்டது. அக் கல்வி முறை, மரபு வழிக் கல்வி முறையையும் நாட்டின் ஆற்றல், தொழில்நுட்பம் முதலியவற்றையும் சீர்குலையச் செய்தது. அது மக்கள் பிற்பட்ட நிலையில் வாழுமாறும் அறியாமையிலேயே ஆழ்ந்திருக்குமாறும் திட்டமிட்டுச் செயற்படுத்தப்பட்டது. தொழில்துறை முன்னேற்றம், தொழில்நுட்ப முன்னேற்றம், வேளாண்மை முன்னேற்றம் ஆகியவற்றிற்கு அக்கல்வி முறை எந்தவித முதன்மையும் அளிக்கவில்லை. இங்கிலாந்து தன் கீழடங்கிய நாடுகளில் இரயில்வே அமைப்புகளையும் நிருவாக முறைகளையும் சாலை வசதிகளையும் செய்தித் தொடர்புகளையும் தன் தலைமையை நிலை நாட்டும் வகையில் தன்னல நோக்குடன் ஏற்படுத்திக் கொடுத்திருந்தன என்பதில் எந்தவித ஐயமுமில்லை. எனினும். இவை பொருளாதார முன்னேற்றத்திற்குத் தேவையான அடிப்படை நிலையில் சிறிதும் வேரூன்றவில்லை. இந்த நிலை, அரசியல் விடுதலை பொருளாதார முன்னேற்றத்திற்கு மிகத் தேவை என்ற உணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி எழுச்சியை உண்டுபண்ணியது. இந்த எழுச்சியைப் பெற்ற நாடுகளில் முதலிடம் பெற்றது இந்தியா. இதனைப் பின்தொடர்ந்து இந்தோனேசியா, பர்மா, இலங்கை, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா முதலிய நாடுகளில் உரிமை வேட்கை தோன்றியது. சீர்குலைந்த பொருளாதார நிலை, வறுமை, பசி, பட்டினி, நோய் ஆகியவையே விடுதலை வேட்கைக்கு மூல காரணமாயிருந்தன. அரசியல் விடுதலையே பொருளாதார விடுதலைக்கு வழிவகுக்கும்; பொருளாதார விடுதலையே பொருளாதார முன்னேற்றத்தை அடையச் செய்யும் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அரசியல் அடிமை நிலைதான், பின்தங்கிய பொருளாதார நிலைக்குக் காரணம் என்பதைக் குடியேற்ற நாட்டு மக்கள் உணர்ந்தனர். அரசியல் விடுதலையைப் பெற்றுவிட்டால், விரைவான பொருளாதார முன்னேற்றம் உறுதியாக ஏற்படும் என்ற உணர்வு பெரும்பான்மையான குடியேற்ற நாட்டு மக்களுக்கு ஏற்பட்டது. இந்த நிலை எப்பொழுதும் உண்மையாய் இருப்பதில்லை. இங்குச் சில எடுத்துக்காட்டுகளைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

இந்தியா விடுதலை பெற்றதிலிருந்து பொருளாதார முன்னேற்றத்திற்கு உரிய நல்ல அடிப்படையை ஏற்படுத்தி உள்ளது. தன் தேவையில் சிக்கன எல்லையைப் பெற்றுள்ளது. மக்கள் தொகைப் பெருக்கம் மிகுதியாக ஏற்பட்ட போதிலும், உணவு உற்பத்தி ஏறத்தாழ மூன்று மடங்காகப் பெருகி உள்ளது. பசுமைப் புரட்சியின் விளைவாகப் புதுவகை நெல், கோதுமை, சோளம், தினை ஆகியவற்றின் உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதிகள் விரிவுபடுத்தப்பட்டு, ஏறக்குறைய எல்லா வகையான உணவுத்தானியங்களின் உற்பத்தியும் பெருகியுள்ளது. இரும்பு, நிலக்கரி, சிமெண்டு, எந்திரக் கருவிகள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் அடிப்படைத் தொழிற்சாலைகளும், அவற்றோடு தொடர்புடைய தொழிற்சாலைகளும் குறிப்பிடத் தக்க முன்னேற்றத்தை எட்டி உள்ளன. இதே முன்னேற்ற நிலையை நுகர்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் எய்தி உள்ளன. மக்களுக்குத் தேவையான எல்லா வகை நுகர்பொருள்களையும் உற்பத்தி செய்வதில் இவை நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளன. இவற்றோடு கூட எந்திரப் பொருள்கள், துணி உற்பத்திக்கு உரிய எந்திரப் பொருள்கள், மின்னியக்கப் பொருள்கள் போன்ற எண்ணற்ற பொருள்களை இந்தியா வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது.

வழிவழியாக அனுப்பி வரும் பொருள்களாகிய தேயிலை, சணற் பொருள்கள், இவைபோன்ற ஏனைய முதன்மையான பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்கிறது. அரசியல் விடுதலை எவ்வாறு பொருளாதார முன்னேற்றத்தை உண்டுபண்ணும் என்பதற்கு இந்தியா ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும். உலகிலுள்ள தொழில் துறை நாடுகளுள் இந்தியா பத்தாம் இடத்தைப் பெற்றுள்ளது என்றால், அதற்குக் காரணங்கள் முன்னேற்ற வழிமுறைகளே. இந்தியா பெரும்பாலான புதுவகைக் கருவிகளையும் இணைத்து உருவாக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றுள்ளது. அன்றியும், படைகளுக்குத் தேவையான பொருள்களைத் தானே உற்பத்தி செய்கிறது. போர்க் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு முன்னேற்றங் கண்டுள்ளன.

பல குடியேற்ற நாடுகளின் முன்னேற்ற வழிமுறைகளை ஆராயும்போது, இந்தியா முதன்மையான எடுத்துக்காட்டாகத் திகழவில்லை. இந்தியாவை விட முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதற்கு வேறு சில நாடுகள் சான்றுகளாகத் திக்ழ்கின்றன. இவ்வாறு சான்றுகளாகத் திகழும் நாடுகளுள் ஒன்று மலேசியா. இங்குப் பொருளாதார முன்னேற்றம் குறிப்பிடத்தக்க அளவு ஏற்பட்டுள்ளது. ஒரு நகரம்

மட்டுமாகவே அமைந்த நாடு, எவ்வாறு மிக விரைவாக முன்னேற முடியும் என்பதற்குச் சிங்கப்பூர் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். இதற்கு எதிரிடையாக, இந்தோனேசியா முன்னேற்ற நிலையில் மந்தமாக உள்ளது. உணவு உற்பத்தியில் தன் தேவையை நிறைவு செய்யக் கூடிய நிலையைப் பெற்றிருந்தாலும், பர்மா இன்றும் மிகப் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகிறது. விடுதலை பெறுவதற்கு முன்னால், அரிசி ஏற்றுமதி செய்வதில் பர்மா மிகப் பெரிய நாடாகத் திகழ்ந்தது. இப்பொழுது அந்த நாட்டினுடைய ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது. சுற்றுலாப் போன்ற துறைகளில் இலங்கை சில முன்னேற்றத்தைக் கண்டிருந்தாலும், அதனுடைய தோட்டத் தொழிலிலும் தொழில் துறைகளிலும் எவ்வளவு முன்னேற்றம் கண்டிருக்க வேண்டுமோ அவ்வளவு முன்னேற்றமில்லை. அடுத்து 1971இல் உருவான பங்களாதேசமும் மிகப் பின்தங்கிய நிலையில் உள்ளது.

ஆப்பிரிக்காவின் நிலை மிகவும் வளராநிலையுடையது. பின்தங்கிய நிலைக்குப் பழைய குடியேற்ற ஆட்சியாளர்களே காரணம் என அவர்கள்மீது அடிக்கடி குற்றம் சுமத்தப்படுகிறது. பின்தங்கிய நிலைக்குக் குடியேற்ற ஆட்சியாளர்கள்தாம் காரணம் என்பது முழுமையான உண்மை அன்று. நைசீரிய நாடு பல ஆண்டுகள் விடுதலையுடன் இயங்கியும் தரமான, மிகுந்த எண்ணெய் வளம்பெற்றிருந்தும். இலட்சக் கணக்கான நைசீரிய மக்கள் சேரிகளில் வாழ்கிறார்கள்; நகரத்தில் பிச்சைக்காரர்கள் காணப்படுகிறார்கள். இது மிக்க வியப்பை உண்டுபண்ணுகிறது. நாட்டின் முதன்மையான நகரம் நீர் ஓடைகள் குறைபாடுடையனவாகவும், நல்ல சாக்கடை வசதி இல்லாதனவாகவும், மருத்துவ வசதி, கல்வி வசதிகள் ஆகியவற்றில் பற்றாக்குறை உடையனவாகவும் காணப்படுகிறது. இவ்வளவு பற்றாக்குறைகள் இருந்த போதிலும், புதிய தலைநகருக்கான கட்டுமானப் பணிகள் 1600 கோடி தாலர் செலவில் தொடங்கப்பட்டுள்ளன. அரசியல் விடுதலை பெற்ற நாட்டை எதிர்நோக்கியுள்ள முக்கிய சிக்கல்களுள் இதுவும் ஒன்று. எவற்றிற்கு முதலில் தலைமை தரப்பட வேண்டுமோ, அவற்றிற்கு முதலில் தலைமை தரப்படவில்லை. நைசீரியா இப்பொழுது மிகத் தாழ்ந்த பொருளாதார நிலையில் உள்ளது. வேளாண்மை புறக்கணிக்கப்பட்டமையால் மக்கள் பிழைப்புத் தேடி நகர் நோக்கிச் செல்கின்றனர்.

அரசியல் விடுதலை, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி காட்ட வேண்டும். தான்சானியாவில் சூலியசு நயரேர் (Julius Nyrere) போன்ற தன்னலமற்ற தலைவரால் கூடத் தேவையான அளவு பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வருவதில் வெற்றி காண முடியவில்லை. உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக அவர் வேளாண்மையில் மேற்கொண்ட சோதனைகள் உற்பத்திக்கு எதிராக அமைந்துவிட்டன. பெரும்பான்மையான ஆப்பிரிக்க நாடுகளில் குடியேற்றச் சக்திகளால் நன்கு அமைக்கப்பட்ட சாலைகளும், சிறப்பாக அமைக்கப்பட்ட இரயில்வேக்களும், ஏனைய சாதனங்களும் இப்பொழுது பழுதுபட்ட நிலையை அடைந்துள்ளன. தொழிற்சாலைகளின் முன்னேற்றத்திற்குத் தேவையான எந்திரங்களின் உதிரிப்பாகங்களை வாங்குவதற்கும், தேவைப்பட்ட பிற பொருள்களை வாங்குவதற்கும் உரிய அயற் செலாவணிப் பற்றாக்குறை அங்கு ஏற்பட்டுள்ளது. அரசியல் விடுதலை அடைந்த பிறகும் செல்வ வளம் நிறைந்த குடியேற்ற நாடு ஒன்று ஒழுங்கற்ற நிலைக்கு இறங்கி வந்திருக்கிறது என்பதற்கு உகாண்டா ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். அங்கு எவ்வகைப்பட்ட பொருளாதார முன்னேற்றமும் இல்லை. சயரே (காங்கோ) என்ற நாடு சிறிதளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. கென்யாவில் கூடச் சில கடினமான பொருளாதாரச் சிக்கல்கள் உள்ளன. குடியேற்ற ஆட்சியாளர்களைக் குறை கூறுவது என்பது எளிது. ஆனால், இவ்வாறு குறை கூறுவதனால் பொருளாதாரச் சிக்கல் தீர்ந்துவிடாது. ஐவரி கோசுட்டு (Ivory Coast) போன்ற சில நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அங்குள்ள மக்கள் அதனால் வளமோடு வாழ்கின்றனர்.

அரசியல் விடுதலை, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழியமைக்க முடியும். ஆனால், இதற்கு உயர்ந்த அரசியல் பொறுப்புணர்வு தேவை. அதே நேரத்தில் எது முதலில் செய்யப்பட வேண்டும், எது அடுத்துச் செய்யப்பட வேண்டும் என்ற முறையான ஒழுங்கும் தேவைப்படுகிறது. எது தங்களால் இயலும் என்பதை அறிந்து கொள்ளுதற்கும், நாட்டின் சக்திக்கு ஏற்ற செயல் எது என்ற நோக்கவுணர்வுக்கும் இது வழிகாட்டும். எங்கெங்கு எளிமை தேவைப்படுகிறதோ, அங்கங்கு அவை வற்புறுத்தப்பட வேண்டும்; அவற்றை மக்கள் உணரும்படி செய்ய வேண்டும்; நடைமுறைப்படுத்தப்படவும் வேண்டும். உயர்ந்த சேமிப்பும் தக்க முதலீடும் இல்லாமல் பொருளாதார முன்னேற்றம் என்பது கனவே. இன்றைய உலக அரங்கில், குறிப்பாக மேலை நாடுகளிலும் முன்னேற்றம் அடைந்த நாடுகளிலும் கல்வி, கடின உழைப்பு, தொழில் துறை, பொருளாதார நிலை பற்றிய உயர் ஆராய்ச்சி ஆகியவை அந்நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியுள்ளன. வளர்ந்து கொண்டிருக்கிற பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால், இது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது.

பொருளாதார முன்னேற்றம் மக்களிடையே ஒரு முழுமையான குறிக்கோளையும் சூழ்நிலையையும் உருவாக்கல் வேண்டும். இவ்வித நிலைக்கு வித்து விடுதலை. அவ்விடுதலை இராணுவ ஆட்சியையோ வல்லாட்சி முறையையோ உருவாக்கினால் பொருளாதார முன்னேற்றம் வெவ்வேறுவடிவங்களை எடுக்கும். உண்மையான பொருளாதார முன்னேற்றம் எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கும்; முதலீடு மிக்க வேலை வாய்ப்புகளை உண்டுபண்ணும்; ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும்; மக்கள் பொருளாதார முன்னேற்றத்தில் முழுமையாகப் பங்கேற்பார்கள். ஒரு சிலருக்கு மட்டும் வசதிகளும் செல்வமும் குவியாமல் எல்லா மக்களுக்கும் கிடைக்கும் ஒரு சூழ்நிலை உருவாகும்.

ஒவ்வொரு ஒன்றியமும், அதன் உறுப்பினர்கள் மூலம் தங்கள் தேவைகளை நன்கு அறிந்து தண்ணீர் வசதி, கல்வி, பாசன வசதி,சிறு தொழில்கள் வளர்ப்பு, வேலைவாய்ப்பு, சாலை அமைப்பு ஆகியவைபோன்ற காரியங்களை மக்களாட்சி முறையில் விவாதித்து முடிவெடுத்து, திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றும். ஆனால், முற்றிலுமாக ஒன்றியங்கள் நன்முறையில் செயற்பட அவற்றிற்குச் செயலுரிமையும் பண வசதியும் கொடுக்கப்படவில்லை. எனவே இச் செயல்களில் குறைபாடுகள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், காலப்போக்கில் இவ்விதமக்களாட்சிக் கொள்கை நாடு முழுவதிலும் பரவுமானால், அது நல்ல பொருளாதார முன்னேற்றத்தைக் கொண்டுவரு மென்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் இன்றியமையாதது. இந்தியாவின் முன்னேற்றத்திற்குச் சிறந்த காரணம் மக்களாட்சி முறை. இதனைப் பேணிக் காத்து எதிர்காலத்தில் கூடுதல் முன்னேற்றத்தைக் காட்ட வேண்டியது மக்களின் கடமையாகும்.

டி.கே.சா.சு.

துணை நூல்கள்:

**Benjamin Higgins**, "Economic Development", W.W. Norton and Company, New York ,1959.

**Singh**, S.P., "Underdevelopment to Developing Economics", Oxford University Press, Bombay, 1978.

**Tarlok Singh**, "India's Development Experience", Macmillan & Company, New Delhi, 1979.

**Das.** A., "Foundations of Gandhian Economics", Allied Publishers, New Delhi, 1979.

***அரசியலமைப்புச் சட்டம்:*** அரசியல் அமைப்பு (Consitution) என்றால் என்ன என்பதற்கு அறிஞர் பலர் விளக்கம் அளித்துள்ளனர். அரசாங்கத்தின் அமைப்பையும் அலுவல்களையும் பொறுப்புகளையும் பற்றிக் கூறும் விதிகளின் தொகுப்பே அரசியலமைப்பு என்கிறார் என்றி மெயின் (Henry Maine).

வளர்ச்சி பெற்ற அரசியற் சமுதாயம் தன்னைத் தானே ஆண்டுகொள்ள ஏற்படுத்திக்கொண்ட சட்டங்கள், வழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றின் தொகுப்பே அரசியலமைப்பு என்கிறார் பிரைசு பிரபு (LordByrice).

எனவே, அரசியலமைப்பு என்பது, அரசின் உறுப்பாகிய அரசாங்கத்தின் அலுவல்கள், அதிகாரங்கள், பொறுப்புகள் முதலியவற்றை விளக்கும் விதிகளின் தொகுப்பாகும்.

அரசாங்கத்தின் அடிப்படை அதிகாரம் பற்றிப் பல்வேறு கொள்கைகள் நிலவுகின்றன. அதிகாரம் அனைத்தும் இறைவனால் அளிக்கப்பட்டது என்பது ஒரு கொள்கை. அரசனும் குடிகளும் செய்து கொண்ட உடன்படிக்கையின் விளைவே இவ்வதிகாரம் என்பது மற்றொரு கொள்கை. அதிகாரம் முழுவதும் குடிகளுக்கே சொந்தம்; அவர்களிடமிருந்தே அரசாங்கம் இவ்வதிகாரத்தைப் பெறுகிறது என்னும் கொள்கை இக்காலத்தில் வலுப்பெற்றுள்ளது. 'இந்திய மக்களாகிய நாம் இந்த அரசியல் அமைப்புச் சட்ட மூலமாக இந்த அரசியல் அமைப்பை ஏற்றுச் சட்டமாக இயற்றி, இதனை நமக்கு நாமே அளித்துக் கொள்கிறோம்' என்பது இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் முன்னுரையாகும். அரசியல் அதிகாரம் மக்களால் அளிக்கப்படுவது என்பது இதன் கருத்தாகும். ஆனால், உண்மையில் அரசை ஒரு சிலரே நடத்த இயலும். அனைவரும் சேர்ந்து ஒருங்கே ஆள முடியாது. ஆகையால் அரசாங்கத்தின் பல்வேறு உறுப்புகள் எந்த எந்த எல்லைக்குள் இயங்க வேண்டும் என்று விளக்கப் பொதுமக்கள் எண்ணப்படி வரையறுத்துக் கூறும் அடிப்படைச் சட்டமாகிய அரசியலமைப்புச் சட்டம் ஒன்று வேண்டும்.

அரசியலமைப்புச் சட்டம் என்பது, அரசின் பல்வேறு உறுப்புகளின் அமைப்பையும் பணிகளையும் அவ்வுறுப்புகளிடையே இருக்க வேண்டிய தொடர்பையும் அவ்வுறுப்புகளுக்கும் மக்களுக்கும் இடையே இருக்க வேண்டிய தொடர்பையும் உறுதிசெய்து, ஒழுங்கு செய்யத் தேவையான விதிகள் அடங்கியது எனலாம். அரசின் இன்றியமையா அங்கங்கள் மூன்று. அவை சட்ட மன்றம் (Legislature), நிருவாக அமைப்பு (Executive), நீதி மன்றம் (Judiciary) என்பன.

அரசியலமைப்புச் சட்டமானது, சட்டங்கள் இயற்றுவதற்கு வேண்டிய நிறுவனங்கள், சட்டசபை உறுப்பினர், தேர்தல் நடத்த வேண்டிய முறை, சட்டங்கள்

இயற்ற வேண்டிய முறை, சட்டங்கள் இயற்ற வேண்டிய செய்திகள், நாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டுப் பாதுகாப்புக்காகப் படைகளை அமைப்பது, அவற்றின் பொறுப்பு, சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய முறை, வழக்குகளைத் தீர்த்து வைக்க நீதிமன்றங்களின் அதிகாரம், தீர்ப்பு ஆணைகள் முதலியன பற்றியது.

மேலும், மாநிலத்தின் ஆட்சி அதிகாரம் செல்லும் பகுதி, அப்பகுதியின் எல்லைகள், அதனுடன் இணைத்தல் அல்லது நீக்குதல், குடிகளாவதற்குரிய தகுதிகள் ஆகியவற்றையும் அது வகுக்கும்.

அரசியலமைப்பு பெரும்பாலும் எழுதப்பட்டதாகவே (Written Constitution) இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இந்தியா போன்ற சில நாடுகளின் அரசியல் அமைப்புகள் எழுத்து வடிவில் அமைந்துள்ளன. இங்கிலாந்தின் அரசியலமைப்பு மட்டும் எழுதப்படாத அரசியலமைப்பாக விளங்குகிறது (Unwritten Constitution). எழுதப்படாத அரசியல் அமைப்புகளைக் கொண்ட நாடுகளின் சட்டமன்றங்கள், அரசியல் அமைப்பை மாற்ற விரும்பினால் எளிதில் மாற்றி விடலாம். ஆனால், அமெரிக்க ஐக்கிய நாடுகள் போன்ற நாடுகளில் அதற்கென்று வகுக்கப்பட்டுள்ள விதிமுறையினைத் தழுவியே, அரசியல் அமைப்பினை மாற்ற இயலும். அன்றியும் நெகிழும் (Flexible) அல்லது நெகிழாத (Rigid) அரசியலமைப்பு என மற்றொரு வகை அரசியலமைப்பும் உள்ளது. எழுதப்படாத அரசியலமைப்பில் மாற்றங்கள் கொண்டு வருவது எளிது; எழுதப்பட்ட அரசியல் அமைப்பில் மாற்றங்கள் செய்யச் சில நடை முறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

உலகிலேயே மிகப்பெரிய அரசியலமைப்பினைக் கொண்டது இந்தியா. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 395 விதிகளும் 10 இணைப்புகளும் கொண்ட நீண்ட ஆவணமாகும்.

அனைத்து அதிகாரங்களும் சட்டங்களும் ஆணைகளும் ஒரே சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்திடமிருந்து பிறந்தால், அதனை ஒற்றையாட்சி முறை (Unitary Type) என்று கூறுவர். எடுத்துக்காட்டாக இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, சப்பான் ஆகிய நாடுகளைக் கூறலாம்.

கூட்டாட்சி முறை (Federal Type) நாடுகளுக்கு எடுத்துக்காட்டாக இந்தியா, அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, கனடா போன்ற நாடுகளைக் கூறலாம்.

உருசியா, பொதுவுடைமை அடிப்படையில் அமைந்த அரசாங்கத்தைப் பெற்றிருந்தபோதிலும், அது ''மக்களாட்சியில் அதிகாரக் குவிப்பு'' (Democratic Centralization) என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்த கூட்டாட்சி நாடே ஆகும்.

அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட நாடுகளில் அரசு செயற்பட வேண்டிய விதிமுறைகள் அனைத்தும் எழுதப்பட்டிரா. வரையப்படும் விதிகளுடன் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய முறைகளைப் பற்றி எழுதப்படாத வழக்கங்கள் (Customs) நாளடைவில் தோன்றி நிலைத்துச் சட்டத்துக்கு இணையாக வலுப்பெற்றுவிடும். இத்தகைய வழக்கங்களுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இங்கிலாந்து நாட்டு அரசருக்கு வழங்கப்பட்டுள்ள மறுப்பாணை (Veto)யைக் குறிப்பிடலாம். பாராளுமன்றம் இயற்றும் எச்சட்டத்தினையும் புறக்கணிக்கும் அதிகாரம் அரசருக்குச் சட்டப்படியாக இருந்தபோதிலும், இவ்வதிகாரத்தினைக் கி.பி. 1704–ஆம் ஆண்டு முதல், இங்கிலாந்து நாட்டு அரசர் எவரும் பயன்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. காண்க: இந்திய அரசியல் அமைப்புச் சட்டம்.

**அரசியலமைப்புத் திட்டங்கள்** நாடுகளின் அரசு எத்தன்மையதாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயம் செய்கின்றன. ''அரசியலமைப்பு என்பது அரசின் அதிகாரங்கள், மக்களின் உரிமைகள் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று சரிசெய்துகொண்டு ஒழுகும் விதிமுறைகளின் தொகுப்பேயாகும்'' என்கிறார் சி.எப். இசுடிராங்கு (C.F. Strong). அரசின் தன்மைகளைப் பொறுத்தே அரசியல் அமைப்புகள் உள்ளன. இதுவே ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் எனலாம்.

அரசியல் அமைப்புத் திட்டங்கள், அரசின் அங்கங்கள், அங்கங்களின் அதிகாரங்கள், அவற்றைச் செலுத்தும் விதம், மக்களின் அடிப்படை உரிமைகள், அரசியல் அமைப்புத் திருத்த வகைகள் ஆகியவற்றை வரையறை செய்ய வேண்டும்.

ஒரு நாட்டின் அரசியல் திட்டம் எழுதப்பட்டதாகவும் இருக்கலாம்; எழுதப் படாததாகவும் இருக்கலாம். இருப்பினும் அது அந்நாட்டின் அரசியல் சூழ்நிலையையும் நிருவாகத்தையும் பாதிக்கிறது. அதன் பாதிப்பில்தான் மக்களின் உயிரினும் மேலாகிய உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

அரசியல் அமைப்புத் திட்டங்கள் கீழ்க்காணுமாறு பிரிக்கப்படும். அவையாவன: 1) எழுதப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டம், 2) எழுதப்படாத அரசியல் அமைப்புத் திட்டம், 3) நெகிழும் அரசியல் அமைப்புத் திட்டம், 4) ஒற்றையாட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 5) கூட்டாட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 6) ஓரவைச் சட்டமன்றமுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 7) ஈரவைச்

சட்டமன்றமுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 8) பாராளுமன்ற நிருவாகமுறை அரசியல் அமைப்புத் திட்டம், 9) பாராளுமன்றமல்லாத நிருவாகமுறை அரசியல் அமைப்புத் திட்டம், 10) சட்டத்தின் ஆட்சி யுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 11) நிருவாகச் சட்டத்தின் ஆட்சியுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 12) அதிகாரப் பிரிவினையுடைய அரசியல் அமைப்புத் திட்டம், 13) அதிகாரம் ஒன்றிய அரசியல் அமைப்புத் திட்டம் என்பனவாகும்.

எழுதப்பட்ட அரசியல் திட்டம் ஆவணங்களில் எழுதப்பட்டிருக்கும். எழுதப்படாத அரசியல் அமைப் புத் திட்டம் ஆவணங்களில் எழுதப்பட்டிராது. ஆனால் அது நீதி மன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள், நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்படாத மரபு, வழக் கங்கள் ஆகியவற்றின் வடிவில் இருக்கும். எந்த ஒரு அரசியலமைப்பும் முழுமையாக எழுதப்பட்டதாகவோ, அல்லது முழுமையாக எழுதப்படாததாகவோ இருக் காது. ஆகவே இவையிரண்டிற்கும் உள்ள வேற்றுமை, வகையிலன்று, அதன் விகிதத்தைப் பொறுத்தேதான் உள்ளது. எடுத்துக் காட்டாக, இங்கிலாந்தில் எழுதப் படாத அரசியலமைப்புத் திட்டமும், இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவற்றில் எழுதப்பட்ட அரசியலமைப்புத் திட்டமும் உள்ளன.

நெகிழும் அரசியல் அமைப்புத் திட்டம் என்பது எளியமுறையில் திருத்தப்படுவது. இங்கு அரசியல் சட்டத்திற்கும் சாதாரணச் சட்டத்திற்கும் வேறு பாடு இல்லை. எல்லாச் சட்டங்களுக்கும் சாதாரண பெரும்பான்மை இருப்பின் போதுமானது. எழுதப் படாத அரசியல் அமைப்புத் திட்டம் எப்பொழுதும் நெகிழும் தன்மையுடையதாக இருக்கும். ஒருசில எழு தப்பட்ட அரசியல் அமைப்புத் திட்டங்களும் நெகிழும் தன்மையுடையதாக இருக்கும். இதற்கு நியூசிலாந்து அரசியல் அமைப்புத் திட்டம் எடுத்துக் காட்டாகும்.

நெகிழாத அரசியல் அமைப்புத் திட்டம் என்பது எளிதில் திருத்தப்பட முடியாத ஒன்று. இதற்குச் சிறப் புப் பெரும்பான்மை பலம் வேண்டும். இங்கு அரசியல் சட்டத்திற்கும் சாதாரணச் சட்டத்திற்கும் வேறு பாடு உண்டு. அரசியல் சட்டமே உயர்ந்தது. நெகி ழாத தன்மையுடைய அரசியலமைப்புகள் எல்லாம் எழுதப்பட்ட அரசியலமைப்பாகவே இருக்கும். எடுத் துக்காட்டு அமெரிக்க ஐக்கியநாடு, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் அரசியலமைப்புகளாகும்.

ஒற்றையாட்சியுடைய அரசியல் அமைப்புத் திட் டத்தின்கீழ் ஓர் அரசுதான் இயங்கும். அதுவே மத் திய அரசு. மத்தியப் பாராளுமன்றமே உயர்ந்தது. இங்கு மாநில அரசுகள்இல்லை. ஆகவே அதிகாரப் பங்கீடு தேவையில்லை. அதிகார ஒருங்கிணைப்பே இதன்சிறப்பு அமிசமாகும். மேலும் நிருவாக வசதிக் காக மத்திய அரசு பல துறைகளை ஏற்படுத்தும். இத்துறைகளுக்கு இருக்கும் அதிகாரங்கள் மத்திய அரசால் கொடுக்கப்பட்ட ''அளிக்கப்பட்ட அதி காரங்கள்'' ஆகும்.

கூட்டாட்சி அரசியல் திட்டத்தில் இரு அரசுகள் செயற்படும். அவை; மத்திய அரசும் மாநில அரசும் ஆகும். மத்திய சட்டமன்றமும் மாநிலச் சட்டமன் றங்களும் இங்கு உள்ளன. மத்திய-மாநில அரசுகளுக் கிடையே அதிகாரப் பங்கீடு உண்டு. இதையே அதிகா ரப் பங்கீடு என்று அரசியல் வல்லுநர்கள் கூறுவர்.

அதிகாரப் பங்கீடு இரு வழிகளில் செயற்படுத்தப் படும். முதலாவது, மத்திய அரசு சில அதிகாரங் களைத் தன்னுடன் வைத்துக்கொண்டு மீதமுள்ள அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுத்தல் ஆகும். இம்முறையில் மாநில அரசுகள் பலம் வாய்ந் தன. இவ்வழி அமெரிக்க ஐக்கியநாடுகளில் பின் பற்றப்படுகிறது.

அடுத்தது, மத்திய அரசு சில அதிகாரங்களை மாநில அரசுகளுக்குக் கொடுத்து விட்டு மீதமுள்ள அதி காரங்களைத் தன்னுடன் வைத்துக் கொள்ளுதலாகும். இம்முறையில் மத்திய அரசே பலம் வாய்ந்தது. இம் முறை கனடாவில் பின்பற்றப்படுகிறது.

இந்தியாவில் அதிகாரப் பங்கீடு மூன்று வழிகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

அவை, மத்திய அரசின் அதிகாரங்களைக் கொண்ட மத்திய அரசுப் பட்டியல், மாநில அரசுகளின் அதி காரங்களைக்கொண்ட மாநில அரசுப் பட்டியல், மத் திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் பொதுவாக அமைந்த 'பொதுப் பட்டியல்' என்பனவாகும். மேலும் மாநிலங்களுக்கு நேரடி அதிகாரங்களும் அளிக்கப்பட் டுள்ளன.

சட்டமன்றங்கள் அரசியலில் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. இவற்றால் மக்கள் தங்கள் அரசியல் பங்கை ஆற்றுகிறார்கள். மக்களின் பிரதி நிதித்துவம் இங்குத்தான் நிறைவேற்றப்படுகிறது. மக்களால்தான் ஆட்சி நடைபெறவேண்டும் என்ற தத்துவத்தின் கீழ் அமைவது இது. மக்களின் விழிப் புணர்ச்சி இதன் வாயிலாக உணரப்படுகிறது. ஆகவே கே.சி. வேர் என்ற அரசியல் அறிஞர் ''சட்டமன்றங் கள் அரசியல் அமைப்புத் திட்டத்தின் இரு கண்கள்'' என்றார். இங்குப் பிறந்தவைதாம் சட்டமன்றங்களும் அதன் பிரிவுகளும்; அவை ஓரவைச் சட்டமன்றம், ஈரவைச் சட்டமன்றம் எனப்படும்.

ஓரவைச் சட்டமன்றத்தில் கீழ்ச்சபை (மக்கள் சபை) மட்டுமே இயங்கும். ஈரவைச் சட்டமன்றத்தில்

கீழ்ச்சபை (மக்கள் சபை), மேல்சபை (மாநிலச்சபை கள்) ஆகிய இரண்டும் இயங்கும். ஈரவைச் சட்ட மன்றங்கள்தாம் பொதுவாக எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இந்தியா வில், உலோக்சபை (கீழ்ச்சபை) இராச்சியசபை (மேல் சபை) என்றும், இங்கிலாந்தில், பொதுமக்கள் சபை (கீழ்ச்சபை) பிரபுக்கள் சபை (மேல்சபை) என்றும் அமைந்துள்ளமையினைக் கூறலாம்.

சட்டங்கள் இயற்றுவதிலும், திருத்தங்கள் கொண்டு வருவதிலும் இச்சபைகளுக்கு இன்றியமை யாப் பங்கு உண்டு.

சுவிட்சர்லாந்தில் நேரடி மக்களாட்சி நடை முறையில் இருக்கிறது. மசோதாக்கள் சட்டங்களாக மாறுவதற்கும், திருத்த மசோதாக்கள் நிறைவேறு வதற்கும் மக்களின் ஒப்புதல் மிக அவசியம். இதைப் "பொதுமக்கள் வாக்கெடுப்பு" (ரெபரண்டம்) என்று அரசியல் வல்லுநர்கள் கூறுவர்.

மேலும் சட்ட முடக்கங்கள் ஏற்படும் காலங்களில் அதற்குத் தீர்வு காண்கிற வழிமுறைகளை அரசியல் அமைப்புத் திட்டங்கள் வகுத்துத் தருகின்றன.

நிருவாகக்குழு ஓர் அரசின் மற்றுமொரு முக்கியக் கூறாகும். இதன் முதன்மையான பணி சட்டம், அமைதி, ஒழுங்கு இவற்றை நிலை நாட்டுதல், பாதுகாப்பு, நியமன அதிகாரங்கள், நிதித் தொடர் பான பணிகள், நீதித் துறைப் பணிகள், நெருக்கடி நிலை அதிகாரங்கள், கடமைகள் ஆகியவற்றைப்பற்றி அமையும்.

நிருவாகக்குழு, பாராளுமன்ற நிருவாகக் குழு, குடியரசுத் தலைவர் முறை நிருவாகக் குழு, பன்மை நிருவாகக் குழு என மூவகைப்படும்.

பாராளுமன்ற முறை நிருவாகமானது "காபினட் நிருவாகமுறை" என்று அழைக்கப்படும். இம்முறை யில் இரு தலைவர்கள் இருப்பார்கள். ஒருவர் அரசின் தலைவர், மற்றொருவர் அரசாங்கத்தின் தலைவர். அரசின் தலைவர் உண்மையான அதிகாரமுடையவ ரல்லர். இவர் பெயரளவில் தலைவர் என்று அழைக் கப்படுகிறார். காபினட்டும், அதன் தலைவராகிய தலைமை அமைச்சரும் உண்மையான அதிகாரமுடை யவர்கள். இவர்கள் "கூட்டுக் கடமையுணர்ச்சி" என்ற கொள்கையின் அடிப்படையில் செயற்படுகிறார்கள். எல்லா அமைச்சர்களும் காபினட் உறுப்பினர்கள் அல்லர். ஆனால் எல்லாக் காபினட் உறுப்பினர்களும் அமைச்சர்கள் ஆவார்கள். காபினட் முழுபலம் உடைய தன் காரணமாக அது சர்வாதிகாரியாக மாற வாய்ப் புள்ளது. இதனைக் 'காபினட் சர்வாதிகாரம்' என்று கூறுவார்கள். இந்த நிருவாகக் குழு சட்டமன்றத் திற்குக் கடமைப்பட்டது. இதற்கு உறுதியான பதவிக் காலம் இல்லை. கீழ்ச்சபையின் நம்பிக்கையைப் பெற் றுள்ளவரையில்தான் இது பதவியில் இருக்கும். ஆகவேதான் காபினட் நிருவாக முறையில் பாராளு மன்றம் உயர்ந்தது என்பது கூறப்படுகிறது. எடுத்துக் காட்டு இங்கிலாந்து, இந்தியா முதலியனவாகும்,

சனாதிபதி நிருவாக முறையில், சனாதிபதியே அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஆவார். இம்முறையில் அமைந்துள்ள காபினட் அவருடைய அதிகாரத்திற்குட்பட்டது. இவரது பதவிக்காலம் நிலையானது; துரோகக் குற்றச்சாட் டின் மூலமாக அல்லாமல் இவரைச் சட்ட மன்றத் தினால் வெளியேற்ற முடியாது. காபினட் உறுப் பினர்கள் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் அல்லர். எடுத்துக்காட்டு அமெரிக்க ஐக்கிய நாடு ஆகும்.

பன்மை நிருவாக வகையில், அதன் அதிகாரம் ஒரு குழுவிடம் ஒப்படைக்கப்படும். இம்முறையில் பாராளுமன்ற நிருவாகத்தின் நன்மைகளும், சனாதி பதி நிருவாகத்தின் நன்மைகளும் ஒருங்கே இணைந் துள்ளன. எடுத்துக்காட்டு சுவிட்சர்லாந்து, சோவியத்து உருசியா ஆகியனவாகும்.

சுவிட்சர்லாந்தில் நிருவாக அதிகாரம் ஏழுபேர் கள் கொண்ட "பெடரல் கவுன்சி"லுக்குக் (Federal Council) கொடுக்கப்பட்டுள்ளது. சோவியத்து உருசியா வில் இவ்வதிகாரம் 33 பேர்கள் கொண்ட "பிரிசீடி யத்" திற்குக் (Presidiam) கொடுக்கப்பட்டுள்ளது. நீதித்துறை, அரசின் மற்றொரு முக்கியக் கூறாகும். "நீதித்துறையே ஒரு நாட்டின் அரசியல் அமைப்பின் தன்மையை நன்றாக விளக்குகிற விளக்கு" என்று இலாசுகி (Laski) கூறியுள்ளார். இத்துறையை ஏ.வி. டைசி (A.V.Dicey) என்பவர் சட்டத்தின் ஆட்சி, ஆட்சித்துறைச் சட்ட ஆட்சி என்று பிரித்துள்ளார்.

சட்டத்தின் ஆட்சியுள்ள அமைப்பில் ஒரேஒரு சட்டந்தான் செயற்படுத்தப்படும். அதுவே "சாதா ரணச் சட்டம்" எனப்படும். இங்குச் "சட்டத்தின் முன் யாவரும் சமம்" என்ற கோட்பாடு கடைப்பிடிக்கப் படும். ஒரே வகையான நீதிமன்றந்தான் இயங்கும். அதுவே "சாதாரண நீதிமன்றம்" ஆகும். எடுத்துக் காட்டு இங்கிலாந்து ஆகும்.

நிருவாகச் சட்ட ஆட்சியுள்ள இடங்களில் இரு வகையான சட்டங்கள் பின்பற்றப்படும். அவை பொது மக்களுக்கென இயங்கும் சாதாரணச் சட்டம், நிருவாக அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோர்க்கென இயங்கும் ஆட்சித்துறைச் சட்டம் எனப்படும். சாதாரண நீதி மன்றம், ஆட்சித்துறை நீதிமன்றம் என இரு வகை நீதிமன்றங்கள் செயற்படும்.

மேலும் நீதிமன்றங்களுக்கு நீதி மறுஆய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக ஒரு நீதிமன்றம், சட்டமன்றம் இயற்றிய சட்டம் அரசியலமைப்புக்குப் புறம்பாக அமைந்தால் அதை "அரசியல் சாசனத்திற்குப் புறம்பானது" என்று கூறி, அதை மாற்றி அமைக்கவோ தள்ளுபடிசெய்யவோ கட்டளையிடும். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, கி.பி. 1803–ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய நாட்டில் நடந்த மார்பாரி மாடிசன் வழக்கு ஆகும். இவ்வழக்கில் தலைமை நீதிபதி மார்சல் (Marshall) என்பவர் சட்டமன்றத்தால் (காங்கிரசு) இயற்றப்பட்ட "கி.பி. 1789 –ஆம் ஆண்டு நீதித்துறைச் சட்டத்தை" நீக்கம் செய்துவிட்டார். இதனால் இவர் நீதித்துறையின் உயர் அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டார். இவ்வதிகாரத்தின் வாயிலாக மக்களின் உரிமைகளைப் பறிக்கிற சட்டங்கள் நீக்குதல் செய்யப்பட்டு அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

அதிகாரப் பிரிவினையுடைய அரசியல் திட்டம் என்பது அரசியற் கூறுகளை மூன்றாகப் பிரிக்கிறது. சட்டமன்றம், செயற்குழு, நீதிந்துறை ஆகிய மூன்றும் சுதந்திரமாகச் செயல்படும். இக்கொள்கையை அரசியல் கலைக்கு அளித்தவர் மான்டெசுக்யூ (Montesquieu) என்ற பிரெஞ்சு அரசியல் வல்லுநர் ஆவர். இதனையே "அதிகாரப் பிரிவினை" என்று கூறுவர். எடுத்துக்காட்டு, அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகும்.

அதிகார ஒருங்கிணைப்புத் திட்டம் என்பது அரசின் மூன்று அதிகாரங்களும் ஒரே இடத்தில் குவிந்திருப்பது. குறிப்பாக, இங்கிலாந்தில் இம்முறை காணப்படுகிறது. அங்குச் சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றத்திற்கும், நிருவாக அதிகாரம் காபினட்டிற்கும், நீதித்துறை அதிகாரம் பிரபுக்கள் சபைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. அங்குப் பாராளுமன்றம் உயர்ந்தது.

மனித வாழ்விற்கு ஆதாரமாகச் சில அடிப்படை உரிமைகள் உள்ளன. இவைகளே அடிப்படை உரிமைகள் எனப்படும். இவைகள் உரிமைச் சாசனங்கள் வடிவில் காணப்படும். இம்முறையினால்தான் சிறுபான்மையினர் உரிமைகளும் பாதுகாப்பும் அமைகின்றன. ஏபியசுகார்ப்பசு (Habeas Corpus) மேண்டமசு (Mandamas), ரிட் ஆப் புரொகிபிசன் (Writ of Prohibition), கோ வாரண்டோ (Quo Warranto), செர்டியோராரி (Certiorari) என்ற ஆணைகளைப் பிறப்பித்து மக்களின் உரிமைகளை நீதிமன்றம் காக்கிறது.

ஆகவே ஒரு அரசியல் அமைப்புத் திட்டம் இவையனைத்தையும் கொண்டு திகழ வேண்டும். அப்போதுதான் மக்களுக்கு நிறைவான அரசியலைக் கொடுக்க முடியும்.

என்.எஸ்.ச.

துணை நூல்கள்:

**Appadurai**, A., "The Substance of politics", Oxford University Press, 1972.

**Herman Finar**, "The Theory and Practice of Modern Government", 1977.

***அரசியலில் ஆன்மீகம்*** என்பது இக்காலத்தில் கருத்திற் கொள்ள வேண்டியதோர் அரசியற் கருத்தாகும். அரசியலுக்கும் ஆன்மீகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பைக் காட்டுவது அரசியல் ஆன்மீகமாகும். "அரசு என்பது இயற்கையானது. இது மனிதத் தேவைகளிலிருந்து உருவாகி, மனித நல்வாழ்விற்காக நீடித்துள்ளது. எனவே அரசு இன்றி நல்வாழ்வு அமையாது. மனித நலத்திற்கும் முழுமை வாழ்விற்கும் இன்றியமையாத சிறப்புகள் அனைத்தையும் மனிதனுக்கு எட்டும்படி செய்கிற நிறுவனந்தான் அரசு" என்பது பண்டைய கிரேக்க அரசியல் அறிஞர்களின் கருத்து. சாக்ரட்டீசு, பிளேட்டோ ஆகியவர்கள் அரசியல் அறிவுக்கு வித்திட்ட கிரேக்க அறிஞர்கள் ஆவார்கள். இவர்கள் தத்துவஞானிகளுமாவர்; இகம், பரம் என மனித வாழ்வைத் தனித்தனியே பிரித்து அதனைச் சின்னாபின்னப்படுத்தி வன்முறை செய்யாதவர்கள். ஆகவே இவர்களது அரசியல் சிந்தனையில் ஆன்மீகம் என்பது அச்சாணியாக இருக்கும். இவர்கள் கூறும் சிறப்பு (Virtue) என்பது சமூக, அரசியலும், ஆன்மீகப் பொருளும் ஒருங்கே அடங்கிய ஒரு சொல்லாகும். இவர்களுக்குப் பின்வந்த அரிசுடாட்டில் பகுப்பாய்வு முறையைப் பின்பற்றி அரசியலையும், ஒழுக்கக் கூறுகளையும் தனித்தனியாக்க முனைந்து ஓரளவு வெற்றியும் கண்டார். கிரேக்கருக்குப்பின், உரோமானியரது அரசியல் சிந்தனையில் சட்டத்திற்கே சிறப்பான இடம் அளிக்கப்பட்டாலும் தெய்வீகச் சட்டம் எனும் அடிப்படைக் கருத்து மிகவும் வலியுறுத்தப்பட்டது.

ஆன்மா என்பதிலும், அது நிலைத்ததன்மை கொண்டது என்பதிலும், உண்மை, புனிதம், கடவுள், தத்துவம், சிறப்பு ஆகிய கருத்துகளுடன் பின்னிப் பிணைந்து செல்லும் கிரேக்க சிந்தனைக்குப் பிறகு, இடைக்காலத்தில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அரசியல் சிந்தனை என்பது, பெரும்பாலும் சமயம் சார்ந்த அரசியல் சிந்தனையாக மாறியது. திருச்சபையாளர் கருத்தில், அரசு என்பது மனித முழுமை வாழ்விற்குத் தேவையான நிறுவனம் என்பது ஒப்புக் கொள்ளப்படாது, அது பாவத்தின் கூலியாகத் தேவைப்படுகிற, ஆனால் கேடான ஒரு நிறுவனமாகத் தோற்றமளித்தது. ஆன்மீக நிலையிலிருந்து தவறி வீழ்ந்து, சிறப்புகளை இழந்து தவித்துப் பாவத்தின் பயனாக

அல்லற்படுகிறவர்களைத் தண்டிக்கும் நிறுவனமாக அரசும், அதற்கு நல்வழி காட்டி மனிதர்களின் நகரத்திலிருந்து, கடவுளின் நகரத்திற்கு மாந்தர்களை இட்டுச் செல்லும் நிறுவனமாகத் திருச்சபையும் கருதப்பட்டன. பண்டைய இந்திய அரசியல் சிந்தனையிலும் இதே கருத்தைக் காணலாம். ஆன்மீக நிலையிலிருந்த பொற்காலத்திலிருந்து தவறி வீழ்ந்து அச்சமே நிலவும் சூழ்நிலையில் வாடும் மக்களைக் காக்க அரசன் தோன்றினான். இதுவும் கடவுள் செயல் என்பது அங்குக் கூறப்படுகிறது. கிரேக்கச் சிந்தனையில் ஆன்மீகப் பொருள் புதைந்த சிறப்பு என்னும் சொல், பண்டைய இந்திய அரசியல் சிந்தனையில் 'தருமம்' என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகிறது. ஆட்சியின் நோக்கமும் பயனும் தருமமே. இடைக் காலத்திற்குப் பின் மறுமலர்ச்சிக் காலத்தில் ஐரோப்பாவில் ஆன்மீகம் என்பது, அரசியலிலிருந்து பிரிந்தது. இதற்கு முதல் முயற்சி செய்தவர் மாக்கியவல்லி. சமயம், ஒழுக்க நெறிகள் ஆகியவை அரசியலுக்குத் துணையானவை. இவை அரசியல் நோக்கத்திற்காகவே பயன்படக் கூடியவை என்னும் இவர்தம் வாதம் பெரும் அரசியல் ஆராய்ச்சியைத் தோற்றுவித்தது. இயற்கையானது, ஆன்மீகச் சிறப்பை நல்குவது எனும் கருத்துகள் மறைந்து, அரசு என்பது, ஒப்பந்தத்தின் வழியாக உருவானது என்று ஆப்சு(Hobbes), இலாக்கு (Locke), உரூசோ (Rousseau) போன்ற அறிஞர்கள் கருதினார்கள். அரசு மனிதனுக்கு இன்பத்தை அளிக்கவல்ல, பெருக்கவல்ல இயந்திரம் என்று பெந்தாம் (Bentham) போன்றவர்கள் கருதினார்கள். இவர்கள் கருத்தில் அரசியலில் ஆன்மீகத்திற்கு மிகுதியான இடமில்லை. எகல் (Hegel), கான்ட்டு (Kant) ஆகிய செருமானிய அரசியல் அறிஞர்களே, அரசியலில் மீண்டும் ஆன்மீகத்தை ஒருங்கிணைத்தனர். உலக ஆன்மா எனும் கருத்தை வலியுறுத்தும் எல் (Ell) என்பவர் அரசு என்பது, பூவுலகில் இறைவனின் தோற்றம் என்று குறிப்பிடுகின்றார். ஆன்மீகத்தையும் அரசையும் ஒன்றாக இணைத்த புரட்சிக்குப் பின், அரசியலில் பரம் சார்ந்த கருத்துகள் இடம் பெறுவது குறைந்து, இகவாழ்வு நலனும் நாட்டமும் மிகுந்தன. காரல் மார்க்சின் (Karl Marx) கருத்து, இத்தகைய போக்கிற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பொருள் முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு விளங்கும் காரல் மார்க்சின் கருத்துகள், ஆன்மீகச் சிந்தனையை அரசியலிலிருந்து அடியோடு விலக்கியது இயற்கையே; ஏனெனில் அரசு என்பது, வருக்கப் போராட்டத்தின் அடிப்படையில் ஏற்பட்டு, வருக்கப்போராட்டத்தை நிலைநிறுத்தி நீடிக்கச் செய்வது என்பது இவர்தம் கூற்று.

அரசியலில் மீண்டும் ஆன்மீகத்திற்கு இடமளித்து, இரண்டும் ஒருங்கிணையச் செய்ய முற்பட்ட அறிஞர்களுள், இருபதாம் நூற்றாண்டில் காந்தி அடிகள் தலையாய இடம் பெறுகிறார். சமயம் எனும் போர்வையிலிருந்து அரசியல், ஆன்மீகம் இரண்டையும் பிரித்தெடுத்து, நன்னெறியின் அடிப்படையில் இரண்டினையும் காந்தியடிகள் ஒருங்கிணைத்தார். விடுதலை, உரிமைகள், கடமைகள், சமுதாயம், தன்னைத் தானே ஆட்சி செய்து கொள்வது போன்ற பலவும், அரசியலில் ஆன்மீகம் இணைந்த கருத்துகளாக, அவர் எழுத்திலும் சொல்லிலும் வாழ்விலும் காணப்படுகின்றன. கடவுள், உண்மை, அன்பு ஆகியவற்றை ஒன்றாகக் காணும் அவர் வன்முறை தவிர்த்த அறச் சமுதாயத்தை ஆன்மீக அடிப்படையில் அமைக்க முற்பட்டார். அவரது குறிக்கோட் சமுதாயம், அறச்சமுதாயமாகவும் ஆன்மீகச் சமுதாயமாகவும் விளங்கியது. ஆனால் அதன் இறுதி, அரசு வடிவம் கொண்டதன்று. இன்று காணும் அதிகார அரசு என்பது, ஆன்மீகச் சமுதாயத்தில் தனக்கு இடமில்லாமல் மறைந்து ஒழிந்துவிடும் என்பது காந்தியடிகள் நம்பிக்கை. காந்தியடிகளின் பொருளாதாரக் கொள்கைகளும் கூட இத்தகைய ஆன்மீக அடிப்படையிலேயே அமைந்துள்ளன. பொதுவாக இன்று அமைந்துள்ள சமயம் சார்ந்த அரசுகளுக்கும் சமயச் சார்பற்ற அரசுகளுக்கும் எச்சரிக்கையாகவும் வழிகாட்டியாகவும் அமைந்துள்ள காந்தியம், அரசியலில் ஆன்மீகம் இடம் பெற வேண்டியுள்ளதை வலியுறுத்துகிறது எனலாம்.

சி.ஞா.

**அரசியலும் போர் நடப்பும்:** போரினை உருவாக்குவதும் அதன் விளைவுகளைச் சமாளிப்பதும் அரசாங்கத்தின் பணிகளாகக் கருதப்படுகின்றன. போர் என்பது, ஓர் அரசியல் குழுவின் பெயரால் மற்றொன்றின் மீது எதிர்ப்புணர்வு கொண்டு நிகழ்த்தப்படும் திட்டமிட்ட வன்முறைத் தாக்குதலைக் குறிப்பதாகும்.

மக்களைக் கொல்வதும், அவர்களின் இருப்பிடங்களையும் பொருள்களையும் அழிப்பதும் ஆகிய செயல்கள் மனிதவரலாற்றின் தொடக்கக் காலத்திலிருந்தே நடைபெற்று வருகின்றன. சில ஆண்டுக்கால வரலாற்றை நோக்கினாலும் மக்கட் சமுதாயம் மிகுதியான போர்களை மேற்கொண்டிருந்தமை புலனாகும். அக்காலத்தில் பேரரசுகளை உருவாக்குவதில் போர்கள் மிகவும் சிறப்பான பங்கினை வகித்தன. பழைய கல்வெட்டுகள் எகிப்து, மெசபடோமியா, உரோம் போன்ற தொன்மைப் பேரரசுகள் நிகழ்த்திய போர்களைப் பெரிதும் பாராட்டுகின்றன. தமிழில் உள்ள சங்க இலக்கியங்களும் புறப்பொருள் இலக்கண நூல்களும், இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசங்களும், கிரேக்க மொழியில் உள்ள இலியாது, ஒதீசியம் போன்ற நூல்களும், இலத்தீன் மொழியிலுள்ள ஏனீடு என்னும் இலக்கியமும், ஆங்கிலத்தில் உள்ள

ஆர்தர் மன்னரின் காவியமும், சேக்சுபியர் எழுதியுள்ள சூலியசு சீசர், மாக்பெத்து முதலிய உயர் நாடகங்களும் போரின் விளைவு, சாதனை, வெற்றி தோல்விகள் போன்றவற்றைச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றன. உணவு உற்பத்தி முறைகளில் முன்னேற்றம், பல நகரங்களின் தோற்றம், ஒருமுகப்படுத்தப்பட்ட அரசுகள் உருவானமை ஆகியன, தொடக்கக் காலப் போர்களுக்குக் காரணங்களாக அமைந்தன. சில மானிடவியலாளர், போர் நடப்பின் தோற்றத்தை விவசாயத்தின் தொடக்கத்தோடு இணைத்துக் கூறுகின்றனர். பாசன வசதிகள் ஏற்படுத்துவதற்கு முன்பு சிறுபகுதி நிலமே மதிப்புடையதாக இருந்தது. பாசன வசதியில் முன்னேற்றம், உரங்கள், உழுது வேளாண்மை செய்தல் போன்றவை உண்டாவதற்கு முன்பு அவை குறைந்த வளமுள்ளனவாக இருந்ததுடன் பல ஆண்டுகளாகத் தரிசாகவே கிடந்தன. இடம் மாறி மாறி வேளாண்மை செய்து கொண்டிருந்த முதுகுடிகள் ஓயாது தங்கள் வேளாண் நிலப் பரப்பினை விரிவுபடுத்த முற்பட்டபோது போர் நடப்புத் தவிர்க்க முடியாததாகியது. இபான் எனும் போர்னியா குடிகள் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் காடுகளை அழித்து விளைநிலங்களை உண்டாக்குவதற்கு மாறாக, காட்டை அழித்து விளைநிலம் உண்டாக்கியவர்களை வென்று அவர்கள் திருந்திய நிலப் பகுதிகளைக் கைப்பற்றினர்.

எல்லா மாந்தருமே போரினில் ஈடுபடுகின்றனரா என்பது மிக முக்கிய வினாவாகும். சில ஆராய்ச்சியாளர், போர் அனைத்துச் சமுதாயங்களிலும் காணப்படுவதாகக் கூறுகின்றனர். சீரான அரசியல் அமைப்பைப் பெற்றிராத சமுதாயங்களில் போர் நடப்புக் காணப்படுவதில்லை எனச் சிலர் மறுத்துரைக்கின்றனர். எடுத்துக்காட்டாக, மலேசியாவில் வசிக்கும் செமாய்ப் பழங்குடிகளிடையே போர்நடப்போ வன்முறைச் செயல்களோ அவற்றிற்கான கழுவாய் தேடுதலோ அறவே கிடையாது. அதே போன்று எசுகிமோ அல்லது கலிபோர்னிய இந்தியரிடையேயும் போர் முறை என்பது காணப்படவில்லை. ஆனால் எசுகிமோக்களிடம் தனிப்பட்ட வழிவழிப் பழிதீர்க்கும் எண்ணம் காணப்படுகிறது. எனவே போர்நடப்பு அந்தந்தச் சமுதாயத்தைப் பொறுத்து வேறுபடுகிறது எனலாம்.

ஆதிக்குடிகளிடையே போர் நடப்பு: கூட்டமாகத் திரிந்து ஒன்றுபட்டு உழைத்து வாழும் சமூகங்களில், சில அடிப்படைத் தேவைகளை அடைவதற்காகவும் பழிதீர்ப்பதற்காகவும் போர்கள் நிகழ்த்தப் பெற்றன. ஆசுத்திரேலியாவில் உள்ள முரன்கின் எனும் பழங்குடிகளிடையேயும், அருகிலுள்ள ஏனைய முதுகுடிகளிடையேயும் போர் நடப்பு முதன்மையான சமுகப் பணிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இத்தகைய திரிந்து வாழும் குழுவினர்களின் போர் நடப்புகளில், பொதுவாகப் போர்க் கருவிகள், போர்த் தந்திரங்கள் ஆகியன பயன்படுத்தப்படுவதில்லை. மேலும், இச்சமுதாயத்தினரிடையே குழுச்சண்டை காணப்படுவது மிகவும் அரிது.

பழங்குடிச் சமுதாயங்களில் திடீர்த் தாக்குதல் போன்ற போர்நடப்புகள் மிகுதியாகக் காணக் கூடியனவாகும். அவை மிகக் கொடுமையானவையாகவும் சாவினை உண்டாக்கக் கூடியனவாகவும் அமைவதால், அருகிலுள்ள சமுதாயம் எப்போதும் இன்னல்களை எதிர்நோக்கி இருக்க வேண்டியுள்ளது. எத்தனை தடவை, எந்த வகையில் ஆதிக்குடிகளிடையே போர்கள் நிகழும் என்பதைக் கணித்துக் கூற இயலாது. வெளியார் ஆதிக்கம், புதிய கருவிகள் கண்டுபிடிப்பு போன்றவற்றால், ஆதிக்குடிகளின் தொன்மை வழக்கப் போர் முறைகளில் பாதிப்புகள் ஏற்பட்டன. பெரும்பாலும் ஆதிக்குடிகளின் போர்முறை, கைப்பற்றுதல் அல்லது வன்கவர்தலை நோக்கமாகக் கொண்டது அன்று. அமேசான் பகுதிவாழ் இந்தியர்கள் தமக்குள் எவ்விதச் சண்டையிலும் ஈடுபடுவதில்லை. ஆனால் தங்கள் எதிரிகளாகிய பழங்குடிகளின் மீது போர்தொடுத்து அவர்களை முற்றிலும் அழிக்கும் நீண்டதொரு தாக்குதலை நிகழ்த்துகின்றனர். இதேபோன்று மெலனேசியாவில் உள்ள சாலமோன் தீவுகளில் கொள்ளையடித்தல், தலைகொய்தல் ஆகிய பழக்கமுடைய உரோலியானா பழங்குடிகள் தம்மைச் சுற்றியுள்ள சமுதாயங்களிலுள்ள பல்லாயிரக்கணக்கானவர்களைக் கொன்று அவர்களின் மக்கள் தொகையினைப் பெருமளவு குறைத்தனர். குரோ இந்தியர்கள் குழுக்களாக வாழுகின்றனர். அவர்களிடையே ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரிடமிருந்து குதிரைகளைக் களவாட முற்படும்போது அவர்களிடையே போர் நிகழுகிறது. துகும்டானி (Dugum Dani) மக்கள் சடங்கு முறையிலான போர் நடப்பைக் கொண்டிருந்தனர். அதனால் தங்கள் அருகில் வசிக்கும் பழங்குடிகளிடையே சீராகத் தங்கள் எல்லைப் பகுதிகளை உருவாக்கிக் கொண்டனர். செம்பாகா மாரிங் (Isembaga Maring) எனும் சமூகத்தினரிடையேயும் தங்கள் ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தப் போர்நடப்பு ஒரு வழியாகப் பயன்படுத்தப்படுகிறது. யானமாமோ எனும் பழங்குடிகள் தமக்கு அருகில் வசிக்கும் சில சமூகத்தாரிடம் போரையும், சிலரிடம் உடன்பாடுகளையும் கொண்டிலங்குகின்றார்கள். அவர்கள் தங்கள் ஆட்சி நிலப்பரப்பை விரிவுபடுத்திக் கொள்வதுடன் மனைவிகளைப் பெறுவதற்காகவும் சண்டையிட்டுக் கொள்கின்றனர். சில மானிடவியலாளர்கள், எதிர்ப்பு உணர்வுகள் கொண்ட இரு சமுதாயங்களிடையே கலப்பு மணத்தினால் உண்

டான உறவுகள், வாணிகம், இரு சமூகத்தினரிடையே முற்காலத்தில் இருந்ததாகக் கூறப்படும் தொடர்பு போன்ற காரணங்களால் போர் நடப்புத் தவிர்க்கப் படுகிறது என்று கூறுகின்றனர்.

புதிய சமுதாயங்களில் போர் நடப்பு முதுகுடி களின் போர் நடப்பிலிருந்து முற்றிலும் வேறுபடு கிறது. புதிய சமுதாயங்களின் போர் நடப்பினால் எதிர்ப்புணர்ச்சி அல்லது சினம் போன்றவை மிகச் சிறு பங்கே வகிக்கின்றன; விமானப் போர், ஏவு கணைச் சண்டை, பீரங்கிச் சண்டை போன்ற தனிமனி தனை நோக்கியதல்லாத போர்களில் ஈடுபடுவோர் தன் உணர்ச்சிக்கு இடங்கொடாது, தங்கள் உயர் அதி கார அமைப்புகளுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகின்ற னர். போர் நடப்பினை அகப்போர் நடப்பு என்றும் புறப்போர் நடப்பு என்றும் இருவிதமாகப் பிரிக்க லாம். அகப்போர் என்பது, ஓரேவிதமான பண்பாட்டு அலகினை உடைய அரசுச் சமுதாயங்களுக்கிடையே ஏற்படும் போரைக் குறிப்பதாகும். புறப்போர் நடப்பு, வேற்றார் இடத்தைக் கைப்பற்றும் போர் எனவும், பாதுகாப்புப் போர் எனவும் மேலும் இரு வகையாகப் பிரிக்கப்படும். முதல் வகை ஒருநாடு இன் னொரு நாட்டின் மீது கைப்பற்றும் நோக்கத்தோடு தொடுக்கும் போரையும், இரண்டாம் வகை ஒரு நாடு தாக்கப்படும்போது தாக்குண்டநாடு தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஈடுபடும் போரையும் குறிக் கும். உலகில் இதுவரை எண்ணற்ற போர்கள் நிகழ்ந்தபோதிலும் மிகவும் சிறப்பு வாய்ந்த போர் களாக முதல் உலகப்போரும், இரண்டாம் உலகப் போரும் கருதப்படுகின்றன.

வன்முறை என்பது இருவேறுபட்ட கருத்துக ளுடைய குழுக்களிடையேவெளிப்படும்திடீர் வெடிப்பு; வன்மைச் செயல்களையும், பகை, கோப உணர்வுக ளால் உந்தப்பட்டுப் பிறரின் உயிருக்கும் உடைமைக் கும் தீங்கிழைக்கும் விதமாகப் புரியும் செயல்களையும் குறிக்கும். கத்தியால் குத்திக்கொல்லுதல், கற்பழிப்பு, குடித்துவிட்டுப் பேசுதல், அமைதியான ஆர்ப்பாட்டங் களின் மீதான கொடுமையான அடக்குமுறை, அரசி யல் எதிரிகளைச் சிறையிடுதல், அடைக்கலம் அளித் திடும் நிறுவனத்திற்கு எதிரான கண்டனம், போர் நடப்பு, வழிவழிப்பகை, பனிக்கட்டியின் மீதான வளைகோல் பந்தாட்டம் ஆகியவை தனிப்பட்ட மனி தர்களுக்கும் குழுக்களுக்கும் செய்யப்படும் வன்முறை கள் எனலாம். சில சமுதாயங்களில் வன்முறை ஏற் றுக்கொள்ளப்பட்டதாகவும் போற்றத்தக்கதாகவும் கருதப்படுகிறது. சுக்கீ சமுதாயத்திலும் பிரேசிலின் அரசியல் உரைகளிலும் வன்முறைச் செயல்கள் போற் றத் தக்கவையாகக் கருதப்படுகின்றன. ஆனால் வினெசியூலான் யாரூரோ (Venezuelan Yaruro) சமு தாயத்தில் வன்முறை மிகவும் கீழ்த்தரமான செய் கையாகக் கருதப்படுகிறது.

போர் நடப்பிற்கான காரணங்கள் பின்வருமாறு கூறப்படுகின்றன: மனித மனத்தில் ஊறிப்போன போர்த் தினவு (Pugnacity) தான், ஒரு சமுதாயத்தைப் போரில் ஈடுபடுத்துவதில் முதன்மையான பங்கு வகிப் பதாகக் கூறப்படுகிறது. பகைமை உணர்வு தனி மனி தனிடையே மட்டுமன்றி மனிதக் குழுக்களிடையேயும் காணப்படுவதாகவும், இத்தகைய உள்ளார்ந்த பகைமை உணர்வு மரபு வழிப்பட்ட ஆற்றல் என்றும் சொல்லப்படுகிறது.

அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் வெறுப்புணர்வு பகைமையை வளர்த்துப் போரில் கொண்டு செல் கிறது. இதனால் வெறுப்புணர்வு மட்டுமே போருக் கான உண்மையான காரணம் என்று கொள்ள முடி யாது. படை பலம் பொருந்திய ஒரு நாட்டில் அம்மக்க ளிடையே வெறுப்புணர்வு மிகுமானால் அது போர் உண்டாக வாய்ப்பாக அமைகிறது.

போர் நடப்பு மனித இனத்திற்கு மட்டுமே உரிய தாகச் சில மானிடவியலார் கருதுகின்றனர். மீட் என்பவர் போர் மனித குலத்தின் கண்டுபிடிப்பு என எடுத்துரைக்கின்றார். ஓரிடத்தில் முதன்முதலாகத் தோன்றிய போர் பிறகு எல்லா மக்களிடத்திலேயும் பரவத் தொடங்கியது எனும் கொள்கையுடையவர் களுள் ஒருவரான பெர்ரி எனும் அறிஞர், போர் முதன் முதலில் எகிப்தில் தோன்றியதாகவும், பிறகு உல கின் ஏனைய பகுதிகட்குப் பரவியதாகவும் கூறு கின்றார்.

மக்களின் வாழுமிட இயற்கைச் சூழ்நிலை போர் நடப்பில் மிகவும் சிறப்பான பங்கினை வகிக் கிறது. மனித வாழ்விற்கு உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் அடிப்படைத் தேவைகளாகும். மக்கள் தொகைப் பெருக்கத்தினால் இவை போதிய அளவு கிடைப்பதில்லை. அவற்றைப் பெறுவதற்காக ஒவ் வொருவரும் சிலசிக்கல்களை எதிர் நோக்கும் போது மனிதரிடையே கோப உணர்வு, கொந்தளிப்பு அடை கிறது. அது போர் நடவடிக்கைகளில் ஈடுபடச்செய்து விடுகிறது. மேலும், மக்கள் தொகைப் பெருக்கம் அச்சமுதாயத்தை மட்டும் தாக்கக்கூடிய கூறு அன்று; அது அருகிலுள்ள பிற சமுதாயங்களையும் தாக்கக் கூடியதாகும். மரக்கறி உணவையே சிறப்புணவாகக் கொண்டுள்ள குடிகளிடம் போர் நடப்பிற்கான சின உணர்வு குறைவாகவும், புலால் உணவு உண்ணும் சமுதாயத்திடம் இவ்வுணர்வு மிகுதியாகவும் இருப்ப தாகக் கூறுகின்றனர். ஆனால் இக்கூற்றை இதுவரை யாரும் மெய்ப்பிக்கவில்லை.

மனிதர்கள் சில குறிப்பிட்ட இலக்குகளை மற்றச் சில மனிதரின் அழிவின் வழியாக அடைவதற்காகப்

போர் உருவாக்கப்படுகிறது. இதற்காக மனிதர்கள் சண்டைகளில் கருவிகளைப் பயன்படுத்தும்போது அது போர் எனக் கூறப்படுகிறது. அமெரிக்காவின் தென்மேற்குப் பகுதியில் வசிக்கும் மொகாவே எனும் மக்கள், அச்சமுதாயத்தின் பண்பாட்டோடு ஒன்றிப் போன மந்திர, சமய நம்பிக்கைகளில் தூண்டப்படுவதால் போரினில் ஈடுபடுகின்றனர் என்று பாதியர் (Fathauer) என்பவர் கூறுகிறார். மேலும் நியூகோம்பு என்பவர் கூற்றுப்படி அமெரிக்கச் சமவெளி இந்தியர்கள், அவர்களின் சமூகப் பண்பாடு அமைந்த விதத்தில் போரினில் ஈடுபட்டனர் எனக் கூறுகிறார். போருக்கான இலக்குகள் போரின் தன்மையைப் பொறுத்தும் வேறுபடக்கூடியன. ஒவ்வொரு சமுதாயத்திலும் போர் நடப்பதற்கான இலக்குகள் வேறுபடுகின்றன. அவை பாராட்டு, நன்மதிப்பு, பழிதீர்த்தல் அல்லது வழிவழிப்பகை, சமூக முன்னேற்றம், மன எழுச்சி, சமயக் கடப்பாடு, அச்சம், சமூகப் போட்டிகள் முதலானவை ஆகும். பெண்கள், அடிமைகள் ஆகியோரைக் கவர்ந்து கீழ்ப்பணியச் செய்தல், நிலப்பரப்பை விரிவாக்குதல், கொள்ளை அல்லது சூறையாடுதல், வெற்றிச் சின்னங்களை அடைதல் ஆகியன பொருளாதாரச் செயல் நோக்கங்களாகும். பாதுகாப்புக்காகவும் போர்கள் அமைகின்றன.

குருதித்தொடர்பு, சமயம், உடைமை ஆகியவற்றின் பயனாகத் தோன்றிய சமுதாய அமைப்பில் போட்டிகள் மிகுதியாக இருக்கவில்லை. அந்த அமைப்பு எளிமையானதாக இருந்தது. உறவின் அடிப்படையில் அமைந்த தொன்மைச் சமுதாயத்தில் அயலவருக்கு இடம் இருக்கவில்லை. குருதித் தொடர்பு வலிமையிழந்த போது, அமைதியையும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட அதிகாரவன்மை தேவைப்பட்டது. அதிகார வலிமையுடைய வேந்தன் எல்லோரையும் அடக்கி ஆட்சியுரிமை பெறுகிறான். தனக்கு எவ்விதத்திலும் உறவாக அமையாத அயல் சமுதாயத்தை எதிர்த்துப் போர்புரியத் துணிகிறான்.

ஆயத்த நிலையில் இராணுவப் படையினைப் பெற்றிருக்கும் சமுதாயம், படைப்பலமற்ற சமுதாயத்தை மிகுதியாகப்போரில்ஈடுபடுத்துவதற்குரியகாரணத்தை இருவகையாக விளக்கலாம். முதலாவது ஆற்றல் மிக்க படை ஆயத்த நிலையைப் பெற்றுள்ள சமூகங்களின்ஆட்சியாளர்கள்படைப்பலம்குறைவாகப் பெற்றுள்ளதாகத் தாம் கருதும் அருகிலுள்ள சமுதாயத்தின் மீது போர் தொடுக்கத் தூண்டப்பெறுதல். பலம் குறைந்த நாட்டின் மீது தொடுக்கும் தாக்குதலுக்கு அது சிலசமயம் தன்னைத் தாக்கும் பலம் பொருந்திய நாட்டையே மலைக்கச் செய்யும் வகையில் எதிரடி கொடுப்பதும் உண்டு. இரண்டாவது ஒரு நாடு ஆயத்த நிலையில் படைபலத்தை இயக்காமலேயே வைத்திருந்தாலும் கூடத் தாம் தாக்கப்பட்டு விடுவோமோ என அஞ்சிச் சினம்கொண்டு எதிர்பாராத வகையில் தாக்குதலிலும் போரிலும் தானே முதலில் ஈடுபடுவது.

போர் நடப்பு தன்னின உயிருண்ணும் பழக்கத்தில் தோன்றியதாக ஒரு கருத்து நிலவுகிறது. சிலர் ஆதிக்குடிகளின் போர்முறை, விளையாட்டை ஒத்திருப்பதாகக் கருதுகின்றனர். இக்காலத்தில் அரசியல் அதிகாரங்களை ஒருமுகப்படுத்துதல் மிகுந்துவிட்டதால், போர் நடப்பு பாதுகாப்பு நிலையிலிருந்து சமூக நிலை, பிறகு பொருளாதார நிலைக்கென்று மாறி இறுதியாக அரசியலை அடிப்படையாகக் கொள்ள நேர்ந்துள்ளது.

சண்டைகளினால் உண்டாகும் மிகுதியான உயிரிழப்புகளினால் ஒரு சமுதாயத்தின் பால், வயது ஆகியவற்றின் கூட்டமைவுகளில் மாறுதல் ஏற்படுகிறது. இதை டைவேல் என்பவர் தம் ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்துகிறார். சில பழங்குடிகளிடையே ஆண், பெண் அளவு 3:1 எனும் விகிதத்தில் இருப்பதற்கு அங்குள்ள பெண் குழந்தைக் கொலை காரணமாக உள்ளது என்றும், அதே நேரத்தில் அச்சமுதாயத்தில் வயது வந்தோரிடையே மட்டும் இவ்விகிதம் 1:1 என்னும் விகிதத்தில் இருப்பதற்குக் காரணம் போர்களால் ஏற்படும் சாவுகள்தாம் என்றும் கூறுகிறார். டைவேலின் இபோ (Ibo) போர் நடப்புக் குரித்தான நிகழ்வுக்கூறு மேற்சொன்ன கருத்துக்குக் கூடுதல் வலுச் சேர்க்கிறது. பல்வேறு காரணங்களால் போர் நடப்பு நோய்களைப்பெருக்கி அவற்றால் சாவுகளின் எண்ணிக்கையை உயர்த்துகிறது.

போரின் விளைவாக எதிரியின் மீது வெறுப்பும் தன்னினமக்கள் மீது அன்பும் மிகுதிப்படுகின்றன. இது இனமையக் கொள்கை எனப்படும். போரினால் பண்பாட்டுப் பரவல் நிகழ்கிறது. இதனால் சமுதாயத்தின் பண்பாட்டில் மாற்றம் ஏற்படுகிறது. இது பண்பாட்டுப் பேறு எனப்படும். பண்பாட்டுப் பேறு நிகழா வண்ணம் தடுத்திடப் பியூப்லோ மக்கள் தங்கள் சிற்றூர்களுக்கு விரிவான அரணமைத்தலை வழக்கமாகக் கொண்டனர். மேலும் தென்மேற்குப் பகுதியிலிருந்து வட பகுதிக்குக் குதிரைகள் பரவியமை, போர் முறையைப் பெருமளவுக்கு மாற்றி அமைத்தது.

போரினால் தங்கள் ஆளுகைக்குட்பட்ட நிலப்பரப்பைப் பெருக்குவதிலும் அழிக்கப்பட்ட வளங்களை மீண்டும் மிகுதியாக்குவதிலும் மக்கள் ஈடுபட்டனர். இயற்கை வளங்கள் வேறுசீரான முறையில் உபயோகப்படுத்தப்படுகின்றன. போரினில் ஈடுபடும்சமுதாயத்தினரிடையே தங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுகிறது. மேலும் ஒரு சமுதாயத்திலிருந்து இன்னொரு சமுதாயத்திற்கு

ஏற்படும் தொடர்பால் பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்படுகிறது. போர், சமூக அமைப்பில் ஒட்டிணைவாற்றல் (Cohesion), ஏற்றத்தாழ்வு, ஒழுங்குமுறைச்சிதைவு போன்ற விளைவுகளையும் ஏற்படுத்துகிறது. இரு சமுதாயங்கள் போரில் ஈடுபடும்போது அவற்றுள் ஒருமைப்பாடு மிக்க சமுதாயம் வெற்றியடைகிறது. உள்நாட்டுக் கலகங்கள் பேரரசுகளையே உடைத்து விடுகின்றன. போரில் கிடைக்கும் வெற்றி புதிய பேரரசுகளை உருவாக்குகிறது. அவை மீண்டும் உடைவதை மீண்டும் வெல்லுதல் எனக் கூறுகின்றனர்.

மனத்தளவில் ஏற்படும் உணர்ச்சிதான் போருக்குக்காரணம் எனக் கூறப்படுவதால் வீர விளையாட்டுகள் மற்றும் சடங்கு முறையில் அமைந்த பகைமைப் போட்டிகள் போன்றவை ஆதிக்குடிகளிடையே போர் நடப்புக்கு மாற்று வகையாகக் கூறப்படுகின்றன. ஏனெனில் இத்தகைய விளையாட்டுகளும் போட்டிகளும் மனக்கிளர்ச்சியினால் உண்டாக்கப்படுகின்றன. போரின் கடுந்திங்கை உலகமக்கள் நன்றாகவே உணர்ந்திருக்கின்றார்கள். இத்தீங்கிலிருந்து மீள வேண்டுமானால் அதற்கு மாற்று வேண்டும். போர் நடப்பிற்கு ஒரே மாற்று அமைதிதான். போர் நிகழாமல் தவிர்த்து உலக அமைதியைக் காத்திடவேண்டுவதை அனைவரும் தங்கள் கடமையாகக் கருதவேண்டும். முதல் உலகப் போரினால் ஏற்பட்ட அழிவையும் பொருள் இழப்பையும் உயிர்க் கொலையையும் கண்ட உலக நாடுகள், போரின் பிடியிலிருந்து எவ்வாறேனும் மீள வழிகாண வேண்டும் என முனைந்தன. அம் முயற்சியின் பயனாக 'உலக நாடுகள் கழகம்' என்னும் ஓர் அமைப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த அமைப்பால் இரண்டாம் உலகப் போரைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இரண்டாம் உலகப்போர் முடிவுறுவதற்கு முன்பாகவே, அமெரிக்க நாட்டுத் தலைவர் உரூசுவெல்ட்டும், இங்கிலாந்தின் போர்க் காலப் பேரமைச்சராக விளங்கிய வின்சுடன் சர்ச்சிலும் சேர்ந்து 'அட்லாண்டிக்கு அறிக்கை' யை வெளியிட்டனர். அவ்வறிக்கைதான் ''ஐக்கிய நாட்டுச் சபை'' என்னும் உலக அமைப்பின் வித்தாகும். ஐ.நா. சபையின் அடிப்படைக் குறிக்கோள் உலக அமைதியே. சிற்சில போர்களை ஐ.நா. சபை தடுத்து நிறுத்தியுள்ளது. ஆனால் மீண்டும் உலகப் போர் வராமல் தடுக்க ஐ.நா. சபையின் பாதுகாப்புக் கழகம் ஒன்றே போதுமா என்ற ஐயப்பாடு உலக மக்கள் உள்ளத்திலே தோன்றியுள்ளது. அணுக்குண்டுக் கண்டுபிடிப்பு, சில புதிய போர்க்கருவிகளைக் கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் நிலை ஆகியவை, உலக மக்கள் மனத்தில் போர் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன. இது 'அமைதிப் போர்' எனக் கூறப்படுகிறது. இச்சூழல் மாறியாக வேண்டும். ஆங்கில அறிஞர் கோல் என்பார், போரை ஒழிப்பதற்காக ஐரோப்பிய நாடுகளுக்குக் கூறும் அறிவுரை பெரிதும் போற்றற்குரியதாகும். ''உருசியா நீங்கலாக உள்ள ஐரோப்பிய நாடுகள் யாவும் இனம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றில் பெரிதும் ஒற்றுமைப்பட்டிருக்கின்றன. எனவே அவை யாவும் ஒன்றுபட்டு ஒரு கூட்டாட்சியாக அமையவேண்டும். எல்லா நாடுகளுக்கும் பொதுவான நாணய முறை அமைய வேண்டும். எல்லா நாடுகளின் ஆற்றுத் தண்ணீரும் பொதுவான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். வாணிகப் போக்குவரத்து யாவும் எவ்விதக் கட்டுப்பாடுகளுமின்றிப் பொதுவான அடிப்படையில் நடைபெற வேண்டும். எல்லா நாட்டு மக்களுக்கும் விரும்பிய நாடுகளில் வாழக் குடியுரிமை அளிக்கப்படல் வேண்டும்'' என்றெல்லாம் இவர் கூறிய இவ்வறிவுரை, ஐரோப்பாவிற்கு மட்டுமன்றி, உலகத்தின் மற்றப்பகுதிகளுக்கும் பொருந்தும். இன்னும் எவ்வளவு காலமானாலும் உலகம் போரை ஒழித்து, இம்முறையில் ஒன்றுபடும் காலம் ஒன்று கட்டாயம் வரும். ஆ.செ.

துணை நூல்கள்:

முருகு சுந்தரம், ''பாரும் போரும்'', சிவலிங்க நூற் பதிப்புக் கழகம், ஈரோடு.

**Bohannan, (ed).**, ''Law and Warfare'', Studies in Anthropology on Conflict, New York, Natural History Press, 1967.

**Otyerbein, Beith**, ''The Anthropology of War'', in Hand Book of Social and Cultural Anthropology, (ed) John Honigman Rand Mc. Nally, Chicago, 1973.

**Priedm, Harris, M., and Murphy R.**, ''War'', Garden City, N.Y., Natural History Press, 1968.

**Vayada, Andreu, P.**, ''Primitive War in International Encyclopaedia of the Social Sciences, ed; D.L. Sills,'' 1968.

***அரசியலும் முறைமையும்***: மனிதனை மனிதனாக்கி வாழ்விப்பது மக்கள் சமுதாயமே. சமுதாயமே மக்கள் வாழ்வு சிறப்படைவதற்கு அரசாங்கமெனும் அமைப்பை நிறுவுகிறது; அது நன்கு செயல்படச் சட்டங்களையும் நீதிமுறைகளையும் உருவாக்குகிறது. இத்தகைய ஒரு சமுதாய அமைப்பை எல்லோரும் விரும்பி ஏற்றுக்கொண்டு வாழ்வதை 'அரசியல் வாழ்வு' எனக் கூறலாம். சமூக வாழ்வில் அரசியல் இணைந்தும் இயைந்தும் இருக்கிறது.

இந்திய அரசியல் வரலாறு ஏறத்தாழக் கி.மு. 2000 ஆண்டு அளவில் தொடங்குகிறதெனலாம். ஆனால் இதற்கும் பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வேதகால அரசியலைப் பற்றியும் தெரிந்து கொள்ளச் சான்றுகள் கிடைக்கின்றன. அரசனின் கடமை மக்க

ளைக் காப்பது மட்டுமன்றி அவர்கள் வாழ்வை வளங்கொண்டதாக அமைப்பதுமாகும் என்று வேத சம்கிதைகள் கூறுகின்றன. அக்கால அரசாங்கம் பிராமணரைத் துணைக்கொண்ட சத்திரிய அரசாங்கமெனும் கருத்தை வேதங்களிலிருந்து அறியலாம். அரசனின் பாதி புரோகிதரென அயிதரேய பிராமணம் குறிப்பிடுவதிலிருந்து பிராமணரில்லாது அரசனால் நடத்தப்படும் அரசு முறையற்றதென ஒதுக்கப்பட்டிருக்கலாம்.

அரசன் அறநெறி நின்று ஆள்பவனாக இருக்க வேண்டுமென்னும் கருத்தினை வேதங்கள், சாத்திரங்கள், இதிகாசங்கள், இலக்கியங்கள் ஆகியன கூறுகின்றன. இந் நூல்களெல்லாம், சமயம் தழுவிய அரசியல் தருமத்தை வரையறுத்ததுடன் அதையே அரசன் கடைப்பிடித்து ஒழுக வேண்டுமென்றும் வலியுறுத்தின.

அரசன் தண்டம் எனப்படும் நீதி முறையினால் அல்லவை கடிந்து, நல்லவை பெருக்கி, ஒழுங்கினை நிலைநிறுத்திச் சோர்வின்றிச் செயற்படுபவனாக இருத்தல் வேண்டும். இவ்வாறு அறத்திற்கு இசைவாகச் செங்கோலோச்சுவதே அரசனின் தலையாய கடமையாகும். இதையே 'இராசதருமம்' என்ற வடசொல்லும் 'இறைமுறை' என்னும் தமிழ்ச் சொல்லும் உணர்த்துகின்றன. அரசன் கொடுங்கோலனாய் இருப்பானாயின் செல்வத்தையும் நாட்டு மக்களையும் ஒருங்கே இழப்பான் என்று திருக்குறள் கூறுகிறது. தனக்கென உள்ள தருமத்தை மேற்கொள்வது மட்டுமன்றி மக்கள் தத்தம் சுய தருமத்தைக் கொண்டொழுகுமாறு செய்வதும் அரசனின் இன்றியமையாத கடமையாக இருந்து வந்தது. அரசன் அறவழி நின்றும் இறைமுறை பிழையாதும் ஆட்சி செய்தலே முறையான அரசியலெனும் கருத்தை இவற்றினின்றும் அறிய முடிகிறது.

வேத காலத்திற்குப் பின்பு அரசியலில் சில மாறுதல்கள் நிகழ்ந்திருப்பதை ஆய்வுகள் சுட்டுகின்றன. மக்களுக்குப் பாதுகாப்புத் தர இயலாத நிலையிலும் சமூகத்தில் பல வகுப்பினரை ஒன்றாக்க முயலும் நேரத்திலும் அரசனை முறையற்ற ஆட்சியாளன் எனப்பழித்து அவனுக்கு எதிராக மக்கள் புரட்சி செய்யலாமென்று மகாபாரதம் கூறுகிறது. வருணப் பிரிவுகள் கொண்ட சமுதாயமே முறையானதென்று சுட்டப்படுதலால் அரசன் அதை நிலைநிறுத்தும் பொறுப்புக்குள்ளாயினான். ஆனால், இதற்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வந்த கிரேக்க அரசியல் அறிஞர் அரிசுடாட்டில் (கி.மு. 384–322) எந்த அரசும் வகுப்புகளைக் கொண்டதாக இருக்கக்கூடாது என்றும், அப்படி இருந்தால் ஏதாவது ஒரு வகுப்பினர் தாம் நன்மை பெறுவர் என்றும் விளக்கி, பிரிவற்ற சமுதாயமே உண்மையான சமுதாயமென்னும் தம் கோட்பாட்டை நிலைநாட்டினார். அரசியலில் புரட்சிகள் ஏற்படுவது இயற்கையே என்றும் நல்முறைகளைக் கையாண்டு அவற்றைத் தவிர்ப்பதே அரசின் கடமை என்றும் கூறுகிறார்.

மௌரியர் காலத்தவரான கௌடில்யர் தம் நூலான அர்த்த சாத்திரத்தில் "உலக நிகழ்ச்சியை விரும்பும் அரசன் எப்போதும் தண்டத்தைச் செலுத்துவதில் முயற்சியுடையவனாதல் வேண்டுமெனத் தெரிவிக்கிறார்". தருமத்தைவிட அரசியலுக்கு மிகுதியான முதன்மை கொடுக்கும் இவர், நாட்டு நலனுக்காக அறமற்ற செயல்களையும் அரசன் செய்யலாம் என்று குறிப்பிடுவதிலிருந்து அரசியலுக்கு அத்தகைய செயல்கள் முறையானவை என்று காட்டியுள்ளார். இவரின் இக்கருத்து இந்திய அரசியல் சிந்தனை வளர்ச்சியில் ஒரு திருப்பத்தைக் காட்டுகிறதெனலாம். அரசன் மக்கள் தலைவனாக இருந்தாலும் அளவற்ற அதிகாரம் அவனுக்கில்லை என்பதையும், அவனை எதிர்த்துப் புரட்சிசெய்ய மக்களுக்கு உரிமை இல்லை என்பதையும் எடுத்துரைக்கிறார். இவர் காட்டும் இவ்வரசியல் கோட்பாடுகளிலிருந்து இவருக்குப் பின்வந்த காமாந்தகர் வேறுபடுகிறார். அவர் தம் நூலான காமாந்தகீயத்தில் அரசனை அதிக உரிமை பெற்றவனாக, எல்லையற்ற அதிகாரம் கொண்டவனாகக் காட்டுகிறார். அவர்தம் அரசியல் சிந்தனைப்படி இவையே அரசியல் முறைமை என விளங்கிக் கொள்ளலாம்.

மற்றுமோர் அரசியல் நூலான சுக்கிரநீதி, சட்டம் தருமத்தைத் தழுவியே இருக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறது. ஆதலால் அறநெறிப்படி அமையாத அரசியல் சட்டம் முறையற்றதென்பதை இந்நூல் வெளிப்படுத்துகிறது. மேலும் இது அரசன் கொடுங்கோலனாயின் அவனை எதிர்த்துப் புரட்சி செய்யும் உரிமையை மக்கள் பெற்றவர்களாவார்கள் எனும் முறைமையையும் அரசியலில் உருவாக்கித் தருகிறது.

தரும சாத்திரங்களில் மனுதரும சாத்திரம் புகழ் பெற்றதாக விளங்குகிறது. மகாபாரதம் குறிப்பிடுவதைப் போலவே மனுவும் வருணாசிரம தருமத்தைக் காப்பது அரசனின் கடமை என்கிறார். அப்படி அவன் செய்யானாயின் அரசியலில் முறை பிறழ்ந்தானென்று எண்ணுதற்கு இடமுண்டு. மேலும் தன் மனம் போனபடி அரசன் அதிகாரம் செலுத்துபவனாக இருந்தால், தானே அழிந்துபடுவான் என்றுணர்ந்து இச்செயலை அரசியலுக்கு முறையற்றதாக்குகிறார் மனு.

குப்தர்கள் கால நூல் எனக் கருதப்படும் யாக்ஞவல்கிய சுமிருதியில், புனிதச் சட்டமானது பெரும்

பாலோரின் வெறுப்புக்கு உள்ளாகும்போது அதை அவர்களுக்கு இணக்கமாக அரசர் மாற்றியமைக்க வேண்டுமென்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் மதச்சட்டமும் மதச்சார்பற்ற பொதுச்சட்டமும் தனித்தனியே பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன. சமயக் கொள்கைகள் அரசியல் சட்டத்திற்கு அடிப் படையாக அமைதல் கூடாது எனும் கருத்தை இந் நூல் வழியே காணமுடிகிறது. இதையே சிசிரோ (கி.மு. 106–43) எனும் உரோமானிய அரசியல் அறி ஞர், அரசியல் கருத்துகளைத் தெரிவிக்கும்போதும் சட்டங்களை அமைக்கும்போதும் இயற்கை, பகுத் தறிவு ஆகிய இரண்டின் அடிப்படையில் அவை அமையவேண்டுமென வலியுறுத்துகிறார். அறநூல் களை அடிப்படையாக வைத்தே அரசியற் சட்டங்கள் அமைய வேண்டுமெனும் பண்டைய முறையினின்று விலகிச் செல்வது, இவர்களின் முற்போக்குச் சிந்தனை யைக் காட்டுகிறது.

தமிழ்நாட்டின் தொன்மை அரசியலையும் அதன் முறைமை நிலையையும் சங்க இலக்கியங்கள் விளக்கு கின்றன. அரசனுக்குப் பின் அவன் தலை மகன் முடி சூடி ஆட்சிப் பொறுப்பேற்கும் உரிமை பெற்றிருந்தான். இதையே சிலப்பதிகாரத்தில் ''முறை முதல் கட்டில்'' எனக் குறிப்பிடுகின்றார் இளங்கோ அடிகள். ஆனால் அரிசுடாட்டில் 'கற்பனை அரசு' பற்றிக் கூறும்போது ஒரு நாட்டிலுள்ள மக்கள் தோழமையின் அடிப்படை யில் ஒன்றாகச் சேர்ந்து ஓர் அரசை அமைப்பார்களே யானால், அதுவே அரசுக்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என்கிறார். இதன் வாயிலாகக் கிரேக்க நகர அரசுகள் எல்லாவற்றிற்கும் ஒரே அரசாங்கம் தேவை எனும் கருத்தை வெளியிடுகிறார். இதனால் வழி வழியாகத் தொடர்ந்து வரும் மன்னராட்சி அமைப்பை அவர் விரும்பவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. இவர் அடியொற்றி வந்த கிரேக்க அரசியல் அறிஞர் பொலிபியசு (கி.மு. 204–122) நல்ல அரசாங்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் மன்னர் ஆட்சி, உயர்குடி ஆட்சி, மக்கள் ஆட்சி ஆகிய மூன்று முறைகளிலும் உள்ள நல்ல கருத்துகளை ஏற்றுக் கொண்டு ஒரு கூட்டு அரசியல் முறையை அமைப்பதே நலம் என்றுரைக்கிறார்.

சங்க கால அரசியல் அமைப்பு அரசனை முதலா கக் கொண்டிருந்தது. ''மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்'' என்று புறநானூறு குறிக்கிறது. மன்னன் மக்களுக்கு உயிரெனப் போற்றப்படுதலால், தாய் தன் குழந்தைகளை வளர்ப்பதுபோல் அரசன் மக்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதை மற்றொரு புறநானூற்றுப் பாடல் கூறுகிறது (5). அரசர்கள் இத்தகைய பண்பு நலன்களைப் பெற்றிருந்ததனால் தான் அவர்களின் வரலாற்று நிகழ்வுகளைப் புலவர் கள் தங்கள் கவிதைகளில் வடித்து மகிழ்ந்தனரென்று சொல்வது மிகையாகாது. பண்பாளனான அரசனே நீதிநெறி நின்று மக்களைக் காக்க முடியும் எனும் அரசியல் நெறிமுறை இங்குத் தெளிவாக விளக்கப் படுகிறது.

அரசன் அந்தணர்களை வணங்க வேண்டுமென்று புறநானூறு (6) கூறுகிறது. மேலும் அவன் அறநூல் நெறிநின்று நீதி வழுவாது ஆட்சி செய்யும் செங்கோ லனாக இருக்க வேண்டும். இத்தகைய அரசனே மக்களுக்கு இறைவனென வைக்கப்படுவான் என்று திருக்குறள் கூறுகிறது (388). முனிவரின் தவமும் பெண்ணின் கற்பும் பருவகாலங்களின் பொய்யாமை யும் அரசனின் நீதி தழுவிய ஆட்சியைப் பொறுத்தே அமைகின்றன என்பதைச் சங்கப் பாடல்கள் காட்டு கின்றன. நீதிநெறி நின்று ஆளும் அரசன் முறை தப்பினால் நீதியை மறுபடியும் நிலைநாட்ட எவ் வகைத் தியாகத்தையும் செய்வானென்பதை மனு நீதிச்சோழன், பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோ ரின் அறச் செயல்களினின்றும் அறியலாம். நீதி யெனும் நன்னெறியே அரசனுக்கு உயிர்நாடி; அதுவே அரசியலில் முறையானதென்பது சங்க கால அரசியற் கொள்கையாகும்.

அரசியல், சமயத் தொடர்புடையதாக இருத்தல் முறையானதாகுமா எனும் கேள்விக்கு இருவேறு கருத்துகள் நிலவி வந்ததை வரலாறு சுட்டுகிறது. வேத காலத்திலும் அதற்குப் பிறகும் தமிழக வர லாற்றில் சங்க காலம் நீங்கலாக, ஏனைய காலங் களில் அரசியல் அமைப்புக்குச் சமயம் அடித்தள மாகவே இருந்து வந்ததை நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. இதிலிருந்து சமயச் சார்புடைய அரசியலே முறையானதென்பது உணர்த்தப்படுகிறது என்பதில் ஐயமில்லை. இந்திய சமுதாயம் தொன்று தொட்டுச் சமயத்தில் மூழ்கித் திளைத்து வருவதால் அரசிய லுக்கு அது துணையாக நின்றது. இத்தகைய அரசியலைத்தான் மக்கள் முறையானதென்று ஏற்றுக் கொண்டார்கள். மன்னராட்சி முடியும் மட்டும் இந் நிலை நீடித்து வந்தது. ஆனால் ஐரோப்பிய அரசிய லில் பண்டைக் காலந்தொட்டு மன்னராட்சியின் இறுதிவரை இந்நிலை ஒரே சீராக இருந்ததென்று சொல்லமுடியாது. கிரேக்க நாட்டு அரசியல் அறிஞ ரான பிளேட்டோவின் (Plato, கி.மு. 427–347) 'கற்பனை அரசியல்' கோட்பாடு சமயத்தின் அடிப் படையில் அமைந்ததாகவே இருக்கிறது. ஆனால் அவர் மாணாக்கரான அரிசுடாட்டில் நன்னெறியிலிருந்தும் சமயத்திலிருந்தும் அரசியலைப் பிரிக்க வேண்டுமென வலியுறுத்தினார். சமய அடிப்படையில் அரசியல் தோன்றியதாக இவர் கூறவில்லை. கி.பி. 13–ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செயின்டு தாமசு அக்யூனாசு எனும் சிசிலி நாட்டவர், நாடாள்பவர் எவராயினும்

திருச்சபையின் உதவியும் ஒத்துழைப்பும் இன்றிச் செவ்வனே ஆட்சி செய்ய இயலாதென்றார். ஆனால் இவருக்குப் பின் கி.பி. 14,15,16-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தாந்தே (இத்தாலி), சான் விக்ளிப் (பிரிட்டன்), மாக்கிய வெல்லி (இத்தாலி) ஆகிய அரசியல் அறிஞர்கள், சமயம் அரசியலில் தலையிடுதல் கூடாது எனும் கருத்துடையவர்களாகவே இருந்தனர். சமயச் சீர்திருத்தத்திற்குப் பின் சமயத்தினின்றும் அரசியல் வேறாகப் பிரிக்கப்பட்ட நிலையை வரலாற்றுச் சான்றுகள் கொண்டு அறியலாம். இவ்வாறு இருவேறு கோட்பாடுகள் இருந்தாலும், சமயச் சார்பற்ற அரசே பிற்காலத்தில் பல அரசியல் சிந்தனையாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டது. ஆகையால் அத்தகைய அரசே முறையானதென மக்களால் விரும்பப்படுவது, அவ்வறிஞர்கள் வாயிலாக வெளிப்படுகிறது. கோ.க.

துணை நூல்கள்:

நடராசன், பெ., "அரசியல் கோட்பாடுகள்", தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1973.

பரதன், ம., "பழங்கால இந்தியாவில் அரசியல் சிந்தனையும் ஆட்சி முறையும்", தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1977.

**Appadorai**, A., "The Substance of Politics", Oxford University Press, Madras, 1978.

**Subramanian, N.**, "Sangam Polity", Asia Publishing House, Bombay, 1966.

**அரசியார் பேரறிக்கை** என்பது விக்டோரியா அரசியாரால் கி.பி. 1858-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அறிக்கையைக் குறிக்கும். இது அரை நூற்றாண்டுக் காலத்திற்கு இந்திய மக்களின் உரிமைச் சாசனமாக விளங்கியது. பேரரசியார் விக்டோரியாவின் பேரறிக்கை படைவீரர் கலகத்திற்குப் பின் கி.பி. 1858-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 1-ஆம் நாள் இந்திய அரசர்கள், சிற்றரசர்கள், மக்கள் ஆகிய அனைவரும் ஏற்றுக்கொள்ளும்வண்ணம் வெளியிடப்பட்டது. இந்தியாவின் முதல் அரசப் பிரதிநிதியும் தலைமை ஆளுநருமான கானிங் பிரபு அலகாபாத்தில் நடைபெற்ற அரசவை விழாவில் இதனை வெளியிட்டார். அரசியாரின் விருப்பத்திற்கேற்பத் திருத்தியமைக்கப்பட்ட இப்பேரறிக்கையில் அவருடைய பெருந்தன்மை, அறச்செயல், சமயப் பொறை ஆகியவற்றை உணர்த்தும் கீழ்க்காணும் கூறுகள் அடங்கியிருந்தன.

"கிரேட் பிரிட்டன், அயர்லாந்து ஆகியவற்றின் அரசியான விக்டோரியா எனப்படும் யாம், பல இன்றியமையாத காரணங்களை முன்னிட்டு, பிரபுக்கள் மக்கள் சபையாரின் இசைவினைப் பெற்று, இதுவரையில் கிழக்கிந்திய வாணிகக் குழுவால் நிருவகிக்கப்பட்டு வந்த இந்திய ஆட்சியை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம். ஆதலால் அப்பகுதிகளில் உள்ள குடிமக்கள் நம்மிடம் அன்புள்ளவர்களாக இருக்குமாறு பணிக்கிறோம்; நமக்கும் நம் சந்ததியார்க்கும் நம்மால் இந்தியாவை ஆளுவதற்கு நியமிக்கப்படுவோர்க்கும் அவர்கள் பற்றுறுதியுடன் இருக்க வேண்டும்.

"நாமும், திறமைசான்ற ஊழியமும் விசுவாசமும் கொண்டுள்ள சார்லசு சான் கானிங் பிரபுவை நம் முதல் அரசப் பிரதிநிதியாக அல்லது தலைமை ஆளுநராக நியமிக்கின்றோம். அவர் அப்பகுதிகளை நம் சார்பில், நம் பெயரால் ஆட்சியை நிருவகிப்பார். அவர் இந்திய விவகாரங்களைக் கவனிக்க இங்கிலாந்து நாட்டு அமைச்சரவையிலுள்ள செயலாளர்களுள் ஒருவர் வழியாக நாம் பிறப்பிக்கும் ஆணைகள் விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டுச் செயற்படுவர்.

"இப்போது கிழக்கிந்திய வாணிகக் குழுவின் பணியில் உள்ள படைத்துறை சாராத அரசு அலுவலர்கள் யாவரையும் நாம் அவரவர்கள் பணியிலேயே அமர்த்திக் கொள்கிறோம். அவர்கள் நம் விருப்பக் காலத்திற்கு ஊழியம் செய்யக்கடவர்.

"அன்றியும், சுதேச மன்னர்களுக்கு (Native Princess) இதன்வாயிலாகத் தெரிவிப்பது யாதெனில், கிழக்கு இந்திய வாணிகக் குழு அவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படும். அவர்களும் அங்ஙனமே அவற்றை மதித்து நடப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

"இப்பொழுது நம்மிடம் உள்ள பகுதிகளை விரிவுபடுத்த நாம் விரும்பவில்லை; நேரடிப் பகுதியில் அயலார் படையெடுப்பதையும் அனுமதியோம்; அண்டை நாடுகள்மீது அத்துமீறுதலையும் அனுமதியோம்.

"சுதேச மன்னர்களின் உரிமைகள், பெருமை மரியாதை ஆகியவற்றை எங்களுடையதாகக் கருதி மதிப்போம்; நம் குடிமக்களைப்போன்று அவர்களுடைய வாழ்வும் வளம்பெறச் சமுதாயம் முன்னேற விரும்புகிறோம்; இவை உள்நாட்டு அமைதியாலும் நல்லாட்சியாலுமே பெறப்படுவனவாம்.

"எங்களுடைய மற்றக் குடிமக்களுடன் கடமையுணர்ச்சியால் நாங்கள் பிணைக்கப்பட்டுள்ளது போன்று இந்திய மக்களுடனும் பிணைக்கப்பட்டுள்ளோம். எல்லாம் வல்ல இறைவன் அருளால் எங்களிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ள அக்கடமைகளை உண்மையுடன், மனச்சான்றுக்குக் கட்டுப்பட்டு நிறைவேற்றுவோம்.

"நாம் கிறித்தவ சமயத்தில் ஆறுதல்களைப் பெற்று அமைதி அடைகின்றோம்; நம் குடிமக்களின்

மீது நம் கருத்துகளைத் திணிக்க விரும்பவில்லை. சமய நம்பிக்கை, கோட்பாடுகளின் பெயரால் எவரொருவருக்கும் தனிச்சலுகை காட்டுதலோ எவரொருவரையும் வருத்துதலோ கூடாது என்பது எம் கருத்து. எல்லோரும் சட்டங்களால் சமமாகவும், நடுநிலைமையோடும் பாதுகாக்கப்படல் வேண்டும். நம் குடிமக்களின் சமய நம்பிக்கைகளிலும், வழிபாட்டு முறைகளிலும் தலையிடுதல் கூடாது என்று அதிகாரிகள் வலியுறுத்தப்படுகின்றார்கள்.

''நம் குடிமக்களின் இனம் அல்லது சாதி, சமயக் கோட்பாடு எதுவாயினும், வேறுபாடின்றித் தடையில்லாமல், கல்வியறிவு, திறமை, பணியில் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் பதவிகள் வழங்கப்படும் என்பதும் எங்கள் நோக்கம்.

''இந்திய மக்கள் தம் முன்னோர்களிடமிருந்து தாங்கள் மரபுரிமையாகப் பெற்ற நாட்டின்மீதுள்ள உணர்வை நாங்கள் அறிவோம்; அதனை மதிக்கிறோம்; அதனுடன் தொடர்பு கொண்ட அனைத்து உரிமைகளும் நில உடைமையும் பேரரசியின் நியாயமான தேவைகள் பாதிக்கப்படாத வகையில் பாதுகாக்கப்படும். பொதுவாகச் சட்டமியற்றுதலிலும் அதனை நிருவகிப்பதிலும் மரபுரிமைகள், இந்தியாவின் செயல் வழக்காறுகள் ஆகியவற்றிற்குத் தகுதியுரிமை வழங்கப்படும்.

''பேராசை பிடித்தவர்கள் செய்கையால், இந்திய நாட்டிற்கு அண்மையில் ஏற்பட்ட தீமைகளையும், துன்பங்களையும் கண்டு நாம் பெரிதும் வருந்துகின்றோம்; அவர்கள் தங்கள் நாட்டு மக்களைப் பொய் வதந்திகளால் ஏமாற்றியிருக்கின்றனர். மேலும் அவர்களை வெளிப்படையாகக் கலகமிடவும் தூண்டியிருக்கின்றனர். போர்க்களத்தில் அக்கலகத்தை ஒடுக்கிய முறையால் நமது வலிமை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. தவறான பாதையில் இட்டுச் செல்லப்பட்டவர்களை நாம் மன்னித்து விடுகின்றோம்.

''இறையருளால் உள்நாட்டு அமைதியைத் திரும்பவும் நிறுவியபின், இந்தியாவின் அமைதிக் காலத் தொழில்துறை ஊக்குவிக்கப்படும்; பொதுநலத் துறைப்பணிகள் மேம்படுத்தப்படும்; மக்கள் நலனுக்காக அரசு இயங்கும். இந்திய மக்களின் நல்வாழ்வு எங்கள் வலிமை; அவர்களின் மனநிறைவு எங்கள் பாதுகாப்பு; அவர்களின் நன்றியறிதலே தலைசிறந்த கைம்மாறு.

''நம் மக்களின் நலனுக்காக இவ்வெண்ணங்கள் நன்கு ஈடேறுமாறு இறைவன் நமது திறனைப் போற்றிப் பாதுகாப்பாராக''!

பேரரசியார் பேரறிக்கையில் புதுயுகத்தைப் புகுத்துவதற்குரிய நெறிமுறைகள் வரையறுத்துக் குறிப்பிடப்பட்டுள்ளமையைக் காணலாம். தீமையில் இருந்து நன்மைதோன்ற முடியும் என்றால், இத்தகைய திட்டங்கள் அனைத்திற்கும் படைவீரர்கலகமே அடிப்படைக் காரணம் எனலாம். பேரரசியார் பெருந்தன்மையுடன் கலகக்காரரை அளவு மீறித் தண்டிப்பதில்லை என உறுதியளித்தார். இதனால் இந்தியாவில் அமைதியை ஏற்படுத்துவது கானிங் பிரபுவுக்கு எளிதாயிற்று. ஏற்கனவே நிறைவேறிய பட்டயச் சட்டங்களும் இப்பேரறிக்கையில் முற்றுப்பெற்றன. வாணிகக் குழுவின் அதிகாரங்கள் முழுவதும் கி.பி. 1853 ஆம் ஆண்டுக்குள்ளாக ஆங்கில அரசின் ஆட்சிக்குச் சென்றுவிட்டன. நாட்டு மரபுவழியான பழக்க வழக்கங்களில் தலையிடுவதில்லை என்றும் நில உடைமைச் சீர்திருத்தங்களை மேற்கொள்வதில்லை என்றும் இப்பேரறிக்கை அறிவித்தது. ஆனால், அரசுப் பணிகளில் சாதி, சமய வேறுபாடுகளைக் கவனியாமல், தகுதியொன்றை மட்டும் கவனிப்பார்கள். இது நவீன மயமாக்குதலின் குறிக்கோள்களுள் ஒன்று எனலாம். பொது நலனுக்கான பணிகளும் அமைதியான தொழில்களும் வளர்ச்சியும் நல்லாட்சியின் கூறுகள் என்பதையும் சுட்டிக்காட்டிற்று இப்பேரறிக்கை. 'இந்திய மக்களுக்கு இவ்வாணை புதிய வானத்தைப் பூமிக்குக் கொண்டு வந்தது. அவர்களுக்கு அமைதி, சமயப் பாதுகாப்பு, அரசியாரின் மற்றக் குடிமக்களுடன் சம உரிமை ஆகியவற்றை அளித்ததோடு இவைகளுக்கும் மேலாகத் தகுதியுடையவர்க்கு உயர் பதவிகள் அளிக்கப்படும் என உறுதியும் அளித்தது' எனப்பேராசிரியர் ஈசுவரி பிரசாத் கூறுகிறார். இப்பேரறிக்கையைக் கி.பி. 1215-இல் சான்மன்னர் கையொப்பமிட்ட பெரும் பட்டயத்துடன் (Magna Carta) ஒப்பிட்டு, ''இந்தியாவின் பிறப்புரிமையை உறுதிப்படுத்தும் ஒரு பெரிய முதல் அரசியல்சட்டம்'' எனப் புகழ்கின்றனர். பி.கி.அ.

*அரசிலி*, தொண்டை நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று. இக்காலத்தில் இது ஒழிந்தியாப்பட்டு என வழங்கப்பட்டு வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்தில், திண்டிவனத்திலிருந்து புதுச்சேரி செல்லும் வழியிலுள்ள இரும்பை மாகாளம் என்னும் தலத்தினை அடைந்து, அங்கிருந்து ஒட்டன்பாளையத்தின் வழியாக வடகிழக்கே 3 கல் சென்றால் இத்தலத்தினை அடைதல் கூடும். இதனைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இறைவன் பெயர் அரசிலி நாதர்; இறைவி பெயர் பெரிய நாயகி. இத்திருக்கோயிலில் அரசடித் தீர்த்தம் உள்ளது. ரா.கி.

***அரசிறைக் கொள்கை*** என்பது அரசின் நிதிச் சுமையைப் பகிர்வதில் ஏற்படும் அடிப்படைச் சிக்கல்களையும் அரசின் செலவினங்கள் ஏற்படுத்தும் நன்மைகளையும் பற்றிக் கூறுவது. தொகுவினைப்

பொருளாதாரத்தை (Aggregate Economy) எவ்விதம் நன்மை தரத்தக்க வகையில் அமைத்திட முடியும் என்பதை இது விளக்குவது.

தேவைகளை அளவீடு செய்வதிலும் அவற்றை ஆய்வு செய்வதிலும் ஏற்பட்ட முன்னேற்றம், பலவித நிதிக் கொள்கை அணுகுமுறைகளுக்கு வழிவகுத்தது. கினீசியப் (Keynesian) பொருளியல் கோட்பாடு இதற்குத் தூண்டுகோலாக அமைந்தது. பொருளாதாரத்தில் மொத்தத் தேவையின் மிகுதியையும் அதன் நிலைப்பாட்டையும் இவ்வணுகுமுறைகள் நோக்கங்களாகக் கொண்டன. மொத்தத் தேவை மிகும்போது, பொருளாதாரம் அதற்கு இணங்கும்; பயன்படுத்தப்படாத பொருளாதார மூலங்கள் பயன்படுத்தப்படும்; உற்பத்தி, வருவாய், வேலைவாய்ப்பு ஆகியவை பெருகும் என்ற கருத்தினை அடிப்படையாகக் கொண்டவை இந்நோக்கங்கள். இக்கோட்பாட்டின்படி விலை நிலைப்பு ஒரு சிக்கலன்று. ஏனெனில், மிகுந்த தேவையை மிகுந்த அளிப்பு ஈடு கட்டுகிறது. இன்றேல், பண வீக்கம் தோன்றும். இக்கருத்துகள் யாவும் அரசிறைக் கொள்கையில் (Fiscal Policy)சிறப்பிடம் பெற்று விளங்குகின்றன. இக்கொள்கையுடன் பொருளாதார, ஒழுங்கியல் அடிப்படையில் வருமான மறு பங்கீட்டு முறை அமைய வேண்டுமென்ற தேவையும் உணரப் பட்டது. இவ்வணுகுமுறைகளினால் எழுந்த கோட்பாடுகள், மக்களின் நுகர்வு, சேமிப்பு நடவடிக்கைகளையும், உபரி அல்லது பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் ஆகியவை எவ்வாறு நடவடிக்கைகளைப் பாதிக்கின்றன என்பதையும் ஆய்வு செய்ய வழிகோலின.

பொருளாதாரத்தில் செலவுகளைப் பற்றிய ஆய்வு, பணத்தின் பங்கு பற்றி அறிய வழிகாட்டியது. செலவுகள் வருவாயினை உருவாக்குவதுடன், மொத்தச் செலவுகள் மொத்த வருவாய்க்குச் சமமாகின்றன. மொத்தச் செலவும் பணத்தின் அளிப்பும் நிலையான விகிதத்தில் இருக்கும்போது, அரசின் நிதிக் கொள்கையைவிடப் பணத்தின் அளிப்பு மொத்த வருவாய் அளவில் மாற்றத்தை ஏற்படுத்துகிறதா? என்ற வினா எழுகிறது. வரி இல்லாமலும், பணத்தின் அளிப்பை மிகுதிப்படுத்தாமலும் செலவின் அளவை உயர்த்திட முடியும். (இங்குப் பணத்தின் அளிப்பு என்பது அனைத்து மக்களின் மொத்தப் பண இருப்பு ஆகும்). அது பொது வருவாய் அல்லது செலவுக்குள்ள பண அளிப்பு விகிதத்தை மாற்றுகிறது. பொதுவாக, மக்கள் பணத்தை நீர்மை (Liquidity) நிலையில் வைத்திருக்க விரும்புவர். கூடுதலான நீர்மை விருப்பம் வரி வீதத்தை உயர்த்துகிறது. சொத்துகளையும் பிணைய வைப்புகளையும் (Securities) கூடப் பணமாக மாற்றிட விரும்புவர். பண அளிப்பிலும் அரசின் நிதிக் கொள்கையிலும் ஏற்படும் மாற்றங்கள் வட்டி வீதத்தைப் பாதிக்கின்றன. வட்டி வீதம் முதலீட்டைப் பாதிக்கிறது. செலவு, வருமானம், பணத்தின் அளிப்பு ஆகியவை குறித்த ஆய்வு, பணவாக்கக் கொள்கையும் (Monetary Policy), அரசாங்க நிதிக் கொள்கையும் ஒருங்கிணைந்து செயற்பட வலியுறுத்துகிறது. சமூக வருவாயை உயர்த்த இக் கொள்கைகள் துணைபுரிகின்றன.

அரசிறைக் கொள்கையை வகைப்படுத்த நடைமுறையில் பல வழிகள் தோன்றியுள்ளன. பற்றாக் குறை நிதி நிலையில், அரசின் செலவில் ஏற்படும் மிகுதி, மொத்த வருவாயை உயர்த்துகிறது. இம் மிகுதி தொடக்கக் காலத்தில் பெருக்கியின் (Multiplier) விளைவுகள் மூலம் நிகழ்கிறது. அதே நேரத்தில் அரசின் செலவால் உண்டான வருவாய், மக்களால் பல்வேறு நிலைகளில் எவ்விதத்தில் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பொறுத்து அமைகிறது. செலவுகள் மிகுதியாவதால் வருமானமும் மிகுதியாகிறது. மேற்கொண்டு செலவிற்குப் பணமில்லை என்ற நிலைவரை இந்நிகழ்ச்சி தொடர்கிறது. செலவில் ஏற்படும் மாற்றங்கள் மட்டுமல்லாமல் பொதுச் செலவு நிலையாக இருக்கும் வகையில் வரியில் ஏற்படும் மாற்றம் பெருக்கியின் போக்கினைத் தூண்டுமென இன்று அறியப்படுகிறது. வரிக்குறைப்பினால் தனியார் செலவு மிகும். இவ்வாறு தனியார் செலவுகள் மாறுகிறபோது பெருக்கியின் விளைவாக மாற்றங்கள் தோன்றும். பொதுச் செலவுக்கான பெருக்கிகளோடு, வரிப் பெருக்கிகளும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அரசின் செலவுகளும் வருவாய்களும் சமமாகும் நிலையில் கூடப் பெருக்கி செயற்பட்டுக் கொண்டிருக்கலாம். இதுவே சமநிலை வரவு செலவுத் திட்டப் பெருக்கியின் செயல்முறை ஆகும்.

அரசாங்கத்தைப் பொதுப் பொருள்கள் அல்லது அரசு சார்பான பொதுப் பொருள்களின் (Quasi Public Goods) உற்பத்தியாளராகவோ வருவாயை மறுபங்கீடு செய்யும் அமைப்பாகவோ அங்காடிப் பொருளாதார அமைப்பைச் சீர்செய்யும் கருவியாகவோ கருதலாம். அரசைப் பற்றிய இக் கருத்து தொன்மைக்காலக் கருத்தினின்றும் மாறுபட்டது. பொருளாதாரத்தின் அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளையும் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வல்லாட்சிக் கருத்தினின்றும் இப்புதிய கருத்து மாறுபடுகிறது. மனித சமூகப் பொருளாதார வளர்ச்சியின் உடனடித் தேவை உணரப்பட்ட காலத்தில் தத்துவக் கண்ணோட்டத்தில் மட்டுமல்லாமல், பொதுவாகவே அரசின் பங்கு பெருகி வந்தது. இதன் காரணமாக வளர்ச்சி அல்லது முன்னேற்ற வழி முறைகளில் முழுமைப்

படைப்புக் கோட்பாட்டின் (Wholistic Approach) அணுகுமுறை கையாளப்பட்டது.

அரசின் பணியினை விளக்கும்போதும், அரசிறைக் கொள்கையின் விளைவுகளை விளக்கும்போதும் மொத்த வருவாய் அளவு, தனியார் வருவாய் அளவு, பொருளாதார மொத்தத் தேவை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும் என்பது இப்போது வலியுறுத்தப்படுகிறது. முன்னேறிய அல்லது முன்னேற்றமடையாத சமூக அமைப்பாக இருப்பினும், அவற்றின் சிக்கல்களை அணுகும்போது அப்பொருளாதாரத்தின் அளிப்புப் பகுதியும் கவனமாக ஆய்விற்குட்பட வேண்டும் எனக் கருதப்படுகிறது. அதே நேரத்தில் பொருளாதார மேலாண்மையின் தேவையைக் கருதும்போது பண வருவாய்க்கு மட்டும் சிறப்பிடம் அளித்திடாமல், வாழ்க்கைத் தரக் குறியீடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் கருதப்படுகிறது.

அரசின் பல வருமான வழிமுறைகளினால் வருவாயில் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. அதுபோலவே நிதியியல் பயன்களும் பலவாறான விளைவுகளை உண்டாக்குகின்றன. இவற்றால் ஏற்படும் மேலோங்கிய அறிவு, ஆற்றல்மிகு பொருளாதார மேலாண்மைக்கான கொள்கையை உருவாக்குகிறது. சட்டமியற்றுவோர், நிருவாகத்தினர், மக்கள் தலைவர்கள், தனியமைப்புகளைச் சார்ந்தோர் ஆகிய அனைவரும் கொள்கைகளை உருவாக்குவதில் பங்கேற்கின்றனர். பொதுப் பண்ட (Public Good) உற்பத்தியிலிருந்து அரசின் கொள்கை முடிவுகளை அறிந்திட முடியும். அங்காடி விலையில் விற்கப்பட முடியாத தன்மையைப் பெற்றிருப்பவை பொதுப் பண்டங்கள். நாட்டின் பாதுகாப்பு, உண்மையான பொதுப் பண்டத்திற்குச் சான்றாக அமையும். தொடக்கக் கல்வி, சார்பான பொதுப் பண்டத்திற்கு (Quasi Public Good) எடுத்துக்காட்டாகும். பொதுப் பண்டங்களின் நுகர்வு பல சிறந்த நலன்களை விளைவிக்கிறது. அரசின் செலவுகள் நீண்டகாலங்களுக்கு அதிகரித்து வருகிறது. இப்போது பொதுப் பண்டங்கள் மிகுதியான அளவில் உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

எப்பொருள் உற்பத்தி செய்யப்படவேண்டும், எந்த அளவிற்குச் செய்யப்படவேண்டு மென்பவை குறித்துத் திட்டமிடுவதன் தேவை உணரப்படுகிறது. இந்நிலையில் நிருவாகத் திறமை, உற்பத்திச் சிக்கனம், மிகைப் பயன் விளைவுகள் (Spill-over Effects) ஆகியவையும் கவனிக்கப்பட வேண்டியவையே. மிகைப் பயன்கள் பல்வேறு பிரிவினரிடையே மட்டுமல்லாமல் நீண்டகாலத்திலும் பயனளிப்பவையாக அமையலாம். இப் பயன்களை நுட்பமாக மதிப்பிடுவது கடினம். பொதுச் செலவு ஆய்வில், செலவு—நன்மை அணுகுமுறை (Cost-Benefit Approach) பல வழிகளில் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமைகிறது. இவ்வணுகுமுறையில் திட்டங்களுக்கு முதலீடு செய்யு முன்னே, அவற்றால் ஏற்படும் நன்மைகளும் செலவுகளும் அளவிடப்படுகின்றன.

வளரும் நாடுகளின் உற்பத்தி ஆற்றலைப் பெருக்கத் திட்டங்கள் தீட்டுவதன் தேவை பெருமளவில் உணரப்படுகிறது. வளர்ச்சியடைந்த தொழில் வள நாடுகள், அவற்றின் உண்மை ஆற்றலுக்கு (True Potential) ஈடாகத் தம் பொருளாதாரத்தை அமைத்திட அரசின் நிதிக் கொள்கையை முதன்மைக் கருவியாகக் கொண்டு செயற்படுகின்றன. வணிகச் சுழற்சியின் (Trade Cycle) விளைவால் ஏற்படும் சிக்கலையும் மாற்றங்களையும் களைந்திட இக் கொள்கைகளே உதவுகின்றன. பணவீக்கத்தைத் தவிர்ப்பது, வேலைவாய்ப்பை மிகச் செய்வது ஆகிய காரணங்களுக்காக இக் கொள்கைகளைப் பொருத்தமான வழிவகைகளில் கையாளுகின்றன. வளர்ச்சி குறைந்த நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகுந்திருப்பதால், அரசாங்கம் பெருமளவில் செலவு செய்து வேலை வாய்ப்பினைப் பெருக்க வேண்டியுள்ளது. அதனைப் போலவே வறுமையை ஒழிப்பதும் ஒரு சிறந்த பணியாகக் கருதப்படுகிறது. இந்நிலையில் அரசாங்கம் தன் நிதிக் கொள்கையின் மூலம் பொதுச் செலவில் அளவிறந்த தொகையைத் துயர் துடைக்கும் பணிக்கும் (Relief) உதவித்தொகைக்கும் (Subsidy) கொடுக்க வேண்டிய நிலையிலுள்ளது. மேலும், பொதுத் துறை நிறுவனங்கள் எப்போதும் உபரி வருமானத்தைப் பெறும் வண்ணம் செயற்பட இயலாது. அளிப்புப் பகுதியில் அரசின் கட்டுப்பாடு போதாத நிலையில், விலைகளை எளிதில் கட்டுப்படுத்துவது இயலாத காரியம். இந்நிலையில் அரசுக்கு மிகுந்த செலவு ஏற்படும் நிலையும் உள்ளது.

நிதிக் கொள்கை பற்றிய ஆய்வில் வரவு செலவுத் திட்டமும் அதன் விளைவுகளும் கவனமாக வரையறுக்கப்பட்டு ஊக்கமளிக்கப்படுகின்றன. அரசாங்கம் வரிகள், வரியற்ற வருவாய், கடன்கள் போன்றவற்றிலிருந்து திரட்டிய வருவாயைச் சில குறிப்பிட்ட பணிகளுக்காகச் செலவு செய்யக் கூடும். பொருளாதாரத் திறனை மேம்படுத்த நிதியியல் நடவடிக்கையில் அரசாங்கம், ஓர் ஒழுங்கு முறையை வரவு செலவுத் திட்டத்தின் வாயிலாக அறிமுகம் செய்கிறது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிலைப்படுத்த அல்லது ஊக்கப்படுத்த வரவு செலவுத் திட்டத்தில் சில உள்ளார்ந்த தன்மைகள் உண்டு. அயல்நாட்டு வருவாய், உதவி அல்லது கடன் போன்றவையும் இதில் சிறந்த பங்காற்றுகின்றன. அரசின் பன்னாட்டுப்

பொருளாதார உறவுகளும் கூட வரவு செலவுத் திட்டத்திலும் அதன் மூலம் நிதிக் கொள்கையிலும் பாதிப்பை விளைவிக்கின்றன. பி.கி.ரா.

**அரசின் அதிகார எல்லை** என்பது, நாடுகளின் அரசாங்க அமைப்பிலே ஒவ்வொரு அரசாங்கக் கூறுக்கும் (Unit), அல்லது அதிகாரிக்கும் சட்டத்தினால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரம் செலுத்தப்பட வேண்டிய நிலப்பகுதியின் அளவு, அல்லது பொதுப் பணியின் அளவு அல்லது வரம்பினைக் குறிக்கும் 'Jurisdiction' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு நேரான பொருள், நீதிவழங்குதல் அல்லது நீதிவழங்கும் அதிகாரத்தைக் கையாளுதல் என்பதாகும். இது சட்டப்படியான அதிகாரத்தையும் ஏவும் அதிகாரத்தையும் குறிப்பதற்குக் கையாளப்படுகிறது. சட்டத்தை எடுத்துச் சொல்லி உரிமையைக் காத்தல் அஃதாவது நீதி வழங்குதல் என்ற பொருளில் தான் இது கையாளப்பட்டது. ஒவ்வொரு அதிகாரியும் தனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைச் சட்டப்படி எந்தத் துறையில் கையாளுதல் வேண்டுமோ அந்தத் துறையில்தான் அதனைக் கையாளுதல் வேண்டும். வேறொரு துறையில் அதனைச் செலுத்துதலாகாது என்ற வரம்பும் இத் தொடரால் உணர்த்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இடைக்காலத்தில் இங்கிலாந்தில் தோன்றிய ஒரு சட்டத்தின்படி கிறித்துவத் திருச்சபையைச் சேர்ந்த அதிகாரிகள், உலகியல் துறை பற்றிய வழக்குகளை (Temporal) முடிவு செய்தல் கூடாது. எச். எச் வில்சன் (H. H. Wilson) தாமெழுதிய 'பிரிட்டிஷ் இந்திய வரலாறு' (இரண்டாம் பாகத்தில்), "மாநிலங்கள் .........கிழக்கிந்திய வாணிகக் கழகத்தாருடைய அதிகார எல்லையிலிருந்து விலக்கப்பட்டவை என்று கருத இயலாது", என்று கூறுகிறார். கி.பி. 1896-ஆம் ஆண்டின் சட்ட அறிக்கை ஒன்று (Law Times Report, LXXIII), ஒரு குறிப்பிட்ட நீதிமன்றத்தைச் சுட்டி, "அமெரிக்காவிலுள்ள சொத்துகளைப் பற்றிய வழக்குகளை ஆய்வு செய்து தீர்மானித்தற்கு, இந்த நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை" என்று கூறுகிறது. இங்கு இத்தொடர், நீதி வழங்கும் அதிகாரத்தைக் குறிக்கிறது. பொதுவாக இத்தொடர், அதிகாரம், ஆட்சி, நிருவாகம், கட்டுப்பாடு முதலிய கருத்துகளை உணர்த்துகிறது; இதிலிருந்து நீதிவழங்கும் அதிகாரத்தின் அளவு அல்லது எல்லை, ஆட்சி அல்லது நிருவாக அதிகாரத்தின் அளவு அல்லது எல்லை முதலிய பொருள்களை உணர்த்துவதாகக் கொள்ளப்பட்டது. பின்னர் இது நீதித் துறை அமைப்பையும் நீதிமன்றத்தையும் குறிப்பிடும் பொருளிலும் கையாளப்படுகிறது.

உரிமை வழக்குகளை (Civil Cases) முடிவு செய்யும் நீதிமன்றங்கள் எல்லாம் நம் நாட்டில் அவவவற்றின் அதிகார எல்லைக்குத் தக்கப்படி ஒன்றின்மேலொன்றாக அடுக்காக அமைக்கப்பட்டுள்ளன. வழக்கிற்கு உட்படும் மதிப்பு சிறிய அளவாக இருந்தால், அவ்வழக்கு முன்சீபு நீதிமன்றத்திலும், (Munsif-Court) சிறிது கூடுதல் மதிப்புள்ள வழக்காக இருந்தால் மாவட்டத் தலைமை நீதிமன்றத்திலும், அதனினும் பெரிய வழக்கு மாநில உயர்நீதிமன்றத்திலும், எல்லாவற்றிலும் பெரிய வழக்கு இந்தியத் தலைமை நீதிமன்றத்திலும் ஆய்வு செய்யப்படுகின்றன. அதிகாரம் செலுத்தப்படும் நில எல்லையை ஆதாரமாக வைத்து, நாடு பொதுவாக மாநிலங்களாகவும், மாநிலங்கள் மாவட்டங்களாகவும், மாவட்டங்கள் வட்டங்களாகவும், வட்டங்கள் பட்டணங்களாகவும், சிற்றூர்களாகவும் பிரிக்கப்படுகின்றன; ஒவ்வொரு கூறுக்கும் அதிகாரத்தைத் செலுத்துவதற்கு அரசாங்கம் அதிகாரிகளை அமர்த்தி, அவர்களுடைய அதிகாரத்தையும் பணிகளையும் வரையறை செய்கிறது. அதிகார எல்லையை ஒட்டியே அதிகாரக்குவிப்பு (Centralisation), அதிகாரப் பரவல் (Decentralisation) என்ற கருத்துகள் தோன்றியுள்ளன. செய்ய வேண்டிய பணிகளை முடிவு செய்யும் அதிகாரங்கள் அனைத்தும் (Decision-making Powers) நாட்டின் தலைமை அல்லது நடுவண் அரசாங்கத்திடமோ அதிகாரியிடமோ வைக்கப்பட்டிருக்குமானால், அத்தகைய அமைப்புக்கு அதிகாரக் குவிப்பு என்பது பெயர்; இவ்வகை அமைப்பில் மேல்நிலை அதிகாரியானவர் மக்களுக்குப் பொறுப்பாக இல்லாமலும், தம் பதவிக்கு மக்களுடைய ஆதரவைச் சார்ந்திராமலுமிருக்கிறார்; எனவே இவ்வகை அமைப்பு குடியாட்சி இயல்பு உடையதன்று. இதற்கு மாறாக, அதிகாரப் பரவல் முறையிலே கீழ்நிலை அதிகாரிகளுக்கும் அவரவர் நில எல்லைக்குத் தேவையான செயல்களை முடிவு செய்யும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வமைப்பில் கீழ்நிலை அதிகாரிகள் தம் எல்லையிலுள்ள மக்களுக்குப் பொறுப்பாக இருப்பாராதலால், இவ்வமைப்பு குடியாட்சி இயல்புடையதாக இருக்கும்.

ஆட்சித்துறை அமைப்பிலே, அதிகாரிகளின் அதிகார அளவு அல்லது வரம்பு என்ற கோட்பாடுதான் மிக இன்றியமையாத கோட்பாடாகும். எவ்வாறெனில் ஒவ்வோர் அரசாங்க அதிகாரியும் மக்களுக்குப் பயனுள்ள ஒரு பணியைச் செய்தற் பொருட்டே, தமக்குச் சட்டத்தினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை – (அதாவது ஒருவரை ஒரு பணியைச் செய்யுமாறு வற்புறுத்தி அவரை ஏவக்கூடிய, ஆணையிடக்கூடிய அதிகாரத்தைச்) செலுத்துதல் வேண்டும். அதுவன்றி அவர் பிறிதொரு நோக்கத்திற்குத் தம் அதிகாரத்தைக் கையாளுவராயின், அவர் சட்டத்தை மீறிச் செயற்படும் குற்றத்துக்கு ஆளாவார். சட்டத்

தின் ஆட்சி (Rule of Law) நடைபெறும் குடியாட்சி நாட்டில் சட்டத்தை மீறிய தவறு செய்பவர் எவராயினும், அவர் எளிய குடிமகனாயினும், அரசாங்க அலுவலராயினும், மிகக் கீழ்நிலை அலுவலராயினும், மிக உயரிய தலைமை அமைச்சர் அல்லது குடியரசுத் தலைவராக இருந்தாலும், சட்டத்தை மீறிய குற்றம் செய்தவராகக் கருதப்பட்டுத் தண்டம் பெறுதற்குரியர். ஆதலால் ஒவ்வோர் அதிகாரியும் தம் அதிகார எல்லை அல்லது வரம்பு என்பது, தாம் செய்ய வேண்டிய பணிகளால் அமைந்தது என்றுணர்ந்து செயலாற்றுதல் வேண்டும். பிரிட்டிசு, அமெரிக்க, இந்திய ஆட்சித்துறைகளெல்லாம் குடியாட்சிக் கோட்பாட்டை ஒட்டி அமைக்கப்பட்டவையாதலால், அவற்றில் அரசியல் அதிகார எல்லை என்னும் கோட்பாடு அடித்தளமாக விளங்குவதைக் காணலாம். பா.சு.

**அரசின் தோற்றம்**: அரசு இவ்வாறுதான் தோன்றியது என்று யாராலும் தெளிவாகக் கூற முடியவில்லை. ஆனால் அரசு இவ்வாறுதான் தோன்றியிருக்க வேண்டும் என்று அறிஞர்கள் பலரும் பல்வேறுபட்ட கருத்தைக் கூறுகிறார்கள். அதிலும் அறிஞர்களால் ஒருமித்த கருத்துக்கு வரமுடியவில்லை. அரசின் தோற்றம் (Origin of State) பற்றிய கோட்பாடுகளுள் முதன்மையானவை பின் வருவன: சமூக ஒப்பந்தக் கோட்பாடு, இறைவழித் தோற்றக் கோட்பாடு, வன்மைக் கோட்பாடு, தந்தை வழிக்கோட்பாடு, தாய் வழிக்கோட்பாடு, வரலாற்றுக்கோட்பாடு அல்லது வளர்ச்சிக்கோட்பாடு.

அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளிலே மிக்க முதன்மையானதாகக் கருதப்படுவது சமூக ஒப்பந்தக் கோட்பாடாகும். இந்தக் கோட்பாட்டை ஆதரிக்கும் அறிஞர்களுள் முதன்மையானவர்களாகக் கருதப்படுபவர்கள், ஆப்சு (Hobbes), இலாக் (Locke), உரூசோ (Rousseau) ஆகியோராவார்.

ஆப்சு கருத்துப்படி மனிதனுடைய இயற்கை வாழ்க்கை, சமூகநிலை அரசியல் நிலை ஆகிய இரண்டிற்கும் முந்தியதாக இருந்தது. மனிதன் தன்னிச்சையாகத் தான்தோன்றித்தனமாக வாழ்ந்தான். இந்தச் சுய நலமான வாழ்க்கை அறிவின் வழி வந்ததன்று. பசி, நீர்வேட்கை, உணர்ச்சி ஆகிய இவைகளுக்கு மனிதன் ஆட்பட்டிருந்ததால் ஓயாத சண்டைக்கும் ஒழியாத அல்லல்களுக்கும் ஆளானான். அவ்வாழ்க்கையில் சரியானது, தவறானது, நீதி, அநீதி என்ற பாகுபாடுகள் இல்லை. இம்மிருகத்தனமான வாழ்க்கையில் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு யாது? எனவே மனிதன் ஒரு சமூக அமைப்புக்குள் வருகிறான். இச்சமூக வாழ்க்கை ஓர் ஒப்பந்தமாகும். இந்த ஒப்பந்தத்திற்குள் வருகிற யாவரும் பொது நலன் கருதித் தாங்கள் இயற்கையில் பெற்றிருந்த எல்லா அதிகாரத்தையும் ஒருவரிடமோ அல்லது ஒரு மன்றத்திடமோ ஒப்படைக்கிறார்கள். அவ்வாறு ஒப்படைத்தபின் அவ்வதிகாரத்தைத் திரும்பப்பெற அம் மக்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. ஏனெனில் அந்த அதிகாரத்தைப் பெறுகிற ஒருவர் இந்தச் சமூக ஒப்பந்தத்திற்குட்பட்டவர் அல்லர். முழு அதிகாரத்தையும் ஒப்படைக்கும்பொழுது கட்டுப்பாடுகளை விதித்தால், கட்டுப்பாடுகளின் பேரில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டுச் சமூகம் சின்ன பின்னமாகி, மீண்டும் பழைய நிலையை மக்கள் அடைந்துவிடுவார்கள் என ஆப்சு கருதுகிறார். மக்கள் ஒப்படைக்கிற அதிகாரத்திற்கு ஆப்சு, 'பேரரக்கன்' (Leviathan) எனப் பெயரிடுகிறார். இதுவே எல்லா வல்லமையும் பொருந்திய இறைமை ஆகும். இது பிரிக்கவோ பிடிக்கவோ தகர்க்கவோ முடியாதது. ஆப்சின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டில் தெளிவாகப் பார்க்க வேண்டிய பகுதிகள் இயற்கை நிலை (State of Nature), சமூக ஒப்பந்தம், இறைமை (Sovereignty) விமரிசனம் ஆகியவையாம்.

இலாக் கூறும் இயற்கை நிலை, ஆப்சின் இயற்கை நிலையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. மனிதன் அரசியல் நிலைக்கு முற்பட்டிருந்தான். ஆனால் சமூக நிலைக்கன்று. மனிதன் இயற்கை நியதியில் (Law of Nature) வாழ்ந்தான்; பகுத்தறிவோடும் பண்போடும் பழகிப் பல்லுயிர் ஓம்பினான்; இயற்கை நியதியில் இயற்கை உரிமைகளான உயிர், உரிமை, உடைமை ஆகிய இவைகளைப் பேணினான்; தன்னைப் போல் பிறரையும் எண்ணும் தன்மை பெற்றிருந்தான்; சுருங்கக்கூறின் சமூக நிலையில் சுமுகமான – அமைதியான – வாழ்வில் திளைத்திருந்தான்.

இப்படிப்பட்ட இயற்கை நிலையிலும் மூன்று வித சங்கடங்கள் இருந்தன. முதலாவதாக இயற்கை நியதி என்றால் என்ன என்பது தெளிவாக்கப்படாமை. அடுத்ததாக இயற்கை நியதியை மீறுகிறவர்களுக்கு யார் தண்டனை கொடுப்பார்கள் என்ற கேள்வியாகும். இறுதியாக அவ்வாறு தண்டனை கொடுக்கப்பட்டால் யார் அதை நிறைவேற்றுவது? என்ற வினா. இவ்வாறான கேள்விகளுக்கு விடைஅளிப்பதற்கென்றே சமூக ஒப்பந்தம் செய்யப்படுகிறது. இவ்வொப்பந்தத்தின் காரணமாக ஒப்பந்தச் சமூகம் தோன்றுகிறது. இயற்கை நிலையில் தனி மனிதன் பெற்றுவந்த உரிமைகள் யாவும் சமூகத்திடம் ஒப்படைக்கப்படுகிறது. எல்லா உரிமைகளையும் பெற்றிருக்கிற தகுதி அடிப்படையில் இச்சமூகம் மற்றும் ஓர் ஒப்பந்தத்திற்கு வருகிறது. இந்த ஒப்பந்தமே அரசாங்கத்தை ஏற்படுத்துகிறது. பொதுநலன் கருதிச் சட்டம் இயற்றுவதற்கும், சட்டத்தின் வாயிலாகத் தகராறுகளுக்குச் சரியான நீதி வழங்குவதற்கும் ஒரு குறிப்பிட்ட மனிதருக்குச் சமுதாயம் அதிகாரமளிக்

கிறது. இரண்டாவது ஒப்பந்தமாகிய அரசாங்க ஒப்பந்தத்தில் ஆட்சி செய்கின்றவருக்கும் பங்கு இருக்கிறது. அவரும் இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்டவரே. இந்த ஒப்பந்தத்தில் இருந்து மீறும்பொழுது ஆட்சியாளரை நீக்குவதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது. அதாவது, ஆளுவோர், ஆளப்படுவோர் யாவரும் ஒப்பந்தத்தின் பங்குதாரர்களே. ஆளப்படுவோர் இயற்கையில் அனுபவித்து வந்த சில உரிமைகளை ஆளுவோரிடம் ஒப்படைக்கத்தான் செய்கிறார்களேயல்லாமல் உரிமைப்படுத்தவில்லை என இலாக் கூறுகிறார். இது ஆப்சின் கருத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும்.

அரசு தோன்றியமை பற்றிய இலாக் கருத்தின் முக்கியக் கூறுகள் இயற்கை நியதி, சமூக ஒப்பந்தம், அரசாங்க ஒப்பந்தம், சட்டமியற்றலின் உயர்வு, அதிகாரப் பிரிவினை, உயிர், உரிமை, உடைமை ஆகியவை, மனிதனின் மாற்ற முடியாத அடிப்படைப் பிறப்புரிமைகள் என்பனவாகும்.

உரூசோவின் கருத்துப்படி மனிதன் இயற்கை நிலையில் எளிய நிலையில் வாழ்ந்தான். எளிய இனிமை நிறைந்த சுதந்திரமான மனித வாழ்க்கை அது. மற்றவர்களுக்கு இடுக்கண் செய்ய வேண்டிய இன்றியமையாமை இல்லாதிருந்தது. இது சரி, இது தவறு, இது தூய்மை, இது தூய்மையற்றது என்று இனம் பிரித்து வாழத் தெரியாத ஒரு புனிதமான நிலை அது. இந்நிலை நீண்ட காலங்களுக்கு நீடிக்கவில்லை. இதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. முதலாவது மக்கள் தொகைப் பெருக்கம்; இரண்டாவது பகுத்தறிவின் தோற்றம். மக்கள் தொகைப் பெருக்கத்தால் மனிதன் தனித்தனியாக வீடுகள் அமைத்துக்கொண்டான்; நான் எனது என்று சிந்திக்கத் தொடங்கினான்; இயற்கை நிலையின் புனிதம் பாழ்பட்டது; சிந்தித்தான், சீரழிந்தான் என்பது உரூசோவின் கருத்தாகும்.

இவ்வேளையில் இயற்கை நிலையில் இருந்த மகிழ்வும் மன நிறைவும் சமத்துவமும் மறைந்து போயின. போட்டியும்பொறாமையும் தலைதூக்கின. கொள்ளைகளும் கொலைகளும் அன்றாட வாழ்க்கையாயின. இந்தப் பதற்ற நிலையிலிருந்து விடுபடுவதற்குச் சமூக ஒப்பந்தம் தேவைப்பட்டது. இந்தச் சமூக ஒப்பந்தப்படி யாவரும் தங்களிடமிருந்த அதிகாரங்களை ஒன்று கூட்டி ஒரு பொது அதிகாரத்தை நிறுவினர். இதற்குப் பொதுச் சார்பு (General Will) அல்லது பொது நல விருப்பம் என உரூசோ பெயரிடுகிறார். இந்தப் பொதுச் சார்பில் யாவரும் தங்களிடமிருந்த அதிகாரங்களை ஒப்படைப்பதுடன் தாங்களும் அதில் ஓர் உறுப்பினராகிறார்கள். பொதுச்சார்பு பிரிக்கவோ மாற்றவோ மறுக்கவோ முடியாதது. இது மக்களின் ஒருமித்த கருத்தைப் பிரதிபலிக்கும். பொதுச்சார்பு மக்களின் முழுமைபெற்ற மிகச் சிறந்த திண்ணிய எண்ணமாகும். எனவே அது இறைமை படைத்தது. அந்த இறைமைக்கு மீறி யாரும் நடக்க முடியாது. அரசு, மக்களின் ஒருமித்த அமைப்பாகும். பொதுச் சார்பை அது பெற்றிருக்கிறது. அதுவே தலைமை படைத்தது. அரசாங்கம் அரசின் பிரதிநிதியாகும். அரசிடமிருந்து அது அதிகாரங்களைப் பெறுகிறது. அரசாங்கங்களுக்கென்று தனி அதிகாரங்கள் கிடையா.

பொதுச் சார்பைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம். அ,ஆ,இ,ஈ,உ என்பவர்கள் தனிமனிதர்கள் என்றால் அ ஆ இ ஈ உ என்று இணைந்து பொதுச் சார்பாக்கப்படுகிறார்கள். பொதுச் சார்பில் அங்கம் வகிப்பதுடன் அ,ஆ,இ,ஈ,உ என்ற தனி மனிதர்களாகவும் அவர்கள் இயங்குகிறார்கள். தங்களுடைய முழு அதிகாரத்தையும் பொதுச் சார்பில் ஒப்படைத்து விட்டதால், சமத்துவத்தையும் உரிமையையும் யாவரும் அதிலிருந்து பெறுகிறார்கள். பொதுச் சார்பைக் கூர்ந்து நோக்கும்பொழுது இரண்டு குணநலன்கள் நன்கு புலப்படும். ஒன்று, பொதுச் சார்பில் அங்கம் வகிக்கும் தன்மை. இரண்டு, அதற்கு உட்பட்டு வாழும் மனிதப்பண்பு. பொதுச்சார்பில் யாவரும் அங்கம் வகிப்பதால், தனி மனிதத்தன்மை அதில் அடங்கிப் போகவேண்டும் என்பதே உரூசோவின் கருத்தாகும். அவ்வாறு போகாதவர்களைப் பொதுச்சார்பு அடி பணிய வைக்கும். பொதுச்சார்பு யாவரின் நலனுக்கும் பாடுபடுவதால் அது ஒரு போதும் தீங்கிழைக்காது.

உரூசோ காட்டும் ஒப்பந்தத்தின் நிறை, மக்களின் இறைமை பொதுச் சார்பில் தெளிவாக்கப்பட்டுள்ளமையும், குறை அரசு சமூகம் ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு காணமுடியாமையும் ஆகும்.

ஆப்சு, இலாக், உரூசோ ஆகியோர் காட்டிய சமூக ஒப்பந்தத்தில் காணப்படும் பெரிய குறைபாடு, வரலாற்றுச் சான்றுகள் கிடைக்காமையாகும். எனவே இது ஓர் அனுமானக் கொள்கையாகவே நிலைத்திருக்கிறது. எனினும், இவற்றில் காணப்படும் அரசு தோன்றுவதற்கு மக்களின் இணக்கமே அடிப்படையாக அமைந்தது என்ற கருத்தை ஒதுக்கித் தள்ளுவதற்கில்லை.

இறைவழிக் கோட்பாடு, சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்கு முந்தியதாகும். அரசு என்பது, மனிதனின் விருப்பத்தால் தோற்றுவிக்கப்பட்டதன்று; இறைவனால் தோற்றுவிக்கப்பட்டது. அரசர் இறைவனின் சார்பாளராவர்; இறைவனாலேயே நியமிக்கப்படுகிறார்; இறைவனுடைய பேராளராக இருப்பதால் எந்த மானிடருக்கும் அவர் மறுமொழி சொல்லக் கடமைப்பட்டவரல்லர். அரசர் தவறாக

ஆட்சி செய்தால், மக்களுக்கு அவரை நீக்குவதற்கு உரிமை கிடையாது. ஏனெனில் அவர் கடவுளின் பேராளர். அரசர் மோசமாக ஆட்சி செய்தால் அது மக்களின் வினைப்பயனாகும் என்பதுதான் இறைவழிக் கோட்பாட்டின் கருத்தாகும். இக்கோட் பாட்டின் முதன்மையான கூறு இறையுணர்வு. இக் கோட்பாடு எல்லா வல்லமையும் பெற்ற ஓர் அர சனைத் தோற்றுவிப்பதால் கொடுங்கோன்மைக்கு வழிவகுக்கிறது என்பது இதன் குறைபாடாகும். மக் கள் நலன் பேணாக் கொடுங்கோன்மை நீடித்திருந்த தாக வரலாறு கிடையாது.

பழங்காலச் சமூகத்தில் பலமுள்ளவன், பலமற்ற வர்களை அடக்கியாண்டான். பலமுள்ளவன் தனக்கு வேண்டிய சில அடியாட்களை வைத்துக்கொண்டு மக்கள் கூட்டத்தையே அடக்கி ஆள வேண்டிய நிலை நீடித்தது. இந்த நிலை ஒரு குறிப்பிட்ட நிலப்பரப் பில் வாழத் தலைப்பட்ட பின்பும் கூடத் தொடர்ந் தது. இவ்வாறாகப் பழங்குடியில் இருந்த வாழ்க்கை பேரரசாக மலர்ந்தது. பேரரசாக நிலைப்பதற்கும் வன்மையைத் தொடர்ந்து பயன்படுத்த வேண்டி யிருந்தது. வன்மை நிலை பெற்றதற்கு வெளி நாட் டின் வலிந்து கைப்பற்றுதலைத் தடுப்பதும் உள்நாட் டின் குழப்பங்களை அடக்குவதும் காரணங்களாக அமைந்தன. சுருங்கக் கூறின், அரசு தோன்றுவதற்கும் தொடர்வதற்கும் வன்மைதான் காரணமாக இருந் தது. வன்மைக்கோட்பாடு பல்வேறு காலங்களில் வர லாற்று நிகழ்ச்சிகளில் இடம் பெற்றிருக்கிறது. அர சுக்கு எதிராக இக்கோட்பாட்டைச் சமயகுருமார்கள் பயன்படுத்தினார்கள். அரசு வன்மையால் தோன்றி யது; எனவே அதற்கு அடிபணியக்கூடாது என்றும் தேவாலயங்கள் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டன; எனவே மக்கள் தேவாலயங்கட்கு உட்பட்டு வாழ வேண்டும் என்றும் அவர்கள் கூறினர் பொதுவுடைமை வாதிகள் இக்கோட்பாட்டை அரசுக்கு எதிராகக் கையாண்டுள்ளார்கள். அவர்கள் கருத்து, வன்மையால் தான் அரசு நிலைத்திருக்கிறது; இவ்வன்மை பொருந் திய அரசு, இருப்போன், இல்லாதவனைச் சுரண்டு வதற்கு வழிவகுக்கிறது; அப்படிப் பட்ட அரசை மாற்றி அமைக்க வேண்டும் என்பதாகும். அரசு வன் மையால்தான் நிலைத்திருக்கிறது என்பதை முழுமை யாக நம்பியவர்கள், இட்லர், முசோலினி ஆகியோ ராவார்கள். அரசு வன்மையால்தான் நிலைத்திருக் கிறது என்பது உண்மை. ஆனால் வன்மையால் மட்டுமே நிலைத்திருக்கிறது என்பது உண்மையாகாது.

குடும்ப அமைப்புத்தான் சமூக அமைப்பின் முதற் படி. அதிலிருந்தே அரசு தோன்றியது. குடும்பத்தில் தந்தையே தலைவனாக இருந்தான். அவனுடைய சொற்கேட்டு அக்குடும்பம் நடந்தது. தந்தை, தாய், குழந்தைகள் குடும்பத்திற்குள் அடங்குவர். குழந்தை கள் பெரியவர்களானாலும், அவ்வழியில் வந்த மூத்த பெரியவரையே தலைவராகவும் வழிகாட்டியாகவும் கருதினர். அவ்வாறே அதிகாரம் தோன்றியது. ஒரு குடும்பம் பல்வேறு குடும்பமாகப் பல்கியநிலையிலும் பெரியவரையே தலைவராக அக்குடும்ப மக்கள் மதித் தனர். அவருடைய கட்டளைக்குக் கட்டுப்பட்டு நடந்தனர். குடும்பம் குலமாகவும், குலம் இனமாகவும் இனம் அரசாகவும் தழைத்தோங்கியது. தந்தையின் அதிகார உறவோடு அரசு மலர்ந்தது என்பதை விளக்குவதே தந்தை வழிக்கோட்பாடு. இந்தக் கோட் பாட்டை எடுத்துப் பேசுவோரில் முதன்மையானவர் சர் என்றி மெயின் (Sir Henry Maine) என்பவராவர். குடும்பத்திலிருந்துதான் அரசு தோன்றியிருக்க வேண் டும் என்று அரிசுடாட்டிலும் கருதுகிறார். சமூகம் என்பது குடும்பங்கள் யாவும் ஒன்றுபட்டு ஒரே இடத்தில் வாழ்வது என்றும், அவ்வாறே சிற்றூர் வாழ்க்கை தொடங்கியது என்றும், சிற்றூர் என்பது ஒரு குடும்பத்தில் தோன்றிப் பல்கிப் பெருகிய பரி ணாம வளர்ச்சி என்றும் அரிசுடாட்டில் கருதினார். மேலுமவர், ஒவ்வொரு குடும்பமும் தலைவனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடப்பது போலவே, ஒவ் வொரு சிற்றூரும், அந்த வழியில் வந்த மூத்த ஒருவனை நாட்டாண்மையாளனாகக் கொண்டு அவன் சொற்கேட்டு நடந்தது என்றும், அதனால் பல சிற்றூர்கள் சேர்ந்து அரசாக மாறியது என்றும், அவ் வாறு அரசாக மலர்ந்தபோது ஆண்வழியில் வந்த மூத்த தலைவனே அரசனாக முடிசூட்டிக் கொண் டான் என்றும்· விளக்கியுள்ளார்.

ஆனால், மெக்லினன் (Maclenan) போன்ற ஆசிரியர் கள், தந்தைவழிக் கோட்பாட்டைத் தெளிவாக மறுக் கிறார்கள். அவர்கள் தாய்வழி உறவு முறையே எல்லாவற்றிற்கும் முன்னோடியாக இருந்தது என்றும், திருமணம் என்னும் வரன்முறை வந்தபின்னர்த்தான், ஆடவனுக்கு அதிகாரங்கள் சென்றன என்றும் கூறு கின்றனர். திருமணம் என்னும் உறவு வாழ்க்கை மிகப் பிந்திய வளர்ச்சி என்றும், பழங்காலச் சமுதாயம் திருமணம் என்ற கட்டுப்பாடான வாழ்க்கை இல்லா மலேயே வாழ்ந்திருக்கிறது என்றும், அத்தகு வாழ்க்கை யில் உறவு முறையை ஆயும்பொழுது அது தாய்வழி வந்ததாகவே இருக்கிறது என்றும் மெக்லினன் போன்ற ஆசிரியர்கள் கருதுகிறார்கள். மேற்கூறப்பட்டவற்றால் இனமுறைவாழ்க்கைக்குப் பிந்தியதே குடும்பவாழ்க்கை என்பதும், குடும்ப வாழ்க்கைக்கு முன்பாகப் பல கணவர் வாழ்க்கை முறை அமைந்திருந்தது என்பதும் புலனாகின்றன.

உறவின் முறைகள் தாய் வழி வந்ததே என்னும் அடிப்படையில் உருவானதுதான், தாய் வழிக்கோட்

பாடு. இக் கோட்பாட்டு ஆதரவாளர்களின் கருத்துப் படி, முதன்முதலாக இருந்தது பல கணவர் முறை யாகும். தந்தை, தாய் குழந்தைகள் அடங்கிய குடும்ப அமைப்புத் தோன்றாத காலம் அது. குழந்தைகளை ஈன்றெடுத்த தாயே அவர்களின் உறவுகளுக்கு அடிப் படையாக இருந்தாள். தாயே சொத்துரிமைகளுக்கும் அடிப்படையாக இருந்தாள். குடும்பம், குலம், இனம் என்ற பரிணாம வளர்ச்சி என்பது செயற்கையானது. கட்டுப்பாடற்ற வாழ்க்கையில் முதலில் இனமாகத் தான் வாழ்ந்தனர். பின்பு குலம் உண்டாக்கியும் நீண்ட காலங்களுக்குப் பின்னரே குடும்பம் என்ற வரம்புக்குள் மனிதர்கள் வாழ முற்பட்டனர் என்பது தாய்வழிக் கோட்பாட்டு ஆதரவாளர்களின் கருத்து.

தாய்தான் உறவின் அடிப்படையாக இருந்தாள் என்பதில் ஐயப்பாடில்லை. ஆனால் அதிகாரப் பின் னணியில் தோன்றிய அரசுக்கு அடிப்படையாகத் தாய் இருந்தாள் என்பதில் ஐயப்பாடுகள் பல தோன்றுகின் றன. மனித இனத்தில் பெண் ஒரு வலிமைகுறைந்த உறுப்பாகவே இருந்திருக்கிறாள். தாய் வழிவாழ்க்கை எல்லா இடங்களிலும் நிலையாக இருந்தது என்பதற் குச் சான்றுகள் இல்லை. குடும்ப வாழ்க்கையிலும் ஆண்தான் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறான். தாய் வழிக் கோட்பாடும் தந்தை வழிக் கோட்பாடும் குடும்பத்திலிருந்துதான் அரசு தோன்றியது என்ப தனை வலியுறுத்துகின்றன. ஆனால் குடும்ப வாழ்க் கைக்கும் அரசின் நடைமுறைக்கும் நிறைய வேறுபாடு கள் உண்டு. குடும்பத்தின் வளர்ச்சியே அரசு என்று சொல்வதை முழுமையாக ஏற்றுக் கொள்ள முடியா விட்டாலும், குடும்பம் அரசு தோன்றுவதற்கு ஆணி வேராக இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

அரசுஎன்பது இயற்கையான வளர்ச்சியில் பரிணமிக் கிறது என்பதே வரலாற்றுக்கோட்பாடு அல்லது பரி ணாமக் கோட்பாடு எனப்படுவதாகும். இந்தவளர்ச்சி சீராக ஏற்பட்டதன்று. அரசு ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் உருவாக்கப்பட்டதும் அன்று. அரசு தோன்றுவதற்கு உறவுமுறை, மதம், தற்பாதுகாப்பு, உடைமை, வன்மை ஆகியன அடிப்படைக் காரணிக ளாக இருந்துள்ளன.

அவற்றுள் உறவுமுறை குருதித் தொடர்பால் ஏற்பட்டது. இதுவே ஒற்றுமைக்கு அடிப்படைக் கார ணமாக அமைந்தது. உறவு முறைக்கு அடிப்படை யாக இருப்பது குடும்பம். குடும்ப அமைப்பு முறை என்பது ஒரு கட்டுப்பாட்டு வாழ்க்கை முறையாகும். கட்டுப்பாட்டு வாழ்க்கை முறையின் வெளிப்பாடே ஒழுக்கம். ஒழுக்கமும் கட்டுப்பாடும் அரசு தோன்று வதற்குப் பெரிதும் உதவின. சிறிய குடும்பம், பல குடும்பங்களாகிப் பின்னர்க் குலம், இனம் என்று பல் கிப் பெருகின. தந்தை வழிக் கோட்பாடு கூறுவது போலவே மூத்த தலைமுறையில் உள்ள வயது முதிர்ந்த ஆடவனே இந்த இனம் முழுவதற்கும் தலைவனாக இருந்திருக்கிறான். அக்கூட்டத்தினரை அடக்கி ஆளும் ஆட்சி அதிகாரம் மட்டுமன்றி, இராணுவம் நீதி செலுத்துதல், சமய ஒழுங்கு போன்ற அதிகாரங்க ளையும் அத்தலைவன் பெற்றிருக்கிறான். வரலாற்று முறையில் பார்க்கும் பொழுது பழங்காலப் பேரரசர் கள் மேற்கூறிய அதிகாரங்கள் எல்லாவற்றையும் தாங் கள் ஒருவரே நிருவகித்திருக்கிறார்கள் என்பது குறிப் பிடத்தக்கது.

பழங்காலச் சமூகங்களில் சமயம் சிறந்த இடத் தைப் பெற்றிருந்தது. ஒரு கடவுளை வணங்குகிற யாவரும் ஒன்றாக, ஒரே சமூகமாக வாழ்ந்தார்கள். மூதாதையர் வழிபாடும் அன்றைய சமுதாயத்தில் தலைமையான இடம் பெற்றிருந்தது. மூதாதையர் வழிபாடு ஓர் இனத்தின் ஒற்றுமையை நிலைநிறுத்தி யது. மேலும் உறவு முறையின் நிலைக்களனாகவும் அமைந்திருந்தது. இறந்தவர்களை வழிபடும் தன்மை பழங்குடியினரிடம் மிகுந்து காணப்படுகிறது. இயற்கை, மனிதனை மீறிய ஆற்றலாகும் என்று உணர்ந்த மனிதன், இயற்கையைப் பத்தியுடன் வழி பட்டான். இயற்கையின் சீற்றங்களைப் புரிந்து கொள்ள முடியாதது போலவே இறப்பும், மனிதனால் புரிந்துகொள்ள முடியாத ஒன்றாய் இருந்தது.மழலை யில் தொடங்கிய பருவப் பயணம் கிழவனில் முடிந்து, தளர்ந்து, மெலிந்து, மாய்ந்து போனது பெரிய வியப் பாக இல்லாது போயினும் திடீர்ச் சாவுகள் அன்றைய மனிதனைப் பெரிதும் அச்சுறுத்தின. எனவே திடும் என ஒருவன் இறந்துவிட்டால், இறந்தவனுக்குப் பலி பீடம் கட்டி, உயிரினங்களைப் பலி கொடுத்து வணங் கினான். சிறிது சிறிதாக மூட நம்பிக்கைகள் வளரத் தொடங்கின. பேய், பிசாசுகள் என்று கருதும் அள வுக்கு மீறிய பேதைமைகள் மலிந்தன. மந்திரவாதி களின் ஆதிக்கம் தலைதூக்கிற்று. மந்திரவாதிகள் யாவரும் மண்டை ஓட்டை வைத்துக்கொண்டு மயா னத்தில் அலைபவர்கள் அல்லர். மந்திரங்கள் கற்ற வர்கள், சமய குருமார்களாகவும் இருந்தார்கள். இந்தச் சமய குருமார்களுக்கு மக்கள் கட்டுப்பட்டு வாழ்ந்திருந்தார்கள் என்பதில் வியப்பில்லை. இவ்வா றான சமய குருமார்களே அரசர்களாக ஆகும் பொழுது எல்லா அதிகாரத்துடனும் திகழ்ந்திருந்த னர்.

சமயம் சமுதாய ஒற்றுமையை நிலைநிறுத்திய தோடல்லாமல் அரசற்ற நிலையில், பயமற்ற, பயனற்ற, பண்பாடற்ற, நிலையற்ற நிலையை நீக்கிப் பயம் கலந்த பக்தியோடு, பண்பட்ட வாழ்க்கைக்குப் படிக்கல்லாய் அமைந்தது என்று கூறலாம். மத உணர்வுகள் எவ்வாறாயினும், அதன் அடிப்படையில் அமைந்த அரசுகள் இன்றும் சில நாடுகளில் உள்ளன.

உறவினரோடு ஒன்றுபட்டு வாழ்ந்ததற்கும், சமய அடிப்படையில் மனமொன்றி வாழ்ந்ததற்கும், மனிதன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணியதே மறுக்கமுடியாத உள்நோக்கமாகும்.

தனது பாதுகாப்பிற்கு அடுத்ததாக வருவது உடைமை. தன்னைப் பாதுகாப்பதுடன் தன் வாழ்விற்கு மிகத் தேவையானவற்றைப் பாதுகாப்பதிலும், மனிதன் முனைந்தான். உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பளிக்கும் எந்த அமைப்பு முறையையும் அவன் ஏற்க ஆயத்தமாக இருந்தான். இந்த அமைப்பு முறை எல்லா இடங்களிலும் ஒரே தன்மையாக அமைந்தது என்று சொல்வதற்கில்லை. இது அந்தந்தச் சூழ்நிலைக்குத் தக்கவாறு, மக்கள் வாழும் முறை, பழக்க வழக்கங்கள், ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தது. இந்த அமைப்பு முறை, அரசு வடிவம் பெற்றதாக இருந்தது. அரசமைப்பற்ற ஒரு சமூகம் படை எடுப்புகளைத் தாங்கும் வலிமையற்றது. "வாழ்க்கையின் இன்றியமையாத தேவைக்காகவே அரசு தோன்றியது; அது தொடர்ந்து பாடுபடுவது நல்வாழ்விற்காகவே" என்று அரிசுடாட்டில் கூறுகிறார்.

அரசு தோன்றிய தொடக்கக் காலங்களில், அரசியல் விழிப்புணர்ச்சி வெளிப்படையாகத் தெரியவில்லை. மக்கள் தொகைப் பெருக்கமும் உடைமைகளின் வளர்ச்சியும், சண்டை சச்சரவுகள் வலுப்பெறக் காரணமாயின. சட்ட ஒழுங்கையும் அமைதியையும் காப்பது,அரசின் தலைசிறந்த கடமைகளாயின. வெளிநாட்டுப் படையெடுப்பின் விளைவாக, அரசியல் விழிப்புணர்ச்சி வெளிப்படையாகத் தெரிந்தது. இதன் காரணமாக அரசியல் தலைமை இன்றியமையாது வேண்டும் என்பது உணரப்பட்டது. மக்கள் தங்களைப் பாதுகாக்கும் தலைவனுக்கு முழு ஒத்துழைப்பையும் கொடுத்தார்கள். ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைத் தங்கள் வாழும் பகுதியாகக்கொண்டு பிறர் படையெடுப்பிலிருந்து அதைக் காத்தனர். அதுவே அரசின் எல்லைப் பரப்பாகும். பின்னர் இந்த எல்லைப் பகுதிக்குள் வாழும் மாந்தர் யாவரும், சமயம், இனம், மொழி இவற்றிற்கு அப்பாற்பட்டு ஒன்றுபட்டவர் என்னும் உணர்வை அடைந்தனர். இதுவே தேசியமாக மலர்ந்தது. ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் வாழும் உணர்வு தோன்றியபொழுது, குருதித் தொடர்பின் காரணமாக அரசியல் தலைமைத் தன்மை குறைந்து போயிற்று. வெளிநாட்டுப் படையெடுப்பைத் தடுப்பதற்கும் உள்நாட்டுக் குழப்பத்தைத் தவிர்ப்பதற்கும் வன்மை தேவையாயிற்று.

மேற்கூறப்பட்ட காரணிகள் யாவும் அரசு தோன்றுவதற்கு உதவியாயிருந்தன. ஒவ்வொரு காலக்கட்டத்திலும், ஒவ்வொரு காரணியின் தலைமைத் தன்மை மேலோங்கியிருக்கலாம். எனவே, உறவின் முறை வழியாலோ சமயவழியாலோ அல்லது வன்மை வழியாலோதான் அரசு தோன்றியது எனக் கூறமுடியாது.

அரசு தோன்றியதை வரலாற்று முறைப்படி கூற வேண்டுமானால், மேற்சொன்னவாறே கூறமுடியும். எவ்வாறு ஆயினும், குடும்பம் என்ற ஒரு நிலையான அமைப்பு, அரசின் ஒரு சிறிய எடுத்துக்காட்டு என்பதனைத் துணிந்து கூறலாம். சமூகத்திலுள்ள பழக்க வழக்கங்களும் ஒழுக்கங்களும் அரசு தோன்றும் பொழுது எழுத்து வடிவமாக்கப்பட்டுச் சட்டங்களாயின. மக்களின் தேவைகளுக்கேற்ப அரசின் பணிகளும் பெருகின.

அரசுத்தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் வரலாற்றுக் கோட்பாடு, மற்றக் கோட்பாடுகளைவிட நம்பத் தக்கதாக இருக்கிறதென அரசியல் அறிஞர்கள் கருதுகிறார்கள். ஆர்.ச.

துணை நூல்கள்:


**Appadorai, A.**, "The Substance of Politics", Oxford University Press, 1972.

**Sabine, George, A.**, "History of Political Theory", Ed. 3, Oxford, 1971.

**Dunning, W. A**,"A History of Political Theories", Vol. II, 1905.


**அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம்**: பண்டைக் காலத்தில் செப்பேடுகளிலும் ஓலைகளிலும் எழுதும் பழக்கம் இருந்தது. காகிதம் தோன்றாத காலத்தில் எழுதப்பட்ட ஆவணங்கள், நூல்கள் ஆகிய அனைத்தும் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டன. இவ்வாறு எழுதப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பழஞ்சுவடிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் பழஞ்சுவடிப் பாதுகாப்பு நிலையங்கள் தோன்றின. அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம் (Government Oriental Manuscripts Library), தஞ்சை, சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகம், சென்னை உ.வே. சாமிநாதையர் நூலகம் ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

காலின் மெக்கன்சி (Mackenzie) கி.பி. 1782-ஆம் ஆண்டு கிழக்கிந்திய வணிகக்குழுப் படையின் ஒரு பிரிவின் உயர் அலுவலராகப் பொறுப்பேற்றார். இவர் நேரம் கிடைத்தபோதெல்லாம் சுவடிகள், நாணயங்கள், ஆவணங்கள் ஆகியவற்றைச் சேர்த்து வைத்தார். இந்நாட்டின் பண்பாடு, சமயம், வரலாறு, வாழ்க்கை முறை ஆகியவை தொடர்பானவற்றைப் பல மொழிகளிலிருந்துந் தொகுத்துக் கொண்டிருந்தார். மேலும்

சிங்களத் தீவிலிருந்தும், சாவகத் தீவிலிருந்தும் அவருக்குக் குறிப்புகள் வந்து சேர்ந்தன. அனைத்திந்தியாவின் தலைமைப் பரப்பாய்வாளர் (Surveyor General) என்ற உயர் பொறுப்பினைக் கி.பி. 1818-இல் ஏற்கக்கல்கத்தாவிற்குச் சென்றார். தென்னிந்தியாவில் சேகரித்தவற்றிற்கு ஈடுசெய்யும்வகையில் வட இந்தியாவிலும் பல சான்றுகளைச் சேகரித்தார். அரிய பொருள்களைச் சேகரிப்பதையே தம் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட இவர், அதைத் தொடர்ந்து தமது இறுதிக் காலம் வரையிலும் நடைமுறையில் செயற்படுத்தி வந்தார்.

1821–ஆம் ஆண்டு தலைமை ஆளுநராக (Governor General) இருந்த ஏசுடிங்சு (Hastings) இவ்வரிய செல்வத்தை, 10,000 பவுன்களுக்கு மெக்கன்சியின் துணைவியிடமிருந்து குழுவின் சார்பாக விலைக்கு வாங்கினார். இவற்றை வில்சன் என்பவர், அட்டவணைக் குறிப்பெடுத்து மூன்று தொகுதிகளாகத் தொகுத்தார். இவை சுமார் 14 மொழிகளிலும், 16 வகையான எழுத்துகளிலும் காணப்பட்டன. ஒரு பகுதி இங்கிலாந்திலுள்ள இந்திய அலுவலக நூலகத்திலும், இரண்டாவது பகுதி கல்கத்தா பண்டைப் பொருள் சேமிப்பு நிலையத்திலும் இருக்கின்றன. தக்காணத்திலும் அதற்குத் தெற்கிலும் உள்ள நாடுகளிலிருந்து தொகுக்கப்பட்ட செய்திகள் அனைத்தும் தமிழக அரசிடம் வந்து சேர்ந்தன.

இந்திய நூலகம் 'டாக்டர் இலைடன்' (Leiden) என்னும் ஆய்வாளரிடமிருந்து அவர் (1801–1811 வரையில்) இந்தியாவில் தங்கிச்சேகரித்த நூல்களையெல்லாம் விலை கொடுத்து வாங்கி வைத்திருந்தது. இந்தத் தொகுப்பினைப் பிரவுன் (Brown) என்னும் ஆங்கிலேய உயர் அலுவலர், இந்தியாவுக்கே மாற்ற ஏற்பாடு செய்தார். இவ்வாறு கி.பி. 1844–க்குள் இந்த இரு வகைத் தொகுப்புகளையும் "சென்னை அறிவகக் கழகம்" தன் வசம் பெற்றது. பிரவுன் அவர்களும் சில நூல்களையும் சிறப்புமிக்க கையேட்டுப் படிகளையும் சுவடிகளையும் கி.பி. 1855–ஆம் ஆண்டு இக் கழகத்தின் பாதுகாப்பில் ஒப்படைத்துவிட்டு இங்கிலாந்து திரும்பினார்.

இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட நூல் தொகுப்புகள், 1869–ஆம் ஆண்டு மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியரான பிக்பார்ட்டு என்பவரிடம்ஒப்புநோக்கி அட்டவணைப்படுத்த ஒப்படைவு செய்யப்பட்டது. தென்னிந்தியாவிலுள்ள சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாக்கத் தலைமை ஆளுநர் கி.பி. 1876-இல் கல்கத்தாவிலிருந்து ஒரு பொது ஆணை பிறப்பித்தார். இட நெருக்கடியின் பொருட்டுப் பல்வேறு இடங்களில் இருந்த சுவடிகள் கி.பி. 1870-இல் மாநிலக் கல்லூரிக்கு மாற்றப்பட்டு, அங்கிருந்து கி.பி. 1898–இல் சென்னை, புனித சார்சு கோட்டையிலுள்ள ஒரு சிறிய அறைக்கு மாற்றப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகக் கட்டிடம் 1938-இல் கட்டி முடிக்கப்பட்டு நூலகம் செயற்படத் தொடங்கியதும் அக்கட்டிடத்தின் மேற்குப் பகுதியில் முதல் மேல் தளத்தில் இச்சுவடிகள் வைக்கப்பட்டன. ஆயினும், நான்கு ஆண்டுகளுக்குள் இரண்டாம் உலகப் பெரும் போரினால், இத்தொகுப்புகள் திருப்பதியில், சிரீ வேங்கடேசுவரா ஆராய்ச்சிக் கூடத்துக்குக்கொண்டு செல்லப்பட்டன. மீண்டும் 1946–ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக நூலகத்தில் பழைய இடத்திலேயே கொண்டு வந்து வைக்கப்பட்டன.

பல்வேறு சுற்றுக் குழுக்களின் உதவியால் 1872–ஆம் ஆண்டு முதல் 1930–ஆம் ஆண்டு வரையில் பல அரிய கையெழுத்துப் படிகளும் சுவடிகளும் இக் கையெழுத்து நூலகத்தில் சேகரிக்கப்பட்டன. தஞ்சை, செங்கற்பட்டு, முகவை மாவட்டங்களிலிருந்து பல அரிய நூல்கள் 1951, 1952–ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்டன. மொழிவழி மாநில வரையறைக் குழுவின் பரிந்துரைப்படி பழைய சென்னை மாநிலம் பிரிக்கப்பட்டபோது 1224 கன்னடக் கையேட்டுப் பிரதிக் கட்டுகளை மைசூருக்கும், 3335 தெலுங்கு மொழிக் கட்டுகளை ஐதராபாத்துக்கும், 583 மலையாள மொழிக் கட்டுகளைத் திருவனந்தபுரத்துக்கும் அனுப்பி வைத்தனர்.

விலைமதிப்பற்ற சிறந்த சுவடிகளுடன் அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம் செயற்பட்டு வருகிறது.

**அரசு கொள்முதல் கொள்கை:** இதன் மூலம், பொருளாதாரத் தேவையைக் கருத்தில் கொண்டு பொருளாக்கம் செய்வோர் (Producers), நுகர்வோர் ஆகியோரின் நலன்களைப் பாதுகாக்கும் வண்ணம் சமமான, ஒருங்கிணைந்த பங்கீட்டுக் கொள்கை ஒன்றை இந்திய அரசு உருவாக்க முனைந்துள்ளது. இடைத்தரகர்களின் சூழ்ச்சிகள், முற்றுரிமையாளர்களின் முதலாளித்துவம், வளப் பற்றாக்குறைகள் ஆகியவற்றால் பொருளாக்கம் குறைந்து பொருள்களின் விலையில் ஏற்றத் தாழ்வுகள் பெருகியமையால், 1959–ஆம் ஆண்டு அரசு இன்றியமையாப் பண்டங்களைக் கொள்முதல் செய்து, பங்கீடு செய்யும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் முடிவை எடுத்தது. இம்முடிவினால் அரசு தன் திட்டமிட்ட சமத்துவக் கோட்பாட்டை (Planned Socialisation) செயற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளது. தொழிற் பொருள்களின் கொள்முதல், ஏற்றுமதி, இறக்குமதி, பங்கீடு இன்ன பிற அலுவல்களை அரசு வாணிகக் கழகம் ஏற்று நடத்துகிறது. காண்க: த.க. அரசு வாணிகக் கழகம்.

இன்றியமையாத வேளாண்மைப் பொருள்களின் வாணிகத்தில் அரசு நேரடிக் கட்டுப்பாடு செலுத்து

வதனால் பல்வேறு பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்ற இயலும் என அரசுக்கு உணவுத் தானிய ஆய்வுக் குழு (Foodgrains Enquiry Committee) பரிந்துரைத்தது. அதன்படி அரசு முதல் ஆய்வாக அரிசி, கோதுமை இவற்றின் வாணிகப் பொறுப்பை எடுத்துச் செயலாற்றத் தொடங்கியது. மைய அரசு வேளாண்மைப் பொருள்களின் வாணிகத்தை மொத்த விற்பனையாளர்கள் சில்லரை வணிகர்களுக்கு ஒரு கட்டுப்படுத்தப்பட்ட விலையில் விற்க அனுமதித்தது. இக்கட்டுப்படுத்தப்பட்ட விலை (Controlled Price) ஆக்கச் செலவைக் கணக்கிட்டு உறுதி செய்யப்பட்டது. விற்பனை விலை, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ், அளிப்பு (Supply) பாதிக்கப்படாத முறையில் சில்லரை வணிகர்களின் முடிவுக்கு விடப்பட்டது. நடைமுறையில், மொத்த வணிகர்கள், அரசிடம் உரிமம் பெற்று (Licenced Traders) அரசின் சார்பில் குடியானவரிடமிருந்து தானியங்களைக் கொள்முதல் செய்ய அனுமதி பெற்றனர். அரசு குறிப்பிடும் குறைந்த விலையை அவர்கள் குடியானவருக்கு அளிக்கக் கடமைப்பட்டனர். அரசு மொத்த வணிகர்களிடமிருந்து மொத்தமாகத் தானியங்களை அல்லது ஒரு பங்கு தானியத்தைக் கொள்முதல் செய்யும் உரிமையைக் கொண்டிருக்கிறது. மீதியைச் சில்லரை வணிகர்களுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு மிகாமல் மொத்த வணிகர்கள் விற்கலாம்.

நாளடைவில் கூட்டுறவுச் சேவை (Service Co-Operatives) நிறுவனங்களும் ஊரகங்களில் தானியங்களை அரசின் சார்பில் கொள்முதல் செய்தன. கூட்டுறவு நிறுவனங்களின் முன்னேற்றம் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டதால் அவற்றின் தகவுடைமைக்குத் தக்கவாறு அவை செயலாற்றின. மைய அரசு, கூட்டுறவு நிறுவனங்களின் மூலம் கொள்முதல், சேமிப்பு, பாதுகாப்பு, பங்கீடு ஆகியவற்றில் திறமையாகச் செயற்பட இயலும் எனக் கருதி, இந் நிறுவனங்கள் இப்பணியில் சிறப்புப் பங்கு வகிக்க அதிக ஊக்கம் ஊட்டியது. இந்திய உணவுக் கழகம் (Food Corporation of India) மைய உணவுக் கிடங்குக்கழகம் (Central Ware-housing Corporation) போன்ற நிறுவனங்களையும் உருவாக்கி, ஒவ்வோர் அறுவடைக் காலத்திலும் கொள்முதல் விலைகளை அறிவித்து இடையூறுகளின்றித் தானியங்களைக் கொள்முதல் செய்து பாதுகாக்கப் பல திட்டங்களை அறிவித்து நடைமுறைப் படுத்தியது.

இந்திய அரசு 1965-இல் வேளாண்மைப் பொருள்களின் விலை வரையறைக் குழு (Agricultural Price Commission) ஒன்றை அமைத்தது. இக்குழு அரசுக்கு விலைக் கொள்கையைப் பற்றி அவ்வப்போது ஆலோசனை கூறி வருகிறது. உற்பத்தி மிகுதியினால் ஏற்படும் விலைச் சரிவைக் கட்டுப்படுத்திக் குடியானவர்களின் வருமானம் குறையாமல் இருக்க இக்குழு கொள்முதல் விலையை அவ்வப்போது மாற்றி உறுதி செய்கிறது. இக் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டு நெல், கோதுமை, கம்பு, மக்காச் சோளம், உளுந்து, பருத்தி, சணல், கரும்பு போன்ற வேளாண்மைப் பொருள்களுக்கு விலைகளை அரசு உறுதி செய்கிறது. விலைச் சரிவு ஏற்படும் காலத்திலும் இடங்களிலும் இந்திய உணவுக் கழகம், நேரடியாகவோ மொத்த விற்பனையாளர்கள் மூலமாகவோ கட்டுப்பட்ட விலைக்குத் தானியங்களைக் கொள்முதல் செய்து எதிர்காலச் சேமிப்பு (Buffer Stock) இருப்புகளைப் பெருக்குகிறது. விலை உயரும் காலங்களில் தாமாகவோ, கூட்டுறவு நிறுவனங்கள், நுகர்பொருள் வாணிகக் கழகங்கள், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், நியாய விலைக் கடைகள் (Ration Shops) ஆகியவற்றின் மூலமாகவோ குறைந்த விலையில் தானியங்களை விற்க முன்வருகிறது. இப்போது ஏறத்தாழ 18 மிலியன் கண்டி (Ton) உணவுத் தானியங்களை இக் கழகம் கொள்முதல் செய்து எதிர்காலச் சேமிப்பு இருப்பாகப் பாதுகாத்து வருகிறது. இதற்குத் தேவையான பணத்தொகை 2000 கோடி உருபாயாகும். இப் பணத் தட்டுப்பாட்டை ஈடு செய்ய மாநிலங்களிலுள்ள கூட்டுறவுச் சேமிப்புக் கிடங்குகள், மையச் சேமிப்புக் கிடங்குகள், மொத்த வணிகர்களின் வளம் (Resources) ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்கிறது. உணவு உற்பத்திப் பற்றாக்குறையாக உள்ள மாநிலங்களின் தேவையை ஈடுசெய்யும் பொறுப்பை மைய அரசு ஏற்றுள்ளதால், மிகுதியாக உற்பத்தியாகும் மாநிலங்களிலிருந்து தானியக் கொள்முதல் செய்யும் பொறுப்பை இக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளது.

மைய அரசு அளிக்கும் கொள்முதல் விலைக்கும் கட்டுப்பட்ட விற்பனை விலைக்கும் ஆக்கச் செலவுக்ும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஏனெனில், மைய அரசு வேளாண்மை உற்பத்தி பாதிக்காத வண்ணம் குடியானவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கத்துடனும், பொது விலைப் பட்டியலின் (Price Index) அடிப்படையிலும் கொள் முதல் விலையை உறுதி செய்கிறது. பற்றாக்குறை மாநிலங்கள் (Deficit States), உதவித்தொகையுடன் மைய அரசிற்கு ஏற்படும் சேமிப்பு, பாதுகாப்பு, போக்குவரத்து, பிற கொள்முதல் செலவுகளைக் கணக்கிடாமல் குறைந்த விலைக்குப் பெறுகின்றன. மேலும், மாநில அரசுகள் தங்கள் மாநில நிலைக்குத் தக்கவாறு விற்பனை விலையைக் கூடுதலாகவோ குறைவாகவோ வரையறை செய்து, கூட்டுறவு நிறுவனங்கள், நுகர்பொருள் வாணிகக் கழகம் (Civil Supplies Corporation), ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள், நியாய விலைக் கடைகள் ஆகியவற்றின் மூலம் பங்கீடு செய்கின்றன.

கொள்முதல் இடையூறின்றிச் செயற்படும் பொருட்டு அறுவடைக் காலங்களில் தானியங்கள் மாநிலங்களிலிருந்து கடத்தப்படாமல் தடுக்க அவை தனித்தனி மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு மண்டலத்திலிருந்து பிறிதொரு மண்டலத்துக்கு வெளியே, உரிமங்கள் இல்லாமல் தானியங்கள் வெளிச் செல்வது தடைசெய்யப்படுகிறது. மாநிலங்களுக்குள்ளும் வளமான வேளாண்மை பெற்ற மாவட்டங்கள் குறிக்கப்பட்டு அங்கிருந்தும் தானியங்கள் வெளிச் செல்வது தடைசெய்யப்படுகிறது. தமிழ் நாட்டில் தஞ்சாவூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்கள் அரிசிக் கொள்முதலுக்கென மிகுந்த உற்பத்தி செய்யும் மாவட்டங்களாகக் குறிக்கப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் மொத்த விற்பனையாளர்களிடமிருந்தே பெரும்பாலும் கொள்முதல் நடைபெறுகிறது. அரிசி ஆலைகளிடமிருந்தும் ஒரு பங்கு கொள்முதலாகப் பெறப்படுகிறது. இவற்றோடு கூட்டுறவுச் சேவை நிறுவனங்களின் பணியும் குறிப்பிடத்தக்கது. அரசின் கொள்முதல் கொள்கையினால் வேளாண்மைப் பொருள்களின் விலைகளில் ஏற்படும் அளவுக்கு மீறிய ஏற்ற இறக்கங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. குடியானவர்களின் வருமானம் ஒரு நிலையில் இருக்குமாறு செய்து, உற்பத்திப் பெருக்கத்தில் ஊக்கமும் உற்சாகமும் அளிக்கிறது; நுகர்வோரின் நலனும் பாதுகாக்கப்படுகிறது. அ.இரா.

**அரசுடைமையாக்கம்** என்பது தனியார் உடைமையின்கீழ் இயங்கிக்கொண்டிருக்கும் தொழில்கள், தொழிற்கழகங்கள் (Companies) ஆகியவற்றை அரசு, அதன் உடைமையின் கீழ்க் கொண்டு வந்து இயக்குவதைக் குறிக்கும். மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில்கூட எண்ணற்ற அரசுகள் தபால் தந்தி முறையை அரசுடைமையாக்கியுள்ளன. இருப்புப் பாதைகள் (Railways) போன்ற போக்குவரத்துச் சாதனங்களை வேறுபல அரசுகளும் அதன் உடைமையின் கீழ்க் கொண்டு வந்து இயக்குகின்றன.

நாட்டின் இயற்கை வளங்கள், உற்பத்திக் கருவிகள், நிலம் ஆகியவற்றை அரசுடைமையாக்க வேண்டுமென்பது சமதரும (Socialist) பொதுவுடைமைக் (Communist)கோட்பாடுகளின் அடிப்படைக் கொள்கையாகும். இக் கொள்கையை 1917-ஆம் ஆண்டு உருசியாவில் நிறுவப்பட்ட பொதுவுடைமை அரசாங்கமும், அதன்பின் தோன்றிய மற்ற எல்லாப்பொதுவுடைமை அரசுகளும் முழுமையாகச் செயற்படுத்தியுள்ளன. இங்கிலாந்தில் 1945-ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த தொழிற் கட்சி(Labour Party) அரசு நிலக்கரி, மின் உற்பத்தி, இரும்பு, எஃகு உற்பத்தி, போக்குவரத்துச் சாதனங்கள் போன்ற பல முக்கியமான தொழில்களை அரசுடைமையாக்கியது. அதேபோன்று பிரான்சும் 1945-ஆம் ஆண்டிற்குப் பிறகு பல தொழில்களை அரசுடைமை யாக்கியது.

அரசுடைமையாக்கம் (Nationalization) என்ற கொள்கை 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் மிகுதியாகப் பரவி வலுப்பெற்றது. மக்களின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் அரசு தலையிடக்கூடாது என்ற 'தலையிடாக் கொள்கை (Laissez faire), 'போட்டிப் பொருளாதாரம்' (Competitive economy), தனியார் சொத்துரிமையை மதிக்கக்கூடிய தனியுரிமைக் கோட்பாடு (Individualism) ஆகிய கருத்துகள் 19-ஆம் நூற்றாண்டில் வலுப்பெற்றுத் திகழ்ந்தன. அதன் காரணமாக அரசுடைமையாக்கம் என்ற கொள்கைக்கு 19-ஆம் நூற்றாண்டில் ஆதரவு ஏற்படவில்லை. ஆனால் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து சமதரும, பொதுவுடைமைக் கோட்பாடுகள் பரவத் தொடங்கியபொழுது மக்களின் மேம்பாட்டிற்காக அவர்களுடைய சமூக, பொருளாதார வாழ்க்கையில் அரசு தீவிரமாகத் தலையிட வேண்டுமென்ற கருத்து வேகமாகப் பரவி வளர்ந்தது. இக்கருத்து வளர்ந்த பொழுது அரசுடைமையாக்கம் என்ற கொள்கைக்கும் ஆதரவு பெருகியது. இதன் விளைவாக இன்று பொதுவுடைமை நாடுகள் மட்டுமன்றி, ஏராளமான மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளும், வளர்ந்து வரும் நாடுகளும் வங்கிகள், பெரும் தொழிற்சாலைகள், காப்புறுதிக் கழகங்கள் (Insurance Companies), படைத் தொடர்பான தொழில்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்கியுள்ளன.

அரசுடைமையாக்கக் கொள்கைக்கு ஆதரவாகச் சமதரும, பொதுவுடைமை வாதிகள் பல காரணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள். முதலாவதாக முதலாளித்துவ முறை (Capitalism)யில் காணக்கூடிய தனியார் சொத்துரிமை, உற்பத்திக் கருவிகளின் மீது தனியாருக்குள்ள முழு உடைமை ஆகியவை, சமூகத்தில் உள்ள சிறுபான்மையினரை -முதலாளிகளை வலியவர்களாகவும், பெரும்பான்மையினரை - பாட்டாளி வருக்கத்தை வறியவர்களாகவும் மாற்றுகின்றன. நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் சென்று குவிந்து கொண்டிருக்கும் இந்த நிலையைத் தவிர்க்கத் தனியார் உடைமையிலுள்ள உற்பத்திக் கருவிகள், தொழில்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

இரண்டாவதாக, நாட்டிலுள்ள இயற்கை வளங்களைச் சமூக நலனைக் கருதி நன்முறையில் பயன்படுத்த அரசுடைமையாக்கம் இன்றியமையாததொன்றாகும். முதலாளித்துவ முறையில் முதலாளிகள் பொருளை உற்பத்தி செய்வது இலாபத்தை மட்டுமே

குறிக்கோளாகக் கொண்டிருப்பதால் நாட்டின் இயற்கைவளங்கள் அதிக இலாபம் கிடைக்கக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பயன் படுத்தப்பட்டு விரயப்படுத்தப்படுகின்றன. மக்களின் அன்றாட அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றப் பயன்படும் பொருள்களின் உற்பத்தி புறக்கணிக்கப் படுகிறது. இதன் விளைவாக எளிய மக்களின் நலன் பாதிக்கப்படுகிறது. இந்நிலையைத் தவிர்த்து இலாப நோக்கின்றிச் சமூகத் தேவை நோக்கோடு பொருள் உற்பத்தி செய்ய அரசுடைமையாக்கம் வழி வகுக் கிறது.

மூன்றாவதாக, முதலாளித்துவ முறையில் தொழி லாளி சுரண்டப்படுகிறான். குறைந்த ஊதியம், நீண்ட நேர வேலை, வேலையில்லாத் திண்டாட்டம், சுகாதாரமற்ற வாழ்க்கை, பிணி ஆகிய தீமைகளை முதலாளித்துவ முறையில் தவிர்க்க முடியாது. அந்த அல்லல் நிலையிலிருந்து தொழிலாளியைக் காப்பாற்ற அவன் உற்பத்தி செய்த பொருளின் மதிப்பிற்கேற்ப ஊதியம் பெற, ஒரு குறைந்த அளவு வாழ்க்கைத் தரத்தை அவனுக்கு உறுதிப்படுத்தத் தனியார் உடைமையிலிருக்கும் தொழில்கள் அரசுடைமை யாக்கப்பட வேண்டும்.

நான்காவதாக, திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) எனும் கொள்கையைக் கடைப் பிடிக்கும் நாடுகள் அரசுடைமையாக்கத்தைத் தவிர்க்க முடியாது. பொருளாதாரத் திட்டத்தில் திட்டத் தொடர்பான எல்லா இறுதித் தீர்மானங்களையும் ஒரு மையம்தான் செய்யவேண்டும். அத்தீர்மானங் களுக்கேற்பப் பொருளாதார முறை செயற்பட்டுத் திட்ட இலக்குகளை (Targets) அடையமுயலுகிறது. இதற்கு நாட்டின் உற்பத்தி வளங்கள், உற்பத்திக் கருவிகள் ஆகியவைகள் அரசின் உடைமையிலோ அல்லது கட்டுப்பாட்டிலோ இருக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். மாறாக, இவை தனியார் உடைமையில் இருப்பின் அவ்வளங்களைப் பயன் படுத்துவது தொடர்பான தனி நபர்கள் மேற்கொள் ளும் தீர்மானங்கள் ஒன்றுக்கொன்று முரணாக மாறித் திட்டத்தின் குறிக்கோளையே தோல்வியுறச் செய்து விடக்கூடும்.

மேலும், நாட்டுப் பாதுகாப்பின் பொருட்டும் அரசுடைமையாக்கம் வலியுறுத்தப்படுகிறது. போர்க் கருவிகளின் உற்பத்தியைத் தனியார் துறையிடம் ஒப்படைப்பது நாட்டின் பாதுகாப்பிற்குத் தீங்காக அமையவாய்ப்புண்டு. ஏனெனில் படை, பாதுகாப்புத் தொடர்பான இரகசியங்கள் தனியார் துறையினால் போதிய அளவு பாதுகாக்க முடியாமற் போகலாம். இதைத்தவிர படைக்கலக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைக்கப் பெரும் முதலீடு தேவைப்படுகிறது. அந்த அளவு முதலீடு செய்வ தற்குத் தனியார் துறைக்குப் பண வலிமை இல்லை. எனவே, அப்படிப்பட்ட தொழிற்சாலைகளை அரசே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்கூறிய காரணங்களைத் தவிர, இன்னொரு குறிக்கோளை அடையும் பொருட்டும் பல அரசுகள் அரசுடைமையாக்கத்தை மேற்கொண்டுள்ளன. ஒரு நாட்டின் பொருளாதார, அரசியல் துறைகளின் மீது வெளிநாட்டிற்கு இருக்கக் கூடிய ஆதிக்கத்தை ஒழிப் பதற்காகவும், சில நாடுகள் அந்நாடுகளிலுள்ள வெளி நாட்டு மூலதனம், தொழில்கள், தொழிற் கழகங்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்கியுள்ளன. சான்றாக, 1951-ஆம் ஆண்டு ஈரான் இங்கிலாந்தின் ஆதிக்கத்தி லிருந்த எண்ணெய்த் தொழிற் கழகத்தையும், 1956-ஆம் ஆண்டு எகிப்து சூயெசுக் கால்வாயையும், 1960-ஆம் ஆண்டு கியூபா (Cuba) நாடு வெளிநாட்டுத் தொழில் களையும் அரசுடைமையாக்கியமை எடுத்துக்காட் டாகும்.

தொழில்கள், தொழிற் கழகங்கள் ஆகியவை இருமுறைகளில் அரசுடைமையாக்கப்படுகின்றன. முதலாவதாக, அரசுடைமையாக்கப்படும் தொழிற் கழகங்களின் சொத்து முழுவதும் அரசின் உடைமைக்கு மாற்றப்பட்டு, அத்தொழிற் கழகங்கள் முழுக்க முழுக்க அரசினது கட்டுப்பாட்டின்கீழ் இயக்கப்படு கின்றன. இரண்டாவதாக, ஒரு தொழிற் கழகத்தின் பங்கு மூலதனத்தை மட்டும் அரசின் உடைமைக்கு மாற்றிவிட்டுப் பழையபடி அத்தொழிற் கழகம் செயற் பட அனுமதிக்கப்படலாம்.

தனியார் துறையிலிருக்கக்கூடிய ஒரு தொழிற் கழகத்தை அரசுடைமையாக்கும்பொழுது அதன் உரிமையாளர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட வேண் டும் என்பதைப் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவு கின்றன. நட்ட ஈடு வழங்காமல் தனியார் சொத்தை அரசு மேற்கொள்ளக்கூடாது என அமெரிக்க அரசிய லமைப்பு, தனியார் சொத்துக்கு உறுதியளிக்கிறது. ஆனால்,பொதுவுடைமை நாடுகள் தனியார் சொத்தை அரசுடைமையாக்கிய பொழுது எவ்வித நட்ட ஈடும் வழங்கவில்லை. சில ஆசிய, தென் அமெரிக்க நாடுகள் அரசுடைமையாக்கத்திற்கு மிகக்குறைவான நட்ட ஈடுகளையே வழங்கின.

பன்னாட்டு அரசியலில் அரசுடைமையாக்கம் பல சிக்கலைக் கொண்டுள்ளது. ஒரு நாடு வெளிநாட்டுத் தொழில்கள் அல்லது தொழிற் கழகங்களை அரசுடை மையாக்கும்பொழுது அவற்றிற்கு நியாயமான நட்ட ஈடு வழங்க வேண்டுமென மேற்கத்திய நாடுகள் வற் புறுத்துகின்றன. எனவேதான், சோவியத் உருசியா வும், வளர்ந்து வரும் சில நாடுகளும் நட்ட ஈடின்றி வெளிநாட்டுத் தொழிற் கழகங்களையும், மூலதனத் தையும் அரசுடைமையாக்கியபொழுது மேற்கத்திய

நாடுகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தன. மெக்சிகோ நாடு 1920-இல் அமெரிக்கத் தொழிற் கழகங்களின் கட்டுப்பாட்டிலிருந்த எண்ணெய்த் தொழிற்சாலைகளை அரசுடைமையாக்கியபொழுது அமெரிக்கா அதை வலுவாகக் கண்டித்தது. ஈரான், 1950-ஆம் ஆண்டு ஆங்கிலோ ஈரானிய எண்ணெய்க் கழக (Anglo Iranian Oil Company)த்தை அரசுடைமையாக்கியதை இங்கிலாந்தும், 1958-ஆம் ஆண்டு இந்தோனேசியா வெளிநாட்டுத் தொழில்களை அரசுடைமையாக்கியதை நெதர்லாந்தும் எதிர்த்தன. எகிப்து 1956-ஆம் ஆண்டு சூயெசுக் கால்வாயை அரசுடைமையாக்கியதை முறியடிக்கும் பொருட்டு இங்கிலாந்தும் பிரான்சும் எகிப்தின் மீது படையெடுத்தன.

நியாயமான நட்ட ஈடு வழங்காமல் ஒரு நாடு அந்நாட்டிலுள்ள வெளிநாட்டு மூலதனம், தொழிற் கழகங்கள் ஆகியவற்றை அரசுடைமையாக்குதல் பன்னாட்டுச் சட்ட (International Law)த்திற்கு முரணான செயலாகும் என்பது மேற்கத்திய நாடுகளின் வாதமாகும். ஆனால், ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் இந்த வாதத்தை ஏற்க மறுக்கின்றன. இறைமையுடைய ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் எல்லைக்குள் இருக்கும் வெளிநாட்டுத் தொழில்களையும் தொழிற் கழகங்களையும், நட்ட ஈடு கொடுத்தோ கொடுக்காமலோ அரசுடைமையாக்க உரிமையுண்டு என்பது அவர்களின் வாதமாகும். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் இந்த வாதத்தை ஐ.நா. (U.N.O.)வின் பொது அவை (General Assembly) 1952-ஆம் ஆண்டு ஒரு தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொண்டது. பன்னாட்டு நீதி மன்ற (International Govt. of Justice)மும் இந்த வாதத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. எஸ்.மு.

துணை நூல்கள்:

**Albert H. Hanson.**, (Ed) "Nationalism – A Book of Readings", Allen & Unwin, 1963.

**William A. Robson.**, "Nationalized Industry and Public Ownership", University of Toronto Press, 1960.

***அரசுப் பண்ணைகள்***, வேளாண்மை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களாகும். தனியார் முயற்சியினாலோ கூட்டுறவு முயற்சியினாலோ பொதுத் துறை முயற்சியினாலோ இப்பண்ணைகள் அமைகின்றன. பொதுத் துறை முயற்சியில் அமையும் பண்ணைகள், அரசுப் பண்ணைகள் (State Farms) எனப்படும். இங்கு அரசு என்பது, பொதுத் துறை (Public Sector) என்கிற பொருளில் அமைகிறது.

பொதுவுடைமை நாடுகளில் வேளாண்மை உற்பத்தி முழுவதும் அரசுப் பண்ணைகளில் நடைபெறுகிறது. அங்குத் தனியார் நிலவுரிமை வழக்கில் இல்லை. இந்தியாவில் வேளாண்மைத் தொழில் பெரும்பாலும் தனியார் துறையிலும், ஓரளவு கூட்டுறவு முறையிலும், மிகச் சிறிய அளவில் பொதுத் துறையிலும் நடைபெறுவதால், அரசுப் பண்ணைகள் எண்ணிக்கையிலும் உற்பத்தி அளவிலும் மிகக் குறைவாகவே உள்ளன. அரசுப் பண்ணைகள் அரசிற்குச் சொந்தமான அல்லது தனியாரிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட (Leased in) நிலத்தில் அமையலாம். எனவே, இங்கு அரசுப் பண்ணைகளின் அடிப்படைத் தன்மை, பொதுத் துறை உற்பத்தி முயற்சியே தவிரப் பொதுத் துறை நிலவுரிமை (Public Ownership of Land) அன்று. மேலும், இந்தியாவில் அரசுப் பண்ணைகள் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காக இயங்குகின்றன.

இங்குள்ள அரசுப் பண்ணைகளைப் பலவாறாக வகைப்படுத்தலாம். முதலாவதாக, வேளாண்மை என்பது, பயிர்ச் சாகுபடி மட்டுமன்று; உயிரியல் உற்பத்தி முறைகள் (Biological Production Process) சார்ந்த பலதொழில் முயற்சிகளையும் உள்ளடக்கியது. பன்றி வளர்த்தல், பட்டுப் புழு வளர்த்தல், தேனீ வளர்த்தல், காளான் உற்பத்தி, தோட்டக்கலை, மலை வேளாண்மை, கால்நடைப் பண்ணை, கோழிப் பண்ணை, மீன் பண்ணை, காடு வளர்ப்பு என்று அரசுப் பண்ணைகள் பல துறைகளில் அமைந்துள்ளன.

அரசுப் பண்ணைகள் சில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகச் செயற்படுவன. எனவே, அந்த நோக்கங்களின் அடிப்படையிலும் அவற்றை வகைப்படுத்தலாம்.

1) இனப்பெருக்கப் பண்ணை: இது பயிர், விலங்கினங்கள், மீன் போன்றவற்றின் பல இனங்களைப் (Species) பாதுகாத்துப் புது இன உற்பத்திக்குப் பயன்படுத்தும் நோக்கம் கொண்டது.

2) ஆராய்ச்சிப் பண்ணைகள்: இனப்பெருக்கம், பயிர்செய் நேர்த்தி, பயிர்ப் பாதுகாப்பு, மண்வளம், இயந்திரம், மற்றும் கருவிகளின் வடிவமைப்புப் பொருளாதாரம் முதலிய பல துறைகளில் ஆய்வு நடத்த இப் பண்ணைகள் பயன்படுகின்றன.

3) விதைப் பண்ணைகள்: நேர்த்தியான வித்துக்களை உற்பத்தி செய்வது இவற்றின் நோக்கம். இவை விதை உற்பத்திப் பண்ணைகள், விதைப் பெருக்கப் பண்ணைகள் (Seed Multiplication Farms) என இரு வகைப்படும். முன்னது, அடிப்படை விதைகளை (Breeder's Seed) உற்பத்தி செய்வது; பின்னது, அடிப்படை விதைகளைப் பெற்று அவற்றைப் பெருக்கி உழவர்களுக்கு அளிப்பது.

4) நாற்றுப் பண்ணைகள்: பழச் செடிகள், பூச் செடிகள், மரக் கன்றுகள் ஆகியவற்றைப் பெருக்குவதே இப்பண்ணைகளின் நோக்கம்.

5) விளக்கப் பண்ணைகள்: இவை பலவகைச் சாகுபடி முறைகளையும், பண்ணை வரவு-செலவுத்

திட்டம், பண்ணை நிருவாகத் திட்டம் (Farm Planning), பயிர்ப் பாதுகாப்பு முறைகள், பயிர்செய் நேர்த்திகள் ஆகியவற்றைச் செய்து காட்டி விளக்கும் நோக்கம் கொண்டவை.

6) மாதிரிப் பண்ணைகள்: இவை உழவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்தவை.

7) வணிக நோக்கப் பண்ணைகள்: இவை பொது விற்பனைக்காகப் பொருள்களை உற்பத்தி செய்யும் பண்ணைகள். மீன் குஞ்சுகள், இறைச்சிக் கோழி (Broiler Farms), முட்டை, பால், காய், கனி வகைகள், காளான் வகைகள் ஆகியவற்றை உற்பத்தி செய்து, விற்பனை செய்வது இவற்றின் நோக்கம்.

8) பன்னோக்குப் பண்ணைகள்: மேற்சொன்ன நோக்கங்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட நோக்கங்களுடன் இயங்குவன பன்னோக்குப் பண்ணைகள் (Multipurpose Farms) எனப்படும். எஸ்.வ.

**அரசும் கல்வியும்**: அரசு, மக்களைச் சமூக இயல்பினராக்குவதில் தலையாய பங்கு கொள்கிறது. மக்கள் யாவரையும் உள்ளடக்கிய பெரும் சமுதாய மாகிய இவ்வமைப்பு மிகவும் செல்வாக்குடையது; வலிமைமிக்கது. கல்வி அமைப்பு, பயிற்றும் முறைகள், பள்ளிச் செயல்கள் யாவும் அந்நாட்டின் அரசின் தன்மையைப் பொறுத்து அமையும். இசுபார்ட்டா (Sparta) கல்வி முறையும், ஏதென்சிலிருந்த (Athens) கல்வி முறையும், அவ்விரு கிரேக்க நகரங்களில் காணப்பட்ட சமூக அமைப்பையும், அரசின் குறிக்கோள்களையும், தேவைகளையும் வெளிக்காட்டுவனவாக அமைந்திருந்தன. குடியாட்சி நடைபெறும் நாடுகளின் கல்வி முறைக்கும், எதேச்சாதிகார நாட்டின் கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடு இதை எடுத்துக் காட்டும்.

நாசிசம், பொதுவுடைமை, பாசிசம் ஆகிய கொள்கைகள் குழந்தைகளின் மனத்தில் பள்ளிக் கல்வியின் மூலம் முறையே செருமனி, உருசியா, இத்தாலி நாட்டில் திணிக்கப்பட்டனவென்பதை வரலாறு கூறும். குடியாட்சிக் கோட்பாட்டை மேற்கொண்டுள்ள நாடுகளின் கல்விமுறைக்கும் எதேச்சாதிகார நாடுகளின் கல்வி முறைக்கும் உள்ள வேறுபாடுகள், அவ்விரு ஆட்சி முறைக்குமுள்ள வேறுபாடுகளின் காரணமாக எழுந்தவையாகும். கல்விக் கொள்கைகளை உருவாக்குவதிலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அரசு ஈடுபடும் தன்மையைப் பற்றிக் கருத்து வேறுபாடுகள் அறிஞர்களிடம் காணப்படுகின்றன. கல்வியின் கலைத் திட்டம் (Curriculum), கற்பிக்கும் முறைகள், அவைபற்றிய செயல்கள், நிருவாகம் ஆகியன குடும்பம், சமய நிறுவனம், மக்கட் பற்றுடைய குழுக்கள் போன்ற சமூக நிறுவனங்களின் பொறுப்பிலிருக்க வேண்டும் என்ற கருத்தை ஒரு சாரார் வலியுறுத்துவர். இதை, 'இருப்பது போல் இருக்கட்டும்' என்று அழைக்கப்படும் 'தலையிடாக் கொள்கை' (Laissez-faire) என்று கூறுவர். மற்றொரு சாரார் சமூகச் சம தருமக் கொள்கையைப் (Socialisation) பின்பற்றுபவர்களாவர். இவர்கள் கருத்துப்படி, 'அரசு கல்வியைப் புறக்கணிக்க இயலாது. பெரும்பாலான பெற்றோர்கள் தகுந்த அறிவுத்திறன் அற்றவர்களாயிருப்பதாலும் அவர்கள் மற்றைய பணிகளில் ஈடுபட்டிருப்பதால், தங்கள் குழந்தைகளின் கல்வியைப் பற்றித் தகுந்த அளவு கவனிக்க ஒய்வு இல்லாமலிருப்பதாலும் அரசு அதன் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. மேலும், சமய நிலையங்களிலிருந்து பெறப்படும் கல்வி ஒரு சார்புடையதாகவும், குறுகிய மனப்பான்மையை வளர்க்கும் தன்மையுடையதாகவும் இருக்கும் என்பதை மறுக்க முடியாது. எனவே, அரசு தனது இன்றியமையாத பொறுப்பிலிருந்து விடபடமுடியாது' என்று கூறுகிறார்கள்.

அண்மைக் காலந்தொட்டு மற்றொரு சாராரின் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது. அது மேற்கூறிய இரண்டு கொள்கைக்கும் புறம்பாக நடுநிலையைப் பின்பற்றும் கருத்தாகவும் அமைந்துள்ளது. குழந்தைகளின் வளர்ச்சியை நாடும் அரசு, சமூக நிலையங்களாகிய குடும்பம், சமய நிறுவனம் முதலியவற்றின் ஒத்துழைப்பால் கல்வி அமைப்பை உருவாக்கி நிருவகிக்கும் பொறுப்பை ஏற்பதாகும். கல்வி பற்றிய ஒவ்வொரு செயற்பாட்டிலும் தலையிட்டு அரசு தனது கொள்கையைத் திணிப்பதையும் தவிர்த்து இயங்குகிறது. இது நடுநிலைக் கொள்கையைப் பின்பற்றுபவர்களின் கூற்றாகும். பல நூற்றாண்டுகள் அயலார் ஆட்சியின் பிடியிலிருந்து விடுதலை பெற்ற இந்திய நாட்டிற்கு இக்கொள்கை மிகவும் பொருத்தமுடையதாக இருக்கிறது.

கல்வி, அரசுக் கட்டுப்பாட்டின் கீழ்வருவதால் ஏற்படும் இடுக்கண்கள்: அரசு கல்வியைத் தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவருவதால் கல்வியின் நோக்கங்கள், நிருவாகம் எல்லாம் அதன் அரசியல் கட்சியின் கொள்கைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்படும் நிலை உருவாகும். அரசியல் கட்சியின் தத்துவத்திற்கு ஏற்பக் கல்வி நிலையங்கள் பணிசெய்ய வேண்டிய நிலை ஏற்படும். ஆசிரியர்கள் பணியமர்த்தம் உட்பட எல்லாச் செயல்களிலும் கட்சியின் ஆதிக்கம் வலுவடையும்.

குழந்தைகளின் உள்ள வளர்ச்சி, திறன் வளர்ச்சி, ஆளுமை மேம்பாடு எல்லாம் புறக்கணிக்கப்பட்டு, அரசியல் கட்சியின் கொள்கைக்கும் கோட்பாட்டிற்கும் கல்வித்துறை செயற்படுத்தப்படும். மறைமுகமாக அரசின் (கட்சியின்) கொள்கைகளைக் குழந்தைகளின்

உள்ளத்தில் பதிய வைக்க ஆசிரியர்களும் அலுவலர்களும் பயன்படுத்தப்படுவார்கள்.

**அதிகாரக் குவிப்பும் பரவலாக்கப்படுதலும்:** கல்வி நிருவாகத்தைப் பற்றிக் கூறும்பொழுது இரண்டு முறைகளைக் கூறலாம். அவை அதிகாரக் குவிப்பும் பரவலாக்கப்படலும் ஆகும். மைய அரசின் நேரடி நிருவாகத்திலிருக்கும் முறைக்கு அதிகாரக் குவிப்பு (Centralisation) முறை என்று பெயர். பிரான்சு நாட்டிலும் உருசியாவிலும் இம்முறை வழக்கிலுள்ளது. அதிகாரம் பரவலாக்கப்படும் (Decentralisation) முறை அமெரிக்க ஐக்கிய நாட்டில் பின்பற்றப்படுகிறது. பள்ளிக் குழுக்கள் (School Boards) தனி உரிமை பெற்று இயங்குகின்றன. சில இடங்களில் வட்டார அதிகாரிகள் (Local Authorities) நிருவாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளனர். இன்னும் சில பகுதிகளின் மாநில அரசுகள் கல்வியைத் தமது பொறுப்பில் வைத்துள்ளன. இங்கிலாந்தில் கல்விப் பொறுப்புக் கூட்டுறவு முறையிலுள்ளது. அரசு, மாநிலக் கல்வி அதிகாரிகள், பள்ளிகள் ஆகிய மூவரும் இணைந்து கல்வி நிருவாகத்தை நடத்துகின்றனர். இந்தியாவில் கூட்டாட்சி முறையில் அரசியல் அமைப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பள்ளி நிருவாகம் அதிகாரக் குவிப்பு முறையிலும், பன்முகப்படுத்தல் முறையிலும், மாறிமாறிச் செயற்பட்டு வருகிறது.

**அதிகாரக் குவிப்பு முறையின் நன்மைகள்:** (அ) கல்வி, மைய அரசின் நிருவாகத்திலிருப்பதால் அதன் முன்னேற்றம் நாடு முழுவதும் ஒரே அளவாக அமையும். (ஆ) எல்லா மாநில அரசுகளின் கல்வி முயற்சிகட்கிடையே ஒருங்கிணைப்பு ஏற்படுகிறது. (இ) ஒவ்வொரு மாநிலத்திலும் தனித்தனியாகச் சோதனை முறைகள் கல்வியில் செயலாக்குவதால் ஏற்படும் இரட்டிப்புச் செலவுகள் நிகழாவண்ணம் காக்க முடிகிறது. (ஈ) நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் உரிய தேவைகளைக் கணக்கிட்டு, மைய அமைப்பினால் எளிமையாகத் திட்டமிட்டு, ஒவ்வொரு மாநிலத்தின் தேவைகளுக்கு ஏற்பக் கல்வி பற்றிய செயல்கள் நடைபெற வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

**குறைபாடுகள்:** (அ) நாடு முழுமைக்கும் அமைக்கப்படும் கல்விமுறை மாற்றியமைப்பதற்கு எளிதாக இருக்க முடியாது. நாளடைவில் கல்விமுறை வளையாத் தன்மையைப் பெறும். (ஆ) வழக்கமாக நடைபெறும் நிருவாகம், கல்விப் பணியைக் காட்டிலும் முதன்மை பெறும் நிலை அடையக் கூடும். (இ) நிலப்பரப்பு அதிகம் உள்ள நாட்டில், வெகுதொலைவிலுள்ள பகுதிகளும் மாறுபாடான பண்பாடு, பழக்க வழக்கங்களும் மைய அரசினால் பெரும்பாலும் புறக்கணிக்கப்படும் சூழ்நிலை ஏற்படலாம்.

**பரவலாக்குதலால் நன்மைகள்:** (அ) உள்ளூர்ப் பகுதியின் முயற்சியும் ஊக்கமும் ஆதரவும் கல்விச் செயல்களில் இடம் பெறும். (ஆ) கல்வி ஏற்பாட்டில் தனிப்பட்ட குடிமகனும் சிறு குழுக்களும் பங்கு பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகரிக்கப்படும். (இ) கல்வி பற்றிய திட்டங்களை நாட்டின் ஒவ்வொரு பகுதியின் வேறுபட்ட தேவைகளுக்கேற்ப அமைக்க முடியும். (ஈ) கல்வி அமைப்பில் முன்னேற்றம் கருதி மாறுதல்களை ஏற்படுத்தி எளிமையாகச் செயலாற்ற முடியும்.

**குறைபாடுகள்:** (அ) நாடு முழுமைக்கும் ஒரே விதமான கல்வி அமைப்பு முறை தோன்ற இயலாது.(ஆ) வேண்டிய அளவு நிதி முதலீடு செய்யத் தடையேற்படும். (இ) சிதைந்து போகும் சக்திகள் மேலோங்கி நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் தீங்கு ஏற்படும்.

இந்திய நிருவாகத்தைக் கண்ணுற்றால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் 1919–ஆம் ஆண்டிற்கு முன்பு மாநிலங்களுக்கு எவ்விதமான தனி உரிமையும் கிடையாது. மைய ஆட்சியும் மாநில ஆட்சியும் இங்கிலாந்திலுள்ள இந்தியச் செயலர் அனுமதியின்றி எந்தவிதச் சட்டமும் இயற்ற இயலாது. மாநிலங்களின் நிருவாகத்தை மைய அரசு தனது பிடியில் வைத்திருந்தது.

1919–ஆம் ஆண்டு முதல் கல்வி பற்றிய கொள்கையில் பரவலாக்குதல் முறை மேற்கொள்ளப்பட்டது. 1947–ஆம் ஆண்டிற்குப் பிறகு மேலும் அதிகாரம் பரவலாக்கல் அதிகமாக்கப்பட்டது. வட்டார அமைப்புகளிடம் தொடக்கக் கல்விப் பொறுப்பு விடப்பட்டது. 1929–ஆம் ஆண்டு ஏற்பட்ட சர் பிலிப் ஆர்டாக் குழு அறிக்கையும் (Sir Philip Hartog), 1944–ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட சான் செர்சண்ட்டுக் குழு அறிக்கையும் (John Sergeant Committee) வட்டார அமைப்புகளிடம் தொடக்கக் கல்வியின் பொறுப்பை விடுவதைத் தவிர்த்து, மாநில அரசே அதன் நிருவாகத்தை ஏற்க வேண்டுமென்று பரிந்துரை செய்தன. எனினும் 1958–ஆம் ஆண்டு முதல், வட்டார அமைப்புகளுக்கு அதிக அளவில் அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. கேர் கமிட்டி (Kher Committee) முதலிய பல குழுக்கள், தொடக்கக் கல்வியை வட்டார அமைப்புகள் ஒழுங்காக நிருவகிக்கவில்லையென்றும், மாநில அரசே அதன் முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்றும் கூறியதோடு, மாநில அரசின் மேற்பார்வையின் கீழ்த் தன்னிலையுடைய குழுக்களிடம் (Independent Committee) தொடக்கக் கல்வியின் நிருவாகம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற கருத்தையும் வெளியிட்டன.

இந்திய அரசியல் சட்டத்தின் 7–ஆவது அட்டவணையில் மூன்று பட்டியல் உள்ளன. மத்திய ஆட்சி

யின் பட்டியலில் (Union List) 97 தலைப்புகளும், மாநில அரசுப் பட்டியலில் (State List) 66 தலைப்பு களும், ஒருங்கியல் பட்டியலில் (அதாவது மைய மாநில அரசுகளின் இணைந்த பொறுப்பில், Concurrent List) - 47 தலைப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன. கல்வியைப் பற்றிய சட்டம் இயற்றுவதற்கும், மத்திய அரசின் மேற்பார்வையில் கல்வித் திட்டம் அமைவ தற்கும் ஒருங்கியல் பட்டியலில் கல்வியைக் கொண்டு வருவது பற்றிய சிக்கல் எழுந்தது. வெவ்வேறு கருத்து களை வல்லுநர்கள் எடுத்துரைத்தார்கள். நாடாளு மன்ற உறுப்பினர்களடங்கிய குழு ஒன்று உயர்நிலைக் கல்வி பற்றிப் பி.என். சாப்ரு தலைமையில் ஏற்படுத் தப்பட்டது. அக்குழு உயர் கல்வியை ஒருங்கியல் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்ற கருத்தை வெளி யிட்டது. 1976-ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தப்படி கல்வி ஒருங்கியல் அதி காரப் பட்டியலில் சேர்க்கப்பட்டது.

கல்வியை மக்களுக்கு அளிக்கும் பொறுப்பிலிருந்து அரசு தன்னை விடுவித்துக் கொள்வது விரும்பத்தக்க தன்று. அதே சமயத்தில் தனது கடுமையான பிடி யில் கல்வியை வைத்துக் கொண்டு, கற்பிக்கும் பணி யிலும் நிருவாகத்திலும் ஈடுபட்டுள்ளவர்கள் விரும் பத்தகாத இடையூறுகளை ஏற்படுத்தாமலும், மனி தனின் தனித் தன்மைக்கு ஊறு செய்யா வண்ணமும் அரசு கல்வியைச் செயற்படுத்த வேண்டும். அரசின் ஈடுபாடு, மேற்பார்வை, வழிகாட்டுதல் ஆகியவற்று டன் கல்வி அமைதல் விரும்பத்தக்கதாகும்.

இரா.தி.

**அரசும் சமூகமும்**: தனி மனிதனின் வாழ்க்கை யில் அரசின் தொடர்பு இடைவிடாது நிகழ்கிறது. குழந்தை பிறந்தவுடன் அதன் பிறப்பு, அரசாங்கத் தில் பதிவு செய்யப்படுகிறது. வளரும்பொழுது அவ னுடைய கல்விக்கு அரசு பொறுப்பேற்கிறது. பின்னர் அவனுக்கு வேலை வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுக்கிறது. அவனுடைய உணவு, உடை, உடைமை கள் ஆகியவற்றுக்கான செலவுகள் யாவும் அரசின் கொள்கைகளால் தாக்கப்படுகின்றன. அவனது வரு மானத்தின் ஒரு பகுதியை வரியாக அரசு எடுத்துக் கொள்கிறது. அதற்கு ஈடாக அரசு அவனுக்குக் கல்வி, இலவச மருத்துவம், ஓய்வு ஊதியம், போக்குவரத்து, காவல், பாதுகாப்புப் போன்ற வசதிகளை உண்டாக்கிக் கொடுக்கிறது. அவன் இறந்த பின்னர் அவனது இறப் பும் அரசாங்கத்தில் பதிவு செய்யப்படுகிறது. இவ்வாறு மக்களின் அன்றாட வாழ்க்கையில் அரசின் தொடர் பினைப் பலவகைகளில் காணலாம். கிரேக்க அறிஞர் அரிசுடாட்டில் (Aristotle) அரசு இயற்கையாகவே உருவாயிற்று என்று கருதினார். மேலும், அவர் மனி தனின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யவே குடும்பம் என்னும் அமைப்பு ஏற்பட்டது என்றும், அக் குடும்ப அமைப்பு குழந்தைகள், பேரக்குழந்தைகள் என்று பல குடும்பங்களாகப் பெருகிப் பின்னர் அவை ஒன்றுசேர்ந்து ஊரகமாயிற்று என்றும், மக்கள் ஒன்று கூடி ஒரே இடத்தில் வாழும்போது தங்களுடைய நல் வாழ்வுக்காக அரசு என்னும் அமைப்பை உருவாக் கினார்கள் என்றும் கூறுகிறார்.

தாமசு ஆப்சு (Thomas Hobbes) என்ற அறிஞர், அரசு தொடங்கிய சூழ்நிலையைப் பின்வருமாறு விளக்குகிறார். பண்டைக் காலத்து மனிதர்கள் எல் லோரும் உடல் வலிமையிலும் மனமுதிர்ச்சியிலும் ஏறத்தாழச் சமநிலையில் இருந்தார்கள். கூட்டமாக வாழ்ந்து வந்த மனிதர்கள் தமக்கு வேண்டியவற்றைப் பெற வன்முறையில் ஈடுபட்டார்கள். எவ்விதப் பாது காப்போ கட்டுப்பாடோ இல்லாமல், ஒழுங்கு, ஒழுங் கின்மை ஆகியவற்றை அறிந்திராமல், தன்னிச்சை யாகத் தாம்மட்டும் நலமுற வாழவேண்டும் என்ற அடிப்படையில் குறுகிய வாழ்க்கையை அமைத்துக் கொண்டனர். தங்களின் இந்த அவல நிலையை உணர்ந்து தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாது காப்பு வேண்டி அவர்கள் ஒரு தலைவனைத் தேர்ந் தெடுத்து அவனுக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

நாகரிகம் முதிர்ச்சியுறாத சமூகங்களில் அரசு என் பது பெயரளவில் தான் இருந்தது. அவர்களுக்கு முறை யான விரிவான அரசு தேவைப்படவும் இல்லை. ஏனெனில் மக்கள் கூட்டம் சிறியதாகவும் எளிதில் அடக்கி ஆளக்கூடியதாகவும் இருந்தது. ஏறக்குறைய 20 முதல் 200 பேர் வரை அடங்கிய சமூகத்தில் எல் லோருமே ஒருவரை ஒருவர் அறிந்திருந்தமையால் கட்டுப்பாடு நிலவியது. மேலும், நாகரிகம் வளர்ச்சி யுறாமல் தேங்கி நின்றதால், பல நூறு ஆண்டுகளாகச் சமூக நிலையில் எவ்வித மாற்றமுமின்றி மக்கள் வாழ்ந்தனர். அவர்கள் தேவைகளும் குறைவாக இருந் தன. அத்தகைய சமூகத்துப் பெரியவர்கள் நல்ல நூல்நிலையங்களுக்கு ஒப்பானவர்களாக இருந்தனர். சிறியவர்கள் தமக்குத் தேவையானவற்றைப் பெரிய வர்களிடமிருந்து கற்றுத் தெரிந்து கொண்டனர். அது மட்டுமன்றித் தனிப்பட்டவர் உடைமைகளும் குறை வாகவே இருந்தன. பண்டைய சிறிய சமூகத்தில் ஒருவருடைய உடைமைகள் எல்லோருக்கும் தெரிந் திருந்தமையால், களவாடிய பொருள்களை விற்கவோ வேற்றூருக்கு எடுத்துச் செல்லவோ முடியாததால் களவு நிகழ்வது அரிதாக இருந்தது. பொறாமை, பழி கூறல், தனிப்பட்ட பகைமை இவையே குற்றம் நிகழக் காரணங்களாக இருந்தன. ஒரு மனிதனின் நற் பெயரே அவனது பெரும் செல்வமாக மதிக்கப்பட்டது.

பண்டைக் காலத்து மக்கள் நாடோடிகளாக வேட்டையாடித் திரிந்த போது, நிலையான தலைமை

இருக்கவில்லை. தேவைக்கேற்பத்தான் தலைமை உருவாயிற்று. அதாவது கூட்டத்தினரிடையே சச்சரவு ஏற்பட்டாலோ வெளியிலிருந்து இடையூறு ஏற்பட்டாலோ மட்டுமே ஒரு தலைவனின் அறிவுரை, உதவி, அதிகாரம் முதலியன பிறரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதுபோன்ற தலைமை பரம்பரையாக ஏற்படவில்லை. காலச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தலைமை அமைந்தது. எடுத்துக்காட்டாக வேட்டையாடும் திறமை வாய்ந்தவன் பஞ்சக் காலத்தில் வேட்டையால் வாழ்பவர்களுக்குத் தலைவனானான். அனுபவம் முதிர்ந்தவர்களின் குழு, அவனுக்குத் தக்க அறிவுரை கூறி வந்தது.

இந்த நாடோடி நிலைமை மாறி மக்கள் ஒரே இடத்தில் பல குடும்பங்களாக வாழத் தொடங்கிய போது தனியார் உடைமைகள் மிகுந்தன. தேவைகளுக்குத் தகுந்தவாறு குடும்பத் தலைவர்கள் ஒன்று கூடி எண்ணிச் செயற்பட்டனர். பிறகு சேமிக்கப்பட்ட தானியங்கள், பிற பொருள்கள், பெண்கள் ஆகியோர்களைக் கவர்ந்து செல்ல அடிக்கடிப் போர்களும் கவர்தலும் நடக்கத் தொடங்கின. தோல்வியுற்றவர்களை வென்றவர்கள் அடிமைகளாக்கினர். அது முடியாதபோது கொன்று குவித்தனர். அவர்களின் உடைமைகளையும் விளை நிலங்களையும் கைப்பற்றினர். அந்நிலங்களில் வேலை செய்ய ஆட்கள் தேவைப்பட்டதால், மீண்டும் மீண்டும் போர் தொடுக்க வேண்டியிருந்தது. இதன் விளைவாகக் கூட்டங்கள் பெருகி, மக்கள் வாழும் இடங்கள் விரிவடைந்து சிற்றூர்களாகவும் நகரங்களாகவும் நாடுகளாகவும் மாறின. பலவகைப்பட்ட மக்களிடையே ஒற்றுமையை வளர்க்கவும் அவர்களுக்கு வசதிகள் உண்டாக்கிக் கொடுக்கவும் திறமையான தலைமை தேவைப்பட்டது. தலைவன் கடமைகள் மிகுந்த போது அவனுக்குத் திறமையான நம்பிக்கையுள்ள உதவியாளர் தேவைப்பட்டனர். இவ்வாறாக அரசு உருவாயிற்று.

தொடக்கத்தில் ஏற்பட்ட அரசுக்கும் இக்கால அரசுக்கும் வேற்றுமைகள் பல உள்ளன. போர்களையும் சச்சரவுகளையுமே எதிர்கொண்ட பண்டைக் காலத்தில் வன்முறையே அரசின் இயங்குமுறையாக இருந்தது. அது போர்க்கால அரசு (War State) எனப்பட்டது. காலப்போக்கில் வளர்ந்து வரும் நாகரிகத்திற்கு ஏற்பப் பல மாறுதல்களையடைந்து நலஅரசு உருவாயிற்று. பண்டைக் காலத்தில் மக்களின் அன்றாட வாழ்க்கையில் மிகக் குறைவாகத் தலையிடும் அரசே மிகச் சிறந்த அரசு என்ற கருத்து நிலவியது. அந்நிலை மாறி இன்றைய அரசு பல்வேறு துறைகளாக விரிவடைந்து தனிமனித வாழ்க்கையின் எல்லாக் கூறுகளிலும் தொடர்பு கொள்கிறது.

ஒரு நாட்டின் பொருளாதாரம் அரசால் முடிவு செய்யப்படுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு திட்டமிடுகிறது. நிலமில்லாத மக்களுக்கு நிலங்களை வழங்கி உற்பத்தியான பொருள்களை விற்கவும் உதவுகிறது. போக்குவரத்து வசதிகளைப் பெருக்கி வாணிகம் செழிக்க வழி செய்கிறது. பலவகைத் தொழில்களும் சீராக நடப்பதற்குத் திட்டங்களும் சட்டங்களும் இயற்றி நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தனியார் துறை நிறுவனங்கள் மட்டுமன்றி அரசும் பல தொழிற்சாலைகளை நிறுவி நடத்துகிறது.

கல்விக் கூடங்கள் பல அமைத்து மக்களின் அறிவையும் திறனையும் வளர்க்க அரசு வழி செய்கிறது. கற்றுத் தேர்ந்த கல்வியையும் வேலைத் திறனையும் நன்கு பயன்படுத்த வேலை வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுக்கிறது.

ஊனமுற்றவர்களும் நலிவுற்றவர்களும் புறக்கணிக்கப்படாமல் அவர்களைக் காக்கும் பொறுப்பை அரசு ஏற்று அவர்களுக்குத் தேவையான கல்வி, மருத்துவம் மட்டுமன்றி வேலை வாய்ப்புகளும் அளித்து அவர்களும் சமூகத்தில் சிறப்பாக வாழ வழி செய்கிறது. அதுமட்டுமன்றித் திக்கற்றோர் உதவியற்ற முதியோர், மனநலிவுற்றவர்கள் ஆகியோர்க்கான காப்பகங்களையும் அரசு நடத்துகிறது.

இவ்வாறு விரிந்து செயலாற்றும் இன்றைய சமூக நல அரசின் முதன்மையான பணி, நாட்டை அயலார் தலையீட்டிலிருந்து காப்பாற்றுவதேயாகும். இதற்காகவே, படைகள், அவற்றுக்குத் தேவையான படைக்கலன்கள், பயிற்சிகள் ஆகிய இவற்றிற்காகப் பெருந்தொகையை அரசு செலவிடுகிறது. அது மட்டுமன்றி அயல்நாட்டவர்களுடன் நல்லுறவு ஏற்படுத்தி அமைதி காக்கவும் பொருளாதார உறவுகள் மேம்படவும் திட்டமிட்டுச் செயலாற்றுகிறது.

தன் நிருவாகத்திற்கு உட்பட்ட இடங்களில் ஒழுங்கமைப்புச் சீராக நிலவச் செய்வது அரசின் அடுத்த பணியாகும். ஒரு சமூகத்து மக்களுக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்வது, அதைச் சமமாகப் பகிர்ந்தளிப்பது, மக்களுடைய கல்வி, உடல் நலம், பொழுதுபோக்கு, அயல்நாட்டுத் தொடர்பு, போக்குவரத்து யாவும் ஒழுங்காகச் செயற்பட ஒரு முறையான சமூக ஒழுங்கமைப்பு இன்றியமையாததாகும். இதனை ஏற்படுத்துவது அரசின் முதன்மையான பணியாகும்.

நாட்டின் பரப்பளவு மிகுதியாக உள்ள போது இந்தப் பணியைச் செயற்படுத்துவது கடினமானதாகிறது. எடுத்துக்காட்டாகச் சோவியத்துஅரசின்நிருவாகத்தில் ஏறத்தாழ 84,73,000 சதுர மைல்கள் உள்

ளன. அடுத்துச் சீனா, இந்தியா, அமெரிக்கா ஆகியன வும் அதிகமான நிலப்பரப்புக் கொண்ட நாடுகள் ஆகும். அடிக்கடி புரட்சிகள் நடக்கும் நாடுகளிலும் ஒழுங்கமைப்பை நிலைநாட்டுவது கடினமானதாகும். நடு மற்றும் தென் அமெரிக்க நாடுகளை இதற்கு எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். அடிக்கடி கல வரங்களும் சச்சரவுகளும் நடந்து கொண்டிருந்தால் அதை அடக்குவதிலேயே ஒரு அரசின் நேரமும் பொருளும் செலவிடப்படும். பொருள் இழப்பு மட்டு மன்றிப் பல ஆண்டுகளாகத் திட்டமிட்டு வளர்ந்துள்ள பொருளாதாரமும் சீர்குலைவதால் அரசின் பணிகள் மேலும் சிக்கலாகின்றன.

அரசின் மூன்றாவது இன்றியமையாப் பணி மக்கள் நலனுக்காகத் திட்டமிடுவதும் அதை நிறை வேற்றுவதும் ஆகும். எல்லா மக்களுக்கும் பலனளிக் கும் வகையிலும் எல்லா மக்களாலும் ஏற்றுக்கொள் ளக் கூடிய வகையிலும் திட்டமிடுவது என்பது மிக மிகக் கடினமான அல்லது அறவே முடியாத செயலா கும். எடுத்துக்காட்டாக மிக்க வருமானமுள்ளவர் களிடமிருந்து வரிப்பணம் பெற்றுக் குறைந்த வரு மானம் கொண்ட வரி செலுத்தாத மக்களுக்கு இல வச வசதிகளை அளிக்கிறது. இந்த வசதிகளைப் பெறும் மக்கள் அரசைப் பாராட்டி வரவேற்பது போல வரி கொடுப்பவர்கள் பாராட்டுவதில்லை.

தனி மனிதனின் உரிமைகளையும் உடைமை களையும் பாதுகாப்பது அரசின் தலையாய பணி யாகும். அதற்காகவே சமூகம் அரசுக்கும் பலவித அதி காரங்களை அளித்திருக்கிறது. தன் பாதுகாப்பிற்கும் மேம்பாட்டிற்கும் வேண்டிச் சில உரிமைகளைத் தனி மனிதன் விட்டுக் கொடுக்கிறான். அரசு சட்டங்களை இயற்றி மக்களைக் கட்டுப்படுத்துகிறது. அது மட்டு மன்றிக் குடும்பம், கல்வி நிலையம், சமயம் என்ற அமைப்புகளும் கட்டுப்பாடு வளர உதவுகின்றன.

வி.கோ.

**துணை நூல்கள்:**

**Ogburn and Nimkoff.**, "A Hand Book of Sociology", Routledge & Kegan Paul Limited, Broadway House, London, 1960.

**Reece MC Gee** (Editor), "Sociology, An Introduction", The Dryden Press, Hinddale, Illinois, 1977.

**Bottomore. T.B.**, "Sociology, A Guide to Problems & Literature", George Allen & Unwin (India) Pvt. Limited, Bombay, 1971.

***அரசு வாணிகக் கழகம்***, தேர்வு செய்யப் பட்ட பொருள்கள் சிலவற்றின் கொள்முதலிலும் விற் பனையிலும் அரசு நேரடியாகப் பங்கு கொண்டு அவற்றைச் செயற்படுத்தும் கருவியாக 1956-ஆம் ஆண்டு நிறுவனச் சட்டத்தின்கீழ் அரசு வாணிகக் கழகம் (State Trading Corporation) வரையறுக்கப் பட்ட தனியார் நிறுவனமாக மே திங்கள் 18-ஆம் நாளில் அமைக்கப்பட்டது. ஒரு கோடி உரூபாய் அனு மதிக்கப்பட்ட முதலாகவும் (Authorised Capital), 100 உரூபாய் மதிப்புள்ள பங்குகளாக ஒரு இலட்சம் உரூபாய் அளவிற்கும், 5 இலட்சம் உரூபாய் செலுத் திய முதலாகவும் (Paid up Capital) கொண்டு தொடங்கப்பட்டது. அதன் முழுமையான முதல், இந் தியக் குடியரசுத் தலைவரின் பெயரில் மைய அரசால் வழங்கப்பட்டது. இக்கழகம் சட்டத்தால் கட்டுப்பட்ட நிறுவனம் அன்று. அயல்நாட்டு வாணிகத்தில் அடங் கும் ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களைக் கொள் முதல் செய்தல், விற்பனைக்கான வழி வகைகளை வகுத்தல், சரக்குப் போக்குவரத்துக்கான பாதுகாப்பை மேற் கொள்ளுதல் ஆகியவற்றை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் திறமைமிக்க வகையில் செயற் படுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக் குறிக்கோளை அடைவதற்குத் தேவையான பிற தொடர் அலுவல்களையும் ஏற்று நிறைவேற்றுவது இதன் மற்றொரு பொறுப்புமாகும்.

சிறப்பு நோக்கங்கள்: ஏற்றுமதி அளவையும் தரத்தையும் பெருக்குவது, அவற்றைப் பன்முகப்படுத் துவது, வெளி வாணிக இடைவெளி நீக்கம், தொழில் வாணிகத் துறைகளோடு ஒத்துழைப்பு, நீண்டகால அடிப்படையில் மொத்தச் சரக்குகளை (Bulk Commodities on Long term basis) ஏற்றுமதி செய்வதற் கான வழிவகைகளை ஆராய்ந்து செயற்படுத்துவது, மொத்தச் சரக்கு இறக்குமதியை வரையறுப்பது, அரசு ஆணையின்போது விலை வரையறை ஆதரவு (Price Support) ஆகியவற்றுக்குத் தேவையான நடவ டிக்கைகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவது ஆகியவைகளாகும்.

கழகத்தின் விற்பனை 1956-இல் 9.2 கோடிஉரூ பாயிலிருந்து 879 கோடியாக 1975-இல் வளர்ந்தது. இது, 1980-ஆம் ஆண்டு அளவில் ஏற்றுமதிப் பொருள் களின் மதிப்பு 1000 கோடி உரூபாய்க்கு மேலும் உயர்ந்தது. நுகர்பொருள்கள், தோல்சார் பொருள் கள், தொழிற் பொருள்கள், முன்னேற்றப் பொருள் கள் (Development Goods), உற்பத்திப் பொருள்கள் ஆகியவை இக்கழகத்தின் முழுக் கட்டுப்பாட்டில் ஏற்று மதியாகின்றன. நடுத்தர, சிறு தொழிற்சாலை உற் பத்திப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க மாநில அங்காடி அமைப்பு (State Marketing Division) ஒன்றை நிறுவியுள்ளது. ஏற்றுமதியை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனங்

களை ஊக்குவித்து அவற்றில் கழகம் முதலீடு செய்து அவற்றின் வளர்ச்சியில் முழுமையான பங்கேற்று வருகிறது. இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கழகத்தில் (Indian Motion Pictures Export Corporation) முதன்மைப் பங்குதாரராக முதலீடு செய்து, இந்தியத் திரைப்பட ஏற்றுமதியைப் பெருக்குகிறது.

கைவினை, கைத்தறி ஏற்றுமதிக் கழகத்தை நிறுவிக் (Handicrafts and Handloom Export Corporation Limited) கைவினைப் பொருள்களின் ஏற்றுமதியைப் பெருக்க உதவுகிறது. கனிப்பொருள் ஏற்றுமதிக்கெனத் தனியாக இந்தியக் கனிப்பொருள் மற்றும் உலோகப் பொருள் வாணிகக் கழகம் (Mineral and Metal Trading Corporation of India) என்ற அமைப்பை 34.8 மிலியன் உரூபாய் செலவில் நிறுவியுள்ளது. இதைப்போன்றே இந்திய முந்திரிக் கழகமும் (Cashew Corporation of India) அரசு வாணிகக் கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது. பொறியியல் கருவிகள், இரயில் தளவாடங்கள், இரயில் பெட்டிகள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்யும் பொறுப்புக்கென இந்தியத் திட்டங்கள், கருவிகள் கழகம் (The Projects and Equipments Corporation of India) என்ற அமைப்பை 1971-இல் ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் இக்கழகத்தினால் தோற்றுவிக்கப்பட்ட பெரும் பொறியியல் திட்டங்கள், அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கான அடித்தளமாக அமைந்துள்ளன.

ஏற்றுமதி இறக்குமதி வாணிக ஒப்பந்தங்களில், இது நேர்முக (Direct) மறைமுக (Indirect) ஒப்பந்த முறைகளைக் கையாள்கிறது. நேர்முக ஒப்பந்த முறையில் கழகம், தன் சொந்தப் பணத்தை முதலீடு செய்து, வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மறைமுக ஒப்பந்த முறைப்படி, வெளி நாட்டவர்க்கும் இந்திய வணிகருக்குமிடையே வாணிக ஒப்பந்தங்கள் ஏற்பட முகவராகவும் நடுவராகவும் இருந்து துணை புரிகிறது. இவ்வாறு ஒப்பந்தங்களை ஏற்படுத்தித் தரவும், இறக்குமதி, ஏற்றுமதி உரிமங்களைப் பெற்றிடவும், பொருளின் தர அளவு பொறுப்புறுதிக்காகவும் (Guarantee) இது உதவி செய்கிறது. சரக்கு விடுப்பின் காலப் பட்டியலைப் (Deliverence of Stock Schedule) பின்பற்றுவதிலும், குறிப்பட்ட காலத்தில் அயற்செலாவணி கொடுக்கப்படுவதிலும் எவ்விதச் சிக்கல்களும் ஏற்படாதபடி வாணிகம் நல்ல முறையில் நடந்திடத் தேவையான உதவிகளை இக்கழகம் செய்கிறது. வாணிக ஒப்பந்தம் செய்து கொண்ட பின், எழும் தகராறுகளையும் இக் கழகம் தீர்த்து வைக்கிறது.

கழகம் ஏற்றுமதி செய்யும் பொருள்களாவன: 1) இரயில் பெட்டிகள்–எந்திரங்கள், 2) பொறியியற் பொருள்கள்–எந்திரக் கருவிகள், சிறு தொழிற் பொருள்கள், 3) இரசாயனப் பொருள்கள்–உப்பு, மருந்து வகைப் பொருள்கள், 4) நுகர்பொருள்கள்–தோல், காலணிகள், தலைமுடிகள், கைவினைப் பொருள்கள், துணிகள், தைத்த ஆடைகள், 5) வேளாண்மைப் பொருள்கள்–பழ வகைகள், பழச் சாறு, உயர்ந்தரக அரிசி, பயறு வகைகள், 6) சிமெண்டு முதலியன.

நாட்டின் வளம் குன்றாமல் ஏற்றுமதியைப் பெருக்கி எஃகு. சிமெண்டு, தொழிற்சாலை எந்திரங்கள் போன்ற இன்றியமையாப் பொருள்களை இறக்குமதி செய்வதில், தொடக்க காலத்திலிருந்து கழகம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறது. இறக்குமதியின் அளவு, காலம், விலை ஆகியவை உள்நாட்டின் உற்பத்தி அளவைச் சிறிதேனும் கெடுக்காத வகையில் பார்த்துக் கொள்கிறது. உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தருகிறது. மூலப்பொருள்கள், காலணிகள், கைவினைப் பொருள்கள், உப்பு, தேயிலை, காப்பி, கம்பளி போன்ற ஏற்றுமதிப் பொருள்களின் தர வரையறை, கொள்முதல், ஏற்றுமதி அளவு, விற்பனைக்கான நாடுகளின் தேர்வு, சரக்குப் போக்குவரத்து வகை, தடம் ஆகியன குறித்து எல்லா முடிவுகளையும் இக் கழகமே செய்கிறது. சணல், இரப்பர், புகையிலை போன்ற பொருள்களின் உற்பத்தி நாட்டில் மிகுதியாகப் பெருகிய காலங்களில் விலை ஆதரவு (Price Support), மிகைப்பொருள் பங்கீடு ஆகிய பொறுப்புகளை ஏற்கிறது. அரசின் ஆணைக்கேற்ப வேளாண்மைப் பொருள்களின் உற்பத்தி நலனையும் விலையையும் பாதுகாத்து வருகிறது. நாட்டில் உற்பத்தியாகும் சிமெண்டுத் தொழிற்சாலைகளிலிருந்து நேரடியாகக் கொள்முதல் செய்வதுடன், நாட்டின் மொத்த தேவையைக் கணக்கிட்டுப் பற்றாக்குறைக் காலங்களில் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, நாடு முழுவதும் ஒரே விலையை நிலைப்படுத்துகிறது. கட்டுப்பாடான விலைக்கு (Controlled Price) சிமெண்டு விற்கும் பொறுப்பையும் அரசு இக் கழகத்திடமே ஒப்படைத்துள்ளது.

மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்வதில் இணைப்பு வாணிக ஒப்பந்த (Link Trade Agreement) முறையைப் பின்பற்றி நாட்டு ஏற்றுமதிக்கு ஈடான இறக்குமதிக்கு வழி வகை செய்கிறது. எடுத்துக்காட்டாக, செருமனியிடமிருந்து துணி ஆலைகளுக்குத் தேவையான புதிய எந்திரங்களை இறக்குமதி செய்து அதன் மதிப்பிற்கு ஈடான இந்திய நாட்டுப் பொருள்களைச் செருமனிக்கு ஏற்றுமதி செய்தது. அதனால், அயற் செலாவணி செலுத்து நிலையிலும் சாதகமான நிலை ஏற்பட உதவுகிறது. உள்நாட்டு வாணிகத்தைக் கட்டுப்படுத்துவதால் ஏற்றுமதி வளர்ச்சி

யடையும் என்ற எண்ணத்துடன் சில பொருள்களின் அக வாணிகத்தையும் தானே மேற்கொண்டு நடத்து கிறது.

மைய, மாநில அரசுகளின் உதவியுடனும், சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தின் (Small Industries Development Corporation) உதவியுடனும் ஏற்று மதிக்கான உயர்தரப் பொருள் உற்பத்திக்கு நிதி உதவி அளித்தும், மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாட்டின் உற்பத்தித் திறனைப் பெருக்குகி றது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத் தேவைக் கேற்ப மூலதன எந்திரங்கள் (Capital Equipments) தொழிற்சாலை மூலப்பொருள்கள், அரிய பண்டங்கள் ஆகியவற்றை அவ்வப்போது இறக்குமதி செய்வதன் மூலம் குறிப்பிட்ட காலத்தில் வழங்கவும் செய்கிறது. ஏற்றுமதிப் பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளுக்குத் தடங்கலின்றி மூலப் பொருள் கட்டுப் பாடான விலையில் குறித்த காலத்தில் கிடைத்திடத் தொழிற்சாலை மூலப்பொருள் உதவி மையம் (Industrial Raw Material Assistance Centre) ஒன்றை உருவாக்கியுள்ளது.

அரசு வாணிகக் கழகம் இந்திய ஏற்றுமதியைப் பெருக்குவதன் காரணமாகப் புதிய அங்காடிகளை ஆய்ந்துகண்டுகொள்ளவும், வெளிநாடுகளின் தேவைக் கேற்பப் பொருள்களின் தரத்தை உயர்த்தவும் மிகவும் முனைந்து செயற்படுகிறது. வாணிக ஒப்பந்தங்களில் இந்தியாவிற்குப் பலன் தரக்கூடிய கூறுகளை ஆராய்ந்து வாணிக ஒழுங்குக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தித் தருகிறது. உலக அங்காடியின் தன்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு உலகம் முழுவதும் 18 அலுவல கங்களை அமைத்துச் செயலாற்றுகிறது.

**அரண்மனைச் சிறுவயல்,** இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடி – சிவகங்கைச் சாலையி லுள்ள ஓரூர். இருப்புப்பாதை நிலையம் உள்ளது. சிறுவயல் குறுநிலமன்னரின் மாளிகை இங்குள்ளது. இது மருது பாண்டியர் இருந்த அரண்மனையாகும். எனவே இவ்வூரை அரண்மனைச் சிறுவயல் என்பர். மருதுபாண்டியர் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் சிவ கங்கைச் சீமையின் மன்னராக இருந்தவர்கள். ஆங்கி லேயரை எதிர்த்துப் போராடித் தூக்குத் தண்டனை பெற்றவர்கள். சிவகங்கைச் சரித்திரக் கும்மியும் அம் மானையும் சிறுவயலைப் பட்டினமாக்கி, அதில் அரண் மனை கட்டிய செய்தியைக் கூறுகின்றன.

**அரணிடுதலும் முற்றுகையிடுதலும்,** வீரவாழ்வையே உயர்ந்த வாழ்வாகக் கருதிய மக் கட்கு இன்றியமையாதனவாகும். அரசனின் உறுப்பு களுள் அரணினை ஆறில் ஓர் உறுப்பாகத் திருவள்ளு வர் கூறுகின்றார். சிறந்த படை, குடிமக்கள், செல் வம், அமைச்சர், நண்பர், அரண் ஆகியன அவ்வாறு உறுப்புகளாகும். அரண்களின் தன்மையினைக் கூறப்புகுந்த வள்ளுவர் நிலவரண், நீரரண், மலை யரண், காட்டரண் என்ற நான்கு அரண்களைக் கூறுகிறார். வெற்றியினை விரைந்து தேடிய வேந்தர் கள் வலிமைமிக்க கோட்டைகளைக் கட்டியிருந்தனர். பெரும்பாலான கோட்டையமைப்புகள் அரசர்களா லும் குறுநிலத்தலைவர்களாலும் நகர அரசாக நிறு வப்பட்டிருந்தன. சில பேரரசுகளும் தங்கள் தலை நகரை உயர்ந்த மதில்கள் அமைத்துக் காத்தன.

வரலாற்றின் தொடக்கக் காலத்தில் எழுப்பப் பெற்ற கோட்டையானது கி.மு. 7000–ஆம் ஆண்டில் கட்டப்பெற்றது. அது செரிகோ என்ற இடத்தில் 10 ஏக் கர் நிலப்பரப்பில் கட்டப்பெற்றது. சுவர் 4.5 மீட்டர் பருமனுள்ளதாகவும் 6.3 மீட்டர் உயரமுள்ளதாகவும் 3 மீட்டர் ஆழமுள்ளதாகவும் கட்டப்பெற்றது. அது அக்கால மக்கட்கு நல்லதொரு பாதுகாப்பினை நல் கியது. அதுபோன்றதொரு கோட்டையமைப்பு, பின் னர் எகிப்திலும் அசிரியாவிலும் கட்டப்பெற்றது. இங்குக் காணப்படும் கோட்டைச் சுவர் 9 மீட்டர் பருமனுடையது. இதன் உயரம் 37 மீட்டர். கிரீசு, இசுபார்டா, உரோம் ஆகிய இடங்களில் கட்டுப்பட் டுள்ள கோட்டைகள் இன்றுள்ள பொறியாளர்களின் செயல் திறனை விஞ்சுகின்ற அளவிலும் வியக்கத்தக்க அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன. உடைந்துபோன கோட்டையின் பகுதிகள் உறுதியான கோட்டைக்குள் பலர் பாதுகாக்கப்பட்டனர் என்பதைக் கூறுகின்றன. திராய் (Troy) என்னும் நகரத்தில் வலிமை வாய்ந்த கோட்டையொன்று இருந்ததாக ஓமர் (Homer) எழு திய இலியாது (Illiad) என்னும் நூலால் அறியலாம். அக்கோட்டைக்குள் நுழையப் பல நாள்கள் முயன் றும், கிரேக்கர்கள் தோல்வியுற்றதால் இறுதியில் சூழ்ச்சித் திறனால் மரக் குதிரைக்குள் புகுந்து கோட் டைக்குள் நுழைந்து திராயைக் கைப்பற்றினர். இத னால் வலிமைவாய்ந்த போர் எண்ணம்கொண்ட கிரேக்கர்களாலும் வெல்லமுடியாத கோட்டைகள் அக்காலத்தே கட்டியுள்ளமையை அறியலாம். நாடோடிக் கூட்டத்தினரின் தொல்லைகளுக்காளான சீனர்கள் பருமனான நெடுஞ்சுவர் ஒன்றை எழுப்பி யுள்ளனர். இது இன்றும் மாபெரும் அரணாக உலகி னரை வியப்படையச் செய்கிறது. அவ்வரணே நாடோ டிக் கூட்டத்தினரைச் சீனாவில் நுழைய விடாமல் தடுத்தது.

சங்க இலக்கியங்களில் பல கோட்டை அமைப்பு களைக் காண முடிகிறது. அக்காலக் கோட்டைகள் உயர்ந்த மதில்களை அரணாக்கிக் கொண்டு விளங் கின. அரணை ஒட்டி ஆழமான அகழி வெட்டப்பட்டி ருந்தது. அகழியைக் கடக்க இயலாதவாறு கணைய மரத்தொடுகூடிய தொங்கு பாலம் அமைத்திருந்தனர். சில கோட்டைகள் காடுகளையும் மலைகளையும் அர

ணாகக் கொண்டு விளங்கின. தகடூரில் இருந்த கோட்டை, காடுகளை அரணாகக் கொண்டு விளங்கிற்று. வல்லம் என்னுமிடத்திலிருந்த கோட்டையானது மிளைக்காடுகளை அரணாகக் கொண்டு விளங்கியது. கானப்பேரெயில் கோட்டையானது காட்டின் நடுவில் பகைவர்கள் யாரும் நெருங்க முடியாதபடி அமைக்கப்பட்டிருந்தது. அக்காடுகள் போர் வீரர்களின் பயிற்சிக் களமாக விளங்கின. மேலும் சில ஊர்களில் மதில் அமைக்கப்பட்டிருந்ததெனத் தேவாரப் பாடல்கள் தெரிவிக்கின்றன. 'வலங்கொள் மாமதில் சூழ் திருவாரூர்' எனச் சம்பந்தர் தேவாரம் குறிப்பிட்டுள்ளது. மதுரையில் நீள் கடின மதில் இருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. வட்ட மதிலும் திகழ்ந்தவண் திருவையாறு என்றும், மலையென ஓங்கும் மாளிகை நிலவும் மாமதில் ஓமாம்புலியூர் என்றும், மதி தோய்கின்ற மாமதில் காஞ்சி என்றும், தொன்மதிற் சீர்காழி என்றும், சேணுலாமதில் ......... வேணு நற்புரம், திண்ண நன் மதிலணி சிரபுரம், சண்பை நகரில் நீள் மாடமதில் என்றும், பருமதில் சூழ்ந்துள்ள பாம்புரம் என்றும் பலவாறாக மதில், அரண், புரிசை, அகழி ஆகியவை அமைந்திருந்தமையினைச் சம்பந்தர் பாடியுள்ளார். இதனால் பல மாமதில்களைக் கொண்ட ஊர்கள் அக்காலத்தே விளங்கியிருந்தன என்பது தெளிவாகும். கோட்டைகள் அமைக்கத் தகுதியமைந்த இடத்தைத் தெரிந்தெடுத்தலும் உண்டு. முயல்,வேட்டை நாய்களை விரட்டிய இடத்தில் விசய நகர் அமைக்கப்பட்டது என்பது கூறப்படுகிறது. கோட்டையில், கொத்தளங்கள், வளைந்து தானே இயங்கும் அமைப்புடைய வில், கரிய விரலினையுடைய கருங்குரங்கு போன்ற பொறி, கற்களை வீசுகிறகவண், கோட்டைக்கருகில் நெருங்கியவர் மீது வெம்மை மிக்க நெய், உருக்கிய செம்பு இரும்பு, ஆகியவற்றை ஊற்றும் கருவி, தூண்டில் போன்ற பொறிகள், கழுத்திற் பூட்டிக் குறுக்கும் இரும்புச் சங்கிலி, அகழியைத் தாண்டிக் கோட்டைமீது ஏற முயலுவோரைத் தள்ளும் இரும்புக் காப்புகள், அரண்மீது ஏறியவரைக் கோட்டாற் கிழிக்கும் பன்றிப்பொறி, அவர்களின் கைகளை நடுங்கச் செய்யும் ஊசிப்பொறிகள், பகைவரைத் தாக்கும் சிச்சிலிப்பொறி, மூங்கில் வடிவான பகைவர்களை அடித்துத் துன்புறுத்தும் பொறி, எறிகோல் ஈட்டி, மதிற்குரிய ஏனைய பொறிகள் போல்வன மிகுந்திருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. அகழிகளில் முதலைகள் விடப்பட்டிருந்தன. அவைகள் பகைவர்களை அருகில் நெருங்கவிடாமல் தடுத்தன.

சார்லமேனின் (Charlemagne) கோட்டையமைப்பு முறையானது இக்கால அமைப்புகளைக் கொண்டு விளங்கிற்று. அவன் கோட்டைகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பெற்றன ஆகும். அவன் அமைத்த முறையைப் பின்பற்றியே, ஐரோப்பா அனைத்திலும் இடைக் காலத்தில் கட்டபெற்றன போன்று ஐரோப்பாவிலுள்ள கோட்டைகள் காணப்படுகின்றன. அவ்வமைப்புகள் சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ள முறையே உள்ளன.

வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் போர் முறைகள் மாறின. அரணமைக்கும் முறைகளும் மாறியமைக்கப்பட்டன. கோட்டைகள் வலிமை வாய்ந்தவைகளாக விளங்க அவற்றின் அடித்தளம் செம்பால் உருக்கி வார்க்கப்பட்டதும் உண்டு. துப்பாக்கித் தாக்குதல்களையும், பீரங்கிக் குண்டுகளையும் தாங்கும் திறன் வாய்ந்தவைகளாகப் பிற்காலக் கோட்டைகள் கட்டப்பெற்றன. ஐரோப்பாவில் உள்ள கோட்டை அமைப்பு முறையினைப் போன்று குசராத்து மாநிலத்தில் மண்டு என்ற இடத்தில் ஒரு மலைப்பகுதியில் கோட்டையொன்றை அமைத்துள்ளனர். அது வலிமை மிக்க அரணை மதிலாகக் கொண்டது. அங்குக் காணப்படும் கொத்தளங்கள், கதவுகள் ஆகியன சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற கோட்டைகளை இந்தியாவில் ஆக்ரா, தௌலதாபாத்து, மதுரை, செஞ்சி, வேலூர் போன்ற இடங்களில் காணலாம். செஞ்சியில் கட்டப்பெற்ற கோட்டையானது தென்னிந்தியாவின் திராய் (Troy) எனப் போற்றப்படுகிறது. இதன்றியும் மராத்தியர் காலத்தில் மகாராட்டிர மலைப்பகுதிகளில் அமைந்த இருநூற்றுக்கும் மிகுதியான கோட்டைகள் காணப்படுகின்றன. அவை கருங்கல்லால் ஆனவை. அக்கோட்டைக்குள் மக்களுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் கிடைக்க வழி செய்யப்பட்டிருந்தன. அரண்கள் சிறந்த பாதுகாப்பினை மக்களுக்கு அளித்தன. இதனால் எளிதில் மொகலாயர்களும் பாமினி சுல்தான்களும் வெல்ல முடியாதபடி இவை இருந்தன.அவற்றுள் இராய்கட்டு என்ற கோட்டையே மிகவும் சிறப்பு வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. கோட்டையின் மீதுள்ள கொத்தளங்களில் பீரங்கிகள் நிறுத்தப்பட்டுத் தொலைதூரங்களில் உள்ள பகைவர்களைத் தாக்கியதும் உண்டு. பகைவர்கள் வலியவர்களானபோது அரணமைப்பும், வலிமை மிக்கதாகச் செய்யவேண்டிய கட்டாயத்தினை உணர்ந்து ஆல்பிரைட்டு டியூரர் (Albright Durear) என்ற செருமானியர் புதுமையான கோட்டை வடிவமைப்பு முறையினை நூலாக வெளியிட்டுள்ளார். கோட்டைகள் இரண்டு அல்லது மூன்று மதில்களைக் கொண்டனவாகவும் அமைந்திருந்தன. கோட்டைக்கருகாமையில் அகழியும், கோட்டையின் உயரே பல முனைகளிலும் திரும்பித் தாக்கச் செய்யும் பொறியமைப்புகளும் இடம் பெற்றிருந்தன. பின்னாளில் நாடுகள் சிறிய கோட்டைகளை முற்றுகையிடாமல் போர் தொடுத்து அவற்றை விழுங்கிய நிலையில், நாட்டின் எல்லையோரத்தில் கோட்டை

களும், முள்வேலியும் அமைக்கப்பெற்றன. நாடுகளின் எல்லையோரங்களில் மிக நீளமாகவும் வரிசையாகவும் கோட்டைகள் அமைத்துப் பகைவரைத் தடுத்தனர். முதன் முதலில் பிரான்சு தனது கிழக்கெல்லைப் பகுதியில் ‘மாகிநாட் கோடு’ (The Maginot Line) என்று பல கோட்டைகள் அமைத்துச் செருமானியரின் போர் வெறியிலிருந்து தப்பித்துக்கொள்ள நினைத்தது. இதேபோன்ற அமைப்புடைய தொடர் கோட்டைகள் இத்தாலியின் வடக்குப் பகுதியிலும், வட கிழக்குப் பகுதியிலும் கட்டப் பெற்றுள்ளன. போலந்தின் எல்லையோரத்தில் உருசியாவும், செருமனியின் எல்லையோரத்தில் செக்கோசுலோவாகியாவும் கட்டியுள்ளன. இவை யாவும், பீரங்கி, கவச மோட்டார், டாங்கி ஆகியவைகளைத் தடுத்து நிறுத்த அமைக்கப் பட்ட அரண்களாகும்.

இரண்டாம் உலகப்போரின் பின்னர் அணு ஆயுதங்கள் தயாரிக்கப்பட்டன. இவை, போர் தொடுத்து நாட்டை அழிப்பதைவிட ஒரு நாட்டில் இருந்தபடியே ஓர் இயக்கியின் உதவியால் பகைவரின் நாட்டைச் சில மணித்துளிகளில் அழித்துவிடும். எனவே, ஒரு நாடு தன் அணு ஆயுதங்களை இன்றியமையாத தளத்தில் நிறுவச் செய்தலும், அதனைப் பகைவர் நாடு விழிப்புணர்வோடு அணு ஆயுதத்தின் அவ்வப்போதுள்ள நிலையினைக் கண்காணித்த வண்ணமே இருத்தலும் நடைபெற்று வருகின்றன. ஒரு நாட்டில் நிறுவப்பட்டுள்ள ஏவுகணைகளுக்கு எதிராகப் பகைவரது நாடுகளும் ஏவுகணைகளை ஆயத்த நிலையில் வைத்துள்ளன. இவை ஒன்றையொன்று தாக்கி உயிர் இழப்பும் பொருள் இழப்பும் விளைவிக்கும் என்ற அச்சமே வல்லரசுகளின் முதன்மையான அரணாக இன்று விளங்குகிறது.

முற்றுகை என்பது கோட்டையினை வளைக்கை அல்லது சூழ்ந்து கொள்ளுதல் என்ற பொருள் கொண்டதாகும். பகைவனின் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் போரினைத் தமிழர்கள் உழிஞைப் போர் என்றனர். கோட்டைக்குள் பகைவர்கள் ஏணிகளின் உதவியால் நுழைய முயலுதலும், அவற்றைத் தடுக்கக் கோட்டையில் உள்ளோர் அம்பு மாரி பொழிதலும், பலவகைப் பொறிகளால் பகைவரைத் தாக்கி எறிதலும் சிலப்பதிகாரத்தில் கூறப் பட்டுள்ளன. உடும்புளின் துணையால் மதில் மீது ஏறுவதும் உண்டு. கோட்டையில் இருப்போர் வெளியேவந்து தங்கிய நிலையும் உண்டு. அவர்கள் தாமே கோட்டைப் போரில் விழுப்புண்பட்டு இறந்தமையினைத் தொல்காப்பிய நொச்சித்திணை கூறுகிறது. கோட்டையைக் காக்க வீரர்கள் போராடிய நிலையினையும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. மதிலின் உச்சியைக் கைப்பற்றிய பகைவர்கள் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து மங்கல நீர் தெளித்து, மண்ணு மங்கலம் என்ற விழாவைக் கொண்டாடியதும் உண்டு, முற்றுகையிடப்பட்ட நிலையில் தூதுவர்களையும் புலவர்களையும் கோட்டைக்குள் அனுப்பியும், கோட்டைக்குள் இருப்போர் பகைவனுக்கு அனுப்பியும் இரு பாலாரும் ஒத்த உடன்படிக்கை செய்து கொண்டமையும் உண்டு. முற்றுகையினை நீட்டித்துக் கோட்டைக்குள் இருந்த மக்கள், விலங்கினங்கள் உணவில்லாமல் தவிக்கச் செய்வதும் உண்டு. தமிழ்நாட்டில் சங்க காலத்தில் நடைபெற்ற உறையூர் முற்றுகை இத்தன்மை வாய்ந்ததாகும். இதுபோன்ற ஒரு நிலையைக் கிரேக்கர்கள் திராய் (Troy) நகரை முற்றுகையிட்ட போது கையாண்டனர். அந்த முற்றுகை பலகாலம் நீட்டித்தது. தொடர்ந்து முற்றுகையிட்டபோதிலும் திராய் மக்கள் பணிய மறுத்தனர். பின்னர்க் கிரேக்கர்கள் தம் சூழ்ச்சித் திறனால் கோட்டைக்குள் புகுந்து திராய் மக்களைத் தோற்கடித்து எலனைக் (Helen) கைப்பற்றினர்.

அசிரியர்கள் போர் வீரர்களுக்கு முறைப்படி சிறப்பான பயிற்சிகள் அளித்து முற்றுகையில் ஈடுபடுத்தினர். சக்கரக் கவச வண்டிகள் அமைத்து, அதில் வில் வீரர்களை அனுப்பிக் கோட்டைகளை முற்றுகையிட வைத்தனர். இதனால், கோட்டைக்குள் இருந்தோர் ஏவும் அம்புகளால் அசிரியர்கள் தப்பித்துக் கொள்ளவும், வலிந்து தாக்குதல் மேற்கொள்ளவும் முடிந்தது. உயிரிழப்புகள் மிகுதியாக ஏற்படாமல் பகைவர்களின் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றியுள்ளனர்.

சீனாவில் மங்கோலியர்கள் சிறப்பான முற்றுகை முறைகளைக் கையாண்டார்கள். இவர்களின் படையானது ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இரு பிரிவினைச் சார்ந்தவர்கள் ஏனைய மூன்று பிரிவினருக்குப் பாதுகாப்புக் கவசமாக விளங்கினர். மூன்று பிரிவினர்களும் வில் அம்புகளைத் தாங்கியிருந்தனர். முன் நின்ற இரு பிரிவினரும் ஈட்டிகளைத் தாங்கி நின்றனர். போர் நிகழ்ந்தபோது பின்னர் இருக்கும் வில்வீரர்கள் ஈட்டிவைத்திருப்போர்களின் இடையில் வந்து நின்று ஒரே நேரத்தில் அம்பு மழை பொழிவர். பகைவர்கள் குழப்பம் அடையும் வரையில் ஓயாமல் போர் செய்வர். ஈட்டி வைத்திருப்போரும் அதே நேரத்தில் போர் புரிவர். ஈட்டியும், அம்பும் மாறி மாறித் தாக்குவதால் பகைவர்கள் நிலை குலைந்து போய்விடுவர். அவர்கள் சிறந்த கட்டுப்பாடு கொண்டோராகவும், இலக்கினைத் தவறாமல் வீழ்த்தும் திறன் கொண்டோராகவும் திகழ்ந்து வேகத் திறனைக் கணக்கிட்டுக் காலமுறையில் தாக்குதல் நிகழ்த்தி முற்றுகையிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

இசுகாண்டினேயாவின் வடபகுதியான குளிர்நாட்டில் வாழ்ந்து வந்த வைகிங் என்ற இனத்தவர் சிறந்த

முற்றுகைகளை அறிந்திருந்தனர். இவர்கள் பாரிசு நகரத்தைக் கி.பி. 885-இல் முற்றுகையிடத் தொடங்கிக் கி.பி. 887-இல் வெற்றி பெற்றுள்ளனர். இவர்கள் நிலத்திலும் நீரிலும் முற்றுகையிடுதலைக் கையாண்டனர். போரைத் தொடங்கியவுடன் தற்காப்பைப் பற்றிப் பெரிதும் கவலை கொள்ளாமல் எதிரியைச் சாய்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு போரிட்டனர். இவர்கள் பெரும்பாலும் செல்வம் நிரம்பியுள்ள நாட்டையே முற்றுகையிட்டனர்.

சார்லமேனின் படைவீரர்கள் முற்றுகையில் சிறந்து விளங்கினர். தங்கள் முன்னோரின் போர் முறைகளையும் போர்க் கருவிகளையும் நவீன மயமாக்கினர். போர் வீரர்கள் கத்தி, ஈட்டி, வாள், கவசம் ஆகியன ஏந்தி முற்றுகையிட்டனர். இவர்கள் நிகழ்த்திய 53 போர் முற்றுகைகளில் முற்றுகைக் கருவியினை உடன் கொண்டு சென்றனர். மூன்று மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களையும், ஆறு மாதங்களுக்குத் தேவையான போர்க் கருவிகளையும் கொண்டு சென்று பகைவர்களுக்கு ஓயாமல் தொல்லை கொடுத்து நாட்டைக் கைப்பற்றினர். இவர்கள் கி.பி. 773-இல் இலம்பார்டி நாட்டு அரசனை எதிர்த்து அவனது கோட்டையினை முற்றுகையிட்டனர். போர் வீரர்கள் அனைவரும் இலம்பார்டிக் கோட்டையை எட்டு மாதங்கள் முற்றுகையிட்டனர். உணவின்றி இருந்த இலம்பார்டி மக்கள் சார்லமேனிடம் சரணடைந்தனர். இலம்பார்டி சார்லமேன் வசமாயிற்று.

இசுலாமியர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் ஏற்பட்ட சிலுவைப்போரில் பல முற்றுகைத் தந்திரங்கள் பின்பற்றப்பட்டன. கிறித்தவர்கள் பயன்படுத்திய முற்றுகைக் கருவிகள், கவண்பொறி, குறுவில் போன்ற பல ஆயுதங்களும் தேள், உடும்பு போன்ற விலங்கினங்களும் ஆகும். மதில்களைத் தகர்ப்பதற்குரிய பெரும் பூணிட்ட உத்திரங்களைப் பயன்படுத்தினர். கிறித்தவர்கள் கி.பி 1097-இல் மாரா என்ற கோட்டையை முற்றுகையிட்டனர். பகைவர்களின் கோட்டைக்கெதிரில் பெரிய மரத்தாலான அரண் ஒன்றை அமைத்தனர். அவ்வரணில் அமர்ந்து எதிரிகளை இரும்புத் தூண்டில் முள்களைப் பயன் படுத்திக் கோட்டையிலிருந்து வெளியில் இழுத்தனர். எருசலம் கோட்டையைக் கிறித்தவர்கள் தகர்த்து உள்ளே நுழைந்தனர். இவர்கள் ஐரோப்பாவின் போர் முறைகளையும் முற்றுகை முறைகளையும் மாற்றி அமைத்தனர். இதனால் இவர்களுக்குப் பின்னர் முற்றுகை முறையில் பெரிய மாற்றங்கள் மேற்கொண்டு குறுகிய காலத்தில் கோட்டைகள் கைப்பற்றப்பட்டன. ஐந்தாண்டுக் காலத்திற்குமேல் முற்றுகையிடப்பட்டும் கைப்பற்ற இயலாத கான்சுடாண்டிநோபிள் கோட்டை துருக்கியர் முற்றுகையின் விளைவால் ஐம்பத்தைந்தே நாள்களில் வீழ்ச்சியுற்றது.

இந்திய வரலாற்றில், அக்பரின் கோண்டுவானா முற்றுகையும் ஆங்கிலேயரின் பாண்டிச்சேரி முற்றுகையும் சிறப்பானவையாகும். கி.பி. 1761-இல் பாண்டிச்சேரியை ஆங்கிலேயர் முற்றுகையிட்ட போது மக்கள் உணவின்றியும், பணமின்றியும் தவித்தனர். பட்டினியால் பலர் இறக்கலாயினர். புசிப்பதற்கு ஏதும் இன்மையால் நாயின் விலைகூட உயர்ந்து இருபத்துநான்கு ரூபாய்க்கு விற்பனை ஆயிற்று. இறுதியில் பாண்டிச்சேரி ஆங்கிலேயரிடம் வீழ்ச்சியடைந்தது. பாண்டிச்சேரியின் செல்வச் செழிப்பும் அழகும் அழிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து செஞ்சி முற்றுகையும் மாகி முற்றுகையும் இந்திய வரலாற்றில் கூறப்படுகின்றன.

அண்மைக் காலத்துப் போர்கள் உலக நாடுகள் பலவும் பங்குபெற்று உலகப் போர்களாக நிகழ்நதுள்ளமையால், சிறியநாடுகளின் மேல் செய்யப்படும் முற்றுகையில் நாட்டமிழந்து, பெரிய நிலப்பரப்பைக் கைப்பற்ற நினைத்தனர். மேலும், விமானப்படை பெரும் பணிபுரிந்து வருவதால் கோட்டைகளை வெகு விரைவில் அழிக்க வாய்ப்புள்ளதாலும் கோட்டைகளைக் கட்டாமல் தற்காப்புக்கான புதிய வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றனர். இதன் காரணமாகவே அரணிடுதலும் முற்றுகையும் இக்காலப் போர் முறைக்கு ஒவ்வாதனவாயின. இக்காலத்தில் வீடுகளுக்கும் கோயில்களுக்குமே வலிமைமிக்க அரண்கள் அமைத்துள்ளனர். ஏ.சு.

**அரதத்தாச்சாரியார்,** சோழநாட்டில் கஞ்சனூரில் வைணவ குலத்தில் வாசுதேவாச்சாரியாரின் புதல்வராகத் தோன்றினார். இவருடைய இயற்பெயர் சுதர்சனர். சிறுவயதிலிருந்தே பரமசிவனிடம் பக்திபூண்டொழுகி வந்தார். ஆகவே இவர் தந்தை இவரைப் புறக்கணித்தார். சுதர்சனர் அவ்வூரிலுள்ள அக்னீசுவரப் பெருமானை வழிபட்டு வந்தார். ஈசுவரர் தட்சிணாமூர்த்தித் திருக்கோலத்தில் எழுந்தருளி, அவருக்குச் சிவதீட்சை செய்து அரதத்தர் என்ற பெயரையும் சூட்டினார். ஒரு நாள் தம் தந்தையும் பிற வைணவர்களும் சூழ்ந்திருக்க, அவ்வூர் வரதராசர் சந்நிதியில் அக்கினிக் குழியின் நடுவில் பழுக்கக் காய்ந்த ஓர் இரும்பு முக்காலியின் மீதமர்ந்து, வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள் ஆகியவற்றிலிருந்து மேற்கோள்களைக் காட்டிச் சிவபெருமானே மேலான தெய்வம் என்பதை நிலைநாட்டினார். அப்போது ஆக்கப்பட்ட நூல் 151 பாக்கள் கொண்ட சுருதி சூக்தி மாலை என்பதாகும்.


'பஞ்சரத்தின சுலோகம்' என்ற மற்றொரு நூலில், 'நாராயணன் ஆயிரம் மலர்களால் சிவனைப் பூசித்தது, ஆலகாலவிடத்தை உண்டு திருமால், பிரமன் முதலானோரைக் காத்தது' முதலான இருபத்து

நான்கு காரணங்களைச் சொல்லிச் சிவனே முதற் பொருள் என நிலைநாட்டியுள்ளார்.

இவருக்குக் கமலவல்லி என்ற மனைவியும் எட்டுப் புதல்வர்களும் இரு பெண்களும் இருந்தனர். இவர் தொண்ணூற்றாறு வயதிற்குமேல் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார். பி.தி.

**அரதைப் பெரும்பாழி**, சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்திலுள்ள அவளிவணல்லூர் என்னும் மற்றொரு தேவாரப் பாடல்பெற்ற தலத்திற்கு அருகில் ஒருகல் தொலைவிலுள்ளது. தஞ்சை-நாகைச் சாலையிலுள்ள சாலியமங்கலத்திலிருந்தும் நீடாமங்கலத்திலிருந்தும் தஞ்சையிலிருந்தும் பேருந்துவழிச் சென்று இத்தலத்தினை அடையலாம். இக்காலத்தில் இவ்வூர் அரித்துவார மங்கலம் என்று வழங்கப்படுகிறது. இத்தலத்தினைத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். இறைவன் பெயர் பாதாளேசுரர்; இறைவி பெயர் அலங்கார நாயகி. இங்குப் பிரமதீர்த்தம் உள்ளது. இத்தலத்திற்குரிய மரம் வன்னி. ரா.கி.

**அரப்பா** ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு பெரும் நாகரிகத்தினைக் கண்ட நகரம். இது, பாகிசுத்தானின் மேற்குப் பஞ்சாபு மாநிலத்தில் மாண்ட்கொமரி மாவட்டத்தில், சட்லெசு ஆற்றங்கரையில் இன்று சிற்றூராகக் காட்சியளிக்கிறது. இவ்வூர் தில்லியிலிருந்து வடமேற்காக 480 கி.மீ. தூரத்தில் இலாகூர் மூல்டான் இருப்புப் பாதையில் அரப்பா சாலை என்னும் இருப்புப்பாதை நிலையத்திற்கருகில் உள்ளது.



அரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட உடைந்த ஆண் சிலை

அரப்பா நகரின் சுற்றளவு 4 கிலோமீட்டர்களாகும். இங்கு 6 மண்மேடுகள் இருக்கின்றன. அவற்றுள் பெரியது 323 மீட்டர் நீளமும், 260 மீட்டர் அகலமும் உடையது. இங்குள்ள மேடுகளின் உயரம் 8 மீட்டர் முதல் 20 மீட்டர் வரை உள்ளது. இம்மண்மேடுகளில் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையின் முதல் இயக்குநராக இருந்த அலெக்சாந்தர் கன்னிங்காம் என்பார் கி.பி. 1853, 1856, 1872 ஆகிய ஆண்டுகளில் மும்முறை ஆய்வுகளை மேற்கொண்டார். அக்கள ஆய்வில் அவர் சில முத்திரைகளையும் மட்பாண்ட ஓடுகளையும் பழம் பொருள்களையும் கண்டறிந்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் கராச்சி-இலாகூர் இருப்புப் பாதை அமைக்கும் பணி தொடங்கியது. அக்காலத்தில், அதற்குத் தேவையான செங்கற்களை இந்நகரின் மேடுகளில் புதைந்திருந்த கட்டிடப் பகுதிகளிலிருந்து எடுத்துப் பயன்படுத்தினர். இதனால் அரப்பாவின் தொன்மையான கட்டிடங்கள் சிதைவுற்றன.

தயாராம் சகானி என்பார் 1922-ஆம் ஆண்டு அரப்பாவில் அகழாய்வை மேற்கொண்டார். அதன் பின்னர்த் தொடர்ந்து பல அகழாய்வுகள் இங்கு மேற்கொள்ளப்பட்டன. 1946-ஆம் ஆண்டு மார்ட்டிமர் வீலர் என்னும் தொல்லியல் அறிஞர், மீண்டும் ஓர் அகழாய்வினை இங்கு மேற்கொண்டார். இவ்வகழாய்வுகளின் மூலம் அரப்பாவின் தொன்மை புலப்பட்டது. இந்நகரம் மொகஞ்சோதாரோவைவிடப் பரப்பளவில் பெரியது. இருப்புப் பாதை அமைக்க இந்நகரின் பழைய கட்டிடங்களைச் சீர்குலைத்ததால் இந்நகரின் முழுமையான கட்டிட அமைப்பை அறிய முடியாமல் போயிற்று. எனினும் இந் நகரத்தின் அமைப்பு மொகஞ்சோதாரோவின் அமைப்பினை ஒத்துள்ளது என்பதும், அங்கு வாழ்ந்த மக்களும் மொகஞ்சோதாரோவின் மக்களும் ஒரே நாகரிகத்தினைச் சேர்ந்தவர்கள் என்பதும் தெளிவாயின.

அரப்பா அகழாய்விலிருந்து அம்மக்கள் சுட்ட செங்கற்களால் காற்றோட்ட வசதிமிக்க சிறந்த வீடுகளைக் கட்டி வாழ்ந்தமை தெரிகிறது. வீடுகள் பல அறைகளைக் கொண்டும் மேல்மாடிகளைக் கொண்டும், குளியலறைகள், குப்பைத் தொட்டிகள், சாய்க்கடைகள் முதலியன கொண்டு அமைக்கப்பட்டும் விளங்கின. கழிவுநீர் கிழக்கு நோக்கிப் போகுமாறும், சாலைகளின் ஓரங்களில் செல்லுமாறும் சாய்க்கடைகள் அமைக்கப்பட்டன. வீடுகளில் பெரும்பாலானவை

இரண்டு அடுக்குகள் கொண்ட மாடி வீடுகள். வீட்டின் கூரைகள் சமதளமாக (தட்டையாக) அமைக்கப் பட்டுள்ளன. நகரின் மேற்கே கோட்டை ஒன்று இருந்தமைக்கான சிதைந்த சின்னங்கள், அகழாய்வின் மூலம் தெரிந்தன. கோட்டைப் பகுதியில் மக்கள் மிகுதியாக வாழ்ந்தமைக்கான அறிகுறிகள் உள்ளன. இச்சிதைவுகளின் மூலம் இந்நகரம் திட்டமிடப்பட்டுக் கட்டப் பெற்ற நகரமாயிருந்திருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.



அரப்பாவில் கிடைத்த நடன மாதின் சிலை

இங்குக் கண்டுபிடிக்கப்பட்டவற்றுள் உணவுக் களஞ்சியம் குறிப்பிடத்தக்கது. அதன் நீளம் 36 மீட்டர்; அகலம் 45 மீட்டர். களஞ்சியத்தின் சுவர்கள் 17 மீட்டர் உயரம் கொண்டவை. சுவர்களை ஒட்டினாற்போல் 8 மீட்டர் இடைவெளிவிட்டு மற்றொரு நீண்ட சுவர் காணப்படுகிறது. இந்த இரு வரிசைகளுக்கும் இடைப்பட்ட பகுதி, கூறையால் மூடப்பட்டிருக்க வேண்டும். இச் சுவர்களுக்கிடையில் அமைக்கப்பட்டுள்ள ஆறு மண்டபங்கள் ஒவ்வொன்றும், மூன்று பெருஞ்சுவர்கள் கொண்டு நான்கு அறைகளாகத் தடுக்கப்பட்டுள்ளது. இப்பெரும் அறைகள் யாவும் பல்வேறு கூலக் கிடங்குகளாக இருந்திருக்கக் கூடுமென அறிஞர்கள் கருதுகின்றனர். இங்குக் கண்டு பிடிக்கப்பட்ட முத்திரைகள் பெரும்பாலும் மாவுக் கல்லால் செய்யப்பட்டவையாகும். இவைகளில் விலங்கினங்களின் உருவங்களும் சித்திர எழுத்துகளும் உள்ளன. எல்லா முத்திரைகளிலும் காணப்படும் இவ்வெழுத்துகள் ஒரே தன்மையனவாக உள்ளன. மேலும், வளையல்கள், மணி வகைகள், பதுமைகள், காளை மாட்டு உருவங்கள், மட்பாண்ட வகைகள் ஆகியவையும் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரப்பா நாகரிகம் ஏறக்குறைய கி.மு. 3500–கி.மு. 2750 ஆண்டுகளில் உச்ச நிலையை எட்டியிருக்க வேண்டும். இக்கட்டிடச் சிதைவுகளைக் காண மக்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். அரப்பாவில் கண்டுபிடிக் கப்பட்ட பொருள்களும் அங்கு உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. சிந்துவெளி நாகரிகத்தின் பழைய நகரங்களில் ''அரப்பாவே'' முதலில் கண்டு பிடிக்கப்பட்ட நகரமாதலால் தொல்லியலார் பின்பற்றும் கோட்பாட்டின் அடியொற்றி இந்நாகரிகத்தை அரப்பா நாகரிகம் என்று குறிப்பிட்டனர். காண்க: சிந்துவெளி நாகரிகம்; மொகஞ்சோதாரோ நாகரிகம்.

துணை நூல்கள்:

**Vats, M.S.,** "Excavations at Harappa", 2 Vols., Delhi, 1940.

**Wheeler, R E.M.,** "The Indus Civilization (3rd Edition)", Cambridge, 1968.

**அரபத்த நாவலர்**: கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர் தஞ்சை மாவட்ட அறந்தாங்கிக் கோட்டத்தில் உள்ள திருப்பெருந்துறை என்னும் ஊரைச் சேர்ந்தவர். வேளாளர் குலத்தைச் சார்ந்த இவர் சைவ சமயத்தினராவார். தமிழில் பரத சாத்திரம் என்னும் இலக்கண நூலை இவர் இயற்றியுள்ளார். பரதம் என்னும் பெயர் பாவம், இராகம், தாளம் என்னும் மூன்று சொற்களினுடைய முதலெழுத்துகளின் கூட்டாக வழங்கும் காரணப் பெயர் என்பது கூறப்படுகிறது. பரதர் இயற்றியது என்பதனால் இப்பெயர் அமைந்தது என்றும் கூறுவர். இந்நூல் நாட்டியத்தின் இயல்பினைக் கூறுகிறது. இது அகத்தியர் இயற்றிய மகாபாரதம் என்னும் நூலின் சுருக்கமாக அமைந்தது; பாயிரம், பாவவியல், இராகவியல், தாளவியல், ஒழிபியல் என ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. நூற்பாவாலமைந்த இந்நூல் நாட்டிய இயல்பினை விளக்க, இயல் இசைத் தமிழின் திறங்களை நன்கு விளக்கிக் கூறுகிறது. 32 இராகங்களுக்கு இந்நூல் இலக்கணம் இயம்புகிறது. அழகர் கலம்பகம் என்னும் நூலும் இவரால் பாடப் பெற்றது எனக் கூறப்படுகிறது.

**அரபாகோ** ஆதிக்குடியினர் வடஅமெரிக்கச் சமவெளிகளின் மிகப் பெரிய நாடோடிக் குழுக்களாவர். இவர்கள் எருமைகளை வேட்டையாடுபவர்களாகவும் திகழ்கின்றனர். இவர்கள் அமெரிக்கத் தோல் வணிகர்களால் 'அரபாகோ' (Arapaho) என்ற பெயரால் அழைக்கப்பட்டனர். பச்சைக் குத்துபவர்கள் என்ற பொருளில் இவர்களுக்கு இப்பெயர் உண்டானது என்றும் கருதுகின்றனர். அரபாகோ ஆதிக்குடியினர் இன்று இரு குழுக்களாக வாழ்ந்து வருகின்றனர்.

பெரும்பான்மையோர் வேட்டையாடும் சிறு குடும்பக் குழுக்களாகவே காணப்படுகின்றனர். இக்குழுவினர் அனைவரும் அல்கான்சியன் மொழியைப் பேசுகின்றனர். வேட்டையாடப்பட்ட எருதுகளின் இறைச்சி உணவாகவும் தோல் உடையாகவும் கூடாரத்தின் உறையாகவும் பயன்படுத்தப்படுகின்றன. எருதுகளின் கொம்புகளும் எலும்புகளும் இவர்களுக்கு வேண்டிய கருவிகள் செய்யப் பயன்படுகின்றன. இவர்களின் பொருளாதாரம் தோட்டப் பயிரிடுதலை அடிப்படையாகக் கொண்டதாகும். காய்கறிகள், சிறு தானியங்கள் முதலானவையே பெரும்பான்மையாக விளைவிக்கப்படுகின்றன. பயன்படுத்தப்படாத தங்களின் விளை நிலங்களை வெள்ளையர் பயிரிட விட்டுவிடுகின்றனர். வெள்ளையரிடமிருந்து கிடைக்கும் பொருள்களையே இவர்கள் பெரிதும் சார்ந்திருக்கின்றனர். அரபாகோ




அரபாகோ பழங்குடித் தலைவன்

வீடுகள்மிக எளிமையானவை. அருகிலுள்ள வெள்ளையரின் பண்பாட்டுத் தாக்கத்தினால் வெள்ளையரின் சமூக அமைப்பினை ஏற்று வருகின்றனர். அரபாகோவினரின் சமயம் உருவமில்லாத் தெய்வ ஆற்றலில் நம்பிக்கை கொண்டிருக்கிறது. ஒரு பட்டையான குழாயும் சக்கரம் ஒன்றும் புனிதமானவையாகக் கருதப்படுகின்றன. மேலும், விழாக் காலங்களில் நான்கு நாட்கள் வரை நடனமும் நாட்டியங்களும் நடைபெறுகின்றன. இந் நடனங்களில் இவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொள்ளுதல், இக்காலத்தில் அங்கு வாழும் நகரம் சார்ந்த இந்தியர் வாழ்க்கை முறையைத் தெளிவாகக் காட்டுகின்றது. அரபாகோவினர் எப்பகுதியில் வாழ்ந்தாலும் இவ்விழா நடக்கும் போது அங்குவந்து கலந்து கொள்வர். அவர்கள் இன ஒற்றுமையை அடையாளம் காட்டுவதற்கு இவ்விழா நடைபெறுகிறது. திருமணம் அரபாகோ குடிகளுக்குள் பொதுவாக நடைபெறும். எனினும் இதற்கு மாறாக ஏற்படும் திருமணத்தினால் பிறக்கும் குழந்தைகள் 'அரபாகோ' சமூகத்தினரிடையே வளர்வதால் இக்குடியைச் சார்ந்த தோற்றத்தையே பெறுகின்றனர்.

**அரபிக் கடல்** இந்தியப் பெருங்கடலின் வடமேற்குப் பகுதிக் கடற் பரப்பாகும். பண்டைக் காலத்திலும் இடைக்காலத்திலும் "பச்சிம் சமுத்திரம்" எனவும் இது அழைக்கப்பட்டது. அராபியா தீபகற்பத்தில் வாழ்ந்த அராபியர்களின் இனப்பெயரையே இக்கடலும் பெற்றதெனலாம். இக்கடல் இந்தியாவுக்கும் அராபியாவுக்கும் இடையில் உள்ள கடலாகும். இக்கடலுக்குக் கிழக்கே இந்தியாவும், மேற்கே சவுதி அரேபியாவும் ஆப்பிரிக்காவும், வடக்கே ஈரான், பாகிசுதான் ஆகியவையும், தெற்கே இந்தியப் பெருங்கடலும் உள்ளன. இந்தியாவுக்கும் அராபியாவுக்கும் இடையிலுள்ள இக்கடலின் மிகவும் அகலமான கடற்பகுதி ஏறத்தாழ 2400 கி.மீ. நீளமாகும். ஓமன் வளைகுடா இதனைப் பாரசீக வளைகுடாவுடனும், ஏடன் வளைகுடா இதனைச் செங்கடலுடனும் இணைக்கின்றன. தெற்கில் இக்கடல் இந்தியப் பெருங்கடலுடன் கலப்பதால், இதன் தெற்கு எல்லையை அறுதியிட்டுக் கூற இயலாது. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் தோன்றி ஓடி வருகிற சிந்து ஆறும், மேற்கு இந்தியாவிலிருந்து ஓடிவருகிற நருமதை, தபதி போன்ற ஆறுகளும் இக்கடலிற் கலக்கிற மிகச் சிறப்பான ஆறுகளாகும்.

ஐரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடைபெற்று வந்த வாணிகம் இக்கடலின் வழியேதான் மிகச் செம்மையாக நடைபெற்றது. ஏடன், கராச்சி, பம்பாய், கொச்சி, கொழும்பு முதலிய துறைமுகங்கள் இக்கடலை நோக்கியுள்ளன. இத்துறைமுகங்களிலிருந்து பட்டு, பஞ்சு, கம்பளி முதலிய ஆடை வகைகளும், சர்க்கரை, பல்வகைத் தானியங்கள் போன்ற உணவுப் பொருள்களும் நறுமணப் பொருள்களும், தரை விரிப்புகளும், வெள்ளிப் பொருள்களும், பெட்ரோலிய வகைகளும் அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து பொருள்களைக் கப்பல் வழியாக இக்கடலின் மேற்குக் கடற்கரைத் துறைமுகங்களுக்குக் கொண்டு சென்று, பின்னர் ஒட்டகங்களின் துணையால் பாலைநிலங்களைக் கடந்து, மேலை நாடுகளுக்கு அனுப்புகின்றனர். இத்துறைமுகங்களைத் தவிர, ஆபன், பெர்பெரா (Berbera), முகல்லா, சலாலா, கார்பூரா, போர்பந்தர், (Porbandar), தியூ (Tiu), தாமன் (Daman), மங்களூர் (Mangalur), திருவனந்தபுரம் (Trivandrum) போன்ற




அரபிக்கடல்

நகரங்களும் இக்கடலை எதிர்நோக்கி அமைந்து இக்கடலுக்கு எழிலூட்டுகின்றன.

இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள கத்தியவார் தீபகற்பத்திற்கு வடக்கே கட்சு (Cutch) வளைகுடாவும், தெற்கே காம்பே (Combay) வளைகுடாவும் உள்ளன. இக்கடலில் முக்கியத் தீவுகளாக இலட்சத் தீவுகளும், (Laccadive Islands) குரிய முரியத் தீவுகளும், சோகாட்டிரத் தீவுகளும் (Soctra Islands) அமைந்துள்ளன. மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் ஒரு நுழை வாயிலாக இக்கடல் அமைந்து, இரு பெரும்பகுதிகளுக்கும் இடையே அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம், கலை, இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறப்புக் கருத்துகளைப் பரப்பி வருகிற மையமாகவும் பயன்பட்டு வருகிறது. பொன்.சு.

**அரபிச் சங்கம்** என்பது மேற்கு ஆசியாவிலும் ஆப்பிரிக்காவிலும் உள்ள நாடுகளையும், பாலத்தீன விடுதலை நிறுவனத்தையும் உள்ளிட்ட 22 உறுப்பினர் அடங்கிய ஒரு சங்கம் ஆகும். அராபிய நாடுகளிடையே அரசியல், பொருளாதாரம், ʼபண்பாடு, சமூக உறவுகளை நெருக்கமாக்க வேண்டுமென்பதே இச்சங்கத்தின் தலையாய குறிக்கோள். அதன் அடிப்படையில் எழுந்த ஒப்பந்தம் இதனை வலியுறுத்திக் கூறுகிறது. உறுப்பு நாடுகளின் பேராளர்களைக் கொண்ட செயற்குழுவும் நிலைநாட்டப் பெற்றுள்ளது. ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒரு வாக்கு என்ற முறை நடைமுறையில் உள்ளது. சிக்கல்களை அமைதியான முறையிலேயே தீர்க்க இக்குழு பாடுபட வேண்டும். சங்க உறுப்பு நாட்டின் மீது எழும் வலுத் தாக்கலைத் தடுக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை ஒருமனப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் இக்குழு முடிவு செய்கிறது. பொதுச் செயலாளர் ஒருவரையும் ஏனைய அலுவலக உறுப்பினர்களையும் கொண்டு சங்கச் செயலகம் பணியாற்றுகிறது.

இருப்பினும் அராபிய நாடுகளிடையே பொல்லாங்கும் பொறாமையும் குறைந்தபாடில்லை. பாலத்தீனத்தில் இருக்கும் யூதர்கள், இசுரேலியர் ஆகியோருக்கு எதிராகவே இச்சங்கம் செயலாற்றுகின்றது.

அரபிச் சங்கம் (Arab League) 1945-இல் உருவாக்கப்பெற்றது. தொடக்கத்தில் ஏழு அராபிய நாடுகள் உறுப்பு நாடுகளாய் இருந்தன. அவை ஈராக்கு சவுதி அரேபியா, இலெபனான் குடியரசு, ஏமன் (சனா), திரான்சு சோர்டான் (இக்காலத்தில் சோர்டான்), எகிப்து, சிரியா என்பன. 1945-க்குப் பின்னர் மேலும் பதினைந்து நாடுகள் சேர்ந்துள்ளன. அவை இலிபியா (1953), சூடான் (1956), மொராக்கோ (1958), துனீசியா (1958), குவைத்து (1961), அல்சீரியா (1962), ஏமன் (ஏடன்) (1968), பகரெய்ன் (1971), ஓமன் (1971), கட்டார் (1971), ஐக்கிய அராபிய எமரேட்டுகள் (1971), மாரிடானியா (1973), சோமாலியா (1974), பாலத்தீன விடுதலை நிறுவனம் (P.L.O.) (1976), சிபோத்தி (1977) என்பனவாகும்.

அரபிச் சங்கம் 1979-இல் எகிப்தைத் தள்ளி வைத்தது. அதன் விளைவாக அச்சங்கத்தின் தலைநகரும் கெய்ரோ (Cairo) (எகிப்து) விலிருந்து துனீசு (Tunis) (துனீசியா) நகருக்கு மாற்றப்பட்டது. இப்போது மீண்டும் எகிப்து அரபிச் சங்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**அரபு இலக்கியம்** உலகின் தொன்மையான இலக்கியங்களுள் ஒன்றாகும். இது அகன்ற இலக்கியப் பரப்பினை உடையது; காலந்தோறும் புதுப்புது இலக்கிய வகைகளைப் பெற்று வளர்ந்து வரும் பெருமை சான்றது. மேலும், உலகெங்கும் வாழும் அரபியர் அரபியரல்லாதார் ஆகியோரால் வளர்க்கப்படுவதாலும், பேணிக் கற்கப்படுவதாலும் இம்மொழி இலக்கியம் உலகளாவிய இலக்கியமாக மிளிரும் சிறப்பினைப் பெற்று விளங்குகிறது.

இதன் தோற்றம் திட்டமாக வரையறுக்கப்படவில்லை. அரபுத் தீபகற்பத்தின் தென் பகுதியாகிய ஏமனிலிருந்து கிடைத்துள்ள கல்வெட்டுகள் சில கி.மு. 8-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகக் கருதப்படுகின்றன. இக் கல்வெட்டுகளின் எண்ணிக்கை மிகுதியும், இவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள அரபு இனக்குழுக்களின் வரலாறும், இவற்றில் காணப்பெறும் அரபுமொழி நடையும் அரபு இலக்கியத்தின் தொன்மையைச் சுட்டிக் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன. எழுத்து வடிவம் பெற்ற பழமையான அரபு இலக்கியங்கள் என்னும் வகையில், கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் வடக்கு அரேபியாவில் எழுதப்பட்ட பழமொழிகளும் கவிதைத் துணுக்குகளும் முதலிடம் பெறுகின்றன. எனினும் 'முதன்முதலில் எழுத்து வடிவம் கொடுக்கப்பெற்றுக் கருத்தும் வடிவமும் சிதையாவாறு பேணிப் பாதுகாக்கப்பட்ட சிறப்பினையுடைய அரபு இலக்கியம்' என்னும் பெருமை இசுலாமியர்களின் திருமறையாகிய குர்ஆனுக்கே உண்டு. இசுலாம் தோன்றுவதற்கு முன்னர்த் தோன்றிய அரபு இலக்கியங்கள், அரபு இலக்கிய வரலாற்றில் 'அறியாமைக் காலம்' (அல் சாகிலியா) சார்ந்தன எனக் குறிக்கப்படுகின்றன. இது கி.பி. 500 முதல் கிசுறத் ஆண்டு தொடங்கும் கி. பி. 622 வரை அமையும் 122 ஆண்டுக் காலப் பகுதியாகும். இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் வாய்மொழி இலக்கியங்களாக உலவி, இசுலாம் தோன்றிய பின்னர் எழுத்து வடிவம் பெற்றன.

தொன்மையான அரபுக் கவிதைகளை வடிவம், பொருள் ஆகிய அடிப்படையில் இரு வகைகளாகப் பகுக்கலாம். 2 அடி முதல் 20 அடி வரை அமையும் குறுங்கவிதைகள் (இரசுசு) முதல் வகையின. இவை இயைபுத் தொடை பெற்ற ஒழுங்கான ஈரடிகள் கொண்டனவாகும். இனப் புகழ்ச்சி, அங்கதம், போர், காதல், கையறுநிலை ஆகியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டவை.

குறுங்கவிதை எழுதுவதில் வல்ல பெண் கவிஞர் பலர் இக்காலத்தில் வாழ்ந்திருந்தனர். இவர்களுள் கன்சா என்பவர் குறிப்பிடத்தக்கவர்.

இரண்டாம் வகையினவாகிய நெடுங்கவிதைகள் (கசீதா) 60 அடி முதல் 100 அடி வரையில் அமைந்தனவாகும். இவற்றின் முற்பகுதி (நாசிப்) பயணம் மேற்கொண்ட கவிஞன், தன்னுடைய காதலியின் அழகையும் பிரிவின் கொடுமையையும் தன்னைத் தொடர்வோருக்குச் சொல்வதாக அமைந்துள்ளது. அடுத்த பகுதி ஒட்டகம், குதிரை போன்றவற்றின் வருணனையாகவும் இயற்கைப் புனைவாகவும் அமைந்துள்ளது. இறுதிப் பகுதி கவிஞனின் பெருமையைப் புலப்படுத்துவதாகவோ பாலைநில வாழ்க்கையை விளக்குவதாகவோ புகழ்ந்து பாடப் பெறும் வள்ளலின் பெருமையைக் குறிப்பிடுவதாகவோ அமைந்துள்ளது.

இக்காலப் பகுதியைச் சேர்ந்த இலக்கியங்கள் கவிதைத் தொகுப்புகள் (திவான்) எனவும், தொகை நூல்கள் எனவும் இருவகையில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. கவிதைத் தொகுப்புகள் ஒரு புலவரின் கவிதைத் தொகுப்புகள் எனவும், ஓரினக்குழுப் புலவர்களின் கவிதைத் தொகுப்புகள் எனவும் இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. நாபிகா, அந்தாரா, தராபா, சுகேர், அல்கமா, அம்ருல் கயசு என்னும் ஆறு கவிஞர்களின் கவிதைத் தொகுப்பு நூல்களும் 'குதலிய்யா இனக்குழுவின் கவிதைத் தொகுப்பு என்னும் நூலும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

தொகைநூல்கள்: கி.பி.8-ஆம் நூற்றாண்டில் அம்மத் அர்ராவியா என்பார் தொகுத்த முஅல்லகத் மிகச் சிறந்த தொகை நூலாகும். மக்காவிற்கு அருகிலுள்ள உக்காசா என்னும் இடத்தில் ஆண்டு தோறும் கூடும் சந்தையின்போது பல்வேறு கவிஞர்கள் தத்தம் புலமையை வெளிப்படுத்திப் பாடுவார்கள். அக்கவிதைகளுள் மிகச் சிறந்தன, மக்காவிலுள்ள இறை இல்லத்தில்(கஃபத்துல்லா)ஓராண்டுக்காலம் பொன்னெழுத்துகளில் பொறிக்கப்பட்டுத் தொங்கவிடப்பெறும். அவ்வாறு தொங்கவிடப்பட்ட கவிதைகள் முஅல்லகத் (தொங்கவிடப்பட்ட கவிதை) என அழைக்கப்பெறும் என்பர். அக்காலத்தில் அரபு மொழியின் வரிவடிவம் செம்மையுறவில்லை. போர்க்குணம் கொண்ட அரபு இனக் குழுக்கள், ஒரு குறிப்பிட்ட இனக் குழுவைச் சேர்ந்த ஒருவரைச் சிறந்த கவிஞராக ஒப்புக்கொண்டிருக்க மாட்டா. சிறந்த கவிஞர் யார் என்பதை முடிவு செய்ய எல்லோரும் ஒப்புக் கொண்ட நடுவர் குழு இருந்திருக்க முடியாது. இவை போல்வனவற்றைக் காரணங்களாகக் காட்டி முஅல்லகத்தின் பெயர்க்காரணத்தை எதிர்ப்பாரும் உளர். அவர்கள் முஅல்லகத் என்பதற்கு மணிமாலை ('இல்க்' – விலை மதிப்பற்றது; மணி) எனப் பொருள்கொள்வர். அம்ருல் கயசு, தராபா, சுகேர், இலாபித், அந்தாரா, அமிர் இப்னு குல்சும், ஆரித் இப்னு இல்லிசா ஆகிய ஏழு கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் உள்ளன. பிற்காலத்தில் நாபிகா, ஆசா, ஆபித் இப்னு,

அப்ராசு என்போரின் கவிதைகளும் இத்தொகுப்பில் இடம்பெறத் தொடங்கின.

அல் அமாசா என்பது அபூ தம்மாம் அபீப் பின் ஆவ்சு (இ.850) என்பார் தொகுத்த தொகை நூல், 'வீரச் செயல்கள்' (அல் அமாசா) என்னும் பொருள் பற்றிய கவிதைகள் அடங்கிய இந்நூலின் உட்பிரிவு (பாபு) ஒன்றால் பெயர் பெற்றுள்ளது. இத்தொகுப்பில் இசுலாமியச் சமயம் தோன்றிய காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளும் கலந்துள்ளன என்பர். இக்கவிதைகளில் பல பண்டைய அரபு இலக்கியத்தின் சிறப்பினை விளக்கும் சான்றுகளாகத் திகழ்வதை இலக்கியத் திறனாய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

முபாதல்லியாத் என்னும் தொகை நூல், அதனைத் தொகுத்த முபாத்தல் அல்தப்பி (இ.786) என்பார் பெயரால் அழைக்கப்படுகிறது. இத்தொகை நூலில் 68 கவிஞர்கள் எழுதிய 128 கவிதைகள் காணப்படுகின்றன.

புகழ்பெற்ற இம்மூன்று கவிதைத் தொகுப்புகளும் நீங்கலாக, புக்தூரி (இ.897) என்பார் தொகுத்த 'அமாசா' என்னும் தொகை நூலும், அபு சய்யது முகம்மது அல் குறைசி (ஏ.1000) என்பார் தொகுத்த 49 நெடுங்கவிதைகள் அடங்கிய 'சம்கரத்து அசா அரி அல் அரப்' என்னும் தொகை நூலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

இக்காலப் பகுதியில் வாழ்ந்திருந்த ஆதி இப்னு சயத் என்னும் கிறித்துவக் கவிஞரும் சாமுவேல் இப்னு அதியா என்னும் யூதக் கவிஞரும் எழுதியுள்ள கவிதைகள் வெளிவந்துள்ளன. அம்ருல் கயசின்கவிதை பண்டைய அரபு இலக்கியத்தின் இயல்பினை விளக்குவதாக அமைந்துள்ளது.

சமகால அரபு இலக்கியம்: இசுலாத்தின் தோற்றத்திற்குப் பின் திருமறையும் (குர்ஆன்), நபிமொழியும் (ஆதீது) அரபு இலக்கியத்தை இயக்கும் சக்திகளாகத் திகழ்கின்றன. திருமறை இறைவனால் அருளப்பட்ட வேத வெளிப்பாடாதலால் இது ஆய்வுக்கு அப்பாற்பட்டதாகக் கருதப்படுகிறது. இந்நூல் முகம்மது நபிக்குக் கி.பி. 610 தொடங்கி 632 வரை அமையும் 22 ஆண்டுக்காலப் பகுதியில் சிறுகச் சிறுக அருளப்பட்டது. அவ்வப்போது சிறிதும் பெரிதுமாக அருளப்பட்ட திருமறையின் பகுதிகள் தக்காரால் மனப்பாடம் செய்யப்பட்டும், தோல், விலங்குகளின் எலும்பு போன்றவற்றில் எழுதப்பட்டும் பாதுகாக்கப்பெற்றன. இயமாமாப்போரில் (633) மனப்பாடம் செய்திருந்தவர்கள் பலர் இறந்து விட்டமையால், இந் நூலிற்கு முழுமையான எழுத்து வடிவம் கொடுத்துத் தொகுத்துப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இசுலாத்தின் மூன்றாவது கலீபாவாகிய உதுமானால் 651-இல் இந்நூல் முறைப்படி தொகுக்கப்பட்டு முழுமையான எழுத்து வடிவம் பெற்றது. பின்னர் அச்சாசு பின் யூசுப் (714) என்பார், திருமறையில் உயிர்க் குறிகளையும் மெய்யெழுத்துகளுக்கான மேல் கீழ்ப் புள்ளிகளையும் ஏற்படுத்தித் திருமறை எத்தகைய மாறுதலும் இல்லாது எல்லா இடங்களிலும் ஒன்று போல் வழங்குமாறு செய்தார்.

திருமறை 114 அத்தியாயங்களை (சூரா) உடையது. இந்நூலில் 6666 வசனங்கள் (ஆயத்) உள்ளன. எனினும் இந்தியாவில், சிறப்பாகத் தமிழ்நாட்டில் வழங்கும் திருமறை, கபா (ஈராக்) அறிஞர்களின் கருத்தினைப் பின்பற்றி 6236 வசனங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.(சில வசனங்களைப்பிரித்து 6666 வசனங்களையும் அடையாளமிட்டுக் காட்டுவர்.) திருமறை மீண்டும் மீண்டும் ஓதப்படும் நூலாகையால் இது திங்களின் 30 நாட்களிலும் ஓதும் வகையில் 30 பாகங்களாகவும் (சூசு), வாரத்தின் 7 நாட்களிலும் ஓதும் வகையில் 7 பிரிவுகளாகவும் (மன்சில்) பகுக்கப்பட்டுள்ளது. திருமறையின் தூய்மையைப் பேணிக் காக்க வேண்டும் என்னும் எண்ணம், அரபு மொழியில், அகராதியியல் முதல் தத்துவவியல் வரை பல்வேறு கலைகள் வளரக் காரணமாயிற்று.

முகம்மது நபி மறைந்து நீண்ட காலத்திற்குப் பின்னர் இசுலாமிய நெறியை வலிமை உடையதாக்குவதற்காக அவருடைய மொழிகளைத் (அதீது) தேடிச் சேர்க்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறு தேடித் திரட்டியவைகளில் உண்மையானவை என ஒப்புக் கொள்ளப்படும் ஆறு நபிமொழித் திரட்டுகளில் புகாரி (870) என்பார் திரட்டிய 'சகீகு புகாரி' (சகீகு- உண்மையானது), முசுலீம் (874) என்பார் திரட்டிய 'சகீகு முசுலீம்' என்பவை குறிக்கத்தக்கன ஆகும். புகாரி என்பார் தாம் திரட்டிய 6,00,000 நபி மொழிகளில் 7,000 நபி மொழிகளை மட்டுமே தம்முடைய நூலில் தொகுத்துத் தந்துள்ளமை, அவரது அயராத உழைப்பையும், உண்மையே நிலைக்க வேண்டும் என்பதில் அவருக்கிருந்த ஆழ்ந்த பற்றுதலையும் விளக்குகிறது. ''இவ்வுலகம் இறை நம்பிக்கை உடையவனது சிறைக்கூடமாகும். மேலுலகம் இறை நம்பிக்கையற்றவனின் சிறைக்கூடமாகும்'' என்பது சகீர் முசுலிமில் காணப்படும் ஒரு நபிமொழி ஆகும்.

திருமறையின் விரிவுரைகளாகவும் விளக்கவுரைகளாகவும் அரபியராலும், அரபியரல்லாதாராலும் அரபு மொழியில் ஆயிரக்கணக்கான நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இவற்றைப் போன்று நபி மொழிகளையும், முகம்மது நபியின் பழக்க வழக்கங்களையும் (சுன்னா), வரலாற்றையும் (சீறா) ஆராயும் நூல்கள் பல அரபி மொழியில் தோன்றியுள்ளன.

இந்நூல்கள் அரபு இலக்கியப் பரப்பை வளப்படுத்தி யுள்ளன.

முகம்மது நபியின் காலத்தில் இசுலாத்தை ஏற்றுக் கொண்ட காப் இப்னு சுபைர் என்னும் கவிஞர் முகம் மது நபியைப் புகழ்ந்து எழுதிய 'பானத் சுஆத்' (சுஆத்–புறப்பட்டாள்) என்னும் அகப்பொருள் சாயல் பொருந்திய கவிதை நூல், அரபு இலக்கியத்தில் பெரும்புகழ் பெற்றதாகும். இந்நூலுக்கு அரபு மொழி யில் நூற்றுக்கணக்கில் விரிவுரைகள் எழுதப்பட்டிருக் கின்றன; இது உலக மொழிகள் பலவற்றில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இக்கவிதை நூலில், கவி ஞர், முகம்மது நபியை 'இந்தியாவில் செய்யப்பட்ட வாள்' எனப் புனைந்துரைத்துள்ளார்.

**இசுலாத்திற்குப்பின் தோன்றிய அரபு இலக்கியங்கள்:** இசுலாமியச் சமயத்தின் குடியாட்சி நெறிப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு கலீபாக்களின் காலத் திற்குப் பின், பரம்பரை உரிமையுடன் உமையாக் கலீ பாக்கள் அரபுநாட்டை ஆண்டனர் (661–750). இவர் கள் காலத்தில் வாழ்ந்திருந்த அக்தால், பராசுதாக், சரீர், துர்ரும்மா ஆகிய கவிஞர்கள் சிறந்த இலக்கி யங்களைப் படைத்தார்கள்.

இக்கால அரபு இலக்கியத்தில் இசைப்பாடல் களும் தெய்வீகக் காதல் கதைகளும் இடம்பெறத் தொடங்கின. முதல் யசீது (680–683), இரண்டாம் வாலிது (743–744) ஆகியோரின் மறுப்புப் பாடல்களும் வேட்டைப் பாடல்களும் குறிப்பிடத்தக்கவை. இக் காலத்தில் வாழ்ந்த உமர் பின் அபிராபியா எழுதிய காதல் கவிதைகள் இலக்கியத் தரம் வாய்ந்தவையாக மதிக்கப்படுகின்றன. சமீல் என்பாரின் புகழ்பெற்ற 'மசுனூன் பனி ஆமிர் வ லைலா' இக்காலத்தில் தோன்றிய இலக்கியமாகும்.

பிற்காலத்தில் ஓங்கி வளர்ந்த சூபித் தத்துவமும் சூபி இலக்கியமும் இக்காலத்தில் தோற்றுவாய் பெற் றன. அசன் அல் பசரா, இராபியா அல் அதாவிய்யா ஆகியோர் அரபு இலக்கியத்தில் இடம்பெறும் குறிக் கத்தக்க தொடக்கக் கால சூபி ஞானிகளாவர். இக் காலத்தில் தோன்றிய உரைநடை நூல்களில் வகாப் பின் முனைப்பியின் 'அவாஇல்' (தோற்றங்கள்), அசத் பின் மூசாவின் 'கிதாபுல் அல் சூக்த், (மெய்ஞ்ஞான நூல்) போல்வன குறிப்பிடத்தக்கவை.

அப்பாசியக் கலீபாக்களின் காலத்தில் (750—1250) இசுலாம் உலகின் பல்வேறு பகுதிகளிலும் விரைந்து பரவியது. எனவே, அரபு மொழி உலகில் பல்வேறு மொழிகளோடு தொடர்பு கொண்டது; கிரேக்க, உரோம, பாரசீக, இந்திய நாட்டு இலக்கியங்களின் செல்வாக்கு அரபு இலக்கியத்தில் படியத் தொடங் கியது.

முதி பின் இயாசின் காதல் கவிதைகள் இக் காலத்தில் எழுதப்பட்டன. 'ஆயிரத்தொரு இரவுகள்' வாயிலாகப் புகழுடன் வாழும் அபூநுவாசின் (810) கவிதைத் தொகுப்பில் அங்கதங்கள், கையறு நிலை கள் நிரம்பக் காணப்படுகின்றன. இவ்வுலகில் இரண்டு வாழ்க்கை இருப்பதாக அபு அல் அதாகியா கூறு கிறார்.

இக்காலத்தில் வாழ்ந்த தா அலிபியின் இரங்கற் பாக்கள் குறிக்கத் தக்கவை. பழங்கால அரபு போர்ப் பாடல்களுக்குப் புதிய சுவை சேர்த்துப் பாடிய முத் தனப்பியின் (915–965) கவிதைத் தொகுப்பு மிகச் சிறந்த உலக இலக்கியங்களுக்கு இணையாகக் கருதப் படுகிறது. அரபு மொழியை இனிமை தோயப் பயன் படுத்தி இனிக்க இனிக்கப் பாடியுள்ள முத்தனப்பியை அரபுக் கவிஞர்களின் தலைவர் என இலக்கியத் திற னாய்வாளர் போற்றிப் பாராட்டுவர். 'சக்து அல் சந்த்' (தீப்பொறி), இலுமிய்யாத்' போன்ற கவிதைத் தொகுப்புகள் எழுதிய அபு அல் அலா அல் மாவுரி (973–1057) இக்காலத்தில் வாழ்ந்தவர் ஆவார். மணம் புரிந்து கொள்ளாது வாழ்ந்த இவர், தம்முடைய கல்லறையில், 'இந்தத் தவறு எனக்கு என் தந்தை செய்தது; நான் யாருக்கும் செய்யவில்லை' என எழு தும்படி செய்தார் என்பர்.

இப்னுல் இதாசு (861–908) எழுதிய சிறந்த அணி இலக்கண நூலாகிய 'கிதாபுல் பாதி', துக்ராகு (1120) எழுதிய 'இலாமியத்துல் அசம்' (லகரத்தில் முடியும் அடிகளை உடையது) ஆகியன இக்காலத்தில் எழுதப் பட்ட சிறந்த நூல்கள். இமாம் பூசுரி (1296) எழுதிய 'கசீதத்துல் புர்தா' (போர்வைக் கவிதை) இக்காலத் தில் எழுதப்பட்ட மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று. இந்நூலுக்குத் தமிழில் மட்டும் இதுவரை செய்யு ளிலும் உரைநடையிலும் ஐந்து வெவ்வேறு மொழி பெயர்ப்புகள் வெளி வந்துள்ளன.

பதீஉல் அல் சமான் அல் அமதானியின் (1007) 'மகாமத்' (பேரவை), அதைத் தொடர்ந்து எழுதப் பட்ட ஆரீரியின் (1054–1122) 'மகாமத்' என்பன இக் காலத்தைச் சேர்ந்த இலக்கியங்களாகும். இவை சந்த இனிமையுடைய உரைநடையில் (சாசு) புதினம் போன்ற அமைப்பினை உடையனவாக எழுதப் பெற் றுள்ளன.

அபு தாலிப் அல் மக்கி (996) எழுதிய 'குதூஉல் குலூப்' (இதயத்தின் உணவு), அபு அப்துல் இரகுமான் அல் சுலாமி (1021) எழுதிய 'தபாகத்துல் சூபிய்யா' (சூபிகளின் பிரிவுகள்), முகியித்தீன் அப்துல் காதர் செய்லானி (1077–1166) எழுதிய 'புதூ குல் கைப்' (இரகசியங்களின் திறவுகோல்), இயாபுல் அல்தீன் அபு அப்சு உமர் அல் சுகுராவர்த்தி (1234) எழுதிய

'அவாரிபுல் மஅரிப்' (அறிவுக் கொடைகள்) போல்வன இக்காலத்தில் எழுதப்பட்ட சிறந்த சூபி இலக்கியங்களாகும்.

'இச்சத்துல் இசுலாம்' (இசுலாத்தின் சான்று) எனப் புகழ்ந்து போற்றப்பெறும் அபு ஆமித் அல் கச்சாலி (1058–1111) யின் மிகச்சிறந்த நூலாகிய 'இகுயா உலாமுத்தீன்' (சமய அறிவுகளின் மறுமலர்ச்சி) இக்காலத்தைச் சேர்ந்ததாகும்.

இக் காலத்தில் சிறந்த நீதிநூல்கள் பல எழுதப்பட்டன. இப்னு அல் முகாபா (760) எழுதிய 'கலிலா வ திம்னா' (அரசர்களின் கண்ணாடி), பாரசீக மொழி வழியாக வந்த வடமொழி நூல் ஒன்றின் மொழிபெயர்ப்பு எனக் கருதப்படுகிறது. சாகிசு (இ. 869) என்பார் எழுதிய 'உயூனுல் அக்பார்' (வரலாறுகளின் தேர்வு), இப்னு குதைபா (இ. 889) எழுதிய 'கிதாபுல் மஅரிப்' (பொது அறிவு நூல்), 'கிதாபுல் அல் சிஅர் வஅல் சூ அரா' (கவிதைகளையும் கவிஞர்களையும் பற்றிய நூல்) என்பன சிறந்த உரைநடை நூல்களாகும். இப்னு அப்தர் இரப்பிகி (இ. 940) எழுதிய 'அல் இக்த் அல் பரித்' (இணையற்ற மணிமாலை) பல்வேறு மணிகளின் பெயர்தாங்கிய 25 தொகுப்புகளை உடையது.

இப்னு இசாக் (768) எழுதிய 'சீறத்து இரசூலில்லாக்' (இறைதூதரின் வரலாறு), அகமத் பின் இயகுயா அல் பலாதூரி (892) எழுதிய 'கிதாபுல் அன்சாபி அல் அசுராப்' (பெருமக்களின் பரம்பரை பற்றிய நூல்) என்பன, இக்காலத்தில் எழுதப்பட்ட சிறந்த வரலாற்று நூல்களாகும். தபாரி (838–923) யின் 'தாரிக்குல் அல் இருசூல் வ அல் முலூக்' (தூதர்கள், அரசர்களைப் பற்றிய வரலாறுகள்) அவருக்குச் சிறந்த வரலாற்று நூலாசிரியர் என்னும் புகழினைப் பெற்றுத் தந்துள்ளமை போன்று, அவருடைய 'தப்சீர் (திருமறை விளக்கவுரை) அவருக்குச் சிறந்த சமயவியல் அறிஞர் என்னும் புகழினைப் பெற்றுத் தந்துள்ளது. மசூதி, பிரூனி, அபுல் பரச், இப்னு கல்துன் ஆகியோரின் வரலாற்று நூல்கள் சிறந்தனவாக மதிக்கப்படுகின்றன. பிரூனியின், 'தாரிக்குல் இந்து' (இந்திய வரலாறு) மிகச் சிறந்த நூலாகும். இப்னு அல் ஆதிர் (1234) எழுதிய 'கிதாபுல் காமில் பி அல் தாரிக்' (முழுமையான வரலாற்று நூல்) உலகத்தின் தோற்றம் தொடங்கி கிசுறத் 628 (1230–1231) வரையுள்ள உலக வரலாற்றைக் கூறும் நூலாகும்.

ஐரோப்பாவில் இசுபெயின் போன்ற பகுதிகள் அரபுகளால் வெற்றி கொள்ளப்பட்டபோது அரபு இலக்கியம் அந்தப் பகுதிகளில் விரைந்து வளர்ந்தது. இசுபானிய அரபு இலக்கியத்தை வளர்த்தவர்களுள் இப்னு அனி (இ. 973), இப்னு ராசிக் கய்ரவான் (இ. 1070), இப்னு செய்த்தூன் (இ. 1071), முதாமித் (இ. 1095), இப்னு அம்மார் (இ. 1078) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இப்னு அசம் (1064) எழுதிய 'கிதாபுல் மிலால் வ அல் நிகால்' (சமயங்களையும் உட்பிரிவுகளையும் பற்றிய நூல்) சமய வரலாற்றில் மிகவும் புகழ்பெற்றது. இப்னு கல்துனின் (1332–1406) 'கிதாபுல் இபார்' (எடுத்துக் காட்டுகளின் நூல்)சிறந்த வரலாற்று நூலாக இன்றும் மதிக்கப்படுகிறது.

கலீபா மாமூனின் (813–833) காலத்தில் 'பைத்துல் இக்மா' (அறிவுப் பேரவை) என்னும் கழகம் அமைக்கப்பட்டுக் கிரேக்க, உரோம, பாரசீக, இந்திய நூல்கள் பல அரபு மொழியில் பெயர்க்கப்பட்டன. இப்னு சீனா (980) அபு பக்கர் அல் ராசி (923) ஆகியோர் மிகச் சிறந்த அறிவியல் நூல்கள் எழுதியுள்ள அறிவியல் அறிஞர்களாவர்.

மங்கோலியப் படையெடுப்பிற்குப்பின் இக்காலம் வரை: மங்கோலியரின் படையெடுப்பால் அப்பாசியக் கலீபாக்களின் தலைநகராகிய பகுதாது வலிமை இழந்தது. இக்காலத்தில் முவாச்சாகுசசல் போன்ற நாட்டுப்பாடல் வடிவங்கள் வளரத் தொடங்கின. இப்னு கல்லிகளின் (1211–1282) 'வபாத்து அல் அயான்' (குறிக்கத்தக்கவர்களின் மரணச் செய்தி) இக்கால நிலையைத் தெளிவாக விளக்கும் வரலாற்று நூலாகும்.

அபுல் பிதா (1302) எழுதிய உலக வரலாறு, இப்னு அரப்ச (1450) எழுதிய 'அசபுல் மக்தூர்' (விதியின் வியப்புகள்) போல்வன இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த நூல்கள். சலாலுத்தீன் அல் சுயூதி (1445–1505) எழுதிய 'தரீக்குல் குலாபா' (கலீப்பாக்களின் வரலாறு), இப்னு அசர் (1449) எழுதிய 'இசாபா பி தமயிசு அல் சகாபா' (நாயகத் தோழர்களின் வரலாறு), சமாலுத்தீன் இப்னுமுகரம் (1311) எழுதிய 'இலிசானு அல் அரப்' (அரபு அகராதி) என்பவை அவ்வத் துறைகளில் தலைசிறந்த நூல்களாகும்.

'அல்பு இலைலா வ இலைலா' (ஆயிரத்தொரு இரவுகள்) இக்காலத்தில் முழுமையான வடிவம் பெற்றது. அசுமாஇ என்பாரால் 'சீறத்து அந்தார்' (அந்தாரின் வரலாறு) என்னும் காதல் இலக்கியம் படைக்கப்பட்டது.

மங்கோலியர்களின் படையெடுப்பு அரபு இலக்கிய வளர்ச்சியில் ஒரு தேக்க நிலையை ஏற்படுத்தியமையால் இக்காலம் பொதுவாக அரபு இலக்கிய வரலாற்றில் இருண்ட காலம் என அழைக்கப்படுகிறது. முன்னர்க் கூறிய ஒரு சில இலக்கியப் படைப்புகள் நீங்கலாகக் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க நூல் எதுவும் இக்காலத்தில் தோன்றவில்லை.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அரபு இலக்கியம் மறுமலர்ச்சி அடையத் தொடங்கியது. பரந்து விரிந்த அரபுப் பேரரசின் அழிவில் சிறுசிறு நாடுகள் தோன்றின. எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து மறுமலர்ச்சி அடைந்த அரபு இலக்கியம், எகிப்திய இலக்கியம், சிரியா இலக்கியம் எனத் தனித்தனியாகப் பிரிந்து வளரத் தொடங்கியது.

இக்கால எகிப்தியக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் அல் பாருதீ ஆவார். ஆயின் அகமது சாங்கி (1868-1932) 'கவிஞர்களின் இளவரசர்' எனப் பாராட்டப் பெறுகின்றார். எகிப்தின் நாட்டுப் பாடல் பெருந்திரட்டு ஒன்று 1959-இல் வெளியாயிற்று. இந்நூற்றாண்டின் இலக்கிய வளர்ச்சியில் இதழ்கள் பெரும் பங்காற்றுகின்றன.

சிரியாக் கவிஞர்களில் இரசசு, முவாச்சாகு போன்ற நாட்டுப் பாடல் வடிவங்களைப் பயன்படுத்தி வெற்றி கண்ட கலீல் முத்ரான் குறிக்கத் தக்கவர். 1932-இல் நிறுவப்பட்ட 'அப்பல்லோ' என்னும் இதழ் சிரியா அரபு இலக்கிய வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றியது. சுலைமான் அல் புசுதானியின் 'இலியாத்' மொழிபெயர்ப்பே (1904) இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த இலக்கிய முயற்சியாகும்.

ஈராக்கியக் கவிஞர்களில் அல் சகாவியும், அல் ருசாபியும் சிறப்பிடம் பெறுகின்றனர். முன்னர்க் குறித்த அப்பல்லோவின் இலக்கியத் தாக்குதலால் 'அல் சிஅர் அல் சுர் என்னும் புதுக்கவிதை பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. இது 'அல்சி அர் அல் முர்சல்' என்னும் வசன கவிதையிலிருந்து வேறுபட்டதாகும்.

சூடானியக் கவிஞர் கர்துல்லா, தென் அராபியக் கவிஞர் யக்யா உமர், 'அல் சத்' என்னும் வசன கவிதை நாடகம் படைத்த தூனிசியக் கவிஞர் மகமூது அல் மசு அதி ஆகியோர் இக்காலத்தைச் சேர்ந்த சிறந்த இலக்கியப் படைப்பாளிகள். அமெரிக்காவில் வாழ்ந்த கலீல் சிப்ரான் (1883-1931) தம்முடைய தத்துவக் கருத்துகள் செறிந்த வசன கவிதைகளால் உலகப் புகழ் பெற்றுத் திகழும் பெருங் கவிஞராவர்.

மகமூத் சாவின் அமைச்சராகிய அப்துல் அசீசு ஆசப் கான் இந்திய அரபு இலக்கியத்தின் முன்னோடி ஆவார். அப்துல் அக் தக்லவி, சா வலியுல்லாக், அப்துல் அசீசு, பக்ருல் உலூம் ஆகியோர் இந்திய நாட்டு அரபு இலக்கியப் படைப்பாளிகள். வடமொழியிலுள்ள பண்டை நூல்கள் பலவும் பகவத் கீதையும் அரபுமொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. பஞ்ச தந்திரக் கதைகள், புத்த சாதகக் கதைகள் போல்வனவும் அரபுமொழியில் பெயர்க்கப்பட்டுள்ளன. யூசுப் கோக்கன் என்பார், திருக்குறளை அரபுமொழியில் பெயர்த்துள்ளார்.

**தமிழ்நாட்டு அரபு இலக்கியம்:** சதக்கத்துல்லா அப்பா தமிழ்நாட்டில் தோன்றிய சிறந்த அரபுக் கவிஞராவார். இவர் எழுதியுள்ள 'வித்ரியா'வின் பின்னிணைப்பாகிய 2982 செய்யுள்கள் அடங்கிய நூலும், 'குத்பிய்யா' (முகியித்தீன் அப்துல் காதிர் செய்லானியைப் புகழும் நூல்), 'கசிதா இராயியா பிகஞ்ச சவாரியா' (நாகூர் சாகுல் அமீதின் புகழ்கூறும் நெடுங்கவிதை)என்னும் நூல்களும் குறிக்கத்தக்கவை. முகம்மது நபியைப் புகழ்ந்து கீழக்கரை தைக்கா சாகிபு ஒலியுல்லாவும், காயல் பட்டினம் தைக்கா சாகிபு ஒலியுல்லாவும் எழுதியுள்ள புகழ்ப்பாக்கள் சொற்சிறப்பும் பொருட்சிறப்பும் உடையவை. உமர் ஒலியுல்லாவின்' இலாசி கம்து பக்னீ' என்னும் இசைப் பாடல் அரபு இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறது. குணங்குடி மசுதான் சாகிபு அரபுக் கவிதை நூல் செய்துள்ளார்.

முகம்மது நபியையும் இசுலாமியச் சான்றோர்களையும் புகழும் வகையில் பற்பல 'மௌலித்' (புகழ் மாலைகள்) நூல்கள் தமிழ்நாட்டு அறிஞர்களால் இயற்றப்பட்டுள்ளன. கீழக்கரை சையிது முகம்மது ஆலிம் எழுதிய 'பஞ்சரத்தின மௌலிது' என்னும் நூல் இவ்வகையில் சிறந்ததாகும். முகம்மது நபி, கலீபா அலி, பாத்திமா, அசன், உசேன் ஆகியோரின் பெருமை கூறும் இந்நூல் தமிழ்நாட்டு முசுலிம்களிடையே மிகவும் புகழ்பெற்றதாகும்.

தமிழிலுள்ள நீதி இலக்கியங்களுள் பல தமிழ் நாட்டு அறிஞர்களால் அரபியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. காயல்பட்டினம் சலாகுத்தீன் மொழிபெயர்ப்புத் துறையில் புகழ்பெற்ற கவிஞராவார்.

செ.அ.

**அரபுக் கதைகள்** என்பது பெரும்பாலும் காமச்சுவையும் பிறசுவைகளும் மிகுந்து, கற்பனை நயம் செறிந்த பல கதைகளின் தொகுப்பாகும். இந்த நூல் அல்பு லைலா வலைலா அதாவது ஆயிரத்தொரு இரவுகள் என்றும் வழங்கப்பெறும். மேற்காசியாவிலுள்ள அரபு நாடுகளில் உருவாகிய இக்கதைகள் அலாவுதீன், அலிபாபா, சிந்துபாத் போன்ற கதைகளைப் போலவே, மேல்நாட்டு இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானவைகளாகத் திகழ்ந்தன. இக்கதைகள் உருவாகிய காலமும், இவற்றை உருவாக்கிய ஆசிரியரும் அறியக்கூடவில்லை. இக்கதைகளில் இடம் பெறும் முதன்மையான கதை மாந்தர்களின் பெயர்கள் ஈரானியச் சார்பினவாக இருந்தபோதிலும், கதைகளின் அடிப்படை இந்தியத்தன்மை வாய்ந்ததாக உள்ளது. பெயர்களுள் பெரும்பாலன அரபுப் பெயர்களாக அமைந்துள்ளன. கதை நிகழுமிடங்கள் இந்தியா, இவின், இவிக்கு, எகிப்து, கிரீசு ஆகிய நாடுகளைச் சார்ந்தனவாக உள்ளன. இது, ஆயிரம் கதை

கள் என்றும், ஆயிரத்தொரு இரவிற் சொல்லிய கதைகள் என்றும் கூறப்படும். இத்தொகுப்பில் ஆயிரம் என்ற பெயர் பொதுவாக மிகுதியை உணர்த்தும் எண்ணாகவே அமைந்தது. காலப்போக்கில் அந்த எண் கதைகளின் உண்மையான எண்ணினைக் குறிக்கும் எனக் கருதப்பட்டு, அந்த எண்ணிக்கை அளவு கதைகள் சேர்க்கப்பட்டன. தொடக்கத்தில் வாய்மொழியாக வழங்கப்பட்ட கதைகள், பின்னர்ப் பல காலங்களில் பலரால் எழுத்துவடிவம் தரப்பெற்றுத் தொகுக்கப்பெற்றதொரு கதைத் தொகுப்பே, அரபுக்கதைகள் என்று கருதப்படுகிறது. சக்ரெயார் என்னும் மன்னன் தன் மனைவியின் கூடா ஒழுக்கத்தைக் கண்டு மனத்துயருற்றுச் சினம்மிகக் கொண்டு அவளைக் கொலை செய்தான். எல்லாப் பெண்களும் இவ்வாறே ஒழுக்கமற்ற துரோகிகளாக இருப்பர் எனத் தவறாக அவன் முடிவு செய்தமையால், நிலையான மனைவி ஒருத்தியைக் கொள்ள விரும்பவில்லை. அதனால் நாடோறும் ஒரு பெண்ணை, மணந்து மனைவியாக்கி, அன்றிரவு அவளுடன் கூடியிருந்து, விடிவதற்குள் அவளைக் கொன்று விடுவதனை வழக்கமாகக் கொண்டான். இவனை அறிவுறுத்தித் திருத்தலாம் என்னும் உறுதியுடன், மந்திரியின் மகளான அழகுமிக்க சகர்சாத் என்பவள் மன்னனை மணந்து கொண்டாள். கதை கேட்பதில் ஆர்வமிக்கவன் என்பதனை உணர்ந்து, சுவை மிக்கதும் உணர்ச்சியைத் தூண்டத்தக்கதுமான ஒரு கதையினை இரவில் கூறத்தொடங்கி, விடியற்காலம் வரை கூறி, ஆர்வத்தைக் கவரும் ஒரு கட்டத்தில் கதையினை நிறுத்தினாள். மன்னன் கதை கேட்கும் அவாவில் கொலை செய்வதனை ஒத்தி வைக்கின்றான். மறுநாள் இரவு கதையினைத் தொடர்ந்து கூறி அவ்வாறே நிறுத்தினாள். இவ்வாறாக 1001 இரவுகள் தொடர்ந்து கதைகள் கூறிக் கொலை செய்யப்படுவதினின்றும் விடுபட்டாள். இக்கதைகள் உணர்த்திய நீதிகளால் உண்மை உணர்ந்த மன்னன், கொலை செய்யும் எண்ணம் நீங்கி, அப்பெண்ணையே தன் நிலைத்த மனைவியாகக் கொண்டான். இதுவே அரபுக்கதைகளின் அடிப்படையாகும்.

இக்கதைகள், தம் சுவையால் மேலைநாட்டு மக்கள் உள்ளங்களைக் கவர்ந்தமையால், இவை ஐரோப்பிய மொழிகளில் பெயர்க்கப்பட்டன. அண்டாயின் காலண்டு என்பவரால் இக்கதைத் தொகுப்பு நூல், முதன்முதலில் பிரஞ்சு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது. பத்துத் தொகுதிகளாக அமைந்த இந்த வெளியீடு, நான்கு பகுதிகள் கொண்ட சீரிய மொழிக் கையெழுத்து ஏட்டினின்றும் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டது. இதிலிருந்து அரபு மொழியில் திரும்பவும் இந்நூலை மொழி பெயர்த்தனர். இக்கதைத் தொகுப்பு நூல் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் இந்திய மொழிகளிலும் பெயர்த்து வெளியிடப்பட்டது. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அமரம்பேடு என்னும் ஊரில் வாழ்ந்த அண்ணாச்சாமி முதலியார் கி.பி. 1888-இல் இதனைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். பின்னர் இக்கதைகளைக் காரைக்குடி அ.லெ. நடராசன் நடைச் செப்பம் செய்து பல பகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

*அரபு-சராய்* தில்லியிலிருந்து மதுரா செல்லும் சாலையில் உள்ள ஒரு மொகலாயர் காலச் சின்னமாகும். தில்லியில் உமாயூனுடைய கல்லறைக்குத் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள இது, இரண்டு முற்றங்களையும் பல சிறிய அறைகளையும் கொண்டது. நுழைவு வாயில் அதன் நடுவில் உள்ளது. கிழக்கு வாயிலின் பக்கம் சில அழிந்துபட்ட ஓவியங்கள் இருக்கின்றன. இரண்டாம் முற்றத்தில் மேல்வளைவு கொண்ட பல சிறிய அறைகள் உள்ளன. இவை மண்டி எனப்படும். இவற்றைக் கட்டியவர் பேகா பேகம் அல்லது ஆசி பேகம் (Haji Begum) ஆவர். இவர் மெக்காவிலிருந்து வரவழைக்கப் பெற்ற 300 அரபு சமய குருமார்களுக்காக இவற்றைக் கட்டினார். அரபு சராய் (Arab-Sarai) என்று இப்பழஞ் சின்னத்தைக் கூறுவது தவறான வழக்காகும் என்று பலர் கருதுகின்றனர். இக்கட்டிடம் பாரசீகப் பணியாளர்களுக்காகக் கட்டப்பட்டது என்றும், உமாயூன் கல்லறையைக் கட்டிய கைவினைஞர்களும் வேலைக்காரர்களும் தங்கிய வீடுகளாக இவை இருந்தன என்றும் சொல்லப்படுகிறது.

*அரபு பணவாக்க நிதி:* அரபு நாடுகளின் அயற்செலாவணிச் சீரமைப்பின் ஒற்றுமைக்காக 1960-ஆம் ஆண்டில் 'அரபு பணவாக்க நிதி' (Arab Monetary Fund) ஒன்று உருவாக்கப்படும் திட்டம் கொண்டுவரப்பட்டது. அரசியல் நெருக்கடியும் எண்ணெய் விலைகளின் ஏற்றத்தினால் ஏற்பட்ட பணவீக்கச் சிக்கல்களும் இந்நிதியின் தேவையை 1974-இல் உறுதிப்படுத்தின. மொராக்கா நாட்டின் தலைநகரான இரபாத்தில் நடைபெற்ற மாநாட்டில் பல அடிப்படைக் கருத்துகள் குறித்துக் கலந்தாராயப்பட்டது. பின்னர் அரபுச் சங்க (Arab League) நாடுகளின் வெளி விவகார அமைச்சர் குழு, அதனை ஒப்புக்கொண்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்டது. அவ்வுடன்படிக்கையின் விளைவாக 1977-ஆம் ஆண்டு இறுதியில், அயற்செலாவணிச் சமநிலைக்கான முதல் துணைக்கடன் வழங்கப்பட்டது.

இந்நிதியின் முக்கிய நோக்கங்கள்: (1) உறுப்பு நாடுகளின் அயல்நாட்டுப் பண வழங்கீட்டில் ஏற்படும் சமநிலையில்லாத் தன்மையின் முட்டுக் கட்டைகளைத் தவிர்க்கத் திட்டமிட்டு உதவுதல். (2) அயற் செலாவணி வீதத்தை உறுதிப்படுத்தி, இறுதியில் ஒன்று

பட்ட அரபுச் செலாவணி ஒன்றை உருவாக்க வழி வகுத்தல். (3) பன்னாட்டுப் பொருளாதார வங்கியியல் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஒன்றுபடுத்திச் செயற்படத் தூண்டுதல்.

இந்நிதியின் மேலாண்மைக்குப் பொறுப்பான ஆளுநர் குழு உறுப்பினர்களில், உறுப்பு நாடுகளின் பேராளராக ஓர் ஆளுநரும் ஓர் உதவி ஆளுநரும் அமர்த்தப்படுகின்றனர். இயக்குநர் குழு, நிதியின் பொது இயக்குநரின் தலைமையின் கீழ்த் தேர்ந்தெடுக்கப்பட்ட 8 சிறப்பு வல்லுநர்களுடன் செயற்படுகிறது. ஈராக்கு நாட்டினரான டாக்டர் சவாட் அசீம் (Jawad Hashim) பொது இயக்குநராகவும், இயக்குநர் குழுத் தலைவராகவும் இப்போது பணியாற்றுகிறார்.

ஐக்கிய அரபு நாடுகளின் தலைநகரான அபுதாபியில் இந்நிதியின் தலைமைச் செயலகம் நிறுவப்பட்டுள்ளது. எகிப்து, இசுரேல் நாட்டுடன் 1979-இல் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டதன் விளைவாக உறுப்பினர் தகுதியை இழந்தது.

மற்றைய உறுப்பு நாடுகள்: அல்சீரியா, பெகரின், ஈராக்கு, குவைத்து, இலெபனான், இலிபியா, மாரிடானியா, மொராக்கோ, ஓமான், பாலசுதீன விடுதலைக் கழகம், கட்டார், சவுதி அரேபியா, சோமாலியா, சூடான், துனீசியா, சிரியா, ஐக்கிய அரபுக் குடியரசுகள், ஏமன், அரபுக் குடியரசு, ஏமன் மக்கட் குடியரசு ஆகியன இதன் உறுப்பு நாடுகளாகும்.

ஆளுநர் குழுவின் 1981-ஆம் ஆண்டுக் கூட்ட முடிவின்படி உறுப்பு நாடுகளின் செலுத்தப்பட்ட பங்குத் தொகை (Paid up Contribution) 400 விழுக்காட்டில் இருந்து 500 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில் ஐந்தில் ஒரு பங்கு நிதி, உறுப்பு நாடுகளின் எதிர்பாராத ஏற்றுமதி வருவாய் இழப்புகளை ஈடுசெய்யக் கடனாக வழங்கப்படுகிறது. உறுப்பு நாடுகள் 52 விழுக்காடு பங்குத் தொகை மட்டும் இதுவரை செலுத்தி வந்தன. ஆனால் முழுப் பங்குத் தொகையையும் அவை செலுத்த வேண்டும் என்று நிதி ஆளுநர்கள் இப்போது முடிவு செய்துள்ளார்கள்.

**அரபு மொழி** அரபு நாட்டில் தோன்றி, மேற்கு ஆசியப் பகுதியிலுள்ள பல நாடுகளின் மக்களுக்குத் தாய் மொழியாகவும் பிறவிடங்களிலுள்ள இசுலாமிய மக்களுக்குச் சமய மொழியாவும் விளங்குவதாகும். இது செமிட்டிக் மொழிகளின் தென்பிரிவுக் குழுவைச் சார்ந்த மொழிகளுள் ஒன்று; அக்குழுவிலுள்ள தன்னொடு தொடர்புடைய ஏனைய மொழிகளைப் போலவே, செமிட்டிக் மொழியியல்புகளைக் கொண்டுள்ளது. இம் மொழி, மூன்று மெய் எழுத்துகள் கொண்டு அமையும் அடிச் சொற்கள் (Triconsonantal Roots), உட்பிணைப்பு விகுதிகள் (Inflectional endings), வினைப்பொருள், காலம் ஆகியவற்றில் சுருக்கமுடைமை போல்வனவற்றைக் கொண்டிருந்தாலும், சொற்களை ஒலிக்கு முறை வேறுபாடுகளாலும், முன்னொட்டுப் பின்னொட்டு முதலிய ஒட்டுகளைச் சேர்த்தலாலும், பொருள் வேறுபாடுகளை நுட்பமாக உணர்த்தவல்ல ஆற்றலும் சொல்வளமும் பெற்றுள்ளது.

அரபு மொழியின் கிளை மொழிகள் மூன்று வகைப்படும். முதாலாவது அரபு மொழியின் நேரான கிளை மொழிகள். இவை மற்றக் கிளை மொழிகளை விடத் தொன்மை வாய்ந்தன. இரண்டாம் வகையில் ஈராக்கு, சிரியா, எகிப்து முதலிய பகுதிகளைச் சார்ந்த கிழக்குப் பகுதிக் கிளை மொழிகள் அடங்கும். இலிபியாவுக்கு மேற்குப் பகுதியிலமைந்த மேற்குப் பகுதிக் கிளை மொழிகள் மூன்றாம் வகையைச் சார்ந்தன. மால்டாவில் பேசப்படும் கிளை மொழியும் இவற்றில் அடங்கும். இக்கிளை மொழி இத்தாலிய, சிசிலிய மொழியிலிருந்து சொற்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. இந்த அரபுக் கிளை மொழி மட்டும் இலக்கிய மொழியாக வளர்ந்து இலத்தீன் எழுத்து வடிவத்தை ஏற்றுள்ளது.

எழுத்து வடிவிலான அரபு இலக்கியம், செமிட்டிக் மொழிகளின் இலக்கியங்களில் காலத்தால் பிற்பட்டுத் தோன்றியதாகும். எனினும், பழமைபேணும் பாங்கு, சொற்றொகுதிப் பெருக்கம், தொடரமைப்புத் தனித்தன்மை, வினைவடிவங்களின் விரிவு ஆகியவற்றால் அமையும் சிறப்பில், பிற செமிட்டிக் மொழிகளினும் விஞ்சி நிற்கிறது.

அரபு மொழி, செமிட்டிக் மொழிகளுள் மிக்க வளர்ச்சியடைந்ததும், மிகுதியான மக்களால் பேசப்படுவதுமாகும். இம்மொழியினை வட அரபு மொழி, தென் அரபு மொழி என இருவகைப்படுத்துவர். தென் அரபு மொழி, ஏமன் என்னும் தென் அரபு நாட்டின் பழமையான பேச்சுமொழியாகக் கி.பி. 600-ஆம் ஆண்டு வரை விளங்கியது. அப்பகுதியில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ள சில ஆயிரம் கல்வெட்டுகளால் இன்றும் அம்மொழி இருந்து வருகிறது. அக் கல்வெட்டுகளில் சில கி.மு. 7-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பழமையுடையனவாகும். வட அரபு மொழியில் இசுலாமியப் புனித மறை நூலான குர்ஆன் இயற்றப்பட்டது. இசுலாமிய சமயம், தான் வெற்றி கொண்ட, வேறுமொழிகள் பேசும் பிற நாடுகளில் செய்தது போல, அராபியத் தீபகற்பத்தின் தென் பகுதியிலிருந்த அரபு மொழிக்கு மாற்றாக வட அரபு மொழியினைப் புகுத்தியது. இதனால் இசுலாமிய சமயமொழியாகவும் குர்-ஆன் மொழியாகவும் அமைந்து, வட அரபு மொழி ஒப்பற்று உயர்ந்து விளங்கும் நிலை எய்தியது.

இம்மொழி இலக்கண ஆசிரியர்கள், இச் சொற்களைப் பெயர், வினை, இடை என்னும் மூவகையுள் அடக்குவர். பெயர் உரி, வினை உரி ஆகிய சொற்கள் பெயர்ச் சொற்களில் அடங்கின. பெயராக, வினையாக ஆக்கப்பெற்ற சொற்கள் எல்லாம், மூன்று மெய்ம் மயங்கும் வேர்ச் சொற்களிலிருந்து உருவாயின. அவ்வேர்ச்சொல் படர்க்கை ஆண்பால் ஒருமைச் சொற்களாகும். குறிப்பிட்ட அமைப்பில் வேர்ச் சொற்களைப் பயன்படுத்துவதன்வாயிலாக, அச் சொற்களின் மூலப்பொருளோடு மாறுபடாத பொருள் மாற்றங்களைச் செய்யலாம். முன்னொட்டு, பின்னொட்டு முதலியவற்றைச் சேர்ப்பதனால் ஒவ்வொரு சொல்லினின்றும் ஏறத்தாழ எழுபது சொற்களை உருவாக்கக்கூடும்.

நபேத்திய எழுத்து வடிவிலிருந்து உருவாகிய அரபு மொழி எழுத்தின் வரிவடிவம் அழகுமிக்கது. அது இரண்டு வகையாக அமைந்துள்ளது. ஒன்று, எழுத்துகளை ஒன்றோடொன்று இணைத்து எழுதும் நாசுகி (Naskhi) என்னும் அரபு மொழி வடிவம். இது தகவல் தொடர்பான கடிதம் முதலியன எழுதுதல், நூல் எழுதுதல் போன்றவற்றிற்குப் பயன்பட்டது. மற்றொன்று, அல்குபாவில் உருவாகிய குபிக் (Kufic) என்னும் கோணவடிவில் எழுதப்படும் அழகுமிக்க அரபு மொழி வடிவமாகும். இது முற்காலத்தில் குர்–ஆனின் விலையுயர்ந்த படிகளை உருவாக்குங்கால் பயன்படுத்தப்பட்டது; இசுலாமியக் கட்டிடக்கலை அமைப்பில் அலங்கார எழுத்துகளைப் பொறிப்பதற்குப் பயன்படுகிறது.

28 எழுத்துகளைக் கொண்ட இம்மொழி வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாக எழுதப்படுகிறது. இம்மொழியிலுள்ள எழுத்துகள் அனைத்தும் மெய்யெழுத்துகளே. அவற்றின் மேலும் கீழும் சிறிய குறியீடுகளை அமைத்து உயிரெழுத்து உருவாக்கப்படுகிறது. உயர்தனிச் செம்மைநிலையடைந்த (Classical) அரபு மொழியின் எழுத்து வழக்கிற்கும் பேச்சு வழக்கிற்கும் நிரம்ப வேறுபாடுண்டு.

குர்–ஆன் அரபு மொழியில் தோன்றிய முதல் படைப்பாகும். அம் மொழியில் பின்னர்த் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக இது திகழ்கிறது. அல்லா என்னும் சொல்லைப் போலவே திருமறையாகிய குர்–ஆனும் இசுலாமிய மக்களுக்குப் புனிதம் மிக்கதாக அமைந்துள்ளது. குர்–ஆனின் சந்த இனிமை மிக்க அழகிய உரைநடை, அரபு மொழியில் ஓர் உயர்ந்த தரத்தை அமைத்துள்ளது. பழமை பேணும் அரபு எழுத்தாளர்கள் இன்றும் அதனைப் பின்பற்றி எழுத முற்படுகின்றனர். அரபு மொழி பேசும் மக்களிடையே வழங்கும் கிளை மொழிகள் பலவும் தனித்தனி மொழியாக மாறிவிடாமல் இந்நூல் காத்துவருகிறது.

மொராக்கோ நாட்டில் பேசும் அரபு மொழியினை ஈராக்கு நாட்டினர் முற்றிலுமாகப் பொருளுணர இயலாது. ஆனால் அங்கெல்லாம் குர்–ஆன் அடிப்படையிலான செவ்விய எழுத்து மொழியினைக் கையாளுவதால் எழுத்து மொழியினை இருநாட்டவரும் எளிதாகப் படித்துணர முடியும்.

எல்லா இசுலாமிய நாடுகளிலும், அங்குள்ள மக்களின் தாய்மொழி எதுவாயினும், சமயமொழியாக அரபு மொழி விளங்குகிறது. சமய மொழியாக அமையுங்கால் அது பெரும்பாலும் கல்வியறிவு மிக்கவர்களின் மொழியாகவே உள்ளது.

தொடக்கக் காலத்தில் அராபியத் தீபகற்பத்தின் வடபகுதியில் பேசப் பெற்ற ஓர் எளிய கிளைமொழியாக இருந்த அரபு மொழி, இன்று அராபியத்தீபகற்பம் முழுவதுமேயன்றிச் சோர்டான், இலெபனான், சிரியா, ஈராக்கு, எகிப்து, இலிபியா, துனீசியா அல்சீரியா, மொராக்கோ, சூடானின் சில பகுதிகள், நைசர் நதிப் பகுதிகள், செனகல், மாரிடானா ஆகிய நாடுகளிலும் பிறநாட்டுப் பகுதிகளிலும் 10 கோடிக்கும் மிகுதியான மக்களால் பேசப்படும் மொழியாக உள்ளது. இம் மொழியின் வியக்கத்தக்க வளர்ச்சிக்கு, இசுலாமிய சமயத்தின் வெற்றிகள் அடிப்படையாக அமைந்தன. இப்பொழுது இசுலாமிய நாடுகளில் பரவி வரும் மேலைநாட்டுப் பண்பாடும், அவ்வந்நாடுகளின் தேசிய உணர்வும், அரபு மொழி பரவுவதற்கு ஓரளவு தடையாக உள்ளன என்பது கூறப்படுகிறது. ஒரு இசுலாமியர் அல்லாவை அணுகுவதற்குரிய ஒரே மொழியாக அரபு மொழி உள்ளது என்பது அச்சமய மக்களின் அழுத்தமான எண்ணமாகும்.

**அரவான்** என்பவன் அர்ச்சுனனுக்கும் உலூபி என்னும் நாக கன்னிகைக்கும் பிறந்த மகன்; எதிர் உரோமம் உள்ளவன். துரியோதனன் கூட்டத்தினருக்கும் பாண்டவர்க்கும் ஏற்பட்ட மன மாறுபாட்டால் பாரதப்போர் தொடங்கியபோது அவ்விருசாராரின் வேண்டுகோளை ஏற்று, அப்போரில் முதற் பலியாகத் தன் குருதி கொடுத்து உயிர்ப்பலி ஆகியவன்.

**அரவிந்தர்** கி.பி. 1872–ஆம் ஆண்டு ஆகசுட்டுப் பதினைந்தாம் நாள் கல்கத்தாவில் கிருட்டிணதன கோசிற்கும் சுவர்ணலதா தேவிக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார்.

இங்கிலாந்தில் உயர்தர மருத்துவக்கல்வி பயின்ற கிருட்டிணதன கோசு, தம் மக்களை மேல் நாட்டு முறையிலேயே வளர்க்க விரும்பினார். அரவிந்தருக்கு ஐந்து வயது ஆகும் அவரையும் அவர் தமையன்மார்



அரவிந்தர்

இருவரையும் தார்சிலிங்கில் உள்ள உலோரட்டோ கான்வென்டில் சேர்த்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப்பின் 1879-ஆம் ஆண்டு கிருட்டிணதன கோசு குடும்பத்துடன் இங்கிலாந்திற்குச் சென்று ஏழு வயதான அரவிந்தரையும் அவர் அண்ணன் வினைய பூடணம், மனமோகன் ஆகிய இருவரையும் மான்செசுடரில் தமக்கு நெருக்கமான திராயிட்டுக்குடும்பத்தினரின் பொறுப்பில் விட்டுவிட்டுத் தாயகம் திரும்பினார்.

செயின்ட்டுபால்சு பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட அரவிந்தர் மிக விரைவாகக் கல்வியில் முன்னேறி இலக்கியத்திற்குரிய பல பரிசுகளைப் பெற்றார். அவருடைய சிறந்த அறிவினை அறிந்து ஆசிரியர்கள் அவரை உயர்படிவத்திற்கு மாற்றினார்கள். இளம் வயதிலேயே ஆங்கிலத்தில் அவர் கவிதைகள் எழுதத் தொடங்கினார். பிரெஞ்சு, செருமன், இலத்தீன், கிரேக்கம் முதலிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார். கேம்பிரிட்சு கிங்சு கல்லூரியில் 1890-ஆம் ஆண்டில் சேர்ந்தார். அவருக்கு இலண்டன் செயின்ட்டு பால்சு பள்ளி ஆண்டொன்றுக்கு 80 பவுன் பண்டை இலக்கியச் சிறப்பு உதவித் தொகையாக அளித்து வந்தது.

பரோடா மன்னரான சயாசிராவ் கெய்க்வார் முதலில் அரவிந்தருக்குச்சமசுத்தானத்தின் பல பகுதிகளில் வேலையளித்த பிறகு இறுதியாகப் பரோடாக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக அவரை அமர்த்தினார். இந்த வேலையை மனநிறைவுடன் செய்த அரவிந்தர் மாணவர்களின் உள்ளங்களில் நீங்காத இடம் பெற்றுவிட்டார். இலக்கியப் பற்று மிகுந்த அவர் அப்போது தம் தாய் மொழியை ஆர்வத்துடன் கற்றார். மேலும் பல இந்திய மொழிகளையும் கற்றுக் கொண்டார். வடமொழி இலக்கியத்தில் பேரார்வத்துடன் ஈடுபட்டார். இந்நாட்களில்தாம் அவரது புகழ் பெற்ற இலக்கியப் படைப்புகள் உருவாயின. பர்த்துருகரியின் சதகங்களையும், காளிதாசனின் குமார சம்பவத்தையும் விக்ரமோர்வசீயத்தையும் உதயணன் சரிதத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

பரோடாக் கல்லூரியில் இருந்தவரை மறைமுகமாக அரவிந்தர் நாட்டுப்பணியில் ஈடுபட்டிருந்தார். பின், 1905-ஆம் ஆண்டு ஏற்பட்ட வங்கப் பிரிவினையின்போது எழுநூறு ரூபாய் வருமானம் தந்த ஆங்கிலப் பேராசிரியர் பணியை உதறிவிட்டு அரசியலில் நேரிடையாக ஈடுபட்டார். இந்நாள்களில் அவர் வங்காளம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்தார், மக்களின் உள்ளங்களில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். பின், 1906-ஆம் ஆண்டு கல்கத்தாவில் துவக்கப்பட்ட தேசியக் கல்லூரியில் 150 ரூபாய் வருமானத்தில் ஆசிரியர் பணியை ஏற்றுக் கொண்டார்.

அவர் மீது ஆங்கிலேய அரசினர் 1908-ஆம் ஆண்டு பல பொய்க் குற்றங்களைச் சுமத்தி அலிப்பூர் சிறையில் அடைத்தனர். அலிப்பூர் வழக்கில், 'தேசபந்து' என்று பிற்காலத்தில் புகழ் பெற்ற சி.ஆர். தாசு தான் அரவிந்தரின் வழக்கறிஞராக இருந்து வாதாடினார்.

சிறையிலிருந்து வெளியே வந்தபின் நாட்டு மக்களின் சோர்வுற்றிருந்த உணர்வினை முறுக்கேற்றுவதற்காக ஆங்கிலத்தில் 'கர்மவீர்' என்றும், வங்காளியில் 'தர்ம' என்றும் இரண்டு இதழ்களைத் தொடங்கினார். ஆனால் நீண்ட நாள் இப்பணியினைத் தொடர அவரால் இயலவில்லை. மீண்டும் அவரைக் கைது செய்ய அரசாங்கம் முயன்று வந்தது. இச்சமயத்தில் திடீரென்று அவருக்குச் 'சந்திர நாகூருக்குச் செல்' என்று ஒரு தெய்வக் கட்டளை பிறக்கவே அதைத் தலைமேற்கொண்டு பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்த சந்திர நாகூருக்குச் சென்றார். அங்கே ஏறக்குறைய ஒரு மாதம் தங்கினார். இதற்குள் அவருக்குத் தமது வாழ்வுப் பாதை தெளிவாக விளங்கிவிட்டது. தாம் ஆற்ற வேண்டிய கடமை அரசியற் களத்தில் இல்லை என்பதை உணர்ந்தார். 'அதைச் செய்யப் பல வல்லுநர்கள் இருக்கிறார்கள்; நீ நான் இடும் சிறந்த பணியைச் செய்ய வேண்டியவன்' என்று மிகத் தெளிவாகவே இறைவன் அரவிந்தருக்கு உணர்த்தியிருந்தார். எனவே மறுசிந்தனையின்றி ஆண்டவனிடம் தம்மை

முழுவதுமாக ஒப்படைத்து விட்டார் அவர். சந்திர நாகூரிலிருந்து புறப்பட்டுப் புதுவைக்குச் செல்லும்படி மீண்டும் அவருக்குக் கட்டளை பிறந்தது. அதன்படி அவர் 1910-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 4-ஆம் நாளன்று புதுவைக்கு வந்து சேர்ந்தார்.

புதுவையைத் தமது வாழ்விடமாக்கிக் கொண்டார். ஆன்மீக ஆராய்ச்சியில் தமது முழு நேரத்தையும் செலவிட்டார். அரசியலில் ஈடுபட்டிருந்தபோது அவரைச் சுற்றியிருந்த நண்பர்களில் சிலர் இப்போது அவருடன் புதுவைக்கு வந்தனர். இவர்கள் தங்கியிருப்பதற்கான ஏற்பாட்டை அச்சமயம் புதுவையில் இருந்த மண்டபம் சீனிவாசாச்சாரியார், கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் செய்து கொடுத்தனர்.

ஆழ்ந்த ஆராய்ச்சியின் முடிவாக அரவிந்தர் ஆன்மீக வரலாற்றின் ஒரு புதிய திருப்பத்தைக் கண்டு பிடித்தார். முழுமையான யோகம் (Integral Yoga) என அவர் அதனைக் குறிப்பிட்டார். இந்த யோகத்தைப் பயிலுவதற்கான வழியையும் அவர் மிக விரிவாக விளக்கியுள்ளார்.

'வாழ்வனைத்தும் யோகம்' (All Life is Yoga) என்பது அரவிந்தரின் கொள்கையாகும். அதாவது வாழ்க்கையில் தேவையற்றது என்பது எதுவும் இல்லை; வாழ்வின் ஒவ்வொரு சிறு பகுதியும் சிறந்ததே; ஆன்மீக வாழ்வை மேற்கொண்டவனுக்கு உலகமே ஒரு கல்விக் கூடமாக விளங்குகிறது. தான் எதிர்கொள்ளும் எந்த நிகழ்ச்சியையும் மேற்கொள்ள வேண்டிய எந்தத் தொழிலையும் ஆன்மீகக் கண்ணோட்டத்துடன் அணுகவேண்டும். தன் ஒவ்வொரு செயலையும் உணர்ச்சியையும் எண்ணத்தையும் அகந்தையின் மாசு நீக்கி இறைவனுக்குரிய படையலாக ஒப்படைக்கிறவன் தான் உண்மை யோகி. முழுமையான யோகம் பயிலுபவன் வாழ்வைத் துறக்க வேண்டியதில்லை; வாழ்வைத் தூய்மையாக்குவதே அவனது கடமை.

அரவிந்தர், தம் ஆன்மீக ஆராய்ச்சியில், கண்டறிந்த முடிவு என்ன? அகண்ட அறிவில், நெடுந்தொலைவில், எதிர்காலத்தின் கருவில் பொதிந்து கிடந்த உண்மையை அரவிந்தர் தம் அகக் கண்ணால் கண்டறிந்தார். அதாவது மனிதப் பிறவியை அடுத்து புதியதொரு படைப்புத் தோன்றப் போகிறது. குரங்கிலிருந்து மனிதன் தோன்றியது போல், மனிதனையடுத்து ஒளியுடல் படைத்த தொன்மை மானிடப் படைப்புத் தோன்றப் போகிறது. இப் புதிய படைப்பில் இப்போது காணப்படும் குறைபாடுகள் இருக்க மாட்டா. இறப்பு என்னும் விதி மாறிப்போகும்; பசியும் பிணியும் மூப்பும் அந்தப் புதிய படைப்பில் தலைகாட்டா. ஆனால் அந்தப் புதிய படைப்புத் தோன்றுவது எப்படி? சிக்கல் இதுதான். அதற்குக் கோடானுகோடி ஆண்டுகள் ஆகலாம். அதை விரைவாக்க வழியேதும் இல்லையா? உண்டு என்கிறார் அரவிந்தர். அந்தப் புதிய படைப்பைத் தோற்றுவிக்க வல்ல ஆற்றலை இந்தப் பூமியில் வந்து இறங்குமாறு செய்யலாம். அதற்கு மிகக் கடுமையான ஒரு முனைப்பட்ட யோகப் பயிற்சி வேண்டும். இறைவனொருவனுக்கே தன் விருப்பங்கள், செயல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை ஒப்படைத்து வாழ்வையே ஒரு தவமாக்க வேண்டும் என்கிறார். இதற்கான வழியைத் தேடினார் அரவிந்தர்.

பண்டைய யோக வழிகளின் கருத்துகளையெல்லாம் ஒருங்கிணைத்து வேத வழியை அடிப்படையாகக் கொண்டு புதிய வாழ்வை வரவேற்பதற்கான பாதையை வகுத்தார் அவர். மனிதன் தன் மூன்று அங்கங்களையும், அதாவது அன்னமய சரீரம் (உடல்) பிராணமய சரீரம் (உணர்ச்சிகளை இயக்கும் நுண்ணுடல்) மனோமய சரீரம் (எண்ணங்களின் மையமாக விளங்கும் மனவுடல்) ஆகிய மூன்று அங்கங்களையும் நன்கு கண்காணித்துத் தூய்மைப்படுத்த வேண்டும். இதற்கு வழியாக ஆர்வம் (Aspiration), புறக்கணித்தல் (Rejection), அடைக்கலம் புகுதல் (Surrender) ஆகிய முறைகளைக் கையாள வேண்டும்.

ஆர்வம்: தனது உடல் ஆற்றும் செயல்கள், இதயம் உணரும் உணர்ச்சிகள் மனம் எண்ணும் எண்ணங்கள் யாவுமே இறைவனுக்காக, இறைவனைக் குறித்தே இருக்க வேண்டும் என்கிற ஆர்வம் யோகம் பயில்பவனுக்கு என்றும் குன்றாமல் இருக்க வேண்டும்.

புறக்கணித்தல்: தனது குறிக்கோள் வாழ்வுக்குப் பொருந்தாத செயல்கள், உணர்ச்சிகள், எண்ணங்கள் அனைத்தையும் அவ்வப்போது, உடனுக்குடன் கண்காணித்து நீக்கி விடவேண்டும்

அடைக்கலம் புகுதல்: தனது ஒவ்வொரு செயலையும் உணர்ச்சியையும் யோகம் பயில்வோன் முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்துச் செயலாற்ற வேண்டும்.

இவ்வாறு மனிதன் தன் உடல் முதல் மனம் வரை அனைத்து உறுப்புகளையும் தூய்மைப்படுத்தும் வேள்விக்கு 'முழுமையான யோகம்' எனப் பெயரிட்டார் அரவிந்தர்.

மனித வாழ்வைத் தெய்வவாழ்வாக மாற்றுவதற்காக ஒரு 'தேவசங்கம்' அமைக்கவேண்டும் என்ற கருத்து, பல நாட்களாகவே அவருக்கு இருந்து வந்தது. இந்தக் கருத்திற்கு வடிவம் ஏற்படும் காலமும் வந்தது.

அரவிந்தர் தமது யோக முறையில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தார். மானிட நிலைக்கு அப்பாற்பட்ட உருமாற்றத்திற்காக மிகை மன ஆற்

றல் (Supramental Force) பூமியில் வந்து இறங்க வேண்டும் என்று அவர் கூறினாரல்லவா? அந்த முயற்சியில் அவர் மிகக் கடுமையாக முனைந்தார்.

அவருடைய யோகப் பயிற்சி 1926–ஆம் ஆண்டில் பெருவெற்றி பெற்றது. மனத்திற்கும் அதிமனத்திற்கும் இடைப்பட்ட ஆற்றலான மேல்மன (Over mind) ஆற்றல் அரவிந்தர் மூலமாக வந்து இறங்கியது. அதிமன ஆற்றல் புவியில் வந்து இறங்கிய முதல்நிலை இது. இதற்குப் பிறகு அதிமன ஆற்றலை ஈர்க்கும் முயற்சியாக அரவிந்தர் கடும் தவத்தில் ஈடுபட்டார். இதற்கு முழுமையான தனிமை தேவைப்பட்டது. எனவே, தாம் அன்றாடம் பார்த்தும் பேசியும் வந்த மாணவர்களையெல்லாம் விட்டு விலகித் தனி அறையில் மோனத்தவத்தில் இருக்கலானார். ஆசிரமத்தின் முழுப்பொறுப்பும் அன்னையிடம் ஒப்படைக்கப்பட்டது.

அரவிந்தர் மனங்கடந்த ஆற்றலை ஈர்ப்பதற்காகத் தனித்திருந்து தவம் செய்தார். அந்தத் தவம் தொடர்ந்து இடையறாது நீடித்தது. அந்தத் தவத்தின் தன்மை என்னவென்பதை விளக்குவதற்குச் சொற்கள் பயன்படா. எனினும் அரவிந்தர் தாமே மாணவர்களுக்கு எழுதியுள்ள கடிதங்கள் மூலமாகவும் அவர் இயற்றியுள்ள ‘சாவித்திரி’ என்னும் பெருங்காப்பியத்தின் வாயிலாகவும் அவர் ஆற்றிய பணியின் தன்மையை அறியலாகும். இப் பெருங்காப்பியத்தில் தம் அறிவுப் பயிற்சியில் தாம் உலவிய இடங்களையும் அனுபவித்த உணர்வு நிலைகளையும் மிக நுணுக்கமாக விவரித்துள்ளார்.

இறுதியில் 1950–ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அரவிந்தர் அதிமன ஆற்றலையும் ஒளியையும் தமது உடல் மூலமாக இந்தப் பூமிக்குக் கொண்டுவந்தார் என்று கூறப்படுகிறது.

அரவிந்தரின் நாற்பது ஆண்டு யோகப் பயிற்சியில் அவர் குறித்த இலக்கை அடைந்தார். மக்கட் குலம் பெரிய எதிர்காலத்தை நோக்கி முன்னேறுவதற்கான விதையை அவர் இந்த மண்ணுலகில் ஊன்றி விட்டார்.

இந்த விதை முளைவிட்டுத் தளிர்த்து வேரூன்றி வளருவதற்கான முயற்சியை அன்னை மேற்கொண்டார்; ஆசிரமம் என்னும் வேள்விச் சாலையைப் பல துறைகளிலும் வளரச் செய்தார். அவர் 1943–ஆம் ஆண்டில் துவக்கியிருந்த பள்ளிக் கூடத்தை 1956–ஆம் ஆண்டில் அரவிந்தரின் பெயரில் அனைத்துலகக் கல்வி மையமாக மாற்றினார். இங்கே அனைத்துலக மொழிகளும் அறிவியலும் பிற பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. ஆன்மிக வாழ்விற்கு உறுதியான உடல் வேண்டும் என்பதால் பரந்த விளையாட்டரங்கமும் ஏற்படுத்தினார். இசை, நடனம், ஓவியம் ஆகிய கலைகளும் இங்கே கற்பிக்கப்படுகின்றன. மானிடவாழ்வை முழுமையாக்குவதற்குரிய அனைத்துத் துறைகளும் இங்கே உண்டு. தொடக்கப் பள்ளி முதல் பல்கலைக்கழகக் கல்வித் திட்டம்வரை இங்கே செயற்பட்டு வருகிறது. ஆனால் ஏனைய கல்விக் கூடங்களிலிருந்து மாறுபட்ட நோக்கம் கொண்டதாகையால் இங்கே மனத்திற்கு முழு உரிமை அளிக்கப்பட்டு வருகிறது. தேர்வு இன்மையால் மாணவர்களின் மனம் தேர்வு என்னும் குறுகிய வட்டத்திலிருந்து விலகி வளர்ச்சியுற வாய்ப்பு நிறைய இருக்கிறது. இளம் பருவத்திலிருந்தே மக்களை நல்வழியில் திருப்புவது எளிதாகும் என்ற நோக்கத்தில் அன்னை, ஆசிரமப் பள்ளிக் கூடத்தில் பெரிதும் கவனம் செலுத்தினார்.

ஆசிரமத்தின் வளர்ச்சி புதுவை நகரத்துடன் நின்றுவிடவில்லை. புதுவைக்கு 10 கி.மீ. தொலைவில் புதிய நகரம் ஒன்று உருவாக்கும் திட்டம் 1965–இல் உருவாகியது. இந்த நகரத்திற்கு அரோவில் (Auroville) என்று பெயர் சூட்டினார் அன்னை. இதன்பொருள் ‘வைகறை நகரம்’ என்பதாகும். இந்த நகரம் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக விளங்கும் என்று அன்னை கூறினார். இங்கே மதம், இனம், மொழி என்ற பாகுபாடுகளையெல்லாம் கடந்து மக்கள் யாவரும் ஒருங்கிணைந்து ஆன்மிக வாழ்வு மலர உலகிற்கு வழிகாட்டிகளாக இருக்கவேண்டும் என்பது அன்னையின் கனவு.

அன்னை 1973–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இயற்கை எய்தினார். இருப்பினும் அவரது குறிக்கோளும் அரவிந்தரின் கடுந்தவப்பயனும் ஒரு புதிய உலகத்தை உருவாக்கும் இறுதியான அடித்தளமாக அமைந்து விட்டது.

அரவிந்தர் 1950–ஆம் ஆண்டு திசம்பர் 4–ஆம் நாள் பூதவுடலை நீத்தார். எஸ்.ச.நா.

**அராபிய இசுரேலியப் போர்கள்,** இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னர் மேற்கு ஆசியாவைத் தாக்கிய பெரும்போர்களாகும். இசுரேல் என்பது, பாலசுதீனத்தில் 1948-ஆம் ஆண்டு மே திங்கள் 15-ஆம் நாளில் யூதர்கள் தமக்கென ஏற்படுத்திக்கொண்ட ஒரு தனி நாடாகும். பண்டைக் காலத்தே கி.மு. 1100–ஆம் ஆண்டளவில் யூதர்கள் பாலசுதீனத்தில் ஒரு சுதந்திர நாட்டை ஏற்படுத்தி ஆண்டு வந்தார்கள். அவர்களே இயேசுநாதர் சிலுவையிலறையப்படுவதற்குக் காரணமானவர்கள். எனினும்,கிறித்தவச்சமயத்தின்முக்கியக்கொள்கையை உருவாக்கியவர்கள் அவர்களே. ஆனால் நல்வினையின்மையால் அவர்கள் நாடு எகிப்தியர்கள், பாரசீகர்கள், சிரியர்கள், உரோமானியர்கள் முதலியோரால்

கைப்பற்றப்பட்டது. அவர்கள் அடிமைப்படுத்தப் பட்டதோடு பெரிதும் கொடுமைப்படுத்தவும்பட்ட னர். இறுதியில் வந்த உரோமானியர்கள், தமக்கு அடங்காத யூதர்களைப் பூண்டோடு ஒழிக்க முயன்ற னர். எனவே யூதர்கள் தம் தாய்நாட்டைவிட்டு வெளியேறிப் பல நாடுகளிலும் சென்று அடைக்கலம் புகுந்தனர்.

ஆனால் சென்றவிடமெல்லாம் அவர்கள் அங்கே வாழ்ந்த மக்களை விஞ்சும் அளவுக்குப் பல துறைகளி லும் முன்னேறலாயினர். அதைக்கண்டு பொறாமை யுற்ற அந்தந்த நாட்டு மக்கள் அவர்களைத் துன் புறுத்தவும் நாட்டைவிட்டு வெளியேற்றவும் முனைந்த னர். ஆசுதிரியாவிலும் உருசியாவிலும் குறிப்பாக இட்லர் காலத்துச் செருமனியிலும் யூதர்கள் கணக் கின்றிக் கொல்லப்பட்டதோடு வெளியேற்றவும் பட்டனர். இதைக்கண்ட யூதர்கள் தம் பழைய சொந்த நாட்டுக்கே சென்று தமக்கென ஒரு நாட்டை ஏற்படுத்திக்கொள்ள முன்வந்தனர். இந்தக் குறிக் கோளுக்காகப் பாடுபடச் சியானிசுடு இயக்கம் (Zionist Movement) ஒன்றைத் தியோடர் கெர்செ (Theodor Herze) என்பார், கி.பி 1897-இல் பாரிசு மாநகரில் தோற்றுவித்தார். அவ்வியக்கம் விரைவில் ஐரோப்பா வெங்கும் பரவியது.

முதல் உலகப் போரில் யூதர்கள் நேச நாடுகளுக்கு முழு ஆதரவையும் நல்கியதன் விளைவாக அவர் களின் தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பிரிட்டன் உதவி செய்வதாகக் கூறி, 1917-இல் பால்பர் (Balfour) அறிக்கை ஒன்றை விடுத்தது. அதைப் பயன்படுத்திக் கொண்டு யூதர்களில் பெரும்பாலோர் பாலசுதீனத் தில் குடிபுகுந்தனர். போருக்குப்பின் பாலசுதீனம் ஆங்கிலேயரின் பாதுகாப்பில் ஒப்படைக்கப்பட்டது. பல வட்டமேசை மாநாடுகளைக் (Round Table Conference) கூட்டி யூதர்களுக்குத் தனிநாடு வழங்க அது பல திட்டங்களை வெளியிட்டது. ஆனால் அராபியர்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. இரண்டாம் உலகப்போரில் யூதர்கள் நேச நாடு களுக்குப் பெரிதும் உதவினர். எனவே அவர்களது தனிநாட்டுக் கோரிக்கைக்குப் பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகள் துணை நின்றன. 1947-இல் பிரிட் டன் பாலசுதீனக் கோரிக்கையை ஐ.நா. சபைக்கு எடுத்துச் சென்றது. ஐ.நா.வினால் ஏற்படுத்தப்பட்ட விசாரணைக்குழு பாலத்தீனம் மூன்றாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றும், ஒரு பகுதி யூதருக்கும், இன்னொரு பகுதி அராபியர்க்கும், எருசலேம் நகர்ப்பகுதி மட்டும் ஐ.நா. சபைக்கும் வழங்கப்பட வேண்டுமென்றும் பரிந்துரைத்தது. யூத, அரபு நாடுகள் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பின் எருசலத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு கூட்டமைப்பு நாடாகப் பாலசுதீனம் அமைக்கப்படலாமென்றும் அது மற்றொரு கருத் தைக் கூறியது முன்னதை ஐ. நா. சபை ஏற்றுக் கொண்டது. இந் நிலையில் 1948-ஆம் ஆண்டு மே 14-இல் பிரிட்டன் பாலசுதீனத்திலிருந்து விலகிக் கொள்வ தாக அறிவித்தது. அதே நாளில் யூதர்கள், தன்னுரிமை பெற்றஇசுரேல் நாடு நிலைநாட்டப்பெற்று விட்டதாக அறிவித்தனர். ஐ.நா.வின் பரிந்துரை ஓரளவு செயன் முறைக்கு வந்தது. ஆனால் பாலசுதீன அராபியர் களுக்கு நாடு வழங்கப்படவில்லை. பாலசுதீன அராபி யர்களின் சிக்கல் இன்னும் தீர்ந்தபாடில்லை. அரபு இசுரேலியப்போராட்டம் விட்டுவிட்டு நடைபெற்றுக் கொண்டே வருகிறது.

அரபு நாடுகளுக்கிடையே ஓர் உரிமை பெற்ற யூத நாடு தோற்றுவிக்கப்பட்டதை அராபியர்கள் அடியோடு வெறுக்கலாயினர். 1948-இல், ஐந்து அரபு நாடுகள் சேர்ந்துகொண்டு இசுரேலைத் தாக்கின. யூதர்களைவிட 25 மடங்கு எண்ணிக்கை மிகுதி கொண்ட அராபியர்களின் படை தோற்கடிக்கப்பட் டது. பாலசுதீனத்தின் பெரும்பகுதியை இசுரேல் தன்வசமாக்கியது. யூதர்களும் அராபியர்களும் ஓர் இடைக்கால ஒப்பந்தத்தைத் தமக்குள் ஏற்படுத்திக் கொண்டார்கள். யூதர்கள் வசப்பட்ட பாலசுதீனத்தி லிருந்து மிகுதியான அராபியர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

எகிப்தில் பரூக் மன்னரைத் துரத்திவிட்டு ஆட்சி யைக் கைப்பற்றி ஆண்டு வந்த கர்னல் நாசர் என் பார், 1965-இல் சூயெசுக் கால்வாயை நாட்டுடைமை யாக்கினார். அதனால் பிரிட்டனும் பிரான்சும் பெரி தும் பாதிக்கப்பட்டன. எனவே அவை இசுரேல் நாட் டின் உதவியோடு 1956-இல் எகிப்தைத் தாக்கின. இது ஒரு தகாத செயல் என இந்தியா கண்டித்தது. அமெரிக்கா வாளா இருந்தது. வல்லரசுகள் தம் படை களைப் பின்வாங்காவிட்டால் தான் எகிப்துக்கு உதவி செய்ய நேரும் என உருசியா அறிவித்தது. இதைக் கண்ட பிரிட்டனும் பிரான்சும் போரை நிறுத்திவிட் டன. பிரிட்டனின் தலைமை அமைச்சர் ஈடன் பதவி விலகினார். சூயெசுக் (Suez) கால்வாய் ஓரளவு மூடப் பட்டது. ஐ.நா. அவசரக் காலப்படை ஒன்று கால் வாய்க்கருகில் நிறுத்தி வைக்கப்பட்டது. யுதாண்டு (U Thand) எனும் ஐ.நா. செயலர் இருநாடுகளுக்கும் சமாதானம் செய்துவைக்கப் பெரிதும் முயன்றார். நாசரின் விருப்பத்துக்கிணங்க, ஐ.நா. படைகள் சூயெசுக் கால்வாய்ப் பகுதியிலிருந்து விலக்கிக் கொள்ளப்பட்டன.

1967-ஆம் ஆண்டில் நாசர் திடீரென இசுரேல் மீது பாய்ந்து தாக்கினார். இசுரேல் ஒருகணம் திகைத்துவிட்டது. எனினும் அமெரிக்காவிடமிருந்து பெற்ற புதிய போர்க் கருவிகளைக் கொண்டு இசுரேல்

திருப்பித் தாக்கியது. ஆறு நாளில் எகிப்தியப் படைகள் முறியடிக்கப்பட்டன. செருசலம் நகரம் யூதர்கள் வசமாயிற்று. சினாய்த் தீபகற்பமும் சிரியாவில் ஒரு பகுதியும் யூதர்களிடம் சிக்கின.

இத்தோல்வியால் மனமுடைந்த நாசர் விரைவிலேயே இறந்தார். அவருக்குப் பின்வந்த சதாத்து (Sadat) என்பார், வல்லரசுகளைச் சாராது நிற்க முயன்றார். உருசிய வல்லுநர்களை எல்லாம் நாட்டைவிட்டு ஓட்டினார் (1972). அமெரிக்கர்களையும் அவர் நாடவில்லை; பகைத்துக் கொள்ளவுமில்லை. யூதர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி அமைதியான முறையிலேயே இழந்த சினாய்த் தீபகற்பத்தை மீண்டும்பெற அவர் முயன்றார். ஆனால் கிடைத்த பகுதியை விட்டுவிட இசுரேலுக்கு எண்ணமில்லை. எனவே சதாத்து பொறுமை இழந்தார். 1973–ஆம் ஆண்டு அக்டோபர் 6–இல் இசுரேல்மீது திடீரெனப் படையெடுத்தார். இசுரேலியர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. எனவே அவர்கள் திக்குமுக்காடினர். சூயெசுக் கால்வாயும் சினாய் நாட்டின் ஒரு பகுதியும் எகிப்தியர்கள் வசமாயின. யூதர்கள் யாம் கிப்பூர் (Yam Kippur) என்னும் சடங்கில் ஈடுபட்டிருக்கும்போது தொடங்கப்பட்டதால், இப்போர் யாம் கிப்பூர் போர் எனப்பட்டது. 1973 நவம்பர் 11–இல் இருநாடுகளும் தமக்குள் ஓர் உடன்பாட்டைச் செய்து கொண்டன. அமெரிக்க அறிஞர் என்றி கிசிஞ்சர் (Henry Kissenger) என்பார், இரு நாடுகளிடையே அமைதி நிலவச் செய்யப் பெரும்பாடுபட்டார்.

யூதர்கள் கைப்பற்றிய நாடுகளிலிருந்து இலட்சக் கணக்கில் வெளியேற்றப்பட்ட அராபியர்கள் இருக்க இடமின்றி ஏதுமிலிகளாய் அலைந்தனர். அவர்கள் அல்பட்டா (Al Fatah), பெடயீன் (Fedayeen), கருஞ் செப்டம்பர் (Black September) ஆகிய கலகக்காரக் குழுக்களாகப் பிரிந்தனர். அக்குழுக்களை இணைத்துப் பாலசுதீன விடுதலை அணி (Palestinian Liberation Organisation) என்னும் பெயரில் அராபத்து (Arafat) என்ற தலைவர் ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளார். அதன் வீரர்கள் அடிக்கடி யூதர்கள் மீது கொரில்லாப் போரை நிகழ்த்தி வந்தனர். தெற்கு இலெபனான், சிரியா ஆகிய நாடுகளில் ஏதுமிலிகளாய் அராபத்தின் ஆதரவாளர்கள் வாழ்ந்து வந்தனர். தம் நாட்டின் மீது கொரில்லாப் போர் நிகழ்த்தி வந்த அராபிய ஏதுமிலிகளை ஒழித்துக்கட்டத் தெற்கு இலெபனான் மீது இசுரேலியர் படையெடுத்து, 1982–இல் அதனைக் கவர்ந்து கொண்டனர். கோலான் மலைகளுக்கு அப்பால் அவர்களைத் துரத்திவிட்டனர். அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையே மேலும் மோதல் ஏற்படுவதைத் தடுக்கப் பிரிட்டன், அமெரிக்க ஐக்கிய நாடு முதலிய நான்கு நாட்டுப் படைகள் இலெபனானுக்கு அனுப்பப்பட்டன. இந்நிலையில் இலெபனானில் இருந்த பாலன்சிசுடுகள் (Phalangists) என்னும் கிறித்தவக் கட்சியினர், இசுரேலியர்களுக்கு உடந்தையாக இருந்து, திடீரென்று கலகம் செய்த அராபிய ஏதுமிலிகளைக் கொன்று குவித்தனர். வல்லரசுகளால் ஒன்றும் செய்ய இயலவில்லை. விரைவிலேயே அராபத்துக்கெதிராக ஒரு கட்சி பாலசுதீன விடுதலை அணியில் தோன்றியது. அது கலகம் செய்து அராபத்தையும் அவர் துணைவர்களையும் முறியடித்து இலெபனானை விட்டே வெளியேற்றி விட்டது. அராபத்து நேராக எகிப்து சென்று முபாரக் (Mubarak) என்னும் குடியரசுத் தலைவரிடம் அடைக்கலம் புகுந்தார். அராபத்தின் முயற்சியால் அரபு சங்கத்திலிருந்து (Arab league) வெளியேற்றப்பட்ட எகிப்து, மீண்டும் அதில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இலெபனானின் தலைவர் அமீன் கெமாயல் (Amin Gemayel) என்பாரின் பதவிக்கே கேடு ஏற்பட்டு விட்டது. கிறித்தவர்களல்லாதாரும் முசுலிம்களும் அவருக்கு ஆதரவு தர மறுத்தனர். அவர் படைகளிலேயே அவருக்கு ஆதரவில்லை. அமெரிக்காவும் பிரிட்டனும் தம் படைகளைத் திருப்பி அழைத்துக் கொண்டன. எனவே இசுரேலியர்களுக்கு ஆதரவாக இருந்து வந்த அவர் சிரியாவின் ஆதரவை நாடியுள்ளார். சிரியக் குடியரசுத் தலைவர் ஆசாத்தின் செல்வாக்கு இலெபனானில் பெருகி வருகிறது. இசுரேலின் செல்வாக்கு அங்குக் குறைந்து வருகிறது. இந்நிலையில் பாலசுதீன அராபிய முசுலிம் அகதிகளின் சிக்கல்கள் எவ்வாறு தீர்க்கப்படப் போகின்றன என்பதற்குக் காலந்தான் பதில் சொல்லவேண்டும். கி.ர.அ.

*அராபிய எண்கள்:* இவற்றை அராபிய – இந்து எண்கள் என்றும் கூறுவர். எண்களைச் சுட்டிக் காட்டும் குறுயீடுகள் இவை. 10 குறியீடுகளைச் சுட்டிக்காட்டுவர். அவையாவன: – 0,1,2,3,4,5,6,7,8, 9 என்பனவாம். இவற்றை எண் உரு என்றும் சொல்வர்.

இந்த எண்களின் மதிப்பு எண் உரு இருக்கும் இடத்தைப் பொறுத்து அமையும். 257 என்ற எண்ணில் வரும் 2 என்ற எண் இருநூறு என்னும் மதிப்பைக் குறிக்கிறது. அடுத்து வரும் 5 என்ற எண் ஐம்பது என்னும் மதிப்பையும், இறுதியில் வரும் 7 என்ற எண் வெறும் ஏழு என்னும் மதிப்பையும் பெறுகின்றன. சுன்னம் (Zero) எனப்படும் 0 என்ற எண் எந்தவோர் இடத்தையும் நிரப்பக் கூடியது. அதற்கு மதிப்பு இல்லாதது போல் தோன்றினும், அந்த எண்ணுக்கு முன்னரும் பின்னரும் வரும் மற்ற எண்களைப் பொறுத்து அதன் மதிப்புக் கணிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக 101 என்னும் எண்ணில் முதலில் வரும் 1 என்னும் எண்ணுக்கு நூறு என்னும் மதிப்பும், அடுத்து வரும்

0 மதிப்பற்றதாக இருந்தாலும் அது பத்துக்கான இடத்தில் வருவதால் அதற்குப் பின்னர் வரும் ஒன்றுக்கு வெறும் ஒன்று என்னும் மதிப்பையும், முன்னர் வரும் எண்ணுக்கு நூறு என்ற மதிப்பையும் அளிக்கிறது.

அராபிய எண்கள் தோன்றிய வரலாறு குறித்துத் திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. மேற்குறித்த எண்கள் இந்தியாவில் வாழ்ந்து வரும் இந்துக்களின் நன்கொடை என்பர். 1 முதல் 9 வரையிலான எண்கள் கி.மு. 200–ஆம் ஆண்டளவில் பழக்கத்திற்கு வந்திருக்கக் கூடும். சுன்னம் எனப்படும் '0' என்னும் எண்ணையும் கண்டுபிடித்துக் கொடுத்தவர்கள் இந்துக்களே. குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த பாசுகராசாரியார் என்பவர் இதனைக் கண்டுபிடித்தார் என்பர். இந்தியரால் இந்தியாவில் பயன்படுத்தப்பெற்ற இவ்வெண்களை ஐரோப்பியர், அராபியர்கள் வழியாகத் தெரிந்து கொண்டார்கள். அராபியர் இந்த எண்களைக் கி.பி. 800–ஆம் ஆண்டளவில் தமதாக்கிக் கொண்டு, கி பி. 900–ஆம் ஆண்டளவில் இசுபெயின் (Spain) நாட்டிற்குக் கொண்டு சென்றனர். ஏனைய ஐரோப்பிய நாடுகள் கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் அவர்களுடன் வாணிகம் செய்ய வந்த வணிகர்களிடமிருந்து இவ்வெண்களைத் தெரிந்து கொண்டனர். அதேபோல் இசுபானியப் (Spanish) பல்கலைக் கழகங்களில் இருந்த அறிஞர்களும் இவ்வெண்களைப் பயன்படுத்தினர். அச்சுக்கலை கண்டுபிடிக்கப்பட்டபோது இவ் வெண்கள் ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் பரவின.

**அராபியப் பாலைநிலம்**, அராபியா முந்நீரகத்திலுள்ள (Peninsula) பாலைநிலங்கள் அனைத்தையும் குறிக்கும் தொடர். 13,00,000 ச.கி.மீ. பரப்பைக் கொண்ட அராபியப் பாலைநிலத்தில் அல்சாபுரா, அல்லப்பா, அன் நாபுத் (An Nafud), அசுசும்மன், இர்க்கசு சுபாய், நாபுத் சுத்தகி, இரப் அல் கலி (Rub al kali),சிரியா போன்ற பகுதிகள் அடங்கும். இவை அரேபியாவில் உள்ளன.

நைல் ஆற்றுக்கும் செங்கடலுக்கும் இடையேயுள்ள பாலை நிலத்தையும் அராபியப் பாலை நிலம் என்றே கூறுவர். இது எகிப்தில் உள்ளது. இப்பாலை நிலம் சகாராவின் ஒரு பகுதியாகும். இதனைக் கிழக்கத்தியப் பாலைவனம் என்பர். வடக்கே மத்தியதரைக்கடலும், தெற்கில் சூடானும் இதன் எல்லைகளாம். இப்பாலை நிலம் 1,45,000 ச.கி.மீ. பரப்பினைக் கொண்டுள்ளது.

**அராமிய எழுத்துகள்** வட செமிட்டிக் இனத்தைச் சேர்ந்த மொழியின் எழுத்து முறையாகும். அராமிய மொழி கிறித்து பிறப்பதற்குப் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே மேலை ஆசியாவில் பழக்கத்தில் இருந்துவந்த தொன்மையான மொழியாகும். இம்மொழி, தொன்மைச் சிறப்பு மிக்க மெசபடோமியா, சிரியா போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களால் பேசப்பட்டு வந்தது. அராமிக் வகை எழுத்துகள் உள்ள கல்வெட்டுகள் பல்வேறு இடங்களில் கிடைத்துள்ளன. குறிப்பாக, இக்கல்வெட்டுகள் நடு ஆசியா, குர்திசுத்தான், காக்கசசுப் பகுதி, ஊரல் மலைத் தொடருக்குத் தென்பகுதி, ஆப்கானிசுத்தானம், எகிப்து ஆகிய இடங்களில் கிடைத்துள்ளன. சார் இ–கூன், தட்சசீலம் ஆகிய இடங்களில் உள்ள அசோகரின் கல்வெட்டுகள் அராமிய எழுத்துகளைக் கொண்டுள்ளன.

**அரிஅரரும் புக்கரும்** விசயநகரப் பேரரசுக்கு அடிகோலிய அண்ணனும் தம்பியுமாவர். இவர்கள் கி.பி. 14–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அரசோச்சியவர்கள். இவர்கள் குருபா சாதியினராவார்கள். இருவரும் ஆழ்ந்த இந்து சமயப் பற்றுக் கொண்டவர்கள். தொடக்கத்தில் இவர்கள் வாரங்கல் அரசனின் நிதித்துறை அலுவலர்களாகப் பணியாற்றியவர்கள். தில்லி சுல்தானின் படைத் தளபதியான மாலிக் காபூர் வாரங்கலின் மீது படையெடுத்துச் சூறையாடி அதனை அழித்தார். பதவியிழந்த அரிஅரரும் புக்கரும் ஆனைகுண்டி எனப்படும் கம்பிலி நகரையாண்ட பிட்டிதேவராயரின் ஊழியர்களாகச் சேர்ந்தனர். முசுலிம்கள் கொள்ளைக் கூட்டத்தாரைப் போன்று செயற்பட்டதால் வெறுப்புற்ற இவர்கள், தம் தாய்நாட்டையும் சமயத்தையும் காக்கும் காவலராயினர். ஆனைகுண்டி வீழ்ச்சியுற்றபோது இவர்கள் தில்லிச்சுல்தானின் சிறைக் கைதிகளாகத் தில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு இவர்கள் முசுலிம்களாக மதம் மாற்றப் பெற்றனர். அதன் விளைவாக இருவரும் சுல்தானின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் உகந்தவர்களாயினர். கம்பிலியின் ஆளுநராயிருந்தவரால் அப்பகுதியில் வாழ்ந்த இந்துக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அரிஅரரும் புக்கரும் அவர்களைக் கட்டுப்படுத்த, தக்காணத்திற்கு அனுப்பப்பெற்றனர். அங்கு இவர்கள் இந்துக்களின் கலகத்தை அடக்கி நிலையான ஆட்சிக்கு வகை செய்தார்கள். பின்னர்த் தில்லிச்சுல்தான் ஒய்சல அரசரான மூன்றாம் வீரவல்லாளர் மீது போர் தொடுத்தார். இந்துவாயிருந்து மதம் மாறியதால் வீரவல்லாளரைத் தோற்கடிக்க இயலவில்லை என்பதை உணர்ந்த அரிஅரரும் புக்கரும் இசுலாம் சமயத்தை விட்டொழித்து மீண்டும் இந்துக்கள் ஆயினர். முசுலிம் வரலாற்றாசிரியர்களின் கருத்தும், இந்து மரபு வழிச் செய்திகளும் இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றன.

இந்து சமயம் வந்த அரிஅரரும் புக்கரும் தில்லிச் சுல்தானிடம் அடிமையாகப் பணிபுரிவதையும் துறந்து விட்டுத் தனியானதொரு சுதந்தர இந்து அரசை

நிலை நாட்டமுயன்றனர். அவ்வாறு இவர்கள் நிலை நாட்டிய அரசே விசயநகரப் பேரரசாக உருமாறியது.

இப்பகுதியில் நிலவிய இசுலாம் சமயத்திற்கெதிரான இயக்கம் இம்முயற்சிக்கு உறுதுணையாயிற்று. மேலும், மாதவ வித்தியாரணியர் என்னும் ஆசாரியார் இவர்களைச் சமயம் மாற்றி இந்துக்களாக்கினார். சமயம் மாறி வந்தவுடன் அரிஅரரும் புக்கரும் ஆனைகுண்டிக்கு எதிர்ப்புறத்தில், துங்கபத்திரை ஆற்றின் வலக்கரையில் புதியதொரு நகரத்தை அமைத்தனர். அதனையே 'வெற்றித் திருநகர்' என்று பொருள்படும் விசயநகரம் என்றழைத்தனர். தமக்கு நல்வழி காட்டிய வித்தியாரணியரின் நினைவாக அந்நகர் வித்தியாரணியநகர் என்று பெயர் சூட்டப்பட்டு, காலப் போக்கில் அப்பெயரே மருவி 'விசயநகரம்' என ஆயிற்று என்றும் கூறுவர்.

அரிஅரர் கி.பி. 1336-ஆம் ஆண்டு ஏப்பிரல் 18-ஆம் நாள் இங்கு எழுந்தருளியிருக்கும் விருபாட்சர் முன்னிலையில், முடிசூட்டிக் கொண்டார். இவரை முதலாம் அரிஅரர் என்று அழைப்பர். (விருபாட்சர் கோயில் விசய நகரின் முதன்மையான சிவத்தலமாகும். இன்றும் இக் கோயிலைக் காணலாம்). கிருட்டிணா ஆற்றிற்குத் தென்பாலிருந்த அனைத்து நிலப் பகுதிகளும் விருபாட்சருக்குச் சொந்தமானதே என்று அரிஅரர் கூறினார். அரிஅரர்-புக்கரின் தந்தையார் சங்கமர் எனப்பட்டதால் இவர்களால் நிலைநாட்டப் பெற்ற மரபினைச் 'சங்கமர் மரபு' என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள்.

விசயநகரப் பேரரசின் முதல் அரசர் முதலாம் அரிஅரரேயாவார். இவர் கி.பி. 1336 முதல் கி.பி. 1357 வரை அரசாண்டார்.

அரிஅரர் பேரரசை நிறுவியதோடன்றி நல்லாட்சிக்கான நிருவாக அமைப்பையும் திருத்தி அமைத்தார். பேரரசு தலம், நாடு, சீமை என்ற பிரிவுகளாகப் பகுக்கப்பட்டது. காடுகளாயிருந்த கொடைமாவட்டங்கள் உழுநிலங்களாயின. ஆனைக்குண்டி, பாதாமி, உதயகிரி, குத்தி போன்ற ஊர்களிலிருந்த கோட்டைகளை இவர் வலுவாக்கினார்.

அரிஅரரின் ஆட்சிக் காலத்தில் இவர் தம்பியான புக்கர் ஒய்சல நாட்டின் அரசரான மூன்றாம் வீரவல்லாளனைக் கி.பி. 1340-இல் தோற்கடித்துப் பெனுகொண்டாவைக் கைப்பற்றினார். அரிஅரரின் மற்றொரு தம்பியான மாரப்பர் வனவாசியை ஆண்ட கதம்ப அரசரைத் தோற்கடித்து அவருடைய நாட்டையும் விசயநகரத்துடன் இணைத்தார். அரிஅரர் தொண்டை மண்டலத்தை ஆண்ட சம்புவராயரை மாபார் சுல்தானிடமிருந்து மீட்டு அவரை மீண்டும் அரசராக்கினார்.

இவருக்குப் பின்னர் விசயநகரத்தின் அரசராக இவருடைய தம்பி புக்கர் முடிசூட்டிக் கொண்டார். இவரை வரலாற்றில் முதலாம் புக்கர் என்பர். இவர் கி.பி. 1357 முதல் கி.பி. 1377 வரை அரசாண்டார். இவர் சம்புவராயர் மீது படையெடுத்து அவரை வென்று விசயநகரப் பேரரசின் பரப்பைத் தென்பெண்ணை, கொள்ளிடம் ஆறுகள் வரை விரிவாக்கினார்.

புக்கர் பாமினி சுல்தானுடன் மூன்று போர்கள் செய்தார். மூன்றிலும் தோற்றுப்போனார். கிருட்டிணா ஆறு விசயநகர, பாமினி அரசுகளின் எல்லையாயிற்று. இரெட்டி அரசு மீது படையெடுத்து இவர் இராசகொண்டா, கொண்டவீடு போன்ற பகுதிகளை விசயநகரத்துடன் இணைத்துக் கொண்டார்.

புக்கர் ஒரிசாவையும் வெற்றி கண்டார். பின்னர் மகாராசாதிராசர் என்றும், இராசபரமேசுவரர் என்றும் பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார். வேதங்களைக் கற்றுத் தருமத்தை ஆதரித்ததால் இவரை 'வேதமார்க்கப் பிரதிட்டாபகர்' என்று அழைத்தனர். தலைநகரை வலுவாக்கி விரிவாக்கினார். தெலுங்கு மொழிக் கவிஞர்களைக் காத்தார். சீன நாட்டிற்குத் தூதுக் குழுவொன்றையும் அனுப்பிய புக்கர், வெளிநாட்டு உறவிலும் ஆர்வம் காட்டினார்.

கோவாத் துறைமுகம், பெல்காம் கோட்டை, துளுவர் நாடு போன்றவை விசயநகருக்குக் கட்டுப்பட்டிருந்தன. முசுலிம் வரலாற்று வல்லுநர்கள் இவருடைய ஆட்சியைப் பெரிதும் பாராட்டினர்.

தென்னகத்தில் இந்து சமயத்தை இசுலாம் சமயத் தாக்குதல்களிலிருந்து காத்துப் பெயரும் புகழும் பெற்றவர்கள் அரிஅரரும் புக்கரும் ஆவர் என்றால் அது மிகையாகாது.

**அரிஅரன்** திருமாலும் சிவனும் இணைந்த இறைவன். அரி என்பது திருமாலையும், அரன் என்பது சிவனையும் குறிக்கும் இறை வடிவங்கள் பலவாயினும், 'ஒருவனே தேவன்' என்னும் தத்துவத்தினை அரிஅரன் விளக்குகிறது. அரிஅரன் என்னும் உருவத்தின் வலப்பாகத்தில் சிவனுக்குரிய சிறப்புக் கூறுகளும் இடப்பாகத்தில் திருமாலுக்குரிய சிறப்புக் கூறுகளும் காணப்படும். அரிஅரன் நான்கு கைகளை உடையவர். வலப்பக்கத்தில் சடைமுடியையும் பிறை நிலவும் பெற்றிருக்கும் இவர், தலையின் இடப்பக்கத்தில் மகுடத்தினை அணிந்திருப்பார். வலப்பக்கக் காதில் பாம்புக் குண்டலமும் (காதணி) இடப்பக்கக் காதில் மகரகுண்டலமும் உடையவர். வலப்பக்கக் கைகள் ஒன்றில் வரத முத்திரையினையும், பிறிதொன்றில் திரிசூலமோ முரசோ மழுவோ மண்டையோடோ இருக்கும். இடப்பக்கக் கைகளில் சக்கரம், சங்கு,



அரிஅரன்

தண்டாயுதம் ஆகியவற்றிலொன்றை வைத்திருப்பார். மற்றொரு கை கடக முத்திரையில் தொடையினைத் தொடும் வண்ணம் அமைந்திருக்கும். சிவனுடைய ஊர்தியான நந்தி அரிஅரனின் வலப்பக்கத்திலும், திருமாலின் ஊர்தியான கருடன் இடப்பக்கத்திலும் இருப்பர். சில சிற்பங்களில் அரிஅரனுடன் பார்வதியும் இலக்குமியும் இருப்பர். அரிஅரன் நின்ற கோலத்திலிருப்பர்.

**அரிக்கமேடு** புதுச்சேரிக்குத் தெற்கில் ஏறத்தாழ நான்கு கி.மீ. தொலைவில் அமைந்துள்ள காக்கயன்தோப்பு என்னும் சிற்றூரின் கிழக்குப் பகுதியில் அமைந்த மேட்டுப்பாங்கான பகுதி. இம்மேட்டின் வடபகுதியில் அரியாங்குப்பத்தாறு என்னும் சிற்றாறு ஓடுகிறது. வரலாற்றுச் சின்னங்கள் இம்மேட்டுப் பகுதியில் புதையுண்டிருக்கின்றன என்று கி.பி. 18-ஆம் நூற்றாண்டு முதலே அறிந்திருந்தனர். எனினும், 1837-இல், ஜி.தூப்ரே (G. Jouveari-Dubreuil) என்னும் பிரெஞ்சு ஆய்வாளர்தாம் முதன் முதலில் இவ்விடத்தின் வரலாற்றுச் சிறப்பினை அறிவித்தார். பின்னர் 1941-இல் பிரெஞ்சு அகழாய்வுக் குழுவினர் சில இடங்களில் ஆய்வுகளை நடத்தினர். இந்திய அரசின் தொல்லியல் துறையின் இயக்குநர் மேலாளரான மார்ட்டிமர் வீலர் (Mortimer Wheeler) என்பவரால் 1945-இல் அறிவியல் நோக்கில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. தென்னிந்தியாவில் முதன்முதலில் அறிவியல் நோக்கில் அகழாய்வு நடைபெற்றது இவ்விடத்திலேயேயாகும். கிரேக்கப் பயண நூலான செங்கடற் செலவு (Periplus of the Erythrean Sea, கி.பி. 60-100), கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்த தமிழ்நாட்டு வணிகத் தலங்களைக் குறிப்பிடும்போது 'பொதுகே' (Poduke) என்று இத் துறைமுகத்தைக் குறிக்கிறது. தாலமியும் தம்முடைய நூலில் கபேரிசு (காவிரிப்பூம் பட்டினம்) துறைமுகத்திற்கு வடக்கே 'பொதுகே' அமைந்திருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இத்துறைமுகத்தில் உரோமானிய வணிகர்கள் தங்கியிருந்து தம் வாணிகத்தை நடத்தினர் எனவும் கிரேக்க நூல்கள் குறிப்பிடுகின்றன. எனினும், சங்க இலக்கியங்கள் 'பொதுகே' என்ற ஊரினைச் சுட்டவில்லை.

அரிக்கமேடு என்ற பெயருக்கு விளக்கம் கூறிய கே.ஆர். சீனிவாசன், 'அருக்கு மேடு' (சிதைவுகளின் மேடு) அல்லது 'அருகுமேடு' (ஆற்றங்கரையின் அருகே அமைந்த மேடு) என்பதன் திரிபாகலாம் என்பர். 'அருகன் மேடு' (சமணர்கள் வாழ்ந்த இடம்) என்பதே திரிந்து அரிக்க மேடாயிற்று என்பாரும் உளர். அகநானூற்றுப் பாடலொன்று வேலூர் மன்னர்களுக்கு உரித்தான கடற்கரைப் பட்டினமாக 'வீரை' என்ற ஊரைக் குறிக்கிறது. அரிக்க மேட்டிற்குச் சற்றுத் தொலைவில் 'வீராம்பட்டினம்' என்னும் ஊரும் அமைந்துள்ளது. இச்சான்றுகளின் அடிப்படையில் அரிக்க மேட்டின் தொன்மையான பெயர் வீரையாகும் என்று ஐராவதம் மகாதேவன் என்னும் அறிஞர் கூறுகிறார்.

அரியாங்குப்பத்து ஆற்றின் கிழக்குக் கரையில் இரண்டு இடங்களில் அகழாய்வு நடைபெற்றது. இவ்விரண்டு இடங்களும் கரையோரமாக ஏறத்தாழ 300 மீட்டர் இடைவெளியில் அமைந்துள்ளன. இவ்வகழாய்வில் ஒரு பண்பாட்டுக் காலத்தைச் சார்ந்த தொல் பொருள்கள் கிடைத்துள்ளன. இப்பண்பாடு செழித்தோங்கிய காலம் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளாகும். இப்பண்பாடு கி.பி. 200-ஆம் ஆண்டுக்குப் பின்னர்ச் சீரழிந்தது. இக்காலத்தில் மக்கள் வேறிடங்களுக்குக் குடிபெயர்ந்தனர். அடிக்கடி நிகழும் வெள்ளத்திலிருந்து தம்மைக் காத்துக் கொள்வதற்காக வேறிடங்களுக்கு இம்மக்கள் குடிபெயர்ந்திருக்கலாம்.

அகழாய்வுகள் வெளிப்படுத்திய கட்டிடங்களுள் முதன்மையானது பண்டசாலையாகும் (Ware house). இக்கட்டிடம் அரிக்கமேட்டின் வட பகுதியில் நடைபெற்ற அகழாய்வில் வெளிக் கொணரப்பட்டது. செவ்வக வடிவம் கொண்ட இப்பண்டசாலை ஏறத்தாழ 45 மீட்டர் நீளமும் 11 மீட்டர் அகலமும் உடையது. இக்கட்டிடத்தின் வட பகுதியில் ஏறத்தாழ 18 மீட்டர் அளவுள்ள மற்றொரு சிறு பொருட்கிடங்கு காணப்படுகிறது. இக்கட்டிடங்கள் பருத்த சுவர்களைக் கொண்டவை. இவை பளுவான செங்கற்களைக் கொண்டுகட்டப்பட்டவை. செங்கற்களினிடையில் மண் சாந்திட்டு இணைக்கப்பட்டுள்ளது. வெளிப்புறங்களின் மீது சுண்ணாம்புக் காரை பூசப்பட்டுள்ளது. நான்கு



அரிக்கமேடு சாயத் தொட்டி

பக்கச் சுவர்களும் நல்ல அடித்தளத்தின்மீது எழுப்பப்பட்டுள்ளன. அடித்தளம் அமைப்பதற்கு, முதலில் மணலிட்டுள்ளனர். அதன்மீது கற்களைப் பரப்பி வலுப்படுத்திப் பின்னர்ச் சுவர்களை எழுப்பியுள்ளனர். இக்கட்டிடத்தின் தரைப்பகுதி அடித்தளத்திலிருந்து ஏறத்தாழ $1\frac{1}{2}$ மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டிடத்தின் நுழைவாயில்களைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை. இவ்வகழாய்வில் தென்பட்ட மற்றக் கட்டிடங்களில் சாயம் தோய்க்கும் தொட்டிகள் சிறப்பானவை. தென் பகுதியில் நடைபெற்ற அகழாய்வில் இத்தொட்டிகள் தென்பட்டன. சாயம் தோய்க்கும் தொட்டிகள் இரண்டு கிடைத்துள்ளன. இத்தொட்டிகள் ஏறத்தாழ 3 மீட்டர் அகலமும் 4 மீட்டர் நீளமும் உடையவை. ஒரு தொட்டியின் தென் பகுதியில் ஓர் அறை இணைந்துள்ளது. மற்றொரு தொட்டியின் தென் பகுதியில் ஒரு நீண்ட முற்றம் அமைந்துள்ளது. இத் தொட்டிகளும் செங்கற்களால் கட்டப்பட்டவையே. இத் தொட்டிகளின் அடித்தளமும் தரையும் செங்கற்களால் அமைக்கப்பட்டிருந்தன. இத் தொட்டிகளில் உள்ள நீரை வெளியேற்ற இரண்டு கால்வாய்ப் புழைகள் உள்ளன. ஒரு சாயத் தொட்டியின் வெளிப் பகுதியில் உள்ள முற்றத்தின் சுற்றுச் சுவரில் கதவு நிலைகள் பதிக்கப்பட்டதற்கான அடையாளக் குழிகள் இருந்தன. இவ்விரண்டு சாயத் தொட்டிகளும் மெல்லிய துணிகளைச் சாயம் தோய்க்கப் பயன்பட்டிருக்கலாம். இக் கட்டிடங்களைத் தவிரச் சிதைந்து போன தெருவின் ஒரு பகுதியும் அகழாய்வின் மூலம் வெளிப்பட்டுள்ளது. இவைதவிர உறை கிணறுகள் பலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பலவகையான மட்கலன்களின் சிதைவுகளும் இவ்வகழாய்வில் கிடைத்துள்ளன. இவற்றுள் மத்திய தரைக் கடல் பகுதிகளிலிருந்து, குறிப்பாக உரோம், கிரேக்கப் பகுதிகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூன்று விதமான மட்கலங்கள் இவ்விடத்தில் கிடைத்துள்ளன. அவையாவன 1) அரிட்டைன், 2) இரு கைப்பிடியுள்ள 'ஆம்போரா' எனப்படும் சாடிகள் (Amphorae,) 3) இரௌலட்டடு (Rouletted) வட்டில்கள். இவற்றுள் அரிட்டைன் எனப்படும் சிவந்த வண்ணப் பூச்சுக் கொண்ட மட்கலங்கள் இத்தாலியப் பகுதியான' அரிசோ' (Arezzo) வில் தான் முதன்முதலாகச் செய்யப்பட்டன. இம்மட்கலங்களைச் செய்தோர் பெயரும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ளன. இவ்வகழாய்வில் கிடைத்த அரிட்டைன் மட்கலங்கள் இத்தாலியில் வனையப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டது. அவற்றின் காலம் கி.பி. 20-இலிருந்து 50-க்குள் இருக்கலாம். இரண்டு பக்கம் கைப்பிடியுடன் கூடிய உயரமான சாடிகளின் சிதைவுகளும் கிடைத்துள்ளன. இவை கிரேக்க மதுச்சாடிகளுடன் ஒத்துள்ளன. எனவே, யவன மதுச்சாடிகள் அரிக்கமேட்டில் இறக்குமதி செய்யப்பட்டன எனலாம். யவனத் தேறல் பற்றிய குறிப்புகள், சங்க நூல்களில் காணக் கிடைக்கின்றன. மேலும், இவ்வகழாய்வில் கிடைத்த இச்சாடிகளின் சிதைவுகளை ஆராய்ந்த வேதியியல் அறிஞர்கள் யவனத் தேறலின் எச்சம் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளனர். இரௌலட்டடு மண் வட்டில்கள் மற்றுமொரு வகையானவை. இவை கரிய நிறத்துடன் கூடிய அகலமான வட்டவடிவ வட்டில்களாகும். இவற்றின் நடுவே ஒன்று அல்லது இரண்டு வட்டங்களாகப் புள்ளிக் கோலம் (Rouletting) இடப்பட்டுள்ளது. இம்மூன்று விதமான மட்கலங்களுள் மதுச் சாடிகளும் இரௌலட்டடு வட்டில்களும்,அரிட்டைன் மட்கலங்களுக்கு முன்னமேயே இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அரிட்டைன் மட்கலங்கள் ஏறக்குறைய,கி.பி. 50-க்குப் பிறகு வழக்கிலிருந்து மறைந்தன. இதன் பின்னரும் கூட இவ்விரண்டு மட்கலங்களும் இறக்குமதி செய்யப்பட்டதை இவ்வகழாய்வு உணர்த்துகிறது. எனவே இம்மட்கலங்கள் ஏறக்குறைய, கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகள் வரை வழக்கில் இருந்துள்ளன.

உள்நாட்டில் வனையப்பட்ட மட்கலங்களின் சிதைவுகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவற்றுள் சாம்பல் நிற மட்கலங்கள் மிகத் தொன்மையானவை. இவ்வகை மட்கலங்கள்தாம், பழங்கால மண்படிவங்களில் கிடைக்கின்றன. கருப்பு, சாம்பல் வண்ண மட்கலங்களும் இவ்விடத்தில் கிடைத்துள்ளன. கருப்பு, சிவப்பு வண்ண மட்கலங்களும், இவ்

வகழாய்வில் ஓரளவு கிடைத்துள்ளன. இவை தவிரச் சிவப்பு நிறமுடைய மட்கலங்கள், எல்லாப் பண்பாட்டுக் காலப் படிவங்களிலும் கிடைக்கின்றன. எனினும் பழங்கால மண் படிவங்களில் இவ்வகை மட்கலங்கள் குறைவாகக் கிடைக்கின்றன. தென்பகுதியிலும் வட பகுதியிலும் மேல்மட்ட மண் படிவங்களிலும் இச் சிவப்பு நிற மட்கலங்களைப் பயன்படுத்துதல் மிகுதியாயுள்ளது. பெரும்பாலும் இம் மட்கலங்களை மணல், களிமண், மைக்கா, உமி ஆகியவற்றைக் கொண்டு பிசைந்து செய்திருக்கின்றனர். இம் மட்கலங்கள் பெரும்பாலும் சக்கரத்தைச் சுழல விட்டு வடிவமைத்திருக்கின்றனர். ஆயினும் குமிட்டி அடுப்பு, கிணற்றுக்கான உறைகள், மற்றும் பெரிய தொட்டிகள், சாடிகள் ஆகியவற்றைச் சக்கரத்தின் உதவியின்றிக் கைகளாலேயே வனைந்தனர். இம்மட்கலங்களை ஒரு சிறிதே அக்கால மக்கள் அழகு செய்துள்ளனர். விரல் நுனிகளைப் போன்ற வளைந்த வரிக்கோடுகள் இட்டும் பானைகளை அழகு செய்துள்ளனர். இம்மட்கலங்கள் பல வடிவினை உடையவை. இவற்றை வட்டில்களாகவும் அகல வாயுள்ள பாத்திரங்களாகவும், சிறு குவளைகளாகவும், சட்டிகளாகவும் செய்துள்ளனர். பானைகள், மூடிகள், கூர் முனையுடைய சாடிகள் ஆகியன செய்யப்பட்டிருக்கின்றன. இக் காலத்தில் மிகுதியாகப் பயன்படுத்திய மட்கலம் வாயகன்று அடி சிறுத்த கோப்பை போன்ற பாத்திரமாகும்.




சுடுமண் பொம்மைகள்

அகழாய்வின்போது ஏறத்தாழ 200க்கும் மேற்பட்ட மணிகள் (Beads) கிடைத்தன. இவை சங்கு, எலும்பு, தங்கம், கண்ணாடி, ஆகிய பொருள்களில் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் நவரத்தினக் கற்களால் ஆன மணிகளையும் தங்கத்தால் ஆன மூன்று மணிகளையும், சுடுமண்ணால் ஆன பல மணிகளையும் கண்டெடுத்துள்ளனர். பெரும்பாலான மணிகள் கண்ணாடியால் ஆனவை. இம்மணிகளில் நீலம், பச்சை ஆகிய நிறமணிகளே மிகுதி. ஊடுருவிப் பார்க்க இயலாத மங்கிய கண்ணாடி மணிகளும் மிகுதியாகக் கிடைத்துள்ளன. இவை கோளம் (Spherical), உருளை (Round), நீள்உருளை,கூம்பு, இரட்டைக்கூம்பு, எண்கோண வடிவங்கள் ஆகியவற்றைக் கொண்டன. மேலும், சில மணிகளின் வெளிப்புறத்தில் நீளவாட்டத்திலும் சிலவற்றில் குறுக்கு வாட்டத்திலும் வரிக்கோடுகள் போடப்பட்டுள்ளன. பல்வேறு நிலைகளில் பல சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் சிறப்பானதாக ஒரு பெண் உருவத்தைக் குறிப்பிடலாம். இது கி.பி. முதல் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். இவ்வுருவம், ஒரு கையைத் தாழ விட்டுக் கொண்டும், மற்றொரு கையால் கூடையொன்றை இடையில் அணைத்துக் கொண்டும் உள்ளது. முழுமையாகச் சீலையணிந்த இவ்வுருவத்தின் தலைப்பகுதி கிடைத்திலது. சீலையின் மடிப்புகள் நன்கு காட்டப்பட்டுள்ளன. கோவணம் மட்டும் அணிந்த தலையற்ற ஆண் உருவம் ஒன்றும் அகழாய்வில் கிடைத்துள்ளது. அதன் ஒரு கை பக்கவாட்டில் தொங்கவிடப்பட்டுள்ளது; மற்றொரு கை இடையைத் தொட்டுக் கொண்டுள்ளது; மிக அழகான கழுத்தணி, இடை அணி ஆகியவற்றை அணிந்துள்ளது. இவை தவிர மற்றுமொரு பெண் உருவம் அகழாய்வில் கிடைத்துள்ளது. சிவபெருமானின் தலைப்பகுதியும் கிடைத்துள்ளது. உயர்ந்த சடை முடியில் சுருண்ட பாம்பு அமைந்திருக்க, ஒரு பக்கம் சந்திரனின் பிறை அமைக்கப்பட்டுள்ளது. கண் பாதி மூடிய தியான நிலையைச் சிவபெருமானின் உருவம் காட்டுகிறது. இவை தவிர இன்னும் சில சுடுமண் உருவங்கள் கிடைத்துள்ளன. சதுரங்கக் காய்கள், வட்டமான விளையாட்டு வில்லைகள், காதணிகள் ஆகியவையும் கிடைத்துள்ளன. மாதுளை வடிவிலான பொருள்ஒன்றும் கிடைத்துள்ளது. அது பம்பரமாக இருக்கலாம்.

இரும்புப் பொருள்களில் ஒரு மோதிரம், கத்தி, ஆணிகள் ஆகியவையும் தாமிரத்தால் ஆன ஒரு கிலுகிலுப்பையும் அம்மிக் கற்களும் குழவிக் கற்களும் கிடைத்துள்ளன. இங்குக் கிடைத்த கற்பொருள்களில் வட்ட வடிவமானபொருள் பெரும்பாலும் எடைக் கல்லாக இருக்கலாம். மரத்தாலான பொருள்களில், உட்புறம் குடையப்பட்ட ஒரு மரத்துண்டு கிடைத்துள்ளது. இத்துண்டு பெரும்பாலும் சிறுவர் விளையாட்டுப் பொருளாக இருக்கலாம். இவை தவிர, மரத்தாலான கொட்டாப்புளி ஒன்றும் அறுக்கப்பட்ட சங்குகள் பலவும் முற்றுப்பெறாத சங்கு வளையல்களும் கிடைத்துள்ளன. இங்குக் கிடைக்கப் பெற்ற

சிறிய அளவிலான சங்கு வளைகள் காதணிகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். தந்தத்தால் ஆன வேலைப்பாடமைந்த புகைப்பிடி ஒன்றும் கிடைத்துள் ளது.



அரிக்க மேடு - பிராமி எழுத்துகள்

பிராமி எழுத்துக் கீறல்களைக்கொண்ட மட்கல ஓடுகள் பல முதன் முதலாக இவ்வகழாய்வில் கிடைத் துள்ளன. இவை கி.பி முதல் இரண்டு நூற்றாண்டு களின் எழுத்தமைதியைக் கொண்டுள்ளன. மேலும், இவை தமிழ் நாட்டின் மலைக் குகைகளிலுள்ள பிராமி கல்வெட்டு எழுத்துகளையும் ஒத்துள்ளன. எனவே இவ்வெழுத்துகள் ஏறத்தாழக் கி.பி. 50–ஆம் ஆண் டைச் சார்ந்தனவாக இருக்கலாம். இப்பிராமிக் கீறல் கள் தமிழ், பிராகிருதம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளில் எழுதப்பட்டுள்ளன. இக்கீறல்கள் அனைத்தும் முழுமையாக நமக்குக் கிட்டவில்லை. இவற்றில் அரைகுறைச் சொற்களே உள்ளன. இம்மட் கலக் கீறல்களில் ஆமன், (சா)த்தன், தவபிழார், முதி குழரன், கைக்கோளர், அகல் போன்ற தமிழ்ச் சொற் களைக் காணலாம், யகமித்தச (யக்சமித்ர), யதவல பூத என்னும் பிராகிருதப் பெயர்களும் எழுதப்பட்டுள் ளன. பூதஎன்ற சிங்களச் சொல்லும் இம் மட்கலக் கீறல்களில் உண்டு.

இவ்வகழாய்வினால் பல சிறப்பான முடிவுகள் தமிழ்நாட்டு வரலாற்றில் ஏற்பட்டிருக்கின்றன. கிழக் குக் கடற்கரையில் உரோமானியர்களுடன் வணிக உறவுகளை மேற்கொள்ளவும், தங்கியிருந்த வணிகர் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்ளவுமான ஒரு வணிக மையமாக அரிக்கமேடு இருந்துள்ளது என்பது தெற்றெனப் புலப்படும். தமிழ் இலக்கியத்தில் குறிப் பிடப்பட்ட உரோமானியர் வணிகத் தொடர்பு உறு திப்படுத்தப்பட்டதுடன், வணிக உறவுக்கான காலத் தையும் வரையறை செய்ய இவ்வகழாய்வு துணை புரிகிறது. தமிழகத்தில் பரவலாகக் கிடைக்கும் கருப்பு சிவப்பு மட்கலங்களின் காலத்தைக் கணிப்பதற்கும் இவ்வகழாய்வு துணை புரிந்துள்ளது. கி.பி. முதல்– இரண்டு நூற்றாண்டுகளில் நிலவி வந்த கட்டிடக் கலையின் தன்மைகளை இவ் அகழாய்வினால் அறிய முடிகிறது. அரிக்கமேடு வணிக மையம் என்பதோடு நில்லாமல், மணிகள் உற்பத்தி செய்யும் சிறந்த தொழிற் கூடங்களையும் பெற்றிருந்திருக்கிறது. இவை தவிர உரோமானியக் கைவினைஞர்களும் அரிக்கமேட் டில் தங்கியிருந்து தம் கைத்திறனைக் காட்டியுள்ள னர் என்பதும் தெரிய வந்துள்ளது. மேலும் மெல்லிய துணி உற்பத்தி மையமாகவும் அரிக்கமேடு திகழ்ந்தது என்பதையும் அறிய முடிகிறது. ப.ச.

துணை நூல்:

**Wheeler, R.E.M., Ghosh, A. and Krishna Deva**, "Arikamedu: an Indo-Roman Trading-Station on the East Coast of India", Ancient India, No.2, July, 1946.

***அரிகதை காலட்சேபம்*** என்பது அரியின் பெருமைகளைக் கேட்டுப் பொழுதைப் போக்குதல் எனப்படும். கதா காலட்சேபம் எனப்படும் இக்கலை தெய்வத் தொடர்புடையதாகும். இதன்கண் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று கலைகளின் இயல்பும் விளக்கமுறும். ஆயினும் இங்கு இசைக்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலத்தில் பிறந்த இந்தக் காலட் சேபக் கலை தமிழகம் வந்து முழுவடிவை அடைந்துள் ளது. அம்மாநிலத்தில் இக்கலையைக் "கீர்த்தன்", என் றும், இக்கலையினை மேற்கொண்டவர்களைக் "கீர்த் தன் கார்", என்றும் குறிப்பிட்டனர். தமிழகத்தில் இக்கலை, "கதா காலட்சேபம், சங்கீத உபன்யாசம் இசைச் சொற்பொழிவு, கதைப் பிரசங்கம்" முதலிய பெயர்களைப் பெற்றுள்ளது. இதனை மேற்கொண்ட வர்கள் "பாகவதர்கள்" என்று சொல்லப் பெற்றனர். மராட்டியர்கள் விட்டுணுத் தொடர்பான பாடல் களைப் பாடிப் பொருள் மட்டுமே கூறி வந்துள்ளனர்.

பன்மொழிப் புலமை பெற்றவர்களாகப் பாகவதர் கள் விளங்கியதால் பன்மொழிகளின் கூட்டுறவை ஒரு வர் வாய்மூலமாகக் கேட்பதற்கு இக்கலை வழி செய் கிறது. கல்வி அறிவு இல்லாத பாமர மக்களுக்குக் கேள்வி மூலமாக அறிவைப் புகட்ட இக்கலை பயன் பட்டுவந்துள்ளது.

உலக இயல்புகளையும், புராண, இதிகாச உண்மை களையும் மக்களுக்குத் தெரிவிப்பதால் இக்கலை ஒரு விளம்பரமாகவே கருதப்படும். இக்கலையோடு பேரள

வில் வைணவமும் சைவமும், சிறிய அளவில் கிறித்து வமும் தொடர்பு கொண்டுள்ளன.

கி.பி. 1864-ஆம் ஆண்டு மராட்டிய பாகவதரான இராமச்சந்திர மூர்கூர் பாவா என்பவர், இராமேசுவர யாத்திரையின் பொழுது தஞ்சையில் தங்கினார். அப் பொழுது தஞ்சையைக் காமாட்சிபாய் சாகேபு என் னும் மராட்டிய அரசி ஆட்சி செய்தார். இவர் காலத் தில்தான் கதை காலட்சேபம் தஞ்சையில் பரவத் தொடங்கியது.

இந்நிகழ்ச்சியின் போது பொது மக்கள் திரளாக அமர்ந்திருப்பர்; பாகவதரும் பக்க வாத்தியக்காரரும் பின்பாட்டுக்காரரும் தாளமிடுபவரும் முன்னும் பின் னும் நடந்துகொண்டே மெய்ப்பாட்டுடன் இக் கலையை நிகழ்த்தியுள்ளனர். மராட்டிய மொழியில் தான் பாடியும் பேசியும் வந்தனர். தஞ்சையில் அன்று மிகுதியான மராட்டியர்கள் வாழ்ந்து வந்ததால் இக் கலைக்கு ஆதரவு பெருகிற்று.

மராட்டியக் கதை காலட்சேபங்களில் சாகி, திண்டி, ஓவி, அஞ்சனா கீதம், பஞ்சசாமரம், கட்கா, அபங்கம், மத்தகோகிலம் போன்ற பாடல்வகைகளைப் பயன் படுத்தினர். தமிழகத்துப் பாகவதர்களாலும் இப் பாடல் வகைகள் தொடக்கக் காலத்தில் பாடப்பட்டு வந்தன. இராமசந்திர மூர்கூர் பாவா நாற்பது ஆண் டுக் காலம் இக்கலையை நடத்தி மறைந்தார். இவ ருக்குப்பின் இவர் மகன் விட்டுணு பாவா கதை காலட் சேபக் கலையை மேற்கொண்டார்.

தெலுங்கர் ஆட்சியிலும் மராட்டியர் ஆட்சியிலும் அமைச்சராக இருந்த பெரியண்ணா (வேங்கடசாமி நாயுடு) தமது ஓய்வுக் காலத்தை இறை சிந்தனையில் கழிக்க எண்ணினார். கிருட்டிண மடம் ஒன்றை நிறு வினார். பன்மொழிப் புலமை பெற்ற பெரியண்ணா தம்மிடத்து அடைக்கலமாக வந்த சிறுவனுக்குப் பல விதமான கலைகளைக் கற்பித்துக் கதை காலட்சேபம் தையும் கற்பித்தார். அச்சிறுவனே பின்னர்த் தஞ்சைக் கிருட்டிண பாகவதர் என்று மற்றவர்களால் போற்றப்பட்டார். இவருடைய கதை காலட்சேபம் பார்க்கவும் கேட்கவும் சிறப்பாயிருக்கும் என்பர். மராட்டிய பாகவதர்கள் காலில் சலங்கை கட்டி இருந்தாலும் ஆடுவதில்லை. கிருட்டிண பாகவதர் மெய்ப்பாட்டோடு ஆடவும் செய்தார். முதன் முத லில் நின்றுகொண்டே கதை காலட்சேபம் நடத்தும் முறையைத் தொடங்கினார். மராட்டிய முறையிலி ருந்து சற்று மாற்றி இக்கலையை நடத்தி இதில் புதிய அமைப்பைத் தோற்றுவித்தார். இவர் நிகழ்ச்சிகளில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளைக் கலந்தே கதை காலட்சேபத்தை நடத்தினார். இவரது காலம் கி.பி.1847–1903 ஆகும். கிருட்டிண பாகவதருக் குப் பின்பாட்டு பாடி வந்த கரந்தைக் கோவிந்தசாமி பாகவதர், வேற்றுமொழிக் கலப்பு இன்றி முதன்முறை யாகத் தமிழில் கதை காலட்சேபத்தை நடத்தினார்.

தஞ்சைக் கிருட்டிண பாகவதரின் முறையைப் பின்பற்றித் தில்லைத்தானம் நரசிம்ம பாகவதர், இலக்குமணாச்சாரியார், திருப்பழனம் பஞ்சாபகேச சாத்திரியார், தஞ்சைப் பஞ்சாபகேச பாகவதர், சூல மங்கலம் வைத்தியநாத பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர் போன்றோர் இக்கலையை மேற்கொண்டவர்களுள் குறிப்பிடத்தக்கவராவர்.

இக்கதை காலட்சேபக்கலையாம் உலகில் நுழைந்த முதல் பெண்மணி திருமதி. சீ. சரசுவதியாவர். இவ ரைத் தொடர்ந்தவர்களில் பண்ணிபாய், பத்மாசனி, திருக்கோகர்ணம் கனகாம்புசம் போன்ற பெண்கள் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

கதை காலட்சேபக்கலையையும் பாகவதர்களை யும், தமிழகச் சைவ மடங்களும், சமசுதானங்களும் சமீன்தார்களும் ஆதரித்து வந்துள்ளனர். திருவாவடு துறை ஆதீனத்தின் பொருள் உதவியோடு தமிழ்நாடு, இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையினரால் தஞ்சையில் 1963–ஆம் ஆண்டு மூன்றாண்டுப் பாடத் திட்டத்தோடு இக்கலைப் பயிற்சிக்கூடம் ஒன்று தொடங்கப் பெற்று ஆறு ஆண்டுகள் நடைபெற்ற பின் இயங்காது போயிற்று. குவாலியர் சமசுதானத் தில் அரிகதை காலட்சேபப் பள்ளி ஒன்று இருந் துள்ளது. இன்று சில பாகவதர்கள் தம் வீட்டிலேயே ஒரு கதைக்கு ஆறு மாதக்காலத்தைப் பயிற்சிக் காலமாக அமைத்துப் பயிற்றி வருகின்றனர்.

அரிகதை காலட்சேபக் கலையை நடத்துபவர்கள் நின்றுகொண்டு நிகழ்ச்சியை நடத்துதல் மரபாகும். சுருதியும் (தம்பூரா) மிருதங்கமும் இக்கலைக்கான பின்னிசைக்குரிய இன்றிமையாத கருவிகளாகும். பிற் காலத்தில் 'வயலின்' அல்லது 'ஆர்மோனியம்' பயன் படுத்தப்பட்டுள்ளது. பாகவதர் தம் கையில் வைத்தி ருக்கும் இசைக்கருவியின் பெயர் 'சிப்ளா' என்ப தாகும்.

அரிகதை காலட்சேபம் வெற்றி அடைவதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவர் பின் பாட்டுக்கார ராவர். இவர் பாகவதருக்கு நெருங்கிய உறவாகவோ மாணவராகவோ இருப்பார். பயிற்சிக் காலத்தும் பின் பாட்டுக்காரராக இருந்த பின்புதான் தாமே கதை காலட்சேபத்தை நடத்துந் திறம் பெறுவார். பாகவ தரின் பொருள்நிலைக்கேற்ப ஒருவரோ அல்லது இரு வரோ பின்பாட்டுக்கு அமைவர். இப்போது பின்பாட் டுக்காரர் இன்றியே கதை காலட்சேபம் நடைபெறு கிறது.



அரிகதை காலட்சேப நிகழ்ச்சி

தொடக்கக் காலத்தில் பாரதம், இராமாயணம், பாகவதம், அடியவர் பெருமைகள் ஆகியவற்றையே சொல்லி வந்தனர். இந்திய நாட்டுச் சுதந்திரப் போராட்ட எழுச்சிக்குரியதாக இக்கலை பயன்பட்டுள்ளது. இராமாயணம், பாரதம் போன்ற இதிகாசங்களை இன்று தொடர் நிகழ்ச்சியாகச் செய்து வருகின்றனர். அரசாங்கக் கொள்கைகளை மக்களிடம் பரப்புவதற்கும் இக்கலை பயன்படுகிறது. பெருந்தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கதை காலட்சேப முறைக்கு ஏற்ப அமைத்துச் சொல்லி வருகின்றனர். சுவாதித் திருநாள் மகாராசர் குசேலரின் கதையைக் காலட்சேப முறைக்கேற்ப அமைத்தார். நந்தனார் வரலாற்றைக் கோபால கிருட்டிண பாரதி, கதை காலட்சேப முறைக்கு ஏற்ப அமைத்துள்ளார்.

கதை காலட்சேபம் தமிழகத்தில் நான்கு பிரிவாக அமைந்து நடைபெறுவது மரபாகும். முதலில் பஞ்சபதி பாடுவர். (விநாயகர், சிவன், திருமால், ஆசான், அனுமன் ஆகிய ஐவரைப் பற்றிய பாடல்கள்). இரண்டாவது நாம சித்தாந்தம். (தலைப்பைத் தெளிவு செய்தல்). மூன்றாவது சரித்திர-பிராரம்பம். (தொடக்கம்). நான்காவது உபசம்காரம். (கதை காலட்சேபத்தின் தொடக்கத்தில் பாடிய பாடலைப் பாடி முடித்தல்) இந்த அமைப்பே மரபாகும். பஞ்சபதி பாடும் முறையை ஒருசில பெரிய பாகவதர்கள் பின்பற்றாமல் விநாயகர், சரசுவதி ஆகியோரைப் பற்றி மட்டும் பாடத் தொடங்குகின்றனர்.

கதை காலட்சேபத்தின் தொடக்கத்தில் கானடா, நாட்டை, தன்யாசி, ஆரபி, வராளி, சிரிராகம் ஆகிய இராகங்கள் பாடப்படும். முடிவில் சௌராட்டிரம், சுருட்டி, மத்தியமாவதி ஆகிய இராகங்களைப் பாடுவர். மகாபாரதம் சொன்னால் வியாச பாரதத்தையும், இராமாயணம் சொன்னால் வால்மீகி இராமாயணத்தையும்தான் சொல்லுவர். இன்று வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தையும், கம்ப இராமாயணத்தையும் சொல்லுகின்ற நிலை உருவாகி வளர்ந்துள்ளது. தமிழகத்துக் கதை காலட்சேபங்களில் தமிழகத்திற்கே உரிய குறவஞ்சி, பள்ளு, கும்மி, தெம்மாங்கு முதலிய பாடல் வகைகளும் பாடப்படுகின்றன. அருணாசலக் கவிராயர், மழவை சிதம்பர பாரதி, பாபநாசம் சிவன் முதலியோர் பாடல்களும் இடையிடையே பாடப்படும்.

ஆதி, உரூபக, மிசுர சாபு, செம்பை, உசி ஆகிய தாள வகைகளையே கதை காலட்சேபங்களில் பயன்படுத்துவர். சிறுபான்மையாகச் சிர திரிபுடை, கண்ட திரிபுடை ஆகிய தாள வகைகளைக் கையாளுவர். கதையின் நடுவே மிருதங்கம் தனியே வாசிப்பதற்கு

நேரம் ஒதுக்கப்படும். பின்பாட்டுக்காரரின் இராகக் கற்பனைக்கு ஒரு சில மணித்துளிகள் கொடுக்கப்படும். கதை சொல்லும் பாகவதருக்குச் சற்று ஓய்வு ஏற் படுத்துவதற்காகவே இம்முறையினை அமைப்பர்.

மருத்துவம், சோதிடம், நடப்பியல், அரசியல், குடும்பச்சூழல் பற்றிய செய்திகள், புதுமையான இராகங்கள், குட்டிக் கதைகள், பழமொழிகள், கடின சந்தப் பாடல்கள், நகைச்சுவை, பன்மொழிப் புலமை, நடிப்பு, நடனம், ஏற்ற இறக்கப் பேச்சு ஆகியவற்றைக் கதை காலட்சேபம் சிறப்புறுவதற்குச் சமயத்திற்கேற்ப அமைத்துக் கொள்வர்.

கதை காலட்சேபம் நடத்தும் பாகவதர்களுக்கு மக்களே பட்டங்கள் கொடுத்துச் சிறப்பித்தனர். அரி கதை திலகம், அரிகதை பூடணம், அரிகதை இரத்தி னம், அரிகதை சாம்ராட்டுப்போன்றவை பொதுவான பட்டங்களாகும். அரிகதை கேசரி, கீர்த்தனை குல சேகர, அரிகதை கலைவாணி ஆகியவை சிறப்புப் பட்டங்களாகும். தமிழக அரசு கலைஞர்களை ஊக் குவிக்கும் பொருட்டுக் ''கலைமாமணிப்'' பட்டத்தை நல்கி வருகிறது. அதில் பாகவதர்களும் இடம் பெற் றுள்ளனர். புதிய இராகங்களைக் கண்டறியும் திற னும் கவிபுனையும் ஆற்றலும் பாகவதர்கள் பெற்றி ருந்தனர்.

கோவில்களில் மட்டும் நடைபெற்று வந்த இக் கலை பொது நிகழ்ச்சிகளிலும், அரசாங்க நிகழ்ச்சி களிலும், பங்குபெறத் தொடங்கியது. தொடக்கக் காலத்தில் இரவு முழுவதும் நடைபெற்ற இக்கலை, இன்று இரண்டுமணி நேரத்திலிருந்து மூன்றுமணி நேரத்திற்குள் நிறைவுறும் நிலை அடைந்துள்ளது.

இனிய குரல் வளம், தோற்றப் பொலிவு, நினை வாற்றல், வாக்குத்திறன் பெற்றவர்கள் யாவரும் இக்கலையை மேற்கொள்ளலாம். இன்று ஒன்பது அல்லது பத்து வயதுச் சிறுமியரும் இக்லையைப் பயின்று நடத்தி வருகின்றனர்.

மராட்டிய கலையான கதை காலட்சேபக்கலை, தமிழகத்துக் கலைகளான, பாரதம் படித்தல், வில்லுப் பாட்டு, நாட்டிய நாடகம், தெருக்கூத்து ஆகியவற் றின் அடிப்படைக் கூறுகளோடு இணைந்துள்ளது.

இரா. குரு.

**அரிகரசாத்திரி, சி., (கி.பி. 19-நூ.)** திருநெல் வேலி மாவட்டத்திலுள்ள தென்காசியைச் சேர்ந்தவர்; வடமொழியில் வல்லுநர்; வடமொழியில் நூல்கள் இயற்றியும் பதிப்பித்துமுள்ளார்.

கௌடிலியரது அருத்தசாத்திரம், பாசமகாகவி யின் பிரதிமா நாடகம், 'சுவப்பந வாசவதத்தம்' ஆகிய நூல்களை இவர் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். நா.ஜெ.

**அரிகரபுத்திர உபாத்தியாயர்** பொய்கைப் பாக்கம் என்னும் ஊரினர்; கி.பி. 19-ஆம் நூற்றாண் டில் வாழ்ந்தவர்; கி.பி. 1871-ஆம் ஆண்டு 'விவேக சிந்தாமணி, என்னும் நூலை இயற்றியுள்ளார். இந் நூல், நீதி சிந்தாமணி, வெள்ளைச் சிந்தாமணி என வும் பெயர்பெறும். இதில் 135 பாடல்கள் உள்ளன. உலகியல் அறங்கள், மாந்தர் இயல்புகள் ஆகியன இந் நூலில் சிறப்புற விளக்கப் பெற்றுள்ளன. இந்நூல் நிசகுணயோகி தொகுத்த விவேக சிந்தாமணியின் வேறானதாகும். நா.ஜெ.

**அரிகேசரி பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1422 – கி.பி. 1463)** தென்பாண்டி நாட்டில் அர சாண்ட பிற்காலப் பாண்டியர்களுள் ஒருவர். இவர், தென்காசியில் உள்ள இறைவனுக்குக் கோயில் எழுப்பி அங்கு நாள் வழிபாடு நன்கு நடைபெறும் பொருட்டு இறையிலியாகப் பல ஊர்களை வழங் கினார். இக்கோயிலின் நித்திய, நியம பூசைகள் தவறாது நன்கு நடைபெறுவதற்காகச் சிவனடியார் களையும் வழித்தோன்றல்களையும் வேண்டி ஆறு கட்டளைக் கலித்துறைச் செய்யுள்கள் இயற்றியுள் ளார். இப்பாடல்கள் தென்காசிக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

தமிழிலும் வடமொழியிலும் புலமை மிக்க இவர் இறையன்பிலும் அறப்பணிகளிலும் ஆர்வம் மிகக் கொண்டவர். இவர்தம் பாடல்கள் எண்ணிக்கையில் குறைந்தனவாயினும் இனிமையும், உறுதியும் ஏற்ற மும் கொண்டவை. நா.ஜெ.

**அரிகேசரி பராங்குச மாறவர்மன்** பாண் டிய நாட்டை ஆண்ட மன்னர்களுள் ஒருவர்; கோச் சடையன் இரணதீரனுக்குப்பின் பட்டமேற்றார்; முத லாம் இராசசிம்மபாண்டியன் எனவும் அழைக்கப் பெற்றவர். கோச்சடையனின் மகனான இவர்தம் வெற்றிகளைச் சீவரமங்கலச் செப்பேடுகளும் வேள்விக் குடிச் செப்பேடுகளும் குறிப்பிடுகின்றன. இவர் பல்ல வரை வென்றார். இவர் மழகொங்கு நாட்டைக் கைப் பற்றிப் பாண்டிக் கொடுமுடியில் பசுபதி ஈசுவரரை வணங்கினார்; கங்க வேந்தனுடன் திருமணத் தொடர்பு கொண்டார்; வெண்பைப் போரில் சாளுக் கியரை வென்றார். இவர் பெரியாழ்வாரின் உடன் காலத்தவராகக் கருதப் பெறுகிறார். இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டியரின் மேலாண்மை சோணாட்டி லும் கொங்கு நாட்டிலும் பரவியது. இவர் கோசக சரம், துலாபாரம் முதலான பல தானங்களைச் செய்தவர். சமயப் பொறை உடையவர். ம.இரா.

**அரிகேசரி மாறவர்மன்** பாண்டிய மன்னர் களுள் ஒருவர். பாண்டிய மன்னன் செழியன் சேந்த னுக்கு மகன். சேந்தனது இறப்பிற்குப் பின்னர் மன்னர் ஆனார். வேள்விக்குடிச் செப்பேடுகள்

இவர் வெற்றிகளை விரித்துக்கூறும். இவர் பாழி, நெல்வேலி, செந்நிலம், புலியூர் முதலான போர்க் களங்களில் பொருது வென்று வாகை சூடினார். சேரர், சாளுக்கியர், பரதவர், குறுநாட்டவர் முதலானோரை வென்றடிப்படுத்தினார். இரணியகருப்பம், துலாபாரம் முதலான மகாதானங்களைச் செய்தவர். சைவ சமய வரலாற்றில் இவர் கூன்பாண்டியன், நின்றசீர் நெடுமாறன் என்று குறிக்கப்பெறுகிறார். தொடக்கக் காலத்தில் இவர் சமணராக இருந்து பின்னர் ஞான சம்பந்தரால் சைவரானார் என்று பெரிய புராணம் கூறுகிறது. இவர் பாண்டிய அரசினை விரிவு படுத்தினார். ம.இரா.

**அரிகோரப் போர் (கி.பி. 1791. மே. 15)** ஆங்கிலேயருக்கும் மைசூர் மன்னன் திப்புவிற்கும் இடையே நடைபெற்றது. இவர்களுக்கிடையே மூன்று போர்கள் நடைபெற்றன. (ஆங்கில-மைசூர்ப் போர்கள்) கி.பி. 1790-ஆம் ஆண்டு செப்டம்பர் 13-ஆம் நாள் சத்தியமங்கலத்தில் நடைபெற்ற போரில் ஆங்கிலப் படைத்தலைவர் திப்புவிடம் தோற்றதுடன் தலைதெறிக்க ஓடிக் கோயம்புத்தூரில் தஞ்சம் புகுந்தார். நிசாமுடனும் மராட்டியருடனும் முன்பே நட்புடன்படிக்கை செய்து கொண்டிருந்தார்.

எப்படியும் மைசூரை வென்றாக வேண்டுமென்பதே இந்திய ஆட்சித் தலைவர் காரன்வாலீசின் (Cornwallis) திட்டம். எனவே, அவரே சென்னை வந்து படைத்தலைமை ஏற்றுக் கொண்டார். இவரது ஆணைப்படி மெடோசு (Medows) சென்னையிலிருந்து தென்புறமும், ஆபர்குரோம்பி மேல்திசையில்மலபாரின் மறுபுறமும் தாக்கினர். வடக்குப் பகுதியில் நிசாமும் மராத்தியரும் தாக்குதல் நிகழ்த்த ஆணையிடப்பட்டனர். காரன்வாலீசு கீழ்த்திசைத் தாக்குதலுக்குத் தலைமையேற்றார். வேலூர் வந்து பெரும்படை திரட்டி, ஆம்பூர்க் கணவாய் வழியே மைசூரினுள் புகுந்தார். இருபடைகளும் அரிகோரம் என்னுமிடத்தில் கி.பி. 1791-இல் சந்தித்தன. கடுமையான போர் நடந்தது. திப்பு நாற்புறமும் எதிரிகளால் சூழப்பட்டார். வீரத்துடன் போர் புரிந்த போதிலும் தோல்வி கண்டார். சீரங்கப்பட்டணமும் வீழும் நிலையில் திப்பு ஒப்பந்தம் செய்துகொள்ள இசைந்தார்.

திப்பு தம் அரசில் பாதியை ஆங்கிலேயருக்கு விட்டுக்கொடுக்க வேண்டுமென்பதும், போர்க்கடன் கட்டி முடிக்கும் வரையில் அவர்தம் இரு புதல்வர்களும் ஆங்கிலேயரிடம் (பணையமாக) வளரவேண்டும் என்பதும் கூறப்பட்டன.

இவ்வெற்றியின் விளைவாக ஆங்கிலேயர் செல்வாக்கு மேலும் விரிவடைந்தது. மலபார் ஆட்சியும், குடகு அரசின் மீது மேலுரிமையும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. இப்போரினால் திப்பு சுல்தானுக்குப் பெரும்பொருள் இழப்பு ஏற்பட்டது. அடிமைத் தளையை அகற்ற முழுமூச்சுடன் போரிட்ட மாவீரன் திப்பு அண்டை அரசுகளின் ஆதரவின்மையால் தோல்வியுற நேரிட்டது.

**அரிச்சந்திர நாடகம்** அரிச்சந்திரனுடைய வரலாற்றினை நாடக வடிவில் அமைக்கப்பட்ட நூலாகும். அரிச்சந்திரன் வரலாறு பாரத நாட்டிலுள்ள பல்வேறு மொழிகளிலும் வரையப்பெற்றுள்ளது. இவ்வரலாற்றுக் கதை இயலாகவும் இசையாகவும் நாடகமாகவும் அமைந்து பண்டுதொட்டுப் பாரத மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து, பண்படுத்திவந்துள்ளது. தமிழ்மொழியில் அரிச்சந்திரபுராணம் என்னும் பெயரில் புலவர்கள் போற்றும் இலக்கிய வகையில் அமைந்த இவ்வரலாறு, உரைநடை நூலாகவும் அமைக்கப்பட்டுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், அரிச்சந்திரன் வரலாற்றுக் கதையினைத் தமிழில் படிக்கும் நாடகமாகவும் நடிக்கும் நாடகமாகவும் உருவாக்கும் முயற்சியில் பலர் ஈடுபட்டனர். மு.வ. கலியாண சுந்தரம்பிள்ளை, மெய் அரிச்சந்திரன் நாடகம் என்ற பெயரிலும், சாங்கியா பிள்ளை கி பி. 1899-ஆம் ஆண்டில் நீதிநெறி அரிச்சந்திர நாடகம் என்ற பெயரிலும் எழுதினார்கள். பின்னர்க் கி.பி. 1910-இல் பவானந்தம் பிள்ளை அரிச்சந்திர நாடகம் ஆக்கியுள்ளார். சிறந்த நாடகப் பேராசிரியர்களான சம்பந்த முதலியாரவர்களும் சங்கரதாசு சுவாமிகளும் அரிச்சந்திர நாடகத்தை எழுதியதோடு, தங்கள் நாடகக் குழுவினரால் நாடகமாக நிகழ்த்தியும் காட்டினர்.

அரங்கப்பிள்ளை, நரசிம்ம ஐயர், பரசுராமக் கவிராயர், வெங்கடராம உபாத்தியாயர், சிவசாமி, தண்டாச்சியா பிள்ளை, வீரலிங்க பாரதி, முத்தழக பாரதி ஆகிய பலரும் தனித்தனியே அரிச்சந்திர நாடகங்களை எழுதிச் சென்ற நூற்றாண்டில் வெளியிட்டுள்ளனர்.

வாய்மையைக் காக்க அரிச்சந்திரன், தன் நாடு, நகரம், மனைவி, மக்கள் ஆகிய எல்லா உடைமைகளையும் இழந்தான். முடிவில், சூளுரைத்த விசுவாமித்திர முனிவரைத் தோற்கடித்து, இழந்தவற்றையெல்லாம் மீட்டு, வாய்மை வெல்லும் என்பதை நிறுவிக் காட்டினான்.

பாமர மக்கள் இறை அருளைப் பெற அரிச்சந்திரன் கதையைக் கூத்தாக நடித்துப் போற்றுவர். படித்தவர்கள் வாய்மையின் சிறப்பினை வலியுறுத்த இந்நாடகத்தை மேடையேற்றிப் போற்றுவர். காந்தியடிகள்பால் இலங்கிய அளவற்ற உண்மை வேட்கைக்கு அரிச்சந்திர நாடகம் அடிப்படையாக விளங்

கிய தன்மையினை அவர்தம் சத்தியசோதனை உணர்த்துகிறது. சு.ச.

**அரிச்சந்திர மயான காண்டம்** என்பது அரிச்சந்திரன் வரலாற்றில் அவன் சுடுகாட்டில் பிணம் எரிப்பவனாக அடிமை வாழ்வு வாழும் போது உள்ள துன்பக் கதையைச் சொல்லும் பகுதியாகும். இப்பகுதி அரிச்சந்திர மயான காண்டம் என்னும் பெயரில் கூத் தாகவோ நாடகமாகவோ நடித்துக் காட்டப்பட்டு வருகிறது. அவ்வாறு நடித்துக் காட்டும்போது இதனைக் காணும் மக்கள் அவல உணர்வால் நெஞ்சு நெகிழ்ந்து பெரிதும் ஈடுபடுவர். அரிச்சந்திரன், பொய் சொல்வதில்லை என்னும் விரதம் பூண்டவன். இவன், உண்மையைப் பேசுவதால் எத்தகைய இழப்பு வரினும் ஏற்றுக் கொள்வது என்னும் உறுதி கொண் டவன். இக்கொள்கையால் இவன் அடிமையாகிச் சுடுகாட்டில் ஏவல் புரியும் நிலைமை எய்தினான். செங்கோல் தாங்கிய கை, பிணஞ் சுடுகோல் தாங்கிப் பிணத்தை எரிப்பதில் ஈடுபட்டது. பெற்ற மகனைப் பிணமாகவும், தாலி கட்டிய மனைவியைக் கொலை காரியாகவும் காண நேர்ந்தது. எனினும், தம் கொள் கையினின்றும் மாறாமல் உறுதியுடன் இருந்தான். இறுதியில் வாய்மை வெல்ல, துன்பங்கள் நீங்கப் பெற்று இன்பம் எய்தினான்.

அரிச்சந்திரன் கதை நாடகமாகத் தொடர்ந்து பல நாட்கள் நடைபெறும். நாடகம் தொடங்கி நடைபெறும் நாட்களில் யாராவது நாடகம் முடிவ தற்கு முன் தம் சொந்த ஊருக்குத் திரும்ப வேண்டும் என்றால், மயான காண்டம் தொடங்குவதற்கு முன்பே போய்விடுவர். மயான காண்டம் தொடங்கி விட்டால் பின் அரிச்சந்திரன் நாட்டைத் திரும்பப் பெற்று அரசாள்வது வரை அனைவரும் தங்கி இருப் பர். நாடகத்தில் பாத்திரங்களின் துன்பத்தைத் தம் சொந்தத் துன்பமாகவே மக்கள் கருதி வந்தனர்.

கிராமங்களில் ஒரு நாள் மட்டும் கூத்து நடத்து வதாக இருப்பின், அரிச்சந்திரன் கதையை நடிப்பிற்கு எடுத்துக் கொள்ளமாட்டார்கள். காரணம், விழாவின் இறுதியில் துன்பியல் முடிவு வருவதை மக்கள் விரும் பாமையாகும். மூன்று நாள் கூத்து நடப்பதாயின் இரண்டாம் நாள் பொதுவாக இக்கதையை நடிப்பர். மயான காண்டத்தைக் கூத்தாக நடித்தால் மழை வரும் என்பது மக்களின் நம்பிக்கை. சு.ச.

**அரிச்சந்திரன்** இந்திய நாட்டில் தொன்று தொட்டு வழங்கி வரும் புராண மாந்தருள் வாய் மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் மன்னன் ஆவான். இறுதி வரை வாய்மை தவறாமல் வாழ்ந்த இவன் வரலாறு, கற்பார் உள்ளத்தை உருக்கும் தன்மையது. தமிழில் 'அரிச்சந்திர புராணம்', நெல்லூர் வீரகவிரா யர் என்பாரால் பாடப்பட்டுள்ளது. கி.பி. 1523-இல் இந்நூல் அரங்கேற்றப்பட்டது. வடமொழியில் வழங்கி வந்ததும், தமிழில் வெண்பாவில் பாடப்பெற் றிருந்ததுமாகிய அரிச்சந்திரன் வரலாற்றை இவ்வாசி ரியர் 1215 விருத்தப்பாக்களில் பத்துக் காண்டங்க ளாக அமைத்துப் பாடியுள்ளார்.

அரிச்சந்திர்ன் அயோத்தியைத் தலைநகராகக் கொண்டு கோசல நாட்டை ஆண்டுவந்த பேரரசன். சத்தியகீர்த்தி என்பான் இவன் அமைச்சன். கன்னோசி நாட்டு மன்னன் சந்திரதயன் மகள் சந்திரமதியைப் பற்றி முனிவர்கள் கூறக் கேட்டு அவள்பால் காதல் கொண்டான். சிவனுடைய வரத்தால் சந்திரமதி பிறந்தபொழுதே மங்கல நாணுடன் பிறந்தவள். அது யார் கண்ணுக்குத் தெரிகிறதோ அவரே அவள் கண வராவார் என்று இறைவன் அருளியவாறு, அரிச்சந் திரன் கண்ணுக்கு மட்டும் அது காணப்பட, அவன் அவளை மணந்துகொண்டு இனிது வாழ்ந்தான். அவர்களுக்கு உலோகிதாசன் என்னும் மகன் பிறந் தான். வாய்மை தவறாமல், வண்மை, வீரம் ஆகிய வற்றிற் சிறந்து செங்கோல் நடத்தி வந்தான் அரிச் சந்திரன்.

இந்நிலையில், தேவர்களும் முனிவர்களும் அவை யில் கூடியிருக்க, இந்திரன் 'மண்ணுலகில் வாய்மை தவறாது அரசாளும் மன்னவன் யாவன்?' என்று வினவினான். வசிட்டர் 'அரிச்சந்திரனே அத்தகைய வன்' என்றார். விசுவாமித்திரர் அதை மறுத்தார்; அரிச்சந்திரனைப் பொய்யனாக்கிக் காட்டுவதாகச் சூளுரைத்தார். மண்ணுலகில் வந்து விசுவாமித்திரர் வேள்வி செய்வதற்கு அரிச்சந்திரனிடம் பொருள் கேட்க, அவனும் கொடுக்க, அதனைப் பின்னர்ப் பெற் றுக் கொள்வதாகக் கூறினார். தம் சூழ்ச்சியால் நாட்டை வளமிழக்கச்செய்து, இருபுலைச்சியரை அனுப்பித் தம்மை மணந்து கொள்ளுமாறு அவனிடம் கேட்கச் செய்தார். அவன் மறுக்க, அதன்பின் தாமே சென்று வற்புறுத்த அரிச்சந்திரன், ''நாட்டை வேண்டி னும் தருவேன், இவர்களை மணக்க மாட்டேன்'' என் றுரைத்தான். அக் கூற்றைப் பயன்படுத்தி நாட்டைப் பெற்றுக் கொண்டு அவனை நாட்டைவிட்டுப் போகச் செய்து, முன்னர் வைத்துச் சென்ற பொருளை அப் போது தருமாறு கேட்க, வாய்மை தவறாத அரிச்சந் திரன் நாற்பது நாளில் தரவேண்டும் என்ற வரை யறைக்கு இசைந்து, தரகனாகிய சுக்கிரன் என்ற மறையவனையும் கூட்டிக்கொண்டு மனைவி, மகன், அமைச்சன் ஆகியோருடன் காசிக்கு வந்து சேர்ந்தான். தரகன் உடனே பொருளைத் தருமாறு சுடுமொழி கூற, மகனையும் தன்னையும் விற்றுக் கடனைக் கொடுக்குமாறு சந்திரமதி கூறினாள். அவ்வாறே அவர்கள் இருவரையும் விசுவாமித்திரர் விடுத்த

வேதியனிடம் விற்றுக் கடனைத் தீர்க்கத் தரகன் தனக்குக் கூலி தரவேண்டுமென்று கேட்க, அரிச்சந்திரன் தன்னையே புலையன் வீரவாகுவுக்கு விற்று, தரகனுக்குப் பொருள் கொடுத்தான். புலையன் ஆணைப்படி அரிச்சந்திரன் சுடலையில் பிணங்களை எரிக்கும் கடமை மேற்கொண்டான். கூலியாகத் தரும் பணம், கொள்ளியாடை இரண்டையும் புலையனுக்குக் கொடுத்துவிட்டு, வாய்க்கரிசியாகத் தருவதை மட்டும் தான் வைத்துக் கொள்ளலாம் என்பது புலையன் வீரவாகுவின் ஆணை.

உலோகிதாசன் முனிவர் வஞ்சனையால் பாம்பு கடிக்க இறந்தான். சந்திரமதி மறையவனிடம் இசைவு பெற்று மகனை எரியூட்டிவரப் புறப்பட்டாள். மகனுடலைக் கொண்டு வந்து சுடலையில் எரியூட்ட முற்பட்டபோது, அரிச்சந்திரன் கூலி கேட்க, அவள் தன்னிடம் ஒன்றும் இல்லை என்று மன்றாடக் கழுத்தில் தாலி உள்ளதே என்று அவன் சுட்டிக்கூற, பிறன் கண்ணிற்குத் தன் தாலி புலப்பட்டமையால் தன் கற்புப் போய் விட்டதோ என்று நொந்து புலம்பினாள். அவன் அவளையும் மகனையும் அறிந்து கொண்டான். அவளும் தன் கணவன் என்று உணர்ந்து கொண்டாள். வாய்மை தவறக் கூடாதென்று, மறையவனிடம் கூலிப் பொருள்களை வாங்கிவருமாறு அனுப்ப, அவள், வழியில் காசி மன்னன் மகன் பிணமாகக் கிடக்கக் கண்டு, தன் மகனோ என்று அருகில் சென்று பார்க்கக் காவலர்களால் பிடிக்கப்பட்டாள். மன்னனிடம் தானே கொன்றதாக உரைத்தாள். அவள் கொன்றிருக்க மாட்டாள் என்று ஐயுற்ற மன்னன், முனிவர் சூழ்ச்சியால், வேறு வழியின்றி, அவளை வெட்டிக் கொல்ல ஆணையிட்டான். வீரவாகு அரிச்சந்திரனிடம் அவளை ஒப்படைத்துச் சுடலையில் ஆணையை நிறைவேற்றக் கூறினான். அரிச்சந்திரன் வாய்மை தவறாது உண்மையாகப் பணிபுரியும் ஒழுக்கமுடையவனாதலால் கொல்லத் துணிந்தான். சந்திரமதியும் கொல்லத் தூண்டினாள். அப்போது விசுவாமித்திரர் ஓடிவந்து, ''நாட்டை உனக்கு நான் தரவில்லை'' என்று கூறினால் நாட்டையடைந்து இழந்த மகனையும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். இருவரும் ''பொய் சொல்ல மாட்டோம்'' என்று மறுத்துவிட்டனர். தேவர்களும் முனிவர்களும் மற்றையோரும் காண அரிச்சந்திரன் வெட்டிய வாள், சிவனருளால் மாலையாகிச் சந்திரமதி கழுத்தில் விழுந்தது. அனைவரும் அவன் வாய்மையைப் புகழ்ந்தனர். காசியரசன் மகனும் உலோகிதாசனும் முருகனருளால் உயிர் பெற்றெழுந்தனர். தோற்ற விசுவாமித்திரர் தாம் உரைத்தவாறு தம் தவத்தில் பாதியையும் நாட்டையும் தந்து அரசாள வேண்ட, அரிச்சந்திரன் தனக்குத் தகுதியில்லை என்று மறுக்கச் சிவபெருமான், தீக்கடவுளும் எமனும் முறையே மறையோனாகவும் புலையனாகவும் வந்தார்கள் என்றுணர்த்தி, அரசு புரியுமாறு ஆணை தந்தார். இந்திரனும் காசி மன்னனும் சிவன் பணித்தவாறு அரிச்சந்திரனுக்கு முடி சூட்டினர். தம்முடன் கொண்ட முன்பகைமையால் தான் விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்குத் துன்பம் விளைவித்தார் என்று வசிட்டர், விசுவாமித்திரர் வரலாற்றைக் காசிராசனிடம் விரிவாக எடுத்துரைத்தார். அரிச்சந்திரன் அரசு புரிந்து நெடிது வாழ்ந்தான்.

அரிச்சந்திரனைப் பற்றி வழங்கும் பிற செய்திகள்: இவன் திரிசங்குவின் மகன்; தனக்கு ஆண்மக்கட்பேறு வழங்குமாறு வருணனை வேண்டிப் பெற்றான். பெற்ற பின் தான் கூறியவாறு தன் மகனை வேள்வியில் பலியாக அளிக்கவில்லை. மகன், தன்னிலையை உணர்ந்து அஞ்சிக் காட்டுக்குச் சென்றான். அரிச்சந்திரனுக்கு வருணனால் மகோதரம் என்ற நோய் ஏற்பட்டது. இதனை அறிந்த மகன், காட்டிலிருந்து திரும்பி வரும் போது இந்திரனால் ஆறு ஆண்டுகள் தடை ஏற்பட்டுவிட, ஆறாம் ஆண்டினிறுதியில் அசிகிரதன் என்பவனிடம் சுனச்சேபனை விலைக்கு வாங்கித் தந்தையிடம் கொடுத்தான். சுனச்சேபனை வேள்வியில் பலியிட்டு வருணனை மனநிறைவு செய்து அரிச்சந்திரன் நோய் நீங்கப் பெற்றான். ந.மா.

**அரிச்சந்திரன் கதை** புராணம், விலாசம், கும்மி போன்ற இலக்கிய வகையாகவும் கூத்தாகவும் நாடகமாகவும் நாட்டுப் பாடலாகவும் பாரத நாட்டு மக்களிடையே செல்வாக்குப் பெற்றுத் திகழும் புராணக் கதைகளுள் ஒன்று.

இது, உண்மையை உயிருக்கும் உடைமைக்கும் மேலாக மதித்துப் போற்றிய மன்னன் அரிச்சந்திரனின் கதை. இக்கதை பாரத நாட்டில் மட்டுமன்றித் திபெத்துப் போன்ற நாடுகளிலும் பரவியுள்ளது.

அயோத்தி நாட்டு மன்னன் அரிச்சந்திரன். இவன் மனைவி சந்திரமதி; மகன் உலோகிதாசன். இவன் உண்மை பேசுவதைத் தன் வாழ்வியற் கொள்கையாகக் கொண்டவன். இவனைப் பொய் சொல்ல வைப்பதாகக் கூறி விசுவாமித்திரர் அதனை நிறைவேற்றும் முயற்சியில் ஈடுபட்டார். இருவருக்கும் நடந்த இந்தப் பலப்போட்டியில் அரிச்சந்திரன் தன் நாடு, நகரம், அரசு அனைத்தையும் இழந்தான். பின்னர் இன்னொரு நாட்டில் தன் மனைவியை விலை கூறி விற்றுத் தானும் சுடுகாட்டினைக் காவல் காக்கும் புலையனிடம் அடிமையானான். தன் மகன் பிணமான போது அவனை எரிக்க வந்த தன் மனைவியிடமே பணம் கேட்கும் நிலை தோன்றியது. அதற்காக அவளது தாலியையும் பணயமாகக் கேட்டான். மனைவி மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு அவளை வெட்டுமாறு ஆணை வந்தபோது அதையும்

ஏற்று அவன் அவள் கழுத்தை வெட்டும்போது, வெட்டிய வாளுக்கு மாறாக அவள் கழுத்தில் மாலை விழுந்தது. இறுதியில் வாய்மை வெல்ல அரிச்சந்திரன் இழந்த பொருளையும் மனைவியையும் எய்தினான்.

இக்கதையை, வீரராகவக் கவி 1215 விருத்தங்களில் அரிச்சந்திர புராணம் என்னும் பெயரில் தமிழில் பாடியுள்ளார். அரிச்சந்திரக் கும்மி, அரிச்சந்திர இயட்சகானம், அரிச்சந்திர பாகவத மேளா ஆகிய வகைகளிலும் இக் கதை அமைந்துள்ளது. அரிச்சந்திர விலாசம் என்னும் பெயரிலும் கவிராயர் பாடியுள்ளார். வடமொழி தேவி பாகவதத்தில் இம் மன்னனின் கதை கூறப்பட்டுள்ளது. நெல்லூர் வீரன் என்னும் ஆசுகவிராயர் இக் கதையை வில்லுப் பாடலாகப் பாடியுள்ளார். வாய்மையின் மேன்மையினை விளக்கி நிற்கும் இக் கதை இந்திய மொழிகள் பலவற்றில் திரைப்படமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. காந்தியடிகளின் வாய்மை நாட்டத்திற்கு இக்கதை அவருடைய இளமைக் காலத்தில் வித்தாக அமைந்து விளங்கிய செய்தியினைத் தம் சத்திய சோதனையில் அவர் குறிப்பிட்டுள்ளார். சு.ச.

**அரிச்சித்திரம்** என்பது உலோகத் தகட்டில் அமிலத்தைக் கொண்டு அரித்து உண்டாக்கப்படும் சித்திரமாகும். உலோகத் தகட்டில் அல்லது மரத்தில் செதுக்குவது செதுக்கும் சித்திரம் ஆகும். இதில் சித்திரப் பகுதி மேடாக இருக்கும். ஆனால் அரிச்சித்திரத்தில் சித்திரப்பகுதி அரித்து எடுக்கப்பட்டுப் பள்ளமாக இருக்கும்.

செப்புத் தகட்டின் மீது அரக்கு, மெழுகு போன்றவைகளைப் பூசி அரிகளம் ஏற்படுத்தவேண்டும். அதை அனலில் காட்டிப் புகையூட்ட வேண்டும். இவ்வாறு செய்வதனால் சித்திரம் வரையும் பொழுது அது கண்ணுக்குத் தெரியும். அதன்பின் ஓவியர் தாம் வரைய விரும்பும் சித்திரத்தை அந்தத் தளத்தின் மீது ஒரு ஊசியினால் வரைய வேண்டும். கோடுகள் உள்ள இடங்களில் மட்டும் அரிகளம் கீறப்பட்டு உலோகப் பரப்பு வெளியே தெரியும்.

காகிதத்தின் மேல் சுண்ணாம்பு தடவி அதன்மீது சித்திரம் வரைந்து அந்தக் காகிதத்தை களத்தின்மீது வைத்துக் கொண்டு ஊசியால் வரையலாம். பின்னர்த் தகடு அமிலம் நிறைந்த பாத்திரத்திற்குள் வைக்கப்படும். ஐட்ரோக்ளோரிக் (Hydro Chloric Acid) அமிலமும் நைட்ரிக் (Nitric Acid) அமிலமும் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றன. தகடு அமிலத்தில் வைக்கப்பட்டதும் அமிலம் உலோகப் பகுதியை அரிக்கும். பின்னர்த் தகடு வெளியே எடுக்கப்படும். பலமுறைகள் இவ்வாறு செய்வதன்மூலம் சித்திரத்தில் உள்ள மிக மெல்லிய கோடுகளும் அரிக்கப்படும். பின்னர்த் தகட்டை எடுத்து அதன்மீதுள்ள களப்பொருள் கருப்பூரத் தைலம் கொண்டு நீக்கப்படவேண்டும். அரிச்சித்திரத் தகட்டை வைத்துக் கொண்டு பல படிவங்கள் எடுக்கலாம். தகட்டின்மீது ஒட்டிக் கொள்ளக் கூடிய வண்ணத்தைச் சித்திரத்தின் மீது பூசவேண்டும். இதன் மீது ஒரு காகிதத்தை வைத்து அழுத்தித் தாளில் சித்திரப் படிவம் எடுக்கலாம்.

இரெம் பிராண்டு (Rem Brandt) என்னும் தச்சு ஓவியக் கலைஞர் பல அரிச்சித்திரங்களைத் தீட்டினார். மூன்று சிலுவைகள் (Three Crosses) என்னும் அரிச்சித்திரம் இரெம் பிராண்டு வரைந்த மிகச் சிறந்த அரிச்சித்திரம் ஆகும். இந்தியாவிற்குக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வந்த ஆங்கிலேயர்கள் இந்தியாவின் பல்வேறு காட்சிகளை அரிச்சித்திரங்களாக வரைந்துள்ளனர்.

**அரிசமய தீபம்**, வைணவ சமய அடியார்களாகிய ஆழ்வார்கள், ஆசாரியர்கள் ஆகியோரின் வரலாற்றினை விருத்தப் பாக்களால் கூறும் தமிழ் நூல். இதன் ஆசிரியர் கீழையூர்ச் சடகோபதாசர், கி.பி.18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவருள் ஒருவராவார். இவர், தொண்டை நாட்டிலிருந்து தென்னாட்டுக்குச் சென்ற வல்லை காளத்தியப்ப முதலியார் மரபில் தோன்றியவர். இவர் சடகோபராமானுச முதலியார் என்னும் பெயரொடு, நாகப்பட்டணம் வட்டத்தைச் சார்ந்த கீழையூரில் மிக்க புகழோடு வாழ்ந்தார். இவருடைய புதல்வர் பத்தராவி முதலியார் ஆவார். இந்நூலாசிரியர் சிறந்த வைணவ சமயச் சீலராய் விளங்கிச் சடகோபதாசர் எனும் பெயர் பூண்டு, இந்நூலினை இயற்றியுள்ளார்.

இந்நூல், பரமபதச் சருக்கம், ஆதி யோகிச் சருக்கம், பத்தி சாரச் சருக்கம், பராங்குசச் சருக்கம், குலசேகரச் சருக்கம், பதுமைச் சருக்கம், முனிவாகனச் சருக்கம், விப்பிரநாராயணச் சருக்கம், பட்டநாதச் சருக்கம், கோதைச் சருக்கம், பரகாலச் சருக்கம், நாதமுனிச் சருக்கம் யாமுநச் சருக்கம், இராமானுசச் சருக்கம் ஆகிய பதினான்கு சருக்கங்கள் கொண்டமைந்துள்ளது. பெரியாழ்வார் திருமகளாகிய ஆண்டாளின் சரிதம் அவர் வரலாற்றில் அடங்குவதாலும், மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரின் சீடராய் அமைவதாலும் இவ்விரு ஆழ்வார்களின் வரலாறு தனித்தனியாக இந்நூலில் கூறப்படவில்லை. ஏனைய ஆழ்வார்களின் வரலாறுகளையும், நாதமுனிகள், யாமுனாச்சாரியார், இராமானுசர் ஆகிய ஆசாரியர்களின் வரலாறுகளையும் இந்நூல் விரிவாகக் கூறுகிறது. ‘வளைபொய்கை’ எனத் தொடங்கும் துதிக் கவியினை அடுத்து, நான்கு நான்முகச் செய்யுள்களையும் கொண்டு இந்நூல் தொடங்குகிறது.

இந்நூல் முதலாழ்வார்கள் முதல் இராமானுசர் வரையிலுள்ள வைணவச் சான்றோர்களின் வரலாறுகளையே கூறுகிறது. இராமானுசருக்குப் பின்னர் வைணவ ஆசாரிய பரம்பரை வடகலை தென்கலை எனப்பிரிவுபட்டுச் செல்வது நோக்கி இந்நூலாசிரியர் இராமானுசர் வரலாற்றோடு இதனை, நிறுத்திவிட்டார் என்று இந்நூலை 1904–ஆம் ஆண்டில் பதிப்பித்த சே. முத்துக் கிருட்டிண நாயுடு கூறுகின்றார். அதனால் இந்த நூல் வடகலை தென்கலையாகிய இருகலையினர்க்கும் உரியதாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலுக்குச் சே. முத்துக்கிருட்டிண நாயுடு எழுதிய பொழிப்புரையும், கா.ர. கோவிந்தராச முதலியார் எழுதிய உரையும் உள்ளன.

***அரிசிங் நால்வா*** பஞ்சாப் பகுதியின் பேரரசர் இரஞ்சித்சிங் என்ற சீக்கிய அரசரின் புகழ்பெற்ற படைத்தலைவர். கி.பி. 1834–ஆம் ஆண்டு மே மாதம் 6–ஆம் நாள் இவர் பெசாவர் கோட்டையைக் கைப்



அரிசிங் நால்வா

பற்றி அதைச் சீக்கியர் தம் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தார். அரிசிங் நால்வா (Hari Singh Nalwa) மாபெரும் வீரர்; நெஞ்சுரமும் துணிச்சலும் மிக்கவர்.

***அரிசித்துப் போர்***: கி.பி. 842–க்கும் 877–க்கும் இடையில் இலங்கையில் அரசராயிருந்தவர் இரண்டாம் சேனர் ஆவார். பாண்டியர்களைப் பழிக்குப்பழி வாங்க முயன்ற இவருடைய வரலாற்றைச் சூளவம்சம் விவரிக்கிறது. இரத்தினவசதா என்னுமிடத்தில் வைக்கப் பெற்றிருந்த புத்தர் பெருமானின் தங்க உருவச் சிலையை உடைத்த பாண்டியர்களைப் பழிவாங்க எண்ணிப் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்க முடிவு செய்த வேளையில், பாண்டிய அரச குடும்பத்தைச் சார்ந்த உறுப்பினர் ஒருவர் இலங்கைக்கு ஓடிச் சென்று,இரண்டாம் சேனரிடத்தில் தஞ்சம் புகுந்தார். இவ்வரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டு இரண்டாம் சேனர் பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தார். வெற்றிபெற வேண்டிப் பல்லவ மன்னர் நிருபதுங்கனுடனும் இவர் உடன்படிக்கை செய்து கொண்டார். இவ்விருவரின் கூட்டுப் படைகள் பாண்டிய நாட்டை வடக்கிலிருந்தும் தெற்கிலிருந்தும் தாக்கின. பாண்டிய அரசர் வடபால் படையெடுத்துப் பகைவர்களைச் சந்தித்து அரிசித்து (Arichit) என்னுமிடத்தில் நடந்த போரில் தோல்வி அடைந்தார்.

***அரிசில்கிழார்***: சங்கப் புலவர்களுள் ஒருவர். இவர்தம் இயற்பெயர் அறியக் கூடவில்லை. கிழார் என்னும் பெயரை நோக்க இவர் வேளாண் மரபினர் என்பது புலனாகிறது. இப்பெயரிலுள்ள அரிசில் என்பது பற்றிப் பல கருத்துகள் கூறப்பட்டுள்ளன. சோழ நாட்டில் கொள்ளிடத்திற்கு வடபாலுள்ள அரியலூர் என்பதன் மரூஉவெனச் சிலர் கருதுகின்றனர். மைசூர்ப் பகுதியிலுள்ள அரிசிற்கரை என்னும் ஊரே அரிசில் எனக் குறிப்பிடப்பட்டது என்று கூறுவாருமுளர். சோழ நாட்டில் கும்பகோணத்திற்கு அருகில் காவிரியின் கிளை ஆறாகச் செல்லும் ஓராற்றின் பெயர் அரிசில் என்பதாகும். அவ்வாற்றின் கரையில் இருந்த ஓரூரின் பெயர் அரிசில் என்பதும் அவ்வகையில் இப்புலவர் அரிசில் கிழார் எனப்பட்டார் என்பதும் கூறப்படுகின்றன.

பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்து இவரால் பாடப்பட்டதாகும். இப்பத்தில் இவர் தகடூரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையினைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இப்பத்தினைப் பாடியதற்காகப் பெருஞ்சேரலிரும்பொறை தானும் தன் மனைவியும் அரண்மனையினின்றும் புறம்போந்து, தன்பால் உள்ளனவெல்லாம் கொள்ளுங்கள் என்று கூறி, ஒன்பது நூறாயிரம் பொற்காசுகளையும் அரசு கட்டிலையும் வழங்கினான். புலவர் வேண்டுகோளை ஏற்றுப் பெருஞ்சேரலிரும்பொறை மீண்டும் தன் ஆட்சியைத் தொடர, இவர் அம்மன்னன்பால் அமைச்சராக விளங்கினார்.

ஏழு பாடல்கள் (146, 230, 281, 285, 300, 304,342) புறநானூற்றிலும், ஒரு பாடல் (193) குறுந்தொகையிலும் இவர்பெயரில் அமைந்துள்ளன. பேகனால் துறக்கப்பட்ட அவன்மனைவி கண்ணகியை அவன்பால் கூட்டுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கவிதைபாடி வேண்டிக்கொண்ட புலவர்களுள் இவரும் ஒருவர். பிரிந்து வருந்தும் கண்ணகி மகிழ்ந்து மலர் மாலை சூடுமாறு, பேகன் தேர் ஏறி அவள்பால் செல்வதுவே தாம் அவனிடம் பெற விரும்பும் பரிசில் என்று இவர் புறநானூற்றில் பாடியுள்ளார். இவர் அதியமான் தகடூர் பொருது வீழ்ந்த எழினியின் மீது கையறு நிலைச் செய்யுள் இயற்றியுள்ளார். இவருடைய குறுந்தொகைப் பாடல் முல்லைத் திணையில் தலைவி கூற்றாக அமைந்துள்ளது. கபிலர், பரணர், பெருங்குன்றூர்க்கிழார், மருதன் இளநாகனார், ஔவையார் போன்றோர் இவர் காலத்தில் வாழ்ந்த புலவராவர். தகடூர் யாத்திரை என்னும் நூலில் இவருடைய

பாடல்கள் உள்ளன என்னும செய்தி, தொல்காப்பியப் புறத்திணையியலுக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையினால் தெரிகிறது.

**அரிசிற்கரைப்புத்தூர்** தேவாரப் பாடல் பெற்ற சோழநாட்டுத் தலங்களுள் ஒன்று. தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திற்குத் தென்கிழக்கில் 5 கல் தொலைவிலுள்ளது. பேருந்தில் சென்று இவ்வூரினை அடையலாம். இவ்வூர் இப்போது அழகார் புத்தூர் என வழங்கப்படுகிறது. இதனைப் பெரிய புராணம் செருவிலிபுத்தூர் எனக் குறிப்பிடுகிறது. காவிரியின் கிளைநதிகளில் ஒன்றாகிய அரிசிலாற்றின் தென்கரையில் இது அமைந்துள்ளது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர்,சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆகிய மூவரின் தேவாரப் பாடல்கள் இத்தலத்திற்குள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தலத்தையும் இதன்கண் வீற்றிருக்கும் இறைவனையும் சுட்டி, 'அலைக்கும் புனல்சேர் அரிசில் தென்கரை அழகார் திருப்புத்தூர் அழகன்' என்று குறிப்பிட்டுள்ளார். கடுவாய்க்கரைப் புத்தூர் என்னும் பிறிதொரு சோணாட்டுத் தேவாரத்தலத்தினின்றும் வேறுபட்டுத் தெரிவதற்கு அரிசிற்கரை என்னும் அடைமொழி சேர்த்து அரிசிற்கரைப் புத்தூர் எனப்பட்டது. இத் திருத்தலத்தில் உண்மையானந்த முனிவர் பூசித்தார் என்பது கூறப்படுகிறது. இங்கிருந்து புகழ்த்துணை நாயனார் வழிபாடு செய்து முத்தியடைந்த செய்தியினைச் சுந்தரமூர்த்தி சிவாமிகள் 'அகத்தடிமை' எனத் தொடங்கும் தேவாரப் பாடலில் குறிப்பிட்டுள்ளார். இத்தலம் கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்த தலங்களுள் ஒன்றாகும். இறைவன் பெயர் படிக்காசளித்த ஈசுவரர்; இறைவியின் பெயர் அழகாம்பிகை.

**அரிசுடாட்டில் (கி.மு. 384-322)** பண்டைய கிரேக்கரின் ஒரு பிரிவினரான அயோனிய சமூகத்தைச் சேர்ந்தவர். அரிசுடாட்டிலை (Aristotle) ஒரு நடமாடும் கலைக் களஞ்சியம் என்று கூறவேண்டும். இவர் கிரீசின் புகழ்பெற்ற ஆதென்சு நகருக்கு அண்மையில் இசுதாகிரா (Stagira) என்ற ஊரில், கி.மு. 384–ஆம் ஆண்டில் நிகோமகசு (Nicomachus) என்னும் மருத்துவருக்கு மகனாகப் பிறந்தார். இவர் தந்தை, மகா அலெக்சாந்தரின் பாட்டனாருக்கு அரசாங்க மருத்துவராகப் பணிபுரிந்தவர். அச் சூழ்நிலை காரணமாக அரிசுடாட்டிலுக்கு இளமையிலேயே மருத்துவத் துறையில் ஓரளவு அனுபவம் இருந்தது. இவரும் ஒரு மருத்துவராக வரவேண்டுமென்று இவர்தம் பெற்றோர் விரும்பிய போதிலும், இவர் தத்துவத் துறையிலும் வேறு பல சமூகச் செய்திகளிலும் மிக்க நாட்டம் கொண்டிருந்தார். அதனால் பெற்றோரின் விருப்பம் நிறைவேற வில்லை. மேலும், இவர்



அரிசுடாட்டில்

அயோனிய–கிரேக்கப் பிரிவைச் சேர்ந்தவர். அயோனியர்கள் இயற்கையை விரும்பிப் போற்றி வந்தவர்கள்; அதைப்பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபாடு கொண்டவர்கள். ஆகவே, இவருக்கும் அத்தகைய வேட்கை மேலோங்கியிருந்தது. அக்காலத்தில் கல்வி கேள்விகளில் சிறப்புற்று விளங்கிய ஆதென்சு நகரம் அரிசுடாட்டிலின் கருத்தைக் காந்தம்போல் ஈர்த்தது. கி.மு. 367–இல் இவர் ஆதென்சுக்குச் சென்று, முதலில் ஐசோக்ரேட்டசு என்னும் ஆசிரியரிடத்தும், பின்னர்ப் பிளேட்டோ என்னும் பேரறிஞரிடத்திலும் கல்வி பயின்று, 17 ஆண்டுகள் மாணவராக விளங்கினார். அக்காலத்தில் பல அரசியல் தத்துவங்களை ஆர்வத்துடன் ஆராய்ச்சி செய்து, பிளேட்டோவின் கல்விக் கூடத்திற்குச் சிறந்த பெயரைப் பெற்றுத் தந்தார். மனிதனின் கூடி வாழும் தன்மையை விளக்கிச்சமுதாயத்தைப் பற்றிய அரசியல் நூலை ஓர் அறிவியல் நூலாக வகுத்த முதல் அறிஞர் அரிசுடாட்டில். அக் காலத்திய சூழ்நிலையில் இவர் தம் கட்டுரைகளிலோ நூல்களிலோ குறிப்பிடாத சிறப்பான செய்தி எதுவுமே இல்லை என்று துணிந்து கூறலாம். இவர் பெருமையை உணர்ந்த மாசிடோனிய (Macedonia) மன்னர் இரண்டாம் பிலிப்பு, இவரை அழைத்துத் தம் மகன் அலெக்சாந்தருக்குக் கல்வி பயிற்றுவிக்கத் தனி ஆசிரியராக அமர்த்தினார்.

இச் சேவையை அரிசுடாட்டில் 12 ஆண்டுகள் புரிந்த பின் கி.மு. 334–இல் ஆதென்சுக்குத் திரும்பிச்

சென்று, தாமே ''இலைசியம்'' (Lycium) எனப்பெறும் ஒரு கல்விக் கூடத்தை நிறுவினார். இக் கூடத்தின் தோட்டத்தில் இவர் தம் மாணவர்களுடன் நடந்து கொண்டே கல்வி பயிற்றுவித்ததால், இக் கல்விக் கூடத்திற்கு ''நடமாடும் கழகம்'' என்று ஒரு பெயர் ஏற்பட்டிருந்தது. இவரிடம் மிகுதியான மாணவர்கள் வந்து சேர்ந்ததால், பிளேட்டோ நிறுவிய கல்விக் கூடத்தைவிட இதன் சிறப்பு மிகுதியாக ஓங்கியது. இவர் மாணவர்களுக்குக் கல்வி கற்பித்ததுமட்டு மன்றி, நாளும் பொது மக்களுக்கும் அரிய போதனை களைச் செய்துவந்தார். தம் நண்பர் கிப்பியாசு (Hippius) என்பாரின் வளர்ப்புப் பெண் ஒருத்தியை இவர் திருமணம் புரிந்திருந்தபோதிலும், வாழ்க்கை யின் பெரும் பகுதியைத் தம் ஆராய்ச்சிகளிலேயே கழித்தார். இவரது இல்வாழக்கை பற்றி மிகுதியாகக் குறிப்புகள் கிடைத்தில. இவர் கல்விக் கூடத்தில் ஒரு பொருட்காட்சியும் அமைந்திருந்தது. இவர் தம் மாணவர்கள், பல்வேறு இடங்களிலிருந்து அனுப்பிய அரும்பொருள்களை அங்கே சேகரித்து வைத்திருந் தார். தம் மாணவரான அலெக்சாந்தர் உலகின் பல இடங்களிலிருந்து கொண்டுவந்த பொருள்கள் பல வற்றை அப்பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பியிருந் தார். அலெக்சாந்தர் பாரசீகத்தை வென்ற பிறகு ஏறத்தாழ ஒரு கோடி உரூபாய் மதிப்புள்ள பொருள் களை அரிசுடாட்டிலுக்குப் பரிசாக வழங்கினார். ஆனால், இறுதிக் காலத்தில் அரிசுடாட்டில்-அலெக் சாந்தர் நல்லுறவு பாதிக்கப்பெற்றது. இதற்குக் காரணமாக இருந்தவர் காலிசுதனீசு (Callisthenes) என்ற அலெக்சாந்தரின் அரசியல் ஆலோசகர் என் பது கருதப்படுகிறது. காலிசுதனீசும் அரிசுடாட்டிலும் நெருங்கிய நண்பர்கள். காலிசுதனீசு உண்மையை அஞ்சாமல் கூறும் இயல்புடையவர். அவரை ஒருவர் ''மிகச் சிறப்பான நிலைமைக்கு நீர் வரவேண்டு மானால் அதற்குச் செய்யவேண்டியது யாது? என வினவினார். இக்கேள்விக்கு, அவர் அளித்த விடை ''தம்மைவிட மிகச் சிறப்பாக விளங்குபவரை ஒழித் துக்கட்ட வேண்டியதுதான்'' என்பதாகும். இதைக் கேள்வியுற்ற அலெக்சாந்தர் அவரைச் சிறையில் அடைத்து அங்கேயே இறக்குமாறு செய்து விட்டார். அத்தகைய மனவோட்டத்திற்கு, அரிசுடாட்டில் காரணமாக இருந்திருக்கக்கூடும் என்ற ஐயப்பாடு காரணமாக, அலெக்சாந்தர் அரிசுடாட்டிலைத் தம் பகைவராகக் கருதத் தொடங்கினார். ஆனால் தம் முன்னாள் ஆசிரியரைக் கொன்றுவிடவில்லை; சிறைப் படுத்தவும் இல்லை. அலெக்சாந்தர் கி.மு. 323 ஆம் ஆண்டில் இறந்த பின், அலெக்சாந்தரின் நண்பர்கள் அரிசுடாட்டிலை வெறுத்தனர். இதை உணர்ந்த அக் கலைஞர் இயோயா (Euboea) நாட்டில் உள்ள சால் சிசு (Chalcis) என்னும் ஊருக்கு ஓடி, அடுத்த ஆண் டில் (கி.மு. 322) அங்கேயே தம் பூத உடலை நீத் தார். இவர் இறந்ததற்கு அளவுகடந்த உழைப்பால் ஏற்பட்ட வயிற்றுக் கோளாறுதான் காரணம் என்று அவருடைய மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். பின் வரும் சந்ததியினருக்கு இவர் தம் நூல்களை மட்டும் அன்றி, ஓர் எடுத்துக்காட்டான வாழ்க்கையையும் விடுத்துச் சென்றுள்ளார். கிரேக்க வரலாற்றறிஞர் சே.பி.பியூரி, (J.B. Bury) அரிசுடாட்டிலை, ''அஞ்சாத சுயசிந்தனை என்னும் (கிரேக்க) மரபைக் காப்பாற் றிய பெருமையுடையவர்'' என்று சிறப்பித்துள்ளார். தம் வாழ்க்கையையே அறிவு வளர்ச்சிக்காக ஈடுபடுத் தியவர் இவர்.

இவர், 158 அரசியல் அமைப்புகளின் வரலாற்றை யும் வளர்ச்சியையும் ஆய்ந்து எழுதிய நூல், அரசியல் (Politics) என்பது. அரசியலே அன்றி, மனித வாழ்க் கைக்குத் தேவையான அனைத்தையும் அந் நூல் குறிப்பிடுகிறது. இதைத் தவிர இவர் எழுதியுள்ள நூல் வகைகளாவன: உளவியல், விலங்கியல், அளவை நூல், அரசியல் அமைப்பு, வானிலை இயல் (Meterology), மெய்யறிவு, இயற்பியல், செய்யுளியல், பேச் சுக்கலை, ஒழுக்கவியல், உயிர் நூல், புலங்கடந்த நுண் பொருள் ஆராய்ச்சிநூல், அழகுக் கலை முதலிய பல வாம். அரிசுடாட்டிலின் உளவளர்ச்சி, தொடக்கத்தில் பிளேட்டோவின் கற்பனை ஆராய்ச்சியில் தொடங்கி, அறிவியல் ஆராய்ச்சியில் முடிவுற்றது.

இலக்கியத் திறனாய்வு முறைக்கு உரிய சில அடிப் படை விதிகளையும் இவர் வகுத்துக்கொடுத்து அத் துறையில் மிகப் பெரிய மேதையாக விளங்கினார். உலகம் முதலிய அண்டகோளப் பொருள்களைப் பற் றிச் சிந்தித்து, எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இறைவன் ஒருவன் உளன் என்னும் முடிவுக்கு இவர் வந்திருந்தபடியால், தாம் எடுத்துக்கொண்ட அரசி யல் முதலிய எல்லாச் செய்திகளிலும் ஒழுக்கத்தை யும் நேர்மையையும் அதனதன் இயல்புத் தன்மை யையும் வற்புறுத்தியுள்ளார். ஒவ்வொரு பொருளுக் கும் முடிவு அல்லது முடிவான காரணம் ஒன்று உண்டு என்பதே இவர் நம்பிக்கை. எப்பொருளிலும் அதன் வெளி உருவத்திற்கும் அதன் உட்பொருளுக்கும் வேறுபாடு உண்டு எனவும் இவர் போதித்தார். இவ ருடைய ''அரசியல் நூல்'' இன்றும் விவாதத்திற்குரிய ஓர் அரிய கருவூலமாகத் திகழ்கிறது. உலகில் உள்ள உயரிய நூல்களின் பட்டியலில் இது இடம் பெற் றுள்ளதே இதற்குச் சான்றாகும். ஈராயிரம் ஆண்டு கட்கு முன்பு எழுதப்பெற்ற அந்நூல், இன்றும் கல்வி யாளர்களுக்கும் ஆட்சியாளர்களுக்கும் அரசியல் வாதி களுக்கும் பயனுள்ளதாக இருப்பதைக் காண்கிறோம். அளவை நூலில் ''சிலாசிசம்'' என்னும் விவாத

முறையை முதலில் வகுத்தவர் இவரே. இயற்கைப் பொருள்களைப் பற்றிய அறிவியற் கலைகளை முதன் முதலில் வகுத்தவரும் இவரே. ஓரளவு மருத்துவ அறிவு பெற்றிருந்ததால், மனித உறுப்புகளின் தன் மையை ஆய்ந்து அதற்கேற்ப ஒழுக்க விதிகளை வரைந் தார். அரசியல் தத்துவத்தையும் ஒழுக்க விதிகளை யும் இணைத்துப் பேசிய பெரியார் இவர். இவருடைய தத்துவச் கோட்பாடுகளைப் பிற்காலத்தில் புனிதர் தாமசு அக்வைனசு (St. Thomas Aquinas), இசு பினோசா (Spinoza), தெக்கார்ட்டே (Descartes), பிரான்சிசு பேகன் (Francis Bacon), இம்மானுவல் கான்ட்டு (Emmanual Kant) முதலிய அறிஞர்கள் நன்கு கற்றுணர்ந்து, அந்த அடிப்படையில் தத்தம் கோட்பாடுகளை விளக்கலாயினர்.

அரிசுடாட்டிலின் கருத்துகளில் தாம் வாழ்ந்த காலத்தின் தாக்கம் (Impact) காணப்படுகிறது. இசு பார்ட்டாவின் (Sparta) ஆதிக்கம் சிதைவுற்று, தீப்சின் ஆதிக்கம் ஓங்கிக் கொண்டிருந்த காலம் அது. தீப்சின் உயர்நிலையும் நிலைத்து இருப்பதாகத் தெரிய வில்லை. ஆகவே, அரசியல் மாறுபாடுகள் வந்து கொண்டே இருக்கும் என்பதை இவர் வலியுறுத்தி னார். வரலாறு, வட்டமாகச் சூழவரும் இயல்பினது; அதாவது, சகடக்காற் போலத் திரும்பத் திரும்ப நிகழும் செய்திகளை உடையது; அது மாறுபடாத பழமையை விளக்குவது; மேலும் வரலாறு என்பது ஒரு விளக்கம்; பழமை என்பது என்றும் மாறுபடா தது: இவை இவர்தம் வரலாற்று வரைவியல் கொள் கைகள்.

இவர் நீதி பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்துகள் பிளேட்டோவின் கருத்துகளுடன் மாறுபாடு உடையன வாக இருக்கின்றன. நீதியை, இவர் இரண்டு வகை களாகப் பிரித்தார். ஒன்று பொதுவான உலக நீதி. இது எல்லோராலும் பொதுவாகக் கடைப்பிடிக்கப் பட வேண்டிய தருமம் ஆகும். மற்றொன்று தனிப் பட்ட நீதி; அதாவது, ஓர் அரசு, அதன் மக்களின் தன்மைக்கு ஏற்ப, ஒவ்வொருவருடைய தகுதிக்கும் ஏற்ப விதிக்கும் சட்டங்கள் ஆகும்.

பிளேட்டோவின் பொது உடைமைக் கருத்துகளை யும் இவர் மறுத்துப் பேசுகிறார். பொதுவான சொத் துடைமை முறையில், மக்களுக்கிடையே மாறுபாடு களும் சச்சரவுகளும் ஏற்பட்டுப் பல இன்னல்கள் விளையக் கூடுமாதலால், ஒருமைப்பாடு தோன்றாது என்பது இவரது கருத்து. ஆகவே, அரசின் ஒற்றுமை உணர்வு என்ற கருத்தை அடிப்படையாக வைத்து அரசியலமைப்பின் உறவுகளை ஆய்வு செய்து, மக்க ளின் நலன் ஒன்றையே கருதி, அரசு இயங்கவேண்டும் என்று இவர் விளக்கியுள்ளார்.

பெண்டிர் நிலை பற்றிப் பிளேட்டோவும் அரிசு டாட்டிலும் வேறுபடுகின்றனர். மகளிர், தம் இல்லத் துயர்களிலிருந்து விடுபட்டு, அரசுக்குத் தொண்டு செய்ய வரவேண்டுமெனவும், அவர்களிடையே பொதுவுடைமை வளர வேண்டுமெனவும் பிளேட்டோ குறிப்பிட்டிருப்பதை இவர் ஏற்றுக்கொள்ளவில்லை. குடும்ப வாழ்க்கைதான் பெண்களுக்கு அழகு என்று வற்புறுத்திய இவர், பெண்களின் விடுதலை பற்றி எதுவுமே கூறவில்லை.

தத்துவ ஞானிகள் மன்னர்களாக மாட்சிமை பெறவேண்டும் என்னும் பிளேட்டோவின் கருத்தை யும் இவர் மறுக்கிறார். இவர் கருத்துப்படி ஓர் அரசி யல் வல்லுநனுக்கு இன்றியமையாத தேவை செயல் முறைப் பகுத்தறிவே தவிர, தத்துவ ஞானமன்று என்பதாகும்.

அரசியலின் தன்மை பற்றி இவர் மிகத்தெளிவாக விளக்கியுள்ளார். இவர் விரும்புவது ஒரு தனிப்பட்ட, தூய்மையான அரசியல் அன்று; சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் ஒரு கலப்பட அரசியலையே இவர் வரவேற்றார்.

தலைமை அல்லது இறைமை அதிகாரம் ஒருவ ரிடத்திருந்தால் அது முடியாட்சியாகும். அது, திறமைக் கேற்ப அமைவதாகும். இந்த ஒற்றை ஆட்சியாளர் சிறந்த குறிக்கோளினின்று விலகிச் சென்று விடக் கூடும். அப்பொழுது, அது வல்லாட்சி ஆகிறது. அதற்கு எதிர்ப்பு ஏற்படுவது இயற்கை. அதன் விளை வாகத் தலைமை அதிகாரம் சிலரிடத்திற்கு மாறும். உயர்ந்த குறிக்கோளினின்றும் வழுவாமல், இச்சிலர் தூய அரசாங்கத்தை நடத்தும் வரை, இதை ''உயர் குடியினராட்சி'' (Aristocracy) என்று போற்றலாம். ஆனால், காலப் போக்கில் இம் முறையில் குறைகள் தோன்றக்கூடும். அதன் விளைவாக அமைவது செல் வச் சிறுகுடியாட்சி (Oligarchy) ஆகும். இம் முறை யில் செல்வம் இல்லாத வறியவர்மீது செல்வச் சிறு குடியினர் ஆதிக்கம் செலுத்துவர். இது நிலைத்து நிற் காது. இதனை எதிர்த்து மக்கள் குடியாட்சியை அமைப்பார்கள். இதில் தலைமை அல்லது இறைமை அதிகாரம் எல்லாக் குடிமக்களிடத்திலும் மாறுகிறது. இதற்கு அரிசுடாட்டில் தந்துள்ள பெயர் அரசமைப்பு (Polity) என்பதாகும். அதாவது, மிதமான குடியாட்சி ஆகும். இம் முறையில், உடைமைக் கோட்பாடும் உரிமைக் கோட்பாடும் இணைந்து காணப்படும். நேர் முறை மக்களாட்சி என்றும் இதைக் கூறலாம். இங்கே, அரசியல் அலுவல்கள் யாவும் சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் ஆகியவற்றிடையே பிரிக்கப் பட்டு, அலுவலர்கள், தேர்தல்முறை, திருவுளச் சீட்டு முறை ஆகிய இரண்டும் கலந்த ஒரு கலவை முறை யில் அமர்த்தப்படுவார்கள். 'அரசமைப்பு' என்று இவ

ரால் கருதப்பட்ட சிறந்த ஆட்சி முறையும் சீர்கேடுக ளுக்கு உட்படுவது இயல்பு. இத்தகைய ஆட்சி தூய் மையற்றுப் போகும்பொழுது, குடியாட்சி அல்லது மக்களாட்சி அமைகிறது என்பது இவரது கருத்து. இன்றைய மக்களாட்சியை இவர் எதிர்மறை மக்க ளாட்சி என்று குறிப்பிடுகிறார். குழப்பங்கள் நிறைந்த இந்த மக்களாட்சியை எதிர்த்து முடியாட்சி மறுபடி யும் ஏற்பட்டு, அமைதி நிலவும் என்று கூறுவதன் வாயிலாக இவர், அரசியலமைப்பில் சுழற்சி மாறுதல் (Cyclical Change in Politics) தவிர்க்க முடியாதது என்பதை விளக்கியுள்ளார். இம்மாறுதலுக்குக் காரண மான புரட்சிகளைத் தவிர்ப்பது எந்த அரசுக்கும் ஒரு முதன்மையான பணியாகும் என்பதையும் இவர் வற்புறுத்தியுள்ளார். அரசியல் நன்முறைகளைக் கடைப்பிடித்து ஒழுகுதல் நற்பயனை விளைவிக்கும் என்பதும் இவர் கோட்பாடு. சிறப்பாக, இவர் குறிப் பிடுவது சட்டத்தை மதித்து மக்கள் நடப்பார்களே யானால், அதனால் அவர்களுக்கு நன்மை உண்டு என்பதாகும். அரசியலமைப்புக்கு உட்பட்ட வாழ்வை அடிமைவாழ்வு என்று கருதாமல், உயர்ந்த நலன் பயக்கும் வாழ்வு என்று நம்பி, அதற்கு யாவரும் ஒத் துழைக்க வேண்டும் என்பது இவருடைய அவா. அர சைப் பற்றிய பல்வேறு கருத்துகள் நிலவிய அப்பழங் காலத்தில், அரசின் குறிக்கோள், "மக்கள் நல் வாழ்க்கை ஒன்றே" என வலியுறுத்திய பெருமை இவ ருக்கே உரியது. ஒவ்வொரு கட்டத்திலும் இயற் கைக்கு இவர் தனி மதிப்புத் தருகிறார். செயற்கை இயற்கையை ஒட்டியதாக இருக்க வேண்டுமென்ப தும், இயற்கையை ஒத்தே அது அமையும் என்பதும் இவர் கோட்பாடுகள். அரசின் தோற்றத்தை விளக் கும் பொழுதும், வேறுபலர் கூறியுள்ள ஒப்பந்தக் கோட்பாட்டை (Contract Theory) இவர் ஒப்புக் கொள்ளவில்லை. குடும்ப வாழ்க்கையினின்று இயல் பாகவே விரிவுற்று அரசு தோன்றியது என்பது இவ ரது கருத்து. உரிமை என்பதற்கு இவர் தரும் பொருள் போற்றற்குரியது. அதாவது, வாழ்க்கையின் குறிக் கோள், தமக்கு நலனைத் தேடிக் கொள்வதுடன், பிற ருக்கும் நலனை நாடி, அதன் வழியாகத் தம்முடைய நலனையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ப தாகும். இந்த உரிமை சிதைவுறும் பொழுதெல்லாம் புரட்சியும் அரசியல் மாற்றமும் இயல்பாக அமையும் என்றும் இவர் விளக்கியுள்ளார். இவர்தம் அரசியல் கருத்துகள், அக்காலத்தில் மாறுபாடுகள் நிறைந்த கிரேக்க அரசியல் முறைகளின் தாக்கத்தால் உரு வாகியவை; அவை எக்காலத்திற்கும் பொருந்தா தவை என்ற குற்றச் சாட்டுகள் இருப்பினும், அடிப் படைக் கருத்தைப் பொறுத்தவரை இவருடைய விளக்கங்கள் பல இன்றும் மக்கள் சிந்தனையைத் தூண்டும் தன்மையன. அவற்றில், ஆன்மீகத் தன்மை யையும் தார்மீகத் திறனையும் காண முடிகிறது. சட்டமியற்றல், நிருவாகம், நீதி என்ற வகையில் அரசின் அதிகாரங்களைப் பிரிக்கும் கருத்து முதன் முதலில் இவரால் தோற்றுவிக்கப் பெற்றது என் பதும் நினைவுகூரத்தகும். ஆனால், பிற்காலத்தில் வளர்ச்சி அடைந்ததுபோல விரிவான முறையில் இவர் அதை விளக்கவில்லை; குறிப்பிட்டுக் காட்டிச் சென்றார். சட்டமியற்றும் பெரும் பொறுப்பைப் பெற்றவர்கள், என்னென்ன நற்குணங்களை உடைய வர்களாகவும், எத்தகைய தீய பண்புகளை விட் டொழித்தவர்களாகவும் இருக்கவேண்டு மென்பதை யும் இவர் விளக்கியுள்ளார். அடிமை முறையை ஆதரித்தார் என்ற குற்றச்சாட்டு இவர்மீது உளது. ஆனால், அப்பொழுது இருந்த கிரேக்க நகர அரசு களின் போக்கிற்கு ஏற்பத் தம் கருத்துகளை மாற் றிக் கொள்ள இவரால் முடியவில்லை. மக்கள் முன் னேற்றத்திற்குச் சிலர் அடிமைகளாக இருக்க வேண்டி யது இன்றியமையாதது என்பதும், அவர்கள் குடி யாட்சி உரிமைகளைக் கேட்க முடியாது என்பதும் இவர் கருத்துகள் ஆகும். கிரேக்க நகர அரசை அடிப் படையாக வைத்து, இவர் வகுத்த அரசியல் கோட் பாடுகள், பிற்காலத்திய பல்வேறு வகைப்பட்ட அரசி யலமைப்பு வகைகளைச் சீர்தூக்கி ஆராய்வதற்கு உதவிபுரிகின்றன.

கிரேக்க அரசியல் எழுத்தாளர்களுள் தலைசிறந் தவராக விளங்கிய இவர் தம் இரு மனைவியர் மூலம் பீதியாசு (Pythias) என்ற ஒரு மகளையும் நிகோ மகூசு என்ற மகனையும் பெற்றிருந்தார். இவர் தம் மகளையும் மகனையும் பற்றி அதிகமாக அறியப் படவில்லை. ஆனால், இவர் விட்டுச்சென்ற எழுத் தோவியங்கள், இக்காலத்திய அறிஞர்கள் உள்ளங் களிலே ஊடுருவி நிலைபெற்றுவிட்டன. ஐரோப்பிய மறுமலர்ச்சிக் கால மேதையான இத்தாலியக் கவிஞர் தாந்தே (Dante) ஒரே வரியில் இவரை மதிப்பிட்டுள் ளார். அதாவது "அறிஞர்க்கு அறிஞர்" என்பதாகும் (Master of those who know). இது மிகவும் பொருத்த மான பாராட்டேயாகும். சை.வே.சி.

துணை நூல்கள்:

**Barker, Ernest.**, "The Political Thought of Plato and Aristotle", Rev., Ed., London, New York, 1959.

**Randall, John, R.**, "Aristotle," New York, 1960.

**Ross, William, D.**, "Aristotle", 5th Ed., Rev., London, 1949.

**Appadorai, A.**, "The Substance of Politics", London, 1972.

**அரிசுடைடு பிரியாண்டு (கி.பி. 1862-1932)** பிரான்சு நாட்டின் தலைமை அமைச்சராகப் பதினொரு முறை ஆட்சிபுரிந்தவர். நான்டெசு (Nantes), என்னும் ஊரில் பிறந்த இவர், வழக்குரைஞராகவும் பத்திரிக்கையாளராகவும் பணியாற்றியபின், 1902-இல் சமதருமவாதி (Socialist) யாகப் பொதுமக்கள் அவையின் உறுப்பினரானார். இவர் அப்பதவியைத்தம் வாழ்நாள் முழுவதும் அனுபவித்தவர். இவர் பிரான்சு நாட்டில் திருச்சபைக்கும் அரசுக்கும் இருந்த அறுபடாத தொடர்பை எதிர்த்துச் சட்ட முன்வரைவொன்றைக் கொணர்ந்தபோது பொதுமக்களின் கருத்தைக் கவர்ந்தார். கி.பி. 1906-இல் தீவிரவாதிகளும் முடியரசுக் கட்சியினரும் இணைந்த கூட்டாட்சியில் அமைச்சராகப் பொறுப்பேற்றார். இதன் விளைவாகச் சமதருமக்கட்சி இவரைக் கட்சியிலிருந்து வெளியேற்றியது. கிளமன்சு (Clemenceau) என்பாரின் அமைச்சரவையில் இவர் நீதித்துறை, பொது வழிபாட்டுத் துறை அமைச்சராகப் பணிபுரிந்தார். 1909-இல் இவர் தலைமை அமைச்சரானார். தொழிலாளர் குழப்பத்தைக் கட்டுப்படுத்த இவர் அரும்பாடுபட்டார். 1915 முதல் 1917 வரை முதல் உலகப் போரின் போது தலைமை அமைச்சராகப் பதவி வகித்த பிரியாண்டு, தீர்மானமான முடிவுக்கு வர இயலாத தலைவராக இருந்தமை இவருடைய பெருங்குறையாகும். எனினும் 1920-இல் சர்வதேசச்சங்கத்தின் (League of Nations) இன்றியமையாமையினை வலியுறுத்திப் புகழ் பெற்றார். 1926-இல் இவருக்கும் இசுட்ரெசுமன் (Stresemann) என்பாருக்கும் கூட்டாக, அமைதிக்கான நோபெல் பரிசு கிட்டியது. 1927-இல் அமெரிக்க ஐக்கிய நாட்டின் வெளியுறவு அமைச்சராக இருந்த கெல்லாக்கு (Kellogg) என்பாருடன் இணைந்து பன்னாட்டு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கினார். போர் வெறியைத் தவிர்க்க வேண்டிக்கொள்ளும் அவ்வொப்பந்தத்தை 65 நாடுகள் ஆதரித்தன. அரிசுடைடு பிரியாண்டு (Aristide Briand) 1932-இல் காலமானார்.

**அரிசேனர்** அலகாபாத்துக் கற்றூண் சாசனத்தை வரைந்தவராவார். அலகாபாத்தின் தொன்மையான பெயர் பிரயாகை என்பதாகும். இவர் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சமுத்திரகுப்த மாமன்னரின் மெய்க்கீர்த்தியை வடமொழியில் இக்கற்றூணில் அரிசேனர் (Harishena) பொறித்துள்ளார். 33 வரிகளைக் கொண்ட இம்மெய்க்கீர்த்தி பல பகுதிகளில் சிதைவுண்டுள்ளது. சமுத்திரகுப்தரின் வெற்றிகளைக் குறிப்பாகத் தென்னிந்திய வெற்றிகளைக் குறித்து அறிய உதவும் அருமையான சான்றாக இதைக் கூறலாம். அரிசேனர் சமுத்திர குப்தரின் படைத் தளபதியாக இருந்தவர். இவர் கவிபாடும் ஆற்றல் பெற்றவர் என்பதனைச் சாசனத்தால் அறியலாம். சமுத்திரகுப்த மாமன்னரின் அவைப்புலவர் என்றும் அரிசேனரைக் கருதலாம்.

**அரிஞ்சய சோழன் (கி.பி. 956-957)** சோழ வேந்தன் முதலாம் பராந்தக சோழனின் மூன்றாவது மகன் ஆவார். இராசகேசரி கண்டராதித்தன் இறந்த பின்னர்ப் பரகேசரி பட்டத்துடன் அரியணையேறினார். இவர் அரிகுலகேசரி எனவும் அரிந்தமன் எனவும் அழைக்கப்பட்டார். தம் மகளான அரிஞ்சிகைப் பிராட்டியை வாணர்குல மன்னனுக்கு மணமுடித்து வாணரது நட்பினைப் பெற்றார். தம் தந்தையான முதலாம் பராந்தகன் இழந்த திருமுனைப்பாடி நாட்டையும் தொண்டை நாட்டையும் மீட்க இராட்டிரகூடருடன் இவர் போரிட்டார். ஆற்றூரில் நடைபெற்ற போரில் இவர் உயிர் துறந்தார்; எனவே 'ஆற்றூர்த் துஞ்சிய தேவர்' என்னும் சிறப்புப் பெயரினைப் பெற்றார். முதலாம் இராசராசப் பெருமன்னன், தன் தந்தை வழிப்பாட்டனான அரிஞ்சயனுக்குப் பள்ளிப்படைக்கோயில் எடுத்தார். அது இன்று சோழேச்சுரம்' என அழைக்கப்படுகிறது. ம.இரா.

**அரிட்டைன் மட்கலன்** என்பது மத்திய தரைக்கடல் நாடுகளில் பயன்படுத்தப்பட்ட ஒருவகை மட்கலனைக் குறிக்கும். முதன்முதலில் இத்தாலி நாட்டில் 'அரிட்டியம்' (Arretium) என்ற இடத்தில் செய்யப்பட்டதால் அவ்வூரின் பெயரைக் கொண்டே அரிட்டைன் மட்கலன் (Arretine ware) என அழைக்கப்படுகிறது. 'அரிட்டியம்' எனும் ஊர் இக்காலத்தில் 'அரிசோ' (Arezzo) எனப்படுகிறது. அரிட்டைன் மட்கலன் இளஞ்சிவப்பும் பளபளப்பும் கொண்ட மெல்லிய மட்கலனாகும். சில மட்கலன்கள் அரக்கு நிறத்திலும் சில மஞ்சள் கலந்த சிவப்பு நிறத்திலும் காணப்படும். இம்மட்கலன்கள் வட்டில்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை இத்தாலியில் கி.பி. 50-ஆம் ஆண்டிற்குப் பின்னர் உண்டாக்கப்படவில்லை. இவை 'அரிட்டியத்தில்' மட்டுமன்றி இத்தாலியிலுள்ள புட்டோலி, மொடியா, இரெமினி ஆகிய பிற பகுதிகளிலும் வனையப்பட்டன. இம்மட்கலனின் உடைந்த பகுதிகள், தமிழகத்தில் பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு எனும் இடத்தில் அகழ்வாய்வின்போது கிடைத்துள்ளன. இவை கி.பி. 50 வரையுள்ள காலக் கட்டத்தைச் சார்ந்தவை. அரிட்டைன் மட்கலத் துண்டுகள் இங்குக் கிடைத்திருப்பதன் வாயிலாகத் தமிழகம் மிகப் பழங்காலத்திலிருந்தே உரோமானிய (இத்தாலி) நாடுகளுடன் கடல் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பதை அறியலாம்.

**அரித்துவாரம்** இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தில் சகரன்பூர் மாவட்டத்தில் உள்ள இந்துக்களின் தொன்மையான புண்ணியத்தலங்களுள் ஒன்று. கங்கை இமயமலையில் தோன்றி, அம்மலைப்பகுதி



அரித்துவாரம்

களினூடே பாய்ந்து, இருடிகேசத்தின் வழியாக வந்து அரித்துவாரத்தின் சமவெளியில் நுழைகிறது. இதைப் பழங்காலத்தில் கபிலா அல்லது குபிலா என்றனர். கபிலா என்னும் இருடி வாழ்ந்தமையால் இதனைக் கபிலத்தானம் என்றும் குறிப்பிட்டனர். அரித்துவாரம் (Hardwar) என்னும் சொல் திருமாலின் வாயில் என்று பொருள்படும். இங்கு 'அரியின் திருவடி' என்னும் பெயர் கொண்ட குளியற் கட்டம் உள்ளது. இங்குக் 'கும்பமேளா' திருவிழாவின்போது கோடிக்கணக்கான இந்துக்கள் கங்கையில் நீராட வருவார்கள். கங்கையில் நீராடினால் பாவங்கள் கழியும் என்பது இந்துக்களின் மரபு வழி நம்பிக்கையாகும். இங்கு நடைபெறும் கும்பமேளா பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை நிகழ்கிறது. அந்தத் திருவிழாவின்போது நாடெங்கிலுமிருந்து இந்துக்கள், பௌத்தர்கள், சமணர்கள் போன்றோர் வந்து கூடுகின்றார்கள். 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இவ்வூரின் மக்கள் தொகை 1,15,747 ஆகும்.

**அரிதாசர்** கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் அரிகண்டபுரம் என்றும் அரிவாசபுரம் என்றும் வழங்கப் பெற்ற அரிதை நகரில், காராளர் மரபில் தோன்றியவர். இவ்வூர் இப்பொழுது நாகலாபுரம் என்று வழங்கப்படுகிறது. இது தொண்டை நாட்டில் குன்றவர்த்தனக் கோட்டத்தில் இன்றைய ஆந்திர மாநிலத்திலுள்ள சித்தூர் வட்டத்தில் அமைந்துள்ளது. நாகலாபுரம் என்னும் பெயர் கல்வெட்டில், 'சந்திரகிரி இராச்சியத்து வேதகிரி தேசத்து அரிசாகபுரமான நாகலாதேவி அம்மன்புரம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் காலத்தில் விசயநகர அரசராக விளங்கிய கிருட்டிண தேவராயரின் தாயார் பெயர் நாகலாதேவி என்பதும், அவர் பெயரால் இவ்வூர் நாகலாபுரம் என்று வழங்கப்படுகிறது என்பதும் கூறப்படுகின்றன. இவ்வூர் வேதநதி எனப்படும் ஆரணி ஆற்றங்கரையிலுள்ளது.

அரிதாசரின் பெற்றோர் திருவேங்கடமுடையாரும் பெருமாள் முதலிச்சியும் ஆவர். உடன்பிறந்தோர் வடமலையண்ணகனையன் என்பவரும் தெய்வங்கள் பெருமாள் என்பவருமாவர். இவர்தம் அண்ணனான வடமலை அண்ணகனையன் அரசியலில் சிறப்புற்றுத் திகழத் தம்பியான திருமலையப்பர் திருமால் பக்தியில் சிறந்து விளங்கித் தம்மூரில் ஒரு திருமால் கோயிலைக்கட்டினார். இத் திருமலையப்பரே, அவர் கொண்ட திருமால் பக்தியால் அரிதாசர் என மக்களால் அழைக்கப் பெற்றார்.

அரிதாசரின் முன்னோர்கள் புலமை மிக்கவர்கள். இவர்கள் ஆற்றுவான்பாடி என்னும் ஊரிலிருந்து நாகலாபுரம் வந்தவர்கள் என்பதனைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவர் கிருட்டிண தேவராயரின் ஆணையால் பல ஊர்களுக்கும் அவைகளுக்கும் தலைவராக நியமிக்கப் பெற்றார்; பல திருக்கோயில்களின் விசாரணைப் பொறுப்பையும் அறங்கள் செய்யும் அனுமதியையும் பெற்று விளங்கினார்.

இவர் 'இருசமய விளக்கம்' என்னும் நூலை இயற்றியுள்ளார். பெயரளவில் சைவம், வைணவம் ஆகிய இருசமயங்கள் பற்றிய விளக்கந்தரும் நூல்போற் காணப்படினும், இது சைவக் கதைகளை மறுத்து, வைணவ சமய ஏற்றங் கூறும் நூலாகவே உள்ளது. இந்நூலை இவர் வடமொழியிலோ மணிப்பிரவாள நடையிலோ இயற்றாமல் தமிழில் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. சிவபுராணக்கதைக் கருத்துகளை மறுத்துத் திருமால் பரமாக இந்நூலை இயற்றியுள்ளார். இவர் தம் குருவாக வடிவழகிய நம்பி என்பவரையும் பெத்த பெருமாள் என்பவரையும் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் 2119 விருத்தங்களையும் 130 பரிச்சேதங்களையும் 26 படலங்களையும் கொண்டுள்ளது. இவர்தம் பிற நூல்கள் சௌமிய நாராயணப் பெருமாள் கும்மிப்பாட்டு, சௌமிய நாராயணப் பெருமாள் சோபனப்பாட்டு, சௌமிய நாராயணப் பெருமாள் திருநாள் வாகனக்கவி என்பனவாகும்.

**அரிதி** புத்த சமயத்தவர் வழிபடும் பெண் தெய்வம். அரிதி வழிபாடு இந்தியா, நேபாளம், திபேத்து, சீனா, சாவகம், துருக்கி ஆகிய நாடுகளில் இன்றளவும் சிறப்புற்று விளங்குகிறது. அரிதியைப் பற்றிப் பல்வேறு கதைகள் நிலவி வருகின்றன. இவள் இராசகிருகத்தின் பாதுகாப்பாளராக இருந்த சடகிரி என்பவனின் தங்கை. இவளது உண்மைப் பெயர் அபிரதி. இவள் காந்தார நாட்டுப் பாதுகாவலனான பான்சிகா (Pansika) என்பவனை மணந்தாள். இவர்

களுக்கு 500 குழந்தைகள் பிறந்தன. அபிரதி தனது கடைசிக் குழந்தையான பிரயங்கரன் என்பவனை மிகவும் நேசித்தாள்.

இவளுக்குக் குழந்தைகளைப் பிடித்து உண்ணும் பழக்கம் இருந்தது. இதனால், இவள் அரிதி என அழைக்கப்பட்டாள். அரிதி என்பதற்குக் குழந்தைகளைக் திருடுகிறவள் என்பது பொருள். இதன் விளைவாக இராசகிருக மக்களிடம் அச்சம் ஏற்பட்டு எங்கும் அழுகுரல்கள் எழுந்தன. மக்கள் புத்தரிடம் சென்று தம் குறையினை முறையிட்டனர். புத்தர் அரிதியின் செல்லப் பிள்ளையான பிரியங்கரனைத் தூக்கிச் சென்று அரிதிக்குப் பாடம் புகட்டினார். தன் குழந்தைக்காக வேதனைப்பட்ட அரிதியிடம் புத்தர், தம் குழந்தைகளின் பிரிவால் வாடும் பிற பெற்றோர்களின் துயரங்களை எடுத்துக்கூறினார். அரிதி மனம்திருந்தி மனித இறைச்சி உண்ணுவதை விட்டொழித்தாள். அன்று முதல் இராசகிருகத்தைச் சார்ந்த மக்களும் புத்தரின் ஆணைப்படி அரிதிக்கும் அவள் குழந்தைகளுக்கும் நல்ல உணவை அளித்து வந்தனர். இன்றும் வட இந்திய புத்த மடாலயங்களிலும் நேபாள மடாலயங்களிலும் அரிதிக்கும் அவள் குழந்தைகளுக்கும் உணவு படைக்கின்றனர். வட இந்திய,புத்த மடாலயங்களில் அரிதிக்கெனப் படையல் மேடைகள் இருந்ததாகச் சீனப் பயணி யுவான்சுவாங் என்பவரும் இட்சிங் என்பவரும் தம் குறிப்புகளில் சுட்டியுள்ளனர்.



அரிதி

சிற்பங்களில் அரிதி அமர்ந்த நிலையில் வடிக்கப் பட்டிருப்பாள். அவளது மடியில் குழந்தை ஒன்று இருக்கும். அவளைச் சுற்றிலும் 5 குழந்தைகள் இருப்பர். இவ்வைந்து குழந்தைகளும் இவளுக்கு 500 குழந்தைகள் உண்டு என்பதைக் காட்டுகின்றன. அரிதியின் ஒரு கையில் மாதுளங்கனி காணப்படும். இது இனப் பெருக்கத்தைக் குறிக்கும் அடையாளமாகும்.

சாவகத்தில் சண்டி மெந்துத்து (Chandi Mendut) என்னும் இடத்தில் காணப்படும் அரிதியின் சிற்பம் ஒரு குழந்தையை மார்போடு அணைத்தவண்ணம் தென்படுகிறது. திபெத்தில் காணப்படும் உருவச் சிலையில் அரிதி தாமரையில் அமர்ந்தவாறு உள்ளாள். அரிதி தன் கணவர் பான்சிகாவுடன் இருப்பது போன்றும் சிற்பங்கள் உள்ளன. இவன் குபேரப் படைத் தலைவனாவான். அசந்தா, எல்லோராக் குகைகளில் அரிதி, பான்சிகா சிற்பங்கள் பெருமளவில் காணப் படுகின்றன.

**அரிமர்த்தன பாண்டியன்** தமிழ்ப் புராணங்களில் இடம்பெற்ற பாண்டிய மன்னர்களுள் ஒருவன். இவனைப் பற்றிய செய்திகள் திருவிடையாடற் புராணத்திலும் திருவாதவூரர் புராணத்திலும் காணப்படுகின்றன. இவனிடத்தில் மாணிக்கவாசகர் அமைச்சராய் இருந்தார் என்று புராணங் கூறுகிறது.

ஏ.சி.பா.

**அரிமளம்** புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஓர் ஊர். புதுக்கோட்டையிலிருந்து 18 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் புகையிலைக்குப் பெயர் பெற்றது. கந்தசாமிக் கவிராயர் என்பார் இவ்வூரில் தங்கி அரிமளத் தலபுராணத்தைப் பாடியிருக்கிறார். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வாழும் ஊர்களுள் அரிமளமும் ஒன்று.

**அரிமா சங்கம்** அமெரிக்காவிலுள்ள சிகாகோ நகரில் 1917–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. மெல்வின் சோன்சு (Melvin Jones) என்பவர் இதைத் தோற்றுவித்தார்.

அக்காலத்தில் சிகாகோ நகரில் வெவ்வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்த செல்வாக்குடையோர் பலர் ஒன்று கூடிப் பல சிறு சங்கங்களை அமைத்திருந்தனர். அத்தகைய சங்கம் ஒன்றில் மெல்வின் சோன்சும் உறுப்பினராக இருந்தார். குறிப்பிட்ட நாள்களில் சங்க உறுப்பினர்கள் கூடி நல்ல விருந்து உண்டு கலந்து உரையாடுதல் வழக்கம். அவ்வுரையாடல்கள் தன்னலத்தையே மையமாகக் கொண்டிருந்தன. அவரவர் பொருளாதார நிலையை உயர்த்த எவ்வெவ் வகையில் எவரிடம் எத்தகைய உதவியை நாடலாம் என்பதை ஆராய்வதே அக்கூட்டங்களின் இன்றியமையாத நோக்கமாக இருந்தது. அதுபோன்ற பல சங்கங்கள் அமெரிக்க நாட்டின் பல நகரங்களில் இயங்கி வந்தன. மெல்வின் சோன்சுக்கு அச்சங்கங்களின் நடைமுறை மனநிறைவு கொடுக்கவில்லை. அவர் தன்னலத்திலும் சிறந்தது பொது நலமே என்பதை உறுதியாக நம்பினார். அச்சீரிய கருத்தைத் தம் சங்க உறுப்பி

னர்களுக்கு விளக்கி அவர்களை ஏற்றுக்கொள்ளச் செய்தார். நாட்டிலுள்ள பிற சங்கங்களும் இக் கருத்தை ஏற்றுச் செயற்படவேண்டுமென்று விரும்பினார்; அதற்கான திட்டமும் வகுத்தார். அனைத்துச் சங்கங்களையும் அழைத்து மாநாடு ஒன்று நடத்த ஆவன செய்தார். அமெரிக்க நாட்டில் 9 மாநிலங்களில் இயங்கி வந்த 22 சங்கங்கள், அழைப்பை ஏற்று 36 பேராளர்களை மாநாட்டிற்கு அனுப்பி வைத்தன. 1917–ஆம் ஆண்டு சூன் 7–ஆம் நாள் சிகாகோ நகரில் மாநாடு நடைபெற்றது. பொதுநலத் தொண்டின் மேன்மையையும் இன்றியமையாமையையும் மெல்வின் சோன்சு மாநாட்டில் விளக்கிக் கூறினார். மாநாடு அதனை ஏற்றுக்கொண்டது. மெல்வின் சோன்சின் பெருமுயற்சியால் சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டு அனைத்துலக அரிமாசங்கம், (International Lions Club) நிறுவப்பட்டது. முதல் தலைவராக இந்தியானா மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் வில்லியம் பி.உட்சு (Dr. William B. Woods) என்பவரும் செயலாளராக மெல்வின் சோன்சும் அமர்த்தப்பட்டனர். இச்சங்கம் இன்று உலகின் பல பகுதிகளில் உள்ள 157 நாடுகளில் 36, 359 சங்கங்களை அமைத்து 1 352,854 (அக்டோபர் 1983 இல்) உறுப்பினர்களைக் கொண்ட ஒரு பெரும் இயக்கமாக வளர்ச்சி பெற்றுள்ளது. "பணி செய்வோம்" (We Serve) என்பது அரிமா சங்கத்தின் அடிப்படைக்கொள்கை (Motto) ஆகும்.

அரிமா சங்கத்தின் குறிக்கோள்கள்: 1) அனைத்து நாட்டு நல்லுறவுக்கான கொள்கைகளை ஆய்ந்து, கொடை உள்ளத்துடன் விட்டுக் கொடுத்துப் பழகும் உணர்வை உலக மக்களிடையே உருவாக்கி வளர்த்தல். 2) நல்லரசுக்கும் நற்குடிமைக்கும் ஏற்ற நடைமுறைகளை உருவாக்கிச் செயற்பட உதவுதல். 3) குடிமை, சமுதாயம், பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பேணி மக்கள் நலமுடன் வாழ ஊக்கத்துடன் செயற்படுதல். 4) சங்கங்களிடையே நட்பையும் நல்லுறவையும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு பழகும் பண்பையும் வளர்த்து ஒற்றுமையை ஏற்படுத்தல். 5) கட்சி, மதம் ஆகியவை தவிரப் பொதுச் செய்திகளைக் குறித்து முழுமையாக ஆராய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல். 6) சங்க உறுப்பினர்களின் வருவாயைப் பெருக்கச் செய்வதை மட்டும் நோக்கமாகக் கொள்ளாது, அவர்களின் வாணிகம், தொழில் ஆகியவற்றில் திறமையை ஊக்குவித்துத் தரத்தையும் நேர்மையையும் வளர்த்தல்.

இந்தக் குறிக்கோள்களின் அடிப்படையில் உறுப்பினர்களின் பணி அமைதல் வேண்டும் என்று சங்கம் வலியுறுத்துகிறது.

அரிமா சங்கங்கள், மக்களுக்குப் பணிபுரிவதில் தனி ஒருவர் செய்யும் தொண்டைக் காட்டிலும், பலர் ஒன்று கூடி ஆற்றும் பணியே மிகவும் பயனுள்ளதாகும் என்ற அடிப்படையில் இயங்கி வருகின்றன. பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், சிறுவர் பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள், சாலைகள், இலவச கண் மருத்துவ முகாம்கள் போன்ற பலநற்பணிகளை அரிமா சங்கங்கள் செய்துவருகின்றன. அதன் ஆட்சிக் குழுவில் தலைவர், துணைத்தலைவர், செயலர், துணைச் செயலர், பொருளாளர் போன்ற வழக்கமான பதவிகளுடன் அரிமா அடக்குநர் (Lion Tamer) அரிமா முடுக்குநர் (Lion Twister) என்ற இருபதவிகளும் உள்ளன. இவர்களுள் அடக்குநர், சங்கச் செயல்முறைகளுக்கு உட்பட்டு உறுப்பினர்கள் நடந்து கொள்வதற்குத் துணை செய்வார்; முடுக்குநர், சங்கக் கூட்டங்களில் கலகலப்பு உண்டாக்க உறுப்பினர்களுக்குத் துணை செய்வார்.

ஒரு வட்டாரத்தில் உள்ள சங்கங்கள் அனைத்தும் இணைந்து ஓர் அரிமா மாவட்டமாகும். அம்மாவட்டங்கள் எண்களினால் குறிப்பிடப்படும். இத்தகைய ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஓர் ஆளுநர், மாவட்டத்திலுள்ள சங்க உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் படுவர்.

அனைத்து மாவட்ட ஆளுநர்கள், அனைத்துலக அரிமா சங்கத்தலைவரையும் துணைத்தலைவர்களையும் தேர்ந்தெடுப்பர். இச்சங்கத்தின் தலைமைச் செயலகம், அமெரிக்காவில் இல்லினாய்சு (Illinois) மாநிலத்திலுள்ள ஓக்புரூக்கு (Oakbrooke) என்னும் ஊரில் உள்ளது.

அரிமா சங்கத் தொண்டுகளுக்குத் துணையாகத் தொண்டுமனப்பான்மையினை வளர்க்கும்இரு துணை அமைப்புகள் உள்ளன. இவை இளைஞர்களுக்காக 'இலியோ சங்கம்' (Leo Club) என்னும் பெயரிலும், பெண்களுக்காகப் 'பெண்கள் அரிமா சங்கம்' (Lioness Club) என்னும் பெயரிலும் செயற்படுகின்றன.

இந்தியாவில் அரிமா சங்கம் தோன்றுவதற்குச் சாரணர் இயக்கம் காரணமாக இருந்தது. 1955–இல் அமெரிக்காவில் நடைபெற்ற உலகச் சாரணர் பெருவிழாவிற்கு இந்தியாவின் பேராளர்களாக மூன்று சாரண ஆணையர்கள் சென்றிருந்தனர். அவர்களில் ஒருவர் நோசீர் பண்டோல் என்பவர். இந்திய ஆணையர்களை விருந்தினராகப் பென்சில்வேனியா மாநிலத்தின் செக்சடன் அரிமா சங்கம் அழைத்திருந்தது. நோசீர் பண்டோல், அவர்கள் செய்து வரும் பணிகளைக் கண்டு வியந்தார். அதுபோன்ற இயக்கம் ஒன்று இந்தியாவிற்குத் தேவை என்பதை உணர்ந்து இந்தியா திரும்பியதும் சங்கம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். அதன் பயனாக, இந்தியாவில் முதல் அரிமா சங்கம் பம்பாய் நகரில் 3–2–1956–இல் தோன்றி

யது. செக்சடன் அரிமா சங்கமே பம்பாய்ச் சங்கத்தை முன்மொழிந்து அறிமுகப்படுத்தியது. நோசீர் பண்டோல் பம்பாய்ச் சங்கத்தின் முதல் தலைவர் ஆனார். பண்டோலின் சீரிய முயற்சியால் இந்தியாவின் பல பாகங்களிலுமுள்ள பெருநகரங்களிலெல்லாம் அரிமா சங்கங்கள் தோன்றின. இந்தியாவில் நோசீர் பண்டோல் அரிமா சங்கத் தந்தை என்ற புகழைப் பெற்றார்.

தென்னிந்தியாவில் முதற் சங்கம் பெங்களூரில் 1957–சனவரியில் தோன்றிற்று. அவ்வாண்டு ஆகசுட்டு மாதம் தமிழ்நாட்டில் சென்னையில் அரிமா சங்கம் தோன்றிற்று. இன்று இந்தியாவில் உள்ள 2000 அரிமா சங்கங்களில் 1,00,000 உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

கி. ப.

**அரிமிதைய மாவலி வாணராயர்** கி.பி. 9–ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வாணர் குல மன்னர். இவர் கங்க நாடு, புறமலை நாடு, திருக்கோவலூர் நாடு, கோவூர் நாடு, தாயனூர் நாடு, புற்ற நாடு முதலான பகுதிகளை ஆண்டு வந்தார். கி.பி. 9–ஆம் நூற்றாண்டளவில் வாணர்–நுளம்பர் பகைமை மிக்கது. இருப்பினும் நுளம்ப வேந்தர் ஒருவர் இவருடன் நட்புறவுடன் திருமண உறவும் கொண்டிருந்தார். சிலகாலம் சென்றபின் நுளம்பன், வாணன்மீது வஞ்சகமாகப் போர் தொடுத்தான். போரில் அரிமிதைய மாவலி வாணராயர் கொல்லப்பட்டார். நுளம்பன் தகடூர்ப் பகுதி உள்ளிட்ட பகுதிகளுக்கு வேந்தனானான். வாண அரசனின் உண்மை ஊழியரான ‘சக்கரக் குட்டியார்’ தகடூர் மீது படையெடுத்துச் சென்று நுளம்பனை வென்று, வாணரின் அரசினை மீண்டும் கைப்பற்றினார். ம.இரா.

**அரியக்குடி**, இராமநாதபுரம் மாவட்டத்தில் காரைக்குடிக்கு அருகிலுள்ள சிற்றூர்; வைணவத் தலம். பாடல்களாலேயே கடிதம் வரையும் அரங்கநாதன் செட்டியார் வாழ்ந்த ஊர். கருநாடக இசை மேதை அரியக்குடி இராமானுச அய்யங்கார் பிறந்த ஊர்.

**அரியலூர்**, திருச்சிராப்பள்ளி மாவட்ட உடையார்பாளையம் வட்டத்திலுள்ள ஓர் ஊர்; சௌராட்டிரர்கள் என்னும் பிரிவினர் நெய்யும் சேலைக்குப் பெயர் பெற்றது. இங்கு நடைபெறும் சந்தை தமிழ்நாட்டில் நடைபெறும் சந்தைகளுள் சிறப்பு வாய்ந்தது. இங்குள்ள கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனை வணங்குபவர்களுக்குப் பிணி நீங்குமென்பது மரபுவழி நம்பிக்கையாக உள்ளது. இவ்வூர் திருச்சி சென்னை செல்லும் குறுக்கு இருப்புப் பாதை வழியில் அமைந்துள்ள இரயில் நிலையத்தைக் கொண்டுள்ளது.

**அரியலூர் மழவராயர்கள்**: தமிழகத்தின் தொன்மை மிக்க அரசியல் பிரிவுகளுள் மழநாடும் ஒன்று. இம் மழநாடு, பண்டு மேல் மழநாடு கீழ்மழநாடு–என்னும் இருபெரும் பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. அரியலூர் கீழ் மழநாட்டைச் சேர்ந்தது. மழநாட்டில் வாழ்ந்தவர்கள் மழவர் என அழைக்கப்பட்டனர். மழவர் என்னும் இத்தொல்குடியினர் சிறந்த வீரர்களாய்த் திகழ்ந்தனர். சங்க நூல்களிலும் பண்டைய சாசனங்களிலும் மழவர் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

அரியலூர் மழவராயர் குடியின் முன்னவர்களாக இராமநயினார், பூமி நயினார் என்னும் உடன் பிறந்தோர் இருவர் இருந்துள்ளனர். இவ்விருவரும் விசயநகரப் பேரரசில் கசபதி வம்சத்தினரான திம்மராயரின் காலத்தில் அவர் துணையுடன், அரியலூர்ப் பகுதியை ஆண்டு வந்தனர். திம்மராயருக்குப் பின் அரியணையேறிய நரசிம்மராயர், இவ்விருவருக்கும் அனுமதி வழங்கி, மதுரையை ஆண்டு வந்த விசுவநாத நாயக்கரின் (கி.பி. 1529–64) கீழ்ச் சிற்றரசராக இராமநயினாரை அமர்த்தினார். ஊட்டத்தூருக்கும் சிதம்பரத்திற்கும் இடைப்பட்ட நிலப்பகுதிக்கு இராமநயினார் தலைவரானார்.

அரியலூரில் கோயில் கொண்டுள்ள ஒப்பில்லாத அம்மனின் அருளால், இராமநயினாரின் கால்வழியினர், ‘குன்றை ஒப்பிலாத மழவராயர்’ என்னும் பட்டத்தினைப் புனைந்து கொண்டனர். இம்மரபினைச் சேர்ந்த எட்டாவது மன்னர் அரங்கப்ப ஒப்பிலாத மழவராயர், கி.பி. 1651–இல் மதுரை நாட்டின் மீது முசுலிம் படையெடுப்பு நிகழ்ந்தபோது, மதுரையை ஆண்ட வீரப்ப நாயக்கருக்குப் படையுதவி அளித்து வெற்றி பெறச் செய்தார். இம்மரபின் 16–ஆம் அரசரான இராம விசய ஒப்பிலாத மழவராயர் மிகச் சிறந்த வீரராகத் திகழ்ந்தார்.

ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் தென்னிந்தியாவில் உண்டான ஆதிக்கப் போட்டியில் மழவராயரின் பங்கு யாது என்பது தெளிவாகத் தெரியவில்லை. கி.பி. 1765–இல் கருநாடக நவாப்பு அரியலூரைக் கைப்பற்றி, அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கினார். அரியலூர் மன்னரோ முதலில் தஞ்சைக்கும் பின்னர் மைசூருக்கும் சென்று தஞ்சம் புகுந்தார். கி.பி. 1780 இல் மைசூர் ஐதர் அலியின் தலையீட்டால், அரியலூர் மீண்டும் மழவராயர் வசம் வந்தது. கி.பி. 1783–இல் அரியலூர் அரசர், ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக் குழுவினால் நிலக்கிழாராக அமர்த்தப்பட்டு, வரிவசூல் செய்யும் உரிமையைப் பெற்றார். கி.பி. 1817–இல் அரியலூர் அரசருக்கு ஆங்கிலேயர் ‘சன்னது’ வழங்கினர். அச்

சமயம் அவருக்கு 57 கிராமங்கள் சொந்தமாய் இருந்தன. ஆனால் 1907-இல் இவரிடம் 7 கிராமங்களே மிஞ்சின. இறுதியாக, கி.பி. 1951-இல் இவையும் அகற்றப்பட்டு, நட்ட ஈடு வழங்கப்பட்டது. இவர்களின் 400 ஆண்டு ஆட்சியும் முடிவுக்கு வந்தது.

அரியலூர் மழவராயர்கள் கலைகளையும் கல்வியையும் ஆதரித்தார்கள். இவ்வூரிலுள்ள கோதண்ட இராமசாமி கோயிலில் விளங்கும் வனவாசம் செல்லும் இராமரின் நின்ற கோலம் அழகாக வடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள தசாவதாரச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன.

இவர்கள் கொடைப்பண்பு மிக்கவர்கள் என்பதனை அரியலூர் கிருட்டிணன் கோயில், உடையார் பாளையம், திருமழபாடி, திருப்பழூர் முதலான இடங்களிலுள்ள கோயில் கல்வெட்டுகளாலும் செப்பேடுகளாலும் அறியலாம்.

இவர்கள் வடமொழி, தெலுங்கு, தமிழ், இசை ஆகிய துறைகளில் வல்ல புலவர் பெருமக்களைத் தம் அரசவையில் அமர்த்திப் பேராதரவு நல்கினர். மழவராயர் சிலரும் புலவர்களாகத் திகழ்ந்தனர். கிருட்டிணைய மழவராயர் அந்தகக் கவி வீரராகவ முதலியாரையும், விசயரங்க ஒப்பிலாத மழவராயர் கடல் இருவாட்சிப் புலவரையும்,யுவரங்க மழவராயர் சுப்பிரமணியக் கவிராயரையும் பேணித் தக்க பரிசில்கள் வழங்கினர். இருவாட்சிப் புலவர் 'திருக்கை வளம்' என்னும் நூலை இயற்றி அரசவையில் அரங்கேற்றினார். தமிழறிஞர் உ.வே.சா. அவர்களின் தந்தையார் வேங்கடசுப்பையர், அரசவையில் இசைப் புலவராகத் திகழ்ந்தார். இதற்காக இவருக்கு இலந்தங்குழி என்னும் கிராமத்தில் 10 காணிநிலம் முழுமானியமாக அளிக்கப்பட்டது.

புலவர் சண்பகமன்னரும் அவரது கால்வழியினரும் அரியலூர் அரசவையில் தொடர்ந்து தமிழ்ப்பணி புரிந்தனர். நவராத்திரி நாடகம், சிவராத்திரி நாடகம், பார்வதி திருக்கல்யாண நாடகம், அரியிற் சிலேடை வெண்பா, இராமாயண வண்ணம், இராமாயணச் சிந்து, சார்ங்க சருக்கரை விநாயகர் பஞ்ச ரத்தினம், பஞ்சாயத்து மாலை, சிவபிரம்ம ஐக்கிய சரித்திரம் போன்ற இலக்கியங்கள் ஆங்கு மலர்ந்தவையே ஆகும். அவற்றில் ஒன்றும் இன்று கிடைக்கப்பெறவில்லை. அரியலூர் அரசவைப் புலவர்களின் மரபினர் இன்றும் அரியலூரில் வாழ்ந்து வருகின்றனர். அரியலூர் மழவராயரின் கலைப்பணி இன்றும் நின்று நிலவி, இவர்களது பெருமையைக் கூறுகிறது.

ம.இரா.


**அரியாட்னி** என்பவள் கிரேக்கப் புராணத்துள் வரும் ஒரு பாத்திரம். இவள் மினோசு (Minos) என்பவனின் மகள். தீசியசு (Theseus) என்பவன் கிரீட்டு (Crete) நகரைச் சார்ந்த மினோடர் (Minotaur) என்ற பூதத்தைக் கொல்ல முயன்றான். அப்போது அரியாட்னி (Ariadne) தீசியசுமீது காதல்கொண்டு கிரீட்டு நகருக்குள் செல்வதற்கு ஒரு நூற்கண்டைக் கொடுத்தாள். அதனைப் பெற்றுக் கொண்ட தீசியசு மினோடரைக் கொன்று, அரியாட்னியை அழைத்துக் கொண்டு தப்பி ஓடினான். பின்னர், நாக்சசு (Naxos) எனும் தீவில் இவளைக் கைவிட்டுவிட்டான். இத்தீவில் தையானிசசு (Dionysus) என்பவன் இவளைக் கண்டு மணந்து கொண்டான். கிரேக்க ஓவியங்களில் இவள் சிறப்பிடம் பெற்றுள்ளாள்.

**அரியானா** இந்தியாவின் இருபத்திரண்டு மாநிலங்களில் ஒன்று. இம்மாநிலம் 1966-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் நாள் அமைக்கப்பட்டது. முந்தைய பஞ்சாபு மாநிலம் அரியானாவையும் சேர்த்தேயிருந்தது. அதனை இரண்டாகப் பிரித்ததன் விளைவாகப் பஞ்சாபு, அரியானா (Haryana) என்னும் பெயரில் இரு மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. பஞ்சாபு மாநிலத்தில் இந்தி பேசும் மாவட்டங்களைத் தனியாகப் பிரித்து உருவானதுதான் இம்மாநிலம்.

அரியானாவின் வடக்கில் இமாசலப் பிரதேசமும் தெற்கில் இராசசுத்தானமும், கிழக்கில் உத்தரப் பிரதேசமும், மேற்கில் பஞ்சாபும் எல்லைகளாக உள்ளன. இந்தியக் குடியரசின் நேராட்சிப் பகுதியான தில்லி மாநகரை முப்பக்கங்களில் அரியானா சூழ்ந்துள்ளது.

அரியானாவை இமயமலையின் பகுதியான தராய், இந்திய கங்கைச் சமவெளி என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இச்சமவெளி செழுமையானது. கடல் மட்டத்திற்கு மேல் 230 மீட்டர் முதல் 300 மீட்டர் வரை வடக்கிலிருந்து தெற்காகச் சரிந்துள்ளது. அரியானாவின் தென் மேற்குப் பகுதி வறண்டு மணற்பாங்கானதும் தரிசானதுமாய் அமைந்துள்ளது. இம்மாநிலத்தில் ஆண்டு முழுதும் நீர் வரத்தினைக் கொண்ட வற்றா ஆறுகள் இல்லை.

காகர் (Ghaggar) என்னும் ஒரேயாறு இம்மாநிலத்தின் வடகோடியில் பாய்கிறது. மழையும் குறைவாகவே பெய்கிறது. எனவே ஆற்று நீர்ப்பாசனம் மிகக் குறைவு. பெய்யும் மழையை நிலம் உறிஞ்சிக் கொள்வதால் நிலத்தடி நீரைக் குழாய்க் கிணறுகள் மூலம் அரியானா மாநிலம் சிறப்பாகப் பயன்படுத்துகிறது. ஏறத்தாழ மூன்றிலொரு பங்கு நீர்ப்பாசனம் குழாய்க் கிணறுகள் மூலமே நடைபெறுகிறது. பெருமழை பெய்யும்போது சில வேளைகளில் வெள்ளப் பெருக்கு ஏற்படுவதுண்டு.




அரியானா

அரியானாவின் தட்பவெப்ப நிலை பெரும்பாலும் ஆண்டு முழுதும் குறிப்பிட்ட ஒரு முறையிலேயே அமைந்துள்ளதெனலாம். கோடையில் மிகுந்த வெப்பத்தையும் குளிர்காலத்தில் கடுங்குளிரையும் கொண்டிலங்கும் அரியானாவில் மே மாத வெப்பத்தின் அளவு 46° செண்டிகிரேடு வரை உயருவதுண்டு. சனவரியில் வெப்பத்தின் அளவு மிகக் குறைவு. பருவக் காற்று மழை சூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையிலும் குளிர்கால மழை திசம்பர் முதல் பிப்பிரவரி வரையிலுமாக இரு பருவங்களில் நன்கு பொழிகிறது.

அரியானா மாநிலத்தின் பரப்பளவு 44,222 ச.கி.மீ. 1981-ஆம் ஆண்டுக் கணக்கின்படி மக்கள்தொகை 1,28,50,902.

அரியானா மாநிலத்தில் பன்னிரண்டு மாவட்டங்கள் உள்ளன. அவை அம்பாலா, இசார் (Hissar), கர்னால் (Karnal), குர்காம், குருச்சேத்திரம், செண்டு (Zind), சிர்சா, சோன்பத்து, பரிதாபாத்து, பிவானி, மகேந்திரகார், இரோடக்கு என்பனவாம். அம்மாவட்டங்களில் பிவானியின் தலைநகர் நார்நாலாகும் (Narnal). ஏனைய மாவட்டங்களின் தலைமையிடங்கள் மாவட்டத்தின் பெயராலேயே வழங்கப்படுகின்றன. சண்டிகர் அரியானாவுக்கும் பஞ்சாபுக்கும் சேர்ந்த தலைநகரமாகும். அது அம்பாலா மாவட்டத்தின் வடகோடியில் பஞ்சாபிற்கும் அரியானாவிற்கும் இடையிலுள்ள புது நகரமாகும்.

1966-இல் இம்மாவட்டத்தில் தொழில் வளர்ச்சி மிகக் குறைவாக இருந்தது. ஆனால் இப்போது இம் மாநிலம் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. முறையான திட்டங்களினால் தொழில் முனைவர்கள் ஆக்கமும் ஊக்கமும் பெற்றுப் பல தொழிற்சாலைகளை நிறுவியுள்ளனர்.

அரியானா மாநிலத்திலுள்ள-பரிதாபாத்துவல்லபகர் தொழிற்சாலை வளாகம் இந்திய நாட்டிலேயே தலைசிறந்த தொழிற்சாலை மையமாக உருவாகியுள்ளது. குர்காம், சோன்பத்து, இரோடக்கு, பகதூர்கர், இசார், சகதாரி, பானிப்பட்டு, அம்பாலா போன்ற நகரங்கள் தொழிற்சாலை நகரங்களாகும். இன்று அரியானா தொழில்வளர்ச்சிக்கான சீரிய அடிப்படை கொண்டுள்ளது எனில் மிகையாகாது. இந்த மாநிலத்தில்1966-இல், 4500 ஆக இருந்த சிறு தொழிற்சாலை எண்ணிக்கை 1981-இல் 42,000 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் ஏற்றுமதியும் உரூ.4.55 கோடியிலிருந்து, 1981-இல் உரூ. 152 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் பயன்படுத்தப்படும் இழுவை உந்துகளில் (Tractors) மூன்றில் இரண்டு பகுதி அரியானாவில் செய்யப்பட்டனவாகும். அதேபோல் இந்தியாவில் உருவாகும் ஒவ்வொரு ஐந்து மிதிவண்டிகளுள்ளும் (Bicycles) ஒன்று இம் மாநிலத்தில் உருவாகின்றது. இந்தியாவில் உண்டாக்கப்படும் அறிவியல் தொடர்பான கருவிகளுள் 35 விழுக்காடு கருவிகள் இம் மாநிலத்திலுள்ள அம்பாலாவில் செய்யப்படுகின்றன.

இந்தியாவின் இராணுவத் தளவாடங்களில் 60 விழுக்காடு இம்மாநிலத்தைச் சார்ந்த இயமுனா நகரிலும், கராணுவத்தினர் பயன்படுத்தும் உரோமக் கம்பளங்களுள் 75 விழுக்காடு பானிப்பட்டிலும் உருவாக்கப்படுகின்றன. பானிப்பட்டு நகரினை 'இந்தியாவின் நெசவாளர் நகர்' என்பர். சண்டிகருக்கருகில் பஞ்சகுலாவில், "பாரத எலக்டிரானிக்சு நிறுவனம்" பெரிய தொழிற்சாலையொன்றை அண்மையில் கட்டி முடித்துள்ளது.

இம்மாநிலத்திலுள்ள 309 பெரியதும் நடுத்தரமானதுமான தொழிற்சாலைகளில் ரூ. 1150 கோடி மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகின்றன. தொழிற்சாலைகள் சில இடங்களிலேயே குவிந்துவிடாமல், அவற்றை இப்போது நாட்டுப்புறங்களில் அமைத்துப் பரவலாக்கும் பணியில் இம்மாநிலம் முற்பட்டுள்ளது. தனியார் துறையினரும் தொழிற்சாலைகளை அமைக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

அரியானாவில் கைத்தறி நெசவாலைகள் சீரிய நிலையிலுள்ளன. உற்பத்தியாகும் ஆடைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தொழிற்பயிற்சி நிலையங்கள் நிலைநாட்டப்பெற்று மாணவர்க்குத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அரியானா மாநிலம் அமைக்கப்பட்ட நாளில் இது உணவுப்பொருள் விளைச்சலில் பற்றாக்குறை மாநிலமாக இருந்தது. ஆனால் இன்று தேவைக்கு மிகுதியாக விளைவிக்கும் மாநிலமாகித் தலைநிமிர்ந்து நிற்கிறது. மத்திய அரசின் உணவுப் பொருள் சேமிப்பிற்குக் கணிசமான அளவு பொருள்களைக் கொடுக்கும் இரண்டு மாநிலங்களில் அரியானாவும் ஒன்று. 1966-இல் 25.92 இலட்ச டன் விளைந்த உணவுப்பொருள்கள் 1983-84-இல் 75.25 டன்னாக உயர்ந்துள்ளன. வீரிய விதைகளைப் பயன்படுத்திக் கோதுமை,சாகுபடியாகும் நிலத்தில் 90 விழுக்காடும், நெல்,பயிரிடப்படும் நிலத்தில் 85 விழுக்காடும் பயிராகின்றன. அறிவியல் முறைப்படி புதுமைப் படுத்தப்பட்டுள்ள செய்முறைகளை வேளாண்மையிலும் பயன்படுத்தி அரியானா சிறப்பிடம் பெறுகிறது. செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதும் மிகுதியாக உயர்ந்துள்ளது. இழுவை உந்துகள் 4800லிருந்து 62,892 வரை உயர்ந்துள்ளன. அதேபோல் அரியானா மக்கள் புதிய முறைகளைப் பயன்படுத்தி விதைத்தல், அறுத்தல், தாளடித்தல் போன்ற பணிகளைச் செய்யும் வழி காட்டுகிறார்கள்.

இசாரில் இருக்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆய்வுப்பணிகளில் முதலிடம் பெற்று விளங்குகிறது. அரியானா இந்தியாவிலேயே முதன்முதலாகப் பயிர்க் காப்பீடு முறையை உருவாக்கியுள்ளது.

இரும்புத் தாது, சுண்ணாம்புக்கல், சீனக்களிமண், பளிங்குக்கல் போன்றவை அரியானாவின் கனிப்பொருள்களாம்.

அரியானாவின் வரலாறு வேத காலந்தொட்டு வருவதாகும். பரத மரபினர் இப்பகுதியை ஆண்டதாகப் பண்டைய வரலாற்றுச் செய்திகள் கூறுகின்றன. பரத மரபினர் ஆண்டமையால்தான் நம் நாட்டிற்கும் பாரதம் என்று பெயர் வந்தது. மகாபாரதத்தில் அரியானாப் பகுதி சீரிய இடத்தைப் பெற்றுள்ளது. பாண்டவர்களுக்கும் கவுரவர்களுக்கும் இடையே நடந்த பாரதப்போர் இங்குள்ள குருச்சேத்திரத்தில் நடைபெற்றது. குருச்சேத்திரத்தைத் தருமச் சேத்திரம் என்று பகவத்கீதை பேசுகிறது. இன்று பாரதப் போர் நடைபெற்றதாகக் கருதப்படும் இடத்தில் காஞ்சி காமகோடிப்பீடச்செயேந்திர சரசுவதி சங்கராசாரியார் அவர்கள் நினைவுச் சின்னம் ஒன்றை அமைந்துள்ளார்கள். இந்நினைவுச் சின்னம், வீடுமர் முள்படுக்கையில் படுத்திருந்தபோது, அர்ச்சுனனின் அம்பினால் தோண்டப்பட்டதாகக் கருதப்படும் வீடும குண்டம் என்னும் நீர்ச்சுனைக்கு அருகில் உள்ளது. அர்சவருத்தனர் அரசாண்ட தானேசுவரம் குருச்சேத்திரத்திற்கு அருகில்தான் உள்ளது.

முசுலிம் அரசர்கள் ஆண்ட காலத்திலும் இப்பகுதி சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. பானிப்பட்டு என்னுமிடத்தில் நடைபெற்ற மூன்று வரலாற்றுச் சிறப்புமிக்க போர்கள் இம்மாநிலத்துள்ள பானிப்பட்டு என்னுமிடத்தில் நடந்ததாக வரலாறு கூறும். இன்று பானிப்பட்டு சிறந்த தொழிற்சாலை நகரமாக உருவாகியுள்ளது.

கி.பி. 1857-ஆம் ஆண்டில் ஏற்பட்ட முதல் சுதந்திரப் போரிலும் இப்பகுதி மக்கள் பெரும்பங்காற்றினர். ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்த சசார் (Jhajjar), பகதூர்கர் நவாபுகளும், வல்லபகர் (Vallabhgarh) அரசரும், இரிவாரியைச் (Riwari) சார்ந்த இராவ் துலாராம் என்பாரும் இப்பகுதியைச் சேர்ந்தவர்களே. போருக்குப் பின்னர் இவர்களுடைய பகுதிகளை ஆங்கில அரசே எடுத்துக்கொண்டு சிலவற்றைப் பாட்டியாலா, நாபா, சிண்டு அரசர்களின் ஆளுகைக்கு விட்டது. பின்னர் அரியானா, பஞ்சாபு மாநிலத்தின் பகுதியாயிற்று.

பஞ்சாபுடன் இணைந்திருந்தபோது இப்பகுதி புறக்கணிக்கப்பட்டது. நாடு பிரிவினையின்போது பாகிசுதானின் மேற்கு பஞ்சாபு மாநிலத்திலிருந்து ஏதுமிலிகளாக ஓடி வந்தவர்கள் அரியானாப் பகுதியில் குடியமர்ந்து இதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டனர். 1966-ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் பஞ்சாபுப் புனரமைப்புச் சட்டத்தின்படி இந்தி மொழி பேசும் பகுதி

களைப் பஞ்சாபிலிருந்து பிரித்து, அரியானா மாநிலம் உருவாக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் ஆட்சிமொழியும் பேச்சு மொழியும் இந்தி யாகும். சுற்றுலா வளர்ச்சியிலும் அரியானா சிறப்பிடம் பெற்றுள்ளது. சண்டிகர், குருச்சேத்திரம், அம்பாலா, பானிப்பட்டு போன்றஇடங்கள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவை.

சண்டிகர் புதுமையான நகர். பிரெஞ்சுக் கட்டிடக் கலை வல்லுநரின் கருத்துப்படி கட்டப்பெற்ற இந் நகரம் இந்தியாவின் அழகிய நகரங்களுள் ஒன்றாகும்.

சுராசுகுண்டு (Surajkund) மற்றோர் அழகான சுற்றுலா மையம். இங்குள்ள இராச அன்சு (Raj Hans) என்னும் உணவகம் சிறப்புப் பெற்றது. காசு மீரப்பள்ளத்தாக்கு, சிம்லா, அமிர்தசரசு, பாக்ரா நங்கல் அணை போன்றவற்றைக் காண அரியானா மாநிலத்தின் வழியாகத்தான் பயணம் செய்யவேண்டும்.

**அரியானா வேளாண்மைப் பல்கலைக் கழகம்** தில்லி நகருக்குத் தெற்கே 160 கி.மீ. தூரத்தில், அரியானா மாநிலத்திலுள்ள கிசார் (Hisar) என்னும் நகரில் 3300 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இப்பல்கலைக்கழகம் 1970-ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் 2-ஆம் நாள் தோற்றுவிக்கப் பெற்றது. இது முன்னர்ப் பஞ்சாபு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஒரு பகுதியாகவே இயங்கி வந்தது.

வேளாண்மை, கால்நடை மருத்துவம், அடிப்படை அறிவியல், விலங்கின அறிவியல், மனையியல், உடற் பயிற்சி ஆகிய துறைகளுக்காக மொத்தம் ஏழு கல்லூரிகள் அரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளன. வேளாண்மைக்காக இரு கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் ஒவ்வொரு துறையிலும் இளமறிவியல் பட்டத்திலிருந்து ஆய்வுப்பட்டம் வரை மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுகிறது.

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கப் பணி ஆகியவற்றின் வாயிலாக, இப்பல்கலைக்கழகம் வேளாண்மை வளர்ச்சியில் பெரும் பணியாற்றி வருகிறது. உழவர் பெருமக்களின் வேளாண்மைச் சிக்கல்களை இப்பல்கலைக்கழக அறிவியல் வல்லுநர்கள் தீர்த்திட உதவி செய்கின்றனர். இதன் உதவியாலும் கருத்துரையாலும் கிசார் நகரைச் சுற்றியும் வேளாண்மை வளர்ச்சியடைந்து வருகிறது.



அரியானா வேளாண்மைப் பல்கலைக் கழக நிருவாகக் கட்டடத் தோற்றம்.

வேளாண்மைப் பொருளியல், வேளாண்மைத் தொழில் நுட்பவியல், பூச்சியியல், தோட்டக் கலையியல், மண்ணியல், காய்கறிப் பயிரியல் போன்ற பாடத்துறைகள் வேளாண்மைக் கல்லூரிகளில் கற்பிக்கப்படுகின்றன.

விலங்கின வளர்ச்சியியல் (Animal Breeding), விலங்கின ஊட்டச் சத்து இயல் (Animal Nutrition), கால்நடை வளர்ச்சியும் பாதுகாப்பும் போன்ற பாடத்துறைகள் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கற்பிக்கப்படுகின்றன.

அரியானா வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 1982-ஆம் ஆண்டு 1904 மாணவரும் 386 மாணவியரும் பயின்றனர். எல்.டி.க.

**அரிவாள் தாய நாயனார்** திருத்தொண்டர் புராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்; சோழ நாட்டில் உள்ள கணமங்கலம் என்னும் ஊரினர். இவ்வூர் தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி புகைவண்டி நிலையத்திற்கு வடக்கே 2½ கல் தொலைவில் உள்ள தண்டலைச் சேரிக்கு அருகில் உள்ளது. இப்போது இவ்வூர் கணமங்கலத்திடல் என வழங்கப்படுகிறது. வேளாளர் குலத்தில் பிறந்த அரிவாள் தாயர் நாள்தோறும் சிவபெருமானுக்குச் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் கொண்டு படைத்து வழிபாடு செய்து வந்தார். இது இவர் மாறுபடாமல் தொடர்ந்து செய்து வந்த தொண்டாகும்.

அப்பகுதியில் பஞ்சம் ஏற்பட்டு வறுமையால் வாடியபோதும், தாம் பட்டினி கிடந்தும் இத்தொண்டினைத் தவறாது செய்து வந்தார். ஒருநாள் பசியால் உடல் மெலிந்து தளர்ந்த நிலையில் சிவபெருமானுக்குரிய படையல் பொருள்களைக் கூடையில் வைத்துத் தலைமேல் சுமந்து சென்றார். அவர் மனைவி ஆனைந்தினை (பஞ்சகவ்வியத்தை) மட்கலத்தில் எடுத்துக் கொண்டு பின்சென்றார். இவ்வாறு வயல் வழியே செல்லும்போது, பசி மயக்கத்தால் தாயனார் தள்ளாடிக் கீழே விழ, அவர் மனைவியார் ஒரு கையால் அவரை அணைத்துப் பிடித்தும் கூடையில் இருந்த பொருள் அனைத்தும் கமரில் (நிலவெடிப்பு) சிந்தின. இதனைக் கண்ட நாயனார், 'இனிக் கோயிலுக்குப் போய்ப் பயன் இல்லை; உயிரோடிருந்தும் பயன் இல்லை' எனக் கருதி, அரிவாளால் தம் கழுத்தை அறுத்துக் கொள்ளத் தொடங்கினார். சிவபெருமான் அதைத் தடுக்கத் திருவுளங் கொண்டு தாயனாரின் கையைப் பிடித்து நிறுத்தினார். தரையிலிருந்து வெடிப்பு வழியாகச் சிவபெருமான் நீட்டிய கையும், மாவடுவைக் கடிக்கும் விடேல், விடேல், என்னும் ஒலியும் ஒரே நேரத்தில் எழுந்தன.

தாயனார், சிவபெருமான் கருணையை வியந்தார். சிவபெருமான் உமையாளொடுங் காட்சி கொடுத்துத் தம் உலகிற்குத் தாயனாரை அவர் மனைவியுடன் அழைத்துக் கொண்டார்.

தாம் மேற்கொண்ட சிவத்தொண்டிற்கு ஊறு நேர்ந்தபோது உயிர் வாழ விரும்பாமல் தம் கழுத்தை அரிவாளால் அரிந்ததால் தாயனார் அரிவாள் தாயனார் என்று அழைக்கப் பெற்றார். இவர் முத்தியடைந்தது தைத்திங்கள் திருவாதிரை நாளில் ஆகும். இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் "எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்" எனக் குறிப்பிட்டுப் போற்றியுள்ளார்.
வி.பா.

**அரிவை** என்ற சொல் 'பெண்' எனப் பொருள்படும். இச்சொல் இலக்கியங்களில் பெரும்பாலும் 'பெண்' என்னும் பொதுப் பொருளிலேயே வழங்கி வந்துள்ளது. சங்க காலம் முதல் இக்காலம் வரை தோன்றியுள்ள செய்யுள்களில் அமைந்துள்ள இவ்வழக்காற்றைச் "செறி எயிற்று அரிவை" (2) என்னும் குறுந்தொகைச் செய்யுட் பகுதி கொண்டும், "ஆர அமர அரிவை உரை கேட்டிடுவாய்" என்னும் (முகில் விடுதூது) முடியரசன் கவிதைப் பகுதி கொண்டும் அறிய முடிகிறது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் இச்சொல் வழக்கில், ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படலாயிற்று. இந்நூற்றாண்டில் எழுந்ததெனக் கருதப்படும் சிற்றிலக்கிய வகைகளில் சிறப்பானது உலாவாகும். அவ்வுலாக்களுள் முதன்மையானது திருக்கயிலாய ஞான உலாவாகும். இதன் பின்னர்ப் பல உலா நூல்கள் தோன்றின.

பாட்டுடைத் தலைவன் தெருவில் உலா வரும்போது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய எழுவகைப் பருவ மாதர்களும் அவனழகைக் கண்டு காமுற்று மையல் கொண்டு மயங்கியதாக வைத்துப் பாடுவது உலாவின் இலக்கணம். இம்மரபு எல்லா உலா நூல்களிலும் ஒரே விதமாக அமைந்துள்ளது. இதனை, "திறந்தெரிந்த பேதை முதல் எழுவர்" எனத் தொடங்கும் வச்சணந்தி மாலைப் பாடலால் அறியலாம். இவ்வேழு பருவங்களுள் அரிவை என்பது இருபது முதல் இருபத்தைந்து வயதுக்குட்பட்ட பருவத்தினைக் குறிக்கும். இதனைப் பிறவாறும் கூறுவர். ஏழு பருவங்களில் அரிவைப் பருவம், இளமை நன்கு கனிந்து விளைந்து விளங்கும் பருவம். எனவே இப்பருவ மகளிர், சிறந்த உறுப்பு நலனும் உணர்ச்சி முதிர்வும் பெற்றவராயிருத்தலின், அகப்பொருட் சுவை ததும்பும் வண்ணம் உலா நூல்களில் வருணிக்கப் பெற்றுள்ளனர். ஆ. ந.

*அருக்கொணாமலை* அருணகிரிநாதரால் பாடப்பெற்ற தலங்களுள் ஒன்று. இலங்கையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள நகுலேசுவரம் என்னும் தலம் இத்தலமாகக் கருதப்படுகிறது. இது கீரிமலைச் சரிவில் அமைந்துள்ளது. போர்த்துகீசியரால் பாழ்பட்ட இத்தலம் கி.பி. 1850-இல் திருப்பணி செய்யப் பெற்றது. ரா.கி.

*அருகத்து நிலை:* பௌத்த சமயத்தில் வீடு பேறாகிய முத்தி அல்லது நிருவாண நிலையை அடைவதற்கு ஐந்து நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை (1) விருப்ப உலகில் இருக்கும் மனிதநிலை, (2) துறக்க உலக உயிர்நிலை, (3) உயர் துறக்க உலகின் வடிவமற்ற உயிர்நிலை, (4) தூய்மையான உயிர் நிலை, (5) பரிநிருவாண நிலை என்பன. பௌத்த சமயத்தில் நான்காவது நிலையான தூய்மையான உயிர்நிலையே. அருகத்து நிலை எனப்படுகிறது. அருகத்து நிலையைப் பௌத்த சமயத்தின் எண்வகை நெறிகளுள் இறுதியானதான நல்ல தியானத்தால் பெறலாம்.

தியானத்தில் நான்கு நிலைகள் உள்ளன. முதல் நிலையில், ஒருவன் இச்சமயத்தின் மேலான உண்மைகளைப் பற்றிச் சிந்தித்து அறிய முயல்கின்றான். இச் சிந்தனை பெருமகிழ்ச்சியை அளிக்கும். இரண்டாவது நிலையில், உணர்வுள்ள சிந்தனை குன்றி, மன ஒருமையினால், ஆழ்ந்த அமைதி கிட்டுகிறது. தியானத்தின் மூன்றாவது நிலையில், அனைத்து ஆவல்களுடன் வாழவேண்டும் என்ற விருப்பமும் நீங்கிவிடுகின்றது. தியானத்தின் இறுதிநிலையில் ஒருவன் இன்ப துன்பங்களிலிருந்து விடுபட்டு, முழுமையான அமைதியை நுகர்கிறான். இவ்வாறு கடைப்பிடிக்க வேண்டிய நான்கு நெறிகளையும் கடந்து, அதன் பயன்களைப் பெற்று, இப் பிறப்பின் இன்ப துன்பம் நீங்கி மறுபிறப்பு இல்லாத நிலையை அடைந்தவரே அருகத்து நிலையை அடைந்தவராவர். இந்நிலையை அடைந்தவர் ஆரியர் எனவும் சொல்லப்படுகின்றனர். அருகத்து நிலை அடைந்தோர் முற்றுணர்வு பெற்று விளங்குவர். முற்றுணர்வை பிரஞ்ஞை என்பர். இது பிறவியைக் கடக்க உதவுதால் இந்நிலை அடைந்தோர், பிரஞ்ஞானி புத்தர் எனக் கூறப்படுகின்றனர். கௌதம புத்தரின் முதன்மை மாணாக்கர்கள் அனைவரும் இந் நிலையை அடைந்தோரே.

அருகத்து நிலை அடைந்தோர், தொடர்ந்து அந்நிலையில் இருக்கவும் இறுதி நிலையான பரிநிருவாணத்தை அடையவும் அன்பு, கருணை, மகிழ்ச்சி, பற்றின்மை ஆகிய நான்கு தன்மைகளையும் வளர்த்துக் கொள்வதுடன் மன உடற்பயிற்சிகளையும் மேற்கொள்ளவேண்டுமெனப் பௌத்தசமயம் கூறுகின்றது.

சமண சமயத்திலும் உயர்நிலை அடைந்த ஆன்மா உடலோடு கூடி இருக்கும்போது அருகத்து நிலை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது. சமணர் அருகர் என்றும் கூறப்படுவர். பி.ஆர்.ந.

*அருங்கலச் செப்பு* என்பது தமிழிலுள்ள அறநூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர் பெயர், காலம் முதலியன தெளிவாகத் தெரியவில்லை. திருவாரூருக் கருகில் இருந்த தீபங்குடியில் விளங்கிய அருங்கலான் வயத்தாரால் இது எழுதப்பட்டது. அருங்கலான் வயம் என்பது தென்னாட்டுச் சைன சங்கங்களிற் சிறப்புற்று விளங்கிய நந்தி கணத்தின் ஒரு பிரிவாகும். இந்நூலைப் பின்பற்றியே 'அறநெறிச் சாரம்' எழுதப் பட்டதால் இதன் காலம் அறநெறிச் சாரத்தின் காலமாகிய கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதாகலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர்.

இது சமந்தபத்ராசாரியரால் இயற்றப்பெற்ற இரத்தின கரண்டகம்' என்னும் நூலின் வழி நூலாக அமைந்துள்ளது என்பர். சமண சமயத்தைச் சேர்ந்த இல்லறத்தாருக்குரிய ஒழுக்கங்கள் இந்நூலில் வரையறுத்துத் தரப்பெற்றுள்ளன. 'அரிய அணிகலப் பெட்டி' என்றும் பொருள்படும் தொடராகிய 'அருங் கலச் செப்பு' என்பது, அரிய அணிகலன்கள் போல் வனவாகிய ஒழுக்கங்களை எடுத்துரைக்கும் நூலுக்கும் பெயராக அமைக்கப் பெற்றிருக்கலாம் என்றும் கருத இடமுண்டு.

அருகன் துதியோடு சேர்த்து இந்நூல் 182 குறள் வெண்பாக்களால் இயன்றது; நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் என்ற அறம் மூன்றினையும் விரித்துப் பேசுகிறது. நற்காட்சிக்குரிய நிலையான பொருள்கள், நற்காட்சியின் எண்வகை உறுப்புகள், மூவகை மூடம், நற்காட்சியின் பயனும் சிறப்பும், நற்காட்சியுடையார் மாட்சி, நல்ஞானம் ஆகியன முதற்கண் கூறப்பட்டுள்ளன. நல்லொழுக்கம் இருடிகட்குரியதும் மனையார்க்குரியதும் என இருவகைப்படும். அணுவிரதம், குண விரதம், திசை விரதம் என்று மனையார்க்குரிய ஒழுக்கம் மூன்று வகைப்படும். பெரிய கொலை, பொய், களவு, காமம், பொருள் வரைதல் என்னும் ஐந்தும் அணுவிரதம் ஆகும். கள், தேன், புலால் ஆகிய மூன்றும் உண்ணாமை குணவிரதம் ஆகும். ஆறு, மலை, கடல், அடவி என்னும் நான்கும் திசை விரதமாகும். இவை விரிவாக இந்நூலில் விளக்கப் பெற்றுள்ளன.

சிறிய கொலை, பொய், களவு, காமம், பொருள் ஆகிய ஐந்தனையும் முற்றத் துறத்தல் மாவிரதம் எனப்படும். அனர்த்த தண்ட விரதம், போக-உப போக பரிமாண விரதம், சாமாயிக்கு விரதம், போசத உபவாசம், தேசாவகாசிக விரதம், அத்தி சம்விபாக விரதம், பூசனை, சல்லேகனை, அறத்தின் பயன்,

இல்லறத்தாரின் பதினோரு நிலைகள் ஆகியனவும் விளக்கப் பெற்றுள்ளன. இறுதியில் நூலின் சிறப்பும், பயனும் உரைக்கப் பெற்றுள்ளன. ந.மா.

**அருங்காட்சியகம்** என்பது கற்பதற்கு ஆர்வத்தைத் தூண்டும் ஒரு கலைக் கூடம்; வரலாற்றுச் சிறப்புடைய பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் ஓர் இடம். கலைத் தொடர்புடைய அரும் பொருள்கள் இங்குச் சேகரித்து வைக்கப்படும்.

அருங்காட்சியகத்தின் முதன்மையான பணிகள்: அவை, (1) சேகரிப்பும் ஆவணப்படுத்துதலும், (2) பாதுகாப்பு, (3) காட்சிக்கு வைத்தலும் காட்சிப் பொருள்களைப் பற்றி ஆய்வு செய்தலும் ஆகிய மூன்றுமாகும்.

பொருள்கள் சேகரிப்பு எல்லா அருங்காட்சியகங்களுக்கும் மிக இன்றியமையாததாகும். நிறுவப்பட்ட குறிக்கோள்களைப் பொறுத்துச் சேகரிப்புகள், குறிப்பிட்ட பொருள்களை அல்லது பரந்த அளவில் சேகரிக்கப்பட்ட பொருள்களைக் கொண்டனவாக இது விளங்கும். வாழ்வியல் இயற்கையியல் ஆகியவற்றைத் தன்னுள் அடக்கிய பல்நோக்கு அருங்காட்சியகங்கள் உள்ளன. இவை வாழ்க்கையியல் இயற்கையியல் ஆகியவை பற்றிய பொருள்களை மிகப் பரந்த அளவில் சேகரித்து வைத்துள்ளன. ஒரு நெசவு அருங்காட்சியகம், பலதரப்பட்ட நெசவில் மட்டுமே ஆர்வமுடையதாக இருக்கும். புது தில்லியில் இருக்கும் 'தொடர் வண்டி அருங்காட்சியகம்', தொடர் வண்டிப் பொறியின் பழைய மாதிரிகள், பெட்டிகள் முதலியவற்றைக் கொண்டதாக அமைந்துள்ளது. இலண்டனிலுள்ள ''அம்மை துசோன்சு அருங்காட்சியகம்' (Madam Tussands Museum) ஒரு வரலாற்று அருங்காட்சியகமாகும். இதில் புகழ்பெற்ற வரலாற்றுச் சிறப்புடையவர்களின் முழு உருவ மெழுகு மாதிரிகள் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. அருங்காட்சியகம், பொருள்களை வாங்கிச் சேகரிதல், களப்பணி மூலம் சேகரித்தல், நன்கொடையாகப் பெறுதல், எதிர்பாராமல் கிடைக்கப் பெறும் புதைபொருள்களைச் சேகரித்தல் எனப் பல வழிகளில் பொருள்களைச் சேகரிக்கிறது.

அருங்காட்சியகத்தில், பொருள்களைச் சேகரிப்பது மட்டும் போதாது. அப்பொருள்கள் பற்றிய விவரங்கள், அவை கிடைக்கப்பெற்ற இடம், அவற்றின் சிறப்பியல்புகள், கையாளப்பட்ட பாதுகாப்பு முறைகள், நிழற்படங்கள் முதலியவற்றைக் கொண்ட ஒரு பதிவேட்டினைக் கவனமாகக் கையாள வேண்டியது இன்றியமையாதது. இத்தகைய ஆவணம், பொருள்களைப் பற்றிக் கற்பதற்கும் முறையான ஒப்பாய்விற்கும் உதவியாக அமையும்.

பொருள்களைப் பாதுகாத்தல் அருங்காட்சியகத்தின் இரண்டாம் பணியாகும். இதுவும் சமஅளவு முதன்மை வாய்ந்தது. சில வேளைகளில், தொகுக்கப்பட்ட பொருள்கள் மிகவும் சிதைந்தோ உடைந்தோ இருக்கலாம். துணிகள், சித்திரங்கள், கையெழுத்துப் படிகள் போன்றவை பூச்சியினாலோ காளானாலோ பாதிக்கப் பட்டிருக்கலாம். எனவே, எப்பொருள் பெறப்பட்டாலும் அதனைக் காட்சியில் அல்லது சேமிப்புக் கிடங்கில் வைப்பதற்கு முன்பு, அதனைப் பாதித்த பூச்சியின் இளம்புழுக்கள் அல்லது காளான் முதலியன அதனுடன் வைக்கப்பட்டுள்ள மற்றப் பொருள்களைத் தாக்காத வகையில் முதனிலைப் பாதுகாப்பு அளிக்கப்படுவது எல்லா வகையிலும் ஏற்றதாகும்.

பாதுகாத்தல் எனப்படுவது, பொருள்களைத் தூசி, அழுக்கு, பூச்சி மற்றும் காளான் அரிப்பிலிருந்து பாதுகாக்கும் எளிய முறையிலிருந்து, முன்பு கூறப்பட்டவற்றால் வரும் சேதத்தைத் தவிர்ப்பதற்கும், அதனுடைய இயல்பான உருவத்தை அளிப்பதற்கும் செய்யப்படும் சிக்கலான வேதியியல் முறை வரையுள்ள எல்லா நிலையையும் குறிக்கும். சில வேளைகளில் மட்பாண்டம், பீங்கான், உலோகப் பொருள்கள் ஆகியவற்றின் உடைந்த துண்டுகள் அருங்காட்சியகத்தில் பெறப்படும்போது அவற்றின் முந்தைய வடிவங்களை அளிப்பதற்காகக் காப்பாட்சியரால் அவை ஒன்றுபடுத்தப் படுகின்றன. பொது மக்களைக் கவர்வதற்கும் வரலாற்றுக் கலை அல்லது பொருள்களின் சுற்றுச் சூழல் தன்மைகளைக் கற்பதற்கும் இத்தகைய பொருள்கள் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

காட்சி அமைப்பு என்பது, பொது மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் ஆர்வத்தைத் தூண்டும் வகையிலும் பொருள்களை அமைப்பதாகும். ஒழுங்காக அமைக்கப்பட்ட காட்சிப் பொருள்களின் வாயிலாக, காப்பாட்சியர் அவற்றின் வரலாறு, கலை மற்றும் இயற்கையியலின் வளர்ச்சியினைக் காட்டுவதன் வாயிலாக, அருங்காட்சியகத்தைக் காணவரும் பொது மக்களின் அறிவை வளர்க்க முடிகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவது சென்னை அரசு அருங்காட்சியகத்தின் முகப்பிலமைந்திருக்கும் சிற்பக் கூடமாகும். தென் இந்தியாவிலும் வட இந்தியாவிலும் வளர்ச்சியுற்றிருக்கும் சிற்பக் கலையினைப் பொது மக்களுக்குக் கூறும் வகையில் இக்கூடத்தில் இந்தியச் சிற்பங்கள் காலக்கிரமமாக அமைக்கப்பட்டுள்ளன. நியூயார்க்கில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க இயற்கையியல் அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள சூழ்நிலைக் கலைக் கண்காட்சி, இதற்கு மற்றுமொரு எடுத்துக் காட்டாகும்.

அருங்காட்சியகத்தின் அடுத்த பணி, பொருள்களின் ஆய்வு எனப்படுவது. இது வரலாறு, கலை,

தொழில்முறை போன்ற பல கோணங்களிலிருந்து பொருள்களை ஆய்வு செய்து, அவற்றின் வாயிலாகப் பல துறைகளை வளர்ப்பதற்கு உதவும் வகையில் புதிய உண்மைகளைப் பெறுவதேயாகும். அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் சேகரிப்பினை ஆய்வு செய்தே வரலாறு, இயற்கையியல், கலை, தொழில் துறை போன்றவை பெருமளவில் வளர்ச்சியுற்றன. அரசர்கள் ஆட்சி புரிந்த காலம், அவர்களின் பல்வேறு செயல்கள் ஆகியவை பற்றிய புதிய உண்மைகளை விளக்கும் நாணயங்களும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள சின்னங்களும் பற்றிய ஆய்வு முறை இதற்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

அருங்காட்சியகம் இச்செயல்களை வேறுபட்ட அளவில் உலகின் பல பகுதிகளிலும் நிறைவு செய்து வருகிறது. அண்மைக் காலத்தில் அருங்காட்சியகத்தின் எண்ணிக்கை மிகுதியாகி வரும் நிலையே, அருங்காட்சியகத்தின் சிறப்புத் தன்மையை நன்கு உணர்த்தும்.

அருங்காட்சியக வகைகள்: அருங்காட்சியக வளர்ச்சி கி.பி. 18–ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தொடக்க நிலையில் இருந்தது. சேகரிப்புகள் பரந்த நோக்கத்துடன் செய்யப்பட்டன. மனிதனின் தலைசிறந்த படைப்புகளையும் இயற்கை அரும்பொருள்களையும் எவ்வித வரையறையும் இல்லாமல் அருங்காட்சியகங்கள் சேகரித்து வந்தன.

முதல் உலகப் போருக்குப் பின்னர் இந்த நூற்றாண்டில் நிறுவப்பட்ட அருங்காட்சியகங்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளது. கல்வி வளர்ச்சிக்கு அருங்காட்சியகங்கள் இன்றியமையாதவை என்னும் எண்ணமே இதற்குரிய முதற் காரணமெனலாம். தாய் நாட்டுச் சிறப்பு, அதன் பண்பாட்டுப் பெருமை ஆகியவற்றின் வாயிலாகத் தேசியஉணர்வினைப் பலப்படுத்துவதற்கு அருங்காட்சியகங்கள் துணை செய்கின்றன. மேலும் எல்லாத் துறைகளிலும் அறிவு விரைந்து வளர்ச்சியடைந்ததால், அறிவியலறிஞர்கள் ஒரு துறையின் ஒரு பகுதியை அழுத்தமாக ஆராய்வது தேவையாகிறது. இத்தன்மை அருங்காட்சியகங்களுக்கும் பொருந்துவதாயிற்று. இதனால் சிறந்த அருங்காட்சியகங்கள் தோன்றத் தொடங்கின. இதில் ஒரு துறை அல்லது குறிப்பிட்ட பகுதியைப் பற்றிய ஆராய்வு தொடங்கியது. இதனால் பலதரப்பட்ட அருங்காட்சியகங்கள் உண்டாயின. அவற்றை, 1) பலதரப்பட்ட அருங்காட்சியகங்கள், 2) கலை மற்றும் தொல்பொருள் அருங்காட்சியகங்கள், 3) இயற்கையியல் அருங்காட்சியகங்கள், 4) அறிவியல் அருங்காட்சியகங்கள், 5) வரலாற்று அருங்காட்சியகங்கள், 6) மானிடவியல் அருங்காட்சியகங்கள், 7) குழந்தைகள் அருங்காட்சியகங்கள், 8) பெரியோர்களின் நினைவுச் சின்ன அருங்காட்சியகங்கள், 9) திறந்தவெளி அருங்காட்சியகங்கள், 10) இடத்தின் சிறப்பினைக் காட்டும் அருங்காட்சியகங்கள், 11) கோயில் அருங்காட்சியகங்கள் எனப் பலவாறாகப் பிரிக்கலாம்.

அருங்காட்சியகத்தின் பணியாட்கள் காப்பாட்சியர் குழு, தொழில் நுட்பக் குழு, நிருவாகக் குழு, காவற் பணியாளர்கள் குழு என நான்கு பிரிவினராகப் பகுக்கப் படுகின்றனர்.

அருங்காட்சியகத்தின் இயக்குநர் அல்லது தலைவர், பொறுப்பாளர் என்ற முறையில் இந்நான்கு பிரிவுப் பணியாளர்களையும் கண்காணித்து வருகிறார். அவர் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி இயக்குநர்களால் உதவி செய்யப்படுகிறார். அவரது கடமை, திட்டத்தினைச் செயற் படுத்துதலும் புதியவற்றைக் கண்டுபிடித்தலும் அருங்காட்சியகத்தை விரிவு படுத்தலுமேயாகும். இந்நான்கு பிரிவுப் பணியாளர்களின் செயல்களையும் இணைத்து, அருங்காட்சியகத்தின் முதற்கடமையானசேகரிப்பு,காட்சிக்கு அமைத்தல், ஆவணப் படுத்துதல், பொருள்களைப் பற்றிய அறிவினை விரிவாக்குதல் ஆகியவற்றை நிறைவு செய்கிறார்.

மக்களின் பண்பாட்டுப் பெருமை, வழி வழியாக வரும் இயற்கைச் சிறப்பு ஆகியவற்றின் அடையாளமாகத் திகழுவது அருங்காட்சியகம். இது ஒரு சிறந்த பொது நிறுவனமாக விரைவாக வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருக்கிறது. இது, சமுதாயத்தினர் பண்பாட்டையும் அறிவியலையும் அறியும் மையமாகும். தாய்நாட்டு மக்களும் அயல்நாட்டு மக்களும் பார்க்கும் பொது இடமாகவும் திகழ்கிறது. அருங்காட்சியகம், அமைந்திருக்கும் இடத்திலுள்ள மக்களின் பல்வேறு சாதனைகளைக் காட்டும் காட்சிச் சாளரமாக (Show Window) அமைகிறது. இவற்றையெல்லாம் ஆராயும் போது, அருங்காட்சியகக் கட்டடங்கள் மனத்தில் பதியத்தக்க வகையிலும் கவர்ச்சிகரமாகவும் பாராட்டு தலை வெளிக் கொணரத்தக்கவையாகவும் நினைவில் நிற்கும் வண்ணமுடையனவாகவும் அமைதல் இன்றியமையாததாகிறது. மேலும் அருங்காட்சியகப் பணிகளை நிறைவு செய்யத் துணையாகவும் இக் கட்டடங்கள் அமைதல் வேண்டும்.

அருங்காட்சியகக் கட்டட அமைப்புக்கு நினைவில் கொள்ள வேண்டிய சில கருத்துகள் உள்ளன. இவை அருங்காட்சியகத்தில் எந்தவிதமான பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும் என்பதிலிருந்து தொடங்குகின்றன. ஓர் அருங்காட்சியகம் அடிப்படை வசதிகளையும் திறந்த வெளியிடங்கள், காற்றோட்டமான நன்கு அமைக்கப்பட்ட காற்றுப் புழைகளுடைய கூடங்கள், இளைப்பாறும் இடங்கள் முதலானவற்றையும் கொண்டிருக்க வேண்டும். அருங்காட்சியகக் கட்

டடத்திற்கு வடிவமைக்கும்போது இவையனைத்தும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தொடக்கக் காலங்களில் அருங்காட்சியகங்கள், நினைவுச் சின்னங்களாகத் திகழ்ந்த மிகப் பெரிய அரண்மனைகளிலும் மாளிகைகளிலும் நிறுவப்பட்டிருந்தன. இவற்றிற்குப் புதிய கட்டடங்கள் கட்ட நேரிட்டபோது, அவற்றைப் போன்றே நினைவில் நிற்கக் கூடியதான கட்டடத்தில் இவற்றை நிறுவும் கொள்கை நடைமுறையாக்கப்பட்டது. பல அருங்காட்சியகங்கள் கி.பி. 18-19-ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய சிறப்பினைக் கொண்டிருந்தன. இவற்றிற்கு எடுத்துக் காட்டாக இலண்டனிலுள்ள 'பிரிட்டன் அருங்காட்சியகம்' (1773), பாரிசிலுள்ள 'பிரான்சு நாட்டின் நினைவுச் சின்ன அருங்காட்சியகம்' (1793), கல்கத்தாவிலுள்ள 'இந்திய அருங்காட்சியகம்' (1814) ஆகியவற்றைக் கூறலாம்.

தொடக்கக் கால அருங்காட்சியகங்களில் காட்சிப் பொருள்களை அமைத்திருந்த கூடங்கள் நீளமான அமைப்பினைக் கொண்டிருந்தன. அவ்வாறு நிலவிய நீளமான கூடங்கள் பல சிறு அறைகளாகப் பகுக்கப்பட்டு அவற்றில் பல்வேறு பொருள்களைக் காட்சிக்கு வைத்திருந்தனர். இதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது மியூனிச்சிலிருக்கும் 'ஆல்ட்பினாகோதேக்' (Altepina kothak) அருங்காட்சியமாகும். இத்தகைய வகைப்பாடு ஒரே மாதிரியான அல்லது சலிப்பைத் தருகின்ற உணர்வினை உண்டாக்குவதால், கட்டட வடிவமைப்பு வல்லுநர்கள், பார்வையாளர்கள் முதலானோரின் தேவைக்கேற்ப வடிவங்களை நுண்திறனுடன் அமைக்கும் வழி தேடினர். இத்தகைய வடிவமைப்பைக் கொண்டு 'தோர்னை அருங்காட்சியகம்' (Tournei Museum) திகழ்கிறது.

பிரேசில் நாட்டில் 1947-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கலை அருங்காட்சியகத்தில் 1000 அடி நீளமுள்ள பெரிய கூடமொன்று இரட்டை 'டி' (Double 'T') வடிவம் கொண்டுள்ளது. அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஏலில் (Yale) 1953-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்ட முக்கோண வடிவக் கட்டடம், ஒரு நீண்ட சதுர அமைப்பிற்குள் உள்ளது. 'பிராங்குலாய்டு ரைட்' (Frank Lloyd Wright) என்பவரால் கட்டப்பட்டது, நியூயார்க்கிலுள்ள 'குக்கன்கேய்ன் அருங்காட்சியகம்' (Guggenhain Museum). இது ஆறு அடுக்குக் கொண்ட சுருள் வடிவுடைய கோபுரமாகும். இதில் மின் ஏற்றப் பொறி வழியாக (Elevator) மேலே சென்று, பின்னர்ப் படிப்படியாகச் சாய்வான தரையில் இறங்கி நடக்கலாம். இதனால் பார்வையாளர்கள் ஒவ்வொரு தளமாக ஏறிச் சோர்வடையாமல் கண்டுகளிக்கிறார்கள். சுருள் வடிவச் சுவரில் ஓவியங்கள் படிப்படியாகக் கீழ்மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளமையால் ஒவ்வொரு ஓவியமும் பிறவற்றிலிருந்து பிரிந்து தனியாக நிற்கிறது. இது ஒரு மேம்பட்ட கட்டட அமைப்பாகும். இது 1959-ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். மற்றுமொரு புதிய கட்டட அமைப்பினைக் கொண்டுள்ள அருங்காட்சியகம், மெக்சிகோவிலுள்ள மானிடவியல் அருங்காட்சியகமாகும். புது தில்லியில் அமைந்துள்ள தேசிய அருங்காட்சியகம் வட்ட வடிவமானது. இது நடுவிலுள்ள வட்ட வடிவத் திறந்த வெளியிலிருந்து தொடங்கும் கூடங்களைக் கொண்டுள்ளது. ஒரு பகுதியே இதில் முழுமை பெற்றிருந்த போதிலும், மனத்தில் பதியும் வண்ணம் அமைக்கப்பட்ட ஒரு புதிய அருங்காட்சியகக் கட்டடமாக இது திகழ்கிறது.

அருங்காட்சியக வரலாறு: அலெக்சாண்டிரியாவில் தாலமி (Ptolemy) என்பார் கி.மு. 3-ஆம் நூற்றாண்டில் ஒரு கலைக் கூடத்தை நிறுவினார். இது நூலகம், வான ஆராய்ச்சி நிலையம், அரங்கம், விலங்குக் காட்சிச் சாலை, தாவரவியற் பூங்கா முதலான பலவற்றைத் தன்னுள் கொண்டு, கற்பதற்கும் கலையினைப் பற்றி அறிவதற்குமான சிறந்த மையமாகத் திகழ்ந்தது

நம் நாட்டின் தொன்மையான இலக்கியங்களில் 'சித்திரச்சாலைகள்' குறிக்கப்பட்டுள்ளன. ஓர் இந்துக் கோயிலையே ஓவியக் கூடமாகக் கருதலாம். ஏனெனில் கருவறையைச் சுற்றி அமைந்துள்ள பல்வேறு மண்டபங்களில் ஆண் பெண் தெய்வங்களைப் பற்றிக் காப்பியங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டு வரும் கதைகளை நினைவு கூரும்வகையிலான சிற்பங்களும் ஓவியங்களும் உள்ளன.

பண்டைய ஆட்சியாளர்கள் அவர்கள் கைப்பற்றிய நிலப்பகுதியிலிருந்தும் தம் அரசிலிருந்தும் கலைச் செல்வத்தைக் குவித்து வைத்திருந்தனர். உரோமானியர்கள் கிரேக்கர்களை வெற்றி கொண்டு கொள்ளையடித்தவற்றுள் பெரும்பாலானவை கலைச் சேகரிப்புகளாகும். இவ்வாறே சார்லிமான்யர் (Charlemagne) என்னும் பிரெஞ்சு ஆட்சியாளர், தாம் கைப்பற்றிய நிலப்பகுதியிலிருந்து விலையுயர்ந்த பொருள்களின் மாபெரும் சேகரிப்பினை உண்டாக்கினார். ஆயினும், இவையனைத்தும் போரின் விளைவுகளாகும். பொருள்களை உண்மையாகச் சேகரிக்க வேண்டும் என்ற உணர்வு ஐரோப்பாவில் கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இக்காலத்தில் அரசர்களும் இளவரசர்களும் மட்டுமன்றிக் குடிமக்களும் கலைப் பொருள்களை முறையாகச் சேகரிக்கத் தொடங்கினர். ஆத்திரிய வேலாய்சு (Valois) மன்னர்களும் பூர்கோயின்யா (Bourgogne) கோமகன்களும் சேகரிக்கத் தொடங்கிய பொருள்கள் வியன்னாவிலும் பிரேசில் நாட்டிலும் அமைந்த அருங்காட்சியகங்களில் வைக்

கப்பட்டன. பிரான்சிலுள்ள 'பெர்ரி' (Berry) கோமகன் சேகரித்த கலைப் பொருள்கள் பதினேழு அரண்மனைகளில் வைக்கப்பட்டிருந்தன. இத்தாலியிலிருந்த பாலடின் (Palatin) கோமகன்கள் கைப்பிரதிகளைப் படி எடுப்பதற்காக முப்பது படியெடுப்பாளரைப் பணியமர்த்தி இருந்தனர். அவர்கள் எண்ணூறு கையெழுத்துப் படிகளை வைத்திருந்தனர்.

கத்தோலிக்கக் குருமார்களும் சிறந்த கலைப் பொருள் சேகரிப்பாளர்களாகத் திகழ்ந்தனர். உரோமாபுரியின் தலைநகரில் கி.பி. 1471- இல் ஒரு தொல் பொருளாராய்ச்சித் துறையை நிறுவி, அதில் சலவைக்கற் சிற்பங்களையும் படிமங்களையும் நிறுவினர்.

ஆசுத்திரியாவிலுள்ள ஏப்சுபர்க்குகளும் (Habsburgs) சிறந்த சேகரிப்பாளர்களாவர். அவர்கள் போர்க் கருவிகள், கையெழுத்துப் பிரதிகள், ஓவியங்கள், பதக்கங்கள், மட்பாண்டம், ஓவியத்திரை ஆகியவற்றைச் சேகரித்தனர். இவையே இறுதியில் வியன்னா அருங்காட்சியகப் பொருள்களாயின.

இங்கிலாந்திலும் சிறந்த சேகரிப்பாளர்கள் இருந்தனர். அவர்களுள் ஒருவர் முதலாம் சார்லசு ஆவார். இவர் கலைப் பொருள்களைச் சிறந்த முறையில் சேகரித்தார். ஆனால், இவருக்குப் பின் வந்த ஆலிவர் குராம்வெல் (Oliver Cromwell) கலையினை மிகுதியாக வெறுத்தமையால் அப்பொருள்களை விற்றுவிட ஆணையிட்டார். மற்றுமொரு சேகரிப்பாளரான அருண்டேல் பிரபு அவரது மாளிகையில் பல சேகரிப்புகளை முறையாக அமைத்தார். இது கி.பி. 1578-ஆம் ஆண்டிலிருந்து பொது மக்கள் பார்வைக்குத் திறந்து வைக்கப்பட்டது. இங்கிலாந்தில்தான் புதிய அருங்காட்சியகத்தின் சிறப்பு ஒளிர்ந்தது.

பிரான்சில் 14-ஆம் உலூயி (Louis xiv) கலையைப் பாதுகாக்கும் புரவலரானார். இவர், கார்டினல் மசாரின் (Cardinal Mazarin), சபாசு (Jabch) ஆகியோரின் கலைச் சேகரிப்புகளை வாங்கினார். இவற்றை அவர் 'உலுவ்ரி (Louvre) அரண்மனையில்' அப்போலோ என்ற பெயரில் அமைந்த கூடத்தில் கி.பி. 1681-ஆம் ஆண்டு பொதுமக்கள் பார்வைக்குத் திறந்து வைத்தார். எனினும் இது நீண்ட நாள்கள் நீடிக்கவில்லை. இவரின் பின்தோன்றல்கள் ஒரே காலத்திற்குரிய கலைச் சேகரிப்பினைத் தொடர்ந்தார்கள். அரசர்களின் சேகரிப்பானது, மிகக் குறுகிய காலத்திலேயே பிரான்சின் மிகப்பெரிய சேகரிப்பாகிவிட்டது. இவற்றை நோக்கும் போது கி பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் கி பி. 17-ஆம் நூற்றாண்டு வரை மறுமலர்ச்சியின் வேகத்தால், இடைக்காலப் பழைமை நிலை, புதிய காலத்தை நோக்கிச் செல்லத் தொடங்கிய சமயத்தில் தான் எல்லாவிதமான பொருள்களும் சேகரிக்கப்பட்டன என்பது புலனாகிறது. எனினும், இவையனைத்தையும் அருங்காட்சியகமாகக் கருதாமல் சேகரிப்புகளாக மட்டுமே கருத வேண்டும். ஏனெனில், இவை அருங்காட்சியகங்களாக நிறுவப்படாமல், பொது மக்கள் பார்வைக்கு அமைக்கப்படாமல் தனிப்பட்டவர்களின் இன்பத்திற்காகவே அமைந்தன.

அருங்காட்சியகம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் ஒரு துறையாக வளர்ச்சியடைந்தது. அவ்வேளையில் தான் மறுமலர்ச்சி உணர்வு, அறிவியல் உணர்வுடன் கலந்து, அறிவு அனைவரும் பெறுமளவில் இருத்தல் வேண்டும் என்ற கருத்து நிலவியது. இதற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது திதரோத் (Diderrot) என்னும் தத்துவஞானியால் உருவாக்கப்பட்ட கலைக் களஞ்சியம். இவர் அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு வாயிலாக இக்கலைக்களஞ்சியத்தை உருவாக்கத் தொடங்கினார். பொது மக்களின் கல்வி அறிவிற்குக் கலைப் பொருள்களின் சேகரிப்புகளைக் கிடைக்கச் செய்வது இன்றியமையாததாயிற்று. இதன் விளைவாகக் கி.பி. 1751-ஆம் ஆண்டில் 'பிரிட்டன் அருங்காட்சியகம் நிறுவப்பட்டு வளர்ச்சியடையத் தொடங்கியது.

பிரெஞ்சுப் புரட்சி (கி.பி. 1789) உலக வரலாற்றில் குறிப்பிடத் தக்க சிறந்த நிகழ்ச்சியாகும். அருங்காட்சியகங்களின் வரலாற்றிலும் இது ஒரு திருப்பு முனையாக அமைந்தது. பிரான்சு நாட்டு மன்னர்களின் சேகரிப்புகள் பொது மக்கள் சொத்தாக ஆக்கப்பட்டன. புரட்சி உச்சக் கட்டத்தில் இருந்தபோது, புரட்சியாளர்களின் குழு பின்வரும் நான்கு அருங்காட்சியகங்களை நிறுவியது: (1) கலை அருங்காட்சியகம், (2) இயற்கையியல் அருங்காட்சியகம், (3) பிரெஞ்சு நினைவுச் சின்ன அருங்காட்சியகம், (4) கைத்திறன் அருங்காட்சியகம்.

இலண்டனில் கி பி. 1824-ஆம் ஆண்டில் தேசியக் கூடம் தொடங்கப்பட்டது. மியூனிச்சில் (Munich) பண்டைய ஓவியங்களைக் கொண்டு "ஆல்ட்பனாகோதேக்" என அழைக்கப்படும் பண்டைய ஓவியக் கூடம் கி.பி. 1836-இல் தொடங்கப்பட்டது. பெர்லினில் கி.பி. 1828-ஆம் ஆண்டில் பிரடரிக்கு வில்லியம் மன்னர் கூடத்தைத் (Royal Gallery) திறந்து வைத்தார். நியூரம்பெர்கில் கி.பி. 1853-இல் செருமன் அருங்காட்சியகமும் திறக்கப்பட்டது. இன்று இலெனின் கிராடு என்று அழைக்கப்படும் பீடர்சுபர்கில் கி.பி. 1852-ஆம் ஆண்டில் எர்மிடேசு (Hermitage) என்னும் அருங்காட்சியகம் தொடங்கப்பட்டது. இதில் உருசிய மன்னர்களின் சேகரிப்புக்கள் வைக்கப்பட்டன.

இவ்வாறு 19-ஆம் நூற்றாண்டில் அருங்காட்சியகம் தன்னைக் கலை, அறிவியல் பொருள்கள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் ஒரு சிறந்த துறையாக ஆக்கிக்

கொண்டது. மேலும், ஐரோப்பாவில் பல நாடுகளிலும் அருங்காட்சியகங்களுக்கெனத் தனியாகப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டன. அருங்காட்சியகக் கட்டடக் கலை, உட்புற அலங்காரம் ஆகியவற்றில் சிறந்த கவனம் செலுத்தப்பட்டது.

காலப்போக்கில் தொல்பொருளியல் அகழ்வினால் வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பொருள்கள் பல அகழ்ந்தெடுக்கப்பட்டன. அருங்காட்சியகங்கள் அத்தகைய தொல்பொருளியல் சேகரிப்புகளால் மேலும் வளர்ந்தன. சுவீடன், நார்வே, தென்மார்க்கு (Denmark) ஆகியவற்றிலுள்ள அருங்காட்சியகங்கள் குறிப்பிடத் தக்கவையாகும். 'கோபன்கேகன் அருங்காட்சியகம்' இத்தகைய வரலாற்றுக் காலத்திற்கு முந்திய பொருள்களின் மிகுதியான சேகரிப்புகளைக் கொண்டிருந்தது. பிரான்சிலுள்ள ''செயின்ட்டுசெர்மா ஆன்-லாயே'' அருங்காட்சியகம் மற்றொரு தொல் பொருளியல் அருங்காட்சியகமாகும். இன்று அருங்காட்சியகச் சேகரிப்புகளில் தொல் பொருள் அகழ்வு வலிமையான ஆதரவு பெற்றுள்ளது. இதனால் அருங்காட்சியகம் என்பது, தொல் பொருள் சேகரிப்புகளே உடையது என்றே கருதப்படுவதாயிற்று.

இனி, மற்றுமொரு வகையான அருங்காட்சியகம், ஒப்பனைக்கலை அருங்காட்சியகமாகும். கலைநயமற்ற பொருள்களின் பெரும்பான்மையான உற்பத்தியால் கலை உணர்வு அழிந்துவிடும் என்ற அச்சத்தால் எழுந்ததே இவ்வருங்காட்சியகம். இந்நோக்கத்தினைத் தடுப்பதற்கும் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களில் கலையுணர்வினை மீட்பதற்கும் அன்றாடப் பொருள்களைக் கொண்டு சில ஒப்பனைக் கலைப் பொருள்களின் கண்காட்சி ஒன்று இலண்டனில் கி.பி. 1851-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கண்காட்சிக்காகத் திரட்டப்பட்ட பொருள்களைக் கொண்டு கி.பி. 1857-ஆம் ஆண்டில் விக்டோரியா, ஆல்பர்ட்டு அருங்காட்சியகம் ஆகியவை திறக்கப்பட்டன. இவற்றைத் தொடர்ந்து கி.பி. 1863-ஆம் ஆண்டில், பாரிசில் ஒப்பனைக் கலை அருங்காட்சியகமும் கி.பி. 1884-ஆம் ஆண்டில் புருசெசில் ''சாங்குவாண்டனேர்'' (Cinquantenaire) அருங்காட்சியகமும் திறக்கப்பட்டன.

ஒப்பனைக் கலை அருங்காட்சியகத்திலிருந்து கிராமியக் கலை அருங்காட்சியகம் மிக எளிதாக உருவாயிற்று. மக்கள் இன அமைப்பியல், கிராமிய அருங்காட்சியகங்கள், திறந்த வெளி அருங்காட்சியகங்கள் ஆகியவற்றை முதன் முதலில் இசுகாண்டினேவிய நாடுகள் (Scandinavia) தொடங்கின. சுவீடன் நாட்டுக் கிராமத்தை எல்லாவகையிலும் ஒத்திருக்குமாறு அமைந்த நார்டிக் (Nordic) அருங்காட்சியகத்தைக் கி.பி. 1873-ஆம் ஆண்டில் முதன் முதலாக இசுடாக்கோமில் (Stockholm) உருவாக்கினர். தென்மார்க்கு, ஆலந்து, பின்லாந்து ஆகிய நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களை நார்வேயும் பின்பற்றி முன்னணி வரிசையில் நின்றது. இப்பொழுது திறந்த வெளி அருங்காட்சியகங்கள், கடந்த காலத்தின் கலைச் சுவைத் திறனை அன்றிருந்தது போலவே பாதுகாப்பதன் வாயிலாகப் புகழடைந்து வருகின்றன.

பண்டைக்காலப் பொருள்களை அவற்றின் இயல்பான சூழ்நிலையில் பாதுகாத்து, அக்கால மக்களின் வரலாற்றினை எடுத்துக் காட்டுவதும் அருங்காட்சியகங்களின் ஒரு பணியாகும். அவ்வாறே தொன்மையான கட்டடத்தில் இடைக்காலப் பொருள்களைப் பாரிசிலுள்ள குளூனி அருங்காட்சியகம் முதன் முதலாக வைத்தது. வரலாற்றுக் காலத்தை நினைவுபடுத்தும் வகையில் அவ்வக் காலத்துப் பொருள்கள், அவ்வக்காலத்திற்குரியவாறு வெர்செல்சு, (Versailles) அரண்மனையில் அமைக்கப்பட்டுள்ளதுபோல் கால அளவினைக் காட்டும் அறைகள் பல தொன்மையான கட்டடங்களில் அமைக்கப்பட்டன. புகழ் பெற்ற சிறந்த மனிதர்களின் வாழ்க்கையோடு தொடர்புடைய இடத்தில் பொருள்களைக் கொண்ட நினைவுச் சின்ன அருங்காட்சியகங்களும் வரலாற்று உணர்வினையுடையனவாகக் கருதப்படலாம். இத்தகைய நினைவுச் சின்ன அருங்காட்சியகங்களுக்கு எடுத்துக்காட்டுகள் நம் நாட்டிலுள்ள காந்தி நினைவுச் சின்ன அருங்காட்சியகங்கள், புது தில்லியிலுள்ள நேரு அருங்காட்சியகம், சென்னையிலுள்ள காமராசர் நினைவு இல்லம் ஆகியவையாகும்.

உலகில் அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டவுடன் எல்லா இடங்களிலும் அறிவியல் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன. அறிவியல் அருங்காட்சியகங்களின் சிறப்பியல்பு, பல காட்சிப் பொருள்கள் ஓர் அறிவியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் மாதிரிகளாக இருப்பதேயாகும். இங்கு வரும் பார்வையாளர்கள் இம் மாதிரிகளைத் தாங்களே இயக்கி அதன் அறிவியல் தத்துவத்தைச் செயல் முறையால் அறிந்து கொள்ளலாம். இலண்டனிலுள்ள 'அறிவியல் அருங்காட்சியகம்', பாரிசிலுள்ள 'பாலே தோலா தெகுவர்த்' அருங்காட்சியகம், வாசிங்டனிலுள்ள சுமித்சோனிய அருங்காட்சியகம் ஆகியவை புகழ் பெற்ற சில அறிவியல் அருங்காட்சியகங்களாகும். இந்தியாவில் 1950-ஆம் ஆண்டில் முதன் முதலில் புது தில்லியிலுள்ள தேசிய இயற்பியல் ஆய்வுக் கூடத்தில் ஒரு சிறிய அறிவியல் அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. பின்னர் 1956-ஆம் ஆண்டில் கல்கத்தாவில் பிர்லா அறிவியல், தொழிலியல் அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. பெங்களூரில் விசுவேசுவரய்யா அறிவியல், தொழில்நுட்ப அருங்காட்சியகம் 1965-இல் அமைக்கப்பட்டது. பம்பாயிலுள்ள நேரு மையமே

இப்போதுள்ள மிகப்பெரிய அறிவியல் அருங்காட்சியகமாகும்.

இக்காலத்தே நிறுவப்பட்டு வருகிற மற்றுமொரு வகையான அருங்காட்சியகம், குழந்தைகள் அருங்காட்சியகங்களாகும். இவ்வருங்காட்சியகம் ஒரு பொதுவான அருங்காட்சியகத்தின் சிறிய அளவிலமைந்த ஒன்றன்று. இது குழந்தைகளுக்கு அருங்காட்சியகத்தின் கலை, இயற்கையியல், மேலும் பல அறிவியல் சேகரிப்புகளின் பல்வேறு செயல்முறைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வாய்ப்பினை அளிக்கும் ஒரு செயல்முறை மையமாகும். இவ்வருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டிருக்கும் சேகரிப்புகள் குழந்தைகள் எளிதாகக் கையாளத் தக்கனவாகும். அதாவது பெரிய வேலைப்பாடமைந்த கலை வண்ணங்கள் (Art Pieces) மிகுதியாகக் கிடைக்கும் பொருள்கள், எளிதாகத் திருப்பி வைக்கக் கூடிய பொருள்கள், அறிவியல் தத்துவத்தை விளக்கும்வண்ணம் அமைக்கப்பட்ட எளிய காட்சிப் பொருள்கள், பல வட்டாரங்களைச் சார்ந்த மக்களின் பண்பாட்டினை விளக்கும் வண்ணம் உள்ள பொருள்கள் போன்றவை இடம்பெறும்.

நியூயார்க்கிலுள்ள புரூக்லினில் கி.பி. 1899-இல் முதன் முதல் குழந்தைகள் அருங்காட்சியகம் ஒன்று திறக்கப்பட்டது. பதினான்கு ஆண்டுகள் கழித்துப் ‘‘போசுடன் (Boston) குழந்தைகள் அருங்காட்சியகம்’’ நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து மற்ற இடங்களிலும் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன. குழந்தைகள் அருங்காட்சியகம் அமைக்கும் கருத்து, மற்ற நாடுகளுக்கும் பரவியது. இந்தியாவில் குசராத்திலுள்ள அம்ரேலியில்தான் முதலில் குழந்தைகள் அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. இதனைத் தொடர்ந்து புது தில்லியிலுள்ள தேசிய குழந்தைகள் அருங்காட்சியகமும் பாலர் பவனும் 1962-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டன. இப்போது இலட்சுமணபுரி, கல்கத்தா ஆகிய நகரங்களிலும் குழந்தைகள் அருங்காட்சியங்கள் உள்ளன. சென்னை அரசு அருங்காட்சியகம் போன்ற பல அருங்காட்சியகங்களில் குழந்தைகள் கூடங்கள் உள்ளன.

இவ்வனைத்து அருங்காட்சியகங்களும் இரண்டு முதன்மையான கருத்தினை விளக்கும் சான்றாகத் திகழ்கின்றன. அவை, அன்றாடம் பயன்படுத்தும் எளிய பொருள்களையும் இச்சேகரிப்புகளில் சேர்த்து அருங்காட்சியகச் சேகரிப்புகளின் வாய்ப்பினைப் பெருக்குவது, கல்வியில் அருங்காட்சியகங்களின் பங்கு மேன்மேலும் சிறப்பு எய்தச் செய்வது ஆகியனவாகும். குழந்தைகள் அருங்காட்சியகங்களும் பொது மக்களுக்குக் கல்வியறிவு புகட்டும் அடிப்படையில் நிறுவப்பட்டன. கடந்த காலத்தின் நினைவுச் சின்னங்களைப் பாதுகாத்தல் என்பது அருங்காட்சியகத்தின் தலைசிறந்த நோக்கமாகத் தொடர்கிறது. எனினும், அவற்றை வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்வதற்காகவும் பரப்புவதற்காகவும் பயன்படுத்துவது என்பது, அதைப்போன்றே அல்லது அதனினும் மிக்க சிறப்புத் தன்மை வாய்ந்ததாக அமைந்துள்ளது.

மேலும், அருங்காட்சியகம் ஒரு நாட்டின் பண்பாட்டுச் செல்வத்தைக் காட்டும் களஞ்சியமாகத் திகழ்கிறது. ஒரு நாட்டின் கலை, நாகரிகம், பண்பாடு மரபுரிமையினையும் பெருமையினையும் காட்டும் சாளரமாகவும் இது வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

இரண்டாம் உலகப் போரின் விளைவாக முந்தைய குடியேற்றத்திலிருந்த குடியேற்றச் சத்திகள் விலகி, தங்கள் பண்பாட்டினை அடையாளம் காட்டும் வகையில், தனிப்பட்ட தன்னம்பிக்கை வாய்ந்த நாடுகள் உருவாகத் தொடங்கின. அத்தகைய நாடுகளில் அம்மக்களின் வரலாற்றுக் காலப் பெருமை, பண்பாட்டின் புகழ் ஆகியனஇன்றியமையாதனவாகத் திகழ்ந்தன. இப்போக்கே இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அருங்காட்சியகங்களின் மிக விரைந்த வளர்ச்சிக்குச் சிறப்பான காரணமாகத் திகழ்ந்தது. உலகப் போருக்குப் பின்னர் அறிவியல், தொழில் நுணுக்கங்கள் ஆகியன மிகவும் விரைவாக வளர்ச்சியடைந்தன. இதனால், நாடுகளுக்கிடையே தகவல் தொடர்பு முன்னேறி அறிவியல் வளர்ச்சியினை அறிந்துகொள்ளும் ஒரு வழியாகவும் அருங்காட்சியகம் திகழும் என்னும் கருத்துப் பரவி, பிற நாடுகளிலும் அருங்காட்சியகங்கள் விரைந்து வளர்ச்சியடைந்தன. இங்ஙனம் நாடுகளும் தம்மை மாற்றிக்கொண்டு வந்தன. இதனால் அறிவியல் அருங்காட்சியகங்களின் எண்ணிக்கைகளும் குழந்தைகள் அருங்காட்சியகங்களின் எண்ணிக்கைகளும் மிகுதியாயின.

அருங்காட்சியகங்களின் விரைவான வளர்ச்சி நிலை, ஆசியா ஆப்பிரிக்காவில் அண்மைக் காலத்தில் புதிதாக உரிமை பெற்ற நாடுகளில் நன்கு வெளிப்பட்டது. பல நாடுகளில் அவ்வப்போது இருந்த குடியேற்ற நாட்டு அரசாங்கத்தினரால் அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டிருந்தன. இந்நாடுகள், உரிமைஏற்ற பிறகு தத்தம் பண்பாட்டின் தனிச்சிறப்பினை வெளிப்படுத்துவதில் ஆர்வம் கொண்டன. இதன் விளைவாக முன்னரே அமைக்கப்பட்டிருந்த அருங்காட்சியகங்களை மேம்படுத்தின. தேசியப் பண்பாடு, மரபுரிமை ஆகியவற்றைக் காட்டும் தொல்பொருளியல், கலை அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன.

ஆசிய நாடுகளில் அருங்காட்சியக வளர்ச்சி ஒரே தன்மையாக இல்லை. ஐரோப்பா வடஅமெரிக்கா ஆகியவற்றிலுள்ள அருங்காட்சியகங்களின் வளர்ச்சியு

டனும் ஆசிய நாடுகளின் பழைமையுடனும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதன் வளர்ச்சி போதுமானதாக இல்லை. முப்பத்திரண்டு ஆசிய நாடுகளில் 1977-ஆம் ஆண்டில் 1157 அருங்காட்சியகங்கள் இருந்தன. அதாவது, ஒவ்வொரு நாட்டிலும் ஏறத்தாழ 36 அருங்காட்சியகங்களிருந்தன. சில நாடுகள் மிகுதியான அருங்காட்சியகங்களைக் கொண்டிருந்தன. அவை: சப்பான் (415), இசுரேல் (148), இந்தியா (146) ஆகியவையாகும். இங்ஙனம் இம்மூன்று நாடுகளிலேயே 800க்கும் மேற்பட்ட அருங்காட்சியகங்களுள்ளன. எஞ்சியுள்ள பெரிய நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலான அருங்காட்சியகங்களே இருந்தன. எடுத்துக் காட்டாகச் சீனாவில் 42, பாகிசுத்தானில் 18, பங்களாதேசத்தில் 7 அருங்காட்சியகங்கள் மட்டுமேயிருந்தன.

ஆசிய நாடுகளிலேயே மிகுதியான அருங்காட்சியகங்களைக் கொண்டிருப்பது சப்பான் (Japan) நாடேயாகும். மேலும், மேற்கு நாட்டவருடன் ஒப்பிட்டுப் பார்க்குமளவில், சப்பானிய அருங்காட்சியகங்கள் உயர்தரமான நிறுவனத்தினையும் செயல்முறையினையும் கொண்டுள்ளன. இவை, நாடுகளுக்கு இடையேயான பண்பாடுகளின் சேகரிப்புகளையும் கொண்டுள்ளன. தோக்கியோவிலுள்ள (Tokyo) தேசிய அருங்காட்சியகமே சப்பானிய அருங்காட்சியகங்களிலேயே சிறந்ததொன்றாகும். மெய்சி (Meiji) புரட்சிக்குப் பின்னர் இவ்வருங்காட்சியகம், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலிருந்து புதிய காலம் வரையிலான 90,000 பொருள்களுக்கு மேலான சேகரிப்பினைக் கொண்டுள்ளது. இது தொல்பொருளியல், ஒப்பனைக் கலை, கவின்கலை ஆகிய துறைகளைக் கொண்டுள்ளது. இவ்வருங்காட்சியகத்தில் ஆசியாவின் தொன்மையான பிற பண்பாட்டினை எடுத்துக் காட்டும் டோயோசான் கூடம் உள்ளது. இவ்வருங்காட்சியகத்தின் மிகச் சிறந்த அமைப்புகளில் ஒன்று, மக்களிடையே பெருமளவில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைக்கப் பட்டுள்ள அனைத்து நாட்டுக் கண்காட்சியாகும். புதிய கலைகளைக் கொண்ட கூடங்களையும் சப்பான் கொண்டுள்ளது. அவை தோக்கியோவிலுள்ள பிரிட்டிசுடோன் கூடம் (Bridgstone Gallery) டோக்கியோ, கியோடோவில் உள்ள புதிய கலைகளைக்கொண்ட "தேசிய அருங்காட்சியகம்", காமிக்குராவிலுள்ள 'கனகாவா பிரிபெக்சுரல் புதிய கலை அருங்காட்சியகம்' ஆகியவையாகும். தலைசிறந்ததும் உள்நாட்டுச் சுற்றுப்புறச் சூழலை வலியுறுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டதுமான இயற்கையியல் அருங்காட்சியகத்தை ஒசாகா(Osaka) நகரம் கொண்டுள்ளது.

வில்லியம் சோன்சு (William Jones) போன்ற புகழ்பெற்ற ஆராய்ச்சியாளர்களின் முயற்சியினால் இந்தியாவில் அருங்காட்சியகங்களின் இயக்கம், மிகவும் முன்னரே தொடங்கியது. கல்கத்தாவில் இந்திய அருங்காட்சியகம் கி.பி. 1814-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. அடுத்த ஐம்பது ஆண்டுகளில் முதன்மையான நகரங்களில் பல அருங்காட்சியகங்கள் தோன்றி வளரலாயின. அவை "சென்னை அரசு அருங்காட்சியகம்" (கி.பி. 1851), திருவனந்தபுரம் "நேப்பியர் அருங்காட்சியகம்" (கி.பி. 1955), இலட்சுமணபுரி "மாநில அருங்காட்சியகம்" (கி.பி. 1863), நாக்பூர் "மைய அருங்காட்சியகம்" (கி.பி. 1864), பெங்களூர் "கருநாடக அரசு அருங்காட்சியகம்" (கி.பி. 1866) ஆகியவையாகும். இவ்வருங்காட்சியகங்கள் எல்லாம் கலை, இயற்கையியல் சேகரிப்புகளைக் கொண்டுள்ளன. நாடு உரிமை பெற்ற பின்னரே தேசிய அருங்காட்சியகங்கள் நிறுவப்பட்டன. புது தில்லியில் 1949-ஆம் ஆண்டில் "தேசிய அருங்காட்சியகம்", 1954-ஆம் ஆண்டில் "புதிய கலை தேசியக் கூடங்கள்", 1962-ஆம் ஆண்டில் "தேசிய குழந்தைகள் அருங்காட்சியகம்", 1973-ஆம் ஆண்டில் "இயற்கையியல் தேசிய அருங்காட்சியகம்" ஆகியவை நிறுவப்பட்டன. போபாலில் "மனித ஆய்வு தேசிய அருங்காட்சியகம்" நிறுவப்பட்டு வருகிறது. அறிவியல், தொழில்நுட்ப அருங்காட்சியகங்கள் கல்கத்தா, பெங்களூர், பிலானி, பம்பாய் ஆகிய நகரங்களில் சிறப்புற அமைக்கப்பட்டன. "சாரநாத் அருங்காட்சியகம்", "நாகார்ச்சுன கொண்டா அருங்காட்சியகம்", "சீரங்கப்பட்டணம் அருங்காட்சியகம்" போன்ற அருங்காட்சியகங்களுடன் மேலும் சில சிறந்த அருங்காட்சியகங்களை இந்தியத் தொல்பொருளியல் ஆய்வுத் துறையினர் நிறுவியுள்ளனர். இப்போது அருங்காட்சியக உணர்வினை மேலும் பரப்புவதற்காக மாவட்டத் தலைநகரங்களில் அருங்காட்சியகங்கள் நிறுவப்படுவதற்கான திட்டம் செயற்பட்டு வருகிறது. இத்தகைய மாவட்ட அருங்காட்சியகத் திட்டம் தமிழ்நாடு, கருநாடகம், குசராத்து, இராசசுத்தான், மத்தியப் பிரதேசம், ஒரிசா போன்ற மாநிலங்களில் வலிமையுற்று வருகிறது.

நாட்டிலேயே பழமையான மாநில அருங்காட்சியகத்தைக் கொண்டுள்ள பெருமை தமிழ்நாட்டினையே சாரும். கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்திற்கு அடுத்தபடியாக நாட்டில் இதுவே பழைமையான அருங்காட்சியகமுமாகும். இதன் வரலாறு நிலையான வளர்ச்சியுடையதாகும். இதன் சேகரிப்புகளுடன் இதன் செயல்முறைகளும் மிகுதியாகிக் கொண்டு வருகின்றன. இதன் வெளியீடுகள் பல தலைப்புகளைப் பற்றியனவாகும். இதில் பல புத்தகங்கள் அந்தந்தத் துறைகளில் தகுதி மிக்க நூல்களாக விளங்குகின்றன. புதுக்கோட்டை, சேலம், மதுரை, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் அருங்காட்சியங்கள் செயற்படுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளிடையே அருங்காட்சியக வளர்ச்சியில் தாய்லாந்து மிகவும் திறம்படச் செயற்படுகின்றது. பாங்காக்கிலுள்ள (Bangkok) தேசிய அருங்காட்சியகம், கி.பி. 1874-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இவ்வருங்காட்சியகம் தொன்மைக் காலத்திலிருந்து கி.பி. 19-ஆம் நூற்றாண்டு வரையிலான தாய்லாந்து நாட்டுக் கலையின் வளர்ச்சியினைச் சித்திரித்துள்ளது. ஆடையணிகள், அரச ஆடை அணிகலன்கள், இசைக் கருவிகள் போன்ற ஒப்பனைக் கலைப்பொருள்களும் இங்குக் காட்சியில் அமைக்கப்பட்டுள்ளன. பாங்காக்கில் 1978-ஆம் ஆண்டில் அறிவியல் தேசிய அருங்காட்சியகம் ஒன்று நிறுவப்பட்டது.

இந்தோனேசியாவில் கி.பி. 1778-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஆசியாவிலேயே மிகப் பழைமையான அருங்காட்சியகமான 'புராத் அருங்காட்சியகம்'' உள்ளது. இது, இப்பொழுது ''சகர்த்தா (Djakarta) தேசிய அருங்காட்சியகம்'', எனப்படுகிறது. பிலிப்பைன்சின் தேசிய அருங்காட்சியகம் மணிலாவில் உள்ளது. இது பல பொருள்களைக் கொண்ட பல்நோக்கு அருங்காட்சியகமாகத் திகழ்கிறது. அருங்காட்சியகச் செயல்முறைகளோடு இது நினைவுச் சின்னத்தைப் பாதுகாத்தல், பொருள்களின் பண்பாட்டுப் பெருமையினைப் பாதுகாத்தல் ஆகியவற்றைப் பேணும் பொறுப்பையும் ஏற்றுள்ளது.

மலேசியாவின் தேசிய அருங்காட்சியகம் கோலாலம்பூரில் உள்ளது. கொழும்பில் கி.பி. 1877-ஆம் ஆண்டில் கொழும்பு அருங்காட்சியகம் நிறுவப்பட்டது. இதுவே இலங்கையின் முதன்மையான அருங்காட்சியகமாகும். சியோல் நகரில் கொரியாவின் ''தேசிய அருங்காட்சியகம்'' உள்ளது. இவ்வருங்காட்சியகம், கல், பஞ்சலோகம், இரும்பு ஆகியவற்றால் ஆன சிற்பங்களையும் அழகுமிக்க மட்பாண்டங்களையும் கொண்டுள்ளது. முன்னர் அரசர்கள் தங்குமிடமாக இருந்த ''சாங்க் டூக் அரண்மனை'' இப்போது அரசர்களின் பழக்க வழக்கங்களை விளக்கும் அருங்காட்சியகமாகத் திகழ்கிறது.

பாகிசுதானின் தேசிய அருங்காட்சியகம் 1970-ஆம் ஆண்டில் திறக்கப்பட்டது. காந்தாரச் சிற்பங்களுக்குப் புகழ் பெற்ற இலாகூர் அருங்காட்சியகமே பாகிசுதானின் பழைமையான அருங்காட்சியகமாகும். இதனைப் போன்றே காந்தாரச் சிற்பங்களின் மிகுதியான சேகரிப்பினைக் கொண்டது ''பெசாவர் (Pehawar) அருங்காட்சியகமாகும்''.

இன்றைய பங்களாதேசத்திலுள்ள ''தாக்கா அருங்காட்சியகம்'', 1913-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது தொல்பொருளியல், போர்க்கருவிகள், ஓவியங்கள், ஒப்பனைக் கலைகள் ஆகியவற்றின் தலைசிறந்த சேகரிப்புகளைக் கொண்டுள்ளது. சிட்டகாங்கில் சிறந்ததொரு இன ஒப்பாய்வியல் (Ethnology) அருங்காட்சியகமும், சோனார்க்கானில் கிராமியக் கலை அருங்காட்சியகமும் உள்ளன.

பர்மாவின் தேசிய அருங்காட்சியகம் இரங்கூனில் உள்ளது. இதில் சமகால ஓவியங்கள், கைத்திறன் மிக்க தொழிற்பொருள்கள், தொல்பொருளியல் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றைக் கொண்ட கூடங்களுள்ளன. இவ்வருங்காட்சியகத்தின் மையக்கூடத்தில் அமைக்கப்பட்டதும் மாண்டலேயிலிருந்து கொணரப்பட்டதுமான சிங்க வடிவ அரசிருக்கை (Lion Throne), மனத்தில் பதியத்தக்க வண்ணத்தையும் காட்சிச் சிறப்பையும் கொண்டுள்ளது. ''பாகன் அருங்காட்சியகம்'', ஒரு சிறந்த தொல்பொருளியல் அருங்காட்சியகமாகும்.

காட்மண்டுவிலுள்ள (Katmandu) சிறந்த கலைச் சேகரிப்புகளைக் கொண்ட நேபாள அருங்காட்சியகம் ''நேபாளத்தின் தேசிய அருங்காட்சியகமாகும்''. திரிபுவன மன்னரின் நினைவாகக் கட்டப்பட்ட அருங்காட்சியகம் ஆர்வத்தைத் தூண்டும் மற்றுமொரு அருங்காட்சியகமாகும். வட்டார அருங்காட்சியகங்கள் நேபாளத்து அருங்காட்சியக வளர்ச்சியில் கவனிக்கத்தக்கனவாகும். இனஒப்பாய்வியல் அருங்காட்சியகம், கலை மற்றும் பண்பாட்டு மையம், மனமகிழ் பூங்கா ஆகியவற்றை வட்டார அருங்காட்சியகங்கள் கொண்டுள்ளன.

சீனாவில் இப்போதுள்ள அருங்காட்சியகங்கள் பின்வரும் இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன: அவை, வரலாற்று அருங்காட்சியகங்கள், கலை அருங்காட்சியகங்கள், சீன தேசத்து நாட்டுரிமை இயக்க அருங்காட்சியகங்கள், அறிவியல் அருங்காட்சியகங்கள், உற்பத்தித் திறன், தொழில்நுட்ப அருங்காட்சியகங்கள் ஆகியவையாகும். நேன்டாங்கில் 1905-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இயற்கையியல் மையமே பழைமையான அருங்காட்சியகமாகும். சீன மக்கள் குடியரசு அமைப்பின்போது, 21 அருங்காட்சியகங்களேயிருந்தன. புதிதாக வந்த அரசாங்கம், பழைய அருங்காட்சியகங்களைப் புதுப்பித்ததோடு புதிய அருங்காட்சியகங்களையும் நிறுவியது. பெய்சிங் (Beijing) அரண்மனையில் உள்ள சீன வரலாற்று அருங்காட்சியகம், 'யான்-மு' (Yan-Mu) எனும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய மனிதனின் வளர்ச்சிக் காலத்திலிருந்து 1919-ஆம் ஆண்டு மே நான்காம் நாள் இயக்கம் வரையிலான பரந்த காட்சியினைக் கொண்டுள்ளது. அதே அரண்மனையிலுள்ள ''சீனப் புரட்சியினைப் பற்றிய அருங்காட்சியகத்தில் 1949-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மக்கள் குடியரசு

வரையிலான வரலாறு காணப்படுகிறது. பெய்சிங் அரண்மனை அருங்காட்சியகமே நாட்டின் பெரிய கலை அருங்காட்சியகமாகும். இது 1925-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது கிட்டத்தட்டப் பத்து நூறாயிரம் பொருள்களைக் கொண்டதொரு பரந்த பகுதியாகும். சீன நாட்டுரிமை இயக்கத்தின் முதல் அருங்காட்சியகம் 1954-ஆம் ஆண்டில் நானிங்கில் தொடங்கப்பட்டது. இயற்கையியலின் சிறப்பான அருங்காட்சியகங்கள் பெய்சிங், சங்காய், தியான்சின், இத்தாலியன் மற்றும் கியூங்டா ஆகிய இடங்களில் உள்ளன. மாகாணப்பகுதி, தன்னாட்சிப் பகுதி ஆகியவற்றைச் சார்ந்த மாநில அருங்காட்சியகங்கள், பல்நோக்கு அருங்காட்சியகங்களாகும். பெருந்தலைவர்கள் மற்றும் எழுத்தாளர்களான மா-சே-துங், சூ என்லாய், புரட்சி எழுத்தாளரான லுயூசன் மற்றும் கி.பி. 8-ஆம் நூற்றாண்டின் கவிஞரான தியூசு ஆகியோரின் நினைவாகப் பல நினைவு அருங்காட்சியகங்களுள்ளன.

ஆப்பிரிக்காவில் நடந்த அருங்காட்சியகப் புரட்சி, ஆசியாவைக் காட்டிலும் குறைந்த ஊக்கத்தினையே கொண்டிருந்தது. இப்பெரிய கண்டத்தின் 47 நாடுகளில் 447 அருங்காட்சியகங்களே உள்ளன. தென் ஆப்பிரிக்கா, எகிப்து, அல்சீரியா, துனீசியா ஆகிய நான்கு நாடுகள் மட்டுமே ஆப்பிரிக்காவிலுள்ள அருங்காட்சியகங்களில் பாதிக்கு மேலான எண்ணிக்கையைக் கொண்டுள்ளன. அருங்காட்சியகச் சேகரிப்பிற்கான பொருள்களின் வளம்மிகப் பெரியதாக உள்ளது.

அருங்காட்சியக அமைப்பு முறைகள்: உலகத்திலுள்ள அருங்காட்சியகங்கள் எல்லாவற்றின் வளர்ச்சியும் மனித குலத்தின் பெருமையை அறிந்துகொள்ள உதவும் ஓர் வாயிலாக விளங்குகிறது. இத்துறையில் நாடுகளிடைப்பட்ட மிகச் சிறந்த தொழில் நிறுவனம் 'அனைத்துலக அருங்காட்சியகங்கள் கழகம்' (International Council of Museums) ஆகும். இதன் சுருக்கம் 'ஐகாம்' (ICOM) என வழங்கப்படுகிறது. இது அரசாங்கத்தினைச் சாராமல் தொழில் நிறுவனமாக இயங்குகிறது. ஐகாம் அவை, 'யுனசுகோவுடன்' (UNESCO) கலந்தாலோசனை செய்யும் தகுதி பெற்றுள்ளது. இது 1948-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

ஒவ்வொரு நாடும் தேசியக் குழுவின் வழியாகவே இந்த ஐகாமில் உறுப்பினராகிறது. இதில் மூன்று வகையான உறுப்பினர் பதவியுள்ளது. அவை தனிப்பட்டோர், நிறுவனத்தினர், ஆதரவாளர் பதவியாகும். அருங்காட்சியக அலுவலர், அருங்காட்சியகங்கள் மற்றும் அருங்காட்சியகப் பணிகளில் ஆர்வமுள்ளவர்கள் இதில் உறுப்பினர் ஆவதற்குத் தகுதியுடையவராவர். இதன் உறுப்பினர் ஐகாமில் ஏற்பாடு செய்யப்படும் மாநாடு மற்றும் கருத்தரங்குகளில் கலந்து கொள்ளவும், அவ்வப்போது அதன் வெளியீட்டைப் பெறவும், அதன் கூட்டங்களில் வாக்களிக்கவும் உரிமையுடையவராவர்.

பலநாட்டுக் குழுக்களின் வழியாக 'ஐகாம்' தன் பணிகளைச் செய்து வருகிறது. தொல்பொருளியல் வரலாறு, கட்டடக்கலை, அருங்காட்சியகத் தொழில் முறை, செயல்முறைக்கலை, புதிய கலை, பாதுகாப்பு, உடை, ஆவணப் படுத்துதல், கல்வி இன ஒப்பாய்வியல், நாடுகளிடைப்பட்ட கலை, கண்காட்சிகள், பணியாளர்களுக்குப் பயிற்சி, இசைக் கருவிகள், வட்டார அருங்காட்சியகங்கள், இயற்கையியல், அறிவியல், தொழில் நுட்பம், அருங்காட்சியகப் பாதுகாப்பு ஆகியவை ஐகாம் செய்து வரும் பணிகளாகும்.

'ஐகாமின்' தலைநகரம் பாரிசிலுள்ளது. 'ஐகாமின்' தேசியக் குழு, இப்போது அதன் அலுவலகத்தைக் கல்கத்தாவிலுள்ள இந்திய அருங்காட்சியகத்தில் கொண்டுள்ளது.

1946-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அருங்காட்சியகப் பிரிவொன்றினை'யூனெசுகோ'(UNESCO) கொண்டுள்ளது. அரசாங்கங்களுக்கு இடையே அமைந்துள்ள குழுவாகும் இது. அருங்காட்சியகத்தைக் குறித்த ஆர்வத்தைத் தூண்டும் கருத்தரங்குகளை அவ்வப்போது அமைத்தல், மேலும் அருங்காட்சியகத் தொழில்துறையினைப் பற்றிய புத்தகம் வெளியிடல், 'ஐகாமின்' பணிக்குப் பண உதவியளித்தல், உறுப்பு நாடுகளுக்குத் தூதுக் குழுவினை அமைத்து அதன் மூலம் இக்கழகத்தை முன்கொணர்தல் ஆகியவற்றைச் செய்வதன் வாயிலாக இது அருங்காட்சியகங்களின் வளர்ச்சிக்குத் துணை செய்கிறது. பாரிசிலுள்ள இப்பணியகத்தில் ஆவண மையத்திற்கு (Documentation Centre) ஐகாம் துணை செய்கிறது. ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல் அருங்காட்சியகப் பிரிவு, அருங்காட்சியகம் எனும் காலாண்டு இதழினை வெளியிடுகிறது.

மற்றுமொரு, நாட்டிடைப்பட்ட உலக அமைப்பு முறையே, 'பொதுநல நாடுகளின் அருங்காட்சியகச்' சங்கம் (Common Wealth Association of Museums). இது 1975-ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. இதன் உறுப்பினர் பதவி பொதுநல நாடுகளிலுள்ள அருங்காட்சியகங்களுக்கு மட்டுமே உரியதாகும். அருங்காட்சியகங்களின் வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தின் பொது முயற்சியில், இவ்வனைத்து அருங்காட்சியகங்களையும் இணைக்கவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும். இதன் தலைமை அலுவலகம் இலண்டனிலுள்ளது.

பல தொழில்முறைச் சங்கங்கள் அருங்காட்சியகப் பணியாளர்களுக்குப் பொதுமன்றத்தினை அளிக்கின்றன. இவற்றுள் பழைமையானது இலண்டனில்

தலைமையகம் கொண்டுள்ள அருங்காட்சியகச் சங்கமாகும். இது தனிப்பட்டவரையும் நிறுவன உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்கிறது. இது அருங்காட்சியகம் இதழினை வெளியிடுகிறது. இது அருங்காட்சியகத்தினர் தங்கள் துறையினைப் பற்றிப் பேச ஓர் இடத்தினை அளித்துள்ளது. அருங்காட்சியகத் துறைக்குத் தேவையான பட்டயப் படிப்பில் (Diploma Course) தேர்வு ஒன்றினையும் நடத்தி வருகிறது.

இந்தியாவிலிருக்கும் அருங்காட்சியகத் துறையினரை ஒன்று சேர்க்கும் எண்ணத்தோடு 1943–ஆம் ஆண்டில் இந்திய அருங்காட்சியகச் சங்கம் நிறுவப்பட்டது. இதன் இப்போதைய அலுவலகம் புது தில்லியிலுள்ள தேசீய ஆவணக் காப்பகத்திலுள்ளது (National Archives). அருங்காட்சியக அலுவலரும், இந்திய அருங்காட்சியகங்களும் இதில் உறுப்பினராகலாம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடைபெறும் இதன் ஆண்டுக் கூட்டம், அருங்காட்சியகத் தலைப்பினைப் பற்றிய கருத்தரங்குகள் நடத்த நல்லதொரு வாய்ப்பினை அளிக்கிறது. இக் கருத்தரங்கில் பேசப்படும் தலைப்புகள், ஆண்டு வெளியீடான ''இந்திய அருங்காட்சியகங்களின் இதழில்'' (Journal of Indian Museums) வெளியிடப்படுகின்றன. இங்ஙனம் கருத்தரங்கத் தலைப்பினை வெளியிடாதபோது இந்திய அருங்காட்சியகப் பணிகளைப் பற்றிய கட்டுரைகளை வெளியிடுகிறது.

இந்தியாவிலுள்ள அருங்காட்சியகங்களைப் பற்றிய சுருக்கமான விவரத் தொகுதியினை அருங்காட்சியகச் சங்கம் வெளியிடுகிறது. இது இன்று வரையிலான செய்திகளை வெளியிடுகிறது.

சில மாநிலங்களில் அருங்காட்சியகப் பணியாளர்களால் இத்தகைய சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், இம்மாநில அருங்காட்சியகங்கள் ஒரே மாதிரியான செயல் புரிவதில்லை. இத்தகைய மாநிலச் சங்கங்களுக்கு எடுத்துக் காட்டு, மேற்கு வங்காள அருங்காட்சியகங்கள் சங்கம், குசராத்து அருங்காட்சியகங்களின் சங்கம் ஆகியவையாகும்.

கலைப்பொருள்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாக்கும் நிறுவனங்களும் கூட அருங்காட்சியகப் பணியில் இன்றியமையாத ஆர்வம் கொண்ட நிறுவனங்களாக உள்ளன. பல அருங்காட்சியகங்களில் பணி புரியும் பலரும் அத்தகைய சங்கங்களின் உறுப்பினராக உள்ளார்கள். பாதுகாப்பகப் பிரிவிற்கான அனைத்து நாடுகளின் சங்கமே உலகப் பாதுகாப்பு நிறுவனம் (International Institute for Conservation) ஆகும். இதனைச் சுருக்கமாக 'ஐஐசி' என அழைக்கின்றனர். இதன் தலைமையகம் இலண்டனிலுள்ளது. பாதுகாத்தலில் ஆர்வமுள்ள தனிப்பட்டவர்களும் மற்றும் நிறுவனத்தார்களும் இதில் உறுப்பினராகச் சேரலாம். இது அவ்வப்போது மாநாடுகளை நடத்துகிறது. மேலும் இரண்டு முதன்மையான பருவ இதழ்களான 'பாதுகாத்தலின் ஆய்வு' (Studies in Conservation) 'கலை மற்றும் தொல்பொருளியல் தொழில் நுட்பச் சுருக்கக் குறிப்பு' (Art and Archaeology Technical Abstracts) ஆகியவற்றையும் வெளியிடுகிறது.

''உரோம் மையம்'' என அழைக்கப்படும் மையம் உடைமைகளைப் பாதுகாத்தல் மற்றும் புதுப்பித்தல் பற்றி ஆய்வு செய்யும் உலக அரசுகளால் அமைக்கப்பட்ட நிறுவனமாகும். இது 1959–ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டுக் கல்வி, அறிவியல், பண்பாட்டுக் கழகத்தாரால் தொடங்கப்பட்டது. இது ஓர் நூலகத்தையும் ஆவணத் துறையினையும் பாதுகாத்து வருகிறது. இது, ''பணி மற்றும் வெளியீடுகள்'', ''தொழில்நுட்பக் குறிப்புகள்'' எனும் இரு தொடர் வெளியீடுகளை வெளியிடுகிறது. ஒவ்வோர் ஆண்டும் பொருள்களைப் பேணுதல் பற்றிய பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடு செய்கிறது. உறுப்பு நாடுகளுக்குப் பேணுதலிற் சிறந்த உதவியினை அளிக்கிறது.

''பண்பாட்டு உடைமைகள் பேணுதல் ஆய்வு இந்தியச் சங்கம்'' எனப்படுவது பேணுதல் பணியாளர்களுக்காக அமைக்கப்பட்ட தொழில் துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் புதுதில்லியில் இயங்குகிறது. இது நிறுவனத்தைச் சார்ந்தோர், கூட்டு உறுப்பினர் என்னும் இருவகை உறுப்பினரைக் கொண்டுள்ளது. இது ஆண்டுதோறும் கருத்தரங்கு ஒன்றினை நிறுவி ''இந்தியாவில் பண்பாட்டு உடைமைகளைப் பேணுதல்'' என்னும் இதழினையும் வெளியிடுகிறது.

அருங்காட்சியகச் செயல்களில் விருப்பமுள்ள பொதுமக்களை அருங்காட்சியகச் செயல்முறைகளில் ஈடுபடச் செய்யும் ஒரு நிறுவனம் ''அருங்காட்சியகத்தின் நண்பர்கள்'' என்னும் பெயரில் இயங்கி வருகிறது. இந்தச் சங்கங்கள், மேலைநாடுகளில் பொதுவாகக் காணப்படுகின்றன. இவை அருங்காட்சியகப் பணியாளர்களையும் அருங்காட்சியகத்தில் ஆர்வமுள்ள பார்வையாளர்களையும் கொண்டு, அருங்காட்சியகத்தினைப் பற்றி அனைவரும் அறிந்து கொள்ளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்தியாவில், இத்தகைய சங்கம் பம்பாயில், ''பிரின்சு ஆப் வேல்சு அருங்காட்சியகத்துடன்'' இணைந்து திறம்படச் செயற்பட்டு வருகிறது. இது ''பிரின்சு ஆம் வேல்சு அருங்காட்சியகத்தின் நண்பர்கள்'' என்று அழைக்கப்படுகிறது. இதன் உறுப்பினருக்கு அருங்காட்சியகத்தில் சலுகைகள் உண்டு. இவர்கள் சொற்பொழிவுகள், கண்காட்சிகளை நிறுவுதல் மற்றும் தாங்களாகவே விளக்கிக் கூறும் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகிய

வற்றின் வாயிலாக அருங்காட்சியகச் செயல் முறைகளில் பங்கேற்கின்றனர்.

அரசு உயர்குடியினர் ஆகியோரின் சேகரிப்புகளிலிருந்து அருங்காட்சியகம் கி.பி. 16, 17-ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதன் முதல் மாற்றம் பொருள்களின் சேகரிப்புகளின் அணுகுமுறையில் ஏற்பட்டது. முதலில், இது தனியார் மகிழ்ச்சிக்காகவும் அவரவர் விருப்பத்திற்கேற்றவாறும் அமைந்தது. பின்னர்ப் பொதுமக்கள் இன்பத்திற்காகவும் கல்வியுணர்விற்காகவும் சேகரிக்கப்பட்டன. இதன் பின்னரே தேசியப் பெருமை மற்றும் சிறப்பினை எடுத்துக் காட்டும் இடமாக அருங்காட்சியகத்தைக் கருதும் எண்ணம் வந்தது. ஒரு தேசத்தின் கடந்த காலச் சாதனைகளைக் குறிக்கும் பொருள்களைக் காட்சிக்கு அமைக்கும் இடமாகவும் இது அமைந்தது. பல்வேறு நாடுகள், தத்தம் நாட்டு மக்களின் பண்பாடு மற்றும் கலையினைக் காட்டும் பொருள்களைச் சேகரித்து வைத்தன. இத்தகைய சேகரிப்புகள், ஒருவன் தான் கொண்டுள்ள தேசிய மரபுரிமையின் பெருமையினைப் பரப்புவதற்காகப் பயன்பட்டன. இதுவே தேசிய உணர்வுகளுக்கும் வழிகோலியது.

மேலும் பரம்பரைப் பழக்கம் முதல் புதியகாலம் வரையிலும், நாட்டுப்புறத்திலிருந்து பழம்பெரும் கலைகள் வரை தேசிய மரபுரிமையில் பல நிலைகள் உள்ளமையால், இவ்வனைத்தினையும் ஒரே வகை அருங்காட்சியகங்கள் போதுமான அளவு காட்ட இயலா. எனவே அவை தேசிய மரபுரிமையின் சில குறிப்பிட்ட கூறுகளில் அதாவது நாட்டுப்புறக் கலை, பழம்பெரும் கலை, புதிய ஓவியங்கள் போன்றவற்றில் சிறந்த ஈடுபாடு செலுத்தின. இதனால் அருங்காட்சியகங்கள் பலவகைகளாக விரிவடைந்தன.

தேசிய மரபுரிமை என்பது பண்பாட்டு வளத்தினை மட்டுமே கொண்டுள்ளது என்ற கருத்து முன்னர் நிலவி வந்தது. இப்போது ஒரு நாட்டின் இயற்கை வளமும் தேசிய மரபுரிமையின் பெருமையினை நிலை நிறுத்தும் என்ற பரந்த எண்ணம் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக இயற்கையியல் ஆய்வு, இயற்கையியல் அருங்காட்சியகங்கள் ஆகியவற்றில் மிகுதியான ஆர்வம் உண்டாகியது. இந்த நாட்களில் இயற்பியல் அறிவியல்கள் பற்றி விளக்கும் அருங்காட்சியகங்களும் பொதுவாகக் காணப்படுகின்றன.

இங்ஙனம் அருங்காட்சியகங்களின் வகைகள் மிகுந்ததுடன், அருங்காட்சியகங்களின் கல்விப் பங்கும் இப்போது முதன்மை பெற்று வருகிறது. திங்கள் சொற்பொழிவுகள், சிறப்புக் கண்காட்சிகள், திரைப்படக் காட்சிகள், கருத்தரங்குகள் ஆகியவை வழக்கமான கூறுகளாகத் திகழ்கின்றன.

சமுதாயத்தின் பண்பாடு, கல்வி ஆகியவற்றின் மையமாக அருங்காட்சியகம் விரைந்து வளர்ந்து வருகிறது. இது பண்பாட்டிலும் இயற்கையியலிலும் ஆர்வமுள்ள பொருள்களைப் பாதுகாக்கும் முயற்சியோடு இத்துறைகள் தொடர்பான செய்திகள் குறித்த விழிப்புணர்ச்சியினையும் பரப்புகிறது. இப்பண்பின் முதன்மை உணரப்பட்டதனாலேயே அண்மைக் காலத்தில் அருங்காட்சியகங்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. என்.அ.

துணை நூல்கள்:

**Agrawal Usha**, "Brief Directory of Museums in India", Museums Association of India, New Delhi, 1980.

**Baxi, Smit. J. and Dwivedi Viuod** P., "Modern Museum", Abhinav Publications, New Delhi, 1973.

**Morely, Grace**, "Museums Today", Department of Museology, M. S. University, Baroda, 1981.

**Morely Grace**, "Museums in China Today", in "Museum" Vol. XXXII, No, 4, 1980.

***அருச்சுனன்*** பாண்டு அரசனின் ஐந்து மக்களுள் மூன்றாம் மகன். தீராத நோய் பற்றியிருந்த காரணத்தினாலும், முனிவர் ஒருவரின் சாபத்தினாலும், மாத்திரி, குந்தி என்று இரண்டு மனைவியர் இருந்தபொழுதிலும் பாண்டு மக்கட்பேறு இல்லாதவனாக இருந்தான். ஆகவே குந்தி தன்கணவர் பாண்டுவின் இசைவுடன், துருவாச முனிவர் அருளினால் பெற்ற மந்திரத்தால் தருமராசன், வாயுதேவன், இந்திரன் ஆகிய தேவர்களைத் துதித்து அவர்கள் வழியாக முறையே தருமபுத்திரன், பீமன், அருச்சுனன் என்னும் மக்களைப் பெற்றாள். பின்னர்த் தன் சக்களத்தியாகிய மாத்திரிக்குத் துருவாச முனிவர் அருளிய மந்திரத்தைச் சொல்லிக் கொடுத்து, அசுவினி தேவர்கள் (இரட்டைத் தேவதைகள்) வழியாக நகுலன், சகாதேவன் என்னும் இரண்டு மக்களை அவள் பெறுமாறு செய்தாள். இவர்கள் ஐவருமே பாண்டு குமாரர்கள் (பஞ்ச பாண்டவர்கள்) என்று சொல்லப்படுகிறார்கள். ஐவர்களுள் நடுமகனாக இருப்பவன் அருச்சுனன். ஆகவே அவனை 'மத்தியமன்' என்றும் குறிப்பிடுவர். அவன் இந்திர தேவனால் குந்திக்குப் பிறந்தவன். 'அருச்சுனன்' என்ற சொலிற்கு 'வெண்மை' 'தூய்மை' என்பது பொருள். அருச்சுனன் தன் எண்ணங்களிலும் செய்கைகளிலும் தூய்மையாக இருந்தமையினால் அவன் அருச்சுனன்

என்று அழைக்கப்படுகிறான். இந்திரனுடைய மகன் என்பதால் 'ஐந்திரி' என்றும், குந்தியின் மைந்தன் என்பதால் 'கௌந்தேயன்' என்றும், பாண்டு அரச னின் மகன் என்று பொதுவாகச் சொல்லப்படுவ தினால் 'பாண்டவன்' என்றும் குறிப்பிடப்படுகிறான். குந்திக்குப் 'பிருதா' என்று மற்றொரு பெயரும் உள் ளது. ஆகவே பிருதாவின் மைந்தனாதலினால் 'பார்த் தன்' என்றும் அழைக்கப்படுகிறான். இவன் அழகிய உடலமைப்புடன் கூடியவன்; நேர்மையானவன்; தன் மானமுள்ளவன்; தாராள மனப்பான்மையுடன் கூடிய வன்; வில்வித்தையில் மிகவும் தேர்ச்சி பெற்றவன்; அம்பு எய்வதில் இவனுக்கு நிகர் ஒருவரும் இல்லை; இடக் கையினாலும் அம்பு எய்துவதில் மிகத் திறமை பெற்றவன்; துரோணரிடம் வில்வித்தை பயின்று மிகச் சிறந்த மாணவன் என்று புகழ் பெற்றவன்; துரோண ரின் அன்பிற்குப் பாத்திரமானவன். இவன் அம்பு எய்வதில் தன்னிடமுள்ள தேர்ச்சியின் மூலம், துருபத நாட்டு அரசன் வைத்த 'பணயத்தில்' வெற்றி பெற்று அவன்மகள் 'திரௌபதி'யை அடைந்தும், தாயின் சொற்படி தன் நான்கு உடன்பிறந்தா ரோடு அவளை மணந்தான். தமையனான தருமபுத்தி ரன், தாய் குந்தி இவர்களின் சொற்களுக்குக் கட்டுப்பட் டுக் கௌரவர்களாகிய துரியோதனன், அவன் உடன் பிறந்தோர் ஆகியோரால் இழைக்கப்பட்ட பல இன் னல்களையும் பொறுத்துக் கொண்டிருந்தான். இவன் பாண்டவர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொண்ட ஒரு கட்டுப்பாட்டின்படி திரௌபதியுடன் வாழ்ந்து வருகையில், அறியாமல் அக்கட்டுப்பாட்டை மீறிய தன் காரணத்தால், அருச்சுனன் புனிதயாத்திரை (தீர்த்த யாத்திரை) செய்யவேண்டிய நிலை ஏற்பட் டது. புனிதயாத்திரை செய்தபொழுது பரசுராமரிட மும் வில்வித்தையைப் பயின்றான். பயணத்தின் பொழுது 'உலூபி' என்ற நாக கன்னிகையை மணந்து அவள் வாயிலாக ஐராவத்து (அறவன்) என்ற மகனை யும், மணிபுரநாட்டு அரசகுமாரி 'சித்திராங்கதா'வை மணந்து அவள் வாயிலாகப் பப்புருவாகன் என்ற மக னையும் பெற்றான். பிறகு துவாரகையை அடைந்து கண்ணனின் அறிவுரையாலும் உதவியாலும் 'பலராம ரின்' விருப்பத்திற்கு மாறாக அவர் உடன்பிறந்த சுபத்திரையை மணம் செய்து கொண்டான். அவள் மூலம் 'அபிமன்யு' என்னும் ஆற்றல்மிக்க மகனைப் பெற்றான். மகாபாரதப் போரில் தன் மகன் அபி மன்யு கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த சயத்தரதனை மறுநாள் சூரியன் மறைவதற்கு முன் கொல்வேன் என்று சூளுரைத்துத்தன் தேரோட்டியாக விளங்கிய கண்ணனின் உதவியினால் அதனை நிறை வேற்றினான். தேவர்களுக்குப் பகைவனாக இருந்த 'நிவாத கவசர்கள்' என்ற அசுரர்களுடன் தனிமை யில் போராடி அவர்களை வென்று தேவர்களால் பெருமைப்படுத்தப் பெற்றான். காண்டவ வனத்தை எரிப்பதற்கு அக்கினி தேவனுக்கு உதவி புரிந்தமையி னால் அக்கினிதேவன் காண்டீபம் என்ற பெயருடைய மிகச் சிறந்த வில்லைப் பரிசாக அளித்தான்.

சூதாட்டத்தில் கௌரவர்கள் செய்த சூழ்ச்சிகளி னால் நாட்டைத் துறந்து, தன் உடன்பிறந்தார், திரௌபதி ஆகியோருடன் 12 ஆண்டுக் காலம் காட்டி லும், ஓராண்டு மறைவாக (அஞ்ஞாதவாசம்) விராட நாட்டிலும் வசித்து வந்தான். காட்டில் வாழ்ந்த பொழுது, தங்களுக்குப் பல வகையிலும் இன்னல் செய்து தங்களை நாட்டைவிட்டுத் துரத்திய கௌர வர்களுடன் போர் புரிவதற்காகத் தெய்வீகப் படைக் கலங்களைப் பெற இமயமலைக்குச் சென்று கடுந் தவம்புரிந்தான். சிவபெருமான் வேட உருவம் தாங்கி அருச்சுனனின் வீரத்தைச் சோதித்தார். ஆற்றல்மிக்க 'பாசுபதாத்திரம்' என்னும் ஆயுதத்தைச் சிவன் அருச் சுனனுக்கு அளித்தார். நான்கு திசைப் பாலகர்களான இந்திரன், இயமன், வருணன், குபேரன் – ஆகியோர் படைக்கலங்களை அருச்சுனனுக்குப் பரிசாக அளித்த னர். 12 ஆண்டுகளுக்குப் பின்னர் விராடநாட்டில் ஒரு வரும் அறியாதவாறு மறைவாக ஓராண்டு வசித்த பொழுது "பிருகன்னளை" என்ற பெயரில் 'அலி' உருக்கொண்டு, அந்நாட்டு அரசகுமாரி 'உத்திரை'க்கு நாட்டிய ஆசிரியனாகவும் பாடல் ஆசிரியனாகவும் இருந்தான். துரியோதனன் விராடநாட்டுப் பசுக் களைக் கவர்ந்து (கோக்ரசு) அந்நாட்டுடன் போர் தொடுத்தபொழுது, விராடநாட்டு அரசகுமாரன் 'உத்தரகுமாரனைத் தேரில் வைத்துக் கொண்டு, மயானத்தில் பாதுகாப்புடன் வைத்திருந்த தன் காண்டீபத்தை எடுத்துக்கொண்டு, போர்க்களத்தில் துரியோதனனை வென்று பசுக்களை மீட்டான். அப் போது போர்க்களத்தில் தன் மகன் 'அபுமன்யு' வுடன் எதிர்த்துப் போர் புரிய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டது. அவ்வமயம் அருச்சுனன் 'பிரகன் னளை' வேடத்தில் இருந்தமையினால் அபிமன்யுவால் தன் தந்தையை அடையாளம் கண்டு கொள்ள முடிய வில்லை.

மகாபாரதப் போரில் அருச்சுனனின் பங்கு மிக மிகச் சிறந்தது. 'பகவத் கீதையின்' தோற்றத்திற்குக் காரணமாக இருந்தவன் அருச்சுனன். போரில் கண்ண னைத் தன் தேரோட்டியாக இருக்குமாறு வேண்டி னான். முதல் நாள் போர் தொடங்குமுன் பகைவர் களாக இருக்கிற தன் உறவினர்களையும், துரோணர் முதலான ஆசிரியர்களையும் பார்த்து மனக் கலக்கம் அடைந்தபொழுது, கண்ணன் வேதசாரத்தையும் ஆன்மாவின் தத்துவங்களையும் சத்திரியன் கடமை யையும் எடுத்துக் கூறிப் போர் புரியத் தூண்டினான்.

போரில் மிகச் சிறந்த வீரர்களான விடுமர், கர்ணன், சயத்திரதன் போன்றவர்களையும் கௌரவர்கள் பலரையும் கொன்றான்.

மகாபாரதப் போரில் பாண்டவர்கள் வெற்றி யடைந்த பிறகு, தருமர் அத்தினாபுரத்தை ஆண்டு கொண்டிருந்தபொழுது 'அசுவமேத வேள்வி' செய் தார். அவ்வமயம் அருச்சுனன் பாதுகாப்பில் வேள்விக் குதிரை அனுப்பப்பெற்றது. குதிரையைப் பின்பற்றிப் பல நாடுகளுக்குச் சென்று, பல அரசர்களுடன் போர்புரிந்து அவர்களை வென்றான். மணிபுர நாட்டை அடைந்தபொழுது தன் மகனான பப்புரு வாகனனுடன் போர் புரிய வேண்டிய நிலை ஏற்பட் டது. போரில் தன் மகனாலேயே கொல்லப்பட்டான். 'உலூபி' என்னும் தன் மனைவியின் மந்திர ஆற்ற லால் மீண்டும் உயிர் பெற்றான்

பாரத நாடு முழுவதும் சுற்றிவிட்டுப் பேரோடும் புகழோடும் அத்தினாபுரத்திற்குத் திரும்பியவுடன் அசுவமேத வேள்வி செய்து முடிக்கப்பட்டது. பின்னர் யாதவர்களின் கலகத்தின்பொழுது கண்ணனால் துவாரகைக்கு அழைக்கப்பட்டான். வாசுதேவன், கண்ணன் ஆகியோரின் முடிவுக் காலத்தில் அவர் களுக்கு ஈமச் சடங்குகளைச் செய்தான். பின்னர் அபி மன்யுவின் மகனாகிய பரீட்சித்திற்கு முடிசூட்டித் தன் உடன் பிறந்தார்களுடன் அருச்சுனன் சுவர்க்கம் அடைந்தான். எஸ்.செ

**அருணகிரிநாதர்** முருகன் அருள்பெற்று அவன் மீது திருப்புகழ்பாடிய அருட்புலவராவார். இவர் முரு கன் எழுந்தருளியுள்ள பல திருத்தலங்களையும் சிறப் பாக, ஆறுபடை வீடுகளையும் சென்று கண்டு மகிழ்ந்து பாடியவர். இவர் பாடிய பாடல்கள் நூலாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அத்தொகுப்பு "திருப்புகழ்" என இப்பொழுது வழங்கப்படுகிறது. முருகன் பாடல் களை இவரே, "படிக்கும் திருப்புகழ்" எனக் கூறுவ தால், முருகன்மேல் இவர் பாடிய பாடல்களுக்கும் அப்பெயர் பொருந்தியதாகலாம்.

இவர் ஊர் திருவண்ணாமலை; நல்லொழுக்கமும் பண்பும் நிறைந்த குடியில் தோன்றி மனைவி மக்க ளோடு இல்லறம் நடத்தியவர். ஆயினும் அக்காலத் தில் சமுதாயத் தவறாகக் கருதப்படாத விலைமாதர் தொடர்பு இவருக்கு இருந்தது. அதன் காரணமாக நாளடைவில் இவர் செல்வம் குறைந்து, வறுமை நிலையை அடைந்தார். தீராத நோயும் இவரைத் தொடர்ந்தது. தம் தவறுகளை உணர்ந்து மனம் வருந்தித் தற்கொலைக்கு இவர் முயன்றபோது முருகன் திருவருள் இவரைத் தடுத்தாட்கொண்டது. அதுமுதல் இவர் பக்தியும் ஞானமும் முதிர்ந்து முரு கனைப் பாடுவதே தம் குறிக்கோளாகக் கொண்டார்.

"மனையவள் நகைக்க ஊரின் அனைவரும் நகைக்க" என்று தொடங்கும் திருப்புகழ்ப் பகுதி மேற்கூறிய இவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

அருணகிரியார் காலத்தில் அரசாண்டு வந்தவன் பிரபுடதேவராசன் என்பவன். இவன் அருணகிரியார் பெருமையறிந்து இவர்பால் பெருமதிப்புக் கொண்டி ருந்தான். இந்த அரசனிடம் அவைக்களப் புலவனாக விளங்கியவன் சம்பந்தாண்டான். அவன் பராசக்தியை வழிபடுகின்றவன். எல்லார் முன்னிலையிலும் சக்தியை வரவழைத்துக் காட்டுவேன் எனச் சூளுரை செய்து தோற்றவன். அந்த நிலையில் பிரபுடதேவன் வேண் டிக் கொண்டபடி அருணகிரியார் முருகனை மயில் மேல் வரவழைத்துக் காட்டினார். இவர்தம் இணை யற்ற பக்தியை மக்கள் அறிந்து கொள்ள இது ஒரு தக்க சான்றாக அமைந்தது. அருணகிரியாரும் இந்த அற்புதம் முருகனின் பெருங்கருணையே என நினைந்து, "சயிலம் எறிந்த கை வேற்கொடு மயிலி னில் வந்தெனை ஆட்கொளல் சகமறியும்படி காட் டிய – குருநாதா" எனத் திருச்சிராப்பள்ளியிலும், "உலகினில் அனைவர்கள் புகழ்பாடி – அருணையில் ஒரு நொடிதனில் வருமயில் வீரா" எனத் திருமுது குன்றிலும் வியந்து பாடியருளினார்.

வில்லிபுத்தூராழ்வாருக்கும் அருணகிரியாருக்கும் புலமைப் போட்டி ஒன்று நடந்ததாகக் கூறப்படு கிறது. தமிழ்ப் பாடல் இயற்றுவதில் தவறு செய்யும் புலவர்களை வில்லிபுத்தூரார் காதறுத்துத் தண்டிப் பது வழக்கம் என்று கூறி, அவர் செருக்கை அடக்க வேண்டுமென்று பலர் அருணகிரியாரிடம் வேண்டிக் கொண்டனர். அருணகிரியாரும் போட்டிக்கு ஒப்புக் கொண்டார். அப்போட்டியில் அருணகிரியார் முருகன் மேல் அந்தாதியாகப் பாடத் தொடங்க ஒவ்வொரு பாடலுக்கும் வில்லிபுத்தூரார் பொருள் சொல்லி வந்தார். "திதத் தித்த" என்னும் 54–ஆவது பாடலுக்கு வில்லியார் பொருள் சொல்ல முடியாது திகைத்தார். அருணகிரியார் தாமே அப்பாடலுக்குப் பொருள் சொல்லி மேலும் பல பாடல்கள் பாடிப் போட்டியில் வென்றார். அப்போது பாடிய போட்டிப் பாடல்களே "கந்தர் அந்தாதி" என்று இப்போது வழங்கப்படுகின்றது. வில்லிபுத்தூராருக்கும் அருண கிரியாருக்கும் நடந்த இந்தப் போட்டி நிகழ்ச்சிக்குத் தகுந்த சான்றுகள் இல்லை.

அருணகிரிநாதர் வாழ்க்கை வரலாறு பலவாறு கூறப்படுகிறது. பட்டினத்தாருக்கும் முத்தம்மை என்ற உருத்திரகணிகைக்கும் இவர் பிறந்தவர். காம இன்பத்தில் மூழ்கியதால் தொழு நோய் இவருக்கு வந்தது. அப்போதும் இவர் அந்த இன்பத்தை வேண் டித் துடித்தார். இது கண்டு இவர் தமக்கையார்

தம்மையே அளிக்க முன்வந்தார். இது இவருக்குப் பெரும் அதிர்ச்சியைத் தந்தது. எனவே, தம் வாழ்நாளை முடித்துக்கொள்ளத் திருவண்ணாமலைக் கோபுரத்திலேறிக் கீழே விழுந்தார். அப்போது முருகன் அவரைத் தாங்கிப் பிடித்தார். பின்னர்த் திருப்புகழ் பாடத் தொடங்கினார் என்பது கூறப்படுகிறது.

பிரபுடதேவன் விருப்பப்படி பாரிசாத மலரைக் கொண்டுவரத் தம் உடலை விட்டுக் கிளி உருவத்தில் விண்ணுலகம் சென்றார். திரும்பி வருவதற்குள் இவர் மேல் பொறாமை கொண்டிருந்த சம்பந்தாண்டான் இவர் உடலை எடுத்து எரித்து விட்டான். அதனால் தம் வாழ்நாள்வரை இவர் கிளி உருவிலேயே வாழ்ந்தார். கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம் முதலிய நூல்களைக் கிளி உருவிலேயே இருந்து பாடினார் என்பர்.

இவை போன்ற செய்திகள் தண்டபாணி சுவாமிகள் பாடிய புலவர் புராணம், கந்தப்ப தேசிகரின் திருத்தணிகை உலா முதலியவற்றில் குறிக்கப்பட்டுள்ளன.

''வாக்கிற்கு அருணகிரி'' என்ற தனிப்பாடல் வரி இவர் கவி வன்மையைச் சிறப்பித்துப் பாராட்டுகிறது.

> ''கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன
> எந்தையருள் நாடி இருக்கும்நாள் எந்நாளோ?''

என்னும் தாயுமானவர் வாக்கும்,

> ''அருணகிரி நாதர் அனுபவம் நாயேற்குக்
> கருணைபொழி போரூரா காட்டு''

என்னும் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள் வேண்டுகோளும் அருணகிரியாரின் பக்தி முதிர்வை நமக்குத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. இவர் வாழ்ந்த காலம் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டாகும்.

அ.பா.

**நூல்கள்:** ஆழ்வார்கள் நாயன்மார்களுக்குப் பின்னர்த் தமிழில் பக்தி இலக்கிய வரிசையில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்வன அருணகிரிநாதர் படைப்புகளாகும். இவர்தம் பாடல்கள் பக்திச் சிறப்பும், சந்த நலமும் சான்றனவாகும். அதனால், ''வாக்கிற்கு அருணகிரி'' என்று இவர் பாராட்டப் பெற்றார். வடமொழிச் சொற்களை நிரம்பக் கலந்த மணிப்பிரவாள நடை இவர் தம் சந்தப் பாடல்களுக்கு அழகூட்டுவதாக அமைந்துள்ளது. இவர் இயற்றிய நூல்கள், திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, கந்தரந்தாதி, திருவகுப்பு, விருத்தங்கள், திருவெழுகூற்றிருக்கை முதலியனவாகும்.

திருப்புகழ், பல தலங்களில் அமைந்துள்ள முருகப் பெருமானைப் புகழ்ந்து பாடிய சந்தப்பாக்களின் தொகுப்பாகும். ஒவ்வொருபாடலுக்கும், 'தான தனதன தான தனதன, தனதான' என்பது போன்ற சந்தக் குழிப்பு அமைக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பு 16 ஆயிரம் பாடல்கள் கொண்டது என்று கூறப்பட்டாலும், வ.சு. செங்கல்வராய பிள்ளைப் பதிப்பில் 1304 பாடல்களே உள்ளன. பின் வந்த பதிப்புகளில் 1311, 1361 பாடல்கள் காணப்படுகின்றன. எண்ணிக்கையில் அமைந்த வேறுபாடு, 'வெள்ளிப் பாடல்' எனத் தகும் போலிப் பாடல்களின் சேர்க்கையாலானதாகும் என்று கருதுகின்றனர்.

கந்தரலங்காரம், காப்புச் செய்யுளோடு 102 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால் ஆகியது. ஆறு மிகைப்பாடல்களும் உள்ளன. 'கந்தன் நன்னூல் அலங்காரம்' என வருவதாலும், முருகன் வடிவம், படை, ஊர்தி முதலியவற்றை அலங்கரித்துப் பாடப் பெற்றிருப்பதாலும் இந்நூல் கந்தரலங்காரம் எனப்பட்டது.

கந்தரனுபூதி, 105 கலிவிருத்தங்கள் கொண்டுள்ளது. ஆனால், தொடக்கத்தில் அமைந்துள்ள 51 பாடல்களே அருணகிரியார் பாடல்கள் என்று அறிஞர் கூறுகின்றனர். இது, முருகன் அருள் பெற்றமை, ஆட்கொண்டமை, உபதேசம் முதலியன பற்றிக் கூறும் அரிய அருளனுபவ நூலாகும். 'கந்தானுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தை' என இந்நூலையும் ஆசிரியரையும் தாயுமானவர் சிறப்பித்துள்ளார்.

கந்தரந்தாதி, காப்புச் செய்யுளொடு 102 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால், அந்தாதியாக அமைந்துள்ளது. நூல் முழுதும் யமகமாக உள்ளமையால் பொருள் விளங்குவது அரிதாகும். வில்லிபுத்தூராழ்வாரை வாதில் வெல்வதற்காக இந்நூல் பாடப்பட்டது என்பர்.

திருவகுப்பு, முருகன் அருள் நலம், அடியார் பெருமை முதலியவற்றை வகுத்துச் சந்த நலமிக்க விருத்தப் பாடல்களால் பாடப்பட்டது. இப்பொழுது அச்சிடப்பட்டுள்ள 25 வகுப்புகளுள் 18 வகுப்புகளே அருணகிரியார் பாடியன என்பர்.

திருவிருத்தங்கள் வேல்விருத்தம் (10 பாடல்), மயில் விருத்தம் (10 பாடல்), சேவல் விருத்தம் (10 பாடல்) என்று மூன்று சிறு நூல்களாக அமைந்துள்ளன.

திருவெழுகூற்றிருக்கை என்பது 'சித்திரக்கவி' வகையுள் அமைந்த பாடலாகும். நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், பெயரறியாச் சமணப் புலவர் ஒருவர் ஆகியோர் பாடியுள்ள திருவெழுகூற்றிருக்கைப் பாடல்களைப் போன்று அருணகிரி நாதரும் ஒரு திருவெழுகூற்றிருக்கை பாடியுள்ளார்.

**அருணகிரிநாதர், சு.சு.(கி.பி. 1895–1974)** வட ஆர்க்காடு மாவட்டம் திருவண்ணாமலை வட்டத்திலுள்ள சுரகுளத்தூரில் 1895–ஆம் ஆண்டு திசம்பர்த்

திங்கள் பதினைந்தாம் நாள் பிறந்தார். சுப்பராய முதலியாரும் கன்னியம்மாளும் இவர்தம் பெற்றோராவர்.

அருணகிரிநாதருக்கு ஆங்கிலம் பயில வாராததனால் பள்ளிப் படிப்புப் பாதியில் நின்றது. யாழ்ப்பாணம் கனகசபையின் அறிவுரையால் தமிழ் கற்ற இவர் முப்பத்திரண்டு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். எந்த நிலையிலும் மனிதன் நேர்மையை இழக்கக் கூடாது என்பது இவரது கொள்கையாக அமைந்திருந்தது.

நீதிக் கட்சியில் ஈடுபாடு கொண்ட இவர், அக் கட்சிச் சார்பில் வெளியான 'திராவிடன்' என்ற நாளேட்டின் துணையாசிரியராகப் பணியாற்றினார். நீதிக்கட்சியின் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்.

இவர் கி.பி. 1937–ஆம் ஆண்டு 'ஆனந்தபோதினி' என்னும் சிறுகதைத் திங்களிதழைத் தொடங்கினார். அவ்விதழில் அருணன், விசயன் முதலிய புனை பெயர்களில் எழுதிவந்தார். இவர் பல புதினங்களையும் எழுதியுள்ளார். 'சுதந்திர நாடு' என்ற இதழுக்கும் ஆசிரியராக இருந்துள்ளார். இவ் இதழில் 'மின்னொளி' என்ற புனை பெயரில் அரசியல் கட்டுரைகளை எழுதி வந்தார்.

இந்தி எதிர்ப்புப் போரில் தம் மனைவி உண்ணாமுலையாரையும் ஈடுபடுத்தினார். அதன்விளைவாக அவ்வம்மையார் தம் கைக் குழந்தையுடன் ஓராண்டுக் காலம் சிறைப்படுத்தப் பட்டார்.

தமிழாசிரியராகவும் இதழாசிரியராகவும் நூலாசிரியராகவும் திகழ்ந்த இவர், சென்னைப் பண்டிதர் சங்கத்தின் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். அப்போது தமிழ்ப் புலவர் பெருமக்கள் குறைகளை நீக்க ஒரு மாநாடும் நடத்தினார்.

அருணகிரிநாதர் பிறருக்கு உதவும் இயல்பினர். நாவலர் சோமசுந்தர பாரதியார் இவருக்கு 'ஆசிரிய மணி' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டினார்.

வடபழநி ஆண்டவர் அந்தாதி, மனைவியின் கடமை, வாழ்வதற்கு வழி, பேரும் புகழும், வீரகேசரி, அசலாம்பிகை, திருக்கழுக்குன்றத்துக் கொலை, பத்மாசனி, அமரநாதன், சற்குண வல்லி, குமுத ரஞ்சனி, ஆனந்த மனோகரன், அமிர்தசாகரன், அமிர்த குமாரி, செய்யாத குற்றத்திற்குச் சென்ம தண்டனை, தென்னிந்தியப் பெருமக்கள், புகழேந்திப் புலவர், பட்டினத்தார், கொலம்பசு, புத்தர். அசோகர், அயல் நாட்டுப் பெரியோர், அமெரிக்காவின் மூன்று பெருமக்கள், சேம்சு கார்பீல்டு, வில்லியம் மில்லர், நல்லோர் நடந்த வழி, தமிழர் வாழ்ந்த விதம், தமிழ் நாட்டுப் பெரியோர், இவர்கள் உயர்ந்த விதம், அறிஞர் வரலாறு, தமிழ் மக்கள் சென்ற வழி முதலான பல நூல்களை இயற்றியுள்ளார்.

இவர் தம் எழுபத்தொன்பதாவது வயதில் (17-4-1974) காஞ்சிபுரத்தை அடுத்துள்ள 'வயலக்கா' என்னும் ஊரில் இயற்கை எய்தினார். மு.த.

**அருணகிரிநாதர் சுவாமி** 20–ஆம் நூற்றாண்டில் விளங்கிய புலவர்களுள் ஒருவர். இவர் கி.பி. 1897–ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் பத்தொன்பதாம் நாள் பாண்டிய நாட்டுப் பகுதியாகிய சேதுநாட்டில் உள்ள பழுவூர் என்னும் ஊரில் பொன்னையா பிள்ளை, காளி முத்தம்மையார் இருவருக்கும் மகனாகப் பிறந்தார். அண்ணாமலையாரின் அருளால் பிறந்தவர் என்பதனால் அருணகிரியார் எனப் பெயரிடப் பெற்றார்.

அருணகிரிநாதர்சுவாமி தம் 6–ஆம் வயதில் கல்வி பயிலத் தொடங்கினார். இளமையில் வேளாண்மையிலும் மிக்க ஈடுபாடு உடையவராக இருந்தார். இவர் தம் 16-ஆம் வயதில் அன்னையார் இறந்தார். தம் 11-ஆம் வயதில் மாரியாயி என்னும் மங்கை நல்லாளை மணந்தார்.

நான்காண்டு இல்லற வாழ்வுக்குப் பின்னர்த் தமது இருபத்து மூன்றாம் வயதிலேயே துறவு நிலையை மேற்கொண்டார். திருவண்ணாமலையில் துறவு நிலை பெற்ற அருணகிரிநாதர்சாமி, தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள பல்வேறு கோவில்களுக்குச் சென்று இறைவழிபாடு நிகழ்த்தினார். கோலாலம்பூர், பினாங்கு முதலிய இடங்களுக்கும் சென்று அங்குள்ள இறைவனை வழிபட்டதோடு சமயச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார்; பல நூல்களை இயற்றியருளினார்.

இல்லறப் பற்றைத் துறந்த அருணகிரிநாதர்சாமியால் நாட்டுப் பற்றினைத் துறக்க இயலவில்லை. கி.பி. 1925 ஆம் ஆண்டு முதல் விடுதலை இயக்கத்தில் முனைப்பாக ஈடுபட்டார். துறவிகள் இல்லறத்தைத் தான் துறக்க வேண்டுமே தவிர, பொது நலப் பணியிலிருந்து விலகக் கூடாது என்ற கருத்துடைய இவர், துறவிகளைப் பொதுநலப் பணியில் ஈடுபடுத்தும் பொருட்டுத் 'தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்' ஒன்றையும் நிறுவினார்.

'சென்னை அகத்திய குருகுலம் சாது நாராயண தேசிகர் நிலையம்' என்ற அமைப்பினை, கி.பி. 1932–ஆம் ஆண்டு திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் நிறுவினார். ஏழை எளியவர்களுக்கு உதவும் வகையில் 'அகத்தியனார் சித்த மருத்துவ நிலையம்' ஒன்றையும் தொடங்கினார்.

நாட்டுப்பற்றால் விடுதலை வேள்வியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அருணகிரிநாதர்சுவாமி, மொழியின் பாலும் மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். கி.பி. 1937-ஆம் ஆண்டில் இந்தியெதிர்ப்பு இயக்கத்தில் இவர் பங்கேற்றார்.

கி.பி. 1957-ஆம் ஆண்டு இவருக்கு மணிவிழாக் கொண்டாடப் பெற்றது. அப்போது 'இறையருள் வேட்டலும் சமயநெறி விளக்கமும்' என்னும் தலைப்பில் மலர் ஒன்று வெளியிடப் பெற்றது.

தண்ணீர்மலை முருகன் பஞ்சரத்தினப் பாமாலை, மார்க்கண்டேசுரர், மங்களாம்பிகை பதிகங்கள், இராம செய உயிர் வருக்கப் பாமாலை, பேரா முருகன் சத மணிமாலை, கோலாலம்பூர் குமரவேள் போற்றிப் பதிகம், பத்துமலை வடிவேலர் பதிற்றந்தாதி, ஆடு மயில் பாடல், மலேயா பஞ்சக் கொடுமைச் சிந்து, மக்கள் கடமை, குருசீடா சாரம், குருவருள் மாலை, கடவுள் விளக்கம், செய்நெறி ஒப்புமை வெண்பா ஆகிய நூல்களைப் படைத்த அருணகிரிநாதர்சாமி விடுதலை வேட்கைப் பாடல்களையும் இயற்றியுள்ளார்.

அறுபத்தைந்து ஆண்டுகள் வாழ்ந்த அருணகிரிநாதர்சுவாமி கி.பி. 1962-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்து வீடு பேறு அடைந்தார்.

மு.த.

**அருணகிரிநாதர் தத்துவம்**: அருணகிரிநாதர் பதினைந்தாம் நூற்றாண்டில் திருவருணையில் தோன்றியவர். முருகப் பெருமானிடம் பிரணவத்தைப் பற்றிக் கேட்டறிந்தவர்கள் மூவர். அவர் சிவபெருமான், அகத்தியர், அருணகிரிநாதர் ஆகியோராவர்.

அருணகிரிநாதர் மூவர்க்குந் தேவர்க்குந் தனிப் பெருந் தலைவராகிய முருகப் பெருமான் ஒருவனையே பாடி 'பரமபதவிரதநிலை'யை உலகுக்கு உணர்த்தியவர்.

அருணகிரிநாதர் பாடிய நூல்கள் ஆறு: (1) திருப்புகழ், (2) திருவகுப்பு, (3) கந்தரந்தாதி, (4) கந்தரலங்காரம், (5) கந்தரநுபூதி, (6) வேல்-மயில்-சேவல் விருத்தங்கள்.

திருப்புகழ் பதினாயிரம் பாடல்கள் கொண்டது என்பது திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழால் அறியப்படும். பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையை உணர்ந்து உலகுக்கு உணர்த்தியவர் அருணகிரியார். மெய்கண்டாரின் கொள்கையாகிய சைவ சித்தாந்தக் கொள்கையை உடையவர்.

''பதியினைப் போல் பசுபாசம் அநாதி'' என்கிறார் திருமூலர். உயிர்கள் இறைவனால் படைக்கப் பட்டவையல்ல. இறைவன் என்றோ அன்றே உயிர்களும் உண்டு. ''என்று நீ அன்று நான்'' என்பது தாயுமானவர் திருவாக்கு. சற்காரியவாதம் என்பது சைவ சித்தாந்தத்தின் அடிப்படையான தத்துவம். ''இல்லது தோன்றாது; உள்ளது அழியாது;'' இதுதான் சற்காரியவாதம். இந்த உலகம் மாயையிலிருந்து தோன்றியது. இந்த உலகுக்கு முதற்காரணம் மாயை; துணைக்காரணம்-சக்தி; நிமித்தகாரணம்-சிவன். ஒரு பானைக்கு முதற்காரணம் மண்; துணைக்காரணம்- - தண்டசக்கரம்; நிமித்தகாரணம் - குயவன். மண்ணில் இருந்து பானை வருவதுபோல் மாயையிலிருந்து உலகம் தோன்றியது.

இந்த உலகத்துக்குப் பிரபஞ்சம் என்ற ஒரு பெயருண்டு. ''பிரபஞ்சமென்னும் சேற்றைக் கழிய வழி விட்டவா'' என்று கந்தரலங்காரத்தில் கூறுகிறார் அருணகிரிநாதர். பஞ்சம் என்ற சொல்லுக்கு விரிவு என்பது பொருள். பஞ்ச பாத்திரம் என்றால் வாய் விரிந்த பாத்திரம் என்று பொருள்படும். ''ப்ர'' என்ற உபசர்க்கத்துக்கு நன்றாக என்பது பொருள். ஆகவே பிரபஞ்சம் என்பது நன்றாக விரிந்தது எனப் பொருள் படும்.

சுருட்டியுள்ள பாயை விரித்துப் போடுவதுபோல-மாயையில் சூட்சுமமாக இருந்த உலகை இறைவன் விரிவு செய்து தூலத்தில் படைத்தான். இந்த உலகுக்கு இறைவன் முதற்காரணம் என்று கூறிச் சிலர் இடர்ப்படுவர்.

இறைவன் - சித்துப் பொருள்; உலகம்- அசித்துப் பொருள்; சித்திலிருந்து அசித்து தோன்றாது. மாயை - அசித்து; உலகம்-அசித்து. ஆகவே மாயையாகிய அசித்தினின்றும் உலகமாகிய அசித்து தோன்றியது. இந்த விவரங்களைச் சிவாகமங்கள் விரிவாகப் பேசுகின்றன. ஆகமத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்கள் கூறப்படுகின்றன. ஆகமங்கள் இருபத்தெட்டு. இந்த ஆகமநெறியில் தமக்கு முக்தி நலம் வேண்டும் என்று அருணகிரிநாதர் முருகப் பெருமானை வேண்டுகிறார்.

எனவே அருணகிரிநாதர் சைவசித்தாந்தச் செந்நெறியை உலகுக்கு உணர்த்தவந்த பரமகுருநாதராவார்.

கி.வா.

**அருணகிரிப்புராணம்**, சைவப் பெரும் புலவராகிய சிதம்பரம் - கண்கட்டி மறைஞான சம்பந்தர் இயற்றியது ஆகும். அருணகிரி என்பது திருவண்ணாமலை. இந்நூல் 613 செய்யுள்கள் உடையது. இதன் கண் பாயிர முட்பட எட்டுச் சருக்கங்கள் உள்ளன. பாயிரப் பகுதி 35 பாடல் கொண்டது. விநாயகர் காப்பாக மூன்று பாடல்கள் உள்ளன. மலையாகிய அண்ணாமலையாரையும் பராசக்தியையும், ஆலயத்துள்ளிருக்கும் அண்ணாமலையாரையும் உண்ணாமுலையம்மையையும் தனித்தனியே போற்றியுள்ளார். இவர்களை

யன்றித் தனியே சபாநாதர், அண்ணாமலை நாதர், அதிகார நந்தி, நந்தி, மாகாளர், இடபதேவர் ஆகியோர்க்கு வணக்கமும் முனிவர்க்கு வணக்கமும் கூறப் பட்டுள்ளன. காரைக்காலம்மையார், நால்வர், திரு மாளிகைத் தேவர், மெய்கண்டார் ஆகியோருக்கும் வணக்கம் கூறியுள்ளார்.

நூல் முழுதும் சந்தப் பாடல்களும், பக்திச் சுவையும் நிரம்பிக் காணப்படுகின்றன. பாடல்கள் எளிமையும் இனிமையும் பொருந்திய சொற்களால் அமைந்துள்ளன. அருணகிரிப்புராணம் என்னும் பெயரில் புராணத் திருமலைநாதர் ஒரு நூல் எழுதினார் எனவும், அது இப்பொழுது கிடைக்கவில்லை எனவும் கூறுகின்றனர். ரா.கி.

**அருணந்திசிவாசாரியார்** சைவசித்தாந்த சாத்திர நூல்கள் செய்த ஆசிரியர்களுள் ஒருவர். தமிழகத்தின் ஒரு பகுதியாகிய நடுநாட்டில் பெண்ணை யாற்றின் வடகரையிலுள்ள திருத்துறையூரில் ஆதி சைவ மரபில் தோன்றியவர், கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சைவ ஒழுக்கமும் சாத்திரப் பயிற்சியும் மிகுதியாகப் பெற்ற இவர், சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் எய்தித் தம்மை யடுத்த மாணவர்களுக்குச் சித்தாந்த உபதேசம் செய்து வந்தார்.

சகலாகம பண்டிதர், சிவஞானபோத மென்னும் செந்தமிழ்ச் சாத்திர மூல நூலை இயற்றிய மெய் கண்ட தேவரின் தந்தையாராகிய அச்சுதகளப்பாளரின் குருவாக விளங்கினார். மெய்கண்ட தேவர் குருவருளும் திருவருளும் வாய்க்கப்பெற்றுத் திருவெண்ணெய் நல்லூரில் தம்மாணவர்களுக்கு முப்பொருளியல்புகளைத் தெளிவுபடுத்தி வந்தார். வயதில் இளையராகிய மெய்கண்டதேவரின் சிறப்பினைக் கேட்டு, அதனால் புலமை அழுக்காறு அடைந்த சகலாகம பண்டிதர், அவரைக் காண வந்தபோது மெய்கண்டதேவர் ஆணவத்தின் இயல்பினைத் தம் மாணவர்க்கு அறிவுறுத்தி விளக்கிக் கொண்டிருந்தார். சகலாகம பண்டிதர், அவரிடம் ஆணவத்தின் இயல்பு யாது என வினவினார். அவ்வினாவிற்கு வினாவியவரே விடையாவார் என்னும் கருத்தில், மெய்கண்ட தேவர் சகலாகம பண்டிதரைச் சுட்டிக் காட்டினார். அதனால் மெய்யுணர்வு பெற்று, அஞ்ஞானமும் ஆணவமும் அகலப்பெற்ற சகலாகம பண்டிதர் மெய்கண்டார்பால் மாணவராக அமைந்தார். மெய்கண்டார் அவருக்கு 'அருள்நந்தி தேவர்' என்னும் தீக்கைத் திருநாமம் சூட்டித் தாமியற்றிய சிவஞான போதத்தையும், தமக்குப் பொல்லாப் பிள்ளையார் வழங்கிய சூர்ணிகையையும் அருளிச் செய்தார். ஆசிரியராகிய மெய்கண்ட தேவரின் விருப்பப்படி அருணந்தி சிவாசாரியார், சிவஞானசித்தியார் என்னும் விரிவான சைவசித்தாந்த சாத்திர நூலை இயற்றினார். முதனூலாகிய சிவஞானபோதத்தின் வழி நூலாகத் திகழும் சிவஞானசித்தியார், சிவாகமங்களுக்கெல்லாம் ஓர் உரையாணி என்று கூறத் தகும் பெருமை பெற்றதாகும்; பரபக்கம், சுபக்கம் என்னும் இருபகுதியாக அமைந்தது. 'பார் விரித்த நூலெல்லாம் பார்த்தற்குச் சித்தியிலே-ஓர் விருத்தப் பாதி போதும்' என்றும், 'சிவனுக்கு மேல் தெய்வமில்லை; சிவஞானசித்திக்கு மேல் சாத்திரமில்லை' என்றும் அமைந்த புகழுரைகள், இந்த நூலின் பெருமையினையும் இதன் ஆசிரியராகிய அருணந்தி சிவாசாரியாரின் புகழையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன.

இவர் 'இருபா இருபஃது என்னுமொரு நூலையும் செய்துள்ளார். இது பத்து வெண்பாவும் பத்து ஆசிரியப்பாவுமாக அமைந்து, சைவ சித்தாந்த உண்மைகளை மாணவ-ஆசிரியரின் வினா விடையாக உணர்த்தும் பாங்கில் உள்ளது. ஆசிரியரின் இவ்விரு நூல்களும் மெய்கண்டசாத்திரம் என வழங்கும் சித்தாந்த சாத்திரத்தின் பதினான்கு நூல்களுள் அடங்கி விளக்குகின்றன. அருணந்தி சிவாசாரியார் வீடுபேறெய்தியது புரட்டாசித் திங்கள் பூர நாளிலாகும்.

**அருணமச்சிவாய தேவர்** சைவ சித்தாந்த சமயாசாரியர்களுள் ஒருவர். மெய்கண்டார், அருள் நந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் ஆகிய நால்வரும் சித்தாந்த சைவ சந்தானாசாரியர் எனப்படுவர். உமாபதி சிவாசாரியருக்குப் பின்னர் இச் சமயாசாரிய பரம்பரை அருளுரை பெறு முறையில் பல பிரிவுகளாகப் பிரிந்து வளர்ச்சியுற்றது. உமாபதி சிவத்திடம் சீர்காழி மச்சுச் செட்டியார் என்பவர் அருளுரை பெற்று அருள்நமச்சிவாயர் என்னும் பெயரோடு ஆசாரியராக விளங்கினார். அவருடைய மாணவர் பலருள் சித்தர் சிவப்பிரகாசர் என்பவர் வழியாகச் சமய பரம்பரை ஒன்று உருவாகியது. அடுத்த தலைமுறைக்குப் பின்னர் அப்பரம்பரையே திருவாவடுதுறை ஆதீனம் ஆகியது. மற்றொரு மாணவராகிய காழிக் கங்கை மெய்கண்டார் வழியாகப் பிறிதொரு பரம்பரை வளர்வதாயிற்று. சில தலைமுறைக்குப் பின்னர் அந்த ஞானபரம்பரையில் வந்த கமலை ஞானப்பிரகாசர் வழியாகத் தருமபுர ஆதீனம் தோன்றியது. அருள்நமச்சிவாயர் 'ஞான பூசைத் திருவிருத்தம்' முதலிய ஐந்து நூல்கள் இயற்றினார். இவர் கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார்.

**அருணன்**[1] சூரியனின் தேரோட்டி; செந்நிறத்தினன்; காசிபருக்கும் விநதைக்கும் பிறந்தவன். இவன் தாய், தன் மாற்றாளாகிய கத்துரு முதலில் மகப்

பெற்றாள் என்று பொறாமை கொண்டு, தான் அடைகாத்திருந்த முட்டையைப் பருவம் அடைவதற்கு முன் உடைத்தாள். அதிலிருந்து காலில்லாதவனாக இவன் பிறந்தான். தன் தாயைப் பார்த்து என்னைக் காலில்லாதவனாகச் செய்தபடியால் நீ மாற்றவளுக்கு அடிமையாகிப் பிறகு, என் உடன்பிறந்தானாகிய கருடனால் அது நீங்கப் பெறுவாயாக என்று சாபம் இட்டான். இவனுடைய மனைவியின் பெயர் சயேனி; மக்கள் சம்பாதியும் சடாயுவும் ஆவர்; தம்பி கருடன். இவன் கதிரவனுக்குத் தேரோட்டியானமையால் கதிரவனுக்கே அருணன் என்னும் பெயருண்டாயிற்று.

அருணன்[2] இந்திரனுடைய கொலுப் புதுமையைக் காணும்பொருட்டுப் பெண்ணுருக்கொண்டு சென்றான். இவன் பெண்ணுருவைக் கண்டு இந்திரன் விருப்புற்றுத் தழுவினான். அதனால் வாலி பிறந்தான். பிறகு கதிரவன் இவன் காலந்தாழ்த்ததைப் பற்றி உசாவியறிந்து, அவ்வாறு பெண்வடிவம் கொளச் செய்து இன்புற்றான்; அப்பொழுது சுக்கிரீவன் பிறந்தான்.

அருணன்[3] முராசுரன் என்னும் அசுரனின் மகன்; கண்ணனுடன் போர் செய்து இறந்தான்.

அருணன்[4] ஓர் அசுரன். இவன் பிரமனிடத்தில் தன்னை யாராலும் வெல்ல இயலாதவாறு வரம் பெற்றுப் பின்னர்த் தேவர்களைத் துன்புறுத்தினான். அவர்கள் சிவசத்தியாகிய பிரமராம்பிகையினிடத்தில் தங்களைக் காக்குமாறு வேண்டினார்கள். அதற்கிசைந்து சிவசக்தி தன் மாலையில் மொய்த்த வண்டுகளை ஏவி, அசுரனை அழித்து வருமாறு கட்டளையிட்டாள். வண்டுகள் சென்று அருணனையும் அவனது சேனையையும் அழித்து மீண்டன. த.கோ.

**அருணாசலக் கவிராயர்**[1] கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் விளங்கிய நாடகப் புலமை சான்ற புலவர்களுள் ஒருவர். தஞ்சையை ஆண்டுவந்த மராட்டிய மன்னர்கள் வழித் தோன்றிய சிவாசியின் கட்டளைக்கு இணங்கி 'மதன சுந்தரப் பிரசாத சந்தான விலாசம்' என்னும் நூலை இயற்றினார். அம்மன்னரால் ஆதரிக்கப் பெற்ற இவர், படிப்பதற்கு மட்டுமன்றி நடிப்பதற்காகவும் நாடகங்கள் எழுதினார். இவர் எழுதிய பல நாடகங்களுள் 'புரூரவ நாடகம்', 'பாண்டிய கேளீ விலாச நாடகம்' ஆகியவை குறிப்பிடத்தக்கன.

அருணாசலக் கவிராயர்[2] கி. பி. 19-ஆம் நூற்றாண்டில் தஞ்சையில் வாழ்ந்த புலவர். இராமலிங்கநாத சாமிகள் என்பவரின் மௌனப் பயிற்சியில் யோகசித்தி பெற்றவர். இந்தச் சாமிகளின் மாணவர்களுள் அருணாசலக் கவிராயரும் ஒருவர். தம் குருநாதர்மீது கொண்ட பக்தியாலும், குருநாதரின் யோக சித்தியினை உணர்ந்த ஆர்வத்தாலும் இவர் மீது பல பாடல்கள் பாடியுள்ளார். பதினொரு பாடல்களை மட்டும் கொண்ட, 'இராமலிங்க சுவாமிகள் தோத்திரப் பதிகம்' என்னும் பெயரில் கி.பி. 1885-ஆம் ஆண்டில் அப்பாடல்கள் வெளிவந்துள்ளன.

அருணாசலக் கவிராயர்[3] செயங்கொண்டத்துக்கு அருகில் உள்ள உடையார் பாளையத்தைச் சேர்ந்த கவிஞர். இவர் தம் ஊரைப் புகழ்ந்து பாட வேண்டும் என்ற ஆர்வத்தால் 'முற்கபுரி மான்மியம்' என்னும் நூலை இயற்றினார். முற்கபுரி, உடையார் பாளையத்தினைக் குறிக்கும். புலமை சான்ற வித்துவான் தியாகராசச் செட்டியார், உ.வே. சாமிநாத ஐயர் ஆகியோரிடம் மதிப்புரை தருமாறு கேட்டார். தலைப்பினால் பெரிய நூலாகத் தோற்றம் அளித்தாலும், பொருளாலும் அதனைச் சொல்லும் திறத்தாலும் பாட்டு நலத்தாலும் அந்த நூல் வெற்றிபெறவில்லை என்பதைத் தம் முன்னுரைகளால் அப்பெருமக்கள் குறிப்பாக வெளிப்படுத்தியுள்ளனர். இந்த நூல் தல புராண வகையைச் சார்ந்தது.

அருணாசலக் கவிராயர்[4] கி.பி. (1712-1779) இசைத் தமிழால் இராமாயணத்தைப் பாடிய சைவ வேளாள மரபினர். தஞ்சை மாவட்டத்துத் திருக்கடவூருக்கு அருகில் உள்ள தில்லையாடியில் பிறந்தவராயினும் பெரிதும் சீர்காழியிலேயே வாழ்ந்தமையால் சீர்காழி அருணாசலக் கவிராயர் என்றே இவர் புகழ் நிலைத்தது.

நல்லதம்பிப் பிள்ளைக்கும் வள்ளியம்மைக்கும் மகனாகிய இவரைத் தருமபுர ஆதீனத்தைச் சார்ந்த அம்பலவாணக் கவிராயர் எனும் பண்டார சந்நிதி, கல்வியார்வத்தில் ஈடுபடுத்தினார். தருமையாதீனத் தம்பிரான்களிடம் சைவசித்தாந்த சாத்திரத் திறப்பாடுகளையும் இலக்கண இலக்கிய மாட்சிகளையும் செம்மையுற அறிந்தார்.

இராமாயணத்தில் மிகச் சிறந்த காட்சிகளைத் தொகுத்து, அக்காட்சிகளின் சுவைக்கு ஏற்ற இசையையும் தேர்ந்து, இனிய கீர்த்தனைகளாக அமைத்தார். இவ்விசைப் பாடல்கள் கேட்போரின் உள்ளுணர்வைத் தூண்டிக் கவரும் இசையுடன் பெரிய அளவில் வழக்குச் சொற்களையும் கலந்து ஆக்கப் பட்டுள்ளமையால், பாடும்போதே பாவனையும் அழுத்தமான பொருள் தெளிவும் புலனாகின்றன. இப்பாடல் தொகுதி, 'இராமநாடகக் கீர்த்தனை' என வழங்கப் பெறுகிறது.

இசையறிவும், குரல் வளமும் ஒருங்கே வரப் பெற்றிருந்தமையால் இப்பாடல்களை இவரே இசையரங்குகளில் இசைத்துக் காட்டி, நாடு முழுவதும் பரவ வழியமைத்தார். தஞ்சை மராட்டிய மன்னராகிய துளசி

மகாராசாவும், புதுச்சேரி ஆனந்தரங்கப் பிள்ளை எனும் புகழ் சான்ற பெரியாரும் இக் கீர்த்தனைகளைக் கேட்டுப் பாராட்டி இவருக்குப் பரிசுகள் தந்துள்ளனர்.

இராமாயணச் சொற்பொழிவாளர்களுள் சிலர் பாடுவதற்கும், திறனாய்வு செய்வதற்கும் கம்ப ராமாயணத்தோடு இக் கீர்த்தனைகளையும் எடுத்தாள்கின்றனர். தில்லையாடி மணலி முத்துக் கிருட்டிண முதலியார், இராம நாடகக் கீர்த்தனைகளை அரங்கேற்றுவதற்கு உதவியாக இருந்தார். இக் கீர்த்தனைகளை மட்டுமே துணைக்கொண்டு முழுமையான இராமாயண நாடகம் நடத்தி வரப்பட்டமையால் இக்கீர்த்தனை நூலை 'இராம நாடகம்' எனவும் குறிப்பிடுவர். இன்றும் சிற்றூர்களில் இராமாயண நாடக மேடையில் இப் பாடல்களைப் பாடுவதுண்டு. இசை அரங்குகளிலும் இக் கீர்த்தனைகளைப் பாடி ஒரு சிலர் மக்களைக் கவருவர்.


வடமொழி, தெலுங்கு ஆகிய மொழிகளிலும் பயிற்சியுடைய இவர்பால் வேங்கடராமையர், கோதண்டராமையர் ஆகியோர் மாணாக்கராகப் பாடங்கேட்டனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று "இராமநாடகக் கீர்த்தனையை" இயற்றினார். இந்த நூலை இவர் திருவரங்கத்தில் அரங்கேற்றினார்.

இவர் சில தனிப்பாடல்களையும், சீர்காழித் தல புராணம், சீர்காழிக் கோவை, அனுமார் பிள்ளைத் தமிழ், அசோமுகி நாடகம், காழி அந்தாதி, காழிக் கலம்பகம் முதலிய நூல்களையும் இயற்றியுள்ளார். இவர் தம் 67-ஆம் வயதில் காலமானார்.

**அருணாசலக்கவிராயர், மு.ரா.** கி.பி.1852-ஆம் ஆண்டு, தென்பாண்டி நாட்டில் சேற்றூருக்கு அண்மையில் உள்ள முகவூரில் பிறந்தார். இவர் தந்தையார் இராமசாமிக் கவிராயர். மு.ரா. சுப்பிரமணியக் கவிராயரும், மு.ரா. கந்தசாமிக் கவிராயரும் இவருடன் பிறந்தவர்கள். இவர்களும் சிறந்த புலவர்களாக விளங்கினர்.

மு.ரா. அருணாசலக்கவிராயரின் பெரிய தந்தையார் கந்தசாமிக் கவிராயரும் அவர் மக்கள் மீனாட்சி சுந்தரக் கவிராயர், பழநிக் குமாரத் தம்பிரான் ஆகியோரும் புலவர்களாக விளங்கினர். எனவே, இவரது குடும்பமே கவிக்குடும்பமாகத் திகழ்ந்தது என்னுமாறு புலமைச் சிறப்புற்று விளங்கியது.

மு.ரா. அருணாசலக் கவிராயர் திருவாவடுதுறை ஆதீனத்தில் நமச்சிவாய தேசிக மூர்த்திகளிடம் கல்வி கற்று, இலக்கண இலக்கியங்களில் நல்ல பயிற்சி பெற்றார். வெள்ளக்கால் ப.சுப்பிரமணிய முதலியார் 'கம்ப ராமாயண சாரம்' எழுதியபோது, பல அரிய பாடல்களைத் தொகுத்துக் கொடுத்து உதவி புரிந்தார். சுப்பிரமணிய முதலியார் இயற்றிய நெல்லைச் சிலேடை வெண்பா என்னும் நூலை ஆராய்ந்து திருத்தம் செய்து உதவினார்.



அருணாசலக் கவிராயர் மு.ரா.

சிறிது காலம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் வேலை பார்த்த இவர், வேறெங்கும் ஊதியம் பெறுதற் பொருட்டு வேலை தேடியதில்லை. தம்மை மதிக்காதவரிடம் சென்று கொடை பெற்றதில்லை. உடன் பிறந்தவர் போல எண்ணிப் போற்றுகின்றவர்களிடம் மட்டுமே செல்லும் தன்மையினராய் விளங்கினார். பிறர் அதிகாரம் செய்யும் பணிகளில் ஈடுபடுவதில் சிறிதும் நாட்டமில்லாதவர். திருவாவடுதுறை ஆதீனம், இவரைத் தம் ஆதீனத்திற்கு ஆசிரியராக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்ட காலத்தில் அதனை ஏற்க மறுத்து விட்டார். இவர் அழுத்தமான தன் மதிப்புள்ள சிறந்த புலவராகத் திகழ்ந்தார்.


இவர் தமிழுக்குத் தொண்டாற்றுவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார். இவர் சிவகாசித் தலபுராணம், சிவகாசிப் பதிற்றுப் பத்தந்தாதி, சிவகாசிக் கலிவிருத்த அந்தாதி மூலமும் உரையும், ஆறுமுக நாவலர் சரித்திரம், பர்வத வர்த்தனியம்மை பிள்ளைத் தமிழ், சேறைத் தவம் பெற்ற நாயகிப் பிள்ளைத் தமிழ், திருப்பரங்கிரிப் பிள்ளைத் தமிழ், திருப்பரங்கிரிப் பாமாலை, திருப்பரங்கிரிக் கலித்துறை அந்தாதி, திருப்பரங்கிரி அலங்காரம், திருப்பரங்கிரி மும்மணிக் கோவை, திருப்பரங்கிரி அநுபூதி, திருப்பரங்கிரிக் கோவை, ஒற்றைக்கடை விநாயகர் அந்தாதி, ஒற்றைக் கடை இரட்டை மணிமாலை, ஒற்றைக்கடை மும்மணிக் கோவை, திருக்குறள் புராண வசனம், திருக்குறள் திரட்டும் தெளிபொருள் வசனமும், திருக்குறள் மூலமும் தெளிபொருள் வசனமும், வேணுவனத்தல

புராணம் குறிப்புரையுடன், காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ் குறிப்புரையுடன், நெல்லை வருக்கக் கோவை, திருச்செந்தூர்ப் பிரபந்தத் திரட்டு, திருக் குற்றாலத் தல புராணம் குறிப்புரையுடன், திருக்குற் றாலக் குறவஞ்சி குறிப்புரையுடன், குறுக்குத் துறைச் சிலேடை வெண்பா போன்ற பல நூல்களை எழுதியும் பதிப்பித்தும் சிறந்த தமிழ்த் தொண்டாற்றினார்.

இவர் உரைநடையில் எழுதியுள்ள திருப்பரங்கிரிப் புராண வசனம் என்னும் நூல் பதினொரு சருக்கங் களைக் கொண்டது. மு.த.

**அருணாசல நாவலர், நா.** தமிழிலுள்ள விரிவு நிகண்டு என்னும் நூலினை இயற்றியவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வீரவ நல்லூரைச் சேர்ந்தவர். இவர் எழுதிய நிகண்டு நூல் எதுகை முறையில், விருத்தப்பாவினால் அமைந்துள்ளது; ஆயி ரத்திற்கும் மேற்பட்ட செய்யுள்களைக் கொண்டது. இது சூடாமணி நிகண்டினை அடிப்படையாகக் கொண்டது. உலக வழக்குச் சொற்கள் பலவற்றைக் குறிப்பாக நெல்லைப் பகுதியில் வழங்கும் வழக்குச் சொற்களை இவர் தம் நூலில் சேர்த்துள்ளார்.

**அருணாசலப் பிரதேசம்** இந்தியாவின் நேராட்சிக்குட்பட்ட பகுதிகளுள் ஒன்று. முன்னர் வட கிழக்கு எல்லைப்பகுதி (North East Frontier Agency) என்று பெயர் கொண்ட இது, அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. 1972 சனவரி 21 ஆம் நாள் இது அசாமிலிருந்து பிரிக்கப்பட்டு, இந்திய ஒன்றியத் தின் நேராட்சிப் பகுதியாக்கப்பட்டது.




அருணாசலப் பிரதேசம்

இது, கொமங் (Komeng), திராப் (Tirap), சுபன் சிரி (Subansiri), சியாங் (Siang), உலோகித் (Lohit) ஆகிய மாவட்டங்களைக் கொண்டது. இதன் பரப் பளவு 81,426 ச.கி.மீ. அருணாசலப் பிரதேசத்தின் மக்கள்தொகை 6,28,050 (1981). இங்கு மக்கள்தொகை மிகக் குறைவு. ஒரு சதுரக் கிலோ மீட்டரில் 7 பேர் வாழ்கிறார்கள்.

அருணாசலப் பிரதேசத்தின் (Arunachal Pradesh) நிலப்பரப்பில் 60 விழுக்காடு காடுகள் நிறைந்துள்ளன. மக்கள் தொகையில் 18.5 விழுக்காட்டினர் பயிர்த் தொழில் செய்கின்றனர். 1970-இல் 2 இலட்சம் ஏக் கர் நிலப்பரப்பில் வேளாண்மை செய்யப்பட்டது. அதில் 32,600 ஏக்கர் நீர்ப்பாசன வசதியைப் பெற்றி ருந்தது. நெல், இரப்பர், (Rubber), காபி, தென்னை, கமுகு, பழவகைகள், நறுமணப் பொருள்கள் போன் றவை பயிரிடப்படுகின்றன. இங்குக் கூட்டுறவு நிறு வனங்கள் ஏறத்தாழ 100க்கு மேல் இயங்குகின்றன. அருணாசலப் பிரதேசத்தின் தலைநகர் இட்டாநகர் (Itanagar) என்பதாகும்.

**அருணாசல புராணம்**, சைவ எல்லப்ப நாவலர் இயற்றிய புராணமாகும். அருணாசலம் என் பது திருவண்ணாமலையின் மறு பெயராகும். இது அருணை என்றும், ஆதி அருணாசலம் என்றும், சோதி மலை என்றும் குறிக்கப் பெறும். அருணாசலபுராணம் என்னும் இந்நூல் திருவண்ணாமலைத் தலத்தின் சிறப் புரைக்கும் நூலாகும். இந்நூலாசிரியர் சோணாட்டில் திருவெண்காட்டிற்கு அண்மையில் உள்ள 'பூந்தாழை' என்னும் ஊரினர். கார்காத்த வேளாண் மரபின ராகிய இவர் கி.பி. 17, 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனக் கருத இடமுண்டு. இளமையில் தமிழ், வடமொழி இலக்கண இலக்கியங்களைக் கற்றுச் சிறந்து விளங்கினார். தருமபுர ஆதீனத்தில் சைவ சமய நூல்களைக் கற்றுத் தேர்ந்தார். இவர் சைவ சமயத்தில் பழுத்த ஈடுபாடு கொண்டு விளங்கி யமையால் 'சைவ கவி' என்றும், சைவ எல்லப்ப நாவ லர் என்றும் அழைக்கப்பெற்றார். நாவன்மை மிக்கு விளங்கியமையால் நாவலர் என்னும் அடைமொழி சேர்த்து வழங்கப் பெற்றார். இவர் இயற்றிய பிற நூல்கள் திருவருணைக் கலம்பகம், திருவெண்காட்டுப் புராணம், செவ்வந்திப் புராணம், திருவிரிஞ்சைப் புராணம், தீர்த்த கிரிப்புராணம், திருச்செங்காட்டங் குடிப் புராணம் முதலியன. இவர் உருவாக்கிய தல புராணங்கள் தலப்பெருமையினை உரைப்பதோடு படிப்போர்க்குப் பல படிப்பினைகளையும் அறிவிக்க வல்லவை; ஒன்பான் சுவையும் மிக்கவை. இவருடைய 'திருவருணைக் கலம்பகம்' கலம்பகப் பிரபந்தங்களுள் சிறந்ததாகப் புலவர்களால் கருதப்படுகிறது. "சைவத் தின் மேற் சமயம் வேறில்லை. அதில் சார் சிவமாம் தெய்வத்தின் மேல் தெய்வம் இல்" என்று அழுத்த மாக உரைப்பதால் இவரது ஆழ்ந்த சைவ சமயப்

பற்றுப் புலனாகிறது. திருவண்ணாமலையில் இறைவன் அழல் வடிவினனாக அமர்ந்துள்ளதாக இப்புராணம் கூறுகிறது. இந்நூல் திருமலைராயன் ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்டதெனத் தெரிகிறது. கி.கோ.

**அருணாசலம், கா.,** இலங்கைத் தமிழறிஞர்களுள் ஒருவர். இலங்கையின் கிழக்கு மாநிலம் மட்டக்களப்புப் பகுதியைச் சேர்ந்த மட்டு நகர் இவரது ஊராகும். இவர் பெற்றோர் காசிநாதர், சின்னப்பிள்ளை அம்மாள் ஆவர்.

இவர் வித்துவான் ச. பூபாலபிள்ளை, வித்துவான், பு. பொ. வைத்தியலிங்க தேசிகர் போன்றவர்களிடம் பாடம் கேட்டுத் தம் தமிழ்ப் புலமையையும் சமய அறிவையும் வளர்த்துக் கொண்டார்.

சைவப் பாடசாலைகளில் தலைமைத் தமிழாசிரியராய்ப் பணியாற்றிய இவர், 50 ஆண்டுகளுக்கும் மேலாகச் சிற்றூர்தோறும் சென்று தமிழ், சமயம், சமூகம் பற்றிப் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். மட்டுநகர் மான்தீன குட்டரோக மருத்துவ மனையிலும் சமயப் பணியாற்றினார்.

பன்னிரண்டு பாகங்களைக் கொண்ட 'சைவக் களஞ்சியத்தை' இயற்றினார். சைவசமய ஆரம்ப போதினி, சைவ சமய இளைஞர் போதினி, இந்து மாணவர் பக்திப் பாமணி மாலை, இந்து சமய மாத மகத்துவ மான்மியம், சைவ இலக்கியக் கதை மஞ்சரி, சைவ சமய சிந்தாமணி ஆகிய ஆறு பாகங்கள் வெளிவந்துள்ளன. சித்தாந்த சிரோமணி, மெய்ஞ்ஞான தீபம் அல்லது நுண்பொருள் விளக்க ஆராய்ச்சிக் கட்டுரைகள், சர்வ ஞானோத்தராகம சார சங்கிரகம், அருட்பாத் திரட்டும் அரும்பொருட் பாக்களும், விநாயக மகத்துவ நுட்பம், முருகன் மகத்துவ நுட்பம் ஆகிய ஆறு பாகங்களும் இன்னும் வெளியிடப் பெறவில்லை. இவை ஆறும் மதிப்புரைகள் பெறப்பெற்று அச்சிடும் நிலையில் உள்ளன.

இவர் வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும், பலவேறு விழா மலர்களிலும், தமிழ், சமயம், சமூகம் தொடர்பான பல கட்டுரைகளை எழுதிச் சிறப்புப் பெற்றார்.

தேசிகமணி, சைவ மணி, சித்தாந்த சரபம் போன்ற சிறப்புப் பட்டப் பெயர்களையும் பெற்றிருந்தார்.

**அருணாசலம்பிள்ளை, மு.,** இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இவருடைய ஊர் நெல்லை மாவட்டத்திலுள்ள இராயகிரி ஆகும். சோழிய வேளாள மரபினைச் சார்ந்தவர். முத்துப்பிள்ளை, செல்லம்மை ஆகியோர் புதல்வராக 26-3-1903-இல் தோன்றிய இவர், இளமையிலேயே இலக்கிய இலக்கணக் கல்வியினை அருணாசலக் கவிராயர் அவர்களிடம் பெற்றார். பின்னர்ப் புதுக்கோட்டையைச் சார்ந்த மேலைச்சிவபுரியில் அமைந்துள்ள கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் முறையாகத் தமிழ் பயின்று, அக்கல்லூரியிலேயே தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் போன்ற தமிழ்ப் பெரும்புலவர்களின் அன்பாதரவில் விளங்கிய இவர் பின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் தமிழ் விரிவுரையாளராகப் பதவியேற்று, ஓய்வு பெறுங்காலம் வரை தொடர்ந்து பணிபுரிந்து வந்தார். இசைத் தமிழில் நாட்டம் கொண்ட இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சார்பில் பல தமிழிசைப் பாடல்களை இயற்றியுள்ளார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் கிடைத்த தமிழிசைப் பாடல்களைத் திரட்டித் தமிழ் இசைக்கலைஞர்களின் துணையொடு இசை வகுத்துப் பல தொகுதிகளாக அவை வெளிவரச் செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பயின்ற தமிழ் மாணவர்களுக்கு, இலக்கண இலக்கியப் பாடங்களை அவர்கள் உளங்கொளக் கற்பித்துச் சிறப்புற்று விளங்கினார். அப்பல்கலைக்கழகத்தே பணிபுரிந்த காலத்தில், சென்னைப் பல்கலைக்கழகம் நடத்தும் வித்துவான் தேர்வினை 1939-ஆம் ஆண்டில் எழுதி, அதில் மாநிலத்தில் முதலாமவராகத் தேர்வு பெற்று, அதற்கான ''ஐந்தாம் சார்சு அரசர் நினைவுத் தமிழ்ப் பரிசாக'' (King George V Memorial Tamil Prize) ரூ 1000 பெற்றார். செந்தமிழ்ச் செல்வி, தமிழ்ப் பொழில், ஞானசம்பந்தம் முதலிய இலக்கிய, சமய இதழ்களில் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். மேலைச் சிவபுரிச் செந்தமிழ்க் கல்லூரி ஆண்டு விழாவில், தமிழ்ச் சான்றோர் இவருக்கு 'முத்தமிழ் மணி' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர். விபுலானந்தர், சோமசுந்தர பாரதியார் கந்தசாமியார், இராகவையங்கார், வேங்கடசாமிநாட்டார், கா. சுப்பிரமணிய பிள்ளை, இரா. பி. சேதுப்பிள்ளை, தெ. பொ. மீனாட்சி சுந்தரம்பிள்ளை முதலிய தமிழ்ப் பேரறிஞர்களோடு தொடர்பு கொள்ளும் வாய்ப்பினைப் பெற்ற இவர், 1966-ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து பணி ஓய்வுபெற்று மதுரையில் வாழ்ந்து வந்தார். பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியால் இவர் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி அறிஞராகச் சேர்ந்து, தொல்காப்பிய உரைகளில் ஆய்வு புரிந்தார். இவரது ஆய்வு, தொல்காப்பிய உரைவளமாகத் திகழ்கிறது. இவர், தொல்காப்பிய அகத்திணை இயல், புறத்திணையியல் ஆகியவற்றிற்கு அவற்றின் பல்வேறு உரைகளையும் முறைப்படக் காட்டி, அவைபற்றிய தம் ஆய்வுக் கருத்தினை விளக்கியுள்ளார். அவை தொல்காப்பிய உரைவளம் என்னும் பெயரில் தனித்தனி நூல்களாக வெளி

வந்துள்ளன. தமிழ்த் தொண்டும் சைவத் தொண்டும் தொடர்ந்து ஆற்றி வந்த இவர் 24-4-1973-இல் மறைந்தார்.

**அருணாசலம் பொன்னம்பலம் சர்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் வாழ்ந்த தமிழறிஞரும் புரவலரும் நீதிபதியுமாவர். இலங்கையிலுள்ள மானிப்பாய் என்பது இவருடைய ஊர். பெற்றோர் கொழும்பில் வாழ்ந்த பொன்னம்பலம் என்பாரும் செல்லாச்சி அம்மையாரும் ஆவார்கள். சர் பொன்னம்பலம் இராமநாதன் இவர்தம் இளவல். கி.பி. 1853-இல் பிறந்த இவர் தம் கல்லூரிக் கல்வியை இராயல் கல்லூரியிலும் முதுகலைக் கல்வியை இங்கிலாந்திலும் பெற்றார். அங்குச் சட்டக் கல்வி கற்றுப் பாரிசுடர் (Barrister) பட்டம் பெற்றார். கற்குங்கால் கல்வியில் சிறந்து விளங்கியமையால் கல்விக்குரிய உதவித் தொகைகள் கிடைத்தன. இங்கிலாந்து நாட்டில் உயர் கல்வியும் சட்டக் கல்வியும் பெற்ற இவர், தஞ்சையைச் சேர்ந்த அருட்புரானந்த தேசிகர் எனப்பட்ட இலக்கணம் இராமசாமிப்பிள்ளையிடம் தமிழும் சமய நூற்கல்வியும் பெற்றார்.



சர் அருணாசலம் பொன்னம்பலம்

இலங்கை அரசாங்கத்தில் காவல்துறை நீதிமன்ற நீதிபதியாகவும், பின்னாத் தலைமைப் பதிவாளராகவும், குருணாகல் என்னுமிடத்திலுள்ள உயர்நீதிமன்றத்தில் நடுவராகவும் பணியாற்றினார். இலங்கை நிருவாகப்பணித் (Ceylon Civil Service) தேர்வில் முதன் முதலாகத் தேர்வடைந்த இலங்கையர் என்னும் சிறப்பு இவருக்கு உண்டு. இலங்கைச்சட்ட நிரூபண அவையிலும் (1906) சட்ட நிருவாக் அவையிலும் (1912) உறுப்பினராக அமர்த்தப்பெற்றுச் சிறப்புறப் பணியாற்றினார்.

இலங்கைத் தேசிய காங்கிரசு தோற்றுவிக்கப் பெற்ற காலத்தில் (1919) அதன் முதல் தலைவராக விளங்கினார். இவர் அவ்வாண்டில் இலங்கையில் தொழிற்சங்கத்தை உருவாக்கித் தொழிலாளர் நலத்திற்குப் பணிபுரிந்தார். இலங்கையில் தாய்மொழிக் கல்விக்கு அடிப்படை அமைத்தவரும் இவரே. இவர் இலங்கைப் பல்கலைக் கழகம் தோன்றுதற்குப் பெரிதும் முயன்றார்: இராயல் ஆசிய சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்; இலங்கைச் சைவ பரிபாலன சபையின் முதல் தலைவராக இருந்து, அதன் வாயிலாகச் சைவசமய கருத்துகள் பரவுவதற்கு வேண்டிய தொண்டுகளை ஆற்றினார்.

இவர் ஆற்றிய பல்துறைப் பணிகளையும் பாராட்டும் வகையில் அன்றைய ஆங்கில அரசு இவருக்குச் சர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இலங்கையில் பல்கலைக் கழகம் அமைவதற்கு இவர் மேற்கொண்ட முயற்சிகளைப் போற்றும் வகையில், பேராதனையில் அமைந்துள்ள பல்கலைக் கழகத்தில், இவர் பெயரால் 'அருணாசல மண்டபம்' என்ற ஒரு மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இலங்கைக்கு இவர் ஆற்றிய தொண்டினை மதித்துப் போற்றும்வகையில் இலங்கைப் பாராளுமன்றக் கட்டிட முற்றத்தில் இவர்தம் உருவச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. நாடு போற்ற வாழ்ந்த இவர் 1924-இல் காலமானார். 'இலங்கைச் சரித்திரக் குறிப்புகள்' என்னும் கட்டுரை எழுதிச் 'சித்தாந்த தீபிகை' எனப்பெயரியஇதழில் வெளியிட்டார். திருமுருகாற்றுப்படையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். புறநானூறு, திருவாசகம், திருக்கோவையார், கல்லாடம், தாயுமானவர் பாடல்கள் ஆகிய நூல்களிலிருந்து பல செய்யுள்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இவருடைய மொழிபெயர்ப்புகளையும் ஆங்கிலக் கட்டுரைகளையும் தொகுத்து, ஆராய்ச்சியும் மொழிபெயர்ப்பும் (Studies and Translations) எனப்பெயரிய நூலாக வெளியிட்டுள்ளனர். இவருடைய மற்றொரு நூலின் பெயர் ''கீழை நாட்டு ஒளி'' என்னும் (Light from the East) கருத்தில் அமைந்ததாகும்.

**அருணாசல முதலியார்** கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் சென்னையைச் சார்ந்த திருமயிலையில் வாழ்ந்த புலவர். இவர் கொடியிடை மாலை, சிதம்பரம் சிவகாமியம்மை பதிகம், திருமுல்லைவாயில் மாசிலாமணியீசர் பதிகம், திருமயிலைக் கபாலீசர் பதிகம் கற்பகாம்பிகை பதிகம், பிரமராம்பிகை பதிகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார். இவர் பாடிய ஐந்து தனிப்பாடல்கள் தனிச் செய்யுட் சிந்தாமணி என்னும் நூலில் காணப்படுகின்றன.

ஏ.சி.பா.

**அருணிலை விசாகன்** கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் தொண்டை நாட்டிலுள்ள அரும்பாக்கம் என்னும் ஊரினர்; மூன்றாம் குலோத்துங்கன் காலத்தவர். மூன்றாம் குலோத்துங்கனின் அரசு அதிகாரிகளுள் ஒருவராக இருந்து பல சிறப்புப் பெயர்களையும் பெற்றவர். இவரது சிறப்புப் பெயர்களுள் ஒன்று 'வத்சராசன்' என்பதனைக் கல்வெட்டுவழி அறியமுடிகிறது. இதனால், இவர் வச்சர், வச்சவர், வத்தவர், வத்தர் என வழங்கப் பெற்ற சிற்றரசர் மரபில் தோன்றியவர் என்பது தெரிகிறது. வச்சத் தொள்ளாயிரம் எனும் நூல் இம்மரபில் வந்த தலைவன் மீது பாடப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

''மணவிற் கோட்டத்துத் திருப்பழையனூர் நாட்டுத் திருவாலங்காட்டுத் திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளின நாயனாருக்குத் திருநந்தா விளக்கொன்று, 'குன்ற வர்த்தனக் கோட்டத்து இல்லத்தூர் நாட்டு அரும்பாக்கமுடைய அருணிலை விசாகன் திரைலோக்கிய மல்லன், வத்சராசன்' என்பவனால் அமைக்கப்பட்டது' என்று திருவாலங்காட்டுக் கல்வெட்டு கூறுகிறது. இது மூன்றாம் குலோத்துங்கனின் முப்பத்திரண்டாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப் பெற்ற கல்வெட்டு ஆகும். இதே கல்வெட்டு, ''பாரதத்தை அருந்தமிழ்ப் படுத்துச் சிவநெறி கண்டவர்'' என்று அருணிலை விசாகன் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதனால் அருணிலை விசாகன் தமிழில் எழுதிய ஒரு பாரதம் இருந்தமை புலப்படும். இப்பாரத மொழி பெயர்ப்பு இப்போது வழக்கில் இல்லை.

'சிவநெறியில் ஒழுகுபவன்' எனக் கல்வெட்டில் குறிக்கப் பெற்றிருப்பதால் சைவ சமயத்தில் இவருக்குள்ள ஈடுபாடும் பற்றும் தெளிவாகப் புலனாகின்றன. பாரதத்தைத் தமிழ்ப் படுத்தினார் என்பதனால், இவர் சிற்றரசராகவும், சோழனின் அரசு அதிகாரியாகவும் இருந்ததோடு, வடமொழி வல்ல சிறந்த தமிழ்ப் புலவராகவும் விளங்கியவர் என்பது புலனாகிறது.

சதாசிவ பண்டாரத்தார் இவரை 'அறநிலை விசாகன்' என்று குறிப்பிடுகிறார். மு.த.

**அருத்த கம்பித இராகம்:** கருநாடக இசையில் சில இராகங்களில் ஒரு சில சுரங்கள் மட்டும் அசைத்துப் பாடப்படும். மற்றச் சுரங்கள் தெளிவாகப் பாடப்படும். இத்தகைய இராகங்கள் அருத்த கம்பித இராகங்கள் எனப்படும். எடுத்துக்காட்டு குந்தலவராளி. காண்க: இசை.

**அருத்தாபத்தி:** இந்தியத் தத்துவவாதிகள் பொருள்களைப் பற்றி உள்ளது உள்ளபடியான அறிவைப் பெறப் பத்து வழிகள் அல்லது கருவிகள் உள்ளன என ஆராய்ச்சியின் மூலம் முடிவு செய்துள்ளனர். அக்கருவிகள் தமிழில் அளவைகள் எனப்படும். வடமொழியாளர் அவைகளைப் பிரமாணங்கள் எனக் கூறுவர். பத்து அளவைகளில் ஐந்தாவதாக வைத்து எண்ணப்படுவது அருத்தாபத்தி என்பதாகும். அதைத் தமிழில் பொருளளவை என்பர் தருக்க நூல் வல்லுநர்.

மீமாம்சகர், சங்கர வேதாந்திகள், புராணிகர், தந்திரவாத மதத்தினர் ஆகியோர் அருத்தாபத்தியை ஓர் இன்றியமையாத அளவையாக ஏற்றுக் கொள்கின்றனர். மற்றவர் அதை அனுமான அளவையிலேயே அடக்கி விடுவர்.

அருத்தாபத்தி என்பதற்கு ஊகம் என்பது பொருள். முன்பு அறியப்படாததொரு உண்மையை ஊகத்தின் வாயிலாக உணர்வதே அருத்தாபத்தி எனப்படும். ஒன்றுக்கொன்று ஒவ்வாதது போல் காணப்படும் இரண்டு உண்மைகளின் ஒவ்வாமையை நீக்குவதற்காக முன் அறியப்படாததோர் உண்மையை ஊகிப்பது அருத்தாபத்தி முறை. தேவதத்தன் உயிரோடிருக்கிறான். ஆனால், அவன் தன் வீட்டில் இல்லை என்றால் அவன் வெளியே சென்றிருக்கிறான் என ஊகத்தால் அறிகிறோம். தேவதத்தன் உயிரோடியிருப்பது வீட்டில் இல்லாதிருப்பது ஆகிய இரண்டும் உண்மை. ஆனால், அவைகளிடையே ஒவ்வாமை காணப்படுகிறது. அவன் வெளியே சென்றிருக்கிறான்' என்று ஊகிப்பதால் ஒவ்வாமை நீங்கிப் பொருள் விளக்கம் பெறுகிறது. அதேபோலப் பீமன் பருத்தும் கொழுத்தும் காண்கிறான். ஆனால், அவன் பகல் வேளையில் உண்பதில்லை என்றால் அவன் இரவில் பேருணவு உண்ணுகிறான் என்று ஊகிப்பதால் 'கொழுத்திருப்பது' 'பகலில் உண்ணாதிருப்பது' ஆகிய இரண்டிற்குமிடையே உள்ள ஒவ்வாமை அகன்று விடுகிறது. அவன் பகலில் உண்ணாமலிருந்தும் கொழுத்திருப்பதின் காரணம் தெளிவாகப் புரிகிறது. எனவே, அறியப்பட்ட உண்மைகளில் காணப்படும் ஒவ்வாமையை நீக்கிப் பொருளை விளங்க வைப்பதே அருத்தாபத்தியின் நோக்கமாகும். கூ.ரா.ந.

**அருந்ததி** வசிட்டரின் மனைவி; கற்புமிக்க பத்தினித் தெய்வமாகப் போற்றப்படுபவள்; கருத்தம முனிவரின் மகள்; பஞ்சகன்னியருள் ஒருத்தி ஊர்சை என்பது இவளது வேறு பெயராகும். பருவதர், நாரதர் ஆகிய இருவரும் இவளுடைய உடன்பிறந்தாராவர்.

இவர் தம் சிறந்த கற்பின் காரணமாக வைதிக நெறியிலமையும் திருமணத்தின்போது மணமகன் மணமகளுக்குக் கற்பு மாட்சிக்கு எடுத்துக் காட்டாக 'அருந்ததி காட்டுவது' மரபு. ஏழு மாமுனிவர்களுக்கும்

இணையாகப் பெரிதும் போற்றப்படுகிறாள். தன் கணவனைப் போலவே தானும் சூரிய குலத்தில் தோன்றிய இரகு வமிசத்து மன்னர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்துள்ளாள். மேலும், இராமபிரானால் காட்டுக்கு அனுப்பப்பட்ட சீதைப்பிராட்டியின் நலனைப் பேணிக் காப்பவளாகவும் இருந்தாள்.

ஏழு மாமுனிவர்களைக் குறிப்பிடும் ஏழு விண்மீன்களின் தொகுதி வானத்தில் காணப்படுகிறது. இது சப்தரிசி மண்டலம் என்றும், பெரிய கரடி என்று பொருள்படும் அர்சா மேசர் (Ursa Major) என்றும் கூறப்படுகிறது. இவற்றில் நடுவே மிக்கொளிரும் மிசார் (Misar) எனப்படும் விண்மீன் வசிட்ட மாமுனிவரையும், அருகே காணப்படும் விண்மீன் அருந்ததியையும் குறிக்கும்

**அருந்தமிழ்த் திரட்டு**: இதுவொரு தனிப்பாடல் திரட்டு நூலாகும். இன்னும் அச்சில் வெளிவராத தமிழ் நூல்களுள் ஒன்று. தஞ்சையிலுள்ள சரபோசி மன்னர் சரசுவதி மகால் நூலகத்தில், ஓலைச்சுவடியாக உள்ள இதன் மூல ஏடும், கையெழுத்துப் படியும் உள்ளன. பனையோலையேட்டின் பக்கம் ஒன்றிற்கு 4 முதல் 7 வரிகள் கொண்ட 107 ஏடுகள் அடங்கியது இச்சுவடி. இதன் முதலிரு ஏடுகளும் இடையிடையே சில பகுதிகளும் சிதைந்துள்ளன. இதில் காளமேகப் புலவர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்களின் தனிப்பாடல்கள் உள்ளன. இச்செய்யுள்களில் இதுகாறும் அச்சு வடிவம் பெறாத செய்யுள்களும் உள்ளன.

இப்பெயரிலேயே அச்சிடப்படாத கையெழுத்துப் பிரதி ஒன்று சென்னை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நூலகத்திலும் இருப்பதாகத் தெரிகிறது.

**அருப்புக்கோட்டை** மதுரை–திருநெல்வேலிச் சாலையில் மதுரையிலிருந்து 48 கி.மீ. தொலைவிலும், விருதுநகரிலிருந்து மேற்கே 19.2 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள ஊராகும். முன்பு இராமநாதபுர மாவட்டத்தைச் சேர்ந்த இந்நகரம் இப்போது காமராசர் மாவட்டத்தில் உள்ள ஒரு வட்டத் தலைநகர் ஆகும். இது ஒரு நகராட்சி.

அருப்புக்கோட்டை முன்பு வெண்பில் நாட்டைச் சேர்ந்த 'செங்கத்துருக்கை இடத்துவழி' என்று கல்வெட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளது. திருநல்லூர் எனவும் முன்பு அழைக்கப்பட்டது. இடத்துவழி என்னும் பெயர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் அருப்புக்கோட்டை என மாற்றப்பட்டது. இங்கு மல்லிகை அரும்புகள் மிகுதியாக விளைந்தமையால் இவ்வூர் அரும்புக் கோட்டை எனப் பெயர் பெற்றுப் பின்னர் அருப்புக்கோட்டை எனத் திரிந்தது எனவும் கூறுவர்.

இங்குக் கைத்தறி நெசவு சிறப்பிடம் பெற்றுள்ளது. இங்கிருந்து வேட்டி, துண்டு, கைத்தறிச்சேலை, பட்டுச்சேலை, விரிப்பு ஆகியன பல பகுதிகளுக்கும் ஏற்றுமதி ஆகின்றன. சாயத் தொழிற்சாலைகள், எண்ணெய் ஆலைகள், பஞ்சாலைகள், அரிசி ஆலைகள், தீக்குச்சித் தொழிற்சாலைகள் முதலிய பல தொழிற்சாலைகள் இங்குள்ளன.

அருப்புக்கோட்டை, பாண்டியர் ஆட்சிக் காலத்திலும், மதுரை நாயக்கர் ஆட்சிக்காலத்திலும் சிறப்புப் பெற்றது. கி.பி. 1193-இல் 'திருவாலவாயுடையான் சோழகங்கன்' என்பானின் மகனான 'அருளாள அழகப் பெருமாள்' என்பார் இவ்வூரிலுள்ள ஏரியை வெட்டுவித்தார். இங்குக் கி.பி. 1232–இல் கிணறு ஒன்றும் வெட்டப்பட்டது. மதுரை நாயக்க மரபினரான வீரப்ப நாயக்கர் (கி.பி. 1572–1598) இவ்வூர்க் கோட்டையைக் கட்டினார் என்பது கூறப்படுகிறது.

இங்குப் பழைமையான 'சுந்தரேசுவரர் கோயில்' என்னும் சிவன்கோயிலும், மாரியம்மன் கோயிலும், ஆயிரம் கண் மாரியம்மன் கோயிலும், வெங்கடேசப் பெருமாள் கோயிலும், மாதாகோயில் ஒன்றும், மசூதிகள் இரண்டும் உள்ளன. இவ்வூருக்கு வெளியே தென் மேற்கில் சிறிய குன்றில் மலையரசன் கோயிலும் உள்ளது. அருப்புக்கோட்டை சுந்தரேசுவரர் கோயில் பழங்காலத்தில் 'குரல்மானீசுவரம் உடையார்கோயில்' என அழைக்கப்பட்டது. சுந்தரேசுவர் கோயில் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கட்டப்பட்டது. இக்கோயிலில் கல்வெட்டுகள் பல உள்ளன. அருப்புக்கோட்டையில் எழுந்தருளியுள்ள 'வாழவந்த அம்மன்' கி.பி. 17–ஆம் நூற்றாண்டு முதல் புகழ் பெற்றுள்ளது. அமுதலிங்கேசுவரரும் அமுதவல்லியம்மையாரும் எழுந்தருளியுள்ள சிவன் கோயில் ஒன்றும் இங்குள்ளது.

**அரும்பண்ட ஒதுக்கீடு**: மக்கள், தாம் விரும்பியும் அடைவதற்கு அரிதான பண்டங்கள் அருமைப் பண்டங்கள் எனப்படும். சில வள ஆதாரங்கள் இயற்கையின் இலவச நல்கையாக இருப்பினும், அவை குறிப்பாக ஒருசில இடங்களில் மட்டும் காணப்படுவதால் மற்ற இடங்களில் அருமைப் பொருள்களாகின்றன.

சில பண்டங்கள் உலகெங்கும் பெருமளவிலோ அருமைப் பொருள்களாகவோ விளங்குகின்றன. எடுத்துக்காட்டாக வைரம், தங்கம், யுரேனியம், பிளாட்டினம் போன்ற பொருள்கள் உலகெங்கும் பெரிதும் மதித்து விரும்பப்படினும் அவை அருமைப் பொருள்களாகவே இருக்கின்றன. கிடைப்பருமையால் இப்பொருள்கள் மதிப்பில் உயர்வதோடு பிற பொருள்களின் மதிப்பை வரையறை செய்யும் ஓர் அளவுகோலாகியும் விடுகின்றன. இவற்றின் பெருக்கமே

ஒரு நாட்டின் செல்வப் பெருக்கமாகவும் கருதும் அளவிற்கு இவை மதிப்புப் பெற்றுவிடுகின்றன. சில பண்டங்கள், ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் பெருமளவு காணப்பட்டுப் பிற இடங்களில் காணப்படவில்லையாயின், அவை கிடைப்பருமைப் பண்டங்கள் என்று பெயர் பெறும். இத்தகைய பண்டங்கள் இயற்கைப் பண்டங்களாகவும் இருக்கலாம்; மனிதனால் படைக்கப்பட்டவையாகவும் இருக்கலாம். எண்ணெய் வளங்கள் பெரும்பான்மையாக அரேபிய நாடுகளில் காணப்படுவதால், வளர்ச்சி மிக்க அமெரிக்க நாடுகளுக்குக்கூடப் பெட்ரோல் எரிவாயு போன்றவை அருமைப் பொருள்களாகி விடுகின்றன. தேயிலை, சணல், மிளகு போன்ற பண்டங்கள் ஒருசில நாடுகளில் உள்ள தட்ப வெப்ப நிலையிலேயே பயிரிடப்படும். இப்பண்டங்கள் விளையாத நாடுகள், இப்பண்டங்களை எதிர்நோக்கி நிற்க வேண்டியதாகின்றன.

ஒருசில நிலப்பகுதிகளில் காணப்படும் வள ஆதாரங்களாலும் தொழில் நுணுக்கத்தாலும் ஒரு குறிப்பிட்ட பொருள் குறைந்த செலவில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும். எடுத்துக்காட்டாகச் சப்பான் நாட்டின் கார் உற்பத்தியைக் கூறலாம். இவ்வாறு காணப்படும் பொருள்களின் மிகுதியான அளிப்பையும் இல்லாமையையும் ஈடுகட்டவே உலகில் பன்னாட்டு வாணிகம் தலையெடுத்தது. ஒரு நாடு தன்னிடமுள்ள தேவைக்கு மிகுதியான பண்டங்களை மற்றொரு நாட்டிற்கு நல்கி, அந்நாட்டிலிருந்து தனக்குத் தேவையான, தன்னாட்டில் உற்பத்தி செய்ய முடியாத அருமைப் பண்டங்களைப் பெற்றுக் கொள்வதே பன்னாட்டு வாணிகத்தின் உட்கருத்தாகும். ஆகவே பன்னாட்டு வாணிகமும் ஒதுக்கீட்டின்பாற்பட்டதே.

சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஏற்ப அருமைப் பண்டங்களின் இயல்பு மாறுகிறது. வருவாயை அடிப்படையாகக் கொண்டு ஏற்றத் தாழ்வுகளைக் கணித்தால் உயர் வருவாயுடையோர், நடுத்தர வருவாயுடையோர், குறைந்த வருவாயுடையோர், பொருளாதார நிலையில் பின்தங்கியோர், வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் என்று பல வாறாகப் பிரிக்கலாம். இப்பாகுபாட்டிற்கு அடிப்படையாக அமையும் பணம் ஓர் அருமைப் பொருள். ஒரு கோடீசுவரனுக்கு எலிகாப்டர் ஒருவேளை அருமைப் பண்டமாக இருக்கலாம். ஆனால், வறுமைக் கோட்டின் கீழ் இருப்பவனுக்கு அன்றாடம் உண்ணும் உணவே அருமைப்பொருளாகி விடுகிறது. அதேபோல் ஒருபொறியியல் மாணவனுக்கு ஒரு தொழில் நுணுக்க விளக்க நூல் அருமைப் பொருளாக இருக்கலாம். ஒரு திரைப்படக் கலைஞனுக்கு அவனது அலங்காரப் பொருள்கள் அருமையானவையாய் இருக்கலாம். இவ்வாறு பல திறப்பட்ட அருமைப் பண்டங்களைப் பங்கீடு செய்வது தேவையாகிறது.

அருமைப் பண்டங்களின் ஒதுக்கீட்டைப் (Allocation of Scarce Resources) பொருள்களின் அருமைப் பாட்டிற்குக் காரணமாக அமையும் உற்பத்தி, நுகர்வு என்ற இரு செயல்களின் கீழ் ஆராயலாம். பண்டங்கள் உலகில் இரு செயல்களுக்காக வேண்டப்படுகின்றன. அவை உற்பத்தியும் நுகர்ச்சியும் ஆகும். உற்பத்தியில் பண்டங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, நுகர்ச்சியில் பண்டங்கள் பங்கீடு செய்யப்படுகின்றன.

உற்பத்தி என்பது நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு என்ற நான்கு காரணிகளையும் ஒருங்கிணைத்துப் பயன்பாட்டினை (Utility) உருவாக்குவதேயாகும். உற்பத்தி நிலைதான், ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் ஆக்கத்தையும் சிறப்பையும் காட்டுகிறது. இவ்உற்பத்தியில் பயன்படுத்தப்படும் காரணிகள் தங்கு தடையின்றிக் கிடைக்குமேயானால், பண்டங்களின் அளிப்புக்குக் குறைவிராது. ஏனெனில், நிலத்திலிருந்து விளையும் பொருள்களின் தேவைக்கேற்ப மிகுதியான அளவு நிலங்கள் பயிரிடப்படலாம். அதனால், உணவுத் தானியங்கள் அருமைப் பொருள்களாக இராமல், அளிப்பு மிகுந்த பொருள்களாக இருக்கும். அத்தகைய பொருள்களை ஒருவேளை கடலில் கொட்டிவிட வேண்டிய நிலை கூட ஏற்படலாம். ஆனால், உற்பத்திக்கு உதவக்கூடிய நிலம் அதன் அளவிலும் தன்மையிலும் குறைவுபடும் போது நிலத்தின் விளைபொருள்கள் அருமைப் பண்டங்களாகிவிடும். வளம் கொழிக்கும் பூமியின் அளிப்பு குறைவுபட்டுக் காணப்படும்போது நிலமும் அருமைப் பண்டமாகிவிடுகிறது. இத்தகைய அருமைப்பாடுடைய நிலத்தையும் பங்கிட்டு ஒதுக்கீடு செய்ய இயலும். எல்லா நிலங்களும் ஒருசிலரிடமே இருக்குமாயின் நாட்டில் நிலப்பசி ஏற்பட்டு, உணவுப் பண்டங்களின் ஆக்கம் குறைந்து, சமுதாய அமைப்பே அழிந்து விடக் கூடும் என்றுதான் உச்சவரம்புத் திட்டம், உழுபவனுக்கு நிலம் சொந்தம் போன்ற சீரமைப்புகள் கொண்டுவரப்பட்டன.

மற்றொரு வகையிலும் நிலம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சிற்றூர்களில் வேளாண்மைக்கெனப் பயன்படுத்தப்படும் நிலத்தில், பண்டங்களின் அருமைப்பாட்டிற்கேற்ப நெல், கேழ்வரகு, வேர்க்கடலை, கரும்பு, புகையிலை என்று பல்வேறு அளவில் பயிரிடப்படுகின்றன. உணவு எண்ணெய் பற்றாக்குறை எழுமாயின், அருமைப்பாட்டிற்குட்பட்ட நிலம், பெருமளவில் எண்ணெய் வித்துகள் ஆக்கத்திற்கென ஒதுக்கப்படுகிறது.

அதேபோல் நகர்ப்புற நிலங்களும் ஒரு சிலரிடம் தேங்காமல் பகிர்வு செய்யப்பட வேண்டியே, நகர நில உச்சவரம்பு உருவாக்கப்படுகிறது. நகரங்களின்

அருமைப் பண்டமான நிலத்தின் பயன்பாட்டை நல்ல முறையில் ஆய்ந்து வீடு கட்டுவதற்கு எவ்வளவு என்றும், பூங்கா, மருத்துவ நிலையங்கள், விளை யாட்டுத் திடல்கள் அமைக்க எவ்வளவு என்றும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

உழைப்பு என்பது மனிதனால் அளிக்கப்படும் ஒன்று. உழைப்பு இருவகைப்படும். ஒன்று உடல் உழைப்பு; மற்றொன்று அறிவு உழைப்பு. இவ்விரண் டையும் சேர்த்து மனித ஆற்றல் என்று பொதுவாகக் குறிப்பிடுவதுண்டு. மக்கள் தொகை மிகுதியாகக் காணப்படும் நாடுகளில் மனித உழைப்பு ஓர் அருமைப் பொருள் அன்று. ஆனால் அம்மக்கள் கல்வி அறிவும் தொழிற் பயிற்சியும் இல்லாதிருப்பின், அறிவு உழைப் பின் தரம் குன்றி, அறிவு உழைப்பு அருமைப் பண்ட மாகக் கருதப்படும். மனித உழைப்பு மிகுதியாகக் காணப்படுவதால்தான் இந்தியா போன்ற மக்கள் தொகை மலிந்த நாட்டில் வேளாண்மை, தொழிற் சாலை உற்பத்தி ஆகியவற்றை எந்திரமயமாக்கக் கூடிய வாய்ப்பில்லை. ஆகவே உற்பத்தித் துறையில் வேலையின்மையை நீக்கும் வகையில் மனித உழைப்பை மிகுதியாக ஒதுக்கீடு செய்து, மற்றக் கார ணிகள் குறைந்த அளவில் உற்பத்தியில் ஈடுபடுத்தப் படுகின்றன.

இன்றைய தொழில் எந்திரமயமாக்கப்பட்ட தொன்று. இத்தகைய முறையில் தொழில் நுணுக்க அறிவு மிகுதியாகத் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட அறிவைப் பெற, அடிப்படைக் கல்வியும் தொழிற் கல்வியும் தேவை. இந்தியா போன்ற வளரும் நாடு களில் இவை இப்பொழுதுதான் வளரத் தொடங்கி யுள்ளன. அறிவுக் கூர்மையையும் ஆற்றலையும் ஓர் ஆக்கக் காரணியாகக் கணிக்கும்பொழுது, ஏழை நாடு களிலும் வளரும் நாடுகளிலும் இவ்வறிவாற்றல் படைத்த அமைப்பாளர்கள் அருமைப்பாடுடையவர் களாகி விடுகிறார்கள். இந்தியா விடுதலைபெற்ற காலத்தில், தொழில் அமைப்பாளர்கள் அருமையாக இருந்ததால்தான் வெளிநாட்டு அமைப்பாளர்கள் பலர் இந்நாட்டில் வந்து, தத்தம் தொழில் அமைப்பு களை அமைத்து, ஆதாயத்தைப் பெருமளவில் ஈட் டித் தம் நாட்டிற்கு எடுத்துச் சென்றனர். இன்று இந் நிலை மாறிவருகிறது. தொழில் தொடங்குவோன், தொழிலின் நன்மை தீமைகளைத் தாங்குவோன், புதிய கண்டுபிடிப்புகளைப் புகுத்துவோன் ஆகிய யாவரும் உற்பத்திக் காரணிகளாகக் கருதப்பட்டு அவை அரு மையாக இருப்பினும், கிடைக்கும் அளவை நல்ல முறையில் பயன்படுத்தப் பகிர்ந்து ஒதுக்கீடு செய்யப் படுகின்றன.

மூலதனம் என்னும் சொல்லுக்குச் சிறப்புப் பொருள் உண்டு. தொழிலில் முதலீடு செய்யப்பட் டுள்ள பணம் மட்டும் மூலதனமாகாது. உற்பத்தியில் பங்கு பெறும் கச்சாப் பொருள்கள், எந்திரங்கள், அடிப்படைக் காரணிகள் ஆகிய அனைத்தும் மூல தனம் என்று கொள்ளப்படும். இவ்வகையில் செருப் புத் தைப்பவனின் கையில் அமைந்துள்ள குத்தூசியும் மூலதனமே. இத்தகைய மூலதனம் வளரும் நாடுகளில் அருமைப் பண்டமாகக் காணப்படுகிறது. வருவாய் இரு வழியில் செலவிடப்படுகிறது. ஒன்று நுகர்ச்சிக் காக; மற்றொன்று சேமிப்பிற்காக. நுகர்ச்சிக்கே வரு வாய் போதவில்லையென்றால் சேமிப்புக்கு இட மில்லை. சேமிக்கும் பணம் வங்கிகள் வாயிலாகச் சேர்க்கப்பட்டு முதலீடாக உற்பத்தியில் பயன்படுத் தப்பட வேண்டும் என்பது, பொருளியல் கருத்து. வறிய நாடுகளில் வருமானம் போதிய அளவில் இல் லாததால் சேமிப்பு இல்லை. பணம் படைத்தோர் ஒருசிலரன்றிப் பெரும்பாலோர் சேமிப்பு என்பதை, சமுதாயத்தில் தங்களை உயர்த்திக் காட்டக் கூடிய நுகர்வில், அதாவது ஆடை அணிகளில் செலவிடு கின்றனரே தவிர, உற்பத்தியை மீண்டும் பெருகச் செய்யும் வழிகளில் செலவிடுவதில்லை. ஆகவே, பின்தங்கிய நாடுகளில் மூலதனம் அருமைப் பொரு ளாக இருக்கிறது. இக் குறைபாட்டை நீக்க வருவாய் பெருக வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்காகப் பாடுபடும் பல நாடுகள், ஒரு தனிப்பட்ட மனிதனின் வருவாய் ஒரு குறிப்பிட்ட நிலைக்கும் கீழே போகக்கூடாது என்பதற்காகக் குறைந்த அளவு ஊதியம் என்பதைச் சட்டத்தின் மூலமாக அமுலாக்கி இருக்கின்றன. அதுமட்டுமன்றி, அருமைப் பண்டமா கிய மூலதனம் வீணாகக்கூடாது என்னும் நோக்கில், கிடைக்கும் மூலதனத்தைச் சமுதாயத்தின் இன்றிய மையாத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும் பயன்படுத்துகின்றன. இதனையே, வள ஆதாரங்க ளின் ஒதுக்கீடு (Resource Allocation) எனப் பொரு ளியல் குறிப்பிடுவர்.


பண்டங்களை உற்பத்தி செய்யும் காரணிகள் அருமைப் பண்டங்களாக இருப்பின், அவற்றால் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் அருமைப் பண்டங்களாகவே மாறிவிடுகின்றன என்பது தெளிவு. இவ்வாறு கூறுவதால் வளம் கொழிக்கும் வளர்ச்சி மிக்க நாடுகளில் அருமைப் பண்டங்களே இல்லை என்பது பொருளன்று. அங்கு உற்பத்திக் காரணிகள் போதிய அளவிற்கு இருப்பினும், எப்பொருள் எவ் வாறு எப்போது உற்பத்தி செய்வது என்ற சிக்கல் தலையோங்கி நிற்கிறது. இச் சிக்கலை அவிழ்க்கவும் ஒதுக்கீடு முறை கையாளப்படுகிறது. இச்சிக்கல் நன்கு கண்காணிக்கப்படாவிட்டால் தேவையற்ற பொருள் களின் மிகுதி ஒரு பக்கமும் தேவையான பண்டங்க

ளின் வறட்சி ஒரு பக்கமும் ஏற்பட்டு, நாட்டின் பொருளாதார நிலை, சீர்குலையும் வாய்ப்புண்டாக லாம்.

வளரும் நாடுகளின் அருமைப் பண்டப் பங்கீடு அல்லது ஒதுக்கீடு, வளர்ந்த நாடுகளின் செயல் முறையை விட மாறுபட்டுத் தோன்றுகிறது. வளர்ச்சி யடைந்த நாடுகள் நுகர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. ஆனால், வளரும் நாடுகள் உற்பத்தி யில் மிகுந்த அக்கறை காட்டுகின்றன. வள ஆதாரங் களையும் உற்பத்திக் காரணிகளையும் உற்பத்தியில் பயன்படுத்தும் பொழுது, இருவகைச் சிக்கல்களைத் தீர்க்க வேண்டிவரும். ஒன்று, காரணிகளை முழுமை யாகப் பயன்படுத்துவது; மற்றொன்று, அவ்வாறு பயன்படுத்தப்படும் பொழுது எவ்வாறு காரணிகள் பங்கீடு செய்யப்படுகின்றன என்பதாகும். காரணிக ளின் பயன் அவற்றின் உற்பத்தித் திறனைப் பொறுத் தது. பயன்படுத்தப்படாத நிலமோ எந்திரமோ சமுதாயத்திற்கு எந்தப் பலனையும் அளிக்காது. வள ஆதாரங்களையும் காரணிகளையும் பயன்படுத்தும் பொழுது, அவை வீணாவதைத் தவிர்க்க வேண்டும். பொருளியலில், அருமைப்பாடுடைய பண்டங்களை எவ்வாறு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதே பெரிய சிக்கலாகும்.

ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்திக் காரணி களின் அளவு, ஆக்கத் திறன், தொழில் முறை ஆகியன நன்கு கொடுக்கப்பட்டனவாகக் கருத்தில் கொண்டு, சமுதாயம் நுகர்ச்சிப் பொருளிலும், மூலதனப் பொருள் உற்பத்தியிலும் ஈடுபடுவதாக ஊகித்துக் கொண்டால், அதில் நுகர்ச்சிப் பண்டங்களை மிகுதி யாக உற்பத்தி செய்யும்போது முதலீட்டுப் பொருள் களைச் சமுதாயம் அதே அளவில் உற்பத்தி செய்ய முடியாது. ஏனெனில், காரணிகளின் அளவு, திறன் ஆகிய அனைத்தும் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆகவே உற்பத்தி வாய்ப்பு எல்லை (Production Possibility Boundry) என்று ஒன்று அமைகிறது. இந்த உற்பத்தி வாய்ப்பு எல்லையில், தாம் எப்பகுதியில் இருப்பது என்பது சமுதாயமே முடிவெடுக்க வேண்டிய ஒன்று. இக்கருத்தை ஒரு வரைபடத்தின் உதவிகொண்டு விளக்கலாம். எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயம் டிராக்டரும் அரிசியும் உற்பத்தி செய்கிறது. இது, வரைபடத்தில் இரு அச்சுகளில் காட்டப்பட்டுள்ளது.

இவ்வரைபடம் X அச்சில் அரிசியையும் Y அச்சில் எந்திரக் கலப்பை (Tractor) யையும் காட்டு கிறது. எந்திரக் கலப்பையையும் அரிசியையும் ஒரே அளவில் உற்பத்தி செய்ய முடியாது. சமுதாயம் உற்பத்தி வாய்ப்பு எல்லையை 'd' என்ற புள்ளியில் வரையறை செய்கிறது என்று கொண்டால், அப் போது 9 எந்திரக் கலப்பைகளும் 6 டன் அரிசியும்



வரைபடம

கிடைக்கும். மிகுதியான அளவில் அரிசி தேவைப் படின், எந்திரக் கலப்பை உற்பத்தியைக் குறைக்க வேண்டி வரும். இப் பலதிறப்பட்ட சேர்ப்பின் புள்ளி களை ஒன்று சேர்த்தால், கிடைப்பது உற்பத்தி வாய்ப்பு எல்லைக்கோடு. எந்தப் புள்ளியில் சமுதா யம் தன் உற்பத்தி அளவை வரையறை செய்யும் என்பது, அந்தச் சமுதாயத்தின் தேவைகளைப் பொறுத்தது.

உற்பத்தி வாய்ப்பு எல்லைக் கோட்டின் திசை மாற்றத்தைக் கொண்டு சமுதாயத்தின் வளர்ச்சியைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக, மேலே காட்டிய வரைபடத்தில் உற்பத்தி வாய்ப்புக் கோடு வலப் புறம் நகர்கிறது என்றால், அந்தச் சமுதாயம் வளர்ச்சிப் பாதையில் முன்னேறுகிறது என்பது பொருள். இந்த எல்லைக்கோடு, உற்பத்திக் காரணி கள் எவ்வாறு, எந்த அளவில், தேவையான பண்டங் களுக்கு ஏற்பப் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவிக்கிறது. சமுதாயத்தின் உடனடித் தேவை டிராக்டர்தான் என்றால், இருப்பில் இருக்கும் காரணிகள் டிராக்டர் உற்பத்திக்குப் பயன்படுத்தப் படும். அரிசியின் உற்பத்தி அப்பொழுது குறையும்.

இவ்வாறு எப்பொருள் எந்த அளவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பது, அச்சமுதாயத்தின் அரசியல் அமைப்பைப் பொறுத்தது. முதலாளித்துவம் அமைந்த தனியுடைமை நாடாக இருப்பின், தனி மனிதனின் தேவைகள் முதற்கண் நிறைவு செய்யப் படலாம். சமதருமக் கோட்பாட்டில் எழுந்த சமு தாயம், சமூகத் தேவைகளை நிறைவு செய்வதில் உற்பத்தியைக் கொண்டு செல்லலாம். இந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில், வறுமைக் கோட்டிற்கு கீழ்உள்ள மக்களை உய்விக்க வள ஆதாரங்கள், பெருமளவில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இலவச மாகக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது என்றால், பெருமளவு வள ஆதாரங்கள் இப்பணிக் கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதுதான்

உண்மை. இதனால் பிற துறைகளுக்குப் போதிய அளவு உற்பத்திக் காரணிகள் இல்லாமற் போகலாம். ஆனால் சமுதாயத்தின் நிலை, இத்தகைய செயல்களுக்கு முதலிடம் கொடுக்கத் தூண்டுகிறது. தனியுடைமை நாடுகளில் ஆதாய நோக்கு, உற்பத்திக் காரணிகளின் ஒதுக்கீட்டுக்கு அடிப்படையாக அமைகிறது. பொதுவுடைமை நாடுகளில் உற்பத்திக் காரணிகள், சமுதாயத் தேவைக்கேற்பத் தனி மனிதனின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்காமல், ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. எந்த நாட்டின் அரசியல் கோட்பாடு சமூக நலனைத் தனது எல்லையாகக் கொண்டுள்ளதோ அந்த நாட்டில், அருமை மிக்க வள ஆதாரங்கள், 'உரிமம்' (Licence), பங்கு முறை (Quota) ஆகியவற்றைப் பின்பற்றி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

அருமைப் பண்டங்களின் பங்கீட்டை நுகர்ச்சிப் பிரிவில் ஆய்ந்துகாணின் உற்பத்தியில் உருவாகின்ற பண்டங்கள், செல்வம் மிகுந்த நாட்டிலும் வறுமை மிகுந்த நாட்டிலும் போதுமானவையாக இல்லை. ஆகவே, பண்டங்கள் அருமையாகிப் பங்கீடு தேவையாகிறது. அருமைப் பண்டங்களைப் பங்கீட்டு முறையின்றி அப்படியே அங்காடியில் விற்பனைக்கு விட்டு விட்டால், வாங்கும் திறன் (பணம்) உடையோர் மிகுந்த விலை கொடுத்து வாங்குவர். ஏன் மிகுந்த விலை கொடுக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு. அருமைப் பொருளாயினும் எளிதாகக் கிடைக்கும் பொருளாயினும் உற்பத்திச் செலவிற்கு ஏற்ப விலை வரையறுக்கப்பட வேண்டும். ஆனால், அங்காடியில் காணப்படும் அளப்பரிய தேவையால், விலை செயற்கையாக உயர்த்தப்பட்டு, மிக்க விலை கொடுப்பவர் கையில் போய்ச் சேருகிறது. இந்நிலையில் கறுப்பு அங்காடி முறை செயற்படத் தொடங்குகிறது. இக்கறுப்பு அங்காடி முறையினால், வறியவர் அருமைப் பண்டங்கள் கிட்டாது தவிப்பர்.

அருமைப் பண்டங்களை 'முன்வருவோர் முன் பெறுவர்' என்னும் முறையில் பங்கீடு செய்தால் இனம், மொழி, மதம் போன்ற உணர்வுகளால் உந்தப்பட்டுப் பின் வருவோரையும் முன்வருவோராகக் கொள்ளுதல் கூடும். இக்குறைபாட்டினை இம்முறையினின்று மாற்றிவிட முடியாது. இதனால், அரசு தானே அருமைப் பண்டங்களைப் பகிர்ந்தளிக்கிறது. பெரும்பாலான நாடுகளில், இன்று நல்ல முறை என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுச் செயற்பட்டு வரும் சிறந்த பங்கீட்டு முறை, நியாயவிலைக் கடைகளின் மூலம் உருவாகிறது. இக்கடைகளில் விலைகள் வரையறை செய்யப்பட்டனவாகவே இருக்கும். ஒரு குடும்பத்தின் அளவிற்கேற்பப் பண்டங்களின் அளவும் வரையறை செய்யப்படுகிறது. வாழ்விற்கு இன்றியமையாத உணவுப் பண்டங்கள் பெரும்பாலும் இவ்வழியில் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

மக்களின் நலனைத் தம் குறிக்கோளாகக் கொண்டுள்ள அரசுகள், பிற பண்டங்களையும் தம் பொறுப்பில் வைத்துள்ளன. எடுத்துக்காட்டாக, தமிழக வீட்டுவசதி வாரியத்தைக் கூறலாம். இவ்வமைப்பு வீட்டு வசதி வேண்டுவோருக்குக் குறைந்த செலவில் தவணை முறையில் ஆதாய நோக்கின்றி உதவி அளித்து வருகிறது. குடிசைவாழ் மக்கள் தங்கள் வீட்டுத் தேவையை வருவாயைக் கொண்டு நிறைவு செய்ய முடியாதவர்களாய் இருப்பதால், அரசே பண ஈடு கொடுத்து அவர்களுக்கு வீட்டு வசதியை அளிக்கிறது. மனித நலனைக் காக்கும் அரசியலமைப்பு, ஒரு குறிப்பிட்ட பண்டங்களின் நுகர்வு ஒரு நிலைக்குக் கீழே போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய பண்டங்கள் பெரும்பாலும் அருமைப் பண்டங்களாகவே இருக்கின்றன. கல்வியில் பெரும்பாலான மக்கள் பின்தங்கிவிட்டால், நாட்டின் வளர்ச்சி தடைப்படக் கூடும். ஆகவே, இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. இதையும் ஒதுக்கீடு என்றுதான் சொல்லவேண்டும். வளம் படைத்தோர் மட்டும் கல்விச் செல்வத்தை நுகராமல் பலருக்கும் அது பகிர்ந்தளிக்கப்படுகிறது. இவ்வாறே, மருத்துவ வசதியும் அவ்வசதி கிடைக்கப் பெறாத சிற்றூர்களிலும் கிடைக்கும் வகையில், அரசு வழி வகுத்துள்ளது.

இத்தகைய ஒதுக்கீட்டு முறையின் நோக்கம் எக்குறிக்கோளுக்காக அது செயற்படுத்தப்படுகிறதோ அதனை அடைவதேயாகும். பயனுள்ள வழியில் பங்கீடு முறைகள் செயற்பட வேண்டுமாயின், சமுதாய அமைப்பும் அரசியல் கூறுபாடுகளும் மனிதனின் மனப்பாங்கும் தன்னலத்தைப் பெரிதும் பாராட்டாமல் சமுதாய நீதியை நிலைநிறுத்த அடிகோலுவதாக அமைய வேண்டும். நே.எஸ்.டே.

துணை நூல்கள்:

**Left Wich.**, "A Basic Framework for Economics," Business Publications INC, Texas, 1980.

**Hunt E.K.**, & **Howard, J. Sherman.**, 'Economics–An Introduction to Traditional and Radical Views' Harper & Row Publishers, New York, 1978.

**அரும்பதவுரையாசிரியர்** சிலப்பதிகாரத்திற்குக் குறிப்புரை வரைந்த பழைய உரையாசிரியர். இவர் இயற்பெயரை அறியக்கூடவில்லை. இந்திர விழவூரெடுத்த காதைக்கு உரை எழுதுகையில் 'அரும்பத வுரையாசிரியர்' என்று அடியார்க்கு நல்லார் குறிப்பிடுதலால் அவர் காலத்திலேயே இவரது இயற்பெயர் வழக்கத்தில் இல்லையென்பது புலனாகிறது. சிலப்பதிகார அரும்பதங்களைத் தேர்ந்து அவற்றிற்குப் பயன்மிக்க குறிப்புரை எழுதியமையால் அச்சிறப்பு நோக்கி இவரது இயற்பெயரை நினையாமல்

அரும்பத வுரையாசிரியர் என்றும், அரும்பதவுரைகாரர் என்றும் புலவர்கள் குறிப்பிட்டுப் போற்றினர். இவருடைய பெற்றோர், ஊர் பற்றிய செய்திகளும் கிடைக்கவில்லை.

தம் உரைத் தொடக்கத்தில் விநாயக வணக்கம் கூறியுள்ளமையால் இவர் சைவ சமயத்தவர் ஆவர். விநாயக வணக்கம் நூலின் தொடக்கத்தில் கூறும் வழக்கம் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏற்பட்டது என்பது கல்வெட்டறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் கருத்தாதலின், இவர் காலம் கி.பி.9-ஆம் நூற்றாண்டாகலாம் என்று சிலர் கருதுவர். சீவக சிந்தாமணியிலிருந்து இவர்தம் உரைக்கு மேற்கோள் காட்டுவதால் இவரைப் பத்தாம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர் என்றுங் கூறுவர். அடியார்க்கு நல்லார் கி.பி.14-ஆம் நூற்றாண்டினராதலின், இவர் கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்கும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டவராதல் கூடும்.

சிலப்பதிகாரத்தில் பதிகம் முதல் வஞ்சிக் காண்டத்தின் இறுதிக் காதையாகிய வரந்தரு காதை முடிய இவர் அரும்பதவுரை வரைந்துள்ளார். எனினும், மதுரைக் காண்டத்தின் இறுதியிலுள்ள கட்டுரை என்னும் பகுதிக்கும், வஞ்சிக் காண்டத்தின் இறுதியிலுள்ள கட்டுரை, நூற்கட்டுரை ஆகிய பகுதிகளுக்கும் அரும்பதவுரை காணப்பெறவில்லை. மேலும், சிலப்பதிகாரத்திலுள்ள காதைகளுள் பன்னிரண்டின் இறுதியில் பதினைந்து வெண்பாக்கள் உள்ளன. இவற்றுள் வேனிற்காதை, கனாத்திறம் உரைத்த காதை, கொலைக் களக் காதை, அழற்படு காதை, கட்டுரை காதை ஆகியவற்றின் இறுதியிலுள்ள வெண்பாக்களுக்கும், வழக்குரை காதையின் இறுதியிலுள்ள மூன்று வெண்பாக்களுள் முதல் வெண்பாவிற்கும் ஆக ஏழு வெண்பாக்களுக்கு மட்டும் இவர்தம் அரும்பதவுரை கிடைத்துள்ளது.

அடியார்க்கு நல்லாரின் பெருஞ் சிறப்பிற்குக் காரணமாக விளங்கியது அரும்பதவுரையாக அமைந்த இவர்தம் உரையேயாகும். அரும்பதவுரையாசிரியர் பெரிதுஞ் சிந்தித்துத் தாம் கண்ட கலை நுணுக்கங்களையும் நூலனுபவங்களையும் அக்கால மரபுகளையும் அரும்பதவுரையில் குறிப்பிட்டமை, அடியார்க்கு நல்லாருக்கு நல் வாய்ப்பினை யளித்துச் சிலப்பதிகாரத்திற்கு வளமான விரிவுரை காணத் தூண்டிற்று என்பது பொருத்தமுடையதாகும். அரும்பதவுரையாசிரியரிடம் நன்மதிப்பும் நம்பிக்கையும் கொண்டவர் அடியார்க்கு நல்லார் எனினும், சில இடங்களில் அவர் கருத்திற்கு ஆக்கஞ் சேர்க்கும் வகையிலும் தம் மனத்திற்குப் பொருத்த மெனப்பட்டவற்றை அப்படியே எடுத்துரைக்கும் வகையிலும் உரைமாற்றங் கண்டுள்ளார். மங்கல வாழ்த்துப் பாடலில் கண்ணகியையும் கோவலனையும் அறிமுகப்படுத்தும் இளங்கோவடிகள் முதற்கண் கண்ணகியை இனிது புனைந்துரைக்கிறார். இதற்கு, அரும்பதவுரையாசிரியர் 'இவளை முன் கூறிற்று கதைக்கு நாயகி யாதலான்' என்று எழுதுவதும், அடியார்க்கு நல்லார் 'கண்ணகியை முற்கூறினார் பத்தினியை ஏத்துதல் உட்கோளாகலான்' எனக் கூறிச் செல்வதும் சிந்திக்கத்தக்கன. அரும்பதவுரையாசிரியர், செங்குட்டுவன் மலைவளங் காணச் சென்றது திருச்செங்கோடு என்று குறிப்பிட்டெழுதவும், அடியார்க்கு நல்லார் அதனை ஏற்க மனமில்லாமல் கொடுங்கோளூர்க்கு அயலதாகிய செங்குன்று என்னும் மலை என்று உரையெழுதியுள்ளார். இவ்வாறு, அரும்பதவுரையாசிரியர் கருத்திற்கு உடன்படாமல் அடியார்க்கு நல்லார் உரையெழுதும் பிற இடங்களுமுண்டு. 'இருவரும் மாறுபட எழுதியிருக்கும் உரைகளை ஆராய்வுழிச் சில இடங்களில் அரும்பதவுரையே பொருத்தமுடையதாகக் காணப்படுகிறது என்பர் ந.மு. வேங்கடசாமி நாட்டார்.

அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் சில இடங்களில் மூலபாடங்கொள்வதிலும் வேறுபடுகின்றனர். அரும்பதவுரையாசிரியர் காட்டிய சிலமேற்கோள்களையும் சிலநூற்பெயர்களையும் அடியார்க்கு நல்லார் போற்றாமல் செல்கின்ற இடங்களுமுண்டு. எனினும், அடியார்க்கு நல்லாருரை கிடைக்காத பகுதிகளுக்கு அரும்பதவுரையே விளக்கங் காணத் துணை நிற்கிறது. இவருரை, அரும்பதவுரையே யாயினும் சிற்சில இடங்களில் பொழிப்புரையாகவும் காணப்படுகிறது.

இவர் சங்க நூல்கள், சிந்தாமணி, வளையாபதி, பதினாறு படலம், மறைந்து போன 'செயிற்றியம்' முதலிய பல நூல்களைப் பயின்றவர் என்பதனை இவ்வுரையால் உணரலாம். ஆழ்ந்த புலமையும், ஆராய்ச்சித் தெளிவும், அரியவுழைப்புங் கொண்டவர் அரும்பதவுரையாசிரியர் என்பதனை அவரது உரை நன்கு புலப்படுத்துகிறது. செ.வை.

**அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ்**, விநாயகர் மீது பாடப்பட்டுள்ள பிள்ளைத்தமிழ் நூல்களுள் ஒன்று. அரும்பாத்தை என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் வட்டத்திலுள்ள ஒரு சிற்றூராகும் என்று கூறுகின்றனர். ஊர்ப் புள்ளிவிவரப் பட்டியலில் (Village Statistics Register) இவ்வூர் அரும்பாத்து என்று குறிக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்வூரின் பெயர் அரும்பாத்தி என்றும் சில ஏடுகளில் காணப்படுகிறது. இவற்றால் இவ்வூர் அரும்பாத்தை, அரும்பாத்து, அரும்பாத்தி ஆகிய மூன்று பெயர்களாலும் வழங்கப்பட்டது என்பது தெரிகிறது.

இந்நூலாசிரியர் பெயரினை அறியக் கூட வில்லை. ஆனால், இந்நூலிலுள்ள சில பாடல்களிலிருந்து இவர் வறுமையில் வாடியவர் என்பதும், புதுச் செல்வம் பெற்ற பலரிடம் சென்று அவரைப் புகழ்ந்து பாடி நின்றார் என்பதும் அறியப்படுகிறன. இவர் தமக்கு விநாயகப் பெருமான் அருள்புரிந்த செய்தியினை 'ஈரடி மீது தியானம் விடாதிரு என்றார்' (19) என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், இவ்வாசிரியர் தமக்கு இரு புதல்வர் பிறந்தமை, புதல்வர்க்குச் சுப்பிரமணியன் வேதவிநாயகன் எனப் பெயரிட்டமை, விநாயகப் பெருமான் வேண்டியவற்றை அருளியமை ஆகியவற்றை நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் விநாயகருக்குரிய பல பெயர்களை ஒரு பாடலில் தொகுத்துக் காட்டியுள்ளார் (58). இந்நூல் விநாயகரைப் பற்றி அமைந்துள்ளமையால், காப்புப் பருவத்தில் காப்புக் கடவுளுள் ஒருவராக விநாயகர் தனியே குறிப்பிடப்பட்டு வணக்கம் கூறப்படவில்லை. அவையடக்கத்தோடு அப்பருவம் 11 பாடல்கள் கொண்டுள்ளது. இந்நூல், அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகத்தார் வெளியிட்டுள்ள 'பிள்ளைத் தமிழ்க் கொத்து' என்னும் தொகுப்பு நூலில் முதலாவதாக அச்சிடப் பெற்றுள்ளது.

**அரும்பைத் தொள்ளாயிரம்:** விக்கிரம சோழனின் படைத்தலைவனாக விளங்கியதோடு, திருக்கோயிற் பணிகள் பலவற்றினை மிக்க ஈடுபாடு கொண்டு செய்த அரும்பாக்கம் மணவிற்கூத்தனான காலிங்கராயன் மீது பாடப் பெற்ற நூலாகக் கருதப் படுகிறது. இவன் நரலோக வீரன் என்றும் அழைக்கப் பட்டான். இன்று இந்நூல் கிடைக்கவில்லை. அரும்பை என்பது அரும்பாக்கத்தைக் குறிப்பதாகும். இந்நூலின் பெயர் அரும்பகைத் தொள்ளாயிரம் என்னும் பாட வேறுபாட்டுடனும் காணப்படுகிறது. முத்தொள்ளாயிரம் என்பது போல இந்நூலும் செய்யுள் எண்ணால் பெயர் பெற்றது. இலக்கண விளக்கப் பாட்டியலின் உரையாசிரியர், எண்செய்யுளுக்கு எடுத்துக்காட்டாக இந்நூலையும் முத்தொள்ளாயிரத்தையும் காட்டியுள்ளார். இந்நூல், ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்றதாகக் கூறப்படுகிறது. கலைமகள் அருள் பெற்று ஒட்டக்கூத்தர் அரும்பைத் தொள்ளாயிரம் பாடுங்கால், அதன் ஒரு செய்யுளைக் கேட்டு, விக்கிரம சோழன் அதனை ஒட்டிப் பாடுமாறு வேண்டியதாகவும், அப்போது அவர் 'நடித்தது நச்சரவு உச்சி' எனத் தொடங்கும் செய்யுளைப் பாடியதாகவும் தமிழ் நாவலர் சரிதை கூறுகிறது. இந்நூல் தொள்ளாயிரம் பாடல்கள் கொண்டது.

**அரும்பொருள் விளக்க நிகண்டு** ஒரு சொற் பல பொருள்களை மட்டும் விரித்தோதும் நிகண்டுகளுள் ஒன்றாகும். அருஞ்சொற் பொருள்களை விளக்கியமையினாலே இந்நூல் அரும்பொருள் விளக்க நிகண்டு என்னும் பெயர் பெறுவதாயிற்று.

மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டின் அமைப்பைப் பின்பற்றிய நிகண்டு நூல்களுள் இது முதலாவதாகும். இது ககர எதுகை முதல் னகர எதுகை ஈறாகச் சொற்களை அமைத்து, ஆசிரிய விருத்தத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. சூடாமணி போல் ஒரெதுகையில் பிற எதுகைச் சொற்கள் விரவுதலின்றி அமைந்திருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

இதனை இயற்றியவர் அருமருந்தைய தேசிகர். இவர், சிவப்பிரகாசருக்கு மகனாவார்; வீரசைவமரபினர் திருச்செந்தூரில் வாழ்ந்தவர். இவர் தம் ஞானாசிரியரும் தில்லைவாசியுமாகிய பச்சைக் கந்தைய தேசிகருடைய ஆணையை மேற்கொண்டு இந்நூலினை இயற்றியுள்ளார். இந்நூல் 700 விருத்தங்களால் ஆயது. இதில் சூடாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, அகராதி நிகண்டு, கயாதர நிகண்டு ஆகியவற்றிலுள்ள ஒருசொற் பல்பொருட் பெயர்களைத் திரட்டித் தந்துள்ளார். இதில் 3200 சொற்களுக்கு மேல் பொருள் விளக்கப்பட்டுள்ளது.

இந்நூல் அரங்கேறிய காலம் சாலிவாகன சகம் 1885-ஆம் ஆண்டு சித்திரபானு மாசிமாதம் சிவநிசி பொருந்திய வெள்ளிக்கிழமை ஆகும். எனவே இந்நூல் கி.பி. 1763-இல் இயற்றி முடிந்தது என்பது தெளிவு.

வீரசைவராகிய இரேவணாத்திரியர் கி.பி. 1594-இல் இயற்றிய அகராதி நிகண்டினை, வீரசைவராகிய இவரும் பின்பற்றியுள்ளார். வீர சைவர் என்பார் பெரும்பாலும் கன்னடதேசத் தொடர்புடையவர். ஆதலினால் இவர் தம் நிகண்டில் கன்னடச் சொற்கள் பலவற்றைச் சேர்த்திருக்கிறார். அகராதி நிகண்டினை அரும்பொருள் விளக்க நிகண்டு பல இடங்களில் அடியொற்றிச் செல்லுகிறது.

சூடாமணி நிகண்டின் 11-ஆம் தொகுதியைக் கி.பி. 1897-இல் உரைவிளக்கத்துடனும் மேற்கோளுடனும் பதிப்பித்த திருமழிசைச் சிவப்பிரகாசையராகிய வீரசைவர், முந்திய வீரசைவ ஆசிரியர் இயற்றிய அகராதி நிகண்டு, அரும்பொருள் விளக்க நிகண்டு என்பன அச்சாவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ளார். இவர் அரும்பொருள் விளக்க நிகண்டினை 'அரும்பொருள் விளக்க தீபிகை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலின் பல பிரதிகளையும் ஒப்பு நோக்கி நன்கு ஆராய்ந்து அச்சில் வெளியிட்டவர் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளையாவர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் செந்தமிழ்ப் பிரசுரம் 54-ஆவதாக 1931-இல் இந்நூல் அச்சிடப்பெற்று வெளிவந்தது. பல

பொருள் ஒரு சொல் அகராதியையும் பதிப்பாசிரியர் தொகுத்துத் தந்திருப்பது இப்பதிப்பிற்கு ஒரு தனிச் சிறப்பை நல்குகிறது. ஆய்வாளருக்கு இந்த அகராதி பெரும்பயனுடையதாகும். மு.ச.

**அருமருந்து தேசிகர்** பாண்டிய நாட்டில் திருச்செந்தூரில் வாழ்ந்த புலவர். அருமருந்த தேசிகர், அருமருந்தைய தேசிகர் எனவும் அழைக்கப்படுவார். இவர் தந்தையார் சிவப்பிரகாசர்; வீரசைவர். அருமருந்து தேசிகர் சிதம்பரத்தில் வாழ்ந்த பச்சைக் கந்த தேசிகரை ஞானாசிரியராகக் கொண்டார். இவர் 'அரும் பொருள் விளக்க நிகண்டு' என்னும் நூலை இயற்றியுள்ளார். எழுநூறு ஆசிரிய விருத்தச் செய்யுள்களைக் கொண்டு விளங்கும் இந்நூல் ஒருசொல் பல்பொருட் பெயர்களைத் தொகுத்துக் கூறுகிறது. இதன்கண் 3200 சொற்களுக்கு மேல் பொருள் விளக்கம் தரப்பட்டுள்ளது. ஓரெதுகை வரிசையில் பிற எதுகைச் சொற்கள் கலக்காமல் செய்யுள் முழுதும் ஒரே எதுகையில் வருமாறு இந்த நிகண்டு அமைந்துள்ளது. நூலாசிரியர் வீரசைவராதலின் கன்னட மொழியோடு தொடர்பு மிகவுடையவர். அதனால் கன்னடச் சொற்கள் பலவற்றை இந்நிகண்டினுள் சேர்த்துள்ளார். இரேவணசித்தர் இயற்றியுள்ள அகராதி நிகண்டினை அடியொற்றி இவர் தம் நூலினை ஆக்கியுள்ளார்.

**அருமன்** சங்க காலத்தில் வாழ்ந்த வள்ளல்களுள் ஒருவன். தன்னைத் தேடி வருவோர்க்கெல்லாம் இல்லையென்னாது சோறு வழங்கியவன். இவனை நக்கீரரும் (நற். 367), கள்ளில் ஆத்திரையனாரும் (குறுந். 293) தத்தம் பாடல்களில் பாராட்டியுள்ளனர். இவனது ஊராகிய சிறுகுடி தொன்மையானது. கள்ளில் ஆத்திரையனார் 'ஆதி அருமன் மூதூர்' என்று இதனைக் குறிப்பிட்டுள்ளார். 'தெய்வத்திற்கு இடும் பலியுணவினைக் காக்கைகள் வெண்சோற்றோடு கவரும் மனைகளை உடையது' என்று நக்கீரர் இவ்வூரினைச் சிறப்பித்துள்ளார்.

**அருமைப்பாடு** என்னும் சொல் பொருளியலில் நுட்பமான சொல்லாகும். அருமைப்பாடு இயல்பாகப் பற்றாக்குறையைக் குறிக்கும். ஆனால், பொருளாதாரத்தில் இச்சொல் ஒரு தனிப்பட்ட பொருளில் கையாளப்படுகிறது. பொருள்கள் இல்லாவிட்டால் 'இல்லாமை'; அவை போதுமானவையாக இல்லாவிட்டால் 'பற்றாக்குறை'. ஆனால், அருமைப்பாடு (Scarcity) என்பது பொருள்கள் கிடைத்தலின் அருமைப்பாடு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. வளங்கள் (Resources), அன்றாடம் பெருகிவரும் அறிவியலுக்கும் வளர்ந்துவரும் மக்கள் தொகைக்கும் ஈடு செய்வதாக அமைவதில்லை. மனிதனின் தேவைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. அவற்றை நிறைவு செய்யும் வழி வகைகள் போதுமானவையாக இல்லை. எனவே, வாழ்வில் மக்களின் முதன்மையான சிக்கல் 'அருமைப்பாடு' அல்லது 'கிடைப்பருமை' ஆகும். இக் கிடைப்பருமை மனிதனின் உழைப்புக் குறைவால் விளைந்ததன்று; வளங்களைப் பயன்படுத்தும் முறையினாலும், புற்றீசல் போல் வளர்ந்து வரும் புதிய தேவைகளாலும் நேரிட்டதாகும்.

பொருளியலில் அருமைப்பாடு ஒரு சிறப்பான இடத்தைப் பெறுகிறது. பொருளியலுக்கு இலக்கணம் வகுத்த பேராசிரியர் இராபின்சு (Robins) அருமைப்பாட்டை அடிப்படையாக வைத்தார். அவர், வளங்கள் அல்லது தேவைகளுக்கு ஈடுகொடுப்பது, வாய்ப்புகளின் கிடைப்பருமையால் எழும் சிக்கல்களை ஆய்வது ஆகியவை பொருளியலின் முக்கிய நோக்கங்களாகும் என்றார். சிட்டாசுகி (Scitovsky) என்னும் பொருளியல் வல்லுநர், பொருளாதாரம் அருமைப்பாடுடைய துணை ஆதாரங்களை நிருவகிக்கும் திறன் பற்றிக் கூறும் ஒரு சமூக அறிவியல் (Social Science) என்று கூறுகிறார். அருமைப்பாட்டிற்கு ஏன் பொருளியலில் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது என்ற கேள்வி எழுவது இயல்பு. பொருளியல் பொதுவாக மனிதனின் அன்றாட வாழ்வினை ஒட்டிச் செல்லும் ஒரு அறிவியல் ஆகும். ஆழ்ந்த அறிவியல் நோக்கோடு மனிதனின் செயல்களையும் அவன் சூழ்நிலையையும் நோக்கினால், மனிதன் பொருளாதார விளக்கத்தின் மையமாக விளங்குகிறான் என்பது தெளிவாகும். ஆகவே, அருமைப்பாடு என்னும் கருத்து, பொருளாதாரச் சூழலில் விளக்கப்படுவது சாலச் சிறந்தது.

இயற்கை வளங்களை மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்யச் செயலில் ஈடுபடுத்தும்பொழுது அருமைப்பாடு ஏற்பட ஏதுவாகிறது. வளத்தின் ஆதாரங்களான நிலம், நீர், மனித ஆற்றல், மூலதனம், எந்திரங்கள் போன்றவை அளப்பரியனவாகத் தோன்றினும், மக்கள் பெருக்கத்தினாலும் பொருள்களின் மிதமிஞ்சிய தேவையினாலும் அவை பயன்படுத்தப்படும் அளவினாலும் வளங்கள் கிடைப்பதற்கரியவை ஆகின்றன. கற்காலத்திலும் உலோகக்காலத்திலும் மனிதன் தன் கண்முன்னே பரந்து கிடந்த நிலங்களைக் கண்டு இறுமாந்திருந்தான். அவன் நிலத்தின் அருமைப்பாட்டை அன்று உணரவில்லை. ஆனால், இன்று குறிப்பாக நகரங்களில், மக்கள் வாழ இல்லங்கள் அமைக்கக் கூட நிலங்கள் இல்லாமல் அடுக்கடுக்காக ஒன்றின் மேல் ஒன்றாக வீடுகளைக் கட்டுவதைக் காண்கிறோம். பயிரிடும் நிலங்களின் பரப்பளவை அதிகரிக்க இடு பொருள்களைப் (Input) பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டிய நிலை

இன்று ஏற்பட்டுள்ளது. இச் செயலும் ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பின் எதிர்பார்க்கும் பலனைத் தருவதில்லை. ஏனெனில், குறைந்துசெல் உற்பத்தி விளைவு விதி (Law of Diminishing Returns) நிலத்தில் செயற்படத் தொடங்கி விடுகிறது. ஒரு வேளை மனிதனின் தேவைகள் கணக்கிலடங்குவனவாக இருந்திருப்பின் வளத்தின் அருமைப்பாடும் பொருள்களின் அருமைப்பாடும் உணரப்படாமல் இருந்திருக்கும். உலகில் கணக்கற்று வளர்ந்துவரும் தேவைகளையும் கணக்கில் அமைந்துள்ள வளங்களையும் இணைத்து நோக்கும் பொழுது அருமைப்பாடு நிகழ்வதை உணர முடியும்.

நிலத்தில் பயிரிடுதல், கட்டடம் கட்டுதல், போக்குவரத்துப் பாதைகள் அமைத்தல் ஆகிய திட்டங்களுக்கு வளங்களைப் பல வழிகளில் பயன்படுத்தலாம். இவ்வளங்களின் அளிப்பு, பயன்படுத்தப்படும் விதம், இரண்டுமே அருமைப்பாட்டிற்கு அடித்தளமாக அமைகின்றன. தேவைகள் எழும்போது அவற்றை நிறைவு செய்ய வழிவகைகளும் ஆயத்தமாக இருப்பின், அருமைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட பொருளியலைக் கற்கவேண்டிய அவசியமே இல்லாது போயிருக்கும். அருமைப்பாட்டின் சிறப்பு என்னவெனில், இது ஓர் இடைக்கால இயல் நிகழ்ச்சி என்பதாகும். காலப் போக்கில் உற்பத்திக் காரணிகளின் அசைவால் ஒரு குறிப்பிட்ட அருமைப்பாடு மறைந்து விடுகிறது; மற்றொன்று தோன்றுகிறது.

வளங்களின் கிடைப்பருமையால் மட்டும் அருமைப்பாடு தோன்றுவதில்லை. மனித வாழ்வில் ஏற்படும் தேவைகள், விருப்புகள் ஆகியவற்றை அடையும் வழிவகைகளும் (Means)காரணமாகின்றன. இங்கு 'வழிவகைகள்' என்பது குறிப்பாகப் பணம் அல்லது செல்வத்தைக் குறிக்கிறது. வறுமை மிகுந்த நாடுகளில் தேவைகளை நிறைவு செய்யும் வழிவகைகள் குறைவாக இருக்கும் கட்டத்தில் கிடைப்பருமை நிலவுகிறது. அங்கு வளங்கள் அளவிற்குட்பட்டனவாக இருக்கின்றன. தேவைகள் அளவற்றவைகளாகின்றன. விருப்பங்கள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. ஆனால், வழி வகைகள் குறைந்தவையாக இருக்கின்றன. இத்தகைய நிலையில், மக்கள் நலனை (Human Welfare) எவ்வாறு மேம்படுத்துவது எனப் பொருளியல் ஆராய்கிறது. மனிதனின் எண்ணற்ற தேவைகளுள் முதன்மையானவற்றை நிறைவேற்ற வளங்களைப் பயன்படுத்தித் தேவையான பொருள்களை உற்பத்தி செய்வது எவ்வாறு என்பதை விளக்கிக் காட்டுவதே பொருளியலாகும்.

அன்றாட வாழ்வில் அருமைப்பாடு: மனித வாழ்வு, உற்பத்தி, நுகர்வு, பங்கீடு, பரிமாற்றம் என்ற முக்கியச் செயல்களில் பின்னிக் கிடக்கிறது. உற்பத்தியில் நிலம், உழைப்பு, மூலதனம், நிருவாகம் என்ற நான்கு காரணிகள் பங்கு பெறுகின்றன. நிலத்தின் அளவு நாளடைவில் உற்பத்தியின் பெருக்கத்திற்கு ஈடுகொடுக்க முடியவில்லை. இதனால் படைப்புக் காலத்தில் இருந்த நிலங்கள் எல்லாம் அழிந்துவிட்டன என்பது பொருளன்று. அன்று நிலத்தில் மக்களுக்கு இருந்த ஈடுபாடு குறைவு. இன்று நிலத்தின் பயன்பாடு (Utility) மிகுந்துவிட்டது. ஆகவே, நிலம் குறிப்பிட்ட தேவையை நிறைவு செய்யக் கிடைப்பதரிதாகிறது. எனவே, காடுகள் அழிக்கப்படுகின்றன. கரடுமுரடான நிலங்கள் பண்படுத்தப்படுகின்றன. காடுகளின் அழிப்பால் மழையின் இயல்பு மாறுகிறது. உலகின் பல பாகங்களில் ஒரு குறிப்பிட்ட சமயத்தில் வறட்சி ஏற்படுகிறது. அன்று மழை நீர் வீணே ஓடிக் கடலில் சேர்ந்தது. அப்பொழுது தண்ணீர் இலவசப் பொருள். இன்று மனிதன் அந்நீரை அணைகள் கட்டித் தேக்கி வறட்சிக் காலத்தில் பயன்படுத்துகிறான். தேவைக்கேற்பத் தண்ணீரின் அளவு இல்லை என்றால் தண்ணீரும் அருமைப்பாடுடைய பொருளாகி விடுகிறது.

ஆதியில் மனிதன் தன் குறைந்த விருப்பங்களுக்கு ஏற்பப் பசி ஏற்படும்பொழுது வேட்டையாடினான். பின் பசியைப் போக்கப் பயிரிட்டான். எளிய முறையில் தன் உடையையும் உறையுளையும் அமைத்துக் கொண்டான். நாளடைவில் அவன் விருப்புகள் விரிவடைந்தன; தேவைகள் பல தோன்றின; அவற்றை நிறைவேற்ற அயராது உழைத்தான். அவன் தன் உழைப்பால் அனைத்துத் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்ற முடியாது என்று கண்ட பொழுது, இயந்திரங்களைக் கண்டுபிடித்து, அவற்றின் சக்தியையும் தன் உழைப்போடு கூட்டிக் கொண்டான். உழைப்பு என்பது மனித ஆற்றல். மக்கள் தொகை குறைவான நாடுகளில் மனித ஆற்றல் அருமைப்பாடு உடையதாகிறது. மனித ஆற்றல் அதிகமாகக் கிடைக்கும் நாடுகளில் மூலதனம் கிடைப்பது அரிதாகிவிடுகிறது. மனிதன் பெரும்பாலும் தான் ஈட்டிய செல்வத்தையும் பொருள்களையும் தனது நுகர்ச்சிக்காகச் செலவிடுவதால், மீண்டும் உற்பத்திக்குப் பயன்படுத்தக் கூடிய வழியில் அவற்றைச் சேமிக்காமல் ஆடை அணிகலன்களாகச் சேமிக்கிறான். இதனால், உற்பத்திக்கான முதலீட்டை எழுப்ப முடியவில்லை. நுகர்ச்சி நிறைவு பெற்றால் தான், முதலீட்டைப் பற்றிச் சிந்திக்க முடியும்.

முதலீடு தேவைக்குப் போதுமானதாக இல்லை என்றால் உற்பத்தி குறைகிறது. உற்பத்தியின் குறைவால் பண்டங்களின் பற்றாக்குறை ஏற்படுகிறது. குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களைப் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே எப்படிப்

பங்கீடு செய்வது? இன்று நம் நாட்டில் செயற்படும் நியாய விலைக் கடைகளில் உதவித்தொகை பெற்று விற்பனையாகும் பண்டங்கள் (Subsidised Goods), பொருள்களின் அருமைப்பாட்டை உணர்த்துகின்றன. தேவைக்கேற்பப் பொருள்கள் விற்பனையில் இல்லை என்றால் இருக்கும் பொருள்களுக்குப் போட்டி ஏற்படுகிறது. இதனால், பண்டங்களின் மதிப்பு (Value) உயர்கிறது; எனவே, விலையும் ஏறுகிறது. அருமைப்பாடுதான் விலை ஏற்றத்திற்கு வழி வகுக்கிறது. அதிக விலையின் விளைவு ஆதாயம் ஆகும், ஆதாயம், பதுக்கல் செய்ய வணிகர்களைத் தூண்டுகிறது.

மனிதனின் உள்ளத்தில் கிடைப்பரிய பொருள்களை நாடிச் செல்லும் நாட்டம், அன்றும் இன்றும் என்றும் உள்ளது. இதனால்தான், அருமைப்பாடு நிகழும் காலங்களில் பொருள்களின் விலை உயர்கிறது. எரிபொருளான மண்ணெண்ணெயின் விலை, ஒரே நாளில் பலர் அதற்காகத் தெருவில் அலைவதைப் பார்த்தவுடனே, நஞ்சுபோல் ஏறிவிடவில்லையா? அருமைப்பாடே பல சமூகச் சிக்கல்களுக்கு ஆணிவேராக அமைந்துள்ளது. தேவைக்கு மேல் அளிப்பு இருந்து விட்டால் அருமைப்பாட்டை வலைபோட்டுத் தேட வேண்டியிருக்கும். சூரிய ஒளி, காற்று இவ்விரண்டும் இன்றியமையாதவை. இருப்பினும், இவ்விரண்டும் அருமைப்பாட்டைத் தாண்டி நிற்பதால் இவற்றுக்கு விலை இல்லை. ஒருவேளை சூரிய ஒளியை ஓர் ஆக்கச் சக்தியாக வருங்காலத்தில் பெருமளவில் பயன்படுத்தத் தொடங்கினால், அதற்கும் விலை கொடுக்க வேண்டி வரலாம். இன்று தங்கம் மக்களுக்குக் கிட்டாததொன்றாகி விட்டது. காரணம், தங்கத்தின் அருமைப்பாடு உலகெங்கும் உணரப்படுகிறது. தொடர்ந்து அதன் விலையும் ஏறிக்கொண்டே போகிறது. இருப்பினும், மனிதனுக்குத் தங்கத்தின் மேல் உள்ள நாட்டம் தீரவில்லை. இத்தகைய நாட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவரவே மனிதன் உழைக்கிறான். அனைத்துப் பண்டங்களும் மக்களுக்குத் தங்குதடையின்றிக் கிடைக்குமாயின் மனிதன் வேலை உண்பதும் உறங்குவதுமாகவே இருந்திருக்கும்.

அருமைப்பாடு, பொருளாதார வகையில் பிரிவினையையும் வேறுபாட்டையும் உருவாக்கியுள்ளது. பொருள்களின் கிடைப்பருமை மிக்க அளவில் உள்ள நாடுகள் ஏழை நாடுகளாகவும், கிடைப்பருமையின்றி உற்பத்திக்கூடுதலாக உள்ள நாடுகள் செல்வம் மிகுந்த நாடுகளாகவும் கருதப்படுகின்றன. உற்பத்திப் பெருக்கத்தினால் வாணிகம் வளர்கிறது. பிற நாட்டிலும் பண்டங்கள் விற்கப்படுகின்றன. செல்வம் நாட்டிற்குள் வருகிறது. அது மீண்டும் அதிக உற்பத்திக்கு ஆதாரமாக அமைகிறது. வளங்கள் நிரம்பப் பெற்ற பொருளாதார வளர்ச்சி மிக்க அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அருமைப்பாட்டிற்கு இடமில்லையா என்ற கேள்வி எழுவது இயல்பு. அந்நாடுகளில் வறுமைக் கோட்டிற்கடியில் வாழும் மக்கள் மிகச் சிலர். அந்த மிகச் சிலரும் ஏழை நாடுகளில் வாழும் நடுத்தர மக்களை விட வாழ்க்கைத் தரத்தில் மேம்பட்டவர்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பொருளாதார வளர்ச்சியின் காரணமாக அமெரிக்கா போன்ற நாடுகள், அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் போன்றவைகளில் நிறைவு பெற்றுவிட்டன. அங்கு எழும் தேவைச் சிக்கல்கள், புதிய அமைப்புக் காரை எப்பொழுது வாங்குவது, வருமானத்தை எப்படிச் செலவிடுவது என்பன போன்றவைகளே. ஆகவே, அங்கு ஆடம்பரப் பொருள்களின் தேவை வளர்கிறது. வளரும் தேவை உடனுக்குடன் உற்பத்தியின் மூலம் தீர்க்கப்படுகிறது. அதற்குள் வாழ்க்கை முறை (Life Style) மாறுகிறது. புதிய தேவைகள் மீண்டும் எழுகின்றன. இந்தச் சூழல், அருமைப் பொருள்களின் பங்கீட்டால் ஈடுசெய்யப்படுகிறது. அந்நாடுகளில் எழும் சிக்கல்களில் முதலிடம் பெறுவது, எவ்வகையில் வள ஆதாரங்களை உற்பத்திக்குப் பங்கீடு செய்வது என்பதே! தேவையை நன்கு கணிக்காமல் உற்பத்தி செய்தால், அங்காடியில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கிவிடும். இந்நிலை பெருமளவில் நிகழ்ந்தால் பொருளாதார மந்தம் ஏற்பட்டு, அந்நாட்டை முடக்கிவிடும்.

உலகில் எல்லா நாடுகளிலும் அருமைப்பாடு உணரப்படுகிறது. ஆனால், நாட்டிற்கு நாடு அதன் இயல்பு மாறுகிறது. பேராசிரியர் மெக்கென்னா (Mekenna) பின்வருமாறு கூறுகிறார்: 'வள ஆதாரங்களின் பற்றாக்குறையால் மனிதத் தேவை நிறைவு செய்யப்படாத போது, அந்நாட்டில் பொருளியல் மறைந்துவிடும். ஆனால், அத்தகைய நிலை ஏற்படாதது ஏனெனில் காலம் குறுகியது' என்கிறார்.

அருமைப்பாடு ஒரு கோணத்தில் பார்த்தால், சமுதாயத்தின் வகுப்புப் பிரிவினைக்கும் காரணமாகிறது. அருமைப்பாடு மிகுந்த பொருள்களை விற்பனை செய்யும் விற்பனையாளருக்கு மிகுந்த ஆதாயம் பெற வாய்ப்புண்டு. அதே சமயம், அருமைப்பாடு மிகுந்த பண்டங்களை வாங்குவோர் (நுகர்வோர்) தங்களது எல்லைக்குட்பட்டுச் செலவிட வேண்டியதாகிறது. இதனால், சமுதாயத்தில் ஒருசாராரிடம் செல்வம் சேருகிறது; மற்றொரு சாராரிடம் செல்வம் குறைகிறது. காலப்போக்கில் இது, இருப்போர், இல்லாதோர் என்ற நிலையைத் தோற்றுவிக்கிறது. நுணுக்கமாக ஆராய்ந்து பார்த்தால், அருமைப்பாடு ஒழுங்காக ஈடுகட்டப்படாவிட்டால், அது சுரண்டலுக்கும் (Exploitation) முதலாளித்துவத்திற்கும் அடிகோலும். உலகில் காணப்படும் குறிப்பிட்ட சில

பொருளாதார அமைப்புகளான சமத்துவம், முதலாளித்துவம், பொதுவுடைமை ஆகிய யாவும் அருமைப்பாட்டின் அடிப்படையில் எழுப்பப்பட்டவையே. பொதுவுடைமை நாடான உருசியாவிலும் சமத்துவ நாடுகளான இசுகாண்டிநேவிய நாடுகளிலும் அருமைப்பாட்டின் விசையூக்கத்தை (Vigour) மட்டுப்படுத்திப் பண்டங்கள் யாவருக்கும் எளிதாகவும் சம அளவிலும் கிடைக்கும்படி வள ஆதாரங்கள் யாவும் பொதுவுடைமையாக்கப்பட்டு, அரசே அனைத்துப் பகிர்வு முறையையும் நடத்தி வருகிறது.

மனிதனின் பொருள் சாராச் செல்வத்திலும் (Non-Material Wealth) அருமைப்பாடு இடம் பெறுகிறது. பொருள் சாராச் செல்வத்துள் முதன்மையான இடம் பெறுவது மனிதனின் திறமை. குறிப்பாக, பொருளீட்டும் திறன் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. இத்திறமை வேறுபாட்டால் ஊதியத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. திறமை எல்லோரிடமும் சமமாக இல்லாததால், ஒரே பணியை ஒரே தகுதி பெற்றுச் செய்யும் இருவர் தம் வேலைத் திறனில் மாறுபடுகின்றனர். ஒரு வேலையைச் செய்து முடிக்க ஒரு குறிப்பிட்ட திறன் ஒரு தொழிலாளியிடம் எதிர்பார்க்கப்படுகிறது. அத்திறன் அவனிடம் குறையுமேயானால் அவனும் பாதிக்கப்படுகிறான்; உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. இதனைத் திறன் அருமைப்பாடு (Scarcity of Efficiency) என்று கொள்ளலாம். இத்தகைய திறன் அருமைப்பாட்டை நீக்கக் கல்விப் பயிற்சி, சாதகமான சூழ்நிலை, உடல் உரம் பெறச் சலுகைகள் முதலியன உழைப்பவருக்கு அளிக்கப்படுகின்றன. அருமைப்பாடு அல்லது கிடைப்பருமை, மனிதக்கையின் எல்லா நிலைகளிலும் பின்னிப் பிணைந்து கிடந்தாலும், அது மனிதனால் மேற்கொள்ள முடியாததொன்றன்று. பண்டங்களின் அருமைப்பாட்டை நீக்க, மாற்றுப் பொருள்களை (Substitutes) அவன் பயன்படுத்தலாம். சர்க்கரைத் தட்டுப்பாடு என்றால், வெல்லத்தைப் பயன்படுத்தலாம். காப்பிக் கொட்டை கிடைப்பருமையாகிவிட்டது என்றால் தேயிலையைப் பயன்படுத்தலாம்.

அருமைப்பாடு இயற்கையின் விளைவாலும் மனிதனின் செயற்கையாலும் நிகழ்கிறது. இயற்கையின் அளிப்பில், எல்லா வளங்களும், எல்லா இடங்களிலும் சமமாகக் காணப்பட்டு, மனிதனின் ஆற்றலிலும் திறமையிலும் மட்டும் அருமைப்பாடு காணப்படின், அது மனிதனால் எழுந்தது என்று கூறலாம். ஆனால், சகாராப் பாலைவனம் இயற்கையின் கொடுமையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. எரிமலைகள் நிறைந்த இந்தோனேசியா, இயற்கையின் கொடுங்கோன்மைக்குச் சான்றாக அமைகிறது. அதே சமயம், வற்றாதவள நதிகள் பாய்ந்தோடும் செழுமையான பல இடங்கள், இயற்கையின் வள்ளல் தன்மைக்கு எடுத்துக்காட்டாகின்றன. சில இடங்களில் இயற்கை, அருமைப்பாட்டைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துவிடுகின்றது. பல சூழல்களில் மனிதனின் செயலும், அருமைப்பாட்டைத் தோற்றுவிக்கிறது. இயற்கை வளங்களை உற்பத்தியில் ஈடுபடுத்தும்பொழுது மனிதத் தேவைகளுக்கேற்ப இன்றியமையாப் பண்டங்களை உற்பத்தி செய்யாமல், உல்லாச வாழ்வுக்கான ஆடம்பரப் பண்டங்களையும் (Luxuries) மதிப்பை உயர்த்திக் காட்டும் பெருமைசார் (Prestigious Goods) பண்டங்களையும் உற்பத்திசெய்வதால், பண்டங்களுக்கு அருமைப்பாடு ஏற்படுகிறது. அன்றியும், உற்பத்தி செய்த பொருள்கள் சீரிய முறையில் பங்கீடு செய்யப்படாவிட்டாலும் அருமைப்பாடு எழும். எவ்வாறாயினும், எழுந்த, எழுகின்ற, எழும் அருமைப்பாட்டைத் தனி மனிதனின் தனி முயற்சியாலும் சமுதாயத்தின் கூட்டு முயற்சியாலும் அரசியல் அமைப்புகளாலும் திட்டங்களாலும் ஈடுசெய்ய முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, மக்கள் அருமைப்பாடுடைய பொருள்களைப் பகிர்ந்து வாழும் மனப் பக்குவம் அடைய வேண்டும். காண்க: அரும்பண்ட ஒதுக்கீடு.

நே.எஸ்.டே.

துணை நூல்கள்:

**Richard G. Lipsey.,** "An Introduction to Positive Economics", English Language Book Society and Wieidenfeld and Nicolson, Third Edition, Great Britian, 1971.

**Hunt. E.K. & Howard J. Sherman.,** "Economics: An Introduction to Traditional and Radical Views", Harper International Edition, Harper & Row Publishers, Third Edition, New York, 1978.

**Paish. F.W.,** "Benham's Economics – A General Introduction", Sir Isaac Pitman and Sons Limited, Eighth Edition, London, 1967.

**அருவா நாடு** என்பது தென்னார்க்காடு மாவட்டத்தில் பெண்ணையாற்றின் தென்பகுதி நாட்டினைக் குறிக்கும். செந்தமிழ் நாட்டைச் சார்ந்த பன்னிரண்டு நாடுகளுள் ஒன்று. இங்கு வாழ்ந்தவர்கள் அருவாளர் என்று கூறப்பட்டனர்.

**அருவாவடதலை** அருவா நாட்டிற்கு வடக்கே உள்ள பகுதிகள் அருவா வடதலை எனப்பட்டது. இது இக்காலச் செங்கற்பட்டு மாவட்டமாகும்.

**அருவாளர்** அருவா நாட்டில் வாழ்ந்தவர்கள். செந்தமிழ் நாட்டினைச் சார்ந்து விளங்கும் தென்

பாண்டி முதலான பன்னிரண்டு கொடுந்தமிழ் நாடுகளில் அருவா, அருவா வடதலை என்னும் இரு நாடுகளும் அடங்கும். அருவா நாடு, அருவாள நாடு எனவும் வழங்கப்பெறும். தென்னார்க்காடு மாவட்டத்தில் கொள்ளிடத்திற்கு வடக்கேயுள்ள அருவா நாட்டிலும் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த அருவா வடதலை நாட்டிலும் வாழ்ந்த பழங்குடி மக்கள் அருவாளர் எனப்பட்டனர். அகத்தியர் வட நாட்டிலிருந்து தென்னாடு வந்தபோது பல வேளிர்களோடு அருவாளரையும் கொண்டு வந்து குடியேற்றினார் என்று நச்சினார்க்கினியர் தம் தொல்காப்பியப் பாயிர உரையில் குறிப்பிட்டுள்ளார். திருமாவளவன் ஆகிய கரிகாலன் அருவாளர்களை வென்று அவர்களைத் தன் ஏவல் கேட்குமாறு செய்தான் என்னும் செய்தி பட்டினப் பாலையில் 'தொல்லருவாளர் தொழில் கேட்ப' எனக் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் கூறப்பட்டுள்ளது.

**அருவி ஆறு** சிரீலங்காவில் உள்ளதோர் ஆறு. இதனைத் தாமிரபருணி என்றும் கூறுவர். இவ்வாற்றின் நுழைவாயிலில் சிரீலங்காவின் துறைமுகப்பட்டினம் இருந்தது. தாம்ரபன்னி அல்லது தாம்பன்னி என்பது பண்டைக் காலத்தில் சிரீலங்காவிற்கு வழங்கப்பட்ட பெயர். இப் பெயருக்கும் தாமிரபருணி ஆற்றிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. திருநெல்வேலி மாவட்டத்தில் ஓடும் ஆறு தாமிரபருணி என்பதாகும். அப்பெயரே சிரீலங்காவிற்கும், அருவி ஆற்றின் வாயிலில் இருந்த துறைமுகத்திற்கும் சூட்டப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**அருள் யாத்திரை** என்பது கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கிலாந்தில் கத்தோலிக்கர் நடத்திய கிளர்ச்சியைக் குறிக்கிறது. ஆங்கில மன்னர் எட்டாம் என்றி (Henry VIII) கொண்டு வந்த சமயச் சீர்திருத்தங்களுக்கும் கெடுபிடி ஆட்சிக்கும் எதிராக இலிங்கன்சயர், யார்க்சயர் போன்ற வட இங்கிலாந்துப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள், குறிப்பாகக் கத்தோலிக்கர்கள் செய்த கிளர்ச்சிகளே 'அருள் யாத்திரை' (Pilgrimage of Grace) எனப் பொதுவாகப் பேசப்படுகின்றன. இங்கிலாந்தில் போப்பாண்டவரின் மேலாண்மையை (Supremacy) நீக்கியதையும், கிறித்தவ மடாலயங்களைக் கலைத்து அவற்றின் சொத்துக்களைச் சூறையாடியதையும் கண்டு, சீற்றமுற்ற கத்தோலிக்கக் குருமார்களும் பிரபுக்களும் குடியானவர்களும் மற்றையோரும் கி.பி. 1536-ஆம் ஆண்டில் கலகஞ்செய்யத் தொடங்கினர். இக்கிளர்ச்சி இயக்கத்தில் பங்கு கொண்டவர்கள் பல காரணங்களால் ஒன்று சேர்ந்து போராடிய போதிலும், கத்தோலிக்கத் திருச்சபைக்கெதிரான அரசவையினரின் முயற்சியை முறியடித்து அச்சமயத்தை மீட்கப் போவதாகக் கூறிக் கொண்ட அவர்கள், தங்களை அருள் யாத்திரிகர் என அழைத்துக் கொண்டனர். எனினும், அவர்கள் கத்தோலிக்க இங்கிலாந்தின் பேராளர்களாக மட்டுமன்றிப் பழமையான இங்கிலாந்தின் சார்பாளர்களாகவும் விளங்கினர் எனலாம்.

தொடக்கத்தில் இலிங்கன்சயரில் டி' ஆர்க் (D' Ark) என்பார் தலைமையில் எழுந்த இக்கிளர்ச்சி, விரைவாகப் பரவியபோதிலும், பதினைந்து நாட்களிலேயே ஒடுக்கப்பட்டுவிட்டது. இருப்பினும், இராபர்ட் ஆசுக் (Robert Aske) என்னும் வழக்கறிஞரின் தலைமையிலெழுந்த குடியானவர்களின் கிளர்ச்சி எளிதில் அடங்குவதாக இல்லை. இக்கிளர்ச்சியாளரின் திட்டம் கி.பி. 1536-ஆம் ஆண்டின் இறுதியில் இறுதிவடிவம் பெற்றது. போப்பாண்டவரின் மேலாண்மையை ஏற்றுக் கொள்ளல், மடாலயங்கள் சிலவற்றையாவது மீண்டும் நிலைநாட்டல், துரோகக் குற்றச் சட்டம் போன்ற கொடுஞ் சட்டங்களை நீக்குதல், பாராளுமன்றக் கூட்டம் ஒன்றை வடபகுதியில் கூட்டுதல், தாமசு கிராம்வெல் எனும் அமைச்சரைப் பதவியிலிருந்து விலக்குதல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராடினர். அவர்களுடன் யார்க் தலைமைப் பிசப்பும் பிரபுக்கள் பலரும் சேர்ந்து கொண்டதால், யார்க்சயர் மட்டுமன்றி இலிங்கன்சயர் முதலான பகுதிகளும் கலகக்காரர்களின் வசம் வந்தன. எனவே, மன்னரின் பேராளரான நார்போக் பிரபு (Earl of Norfolk), அவர்களுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வந்தார். கலகக்காரர்கள் அனைவரையும் மன்னித்து விடுவதாகவும் பாராளுமன்றத் தொடரை வடக்கிலும் கூட்ட முயற்சி மேற்கொள்வதாகவும் அவர் வாக்குறுதிகள் தந்தவுடன் 'அருள் யாத்திரை' வீரர்கள் கலைந்து சென்றனர். அவர்களின் தலைவரான இராபர்ட்டு ஆசுக், மன்னர் என்றியைப் பேட்டி கண்டு வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்குமாறு கேட்க இலண்டன் நகர் சென்றார். அவருக்கு அங்கே சிறப்பான வரவேற்புக் கிடைத்தது. ஆனால், இதற்கிடையில் கி.பி. 1537-இல் சில கத்தோலிக்கக் குருமார்களின் தூண்டுதலினால் பீவர்லி (Beverley), பிகாட் (Begod) ஆகியோர் தலைமையில் மீண்டும் கலகங்கள் எழுந்தன. இப்புதிய கிளர்ச்சியைத் தடுக்க ஆசுக்கும் வேறு சில அருள் யாத்திரைத் தலைவர்களும் முயன்றனர். ஆனால், தம் பகைவரை அழிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருந்த எட்டாம் என்றி, பிகாட்டுடன் ஆசுக் முதலானோரையும் சிறையிலடைத்துப் பின்னர்த் தூக்கிலிட்டுக் கொன்றார். இங்ஙனம், 'அருள் யாத்திரை' எனும் பெயரால் அரசருக்கெதிராக எழுந்த கலகங்கள் இறுதியில் ஒடுக்கப்பட்டன. என்றாலும் இவற்றினால் இரு முதன்மையான பயன்கள் ஏற்பட்

டன. முதலாவதாக, இங்கிலாந்தின் வடபகுதிகளின் ஆட்சிக்கான வடகவுன்சில் (Council of the North) அமைப்பு முறைக்கு இறுதி வடிவம் தரப்பட்டது. இரண்டாவதாக, வடபகுதிகளில் வாழ்ந்த வலிமை மிக்க பகைவர்களை அடியோடு அழித்த என்றி மன்னர் ஈடு இணையற்ற வல்லாட்சியாளராகத் திகழலானார் பா.மா.

**அருளப்ப நாவலர்** இலங்கையில் வாழ்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். யாழ்ப்பாணத்துக் காரைத் தீவில் தெல்லிப்பழை என்னும் ஊரில் வாழ்ந்தவர். இவரது இயற்பெயர் பூலோகசிங்க முதலியார் என்பதாகும். காலம் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு; கி.பி. 17-ஆம் நூற்றாண்டு என்றும் கூறப்படுகிறது. கிறித்தவ சமயத்தில் கத்தோலிக்கப் பிரிவினைச் சேர்ந்தவர். திருச்செல்வர் என்னும் உரோமன் கத்தோலிக்க ஞானியின் வரலாற்றினைத் 'திருச்செல்வராசர் காப்பியம்' என்னும் பெயரில் காவியமாகப் பாடியுள்ளார். 25 படலங்களைக் கொண்டுள்ள இந்நூல், 1900 செய்யுட்களால் அமைக்கப்பட்டுள்ளது. இது தியாகராச பிள்ளையால் கி.பி. 1896-இல் விளக்கக் குறிப்பொடு பதிக்கப்பெற்றது. நாவலர் என்னும் பெயரால் இவரது சொல்லாற்றல் திறன் விளங்குகிறது. திருச்செல்வர் அம்மானை, சாந்தியோக மையூர் அம்மானை ஆகிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார்.

**அருளாள தாசர்** கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் பாண்டிநாட்டு நெல்லி நகரில் வாழ்ந்த புலவர்; மதுரகவி வரதராச ஐயங்கார் என்னும் பெயராலும் அழைக்கப்படுவார்; இனிய கவிதை பாடும் சிறப்பினால் மதுரகவி என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவருடைய ஊராகிய நெல்லி நகர், தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள நெல்லிக்குப்பமாகும் என்று கூறுபவர்களுமுண்டு. வடமொழி தென்மொழி இரண்டிலும் புலமை நிரம்பியவர். இவர் வடமொழிப் பாகவதத்தினைத் தமிழில் செய்யுள் நூலாகப் பாடியுள்ளார். வடமொழியில் வியாசர் எழுதிய புராண பாகவதம் என்னும் நூலினையே இவர் தமிழாக்கம் செய்தார் என்பது கூறப்படுகிறது. 135 படலங்களையும் 9151 செய்யுட்களையும் கொண்டமைந்த இவருடைய பாகவதம் கி.பி. 1543-ஆம் ஆண்டில் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது என்னும் செய்தி இந்நூற் செய்யுளொன்றினால் தெரியவருகிறது. இந்நூலின் இரண்டாம் பகுதி கி.பி. 1891-இல் மகா பாகவதம் என்னும் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. இதிலுள்ள சில படலங்கள், வெவ்வேறு ஆசிரியர் எழுதிய உரையுடன் வெவ்வேறு காலங்களில் வெளிவந்துள்ளன.

**அருளாளப் பெருமாள்** கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து 'பிரமய சாரம்' எனும் நூலை எழுதிய வைணவர். இவரை அருளாளப் பெருமாள் எம்பெருமானார் எனவும் மக்கள் அழைத்தனர். வைணவராவதற்கு முன்னர் 'யக்ஞ மூர்த்தி' என்பது இவரது பெயராகும். வேதாந்தியான யக்ஞ மூர்த்தி, விசிட்டாத்துவைதக்கோட்பாட்டினைத்தோற்றுவித்தவரும், உடையவர், எம்பெருமானார் என்னும் சிறப்புப் பெயர்களைப் பெற்றவருமான திருப்பெரும்பூதூர் இராமானுசரை (கி.பி. 1017–கி.பி. 1137) எதிர்த்துப் பதினேழு நாள் வாதம் செய்தனர் என்றும், அதன் பின்னர் அவருக்குச் சீடரானார் என்றும் கூறப்படுகிறது. அருளாளப் பெருமாள் 'ஞான சாரம்' என்னும் நூலையும் எழுதியுள்ளார். உடையவரின் கட்டளைப்படி திருமாலைத் திரு ஆராதனம் செய்யும் உரிமை பெற்று விளங்கினார். இவர், கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்றும் கூறப்படுகிறார்.
த.கோ.

**அருளையர்** தாயுமான அடிகளின் மாணவர் ஆவார். அருளைய பிள்ளை என்பது இளமைப் பெயர். தாயுமான அடிகள் திருச்சியிலிருந்து ஆட்சிபுரிந்த (கி.பி. 1608 1625) முத்துவீரப்ப நாயக்கரின் காலத்தைச் சேர்ந்தவராதலின், அருளையர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராவார். இவர் தாயுமான அடிகளின் சிறியதாயாருக்கு மைந்தராவார். அடிகள் திருச்சிராப்பள்ளியில் அரசு அலுவலில் இருந்தபோதும், பின்னர் அதனை நீத்து இராமநாதபுரம் சென்றபோதும், இறுதியில் இல்லறத்தைத் துறந்து துறவு மேற்கொண்டு திருச்சி இராமநாதபுரம் ஆகிய இடங்களில் இருந்தபோதும் அருளையர் அடிகளோடே இருந்து வந்துள்ளார். இவரே, தாயுமான அடிகள் அவ்வப்போது பாடியருளிய பாடல்களை எழுதிப் பாதுகாத்துப் பின் வந்தோருக்குப் பயன்படுமாறு செய்தவர். அரண்மனை அலுவலைத் துறந்து அடிகள் சென்றபோது, மறந்து வைத்துவிட்டு வந்த பூசைப் பெட்டியினைத் திருச்சியிலிருந்த அரண்மனைக்குச் சென்று அருளையர் பெற்றுவந்தார் என்பது கூறப்படுகிறது.

தாயுமான அடிகளே தம் இளவலும் மாணாக்கருமாக விளங்கிய அருளையர்க்கு ஞானாசிரியராக அமைந்து தீட்சை முதலியன செய்வித்தருளினார். தம் ஞான குருவும் ஆசிரியருமாகத் திகழ்ந்த தாயுமான அடிகள் பேரானந்த சமாதி நிலையுற்று, இறைவன் திருவடி நிழலில் கலந்தபோது, அருளையர் மிகவும் கவன்று, காதலாகிக் கசிந்துருகித் தம் குருவின் மீது, 'அருள்வாக்கிய அகவல்' என்னும் பெயரில் நெடிய துதிப்பாடல் இயற்றிப் போற்றினார். 'குருவே

சிவம்' என்று கூறும் கோட்பாட்டின் உண்மையை விளக்கி நிற்கிறது இந்தப் பாடல் இது, 232 அடிகளால் அமைந்த நிலைமண்டில ஆசிரியப்பாவாகும். தம் ஞானாசிரியர் திருமறைக் காட்டில் பிறந்தார் என்பதனைத் 'திருமகள் மருவிய திகழ்வள மறைசையில், வருமுணர்வாளன்' எனக் குறிப்பிட்டுள்ளார். குருவாக விளங்கிய அவரே தமக்குக் கருப் புகா வழியினைக் காட்டி அருள் செய்தவர் என்னும் உண்மையை, 'விருப்பு வெறுப்பினை வேரறப் பறித்துக், கருப்புகா தென்னைக் காத்தருள் செய்தோன்' என்றும், தம் உள்ளக் கருத்துணர்ந்து தண்ணருள் செய்த த"ாதிதி என்பதனை 'எண்ணிய எண்ண தாயுமானவன்' என்றும் காட்டியுள்ளார். குருவாய் வந்து அருள்புரிந்ததனை 'ஒரு மொழி பகர்ந்த உதவி' என்று நன்றியொடு நினைந்து குருபதம் போற்றியுள்ளார்.

**அரூர்** தருமபுரி மாவட்டத்தைச் சார்ந்த வட்டங்களுள் ஒன்று. தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டில் வளர்ச்சி குறைந்த மாவட்டங்களுள் ஒன்று. மலைகளும் காடுகளும் கொண்ட இவ்வட்டத்து மக்களில் பெரும்பாலோர் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடுகின்றனர். கோரை, தாழை போன்றவற்றிலிருந்து பாய் பின்னல், மூங்கிற் கூடை முடைதல், கயிறு திரித்தல் போன்றவை இவ்வட்டத்தின் சிறப்புத் தொழில்களாம். இவ்வட்டத்தில் நல்ல மாம்பழங்கள் விளைகின்றன. இவ்வட்டத்தில் அரூர் (Harur) என்னும் பெயரில் ஊர் ஒன்றுமுள்ளது. பல்லாண்டுகளுக்கு முன்னர் வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் சேலத்திலிருந்து பெங்களூர் செல்லும் குறுகிய இருப்புப்பாதையொன்றிருந்தது. சில ஆண்டுகளுக்குப் பின்னர்ப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவில்லை எனக் கருதி அப்பாதை அகற்றப்பட்டது. இந்திய விடுதலைக்குப் பின்னர் 1978-ஆம் ஆண்டில் இந்திய அரசின் இருப்புப் பாதை வாரியம் மீண்டும் சேலத்தையும் பெங்களூரையும் இணைக்கும் இருப்புப் பாதையைப் போட்டுள்ளது. அரூருக்கு இருப்புப் பாதைத் தொடர்பு இல்லையென்றாலும் மொரப்பூர் இருப்புப் பாதை நிலையம் அரூருக்கு 13 கி.மீ. தொலைவில் இருக்கிறது. அரூர் வாணியாற்றங்கரையிலுள்ள சிறிய ஊர். பண்டைக் காலத்தில் இந்த ஊரை அரியூர் என்றனர். அது மருவி அரூர் என்று வழங்கி வருகிறது. 1981-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்குப்படி அரூரின் மக்கள் தொகை 16,313 ஆகும்.

**அரே கிருட்டிணா இயக்கம்**, இந்து சமயக் கடவுளான கிருட்டிணனைப் போற்றி வழிபடும் சமய இயக்கத்தைக் குறிக்கும் பெயராகும். உலகின் பல பாகங்களிலும் இந்த இயக்கத்தினர் கிருட்டிண வழிபாட்டைப் பக்தி சிரத்தையோடு செய்து வருகின்றனர். இது ஒரு பன்னாட்டு இயக்கம். தொடக்கக் காலத்தில் இதனைக் ''கிருட்டிணர் நனவைப் பரப்பும் பன்னாட்டுக் கழகம்'' (ISKCON) என்று அழைத்தனர். 'அரே கிருட்டிணா' என்னும் சொற்கள் இவ்வியக்கத்தினர் பரவசமூட்டும் பக்தியுடன் பாடும் மந்திரத்தின் முதற் சொற்களாம். 'அரே' என்னும் சொல் வடமொழியில் ''அரி'', என்னும் சொல்லின் திரிபே யாகும். 'கிருட்டிணா' என்னும் வடமொழிச் சொல் அவதார புருடனாகிய திருமாலைக் குறிக்கிறது.

தவத்திரு சுவாமி பக்தி வேதாந்த பிரபுபாதர் என்னும் அடியாரால் தோற்றுவிக்கப்பட்டது அரே கிருட்டிணா இயக்கமாகும் (Hare Krishna Movement). இவர் ஓர் இந்தியர். சுவாமி பக்தி வேதாந்தர் 1965-ஆம் ஆண்டில் இவ்வியக்கத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று பரப்பினார். இருபதுக்கும் மேற்பட்ட, அரே கிருட்டிணா இயக்கத்தினைச் சேர்ந்த கிளைகள், அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் ஏனைய நாடுகளிலும் நிறுவப்பட்டுள்ளன.

'அரே கிருட்டிணா' என்னும் மந்திரத்தை ஆடியும் பாடியும் தாளமிட்டும் உள்ளத்தையும் உணர்வையும் தொடும் வண்ணம் பரவச நிலையில் கருத்தூன்றி வழிபாடு நடத்தும் இதன் தொண்டர்கள் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் உள்ளொளி பெற்று மகிழ்வர். இதன் உறுப்பினர்கள் சமூகமாகக் கூடிக் கூட்டு வழிபாடு நடத்துவதில் வல்லவர்கள். காம இச்சைகளுக்கு அப்பாற்பட்டு, சூதாட்டம் ஊன் உண்ணும் பழக்கம் குடிப்பழக்கம் போன்ற தவறுகளைச் செய்யாதவர்களாய்த் தூய இறையுணர்வுடன் கூடிய நல்வாழ்வு வாழ்வோர், வீடுபேற்றை அடையலாம் என்பது அவர்களின் கொள்கைகளாம்.

தலையை மழித்துக் கொண்டும், கழுத்தில் உருத்திராட்ச மாலையணிந்தும், காவியுடுத்தியும், தலையுச்சியில் குடுமி வைத்துக்கொண்டும் வைதிகர்களைப் போல் காட்சியளிக்கும் இவ்வியக்கத்தினருக்குச் சாதி, உணர்வு கிடையாது. இவ்வியக்கத்தைச் சார்ந்த பெண்கள் வண்ணச் சேலைகளைக் கட்டிக் கொள்வர்.

அரே கிருட்டிணா இயக்கத்தினர் மிகுதியாக இருக்கும் நகரங்களில் 'இரத உற்சவம்' எனப்படும் தேர் இழுக்கும் திருவிழாவை ஆண்டுக்கொரு முறை நடத்துகிறார்கள்.

பகவத் கீதை இவர்களின் வேதநூல். உலகெங்கும் இப்பெரும் பக்தி நூலை இவ்வியக்கத்தினர் பரப்புகின்றனர். கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் இந்தியாவில் சிறந்து விளங்கிய பக்தி இயக்கத்தைத் திரும்பக் கொணரும் மறுமலர்ச்சி இயக்கம் என்றும் இதனைக் கருதலாம்.

**அரேகீபா** தென் அமெரிக்காவிலுள்ள பெரு நாட்டின் இரண்டாவது பெரிய நகரம். இந்நகர் தென்

பெருவில் கடல் மட்டத்திற்கு மேல் 2470 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் மையம் இது. அரேகீபாவைச் (Arequiba) சுற்றிலும் பண்டைக்கால அழிவுச் சின்னங்களும் சிற்றூர்கள் பலவும் காணப்படுகின்றன. இந்நகரின் அருகில் மலைகள் பல உள்ளன. கி.பி. 1540-ஆம் ஆண்டு இசுபெயின் (Spain) நாட்டுக் குடியேற்றக்காரர்களால் இந்நகரம் அமைக்கப்பட்டது. மக்கள்தொகை 5,30,528. (1972).

**அரேபியா** தென்மேற்கு ஆசியாவிலுள்ள பரந்த பாலைநில முந்நீரகம். அரேபிய முந்நீரகத்தின் பெரும் பகுதியில் சவுதி அரேபியா என்னும் நாடு அமைந்துள்ளது. ஏமன் (Yeman) (சனா), ஏமன் (ஏடன்), ஓமன், ஐக்கிய அராபிய எமரேட்டுகள், கட்டார், குவைத்து ஆகியவை இம்முந்நீரகத்தில் அடங்கியுள்ள ஏனைய நாடுகளாம். பகரெயின் இம்முந்நீரகத்தை அடுத்துக் கடலையொட்டியுள்ள தீவு நாடாகும்.







அரேபியா

உலகப் பெருஞ் சமயங்களில் ஒன்றான இசுலாம் அரேபியாவில்தான் தோன்றியது. அரேபியாவில் கிடைக்கும் மிகுதியான பெட்ரோலியப் பொருள்களின் எண்ணெய் வளத்தால் உலகிலேயே அரேபியா சீரியதோர் இடத்தைப் பெறுகிறது.

அரேபிய முந்நீரகத்தின் நீளம் 2410 கி.மீ; அகலம் 1930கி.மீ. அதன் மொத்தப் பரப்பு 30,09,600 ச.கி.மீ. வடக்கில் சோர்டானும் ஈராக்கும், மேற்கில் செங்கடலும், கிழக்கில் பாரசீக வளைகுடாவும், தெற்கில் அரபிக்கடலும் இதன் எல்லைகளாகும்.

அரேபியாவின் பெரும் பரப்பு வறண்ட தரிசு நிலம். இரப் அல் கலி (Rub al-Khali), அன்னாபட்டுப் போன்ற பகுதிகளில் பெரும் மணற்பாங்கான பாலை நிலங்களைக் காணலாம். இங்கு நீர்ப்பெருக்கெடுத்தோடும் ஆறுகள் இல்லை. ஆண்டில் சில நேரங்களில் நீர் கொணரும் பருவக்காலச் சிற்றோடைகள் ஒரு சில உண்டு. இதன் உட்பகுதிகளில் வெப்பம் 54 செண்டிகிரேடு வரை உயரக்கூடும். ஒருசில பயிர் பச்சைகளும் விலங்குகளுமே அரேபியாவில் வாழ்கின்றன.

அரேபியாவின் மக்கள் தொகை ஏறத்தாழ 2.16 கோடியாகும். அவற்றில் பத்து விழுக்காடு கொண்ட பெதோயின் இன மக்கள் ஆண்டு முழுதும் இடம் விட்டுக் குடிபெயர்ந்து வாழ்கின்றனர். துறைமுகப் பட்டணங்கள், எண்ணெய் எடுக்கும் நகரங்கள், பாலை நிலப் பசுஞ்சோலைகள் அல்லது குடிநீர் கிடைக்கும் மேட்டு நிலங்கள் போன்ற பகுதிகளில் பெரும்பாலான மக்கள் வாழ்கின்றனர். மக்களின் பெரும்பாலான வருமானம் எண்ணெய் வயல்களிலிருந்து கிடைக்கிறது. சாகுபடி செய்ய நீர்ப்பாசன வசதிபெற்ற இடங்களில் குடியானவர்கள் பார்லி, கதிர்மணி, காய்கறிகள், பேரீச்சை, அத்திப்பழம், திராட்சை, முலாம்பழம், தினை, கோதுமை போன்றவற்றை விளைவிக்கிறார்கள். அரேபியக் குதிரைகள் வனப்புக்கும் நீடித்த உழைப்பிற்கும் உலகப் புகழ் பெற்றவை. இந்நாட்டிலுள்ள செட்டா, மெக்கா, மெதீனா, இரியாத்து என்னும் நகரங்களை நெடுஞ்சாலைகள் இணைக்கின்றன. இச்சாலைகள் ஒரு நகரை மற்றொரு நகருடன் இணைப்பதுடன், பாரசீக வளைகுடாவையொட்டியுள்ள எண்ணெய் மையங்களோடும் தொடர்பு கொள்கின்றன. கிழக்கில் அந்தமான் என்னும் ஊரிலிருந்து மேற்கில் இரியாத்துவரை அரேபியாவின் ஒரேயொரு இருப்புப்பாதைத் தொடர் செல்கிறது.

கி.பி. 1500-ஆம் ஆண்டிலிருந்து 1918-ஆம் ஆண்டு முதல் உலகப் போர் முடிவுற்ற தருணம் வரை, அரேபியாவில் மேற்குக்கடற்கரைப் பகுதியையும் மெக்கா, மெதீனா போன்ற புனித நகரங்களையும், உதுமானியத் துருக்கர்கள் தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். கி.பி. 1820-முதல் 1970 வரை ஏனைய கடற்



அரேபிய பாலைநிலம்

கரைப் பகுதிகள் ஆங்கிலேயர்களின் பாதுகாப்பில் இருந்தன. அரேபியாவின் உள்நாட்டுப் பகுதிகளை உள்ளூர்த் தலைவர்கள் கண்காணித்து வந்தனர்.

நிசட்டு என்னும் உள்நாட்டு மாநிலத்தை இபன் சாஊத்து என்பார் 1920-ஆம் ஆண்டில் அரசாளத் தொடங்கினார். அவர்தான் அரேபியாவின் பெரும் பகுதியை இணைத்தவர். சவுதி அரேபியா என்னும் அரசை நிலைநாட்டியவரும் அவரேயாவர். ஏமன் (சனா) என்னும் பகுதி, முதல் உலகப் போருக்குப் பின்னர்த் துருக்கியிடமிருந்து விடுதலை பெற்றது. 1960-ஆம் ஆண்டிலும் 1970-ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் அரேபியாவின் கடற்கரையையொட்டியுள்ள காப்பாளராட்சிப் பகுதிகளுக்கு இங்கிலாந்து சுதந்தரம் கொடுத்துவிட்டது.

**அரேபூரா கடல்** பசிபிக்குப்பெருங்கடலில் உள்ள கடல். இது ஆசுதிரேலியாவின் வடகடற்கரைக்கும் நியூகினியின் தென் கடற்கரைக்கும் இடையில் உள்ளது. மேற்கில் இக்கடல் தைமோர் (Timor) கடலுடன் இணைந்துள்ளது. இக்கடலைத் தோரசு நீர்ப்பிரிவு (Strait of Torres) பவளக் கடலுடன் இணைக்கிறது. கடலின் நீளம் 1278 கி.மீ. அகலம் 563 கி.மீ. ஆகும்.

**அரையசு** (கி.மு. 335) கிறித்தவ சமய குருமார்களுல் ஒருவர். இவருடைய பழங்காலக் கிறித்தவ சமயக் கருத்துகள் அரையனிசம் (Arianism) எனக் கூறப்பட்டன. இவரது கொள்கை திரித்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. திரித்துவம் (Trinity) என்பது, இறைவனைத் தந்தையாகவும் (God the Father), தேவ குமாரனாகவும் (The Son of God) பரிசுத்த ஆவியாகவும் (Holy Spirit) ஒரே தன்மையில் வெளிப்படுத்துவதாகும். பழங்கால மக்களும் இக் கருத்தை நம்பினர். நிகாசியா (Nicacia) மன்றம் அரையசுவின் கருத்துகளைப் பற்றி ஆராய்ந்தது. இயேசு இறைவனின் உயர்ந்த நிலையினின்று வேறுபட்டு இருந்தாலும், தொழுகைக்குரிய இறைவன் என்பது அரையசின் (Arius) கூற்று.

இயேசுவும் அறக் குறைபாடுகளுக்குட்பட்டவர் என அரையசு கி.மு. 318-ஆம் ஆண்டுக் கூறியதனால் அக்கூற்று, கிறித்தவ சமயத்திற்கு எதிரானது என அலெக்சாண்டர் கருதி, இவரைக் கிறித்தவ சமயத்தினின்று விலக்க ஆணையிட்டார்.

ஆனால்அரையசு தம் கொள்கைகளை மக்கள் கவரும் வகையில் பரப்பிக் கிறித்தவ மக்களுள் சிலரைத் தம் வயப்படுத்தினார். உரோமானியப் பேரரசை, கி.மு. 325-இல் ஆண்ட கான்சுடன்டைன் என்பவர் கூட்டிய நிக்ககர் (Nicacar) என்ற அவையானது, அரையசின் கொள்கைகள் தவறானவை என முடிவு செயதது. 'தேவகுமாரன்' முழுமையான தெய்விகத் தன்மை படைத்தவர் என்றும், அதனால் அக்குமாரன் தந்தைக்கு ஒப்பானவர் என்றும் அது அறிக்கை வெளியிட்டது. அரையசு கி.மு. 335-இல் காலமானார்.

**அரையர் சேவை** என்பது வைணவத் திருக்கோயில்களில் ஆழ்வார்களின் அருளிச் செயல்களை இசையுடன் பாடி அபிநயம் செய்து அழகுறப் பேசி நடிக்கும் முத்தமிழ்க் கலையாகும். இது நாலாயிரத்

திவ்வியப் பிரபந்த இலக்கியவிழா எனத்தகும். நாத முனிகள் உடன்பிறந்தாள் மக்களும் மாணவர்களு மாகிய கீழை அகத்தாழ்வானும் மேலை அகத்தாழ் வானும், திருவரங்கத்து அழகிய மணவாளப் பெரு மாள் திருமுன்பு இச்சேவை செய்தபோது பெருமாள் உகந்து இவர்களுக்கு அரையர் என்ற சிறப்புப் பெயரை அளித்தார் எனக் கூறப்படுகிறது. இவர் களை 'விண்ணப்பம் செய்வார்', 'நம்பாடுவான்' என்று கோயிலொழுகு குரு பரம்பரை என்ற நூல்களும் கல் வெட்டுகளும் கூறும்.

அரையர் சேவை கொண்டாட்டம், பாசுரம் பாடு தல், அபிநயம் செய்தல், உரை கூறுதல், கொண்டாட் டம் என்று ஐந்து பிரிவுகளாக அமையும். கொண் டாட்டம் என்பது இறைவன் புகழ்பாடுதல் என்பதா கும். இது 'கண்ணும் மனமும் அழகிய பெருமாள் என்பது போன்ற பாசுரங்களில் வரும் சொற்றொடர் களால் அமையும். பெருமாளைப் பாடும் கொண்டாட் டம் 'பெருமாள்' என்றும் நாச்சியாரைப் பாடும் கொண்டாட்டம் 'நாச்சியார்' என்றும் முடியும். அரை யர் சேவையில் சில பாசுரங்கள் உரையோடு வழங்கப் பெறுவதுண்டு. அவ்வுரை தம்பிரான்படி என்று கூறப் படுகிறது. அரையர் 'தம்பிரான்மார்' எனப்படுவ தால் அவர்கள் கூறும் உரை தம்பிரான்படி எனப் பட்டது.

திருவரங்கப் பெருமாளும் நாச்சியார்களும் எழுந் தருளியிருந்த திருவோலக்கத்தில் ஒரு கார்த்திகைத் திருவிழாவின்போது திருமங்கையாழ்வார் தம்முடைய திருநெடுந்தாண்டகம் முதலிய ஆறு பாசுரங்களையும் பண்ணுடன் அபிநயித்துப் பாடியருளினார். அதனைக் கேட்டுகந்த பெருமாள் ஆழ்வாருக்குச் சிறப்புகள் செய்து, வேண்டும் வரம் கேட்கப் பணித்தார். அவர் பெருமாளிடம் 'மார்கழி மாத ஏகாதசி முதல் பத்து நாட்கள் நம்மாழ்வாரின் திருவாய்மொழியை வேதத் திற்கு ஒப்பாகக் கேட்டருளவேண்டும்' என்று வரம் வேண்டினார். பெருமாளும் அருளினார்.

நம்மாழ்வார் திருநாட்டை அலங்கரித்த பிறகு, ஆழ்வார் திருநகரியில் மதுரகவியாழ்வார், நம்மாழ் வார் திருமேனியை நிறுவி வழிபட்டுத் திருவாய் மொழி முதலிய பிரபந்தங்களை உலகோர் அறியப் பரப்பும் தொண்டு மேற்கொண்டிருந்தார். திருவரங் கர் அழைப்பினைப்பெற்ற மதுரகவியாழ்வார், நம்மாழ் வார் திருமேனியோடு, மார்கழித் திங்கள் வளர்பிறை பத்தாம் நாளன்று திருவரங்கம் வந்தடைந்தார். மறு நாள் ஏகாதசி தொடங்கி வேதம் விண்ணப்பித்த தற்குப்பின் நாளொன்றுக்கு ஒரு பத்தாகப் பத்து நாள் இரவுகளில் திருவாய்மொழி முழுவதையும், பெருமாள் திருமுன்னர் இன்னிசையில் வழங்கினார். இறுதியில் பெருமாள், ஆழ்வாரைத் தமக்கு ஒப்பாக ஒரே இருக்கையில் அமரச் செய்து, வரிசைகள் நல்கி மறுநாள் ஆழ்வார் திருநகரி போக விடுத்தார். இவ் வாறு பல ஆண்டுகள் தொடர்ந்து நடைபெற்ற இவ் விழா இடையில் நின்று போயிற்று. கோயிலொழுகு கூறும் இவ்வரலாற்றின் அடிப்படையில், இக்கலை வழிபாட்டு விழாத் தோன்றிய காலம் திருமங்கை ஆழ்வார் காலம் (கி.பி. 8–ஆம் நூற்றாண்டு) ஆகும்.

நாதமுனிகள் இதனைத் தோற்றுவித்தார் என் பதை வைணவ குரு பரம்பரை நூல்கள் கூறுகின்றன. ஆழ்வார்கள் காலத்திற்குப் பின் சில நூற்றாண்டு களுக்குள் அவர்களுடைய அருளிச் செயல்களை ஓது வாரும் ஓதுவிப்பாரும் அருகி இலராயினர். கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் விளங்கிய நாதமுனிகள் அரிதின் முயன்று, திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களைத் தொகுத்தார். அவற்றை அழியாமற் காக்கவேண்டித் திருவரங்கத்தில் அப்பாசுரங்களை ஆண்டுதோறும் சேவிக்கும் முறையை உருவாக்கினார். நம்மாழ்வாரை ஆண்டுதோறும் திருக்குருகையிலிருந்து எழுந்தருளப் பண்ணும் வழக்கத்தை மீண்டும் உண்டாக்கினார். அதனால் இவர், 'வலம்புரி அன்ன நற்காதல் அடிய வர்க்குத் தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்' என்று வேதாந்த தேசிகரால் பாராட் டப் பெற்றார். மார்கழித் திங்கள் அமாவாசை நாளுக்கு மறுநாள் பிரதமை முதல் தசமி முடியப் பத்து நாட்களில் முதலாயிரம் பெரிய திருமொழி, திருநெடுந்தாண்டகம் ஆகியவற்றைப் பண்ணுடன் பாடி, அபிநயிக்கும் மரபினைத் தோற்றுவித்தார். பத்து நாட்கள் பகல் வேளையில் நடைபெறுவதால் இவ்விழா பகல்பத்து எனவும், திருமொழித் திருநாள் எனவும் அழைக்கப்பெற்றது. திருமங்கையாழ்வாரால் தொடங்கப்பெற்று மார்கழித் திங்கள் ஏகாதசி (பதி னோராம் நாள்) முதல் உள்ள பத்து நாட்களில் நம் மாழ்வாரின் திருவாய் மொழியைப் பண்ணுடன் பாடி அபிநயிக்கும் மரபினையும் நாதமுனி தொடர்ந்து நடைபெறச் செய்தார். பத்து நாட்கள் இரவு வேளை யில் நடைபெற்றதால் இவ்விழாப் பகுதி இராப்பத்து எனவும், திருவாய்மொழித் திருநாள் எனவும் பெயர் பெற்றது. இவ்வாறு இருபது நாட்கள் 'அத்தியயன உற்சவம்' என்னும் திவ்வியப் பிரபந்த இலக்கியப் பெரு விழாவைத் தோற்றுவித்துப் பலகாலம் தொடர்ந்து நிகழ்த்தி வந்தார் நாதமுனிகள். தமக்குப்பின் இக் கலை தொடர, இதனைத் தம் மருமக்களும் சீடர் களுமாகிய கீழையகத்தாழ்வான், மேலையகத்தாழ் வான் ஆகிய இருவருக்குப் பயிற்சியளித்தார். அவ்விரு வரும் மணவாளப் பெருமாள் அரையர், நானா வினோத அரையர் என்னும்சிறப்புப் பெயர் பெற்றனர். இறைவன் நம்பெருமாளே இவ்விருவருக்கும் அரையர் என்ற பட்டமும், தலையில் அணியும் தலையணியும்,

தொங்கும் பரிவட்டமாகப் பட்டும் பருத்தியும், சாத்திக் களைந்த திருமாலையும் ஆகியவற்றை அளித்தார்.

உற்சவரின் முன்பு மட்டுமே அரையர் சேவை நடைபெறும். அப்போது பெருமாளுடன் ஆழ்வார்கள் அனைவரும் எழுந்தருளியிருப்பர். இவ்விழா மார்கழித் திங்கள் வளர்பிறை முதல்நாள் தொடங்கிப் பகல் பத்து, இராப்பத்து என இருபது நாட்கள் நிகழும். ஒரு காலத்தில் தமிழக வைணவக் கோயில்கள் அனைத்திலும் நடைபெற்ற இவ்விழா, இப்போது ஆழ்வார் திருநகரி, திருவில்லிப்புத்தூர், திருவரங்கம் ஆகிய மூன்று இடங்களில் மட்டும் நடைபெறுகிறது. மைசூரில் உள்ள மேல்கோட்டையில் அரையர் இசையுடன் பாடுவது மட்டும் உண்டு; அபிநயம் இல்லை.

அரையர் பாசுரங்களை உணர்ச்சியோடு பாடி அபிநயம் செய்வர். அப்போது அவர் தம்மை ஆழ்வாராகவே கருதுவர், தாய், தோழி முதலியவர் கூற்றாக வரும் துறைப் பாசுரங்களில் அரையரே அந்தந்த மாந்தரோடும் நிகழ்ச்சிகளோடும் மனம் மொழி மெய்களால் ஒன்றிவிடுவர். அதனைக் காண்பவர்களும் அரையரை ஆழ்வாராகவும் தாயாகவும் தோழியாகவும் கருதி ஈடுபடுவர். பாசுரங்களை அரையர் மனமுருகப் பாடுவர்.

சேவைக்காகத் தனியே ஒப்பனை, உடை ஏதும் அரையர் அணிவதில்லை. கூம்பு வடிவிலான தலையணி (குல்லாய்) ஒன்றை அவர் தலையில் அணிகிறார் இறைவன் சூடிக்களைந்த இருமாலைகளை அவர் அணிகிறார். அரையர் தம் கைகளில் இரு தாளங்களை வைத்துள்ளார். தாளத்தை ஆழ்வார் என்றே அழைப்பர். ஆழ்வார்திருநகரியில் அரையர் பயன்படுத்தும் தாளத்தை நாதமுனி பயன்படுத்திய தாளம் என்பது வைணவ மரபு. அத்தாளம் வடிவில் பெரியது. இவை தவிர, வேறு உடையோ ஒப்பனையோ அணிகலன்களோ துணை இசைக்கருவிகளோ சேவையின்போது இடம்பெறா. பள்ளுப்பாட்டுப் பாடும்போது மட்டும் அரையர் மத்தளத்தைப் பயன்படுத்துவர்.

சேவை நிகழ்த்தும்போது, பாசுரத்தைப் பண்ணுடன் பாடி, அதற்கேற்பத் தாளங்களைத்தட்டி இசைக்கிறார். அடுத்து, பாசுரத்தின் முழு விளக்கம் வெளிப்படுமாறு அபிநயம் செய்கிறார். கால்களால் தாள அறுதியிடுவது, கைகளால் முத்திரை காட்டுவது, முகபாவம், அங்க அசைவு ஆகியவற்றால் முழுமையான அபிநயம் வெளிப்படுகிறது. முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் தாள அறுதியிட்டுக் கைகளை இயக்கி அரையர் அபிநயம்செய்கிறார். பரதரின் நாட்டிய சாத்திரம் கூறும் நுட்பமான அபிநய வகைகளை ஆழ்வார்திருநகரி அரையரிடம் காணமுடிகிறது. திருவரங்கத்தில் அரையர் இருந்தவிடத்திலே இருந்து அபிநயம் செய்கிறார்.

பாசுரத்தினைப் பாடுகையில் இரு அரையர்களும் பாடினாலும், ஒருவர் மட்டுமே அபிநயம் செய்கிறார். அப்போதும் மற்றவர் பாடுகிறார். அபிநயம் செய்த பின், அரையர் உரை கூறுகிறார். இடையிடையே வரும் உரையாடல்களைக் குரலில் ஏற்ற இறக்கம் தந்து அரையர் பேசுகிறார். ஒருவரே பல பாத்திரங்களாக மாறிமாறிப் பேசும் பாங்கில் இது அமைகிறது. உரை கூறிவருகையில் மற்றவர் அதனை மூலத்துடன் சரிபார்த்து வருவார், தடங்கல் ஏற்படின்மட்டும் அடியெடுத்துக் கூறுவார்.

அரையர் கூறும் உரையில் காட்சி மாற்றம், நிகழ்ச்சி இயைபு, நிகழ்ச்சித் தொடர்பு, நிகழ்ச்சி முடிபு, உரையாடல் இயைபு, உரையாடல் தொடர்பு ஆகியன சொற்களின் வழியே காட்டப்படுகின்றன. நாட்டுப்புறக் கூத்து மரபில் மாந்தரின் கூற்று வழியே புலப்படுத்தப்படும் இவ்வியல்புகளை, அரையர் சேவையிலும் அரையரின் (அவர் மாறிக்கூறும் மாந்தரின்) கூற்று வழியே காணமுடிகிறது. அரையர் சேவை நிகழும்போது, அவர் உற்சவரின் முன்னே நிகழ்த்த, பார்வையாளர் மூன்று புறமும் அமர்ந்து இருப்பர். அரையர் நடுவில் இருந்து நடித்துப்பாட அதனை அடியார்கள் முப்புறங்களிலும் இருந்து காண்பதால் அரையர் அடியார் ஆகியோர்க்கிடையே நெருக்கம் ஏற்படுகிறது. இப்பாங்கு நாட்டுப்புறக் கூத்தரங்கின் கூறாகும். சரிசமமாக இருந்து காணும் சனநாயகப் பண்பை நாட்டுப்புறக் கூத்து அரங்கம் வளர்த்தது. தமிழரின் பொதுவியல் கூத்தில் காணப்பட்ட இப்பாங்கை -நாட்டுப்புறக் கூத்து மரபை-அரையர் சேவையில் இன்றும் காணலாம். முத்துக்குறி நிகழ்ச்சியில் அரையர் ஒருவரே தாயாகவும் மகளாகவும் குறத்தியாகவும் மாறிமாறி அபிநயம் செய்கிறார். வேடப்புனைவு ஏதுமின்றி, தம்முடைய அபிநயம் வழி இதைச் செய்கிறார். மகள் நிலையிலிருந்து கூடல் இழைக்கிறார்; தாயாக நின்று மருகுகிறார்; குறத்தியாகப் பேசுகிறார். தம் கையில் உள்ள பட்டுத்துண்டைத் தலைவியாக எண்ணி, உற்சவரிடம் (தலைவனிடம்) காட்டிக் காட்டிப் பேசும் தாயாக அரையர் உருகுகிறார். ஒரு தட்டில் அரிசி பரப்பி வைக்கப்பட்டுள்ளது. தலைவியாக நின்று கூடலிழைக்கையில் அது தவள மண்ணாகவும், கட்டுவிச்சியாக நின்று குறி சொல்லுகையில் முத்தாகவும் கொள்ளப்படுகிறது.

அரையரின் நடனம் நாடகமுறையில் பொதுவியல் நெறி சார்ந்தது; முத்திரை, அடவு, தாளஒத்து 'சதி', அபிநயம், முகபாவம் முதலியவற்றால் விளக்கும் ஆடற்கலை முறையில் அமையும். பேரின்பத்தை மையமிட்ட அரையர் சேவையில், கட்டுவிச்சி தத்துவக் குறி

யீடாக, உயிரையும் இறையையும் இணைக்க உதவும் ஞானாசிரியராகச் செயற்படுகிறாள்.

அரையர் சேவையில் பாசுரத்திற்கு மட்டுமே அபிநயம் உண்டு. ஆனால் முத்துக்குறி நிகழ்ச்சியில் மட்டும் பாசுரத்துடன் உரைக்கும் அபிநயம் உண்டு. திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகப் பாசுரத்தைப் பாடும் நிகழ்ச்சி முத்துக்குறி. இந்நிகழ்ச்சியின் போது அரையர் குறத்தியாக முத்துக்குறி பார்ப்பார். அக்குறி பார்க்க அரையர் பெருமாளிடம் தீர்த்தமும், திருவடிநிலையான திருசடகோபமும் பெற்று அங்குக் கூடியுள்ள ஆழ்வார் ஆசாரியர்களுக்கும் குழுவினர்க்கும் வழங்குவர். இது, பகல் பத்தின் ஒன்பதாம் நாளில் திருவரங்கத்திலும், பத்தாம் நாளில் ஆழ்வார் திருநகரி, திருவில்லிபுத்தூர் ஆகிய தலங்களிலும் நிகழும். இப்பாசுர உரை மிக நீண்டதாயிருப்பதால், ஏனைய நாட்களைவிட அரையர் சேவை நிகழும் காலமும் நீண்டதாக இருக்கும். திருவில்லிபுத்தூரில் மட்டும் முத்துக்குறி நிகழ்ச்சி, மூன்று பிரிவுகளாக நிகழும். ஆடித்திங்களில் தேர் நிலைக்கு வந்து சேர்ந்த மறுநாளிலும், மார்கழித் திங்களில் அத்யயன உற்சவத்தில் பகல்பத்தின் இறுதி நாளிலும், தைத்திங்களில் பொங்கலுக்கு மறுநாளிலும் நடைபெறும். திருமங்கையாழ்வாரின் திருநெடுந்தாண்டகத்தில் உள்ள பதினோராம் பாசுரமான 'பட்டுடுக்கும்' என்பதன் ஈற்றடியில் 'கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள்' என்று வருகிறது. இப்பாசுரத்திற்கு அரையர் கூறும் தம்பிரான்படி உரையில் குறம், குறவஞ்சிக் கூறுகள் மிக்குள்ளன. பாசுரத்தின் அமைப்பு அகப்பொருள் இயல்பிலானது. கடல் வண்ணன் மையலில் சிக்குண்ட தலைவி நிலைகண்டு தாய் புலம்புவது, கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்படுத்தித் தன் மகளுக்கு மையல் செய்தவன் திருமால் என உணர்வது ஆகியன ஆழ்வார் பாடலிலே உள்ளன. அரையர் கூறும் தம்பிரான் படியில் பல்வேறு நிலைகள் நாடகப் பாங்குடன் உள்ளன. குறத்தியாக வந்து பேசுமிடங்களில் அரையர் கூறும் உரைமுழுவதும் வடசொற் கலப்பு ஏதுமின்றி, வழக்குச்சொற்கள் மிக்க பேச்சுத் தமிழில் உள்ளது. உடையில்-புனைவில்-மாற்றம் ஏதுமின்றித் தம்முடைய அபிநயம், உரை வழியே தாயாகவும் மகளாகவும் குறத்தியாகவும் அரையர் நடிக்கிறார்.

பகல்பத்து, இராப்பத்து நாட்களில் அரையர் சேவைக்கு எடுத்துக்கொள்ளும் பாசுரங்கள் மாற்றம் பெற்று வந்துள்ளன. முன்னர் அளவில் மிகுதியாக விருந்து பின்னர்க் குறைந்துள்ளது. இச்செய்திகளைக் குருபரம்பரை நூல்கள், உரைகள் வழி அறியலாம். ஆழ்வார்திருநகரி, திருவில்லிபுத்தூர் ஆகிய இரு தலங்களிலும் இன்று அரையர் சேவை நடைமுறையில் மாற்றம் ஏதுமில்லை. திருவரங்கத்தில் பகல் பத்தில் மட்டும் அரையர் சேவிக்கும் பாசுரங்கள், ஏனைய இரு இடங்களுடன் சிறிது மாறுபடுகின்றன. திருவரங்கத்தில் பகல்பத்தின் நான்காம் நாளில் 'கம்சனைக் காய்ந்த கருவில்லி' என்னும் தொடர் வரும்போது அப்பதிகத்தை அதனோடு நிறுத்தி அடுத்த பதிகத்தைத் தொடர்வர். பிற்பகலில் கம்சனைக் காய்ந்த கருவில்லி என்ற பாசுரத்திற்குத் தம்பிரான்படி கூறிக் கம்ச வதத்தினை அரையரே நாடகமாக நடித்துக் காட்டுவார். ஏழாம் நாள், 'மண்ணளந்த தாளான்' என்னும் பகுதி வரும்போது நிறுத்தி, பிற்பகலில் அதற்குத் தம்பிரான்படி கூறி வாமன அவதார நிகழ்ச்சியையும், எட்டாம் நாள் 'ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான்' என்னுமிடத்தில் நிறுத்திப் பிற்பகுதியில் கடல் கடைந்த நிகழ்ச்சியினையும் நடித்துக் காட்டுவர். இறுதிநாள் பிற்பகலில் 'குன்றாத வலி அரக்கர்கோனை மாளக் கொடுஞ்சிலைவாய்ச் சரம் துரந்து குலம் களைந்து வென்றான்' என்னும் பாசுரம் வரும்போது இராவண வதம் நிகழ்ச்சி நடித்துக் காட்டப்பெறும்.

அரையர் சேவையில் பள்ளுப்பாட்டு பாடும் வழக்கம் உள்ளது. இன்றும் இவ்விழா நடைபெறும் மூன்றிடங்களிலும் இது வழக்கில் உள்ளது. அரையர் ஒருவர் கூடா ஒழுக்கத்தால் ஊரிலிருந்து வெளியேற்றப் பட்டுப் பறைச்சேரியில் தங்கியிருந்தார். அங்கிருந்தே அவர் பள்ளும் பறையும் சூழ இசையுடன் பாடுவதனை அரங்கப்பெருமாள் கேட்டுகந்து, அவரை வரவழைத்து 'வரம் தரும் பெருமாள் அரையர்' எனப் பட்டப் பெயர் வழங்கினார். அன்றுமுதல் பறைஇசையுடன் பள்ளுப்பாட்டுப் பாடும் பழக்கம் அரையர் சேவையில் இடம்பெற்றது. இப்பள்ளுப்பாட்டு இன்றும் மூன்றிடங்களிலும் படியேற்றம், திருமுடிசேவை, திருவூறல் ஆகிய விழாக் காலங்களில் பாடப்படுகின்றன. இப் பள்ளுப்பாடல்கள் எளிய சொற்களில் திருமால் புகழ் பாடும் பாடல்கள். கவிஞன் கூற்றாகவும், அகப் பொருள் அமைப்பில் தலைவி கூற்றாகவும் அமைந்த பாடல்கள் இவை. இப்பள்ளுப்பாட்டிற்கும் தமிழ் இலக்கிய வகைகளுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இன்று ஆழ்வார்திருநகரியில் அரையர் ஒருவர் உள்ளார். அவருடன் அவருடைய மூத்த மைந்தரும் இணைந்து இச்சேவையில் பங்காற்றுகிறார். திருவரங்கம், திருவில்லிபுத்தூர் ஆகிய ஈரிடங்களிலும் இரு அரையர் குடும்பங்கள் உள்ளன. விழா நாட்களில் இவ்விரு குடும்பங்களும் தம்முள் முறைவைத்துக் கொண்டு, நிகழ்ச்சிகளில் பங்கேற்கும். நாள்தோறும் நாள்வழிபாட்டில் திவ்வியப் பிரபந்தம் பாடும் பணியையும் அரையர் செய்கிறார், விழா நாட்களில் (பகல்பத்து, இராப்பத்து) அரையர் பாசுரத்தைப் பாடி, அபிநயம் செய்து உரை கூறியபின், குழுப்பாடலாகப் பாடும் வைணவர்கள் தொடர்ந்து ஓதுவர்.

முடித்து வைப்பதும் அரையரின் பணி. அரையர் பண்ணுடன் இசைக்க, வைணவர்கள் குழுப்பாடலாகப் பாடுகையில் இசையின்றி ஓதுவர். இராமாநுசர் காலம் வரை, நாலாயிரம் முழுவதும் கோயிலுள் ஓதும் உரிமை அரையர்களிடம் இருந்தது. இராமாநுசர் காலந்தொட்டு, இயற்பா மட்டும் திருவரங்கத்தமுதனார் மரபினரால் பாடும் முறை வந்தது. இன்றும் இசையுடன் கூடிய மூவாயிரம் அரையராலும், இயற்பா ஆயிரம் மட்டும் அமுதனார் வழித்தோன்றல்களாலும் பாடும் மரபு தொடர்கிறது.

அரையர் சேவை நிகழ்த்தத் தலைப்படுமுன் 12 முதல் 18 ஆண்டுகள் வரை அரையர் பயிற்சி பெறுகின்றார். தந்தைவழி மைந்தருக்கு என்று தலைமுறை மரபு வழியில் -- பயிற்சி அளிக்கப்பெறுகிறது. நாலாயிரம் பாசுரங்கள், அவற்றின் உரை, கொண்டாட்டம், பள்ளுப் பாடல்கள் ஆகியவற்றை மனனம் செய்வது, பண்களை முறையாகப் பயில்வது, அபிநயம் கற்பது என்பன பயிற்சியில் அடங்கும். பயில்பவர் தம் ஆசிரியராகிய தந்தையுடன் இணைந்து அரையர் சேவை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுப் பயிற்சி பெறுகிறார். அரையர் சேவையாகிய இக்கலை, மரபாகத் தந்தையிடமிருந்து அவருடைய மூத்த மைந்தருக்கு என்று தொடர்கிறது. ஆண்களுக்கு மட்டுமே இக் கலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்பிள்ளை இல்லாதபோது, தக்க ஒரு ஆண்பிள்ளையை எடுத்து அவனுக்குப் பயிற்சி அளித்து அவனைச் சேவைக்கு உரியனாக்குவர். விழாவில் பாடப்பெறும் திவ்வியப் பிரபந்தம் பூசைக்குரிய மந்திரமாக இருத்தலாலும், விழா நடைபெறுமிடம் தூய்மையும் புனிதமும் மிக்க இறைவன் திருமுன்பாக இருத்தலாலும் பெண்களுக்கு இதில் பயிற்சி அளிப்பதில்லை. அரையர்களுக்கு முற்காலத்தில் மன்னர்கள் முற்றூட்டுகளாக நிலங்களை அளித்த செய்திகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன. இப்போது அரசு இவர்களுக்கு மானியம் வழங்கி வருகிறது.

அரையர் சேவை என்னும் பத்திக் கலையின் நோக்கம், எளிய மக்களும் உணரும் வண்ணம் ஆழ்வார் பாசுரங்களைப் பண்ணும் கூத்துமாக வெளியிட்டு அவர்களைப் பத்தி நெறியில் ஈடுபடச் செய்வதேயாகும். இந்த நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் ஆழ்வார்திருநகரி, திருவில்லிபுத்தூர், திருவரங்கம் ஆகிய ஊர்களில் ஆண்டுதோறும் மார்கழித் திங்களில் பகல் பத்து இரவுப்பத்து என்னும் பெயரில் இலக்கியப் பெருவிழா சிறப்புற நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. சு.வே.

**அரையன் இராசராசன்** முதலாம் இராசராச சோழரின் படைத்தலைவர். விக்கிரம சோழியவரையனான அரையன் இராசராசன் எனவும் இவர் குறிக்கப் பெற்றுள்ளார். இவர் முதலாம் இராசேந்திரனின் காலத்திலும் படைத்தலைவராக இருந்தார்; சோழ மண்டலத்திலுள்ள திரைமூர் நாட்டிலுள்ள சாத்தமங்கலத்தில் பிறந்தவர்; மேலைச் சாளுக்கியரையும், கீழைச் சாளுக்கியரையும் கலிங்கரையும் வென்றவர். இவரது வெற்றிச் சிறப்பினை அனந்தபுரம் மாவட்டம், கொத்தசிவரத்தில் உள்ள ஆஞ்சநேயர் கோயில் கற்றூண் கல்வெட்டு (கன்னட சாசனம்) விரித்துரைக்கின்றது. இவர் மேலைச் சாளுக்கிய செயசிங்கனை வென்றவர். இவருக்கு எதிர்த்தவர் காலன், நால்மடி பீமன், சோழ சக்கரன், சாமந்தாபரணன், உபாரி நாராயணன், வீரபூடணம், வீரவீமன் முதலான சிறப்புப் பெயர்கள் உண்டு. ம.இரா.

**அல்** இங்கிலாந்தின் வடகிழக்குப்பகுதியிலுள்ள தலைசிறந்த துறைமுகங்களுள் ஒன்று. கடந்த 600 ஆண்டுகளுக்குமேல் அல் (Hull) சீரிய துறைமுகமாக இருந்து வருகிறதென்பதே இதன் சிறப்பினைச் சுட்டிக்காட்டும். அல் (Hull) ஆறும் அம்பர் (Humber) ஆறும் கலக்குமிடத்தில் அமைந்துள்ளது இத் துறைமுகம். இது 16 கி.மீ. நீளமுள்ளது. மீன்பிடிக்கும் கப்பல்களின் தலைமையிடமாக இதைக் கருதுவர். அல் நகரில் இரசாயனம், சிமெண்டு, காகிதம், சவுக்காரம் போன்றவற்றுக்கான தொழிற்சாலைகள் உள்ளன. இரண்டாம் உலகப் போரின்போது செருமானிய விமானங்களால் இந்நகரம் பெருந்தாக்குதலுக் காளானது. இந்நகரை அல் ஆற்றங்கரையில் அமைந்துள்ள கிங்சுடன் (Kingston-upon-Hull) என்றும் கூறுவர். இதன் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 2,68,302 ஆகும்.

கனடா நாட்டுக் குவிபெக்கு மாநிலத்தில் அல் என்னும் பெயரில் உள்ள ஊரும் ஒரு தொழிற்சாலை நகரமாகும். இதுகுவிபெக்கு மாநிலத்தின் தென்பாகத்தில் அமைந்துள்ளது. இந்நகரம் ஆட்டாவா (Ottawa) ஆற்றங்கரையிலுள்ளது. கனடா நாட்டின் தலைநகரான ஆட்டாவா ஆற்றின் மறுகரையிலுள்ளது. அல் நகர் ஆட்டாவாவின் பெருநகர்ப் பகுதியாகும். மூன்று பாலங்கள் இவ்விரு நகரங்களையும் இணைக்கின்றன. அல் நகரம் காகிதத் தொழிலுக்கும் மரமறுக்கும் தொழிலுக்கும் சிறப்பான மையமாகும். இங்கு இரும்பு உருக்கு வார்ப்படத் தொழிற்சாலைகளும் உள்ளன. இறைச்சியைத் தகரப் பீப்பாய்களில் அடைத்தலும், அச்சுயந்திரங்கள் உற்பத்தி செய்தலும் பிற தொழில்களாம். குவிபெக்குப் பல்கலைக் கழக வளாகம் அல் நகரில் அமைந்துள்ளது. இந்நகரத்தின் மக்கள்தொகை 1981-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 56,225 ஆகும்.

**அல்-அக்காபா** சோர்டான் நாட்டின் துறைமுகப்பட்டணம். சோர்டான் நாட்டுத் தென்மேற்கு முனையில் சோர்டான், இசுரேல், எகிப்து, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் சந்திக்கும் இடத்தில்

அமைந்துள்ளது. அக்காபா விரிகுடாவின் நுழைவாயிலில் உள்ளது.


பொது மக்கள் பெரிதும் விரும்பும் குளிர்காலத்து வாழுமிடமான அல்–அக்காபா (Al–Aqabah) பாலை நிலத் தட்பவெப்ப நிலையைக் கொண்டது. இங்கு ஆண்டொன்றுக்கு 50 மில்லி மீட்டர் மழை பெய்கிறது. கோடை தட்பவெப்ப நிலையிலும் குளிர்காலத் தட்ப வெப்ப நிலையிலும் ஏற்றத்தாழ்வுண்டு. அக்காபாவில் செடி கொடிகள் வளருவது அருமை; பாலை நிலப் பசுஞ்சோலைகள் உள்ள அக்காபா நகரில் பேரீச்ச மரங்கள் பல, கிணறுகளைச் சுற்றித் தென்படுகின்றன.

உரோமானிய ஆட்சிக் காலத்தில் பேரரசர் திரேசன் (Trajan), அக்காபாவை தெமாசுகசு (Damascus) நகருடனும் எகிப்துடனும் இணைத்தார். கி.பி. 634–இல் அராபிய வெற்றி ஏற்பட்ட காலத்தில், இங்குக் கிறித்தவப் பிசப்பு ஒருவர் ஆட்சி செய்தார். கி.பி. 1115–இல் அக்காபாவைச் சிலுவைப் போர் வீரர்கள் கைப்பற்றி இங்குக் கோட்டையொன்றையும் கட்டினர். ஆனால், இதைக் கி.பி. 1187–இல் சலாடின் மன்னர் மீண்டும் கைப்பற்றினார். கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் மெக்காவிற்கு வந்த பயணியர் தங்கிச் செல்லும் வழியில் அக்காபா அமைந்தது. முதல் உலகப் போரின் போது நேசப்படையினர் இந்நகரைக் கைப்பற்றினர். 1924 வரை இந்நகர் ஏசாசின் (Hejaz) ஒரு பகுதியாகவே இருந்து, பின்னர்ச் சோர்டானுக்குக் கொடையாக வழங்கப்பெற்றது. 1949–இல் இசுரேலுடன் போர் நிறுத்த எல்லைக்கோட்டிற்கு 5 கி.மீ. மேற்கில் அக்காபா இருந்தது.

அக்காபா விவிலிய நூலில் சாலமன் அரசரின் துறைமுகப் பட்டணமெனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. 1917–18–ஆம் ஆண்டுகளில் பாலத்தீன முன்னணிக்கு உதவும் வகையாகப் பிரிட்டிசுக் கப்பல்கள் அக்காபாவைப் பயன்படுத்திக் கொண்டன. 1930–ஆம் ஆண்டிலும், மீண்டும் இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோதும் சோர்டானுக்குப் பொருள்களைஅக்காபாவின் வழியாகவே அனுப்பினர். இசுரேல் உருவானபின் பொருள்கள் இலெபனானின் பேரூட்டு நகரிலிருந்து தரைவழியாகச் சோர்டான் சென்றடைகின்றன. 1952–இலிருந்து சோர்டான் அரசு அக்காபாவை வளர்க்கும் பொருட்டு அதற்காக ஒரு நிறுவனத்தையும் அமைத்துள்ளது. 1959–இல் அக்காபா துறைமுகத்திற்கும் சோர்டானின் தலைநகரான அம்மானுக்கும் (Amman) 336 கி.மீ. நீளப்பாதை அமைத்துள்ளார்கள். மேற்குறிப்பிடப்பட்ட வளர்ச்சிப் பணிகளால் இத்துறைமுகம் ஏற்றுமதி, இறக்குமதியில் சிறப்பிடம் பெற்றுள்ளது. 1967–இல் இசுரேலுடன் நடைபெற்ற போரின் விளைவாகச் சோர்டான் மத்திய தரைக் கடலுடன் கொண்ட தொடர்பு அறுபட்டு விட்டது. 1969–இல் மாபெருஞ் சேமிப்புக் கிடங்குகளைக் கட்டி முடித்துள்ளனர். சூயசுக் கால்வாய் மூடப்பட்டதாலும் இத்துறைமுகத்திற்கு வந்து போகும் பொருள்கள் குறைந்துள்ளன. மக்கள்தொகை 15,000 (1973 மதிப்பீடு).

**அல்–அசார் பல்கலைக் கழகம்** உலகில் உள்ள தொன்மையான பல்கலைக் கழகங்களுள் ஒன்று. எகிப்தின் இன்றைய தலைநகரான கெய்ரோ நகரில் கி.பி. 970–ஆம் ஆண்டில் இது நிலை நாட்டப்பெற்றது. இசுலாமியக்கல்வியைக் கற்பிக்கும் தலையாய மையமாக இது கருதப்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தில் இறையியல், இசுலாமியச் சட்டம், அராபிய மொழியியல், மருத்துவம், பொறியியல், வேளாண்மை போன்ற பாடங்களை மாணவர்கள் கற்கிறார்கள் இப்பல்கலைக்கழகம் அரசாங்க ஆதரவுடன் நடைபெறுகின்றது.

**அல்காம்பிரா** இசுபெயின் நாட்டில் கிரனடாவிலுள்ள அரண்; கட்டடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கோட்டையும் தேவாலயமும் உடையது. கிரனடா நகரத்தின் புறத்தே உள்ள குன்றிற்கருகில் தாரோ (Darro) ஆற்றுக்கு மேற்புறம் அல்காம்பிரா (Alhambra) கட்டப்பட்டுள்ளது. அல்காம்பிரா என்னும் அராபியச் சொல்லுக்குச் சிவப்பு அரண் என்பது பொருள். சிவப்பு நிறமான கற்களைக் கொண்டு கட்டப்பட்டதால் அல்காம்பிரா எனப்பெயர் பெற்றது. மாளிகையைச் சுற்றியுள்ள சுவர்களின் மேல் கோபுரங்கள் உள்ளன. இதன் மேற்கே நகரைக் காக்



அல்காம்பிரா - அரண்மனையின் ஒரு பகுதியிலுள்ள சிங்க மண்டபம்

கும் கோட்டை ஒன்றும் அதன் நடுவில் மூர்கள் வசித்த அரண்மனையும் உள்ளன. இந்த அரண்மனை பெருமள வில் அழிந்துபட்டதால் இங்கு அரசர் ஐந்தாம் சார்லசு அரண்மனையைக் கட்டியுள்ளார். இக்கோட்டையின் கிழக்குப்பக்கம் கட்டடங்கள் அழிந்துபட்ட நிலையில் உள்ளன. ஆனால் கோபுரத்தின் பகுதிகளும் நுழை வாயில்களும் சிதைந்த நிலையிலுள்ளன. இப்பகுதியிலும் ஒரு நகரைக் காக்கும் புறக்காவல் அரண் உள்ளது. மூர்களின் கலைக்குச் சிறப்பை ஊட்டுவனவாக இங் குள்ள மீன்குளக் கூடமும் சிங்கக் கூடமும் படியோடி விண்டராசா (Patiode Lindaraja) வும் குறிப்பிடத் தக்கன. இங்குள்ள நீர் ஊற்றும் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களும் மூர்களின் கலைத் திற மையைக் காட்டுவன. சுவர்களில் குர் ஆன் வரிகள் அழகான செதுக்குச் சித்திரங்களாகச் செதுக்கப்பட் டுள்ளன. இங்கு 13 கோபுரங்கள் உள்ளன. அரசதூதர் மண்டபம் மிக்க அழகு வாய்ந்தது. இதன் பரப்பு 35 ஏக்கர். அரண்மனையின் கிழக்கில் உள்ள தேவாலயம் 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டப்பட்டது. இத்தேவாலயம் முன்னரே இங்கிருந்த மசூதியை அழித்துக்கட்டப்பட்டது. கி.பி. 1590-இல் தீயால் எரிந்து போனதாலும் பிரெஞ்சுக் குடியேற்றத்தாலும் அல்காம்பிரா பெருமளவில் சிதைவுற்றது.


**அல் கார்டெல் (கி.பி. 1871-1955)** அமெ ரிக்க அரசியல் வித்தகர். இவர் 1945-ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார். 1933 முதல் 1944 வரை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வெளியுறவுச் செயலராகப் பணிபுரிந்தார். அல் கார் டெல்(Al-Cartel) முயற்சியால், அமெரிக்க ஐக்கிய நாட்டிற்குத், தென் அமெரிக்க நாடுகளிடையேயும் அண்டைநாடுகளிடையேயும் நல்லுறவுக் கொள்கை தீவிரமாகச் செயற்பட்டது. அனைத்து அமெரிக்க நாடுகளுக்குமிடையே முழு ஒற்றுமையையும் இணக் கத்தையும் ஏற்படுத்திய பெருமை இவரைச் சாரும்.

பசிபிக்குக் கடற் பகுதியில் போர் மூள்வதை இவர் தடுக்க முயற்சிசெய்தார். சப்பான் பெர்ல் துறைமுகத் தைத் தாக்கியபோது, அதற்கு உடந்தையாய் இருந் தவர்களை இவர் சாடினார். ஐக்கிய நாடுகள் நிறு வனத்தை உருவாக்க வேண்டும் என்னும் கொள் கையை வெளியிட்டார். உடல் நலக் குறைவின் கார ணமாகத் தம் பதவியை விட்டு, 1944-இல் விலகினார்.

அல் தென்னசியைச் சார்ந்த ஓவர்ட்டன் கவுன் டியில் பிறந்து கம்பர்லாந்து சட்டப்பள்ளியில் படித்துப் பட்டம் பெற்ற இவர் 1907-இல் அமெரிக்க நாட்டின் பிரதிநிதிச்சபையின் உறுப்பினரானார். 1913-இல் இவர் வருமான வரிச் சட்டத்தை எழுதி முடித்தார். 1916-இல் வாரிசுரிமை வரிச் சட்டத்தை யும் எழுதி முடித்தார். உட்ரோ வில்சனை (Woodrow Wilson) ஆதரித்த இவர், பன்னாட்டுப் பொருளா தாரக் கூட்டுறவு ஏற்படக் குறைந்த வரிகளே அடிப் படையாக அமைய வேண்டுமென்பதைக் கருத்தாகக் கொண்டவர்.

1920-இல் மக்களாட்சித் தேசியக் குழுவின் தலைவராகவும், 1930-இல் மேலவையின் செனட்டு உறுப்பினராகவும் இருந்த கார்டெல் 1932-இல் நடை பெற்ற மக்களாட்சிக் கட்சியின் தேசிய மாநாட்டில், பிராங்கிளீன் உரூசுவெல்ட்டு என்பார் குடியரசுத் தலைவராக நியமனம் பெற உதவினார்.

***அல்சிபியாடீசு*** ஆதன்சு நகரத்தைச் சார்ந்த தளபதி. பெலப்பனீசியப் போரில் ஆதன்சு தோல்வி யுறக் காரணமாயிருந்தவர். உயர்குடியிற் பிறந்த செல்வர்; மிகுந்த அறிவுபடைத்தவர்; ஆனால் பொல்லாத அரசியல்வாதி. கி.மு. 450-ஆம் ஆண்டள வில் பிறந்தவர்; சிறுவயதிலேயே தந்தையை இழந்த வர். ஆதீனிய இராணுவத்தை நடத்திச் செல்லுகை யில் கொரோனியாவில் கி.மு. 447 அல்லது கி.மு. 446-இல் இவர் தந்தை இறந்துபட்டார். ஆல்சிபியா டீசு( Alcibiades) வின் காப்பாளராக அரசியலறிஞர் பெரிக்கிளிசு இருந்தார். அரசியற் பணிகளில் முழுமை யாகக் கவனம் செலுத்திய பெரிகிளிசின் அன்பும் பாது காப்பும் அல்சிபியாடீசுக்குக் கிட்டவில்லை. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சியுற்ற அல்சிபியாடீசு கட்டழகராகவும் கூரிய அறிவினராகவும் வளர்ந்தபோதிலும், இவரிடம் ஊதாரித்தனமும், பொறுப்பற்ற தன்மையும், தன்னலமும் காணப்பட் டன. சாக்ரட்டீசு அவர்களின் அறப்பற்றின் வலிமை யும் ஆழ்ந்த சிந்தனையும் அல்சிபியாடீசைப் பாதித்



அல்சிபியாடீசு

தன. அதேபோல் அல்சிபியாடீசின் அழகும், அறிவும் சாக்ரட்டீசைக் கவர்ந்தன.

இவர் கி.மு. 419-ஆம் ஆண்டில் அரசியலில் நுழைந்து மக்களின் மனத்தைக் கவர்ந்தார். போர் செய்த கட்சியின் தலைவராக இருந்தமையால் அல்சிபியாடீசு ஆதீனியர்கள் திறம்படைத்தவர்களாக ஆவது எங்ஙனம் என்பதைக் கூறினார். சிசிலியின்மீது படையெடுக்க வேண்டிப்படையொன்றைத் திரட்டிப் போருக்குச் செல்லுமாறு இவர் அனுமதிக்கப்பெற்றார். இப்படைகள் ஆதன்சு நகரை விட்டுச் செல்லப் புறப்பட ஆயத்தமாயிருந்தஞான்று, எர்மசு (Hermus) என்ற புனிதத் தெய்வச் சிலையை அழித்து விட்டார் என்று அவர்மீது மக்கள் குற்றஞ்சாட்டினர். விசாரணை வேண்டி வாதிட்ட அல்சிபியாடீசைப் போருக்குப் புறப்படும்படி கட்டளையிட்டனர். பின்னர் விசாரணைக்கு இவர் அழைக்கப்பட்டார். ஆனால் இவர் இசுபார்ட்டா நகருக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அங்குச் சிசிலிய மக்களுக்கு உதவிடுமாறு இவர் இசுபார்ட்டா மக்களுக்கு அறிவுரை கூறினார். பின்னர் இவர் ஆசியா மைனருக்குச் சென்று, பாரசீகத் தலைவர் திசாபர்னசு என்பாருடன் இணைந்து கொண்டார்.

சிறிது காலத்திற்குப் பின்னர் அல்சிபியாடீசை ஆதீனியர்கள் மன்னித்துவிட்டனர். மீண்டும் படையை நடத்திச் செல்லுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டனர். நாடுதிரும்பும் வழியில், ஆதீனியக் கப்பற்படையைக் கெலசுபாண்டில் (Helles pont) தலைமையேற்று நடத்தினார். இசுபார்ட்டா மக்களை எதிர்த்துப் போரிட்டுப் பலவெற்றிகளைப்பெற்றார். நகர மக்கள் இவருக்கு வீர வரவேற்பு நல்கினர். பின்னர் இவருடைய படைகள் நோசியம் என்னுமிடத்தில் தோற்றுப் போயின. அதன் விளைவாக மீண்டும் இவரை மக்கள் வெறுத்தனர். கி.மு. 405-ஆம் ஆண்டில் ஆதீனியர்கள் யகாசுபோடமி என்னுமிடத்தில் படுதோல்வி அடைந்தனர். மீண்டும் அல்சிபியாடீசு ஆசியாமைனரில் தஞ்சம் புகுந்தார். கி.மு. 404-இல் இவர் தங்கியிருந்த வீட்டிற்குப் பகைவர்கள் தீ வைத்தனர். தப்ப வழியின்றி அல்சிபியாடீசு இறந்து போனார்.

**அல்சியர்சு** அல்சீரியாவின் தலைநகரும், மத்திய தரைக்கடலில் ஒரு துறைமுகமுமாகும். அல்சீரியாவின் மிகப் பெரும் நகரம் அல்சீயர்சுதான். இந்நகர் கி.பி. 900-ஆம் ஆண்டளவில் நிலைநாட்டப்பெற்றது. மூர் இனத்தவர்கள் பேரரசை நிலைநாட்டி இருந்த காலத்தில் இந்நகரமே அவர்களின் முக்கிய நகரங்களுள் ஒன்றாகும். அல்சீரசு வளைகுடாவை எதிர்நோக்கி மலைப்பாங்கான இடத்தில் இந்நகரம் அமைந்துள்ளது. இன்றைய மாநகரம் மலைப்பிரிவின் தாழ்நிலப் பகுதியைப் பெரும்பாலும் கொண்டுள்ளது. மூர்கள் வாழ்ந்த பழம் பகுதியினைக் கசுபா (Kasba) என்பர். கசுபா என்பதற்குக் கோட்டை என்பது பொருள்; மலையுச்சியில் கட்டப்படுவது. மக்கள் குடியிருப்புகள் குறுகிய சந்துகளுக்கிடையே பெருகியுள்ளன. அல்சீயர்சு (Algiers) மாநகரின் மக்கள்தொகை 21,59,57 (1980).




அல்சியர்சு நகரம்

***அல்சீரியா*** வட ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள குடியரசு நாடாகும். இது மத்தியதரைக்கடலின் தெற்கிலும் ஆப்பிரிக்காவின் வடக்கிலும் அமைந்திருக்கிறது. இந்நாட்டிற்குக் கிழக்கில் துனிசியாவும் (Tunisia) இலிபியாவும் (Lybia), மேற்கில் மேற்கு சகாராப் பாலை நிலமும் மொராக்கோவும், தெற்கில் நைசர், மாலி, மௌரிடானியா ஆகிய நாடுகளும் எல்லைகளாக அமைந்துள்ளன. அல்சீரியாவின் (Algeria) பரப்பு 23,81, 741 ச.கி.மீ.

கி.பி. 1982–ஆம்ஆண்டு மதிப்பீட்டின்படி இந்நாட்டின் மக்கள்தொகை 2,10,00,000 ஆகும்.

நல்ல வளமான மண்ணைப் பெற்றிருக்கிறது. திராட்சைக் கொடிகள், ஒலிவ மரக்காடுகள், பழ மரங்கள், தானியப் பயிர்கள், காய் கறிகள் ஆகியவை இங்கே செழித்து வளர்கின்றன.

**இசுடெப்பிசு என்று கூறப்படும் புல் நிறைந்த நிலப்பிரிவு:** இது உயரமான பீடபூமிப் பகுதியாகும். இதில் புல் வளர்வதால், மக்கள் ஆடு மாடுகளை வளர்க்கிறார்கள். காகிதம் செய்வதற்குப் பயன்படும் பெசுபார்டோ புல் இங்கே அறுவடை செய்யப்படுகிறது.




அல்சீரியா

அட்லாசு மலைகள் இந்நாட்டை 1. மத்திய தரைக் கடல் நிலப்பிரிவு, 2. இசுடெப்பிசு நிலப்பிரிவு, 3. சகாராப்பாலை நிலப் பிரிவு என்று பிரிக்கின்றன.

**மத்தியதரைக்கடல் நிலப்பிரிவு:** பெரும்பான்மை மக்கள், ஒடுங்கி நீண்டிருக்கும் இப்பகுதியில் வாழ்கின்றனர்; உழைக்கின்றனர். இது 160 கி.மீ. அகலமும் 1160 கி.மீ. நீளமும் கொண்ட பகுதியாகும். இப்பகுதி

**சகாராப் பாலை நிலப்பிரிவு:** இது மணல் இடம் பெயர்ந்து கொள்ளும் அகன்ற பெரிய பரப்பாகும். இதில் மக்கள் மிகக் குறைவாக வாழ்கின்றனர். பாலை நிலப் பசுஞ்சோலைகளில் சிற்றூர்கள் உள்ளன. அங்கே காய்கறிகளும் வெப்ப மண்டலப் பழங்களும் பேரீச்சம் பழங்களும் விளைகின்றன.

**ஆறுகள்:** 720 கி.மீ. நீளம் ஓடும் செலீப்பு என்னும் ஆறு இங்குள்ள முதன்மையான ஆறாகும். மற்ற ஆறுகள் கெபிரு சாகசல், செப் அவுசு, சிக், தாப்னா முதலியன.

வேளாண்மைக்குப் பயன்படும் பெரும்பாலான நிலங்கள் கடற்கரையை ஒட்டி இருப்பவையே. காடுகள் 12,000 ச.கி.மீ. அளவு உள்ளவை. காடுகளில் பொதுவாகக் காணப்படும் மரங்கள் ஆலப்போ பைன், பசுமையான ஒக்சு, செடார், கார்க்கு, ஒக்சு முதலியவை. மீன் பிடிப்பில் கிடைக்கும் மீன் வகைகள் சார்டைன், இசுபார்ட்சு, இடூரை, மேல் ஓடுகள் மூடிய மீன்கள் முதலியன. மக்கள் கடலிலே மூழ்கிக் கடற்பஞ்சுகளையும் முத்துகளையும் எடுக்கிறார்கள்.

அட்லசு மலைத் தொடர்களிலிருந்து இரும்புக் கனிகள், பாசுபேட்டுகள், நிலக்கரி, துத்தநாகம், ஈயம், அண்டிமணி, செம்பு, டங்சுடன், இயற்கை வாயு ஆகியவையும் டெசிலி, ஆரிசு மிசான்ட்டு, டிசபெல் பார்க்கா பகுதிகளில் எண்ணெயும் கிடைக்கின்றன.

**மக்கள்:** அல்சீரியர்களில் பெரும்பாலோர் அராபியர்கள். இவர்கள் பெர்பெரிகள் இனத்தவர்களில் கலந்த இனத்தவர்களாவர். காபிலசு, இடுவார்கசு, மொசொபைட்டு, அவுரே அவுரோசியர் முதலிய மக்கள் அடங்குவார்கள். அவர்களில் பெரும்பாலோர் முசுலிம்கள். அவர்கள் உடை உடுப்பதிலும், வீடுகளிலும் ஐரோப்பியர்களைப் பின்பற்றுகிறார்கள். சிலர் அராபிய உடைகளை அணிகிறார்கள். பெண்கள் முகத்திரை போடும் பழக்கம் உடையவர்கள்.

**நாட்டுப்புற வாழ்க்கை:** நாட்டுப்புற மக்களில் பெரும்பாலோர் குடியானவர்களே. வீடுகள் செங்கல், களிமண், கல் ஆகியவற்றினால் கட்டப்படுகின்றன. ஆண்கள் கால்நடைகளையும் ஆடுகளையும் மேய்க்கிறார்கள். வீடுகளில் வெப்பம் தெரியாமலிருக்கச் சாளரங்கள் அமைக்கப்படுகின்றன. ஊர் சுற்றும் நாடோடிகள் கூடாரங்களில் வாழ்கிறார்கள். அவர்களுள் பெரும்பாலோர் கைவேலைகளிற் சிறந்தவர்களாய் இருக்கின்றனர். நகர மக்கள் தொழிற்சாலைகளிலும், வாணிகர், தொழில்கள் நடத்துவோர் ஆகியோரிடமும் வேலைக்கு அமர்கிறார்கள். பலர் வேலையில்லாமல் இருக்கிறார்கள்.

**வேளாண்மை:** குடியானவர்கள் கோதுமை, பார்லி, ஓட்சு, உருளைக் கிழங்கு, அவரை, பட்டாணி, தக்காளி, எலுமிச்சை, பேரீச்சை, அத்தி, வாதுமை, மாதுளை பீன்சு முதலியவற்றைப் பயிர்செய்கிறார்கள். பேரீச்சம் பழங்களை ஏற்றுமதி செய்வதில் இந்நாடு முன்னிற்கிறது. இந்நாட்டில் ஏறத்தாழ 3,60,000 எக்டேர் நிலத்தில் திராட்சை பயிராகிறது. மற்றப் பயிர்கள் பருத்தி, புகையிலை, கூலங்கள், இசுபார்டொபுல் முதலியன. செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் முதலிய கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. வேளாண்மை செய்வதற்கான வசதிகள் 2.5 இலட்ச எக்டேர் பரப்பு நிலத்திற்கே உள்ளன.

**சுரங்கத் தொழில்:** இயற்கை வாயுவும் எண்ணெயும் சிறப்பான கனிப் பொருள்கள் ஆகும். மற்றக் கனிப் பொருள்கள், அண்டிமணி, நிலக்கரி, செம்பு, இரும்புத்தாது, ஈயம், சலவைக்கல், பாசுபேட்டு, துத்தநாகம் முதலியவை ஆகும்.



அல்சீரியாவிலுள்ள ஓரன் துறைமுகம்

**நகரங்கள்:** பெருநகரங்கள் அல்சியர்சு, கான்சுடான்டைன், ஓரன் ஆகியவையாம். பழைய பகுதிகள் கசுபாக்கள் என்றழைக்கப்படுகின்றன.

**ஏற்றுமதியும் இறக்குமதியும்:** சாராயம், எலுமிச்சம் பழங்கள், இரும்புக் கனிகள், காய்கறிகள், பாசு பேட்டுகள் ஆகியவை ஏற்றுமதியாகின்றன. உணவு, பருத்தித் துணிகள், இயந்திரங்கள் முதலியன இறக்குமதி செய்யப்படுகின்றன. பிரான்சு இந்நாட்டுடன் பெருமளவு வாணிகத் தொடர்பு கொண்டிருக்கிறது.

**போக்குவரத்து:** இந்நாட்டில் 100 விமானங்கள் வந்திறங்கும் தளங்கள் உள்ளன. 25,600 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 4000 கி.மீ. நீள இருப்புப் பாதைகள் போடப்பட்டுள்ளன.

**கல்வி:** மக்களுள் கால் பகுதியினர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். 2500 பொதுத் தொடக்கப் பள்ளிகள் உள்ளன. அங்கே 16,00,000 பேர் கல்வி பயில்கின்றனர். இங்குப் பள்ளி ஆசிரியர்கள் போதுமான அளவு இல்லை.

நூல் நிலையங்கள் அராபி, துருக்கி, பார்கர் ஆகிய மொழிகளில் உள்ள கையெழுத்துப் படிகளைப் பாதுகாக்கின்றன. கையெழுத்துப் படிகள் எடுப்பதிலும் கட்டடம் செய்வதிலும், ஒளியேற்றுவதிலும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகள் உள்ளன.

இசுலாமியர் கட்டட வேலைப் பாட்டுக்கலையில் மிகச் சிறப்பாக முன்னேறியுள்ளனர். இங்கே சிறந்த வேலைப்பாடுகள் அமைந்த மசூதிகளும், தூபிகளும் உள்ளன. சிறந்த கைவேலைக்காரர்கள் விரிப்புகள், நகைகள், மட்பாண்டங்கள், கண்ணாடிப் பண்டங்கள் பித்தளை விளக்குகள், சமைக்கும் பாத்திரங்கள் ஆகியவற்றைச் செய்கிறார்கள்.

**கொடி:** இடப்பாதியில் பச்சை நிறமும் வலப்பாதியில் வெள்ளையும் அதன் நடுவில் ஒரு சிவப்பு நட்சத்திரமும் அல்சீரிய நாட்டுக் கொடியில் அமைக்கப் பட்டுள்ளன.
த.கோ.

***அல்சுடர்*** அயர்லாந்திலுள்ள வரலாற்றுப் புகழ்பெற்ற பகுதி. வட அயர்லாந்தும், தானிகால் (Denegal), கவான், மொனகான் என்னும் பகுதிகளும் இதில் அடங்கியிருந்தன. கி.பி. 1175-ஆம் ஆண்டு ஆங்கிலேயர் இப்பகுதியின்மீது படையெடுத்தனர். இருப்பினும் இங்கிருந்த 'ஓ' நீலிசு ('O' Neills) 'ஓ' தோனல்சு என்ற இனத்தினர் அப்படையெடுப்பை வெற்றியுறத் தடுத்து நிறுத்தி விட்டனர். பலமுறை படையெடுத்தும் எவ்விதப் பாதிப்பையும் அல்சுடர் (Ulster) அடையவில்லை. கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் இசுகாட்லாந்தினர் அயர்லாந்துப் பகுதியில் வந்து குடியேறத் தலைப்பட்டனர். 1922-இல் அல்சுடரிலிருந்து ஆறு பகுதிகள், அயர் சுதந்தர அரசுடன் (Irish Free State) சேர மறுத்தன. இவை இங்கிலாந்துடன் நட்புறவு கொண்டு வட அயர்லாந்து என்ற பெயருடன் விளங்கி வருகின்றன. அயர்லாந்துடன் தானிகால், கவான், மொனகான் என்னும் பகுதிகள் இணைந்தன. இவையே அல்சுடர் என்று இக்காலத்தில் அழைக்கப்படுகின்றன. இதன் மக்கள் தொகை 2,30,159 ஆகும்.

தியூடர் (Tudors) மன்னர்கள் காலத்திலும் கிராம் வெல்லின் ஆட்சிக் காலத்திலும் புராட்டசுடண்டு சமயத்தைச் சேர்ந்த ஆங்கிலேயர்கள் அல்சுடரில் வந்து மிகுதியாகக் குடியேறினர். ஆகையால் தான், அவர்கள் ஆங்கில அரசுடன் எப்போதும் நல்லுறவு கொண்டுள்ளனர். அயர்லாந்தின் ஏனைய பகுதிகளில் எல்லாம் கத்தோலிக்கச் சமயத்தவர்களே வாழ்கின்றனர். அவர்களுடன் சேர்ந்து அல்சுடர் மக்கள் செயற்படுவதில்லை. எனவே, தன்னாட்சி பெற்றுள்ள கத்தோலிக்கர்களுக்கும் இங்கிலாந்து இராணியாரை ஏற்றுக்கொள்ளும் அல்சுடர் புராட்டசுடண்டுகளுக்கும் ஓயாது போராட்டம் நடைபெற்று வருகிறது. பிரிட்டிசு அரசு புராட்டசுடெண்டுகளுக்கு உதவி செய்கிறது. ஆனால், தன்னாட்சி வழங்க மறுக்கிறது.

***அல்செசுடிசு*** கிரேக்கப் புராணக் கதையில் வரும் தெசலி நாட்டு அரசன் அட்மிட்டசின் (Admetus) மனைவி. அட்மிட்டசுக்காக வேறு எவரேனும் தமது உயிரைக் கொடுத்தாலொழிய அவன் இறக்க வேண்டும் என்று விதியிருந்தது. முதியவர்களான அவன் பெற்றோர் அவனுக்காகத் தம் உயிரைக் கொடுக்க முன் வந்திலர். அல்செசுடிசு (Alcestis) தன்னுயிரைக் கொடுத்துத் தன்கணவரின் உயிர் காக்க முன் வந்தாள். அட்மிட்டசு உயிர்த்து எழ எழ அல்செசுடிசின் உயிர் போய்க் கொண்டிருந்தது. அத்தருணத்தில் எர்குலிசு (Hercules) வந்து எமனுடன் போராடி அவனை வென்றான். அல்செசுடிசு உயிருடன் எழுந்தாள். இப்புராணக் கதையினை யுரிப்பிரிபீசு (Euripripisu) என்னும் கிரேக்கக்கவி நாடகமாக எழுதியுள்ளார்.

***அல்சேசிய நாட்டவர்*** பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய இரு நாடுகளுக்கும் இடைப்பட்ட வளமிக்க நிலப்பரப்பாகிய அல்சேசி (Alsace) நாட்டில் வாழும் மக்களாவர். இந்நாட்டின் வரலாறு பல போர்களைக் கொண்டதாகும். மேற்குச் செருமானியரும் பிரான்சு நாட்டவரும் இந்நிலப்பரப்பைத் தத்தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவரப் பன்னெடுங்காலமாகப் போர் புரிந்துள்ளனர். இது கி.மு. முதல் நூற்றாண்டில் சூலியசு சீசரின் ஆட்சியின்போது கைப்பற்றப்பட்டு, கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை உரோமானியரால் ஆட்சி செய்யப்பட்டது. அலமான்னி (Alamanni) எனும் செருமானியப் பழங்குடிகளால் இப்பரப்பு கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் கைப்பற்றப்பட்டது. கி.பி. 1681-இல் பிரான்சின் 14-ஆம் லூயி (Louis XIV) அல்சேசிப் பகுதியைக் கைப்பற்றினார். செருமானியக்

கிளை மொழியைப் பேசிவந்த அல்சேசிய நாட்டவர், கி.பி. 1648 - 1871 வரையுள்ள காலத்தில் பிரான்சின் பண்பாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். 20-ஆம் நூற்றாண்டில் மட்டும் அல்சேசிய நாட்டவர், தம் நாட்டுத் தன்மையை (Nationality) மூன்று முறை மாற்றிக் கொள்ள நேரிட்டது. கி.பி. 1870-ஆம் ஆண்டு முதல் 1918-ஆம் ஆண்டு வரை செருமானிய நாட்டவராகவும், 1918-ஆம் ஆண்டு முதல் 1940-ஆம் ஆண்டு வரை பிரான்சு நாட்டவராகவும், பின்னர் 1945-ஆம் ஆண்டு வரை செருமானியராகவும் வாழ்ந்தனர். பிரான்சின் இலோரய்ன் (Lorraine) பகுதிக்கும் மேற்குச் செருமனியின் எல்லையில் பாயும் இரைன் (Rhine) ஆற்றிற்கும் இடைப்பட்ட இன்றைய அல்சேசி நாடு, பாசு - இரைன் (Bas-Rhine), ஆட்-இரைன் (Haut - Rhine), பெல்போர்ட்டு (Belfort) எனும் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. செருமானிய நாட்டின் எல்லையில் பாயும் நீண்ட இரைன் நதிப் பகுதியும் அல்சேசிய வடபகுதியும் பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாடுகளின் கலகப் பகுதியாகவே காட்சியளிக்கின்றன.


அல்சேசி நாட்டவர்கள் பன்னெடுங்காலமாகப் பிரான்சு, மேற்குச் செருமனி ஆகிய நாட்டவரால் ஆளப்பட்டிருந்தும், தங்களைப் பிரெஞ்சு நாட்டவர் என்றோ செருமானியர் என்றோ கருதுவதில்லை. இவர்கள் தங்களை அல்சேசி நாட்டவர் என்றே கருதினர். நீண்டகாலமாக இரு நாட்டவராலும் துன்புறுத்தலுக்குள்ளானதே இதற்குக் காரணமாகும். அல்சேசி நாடு காடு நிறைந்த நிலப்பரப்பாக இருந்த போதிலும் தானிய வகைகள், புகையிலை, மதுபானம் போதைப் பொருள் ஆகியவற்றிற்கு மணமூட்டும் ஆப்சு (Hopes) முதலான பயிர் வகைகள் ஆகியவற்றை விளைவிக்கின்றனர். அல்சேசி நாட்டவர் வேளாண்மையிலும் காடுவளர்ப்பதிலும் மிகுந்த முன்னேற்றம் கண்டுள்ளனர். அல்சேசியர் விருந்தோம்பும் பண்பினர்; பன்றி இறைச்சி உண்பதில் விருப்புடையர். சமயப் பற்று மிகுந்த இவர்களுள் பெரும்பாலானவர்கள் உரோமன் கத்தோலிக்கப் பிரிவையும் குறைந்த எண்ணிக்கையினர் புராட்டசுடண்டு பிரிவையும் சார்ந்துள்ளனர். இருப்பினும், கோயில், மலைத் தெய்வம் முதலானவற்றையும் வழிபடுகின்றனர். தூய ஒடைல் (St. Odile) தலம் இவர்களால் முதன்மையானதாகக் கருதப்படுகிறது.

இலொரய்ன் பகுதியில் செருமானியக் கிளை மொழியும் பெரிய நகரப் பகுதிகளில் பிரான்சு மொழியும் பேசப்படுகின்றன. இன்றைய நிலையில் அல்சேசிய நாட்டவர் தொழிற்றுறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளனர். எஃகு, ஆடை, காகிதம், கண்ணாடி, முதலானதொழில்களில் இவர்கள் சிறந்து விளங்குகின்றனர்.

**அல்சேசு (கி.பி.1857-1927)** செருமானிய கீழ்த்திசை மொழிப் புலமையாளர். இவரது முழுப்பெயர் ஈசின் அல்சேசு (Eugen Hultzsch). இவர் வடமொழிப் புலமை மிக்கவர். கி.பி. 1884 முதல் 1885 வரையிலான ஆண்டுகளில் ஆறுமாதக் காலம் வட இந்தியாவில் பயணம் செய்தார். இவர் தம் பயணத்தின் போது விலைமதிப்பற்ற கையெழுத்து ஏடுகளையும் கல்வெட்டுகளையும் சேகரித்தார். கி.பி. 1887 - இல் சென்னை மாநிலத் தொல்லியல்ஆய்வுத்துறையில் கல்வெட்டாய்வாளராகநியமிக்கப்பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வடமொழித் தேர்வுக் கண்காணிப்பாளராகவும் இவர் பணியாற்றினார். 1903-இல் கல்வெட்டாய்வாளர் பணியிலிருந்து விலகிய பின்னர், ஆல் (Halle) பல்கலைக் கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகப் பொறுப்பேற்றார். தென்னிந்தியக் கல்வெட்டுச் சாசனங்கள் என்னும் தொகுதியைத் தொடங்கி முதற்பகுதியைப் பதிப்பித்தவர். மேலும், தென்னிந்திய வடமொழிக் கையெழுத்து ஏடுகள் பற்றிய அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளார். இந்தியக் கல்வெட்டியலைப் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளை ''இந்தியத் தொல்லியல்'' (Indian Antiquary) என்னும் இதழில் வெளியிட்டிருக்கிறார்.

**அல்சேசு-லோரென்** செருமனிக்கும் சுவீடனுக்கும் எல்லையில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இரு பிரெஞ்சு மாநிலங்கள்; கனிவளம் செறிந்தவை. நிலக்கரி இரும்பு ஆகியவை இங்கு நிறையக் கிடைக்கின்றன. கி.பி. 17-ஆம் நூற்றாண்டிலிருந்து பிரான்சுக்கும் செருமனிக்கும் இவ்விரு மாநிலங்களும் தீராத தொல்லைகளைத் தந்து வந்தன. லோரென் (Lorraine) புனித உரோமானியப் பேரரசுப் பகுதியாயிருந்து, 13-ஆம் நூற்றாண்டில் பிரான்சின் செல்வாக்கிற்கு உட்பட்டு, 16-ஆம் நூற்றாண்டில் சட்ட பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டு வரை லோரென் தன்னாட்சிப் பகுதிக்கான தகுதியைப் பெற்றிருந்தது. பிரெஞ்சு மன்னர் பதினைந்தாம் லூயியின் ஆட்சிக்காலத்தில் மீண்டும் இப்பகுதி முடியாட்சிக்கு உட்பட்டது.

அல்சேசு (Alsace) 17-ஆம் நூற்றாண்டு வரை புனித உரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாயிருந்தது. ஓரளவு தன்னாட்சி பெற்றிருந்த போதிலும், அல்சேசு செருமானியப் பண்பாடு, நிறுவனங்கள் ஆகியவற்றின் இருப்பிடமாயிருந்தது. கி.பி. 1648-ஆம் ஆண்டில் முடிவுற்ற வெசுட்பேலியா உடன்படிக்கையின்படி முப்பதாண்டுப்போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதோடு, அல்சேசு மாநிலம் பிரான்சுக்குக் கொடுக்கப்பட்டது. இருப்பினும் அல்சேசு மக்கள் செருமானியப் பழக்க வழக்கங்கள், மொழி ஆகியவற்றைப் பேணிக் காத்ததோடு, பேரரசு கொடுத்




அல்சேசு லோரேன்

திருந்த சிறப்பதிகாரங்களையும் உரிமைகளையும் மதித்து வந்தது. இச்சிறப்புரிமை கி.பி. 1789–ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக் காலம்வரை நீடித்தது. அதற்குப்பின்னர் அல்சேசும் லோரெனும் பண்பாட்டிலும் அரசியலிலும் ஒன்றுபட்டுத் திகழ்ந்தன. கி.பி 1870–71 பிரெஞ்சுப் பிரசியப் போருக்குப் பின்னர், இவ்விரு மாநிலங்களும் செருமானியப் பேரரசின் பகுதிகளாக்கப்பட்டன. முதல் உலகப் போரின்போது செருமனி, அல்சேசு–லோரென் பகுதிகளை நம்பாமல் பகையுணர்ச்சியோடு நோக்கியது. வேர்சே உடன் படிக்கையின்படி இவ்விரு மாநிலங்களையும் பிரான்சு பெற்றது. இரண்டாம் உலகப் போரின் போது செருமனிக்கு இவ்விரு மாநிலங்களும் கொடுக்கப்பட்டன. ஆனால் 1945–இல் செருமனி தோல்வியுற்ற போது அல்சேசு–லோரென் ஆகிய இரண்டும் மீண்டும் பிரான்சுக்கே கொடுக்கப்பட்டன.

**அல்டாமிசுக் கல்லறை** தில்லியில் குதுப் மசூதிக்கு வடமேற்கு மூலையில் அமைந்துள்ளது. தில்லியை ஆண்ட சுல்தானிய மரபுகளுள் ஒன்றான அடிமை மரபு அரசர்களுள் ஒருவர் அல்டாமிசு (கி.பி. 1211–1236). இவர் தாம் இறக்கும் முன்னர் இந்த இடத்தைத் தெரிந்தெடுத்தார். இவ்வழகுமிக்க கல்லறையை இவர் மகள் இரசியா கட்டினார். இந்தியாவில் இன்று வரை நிலைத்துள்ள தொன்மையான கல்லறைகளுள் இதுவும் ஒன்று. இக்கல்லறையின் நுட்பமான சிற்பப் பணி வியக்கத்தக்கது. காண்க: இல்துத்மிசு.

**அல்டோனா** மேற்குச் செருமனியில் ஆம்பர்க்கு நகரத்தின் வடமேற்கே உள்ள ஒரு நகரம்; எல்பு (Elbe) ஆற்றின் வலக் கரையில் அமைந்துள்ளது. கி.பி. 1640-இல் தென்மார்க்குக்குச் சொந்தமான ஒரு சிற்றூராக இருந்தது. கி.பி. 1713–ஆம் ஆண்டு இந் நகரம் இசுவிடியர்களால் (Swedes) எரிக்கப்பட்டது. செருமானியர்கள் கி.பி. 1864–ஆம் ஆண்டு இந்நகரைத் தம்வசப்படுத்தினர். இது ஆம்பர்க்கு (Hamburg) நகரத்தின் ஒரு பகுதியாக இன்று உள்ளது. இந்நகரம் ஆம்பர்க்கின் துறைமுக நகரமாகவும் விளங்குகிறது. இது பல கப்பல்கள் தங்குவதற்கேற்ற துறைமுகத்தைப் பெற்றுள்ளது. அல்டோனா (Altona)வில் இயந்திரங்கள், இரசாயனப் பொருள்கள், நெசவாலைகள், தோல் பொருள்கள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்குள்ள துறை முகத்தில் கப்பல்கள் பழுது பார்க்கப்படுகின்றன.

**அல்துசிசுயோவானாசு** (கி.பி. 1557–1638- அல்துசிசு யோவானாசு (Althusius, Johannes) செருமனி நாட்டைச் சேர்ந்த சட்டம் அரசியல் சார்ந்த தத்துவ அறிஞர். இவர் தைடென்சாசென் (Diedenshausen) என்ற சிற்றூரில் ஓர் உழவரின் மகனாகப் பிறந்தார். சுவிசு மக்கள் வாழ்க்கை நெறியின் அனுபவம் இவருக்கு, நகரவைக்குரிய சுதந்திர உணர்வையும் தன்னாட்சி மேல் விருப்பத்தையும் குடியரசுச் சட்டத்துக்குட்பட்ட சாயலையும் ஏற்படுத்தியது. கேல்வின் (Calvin) என்ற சிந்தனையாளரின் (Calvinist) அடக்கப் பண்பு இவரைப் பெரிதும் கவர்ந்ததோடு ஒரு சிறந்த இலக்கிய அறிஞருமாக்கியது. கிறித்துவ நம்பிக்கையும் மக்கள் நேய உணர்வும் மக்களாட்சிப் பற்றும் உணர்வும் இவருடைய சிறந்த குணங்கள். இவர் திடமான மனம் உடையவர்; சிறந்த ஒழுக்க சீலர். ஆகையினால், இவர் தம் கருத்தை நிறுவும் அறிஞராக மட்டுமல்லாமல் சிறந்த ஆசிரியராகவும் உண்மையான, நேர்த்தியான கோட்பாடுடையவராகவும் விளங்கினார்; சமூக வாழ்க்கையின் செயலாராய்ச்சித் திறமையைப் பெரிதும் விரும்பினார்.

பேசல் (Basel) என்ற நகரில் 1586–ஆம் ஆண்டு சமூகம் சமயம் சார்ந்த சட்டத்தேர்வில் மரபுவழி உரிமை பற்றிய ஆய்வுக்கட்டுரைக்காகப் பேரறிஞர் பட்டம் பெற்றார். இவர் இது தொடர்பாகச் சிறந்த நூல் எழுதினார். இந்நூலின் மூலம் பிரஞ்சுத் தத்துவ ஞானி பிட்டிரசு ராமசு (Petrus Ramus) என்பவரின் ஒழுங்குமுறையைப் புகுத்தினார். அந்த முறை அப்பொழுது நிலவிய மக்கள் நேய முறையை ஒத்திருக்கவில்லை. இராமசு அவர்களின் முறை இரண்டு

வாதப் பொருத்தமுடைய எண்ணங்களைப் பிரித்து, அவை ஒவ்வொன்றிலும் இன்னும் இரண்டு புதிய எண்ணங்களை உருவாக்கியது. இத்தகைய முடிவற்ற சீர்திருத்த முறையான ஒழுங்குமுறையை அல்துசிசு தம்முடைய நூல்களில் கடைப்பிடித்தார். எர்பானில் (Herborn) 1595-ஆம் ஆண்டில் இவர் பேராசிரியரானார்.

இவர் ஒரு வழக்கறிஞராகவும் இருந்தார்; நாட்டின் பெரிய மனிதர்களையும் கல்லூரித் தொடர்பான கொள்கைகளையும் எதிர்த்தார். சமய, சட்டஒழுங்குத் தொடர்பான ஒரு சிறந்த நூலை எழுதினார். இந்த அரசியல் நூல் மனித சமுதாயத்தைச் சமூக வாழ்க்கையில் இணைக்கிறது. மனிதர்கள் அரசியல் அடிப்படையில் ஒன்று சேருகின்றனர். இவர் உரூசோ (Rousseau), குரோட்டியசு (Grotius) கொள்கைக்கு உடன்பட்டார். ஆனால், போடின் (Bodin) என்பவரின் அரசருக்குரிய தனியான கொள்கையை எதிர்த்தார். இவரது கொள்கைப்படி அரசு என்பது கூட்டுச் சேர்ந்த மக்களின் தன்மையே தவிர அரசருடையதன்று. மக்களின் பேராளர்கள் அடங்கிய குழு, அரசியல் விவாதங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்று கூறினார். அரசர் தலைவர்; மக்களால் அமைக்கப்பட்ட ஆணையாளர். மக்கள் கூறியபடி நடக்காவிட்டால் நீக்கப்படவேண்டும் என்ற கருத்துடையவர் இவர். மக்களின் பேராளர்கள் அடங்கிய குழு இயற்கை விதிகளையும் இறைவன் கடமையையும் கடைப்பிடிக்க வேண்டும். மனிதனின் இயற்கைத் தன்மையும் ஒருவகையில் சமுதாயக் கட்டுவிதியின் அடிப்படையாகிறது என்று கருதினார்.

இவர் கி.பி. 1603-இல் 'அரசியல் முறைகளின் சுருக்கம்' என்ற நூலை எழுதினார். இவர் குடும்பம், நகரம், மாநிலம், நாடு போன்ற சமூக வரிசைகளில் தலைமையானது 'அரசு' என்று கருதினார். வரம்பற்ற அதிகாரத்தின் நிலைக்களமாக அரசை இவர் கருதவில்லை. ஓர் அரசு தோற்றுவிக்கப்பட்டவுடன் சிறு சமூகங்களின் உரிமைகள் மறைந்து விடா. அரசு, சிறு சமூகங்களின் அதிகாரத்திற்கு உதவியாக அதன் பரந்த கடமையினைச் செய்வதற்குத் தேவையான அளவு மிகுதியான உரிமையினை மட்டும் பெற்றிருக்கும். மக்களிடையே உண்டாகும் ஒரு சமூக ஒப்பந்தத்தின் மூலமே அரசு உண்டாகிறது என்று இவர் கூறுகிறார். மனிதனின் இயற்கைப் பண்பிற்கேற்ப அரசு அமைகின்றது. ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளும் உரிமை சிறு சமூகத்திற்கு உள்ளதொரு நீக்க முடியாத உரிமை என்பது இவர் கருத்து. அல்துசிசு இரண்டு சமூக ஒப்பந்தங்களைக் குறிப்பிடுகின்றார். அரசை அமைப்பது முதல் ஒப்பந்தம். அரசாங்கத்தை அமைப்பது இரண்டாம் ஒப்பந்தமாகும். எனவே அரசாங்கத்திற்கு இவரது கருத்தின்படி இறைமை (Sovereignty) இல்லை. பொது மக்களின் நல்வாழ்விற்குக் கருவியாக விளங்கி வரும் பல்வேறு சிறு குழுக்கள் சுதந்திரமாகத் தோன்றி வளர்ந்தவையாதலால் நாட்டு அரசாங்கத்திற்கு அக்குழுக்களை அழிக்கவோ கட்டுப்படுத்தவோ உரிமையில்லை என்பது இவரது கொள்கை. இதனைப் பின்னர்க் கீர்க்கி, மெயிட்லண்டு (Maitland) போன்றோர் விரிவாக்கினர். இவர் பரீசியா (Frisia) விலுள்ள எம்டன் (Emden) நகர்மன்றத் தலைவராகக் கி.பி. 1604-இல் நியமிக்கப் பெற்றார். இவர் கி.பி. 1 638-இல் காலமானார்.

**அல்பான்சோ பதின்மூன்றாம் (கி.பி. 1886-1941):** இசுபெயின் குடியரசு நாடாக அறிவிக்கப்படும் வரை அதன் அரசராக (1902-1931) இருந்தவர் இவர். இவர் தந்தை இசுபெயின் நாட்டு அரசர் பன்னிரண்டாம் அல்பான்சோ ஆவார். இவரது ஆட்சிக்காலத்தில் இசுபானிய மக்கள் சிறுகுழு ஆட்சியால் (Oligarchy) மன நிறைவில்லாமல் வாழ்ந்தனர். குறைவான ஊதியத்தாலும் மொராக்கோ மீது படையெடுத்ததாலும் அவர்களின் மன நிறைவின்மை மேலும் பெருகியது. இதனை இசுபானிய நாடாளுமன்ற அரசினால் தீர்த்து வைக்க முடியவில்லை.

அல்பான்சோ (Alfonso XIII) மாட்ரிடு (Madrid) என்னும் இடத்தில் பிறந்தார். இவர் ஆறுமாதக் குழந்தையாக இருந்தபொழுது இவர் தந்தை இறந்தார். இதனால் குழந்தைப் பருவத்திலேயே இவர் அரசரானார். இவர் தாய் ஆசுதிரியா இளவரசி மேரியா கிறித்தினா (Archduchess Maria Cristina of Austria). தம் மகன் தக்க வயது வரும் வரை தாமே இசுபெயினை ஆண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் நாட்டில் குழப்பங்கள் பல ஏற்படவே 1923-இல் நாட்டின் ஆட்சியை மைக்கேல் பிரீமோ டி இரீவெரா (General Miguel Primo de Rivera) என்னும் படைத் தலைவரிடம் ஒப்படைத்தார். 1930-ஆம் ஆண்டு வரை இரீவெரா ஆட்சியைக் கவனித்து வந்தார். 1931-ஆம் ஆண்டு இசுபெயின் குடியரசு வாதிகள் முடியாட்சியைக் கவிழ்த்து ஆட்சியைப் பிடித்தனர். அரசுக்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு அல்பான்சோ நாடு கடத்தப்பட்டார். பிரான்சிசுகோ பிராங்கோ (Francisco Franco) என்பவர் தலைமையில் புதிய அரசாங்கம் 1939-இல் ஆட்சிக்கு வந்தது. அல்பான்சோ 1941-ஆம் ஆண்டு உரோமாபுரியில் இறந்தார். மன்னராட்சி மீண்டும் 1975-ஆம் ஆண்டு இசுபெயினில் ஏற்பட்டது. பதின்மூன்றாம் அல்பான்சோவின் பேரர் சுவான் கார்லாசு (Juan Carlos) என்பவர் அரசரானார். அல்பான்சோவின் கல்லறையிலிருந்து அவர் எலும்புகள்

தோண்டி எடுக்கப்பட்டு மாட்ரிட்டுக்கருகிலுள்ள எல் எசுக்கோரியல் (El Escorial) என்னும் சுடுகாட்டில் புதைக்கப்பட்டன. தேவாலயமும் மடாலயமும் அரண் மனையும் இணைந்த பகுதி இது.

**அல்-பிரூனி (கி.பி. 973–1048)** என்பார் அறிவு லகப் பேரறிஞர்களுள் தலைசிறந்த வானவியல் வல்லு நர்; வரலாற்று அறிஞர்; தாவரவியலார்; மருந்திய லார்; புவியமைப்பியலார்; கவிஞர்; தத்துவஞானி; கணிதமேதை; மனிதநலக் கோட்பாட்டாளர். தமது கால அறிவுத் துறையில் மட்டுமன்றி, அதுவரை தெரியாதபல துறைகளிலும்தேர்ச்சியுற்ற பேரறிஞர் உலக வரலாற்றில் அரிதாகவே தோன்றுகின்றனர். அபு–அல்–ரைகன் முகம்மது இபினி அகமது அல்-புரூனி (Al–Biruni) குவாரிசத்தின், தலைநகரான 'காத்' என் னும் நகருக்கு அருகில், கி.பி. 973–ஆம் ஆண்டு செப்டம்பர்4–ஆம் நாள் பிறந்தார். "உண்மையில் என்னுடைய குடிவழியைப் பற்றித் திட்ட வட்டமாக ஒன்றும் அறியேன். ஏனெனில் என்னுடைய பாட்ட னார், என் தகப்பனார் யாரென்றும் எனக்கு உறுதி யாகத் தெரியாது" என்று தம்முடைய கவிதை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கிரேக்கக் கல்வியாளர் ஒருவர், இவருக்கு முதல் ஆசிரியராக வாய்த்தார். ஆசிரியர் வேண்டுகோளுக் கிணங்கி இளமைத் துடிப்புமிக்க அல்–பிரூனி செடிகள், விதைகள், பழங்கள் ஆகியவற்றைச் சேகரித்தார். இப்பணி இயற்கை அறிவியலில் இவருக்கிருந்த ஆர்வத்தை மேலும் பெருகச் செய்தது.

அபு-நசர் மான்சூர் என்பவர் அல்பிரூனியின் வளர்ப்புத் தந்தையாவார். அவர் கணிதநூல் வல்லு நர்; வான நூலறிஞர். அவர் யூக்ளிட்டின் (Euclid) வடிவியலையும் (Geometry), தாலமியின் வானநூலை யும் அல்-பிரூனிக்குக் கற்பித்தார். விண்மீன்கள் கனிப்பொருள்கள் ஆகியவற்றைப் பற்றியும் கற்றார். வானம், நிலவுலகம் இரண்டின் மறைபொருளைக் கண்டறியத் துருவித் துருவி அவற்றை ஆராய்ந்தார். வரலாற்றின் பொருளாழத்தைக் கண்டறிய எண் ணற்ற நூல்களைக் கற்றார்.

உலகத்தின் வடிவம் உருண்டையானது என்ற கருத்தினைத் தந்தார். மத்திய ஆசியாவில் இந்தப் பணியை முதன்முதல் செய்தவர் அல்-பிரூனியே யாவர். இவர் சிறப்புமிக்க கவிஞராகவும் விளங்கினார். தம் காலத்தின் எண்ணப்போக்கிற்கு அல்-பிரூனி கட்டுப்படாதவர். மிகவும் முற்போக்கான கருத்து களைக் கொண்டிருந்தார் இவரது காலத்திய அறிஞர் களுள் பெரும்பாலோருக்கு இவருடைய புதுமை வாய்ந்த கண்டுபிடிப்புகள் புரிந்து கொள்ள முடியாத வையாய் இருந்தன. உலகத்தின் சுற்றளவை அளப்ப தற்குப் புதியதோர் எளிய வாய்பாட்டை முதன் முதல் இவர் வகுத்தார். சூரியனைச் சுற்றி உலகம் சுழலுவது இயற்கையில் நிகழக் கூடியது என்று கருதி னார். புவியியல் ஊழிகள் ஒன்று மற்றொன்றைத் தொடர்ந்து தோன்றும் சுழல் வட்டமாகும் என்ற கருத்தினை விளக்கியுரைத்தார். 'காலம் செல்லச் செல்லக் கடல் வறண்ட நிலமாகவும் வறண்ட நிலம் கடலாகவும் மாற்றமுறும்' என்று இவர் எழுதியுள் ளார்.

அல்-பிரூனி தம் காலத்தில் பல அரசுகளின் போர்களைக் கண்டார். அதனால் நிலையான வாழ் வற்று வாழ்ந்தார். இந்திய அறிஞர்களின் தொடர் பும் கிட்டிற்று. இவர் வடமொழியிலும் இந்திய நாக ரிகத்திலும் அக்கறை காட்டினார். இன்றைய இந்திய நாட்டின் பகுதியாக இருந்த ஒரு பேரரசில் இவர் வாழ நேர்ந்ததே அதற்குக் காரணம். அப்போது இந்தியாவின் பஞ்சாபு, காசுமீரம் அகிய பகுதிகளில் பயணம் செய்தார். தம்முடைய வானநூல் பற்றிய ஆய்வு நூலை வடமொழியில் மொழிபெயர்த்தார். பஞ்சதந்திரக் கதைகளை இவரே அராபிய மொழியில் மொழிபெயர்த்தார். இந்தியாவில் நிலவிய சாதி முறை, மெய்ப்பொருள், அறிவியற்கலை, சமயம், சட்டம், பழக்கவழக்கம், மூடநம்பிக்கை, புராணம், நிறுத்தல், முகத்தல், நீட்டல் அளவை முறைகள், எழுத்து, மொழிவடிவம், நிலவியல் போன்ற பலதிறப் பட்ட செய்திகளைத் தாமே நேரில் அறிந்தும் இந்தி யப் பேரறிஞர்களுடன் உரையாடியும் அறிந்தவற்றை 'இந்தியா' என்ற கலைக் களஞ்சிய நூலில் குறித்துள் ளார்.

தம் ஐம்பதாம் வயதுக்குமேல் அல்-பிரூனி கடுமை யான நோய்களுக்குட்பட்டார். எனினும் ஆய்வறிவு மங்கவில்லை. மசூதின் மகன் மான்தூத்தின் ஆட்சிக் காலத்தில் (1040–1048) 'இரத்தினங்கள்' என்ற நூலை எழுதினார். 80 வயது வரையிலும் இவர் அறிவுத்திறன் ஆராய்ச்சிகளிலேயே திளைத்தார். 'மருத்துவப் பொறியியல்' இவர் எழுதிய இறுதி நூல்.

அல்-பிரூனி பாரசீகர். இளமையில் 'குவாரிச மொழியே' பேசினார். பின்னர்ப் பாரசீகம் இவர் பேசும் மொழியாயிற்று. எனினும் எழுத்திலக்கியங் களில் எல்லாம் அராபிய மொழியைப் பயன்படுத்தி னார்.

இவர் எழுதிய 'அல் – பிரூனியின் இந்தியா', 'புக் ஆன் பார்மசி அண்டு மெட்டிரியா மெடிகா', 'கிரனா லஜி ஆப் ஏன்சியன்டு நேஷன்சு', 'தி டிட்டர்மினேஷன் ஆப் தி கோஆர்டினேட்ஸ் ஆப் சிட்டீஸ்', 'வினாக்க ளும், விடைகளும்', 'வானியல் சூத்திரம்', 'கேனன் ஆப் மெடிசின்' ஆகிய நூல்கள் கிழக்கிற்கும் மேற்கிற் கும் இடையே பயன்மிகு அறிவியல் பண்பாட்டுப்

பரிமாற்றத்தை அளித்து ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளும் உறவுப் பாலமாக இருக்கின்றன. இவர் கீழைநாடுகளின் புலமைத் திறத்துக்கு ஒரு பெருஞ் சின்னமாக விளங்கினார் என்று கூறுவது மிகை யாகாது.

**அல்பேனிய மொழி** அல்பேனியாவின் அர சாங்க மொழியாகும். இம் மொழியை ஏறத்தாழ 25 இலட்சம் மக்கள் பேசுகின்றார்கள். இவர்களுள் பெரும்பான்மையோர் அல்பேனியாவில் வாழ்கின்ற னர். அல்பேனியாவில் மட்டுமன்றி அருகிலுள்ள யூகோசுலோவியா, கிரீசு, இத்தாலி, துருக்கி, பல் கேரியா, அமெரிக்கா, சிசிலி போன்ற பிறநாடுகளி லும் இம்மொழியினைப் பேசுவோர் வாழ்கின்றனர். அல்பேனியர் பற்றிய செய்திகளைத் தாலமி குறிப் பிட்டுள்ளார்.

அல்பேனியா நாடு பண்டைக் காலத்திலிருந்தே பல்வேறு படையெடுப்புகளுக்கு இலக்காகி வந்துள் ளது. அதன் தென்பகுதி முன்னர் எபிரசு (Epirus) என்றும், வடபகுதி இல்லிரியா (Illyria) என்றும் இரு பகுதிகளாகப் பிரிந்திருந்தமையும், தென்பகுதி கிரேக்க மன்னர்களின் கீழும், வடபகுதி பின்னர் உரோமப் பேரரசர்களின் கீழும் இருந்து வந்துள்ளன. உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் இல்லிரியா கோதிய ரின் கீழ் இருந்துள்ளது. இதன் பின்னர் அல்பேனியா முழுவதும் சிலாவிக் அரசின் கீழ் இருந்துள்ளமை அல் பேனிய இடப் பெயர்களால் விளங்குகிறது. அல்பேனி யர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் உரு மேனியர்கள். இவர்கள் உரோமப் பேரரசுக்கும் இலத் தீன் மொழிக்கும் அடிபணிந்து நின்றார்கள். பல்வேறு அந்நிய அரசுகளின் ஆட்சிக்கீழ் இருந்தாலும் அல்பேனி யர்கள் தங்கள் மொழியினைப் பாதுகாத்து நின்றமை குறிப்பிடத்தக்கது. எனினும் இம் மொழியில் பல பிறமொழிச் சொற்களைக் காணலாம். இலத்தீன், கிரீக்கு, உரோமான்சு, துருக்கி, சிலாவிக் போன்ற மொழிச் சொற்கள் கலந்துள்ளன.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டுவரை இது ஒரு இந்தோ-ஐரோப்பிய மொழி என்பதில் தெளிவு ஏற் படவில்லை. இதன்கண் பிறமொழிச் சொற்கள் மிகுதி யாகக் காணப்படுவதும், பிற இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பங்களிலிருந்து மிக்க மாற்றங்களைக் கொண்டிருப்பதும், பழைய ஏடுகள்எவையும்இல்லாமல் இருப்பதும், இதற்குக் காரணங்களாகும். இம்மொழி இந்தோ-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தினைச் சார்ந் தது என்பதனைப் பிரான்சு பாப், குசுத்தவ்மேயர், ஒல்சர் பெடர்சன் போன்றோர் அல்பேனிய மொழிச் சொற்களுக்கும், இந்தோ-ஐரோப்பிய மொழிச் சொற் களுக்கும் உள்ள உறவை எடுத்துக் காட்டுவதன் வாயிலாக விளக்கியுள்ளனர். இந்தோ-ஐரோப்பிய மொழியில் இது 'சதம்' பிரிவினைச் சார்ந்தது என் றும், பால்டோ சிலாவிக் மொழிகளையும் ஆர்மேனி யன் மொழியையும் இணைக்கும் இடைநிலையாக உள்ளது என்றும் மொழியியல் அறிஞர் கூறுகின்ற னர். மேலும் இம்மொழி பழைய உரோமர்களின் காலத்தில் வழங்கிவந்த இல்லிரியன் மொழியிலிருந்து உருவானது என்றும், அதனுடன் நெருங்கிய தொடர் புடையது என்றும் கூறுகின்றனர். இம்மொழியில் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு முதல் இலக்கியங்கள் உருவாகியுள்ளன. வடஅல்பேனியாவில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கப் பாதிரிமார்களின் உதவியாலும் முயற்சியாலுந்தான் இலக்கியங்கள் தோன்றின. தென் அல்பேனியாவில் இந்நிலை கி.பி. 19-ஆம் நூற்றாண் டில்தான் உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

கி.பி. 15 ஆம் நூற்றாண்டிலிருந்தே இலக்கியங் கள் உண்டான போதிலும் இதற்கெனத் தனி எழுத்து முறை எதுவும் இல்லாதிருந்த நிலையில் பல்வேறு குழப்பங்கள் காணப்பட்டன. பல புதிய ஒலிகளைக் கொண்ட அல்பேனியன் மொழிக்கு உரோம எழுத்து முறையில் காணப்பட்ட எழுத்துகள் போதாத நிலை யில், சமிபெய் பிராசிரி (Samibey Frasheri) புதிய எழுத்துமுறை ஒன்றை உருவாக்கினார். உரோம எழுத்துகளையும் பயன்படுத்தி உருவாக்கிய இம்முறை யில் முப்பத்தெட்டு எழுத்துகள் உள்ளன. இவ் வெழுத்து முறை அல்பேனிய ஒலி எழுத்து முறைக் கேற்ப மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. 1909-ல் அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட குழு வொன்று இம்மொழிக்கெனத் தனியொரு எழுத்து முறையை உருவாக்கியது. இது தேசீய எழுத்துமுறை என்று கூறப்படுகிறது. இம்மொழியில் காணப்படும் முதல் எழுத்துச் சான்று கி.பி. 1462-ல் எழுதப்பட்ட ஒரு சடங்கு நூலாகும் (Baptismal Ritual). இதன் பின்னர்க் கி.பி 1555-இல் வேதாகம மொழிபெயர்ப்பு ஒன்று உருவாக்கப்பட்டது. எனினும் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முதல்தான் இலக்கியங்கள் பல தோன்றத் தொடங்கின. கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் குசுல்வரி பாபா என்னும் கவிஞர் பல கவிதைகளை இயற்றி னார். அதன் பின்னரே இம்மொழியில் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டது.

இம்மொழியின் இலக்கணக் கூறுகள் இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் இலக்கணக் கூறுகளோடு ஒத்திருக்கின்றன. இம்மொழியின் பெயர்ச் சொற் களில் வேற்றுமை, பால் எண் ஆகியவற்றை உணர்த் தும் உருபுகள் வெளிப்படையாக அமைந்துள்ளன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் காணப்பட்ட அல்பேனிய மொழிக்கும் இக்கால அல்பேனியன் மொழிக்குமிடையே வேறுபாடுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன.

**அல்பேனியா** மலைவளம் நிறைந்த ஒரு சிறிய நாடு. ஐரோப்பாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள பால்கன் முந்நீரகத்தைச் சேர்ந்தது. இது ஐரோப்பா விலேயே மிகவும் ஏழ்மை நிலவும் நாடுகளுள் ஒன்றா கும். இரண்டாம் உலகப் போரிலிருந்து இது உருசியா வுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஒரு பொது வுடைமை நாடாக இருந்து வந்தது. 1961–ஆம் ஆண் டிலிருந்து இது உருசியாவுடன் தொடர்பை அறுத்துக்




அல்பேனியா

கொண்டு சீனாவுடன் தொடர்பு கொண்டுள்ளது. 400 ஆண்டுகளுக்கு மேலாக இது உதுமானியப் பேரர சின் கீழ் இருந்து வந்தது. 1912–இல் இந்நாடு தன் னாட்சி பெற்றது.

நாட்டின் ஒரே கட்சியான பொதுவுடைமைத் தொழிலாளர்கள் கட்சியே நாட்டை ஆள்கிறது. அரசு அலுவலர்கள் அனைவரும் கட்சி உறுப்பினர்களே, அரசுத் தலைமை ஆட்சிக் குழுவின் ஆணையின்படி இவர்கள் இயங்குகின்றனர். அல்பேனியாவின் (Albania) சட்டதிட்டங்கள் மக்கள் சட்ட மன்றத்தா லேயே வகுக்கப்படுகின்றன. மக்கள் நான்காண்டுக்கு ஒருமுறை 214 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அவ்வவைக்கு அனுப்புகின்றனர். கட்சி குறிப்பிடும் ஒரு பட்டியலிலிருந்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஆண்டுக்கு ஒருமுறை ஒரு சில நாட்களே சட்டமன்றம் கூடி ஆட்சி மன்றக் குழுவின் செயல் திட்டங்களை ஏற்கும். ஆட்சி மன்றத்தின் தலைவரே நாட்டின் தலைவராவார். 18 வயது வந்த அனைவரும் வாக்கு ரிமை பெற்றுள்ளனர். அல்பேனியா 27 மாவட்டங் களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அல்பேனியர், பேசும் மொழியினால் இருபெரும் பிரிவினராய்க் 'கெகசு' என்றும் 'டோகசு' என்றும் அழைக்கப்பெறுகின்றனர். இவர்கள் இசுகூம்பன் ஆற் றின் வடக்குக் கரையிலும் தெற்குக் கரையிலும் வாழ்கின்றனர். கிரீசை ஒட்டிய எல்லைப் பகுதிகளில் சிறுபான்மை கிரேக்கர்கள் வாழ்கின்றனர். 11 நகரங் களில் ஒவ்வொன்றிலும் 15,000 மக்களுக்குமேல் வாழ் கின்றனர். அவர்கள் வாழ்க்கைத்தரம் மிகவும் தாழ்ந்த நிலையிலேயே உள்ளது. அல்பேனியக் குடியானவ னொருவனின் மாத வருமானம் ஏறத்தாழ 320 உருபாய் ஆகும். இந்நாட்டில் பலரும் தொளதொள வென்ற காற்சட்டையையும் வெள்ளைத் துருக்கித் தொப்பிகளையும் அணிகின்றனர். பெண்கள் பூவேலைப்பாடு நிறைந்த பாவாடைகளையும் மேலங்கி களையும் அணிகிறார்கள்.

அல்பேனியா அரசு சமய நடவடிக்கைகளை எதிர்க் கிறது. 1967–இல் இது அனைத்துச் சமயச் சட்டங் களைப் பொருட்படுத்தாமல் அவற்றின் சொத்துகளை யும் கைப்பற்றிக் கொண்டது. அப்படித் தடைவிதித்த போது 70 விழுக்காட்டு மக்கள் முகம்மதியர்களாகவும் மற்றவர்கள் கிறித்தவர்களாகவும் இருந்தனர். 1945–இல் அந்நாட்டின் கல்வியறிவு 30 விழுக்காடாக இருந் தது. இப்போது அவர்களுள் பெரும்பான்மையினர் கல்வியறிவு பெற்றிருக்கின்றனர். எல்லாக் குழந்தை களும் கட்டாயமாக எட்டாண்டுகள் பள்ளிக்குச் செல்ல வேண்டும். திரானா இந்நாட்டின் தலைநகரம். இங்கே ஒரு பல்கலைக்கழகம் அமைந்துள்ளது.

அல்பேனியாவை மலைகளே மூடியுள்ளன. அந்நாட்டின் ஆல்பசு மலை 2833 மீட்டர் உயரம் இருக்கின்றது. மிக உயர்ந்த மலைமுடி கோனாப்பு. இது 3007 மீட்டர் உயரமுள்ளது. ஏடியாட்டிரிக்குக் கடற்கரையோரமாகச் சமவெளி காணப்படுகிறது. நாட்டின் பரப்பில் முப்பது விழுக்காடு புதர்க் காடுகள் உள்ளன. இந்நாட்டு ஆறுகளுள் புயூனேவில் மட்டும் கப்பல்கள் செல்லும். நாட்டின் மழையளவு 100 முதல் 150 செ.மீ. ஆகும்.

மக்களுள் முக்கால் பங்கினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். பொதுவுடைமைக் கூட்டுறவுப் பண்ணைகள் நாட்டின் பரப்பில் 9/10 பாகம் உள்ளன. கோதுமையும் தானியங்களும் விளைபயிர்களாகும். இவற்றோடு பருத்தி, பீட், கரும்பு, புகையிலை ஆகியவற்றையும் பயிர் செய்கிறார்கள். கால்நடைகளான ஆடுமாடுகளையும் வளர்க்கிறார்கள்.

அல்பேனியச் சுரங்கங்களில் குரோமைட்டும் செம்பும் வெட்டியெடுக்கிறார்கள். எண்ணெய் வயல்களும் உள்ளன. கிடைக்கும் பொருள்கள் ஆசுபால்டு, நிலக்கரி, நாப்தா, இலிக்னைட்டு, இரும்பு, நிக்கல் ஆகியவை.

இந்நாட்டில் 3200 கிலோமீட்டர் நீளத்திற்குச் சாலைகள் அமைந்திருக்கின்றன. ஏறத்தாழ 104 கி.மீ நீளத்திற்கு இருப்புப்பாதைத் தொடர் உள்ளது. அல்பேனியாவின் முக்கியத் துறைமுகம் தூரசு. தந்தி, தொலைபேசி அமைப்பு வசதிகளும் உள்ளன. திரானியில் ஒரு தொலைக்காட்சி நிலையம் உள்ளது.

கிறித்து பிறப்பதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்னர் அல்பேனியா இலூரியன் அரசாங்கத்தின்கீழ் இருந்தது. கி.மு. 167-இல் உரோமானியர்கள் அல்பேனியாவை வென்றார்கள். பின்னர்க் கி.பி. 300-1000 வரை அல்பேனியாவின்மீது கோத்துகள், பல்கேரியர்கள், இசுலாவுகள், நார்மானியர் போன்றோர் படையெடுத்தனர். கி.பி. 1014-இலிருந்து 1204 வரையுள்ள இடைக்காலத்தில் இது பைசாண்டியப் (Byzantine) பேரரசின் கீழ் இருந்துவந்தது. பின்னர்க் கி.பி. 1300-ஆம் ஆண்டளவில் இது சைபீரியப் பேரரசின் கீழ் இருந்தது. அதன்பின்னர் 1400-ஆம் ஆண்டளவில் அல்பேனிய



அல்பேனியாவின் தலைநகர் திரானே

நாட்டின் வீரன் இசுகந்தர் பெக்கு துருக்கியர்களை எதிர்த்தான். அவன் கி.பி 1468-இல் இறந்தபின்னர்த் துருக்கியர்கள் அந்நாட்டை வென்றனர். அதன் பிறகு 400 ஆண்டுகளுக்கு மேலாக அது உதுமானியப் பேரரசின்கீழ் இருந்து வந்தது. இந்த நேரத்தில் இசுலாம் சமயம் பரவியது. இந்நாடு முதல் பால்கன் போரின்போது 1912-இல் தன்னுரிமை பெற்றது. இதனைச் செருமனி நாட்டு இளவரசர் வில்லியம் சில மாதங்கள் ஆட்சி புரிந்தார். இந்நாடு 1920 வரையிலும் இத்தாலிக்கு அடங்கியிருந்தது. அகமது பைக் சோகு 1925-இல் ஆட்சியைக் கைப்பற்றி இந்நாட்டை ஒரு குடியரசு நாடாக அறிவித்துத் தாம் அக்குடியரசின் தலைவராகவும் மன்னராகவும் 1939 வரை வல்லாட்சி புரிந்தார்.

இரண்டாம் உலகப் போரில் இந்நாடு முதலில் இத்தாலி நாட்டிற்கும் பின்னர்ச் செருமானிய நாட்டிற்கும் உட்பட்டு இருந்தது. இந்நாட்டில் 1944-இல் உள்நாட்டுப்போர் மூண்டது. இப்போரில் பொதுவுடைமைத் தளபதி என்வர்கீர் வெற்றி பெற்றார். அவர் 1944-இல் நாட்டைப் பொதுவுடைமை ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். இப்போரில் யூகோசுலாவியர் உதவினர். பின்னர் 1948-இல் உருசியாவுக்கும் யூகோசுலாவியாவுக்கும் பிளவு ஏற்பட்ட போது இவர்கள் உருசியாவையே ஆதரித்தனர்.

அல்பேனியர்கள் 1960-ஆம் ஆண்டளவில் சீனாவை ஆதரிக்கத் தொடங்கினார்கள். அல்பேனியப் பிரதிநிதிகள் ஐக்கிய நாடுகள் அவையில் எடுத்துக்கொண்ட முயற்சிகள்தாம், சீனாவுக்கு ஐக்கிய நாடுகள் அவையில் 1971-இல் இடம் கிடைக்க உதவின.

பின்னர் 1970க்குப் பிந்திய ஆண்டுகளில் அல்பேனியாவுக்கும் சீனாவுக்கும் இருந்த உறவுகள் நலியத் தொடங்கிப் பின் 1978-இல் சீனா அல்பேனியாவுக்கு அளித்த அனைத்து உதவிகளையும் நிறுத்திவிட்டது.

அல்பேனியாவின் பரப்பு 28748 ச.கி.மீ. 1982-ஆம் ஆண்டுப்படி மக்கள் தொகை 27,50,000ஆகும். த.கோ.

**அல் - மன் சூர்** இச்சொல் இறையருள் பெற்ற வெற்றியாளன் என்ற பொருளைக் குறிக்கும். இதைச் சில முசுலிம் மன்னர்கள் பட்டப் பெயராகப் புனைந்து கொண்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் இருவர். ஒருவர் அபுசாபர் அப்துல்லா அல்-மன்சூர்(714-775) என்பவர். அவர் முகம்மது நபியின் மாமன் அப்பாசினுடைய குலத்தோன்றல்களான அப்பாசிய காலிபுகளில் இரண்டாம் மன்னர் ஆவார். கி.பி. 714-இல் ஓர் அடிமைப்பெண்ணின் மகனாகப் பிறந்தார் இவர். கி.பி 754-இல் இவருடைய அண்ணன் அபுல் அப்பாசு அல்சபாவிற்குப் பின் அரியணை ஏறினார். இவர் தாம் அரியணை ஏறுவதை எதிர்த்த இவருடைய உறவினரும், சிரியாவின் ஆளுநருமான அப்துல்லாவைத் தோற்கடித்தார். குராசனில் இவரை எதிர்த்த அபு முசுலிம் கொலை செய்யப்பட்டார். இவருடைய மகனான அல்-மகதியைக் குராசனின் ஆளுநராக நியமித்தார். கி.பி. 762-763இல் மெக்காவிலும் மெதீனாவிலும் ஏற்பட்ட கலகங்களை அல்மன்சூர் அடக்கினார். கி.பி. 762-இல் இவர் பாக்தாது நகரைக் கட்டத் தொடங்கி, கி.பி. 766-இல் முடித்தார்; கி.பி. 775 அக்டோபரில் மெக்காவுக்குப் புனிதயாத்திரை செல்லும் வழியில் பீர்மைமுன் என்ற இடத்தில் இறந்தார்.

முகம்மது இபின்- அபி-அமீர் அல்-மன்சூர் (கி.பி. 978-1002) என்பவர் இரண்டாமவர். இவர் இசுபெயினுக்கு வந்த அரேபியப் போர் வீரனின் மகனாவார். இரண்டாம் ஈசாம் என்ற சிறுவன் இசுபெயினில் மன்னராக இருந்தபோது, இவர் இரண்டாம் நிலைப் படைத் தலைவராக இருந்தார். இரண்டாம் ஈசாமின் அன்னை, இவருடைய காமக்கிழத்தி இருந்தாள் எனக் கூறப்படுகிறது. கி.பி. 978-இல் முதலமைச்சரை வெளியேற்றிவிட்டு, இவர் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார்; படையைச் சீர்திருத்தி அமைத்து, வடஇசுபெயினில் இருந்த கிறித்தவ அரசுகளைத் தாக்கித் தோற்கடித்தார். கி.பி. 981-இல் அல்-மன்சூர்-பீ-அல்லா என்ற பட்டப் பெயரைப் புனைந்துகொண்டார். அதுமுதல் இவரே உண்மையான ஆட்சியாளராக விளங்கினார்; அரசாங்க நிருவாகத்தைச் சீர்திருத்தினார்; வட ஆப்பிரிக்காவில் இருந்த முகம்மதிய நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கினார்; புலவர்களையும் கலைஞர்களையும் போற்றினார்; கி.பி. 994-இல் அல்மாலிக் அல்கரிம் என்ற பட்டப் பெயரைப் புனைந்து கொண்டார். கி.பி. 1002 ஆகசுட்டு 10 ஆம் நாள் மெதினாசீலி என்ற இடத்தில் இவர் காலமானார். அ.இரா.

**அல்மேடா (கி.பி. 1450-1510)** என்பார் போர்ச்சுகீசிய இந்தியாவின் முதல் வைசிராயாக இருந்தவர். 15-ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் இரண்டாம் கவுண்ட்டு அப்பராண்டசு என்பவருக்கு இளைய மகனாகப் பிறந்தார். அல்மேடா (Almeida) போர்ச்சுகலில் புகழ்பெற்ற குடும்பத்தில் தோன்றியவர். இளமைப் பருவத்தில் ஆரகானைச் சேர்ந்த பெர்டினான்டு என்பாரின் கீழ் ஐரோப்பிய முசுலிம்களான மூர்களுக்கு எதிரான போரில் (கி.பி.1485-1495) கலந்துகொண்டார். பிறகு இந்தியாவில் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிக்கு மார்ச்சு மாதம் முதல் நாள் அன்று இம்மானுவேலால் அரசப் பிரதிநிதியாக நியமிக்கப்பெற்றுப் பெரியதொரு கப்பற்படையுடன் சூலை மாதம் குயிலான் (சில்வா) வந்தடைந்தார். மொம்பாசாவைச் சேர்ந்த மூர்கள் இவரை மிகவும் கடுமையாக எதிர்த்து நின்றனர். இருப்பினும் அவர்களின் குடியிருப்புக்களை அழித்து, அவர்கள் செல்வங்களைக் கவர்ந்து, தமது படைபலத்தைப் பெருக்கிக்

கொண்டார். அஞ்சுடிவர் தீவுகள் மற்றும் கண்ணனூர் போன்ற இடங்களில் போர்ச்சுகீசியச் செல்வாக்கினை வளர்க்கக் கோட்டைகளை நிறுவினார். இந்தியாவிற்கு வருகை தந்தபோது, கொச்சியில் தங்கினார். அங்கே கி.பி.1503-இல் அல்பான்சோ-டி-ஆல்புகர்க்கு போர்ச்சுகீசியக் கோட்டை ஒன்றைக் கட்டினார். மலாக்காவுடன் இவர் செய்துகொண்ட வாணிக உடன்படிக்கையும், இவர் மகன் இலோரன்சோவின் கண்டுபிடிப்புகளும் இவரது ஆட்சிக்காலத்தில் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகளாகும். இவருடைய படைத் தலைவரான இலோரன்சோ (Lorenso) இலங்கைக்குச் சென்று குடியிருப்பை நிறுவிய முதல் போர்ச்சுகீசியராகக் கருதப்படுகிறார். அவ்வாறே பெர்னாண்டோவும் மடகாசுகரைக் கண்டுபிடித்த முதல் ஐரோப்பியராகக் கருதப்படுகிறார். இந்தியப் பெருங்கடலின் பகுதியில் வளர்ந்துவரும் போர்ச்சுகீசிய செல்வாக்கினை அழிக்க நினைத்த எகிப்தியர்களின் கப்பற்படையால், கி.பி. 1508-இல் பெர்னாண்டோ, தாபுல் என்ற இடத்தில் கொல்லப்பட்டார். மகனின் இறப்பால் வஞ்சம் தீர்த்துக் கொள்ள நினைத்த அல்மேடா, தமக்குப் பதிலாக அரசாங்கத்தில் நியமிக்கப்பட்ட ஆல்புகர்க்கைச் சிறையில் அடைத்து வைத்தார். பிறகு அரேபியர்களின்மீதும், அவர்களின் எகிப்தியக் கூட்டணியின்மீதும் போர் தொடுத்து, கோவா மற்றும் தாபுல் போன்ற இடங்களிலிருந்த கோட்டைகளைக் கொள்ளையடித்துத் தீயிட்டு அழித்தார். இறுதியாக, கி.பி.1509 பிப்பிரவரியில் தியூ என்ற இடத்தில் எதிரிகளின் கூட்டுப் படையை அழித்தார். உடனே கொச்சிக்குத் திரும்பிய இவர்,ஆல்புகர்க்கின் அரசாளும் உரிமையை எதிர்த்து நின்றார். ஆதலால் கி பி.1509--ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இவர் ஆல்புகர்க்கிற்கு இணங்கிடும்படி வலியுறுத்தப்பட்டார். மூன்று கப்பல்களின் துணை கொண்டு 1509 திசம்பர் மாதம் முதல் நாள் ஐரோப்பாவிற்குப் பயணமானார். அப்போது சல்தான்ன விரிகுடா என்று அழைக்கப்பட்ட டேபிள் விரிகுடாவில் நீர் நிரப்ப இவருடைய கப்பல்கள் நின்றன. இங்கே கி.பி.1510 மார்ச்சு மாதம் முதல் நாள் ஆட்டன்டாட்டுக் குடியினரால் தாக்கப்பட்டு இவர் கொலையுண்டார். இந்தத் தாக்குதலில் இவர்தம் முழுவீரத்தையும் வெளிக்காட்டினார். கேப்டவுன் என்ற இடத்தில் நடந்த இத்தாக்குதலில் கொல்லப்பட்ட 65 போர்ச்சுகீசியர்களுள் 12 பேர் தலைவர்கள். மறுநாள் அல்மேடாவின் உடல் கண்டுபிடிக்கப்பட்டது. இவருடைய உடல் அவ்விடத்திலேயே புதைக்கப்பட்டது.

ஈ.தி.

**அல்மோரா** இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஒரு மாவட்டம். இம்மாவட்டத்தின் தலைநகரும் அல்மோரா (Almora) என்னும் பெயருடையது. இந்நகரில் இராம்சே கல்லூரியும் படை நிலையமும் அமைந்துள்ளன. இங்குத் தேயிலை பயிரிடப்படுகிறது. இந்நகரம் கடல்மட்டத்திற்குமேல் 1940 மீட்டர் உயரத்திலுள்ளது. அல்மோரா நகரம் இமயமலையின் அடிவாரத்தில் உள்ளது; தில்லியிலிருந்து வடகிழக்காக 250 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

**அல்மோராச் சிறை** அல்மோராவில் உள்ள புகழ்பெற்ற சிறைச்சாலை. இச்சிறைக்கூடத்தில்தான் பண்டித சவகர்லால் நேரு 1934 செப்டம்பர் 16 முதல் 1935 செப்டம்பர் 4-ஆம் நாள் வரை சிறை வைக்கப்பெற்றார். தில்லியிலிருந்து நேரு இந்தச் சிறைக்கு மாற்றப்படக் காரணமாயிருந்தது அவருடைய துணைவியார் கமலா நேருதான். அந்த அம்மையார் நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணமாக அவருக்கு அருகாமையில் இருப்பது நலம் என்ற நோக்குடன்தான் நேருவை அல்மோராச் சிறைக்கு மாற்றினர்.

**அல்லங்கீரனார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். கீரன் என்பது இவரது இயற்பெயராகும். அல்லம் என்பது ஊர்ப் பெயரென்றும், பிற கீரனாரின்றும் வேறுபடுத்துதற்கு ஊர்ப் பெயரடை முன்னர்ச் சேர்க்கப்பட்டது என்றும் தெரிகிறது. அல்லம் என்னும் ஊர் இக்காலத்துக் கேரளப் பகுதியில், மலையாளம் மாவட்டத்தில் உள்ளது என்று இ. வை. அனந்தராமையர் குறிப்பிட்டுள்ளார். இவரது ஒரே பாடல் நற்றிணை 245-ஆம் பாடலாக அமைந்துள்ளது. நெய்தல் திணையில் தோழி கூற்றாக இப்பாடல் உள்ளது. தலைவனுக்குக் குறை நேர்ந்த தோழி தலைவியிடம் வந்து அவளது குறிப்பினைத் தன் வயம் ஆக்குவதாகப் பாடல் அமைந்துள்ளது. இப்பாடலில் குதிரை மீதேறி வந்த தலைவன், நம்மை வருத்துதலை அறியாதவனாய், நம்மால் அவன் வருத்தமுற்றதனை மட்டும் கூறிக் கடற்கரைச் சோலையில் உரையாடினான் என்று தோழி தலைவனின் நிலைமையினை அழகுறக் காட்டியுள்ளாள்.

**அல்லமாப் பிரபு[1]**: தமிழிலுள்ள வீரசைவ இலக்கியமாகிய பிரபுலிங்க லீலையில் இடம் பெற்றுள்ள அல்லமதேவராவார். இவரை அல்லமர், அல்லமதேவப்பிரபு என்றும் வழங்குவர். இவருடைய வரலாறு சிவப்பிரகாச சுவாமிகளால் பிரபுலிங்க லீலையில் அழகுற விளக்கப்பட்டுள்ளது. சமய வரலாற்றில் இடம்பெற்ற இவர், புராண முறையில் இந்நூலில் விளக்கப்பெற்றுள்ளார். இறைவனாகிய சிவபெருமானே அல்லமராக வந்தார் என்பதனை இந்நூல் 'எமது மெய்வடிவத்தானே அல்லம நாம மைந்தன் ஆயினம்' என்று இறைவன் கூற்றில் வைத்துக் குறிப்பிட்டுள்ளது.

அல்லமர் வள்ளி காவை என்னும் ஊரில், நிராங்காரன் சுஞ்ஞானி ஆகிய இருவர்தம் தவப் பயனாகத் தோன்றினார். இவர் சிவ அமிசம் உடையவர்; மாயையால் பற்ற இயலாதவர்; வீரசைவர். வசவ

தேவர் இவரை வணங்கி அரியாசனத் திருத்தி அமுது செய்தருள வேண்டினார். வசவர் இவர்பால் உள்ளத்தைச் செலுத்தியிருந்தமையால் தங்களைப் போற்ற மறந்தமை கண்ட அடியார்கள் சினந்து வேறிடம் சென்றனர். ஓர் இலட்சத்து எண்பதினாயிரம் அடியார்களுக்காகச் சமைக்கப்பட்ட உணவு வீணாகுமே என்று வசவர் வருந்தினார். அல்லமர் தமக்குச் சிறிது உணவிட வேண்டிப் பெற்று எல்லா உணவினையும் உண்டுவிட்டார். அடியர்களை உண்ண அழைத்துவருவாறு வசவரை அல்லமர் ஏவினார். தாங்கள் வாயும் கையும் செயற் படாமலேயே முழு நிறைவாக உண்டு மகிழ்ந்தோம் என்று அடியார்கள் கூறினார்கள். அல்லமர்க்குச் செய்யும் வழிபாடு அடியார்களைச் சென்றடையும் என்றும் கூறினார். அல்லமர் வசவருக்கு மெய்ப்பொருள் உணர்த்தினார் (பிரபுலிங்கலீலை).

அல்லமாப்பிரபு[2]: கன்னட நாட்டில் கி.பி 12-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் அறப்புரட்சி செய்தவருள் ஒருவர் அல்லமப்பிரபு என்னும் பிரபுதேவனாராவார்; அக்காலச் சிவசரணருள் மேம்பட்ட அறிவுடையவர். இவர் வைராக்கிய மூர்த்தி; அறிவின் உச்சியை எட்டியவர்; வீரசைவ சித்தாந்தக் கொள்கையினர். ஆனால் எல்லா நெறிகளிலும் இலங்கிய சான்றோர் பண்புகளைப் போற்றினார். எவ்வகைக் கட்டுப்பாட்டுக்கும் அகப்படாது நின்று குறைகள் எங்கிருப்பினும் கண்டித்தார். உயர்ந்த பண்பும் உண்மையன்பும் நிறைந்த ஞானியாக விளங்கினார். இவருடைய வசனங்கள் (பேச்சு மொழி) சில எளிமையாகவும் பல அருமையாகவும் விளங்குகின்றன. இவர் அறிவரிய அறிவை அறிந்தவர். எனினும் அறியாதவர் போலிருப்பார்.

அல்லமரின் வாய்மொழிகளை 'ஆழ்ந்த வசனம்' என்பர். தக்க விளக்கம் பெறாமல் பல வசனப் பொருளை உணர்வது அரிது. சொல்லுக்கும் செயலுக்கும் உள்ள வேற்றுமைகளைச் சாடுவன இவர்தம் வசனங்கள். அவை அறியாமை அகந்தைகளைக் கண்டிக்கின்றன. அவை அழிவுத் தாக்குதல் அல்ல; ஆக்கந் தருபவை; விழிப்புணர்வை ஊட்டுபவை. "தெய்வம் கல்லில் இல்லை; நம்மிடமே உள்ளது; சாதனையால் அதனைக் காணவேண்டும். உடலுக்குள் ஓங்கிய ஆலயம் இருக்க வேறு தேவாலயம் வேண்டுமா? முரண்படச் சொல்லவில்லை ஐயா! குகேசுவரா! நீ கல் எனில் நான் யார்?" என்று கேட்கிறார்.

இவர் வசனங்களில் குருட்டு நம்பிக்கைகளையும் மூடக் கொள்கைகளையும் கடுமையாகத் தாக்கியுள்ளார். இருள் சூழ்ந்துள்ள சமுதாயத்துக்கு உயர்வேற்றம் தரும் சிவவாக்கியராகவே விளங்குகிறார். கன்னட இலக்கியத்துக்கும் வீர சைவ சமயத்துக்குமேயன்றி, மக்கள் வாழ்வுப் பேரொளிக்கும் முன்னோடியாக அல்லமதேவர் விளங்குகிறார். த.கோ.

**அல்லா** என்பது நபிகள் நாயகத்தால் நிலைநாட்டப்பெற்ற இசுலாம் மதத்தில் பரம்பொருளுக்கு அராபிய மொழியில் நிலவும் பெயர். அல்லா (Allah) என்னும் சொல் அல், இலாகி என்ற இரண்டு சொற்களின் இணைப்பாகும். அல் என்ற சொல் ஆங்கிலத்தில் 'தி' (The) என்ற சுட்டாகும். இலாகி என்றால் கடவுள் என்று பொருள்படும். இசுலாமியத் திருமறையான திருக்குரான் பரம்பொருளை அல்லா என்று குறிப்பிடுகிறது. 'அல்லாவையன்றிப் பிறிதொரு தெய்வமில்லை; நபிகள் நாயகம் அல்லாவின் தூதர்' என்பது முசுலிம்களின் கூற்றாகும்.

**அல்லாகு**: இச்சொல் இசுலாமியச் சமயத்தின் கடவுளைக் குறிக்கிறது. முகமதியர்கள் எந்த நாட்டிலிருந்தாலும் எந்த மொழியைப் பேசினாலும் தனி முதல்வனான இறைவனை அல்லாகு என்று சொல்கிறார்கள். முகமதியர்கள் சமய நூலாகிய திருக்குரானில் முழு முதல்வனாகிய கடவுளுக்கு 'ரப்பு' என்ற வேறு பெயரையும் காண்கிறோம். அல்லாகுவின் சிறப்புப் பெயர்கள் தொண்ணூற்றொன்பது என்று நபிகள் நாயகம் கூறியிருக்கிறார். அப்பெயர்களுக்கு அசுமா-அல்-சிபாத் என்ற பெயர் வழங்கப்படுகிறது. அல்லாகு என்பது மேற்கூறப்பட்ட பெயருடன் நூறாவது பெயராகச் சேர்த்து, "ஏக ஈசுவரன்" பெயராகக் கூறப்படுகிறது. அல்லாகு என்பதை முதலிலும் தொண்ணூற்றொன்பது பெயர்களுக்குப் பிறகு நூறாம் பெயராகவும் வழங்குவது வழக்கம். இந்நூறு பெயர்களையும் முகமதியர்கள் செபமாலையைக் கொண்டு மனத்துட் சொல்லி வழிபடுவது வழக்கம்.

முகமதியர்களின் கொள்கைப்படி "அல்லாகு ஒருவன்; அவனுடைய ஆற்றலை மீற எவராலும் முடியாது; அவன் எப்பொழுதும் நிலைத்திருப்பவன்" என்ற கருத்துகளை விளக்கக்கூடிய "லா இலாஹூ இல்லல்லாஹூ" (வணக்கத்துக்குரியவன், அல்லாகுவைத் தவிர வேறு ஒரு கடவுளும் இல்லை) என்ற சொற்றொடரை முகமதியர்கள் உள்ளன்போடு ஒப்புக் கொள்ளுகின்றனர். திருக்குரானில் அல்லாகுவினுடைய இயல்பு, தத்துவம் முதலியன நன்கு விளக்கப் பட்டுள்ளன.

**அல்லாப் பிச்சைப் புலவர்** பாண்டிய நாட்டுக் குலசேகரன் பட்டினத்தில் சர்க்கரைச் சாயபுத்தம்பி என்பாருக்கு மகனாகப் பிறந்தார். இவர் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; இசுலாமியப் பற்று மிக்கவர். 'சுகபுல்லீமானென்று வழங்கா நின்ற ஈமானுடைய பயன்கள்', 'சைகு தாவுது ஒலியுல்லா பேரில்

பாடல்கள்', 'அசரத் சையிது குத்பு சாகுல் அமீது மீறான் கௌது சுல்தான் காதிறு கன்இசவாய் சாகிபு ஆண்டவர் அவர்கள் பேரில் பாடல்கள்' முதலியன இவர் இயற்றியவை. ஐதுறூசு நயினார்ப் புலவர் பாடிய 'நவமணிமாலை' என்னும் முகியதீன் புராண நூலைப் பாராட்டிச் சிறப்புப்பாயிரம் செய்துள்ளார். இரட்டையாசிரிய விருத்தத்தால் அமைந்த இச்சிறப்புப் பாயிரத்தின் துணையால் ஐதுறூசு நயினார்ப் புலவரின் வரலாற்றினைத் தெரிந்து கொள்ளலாம்.

மு.த.

***அல்லி அரசாணி மாலை***, அல்லி என்னும் அரசியின் கதையைக் கூறும் நாட்டுப்புறப் பாடல் நூலாகும். இதனைப் புகழேந்திப் புலவர் பாடியதாகச் செவி வழிச் செய்தி கூறும். இவர் இயற்றியன வாகக் கூறப்படும் கதைப்பாடல்கள், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் எழுத்து வடிவம் பெற்றுக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் அச்சாகியுள்ளன.


அல்லி அரசாணி மாலையில் கூறப்படும் கதை மகாபாரதக் கதைப் பாடல்களுள் ஒன்றாகும். சோழ நாடு பஞ்சமுற்றபோது பாண்டியன் சோழனுக்காக இந்திரனிடம் போய் மழைவரம் கேட்டான். பாண்டியன் நடந்துகொண்ட முறை சரியில்லை என எண்ணி இந்திரன் அவன்மீது சினம் கொண்டு சோழ நாட்டிற்கு வளத்தையும், பாண்டிய நாட்டிற்கு வறட்சியையும் நல்கினான். பாண்டியர்கள் குழந்தை வரம் கேட்டுத் தவம் செய்தார்கள். அவர்களுக்குச் சொக்கநாதர் அருளால் அல்லி மகளாகப் பிறந்தாள். இடைக்காலத்தில் பாண்டிய அரசின் ஆட்சிப் பொறுப்பேற்ற நீள்முகன் எனும், வெள்ளாட்டி பெற்ற மகன் அரசைத் திரும்பக் கொடுக்க மறுத்துப் பாண்டியர்களை அடிமையாக்கித் திறை பெற்று வந்தான். அல்லி பெரியவள் ஆனதும் நீள்முகனை வென்று ஆட்சியைப் பெற்று இராணியானாள். ஆண்களை வெறுக்கும் இவளைத் தீர்த்த யாத்திரைக்குக் கிருட்டிணனோடு வந்த அருச்சுனன் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான். கிருட்டிணன் உதவியால் பல இடையூறுகளைக் கடந்து பாம்புருவில் அந்தப்புரம் சென்று, அவளை மயக்கிக் கூடி, அவள் கழுத்தில் தாலியும் கட்டிவிடுகிறான். அல்லி அறிந்து, அந்த இழிவைப் போக்கிடப் பாண்டவர்கள் மீது படையெடுத்தாள். இவளை நேரில் வெல்ல முடியாமல் சகாதேவன் புலிக்கூண்டால் தந்திரமாகப் பிடித்து விடுகிறான். இறுதியில் பாஞ்சாலி அல்லியின் மனத்தினை மாற்றி மணமுடித்து வைக்கிறாள்.

இக்கதை, அல்லி திருமணம், அல்லி அருச்சுனா, அல்லி அர்ச்சுனன், அல்லி சரித்திரம் எனும் பெயர்களில் நாடகமாகவும், நடத்தப் பெற்று வருகிறது.

சு.ச.

***அல்லி மரைக்காயர்***. ம, கி.பி.19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நாகூரில் பிறந்தார். மீறாலெப்பை மரைக்காயர் மகனாகிய இவர் அக்குபேரில் பஞ்சரத்தினம், நபிநாயகத்தின் மீது பதிகம், இமாம் அசைன் உசைனாண்டவர் பேரில் தசரத்தினம், முகியித்தீன் அப்துல் காதிர் ஆண்டவரவர்கள் பேரில் பதிற்றந்தாதி, கலறத்து சாகுல் அமீது ஆண்டவர் பேரில் நவமணி மாலை, வண்டுவிடுதூது, அன்னம் விடுதூது, அம்மானை, முனாசாத்து, நெஞ்சறிவுறுத்தல் என்னும் பத்து நூல்கள் எழுதினார். இப்பத்து நூல்களும் பிரபந்தக் கொத்து என்னும் பெயரில் கி.பி. 1878-இல் ஒரே தொகுதியாக அச்சாகியுள்ளது. இது 128 செய்யுட்களைக் கொண்டது. மேலும் இவர் நாகை வள்ளல் செய்னுல்லாபிதீன் மியாவைப்பற்றிப் 'பங்கலாச் சிறப்புப் பதிகம்' என்னும் நூல் ஒன்றும் பாடியுள்ளார். இது 14 செய்யுட்களைக் கொண்டது.

***அல்லூரி சீதாராம ராசு*** ஆந்திரப் பிரதேசத்தைச் சார்ந்த புரட்சிவாதி. கி.பி. 1897-ஆம் ஆண்டு ஆந்திரப் பிரதேச மேற்குக் கோதாவரி மாவட்டத்திலுள்ள மொகல்லு என்னும் ஊரில் பிறந்தார். இவருடைய தந்தை வேங்கடராமராசு என்பார் இராசமகேந்திரவரத்தில் நிழற்படக்கூடம் வைத்திருந்த கலைஞர். இராசமகேந்திரவரத்திலும் நரசாபுரத்திலும் கல்வி கற்றவர் அல்லூரி சீதாராம ராசு. வேதங்கள், இரேகை சாத்திரம், மந்திர சாத்திரங்கள் முதலியவற்றை அறிந்திருந்ததோடு, இவர் வில்வித்தை, குதிரையேற்றம் ஆகிய கலைகளையும் கற்றுத் தலை



அல்லூரி சீதாராமராசு

யாய வீரராகத் திகழ்ந்தார். விசாகப்பட்டண மாவட்டத்தில் கிருட்டிணா தேவிப்பேட்டையில் இராமருக்குக் கோயில் கட்டி ஓராண்டுக் கடுந்தவம் புரிந்தார். அங்கு வாழ்ந்த கோயர்கள் என்னும் பழங்குடி மக்கள் இவரை வில்லேந்தியவர் (தனுர் தாரி) என்னும் பொருளில் கலியுக இராமனாகக் கொண்டு பக்தியுடன் வணங்கினர். அவ்வேழை மக்களின் மனக்குறை தீர அரும்பாடுபட்டு அவர்களிடையே நாட்டுப்பற்றை வளர்த்துப் படைக்கலமேந்திய தேசபக்தர்களாக்கிய பெருமை இவரைச்சாரும்.

ஒத்துழையாமை இயக்கம் 1921-22-ஆம் ஆண்டுகளில் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், இவரும் அவ்வியக்கத்தில் பங்குகொண்டு தம் துணைவர்களையும் வெள்ளையராட்சிக்கெதிராகத் தூண்டிவிட்டார். அரசு நடத்தும் நீதிமன்றங்களைப் புறக்கணித்துவிட்டு, இவர்கள் தமக்கே சொந்தமான ஊராட்சி நீதி மன்றங்களை அமைத்துக் கொள்ள வேண்டுமென இவர் கருத்துரைத்தார். வெகுண்டெழுந்த அரசு இவரைச் சிறைசெய்தது. ஆயினும் போதுமான சான்றுகள் இன்மையால் இவரை அரசு விடுவித்தது.

இவர் சிறையிலிருந்து விடுவிக்கப் பெற்றாலும், இவருடைய துணைவர்கள் வெள்ளை அரசாங்கத்தாலும், அதற்கு உறுதுணையான கங்காணிகளாலும் அச்சுறுத்தப் பட்டுச் சொல்லொணாத் துயர்களுக்கு ஆளாயினர். காந்தம்துரை, மல்லுதுரை என்னும் இரு சகோதர இளைஞர்கள், பாசுடியன் என்னும் வெள்ளைக்கார அதிகாரியால் பதவிநீக்கம் பெற்று நிலங்களையும் பறிகொடுத்தனர். உழைப்பிற்கேற்ற ஊதியம் கேட்ட ஏழைத் தொழிலாளர்கள் சந்தானம் பிள்ளை என்னும் கண்காணிப்பாளரால் கண் காது தெரியாமல் அடித்து நொறுக்கப்பட்டனர். இக்கொடுமைகளுக்கு இரையான பழங்குடி மக்கள் அல்லூரி சீதாராமராசு தலைமை தாங்கி அக்கொடுமையை எதிர்க்க வேண்டுமெனக் கோரினர்.

அல்லூரி சீதாராம ராசு அம்மக்களின் வேண்டுகோளை ஏற்றுப் படைக்கலம் தாங்கிய கலகத்திற்கு ஆயத்தமாகி, அயலாரை எதிர்ப்பதென்னும் முடிவுக்கு வந்தார். காவல் நிலையங்களைத் தாக்கித் துப்பாக்கிகளையும் ஏனைய போர்க்கருவிகளையும் பறித்துக் கொண்டனர். 1922 ஆகசுட்டு 22-ஆம் நாள் சிந்தலப் பள்ளி காவல்நிலையம் இவருடைய தாக்குதலுக்கு உள்ளாயிற்று. இவர் அதே ஆண்டு அக்டோபர் 15-ஆம் நாள் கோதாவரி மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதி ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் சுட்டடிகலா காவல் நிலையத்தைத் தாக்கப் போவதாக அறிவித்தார். குறிப்பிட்ட நாளில் குறித்த நேரத்தில் இவர் அக்காவல் நிலையத்தை அடைந்தபோது காவல் நிலையம் திறந்து கிடந்தது. இவரை வரவேற்க ஆள் ஒருவரும் தென்படவில்லை. இவர் காவல் நிலையத்திலிருந்து படைக்கலங்கள் அனைத்தையும் கவர்ந்து கொண்டு, எடுத்துச் சென்ற பொருள்களுக்குரிய பற்றுச்சீட்டையும் காவல் நிலைய நாளேட்டில் குறித்து வைத்துவிட்டு வெளியேறிவிட்டார். ஆங்கிலேயர் அச்சமுற்றனர். பயிற்சி பெற்ற ஆங்கிலப் படைக்கலப் படைவீரர்களால் இவரைப் பிடிக்க இயலவில்லை. இவரைப் பிடிக்க உதவும் செய்தியைச் சொல்வோருக்கு உரூபாய் பத்தாயிரம் என்று அரசு அறிவிப்புச் செய்தது. ஆயினும் பயன் ஒன்றுமில்லை.

இவருக்கு இன்னல்கள் வரத் தொடங்கின. இவருடைய அணுக்கத் தோழர்களில் ஒருவரான காந்தம் துரை போர் ஒன்றில் கொல்லப்பட்டார். அக்கிதுரை எனப்படும் இவர் நண்பர் பிடிப்பட்டார். அல்லூரியின் தம்பியும் காட்டிக் கொடுக்கப்பட்டார். இவர் தனித்தவரானார்.

இவரைப் பின்பற்றியவர்கள் சொல்லொணா அல்லலுக்கு உள்ளாயினர். அவர்கள் மீது தண்டனை வரி விதிக்கப்பட்டது. அல்லூரிக்கு ஆதரவு காட்டிய, ஒரு பாவமும் அறியாத பழங்குடி மக்கள் தொல்லைக்காளாயினர். எனவே ஆங்கிலேயரிடம் சரணடைவது ஒன்றே அவர்களின் தொல்லையைப் போக்கும் ஒரே வழி என்ற முடிவுக்கு வந்தார் இவர். காவி உடை தரித்துத் துறவி போல வந்து சரணடைந்த இவரை ஆங்கில இராணுவத்தினர் கைப்பற்றி நெஞ்சில் சுட்டு வீழ்த்தினர். சுதந்திரத்திற்குப் பாடுபட்ட அல்லூரி சீதாராம இராசு நாட்டுக்காகக் களபலியானார்.

**அலக்நந்தா** கங்கையாற்றின் நான்கு துணை ஆறுகளுள் ஒன்று. இது பரதனின் நாட்டில் பாய்வதாகக் கருதுவர். இது நிலத்தில் பாய்ந்து வரும் ஆறு என்று வைணவர்கள் கருதுவர். ஆர்த்துப் பாய்ந்து வந்த இவ்வாற்றைச் சிவபெருமான் தம் சடாமுடியில் வாங்கிக் கொண்டார் என்றும் கூறுவர். இமயமலையில் பத்திரி-கேதாரப் பயணம் செய்பவர் அலக்நந்தாவை இன்றும் காண்கிறார்கள்.

**அலகப்பா** பண்டைய இந்திய அரசுப்பகுதிகளுள் ஒன்று. இங்குப் புத்தரின் எச்சங்களைக் கொண்டு நிலைநாட்டப் பெற்ற தூபி ஒன்று கட்டப்பெற்றிருந்தது. தம்மபதம் பற்றிய விளக்கவுரையில் அலகப்பா (Allakappa) என்ற பகுதியின் பெயர் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளது.

**அலகாபாத்து** உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ளதொரு மாநகரம். இதன் பழம் பெயர் பிர

யாகை என்பதாகும். இந்திய நாட்டின் புனித நகரங்களுள் இதுவும் ஒன்று பிரயாகை என்னும் பெயரை அக்பர், அலகாபாத்து (Allahabad) என மாற்றினார். அலகாபாத்து என்பது கடவுள் நகரம் எனப்பொருள்படும். இது உத்தரப்பிரதேச மாநிலத்தின் இரண்டாம் பெருநகர்மாகும். இயமுனை ஆற்றின் வடகரையில் அமைந்துள்ள இந்நகரத்தின் வடமேற்கில் கங்கையும் யமுனையும் ஒன்றாகக் கலக்கின்றன. நிலத்தடியில் பாய்ந்தோடி வரும் சரசுவதி என்னும் ஆறும் இவற்றோடு இணைவதால் இதனை முக்கூடல் அல்லது 'திருவேணி சங்கமம்' என்றும் அழைப்பர். திரிவேணி சங்கமத்தில் நீராடுவதால் பாவங்கள் தொலையும் என்பது இந்துக்களின் மரபுவழிக் கருத்தாகும். இங்கு இயமுனை ஆற்றின் வலக்கரையில் உள்ள அக்பர் கட்டிய கோட்டையும் அரண்மனையும், சும்மா மசூதியும் புகழ்பெற்றவை. கோட்டையின் நுழைவாயிலின் அருகில் அசோகர் கற்றூண் உள்ளது. அதன் உயரம் ஏறத்தாழ 12 மீட்டராகும். அத்தூணில் அசோகர் கட்டளைகளும், கி.பி நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த குப்தப்பேரரசர் சமுத்திரகுப்தரின் வெற்றிகளைக் குறித்த வடமொழிச் சாசனம் ஒன்றும் பொறிக்கப்பெற்றுள்ளன. பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் கும்பமேளாவும், மாகமேளாவும் சிறப்பாக இந்நகரில் கொண்டாடப்பெறும். கும்பமேளாவின்போது திருவேணி சங்கமத்தில் நீராட இலட்சக்கணக்கானவர் நாடு முழுவதிலுமிருந்தும் பிரயாகைக்கு வருகின்றனர். முசுலிம்களின் ஆட்சிக் காலத்திலும் இந்நகரம் சிறப்புப் பெற்றிருந்தது. குசுருபாக் என்னும் நினைவுச் சின்னம் இசுலாமியர் ஆட்சிக் காலத்தில் நிறுவப்பெற்றதாகும். கிழக்கிந்திய வணிகக் குழுவின் ஆட்சியின்போது கி.பி. 1801-ஆம் ஆண்டில் இந்நகரம் ஆங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டது. கி.பி. 1857 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பெரும் புரட்சியின்போது இங்கும் கலகம் மூண்டது. இங்கு நேரு குடும்பம் வாழ்ந்துவந்த ஆனந்தபவன் இந்திய விடுதலைப் போராட்டத்தின்போது காந்தியடிகளின் மையமாயிற்று. இந்திய தேசியக் காங்கிரசுக் கட்சியின் பல மாநாடுகள் இங்கு நடைபெற்றன. காங்கிரசு கட்சியின் தலைமையிடமாக ஆனந்தபவன் கி.பி. 1948-ஆம் ஆண்டுவரை நீடித்தது. இந்நகரில்தான் அலகாபாத்துப் பல்கலைக் கழகம் கி.பி. 1887-ஆம் ஆண்டு நிலைநாட்டப்பெற்றது. உத்தரப் பிரதேசப் பல்கலைக் கழகங்களில் அது சிறந்ததெனப் பாராட்டப்படுகிறது.

**அலகாபாத்துக் கற்றூண் சாசனம்** குப்தப் பேரரசரான சமுத்திர குப்தரால் கி.பி. 360-இல் வெளியிடப்பட்டது. இக்கற்றூண் சாசனம் கி.பி.1834-இல் முதன் முதல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 'வங்காள ஆசியக் கழக'த்து இதழின் தொகுதியில் இதனைக் காணலாம். டாக்டர் பிளீட்டு என்னும் அறிஞர் இதனைக் 'குப்தர் சாசனங்கள்' என்னும் தொகுதியில் முதல் சாசனமாக வெளியிட்டார்.

இச்சாசனம் 12 மீட்டர் உயரமுள்ள அசோகர் கற்றூணின் ஒரு பக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இத்தூண் முதலில் கௌசாம்பியில் இருந்தது. பின்னர் அலகாபாத்திற்கு மாற்றப் பெற்றது. இது குப்தர் காலத்திய நாகரி எழுத்தில் முப்பத்து மூன்று வரிகளில் எழுதப்பட்டிருக்கிறது. ஆயினும், முழுவதும் ஒரே நீண்ட வாக்கியமாக அமைந்துள்ளது. ஏழு, எட்டு, ஆகிய வரிகளில் அழகிய கவிதை ஒன்றும் காணப்படுகிறது. வடமொழிப் புலவர் பெருமானான காளிதாசருக்கு நிகரான திறமையுடைய ஒரு கவிஞரால் இது இயற்றப்பட்டிருக்கலாம் என்பது சிலர் கருத்து. இதனை இயற்றியவர் மகாதண்டநாயகர் (பெரும் படைத்தலைவர்) அரிசேனர் என்பவர். இவ்விவரம் அச்சாசனத்திலேயே காணப்படுகிறது.

இச்சாகனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகள் அவை நிகழ்ந்த காலத்தை வரிசைப்படுத்தி அதற்கேற்பக் கூறுவதாகக் கொள்ளமுடியாது. நிகழ்ச்சிகள் முன்பின்னாக அமைந்திருக்கக் கூடும். ஆகவே இந்தச் சாசனத்தைக் கொண்டுமட்டும் சமுத்திர குப்தரின் ஆட்சிக்காலச் செய்திகளைக் கால வரிசைப்படுத்திக் கூறிவிட முடியாது. இந்தச் சாசனத்தில் குறிக்கப் பெற்றுள்ள ஆள் பெயர், இடப்பெயர்கள் என்பவற்றை முழுவதும் மனநிறைவோடு அடையாளம் கண்டு கூறுதல் இயலாததொன்று. ஆயினும் பொதுப் படையாக இந்தச் சாசனம் என்ன கூறுகிறது என்பதை அறிந்து கொள்வதில் தடையில்லை, சாசனத்தின் பொருள் விளக்கமாகவே உள்ளது. பழைய சாசனங்கள் எல்லாவற்றிலுமே சில சொற்றொடர்கள் அரசர்கள் முதலியோரை மிகையாகப் புகழ்வது காணப்படும். அவ்வரசர்கள் வாழ்நாளிலேயே பொறிக்கப்படும் சாசனங்களில் இத்தகைய மிகைப்புகழ்ச்சி காணப்படுதல் மிகவும் இயற்கை என்பது பெறப்படும். அவ்வாறு ஓரளவு சில புகழ்ச்சிகள் இந்தச் சாசனத்திலும் புகுந்திருக்கக்கூடும். அவற்றை நீக்கி விட்டுக் கணக்கிட்டால் பெரும்பாலும் நம்பக்கூடிய செய்திகளையே இந்தச் சாசனம் கூறுவதாகக் கொள்ளலாம். இதிற்கூறும் செய்திகள் வரலாற்றுச் செய்திகளாகவே இருந்திருக்கும் என்றுங்கொள்ளலாம். இந்த ஒரு சாசனத்தில் கூறியுள்ள விவரங்களை வைத்துக் கொண்டே சமுத்திரகுப்தரின் வரலாற்றை ஆசிரியர்கள் வரைகின்றனர். சாசனத்தின் முதல் நான்கு வரிகளில் ஓரளவு இடர்ப்பாடு காணப்படுமாயினும், பிற பகுதிகளைப் படிப்பதும் அவற்றின் பொருளைப் புரிந்து கொள்வதும் எளிதேயாம்.

இச்சாசனத்தின் வாயிலாக நமக்குத்தெரியவரும் விவரங்களில் சமுத்திரகுப்தரின் சிறப்புகள், சில போட்டியாளர்களை வலுவில் நீக்கிவிட்டு அவர் ஆட்சிக்கு வந்த விவரம், வெற்றி விவரங்கள், தென்னிந்தியாவை உட்படுத்தியது, சாசனம் இயற்றிய வரைப் பற்றிய விவரம் ஆகியவை குறிப்பிடத்தகும்.

சமுத்திரகுப்தரின் வெற்றிகளையும் அவரிடம் தோற்றவர்களைப் பற்றிய செய்திகளையும் கூறும் பகுதி இந்தச் சாசனத்தில் மிகவும் சிறப்பானது. இவ்வெற்றிகள் அவர் அசுவமேதயாகம் செய்ததற்குக் காரணமாயிருந்தன. வென்ற நாடுகளுள் பலவற்றைத் தோற்ற மன்னர்களிடமே திரும்பவும் கொடுத்து விட்டமையால். அவரது பேரரசு தென் இந்தியாவில் மிகுதியாக விரிவடையவில்லை. தக்காணத்திலும் தென் இந்தியாவிலுமாக அவ்வரசர் வென்று, ஆனால் இணைத்துக் கொள்ளாத நாடுகளின் அரசர்களைப் பற்றிய பட்டியல் கீழ்க்கண்டவாறு அமைந்துள்ளது: கோசலத்தை ஆண்ட மகேந்திரர்; மகாகாந்தாரத்தின் மன்னர் வியாக்கிரராசர்; கேரளத்து மந்தராபூர்; பிசுட்டபுரத்து மன்னர் மகேந்திரகிரி; கோட்டூராவன் சுவாமிதத்தர்; எரண்டபள்ளியின் அரசர் தாமனர்; காஞ்சியைப் புரந்த விட்டுணுகோபர்; அவமுக்தாவின் அரசர் நீலராசர்; வேங்கியின் வேந்தர் அசுத்தி வர்மர்; பாலக்காவின் காவலர் உக்கிரசேனர்; தேவராட்டிரத்து மன்னர் குபேரர், குந்தலபுரத்து மன்னர் தனஞ்சயர் மற்றும் தட்சிணாபதத்தை ஆண்ட பிற அரசர்கள் ஆகியோர் என்று பொதுப்படையாக இக்கணக்கீடு கூறுகின்றது. இப்பட்டியல் பெரும்பாலும் தென்னகத்தில் எப்பகுதியில் ஆண்ட மன்னரையும் விட்டு வைத்ததாகத் தெரியவில்லை. ஆயினும் சமுத்திரகுப்தரின் பேரரசு எல்லையை ஒரு வரைபடத்தில் சரிவரக் குறித்துக் காட்ட வேண்டுமாயின், மேற்கூறிய பட்டியலில் குறிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நாட்டின் பெயரையும் உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டும். சில பெயர்கள் இப்போது, அல்லது குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட வரலாற்றுக் காலத்தில் வழக்கில் இருந்த பெயர்களாகத் தோன்றவில்லை; சில பெயர்களை வேறு சில பெயர்களாக மயங்கி விடுதற்கு இடமுண்டு. இந்த மயக்கங்களும் இடர்ப்பாடுகளும் நீங்கினால் அன்றி எந்த நாட்டு மன்னர்களையெல்லாம் அந்தக் குப்த அரசர் வென்றார் என்பதைத் தெளிவாகக் காண முடியாது. இந்த இடர்ப்பாடுகள் காரணமாக இவ்வெற்றிகளைப் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. கோட்டுரா, பாலக்கா, தேவராட்டிரா முதலிய பெயர்கள் வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்கு மிகுந்த தொல்லை தந்துள்ள இடப்பெயர்கள். கேரளா என்னும் பெயரைச் சேர நாடான கேரள நாடாகக் கருதிக் கோட்டுரா என்னும் இடத்தைக் கோவை மாவட்டத்திலுள்ள கோட்டூர் என்னுமிடமாக மயங்கியவர்கள் உண்டு. இதனைச் சார்ந்துள்ள பாலக்காட்டினையே 'பாலக்கா' குறிப்பதாகவும் அவர்கள் தவறாகக் கருதினர். இக்காரணங்களால் சமுத்திரகுப்தர் தென்னாடு முழுவதின்மீதும் படையெடுத்துவந்து ஆங்காங்கு உள்ள அரசர்களை வென்றதாகக் கருதப்பட்டது. ஆனால்,இது தவறான கருத்து. தட்சிணாபதத்தில் ஆண்ட பிற அரசர்களையும் சேர்த்து சமுத்திர குப்தர் வென்றதாக அலகாபாத்துக் கற்றூண் சாசனம் கூறுவதால், டாக்டர் ஓயர்னல் போன்ற ஆசிரியர்கள் சமுத்திர குப்தரின் பேரரசு அசோகர் பேரரசைக் காட்டிலும் தென்னகத்தில் மிகப்பரந்திருந்தது என்பர். தேவராட்டிரத்தை, மதுரை மாவட்டத்தின் மேல்கோடியில் உள்ள தேவாரம் என்னுமிடத்தோடு ஒன்றிப் பார்த்த அறிஞர்களும் உளர். ஆயினும் அச்சாசனத்தை ஊன்றி ஆராய்வார்க்கும், அக்காலத்துத் தென்இந்திய வரலாற்று நிலையை மனத்திற்கொண்டு முடிவுகளை மேற்கொள்பவர்களுக்கும், சமுத்திரகுப்தர் கேரளம் வரையில் படையெடுத்து வந்து வென்றதாகக் கொள்ளுதல் தவறு என்பது எளிதில் புலப்படும்.

ஊன்றிப் பார்ப்பவர்களுக்குச் சமுத்திரகுப்தரின் போர்ப்படைகள், மகதத்தில் தொடங்கித் தீபகற்ப இந்தியாவின் கீழைக்கரையோரமாக முன்னேறி ஆந்திர நாட்டில் இருந்த பல அரசர்களை வென்றார் என்பதே உண்மை என்பது தெரியவரும். பாலக்கா என்பது நெல்லூர் மாவட்டத்திலுள்ள பாக்கை என்பதாம்; கோட்டூரா என்பது கஞ்சம் மாவட்டத்திலுள்ள கோட்டூர் என்பதே. கோதாவரி மாவட்டத்திலுள்ள கோலேர் என்பதே கேரலா என்று கொள்ளலாம். கஞ்சம் மாவட்டத்திலுள்ள ரெண்டபள்ளி என்பதே எரண்டபள்ளியாதல் கூடும். தேவராட்டிரத்தையும் மகாராட்டிரத்தோடு இணைக்காமல் அது விசாகப் பட்டினம் மாவட்டத்தில் உள்ள ஒரு பகுதியாக இருக்கலாம் என்பது பிரெஞ்சு வரலாற்று அறிஞரான சுவோ துப்ராயில் என்பவரது கருத்து. கோசலம் என்பது தென்கோசலம். பிசுட்டபுரம் கோதாவரி மாவட்டத்திலுள்ள பித்தாபுரம் என்பது தெளிவு. வேங்கியும் காஞ்சியும் ஐயத்திற்கு இடம் தரவில்லை. இவை யெல்லாம் தீபகற்ப இந்தியாவின் கீழைக்கரையிலேயே ஆந்திர நாட்டின் தென்கோடி வரையில் உள்ள பிரதேசத்தில் அடங்கி விடுவதால் 'பிற இடங்களும்' அங்கேயே இருப்பதாகக் கொள்ள வேண்டும். சமுத்திர குப்தர் கோதாவரி, கிருட்டிணா, நெல்லூர் மாவட்டங்களைக் கடந்து வந்து பிறகு மேற்கே திரும்பிச் சதாரா, மண்டியா மாவட்டங்கள் வழியாகத் திரும்பவும் மகதம் அடைந்ததாகப் பேராசிரியர் சத்தியநாத அய்யர் கருதுகிறார்.

இனி, சமுத்திரகுப்தர் கற்றூண் சாசனத்தில் குறிக்கப்பட்டுள்ள இடங்களில் ஆண்ட மன்னர்களை வென்றதாகக் கூறலாமேயன்றி, அவ்வவ் இடங்களுக்கெல்லாம் படையெடுத்துச் சென்று அந்த மன்னர்களை வென்றார் என்று கொள்ளத் தேவையில்லை எனத் தெரிகிறது. பல மன்னர்களை ஒருங்கு சேர்த்துப் பட்டியலாக்கி அவர்களை வென்ற செய்தியைக் கூறும்போது, அவ்வாறு வெல்லப்பட்ட மன்னர்கள் ஒரு இராணுவக் கூட்டுச் சேர்ந்து திக்விசயத்தை முன்னிட்டுத் தென்னாடு நோக்கிப் படைகொண்டு எழுந்த மகதப் பேரரசரைத் தோற்கடித்து விரட்டும் எண்ணத்தோடு ஒரே இடத்தில் திரண்டு அவரை எதிர்த்திருக்கக்கூடும். அவ்வாறு அவரை அக்கூட்டு மனனர்கள் எதிர்த்த இடம் கிருட்டிணா ஆற்றங்கரையாகவும் இருக்கலாம். காஞ்சியைச் சேர்ந்த விட்டுணுகோபனைக் காஞ்சியில்தான் வென்றிருக்க வேண்டும் என்பதில்லை. அவ்வாறு கற்றூண் சாசனமும் வெளிப்படையாகக் கூறவில்லை. விட்டுணுகோபனும் பிற ஆந்திரமன்னர்களோடு சேர்ந்து வடக்கே சென்று மகத மன்னரை எதிர்த்துப் போரிட்டுத் தோற்றிருக்கலாம். சமுத்திரகுப்தர் தொண்டைமண்டலம் வரையில் படையெடுத்து வந்தார் என்பது, அசோக மௌரியர் தொண்டைமண்டலத்தைத் தமது பேரரசில் அடக்கியிருந்ததாகச் சில வரலாற்றாளர்கள் கூறுவதுபோல ஏற்றுக் கொள்ளத் தேவையில்லாததொரு கூற்று என்று கொள்ளலாம்.

இச்சாசனத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளிலிருந்து வேறொரு சிக்கலும் எழுந்துள்ளது. அதாவது தாம் வென்ற அரசர்களுக்கே அவர்களுடைய நாடுகளைத் திரும்பவும் மகத மன்னர் வழங்கிவிட்டதாகச் சாசனம் கூறுவது வரலாற்று விவாதம் ஒன்றைக் கிளப்பியுள்ளது. வென்ற நாடுகளைத் திரும்பவும் தோற்ற மன்னர்களுக்கே திருப்பித் தருவதில் கொள்கை என்ன, அதற்குக் காரணம் என்ன என்பதே அச்சிக்கல். வடநாட்டில் சமுத்திரகுப்தர் வென்ற பகுதிகளைப் பேரரசில் சேர்த்துக் கொண்டுவிட்டார் என்பது தெரிகிறது. ஆகையால்சமுத்திரகுப்தர்விந்தியத்திற்குத் தென்பால் உள்ள நாடுகளை வெல்லுதலை மட்டும் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்; அவற்றைப் பேரரசோடு இணைத்துக் கொள்ளும் எண்ணம் அவருக்கில்லை. திக்குவிசயத்தின் நோக்கமே பிற மன்னர்கள் தம்மைப் பேரரசர் என்று ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது தான். அதன் முடிவாக அவர் அசுவமேதயாகம் செய்தார். அவ்வாறு செய்வதற்கு ஓர் அரசருக்கு 'சாம்ராட்' என்னும் தகுதி ஏற்பட்டுவிட்டால் போதும்; நாட்டைப் பிடித்துப் பேரரசோடு இணைக்க வேண்டுவதில்லை என்று கொள்வதில் தவறில்லை. அன்றியும் திக்குவிசயத்தை மேற்கொள்ளாத பிற நாட்டுப் பேரரசர்களும் இவ்வாறு வென்ற நாட்டைத் தம் அரசோடு இணைத்துக் கொள்ளாமல் தோற்ற மன்னருக்கே விட்டுக் கொடுத்த செய்தி வரலாற்றில் காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, மகா அலெக்சாந்தர், போரசு என்பாரது நாட்டை அவருக்கே திரும்ப அளித்து விட்ட செய்தி கிரேக்க வரலாற்றால் அறியக் கிடக்கிறது. சுவோ துப்ராயில் என்னும் ஆசிரியர், இவ்வாறு வென்ற நாட்டைச் சமுத்திரகுப்தர் தோற்ற மன்னர்க்கே திரும்பவும் அளித்துவிட்ட செய்தியை, அவர் வென்ற நாட்டைப் பின்னர் விட்டதாகக் கொள்வார். அவ்வாறு கொண்டு பல அரசர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து குப்த மன்னரைப் புறங்கண்டு தங்கள் நாடுகளை மீட்டுக் கொண்டனர் என்னும் கருத்துப்படக் கூறுவார். இக்கூற்றுக்குக் கற்றூண் சாசனத்தில் போதிய ஆதரவு இருப்பதாகத் தெரியவில்லை.

இச்சாசனம் சமுத்திரகுப்தரது தனித்தன்மையைப் போற்றுகின்றது. அவரைக் கவிராசர் என்று புகழ்கிறது. ஆனால், இக்கூற்றைத் தவிர அவரது புலமையை நிலைநாட்ட வேறு சான்று ஒன்றும் இல்லை. அவர் இயற்றிய நூல்களோ கவிதைகளோ ஒன்றுகூட இல்லாத நிலையில் இச்சாசனம் அம்மன்னரை லிச்சாவி வழிவந்ததாகக் கூறுகிறது. அதாவது 'லிச்சாவியின் மகள் வயிற்றுப் பேரன்' என்பது சாசனக் கூற்று. லிச்சாவி அரசரோடு மகதத்து மன்னர்களுக்குத் திருமணத் தொடர்பு உண்டு என்பது வரலாறறிந்தது.

ந.சு.

**அலகுப் பகுப்பு:** ஒரு சுரத்தான நிலையுள் (தாயினுள்) 22 அலகுகள் உண்டு என்று பண்டைத் தமிழிசைப் பாணர்கள் பகுத்துக் கணக்கிட்டிருந்தார்கள். அலகு என்பது ஓர் இசை நரம்புக்கும் (சுரத்திற்கும்) அடுத்த இசை நரம்புக்கும் இடையே ஏற்படும் இடைவெளி ஒலி அளவு ஆகும். இந்த ஒலி அளவைக் குறிக்கும் பெயர்கள் மாத்திரை, சுருதி, அலகு என்பன. ஏழிசை நரம்புகளின் பெயர்கள் – குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன. இப்பெயர்களின் முதல் எழுத்தால் இவை குறிக்கப்படுகின்றன.

ஏழ்நரம்புக்கு அலகுப் பகுப்புகள்

| நரம்புகள் | கு | து | கை | உ | இ | வி | தா | 7 | நரம்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுவரம் | ச | ரி | க | ம | ப | த | நி | 7 | சுவரம் |
| அலகு | 4 | 4 | 3 | 2 | 4 | 3 | 2 | 22 | அலகு |

இங்குப் பகுத்துக் கூறப்பட்டுள்ள அலகுகள் செம்பாலை என்னும் பண்ணுக்குரிய அலகுகள் இங்கு மூன்றுவகை அலகுகள், உள்ளன: அவை 4,3,2 என்று அலகுத் தொகை பெறுவன.

நான்கு அலகுகளைப் பெறுபவை –கு.து.இ (ச.ரி.ப)
மூன்று அலகுகளைப் பெறுபவை –கை.வி. (க.த)
இரண்டு அலகுகளைப் பெறுபவை -உ.தா. (ம.நி)
இவற்றை விளக்கும் சிலப்பதிகார மேற்கோள் பாடல்:

அலகுப் பகுப்பு

குரலே துத்தம் இளியிவை நான்கும்
விளரி கைக்கிளை மும்மூன் றாகித்
தளராத் தாரம் உழையிவை ஈரிரண்டு
எனஎழும் என்ப அறிந்திசி னோரே
— (சிலப்.வேனிற். 31–32 அரும்பதவுரை)

மேற்கூறிய செம்பாலைக்குரிய இந்த நரம்புக் கணக்குகளையே சேந்தன் திவாகர நிகண்டும் பஞ்ச மரபு நூலும் கூறுகின்றன. சிலப்பதிகாரமும் சுட்டிக் காட்டுகிறது. எனவே ஒரு சுரத்தான நிலைக்கு 22 அலகுக் கணக்கு முறையே 2000 ஆண்டுகட்கு முன்னிருந்து வழங்கி வருகிறது என அறியலாம். இந்தப் பகுப்பைப் பன்னிரு நரம்புகட்கும் பகுத்துக் காண்போம்.

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | |
| கு | து | து | கை | கை | உ | உ | இ | வி | வி | தா | தா | |
| ச | ரி | ரி | க | க | ம | ம | ப | த | த | நி | நி | |
| +2 | 2 | +2 | 1 | +2 | 2 | 2 | + 2 | 1 | +2 | 2 | 2 | = 22 |
| +4 | | +4 | | +3 | 2 | | + 4 | | +3 | 2 | | = 22 |

இந்த அலகுகள் செம்பாலைக்குரியன. செம்பாலை என்பது அரிகாம்போதி இராகம் ஆகும். வீ.ப.கா.சு.

**அலகுமுறை**: கற்பிக்கும் பாடப்பகுதிகளில் ஒரு பெரும் பிரிவு 'அலகு' என்று கொள்ளப்படும். அலகு என்பது சிறு கூறுகளை ஒருங்கே அமைத்து மாணாக்கரின் கவனத்தை ஈர்க்கத்தக்க வகையில் ஒரு குறிப்பிட்ட அளவில் அமைவது. இந்த வகையில் அமைக்கப் பெறும் அலகு பெரிய அளவில் இருக்க வேண்டும் என்பதில்லை. சான்றாக, ஒரு பாடநூலை எடுத்துக் கொண்டு, அதனை நான்கு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஓர் 'அலகு' என்று அமைக்கலாம். அவ்வாறே, ஒவ்வொரு பாகத்தையும் பல பிரிவுகளாகப் பிரித்துக் கிளை அலகாக அமைக்லாம். அந்த ஒவ்வொரு பகுதியும் பல உட்பிரிவுகள் கொண்டதாகவும் அமையலாம். இத்தகைய உட்பிரிவுகளில் சிறிய பகுதிகளை 'அடிப்படைகள்' எனக் கூறலாம். ஒவ்வோர் அலகும் பொருளுடன் அமைந்து முழுப் பாடத்தின் நடைமுறைக் கூறாக விளங்க வேண்டும். இந்திய வரலாற்றினை இந்து, மொகலாய, ஆங்கிலேய, சுதந்திரத்திற்குப் பிந்திய காலப் பகுதி என்று நான்கு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் அலகினையும் அடிப்படைகளையும் அமைத்துக் கொள்ளலாம்.

இத்தகைய அலகுகளை அமைத்துக் கொண்டபின் அதற்கேற்பக் கற்பிக்கும் முறைகளை முடிவு செய்ய வேண்டும். 'அலகு முறை' (Unit Method) என்பதைவிட 'அலகு முறைகள்' என்பதே சரியான விளக்கமாகும் என்று வெசுலி (Wesley) கருதுகிறார். அலகு என்பது பல பொருள்களையும், அனுபவங்களையும் கோவையாக அமைப்பதன் மூலம் மாணாக்கர்களிடம் பயிற்றுப் பயனை ஏற்படுத்த உதவுவதுதான் என்பது வெசுலி அவர்களின் கருத்து. ஆகையால் பாடப் பகுதிகளை இணைப்பதில் மாணாக்கர்களின் தேவைகளை மனத்திற் கொள்ள வேண்டும். சமூக அறிவியல் பாடப் பகுதியில், இந்த 'அலகு முறை' நல்ல பயனளிக்கும். 'நம் நாட்டின் குடிநீர் வசதி' என்ற அலகை எடுத்துக் கொண்டால், அதனுடைய பல பகுதிகளை மாணாக்கர்கள் புரிந்து கொள்ளும் வகையில் சூழலை அமைத்துக் கொள்வோமேயானால், அது குறிப்பிடத்தக்க அளவில் பயிற்றும் பயனை ஏற்படுத்தும். இவ்வாறே ஆற்றங்கரை நாகரிகம், மக்களாட்சி, தேசிய மன்னர்கள் ஆட்சி ஆகியவற்றை 'அலகு' முறையில் ஒழுங்கமைக்கும் பொழுது, அந்த அலகைப் பற்றிய பாடப் பொருள் அடிப்படைகள் இடம் பெற வேண்டும். தொடர்பற்ற விவரங்களை அறவே விலக்க வேண்டும்.

"அலகுப் பாட முறைகளை" த் திட்டமிடுதல் மிக இன்றியமையாததாகும். பாடங்களை மட்டும் மனத்திற் கொண்டு தனித்தனியே திட்டம் வகுத்தல் அலகுப் பாட முறைக்கு அடிகோலாது. கல்வி பயிலும் மாணவர்கள் பாடத்தில் வரும் விவரங்களையும், கருத்துகளையும் சீரிய முறையில் பாகுபாடு செய்து, ஒப்பிட்டுத் தெளிவாகப் புரிந்து கொள்ளுவதற்கு அல

குப்பாட முறை இன்றியமையாததாகும். இந்த முறை, படித்த பாடப் பொருள்களை வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கும் உதவுகிறது. கற்றல் என்பது மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியுடன் இணைந்ததாகும். செயல்முறை வழி வந்த கல்வியே அலகு முறைப் பாடத்திட்டத்தின் உயிர் நாடியாகும். குறிக்கோள், அதை அடைதற்கு வேண்டிய கற்றல் அனுபவங்கள், அவ்வப்பொழுது மதிப்பீடு செய்தல் ஆகியவை அலகுப்பாட முறையின் சிறந்த கூறுகளாகும். அலகுப்பாட முறை மாணவர் வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது; மாணவர் முழுமையான அறிவைப் பெற ஒரு சிறந்த கருவியாக அமைந்துள்ளது; அவர்களுடைய ஆர்வங்களைத் தூண்டி, விரும்பத்தகக மனப்பான்மையை அமைத்துப் பயன்தரக் கூடிய கண்ணோட்டத்தோடு செம்மைப்படுத்துகிறது.

அலகு முறையில் கற்பிப்பதற்கு, டாக்டர் மாரிசன் (Dr. Morrison) ஒரு முறையை ஏற்படுத்தியுள்ளார். அலகு என்பது கற்கவேண்டிய செய்திகளை இணைத்து, பெரும் பகுதியாகவும், அதே சமயத்தில் மாணாக்கர்களுக்குச் சிறந்த வகையில் முழுமையாகப் புரிய வைக்கும் சிறு பகுதியாகவும் அமைதல் வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கிறார். அவரது திட்டத்தில் ஐந்து படிகள் கூறப்பட்டுள்ளன.

1) புத்தாய்வு செய்தல் (Exploration)
2) முன்னிலைப் படுத்துதல் (Presentation)
3) தன்வயப்படுத்துதல் (Assimilation)
4) அமைப்புக்காணல் (Organisation)
5) விவரங் கூறல் (Recitation)

முதற்படியில் மாணவனின் முன்னறிவை அல்லது பின்னணிச் சூழலைத் தகுந்த சோதனைகள் மூலம் அறிந்து அந்நிலையிருந்து பாடம் தொடங்க முற்பட வேண்டும். இரண்டாவது படியில் உரையாடல் அல்லது விரிவுரை மூலம் ஆசிரியர் பாடத்தின் தலையாய செய்திகளை எடுத்துக் கூற வேண்டும். மூன்றாவது படியில் மாணாக்கர் வேகமாகக் கற்றல், ஆசிரியர் மேற்பார்வை அல்லது ஆய்வுக்கூட முறையில் புரியாதவற்றைப் புரிய வைக்கும் பெரும்பகுதியாக அமைத்துக் கொள்ள வேண்டும். நான்காவது படியில் மாணவர்கள் வகுப்பில் கூடித் தாங்கள் கற்ற பாடத்தைக் காரண காரிய ஒழுங்கு படுத்தி, அதன் சுருக்கத்தை எழுத வேண்டும். ஐந்தாவது படியில் எழுதிய பாடச் சுருக்கங்களில் மூன்று அல்லது நான்கை எடுத்துக் கொண்டு ஆய்வு செய்தல், ஒன்று கூடி உரையாடல் முதலியவை நடைபெறும். இவ்வாறு ஐந்து படிகள் மூலம் அலகு பற்றிய பாடப் பொருளைக் கற்பிக்க முற்படுவதால் மாணவர்கள் முழுத் திறமையைப் பெறுகின்றனர்.

அலகு முறையில் வேறு விதமான படிகள் அமைந்திருத்தலையும் காணலாம். நியூ செர்சி (New Jersy) கையேட்டில் பின்வரும் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை 1) நோக்கம் நிறுவுதல், 2) திட்டம் தயாரித்தல், 3) செயலாற்றல், 4) மதிப்பீடு செய்தல் என்பனவாகும்.

அலகு முறையின் சிறப்புக் கூறு, எல்லா மாணாக்கரும் ஊக்கத்துடன் முழுமையாகக் கற்று, சூழலின் பல பகுதிகளை அறிந்து வாழ்க்கையைப் பயனுள்ள வகையில் அமைத்துக் கொள்வதுதான். ஆனால் இந்த முறையை அமைப்பது கடினமாகும். கால வரையறைப்படி திட்டம் வைப்பதில் கவனம் வேண்டும். இல்லாடில் காலம் வீணாகும் குழப்பமான வழி முறையில் அலகை அமைத்துக் கொண்டால் பயிற்றுதலின் குறிக்கோளைஅடைய முடியாது. ஆசிரியர் பின்பற்றும் வழிமுறைகளை ஈடுபாடின்றி மேற்கொண்டால் கற்றல் நிறைவுறாது. சொந்தச் சிந்தனையைக் கைவிட்டு வழிகாட்டிகளின் அடிச்சுவட்டில் சென்றால் கற்றல் ஏட்டளவில் சுருங்கும். ஜெ.இரா.

துணை நூல்கள்:

**Arthur C. Bining and David H. Bining**, "Teaching the Social Studies in Secondary Schools", Third Edition, Mcgraw Hill Book Company, 1952.

**Edge**, "Teaching Social Studies in High Schools", Third Edition, D.C., Heath and Company, Boston, 1950.

***அலங்கார சாத்திரம்*** என்பது அணி இலக்கண நூலாகும். இலக்கியம் தோன்றி வளர்ந்த பின் இலக்கணம் தோன்றுவது இயல்பு. இந்திய நாட்டில் தொன்மையும் இலக்கிய வளமும் பெற்ற இரு பெரும் மொழிகளான தமிழுக்கும் வட மொழிக்கும் இது பொருந்தும். இவ்விரு மொழிகளிலும் காப்பியங்கள் நிறைந்துள்ளன. காப்பியத்தை அணி செய்வன இவை என்று அவ்வக்காலங்களில் தோன்றிய நூல்கள் வரையறை செய்துள்ளன. அத்தகைய நூல்களை அணி நூல் அல்லது அலங்கார சாத்திரம் என்று கூறுவர்.

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களுள், பொருளதிகாரம் தமிழ் இலக்கியத்தின் அகப்பொருள் புறப்பொருள் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் கூறுவது. சிறப்பாகத் தொல்காப்பியத்தின் மெய்ப்பாட்டியல், செய்யுளியல், உவமவியல், மரபியல் என்னும் நான்கு இயல்களும் தமிழிலக்கிய இயல்புகள் பற்றியன. இவை இலக்கியத் திறனாய்வின் பகுதியாகக் கொள்ளத்தக்கன.

தமிழிலக்கியத்தில், பொருள் பற்றி அகம், புறம் என்ற பாகுபாடும், திணைபற்றிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகைப் பாகுபாடும் சிறப்பியல்புகளாகக் கருதப்படுகின்றன. இயற்றமிழ்ப் பாடல்களை எழுதுவோரும் நாட்டிய நாடகங்களை நடிப்போரும் இப்பாகுபாடுகளை உளத்தில் கொள்ளவேண்டும் என்பதும், அகப்பாடல்களில் வரும் தலைவன் தலைவி முதலியோர் பெயர் சுட்டப் பெறாமல் பொதுவாகவே குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதும் தொல்காப்பியர் காலத்து இலக்கிய மரபு.

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்னும் எட்டு மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவை நாட்டியம், நாடகம், செய்யுள் ஆகியவற்றில் ஆளப்படுவன. ஒவ்வொரு மெய்ப்பாட்டிற்கும் உரிய பொருள், பொறியுணர்வு, குறிப்பு, சத்துவம் ஆகியவற்றைக் கணக்கிட்டு முப்பத்திரண்டு பொருள்களைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவை பரதரின் நாட்டிய சாத்திரத்திலும் கூறப்பட்டுள்ளன.

ஒரு காப்பியப் பாடலில், சொற்களிலிருந்து நேராகப் பெறப்படும் கருத்தை விடக் காப்பியச்சுவை பயக்கும் ‘‘குறிப்புப் பொருளைத்’’ தருவதில் சில கவிஞர்கள் வெற்றி பெற்றுள்ளார்கள். இக்குறிப்புப் பொருளைத் தொல்காப்பியர் ‘இறைச்சி’ என்பார். இதை வடமொழி அலங்கார சாத்திரம் ‘வியங்கியப் பொருள்’ என்றும் ‘தொனிப்பொருள்’ என்றும் கூறும்.

தொல்காப்பியர் உவமையை ஓரியலில் விளக்கியுள்ளார். உவமம் என்பது எக்காலத்திலும் எம்மொழியிலும் ஆளப்படும் முதன்மையான அணி. ஒரு பொருளை மற்றொரு உயர்ந்த பொருளோடு ஒப்புமை காட்டி அழகுற விளக்குவதே உவமம் எனப்படும். அதை உள்ளுறை உவமம், ஏனை உவமம் என்று இருவகையாகத் தொல்காப்பியர் காட்டியுள்ளார். இவ்வுவமத்தைத் தொழில், பயன், வடிவு, வண்ணம் என்ற அடிப்படையில் நான்கு வகையாக விரிக்கிறார்.

தொல்காப்பியர் செய்யுளியலில் கூறிய‘வண்ணம்’ ‘வனப்பு’ ஆகியன பற்றிய கருத்துகள் திறனாய்வுத் தன்மையுடையனவாகக் கொள்ளத்தக்கன. ‘மெல்லென்ற சொற்களால் விழுப்பம் பொருந்திய பொருளைச் சொல்லுதல்’ (செய். 553), ‘தெரிந்த சொற்களால் செம்மையாக எடுத்துச் சொல்லுதல்’ (செய். 553) என்பன, காப்பிய வனப்பைக் கூறும்போது இலக்கியத்திற்கு அணி செய்யும் தெளிவு, இனிமை முதலான காப்பியப் பண்புகளைச் சுட்டுவனவாகக் கொள்ளலாம். இவை போன்ற ‘வனப்புகள்’ சொற்களின் அமைப்புப் பற்றியும் பொருள் பற்றியும் தரப்பட்டுள்ளன. காப்பியத்தில் ஒலிநயம் அமைத்துப் பாடுவது மரபு. இதனையும் தொல்காப்பியர் பாகுபாடு செய்து விளக்கியுள்ளார்.

திவாகர நிகண்டில் (கி.பி. 700) நான்கு தொகுதிகளாக 28 அணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை வடமொழியில் பாமகரால் எழுதப்பட்ட காவியாலங்காரத்தையும், தண்டியால் எழுதப்பட்ட காவியாதரிசத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. பிங்கல நிகண்டும் (கி.பி. 10-ஆம் நூற்) 28 அணிகளையே குறிப்பிட்டுள்ளது. யாப்பருங்கல விருத்தி 27 அணிகளைக் குறிக்கும்.

புத்தமித்திரர் (கி.பி. 1100) தமிழ் வடமொழி இரண்டையும் பயின்றவர். வீரசோழியம் என்ற இலக்கணத்தை எழுதியவர். இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்து பிரிவுகளைக் கொண்டது. தண்டியால் வடமொழியில் இயற்றப்பட்ட காவியாதரிச நூலின்படியே அலங்காரப் படலத்தை அமைத்துள்ளதாக ஆசிரியர் கூறியுள்ளார். செய்யுள் என்ற மனிதருக்குச் சொல் உடலாகவும், பொருள் உயிராகவும் உள்ளது என்பது அவர் கருத்து. உடலுக்கு அணிகள் போலச் செய்யுளை அணி செய்வன அலங்காரங்கள். காவியாதரிசத்தை ஒட்டியே வைதருப்ப நெறியின் ஆவியாகிற ‘சிலிட்டம்’ முதலான பத்துக் காப்பிய குணங்களையும், ‘தன்மை’ முதலாகப் ‘பாவிகம்’ ஈறாக அலங்காரங்கள் முப்பத்தைந்தையும் குறிப்பிடுவதோடு ‘சுவை’யையும் (காப்பிய ரசத்தை) அணி எனக் கருதிச் சேர்த்துள்ளார். ஆசிரியர் பௌத்தராகையால், தொல்காப்பியர், பரதர், தண்டி ஆகியோர் குறிப்பிட்டுள்ள எட்டு மெய்ப்பாடுகளோடு ‘சாந்தத்தை’ ஒன்பதாம் மெய்ப்பாடாகக் கொண்டுள்ளார்.

அடுத்துக் குறிப்பிடத்தக்கவர் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தண்டியலங்கார ஆசிரியர். இவர் காஞ்சியில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பல்லவர் அரசவையில் வாழ்ந்த தண்டி என்பவர் ஆக்கிய ‘காவியாதரிசம்’ என்ற வடமொழி அலங்கார நூலைத் தமிழில் ஆக்கியவர். தமிழாக்கம் செய்யும்போது தமிழிலக்கியங்களுக்கேற்ப ஒரு சில மாற்றங்களையும் செய்துள்ளார். வடமொழி நூலில் காப்பிய வகைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தண்டி அதை விடுத்துச் செய்யுளணிகளை விளக்குவதையே முதன்மையான குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார். எனினும், முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என்று தமிழ்ச் செய்யுளை வகைப்படுத்தியுள்ளார். வடநூலை ஒட்டி வைதருப்ப நெறி, கௌடநெறி என இருவகை நெறிகளையும் அவற்றைச் சார்ந்த செறிவு, தெளிவு,

முதலான பத்துக் காப்பியக்குணங்களையும் விளக்கியுள்ளார்.

தொகைநிலைச் செய்யுள் என்ற வகை தமிழுக்கே சிறப்பாக உள்ளது. இது பொருள், இடம், காலம், யாப்பு முதலான அடிப்படைகளில் பாகுபாடு செய்யப்படுவது. புறநானூறு, களவழி நாற்பது, கார் நாற்பது. கலித்தொகை முதலாயின இவற்றிற்கு எடுத்துக்காட்டுகள். தொடர்நிலைச் செய்யுள் பொருள் தொடர்நிலை (சீவகசிந்தாமணி) என்றும், சொல் தொடர்நிலை (அந்தாதி) என்றும் இரு வகையாகும். பொருள் தொடர்நிலை 'பெருங்காப்பியம்' என்றும், 'காப்பியம்' என்றும் இருவகைப்படும். பலவகைப் பிரபந்தங்களும் 'காப்பியம்' என்ற பிரிவில் அடங்கும். காவியாதரிசத்தைப் பின்பற்றித் தண்டியலங்காரத்திலும் பொருளணியியலில் முப்பத்தைந்து பொருளணிகள் விளக்கப்பட்டுள்ளன. அக்கால நிலைக்கேற்பச் சொல்லணியியலில் வல்லினம், இடையினம், மெல்லினம் என்ற பாகுபாட்டு அடிப்படையில் மடக்கணியும் நிரோட்டகம், நாகபந்தம் முதலான பல்வேறுவகைச் சொல்லணிகளும் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இறுதிப் பகுதியில் கவிஞன் தவிர்க்க வேண்டிய வழுக்கள் சுட்டப்பெற்றுள்ளன.

திருக்குருகைப் பெருமாள் கவிராயர்(கி.பி. 1700) மாறனலங்காரத்தை இயற்றியுள்ளார். இவர் ஓரளவு தொல்காப்பியத்தையும் பெருமளவு தண்டியலங்காரத்தையும் பின்பற்றியுள்ளார். இந்நூல் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என்ற நான்கு இயல்களைக் கொண்டுள்ளது. இதில் குறிப்பிடத்தக்கவை வருமாறு: தண்டியலங்காரத்தில் கூறப்பட்ட இரு நெறிகளுக்கு மேலாக அக்கால வடநூன் மரபையொட்டிப் பாஞ்சால நெறி என்னும் மூன்றாம் நெறியையும் குறிப்பிட்டுள்ளார். இந்நூலில் 64 பொருளணிகளும் 32 சொல்லணிகளும் விளக்கப்பட்டுள்ளன.

அப்பய்ய தீட்சிதரால் வட மொழியில் எழுதப்பெற்ற குவலயானந்தம் கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு, கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் விளக்க உரையுடன் வெளியிடப்பட்டது. இதில் 120 அணிகள் இடம் பெற்றுள்ளன. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூலின் அணியதிகாரப் பிரிவில் 30 சொல்லணிகளும், 30 பொருளணிகளும் விளக்கப்பட்டுள்ளன. எண்வகைப் பொருள்கோளும் சொல்லணியில் அடங்கும்.

அணியிலக்கணம் ஒன்று கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் உரைநடையில் எழுதப்பெற்றது. இதில் 102 பொருளணிகள் விளக்கப்பட்டுள்ளன. இது வடமொழியில் சயதேவரால் எழுதப்பட்ட சந்திராலோகத்தைத் தழுவியது. இந்நூற்றாண்டின் மத்தியில் முத்துவீரிய உபாத்தியாயர் எழுதிய முத்துவீரியம் என்ற இலக்கணத்தின் அணியதிகாரம் என்ற ஐந்தாம் பகுதியில் சொல்லணி, பொருளணி, செய்யுளணி என்ற வகையில் அணிகளும், நெறிகள், பொருள்கோள், வழுக்கள், மலைவுகள் ஆகியனவும் விளக்கப்பட்டுள்ளன. இதே நூற்றாண்டின் பிற்பகுதியில் சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் என்பவரால் சந்திராலோகம் என்ற நூலில் நூறு அணிகள் விளக்கப்பட்டுள்ளன. இந்நூற்றாண்டில் சீனிவாசராகவாச்சாரி என்பவர், வடமொழியில் உள்ள காவியப் பிரகாசம் போன்று காப்பியப்பாகுபாடு, சொற்பொருள் வகை, காப்பிய நெறிகள், மெய்ப்பாடு, சொல்லணி, பொருளணி ஆகியன கொண்ட தண்டியலங்கார சாரம் என்ற நூலை ஆக்கியுள்ளார்.

நாட்டிய சாத்திரம் இயற்றிய பரதர் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக் கூடும். அவர் தம் நூலில் நாட்டியத்தின் பல்வேறு இயல்புகளை மிகுதியும் விளக்கினாலும், காப்பிய இலக்கணத்தின் முன்னோடியாக உவமை உருவகம், தீபகம், இயமகம் என்ற நான்கு அலங்காரங்கள், சிலேடம், பிரசாதம் முதலான பத்துக் காப்பிய குணங்கள், கூடார்த்தம், அர்த்தாந்தரம் முதலான பத்துக் காப்பிய தோடங்கள், முப்பத்தாறு இலட்சணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிட்டுள்ளார். பின்னர் வந்த அலங்கார சாத்திரக்காரர்கள், பரதர் கூறிய இலட்சணங்களுள் சிலவற்றை அலங்காரங்களாகவும் வேறு சிலவற்றைக் காப்பியக் குணங்களாகவும் கொண்டுள்ளார்கள்.

காஞ்சியில் வாழ்ந்த தண்டி (கி.பி. 700) வடமொழியில் காவியாதரிசம் என்ற அலங்கார நூலை எழுதினார். அதனைத் தழுவிக் கன்னட மொழியில் எழுதப்பட்ட கவிராசமார்க்கமும், சிங்கள மொழியில் எழுதப்பட்ட 'சிய-பாள்-லகாரமும் (சுவீய பாடாலங்காரம்) கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. தமிழகத்தில் கி பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒருவர் இதே நூலைப் பெரும்பகுதி தழுவித் 'தண்டியலங்காரம்' என்னும் பெயரில் ஓர் அணி நூலைத் தமிழில் எழுதினார். அது இன்றளவும் போற்றப்பட்டு வருகிறது. காவியாதரிசத்தில் காவியத்தின் இலக்கணம் கூறப்பட்டிருப்பதுடன், அக்காவியம் வடமொழி, பிராகிருதம், போன்ற மொழி அடிப்படையிலும், உரைநடை (கத்தியம்), செய்யுள் (பத்தியம்) இரண்டும் கலந்தது (மிசிரம்) என்ற வகையிலும் பாகுபாடு செய்யப்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. பெருங்காப்பியத்தின் இலக்கணமும் தரப்பட்டுள்ளது. சிலேடம், பிரசாதம் முதலான காப்பியக் குணங்களுள் வைதருப்பம் கவுடம் என்ற நெறிகளுக்கும் தண்டி

முதன்மை கொடுத்துள்ளார். ஆசிரியர் வைதருப்பத் தையே சிறந்த நெறியாகப் போற்றியுள்ளார்.

பாமகர் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படுகிறார். இவர் காவியாலங்காரம் என்ற தம் நூலில் காவியத்தைச் செய்யுள் (பத்தியம்), உரைநடை (கத்தியம்) என்று பிரித்துள்ளார். முப்பத்தெட்டு வகை அலங்காரங்கள் இந்நூலில் விளக்கப்பட்டுள்ளன. 'தேர்ந்த சொற்களையும் ஏற்புடைப் பொருளையும் கொண்ட காவியத்திற்கு அணி செய்வது அலங்காரம் என்று பாமகர் கூறுகிறார். பொதுமக்கள் பேசுவது போலல்லாது மாறுபட்ட முறையில் அழகொழுக ஒரு கருத்தைக் கூறுவதே 'வக்ரோக்தி'. இதுவே எல்லா அணிகளிலும் பொதுவாகக் காணப்படுவது என்பதனை முதன் முதல் சொன்னவர் பாமகர்.

பாமகருடைய நூலுக்கு உரை எழுதிய உத்படர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். இவர் எழுதிய நூல் அலங்கார சார சங்கிரகம். இவர் நாற்பத்தொன்று அலங்காரங்களைத் தாம் எழுதிய நூலிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கியுள்ளார். வாமனர் (கி.பி. 900) இயற்றிய நூல் காவியாலங்கார சூத்திரம் என்பதாகும். காவியத்தின் பயனை முதலில் குறிப்பிட்டு, இரீதி காவியத்தின் உயிர்நாடி என்ற கருத்தை எடுத்துக் காட்டினார். முன் கூறப்பட்ட வைதருப்பம், கவுடம்ஆகியவற்றுடன் மூன்றாவதாகப் பாஞ்சாலி என்ற நெறியையும் இவர் குறிப்பிட்டுள்ளார். தண்டி கூறிய பத்துக் குணங்களையும் சொல்லைச் சார்ந்தவை பத்து, பொருளைச் சார்ந்தவை பத்து என விரித்துள்ளார். காவிய குணங்களையும் அலங்காரங்களையும் வேறுபடுத்தியுள்ளார். உவமை முதலான 33 அலங்காரங்களையும் விளக்கியுள்ளார். காவியம் எழுதும் போது தவிர்க்கப்பட வேண்டிய சொற்குற்றம் பொருட் குற்றம் ஆகியவற்றையும் சுட்டியுள்ளார்.

காவியாலங்காரத்தின் ஆசிரியரான உருத்ரடர் கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். காவியத்தின் பயன், கவிக்கு வேண்டிய தகுதிகள், காவியத்தின் இலக்கணம், ஐவகை விருத்திகள், இயமகம், சிலேடை, சித்திராலங்காரங்கள், பொருளணிகள் முதலானவற்றை விளக்கியுள்ளார். வாமனர் கூறிய நெறிகளோடு நான்காவதாக 'இலாடீ' என்ற நெறியையும் சேர்த்துள்ளார்.

குந்தகர் என்பவர் சொல்லையும் பொருளையும் காட்டிலும் மேலானதொரு கவியின் திறன்தான் காவியத்தின் சிறப்புக்குக் காரணம் என்பதை வலியுறுத்துகிறார். 'வக்கிரத்தன்மை' என்பது கவிக்கு இயல்பாயமைந்த சக்தி. இத்தன்மையுடைய கவிஞனே எல்லோரும் வழங்கும் சொற்களிலே ஏற்றவற்றைத் தேர்ந்து அழகுற எடுத்துச் சொல்லும் திறனைப் பெற்றிருக்கிறான். மகிமபட்டர் தொனியை அநுமானத்தில் அடக்குவர்.

போசன் (கி.பி. 1100) 'சரசுவதீ கண்டாபரணம்' 'சிருங்காரப்பிரகாசம்' என்னும் நூல்களின் ஆசிரியர். எல்லா அலங்கார நூல்களிலும் அளவிற் பெரியது சரசுவதீ கண்டாபரணம். இதில் காவியத்தின் பயன், இலக்கணம், வகைகள், குற்றங்கள், குணங்கள், அணிகள், நாயகநாயகிப் பிரிவுகள், விருத்திகள், சுவைகள் முதலானவை ஆராயப்படுகின்றன. சுவை என்பது அபிமானம், அகங்காரம், சிருங்காரம் என்ற சொற்களால் விளக்கப்பட்டுள்ளது. 'சிருங்காரம் (இன்பம்) ஒன்றே சுவை' என்பது இவரது கொள்கை.

சேமேந்திரன் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் 'ஔசித்ய விசாரசர்ச்சை' என்ற நூலை எழுதினார். 'ஏற்புடைத் தன்மை' என்ற கொள்கையைச் சொல், வாக்கியம், நூல், காவியகுணம், அலங்காரம், சுவை, காலம், இடம் முதலானவற்றுடன் தொடர்புபடுத்தி விரிவாக ஆராய்ந்துள்ளார். ஒரு காவியத்தில் சுவை சிறக்க வேண்டுமானால் இக்கொள்கை இன்றியமையாது பின்பற்றப்பட வேண்டும் என்பதைப் பின்வந்த ஆனந்தவர்த்தனர் வலியுறுத்தியுள்ளார்.

மம்மடர் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் இவர், காவியப்பிரகாசம் என்ற முழுமையான நூலை எழுதினார். இது இன்றும் பல்லோராலும் பயிலப்படுவதற்குக் காரணம் காப்பியத்தைப் பற்றிய அனைத்தும் இதில் விளக்கம் பெற்றுள்ளமையே யாகும். காப்பியத்தின் பயன், அதன் இலக்கணம், சொற்பாகுபாடு, பொருட் பாகுபாடு, இவற்றை ஒட்டிய சொற்சக்திகள், தொனிப் பாகுபாடு, சுவைகள், அலங்காரங்கள் ஆகிய அனைத்தும் திட்பமாக விளக்கப்பட்டுள்ளன.

உருய்யகரின் (கி.பி. 1200) 'அலங்கார சருவசுவம்' தொனிக் கொள்கையை ஆதரிக்கிறது. சில சொல்லணிகளும் 75 பொருளணிகளும் விளக்கப்பட்டுள்ளன. இந்நூலை முன்மாதிரியாக வைத்து எழுந்தவையே பின்னர்த் தோன்றிய ஏகாவளீ, குவலயானந்தம் போன்றவை. அலங்காரங்களை நுட்பமாக எடுத்துக் கூறுவது இந்நூல். 'சாகித்ய மீமாம்சை' என்பதும் இவருடைய நூலாகச் சிலரால் கருதப்படுகிறது. இதில் விருத்தி, தோடம், குணம், அலங்காரம், சுவை, காவியப் பாகுபாடு, சொற்பொருள் முதலியன ஆராயப்பட்டுள்ளன.

வாக்படர் (கி.பி. 1200) என்ற சமணரின் பெயரால் வழங்கப்படுவது வாக்படாலங்காரம். காப்பிய இலக்கணம், கவிக்கு வேண்டிய தகுதி, மொழிவாரிக் காப்பியப் பாகுபாடு, குணங்கள், அணிகள், சுவைகள், நாயக – நாயகிப் பாகுபாடு முதலியன விளக்கப்பட்டுள்ளன.

ஏமசந்திரரின் (கி.பி. 1300) 'காவியாநு சாசனம்'', 'காவிய மீமாம்சை', 'காவியப் பிரகாசம்' போன்ற முந்தைய நூல்களைத் தழுவி எழுதப்பட்டது.

சயதேவரின் (கி.பி. 1300) 'சந்திராலோகம்' எளிய, இனிய முறையில் எழுதப்பட்ட நூல். காப்பிய இலக்கணம் முதலாக விருத்தி, சுவை முதலிய அனைத்தும் பத்து இயல்களில் விளக்கப்பட்டுள்ளன.

வித்தியாதரரின் (கி.பி. 1400) 'ஏகாவளியும்', வித்தியாநாதரின் (கி.பி. 14-நூ. )'பிரதாப ருத்திர யசோபூடண'மும் மரபுவழி அமைந்த அலங்கார நூல்களாகும்.

வாக்படரின் (கி.பி. 1500) 'காவியாநு சாசனமும், இவ்வகையைச் சார்ந்ததே. விசுவநாதரின் 'சாகித்ய தர்ப்பணத்தில்' காப்பியத்தின் பயன், சொற்சக்தி, பாவங்கள், தொனி, நாடகவியல், காப்பியதோசங்கள், குணங்கள், அணிகள் ஆகியவை தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. வங்காள வைணவரான உரூப கோசுவாமி ''உச்வலநீலமணி'' என்ற நூலில் பக்தியும் ஒரு சுவையே என்பதைத் திறம்பட நிறுவியுள்ளார்.

அப்பய்ய தீட்சிதர் (கி.பி. 1600) சந்திராலோகத்தை அடியொற்றிக் குவலயானந்தம் என்னும் அலங்கார நூலை இயற்றினார். இதில் 115 அணிகள் ஆய்வுமுறையில் விளக்கப்பட்டுள்ளன. இவர், உவமை யெனும் கூத்தி பல்வேறு வேடம் பூண்டு பல அணிகளாகக் காட்சியளிப்பதாகக் கூறியுள்ளார். சித்திர மீமாம்சை என்னும் நூலில் காப்பியத்தை மூன்று வகையாகப் பிரித்துள்ளார். முதல் தரமான காப்பியம் தொனிக் காப்பியம். இரண்டாந் தரமான காப்பியத்தில் தொனி மற்றொரு பொருளுக்கு அடங்கியிருக்கும். மூன்றாந் தரமான காப்பியம் சொல்லணி பொருளணி சிறப்பாகப் பயிலப்படும் காப்பியம். பொருளணிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் பிறர் கருத்தைத் திறனாயும்வகையில் ஆராய்கிறார். தமிழகத்தைச் சேர்ந்த இவர் நூற்றுக்கும் மேலான நூல்களை ஆக்கியுள்ளார். இவரைப் புரந்தவர் சின்ன பொம்மன் ஆவார்.

சகந்நாதபண்டிதர் (கி.பி. 1700) 'இரச கங்காதரம்' என்னும் சிறந்த அலங்கார நூலின் ஆசிரியர்; ஆந்திர நாட்டைச் சார்ந்தவர். நூல் அளவை முறை உரைநடையில் இவரால் எழுதப்பட்டுள்ளது. பிறர் கருத்தைத் துருவிப் பார்த்துத் தம் கருத்தை ஆணித் தரமாக எடுத்துரைப்பதில் இவர் வல்லவர். காப்பியப் பகுப்பு, சூத்திர விளக்கம், குணங்களும் சுவையும், அலங்காரங்கள் - இவை அனைத்தும் திறம்பட விளக்கப்பட்டுள்ளன. அப்பய்ய தீட்சிதரின் சித்திரமீமாம்சைக்குக் கண்டன நூல் எழுதியுள்ளார். தம்முடைய சிறு காப்பியங்களான பாமினி விலாசம், கங்காலகரி முதலியவற்றிலிருந்தும் தம் நூலிற்குரிய எடுத்துக் காட்டுகளைத் தந்துள்ளார். இவரே குறிப்பிடத்தக்க சிறப்பான அலங்கார சாத்திர இறுதி ஆசிரியர் எனலாம்.

பி.தி.


**அலங்காரம்** என்பது புரந்தர தாசரால் வகுக்கப்பட்ட பயிற்சி இசையைச் சேர்ந்த சுர வரிசைகளைக் குறிக்கும். இவை 35 தாளங்களை விளக்குவதற்காக ஏற்பட்ட சுர வரிசைகளாகும். இவற்றைப் பாடிப் பயிற்சி பெற்றால்தான் இசை அறிவினை முழுமையாகப் பெற முடியும். காண்க: இசை

**அலபாமா** அமெரிக்க ஐக்கிய நாட்டின் தென் கிழக்கில் அமைந்துள்ள ஒரு மாநிலம். அந்நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் 22-ஆம் மாநிலமாகும். மிசிசிப்பி ஆற்றுக்குக் கிழக்கே இம்மாநிலம் அமைந்துள்ளது. அலபாமாவின் (Alabama) வடக்கில் தென்னசிப் பள்ளத்தாக்கும், தெற்கில் புளோரிடாவும் மெக்சிகோ வளைகுடாவும், கிழக்கில் சார்சியாவும், மேற்கில் மிசிசிப்பியும் எல்லைகளாக உள்ளன. அலபாமாவை அப்பலேச்சிய நாடு (Appalachian State) என்றும் வளைகுடா நாடு (Gulf State) என்றும் அழைக்கிறார்கள்.

இம்மாநிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,33,667 ச.கி.மீ. கி.பி.1980-ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி அலபாமாவின் மக்கள் தொகை 38,93,888 ஆகும்.

இம்மாநிலத்தை உள்நாட்டுத் தாழ்ந்த மேட்டு நிலப்பகுதி, அப்பலேச்சிய மேட்டுநிலப்பகுதி, வளை குடாக் கடற்கரைச் சமவெளி என்று மூன்றாகப் பிரிக்கலாம்.

உள்நாட்டுத்தாழ்ந்த மேட்டுநிலப்பகுதி: இம்மாநிலத்தின் வடமேற்கே அமைந்துள்ளது. இதன் வழியாகத்தென்னசி மாநிலத்திற்குச் செல்லலாம். இந் நிலப்பகுதியில் கனோபி (Knobby) குன்றுகள் உள்ளன. இக்குன்றுகளின் குறுக்காகத்தென்னசி ஆற்றின் அகலமான சமவெளி உள்ளது. அப்பலேச்சிய மேட்டு நிலப்பகுதி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகள் அப்பலேச்சிய மேட்டுநிலப்பகுதி, அப்பலேச்சிய மலைப்பகுதியும் சமவெளியும், பீட்மாண்டு மேட்டுநிலப்பகுதி என்பனவாகும். அப்பலேச்சிய மேட்டுநிலப்பகுதி, கம்பர்லாந்து மேட்டுப்பகுதி என்றும் சொல்லப்படும். வேளாண்மைக்கு உகந்த நிலங்களைக் கொண்டு விளங்கும் இப்பகுதியில், மரம் வெட்டும் தொழிலும் சுரங்கத்தொழிலும் சிறப்பானவை. அப்பலேச்சிய மலைப்பகுதி, சமவெளிப் பகுதியில்




அலபாமா

சுரங்கங்கள் மிகுதியாக உள்ளன. இப்பகுதியிலுள்ள காடுகளில் ஓக், பைன் போன்ற மரவகைகள் மிகுதியாக உள்ளன.

பீட்மாண்டு மேட்டுநிலப் பகுதியில் பொதுவாக மலைகள் காணப்படுகின்றன. பீட்மாண்டு என்பதற்கு அடிப்பகுதி அல்லது மலை அடிவாரம் என்பது பொருள். வளைகுடா கடற்கரைச் சமவெளிப்பகுதியாகும். பல ஆண்டுகளாக இப்பகுதி பருத்தி விளைகின்ற பகுதியாக இருந்து வந்தது. ஆனால் இக்காலத்தில் இப்பகுதி, கால்நடைகளின் மேய்ச்சல் புல்வெளிகளாகவும் விளைச்சல் நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளது.

தென்னசி ஆறு, அதனுடன் கலக்கும் ஓகையோ ஆறு, மொபைல் ஆறு, தாம்பிக்கு ஆறு, பிளாக்வாரியர் ஆறு, கூசா (Coosa), தாலபூசா (Talla Poosa), அலபாமா ஆறு, சாட்டேகோச்சி ஆறு போன்றவை இம் மாநிலத்தில் பாயும் ஆறுகளாகும். இங்குள்ள ஏரிகளுள் மிகப்பெரிய ஏரி குண்டர்சுவில்லி ஏரியாகும்.




அலபாமா மாநிலச்சின்னம்

அலபாமா மிதமான தட்பவெப்பநிலை கொண்டது; மழை ஆண்டொன்றுக்கு 135 செ.மீ. முதல் 165 செ.மீ. வரை பெய்கிறது.

நிலக்கரி,. சுண்ணாம்புக்கல் போன்றவை இம் மாநிலத்தில் கிடைக்கின்ற கனிப்பொருள்களாகும்.

சோயாபீன்சு, பருத்தி, பயறு வகைகள் பட்டாணி, உருளைக்கிழங்கு, தக்காளி, கோதுமை போன்றவை இங்கு விளைகின்றன.

அலபாமாவின் பெரும்பான்மையான மக்கள் வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கோழி வளர்ப்பினால் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைந்துள்ளது. கால்நடை வளர்த்தல், பன்றி வளர்த்தல், பால் உற்பத்தி போன்ற பிறதொழில்களின் மூலமும் இம்மாநிலத்தின் வருமானம் சீராகப் பெருகியுள்ளது.

நூற்பு ஆலைகளும் உலோகத் தொழிற்சாலைகளும் இரசாயன உற்பத்தித் தொழிலகங்களும் காகி

த் தொழிற்சாலைகளும் நாட்டின் பிற தொழிற் சாலைகளாகும்.

1,40,000 கிலோமீட்டர் நெடுஞ்சாலைகள் இம் மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இருப்புப்பாதை வழிகளும் இம்மாநிலத்தின் பெரு நகரங்களை இணைக் கின்றன. இம்மாநிலத்தில் 7240 கி.மீ. நீளத்திற்கு இருப்புப்பாதைகள் போடப்பட்டுள்ளன. முதன்முத லில் கி.பி. 1832- ஆம் ஆண்டு தெகாடூருக்கும் (Decatur) மசில் சோல்சிற்கும் (Muscle Shoals) இடையில் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது. விமான நிலையங் கள் மாநிலத்தின் சிறப்பான நகரங்களில் அமைக்கப் பட்டுள்ளன. அலபாமாவிலுள்ள ஆறுகள் ஆற்றுப் போக்குவரத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. இம் மாநிலத்தின் துறைமுக நகரம் மொபைல் (Mobile) ஆகும். மொபைலிலிருந்து பிற நாடுகளுக்குப் பொருள் கள் ஏற்றுமதியாகின்றன. பிறநாடுகளிலிருந்தும் பொருள்கள் இத்துறைமுகத்தின் வழியாக இறக்கு மதியாகின்றன.


செவ்விந்தியர்கள் எனப்படும் பழங்குடி மக்களே இங்கு முதன் முதலில் வாழ்ந்து வந்தனர். கி.பி.1702 –ஆம் ஆண்டு அலபாமா பிரெஞ்சுக் குடியேற்ற நாடா யிற்று. அப்போது இது இலூசியானாவின் ஒரு பகுதி யாகச் செயற்பட்டு வந்தது. ஆங்கிலேயர் கி.பி.1817–ஆம் ஆண்டு அலபாமாவைத் தங்களது குடியேற்ற மாக அமைத்தனர். கி.பி. 1819–ஆம் ஆண்டு திசம்பர் 14–ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இப்பகுதி இணைக்கப்பட்டு ஒரு மாநிலமானது. இங்கு வாழும் மக்களுள் பெரும்பாலோர் 19–ஆம் நூற்றாண்டில் குடியேறியவர்கள். நீக்கிரோ இன மக்களும் இம் மாநிலத்தில் வசிக்கின்றனர்.

இங்கு உயர் கல்வி நிலையங்களும் கல்லூரிகளும் உள்ளன. அலபாமா பல்கலைக்கழகம் இம்மாநிலத் தின் தொன்மையான பல்கலைக் கழகமாகும். இப் பல்கலைக்கழகம் தசுகலூசா (Tuscaloosa) என்னும் இடத்தில் உள்ளது. கி.பி. 1890-ஆம் ஆண்டு இப் பல்கலைக்கழம் நிறுவப்பட்டது.


'மான்ட்கோமரி' என்னும் நகரம் இம்மாநிலத் தின் தலைநகரமாகும். இங்குப் பல கல்வி நிலையங் கள் உள்ளன.

பர்மிங்காம் அலபாமாவிலுள்ள மிகப் பெரிய நகர மாகும். மக்கள் நெருக்கம் மிகுந்துள்ள நகரமும் இதுவே. இந்நகரத்தில் பல தொழிற்சாலைகள் உள் ளன.

மொபைல் இரண்டாவது மிகப்பெரிய நகரமாக வும் அலபாமாவின் ஒரே துறைமுக நகரமாகவும் விளங்குகிறது. இங்கிருந்து கப்பல்கள் மூலம் பொருள் கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பிற நாடுகளி லிருந்து இறக்குமதியும் இத்துறைமுகத்தின் வழியாக நடைபெறுகிறது. இந்நகரம் அலபாமாவின் நுழைவு வாயில் என அழைக்கப்படுகின்றது. இங்குக் கப்பல் தளங்களும் பல்வேறு தொழிற்சாலைகளும் உள்ளன.



அலபாமாச் சட்டமன்றம்




இயற்கைப் பிரிவுகள்

அன்சுவிலி (Huntsville), தசுகலூசா (Tuscaloosa), காட்சுடன் (Gadsden), தோதான் (Dothan) ஆகியவை பிற நகரங்களாகும்.

அலபாமா சட்டமன்றம், 'செனட்' எனப்படும் மேலவையையும் ஒரு பிரதிநிதித்துவ அவையையும் கொண்டிலங்குகிறது. இதன் உறுப்பினர்கள் 4 ஆண்டு களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கப்படுவர். செனட் அவை 35 உறுப்பினர்களையும் பிரதிநிதித்துவ அவை 105 உறுப்பினர்களையும் கொண்டு செயற்படுகின் றன. மாநிலத்தின் தலைமை நிருவாகத்தை ஆளுநர் கவனிக்கிறார். இவர் 4 ஆண்டுக் காலத்திற்குத் தேர்ந் தெடுக்கப்படுகிறார். ஆளுநருக்கு உதவியாக ஒரு துணை ஆளுநரும் இருக்கிறார்.

அலபாமாவின் இன்றைய அரசியலமைப்பு 1901-ஆம் ஆண்டு வரையப்பட்டது.

மாநிலத்தின் தலைமை நீதிமன்றம் ஒரு தலைமை நீதிபதியையும் எட்டு இணை நீதிபதிகளையும் கொண் டுள்ளது.

***அலரிக்*** (**கி.பி. 370-410**) விசிகோத்துகளின் அர சர்களுள் ஒருவர். கி.பி. 400-ஆம் ஆண்டின் தொடக் கத்தில் இவர் இத்தாலியின்மீது படையெடுத்து உரோமாபுரியைக் கைப்பற்றினார். கி.பி. 395-ஆம் ஆண்டில் வீழ்ச்சியுறத் தொடங்கிய உரோமானியப் பேரரசு, கிழக்கு, மேற்குப் பேரரசுகளாகப் பிரியலா யிற்று. கிழக்கத்திய உரோமானியப் பேரரசின்மீது விசிகோத்துகளின் (Visigoths) படையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்ற அலரிக் (Alaric), இத்தாலி யின் மீது கி.பி. 401-ஆம் ஆண்டில் படையெடுத்தார். மேற்கு உரோமானியப் பேரரசின்மீதும் பல தாக்கு தல்களை இவர் நடத்தினார். உரோமாபுரியும் கி.பி. 408-9-ஆம் ஆண்டுகளில் இவரால் தாக்கப் பெற்றது. பெரும் தொகைகளை மீட்சிப் பணமாகப் பெற்று அலரிக் முற்றுகைகளைக் கைவிட்டார். மீண் டும், கி.பி. 410-ஆம் ஆண்டில் உரோமாபுரியைக் கொள்ளையடித்துக் கைப்பற்றினார். எனினும், அங் கிருந்த திருச்சபைகளை இவர் தொடவில்லை. அலரிக் ஆப்பிரிக்காவில் நிலையாகத் தங்கத் திட்டமிட்டிருந் தார். எனினும் கடும் புயலொன்று இவரைத் தென் இத்தாலியில் உள்ள கொசென்சாவில் தங்கும்படி செய்துவிட்டது. அங்கேயே கி.பி. 410 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் அலரிக் காலமானார்.

***அலாசுகா*** அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பது மாநிலங்களுள் ஒன்று. இது அமெரிக்காவின் 49-ஆம் மாநிலமாக 1959-ஆம் ஆண்டு சனவரி மாதம் 3-ஆம் நாள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. அமெரிக்காவுடன் இணையும் முன்னர் அலாசுகா (Alaska) உருசியாவின் பகுதியாக இருந்தது. அமெரிக் காவின் வெளியுறவு அமைச்சராகவிருந்த வில்லியம் எச். சீவார்டு (William H. Seward) என்பார், இதனை உருசியாவிடமிருந்து கி.பி. 1867-ஆம் ஆண்டில், 72 இலட்சம் தாலர் (Dollar) விலைகொடுத்து வாங்கி னார். அலாசுகாவை விலைக்கு வாங்கியதைக் குறை கூறிய அமெரிக்கர் பலர், இது சீவார்டின் பிழை(Seward's Folly) என்றும், சீவார்டின் பனிக்கட்டிப் பெட்டி (Seward's Icebox) என்றும் கூறி அவரை வைதார்கள். ஆனால், அலாசுகாவில் கிடைத்த மீன், கனிப்பொருள் கள், மரம், நீர்மின்சக்தி போன்றவையும், பெரு மளவில் கிடைத்த பெட்ரோலியப் பொருள்களும் சீவார்டுக்குப் புகழ் சேர்த்தன.

அலாசுகா என்னும் சொல்லுக்குப் பெருநிலம் (Great Land) என்பது பொருள். இதன் அருகிலுள்ள அலூசியத் தீவுகளில் (Alutian Island) வாழ்ந்த மக் கள், இச்சொல்லைப் பயன்படுத்தினர்.

**எல்லை:** அலாசுகாவின் வடக்கில் ஆர்ட்டிக்குப் பெருங்கடலும், தெற்கில் வடபசுபிக்குப் பெருங்கட லும், கிழக்கில் கனடாவின் யூகான் மாநிலமும், மேற்கில் பேரிங்கு(Bering Strait) நீர்ப்பிரிவும் அமைந் துள்ளன. இது ஒரு முந்நீரகம் (Peninsula) ஆகும்.


பரப்பு: அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களுள் அலாசுகாவே பரப்பளவில் மிகப் பெரியதாகும். இதன் பரப்பு 15,27,464 சதுரக்கி.மீ. இது கிழக்கு மேற்காக 3541 கி.மீ. நீளமும், தெற்கு வடக்காக 1931 கி.மீ. அகலமும் கொண்டது. இதன் கடற்கரை 10,686கி.மீ. நீளமுடையது

**இயற்கைப்பிரிவுகள்:** அலாசுகாவை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை 1. பசிபிக்கு மலைப் பிரிவு, 2. நடு மேட்டுநிலங்களும் தாழ் நிலங்க ளும், 3. இராக்கி மலைத்தொடர்ப் பிரிவு, 4 ஆர்ட் டிக்குக் கடற்கரைச் சமவெளி என்பனவாம்.

பசிபிக்கு மலைப்பிரிவு என்பது பசிபிக்குக் கடற் கரையை யொட்டித் தெற்கில் கலிபோர்னியா வரை நீண்டுள்ள மலைத்தொடர்ப் பகுதிகளைக் குறிக்கும். அலாசுகாவிலுள்ள மலைத்தொடர்கள், மேற்கில் அலூசியத் தீவுகளிலிருந்து வளைந்து, தென் நடு அலாசுகாவின் வழியாகக் கடற்கரையையொட்டித் தென்கிழக்காக அமைந்துள்ளன.

செயின்ட்டு எலியாசு மலைத்தொடர் (Saint Elias Range), இராங்கல் மலைகள் (The Wrangell Mountains), சுகா-கேனை மலைகள் (Chugach and Kenai Mountains), தல்கீத்னா மலைகள் (Talkeetna Mountains), அலாசுகா மலைத்தொடர் (Alaska Range) போன்றவை சிறப்பான மலைத்தொடர்களாகும்.

போனா (Mount Bona), பிளாக்பர்ன் (Mount Blackburn), சான்போர்டு (Mount Sanford), இராங்




அலாசுகா

கல் (Mount Wrangell), பேர்வெதர் (Mount Fair-weather), மேக்கின்லி (Mount Mckinley), போரக்கர் (Mount Foraker) போன்றவை மலை உச்சிகள் ஆகும்.

பசிபிக்கு மலைப்பிரிவைச் சார்ந்த அலூசியத் தீவுகளுள் 14 பெருந் தீவுகளும், ஏறத்தாழ 55 சிறு தீவுகளும், மேலும் பல சிறு தீவுத் திடல்களும் அடங்கியுள்ளன. உனிமாக்கு (Unimak), உனலாசுகா (Unalaska), உம்நாக்கு(Umnak)போன்றவை பெருந்தீவுகளுள் சில. இப்பகுதியின் முதுகெலும்பாக அமைவது அலூசிய மலைத் தொடர்கள்தாம். இம்மலைத் தொடர்களில் எரிமலைகளும் உள்ளன. நடு மேட்டுநிலங்களும் தாழ் நிலங்களும் என்னும் இயற்கைப் பிரிவே, அலாசுகாவின் பரந்த நிலப்பகுதியாகும். இப்பிரிவின் தெற்கில் அலாசுகா மலைத்தொடர்களும் வடக்கில் புரூக்சு மலைத்தொடரும் (Brooks Range) அமைந்துள்ளன. குசுகோக்விம் ஆறு (Kuskokwim) இப்பகுதியில் பாய்கிறது. இப்பகுதியில் தாழ்ந்த சுருள் குன்றுகளும் (RollingHills) பரந்த சதுப்புநில ஆற்றுப்பள்ளத்தாக்குகளும் அடங்கும். யூகான் ஆறு (Yukon), கனடா நாட்டில் உற்பத்தியாகி இப்பகுதியின் வழியாகப் பாய்ந்து பேரிங் கடலில் கலக்கிறது. இராக்கி மலைத்தொடர்ப் பிரிவில் புரூக்சு மலைத் தொடர்களும் அவற்றின் அடிவாரங்களும் அடங்கியுள்ளன. புரூக்சு மலைத் தொடர், கிழக்கில் 2700 மீட்டர் வரை உயரமுள்ள பல பனி மூடிய மலை முகடுகளைக் கொண்டும் மேற்கில் தாழ்ந்தும் உள்ளது. பெய்ராடு (Bairad), திலாங் (Delong), எண்டிகாட்டு (Endicott) மலைகள் இப்பிரிவில் உள்ளன. ஆர்ட்டிக்குக் கடற்கரைச் சமவெளி அலாசுகாவின் வடகோடிப் பிரிவாகும். இப்பகுதி பெரும்பாலும் பனி மூடிய சமவெளியாகும். இங்கு மரங்கள் வளருவதில்லை. கோடைக் காலத்தில் அடர்ந்த குட்டைப் புற்களும், காட்டு மலர்களும் மிகுதியாகக் காணப்படும். இப்பகுதியைத் தூந்திரப் பகுதி (Tundra) என்பர்.

**கடற்கரைகள்:** அலாசுகாவின் கடற்கரைகள் 10,686 கி.மீ. நீளமுள்ளவை. இதில் 8980 கி.மீ. நீளம் பசிபிக்குப் பெருங் கடலையொட்டியும், 1706 கி.மீ. நீளம் ஆர்ட்டிக்குப் பெருங் கடலையொட்டியும் உள்ளன.

கடற்கரைகளில் எண்ணற்ற வளைகுடாக்களும் விரிகுடாக்களும் உள்ளன.

ஆறுகள்: யூகான் (Yukon) ஆறு, அலாசுகாவின் சிறப்பான நீர் வழியாகும். இதன் நீளம் 2849 கி.மீ. இந்த ஆறு சூன் மாதம் முதல் அக்டோபர் மாதம் முடிய பனியால் உறைவதில்லை. சிறு படகுகளும், தெப்பங்களும் இந்த ஆறு கடலில் கலக்கும் பேரிங் கடலிருந்து, அலாசுகாவின் குறுக்காகக் கனடா வரை போக்குவரத்துக்குச் செல்லக் கூடும். கொயுகுக் (Koyukuk), தனானா (Tanana) ஆகியவை யூகான் ஆற்றின் சிறப்பான துணையாறுகள். குசுகோக்விம் (Kuskokwim) இரண்டாவது பெரிய ஆறாகும். கொல்வில்லி (Colville) ஆறும் குறிப்பிடத்தக்கது,

ஏரிகள்: அலாசுகாவில் ஆயிரக்கணக்கான ஏரிகள் உள்ளன. இலியம்னா ஏரி (Iliamna Lake) மிகப் பெரியது. இவ்வேரி 130 கி.மீ. நீளமும், 32 கி.மீ. அகலமும் கொண்டது. அலெக்நாகிக் (Aleknagik), பீசராப் (Becharof), கிளார்க்கு (Clark), கேனை (Kenai), மின்சுமினா (Minchumina), நாக்நெக் (Naknek), சிலாவிக் (Selawik), தசேக்புக் (Teshepuk), துசுட்டுமேனா (Tustumena) ஆகியவை பிற சிறப்பான ஏரிகளாகும்.

பனியாறுகள்: அலாசுகா மலைப் பள்ளத்தாக்குகளில் ஆயிரக்கணக்கான பனியாறுகளைக் (Glaciers) காணலாம். இவை 1.6 கி.மீ. முதல் 48 கி.மீ. வரை நீளமுள்ளவை. மலாசுபினா (Malaspina) என்னும் பனியாறு, வட அமெரிக்காவிலேயே மிக நீளமானதாகும். இது புனித எலியாசு மலைத்தொடரில் அமைந்துள்ளது; 80 கி.மீ. அகலத்தில் பனிப்படிவமாக இங்குப் படிந்துள்ளது. கொலம்பியாப் பனியாறு (Columbia) மற்றொரு பனியாறாகும்.

தட்பவெப்பநிலை: அலாசுகாவின் தட்பவெப்ப நிலை பெரும் மாறுபாடுகளைக் கொண்டது. சப்பான் வெப்ப நீரோட்டத்தின் காரணமாகக் கிழக்காக வீசும் கடற்காற்றுகளின் பயனாய் அலாசுகாவில் ஆண்டு முழுதும் மிதமான தட்பவெப்ப நிலை நிலவுகிறது. தெற்கு, தென்கிழக்குக் கடற்கரைகளில் – 2° செ. கி. முதல் 13° செ. கி. வரை வெப்பநிலை நீடிக்கிறது. மழை, பனி உருகுவதாலும் ஈரக்கசிவுகளினாலும் அலாசுகாவில் 51 செ. மீ. முதல் 561 செ.மீ. வரை பெய்கிறது. அலாசுகாவின் வடபகுதி குளிர் மிகுந்த பகுதியாகும்.

மக்கள்: அலாசுகாவின் மக்கள்தொகை 4,01,851 (1980). இவர்களுள் மூன்றிலொரு பங்கு மக்கள் அலாசுகாவில் பிறந்தவர்கள். ஏறத்தாழ 50,800 பேர் உள்ளூரில் உள்ளவர்கள். அவர்களுள் 28,100 பேர் எசுகிமோக்கள் (Eskimos); 16,300 பேர் செவ்விந்தியர்கள் (Red Indians); 6,400 பேர் அலூத்தியர்கள்



அலாசுகாவிலுள்ள எசுகிமோ

(Aleuts) ஆவர். எசுகிமோக்களுள் பெரும்பாலோர் வடக்கிலும் மேற்கிலும் வாழ்கிறார்கள். திலிஞ்சிட்டு (Tlingit), அய்டா (Haida) இந்தியர்கள், அலாசுகாவின் தென் நடுவில் வாழ்கிறார்கள். அலூத்தியர்கள் எசுகிமோக்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். இவர்கள் அலாசுகா முந்நீரகத்திலும் அலூசியத் தீவுகளிலும் வாழ்பவர்கள்.

வெள்ளைக்காரர்கள் ஆங்கரேசு (Anchorage) பேர்பாங்சு (Fairbanks) என்னும் பெரு நகரங்களிலும், தென்கிழக்குக் கடற்கரை நகரங்களிலும் வாழ்கிறார்கள்.

உரோமன் கத்தோலிக்கக் கிறித்தவர்கள், உருசிய வைதிகத் திருச்சபையைச்(Russian Orthodox Church) சார்ந்த கிறித்தவர்கள், ஏனைய கிறித்தவ சமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள் ஆகியோர்களாக அலாசுகா மக்கள் வாழ்கிறார்கள்.

பொருளாதாரம்: அலாசுகாவின் பொருளாதாரத்திற்கு இங்கு அமைக்கப்பட்டுள்ள படைத்தளங்கள், இரடார் அமைப்புகள் (Radar Installations), அரசுக்குரிய திட்டங்கள் போன்றவை பேருதவி செய்கின்றன. மக்கள் தொகையில் ஏறத்தாழ 23,000 பேர் அமெரிக்கப் படைவீரர்களாகவும் 54,000 பேர் அரசாங்கப் பணியாளர்களாகவும் வேலை செய்கிறார்கள். ஆண்டுதோறும் அலாசுகாவிற்கு ஏறத்தாழ 5 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். இம்மாநிலத்தின் சுற்றலாத் துறையும் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது.

அலாசுகாவில் விலையுயர்ந்த கனிப்பொருள்கள், என்றும் பச்சைப் பசேலென்று தோற்றமளிக்கும் அடர்ந்த காடுகள், அளவுக்கும் மிகுதியான நீர், மீன்,

விளையாட்டுக்குதவும் விலங்குகள் போன்றவை இயற்கைச் செல்வங்களாகும். பெட்ரோலியப் பொருள்களும் இயற்கை வாயுவும், கேனை முந்நீரகத்திலும் (Kenai Peninsula) குக்கு உட்குடாவிலும் (Cook inlet) கிடைக்கின்றன. கண்டங் கடக்கும் அலாசுகாக் குழாய்த் திட்டம் 1977-இல் ஏற்பட்டதிலிருந்து பெட்ரோல் இயற்கை வாயுக்களை எளிமையாகக் கொண்டு செல்ல வழிபிறந்தது. நிலக்கரி, பொன், வெள்ளி, செம்பு, மணல், கூழாங்கற்கள் போன்றவை இங்கு வெட்டியெடுக்கப்படும் சுரங்கப் பொருள்களாகும். குளிர்காலப் பயிர்கள் இங்கு வேளாண்மை செய்யப் படுகின்றன. வேளாண்மைக்குதவும் உழுநிலங்கள் இங்கு மிகக் குறைவு. பெரும்பாலான உணவுப்பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

உள்நாட்டிற்கும் வெளிநாடுகளுக்கு மிடையே போக்குவரத்து பெரும்பாலும் வானவூர்திகள் மூலமே நடை பெறுகிறது. கடற்கரையையொட்டியுள்ள நகரங்கள், படகுப் போக்குவரத்தால் இணைக்கப்படுகின்றன. தென் மையப் பகுதியிலுள்ள நகரங்கள், அலாசுகா நெடுஞ்சாலையுடன் இணைக்கப்படுகின்றன.

வரலாறு: வைட்டசு பேரிங் (Vitus Bering) என்பார் அலாசுகாவைக் கி.பி. 1741-ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார். கொடியாக் (Kodiak) தீவில் கி.பி. 1784-ஆம் ஆண்டில் முதல் குடியேற்றம் அமைக்கப்பட்டது. உருசியா அமெரிக்கா என்னும் பெயரில், சிட்கா (Sitka)வைத் தலைநகராகக் கொண்டு, உருசியா-அமெரிக்க மென்மயிர் வணிகக் குழு இப்பகுதியில் கி.பி. 1806-இல் வாணிகம் செய்யத் தொடங்கியது. அப்போது இது உருசியர்களுக்குச் சொந்தமானதெனக் கருதப்பட்டது. அமெரிக்கா, கி.பி. 1867-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 30-ஆம் நாள் செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, அலாசுகாவை உருசியாவிடமிருந்து விலைக்கு வாங்கியது. எனினும் கி.பி 1884-ஆம் ஆண்டு வரை இப்பகுதி சரியான முறையில் நிருவகிக்கப்படவில்லை. அவ்வாண்டில் அலாசுகா ஒரு மாவட்டமாக்கப்பெற்று ஆரிகான் (Oregan) மாநிலத்தின் மேற்பார்வையில் இருந்தது. அமெரிக்கக் காங்கிரசின் சட்டப்படி 1912-ஆம் ஆண்டு 24-ஆம் நாள் அலாசுகா, அமெரிக்காவுடன் இணைக்கப்பட்ட பகுதியாகியது. இப்பகுதியின் முதல் சட்டமன்றம், 1913-ஆம் ஆண்டில் பெண்களுக்கு வாக்குரிமை வழங்கியது. ஏழாண்டுகளுக்குப் பின்னர்வந்த அரசியல் அமைப்புத் திருத்தம், இதனை உறுதிப்படுத்தியது. அலாசுகா அமெரிக்காவின் 49-ஆம் மாநிலமாக 1959-ஆம் ஆண்டு சனவரி மாதம் 3-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அலாசுகாவின் தலைநகர் சுனேவா (Juneau); மக்கள்தொகை 19,528 (1980).

ஆங்கரேசு (Anchorage) நகரம் அலாசுகாவின் பெருநகரம். பேர்பாங்சு (Fairbanks), சிட்கா (Sitka), கெட்சிக்கன் (Ketchikan) போன்றவை குறிப்பிடத்தக்க நகரங்கள்.

***அலாசுகா மலைத்தொடர்*** அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான அலாசுகாவின் (Alaska) மலைத்தொடர். இது அலாசுகாவின் மிக நீண்ட மலைத்தொடர். அலாசுகா முந்நீரகத்திலிருந்து யூகான் நிலப்பகுதி வரை இத்தொடர், தென் மத்திய அலாசுகா என்னும் பெயரில் விளங்குகிறது. வட அமெரிக்காவின் மிக உயர்ந்த மலையுச்சியான மவுண்டு மெக்கின்லி இத்தொடரில்தான் உள்ளது. இதன் மலைச் சரிவுகளில் பலநூறு பனிப் பாறைகள் உள்ளன.

***அலாதீன்***, அராபிய இரவுகள் என்னும் கதைத் தொகுப்புகளில் வரும் கதாநாயகன்; 'அலாதீனும் அதிசய விளக்கும்' என்னும் கதையில் வரும் சிறப்பான பாத்திரம். இக்கதை பாரசீகத்தில் தோன்றியது. அலாதீனை ஓர் ஆப்பிரிக்க மந்திரவாதி விலைக்கு வாங்கினான். அவனை ஒரு குகைக்குள் சென்று அற்புத விளக்கு ஒன்றை எடுத்து வரச் செய்தான். அலாதீன் அதனை மந்திரவாதியிடம் கொடுக்க மறுத்தான். பின்னர் அவ்விளக்கைத்தேய்க்கவே அதிலிருந்து ஒரு பூதம் வந்தது. அப்பூதம் அவ்விளக்கை யார் வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு அடிமைத் தொழில் செய்தது. அலாதீன் தாம் விரும்பிய அனைத்தையும் அப்பூதத்தின் வாயிலாகப் பெற்றான்.

அலாதீன் (Aladdin) சீனாவின் இளவரசியை மணந்தான். பூதம் அவனுக்கு அழகிய மாளிகை ஒன்றைக் கட்டித் தந்தது. மந்திரவாதி இவனை ஏமாற்றி அற்புத விளக்கைப் பெற்றுப் பூதம் கட்டிய அழகிய மாளிகையினைச் சீனாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்குக் கொண்டு சென்றான். அலாதீன் ஆப்பிரிக்கா சென்று மந்திரவாதியைக் கொன்று விளக்கைப் பெற்று இளவரசியுடன் இன்பமாக வாழ்ந்தான். அலாதீனின் கதைகள் இளைஞர்களையும் குழந்தைகளையும் மயக்கும் தன்மை படைத்தன.

***அலாய் மினார்*** (Alai-Minar), அலாவுதீன் கில்சியால் தில்லியில் குதுப்மினாருக்கு வடக்கில் கட்டப்பெற்ற முற்றுப்பெறாத தூபி. இதன் உயரம் 25 மீட்டராகும். இத்தூபியை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கு முன் அலாவுதீன் கில்சி இறந்துவிட்டார். எனவே முதல் தளத்துடன் இன்றும் முடிவுறா நிலையிலேயே நிற்கின்றது.

***அலாரிப்பு***: பரத நாட்டிய நிகழ்ச்சியின் தொடக்கத்தில் நிகழ்த்தப்படும் ஆடல்பகுதி அலாரிப்பு எனப்படும். இது, ஆடல் நிகழ்ச்சியின் தொடக்கத்தில்,

இறைவணக்கமாகவும் அவையினருக்கு வணக்கம் செய்வதாகவும் அமைந்திருக்கும் நடனப்பகுதி ஆகும். ஆடல் நிகழ்ச்சியில் கடினமான நடனப் பகுதிகளை நிகழ்த்துவதற்கு உடலை ஆயத்தம் செய்துகொள்ளும் முறையாக இது அமைந்திருக்கிறது என்றும் கருதப் படுகிறது. இது எளிய உடல் அசைவு முறைகளையும் முத்திரைகளையும் கொண்டதாகும். இதன் சொல் லுக்கட்டு, தாம்-தி-தாம்-கிட-தக-தை-தித்-தை என் பதாகும். இக்காலத்தில் ஆடல் கலைஞர்கள் அலாரிப் பில் வேறு சில கடினமான அடவுகளையும் இணைத்து நிகழ்த்துகின்றார்கள். காண்க: பரதநாட்டியம்.

**அலாவுதீன் — கல்லறையும் கல் லூரியும்**: டில்லி குதுப்மினார் பகுதியில் இவையிரண் டும் அமைந்துள்ளன. இப்போது இவை அழிந்துபட்ட நிலையில் உள்ளன. குவ்வத் - உல் - இசுலாம் மசூ திக்குத்தென்மேற்கில் இவை உள்ளன. அலாவுதின் இங்கு கல்லூரி (மதரசா) ஒன்றைத் தொடங்கினார் என்றும், அதில் இசுலாமிய இறைமையியலும் திருமறை களும் போதிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. இக் கல்லூரி, அழிந்துபட்ட நிலையில் 'ட' வடிவில் காணப் படும் பலவித அறைகளைக் கொண்டுள்ளது. தெற்குப் பகுதியின் நடு அறையில் காணப்பெறும் கல்லறை அலாவுதீனின் கல்லறையாக இருக்கக்கூடும். கல்லறை யும் கல்லூரியும் ஒருங்கே அமைய இந்தியாவில் கட் டப் பெற்ற முதல் கட்டடம் இதுதான் என்பர்.

**அலாவுதீன் கில்சி (கி.பி. 1296-1316)**, கில்சி மரபு அரசர்களுள் தலைசிறந்தவர். ஆட்சித்திறனும் போர்த்திறனும் கொண்ட அலாவுதீன், நிலையான இராணுவம் அமைத்த முதல்துருக்கியத்தில்லிசுல்தான் ஆவார். வரிவிதிப்புச் சட்டங்களையும் கட்டுப்பாடு களையும் ஏற்படுத்திய முதல் துருக்கியச்சுல்தானும் இவரே. விந்தியமலையைக் கடந்து தக்காணத்தை வென்று ஏறத்தாழ இந்தியா முழுமைக்கும் அரசியல் ஒற்றுமையை வழங்கிய முதல் துருக்கியச்சுல்தான் என்ற சிறப்பையும் இவர் பெறுகிறார்.

அலாவுதீன் மாமனாகிய சலாலுதீன் பிரோசு இவரை அன்புடன் வளர்த்து மாப்பிள்ளையாக்கிக் கொண்டார். அரியணை ஏறியதும் சலாலுதீன், அலா வுதீனைக் காரா என்னும் பகுதிக்குத் தலைவராக்கி னார். இங்குத்தான் அலாவுதீன் மனத்தில் "பேராசை யின் விதைகள்" ஊன்றப்பட்டன என்று மசும்தார் குறிப்பிடுகிறார். காரா கலகக்காரர்களின் நுட்பமான தீய கருத்துகள் இவர் மனத்தில் நன்கு வேரூன்றின என்று பரணி (Barani) கூறுகிறார். அலாவுதீன் மாள வத்தின்மேல் படையெடுத்துப் பில்சா நகரத்தைக் கி.பி. 1292-இல் சூறையாடி, அளவற்ற பொருளைக் கொள்ளை கொண்டார். மகிழ்ச்சியுற்ற சுல்தான் அவரை அயோத்தி ஆளுநராகவும் அமர்த்தினார்.


அலாவுதீன், தேவகிரி அரசின் பெருஞ் செல்வத் தைப் பற்றிக் கேள்வியுற்றார். மேற்குத் தக்காணம் வரை பரவியிருந்த இந்த அரசை யாதவ குலத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் என்பார் ஆண்டு வந்தார். சுல்தானின் இசைவு பெறாமலேயே கி.பி. 1296 இல் அலாவுதீன் தேவகிரியின் மீது படையெடுத்துச் சென்று. அரசரைத்தோற்கடித்துப்பெருங்கொள்ளைப் பொருள்களுடன் காராவிற்கு மீண்டார். இதுவே அலாவுதீனின்முதல்தென்னிந்தியப் படையெடுப்பாகக் கருதப்படுகிறது. இப்படையெடுப்பால் தக்காணத்தின் பொருள் வளம் வறண்டதோடு மட்டுமன்றி, விந்திய மலைக்குத் தென்பகுதியில் நிலையான முசுலிம் ஆட்சி ஏற்படுவதற்கான வழியும்பிறந்தது. "திட்ட அமைப்பு, அதனை நிறைவேற்றும் துணிவு, அச்சாதனையின் விளைவாக ஏற்பட்ட நல்வாய்ப்புகள் முதலிய எல்லா வகையிலும் இவ்வீரச் செயலுக்கு இணை வரலாற் றில் காண்பதரிது" என்று இச்செயலைப் பெரிட்டா பாராட்டுகிறார். அலாவுதீன் வெற்றியை அறிந்த சலாலுதீன்அவரை வரவேற்கக் குவாலியரிலிருந்து தில் லிக்குச் சென்றார். அலாவுதீன் நயவஞ்சகமாக அவ ரைக் 'காரா' வுக்கு அழைத்து சென்று கொன்றார். அலாவுதீன் தில்லிச்சுல்தானாக கி.பி. 1296-இல் முடி சூட்டிச் கொண்டார்.

அரியணை ஏறிய அலாவுதீனைப் பல இடர்ப்பாடு கள் சூழ்ந்தன. இறந்த சுல்தானின் ஆதரவாளர்கள் அலாவுதீனை வஞ்சம் தீர்க்க முயன்றனர். மாண்ட அரசரின் மனைவி மக்கள் அரசு உரிமைக்காக, ஏனைய குறுநில மன்னர்கள் துருக்கிய ஆட்சியை அகற்ற விரும் பினர். மங்கோலியப் படை யெழுச்சிகள் மைய அர சிற்குத் தொல்லையளித்தன.

அரசுக்கெதிரான இடையூறுகளை அழித்து வட இந்தியாவில் முசுலிம் ஆட்சியை வேரூன்றச் செய்வ தும், வட இந்திய-தென் இந்திய அரசர்களால் அர சுக்கு இன்னல் ஏற்படாவண்ணம் காப்பதும், சிறந்த தோர் ஆட்சிமுறையை அமைப்பதும் அலாவுதீனின் குறிக்கோள்களாயின.

பொன்னை வாரி வழங்கிப் பிரபுக்களையும் அரசு அலுவலர்களையும் தில்லிப் பெருங்குடி மக்க ளையும் அலாவுதீன் தம் பக்கம் சேர்த்துக் கொண் டார். இவர் கி.பி.1296 அக்டோபர் 3-ஆம் நாள் தில்லி சுல்தானாக முடிசூட்டிக் கொண்டார். அலாவுதீன் மனைவி சிறை வைக்கப்பட்டாள்; மக்கள் கொல்லப் பட்டனர். பொன்னாசைக்காகத் தங்கள் மன்னனைக் கைவிட்டுத் தம்பக்கம் சாய்ந்த பிரபுக்களையும் அலாவுதீன் தண்டித்தார்.

மங்கோலியர்களின் படையெடுப்பு, தில்லி ஆட் சிக்கு அச்சத்தை விளைவித்தது. பஞ்சாபு மக்கள் துன்புற்றனர். அலாவுதீன் அதனைத் தீர்க்க முற்




அலாவுதின் கில்சியின் பேரரசு

பட்டார். முதலில் தம்முடைய படையையும் செல்வத்தையும் பெருக்கிக் கொண்டு, மங்கோலியர் வரும் வழியில் இருந்த பழைய கோட்டைகளைப் புதுப்பிக்கவும், புதிய கோட்டைகளைக் கட்டவும் சுல்தான் பணித்தார். சமானா, திபால்பூர் ஆகிய இடங்களில் காவற் கூடங்கள் அமைக்கப்பட்டன. திறமையான வீரர்கள் அவற்றைக் காவல் புரிந்தனர்.

மங்கோலியப் படையெழுச்சிகள் கி.பி. 1297 முதல் தொடங்கின. 1299-ஆம் ஆண்டில் நிகழ்ந்த படையெழுச்சி கொடியது. குட்லக்கு குவாசா என்பார், பல்லாயிரம் மங்கோலியர்களுடன் இந்தியாவிற்குள் புகுந்தார். இம்முறை அவர்கள் நாடு பிடிக்கும் நோக்குடன் படையெடுத்தனர். தில்லியில் பெரும் குழப்பம் ஏற்பட்டது. பெருவீரன் சபார்கான் என்பவர் மங்கோலியரைத் தாக்கினார். போரில் அவர் கொல்லப்பட்டாலும் மங்கோலியர் பின்வாங்கினர். கி.பி. 1304-இல் மீண்டும் மங்கோலியர் படையெடுத்து அம்ரோக் வரையில் முன்னேறினர்; இழப்பிற்காளான அவர்கள் பின்னடைந்தனர். கி.பி. 1307-1308-இல் மீண்டும் மங்கோலியப் படையெடுப்பு நிகழ்ந்தது. அடுத்தடுத்து ஏற்பட்ட தோல்விகளால் மங்கோலியர் மருண்டு, மீண்டும் அலாவுதீன் காலத்தில் படையெடுக்கவே இல்லை. அலாவுதீனின் மங்கோலியக் கொள்கை வெற்றி பெற்றது.

முதல் மூன்று ஆண்டுகளில் தாம் பெற்ற வெற்றிகளால் அலாவுதீன் மிகவும் செருக்கடைந்தார். புதிய

சமயத்தையும் இனத்தையும் நிறுவவும், அலெக்சாந்தரைப் பின்பற்றி உலகையே வெல்லவுமான வீணான பேராசை இவர் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரிந்தது. அரசியலும் சமயமும் தனித்தனியானவை என்றும், வட இந்தியச் சிற்றரசர்களை வெல்லுவதையும் மங்கோலியப் படையெழுச்சிகளைத் தடுப்பதையும் சுல்தான் தம் கடமைகளாகக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர்கள் அறிவுறுத்தினர். திட்டங்களைக் கைவிட்டபோதிலும், அலாவுதீன் தம்மை "இரண்டாம் அலெக்சாந்தர்" என்று புகழ்ந்துகொள்ளும் ஆர்வத்தை மாற்றிக்கொள்ள விரும்பாததால் அப்பட்டத்தைத் தம் காசுகளில் பொறித்துக் கொண்டார்.

வட இந்தியப் போர்கள்: "அலாவுதீனின் ஆட்சியே, தில்லி சுல்தானியப் பேரரசைத் துவக்கியது" என்று உல்சிலி பெயிக்குக்கூறியுள்ளார். இவர் காலத்தில் முசுலிம் பேரரசு பல பகுதிகளிலும் பரவியது.

அலாவுதீனின் குசராத்துப் படையெடுப்பு, காரணமின்றி மேற்கொள்ளப்பட்டதாகும். உலுக்கான் நசரத்கான் என்பார் தலைமையில் பெரும் படை கர்ணதேவன் ஆட்சி செய்த குசராத்திற்குச் சென்றது. தாக்குதலைத் தடுத்து நிறுத்த இயலாத கர்ணதேவன் தம் மகள் தேவாலதேவியுடன் தேவகிரி அரசர் இராமச்சந்திரனின் அவையில் தஞ்சம் புகுந்தார். அவர் மனைவி கமலாதேவி சிறைபிடிக்கப்பட்டு, அலாவுதீனின் அந்தப்புரத்திற்கு அனுப்பப்பட்டார். திரண்ட செல்வத்துடன் படையினர் தில்லி திரும்பினர். காம்பேயில் வாணிகச் செல்வரைக் கொள்ளையடித்து, காபூர் என்ற அலியைப் பொருள் கொடுத்து வாங்கினர். அவன் பின்னர்ச் சுல்தானின் அன்பைப் பெற்று உயர் பதவி அடைந்தான்.

இராந்தாம்பூர் கி.பி. 1299-ஆம் ஆண்டு முற்றுகையிடப்பட்டது. அமீர் தேவன் என்ற வீர ராசபுத்திரத் தலைவர் அதனை ஆட்சி செய்தார். அவர் புரட்சி செய்த புதிய முசுலிம்களுக்குப் புகலிடம் அளித்த காரணத்திற்காக அலாவுதீன் இராந்தாம்பூர் கோட்டையை முற்றுகையிட, நசரத்கான், உலுக்கான் ஆகியவர்களின் தலைமையில் படையை அனுப்பினார். முற்றுகையின்போது நசரத்கான் கொல்லப்பட்டார். உலுக்கான் விரட்டியடிக்கப்பட்டார். படைகளின் தோல்வியை அறிந்த அலாவுதீன் தாமே போர்க்கோலம் பூண்டார். வஞ்சகத்தைக் கையாண்டதால் கி.பி. 1301-இல் அரண் வீழ்ந்தது. அமீர்தேவனின் முதலமைச்சர் நயவஞ்சகச் செயலால் கோட்டை வீழ்ந்தது. அமீர்தேவனும் புதிய முசுலிம்கள் பலரும் கொல்லப்பட்டனர். காட்டிக்கொடுத்த சுயவனும் கொல்லப்பட்டான். இராந்தாம்பூரின் ஆட்சிப் பொறுப்பை உலுக்கானிடம் ஒப்படைத்த பின் அலாவுதீன் தில்லிக்குத் திரும்பினார்.

அலாவுதீனின் கவனம் இராசபுத்திரர்களின் தாயகமான மேவார் நாட்டின் மீது திரும்பியது. இப்படையெடுப்பு, சுல்தானின் நாடு பிடிக்கும் ஆசையால் நிகழ்ந்தது எனலாம். ஆனால், உடனடிக் காரணம் இராணா இரத்தன்சிங்கின் இராணி பேரழகி பத்மினியின்பால் கொண்ட மையல் என்று கூறப்படுகிறது. அக்காலத்திய வரலாற்றுச் சாசனங்கள் இதைப்பற்றிக் கூறவில்லை. ஓசா, இலால் போன்ற இக்கால வரலாற்றுப் பேராசிரியர்கள் பத்மினியைப் பற்றிய நிகழ்ச்சிகள் புனைந்துரைக்கப்பட்டவை என்று கூறுகின்றார்கள். சிறைபிடித்துச் சுல்தானின் முகாமிற்கு அனுப்பப்பட்ட இராணாவை இராசபுத்திரர்கள் விடுதலை செய்தனர். சித்தூர்க் கோட்டையைக் காப்பாற்றக் கோரா, பதால் என்பவர்கள் எதிர்த்து நின்றனர். எதிர்க்க இயலாது என்பதை உணர்ந்தவுடன் வீரமரணத்தை விரும்பி ஏற்றனர். இராசபுத்திரப் பெண்மணிகள் தம் குலவழக்கப்படி "சோகர்" எனப்படும் தீக்குளித்த நிகழ்ச்சியை டாடு என்னும் ஆங்கிலேயர் அழகுற வருணித்துள்ளார். சித்தூர் வீழ்ச்சியுற்றது. ஆனால், கி.பி. 1325-ஆம் ஆண்டளவில் இராசபுத்திரர்கள் சித்தூரை மீட்டனர். மீண்டும் அது மேவாரின் தலைநகராயிற்று.

சித்தூரைப் பணியவைத்த பின்னர் அலாவுதீன் மாளவ நாட்டின் மீது படை எடுத்தார். அதன் அரசர் தோற்கடிக்கப்பட்டார். மாண்டு, உச்சயினி, தார், சாந்தேரி போன்ற நகரங்கள் அலாவுதீனால் கைப்பற்றப்பட்டன. கி.பி. 1308-இல் பேரரசுப் படைகள், மார்வாரின் வலிமைமிக்க கோட்டையான சிவானாவைக் கைப்பற்றின.

அலாவுதீனின் தலைமையில்தான் கில்சிகள் தக்காணத்தை முதல் முறையாக வென்றனர். அவர் தம் தென்னாட்டுப் படையெடுப்புகள் அரசியல், பொருளாதாரத் தூண்டுதல்களால் விளைந்தவை. தம் பேரரசின் எல்லை தென்னிந்தியாவில் பரவவேண்டும் என்பதும், தெற்கில் இந்து ஆட்சிக்கு மாறாக முசுலிம் ஆட்சி ஏற்பட வேண்டும் என்பதும் அவர் நோக்கமன்று. "தென்னிந்தியப் படையெழுச்சியின் நோக்கம் கொள்ளையடிப்பது" என்று சத்தியநாதையர் கூறுகிறார். தென்னாட்டு அரசர்கள் அலாவுதீனின் வலிமையை உணரவேண்டுமென்பதும், வட இந்தியாவில் உள்ள முசுலிம் ஆட்சிக்கு இடையூறு செய்யாமலிருக்க வேண்டுமென்பதும் அலாவுதீனின் நோக்கங்களாகும்.

தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழல், அலாவுதீன் படையெடுத்துச் செல்லுவதற்கான வாய்ப்பை அளித்தது. அப்போது தென்னிந்தியாவில் நான்கு இந்து அரசுகள் இருந்தன. 1. தேவகிரியில் யாதவர்கள் அரசு. இராமச்சந்திர தேவர் என்பார் அதன் அரசர். 2. வாரங்கல்லில் காகதீய அரசு. அதனை ஆண்டவர் பிரதாபருத்திர தேவர். 3. துவார சமுத்திரத்தில் ஒய்சால அரசு; மூன்றாம் வீரபல்லாளர் இப்பகுதியை ஆண்டுவந்தார். 4. மதுரையில் பாண்டிய அரசு; பாண்டியர் ஆண்டனர். முசுலிம் எழுத்தாளர்கள் இதனை மாபார் என அழைத்தனர். மாறவர்மன் குலசேகரன் அப்பொழுது மன்னராக விருந்து வாணிகத்திற்கு ஆதரவு அளித்து, அதனால் நாட்டின் செழிப்பைப் பெருக்கினார். தென்னிந்திய இந்து அரசர்களிடம் ஒற்றுமை நிலவவில்லை. ஆகவே அவர்கள் கில்சியின் படைத்தலைவர் மாலிக்காபூரால் தோற்கடிக்கப்பட்டனர். கி.பி. 1307-இல் தேவகிரியும், கி.பி. 1310-இல் வாரங்கலும் துவாரசமுத்திரமும் வீழ்ந்தன. கி.பி. 1311-இல் மதுரை கொள்ளையடிக்கப் பட்டது. இராமேசுவரம் வரை மாலிக்காபூர் சென்று கொள்ளையடித்தமை தெரிகிறது.

மாலிக் காபூர் கி.பி. 1313-இல் மீண்டும் தில்லியிலிருந்து தேவகிரியின் மீது படையெடுத்துக் கைப்பற்றினார். நான்கு தென்னிந்திய இந்து அரசுகளும் அடிபணிந்து சுல்தானின் மேலாதிக்கத்தை ஏற்றனர் ஆனால், தில்லி அரசோடு அவை இணைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நகரங்களைக் கொள்ளையிடுதல், மக்களைக் கொன்று குவித்தல், கோயில்களைச் சூறையாடுதல் போன்ற செயல்கள் தென்னிந்திய மக்களைப் பெரிதும் வேதனையுறச் செய்தன. அவர்கள் மனத்தில் ஏற்பட்ட ஆழ்ந்த வெறுப்பின் அரசியல் விளைவே விசயநகரத்தின் எழுச்சியாகும் என்று மசும்தார் குறிப்பிடுகின்றார்.

பால்பனைப் போன்று அலாவுதீன் தெய்விக உரிமைக் கோட்பாட்டில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். அரசு அலுவல்களில் அவர் உலேமாக்களின் செல்வாக்கினை விரும்பவில்லை. தம்முடைய விருப்பத்திற்கேற்றவாறு சட்டங்களை ஏற்படுத்தினார். சமயத் துறையை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து சமயச் சார்பற்ற அரசைத் தோற்றுவித்த முதல் தில்லிச் சுல்தானும் அலாவுதீனே ஆவார். அலாவுதீன் இசுலாமிய சமயத்தைப் புறக்கணித்தார் என்று கருதக் கூடாது. இசுலாம் சமயத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்று நினைவுச் சின்னங்களின் மீது காணப்படும் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன.

மத்தியில் வலிமை வாய்ந்த ஓர் ஆட்சியை ஏற்படுத்த அலாவுதீன் விரும்பினார். ஆனால், சில புரட்சிகளால் இவரது ஆட்சி மாசுபட்டது. புதிய முசுலிம்களால் தோற்றுவிக்கப்பட்ட சூழ்ச்சியும் ஆகாத் கானால் தோற்றுவிக்கப்பட்ட கலகமும் சுல்தானைக் கொல்வதனைக் குறிக்கோளாகக் கொண்டன. இவர்தம் இரு மக்களால் உருவாக்கப்பட்ட புரட்சி, தில்லிக் கொத்தவாலின் உயிரை வாங்கிக் காசி மௌலானாவால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சி ஆகிய அனைத்துப் புரட்சிகளையும் இவர் அடக்கினார். இவர் இப்புரட்சிகள் தோன்றியதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தறிந்தார். திறமை குறைந்த ஒற்றர்கள், குடிப்பழக்கம், பெருங்குடிமக்களின் நெருக்கம், பணப்பெருக்கம் ஆகிய நான்கும் புரட்சிகள் தோன்ற அடிப்படைக் காரணங்களாகும் எனவுணர்ந்த அலாவுதீன் அடக்குமுறைச் சட்டங்களை உருவாக்கினார்.

முதல் சட்டம், சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் நோக்கங் கொண்டது. இதனால் ஒய்வுத் தொகைகளும் சமய அறக்கொடைகளும் மானிய நிலங்களும் அகற்றப்பட்டதன் பயனாக உயர்குடிமக்கள், அலுவலர்கள், பெரும் வணிகர்கள் ஆகியோரின் இல்லங்களைத் தவிர வேறெங்கும் பொன்னைக் காண முடியாது போயிற்று. இரண்டாவதாக, அலாவுதீன் திறமையான ஒற்றர் படையை நிறுவினார். அப்படையினர் நாட்டு மக்களைப் பற்றியும் அலுவலர்களைப் பற்றியும் குறித்த செய்திகளை அவருக்கு அறிவித்து வந்தனர். மூன்றாவதாக, குடிப்பழக்கம், வெறியூட்டும் சாராயம், இன்தேறல் முதலியவற்றை விற்றல், பகடையாட்டம் முதலியன தடை செய்யப்பட்டன. குடிப்பழக்கத்தைத் தாமும் கைவிட்டுச் சுல்தானே ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். நான்காவதாக, பணப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முயற்சி எடுத்தார். சுல்தானின் ஒப்புதல் இன்றி உயர்குடி மக்கள் விருந்துகள் அளித்தல், திருமண ஒப்பந்தங்கள் செய்து கொள்ளுதல் போன்றவை தடை செய்யப்பட்டன. இதனால் விருந்துகளும் இலவச உணவளிக்கும் முறைகளும் ஒழிந்தன.

அலாவுதீன் இந்துக்களை மிகவும் துன்புறுத்தினார். அரசுக்கு வரி தண்டும் இந்து மதச்செல்வர்கள் கூடச் சுல்தானின் அடக்குமுறை நடவடிக்கைகளிலிருந்து தப்ப இயலவில்லை. இந்துக்கள் தம் வருவாயில் பாதியை அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டனர். தலைவரி, உள்நாட்டுப் பொருள்களின் மீதான வரி, சுங்கவரி போன்ற பழைய வரிகளுடன் மேய்ச்சல் வரி,வீட்டு வரி போன்ற வரிகளும் திரட்டப்பட்டன. வரிவாங்கும் அலுவலர்களைக் கண்டு இந்து மக்கள் அஞ்சினர். மிக ஏழ்மையான நிலைக்கு இந்துக் குடும்பங்கள் தாழ்த்தப்பட்டதால்,இந்துப் பெண்டிர் முசுலிம்களின் இல்லத்தில் பணிப்பெண்களாக ஊழியம் செய்ய வேண்டிய நிலை

ஏற்பட்டது. மரம் அறுத்தல், நீர் இறைத்தல் ஆகிய தொழில்களில் ஈடுபடவும், அரசாங்க அடிமைகளாக இருக்கவுமே இந்துக்களுக்கு அலாவுதீன் வாய்ப்பளித்தார்.

தம் அரசு நன்கு செயற்பட வலுவான படை வேண்டும் என்பதை அலாவுதீன் நன்கு உணர்ந்தார்; நிலையான படையின் தேவையையும் அறிந்தார். நிலையான படையைஏற்படுத்திய முதல் துருக்கிய ச் சுல்தான் அலாவுதீன் கில்சியேயாவார். படை வீரர்கள் இராணுவ அமைச்சரால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அரசுக் கருவூலத்திலிருந்து படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கப்பட்டது. போர்க்கலங்களும் அரசரால் அளிக்கப்பட்டன. உயர் வகுப்பினர் தனிப் படைகளை வைத்திருப்பதை அனுமதிக்கவில்லை. போர் வீரர்களைப்பற்றிய தனிக்குறிப்புகளை எழுதி வைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி ஊழலை ஒழித்தார். குதிரைகளுக்குச் சூடு போடும் முறையைக் கையாண்டு பொய்க்கணக்கை ஒழித்தார்.

குறைந்த ஊதியத்தில் படைவீரர்கள் வாழ்க்கை நடத்த, வாழ்க்கைக்கு மிகவும் தேவையான பண்டங்களின் விலைகளைக் கட்டுப்படுத்த, அலாவுதீன் சில கட்டளைகள் பிறப்பித்தார். கள்ளச் சந்தைக்காரர்களும் பதுக்கல் செய்தவர்களும் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அரசுக் களஞ்சியங்களில் தானியங்கள் சேகரித்து வைக்கப்பட்டன. இதனால் வறட்சிக் காலத்தில்கூட உணவுப் பொருள்கள் கிட்டின.

அங்காடிகளைக் கட்டுப்படுத்தத் திவான்–இ–ரியாசத், சகான்–இ–மண்டி என்னும் இரு அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். வணிகச் சட்டங்களை மீறினோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதன் விளைவாக உணவுப் பொருள்களின் விலை குறைந்தது. இச்சட்டங்கள் நாடுமுழுவதும் செயற்படுத்தப்பட்டனவா அல்லது தில்லி நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மட்டுமே செயற்படுத்தப்பட்டனவா என்பது பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. தில்லியிலும் அதன் சுற்றுப்புறத்தில் மட்டுமே மேற்கூறிய திட்டங்கள் செயற்படுத்தப் பட்டன என்று கொள்வது பொருத்தமானதாகும்.

பொது வருவாய்த் துறையைப் பெருக்கத் தனிப் பட்டவர்களின் நலன்களை இயன்ற அளவு குறைக்க வேண்டும் என்பது அலாவுதீனின் நோக்கமாகும். அவருக்கு முன்னர் ஆட்சி செய்தவர்கள் வருவாய்த்துறைச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரவில்லை. ஓய்வூதியங்கள், சமய அறக்கொடை, நிலங்களை மானியமாக அளித்தல் போன்ற முறைகளை அலாவுதீன் அகற்றினார். இந்து அரசு ஊழியர்கள் பெற்ற சலுகைகள் மறுக்கப்பட்டன. அவர்களும் நிலவரி, வீட்டுவரி, மேய்ச்சல் வரி செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டனர். அரசின் வருவாயை முடிந்த அளவு உயர்த்த மொத்த விளைச்சலில் பாதி அரசின் பங்காகுமெனவும், இந்துக்கள் சிசியா வரியையும் செலுத்த வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது. மற்றும் நிலங்கள் அளக்கப்பட்டு நிலத்தின் அளவு மதிப்பிடப்பட்டது. இச்சட்டதிட்டங்களைச் செயற்படுத்த நேர்மையும் திறமையும் மிக்க வருவாய்த்துறை அலுவலர்கள் அமர்த்தப்பட்டனர். வீரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நிலமாக ஊதியம் வழங்கும் முறையை அலாவுதீன் ஏற்றுக் கொள்ளவில்லை.

அலாவுதீன் கில்சி படையின் அடிப்படையில் ஆட்சியை அமைத்த வல்லாட்சியாளர் ஆவார். அரசரே அனைத்து அதிகாரங்களையும் கைக்கொண்டார். அமைச்சர்கள் தனித்துச் செயற்படவில்லை. அலாவுதீனின் விருப்பு வெறுப்பிற்கேற்றவாறு அவர்கள் நடத்தப்பட்டனர்.

அலாவுதீன் கில்சி தில்லியில் உள்ள குவ்வத்–உல்–இசுலாம் (Quwwatu'l-Islam) என்னும் மசூதியை விரிவுபடுத்தினார். இம்மசூதியின் தென்புற நுழைவாயில் இவரால் கட்டப்பட்டது. இந்நுழைவாயில் அலைதர்வாசா என்று கூறப்படுகிறது. குதுப்மினாருக்கு அருகில் அலாய்மினார் என்ற உயர்ந்த மினாரையும் இவர் கட்டத் தொடங்கினார். அது முடிவுறா நிலையிலேயே இவர் காலமானார். தில்லியின் இரண்டாம் பெருநகரை அலாவுதீன் கில்சி நிறுவினார். அது 'சிரீ' (Siri) எனப் பெயரிடப்பட்டது. அலாவுதீன் மகன் கிசிர்கான் என்பவரும் தில்லியில் சில இசுலாமியக் கட்டடங்களைக் கட்டினார்.

கி.பி. 1312–ஆம் ஆண்டிற்குப் பிறகு இவரது வாழ்க்கையின் வெற்றி ஒளி மங்கத் தொடங்கியது. அத்து மீறிய செயல்களால் இவர் உடல் நலம் கெட்டது. மாலிக் காபூரின் ஆதிக்கத்தில் இவர் கைப்பொம்மையானார். காபூரின் தீயபழக்கங்களின் விளைவாகச் சுல்தானின் மூத்த மைந்தர் கிசிர்கான் சிறைவைக்கப்பட்டார். அவருடைய தாயாரும் தில்லியில் சிறை வைக்கப்பட்டார். குசராத்து ஆளுநர் கொலை செய்யப்பட்டார். நாட்டின் பல பகுதிகளிலும் கலகங்கள் தோன்றின. தேவகிரியில் அரபாலர் புரட்சிக் கொடி பிடித்தார். சித்தூரின் இராணா அமீர் இராசபுதனத்திலிருந்து முசுலிம்களை விரட்டியடித்தார். குசராத்திலும் கிளர்ச்சி ஏற்பட்டது. அலாவுதீன் கில்சி கி.பி. 1316 சனவரி இரண்டாம் நாள் மரணமடைந்தார்.

இரா.இரா.

துணை நூல்:

**Majumdar, R. C.**, & Others, "An Advanced History of India", Macmillan, India, 4th Ed., 1981.

**அலி (கி.பி. 600-661)** முகம்மது நபியின் மருமகன். இவர் மனைவி பாத்திமா. நாலாவது காலீப் பாகக் கி.பி. 656-இல் தேர்ந்தெடுக்கப்பட்டார்.மி குந்த அறிவு படைத்தவர் என்று புகழப்பெற்றவர். இவருடைய கண்கள் மிக்க அழகுடையன. யாருடைய கண்ணையேனும் புகழவேண்டியிருந்தால் அராபியர்கள் 'அயின் அலி' (அலியின் கண்கள்) என்று கூறுவர். இவர் காலத்தில்தான் சியா, சன்னி (Shia, Sunni) என்னும் இரண்டு இசுலாமியப் பிரிவுகள் ஏற்பட்டன.

**அலி அகமது பக்ருதீன் (கி.பி. 1905-1977)** இந்தியாவின் ஐந்தாம் குடியரசுத் தலைவர். இவர் 1905-ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் நாள் தில்லியில் பிறந்தார். இவர் தந்தை அகமது, அசாம் மாநிலத்தைச் சேர்ந்தவர்; இந்திய மருத்துவத்துறையில் பணியாற்றியவர். இவர் தாய் உருக்கியா சுல்தானா தில்லியைச் சேர்ந்தவர். பக்ருதீன் (Fakhruddin) அலி அகமது உத்தரப் பிரதேசத்திலுள்ள கோண்டா என்ற இடத்திலும் தில்லியிலும் உள்ள பள்ளிகளில் பயின்ற பின், இசுடீபன் கல்லூரியில் சேர்ந்தார். பின்பு இங்கிலாந்து சென்று அங்குள்ள கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த காத்தரைன் கல்லூரியில் வரலாற்றைச் சிறப்புப் பாடமாகப் பயின்றார். பின்னர் அந்நாட்டிலுள்ள டெம்பிள் என்னுமிடத்திலுள்ள புகழ்பெற்ற சட்டக் கல்லூரியில் பயின்று வழக்குரைஞர் ஆனார். இங்கிலாந்திலிருந்து இவர் தாய் நாடு திரும்பும்பொழுது இவாகு வயது 28.



இவர், பஞ்சாப் மாநிலத்திலும் அசாம் மாநிலத்திலும் வழக்குரைஞராகப் பணியாற்றினார். காந்தி அடிகளின் அகிம்சைக் கோட்பாடுகளால் ஈர்க்கப்பட்டு, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடும் நோக்கத்தோடு 1931-ஆம் ஆண்டு காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தார். சத்தியாக் கிரகத்தில் பங்கு கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனைப் பெற்றார். அசாம் மாநிலச் சட்டப் பேரவையின்உறுப்பினராக 1935-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார். 1938-ஆம் ஆண்டு அசாம் மாநில நிதி வருவாய்த் துறையில் இவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. நில வரியைக் குறைத்து வேளாண்மை வருமானத்திற்கு ஒரு புதிய வரியைக் கொண்டுவந்தார். பொது மக்களைப் பாதிக்காமல் மாநிலத்தின் வருவாயைப் பெருக்கினார்.

திருமணத்திற்கு முன்பே அமைச்சராகப் பணியாற்றிப் புகழ்பெற்ற பக்ருதீன் அலி அகமது 1945-ஆம் ஆண்டு ஆபிதா அய்தர் என்ற பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு ஆண்மக்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். திருமதி ஆபிதா அகமது அலிகார் முசுலிம் பல்கலைக்கழகத்தில் படித்தவர்; தம் கணவரின் அரசியல் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர். திருமணமான மறு ஆண்டே இவர் அசாம் மாநிலத்தின் அட்வகேட் செனரலாக நியமனம் பெற்றார்.

நாட்டு விடுதலைக்குப்பின் பக்ருத்தீன் அலி அகமது அசாம் மாநிலச் சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் பல்வேறு நிலைகளில் பல ஆண்டுகள் பணிபுரிந்தார். 1955-ஆம் ஆண்டு நாடாளுமன்ற மேலவை உறுப்பினராகப் பணிமேற்கொண்டார். அவ்வாண்டு இந்தியாவிலிருந்து சோவியத்துஉருசியாவிற்குச் சென்ற வழக்கறிஞர்களின் குழுத்தலைவராகச் சென்றார். இந்திய அரசு,ஐக்கிய நாடுகளின் அவைக்கு அனுப்பிய குழுவின் உறுப்பினராகப் பலமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். 1958-66-ஆம் ஆண்டுகளில் சமூக நலம், சட்டம், பஞ்சாயத்து ஆகிய துறைகளில் இந்திய அரசின் அமைச்சராகப் பணியாற்றினார்.

அசாம் மாநிலத்திலுள்ள பர்பீட்டா என்ற நாடாளுமன்றத் தொகுதியிலிருந்து 1967-ஆம் ஆண்டு பக்ருதீன் அலி அகமது தேர்ந்தெடுக்கப்பட்டார். மத்திய அரசில் அவர் பல்வேறு துறைகளில் பணியாற்றினார். 1966-ஆம் ஆண்டு மத்திய அரசின் மின்துறை, நீர்ப்பாசனத்துறைகளிலும், 1967-ஆம் ஆண்டு கல்வித் துறையிலும், 1967-69ஆம் ஆண்டுகளில் தொழில் துறை, முசுலிம் அறக்கட்டளைத்துறைகளிலும், 1969-70-ஆம் ஆண்டுகளில் தொழில், உள்நாட்டுவாணிகம்,

ஆகிய துறைகளிலும், 1971–72–ஆம் ஆண்டுகளில் உணவு, வேளாண்மை ஆகிய துறைகளிலும் அமைச்சராகப் பணியாற்றினார். இவர் மத்திய அரசில் அமைச்சராகப் பணியாற்றியபொழுது இங்கிலாந்து, பிரான்சு,மேற்குச்செருமனி, உருசியா, இத்தாலி, அங்கேரி, பல்கேரியா, இலங்கை முதலிய நாடுகளுக்குப் பயணம் சென்று வந்தார். 1970–71ஆம் ஆண்டுகளில் ஐக்கிய நாடுகள் அவையில் உணவு, வேளாண்மை அமைப்பின் சார்பாக ஆசுத்திரேலியாவிலும் இத்தாலியிலும் நடைபெற்ற மாநாடுகளில் கலந்து கொண்டார். மொராக்கோ என்னும் நாட்டிலுள்ள இரபாத்து என்னுமிடத்தில் 1969–ஆம் ஆண்டு நடந்த இசுலாமிய நாடுகளின் உறுப்பினர்கள் கூட்டத்தில் கோடிக்கணக்கான முசுலிம்கள் வாழும் இந்தியாவின் உறுப்பினராகச் சென்றார். இந்திய நாட்டின் உறுப்பினராக 1971–ஆம் ஆண்டு அரபு நாடுகளுக்குச் சென்று அவற்றுடன் நட்புறவு ஏற்பட வழிகோலினார். காசுமீரின் தலைவர் சேக் அப்துல்லாவிற்கும் இந்திய அரசுக்குமிடையே நல்லுறவு ஏற்படப் பெரிதும் உதவினார். இவரது முயற்சியால் சேக் அப்துல்லா தமது ‘தனி காசுமீரம்’ என்னும கொள்கையை ஓரளவு மாற்றிக் கொண்டு இந்திய அரசுடன் உடன்பாடு கொண்டார். இவர் மத்திய அரசில் அமைச்சராகப் பணியாற்றிய காலங்களில் முசுலிம் அறக்கட்டளைக்குழுவின் தலைவராகவும் இருந்து வந்தார். முசுலிம் அறக்கட்டளையில் இருந்த சில ஊழல்களை உணர்ந்த இவர் அவற்றை நீக்கப் பெரிதும் பாடுபட்டார். அறக்கட்டளைகளை உருவாக்கியவர்களின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் கூறினார். முசுலிம் சமூகத்தவர்கள் கல்வியில் பின்தங்கியிருப்பதை உணர்ந்து இவர் முசுலிம் சமூகத்தவர்களால் நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டினார்.

சிறந்த தேசியவாதியான பக்ருதீன் அலி அகமது இந்துக்களையும், முசுலிம்களையும் இணைக்கும் ஒரு பாலமாக விளங்கினார். அலிகார் முசுலிம் பல்கலைக் கழகம் 1965-67–ஆம் ஆண்டுகளில் வகுப்புவாதத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளால் தொல்லைப்பட்டபோது,இவர் தமது விருப்பு வெறுப்பற்ற நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்து அமைதியை நிலைநாட்டினார். இவர் குடியரசுத் தலைவரான பின்பு 1976–ஆம் ஆண்டு அலிகார் முசுலிம் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்பொழுது, அப்பல்கலைக்கழகம் வகுப்புவாதத்திற்கு அப்பாற்பட்டதென்றும், வளர்ந்து வரும் இந்தியாவில் எல்லா வகுப்பினரும் சேர்ந்து வளர்வதே சிறப்பு என்றும் கூறினார்,

இந்திய அரசியல் வரலாற்றில் 1969–ஆம் ஆண்டு குறிப்பிடத்தக்க குடியரசுத் தலைவரின் தேர்தலில் அப்போது பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தியின் ஆதரவு பெற்ற வி.வி. கிரியைத் தாமும் ஆதரித்துப் பிரதமரின் நல்லெண்ணத்தைப் பெற்றார். அரசியல் விவகாரக் குழுவின் உறுப்பினராகவும், காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவில் உறுப்பினராகவும், கட்சியின் செயற்குழுவில் உறுப்பினராகவும், கட்சியின் மேலிடமென்று கூறப்படும் நாடாளுமன்றக் குழுவின் உறுப்பினராகவும் இவர் பணியாற்றினார்.


காங்கிரசுக் கட்சியின் சார்பில் 1974-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டுப் பெருவாரியான வாக்குகளுடன் வெற்றிபெற்று அவ்வாண்டு ஆகசுடு மாதம் 24–ஆம் நாள் குடியரசுத் தலைவராகப் பதவியேற்றார். இவர் இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த இரண்டாவது முசுலிம் ஆவார். இவர் பதவியேற்றபின் தாம் ஆற்றிய உரையில், நாட்டுத் தந்தை காந்தியடிகள், சவகர்லால்நேரு, சர்தார் பட்டேல், மவுலானா அபுல்கலாம் ஆசாத் போன்ற பெரும் தலைவர்களின் கோட்பாடுகளால் தாம் உருவாக்கப்பட்டவர் என்று கூறினார். இவர் குடியரசுத் தலைவராக இருந்த காலத்தில் இந்தியாவிற்கும் மேற்காசிய நாடுகளுக்குமிடையே இருந்த நல்லுறவு இன்னும் வலுப்பெற்றது. இந்தியாவிற்கு வருகை தந்த அரபு அமீர்களின் ஐக்கிய நாட்டுத் தலைவரான சேக் சையீது,இந்தியக் குடியரசுத் தலைவர் பக்ருதீன் அலி அகமதினுடைய முயற்சியாலும் தூண்டுதலாலும் 1975–ஆம் ஆண்டு இருபது இலட்ச ரூபாய்களைப் பெட்ரோலியம் பற்றிய ஆராய்ச்சிக்கென்று அலிகார் முசுலிம் பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாகக் கொடுத்தார்.

இவரது குடியரசுத் தலைமைக்காலத்தில் இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க மற்றொரு நிகழ்ச்சி 1975 ஆம் ஆண்டு சூன் மாதம் 26–ஆம் நாள் இந்தியாவில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டதாகும். நெருக்கடி நிலைக்காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. அப்பொழுது பக்ருதீன் அலி அகமதும் அவர் மனைவியாரும் குடும்பக் கட்டுப்பாடு இசுலாம் சமயக் கோட்பாடுகளுக்குப் புறம்பானதன்றுஎன்பதைப் பல மேடைகளில் முசுலிம் மக்களுக்கு எடுத்துக் கூறினர். நெருக்கடி நிலைக்காலத்திலும், இவர் பல நாடுகளுக்கும் சுற்றுப் பயணம் செய்து அந்நாடுகளுக்கும் இந்தியாவிற்குமிடையே நல்லுறவை வளர்த்தார். அவ்வாறு இவர் மலேசியாவிற்குச் சென்று அதன் தலைநகரான கோலாலம்பூரில் தங்கியிருக்கும் பொழுது இவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இவர் தம் மற்ற சுற்றுப் பயணங்களை எல்லாம் தள்ளிவைத்து விட்டு, விரைவாக இந்தியா திரும்பினார். இந்தியா திரும்பியவுடன் மறுமடியும் மாரடைப்பு ஏற்பட்டு 1977–ஆம்

ஆண்டு பிப்பிரவரி மாதம் 11-ஆம் நாள் காலமானர். இவரது பூத உடல் புது தில்லியில் நாடாளுமன்றச் சாலையிலுள்ள சும்மா மசூதியில் அடக்கம் செய்யப்பட்டது. மு.ர.

***அலிகார்*** உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள நகரம். வேளாண்மைப் பொருள்களின் சிறப்பான வாணிக மையம். இங்குப் பஞ்சாலைகளும் உள்ளன. இங்குள்ள அலிகார் (Aligarh) முசுலிம் பல்கலைக்கழகம் புகழ்பெற்றது. ஆங்கில-கிழக்கிந்தியக் கல்லூரியாகக் கி.பி. 1875-ஆம் ஆண்டு முசுலிம் கல்வி நிறுவனமாகத் தொடங்கிய அலிகார் பல்கலைக்கழகம், இந்தியாவின் பெரும் பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். இதை இந்தியநாட்டின் மைய அரசே ஏற்று நடத்துகிறபடியால் இங்கு இந்தியாவின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் கல்வி கற்கவும் ஆய்வு நடத்தவும் சேர்க்கப்படுகிறார்கள். அலிகாரின் பண்டைய பெயர் கோயில் (Koil) என்பதாகும். இங்குள்ள அழிவுற்ற கோட்டைக்குள் இந்து, சமணக் கோயில்களின் அழிவுச் சின்னங்களைக் காணலாம். இவ்வழிவுச் சின்னங்களின் மேல் எழுப்பப்பட்டது தான் இங்குள்ள மசூதியாகும். அலிகாரில் பூட்டுகள், செப்புப் பொருள்கள், பால் பண்ணைப் பொருள்கள் முதலியன உற்பத்தியாகின்றன. அலிகார்ப் பூட்டு உலகப் புகழ்பெற்றது.

***அலிகினி மலைத் தொடர்***, அமெரிக்க ஐக்கிய நாட்டின் கிழக்கே உள்ள அப்பலேச்சிய மலைத் தொடரின் பகுதியே அலிகினி மலைத்தொடர். தென்மேற்கில் நடு பென்சில்வேனியாவிலிருந்து மேற்கு மேரிலாந்து, மேற்கு வர்சீனியாவின் கிழக்கு, மேற்கு வர்சீனியா ஆகியவற்றின் வழியாக இம்மலைத்தொடர் செல்கிறது. இது வடக்கில் கடல் மட்டத்திற்குமேல் 610 மீட்டர் வரை உயர்ந்தும்,




அலிகினி மலைத்தொடர்

தெற்கில் 1460 மீட்டர் வரை உயர்ந்தும் இருக்கிறது. அலிகினி மலைத் தொடரின் மிக உயர்ந்த உச்சியின் பெயர் இசுபுருசு நாப் என்பதாம். இதன் உயரம் 1482 மீட்டர்கள். இம்மலையுச்சி மேற்கு வர்சீனியாவில் உள்ளது.

***அலி பாச்சா*** துருக்கிய அரசியல் வல்லுநர்களில் ஒருவர். கி.பி. 19-ஆம் நூற்றாண்டில் உதுமானியச் சீர்திருத்த இயக்கத்தின் சீரிய தலைவர்களுள் ஒருவர். அலி பாச்சாவின் (Ali Pasha) முழுப்பெயர் முகமது அமீர் அலி என்பதாகும். துருக்கி நாட்டின் துணை நிலை அரசியல் தூதராகவும் (கி.பி. 1838) பின்னர்த் தூதராகவும் (கி.பி. 1841) இலண்டனில் பணியாற்றியவர். கி.பி. 1852-இல் நாட்டின் தலைமை அமைச்சரானார். தன்சிமத் அரசுக் குழுவின் தலைவராகவும் பதவி வகித்தவர் (கி.பி. 1855).பவுட்டுபாசாவுடன் இணைந்து கி.பி. 1856-இல் கட்-இ-சரீப் சீர்திருத்தப் பேரறிக்கையை வெளியிடுவதில் பெரும்பங்கு கொண்டார். இச் சீர்திருத்தப் பேரறிக்கை எல்லாக் குடி மக்களின் வாழ்வுக்கும், சுதந்திரத்திற்கும் சொத்துரிமைக்கும் உறுதி அளித்ததுடன், படை, வரிவிதிப்பு ஆகியவற்றிலும் சீர்திருத்தங்கள் வரும் எனவும் கூறியது. கி.பி. 1858 முதல் 1859, 1861, 1867 முதல் 1871 வரையிலான காலங்களில் பல முறை தலைமை அமைச்சராக இவர் பணியாற்றினார்.அது சமயம் உதுமானிய நிருவாகத்துறை, நிதி, நீதி ஆகிய துறைகளில் மேலை நாடுகளின் பாணியில் விரிவான சீர்திருத்தங்களையும் புகுத்தினார்.

***அலிபாபா*** என்பவன் அலிபாபாவும் நாற்பது திருடர்களும்' என்னும் கதையில் வரும் கதைத்தலைவன். இக்கதை அராபிக் கதைகள் என்னும் பாரசீக நூலில் வரும் சிறந்தொரு கதையாகும். நாற்பது திருடர்கள் திருடிய செல்வத்தினை ஒரு குகையில் மறைத்து வைத்திருந்தனர். அக்குகையைக் கண்ட அலிபாபா அக்குகையைத் திறக்கும் மந்திரத்தையும் மறைந்திருந்து கேட்டான். அம்மந்திரத்தைச் சொல்லித் திருடர்கள் குகையைத் திறந்து தேவையான செல்வத்தை எடுத்துக்கொண்டு நல்வாழ்வு வாழ்ந்தனர். அதுபற்றிக் கேள்வியுற்ற இவன் தமையனும் அம்மந்திரத்தை அலிபாபாவிடமிருந்தறிந்து அக்குகையினுள் சென்றான். மந்திரத்தை மறந்தமையால் குகையினைத் திறக்க இயலாமல் திருடர்களால் பிடிபட்டுக் கொல்லப்பட்டான். அலிபாபாவை அறிந்த திருடர்கள் அவனைக் கொல்லத் திட்டமிட்டனர். அலிபாபா தன் அறிவுத் திறமையால் அவர்களை அழித்தான் என்பதே கதை.

***அலிமர்த்தன்கான்*** காண்டகாரில் பாரசீகத்தின் ஆளுநராக இருந்தவர். கி.பி. 1637 ஆம் ஆண்டில் பாரசீக அரசரின் வல்லாட்சியிலிருந்து தப்பியோடியவர். தில்லியில் புகலிடம் வேண்டி ஓடுமுன், காண்டகாரைச் (Kandahar) சாசகானுக்குக் (Shah Jahan) கொடுத்துவிட்டார். தில்லியில் அனைத்து மரியாதை

களுடன் வரவேற்கப்பட்டார். பின்னர், பல்வேறு காலக் கட்டங்களில் காசுமீரம், காபூல் போன்ற பகுதிகளின் ஆளுநராக நியமிக்கப் பெற்றார். பால்க்கு, பதக்சான் பகுதிகளின்மீது மொகலாயப் படையெடுப்பின்போது அலிமர்த்தன்கான் அதில் பங்கு கொண்டார். பொதுப் பணிகளை இவர் செவ்வனே நிறைவேற்றியதால் தில்லி அரண்மனை வாசிகள் இவரைப் போற்றிப் பாராட்டினர். அத்தகைய பொதுப்பணிகளுள் ஒன்று இவர் வெட்டிய வாய்க்காலாகும். இவ்வாய்க்கால் 192 கி.மீ. தொலைவு யமுனை ஆற்றிலிருந்து தில்லி வரை தோண்டப்பட்டு, இவருடைய பெயரையே தாங்கி நிற்கிறது.

***அலிமுராத்து*** சிந்து வெளியில் அகழாய்வு செய்யப்பட்ட இடம். இங்கு இரண்டு மண் மேடுகள் உள்ளன. இங்கு அகழாய்வு செய்தபொழுது எட்டடிக் குறுக்களவுள்ள ஒரு கிணறும் ஒரு வளைவான கற் சுவரும் காணப்பட்டன. ஓவியம் தீட்டப்பட்ட மட் பாண்டங்களும் வேலைப்பாடமைந்த தொட்டிகளும் தரம் வாய்ந்த கல்லொன்றும் செம்மணியொன்றும் இவ்விடத்தில் கண்டிபிடிக்கப்பட்டுள்ளன.

***அலியார்ப் புலவர்***, க கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இசுலாமியத் தமிழ்ப் புலவர்களில் ஒருவர். அசன் அலிப் புலவர் என்பது இவரது வேறு பெயராகும்; படைப்போர் என முடியும் பெயரமைந்த ஐந்து நூல்களை இயற்றியுள்ளார். படைப் போர் என்பது போர் பற்றி அமையும் இசுலாமிய இலக்கிய வகைகளுள் ஒன்றாகும். இபுனி ஆண்டான் படைப் போர், இந்திராயன் படைப் போர், உச்சி படைப் போர், தாகி படைப் போர், வாடோக்கி படைப் போர் ஆகிய ஐந்தும் இவர்தம் படைப் போர் இலக் கியங்களாகும்.

இவ்வைந்து நூல்களையும் தனித்தனியாகவும் சேர்த்து ஒன்றாகவும் அச்சிட்டுள்ளனர். இந்நூல் கி.பி. 1878-ஆம் ஆண்டில்அச்சாகியுள்ளது. இவற்றில் 2950 பாடல்கள் உள்ளன. இத்தொகுப்பு 'ஐந்து படைப்போர்' என்னும் பெயரில் அமைந்துள்ளது.

இவை ஐந்தும் நபிகள் நாயகத்தின் வரலாற்றோடு தொடர்புடைய செய்திகளைக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. இவ்வைந்தும் ஒன்றற்கொன்று தொடர்பு பற்றி ஒரு நூல் போலவும் அமைந்துள்ளன என்பர். ஒரு படைப் போரினை முடிக்கும் போது அடுத்த படைப் போரின் தோற்றுவாயைக் குறிப்பிட்டுச் செல்கிறார் அலியார்ப் புலவர். இதனாலும் இத் தொகுப்பு, தொடர்ந்து செல்லும் ஒரு நூல் போலவே அமைந்துள்ளது எனக் கொள்ளலாம். மு.த.

***அலூசன் தீவுகள்*** வட அமெரிக்காவில் அலாசுகா முந்நீரக ஓரத்திலிருந்து மேற்காகப் பரவியுள்ள எரிமலைத்தொடர்கொண்டதீவுகள் ஆகும். இங்குள்ள மலைத்தொடர் 1400 கி.மீ. பரவி உள்ளது. தீவுகளில் தென்படும் மலைகள் அலாசுகா மலைத் தொடரின் பகுதியாகும். அலூசன் தீவுகள் (Aleutian Islands) அலாசுகாவின் பாகமாக இருந்து பேரிங் நீர்ப்பிரிவினைப் பசிபிக்குப் பெருங்கடலிலிருந்து பிரிக்கின்றன. இவை 14 பெருந் தீவுகளையும் 55 சிறு தீவுகளையும் வேறு பல சிறு சிறு தீவுத் திடல்களையும் கொண்டன. இத்தீவுகளின் மொத்தப் பரப்பு 17,552 ச.கி.மீ. இவை ஆர்க்டிக்கு வட்டத்திற்குத் தெற்கில் 1300-இலிருந்து 1600 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளன. இங்குப் பல வெந்நீர் ஊற்றுகள் உள்ளன. மர வகைகள் வளராத இத்தீவுகளில் சிறு புதர்கள், மலர்கள், புற்கள், பாசிகள் போன்றவை செழித்து வளருகின்றன. மீன் பிடித்தல், சிறப்புத் தொழில். கீழ் மேலாக அலூசன் தீவுகளை ஐந்து பிரிவுகளாகப் பிரிப்பர். அவை 1. பாக்சுத் தீவுகள் 2. நான்மலைத் தீவுகள் 3. ஆந்திரியானோப்புத் தீவுகள் 4. எலித்தீவுகள் 5. அருகிலிருக்கும் தீவுகள்.

***அலெக்சாந்தர்***: இசுகாட்லாந்தில் (Scotland) இப்பெயருள்ள அரசர் மூவர் இருந்துள்ளனர்.

அவருள் ஒருவர் இசுகாட்லாந்து மன்னராகக் கி.பி. 1107-இல் பட்டமேற்றார். இவர் தந்தை மால்கம் கான்மோர் (Malcolm Canmore). இவரது காலத்தில் இசுகாட்லாந்தின் திருச்சபை செயலற்றதாக்கப்பட்டது. இவர் இங்கிலாந்து மன்னன் முதலாம் என்றியின் மகள் செபில் என்பவளை மணந்தார். இவர்களுக்கு குழந்தை இல்லை. கொடூரன் என்று இவர் அழைக்கப்பட்டார்.

***அலெக்சாந்தர் ஆர்ச்சிபென்கோ*** கி.பி. 1887-1964 ஆகிய காலத்தில் வாழ்ந்த சிற்பிகளில் தலைசிறந்தவர்; திடமாகவும் திடமற்றதாகவும் வரையப்பெற்ற மாலிட உருவத்தை இணைத்த பெருமை இவரையே சாரும். இவரது சிற்பக் கலைப்பாணியை இவர் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இவர் பயன்படுத்திய திடப்பொருள்களையும் திடமற்ற பொருள்களையும் புதிய சிற்பிகளில் பலர் பயன்படுத்தும் செல்வாக்கிற்குட்பட்டனர். இவர் உருவாக்கிய சிற்ப உருவங்கள் உட்புறம் வளைந்தவை; வெளிப்புறம் வளைந்தவை யாவும் கோணவடிவங்களாக இருக்கின்றன.

உருசியாவில் உக்ரேன் பகுதியில் கீவ் என்ற ஊரில் பிறந்தவர் ஆர்ச்சிபென்கோ. 1923-இல் அமெரிக்கக் குடிமகனானார். ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்களில் நுண்கலைப் பள்ளிகளை நிலைநாட்டியவரும் இவரே. அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் இவர் பலருக்கு நுண்கலைகளைக் கற்பித்தார்.

**அலெக்சாந்தர் எண்மர்:** இவ்வெண்மரும் போப்பாண்டவர்கள். அவர்கள்:

| | | | கி.பி கி.பி |
|---|---|---|---|
| 1. | அலெக்சாந்தர், | முதலாம் | ( 105 – 115) |
| 2. | ,, | இரண்டாம் | (1061—1073) |
| 3. | ,, | மூன்றாம் | (1159 – 1181) |
| 4. | ,, | நான்காம் | (1254 – 1261) |
| 5. | ,, | ஐந்தாம் | (1409—1410) |
| 6. | ,, | ஆறாம் | (1492—1503) |
| 7. | ,, | ஏழாம் | (1655—1667) |
| 8. | ,, | எட்டாம் | (1689 – 1691) |


இவர்களுள் மூன்றாம் அலெக்சாந்தரும் (கி.பி. 1159–1181). ஆறாம் அலெக்சாந்தரும் (கி.பி. 1492–கி.பி. 1503) குறிப்பிடத் தக்கவர்கள்.

அலெக்சாந்தர், மூன்றாம்: உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபையின் போப்பு. இவர் போலக்னா (Bologna) பல்கலைக்கழகத்தில் திருச்சபைச் சட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தார். கி.பி. 1153–ஆம் ஆண்டில் நான்காம் அனாசுடாசியசு (Anastasius-IV), நான்காம் ஏட்ரியன் (Adrian-IV) போன்ற போப்பாண்டவர்களுக்குக் கீழ்ச் சமயத்துறை(Chancellor) நடுவராக இருந்தார். கி.பி. 1159–இல் போப்பு ஆறாம் ஏட்ரியனுக்குப்பின் போப்பாக நியமனம் பெற்றார். இவருக்கு எதிராகச் சிறுபான்மையோரால் நான்காம் விக்டர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். விக்டரை முதலில் அங்கீகரித்த பார்பரோசா வமிசத்தினர், இலெக்னானோ தோல்வியுற்ற பின் அலெக்சாந்தரையே போப்பாக ஏற்றனர். இவர் உரோமானியக் கத்தோலிக்கத் திருச்சபை மதகுருக்களின் மூன்றாவது மாநாட்டை கி.பி. 1179–இல் கூட்டி, உரோமானியக் கத்தோலிக்கச் சமயச் சட்டங்கள் சிலவற்றை இயற்றினார். இங்கிலாந்து அரசர் இரண்டாம் என்றியைத் தாமசு பெக்கட்டு (Thomas Beckett) என்பவரின் கொலையை முன்னிட்டுப் பணிய வைத்தார். போர்த்துகீசிய மன்னராக முதலாம் அல்பான்சோவை ஆட்சியில் அமர்த்தினார். உரோமானியக் குடியரசு, மூன்றாம் இன்னசன்ட் (Innocent III) என்பவரைக் கி.பி. 1179–இல் இவருக்கு எதிராகப் போப்பாக்க முயற்சி செய்தது. ஆனால்அவரைத் தன்வசப்படுத்தி மூன்றாம் இன்னசன்ட்டைக் கி.பி.1180 இல் பதவியிழக்கச் செய்தார். 1180 இல் இசுகாட்லாந்து (Scotland) அரசரான வில்லியம் என்பவரைச் சமயநீக்கம் செய்தார். கி.பி. 1181–ஆம் ஆண்டு ஆகசுட்டு 30–ஆம் நாள் உயிர் நீத்தார்.

அலெக்சாந்தர், ஆறாம் (போப்பு) (1492–1503): அலெக்சாந்தர் என்னும் பெயருள்ள போப்பாண்டவர்களுள் இவரே தலைசிறந்தவர். இவரை ஆறாம் அலெக்சாந்தர் என்பர். கி.பி. 1413–இல் இசுபெயினிலுள்ள வாலன்சியாவிற்கு அருகிலுள்ள உரோட்ரிகோ லேன்கோல் (Rodrigo Lan Col) என்னுமிடத்தில் பிறந்தார். மூன்றாம் காலிக்சுடசு (Calixtus–III)வின் மருமகனானார். இவர் வழக்காடுவதிலும் ஆட்சித் திறமையிலும் சிறந்த திறமை பெற்றவர். மூன்றாம் காலிக்சுடசு இவரைக் கார்டினலாக நியமித்தார். ஆறாம் இன்னசன்ட் என்பவர் கி.பி. 1492–இல் இறந்ததும் அலெக்சாந்தர் போப்பு ஆனார். சவனரோலா என்னும் பிளாரன்சின் சமய உரையாற்றுபவர் இவரை எதிர்த்ததால்,கி.பி. 1498-இல் போப்புஅலெக்சாந்தர் சவனரோலாவைக் கொல்லும்படி செய்தார். பேரறிவும் துணிச்சலும் மிக்க இவர் உரோமாபுரியை அழகு படுத்தினார். கல்வியையும் கலைகளையும் வளர்த்தார். திருச்சபையின் வருமானம் இவரது காலத்தில் அதிகரித்தது. அமெரிக்காவிலிருந்த இசுபெயின் (Spain) போர்த்துகீசிய குடியேற்றங்களுக்கிடையே நில எல்லையை வகுத்தார். இவர் தம் இரு புதல்வர்கள் சீசர் போர்சியா(Cesaure Borgia) உலுக்ரிசியா (Lucrezia) பெரும்புகழ் பெற்றவர்களாவர்.

**அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி. (1814-1893)** இங்கிலாந்திலுள்ள வெசுட்டு மினிசுடரில் கி.பி. 1814–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 23–ஆம் நாள் பிறந்தார். இவர் கி.பி. 1831–ஆம் ஆண்டு இந்தியாவிற்கு வந்து வங்காளத்தில் பொறியாளராகத் தமது பணியைத் தொடங்கினார். இவர்சீக்கியப் போர்களில் பங்குகொண்டு தமது திறமையைக் காட்டினார். தாம் ஒரு பொறியாளராக இருந்தும் இந்தியத் தொல்பொருள் ஆய்வில் இவர் மிகுந்த அக்கறை கொண்டார். கி.பி. 1856-ஆம் ஆண்டு முதல் கி.பி. 1858–ஆம் ஆண்டு வரை முதன்மைப் பொறியாளராக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் தமது ஆர்வம் மிகுதியால் இந்திய நினைவுச் சின்னங்கள் உள்ள இடங்களைப் பார்வையிட்டுச் சில இடங்களில் கி.பி. 1834–ஆம் ஆண்டுக்கும் கி.பி. 1854–ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் அகழாய்வுகளை மேற்கொண்டார். அவைகளில் குறிப்பிடத்தக்கவை மனிக்யாலா, சாரநாத்து,பில்சா போன்ற இடங்கள் ஆகும். கி.பி. 1858-ஆம் ஆண்டு அரசாங்கம் கன்னிங்காமை வடமேற்கு எல்லைப்புற மாநிலப்பொறியாளராக நியமித்தது. அங்கும் தொடர்ந்து பணியாற்றி 1861–ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

அலெக்சாந்தர் கன்னிங்காம், இந்தியாவில் உள்ள பழங்கால நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது அரசின் தலையாய கடமை என்றும், அதற்கு ஏற்ற தகுதி வாய்ந்த அதிகாரிகளை நியமித்துக் கல்வெட்டியல், நாணயவியல், தொல்பொருளியல் ஆகியவற்றை



அலெக்சாந்தர் கன்னிங்காம்

இந்தியாவில் நிறுவி ஆராய்தல் வேண்டும் என்றும் கி.பி. 1848-ஆம் ஆண்டு கல்கத்தாக் கழக இதழில் ஒரு கட்டுரை எழுதி அரசாங்கத்திற்கு எடுத்துரைத்தார். அரசாங்கம் இவரது முயற்சிக்குச் செவிசாய்க்கவில்லை. கி.பி.1860-ஆம் ஆண்டு கானிங்பிரபு இந்தியாவின்முதல் அரசப் பிரதிநிதியாகப் பதவியேற்றார். கானிங்பிரபு தொல்லியலில் மிக்க ஆர்வமும், இந்திய வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதில் தனிப்பட்ட ஊக்கமும் கொண்டவர். அவர் அலெக்சாந்தரின் தொல்லியல் ஆர்வத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் கி.பி.1861-ஆம் ஆண்டு வட இந்தியத் தொல்லியல் ஆய்வுத்துறையை ஏற்படுத்திக் கன்னிங்காமை அதன் முதல் தொல்லியல் பரப்பாய்வாளராகத் தற்காலிகமாக நியமனம் செய்தார். கன்னிங்காமிற்கு மாத ஊதியமாக உரூபாய் நானூற்று ஐம்பதும், களப்பணிப்படியாக (Field Allowance) உரூபாய் இருநூற்று ஐம்பதும் வழங்கப்பட்டன. கன்னிங்காம் கங்கைச் சமவெளியில் உள்ள தொன்மையான நகரங்களில் தமது ஆய்வினை மேற்கொண்டார். கி.பி. 1866-ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் 9-ஆம் நாள் தொல்லியல் பரப்பாய்வாளர் கன்னிங்காமின்பணி, அப்போது அரசப்பிரதிநிதியாக இருந்த இலாரென்சு பிரபுவால் அப்போதைக்கு நிறுத்திவைக்கப்பட்டது.

இந்திய அரசப் பிரதிநிதி மேயோ பிரபு காலத்தில் மீண்டும் கி.பி. 1870-ஆம் ஆண்டு தொல்லியல் பரப்பாய்வுத்துறை ஏற்படுத்தப்பட்டு, அலெக்சாந்தர் கன்னிங்காம் அதன் இயக்குநர் பொறுப்பை ஏற்றார். இவருக்குத் துணையாக மூன்று உதவியாளர்களும் நியமிக்கப்பெற்றனர். அவர்கள் சே. டி. பெக்லர் (J.D. Beglar), எ.சி. எச். கார்லைல் (A.C.H. Carlleyle), எச். பி. டபுள்யூ. காரிக் (H.B.W. Garrick) ஆவர். அவர்கள் நினைவுச் சின்னங்களைப் பற்றி வரைபடங்கள் வரையவும், வரலாற்றுப் புவியியல் தொடர்பான ஆதாரக் கூறுகளை ஆயத்தமாக்கவும் பொறுப்பினை ஏற்றனர். கன்னிங்காம் விடாமுயற்சியுடன் சீனப்பயணி யுவான்சுவாங் இந்தியாவில் பார்வையிட்ட இடங்கள் யாவற்றையும் கண்டுபிடித்தார். இதற்காக மொழிபெயர்க்கப்பட்ட யுவான் சுவாங்கின் குறிப்புகள் அவருக்குப் பேருதவி புரிந்தன. கன்னிங்காம் புத்தகயா முதல் வடமேற்கே சிந்து சமவெளி வரையிலும், வடக்கே கால்சி முதல் தெற்கே தமணர் (Dhamnar) குகை வரைலும் உள்ள வரலாற்றுப் பழமைச் சின்னங்களைப் பார்வையிட்டு அவை பற்றிய குறிப்புகளைச் சேகரித்தார். கன்னிங்காம் பிற்காலத்தில் நாணயவியலிலும் ஆர்வம் காட்டினார். இவர் இந்திய-சித்திய நாணயங்கள் பற்றி ஆய்ந்து பல நூல்களை வெளியிட்டார். இந்தியத் தொல்லியலுக்கு ஆற்றிய தொண்டு இவருக்கு "இந்தியத் தொல்லியலின் தந்தை" என்ற பெயரை ஈட்டித் தந்தது. அலெக்சாந்தர் கன்னிங்காம் கி.பி 1885-ஆம் ஆண்டு தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். கி.பி. 1893-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28-ஆம் நாள் இலண்டனில் இறந்தார். எனினும் இவரது புகழ் இந்தியத் தொல்லியல் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளது.

கன்னிங்காம் இயக்குநர் பதவிக்காலம் முடிவதற்குள் தொல்லியல் பரப்பாய்வுத்துறை பற்றி இருபத்தொரு அறிக்கைகளை வெளியிட்டார். இவரது வெளியீடுகளுள் குறிப்பிடத்தக்கன: (1) கி.பி. 1887-இல் வெளியிடப்பெற்ற கார்பசு இன்சுகிரிப்டனம் இந்திகாரம்-தொகுதி-1 (Corpus Inscriptionum Inducarum Vol I), இதில் அசோகர் கல்வெட்டுகள் இடம் பெற்றுள்ளன; (2) இந்தியாவின் பழம் புவி அமைப்பு (Ancient Geography of India); (3) புத்தர் காலம் (Buddhist Period, 1871); (4) பாரூத் தூபி (Stupa of Bharhut, 1879); (5) இந்தியக் காலக் கணிப்பு (Book of Indian Eras, 1884); (6) காசுமீர்க் கோயில்கள் (Temples of Kashmir).

**அலெக்சாந்தர், மகா** (கி.மு. 356-323) வரலாறு போற்றும் மாவீரர்; மாசிடோனிய மன்னர் இரண்டாம் பிலிப்பின் மைந்தர்; அரிசுடாட்டிலின் மாணவர். இவர் தாயார் ஒலிம்பியசு. இவர் பெற்ற வெற்றிகளின் விளைவாக வரலாற்றில் இவர் மாவீரர்



மகா அலெக்சாந்தர்

அலெக்சாந்தர் (Alexander, the Great) எனக் கூறப்படுகிறார்.

இளமை முதலே இவர் திறமைசாலியாகத் திகழ்ந்தார். தமது 16-ஆம் வயதில் தம் தந்தையார் பைசாண்டியத்திற்குச் (Byzantium) சென்றுவிட்ட காரணத்தால், இவர் ஆளுநராகப் பொறுப்பேற்றுத் திறம்பட ஆட்சிபுரிந்தார். அப்போது திரேசிலில் (Thrace) தோன்றிய கலகத்தை மிக எளிதாக அடக்கினார். தெமோசுதனிசின் (Demosthenese) பேருரையால் கவரப்பட்டுக் கிரேக்க நகரங்கள் பல இவரை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தபோது அவற்றையும் அடக்கினார். கி.மு. 336-இல் இவர் தந்தையார் கொலை செய்யப்பட்டதன் விளைவாக நாடெங்கும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இதற்குத் தெசாலியர்களும் (Thessalians) தீப்சு (Thebes) மக்களும் பெரிதும் பொறுப்பாவர். சினங்கொண்ட அலெக்சாந்தர் அவர்களைப் போரில் தோற்கடித்தார். இப்பெரும் வெற்றிக்குப் பின்னர் மூன்றாம் அலெக்சாந்தரெனத் தம் படைத் தலைவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். காரிந்தில் (Corinth) கூடிய கூட்டம் இவரை ஆசியா மீது படையெடுக்கப் படைத் தலைவராகவும் நியமித்தது. ஆசியாமீது படையெடுத்துத் திரும்பிய போது இவருக்குக் காரிந்தில் ஒரு சோதனை ஏற்பட்டது. பகைவர்கள் இவர் இறந்துவிட்டாரென்ற பொய்யைப் பரப்பிக் கிளர்ச்சியைத் தூண்டினர். தீப்சு மக்களும் ஆதென்சு மக்களும் இக்கிளர்ச்சிக்குத் துணை நின்றனர். சினங்கொண்ட அலெக்சாந்தர் தீப்சு மீது படையெடுத்து மக்களை அடிமைகளாக்கி விற்கவும் செய்தார். இவரது வீரச்செயல் கிரேக்க நாட்டையே பெரிதும் அச்சத்தில் ஆழ்த்தியது. கிரேக்கம் இவருக்கு அடிபணிந்தது.

வெற்றிவாகை சூடி மாசிடோனியாவிற்குத் திரும்பிய அலெக்சாந்தர், பாரசீகத்தைத் தாக்கத் துணிந்தார். கடலையும் பல வணிகத் தடங்களையும் உள்ளடக்கிய இப்பேரரசு பொருளியல் துறையில் மிகச் சிறந்து விளங்கியது. இவர் தந்தை ஆசியா மைனருக்கு அருகிலுள்ள பல கிரேக்க நகரங்களின்மீதும் படையெடுத்தார். ஆயினும், அதனால் எத்தகைய பயனும் ஏற்படாமற் போயிற்று. அதனைப் பயனுறச் செய்ய இவர் மீண்டும் அப்பகுதியின்மீது படையெடுக்கத் துணிந்தார்.

இவர் சிறப்புமிக்க ஆசியப் படையெடுப்பைக் கி.மு 334-இல் மேற்கொண்டபோது 30,000 வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் சிற்பிகளும் தாவரவியல் அறிஞர்களும் பொறியியல் வல்லுநர்களும் மெய் விளக்க அறிஞர்களும் இப்படையில் இடம்பெற்றதால், இவரது படையெடுப்பே முற்றிலும் மாறுபட்டுத் திகழ்ந்தது. இது பண்பாடுகள் இணைவதற்கு ஒரு வகைப் பாலமாக விளங்கியது. அலெக்சாந்தர் ஆசியா மைனரிலிருந்து சைலீசியக் கணவாய் வழியே பாரசீகத்தை அடைந்தார். இங்குக் கிராமிகசு (Gramicus) என்ற ஆற்றங்கரையில் நிகழ்ந்த போரில் பெரும் வெற்றி பெற்றார். பாரசீக ஆதிக்கத்திலிருந்த அயோனிய கிரேக்கத் துறைமுகங்களில் தடையிலா வாணிகத்திற்கு வழிவகுத்தார். அந்நகரங்களுக்கும் விடுதலை வழங்கினார். அவை பாரசீகக் கொடுங்கோன்மையிலிருந்து தப்பின. மலைவாழ் மக்களையும் அவ்வாறே வென்று தமது பேரரசின் இணை உறுப்பினர்களாக்கிக் கொண்டார். கார்டினியர்களையும் (Cardenians) வென்று குடியுரிமையையும் அவர்களுக்கு வழங்கினார்.

இதுகாறும் அலெக்சாந்தர் தம் படைத்தலைவர்களின் அறிவுரையின் வழி நின்றார். மத்தியதரைக் கடலைக் கடந்து பாரசீகக் கப்பற் படைகளை இவர் கவர விரும்பியதை மூத்த படைத்தலைவர்கள் ஏற்கவில்லை. அதனைப் புறக்கணித்து, அப்பகுதியின் மீதும் படையெடுத்து, வளம் மிகுந்த சிரியாவின் பகுதிகளையும் வென்று, தமது பேரரசினை விரிவுபடுத்தினார். பாரசீக வேந்தனான மூன்றாம் தேரியசு (Darius III) என்பவனை இப்போரில் வென்றார்.

அலெக்சாந்தரின் தயர் (Tyre) முற்றுகை வரலாற்றுச் சிறப்பு மிக்கது. இப்பகுதி கடலில் அமைந்திருந்ததால் வெல்லுதற்கு அரிதாகியது. மாசிடோனியப் பொறியாளர்கள் சிறு குன்றுகளை நிறுவி அப்பகுதியினை அடைய வழி வகுத்தனர். ஏழு மாதம் கடும் முற்றுகை நடந்தது. இறுதியில் அது வீழ்ந்தது. பின்னர் எகிப்தியப் படைகளும் தோற்றன. இவர் எகிப்திற்கு வந்து அங்கு ஓய்வு கொண்ட நேரத்தில் இவரே எகிப்தின் பேரரசரென அந்நாட்டின் குறியுரை (Oracle) அறிவித்தது. எகிப்தும் கைப்பற்றப்பட்டது. இவரது பெயரால் இங்கு அலெக்சாந்திரிய நகரம் உருவாக்கப்பட்டது.

நைல் ஆற்றங்கரையில் தமது புதிய தலைநகரை அமைத்தபின்னர், கி.மு. 331-இல் இவர் மீண்டும் பாரசீகத்தின்மீது படையெடுத்தார். காகமேலா (Gaugamela) என்ற இடத்தில் பாரசீகர் முற்றிலும் தோற்கடிக்கப்பட்டனர். பின்னர், பெர்சிபோலிசு (Persipolis) நகரமும் அழிக்கப்பட்டது. கி.மு. 330-இல் தேரியசும் கொல்லப்பட்டார். பாரசீகம் இவரது பேரரசின் பகுதியாயிற்று.


பாரசிக நிருவாகம் இவருக்குப் பெருந் தொல்லையாயிற்று. அந்நாட்டு நில நிருவாக முறையில் இவர் மாற்றம் ஏதும் செய்யத் துணியவில்லை. பாபிலோனியாவை மையமாகக் கொண்ட ஒரு புது நிருவாக முறையினை இவர் புகுத்தினார். படைத் துறையைச் சாராத சமூகத் துறைகளைப் படைத்துறையினின்றும் பிரித்தார். மசை என்ற பாரசீகச் செல்வர் ஒருவரை, அவ்வகை நிருவாக முறையின் தலைவராக்கினார். பின்னர், இவர் பாரசீக, மாசிடோனிய ஏவலர்களைப் பலமுக்கியத்துறைகளுக்குப் பொறுப்பேற்குமாறு செய்தார். பாரசிகர்களை மாசிடோனியர்களுக்கு ஒப்பாக நடத்தியதை மாசிடோனியர்கள் வெறுத்தனர். சமயத் துறையிலும் இவர் எகிப்திய, பாரசீகச் சமயங்களை ஏற்று அவற்றை ஒருங்கிணைத்தார். தெய்வத்திற்கு ஒப்பாக மன்னனை மதிக்கும் பாரசீக மரபினையும் இவர் ஏற்றுக்கொண்டார். அதனை இவர்தம் வீரர்கள் ஏற்க மறுத்தனர். இவரைக் கொலை செய்யச் சதியும் நிகழ்ந்தது. அதில் பங்கேற்ற பிலிடாசு, பெர்மினியன் போன்ற படைத் தலைவர்களும் கல்லிதெனிசு (Callisthenes) என்ற மெய்விளக்க அறிஞரும் தூக்கிலிடப்பட்டனர்.

அலெக்சாந்தரின் இந்தியப் படையெடுப்பைப் பற்றிப் பண்டைய கிரேக்க அறிஞர்கள் மிகுதியும் குறிப்பிடாது விடுத்தனர். இவரது இந்தியப் படையெடுப்பிற்குப் பல காரணங்கள் இருக்கக்கூடும். பாரசீகப் பேரரசினை வென்ற அலெக்சாந்தர் அதன் அருகில் அமைந்த இந்தியப் பகுதிகளை வெல்ல நினைத்திருக்கலாம். தமது படையிலிருந்த இந்திய வீரரான சிசிகோட்டர் (சசிகுப்தர்) வாயிலாக இந்தியாவையும், அதன் வளத்தையும் கேட்டு மகிழ்ந்து அலெக்சாந்தர் அதனை வெல்ல நினைத்திருக்கலாம். செர்சசு (Xerxes) தலைமையில் கிரேக்கத்தில் போரிட்ட இந்திய வீரர்கள் இந்தியாவிற்கு வரும் ஆவலைத் தூண்டினர். இந்தியாவைக் கவரவேண்டும் என்ற அலெக்சாந்தரின் தணியாத தாகமும் காரணமாக இருக்கக் கூடும். தட்சசீல மன்னரின் அழைப்பும் அவரது வருகையை விரைவுபடுத்தியது. பகை காரணமாக தட்சசீல அரசர், புரு மன்னனை எதிர்த்துப் படையெடுத்து வருமாறு இவரை வேண்ட, அதனைப் பயன்படுத்தி, இவர் இந்தியா வருவது எளிதாயிற்று. இந்தியாவில் நிலவிய குழப்பமும் இவருக்கு மேலும் நன்மையாகவே அமைந்தது. எர்குலிசு (Hercules) என்ற வீரரைப் போலத் திகழ வேண்டும் என விழைந்த அலெக்சாந்தர், இந்தியாவின்மீது படையெடுக்கத் துணிந்தார்.

அலெக்சாந்தர் கி.மு. 327-இல் இந்துகுசு (Hindu kush) மலைப் பகுதியினைக் கடந்து 30,000 வீரர்களுடன் இந்தியாவிற்கு வந்தார். போர் நுட்பமறிந்த இவர் தமது படையினை இரு கூறாகப் பிரித்து, ஒரு பகுதியினைப்பெர்டிகாசுதலைமையில் காபூல் வழியாக இந்தியாவை அடையுமாறு ஏவினார். சிந்துப் பகுதி வந்தவுடன் அதனைக் கடக்க வல்ல பாலம் அமைத்தல் அவரது பணியாக இருந்தது. மற்றொரு படைக்குத் தாமே தலைமையேற்று இந்தியா வரும் வழியில் உள்ள பகுதிகளை வென்று, அவற்றைத் தமதாக்கிக் கொள்வது இவரது திட்டம்.

கிரேக்கப் படையினைக் கண்ட தட்சசீல மன்னர் அம்பி, மகிழ்ந்து வரவேற்று முகமன் கூறி, அதனை இந்தியாவிற்குள் வழி நடத்தவும் ஒப்புக்கொண்டார். அலெக்சாந்தரின் வலிமையைக் கண்ட பல இந்தியச் சிற்றரசர்கள் இவரது மேலாண்மையை ஏற்றனர். புட்கலாவதியின் அரசரான அகூடசு இவரை எதிர்க்கத் துணிந்தார். அவர் முப்பது நாள்கள் இவருடன் போர் புரிந்து இறந்துபோனார்.

இந்தியாவை நோக்கி வந்த அலெக்சாந்தர் வழியில் பலரை வென்றார். மேற்கு அசுவகர்களை வென்றார். கிழக்கு அசுவகர்களையும் மசகா என்ற இடத்தில் சந்தித்தார். மசகா நகரம் பெரும் அரண்களாலும் ஆழமான அகழிகளாலும் பாதுகாக்கப்பட்டிருந்தமையால் அதனைக் கைப்பற்றல் அரிதாயிற்று. இருப்பினும், கிழக்கு அசுவகர்கள் வீழ்ந்தனர். பசரா, ஓரா போன்ற நகரங்கள் பிடிபட்டன. இதனால், சிந்து நதியின் நுழைவாயில் திறக்கப்பட்டது. அவருடன் நட்புப் பாராட்டிய நிசா என்ற நகரில் பத்து நாள்கள் தங்கி ஓய்வெடுத்த பின்னர், சிந்து ஆற்றங்




அலெக்சாந்தர் படைகள் சென்ற வழியைக் காட்டும் படம்

கரையில் உள்ள ஒகிந்துப் பகுதியினை வந்தடைந்தார்.

சிந்து ஆற்றினைக் கடந்த அலெக்சாந்தரை அம்பி வரவேற்றார். தட்சசீலம் வந்த அலெக்சாந்தருக்குப் பெரும் வரவேற்புடன் பல விலையுயர்ந்த அரிய பொருள்களும் பரிசாக வழங்கப்பட்டன. தட்சசீலத்திலிருந்த அலெக்சாந்தர், புரு மன்னனைத் தமக்குப் பணிந்து போகுமாறு அழைப்பு விடுத்தார். தம்மைப் போர்க்களத்தில் சந்திக்குமாறு புரு சூளுரைத்தார். 30 ஆயிரம் போர் வீரர்கள் அடங்கிய காலாட்படையோடும் 4000 பேர் கொண்ட குதிரைப் படையோடும் 300 இரதங்களைக் கொண்ட தேர்ப்படையோடும் 200 போர் யானைகளைக் கொண்ட யானைப் படையோடும் புரு போருக்கு ஆயத்தமானார். அலெக்சாந்தருக்கு எதிராகச் சீலம் ஆற்றங்கரையில் அவர் பாசறை அமைத்தார். புரு மன்னர் அறியாவகையில் அவர் பாசறைக்கு இருபத்தைந்து கல் தொலைவுக்கு அப்பால் பெரு முயற்சிக்குப் பின்னர் அலெக்சாந்தர் ஆற்றைக் கடந்தார். ஒவ்வொரு இரதத்திலும் இரண்டு வில் வீரர்களும் வாளொடு கேடயங்கள் தாங்கிய நான்கு வீரர்களும் போர் முறையில் சிறந்த இரண்டு தேரோட்டிகளும் இருந்தனர். போர் நடைபெறும்பொழுது இந்தத் தேர்ப்படை வீரர்கள் வில், வாள், ஈட்டி, கோடரி போன்ற போர்க்கருவிகளைப் பயன்படுத்த முடியும். அன்றிரவு பெய்த அடைமழை காரணமாகச் சேற்றில் இந்தத் தேர்ப்படை செம்மையாக இயங்க முடியவில்லை. பெரும் வில்லினைக் கொண்டிருந்த வில் வீரர்களும், வில்லினை மண்ணிற்பதித்து நிலை நிறுத்தி அம்பு எய்ய இயலவில்லை. நிலம் வழுக்கிய காரணத்தினால் அவர்களின் குறி தவறியது. அலெக்சாந்தர் குதிரைப்படைகள் எழுப்பிய பேரோசையைக் கேட்டு புருவின் யானைப் படைகள் மருண்டு, அவர்களின் படையினையே அழிக்கத் துவங்கின. புரு மிடுக்கோடும் தீரத்துடனும் போரிட்டும் பயனற்றுப் போயிற்று. தம் விரைந்து செல்லும் குதிரைப் படையால் புருவின் படையை அலெக்சாந்தர் தோற்கடித்தார். பெரும் விழுப்புண்கள் பெற்ற புரு தோல்விக்குப் பின்னர் அலெக்சாந்தர் முன் நிறுத்தப்பட்டார். எவ்

வாறு நடத்தப்பட வேண்டுமென அலெக்சாந்தர் புருவை வினவத் தம்மை ஓர் அரசனைப் போல நடத்த வேண்டுமெனக் கூறினார் புரு. பெரிதும் மகிழ்ந்த அலெக்சாந்தர் புருவை மீண்டும் அவர் பகுதிக்கே மன்னராக்கியதுடன் தாம் வென்ற 15 குடியரசுகளையும் 500 நகரங்களையும் ஈந்து நட்புப் பாராட்டினார். (கி.மு. 326)

பின்னர்ப் பீயாசுப் பகுதிகளை வெல்ல நினைத்தார்; அப்பகுதிகளையும் எளிதில் வென்றார். அதற்கப்பால் இவர் செல்ல முனைந்தபோது வீரர்கள் கலகம் செய்தனர். சீலம் நதிக்கே இவர் திரும்ப நேரிட்டது. வழியில் தம்மை எதிர்த்த மல்லர்களையும் சூத்திரகாக்களையும் வென்றார். பெருத்த புண்களுடன் அலெக்சாந்தர் இப்போரில் உயிர் தப்பினார். இறுதியில் இவர் படைகள் படலா என்ற இடத்தை அடைந்தன. இங்குத் தம் படைகளை முப்பெரும் பிரிவுகளாகப் பிரித்துத் தாயகம் திரும்புமாறு பணித்தார். ஒரு படை காந்தாரம் வழியாகவும், பிறிதொன்று செயிசுடன் வழியாகவும், மற்றொன்று பலுசிசுதானம் வழியாகவும் தாயகம் திரும்புவதென முடிவு செய்யப்பட்டது. இரண்டாம் படையோடு தாயகம் திரும்பிய அலெக்சாந்தர் கி.மு. 323-இல் பாபிலோனியாவில் காலமானார்.

அலெக்சாந்தர் படையெடுப்பின் நோக்கம் கிழக்கை கிரேக்கமயமாக்குவதேயாம் என்பர் பலர். எர்நீசு என்பாரும் கி.மு. 326-க்குப் பின்னர் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக இருந்தது, அலெக்சாந்தர் படையெடுப்பே என்பர். பியூரி என்பாரும் இக்கூற்றினை ஏற்றுக்கொண்டு வாணிக, பண்பாட்டுத் துறைகளில் இப்படையெடுப்பு பெரும் தாக்கத்தினை விளைவித்துள்ளது என்பார். உண்மையில் கிரேக்கப் படையெடுப்பினால் உடனடிப் பயன் மிகுதியுமில்லை. குறிப்பாக அரசியல் முறையில் இது நிலைத்த மாற்றங்கள் எவற்றிற்கும் வித்திடவில்லை. சில ஆண்டுகளில் இவ்வெற்றி மறைந்து விட்டது.

பன்னாட்டுத் துறையிலும் பெரிதும் மாற்றங்கள் நிகழ்ந்துவிடவில்லை. இந்தியா கிரேக்க மயமாக மாறாது இந்தியாவாகவே இருந்துள்ளது. தொடர்ந்து இந்திய நாகரிகம் தனித்தே நின்று வளர்ந்தது. இந்திய, புத்த, சமணச் சான்றுகள் இதுபற்றிக் குறிப்பிடாததே, இது நிலைத்த மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பதற்குத் தக்க சான்றாகும்.

எனினும் இப்படையெடுப்பின் விளைவால் கிழக்கு, மேற்கு நேரடித் தொடர்பு மிகுந்தது. இந்திய, கிரேக்க நாகரிகங்கள் ஒன்றையொன்று ஈர்த்தன; வாணிகம் தொடர்ந்தது; புவியியல் அறிவு மிகுந்தது. நேரடித் தொடர்பு மிகுந்து வாணிகத் தடங்கள் பல திறக்கப்பட்டன. இதனால் காபூல் வழியாக இந்தியாவிற்கு வருதல் எளிதாயிற்று.

இந்தியாவில் ஒரு பெரும் பேரரசு அமைய இது வழிகோலியது. சந்திரகுப்த மௌரியர் பெரும் பேரரசை இதனால்தான் நிலை நிறுத்த முடிந்தது. அலெக்சாந்தர் நிறுவிய குடியேற்றங்கள் முற்றிலும் மறைந்துவிடவில்லை. அதன்வழித் தொடர்பு தொடர்ந்தது. வானவியல், காந்தாரக்கலை, நாணயக்கலை ஆகியவற்றை இந்தியர்கள் கிரேக்கர்களிடமிருந்து கற்றனர். இந்தியத் தத்துவம், சமயம் ஆகியவை கிரேக்கத்தைப் பெரிதும் ஈர்த்தன. இரு பண்பாடுகளும் வளர இப்படையெடுப்புத் துணையாயிருந்தது.

பி.சு.

துணை நூல்கள்:

**Burn, Andreq R.**, "Alexande the Great and the Hellenistic Empire", New York, 1948.

**Fuller, J.F.C.**, "Generalship of Alexander the Great", New Brunswick N.J., 1959.

**Taru, William, W.**, "Alexander the Great", Boton, 1956.

**Robinson, Charles, A.**, "History of Alexander the Great" 2 vols., Providence R.E. 1963.

**அலெக்சாந்தர், முதலாம் (யூகோசுலாவியா - 1888-1934)** செர்புகள், குரோவாட்டுகள், சுலோவீன்கள் போன்றோர் வாழ்ந்த பகுதிகளுக்கு 1921-ஆம் ஆண்டு அரசரானார். 1918-ஆம் ஆண்டு நாகரிகத்திலும் பண்பாட்டிலும் ஒற்றுமை மிகுந்த இம்மக்கள், ஒன்றிணைந்து யூகோசுலாவியா என்னும் புதிய நாட்டினை உருவாக்கினர். அலெக்சாந்தர் செர்பு இனத்தைச் சார்ந்தவர். செர்பு இனத்தைச் சார்ந்த ஒருவனே புதிய நாட்டை ஆளத் தகுதி உள்ளவன் என இவர் நம்பினார். இதனைப் பிற இனத்தவர் வெறுத்தனர். எனவே அலெக்சாந்தர் 1929-ஆம் ஆண்டு நாட்டின் அமைதியின்மையைப் போக்க இராணுவ உதவியுடன் சருவாதிகாரியானார். 1931-இல் சட்டமன்ற ஆட்சியை மீண்டும் நிறுவினார். எனினும் இவருக்கு எதிராக நாட்டில் கலகங்கள் தொடர்ந்தன. பிரான்சின் குடியரசுத் தலைவரைக் காண 1934-ஆம் ஆண்டு பிரான்சிற்குச் சென்றபொழுது இவர், சில குரோவாட்டுத் தீவிரவாதிகளால் மார்சேல்சில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

**அலெக்சாந்தர், இரண்டாம், (1198-1244)** இசுகாட்லாந்து (Scotland) மன்னர்; கி.பி. 1198-இல் ஏடிங்டனில் (Haddington) பிறந்தார்; கி.பி. 1214-இல் தம் தந்தை வில்லியத்திற்குப் பின் பட்டமேற்றார். இங்கிலாந்து மன்னன் சானிற்கு (John) எதி

ராகப் பிரெஞ்சு அரசர் லூயியிடம் நட்புக் கொண்டு சானைப் பகைத்துக்கொண்டார். சான் இசுகாட்லாந்தின்மீது படையெடுத்து எல்லைப்புறங்களில் நாசத்தை விளைவித்தார். அலெக்சாந்தர் கி.பி. 1217-இல் சானின் மகளான சோவானாவை மணந்ததன் விளைவால் இங்கிலாந்துடன் நட்பு ஏற்பட்டது. மூன்றாம் என்றியின் ஆட்சியில் கி.பி. 1244-இல் நியூகாசிலில் நடந்த உடன்படிக்கையின்படி, ஆங்கிலேய மன்னருக்கெதிரான செயல்களில் ஈடுபடுவதில்லை என்று இவர் ஒப்புக்கொண்டார். கி.பி. 1244-இல் இவர் இறந்தார்.

**அலெக்சாந்தர், மூன்றாம் (கி. பி. 1241-1286)**: இசுகாட்லாந்து (Scotland) மன்னர் இரண்டாம் அலெக்சாந்தருக்குப் பின் அவர் மகன் அலெக்சாந்தர் III தமது 8-ஆம் வயதில் பட்டமேற்றார். தமது 10-ஆம் வயதில் ஆங்கிலேய அரசர் மூன்றாம் என்றியின் மகள் மார்க்கரெட்டை மணந்தார். இவரது காலத்தில் அரசின் நிருவாகம் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. இவர் யோலெண்டு (Yolande) என்பவளை இரண்டாம் மனைவியாகக் கி.பி. 1285-இல் மணம் புரிந்து கொண்டார். கி.பி.1286-இல் குதிரை மீது கிங்காரன் மலைமீது சென்று கொண்டிருந்த பொழுது கீழே விழுந்து இறந்தார்.

**அலெக்சாந்தர், முதலாம் (கி.பி. 1777-1825)** உருசியாவின் பேரரசர் இவர் கி.பி. 1801-ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தார். இவர் தந்தை பால்; தாய் உர்ட்டம்பர்க்கு இளவரசி டோரோதியா சோபியா



முதலாம் அலெக்சாந்தர்

(Princess Dorothea Sophia of Wurrtemberg). இவர் தன் பாட்டி இரண்டாம் காதரீனின் வளர்ப்பில் வளர்ந்து அவர் மூலம் அறிவு முதற்கோட்பாடுகளையும், பரம்பரையாக வந்த தனியாட்சிக் கொள்கைகளையும், உரூசோவின் (Rousseau) கருத்துக்களையும் இவைபோன்ற பலவகைக் கருத்துக்களையும் கற்றவர். இவரது ஆட்சியின் பெரும் பகுதி நெப்போலியனிடம் போர் புரிவதிலேயே கழிந்தது. கி.பி. 1808-ஆம் ஆண்டு நெப்போலியனிடம் தோல்வி கண்டு, அவரது வெற்றியை ஏற்றுக்கொண்டார். கி.பி. 1812-ஆம் ஆண்டில் நடந்த போர்கள் அலெக்சாந்தரின் திட்டங்களையும் செயற்பாடுகளையும் மாற்றிவிட்டன. தூய ஒப்பந்தம் (Holy Alliance) என்ற அமைப்பின் மூலம் ஐரோப்பாவில் அமைதி நிலைநிறுத்துவதையே தமது குறிக்கோளாகக் கொண்டார். ஐரோப்பிய நாடுகளை நெப்போலியனுக்கு எதிராக ஒன்றுபடுத்துவதில் தீவிரமாகச் செயற்பட்டார். அலெக்சாந்தர், பேடனைச் சார்ந்த இளவரசி எலிசபெத்தை மணந்தார் (Princess Elizabeth of Baden). இரு பெண்மக்கள் இவர்களுக்குப் பிறந்தனர். இவருக்கு ஆண் வாரிசு எதுவுமில்லாததால் இவர் சகோதரர் இவரை அடுத்து ஆட்சிக்கு வந்தார். அலெக்சாந்தர் இறுதி நாட்களில் தமது தாராளக் கொள்கையைக் கைவிட்டார். தம்மை உரோமானியப் பேரரசிலுள்ள கிறித்துவத் திருச்சபையின் இரட்சகன் என்று கூறிக்கொண்டார்.

இவர் கி.பி. 1825-ஆம் ஆண்டு இறக்கவில்லை என்றும் சைபீரியாவிற்குச் சென்று அங்குக் குசுமா (Kuzma) என்னும் பெயரில் துறவியாக வாழ்ந்து வந்தார் என்றும் ஒரு கதை பின்னர் எழுந்தது.

**அலெக்சாந்தர், இரண்டாம் (கி.பி. 1818-1881)** உருசியாவின் அரசர் முதலாம் நிக்கோலசின் (Nicholas) மகன். கி.பி 1841-ஆம் ஆண்டு இசுடாம்சதாத்தின் (Hezze-Darmstadt) இளவரசி மேரியை (Marie) மணந்தார். இவர்களுக்கு ஆறு ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். கி.பி. 1855 இல் பட்டமேற்று, கி.பி. 1881 வரை ஆட்சி செய்தார். இவர் பட்டமெய்திய காலத்தில் உருசியா மிக இக்கட்டான நிலையில் இருந்தது. கிரிமியப் போர் முடிவடையா நிலைமையில் இருந்தது. கி.பி. 1861-ஆம் ஆண்டு இவர் அடிமைகளுக்கு விடுதலையளித்தார். இவர் பின்பற்றிய வெளிநாட்டுக் கொள்கையினால் உருசியாவின் மதிப்பு பிற நாடுகளில் உயர்ந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் உருசியாவில் தொழிற்புரட்சி உருவானது. இருப்புப் பாதைகள் நாட்டின் பல பாகங்களில் விரிவடைந்தன. காகசசுப் (Caucasus) பகுதியை உருசியா கைப்பற்றியமையால் ஆட்சியின் பரப்பு மத்திய ஆசியா வரை பரவி



இரண்டாம் அலெக்சாந்தர்

யிருந்தது. இவர் செயின்டு பீட்டர்சு பர்க்கு என்னு மிடத்தில் கி.பி. 1881-இல் நிகிலிசுட்டு என்னும் இரகசியத் தீவிரவாதியினால் கொல்லப்பட்டார்.

**அலெக்சாந்தர், மூன்றாம்** (கி.பி. 1845 1894) உருசிய மன்னர் இரண்டாம் அலெக்சாந்தரின் இரண்டாம் மகன். இவர் அண்ணன் கி.பி.1865-ஆம் ஆண்டு இறந்ததும் இளவரசுப்பட்டமெய்தினார். தந்தை இறப்பிற்குப் பின் கி.பி. 1881-இல் உருசியப் பேரரசரானார். இவர் தென்மார்க்கின் இளவரசி தேக்மார் (Dagmar of Denmark) என்பவளைத்



மூன்றாம் அலெக்சாந்தர்

திருமணம் செய்தார். இவர்களுக்கு மூன்று ஆண்களும் இரண்டு பெண்களும் பிறந்தனர். இவர் நன்கு கற்றறிந்தவர் அல்லர்; குறுகிய மனப்பான்மை உடையவர்; தந்தையின் கொள்கைகளைக் கைவிட்டுத் தன்னிச்சையாக ஆட்சி செய்தார்.

**அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளி**: இது கிரேக்க நாட்டில் அலெக்சாண்டிரியா என்ற பெரு நகரத்தில் பிளேட்டோ (Plato) வின் தத்துவங்களைக் கற்பிக்கும் கூடமாக, கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆறாம் நூற்றாண்டுவரை அதாவது அரேபியர்கள் அந்தப் பெருநகரத்தைத் தங்கள் கைப்படுத்திய காலம்வரை விளங்கியது. இதைத் தோற்றுவித்தவர் மாவீரர் அலெக்சாந்தர் என்று சொல்லப்படுகிறது. பிலோ (Philo) என்ற தத்துவ அறிஞர் அலெக்சாண்டிரியாவில் கி.மு. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தார். இவர் பிளேட்டோவின் தத்துவக் கோட்பாடு வாயிலாகப் பைபிளுக்கு விளக்கம் கொடுத்தார் என்று சொல்லப்படுகிறது. இவர் அப் பணியை இந்தத் தத்துவப் பள்ளியின் மூலமாகச் செய்தார் என்றும் தெரிகிறது. பிலோவின் இந்தப் பணி அவரை உயர்த்தியதோடு பிளேட்டோவின் தத்துவக் கொள்கைகளைப் புகழடையவும் செய்தது.பிளேட்டோவின் தத்துவங்களே வாழ்விற்கு அடிப்படை என்ற உன்னத நிலையையும் ஏற்படுத்தித் தந்தது. இந்த எழுச்சியை உலகம் முழுவதும் பரவச் செய்த பெருமையும் இதன் மூலம் கிறித்தவ மதத்தைத் தன் வயப்படுத்திய பெருமையும் பிலோவையே சாரும்.

இந்தத் தத்துவப்பள்ளி, ஏதன்சு நகரப் பள்ளியோடு நீண்ட காலம்வரை நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது என்பது தெரிய வருகிறது. இந்த இரண்டு பள்ளிகளுமே பிளேட்டோவின் தத்துவங்களைப் பாடமாக வைத்திருந்தபோதிலும் இரண்டு பள்ளிகளும் வெவ்வேறு வகையில் அப்பாடத்தைப் பயிற்றுவித்தன. இந்த இரண்டு பள்ளிகளுள் அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளி மிகச் சிறப்பாகச் செயற்பட்டதாகவும் வருவாயும் மிகுதியாகக் கிடைத்ததாகவும் கூறப்படுகின்றது.

இவ்விரு பள்ளிகளும் பிளேட்டோவின் தத்துவங்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கற்பித்தன. ஏதன்சு நகரப் பள்ளியில் யூக தத்துவம் (Speculative Philosophy), அருளனுபவத் தத்துவம் (Mystic Philosophy), சமயத் தத்துவம் (Religious Philosophy) முதலியன சிறப்பாகக் கற்பிக்கப்பட்டன. ஏதன்சுபள்ளி அதன் இறுதிக்காலம் வரை புறச் சமயத்தில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளி இதற்கு மாறாகச் சார்பற்ற பொதுவான தத்துவப்பாடங்களைக் கூர்ந்த

அறிவு வாயிலாகக் கற்பித்தது. பின்னர் அலெக்சாந்தரின் தத்துவப் பள்ளியின் பாடங்களில் கிறித்தவத் தத்துவத்தின் மணம் வீசத் தொடங்கியது. அரேபியர் நுழைவுக்குப் பிறகு அங்கு இசுலாமியத் தத்துவத்தின் மணம் வீசத்தொடங்கியது.

அலெக்சாந்தரின் தத்துவப்பள்ளிக்கும் ஏதன்சு பள்ளிக்கும் இடையே நிலவிய வேறுபாடுகளை (Tension), போலிமிக்கு (Polemic) என்பவருக்கும், புரோக்குலசு (Proclus) என்பவருக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகள் மூலம் அறியலாம். இந்தக் கருத்து வேறுபாடுகளுக்கு அடிப்படையாக அமைந்தது பிளேட்டோவின் திமயூசு (Timaeus) என்ற அவரது படைப்பில் எழுந்த சிறு ஐயந்தான். அதாவது, இந்த உலகத்தின் படைப்பு காலவரம்பிற் குட்பட்டதா? உட்படாததா? என்ற ஐயந்தான் அது. போலிமிக்கு இந்த உலகம் காலவரம்பிற்கு அப்பாற்பட்டதாதலால் அழிவில்லாதது என்று கூறினார். புரோக்குலசு இந்த உலகம் காலவரம்பிற் குட்பட்டது. ஆதலால் அழிவது என்று மறுத்துரைத்தார். இருவருக்கும் ஏற்பட்ட இந்தக் கருத்து வேற்றுமை நீண்ட காலம் வரை நீடித்தது.

இந்தத் தத்துவப் பள்ளியில் உறுப்பினர்களாகத் திகழ்ந்தவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் இராக்கிலிசு (Hierocles), எரிமியசு (Hermeias), அம்மோனியசு எர்மியோன் (Ammonius Hermeion) போன்றவராவார்கள். இவர்கள் ஏதன்சு பள்ளியில் மாணவர்களாகவும் திகழ்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அலெக்சாந்தர் தத்துவப் பள்ளியின் முதல் பேராளர் என்ற பெருமை இராக்குலிசு என்பவரைச் சாரும். இவர் ஆராய்ச்சிக் கட்டுரையில் பிளேட்டோவின் கருத்தும் அரிசுடாட்டில் கருத்தும் அடிப்படையில் ஒன்றுதான் என்று குறிப்பிடுகிறார். இப்பள்ளிக்கும் கிறித்தவத் தத்துவப் பள்ளிக்கும் ஏதேனும் தொடர்பு உண்டா என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கவில்லை.

இறுதியாக வந்த இசுடீபன்லெசுலி (Stephen Leslie) என்ற இந்தப் பள்ளியின் தத்துவவியலார், கான்சுடாண்டி நோபில் பல்கலைக் கழகத்தில் (University of Constantinople) தத்துவம் கற்பிக்க அழைக்கப்பட்டார். அலெக்சாண்டிரியப் பெருநகரத்தில் கற்பிக்கப்பட்ட பிளேட்டோவின் தத்துவத்தைப் பைசாண்டைன் பேரரசு (Byzantine Empire)க்கு எடுத்துச் சென்ற பெருமை அலெக்சாந்தரைச் சாரும்.

ஆர்.கோ.

**அலெக்சாந்திரிய நூலகம்** அலெக்சாந்திரியாவில் இருந்த தொன்மையான நூலகம். பண்டைக் காலத்தில் திரட்டப்பெற்ற சுருள் வடிவமான ஏடுகள் இந்நூலகத்தில் இருந்தன. இந்நூலகம் அக்காலத்தில் பெரும்புகழ் பெற்று விளங்கியது. எகிப்தின் உரோமானிய அரசர்களான முதலாம் தாலமியும், இரண்டாம் தாலமியும் இந்நூலகத்தைக் கி.மு. 200-ஆம் ஆண்டு வளர்ச்சிபெறச் செய்தார்கள். இந்நூலகத்தில் ஏறத்தாழ 7,00,000 சுருள் வடிக ஏடுகள் இருந்தன. இந்நூலகத்தின் ஒரு பகுதி கி.மு. 47-இல் சூலியசு சீசர் முற்றுகையின் போதும், பின்னர் வந்தமுற்றுகைகளின் போதும் அழிந்திருக்கக்கூடும்.

**அலெக்சாந்திரியா** ஒரு நகரம். எகிப்து நாட்டின் சிறந்த துறைமுகமும் இரண்டாவது பெருநகரமும் ஆகும். கெய்ரோ எகிப்தின் தலைநகர். அதற்கு அடுத்தபடியாக வரும்பெரிய நகரம் அலெக்சாந்திரியா (Alexandria). இது மத்தியதரைக் கடலில் அமைந்துள்ளது; நைல் ஆற்றுக் கழிமுகத்தின் மேற்கு ஓரத்தில் உள்ளது. பண்டைக் காலந்தொட்டே அலெக்சாந்திரியா சிறப்பான துறைமுகமாகவும் பண்பாட்டு மையமாகவும் இருந்து வருகிறது.

மத்தியதரைக் கடலையொட்டிக் குறுகிய வால் போன்று அலெக்சாந்திரியா நகரம் அமைந்துள்ளது. தீபகற்பப் பகுதியில் இரு துறைமுகங்களைக் கொண்டு இது விளங்குகின்றது. மேற்குப்புறத் துறைமுகம் எகிப்தின் சிறந்த கடற்படைத் தளமாக இருக்கிறது. சிறுபடகுகள் கிழக்குத் துறைமுகத்தில் தங்குகின்றன. அலெக்சாந்திரியாவின் மேற்கில், பாலை நிலத்தின் மேற்குப்பகுதி தொடங்குகின்றது. மரியோடிசு ஏரி நகரின் தெற்கில் உள்ளது.

இந்நகரின் நடுப்பகுதியில் அமைந்துள்ள சுதந்தரச் சதுக்கம் அலெக்சாந்திரியாவின் மையமாகத் திகழ்கிறது. இச்சதுக்கத்தின் நடுவில் கி.பி. 1800-ஆம் ஆண்டளவில் இக்கால எகிப்திய அரசை நிலைநாட்டிய முகம்மது அலி என்பாரின் சிலை உள்ளது. இச்சதுக்கத்தின் தெற்கிலும் கிழக்கிலும் நகரின் வாணிக மையங்கள் அமைந்துள்ளன. நகரின் வடமேற்கிலும் கிழக்கிலும் மக்கள் வாழும் பகுதிகளைக் காண்கிறோம். கடற்கரையை அடுத்துள்ள பரந்து விரிந்த தெருக்களில் உணவு விடுதிகள் உள்ளன. அலெக்சாந்திரியாப் பல்கலைக் கழகம் அலெக்சாந்திரியாவின் நடுநாயகமாய் விளங்குகின்றது.

அலெக்சாந்திரியாவின் மக்களில் பெரும்பாலோர் எகிப்தியர்கள். நூற்றுக்கு இருவரே அந்நியர்கள். எகிப்தியருள் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பேர் முசுலிம்கள்; அவர்கள் அரபிய மொழியைப் பேசுகின்றனர். வேலை தேடிவரும் நாட்டுப் புற மக்களின் வரவால் அலெக்சாந்திரியாவில் மக்கள் தொகை மிகுதி.

இந்நகரில் இரண்டு எண்ணெய் சுத்தி செய்யும் தொழிற்சாலைகளும் எண்ணற்ற பிற தொழிற்சாலை

களும் இருக்கின்றன. அழகுமிக்க அலெக்சாந்திரியா வைக் காண விடுமுறை நாட்களில் எண்ணற்றோர் வருகை புரிகிறார்கள். அவர்கள் செலவிடும் பணத் தால் இந்நகரப் பொருளாதாரம் பெரிதும் பெருகி யுள்ளது. மகா அலெக்சாந்தர் அலெக்சாந்திரியாவைக் கி.மு. 332–ஆம் ஆண்டில் உருவாக்கினார். கி.மு. 323–இல் அலெக்சாந்தர் காலமான பின்னர், அவ ருடைய படைத்தலைவர்களுள் ஒருவரான தாலமி (Tlomey) என்பார் அங்குத் தாலமிகளின் மரபினை நிலை நாட்டினார். தாலமி அலெக்சாந்திரியாவை எகிப்தின் தலைநகராக்கினார். அதன் விளைவாக அந்நகர் வாணிகம், மற்றும் பண்பாட்டு மைய மாயிற்று. அலெச்சாந்திரியாவில் புகழ்மிக்க நூலகம் ஒன்றும் அலெக்சாந்திரியாக் கலங்கரை விளக்கமும் உருவாகின. இந்தக் கலங்கரை விளக்கம் பண்டைய உலகின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாக விளங்கிற்று.

கி.பி. 642–ஆம் ஆண்டில் அரேபியாவைச் சார்ந்த முசுலிம் படைகள் இந்நகரைக் கைப்பற்றின. அராபி யர் எகிப்தின் தலைநகரை அலெக்சாந்திரியாவி லிருந்து கெய்ரோவிற்கு மாற்றினர். கி.பி. 1700–ஆம் ஆண்டளவில் அலெக்சாந்திரியா சிறியதொரு மீன் பிடிக்கும் சிற்றூராக மாறிவிட்டது. எகிப்து, அராபி யரின் ஆட்சியில் கி.பி. 1517–ஆம் ஆண்டு வரை நீடித் தது. பின்னர் இது (துருக்கிய) உதுமானியப் பேரரசின் பகுதியாயிற்று. கி.பி. 1798–ஆம் ஆண்டில் நெப்போலி யனால் நடத்திச் செல்லப்பெற்ற பிரெஞ்சுப் படைகள் அலெக்சாந்திரியாவைக் கைப்பற்றின. பிரிட்டிசு-துருக்கியர்கள் கி.பி. 1801-ஆம் ஆண்டில் பிரெஞ்சி யரை இங்கிருந்து துரத்தியடித்தனர்.

பிரெஞ்சியர் சென்றபின், துருக்கியப் படைத்தலை வரான முகம்மது அலி எகிப்தின் ஆட்சியைக் கைப் பற்றிக் கொண்டார். முகம்மது அலியின் ஆட்சிக் காலத்திலும், அவரை அடுத்து வந்தவர்களின் ஆட்சிக் காலத்திலும் அலெக்சாந்திரியா மீண்டும் சிறப்புப் பெற்ற துறைமுகமாயிற்று. கி.பி. 1881–ஆம் ஆண்டில் அரசாங்கம் எகிப்தியர்களால் மட்டுமே ஆளப்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் அலெக்சாந்திரியாவில் கலகம் மூண்டது. கி.பி. 1882–ஆம் ஆண்டில் பிரிட்டிசுகாரர்கள் தலையிட்டுக் கல கத்தை அடக்கினர். எகிப்து அவர்கள் வசமாயிற்று. முதல் உலகப் பெரும்போரின்போதும், இரண்டாம் உலகப் பெரும்போரின்போதும் அலெக்சாந்திரியா பிரிட்டிசுக் கப்பற்படையின் மத்தியதரைக் கடல் தளமாக விளங்கியது.

1947–இல் ஆங்கிலேயர் அலெக்சாந்திரியாவை விட்டு வெளியேறினர். அந்தச் சமயத்தில் அந்நியர் களின் ஆதிக்கத்தால் அலெக்சாந்திரியா பன்னாட்டுத் தன்மை பெற்று விளங்கலாயிற்று. இப்போது அயலார் ஆதிக்கப்பிடி தளர்ந்து அலெக்சாந்திரியாவும் ஏனைய எகிப்திய நகரங்களில் ஒன்றாகத் திகழ்கின்றது. 1976–ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி அலெக் சாந்திரியாவின் மக்கள்தொகை 23,18,655.

**அலெக்சி தோல்சுதாய் (கி.பி. 1882-1945)** சோவியத்து இலக்கியத்தினை உலகறியச் செய்த இலியோ தோல்சுதாய்க்குப் பிறகு உலகப் புகழ் பெற் றவர். இவர் கி.பி. 1882–ஆம் ஆண்டு சனவரி 10–ஆம் நாள் பிறந்தார். குழந்தைகளுக்கான நூல்களை எழுதி வந்த அன்னை, தன் மகன் அலெக்சியிடம் (Tolstoy, Alexei) இலக்கிய ஆர்வம் வளர்வதற்குப் பெரிதும் துணைபுரிந்தார். கி.பி. 1901–ஆம் ஆண்டில், அலெக்சி பீட்டர்சுபர்க்குத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேர்ந் தார்; மாணவப் பருவத்திலேயே சார் ஆட்சிக்கு எதி ராக இயங்கிய இயக்கங்களில் பங்கு கொண்டார்; சமூகக் குடியாட்சிக் கட்சியில் சேர்ந்தார்.

அலெக்சியின் கவிதைகளே முதன்முதலில் வெளி வந்தன. பின்னர்க் கதைகளும் புதினங்களும் எழுதி



அலெக்சி தோல்சுதாய்

னார். சார் ஆட்சிக் காலத்தில் நில முதலாளியம் சிதைந்து வந்ததைச் சித்திரிக்கும் இந்த நூல்கள், இவ ருக்கு இயற்கையிடமும் மக்களிடமும் உள்ள பேரன் பைப் புலப்படுத்தின.

கி.பி. 1917-இல் சமதருமப் புரட்சி வெற்றி யடைந்த பிறகு, கி.பி. 1919-இல் தம் தாய்நாட்டி லிருந்து வெளியேறிப் பாரிசு நகரில் புகலடைந்தார். தாய்நாட்டைத் துறந்து வேற்று நாட்டில் எதிரியாக வாழ்வதை வெறுத்துக் கி.பி. 1921-இல் பெர்லினுக் குச் சென்றார். அடுத்த ஆண்டில் மாக்சிம் கோர்க்கி பெர்லின் வந்தபோது இருவரும் நண்பராயினர்.

அதே ஆண்டில் தாயகம் திரும்பினார். அரசும் உருசிய மக்களும் மகிழ்ந்தேற்றனர்.

மகா பீட்டர் (கி.பி. 1696–1725) ஆட்சிக் காலத்தினைப் பின்னணியாகக் கொண்டு 'பேரரசர் பீட்டர்' எனப் பெயரிய புதினத்தையும் நாடகத்தையும் எழுதினார். புரட்சிக் காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரினை மையமாகக் கொண்டு 'அக்கினிப் பரீட்சை' எனும் பெயரிய புதினத்தையும் வேறு பல புதினங்கள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள் மதிப்புரைகள் ஆகியவற்றையும் எழுதினார். தம் சோவியத்து நாட்டின் பல்வேறு இன மக்களின் நாட்டுப் பாடல்களையும் கதைகளையும் தொகுத்தார். தம் சிந்தனைகளும் கருத்துகளும் சொற்சித்திரங்களும் புதிய உலகின் எழுச்சிக்குரலாகச் செய்து விளங்கிய அலெக்சி கி.பி. 1945-இல் இறந்தார். த.கோ.

**அலைக் கோட்பாடு** என்பது மொழிகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கண்டறியக் கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் புத்திலக்கணத்தார் (Neogrammarians) கண்டு கூறிய பல்வேறு கோட்பாடுகளுள் ஒன்று. கி.பி. 1872–ஆம் ஆண்டு இந்தோ–ஐரோப்பிய மொழிகளின் மரபுவழித் தொடர்புகளையும், ஒற்றுமை–வேற்றுமைகளையும் விளக்கப் போந்த சோன்சு சுமித்து (Johannes Schmidt) என்பவரே முதன் முதலில் இக்கோட்பாட்டினைக் கொண்டுவந்தார்.


அமைதியான நீரில் ஒரு மையத்தினின்றும் தோன்றுகிற வட்டவடிவமான அலைகள் அம்மையத்தினின்றும் விலகிச் செல்லச்செல்ல மெலிதாகி இறுதியில் மறைந்துவிடும். அந்நீரில் வேறொரு மையத்தினின்றும் வருகின்ற அலைகளுடன் சந்திக்கிறபொழுது அவை தடைப்படுவதையும் காணலாம். இதுபோன்று ஒரு செழுமை வாய்ந்த மொழியின் தாக்கம், நீரில் உண்டாகும் அலைகளைப் போன்று பரந்து செல்லும் பான்மையது. இந்நிலையில் மற்றொரு மொழியின் தாக்கமும் நீரலை போன்று பரவி வருங்கால், இரு தாக்கங்களும் ஓரிடத்தில் சந்திக்கும் நிலையில், காலப் போக்கில் ஒரு புதிய மொழிப்பண்பு தோன்றுதற்குக் காரணமாக அமைந்துவிடும். இச்சூழ்நிலை, உறவுடைய மொழிகளுக்கிடையேயும் உறவற்ற மொழிகளுக்கிடையேயும் ஏற்படும். அப்பொழுது பல்வேறு மொழி மாற்றங்கள் (Linguistic Innovations) உண்டாகும். இம்மாற்றங்களை அலைக் கோட்பாடு (Wave Theory) மட்டுமே விளக்க வல்லது எனக் கருதினர்.

ஏனெனில், இக்கோட்பாட்டிற்கு முன்னர்த் தோன்றிய காலக்கிரமக் கிளைக் கோட்பாடு (Family Tree Theory) காலக்கிரமத்தில் ஏற்பட்ட மாற்றங்களால் தொல்மொழி (Proto Language) பிரிந்த நிலையை மட்டுமே விளக்கி நின்றது. மொழித் தொடர்பால் (Language Contact) அவ்வப்பொழுது ஏற்படும் மொழி மாற்றங்களை இக்கோட்பாடு காட்டாதாகையாலேயே அலைக்கோட்பாடு தோன்றிற்று. எடுத்துக்காட்டாகக் காலக் கிரமத்தில் ஏற்பட்ட மொழி மாற்றங்களின் அடிப்படையில், திராவிட மொழிகள் தென் திராவிட மொழிகள், மத்திய திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் எனப் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் காலக்கிரமக் கிளை வரைபடம் (Family Tree Diagram) மூலம் விளக்குவர். ஆனால், இம்மொழிகள், அவை பேசப்படுகிற இட அடிப்படையில் பிற மொழிகளுடன் (உறவு மொழிகள், உறவற்ற மொழிகள்) மொழித் தொடர்பு ஏற்படுத்துவதன் காரணமாகப் பல்லேறு மொழிமாற்றங்கள், காலக்கிரமம் வரையறுக்க முடியாதபடி ஏற்படுகின்றன. இத்தகைய மாற்றங்களை அலைக் கோட்பாட்டின் மூலம் விளக்கலாம்.

ஓரிடத்தில் தோன்றுகிற புதிய அரசியல் சூழ்நிலை (காலனி ஆதிக்கம் போன்று), மக்களின் இடப் பெயர்ச்சி (Migration) போன்றவற்றால் மொழிக் கலப்பு ஏற்படும்பொழுது, முன்பு இருக்கும் மொழியின் மேல் புதிதாக வரும் மொழியின் தாக்கம் ஏற்படின் அல்லது முன்பு இருக்கும் மொழியின் தாக்கம் புதிய மொழியின் மேல் ஏற்படின், இருக்கும் மொழி, வரும் மொழி இரண்டிலுமே மொழி மாற்றங்கள் ஏற்படும். இது புதியதொரு மொழிப்பண்பு உருவாதற் பொருட்டு முதலில் மொழிப்பிளவு (Divergence) ஏற்பட்டுக் காலப்போக்கில் புதியதொரு மொழியே உருவாகிவிடும். தமிழ் மலையாளமாக மாறிய செய்தியினை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். மேலும், தமிழ் போன்ற பல்வேறு கிளைமொழிகளைத் (Dialects) தன்னத்தே கொண்ட ஒரு மொழியில், அதன் பொதுக் கிளைமொழி (Common Dialect) ஒன்று, தன் செல்வாக்கைப் பிற கிளைமொழிகளில் பரப்புமேயானால், கிளைமொழிகளில் சமநிலை (Dialect Levelling) ஏற்படும். இத்தகைய மாற்றங்களை யெல்லாம் அலைக்கோட்பாடே விளக்கி நிற்கும். ஆர்.பா.

**அலைதர்வாசா** குதுப்மினாருக்கு அருகில் கில்சி மரபினைச் சேர்ந்த அலாவுதீன் கில்சி என்ற பேரரசரால் கி.பி. 1310–இல் கட்டப்பட்ட தலைவாயில். குவ்வத்-உல்-இசுலாம் என்றழைக்கப்படும் மசூதிக்குள் நுழைவதற்கான தென்புற வாயில் இது. இவ்வாயில் சிவப்பு நிற மணற் கற்களையும் வெள்ளைப் பளிங்குக் கற்களையும் கொண்டு கட்டப்பட்டதாகும். இப்பொழுது இந்தியாவில் உள்ள தலைவாயில்களிலேயே மிகவும் அழகியது என்று இதை வல்லுநர்கள் கூறுகின்றனர். குரானில் உள்ள சொற்றொடர்களும் இசுலாமிய சமய நீதி நெறிகளும் இவ்வாயிலில் அழகாகப் பொறிக்கப்பட்டுள்ளன. பேரரசர் அலாவு

தீன் கில்சியைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளும் இவ்வாயிலின் மேற்கு, தெற்கு, கிழக்கு வளைவுகளில் செதுக்கப்பட்டுள்ளன. இத்தலைவாயிலைக் கட்டி



அலைதர்வாசா

முடிக்கும் பணி நிறைவு பெற்றதும் அலாவுதீன் கில்சி குவ்வத்-உல்-இசுலாம் மசூதியை அதன் வடக்குப் புறத்தில் விரிவாக்கும் பணியை மேற்கொண்டார். ஆனால், இப்பணி முடிவடைவதற்குள் அலாவுதீன் கில்சி கி.பி.1315-இல் இறந்தார். இப்பணி முடிவடைந்திருந்தால், மசூதியின் பரப்பு கிழக்கு-மேற்காக 240 மீட்டர், வடக்கு-தெற்காக 130 மீட்டர் இருந்திருக்கும். மசூதியின் வடக்குப் புறத்திலும் ஒரு வாயிலைக் கட்டும் பணியை அலாவுதீன் கில்சி மேற்கொண்டார். ஆனால் அப்பணியும் இன்றளவும் முடிவடையாத நிலையிலிருக்கிறது. அ.கா.

***அலைவாய்*** திருச்செந்தூருக்குரிய வேறுபெயராகும். இவ்வூர் செந்தில் என்று சங்கநூல்களிலும் சிலப்பதிகாரத்திலும் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வூர் நெல்லை மாவட்டத்தில் கடற்கரை நகரமாக அமைந்துள்ளது. இது முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டுள்ள இடங்களுள் ஒன்றாகச் சங்க காலத்திலிருந்தே சிறப்பிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலியிலிருந்து புகைவண்டி வழியாகவும் பேருந்து வழியாகவும் இவ்வூரைச் சென்றடையலாம். முருகப்பெருமான் விளங்கும் சிறப்பினால் இவ்வூரினை ''உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய்'' என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் இவ்வூரில் முருகன் ஆறுமுகங்களொடும் பன்னிரு கரங்களொடும் விளங்கி மக்களுக்கும் தேவர்க்கும் அருள்புரியும் பாங்கினைத் திருமுருகாற்றுப்படையில் அழகுறக் காட்டியுள்ளார். முருகனுடைய ஆறுபடை வீடுகளுள் ஒன்றாக இவ்வூர் பிற்காலத்தில் கருதப்பட்டுப் போற்றப்படுகிறது. கடலலை இடையறாது வீசும் கடற்கரையில் அமைந்தது என்னும் காரணத்தால் இவ்வூர் அலைவாய் எனப்பட்டது. முருகன் குறிஞ்சிக் கிழவன் எனப்பட்டாலும், காடும் காவும் கவின்பெறு துருத்தியும் போன்ற எல்லா இடங்களிலும் விளங்குபவன் என்னும் கருத்தில் கடற்கரையில் அலைவாயிடத்தே அவனை அமைத்துத் தமிழ்மக்கள் போற்றி வருகின்றனர். இவ்வூர் மருதவளமும், நெய்தல் வளமும் ஓராற்றான் குறிஞ்சிவளமும் கொண்டு திகழும் இயற்கையினை அகநானூற்றுப் பாடல் (266) ''வயலில் உழவர் உண்டாக்கும் ஒலி ஆரவாரத்திற்கு அஞ்சி மயில்கள், தெய்வமுடைய குன்றினில் வந்து தங்கும் சிறப்புடைய, அழகிய மணிவிளக்கு ஒளிவீசும் அலைவாய்'' என்று குறிப்பிட்டுள்ளது. பழைமையான கடலலை மோதும் இவ்வூர்க் கடற்கரையில் அமைந்துள்ள மணல் முன்றிலில் முருகப் பெருமான் கோயில் கொண்டு விளங்கும் பாங்கினைத் ''தாழ்நீர் வெண்டலைப்புணரி அலைக்கும் செந்தில் நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை'' என்று புறநானூறு (55) சிறப்பிக்கிறது. 'சீர்கெழு செந்தில்' என்று சிலப்பதிகாரமும், 'நம் செந்தில் மேய வள்ளி மணாளன்' என்று தேவாரமும் இவ்வூரைக் குறிப்பிட்டுள்ளன. அருணகிரிநாதர் தம் திருப்புகழில் சிறப்பித்துப் போற்றிய இந்நகரின்மீது பிற்காலத்தே தோன்றிய புலவர் பலர் பல்வேறு சிற்றிலக்கிய வகைகளில் நூல்கள் இயற்றி இத்தலத்தினையும் இங்குள்ள இறைவனையும் போற்றி வந்துள்ளனர். காண்க: திருச்செந்தூர்.

***அலோர் இசுடார்*** மலேசியாவில் கெட்டா (Keddah) என்னும் அரசின் தலைநகரம். இது மலாயா முந்நீரகத்தின் வடகிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது. கெட்டா ஆற்றங்கரையின்மீது அமைந்துள்ள அலோர் இசுடார் (Alor Star) நகரம் பினாங்கு (Penang) என்னும் ஊருக்கு வடக்கே 80 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. இவ்வூருக்கும் அதன் தெற்கிலுள்ள கோலாலம்பூருக்கும் சிங்கப்பூருக்கும் இருப்புப்பாதைத் தொடர்புண்டு. வடக்கே தாய்லாந்து நாட்டின் தலைநகரான பாங்காக்கு மாநகருக்கும் இதுபோல் இருப்புப்பாதைத் தொடர்புண்டு. மக்கள்தொகை 71,682 (1980).

***அலோர்சு*** தெற்குப் பசிபிக்கில் இந்தோனேசியாவில் வாழும் ஒரு பழங்குடியினர். இம் மக்களிடையே (Alorse) தங்கள் குழந்தைகளைச் சீராகக் கவனித்து வளர்க்கும் பழக்கம் கிடையாது. குழந்தைகளைப் பேசப் பழக்குவதுகூட இல்லை. பெரியவர்கள் குழந்தைகளுக்கு ஆறுதல் அளிக்கும் விதத்தில் பாடுவது உண்டு. ஆனால், ஒரு சொல்லும் பேசுவது கிடையாது. குழந்தையை எப்போதாவது பெயர் சொல்லி அழைப்பர். உடலைத் தூய்மை செய்து கொள்ளும் முறைகளையும் குழந்தைகட்குச் சொல்லித் தருவதில்லை. குழந்தைகளைத் தூக்கி வைத்திருக்கும்

போது, தாம் அணிந்துள்ள ஆடையின் மீதே மலம், சிறுநீர் கழித்து விட்டாலும் அது குறித்து வெறுப்படைவதோ சினமடைவதோ மாறுதல் கொள்வதோ இல்லை. அதைச் சில தழை, துகள்கள் அல்லது மூங்கில் பட்டையினால் துடைத்து விடுவார்கள். மேலும் அலோர்சு மக்கள் குழந்தைகளை நடக்கப் பழக்குவதும் இல்லை. தாய் தன் குழந்தைகளுக்குப் பாலூட்டுவதிலோ ஏனைய பணிவிடைகளிலோ மிக்க அக்கறை எடுத்துக்கொள்ளுவது கிடையாது. மகப்பேற்றையே இத்தாய்மார்கள் வெறுப்பாக எண்ணுகின்றனர். பிறந்து சற்று நேரமே ஆன குழந்தைக்குக் கூட எவ்வித அடிப்படைக் கடமைகளையும் இவர்கள் மேற்கொள்வதில்லை. ஆனால் அலோர்சுப் பெண்கள் ஆண் குழந்தைபெறுவதை விரும்புகின்றனர். இவர்களிடையே குழந்தை வளர்ப்பில் கவனமின்மை இருந்தபோதிலும் தங்கள் குழந்தைகள் மிக்க ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டுள்ளனர். உடல்சார்ந்த தண்டனைகளைப் பெற்றோரே கொடுக்க வேண்டும் எனும் ஒழுங்கு இருந்தபோதிலும், நடைமுறையில் இது மீறப்படுகிறது. உறவினர்களும் நெருங்கியோர் அல்லாதாரும் கூடப், பெற்றோரைப் போலவே குழந்தைகளைத் தலைமேல் அடிப்பதையும் காதைப் பிடித்து இழுப்பதையும் வாயைத் திருகுவதையும் கட்டிப் போடுவதையும் செய்கின்றனர். ஏளனஞ் செய்தலும் குறைகூறுதலும் ஏமாற்றுதலும் இவர்களிடையே காணப்படுகின்றன.

ஆ. செ.

**அவத் பிகாரி (கி.பி. 1889-1915)** புரட்சித் தியாகிகளுள் ஒருவர். கி.பி. 1889-ஆம் ஆண்டு தில்லியில் பிறந்தார். தலைசிறந்த புரட்சிவாதி. உத்தரப்பிரதேசத்திலும் பஞ்சாபிலும் புரட்சி நடவடிக்கைகளை அமைத்தவர் இவர். இராசு பிகாரிபோசின் துணைவர்களுள் ஒருவரான அவத் பிகாரி, (Avadh Behari) 1912-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 23-ஆம் நாள் ஆங்கில அரசாங்கத்தின் இந்திய அரசப் பிரதிநிதியான ஆர்டிஞ்சு பிரபு (Lord Hardinge) வைக் கொல்ல நடைபெற்ற சதியில் பங்கு பெற்றவர். இதைத் தில்லிச் சதி வழக்கு எனக் கூறுவர். ஆர்டிஞ்சு பிரபு தில்லிச் சாந்தினிச் சதுக்கத்தில் அரசு மரியாதைகளுடன் ஊர்வலமாகச் செல்லும்போது அவரைக் கொல்லச் சதி நடந்தது. 1913-ஆம் ஆண்டு மே மாதம் 17-ஆம் நாள் நடைபெற்ற இலாகூர்ச் சதிவழக்கிலும் இவருக்குத் தொடர்பிருந்தது. 1914-ஆம் ஆண்டு பிப்பிரவரியில் இவர் கைது செய்யப்பெற்று, அமிர் சந்து, பால்மோகானந்து, வசந்த குமார் பிசுவாசு என்னும் மூன்று துணைவர்களுடன் விசாரிக்கப் பெற்றார். மரண தண்டனை விதிக்கப்பெற்று 1915-ஆம் ஆண்டு மே மாதம் 11-ஆம் நாள் அம்பாலா மத்திய சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

**அவதாரம்** என்பது திருமால் தன் முழு ஆற்றலோடு பல்வேறு வடிவில் உலகில் தோன்றுவதைக் குறிக்கும். இறைவன் தன் ஆற்றலின் ஒரு பகுதியையே கொண்டு தோன்றுவதை அம்சாவதாரம் என்று கூறுவர். அறத்தை நிலைநிறுத்துவது அவதாரத்தின் நோக்கமாகக் கருதப்படுகிறது. திருமால் இவ்வுலகில் இதுவரை ஒன்பது அவதாரங்கள் எடுத்திருக்கிறார் என்றும் கலியுக முடிவில் கல்கி என்ற பெயரில் பத்தாவது அவதாரத்தை எடுக்க இருக்கிறார் என்றும் புராணங்கள் கூறுகின்றன. காத்தற்கடவுளான திருமால் ஒருவரே இப்படி அவதாரங்களை எடுத்திருக்கிறார். அவர் எடுத்த பத்து அவதாரங்களாவன: 1) மச்சம், 2) கூர்மம், 3) வராகம், 4) நரசிம்மர், 5) வாமனர், 6) பரசுராமர், 7) சீராமர், 8) பலராமர், 9) கிருட்டிணன், 10) கல்கி.

1) மச்சாவதாரம்: (மீன் வடிவம்) வைவசுவத மனுவின் காலத்தில் மச்சாவதாரம் (மீன் வடிவம்) நிகழ்ந்தது. ஒருகாலத்தில் பிரமன் வேதங்களை ஓதிக் கொண்டிருந்தபோது அயக்கிரீவன் என்ற அசுரன் அவற்றைத் திருடிக்கொண்டு போய்க் கடலின் அடியில் ஒளிந்து கொண்டான். திருமால் மீனாகப் பிறந்து அவற்றை மீட்டார். திருமாலின் மச்ச அவதாரம் சிற்பங்களில் வடிக்கப்படும்பொழுது, மீன் போன்றோ அல்லது தலைப்பகுதி ஆண் வடிவையும் அடிப்பகுதி மீன் வடிவையும் கொண்டோ அமைக்கப்படும்.நான்கு கைகளைக் கொண்டு விளங்கும். இவருடைய இரு கைகளில் சங்கும் சக்கரமும் மற்றிரண்டு கைகளில் அபய முத்திரையும் வரத முத்திரையும் காணப்படும். பல அணிகலன்களையும் தலையில் கிரீட மகுடத்தையும் இவர் அணிந்திருப்பார்.

2) கூர்மாவதாரம்: ஒரு காலத்தில் திருமாலின் எண்ணத்தின்படி தேவர்கள் அசுரர்களைத் துணை சேர்த்துக் கொண்டு அமிர்தத்தைப் பெறுவதற்காகப் பாற்கடலைக் கடையத் திட்டமிட்டனர். மந்திர மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்பைக் கடையும் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையத் தொடங்கினர். மத்தின் அடிப்பகுதியில் தாங்குவதற்கு ஒன்றும் இல்லாததால் மத்து அமிழ்ந்தது. இதைக்கண்ட திருமால் கனமான முதுகோடு கூடிய ஆமை வடிவத்தை எடுத்துக் கொண்டு மத்தின் அடிப் பகுதியில் அமர்ந்து அதைத் தாங்கினார். அதனால் மகாலட்சுமி, அமுதம், சந்திரன், பாரிசாதம் முதலான பல பொருள்களைத் தேவர்களால் கடைந்தெடுக்க முடிந்தது. மச்ச அவதாரம் போன்றே கூர்மாவதாரமும் தலைப்பகுதி ஆணின் முகத்தையும் கீழ்ப்பகுதி ஆமை வடிவத்தினையும் கொண்டிருக்கும். இவரும் நான்கு கைகளைக் கொண்டு விளங்குவார்.

3) வராகாவதாரம்: திருமால் வீற்றிருக்கின்ற வைகுண்டத்தில் சயன், விசயன் என்ற இரு வாயிற்

காப்போர்கள் இருந்தார்கள். ஒரு சமயம் சனகர் முதலான முனிவர்கள் திருமாலை வழிபட வைகுண்டம் சென்றபோது வாயிற்காப்போர் அவர்களைப் பொருட்படுத்தாமல் இருந்தனர். கோபமுற்ற முனிவர்கள் அவர்களை அசுரர்களாகப் பிறக்குமாறு சாபம் இட்டனர். அதன் விளைவாகக் காசியபரின் புதல்வர்களாகச் சயன் இரணியாட்சனாகவும் விசயன் இரணியகசிபாகவும் தோன்றினர். இவ்விருவரும் தேவர்களைத் துன்புறுத்தினர். ஒருசமயம் இரணியாட்சன் கதையால் கடலை அடித்தான். கடற்கடவுளான வருணன் திருமாலிடம் முறையிடத் திருமால் வந்தார். அவரைக் கண்ட இரணியாட்சன், பூமியைச் சுருட்டிக் கொண்டு கடலின் அடியில் சென்று ஒளிந்து கொண்டான். திருமால் பன்றி உருவம் தாங்கிக் கடலுக்கு அடியிற் சென்ற போது இரணியாட்சன் பாதாளத்திற்கு ஓடினான். பன்றி உருவில் இருந்த திருமால் பாதாளத்திற்குச் சென்று இரணியாட்சனைக் கொன்று, பூமியைத் தம் கொம்பில் தாங்கியவாறு மேலே கொண்டுவந்து காப்பாற்றினார். இவர் பூவராகன், (ஆதிவராகன்) யக்ஞவராகன், பிரளயவராகன் என்று வெவ்வேறு திருவுருவங்களில் திருக்கோயில்களில் காட்சி தருகின்றார். வராக அவதாரச் சிற்பங்கள் மாமல்லபுரம், இராசம், நாகணபுரம், ஆகிய இடங்களில் உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் வராக அவதாரத்தைக் காட்டும் வெண்கலச்சிலையொன்றும் உள்ளது.

4) நரசிம்மாவதாரம்: இரணியாட்சன் கொலையுண்டதால் அவன் தம்பி இரணியகசிபுவிற்குத் திருமாலின் மீது கோபம் பொங்கிற்று. பிரமனை நோக்கி மந்தரமலையின் உச்சியில் அமர்ந்து கடுந்தவம் புரிந்தான். பிரமனும் அவன்முன் தோன்றிச் சில வரங்களைக் கொடுத்தார். அவற்றுள் ஒன்று 'திருமாலைத் தவிர வேறு எவராலும் தான் கொல்லப்படுதல் கூடாது' என்பதாகும். அன்று முதல் திருமால் அடியார்களை அவன் துன்புறுத்தி வந்தான். அவனுக்குப் பிரகலாதன் என்ற புதல்வன் பிறந்தான். பிறந்ததிலிருந்தே இச்சிறுவன், திருமால் அடியானாகக் காணப்பட்டான். திருமாலின் மீது இவனுக்குப் பகைமை உணர்ச்சி வளரவேண்டும் என்ற நோக்கத்துடன் அத்தகைய உணர்ச்சியை ஊட்டக்கூடிய ஓர் ஆசிரியருடன் இவன் தங்கியிருந்து பயிலுமாறு இரணியகசிபு ஏற்பாடு செய்தான். இது பலனளிக்காததைக் கண்ட இரணியகசிபுவிற்குக் கோபம் பொங்கிற்று. பிரகலாதனைப் பல வழிகளில் அச்சுறுத்தத் தொடங்கினான். மதம்பிடித்த யானைகளின் முன்பு பிரகலாதன் நிறுத்தி வைக்கப்பட்டான். இவன்மீது மோத முற்பட்ட யானையின் தந்தங்கள் இலக்குத் தப்பிப் பூமியில் மோதி ஒடிந்தன. நச்சுப் பாம்புகளை இவன்மீது ஏவினான். கடித்த பாம்பின் பற்கள் தாம் ஒடிந்தன. கொழுந்துவிட்டு எரிகின்ற தீயில் இவன் போடப்பட்டான். தீ குளிர் நிழல் போல் இவனுக்கு இருந்தது. அத்தீயிலிருந்து கிளம்பிய ஒரு பூதம் இவனைக் கொல்ல முயன்றது. அக்கணமே திருமாலின் சுதர்சனச் சக்கரம் அப்பூதத்தின் தலையைத் துண்டாக்கியது. தன் தீய முயற்சிகளில் தோல்வியுற்ற இரணியகசிபு பிரகலாதனை நோக்கிச் சினம்பொங்க, 'உன் திருமால் எங்கே இருக்கிறான்' என்று கேட்டான். அதற்குப் பிரகலாதன் 'அவன் அசையும் பொருள் அசையாப் பொருள் எல்லாவற்றிலும் இருக்கிறான்' என்று மறுமொழி அளித்தான். இரணியகசிபு அருகிலிருந்த தூணைக்காட்டி, 'இத்தூணில் இருக்கிறானா?, என்று கேட்டுக் கொண்டே அதைக் காலால் உதைத்தான். பிரகலாதன், 'அவன் தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான்' என்று சொன்னான். அதே கணத்தில் தூணைப் பிளந்துகொண்டு ஓர் உருவம் வெளிப்பட்டது. அது பாதி மனித உருவமும், பாதி சிம்ம உருவமும் கொண்ட ஒரு கோர உருவம். அது தான் நரசிம்ம அவதாரம். நரசிம்மர் இரணியகசிபுவைக் கீழே தள்ளித்தம் கூரிய நகங்களால் அவன் வயிற்றைக் கிழித்துக் குடலை எடுத்து மாலையாகப் போட்டுக் கொண்டு பேரொலி செய்தார். பிரகலாதன் அவரை அன்பு பொங்கப் பாடித் துதித்து வணங்கினான். நரசிம்மர் அவனுக்கு ஆசி கூறி மறைந்தார். இவர் சிற்பங்களில் கிரிச நரசிம்மர், இசுதாவுன நரசிம்மர், யோக நரசிம்மர், கேவல நரசிம்மர், இலக்குமி நரசிம்மர் போன்ற உருவங்களில் வடிக்கப்படுகிறார்.

5) வாமனாவதாரம்: பிரகலாதனின் பேரன் மகாபலிச் சக்கரவர்த்தி. பாற்கடலினின்றும் அமிர்தத்தைக் கடைந்தெடுத்த தேவர்களும் அசுரர்களும் அவ்வமுதத்தைத் தாமே பெறவேண்டும் என்று போரிட்டனர். தேவர் தலைவனான இந்திரன், அசுரர் தலைவனான மகாபலியின் உடலை வெட்டினான். அசுரர்கள் மகாபலியின் உடலைப் பாதாளத்திற்கு எடுத்துச் சென்று தம் குல குருவான சுக்கிராசாரியரைக் கொண்டு மகாபலியை உயிர்பெற்று எழச் செய்தனர். பிறகு மகாபலி இந்திரலோகத்திற்குச் சென்று தேவர்களைப் போரில் சிதறி ஓடச் செய்தான். தேவர்களின் துயரைத் துடைக்க வேண்டும் என்று தேவமாதாவான அதிதி திருமாலை வேண்டினாள். அவரும் அதிதியின் வயிற்றில் இந்திரனுக்கு இளையவனாகப் பிறந்தார். அவரே வாமனர் (குள்ள வடிவினர்). மகாபலி நருமதை நதிக்கரையில் ஒரு பெரிய வேள்வியை நடத்தினார். அங்குக் கூடியிருந்தவர்களுள் வாமனரும் ஒருவர். வாமனர் தம் காலடியால் அளக்கக்கூடிய மூன்றடி இடத்தைத் தானமாக வழங்குமாறு மகாபலியை வேண்டினார். சுக்கிராச்சாரியார் தடுத்தபோதிலும் மகாபலி அப்படியே மூன்றடி நிலத்தை வழங்க ஒப்புக்




மச்சம் கூர்மம் வராகம் நரசிம்மர் வாமனர்.

கொண்டார். வாமனர் விசுவரூபம் எடுத்து இரண்டு அடிகளால் வானம், நிலம், கீழுலகு ஆகியவற்றை அளந்துவிட்டு மூன்றாவது அடியை எங்கே வைப்பது என்று கேட்டார். மகாபலி மூன்றாவது அடியைத் தம் தலைமீது வைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொண்டார். வாமனர் அப்படியே செய்து அவரைக் கீழுலகத்தில் ஆழ்த்திவிட்டார். தேவர்கள் தாங்கள் இழந்த தேவலோகத்தைப் பெற்றார்கள். வாமனர் எடுத்த விசுவரூபம் திருவிக்கிரமர் எனப்படுகிறது. திருவிக்கிரமரின் உருவம், மாமல்லபுரத்தில் கணேசபுரக் குகைக் கோயிலிலும், பாதாமி, எல்லோரா ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது.

6) பரசுராமாவதாரம்: ஒரு காலத்தில் அக்கினி பகவான், கார்த்தவீரியார்ச்சுனன் என்ற அரசனிடம் தமக்கு உணவு வேண்டும் என்று கேட்டான். அவனும் தம் பேரரசில் எந்தப் பகுதியை வேண்டுமானாலும் உணவாகக் கொள் என்று அனுமதி வழங்கினான். அக்கினி பகவான் பல காடுகளைக் கொளுத்தினான். அக்காடுகளுள் ஒன்றில் வசித்துவந்த ஆபவர் என்னும் முனிவர் தாம் வசித்துவந்த இடம் தீக்கிரையானதற்குக் காரணம் கார்த்தவீரியன் என்னும் சத்திரியன் என்று தெரிந்து, சத்திரிய குலமே அழிவதற்காகத் திருமால் பரசுராமராக அவதரிப்பார் என்று சாபமிட்டார். பரசுராமர் சிவனை நோக்கித் தவம் புரிந்து வில்வித்தையில் தேர்ச்சி பெற்றார். சிவன் அவருக்குப் பரசுப் (கோடரி) படைக்கலத்தை வழங்கினார். அன்று முதல் அவர் பரசுராமர் என்னும் பெயர் பெற்றார். அவர் பாரதநாட்டை இருபத்தொரு முறை சுற்றிவந்து சத்திரியர்களைக் கொன்றார் என்பது கூறப்படுகிறது. சத்திரியர்களைக் கொன்ற பாவத்தைத் தீர்ப்பதற்குப் பரசுராமர் குரு சேத்திரத்தில் வேள்வி செய்தார். அப்போது தம் பொன், பொருள் அனைத்தையும் காசியபருக்குக் கொடுத்துவிட்டார். தமக்கென ஓர் இடம் இல்லாததால் காசியபர் சொன்னதற்கேற்பத் தென்னாட்டின் மேற்குக் கடற்கரைக்குச் சென்று, வருணபகவானை வேண்டிக் கடலில் ஒரு பகுதியை நிலமாகப் பெற்றார். அது இன்றைய கேரளநாடு என்று சொல்லப்படுகிறது. இராமன் சனகருடைய அவையில் சிவனுடைய வில்லை முறித்துச் சீதையைத் திருமணம் செய்து கொண்டு திரும்பியபோது பரசுராமர் தம்மிடம் உள்ள திருமாலின் வில்லை நாணேற்ற முடியுமா என்றுகேட்டார். இராமர் அச்செயலை எளிதில் செய்து காட்டினார். பரசுராமர் இராமருக்கு வாழ்த்துக் கூறிவிட்டுத் தவம் செய்யும்பொருட்டு மகேந்திர மலைக்குச் சென்று விட்டார்.

7) இராமாவதாரம்: இலங்கையில் ஆண்டுவந்த இராவணன், தேவர்கள் முதலான நல்லவர்களுக்குத் தாங்கமுடியாத தீமைகளைச் செய்துவந்தபோது



பரசுராமர் சீராமர் பலராமர் கிருட்டிணன் கல்கி.

இதைப் பொறுக்க முடியாமல் தேவர்கள் சிவபெருமானிடத்து முறையிட, சிவபெருமான் பிரமனிடத்து முறையிட, பிரமனும் சிவனும் திருமாலிடம் முறையிட, அவர் நிலவுலகத்தில் அவதாரம் செய்து இராவணனைக் கொல்வதாக வாக்களித்தார். இந்த அவதாரத்தில் தம் சங்கு, சக்கரம், ஆதிசேடன் ஆகியோர் தம் உடன்பிறப்பினராகப் பிறப்பார்கள் என்றும் தேவர்கள் வானரர்களாகப் பிறப்பார்கள் என்றும் திருமால் கூறினார். இவ்வாறு கம்பராமாயணம் கூறுகிறது.

அயோத்தியில் ஆட்சிபுரிந்து வந்த தசரத சக்கரவர்த்திக்குக் கோசலை, கைகேயி, சுமித்திரை என்ற மூன்று மனைவியர் இருந்தனர். ஆயினும் தசரதனுக்கு ஆண்மகவு பிறக்கவில்லை. குலகுருவான வசிட்டர் கூறியவண்ணம் தசரதன் ஆண்மகவினைப் பெறுவதற்காகப் புத்திரகாமேட்டி என்னும் வேள்வியைச் செய்தார். வேள்வித் தீயினின்றும் தோன்றிய ஒரு தெய்விக ஆடவன் பாயசம் நிரம்பிய ஒரு கிண்ணத்தைத் தசரதரிடம் கொடுத்தான். தசரதன் தம் மனைவியர் மூவருக்கும் அதைப் பகிர்ந்தளித்தான். அதைப் பருகிய மூன்று அரசியர்களுள் கோசலைக்கு இராமனும், கைகேயிக்குப் பரதனும், சுமித்திரைக்கு இலக்குவன், சத்துருக்கனன் என்ற இருவரும் பிறந்தனர் அவர்கள் முறையே விற்பயிற்சி முதலான கல்விகளைக் கற்று ஒழுக்க சீலர்களாய் அனைவராலும் போற்றப்படுபவராய் வளர்ந்து வந்தனர். ஒருமுறை விசுவாமித்திரர் வேண்டுகோளுக்கிணங்க இராமனும், இலக்குவனும் விசுவாமித்திரருடன் காட்டிற்குச் சென்று, விசுவாமித்திரரின் வேள்வியைக் காத்து, அரக்கர்களை விரட்டினர். தாடகை என்னும் அரக்கியை இராமன் கொன்றான்.

விசுவாமித்திரர் இராம இலக்குவர்களை அழைத்துக் கொண்டு சனகரின் மிதிலாபுரிக்குச் சென்று கொண்டிருக்கும்போது கௌதமரின் சாபத்தால் கல்லாய்க் கிடந்த அவர் மனைவி அகலிகை, இராமன் திருவடி பட்டவுடன் பழைய உருவத்தைப் பெற்றெழுந்தாள். சனகரின் கட்டளையின்படி அவரிடம் இருந்த சிவபெருமான் வில்லை வளைத்து அவரால் வளர்க்கப்பட்டுவந்த சீதையை இராமன் மிதிலையில் திருமணம் புரிந்து கொண்டான். இலக்குவன் ஊர்மிளையையும், பரதன் மாண்டவியையும், சத்துருக்கனன் சுநதகீர்த்தியையும் மணம் புரிந்து கொண்டனர்.

அனைவரும் அயோத்திக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த போது, வழியில் பரசுராமர் இராமனைப் பார்த்து ‘மிதிலையில் சிவன் வில்லை முறித்தது பெரிதன்று. அதைக்காட்டிலும் ஆற்றல் வாய்ந்த என்னிடம் உள்ள விட்டுணுவின் வில்லை நாணேற்று

வாயா? என்று செருக்குடன் கேட்டான். இராமன் எளிதாக அப்படியே செய்துகாட்டப் பரசுராமன் இராமனுடைய அம்பிற்குத் தம் தவ வலிமையையே இலக்காக வைத்து அதை இழந்த நிலையில் இராம னுக்குப் புகழ்மாலை சூட்டி மகேந்திரமலைக்குச் சென்று விட்டான். தசரதன், இராமன் முதலான அனைவரும் அயோத்தியை அடைந்தனர்.

தசரதன் உரிய காலத்தில் இராமனுக்கு முடி சூட்டுவிழாச் செய்ய முற்பட்டான். அப்போது கைகேயி தனக்கு முன்பு வாக்களித்திருந்த இரண்டு வரங்களைத் தசரதனிடம் கேட்டாள். அதன்படி இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்கவும் பரதன் நாடாளவும் ஏற்பாடாயிற்று. இராமன், இலக்குவன், சீதை மூவரும் தண்டகாரணியம் சென்ற னர். இராமன் கங்கையைக் கடக்கும்போது குகன் என்ற வேடனின் நட்பைப் பெற்றான். இராமன், விராதன் என்னும் கோர அரக்கனை அழித்து, சரபங் கர், அகத்தியர் முதலான முனிவர்களின் வாழ்த்தைப் பெற்று, பின்னர்ப் பஞ்சவடியில் குடில் அமைத்து வாழ்ந்து வந்தான். இராவணனின் சகோதரியான சூர்ப்பணகை, இராமன்மீது தனக்குள்ள காதலை அவன் முன்பு வெளிப்படுத்தினாள். இராமன் ஆணைப்படி அவளுடைய காதுகளையும், மூக்கையும் இலக்குவன் அரிந்தான் இதை அறிந்த கரன், தூட ணன், திரிசிரசு முதலான அரக்கர்கள் இராமனுடன் போரிட்டு மாண்டனர். சூர்ப்பணகை இராவணனிடம் சென்று சீதையைக் கவர்ந்துவந்து தன் மனைவி யாக்கிக் கொள்ளும்படி தூண்டினாள். இராவணனும் ஆண்டி வேடம் கொண்டு, இராமனைச் சீதையின் வேண்டுகோளால் மாய மானைத் துரத்திக் கொண்டு செல்லும்படி செய்து, சீதையை இலங்கைக்கு வான் வழித் தூக்கிச் சென்றான். இராவணனோடு போரிட்டு உயிர் பிரியும் நிலையில் இருந்த சடாயுவிடமிருந்து இராவணன் சீதையைத் தூக்கிச் சென்ற செய்தியை அறிந்த இராமன் சடாயுவின் இறுதிச் சடங்கைத் தானே நடத்தினான். பின்னர், சபரி என்ற தாழ்ந்த குல அடியாளின் விருந்தோம்பலை ஏற்றுக்கொண்டு மேலே சென்றான்.

இரிசியமுக மலையில் அனுமனுடன் இருந்த சுக்கிரீவன் இராமனுடைய நட்பைப் பெற்று, அவனைக் கொண்டு தனக்குத் துரோகம் செய்த வாலியைக் கொன்றான். இராமன் வாலியின் அரசைச் சுக்கிரீவன் பெறச் செய்தான். சுக்கிரீவனைச் சேர்ந்த அநுமனை உள்ளிட்ட வானரத் தலைவர் கள் சீதை இருக்குமிடத்தைத் தேடிச் சென்றனர். அநுமன் பல இன்னல்களைக் கடந்து இலங் கையை அடைந்தான். அசோகவனத்தில் சீதையைக் கண்டு, அரக்கர்களை அச்சுறுத்தி, இராவணனைச் சந்தித்து, இலங்கையைக் கொளுத்தி, இராமன் இருக்குமிடத்திற்கு வந்து 'கண்டேன் கற்பரசியாகிய சீதையை' என்று சொன்னான். இராவணனின் தம்பி யாகிய வீடணனை இராமன் நண்பனாக ஏற்றுக் கொண்டு சரணடைந்தோரைக் காக்கும் அறத்தை நிலைநாட்டினான். வானரர்களின் உதவியால் இலங் கைக்குப் பாலம் அமைத்து, இலங்கையை அடைந்து பெரும்போரிட்டு இராவணனைக் கொன்றான். சீதை யின் கற்பை உலகறிய அவளைத் தீயில் புகச் செய்து, பின்னர் எல்லோருடனும் அயோத்திக்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொண்டான். சிலைகளில் இராமர் நின்ற கோலத்தில் இருப்பர்; அவருக்கு வலப்பக்கத் தில் சீதையும் இடப்பக்கத்தில் இலக்குமணரும் இருப் பர். அனுமன் இராமனை வணங்கிய வண்ணம் நின்று கொண்டிருப்பான்.

திருமால் திருக்கோயில்களில் தென்கிழக்குப் பக் கம் இராமருக்கான தனியான வழிபாட்டுத்தலத்தைக் காணலாம். மாமல்லபுரத்திலுள்ள திருமால் கோயி லில் இராமரின் சிற்பமும் அனுமனின் சிற்பமும் உள் ளன. சென்னை அருங்காட்சியகத்தில் இராமர், இலக்குமணர், சீதை, அனுமரின் சிலைகள் உள்ளன.

8. கிருட்டிணாவதாரம்: கிருட்டிணன் யாதவ குலத்தில் வசுதேவருக்கும் தேவகிக்கும் குழந்தை யாகப் பிறந்தான். வசுதேவருக்கும், தேவகிக்கும் பிறக்கும் குழந்தையால் கம்சன் தனக்குக் கேடுவரும் என்று அறிந்திருந்தபடியால், கிருட்டிணனைக் கொல் லும்படி பூதனை என்ற அரக்கியை அனுப்பினான். அவள் கிருட்டிணனுக்கு முலைப்பால் கொடுத்துக் கொல்ல எண்ணியபோது கிருட்டிணன் அவள் பாலு டன் உயிரையும் சேர்த்துக் குடித்துவிட்டான். ஒரு வண்டியின் உருவம் தாங்கி அவனைக் கொல்ல வந்த சகடாசுரனையும் எட்டி உதைத்துக் கொன்று விட்டான் கிருட்டிணன். இதே போலக் கம்சனால் அனுப்பப்பட்ட வத்சாசுரன், பகாசுரன், அகாசுரன், அரிட்டாசுரன், கேசி, வியோமாசுரன் ஆகியோரை யும் கிருட்டிணன் கொன்றுவிட்டான். ஒருமுறை கிருட்டிணன் மண்ணைத்தின்று கொண்டிருக்கும் போது யசோதை அவன் வாயைத் திறக்கச் சொல்லிப் பார்க்க, அவன் வாயில் அனைத்துலகங்களையும் கண்டு வியந்தாள். யமுனை நதியில் வாழ்ந்து வந்த காளியன் என்ற பாம்பினால் யாதவர்களுக்குத் தீங்கு நேர்ந்தது. இதைக் கேள்வியுற்ற கிருட்டிணன் யமுனையில் குதித்துக் காளியன் தலையில் நடனமாடி அதை அடக்கினான். கோகுலத்திலுள்ள இடையர் கள் ஆண்டுதோறும் இந்திரனுக்கு விழா எடுத்து வந்தனர். கிருட்டிணன் இந்திரனுக்கு மாற்றாக இடையர்குலத் தெய்வமான கோவர்த்தன மலைக்கே விழா எடுக்குமாறு பணித்தான். அவர்களும் அப்ப டியே செய்தனர். இதனால் கோபமுற்ற இந்திரன்

கோகுலத்திற்கு நாசம் விளைவிக்கும் வகையில் அடாத மழை பெய்வித்தான். கண்ணன் கோவர்த் தனமலையையே தூக்கிக் குடையாகப் பிடித்து இடையர்களைக் காப்பாற்றினான். கிருட்டிணன் கோகுலத்திலுள்ள கோபியருடன் இராசக்கிரீடை புரிந்ததைச் சீவன் இறைவனோடு ஒன்று சேர்வதில் காட்டும் பக்தி ஆர்வத்தைக் குறிப்பதாகக் கூறுவர். கம்சன் ஏற்பாடு செய்த மல்யுத்தப் போட்டியில் கிருட்டிணன் பல மல்லர்களைக் கொன்று, கம்சன் மீது தாவி, அவனையும் கொன்றான். விதர்ப்ப வேந் தனான வீடுமகனின் புத்திரியான உருக்குமணியை உருக்மி என்ற அவள் தமையன், சிசுபாலனுக்குத் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதைக் கேள்வியுற்ற கிருட்டிணன் குண்டினபுரிக்குச் சென்று உருக்குமணி யைக் கவர்ந்துவந்து மனைவியாக்கிக் கொண்டான். சத்ராசித்து என்பவன் தன் மகள் சத்தியபாமாவைக் கிருட்டிணனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். சத்யபாமாவின் விருப்பத்திற்கிணங்கக் கிருட்டிணன் இந்திரலோகத்திலிருந்து பாரிசாத மரத்தைப் பிடுங்கி வந்து துவாரகையில் சத்தியபாமாவின் இல்லத்திற் கெதிரே நட்டான். மகாபாரதப் போரின்போது கிருட் டிணன் பாண்டவருக்கு உறுதுணையாக இருந்தான். பாண்டவர்கள் சார்பாகத் துரியோதனனிடம் தூது சென்றான். துரியோதனன் தம் அவையில் திரௌபதி யைத் துச்சாதனனைக்கொண்டு துகிலுரித்து அவ மானப்படுத்தியபோது கிருட்டிணன் அவளுக்கு ஆடை யைத் தந்து மானங் காத்தான். பாரதப் போரில் அருச்சுனனுக்குச் சாரதியாக இருந்து உதவினான். போர்க்களத்தில் அருச்சுனனுக்குக் கீதையை அறி வுறுத்தினான்.

9. பலராமாவதாரம்: வசுதேவரின் மற்றொரு மனைவியான உரோகினிக்குப் பிறந்தவர் பலராமர். இவர் கிருட்டிணனுடன் சாந்தீபினி முனிவரிடம் கல்வி பயின்றார். பாண்டவர்களும் கௌரவர்களும் சமாதா னமாக வாழவேண்டும் என்ற முயற்சியில் தோல்வி யுற்று, பாரதப்போரில் கலந்துகொள்ள மனமில்லாத வராய்த் தீர்த்த யாத்திரை செய்து நைமிசாரணியம் சென்றார். அதன் பக்கத்தில் முனிவர்களுக்குத் தொல்லை தந்துகொண்டிருந்த வத்கலன் என்ற அசு ரனை அழித்தார். பாரதப் போர் முடிந்து முப்பத் தாறாண்டுகள் கழித்துப் பலராமர் துவாரகையில் பிர பாச தீர்த்தக்கரையில் யோகத்திலமர்ந்து உயிர் துறந் தார்.

10. கல்கி அவதாரம்: கலியுகத்தில் தருமம் கெடும். தீயவரின் பலம் ஓங்கும். கடவுள் பக்தி குன் றும். சாதிகளுக்கிடையே கலப்பு ஏற்படும். புலித் தோல் போர்த்த பசுக்கள்போல் சிலர் நடமாடுவர். கலியுக முடிவில் மகாவிட்டுணு, விட்டுணுயசசு என்பவரின் புதல்வராகக் கல்கி என்ற பெயரில் அவ தரிப்பார். வருணாசிரம தருமம் அவரால் நிலை நிறுத்தப்படும். தீயவர் ஒழிக்கப்படுவர். நல்லொழுக் கம் நிலவத் தொடங்கும். தம் வேலை முடிந்தவுடன் மகாவிட்டுணு, கல்கி அவதாரத்தை முடித்துக் கொண்டு தேவலோகம் சென்றுவிடுவார். கிருதயுகம் தொடங்கும். பெ.தி.

**அவதூறு**: உலகில் படிமுறை வளர்ச்சியினால் (Evolution) உயிர்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. உயிர்களின் வளர்ச்சியில் மனிதப் பிறவி உயர்ந்த தாகக் கருதப்படுகிறது. மனிதனின் உழைப்பால் சமுதா யம் வளர்ச்சியடைந்து வருகிறது. சமுதாய வளர்ச்சி யினால் நாகரிகம் பிறக்கிறது. நாகரிக வளர்ச்சியி னால் மனித வாழ்க்கை உன்னத நிலையடைகிறது. உன்னத வாழ்க்கையில் மனிதனுக்குப் பேரும் புகழும் பெறுவதற்கு வாய்ப்புகள் உண்டாகின்றன. மனிதன் தன் உழைப்பால் உடைமைகளைப் பெருக்குவதைப் போன்று குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்கம், கடமை, அறம், மறம் ஆகியவற்றினால் பேரும் புகழும் பெறு கிறான். ஒருவன் புகழுக்குச் சமுதாயத்தில் செல் வாக்கு, மதிப்பு, அன்பு, ஆதரவு முதலியன உண்டு. புகழ், மத, இன, சாதி, மொழி, நாடு கடந்து பரவக் கூடியது; காலம் கடந்து நிலைத்து நிற்கக் கூடியது. மனிதப் பிறவியின் பயனும் வாழ்க்கையின் நோக்க மும் புகழைப் பெறுவதே. அந்தப் புகழினை இழந்த விடத்து உயிர் வாழ்தல் கூடாது என்பது சான்றோர் கொள்கை. கொலை, கொள்ளை ஆகிய குற்றங்களி னால் ஒருவரின் உயிர் உடைமைகளை அழித்தல் போன்று, பொய்யுரை, பழிச்சொல் ஆகியவற்றி னால் ஒருவர் புகழை அழித்துவிட முடியும். இது கொலையை விடக் கொடியது. ஒருவர் புகழுக்கு இழுக்கு அல்லது தீங்கு உண்டாக்கும் செயல் அல்லது செய்தி 'அவதூறு' எனப்படும் (Defamation). அவதூறு ஒரு குற்றம் எனச் சட்டம் கருதுகிறது. 'அவதூறு' புரிவது குற்றம் என்று மனுநீதிச் சட்டத்தில் கூறப் பட்டுள்ளது. அரிச்சந்திரன் தன் மீது அவதூறு வரா மல் தடுக்க நாடு, மனைவி, மகன் மூவரையும் இழந்து தன் புகழைக் காத்தான். சிபி தன் புகழ் காக்கத் தன் உயிரையே ஒரு புறாவிற்காகத் தியாகம் செய் தான் என்று புராணம் கூறுகிறது.

இராமாயணத்தில், கூனியின் பொய்யுரைகளி னால் கைகேயி மதிமயங்கி இராமனை வெறுத்துக் காட்டுக்கனுப்பினாள். கூனியின் பொய்யுரைகள் இரா மனை நாடு இழக்கச் செய்து விட்டன. மகா பாரதத் தில், சகுனியின் பொய்யுரைகளினால் துரியோதனன் மேலும் தீயவனாகிப் பாண்டவர்களை அடியோடு வெறுத்து ஒதுக்கியதால் பாரதப் போர் நிகழ்ந்தது.

பொற்கொல்லன் பொய்யுரையினால் கோவலன் 'கள்வன்' எனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலை யுண்டான். அநீதி வழங்கிய மன்னனையும் மதுரை யையும் அழித்து, கணவன் மீது சுமத்தப்பட்ட பழியை நீக்கினாள் கண்ணகி என்று சிலப்பதிகாரம் கூறுகிறது.

கனக விசயர் என்னும் வடநாட்டு அரசர்கள் தமிழையும் தமிழர்களின் வீரத்தையும் பழித்துக் கூறி யதற்காகச் சேரன் செங்குட்டுவன் அவர்கள் மீது படையெடுத்து வென்று, இமயத்திலிருந்து அவர்கள் தலை மீது கல்லை ஏற்றிக்கொண்டு வந்து கற்புக் கரசியாம் கண்ணகிக்குச் சிலை எழுப்பியதாக வர லாறு கூறுகிறது.

'அவதூறு' குற்றமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால் உரிமை வழக்கு, தீங்கியல் சட்டம் (Law of Torts) என்பன இங்கி லாந்து நாட்டின் 'அவதூறு'ச் சட்டத்தையும், அந் நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகளையும் அடிப்படை யாகக் கொண்டவை. இங்கிலாந்தில் கி.பி. 1792 முதல் 1952 வரை ஏறத்தாழ 13 சட்டங்கள் அவதூறுத் தொடர்பாக இயற்றப்பட்டுள்ளன. அவதூறு புரிபவர் கள் மீது குற்ற வழக்குத் தொடுத்துத் தண்டனையும் உரிமை வழக்குத் தொடுத்து மான நட்ட ஈடும் பெறச் சட்டம் வழி வகுக்கிறது.

ஒருவரது புகழ் அல்லது நற்பெயர் கெடுவதற்கு எந்தப் பொய்யான அறிக்கை, தகவல் அல்லது செயல் காரணமோ அதுவே அவதூறு ஆகும். ஒருவர் மற்றொருவர் மீது வீண்பழி சுமத்துதல் அவதூறு ஆகும். இருப்பினும் 'அவதூறு' என்பதனை அறிஞர் பலர் பலவாறு வரையறுத்துள்ளனர். அவற்றுட் சில:

1. 'எந்தப் பொய்யான செய்தியினால் மற்ற வரின் 'புகழ்' பாதிக்கப்படுமோ அதுவே அவதூறு.

2. எந்தப்பொய்யான அறிக்கையினால் மற்றவர் புகழ் கெட்டு விடுமோ அதுவே அவதூறு.

3. நியாயமின்றியோ மன்னிப்பதற்குக் காரண மின்றியோ பரப்பப்பட்ட ஒரு செய்தி, ஒருவர் புக ழுக்கு இழுக்காகவோ கேலியாகவோ பகைமை யாகவோ வெறுப்பாகவோ அமைந்து மாசு கற்பிக்கு மாயின், அதுவே அவதூறு.

4. எந்தப் பழிப்புரை அல்லது குற்றச்சாட்டு, மற்றவரை ஏளனப் படுத்தவோ காழ்ப்புண்டாக்க வோ வெறுத்து ஒதுக்கவோ பகைமை காட்டவோ அவனைக் கண்டும் காணாதது போல ஒதுங்கிச் செல் லவோ அவனது அலுவலகத்திற்கோ வாழ்க்கைத் தொழிலுக்கோ வணிகத்திற்கோ தீங்கு அல்லது இழப்பினை உண்டாக்க அல்லது செய்ய முடியுமோ அது அவதூறு.

5. எந்தச் சொல்லைக் கேட்டால் சமுதாயத் திலுள்ள நல்ல சிந்தனையாளர் வாதியைக் (Plaintiff) குறைத்து மதிப்பிடுவரோ அதுவே அவதூறு. இது அட்கின் பிரபுவின் (Lord Atkin) கருத்து.

இந்தியத் தண்டனைச் சட்டத்தில் அவதூறு என் னும் குற்றத்திற்கு விளக்கமான, அளவான வரை யறை வழங்கப்பட்டுள்ளது:

எவரேனும் எந்த ஒரு பழிச் சொல் அல்லது குற்றச்சாட்டுகளைச் சொற்களால் கூறினாலோ, படித்து அறிதற்பொருட்டு எழுதி வைத்தாலோ, குறியீடுகளாக அல்லது பார்த்துப் புரிந்து கொள்ளும் படி செய்தாலோ, இதனை வெளியிடுதலினால் மற்ற வரின் புகழுக்கு இழுக்கு அல்லது தீங்கு உண்டாகும் என்று தெரிந்தோ, புகழ் கெடுவதற்குக் காரணம் உண்டு என்று கருதியோ, உட்கருத்துடன் செயல் பட்டாலோ அவர் அவதூறுக் குற்றம் புரிந்தவராகக் கருதப்படுகிறார். இதுவே சட்டப்படி பின்பற்ற வேண்டிய வரையறையாகும்.

எந்த ஒரு குற்றச்சாட்டும் மறைமுகமாகவோ (Innuendo) நேரடியாகவோ ஒருவரின் புகழைக் கெடுப்பதாகவோ, மற்றவர்களின் கணிப்பில் அவரது நல்லொழுக்கத்தைக் குறைத்துவிட்டதாகவோ, அறி வாற்றல் திறன் குறைந்துவிட்டதாகவோ, அவரது நடத்தையோ சாதியோ தொழிலோ குறைந்த தாகவோ, அவர் மீதுள்ள நம்பிக்கை குறைந்துவிட்ட தாகவோ, அவரது உடல் அருவருக்கத்தக்க நிலையில் உள்ளது என்று கருதுமாறோ, அவரது உடல் இழி வான நிலையில் உள்ளது என்று கருதக் கூடியதாக அமைந்திருந்தாலோ அவதூறு புரிந்ததாகக் கருதப் படும். எந்தப் பழிச் சொல்லைக் கேட்டால் ஒரு நாட்டின் அல்லது சமயத்தின் மீது பகைமையோ வெறுப்போ உண்டாக்குமோ அதுவும் அவதூறு ஆகும்.

மேலே கூறப்பட்ட விளக்கங்களுக்குச் சில எடுத்துக்காட்டுகள் இந்தியத் தண்டனைச் சட்டத் திலேயே வழங்கப்பட்டுள்ளன. 1. 'ஊ' என்பவன் அ-வின் கடிகாரத்தைத் திருடினான் என்று நம்பும்படி செய்யும் உட்கருத்துடன், 'ஊ, நாணயமானவன், அவன் அ-வின் கடிகாரத்தைத் திருடியே இருக்க மாட்டான்' என்று ஆ-கூறினால், இந்தப் பிரிவின் கீழ் அளிக்கப்பட்டுள்ள விலக்குகளுக்கு உட்பட்டா லன்றி, அவதூறு குற்றம் புரிந்ததாகக் கருதப்படும். 2. அ-வின் கடிகாரத்தைத் திருடியது யார் என்று இ-யை வினாவ அதற்கு இ, கடிகாரத்தைத் திருடியது ஊ-தான் என்று நம்பும்படி செய்யும் உட் கருத்துடன் ஊ-வைச் சுட்டிக் காட்டுகிறான். இ-யின் சுட்டிக் காட்டும் செயல், விலக்குக்குட்பட்டாலன்றி, அவதூறு புரிந்ததாகக் கருதப்படும். 3. அ-வின் கடி

காரத்தை ஊ-தான் திருடினான் என்று நம்பும்படி செய்யும் உட்கருத்துடன் அ-வின் கடிகாரத்துடன் ஊ ஓடுவதாகப் படம் வரைந்து காட்டுதல், விலக்குக் குட் பட்டாலன்றி அவதூறுக் குற்றமாகக் கருதப்படும்.

அவதூறுக் குற்றத்திலிருந்து விலக்கு அல்லது சலுகை அளிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகள் பின்வருமாறு: 1. குற்றச் சாட்டு உண்மையாக இருப்பின் அவதூறு ஆகாது. ஒருவர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டு உண்மையாக இருந்தாலும் அல்லது பொதுமக்களின் நன்மையைக் கருதி வெளியிட்டிருந்தாலும் அவதூறு ஆகாது. பொதுமக்களின் நன்மை என்பது அந்த அந்த நிகழ்ச்சியைப் பொறுத்ததே. 2. அரசு ஊழியர் மீது சுமத்தப்படும் குற்றச் சாட்டு அவதூறு ஆகாது. அதாவது, அரசாங்க ஊழியர்களின் நடத்தை, ஒழுக்கம், பணியாற்றும் முறை ஆகியவைகளைப் பற்றிய கருத்துகளை நல்லெண்ணத்துடன் பேசுவதோ எழுதுவதோ அவதூறு ஆகாது. 3. சமூக ஊழியர் மீது குற்றஞ்சாட்டுதல் அவதூறு ஆகாது. 4. நீதிமன்ற நடவடிக்கைகளை வெளியிடுவது அவதூறு ஆகாது. 5. ஒரு நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பெற்ற வழக்கைப் பற்றி நல்லெண்ணத்துடன் செய்யப்படும் திறனாய்வு அவதூறு ஆகாது. வழக்குத்தொடுப்போர் எதிர்வழக்காடுவோர் சாட்சி ஆகியோருக்கு எதிராகக் கூறப்படும் குற்றச்சாட்டு அவதூறு ஆகாது. 6. பொது நிகழ்ச்சி அல்லது புத்தகத்தைப் பற்றிக் கூறும் கருத்துரை அவதூறு ஆகாது. 7. தன் கீழ்ப் பணியாற்றுவோரைக் கண்டித்தல் அவதூறு ஆகாது. 8. சட்டப்படி ஒருவர் மீது வழக்குத் தொடுப்பது அவதூறு ஆகாது. 9. தன்னலங்கருதிச் சுமத்தப்படும் குற்றச் சாட்டு அவதூறு ஆகாது. ஒருவர் தன்னலங் கருதியோ பிறர் நலங்கருதியோ பொதுநலங் கருதியோ நல்லெண்ணத்துடன் ஒருவரது நடத்தை பற்றிக் குற்றஞ் சாட்டுதல் அவதூறு ஆகாது. 10. பொது நன்மையைக் கருதி விடப்படும் எச்சரிக்கை அவதூறு ஆகாது.

அவதூறு இருவகைப்படும். ஒன்று நிரந்தர அவதூறு அல்லது பழி (Libel); மற்றொன்று நிலையில்லா அவதூறு அல்லது நிந்தனை (Slander). இவ்விரண்டு வகை அவதூறுக்கும் தண்டனை ஒன்றே. இரண்டாண்டு சிறைத் தண்டனை அல்லது தண்டத் தொகை அல்லது இரண்டும் இக்குற்றத்திற்குரிய தண்டனைகளாகும். ச.நா.

**அவந்தி புரம்** காசுமீர மன்னன் அவந்திவருமனால் உண்டாக்கப் பெற்றதோர் ஊர். அவந்திவர்மனின் ஆட்சிக் காலம் கி.பி. 855 முதல் கி.பி. 883 வரையாகும். வந்திபூர் என்று இக்காலத்தில் வழங்கும் ஊரையே அவந்திபுரம் என்று கூறுவர். இவ்வூர் ஓர் அழிவுச் சின்னமாக இருக்கிறது. பண்டைய காசுமீரத்தின் கட்டடக் கலைக்கும் அழகான நினைவுச் சின்னங்களுக்கும் இவ்வூர் சிறந்த எடுத்துக்காட்டு என்பது இராசதரங்கிணி என்னும் நூலின் கூற்றாகும். இந்நகரத்தில் அவந்திவருமன் அவந்தீசுவரர் என்னும் சிவன் கோயில் கட்டினார் என்றும் அந்த நூல் கூறுகிறது. காசுமீரத்தின் தொடக்ககால வரலாற்றையும் பண்பாட்டையும் குறிக்கும்போது அவந்திபுரத்தையும் குறிப்பர்.

**அவரோசு** (கி.பி. 1126-1198) அராபியத் தத்துவ அறிஞராவார். இவர் இசுபெயின் (Spain) நாட்டிலுள்ள கார்டோபா (Cordoba) என்னும் ஊரில் பிறந்தார். ஐரோப்பியத் தத்துவ அறிஞர்களின் வரிசையில் சிறந்தவராக இவர் கருதப்படுகிறார். அவரோசு (Averroes) அரிசுடாட்டிலின் நூல்களுக்கு உரை எழுதியவர். அரிசுடாட்டிலின் அறிவுரைகளை நன்கு கற்றுத் தெளிந்த பிறகு தாமே சில நூல்களை வெளியிட்டுள்ளார்.

கிரேக்க மக்களின் விருப்பங்களுக்கு ஏற்றவாறு பிளேட்டோ, அரிசுடாட்டில் போன்றவர்கள், மக்கள் அரசாட்சிக்கு உட்பட்டுச் சமூக வளர்ச்சியிலும் எவ்வாறு பங்கு பெறுகிறார்கள் என்பதை இவர் தம் நூலிலும் திறனாய்வுக் கட்டுரைகளிலும் சுட்டியுள்ளார். இசுலாமிய மோர்பெக்கைச் சார்ந்த வில்லியம் (William of Moorbeke) என்பவரைக் கிரேக்க மூல நூலிலிருந்து புதுமொழி பெயர்ப்புச் செய்வதற்கு இணங்கச்செய்தார். அரிசுடாட்டிலின் அடிப்படைத் தத்துவத்தையும் கருத்தையும் பின்பற்றியவர். இவர் தத்துவத்தின் ஒரு பிரிவான புலன்கடந்த இயலினைக் (Metaphysics) கூறுகையில், ‘மனித அறிவுக்கு அப்பாற்பட்டதுதான் புலன் கடந்த அறிவியல்; இதில் மனிதன் நிலை வரையறுக்கப்பட்டது ; கடவுள்தான் இவ்வுலகினைப் படைத்தவர்; அதை முதன் முதலில் பருப்பொருளிலிருந்து (Matter) உருவமாகிய உலகத்தை (Form) படைத்தார்’ என்று கூறுகிறார். மனிதனின் தனிச்சிறப்பு, ஐம் பொறிகளின் உதவியினால் வெளி உலகப் பொருளைப் பற்றி அறிவதாகும். உலகம் நிலையானது. இவ்வுலகத்தில் தோன்றும் உயிர் உள்ளவை, உயிர் அற்றவை, அனைத்தும் அழியும் தன்மையுடையன.

உலகம் என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக ஒருவர் இருக்க வேண்டும் என்பது பொது விதி. அதில், அவ்வுலகினை இயக்கும் காரண கருத்தாவும் உள்ளார். கடவுள் சூனியத்திலிருந்து உலகமாகிய உருவத்தை உண்டாக்கினார். இது கடவுளின் ஆக்கச் செயல்களுள் ஒன்று. இதில் மனிதன் தனது பகுத்தறிவின் வாயிலாக ஒன்றிலிருந்து ஒன்றைப் புரிந்து கொண்டு செயற்படுகிறான் என்பது தனிச் சிறப்பாக நிகழ்ந்து வருகிறது.

உலகில் உயிருள்ள பொருளின் இறப்பின்மை பற்றிய இவரது கருத்து சிக்கலுக்குரியது. இவரது அறிவின் செயல்திறன், புரிந்து கொள்ளும் இயல்பு முறையை விளக்குகிறது.

அவரோசு தாமே தத்துவத்திற்கும் இசுலாமிய சமயத்திற்குமிடையில் ஏற்பட்ட உண்மையான பூசல்களை மறுத்தார். ஆனால், இவை இரண்டும் உண்மை தான். இவை இரண்டிலும் ஒரே ஒரு உண்மைதான் உண்டு. தத்துவம் தனது உண்மையினை அறிவியல் முறையின் வாயிலாக அளிக்கிறது.

ஆனால், இசுலாமிய சமயப்படி அம்மதத்தின் மறை நூலான குரான் (Koran), அறிவியல் முறைப்படி விளக்கம் அளிப்பது இல்லை. அது மிகுந்த கற்பனைத் திறத்தால் உண்மையினை வெளிப்படுத்துகிறது. சில வேளைகளில் குறியீட்டு மொழியினால் இசுலாம் உண்மையினை விளக்குகிறது. அற ஒழுக்கத்திற்கும் சமயக் கல்விக்கும் குரான் ஒரு பொருத்தமான சமய மறை நூலாக விளங்குகிறது.

அவரோசு கி.பி. 1230-ஆம் ஆண்டிற்குப் பிறகு இலத்தின், ஈபுரு ஆகிய மொழிகளில் செய்த மொழி பெயர்ப்புப் பணிகள், கிறித்துவ ஐரோப்பா முழுவதும் தெரிய வந்தன. இவரது அறிவுக் கோட்பாடும் உலகம் நிலையானது என்ற கோட்பாடும் கி.பி. 1225-ஆம் ஆண்டிற்குப் பிறகு கருத்து மாறுபாடுகளுக்கு உட்பட்டன.

அச்குவினசு, அவரோசின் கருத்துகளைத் திறனாய்வு செய்தார். அவரோசிடமிருந்து அக்குவினசு நிறையச் செய்திகளை அறிந்து கொண்டார். அவரோசு கடவுள் நம்பிக்கையற்றவர் என்று மக்களால் கூறப்பட்ட கருத்தை அக்குவினசு (Aquineces) மறுத்தார். புதிய தத்துவ அறிஞர்கள், அவரோசு தத்துவ விளக்கத்திற்கு ஒரு தூண் போன்றவர் எனவும், பகுப்பாய்வு மதி நுட்பம் கொண்டவர் எனவும் கூறினார்கள். இவர் கி.பி. 1198-ஆம் ஆண்டு காலமானார். மு.மு.

**அவலோகிதேசுவரர்** மகாயான புத்த சமயத்தில் கொண்டாடப் பெறும் போதிசத்துவர்களுள் ஒருவர். பத்மபாணி அதாவது தாமரையைச் சுமப்பவர் என்று இவர் அழைக்கப்பெறுகிறார். புத்தசமயத் தெய்வத் தொகுதியில் மிகவும் விரும்பப்பெறும் போதிசத்துவர்களுள் ஒருவராகக் கருதப்பெறும் அவலோகிதேசுவரர், 108 வடிவங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளார். அவர், வண்ண ஓவியங்களாகக் காட்மண்டுவில் உள்ள மச்சந்தர் வகாலில் (Macchandar Vahal) காணும் சாசனக் குறிப்புகளில் சுட்டிக் காட்டப் பெற்றுள்ளார். அவலோகிதேசுவரர் பற்றிய தத்துவ விளக்கத்தைக் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் கட்டப்பெற்ற மகாசங்கிகாவைச் சார்ந்தவர்கள் தம் நூலான மகாவத்து அவதான (Mahavattu Avadana) த்தின் கருப் பொருளாகக் கொண்டுள்ளனர். அந்நூலில், அவலோகிதேசுவரர் போதிசத்துவர் என்னும் உருவில் வரும் பகவானாகவும், மக்களுக்குத் தொடர்ந்து நல் வாழ்விற்கும் இன்பத்திற்கும் வழிகாட்டும் கடமைக் குட்பட்டவராகவும் குறிப்பிடப்பெற்றுள்ளார். அவலோகிதேசுவரப் போதிசத்துவரின் தத்துவம், அவலோகிதேசுவரர் என்னும் திடப் பொருளாக வடிவமைக்கப்பெற்றுக் கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முன்னரே தெரிந்திருக்கவேண்டும். அவலோகிதேசுவரரின் உருவச் சிலைகள் குப்தர்களின் காலத்தில் அதாவது கி.பி. மூன்றாம் நூற்றாண்டின் இறுதிக் கட்டத்தில் வெளிவரலாயின. கி.பி. நான்காம் நூற்றாண்டின் இறுதியில் அவலோகிதேசுவர வழிபாடு பொதுமக்களால் ஏற்றுக்கொள்ளப்பெற்றுக் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இதனை இந்தியாவிற்கு வருகைபுரிந்த சீனப்பயணிகளான பாகியானும் யுவான் சுவாங்கும் தம் குறிப்புகளில் பெருமைபடக் குறிப்பிட்டுள்ளார்கள். மகாயான



அவலோகிதேசுவரர்


புத்த சமயத்தைச் சார்ந்த இத்தெய்வ வழிபாடு, இந்தியாவில் கி.பி. எட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நிலைகுலையத் தொடங்கியது. கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதிக்குள் அவலோகிதேசுவர வழிபாடு பெரும்பாலும் மறைந்து விட்டதென்றே கூறலாம்.

பம்பாய் மாநகருக்கருகில் உள்ள கானேரிக் குகைகளில் அவலோகிதேசுவரப் போதிசத்துவர் பொது மக்களுக்குத் தெரிந்தவராக இருந்திருக்கிறார். கல்யாண், சோபாரா, சௌலா போன்ற துறைமுகப் பட்டினங்களுக்கருகில் கானேரி அமைந்துள்ளதால் கடல்கடந்து வாணிகம் செய்த வாணிகர்களுக்குப் புகலிடம் கொடுக்கும் இடமாகவும், புத்த சமயத் துறவிகளுக்குத் தங்கும் இடமாகவும் இது அமைந்தது. கப்பல் கவிழ்வு, கொடுவிலங்குகள், வெள்ளம், தீ, கொள்ளை போன்ற தொல்லைகளிலிருந்து காக்கும் கடவுளாக அவலோகிதேசுவரப்போதிசத்துவர் கருதப் பெற்றார். கானேரியில் இரண்டாம் குகையில் உள்ள வழிபாட்டுப் பாசுரத்தில் போதிசத்துவரின் கருணை, எட்டுக் காட்சிப் பொருள்களாகச் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளது. 41-ஆம் எண்ணுள்ள குகையில் அவலோகிதேசுவரரின் அழகான சிற்பம் ஒன்று பதினோரு முகங்களுடன் நிற்பதைக் காணலாம். அவலோகிதேசுவரர் என்னும் ஒருருவில் நிற்கும் புத்தருக்கு மாறாக, மேலும் பத்து அதிகப்படியான வாய்களுடனும் நான்கு கைகளுடனும் இங்குக் காட்சி அளிக்கிறார்.

**அவளிவணல்லூர்** சோழ நாட்டிலுள்ள தேவாரப் பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று; தஞ்சை மாவட்டத்திலுள்ளது. தஞ்சையிலிருந்து பேருந்தில் சென்றடையலாம். தஞ்சை நாகை இருப்புப் பாதையில் சாலியமங்கலம் புகைவண்டி நிலையத்தில் இறங்கி அங்கிருந்து வடகிழக்கே 6 கல் தொலைவு சென்று இத்தலத்தை அடையலாம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய இருவரின் தேவாரப் பதிகங்கள் இத்தலத்திற்குண்டு. இறைவன் பெயர் சாட்சி நாதர்; இறைவி பெயர் சௌந்தரிய நாயகி ஆகும். இத்தலத்தில் சந்திர தீர்த்தம் உள்ளது. இங்குத் திருமாலும் காசிப முனிவரும் வழிபட்டனர் என்பது கூறப்படுகிறது.

**அவனி சூளாமணி மாறவர்மன்** பாண்டிய வேந்தர்; பாண்டியன் கடுங்கோனின் மைந்தர்; கடுங்கோனுக்குப் பின்னர் அரசுகட்டில் ஏறினார். மாறவர்மன் என்னும் பட்டத்தை முதன் முதலில் சூட்டிக் கொண்டவர். இவரது ஆட்சிக் காலம் கி.பி. 600-625 ஆகும்.

**அவாய்** தீவுகள் வட பசிபிக்குப் பெருங் கடலில் அமைந்துள்ளன. சான் பிரான்சிசுகோவிற்கு ஏறத்தாழ 3000 கிலோ மீட்டர் தென்மேற்கில் உள்ள இத்தீவுக் கூட்டத்தில் 20 தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் எட்டுத் தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கிறார்கள். அவாய் (Hawaii) தீவுக் கூட்டத்தின் பரப்பளவு 16,706 ச.கி.மீ. மக்கள்தொகை 9,65,000 (1980).




அவாய்

அவாய், அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஐம்பதாவது மாநிலமாகும். மக்கள் வாழும் எட்டுத் தீவுகள் வருமாறு:- 1) அவாய் (Hawaii), 2. மவ்வீ (Mavi), 3. ஓவைகூ (Oahu) 4. கவ்வை (Kavai) 5. மாலோகீ (Molokai), 6. இலானீ (Lanai), 7. நீகௌ (Niihau), 8. காகூலாவே (Kahoolawe).

ஆனலூலு (Honolulu) என்னும் நகரம் அவாய் தீவுகளின் தலைநகராகும். இவ்வூர் ஓவைகூ (Oahu) தீவில் அமைந்துள்ளது. இதன் மக்கள்தொகை 3,65,114 (1980). அவாய் மாநிலத்தின் சிறப்பான துறைமுகமும் இதுவே. சர்க்கரை உற்பத்தி ஆலைகள், அன்னாசிப் பழங்களைப் பதப்படுத்தும் தொழில் போன்றவை இங்கு நடைபெறும் சீரிய தொழில்கள். அமெரிக்காவிலிருந்து ஆசியாவுக்குச் செல்லும் வான வூர்தி வழியில் அமைந்துள்ள இந்நகரம், பன்னாட்டு விமான நிலையத்தைக் கொண்டுள்ளது. பசிபிக்குப் பெருங் கடலின் நடுவில் உள்ள அழகான விமான நிலையமும் இதுவே. இது ஒரு சுற்றுலாப் பயணிகளின் மையமாகும்.

கயிலுவ்வா, கூனோயே, ஈலோ (Hilo), வைப்பாகு, பெர்ல் நகரம் (Pearl City), வாகைவா, ஏயே, காகூலை, வைலூகூ (Wailuku) போன்றவை இத்தீவுகளின் சிறப்பான நகரங்களாம்.

மிதமானதும் ஒரே சீரானதுமான தட்பவெப்ப நிலையைக் கொண்டு இலங்கும் இத்தீவுகள் வாழ

வசதியானவை; கோடை, கார் ஆகிய பருவங்கள் குறித்த காலத்தில் நிகழும்.

மண்வளமே இம்மாநிலத்தின் மதிப்புமிக்க மூல தனமாகும். ஏறத்தாழ 9 விழுக்காட்டு நிலமே உண வுப் பொருள்கள் பயிரிடப் பயன்படுகிறது.

சிமெண்டு, கல், மணல், சரளைக்கல், மாக்கல் போன்றவை இங்குக் கிடைக்கும் பொருள்கள்.

அன்னாசியும் கரும்பும் இங்கு ஆண்டு முழுதும் பயிராகின்றன. அவாய் மாநிலத்தை ஒரு பூந்தோட் டம் என்றால் மிகையாகாது. மான், காட்டு ஆடுகள், காட்டுப் பன்றிகள் போன்றவை இங்குக் காணப்படுகின் றன. இங்குப் பாம்புகள் இல்லை. கால்நடைவளர்ப்பு மக்களின் தொழில்களுள் ஒன்று. இங்கு வாழும் மக் கள் பல இனத்தவர். கீழை, மேலை நாடுகளின் பண்பாட்டுச் சந்திப்பினை இங்குக் கண்டு களிக்கலாம்.

அவாய் மாநிலத்தின் பேச்சு மொழி ஆங்கிலம். அவாய் தீவுகளைக் கி.பி. 1778 சனவரியில் சேம்சு குக்கு (James Cook) என்னும் ஆங்கில மாலுமி கண்டு பிடித்தார். இத்தீவுகளை அவர் சான்ட்விச் (Sandwich) தீவுகள் என்று அழைத்தார். தொடக்கத்தில் இங்குத் தனித் தனியாக இருந்த அரசுகளை உள்ளூர்த் தலை வர்கள் ஆண்டு வந்தனர். கி.பி. 1810-ஆம் ஆண்டு



ஆனலூலு

முதலாம் காமேசமகா (Kamchameha) என்னும் அர சர் எல்லாத் தீவுகளையும் வென்று ஒரு குடைக்கீழ் அரசாண்டார். கி.பி. 1820-ஆம் ஆண்டளவில் கிறித்த வப் பாதிரிகள் நியூ இங்கிலாந்திலிருந்து வந்தார்கள். பின்னர் ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந் தும் கிறித்தவப் பாதிரிகள் வந்தனர்.

கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் பெரும்பகுதியில் இத்தீவுகள் சுதந்திரமாகவே இருந்தன. அப்போது இலிலிவோகலானி (Lilivokalani) என்னும் பெயர் கொண்ட அரசியார் ஆட்சி செய்தார். ஆனால், கி.பி. 1893-ஆம் ஆண்டில் அவ்வரசியார் பதவி நீக்கம் பெறவே, அங்கு இடைக்கால அரசொன்று நிறுவப்பட் டது. கி.பி. 1894-இல் மக்களின் விருப்பப்படி அது குடி யரசாக்கப்பட்டது. கி.பி. 1898-ஆம் ஆண்டு, ஆகசுட்டு மாதம் 12-ஆம் நாள் அவாய் அமெரிக்க ஐக்கிய நாட்டுடன் இணைந்தது.

1941-ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 7-ஆம் நாள் இரண்டாம் உலகப் போரின்போது, சப்பானியர் இத்தீவுக் கூட்டத்திலுள்ள பேர்ல் துறைமுகத்தைத் (Pearl Harbour) தாக்கினர் அதன் விளைவாகவே அமெரிக்க ஐக்கிய நாடு நேசநாடுகளின் பக்கம் சேர்ந்து போரில் ஈடுபட்டது.

அவாய் அமெரிக்க ஐக்கிய நாட்டின் 50-ஆவது மாநிலமாக 1959-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 18-ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

**அவானா** கியூபா நாட்டின் தலைநகரமும் சீரிய துறைமுகமும் பெரு நகரமுமாகும். மேற்கு இந் தியத் தீவுக் கூட்டங்களுள் ஒன்றான கியூபாத் தீவின் வடமேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள அவானா (Havana), அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களுள் ஒன்றான பிளாரிடாவுக்குத் (Florida) தெற்கே 160 கி.மீ. தொலைவில் உள்ளது. கியூபா நாட்டின் மக்கள் தொகையில் ஐந்திலொரு பங்கு மக்கள் அவானாவில் வாழ்கிறார்கள். இந்நகரை இசுபானிய மொழியில் 'லா அவானா' (La Havana) என்பர்.

அவானா மாநகரத்தின் பரப்பு 740 ச.கி.மீ. இதை இசுபானியக் குடியேற்றக்காரர்கள் கி.பி. 1519-ஆம் ஆண்டில் அமைத்தார்கள். இதன் நுழைவாயிலில் பர்ரோ காசில் (Burro Castle) என்னும் இசுபானியக் கோட்டையொன்றுள்ளது.

அவானாவின் பழைய நகரம் இன்றைய துறை முகத்திற்கு மேற்கிலுள்ளது. இங்குத்தான் இசுபானியர் குடியேறினர். இங்குள்ள அவானாக் கிறித்தவக் கோயில் புகழ்மிக்கது. இது கி.பி. 18-ஆம் நூற்றாண் டின் தொடக்கத்தில் கட்டப்பட்டது. புதிய அவானா நகரம் மக்கள் மிகுதியாக வாழும் இடமாகும். அவா னாப் பல்கலைக் கழகம் இங்குள்ளது.



கியூபா நாட்டின் வாணிகத் தொழிற்சாலை மையமாக இருப்பது அவானாவேயாகும். இங்குப் பொதுவுடைமைக் கொள்கைச் சார்புள்ள அரசு இயங்குவதால், அனைத்து வாணிகங்களும் தொழிற்சாலைகளும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன. பணியாளர்கள் அனைவரும் அரசாங்க ஊழியர்களாவர். புகையிலை பதப்படுத்தல் இங்கு நடைபெறும் சிறப்பான தொழிலாகும். பீர், இரசாயனப் பொருள்கள், மிதியடிகள், ஆடைகள் போன்றவை பிற உற்பத்திப் பொருள்களாம்.

கியூபா நாட்டின் ஏற்றுமதிப் பொருள்களுள் ஐந்திலொரு பங்கும், இறக்குமதிப் பொருள்களுள் பாதியும் அவானா துறைமுகத்தின் வழியாகவே செல்லுகின்றன. புட்டிகளில் அடைக்கப்பட்ட பழ வகைகள், மீன், சர்க்கரை, புகையிலைப் பொருள்கள் போன்றவை ஏற்றுமதியாகும் சிறப்பான பொருள்கள். உணவுப் பொருள்கள் இயந்திர வகைகள், பெட்ரோல், பேருந்து வண்டிகள் போன்றவை இறக்குமதிப் பொருள்கள். கியூபா பெரும்பாலும் பொதுவுடைமை நாடுகளுடனேயே வாணிகம் செய்கிறது.

திகோ வெலாசுகுசு (Diego Valazquez) என்ற இசுபானிய ஆளுநரே அவானாவைக் கி.பி.1515-ஆம் ஆண்டில் உருவாக்கினார். அப்போது இந்நகரம் தீவின் தென்கரையில் இருந்தது. கடல் கொள்ளையரின் தாக்குதல்களினால் இந்நகரம் பெருகி வளரவில்லை. எனவே, கி.பி. 1519-இல் இன்றுள்ள இடத்தில் அவானாவைக் கட்டினார்கள். அவானா துறைமுகம் வாணிகக் கப்பல்கள் வந்து செல்ல வசதியான அழகிய துறைமுகம். காலப்போக்கில் இது பெரும் வாணிக மையமாக உருப்பெற்றுக் கி.பி.1552-இல் கியூபா நாட்டின் தலைநகராயிற்று.

ஆங்கிலேயர் இந்நகரைக் கி.பி.1762-ஆம் ஆண்டில் கைப்பற்றி ஏறத்தாழ ஓராண்டு வைத்திருந்தனர். வாணிகம் பெருகி வளர்ந்தது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் கப்பலான மெயின் (Maine) கி.பி.1898-ஆம் ஆண்டு இத்துறைமுகத்தின் மீது குண்டு வீசியது. அதன் விளைவாக இசுபானிய அமெரிக்கப் போர் மூண்டது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியில் கியூபா அரசாங்கம், எண்ணற்ற பொருட் செலவில் அவானாவைச் சுற்றுலா மையமாக்கியது. அமெரிக்க நிறுவனங்கள் பெரும் முதலீடு செய்து அவானாவில் வாணிகத்தைப் பெருக்கின. பிடல் காசுடுரோ (Fidel Castro) என்பவர் தலைமை அமைச்சர் பொறுப்பேற்றபின், கியூபா நாடு பொதுவுடைமை நாடுகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. அவானாவின் மக்கள் தொகை 19,00,240 (1981).

**அவித்தை:** வித்தைக்கு எதிரான சொல் அவித்தை. வித்தை என்றால் அறிவு. எனவே, அவித்தை என்பது அறியாமை ஆகும். இந்திய மெய்ப்பொருள் இயலில், ஆன்மா கட்டுண்டு சீவனாகத் தன்னைக் கருதுவதற்கு அறியாமையே மூலகாரணம் எனச் சொல்லப்படுகிறது. அறியாமையை மெய்ப்பொருட் காட்சி இயலார் பலவழிகளில் விளக்குகின்றனர்.

சமண சமயத்தில், அச்சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான மூன்று இரத்தினங்களைச் சீவன் அறிந்துகொள்ளாமையே அவித்தை எனப்படுகிறது. பௌத்த சமயத்தில் அச்சமயம் கூறும் இரண்டாவது பேருண்மையான பாவச் சக்கரம் எனப்படும் பிறப்புச் சங்கிலித் தொடர்பினை அறியாமையே அவித்தை எனப்படுகிறது. நையாயிகர்களின் கருத்துப்படி அவித்தை என்பது, சீவன் அல்லாதவற்றைச் சீவனாகக் கருதுவதும் பொருள்களின் உண்மைத் தன்மையை உணராததும் ஆகும். சாங்கியர்களின் கருத்துப்படி உணர்வுப் பொருளாகிய புருடன் எனப்படும் உயிர், உணர்வற்ற பொருளாகிய பிரகிருதியில் இருந்து தன்னைப் பிரித்து அறிந்து கொள்ளாமையே அவித்தையாகும். இதனை அவிவேக ஞானம், பிரித்தறிய இயலா அறிவு என்பர்.

அத்துவித வேதாந்திகள், அவித்தையை ஒரு உள்பொருளாக ஏற்பதில்லை. எவ்வாறு பொருள்களை மறைக்கும் இருள் உள்பொருள் இல்லையோ, அவ்வாறே பிரமன் அல்லது ஆன்மாவை மறைக்கும்

அவித்தையும் உண்மைப் பொருள் அன்று.ஒளியினால் இருள் விலகுவதுபோல அறிவினால் அவித்தை நீங்கும். அத்துவிதத்தின்படி ஒரே உள்பொருளான பிரமத்திற்குப் புறம்பானதன்று அவித்தை. பிரமத்திலேயே தோன்றி பிரமத்தையே மறைக்கும் ஆற்றல் அவித்தையாகும். ஒன்றான பிரமம் இறைவனாக மாறி, அவ்விறைவன் இவ்வுலகமாகத் தோற்றமளிப்பதன் காரணம் மாயையாகும். ஒன்றான பிரமம் பல உயிர்களாகத் தோன்றுவது அவித்தையினால் ஆகும். அவித்தையும் மாயையும் ஒன்றே. அவித்தை பகுதியாக இருப்பது; மாயை–தொகுதியாக இருப்பது. அவித்தைக்கு இருவகைச் செயல்கள் உண்டு. அவை, ஆவரணம் எனப்படும் மறைத்தலும், விட்சேபம் எனப்படும் திணித்தலும் ஆகும். மங்கிய ஒளியில் உண்மையான கயிறு மறைக்கப்பட்டு அதனிடத்தில் பாம்பின் தோற்றம் திணிக்கப்படுவது அவித்தையினாலேயே. ஒன்றாக வரம்பற்ற உணர்வுப் பொருளாகிய பிரமம், தன்னிடத்தேயுள்ள வரம்பிற்குட்பட்ட உணர்வுப் பொருளான சீவனாகத் தோன்றுகிறது.

இதில் பொருள் மாறுதலின்றி நிலைமாற்றம் மட்டுமே நிகழ்ந்துள்ளது. ஆனால், ஒரே வரம்பற்ற உணர்வுப் பொருளாகிய பிரமம் மாயையினால் மறைக்கப்பட்டு வரம்புடைய உணர்வுப் பொருளாகிய இறைவன் அவ்விடத்தில் தோன்றுவதும், வரம்புடைய உணர்வுப் பொருளாகிய இறைவன் மறைக்கப்பட்டு அவ்விடத்தில் வரம்புடைய உணர்வற்ற உலகு திணிக்கப்படுவதும் மாயையினால்தான். இதில் பொருள் மாற்றம் நிகழ்கிறது. இருப்பது ஒரே பரம் பொருளாகிய பிரமம்; ஏனைய அனைத்தும்தோற்றங்களே என்னும் உண்மை அறிவு ஏற்படின் அறியாமை நீங்கி, மீண்டும் தன்னைப் பிரமம் என்று உணரலாம். தோற்றத்தின் உண்மையை அறிவதால் விட்சேபமும், பிரமத்தின் உண்மையியல்பை உணர்வதால் ஆவரணமும் நீங்கி அவித்தை அழிந்துவிடும்.

விசிட்டாத்வைதிகள், நல்வினை தீவினை ஆகிய செயல்களையே அவித்தை என்கின்றனர். பிரமத்தைப் பற்றிய உண்மை அறிவால் செயல்கள் அழிய, அவித்தையும் நீங்கும்.

சைவசமயத்தினர் மும்மலங்களுள் ஒன்றானதும் மூலமலமும் ஆகிய ஆணவத்தையே அவித்தை என்கின்றனர். அதனால் உயிர், தன்னை உடலைச் சார்ந்ததாகக் கருதிச் செயற்படுகிறது. முப்பொருள் உண்மையறிவால், ஆணவம் தன் மறைக்கும் சக்தியை இழக்கும்; உயிர் இறைவனுடன் கலக்கும்.

மேற்கூறப்பட்ட மெய்ப்பொருள் காட்சியியலாளர்களின் கருத்துப்படி, அவர்கள் கோட்பாடுகளின் உண்மை அறிவினால் அறியாமை நீங்கப்பெற்று வீடு பேறு எய்தலாம். ப.ஆர்.ந.

**அவிநயம்** மறைந்துபோன தமிழிலக்கண நூல்களுள் ஒன்றாகும். இந்நூல், மறைந்து போயினும், இதன் நூற்பாக்களுள் சிலவற்றை யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகை உரை, வீரசோழிய உரை, நேமிநாத உரை, நன்னூல் மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை, தக்கயாகப் பரணி உரை, நவநீதப் பாட்டியல் உரை, பன்னிரு பாட்டியல், திருக்குறள் நுண்பொருள் மாலை ஆகியன மேற்கோளாக எடுத்தாளுகின்றன. இம்மேற்கோள்களிலிருந்தே, இந்நூல் இருப்பது அறியப்பட்டது.

அவிநயனார் என்பது நூலாசிரியர் பெயராகும். இவர் சமணர். விநயம் என்பது ஐந்து மூடநம்பிக்கைகளுள் ஒன்றாகும். ஏவாந்தம், விபரீதம், விநயம், சம்சயம், அஞ்ஞானம் என்பன சைன அறத்தின்படி அமைந்த ஐந்து மூடநம்பிக்கைகளாம். இவற்றுள், விநயம் என்பது கண்மூடி வழிபடுதல் என்று பொருள்படும். அவிநயம் என்றால், கண்மூடி வழிபடுதல் அற்ற நிலை என்று பொருள் படும். எனவே, அவிநயன் என்பதற்குக் கண்மூடி வழிபாடு இல்லாதவன் என்பது பொருள்.

தொல்காப்பியன் எனும் ஆசிரியர் பெயரை ஒட்டி தொல்காப்பியம் எனும் பெயர் அமைந்ததைப் போல, அவிநயன் என்னும் நூலாசிரியர் பெயரைச் சார்ந்து, நூலும் அவிநயம் எனப் பெயர் பெற்றது.

இந்நூலின் காலம் கி.பி. 850–க்கும், 1015–க்கும் இடைப்பட்டது. கி.பி. 1015-1040–இல் வாழ்ந்த, யாப்பருங்கல விருத்தியுரையாசிரியர் குணசாகரர், அவிநய நூற்பாக்களை அறுபத்தேழு இடங்களில் மேற்கோளாகக் காட்டியுள்ளார். எனவே, குணசாகரர்க்கு முற்பட்டவர், அவிநயனார் என்பது தெளிவாகிறது. உலாவைப் பற்றி முதன்முதல் இலக்கணம் கூறும் நூல் இதுவாகும் (அவிநயப் புறனடை 121). தமிழில், முதலில் தோன்றிய உலா நூல் ஆதி உலா. இலக்கியங்கள் தோன்றி, இலக்கணம் படைக்கப்படுவதே தமிழின் பொதுவான இயல்பு. இம்மரபின்படி ஆதியுலாவின் தோற்றத்திற்குப் பின்பே, அவிநயம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஆதியுலாவின் காலம் கி.பி 825–850 ஆகும். எனவே, அவிநயம், கி.பி. 850–க்குப் பின்னும் குணசாகரர் காலமாகிய, கி பி. 1015–க்கு முன்னும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

அவிநயனார், எழுத்து, சொல், பொருள் என்று முப்பிரிவு அடங்கிய அவிநயத்தையும், யாப்பை விரிவாகப் பேசும் அவிநயனார் யாப்பையும், அவிநயனார் யாப்பு என்ற நூலிற்குப் புறனடையாக நாற்பது வெண்பாக்களில் எழுதப்பட்ட அவிநயப் புறனடை அல்லது நாலடி நாற்பது என்ற நூலையும், பாட்டியல் நூலாகிய அவிநயனார் கலாவியலையும்,

மறைந்து போன பன்னிரு படலம் என்ற புறத்திணை இலக்கணம் கூறும் நூலின் ஒரு பகுதியையும் எழுதினாராதல் வேண்டும்.

தொல்காப்பிய நெறியினின்று விலகி வளர்ந்த இலக்கணச் செய்திகள் நன்னூலிலும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகைகளிலும், பிற இலக்கண நூல்களிலும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. இச்செய்திகள் பலவற்றிற்கு மூலம், அவிநயம் என்றே தெரிகிறது. எனவேதான், மயிலைநாதர் 'அளவறு புலமை அவிநயனார்' என்றும் (நன்னூல் உரை. நூற்பா. 130), 'புவிபுகழ் புலமை அவிநய நூல் (நன்னூல் உரை 359) என்றும் பாராட்டியுள்ளார்.

மறைந்துபோன அவிநய நூற்பாக்களை ஓரளவு திரட்டிக் காட்டியவர் மயிலை. சீனி. வேங்கடசாமி ஆவார். மேலும் தொடர்ந்து, பல உரைநூல்களில் சிதறிக் கிடந்த நூற்பாக்களைத் தொகை வகை செய்து, உரையெழுதிப் பதிப்பித்துக் கி.பி. 1975–இல், 'அவிநயம்' எனத் தனிநூலாகத் திரு. க.ப. அறவாணன் வெளியிட்டுள்ளார். க.ப.அ.

**அவிநயனார்** தொல்காப்பியத்திற்குப் பின்னும், இடைக்கால இலக்கண நூல்களுக்கு முன்னும் எழுந்தது என்று கருதப்படும் அவிநயம் என்னும் நூலை இயற்றியவர். இவர், சமண சமயத்தைச் சார்ந்தவர்; கி.பி. 9–ஆம் நூற்றாண்டினர் என்னும் செய்திகளை அறிஞர்கள் நன்கு விளக்கியுள்ளார்கள் இந்நூலுக்கு உரை எழுதியவர் தண்டலம் என்னும் ஊரைச் சார்ந்த இராசபவித்திரப் பல்லவ தரையர் என்பர். இன்று நூலோ உரையோ முழுமையாகக் கிடைக்கவில்லை. ஆயினும், இவர் பெயர், நூற்பெயர், நூற்பாக்கள் பற்றிய குறிப்புகள் போன்ற செய்திகள் யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகையுரை, வீரசோழிய உரை, நேமிநாத உரை, நன்னூல் மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை, தக்கயாகப்பரணி உரை, நவநீதப்பாட்டியல் உரை, பன்னிரு பாட்டியல், திருக்குறள் நுண்பொருள் மாலை ஆகிய நூல்களில் காணப்பெறுகின்றன.

'அளவறு புலமை அவிநயனார்' என இப்புலவரும், 'புவிபுகழ் புலமை அவிநயநூல்' என இவர் இயற்றிய நூலும் மயிலை நாதரால் பாராட்டப் பெறுதல், இவர் தம் செல்வாக்கிற்குச் சான்றாக அமையும். யாப்பருங்கல விருத்தியுரையில் அவிநயனார் நூற்பாக்களே மிகுதியும் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றிருப்பது குறிக்கத்தக்கது.

அவிநயனார் எழுதியனவாக அவிநயம் என்ற இலக்கண நூலேயன்றி, அவிநயனார் கலாவியல் என்ற பாட்டியல் நூல், அவிநயனார் யாப்பு, அவிநயப்புறனடை அல்லது நாலடி நாற்பது, பன்னிரு படலத்துள் ஒரு படலம் ஆகிய பிறநூல்களும் குறிக்கப் பெறுகின்றன. அகத்தியர் மாணவர் பன்னிருவருள் இவரும் ஒருவர் எனக் கருதப்பெறுகிறார். இவர் இயற்றிய அவிநயம் என்னும் நூல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14–ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் எழுந்த இலக்கண உரைகளில் மிகுதியும் எடுத்தாளப் பெற்றுள்ளது என்பது நினைக்கத்தக்கது. ''தன்னை உணர்த்தின் எழுத்தாம் பிறபொருளைச் சுட்டுதற் கண்ணேயாம் சொல்''– என்ற அவிநயப் புறனடை 115-ஆம் நூற்பா எழுத்திற்கும் சொல்லிற்கும் வகுக்கும் இலக்கண அமைதி சிந்தித்துப் போற்றுதற்குரியதாகும். தமிழுக்கே உரிய சிறப்பெழுத்துக் கோட்பாடு என்ற ஒன்றினை முதலில் எடுத்து மொழிந்தவர் அவிநயனார் என்பது அறிஞர்கள் கருத்தாகும். ''றன எ ஒவ்வும் தனியும் ழகாரமும், தன்மைத் தமிழ் பொது மற்று'' (அவிநயம்; 114) என்னும் நூற்பா நோக்கத்தக்கது. தி.லீ.

**அவிநயனார் கலாவியல்** என்பது அவிநயனாரால் எழுதப்பெற்ற பாட்டியல் நூலாகும். இந் நூலையும், அவிநயம் என்னும் இலக்கண நூலையும் எழுதியவர் இவரே. அவிநயனாரால் எழுதப்பட்ட பாட்டியல் நூலே, அவிநயனார் கலாவியல் எனக் கொண்டு நவநீதப்பாட்டியல் உரையாசிரியரால் மேற்கோளாகக் காட்டப் பெற்றது.

அவிநயனார் கலாவியல் நூற்பாக்களாக, இரு நூற்பாக்கள், நவநீதப்பாட்டியல் உரையில் மேற்கோளாக இடம்பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று, வாதில் வெல்லும் நெறி பற்றியது; மற்றொன்று அவையில் புகும் நெறி பற்றியது.

வாதில் வெல்லும் நெறி, அவையில் புகும் நெறி பற்றிய இரு நூற்பாக்களும், பொதுவாகப் பாட்டியல் இடம் பெறுபவை. அவையில் பெறும் வெற்றி-தோல்வி பற்றிக் குறிப்பிடும் 'நல்லவைக் கண்ணும்' (96) எனத்தொடங்கும் கலித்துறையின் பின்னே, இந் நூற்பாக்கள் நவநீதப்பாட்டியல் உரையில் இடம் பெற்றிருப்பதும், 'பாட்டியல்' 'கலாவியல்' என்பன ஒரு பொருளன என்பதைக் காட்டும்.

இவையன்றி, அவிநயனார் பாட்டியலில், பாலன், மீளி, மறவன், திறலன், காளை, விடலை, முதுமகன் ஆகிய ஏழு பருவ ஆடவர்க்குரிய அகவை பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது. பாலன் – 7 வயது வரை; மீளி – 10 வயது வரை; மறவன் – 14 வயது வரை; திறலன் – 15 வயது வரை; காளை – 16 வயது வரை; விடலை – 30 வயது வரை; முதுமகன் – 30 வயதிற்கு மேல்.

பேதை முதல் பேரிளம் பெண் ஈறாக ஏழு பருவங்கள், பெண்டிருக்கு வகுக்கப்பட்டாற் போல,

ஆடவர்க்கும் மேற்கண்டவாறு வகுக்கப்பட்டமை அவிநயனார் பாட்டியலால் புலனாகிறது. க.ப.அ.

**அவிநாசி** தேவாரப்பாடல் பெற்ற கொங்கு நாட்டுத் தலங்கள் ஏழனுள் ஒன்று. இவ்வூர் அவிநாசித் திருப்புக் கொளியூர் என்றும் கூறப்படும். புக்கொளியூர் எனப்படும் பகுதி இக்காலத்தில் வெட்டவெளியாக உள்ளது. இப்பொழுது அவிநாசி என்னும் பெயரே வழக்கில் உள்ளது. இறைவன் பெயர் அவிநாசி ஈசுவரர்; இறைவி பெயர் கருணாம்பிகை எனப்படும். கோவை மாவட்டத்திலுள்ள இவ்வூரைக் கோவை, திருப்பூர் முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வண்டியில் சென்றடையலாம். அவிநாசி என்பதற்கு விநாசம் (பெருங்கேடு) இல்லாதது என்பது பொருள். பாதிரி தலமரமாகும்; பிரமன் முதலியோர் வழிபட்ட தலம். இது ஒரு கற்ப முடிவில் பிரமவிட்டுணுக்கள் இறைவனிடத்தில் ஒடுங்கிய தலம் என்று கூறப்படுகிறது. இத்தலத்திற்குத் தட்சிண காசி என்றொரு பெயரும் உண்டு. ஊர் அருகில் ஓர் ஏரி உள்ளது. அதன் கரையிலுள்ள கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவம் உள்ளது. இத்தலத்தினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார். அவர், முன்னர் முதலையுண்ட பாலனைப் பதிகம் பாடி உயிர்பெற்று எழுந்து வருமாறு செய்த திருப்பதி இதுவாகும். இத்தலத்திலுள்ள முருகனை அருணகிரி நாதர் தம் திருப்புகழில் ஆறுபாடல்கள் இயற்றிப் பரவியுள்ளார். மாணிக்கவாசகர் அவிநாசிப் பெருமானை 'அரியபொருளே அவிநாசியப்பா' என்று விளித்துப் போற்றியுள்ளார். இவ்வூர்க்குத் தலபுராணம் உள்ளது. திருக்கோயில் சுவர்களிலும் தூண்களிலும் பழமையான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. தமிழகத்திலுள்ள பெரிய தேர்களுள் இவ்வூர்த் தேரும் ஒன்றாகும்.

**அவிநாசிநாத சாமிகள்** திருக்கோவலூர் ஞானியார் மடாலயத்தின் முதல் தலைவர். இவர் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் கொங்குவள நாட்டில் உள்ள அந்தியூரில் பிறந்தார். இளமையில் ஆறுமுக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சாமிகளிடம் இலக்கிய இலக்கணங்களையும் சைவ சித்தாந்த நூல்களையும் கற்றுத் தெளிவடைந்தார். இவரது உள்ளம் துறவறம் மேற்கொள்ள விழைந்ததால், அன்பர் ஒருவர் தாம்பிரவேணியில் அமைத்துக் கொடுத்த திருமடத்தில் தங்கினார். இவர் நடராசப் பெருமான் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தில்லை சென்றார்; அங்குச் சிலகாலம் தங்கினார். அவிநாசிநாத சாமிகள் தில்லையில் தங்கியிருந்த போது வேதபுரி என்னும் ஊரிலிருந்து தில்லைக்கு வந்திருந்த சிற்றம்பலத்தார் என்பவர், இவரைத் தம்முடன் வருமாறு அழைக்கவே, அவருடன் சென்றுவிட்டார். பின்னர்த் திருக்கோவலூர் சென்றார். அங்கு மெய்யறிவாசிரியரை வழிபட்டுச் சிவ சின்னம் அணியப் பெற்றார். திருக்கோவலூர் ஞானியார் மடாலயத்தின் முதல் தலைவராக விளங்கினார். இவர் அறிதுயில் நிலையை (யோக நிலை) நன்கு பழகியவர் என்றும், அந்நிலையிலேயே பன்னாள் இருந்தார் என்றும் கூறுவர்.

அவிநாசிநாத சாமிகள் நெஞ்சுவிடு தூது, சிகாமணிப் பதிகம், அபிடேக மாலை, அட்டகம், மங்களம் முதலிய நூல்களை இயற்றியருளினார். நெஞ்சு விடு தூது 300-க்கும் மேற்பட்ட கண்ணிகளைக் கொண்டு விளங்குகிறது. சிகாமணிப் பதிகம் பத்துப் பாடல்களையும், அபிடேகமாலை பதினொரு பாடல்களையும் கொண்டவை. அட்டகம் எட்டுச் செய்யுள்களால் ஆனது. மங்களம் இசைப் பாடலால் ஆனது. மு.த.

**அவியன்** சங்க காலத்தில் விளங்கிய குறுநில மன்னர்களுள் ஒருவன்; வள்ளலுமாவான். மாறோக்கத்து நப்பசலையார் என்னும் புலவர் புறநானூற்றில் இவனைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்: அவியன் கான்கெழு நாடன்; கருந்தேர் உடையவன்; அவன் மலையில் ஆட்டுக்குட்டியும் குரங்கும் கூடி விளையாடும்; மூங்கில் ஓங்கி வளர்ந்திருக்கும் (புறம். 383).

காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார் அகநானூற்றில், இவன் மலையில் வளர்ந்த மூங்கிலைத் தலைவியின் தோளுக்கு உவமையாகக் கூறியுள்ளார். மேலும் அவர், அவியன் மதுவளம் மிக்க மலைநாடன் என்றும், அவன் மலையில் வெண்மேகம் தவழும் என்றும், மூங்கில்கள் உயர்ந்து வளரும் என்றும், மலைப்பிளவுகளில் பழங்கள் பழுத்துத் தொங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

'அவியன் திருமுனைப்பாடி நாட்டில் வாழ்ந்தவன்; அவியனூர் என்றோர் ஊர் அவன் பெயரால் பண்டை நாளில் இருந்தது. அவியன் குடியில் தோன்றிய பிற்காலத்தார் பொறித்த கல்வெட்டுகள், பாண்டிநாட்டுத் திருப்புத்தூர்த் திருத்தளி நாதர் திருக்கோயிலில் உள்ளன' என்று பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, தம் புறநானூற்று உரைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். அர.சி.

**அவிரோத உந்தியார்** என்பது, கோயமுத்தூரை அடுத்துள்ள பேரூரில் விளங்கும் வீரசைவ ஆதீனத்தின் முதற் குருமூர்த்தியாக விளங்கிய தவத்திரு சாந்தலிங்க சுவாமிகளால் இயற்றப் பெற்ற நூலாகும். அவிரோதம் என்பது மாறுபாடில்லாமையை (பட்சபாதமில்லாமையை) உணர்த்தும். எந்நெறியாளர்க்கும் எவ்வகையானும் மாறுபாடு (விரோதம்)

இல்லாதவாறு முத்திநெறி காட்டும் ஞானநூல் இது வாகும். திருவாசகத்தில் இடம் பெற்றுள்ள திருவுந்தியாரையும், திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் இயற்றிய திருவுந்தியாரையும் போல இந்நூல் கலித்தாழிசைகளால் அமைந்துள்ளது. 100 கலித்தாழிசை கொண்ட இந்நூலிற்கு மதுரைச் சிதம்பர சுவாமிகள் சிறந்த உரை வரைந்துள்ளார்.

'ஒன்றோடொன்று மாறுபட்டு விளங்கும் சமய நூல்களுள் இந்த நூல் ஒன்றாகாது; அதனால் இது அவிரோத உந்தியார் எனப் பெயர் பெறும்' என்பதனை நூலாசிரியர் 'தவிரா விரோத சமய நூலன்றால்; அவிரோத உந்தியாம்' என்று குறிப்பிட்டுள்ளார். 'எம்மதத்தோர் எவ்வகை நிட்டை சொல்லினும், சம்மதமே எமக்கு உந்தீபற, தற்போதம் மாய்க்கு மேல் உந்தீபற' (66) என்னும் தாழிசை, நன்னெறி காட்டுவதாக அமைந்ததால்எந்நெறியாயினும் ஏற்கத் தக்கதே எனக் கருதும் இந்நூலாசிரியரின் அவிரோத நாட்டத்தினை நன்கு புலப்படுத்துகிறது.

**அவிரோத நாதர்** கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் விளங்கிய சமண சமயப் புலவர்களுள் ஒருவர். சமணர்களும் தம் சமயத்தொடர்பாக இலக்கியங்களும் பிரபந்தங்களும் இயற்ற முற்பட்டனர். இவர் திருநூற்றந்தாதி என்னும் அந்தாதி நூலை இயற்றியுள்ளார். இவர் பெயர் அவிரோதி நாதர் என்றும் அவிரோதி ஆழ்வார் என்றும் வழங்கப் பெறும். அவிரோதி என்பது பகை கடந்தவன் என்னும் பொருளில் அருகதேவனைக் குறிக்கும் பெயராகும். இவர் முதலில் வைணவராக இருந்து பின்னர்ச் சமணசமயம் சார்ந்தவர் என்று கூறப்படுகிறார். வைணவராக இருந்தபோது, ஒருகால், சமண சமய நுட்பம் அறிய விரும்பினார். சமண சமயம் சார்ந்தவர்க்கல்லது கூறுவதற்கில்லை என்று கூறக்கேட்ட இவர் உடனே அச்சமயம் சார்ந்து, நேமிநாதர் கோயிலை ஒருமுறை வலம் வருவதற்குள் திருநூற்றந்தாதியினைப் பாடி முடித்தமை கண்டு, இவருக்கு அச்சமய நுண்பொருள் உபதேசம் செய்யப்பட்டது என்பது கூறப்படுகிறது. தமிழில் பெருந்திரட்டு ஒன்றினைத் தொகுத்த தத்துவராயர், சமய வேறுபாடு கருதாது, இந்நூலிலிருந்தும் பாடலைத் தேர்ந்து தம் திரட்டில் சேர்த்துள்ளார். இந்நூல் 100 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களால் ஆகிய அருக சமயத் துதிநூல் ஆகும். இந்நூலாசிரியர் இவ்வந்தாதியை அருகதேவன் பாதத்தில் சேர்த்ததாகத் தெரிவித்துள்ளார். 'நாக்கொண்ட செஞ்சொல் அவிரோதிநாதன் நவின்ற மெய்ந்நூல்' என்றும், 'அந்தாதியாக அவிரோதி ஓதிய ஆகமம்' என்றும், இந்நூற் சிறப்புப் பாயிரம் கூறுவது, நூலாசிரியனைக் குறித்தே என்றும் சிலர் கூறுவர். மற்றுஞ்சிலர், இவற்றில் 'அவிரோதி' என்பது அருக தேவனைக் குறிக்கும் என்பர். திருநூற்றந்தாதியேயன்றி, இந்நூலாசிரியர் சமணசமய பரமாகத் திருவெம்பாவை ஒன்றும் இயற்றியுள்ளார் என்பது கூறப்படுகிறது. இந்நூல் 20 பாடல்களும் இரண்டு மிகைப்பாடல்களும் கொண்டுள்ளது. இந்நூலின் நடைப்போக்கு முதலியவற்றை ஆய்ந்த சிலர் இது அவிரோத நாதரால் பாடப்பட்டதன்று; பிற்காலத்தது என்று குறிப்பிட்டுள்ளனர்.

**அவுசுபெல் கல்விக் கோட்பாடு**: அவுசுபெல் (David Ausubel) என்பவர் கல்வி உளவியலறிஞர் ஆவார். சொல்வழிக் கற்றல் (Verbal Learning) முறை, செயல்வழிக் கற்றல் (Discovery Learning) முறையைப் போன்றே வலிமையுடையது என்பார் இவர். சொல்வழிக் கற்றல் முறைதான், எளிதாகக் கற்கவும் பாடக் கருத்துகளை அறியவும் தெளியவும் அவற்றை நன்கு நினைவில் வைத்துக் கொள்ளவும் துணையாக நிற்கும் என்பது இவரது கருத்து. முறையான அறிவினை மாணவர்க்கு வழங்குவதே கல்வி கற்பித்தலின் முதன்மையான குறிக்கோள். ஆனால், செயல்வழிக் கற்றல் முறை இக்குறிக்கோளை எளிதில் அடைய உதவுவதில்லை என்பது இவர் கூறும் குற்றச்சாட்டு.

எந்தப் பாடத்தையும் எந்த வகுப்பில் பயிலும் குழந்தைக்கும் எளிதில் கற்பிக்க இயலும் என்பது புரூனர் (Brooner) என்பாரின் கருத்து. இக் கருத்தை அவுசுபெல் ஏற்கத் தயங்குவார். ஏனெனில், ஒரு 'பெரிய கருத்தை' மழலையர் பள்ளியிற் பயிலும் குழந்தையும், பன்னிரண்டாவது வகுப்பிற் பயிலும் மாணவரும் ஒரே தன்மையில் புரிந்து கொள்கிறார்களா என்பது அவுசுபெல் எழுப்பும் கேள்வி. நான்காம் வகுப்பில் பயிலும் மாணவர்களின் சிந்தனைத் திறன்களுக்கு ஏற்ற வகையில் கணிதத்தில் கணக் கொள்கையைச் (Set Theory) சீர்படுத்திப் பயிற்றுவித்தால், அவர்களால் எளிதில் கற்க இயலும் என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதே. அவ்வாறு ஏற்கும் பொழுது பொதுவாகப் பல கருத்துகளைக் கற்றுத் தெரிந்து கொள்ள ஒரு குறிப்பிட்ட அளவில் அனுபவம், அறிவு முதிர்ச்சி, பாட அளவு ஆகியன இன்றியமையாதவை என்ற கருத்தினையும் தள்ளிவிட இயலாது. அதாவது, ஒரு குறிப்பிட்ட அளவில் நுட்பச் சிந்தனைகள் இல்லையென்றால், ஒரு குழந்தைக்குச் சில கருத்துகளை எளிதில் கற்பித்தல் இயலாது. மழலையர், தொடக்கப் பள்ளிக் குழந்தைகள், பள்ளி மாணவ, மாணவியரை விட அனுபவம், அறிவு முதிர்ச்சி, பாட அறிவு ஆகியவற்றில் இயல்பாகவே மிக வேறுபட்டு நிற்கின்றனர்.

அவுசுபெல் முன்னமைப்பு (Advance Organizer) என்ற கருத்தை விளக்குகிறார். இந்த உத்தியின்படி,

முற்றிலும் புதிய ஒரு பாடத்தை மாணவர்கள் கற்பதற்கு முன், அவர்களுக்கு அப்பாடத்தின் சுருக்கத்தை அமைத்துத் தருதல் வேண்டும். அவுசுபெல், பிட்சரால்டு (Fitzgerald) ஆகிய இருவரும் 1961-இல் இணைந்து நடத்திய ஆய்வில், ''பாட முன்னமைப்பினைக் கற்பித்த பின்பு அதற்குரிய பாடத்தை விரிவாகக் கற்பித்தால், மாணவர்களின் கற்றல் திறனும். அவற்றை நினைவில் வைத்தல் திறனும் அதிகரிக்கின்றன'' என்பது காணப்பட்டது. புதிய கருத்துகளைக் கற்பதிலும், புதிய சிக்கலுக்குத் தீர்வு காண்பதிலும் 'பாட முன்னமைப்பு' இன்றியமையாதது. கற்பித்தலில் பாட முன்னமைப்பைப் பயன்படுத்துதல் பழைய கற்றல் முறைக்குத் தலைகீழானது என்பார் அவுசுபெல். ஏனெனில், பழைய கற்பித்தல் முறையில் 'பாடச் சுருக்கம்' பாட இறுதியில் வரும்; அவுசுபெல் கூறும் கற்றல் முறையிலோ 'பாடச் சுருக்கம்' என்பது பாடம் பயிலும் முன்பே போதிக்கப்படும். இம் முறையினால், அடிப்படைக் கருத்துகளைக் குறைவாகக் கற்ற மாணவர்கள், ஆசிரியர்களிடம் புதிய கருத்துகளைக் கற்றுத் தெளிகின்றனர். ஒரு கருத்தின் அடிப்படைக் கூறுகளையே கற்றுத் தெளியாத நிலையில், மாணவர்களால் அக்கருத்தின் நுட்பமான கூறுகளைத் திறம்படக் கற்றுவிட முடியாது என்பது இவரது கருத்து. மாணவர் பின்னர்க் கற்க இருக்கிற அனைத்துக் கருத்துகளுக்கும் விளக்கம் அளிக்கும் வகையில் பாட முன் சுருக்கம் அமைய வேண்டும் என்பார் இவர்.

கே.ஆர்.சி.

துணை நூல்கள்:

**Ausubel, David P.**, ''Journal of Educational Psychology'', ''Use of Advance Organizers in the Learning and Retention of Meaningful Verbal Material''. 51, 1960.

**Anderson, R.C., and David P. Ausubel., (eds.)**, ''Readings in Psychology of Cognition'', Holt, Rinehart & Winston, Inc., New York, 1962.

**Ausubel, David P.**, ''Psychology of Meaningful Verbal Learning: An Introduction to School-Learning'', Grune & Straton, Inc., New York, 1963.

Educational Psychology: ''A Congnitive View'', Holt, Rinehart & Winston, Inc., New York, 1968.

**Bruner, Jerome S.**, ''Toward a Theory of Instruction'' Harvard University Press, Masachusetts., 1966.

***அவுரங்கசீப்*** சிறப்புவாய்ந்த மொகலாயப் பேரரசர்களுள் ஒருவர். மொகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்கு வித்திட்ட பெரும் பணியைச் செய்தவரும் இவரே.


அவுரங்கசீப் (Aurangzeb) (கி.பி. 1658-1707), உடன்பிறந்த அண்ணன் தம்பியரைப் படுகொலை செய்து, தில்லியில் மொகலாயப் பேரரசராக முடி சூட்டிக் கொண்டார். தொடக்கத்தில் இருந்தே, அக்பரின் 'தேசிய அரசினை' (National State) நிறுவும் பணியினைத் தலைகீழாகத் திருப்புவதில் தம் கருத்தினை இவர் செலுத்தலானார். தம்முடைய அரசினை ஓர் 'இசுலாமிய அரசாக'ச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்பதிலேயே அவுரங்கசீப் கருத்தாக இருந்தார்.

மிகுந்த சமயப் பற்றுடன், இசுலாமிய சமய ஆசாரங்களையும் கொள்கைகளையும் கடைப்பிடிப்பதில் மிதமிஞ்சிய ஈடுபாடு உடையவராகவும் இவர் விளங்கினார். இதன் விளைவாக இந்துக்களின் கோயில்களை இடித்தல், இந்து வாணிகர்களின் மீது மிகுதியான வரிகளை விதித்தல், தலைவரியை மீண்டும் விதித்தல், இந்து அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்தல், அரசவையில் பின்பற்றப்பட்டு வந்த இந்துப் பழக்கவழக்கங்களைக் கைவிடல், கட்டாயப்படுத்தி இந்துக்களை மதமாற்றம் செய்தல் போன்ற இந்து சமய எதிர்ப்புச் செயல்திட்டத்தில் இவர் ஈடுபட்டார். மற்றும், இராசபுத்திர அரசகுடும்பங்களோடு நெடுங்காலமாக இருந்துவந்த நட்புறவையும் இவர் முறித்துக் கொண்டார். இவற்றால் 'சமயச் சார்புடைய அரசினை' அவுரங்கசீப் நிறுவினார்.

'சிறப்புமிக்க மக்களின் ஆதரவு இல்லாமல், மாட்சிமை பொருந்திய நிலைத்த பேரரசை நிறுவ இயலாது. அனைவருக்கும் சம உரிமையும் வாய்ப்பும் அளித்து, உறுதிவாய்ந்த அரசினை அமைப்பதற்கு அறியாதவர்கள், பெருமைக்குரிய ஆட்சியாளர்களாக இருக்க இயலாது' எனும் அக்பரின் இலட்சிய நோக்கம், அவுரங்கசீப்பினால் புறக்கணிக்கப்பட்டது.

அவுரங்கசீப்பின் பண்புகளும் கொள்கைகளும் அரும்பாடுபட்டுப் பேரரசர் அக்பர் நிறுவிய 'தேசியப் பேரரசை நிலைகுலையச் செய்தன. மொகலாயப் பேரரசினை நிறுவி, ஒரு 'தேசிய அரசாக' அதனை உருவாக்க அக்பர் முயன்றார். அவுரங்கசீப் அதனைத் தம்முடைய விவேகமற்ற செயல்களினால் அழித்து விட்டார்.

ஆட்சியின் இருநிலைகள்: அவுரங்கசீப்பின் ஆட்சியை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். கி.பி. 1658 முதல் 1681 வரை, இவருடைய சிந்தனை முழுவதும் வடஇந்தியாவையே மையமாகக்கொண்டு சுற்றிச் சுழன்றது. வடஇந்திய அரசியலில் இவர் மூழ்கி இருந்தார். கி.பி.1681-ஆம் ஆண்டிற்குப் பிறகு




அவுரங்கசிப் பேரரசு

தென்னிந்திய (தக்காண) அரசியல் இவருடைய நேரத்தையும் பொருளையும் கொள்ளை கொண்டது. தம்முடைய குடும்பத்தினரோடும் அரசபரிவாரங்களோடும் படையோடும் தக்காணத்தில் குடியேறி, கிளர்ச்சி செய்த இசுலாமியச் சிற்றரசுகளை அடக்கியொடுக்குவதிலும் மராட்டியரைப் பணிய வைக்கும் முயற்சியிலும் தம் வாழ்நாளை அவுரங்கசீப் வீணாக்கிக் கொண்டார். இதன் விளைவாக, வடஇந்திய அரசியல் இவரால் புறக்கணிக்கப்பட்டது. எனவே, அங்குப் பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் தோன்றி, மொகலாயப் பேரரசினை ஆட்டம் கொள்ளச் செய்யும் அளவிற்கு அமைதியின்மையும் அராசகச் செயல்களும் பெருகின.

அவுரங்கசீப்பின் சமயச் சார்பான ஆட்சிமுறைக் கொள்கை: இவர் மிகுந்த சமயப் பற்று வாய்ந்த 'சன்னி' முசுலிமாக விளங்கினார். 'ஒவ்வொரு இசுலாமிய அரசரும், பிற சமயத்தவருடைய நாடுகளை இசுலாமிய நாடுகளாக மாற்றுவதையே நோக்கமாகக் கொண்டு ஆட்சிபுரிய வேண்டும்' எனும் குரானின் கொள்கையில், இவர் அசைக்க இயலாப் பற்றுறுதி கொண்டிருந்தார்.

சமயச் சார்பற்ற செயல் திட்டங்களைப் பின்பற்றியதனால், தம்முடைய முன்னோர்கள், இசுலாமிய இலட்சியத்தைப் புறக்கணித்து விட்டனர் என்று இவர் நினைத்தார். எனவே, நாட்டு ஆட்சியை, இசு

லாமிய இலட்சியத்தைச் செம்மையாகச் செயற்படுத்தும் முறையில் தாம் ஆட்சிபுரிய வேண்டும் எனும் உறுதி பூண்டார் இவர். ஆகவே, இசுலாம் சமயத்தைப் 'பேரரசின் சமயம்' என்று இவர் பறைசாற்றினார். இசுலாமிய சமயம் செல்வாக்குப் பெற்றுச் சிறப்புறச் செய்வதற்கு, அரசக் கருவூலத்தின் பெரும் பகுதியை இவர் செலவழித்தார்.

இதன்விளைவாக, நாட்டில் பெரும்பாலோரால் பின்பற்றப்பட்டு வந்த பல தெய்வ வணக்கத்தை அடக்கியொடுக்க அவுரங்கசீப் திட்டமிட்டார். இந்து சமயத்திற்கு எதிராகப் 'புனிதப் போர்' தொடுக்க முனைந்தார். இந்தியாவை, ஓர் இசுலாமிய அரசாக மாற்றுவதற்கு முயன்றார். குடிமக்களை இசுலாமியராக மாற்றும் செயலில் ஈடுபட்டார். நாட்டின் அரசாட்சியை இசுலாமியச் சட்ட நெறிமுறைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமைப்பதில் வெறியுணர்வோடு இவர் செயற்பட்டார்.

இந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவுரங்கசீப், பல கட்டளைகளைப் பிறப்பித்தார். அன்றாட ஆட்சிப் பணியில் நுழைந்துவிட்டிருந்த இசுலாத்திற்குப் புறம்பான பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் தடை செய்வதற்கு இவர் திட்டமிட்டார்.

எல்லா நகரங்களிலும் சமயக் கட்டுப்பாடும் கண்காணிப்பும் நடைமுறைப்படுத்தப்பட்டன. சமயத் தொடர்பான செயல்முறைகள் எல்லாம் தணிக்கை செய்யப்பட்டன. அரசவையில் இசைக்குத் தடை விதிக்கப்பட்டது. காசுகளில் பொறிக்கப்பட்டுவந்த இசுலாமிய 'மறைமொழிகள்' நீக்கப்பட்டன. அந்தப் புனித மொழிகளையும் புறச்சமயத்தார் அவமதிக்கலாம் எனும் அச்சத்தால், அவுரங்கசீப் இவ்வாறு செய்தார். பாரசீகப் புத்தாண்டு விழாவும், 'நல்ரோசு' எனும் திருவிழாவும் இசுலாத்திற்குப் புறம்பானவை என்று கருதி, அவற்றையும் தடைசெய்தார். மது அருந்துவதும் தடை செய்யப்பட்டது. மதுவிலக்குக் கொள்கையை இவர் கடுமையாகப் பின்பற்றினார். ஆடல் மகளிர் (நாட்டிய நங்கையர்), திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டனர். இதற்கு உடன்படாதவர்கள் மொகலாயப் பேரரசினைவிட்டு வெளியேறிவிடுமாறு கட்டளையிடப் பெற்றனர். நாள்தோறும் இருமுறை பேரரசர் குடிமக்களுக்குக் 'காட்சிதருதல்' எனும் வழக்கத்தைக் கைவிட்டார். இக்காட்சி தருதலால் மக்கள் இடையே 'வீரவழிபாட்டு' மனப்பான்மை வளர்ந்துவிடும் என்று இவர் அஞ்சினார். அரசருடைய எடைக்கு எடை பொன், வெள்ளி போன்ற உலோகங்களை நிறுத்து (துலாபாரம்) அளிக்கும் வழக்கத்தைத் தடைசெய்தார். இந்த வழக்கம் இந்துக்களுடையது என்பதனாலேயே, இவர் இதனை வெறுத்தார். அன்றைய பகட்டான வாழ்க்கையை அவுரங்கசீப் அடியோடு எதிர்த்தார். குரானில் விதிக்கப்பட்ட நெறிமுறைகளுக்கு இணங்க, இவர் எளிய சமயப்பணியார்வம் உடைய வாழ்க்கையை நடத்தினார்.

கி.பி 1659 இல் இந்துப் பள்ளிக்கூடங்களையும் கோயில்களையும் இடிப்பதற்கு அவுரங்கசீப் கட்டளை பிறப்பித்தார். இதன் விளைவாகப் புனிதமிகு இந்துக் கோயில்கள் இடிக்கப்பட்டன. அவ்விடங்களில் மசூதிகள் கட்டப்பட்டன. இவ்வாறு இடிக்கப்பட்ட கோயில்களுள் சிறப்பானவை காசி விசுவநாதர் கோயில், வடமதுரை கேசவராய் கோயில், குசராத்தின் புகழ்மிக்க சோமநாதர் கோயில் முதலியனவாகும். உதயபூர், சோத்பூர், அரித்துவாரம், அயோத்தி, பீசப்பூர், கூச்பிகார் எனும் பகுதிகளில் இருந்த எண்ணற்ற கோயில்கள் இடிக்கப்பட்டன. உதயபூர் பகுதியில் மட்டும் 235 கோயில்கள் மண்மேடாக்கப்பட்டன. சோத்பூரில் அழிக்கப்பட்ட கோயில்களில் இருந்து வண்டி வண்டியாகத் தங்கம் தில்லிமாநகருக்குக் கொண்டு செல்லப்பட்டது.



அவுரங்கசீப்

இந்துக்களின்மீது பயணவரியும் 'செசியா' வரியும் திரும்ப விதிக்கப்பட்டன. தீபாவளி, ஓலிப் பண்டிகைகளை இந்துக்கள் கொண்டாடாதவாறு, தடுக்கப்பட்டனர். அரசின் பெரிய பதவிகளில் இருந்து வந்த இந்துக்கள் நீக்கப்பட்டனர். எல்லாவகையிலும் இந்துக்களை மதமாற்றம் செய்யும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டது.

தம்முடைய சகோதரன் தாராசூகோ மணிமுடி தரிக்க இராசபுத்திரர்கள் உதவி செய்தனர் என்பதற்காக, இராசபுத்திரர்களைச் சந்தேகக் கண் கொண்டு அவுரங்கசீப் பார்த்து வந்தார். இதனோடு

அவர்கள் இந்துக்களாக இருந்தமையாலும், ஒவ்வாத காரணங்கள் காட்டி அவர்களுடைய அரசுகளை அவுரங்கசீப் பறித்துக் கொண்டார். அக்பரின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த இராசபுத்திரர்களின் ஆதரவை இதனால் இவர் இழந்தார்.

சமயத் துன்புறுத்தல் கொள்கையின் ஒரு பகுதியாகச் சீக்கியருடைய கோயில்களும் இடிக்கப்பட்டன. ஒன்பதாவது சீக்கியச்சமய குருவான தேசு பகதூர், மொகலாயரின் கொடுஞ் செயல்களை வெளிப்படையாகவே கண்டித்தார். இதனால், சிறைப்படுத்தப்பட்டு தில்லிக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். இசுலாமிய சமயத்தினைத் தழுவுமாறு அவர் வற்புறுத்தப்பட்டார். தேசு பகதூர் இதற்கு உடன்படவில்லை. இதனால் சீற்றமுற்ற அவுரங்கசீப், தேசு பகதூரைக் கி.பி.1675-இல் தூக்கிலிட்டார். அவருடைய மகன் குருகோவிந்த சிங்கு, பழிக்குப் பழிவாங்கத் துடித்தார்; சீக்கியரை, ஆற்றல்மிக்க படைவீரர் சமூகத்தினராக மாற்றினார். தம் வாழ்நாள் முழுவதும் மொகலாயரின் கொடுமையை எதிர்த்துக் குருகோவிந்தர் போரிட்டார். அவருடைய ஆண்மக்களை இசுலாமியர் சித்திரவதை செய்து சாகடித்தனர். ஆதலின், இசுலாத்தின் கடும் எதிரிகளாகச் சீக்கியரின் அணி திரண்டு எழுந்தது.

இந்துக்களுக்கு இழைக்கப்பட்ட நேர்மையற்ற செயல்களையும் கொடுமைகளையும் எதிர்த்துத்திட்டமிட்ட முறையான ஒரு எதிர்ப்புப் போராட்டம் கி.பி. 1668 அளவில் மதுராவில் (வடமதுரை) தொடங்கியது. சாட்டுகள் (Jats) எனப்படும் இனக்குழு மக்கள், கோகலா எனும் தலைவரின் கீழ்க் கலகம் செய்தனர். அப்பகுதியில் இருந்த இந்துக் கோயிலை இடித்தவனும் இந்துப் பெண்களைக் கவர்ந்து சென்றவனுமான அந்த வட்டாரத்தின் மொகலாய அதிகாரியைக் கொன்றனர். மொகலாயப் படை விரைந்து ஓடி வந்தது. கோகல் கண்டதுண்டமாக வெட்டப்பட்டான். அவனுடைய குடும்பத்தினர், வன்முறையில் இசுலாம் சமயத்திற்கு மாற்றப்பட்டனர். ஆயினும், இராசாராம் என்பவன் தலைமையில் சாட்டுகள் தொடர்ந்து கலகம் செய்தனர். உய்குர் கான் எனும் மொகலாயரின் படைத்தலைவனை அவர்கள் கொன்றனர். அக்பரின் கல்லறையைத் தாக்கி அழித்தனர். தொடர்ந்து நடைபெற்ற மோதலில் இத்தலைவன் உயிர் இழந்தான். எனினும், மற்றொரு தலைவனான சுராமன் தொடர்ந்து போரினை நடத்தி, வெற்றியும் பெற்றான். இறுதியில், பரத்பூர் அரசகுடும்பத்தை இவன் தோற்றுவித்தான். அவுரங்கசீப் ஆட்சியினை இந்தக் கலகம் பெரிதும் பாதித்தது.

நர்நால், மேவாட் எனும் பகுதிகளை ஆட்சிபுரிந்தவர்கள் 'சத்நாமிகள்' (Satnamis) எனப்பட்டனர். அவர்களுடைய பெயரே, அவர்கள் நல்ல (சத்) பெயர் (நாமி) உடையவர்கள் எனும் பொருளைத் தருவதாகும். அவர்கள் பொதுவாக அமைதியை விரும்புபவராவர். அந்த இனக்குழுவைச் சேர்ந்த ஓர் உழவனை மொகலாய அதிகாரிகள் கொடுமைப்படுத்தினர்; கொன்றும்விட்டனர். இதனால் சீற்றமுற்ற 'சத்நாமிகள்' பேரரசனுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். நர்நால் (Narnal) மாவட்டத்தையே தங்கள் கைவசம் கொண்டுவந்தனர். மொகலாயரின் பெரும்படை விரைந்து வந்தது. கடுமையான மோதல்களுக்குப் பிறகு, இக்கலகம் அடக்கியொடுக்கப்பட்டது. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சத்நாமிகள் இக்கலகத்தில் கொலை செய்யப்பட்டனர்.

பந்தல்கண்டு மக்களும் மொகலாய அரசுக்கு எதிராக ஒன்று திரண்டனர்; சம்பல் ராய் தலைமையில் கொரில்லாப் போர் போன்ற முறையை அவர்கள் பின்பற்றினர். அவனுடைய மகன் சத்திரசால் மராட்டியத் தலைவன் சிவாசியினுடைய ஆதரவோடு, தொடர்ந்து போராடி வந்தான். கி.பி. 1705-இல் இவன் களிஞ்சர் கோட்டையைக் கைப்பற்றிக் கொண்டான். பிறகு, மாளவத்தைத் தாக்கினான். இவனோடு, அவுரங்கசீப், சமாதான உடன்பாட்டிற்கு வந்தார். இதன் விளைவாக மாளவத்தின் கிழக்குப் பகுதியில், சத்திரசால் ஒரு தனியரசை நிறுவினான்.

சத்திரபதி சிவாசி (Shivaji), தக்காணத்தில் ஓர் இந்து அரசினை நிறுவினார். இந்தியாவில் இருந்து, மொகலாயருடைய ஆட்சியை ஒழித்துக்கட்ட அவர் வஞ்சினம் உரைத்தார். கி.பி. 1663-இல், மொகலாயப் படைத் தலைவர், செயிட்டகானை எதிர்த்துப் போரிட்டுச்சிவாசி வெற்றியும் பெற்றார். தன்னுடைய கட்டை விரலையும், மகனையும் இழந்ததோடு பூனாவை விட்டுச் செயிட்டகான் தப்பி ஓடினான். மொகலாயப் பேரரசின் வளங்கொழிக்கும் துறைமுகமாக விளங்கியது சூரத்து. அதனைக் கி.பி. 1664-இல் சிவாசி தாக்கினார். கோடிக்கணக்கான விலைமதிப்புடைய பொருள்களை அவர் கொள்ளை அடித்தார். அடுத்த ஆண்டில் மராட்டியருக்கு எதிராக இராசா செயசிங்கு தலைமையில் 4 00,000 குதிரைப் படையை அவுரங்கசீப் அனுப்பி வைத்தார். இதற்கிடையில், புரந்தர் உடன் படிக்கையில் கையெழுத்திட்ட சிவாசி, மொகலாய அரசரின் தலைநகரான ஆக்ராவிற்குச் சென்று, பேரரசரைக் கண்டார். ஆனால் மீண்டும் சிவாசி, மொகலாயருக்கு எதிராகப் போர் முரசு கொட்டினார். சிவாசியும் அவருடைய வழித்தோன்றல்களும் தக்காணத்தில் மொகலாயப் பேரரசினைப் படுதோல்வி அடையச் செய்தனர். மராட்டியரால் உண்டான அச்சுறுத்தலை ஈடுகொடுக்க, பேரரசர் அவுரங்கசீப் 25 ஆண்டுகள் நிலையாகத் தக்காணத்தி

லேயே தங்கிப் போரிட நேரிட்டது. அவுரங்கசீப்பின் தக்காணக் கொள்கை, மொகலாயப் பேரரசின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது.

தக்காணத்துப் பீசப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள், மராட்டியருக்கு மறைமுகமாக ஆதரவு தருகின்றனர் எனும் ஐயுறவை அவுரங்கசீப் கொண்டார். கடுமையான சன்னி முசுலிமான அவுரங்கசீப்பிற்குத் தக்காணத்தில் இரு 'சியா' முசுலிம் அரசுகள் தன்னாட்சி செய்வது பிடிக்கவில்லை. கி.பி. 1682-இல் இளவரசர்ஆசம் தலைமையில் பீசப்பூர் மீது மொகலாயர் படையெடுத்துச் சென்றனர். அதன் சுல்தானான சிக்கந்தர் ஆதில் சா, தம்மைத்தாமே தற்காத்துக் கொண்டார். ஆனால், கி.பி. 1686-இல் அவுரங்கசீப், மாபெரும் படையோடு பீசப்பூர் மீது படையெடுத்தார். இவருடைய தலைமையில் கடுமையான போர் நடந்தது. இறுதியில் பீசப்பூர் வீழ்ச்சியுற்றது. தௌலதாபாத் கோட்டையில் சிக்கந்தர் ஆதில் சா சிறை வைக்கப்பட்டார்.


அக்காலத்தில், கோல்கொண்டாவை அபுல் ஆசன் என்பவர் ஆண்டு வந்தார். இந்துக்களையே அவர் அமைச்சர்களாகக் கொண்டிருந்தார். இதனால், மொகலாயப் பேரரசருக்குக் கோல்கொண்டா சுல்தான்மீது வெறுப்புண்டாயிற்று. கி.பி. 1685-இல் நடந்த போரில், பீசப்பூர் சுல்தானுக்கு அவர் படை உதவி செய்தார். மற்றும் சிவாசிக்கும் அபுல் ஆசனுக்கும் இடையே நட்புறவு நிலவுவதை அவுரங்கசீப் அறிந்து கொண்டார். எனவே, பேரரசர் கோல்கொண்டாவை முற்றுகை இட்டார். ஆசனின் பெரிய அதிகாரி ஒருவனுக்கும் பெரும் பொருளை இலஞ்சமாகக் கொடுத்து, திடுமெனக் கோட்டைக் கதவுகளைத் திறந்துவிடுமாறு செய்தார். இதனால், மொகலாயப்படை கோல்கொண்டாவை எளிதில் கைப்பற்றியது. அதன் சுல்தான் சிறைப்படுத்தப்பட்டார்.

ஆனால், எதிர்பார்த்த விளைவுகளைக் கோல்கொண்டா, பீசப்பூர் கைப்பற்றுதல் உண்டாக்கவில்லை. தெற்கே கிருட்டிணா ஆறு வரையில் மொகலாயப் பேரரசு பரவியது உண்மை. ஆனால், வடக்கே நெடுந் தொலைவில் உள்ள ஒரு மையத்தில் இருந்து, ஒருவனே எல்லாவற்றையும் கவனித்து, ஆட்சிபுரிவதற்கு இயலாத வகையில் மொகலாயப் பேரரசு விரிந்தும் பரந்தும் இருந்தது. இதனால், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது அரிய செயலாயிற்று. பல பகுதிகளை மராட்டியர் தாக்குவதற்கு இந்த விரிந்து பட்ட அரசின் அமைப்பு எளிதில் இடம் தந்தது.

இடையறாத தக்காணப் போர்களில், மொகலாயப் பேரரசின் கருவூலம் கரைந்து போயிற்று. ஊதியம் போதிய அளவிற்குக் கிடைக்காமையால், போர் வீரர்கள் பட்டினியால் வாடினர்; கிளர்ச்சி செய்தனர். வங்காளத்தில் இருந்து, திறமைமிகு திவான் மூர்சித் கூலிகான் ஆண்டுதோறும் அனுப்பிவைத்த வரிப்பணமே, பேரரசரின் குடும்பச் செலவிற்கும் படைச் செலவிற்கும் பயன்படுத்தப்பட்டது. தம் வாழ்நாளின் கடைசிப் பகுதியில், இந்த வருவாயைத் தவிர, வேறு பொருள் வருவாயின்றி அவுரங்கசீப் அல்லல்பட்டார். அவருடைய 'தக்காணக் கொள்கை', பேரரசை அழிக்கும் வேர்ப்புழுவாக அமைந்தது.

இவ்வாறு தம்முடைய அழிவை, அரும்பாடுபட்டுத் தம்முடைய முன்னோர்கள் நிறுவிய பேரரசின் அழிவை, அவுரங்கசீப் தம் சமய வெறியாலும் தெளிவற்ற சிந்தனையாலும் முறையற்ற செயல்களாலும் தேடிக் கொண்டார். க.த.தி.

**அவேரி** கருநாடக மாநிலம் தார்வார் மாவட்டத்திலுள்ள ஊர். பிற்காலச் சாளுக்கியரின் கோயிற் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக அவேரி (Haveri) விளங்குகிறது. இங்குள்ள கோயிலின் பெயர் சித்தேசுவரம். இது சிவனுக்குரிய கோயில். இங்குப் பல சிறுதெய்வங்களின் சிற்பங்கள் செதுக்கப் பட்டுள்ளன. நூறு ஆண்டுகட்கு மேலாகச் சமணர்களும் பிற சமயத்தினரும் தங்கள் வழிபாட்டு இடமாக இக்கோயிலைப் பயன்படுத்தியுள்ளனர். கோயிலின்மாடக் குழிகளின் சிற்பங்கள் அகற்றப்பட்டுள்ளன. இங்குள்ள தேவியின் நெஞ்சளவுச்சிலையொன்று,



சித்தேசுவரம் கோயில்-அவேரி

பிற்காலச் சாளுக்கியரின் கலைத்திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

**அவையோர்** என்பது ஒரு பொதுவான இலக்கில் கவனம் ஒன்றிய மக்கள் திரளைக் குறிக்கச் சமூக வியலார் வழங்கும் பெயராகும். இவர்கள் ஆங்காங்குப் பரந்துபட்டோ ஓரிடத்தில் குழுமியோ இருக்கலாம். இக்குழு சிறியதாகவோ பெரியதாகவோ இருக்கலாம். ஓர் அறையில் கருத்துப் பரிமாறும் குழு மிகச் சிறிய அவை ஆகும். பெரிய அரங்குகளில் கூடும்திரள் ஒரு பேரவை ஆகும். தொலைக்காட்சி பார்ப்போர் அல்லது செய்தித்தாள் படிப்போர் பரந்து கிடக்கும் பேரவையோராவர். இவர்களை ஒரே சமயத்தில், ஓரிடத்தில் சேர்க்க இயலாது. இம்மாபெரும் திரளான அவையோர் (Audience) பரவலான செய்தித் தொடர்பு முறைகளால் (Mass Communication Media) தோன்றியுள்ளனர். பொது இலக்கானவரின் நடப்பைத் திருப்புவோர் திட்டமான அவையில் (Concrete Audience) அடங்குவர். மொழிவாயிலாகத் தம் கருத்தை அவையோர் உணர்த்தாவிடினும் முகக்குறி, சலசலப்பு போன்றவற்றால் பொது இலக்கானவரின் நடத்தை திருத்தப்படும். அவையோர் தரும் ஊக்கம் தலைவர்களுக்கு இன்றியமையாத தேவையாகும். ஒரு கூட்டத்தில் பெரும்பாலோர் செயற்பாடற்றவரே, ஆயினும் இவர்கள் அதே கூட்டத்தில் முனைப்பாகச் செயல்படுவோருக்கு அவையோராக அமைகின்றனர். கேளிக்கை அவையோர், செயல் முனைப்பற்ற ஒரு கூட்டம் (Passive Crowd) எனக் கருதப்படுகின்றனர்.

ஒரு பக்கம் நடிகர் அல்லது பேச்சாளர், மறுபக்கம் ஒருமுகமாகத் தம் கவனத்தை அவர் மீது செலுத்தும் அவையோர் என்னும் நிலைமையை ஒருமுகப்படுதல் என்கிறோம்.

ஒரே சமயத்தில் தம் கவனத்தைக் கவரும் ஒரு நிகழ்ச்சியைப் பலர் காண நேரும் போது தற்செயலான அவை தோன்றுகிறது. ஒரு பேருந்து விபத்தைக் காணப் பலர் கூடினால், அவர்கள் தத்தம் பணியிலிருந்து விடுபட்டு விபத்தில் தம் கவனத்தைத் திருப்புகின்றனர். அவ்விடத்தில் அவ்வேளையில் அங்கு நிற்கும் எவரும் அந்த விபத்தைக்காணும் நோக்கத்தோடு வரவில்லை. மாறாக, திடீரென்று அந்நிகழ்ச்சியைக் கண்ணுறும் அவையோராகின்றனர். அவ்விபத்துக்குப் பின் தற்செயலான அந்த அவையினர் விரைந்து மறையலாம்; அல்லது அவர்கள் சினமுற்ற ஒரு கூட்டமாக மாறலாம். அல்லது பொறுமையாகப் பகுத்தறிந்துவிபத்துக்காளானோரைக் காக்கும் பணியிலும், காவல் துறைக்குச் செய்தி கொடுக்கும் பணியிலும், போக்குவரத்தைச் சீர் செய்யும் பணியிலும் ஈடுபடும் ஒரு முறையான அமைப்பாகவும் செயற்படலாம்.

தற்செயலான அவையினின்றும் முற்றிலும் மாறுபட்டவர் நோக்கமுள்ள அவையோர் ஆவர். குறிப்பான நோக்கமுள்ள அவையோரின் கவனம் நேரடியாகப் பயன் கருதியிருப்பதால் இவ்வகை அவை நோக்கமற்ற அல்லது நிலைபேறற்ற அவையைவிட நீடித்து இருக்கலாம். மேலும் ஒரு வகுப்பிலுள்ள மாணவர்களைப் போன்ற நோக்கமுள்ள அவையோர் மீண்டும் பல முறை அதே நோக்கில் திட்டமிட்டுக் கூடலாம். செய்தி அல்லது கல்வியை நாடியோ பொழுதுபோக்கை நாடியோ இத்தகு அவையோர் கூடுவர். பல சமயங்களில் இரண்டையும் சேர்த்தே நாடலாம். பொழுது போக்குக்காகப் படம் பார்க்கப் போவோர் பயனுள்ள செய்திகளையும் பெற்று வருவதைக் காண்கிறோம். யூ.ஆர்.கா.

துணை நூல்கள்:


"International Encyclopaedia of the Social Sciences" Vol. 3 & 4, The Macmillan Company and the Free Press, New York, 1972

**Julius Could and William L. Kolb,** "A Dictionary of the Social Sciences", Tavistock Publications, UNESCO, 1964.

**Gardner Lindzey and Elliot Aronson,** "The Hand-book of Social Psychology", Vol. I, Amerind Publishing Co., New Delhi, 1975.

**John W. Mc, David & Herbert Harari,** "Social Psychology", Harper & Row, New York, 1967.


***அழகப்பச் செட்டியார்*** இராமநாதபுரம் மாவட்டத்தில் (இன்று பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்) கோட்டையூரில் நாட்டுக்கோட்டை நகரத்தார் மரபில் 1909-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 6-ஆம் நாள் பிறந்தார். தந்தையார் க.வீ.அள. இராமநாதன் செட்டியார்; தாயார் உமையாள் ஆச்சி. இவர் தம் உயர்நிலைக் கல்வியைக் காரைக்குடியிலுள்ள மீனாட்சி சுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் முடித்தார்.

அழகப்பர் கல்வியில் மிகவும் ஆர்வமுடையவர். கல்லூரிக் கல்வி தொடங்குவதற்கு முன்னரே இவர் கல்வி வாழ்க்கைக்கு இடையூறு ஒன்று நேர்ந்தது. மலாயாவில் தொழிலாற்றிய இவர் தந்தையார் தம் தொழிலில் அழகப்பரைப் பழக்குவதற்காக மலாயா வருமாறு கடிதம் எழுதி அழைத்தார். தந்தை சொல் தவிர்க்க முடியாத நிலையில், படிப்பைத் தொடர முடியாத வருத்தத்துடன் மலாயா புறப்பட்டார். கப்பலில் செல்லும்பொழுது வழியிலேயே கடுங்காய்ச்சல் ஏற்பட்டது. கப்பல் அதிகாரி, 'கடும் காய்ச்சல்



அழகப்பச் செட்டியார்

அம்மைக்கு அறிகுறி' என அஞ்சி இவரை நாகப்பட்டினத்தில் இறக்கிவிட்டுச் சென்றார். இப்பயணத்தடை படிப்புப் பயணம் தொடர வாய்ப்பாயிற்று.

சென்னை மாநிலக் கல்லூரியில் அப்பொழுதைய பல்கலைக் கழகத் தொடக்க வகுப்புப் படிப்பைத் தொடர்ந்தார். பின்னர், அக்கல்லூரியிலேயே ஆங்கில இலக்கியத்தைப் பாடமாகக் கொண்டு பி.ஏ., (ஆனர்சு) படித்துத் தேர்ந்தார். நகரத்தார் மரபில் முதுகலைப் பட்டம் பெற்ற முதல்வர் என்ற சிறப்பையும் பெற்றார். ஐ.சி.எசு படிக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இங்கிலாந்து சென்றார். ஆனால், இப்படிப்புக்குரிய மருத்துவச் சோதனையில் இடர்கள் ஏற்பட்டன. இப்படிப்பை விடுத்து, மனம் தளராது 'மிடில் டெம்பிள்' (Middle Temple) என்ற சட்டப் பல்கலைக் கழகத்தில் 'பார்-அட்-லா' (Bar-at-Law) பயிலத் தொடங்கினார். இப்படிப்புக் காலத்திலேயே ஓய்வு நேரத்தில் இலண்டனில் உள்ள 'சார்ட்டர்டு பாங்கு' (Chartered Bank) என்ற பெரிய வங்கியில் பகுதி நேரப் பயிற்சியில் சேர்ந்து, வங்கி அலுவலர் முறைகளையும் மேலைநாட்டுத் தொழில் முறைகளையும் நன்கு அறிந்தார். இரு பயிற்சிகளுக்குமிடையே கிடைத்த ஓய்வு நேரத்தில் விமானம் ஓட்டவும் பயின்றார். 1933–ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26–ஆம் நாள் இலண்டன் வழக்குரைஞர் அவையில் இடம் பெறுவதற்காக அழைப்பைப் பெற்றார். இவர் சார்ட்டர்டு வங்கியியல் மேனிலைப் பயிற்சி பெற்ற முதல் இந்தியராவர்; விமானியாகச் சான்றிதழும் பெற்றார்.

தம் பெரியப்பாவிடம் தம் படிப்பு விருப்பத்தைக் கூறி அவர் இசைவைப் பெற்றார். ஆனால், அழகப்பர் கல்லூரியில் சேருவதற்கு முன்னரே பெரியப்பா எதிர்பாராது காலமானார். அழகப்பர் கல்வித் தடை கண்டு மிகக் கலங்கினார். இவர் கலக்கம் தந்தையாரைக் கனிவித்துக் கல்வியைத் தொடர இசைவுதரச் செய்தது. இளமையில் தம் கல்வியில் கொண்ட ஆர்வமே தம் வாழ்க்கையில் கல்விக்கான தனித்தனிக் கொடைகளுக்கும் பல்வகைக் கல்விநிலையங்கள் நிறுவுதற்கும் வித்திட்டது.

கல்விப் பருவத்துடன் இவர் கல்வி நாட்டம் நின்றுவிடவில்லை. பின்னரும் படிக்கும் பழக்கத்தைப் பெற்றிருந்தார்; பயணம் செய்யும்போதும் படிப்பார். தாம் படிக்கும் நூல்களில் சிறந்த இடங்களைக் கோடிடுவார்; காணப்பெறும் பிழைகளைத் திருத்துவார். இவர் படித்த நூல்கள் இவர் கையெழுத்துடன் காரைக்குடி அழகப்பா கல்லூரி நூலகத்தில் இன்றும் உள்ளன. மூதறிஞர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் எழுதிய 'ஆத்ம சிந்தனை' என்ற நூலைப் படித்து அதில் ஈடுபட்ட அழகப்பர், கல்லூரி மாணவர்கள் அதனைப் படிக்கவேண்டுமெனக் கருதி அந்நூல்களை வாங்கி மாணவர்களுக்குக் கொடுக்குமாறு அனுப்பி வைத்தார். தம் கல்லூரியில் கல்வியின் பல பிரிவுகளும் இருக்கவேண்டுமென எண்ணினார். மிகச் சில கல்லூரிகளிலேயே மண்ணியல் துறைப்பிரிவு (Geology) இருக்கும். முப்பதாண்டுகளுக்கு முன்பிருந்தே அழகப்பா கல்லூரி இத்துறையைப் பெற்று விளங்குகிறது. தகுதி வாய்ந்தவர் எங்கிருப்பினும் அவர்களைத் தம் கல்லூரிக்கழைத்துப் பணியில் அமர்த்தினார். முப்பதாண்டுகளுக்கு முன்னரே, அரசாங்க ஊதிய விகிதம் நூறு ரூபாய்க்குக் குறைவாக இருக்கும்போதே தம் கல்லூரி ஆசிரியர் எவரும் ரூபாய் நூற்றுக்குக் குறைவாக ஊதியம் பெறலாகாது என்பதில் கருத்துச் செலுத்தினார். பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இவர் கல்வி நிறுவனங்கள் செய்ம்முறைப் பயிற்சிக்கான பல கருவிகளையும் பெற்று விளங்குகின்றன. இவை யாவும் அழகப்பர் கல்வியின்பாற் கொண்ட ஆர்வத்தின் விளைவுகளே.

அயல்நாட்டுக் கல்வி முடித்துத் தாயகம் திரும்பிய அழகப்பர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குரைஞராகப் பதிவு செய்துகொண்டார். எனினும், இத்தொழிலைத் தொடரவில்லை. அப்பொழுது கொச்சி திவானாக இருந்த சர் ஆர்.கே. சண்முகம் செட்டியார், கொச்சியில் தொழில்வளம் பெருக முதலீடு செய்வோருக்குப் பல சலுகைகளைத் தந்தார். அழகப்பர் இச்சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு பல நெசவாலைகளைக் கொச்சிப் பகுதியில் தொடங்கினார். அழகப்பரைத் தொழில் துறையில் ஊக்கப்படுத்தியவர் சர் ஆர் கே. சண்முகம் செட்டியார். தமிழ்நாட்டில் சென்னிமலையிலும் துணிகளை வழவழப்பாகச் செய்

யும் தொழில் தொடங்கினார். பம்பாயில் பங்கு வணிகத்தில் (Forward Trading) ஈடுபட்டார். பங்கு மாற்று முன்னோக்குப் பேரத்தில் வல்லுநராக விளங்கினார். 'சூபிடர் ஏர்வேசு' என்ற விமானக் கம்பெனி ஒன்றையும் நிறுவினார். காசுமீரில் ஊடுருவிய பாகிசுதான் படைகளை அப்புறப்படுத்தும் இந்தியப் படைகளுக்கு உணவுப் பொருள்களையும் தளவாடங்களையும் அனுப்ப இந்நிறுவனத்தின் தகோடா (Dakoda) விமானங்கள் பயன்பட்டன. மேனாட்டு முறையில் விடுதித் தொழில் ஒன்றையும் நடத்தினார்.

அழகப்பர் என்றவுடன் வள்ளல் என்ற எண்ணமே மேலோங்கும். அவர் கொடை தொடர்கொடை. அவர் வாழ்க்கை நிறைவுறும் பொழுதே அவர் தொடர் கொடையும் முற்றுப் பெறுகிறது. தக்கர் பாபா வித்தியாலயத்தில் அரிசனத்தார் வாழ்வு உயர்தற்குக் கொடுத்தது, தமிழ்க் கலைக்களஞ்சியத் தொகுப்புக்குக் கொடுத்தது, திருவாங்கூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் கட்டிலுக்கு வழங்கியது, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியற் கல்லூரி நிறுவவும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொழில் நுணுக்கக் கல்லூரி நிறுவவும் நல்கியது போன்றவை பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை நிலை வேறுபாடு கருதாது அழகப்பர் நல்கிய பெருங் கொடைகள் ஆகும். காரைக்குடி வட்டத்தில் கல்வி நிறுவனங்கள் அமைப்பதில் 1947 முதல் அவர் தம் கல்விக்கொடை மேலோங்கியது. மாண்டிசோரிப் பள்ளி, ஆயத்தப் பள்ளி, ஆதாரப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கலைக் கல்லூரி, பெண்களுக்கான கலைக் கல்லூரி, ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி பொறியியற் கல்லூரி, பல்தொழில்நுட்பப் பள்ளி, உடற்பயிற்சிக் கல்லூரி, இசைப் பள்ளி ஆகியன அழகப்பரின் கல்வி நிறுவனங்கள். மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சிக் கழகம் (Central Electro Chemical Research Institute) காரைக்குடியில் அமைய அவர் மேற்கொண்ட முயற்சி சிறப்பானது. தில்லியில் பிரதமர் நேரு இல்லத்தில் நள்ளிரவில் அவர் கல்கத்தாவிலிருந்து திரும்பி வரும் வரை காத்திருந்து, காரைக்குடியில் இக்கழகத்தை அமைக்குமாறும், அதற்கென 300 ஏக்கர் பரப்புள்ள நிலமும் 15 இலட்சம் ரூபாயும் நன்கொடை தருவதாகவும் வாக்களித்தார். இக்கழகத்திற்கான கூடுதல் தண்ணீர்த் தேவையைச் சுட்டிக்காட்டிய போது, தேவையான தண்ணீர்க்கான வாய்ப்பு நிலைகளையும் எடுத்துக்காட்டி ஆராய்ச்சிக்கழகம் அமையப் பாடுபட்டார். புதுதில்லியில் தென்னிந்தியக் கல்விக் கழகம் தழைக்கக் கொடை அளித்தார்.

அழகப்பர் திறமைக்கேற்பப் பல சிறப்புகளும் பொறுப்புகளும், பெற்றார். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்துத் தம் 37-ஆம் வயதில் வீரப் பெருந்தகை (Knight) என்ற பட்டம் பெற்றார். பின்னர் இப் பட்டத்தைத் துறந்தார். சென்னைப் பல்கலைக் கழகமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும் டாக்டர் பட்டம் தந்து சிறப்பித்தன. இந்திய அரசு 1957-ஆம் ஆண்டில் 'தாமரைத்திரு' (பத்மசிரீ) என்னும் பட்டம் அளித்தது. கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்தில் கூடிய காமன்வெல்த்துப் பல்கலைக் கழக மாநாட்டில், சென்னைப் பல்கலைக் கழகக் குழுவில் ஒருவராய் அழகப்பர் பங்கேற்றார். கிளாசுகோ பல்கலைக் கழகத்தின் ஐந்நூற்றாண்டு விழாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகச் சார்பாளராகக் கலந்துகொண்டார். சப்பானில் கியோட்டோ நகரில் நிகழ்ந்த 12-ஆம் பசிபிக் உறவு மாநாட்டில் இந்திய நாட்டுச் சார்பாளராகச் சென்றார். சென்னை அரசின் தொடக்கக் கல்விச் சீர்திருத்தக் குழுவின் தலைவராகப் பணியாற்றி நாடு போற்றும் சிறப்பானதொரு அறிக்கையும் தந்தார். இவர் நோயால் வருந்திய ஒருநேரத்து அண்ணல் காந்தியடிகள் தம் மாலை நேரப் பிரார்த்தனையில் இவருக்காக வேண்டினார். நேரு இவரைச் ''சமதர்ம முதலாளி'' எனக் குறிப்பிட்டார்.

அழகப்பர் தம் கல்வி நிலையங்களிலுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும் அலுவலர்களையும் தம் குடும்பத்தவராகவே கருதினார். ஆண் மகவு இல்லாதவர்கள் பிள்ளை கூட்டிக்கொள்ளுதல் பொது மரபு. உமையாள் என்னும் மகள் தவிர ஆண் மகவு வேறு இல்லாத அழகப்பரிடம் பிள்ளை கூட்டிக் கொள்ளுமாறு சிலர் வற்புறுத்தினர். தம் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் அனைவரும் தம் பிள்ளைகளே எனக்கூறிப் பிள்ளை கூட்டிக்கொள்ள மறுத்துவிட்டார். தம்மைத் தம் கல்விநிலையங்களுடன் இரண்டற இணைத்துக் கொண்டதுடன் கல்லூரி வட்டத்தில் ஒருவகைக் குடும்பவுணர்வு நிலவுமாறும் செய்த பெருமையுடையவர். தம் இறுதி அடக்கமும் கல்லூரி வளாகத்திலேயே அமைய விரும்பிப் பவநகர் அரங்கின் எதிரே இருக்குமாறு அதற்குரிய இடத்தைக் குறித்தார்.

அழகப்பர் நல்லியல்புகளுள் ஒன்று நன்றி மறவாமை. தாமரைத் திரு பட்டம் பெற்றபோது, அச்சிறப்பு, துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியாருடன் தொடர்பு கொண்டு பல்வேறு கல்விக் கூடங்கள் நிறுவிச் சிறப்புற்றதால் கிடைத்தது எனக் கருதினார். நோயுற்றதால் நேரிற் சென்று நன்றி கூறமுடியாத நிலைக்கு வருந்தினார். ஆதலால் பட்டம் பெற்ற மறுநாளே துணைவேந்தருக்குக் கடிதம் வழியாகத் தம் நன்றியைத் தெரிவித்து ஆறுதல் பெற்றார். தமக்கு ஒவ்வொரு நேரத்து ஒவ்வொரு வகையில் உதவி செய்தவர்கள் பெயரைத் தம் கல்லூரிகளின் விடுதிகளுக்கு வைத்தார்.

அண்ணல் காந்தியடிகள் இறந்தபோது சித்து வல்ல சாமியார் ஒருவரை அழைத்துக்கொண்டு வான வூர்தி வழி விரைந்தார். அடிகளின் சாம்பலைக் கொண்டு வந்து காரைக்குடி அருகில் ஆற்றில் கரைத் தார்.

அழகப்பரின் கல்வித்திறமையும் சிந்தனைச் சிறப் பும் அவர்தம் பேச்சுகளில் வெளிப்பட்டன. 'இந்திய நாடு பெரும்பாலும் வேளாண்மைப் பொருளாதாரத் தையே கொண்டிருப்பது. இந்தியா, தொழில் மய மாக வேண்டும்; அதற்கேற்ப நன்கு திட்டமிட்டுத் தொழில்கள் தொடங்க வேண்டும்; அதற்கான பயிற்சி களைப் பெறக் கல்வி நிலையங்களும் பயிற்சி நிலை யங்களும் பெருக வேண்டும்' என நாட்டின் உடனடித் தேவையை வற்புறுத்தினார்.

'கோடி கொடுத்த கொடைஞன்' என்ற சிறப்புப் பெயரைத் தம் நாற்பத்தெட்டாண்டுக் குறுகிய வாழ்க் கையிலேயே பெற்றவர் அழகப்பர். இவர் தேர்ந்த கல்வியாளர்: திறமையான தொழில் வல்லுநர்; தடைகளைக் கண்டு தளராது செயலாற்றும் உறுதிப் பாடுடையவர். இவர் தம் நாற்பத்தொன்பதாம் பிறந்த நாளன்று 6–4–1957–இல் காலமானார். கோ.சி.

**அழகப்பா பல்கலைக் கழகம்**: கல்வித் துறையில் மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்வி நிலையங்கள் பலவற்றை நிறுவிய வள்ளல் அழகப்பரின் நெடுங்காலக் கனவு, 1985 மே திங்கள் ஒன்பதாம் நாள் அழகப்பா பல்கலைக் கழக மாக உருக்கொண்டது. இப்பல்கலைக் கழகம் தமிழ கத்தில் பதினோராம் பல்கலைக் கழகமாகும். பிற கல்லூரிகளை இணைத்துக் கொள்ளாமல் தனியொரு முழுப் பல்கலைக் கழகமாக (Unitary University) அழகப்பா பல்கலைக் கழகம் இயங்கும்.

அழகப்பா பல்கலைக் கழகம் மாணவர்களுக்கு அளிக்கும் உயர் கல்வி, தகுந்த வேலை வாய்ப்புக் கிடைப்பதற்கு உறுதுணையாதல் வேண்டும் என்னும் நோக்குடன் செயற்படுகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில், குறிப்பாகக் காரைக்குடியில், பல்வகைக் கல்விப் பணிகளை ஆற் றும் சீரிய நோக்கத்துடன் 1947–ஆம் ஆண்டு டாக்டர் அழகப்பா கல்வி அறக்கட்டளை நிறுவப்பட்டது. அவ வாண்டிலேயே தமிழகத்தின் அந்நாள் கல்வி அமைச் சர் மாண்புமிகு தி.சு. அவினாசிலிங்கம் அவர்களால் அழகப்பா கலைக் கல்லூரி தொடங்கிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1950-ஆம் ஆண்டில் அழகப்பா ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி மைசூர்ப்பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் சி.ஆர். ரெட்டி அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. இப் பயிற்சிக் கல்லூரி யுடன் இணைந்த நன்முறை உயர்நிலைப் பள்ளி 1951–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

1956-ஆம் ஆண்டில் அழகப்பா உடற் கல்விக் கல் லூரி, மைசூர் அரசப் பிரமுகர் செய சாமராச உடை யார் அவர்களால் தொடங்கப்பட்டது. இவ்வாறு கலையும் அறிவியலும் இணைந்த பல்வகைக் கல்வி நிலையங்கள் படிப்படியே தோன்றி, இறுதியில் இன் றைய அழகப்பா பல்கலைக் கழகம் அமைவதற்கு வழி வகுத்தன. அழகப்பா கல்வி அறக்கட்டளை, தன் னிடமிருந்த கல்வி நிறுவனங்களிற் சிலவற்றையும், கல்லூரி விடுதிகளையும் மற்றைய உடைமைகளையும் பல்கலைக் கழகம் தோன்றுவதற்காகத் தமிழக அர சின்பால் ஒப்படைத்தது. தமிழக அரசும் இப்பல் கலைக் கழகம் நிறுவப்படுவதற்கான சட்டத்தை 1985-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாள் நிறை வேற்றியது.

அழகப்பா கலைக் கல்லூரி (முதுகலை வகுப்பு கள்), அழகப்பா கல்வியியல் கல்லூரி, அழகப்பா உடற் கல்விக் கல்லூரி ஆகியவற்றைக் கொண்டதாக இப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. இப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தர் டாக்டர் (திருமதி) இராதா தியாகராசன் ஆவார்.

கணிதம், இயற்பியல், வணிகவியல், தமிழ் ஆகிய முதுகலைத் துறைகளையும், கல்வித்துறை, உடற் கல்வித்துறை ஆகியவற்றையும் கொண்டது இப்பல் கலைக் கழகம். இத்துறைகள் அனைத்திலும் எம்.பில் (M. Phil) ஆய்வு வகுப்புகள் தொடங்குவதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கல்வித் துறை யிலும் உடற் கல்வித் துறையிலும் பிஎச்.டி. (Ph.D.) பட்ட வகுப்புகள் தொடங்குவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. மற்றும், புதிதாகத் தொழில் துறைசார் வேதியியற் கல்வியை (Industrial Chemistry)விரைவில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் ஆராயப்பட்டு வருகின்றன.

தென் மாநிலங்களில் உடற் கல்வித் துறையில் எம். பில்., பி.எச்டி., போன்ற பட்டங்களுக்கான ஆய்வுகளை மேற்கொள்ளும் முதல் பல்கலைக் கழக மாக அழகப்பா பல்கலைக் கழகம் விளங்கும். மேலும், இப் பல்கலைக் கழகத்தில் தென்னகத்தின் பழமை யான விளையாட்டுகள், தற்காப்புக் கலைகள் ஆகிய சிலம்பம், மற்போர், களரிப் பயிற்று போன்றவற்றில் ஆய்வுகள் நிகழ்த்தப்படும். யோகாசனம் மற்றும் பல் வகை வழி முறைப் பயிற்சிகள் (பிராணாயாமம்) ஆகியவற்றைக் குறித்த ஆய்வுகளும் இங்கு மேற் கொள்ளப்படவுள்ளன.

கல்வியியல் துறையில் எம்.பில்., பி.எச்டி., போன்ற பட்டங்களுக்கான ஆய்வுகள் விரைவில் தொடங்கப் படும். கல்வியியல் கல்லூரியுடன் நன்முறை மேல் நிலைப் பள்ளியும் இணைக்கப்பட்டுள்ள பல்கலைக்

கழகமாகத் தென் மாநிலங்களில் திகழும் பல்கலைக் கழகம் இது ஒன்றே.

தனக்கே உரிய தனித் தன்மைகள் பலவற்றைக் கொண்டே பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தின் பல்வகைப் பழங் கலைகள், பழக்க வழக்கங்கள், பழமொழிகள், பேச்சுவழக்கு, சமய நம்பிக்கைகள், கல்வெட்டுகள், நாட்டார் பாடல்கள், கதைகள், வரலாறு முதலியவற்றை நுணுகி ஆய்வதற்கான முயற்சிகள் இப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினால் மேற்கொள்ளப்படும். கம்பனின் பள்ளிப்படையாகிய நாட்டரசன் கோட்டையைத் தன்னுள் கொண்ட இம்மாவட்டத்தில் தொடர்ந்து பல்லாண்டுகளாகச் சிறப்புற நடத்தப்பட்டு வரும் கம்பன் விழாக்களுக்கு அணிசேர்க்கும் வகையில், தமிழ்த் துறை கம்பனைப் பற்றிய விரிந்த பல ஆய்வுகள் மேற்கொள்வதைத் தன் தலையாய குறிக்கோளாகக் கொள்ளும். இம் மாவட்டத்தின் அண்மைக்கால வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற மருதுபாண்டியர், வேதநாச்சியார் போன்றோரைக் குறித்த சிறப்பாய்வுகளும் வரலாற்றறிஞரின் துணையோடு நிகழ்த்தப் பெறும். இரா.தி.

**அழகம்மை ஆசிரியவிருத்தம்** கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களால் இயற்றப்பட்ட ஒரு சிற்றிலக்கியமாகும். இந்நூல் 10 கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்கள் கொண்டது; செய்யுள்கள் அனைத்தும் சந்தப்பாக்களாக அமைந்துள்ளன. கன்னியாகுமரி மாவட்டச் சுசீந்திரத்திற்கு அருகிலுள்ள தேரூரில் கோயில்கொண்டிலங்கும் அழகம்மை மீது பாடப்பெற்றது இத்துதி நூலாகும். தேரூர் இதன்கண் இரதபுரி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. 'தென்னிரத புரி வாழும் என்னரிய செல்வமே, தேவி அழகம்மை உமையே' என்பதனை ஈற்றடி மகுடமாகக் கொண்டு இதன் செய்யுள்கள் அமைந்துள்ளன. நூலின் தொடக்கத்தில் வெண்பாவிலமைந்த உதய மார்த்தாண்ட விநாயகர் துதி, நூலுக்குக் கடவுள் வாழ்த்தாக உள்ளது. தேரூர், பழனஞ் சூழ்ந்த மருத வளம் சான்று விளங்கும் தன்மையினைக் கவிமணி, 'பொங்கிடும் குரவையிட்டு எங்குமோரொலி செய்து, பொலிவாக மள்ளரெல்லாம், சேற்றுப் பெருக்கூடு நாற்றைப் புதைக்கின்ற செய்யகம் குழுமுமூராம் தென்னிரத புரி' என்று கவினுறக் காட்டியுள்ளார்.

**அழகர் ஆச்சாரியார்** திண்டுக்கல்லைச் சார்ந்த நாகல் நகர் என்னும் ஊரினர். இவர் வாழ்ந்த காலத்து வந்த விகாரி ஆண்டு தீய பலன்களைத் தரும் என்று பலரும் கூறிவந்ததாகத் தெரிகிறது. அக்கூற்றினை இவர் ஏற்கவில்லை. பலரும் கூறிய அக்கூற்றினை மறுத்து 'விகாரி வருடத்திற்குரிய விநோதக் கும்மி' என்ற ஒரு நூலினை எழுதியுள்ளார். இது கி.பி. 1900-ஆம் ஆண்டில் வெளிவந்த கும்மி நூலாகும். இச்செய்தியினால் இவர், கவிஞராகவும், காலத்தைக் கணித்துக் கூறும் அறிஞராகவும் விளங்கியமையை அறிய முடிகிறது. மு.த.

**அழகர் கோவில்** மதுரைக்கு அருகிலுள்ள வைணவத் திருப்பதிகளுள் ஒன்று. ஆண்டுதோறும் சித்திரை மாத முழுநிலவு நாளன்று காலையில் அழகர் கோயில் இறைவனான அழகர், மதுரை நகரத்தே வைகை யாற்றில் இறங்கும் விழாவினைக் காண இலட்சக் கணக்கான மக்கள் கூடுகிறார்கள். கி. பி. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணிப்பு, 'அழகர் ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சியைக் காண ஆண்டுதோறும் ஐந்துலட்சம் மக்கள் கூடுகிறார்கள்' என்று கூறுகிறது. இவர்களில் பெரும்பாலோர் கிராமப் புறத்து மக்களே. தமிழ்நாட்டின் மிகப்பெரிய திருவிழாக்களில் இதுவும் ஒன்று.

அழகர் கோயில் மதுரை நகருக்கு வடக்கு - வடகிழக்குத் திசையில் பன்னிரண்டு கல் தொலைவில் அழகர்மலை அடிவாரத்தில் நிலக்குறுங்கோடு (Latitude 10.5° பாகையிலும், நில நெடுங்கோடு (Longitude) 78 14° பாகையிலும் அமைந்துள்ளது. சங்க இலக்கியத்தில் இம்மலை 'இருங்குன்றம்' என வழங்கப்பட்டுள்ளது. சிலப்பதிகாரம் இம்மலையைத் 'திருமால் குன்றம்' எனக் கூறுகிறது. ஆழ்வார்களின் பாசுரங்கள் ''திருமாலிருஞ்சோலை'' எனக் குறிப்பிடும். 'அழகர்கோயில்' என்னும் பெயர் 'அதிர்குரல் சங்கத்து அழகர் தம் கோயில்' என்னும் நம்மாழ்வாரின் பாசுரத்திலிருந்து பெறப்பட்டதாகும். கல்வெட்டு ஒன்று இந்நிலப் பகுதியைக் ''கீழிரணியமுட்டநாடு'' என்று குறிக்கிறது.



அழகர்

ஏறத்தாழ 15 வேலிப் பரப்பில் அமைந்த கோட்டைக்குள் இக்கோயில் அமைந்துள்ளது. கோயில்

அமைந்துள்ள பகுதிக்கு 'உட்கோட்டை' அல்லது 'இரணியன் கோட்டை' என்பது பெயர். வெளிக் கோட்டை கி.பி. 14-ஆம் நூற்றாண்டில் மாவலி வாணாதிராயர் என்ற சிற்றரசர் வழியினரால் கட்டப் பட்டது. இன்று இக்கோட்டை அழிவுற்ற நிலையில் காணப்படுகிறது. மதுரை நாயக்கர் மன்னர் காலத்தில் இக்கோட்டைக்குள் ஒரு சிறு அரண்மனை இருந்தது; அதுவும் இப்போது அழிந்து விட்டது.

முதல் ஆழ்வார் மூவருள் ஒருவரான பூதத்தாழ் வாரும் பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோரும் தம் திவ்வியப் பாசு ரங்களில் இக்கோயிலைப் பாடியுள்ளனர். இக்கோயில் கி.பி. 6-ஆம் நூற்றாண்டு முதல் புகழ்பெற்ற கோயி லாக விளங்கி வருகிறது.

இக்கோயில் கருவறை வட்ட வடிவமானது. தமிழ்நாட்டுப் பழங்கோயில்களுள் அழகர் கோயில், காஞ்சி கரபுரீசுவரர் கோயில், நார்த்தாமலை விசயா லயச் சோழீச்சரம் ஆகிய மூன்றுமே வட்ட வடிவில் கருவறை உடையன. பொதுவாகக் கோயில் கரு வறைக்குத் தனிப்பெயர் இருப்பது வழக்கமில்லை. இக் கோயில் கருவறைக்கு 'நங்கள் குன்றம்' என்னும் பெயர் வழங்கி வருகிறது. கோயில் இறைவன் பெயர் 'கள்ளழகர்', 'சுந்தரராசப் பெருமாள்' என்பனவாகும். கருவறையில் கிழக்கு நோக்கித் தேவியருடன் நின்ற திருக்கோலத்தில் இறைவன் எழுந்தருளியுள்ளார். கையி லுள்ள சக்கரம் அணி நிலையில் (ஆத்தான சக்கரமாக) அமையாது, பயன்படுநிலையில் (பிரயோக சக்கரமாக) அமைந்துள்ளது. இது ஒரு விதிவிலக்கான செய்தி யாகும். தலமரம் சந்தன மரம். தீர்த்தம் சிலம்பாறு.

இக்கோயில் கோபுர வாசல் நிரந்தரமாக அடைக் கப்பட்டு அதன்மேல் பதினெட்டாம்படிக் கருப்பசாமி என்னும் சிறு தெய்வத்தின் கோயில் அமைக்கப்பட்டுள் ளது. கோயில் இறைவனின் அருட் களையினைத்திருட வந்த பதினெட்டுப் பேரை இக்கோயில் கோபுர வாயி லில் வெட்டிப் புதைத்திருப்பதால் கோபுர வாசல் அடைக்கப்பட்டதாகக் கூறுவர். இதற்கு வடக்கே உள்ள மற்றொரு வாசலே இப்போது பயன்படுத்தப் படுகிறது.

இத்தலம்பற்றிக் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு தொடங்கி எழுந்த சிற்றிலக்கியங்கள் பல. அழகர் அந்தாதி, அழகர் கலம்பகம், அழகர் கிள்ளை விடுதூது, அழகர் பிள்ளைத்தமிழ், அழகர் குறவஞ்சி, சோலை மலைக் குறவஞ்சி, திருமாலிருஞ்சோலைப் பிள்ளைத் தமிழ், அலங்காரர் மாலை ஆகியவை அச்சிடப்பட்ட வையாகும். இவை தவிர அழகர் வருகைப் பத்து எனும் ஆசிரியர் பெயர் அறியப்படாத சிறு நூலும் உள்ளது. சென்னையிலுள்ள கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் அழகர் மாலை, அழகர் அகவல் எனும் அச்சிடப்படாத இரு நூல்களும் உள்ளன. வருணிப்பு என்ற பெயரில் இத்தலத்திறைவன் மீது நாட்டுப்புற மக்கள் பாடும் பாடல்கள் பலவாகும். அழகர் வருணிப்பு, தசாவதார வருணிப்பு, கூர்மாவதாரன் வருணிப்பு, இராமாவதார வருணிப்பு என்னும் பெயரில் அவை சித்திரைத் திரு விழாவில் பாடப்படுகின்றன. இவை பெரும்பாலும் வாய்மொழிப் பாடல்களே.

பரிபாடல் காலத்தில் இத்தலத்தில் பலராம வழி பாடு சிறப்பாக நிகழ்ந்துள்ளது. "பாண்டிய நாட்டில் இந்திர வழிபாட்டிற்கு மாற்றாகப் பலராம வழிபாடு வளர்க்கப் பெற்றது. அதன் வழி உழவர்களை வைணவ நெறிக்குள் ஈர்க்கத் தமிழ்நாட்டு வைணவம் முயன்றுள்ளது", என்பர் ஆய்வாளர். தமிழ்நாட்டில் பலராம வழிபாடு நிகழ்ந்த இடமாக இக்கோயிலை மட்டுமே சான்றுடன் காட்ட முடியும்.

இக்கோயில் படியேற்ற மண்டபத்தில் அமைந் துள்ளயாளிச் சிற்பங்களும் திருக்கல்யாண மண்டபத் தில் அமைந்துள்ள நரசிம்மர், வேணுகோபாலர், பூமி வராகர், இரதி மன்மதன் சிற்பங்களும் கலையழகு மிகுந்தவை. வசந்த மண்டபத்தில் இராமாயணக் காட்சிகள் மேற்கூரை ஓவியமாகத் தீட்டப்பட்டுக் கி.பி. 17-ஆம் நூற்றாண்டுத் தமிழ் எழுத்துகளில் விளக்கத்துடன் அமைந்துள்ளன. இந்த ஓவியங்கள் திருமலை நாயக்கர் காலத்தனவாகும்.

முற்றுப்பெறாத இராயகோபுரம் இக்கோயிலுக் குத் தெற்கில் அமைந்துள்ளது. தமிழிலும் வடமொழி யிலுமாக இக்கோயிலில் 123 கல்வெட்டுகள் படி யெடுக்கப் பெற்றுள்ளன. கருவறையைச் சுற்றிக் கல் வெட்டுகள் ஏதும் காணப்படவில்லை. கல்வெட்டு களின் மூலம் வெளிக்கோட்டைப் பகுதியில் 'சாமந்த நாராயணச் சதுர்வேதிமங்கலம்' என்னும் அக்கிர காரம் இருந்ததையும், இக்கோயில் தேரின் பெயர் 'அமைந்த நாராயணன்' என்பதையும் அறிய முடி கிறது. நம்மாழ்வார், ஆண்டாள் ஆகியோர்தம் பாசுரங்கள், இக்கோயிற் கல்வெட்டுகளில் முறையே சடகோபன் பாட்டு', 'கோதைப் பாட்டு என்று குறிப் பிடப்பட்டுள்ளன.

அழகர் கோயில் சித்திரைத் திருவிழாவினால் புகழ்பெற்ற கோயிலாகும். மதுரை மன்னர் திருமலை நாயக்கர் காலத்திற்கு முன் சித்திரைத் திருவிழாவில் இக்கோயில் இறைவன், சோழவந்தானுக்கு அருகில் உள்ள தேனூரில்தான் வைகையாற்றில் இறங்கித் தலபுராணக் கதையின்படி மண்டூக முனிவருக்குக் காட்சி அளிப்பது வழக்கம். வைணவரான மன்னர் திரு மலை நாயக்கரே தம் ஆட்சிக்காலத்தில் சைவ, வைணவ ஒற்றுமை கருதி இத்திருவிழாவினை மதுரைக்கு

மாற்றி அமைத்தார். இதற்காகவே மாசி மாதத்தில் நடைபெற்று வந்த மதுரை மீனாட்சி அம்மன் திரு மணம் திருத்தேர் விழாக்களையும் சித்திரை மாதத் திற்கு மாற்றி அமைத்தார். இன்றும் மதுரையில் மீனாட்சி அம்மன் திருமண ஊர்வலமும் திருத்தேர் விழாவும் சித்திரை வீதியில் நடைபெறாது மாசி வீதி யிலேயே நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பொழுது அழகர் ஆற்றிலிறங்கும் சித்திரை முழுநிலவு நாளுக்கு இரண்டு நாட்கள் முன்னதாக மதுரை மீனாட்சி அம்மன் திருமணவிழா நடைபெறு கிறது. இது குறித்து மக்களிடையே பரவலாக ஒரு கதை வழங்கி வருகிறது. ''தங்கையான மீனாட்சி அம்மன் திருமணத்திற்காகவே அண்ணனாகிய அழகர் சீர்வரிசைகளுடன் அழகர் கோயிலிலிருந்து புறப்பட்டு வருகிறார். அவர் வைகை ஆற்றிலிறங்கியவுடன் தங்கை மீனாட்சியின் திருமணம் இரண்டு நாள்களுக்கு முன்னரே அவர் இல்லாமல் நடந்துவிட்ட செய்தி அவருக்குத் தெரிகிறது. உடனே மதுரைக்குள் வராமல் சினங் கொண்டு கிழக்கே வண்டியூர் நோக்கித் திரும்பி விடுகிறார். அங்குத் தம் காதலியான துலுக்க நாச்சியா ருடன் தங்கிவிட்டு மலைக்குத் திரும்பி விடுகிறார்'' என்பது கதையாகும். இக்கதைக்குப் புராண வரலாற் றுச் சான்றுகள் இல்லை. என்றாலும் மக்கள் இக் கதையினை நம்புகின்றனர்.

அழகர் கோயில் சித்திரைத் திருவிழா மேலோர் மரபுகளும் நாட்டுப்புற மரபுகளும் (Elites and Folk Tradition) கலந்து விளங்கும் திருவிழாவாகும். இதுவே, இத்திருவிழாவின் தனிப்பெருமை ஆகும். இத்திருவிழாவில் அழகர் மதுரை மாவட்டம் மேலூர்ப் பகுதியில் வாழ்கிற 'மேலைநாட்டுக் கள்ளர்' என்னும் இனத்தாரின் ஆடையணிகளோடு 'கள்ளர் திருக்கோ லம்' பூண்டு ஊர்வலம் வருவார். கையில் வளரி எனப்படும் வளைதடி, சாட்டை, காதுகளில் வண்டக் கடுக்கன், தலையில் கொண்டை இவற்றோடு கள்ளழ கராக (கள்ளர் அழகராக) சித்திரைத் திருவிழாவில் மூன்றாம் திருநாளன்று அழகர்கோயிலிலிருந்துபுறப் பட்டு, மீண்டும் ஒன்பதாம் திருநாளன்று கோயிலுக் குத் திரும்புவார். அழகர் கோயிலிலிருந்து இறைவன் வண்டியூர் சென்று திரும்பும் தூரம் ஏறத்தாழ முப்பது கல் ஆகும். திருவிழாவில் உச்சக்கட்டமான அழகர் வைகை ஆற்றில் இறங்கும் நிகழ்ச்சி ஐந்தாம் திரு நாளன்று (சித்திரைத் திங்கள் நிறைமதியின்) காலை யில் நிகழும்.

இத்திருவிழாவில் நாட்டுப்புற அடியார்களில் சிலர் போர்வீரரைப் போன்று வேடம் பூண்டு ஆட்டுத் தோலால் செய்த தோற்பைகளில் தண்ணீரை நிரப்பி ஊர்வலப் பாதையில் அழகர் மீது பீய்ச்சி அடித்துக் கொண்டே வருவர். வேறு சிலர், சாமியாடியாக வேட மிட்டு மிகக் கனமான திரிகளை எரியவிட்டுப் பிடித்துக் கொண்டு ஆடி வருவர். இவர்கள் திரியாட்டக் காரர்கள் எனப்படுவர். மற்றுஞ் சிலர் சாமியாடி வேட மிட்டுத் தம்மைச் சாட்டை கொண்டு அடித்துக் கொண்டு வருவர். இவர்கள் சில நாட்கள் விரத மிருந்து மார்பில் துளசிமாலை அணிந்து, நெற்றியி லும் மார்பிலும் திருநாமமிட்டு ஆடி வருவர். கி.பி. 1979-இல் நடத்தப்பட்ட ஒரு கள ஆய்வு மூலம் இவ் வாறு வேடமிட்டு ஆடுவோரில் கோனார், அரிசனர், சேர்வை ஆகிய சாதியினர் முறையே 34, 20, 16, விழுக்காட்டினராக இதில் பங்கு பெற்றனர் என்ப தனை அறிய முடிந்தது. தேவர், பிள்ளை, நாயுடு, நாயக்கர், ஆசாரி, செட்டியார், வேளார் (குயவர்) குறவர், சக்கிலியர் ஆகிய சாதியினரும் இதில் பங்கு பெறுவர். இக்கோயிலை வழிபடும் நாட்டுப்புற அடி யார்கள் பெரும்பாலும் மதுரை, சிவகங்கை, முது குளத்தூர், அருப்புக்கோட்டை, வட்டங்களிலிருந்தே அதிக அளவில் வருகின்றனர் என்பது கள ஆய்வின் மூலம் தெரிந்தது. தமிழ் நாட்டில் தாழ்த்தப்பட்ட மக்களை அதிகமாக ஈர்த்த பெருந்தெய்வக் கோயில் இதுவாகுமென்று அழகர் கோயிலைக் கூறலாம்.

வைணவ ஆசாரியர்களான இராமானுசர், கூரத் தாழ்வான், திருமாலையாண்டான் ஆகியோர் இக் கோயிலோடு நெருங்கிய தொடர்புடையவர்களாவர். திருமாலையாண்டான் வழியினர் இக்கோயில் புரோ கிதராகக் கருதப்படுகின்றனர். கூரத்தாழ்வார் அழ கர் மீது 'சுந்தரபா கூத்தவம்' என்னும் நூலை வட மொழியில் பாடியுள்ளார்.

இன்றைய முகவை மாவட்டத்தின் சில பகுதி களை ஆண்டு வந்த மாவலி வாணாதிராயர் என்னும் குறுநில மன்னர் வழியினர் இக்கோயிலோடு நெருங் கிய தொடர்புடையராவர். இவர்களுடைய கல் வெட்டுகளுள் சில 'அழகர் திருவுள்ளம்' என்பதையே மங்கலச் சொல்லாகக் கொண்டு தொடங்குகின்றன. திருமாலிருஞ் சோலை நின்றான், சுந்தரத் தோளுடை யான் என்னும் பெயர்களை இவ்வழியினர் பலமுறை சூட்டிக்கொண்டுள்ளனர். இக்கோயிலில் உள்ள ஒரு கல்திரிகையிலும் வெள்ளியால் ஆன ஒரு கலசப் பானையிலும் 'திருமாலிருஞ் சோலை நின்றான்' என் னும் பெயர் காணப்படுகிறது. கி.பி.1464-இல் இம் மன்னனின் ஆணைப்படி இக்கோயிலில் 'உபானம் முதல் தூபி வரை'த்திருப்பணி செய்யப்பட்டதாக ஒரு கல்வெட்டால் அறிகிறோம். கி.பி.1757-இல் ஐதர் அலி இக்கோயிலில் அமைந்த கோட்டைப் பகுதியைச் சில நாட்கள், கைப்பற்றி இருந்தார் என்பர். நாட்டுப்புற மக்கள் தரும் கால்நடைகளும் பல்வகைத் தானியங் களுமே இக்கோயிலின் மிகப்பெரிய வருவாயாகும். இத்தலத்து இறைவன் நெடுங்காலமாகவே கால்நடை

வளர்ப்போர், உழுதொழில் செய்வோர் ஆகியோரின் தெய்வமாகக் கருதப்பட்டார் என்பது அறிஞர்கள் கருத்தாகும். தொ.ப.

**அழகர் மலை** மதுரையிலிருந்து வடகிழக்கில் 18 கி.மீ. தொலைவில் உள்ளது. இதன் அடிவாரத்தில் பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், பேயாழ்வார், பூதத்தாழ்வார், நம்மாழ்வார் ஆகியோரால் மங்களா சாசனம் பெற்ற வைணவத் தலம் உள்ளது. இங்குத் திருமால் நின்ற கோலத்தில் உள்ளார். இறைவன் அழகர், மாலலங்காரர் எனப்படுகிறார். இறைவி சுந்தரவல்லி நாச்சியார். திருத்தல மரம் சந்தன மரம். தீர்த்தம் சிலம்பாறு. இதனைச் சிற்றாறு எனவும் நூபுர கங்கை எனவும் அழைப்பர். வாயில் அருகில் பதினெட்டாம்படிக் கருப்பர் கோயில் உள்ளது. மலயத்துவச பாண்டியனுக்கும் தரும தேவதைக்கும் இறைவன் இங்குக் காட்சியளித்தார் என்பது கூறப்படுகிறது.

அழகர் மலை என்பதன் இலக்கியப் பெயர் பழமுதிர் சோலை. சிலப்பதிகாரம் இப்புனிதத் தலத்தைத் 'திருமால் குன்றம்' எனச் சுட்டும். திருமாலிருஞ் சோலை என்னும் பெயரும் இதற்குண்டு.

இது சமண முனிவர்களின் வாழ்விடமாகவும் பண்டு திகழ்ந்தது. இம்மலையில் இயற்கைக் குகைத் தளம் ஒன்றுள்ளது. இக்குகை கிடாரிப்பட்டி எனும் சிற்றூரிலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குக் கற்படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. சமணப் பெரியார் பலர் இங்கு உறைந்தனர். இதன் அருகில் சுனை ஒன்றும் உள்ளது. பாறையின் முகப்பில் கி.மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட பண்டைய கல்வெட்டு உள்ளது. சமணப் படுக்கையின் ஓரத்திலும் கி.பி. 4, 5-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டு பொறிக்கப் பட்டுள்ளது. இக்கல்வெட்டில் பொன் வணிகன், உப்பு வணிகன், அறுவை வணிகன், பணித (சர்க்கரை) வணிகன் முதலானோர் குறிக்கப்பட்டிருத்தலால் இவர்கள் சமண சமயத்தினராகவோ சமண சமயத்தை ஆதரித்தவர்களாகவோ இருந்திருக்கலாம். இன்றும் பயணியர் பலர் நாள்தோறும் அழகர் மலைக்கு வருகை புரிகின்றனர்.

**அழகரந்தாதி,** அட்டப்பிரபந்தம் எனப் பெயரிய வைணவ இலக்கியத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள ஒரு சிற்றிலக்கியம். அழகிய மணவாள தாசர் எனப்படும் பிள்ளைப் பெருமாளையங்காரால் இயற்றப்பட்டது. கி.பி.12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய இந்நூல், அந்தாதியாக அமைக்கப்பட்ட 100 கட்டளைக் கலித்துறைச் செய்யுள்களாலாகியது. 'நீராழி வண்ணனை' எனத் தொடங்கி 'நீர்மையுமே' என மண்டலித்து முடிகிறது. திருமாலிருஞ் சோலையில் கோயில் கொண்டுள்ள அழகர் மீது பாடப்பெற்ற இந்நூல் அகத்துறை நலங்கனிந்த பல பாடல்களைக் கொண்டுள்ளது. பாட்டுடைத் தலைவனாகிய திருமாலைச் 'சமயிகள் ஆய்ந்த வண்ணம் உள இலையாய் உருவாய் அருவாய ஒரு முதலே' என்று விளித்துப் போற்றுவது சிறப்பாக உள்ளது.

**அழகரை** என்னும் சிற்றூர் திருச்சி மாவட்டத்தில் உள்ளது. திருச்சி-சேலம் நெடுஞ்சாலையில், திருச்சியிலிருந்து 46 கிலோமீட்டர் தொலைவில் மணல்மேடு என்னும் கிராமம் உள்ளது. மணல்மேட்டிற்கு வடக்கே ஒரு கி.மீ. தொலைவில் அழகரை என்ற பழமையான ஊர் அமைந்துள்ளது. இச்சிற்றூருக்குத் தெற்கில் காவிரியாறு ஓடுகிறது. இவ்வூரில் உள்ள பெரிய கரை அழகிய கரையாக இருந்திருக்க வேண்டும். நீரலையைத் தடுத்து நிற்கும் கரையாக இவ்வூர் அமைந்திருந்ததால் இவ்வூரினுக்கு அழகரை என்னும் பெயர் ஏற்பட்டதென்று செவிவழிச் செய்திகள் கூறுகின்றன.

அழகரையில் உள்ள சிவன் கோயில் சோமசுந்தரர் ஆலயம் எனப்படும். இரண்டு தமிழ்க் கல்வெட்டுகளும் ஒரு கன்னடக் கல்வெட்டும் இக்கோயிலில் உள்ளன. தமிழ்க் கல்வெட்டுகளுள் ஒன்று, இராசாதிராசன் காலத்தையும் மற்றொன்று மூன்றாம் குலோத்துங்கன் காலத்தையும் சேர்ந்தனவாகும். கன்னடக் கல்வெட்டு சதாசிவராயர் என்ற விசயநகர மன்னன் காலத்தைச் சேர்ந்ததாகும்.

அழகரையில் உள்ள மாந்தோப்பிற்குள் ஒன்றும் ஊரின் மையப் பகுதியில் ஒன்றுமாக இரண்டு மணல் மேடுகள் உள்ளன. மையப் பகுதியில் அமைந்திருக்கும் மேடு உப்பிலியன் மேடு என்று வழங்கப்படுகிறது.



சுடுமண் பொம்மைகள்

இந்த மேட்டில் நூறு ஆண்டுகளுக்கு முன் வரையில் உப்பிலியர் என்ற சமூகத்தினர் வாழ்ந்தனர்.

மேற்குறிப்பிட்ட மேடுகளிலும் அழகரையின் மற்றப் பகுதிகளின் மேற்பரப்பிலும் கருப்பு சிவப்பு ஓடுகள், காவி பூசப்பட்டு வண்ணம் தீட்டப்பட்ட ஓடுகள், சிவப்புச் பூச்சுள்ள ஓடுகள் போன்ற பழங்காலத்து மட்பாண்டத் துண்டுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன.

சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினர் 1964-இல் அழகரையில் அகழாய்வு மேற்கொண்டனர். இவ்வூரில் ஐந்து அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. அழகரை மூன்று வகையான கலைப் பண்பாட்டுக் கூறுகளைப் பெற்றிருந்தது என்பது அகழாய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் பண்பாட்டுக் காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு வரையிலும், இரண்டாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு வரையிலும், மூன்றாம் பண்பாட்டுக் காலம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு வரையிலும் செல்வாக்குடன் இருந்துள்ளது.

முதல் பண்பாட்டுக் காலத்தில் கருப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், கருப்பு மட்பாண்டங்கள், காவிக் கலவை பூசப்பட்டு வண்ணந் தீட்டப்பட்ட மட்பாண்டங்கள், சங்கு வளையல்கள், சங்கு மணிகள், பசை மணிகள் போன்றவை கிடைத்துள்ளன. அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட மட்பாண்டங்களில் ஐம்பதுக்கு மேற்பட்ட கீறல் குறிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தக் குறிகளுள் பல, இந்தியாவின் பல்வேறு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மட்பாண்டங்களில் தென்படாதவைகளாக உள்ளன.

இரண்டாவது பண்பாட்டுக் காலத்தில் பளபளப்பாக்கப்பட்ட சிவப்பு மட்பாண்டங்களும், முதலாம் பண்பாட்டுக் காலப் பிரிவில் கிடைத்த கருப்பு-சிவப்பு மட்பாண்டங்களில் சிலவும், கண்ணாடியாலும் சுடுமண்ணாலும் ஆக்கப்பட்ட அரும் பொருள்கள் பலவும் கிடைத்துள்ளன.

மூன்றாம் பண்பாட்டுக் காலத்தில் நேர்த்தியாக வனையப்பட்டுச் சுடப்படாத சிவப்பு மட்பாண்டங்கள் பேரெண்ணிக்கையில் கிடைத்துள்ளன. இம்மட்பாண்டங்களுள் சிலவற்றில் தனித்தன்மை வாய்ந்த சிவப்புப் பூச்சுகள் பூசப்பட்டுள்ளன. இவையன்றிக் கண்ணாடி மற்றும் சுடுமண்ணால் செய்யப்பட்ட அரும் பொருள்கள் பலவும் கிடைத்துள்ளன. அ.பொ.

**அழகன் குளம்** இராமநாதபுரம் மாவட்டத்தில் கடற்கரை ஓரத்தில் உள்ள ஓர் ஊர். இராமநாதபுரத்தில் இருந்து 28 கி.மீ. தூரத்தில் வைகை ஆறு வங்கக் கடலோடு கலக்கும் இடத்திற்கு அண்மையில் இந்த ஊர் உள்ளது. அழகன் குளத்திற்கு மேற்குப் பக்கத்தில் உள்ள 'கோட்டைமேடு' என்னும் பகுதியில் தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் நடத்திய கள ஆய்வுகள், இங்குப் புதைந்திருக்கும் உரோமானியக் குடியிருப்புகள் குறித்த செய்திகளை வெளிப்படுத்தியுள்ளன. இங்குள்ள கோட்டைமேட்டின் தென்பகுதி ஓரளவு சமன் செய்யப்பட்டு அதில், ஓர் உயர்நிலைப் பள்ளி கட்டப்பட்டுள்ளது. இதனால், சிதறிய தொல் பொருள்கள் மிகுந்த அளவில் இங்குக் காணக் கிடக்கின்றன.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தமிழ் நாட்டிற்கும் உரோமானிய நாட்டிற்கும் இடையே நிலவி வந்த வாணிகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பினை உறுதிப்படுத்தும் மிகச் சிறந்த சான்றுகளைத் தந்துள்ள அரிக்கமேட்டிற்கு இணையான சான்றுகளை அழகன் குளமும் தருகிறது. சங்க இலக்கியத்தில் குறிக்கப் பெறும் யவனர்கள் என்று அழைக்கப்பட்ட உரோமானிய நாட்டினர், அந்நாளில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் குடியிருந்தனர். அவற்றுள் அரிக்கமேடு, அழகன் குளம் இரண்டும் மிகச் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. 'அழகன்' என்ற அரசன் வாழ்ந்த பகுதியானதால் இவ்வூர் 'அழகன் குளம்' என்று பிற்காலத்தில் சொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

உயர்நிலைப் பள்ளிக் கட்டடத்திற்கு எனச் சமன் செய்யப்பட்ட பகுதிகளில் தொன்மையான கட்டடப் பகுதிகள் சில வெளிப்படுத்தப் பட்டுள்ளன. மேலும் 38 × 23 × 6 செ.மீ. அளவுள்ள செங்கற்கள் இங்குப் பெருமளவில் கிடைக்கின்றன. இங்கு நடத்தப்பெற்ற மேற்பரப்புக் கள ஆய்வின்போது உரோமானிய நாட்டின் சிறப்பான மட்பாண்ட ஓடுகளான அரிட்டைன், ரௌலட்டட் போன்றவை பெருமளவில் கிடைத்துள்ளன. இவையன்றி, அந்நாட்டிலிருந்து மது கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட ஆம்போரா எனப்படும் கூர் முனை மதுக் குடங்களும் கிடைத்துள்ளன. கோட்டைமேடு பகுதியை ஒட்டிக் கடற்கரை ஓரம் உள்ள பகுதியில் பெருமளவில் சீனத்துப் பானை ஓடுகள் காணப்படுகின்றன. மேலும் இந்தப் பகுதியில் அளவிறந்த பெரிய சங்குகளும் வளையலுக்காக அறுக்கப்பட்ட சங்குகளும் சங்கு வளையல்களும் மதிப்பு வாய்ந்த பல வண்ண மணிகள், கற்கள் போன்றவைகளும் காணப்படுகின்றன.

இப்பகுதியில் மண்ணைத் தோண்டியபோதும் மழை நீரால் ஏற்பட்ட அரிப்பின் போதும் கிடைத்த தங்கக் காசுகளைப் பெருமளவில் இவ்வூர் மக்கள் சேர்ந்துள்ளனர். இலங்கை அரசன் விக்கிரம பாகு

வின் செப்புக்காசு, முதலாம் இராசராச சோழனின் இலங்கைக் காசுகள், விசயநகரக் காசுகள், கி.பி. 1735 முதல் 1791 வரையிலான தென்மார்க்கு (Denmark) நாட்டுக் காசுகள் ஆகியவை இங்குக் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அக்காலத்தில் தமிழகத்திலிருந்து எற்றுமதியான பொருள்களுள் சங்கு வளையல்கள் சிறப்பான இடம் பெறுகின்றன. சங்க காலப் பாண்டியரின் துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்த கொற்கை, சங்கு வளையல்களின் ஏற்றுமதியில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்ந்துள்ளது. அழகன் குளம் கொற்கைக்கு அருகிலேயே உள்ளதால் இப்பகுதியிலும் சங்கு வளையல் செய்யும் தொழிற்கூடம் இருந்திருக்க வேண்டும்.

இங்குள்ள கடற்கரை, தோணிகள் வந்து தங்குவதற்கு ஏற்றவாறு அமைந்துள்ளது. இங்குப் பெரும்பாலான நாட்களில் கடலில் அலை ஏதுமின்றி அமைதியாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இவ்வூருக்குப் பக்கத்தில் உள்ள ஆற்றங்கரை என்ற ஊருக்கருகில் வைகை ஆறு கடலோடு கலக்கிறது. இதனால் உள்நாட்டுப் பகுதிகளுடன் படகுப் போக்குவரத்து நடத்தவும் இந்த இடம் ஏற்றதாகத் திகழ்ந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. எனவே அழகன்குளம் சங்க காலம் முதல் தொடர்ந்து சிறப்பான இடத்தைப் பெற்று வந்துள்ள ஊராகும். பொ.அ.

**அழகன் பெருமாள் குலசேகரன் அல்லது சீவல்லபன் (கி.பி. 1430 – 1473)** திருநெல்வேலிப் பகுதியில் ஆட்சிபுரிந்த பாண்டியன். அரிகேசரி பராக்கிரம பாண்டியனுடன் இவனும் வீரபாண்டியன், மாறவர்மன் விக்கிரம பாண்டியன், சடிலவர்மன் குலோத்துங்க பாண்டியன் ஆகியோரும் இணைந்து ஆட்சிபுரிந்தனர். அரிகேசரி பராக்கிரமனின் தம்பியான இவன், வரதுங்கனுடன் இணைந்து புதுக் கோட்டைச் செப்பேடுகளை வெளியிட்டான். இவனது கல்வெட்டுகள், திருநெல்வேலி செங்கோட்டைப் பகுதிகளில் உள்ளன. தன் அண்ணனால் தொடங்கப்பெற்ற தென்காசிக் கோயில் திருப்பணியை இவன் முற்றுப்பெறச் செய்தான். இக்கோயிலின் வடபுறம் விட்டுணு கோயில் ஒன்றையும் கட்டுவித்தான்.

**அழகிய சிற்றம்பலக் கவிராயர்** கி.பி. 17–ஆம் நூற்றாண்டில் திருமலை நாயக்கர் காலத்தில் வாழ்ந்த புலவர். இவர், வெங்காளப்ப நாயக்கர் குறவஞ்சி, தளசிங்க மாலை எனும் இருநூல்களை இயற்றியுள்ளார். இவற்றுள் வெங்காளப்ப நாயக்கர் குறவஞ்சி என்பது, திருமலை நாயக்கர் ஆட்சிக்குட்பட்ட சிற்றூர்த் தலைவன் வெங்காளப்ப நாயக்கனைப் பாராட்டும் நூல். இந்நூலின் கவித்திறத்தைப் பாராட்டி, நூலின் தலைவனான வெங்காளப்ப நாயக்கன், திருச்சியை அடுத்த மிதிலைப்பட்டி என்ற ஊரைக் கி.பி. 1648-இல் முற்றூட்டாகத் தந்தனன். தொண்டை நாட்டுச் செங்கற்பட்டைச் சார்ந்த மாமல்லபுரத்தைச் சொந்த ஊராகக் கொண்ட கவிராயர், அது முதற் கொண்டு மிதிலைப்பட்டியில் வாழ்ந்து வந்தார். கவிராயரின் பரம்பரையினர் இன்றும் மிதிலைப்பட்டியில் வாழ்ந்து வருகின்றனர். இவர் சைவ சமயத்தினர்.

இக்காலத்தில் இராமநாதபுரத்தை ஆண்டுவந்த தளவாய் சேதுபதி இறக்கவே, விசய இரகுநாத சேதுபதி அரியணை ஏறினார். இரகுநாத சேதுபதியின் வள்ளன்மையை அறிந்த சிற்றம்பலக் கவிராயர், 'தளசிங்கமாலை' பாடினார். இது இரகுநாத சேதுபதியின் புகழினை உரைப்பதாகும்.

கவிராயர் மிதிலைப்பட்டியைப் பெற்ற வரலாறு குறித்துக் கருத்து வேறுபாடு உண்டு. திரு. ரா. இராகவையங்கார் போன்றோர், 'தளசிங்க மாலை' யின் கவித்திறத்தில் இன்புற்று இச்சேதுபதி மன்னனே மிதிலைப்பட்டியைக் கவிராயருக்கு முற்றூட்டாக அளித்தான் என்பர்.

கவிராயரிடம் எண்ணற்ற ஓலைச் சுவடிகள் இருந்தனவென்றும், அவற்றுள் பல, டாக்டர் உ.வே சாமிநாதையர் அவர்கட்குப் பயன்பட்டனவென்றும் கூறுவர். இவர்தம் இரு நூல்களுள் வெங்காளப்ப நாயக்கர் குறவஞ்சி மட்டுமே முழுமையாகக் கிடைக்கிறது. தளசிங்க மாலையின் சில செய்யுள்கள் செந்தமிழ், தொகுதி-6-இல் வெளியாகியுள்ளன. இப்பாடல்கள் கட்டளைக் கலித்துறையில் இயன்றனவாகும். சி.க.

**அழகிய சிற்றம்பலத் தம்பிரான்** தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டம் அம்பர் மாகாளம் என்னும் ஊரினர். இவர் அழகிய சிற்றம்பல தேசிகர் என்றும் அழைக்கப்பட்டார். இவ்வூர் இப்போது திருமானம் என்று வழங்கப்படுகிறது. இவர், தருமபுர ஆதினத்து எட்டாவது பட்டத்துக் குருமூர்த்தியாக விளங்கிய சுவாமிகளைக் குருவாகக் கொண்டு அம்மடத்தின் தம்பிரானாக இருந்தார்.

இவர் சுவர்க்கபுர மடத்தை நிறுவினார். இவர்தம் பெருமையை அறிந்த தஞ்சை மன்னர் இரண்டாவது பாபு சாகிபு ஏகோசி என்பவர், இவருககு நிலங்கள் மானியமாக வழங்கியுள்ளார். அரசி சுசானா பாய், இவர் நிட்டையிலிருக்கும் கோலத்தைக் கண்டு அருள் பெற்றதாகக் கனவு கண்டார் எனவும் சொர்க்கபுரம் வந்து இவரை நேரில் கண்டு வணங்கிச் சில மானியங்களை விடுத்துச் சென்றார் எனவும் வரலாறு கூறப்படுகிறது.

இவர் சிறந்த தமிழ்ப் புலமையுடையவராகத் திகழ்ந்தார். இவர் இயற்றிய நூல்கள் வருமாறு:

திரிபதார்த்த தீபம், அறிவானந்த சமுத்திரம், அருட்பாமாலை, திருவுசாத்தானத் தோத்திரம், வினாவுரை, சித்தாந்த நிச்சயம், அனுட்டான விதி. இவர், தம் ஞானாசிரியர் மீது 'கிளி விடு தூது' என்ற நூலினையும் இயற்றியுள்ளார். இவரது காலம் கி.பி. 18–ஆம் நூற்றாண்டு ஆகும். வி.பா.

**அழகிய சொக்கநாதப் பிள்ளை** கி.பி. 19–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். இவர் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள தச்சநல்லூர் என்னும் ஊரினர். சைவ வேளாள மரபினைச் சார்ந்த இவர் தந்தை வன்னியப்பப் பிள்ளை. இளமையில் தம் தந்தை யாரிடமும் சிறிய தந்தையாரான கணபதி வாத்தியாரிடமும் கல்வி பயின்றார். சுவைபட உரையாடுவதில் வல்லவர். இவர் முனிசீப்பு நீதிமன்றத்தில் பிரதி எழுதும் பணி மேற்கொண்டிருந்தார். மாதம் பத்து ரூபாய் ஊதியமாகப் பெற்றார். தங்கள் வருமானம் எவ்வளவு என வினவுவார்க்கு, 'எனக்கு மாசம்பத்து வந்துகொண்டிருக்கிறது' என்று நயம்பட மொழிவார். மாசம் பத்து எனவும் மா சம்பத்து எனவும் இத்தொடர் இருபொருள்படும். இராசவல்லிபுரம் முத்துச்சாமிப் பிள்ளை என்னும் பெருஞ் செல்வரோடு நட்பு மிகக்கொண்டிருந்தார்.

இவர் பல்வகைச் சிற்றிலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். அவை வருமாறு:

இராசை மாநகரில் வீற்றிருக்கும் கோமதி அம்மை பேரில் பதிகம், முத்துசாமிப்பிள்ளை காதற்பிரபந்தம், காந்திமதியம்மை பேரில் கும்மிப் பாடல், காந்திமதியம்மை பேரில் கீர்த்தனை, காந்திமதியம்மை பேரில் இன்னிசைப்பா, மண்டல மாலை, கிருட்டிணன் கும்மி முதலானவை, கோதை கும்மிப்பாடல்கள், சீவில்லிபுத்தூர்க் கோதையந்தாதி, கோமதியம்மை இன்னிசை மாலை, சிங்கார கவிதாமஞ்சரி, காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ், அனவரததானநாதர் பதிகம், காந்திமதியம்மை பதிகம், காந்திமதியம்மை கலித்துறையந்தாதி, நெல்லை நாயக மாலை, சங்கர நயினார் கோயில் அந்தாதி. இராசை மாநகர் என்பது சங்கர நயினார் கோயிலின் வேறு பெயராகும். முத்துசாமிப் பிள்ளைக் காதற்பிரபந்தம் 860 வெண்செந்துறைகளால் ஆகியது. இடையிடையே சிறுதலைப்புகளைக் கொண்டது. கோதை கும்மிப் பாடல்கள் என்னும் நூல் ஆண்டாளைப் பற்றியது. இராசவல்லிபுரம் முத்துச் சாமிப்பிள்ளை மீதுகண்ணிகள், பதங்கள் பலபாடியுள்ளார். இராசை மாநகர்க் கோமதியம்மை மீது பாடப்பட்ட பதிகத்திலுள்ள 11 செய்யுள்களும், 'மணவாளரைக் கருதியருள் சேர் தவப் பெண்ணென வருகோமதிப்பெணுமையே' என்று முடிந்துள்ளன.

**அழகிய நம்பி** கி.பி. 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர்; வைணவ சமயத்தவர். இவர் அழகிய நம்பிநாதர் என்றும் அழைக்கப் பெற்றார். வைணவ ஆசாரியர்களது வரலாற்றை விரிவான நூலாகப் பாடியுள்ளார். இந்நூலுக்கு வைணவ "குரு பரம்பரை" என்று பெயரிட்டுள்ளார். இது இரண்டு காண்டங்களாக அமைந்துள்ளது.

இந்நூல் 2965 பாடல்களைக் கொண்டது என்னும் குறிப்பு, நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ளது. ஒவ்வோர் உட்பிரிவும் அதற்குரிய பாடல்களும் பற்றிக் குறிப்பிடும்போது 2961 பாடல்கள் அடங்கியுள்ளதாகக் குறிக்கப் பெற்றுள்ளது. இதனால் பாடல் எண்ணிக்கையில் குழப்பம் உள்ளமை புலப்படும். மு.த.

**அழகிய மணவாளச் சீயர்** கி.பி. 12–ஆம் நூற்றாண்டில் திருவரங்கத்தில் வாழ்ந்தவர். பெரியவாச்சான் பிள்ளையின் மாணவரான இவர் ஒரு துறவி. சமயக் கல்வி சிறந்து, பரசமய கோளரியாக விளங்கியதால் 'வாதிகேசரி அழகிய மணவாளச் சீயர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். இவர் 'திருவாய்மொழிக்குப் பன்னீராயிரப்படி என்னும் விளக்கவுரையும் திருவிருத்தத்திற்குத் திருவிருத்த வியாக்கியானம் என்னும் விளக்கவுரையும் எழுதியுள்ளார். 'தத்துவ தீபப் பிரகாசம்', 'சாரீர கைக் கண்டியம்', 'பகவத் கீதை வெண்பா' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**அழகிய மணவாளதாசர்** என்பது தமிழ் மொழியில் அட்டப்பிரபந்தம் என்னும் பெயர் கொண்ட வைணவச் சிற்றிலக்கியத் தொகுப்பினை இயற்றிய பிள்ளைப் பெருமாள் ஐயங்காரின் வேறு பெயராகும். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், சோழநாட்டில் திருமங்கை என்னும் ஊரில், தென்கலை வைணவ அந்தண மரபில் தோன்றினார். இளமையில் தமிழ் வடமொழி நூல்களைக் கற்றும், சமயக் கல்வி பெற்றும் திகழ்ந்தார். இனிய கவி புனையும் திறம் பெற்றார். அதனால் இவர் 'திவ்விய கவி' என்னும் சிறப்புப் பெயர் பெற்றார். திருவரங்கத்திலுள்ள இறைவன் மீது பேரன்புகொண்டு ஒழுகி வந்தமையால் அரங்கநாத தாசர் என்றும் அழகிய மணவாள தாசர் என்றும் இவர் அழைக்கப் பெற்றார். கூரத்தாழ்வான் என்னும் ஆசாரியரின் மகனும் மாணவருமாக விளங்கிய பட்டர் என்பாரிடம் பஞ்ச நமசுகாரம் பெற்று விளங்கினார். இவர் தம் வாழ்நாளின் பெரும் பகுதியைத் திருவரங்கப் பெருமான் தொண்டில் ஈடுபட்டுத் திருவரங்கத்திலேயே கழித்தார். இவர் திருமாலையன்றி மனிதரைப் பாடுவதில்லை என்னும் மனக்கோள் உடையவராதலால், 'மனிதக் கவி மொழியா மங்கைவாழ் மணவாள வள்ளல்' என்று பாராட்டப் பெற்றார். திருமால் திருக்கோலங்களுள்ளும், திருவரங்கப் பெருமான் திருக்கோலத்தை மட்டுமே பாடுவேன் என்னும் உறுதி உடையவராகவும் இருந்துள்ளார். அதனால் திருவேங்

கட மலையில் திகழும் வேங்கடவனையும் பாட முற்படாது 'அரங்கனைப் பாடிய வாயால் வேறு குரங்கனைப் பாடேன்' என்று இவர் இகழ்ந்து கூறினார் எனவும் கூறப்படுகிறது.

இவர் முற்குறித்த பட்டர் என்பவரைக் குருவாகக் கொண்டொழுகியவர் ஆதலால் 'குணவாள பட்டர் இருகோகனகத் தாள்சேர் மணவாளதாசன் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளார். இவருடைய புலமைச் சிறப்பையும் பத்தி மாண்பையும் கவித் திறனையும் விளக்கும் பல நிகழ்ச்சிகள் இவர்தம் வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. கி.பி. 1123-இல் தோன்றிய பட்டருடைய மாணாக்கராக விளங்கியமையால் இவரது காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு என்பது தெரிகிறது. ஆனால், திருமலை நாயக்க மன்னர் காலத்தில் இவர் அம்மன்னனின் அரசாங்க அலுவலர்களுள் ஒருவராக விளங்கினார் என்னும் செவிவழிச் செய்தியும் நிலவுகிறது

இவர் காலத்தில் ஆண்ட மன்னன் இவர்தம் பெருமை அறிந்து தம் அரசாங்க அலுவலருள் ஒருவராக இவரைப் பணி அமர்த்தினான். அரசப் பணியில் ஈடுபட்டிருந்தபோதும் திருமால் அன்பில் சிறிதும் குன்றாது ஒழுகிவந்தார். ஒருநாள் பிற அலுவலர்களோடு பணி செய்திருக்கும்போது, விரைந்தெழுந்து தம்மேலாடையினை எடுத்துக் கைகளால் தேய்த்தார். அச்செயல் கண்டு விளங்காது திகைத்த ஏனையோர் அதன் காரணம் வினவினர். ''திருவரங்கம் பெரிய கோயில் விழாவில் பெருமாள் தேர்மீதேறித் திருவீதியில் உலாவருகிறார். தீவட்டிச் சுடரால் தேரின் திரைச் சீலைத் தீப்பிடித்தது. அதனைத் தேய்த்து அணைத்தேன் என்று கூறினார். கேட்டவர் திகைத்து வியந்து ஐயங்கார் பித்துற்றார் எனக் கருதி, இச்செய்தியை அரசனுக்குத் தெரிவித்தனர். திருவரங்கத்தில் தேர் விழாவின்போது தேரிலுள்ள திரைச்சீலை தீப்பற்றியதனை ஐயங்கார் தேய்த்து அணைத்தமையினை அருகிருந்த அருச்சகர் முதலியோர் கண்டிருந்தனர். இச்செய்தி அரசனுக்கு அறிவிக்கப்பட்டது. அரசன் ஐயங்காரிடம் திருவரங்கத் தேர்விழாவிற்கு எவ்வாறு சென்றீர் எனவினவினன். மனத்தால் எண்ணியதேயன்றி நேரே செல்லவில்லை எனக் கூறினார். மேலாடையினைக் கசக்கிய செய்தியையும் தீயணைத்த செய்தியையும் ஒருங்கே கேட்டு உண்மை உணர்ந்த அரசன், ஐயங்காரவர்களை வரவழைத்து, அவரை அரசியற் பணியினின்றும் விடுவித்து வேண்டும் சிறப்புச் செய்தான். ஐயங்கார் விரும்பியவாறு, திருவரங்கப் பெரியகோயில் மண்டபத் திருச்சுற்றின் வடமேற்குத் திசையில் ஒரு இருப்பிடம் அமைத்துத் தந்தான். மேலும், பெருமாள் வழிபாட்டுணவு (தளிகைப் பிரசாதம்) நாடோறும் கிடைக்கவும் ஏற்பாடுகள் செய்தான்.

அரசனும் ஐயங்காரும் திருவரங்கப் பெருமாள் கோயிலுக்குச் சென்றபோது, ஐயங்கார் அங்கு மறைந்துவிடத் தான் மட்டும் திரும்பியதாக அரசன் கனவுகண்டு அவருடைய பெருமையை உணர்ந்தான் என்றொரு செய்தியும் கூறப்படுகிறது.

இவர் திருவரங்கப் பெருமாள் மீது திருவரங்கத் தந்தாதி, திருவரங்கத்து மாலை, திருவரங்கக் கலம்பகம் ஆகிய நூல்களையும் சீரங்க நாயகியார் ஊசல் எனும் நூலையும் பாடித் திருவரங்கத்திலேயே வாழ்ந்து வந்தார். திருவரங்கரையன்றி வேறிடத்துள்ள திருமாலையும் பாடமாட்டேன் என்னும் இவருடைய பேத உணர்வினை நீக்க விரும்பிய திருவேங்கடவன் இவருக்குக் கண்டமாலை என்னும் கொடிய நோய் உண்டாகுமாறு செய்தனன். நோயுற்ற காரணம் அறிந்த ஐயங்கார், தம் பேதைமை உணர்ந்து வருந்தித் திருவேங்கட மாலை, திருவேங்கடத்து அந்தாதி ஆகிய நூல்களைப் பாடி வேங்கடவனைப் பரவ, நோய் நீங்கப்பெற்றார். பின்னர் அழகர் அந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி ஆகிய நூல்களையும் இயற்றியருளினார். மறந்தும் புறந்தொழா மாந்தராக விளங்கும் இவர், திருவரங்கத்தில் இருப்பதனை உணர்ந்து, திருவானைக் காவில் வாழ்ந்த சைவர்கள் இவரைச் சிவபெருமான் மீது பாடல்கள் பாடுமாறு செய்ய வேண்டும் என எண்ணினர். இவர் மறுத்தமை கண்டு அதற்கான செவ்வியை எதிர்பார்த்திருந்தனர். பெருமாள் கோயில் பள்ளி எழுச்சிப் பசு தம் எல்லையில் மேயக்கண்ட அம்மக்கள் அதனைப் பற்றிக் கட்டிவைத்து, ஐயங்கார் வந்தால் விடுவதாக அறிவித்தனர். வந்த ஐயங்காரிடம் சிவன் மீது பாடல் பாடினால் ஆவினை அளிப்போம் என்றனர். அதற்கிசைந்து 'மங்கை பாகன்' எனத் தொடங்கிப் பாட முற்பட்டுத் திருப்பள்ளி எழுச்சிக்குத் தாமதம் நேராதவாறு பசுவினைக் கேட்க அவர்களும் கொடுத்தனர். பசு மீண்ட பின்னர் ஐயங்கார் 'மங்கை பாகன்' எனத் தொடங்கிச் சிவனைக் குறை கூறும் பாங்கில் பாட்டினை முடித்தார். செவி வழியாக வரும் இவ்வரலாற்றுக் கதை அச்சு நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.

இவர் காலத்தில் வாழ்ந்த சைவ எல்லப்ப நாவலரும், இவரும் ஒருசாலை மாணவர் என்பதும், இருவரும் தத்தம் சமயங்களில் ஆழ்ந்த பற்றுடையவர்களாக விளங்கினர் என்பதும், சமயக் கொள்கையால் மாறுபட்டவர்களாயினும் நட்பால் வேறுபடாதவர்கள் என்பதும் கூறப்படுகின்றன.

தமக்கு இறுதி, பசுவினால் நிகழும் என்பதனை இவர் தம் முன்னுணர்வால் அறிந்திருந்தார். ஒருநாள் திருவரங்கர் திருக்கோயில் முன்னர் நின்று வழிபட்டுக் கொண்டிருந்தபோது ஒரு நொண்டிப் பசு இவரை

முட்டித் தள்ளி வீழ்த்தியதோடு இவர் மேலும் விழுந்தது. எழுபது அகவைக்கு மேலும் வாழ்ந்த முதியவரான இவர் இதன் விளைவாக இறுதி எய்தினார். இவர், தாம் இறக்குமுன்னர்த் 'துளவ துளவ எனச் சொல்லும் சொல் போச்சே' என்று தொடங்கி 'இரங்காய் அரங்கா இனி' எனப் பாடி முடித்துத் திருநாட்டை அலங்கரித்தார்.

இவர் இயற்றிய எட்டுப் பிரபந்தங்களும் அட்டப் பிரபந்தம் என்னும் பெயரால் தமிழ் இலக்கிய வரலாற்றிலும், வைணவ உலகிலும் சிறப்புப் பெற்றுத் திகழ்கின்றன. இவர் காலத்தில் எட்டுப் பிரபந்தங்களும் ஒருங்கே தொகுக்கப்பட்டு ஏட்டில் எழுதப்படவில்லை. ஏடுகளில் இவை தனித்தனியாகவே எழுதப்பட்டிருந்தன. பின்னர் வந்தவர்களே இவற்றை இப்பெயரில் தொகுத்து வெளியிட்டுள்ளார்கள். அட்டப் பிரபந்த நூல்களின் செய்யுள் எண்ணிக்கை 751. சிறப்புப் பாயிரச் செய்யுட்கள் (8). காப்புச் செய்யுட்கள் அவையடக்கச் செய்யுட்கள் (22). பிற்சேர்க்கைப் பாடல்கள் (9) ஆகியவற்றையும் சேர்க்க இத்தொகுப்பில் 790 செய்யுட்கள் அமைந்துள்ளன. இவர்தம் செய்யுட்கள், 'சொல் நோக்கும் பொருள் நோக்கும், தொடை நோக்கும் நடை நோக்கும்' உடையனவாகத் திகழ்கின்றன. இவருடைய நூல்களில் ஆழ்வார்களின் பாடற் கருத்துகளும் சொற்களும் சொற்றொடர்களும் மிகுதியாக இடம்பெற்றுள்ளன.

**அழகிய மணவாளப் பெருமாள் நாயனார்** கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி. 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர்; திருவரங்கம் என்னும் ஊரைச் சேர்ந்தவர்; வடக்குத் திருவீதிப் பிள்ளையின் மகன்; அழகிய மணவாள நயினார் எனவும் அழைக்கப்பட்டார். பிள்ளை லோகாசாரியாரின் தம்பியான இவர் இளமையிலேயே துறவு மேற்கொண்டார். இவர் சிறந்த கல்வியாளரும் உரையாசிரியரும் ஆவார். திருப்பாவை உரை-ஆறாயிரப்படியும், திருவந்தாதி, அமலனாதிப்பிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆகிய நூல்களுக்கு உரையும் எழுதியுள்ளார். மேலும் மாணிக்க மாலை, ஆசாரிய இருதயம், அருளிச் செயல் இரகசியம் என்னும் நூல்களையும் இயற்றியுள்ளார். மாறன் மனம் எனப் பொருள்படும் ஆசாரிய இருதயம் என்னும் நூல் இவர் எழுதியவற்றுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது. இந்நூல் திருவரங்கத்தில் இறைவன்முன் அரங்கேற்றப்பெற்றது. இது நம்மாழ்வாருடைய பெருமை, அவர் அருளிய திருவாய்மொழி முதலிய நூல்கள், மற்றைய ஆழ்வார்களின் நூல்கள், அவர்களுடைய பெருமை முதலியவற்றை விளக்கியுரைப்பதாகும். ஆராய்ச்சி நூல் போன்று அமைந்துள்ள இந்நூலின் இடையிடையே, ஆழ்வார்களின் பாசுரங்களில் வரும் அடிகளையும் தொடர்களையும், வான்மீகி இராமாயணம், பாரதம், கீதை, விட்டுணு புராணம் முதலிய நூல்களில் உள்ள அடிகளையும் தொடர்களையும் எடுத்தாண்டுள்ளார். இந்நூல் மணிப்பிரவாள நடையில் அமைந்ததாகும்.

**அழகியல்** என்பது அழகு வாய்ந்த ஒரு பொருளைக் காணும்போது அல்லது அழகான முறையில் ஒரு கருத்தினை வெளியிடும்போது ஏற்படும் உணர்ச்சியாகும். மக்களின் சுவைத்தல் தன்மை வேறுபட்டிருப்பதால் எல்லோருக்கும் ஒரே வகையில் இவ்வுணர்ச்சி தோன்றாது. உள்ளத்தின் பண்பாட்டைப் பொறுத்தது அழகுணர்ச்சி. கவிஞன் பாரதி, காக்கைச் சிறகினில் கண்ணனின் எழிலைக் கண்டான். எல்லோருக்கும் இது இயலாது. அடியவர்கள் கடவுளை அழகனாகக் கண்டிருக்கிறார்கள்.

அழகுணர்ச்சி என்பது உள்ளத்தால் உணரப்படுவது. ஒரு பொருளைப் பற்றிய எண்ணம், கற்பனை, பாவம் ஆகியவற்றைப் பற்றி நிற்கும். கவிதை, இசை, நாட்டியம், ஓவியம் முதலான கலைகளின் வாயிலாக இன்பமயமான அழகுணர்ச்சியைப் பெறலாம். கலை என்பதே கலைஞனின் உணர்வு வெளிப்பாடு. அது உணர்வை வெளியிடுவதோடு, அதனைப் பிறருக்கு ஊட்டும் பெருமையும் உடையது என்று தால்சுதாய் (Tolstoy) கூறியுள்ளார்.

ஒரு மரத்தில் ஆணும் பெண்ணுமான இரு கிரவுஞ்சப் பறவைகள் உட்கார்ந்திருந்தன. ஒரு வேடன் ஆண் பறவையைத் தன் அம்பினால் கொன்று விட்டான். அதனால் பெண் பறவை கதறுகிறது. இந்த அவலக் குரலைக் கேட்ட கலையுணர்வு நிரம்பிய வான்மீகியின் உள்ளத்தில் சோகம் பொங்குகிறது. பொங்கிய சோகம் சுலோகமாக உருவெடுக்கிறது. இதுவே வான்மீகி இராமாயண காவியத்தின் தோற்றுவாய். இதைப் படிக்கும் கலையுள்ளம் படைத்த சுவைஞர்கள் இன்ப உணர்வைப் பெறுகிறார்கள். இதுவே அழகுணர்ச்சி.

கலைப் படைப்பு மக்களின் உள்ளத்தில் அழகுணர்ச்சியைத் தூண்ட வேண்டுமானால், அது உலகியல் நெறியோடு ஒட்டியும் இருக்க வேண்டும். அழகுணர்ச்சியைத் தூண்டும் வகையில் அதிலிருந்து சிறிது மாறுபட்டும் இருக்க வேண்டும். செய்யுளைப் பற்றிக் கூறும்போது தொல்காப்பியர் 'உலகியல் வழக்கு', 'நாடக வழக்கு' என்னும் தொடர்களைப் பயன்படுத்துகிறார். உலகியல் நிகழ்ச்சியை அப்படியே வடித்துக் காட்டினாலும், முற்றிலும் மாறுபட அமைத்தாலும் அது உள்ளக் கிளர்ச்சியைத் தூண்டாது; கலையும் ஆகாது. நாடகத்தில், அன்றாட நிகழ்ச்சியைச் சிறிது மிகைப்படுத்தி, ஏற்ற சொற்களாலும் அங்க அசைவு

களாலும், பொருத்தமான ஆடை அணிகளால் நன்கு ஒப்பனை செய்த அரங்கில், அபிநயம் செய்து காட்டும் போது உள்ளக் கிளர்ச்சி ஏற்படுவதைப் பார்க்கலாம்.

இத்தகைய இன்பமயமான உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்துவது புனையப்படும் பொருளின் அழகையோ அழகின்மையையோ சார்ந்ததன்று. தனிப்பட்ட மனிதனின் பண்பட்ட உள்ளத்தைச் சார்ந்தது. அத்தகையவனைச் சுவைஞன் என்று கூறுவர். அழகு என்பது பொருளில் இல்லை; ஆழ்ந்த உள்ளத்தில் இருக்கிறது.

கவிதை போன்ற கலைகள் நல்லறிவு புகட்டும் வகையில் அமைய வேண்டும் என்பர் ஒரு சாரார். கலையின் நோக்கம் இன்பம் பயப்பதேயன்றி அறிவூட்டுவதன்று என்பர் மற்றொரு சாரார். சாக்கரட்டீசு (Socrates) 'பயனுள்ள ஒரு பொருளில்தான் அழகைக் காணமுடியும்' என்றார். காந்தியடிகள், 'கலை நன்னெறியை வளர்ப்பதாக இருக்க வேண்டும்' என்றார். இரவீந்திரநாத தாகூர், 'பயனையே கருத்தில் கொண்டு பார்க்குமிடத்தில் கலையழகிற்கு இடமில்லை' என்றார். திரைடன் (Dryden) என்ற திறனாய்வாளர், 'சிறந்த கவிதையின் தலையாய பயன் இன்பம் பயத்தலே; அறிவுறுத்துதலை இரண்டாம் நிலையாகத்தான் கொள்ளலாம்' என்றார். இந்திய அலங்கார நூலாசிரியரான மம்மட பட்டர் அனைத்தையும் இணைத்து, 'காவியமானது புகழ், பொருள், உலகியலறிவு, மேலான இன்பம் ஆகியவற்றை அளிப்பதுடன், தீமையை விலக்கியும் அறிவுறுத்தியும் நலம் பயக்கிறது' என்றார்.

'காதல்', 'வீரம்' போன்ற உணர்வுகள் உள்ளத்தில் எழும்போது அவற்றுக்குப் பற்றுக்கோடாக இருப்பதை 'ஆலம்பனம்' என்பார்கள். துசியந்தன்பால் சகுந்தலைக்குக் காதல் அரும்பியபோது, சகுந்தலையின் காதலுக்குத் துசியந்தன் பற்றுக்கோடு. அதுபோல் துசியந்தன் காதலுக்குச் சகுந்தலை பற்றுக்கோடு. காதல் உணர்வு எல்லா உயிர்களுக்கும் இருக்கக்கூடிய நிலையான உணர்வு. இந்த நிலையான அடிப்படை உணர்வைத் 'தாயி பாவம்' என்பார்கள். காதல் என்ற அடிப்படை உணர்வை 'இரதி' என்று பரதர் முதலானோர் குறிப்பிடுவர். துசியந்தன் அழகு, சாதுரியமான பேச்சு,இயற்கைச் சூழல் போன்றவை அக்காதலை வளர்க்க உதவுகின்றன. இவற்றை 'உத்தீபனம்' என்பர். உத்தீபனம் என்பது வளர்த்தல் என்று பொருள்படும்.

இராமனுக்கும் இராவணனுக்கும் போர் நிகழும் போது இராமனிடத்தில் உள்ள வீர உணர்ச்சிக்கு இராவணன் ஆலம்பனம் ஆகிறான். இராவணனின் ஆவேசப் பேச்சு, போர்க்களச் சூழ்நிலை ஆகியவை இவ்வீர உணர்வைப் பெருக்குகின்றன. ஆகவே, அவை வீரவுணர்வுக்கு உத்தீபனமாக அமைகின்றன. காதலனின் காதல் உணர்வுக்குக் காதலியும், அவள் அழகும் பண்பும் காரணமாக அமைவதால் அக்காதலுக்கு அவள் காரணமாகிறாள். அதுபோல், அக்காதலை வளர்ப்பதற்குச் சந்திரோதயம், வசந்த காலம், தென்றல் முதலானவையும் காரணமாகின்றன. இவ்வாறு 'இரதி' அல்லது 'காதல்' போன்ற உணர்வுகளுக்குக் காரணமாக அமைகின்ற காதலன் அல்லது காதலியை ஆலம்பனம் என்றும் சந்திரோதயம் போன்றவற்றை உத்தீபனம் என்றும் கொள்வார்கள். காதலின் விளைவாகத் தோன்றும் ஓரப் பார்வை, பெருமூச்சு, வியர்த்தல் போன்றவை 'அநுபாவம்' (காரியம்) என்று சொல்லப்படுகின்றன.

கடல் அலைபோல் விரைவில் தோன்றி மறையும் நிலையற்ற உணர்வுகளை 'வியபிசாரிபாவம்' என்றும், நிலையான உணர்வுகளைத் 'தாயி பாவம்' என்றும் வடமொழியாளர் கூறுவர்.

உள்ளத்து உணர்வின் வெளிப்பாடுகளாக எட்டுச் சாத்துவிக பாவங்கள் பரதரால் குறிக்கப்படுகின்றன. அவை: நிலைகுத்தி நிற்றல் (தம்பம்), வியர்த்தல் (சுவேதம்), மயிர் சிலிர்த்தல்(உரோமாஞ்சனசம்)குரல் மாற்றம் (சுரசாதம்), நடுக்கம் (வேபது), நிறமாற்றம் (வைவரணியம்), மூர்ச்சை (பிரளயம்), கண்ணீர் வார்தல் (அச்சுரு) என்பனவாகும்.

மேலே காதல் உணர்வுக்குக் கூறப்பட்டது போலவே நகை, அழுகை, வெகுளி முதலான அடிப்படை உணர்வுகளுக்கும் விபாவம், அநுபாவம், முதலியன கவிகளால் காவியங்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாகப் புலியைக் கண்டபோது ஒருவனுக்கு அச்ச உணர்வு தோன்றுகிறது. அச்ச உணர்வுக்குக் காரணம் (விபாவம்) புலி. விளைவு (அநுபாவம்), நடுக்கம், ஓடுதல் முதலியவை. திடீரெனத் துணுக்குறுதல் நிலையற்ற உணர்வு (வியபிசாரி பாவம்). இவை அனைத்தும் போதிய அளவு கவிஞனால் காவியத்தில் அமைக்கப்பட்டால் அதனைப் படிக்கும் போது சுவை அனுபவம் ஏற்படும்.

சுவையனுபவம் யாருக்கு எவ்வாறு ஏற்படுகிறது என்பது பற்றிப் 10-ஆம் நூற்றாண்டுக்கு முன்பு ஒரு விவாதம் ஏற்பட்டது. ஒரு சாரார், 'நாடகத்தைப் பொறுத்தவரையில் மேடையில் நடிக்கும் நடிகர்களிடத்தே தான் உண்மையான சுவையனுபவம் உள்ளது; நடிக்கும்போது அவர்களிடத்தில் காணப்படும் சுவை பார்ப்போரிடத்தில் ஏறிப் பார்ப்போருக்கே சுவையனுபவம் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது' என்றனர். மற்றொரு சாரார், 'நடிகரிடத்திலே காணப்

படும் காதல், உரையாடல், கடைக்கண்பார்வை, நடுக்கம் போன்றவற்றினின்றும் அவரிடம் காதல் இருப்பதாக நாடகம் பார்ப்போர் கருதுகின்றனர். அவ்வாறு கருதும்போது ஒருவித இன்ப உணர்வைப் பெறுகின்றனர் என்று கூறினர்.

இவ்விருசாராரின் கூற்றுகளும், நாடகத்தைக் காண்போரிடத்தில் உண்மையாகத் தோன்றும் சுவையனுபவத்திற்கு விளக்கந் தரவில்லை என்று கண்டபட்டநாயகர், ஒரு புது விளக்கம் கொடுத்தார். நாடகத்தில் கவிஞன், சகுந்தலை, சீதை போன்றவர்களை வருணிக்கும்போது அப்பாத்திரங்கள் தனிப்பட்ட துசியந்தனின் மனைவி என்றோ இராமனின் மனைவி என்றோ கருதுவார்களானால் காண்போருக்கு அதில் ஈடுபாடு ஏற்பட்டுச் சுவையனுபவம் தோன்றாது. அவர்களுக்கும் நமக்கும் என்ன தொடர்பு என்று கருதி எவ்வித உணர்ச்சியின் பாதிப்பும் இன்றி ஒதுங்கி விடுவார்கள். இத்தகைய நாடகங்களில் ஆசிரியன் படைக்கின்ற பாத்திரங்களிலும் பொருள்களிலும் உள்ள தனித்தன்மை, இடம், காலம் ஆகியவை பற்றிய குறிப்பிட்ட வரம்பு அனைத்துமே மறைந்து, பொதுவாக ஒரு காதலன் காதலி பற்றிய உணர்வு, ஏதோ ஒருவகைப்பட்ட நிலப்பகுதி என்பவை போன்ற 'பொதுத் தன்மை' வாய்ந்தவையாக உணரப்படுவதால்தான், காண்போரிடம் சுவையனுபவம் ஏற்படுகிறது என்று பட்டநாயகர் ஒரு புதிய கருத்தை வெளியிட்டார். இப்படி ஒரு பொதுத் தன்மையைத் தோற்றுவிப்பதற்குக் காவியச் சொற்களுக்கே ஒரு சக்தி இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

செகப்பிரியரின் (Shakespeare) நாடகப் பாத்திரங்கள் தனிப்பட்ட உயிரோட்டமுள்ள பாத்திரங்களேயானாலும், அவை எவ்விடத்திற்கும் எக்காலத்திற்கும் பொதுவான மக்கள் உணர்வுகளையும் விருப்பு வெறுப்புகளையும் உணர்த்தும் எடுத்துக்காட்டு நிலைகளாக அமைந்துள்ளன.

காசுமீரத்தில் வாழ்ந்த அபிநவகுப்தர் (கி.பி. 10–ஆம் நூற்றாண்டு) சுவைக் கொள்கைக்கு இறுதி வடிவம் கொடுத்தார். இவர், பட்டநாயகர் கூறிய சுவை அனுபவம் பற்றிய 'பொதுத் தன்மைக்' கொள்கையை ஏற்றுக்கொண்டபோதிலும், அவர் புதிதாகக் கற்பித்த காவியச் சொற்களுக்கே ஒரு சக்தி இருக்க வேண்டும் என்பது தேவையில்லை என்று நிறுவினார். காவியத்தைப் படிக்கும்போதோ நாடகத்தைப் பார்க்கும்போதோ கவிஞனின் தேர்ந்த சொற்பொருள் வருணனையின் மூலமும், நடிகரின் பேச்சு, வேடம், அணி, இசை முதலானவற்றின் மூலமும் சுவைஞனுடைய தனித் தன்மை விலகிச் சத்துவ குணம் நிரம்பப் பெற்ற நிலையில், புறச்சூழலை மறந்து, சுவையோடு ஒன்றிய அநுபவத்தை அவன் பெறுகிறான். அப்போது அவன் உள்ளத்தின் அடித்தளத்தில் 'வாசனை'யாக அமைந்து கிடக்கும் காதல் முதலான சுவைகள் வெளிப்படுகின்றன என்பது கூறப்படுகிறது. இந்தச் சுவையனுபவம் உலகத்தில் கிடைக்கும் எந்த இன்பத்தைக் காட்டிலும் உயர்ந்தது. இக்கொள்கையே பின் வந்த மம்மடர், அபிநவகுப்தர் போன்ற அலங்கார நூலோரால் சித்தாந்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கவிதையிலோ நாடகத்திலோ எடுத்தாளப்படும் 'பாவம்' (காதல், வீரம், சோகம் முதலியன), கவிதையைப் படிப்பவனுக்கும் நாடகத்தைப் பார்ப்பவனுக்கும் ஆனந்த மயமான உணர்வை ஏற்படுத்துகிறது என்பது அபிநவகுப்தர் போன்றோர் கொள்கை. புறச்சூழலை மறந்து, கலையோடு ஒன்றும்போது ஆன்ம இன்பம் ஒன்றே அனுபவப்பொருளாவதால், அதுஇன்ப மயமாகவே உணரப்படுகிறது. புத்தருடைய வரலாற்றையும் மகாபாரதத்தையும் படிக்கும்போது அவற்றில் ஆளப்படும் சாந்தச் சுவையும் படிப்போர் உள்ளத்தில் ஆனந்தத்தையே தோற்றுவிக்கும் என்பர். பெற்றோருக்கும் மக்களுக்குமிடையே உள்ள அன்பும், ஆண்டவனிடம் அடியவர்களுக்கு ஏற்படும் பக்தியும் சுவைகளாகக் கருதத்தக்கவையே என்பது வேறு சிலர் கருத்து.

காப்பியத்தின் உயிர்நிலை அல்லது அழகு எதில் அடங்கியிருக்கிறது என்பதைப் பற்றிப் பண்டைக்காலம் முதல் அணி நூலார் ஆராய்ந்து வந்துள்ளனர். அணி காப்பியத்திற்கு அழகூட்டுகிறது என்றார் பாமகர். உவமை முதலான அணிகள், காப்பியத்தின் உடலாகக் கருதப்படும் சொல்லுக்கும் பொருளுக்கும் மெருகூட்டுவனவாக அமையுமேயன்றிக் காப்பியத்தின் உயிர்ப்பாகாது என்று கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆனந்தவர்த்தனர், 'துவன்யாலோகம்' என்ற தமது நூலில் நிறுவினார். காப்பியக் குணங்களான இனிமை, செறிவு, தெளிவு முதலானவை சிறப்பாக அமைந்துள்ள சொற்களைக் கொண்டு வைதருப்ப நெறியில் எழுதப்பட்ட காப்பியம், கௌடநெறியில் எழுதப்பட்ட காப்பியம் ஆகியவை உயிரூட்டமுள்ளவை என்று வாமனர் கூறினார். இதுவும் காப்பிய உடலுக்கு அழகூட்டுவதன் மூலம் தொனி விளக்கத்திற்கு உதவக் கூடுமேயல்லாமல், காப்பியத்தின் உயிர்நாடியான தொனியின் உயர்ந்த நிலையை அடைய முடியாது என்று ஆனந்தவர்த்தனர் நிறுவினார்.

மணி அடித்தால், அடித்த பிறகும் சிறிது நேரம் தொடர்ந்து ஒரு தொனியைக் கேட்கிறோம். அதுபோல், சொல் ஒரு பொருளை முதலில் அறிவித்தாலும், தொடர்ந்து வேறு பொருள்களை உணர்த்தும்போது அவற்றைத் தொனிப் பொருள் என்று கூறுவர்.

'சூரியன் மேற்கில் மறைந்து விட்டான்' என்று சொன்னால், அதன் நேரடிப் பொருள் தெளிவாக விளங்குகிறது. இவ்வாக்கியத்தைக் கேட்கின்ற ஒருவன் காதலனாக இருந்தால் அவன் காணும் பொருள் 'காதலியைக் கடற்கரையில் சந்திக்கும் நேரம்' என்பதாக இருக்கலாம். காதலனைப் பிரிந்த ஒரு காதலியாக இருந்தால், 'இனி, சந்திரன் தோன்றி என்னை வருத்தும் நேரம் வந்துவிட்டது' என்ற சோக உணர்வை அவளிடம் அது தோற்றுவிக்கலாம். அதே வாக்கியத்தை ஓர் இடையன் கேட்டால், 'அது மாடுகளைத் திரும்ப வீட்டிற்கு ஓட்டிச் செல்லும் நேரம்' என்பதாக அமையலாம். ஒரு வைதிகன் இந்த வாக்கியத்தைக் கேட்டால், 'சந்தியாவந்தனம் செய்யும் நேரம் வந்துவிட்டது' என்று எண்ணுவான். வெவ்வேறு உள்ளங்களில் வேறுபட்ட பல பொருள்களை, உணர்வுகளைத்தோற்றுவிக்கக் கூடிய சக்தி அச்சொற்களுக்கு இருக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். இச்சக்தியைக் குறிப்பாற்றல் (வியஞ்சனை) என்று கூறுவர்.

ஒரு சொல் நேரடியான பொருளைத் தரும்போது அச்சொல்லுக்குரிய சக்தியைச் செஞ்சொல் ஆற்றல் (அபிதை) என்பர். இந்த நேரடிப்பொருள் சில சமயங்களில் பொருந்தாமல் போகும். 'தாமரை' என்று சொன்னால் தாமரைக் கொடியைத்தான் குறிக்கும். 'தாமரை' போன்ற முகத்தை உடையவள் என்றால் அவள் முகம் 'தாமரைக் கொடிபோல்' இருக்கிறது என்பது பொருந்தவில்லை. 'தாமரை மலரைப் போல்' அழகாக மென்மையாகச் சிவந்து இநக்கிறது என்ற பொருள்தான் பொருந்துகிறது. 'தாமரைக் கொடி' என்ற நேர்பொருளை விட்டு, அதனோடு தொடர்புடைய அதன் உறுப்பாகிய 'தாமரை மலர்' என்ற பொருளைத் தரவியலாது. இரண்டாம் பொருளைத் தருகிற சொல்லின் சக்தியை 'இலக்கணை' என்பர். இன்னும் சில வாக்கியங்களில், அவ்வாக்கியத்தைச் சொன்ன கவிஞன் உணர்த்தக் கருதிய பொருளை, இவ்விரண்டு சக்திகளாலும் கூடப்பெற இயலாததாகிவிடும்,

'கங்கையில் குளிக்கிறான்' என்று சொன்னால் 'கங்கை நீரில் குளிக்கிறான்' என்ற நேர்பொருள் கிடைக்கிறது. 'கங்கையில் குடிசை' என்று சொல்லும் போது நேர்பொருள் பொருந்தவில்லை. கங்கை நீரோட்டத்தில் குடிசை இருக்க முடியாது. இவை இரண்டிற்கும் பொருத்தமில்லை. பொருத்தமில்லாத இடத்தில் இலக்கணையால் நேர்பொருளோடு தொடர்புள்ள ஒரு பொருளைக் காணவேண்டும். முற் கூறிய எடுத்துக்காட்டில் 'தாமரை' என்ற சொல் 'தாமரையோடு தொடர்புடைய தாமரை மலரை' இலக்கணையால் உணர்த்தியது போல, இங்கே 'கங்கை' என்ற சொல் அதனோடு தொடர்புடைய கங்கைக் கரையை உணர்த்துவதாகக் கொண்டால் 'கங்கைக் கரையில் குடிசை' என்ற இலக்கணையால் பெறும் பொருள் கிடைக்கிறது. இப்போது அப்பொருத்தமின்மை நீங்கி விட்டது. அப்படியானால் 'கங்கைக் கரையில் குடிசை' என்றே சொல்லியிருக்கலாமே. 'கங்கையில் குடிசை' என்று சொல்லியிருப்பதால் ஏதோ பயன் கருதியே சொல்லியிருத்தல் வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறோம். குடிசையோடு குளிர்ந்த சூழலையும் புனிதத் தன்மையையும் இணைக்க வேண்டும் என்ற கருத்திலேதான் 'கங்கையில் குடிசை' என்று சொல்லப்பட்டிருக்கிறது. குளிர்ச்சி, புனிதத் தன்மை என்ற இயல்புகள், 'கங்கைக் கரையில் குடிசை' என்று சொன்னால் கிடைக்கா; கரைக்குக் குளிர்ச்சியோ புனிதத் தன்மையோ இருப்பதாகக் கருத முடியாது. கங்கை நீரோடுதான் குளிர்ச்சியையும் புனிதத் தன்மையையும் தொடர்புபடுத்தக் கூடும். ஆகவே, இப்புதுப் பொருளும் செஞ்சொல் ஆற்றலாலோ இலக்கணையாலோ கிடைக்கப் பெறாத நிலையில், 'கங்கை' என்ற சொல்லுக்கு மூன்றாம் சக்தி ஒன்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. அந்தச் சகதியைத்தான் குறிப்பாற்றல் என்று கூறுகிறார்கள். இச்சக்தியால்தான், கங்கை நீர், கங்கைக்கரை என்ற இரண்டு பொருள்களுக்கும் வேறாக உள்ள குளிர்ச்சி, புனிதத் தன்மை என்ற இயல்புகளைப் பெற முடிகிறது.

இனித் தொனியில் பல வகை உண்டு. முதலாவது நேரடியான (வாக்கியம்) பொருளை அறவே விட்டுத் தொனிப் பொருளைத் தருவது. எடுத்துக்காட்டு, கதிரவனின் ஒளியால் ஒளி மங்கிய வானத்தில் உள்ள சந்திரன் 'குருட்டு'க் கண்ணாடிபோல் தோற்றமளிக்கிறது என்னும் வால்மீகியின் கூற்றாகும். 'குருட்டுத்தன்மை' உயிருள்ள பொருளுக்கே உண்டு. உயிரில் பொருளான கண்ணாடிக்குக் 'குருட்டுத் தன்மை' என்ற வெளிப்படைப் பொருளை விடுத்து, அதனுடன் தொடர்புடைய 'பொருளைப் பிரதிபலிக்கும் சக்தியற்றது' என்ற இலக்கணையால் பெறும் பொருளை ஏற்றுக் கொள்ளுகிறோம். இப்பொருளை ஏற்றுக் கொள்வதால் வரும் பயன் 'சந்திரன் தன் ஒளி, அழகு அனைத்தையும் அடியோடு இழந்து காணப்படுகிறது என்பதாகும். தொனிப் பொருளை அழுத்தத்துடன் வெளிப்படுத்த எண்ணிய கவிஞர் 'குருட்டுக் கண்ணாடி'யை உவமையாகக் கூறினார். இது பொருள் தொனி.

இரண்டாவது, வெளிப்படைப் பொருளை விடாமலே தொனிப் பொருளை மேற்கொள்வது. 'சூரியன் கதிர்கள் தம் மீது விழும் பேறு பெற்ற கமலங்களே கமலங்கள்' என்னும்போது கமலம் என்ற சொல் இரு முறை பயன்படுத்தப்பட்ட போதிலும், முதலில் வரும் 'கமலம்' பொதுவாகத் 'தாமரை'

என்ற வெளிப்படைப் பொருளையும் அடுத்து வரும் **'கமலம்'** என்ற சொல் செந்நிறம், மலர்ச்சி, காந்தி, மென்மை, வடிவழகு முதலான அனைத்துப் பண்பு களையும் கொண்ட 'கமலம்' என்று சிறப்பாகத் தொனிப் பொருளையும் தருகிறது. இங்கே 'தாமரை' என்ற வெளிப்படைப் பொருளை விடாது, மேலும் சிறப்பான குறிப்புப் பொருளையும் நாம் பெறு கிறோம்.

மூன்றாவது, வெளிப்படைப் பொருளிலிருந்து அதன் பின்னணியையும் சூழலையும் கருத்திற்கொண்டு படிப்படியாகத் தொனிப் பொருளை அறிதல். எடுத் துக்காட்டு, ஏழு முனிவர்கள் இமவானிடத்தில் சிவ பெருமானுக்குப் பார்வதியைத் திருமணம் செய்விப்பது பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, அருகிலிருந்த பார்வதி தரையில் பொறிக்கப்பட்டிருந்த செயற்கைத் தாமரை இதழ்களில் முகத்தைக் கவிழ்த்தவாறு எண்ணிக் கொண்டிருந்தாள். இப்பேச்சைக் கேட்ட பார்வதி தனக்கு ஏற்பட்ட உவகையை மறைக்க எண்ணி, வெட்கத்தால் தலை குனிந்து தாமரை இதழ்களை எண்ணுவது போல் காட்டிக் கொண்டாள். 'உவகையை மறைத்தல்' என்ற இந்த பாவதொனியை உணர்வதற்கு, அவள் முன்னர் பரமசிவனைக் கணவ னாக அடைய வேண்டும் என்று தவம் செய்து கொண்டிருந்தாள் என்று கூறப்பட்ட கவிக் கூற்றை யும் எண்ணிப் பார்க்க வேண்டியிருப்பதால், தொனிப் பொருள் படிப்படியாகப் புலப்படுவதைப் பார்க் கிறோம்.

நான்காவது, செய்யுளைப் படித்த மாத்திரத் தில் வெளிப்படைப் பொருளினின்றும் தொனிப் பொருள் பெறப்படுவதாகும். எடுத்துக்காட்டு, தலைவன் பிரிவால் துயருற்ற ஒரு தலைவி சேய்மை யில் உள்ள தலைவனையே எண்ணிக் கொண்டிருக் கும் தன் நெஞ்சை நோக்கி, 'நெஞ்சே; நீ கணப் பொழுதில் எத்துணையோ தொலைவில் உள்ள என் காதலனைச் சரேலென்று விரைவிற் சென்று கண்டு களிக்கிறாய். அதனால், கண்களும் அவரைக் காண வேண்டும் என்று துடிக்கின்றன. அவற்றையும் உன் னுடன் அழைத்துச் செல். இன்றேல், இக்கண்கள், அவரைக் காட்டு, காட்டு என்று என்னை நச்சரித்துத் தின்றுவிடும்' என்னும் கூற்றாகும், 'தின்னும் அவர்க் காண லுற்று' (குறள் 1244) என்ற தொடரால் காத லன் பிரிவினால் விளைந்த துயர 'பாவம்' இங்கே தொனிப்பொருளாக உடனே கிடைத்துவிடுகிறது. 'தின்னும்' என்ற ஒரு சொல்லே துயரத்தைக் குறிப் பாக உணர்த்தப் பெரிதும் உதவுகிறது. இது 'பாவ' தொனி.

மனித குலத்திற்கு உரிய தனிச் சிறப்புகளுள் இசை ஒன்று. இவ்விசை ஒன்பது சுவைகளையும் தோற்றுவிக்கவல்லது. அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருளையும் தரவல்லது. இசை என்று 'சங்கீதரத்னாகரம்' கூறுவதிலிருந்து உலகியல் இன்பம், பேரின்பம் இரண்டையும் இசை விளைவிக்கக் கூடியது என்பதை அறிகிறோம். 'இன் னிசை வீணையர் யாழினர் ஒரு பால், இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்' என்று மாணிக்க வாசகர் கூறுவதிலிருந்து இசை, இறைவன்பால் பக்திச் சுவையை விளைவிக்கும் பெருமை வாய்ந்தது என்பதை அறியலாம். சிவபெருமானுக்குச் சாம கானத்தில் விருப்பம்; கண்ணனுக்குக் குழலோசையில் விருப்பம்; கலைமகளுக்கு வீணையை மீட்டுவதில் விருப்பம்; பிரமனுக்குத் தாளம் போடுவதில் விருப்பம்; இவற்றைக் காணும்போது இறைவனுக்கும் இசை இன்பத்தை நுகர்வதில் ஈடுபாடு உண்டு என்பதைக் காணலாம்.

அமெரிக்க உளவியல் நிபுணரான மாக்சு சோவன் (Max Schoen) இசை தோற்றுவிக்கும் உணர்வுகளைப் பாகுபடுத்திக் கூறும்போது சாந்தம், உருக்கம், சோகம், பக்தி, உற்சாகம் அன்பு, உத்வேகம், வீரம், வியப்பு என்பவற்றைக் குறிப்பிடுகிறார்.

சுரங்களை வெவ்வேறு முறைகளில் அமைத்துப் பாடும்போது காதல் முதலான பாவங்களைத் தோற்றுவித்து, ஒலியின்பத்தை உண்டாக்குகிறது என்று சாரங்கதேவரும் கூறுகிறார்.

நாட்டியக் கலை பற்றிச் சிறப்பாக எழுந்த நூல் பரதரின் நாட்டிய சாத்திரம். 'துயரத்தினாலும் அயர்ச்சியினாலும் சோகத்தினாலும் பற்றப்பட்டுள்ள மனிதனின் உள்ளத்தில் ஏற்படும் சோர்வைப் போக்கி, இன்பக் கிளர்ச்சியை உண்டு பண்ணி, அமைதியைத் தரவல்லது நாட்டியம்' என்று பரதர் குறிப்பிடுகிறார்.

சாத்தனாரின் கூத்த நூலில் அபிநயத்தின் இயல் பும் அதன்வழிப் பெறப்படுகின்ற சுவையுணர்வும் விளக்கப்பட்டுள்ளன. நடராசரின் உடுக்கையினின்று தோன்றுகிற 'ஓம்' என்ற பிரணவத்தில் 'அ' என்பது அகமாகிய பாவத்தையும், 'உ' என்பது உள்ளத்தெழு கிற இரசனைச் சுவையையும், 'ம்' என்பது இசை யாகிய பண்ணையும் குறிப்பன என்று சாத்தனார் கூறுகிறார். அவர் இயலும் இசையும் இணைந்த கூத்து பேரானந்தப் பெருநிலைக்கு இட்டுச் செல்லும் என்று கூறுகிறார்.

நாணம், மடம், இன்ப துன்ப நுகர்ச்சி போன் றவை ஒருவர் நேரே காணக்கூடியவை அல்ல; நெஞ் சால் உணர்ந்து கொள்ளத்தக்கவை என்று தொல் காப்பியர் (பொருள். 53) கூறியுள்ளார். சிலப்பதி காரத்தில் கூத்துப் பற்றிய பகுதிகள், எவ்வாறு காதல், வீரம் போன்ற உணர்வுகளைத் தோற்றுவிக்க உதவு

கின்றன என்பதையும், காளிதாசனுடைய மாளவி காக்னிமித்திரம் போன்ற நாடகங்களில் எவ்வாறு நாட்டியம் இரசானுபவத்திற்குத் துணை செய்கிறது என்பதையும் காணலாம்.

பரதரே சுவைக் கொள்கைக்கு முதன் முதல் வித்திட்டவர். இடைக்காலத்தில் தண்டி, வாமனர், உத்படர் போன்றோர் கவிதையில் சுவையின் பங்கு பற்றிச் சிறிதே அறிந்திருந்தனர். அபிநவகுப்தர் இக்கொள்கைக்குக் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் முழு உருவம் கொடுத்தார். பரதர் நாட்டியத்தையே தலையாய நோக்கமாகக் கொண்டு சுவைக் கொள்கையை நிறுவினார். அபிநவகுப்தர் கவிதை, நாட்டியம், நாடகம் அனைத்தையும் சார்ந்த சுவைக் கொள்கையை எடுத்துக் கூறினார். நாட்டியத்தின் தன்மையைக் கூற வந்த பரதர், பலவகை உணர்வுகள் நிரம்பப் பெற்றும் பலவித நிலைகளை உள்ளடக்கியும் உலக நடைமுறையை ஒட்டியும் நாட்டியம் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இங்கே உணர்வுக்கே (பாவம்) முதலிடம் தந்திருப்பதைப் பார்க்கலாம்.

மனத்தினின்றும் தோன்றுகிற உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாக வியர்த்தல், கண்ணீர் அரும்புதல், குரல் மாறுதல் முதலான சாத்துவிக அபிநயமும், உரையாடல், பாடல் முதலான வாக்கின்பாற்பட்ட அபிநயமும், கண்கள், உதடுகள், கைகள் போன்ற உடலுறுப்புகளின் வாயிலாகச் செய்யப்படும் அங்கங்களினாலாகிய அபிநயமும் சுவை அனுபவத்திற்குச் சிறப்பாக உதவுகின்றன என்பதால், பரதர் நாட்டிய சாத்திரத்தில் இம்மூவகை அபிநயங்களையும் பற்றி விரிவாக விளக்கந் தந்துள்ளார். இவ்வபிநயங்கள் எல்லாம் உலகியலை ஒட்டியும் நாடகவியலை ஒட்டியும் இருத்தல் வேண்டும் என்பதையும் தெளிவுறுத்துகிறார்.

ஓவியம் வரைதல் ஒரு கலை என்றும் அதன் விளைவு அழகு என்றும் கூறுவர். இந்த அழகைத் துய்க்கும்போது ஏற்படுவதுதான் அழகுணர்ச்சி. இயற்கையின் எழிலோடு கலைஞன் கற்பனையும் சேர்த்து ஓவியத்தைத் தீட்டும்போது, இயற்கையை நேரே காண்பதிலோ அதன் நிழற்படத்தைக் காண்பதிலோ ஏற்படும் உள்ளக் கிளர்ச்சியை விட மிகுதியாகவே உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. கலை நுணுக்கம் தெரிந்த கலைஞன், ஒரு காதற் காட்சியையோ போர்க்களக் காட்சியையோ ஏழை மக்களின் அவலக் காட்சியையோ வரைந்தாலும் அதனைக் காணும்போது இன்னதென்று விவரிக்க இயலாத இன்ப உணர்வு எழத்தான் செய்யும். ஓவியத்தில் அவன் காட்டும் வண்ணச் சேர்க்கைக் கோடுகள், வளைவுகள், சுற்றுப்புறச் சூழலின் தோற்றம் ஆகிய அனைத்தும் அவன் உணர்த்தக் கருதும் உணர்வுக்கு ஏற்ப அமைந்துவிட்டால், அங்கே அழகு களி நடம் புரியும். உன்னதக் கலைப் படைப்பில் வரையப்பட்ட பல்வேறு பகுதிகளும், கலைஞன் உணர்த்தக் கருதிய முழுப் பொருளோடு இணைந்தவையாக இருக்க வேண்டும். இந்த ஒழுங்குக் கோட்பாடு கவிதை, சிற்பம் முதலிய அனைத்துக் கலைகளுக்கும் பொருந்தும். கவிதை செவி வழியாக இன்பமூட்டும். ஓவியம் கண்வழியாக இன்பமூட்டும்.

திருவனந்தபுரத்து அருங்காட்சியகத்தில் உள்ள இரவிவர்மா ஓவியம், துசியந்தன் முதன் முதல் சகுந்தலையைச் சந்தித்துத் திரும்பும்போது, சகுந்தலை காலில் முள் குத்தியதாகப் பாவனை செய்து திரும்பிப் பார்க்கும் காட்சி, காதற் சுவையை வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். தூக்கத்திற்குப் பெயர்போனவன் கும்பகர்ணன். அவன் மீது யானையை ஏற்றித்தான் அவனுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியும். நகைச் சுவையைக் குறிக்கும் இக்காட்சியைச் சண்டிகாரில் உள்ள காங்கரா ஓவியம் நயம்பட எடுத்துக் காட்டுகிறது. தஞ்சை இராசராசேசுவரக் கோயில் ஓவியம், முப்புர அரக்கர்கள் சிவபெருமானோடு பெருவீரத்தோடு போரிடுவதையும், அவர்களின் மனைவிமார் இந்த வீண் முயற்சியைக் கைவிடுமாறு அவர்கள் காலைப் பிடித்துப் பரிதாபமாகக் கெஞ்சுவதையும், சிவபெருமான் கண்களை விழித்துப் பார்த்த பார்வையிலே திரிபுர அசுரர்கள் அழிந்து போவதையும் உயிரோட்டத்துடன் காட்டும் போது வீரம், கருணை, வெகுளி ஆகிய சுவைகள் காண்போர்க்கு அனுபவப் பொருளாவதை உணரலாம்.

இவ்வாறு கவிதை, இசை, நாட்டியம், ஓவியம் ஆகிய அனைத்துக் கலைகளும் கலையுள்ளம் படைத்த மக்களுக்கு மகிழ்ச்சியனுபவத்தை விளைவிப்பதை அறியலாம்.

பெ.தி.

**அழகியல் சார் உளவியல்** என்பது இயற்கையிலும் மனிதனின் படைப்பிலும் காணப்படும் அழகுபற்றி ஆய்ந்தறியும் ஓர் அறிவியல் துறையாகும். செயற்கை அழகு, மனிதனின் கற்பனைத் திறனுக்கு ஏற்ப இயற்கையொடு இயைபுற, எண்ணத்திலும் காட்சியிலும் சொற்களிலும் அமைக்கப்படுவது ஆகும். இத்தகைய இயற்கையிலும் கற்பனையிலும் காணப்படும் அழகு, ஓர் அடிப்படைக் கோட்பாடின்றி அமைதல் இயலாது. இவ்வழகுக் கோட்பாடும் அழகுணர்வின் தத்துவமும் அழகியலின் அடிப்படைகள் ஆகின்றன.

இயற்கையிலும் கற்பனையிலும் அழகிற்கு அடிப்படையாகும் காரணிகளையும் எத்தகைய கலைப் படைப்புகள் மக்களை மகிழ்விக்கவல்லன என்பதை

யும் அறிவியல் முறையில் ஆராய்வது அழகியல்சார் உளவியல் (Aesthetic Psychology) ஆகும். உலகில் உள்ள பொருள்களிலும், நிகழ்ச்சிகளிலும் அழகு, இனிமை, நலம், வளம், சிறப்பு என்னும் மதிப்பீடுகள் எந்த அடிப்படையில் செயற்படுகின்றன என்று ஆராய அழகியல்சார் உளவியலுக்குச் சில அடிப்படை விதிகள் தேவைப்படுகின்றன. அழகியலின் அறிவியல் விளக்கங்கள் அழகியல்சார் உளவியல் துறையினுள் அடங்குவனவாகும். எப்பொருளும் காண்பவரின் மனப்பாங்கிற்கும் மனநிலைக்கும் ஏற்ப, அழகுடையதாகவோ அழகற்றதாகவோ இருக்கிறது. காண்பவருக்கும் காணப்படும் பொருளுக்கும் நடுவில் இடைவெளி இருப்பதாக உணர்ந்தால்தான் இத்தகைய அழகுணர்வு ஏற்படும். இத்தகைய இடைவெளியை உள இடைவெளி அல்லது உளத்தொலைவு (Psychological Distance) எனக்கொள்ளலாம்.

கிரேக்க மொழியில் அழகியல் (Aesthetics) என்னும் சொல் புலன்காட்சியைக் குறிப்பிடும். உலகில் காணப்படும் காட்சிகளின் அழகினை உய்த்துணர்தலே, அழகியலுக்கு அடிப்படை என்று கிரேக்க அறிஞர் பிளேட்டோ (Plato) கருதினார். அழகினை எடுத்துக்காட்டும் பொருள்கள் எல்லாவற்றிற்கும் ஒரு பொதுவான நல்லியல்பு உள்ளது. மனிதன் அழகுடைய பொருள்களில் ஈடுபட்டபின் அழகிய அமைப்புகளில் ஈடுபடுகிறான். இந்த நிலைக்குப் பின் மனிதன் அழகு என்னும் கருத்தையே துய்க்கும் நிலையை அடைகிறான். ஒழுங்கும் அமைப்பும் அழகுக்கு அடிப்படையானவை. இக்கருத்துகளைப் பிளேட்டோவின் 'உரைக்கோவை' (Symposium) என்னும் நூலிற் காணலாம். கிரேக்க இலக்கியத்திற் காணப்படும் மெய்ப்பொருட் கோட்பாடுகள், அழகியலுக்கு அடிப்படையாக அமைந்தன. மகிழ்ச்சியை ஒரு பொருளில், எழுத்தில் அல்லது ஒலியில் சித்திரிப்பது கலைஞனின் குறிக்கோள் ஆகும். பொருள், மனிதன், நிகழ்ச்சிகள் போன்றவற்றை நுட்பமாக மெய்போல் படைப்பதே கலை ஆகும். இதில் பார்த்துச் செய்தலின் கூறுகள் இருந்த போதிலும் ஒரு பொதுவான முழுமைத் தத்துவம் இருத்தல் வேண்டும். இக்கருத்தையே அரிசுடாட்டிலும் (Aristotle) வற்புறுத்தினார்.

ஐரோப்பாவில் கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சமய, ஒழுக்கவாதிகளும் அறிவியலாரும் அழகியலுக்குப் புறவய அடிப்படையைக் கொடுத்தனர். கான்ட்டு (Kant) போன்ற சிந்தனையாளர்கள் பொருள்களால், எழுத்துப் படைப்பால், காட்சியால் மக்கள் உள்ளத்தில் எழுவதே அழகு என்றும், அறிவுக்கும் கற்பனைக்கும் பொருந்திய நிலையில் இருக்கும் பொருள்களே அழகுடையனவாகக் கருதப்படல் வேண்டும் என்றும் கூறினார்கள். அழகுடைய பொருள்களைப் படைப்போரின் உள்ளத்தில் அறிதல்சார் இயங்கு முறையில் (Cognitive Process) எழும் கலையே அழகியலின் அடிப்படை ஆகும் என்று குரோசே (Croce) கருதினார். அழகியல்சார் அனுபவம் மகிழ்வு தரக்கூடியதாக இருக்க வேண்டும் என்பது இன்பவாதக் (Hedonistic) கோட்பாடு ஆகும். அழகியல்சார் பயன் மதிப்பு உடன்பாடாகவும், மகிழ்ச்சியின்மை எதிர்மறைப் பயன்மதிப்பாகவும் இருக்கின்றன. இத்தகைய கருத்தினைச் சார்சு சந்தாயனா (George Santayana) தம் "அழகுணர்வு" (Sense of Beauty) என்னும் நூலிற் குறிப்பிடுகிறார்.

அழகு என்னும் பொருள் பற்றி நுண்கலை வல்லுநர்கள், மெய்ப் பொருளியலார், இலக்கியப் பேரறிஞர்கள் போன்றோர் பல ஆராய்ச்சிகள் செய்துள்ளனர். நுண்கலைகளின் தோற்றம் அழகின் அடிப்படையில் அமையப் பெற்றது என்றும், வரலாற்றுத் தொடக்கக் காலத்தில் வாழ்ந்த மக்கள், தாம் வாழ்க்கையில் பயன்படுத்திய அடையாளங்களும் முறைகளுமே கலைகளாக மாறியுள்ளன என்றும் சமூகவியலார் கூறுகின்றனர்.

அழகை உணரும்பொழுது உள்ளத்தில் எழும் மனவெழுச்சியே மகிழ்ச்சியாகின்றது. அழகும் மகிழ்ச்சியும் இணைபிரியாதனவாகும். ஆயினும், இன்பியல் மட்டுமே அழகுணர்வுக்கு அடிப்படையென்று திட்டவட்டமாகக் கூறமுடியாது. துன்பியலும் அழகின் அடிப்படையிலேயே அமைந்திருப்பதனை இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று துறைகளிலும் துன்பியல் வகைகள் மக்களால் பெரிதும் விரும்பப் படுவதிலிருந்து உணரலாம். கருத்தழகுமிக்க பாடல்கள் உள்ளத்தை வருத்துவனவாக அமைகின்றன. நாடகங்களில் சிறந்த துன்பியல் காட்சிகள் அழகுணர்ச்சியுடன் அமைக்கப் பெற்றவையே ஆகும். ஆதலின் துன்பியல் அழகுணர்வு போன்றே மகிழ்வுணர்வும் அகவயப்பட்டதாகும். அழகியல்சார் மகிழ்ச்சி மேம்பாடுற்ற மகிழ்வுணர்வைக் குறிக்கிறது. பிராய்டைப் (Freud) பின்பற்றும் உளப்பகுப்பியலார்கள் கலையை உண்டாக்குவதற்கும் துய்ப்பதற்கும் பால் உந்தலே அடிப்படைக் காரணம் என்று கருதினார்கள்.

'அறிதல்' பற்றி ஆய்வு செய்த பிரிட்டிசு உளவியலாளரான இசுபியர்மேன் (Spearman) என்பவர், பொருள்களிடையேயுள்ள தொடர்புகளைக் கண்டுபிடிப்பது அறிதல் இயங்கு முறையில் மிகவும் இன்றியமையாததாயிருப்பதால், அறிதலும் ஆக்கச் செயலே என்றும், அதனால் பொருத்தமில்லாத தொடர்புகளை நீக்கிவிட்டுப் பொருத்தமான தொடர்புகளைக் காண்பதே, கலை ஆக்கத்திற்கும் அனுபவத்திற்கும் அடிப்படை என்றும் கூறுகிறார்.

ஒரு பொருளைக் காணும்போது மகிழ்வு உணர்வு உண்டாவதற்கு, அப்பொருள் நன்மைதரும் பொரு

ளாக இருப்பதோ இன்பந்தரும் நிகழ்ச்சிகளுடன் தொடர்புடையதாக இருப்பதோ, அப்பொருளுடன் உண்டாகும் ஒத்துணர்வோ காரணம் ஆகும். அழகுடைய பொருள்கள் உள்ளத்தில் எழுப்பும் உணர்வுகளை அவற்றிற்கே உரியனவாக எண்ணி மகிழ்வதும் ஒத்துணர்வின் பாற்படும்.

மக்களிடையே காணப்படும் அழகு அனுபவம் பற்றிய வேறுபாடுகள், இயற்கையான புலன் வேறுபாடுகள், காட்சி வேறுபாடுகள் ஆகியவற்றின் விளைவாகும். கார்ல் சீசோர் என்ற அமெரிக்க உளவியலார் இசையைப் பயில்வதற்கும் நுகர்வதற்கும் வேண்டிய அடிப்படையான புலன் ஆற்றல்களை அளந்தறிவதற்கான சோதனைகளை வகுத்துள்ளார். ஆயினும் கலை ஆக்கத்திற்கும் அனுபவத்திற்கும் புலன் ஆற்றல்களை விட உருவக் காட்சி ஆற்றலே மிகவும் இன்றியமையாதது என்பது அறியப்பட்டுள்ளது.

கசுதவு பெக்னர் (Gustav Fechner, கி.பி. 1801-1887) என்னும் உளவியலறிஞர் பரிசோதனை அழகியல் என்பதைத் தோற்றுவித்தார். நிறம், உருவம், ஒலிபோன்றவைகளைத் தேர்ந்தெடுத்தலைப் பற்றியும், ஒரு முழுமையின் பல பகுதிகளும் புலன் காட்சியை எவ்வாறு பாதிக்கின்றன என்பது பற்றியும் பெக்னர், சோதனைகள் நிகழ்த்தியுள்ளார். இவர் ஓவியம், இசை ஆகியவற்றைக் கொண்டு நிகழ்த்திய சோதனைகளின் முடிவுகளையொட்டி மக்களிடையே அமைந்துள்ள பலவகைப்பட்ட மனப்பாங்குகளைக் கண்டுபிடித்தார். ஆனால் இவருடைய ஆராய்ச்சி முடிவுகளைப் பல அறிவியலார்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

துணை நூல்கள்:

**Arnheim, Rudolf.**, "Art&Visual Perception",Berkeley University of California Press, 1954.

**Valenhne Charles**, W., "Experimental Psychology of Beauty", London, Mathuea, 1962.

**அழகின் பெருமாள்** வடமொழியிலுள்ள மநுவிஞ்ஞானேசுரம் என்னும் அறநூலினைத் தமிழ்ச் செய்யுள் நூலாக மொழியாக்கம் செய்த புலவர். இவர் தந்தையார் சிரீகிருட்டிணை என்னும் ஊரைச் சார்ந்த சங்கரதேசிகர் ஆவார். அழகின் பெருமாள் தம் தந்தையாரைக் குருவாகக் கொண்டு கல்வி பயின்றார். வடமொழியிலிருந்த மநுவிஞ்ஞானேசுரம் என்னும் நூலினைத் திருநெல்வேலியில் வாழ்ந்த செல்வரும் வேதியர் குலத்தில் பரத்துவாச கோத்திரத்தில் ஆபத்தம்ப சூத்திரத்தில் தோன்றியவருமான வேங்கட குருநாத சோதிடர் தமிழிற் கூற, அழகின் பெருமாள் விருத்தப்பாவினால் இந்நூலினைச் செய்துள்ளார். தமிழில் இதன் பெயர் மநுவிஞ்ஞானேசுவரீயம் என்பதாகும். வடமொழியிலுள்ள மூல நூலாசிரியரான விஞ்ஞானேசுவரர்,மேலைச் சாளுக்கிய மன்னனான இரண்டாம் விக்கிரமாதித்தன் காலத்தில் வாழ்ந்தவர் (கி.பி. 1070-1100) என்று கருதப்படுகிறார். வடமொழியில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மநுவிஞ்ஞானேசுரம் என்னும் நூல் கி.பி. 1485-ஆம் ஆண்டளவில் தமிழில் மொழிபெயர்த்தமைக்கப்பட்டுள்ளது. இந்நூல் செய்யுள் வடிவில் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்ட வடமொழி அற நூல்களுள் காலத்தால் முற்பட்டது ஆகும். வடமொழியிலுள்ள இதன் மூல நூலுக்கு மிதாட்சரம் என்னும் வேறு பெயருமுண்டு. தமிழிலமைந்துள்ள இந்த அறநூல்,வடமொழி மிதாட்சரத்தின் நேர் மொழிபெயர்ப்பு ஆகாது. மூல நூலின் கருத்துகளைப் பெற்று அங்குக் கூறப்படும் மேற்கோள்களைத் தவிர்த்துச் சுருக்கமாகவும் செறிவாகவும் அமைக்கப்பட்டது இந்நூலாகும். இந்நூல், காப்பு, பாயிரம், அவையடக்கம், நூலின் வரலாறு என்னும் நான்கு பகுதி கொண்ட முன்னுரையோடு இராச லட்சணம் முதலான 49 இலட்சணங்களைக் கொண்டமைந்துள்ளது. 'கொடுத்த சம்பளத்தை வாங்குகிற இலட்சணம்' என்னும் 41-ஆம் பகுதியோடு, இந்நூலின் செய்யுட் பகுதி முடிந்துவிடுகிறது. இதில் 859 விருத்தங்கள் உள்ளன. எஞ்சிய இலட்சணங்களின் சுருக்கம் உரைநடையில் பதிப்பித்தோரால் கொடுக்கப்பட்டுள்ளது. இத்தமிழ் நூல் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடுகளுள் ஒன்றாகும்.

**அழகுசுந்தரம் ரெவரண்டு (கி.பி. 1873-1941)** யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறித்தவத் தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். அழகுசுந்தரம் என்பது இவரது இயற்பெயரும் இளமைக்காலப் பெயருமாகும். யாழ்ப்பாணத்தில் கி.பி. 1873-ஆம் ஆண்டு சி.வை. தாமோதரம் பிள்ளையின் மகனாகப் பிறந்த இவர் இளமையிலேயே கிறித்துவ மதத்தைத் தழுவினார்.

கொழும்புப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சியாளராகப் பணியாற்றினார். சென்னை அரசாங்கம், தமிழ் அகராதித் தொகுப்புக் குழு ஒன்றினை நியமித்தது. அக்குழுவில் இவரும் ஓர் உறுப்பினராக அமைந்து சீரிய தொண்டாற்றினார். அக்காலத்தில் அ. மாதவையா 'பஞ்சாமிர்தம்' என்னும் ஓர் இதழினை நடத்தி வந்தார். அவ்விதழில் இவர் பல கட்டுரைகளை எழுதினார்.

இவர் மெசபெட்டோமியா போர்க்களம் சென்று திரும்பியவர். கிறித்து, தெய்வத்தினின்றும் இறங்

கிய மகன் அல்லர். மனிதராய்ப் பிறந்தே தெய்வ நிலை அடைந்தவர் என்னும் கருத்துடையவர். இக் கருத்தைப் பல இடங்களில் பேசியும் எழுதியும் வலியுறுத்தினார். இதனால் இவர் திருச்சபையினின்று விலக்கப் பெற்றார்.

இவர் திருவாசகத்தையும் சுவிசேடத்தையும் ஒருங்கிணைத்து வெளியிட்ட கருத்துகள் தம் உள் ளத்தைக் கொள்ளை கொண்டனவென்று திரு. வி. கல்யாண சுந்தரனார் தம் வாழ்க்கைக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது, இவரது சிறந்த ஆராய்ச்சி அறிவுக்குக் கிட்டிய பாராட்டாகும்.

இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை வாய்ந்தவராகத் திகழ்ந்தார். 'நான் ஏன் கிறித்துவன் ஆனேன்', ஏசு வரலாறு, அகப்பொருட் குறள், இராமன் கதை, பாண்டவர் கதை, சந்திரகாசம் ஆகிய நூல்களைத் தமிழிலும், 'லைப் ஆப் சீசசு' (Life of Jesus) சீசசு ஆப் நாசரத்து (Jesus of Nazareth) ஆகிய நூல்களை ஆங்கிலத்திலும் படைத்துள்ளார். பல தனிப்பாடல்களையும் இவர் எழுதியுள்ளார். இவருக்குக் 'கிங்சுபெரி' என்ற வேறு பெயரும் உண்டு. இவர் கி.பி. 1941-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

மு.த.

**அழகுமுத்துப் புலவர்** 200 ஆண்டுகளுக்கு முன் தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் தோன் றியவர். தந்தையார் பெயர் அம்பலவாணச் செட்டி யார்; தாயார் சிவகாமசுந்தரி. உடன் பிறந்தவர் நால் வர். அவர்களுள் மூவர் ஆண்கள்; ஒருவர் பெண்.

அம்பலவாணச் செட்டியார் நாகப்பட்டினத்து முருகன் கோவிலில் அலுவல் பார்த்து வந்தார். அம் பலவாணர் தம் மகன் அழகுமுத்துவுக்குப் போதிய கல்வியினை இளமையில் அளிக்காமைக்குக் காரணம் இளமையில் இவர் நோயால் பீடிக்கப் பெற்றவராக இருந்தமையாகும்.

இவர், முருகன்மீது அளவில்லாத பக்தியுடையவர். போதிய கல்வியறிவு இல்லாவிடினும் தந்தையாருக் குப்பிறகு, அவர் பார்த்த முருகன்கோவில் அலுவலை அழகுமுத்துப் புலவரே கவனித்து வந்தார். முருகனுக் குப் படைக்கப் பெற்ற படையலை மட்டுமே உண்டு வந்தார். தெய்வீக ஆற்றல் பெற்றவர் என்று போற்றப் பெற்றார்.

ஒரு நாள் முருகக் கடவுள் இவருக்குக் காட்சி யளித்து 'நான்தான் மெய்கண்ட வேலவன்; என்னைப் பாடுவாயாக' என்று அருள் புரிந்தார் என்றும், அன்று முதல் கல்வியறிவு அற்றவராக இருந்த அழகுமுத்து அருட் கவிமழை பொழியும் அழகுமுத்துப் புலவ ரானார் என்றும் கூறுவர்.

முருகப் பெருமானே இவருக்கு எல்லாமுமாகத் திகழ்ந்தார். இவர் திருமணம் செய்து கொள்ள வில்லை. தென்னகம் முழுதுமேயன்றி வடநாடும் சென்று அங்குள்ள பல தலங்களையும் வழிபட்டுத் திரும்பினார். பின்னர்ச் சீர்காழியில் ஒரு மடத்தில் தங்கியிருந்து இறைவழிபாடு நிகழ்த்தி வந்தார். அங்கேயே ஒரு சித்திரைத் திங்கள், சதய நட்சத்திர நாளில் இறைவன் திருவடியை அடைந்தார். அங் கேயே அடக்கம் செய்யப் பெற்றார். இவருடைய சமாதி திருத்தாளமுடையார் கோவிலுக்கு அருகில் உள்ளது என்பர்.

முருகப் பெருமான் மீது மாளாத அன்பு கொண்ட அழகுமுத்துப் புலவர், அவர் அருள் கிட்டியவுடன் பாடிய நூல் 'மெய்கண்ட வேலாயுத சதகம்' ஆகும். இது நூறு பாடல்களைக் கொண்டது. இதனை அடுத்துக், 'காயாரோகணக் குறவஞ்சி', 'மெய்கண்ட வேலாயுத உலா' ஆகிய நூல்களையும் 'திறப்புகழ்' என்ற நூலையும் பாடினார். அழகுமுத்துப் புலவர் பாடியருளிய 'திறப்புகழ்' அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற சிறப்புடையது என்னும் பாராட் டினைப் பெற்றது. மு.த.

**அழிசி** சங்க காலத்தில் சோழ நாட்டிலுள்ள ஆர்க்காடு என்னும் பேரூரை ஆட்சி செய்த சிற் றரசன். இவன் சிறந்த வீரனும் கொடையாளியு மாவான். ஆர்க்காடு என்னும் பேரூர் மிக்க பழமை யுடையது என்பது, 'வண்டு மூசு நெய்தல் நெல்லிடை மலரும், அரியலம் கழனி ஆர்க்காடு' என்னும் நற்றிணை அடிகளால் அறியலாம் (ந. 190). தலை வியின் அழகிற்கு ஆர்க்காட்டின் அழகு நலனை உவமையாக்கி, 'அழிசி ஆர்க்கா டன்ன விவள், பழிதீர் மாணலம்' என்று குறுந்தொகை சிறப்பிக்கிறது (குறுந். 258). இவன் மகனாகிய சேந்தன், உறையூரை ஆட்சி புரிந்த சிறந்த வீரன். இவன் பெயரால் 'அழிசிகுடி' என்று ஓரூர் விளங்குகிறது. இது விருத்தாசலத்தைச் சேர்ந்த சேத்தியாத்தோப்பு அணைக்கட்டுக்குக் கிழக்கில் உள்ளது.

**அழிசி நச்சாத்தனார்** சங்கப் புலவர்களுள் ஒருவர். சாத்தனார் என்பது இவர் இயற்பெயர். அழிசி இவரது ஊராகலாம். இவரது ஒரே பாடல் குறுந்தொகை 271-ஆம் பாடலாக அமைந்துள்ளது. மருதத் திணையில் தலைமகள் கூற்றாக அமைந்த இப்பாடல், தலைவி தலைவன்பால் கொண்ட காதலின் வன்மையினைக் காட்டுவதாக உள்ளது. இப்பாடலில், தான் தலைவனை உற்றது ஒருநாள்தான் என்றும் அதுவே மிகப் பல நாள் தோள் மயங்கி, வெளவுதற் குரிய நோயாக அமைந்தது என்றும் கூறித் தலை வனுக்கு வாயிலாக வந்த தோழியிடம் தலைவி தன் நிலைமையினை விளக்கியுள்ளாள்.

**அழுகணிச் சித்தர்** பதினெண் சித்தர்களுள் ஒருவர். கண்ணில் நீர் பெருக அழுத பாவனையோடு 'கார்க் காட்டான்' என்பவருக்குப் பாலகனாய்ப் பிறந்தமையால் அழுகண்ணிச் சித்தரென்று இவருக்குப் பெயரிட்டனர் என்பது, கருவூரார் வாத காவியத்தில் கூறப் பெற்றுள்ளது. அகத்தியர் வைத்திய இரத்தினச் சுருக்கம் என்னும் நூலிலும் இதே கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது. அழுவது போன்ற பாங்கில் இவர் குரல் அமைந்திருந்தமையால் மக்கள் இவரை அழுகணிச் சித்தர் என்று பெயரிட்டழைத்தனர் என்ற ஒரு கருத்தும் உண்டு.

சித்தர் பாடல்களில் நிலையாமை பற்றிய கருத்தும், மருத்துவம் பற்றிய குறிப்பும் சிறப்பாக அமைந்திருக்கும். அழுகணிச் சித்தர் பாடல்களில் இவ்விரு பண்புகளும் நன்கினிது இடம் பெற்றுள்ளன.

யோகப் பயிற்சி அனுபவங்களை இவர் தம் பாடல்களில் குழுஉக் குறிச் சொற்களால் குறிப்பிட்டுள்ளார். இவரது பாடலொன்றில் ''அழுகண்ணி'' என்னும் அரிய கற்ப மூலிகை பற்றி விளக்கியுள்ளார். இவர் பாடியுள்ளனவாக ஐம்பது பாடல்கள் கிடைத்துள்ளன. ஈ.வே.மா.

**அழுந்தூர்** தேவாரப் பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற இடமுமாகும். இக்காலத்தில் தேரழுந்தூர் என வழங்கப்படும் இவ்வூர், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் மயிலாடுதுறை நெடுஞ் சாலையில் மயிலாடுதுறைக்கு அருகில் 10 கல் தொலைவில் உள்ளது. திருஞான சம்பந்தரால் பாடப்பெற்ற இத்தலத்து இறைவன் பெயர் வேதபுரீசுவரர்; அம்பிகை பெயர் சௌந்தரநாயகி. இவ்வூரிலுள்ள வைணவத் தலத்திலுள்ள திருமாலை 'அணி அழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே' என்று திருமங்கையாழ்வார் விளித்துப் போற்றியுள்ளார். இத்தலத்தில் வீற்றிருக்கும் திருமாலின் பெயர் ஆமருவியப்பன்; தாயார் பெயர் செங்கமலவல்லி. கவிச்சக்கரவர்த்தி கம்பர் இத்தலத்தில் தோன்றியவர். இதனால் இவ்வூர் 'கம்பன் பிறந்தவூர் காவேரி தங்கும் ஊர் கும்பமுனி சாபம் குலைந்த ஊர்' என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது. ஊரின் புறத்தே கம்பர்மேடு என விளங்கும் பகுதி கம்பர் வாழ்ந்த இடமாகக் கூறப்படுகிறது. ஆமருவியப்பன் திருக்கோயிலில் கம்பர், அவர் மனைவி ஆகியோர் திருவுருவங்கள் உள்ளன.

ஊர்த்துவரதன் என்னும் அரசனது தேர், மேலே செல்லாது இவ்விடத்து அழுந்தியமையால் இவ்வூர் தேரழுந்தூர் எனப்பட்டது என்பதும், இங்கு மறைகள், தேவர்கள், அட்டதிக்குப் பாலகர் ஆகியோர் வழிபட்டனர் என்பதும் கூறப்படுகின்றன.

**அழைப்பாணை**: ஒவ்வொரு குற்றத்திற்கும் இன்னின்ன அளவு தண்டனை விதிக்க வேண்டுமென்று இந்தியத் தண்டனைச் சட்டம் (Indian Penal Code) கூறுகிறது. சிறு குற்றங்களுக்குக் குறைந்த அளவு தண்டனையும் கொடுங் குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையும் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ளன.

மரண தண்டனை, ஆயுள் தண்டனை, ஓராண்டிற்கு மிகுதியாகச் சிறைத்தண்டனை ஆகியவை பெருங்குற்றத்திற்குரிய தண்டனைகளாகும். குறைந்த தண்டனையுடைய குற்றங்கள் பற்றிய வழக்குகள் ''சிறு குற்ற வழக்குகள்''(Summon Cases) எனப்படும்.

ஒரு நீதிமன்றத்தின் முன் நேரில் வந்து சாட்சியம் கூறுமாறோ குற்ற முறையீட்டிற்குப் பதிலுரை கூறுமாறோ நீதிமன்றத்தால் ஒருவருக்கு இடப்படும் ஆணை ''அழைப்பாணை'' (Summons) எனப்படும். ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தின்முன் கொண்டு வந்து நிறுத்தும்படி நீதிமன்றம் ஆணையிடுவது உண்டு. அந்த ஆணை காவல் அதிகாரிக்கோ வேறு பொது அதிகாரிக்கோ இடப்படலாம். இந்த ஆணைக்குப் பெயர் 'பிடியாணை' (Warrant) என்பதாகும். ஒருவரைப் பிடித்துக் கொண்டு வரும்படி இடப்படும் ஆணையாதலின் இது 'பிடியாணை' எனப்படும்.

பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பும் முறை: வழக்கு நிறுவப்பட்டு எல்லா வகையிலும் சரியாக இருந்தால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டு – அதாவது காலவரையறைக்குட்பட்டுத்தகுந்த நீதிமன்றக் கட்டணத்தைச் (Court Fees) செலுத்துதல், நடப்புச் சட்டப்படி அமைதல் போன்றவற்றிற்குப்பின் பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்படும். அதற்கிணங்கப் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் வரவும், வந்து வழக்குரையில் கூறப்பட்டவற்றிற்கு மாற்றம் கொடுக்கவும் வேண்டும். இந்த அழைப்பாணை நீதிமன்றத்தில் அதற்கென்று அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் மூலமோ பதிவு அஞ்சல் மூலமோ வழக்கில் உள்ளபடி, பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்படும். அந்த அழைப்பாணையோடு வழக்குரையின் படியும் அனுப்பப்படும்.

அந்த அழைப்பாணைப்படி பிரதிவாதி நீதிமன்றத்திற்கு ஒரு குறிப்பிட்ட நாளில் வந்து வழக்குக்கு மாற்றந்தர வேண்டும்; அல்லது அவருக்குப் பதிலாக அவரால் நியமிக்கப்பட்டு வழக்குத் தொடர்பாகக் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலுரைக்கத் தகுந்தவர் வந்து பதில் கூறவேண்டும். வழக்குத் தொடர்பான அழைப்பாணை பிரதிவாதிக்குச் சார்பு செய்யப்பட்டிருந்து, அதுபற்றிய சான்றுக் குறிப்பு வழக்கேட்டில் (Bundle) இருந்தால், பிரதிவாதியோ அவரது பேராளரோ அவரது வழக்குரைஞரோ நீதிமன்றத்தில்

வழக்கு எடுத்துக் கொள்ளும் நேரத்தில் இருக்கத் தவறினால் நீதிமன்றம், பிரதிவாதியில்லாமல் வாதியை மட்டும் விசாரித்து அவருடைய வாக்குமூலத்தின் மீது வாதிக்குச் சார்பான தீர்ப்பு வழங்கலாம்.

அழைப்பாணை சாதாரணமாய்ப் பிரதிவாதிக்குச் சார்வுசெய்யப்படவேண்டும்.பிரதிவாதியில்லாதபோது அவருடைய முகவரிடம் சார்பு செய்தால் போதுமானது ஆகும்.

அழைப்பாணை பற்றிய செய்திகள் 1973-ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் ஆறாம் பகுதியில் 61 முதல் 69 வரையில் உள்ள பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன.

அழைப்பாணையின் வடிவம்: குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வோர் அழைப்பாணையும் எழுத்து வடிவினதாக, இரட்டைப் படிகளில், அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கும் அலுவலராலோ உயர் நீதிமன்றம் அவ்வப்போது விதி மூலமாக உத்திரவிடலாகும் வேறு அலுவலராலோ கையொப்பமிடப்பட்டு, அந்நீதிமன்றத்தின் முத்திரையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அழைப்பாணை சார்வு செய்தல்: ஒவ்வோர் அழைப்பாணையும் ஒரு காவல் அலுவலரால் அல்லது இதன்பொருட்டு மாநில அரசு இயற்றப்படும் விதிகளுக்குட்பட்டு அவ்வாணையைப் பிறப்பிக்கும் நீதிமன்றத்தின் ஓர் அலுவலரால் அல்லது வேறு பொது ஊழியரால் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

அழைப்பாணையின்படி கட்டளையிடப்பட்டவருக்குக் கூடுமானவரை நேர்முகமாகவே சார்வு செய்யப்பட வேண்டும்.

அழைப்பாணை சார்வு செய்யும் அலுவலர் வேண்டிக் கொண்டால், படியின் பின்பக்கத்தில் அதைப் பெற்றுக் கொண்டதற்காகக் கையொப்பமிடுதல் வேண்டும்.

வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்குள் பிரதிவாதி வசிப்பவரானால் அவரிடமோ அவருடைய முகவர் அழைப்பாணை ஏற்றுக் கொள்ளும் அதிகாரம் பெற்றிருந்தால் அவரிடமோ அழைப்பாணையைச் சார்வு செய்யலாம். அதற்கென்று அமர்த்தப்பட்ட அலுவலரோ, அவருடைய துணையாளோ அழைப்பாணையைச் சார்வு செய்ய வேண்டும்.

பிரதிவாதி இந்தியாவில் எப்பகுதியில் இருந்தாலும் அல்லது வழக்கு நிறுவப்பட்ட நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்குள்ளிருந்தாலும் அவருக்கு அழைப்பாணை அனுப்புவதற்கு அதற்கென்றுள்ள அலுவலரை நீதிமன்றம், அவ்வழைப்பாணையை அனுப்பும்படி கோரும். அதன்படி அழைப்பாணை சார்வு செய்யப்படலாம், அல்லது பதிவு அஞ்சல் வாயிலாகவும் அழைப்பாணையை அனுப்பும்படி ஆணையிடலாம். ஒப்புகை பிரதிவாதியினால் கையெழுத்திடப் பெற்றுத் திரும்ப வருமானால், மேற்படி ஒப்புகை, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டமைக்குப் போதிய சான்றாகும். அழைப்பாணையில் நீதிபதியோ அவரால் நியமிக்கப்பட்ட அதிகாரியோ கையெழுத்திட வேண்டும். அதனோடு அதில் நீதிமன்றத்தின் முத்திரை (Seal) யும் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்படி அழைப்பாணை பிரதிவாதிக்கு நேரடியாகவும் சார்வு செய்யப்படலாம் (ஆ. 5. வி. 10).

ஒன்றுக்கு மேற்பட்ட பல பிரதிவாதிகள் இருப்பின் ஒவ்வொருவருக்கும் அழைப்பாணை சார்வு செய்யப்படல் வேண்டும்.

கூட்டு நிறுவனங்கள் அல்லது கழகங்களுக்கு அனுப்பப்படும் அழைப்பாணைகள், அச்செயலகங்களின் செயலாளர், வட்டார மேலாளர் அல்லது வேறு முதன்மை அலுவலர் ஆகியோருக்கு அனுப்புவதன் மூலமாகவோ, இந்தியாவில் உள்ள அக்கூட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலருக்கு முகவரியிட்டுப் பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பப்படும் கடிதத்தின் மூலமாகவோ சார்வு செய்யப்படலாம். அவ்வாறு கடிதம் அனுப்புவதாயிருந்தால், அக்கடிதம் சாதாரண அஞ்சல் முறையில் எப்போது போய்ச்சேருமோ அப்போது சார்வு செய்யப்பட்டதாகக் கொள்ளுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட விதிப்படி, ஒரு கப்பலின் தலைவன், அந்தக் கப்பலின் சொந்தக்காரர் சார்பில் அழைப்பாணை பெற்றால் அது சரியான சார்வாகும்.

பிரதிவாதி அழைப்பாணையைப் பெற்றுக் கொள்ளாதபடி ஏமாற்றுவாரானால், நீதிமன்றம் அழைப்பாணையைச் சார்வு செய்யக் கீழ்க்காணும் முறையைக் கையாளலாம்.

பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையின் நகலை நீதிமன்றத்தில் பெரும்பாலானவர் பார்வைபடும் இடத்தில் ஒட்டவும், அதனோடு அவர் இறுதியாக வாழ்ந்ததாகக் கருதப்படும் இடத்திலோ அவர் தொழில் புரிந்த இடத்திலோ அவர் வேலை செய்த இடத்திலோ அழைப்பாணையின் நகலை எளிதாகக் கண்ணுக்குப் புலப்படும் இடத்தில் ஒட்டவும் உத்தரவிடலாம். அல்லது வேறுவகையில் அழைப்பாணை சார்வு செய்யக்கூடுமானால், அந்த வகையிலும் சார்வு செய்ய உத்தரவிடலாம். இவ்வாறு சார்வு செய்யப்பட்ட அழைப்பாணையை நேரடியாகச் சார்வு செய்யப்பட்டதாக நீதிமன்றம் கருதும்.

பிரதிவாதி இருக்குமிடம் சொந்த மாநிலத்திலோ வேறு மாநிலத்திலோவென்றால் அவர் எந்த நீதிமன்றத்தின் அதிகார எல்லைக்குள் இருக்கிறாரோ அந்த நீதிமன்றம் மூலமாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அவருக்கு அவ்வழைப்பாணையை அனுப்பலாம். ஆனால் உயர்நீதிமன்றத்தின் மூலமாக அவருக்கு அழைப்பாணை அனுப்பப் படக்கூடாது.

சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய மாநிலத் தலைநகரங்களில் பிரதிவாதி இருப்பாரானால், மேற்படி அழைப்பாணை அந்தத் தலைநகரங்களில் உள்ள சிறு வழக்கு நீதிமன்றம் (Small Cause Court) மூலமாகச் சார்வு செய்யப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நீதிமன்றங்கள், அழைப்பாணையைச் சார்வு செய்யக் கோரிய நீதிமன்றத்திற்கு அதைத் திரும்ப அனுப்ப வேண்டும்.

சிறையில் இருக்கும் பிரதிவாதிக்கு அழைப்பாணை சிறை அதிகாரி மூலமாக அனுப்பப்படும். அரசு அலுவலர்களுக்கு (இராணுவம், கப்பற்படை, விமானப்படை அதிகாரிகள் நீங்கலாக) அவருடைய தலைமை அலுவலர் மூலமாகச் சார்வு செய்யப்பட வேண்டும்.

**அள்ளூர் நன்முல்லையார்** சங்க காலப் புலவர்களுள் ஒருவர். நன்முல்லை என்பது இவரது இயற்பெயராகும். இவர் பெண்பாற் புலவர் என்று கருதப்படுகிறார். அவ்வாறு கருதாதவர்களும் உள்ளனர். அள்ளூர் இவருடைய சொந்த ஊராக இருத்தல் வேண்டும். இவ்வூர் பாண்டிய நாட்டில் மருத நிலத்தின்கண் அமைந்தது என்று டாக்டர் உ.வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார். சிவகங்கை வட்டத்தில் நாட்டரசன் கோட்டை அருகில் உள்ள அள்ளூரே இவ்வூர் என்றும், தஞ்சை மாவட்டத்திலுள்ள இப்போதைய திருவாலங்காடு என்னுமூரே இவ்வூர் என்றும் கூறுகின்றனர். இப்புலவர் அள்ளூரினைத் தலைவிக்கு உவமையாக்கிப் 'பிண்டநெல்லின் அள்ளூரன்ன எம் ஒண்டொடி' என்று (அகம்.46) குறிப்பிட்டுள்ளார். இவ்வூர் செழியனுக்கு உரியது என்பதனை 'ஒளிறு வாள் தானைக் கொற்றச் செழியன் பிண்டநெல்லின் அள்ளூர்' என்று அப்பாடலில் பாடியுள்ளார். குறுந்தொகையில் ஒன்பதும் (32, 67, 68, 93, 96, 140, 157, 202, 237), அகநானூற்றில் ஒன்றும் (46), புறநானூற்றில் ஒன்றும் (306) ஆகப் பதினொரு பாடல்கள் சங்கத்தொகை நூல்களில் இடம்பெற்றுள்ளன. அகம் புறம் ஆகிய இரு திணைகளையும் பாடியுள்ள புலவர்களுள் இவர் ஒருவராவார். இவர்தம் அகப்பாடல்கள் குறிஞ்சி பாலை மருதம் ஆகிய திணைகளில் அமைந்துள்ளன. காதலரைப் பிரிக்கும் வைகறையினை வாளுக்கு உவமைப்படுத்தித் 'தோள்தோய் காதலர்ப் பிரிக்கும், வாள்போல் வைகறை' என்று கூறியிருப்பது (குறு. 157) நயமிக்கதாக உள்ளது.

**அளகைச் சம்பந்தர்** கி.பி. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புலவர்; துறவியாக விளங்கியவர்; அளகை என்ற ஊரில் தோன்றியவர். சைவ வணிக மரபில் தோன்றிய இவர் தக்க பருவத்தில் கல்வி பயின்று, இராமநாதபுர மாவட்டக் குன்றக்குடியை அடுத்துள்ள துழாவூர்ச் சைவத் திருமடத்தின் தலைவராக விளங்கிய நிரம்ப அழகிய தேசிகரிடம் சமய தீக்கை முதலியனவும் சந்நியாசமும் பெற்றார். இவர் நிரம்ப அழகிய தேசிகருக்குக் குருவாக விளங்கிய கமலை ஞானப் பிரகாசர்பால் சென்று அவரிடத்துச் சீடராக விளங்கினார். இவர் தம் குருவொடு திருவாரூரில் இருந்த போது அவ்வூர்ப் பெருமக்களின் விருப்பத்திற்கிசைந்து திருவாரூர்ப் புராணத்தினைப் பாடினார். இப்புராணத்திற்கு முதல்நூல் வடமொழிக் காந்த புராணத்திலுள்ள நாகர காண்டம் என்னும் பகுதியாகும். இந்நூல் கி.பி. 1592-ஆம் ஆண்டில் பங்குனி உத்தர நாளன்று, திருவாரூர் ஆலயத்திலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் அரங்கேற்றப் பெற்றது. இவரியற்றிய திருவாரூர்ப் புராணம் 111 சருக்கங்களும் 2929 பாடல்களும் கொண்டது.

**அளபெடை** என்பது யாதானுமொரு காரணம் பற்றி எழுத்து, தனக்குரிய மாத்திரையின் நீண்டு ஒலிப்பதனைக் குறிக்கும் பெயராகும். தமிழ் உயிரெழுத்துகளுள் குறிலின் அளவு ஒரு மாத்திரை; நெடிலின் அளவு இரண்டு மாத்திரை; மெய்யெழுத்தின் அளவு அரை மாத்திரை. தொல்காப்பியர் கருத்துப்படி இரண்டு மாத்திரைக்குமேல் ஒலிக்கும் எழுத்து தமிழில் இல்லை. ''மூவள பிசைத்தல் ஓரெழுத்தின்றே'' என்பது தொல்காப்பியம். இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையிலும் மிகுதியாக ஒலித்தலை விரும்புவாராயின், தாம் கருதிய மாத்திரையைத் தருவதற்குரிய எழுத்துகளைக் கூட்டி, அம்மாத்திரைகளை எழுப்பிக் கொள்ள வேண்டும் இவ்வாறு விரும்பிய மாத்திரை அளவுக்கேற்ப எழுத்துகளை நெட்டெழுத்தோடு சேர்த்து ஒலியை எழுப்பிக் கொள்வது அளபெடையாகும். இது தொல்காப்பியர் உயிரளபெடைக்கு வகுக்கும் இலக்கணம்.

'குன்றிய ஓசையுடைய சொல்லினிடத்தே நெட்டெழுத்தின் பின்னர் அவற்றின் இனமொத்த குற்றெழுத்துகள் அவ்வோசையை நிறைவிக்கும்' எனப் பொருள்படும் நூற்பாவால் தொல்காப்பியர் அளபெடை இலக்கணத்தை உணர்த்தியுள்ளார். இதனால் அளபெடையில் நெட்டெழுத்திற்குரிய இரண்டு மாத்தி

ரைக்கு மேற்பட்ட ஓசையினை நிறைப்பன, அவ்வெழுத்தின் பின்னர்ச் சுட்டிய குற்றெழுத்துகளே என்பது தொல்காப்பியக் கருத்தென்பது தெளிவாகிறது. எடுத்துக்காட்டு: ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ.

நெட்டெழுத்துகள் ஒவ்வொன்றும் ஓரெழுத்தொரு மொழியாம். ஆ என்பது பசு; ஈ–ஈதல்; ஊ–தசை; ஏ–அம்பு; ஐ–பெருமை; ஓ–மதகு நீர் தாங்கும் பலகை. ஓரெழுத்தொரு மொழியாகிய நெட்டெழுத்தோடு ஒத்த குற்றெழுத்துச் சேர்ந்து மூன்று மாத்திரையாய் அளபெடுத்துள்ளது. இரண்டு மாத்திரை கொண்ட நெட்டெழுத்தே நீண்டு, மூன்று மாத்திரையாக வில்லை என்பது ஈண்டு உணரத்தக்கது.

'நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய, கூட்டி எழூஉதலென்மனார் புலவர்' என்ற நூற்பாவிலுள்ள ''எழூஉதல் என்பது அளபெடைச் சொல்லாம். எழூதல் என்பது தன்வினை; எழூஉதல் என்பது பிறவினை. எழூஉதல் என்பது 'எழுப்புதல்' எனப் பொருள்படும். நெட்டெழுத்து நீட்சி பெற்று மூன்று மாத்திரையாகவில்லை என்றும், அதற்கொத்த குற்றெழுத்துச் சேர்க்கப்பெற்றே அங்ஙனம் ஆகியுள்ளது என்றும் 'எழூஉதல்' என்ற சொல் உணர்த்துகிறது.

'அவ்வளபுடைய' எனப் பன்மையாற் கூறியதனால் மூன்றுக்கு மேற்பட்ட மாத்திரைகளும் அளபெடையாக வருதலுண்டு என்பது தெரிகிறது. ''செறாஅஅய் வாழிய நெஞ்சு'' (குறள் 1200). இதில் அளபெடை நான்கு மாத்திரை பெற்றுள்ளது. செய்யுளில் சீரின்கண் அளபெடை ஓர் அசையாக வருதலுண்டு.

''கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று''

இக்குறளில் 'கடாஅ' என்ற சீர் ஈற்று அகரம் தனி நேரசையாகிப் புளிமா வாய்பாடாகவும், 'உகாஅமை' என்னும் சீர் அகரம் தனி நேரசையாகி புளிமாங்காய் என்னும் வாய்பாடாகவும் நின்றன. 'செறாஅஅய் வாழிய நெஞ்சு' என்பதில் 'செறாஅஅய்' என்பது புளிமாங்காய் என்னும் வாய்பாடாக நின்று வெண்சீர் வெண்டளையாக அமைந்துள்ளது. இதனாலும் அளபெடை தனி எழுத்துகளின் கூட்டொலி என்பதும், அது நெடிலின் நீட்சி அன்று என்பதும் வலியுறுகின்றன.

தொல்காப்பியர் உயிரளபெடையை எழுத்தாக எழுத்ததிகாரத்தில் கூறியது போல், ஒற்றளபெடையை இவ்வதிகாரத்தில் கூறவில்லை. 'ஒற்றளபெடை செய்யுட்கே வருதலின் ஈண்டுக் கூறாராயினர்' என நச்சினார்க்கினியர் இதற்குக் காரணங் கூறுவர். இதனால் உயிரளபெடை உரைநடையிலும் வரும் என்பது புலனாகிறது. ஆடூஉ, மகடூஉ, மரூஉ, 'எனவரூஉம்' போன்றவைகளை உரைநடையில் வரும் அளபெடைகளாகக் கொள்ளலாம். விலை கூறுதலில் 'உப்போஒஒ உப்பு' போன்றவை உலக வழக்கில் அளபிறந்து ஒலிக்கும் அளபெடை. உரைநடையில் ஓசை இன்பத்தின் பொருட்டும் உலக வழக்கில் விலை கூறுதல், புலம்பல் முதலியவற்றின்பொருட்டும் அளபிறந்து உயிரளபெடை வருதலுண்டு. தொல்காப்பியர் உயிரளபெடைக்கு இரண்டு நூற்பாக்கள் கூறிய தன் நோக்கம் உய்த்துணர்தற்பாலது. ''நீட்டம் வேண்டின்'' என்னும் நூற்பா உரைநடையிலும் உலக வழக்கிலும் உயிரளபெடைகளையும், ''குன்றிசை மொழிவயின்'' என்னும் நூற்பா, உயிரளபெடைக்கு மேலும் விளக்கந் தருதலோடு செய்யுளில் வரும் அளபெடைகளையும் குறிப்பனவாகக் கொள்ளலாம்.

விலை கூறலிலும் புலம்பலிலும் இசையிலும் விளியிலும் அளபெடை மூன்று மாத்திரையினும் மிக்கொலிக்கும். இவ்வுலக வழக்கு அளபெடைகளை இயற்கை அளபெடை என்பர் நச்சினார்க்கினியர். செய்யுளில் வரும் அளபெடையைச் செயற்கை அளபெடை என்பர்.

பாணினியின் இலக்கணம், மூன்று அல்லது நான்கு மாத்திரைகள் கொண்ட எழுத்தைப் 'புலுதம்' என்று கூறுகிறது. வீரசோழியம் பாணினீயத்தைப் பின்பற்றி அளபெடையை மூன்று மாத்திரை கொண்ட ஓர் எழுத்தாகக் கொள்கிறது. வீரசோழியத்திற்குப் பின் தோன்றிய நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நூல்களும் அளபெடையை மூன்று மாத்திரைகள் கொண்ட ஓரெழுத்தாகவே கூறுகின்றன. ஆனால் நன்னூலும் இலக்கண விளக்கமும் அளபெடைச் சொற்களின் ஈற்றில் நிற்கும் குற்றுயிர்கள் அளபெடைகளின் பகுதியாய் இருந்தும், அவை தனித்து நிற்க வல்லவை எனக் குறிப்பிடுகின்றன.

செய்யுட்களில் இசை குன்றுமாயின் சொல்லின் முதலிலும் இடையிலும் கடையிலும் நிற்கும் நெட்டெழுத்துகள் ஏழும் குன்றிய அவ்விசையை நிறைத்தற்குத் தம் மாத்திரையின் மிக்கொலிக்கும். அவ்வாறு அளபெடுத்தமையை அந்தந்த நெடிலுக்கு இனமான குறில் அடுத்து நின்று அறிவுறுத்தும். இவ்வாறு உயிரளபெடையின் இலக்கணத்தை நன்னூல் (91) விளக்குகிறது. ''ஆஅ அளிய அலவன்'', ''உறாஅர்க் குறுநோயுரைப்பாய்'', ''நல்ல படாஅ பறை'' என்னும் இச்செய்யுட் பகுதிகள் முறையே மொழி முதல், இடை, இறுதி ஆகிய அளபெடைகளுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இவற்றில் உள்ள அளபெடைகள் குன்றிய இசையை நிறைத்து நிற்கின்றன. இத்தகைய அள

பெடைகளைச் செய்யுளிசை நிறைக்க வந்த அளபெடைகள் என்பர்.

இவற்றோடு உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் இன்னிசை அளபெடை என்றும், சொல்லிசை அளபெடை என்றும் அளபெடைகளை வகைப்படுத்திக் கூறியுள்ளார். "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே, எடுப்பதூஉ மெல்லா மழை" என்னும் குறளில் 'கெடுப்பதும்' 'எடுப்பதும்' என நிற்பினும் வெண்பாவிற்குரிய செப்பலோசை குன்றாதாயினும், இன்னிசை நிறைத்தற் பொருட்டே குறில் நெடிலாகி அளபெடுத்துள்ளமையால் இதனை இன்னிசை அளபெடை என்பர்.

"உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்றார்
வரனசைஇ யின்னு முளேன்" (குறள்.1263) என்னும் குறளில், 'உரனசை' 'வரனசை' என நிற்பினும் செய்யுளோசை குன்றாதாயினும், 'விருப்பம்' எனப் பொருள்படும் 'நசை' என்னும் பெயர்ச்சொல், 'விரும்பி' எனப் பொருள்படும் வினையெச்சச் சொல்லாதற்கு 'நசைஇ' என அளபெடுத்தமையால் இதனைச் சொல்லிசை அளபெடை என்பர்.

சிவஞானமுனிவரும் அளபெடையை ஓரெழுத்தாகவே கருதுகிறார். இவர் 'நீரும்நீரும்' சேர்ந்தாற் போல நெட்டெழுத்தோடு குற்றெழுத்து ஒத்து நின்று நீண்டிசைப்பதே அளபெடை என்கிறார்.

நெட்டெழுத்து ஏழும் அளபெடுத்தலால் எழுத்து நோக்க அளபெடை ஏழாகும். அவை மொழி முதல், இடை, கடை ஆகிய இடங்களில் நின்று அளபெடுக்குங்கால், ஒளகாரம் மொழியிடை கடைகளில் வரப் பெறாமையால் அவ்விரண்டிடங்களும் நீங்க அமையும் அளபெடை பத்தொன்பதோடு, இன்னிசை நிறைக்கவும் சொல்லிசை நிறைக்கவும் அளபெடுக்கும் அளபெடை இரண்டும் கூடி உயிரளபெடை எழுமூன்று, அதாவது இருபத்தொன்று எனக் கணக்கிடுவர் சிவஞான முனிவர்.

வீரசோழியம், நன்னூல், நேமிநாதம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகியவை உயிரும் மெய்யுமாகிய முப்பது மெய்யெழுத்துகள் அல்லாதவைகளைச் சார்பெழுத்துகளாகக் கொள்கின்றன. இவ்வகையில் அளபெடையை, அந்நூல்கள் சார்பெழுத்துகளுள் ஒன்றாகக் குறிப்பிடுகின்றன.

உயிரளபெடை பற்றித் தொல்காப்பியர் கூறியுள்ள இலக்கணமே தமிழ் மொழியின் இயல்புக்குப் பொருத்தமுடையதாகும். வீரசோழியம் நன்னூல் போன்ற பிற்கால இலக்கண நூல்கள் வடமொழியில் உள்ள 'புலுதம்' என்ற மூன்று மாத்திரைகள் கொண்ட எழுத்தினையொட்டி உயிரளபெடையினை மூன்று மாத்திரையுடைய ஓரெழுத்தாகக் கொண்டன எனலாம்.

ஒற்றளபெடை: தொல்காப்பியர் செய்யுளியலில் 'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' (செய். 16) என்னும் நூற்பாவால் அளபெடை அசையாக நிற்கவும் பெறும் என்று கூறி, அடுத்து, ஒற்று அளபெடுத்து வரினும் அசையாகவும் வரும் என்பதனை "ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப" (செய்.17) என்னும் நூற்பாவால் உணர்த்துகிறார். செய்யுளில் ஓசையை நிறைப்பதற்கு ஒரு மெய்யெழுத்தோடு இன்னொரு அதே மெய்யெழுத்து சேர்ந்து அளபெடுக்கும் என்பது, இந்நூற்பாவின் பொருள். எந்தெந்த மெய்யெழுத்துகள் எவ்வெவ்விடங்களில் அளபெடுக்கும் என்பதை அவர் விளக்கவில்லை.

செய்யுளில் இசை குன்றிய இடங்களில் இருகுறில்களையடுத்தும் தனிக்குறிலையடுத்தும் மொழி இடையிலும் ஈற்றிலும் நின்ற ங்,ஞ்,ண், ந்,ம்,ன்,வ்,ய், ல்,ள் என்ற இப்பத்து ஒற்றெழுத்துகளும் ஆய்தமும் குன்றிய அவ்விசையை நிறைத்தற்குத் தமக்குரிய அரை மாத்திரையிலும் மிக்கு ஒலிக்கும். அவ்வாறு அளபெடுத்தன என்பதை அறிதற்கு அவற்றின் பின் அவ்வெழுத்துகளே வரிவடிவில் வேறு அறிகுறியாய் வரும்.

ஆய்தம் ஒற்றெழுத்தன்றேனும், ஒற்றெழுத்துப் போல அளபெடுத்தலின் இங்குக் கூறப்பட்டது எனலாம். பத்து ஒற்றெழுத்துகளும் ஆய்தமும் ஆகிய பதினோர் எழுத்துகளும் குறிலிணைக் கீழும், தனிக் குறிற் கீழும், மொழியிடையிலும் கடையிலும் அளபெடுத்தலால் ஒற்றளபெடை நாற்பத்து நான்கு ஆதல் வேண்டும். ஆனால் ஆய்தம் குறிலிணைக் கீழோ குறிற் கீழோ மொழி ஈற்றில் வருவதில்லை. இவ்விரண்டும் நீங்க ஒற்றளபெடை நாற்பத்திரண்டு ஆகும் என நன்னூல் உரையாசிரியர் கணக்கிடுவர்.

அளபெடை தொடையாகவும் பயின்று வருகிறது. யாப்பிற்குரிய தொடை வகைகளுள் அளபெடைத் தொடையும் ஒன்றாகும். "அளபெடை தலைப்பெய வைந்து மாகும்" (தொல்.செய்.85) என்பது தொல்காப்பியம். இவ்வளபெடைத் தொடை அடிதோறும் வரும்.

தா.ஏ.ஞா.

# பொருளடைவு




| | |
|---|---|
| அ | 1 |
| அஃதை | 4, 102 |
| அஃறிணை | 4 |
| அஃறிணை இயற்பெயர் | 5 |
| அக்கபோதி | 5 |
| அக்கமாதேவி | 5 |
| அக்கரா | 6 |
| அக்கராபாலிசு | 6 |
| அக்களநிம்மடி | 7 |
| அக்கிதிம்மய்யா நாயக்கர் | 7 |
| அக்கிபூசை | 7 |
| அக்கியாபு | 8, 577 |
| அக்கிரகாரம் | 8 |
| அக்கிரிகோலா | 8 |
| அக்கிரிப்பினா | 9 |
| அக்கிரியா வாதம் | 9 |
| அக்கில் | 9 |
| அக்கிலீசு | 9 |
| அக்கினி | 10 |
| அக்கினிமித்திரர் | 11 |
| அக்கீசன்டின் குட்டர்காம் | 11 |
| அக்குமீனிய மரபு | 12 |
| அக்குரன் | 12 |
| அக்குவினசு, தாமசு தூய | 12 |
| அக்கேயக் கூட்டு | 14 |
| அக்கேயா | 13 |
| அக்கோ | 97 |
| அக்கோச பாரத்துவாசர் | 14 |
| அக்கோலா | 14 |
| அக்டோபர் புரட்சி | 14, 16 |
| அக்பர் | 16 |
| அக்பர் நாமா | 21 |
| அக்பர்பூர் | 21 |
| அக்பரின் தரிசனம் | 557 |
| அக்பரின் பேரரசு | 18 |
| அக்பரும் இந்துக்களும் | 20 |
| அக்பரும் இராசபுத்திரர்களும் | 17 |
| அக்மார்க்கு | 21 |
| அக்னதான் | 23 |
| அக இலக்கணம் | 40 |
| அகக் கட்டுமானச் செலவு | 24, 25 |
| அகக் கட்டுமானப் பயன்கள் | 25 |
| அகக் கட்டுமானம் | 24 |
| அகக்காட்சிக் கொள்கை | 495 |
| அகச்சந்தி | 26 |
| அகச்சந்தி – உள்நிலை விகாரம் | 26 |
| அகச் சின்னங்கள் | 26 |
| அகச் சீராய்வு | 28, 36 |
| அககூட்டா யு.எசு.எசு. | 185 |
| அககுடசின் சாதனைகள் | 32 |
| அககுடசு | 9 |
| அககுடசு சீசர் | 31, 220 |
| அககுடின் தூய | 34 |
| அககுடினிசம் | 34 |
| அகண்ட காவேரி | 34 |
| அகண்டானந்த சுவாமி | 35 |
| அகத்தணிக்கை | 35 |
| அகத்தணிக்கையர் | 36 |
| அகத்திணை | 37 |
| அகத்திய பட்டர் | 40 |
| அகத்திய பண்டிதர் | 40 |
| அகத்தியம் | 41 |
| அகத்தியர் | 41 |
| அகத்தியர் தேவாரத் திரட்டு | 43 |
| அகத்தியர் மலை | 43 |
| அகத்தியர் விண்மீன் | 43 |
| அகத்தியாச்சிரமம் | 44 |
| அகத்தியான் பள்ளி | 45 |
| அகத்தீசர் சதகம் | 45 |
| அகத்தீசுரர் | 45 |
| அகதிகள் | 45 |
| அகதிகள் மறுவாழ்வு | 46 |
| அகநானூற்று உரையாசிரியர்கள் | 48 |
| அகநானூறு | 47 |
| அகநிலைக் கொள்கை | 48 |
| அகநிலை நரம்பு | 51 |
| அகநிலைப்பாலை | 50 |
| அகநிலைராகம் | 51 |
| அகநோக்கு முறை | 51 |
| அகப்பகை | 52 |
| அகப்பொருள் இலக்கண நூல்கள் | 52 |
| அகப்பொருள் இலக்கண வளர்ச்சி | 55 |
| அகப்பொருள் விளக்கம் | 54, 57 |
| அகப்போர் | 683 |
| அகம் | 37, 47 |
| அகம்பல் ஊர் | 58 |
| அகம்பன் மாலாதனார் | 58 |
| அகமணக் காரணிகள் | 59 |
| அகமணக் குடும்பம் | 60 |
| அகமணம் | 58 |
| அகமணமுறைகள் | 59 |
| அகமதாபாத்து | 60 |

அகமதாபாத்துச் சோதனைகள் 61
அகமதிய இனம் 62
அகமதுசா துரானி 63
அகமது நகர் 63
அகமது நிசாம்சா 63
அகமது வீபிக் பாட்சா 64
அகமீட்டுருவாக்கம் 64
அகமுகம் புறமுகம் 65
அகமெம்னன் 67
அகர் 97
அகர்தலா 68
அகர்வாலா 68
அகர ஒலி 2
அகர நிரல் 69
அகரநிரல் வளர்ச்சி 72
அகரம் 68
அகராதி 69
அகராதி அமைப்பு 82
அகராதி நிகண்டு 70, 87
அகராதிப் போர் 79
அகராதியியல் 87
அகராதியின் பணி 87
அகராதியும் கணிப்பொறியும் 86
அகராதியும் கலைக்களஞ்சியமும் 69
அகராதி வகைகள் 79
அகராதி வளர்ச்சி 74, 77
அகல்யாபாய் ஒல்கார் 88
அகலிகை 88
அகலிகை வெண்பா 90
அகலிகை வெண்பா வசனம் 91
அகவர் 91
அகவல் ஓசை 91
அகவற்பா 91
அகழாய்வு 92, 884
அகழாய்வுகள் 732
அகழி 95
அகழிப்போர் 96
அகன்காகுவா 96
அகாசுரன் 97
அகாசூரியசு 97
அகார் 98
அகாரசாதகம் 99
அகாலவருச சுபதுங்கர் 100
அகிச்சத்திரா 100
அகிம்சை 101
அகிரிமண் 102
அகிலேச பிள்ளை 102
அகுதை 102
அகூகன் 103
அகோ 103
அகோபிலம் 103
அகோபிலமடம் 103
அகோம் அல்லது சான் மக்கள் 134
அகோரசிவ பத்ததி 103
அகோர சிவாசாரியார் 103
அகோரமூர்த்தி 103
அகோரா 104
அகோராத்திரமூர்த்தி 104
அங்கத பூபதி 104
அங்கதம் 105
அங்கத வகை – தொல்காப்பியத்தில் 105
அங்கதர் 106
அங்கதன் 107
அங்கப்ப நாவலர் 107
அங்கப்ப பிள்ளை, நா. 108
அங்கப்ப பிள்ளை, பி. 108
அங்கம் 108
அங்கமாலை 108
அங்கவை 108
அங்காடி 217, 548, 551, 552
அங்காடி அமைப்பு 109
அங்காடிக் கட்டுப்பாடு 839
அங்காடித் தோல்வி 609
அங்காடி பன்முகப்படல் 28
அங்காரகன் 111
அங்காரகன் தோற்றம் 111
அங்காளம்மை 111
அங்கீகாரம் 112
அங்கீரகன் 113
அங்குமுத்துப் புலவர் 114
அங்கேரி 114
அங்கோலா 118, 667
அச்சகச் சட்ட விசாரணைக் குழு 120
அச்சகம் மற்றும் நூல் பதிவுச் சட்டம் 120
அச்சணந்தியடிகள் 122
அச்சந்தவிர்த்த நாயகி 389
அச்சம் 122, 218, 219
அச்சரப்பாக்கம் 123
அச்சிராவதி 123
அச்சிறுபாக்கம் 123
அச்சுதராயர் 123
அச்சுதன் 124
அச்சுநாடுகள் 124
அச்சுறுத்திப் பணம் பெறுதல் 125
அச்சுறுத்திப் பறித்தல் 125
அச்சூல் 126
அச்சோதை 126
அசட்ராகான் 126

அசந்தா ஓவியங்களும் சிற்பங்களும் 127
அசந்தாக் குகைகள் 127
அசயராசா 129
அசரத் நிசாமுதீன் அலுயா சிசுடி 129
அசரத்பால் மசூதி 129
அசரீரி 129
அசாசியோ 131
அசாதசத்துரு 131
அசாந்தி 131
அசாபுக் கடல் 132
அசாம் 132, 134, 135
அசாம் மொழிக்காலம் 135
அசாமிய மொழி 134
அசாய்கர் 137
அசாரா ராமசாமி கோயில் 394
அசிசி 137
அசிசியர 138
அசித்துப் பொருள் 774
அசிதகேசகம்பளி 138
அசிமுல்லாக்கான் 139
அசிரியர்களின் முற்றுகை முறை 711
அசிரிய நாகரிகம் 139
அசிரியா 709
அசின்கோர்ட் போர் 143
அசீர்கர் 139
அசுக்காபாத்து 145
அசுகுத் 621
அசுட்டோரியா 145
அசுணம் 145
அசுத்திரியாசு 146
அசுத்திவர்மன் 146
அசுதெக்-தனோவன் பெருங்குழு 422
அசுதெக்கு 146
அசுநான்தாசு 148
அசுமாரா 148
அசுமீர் 148
அசுரர் 148
அசுவகோசர் 148
அசுவசாத்திரம் 150
அசுவசேனன் 150
அசுவமேதம் 151
அசுவான் 152
அசுவான் உயர் அணை 152
அசென்சன் தீவு 153
அசே 153
அசை 154
அசை எல்லை 154
அசை உறுதிசெய்தல் 154
அசை உறுப்புகள் 156
அசையுணர்வு 154
அசையும் எழுத்தும் 154
அசையும் சொத்துகளை அடைமானமாக வைத்தல் 237
அசோகர் 157
அசோகர் கல்வெட்டுகள் 159
அஞ்சத்தக்க பொருளாதார மந்தநிலை 442
அஞ்சல் கட்டண விதிவிலக்கு 636
அஞ்சல்வழிக் கல்வி ஆய்வு 163
அஞ்சல்வழித் தொடர்கல்வி 161
அஞ்சல் வழி விற்பனை 30
அஞ்சனை 164
அஞ்சைக்களத்தீசர் 166
அஞ்சைக்களம் 165
அஞ்ஞவதைப்பரணி 166
அட்கின்சன் சேம்சு 166
அட்கின் பிரபு 861
அட்சரக் காலம் 166
அட்சன் ஆறு 166
அட்சன் என்றி 167
அட்சன் நீர்ப்பிரிவு 168
அட்சன் விரிகுடா 168
அட்சன் விரிகுடா வாணிகக்குழு 169
அட்டக்கிராமம் 170
அட்டகம் 169
அட்டதிக்கசங்கள் 170
அட்டப்பிரதான் 171
அட்டப்பிரபந்தம் 171, 888
அட்டபுட்பம் 172
அட்டமங்கலம் 172
அட்டமாசித்திகள் 372
அட்டமூர்த்தம் 172
அட்டவணை அமைத்தல் 175
அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் 173, 299
அட்டவணை வகுப்பினர் கல்வி மற்றும் பழங்குடியினர் கல்வி 178
அட்டவணையிடுதல் 175
அட்டவால்பா 180
அட்ட வீரட்டத் தலங்கள் 180
அட்டன்சேம்சு 180
அட்டாக்கு 181
அட்டாதசரகசியங்கள் 181
அட்டாவதானம் 182
அட்டாவதானி 182
அட்டிகா 183
அட்டிலா 183
அட்மிரால்டி தீவுகள் 183
அட்மிரால்டி மலைகள் 184
அட்லாசு மலைகள் 184

அட்லாண்டா 185
அட்லாண்டிக்கு அறிக்கை 685
அட்லாண்டிக்குச் சூறை மீன்வளப் பாதுகாப்புப் பன்னாட்டுக் குழு 186
அட்லாண்டிக்குப் பட்டயம் 185
அட்லாண்டிக்குப் பெருங்கடல் 186
அட்லாண்டிக்கு மாநிலங்கள் 188
அட்லாண்டிசு 188
அடக்கக் கணக்கர் 788
அடக்கக் கணக்கின் நுட்பம் 190
அடக்கக் கணக்கு 188
அடக்கச்செலவு 188
அடக்கம் 191
அடக்கல் 191
அடக்கவிலை 191
அடக்கவிலைக் கட்டுப்பாடு 189
அடக்கவிலைத் தணிக்கை 189
அடக்கவிலை மையம் 189
அடக்கவிலை வரையறை 188,89
அடக்குமுறைச் சட்டங்கள் 838
அடகுச் சீட்டு 200
அடகுப் பொருள் திருட்டுப் போதல் 201
அடகு பெறுபவர் 199
அடகு மீட்பு நிபந்தனைகள் 200
அடகுவணிகர் சட்டம் 199
அடகு வைப்பவர் 203
அடங்கன் முறை 201
அடர்சுபில்டு 202
அடவு 202
அடவுகளின் பாகுபாடு 199
அடவுகளுக்கான கையசைவுகள் 204
அடால்பசு கசுடவசு 595
அடால்பு வாக்னர் 205
அடி 205
அடிக்கூறுகள் 207
அடிக்கூறு – பால் 208
அடிநிலை இலக்கணக் கூறுகள் 208
அடிநிலை உறுப்பு 209
அடி நூல் 205
அடிப்படை உரிமைகள் 210, 607
அடிப்படை உறுப்பு உறவுமுறை 264
அடிப்படைக் கல்வி 211
அடிப்படைச் சமுதாய ஆக்கச் செலவு 25
அடிப்படைச் சமுதாய மூலதனம் 24, 612, 613
அடிப்படைத் திறன்கள் 212
அடிப்படை நிகழ்ச்சிக் குறிப்புகள் 214 , 15
அடிப்படைப் புள்ளி விவரம் 214
அடிப்படைப் பொருளியல் 216
அடிப்படை மனவெழுச்சிகள் 218
அடிப்பாகுபாடு 205
அடிமுதலே அத்துமீறல் 283
அடிமை நிலை 219
அடிமை நிலைச் சட்டங்கள் 223
அடிமைப் பணம் 225
அடிமை மரபு 809
அடியளவு 47
அடியன் 225
அடியார்க்கு நல்லார் 225
அடியார்க்கு நல்லார் உரை 273
அடியார்க்கு நல்லார் உரை இயல்பு 226
அடியார்க்கு நல்லார் பல்துறைப் புலமை 228
அடியார்க்கு நல்லார் 225
அடியில் சீர்வரையறை 206
அடியின் வேறுபெயர்கள் 205
அடிலேய்டு 228
அடிவகை 206
அடுக்குநிலை மொழியியல் 229
அடேனார் கொன்ராடு 230
அடை 231
அடைக்கலம் புகுதல் 726
அடைநெடுங்கல்வியார் 232
அடைமானச் சொத்தின் வரிசை உரிமை 240
அடைமானத்தில் கூடுதல் ஆதாயம் 239
அடைமானப் பிணையமும் வங்கியரும் 237
அடைமானம் 232
அடைமான மீட்புத் தடை 239
அடைமான மீட்புரிமை 238
அடைமான மீட்புரிமை அடைப்பு 238
அடைமான மீட்புரிமை மறைதல் 240
அடைமான விகிதப் பொறுப்புக் கோட்பாடு 240
அடையபாளையம் 367
அடையாறு 243
அடையாறு நூலக இதழ் 244
அடையாறு நூலகம் 243
அடைவுச் சோதனை 244
அடைவுப் பதிவு 176
அடோனிசு 245
அண்டர் இராபர்ட்டு 245
அண்டர் சர் வில்லியம் வில்சன் 246
அண்டர் நெடுங்கல்லியார் 232
அண்டலூசியா 246
அண்டார்க்டிகா 246
அண்டார்க்டிகா பெருங்கடல் 246
அண்டார்க்டிகா வட்டம் 249
அண்டைப் பள்ளி 250
அண்டையம் 251
அண்டோரா 252
அண்ண ஒலிப்படக் கருவி 252

அண்ணன்மார் சுவாமிகதை 253
அண்ணாச்சாமி ஐயர் 255
அண்ணாச்சாமி முதலியார் 255, 722
அண்ணாதுரை 255
அண்ணாப்பிள்ளை உபாத்தியாயர் 257
அண்ணா பல்கலைக்கழகம் 257
அண்ணாமலைச் செட்டியார் 258
அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 163, 259, 260
அண்ணாமலை மன்றம் 262
அண்ணாமலை ரெட்டியார் 262
அண்ணாமலை ரெட்டியார் நூல்கள் 264
அண்ணா மாவட்டம் 257
அண்ணா மாவட்டம் 264
அண்ணா விருது 257
அண்ணாவின் இலக்கியப் பணி 257
அண்மை உறுப்பாய்வின் அடிப்படைக் கோட்பாடு 266
அண்மை உறுப்பாய்வு இன்றியமையாமை 265
அண்மை உறுப்பு 264
அண்மை உறுப்புகள் 267
அண்மை உறுப்புப் பகுப்பாய்வு 266
அணி 269, 890
அணியியலுடையார் 273
அணிலாடு முன்றிலார் 274
அணிவகுப்பு 274
அணிவகைகள் 270
அணு ஆணவம் 274
அணுக்குண்டு 474
அணுக்கொள்கை 275
அணுகு முறை 491
அணுவிரதம் 277
அத்தான்பாட்டு 278
அத்தியட்சர் 279
அத்தியயனம் 291
அத்திரம்பாக்கம் 279
அத்திரி முனிவர் 280
அத்தினாபுரம் 280
அத்து மீறுதல் 281, 282, 283
அத்துவாக்கள் 284
அத்துவிதம் 284
அத்துவித வேதாந்திகள் 866
அத்புதானந்த சுவாமி 291
அத்ரன்சிகேரா 291
அத்வைத சித்தாந்தி 292
அத்வைதானந்தர் 292
அதங்கோட்டாசான் 292
அதர்வ வேதப்பிரிவுகள் 292
அதர்வ வேதம் 292
அதவர்யூ 293
அதர்வாங்கிரசு 292
அதாய்-தின்-கா-சோப்ரா 294
அதான் 223
அதானா 294
அதி இராசேந்திரன் 328
அதிகச் சலுகையுறும் நாட்டு விதி 294
அதிகச் சலுகையுறும் நாடுகள் 294
அதிகப் பற்று 298, 625
அதிகார அளிப்பு 301
அதிகார ஆவணம் 305
அதிகார ஒப்படைவு 303, 304, 305
அதிகாரக் குவிப்பு 306, 704
அதிகாரச் சமத்துவப் பொருளாதாரம் 315
அதிகாரப் பகுப்பு 704
அதிகாரப் பங்கீடு 310
அதிகாரப் பரவல் முறை 307, 309
அதிகாரப் பிரிவினை 311
அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு 619
அதிகாரப் பொருளாதார நாடுகள் 319
அதிகாரப் பொருளாதாரம் 314
அதிகாரம் தழுவிய தனியார் முயற்சிப் பொருளாதாரம் 315
அதிகார வரம்பு 320
அதிகார வருக்கம் 322
அதிகார விலைமுறை 316
அதிகை 325
அதிதாரத் தாயி 325
அதிதீ 10
அதிபத்த நாயனார் 325
அதிபர் கார்ட்டர் 455,456
அதிபர் ரிச்சர்டு நிக்சன் 455
அதிமதுரகவி 326
அதிமனம் 727
அதியமான்கள் 326
அதியமான் கோட்டை 327
அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினி 327
அதியமான் நெடுமானஞ்சி 327
அதியன் விண்ணத்தனார் 328
அதியேந்திரன் 326
அதிர்ச்சி மருத்துவம் 328
அதிரதர் 328
அதிரவீசி ஆடுவார் 328
அதிராம்பட்டினம் 328
அதிராவடிகள் 329
அதிலாபாத்து 329
அதிவீரராமபாண்டியன் 329
அதினா 330
அதீசர் 330
அந்தகக் கவி வீரராகவ முதலியார் 330
அந்தபாலர் 331

அந்தமான் நிக்கோபார் தீவுகள் 331
அந்தமான் பழங்குடிகள் 333
அந்தரகாந்தாரம் 337
அந்தரி 337
அந்தாதி இலக்கியம் 337
அந்தாதிப் பாகுபாடு 338
அந்தாதி மாலை 338
அந்தாதி வகை 339
அந்தாம் பிரயோன்சா 340
அந்தாளிக் குறிஞ்சி 340
அந்தி 278
அந்தி இளங்கீரனார் 340
அந்திமான் 341
அந்தியூர் 341, 869
அந்திரோகிலிசு 342
அந்துவஞ்செள்ளை 342
அந்துவன் 342
அந்துவன் கீரன் 342
அந்துவன் சாத்தன் 342
அந்தோணிக்குட்டி அண்ணாவியார் 342
அந்தோணிபிள்ளை தாமசு 343
அந்தோனி கோபு 343
அந்தோனினசு பயசு 343
அந்தோனினைன் சுவர் 343
அநந்த கவிராயர் 343, 344
அநந்த கிருட்டிண ஐயங்கார் 344
அநந்த தேவன் 344
அநந்தநாதநயினார் 344
அநந்தபாரதி ஐயங்கார் 344
அநந்தராமையர், இ.வை. 345
அநாகத நாதம்-ஆகதநாதம் 345
அநிர்வசனக்யாதி 287
அநிருத்தர் 351
அநிருத்தன் 345,346
அநுபாவம் 889
அநுபூதி அனுபவம் 346
அநுபூதி நெறிக் கொள்கை 346
அநுராதபுரம் 348
அநேகதா கால்வாய் 351
அப்சரசுகள் 351
அப்சல்கான் 352
அப்துர் இரகிமான்கான் 353
அப்துர் இரகீம் 353
அப்துர் இரகுமான், முகமது 353
அப்துர் இரசாக்கு 353
அப்துல் அசிசு 354
அப்துல் அமீது 354
அப்துல் அமீது கான் 355
அப்துல் அமீது மரைக்காயர் 355
அப்துல் இரகுமான் புலவர் 356
அப்துல் காதர் 355
அப்துல் காதிர் அருள்வாக்கியார் 356
அப்துல்லா 357
அப்துல்லா சேக் முகமது 357
அப்பர் 358
அப்பலேச்சியன் மலைகள் 361
அப்பனையங்கார் 361
அப்பாச்சாமிப்பிள்ளை 362
அப்பாச்சாமி முதலியார் 362
அப்பாசி 362
அப்பாசித்து மரபினர் 363
அப்பாலும் அடிச்சார்ந்தார் 364
அப்பாலோ 364
அப்பாவுப்பிள்ளை 361
அப்பாவையர் 365
அப்பியாச கானம் 365
அப்பிள்ளையார் 365
அப்புக்கல் 365
அப்புக்குட்டி ஐயர் 366
அப்புவையங்கார் 366
அப்பூதி அடிகள் 366
அப்பூலியா 367
அப்பைய தீட்சிதர் 367
அப்போசுதலர் நடபடிகள் 368
அப்ரடைட்டி 368
அபசுட்டனாய் 369
அபட் தாமசு 369
அபட் பிரான்சு இலிங்வுட்டு 369
அபநேந்திரநாத தாகூர் 369
அபப்தா 370
அபயநாகன் 370
அபாதான் 370
அபாவம் 276
அபிக்ஞான சாகுந்தலம் 370
அபிகேய்ல் இசுமித் ஆடம்சு 372
அபிசாரம் 373
அபிசான் 373
அபித்அலி 373
அபிதம்மம் 373
அபிதாசு 374
அபிதானகோசம் 374
அபிதான சிந்தாமணி 374
அபிதை 891
அபிநந்தனார் 875
அபிநய தருப்பணம் 377
அபிநயம் 375, 892
அபிநவகாளமேகம் 344
அபிநவகுப்தர் 379, 890, 893

அபிநவ பம்பா 379
அபிநவ பாரத சங்கம் 379
அபிபுல்லா, சர்.எம். 380
அபிமன்யு 380
அபிமன்யு சுந்தரி மாலை 380
அபிமானசோழ இராசாதிராசன் 380
*அபிராமபட்டர்* 390
அபிராமி அந்தாதி 380
அபிராமிப்பட்டர் 382
அபிவில்லி 383
அபினிப் போர் 383
அபினென் மலைத்தொடர் 383
அபியன் 384
அபுகிர் விரிகுடா 384
அபுசிம்பல் 384
அபுசெயித்து 386
அபுதாபி 386
*அபுநசர், மான்சூர்* 811
அபுல்-இ-ஆசன் 386
*அபுல்பசல்* 21, 386, 556
அபுல் பெய்சி 386
அபெர்டீன் 387
அபேதானந்த சுவாமி 387
அம்காரா 387
*அம்காரா மொழி* 388
அம்பபாலி 388
அம்பர் 388
அம்பர்கிழான் அருவந்தை 389
அம்பர் சர்க்கா 389
*அம்பர் புராணம்* 388
அம்பர் மாகாளம் 389,885
அம்பலத்தாடுமையர் 390
அமபலவாசி 390
அம்பலவாண அடிகள் 390
அம்பலவாணக் கவிராயர் 390
அம்பலவாண தேசிகர் 390
அம்பலவாண தேசிகர் கலம்பகம் 391
அம்பலவாண நாவலர் 391
அம்பலவாண பண்டிதர் 391
அம்பலவாணர் திருக்கூத்து 392
அம்பாசமுத்திரம் 393
அம்பாய்னா 393
*அம்பாய்னா படுகொலை* 393
அம்பாலா 394, 756
அம்பி 394, 396, 847
அம்பிகாபதி 397
அம்பிகாபதிகம் 398
அம்பிகாபதி கோவை 397
அம்பிகை பாகர் 399
அம்பிரியா 399
அம்பேத்கர் 399
அம்போல்டு 402
அம்போல்டு ஆறு 402
அம்மள்ளனார் 403
அம்மானை 403
அம்மானைக்காய் 403
அம்மானைவரி 403, 404
*அம்மானை விளையாட்டு* 403
அம்மூவனார் 405
அம்மெய்யநாகனார் 405
அம்மைச்சி 405
*அம்மை துசோன்சு அருங்காட்சியகம்* 759
அம்மைய நாயக்கனூர்ப் போர் 405
அம்ரி 406
*அம்ரி நாகரிகம்* 406
அம்லாட் விதி 407
அமர்தாசர் 408
அமர்நாத் 409
அமர்நீதி நாயனார் 409
*அமரக்கோட்டை* 16
அமரகண்டகம் 410
*அமரகோசம்* 410
அமரர் 410
அமராவதி 410
*அமராவதி ஆறு* 413
*அமராவதி கலைப்பாணி* 410
அமனுல்லாகான் 413
அமாசெசு 413
அமாத்தியர் 413
அமாவாசை 414
அமிச சுரம் 414
அமித்ரகட்டா 415
அமிதசாகரர் 415
அமிதாபானுபேகம் 16
*அமிர்தகவி* 416
அமிர்தகவிராயர் 415
அமிர்த பசார் 416
அமிர்தம்பிள்ளை 416
அமிர்தலிங்க சுவாமிகள் 417
அமிருதசரசு 416
அமிருத ரஞ்சனி 417
அமீது 417
அமீர் குசுரு 417
*அமீன் கெமாயில்* 729
அமுதகுண்டலி 418
அமுதசுரபி 419
அமுதபாணியார் 419
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் 419
*அமெரிக்க அகராதிகள்* 78

அமெரிக்க அகராதி வளர்ச்சி 79
அமெரிக்க இந்திய மொழிகள் 420, 426
அமெரிக்க இந்தியர் 422
அமெரிக்க இந்தியர் சிக்காகோ மாநாடு 423
அமெரிக்க இந்தியரின் தொல்வரலாறு 422, 423, 424
அமெரிக்க இந்தியரின் வரலாறு 423
அமெரிக்க இலக்கியம் 427
அமெரிக்க உள்நாட்டுப் போர் 222
அமெரிக்க உளவியல் சங்கம் 432
அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கி 525
அமெரிக்க ஐக்கிய நாடு 433
அமெரிக்கக் கருவூலம் 473
அமெரிக்கச் சமூகவியல் சங்கம் 448
அமெரிக்கச் சலுகைக் கொள்கை 295
அமெரிக்கசுவெசுபூசியசு 448
அமெரிக்க செருமனி ஒப்பந்தம் 295
அமெரிக்கத் தத்துவம் 448
அமெரிக்க தாலர் 453
அமெரிக்க நாட்டில் அதிகார ஒப்படைப்பு 304
அமெரிக்க நாட்டுப் பள்ளிக் கல்வி முறை 456
அமெரிக்க நாடுகள் சுதந்திரம் பெறுதல் 477
அமெரிக்க நூலகச் சங்கம் 459
அமெரிக்கப் புரட்சி 423
அமெரிக்கப் பொருளியல் கருத்துகள் 460
அமெரிக்க பிரெஞ்சு நாட்டுத் திட்டங்கள் 612
அமெரிக்க மைய வங்கி முறை 470
அமெரிக்கா 473
அமெரிக்காவில் அடிமைகள் 222
அமேசான் ஆறு 477
அமைச்சரவை 478
அமைச்சரவைக் குழு 479
அமைச்சரவைக் குழுவின் பணிகள் 479, 481
அமைத்தலும் பணிகளும் 176
அமைதிப் போர் 685
அமைந்த நாராயணன் 881
அமைப்பாவணத்தின் பகுதிகள் 481, 482
அமைப்பாவணத்தை மாற்றும் முறை 482, 483
அமைப்பாவணம் 481
அமைப்பியல் சார் மானிடவியல் 484
அமைப்பின் உட்கூறுகள் 496
அமைப்பு 186, 490, 707, 722
அமைப்பு அடிப்படை 207
அமைப்புக்கிளை மொழியியல் 493
அமைப்புக் கோட்பாடு 495
அமைப்புச் செயல்பாட்டியல் 484
அமைப்பு நிலை 274
அமைப்பு முறை, கல்வியில் 499
அமைப்புமுறைவழிக் கற்பித்தல் 496
அமைப்பு மொழியியல் 484, 500
அமைப்பு மொழியியலார் 493
அமைப்பு வகைகள் 496
அமோகவர்சர், முதலாம் 504
அமோகவர்சர், இரண்டாம் 505
அமோகவர்சர், மூன்றாம் 505
அய்.எசு.எல்.எம். சார்புகள் 506
அய்.எசு.எல்.எம். படிவம் 505
அய்.எசு. வளைகோடு 505
அய்கொளே 507
அய்கொளே கல்வெட்டுச் சாசனம் 510
அய்டான் 510
அய்பா 510
அய்யப்புழல் 511
அய்யனார் 512
அயக்கிரீவர் 513
அயர்லாந்து 513
அயர்லாந்து பிரிவினை 515
அயல் இனமையக் கொள்கை 517
அயல்நாட்டு உதவி 517
அயல்நாட்டு உதவியின் பங்கு 521
அயல்நாட்டுக் கடன் 524
அயல்நாட்டுச் செலுத்துநிலை 529
அயல்நாட்டு மாற்று அங்காடி 453
அயல்நாட்டு மாற்றுச்சீட்டு மூலம் பணம் செலுத்துதல் 541
அயல்நாட்டு முதலீட்டாரின் தலையீடு 537
அயல்நாட்டு மூலதனம் 532
அயல்நாட்டு வாணிகம் 116
அயல்நாட்டு வாணிகம் 538
அயற் செலாவணி 218, 547
அயற் செலாவணி அங்காடி 109
அயற் செலாவணி இடைவெளி 518
அயற் செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டம் (1973) 536
அயற் செலாவணிப் பெருக்கல் 521
அயற் செலாவணி மாற்றுக் கட்டுப்பாடு 539
அயன்மையும் கல்வியும் 554
அயிசா 556
அயினி அக்பரி 556
அயுக்தர் 560
அயூதியா 560
அயூப்கான் 319
அயோ 561
அயோத்தி 560
அயோவா 560
அயோனியக் கடல் 561
அயோனியத் தீவுகள் 561
அயோனியா 562
அர்க்கன்சா 562
அர்கேடியா 564

அர்ச்சுனர், குரு 564
அர்ச சரிதம் 565
அர்சர் 565
அர்சுமத்பானுபேகம் 568
அர்த்த சாத்திர வரலாறு 569
அர்த்தசாத்திரம் 279, 568, 686
அர்த்தநாரீசுவரர் 570
அர்தயாள் 571
அர்துணா 572
அர்பன் 572
அர்பன், முதலாம் 572
அர்பன், இரண்டாம் 572
அர்பன், மூன்றாம் 573
அர்பன், நான்காம் 573
அர்பன், ஐந்தாம் 573
அர்பன், ஆறாம் 573
அர்பன், ஏழாம் 574
அர்பன், எட்டாம் 574
அர்மீனிய சோவியத்துக் குடியரசு 574
அரக்கர் 577
அரக்கான் 8, 577
அரக்கேனிய இந்தியர் 578
அரங்கம் 578
அரங்கமைப்பு 578
அரங்கு 580
அரசகுடி தகாப்புணர்ச்சி 59
அரசகேசரி 582
அரசஞ்சண்முகனார் 582
அரசவில்லி 583
அரசாங்க அமைப்பு 583
அரசாங்கக் கடனுறுதிச் சீட்டு 587
அரசாங்கக் கொடைகளும் உதவிகளும் 590
அரசாங்கச் செலவு 594
அரசாங்கத் தலையீடு 601
அரசாங்கப் பொருளாதாரக் கட்டுப்பாடும் ஒழுங்குகளும் 599
அரசாங்கப் பொருளாதாரக் கோட்பாடுகள் 608
அரசாங்கம் 617, 654
அரசாங்க வரவு செலவுத் திட்டக் கோட்பாடுகள் 620
அரசாங்க வரவு செலவுத் திட்டம் 623
அரசாங்க வருவாய் 634
அரசிதழ் 635
அரசிதழ்ப் பகுதிகள் 636, 637
அரசியல் அதிகாரத்துவம் 638
அரசியல் அமைப்பு 831
அரசியல் அமைப்புக்குட்பட்ட செயல்முறை 639
அரசியல் அமைப்புத் திட்டங்கள் 677
அரசியல் உணர்வற்ற கொள்கை 639
அரசியல் கட்சிகள் 516, 641
அரசியல் கலை 651
அரசியல் குழப்பங்கள் 667, 668
அரசியல் சட்டம் 438
அரசியல்சார் சமூகவியல் 656
அரசியல்சார் மானிடவியல் 658
அரசியல் தத்துவம் 13, 662
அரசியல் தந்திரம் 665
அரசியல் நிலைபேறும் பொருளாதார முன்னேற்றமும் 666
அரசியல் நுழைவு 804
அரசியல் முறைமைக்குட்படுகை 672
அரசியல் வரலாறு 348
அரசியல் வாழ்வு 685
அரசியல் விடுதலையும் பொருளாதார முன்னேற்றமும் 673
அரசியலமைப்பில் சுழற்சி மாறுதல் 747
அரசியலமைப்பின் வரலாற்றுக்கால வளர்ச்சி 659
அரசியலமைப்புச் சட்டம் 676
அரசியலில் ஆன்மீகம் 680
அரசியலும் போர்நடப்பும் 681
அரசியலும் முறைமையும் 685
அரசியற் கருத்துகள் 644
அரசியார் பேரறிக்கை 688
அரசிலி 689
அரசிலி நாதர் 689
அரசிறைக் கொள்கை 690
அரசின் ஈடுபாடு 319
அரசின் ஒழுங்கு நடவடிக்கைகள் 604
அரசின் கடமைகள் 594, 595
அரசின் தலையீடு 111
அரசின் தோற்றம் 693
அரசின் பணவாக்க முறையும் நிதிக்கொள்கை முறையும் 507
அரசின் பணிகள் 691
அரசினர் கீழைக் கலைக் கையெழுத்து நூலகம் 697
அரசு 516, 813
அரசு அங்கீகாரம் 112
அரசு கொள்முதல் கொள்கை 698
அரசுடைமையாக்கம் 700
அரசுத் துறைத் தலைவர்கள் 556
அரசுப் பண்ணைகள் 702
அரசுப் பணி மறுப்பு 101
அரசும் கல்வியும் 703
அரசும் சமூகமும் 705
அரசு வாணிகக் கழகம் 544, 707
அரண்மனைச் சிறுவயல் 709
அரணிடுதலும் முற்றுகையிடுதலும் 709
அரதத்தாச்சாரியார் 712
அரதைப் பெரும்பாழி 713

அரப்பா 93, 713
அரப்பாவின் காலம் 714
அரபத்த நாவலர் 713
அரபாகோ 714
அரபிக்கடல் 715
அரபு இலக்கியத் தொன்மை 717
அரபு இலக்கியம் 717
அரபுக் கதைகள் 721
அரபுச் சங்கம் 716, 722
அரபு சராய் 722
அரபுப் பணவாக்க நிதி 722
அரபுமொழி 723
அரபு மொழியின் கிளைமொழிகள் 723
அரவிந்தர் 724
அராபத்து 729
அராபிய இசுரேலியப் போர்கள் 727
அராபிய எண்கள் 729
அராபியப் பாலைவனம் 730
அராபியர் கிளர்ச்சி 355
அராமிக் மொழி 160
அராமிய எழுத்துகள் 730
அரிஅரரும் புக்கரும் 730
அரிஅரன் 731
அரிக்கமேடு 94, 732
அரிகண்டபுரம் 749
அரிகதை காலட்சேபப் பள்ளி 736
அரிகதை காலட்சேபம் 735
அரிகரசாத்திரி 738
அரிகேசரி பராங்குச மாறவர்மன் 738
அரிகேசரி மாறவர்மன் 738
அரிகோரப்போர் 739
அரிச்சந்திர நாடகம் 739
அரிச்சந்திரபாகவத மேளா 741
அரிச்சந்திர மயான காண்டம் 740
அரிச்சந்திரன் 740
அரிச்சந்திரன் கதை 741
அரிசிங் நால்வா 743
அரிசித் போர் 743
அரிசில் கிழார் 743
அரிசிற்கரைப்புத்தூர் 744
அரிசுடாட்டில் 311, 583, 645, 657, 686, 744, 862
அரிசுடாட்டிலின் கருத்துக்கள் 746
அரிசேனர் 748, 820
அரிஞ்சய சோழன் 748
அரிட்சுடைட் பிரியான்ட்டு 748
அரிட்டைன் மட்கலன் 733, 748
அரித்துவாரம் 748
அரிதாசர் 749
அரிதி 749
அரிமளம் 750
அரிமா அடக்குநர் 751
அரிமா சங்கத்தின் குறிக்கோள்கள் 751
அரிமா சங்கம் 750
அரிமா முடுக்குநர் 751
அரியக்குடி 752
அரியலூர் 752
அரியலூர் மழவராயர்கள் 752
அரியாட்னி 753
அரியானா 753
அரிவமிசம் 10
அரிவாள் தாய நாயனார் 757
அரிவை 757
அருக்கொணாமலை 758
அருகத்து நிலை 758
அருங்கலச் செப்பு 758
அருங்காட்சியகக் கல்வி 768
அருங்காட்சியகப் பணிகள் 759
அருங்காட்சியகம் 759
அருங்காட்சியக வகைகள் 760
அருங்காட்சியக வரலாறு 761
அருச்சுனன் 769
அருட்பா 43
அருணகிரிநாதர் 771
அருணகிரிநாதர் சு.சு. 772
அருணகிரிநாதர் சுவாமி 773
அருணகிரிநாதர் தத்துவம் 774
அருணகிரிப் புராணம் 774
அருணந்திசிவாச்சாரியார் 775
அருணமச்சிவாயதேவர் 755
அருணன் 775, 776
அருணாசலக் கவிராயர் 776
அருணாசலக் கவிராயர். மு.ரா. 777
அருணாசல நாவலர் 778
அருணாலசப் பிரதேசம் 778
அருணாசல புராணம 778
அருணாசல முதலியார் 780
அருணாசலம். கா. 779
அருணாசலம் பிள்ளை. மு. 779
அருணாசலம் பொன்னம்பலம் 780
அருணிலை விசாகன் 781
அருத்த கம்பித இராகம் 781
அருத்தாபத்தி 781
அருந்ததி 781
அருந்தமிழ்த் திரட்டு 782
அருப்புக் கோட்டை 782
அரும்பத உரையாசிரியர் 786
அரும்பாக்கம் 781
அரும்பைத் தொள்ளாயிரம் 788

அரும்பாத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ் 787
அரும்பொருள் விளக்க நிகண்டு 788, 789
அருமருந்து தேசிகர் 788, 789
அருமன் 789
அருமைப் பண்டங்கள் 782, 783
அருவாநாடு 792
அருவா வடதலை 792
அருவி ஆறு 793
அருள் யாத்திரை 793
அருளப்ப நாவலர் 794
அருளனுபவதத்துவம் 851
அருளாள தாசர் 794
அருளாளப் பெருமாள் 794
அருளாளர் 792
அருளையர் 794
அரூர் 795
அரே கிருட்டிணா இயக்கம் 795
அரே கீபா 795
அரேபியா 796
அரேபூரா கடல் 797
அரையசு 797
அரியனிசம் 797
அரையர் சேவை 797
அரையர் சேவைப் பிரிவுகள் 798
அரையர் சேவை – முறை 799
அரையர் பரம்பரை 800
அரையன் இராசராசன் 801
அல் 801
அல் அக்காபா 801
அல் அசார் பல்கலைக் கழகம் 802
அல் அப்பாசு 363
அல் அமின் 353
அல்காம்பிரா 802
அல்கார்டெல் 803
அல்கானிசியன் மொழி 715
அல்கோன்கியன் வாசகன் பெருங்குழு 421
அல்சிபியாடிசு 803
அல்சியர்சு 804
அல்சீரியா 805
அல்சுடர் 807
அல்செசுடிசு 807
அல்சேசுலோரென் 808
அல்டாமிசு கல்லறை 809
அல்டோனா 809
அல்திகாட் கணவாய் 17
அல் துசிசு யோவானாசு 809
அல்படா 729
அல்பான்சோ, பதின்மூன்றாம் 810
அல்பிருனி 811
அல்பிருனி நூல்கள் 811
அல்பு லைலா வலைலா 721
அல்பேனியன் மொழி 812
அல்பேனியா 813
அல்மமூன் 363
அல்மன்சூர் 363
அல் மன்சூர் 815
அல் – மன்சூர், முகமதுஇபின் அபி அமீர் 815
அல்மேடா 815
அல்மோரா 816
அல்மோரா சிறை 816
அல்லமாப்பிரபு 816, 817
அல்லா 817
அல்லாகு 817
அல்லாப்பிச்சைப் புலவர் 817
அல்லி அரசாணி மாலை 818
அல்லிமரைக்காயர். ம. 818
அல்லூரி சீதாராம ராசு 818
அலக்நந்தா 819
அலகப்பா 819
அலகாபாத்து 819
அலகாபாத்துக் கற்றூண் சாசனம் 820
அலகு 822
அலகுப் பகுப்பு 822
அலகுமுறை 823
அலங்கார சருவசுவம் 827
அலங்கார சாத்திரம் 824
அலங்கார நாயகி 713
அலங்காரம் 334
அலபாமா 828
அலரிக் 831
அலாசுகா 831, 843
அலாசுகா மலைத்தொடர் 834
அலாதீன் 834
அலாய் மினார் 834
அலாரிப்பு 834
அலாவுதீன் கில்சி 835, 854
அலாவுதீனுடைய கல்லறையும் கல்லூரியும் 835
அலாவுதீனும் இந்துக்களும் 838
அலி 840
அலி அகமது, பக்ருதீன் 840
அலிகார் 842
அலிகார்ப் பல்கலைக் கழகம் 842
அலிகினி மலைத்தொடர் 842
அலிபாட்சா 842
அலிபாபா 842
அலிமர்த்தன் கான் 842
அலி முராது 483

அலியார்ப் புலவர் 843
அலுவலக மாற்றம் 483
அலுவற் செலவு 191
அலூசன் தீவுகள் 843
அலெக்சாந்தர் 745
அலெக்சாந்தர் ஆர்ச்சிபென்கோ 843
அலெக்சாந்தர் எண்மர் 844
அலெக்சாந்தர் கன்னிங்காம் 844
அலெக்சாந்தர், மகா 12, 845
அலெக்சாந்தர், முதலாம் (இசுகாட்லாந்து) 843
அலெக்சாந்தர், இரண்டாம் (இசுகாட்லாந்து) 849
அலெக்சாந்தர், மூன்றாம் 844
அலெக்சாந்தர், ஆறாம் 844
அலெக்சாந்தர், முதலாம் (யூகோசுலாவியா) 849
அலெக்சாந்தர், முதலாம் (உருசியாப் பேரரசர்) 850
அலெக்சாந்தர், இரண்டாம், (உருசியமன்னர்) 850
அலெக்சாந்தர், மூன்றாம் 850
அலெக்சாந்தர், மூன்றாம் (உருசியா) 851
அலெக்சாந்தரின் தத்துவப் பள்ளி 851
அலெக்சாந்திரிய நூலகம் 852
அலெக்சாந்திரியா 852
அலெக்சி தோல்சுதாய் 853
அலைக் கோட்பாடு 854
அலை தர்வாசா 854
அலைவாய் 855
அலோர் - இசுடார் 855
அவசர கால வரவு செலவுத் திட்டம் 627
அவத் பிகாரி 856
அவதாரம் 856
அவதூறு 860
அவதூறு வகைகள் 862
அவதூறு வரையறை 861
அவந்திபுரம் 862
அவப்புகுதம் 151
அவரோசு 862
அவலோகிதேசுவரர் 863
அவளிவணல்லூர் 864
அவாய் 864
அவானா 865
அவித்தை 288, 866
அவிநயம் 867
அவிநயனார் 867, 868
அவிநயனார் கலாவியல் 868
அவிநாசி 869
அவிநாசிநாத சாமிகள் 869
அவியன் 869
அவிரோத உந்தியார் 869
அவிரோத நாதர் 870
அவிரோதி ஆழ்வார் 870
அவுசுபெல் கல்விக் கோட்பாடு 870
அவுரங்கசீப் 871
அவுரங்காபாத்து 127
அவேரி 875
அவையோர் 876
அழகப்பச் செட்டியார் 876
அழகம்மை ஆசிரியவிருத்தம் 880
அழகர் ஆச்சாரியார் 880
அழகர் கோயில் 880
அழகர் மலை 883
அழகரந்தாதி 883
அழகரை 883
அழகன் குளம் 884
அழகன்பெருமாள் குலசேகரன் (அ) சீவல்லபன் 885
அழகாபுத்தூர் 744
அழகாம்பிகை 744
அழகிய சிங்கர் மடம் 103
அழகிய சிற்றம்பலக்கவிராயர் 885
அழகிய சிற்றம்பலத்தம்பிரான் 885
அழகிய சொக்கநாதப்பிள்ளை 886
அழகிய நம்பி 886
அழகிய மணவாளசீயர் 886
அழகிய மணவாளதாசர் 886
அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் 888
அழகியல் 888
அழகியல்சார் உளவியல் 893
அழகின் பெருமாள் 895
அழகுசுந்தரம் (ரெவரெண்டு) 895
அழகுணர்ச்சி 888
அழகுமுத்துப் புலவர் 896
அழுகணிச்சித்தர் 897
அழுந்தூர் 897
அழைப்பாணை 897
அழைப்பாணை அனுப்புதல் 898
அழைப்பாணை சார்வு செய்தல் 898
அள்ளூர் நன்முல்லையார் 899
அளகைச் சம்பந்தர் 899
அளபெடை 899
அளிப்பு 552, 791
அளிப்புப் பொருளியல் 450, 469, 470
அளிப்புப் பொருளியல்வாதிகள் 601
அளிப்பை வரையறுக்கும் காரணிகள் 550
அளவை முறை அனுபவ இயல் 452
அற்புதத் திருவந்தாதி 338
அறக்கட்டளை எதிர்ப்புச் சட்டம் 199
அறநெறிச்சாரம் 758
அறிக்கை 121
அறிஞர்களைப் போற்றுதல் 557
அறிதல்சார் இயங்குமுறை 894

அறிவாய்வு 34
அறிவியல் அருங்காட்சியகங்கள் 763
அறிவுசார் எதிர்பார்ப்புக் கோட்பாடு 469
அறுவகை அகப்பகை 52
அறுவகை இலக்கணம் 53
அன்சுவிலி 831
அன்னிபெசண்டு அம்மையார் 243
அனிமா 172
அனுமதி விதி 596
அனுமான அளவை 781
அனுமானம் 781
அனெக்சகொரசு 275
அனைத்து சம்மு காசுமீர் முசுலீம்கள் கழகம் 357
அனைத்து நாட்டுச் சங்கம் 124
அனைத்துலக அகதிகள் நிறுவனம் 46
அனைத்துலக அரிமா சங்கம் 751
அனைத்துலக அருங்காட்சியகங்கள் கழகம் 767
ஆக்சுபோர்டு ஆங்கில அகராதி 79
ஆங்கில அகராதியின் தோற்றம் 78
ஆங்கில அடைமானம் 234
ஆங்கில ஆப்கானியப் போர் 413
ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு 63
ஆங்கிலப் பாரசீக எண்ணெய் வாணிகக் குழு 370
ஆங்கிலம் தமிழ் அகராதிகள் 76
ஆங்கிலேய பிரெஞ்சு ஒப்பந்தம் 295
ஆச்சார்ய சங்கரர் 284
ஆசிரிய நிகண்டு 70
ஆசிரியப்பா 91
ஆசிரிய மணி 773
ஆசுடின் 301
ஆசுவால்டு 510
ஆசூர்பானிபல் 140
ஆட் இசுபிரிங்சு 564
ஆட்சிநாதர் 123
ஆட்சிமுறை 335
ஆடம்சு 597
ஆடம் சுமித்தின் கருத்துகள் 600
ஆடம் சுமித்து 27
ஆடம்பரப் பண்டங்கள் 792
ஆடல் கலையில் அபிநயம் 375
ஆடல் தொகுதி அமைப்பியல் 205
ஆண்ட்ரூ கார்னிசீ 459
ஆண்டியன் நாகரிகம் 426
ஆண்டியன் நிலநடுக்கோட்டுப் பெருங்குழு 422
ஆண்டுத் திட்டம் 623
ஆண்டு நிதி நிலை அறிக்கை 623
ஆண்டு வரவு-செலவுத் திட்டம் 622
ஆணவம் 867
ஆத்மார்ப்பன சுருதி 368
ஆதம் சுமித்து 594, 595, 596
ஆதாய மையம் 189
ஆதிக்குடிகளின் போர் 682
ஆதென்சு 104
ஆதென்சு நகரம் 7
ஆப்சு 638
ஆப்பிரிக்காவின் பொருளாதார நிலை 675
ஆம்பர்க்கு 809
ஆம்போரா சாடிகள் 733
ஆமுன்கன் 248
ஆயிரத்தோர் இரவுகள் 722
ஆர்தர்லேபர் 469
ஆர்வம் 726
ஆரியநந்தி 122
ஆரூன் அல் இரசீது 363
ஆரோவில் 727
ஆல்ட்பினோகோதேக் 761, 762
ஆல்புகர்க் 816
ஆல்மெக் நாகரிகம் 424
ஆல்வின் ஏன்சன் இக்சு, 621
ஆலம்பணம் 889
ஆலன்கார்லின் 519
ஆலிடே 268
ஆவணங்களுக்கு எதிராகப் பணம் 541
ஆவர்ணம் 867
ஆழத்தோண்டும் முறை 93
ஆள்விலைப் பிரமாண இசைவுச் சீட்டு 223
ஆற்றல் குழுக்கள் 603
ஆறுகள் 562, 806, 829
ஆறுமுக நாவலர் 43
ஆனந்தக் கூத்து 392
ஆனந்த குமாரசாமி 392
ஆனந்த பவன் 820
ஆனந்த மாநடம் 392
ஆனபாட்டிசுடுகள் 647
ஆனலூலூ 864
இக்சு சே.ஆர். 505
இகின்சு 534
இங்கிலாந்தின் 13 குடியேற்றங்கள் 435
இசுகிப் சேக் ஆண்டுத் திட்டம் 186
இசுகேமல் 547
இசுடாய்க்குகள் 645
இசுடிம்சன் கொள்கை 113
இசுடீபன் வெசுலி 852
இசுடெப்பீசு நிலப்பிரிவு 805
இசுபார்ட்டகசு 220
இசுமாயில் ஆதில் சா 124
இசுரேல் 97

இசுலாத்திற்குப் பின் தோன்றிய அரபு இலக்கியங்கள் 719
இசுலாம் 817
இசுலாமிய நாடுகளில் அடிமை முறை 221
இசுலாமியர் குடும்பம் 60
இசை 888
இட்சிங்கு 149
இட்டாநகர் 778
இட்லர் 124, 317
இடநேரக் கோட்பாடு 34
இடப் பிரிவு 482
இடர்தாங்குச் சிக்கனங்கள் 27,28
இடை எழுவள்ளல் 341
இடைக்கால அரங்குகள் 581
இடைசி 301, 303
இடையாற்று மங்கலம் 345
இடைவிட்ட அண்மை உறுப்பு 266
இடைவிடா அண்மை உறுப்பு 266
இணுவில் 399
இணைப்பு முறை 26
இணைப்பு வாணிக ஒப்பந்தம் 708
இத்தாலி 12, 124
இந்தி எதிர்ப்பு 256
இந்திய அயல்நாட்டுச் செலுத்து நிலை 532
இந்திய அரசியல் சட்டம் 401
இந்திய அரசியல் வரையறைச் சட்டமும் கட்டுப்பாடுகளும் 606
இந்திய அரசியலமைப்புச் சட்டம் (1950) 304, 479, 480
இந்திய அருங்காட்சியகங்களின் இதழ் 768
இந்திய அருங்காட்சியகம் 761
இந்திய உணவுக் கழகம் 699
இந்தியச் சட்டமன்றச் சட்டம் (1833) 304
இந்தியத் தத்துவ அணுக்கொள்கை 276
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை 845
இந்திய நிதி உதவிக் கூட்டிணைப்பு 520
இந்தியப் படையெடுப்பு 847
இந்தியப் பொருளாதாரத்தில் விளைந்த நன்மைகள் 537
இந்தியமயமாக்கப்படும் திட்டம் 536
இந்திய மைய இருப்பு வங்கி 539
இந்திய வரவுசெலவுத்திட்டம் 627, 628, 629, 630
இந்தியாவில் அதிகார ஒப்படைவு 304
இந்தியாவில் அரிமா சங்கம் 751
இந்திரன் வஞ்சம் 89
இந்துமுசுலிம் பாணி கட்டிடக்கலை 61
இந்தோ – ஐரோப்பிய மொழி 812
இந்தோனேசியா 792
இந்தோனேசியாவில் பொருளாதார நிலை 675
இபன் தாவூத் 797
இபாதத் கானா 20
இபோ போர் 684
இயக்குநர் பொறுப்பு மாற்றம் 483
இயல்பு ஆதாயம் 191
இயற்கைப் பிரிவுகள் 115, 828, 831
இயற்கையமைப்பு 753
இயற்கையான மக்கள்தொகை மாற்றம் 215
இயற்கை வளங்கள் 116
இயற்கை வாதம் 452
இயைபு 4
இர்விங் பிசர் 463
இரகுநாதசேதுபதி ஒருதுறைக்கோவை 416
இரகுவம்ச மொழிபெயர்ப்பு 582
இரட்கிளிப் பிரெளன் 484
இரண்டற்றது 288
இரண்டாம் உலகப் போர் 683
இரண்டாம் பானிப்பட்டுப் போர் 17
இரணியன் கோட்டை 881
இரத்தினகரண்டகம் 758
இரத்தினாவளி 568
இரதிபாவம் 889
இராக்கதர் 577
இராக்கிளசு 852
இராகாசிகா 12
இராச்சிய வர்த்தனர் 566
இராசக்கிருகம் 131
இராசகோபாலாச்சாரி 478
இராச தருமம் 686
இராசராசன் மூன்றாம், 223
இராசாசி 256
இராசாதிராசன், இரண்டாம் 223
இராசா தோடர்மால் 19
இராசுமசு 647
இராட்லர் அகராதி 73
இராணி மீனாட்சி 406
இராணுவ அமைப்பு 839
இராணுவ ஆட்சி 667
இராணுவம் 141
இராபர்ட்டு அதால் 640
இராபர்ட்டு ஆக்சு 793
இராபர்ட்டு கிளேசர் 499
இராபர்ட்டு மெக்கைவர் 658
இராபின்சு 789
இராமகிருட்டிண பணிமன்றம் 35
இராமச்சந்திர் மூர்கூர் பாவா 736
இராமசாமி, ஈ.வே. 256
இராமசெசு, இரண்டாம் 374

இராமராயர் 63
இராமாவதாரம் 858
இராயகிரி 779
இரீகன் நிருவாகம் 456
இரு உலகப்போர்களின் விளைவுகள் 317,18
இருங்குன்றம் 880
இருசமய விளக்கம் 749
இருத்தல் கொள்கை 488
இருதயாலய மருதப்ப தேவர் 263
இருப்புநிலை அறிக்கை 174
இருபத்து எட்டு அதிகாரங்கள் 368
இருபத்து நான்கு வகை அபிநயம் 376
இரும்புக்காலம் 366
இருமுக ஒப்பந்தக் கடன்கள் 525
இருமுக ஒப்பந்தம் 295
இருமுகக் கைக்கோடரிகள் 280
இருமொழி அகராதி 74
இருவர் போட்டி 110
இருள்சூழ்ந்த நகையியல் 431
இரெய்னா 248
இரைசு. ஏ.கே. 61
இரௌலட்டட் மட்கலன் 733
இலக்கண நூலாரின் புணரியல் அல்லது சந்தி 26
இலக்கண விளக்கம் 53
இலக்கணை 891
இலக்கிய இனங்கள் 427
இலக்கியக் குறிப்பு 146
இலக்கியம் 350
இலகிமா 173
இலங்கை – போப்பிட்டி 356
இலங்கை – மானிப்பாய் 780
இலட்சு 621
இலட்சுமணசாமி முதலியார் 878
இலாக்கு 304
இலாசுவெல் 641
இலாட்கான் கோயில் 507
இலாம்பு 268
இலால்பகதூர் சாத்திரி 129
இலிங்கன் எல்சுவர்த்து 248
இலிட்டில் ராக்கு 562
இலிடோர் 364
இலியன் திராட்சுகி 16
இலியோ சங்கம் 751
இலியோவ் 15
இலுசிப்பசு 275
இலூயி எம்சுலேவ 229
இலெவி–இசுட்ராசு 484, 486, 489
இலெனின் 14
இலேட்டன் 595
இலோரன்சோ 816
இழப்பீட்டுத் தொகை 200
இளங்கிளியம்மை 123
இளநிலை உயர் பள்ளி 458
இளமைப்பருவம் 744
இறக்குமதி 541, 542
இறக்குமதி உரிமம் 539
இறுதிநிலைச் செலவுக் கணிப்பு 190
இறுதிநிலைச் செலவுக்கோடு 195
இறைமுறை 686
இறைமை 693
இறையனாரகப்பொருள் 54
இறையுரிமைகள் 635
இறைவழி உரிமைக் கோட்பாடு 647
இறைவழிக் கோட்பாடு 694
இன்காப் பேரரசு 180
இன்பவாதக் கோட்பாடு 894
இன்பவாதம் 894
இன்னிசையளபெடை 901
இனம் 176
ஈசத்துவம் 173
ஈசுடன் 662
ஈட்டு அடைமானம் 233
ஈட்டுக் கொடைகள் 592
ஈடிப்பசு 487
ஈடிபசு சிக்கல் 123
ஈமச்சடங்குகள் 335
ஈரவைச் சட்டமன்றம் 678
ஈரோசிமா 275
ஈவர்ட்டு 303
ஈழத்து வட்டுக்கோட்டை 391
உக்ரேன் 843
உச்சகப் பய்யாக் கோயில் 509
உச்சிமல்லிக்குடி கோயில் 509
உட் பிரிவுகள் 625
உடுதடி 5
உண்ட்டு 495
உண்ட்டு, வில்கெல்ம் 51
உண்ணாமை 101
உண்மைக் கொள்கை 13
உணவுத் தானிய ஆய்வுக் குழு 699
உத்தீபனம் 889
உப்புச்சத்தியாக்கிரகம் 353
உபநிடதம் 284
உபரி விதி 596
உமையம்மை 166
உய்த்துணர் அங்கீகாரம் 112

உயர் ஆராயச்சி மையம் 262
உயர்தொழில் நுட்பம் 26, 27
உயர்நிலை 758
உயிர் 866
உயிர்ப்பொலி 3
உயிரளபெடை 900, 901
உரிப்பொருள் 38
உரிமம் 199, 200, 201, 635
உரிமம் பெற்ற வணிகர்கள் 699
உரிமம் வழங்குதல் 604
உருசிய துருக்கியப் போர் 64
உருபனியல் நிலை 490
உருவாக்கப்படும் முறை 623
உருவாண்டா 667
உருசோ 301, 638, 648, 658, 693, 694, 810, 850
உரைக்கோவை 894
உரோம் மையம் 768
உரோமானிய அடிமைகள் 224
உரோமானிய அரங்குகள் 581
உரோமானியச் சட்டம் 220
உரோமானியப் பேரரசு 32
உல்ம் 369
உலக ஆளுமை 112
உலக தருமி 378
உலக தேசிய வருமானம் 453
உலத நாடுகள் கழகம் 685
உலகப் படைப்பிற்கு மூலகாரணங்கள் 9
உலகப் பாதுகாப்பு நிறுவனம் 768
உலக வங்கி 525, 526
உலக வழக்கு, நாடக வழக்கு 39
உலக வைப்பு நிதி 455
உலகாயுதம் 449
உலூக்கா 368
உலோகமாபாலன் 122
உவம வகை 271
உவமையின் நான்கு கூறுகள் 271
உவா 414
உழவாரத்தொண்டு 360
உழைப்பு 784
உழைப்புச் செறிந்த உற்பத்தி முறை 519
உள் ஊக்குத் திறன் 66
உள்துறை அரசியல் 654
உள்நாட்டுக் கடன்கள் 588
உள்நின்று ஊற்றெடுக்கும் முறை 211
உள்ளங்கை நிலை 204
உள்ளாட்சி அரசாங்க முறை 308
உளத்தடை வகை 66
உளத்தொலைவு 894
உற்பத்திக் கட்டுப்பாடு 708
உற்பத்திக் காரணி இட ஒதுக்கீடு 608
உற்பத்தி முறை 318
உற்பத்தி முறை பன்முகப்படல் 28
உற்பத்தி வாய்ப்பு 785
உறவு முறை 486
உறுதி ஆவணம் 120, 121, 122
உறுதிநிலைப்படுத்தல் பணி 609
உறுப்பினர்கள் 460
உறுப்பு நாடுகள் 186, 716, 723
ஊக்கக் கொடைகளும் உதவிகளும் 593
ஊக்குவிப்புகள் 612
ஊகம் 781
ஊக வாணிகப் பேரங்கள் 553
ஊக வாணிகம் 506
ஊடுவழி 603
ஊண மரபினர் 183
எகல் 681
எசுகிமோ அலியுத்துப் பெருங்குழு 420
எசுகோரியல் 811
எசுசோ நிறுவனம் 537
எட்டுப் பிரபந்தங்கள் 171
எட்டுப் பிரிவுகள் 9
எட்டு வீரச் செயல்கள் 180
எட்மண்ட் இலீச் 489
எட்வர்டு சேம்பர்லின் 464
எட்வின் ஆர்.ஏ. செலிக்மேன் 463
எண்பேராயம் 636
எண்வகை மங்கலப் பொருள்கள் 172
எண்வகை மலர் 172
எத்தியோப்பியா 388
எதிர்காலச் சேமிப்பு இருப்பு 699
எதிர்ப்புக் காரணங்கள் 603, 604
எதிர்பாராச் செலவு நிதி 625
எதிரெழுச்சி நிலை அங்கீகாரம் 113
எதிரெழுச்சியினர் 112, 113
எந்திர அளவு 26
எம்பிடோகிளாசு 275
எமில் தர்க்கைம் 661, 662
எய்ட்டகர் 49
எர்குவிசு 807
எர்பர்ட் இசுபென்சர் 600
எர்மன் கிராசுமன் 65
எர்னசுட்டு சாக்கில்டன் 247
எர்னசுட்டு பார்க்கர் 663
எல்.எம். வளைகோடு 505
எல் சல்வேடார் 667
எல்சுவொர்த்து 530

எல்லாளன் 348
எல்லைகள் 753
எல்லைப்புற வாணிகம் 296
'எல்' வடிவ நீள்காலச் செலவு வளைகோடு 198
எலன் 10
எவான்சு பிரிட்ச்சர்டு 662, 659
எழுத்துகள் ஐம்பத்தொன்று 284
எழுதப்பட்ட அரசியலமைப்பு 618, 678
எழுதப்படாத அரசியலமைப்பு 678
எழுதா அரசியலமைப்பு 618
எழுதாச் சட்டம் 303
எழுவகைத் தாண்டவம் 393
என்றி 303
என்றி, ஐந்தாம் 144
என்றி சார்சு 461
என்றி மெயின் 676, 695
ஏக ஈசுவரன் 817
ஏகல் 49
ஏசுடிங்சு 698
ஏதென்சு நகரப் பள்ளி 851
ஏழு 17
ஏரிகள் 434
ஏரிவான் 575
ஏல் பல்கலைக்கழகம் 257
ஏலம் 201
ஏழை நாடுகள் 791
ஏற்றுமதி 542, 543
ஏற்றுமதி இறக்குமதி 552, 553
ஏற்றுமதி இறக்குமதிக் கட்டுப்பாடு 540
ஏற்றுமதி இறக்குமதி வாணிக ஒப்பந்தங்கள் 708
ஏற்றுமதிப் பண்டங்களின் தர வரையறை 22
ஏற்றுமதிப் பொருள்கள் 707
ஏற்றுமதியில் அக்மார்க்கு 22
ஐக்கியநாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டு நிறுவனம் 385
ஐக்கிய நாட்டுச் சபை 685
'ஐகாம்' 767
ஐசங்கு எச்.சே. 66
ஐசுலாண்டிக்கு மொழி 408
ஐதராபாத்து 698
ஐந்தாண்டுத் திட்டங்கள் 609, 610
ஐந்தாண்டுத் திட்டங்களில் வேலைவாய்ப்பு 613
ஐந்திலக்கண நூல்கள் 53
ஐந்து கலைகள் 284
ஐந்து நிலை 758
ஐந்து முறை 291
ஐந்துறுப்புகள் 414
ஐரோப்பியப் பொருளாதாரக்குழு 231
ஐவரி கோசுட்டு 675
ஓசிரிசு 374
ஒத்த கிழமை 51
ஒத்துழையாமை 101
ஒத்துழையாமை இயக்கம் 819
ஒதுக்கீடு 598
ஒப்பந்தக் கோட்பாடு 747
ஒப்பீட்டு அரசியல் 654
ஒப்பீட்டு முறை 550
ஒப்புதல் சீட்டு 122
ஒருங்கிணைத்தல் பணி 609
ஒருசொல் ஒருபொருள் 87
ஒருதன்மைச் செலவுக் கணிப்பு 190
ஒருதுறைக் கோவை 343
ஒருபொருட் பன்மொழி 82
ஒருமுக ஒப்பந்தம் 295
ஒலிப்புடை ஒலி 3
ஒலிமாற்றம் 65
ஒலி முழக்கக் கொள்கை 155
ஒலியனியல் நிலை 490
ஒழிந்தியாப்பட்டு 689
ஒற்றளபெடை 901, 902
ஒற்றையாட்சி 584, 678
ஒற்றையாட்சி அரசியலமைப்பு 677
ஒன்பது சுவை 892
ஓஞ்சி 333
ஓப்பன்கீம் 112
ஓமர் 220
ஓரவைச் சட்டமன்றம் ஒருருப்படுத்துதவிய கோட்பாடு 181
ஓவியம் 888
கசுதவு பெக்னர் 895
கஞ்சனூர் 712
கட்சி முறைகள் 642
கட்டடங்கள் 714
கட்டணம் 634
கட்டாய ஏற்றுமதித் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுச் சட்டம் 22
கட்டுப்பட்ட, கட்டுப்படாத கடன்கள் 519
கட்டுப்படாத அதிகச் சலுகை 296,97
கட்டுப்படுத்தப்பட்ட விலை 699
கட்டுப்பாட்டோடு கூடிய சமுதாயம் 668
கட்டுப்பாடற்ற அதிகச் சலுகை 295
கட்டுப்பாடற்ற கொடைகள் 591
கட்டுப்பாடுகள் 603, 604, 611, 612
கட்டுப்பாடுகள், உதவித்தொகைக் குழு (1979) 608
கட்டுப்பாடுகளின் அளவு 601
கட்டுப்பாடுற்ற கொடைகள் 591
கட்டுமானக் கால அளவு 25

கடலான் மொழி 252
கடலுக்கடியில் அகழாய்வு 94
கடவுள் அருள் 34
கடன் சுமை 527
கடனளிக்கும் பணி 551
கடனைத் திருப்பிச் செலுத்துதல் 519
கடைச் சங்கப் புலவர் 342
கண்காணாக் கைக்கோட்பாடுகள் 600
கண்காணித்தல் 28
கண்ணுக்குப் புலனாகும், புலனாகாத இனங்கள் 530
கணக்குத் தலைப்பு 630
கணிதப் பொருளியல் 463, 465
கணிதவியல் சார்ந்த 214
கதாகாலட்சேபப் பிரிவு 737
கதிரைவேற்பிள்ளை அகராதி 74
கதைப்பாடல் 253, 254
கந்தரந்தாதி 774
கந்தரலங்காரம் 774
கந்தரனுபூதி 774
கப்பல் பட்டியல் 538
கம்பர் மகன் 397
கம்பராமாயணம் 42
கமால்பாட்சா 317
கயவாகு 348
கயாதரம் 70
கர்டர் 100
கர்நூல் மாவட்டச் சிரவேல்வட்டம் 103
கர்னல், ஆல்காடு 243
கர்னல் காலின் மக்கன்சி 412
கரந்தை கோவிந்தசாமி பாகவதர் 736
கரிமா 173
கருணாவதி 60
கருத்து அடிப்படை 207
கருத்துப்படிவ அட்டவணை 177
கருத்து முதல் வாதம் 452
கருமகாரர் 636
கருமத் தலைவர் 636
கருவிகள் 548
கருவி வழிக் கொள்கை 452
கருவூல உண்டியல்கள் 588
கரோத்தி எழுத்து 160
கல்கத்தா 698, 724
கல்கனர் 414
கல்கி 807
கல்கி அவதாரம் 860
கல்வி நிலையம் ஓர் அமைப்பு 497
கல்விப்பணி 259
கல்வியில் அமைப்பு முறை 499
கலப்படம் 22
கலப்புப் பொருளாதாரம் 608, 610, 611
கலாச்சேத்திரப் பள்ளி 243
கலிங்கப் போர் 158
கலித்தொகைப் பதிப்பு 345
கலை 142, 147, 888
கலைச்சொல் 175
கலைச்சொல் அகராதி 81
கலைச்சொல் அட்டவணை 177
கவிஞர்கள் 136
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை 880
கவிராச சாமி 344
களவியற் காரிகை 55
களிற்றுயானை நிரை 47
கற்பனை அரசியல் 687
கற்பித்தல் அமைப்பின் வளர்ச்சி 499
கற்பித்தல் படிகள், மாரிசன் 824
கற்றூண் கல்வெட்டுகள் 160
கறுஞ்சட்டைப் படை 256
கன்னிமாரா நூலகம், சென்னை 122
கனிசுகர் 148
கனிப் பொருள்கள் 755, 829
காகமேளா 847
காகிதப் பணமுறை 549
காங்கோ 131
காசா நசுமுதீன் சிசுடி 148
காசிம் 249
காசுமீர் சதி 358
காசுமீரசைவம் 379
காசுமீரமும் வடமேற்குப் பகுதியும் 18
காஞ்சி தாத்தாச்சாரியார் 368
காடியான்கள் 63
காந்தம் துரை 819
காந்தியடிகள் 101
காப்பியக் குணங்கள் 890
காபாலம் 393
கார்சிகா தீவு 131
கார்டோபா 862
கார்ல் பிரிட்ரிசு 658
கார்ல் மார்க்சு 603, 656, 661, 662
காரன்வாலீசு 739
காரிந்து 846
கால்பிரெய்த்து 462, 468, 470, 601
கால்வணிய மனத்தளர்ச்சி 450
கால்வின் 647
கால்வினிசு 809
கால அளவு 298
காலக்கிரமக்கிளைக்கோட்பாடு 854
காலப்பார்வை 500
கால வைப்புகள் 174

காலிங்கராயன் 788
காலின் மாக்கின்சு 697
காவல் அரசு 609
காவியப் பிரகாசம் 827, 828
காவியம் 888
காவியாதரிசம் 826
காவியாலங்காரம் 827
காளமேகப் புலவர் 106
காளிதாசர் 370
கான்ட்டு 681, 894
கான்பூர் 139
கானா 6
கானாகொத்தான் 258
கானாபல்கலைக்கழகம் 6
கானிங் பிரபு 688, 845
கானேரிக் குகைகள் 864
கிங்சுபெரி 896
கியாசுதீன் துக்ளக் 129
கியாதி வாதம் 287
கியூபா 866
கிரகாம் வாலசு 639
கிரீசு 7
கிருட்டிண தேவராயர் 124
கிருட்டிண பாகவதர் 736
கிருட்டிணாவதாரம் 859
கிரேக்க அரங்குகள் 581
கிரேக்கர்கள் 7
கிரேக்க வரலாறு 224
கிரேட்டியசு 810
கிரைச்சு 67
கிலான் 354
கிளர்ச்சி வகை 66
கிளாபத் இயக்கம் 355
கிளார்க், சே. பி., 461
கிளியோபாத்திரா 35
கிளிவிடு தூது 886
கிளேடியேட்டர்கள் 220
கிளைமொழி அகராதி 80
கிளைமொழி ஒப்பீடு 493, 494
கிளைமொழிகள் 136
கிளைமொழிகளில் சமநிலை 854
கிறித்துவ சங்கீதம் 343
கிறித்துவ சனநாயக ஒன்றியம் 230
கினி வளைகுடா 6
கினீசியப் பொருளியல் 690
கீர்க்கிகார் 49
கீழ்நோக்கிச் செல்லும் நீள்காலச் செலவு வளைகோடுகள் 198
கீழையூர்க் கோயில் 224
கீன்சின் கருத்து 621
கீன்சு 464, 465, 600
குகைக் கல்வெட்டுகள் 160
குசுருபாக் நினைவுச் சின்னம் 820
குடியரசுத் தலைவர்கள் 446, 479, 841
குடியானவர் கிளர்ச்சி 793
குடியுரிமைப் பதிவு முறை 215
குடியேற்ற சக்திகள் 673, 674
குடியேற்ற நாட்டுச் சலுகை 296
குடியேற்ற நாடுகள் 674
குடியேற்றம் 422
குடும்ப அமைப்பு 695
குணங்குடி மசுதான்சாகிபு 45
குப்தா, 478
கும்பமேளா 748, 820
குமாரலதர் 149
குரிகரா 551
குரு அங்கதர் 408
குருச்சேத்திரம் 755
குருநானக் 106
குரோசே 894
குரோபேராட்கின் 655
குரோவாட்டுகள் 849
குலக்குறி 486
குவலயானந்தம் 826, 828
குவிபெக் மாநிலம் 801
குவேக்கர்கள் 222
குழப்பவாதிகள் 655
குழு அகராதி 75
குழுமம் 251
குற்றவியல் நடுவர் 120
குறிக்கோள்கள் 317
குறிப்பாற்றல் 891
குறுகிய காலக் கடன்கள் 588
குறுங்காலச் சராசரி செலவு வளைகோடுகள் 194
குறுங்காலச் செலவுகளும் வளைகோடுகளும் 192, 193
குறைந்துசெல் இறுதிநிலைப் பயன்பாடு 217
குறைந்துசெல் விளைவு விதி 197, 790
குன்றுடையான் கதை 253
கூட்டாட்சி 585, 678
கூட்டாட்சி அமைப்பு 308
கூட்டாட்சி அரசியலமைப்பு 677
கூட்டு இருப்பு அமைப்பு 471
கூட்டு இருப்பு வாரியம் 471
கூட்டு வெளி அங்காடிக் குழு 472
கூட்டு வைப்புக் காப்பீட்டுக் கழகம் 472
கூட்டுறவுச் சேவை நிறுவனங்கள் 699
கூத்து 740
கெசட் 635, 636

கெடிலக்கரை 325
கெய்ரோ 384
கேசல், சே. எம்., 406
கேட்பு வைப்புகள் 174
கேப்டன் ராபர்ட்டு எப். இசுகாட்டு 246
கே. பானா காரிபு பெருங்குழு 422
கைக்கோடரிகள் 126
கைகோள்கள் 39
கையகராதிகள் 75
கையூட்டு 668
கொங்குநாடு 341
கொடுகொட்டி 393
கொடுங்களூர் 165
கொடுமணல் 94
கொடைகள் 519, 635
கொடைப் பொருளியல் கோட்பாடு 468
கொடை பெறுபவர் 306
கொடையாவணம் 125
கொடையாளி 306
கொடை வேண்டல்கள் 623
கொத்தடிமை முறை 223, 224
கொராகன் 353
கொல்லாமை 101
கொழும்புத்திட்டம் 526
கொள்முதல் நிலை 699
கோக்கன் – சியோவின் பெருங்குழு 421
கோக்கன், பிளன் பகுத்தாய்வு 597
கோச்செங்கட்சோழன் 388
கோசுட்டு கலகம் 413
கோட் பிரைடு எபெர்லெர் 464
கோண்டுகுடிக் கோயில் 508
கோதிக் மொழி 407, 408
கோப்பாய் 391
கோபால் சாரனா 489
கோயில்கள் 394
கோயில் பணிகள் 223
கோல்கொண்டா 875
கோல்டு கோசட்டு 6
கோலோன்நகர் 230
கௌடில்யர் 413, 569, 686
சக்ரெயார் 722
சகர்சாத் 722
சங்கஇலக்கியங்களில் கோட்டை 709
சங்ககால அரசியல் அமைப்பு 687
சங்க காலச் சேரமன்னன் 342
சங்கப் பிரிவு 482
சசூர் 500
சட்டப்படியான அடைமானம் 234, 235
சட்டம் இயற்றுதல் 676
சட்டமுறையில்லாக் கொடைகள் 591, 593
சட்டமுறையிலமைந்த கொடை 591
சண்டிகர் 756
சண்முகம் செட்டியார், சர். ஆர். கே., 877
சத்ததந்து 104
சத்திய சோதனை 101
சத்தியபுரி 45
சத்தியவதி 126
சத்தியாக்கிரகம் 101
சத்நாமிகள் 874
சதுரகராதியின் தோற்றம் 72
சந்தாசாகிப் 405
சந்திர குப்த மௌரியர் 569
சந்திராலோகம் 826
சப்பான் 113, 124
சப்பானியர் 8
சபர்மதி ஆறு 60
சபோடக் நாகரிகம் 425
சம இழப்பு 598
சம இறுதிநிலைப் பயன்பாட்டு விதி 217
சமகால அரபு இலக்கியம் 718
சமண சமயம் 866, 870
சமணம் 277
சமணர் குகைக் கோயில் 509
சமத்துவம் 792
சமதளப்பார்வை 500
சமநிலைத் தலையீடு 311
சமநிலையற்ற வரவு செலவுத் திட்டம் 622
சமயசார் ஆட்சிமுறை 872
சமய தத்துவம் 851
சமயம் 142, 147, 335
சமவெளி 425
சமனற்ற நிலை 530, 531
சமுத்திரகுப்தர் 146, 820
சமுத்திரகுப்தரின் வெற்றிகள் 821
சமுதாய ஏற்றத்தாழ்வு 783
சமுதாய ஒப்பந்தம் 301
சமுதாய தார்வின் கொள்கை 600
சமுதாய நலத்திட்டங்கள் 606
சமுதாயப் பணி 259
சமுதாயப் பாதுகாப்பு 611
சமுதாயம் 141
சமூக உபரி 251
சமூக ஒப்பந்தக் கோட்பாடு 693
சமூக ஒப்பந்தம் 648, 693
சமூக-தொழில் நுட்ப முறை 61
சமூக நலக் கொடைகள் 594
சமூக நிலை 567
சமூகம் 147, 251

சமையற்கட்டு அமைச்சரவை 614
சயரில் 667
சயரே 675
சர்-ஒராசியோ நெல்சன் 384
சர்க்காரியா ஆணையம் 592
சர் சேம்சு இராசு 184
சர் தாமசு ரோ 148
சர்வதேச அரசியல் தந்திரம் 666
சர்வதேசக் கோட்பாடு 673
சர்வதேசச் சங்கம் 295
சரக்கு அறைப் பாதுகாப்பு 29
சரசுவதி மகால் நூலகம் 697
சரசுவதியார் 736
சரவா 334
சராசரி மொத்தச் செலவுக்கோடு 194, 195
சாக்கரடீசு 803
சாங்கர் பண்பாடு 407
சாங்கியம் 277, 866
சாசகான் 568
சாஞ்சி 412
சாட்டிய செலவு 626
சாண்டர்கள் 251
சாணக்கியன் 569
சாத்தரே 49
சாதவாகனர் 410
சாதனைகள் 708
சாதனைத் திட்டம் 626
சாதி, மத, இனவெறி 667, 668
சாந்த் பீபீ 63
சாபரே 96
சாபா 636
சாபுத்திரர் 149
சாம்சுகி 268
சாமிநாதய்யர் நூலகம் 697
சாமுவேல்சன் 599
சாமுவேல்சன், டிகிராசு 600
சாயாசி கெய்க்வாட் 400
சார்சியா 185
சார்சு சந்தாயனா 894
சார்லசு, இரண்டாம் 169
சார்லசு, ஐந்தாம் 803
சார்லசு டி ஆல்பர்ட் 144
சார்லசு பி. கிண்டில் பெர்கர் 530
சார்லசு பியர்சு 451
சார்லசு வில்கீசு 247
சார்லிமேன் 710
சாரவா 333
சால்பாய் உடன்படிக்கை 88
சாலமன் அரசர் 802
சாலியன் வாலாபாக் படுகொலை 416
சான் ஆட்லர் 597
சான் ஆடம்சு 372
சான் இசுடுவர்ட் மில் 658
சான் இலாக்கு 693, 694
சான்சன் அகராதி 78
சான்சாகப் அசுட்டர் 145
சான் தூயி 452, 658
சான்போதான் 647
சான் மேனார்டு கீன்சு 505
சான்லாக் 312, 648
சான்விக்ளிப் 688
சிக்கந்தரா 20
சிக்கல்கள் 297, 537, 539
சிக்கல்களும் இடையூறுகளும் 522, 523
சிக்கன விதி 596
சிக்காகோக் குழு 464
சிக்மண்டு பிராய்டு 123, 641
சிகாகோ 459
சிங்கப்பூரின் முன்னேற்றம் 675
சிங்களவர் 348
சிங்காரவேலு முதலியார் 374
சிசரோ 311
சிட்டாசுகி 789
சிட்வே 8
சிட்னி லாம்பு 229
சித்திரமீமாம்சை 368
சித்துப் பொருள் 774
சிதம்பர இரேவண சித்தர் 87
சிதம்பரம் 103
சிம்பாபேயில் 668
சியானிசுட்டு இயக்கம் 728
சிராவசுதி 123
சிருங்காரப் பிரகாசம் 827
சில்லறை வணிகர் 699
சில்லோர் போட்டி 110
சிலப்பதிகார உரையில் அபிநயம் 376
சிலி 96, 578
சிலுவைப் போர் 97, 712
சிவஞானமுனிவர் 419
சிவப்பிரகாச சுவாமிகள் 816
சிவாசி 148, 171, 352, 874
சிவாட்டகம் 170
சிற்றிலக்கியங்கள் 881
சிற்றிலக்கிய வகை 108
சிறப்பு அதிகார ஆவணம் 305
சிறப்புக் கல்வி 458
சிறப்புக் கூறுகள் 315, 626
சிறப்புக் கொள்கைகள் 189, 190

சிறப்புத் தன்மைகள் 512
சிறப்பு நீதிமன்றங்கள் 321
சிறப்புப் பெயர் 356, 582
சிறப்பு முன்னேற்றக் கடன் திட்டம் 526
சிறிய அந்தமானியர் 333
சிறீலங்கை 667
சிறு குழு ஆட்சி 657
சிறு குற்ற வழக்குகள் 897
சிறுதூண் ஆணைகள் 160
சிறுதொழில் முன்னேற்றம் 708, 709
சிறுபாறை ஆணைகள் 160
சிறுவழக்கு நீதிமன்றம் 899
சினம் 219
சீக்கிய சமயம் 409
சீக்கியர்கள் 874
சீர்திருத்தங்கள் 558
சீரங்கநாச்சியார் 181
சீவன்முத்தர்கள் 290
சீன சப்பானிய நாடுகளில் அடிமை முறை 221
சீன-சப்பானியப் போர் (1937-45) 45
சீனா 315
சுங்க ஒன்றியங்கள் 296
சுங்கவரிப் பேரங்கள் 297
சுட்டுப் பெயர் 4
சுத்த மாயை 284
சுதர்சனர் 712
சுப்பிரமணிய முதலியார், வெ.ப., 90
சுப்பிரமணியாட்டகம் 170
சும்பீட்டர் 463
சும்மா காண்டிராசென்டீல்சு 13
சும்மா தியாலசிகா 13
சுமித்சோனிய ஒப்பந்தம் 455
சுமித்சோனியன் அருங்காட்சியகம் 763
சுமிபெய் பிராசிரி 812
சுரகுளத்தூர் 772
சுரண்டல் 791
சுராசுகுண்டு 756
சுருக்க அகராதிகள் 74
சுருதி 822
சுருதி சூந்தி மாலை 712
சுல்தான் அகமது சா, முதலாம் 41
சுவாமிநாதம் 53
சுவாமி பக்திவேதாந்த பிரபுபாதர் 795
சுவிங்லி 647
சுவீடன் 205
சூடாமணி நிகண்டு 70
சூடான் 131
சூபி 347
சூபி இயக்கங்கள் 63
சூபிடர் 364
சூயெசுக் கால்வாய் 728
சூலியசுசீசர் 31
செசியா 873
செப்புக் காலம் 99
செபர்சன் கோட்பாடு 450
செம்பிகா மாரிங் 682
செய்தித்தாள் பதிவாளர், தில்லி 121
செய்தொழில் 116
செயல்பாட்டியல் அணுகுமுறை 484
செயல்முனைப்பற்ற கூட்டம் 876
செயலாக்கப்படுவதைக் கண்காணித்தல் 633
செயற்பாடு 472
செர்சசு 847
செரிக்கோ 709
செருமனி 124, 230, 315, 317, 319
செருமானியப் பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டினர் 485
செல்லுலர் சிறைச்சாலை 333
செலவின் இயல்பு 595
செலவு நன்மை அணுகுமுறை 691
செலுத்து நிலைக் குறிப்பு 530
செலுத்து நிலைக் கோட்பாடு 550
செலுத்துநிலைச் சுரண்டல் 531
செவ்விந்தியர் மரபு 146
சென்டினல் 333
சென்னிகுளம் 262
சென்னை அறிவகக் கழகம் 698
சென்னைப் பல்கலைக்கழகப் பேரகராதி 74
சென்னைப் பல்கலைக்கழகம் 163
சேக்கப் வைனர் 464
சேக்கன் மொழி 408
சேக் முபாரக்கு 386
சேம்சு எம். புக்கானன், கார்டன் டுல்லோக் 602
சேம்சு குக்கு 246, 250
சேமிப்பு முதலீட்டு இடைவெளி 518
'சே'யின் நிதித் திட்டம் 597
சேர்க்கை நிலைத்தொடர்பு 501
சேர்ந்து மீட்கக் கோரும் உரிமை ஒழிப்பு 239
சேர்ந்து மீட்கும் உரிமை ஒழிப்பு 239, 240
சேர்ப்புச் செலவுக் கணிப்பு 190
சைமன் குசனெட்சு 465
சைரசு, மகா 12
சைவ எல்லப்ப நாவலர் 778
சைவக் களஞ்சியம் 779
சைவ சமயம் 866, 867
சைவம் 277

சொக்கலிங்க பெத்தண்ணபூபதி 114
சொல்லிசையளபெடை 901
சொல்லின் வடிவமும் பொருளும் 26
சொல்வகைப்பாடு 208
சோபிசுடுகள் 645
சோம்பென் 335
சோமாசி மாற நாயனார் 388
சோர்வு வாதம் 450
சோவியத் உருசியா 315
சோழர்கள் 349
சோழர் காலம் 2
சோழவந்தான் 582
சோன்சு சுமித் 854
சௌகன் 148
சௌந்தரநாயகி 897
சௌத்திராநந்தம் 149
ஞானமார்க்கம் 290
தக்கணக் கொள்கை 875
தக்காணக் கல்லூரி முதுகலை மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் 98
தக்காணம் 18
தகசுதே 34
தகடூர் 326
தகவல் பெருக்கம் 175
தகுதி, முறை வரையறைகள் 173
தங்கசாலைக் கோட்பாடு 548, 549
தங்கத் திட்டம் 529
தங்க நாணய மாற்றுத் திட்டம் 472
தங்கமணை 131
தச்சநல்லூர் 886
தச்சியர் 6
தசபுய அகோர மூர்த்தி 104
தசுகலூரசா 830
தஞ்சை சரசுவதி மகால் நூலகம் 150
தட்சசீலம் 397
தட்சிணகாசி 869
தட்பவெப்பநிலை 754
தட்ப்வெப்பநிலையும் மழையும் 434
தட்பவெப்பம் 802
தடுத்தாட்கொண்ட புராணம் 224
தடையிலா வாணிகம் 294
தண்டங்கள் 635
தண்டியலங்கார ஆசிரியர் தந்தை 397
தண்டியலங்காரம் 825
தத்துவங்கள் முப்பத்தாறு 284
தத்துவப் பிரகாசிகை 103
தந்தைவழிக் கோட்பாடு 695, 696
தப்ளின் 514
தம்புரான் 225
தமிழ்-ஆங்கில அகராதிகள் 76
தமிழ்-இலத்தீன் அகராதி 76
தமிழ்-உருசிய அகராதி 76
தமிழ்த் தண்டியலங்காரம் 269
தமிழ்நாட்டு அரங்குகள் 581
தமிழ்நாட்டு அரபு இலக்கியம் 721
தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம் 773
தமிழ்நாடு அடகு வணிகர் சட்டம் 199
தமிழ்நாடு அரசின் வரவு செலவுத் திட்டம் 631
தமிழ்நாடு அரசு 615, 617
தமிழ்நாவலர் சரிதை 405
தமிழ்நெறி விளக்கம் 54
தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரகராதித் திட்டம் 75
தமிழ்-பிரெஞ்சு அகராதிகள் 76
தமிழ்-போர்ச்சுகீசிய அகராதி 77, 340
தமிழிசைச் சங்கம் 259
தமிழில் அணியிலக்கணம் 269
தமிழில் இருமொழி அகராதிகள் 75
தமிழில் ஒருமொழி அகராதிகள் 75
தயல் 516
தயாராம் சகானி 713
தர அளவு வரையறை 22
தரப்பினர் செயல் 240
தரவகை/படிநிலைப் பொருளடைவு 175
தர வரையறை வழிமுறைகள் 21
தரும பைலே 12
தரும மகாமாத்திரம் 159
தலங்கள் 180
தலைக்கோட்டைப் போர் 63
தலைமை அமைச்சர் 479, 480
தலைமையுரிமை 426
தலையிடாக் கொள்கை 314, 600, 609
தவறுகள், மோசடிகளைத் தவிர்த்தல் 28, 29
தன்மைகள் 232, 233
தன்வய அடைமானம் 234
தனி ஒருவர் உற்பத்தி 27
தனிக் கணக்கு முறை 29
தனித்தனி முறை 549, 550
தனித் தீர்வைகள் 635
தனி நீதிமன்றங்கள் 321
தனி மனித உரிமை 319
தனிமுறைத் தீர்மானம் 483
தனியார் உரிமை 603
தனியார் உற்பத்தி 601
தனியார் துறை 24, 603, 610, 611, 612
தனியார் தொழில் முயற்சி 314, 317
தனியார் மூலதனம் 537
தனியுரிமைக் கோட்பாட்டாளர் 450
தனியுரிமைக் கோட்பாடு 648

தாசிடசு 8
தாந்தே 646
தாமசு ஆப்சு 705
தாமசு செபர்சன் 636
தாமரை மண்டபம் 396
தாய்வழிக் கோட்பாடு 695, 696
தாயிபாபவம் 889
தாயுமானவர் 794
தார்வினியக் கோட்பாட்டின் தத்துவம் 450
தாராகூகொ 873
தாரை 107
தால்சுதாய் 15
தால்டன் 597, 621
தாலமி 97, 812
தாலர் குவியல் 455
தாலர் நெருக்கடி 454
தாவிசுடாக்கு மனித உறவுகள் நிறுவனம் 61
தான்சென் 20
தானே இருப்பைச் சமநிலைப்படுத்தும் பேரேடு 29
தானோமோர் குழு 303
திகோவெலாசுகுசு 866
திங்களூர் 366
திச்சனர் 496
திசுபூர் 132
திசையாயிரத்து ஐநூற்றுவர் 511
திட்ட்ச் செயலாக்க விளக்க அறிக்கை 623
திட்டமான அவையோர் 876
திட்டமிட்ட சமத்துவக் கோட்பாடு 698
திட்டமிட்ட பொருளாதாரம் 316
திட்டமிட்ட மோசடிகள் 30
திணை மரபு 39
திப்பு சுல்தான் 739
திபா 636
தியாராடெல் பியூகோ 424
தியோடர் கெர்சே 728
தியோடார் சுல்ட்சு 467
திரட்டு 175
திராய் 10, 67
திராவிட நாட்டுப் பிரிவினை 256
திராவிட நாடு 256
திராவிட முன்னேற்றக் கழகம் 256
திராவிடர் கழகம் 256
திரானா 813
திரிசுது 61
திரிடேட்டிசு 576
திரிபுர சுந்தரி 325
திரிவேணி சங்கமம் 820
திருக்கழுக்குன்றம் 104
திருக்குர்ஆன் 817
திருத்தச் சட்டம், 1960 121
திருத்தம் 482
திருத்துறையூர் 775
திருநாவுக்கரசர் 359
திருநாவுக்கரசர் திரு அங்கமாலை 108
திருநூற்றந்தாதி 870
திருப்பிச் செலுத்தல் 299
திருப்புகழ் 771, 774
திருப்பெருந்துறை 713
திருப்பேரை 344
திருமந்திர ஓலை 636
திருமந்திர ஓலை நாயகம் 636
திருமலைராயன் அவைக்களப்புலவர் 326
திருமால்குன்றம் 880, 883
திருமூலர் திருமந்திரம் 180
திருவகுப்பு 774
திருவண்ணாமலை 772
திருவள்ளுவர் 101
திருவனந்தபுரம் 698
திருவாங்கூர் 224
திருவாமூர் 358
திருவாலங்காடு கோயில் 224
திருவாவடுதுறை மடம் 390
திருவிடந்தைப் பெருமான் கோயில் 224
திரேக்கு நீர்ப்பிரிவு 249
திலகவதியார் 358
திவாகர நிகண்டு 825
திவாகரம் 70
திறந்த அங்காடி நடவடிக்கைகள் 589
திறந்தவெளிப் பல்கலைக்கழகம் 163
திறனின் அருமைப்பாடு 792
தீங்கு செய்யாமை 101
தீபிசு 846
தீர்வகப் பணிகள் 551
தீவுகள் 864
தீன் இலாகி 20
துகும்டானி மக்கள் 682
துசாங்கர் 566
துதன்காமென் 24
துணை அடைமானம் 236, 237
துணைச் சட்டங்கள் 302
துணை நிதிநிலை அறிக்கை 625
துர்க்கை கோயில் 508
துருமன் 11
துருமன் கோட்பாடு 11
துருமன் முதல் ரீகன் வரை 442
துரூபட்சுகாய் 210
தூண் ஆணைகள் 160

தூண் கல்வெட்டுகள் 160
தூப்ரே 732
தூபிகள் 411
தூமா 15
தூய போட்டி 109
தெக்குகோகோ ஏரி 146
தெட்டீசு 9
தெமா 6
தெமாகிரிடசு 275
தெல்பி 364
தென் அரபுமொழி 723
தென்காசி 329
தென்னாட்டுப் படையெடுப்பு 837
தென்னில இலக்கியம் 430
தெனோசிடிட்லால் 146
தேக்கார்டு 48
தேசிய அரசிதழ் 636
தேசிய ஆவணக் காப்பகம் 768
தேசிய நூலகம், கல்கத்தா 122
தேசிய நூலகம், பம்பாய் 122
தேரியசு, மூன்றாம் 844
தேவகிரி 16
தேவகிரி யாதவர்கள் 835
தேவராயர், இரண்டாம் 354
தேவனாம்பிரிய திசா 348
தேவாரப் பண் 340
தேவார முதலிகள் 201
தேவைகளை நிறைவு செய்தல் 790, 791
தேவையை அளவீடு செய்தல் 690
தேவையை வரையறுக்கும் காரணிகள் 550, 552, 553
தேனியர் 6
தைட்டன்சுகேன்சென் 809
தைபீரியசு 33
தொகு நிதி 626
தொகை நூல்கள் 717
தொகையடியார் 364
தொடக்கப் பள்ளி 457
தொடர் அடைமானம் 240
தொடர்ந்து அத்து மீறல்கள் 283
தொடர்வண்டி அருங்காட்சியகம் 759
தொடரியல் நிலை 490
தொடரும் செலவினங்கள் 622
தொண்டு 401
தொல்காப்பியம் 69, 888, 824
தொல்காப்பியர் கூற்றுவகை 271
தொல்காப்பிய விதி 901
தொல்வடிவம் 65
தொல்வரலாறறியும் அணுகுமுறைகள் 64
தொலைபேசி மூலம் அச்சுறுத்தல் 126
தொழில் அடைவுச் சோதனை 244
தொழில் உரிமக் கொள்கை விசாரணை அறிக்கை, (1969) 607
தொழில்கள 801
தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி 533
தொழில்நுட்ப இடைவெளி 518
தொழில்நுட்பச் சிக்கனங்கள் 26, 27
தொழில்நுட்ப வளர்ச்சி 784
தொழில் நுணுக்கம் 522, 523
தொழில் புரட்சி 595
தொழில் முன்னேற்றம் 533
தொழில் முனைவோருக்குக் கொடைகள் 594
தொழில் மூலப்பொருள் உதவி 708, 709
தொழில் வளர்ச்சி 534, 754
தொழில், வாணிபம் மீதான கட்டுப்பாடுகள் 605
தொன்மைப் பொருளியல் 529
தொன்னூல் விளக்கம் 53
தொனி 890, 891, 892
தோசுத்து அலிகான் 405
தோடப் பழங்குடி 59
தோற்றுவாய்ச் சட்டம் 303, 304, 305
நகரங்கள் 806
நடத்தை மருத்துவம் 123
நடமாடும் கழகம் 745
நபிகள் நாயகம் 62, 129, 556, 817
நம்பியகப்பொருள் துறை 398, 399
நர்க்கு 520
நரசிம்மகுப்தர் 379
நரசிம்மர் 395
நரசிம்மாவதாரம் 857
நரசிம்மவர்மர், முதலாம் 5
நல அரசு 609, 706
நல அரசுகளும் பொருளாதாரக் கட்டுப்பாடுகளும் 606
நலச் சட்டங்கள் 302
நலப் பொருளியல் 465
நலம்சார் நாடுகளின் செலவு 597
நன்கொடைகள் 635
நன்மை செய்த வல்லாட்சி 307
நன்மை விதிக் கோட்பாடு 598
நாகசாகி 275
நாகாநந்தம் 568
நாகூர் 818
நாசர் 729
நாசிக் 45
நாசிகள் 230
நாசிகளின் கட்டாயப் பணிக்கிடங்குகள் 222
நாட்டிய சாத்திரம் 377
நாட்டிய தருமி 378

நாட்டியம் 888
நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம் 259
நாட்டுப் பாதுகாப்புச் செலவு 595, 596
நாடகம் 740
நாடற்றோர் 667
நாடு இழந்தவர்கள் 47
நாடும் தட்பவெப்பமும் 115
நாணய மதிப்பின் மீட்டுயர்வுக் கொள்கை 622
நாணய மாற்றுக் கட்டுப்பாடு 531
நாணிக்கண்புதைத்தல் 416
நாதமுனிகள் 798
நாதர்சா 63
நா. தென் பெருங்குழு 421
நாமதீப நிகண்டு 71
நாயக – நாயகி பாவம் 346
நார்போக் பிரபு 793
நால்வகைச் சாதிப்பாலைகள் 50
நாற்கவிராச நம்பி 57
நான்கின் உடன்படிக்கை 383
நானாசாகேப் 139
நிக்கோபார் பழங்குடிகள் 325, 335
நிகண்டின் தோற்றம் 70
நிகண்டின் நோக்கம் 71
நிகழ்ச்சி தகவுக் கோட்பாடு 465
நிகழ் விவரம் 215
நிகழ்வு நிலை அங்கீகாரம் 112, 113
நித்திய அநித்தியப் பொருளறிவு 290
நித்திலக் கோவை 47
நிதிக் கொள்கை 588, 589
நிதிச் சிக்கனங்கள் 27
நிதிநிலை அறிக்கை 623
நியாய அடைமானம் 234, 235
நியாய விலைக் கடைகள் 699
நியூகினி 183
நியூயார்க் கூட்டு இருப்பு வங்கி 472
நிர்க்குணபிரமம் 287
நிர்வாகக் குழு 459
நிர்வாகச் சிக்கனங்கள் 27
நிருவாக வருமானம் 634
நில ஒதுக்கீடு 783
நிலப்பண்ணை முறை 595
நிலப்பிரிவுகள் 562
நிலப்பின்னணி 38
நிலம் 796
நிலவரை அதிகார வரம்பு 320
நிலவியல் 433, 473
நிலவியல், மொழி, சமயம், கொடி 514
நிலைகோடல்கள் 204
நிலைமுறைச் சட்டங்கள் 302
நிலையான கடன்கள் 588
நிலையான செலாவணி மாற்று வீதங்கள் 553
நிறுவனக் கணக்குகள் 36
நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள், கணக்கு முறைகள் 605
நிறுவனங்களுக்கு மாநிலம் அளிக்கும் உதவிகள் 593
நிறுவனத்தின் அமைப்பு 481
நிறைகுறைப் போட்டி 110
நிறைவுப் போட்டி 109
நினவா 139
நினைவிலிருத்தும் முறை 52
நீக்கிரோ இன எழுத்தாளர் 430
நீண்ட காலக் கடன்கள் 526, 588
நீண்டகால வரவு செலவுத் திட்டம் 622
நீதிக்கட்சி 255
நீதிப்புனராய்வு 313
நீதிபதிகள் கருத்து (எழுவர்) 304
நீதிமன்றக் கட்டணம் 897
நீதிமுறை மறு ஆய்வு 303, 304
நீதிவழி அதிகார வரம்பு 320
நீமன் கோல்சுடெட்டுச் சோதனை 67
நீர்மைப் பொறுப்பு 454, 455
நீள்காலச் செலவு வளைகோடு 196
நுகர்பொருள் வாணிகக் கழகம் 699
நுகர்வு 216, 217
நுண்ணினப் பொருளியல் 466
நுழைவுச் சீட்டு 45
நூர்சகான் 568
நூரம்பர்க்கு விசாரணை 222
நூல் அமைப்பு 569
நூற்பட்டி வெளியீடு 459
நெகிழ்வற்ற அரசியலமைப்பு 618
நெகிழ்வான அரசியலமைப்பு 618
நெகிழ்வுத் தன்மை 620
நெகிழ்வுள்ள செலாவணி மாற்றுவீதங்கள் 553
நெகிழ்வுள்ள மாற்று வீதம் 553, 554
நெகிழாத அரசியலமைப்பு 678
நெகிழும் அரசியலமைப்பு 678
நெடுந்தொகை 47
நெப்போலியன் போனபார்ட் 131
நெபுகத் நேசர் 413
நெருக்கடிச் செயற் கோட்பாடு 122
நெருக்கடி நிலை 841
நெல்லி நகர் 794
நேட்டால் இந்தியக் காங்கிரசு 357
நேதிநேதி 347
நேமிநாத உரை 273
நேர்க்காட்சியியல் 488
நேர்முக வரிகள் ஆய்வுக்குழு, 1971 607

நேரடி, மறைமுக முதலீடுகள் 535
நைசீரியாவில் பொருளாதார நிலை 675
நையாண்டிப் பாடல் 278
நையாயிகர் 866
நைல்நதிப் போர் 384
நோக்கப் பிரிவின் மாற்றம் 483
நோக்கப் பிரிவு 482
பக்தியார் கில்சி 133
பகவத் கீதை 284
பகராள் சொத்துரிமைச் சட்டம் 306
பகிர்வு 217
பகுதி அடைமான மீட்சி 239
பங்காரு திருமலை 406
பங்கீட்டுக் கொள்கை 699
பங்கீட்டுப் பணி 609
பங்கீட்டு முறை 599, 786
பங்கீடு 708
பச்சைக் கந்தையதேசிகர் 788, 789
பச்சை குத்தும் பண்பாடு 487
பச்சையப்பர் கல்லூரி 255
பஞ்சபுராணம் 43
பஞ்சரத்தின சுலோகம் 712
பட்டங்கள் 259
பட்டயக் கணக்கர் 36
பட்டாச்சார்யா 249
பட்டீசுவரம் 104
படிக்காசளித்த ஈசுவரர் 744
படிநிலைத் தொடர்பு 502
படையமைப்பு 274
படைவலி முதலாளித்துவ அமைப்பு 315
பண்ட ஒதுக்கீடு 783
பண்டங்களின் மதிப்பு 791
பண்டமாற்று 109
பண்ணுருட்டி 365
பண்ணை அடிமை முறை 656
பண்ணையாள் முறை 221
பண்பாட்டுப் பரவல் கோட்பாட்டு அணுகுமுறை 484
பண்பாடு 444
பண அளவுக் கட்டுப்பாடு 589
பண அளவுக் கோட்பாடுகள் 218, 589
பணஅளிப்பு 690
பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை 471
பண இருப்பு 174
பணத்தின் நீர்மை விருப்ப வளைகோடு 506
பண நீர்மைத் தன்மை 589, 590
பணம் 217, 218
பணம் செலுத்தும் முறைகள் 540, 541
பணமாற்று முறை 471
பணமுறை வரவு செலவுத் திட்டம் 626
பணவாக்கக் கொள்கை 690
பணவாட்டக் கொள்கை 622
பணவாட்ட முறை 531
பணவியல் கொள்கை 471
பணவியல் வாதம் 466
பணவீக்க நிலை 533
பணவீக்கம் 317, 454
பணிகள் 186, 723
பணி முறைகள் 29, 30
பணியாளர் பொறுப்புகள் 29
பத்தமடை 393
பதட்டநிலை 123
பதம் எண்பத்தொன்று 284
பதார்த்தங்கள் 276
பதிவு அஞ்சல் அனுப்புதல் 200
பதிவுச் சான்றிதழ் 121
பதினெட்டுப் பத்திகள் 103
பதினோராந்திருமுறை 329
பதேபூர்சிக்ரி 20
பந்தல்கண்டு 874
பப்புவா நியூகினி 184
பயண முகவர் 31
பயன்பாடு 216
பர்டியு தனியாள் சோதனை 245
பர்மா 8
பர்மாவில் பொருளாதார நிலை 675
பரசுராமாவதாரம் 858
பரணி 835
பரதர் 378
பரப்பளவு 754
பரப்பும் மக்கள்தொகையும் 114
பரமபத விரதநிலை 774
பரமானந்தசாமி 340
பரவலாகத் தோண்டும் முறை 93
பரவலான செய்தித் தொடர்பு முறை 876
பரிசுப்பணம் 225
பரிநிர்வாண நிலை 758
பரிமாற்றக் கொள்கை 297
பருவ வெளியீடு 120, 121
பரோடா கல்வெட்டுச் சாசனம் 100
பல்நிலை அண்மை உறுப்பு 266
பல்லவர்கள் 349
பல்லவர் காலம் 2
பலநிலை மறைமுக முதலீடுகள் 535
பலபொருள் ஒருசொல் நிகண்டுகள் 71
பலராமாவதாரம் 860
பவுட் பாட்சா 842
பழமுதிர்சோலை 883
பழைய உரை 58

பழையாறு 409
பற்றாக்குறை 216, 454, 455, 456
பற்றாக்குறை நிதியாக்கம் 533
பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் 621
பற்றுச் சீட்டு 541
பறிமுதல்கள் 635
பன்முக ஆட்சித்துறை அரசாங்கம் 619
பன்மொழிச் சூழல் 211
பன்னாட்டுக் கழகங்கள் 535, 537
பன்னாட்டுச் செலாவணி 456
பன்னாட்டுத் தங்க நாணயத் திட்டம் 471, 472
பன்னாட்டு நிதிக் கழகம் 526
பன்னாட்டு நீர்மை 453
பன்னாட்டுப் பணநிதி 531
பன்னாட்டுப் பணவாக்க நிதி அமைப்பு 453
பன்னாட்டு மறுஅமைப்பு வளர்ச்சி வங்கி 524, 535
பன்னாட்டு வளர்ச்சிக் கழகமும் இந்தியாவும் 520
பன்னாட்டு வாணிகம் 783
பாகம்பிரியா நாயகி 45
பாகிசுதான் தாக்குதல் 358
பாகிசுதானம், பங்களாதேசம் 667
பாகுபாடுகள் 37
பாடத்தைப் பகுத்தல் 499
பாட முன்னமைப்பு 870
பாதங்களின் நிலை 204
பாதாளேசுவரர் 713
பாதியர் 684
பாதுகாப்புத் தொழில் 534
பாதுசா நாமா 354
பாண்டரங்கம் 393
பாண்டித்துரைத் தேவர் 361
பாண்டியர்கள் 349
பாணர் 568
பாம்பெ 32
பாயர்பாக் 49
பார்த்தினான் கோவில் 330
பாரசீக வரலாறு 354
பாரமார்த்திகம் 289
பாராளுமன்ற முறை அரசாங்கம் 618
பாரிடோ உகந்தநிலைக் கொள்கை 598
பாரி மகளிர் 108
பாரூத் 11
பால் அந்தோணி சாமுவேல்சன் 464, 470
பால்சம் 58
பால்சம் பண்பாடு 423
பால்பகா அஃறிணைப் பெயர் 5
பால்பர் அறிக்கை 728
பால்மர் 493
பாலத்தீன விடுதலை அணி 729
பாலபாரதம் 40
பாலிபியசு 646
பாவ்லவ் ஐவன் 66
பாவம் 890
பாவின் பெயரொடு அடிகள் 207
பாறைக் கல்வெட்டுகள் 160
பான்சிகா 749
பானிப்பட்டு 755
பிக்பார்ட் 698
பிகு 601
பிகுவின் கோட்பாடு 596, 597
பிசாரோபிரான்சிசுகோ 180
பிடல் காசுடுரோ 866
பிடியாணை 897
பிணையம் 200
பிந்திய வரலாற்றுக்காலம் 366
பிந்துசாரர் 415
பிம்பிசாரர் 388
பிம்பிசாரன் 131
பியூப்லோ பண்பாடு 423
பியூனிக் போர் 224
பிரகாமியம் 173
பிரட்ரிக் பார்த் 60
பிரணவம் 774
பிரத்தானத்ரயம் 284
பிரதாப்கர் கோட்டை 148, 352
பிரபாகர வர்த்தனர் 566
பிரபுக்கள் ஆட்சி 618
பிரபுடதேவராசன் 771
பிரபுலிங்க லீலை 816
பிரம்மன் 866
பிரம்மசூத்திரம் 284
பிரமஞான சங்கம் 243
பிரமப்பொருள் ஒன்றே 288
பிரமவேதம் 292
பிரயாகை மாநாடு 566
பிரவுதான் 655
பிரவுன் 698
பிராக் சோதிகபூர் 132
பிராங்க்ளின் டி உரூசுவெல்ட்டு 185,11
பிராங்கோ 46
பிராப்தி 173
பிராமி எழுத்து 160
பிராய்டு 894
பிரான்க் வில்லியம் தாசிக் 462
பிரான்சிக்கோ பிராங்கோ 810
பிரிட்சசு சே 218
பிரிட்டன் உட்சு 453
பிரிட்டிசு பவுண்டு இசுடெர்லிங் 453

பிரிய தரிசிகா 568
பிருங்கி முனிவர் 570
பிரெஞ்சு – பிரசியப்போர் 809
பிரேசர் 486
பிரேசில் நாட்டு தோட்டப் பண்ணைச் சமூகம் 59
பிரைசு 676
பிலடெல்பியா 459
பிலோ 851
பிள்ளைப் பெருமாளையங்கார் 171,883
பிள்ளைலோகாசாரியார் 181
பிளாவட்சுகி, எச்.டி., 243
பிளானோ பண்பாடு 423
பிளீட்டு 510
பிளேட்டோ 645, 746, 851, 894
பினே, ஆல்பிரடு 52
பீசப்பூர் 352, 875
பீட் இயக்கம் 430
பீட்டர் பிலா 322
பீத்தியாசு 747
பீர்பால் 20
புகழ் 860, 861
புகழேந்திப்புலவர் 380, 818
புசியமித்திரசுங்கன் 11
புடைப்புச் சிற்பங்கள் 411
புணர்ச்சி மாற்றம் 26
புத்தசரிதம் 149
புதியதாமிசம் 452
புதிய முசுலிம்கள் 838
புதுப் பணிகளுக்குப் பணம் பெறும் முறை 626
புதுவை 727
புதூர் 331
புதைகுழிக் கோயில்கள் 425
புரு 847, 849
புரூடசு 32
புரூனர் 870
புலத்தியன் மரபினர் 577
புலன்கடந்த மெய்ப்பொருளியல் 452
புலனெறி வழக்கு 39
புளூம் பீல்டு 266
புற அறிவு 52
புறக்கணித்தல் 726
புறச்சந்தி 26
புறப்போர் 683
புனரமைப்புத்திட்டம் முதல் புதிய பொருளாதாரக் கொள்கை வரை 441
புனித அகசுடின் 646
புனித உரோமானியப் பேரரசு 808
புனைவற்ற கதை இலக்கியம் 431
பூப்பு நீராட்டு விழா 334
பூனா ஒப்பந்தம் 400
பெட்ரோலிய எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு 455
பெட்ரோலியப் பொருள்கள் இறக்குமதி 531
பெட்ரோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் அமைப்பு 526
பெடயீன் 729
பெண் இன எழுச்சி 431
பெண்கள் அரிமா சங்கம் 751
பெண்ட்லி, எப் 639
பெந்தாம் 301, 648
பெயர் திருத்தம் 482
பெயர்ப் பிரிவு 481, 482
பெயரளவு ஆட்சித்துறை 619
பெர்சிபாலிசு 12
பெர்ல் துறைமுகம் 865
பெர்லின்–ரோம்–டோக்கியோ அச்சு 225
பெரிக்கிளீசு 645, 803
பெரிப்பிளசு 44
பெரிய அந்தமானியர் 334
பெரியகுளம் வட்டத்து அகமலை 58
பெரிய நாயகி 688
பெரிய புராணம் 224
பெருக்கியின் விளைவுகள் 690
பெருஞ் செல்வராட்சி 664
பெரும் பொருளாதார மந்தம் 314
பெருமைப் பண்டங்கள் 792
பெலபோனீசசு 13
பெறுபவர் உரிமைகள் 235, 236
பெறுபவர் கடமைகள் 231
பெனூசியன் பெருங்குழு 421
பேட்டிரிசு கிங் 212
பேரகத்தியத் திரட்டு 41, 42
பேரங்கள் 295
பேரினப் பொருளியல் 466
பைக் 268
பைசாண்டைன் பேரரசு 852
பைராம்கான் 17
பொதிகை மலை 44
பொது உரிமப் பொருள்கள் 540
பொதுக் கணக்கு 630
பொதுக்கணக்கு ஆய்வுக் குழு 633
பொதுக் கல்வி 458
பொதுக் கோட்பாடு 305, 600
பொதுச் சட்டம் 480, 525
பொதுச் செலவு ஆணையம் 592
பொதுத் தன்மைக் கொள்கை 890
பொதுத் துறை 25, 111, 526, 527, 611

பொதுத்துறை உற்பத்தி முயற்சி 702
பொதுநலக் கொள்கை 599
பொதுநல நாடுகளின் அருங்காட்சியகச் சங்கம் 767
பொது நலன் 663
பொதுநிதி 218
பொது நிதியியல் 468
பொது நோக்கு 663
பொதுப்பண்ட உற்பத்தி 690, 691
பொதுப்பணிக்காகும் செலவுகள் 598, 599
பொதுப் பள்ளிகள் 458
பொதுப் பொருளாதார நோக்கங்கள் 612
பொதுப்போக்கும் கோட்பாடுகளும் 428
பொது மூலதன இருப்பு 24
பொது மூலதனம் 533
பொதுவுடைமை 792
பொய்கைப் பள்ளு 114
பொராரோப் பழங்குடி 485
பொருநிலை அங்கீகாரம் 112
பொருள் இலக்குமுறை வரவு செலவுத் திட்டம் 626
பொருள் விளக்க அகராதிகள் 81
பொருளடக்க அட்டவணை 175
பொருளளவை 781
பொருளாக்கம் 217
பொருளாதார அளவை இயல் 463
பொருளாதார ஏற்றத்தாழ்வு 316
பொளாதார, சமுதாய நோக்கங்களுக்கான செலவு596
பொருளாதாரப் பொருள்கள் 109
பொருளாதாரம் 115, 119, 147
பொருளாதார மந்தம் 791
பொருளாதார முன்னேற்றத்திற்கான அரசியல் கொள்கை 676
பொருளாதார முன்னேற்றம் 218
பொருளாதார வளர்ச்சி 443, 613, 614, 615
பொருளியல் நிலை 491
பொற்கோயில் 416
பொறுப்புகளைப் பகிர்தல் 29
பொறுப்புப் பிரிவு 482
பொறுப்பு மையங்கள் 189
பொன்விளைந்த களத்தூர் 331
பொன்னாங்கால் 415
பொன்னாங்கால் அமிர்தகவிராயர் 343
போக்குவரத்து 117, 807
போக்குவரத்தும் செய்தித்தொடர்பும் 218
போதின் 312, 810
போர் அடிமைகள் 224
போர்க்கால அரசு 706
போர்ச்சுகீசியத் தமிழ் அகராதி 340
போர்ச்சுகீசியர் 6
போர்ட்சு 659
போர்ட் பிளேயர் 336
போரசு 397
போல்சுவிக்கு 14, 15
போவன் ஆய்வு 599
பௌச்சர்-டி-பெர்த் 383
பௌத்த சபை 149
பௌத்தம் 277
பௌமிக் 335
மக்கட்டொகை 334
மக்கட் பண்புக் கோட்பாடுகள் 449
மக்கள் 119, 796, 806, 814
மக்கள்தொகை 754, 828
மக்கள் தொகைக் கணிப்பு 215
மக்களாட்சி 618
மகதி பிராகிருதம் 135
மகாசாப் போர் 363
மகாதேவியக்கா 5
மகாயான புத்தமதம் 863
மகாயானம் 148
மகாவம்சம் 348
மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை 391
மகிமா 172
மகேசுவர் 88
மகேந்திரப் பல்லவன் 359
மங்கோலியப் படையெழுச்சிகள் 836
மச்சபுராணம் 126
மச்சாவதாரம் 856
மசுகிரேவின் ஆய்வு 598
மஞ்சூரியா 113
மண்டல் 478
மண்டலச் சலுகைகள் 296
மண்டல வங்கிகள் 471
மண்ணடுக்காய்வு 92
மணிமிடை பவளம் 47
மணிமேகலை 419, 42
மத்தியதரைக்கடல் நிலப்பிரிவு 805
மத்திய மின் வேதியியல் ஆராய்ச்சிக் கழகம் 878
மதராசுக் கற்கருவிகள் 280
மதராசு கெசட் 636
மதிப்பாவணம் 125
மதிப்பிறக்கம் 455, 456
மதிப்பீட்டு மையம் 189
மதிப்பீடுகள் 620, 627
மதிப்பு ஏற்றம் 455, 456
மதிப்புக் குறைப்பு 455
மதிமறைநாள் 414
மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 136

மதுரைத் தமிழ்ச் சங்கம் 361
மந்திரங்கள் பதினொன்று 284
மநுவிஞ்ஞானேசுரம் 895
மயக்கம் 492
மரபான குறுகியகாலச் செலவு 194
மரபுவழி நீள்காலச் செலவு வரைகோடு 197
மராத்தியர் கூட்டமைப்பு 88
மரீசி 126
மருள்நீக்கியார் 358
மலகரிராவ் கோல்கார் 88
மலினோசுக்கி 484
மலேசியாவின் வளர்ச்சி 674
மறு ஏற்றுமதி வாணிகம் 538
மறுநிதி ஒதுக்கம் 630
மறுமலர்ச்சிக்கால அரங்குகள் 581
மன்சாப்தாரி முறை 18
மன்னராட்சி 617
மனித ஆற்றல் வளம் 25
மனித உரிமை அறிக்கை 223, 224
மனித முதல் கோட்பாடு 467
மனிதனின் மூன்று அங்கங்கள் 726
மாக் ஐவர் 617
மாக்கியவல்லி 647, 688
மாக்சு வீபர் 322, 641, 661, 662
மகாராட்டிரம் 127
மாகாளநாதர் 389
மாகிநாட்கோடு 711
மாசுகி 157
மாணவருக்குக் கொடைகள் 594
மாத்திரை 822
மாநில அரசின் கொடைகளும் உதவிகளும் 592, 593
மாநில அரசுகள் 299, 300
மாநில ஆளுநர் 478
மாநில நூற்பதிவாளர் 120
மாப்பிள்ளைக் கலவரம் 353
மாயா நாகரிகம் 425
மாயை 867
மார்க் அந்தோனி 32
மார்கசு 641
மார்க்சியம் 452
மார்சல் நிதி உதவித் திட்டம் 454
மார்டிமர் வீலர் 732
மார்ட்டின் லூதர் 647
மார்டின் லூதர் கிங் 222
மாலனேசியன் 184
மாலிக்காபூர் 14, 838
மாவட்ட வங்கிகள் 471
மாவலி வாணாதிராயர் 882
மாளவிகாக்கினி மித்திரம் 11
மாற்றமர் அடைமான உரிமைக் கோட்பாடு 240
மாற்றுப் பொருள்கள் 792
மாற்று மதிப்பிறக்கம் 531
மாறனகப்பொருள் 55
மாறனலங்காரம் 826
மாறாச் செலவுகள் 190, 192, 194
மாறுஞ் செலவு 190, 192, 194
மான்டெசுகியூ 304, 312, 648, 658
மானசுத் தீவு 184
மானவ தரும சாத்திரம் 220
மானவன்மன் 5
மிகைப் பயன் விளைவுகள் 691
மிகை மன ஆற்றல் 726, 727
மித்தீம் 487
மிதாட்சரம் 895
மிதிலைப்பட்டி 885
மியுலர் 52
மில் கருத்துகள் 597
மில்ட்டன் பிரீடுமேன் 601, 602
மின்கோபி 333
மீட்பினால் பெறும் பிற உரிமைகள் 239
மீட்புரிமை மறைதல் 240
மீர்சா குலாம் அகமது 62
மீனாட்சி கல்லூரி 259
முக்கூற்று முடிபுத் தத்துவம் 369
முகமது பின் துக்ளக் 329
முகமதாபாத்து 329
முகமூடிப் பண்பாடு 487
முகவர் 305, 306, 540
முகலூர் 771
முசுலிம் லீக் 355
முசோலினி 125, 315
முடியாட்சி 657, 663
முதல் 483, 484
முதல் உலகப் போர் 683
முதல் கருநாடகப் போர் 243
முதல் பண்பாட்டுக்காலம் 406
முதல் பிரிவு 482
முதல் பிரிவுத் திருத்தம் 483
முதல் மாற்றம் 483, 484
முதல்வர் 305, 306
முதலமைச்சர் 478
முதலாக்கம் 588
முதலாம் இரிச்சர்டு 221
முதலாம் உலகப் போர் (1914-18) 45
முதலாம் எலிசபெத் அரசியார் 635
முதலாளித்துவம் 315, 317, 791
முத்தமிழ் இலக்கணம் 41
முத்திரைகள் 714

முத்திரை வரி 306
முத்துத்தம்பிப்பிள்ளை 374
முத்துவீரஉபாத்தியாயர் 416
முத்துவீரியம் 53, 826
முதலாளித்துவ முறை 700
முதலீட்டு மையம் 189
முதலீடு 790
முதலேற்பு அதிகார வரம்பு 320
முதுநிலை உயர் பள்ளி 458
முப்பதாண்டுப் போர் 205
முமுட்சுத்துவம் 290
முரணாமை 348
முழுமைப் படைப்புக் கோட்பாடு 690, 691
முழுமையான யோகம் 726
முழுவேலைவாய்ப்புச் செலவுத் திட்டம் 627
முற்றுகையிடுதல் 711
முற்றுரிமை 110
முற்றுரிமை ஆய்வுக் குழு 607
முற்றுரிமை எதிர்ப்புச் சட்டங்கள் 611
முறைசாராக் கல்வி 213
முன்பண மீட்பு முறை 29
மூக்கொலிச் சாயல் 2
மூச்சுத் துடிப்புக் கொள்கை 156
மூத்ததிருநாவுக்கரசு 367
மூர்கள் கலை 803
மூல ஆவண அடைமானம் 234
மூலத் தொழில் 534
மூலதன அங்காடி 109
மூலதனக் கணக்கு 530, 625
மூலதனக் குவிப்பு 319
மூலதனக் கொள்கை 536
மூலதனச் செலவினம் 622
மூலதனத்தின் சிறப்பு 533
மூலதனப் பெயர்ச்சி 553
மூலதனப் பொருட்கள் உற்பத்தி 520
மூலதனம் 784
மூலதன வெளி ஓட்டம் 455
மெடீசி 448
மெய்ஞ்ஞான அருள்வாக்கி 356
மெய்னி 659
மெருகேற்றப்பட்ட கருப்புநிற மட்பாண்டங்கள் 99
மெல்வில் தூவி 459
மெல்வின் சோன்சு 750
மேச்சு வெபர் 656
மேக்ரோ-சிப்சன் பெருங்குழு 422
மேகவர்மன் 349
மேகுடிக் கோயில் 507
மேயோ பிரபு 845
மேல் மனம் 727
மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் 321
மேல் முறையீடு 121
மேலாண்மையினர் 36
மேலேற்பு அதிகார வரம்பு 320
மேற்குச் செருமனி கொடைகள் 526
மேன் 335
மைசூர் 698
மைய அரசின் திட்டங்களுக்கான கொடை 592
மைய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் கொடைகளின் நோக்கங்கள் 591, 592
மைய இருப்பு வங்கி 299
மைய இருப்பு வங்கிச் சட்டம் 173
மைய உணவுக் கிடங்குக் கழகம் 699
மையத் திட்டக் குழு 315, 316
மையத் திட்டமிடல் 24, 612
மைய வங்கிகள் 551
மைய வங்கி முறையின் அமைப்பு 472
மொகஞ்சோதாரோ 93
மொகலாயப் பேரரசின் வளர்ச்சி 17
மொத்தச் செலவு 191
மொத்த வணிகர் 699
மொரார்ச்சி தேசாய் 478
மொலுக்கசு 393
மொழி 147
மொழியின் அமைப்பு 504
மொழியின் செயற்பாடு 504
மோசசு 347
யாப்பருங்கலக்காரிகை 415
யாப்பருங்கலம் 413
யாப்பருங்கல விருத்தி உரை 273
யாப்புறுப்பு 205
யாம்கிப்பூர் போர் 729
யாழ்ப்பாண சங்கன் 356
யாழ்ப்பாணத்து நல்லூர் 582
யாழ்ப்பாணம் தாமோதரம்பிள்ளை 895
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை 794
யுங் காரல் 65
யுவான் சுவாங் 565
யூக தத்துவம் 851
யூகமுறைத் தத்துவம் 450
யூத இன இலக்கியம் 431
யூதர்கள் 728
யோகிச்சார தத்துவம் 148
வக்கியத்து 386
வகுப்புப் பிரிவினை 791
வங்காள தேசம் 112
வங்கிக் கடன்கள் 299
வங்கிகள் பெறும் பயன்கள் 174

வங்கிகளின் பொறுப்புகள் 174
வங்கிகளின் வளர்ச்சி 174, 175
வங்கி வீதக் கொள்கை 589
வங்கி வீதங்கள் 553
வசவண்ணர் 5
வசனங்கள் 5
வசித்துவம் 173
வட்டார ஊரக வங்கிகள் சட்டம் 173
வட்டி 298, 299
வட்டிக் கோட்பாடு 506
வட்டி வீதம் 690
வட அட்லாண்டிக்கு உடன்படிக்கைப் பேரமைப்பு 231
வட அரபுமொழி 723
வட ஆப்பிரிக்கா 34
வட இந்தியப் போர்கள் 837
வடக்குத்திருவீதிப்பிள்ளை 181
வடமொழி அலங்கார ஆசிரியர் 269
வடிவமைப்பு 112
வடிவம் 1
வணிகக் கோட்பாட்டினர் 529
வணிகச் சுழற்சி 462, 691
வணிக தேசியம் 462
வணிக வங்கிகள் 299, 551
வயலக்கா 773
வர்சில் 33
வர்மன் மரபு 133
வரலாற்று அணுகுமுறை 484
வரலாற்றுக் குறிப்புகள் 48
வரலாற்றுக் கோட்பாடு 696
வரலாற்று நிலை 2
வரலாற்றுப்பின்னணி 514
வரலாறு 117, 332, 434, 474, 755, 814, 834, 865
வரவு செலவுத் திட்ட உரை 623
வரவு செலவுத் திட்டம் 587, 588
வராகாவதாரம் 856
வரிகள் 634
வரிசை உரிமைக் கோட்பாடு 240, 241
வரிவடிவம் 724
வருணகுலாதித்தன் மடல் 405
வருமான ஏற்றத்தாழ்வு 783
வருமானப் பங்கீடு 319
வருமானமும் செலவுகளும் 691
வருவாய்க்குரிய சட்டங்கள் 302
வருவாய்க் கணக்கு – செலவினங்கள் 625
வருவாய்க் கணக்கு வரவு செலவுத் திட்டம் 625
வருவாய்ப் பற்றாக்குறை 625
வருவாய் வரவு, செலவுத்திட்டம் 623
வரையறுக்கப்பட்ட அதிகார எல்லை 321
வரையறுக்கும் காரணிகள் 520
வரையறை 175, 548
வல்லரசுகளின் தன்னல நோக்கம் 674
வல்லாட்சி 664
வலிமைக் கோட்பாடு 695
வழியும் முடிவும் 102
வள ஆதாரங்கள் 789
வள ஆதாரங்களின் ஒதுக்கீடு 783
வளப் பங்கீட்டு முறை 316, 318
வளர்ச்சியடைந்த நாடுகள் 25, 533
வளர்ச்சியடையாத நாடுகள் 525, 526, 533, 534
வளர்தமிழ் மன்றம் 258
வளர்ந்துசெல் அரசு நடவடிக்கை விதி 595
வளர்ந்துவரும் நாடுகள் 673
வாக்னரின் விதி 610
வாங்கும் திறன் சமன்பாட்டுக் கோட்பாடு 549
வாசனை 890
வாசிங்டன் முதல் இலிங்கன் வரை 439
வாஞ்சூ குழு 607, 608
வாட்சன், சே. பி., 218
வாணிக உறுதிக் கடிதம் 541
வாணிகச் சிக்கல்கள் 539
வாணிகர் சிக்கனங்கள் 27
வாணிகச் சுழல் வரவு செலவுத் திட்டம் 627
வாணிக நிலை 530
வாணிப மந்த நிலை 471
வாணிப வருவாய் 635
வாமனாவதாரம் 857
வாய்ப்புச் செலவு 598
வாய்பாட்டுத் தொடர்பு 501
வால்டர் கானன் 122
வால்டர் லிப்மென் 640
வாலி 107
வான்மீகி இராமாயணம் 42
வானவன் மகாதேவி சதுர்வேதிமங்கலம் 68
விக்கிரமசோழன் 788
விக்கிரமாதித்தன் அரசவைக்கவி 370
விக்டோரியா பேரரசி 688
விகிதப் பொறுப்புக் கோட்பாடு 240
விசய நகர அரசு 730
விசாரணை ஆணைக்குழுச் சட்டம் 478
விசிகோத்துகள் 831
விட்சேபம் 867
விட்டலசாமி 395
விட்டுணுபாவா 736
விடுதலைக்குப்பின் இந்தியா 531, 674
வித்தியார்த்தி 335
விதிமுறைகள் 30
விநாயக தாமோதர சாவர்க்கர் 379

விமலகலை 379
வியபிசாரி பாவம் 889
விரயச் சடங்கு 425
விரிவாக்கக் கொள்கை 622
விருப்பக் கொடைகள் 592
வில்லிபுத்தூராழ்வார் 771
வில்லியம்சு 636
வில்லியம் சேம்சு 451
வில்லியம் பி. உட்சு 751
விலை ஆதரவு 707
விலைக் கட்டுப்பாடும் நுகர்வோர் பொருள் பங்கீட்டில் ஒழுங்கு முறைகளும் 605
விலைச் சரிவு 699
விலைப்பட்டியல் 699
விவர அறிக்கை 121
விவரணக் கொள்கை 285
விளை பொருள்கள் 865
விளைபொருள்களின் தர வரையறை 22
விற்பனை அடைமானம் 223
விற்பனைக் குறிப்பேடு 30
விற்பனைச் செலவு 192
வின்சுடன் சர்ச்சில் 185
வின்சுலோ அகராதி 73
வீட்டோ 677
வீர சைவம் 5,6
வீரசோழியம் 53
வீரட்டேசுவரர் 325
வீரராகவக்கவி 741
வீரவநல்லூர் 778
வீரை அம்பிகாபதி 397
வெசுலி கிளேர் மிச்செல் 462
வெட்டல் இராசு கடல்கள் 249
வெர்சே உடன்படிக்கை 809
வெளிநாட்டுக் கடன்கள் 588
வேட்டை முறை 334
வேதகாலம் 42
வேதபுரீசுவரர் 897
வேதாந்த தேசிகர் 417
வேதாரணியம் 45
வேல்-மயில்-சேவல் விருத்தங்கள் 774
வேலண்டினியன் 183
வேலைப் பகுப்பு 539
வேலைப் பகுப்பும் தொழில்திறன் மேம்பாடும் 27
வேலைவாய்ப்பின்மையும் வறுமையும் 612, 613
வேளாண்மை 116, 806
வேளாண்மை, ஊரக முன்னேற்றத்திற்கான தேசிய வங்கி 173
வேளாண்மைப் பொருள்களின் விலை வரையறைக்குழு 699
வேளாண்மைப் பொருளியல் 468
வேளாண்மை விளைபொருள்களின் (தரமும், அளவும் பற்றிய) சட்டம் (1937). 21
வைசேடிகம் 276
வைணவத் திருப்பதி 880
வோல்டா ஆற்று நீர்மின் திட்டம் 6

# கலைச்சொற் பட்டியல்

| | |
|---|---|
| அகக்கட்டுமானம் | ... Infrastructure |
| அகச்சிக்கனங்கள் | ... Internal Economies |
| அகச்சிராய்வு | ... Internal check |
| அகத்தணிக்கை | ... Internal Auditing |
| அகநோக்கு | ... Introspection |
| அகமணம் | ... Endogamy |
| அகமுகம் | ... Introversion |
| அகழாய்வு | ... Excavation |
| அங்கதம் | ... Satire |
| அங்கீகாரம் (ஏற்பு) | ... Recognition |
| அச்சுறுத்திப் பறித்தல் | ... Extortion |
| அசைமுகடு | ... Peak |
| அஞ்சல்வழி விற்பனை | ... Value payable by post (V.P.P.) |
| அட்டவணையிடுதல் | ... Indexation |
| அடக்கக் கணக்கு | ... Cost Account |
| அடக்கவிலை ஏடு | ... Cost sheet |
| அடக்கவிலை வரையறை | ... Cost Ascertainment |
| அடகு | ... Pledge |
| அடகு பெறுபவர் | ... Pawnee |
| அடகு வணிகர் | ... Pawn-broker |
| அடகு வைப்பவர் | ... Pawner |
| அடிக்கருத்து | ... Theme |
| அடிச்சொல் | ... Stem |
| அடிப்படை உரிமைகள் | ... Fundamental Rights |
| அடுக்குமுறை உறவு | ... Paradigmatic relation |
| அடுக்குநிலை மொழியியல் | ... Stratificational Linguistics |
| அடைமான ஒப்பந்த ஆவணம் | ... Hypothecation Agreement |
| அடைமானம் | ... Mortgage |
| அடைமானம் பெறுபவர் | ... Mortgagee |
| அடைமானம் வைப்பவர் | ... Mortgager |
| அடைமான மீட்புரிமை அடைப்பு | ... Right of Fore-closure |
| அடைமான மீட்புரிமை மறைதல் | ... Extinguishment of Redemption |
| அடைவுச் சோதனை | ... Achievement Test |
| அண்டையம் | ... Neighbourhood |
| அண்மை உறுப்புகள் | ... Immediate constituents |
| அதிகப் (மிகைப்) பற்று | ... Over-Draft |
| அதிகார அளிப்பு | ... Delegation of Power |
| அதிகாரக் குவிப்பு | ... Centralization of power |
| அதிகாரப் பரவல் | ... Decentralization of power |
| அதிகாரப் பொருளாதாரம் | ... Authoritarian Economy |
| அதிகார வருக்கம் | ... Bureaucracy |
| அநுபூதிநெறிக்கொள்கை | ... Mysticism |

| | | |
|---|---|---|
| அமைச்சரவைக் குழு | ... | Cabinet |
| அமைப்பாவணம் | ... | Memorandum of Association |
| அமைப்பியல் அணுகுமுறை | ... | Structural Approach |
| அமைப்புசார் துறை | ... | Organized Sector |
| அமைப்புசாராத் துறை | ... | Unorganized Sector |
| அமைப்பு மயக்கம் | ... | Structural Ambiguity |
| அமைப்புமுறை அணுகல் | ... | Systems Approach |
| அமைப்பு மொழியியல் | ... | Structural Linguistics |
| அயல்நாட்டுச் செலுத்துநிலை | ... | Balance of Payments |
| அயல்நாட்டு வாணிகநிலை | ... | Balance of Trade |
| அயற் செலாவணி | ... | Foreign Exchange |
| அரசகுடி தகாப்புணர்ச்சி | ... | Royal Incest |
| அரசிதழ் | ... | Gazette |
| அரசியல் மனிதன் | ... | Homo Politicus |
| அரசியலமைப்பு | ... | Constitution |
| அரசிறைக் (நிதி) கொள்கை | ... | Fiscal Policy |
| அருமைப்பாடு | ... | Scarcity |
| அவதூறு/நிந்தனை | ... | Slander |
| அவையோர் | ... | Audience |
| அழகியல் | ... | Aesthetics |
| அழகுணர்வு | ... | Sense of Beauty |
| அழுத்தம் | ... | Stress |
| அழைப்பாணை | ... | Summon |
| அளவைமுறை அனுபவஇயல் | ... | Logical Empiricism |
| அளவையியல் நேர்க்காட்சியியல் | ... | Logical Positivism |
| அளிப்பு | ... | Supply |
| அளிப்புப் பொருளாதாரம் | ... | Supply side economics |
| அறிவு ஆராய்ச்சியியல் | ... | Epistemology |
| அறிவுமுதற் கொள்கை/பகுத்தறிவாக்கம் | ... | Rationalism |
| அனுப்பீட்டு முகவர் | ... | Forwarding Agent |
| ஆக்கத் (உற்பத்தித்) திறன் | ... | Productivity |
| ஆட்சிவேண்டாக் கொள்கை | ... | Anarchism |
| ஆடம்பரப் பண்டங்கள் | ... | Luxury Goods |
| ஆதாயம் | ... | Profit |
| ஆவணம் | ... | Document |
| ஆவணமாற்றுச் சீட்டு | ... | Documentary Bill |
| ஆள்வலத்தேவை | ... | Manpower Need |
| இட-நேரக் கோட்பாடு | ... | Space - Time Theory |
| இடர்தாங்குச் சிக்கனங்கள் | ... | Risk Bearing Economics |
| இணைக் கொடைகள் | ... | Matching Grants |
| இணைப்பிடைச் சொல் | ... | Syndetic |
| இணைப்பொருளாதாரம் | ... | Parallel Economy |
| இந்திய மைய இருப்பு வங்கி | ... | Reserve Bank of India |
| இயல்பு ஆதாயம் | ... | Normal Profits |
| இயற்கை முற்றுரிமைகள் | ... | Natural Monopolies |

| | | |
|---|---|---|
| இயற்கை வாதம் | ... | Naturalism |
| இயைபு | ... | Concordance |
| இருத்தல் கொள்கை | ... | Existentialism |
| இருப்பு அங்காடி | ... | Stock Market |
| இருமொழி வழக்கு | ... | Bilingualism |
| இறுதிநிலைச் செலவு | ... | Marginal Cost |
| இறைமை | ... | Sovereignty |
| இறை மையம் | ... | Theo-Centric |
| இறையியல் | ... | Theology |
| இறைவழி உரிமைக் கோட்பாடு | ... | Divine Right Theory |
| இன்பவாதம் | ... | Hedonism |
| இன்மைக் கொள்கை | ... | Non-Existence |
| இனம் | ... | Race |
| உகந்த அளவு உற்பத்தி | ... | Optimum output |
| உட்கொள்ளும் திறன் | ... | Receptive skill |
| உட்பிணைப்பு விகுதிகள் | ... | Inflectional Endings |
| உண்டியல் அங்காடித் திட்டம் | ... | Bill Market Scheme |
| உண்மைக் கொள்கை | ... | Realism |
| உயர்குடி ஆட்சி | ... | Aristocracy |
| உரிமம் | ... | Licence |
| உரிமைப் பங்கு | ... | Royalty |
| உரிமை வழக்கு | ... | Civil Case |
| உருபன் | ... | Morpheme |
| உருபனியல் | ... | Morphology |
| உரைக்கோவை | ... | Symposium |
| உள்ளாட்சி | ... | Local/Self-Government |
| உள்ளுக்குத் திறன் | ... | Libido |
| உளக்கூறுமாற்றக் கோளாறு | ... | Hysterical conversion |
| உளக்கோளாறு | ... | Neurosis |
| உளச்சிதைவு நோய் | ... | Schizophrenia |
| உளத் தொலைவு | ... | Psychological Distance |
| உளநோய் நீக்கு உளவியல் | ... | Clinical Psychology |
| உளப்பிணி | ... | Psychosis |
| உளவிரிசல் கோளாறு | ... | Hysterical Dissociation |
| உறுதி ஆவணம் | ... | Declaration |
| உறுதிச் சமநிலை | ... | Determinate Equilibrium |
| ஊக்கக் கொடை | ... | Subsidy |
| ஊக்குவிப்புகள் | ... | Incentives |
| ஊக தத்துவம் | ... | Speculative philosophy |
| ஊக வாணிகம் | ... | Speculative Trade |
| ஊடுவழி | ... | Lobby |
| எதிர்காலச் சேமிப்பு இருப்பு | ... | Buffer stock |
| எதிர்பாராச் செலவு நிதி | ... | Contingency Fund |
| எதிரெழுச்சியினர் | ... | Insurgents |
| ஒட்டுநிலைமொழி | ... | Agglutinative language |

ஒதுக்கீடு ... Allocation
ஒப்ப எழுதுதல் ... Dictation
ஒப்படைகள் ... Assignments
ஒப்பந்தக் கோட்பாடு ... Contract Theory
ஒப்பந்தச் சட்டம் ... Contract Act
ஒப்பீடு ... Comparator
ஒப்புமைச் சத்தம் ... Relative loudness
ஒலிப்புடை ஒலி ... Voiced Sound
ஒலி முழக்கம் ... Sonority
ஒலியன் ... Phoneme
ஒலியனியல் ... Phonology
ஒலியியல் ... Phonetics
ஒற்றையாட்சி அரசியலமைப்பு ... Unitary constitution
ஓய்வுவருக்கக் கொள்கை ... Theory of leisure class
ஒருறுப்பு நாடுகள் ... Unitary Nations
கட்டுப்பட்ட, கட்டுப்படாக் கடன்கள் ... Tied & Untied credits
கட்டுப்படுத்துங் கொள்கை ... Restrictionist policy
கட்டுப்பாடு ... Constraint
கட்டுமானக் கால அளவு ... Gestation Period
கடன் உறுதிச் சீட்டு ... Promissory Note
கடன் கருவிகள் ... Credit Instruments
கணக்குச் சமநிலை ... Balance of Accounts
கணிப்பொறி ... Computor
கப்பல் சரக்குச் சீட்டு ... Bill of Lading
கருத்து வடிவம் ... Concept
கருவூல உண்டியல்கள் ... Treasury Bills
கருவூலம் ... Treasury
கருத்துத் திரிவு நோய் ... Paranoia
கருத்து முதற் கொள்கை ... Idealism
கருதுகோள் ... Hypothesis
கருவிவழிக் கொள்கை ... Instrumentalism
கல்திட்டை ... Dolmen
கலைத் திட்டம் ... Curriculum
கழிவு வீதம் ... Discount Rate
காப்பு ... Insurance
காலக் கடன் ... Term Loan
கால வைப்புகள் ... Time Deposits
காவல் அரசு ... Police State
கிலிகள் ... Phobias
கிளைமொழி ... Dialect
குசுகுசுப்பொலி ... Whisper
குடியரசு ... Republic
குடியுரிமைப் பதிவு முறை ... Civil Registration System
குத்தகை ... Lease

| | | |
|---|---|---|
| குற்ற விசாரணைச் சட்டம் | ... | Criminal Procedure Code |
| குறுக்கு மேற்கோள் | ... | Cross-Reference |
| குறைந்துசெல் விளைவு விதி | ... | Law of Decreasing returns |
| குறைவெண் | ... | Quorum |
| கூட்டாட்சி | ... | Federation |
| கூட்டு வெளி அங்காடிக் குழு | ... | Federal Open Market Committee |
| கூர்தலறம்/படிமுறை வளர்ச்சி | ... | Evolution |
| கேட்டல்திறன் | ... | Listening skill |
| கேட்பாணை | ... | Indent |
| கேட்பு வைப்புகள் | ... | Demand Deposits |
| கையேடு | ... | Hand-Book |
| கொடுப்பாணை | ... | Delivery Order |
| கொடைகளும் உதவிகளும் | ... | Grants & Aids |
| கொடையாவணம் | ... | Gift Deed |
| சட்டமுறைக் கொடை | ... | Statutory Grants |
| சம இழப்பு | ... | Equal Sacrifice |
| சமநிலைத் தடையீடு | ... | Check and Balance |
| சமுதாய ஒப்பந்தம் | ... | Social contract |
| சமுதாயப் படிநிலை | ... | Social Stratification |
| சமூக ஒதுக்கம் | ... | Segregation |
| சரக்கிருப்பு அறிக்கை | ... | Inventory Report |
| சார்புச் செயலர் | ... | Under-Secretary |
| சார்புடை மாறி | ... | Dependent Variable |
| சார்புநிலை வாக்கியங்கள் | ... | Hypothetical Statements |
| சிக்கனக் கேடுகள் | ... | Diseconomics |
| சிலராட்சி | ... | Oligarchy |
| சிறு சமூகங்கள் | ... | Ethnos |
| சுங்க ஏற்றுமதி அனுமதிச் சீட்டு | ... | Customs Export Pass |
| சுடுமண் முத்திரை அச்சு | ... | Terracotta sealing |
| சுரண்டல் | ... | Exploitation |
| செயற்பாட்டியல் | ... | Functionalism |
| செயற்பாட்டியல் அணுகுமுறை | ... | Functionalistic Approach |
| செலவு-நன்மை அணுகுமுறை | ... | Cost-Benefit Approach |
| செலுத்தல் | ... | Payment |
| செலுத்தல் சமநிலை | ... | Balance of remittance |
| செலுத்திய முதல் | ... | Paid-up Capital |
| செலுத்து நிலைக் கோட்பாடு | ... | Balance of Payments |
| சேமநலநிதி | ... | Provident Fund |
| சேமிப்பு | ... | Savings |
| சேர்ப்புச் செலவுக் கணிப்பு | ... | Absorption Costings |
| சொற்கோவைப் புள்ளியியல் | ... | Lexico Statistics |
| சொற்பொருளியல் | ... | Semantics |
| சொல்லாக்கம் | ... | Derivation |
| தங்கச் சாலைக் கோட்பாடு | ... | Mint-Par Theory |
| தடையிலா வாணிகம் | ... | Free Trade |

| | | |
|---|---|---|
| தந்தைவழிக்குலம் | ... | Patriclan |
| தரவு | ... | Data |
| தலைமை அமைச்சர் | ... | Prime Minister |
| தலையிடாக் கொள்கை | ... | Laissez-Faire |
| தன்வயப்படுத்துதல் | ... | Assimilation |
| தன்விருப்ப அதிகாரம் | ... | Discretionary Power |
| தன் விருப்பக்கொடை | ... | Discretionary Grant |
| தன்னலக் கும்பல்கள் | ... | Factions |
| தன்னலக் குழுக்கள் | ... | Cliques |
| தன்னியக்க நிறுவனங்கள் | ... | Voluntary Organisation |
| தனிநிலை மொழி | ... | Isolating Language |
| தனியாள் உண்மை வருவாய் | ... | Per Capita Income |
| தனியொருவர் உற்பத்தி | ... | Per Capita Production |
| தாராளக் கொள்கை | ... | Liberalism |
| திட்டச்சார்பற்ற கொடை | ... | Non-Plan Grants |
| திறந்த விற்பனை ஆணை | ... | Open Indent |
| தீங்கியல் | ... | Tort |
| தீர்வு முகவர் | ... | Clearing Agent |
| துணைச் சட்டம் | ... | Adjective Law |
| தொகுவினப் பொருளாதாரம் | ... | Aggregate Economy |
| தொடர்பு வகுப்புகள் | ... | Contact Classes |
| தொடர்முறை உறவு | ... | Syntacmatic Relation |
| தொடரும் செலவினங்கள் | ... | Recurring Expenditure |
| தொல் மொழி | ... | Proto Language |
| தொழில் முயலுநர் | ... | Entrepreneur |
| தொன்மம் | ... | Myth |
| தோற்றுவாய்ச் சட்டம் | ... | Parent Act |
| நகர அரசுகள் | ... | City-States |
| நடத்தை மருத்துவம் | ... | Behaviour Therapy |
| நடுநிலை வழி | ... | Golden Mean |
| நல அரசு | ... | Welfare State |
| நலச்சட்டங்கள் | ... | Welfare Laws |
| நலப் பொருளியல் | ... | Welfare Economics |
| நன்மைசெய் வல்லாட்சி | ... | Benevolent Despotism |
| நனவிலி | ... | Unconscious |
| நாணய மதிப்பின் மீட்டுயர்வு | ... | Reflationary Policy |
| நாணய மாற்றுக் கட்டுப்பாடு | ... | Exchange Control |
| நாணய மாற்று வங்கிகள் | ... | Exchange Banks |
| நிகழ் தகவு | ... | Probability |
| நிகழ் விவரம் | ... | Flow Data |
| நிதியக் கடன்கள் | ... | Funded Debt |
| நியாயவிலைக் கடை | ... | Ration Shop |
| நிலைநிறுத்தல் | ... | Stabilization |
| நிலைமுறைச் சட்டம் | ... | Substantive Law |
| நிலைமுறை மொழியியல் | ... | Synchronic Linguistics |

| | | |
|---|---|---|
| நிலையற்ற மாற்றுவீதம் | ... | Fluctuating Exchange Rate |
| நிலையாவணம் | ... | Charter |
| நிலையான கடன்கள் | ... | Permanent Loans |
| நிலையான மாற்றுவீதம் | ... | Stable Exchange Rate |
| நிறுவனம் | ... | Firm |
| நிறைவுப் போட்டி | ... | Perfect Competition |
| நீண்டகாலத் தேக்கம் | ... | Secular Stagnation |
| நீதிமுறை மறுஆய்வு | ... | Judicial Review |
| நுகர்ச்சி | ... | Consumption |
| நுகர்வுப் பொருள்கள் | ... | Consumers Goods |
| நுண்கற் கருவிகள் | ... | Microliths |
| நேர்நிலை அமைப்பு | ... | Linear Structure |
| பகட்டு நுகர்ச்சி | ... | Conspicuous Consumption |
| பகிர்வு | ... | Distribution |
| பகுதிச் சமநிலை ஆய்வு | ... | Partial Equilibrium |
| பகுதி அடைமான மீட்சி | ... | Partial Redemption |
| பங்கு | ... | Quota |
| பட்டயக் கணக்கர் | ... | Chartered Accountant |
| படிநிலைமுறை | ... | Hierarchical System |
| பண்ணையடிமை | ... | Serfdom |
| பண அங்காடி | ... | Money Market |
| பண அளவுச் சமன்பாடு | ... | Quantity Theory of Equation |
| பண அளிப்புக் கட்டுப்பாட்டுக் கொள்கை | ... | Tight Money Policy |
| பண இருப்பு | ... | Cash Reserve |
| பணச்சீட்டு/பற்றுச் சீட்டு | ... | Receipt |
| பணவாக்கக் கொள்கை | ... | Monetary Policy |
| பணவாட்டம் | ... | Deflation |
| பணவியல் வாதம் | ... | Monetarism |
| பணவீக்கம் . | ... | Inflation |
| பதட்டம் | ... | Anxiety |
| பதிலிடுமுறை | ... | Substitution Method |
| பயண முகவர் | ... | Career Agent |
| பயணிகள் காசோலை | ... | Travellers's Cheque |
| பயன் கொள்கை | ... | Benefit Theory |
| பயன்பாடு | ... | Utility |
| பயன்மதிப்பு | ... | Value |
| பருவ இதழ் | ... | Periodical |
| பற்றாக்குறைக் கொடை | ... | Deficiency Grant |
| பற்றுச்சீட்டு | ... | Voucher |
| பறிமுதல் | ... | Forfeiture |
| பிடியாணை | ... | Warrant |
| பிணைய ஆவணங்கள் | ... | Pledged Documents |
| பிணையம் | ... | Surety |
| பிணையப் பண்டகம் | ... | Bonded Ware-House |
| பின்னூட்டல் | ... | Feed-Back |

புலன் கடந்த மெய்ப்பொருளியல் ... Metaphysics
புறச் சிக்கனங்கள் ... External Economics
புறமுகம் ... Extroversion
பேரரசாட்சி ... Imperial Rule
பொது ஆட்சியியல் ... Public Administration
பொதுக் கொடை ... General Grant
பொதுத் துறைப் பட்டியல் ... Concurrent List
பொதுநலப் பண்பு ... Altruism
பொது நிதியியல் ... Public Finance
பொருளாதார அளவையியல் ... Econometrics
பொருளாதாரச் சமநிலை ... Economic Equality
பொருளாதார மந்தம் ... Depression
பொருளாதார முன்னேற்றம் ... Economic Development
பொறுப்புகள் ... Liabilities
பொறுப்பேற்புக் கணக்கு முறை ... Responsibility Accounting
பொன் திட்டம்/தங்கத் திட்டம் ... Gold Standard
போர்க்கால அரசு ... War State
மக்கட்பண்பு ... Humanism
மக்கள் தொகைக் கணிப்பு ... Census
மண்ணடுக்காய்வு ... Stratigraphy
மதச்சார்பற்ற ... Secular
மதிப்பீட்டுச் செலவுக் கணிப்பு ... Estimated costing
மறு கழிவு ... Re-discount
மறுநிதி ஒதுக்கம் ... Re-appropriation
மனப்பாங்கு ... Temperament
மனித மையம் ... Anthropocentric
மாதிரிப் பொருட்பட்டியல் ... Proforma Invoice
மாற்றிலக்கண மொழியியல் ... Transformational Linguistics
மாற்று மதிப்பிறக்கம் ... Exchange Depreciation
மாற்றொலி ... Allophone
மாறாச் செலவு ... Fixed Cost
மாறும் செலவு ... Variable cost
மிகைப் பயன விளைவுகள் ... Spill-over Effects
மிகை மதிப்புக் கோட்பாடு ... Theory of Surplus Value
மிகை மன ஆற்றல் ... Supramental Force
மிதக்கும் செலாவணிக் கொள்கை ... Floating currency
மீள்விடைத் தாள்கள் ... Response sheets
முகவர் ... Agent
முதலீட்டுக் கணக்கு ... Capital Account
முதலேற்பு அதிகார வரம்பு ... Original Jurisdiction
முரணாமை விதி ... Law of Non-Contradiction
முழுமுதற் பொருள் ... Absolute Being
முழுமைப் படைப்புக் கோட்பாடு ... Holistic Approach
முழுமைப் பள்ளி ... Comprehensive School
முற்றுரிமை ... Monopoly

முறைசாராக் கல்வி ... Non-Formal Education
முறையற்ற சேர்க்கை ... Adultery
முறைமை நிலைமை ... Legitimacy
முன் பண மீட்பு முறை ... Impressed System
மூக்கொலிச் சாயல் ... Nasalization
மூச்சுத் துடிப்பு ... Chest Pulse
மூலதனக் குவிப்பு ... Capital Accumulation
மூலதனப் பொருள்கள் ... Capital Goods
மூலதனம் ... Capital
மேலாண்மை ... Management
மேலேற்பு அதிகார வரம்பு ... Appellate Jurisdiction
மையத் திட்டக்குழு ... Central Planning Board
மொத்தக் கொடை ... Block Grant
மொத்தத் தேவை ... Aggregate Demand
வங்கி வைப்புகள் ... Bank Deposits
வட்டி ... Interest
வணிக உறுதிச் சீட்டு ... Commercial Paper
வணிகக் கோட்பாட்டினர் ... Mercantilists
வணிகச் சுழற்சி ... Trade Cycle
வரம்புத் தேவைகள் ... Marginal requirements
வருவாய்க் கணக்கு ... Revenue Account
வருவாய்க்குரிய சட்டங்கள் ... Fiscal Laws
வருவாய்ப் பற்றாக்குறை ... Revenue Deficit
வருவாய் மிகுதி ... Revenue Surplus
வரைவடிவம் ... Design
வரைவோலை ... Draft
வல்லாட்சி ... Totalitarianism
வளப் பங்கீடு ... Allocation of Resources
வாக்குறுதிச் சீட்டு ... Promissory Note
வாணிக உண்டியல் ... Bill of Exchange
வாய்பாட்டுத் தொடர்பு ... Paradigmatic Relationship
வாரம் ... Rent
விசாரணை ஆணைக்குழுச் சட்டம் ... Commission of Enquiries Act
விவர அறிக்கை ... Return
விலைப்புள்ளி ... Quotation
விளக்க மொழியியல் ... Descriptive Linguistics
வெளியிடும் திறன் ... Expressive Skill
வைப்புகள் ... Deposits.

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உலகுவலத்தலைமை உயர்வைத்தலை
தமிழ்நாடு
அச்சகம்